அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்நூல் வெளியீடு

Srila Sri Kasivasi Swaminatha Thambiran Swamigal Avergal
Tiruppanandal Mutt Endowment Publication

பன்னிரு திருமுறை வரலாறு

இரண்டாம் பகுதி

(8 - 12 திருமுறைகள்)

ஆக்கியோர் :

வித்துவான் க. வெள்ளைவாரணன்
துணைப்பேராசிரியர்
தமிழாராய்ச்சித்துறை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
1969

7

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்நூல் வெளியீடு

பன்னிரு திருமுறை வரலாறு

இரண்டாம் பகுதி

(8 12 திருமுறைகள்)

ஆக்கியோர் :

வித்துவான் க. வெள்ளைவாரணன்

துணைப் பேராசிரியர்

தமிழாராய்ச்சித்துறை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

1969 ரூ 3-60

கீதா பிரஸ், திருச்சி-2.

முன்னுரை

வானாகி மண்ணாகி வளியாகி யொளியாகி
ஊனாகி உயிராகி யுண்மையுமா யின்மையுமாய்க்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை யென்சொல்லி வாழ்த்துவனே.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் தான் தோன்றிய நாள் முதலாகத் தமிழும் தமிழ் கலைச் செல்வங்களும் வளம்பெற்றோங்கும் வண்ணம் தமிழ்ப்பணி புரிந்து வருவதனைத் தமிழகம் நன்குணரும். பல்கலைக் கழகத் தமிழாராய்ச்சித் துறையின் சார்பில் நிகழ்ந்து வரும் ஆராய்ச்சிப் பணிகளுள் தமிழகத்திற் சிறப்பு முறையிற் றோன்றி வளர்ந்த சமய இலக்கியங்களையும் தத்துவ நூல்களையும் ஆராய்ந்து வெளியிடும் பணியும் ஒன்றாகும். செந்தமிழ்ப் பேரன்பர் டாக்டர் ரா. க. சண்முகஞ் செட்டியாரவர்கள் இப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக இருந்தபொழுது கம்ப ராமாயணப் பணியுடன் சைவத் திருமுறைகள் பன்னிரண்டனையும் ஆராயும் திருமுறைப்பணியும் தொடங்கப்பெற்றது. இப்பல்கலைக் கழகத்திற்குத் திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்தின் தலைவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் நிறுவப் பெற்றுள்ள அறக்கட்டளையின் சார்பில் பன்னிருதிருமுறை வரலாறு வெளிவருதல் வேண்டும் எனத் துணைவேந்தரவர்கள் பணித்தார்கள். அவர்களது ஆணையின்படி தமிழாராய்ச்சித் துறைத் தலைவர் பேராசிரியர் வித்துவான் திரு கோ. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் பன்னிருதிருமுறை வரலாறு எழுதும் பணியினை எனக்கு அன்புடன் வகுத்தளித்தார்கள்.

திருப்பெருந்துறையில் சிவநேசச் செல்வர் அரிமளம் அ. அரு. அண்ணாமலை ஐயா அவர்களால் நிறுவப்பெற்ற திருவாசக பாடசாலையில் யான் மாணவனாக இருந்தபொழுது தேவாரப் பதிகங்களைப் பண்ணுடன் பயிலவும் தமிழாசிரியர் வித்துவான் திரு. ஆ. நமசிவாய முதலியார் அவர்களிடம் பெரிய புராணத்தை முறையாகப் பாடங்கேட்கவும் வாய்ப்பு ஏற்பட்டது. அங்கே பயிலுங்காலத்தில் வைராக்கிய சதாசிவ செட்டியார், காரைக்குடி சொக்கலிங்க ஐயா, சுவாமிநாத பண்டிதர் முதலிய பேரறிஞர்கள் நிகழ்த்திய சைவ சமயச் சொற்பொழிவுகள் பன்னிருதிருமுறைகளில் ஈடுபடும் ஆர்வத்தை விளைத்தன. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற் பயின்று ஆராய்ச்சி மாணவனாக இருந்தபொழுது

'தேவாரமும் பெரிய புராணமும்' என்ற தலைப்பில் சைவத் திருமுறைகளை ஒப்புநோக்கி ஆராயும் வாய்ப்பு உண்டாயிற்று. அருள்மிகு விபுலாநந்த அடிகளாருடனிருந்து அவர்கள் இயற்றிய யாழ்நூல் என்னும் இசைத்தமிழாராய்ச்சி நூலை யான் எழுதி வருங்காலத்தில் தேவாரத் திருப்பதிகங்களில் அமைந்துள்ள இயலிசை நலங்களை அறிந்து மகிழும் பேறு எனக்குக் கிடைத்தது. இவ்வாறு இளம்பருவ முதற்கொண்டு சைவத் திருமுறைகளில் தொடர்ந்து பயிற்சி பெற்று வந்த எனக்குத் தமிழாராய்ச்சித் துறையின் சார்பில் அளிக்கப் பெற்ற இத்திருமுறையாராய்ச்சிப் பணி மிகவும் உவப்பாக அமைந்தது. யான் இப்பணியினைச் செய்து வரும்பொழுது தமிழாராய்ச்சித் துறையிற் சிறந்த புலமைப் பணி புரிந்த ஆராய்ச்சிப் பேறிஞர் தி. வை. சதாசிவ பண்டாரத்தாரவர்கள் திருமுறையாசிரியர்கள் வாழ்ந்த காலங்களை ஆராய்ந்து உறுதிப்படுத்தும் நிலையில் இன்றியமையாது வேண்டப் படும் கல்வெட்டுச் சான்றுகளையும் பிற குறிப்புக்களையும் எடுத்துக் காட்டி உதவி புரிந்தார்கள்.

பன்னிருதிருமுறை வரலாற்றில் முதலேழு திருமுறைகளாகிய தேவாரத் திருமுறைகளின் வரலாறு முதற் பகுதியாகவும், திருவாசகம் திருக்கோவை முதல் திருத்தொண்டர் புராணம் ஈறாக வுள்ள ஏனைய ஐந்து திருமுறைகளின் வரலாறு இரண்டாம் பகுதி யாகவும் வகுக்கப்பெற்று முதற்பகுதி 1961ல் வெளியிடப்பெற்றது. இரண்டாம் பகுதி இப்பொழுது வெளிவருகின்றது.

மூவர் தேவாரமாகிய முதலேழு திருமுறைகளைக் குறித்து இன்றியமையாது அறிந்துகொள்ள வேண்டிய பொருட் பகுதிகள் பலவற்றையும் சுருக்கமும் தெளிவும் பொருந்த விளக்கம் முறை யில் அமைந்தது பன்னிருதிருமுறை வரலாற்றின் முதற்பகுதி யாகும். அதனைத் தொடர்ந்து அமைந்த இவ்விரண்டாம் பகுதி யில் எட்டாந்திருமுறையாகிய திருவாசகம் முதல் பன்னிரண்டாந் திருமுறையாகிய பெரிய புராணம் ஈறாகவுள்ள அருள் நூல்களைத் திருவாய் மலர்ந்தருளிய மணிவாசகப்பெருமான் முதல் சேக்கிழார் நாயனார் ஈறாகவுள்ள திருமுறையாசிரியர்கள் இருபத்துநால் வரைப்பற்றிய வரலாறுகளும், அவர்கள் நிலமிசை நிலவிய காலமும், அவர்கள் அருளிய செந்தமிழ்ப் பனுவல்களின் சொற் பொருள் நலங்களும், அந்நூல்களில் அமைந்துள்ள சைவ சித்தாந்தத் தத்துவ உண்மைகளும் பிறவும் ஆராய்ந்து விளக்கப் பெற்றுள்ளன.

திருத்தொண்டர்புராணத்தை ஆராயும்பொழுது குடந்தையை யடுத்துள்ள தாராசுரம் என வழங்கும் இராசராசபுரத்தில் இரண்டாம் இராசராசன் கட்டிய இராசராசேச்சரத் திருக்கோயில் விமானத்தின் திருத்தொண்டத் தொகையடியார்களின் வரலாற்று நிகழ்ச்சிகளைக் குறித்தமைக்கப் பெற்றுள்ள சிற்பங்களுக்கும் அவ்வடியார்களின் வரலாறுகளை விரித்துரைக்கும் இத்திருத்

தொண்டர் புராணத்திற்கும் இடையே அமைந்த தொடர்பு இனிது புலனாயிற்று. இத்தொடர்பு விளங்கத் தாராசுரத்திலுள்ள திருத்தொண்டத் தொகையடியார்களின் சிற்பங்களைப் படம் எடுத்து விளக்கக் குறிப்புக்களுடன் இந்நூலிற் பிற்சேர்க்கையாக வெளியிடுதல் வேண்டும் என்ற எண்ணமுண்டாயிற்று. இந்நிலையில் திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் செந்தமிழ்க் கல்லூரித் தலைவர் சிவநெறிச் செல்வர் திரு. கே. எம். வேங்கடராமையா எம்.ஏ. அவர்கள் தாம் புதுவையிலுள்ள பிரெஞ்சிந்தியக் கலைக்கழகத்தாரிடமிருந்து பெற்ற தாராசுரம் திருத்தொண்டத் தொகையடியார்களின் நிழற் படங்களையும் வாரணாசி அமெரிக்கக் கலைக்கழகத்தாரிடமிருந்துபெற்ற திருப்பனந்தாள் திருத்தொண்டத் தொகைச் சிற்பங்களின் நிழற் படத்தினையும் அன்புகூர்ந்து என்னிடம் தந்தார்கள். தாராசுரச் சிற்பங்களின் படங்களை அப்படியே இத்திருமுறை வரலாற்றில் வெளியிட்டுக் கொள்வதற்குப் புதுவையிலுள்ள பிரெஞ்சிந்தியக் கலைக் கழகத்தலைவர் அவர்கள் அன்புகூர்ந்து இசைவளித்தார்கள். அவ்வாறே திருப்பனந்தாள் சிற்பப்படத்தினை வெளியிடுதற்கு வாரணாசி அமெரிக்கக்கலைக் கழகத்தலைவர் அவர்களும் அன்புகூர்ந்து இசைவளித்தார்கள். தஞ்சைப் பெரிய கோயிலில் முதலாம் இராசராசனும் கருவூர்த்தேவரும் ஒருங்கிருக்கும் காட்சியினைக் குறிக்கும் ஓவியத்தின் நிழற் படத்தினைத் திரு ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளை பி.ஏ., பி.எல். அவர்கள் கொடுத்து உதவினார்கள். இப்பெருமக்கள் அனைவர்க்கும் பல்கலைக் கழகத்தின் சார்பில் எனது நன்றி என்றும் உரியதாகும்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழாராய்ச்சித் துறையின் சார்பில் ஆராய்ந்து எழுதப்பெற்ற இத்திருமுறை வரலாறு, திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்தின் தலைவரவர்களால் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நிறுவப்பெற்றுள்ள அறக் கட்டளையின் பொருளுதவிகொண்டு அடக்கவிலையினும் கால்மடங்கு எளிய விலைக்கு வெளியிடப் பெறுகிறது. இங்ஙனம் செந்தமிழும் சிவநெறியும் வளரச் சிறப்புடைய நூல்கள் பல மிக எளிய விலைக்குக் கிடைக்கும்வண்ணம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அறக் கட்டளையினை நிறுவிய பெருந்தகை திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சாமிநாதத் தம்பிரான் சுவாமிகளாவர். அவர்களுக்குப் பின் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தின் தலைவராக எழுந்தருளியிருக்கும் திருப்பெருந்திரு காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் தம் முன்னோர் செய்த நல்லறங்களைப் பேணிக்காத்துக் குமரி முதல் இமயம் வரை நம் நாட்டிற் சைவமும் தமிழும் தழைத்தினிதோங்க முந்நூறுக்கு மேற்பட்ட நல்லறங்கள் என்றும் தொடர்ந்து நிகழ ஐம்பது நூறாயிர ரூபாவுக்கு மேற்பட்ட பெரும் பொருளை முதற் பொருளாக வைத்து நம் நாட்டு மக்களது கல்விப் பயிற்சிக்கும் தெய்வ வழிபாட்டு நெறிக்கும் ஆக்கமாகும் நற்பணிகளை ஆர்வமுடன் புரிந்தருள்கின்றார்கள். இங்ஙன-

நாடு நலம்பெற ஞானமுண்டாக்கும் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகளின் பொன்னார் திருவடிகளை வணங்கித் தண்ணார் தமிழ் வளர்க்கும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தமிழாராய்ச்சித் துறையின் சார்பில் இத்தகைய தமிழ்ப் பணிகள் பல தொடர்ந்து நிகழும் வண்ணம் ஊக்கமும் ஆக்கமும் உதவி என்னை அன்புடன் ஆதரித்துவரும் அண்ணாமலைப் பல்கலைக் கழக இணைவேந்தர் செட்டிநாட்டரசர் ராஜாசர் டாக்டர் M. A. முத்தையா செட்டியார் B.A , L.L.D. அவர்களுக்கு என் உளமார்ந்த நன்றியும் வணக்கமும் என்றும் உரியனவாகும்.

இத்திருமுறையாராய்ச்சிப் பணி இனிது நிறைவேற ஆவன புரிந்துதவிய பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் செந்தமிழ்ப் பேரன்பர் திருவாளர். தி. மூ நாராயணசாமி பிள்ளை, எம்.ஏ., பி.எல். அவர்களுக்கும், பல்கலைக் கழகத்தின் இப்போதைய துணைவேந்தர் பேராசிரியர் திரு. S. P. ஆதி நாராயண் அவர்களுக்கும், தமிழாராய்ச்சித் துறைத் தலைவர் வித்துவான் திரு. கோ. சுப்பிரமணிய பிள்ளை M.A., B.L. அவர்களுக்கும் எனது உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன். திருமுறை வரலாற்றின் முதற் பகுதியினைப் பாராட்டி அரியதொரு முகவுரை எழுதியுதவிய முன்னாள் துணைவேந்தர் வே. சுப்பிரமணிய நாடார் அவர்களின் தமிழார்வத்தினை நெஞ்சார நினைந்து போற்றுகின்றேன்.

இந்நூல் அச்சாகுங்கால் எனது பணிக்கு அன்புடன் உதவி புரிந்து இதனை வனப்புற அச்சிட்டுக் கொடுத்துதவிய திருச்சிராப்பள்ளி, கீதா பிரஸ் உரிமையாளர் திரு. மணி ஐயர் அவர்களுக்கும் அவர்கள் துணைவர்களுக்கும் எனது நன்றியுரியதாகும்.

க. வெள்ளைவாரணன்.



திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம்
பத்தொன்பதாம் பட்டத்தில் எழுந்தருளிய
ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி
சாமிநாத தம்பிரான் சுவாமிகள் அவர்கள்



திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம்
இருபதாம் பட்டத்தில் எழுந்தருளியிருக்கும்
ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி
அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

உள்ளுறை

முன்னுரை :

நூல்

	பக்கம்
திருவாதவூரடிகள் வரலாறு	1 – 79
மாணிக்கவாசகர் காலம்	80 – 104
திருவாதவூரடிகள் அருளிய அருள் நூல்கள் :	
1. திருவாசகம்	105 – 224
2. திருச்சிற்றம்பலக் கோவை	224 – 277
திருவாசகமும் கோவைத் திருவாசகமும்	278 – 284
தொல்காப்பியமும் திருக்கோவையாரும்	285 – 288
இறையனார் களவியலுரையும் திருக்கோவையாரும்	289 – 293
சங்க நூல்களும் திருக்கோவையாரும்	294 – 319
திருக்குறளும் திருக்கோவையாரும்.	314 – 321
தேவாரமும் திருக்கோவையும்	322 – 329
திருவாதவூரடிகள் மேற்கொண்டொழுகிய சிவநெறிக் கொள்கை	330 – 346
ஒன்பதாந் திருமுறை	347 – 351
1. திருமாளிகைத்தேவர்	351 – 360
2. சேந்தனார்	360 – 369
3. கருவூர்த்தேவர்	370 – 385
4. பூந்துருத்தி நம்பிகாட நம்பி	385 – 388
5. கண்டராதித்தர்	388 – 392
6 வேணாட்டடிகள்	392 – 394
7. திருவாலியமுதனார்	395 – 397
8. புருடோத்தம நம்பி	397 – 399
9. சேதிராயர்	399 – 401

பத்தாந் திருமுறை

திருமூல நாயனார் வரலாறு	401 – 416
திருமூல நாயனார் காலம்	416 – 425
திருமந்திர நூலமைப்பு	425 – 451
திருமந்திரமும் திருக்குறளும்	452 – 456
திருமந்திரமும் ஏனைய திருமுறைகளும்	457 – 478
திருமந்திரமும் மெய்கண்ட நூல்களும்	479 – 507

பதினோராந் திருமுறை	508 – 511
1. திருவாலவாயுடையார்	511 – 519
திருமுகப் பாசுரம்	512 – 517
2. காரைக்கா லம்மையார்	520 – 544
திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள்	530 –
திருவிரட்டை மணிமாலை	532 –
அற்புதத் திருவந்தாதி	534 –
3. ஐயடிகள் காடவர்கோன் நாயனார்	544 – 555
க்ஷேத்திரத் திருவெண்பா	551 –
4. சேரமான் பெருமாள் நாயனார்	555 – 613
(1) பொன்வண்ணத் தந்தாதி	569 –
(2) திருவாரூர் மும்மணிக்கோவை	592 –
(3) திருக்கயிலாய ஞானவுலா	602 –
5. நக்கீரதேவ நாயனார்	613 – 693
(1) கைலைபாதி காளத்திபாதி யந்தாதி	631 –
(2) திருவீங்கோய்மலை யெழுபது	640 –
(3) திருவலஞ்சுழி மும்மணிக்கோவை	653 –
(4) திருவெழு கூற்றிருக்கை	656 –
(5) பெருந்தேவபாணி	659 –
(6) கோபப் பிரசாதம்	663 –
(7) காரெட்டு	667 –
(8) போற்றித் திருக்கலி வெண்பா	668 –
(9) திருமுருகாற்றுப்படை	669 –
(10) திருக்கண்ணப்ப தேவர் திருமறம்	685 –

6 கல்லாடதேவ நாயனார் 693 – 698

திருக்கண்ணப்ப தேவர் திருமறம் 696 –

7. கபிலதேவ நாயனார் 698 – 703

(1) மூத்தநாயனார் திருவிரட்டை மணிமாலை 698 –

(2) சிவபெருமான் திருவிரட்டை மணிமாலை 701 –

(3) சிவபெருமான் திருவந்தாதி 702 –

8. பரணதேவ நாயனார் 703 - 708

(1) சிவபெருமான் திருவந்தாதி 704 –

9. இளம்பெருமானடிகள் 708 – 718

(1) சிவபெருமான் திருமும்மணிக்கோவை 709 –

10. அதிராவடிகள் 713 – 717

(1) மூத்த பிள்ளையார் திருமும்மணிக்கோவை 713 –

11. திருவெண்காட்டடிகள் 717 - 766

(1) கோயில் நான்மணி மாலை 737 –

(2) திருக்கழுமல மும்மணிக்கோவை 743 –

(3) திருவிடைமருதூர் மும்மணிக்கோவை 748 –

(4) திருவேகம்பமுடையார் திருவந்தாதி 756 –

(5) திருவொற்றியூர் ஒருபா வொருபது 762 –

12. நம்பியாண்டார் நம்பி 766 - 792

(1) திருநாரையூர் விநாயகர் திருவிரட்டை மணிமாலை 766 –

(2) கோயிற்றிருப்பண்ணியர் விருத்தம் 769 –

(3) திருத்தொண்டர் திருவந்தாதி 772 –

(4) ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி 774 –

(5) ஆளுடைய பிள்ளையார் திருச்சண்பை விருத்தம் 778 –

(6) ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக்கோவை 778 –

(7) ஆளுடைய பிள்ளையார் திருவுலாமாலை 782 –

(8) ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம் 785 –

(9) ஆளுடைய பிள்ளையார் திருத்தொகை 788 -

(10) திருநாவுக்கரசுதேவர் திருவேகாதச மாலை 789 –

பன்னிரண்டாந் திருமுறை	793 – 1055
சேக்கிழார் நாயனார் வரலாறு	798 –
சேக்கிழார் நாயனார் காலம்	801 –
திருத்தொண்டர்புராணம் :	
நூலமைப்பு	826 –
திருமலைச் சிறப்பு	836 –
திருநாட்டுச் சிறப்பு.	840 –
திருநகரச் சிறப்பு	854 –
திருக்கூட்டச் சிறப்பு	874 –
தடுத்தாட்கொண்ட புராணம்	882 –
தில்லைவாழந்தணர் முதல் இசை ஞானியார் ஈறுகவுள்ள திருத்தொண்டத் தொகை அடியார்களின் வரலாற்றுக் குறிப்புக்கள்	884 –
திருத்தொண்டர் புராணத்திற் போற்றப்பெற்ற நாயன்மார்களின் காலம்	986 –
திருத்தொண்டர் குலம்	990 –
திருத்தொண்டர்கள் வீடுபெற்ற திறம்	991 –
தொகைவிரி நூல்களில் முரண்பாடின்மை	992 –
சேக்கிழார் எடுத்தாண்ட முன்னூற் சான்றுகள்	1003 –
திருத்தொண்டர் புராணச் சிறப்பு	1032 –
பிற்சேர்க்கை :	
1. தாராசுரம் இராசராசேச்சுரத் திருக்கோயிலிலுள்ள திருத்தொண்டத் தொகையடியார்களின் வரலாற்றுச் சிற்பங்கள். (நிழற் படங்களும் அவற்றின் விளக்கமும்)	1 –
2. திருப்பனந்தாள் திருக்கோயிலிலுள்ள திருத்தொண்டத் தொகையடியார்களின் சிற்பங்கள் (படமும் விளக்கமும்)	36 – 39
3. திருஞானசம்பந்தர் முதலிய தேவார ஆசிரியர்களின் வரலாற்று முறைத் திருப்பதிகத் தல அட்டவணை	40 –

நிழற்படங்கள்

இராஜராஜ அபய குலசேகர சோழ மகாராஜா (நூல் முகப்பு)

சேக்கிழார் (திருநாகேச்சரத் திருக்கோயில்)

திருத்தொண்டத் தொகையடியார்களின் வரலாற்றுச் சிற்பங்கள் (தாராசுரம் திருக்கோயிலில் உள்ளவை) 1 முதல் 72G வரையுள்ள படங்கள் பிற்சேர்க்கை

திருப்பனந்தாள் திருக்கோயிலிலுள்ள திருத்தொண்டத்தொகை அடியார்களின் சிற்பங்கள் (73-ம் படம்)

கருவூர்த்தேவரும் இராசராச சோழனும் (74-ம் படம்) தஞ்சை இராசராசேச்சுரத்திலுள்ளது

பொருட்குறிப்பகராதி

பிழையும் திருத்தமும்


இராஜராஜ அபயகுல
சேகர சோழ மகாராஜா

சிவமயம்

பன்னிரு திருமுறை வரலாறு

திருவாதவூரடிகள்

சிவநெறிப்பனுவலாகிய பன்னிரு திருமுறைகளுள் எட்டாந் திருமுறையாகத் திகழ்வன திருவாசகம் திருச்சிற்றம்பலக்கோவை யென்பன. அன்பினால் ஓதுவார் கேட்பார் ஆகிய அனைவருள்ளத்தையும் உருக்கவல்ல இச் செழும் பாடல்களைத் திருவாய்மலர்ந்தருளிய திருவருட் செல்வர், சைவசமய குரவர் நால்வருள் ஒருவராகிய திருவாதவூரடிகளாவர். முன்னைத்தவத்தின் பயனாக முழு முதற் கடவுளாகிய சிவபெருமானே குருவாக எளிவந்து அருள்செய்யப்பெற்ற இப்பெருந்தகையார், பழுதிலாச் செந்தமிழாகிய மணிவார்த்தைகளால் இறைவனது பொருள் சேர்புகழை விரித்துரைத்துப் போற்றினமையால் மாணிக்க வாசகர் என அழைக்கப்பெற்றார்.

திருவாதவூரடிகளாகிய இவரது வரலாறு, கி. பி. 13-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த செல்லிநகர்ப் பெரும்பற்றப்புலியூர் நம்பி பாடிய திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்திலும் கி.பி. 17-ம் நூற்றாண்டில் வாழ்ந்த பரஞ்சோதி முனிவர் பாடிய திருவிளையாடற் புராணத்திலும் இவர்க்குப் பின் வந்த கடவுள் மாமுனிவர் பாடிய திருவாதவூரடிகள் புராணத்திலும் திருவுத்தரகோசமங்கைப் புராணம் கடம்ப வன புராணம் திருப்பெருந்துறைப் புராணம் முதலிய பிற் காலத் தலபுராணங்களிலும் விரிவாகவும் சுருக்கமாகவும் விளக்கப்பெற்றுளது. இப்புராணங்கள் யாவும் மாணிக்க வாசகர் வாழ்ந்த காலத்திற்குப் பல நூற்றாண்டுகள் பிற் பட்டுத் தோன்றியனவாதலின் அடிகளது வரலாற்றைக் கூறும் முறையில் இவற்றிடையே சிற்சில வேறுபாடுகள் காணப்படுகின்றன. இந்நூல்கள் கூறும் முறையில் அடிகளது வரலாறு பற்றிய செய்திகளை நிரல்படத் தொகுத்து நோக்குவோமாக.

(1) திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம்

மதுரைத் திருவாலவாயில் வீற்றிருந்தருளும் சோம சுந்தரக் கடவுள் தன்பால் மெய்யன்புடைய அடியார்கள் பொருட்டு நிகழ்த்தியருளிய அற்புத நிகழ்ச்சிகளாகிய திருவிளையாடல்கள் அறுபத்துநான்கினையும் விரித்துக் கூறுந் தமிழ் நூல்களுள் மிகவுந் தொன்மையுடையதாக விளங்குவது திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராண மாகிய இதுவேயாகும். இது வடமொழியில் உத்தரமகா புராணத்திலுள்ள சாரசமுச்சயம் என்ற பகுதியிற் கூறப் பட்டவற்றை ஆதாரமாகக் கொண்டு இயற்றப்பட்டதென் பர். இதன்கண் விரித்துரைக்கப்பெறும் அறுபத்துநான்கு திருவிளையாடல்களுள் ஞானோபதேசஞ் செய்த திருவிளை யாடல், நரிகுதிரையான திருவிளையாடல், குதிரை நரியான திருவிளையாடல், மண்சுமந்த திருவிளையாடல் ஆகிய நான்கும் அன்புடைத் தொண்டராகிய திருவாதவூரடிகள் பொருட்டு ஆலவாயிறைவரால் நிகழ்த்தப்பெற்ற அருட் செயல்களாகும். இறைவன் செய்தருளிய இத் திருவிளை யாடல்களை விளக்கும் நிலையில் திருவாதவூரடிகளது வரலாறு இப்புராணத்தில் இடம்பெற்றுளது.

செந்தமிழ்ப் பாண்டி நாட்டிலே பொய்யாவாய்மொழிக் கபிலர் என்னும் புலவர் பெருமான் பிறந்தருளியதும் வாயு தேவனால் வழிபடப்பெற்ற சிவபெருமான் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருப்பதும் ஆகிய திருவாதவூரிலே மானமங்கலத்தார் என அழைக்கப்பெறுந் தொன்மை யமைந்த ஆமாத்தியர் குலத்திலே இறைவனருளால் சிவகணத்தலைவரொருவர் வந்து பிறந்தருளினார். அவர்க்கு வாதவூரர் என்றபெயர் இடப்பெற்றது. திருவாதவூரர் முன்னைப்பிறப்பின் தொடர்பால் அறிவுநூல்கள் எல்லா வற்றையும் பதினாருண்டு நிரம்புதற்கு முன்னரே கசடறக் கற்றுணர்ந்தார். அந்நாளிற் பாண்டி நாட்டை யாண்ட வேந்தர் பெருமானாகிய பாண்டியன், வாதவூரரது கல்வி யறிவாற்றலைக் கேள்வியுற்று அவரைத் தன்பால் வர வழைத்துத் ‘தென்னவன் பிரமராயர்’ என்ற சிறப்புப் பெயருடன் பல வரிசைகளும் தந்து பாராட்டித் தன் அமைச்சர்களில் ஒருவராக அமர்த்திக்கொண்டான். அரச னாற் சிறப்புப்பெற்ற திருவாதவூரர், அவனுடைய நால்வகைச் சேனைகளையும் நன்கு பாதுகாக்கவல்ல தலைமையமைச்சராய்ப்

போர் செய்தலும் பகைவர்பால் திறைகொள்ளுதலும் நண்பராகிய வேந்தர்க்கு இனியன புரிதலும் ஆகிய அரசியற் கடமைகளைத் திருத்தமுறச் செய்து வந்தார். தன்னலமற்ற அமைச்சர் தலைவராய் விளங்கும் அப்பெருந்தகையார், மதுரைச் சொக்கநாயகனாகிய சிவபெருமான்பால் அளவிலாப் பேரன்புடையராய்ச் சிவனடியார்க்கும் தம்முடைய சுற்றத்தார்க்கும் வேண்டுவன புரிந்து உலக மக்கள் அனைவர்க்கும் நலந்தரும் நல்லறங்களைச் செய்வாராயினர். இவரது அமைச்சுரிமைச் செயலால் பாண்டியனுக்கு முன்னையினும் பன்மடங்கு செல்வம் பெருகுவதாயிற்று. அதுகண்டு மன்னன் அளவிலா மகிழ்ச்சியடைந்தான்.

ஒரு நாள் பாண்டிய மன்னன் அரசவையிலே வீற்றிருந்தபொழுது குதிரைத்துறைக் காவலாளர்சிலர் அரசன் திருமுன் வந்து வணங்கி நின்று, 'வேந்தர் பெருமானே, நம் சேனையைச் சேர்ந்த குதிரைகளிற் பெரும்பாலன பல வகை நோய்களால் இறந்து போயின. எஞ்சியுள்ளன சிலவும் மெலிவுற்று இறக்கும்நிலையி லுள்ளன. பகைவர் நாட்டினை வென்று கொள்ளும் மன்னவர்பால் ஒரு நூறுயிரம் குதிரைகளேனும் அவசியம் வேண்டப்படுவன' எனத் தெரிவித்தார்கள். அது கேட்ட பாண்டியன், வாதவூரரை அழைத்து 'அமைச்சர் தலைவரே, நம் குதிரைத்துறைக் காவலர் நம்முடைய குதிரைகளெல்லாம் நோயால் இறந்து போயின எனக் கூறிச் சென்றுர்கள். நீவிர் நம் கருவூலத்திலிருந்து வேண்டுமளவும் பொருள்களை யெடுத்துக்கொண்டு குதிரைகள் வந்திறங்கும் கடற்றுறைப் பட்டினத்தை யடைந்து நல்லிலக்கணம் வாய்ந்த சிறந்த குதிரைகளைத் தேர்ந்து வாங்கி வருவீராக' எனப் பணித்தான். வாதவூரரும் மன்னனை வாழ்த்தி 'அவ்வாறே விரைவிற் செய்வேன்' என்க்கூறி அரசன்பால் விடைபெற்று நிதியறையிற் சென்று வேண்டும் பொருள்களை யெடுத்துக்கொண்டு கணக்கிற் பதிவு செய்து அப்பொருளைப் பெட்டகத்திற்கட்டி நம்பிக்கைக்குரிய ஏவலாளர்களைத் தமக்குத் துணையாகக் கொண்டு அவர்களிடம் பொருட் பெட்டகத்தை ஒப்புவித்துப் பயணப்படுத்தினுர்; திருவாலவாய்த் திருக்கோயிலை யடைந்து பொற்றாமரையில் நீராடி நியமங்கள் செய்து அங்கயற்கண்ணியொடும் அமர்ந்த ஆலவா யிறைவரைப் பணிந்து போற்றினுர்; 'எல்லாம் வல்ல இறைவனே, பாண்டிய

மன்னனுக்குரிய பெரும் பொருளைக்கொண்டு அடியேன் முடிக்கக்கருதிய காரியம் இடையூறின்றி இனிது நிறைவேற அருள்புரிவாயாக' என வேண்டி நின்றார். அவ்வளவில் இறைவனைப் பூசிக்கும் இயல்பினராகிய அந்தணர் ஒருவர், திருவாதவூரரையடைந்து உவப்புடன் திருநீறு நல்கினர். திருவருள் வண்ணமாகிய அத் திருநீற்றினை ஆர்வமுடன் வாங்கி யணிந்து கொண்ட வாதவூரர், தாம் கருதிச்செல்லும் காரியம் நன்கு நிறைவேறுமென்னும் துணிபுடையராய் மகிழ்ந்து சேனைகள் சூழச் சிவிகையிலேறி மதுரையை விட்டுப் புறப்பட்டார். நெடுந்தூரஞ் சென்று வழியிடையே யமைந்த கானப்பேர் என்னுந் திருப்பதியை யடைந்து அங்குக் கோயில் கொண்டருளிய சிவபெருமான் திருவடிகளைப் பணிந்து போற்றினர். பின் அங்கிருந்து புறப்பட்டுப் பலகாத தூரங் கடந்து சென்று மொய்யார் தடம் பொய்கை யென்னுந் தீர்த்தச் சிறப்பமைந்த திருப்பெருந்துறையை அணுகினர்.

பெருந்துறை புகுந்த வாதவூரர், உள்ளமும் உரையும் வேறு தன்மையடைய, அன்பு கரைகடந்து மீதூர, இரு கண்களிலும் நீரொழுக அழல் சேர் மெழுகென நெஞ்சம் நெகிழ்ந்துருகப் பெற்றார்; இதற்கு முன் செல்வத்தின் மேலிருந்த அவாவானது அற்றுப்போகத் தமது நெஞ்சம் ஒருவழி ஒடுங்குதலைக் கண்டார்; மிகவும் வியந்தார்; இவ்விடத்தில் ஏதோ ஒரு புதுமையிருத்தல் வேண்டுமென உணர்ந்தார்; 'கொணர்ந்த பொருளுடன் இங்கேயே தங்கி யிருப்போம்' எனத் தம் மனத்துள் எண்ணினர்; தம்முடன் வந்த சேனைத்தலைவர் முதலிய ஏவலாளர்களை நோக்கி 'ஆடி மாதத்தில் குதிரை வருதல் இல்லை; ஆவணித் திங்களில்தான் வந்திறங்கும். அப்பொழுது நல்ல குதிரைகளை யானே வாங்கிக்கொண்டு வருவேன். நீங்கள் இப்பொழுதே பாண்டிய மன்னனையடைந்து இச் செய்தியைத் தெரிவிப்பீராக' என்று சொல்லி அவர்களைப் போகவிடுத்தார். ஏவலாளர்களும் அவ்வாறே மதுரைக்குச் சென்று மன்னனைப் பணிந்து வாதவூரர் கூறியவற்றைத் தெரிவித்தார்கள்.

இப்பால், திருப்பெருந்துறையில் தங்கிய வாதவூரர், பொய்கையில் நீராடித் திருநீறணிந்து சிவபெருமானை வழிபடுதற்குத் திருக்கோயிலுள் தனியே புகுந்தார். அப்

பொழுது, கோயிலுள்ளேயமைந்த குருந்தமரத்தின் நிழலிலே தாரகை நடுவே தண்மதி விளங்குவது போன்று சிவனடியார் களாகிய மாணக்கர்களுக்கு நடுவே சிவபெருமான் ஆசிரியத் திருமேனிகொண்டு எழுந்தருளியிருந்தார். அவ்வழகிய தெய்வக்காட்சியைக் கண்ட திருவாதவூரர், தம் செயலற்று உடல் நடுங்கி நிலத்தின் மீது விழுந்து பலமுறை பணிந்து நின்றார். ஆசிரியத் திருமேனி கொண்டு எழுந்தருளிய இறைவர், வாதவூரரை முடிமுதல் அடிவரையும் மந்திரங் களால் நோக்கி அருட்பார்வையால் உபதேசித்து அவரைத் தூயராக்கி முகமலர்ந்து முறுவலித்துத் தம் அருகேயழைத்து அவர்தம் முடிமிசைத் தம்திருவடிகளைச் சூட்டித் திருவைந் தெழுத்தின் உண்மையைச் செவிப்புலத்து அறிவுறுத்தி யருளினார். அந்நிலையே வாதவூரர் பரமஞானம் வந்தெய்தப் பெற்றுச் சிவஞானச் செல்வராயினார். அவரது நாவில் கலைஞானத் தெய்வமாகிய நாமகள் வந்து அமர்ந்தாள். ஆணவம் முதலிய மும்மலங்களும் அவரை விட்டு அகன்று ஒழிந்தன. குருநாதராகிய இறைவர், திருவாதவூரரை நோக்கி 'அன்பனே, நீ சிவபுண்ணியஞ் செய்தமையால் மனத்தால் நாடியுணரும் பேற்றினைக் கண்களாற் காணப்பெற்றனை; நம்மைப்பாடுவாயாக' எனப் பணித்தருளினார். ஆசிரியர் பணித்த வண்ணம் திவாதவூரடிகள் திருவாசகமாகிய செழும்பாடல்களைப் பாடத்தொடங்கிச் சென்னிப்பத்து, அச் சோப்பத்து ஆகிய பனுவல்களைப் பாடிப் போற்றினார். இங்ஙனம் இறைவனது பொருள்சேர்புகழைப் போற்றிப் பரவும் திருவாதவூரர், அமைச்சர் கோலம் நீங்கி, முற்றத் துறந்து நான்மறை முனிவராய்த் திகழ்ந்தார்.

குருவாய் வந்தருளிய இறைவன், நான்மறையோதும் மாணக்கர்களாகிய அடியவர் கூட்டத்தை வாதவூரடிகளுக்குக் காட்டியருளினான். அவர்களைக்கண்ட அடிகள் 'நண்பர்களே, நீங்கள் முன்னை நல்வினைப்பயனால் ஈசனிடத்து அன்பு பூண்டு அவனைப் பிரியாதிருக்கப் பெற்றீர்கள். யானும் அன்பர்களாகிய நும்மை அடையப்பெற்று மகிழ்கின்றேன்' என்று அதிசயப்பத்தினைப் பாடினார். அந்நிலையில் அருட்குரு வாகிய இறைவர், 'மாணிக்கவாசக, இங்கு நில்' என்று சொல்லித் தம் மாணக்கர்களாகிய தொளாயிரத்து தொண்ணூற்றொன்பதின்மரோடும் விரைவில் மறைந்தார். அந்நிலையில் ஆசிரியப் பெருமானையும் உடன்வந்த அடியார்

களையும் காணப்பெருத வாதவூரடிகள், அளவிலாத்துயருற்று அழுதரற்றினர். தம்மை ஆட்கொண்டருளிய குருமணியை நினைந்து கண்ணீர் ஆருய்ப்பெருகக் கோயிற்பத்து, புணர்ச்சிப்பத்து, செத்திலாப்பத்து, பிரார்த்தனைப்பத்து, ஆசைப்பத்து, உயிருண்ணிப்பத்து, திருப்புலம்பல், வாழாப் பத்து, எண்ணப்பத்து ஆகிய திருவாசகப்பனுவல்களை நெஞ்சம் நெக்குருகிப்பாடிப் போற்றினர். பின்பு பெருந் துறையாகிய அந்நகரத்தினுள்ளே சென்று அங்கு நிகழும் விளையாடல்களைக் கண்ணுற்று அம்மானை, பொற்சுண்ணம் கோத்தும்பி, தெள்ளேணம், பூவல்லி, உந்தி, தோணோக்கம் (திருவெம்) பாவை, சதகம் ஆகிய பனுவல்களை ஓதினர்.

இங்ஙனம் திருவாதவூரடிகள் இறைவனது திருவருட் டிறத்தை யெண்ணி அப்பெருமானது பிரிவினல் உள்ளம் வருந்தி ஊணுறக்கமின்றித் திருவாசகம் ஓதக்கேட்ட தொண்டர்கள், அதிசயித்துத் தேனினுமினிய இத்திருப் பாடல்கள் நாம் முன்பு கேட்டன அல்ல; புதியனவாக வுள்ளன ' என அடிகளைச் சூழ்ந்து பாராட்டிப் போற்றி ஞர்கள். அடிகள் தாம் குதிரைத் திரள் வாங்குதற்கெனக் கொண்டு வந்த பொருளனைத்தையும் பின்வரும் காரியத்தை நோக்காது அடியார்களுக்கு வாரி வழங்கினர். சிறிது நாளிற் பொருளனைத்தும் செலவாயிற்று.

இங்ஙனம் வாதவூரர் கொண்டு சென்ற பொருளனைத் தும் செலவழிந்த செய்தியையறிந்த ஏனைய அமைச்சர்கள், பாண்டியனிடத்திற் சென்று தெரிவித்தனர். அஃதுணர்ந்த அரசன் பெரிதும் சினமுற்ருன். 'தென்னவன் எழுதும் ஓலை; தென்னவன் பிரமராயன் காண்க. என் பொன்னறையி லிருந்து பெரும் பொருளை வாரிக்கொண்டு குதிரைத்திரள் வாங்கிவருவதாகக் கூறிச்சென்றவன் இன்னம் வாராமலிருப் பது எது கருதி? அமைச்சனுக்கு இஃது அழகாகுமோ? உடனே குதிரைகளைக் கொண்டு விரைவில் வருக' என ஓலையொன்றெழுதி, அதனைத் தூதர்கையிற் கொடுத்தனுப் பினன். அரசனல் அனுப்பப்பட்ட தூதர், பெருந்துறையை யடைந்து ஓலையை வாதவூரர்க்குக் காட்டினர். அவ்வோலை யைக் கண்ட அளவில் அரசனது கருத்துணர்ந்த வாதவூரடி கள் மனக்கலக்கமுற்ருர். 'பாண்டியனுடைய அமைச்சனகிய யான் குதிரை வாங்குதற்கெனக் கொணர்ந்த பொருளெல்லா வற்றையும் என் விருப்பப்படி செலவழித்து விட்டேன்,

நாடாளும் வேந்தனுக்குத் தவறிழைத்த யான் எங்ஙனம் உய்வேன்?' எனப் பலவாறு புலம்பினர். 'எனது இடர் நிலையை என்னையாட்கொண்ட இறைவனுக்கு எடுத்துரைப் பேன்' எனத்துணிந்து, பொழுது புலர்வதன்முன் திருப் பெருந்துறைக் கோயிலுட் சென்று இறைவன் திருமுன் நின்று 'போற்றியென் வாழ்முதலாகிய பொருளே' எனத் தொடங்கும் திருப்பள்ளியெழுச்சியைப் பாடித் துதித்துத் தம்முடைய குறைகளைத் தெரிவித்து முறையிட்டார். 'நினக்கு யாம் துணையுண்டு. விரைவிற் குதிரை வரும் என்று பாண்டியனுக்குத் திருமுகம் எழுதி விடுப்பாயாக' என்ற தோர் அருள்வாக்கு விசும்பில் தோன்றியது. அதனைக் கேட்டு மகிழ்ந்த அடிகள், 'சீர்த்திமிக்க பாண்டிய மன்ன னுக்கு அடியேன் வாதவூரன் விண்ணப்பம் :- இன்னும் ஐந்தாறு நாட்களில் குதிரைகள் வந்து சேரும். அவற்றுக் குரிய பந்திகளையும் நீர்த்தடங்களையும் திருத்தமுற அமைத்து நகர வீதிகளையும் குதிரைகளை நடத்தும் செண்டு வெளியை யும் அலங்கரிக்கும்படி ஏற்பாடு செய்தல் வேண்டும்' என்று திருமுகமெழுதி அவ்வோலையைத் தூதர் கையிற் கொடுத்து அனுப்பிவிட்டு, மீண்டும் திருக்கோயிலிற் சென்று மனக் கவலை தீர்ந்து சிறிது பொழுது துயில்கொண்டார். அன்ப ரது பாரத்தைத் தம்முடையதாக ஏற்றுகொள்ளும் சிவபெரு மான், அடிகளாரருகே வந்து தோன்றி, 'இக்காரியத்தை யாம் முடித்தல் திண்ணம். இன்னும் மீளவும் வேந்தன் ஆளனுப்புதற்கு முன்னமே நீ அவனையடைந்து அவன் மகிழத்தக்க வகையில் சமாதானம் கூறுவாயாக' எனக்கூறி மறைந்தருளினர்.

கனவுநிலை நீங்கி விழிப்புற்ற வாதவூரடிகள், திருப் பெருந்துறை யீசனைத்தொழுது விடைபெற்று மதுரையை அடைந்தார். அடிகள் போவதற்கு முன்னரே அவரெழுதிய ஓலையைத் தூதர் வாயிலாகப்பெற்ற பாண்டியன் சினந் தணிந்திருந்தான். அந்நிலையில் வாதவூரர் சென்று மன்னனை வணங்கினர். அவரைக்கண்ட பாண்டியன், அன்புடன் வரவேற்றுச் சிறப்பித்துத் தனியே அழைத்துச் சென்று 'எவ்வளவு குதிரைகள் வாங்கினீர்? எந்தத் துறையில் தங்கியிருந்தீர்? நும்மால் வாங்கப்பெற்ற குதிரைகள் எவ்வண்ணத்தன?' என[illegible] வினன். இங்ஙனம் மன்னன் கேட்ட

வாதவூரடிகள், இறைவன் திருவருளை மனத்திற் கொண்டு தக்கவாறு விடைபகர்ந்தார். அடிகள் கூறியவற்றைக் கேட்டு மகிழ்ச்சியுற்ற பாண்டியன், அவர்க்குப் பல வரிசைகள் நல்கி அவர்தம் மாளிகையிற் செல்லப்பணித்தான்.

மன்னன்பால் விடைபெற்ற அடிகள், திருவாலவாய்த் திருக்கோயிலிற்புக்குச் சொக்கநாதரைப் பணிந்து 'உமை யொருபாகனுகிய பெருமானே, குதிரைகள் விரைவில் வந்து சேருமென்று பாண்டியன் மகிழ உரைத்தேன். குதிரை வாங்குதற்கென அரசன் தந்த பொருள்களையெல்லாம் அடியார்களுக்குச் செலவிட்டேன். உன்னையல்லால் அடியேற்குத் துணையாவார் ஒருவருமிலர்' எனத் தனி நின்று குறையிரந்தார். அப்பொழுது 'அஞ்சல், அஞ்சல்' என்றதோர் அருள்வாக்கு விசும்பிடைத் தோன்றியது. அது கேட்டுத் தேறுதலடைந்த வாதவூரர், தமது மாளிகையிற் சென்று இறைவனை வழிபட்டு அமுது செய்து, கருதிய காரியம் எவ்வாறு முடியுமோ என்ற மனக்கவலையுடன் துயில் கொண்டார். அந்நிலையில் உறவினர்கள் வந்து அடிகளை யெழுப்பி, அரசன்பால் அவர் நடந்துகொண்ட செயல் தவறுடைத்தென அறிவுறுத்தினர். 'நீர் அரசனுக்குச் செய்த தவறுதலால் நும் சுற்றத்தவர்களாகிய எங்களுக்கு என்ன தீங்கு நேருமோ? எமக்குத்துணையாவார் யார்' எனக்கூறி வருந்தினுர்கள் அவர்களது மனக்கருத்துணர்ந்த வாதவூரர், அவர்களை நோக்கி 'உமக்கும் எனக்கும் என்ன தொடர்புளது? எனக்கு உலகத்தில் வெறுப்புமில்லை; விருப்புமில்லை. இறைவன் மானிடத்திருமேனிகொண்டு எழுந்தருளி வந்து என்னை ஆட்கொண்ட அன்றே எனது பிறப்பொழிந்தது. அரசனுக்குத் தவறு செய்தலாகாது என்னுங்கருத்திஞலேயே இங்கு யான் இப்பொழுது வந்தேன். அரசனிடத்துப் பொருள் பெற்று நேர்ந்த கடன் முழுவதையும் ஓர் உபாயத்தால் விரைவில் தீர்த்துவிடப் போகின்றேன். நீங்கள் உங்களுக்காவனவற்றைப் பார்த்துக் கொண்டு போமின்' எனக்கூறினுர். அதுகேட்ட உறவினர்கள் மனம் நொந்து அவரை விட்டு அகன்று போயினர்.

மறுநாள் பாண்டியனுல் அனுப்பப்பட்ட ஏவலாளர் சிலர் வாதவூரரையடைந்து 'குதிரைகள் வந்தனவோ' என வினவினர். அதுகேட்ட அடிகள் 'குதிரைகள் மெய்யாகவே இப்பொழுது வந்துவிடும். நீங்கள் அவசரப்படுதல் வேண்

டாம். நகரத்தை அலங்கரித்து வைக்கும்படி சொல்லுமின். எனது சொல் தப்பாது? எனக்கூறியனுப்பினர். அடிகள் குறித்த காலம் வந்தும் குதிரைகள் வந்து சேரவில்லை. அதனையெண்ணிச் சினமுற்ற பாண்டியன், முறைசெய்வோரை வாதவூரர்பால் அனுப்பிக் கேட்கச்செய்தான். அடிகள் முன்போலவே மறுமொழி சொல்லியனுப்பிவிட்டார். இந்நிலையில் அமைச்சர் பலரும் ஒன்றுகூடி அரசனையணுகி 'வேந்தர்பெருமானே, பித்தனுகிய வாதவூரனது வார்த்தையை மெய்யென நம்பி நகரத்தை அலங்கரிக்கச்செய்தனை. குதிரை வாங்கி வருவதாகக் கூறிச்சென்ற வாதவூரன் பெருந்துறையையடைந்து பித்தனுகி நினது பொருள் முழுவதையும் மனம்போனபடி செலவழித்து விட்டான். இரக்கமின்றி அவனைத் தண்டித்து அவனிடமிருந்து பொருளை வாங்கிக்கொள்ளுதலே இனிச் செய்யத்தகுவதாகும்' என அறிவுரை கூறித் தெளிவித்தனர்.

அமைச்சர் சொற்கேட்ட பாண்டியன், தனது தெளிவின்மையால் நேர்ந்த பொருளழிவினை யெண்ணிப் பெருமூச்சு விட்டுக் கண்களில் தீயெழச் சினங்கொண்டான். 'மையல் நெஞ்சினனுகிய வாதவூரனை வளைத்துப்பிடிமின்' எனப் பிரம்படிக்காரரை ஏவினன். அவர்களும் மன்னன் பணித்த வண்ணம் வாதவூரடிகளையடைந்து வளைத்துப் பிடித்தனர். எனினும் அடிகளது சிவபத்தி மாண்பினை யுணர்ந்து அவரைத் துன்புறுத்த அஞ்சினர். வாதவூரரைச் சிறைப்படுத்தி வருத்தும்படி பாண்டியன் பின்னுஞ்சிலரை அனுப்பினுன். அவர்கள் அடிகளைப்பற்றிச் சென்று கொடுஞ் சிறையில் வைத்துத் துன்புறுத்தினர்கள். துயரம் பொருத அடிகள், இறைவனை நோக்கி முறையிட்டுப் புலம்புவாராயினர். 'ஒளிசெய் மானுடமாக வந்து எனது நெஞ்சினை உருக்கிப் பணிகொண்ட அருளாளா, நீ கூறிய மொழி தப்பாதெனத்துணிந்து, குதிரை விரைவில் வருமென்று மன்னனுக்கு உரைத்தேன். யான் இங்ஙனம் துயருறவும் நீ இரங்காததென்னே? குதிரைகளைக்கொண்டு விரைவில் வருவாயாக' என அழுதரற்றிக் குழைத்தபத்து, அருட்பத்து ஆகிய பனுவல்களைப்பாடிப் போற்றினர்.

அடியார் வருத்தம் தரியாதாராகிய சிவபெருமான், தம்பால் அன்புடைய வாதவூரடிகளது மனத்துயரைப் போக்கத்

திருவுளங்கொண்டு, மிழலை நாட்டுக்காட்டிலே திரியும் நரிகளை யெல்லாம் ஒருங்கு திரட்டி அவற்றுக்கு வேண்டிய அறிவுரை களைச் சொல்லி அவற்றையெல்லாம் குதிரைகளாக்கித் தம்மைப் பிரியாதுள்ள கணநாதர்களைக் குதிரை வீரர்களாகப் பணித்துத் தாமும் ஒரு குதிரைமீதமர்ந்து குதிரைத் திரளுடன் மதுரையை நோக்கி வந்தருளினார். அங்ஙனம் வருபவர், வழியிடையே திருவாதவூரையடைந்து, வாதவூரடி கள் செவியிற்புலப்படும்படி தம்முடைய திருவடிச் சிலம் பொலியைக் காட்டியருளினார். சிறையிலிருந்தபடியே சிலம் பொலியைக் கேட்ட வாதவூரடிகள், ‘இஃது என்னையாண்ட எம்பிரானது பாதச்சிலம்பொலியே யாகும்’ எனத்தெளிந்து இறைவனை இறைஞ்சினர். அப்பெருமான் குதிரைகளைக் கொண்டுவந்தமையுணராது, அவற்றைக்கொணர்ந்தருளும் படி இறைவனை நினைந்து குறையிரந்து வேண்டினார். அந் நிலையில் குதிரைத்திரளின் வருகையைக் கண்ட சிறைக்காவ லர், மனமகிழ்ந்து வாதவூரடிகளை யணுகிக் ‘குதிரைகளின் வரவினை நேரிற் சென்று பாண்டியனுக்குத் தெரிவிப்பீராக’ எனச்சொல்லி அடிகளைச் சிறையினின்றும் விடுவித்தார்கள். அடிகளும் அவ்வண்ணமே மதுரையை யடைந்து பாண்டி யன் முன்னர்ச் சென்று ‘நமது மதுரைப்புறத்தே குதிரை கள் வந்தன என்று தூதர்கள் தெரிவித்தார்கள்’ எனக் கூறினார். அதுகேட்டு மகிழ்ச்சியுற்ற பாண்டியன், குதிரை களின் வரவை எதிர்பார்த்து வீதியின் கண்ணதாகிய மண்ட பத்தில் வந்து அமர்ந்தான். மன்னன் நெடுநேரங் காத்தி ருந்தும் சிவபெருமானது அருள் விளையாட்டால் குதிரைகள் வரத் தாழ்த்தன. பரிகளைக் காணாது மனம் புழுங்கிய பாண்டி யன், ஒற்றர்களை ஏவ, அவர்கள் நாற்றிசையிலும் சென்று நோக்கிக் ‘குதிரைகளைக் கண்டிலோம்’ எனக் கூறினார்கள். அதுகேட்டு வெகுண்ட அரசன், ‘நமது பொருளை யெல் லாம் வீணே செலவிட்டதுமன்றி இங்ஙனம் குதிரைகள் வருவதாகச் சொல்லி ஏமாற்றும் இவ்வமைச்சனை ஊரி னுள்ளே கொண்டு போய் நிறுத்திப் புளியம்வளாரால் அடித்துத் துன்புறுத்துமின்’ எனத் தண்டத் தலைவரை நோக்கிக் கூறினன். அவர்களும் அவ்வாறே அடிகளை யிழுத்துச் சென்று துன்புறுத்தத் தொடங்கிய அளவில், அடிகள் கண்களில் நீர் மல்கத் திருமுகம் வியர்க்கச் சிவபெரு மானை நினைந்து அடைக்கலப் பத்துப் பாடினார். சிறைக்

கூடத்தருகே சோலையிற் புகுந்த குயிலை நோக்கிக் குயிற் பத்துப் பாடினார். அவ்வளவில் இறைவனருளால் குதிரைத் திரள்கள் மதுரை நகர்க்குள்ளே புகுந்தன. அவற்றைக் கண்டு பாண்டியன் பெரிதும் வியந்தான். கேட்போர் நெஞ் சங்கரையத் திருவாசகப் பாடல்களைப் பாடிப் போற்றும் வாத வூரடிகளை அழைத்துவரச் செய்து அவரைத் தன்னருகே அமர்த்தி அவர்தம் கண்களில் வழியும் நீரைத்துடைத்துத் தான் செய்த பிழையினைப் பொறுத்தருளும்படி வேண்டினான்.

இதற்குள் குதிரைவீரர்கள் குதிரைகளை நடத்திக் கொண்டு உடன்வர இறைவர் அழகியதோர் பரிமேலமர்ந்து அரச வீதி வழியே வந்தார். பரிமேலழகராய் வந்தருளிய அவரது பேரழகில் ஈடுபட்டுக் காதல் கொண்ட இளமகளிர் கூறுவதாக அடிகள் அன்னைப் பத்தினைப் பாடினார். குதிரை களைக் கொண்டுவந்த வணிகச் சாத்தினர் அனைவரும் உரு வம் பருவம் முதலியவற்றால் ஒத்த இயல்பினராதலைக் கண்டு வியந்த பாண்டியன், வாதவூரரை நோக்கி 'இவர்களுள் தலைவர் யார்' எனக் கேட்டான். அவரும் 'இப்போது குதிரை யின் முன்னே வந்து தோன்றுவர்' எனக் கூறினார். அவ் வளவில் சிவபெருமான் வெள்ளைப் பரிமீது முன்வந்து தோன்றி 'அரசே, சிறிது நேரம் கண்ணிமையாதிருந்து காண்பாயாக' என மொழிந்து குதிரையின் பலவகைக் கதி களையும் தாம் அமர்ந்துவந்த குதிரையைக்கொண்டு நடத்திக் காட்டினார். அவருடன் வந்த வீரர்களும் தத்தம் குதிரை யினை அவ்வண்ணமே நடத்திக் காட்டினார்கள். அது கண்ட மன்னன், குதிரை வீரர்களை நோக்கி, 'நும் தலைவர் யார்' என வினவினான். சிவகணத் தலைவராகிய அவர்கள், தம்முடன் வந்த இறைவனைச் சுட்டிக்காட்டி, 'யாவருக்கும் தலைவர் இவரே' எனத் தெரிவித்தார்கள். குதிரைச் சேவகனாகிய இறைவனைக் கண்ட பாண்டியன், வியப்பினாலும் களிப்பினா லும் தன்னை மறந்தானாய்க் கைகள் தலைமேற் குவிய வணங் குதற்கு எழுந்தவன், தான் ஒரு குதிரைப் பாகனை வணங்கு தல் தக்கதன்றென நினைந்து வாளாவிருந்தனன். அங்கி ருந்தோர் அனைவரும் பரிப்பாகனாகிய இறைவனைத் தொழுது போற்றினர். பாண்டியன், அமைச்சர்களை நோக்கிக் 'குதிரை வாணிகச் சாத்தின் தலைவராகிய அவர் நம் சொக்க நாதரைப் போலவே எனக்குத் தோன்றுகின்றார். அவர் கொணர்ந்த குதிரைகளைக் காணுங்கள். காலந்தாழ்த்ததாயி

னும் இவற்றை நல்லனவாகத் தேர்ந்து வாங்கிய வாத ஊரரை நோக்குமின்' எனப் பலமுறை வியந்துரைத்தான். குதிரைப் பாகனாகிய இறைவன், அரசன் முன் வந்து 'அரசே உன் மந்திரியாகிய வாதவூரர் தந்த பொருளனைத்தையும் குதிரைகள் தருவதாகச் சொல்லி எம்மவர்கள் கைக்கொண் டார்கள். இக் குதிரைகள் பல தீவுகளிலிருந்தும் இமய மலைக்கு அப்பாலிருந்தும் பெருந்துறையிலே வந்திறங்கி இங்குக் கொண்டுவரப்பட்டன. உடற்பழுதின்றி நற்சுழி களும் நன்னிறங்களும் வாய்ந்த உயர்ந்த சாதிக் குதிரை களாகிய இவை நூறாயிரத்திற்கும் விலையாக, யாங்கள் பெற் றுக்கொண்ட பொன் நூறாயிரமாகும். அறிஞர் முன்னே இவற்றின் நல்லியல்புகளை ஆராய்ந்து கண்டு இக்குதிரை களைக் கைக்கொள்வாயாக. இவை நின்னுடையனவாகக் கைக்கொண்ட பின்னர் இவற்றின் நன்மை தீமைகள் எம்மைச் சார்ந்தனவாகா' எனக் கூறி, ஆவணி மூல நாளிற் குரைகளைக் கயிறு மாறிக் கொடுத்தருளினான். பாண்டிய னும் குதிரைச் சேவகனாகிய இறைவன் சொல்லியவற்றிற் கெல்லாம் முழுதும் உடன்பட்டு 'நாம் குதிரைகள் வாங்கு தற்காகக் கொடுத்த பொன் முழுவதும் இவற்றுள் ஒரு குதிரைக்கேனும் விலையாகப் போதா' எனக் கருதியவனாய், அப் பரித்திரளை ஏற்றுக் கொண்டான். பரித்துறைக் காவ லாளரை யழைத்துக் குதிரைகளை அவர்பால் ஒப்புவித்து அவற்றைப் பந்திகளிற் சேர்க்கும்படி கட்டளையிட்டான். அவர்களும் அக் குதிரைகளைக் கொண்டு சென்று பந்திகளிற் பிணித்தனர்.

கிடைத்தற்கரிய குதிரைகளைப் பெற்ற மகிழ்ச்சியினாலும் குதிரைப்பாகர் காட்டிய குதிரை யேற்றத்தைக் கண்ட வியப் பினாலும் உள்ளங்கிளர்ந்த பாண்டியன், விலை மதித்தற்கரிய பொற் பட்டாடையினைத் தன் கையால் எடுத்துக் குதிரைச் சேவகனாக வந்த இறைவனுக்கு நல்கினான். அத்தலைவன் அவ்வாடையினைத் தன் பரிக்கோலின் முனையால் வாங்கித் தன்னடியாராகிய வாதவூரர் பொருட்டுத் தன் முடிமிசைப் புனைந்து கொண்டான். தான் கொடுத்த ஆடையைப் பரிக் கோலால் ஏற்றது கண்டு பாண்டியன் சினங்கொண்டான். அருகேயிருந்த வாதவூரர், 'அஃது அவர் நாட்டு வழக்கம்' என அமைதி கூறி அரசனது சினத்தைத் தணிவித்தார் மன்னன் அத்தலைவனோடு உடன் வந்த மற்றைய வீரர்க

ளுக்கும் உயர்ந்த ஆடைகளைப் பரிசாக வழங்கினான். வீரர்கள் அவற்றை வாங்கித் தலைமிசைத் தரித்துக் கொண்டார்கள்.

குதிரைச் சேவகனாய் வந்த இறைவன், பாண்டியன் பால் விடைபெற்றுப் புறப்பட்டான். அப்பொழுது வாதவூரடிகள் இறைவர்க்கு முன்னே சென்று அவருடைய திருவடிகளைப்பற்றிக் கொண்டு 'பிடித்த பத்து' என்னும் பனுவலைப் பாடிப் போற்றினார். இறைவன், அடிகளை நோக்கி 'நேசமிக்க முனிவ, நினது நினைவினை இங்கு வந்து முடித்தோம். பாதத்தை விடுக' என்று சொல்லிப் புறப்பட்டுப் போயினான். அன்று குதிரையீடு கண்டவர்களெல்லாம் இது போல்வதொரு காட்சியை முன்பு கண்டிலோம்' எனக் கூறிப் பேரானந்தக் கடலில் திளைத்தார்கள். பாண்டியன் வாதவூரர்க்குப் பொற்பட்டம் முதலிய வரிசைகளை நல்கி அவர் தம் மாளிகைக்குச் செல்லுமாறு விடை கொடுத்தனுப்பி விட்டுத் தனது அரண்மனையை யடைந்தான். குதிரைச் சாத்தின் தலைவனாக வந்த சிவபெருமானும், உடன் வந்த வீரர்களாகிய சிவகணங்களுடன் மறைந்து திருவாலவாய்த் திருக்கோயிலை யடைந்தருளினார்.

குதிரைத்துறைக் காவலர், புதியனவாக வந்த குதிரைகளைப் பந்திகளில் நிரல்படக் கட்டி அவற்றுக்குக் கருப்புக் கட்டியொடு கலந்த கொள், பயறு, துவரை முதலிய இனிய உணவுகளைக் கொடுத்தும் அவை அயின்றில. மாயக் குதிரைகளாகிய அவை, அன்று நள்ளிரவிலே ஒன்றையொன்று முகம் பார்த்து, 'நாம் நேற்று நன்றாக அடிபட்டதுமன்றிக் கழுத்திலும் காலிலும் கயிற்றாற் கட்டுண்டோம். இனி இங்கு நிற்போமானால், குருதி நீரொழுகப் புண்படுவோம். நமக்கு வேண்டாத கொள்ளும் புல்லும் உணவாக இட்டு மனிதர்கள் நம்மேல் தொற்றுவர். விடியுமுன் நம்முருவத்தைக்கொண்டு இவ்விடத்தை விட்டு நழுவி விடவேண்டும்' என்று சொல்லிக் கழுத்திற் கட்டிய கயிற்றைக் கடித்தெறிந்து பண்டை நரிகளாக உருமாறின. நரிகளாகிய அவை, அங்குக் கட்டப்பட்டிருந்த பழைய குதிரைகளைக் கடித்துக்கொன்று அங்கிருந்து புறப்பட்டுக் கடைவீதிகளிலும் மாடமாளிகை திருமடம் முதலியவற்றின் முற்றங்களிலும் திரள்திரளாய்ச் சென்று ஊளையிட்டு ஓடின. ஊர் மக்கள் விழித்தெழுந்தனர். பரித்துறைக் காவலர் என்ன

விளையுமோ என அஞ்சி மனங்கலங்கி மன்னனை யடைந்து 'வேந்தர் பெருமானே, நேற்று வந்த புதிய குதிரைகளைக் கண்ணுறக்கமின்றிக் காத்து வந்தோம். அவை நாங்கள் வைத்த உணவினையுட்கொள்ளாமல் நள்ளிரவிலே நரிபோல் உருப்பெற்றுக் குதிரை, மான், யானைக்கன்று, ஆடு, கோழி முதலியவற்றின் குடர்களைப் பிடுங்கித்தின்று ஊளையிட்டுக் கொண்டு எங்கள் கையிலகப்படாது ஓடிப்போயின' எனக் கூறி முறையிட்டார்கள். அதனைக் கேட்ட பாண்டியன், 'மின்னுமல் இடித்ததுபோல் இத்தகைய துன்பம் நேர்தற்கு எனது அரசியல் முறையில் ஏதேனும் தவறு நிகழ்ந்த துண்டோ? அருளுடைய பெரியோர்க்கு யான் தீங்கிழைத்த துண்டோ' என மனங்கலங்கினன். அத்தாணி மண்டபத்தை அடைந்து அமைச்சர்களை யழைத்து நள்ளிரவில் நிகழ்ந்த வற்றைக் கூறினன். அமைச்சர்கள் மறுமொழி கூற அறி யாமல் தலைகவிழ்ந்து நின்றனர்.

அப்பொழுது வாதவூரடிகள் நாட்கடன்களை முடித்துக் கொண்டு முகமலர்ச்சியுடன் பாண்டியனது பேரவையினை யடைந்தார். முகவாட்டத்துடன் இருந்த மன்னனை நோக்கி 'அரசே, இங்ஙனம் நின் முகம் வாட்டமுற் றிருப்பதேன்' என வினவினர். அவ்வுரை கேட்ட பாண் டியன் அடிகளைச் சினந்து நோக்கி 'நீ நல்லறிவுடைய அமைச்சன். உன்னையொப்பார் யாருளர்? நல்ல குதிரை களைத் தேடிக் கொணர்ந்தாய்' எனக் கடுகடுத்துரைத்தான். வாதவூரர் மனநடுங்கி 'அரசர் பெருமானே. சிறந்தனவாகத் தேர்ந்து கொண்டுவந்த குதிரைகளுள் ஏதேனும் பழு துண்டோ? அறிஞர் முன்னிலையிற் பழுதறக்கண்டு அக் குதிரைகளை நேற்றே ஏற்றுக்கொள்ளவில்லையா' என வினவினர். பாண்டியன் வாதவூரரைச் சினந்து நோக்கி 'நீசிறிதும் அஞ்சாது என் முன்நின்று இவ்வாறு பேசுகின் றனையோ? நேற்று நீ கொணர்வித்த குதிரைகள் யாவும் நரிகளாகி நம்மிடத்திருந்த பழைய குதிரைகளையும் கடித்துப் பிணமாக்கி ஊர்முழுதும் ஊளையிட்டுத் திரிகின்ற செய்தியைப் பித்தனுகிய நீ உணர்ந்திலைபோலும். ஆசிரியர், அரசர், அந்தணர், அன்பிற்கினிய தோழர், அருந்தவத்தோர் ஆகிய வர்களை வஞ்சிப்பார்க்குக் கொலையையன்றி வேறு தண்ட மில்லை. நரிகளையெல்லாம் குதிரைகளாக்கிக் கொணர்ந்து எம்முடைய குதிரைப் பந்திகளிற் கட்டுவித்தாய். இவ்வாறு

அறிவை மயக்கி இந்திரசாலஞ் செய்வது எம்மிடத்தி லேயோ? நீயோ சாதி அந்தணன். உன்னைக் கூறுதற்கு என்ன இருக்கிறது? குதிரைகளை நடத்திவந்த குதிரைச் சேவகன் எங்கே போயினன்? அவனுடன் வந்த ஏனையோர் எங்கே சென்றனர்? அருமறை நூல்களை ஓதியதெல்லாம் இவ்வாறு எம்மை வஞ்சித்தற்குத்தானோ? எனக் கடுமொழி களைக் கூறினன். தண்டத் தலைவரை நோக்கி 'வாதவூர னாகிய இவனைக் கொடுஞ்சிறையில் வைத்துத் தண்டித்து நம் பொருளனைத்தையும் வாங்குமின்' எனப் பணிந்தான்.

தண்டத்தலைவர், வாதவூரடிகளது சிவபக்தி மாண்பினை யுணர்ந்து அடிகளைத் துன்புறுத்தற்கு அஞ்சினராயினும் அரசன் சொற்படி செய்யாவிடில் தமக்குத் தீங்கு வருமென்று அஞ்சி வாதவூரடிகளைச் சிறையில் வைத்துத் தண்டித்தனர். பொறுமைமிக்க பாண்டியன் வாதவூரரைத் தண்டத்தலைவ ருடன் அனுப்பியபின் மனக்கவலையுடன் போந்து தனித் திருந்து வருந்தினன். இப்பால், சிறையிலே துன்புறும் வாதவூரடிகள், அளவிலாத் துயரத்தால் மனங்கலங்கித் திருவேசறவு என்னும் பனுவலைப்பாடி இறைவனை நினைந்து புலம்பினர். அந்நிலையிற் சிவபெருமான் அவருள்ளத்தே தோன்றி ஆருத்துயரத்தைத் தணிவித்தருளினர்.

திருவாதவூரடிகளின் துயரத்தைப் போக்கத் திருவுளங் கொண்ட இறைவர், வருணனை நினைத்தருளினர். அவ்வள வில் அவன் விரைந்து சென்று பணிந்து நின்றான். 'நீவாத வூரர்படும் சிறைத்துன்பம் நீங்கக் கங்குற் பொழுதிலே வைகை யாற்றிற் பெருவெள்ளம் வரச்செய் வாயாக' என இறைவர் வருணனுக்கு அறிவித்தருளினர். வருணனது ஏவ லால் மேகங்கள் திரண்டு மழையைப் பொழிந்தன. வைகை யாற்றிற் பெருவெள்ளமுண்டாயிற்று. என்றுமில்லாத அள வில் வைகையாற்றில் வந்த பெருவெள்ளம், அதன் கரை யினை யுடைத்துக்கொண்டு மதுரை நகருட் புகுந்தது. அதுகண்ட ஊர்காவலர் வெள்ளம் பெருகிய செய்தியை ஊர்மக்களுக்குப் பறையறைந்து தெரிவித்தனர். பறை யொலி கேட்டுத் துணுக்குற்றெழுந்த பாண்டியன், 'கால மல்லாக் காலத்தே வைகை கடலெனப் பெருகியதே? இது என்ன ஊழிக்காலமோ' எனமனங்கவன்றான்; நாடு கண் காணிக்கும் தனது அதிகாரியை யழைத்து, 'வாதவூர் முனி

வரை நாம் சிறை செய்ததனால் விளைந்த துன்பமோ இது? இறைவன் திருவுள்ளத்தை யாரறிவார்? மதுரை நகரில் மனைக்கட்டுடன் குடியிருப்போர் ஒவ்வொருவர்க்கும் தக்க வண்ணம் அடைத்தற்குரிய கரைப்பகுதியை அளந்து கொடுத்து விரைவில் அடைக்கச் செய்வாயாக' என்று சொல்லி யனுப்பினான். அதற்குள் பொழுதும் விடிந்தது.

அரசனது ஆணையினை மேற்கொண்ட அரசியலதிகாரி, ஊர்க்கணக்கர்களை உடனழைத்துக்கொண்டு மதுரை நகரில் வாழும் இளைஞர்முதல் முதியோர்வரை எல்லோரையும் ஒருசேரத் திரட்டிக்கொண்டு வைகைக்கரையினை யடைந்து அவரவர் அடைத்தற்குரிய கரைப்பகுதிகளை அளந்து கொடுத்தனன். அவரவர்களும் தத்தமக்குரிய கரைப்பகுதி யில் மண்ணிட்டு அடைக்கத் தொடங்கினர். அந்நிலையில் மதுரையில் தென்கிழக்கு மூலையிலமைந்த மனை யொன்றில் வாழும் நரைமுதியாளாகிய பிட்டு வாணிச்சி, தனக்கு அளந்த பங்கினை அடைத்தற்குரிய ஆள்கிடைக்காமல் அழுது புலம்பி அரசதண்டத்திற்கு அஞ்சிக் கூலியாளைத் தேடியலைந்தனள். அவளது துயரத்தைப் போக்கத் திருவுளங்கொண்ட சிவ பெருமான், பதினாறு வயதுடைய இளைஞனாகி, மண்வெட்டி யும் கூடையும் கொண்டு அவள்முன் கூலியாளாகத்தோன்றி, 'அன்னையே, வருந்தாதே, இவ்வுலகத்து என்னைப்போல உனக்கு வேறு ஆள் கிடைக்காது பல்லோரும் வேண்டி யழைக்க அவர்கள்பாற் செல்லாது உன்னை வேண்டி இங்கு வந்தேன். வேண்டுமானாற் சொல்' என்றான்.' ஐயா, நல்ல சமயத்தில் வந்து சேர்ந்தீர். உம்மைப் பார்த்தால் எம் வழிபடு தெய்வமாகிய சொக்கநாதரைப் போலவே தோன்று கிறது. மண் சுமவாவிடில் தண்டத் தலைவர்கள் மெய் நோவ அடிப்பார்களே. விரைவில் மண் சுமக்க வல்லீரோ?' எனப் பிட்டுவாணிச்சியாகிய முதியவள் பரிவுடன் வின வினாள். அதைக்கேட்ட இறைவன், 'இளைப்பின்றி விறகு சுமப்பேன். தண்ணீர் சுமப்பேன், மண் சுமக்கமாட்டேனோ? எனக்குக் கூலியாக என்ன தருவாய்' எனக்கேட்டான். 'ஐயா, என்னிடத்திற் பொருளில்லை, வெய்தாய் நறுவிதாய் வேண்டுமளவும் நுகரத்தக்க இன்சுவை யுடையதாய் என் பாலுள்ள பிட்டமுதினைக் கூலியாக முற்படத் தருவேன்' என அம்முதியவள் கூறினாள். 'சொக்கனிடத்துப் பேரன்பு பூண்டவள் நீ, எனக்கு உதிராத பிட்டினைக்கொடுக்க வேண்டு

மென்பதில்லை. உதிர்ந்த பிட்டும் எனக்குப் பிடிக்கும்' எனக் கூலியாளாய் வந்த இறைவன் கூறினன். அன்பிற் சிறந்த முதியவள் அவனை நோக்கி, 'ஐயா, வைகைக்கரை காக்கும் அதிகாரிகள் மிகவும் பொல்லாதவர்கள். யான் தரும் பிட்டினைத்தின்று விரைந்து சென்று எனக்கு அளந்த பங்கினைச் சோம்பலின்றி அடைப்பீராக' என்று கூறித் தான் அப்பொழுது அவித்த பிட்டினை அன்புடன் கொடுத்தாள். கூலியாளாய் வந்த அவன் அப்பிட்டினை மடிநிறைய வாங்கிக் கட்டிக்கொண்டு வைகைக்கரையை அடைந்தான்.

இனியவை பெற்றால் தனித்துண்ணுது பலர்க்கும் கொடுத்து உண்ணுதல் வேண்டும் என்ற முறைப்படி இறைவன் தான்பெற்ற சுவை நிறைந்த பிட்டினை வைகைக் கரையில் வேலை செய்யும் ஏனைய கூலியாட்களுக்குங் கொடுத்துத் தானும் உண்டு மகிழ்ந்து ஆடிப்பாடினன். தன்னிட முள்ள பிட்டுத் தீர்ந்தவுடன் புழுதிபடிந்த மேனியொடுபிட்டு வாணிச்சியாகிய முதியவளிடம் சென்று 'அன்னையே, மண் சுமந்து இளைத்தேன். உனக்கு அளந்த கரையிற் பெரும் பகுதி அடைத்தாயிற்று. சொக்கனார் ஆணை' என்றான். அவ் அம்மையும் அவன் மொழியினை நம்பி மேலும் பிட்டமுதினை நிறையக் கொடுத்தாள். அவன் அதனைப்பெற்று முன் போலவே ஏனையோர்க்குங் கொடுத்துத் தானும் உண்டு கரையை யடைப்பவன் போல அங்குமிங்கும் திரிந்து சில இடங்களில் கரையினையும் உடைத்துவிட்டான், அந்நிலையில் கணக்கர்கள் அவ்விடம் வந்தனர். அவன் அவர்க்கு முன் சென்று 'என்னையொப்பவர் ஒருவருமிலர். என்னை முதலாளாகத் தெரிந்துகொள்ளுங்கள்' எனக் கூறினன். அங்குள்ள வேலையாளர் இவனுடைய குறைகளைச் சொல்லினர். எனினும் இவனால் தமக்குத் தீங்குநேர்தலாகாதென்றஞ்சிய கணக்கர்கள் இவனையே முதலாளாகக் குறித்துச் சென்றார்கள். அவர்கள் போனபின் அவன், கூடையைத் தலைக்கணையாக வைத்துக் கால்மேல் காலை வைத்துப் படுத்திருந்தான். அங்கு நிகழும் வேலைகளைக் கண்காணிக்க அரசனால் அனுப்பப்பட்ட பணியாளர் சிலர் அங்கு வந்து, 'மண்சுமவாது படுத்திருக்கும் இவன் யார்?' என வினவினர். அங்குள்ள ஆட்கள் 'இவன் பிட்டு வாணிச்சி ஆள்' என்றனர். அது கேட்ட பணியாளர் கூலியாளாகிய இறைவனை நோக்கி 'அதிகாரியிடத்தில் உன்னை ஒப்படைப்போம், வா' என

அழைக்க, அவனும் தண்டத்தலைவராகிய அதிகாரியின் முன் சென்று நின்றான். அவனைக்கண்டு அதிசயமுற்ற அதிகாரி, 'மெல்லிய உடம்பினனாகிய நீ யார்? விளங்கச்சொல்' என்றான். 'தந்தை தாய், உடன் பிறந்தார், சுற்றத்தார் ஒருவரும் எனக்கில்லை. பொருளும் இல்லை. இப்பெரிய நகரத்தில் ஒரு மூலையிலிருக்கும் கொற்றாள் யான். பிறர்க்கென உழைப்பதே எனது தொழில். என்னைக்கொண்டு அதிகாரிக்கு என்ன காரியம் ஆகவேண்டும்' என்றான் இறைவன். இம்மொழியினைக் கேட்டு வெகுண்ட அதிகாரி, கொற்றாளாகிய இறைவனை நோக்கி 'உனக்கு அளந்து கொடுத்த கோலறையில் ஒரு கூடை மண் கூட இட்டா யில்லை. சிறிதும் அச்சமின்றி உரையாடுகின்றாய். உன்னை நூறடிகள் அடித்தாலும் தகும். உன் உடலின் மென்மையைக் கண்டு அடிக்க மனம் வரவில்லை. விரைந்து சென்று மண்ணை வெட்டியிட்டுக் கரையை அடைப்பாயாக' எனக் கடிந்து கூறினான். கொற்றாளாகிய அவன் அவ்விடத்தை விட்டகன்று முன்போற் படுத்துகொண்டான்.

மன்னன் ஏவலால் கரையை நோக்கி வந்த தண்டத் தலைவர்கள் பிட்டுவாணிச்சிக்கு அளந்து கொடுத்த கரை அடைக்கப்பெறாது வெள்ளத்தால் அறுக்கப்பட்டுச் சிதைவுறுதலைக் கண்டார்கள். அருகே பணிசெய்யும் சிற்றாட்களை நோக்கி 'இஃது யாருடையது' எனக்கேட்க 'இது பிட்டு வாணிச்சியது' என்றுரைத்து அவளுடைய கொற்றாள் செய்த குறும்புகளையெல்லாம் எடுத்துக்கூறினார்கள். சின முற்ற தண்டத்தலைவர்கள், பிட்டுவாணிச்சியின் கொற்றாளைக் கண்டு 'நீ சிறிதும் அச்சமென்பதின்றி மண் சுமவாமல் இவ்வாறு விளையாடித் திரிவதற்குரிய காரணமென்ன' எனக் கேட்க, அவன் 'காரணம் ஒன்றுமில்லை, கழுத்து நோவச் சுமப்பேன்' எனக்கூறினான். 'இனிநீ விரைந்து சென்று மண் சுமக்கவில்லையானால் நன்றாக அடிப்போம்' என அவர்கள் அவனை அச்சுறுத்தினர். அவன் மிகவும் அஞ்சியவன் போல ஒரு கூடை மண்ணை வெட்டியெடுத்துத் தலைமேற் சுமந்து கொண்டு அடிமேல் அடிவைத்து நடந்தான். அதுகண்ட தண்டத்தலைவர் 'இக்கொற்றாளாற் சிறிதும் நன்மையில்லை, இவன் உடைப்பினை ஒழுங்காக அடைக்க மாட்டான்' எனச்சினந்து அவனைப்பிடித்து அவனது நடு முதுகிற் சிவக்க அடித்தனர். அந்நிலையில் கொற்றாளாய்

வந்த இறைவன் தன் முடியிற் சுமந்த கூடை மண்ணை வைகைக்கரையுயரும்படி அதன் மேலே கொட்டிவிட்டுப் புன் சிரிப்புடையனாய் 'என்னை ஏன் அடிக்கின்றீர்கள் ?' என்று சொல்லிக்கொண்டே கொற்றாட்கள் கூட்டத்திடையே புகுந்து மறைந்தனன். தண்டத்தலைவர் 'அவன் எங்கே ஓடினான்' எனத் தேடிப்பார்த்தும் காணாதவராகி அவனை யனுப்பிய பிட்டுவாணிச்சியை யடைந்து அவளைத் தண்டித் தற்கு நெருங்கினார்கள். அவர்கள் அணுகுதற்கு முன்னரே முதியவளாகிய அவ்வம்மை சொக்கநாதர் திருவருளால் மண்ணுலகத்தவர் காண மாறாஇள நலம் வாய்ந்த தெய்வ வடிவத்தினைப் பெற்று எல்லாவுலகிற்கும் மேலாகிய சிவலோகத்தை யடைந்தாள். அவ் அழகிய காட்சியைக் கண்ட தண்டத்தலைவர்கள் திகைத்து அதிசயித்து நின்றனர்.

இறைவன்மேற் பட்ட அடி, நாடாள் வேந்தனாகிய பாண்டியன் முதலாக இவ்வுலகில் வாழும் நிற்பன நடப்பன வாகிய எல்லாவுயிர்களின் முதுகிலும் ஏனையுலகங்களில் வாழும் தேவர் அசுரர் முதலிய எல்லோர் முதுகிலும் பட்டுப் புடைப்பினை உண்டாக்கியது. மதுரை நகர மக்கள், இதனை யறிவோமென்று பாண்டிய மன்னனையணுகி 'ஒருவன் மேல் அடித்த அடி யாவர் மேலும் பட்டதென்ன?' எனக்கேட்டனர். அரசனும் தன் முதுகைக்காட்டி 'இதன் உண்மையினைச் சொக்கநாதரே அறிவார்' என்றான். அப்பொழுது வாதவூரடிகள் பொருட்டு இறைவனருளால் விசும்பிடத்தே ஓர் அருள் வாக்கு எழுந்தது. 'பாண்டியனே, நீ வேதநூற் பிராயமாகிய நூறாண்டு நெடிது வாழ்வாயாக. நீ நற்பேறு டையவன். நினதுபொருள் அறத்தின் வழியே ஈட்டப் பட்டதாதலால் அதனை வாதவூரன் வாயிலாக நம் அடியார் களுக்கு வாங்கிக்கொடுத்தோம். அப்பொருளுக்குத்தக நீ விரும்பிய வண்ணம் குதிரைகளையும் கொண்டுவந்து தந்தோம். அவனை விடுவித்தற்காகக் கொற்றாளாக வந்து மண் சுமந்து பிட்டும் தின்று அடியும் பட்டோம். அவனைச் சிறை நீக்கி அவன் விரும்பிய வண்ணம் இயங்கச்செய்வா யாக. இங்ஙனம் செய்வதனால் நினக்கே நலம் பெருகும்' என ஆகாயத்தில் தோன்றிய அருள்மொழியினை அங் குள்ளார் அனைவரும் கேட்டு அதிசயித்து அரசனை நோக்கினர்.

அருள்வாக்கினைச் செவிமடுத்த பாண்டியன், உள்ளத்தில் அச்சமும் உடம்பிற் புளகமும் எய்தி, 'இது நம் நாட்டிற் குதிரைச்சேவகனாக வந்த ஆலவாயிறைவனது அருள் வாக்கு' எனத் தெளிந்து உடனே திருவாதவூரடிகளைச் சிறையினின்றும் விடுவித்துத் தனது அருகே வரவழைத்துப் பலவகை உபசாரங்களைச் செய்து அவருடைய திருவடிகளில் வீழ்ந்து வணங்கினான். 'திருவாதவூர் நாயனீரே, வேந்தர் போற்றும் பெருமானாகிய எம் சொக்கநாதர் நும்பால் வைத்த அன்பினைப்போன்று வேறெங்கும் கண்டோமில்லை. எனது அறியாமையால் நுமக்கு மிக்க இன்னல்களைச் செய்தேன். அவற்றையெல்லாம் பொறுத்தருளி நுமது திருவுளப் பாங்கின்படி இருப்பீராக' என அடிகளைத் துதித்துப் போற்றினான். அங்குள்ளாரனைவரும் வியப்புற்று அடிகளார் திருவடிகளில் வீழ்ந்து இறைஞ்சினார்கள்.

பாண்டியனால் உபசரிக்கப் பெற்ற திருவாதவூரடிகள் மன்னனை நோக்கி 'விசும்பில் தோன்றிய வார்த்தையினை இறைவனது அருள் வாக்கென்றே தெளிந்தாய். நின்னைச் சார்ந்து ஒழுகினமையால் இத்தகைய திருவருட்பேற்றினைப் பெற்றேன். நீக்குதற்கரிய பிறவித் தொடர்பையும் அறுத்து உய்ந்தேன். இனி என் வழியே செல்வேன். இன்று எம் பெருமானாகிய கடவுள் உண்டு என ஐயமற உணர்ந்த மெய்யுணர்வால் நினது செல்வம் தீங்கின்றி மேன்மேலும் பெருகியோங்கும்' எனக்கூறி 'நமச்சிவாய வாஅழ்க' என்றெடுத்துச் சிவபுராணத்தை ஓதிக் கொண்டு அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டார். உவகைமிக்க பாண்டியன் அடிகள்பால் அளவிறந்த பேரன்புடையனாய் அவரைத் தொடர்ந்து சிறிது தூரம் பின் சென்று விடைபெற்றுத் தனது அரண்மனையை யடைந்து அடிகளது திருவருட் செயலை வாழ்த்தியிருந்தான்.

திருவாதவூரடிகள், திருவாலவாய்த் திருக்கோயிலுட் புகுந்து சொக்கநாதரை வணங்கி நின்று 'எளியேனை ஆண்டருளிய பெருமானே, என் பொருட்டுக் குதிரைகளைக் கொண்டு எழுந்தருளியதுமன்றி இன்று நின் முடிவருந்த மண் சுமந்து திருமேனி வருந்தப் பிரம்படியும் பட்டனையே' என நெஞ்சம் நெக்குருகிப் பரவிப் போற்றினர். ஆலவாய்ச் சொக்கர், அடிகளை நோக்கி 'நீ உத்தரகோசமங்கை, கழுக்

குன்றம் ஆகிய தலங்களில் நமது திருமேனியைக் கண்டு மகிழ்ந்து, கோவை யென்னும் சிறந்த பனுவலைப் பாடிக் கொண்டு தில்லையம்பலத்தே வருக' என்றதோர் அருள் வாக்கினை விசும்பில் தோற்றுவித்தருளினார். அவ்வருள் மொழியைச் செவிமடுத்த வாதவூரடிகள் அவ்வண்ணமே திருவுத்தரகோசமங்கை, திருக்கழுக்குன்றம் முதலிய தலங்களைப் பணிந்து திருவாசகமாகிய செந்தமிழ்ப் பாடல்களைப் பாடிப் போற்றித் தில்லைப்பதியிற் போந்து புத்தர்களை வாதில் வென்று யாவரும் புகழ்ந்து போற்றத் தில்லைச் சிற்றம்பலவன் பொன்னார் திருவடிகளை யடைந்து ஈறிலாப் பேரின்பத்தில் திளைத்து மகிழ்ந்தார்.

இவ்வாறு பெரும்பற்றப்புலியூர்நம்பி வாதவூரடிகளது வரலாற்றை வகைபெற விளக்கியுள்ளார். இவ்வாசிரியர் கூறியது போலவே பிற்காலத்தவராகிய பரஞ்சோதி முனிவரும் தாம் பாடிய திருவிளையாடற் புராணத்தில் மாணிக்க வாசகரது வரலாற்றை நான்கு படலங்களில் விரித்துக் கூறியுள்ளார். எனினும் பெரும்பற்றப்புலியூர் நம்பி கூறாத புதிய விளக்கங்கள் சிலவும் அவர் கூறியதற்குச் சிறிது வேறுபட்ட நிகழ்ச்சிகள் சிலவும் பரஞ்சோதி முனிவர் இயற்றிய திருவிளையாடலில் இடம் பெற்றுள்ளன. அவற்றைத் தொகுத்து நோக்குவோமாக.

(2) பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம்

திருவாதவூரில் வாதவூரர் பிறந்து வளர்ந்த காலத்தில் பாண்டி நாட்டை ஆட்சிபுரிந்த மன்னன் அரிமர்த்தன பாண்டியன். வாதவூரர் அம்மன்னனுக்கு முதல் மந்திரியாய்க் காரியஞ் செய்து ஒழுகினார். அவர் அந்நாளில் 'நாதனாகிய தன்னையும் என்னையும் நல்கும் போதனாகிய குருபரன் வருவது எப்பொழுது?' எனச் சிந்தித்துக் கொண்டிருந்தார். அந்நிலையில் பாண்டியன் குதிரைகளை வாங்கி வருதற்கெனத் தந்த பொன்களை ஒட்டகங்களில் ஏற்றி ஏவலாளர்களை முன்னே செல்ல விடுத்த வாதவூரர், அங்கயற் கண்ணியொடும் அமர்ந்த ஆலவாயிறைவரைப் பணிந்து, 'வெள்ளி மன்றுள் நடம்புரியும் பெருமானே, இப்பொருள்களெல்லாவற்றையும் நினக்கும் நின்பால் அன்புடைய அடியார்களுக்கும் உரியனவாகச் செய்தருளுக' என வேண்டி நின்றார். அப்பொழுது இறைவனருளால் ஆதி சைவராகிய

அருச்சகரொருவர் வாதவூரர்க்கு முன்னே வந்து திருநீறு நல்கினார். அது கண்டு 'நமக்கு இதுபோலும் நன்னிமித்தம் வேறில்லை. இது நன்னெறிக்கு ஏதுவாம்' எனக் கருதிய வாதவூரர், அத் திருநீற்றினை இருகை யேற்று வாங்கி யணிந்து இறைவனைப் பணிந்து விடைபெற்றுத் திருப் பெருந்துறையை யடைந்தார். அப்பதியிலுள்ள திருக்கோ யிலை யடைந்து வலம் வருங்கால் அக்கோயிலின் ஒரு பக் கத்தே குருந்தமரத்தின் அடியிலே நால்வகை நன்னெறி களிற் பயிலும் மாணவர்கள் சூழ்ந்து போற்றச் சிவஞான போதமெனும் புத்தகத்தைக் கையிற் கொண்டு யோக ஆச னத்திற் குருவாக எழுந்தருளிய இறைவரைக் கண்டார். அம்பலத்தில் ஆடும் வடிவமும் ஆலின்கீழ் நால்வர்க்கு உப தேசித்த வடிவமும் குருமேனி கொண்டு இங்கெழுந்தருளிய இத்திருவுருவமே என்ற வுணர்ச்சி அவருள்ளத்தே யுண்டா யிற்று. ஆசிரியருடைய திருவடிகளில் வீழ்ந்திறைஞ்சினார். அன்புருவாகிய அவர் இறைவனது அருளாகிய வலையிலகப் பட்டு நெஞ்சம் கசிந்துருகினார். அந்நிலையிற் குருவாய் வந்த ருளிய சிவபெருமான், வாதவூரர் முடிமிசைத் திருவடி சூட்டித் தீக்கை செய்து திருவைந்தெழுத்தை உபதேசித்துப் பாசத் தொடர்பகற்றி இன்பமே திகழும் சிவசொரூபமாக அவரை ஆக்கியருளினான். தேனும் பாலும் கருப்பஞ்சாறும் அமுது மாகித் தித்தித்து ஊனையும் உள்ளத்தையும் உருக்கவல்ல சிவவுணர்வு வாதவூரரது மனத்தகத்தே ஊற்றெடுத்துப் பொங்கிப் புறத்தேயும் கசிந்து படரும் நிலையில் அவர்தம் நாவிலே ஞானவாணியாகிய கலைமகள் வந்து அமர்ந்தாள். தம் வசமிழந்து அன்புருவாகிய வாதவூரர், மெய்ம்மயிர் சிலிர்ப்பக் கண்ணீர் மல்க நாத் தழுதழுப்பத் தம்மையாட் கொண்டருளிய குருமணியைத் தொழுது போற்றுவாரா யினார். பழுதிலாத சொற்களாகிய மாணிக்கமணிகளை வரிசைப் படுத்தி அன்பாகிய வடத்திற்கோத்து இறைவன் திருவடி களிற் பாமாலையாகச் சாத்துகின்ற வாதவூரர்க்கு 'மாணிக்க வாசகன்' என்ற திருநாமத்தைக் குருவாக வந்தருளிய பெருமான் கொடுத்தருளினான். தித்திக்கும் மணிவார்த்தை கேட்டு மகிழ்ந்த இறைவன், வாதவூரரை நோக்கி 'செய்தற் கருமம் சிறிதுண்டு. இங்கே யிருப்பாயாக' என்று

ளி அடியார்களோடும் மறைந்தருளினான். மெய்யுணர்வு

குருமணியைக் காணாது உள்ளம் பதைத்து அழுது

அரற்றிய வாதவூரர், கோயில் வாயிலை வந்தடைந்து அரசனுடைய பணியாளர்களை நோக்கி ‘ ஆடி மாதத்திற் குதிரைகள் வந்துசேரும். நீங்கள் முன்னமே சென்று இச்செய்தியை வேந்தனுக்குத் தெரிவிப்பீராக ’ எனச் சொல்லியனுப்பினுர். மதுரை சென்ற பணியாளர்கள், நிகழ்ந்த செய்தியை உள்ளவாறு மன்னனுக்குத் தெரிவித்தார்கள். அது கேட்ட பாண்டியன் ஒன்றும் உரையாமல் குதிரையின் வரவினை எதிர் நோக்கியிருந்தான்.

வாதவூரர் குறித்த வண்ணம் குதிரை வாராமையால் சினமுற்ற பாண்டியன், தறுகணுளர் சிலரை யழைத்து ‘ நீங்கள் இவ்வாதவூரனைக் கொண்டுபோய்த் தண்டித்து எம்முடைய பொன்னெல்லாவற்றையும் வாங்குங்கள் ’ எனப் பணித்தான். அப்பணியினை மேற்கொண்ட தண்டத் தலைவர்கள் வாதவூரடிகள் மேல் திணிந்த கருங்கல்லைப் பாரமாக ஏற்றித் துன்புறுத்தினுர்கள். அன்பர்பாரந் தாங்குவாணுகிய இறைவனே, தாங்க முடியாத அப்பெரும் பாரத்தினை ஏற்றுப் பொறுத்துக் கொண்டமையால், வாதவூரர் அத் துன்பத்தால் சிறிதும் வருந்தாதிருந்தார். அவரது நிலையினைக் கண்ட தண்டத்தலைவர் ‘ இது மாயம் போலும் ’ என வெகுண்டு அடிகளுடைய கைகளிலும் தாள்களிலும் கிட்டி கட்டி நெரித்தார்கள். இரவுப்பொழுது எய்தியதும் அவரை விலங்கிட்டுச் சிறையிலடைத்துத் துன்புறுத்தினுர்கள். வாதவூரர் இறைவன் திருவடிகளைப் புணையாகக்கொண்டு துயரக்கடலைக் கடந்தார்.

வாதவூரரது துயரத்தைப் போக்கத் திருவுளங்கொண்ட சிவபெருமான், ஆவணி மூல நாளில் நந்தி முதலிய சிவகணத் தலைவர்களைக் குதிரைச் சேவகர்களாகவும் காட்டிலுள்ள நரிகளைக் குதிரைகளாகவும் ஆக்கித் தாமும் வேதப்பரிமீது அமர்ந்து மதுரைத் தெருவில் பாண்டியனெதிரே வந்து தோன்றினுர். இறைவனது அருட்கண்ணேக்கத்தைப்பெற்ற பாண்டியன், மனமயங்கித் தன்னை மறந்து இருக்கைவிட்டு எழுந்து இருகைகளையும் தலைமேற் குவித்து நின்றுன். பின்னர் இறைவன் ஆணையால் மெய்யுணர்வு தடைப்பட ஆன்மபோதம் மேலோங்கப்பெற்ற பாண்டியன், இன்று நாம் குதிரை வீரனெருவனைக்கண்டு எழுந்து கைகூப்பி வணங்கி நின்றது என்னை ? எனத் தனக்குள் சிந்தித்து மீள ஆசனத்தில் அமர்தற்கு நாணி நின்றுன்.

குதிரைச் சாத்தின் தலைவராய் வந்து தாம் கொணர்ந்த குதிரைகளின் இயல்புரைத்து அவற்றைத் திறம்பட நடத்திக் காட்டிக் கயிறுமாறிக் கொடுத்த குதிரைவீரர்க்கு விலைமதிக்க வொண்ணாத வெண்பட்டினைப் பாண்டியன் வரிசையாக நல்கினான். வாதவூரரைக் காத்தற்கு வந்த கடவுள் குதிரையில் இருந்திறங்கி அத்தூசினையேற்றுத் தன்முடியிற் சூடிக் கொண்டு வேதப்புரவியொடும் மறைந்தருளினார்.

பாண்டியனது குதிரைப்பந்தியிற் பிணிக்கப்பட்ட மாயக் குதிரைகளெல்லாம் இறைவனது அருள்விளையாட்டால் அன்றிரவே நரிகளாக மாறிப் பழைய குதிரைகளையும் கடித்துத் துன்புறுத்தி மதுரைநகரிற் கலக்கம் உண்டாக்கிக் காட்டிற்கு ஓடிப்போயின. அதனையுணர்ந்து சினமிக்க பாண்டியன் தன் அமைச்சராகிய வாதவூரரைப் பலவாறு இகழ்ந்துரைத்து 'வாதவூரனாகிய இவனைக் கொண்டுபோய்த் தண்டித்துப் பொருளை வாங்குமின்' எனத் தண்டலாளரை ஏவினான். அரசனால் ஏவப்பட்ட தண்டலாளர்கள், வாதவூரரைக் கொண்டுசென்று, நண்பகற்பொழுதிற் கடுவெயிலிலே ஞாயிற்றைப் பார்க்கும்படி நிறுத்தி, அவருடைய நெற்றியிலும் கைகளிலும் கற்களையேற்றித் துன்புறுத்தினர். அக் கொடுந்துயரைப் பொறுக்கமுடியாத வாதவூரர், குருவாக வந்து தம்மையாட்கொண்ட சிவபெருமானை நோக்கி அழுது அரற்றினார். அன்பராகிய அவரது துன்பத்தைத் துடைக்கக் கருதிய இறைவன், தன் சடைமீதுள்ள கங்கையை நோக்கி 'ஊழிக்காலத்துக் கடல்போன்று பெருகி வருக' எனப் பணித்தருள, வைகை நதியிற் பெருவெள்ள முண்டாகிக் கரைகடந்து மதுரை நகருட் புகுவதாயிற்று. மாணிக்க வாசகரை ஒறுத்த தண்டலாளர்கள், வெள்ளப்பெருக்கிலிருந்து தம் பொருள்களைப் பாதுகாத்துக்கொள்ள எண்ணித் தத்தம் வீடுநோக்கி விரைந்து சென்றனர். தண்டலாளர்கள் தம்மைவிட்டகன்றமைகண்ட வாதவூரர், திருவாலவாய்த் திருக்கோயிலுக்குச் சென்று ஆலவாய் இறைவன் திருவடிகளை இறைஞ்சிப் போற்றி அப் பெருமானது திருவருளின்பத்தில் திளைத்து எழுதுசித்திரம் போன்று அசைவற்று இருந்தார்.

நரைமுதியாளாகிய வந்திக்குக் கூலியாளாக வந்தருளிய சோமசுந்தரக் கடவுள், வைகைக் கரைக்குச் சென்று வந்தியின் கூலியாள் என்று தம்மைக் கணக்கில் எழுதும்படி

செய்துவிட்டுத் தமக்குரிய பங்கினை அடைக்காமல் பிட்டினை உண்டு ஆடிப்பாடிப் பொழுது போக்கினார். உடைப்பு அடைபட்டதனை நோக்கவந்த அதிகாரிகள், வந்திக்கு அளந்த பங்கு அடைபடாமை கண்டு வெகுண்டனர். வந்தியின் ஆளாய் வந்த இறைவனைச் சினந்து நோக்கி அவனது திருமேனியின் இயல்பறிந்து அடித்தற்கு அஞ்சிக் கொற்றாளாகிய அவனது குறும்பினை அரசனிடம் சென்று தெரிவித்தார்கள். அதுகேட்ட பாண்டியன் அமைச்சர்களுடன் கரையினைக் காணவந்தான். வந்தியின்பங்கு அடைக்கப்பெறாமல் கரையினை யழித்து வெள்ளம் பெருகுதலைக் கண்டு அளவிறந்த வெகுளியுடையவனாய், இப்பங்கினை யடைப்பவன் எங்கே சென்றான்' என வினவினான். அரசனது சினங்கண்டு அஞ்சிய ஏவலாளர், வந்தியின் கூலியாளைக் கையிற்பற்றி யிழுத்து வந்து மன்னன் முன்னே நிறுத்தினர். கொற்றாளைக் கண்டு சினந்த பாண்டியன் தன் கையிலுள்ள பொற்பிரம்பினை ஓங்கி அவர் முதுகில் அடித்தனன். வந்தியாளாய் வந்த இறைவர் கூடையோடுமண்ணை உடைப்பிலே கொட்டி விட்டு விரைவில் மறைந்தருளினார்.

சிவபெருமான் ஆகாயத்திலே தோற்றுவித்தருளிய அருள் வாக்கினால் வாதவூரடிகளது சிவபக்தி மாண்பினை நன்குணர்ந்த பாண்டியன், அச்சமும் உவகையும் அதிசயமும் ஒருங்கெய்தித் திருவாலவாய்த் திருக்கோயிலையடைந்து சிவனருளில் திளைத்திருந்த திருவாதவூரடிகளுடைய திருவடிகளில் வீழ்ந்து வணங்கினான். அடியேன் அறியாமையாற் செய்த தீங்குகளையெல்லாம் பொறுத்து மாசு நீக்கி இந்நாட்டினைக் காத்து எங்களை ஆட்கொண்டருள்வீராக' எனக் குறையிரந்து வேண்டி நின்றான். அன்பராகிய வாதவூரடிகள் இறைவனருளைப் பெறுதற்குத் தமக்குச் சார்பாய் நின்ற பாண்டிய மன்னனைப் பாராட்டி வாழ்த்தினார். 'ஆலவாயிறைவன் அடியேனைத் தில்லைக்குச் செல்க எனப் பணித்தான். அரசராகிய நீவிரும் அதற்கு இசைதல் வேண்டும்' என்றுரைத்துப் பாண்டியன்பால் விடைகொண்டு புறப்பட்டார். அடிகளது சிவபத்தியில் ஈடுபட்ட பாண்டியன் 'அவரைப் பிரிய மனமின்றித் தொடர்ந்து உடன் சென்றான். அடிகள் 'நில்லுமின், நில்லுமின்' எனப் பணித்து மதுரையினின்றும் புறப்பட்டார். சிவபெருமான் கோயில்கொண்டருளிய திருத்தலங்கள் பலவற்றையும் பணிந்து போற்றித்

தில்லைமூதூரிற் சென்று சேர்ந்தார். தில்லைத் திருவீதியினை வணங்கி உள்ளே புகுந்து சிவகங்கையில் நீராடி இறைவன் திருநடம்புரியும் அருள்நிலையமாகிய பொன்னம்பலத்தைக் கண்டு வணங்கினார். திருப்பெருந்துறையில் குருந்தடியிலே தமக்கு உபதேசித்தருளிய அருட்கோலமே திருச்சிற்றம்ப லத்திலே வருக என அழைக்கும் முறுவற் குறிப்புடன் திகழ் தல் கண்டு மனமுருகித் தொழுது திருவாசகப் பாமாலைகளாற் பரவிப்போற்றினார். அங்கே அம்பலவன் தோற்றுவித்தருளிய அருள்வாக்கின்படி தில்லைப்பதியின் கீழ்த்திசையிலேயுள்ள தவவனத்தையடைந்து சிவயோகத்தில் அமர்ந்திருந்தார்.

ஈழநாட்டிலிருந்து வந்த புத்தர் சிலர், தில்லையை அடைந்து, தில்லை மூவாயிரவரை ஏழு நாட்களில் வாதத்தில் வெல்வதாகக் கூறி, வாதுக்கழைத்தார்கள். அந்நிலையில் கூத்தப்பெருமான், தில்லைவாழந்தணர்களுக்குக் கனவிலே தோன்றி 'வாதவூரனை அழைத்துவந்து புத்தருடன் வாது செய்வீராக' எனக்கூறி மறைந்தருளினார். தில்லை மூவாயிர வரும் மனமகிழ்ந்து வாதவூரடிகளை அணுகி நின்று 'புத்த ருடன் வாது செய்தற்கு வருதல் வேண்டும்' என அழைத் தார்கள். சித்தத்தைச் சிவன் பாலே வைத்த வாதவூரர் 'வரவியலாது' என மறுத்தார். அந்தணர்கள் மனக்கவலை யுடன் மீண்டனர். சிவபெருமான் மீண்டும் அவர்கள் கனவிலே தோன்றித் திருப்பெருந்துறையிற் குருந்தமரத் தின் கீழ்க் குருவாகத் தோனறி வாதவூரரை ஆட்கொண்ட முறைமையினையும், மாணிக்க மணிபோலும் இன்னிசைத் தமிழ்ப் பாடல்களால் தம்மைத் துதித்தமை பற்றி அவர்க்கு 'மாணிக்கவாசகன்' என்ற பெயர் தந்து தாம் சிறப்பித்த செய்தியையும் எடுத்துரைத்து, 'அவனை மாணிக்கவாசகன் என்று அழையுங்கள், வருவான்' என அறிவுறுத்தி யருளினார்.

இறைவன் அறிவுறுத்த வண்ணமே தில்லைவாழந் தணர்கள் மாணிக்கவாசகரை அணுகி அழைத்தார்கள். சிவயோக நிலையில் அமர்ந்த மாணிக்கவாசகர், இறைவனது திருவருட் குறிப்பு இதுவென உணர்ந்து தில்லை வாழந்தணர் களுடன் போந்து தில்லைச் சிற்றம்பலவனை திருவடிகளைத் தொழுது போற்றி, அறிஞர்கள் வந்து குழுமிய பட்டிமண்ட பத்திலே வந்தமர்ந்தார். ஈழநாட்டிலிருந்து வந்த புத்தர்களை

வேறிடத்தில் அமரச்செய்து தனித்து ஒருபால் அமர்ந்த வாதவூரடிகள், புத்தர்களை வினவி அவர்களுடைய சமயக் கொள்கைகளை அளவை நூல் முறைகளால் மறுத்துச் சைவசமயமே மெய்ச்சமயமென நிலைநாட்டினார். புத்தர் களுடன் அடிகள் நிகழ்த்திய வாதத்தில் புத்தர்கள் தோல்வி யுற்றனர். புத்த சமயத்தில் ஈடுபாடுடையனாகிய சோழ மன்னன், இச்செய்தியையறிந்து ஊமையாகிய மகளையும் உடனழைத்துக்கொண்டு தில்லையையடைந்தான். 'என் மகளது ஊமையினைத் தீர்த்தோர் யாவரோ அவரே இவ் வாதத்தில் வெற்றிபெற்றவராவர்' எனக்கூறினான். அது கேட்டுப் புத்தர்கள் தங்கள் வழிபடு தெய்வமாகிய புத்த தேவரை நினைந்து மணி மந்திரம் மருந்து என்னும் மூன்றி னாலும் அப்பெண்ணினது ஊமையைப்போக்க முயன்றும் அந்நோய் தீர்ந்திலது. அஃதுணர்ந்த சோழ மன்னன் திருவாதவூரடிகள் திருமுன் தன் மகளைக் கொணர்ந்து நிறுத்தி 'என் மகளாகிய இவளது ஊமையினைத் தீர்த்தல் வேண்டும்' எனத் தனது குறையினைத் தெரிவித்துக்கொண் டான். அவனது வேண்டுகோளுக்கு இணங்கிய அடிகள், தில்லைச் சிற்றம்பலவன் திருவடிகளைச் சிந்தித்து அவ்வூமைப் பெண்ணை அருட்பார்வையால் நோக்கிச் சிவபெருமானது பொருள் சேர்புகழினைத் தனித்தனி வினாவுரையாகப் பாடி வினவ, அவள் ஊமை நீங்கி, அடிகள் வினவிய வினாக்களுக் கெல்லாம் சிறிதும் தயங்காது தக்கவாறு விடைபகர்ந்தாள். அது கண்டு வியப்புற்ற சோழ மன்னன், சிவபெருமானே முழுமுதற் கடவுள் எனத் தெளிவாக உணர்ந்துகொண் டான்; இறைவனருள் பெற்ற மாணிக்கவாசகர் திருவடிகளில் வீழ்ந்திறைஞ்சித் தில்லை மூவாயிரவரைப் பணிந்து முன்பு அவர்கள் சொன்ன வண்ணமே புத்தர்களைத் தண்டித்துத் தில்லைச் சிற்றம்பலவன் அருட்கூத்தினைக் கண்டு போற்றிச் சைவனானான்.

சிவனருள் விளக்க வந்த திருவாதவூரடிகள், தில்லைப் பதியிலே தங்கி மணிமன்றுள் நடம்புரியும் பெருமானை வழிபட்டு மாணிக்கமணிபோலும் வாசகப் பாமாலையைப் பாடிப் போற்றித் தில்லையம்பலவன் திருவடிக்கீழ் ஈறிலா ஞானானந்தப் பேரொளியிற் கலந்து இன்புற்றார் எனப் பரஞ்சோதி முனிவர் தாம் இயற்றிய திருவிளையாடற் புராணத்தில் குறிப்பிட்டுள்ளார்.

(3) திருவாதவூரர் புராணம்

திருவாதவூரடிகள் மதுரையை விட்டகன்று தில்லைச் சிற்றம்பலவன் திருவடி நீழலெய்தியது வரையுள்ள நிகழ்ச்சிகளைப் பெரும்பற்றப்புலியூர்நம்பி இரண்டு செய்யுட்களில் தொகுத்துக் கூறி முடித்தார். அடிகளது வரலாற்றின் பிற்பகுதியாகிய அதனைப் பரஞ்சோதி முனிவர் சில பாடல்களில் வகுத்து விளக்கினர். இவ்விருவர் நூல்களிலும் சுருக்கமாகவும் சிறிது விரிவாகவும் கூறப்பட்ட செய்திகளையும் அறவே கூறப்படாது எஞ்சிய செய்திகள் சிலவற்றையும் ஆராய்ந்து நோக்கி அடிகளது வரலாற்றைத் தொடக்கம் முதல் இறுதி வரை முழுவதும் விரித்துக் கூறும் நூல், கடவுள் மாமுனிவர் பாடிய திருவாதவூரர் புராணமாகும். அடிகளது வரலாறொன்றையே பொருளாகக்கொண்டு பாடப்பெற்ற இந்நூல், இலக்கியச்சுவை நிரம்பிய செந்தமிழ்க்காப்பியமாகத் திகழ்கின்றது. இரண்டு திருவிளையாடற் புராணங்களிலும் கூறப்படாது இந்நூலில் மட்டும் கூறப்படும் குறிப்புக்களைத் தொகுத்து நோக்குவோமாக.

ஆரிய தேசத்து வணிகர்கள் குதிரைகளுடன் சோழ நாட்டுக் கடற்கரையிலே வந்து இறங்கிய செய்தியைத் தூதர்கள் பாண்டியனுக்குத் தெரிவித்தார்கள். பாண்டியன் தன் அமைச்சராகிய வாதவூரரை நோக்கி 'நீவிர் தூதராகிய இவர்கள் சொன்ன இடத்திற்குச் சென்று நல்ல குதிரைகளை வாங்கி வருவீராக' எனப்பணித்தான். அறநெறியால் வந்த பொருளில் நாற்பத்தொன்பது கோடி பொன்னை அரசன் அவரிடம் கொடுத்தான். அப்பொருளைப் பெற்ற வாதவூரர் நல்ல நாளிலே சொக்கலிங்கப் பெருமானை வணங்கிப் பாண்டியன்பால் விடை பெற்றுப் பரிசனங்களுடன் மதுரையிலிருந்து புறப்பட்டுக் கீழ்த்திசை நோக்கிப் பல காவததூரஞ் சென்று திருப்பெருந்துறையை அணுகினர்.

அந்நிலையில் வாதவூரரை ஆட்கொள்ளத் திருவுளங் கொண்ட சிவபெருமான் சிவகணநாதர்கள் அடியவர்களாகிச் சூழ்ந்து போற்ற ஆசிரியத் திருமேனிகொண்டு திருப்பெருந்துறையிலுள்ளதொரு பூஞ்சோலையிலே குருந்த மரத்தடியில் எழுந்தருளியிருந்தார். அச்சோலையின் அருகே வந்த வாதவூரர், அதனுள்ளிருந்து வந்த சிவாகம ஒலியைக் கேட்டுத் தம்முடன் வந்த ஏவலரை நோக்கி 'இவ்வொலி

இன்னதென அறிந்து வம்மின்' என ஏவினுர். 'சிவனடியார்கள் சூழ்ந்து போற்றச் சிவபெருமானே பொத்த சிவயோகியாரொருவர் குருந்தமர நீழலில் வீற்றிருக்கின்ருர்' என ஏவலாளர் அறிந்து வந்து கூறினர். வாதவூரர் சிவிகையை விட்டு இறங்கிச் சோலையினுள்ளே சென்று ஆசிரியன் எழுந்தருளியிருக்கும் தெய்வ சபையைக்கண்டு மனத்தால் வணங்கியும் மெய்யால் வணங்காதவர்போல் அவரெதிரே சென்று அவர்தம் திருக்கையிலுள்ள ஏட்டுச் சுவடியைக்கண்டு 'ஐயா, நுமது கையிற் பொருந்திய புத்தகம் யாது?' என வினவினுர். 'சிவஞானபோதம்' என ஆசிரியர் விடைபகர்ந்தார். அங்ஙனம் கூறியவளவில் வாதவூரர் அவ்வாசிரியரை நோக்கி, 'சிவம் ஏது? ஞானம் ஏது? இங்கு இலங்கியிடும் போதம் ஏது? இவற்றை விளக்குவீராயின் கல்லாலின்கீழ் வீற்றிருக்கும் பரமகுரு நீரேயாவிர், யான் உமக்கு அடியனுவேன்' எனக்கூறினுர். 'நிலைபெற்ற சிவமாவது ஒப்பற்ற முழுமுதற் பொருள். அதனை வழிபட்டு அதனியல்பினை ஐயத்தினீங்கி உள்ளவாறறிதலே ஞானமாகும். அங்ஙனம் அறிந்ததனை அநுபூதியில் வைத்துத் தெளிந்துணர்தலே போதம் எனப்படும்' என உள்ளம் உருகும் வண்ணம் ஆசிரியர் எடுத்துரைத்தார். அந்நிலையில் வாதவூரர் 'எளியேனை ஆட்கொள்ள வேண்டி மன்றுளாடும் இறைவனே இத்திருமேனி கொண்டு எழுந்தருளினுன்' என நினைந்து 'எம்முயிர்கிறைவா, இன்று என்னை அடிமைகொள்வாயாக' என மொழிந்து ஆசிரியனை முன்னுற வணங்கி நின்ருர். அங்கிருந்த பழவடியார்களில் ஒருவர், தம் மெய்க்குரவனை வணங்கி நின்று 'இவனை அடியவனுக ஏற்றருளல் வேண்டும்' என வேண்டிக் கொண்டார். அதற்கு இசைந்த ஆசிரியர், வாதவூரரை நோக்கி, 'அன்பனே நீ முன்னைப் பிறவிகளிற் செய்த தவத்தினலே உன்னை அடிமை கொள்ளுதற் பொருட்டு இன்று இப்பெருந்துறையின் கண் வந்தோம். மனம் வருந்தற்க' எனத் திருவாய் மலர்ந்து தம் அடியவர்களைக்கொண்டு பட்டினுலும் மலர்மாலைகளாலும் அமைக்கப்பெற்ற பூங் கோயிலிலே அமர்ந்து வாதவூரர் அன்புடன் செய்த வழிபாட்டினை ஏற்றபின் நள்ளிர[illegible] முறைப்படி தீக்கை செய்து [illegible] உபதேசித்தருளினுர்.

பொழுது புலர்ந்ததும் வாதவூரர்க்குச் சிவாகமங்களின் சாரங்களையெல்லாம் விளங்க விரித்துரைத்துக் 'குருவாய் வந்த இவ்வுருவினை நின் மனத்தில் இருத்துவாயாக' எனமொழிந்தருளினார். மெய்ப்பொருளுபதேசம் பெற்ற வாதவூரர், ஆசிரியரைத் துதித்துப் போற்றித் தாம் குதிரை வாங்குதற்கெனக் கொணர்ந்த பெரும் பொருளை அவர் திருமுன் வைத்து 'என்னுயிரும் உடலும் உடைமையும் ஆகிய எல்லாம் நினக்கே உரியன' எனக்கூறி வணங்கினார். ஆசிரியரும் அவர் தந்த பொருளை யேற்றுக் கொண்டு தம் அடியார்களுள் ஒருவரை நோக்கி 'இப்பொருள் எல்லாவற்றையும் சிவாலயத்திருப்பணிக்கும் அருந்தவத்தோராகிய அடியார்களுக்கும் வறுமையால் நலிவுற்றார்க்கும் வழங்குவீராக' எனப் பணித்தார். அவரும் அவ்வாறே அப்பெரும் பொருளைச் சிவப்பணிக்குச் செலவிட்டார். திருவாதவூரர் பிறவித்தொடர்பு நீங்கிச் சீவன் முத்தராக விளங்கினார். பரிசனங்கள் சூழ்ந்துவரக் குடை நிழற்றச் சிவிகையிலேறி வேந்தரைப் போன்று வந்த வாதவூரர், கோவண ஆடையும் முழு நீறு பூசப்பெற்ற மேனியும் விரித்த குடுமியும் உடையராய் நெஞ்சு நெக்குருகிக் கண்ணீர் சொரியத் தம்மை ஆட்கொண்டருளிய ஆசிரியரைத் தொழுது போற்றி அன்பினால் அழுதரற்றினார். உலகத்தை அறவே மறந்து இரவு பகல் காணாராய் ஞான நன்னிலையில் நின்று பித்தர், பாலர், பேய் கோட்பட்டோர் என்னும் இவர்களது தன்மையை எய்தினார்.

உடன் வந்த பரிசனங்கள், பாண்டியன் வெகுள்வான் என அஞ்சி வாதவூரரை யடைந்து வணங்கித் தென்னவன் முனியா முன்னம் குதிரைத் தொகுதியினைக் கொண்டுசேர வேண்டுமெனச் சிந்தியாமையாகிய இது குற்றமாகும் என இரங்கி 'ஐயர் நீர் வருதல் வேண்டும்' என அழைத்தார்கள். வாதவூரடிகள் அவர்களை இன்னாரென்றுணராதவராய் "நீவிர் பொய்யெலாம் உரைத்தல் வேண்டாம் இவ்விடத்தைவிட்டு அகலுமின்' எனப் புகன்றார். அடிகளது நிலைகண்டு துயருற்ற பரிசனங்கள், அவரைவிட்டு நீங்கி மதுரையையடைந்து பாண்டியனை வணங்கி நிகழ்ந்தவற்றை எடுத்துரைத்தார்கள். அது கேட்டுச் சினமுற்ற பாண்டியன், திருமுகம் ஒன்று எழுதித் தூதர் கையிற் கொடுத்து 'இதனைக்காட்டி வாதவூரனைக் கைக்கொண்டு வம்மின்' எனப்பணித்தான்.

சென்ற தூதர்கள், வாதவூரரையணுகி மன்னனது ஓலையினைப் படித்துக் காட்டினார்கள். வாதவூரடிகள் இறைவன் திருமுன்பு சென்று வணங்கித் தென்னவன் எழுதிய ஓலையிலுள்ள வாசகங்களை எடுத்துரைத்தார். அதனைச் செவிமடுத்த சிவபெருமான், வாதவூரடிகளை நோக்கி 'நாடெல்லாம் மதிக்க நாமே நல்ல குதிரைகளைக் கொண்டு சென்று பாண்டியனுக்கு அளித்து மீள்வோம். நீ தூதருடன் சென்று மன்னனைக் கண்டு ஆவணி மூல நாளிற் குதிரைகள் வரும் எனக் கூறுவாயாக' என மொழிந்து மன்னவன் மகிழ வாதவூரடிகளை முன்பு போல் மந்திரிக் கோலஞ் செய்து அவர் கையில் விலை மதித்தற்கரிய மாணிக்க மணியொன்றைத் தந்து 'இம்மணியினைக் கையுறையாகக் கொடுத்துப் பாண்டியனைக் காண்பாயாக' எனக் கூறியனுப்பினார். அவ்வாறே மதுரையை யடைந்த வாதவூரர், மன்னனை யணுகி மாணிக்க மணியைக் கையுறையாகத் தந்து, 'ஆவணி மூல நாளிற் குதிரைகள் வந்து சேரும்' எனக் கூறினார். சினந் தணிந்த மன்னன், வரிசைகள் நல்கி அடிகளை அவரது மாளிகையிற் செல்லப் பணித்தான்.

அமைச்சர்களுள் ஒருவன், பாண்டியனை யணுகி, வாதவூரர் கூறியனவெல்லாம் பொய் யெனக் கூறினான். உண்மையுணர விரும்பிய மன்னன், 'பெருந்துறையிற் குதிரைகள் உள்ளனவா என்பதை விரைவில் அறிந்து வந்துரைமின்' எனத் தூதர்களை ஏவினான். தூதர்கள் பெருந்துறையிலும் அதனைச்சார்ந்த இடங்களிலும் குதிரைகளைக் காணாது மீண்டு வந்து அரசனிடம் தெரிவித்தார்கள். அது கேட்டு வெகுண்ட பாண்டியன், 'நமக்கு அமைச்சனாகி இடர் செய்யும் வாதவூரனைத் தண்டித்து நம் பொருள் முழுவதையும் அவனிடமிருந்து வாங்குமின்' எனத் தண்டலாளரை நோக்கிக் கூறினான். அவர்கள் வாதவூரடிகளைச் சிறையில் அடைத்தனர். மறுநாட் காலை கடுவெயிலில் நிறுத்தித் துன்புறுத்தினார்கள். இளைப்புற்று வருந்திய வாதவூரடிகள், தம்மையாட் கொண்டருளிய இறைவனை நினைந்து "எங்கள் பெருமானே, மன்னனுக்குக் குதிரைகளைக் கொண்டு வந்து கொடுத்தல் நமது கடமையாகும்' எனக் கூறிய சொல்லும் பொய்யாகுமோ எனப் புலம்பி முறை[illegible] அவர் கூறிய மாற்றமெல்லாம் [illegible] புக்கன.

வாதவூரடிகளது துயரத்தைப் போக்க எண்ணிய சிவ பெருமான், நரிகளெல்லாம் குதிரைகளாகவும் தேவர்கள் குதிரை வீரர்களாகவும் திருவுளங்கொண்டார். உடனே நரிகள் குதிரைகளாகி வந்து கூடின. தேவர்கள் குதிரை வீரர்களாகி வந்து குழுமினர். இறைவன் குதிரை வாணிக ராய் வேதக் குதிரையின் மீதமர்ந்து குதிரைத் திரளுடன் மதுரைக்கு எழுந்தருளினார். குதிரைத் திரள்வரக் கண்ட நகரமாந்தர், அரசனிடம் சென்று தெரிவித்தனர். அச் செய்தி கேட்டு மகிழ்ந்த பாண்டியன், வாதவூரர்பால் அன்பு டையனாகி அவரையழைத்துச் சிறப்புச் செய்து குதிரைத் திரள் காண வருவீராக எனக் கூறிச் சிவிகையிலேறிச் சென்றுவெளியை யடைந்தான். குதிரைச் சேவகனாக வந்த இறைவனைக் கண்ட வாதவூரடிகள், 'பண்ணியதவப் பயன் பரியின்மீது நண்ணியது' என வியப்புற்றார். பாண்டி யன் வாதவூரரை நோக்கி 'ஆரிய வணிகரை இவ்வீதியிலே குதிரை நடத்திக் காட்டுமாறு சென்று கூறுமின்' என்றான். அடிகளும் குதிரைத் தலைவரை யணுகி, முகமன் கூறி மன்ன னது விருப்பத்தைத் தெரிவித்தார். குதிரைச் சேவகராய் வந்த இறைவர், மன்னன் வியந்து காணும் வண்ணம் குதிரையை நடத்திக் காட்டினார். அதனைக் கண்டு மகிழ்ச்சி யுற்ற பாண்டியன் பொன்னாடையைப் பரிசாக வழங்கினான். குதிரைத் தலைவராய் வந்த இறைவர் அவ்வாடையைச் செண்டினால் ஏற்றார். தான் அளித்த பொன்னாடையைக் கையினால் வாங்கி முடிமிசைப் புனைந்து கொள்ளாத குதிரைச் சேவகனது செயல் கண்டு பாண்டியன் சினமுற் றான். அரசனது வெகுளி நிலையினைக் குறிப்பாலுணர்ந்த வாதவூரர் 'அஃது அவர் நாட்டு வழக்கம்' எனக் கூறி மன்ன னது சினத்தைத் தணிவித்தார். பரியிலக்கணம் வினவிய பாண்டியனுக்குக் குதிரை வாணிகராய் வந்த இறைவர் அவற்றை விளக்கிக் கூறிக் குதிரைகளைக் கயிறு மாறிக் கொடுத்தார். குதிரைகளெல்லாம் பந்தியிற் கட்டப் பெற் றன. குதிரை வாணிகராய் வந்த இறைவர் திருவாலவாய்க் கோயிலை யடைந்தார்.

அன்றிரவில் இறைவனது அருள் விளையாட்டால் குதிரைகளெல்லாம் நரிகளாக மாறி முன்னுள்ள பழைய குதிரைகளையும் கடித்து வருத்திக் கூக்குரலிட்டு ஓடி மதுரை நகரத்தார்க்குத் துன்ப முண்டாக்கின. இதனை யுணர்ந்து

சினமுற்ற பாண்டியன், வாதவூரரைக் கடுவெயிலில் நிறுத்தி 'நம்முடைய பொருளெல்லாவற்றையும் குறைவற வாங்குமின்' எனத் தண்டலாளரை ஏவினன். அவர்கள் வாதவூரரை வெயிலில் நிறுத்தித் துன்புறுத்தினர்கள். வாதவூரடிகள், சோமசுந்தரக் கடவுளை நினைந்து முறையிட்டார். அடிகளது துயரத்தைப் போக்கத் திருவுளங் கொண்ட இறைவர், கங்கையை நோக்கி 'நீ வைகையிற் சென்று வாதவூரரது துன்பத்தைப் போக்குவாயாக' என ஏவினர். வைகையிற் பெருவெள்ள முண்டாயிற்று. வைகையாறு உடைப்பெடுத்தமையால் அதன் வெள்ளம் மதுரை நகரத்துட் புக்கது. நகரமாந்தர் மனங்கலங்கினர். பாண்டியன் வைகைக் கரையை யடைந்து பொன்னும் மணியும் முத்தும் நறுமலரும் தூவி வைகை நதியை வணங்கி 'அன்னையே நின் சினந்தணிதல் வேண்டும்' என வேண்டி நின்ருன். வெள்ளப் பெருக்கு சிறிதும் குறையவில்லை. அரசனுக்குக் கவலை பெரிதாயிற்று. "எம்பெருமானாகிய திருவாலவாயிறைவனது திருக்கோயிற் பூசை முட்டுப்பாடுற்றதோ? தவச்செல்வர்கள் மனம் வருந்த யாம் தீமை செய்ததுண்டோ? சொல்லுமின்." எனத் தன் அருகிலிருந்த அமைச்சர்களை வினவினன். அமைச்சர்கள் மன்னனைத் தொழுது நின்று, 'அரசே, சிவனடிக்கு அன்பராகிய திருவாதவூரடிகளைக் கடுவெயிலிலிருந்து விடுவித்து மகிழ்வித்தால் இவ்வெள்ளப் பெருக்கு தணியும்' எனக் கூறினர்கள். பாண்டியனும் வாதவூரடிகளை யழைத்து உபசரித்துத் தன் பிழைகளைப் பொறுத்தருளும்படி வேண்டினன். 'வெள்ளப் பெருக்கால் நமது மதுரை நகரம் சிதைவுருதபடி நற்றவத் தலைவராகிய நீரே வைகையாற்றின் உடைப்பினை அடைப்பித்தருளல் வேண்டும்' எனக் குறையிரந்தான். விருப்பு வெறுப்பில்லாத வாதவூரடிகள், வைகைப் பெருக்கு தணியுமாறு இறைவன் திருவடிகளைச் சிந்தித்தார். குதிரைச் சேவகனுகி வந்த இறைவனது திருக்கோலத்தையே நினைந்து வானை நோக்கி வணங்கினர். அந்நிலையில் வெள்ளப்பெருக்கு குறைவதாயிற்று. பின்னர்ப் பறை அறைவித்து நகர மக்களை யழைத்து அவரவர்கள் அடைக்க வேண்டிய நிலப்பகுதியை அளந்து அறிவித்தனர். மக்களனைவரும் தத்தமக்கு அளந்து விடப்பட்ட பகுதியை அடைக்க முற்பட்டனர்.

மதுரை நகரிற் பிட்டு விற்றுப் பிழைப்பவளும் சிவபெருமான்பால் பேரன்புடையவளும் நரை மூதாட்டியுமாகிய செம்மனச் செல்வி யென்பாள், தனக்கு அளந்த கரையினை அடைத்தற்குரிய ஆளின்றி வருந்தித் திருவாலவாய்த் திருக்கோயிலை யடைந்து இறைவன்பால் தன் குறையைச் சொல்லி முறையிட்டாள். அவள் நிலைக்கிரங்கிய சிவபெருமான் மண்வெட்டியுங் கூடையுங் கொண்டு கூலியாளாக அவள்முன் தோன்றி, அவள் அளித்த பிட்டினை வாங்கி யுண்டு, அவளுடன் வைகைக் கரையை யடைந்து அவளுக்கு இட்ட பங்கினை அடைக்கத் தொடங்கித் தான் மேற்கொண்ட வேலையைச் செய்யாது ஆடிப்பாடிப் பொழுது போக்கினர். கூலியாளாகிய இறைவரை நோக்கி ஒன்றுஞ் சொல்ல மாட்டாத பிட்டு வாணிச்சி, ‘அரசன் அதிகாரிகள் கண்டால் என்ன நேருமோ’ என அஞ்சி நடுங்கி நின்ருள். அவளது மனநிலையை யுணர்ந்த இறைவர் ‘அன்னையே, கவலைப் படாது நினது வீட்டிற்குச் செல்வாயாக. உனக்கு அளந்த பங்கை நான் விரைவிலடைத்து விட்டு இதோ வருகிறேன்’ என உறுதி சொல்லி அனுப்பிவிட்டுக் கொன்றை மரத்தடியிற் கூடையைத் தலைக்கணையாக வைத்துத் துயில் கொண்டார். அந்நிலையில் வாதவூரரது ஏவலால் கரையினைக் கண்காணிக்க வந்த அதிகாரி, எல்லாப் பங்கும் அடைபட்ட நிலையிலும் பிட்டு வாணிச்சியின் பங்கு அடைபடாது வெள்ளத்தாற் சிதைவுறுதல் கண்டு வெகுண்டு ‘அவளுடைய கூலியாளை இங்குக் கொணர்க’ எனப் பணித்தான். ஏவலனெருவன் அக்கூலியாளை யிழுத்து வந்து அவன் முன் நிறுத்தினன். வெகுளி மிக்க தலைவன் ‘இவனைக் குருதிசோர அடித்திடும்’ எனக் கூறினன். அது கேட்டு அருகே நின்ற வன்கணளன் ஒருவன் பிரம்பினல் ஓங்கியடித்தான். கூலியாளாக வந்த இறைவர், அங்குள்ளார் திடுக்கிடும்படி விரைந்து மறைந்தார். அவர்மேற் பட்ட அடியானது அரசன், அரசியர், அமைச்சர் முதலிய அனைவர் மேலும் பட்டது; வாதவூரடிகள் மேலும் பட்டது; நிற்பன நடப்பனவாகிய எல்லாவுயிர்கள் மேலும் பட்டது.

அஃதுணர்ந்த வாதவூரடிகள், உயிர்க்குயிராகிய இறைவரே இங்ஙனம் கூலியாளாக எழுந்தருளினர் என்றிரங்கிக் கம்பிதமுங் கண்ணீரு முடையரானர். அந்நிலையில் அவர் முன் அதிகாரிகள் விரைந்து வந்து இறைவனுடைய

திருவிளையாட்டெல்லாம் எடுத்துரைத்தார்கள். அவ்வருட் செயலைக் கேட்டு நெஞ்சம் நெக்குருகிய வாதவூரர், அவ்வதிகாரிகளை நோக்கி 'இறைவன் மண் சுமந்து விளையாடிய இடத்தை எமக்குக் காட்டுவீராக' என்று சொல்லி, அவர்களுடன் அவ்விடத்தை யடைந்து, நிலமிசை விழுந்து புரண்டு அலறி இறைவனது கருணைத் திறத்தை நினைந்து இரங்கினர்; யாவர்க்கும் மேலாம் இறைவனைப் பணிகொண்ட தமது பிழையை நினைந்து பலவாறு புலம்பினர் வைகையாறும் வடிந்தது. இச்செய்தியெல்லாம் அறிந்த பாண்டியன், வாதவூரடிகளை யடைந்து வணங்கித் தனது பிழையைப் பொறுத்தருளுமாறு வேண்டினன். யான் நாளும் நுமது பணி செய்தொழுக இந்நாட்டின் ஆட்சியைத் தாங்களே ஏற்று நடத்தல் வேண்டும் என மன்னன் குறையிரந்து நின்றான். அரசனது அன்பினையுணர்ந்த வாதவூரடிகள் 'என்னைத் திருப்பெருந்துறைக்குச் செல்ல விடுப்பதே இவ்வுலக ஆட்சியை எனக்கு வழங்கியதாகும்' என்றார். அடிகளது சிவபத்தியின் மாண்பினை யுணர்ந்த மன்னன் 'பெரியீர் நும் திருவுளப்படி செய்மின்' எனக்கூறி அவர்பால் விடைபெற்றுத் தனது அரண்மனையை யடைந்தான்.

நம்பனுக்கு அன்பு பூண்ட வாதவூரர், நற்றவக் கோலங் கொண்டார்; தமக்கு மெய்யுணர்வளித்து ஆட்கொண்டருளிய ஆசிரியப் பெருமானைக் கண்டிறைஞ்ச விரும்பி, மதுரையினின்றும் புறப்பட்டுத் திருப்பெருந்துறையை யடைந்து குருநாதர் திருவடிகளில் வீழ்ந்திறைஞ்சினர். அடியார் சூழ ஆசிரியத் திருமேனி கொண்டெழுந்தருளிய இறைவர், வாதவூரடிகளுக்குத் திருநீறு தரித்து அருட்பார்வை நல்கினர். தம்மைச் சூழ்ந்துள்ள அடியார்களை நோக்கி 'நாம் நினைத்து வந்த கருமமெல்லாம் இனிது முடித்தனம். கயிலையிலுள்ள நம் தொண்டர்கள் நமது திருமேனியைத் தரிசிக்க விரும்பி நம்மை அன்புடன் தியானிக்கின்றனர். ஆதலால் யாம் அங்குச் செல்லுதல் வேண்டும். நீங்கள் மகிழ்ச்சியுடன் இங்கு வாழ்ந்திருப்பீராக' எனத் திருவாய் மலர்ந்தருளினர். தொண்டர்களெல்லாம் இறைவன் திருவடிகளில் வீழ்ந்திறைஞ்சித் தோத்திரஞ் செய்து 'எம்பெருமானே, நினது பிரிவைத் தரித்திருக்கும் ஆற்றலுடையோமல்லோம். எம்மைக் கைவிடுவாயோ' என அழுதரற்றினர்கள். அவர்கள்பால் அருளுடைய

இறைவர் 'நீங்கள் வருந்துதல் தவிர்மின். இக்குருந்தமர நீழலில் தெய்வபீடம் அமைத்து அதன்மீது நம்திருவடிகளை வைத்து வழிபட்டிருப்பீராக. இத் திருத்தமாம் பொய்கையின் நடுவே ஒருநாள் தீப்பிழம்பு வந்து தோன்றும். நீவிர் யாவரும் அத்தழலில் மூழ்கி நம்மையடைந்து மகிழ்மின்' எனக்கூறித் தம்முடன் தொடரும் அடியார்களை 'நில்லுமின்' என நிறுத்திக் கயிலையை நோக்கிப் புறப்பட்டார். அவரைப் பிரிந்திருக்கலாற்றாத வாதவூரடிகள், அவரை மீண்டுந் தொடர்ந்தார். அடிகளது வருத்தத்தினைப் போக்கக்கருதிய இறைவர், அங்குள்ளதொரு கொன்றைமர நீழலிற் சிறிது பொழுது தாமதித்திருந்து வாதவூரடிகளை அருகே அழைத்து 'நாம் எல்லாவுலகத்தும் யாண்டும் நீக்கமறத்தங்கியிருப்போ மாயினும், அன்பராகிய அடியார்களது வினைத்தொடர்பகற்றி ஆட்கொள்ளுதல் வேண்டி இத்திருப்பெருந்துறையிற் குருந்த மர நீழலிலே எப்பொழுதும் எழுந்தருளியிருப்போம். இங்குச் சூக்குமநாதவொலியாகிய சங்கநாதமல்லது பிற வாத்தியங்கள் நமக்கு ஆகா. நீ அடியார்களுடன் குருந்தடியில் நம்மை வழிபட்டிருப்பாயாக. திருத்தமாம் பொய்கையில் தோன்றும் தீயுள் அடியார்கள் புகும்பொழுது நீயும் உடன் புகாது இத்தலத்தை விட்டுநீங்கித் திருவுத்தரகோச மங்கையையடைந்து அங்கே சித்திகளெல்லாம் பெற்றுச் சிவ லிங்கத் திருமேனி கொண்டுள்ள திருத்தலங்களிலெல்லாம் இக்குரு வடிவத்தையே கண்டு மகிழ்வாயாக. பின் திருக்கழுக் குன்றத்தை வணங்கி அங்கிருந்து மீண்டும் தென்றிசை நோக்கிவந்து தில்லையிற் பொன்னம்பலத்தை வணங்கிப் 'புத்தர்களை வாதில் வென்று நம்திருவடிப் பேற்றினைப் பெற்று இன்புறுவாய்' எனப்பணித்தருளினர். இங்ஙனம் வரந்தரவிருந்தபெருமானை வாதவூரடிகள் வணங்கி நின்று 'எம்பெருமானே பெருந்துறை நகரிலன்றிப் புலியூர்ப் பொன்னம்பலத்தே முத்திபெறுவை என்று அடியேற் கருளியது எவன்கருதி?' என வினவினர். 'புழுவானது தான் எடுக்கப்பட்ட இடத்தின்கணன்றி வைக்கப்பட்ட இடத்திலேயே வேட்டுவனாகிய குளவியின் வடிவத்தைப் பெறும். அதுபோல இப்பெருந்துறையிலே நினக்கு மெய்ஞ் ஞானத்தை யுபதேசித்தேம், சிவாநுபூதியாகிய பரமுத்தி உனக்குத் தில்லையம்பலத்திலே யுண்டாகும்' எனக்கூறித் தில்லைப்பதியின் சிறப்பினை யெடுத்துரைத்து வாதவூரடி

களின் நெற்றியிலே திருநீறுசாத்திச் சிவபெருமான் மறைந் தருளினர்.

பின்பு வாதவூரடிகள் அடியார்குழுவில் வந்தடைந்து குருந்தின் கீழ்த் தெய்வபீடம் அமைத்து இறைவன் திருவடி களை வழிபட்டிருந்தார். இறைவன் தன்னை அன்பினுற் பாடிப்போற்றிய அடியார்களுக்கு இரங்கி யருள்புரிவார் எனத்தெளிந்து ' நமச்சிவாய வாஅழ்க ' என்றெடுத்து ஞான வாசகம் பாடத்தொடங்கினர். திருப்பெருந்துறையில் இறைவன் திருவடிகளை வழிபட்டிருக்கும் நாட்களில் அற்புதப்பத்து, அதிசயப்பத்து, குழைத்தபத்து, சென்னிப் பத்து, ஆசைப்பத்து, வாழாப்பத்து, அடைக்கலப்பத்து, செத்திலாப்பத்து, புணர்ச்சிப்பத்து அருட்பத்து, திரு வார்த்தை, எண்ணப்பதிகம், திருவெண்பா, திருப்பள்ளி யெழுச்சி, திருவேசறவு, ஆனந்தமாலை, உயிருண்ணிப்பத்து, பிரார்த்தனைப்பத்து, திருப்பாண்டிப் பதிகம் ஆகிய பனுவல் களைப் பாடிப்போற்றினர்.

சிலநாட்களுக்குப்பின் இறைவன் பணித்தவண்ணமே திருத்தமாம் பொய்கையில் தீப்பிழம்பு தோன்றியது. அன்புடைய அடியார்களெல்லாம் அஞ்செழுத்தோதி அதனுள்ளே புகுந்தார்கள். சிவபெருமான் உமையம்மை யாருடன் விடைமீது தோன்றிக் காட்சியளித்தருளினர். அடியார்களனைவரும் சிவகணநாதர்களாயினர். ' புத்தர் களைப் புலியூரில் வாதில் வெல்லுதற் பொருட்டுத் திருவாத வூரனை இப்புவியில் தங்கச் செய்தோம். எமது பிரிவாற்ருது வருந்தும் வாதவூரனது வருத்தத்தைத் தணித்தற் பொருட்டே நும்மை இங்குச் சிலநாள் இருக்கப்பணித்தோம். மலநீங்கிய சிவஞானிகளும் மானுடவடிவத்துடன் இந்நில வுலகில் சிலநாள் தங்குவராயின் அவர்களை மலவாதனை மீளவும் வந்துதாக்கும் என்பது கருதியே பொய்கையில் ஞானக்கினியைத் தோற்றுவித்து நுமது சரீரத்தை நீருக்கி இவ்வுடம்பினைத்தந்தோம்' என இறைவன் சிவகணநாதர் களுக்கு அறிவுறுத்தி அவர்களுடன் மறைந்தருளினர். கொன்றை மரநீழலிற் சிவயோகத்தில் அமர்ந்திருந்த வாத வூரடிகள், இந்நிகழ்ச்சியினை யோகக்காட்சியாலுணர்ந்து பொய்கைக்கரையையடைந்து இறைவனையும் அடியார் களையும் காணுது வருந்தி அழுதரற்றினர். பின் ஒருவாறு உள்ளந்தெளிந்து குருந்தமரநீழலையணுகி இறைவன்

திருவடிகளையிறைஞ்சி நின்று 'மெய்தானரும்பி' யெனத் தொடங்கும் திருச்சதகத்தைப் பாடிப்போற்றினர். முன் சிவபெருமான் அருளியதனை மனத்தின்கண் நினைந்து திருப்பெருந்துறையினின்றும் புறப்பட்டுத் திருவுத்தர கோசமங்கையெய்தி இறைவனது திருக்கோயிலிற் புக்கு அங்குக்குருவடிவத்தைக் காணுது வருந்தி நீத்தல் விண்ணப் பத்தைப் பாடினர். அப்பொழுது இறைவன் அடிகளுக்கு ஆசிரியத்திருமேனி காட்டி அருள் புரிந்தார்.

பின்னர் அங்கிருந்து புறப்பட்டுத் தெய்வத்திருத்தலங் கள் பலவற்றையும் தரிசித்துக் கொண்டு சோழநாட்டை யடைந்து இடைமருதுறையும் பெருமானை இறைஞ்சிப் போற்றினர், திருவாரூர் இறைவனைப் பணிந்து திருப்புலம் பல் பாடினர். சீகாழிப்பதியைப் பணிந்து பிடித்த பத்தினைப் பாடிப் பரவினர். திருக்கழுக்குன்றத்தை வணங்க எண்ணித் தில்லைப் பதியைத் திசைநோக்கித்தொழுது திருமுதுகுன்றம், திருவெண்ணெய் நல்லூரருட்டுறை முதலிய தலங்களைப் பணிந்து திருவண்ணுமலையை அடைந்தார். அங்குள்ள மாதர்களெல்லாம் மார்கழித்திங்களில் திருவாதிரைக்கு முன் பத்துநாள் தொடங்கி வைகறைப்பொழுதில் துயிலெழுந்து மனைகள் தோறும் சென்று மகளிரைத்துயிலெழுப்பி அனை வரும் ஒன்றுகூடிச் சிவபெருமானது மெய்ப்புகழைப்பாடிப் பொய்கையில் நீராடியது கண்ட வாதவூரடிகள், அம் மகளிர் கூறுவதாகத் திருவெம்பாவையை அருளிச் செய்தார். அவர்கள் விளையாட்டில் கூறும் கூற்ருகத் திருவம்மானை பாடினர். காஞ்சி நகரடைந்து திருவேகம்பம், காமக்கோட்டம் ஆகிய திருக்கோயில்களை இறைஞ்சித் திருக்கழுக்குன்றை அடைந்தார். அங்கே இறைவர் பெருந்துறையிற் காட்டிய குருமேனிகொண்டு காட்சி தந்தருளினர். அவ்வருட் காட்சியைக் கண்டு மகிழ்ந்த அடிகள், திருக்கழுக்குன்றப் பதிகம் பாடினர். பின் தில்லைப் பதியை யடைந்து தில்லைச் சிற்றம்பலவன் ஆசிரியத்திருமேனி காட்டி அருள்புரியக் கண்டு ஆனந்தக் கண்ணீர் சொரியக் 'கண்டபத்துப் பாடி ஓவியம்போல் அசைவற்று நின்ருர். இவ்வாறு நெடுநேரம் தன்வசமிழந்து நிற்கும் வாதவூரடிகளைக்கண்ட கோயில் மெய்காவலர் அடிகளைப் பித்தரெனத்தவருகக் கருதிப், 'பொன்னம்பலத்தை விட்டு வெளியே செல்லும்' எனக் கடிந்துரைத்தனர். நன் புலனென்றி நின்ற அடிகளது

செவியில் அச்சொல் புகவில்லை. பின் அடிகள் தம்முணர்வு வரப்பெற்றுச் 'சிவ சிவபோற்றி' எனத்தில்லையம்பலவனை வழிபட்டு வலம் வந்து திருப்புலீச்சரம், திருநாகேச்சரம் (அனந்தீசம்) ஆகிய திருக்கோயில்களை இறைஞ்சித் தில்லைத்திருவீதியை வலம் வரும்போது குலாப்பத்து, கோயிற்றிருப்பதிகம், கோயில் மூத்ததிருப்பதிகம், கீர்த்தித் திருவகவல், திரு அண்டப்பகுதி, போற்றித்திருவகவல் என்பவற்றைப் பாடினர். மாதர்கள் நறுமணப்பொடியாகிய சுண்ணம் இடிக்குங்கால் அவர்கள் கூறுவதாகத் திருப்பொற் சுண்ணம் பாடினர். அருகேயுள்ள சோலையிற் சென்று விளையாடும் சிறுமியர்களின் பலவகை விளையாடல்களைக் கண்டு, அங்ஙனம் விளையாடு மகளிர் 'பயனற்ற சொற்களை நீக்கி எம்பெருமானாகிய இறைவனைப் பாடுமின்' எனத் தமக்குள் உரையாடும் நிலையில் திருத்தெள்ளேணம், திருவுந்தியார், திருத்தோணோக்கம், திருப்பூவல்லி, திருப் பொன்னூசல் ஆகிய பனுவல்களைப் பாடிப்போற்றினர். அன்னைப்பத்து, திருக்கோத்தும்பி, குயிற்பத்து, திருத் தசாங்கம், அச்சப்பத்து, ஆகிய செழும் பாடல்களைப் பாடித் தில்லைநகர்ப் புறத்திலே இலைக்குடில் (பன்னசாலை) அமைத்து அதன்கண் அமர்ந்திருந்தார்.

இவர் இங்ஙனமிருக்க, சிவனடித்தொண்டு பூண்ட அருந்தவரொருவர், சோழநாட்டுத் தலங்களை வணங்கித் தில்லைப் பொன்னம்பலத்தைக் கண் குளிரக் கண்டிறைஞ்சி ஈழநாட்டை யடைந்தார். தில்லைச் சிற்றம்பலத்தின் பெருமையை யுணர்ந்த அவ்வடியவர், செல்லுமிடந்தோறும் பொன்னம்பலம் என்று கூறுதலை வழக்கமாகக் கொண்டிருந் தார். அவரது இயல்பினைக்கண்டு பொருத புத்தர்கள், தம் வேந்தனாகிய ஈழமன்னனைக் கண்டு முறையிட்டார்கள். மன்னன், அவ்வடியவரை அழைத்துவம்மின் என்றான். அரசனது ஏவலால் அழைக்கப்பெற்ற சிவனடியார், அரசன் முன்னிலையில் 'பொன்னம்பலம்' என்று கூறி அமர்ந்தார். 'அச்சொல்லின் சிறப்புயாது' என மன்னன் வினவினன். சிவனடியாராகிய அவர், சிவபெருமான் உமையம்மை காணத் திருநடம்புரியும் தில்லைச் சிற்றம்பலத்தின் சிறப்பினை விரித் துரைத்து 'ஒருமுறை பொன்னம்பலம் என்று சொன்னவர் திருவைந்தெழுத்தை இருபத்தோராயிரத்து அறுநூறுமுறை ஓதிய பயனைப்பெறுவர்' எனக் கூறிமுடித்தார். அதுகேட்டு

அருகேயிருந்த புத்தகுரு மிகவும் வெகுண்டான். 'திரி பிடகத்தை யருளிய புத்ததேவனாகிய எங்கள் தலைவனை யன்றி வேறொரு தெய்வமுண்டோ? உண்டாயின் தில்லையை யடைந்து அங்குள்ளவர்களை வாதில்வென்று பொன்னம் பலத்தைப் போதிநீழற் பெருமானுக்குரிய புத்தவிகாரமாக மாற்றுவேன்' எனச் சூளுரைத்துப் புத்தர்குழுவுடன் புறப் பட்டான். ஈழமன்னனும் ஊமையாகிய தன்மகளை அழைத்துக்கொண்டு தில்லைப் பதியை யடைந்தான்.

முன்னமே சென்ற புத்தகுரு, சிதம்பரத்தையடைந்து திருப்புலீச்சரத் திருக்கோயிலிலே தங்கியிருந்தான். புறச் சமயத்தானாகிய அவனைக் கண்ட நகரமக்கள் 'தில்லை யெல்லையை விட்டு அகல்க' எனக் கடிந்துரைத்தார்கள். 'யான் சோழமன்னனுக்கெதிரில் நுமது சைவசமயம் மெய்ச் சமயம் அன்று எனத்தெளிவித்து எங்கள் புத்ததேவனே தெய்வம் என நிலைநிறுத்தியன்றி இவ்விடத்தை விட்டு அகலேன்' எனப் புத்தகுரு கூறினான். இதனைக்கேட்டோர் இச்செய்தியைத் தில்லைமூவாயிரவர்க்குத் தெரிவித்தார்கள். அவர்கள் அங்குவந்து புத்தகுருவை நோக்கி 'நீ இவ்வாறு செய்வது என்' எனவினவக் கேட்ட புத்தகுரு 'நீங்கள் வேதசாத்திர அளவைகளைக் கொண்டு நுமது தெய்வமே தெய்வமென்று நிலைநாட்டுவீராயின், யான் அதனை மறுத்துப் புத்தனே கடவுள் என நிலைநிறுத்துவேன்' என்றான். புத்தனை வாதில்வென்று போக்குதலே முறையென உணர்ந்த தில்லைவாழந்தணர்கள், சோழமன்னனுக்குத் திருமுகம் எழுதியனுப்பி அருந்தவ முனிவர்களாகிய சிவனடியார்களுக்கும் ஓலையெழுதியனுப்பினார்கள். இரவுப் பொழுதெய்திய அளவில் தில்லை நகர மக்கள் அனை வரும் தத்தம் மனையிற் சென்று துயில் கொண்டனர். அன்றிரவு வைகறைப்பொழுதிலே தில்லைப்பெருமான் சடை முடியும் முழுநீறு பூசிய திருமேனியும் உடையராய்க் கையிற் பிரம்பு தாங்கித் தில்லைநகர மக்களது கனவிலே தோன்றி 'நீவிர் வருந்துதலொழிமின், நம்முடைய ஊரெல்லையில் வாதவூரன் வந்து தங்கியிருக்கிறான். அவன் இம்மொழியைக் கேட்ட போதே விரைந்து வந்து தர்க்க சாத்திர முறைக்குப் பொருத்தமான வகையில் புத்தர்களை வாதில் வெல்வான். தவப்பயனுடைய நீங்கள் அவனை அழைப்பீராக' எனப் பணித்து மறைந்தருளினார்.

விழித்துணர்ந்த அவர்கள் திருக்கோயில் மண்ட பத்திலே வந்து கூடித் தாங்கள் கண்ட கனவினை ஒருவரொடொருவர் சொல்லி மகிழ்ந்து திருவாதவூரடிகளை யடைந்து இறைவனது அருள் வாக்கினை யெடுத்துரைத்து வணங்கினார்கள். இறைவனது அருளிப்பாட்டினை யறிந்த வாதவூரடிகள், தில்லை மூவாயிரவருடன் போந்து கூத்தப் பெருமானை வணங்கி யருள்பெற்றுப் புத்தர்கள் தங்கிய மண்டபத்தை அடைந்தார். சிவபெருமானுக்கு அன்பிலாதா ராகிய புத்தர்களைத் தம் கண்ணாற் பார்த்தலாகாதென்று நடுவே திரையிடுவித்து அத்திரைமறைவில் ஓர் ஆசனத் தில் அமர்ந்தார். சோழ மன்னன் விரைந்து அங்கு வந்து திருவாதவூரடிகள் திருவடிகளை யிறைஞ்சி அவரருகே அமர்ந் தனன். அப்பொழுது ஈழத்தரசன் எழுந்து சென்று தான் கொணர்ந்த திறைப்பொருளைக் கொடுத்துச் சோழ மன்னனை வணங்கினான். சோழனும் மகிழ்ந்து அவனைத் தன்னருகே அமர்த்திக் கொண்டான். ஆராய்ந்துணர்ந்து வெற்றி தோல்வியினை நடு நின்று எடுத்துரைக்கும் சான் றோர்களும் அவை நடுவே வந்தமர்ந்தார்கள். எல்லோரும் வந்து நிரம்பிய அச் சபையிலே சோழ மன்னன் திருவாத வூரடிகளை வணங்கி நின்று 'சைவ சமயத்தை நிலை நிறுத்து வது தங்கள் கடமை. தோல்வியுற்ற புத்தர்களைப் போக்கு வது எனது கடமை' என மொழிந்தான். வாதவூரடிகள் புத்த குருவை நோக்கி 'நீ வந்த காரணம் என்ன' என வினவினார். 'எங்கள் தெய்வத்தை யன்றி வேறு தெய்வ மில்லை யென்று யாவருங் காண உறுதிப்படுத்தி இப்பொன் னம்பலத்தே எங்கள் புத்த தேவரை வைத்தற்காக நேற்றே இங்கு வந்து காத்திருக்கிறேன்' எனப் புத்த குரு கூறினான். அது கேட்டு வாதவூரடிகள் புன்முறுவல் செய்து "நினது கடவுளிலக்கணமும் முத்தி நிலையும் இன்னவெனச் சொல் வாயாக' என்றார். புத்த குரு திரிபிடகத்திற் சொல்லிய வண்ணமே தன் சமயக் கொள்கைகளை யெடுத்துரைத்தான். திருவாதவூரடிகள் அவன் சொல்லியவற்றை யெல்லாம் அளவை நூல் வரம்பு தவறாது மறுத்துரைத்தார். தன் சமயக் கொள்கை மறுக்கப்பட்டமையால் ஒளி மழுங்கிய புத்த குரு அடிகளை நோக்கி 'நும் கடவுள் யாது? நுமது முத்தி எது' என வினவினான். வாதவூரடிகள் சிவபெருமானது பெருமையினை விரித்துரைத்தார். அவ்வளவில் புத்த குரு

இடை மறித்து அடிகள் கூறியவற்றை இகழ்ந்துரைப்பா ஞயினன். அவன் கூறிய இகழ்ச்சியுரைகளுக்கு மறுமொழி கூறிய வாதவூரடிகள், கலைமகளை நோக்கி 'நான்மறைகளைச் சொல்லும் நாமகளாகிய நீ முன்னர்த் தக்கன் வேள்வியிற் பட்ட துன்பத்தை மறந்து சிவநிந்தை செய்யும் இப்புத்தர் களது நாவிலிருப்பது தகுதியோ? இவர்களது நாவினை விட்டு விரைவில் நீங்குவாயாக' எனச் சினந்துரைத்தார். நிறைமொழி மாந்தராகிய அடிகளது சினங்கண்டு அஞ்சிய கலைமகள், புத்தர்களுடைய நாவினை விட்டகன்ருள். அதனல் அவர்களனைவரும் ஊமைகளாயினர். அத்துன்ப நிலையைக் கண்ட ஈழ மன்னன், வாதவூரடிகளை வணங்கி நின்று, 'பெரியீர், நும்முன்னிலையிலே பேசவல்ல புத்தர்கள் ஊமை களாயினர். பிறவியூமையாகிய என்மகளைப் பேசும்படி செய்தருள்வீராயின் யான் நுமக்கு அடியனுவேன்' என்ருன். அடிகள் அம்மன்னன் மகளை அழைத்துவரச் செய்து அவளை நோக்கி முன் தன்பால் புத்தகுரு கேட்ட வினக்களுக்கெல் லாம் விடை கூறும்படி பணித்தருளினர். அவளும் அவ்வினக் களுக்குத் தக்கவாறு விடை பகர்ந்தாள். வாதவூரடிகள் அவ் வினவிடைகளைத் தொகுத்து மங்கையர் விளையாட்டிற் பாடிப் பயிலும் முறையில் திருச்சாழற் பாடல்களாகப் பாடியருளினர்.

இவ்வற்புத நிகழ்ச்சியைக்கண்டு வியந்த ஈழமன்னன் வாதவூரடிகள் திருவடிகளில் வீழ்ந்திறைஞ்சி அவர்க்குத் தொண்டனுயினுன். 'இப்புத்தர்களுக்கு ஊமை நீங்க அருள் செய்தல் வேண்டும்' என இரந்து நின்ருன். அடிகளது அருட் பார்வையால் அங்கிருந்த புத்தர்களனைவரும் ஊமை நீங்கப்பெற்று, 'அடியேங்களுக்குத் திருநீறும் அக்கமாலையும் கல்லாடையும் அளித்தருளல் வேண்டும்' என வாதவூரடிகளை வணங்கினுர்கள். வாதவூரடிகளும் அவர்கள் விரும்பிய வண்ணமே திருநீறு நல்கி அவர்களது துவராடையைச் சுட்டெரித்தார். பின்னர் எல்லோரும் தில்லைச் சிற்றம் பலவனை வணங்கிப் போற்றி அடிகள்பால் விடைபெற்றுத் தத்தம் இருப்பிடத்தை அடைந்தார்கள். வாதவூரடிகள் தில்லையில் பன்னசாலையில் தங்கியிருந்து கூத்தப்பெருமானை வணங்கித் திருப்படையாட்சி, திருப்படையெழுச்சி, அச்சோப் பதிகம், யாத்திரைப்பத்து ஆகிய திருவாசகப் பனுவல்களைப் பாடிப் போற்றிக் கவற்சியும் களிப்புமில்லாத பேரின்ப வாழ்வில் திளைத்திருப்பாராயினர்.

இங்ஙனம் இருக்கும் நாட்களில் ஒருநாள், தில்லையுட் கூத்தனாகிய சிவபெருமான், வேதியர் வடிவு கொண்டு வாதவூரடிகள் முன் வந்து நின்றார். அடிகள் அவ்வேதியரை அங்கு அமரும்படி சொல்லி 'நீர் எங்குளீர்? கூறும்' எனக் கேட்க, வேதியராய் வந்த அவரும் 'யாம் பாண்டி மண்டலத் திருப்போம்' எனப் பகர்ந்தார். பாண்டி நாடெனக் கேட்ட அளவில் முன்னையினும் பரிவுடையராகிய வாதவூரடிகள், வேதியரை நோக்கி 'நீர் இங்கு வருதற்குரிய காரியம் யாது? கூறும்' என்றார். அது கேட்ட வேதியர் 'நும்மைக் காணுதற் பொருட்டே இங்கு வந்தேம். வானோர்களாலும் காணுதற் கரிய இறைவனைப் பரிமீது அமர்ந்துவரச் செய்த நுமது பெருமையாலே பாண்டி நாடு உய்ந்தது. நீர் பெருந்துறை யீசனை வணங்கிப் பின் பல தலங்களையும் இறைஞ்சித் தில்லை யிற் புத்தர்களை வாதில் வென்ற செய்தியைக் கேட்டு யாவரும் பெருமகிழ்ச்சி யடைந்தார்கள். சிவபெருமானது மெய்ப் புகழ் விளங்க நீவிர் பாடிய திருப்பாடல் முழுவதையும் ஓத விரும்பி இங்கு வந்தேன். அப்பாடல்களை யான் எழுதிக் கொள்ளும்படி விளங்கச் சொல்வீராக' என வேண்டிக் கொண்டார். வாதவூரடிகள் தாம் பாடிய திருவாசகச் செழும் பாடல்களை முறையே கூறக்கேட்டு வேதியராகிய இறைவர் முழுவதும் எழுதிக்கொண்டார். மீண்டும் அடிகளை நோக்கி 'தில்லைச் சிற்றம்பலவரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு அகப்பொருட் கோவை பாடுவீர்' என வேண்டினார். அடிகளும் அதற்கிசைந்து அகப்பொருட் கோவை பாடி அப்பாடல்களை முறையே சொல்லி வந்தார். வேதியராக வந்த இறைவர், அக்கோவையையும் எழுதி முடித்துப் புத்தகத்தைக் கட்டிக்கொண்டு விரைவில் மறைந்து போயினார். திருவாதவூரடிகள் தமக்கு முன் இருந்த வேதியரைக் காணாது மனம் வருந்திப் புறத்தே சென்று தேடியும் காணாராய் வியப்பெய்தி இங்ஙனம் வந்து சென்றவர் எல்லாம் வல்ல இறைவரே யெனத்தெளிந்து திருவருளின்பத்தில் தோய்ந்திருந்தார்.

இங்ஙனம் வாதவூரடிகள் திருவாய் மலர்ந்த திருவாசகச் செழுமறையை எழுதிக்கொண்டு சென்ற சிவபெருமான், அதன் முடிவில் 'அழகிய திருச்சிற்றம்பலமுடையார் எழுதியது' எனத் தமது கையொப்பமும் இட்டு அத் திருமுறையேட்டினைத் தில்லைச் சிற்றம்பலத்தின் வாயிற்

படியில் வைத்தருளினர். மறுநாள் பூசை செய்ய வந்த அந்தணர், என்றுமில்லாததோர் புத்தகம் அங்கிருத்தலைக் கண்டு அதிசயித்துத் தில்லைநகரத்தார்க்குத் தெரிவித்தார். அதனைக்கண்ட நகரமாந்தர் 'இஃது இறைவனருளிய ஆகமமோ தமிழ்நூலோ என அறிதல் வேண்டும்' என்றனர். அப்பொழுது தில்லை வாழந்தணரொருவர் முன் சென்று அவ் ஏட்டினை நறுமலர் கொண்டு அருச்சித்து வணங்கி அவிழ்த்துப் படித்துப் பார்த்தபொழுது அதன்கண் திருவாசகமும் திருச்சிற்றம்பலக் கோவையும் எழுதப்பெற்று முடிவில் 'திருவாதவூரன் சொல்ல அழகிய திருச்சிற்றம்பலமுடையார் எழுதியது' எனக் கைச்சாத்திட்டிருத்தல் கண்டு இறைவன் திருவருளை வியந்து போற்றினர்கள். இத்திருமுறையின் பொருளைத் திருவாதவூரடிகள்பாற் கேட்டுணர்தல் வேண்டும் என்ற பெரு விருப்பம் அங்கிருந்தோரனைவருள்ளத்திலும் மிக்குத் தோன்றியது. எல்லோரும் திருவாதவூரடிகள் இருந்த தவச்சாலையை யடைந்து வாதவூரடிகள் திருவடிகளை இறைஞ்சி நின்று திருவாசகத் திருமுறை தமக்குக் கிடைத்த அற்புத நிகழ்ச்சியை எடுத்துரைத்து அத்திருமுறைக்குப் பொருள் விரித்தருளும்படி வேண்டிக் கொண்டார்கள். சிவபெருமானது திருவருட் பெருமையை நினைந்து நெஞ்சம் நெக்குருகிய வாதவூரடிகள், தம்மை வணங்கிய அன்பர்களாகிய எல்லோரையும் அழைத்துக்கொண்டு பொன்னம்பலத்தை யடைந்தார். 'திருவாசகத்திற்குப் பொருளாவார் பொன்னம்பலவராகிய இவரே' எனக்காட்டி எல்லோருங்காணத் தில்லையம்பலத்திற் புக்கு மறைந்தனர். தில்லைச் சிற்றம்பலவனாகிய இறைவன், திருவாதவூரடிகளைப் பாலுடன் மேவிய நீர்போற் பிரிவறக் கலந்து ஒன்றும் வண்ணம் தன் திருவடியிற் சேர்த்தருளினன். அடிகளது திருமேனி சிவரூபமாகிய இவ்வற்புத நிகழ்ச்சியைக் கண்டோரனைவரும் சிவபெருமானது திருவருளை வியந்து திருவாசகத் தேனை நுகர்ந்து மகிழ்ந்தார்கள்.

(4) திருவுத்தரகோசமங்கைப் புராணம்

இந்நூலில் பார்ப்பதி தவம் புரிந்த அத்தியாயத்தில் மாணிக்க வாசகரது வரலாறு சுருக்கமாகக் கூறப்பட்டுளது. திருவுத்தரகோசமங்கைத் திருக்கோயிலின் தென் மேற்குத் திசையில் முற்றுணர்வுடைய முனிவர் ஆயிரவர் சிவபெரு

மானை நோக்கித் தவஞ் செய்தனர். இறைவன் அவர்களுக்கு முன்னே தோன்றி 'நாம் மண்டோதரிக்கு அருள் செய்தற் பொருட்டுக் கடல் சூழ்ந்த தென்னிலங்கைக்குச் செல்கின் றேம். நீவிர் இவ்விடத்திலேயே இருமின்' எனக் கூறித் தம் கையிலுள்ள அரும் பொருள் நூலாகிய திருமுறையை அறிஞர்களாகிய முனிவர்களிடம் தந்தருளினர். முனிவர்கள் இறைவனை வணங்கி நின்று, 'எம்பெருமானே, தாங்கள் தீவினையாளராகிய அரக்கர்கள் வாழும் இலங்கைக்குச் செல் லுதல் தகுமோ' என வினவினர். 'இலங்கை மன்னனாகிய இராவணன் நம் திருமேனியைத் தீண்டும் பொழுது இங் குள்ள பொய்கையின் நடுவே தீப்பிழம்பு தோன்றும்' எனக் கூறிச் சிவபெருமான் இலங்கைக்குச் சென்று மண்டோதரி மாளிகையையடைந்து அவள் அன்புடன் செய்த பூசனையை யேற்று மகிழ்ந்திருந்தார். அந்நிலையில் மண்டோதரி மாளி கைக்கு இராவணன் சென்றான். அப்பொழுது சிவபெரு மான் இளங்குழந்தையாக உருமாறினர். குழந்தையைக் கண்ட இராவணன், தன் மனைவியை நோக்கி 'இக்குழந்தை எங்கிருந்து வந்தது?' என வினவினன். 'தவப்பெண் ணொருத்தி இக்குழந்தையை என்னிடந் தந்து போயினள்' என்றாள் மண்டோதரி. வனப்புமிக்க அக்குழந்தையை அன்புடன் அணைத்தெடுத்துத் தன் மடிமீது அமர்த்திக் கொண்டான் இராவணன்.

இங்ஙனம் சிவபெருமானாகிய அக்குழந்தையை இரா வணன் தொட்ட அளவிலே திருவுத்தரகோசமங்கை யிலுள்ள பொய்கையிலே முற்கூறிய வண்ணம் தீப்பிழம்பு தோன்றியது. அது கண்டு மன நடுக்கமுற்ற தவமுனிவ ரனைவரும் அத்தீயிற் பாய்ந்தனர். அம்முனிவர்களுள் ஆண்டில் இளையவரும் அறிவில் முதியவருமாகிய மாணிக்க வாசகரென்னும் வேதியர் இறைவன் தந்தருளிய அருள் நூலைப் பாதுகாத்தற் பொருட்டுத் தாம் மட்டும் அத் தீயிற் புகாமல் நெடுநாள் அப்பொய்கைக் கரையிலேயே தங்கியிருந்தார். இவர் இங்ஙனமாக, பார்வதி தேவியார் முதுமைக் கோலமுடைய தவச் செல்வியாக மண்டோதரி மாளிகையை யடைந்து இளங் குழந்தையாகிய சிவபெரு மானைப் பெற்றுக்கொண்டு திரும்பினர். பின்பு சிவபெரு மான் உமாதேவியாருடன் திருவுத்தரகோசமங்கையின் பொய்கைக் கரையை யடைந்து தழலிற் புகுந்த முனிவர்

களுக்கு அருள் புரிந்தார். அப்பொய்கைக் கரையிலே பொருள் நூல் குறித்த திருமுறையைப் போற்றல் குறித்து வீற்றிருந்த மருள் நீங்குணர்வின் மாணிக்க வாசகரை நோக்கி, 'அன்ப, நீ இந்நிலவுலகில் யாம் கோயில் கொண் டருளிய தலங்கள் தோறுஞ் சென்று எம்மைப் பாடிப் போற்றுவாயாக. யாமே ஒரு தலத்தில் ஆட்கொண்டு மும் மலங்களைக் களைந்து ஈறிலாப் பேரின்பமாகிய வீடு பேற்றினை அளிப்போம்' என அருள் செய்து மறைந்தருளினார் என இப்புராணத்தில் மாணிக்கவாசகரது முன்னைப் பிறப்பின் வரலாறு குறிப்பிடப் பெற்றுளது.

இந்நூலாசிரியர்,

"நிரைசிறந்த நெடுங்குடுமிப் பொலங்கிரியிற்
கயலெழுது நிருபனேவ
விரைசெலவாம் பரிகொணர்ந்து வருகெனப் போய்ப்
பொருள் கொடுபோய் விழைவி னெய்தித்
தரை விளங்கும் பெருந்துறையிற் குருந்துறைமான்
மழுக்கரந்த தலைவற் போற்றி
உரையிறந்த மெய்ப்பொருள்பெற் றுயர்ந்தவரைத்
தாழ்ந்தவரை யுளத்துள் வைப்பாம்"

எனத் திருவாதவூரடிகளைத் துதிக்கு முகத்தால் அடிகளது வரலாற்றினைச் சுருக்கிக் கூறிய திறம் இங்கு நினைக்கத் தகுவதாகும்.

(5) திருப்பெருந்துறைப் புராணம்

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களால் இயற்றப்பெற்ற இப்புராணத்தில் திருவாதவூரர் திருவவ தாரப் படலம், அமைச்சுரிமை பூண்ட படலம், திருப்பெருந் துறை யடைந்த படலம், உபதேசப் படலம், மதுரையை யடைந்து விடைபெற்ற படலம், தில்லையை யடைந்த படலம் எனவரும் ஆறு படலங்களில் திருவாதவூரடிகளது வரலாறு விரித்துக் கூறப்பெற்றுளது.

திருவாதவூரிலே வாழ்ந்த ஆமாத்திய வேதியராகிய சம்பு பாதாசிருத ரென்பார், தம் மனைவியார் சிவஞானவதியா ருடன் சிவபெருமானை வழிபட்டுப் புத்த சமயக் குறும்பினைப் போக்கவல்ல புதல்வரொருவரைத் தந்தருள வேண்டுமெனக் குறையிரந்து வேண்டினார். சிவபெருமான் அவரது வேண்டு கோளை நிறைவேற்றத் திருவுளங் கொண்டார். சிவகண நாதர் ஆயிரவர் ஒரு நாள் சிவபெருமானை வணங்கி நின்று,

'எம்பெருமானே, அடியேங்களுக்கு ஆகமப் பொருளை யறிவுறுத்தியருளல் வேண்டும்' என விண்ணப்பஞ் செய்தார்கள். அவர்களது பெரு விருப்பத்தை நிறைவேற்றத் திருவுளங்கொண்ட சிவபெருமான் அவர்களை நோக்கி 'நீவிர் அனைவரும் திருவுத்தரகோசமங்கை யென்னுந் தலத்தை யடைந்து நம்மை வழிபட்டிருமின், நாம் அங்கு வந்து நுமது விருப்பத்தை முடித்தருளுவோம்' எனக் கூறி யருளினார்.

இறைவன் பணித்த வண்ணம் சிவகணநாதர் ஆயிர வரும் திருவுத்தரகோசமங்கையை யடைந்து சிவபெருமானை வழிபட்டிருந்தார்கள். அந்நிலையிற் சிவபெருமான் அந்தணனாகி அங்கு எழுந்தருளிச் சிவகண நாதர்களுக்கு ஆகமப் பொருளை உபதேசிக்கத் தொடங்கினார். அப்பொழுது வானோர் தலைவனாகிய இந்திரன் பலவகை அணிநலம் விளங்கப் பவனி வந்தான். இறைவன்பால் உபதேசம் கேட்கும் கணநாதர்களில் ஒருவர், இந்திரனது உலாக் காட்சியிற் கருத்தைச் செலுத்தி இறைவனது உபதேசப் பொருளில் நாட்டமின்றியிருந்தார். அவரது கருத்து புறத்தே செல்லுதலை யுணர்ந்த சிவபெருமான், கணநாதராகிய அவரை நோக்கி, 'நீ நாம் கூறிய உபதேசப் பொருளை மறந்து இந்திரனது உலாக் காட்சியிற் கருத்தைச் செலுத்தினமையால் நீ இந்நிலவுலகிற் பிறந்து விரும்பிய செல்வமெல்லாம் எய்தப்பெற்றுப் பின் நம்மை அடைவாயாக' எனப் பணித்தார். அம்மொழியினைக் கேட்டு மன நடுக்கமுற்ற கணநாதர், 'எம்பெருமானே, அடியேன் என் செய்கேன்' என அழுதரற்றினார். அருளாளனாகிய இறைவன் அவரை நோக்கி 'அஞ்சாதே, நாமே குருவாக வந்து நின்னை ஆட்கொண்டருள்வோம்' என ஆறுதல் கூறித் தேற்றியருளினான். இறைவன் பணித்த வண்ணம் சிவகணநாதராகிய அவ்வடியவர் திருவாதவூரில் சம்புபாதாசிருதர்க்கும் சிவஞானவதியார்க்கும் புதல்வராகப் பிறந்தருளினார்.

பெற்றோர்களால் அன்புடன் வளர்க்கப்பெற்றுக் கல்வித் துறையிற் சிறந்து விளங்கிய திருவாதவூரர், பாண்டிய மன்னனால் நன்கு மதிக்கப்பெற்று அவனுக்கு அமைச்சரா[...] மன்னன் பணித்த வண்ணம் குதிரை வாங்குதற்குப் [...] பட்டு வழியிடையேயுள்ள திருப்பெருந்துறையை [...] தார். அப்பதியில் அன்றிரவு பரிவாரங்களுடன் தங்[...]

தார். ஆன்மநாதராகிய கடவுள் மானிடவுருவுடன் மாணக்கர் பலர் சூழக் குருந்த மரத்தடியில் அமர்ந்திருப்பதாகவும் தாம் அவருடைய திருவடிகளைப் பணிந்து துதிப்பதாகவும் கனவு கண்டு விழித்தெழுந்தார். விடியற் காலையிலே நாட்கடன்களை முடித்துக்கொண்டு தாம் கனவிற் கண்ட வண்ணமே குருந்த மர நீழலிலே குருவாக வீற்றிருந்தருளிய பெருமானைக் கண்டு வணங்கி அவர்பால் ஞானோபதேசம் பெற்றார் எனத் திருப்பெருந்துறைப் புராணம் கூறும்.

இவ்வாறு புராணங்களிற் பல படியாகப் புனைந்துரைக்கப்பெறும் திருவாதவூரடிகளது வரலாற்றினை அடிகளார் திருவாய் மலர்ந்தருளிய திருவாசகம் திருச்சிற்றம்பலக் கோவையாகிய திருமுறையிற் காணப்படும் வரலாற்றுக் குறிப்புக்களாகிய அகச்சான்றுகளையும் பிற நூற் குறிப்புக்களையும் துணையாகக் கொண்டு ஆராய்ந்து துணிதல் அமைவுடையதாகும்.

திருவாதவூரடிகள் அருளிய திருமுறையில் அடிகள் பிறந்தருளிய ஊர், குலம், அவருடைய பெற்றோர் பெயர் முதலியவற்றைத் தெளிவாகத் தெரிந்து கொள்வதற்குரிய சான்றுகள் கிடைக்கவில்லை. எனினும் அடிகள் பிறந்தருளியவூர் திருவாதவூரே யென்பது, 'திருவாதவூர்ச் சிவபாத்தியன்'[1] என நம்பியாண்டார்நம்பி திருவாதவூரடிகளைக் குறித்துப் போற்றுதலால் இனிது விளங்கும். அடிகள் திருவாதவூரில் மானமங்கலத்தாராகும் தொன்னெறி முனிவர் ஆமாத்தியர் குலத்திற் பிறந்தார்[2] எனப் பெரும்பற்றப் புலியூர் நம்பி தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். வாதவூரில் அமாத்தியர்குடியில் தூயசிவாகம நெறியின் துறைவிளங்க அடிகள் அவதரித்தார்[3] என்பர் பரஞ்சோதிமுனிவர். வாதவூரில் மறையோரில் அருள்புனை மாத்தியர் குலத்தில் சைவ நெறித்தலைவனாகத் திகழ்ந்த அந்தணனுக்குப் புதல்வராக வாதவூரர் அவதரித்தார்[4] எனக் கடவுள் மாமுனிவர் கூறுவர்.

1. கோயிற்றிருப்பண்ணியர் விருத்தம் 58.

2. திருவால வாயுடையார் திருவிளையாடற்புராணம், ஞானோபதேசஞ் செய்த திருவிளையாடல் 6-ஆம் செய்யுள்.

3. திருவிளையாடற்புராணம், வாதவூரடிகளுக்கு உபதேசித்த படலம் 4-ஆம் செய்யுள்.

4. திருவாதவூரடிகள் புராணம், மந்திரிச்சருக்கம் 4-ஆம் செய்யுள்.

அடிகள் தோன்றியகுடி ஆதிசைவக் குடும்பம் எனவடமொழி ஆலாசியம் கூறும் என்ப[1] இக் குறிப்புக்களை ஒரு சேரத் தொகுத்து நோக்குங்கால் திருவாதவூரருடைய முன்னோர் வாழ்ந்த தொல்பதி மானமங்கலம் என்பதும், அப்பதியில் வாழ்ந்த அந்தணர்கள் பிறவூர்களிலும் பரவி வாழ்ந்த காலத்து அக்குடும்பத்தினர் மானமங்கலத்தார் என அழைக்கப் பெற்றனர் என்பதும், அந்தணர்களாகிய அன்னோர் அரசர்க்கு அருகேயிருந்து அரசியல் நெறிமுறை களை அறிவுறுத்தும் அமைச்சுத் தொழிலுடையராய் வாழ்ந்த மையால் உழையிருந்தார் என்னும் பொருளுடைய அமாத்தியர் என்ற பெயரால் அழைக்கப் பெற்றனர் என்பதும், அமாத்தியர் என்றபெயரே ஆமாத்தியர் எனவும் மாத்தியர் எனவும் திரிந்து வழங்கலாயிற்றென்பதும், அமாத்திய குலத்தினராகிய திருவாதவூரருடைய முன்னோர் தொன்றுதொட்டுச் சிவாகம நெறியில் ஒழுகிய தமிழ் நாட்டு அந்தணர்களென்பதும் நன்கு புலனாதல் காணலாம்.

திருவாதவூரடிகள் திருவாசகப் பாடல்களில் ஆகமநூற் சிறப்பினைக்குறித்துப் போற்றுதலானும் சிவசமயவுறைப் பின்றித் தம்காலத்து வாழ்ந்த வேதியர்களை,

‘ விரதமே பரமாக வேதியரும்
சரத மாகவே சாத்திரங் காட்டினர் ’

எனத் தமக்குப் புறம்பாயினராக விலக்கிக் கூறுதலானும் தமிழ்நாட்டில் நெடுங்காலமாகச் சிவாகம நெறியினை மேற் கொண்டு வாழ்ந்த அந்தணர்குடியிலே திருவாதவூரடிகள் பிறந்தருளினாரென்பது நன்கு துணியப்படும்.

அடிகளது வரலாற்றினை முதன்முதல் விரித்துக் கூறிய பெரும்பற்றப்புலியூர்நம்பியும் அவர்க்குப் பின்வந்த பரஞ் சோதி முனிவர், கடவுள் மாமுனிவர் ஆகியோரும் வாதவூரடி களைப்பெற்ற தந்தையும் தாயும் ஆகிய பெற்றோர் பெயரைக் குறிப்பிடவில்லை. திருவாதவூரடிகளைப் பெற்ற தந்தையார் சம்புபாதாசிருதர் எனவும் ஈன்று வளர்த்த தாயார் சிவஞான வதியார் எனவும் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை யவர்கள் தாம் இயற்றிய திருப்பெருந்துறைப் புராணத்திற் குறிப்பிட்டுள்ளார்கள். வாதவூரடிகளின் பெற்றோரைக்

* கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் எழுதிய மாணிக்கவாசகர் சரித்திரம் பக்கம் 10.

குறித்து வழங்கும் இப்பெயர்கள் பிற்காலத்தில் நூலாசிரியர் புனைந்து வழங்கிய சிறப்புடைய காரணப்பெயர்களெனவே கொள்ளத்தக்கன.

நம்பியாண்டார் நம்பி திருவாதவூரடிகளைத் 'திருவாதவூர்ச் சிவ்பாத்தியன்' எனச் சிறப்பித்துப் போற்றியுள்ளார். யாவராலும் அறியொணு முதலாய ஆனந்த மூர்த்தியாகிய இறைவனே திருப்பெருந்துறையிற் குருவாக எழுந்தருளி வந்து வாதவூரர்தம் சென்னிமிசைத் திருவடி சூட்டி ஆட்கொண்டு மெய்ப்பொருளை உபதேசித்தருளினுன் என்பது வரலாறு. இவ்வாறு குருவாக எழுந்தருளிவந்து தம்மை ஆட்கொண்டருளிய இறைவனது பெருங்கருணைத்திறத்தை நினைந்து நெஞ்சங்கரைந்துருகிய திருவாதவூரடிகள், தம்மை ஆட்கொண்டருளிய சிவபெருமானுடைய திருவடிகளை எக்காலத்தும் தம் சென்னியிற்கொண்டு போற்றும் செம்புலச் செல்வராய்த் திகழ்ந்தனராதலால் 'சிவனடி சென்னிவைத்தவர்' என்ற பொருளில் 'திருவாதவூர்ச் சிவபாத்தியன்' என்ற சிறப்புப் பெயரால் போற்றப் பெற்றனர். எனினும் அடிகளுக்குப் பெற்றேர் இட்டு வழங்கிய இளம் பருவப் பெயர் 'திருவாதவூரர்' என்பதேயாகும். இச்செய்தி, 'நாமம் இன்னெறி வாதவூரர் என்ன வந்துதயஞ்செய்தார்' எனப் பெரும்பற்றப் புலியூர் நம்பியும், 'பேர்வாதவூரரெனப் பெற்று' எனப் பரஞ்சோதி முனிவரும், 'திருவாதவூரரெனுந் திருநாமந்தரித்தார்கள்' எனக்கடவுள் மாமுனிவரும் கூறு மாற்ருல் இனிது விளங்கும். 'ஆருரர்' என்ற பெயர், திருவாரூரிற் கோயில் கொண்டருளிய சிவபெருமானுக்குரிய பெயராய்ப் பின்பு திருநாவலூரில் தோன்றிய சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குரிய பெயராக இடப்பெற்று வழங்கினமை போன்று, 'திருவாதவூரர்' என்ற இப்பெயரும் திருவாதவூர் என்னும் தலத்திற் கோயில்கொண்டருளிய சிவபெருமானுக் குரிய திருப்பெயராய், அடிகளுக்குப் பெற்றேரால் இடப் பெற்று வழங்கியதெனக் கருதுதல் பொருந்தும்.

திருவாதவூரடிகளுக்குத் திருவாதவூரர் என்ற பெயரைக் காட்டிலும் மாணிக்கவாசகர் என்ற பெயரே இக்காலத்திற் பெருக வழங்கக் காண்கிறேம். மாணிக்கவாசகர் எனவழங்கும் இப்பெயர்க் காரணத்தைச் சிந்தித்து ஆராய்தல் வேண்டும். திருப்பெருந்துறையிற் குருவாக எழுந்தருளிய சிவ

பெருமானுல் ஆட்கொள்ளப் பெற்ற திருவாதவூரடிகள் நாவிலே அவர்பெற்ற உபதேசத்தின் பயனுக ஞானவாணி யாகிய கலைமகள் வந்தமர்ந்தாள். அந்நிலையில் அடிகள் பழுதிலாத சொல்மலர்களாகிய மணிகளை அன்பாகிய வடத்தில் நிரல்படக் கோத்துக் குருமூர்த்தியாகிய பெருமானுக்கு மாலையாக அணிந்து போற்றினரெனவும், அதுகண்டு மகிழ்ந்த சிவபெருமான் வாதவூரர்க்கு மாணிக்க வாசகன் என்ற சிறப்புப் பெயரிட் டழைத்தாரெனவும் பரஞ்சோதி முனிவர் கூறுவர். திருவாதவூரடிகள் வரலாறு கூறும் நூல்களுள் மிகவும் தொன்மை வாய்ந்த திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்தில், திருப்பெருந்துறையிற் குருவாக எழுந்தருளிய இறைவர் வாதவூரரை நோக்கி 'மாணிக்கவாசக' என அழைத்தருளியதாகக் கூறப் பெற்றுளது. திருவாதவூரடிகள் பழைய கல்வெட்டுக்களில் திருவாதவூரர், திருவாதவூராளி நாயனுர் எனவே குறிக்கப் பெறுகின்றுர். இறைவனது பொருள்சேர்புகழை விரித் துரைக்கும் திருப்பாடல்களை 'மணிவார்த்தை' என்ற பெயரால் அடிகள் திருவாசகத்திற் குறிப்பிட்டுள்ளார்.

'சிந்தனை நின் றனக்காக்கி நாயினேன் றன்
கண்ணிணை நின் திருப்பாதப் போதுக்காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கி'

எனவும்,

'பேசும் பொருளுக் கிலக்கிதமாம் பேச்சிறந்த
மாசின் மணியின் மணிவார்த்தை'

எனவும் வரும் வாசகத் தொடர்களால் இக்குறிப்பு இனிது புலனுதல் காணலாம். அடிகள் குறித்த 'மணிவார்த்தை' என்றதொடர்க்கு 'மாணிக்க மணிபோலும் வாசகம்' எனப் பொருள்கொண்ட உமாபதி சிவாசாரிய சுவாமிகள், தாம் இயற்றிய கோயிற் புராணத்தில்,

பேசுபுகழ் வாதவூர்ப் பிறந்துபெருந்துறைக்கடலுண்
டாசி லெழி றடித்தயர வஞ்செழுத்தா லதிர்த்தெழுந்து
தேசமலி தரப்பொதுவார் சிவபோக மிக விளைவான்
வாசகமா மாணிக்க மழைபொழிமாமுகில் போற்றி.

எனத் திருவாத வூரடிகளை இறைஞ்சிப் போற்றியுள்ளார். இதன்கண் 'வாசகமா மாணிக்க மழைபொழி மாமுகில்' எனத் திருவாதவூரடிகளைப் போற்றுமுகத்தால் அவர்

திருவாய் மலர்ந்தருளிய திருப்பாடல்களை 'மாணிக்க வாசகம்' என்றபெயரால் உமாபதி சிவம் குறித்துப் போற்றி யுள்ளமை காணலாம். இக்குறிப்பினைக் கூர்ந்து நோக்குங் கால் திருவாசகத்திற்கு வழங்கிய 'மாணிக்கவாசகம்' என்ற இப்பெயரின் அடியாகவே இத்திருமுறையை அருளிச் செய்த திருவாதவூரடிகளுக்கு மாணிக்கவாசகர் என்ற சிறப்புப் பெயரும் தோன்றி வழங்கியதென்பது நன்கு புலனும். இப்பெயர்க்காரணத்தை மகாவித்துவான் மீனுட்சி சுந்தரம்பிள்ளையவர்கள் திருப்பெருந்துறைப் புராணம் உபதேசப்படலத்தில்

'மன்ன நன்மணியே வார்த்தையாய்த்திரண்டு
வருமொரு காரணக்குறியால்
அன்ன மாணிக்க வாசகரெனும்பே
ராகவின் ருதியென் றறைந்தார்'

எனவரும் தொடரில் தெளிவாகவிளக்கியுள்ளமை இவண் கருதத்தகுவதாகும்.

திருவாதவூரர் உலக நூற்கல்வியும் அறிவனூற்கல்வியும் ஆகிய இருதிறமும் ஒருங்கு பயின்றவர் என்பது அவர் அருளிச் செய்த திருப்பாடல்களில் வரும் பலவகைக் குறிப்புக்களால் இனிது விளங்கும். வாதவூரரது கல்வித் திறத்தை நன்குணர்ந்த பாண்டியன் அவரைத் தனது ஆட்சியில் அமைச்சராக அமர்த்திக் கொண்டான் என்ற செய்தி அவருடைய வரலாறுகூறும் புராணங்கள் எல்லா வற்றிலும் சிறப்பாகக் குறிக்கப்பெற்றுளது. இங்ஙனம் வாதவூரரை அமைச்சராக அமர்த்திக்கொண்ட பாண்டியன் இன்னுனென்பது தெளிவாக விளங்கவில்லை. இப்பாண்டிய மன்னனை அரிமர்த்தனன் என்ற பெயரால் பரஞ்சோதி முனிவர் குறிப்பிடுவர். இவர் கூறுமாறு அரிமர்த்தனன் என்ற பெயருடைய மன்னன் பாண்டி நாட்டை ஆட்சி புரிந் தான் என்பதற்குரிய கல்வெட்டாதரவோ பிற சான்றுகளோ இதுகாறும் கிடைக்கவில்லை. எனவே அரிமர்த்தனன் என்ற இப்பெயரை வாதவூரடிகள் காலத்து வாழ்ந்த மன்னனது இயற்பெயராகக் கொள்ளுதற்கு இடமில்லை. பகைவர்களை அழித்தோன் என்னும் கருத்துப்பட அரிமர்த்தனன் எனப் பிற்காலத்தவர் அம்மன்னனுக்கு இட்டு வழங்கிய புனைபெய ரெனவே இதனைக் கருதவேண்டியுளது.

திருவாதவூரடிகள் பாண்டிய மன்னன்பால் அமைச்சுரிமை பூண்டொழுகியவரென்பது, அவரது வரலாறு கூற வந்த எல்லாப் புராணங்களிலும் தெளிவாக விளக்கப்பெறும் செய்தியாகும்.

'ஈண்டிய மாயா விருள்கெட எப்பொருளும் விளங்கத்
தூண்டிய சோதியை மீனவனுஞ் சொல்ல வல்லனல்லன்'

எனவும்,

'மதுரையர் மன்னன் மறுபிறப்போட மறித்திடுமே'

எனவும்,

'நரகொடு சுவர்க்க நானிலம் புகாமல்
பரகதி பாண்டியற் கருளினை போற்றி'

எனவும் வரும் திருவாசகத் தொடர்களை ஊன்றி நோக்குங்கால் வாதவூரடிகள் தம் காலத்து ஆட்சி புரிந்த பாண்டியனுடன் நெருங்கிய தொடர்புடையவரென்பது நன்குபுலனும்.

பாண்டியனுக்கு அமைச்சுக்கடன் பூண்ட வாதவூரர், அம்மன்னன் பணித்தவண்ணம் குதிரை வாங்குதற்கென நிறைந்த பொன்னைப் பெற்றுக்கொண்டு கீழ்கடற்றுறையை நாடிச் செல்லும்பொழுது, வழியிடையே திருப்பெருந்துறையென்னுந் தலத்திலே சிவபெருமான், அடியார்களாகிய மாணாக்கர்கள் புடைசூழ அந்தணராய் ஆசிரியத் திருமேனி கொண்டு எழுந்தருளியிருந்து மன்னவனமைச்சராகிய வாதவூரரை அருள்நோக்கால் அழைத்தருளித் தீக்கை செய்து திருவைந்தெழுத்தின் உட்பொருளை உபதேசித்தருளினர் என்னும் இச்செய்தியினை,

'தெங்குதிரள் சோலைத் தென்னன் பெருந்துறையான்
அங்கணன் அந்தணனாய் அறைகூவி வீடருளும்
அங்கருணை வார்கழலே பாடுதுங்காண் அம்மானாய்'

எனவும்,

'எந்தரமும் ஆட்கொண்டு தோட்கொண்ட நீற்றனாய்ச்
சிந்தனையை வந்துருக்குஞ் சீரார் பெருந்துறையான்'

எனவும்,

'தென்னன் பெருந்துறையான்
காட்டா தனவெல்லாங் காட்டிச் சிவங்காட்டித்
தாட்டா மரைகாட்டித் தன்கருணைத் தேன்காட்டி
நாட்டார் நகைசெய்ய நாமேலை வீடெய்த
ஆட்டான்கொண் டாண்டவா பாடு[illegible]'

எனவும்,

'பேணுபெருந்துறையிற்
கண்ணார் கழல்காட்டி நாயேனை யாட்கொண்ட
அண்ணுமலையானைப் பாடுதுங்காண் அம்மானாய்'

எனவும்,

'சீரார் பெருந்துறையில்
எளிவந் திருந்திரங்கி யெண்ணரிய இன்னருளால்
அளிவந்த அந்தணனைப் பாடுதுங்காண் அம்மானாய்'

எனவும்,

'அருவாய் மறைபயில் அந்தணனாயாண்டு கொண்ட
திருவான தேவற்கே சென்றூதாய் கோத்தும்பீ'

எனவும்,

'உருநாம் அறியவோர் அந்தணனா யாண்டு கொண்டான்'

எனவும்,

'அந்தண னாகிவந் திங்கே அழகிய சேவடி காட்டி
எந்தம ராமிவ னென்றிங் கென்னையு மாட்கொண் டருளும்
செந்தழல் போற்றிருமேனித் தேவர்பிரான் வரக்கூவாய்'

எனவும்,

'பாரிடைப் பாதங்கள்காட்டிப் பாசமறுத் தெனையாண்ட
ஆருடையம்பொனின்மேனி யமுதினை நீ வரக்கூவாய்'

எனவும்,

'செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலுங் காட்டி
அந்தண னாவதுங் காட்டிவந் தாண்டாய்
ஆரமுதே பள்ளியெழுந்தருளாயே'

எனவும்,

'பேராசை யாமிந்தப் பிண்டமறப் பெருந்துறையான்
சீரார் திருவடி யென்றலைமேல் வைத்தபிரான்'

எனவும்,

'மாய வாழ்க்கையை மெய்யென் றெண்ணி
மதித்திடா வகை நல்கினான்
வேய தோளுமை பங்க னெங்கள்
திருப்பெருந்துறை மேவினான்
காயத்துள்ளமு தூறவூற நீ
கண்டு கொள்ளென்று காட்டிய
சேயமாமலர்ச் சேவடிக்கணஞ்
சென்னிமன்னித் திகழுமே.

எனவும்,

'நீதியே செல்வத் திருப்பெருந் துறையில்
நிறைமலர்க் குருந்த மேவிய சீர்
ஆதியே'

எனவும்,

'போதலர் சோலைப் பெருந் துறையெம்
புண்ணியன் மண்ணிடை வந்திழிந்து
ஆதிப் பிரமம் வெளிப் படுத்த
அருளறிவாரெம் பிரானவாரே'

எனவும்,

'நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநமவெனப்பெற்றேன்
தேனாயின்னமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்
தானேவந்தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள்செய்தான்
ஊனாரு முயிர்வாழ்க்கை யொறுத்தன்றே வெறுத்திடவே'

எனவும்,

'உய்யுநெறி காட்டுவித்திட் டோங்காரத் துட்பொருளை
ஐயனெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே'

எனவும் வரும் திருவாசகத் தொடர்களில் திருவாதவூரடிகள் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

இருவினைகளால் உளவாம் இன்பத் துன்பங்கள் இரண்டையும் ஒரு படித்தாக எண்ணி வாழ்க்கையில் விருப்பு வெறுப்பின்றிப் பழகும் மன நிலையே இருவினையொப்பு என்று பேசப்படுகிறது. இந்நிலை யெய்திய உயிர்களுக்கு ஆணவமலம் கழன்றொழியும் தகுதியுளதாகும். இத்தகுதியினை மலபரிபாகம் என வழங்குதல் மரபு. இங்ஙனம் இருவினையொப்பும் மலபரிபாகமும் வந்தெய்திய நிலையில் உயிரினது அறிவின்கண்ணே இறைவனது திருவருள் பதியப்பெறும். இந்நிலையினைச் சத்திநிபாதம் எனக் கூறுவர். இறைவன் திருவருளை நாடி உலகப்பயன் கருதாது வீடுபேற்றை அவாவிநின்று தம் செயலற்றிருத்தலும், இறைவனையடையும்நெறி யாதென ஆராய்தலும், அகத்தால் உலகத்தை முற்றுந் துறந்து புறத்தே உலகியலோடு ஒத்து வாழ்தலும், அகத்தும் புறத்தும் உலகினை முற்றத் துறந்து சிவஞானம் நல்கும் அருட்குரவன் ஒருவனையே நாடித்திரிதலும் என இவ் அருட்பதிவு நால் வகைப்படும். இவற்றுள் நாலாஞ் சத்திநிபாதமாகி முடிந்த நிலையில் நின்றே திருவாதவூரர் திருப்பெருந்துறையிற் குருமூர்த்தியைக் கண்டு இறைஞ்சினார் எனக் கடமாமுனிவர் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். இரு

யொப்பு வந்தெய்திய நிலையே இறைவனாகிய குருவினைக் காணப்பெற்று மகிழ்தற்குரிய செவ்வி என்பதனைத் திருவாத வூரடிகள் தமது வாழ்க்கை நிகழ்ச்சியில் வைத்து,

‘ உணக்கிலாததோர் வித்துமேல்விளை
யாம லென்வினை யொத்தபின்
கணக்கிலாத் திருக்கோல நீவந்து
காட்டினாய்கழுக் குன்றிலே ’

என விளக்கிய திறம் இங்கு நினைவுகூரத் தகுவதாகும்.

ஆணவமலம் ஒன்றேயுடைய உயிர்களுக்கு உயிர்க்குயி ராய் உள்நின்றும், ஆணவம் கன்மம் என்னும் இருமல முடைய உயிர்களுக்கு உமையொருபாகராய் முன்னின்றும், ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலங்களுமுடைய உயிர்களுக்கு மானுடத் திருமேனி கொண்டு படர்க்கையில் நின்றும் இறைவன் சிவஞானம் நல்குவன் எனச் சைவ நூல் கள் கூறும். அம்மரபின்படி சிவபெருமான் மானுடத் திரு மேனி கொண்டு குருவாய் வந்து திருவாதவூரர்க்குத் திருவடி ஞானம் வழங்கி ஆட்கொண்டருளினன் என்பது வரலாறு. இச்செய்தி,

‘ ஈறிலாதநீ எளியையாகிவந்து
ஒளிசெய் மானுடமாக நோக்கியும்
கீறிலாத நெஞ்சுடைய னாயினேன் ’

என இறைவனை நோக்கி அடிகள் உளமுருகிப் போற்றுத லால் இனிது புலனாதல் காணலாம். தேவருங் காணாச் சிவ பெருமான் இந்நிலமிசைத் தம் கண்காண எழுந்தருளி வந்து தம்மை ஆட்கொண்டருளிய அருட்செயலை,

‘ தேவருமறியாச் சிவனே காண்க
பெண்ணாணலி யெனும் பெற்றியன் காண்க
கண்ணா லியானுங் கண்டேன் காண்க
...
புவனியிற் சேவடி தீண்டினன் காண்க
சிவனென யானுந் தேறினன் காண்க
அவனெனை யாட்கொண்ட ருளினன் காண்க ’

எனவும்,

‘ அருபரத் தொருவன் அவனியில் வந்து
குருபரனாகி யருளிய பெருமையை ’

எனவும் வரும் திருவாசகத் தொடர்களில் வாதவூரடிகள் தெளிவாகக் குறித்துப் போற்றியுள்ளார்.

திருவாதவூரடிகளுக்கு உபதேசம் நிகழ்ந்த பின்னரே திருப்பெருந்துறையிற் கோயில் அமைக்கப் பெற்றதென்றும், வாதவூரடிகளுக்கு உபதேசம் புரிந்தருளிய அருள்நிலையமாக இப்பொழுதுள்ள பெருந்துறைக் கோயிலில் சிவலிங்கத் திருவுருவமும் ஏனைய அங்கங்களும் அமைந்தில்லாமையே அடிகள் காலத்திற்கு முன் அங்கே திருக்கோயில் இல்லாமையைப் புலப்படுத்துமென்றும் மறைமலையடிகள் கருதுவர்.

'செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலுங் காட்டி
அந்தண னாவதுங்காட்டி வந்தாண்டாய்'

என வரும் வாதவூரடிகள் வாய்மொழி, அடிகள் குருவின் திருமேனியைக் காணுதற்கு முன்னரும் திருப்பெருந்துறையிற் சிவபெருமானுக்குத் தனிக் கோயில் உண்டு என்ற குறிப்பை வற்புறுத்தல் காணலாம். 'ஆரூர் மூலட்டானம்' எனத் தொடங்கும் க்ஷேத்திரக் கோவைத் திருத்தாண்டகத்தில்,

'பெருந்துறை காம்பீலி பிடவூர்'

எனக் குறித்துப் போற்றப் பெற்ற பெருந்துறை யென்னும் வைப்புத்தலம் இத் திருப்பெருந் துறையெனக் கருதுதற்கும் இடமுண்டு. இக்காலத்தில் ஆளுடையார் கோயில் என வழங்கும் திருப்பெருந்துறையின் ஒரு பகுதியாய வடக்கூரில் வெள்ளாற்றின் தென்கரையில் அமைந்துள்ள ஆதிகைலாசநாத சுவாமி கோயில் பழைய திருப்பெருந்துறைக் கோயிலாக இருத்தல்வேண்டுமெனத் தோன்றுகின்றது.

சிவபெருமான் திருப்பெருந்துறையிற் குருந்த மர நீழலிற் குருவாய் எழுந்தருளியபோது தமது திருக்கரத்தில் சிவஞான போதம் என்ற நூலை வைத்திருந்தார் எனப் பரஞ்சோதி முனிவரும், அந்நூற் பொருளை வாதவூரடிகளுக்கு உபதேசித்தார் எனக் கடவுள் மாமுனிவரும் கூறுவர். கி. பி. 13-ம் நூற்றூண்டில் மெய்கண்ட தேவரால் இயற்றப் பெற்ற சைவ சித்தாந்தத் தனிமுதல் நூல் சிவஞான போதமென்னுஞ் செந்தமிழ் நூலாகும். இப்பெயருடைய நூலொன்று திருவாதவூரடிகள் காலத்தில் வழங்கிய தென்பதற்கு எத்தகைய சான்றும் கிடைக்கவில்லை. திருப்பெருந்துறையில் ஆசிரியத் திருமேனி கொண்டு தோன்றிய இறைவன், திருவாதவூரர்க்கு அறிவுறுத்தியது, திருவைந்தெழுத்துபதேசமெனவே பெரும்பற்றப் புலியூர் நம்பி தெளிவாகக்

குறிப்பிட்டுள்ளார். அவர் கருத்தே அடிகள் வரலாற்றுக்கு ஏற்புடையதெனத் தோன்றுகிறது.

'நமச் சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க'

எனவும்,

'நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம வெனப்பெற்றேன்'

எனவும்,

'என்னையோர் வார்த்தையுட் படுத்துப் பற்றினாய்'

எனவும்,

'ஓங்காரத்துட் பொருளை
ஐயனெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே'

எனவும்,

'அஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின்றேனை'

எனவும் வரும் திருவாசகத் தொடர்கள் அடிகள் பெற்ற திருவைந்தெழுத் துபதேசத்தின் சிறப்பினை வற்புறுத்தல் காணலாம்.

திருவாதவூரர்க்குச் சிவபெருமான் ஞானோபதேசம் செய்த முறையைப் பிற்காலத்தில் விரிந்து பரவிய சைவ சமயத் தீக்கை முறைகளில் நிருவாண தீக்கை முறைக்கு ஒத்தவாறு கடவுள் மாமுனிவர் விரித்துக் கூறியுள்ளார். இம்முறை பெரும்பற்றப் புலியூர் நம்பி திருவிளையாடலிற் கூறப்படவில்லை. அருட்குரவனாகிய இறைவன், திருநோக்கினாலும், நினைவாலும் தொடுதலாலும் வாதவூரரது சித்தமலம் அறுவித்துப் பேரறிவு நல்கினன் என்ற அளவே பெரும்பற்றப் புலியூர் நம்பி கூறுவர். குருமூர்த்தியாகிய பெருமான், திருவாதவூரர் சென்னியில் திருவடி சூட்டித் தீக்கை செய்து, பல்லோருங்காண அவரது பாசத் தொடர்பாகிய மும்மலங்களையும் நீக்கியருளி, இறைவன் திருவடிகளை அகத்தும் புறத்தும் காணுமாறு காட்டிச் சொல்லிறந்த பேரின்பமாகிய சிவானந்தப் பெருந்தேனை நுகர்ந்து இன்புறும் முறையை அறிவுறுத்தி, 'நின்னை ஒரு பொழுதும் பிரியேன்' என அன்புரை பகர்ந்து அழிவிலாப் பேரின்ப வாழ்வில் அடிகளை நிலைபெறச் செய்தனன். இம்மெய்ம்மை வரலாற்றினை,

'பெரியோ னொருவன் கண்டுகொ ளென்றுன்
பெய்கழ லடிகாட்டிப்
பிரியேன் என்றென் றருளிய வருளும்
பொய்யோ எங்கள் பெருமானே'

'காயத் துள்ளமு தூற வூறநீ
கண்டுகொள் ளென்று காட்டிய
சேய மாமலர்ச் சேவடிக்கணஞ்
சென்னி மன்னித் திகழுமே'

எனவும்,

'வாக்கிறந் தமுத மயிர்க்கால் தோறும்
தேக்கிடச் செய்தனன், கொடியே னூன்றழை
குரம்பை தோறு நாயுடலகத்தே
குரம்பை கொண்டின் றேன்பாய்த்தி நிரம்பிய
அற்புதமான அமுத தாரைகள்
எற்புத் துளைதொறும் ஏற்றினன், உருகுவ
துள்ளங் கொண்டோ ருருச்செய் தாங்கெனக்
கள்ளூ ருக்கை யமைத்தனன், ஒள்ளிய
கன்னற் கனிதேர் களிறெனக் கடைமுறை
என்னையும் இருப்ப தாக்கினன்'

எனவும் வரும் திருவாசகத் தொடர்களால் அடிகள் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளமை காணலாம்.

இறைவனே குருவாக எழுந்தருளி வந்து ஆட்கொள்ளப் பெற்று அன்புருவமாகிய திருவாதவூரடிகள் ஆசிரியப் பெருமானை அகலாது வழிபட்டிருந்த நிலையில் இறைவன் அடிகளை நோக்கி 'அன்பனே என்னைப் பாடுக' எனப் பணித்தருளத் தித்திக்கும் மணி வார்த்தையாகிய திருவாசகச் செழும்பாடல்களைத் திருவாதவூரடிகள் பாடிப் போற்றினர் என்பது வரலாறு. இச்செய்தி,

'நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனை'

எனவும்,

'இருந்துதி யென்வயிற் கொண்டவன்'

(திருக்கோவையார்–300)

எனவும் வரும் அடிகளது வாய்மொழியால் நன்கு வலியுறுதல் காண்க

சிவனடியே சிந்திக்குந் திருப்பெருகு சிவஞானம் பெற்ற திருவாதவூரடிகள், தமக்கு எளிவந்து அருள்புரிந்த இறைவனது பேரருளை நினைந்து நெஞ்ச நெக்குருகி இரு கண்களிலும் உவகைக் கண்ணீர் மழையெனச் சொரிய சிவபோகமாகிய பெருந்தேனை நுகர்ந்து ஏனைச்
தொடர்பினை அறவே துறந்து உலகப்பொ
எவற்றையும் நோக்காது மெய்ப்பொருளையே

விதியுடையராய்த் தம் செயலற்றுச் சித்தஞ் சிவமாகத் திகழ்ந்தனர். அடிகளது இவ்வநுபவ நிலை,

‘நனவே யெனைப்பிடித் தாட்கொண்டவா நயந்து நெஞ்சஞ்
சினவேற்கண் நீர்மல்கத் தெள்ளேணங் கொட்டாமோ’

‘இணையார் திருவடி யென்றலைமேல் வைத்தலுமே
துணையான சுற்றங்கள் அத்தனையுந் துறந்தொழிந்தேன்’

‘கயல்மாண்ட கண்ணிதன் பங்கனெனைக் கலந்தாண்டலுமே
அயல்மாண் டருவினைச் சுற்றமுமாண் டவனியின்மேல்
மயல்மாண்டு மற்றுள்ள வாசகமாண் டென்னுடைய
செயல் மாண்ட வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ’

‘திருவார் பெருந்துறை மேயபிரா னென்பிறவிக்
கருவே ரறுத்தபின் யாவரையுங் கண்டதில்லை’

‘ஊன்கெட் டுயிர்கெட் டுணர்வுகெட்டென் உள்ளமும்போய்
நான்கெட்ட வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ’

‘நவமாய செஞ்சுடர் நல்குதலு நாமொழிந்து
சிவமான வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ’

‘சிந்தைதனைத் தெளிவித்துச் சிவமாக்கி யெனையாண்ட
அந்தமிலா ஆனந்தம்’

எனவரும் திருவாசகத் தொடர்களில் இனிது புலனாதல் காணலாம்.

இங்ஙனம் சிவனருட் கடலில் திளைத்தின்புறும் அடிகள், தாம் குதிரை வாங்குதற் பொருட்டுக் கொணர்ந்த பொன் எல்லாவற்றையும் திருப்பெருந்துறையில் இறைவன் குரு மூர்த்தியாக வந்து தம்மையாட் கொண்டருளிய அன்றே அப்பெருமானிடம் ஒப்புவித்தனரென்பது,

‘அன்றேயென் றன் ஆவியும் உடலும்
உடைமை யெல்லாமும்
குன்றே யனையாய் என்னையாட்
கொண்டபோதே கொண்டிலையோ’

எனவரும் அவரது வாய்மொழியால் நன்கு விளங்கும். இங்ஙனம் தம் உடல் பொருள் ஆவி யனைத்தையும் தம்மை யாட்கொண்ட குருமூர்த்திக்கு உரிமையாக்கி அவரது அருள் வழி நின்ற வாதவூரடிகள், ஆசிரியன் பணித்த வண்ணம் அப்பொருளைச் சிவபெருமானது திருப்பணிக்கும் சிவனடி யார்களுக்கும் செலவு செய்தனரென்பது,

'கொம்மை வரிமுலைக் கொம்பனையாள் கூறனுக்குச்
செம்மை மனத்தால் திருப்பணிகள் செய்வேனுக்கு'

எனவும்,

'தன்சீரடியார் குலம் பணிகொள்ள எனைக்கொடுத்தோன்'
(திருக்கோவையார்–54)

எனவும் அடிகள் தம்மைப்பற்றிக் கூறுங் குறிப்புக்களால் ஒருவாறு உய்த்துணரப்படும்.

திருப்பெருந்துறையில் அருட்குரவன்பால் மெய்ஞ்ஞான உபதேசம் பெற்ற திருவாதவூரர், சிவபெருமானுக்கே பித்தராய் அப்பெருமானது எல்லையற்ற பேரருளில் ஈடுபட்டுத் திளைத்த திறத்தை,

'அன்புட னேக்கிநிற்பர் அழுவர்கைதொழுவர் வீழ்வர்
இன்புற வெழுவர் பின்பால் ஏகுவர் இரங்கி மீள்வர்
நன்பகல் கங்குல் காணார் ஞானநல் லறிவேகொண்டு
கொன்புனை பித்தர்பாலர் பசாசர்தங் கொள்கையானார்'

என்ற பாடலில் கடவுள் மாமுனிவர் விரித்துரைப்பர். இங்ஙனம் பித்தர்போன்று தாம் செய்வதிதுவென வுணராது இறைவன்பால் அளவிலாப் பேரன்புடன் விளங்கிய வாதவூரடிகளது நிலை,

'வஞ்சகப் பெரும்புலையனேனையுன் கோயில்வாயிலிற்,
பிச்சனாக்கினாய்'

'கல்லாமனத்துக் கடைப்பட்ட நாயேனை
வல்லாளன் தென்னன் பெருந்துறையான் பிச்சேற்றிக்
கல்லைப்பிசைந்து கனியாக்கித் தன்கருணை
வெள்ளத்தழுத்தி'

'பித்தென்னை யேற்றும் பிறப்பறுக்கும் பேச்சரிதாம்
மத்தமே யாக்கும்வந் தென்மனத்தை — அத்தன்
பெருந்துறையான் ஆட்கொண்டு பேரருளால் நோக்கும்
மருந்திறவாப் பேரின்பம் வந்து'.

எனவரும் அவர்தம் அருளிச் செயல்களால் நன்கு புலனாதல் காணலாம்.

உலகப் பொருளனைத்தும் இறைவனுடைமையே எனத் தெளிவாகவுணர்ந்த திருவாதவூரடிகள், தாம் கொணர்ந்த பொன்திரளனைத்தும் முன்பு பாண்டியனாற் குதிரை வாங்குதற் பொருட்டுத் தம்மிடம் ஒப்புவிக்கப் பெற்றதென்னும் உலகியல் நிகழ்ச்சியை அறவே மறந்து, தம்மையாட்

கொண்டருளிய இறைவன்பால் பொன்னை ஒப்புவித்தனர் என்னும் இச் செய்தியே வாதவூரடிகள் வரலாற்றிற் காணப்படும் உயிர்நிலையான பகுதியாகும். குதிரை வாங்குதற்கென மன்னன் தந்த பொருளை அமைச்சரொருவர் அவனது இசைவு பெருது தாம் விரும்பிய வண்ணம் செலவழிப்பதென்பது அரசியல் நெறிமுறைக்கு ஒவ்வாத பெருங்குற்றம் என்பதனை யாவரும் நன்குணர்வர். உலகியல் ஆட்சி முறையிற் சிறிய பொறுப்பினை மேற்கொண்ட அதிகாரிகளும் எளிதில் உணர்ந்து விலக்குதற்குரிய பெருங்குற்றமாகிய இதனைப் பாண்டியனுக்குரிய அமைச்சராய் விளங்கிய திருவாதவூரர் உணராமைக்குரிய காரணம் என்ன என்பதே ஈண்டு ஆராய்தற்குரிய பொருளாகும்.

திருப்பெருந்துறையில் இறைவன் அருட்குரவனுக எழுந்தருளி வந்து தம்மை ஆட்கொண்டருளிய அப்பொழுதே வாதவூரடிகள் தம்மையும் இவ்வுலகியல் வாழ்வையும் அறவே மறந்து சித்தஞ் சிவமாகப் பெற்றுச் சீவன்முத்தராயினர். இவ்வரலாற்று நுட்பம் அடிகளது வாய்மொழியாகிய அகச்சான்று கொண்டே முன்னர் விளக்கப்பெற்றது. இங்ஙனம் அறிவாற் சிவனேயாகிய அடிகளது செயலை உலகர் நடைமுறையில் வைத்து ஆராயப் புகுவது சிற்றறிவும் சிறு தொழிலுமுடைய நம்மனேர்க்கு ஒரு சிறிதும் ஏற்புடையதன்றும். தம்மை மறந்து இறைவனையே சிந்திக்கும் செம்மை மனமுடைய சிவஞானிகள் செயலை இறைவன் தன் செயலெனவே ஏன்று கொண்டருளு மியல்பினன் என்பதும் அவ்வண்ணமே வாதவூரடிகள் செயலையும் தன் செயலாகக் கொண்டருளின னென்பதும்,

> ‘ சித்தஞ் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கும்
> அத்தன் ”

எனவரும் அடிகளது அநுபவ வுரையாலும் “ மாணிக்க வாசகர் அறிவாற் சிவனே யென்பது திண்ணம் ” எனவரும் சான்ருேர் வாய்மொழியாலும் நன்கு துணியப்படும். வாதவூரடிகள் செயலனைத்தையும் தவச் செயலெனவே கொண்டு அச்செயலால் வரும் இன்பத் துன்பங்களையும் இறைவன் தானே ஏன்று கொண்டருளிய எளிமைத்திறமே அடிகளது வரலாற்ருல் உலகத்தாருக்கு அறிவுறுத்தப்பெறும் சிறந்த உண்மையாகும்.

இங்ஙனம் திருவாதவூரடிகள் தமதுணர்வு முற்றும் மாறித் தம்மையாட் கொண்டருளிய இறைவன் பணித்த வண்ணம் தம்மிடமுள்ள பொன்னனைத்தையும் செலவிட்ட செய்தியை உடன்சென்ற பரிசனங்களால் அறிந்து சின முற்ற பாண்டியன், தன் அமைச்சராகிய வாதவூரர்க்குத் திருமுகம் எழுதித் தூதர்களை யனுப்பி அழைத்தனனாக, அந்நிலையில் ஒரு சிறிது தம்முணர்வு வரப்பெற்ற வாத வூரடிகள், தாம் மன்னனிடம் வாங்கிய பொன் திரளுக்குரிய குதிரைகளை வாங்கித் தந்து அப்பொன்னை ஈடு செய்ய முடியாத நிலையில் இருத்தலை யெண்ணிப் பெருந்துறை யிறைவன்பால் வருந்தி முறையிட்டனர் என்பதும், இறைவன் 'யாமே குதிரைகளைக் கொண்டு வருவோம், நீ அச்சமின்றி மதுரைக்குச் செல்க' என வாதவூரடிகளை நோக்கிக் கூறியருளினர் என்பதும், அடிகளும் இறைவனது கட்டளையை ஏற்றுப் பாண்டியனை யடைந்து ஏற்பன கூறித் தமது பாரம் அனைத்தையும் தம்மையாண்டருளிய இறைவன்பாற் சார்த்தி 'இறைவனருளால் குதிரைகள் வந்து சேரும்' என உறுதியாக நம்பியிருந்தனரென்பதும், அடிகள் நம்பிய வண்ணமே பெருந்துறை யீசனும் அப்பக்கத்தில் திரியும் நரிகளைக் குதிரைகளாக்கி அவற்றைச் செலுத்தும் குதிரைச் சேவகனாகத் தம் பரிசனத்துடன் மதுரை நகரத்தே வந்து தோன்றினன் என்பதும்,

'ஆண்டுகொண்டருள அழகுறு திருவடி
பாண்டியன் றனக்குப் பரிமா விற்று
ஈண்டு கனகம் இசையப் பெறுஅது
ஆண்டான் எங்கோன் அருள்வழி இருப்பத்
தூண்டு சோதி தோற்றிய தொன்மையும்'

எனவரும் அடிகளது வாய்மொழியால் இனிது புலனாதல் காணலாம். "அழகு பொருந்திய திருவடியால் இறைவன் என்னை ஆண்டுகொண்டருளிய நிலையில் பாண்டி வேந்தனுக்குக் குதிரைகளை விற்று (முன்பு யான் அவனிடம் பெற்ற) நிறைந்த பொன்னை ஈடு செய்யப் பெறுது (வருந்திய நிலையில்) என்னை அடிமை கொண்டவனாகிய எம்பெருமானது திருவருள் வழியே யடங்கி (நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே என) அமைதியுற்றிருந்தேனாக, அந்நிலையில் இறைவனே (குதிரைகளைத்) தூண்டிச் செலுத்தும் சோதிப்பொருளாகத் தோன்றியருளிய பழைய செய்தியும்" என்பது மேற்காட்டிய தொடரின்பொருளாகும்.

அமைச்சராகிய வாதவூரர், குதிரை வாங்குதற்கென்று பாண்டியன்பால் நிறைந்த பொன்னைப் பெற்றுச் சென்றமையும், திருப்பெருந்துறையில் இறைவனே குருவாக வந்து அவரை ஆண்டுகொண்டருளிய நிலையில் அவர் கொண்டு வந்த பொன்னனைத்தும் செலவழிந்து போகவே அப்பொன்னுக்குரிய குதிரைகளை வாங்கி மன்னனிடம் கொடுத்தற் இயலாது வருந்திய அடிகள் தமது பாரமனைத்தையும் இறைவன்பால் ஒப்புவித்து அவனது அருள் வழி யடங்கி எத்தகைய இடையூறுகளையும் பொருட்படுத்தாது ஒழுகினமையும், சித்தஞ்சிவமாகப் பெற்ற அடிகளது துயரைப் போக்கத் திருவுளங்கொண்டு சிவபெருமானே குதிரைச் சேவகனாக வந்து தோன்றினமையும் ஆகிய இவ்வரலாற்று நிகழ்ச்சிகள் மேற்காட்டிய திருவாசகத் தொடராகிய அகச் சான்றினால் நன்கு வலியுறுதல் அறிந்து மகிழத்தக்கதாகும்.

திருவாதவூரர் குதிரை வாங்குதற்கெனக் கொண்டு சென்ற பொன் எல்லாவற்றையும் திருப்பெருந்துறையிற் செலவிட்டமையறிந்து சினமுற்ற பாண்டியன் வாதவூரடிகளைச் சிறையில் வைக்கும்படி கட்டளையிட அரசனுடைய ஏவலர் அடிகளைச் சிறைப்படுத்தினரெனவும், சிறையில் துயருறும் அடிகள் தம்மை ஆண்டருளிய இறைவனை யெண்ணி அழுதரற்றிக் குழைத்தபத்து, அருட்பத்து ஆகிய பனுவல்களைப் பாடிப் பரவினரெனவும் பெரும்பற்றப்புலியூர் நம்பி கூறுவர். நம்பி கூறும் இக்கருத்து,

“ அன்றே யென்றன் ஆவியும்
உடலும் உடைமை யெல்லாமுங்
குன்றே யனையாய் என்னை ஆட்
கொண்டபோதே கொண்டிலையோ
இன்றோ ரிடையூ றெனக்குண்டோ
எண்தோள்முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே ”

“ நீதியே செல்வத் திருப்பெருந்துறையில்
நிறைமலர்க்குருந்த மேவியசீர்
ஆதியே யடியேன் ஆதரித்தழைத்தால்
அதெந்துவே யென்றருளாயே ”

என வரும் அடிகளது திருப்பாடற் குறிப்புக்களுக்கு ஒத்த வகையில் அமைந்திருத்தல் அறியத் தக்கதாகும்.

திருப்பெருந்துறையில் தம்மை அடிமை கொண்டருளிய சிவபெருமான் அன்பராகிய தம் துயரத்தைத் தவிர்க்கத் திருவுளங்கொண்டு காடுகளில் திரியும் நரிகளைக் குதிரைகளாக்கிச் சிவகணத் தலைவர்களைக் குதிரை வீரர்களாகப் பணித்துத் தானும் குதிரைச் சேவகனாகி அழகியதோர் குதிரைமேல் எழுந்தருளிய இவ்வற்புத நிகழ்ச்சியைத் திருவாதவூரடிகள் தாம் பாடிய திருவாசகத்தில்,

"குதிரையைக்கொண்டு குடநாடதன்மிசைச்
சதுர்படச் சாத்தாய்த் தானெழுந்தருளியும்"

"அரியொடு பிரமற் களவறி யொண்ணான்
நரியைக் குதிரையாக்கிய நன்மையும்"

"அரியொடு பிரமற் களவறியாதவன்
பரிமாவின் மிசைப்பயின்ற வண்ணமும்"

"ஒருங்குதிரை யுலவுசடையுடையானே நரிகளெல்லாம்
பெருங்குதிரையாக்கியவா றன்றேயுன் பேரருளே"

"நரியைக் குதிரைப் பரியாக்கி ஞாலமெல்லாம் நிகழ்வித்துப்
பெரியதென்னன் மதுரையெல்லாம் பிச்சதேற்றும்
பெருந்துறையாய்"

"ஆடலமர்ந்த பரிமாவேறி ஐயன் பெருந்துறையாதி அந்நாள்
ஏடர்களையெங்கும் ஆண்டுகொண்ட இயல்பறிவார்
எம்பிரானாவாரே"

"சங்கங் கவர்ந்துவண் சாத்தினோடும்
சதுரன் பெருந்துறையாளி யன்று
மங்கையர்மல்கு மதுரைசேர்ந்த
வகையறிவார் எம்பிரானாவாரே"

என்றாங்குப் பலமுறையும் போற்றியுள்ளமை காணலாம்.

குதிரைச் சேவகனாக வருகின்ற பெருமான் மதுரையை நோக்கி வரும் வழியில் திருவாதவூரையடைந்து வாதவூரடிகள் செவியிற் புலனாமாறு தமது திருவடிச் சிலம்பொலியைக் காட்டியருளினான் எனவும், சிறையிலிருந்த வண்ணமே அவ்வொலியைச் செவிமடுத்த அடிகள், 'இஃது என்னையாண்ட எம்பெருமானது பாதச் சிலம்பொலியே' எனத் தெளிந்து இறைவனை யிறைஞ்சினார் எனவும் பெரும்பற்றப்புலியூர் நம்பி கூறுவர். இந்நிகழ்ச்சி,

"வாதவூரினில் வந்தினிதருளிப்
பாதச் சிலம்பொலி காட்டிய பண்பும்"

என வரும் அடிகளது வாய்மொழிகொண்டு உய்த்துணரப்

படும். அடிகள் திருப்பெருந்துறையில் இறைவனால் ஆட்கொள்ளப்பெற்ற நிலையில் அப்பெருமானை இடைவிடாது சிந்தித்துப் போற்றுமுகத்தால் இறைவனது திருவடிச் சிலம்பொலியைக் கேட்டு மகிழும் சிவாநுபவ இன்பத்தில் பல்காலுந் திளைத்திருந்தவரென்பது,

'சீரார் திருவடித் திண்சிலம்பு சிலம்பொலிக்கே
ஆராத ஆசையதாய் அடியேன் அகமகிழத்
தேரார்ந்த வீதிப் பெருந்துறையான் திருநடஞ்செய்
பேரானந் தம்பாடிப் பூவல்லி கொய்யாமோ'

என வரும் அடிகளது அநுபவ வாசகத்தால் இனிது புலனாதல் காணலாம்.

அடிகள் தம் பொருட்டு இறைவன் குதிரைச் சேவகனாக மதுரை நகரத்தே வந்து தோன்றிய எளிமைத் திறத்தையும், பரிமேலழகனாக வந்த அப்பெருமானது திருமேனிப் பொலிவையும், அவ்வழகிய தெய்வக் காட்சியைக் கண்டு மன்னனாகிய பாண்டியனும் தாமும் மதுரை நகர மக்களும் உள்ளமுருகப் பெற்ற செய்தியையும்,

"மதுரைப் பெருநன் மாநக ரிருந்து
குதிரைச் சேவக னாகிய கொள்கையும்"

எனவும்,

"நன்பொன் மணிச்சுவ டொத்த நற்பரிமேல் வருவானை"
"பொன்னையழித்த நன்மேனி புகழிற் றிகழு மழகன்
மன்னன் பரிமிசைவந்த வள்ளல்"

எனவும்,

'வெள்ளைக் கலிங்கத்தர் வெண்டிருமுண் டத்தர்
பள்ளிக் குப்பாயத்தர் அன்னேயென் னும்
பள்ளிக் குப்பாயத்தர் பாய்பரிமேல்கொண் டென்
உள்ளங் கவர்வரால் அன்னேயென்னும்'

எனவும்,

'பருவரை மங்கைதன் பங்கரைப் பாண்டியற் காரமுதாம்
ஒருவரையொன்று மிலாதவரைக் கழற்போதிறைஞ்சித்
தெரிவர நின்றுருக்கிப் பரிமேற்கொண்ட சேவகனார்
ஒருவரை யன்றி உருவறி யாதென்றன் உள்ளமதே'

எனவும்,

'விரவிய தீவினை மேலைப் பிறப்புமுந் நீர்கடக்கப்
பரவிய அன்பரை என்புருக்கும்பரம் பாண்டியனார்
புரவியின் மேல்வரப் புந்தி கொளப்பட்ட பூங்கொடியார்
மரவியல் மேல்கொண்டு தம்மையுந் தாமறியார் மறந்தே'

எனவும் வரும் திருவாசகப் பகுதிகளில் விரித்துக்கூறிய திறம் படித்து மகிழத்தக்கதாகும்.

குதிரைச் சேவகனாக வந்த இறைவனைப் பாண்டியன் கண்ணாரக் கண்டு மகிழ்ந்தனனாயினும், அங்ஙனம் குதிரைச் சாத்தொடும் வந்த அத்தலைவன் முழு முதற் கடவுளாகிய சிவபெருமானே யென்ற உண்மையைச் சிறிதும் உணரப் பெற்றிலனென்பது,

> " ஈண்டியமாயா விருள்கெட எப்பொருளும் விளங்கத்
> தூண்டிய சோதியை மீனவனுஞ் சொல்ல வல்லனல்லன் "

என வாதவூரடிகள் தெளிவாகக் கூறுதலால் இனிது புலனாம்.

அடிகள் பொருட்டு இறைவனாற் கொணரப்பட்ட குதிரைகள் யாவும் அன்றிரவே மீண்டும் நரிகளாய் மாறிய செய்தியினை,

> " நரியைக் குதிரைப் பரியாக்கி ஞாலமெல்லாம் நிகழ்வித்துப்
> பெரியதென்னன் மதுரையெல்லாம் பிச்சதேற்றும்
> பெருந்துறையாய்
> அரிய பொருளே யவிநாசியப்பா பாண்டி வெள்ளமே
> தெரிய வரிய பரஞ்சோதீ செய்வதொன்று மறியேனே "

என்ற பாடலில் அடிகள் குறிப்பாகச் சுட்டியுள்ளார். இறைவன் கொணர்ந்த குதிரைகள் நரிகளாய் மாறியபின்பே அவை முன்னை நிலையில் நரிகளாயிருந்தன என்னும் உண்மை புலப்படுமாதலானும், பெருந்துறை ஈசன் நரியைக் குதிரையாக்கிய அளவில் அமையாது அக்குதிரைகளை மீண்டும் நரிகளாக மாற்றி மதுரை மக்களை மதி மயங்கச் செய்தனன் என்ற கருத்தமைய 'நரியைக் குதிரைப் பரியாக்கி ஞாலமெல்லாம் நிகழ்வித்துப், பெரியதென்னன் மதுரையெல்லாம் பிச்சதேற்றும் பெருந்துறையாய்' என அடிகள் இறைவனை நெஞ்சநெக்குருகிப் போற்றுதலானும், குதிரைச் சேவகனாகிய இறைவனால் மதுரை நகரத்தே கொண்டு வந்து சேர்க்கப்பெற்ற குதிரைகள் மீண்டும் தம் பழையவுருவினை யெய்தி நரிகளாய் மாறிய நிலை நன்குணரப் படும்.

அரச தண்டத்தில் அகப்பட்டு வருந்திய வாதவூரடிகளது மனக்கலக்கத்தை மாற்றத் திருவுளங்கொண்ட இறைவனது ஆணையால் வையையாற்றில் பெருவெள்ளம் தோன்றிக் கரையையுடைத்துக்கொண்டு மதுரை நகரத்தே புக்கதாக,

மன்னனது அதிகாரிகளால் தனக்கு வரையறுக்கப்பட்ட பங்கினை யடைத்தற்கு ஆள் கிடைக்காது அல்லற்பட்டமுத வந்தி யென்னும் தவமுதியாள் பொருட்டுச் சிவபெருமானே கூலியாளாக வந்து அவ்வம்மையார் அன்பினால் அளித்த பிட்டமுதினைக் கூலியாகப் பெற்று நுகர்ந்து மண் சுமந்தருளிய எளிமைத் திறத்தை,

'ஆங்கதுதன்னில் அடியவட்காகப்
பாங்காய் மண்சுமந்தருளிய பரிசும்'

எனவும்,

'மண்பால் மதுரையிற் பிட்டமுது செய்தருளி'

எனவும்,

'பிட்டுநேர்பட மண்சுமந்த பெருந்துறைப் பெரும்பித்தனே'

எனவும் அடிகள் பலமுறை குறித்துப் போற்றியுள்ளமை காணலாம்.

வந்தியின் ஆளாய் வையைக்கரையில் மண் சுமப்பதாகத் தன்னைப் பதிவு செய்துவிட்டு அவ்வேலையிற் சிறிதும் கருத்தின்றிப் பொழுது போக்கிய இறைவனைப் பிரம்பினால் அடித்துத் தண்டித்தவன் பாண்டிவேந்தனே யென்ற உண்மை நிகழ்ச்சியை,

"கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண்டு அக்கோவால் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய்"

எனவும்,

'திண்போர் விடையான் சிவபுரத்தார் போரேறு
மண்பால் மதுரையிற் பிட்டமுது செய்தருளித்
தண்டாலே பாண்டியன் தன்னைப் பணிகொண்ட
புண்பாடல் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ'

எனவும் வரும் தொடர்களால் வாதவூரடிகள் தெளிவாகக் கூறியுள்ளார்.

இங்ஙனம் வாதவூரடிகள் முன்னர்ப் பாண்டியனுக்கு அமைச்சராக இருந்தமையால் ஏற்பட்ட உலகியற்றுன்பங்களால் சிறிதும் உளங்கலங்காது சித்தத்தைச் சிவன்பாலே வைத்து வாழ்ந்தவரென்பது,

"தகைவிலாப்பழியும் அஞ்சேன் சாதலை முன்னமஞ்சேன்"
"மஞ்சுலா முருமு மஞ்சேன் மன்னரோ டுறவு மஞ்சேன்"

என வரும் அவர்தம் வாய்மொழியால் இனிது புலனும்.

அடிகள் பொருட்டுச் சிவபெருமானே குதிரைச் சேவகனாக எழுந்தருளியும் அடியவளாகிய வந்தியின் பொருட்டுக் கொற்றாளாய் வந்து பிட்டு நேர்பட மண் சுமந்து அரசனது பிரம்படியை யேற்றும் தென்பாண்டி நாடே சிவலோகம் எனச் செய்தருளிய சிறப்பினை,

" மாவாரவேறி மதுரைநகர் புகுந்தருளித்
தேவார்ந்த கோலந் திகழப் பெருந்துறையான்
கோவாகி வந்தெம்மைக் குற்றேவல் கொண்டருளும்
பூவார் கழல் பரவிப் பூவல்லி கொய்யாமோ "

எனவும்,

' பெற்றி பிறங்கரிய பெம்மான் பெருந்துறையான்
கொற்றக் குதிரையின்மேல் வந்தருளித் தன்னடியார்
குற்றங்கள் நீக்கிக் குணங்கொண்டு கோதாட்டிச்
சுற்றிய சுற்றத் தொடர் வறுப்பான் '

எனவும்,

' ஞாலமிகப் பரிமேற் கொண்டு நமையாண்டான் '

எனவும்,

' அப்பாண்டி நாட்டைச் சிவலோக மாக்குவித்த
அப்பார் சடையப்பன் '

எனவும் வரும் தொடர்களில் வாதவூரடிகள் குறித்துப் போற்றிய திறம் இவண் நினைக்கத் தகுவதாகும்.

தான் செய்த பிழைகளையுணர்ந்து பொறுத்தருள வேண்டிய பாண்டிய மன்னனுக்கு ஆறுதல் கூறிய வாதவூரடிகள், மன்னனிடம் விடைபெற்றுத் திருவாலவாய்த் திருக்கோயிலை யடைந்தபொழுது அங்கே இறைவனருளால் தோன்றிய அசரீரியின் வண்ணம் அடிகள் உத்தரகோச மங்கை, கழுக்குன்றம் ஆகிய தலங்களை வணங்கி இறைவன் திருமேனி கண்டு திருவாசகமும் திருக்கோவையும் பாடித் தில்லையை அடைந்தார் எனப் பெரும்பற்றப்புலியூர் நம்பியும், மன்னன்பால் விடைபெற்று மதுரையிலிருந்து புறப்பட்ட அடிகள் பலபதிகளையும் பணிந்து போற்றித் தில்லையை யடைந்தார் எனப் பரஞ்சோதி முனிவரும் கூறுவர். மதுரையிற் குதிரைச் சேவகனாக வந்தருளிய இறைவனது பெருங்கருணைத்திறத்தை யெண்ணி மனங்கசிந்துருகிய வாதவூரடிகள் முன்னாளில் தமக்கு மெய்ப்பொருளுணர்த்திய குருமூர்த்தியைக் காணும் பெருவேட்கையுடன் மீண்டும் திருப்பெருந்துறைக்கு விரைந்து சென்றார் எனக் கடவுள்

மாமுனிவர் கூறுவர். திருப்பெருந்துறையிலிருந்து வாதவூரடிகள் பாடியனவாகக் கருதப்பெறும் திருவாசகப் பாடல்களில் இறைவனே குதிரைச் சாத்தொடு வந்தருளிய மதுரை நிகழ்ச்சி குறிக்கப் பெறுதலாலும், பெருந்துறையிறைவன் குருவாக வந்து தம்மை ஆட்கொண்ட தோடன்றித் தம் பொருட்டுக் குதிரைகளைக்கொண்டு மதுரைக்கு எழுந்தருளியும் வந்தி யென்னும் தவமுதியாளுக்குக் கொற்றாளாகப் போந்து மண் சுமந்தும் மன்னனடித்த பிரம்படி பட்டும் தம்மை உய்யக் கொண்டருளிய எளிமைத் திறத்தை யெண்ணி நெக்குருகிய வாதவூரடிகளுள்ளத்தில் இவ்வாறு தமக்கு அருள் சுரந்த குருமூர்த்தியை மீண்டும் கண்டு வழிபட வேண்டுமென்னும் பெருவேட்கை தோன்றுதல் இயல்பாதலாலும் அடிகள் மதுரையிலிருந்து மீண்டும் திருப் பெருந்துறைக்குச் சென்று திருப்பெருந்துறை யீசனை இறைஞ்சிப் போற்றினர் எனக்கூறும் கடவுள்மா முனிவர் கூற்றே இவ்வரலாற்று நிகழ்ச்சிக்குப் பொருத்தமுடையதாகத் தோன்றுகின்றது. அடிகள் இன்னின்ன இடங்களில் இன்னின்ன பதிகங்களைப் பாடினர் எனப் பெரும்பற்றப் புலியூர் நம்பி கூறும் குறிப்புக்கள் சிற்சில இடங்களில் அடிகள் வரலாற்ருெடு முரண்படுதலும் இவண் சிந்திக்கத் தகுவதாகும்.

திருப்பெருந்துறையில் குருந்த மர நீழலில் அடியார்களாகிய மாணவர்கள் தற்சூழ ஆசிரியத் திருமேனி கொண்டு எழுந்தருளிய சிவபெருமான், திருவாதவூரர்க்கு ஞானோபதேசஞ் செய்த பின்னர் 'மாணிக்க வாசக! இங்கு இருப்பாயாக' எனக் கூறி உடன் வந்த அடியார்களுடன் மறைந்தருளினன் எனப் பெரும்பற்றப் புலியூர் நம்பியும் பரஞ்சோதி முனிவரும் கூறுவர். திருப்பெருந்துறையில் ஞானோபதேசம் பெற்ற வாதவூரடிகள் இறைவன் பணித்த வண்ணம் மதுரைக்குச் சென்று அங்கு இறைவன் செய்தருளிய திருவிளையாடல்களைக் கண்டு மீண்டும் திருப்பெருந்துறைக்கு வருமளவும் சிவபெருமான் ஆசிரியத் திருக்கோலத்துடன் திருப்பெருந்துறையில் எழுந்தருளியிருந்தார் எனக் கடவுள் மாமுனிவர் கூறுவர். இவ்விருவகைக் கருத்துக்களுள் முன்னவர் கருத்தே பொருத்தமுடையதாகத் தெரிகிறது. திருவாதவூரடிகள் மதுரைக்குச் சென்று மீளும் வரை இறைவன் தான் மேற்கொண்ட குருவடிவத்துடன்

திருப்பெருந்துறையில் வெளிப்பட எழுந்தருளியிருக்க வில்லையென்பதும் அடியார்களுடன் போந்து வாதவூரடிகளை யாட்கொண்ட சில நாட்களுக்குள் மறைந்தருளினு ரென்பதும்,

"தொண்டனேற்குள்ளவாவந்து தோன்றினுய்
கண்டுங் கண்டிலே னென்னகண் மாயமே"

எனவும்,

"காணுமாறு காணேனுன்னை யந்நாட்கண்டேனும்
பாணேபேசி யென்றன்னைப் படுத்ததென்ன பரஞ்சோதி"

எனவும்,

'பொய்யனேன் அகநெகப் புகுந்தமு தூறும்
புதுமலர்க் கழலிணையடி பிரிந்துங்
கையனேன் இன்னுஞ்செத்திலே னந்தோ
விழித்திருந் துள்ளக் கருத்தினை யிழந்தேன்
ஐயனே அரசே அருட்பெருங் கடலே
அத்தனே அயன்மாற் கறியொண்ணுச்
செய்ய மேனியனே செய்வகை யறியேன்
திருப்பெருந்துறை மேவிய சிவனே.''

எனவும் வரும் திருவாசகத் தொடர்களால் நன்கு தெளியப் படும். எனவே இரண்டாம் முறையாகத் திருப்பெருந் துறைக்குச் சென்ற வாதவூரடிகள் இறைவனே ஆசிரியனுக எழுந்தருளித் தமக்கு ஞானுேபதேசஞ் செய்தற்கு இடமா யமைந்த குருந்தின் நீழலிலேயே அம்மையப்பர் திருவடிகளை மலர் தூவி வழிபட்டுத் திருவாசகச் செழும்பாடல்களால் பரவிப் போற்றினுர் எனக் கொள்ளுதல் பொருந்தும்.

அன்பர்களாகிய அடியார்களின் துணையின்றி வாதவூரடிகள் தனித்துறைதலாற்ருர் எனக் கருதிய சிவபெருமான் தம்முடன் வந்த அடியார்களை நோக்கி 'யாம் கயிலைக்குச் செல்லுதல் வேண்டும். நீவிர் இங்கே யிருப்பீராக. இங்குள்ள பொய்கையின் நடுவே ஒரு நாள் தீப்பிழம்பு தோன்றும். நீங்களெல்லோரும் அத்தீயில் மூழ்கி நம்மை யடைவீராக'' எனக்கூறி, வாதவூரடிகளை அருகிலழைத்து 'இத்தொண்டர்களுடன் நீயும் தீயிற் புகாமல் திருவுத்தரகோசமங்கை முதலிய தலங்களைப் பணிந்து தில்லைக்கு வந்து சேர்க' என அறிவுறுத்தி மறைந்தருளினுரெனவும், சிலநாட் சென்றபின் அங்குள்ள பொய்கையில் தீப்பிழம்பு தோன்றவே அடியார்களெல்லாம் அஞ்செழுத்தோதி அத்தழலில் மூழ்கிச் சிவகணநாதர்களாய் எழுந்தார்களெனவும்,

அப்பொழுது சிவபெருமான் அம்மையப்பராக விடைமீது தோன்றி அவ்வடியார்களுக்கு அருள் புரிந்து அவர்களுடன் மறைந்தனரெனவும், அந்நிலையில் சிவயோகத்தில் அமர்ந் திருந்த வாதவூரடிகள் சிவனடியார்களாகிய அன்பர்களைக் காணாது பொய்கைக் கரையை யடைந்து அழுதரற்றி 'மெய் தானரும்பி' எனத் தொடங்கும் திருச்சதகத்தைப் பாடிப் போற்றினரெனவும் கடவுள் மாமுனிவர் கூறுவர்.

இறைவன் வாதவூரடிகளைத் 'தில்லைக்கு வருக' எனப் பணித்து மறைந்த நிலையில் உடனிருந்த அடியார்கள் அப் பெருமானது பிரிவிற் காற்றாது தீப்பாய்ந்த அன்பின் திறத் தையும் தமது தனிமையையும்,

" நாயினேனை நலமலி தில்லையுட்
கோல மார்தரு பொதுவினில் வருகென
ஏல என்னை யீங்கொழித்தருளி
அன்றுடன் சென்ற அருள் பெறும் அடியவர்
ஒன்ற ஒன்ற உடன்கலந் தருளியும்
எய்த வந்திலாதார் எரியிற் பாயவும் "

எனவும்,

'விச்சுக் கேடு பொய்க்காகா தென்றிங்கெனை வைத்தாய்
இச்சைக்கானா ரெல்லாரும் வந்துன்றாள் சேர்ந்தார்'

எனவும்,

'புறமேபோந்தேன் பொய்யும் யானும் மெய்யன்பு
பெறவே வல்லே னல்லா வண்ணம் பெற்றேன்யான்
அறவே நின்னைச் சேர்ந்தவடியார் மற்றொன்றறியாதார்
சிறவே செய்து வழிவந்து சிவனே நின்தாள் சேர்ந்தாரே'

எனவும் வரும் தொடர்களில் அடிகள் தெளிவாக விளக்கி யுள்ளார்.

இறைவனது பிரிவாற்றாது உயிர் துறந்த தலையன்பர் களாகிய மெய்யடியார்களுக்கு அப்பெருமான் உமையம்மை யாருடன் தோன்றி அருள் வழங்கிய திறத்தையும், அத் தகைய பேரன்பர்களாகிய அடியார்களைப் பிரிந்தமையால் தாம் கண்கெட்ட ஊரெருது போன்று அல்லற்பட்டுழலும் அவல நிலையையும்,

'போரே றேநின் பொன்னகர்வாய் நீபோந்தருளி யிருள் நீக்கி
வாரே றிளமென் முலையாளோ டுடன் வந்தருள அருள்பெற்ற
சீரே றடியார் நின்பாதஞ் சேரக்கண்டுங் கண்கெட்ட
ஊரேறாய் இங்குழல்வேனோ கொடியேன் உயிர்தான்
உலவாதே'

'பொருத்த மின்மையேன் பொய்ம்மை யுண்மையேன்
போதவென் றெனைப்புரிந்து நோக்கவும்
வருத்த மின்மையேன் வஞ்சமுண்மையேன்
மாண்டிலேன் மலர்க்கமலபாதனே
அரத்த மேனியாய் அருள்செய் அன்பரும்
நீயும் அங்கெழுந்தருளி யிங்கெனை
இருத்தினய் முறையோவெ னெம்பிரான்
வம்பனேன் வினைக்கிறுதி யில்லையே'

என இறைவனை நோக்கி முறையிடு முகமாக அடிகள் விரித்துரைத்த திறம் இவண் நினைக்கத்தகுவதாகும். இங்கெடுத்துக்காட்டிய குறிப்புக்களால் குருவாக வந்த இறைவனும் உடன் வந்த அடியார்களும் மறைந்த நிலையில் அடிகளாற் பாடப்பெற்ற பகுதி திருச்சதகம் என்பது நன்கு துணியப்படும்.

திருவாதவூரடிகள் பெருந்துறை யீசன் பணித்தருளிய வண்ணம் திருவுத்தரகோசமங்கையை யடைந்து நீத்தல் விண்ணப்பம்பாடி முன்பு திருப்பெருந்துறையிற் கண்ட குருவடிவினை அங்கேயும் கண்டு மகிழ்ந்தனரென்பது,

"தெங்குலவு சோலைத் திருவுத்தரகோசமங்கைத்
தங்குலவு சோதித் தனியுருவம் வந்தருளி
எங்கள் பிறப் பறுத்திட் டெந்தரமும் ஆட்கொள்வான்
பங்குலவு கோதையும் தானும் பணிகொண்ட
கொங்குலவு கொன்றைச் சடையான்"

எனவரும் அடிகள் வாய்மொழியால் இனிது விளங்கும். பின்னர் அடிகள் பல தலங்களையும் வணங்கித் திருவிடைமருதினைச் சிறப்பாக வழிபட்ட செய்தி,

"இடைமரு ததனில் ஈண்ட விருந்து
படிமப் பாதம் வைத்தவப் பரிசும்'

எனவும்,

"அந்த இடைமருதில் ஆனந்தத் தேனிருந்த
பொந்தைப் பரவிநாம் பூவல்லி கொய்யாமோ"

எனவும் வரும் திருவாசகக் குறிப்புக்களால் நன்கு புலனும். அடிகள் திருவாரூரை வழிபட்டுத் திருப்புலம்பல் பாடினர் எனக் கடவுள் மாமுனிவர் குறிப்பிடுவர். இச்செய்தி,

"பூங்கமலத் தயனெடுமால் அறியாத நெறியானே
கோங்கலர்சேர் குவிமுலையாள் கூறுவெண்ணீறுடீ
ஓங்கெயில்சூழ் திருவாரு ருடையானே அடியேன்நிீ
பூங்கழல்க ளவையல்லா தெவையாதும் புகழேனே'

எனவரும் அப்பதிக முதற்பாடலால் உய்த்துணரப்படும்.

திருவாதவூரடிகள் சீகாழிப்பதியை யடைந்து தமக்கு வெளிப்பட்டருளிய இறைவன் திருவடிகளை இறுகப்பற்றிக் கொண்டு பிடித்தபத்தினைப் பாடினார் எனக் கடவுள் மாமுனிவர் கூறுவர். இப்பதிகப் பாடல் தோறும் 'உன்னைச் சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந்தருளுவதினியே' என இறைவனை நோக்கி வினவுங் குறிப்பு அமைந்திருத்தலும் 'கழுமல மதனிற் காட்சி கொடுத்தும்' எனவரும் தொடரால் அடிகள் இந் நிகழ்ச்சியைக் குறிப்பிட்டிருத்தலும் கடவுள் மாமுனிவர் கூற்றுக்கு ஆதாரமாகக் கொள்ளத் தக்கன வாகும். 'கழுமல மதனிற் காட்சி கொடுத்தும்' எனவரும் இத்தொடர், வாதவூரடிகள் கண்ட தெய்வக் காட்சியையும் அவர்க்கு முற்காலத்தே ஆளுடைய பிள்ளையார்க்குத் தோணிபுரத்திறைவர் அம்மையப்பனாகத் தோன்றிய அருட் காட்சியையும் ஒரு சேரக் குறித்து நிற்றல் உணர்ந்து மகிழத் தக்கதாகும். இவ்வாறே திருநாவுக்கரசர்க்குத் திருப்பூவணத் திறைவன் முன்னின்றருளிய அருட்செய்தியை,

"பூவண மதனிற் பொலிந்திருந் தருளித்
தூவண மேனிகாட்டிய தொன்மையும்"

என்ற தொடரால் அடிகள் குறித்துப் போற்றியுள்ளமை காண்க.

இறைவன் பணித்த வண்ணம் திருக்கழுக்குன்றத்தை யடைந்த திருவாதவூரடிகள், தமக்குத் திருப்பெருந்துறை யில் எளிவந்தருளிய குருவடிவினைக் கண்டு வணங்கி மகிழ்ந்த செய்தி,

'மலங்கினேன் கண்ணின் நீரைமாற்றி
மலங்கெடுத்த பெருந்துறை
விலங்கினேன் வினைக்கேட னேன்இனி
மேல் விளைவ தறிந்திலேன்
இலங்குகின்ற நின் சேவடிக
ளிரண்டும் வைப்பிட மின்றியே
கலங்கினேன் கலங்காமலே வந்து
காட்டினாய் கழுக்குன்றிலே'

எனவும்,

'பூணொணாததொ ரன்பு பூண்டு
பொருந்தி நாடொறும் போற்றவும்
நாணொ ணாததொர் நாணமெய்தி
நடுக்கடலு ளழுந்திநான்

பேணு ஞதபெருந்துறைப்பெருந்
தோணிபற்றி யுகைத்தலுங்
காணு ஞத் திருக் கோலம் நீ வந்து
காட்டிஞய் கழுக் குன்றிலே '

எனவும் வரும் திருக்கழுக் குன்றப்பதிகத் திருப்பாடல்களால் நன்கு புலனும்.

'நலமலி தில்லையிற், கோலமார்தரு பொதுவினில் வருக' என இறைவன் பணித்த வண்ணம் திருவாதவூரடிகள் தில்லையை யடைந்து பொன்னம்பலவனைப் போற்றி வழிபட்டிருந்தமை, அடிகள் தில்லையிற் பாடிய திருவாசகப் பதிகங்களால் இனிது விளங்கும். திருவாதவூரடிகள் தில்லையில் தங்கியிருந்தபொழுது புத்தரை வாதில் வென்ருர் எனப் பெரும்பற்றப் புலியூர் நம்பியும், இலங்கையிலிருந்து போந்த புத்தர் சிலர் தில்லையை யடைந்து ஏழு நாள் வரையறுத்து வாது செய்யத் தொடங்கியபொழுது தில்லைப்பதியிலுள்ளோர் கூத்தப்பெருமான் பணித்த வண்ணம் மாணிக்கவாசகரை வேண்டிக்கொள்ள அடிகள் புத்தரை வாதில் வென்றனர் எனப் பரஞ்சோதி முனிவரும் தம் நூலிற் குறிப்பிட்டுள்ளனர். தில்லையிற் பொன்னம்பலவாணனைப் போற்றி மகிழ்ந்த சிவனடியாரொருவர் ஈழநாட்டிற்குச் சென்று 'பொன்னம்பலம்' என்ற திருப்பெயரை இடைவிடாது ஓதி இரந்துண்டிருந்தனரென்றும்* அது கண்டு பொருத இலங்கைப் புத்தர்கள் அவ்வடியவர் செய்கையைத் தம் மன்னனிடம் தெரிவிக்க, அவனும் அவ்வடியாரை அழைத்துப் 'பொன்னம்பலம்' என அவர் கூறுவதன் கருத்தினைக் கேட்டறிந்து புத்த மதத்தைத் தில்லையில் நிலைநாட்டுங் கருத்துடன் புறப்பட்ட தன்னுடைய குருவினை முன்னனுப்பித் தன் புதல்வியாகிய ஊமைப்பெண்ணுடன் தில்லையை யடைந்தனனென்றும், அப்பொழுது திருவாதவூரடிகள் தில்லைநகர மக்கள் வேண்டுகோட்கிசைந்து புத்தர்களுடன் வாது நிகழ்த்தி இலங்கை மன்னன் மகளாகிய

* "பல்காலுன்னைப் பாவித்துப் பரவிப் பொன்னம்பல மென்றே
ஒல்கா நிற்கும் உயிர்க்கிரங்கி யருளாய் என்னை
யுடையானே "

எனவரும் திருவாசகத்தொடர் 'பொன்னம்பலம்' என்ற திருப்பெயர் திருவைந்தெழுத்தினையொத்துச் சிந்தித்து ஓதத்தகும் சிறப்புடையதென்பதனை இனிது புலப்படுத்தல் காணலாம்.

ஊமைப்பெண்ணையும் பேசும்படி அருள் செய்து இலங்கை மன்னனைச் சைவனுக்கினுரென்றும் கடவுள் மாமுனிவர் திருவாதவூரடிகள் புராணத்தில் விரித்துக் கூறியுள்ளார்.

வாதவூரடிகள் புத்தர்களை வாதில் வென்ருர் என வழங்கும் இந்நிகழ்ச்சிக்கு அடிகளது வாய்மொழியாகிய அகச்சான்றெதுவும் கிடைக்கவில்லை. ஊமைப்பெண்ணைப் பேசுவித்த நிலையில் அடிகள் வினுவும் விடையுமாகத் திருச்சாழல் பாடினுர் என நெடுநாட்களாக வழங்கிவரும் செவிவழிச் செய்தியே இதற்கு ஆதாரமாதல் கூடும். 'புத்தன் முதலாய புல்லறிவிற் பல்சமயம்' என்ற தொடரால் தம் காலத்துப் புறச் சமயங்களை அடிகள் குறிப்பிடுதலால் அவர் காலத்துப் புத்த சமய வாடை தமிழ் நாட்டிலும் ஓரளவு வீசினமை நன்கு விளங்கும். தமிழ் நாட்டிலிருந்து சைவாசாரியரொருவர் ஈழநாட்டிற்குச் சென்று அங்குள்ள பௌத்த மன்னனைச் சைவசமயத்திற்குத் திருப்பினர் என ராஜரத்நாகரி யென்னும் இலங்கைச் சரித நூல் கூறுகிறதென்றும், அந்நூலிற் குறித்த காலம் கி. பி. 819-ஆம் ஆண்டினை ஒட்டியதென்றும் நெல்சன் என்பார் தாம் எழுதிய மதுரைச் சரித்திரத்தில் (Madura manual) குறிப்பிட்டுள்ளார். ராஜரத்நாகரியிற் குறிக்கப்பட்ட சைவாசாரியரென்பவர் திருவாதவூரடிகள் புராணம் கூறுமாறு அடிகள் தில்லையிலிருந்தபொழுது தமிழ் நாட்டிலிருந்து இலங்கைக்குச் சென்ற சிவனடியாரெனத் தெரிதலால் தில்லையில் திருவாதவூரடிகளால் வாதில் வெல்லப்பட்ட புத்தர்கள் இலங்கையிலிருந்து வந்தவர்களென்பதும், அவர்கள் எல்லோரும் வாதவூரடிகளது பெருமையை யுணர்ந்து சிவநெறியைத் தழுவினரென்பதும் நன்கு துணியப்படும்.

தில்லையிற் சிவபெருமான் வேதியராகி வந்து வாதவூரடிகள்பால் திருவாசகத்தையும் திருச்சிற்றம்பலக் கோவையையும் கேட்டு எழுதிச் சென்ற செய்தி, திருவாதவூரடிகள் புராணத்தில் விரித்துக் கூறப்பெற்றுளது. திருச்சிற்றம்பலக் கோவையைத் திருவாதவூரடிகள் பாடியபோது அழகிய திருச்சிற்றம்பலமுடையாராகிய இறைவரே தம்து திருக்கரத்தினுல் எழுதிக்கொண்டார் என்னும் இவ்வரலாற்றினை "மெய்யருந்தவர் கோவையெழுதிச் சிவந்தன...........தென்னு செந்தமிழ் மூவர் கவியைச் சுமந்தன தில்லையம்பல வாணர் கனகப்புயங்களே" எனத் தில்லைக்கலம்பகத்தில் இரட்டைப்

புலவர் குறித்துள்ளார். எனவே இச்செய்தி கி. பி. 14-ஆம் நூற்றுண்டிலேயே பெருக வழங்கினமை நன்கு பெறப்படும். இச்சிறப்புடைய நிகழ்ச்சி, பெரும்பற்றப்புலியூர் நம்பியும் பரஞ்சோதி முனிவரும் பாடிய திருவிளையாடற் புராணங் களிற் குறிக்கப்பெறவில்லை. எனினும் பின்வந்த சான்ருேர் பலர் இந்நிகழ்ச்சியை வலியுறுத்தியுள்ளமை இவண்நோக்கத் தகுவதாகும்.

“ கறைமிடற்றெம் பரற்போற்றி நரிபரியா
வரவழைத்துக் கயற்கண்மூகை
இறைவளையைப் பேசுவித்துப் புத்தரைவென்
றம்பலத்தி னினிதிருடும்
பிறைமுடித்த பிரானெழுதக் கோவைதிரு
வாசகம்பேர் பிறங்குபாடன்
மறைவகுத்த வாதவூர் மாணிக்க
வாசகர்தாள் மனத்துள் வைப்பாம் ”

என இரசை வடமலையப்ப பிள்ளையனவர்களும்,

“ நலமலி வாதவூர் நல்லிசைப் புலவ
மனநின் றுருக்கும் மதுர வாசக
கலங்குறு புலனெறி விலங்குறு வீர
திங்கள் வார்சடைத் தெய்வ நாயகன்
ஒருகலை யேனு முணரான், அஃதான்று
கைகளோ முறிபடுங் கைகள், காணிற்
கண்களோ வொன்று காலையிற் காணும்,
மாலையி லொன்று வயங்கித் தோன்றும்,
பழிப்பி ளென்று விழிப்பி னெரியும்
ஆயினுந் தன்னை நீபுகழ்ந் துரைத்த
பழுதில் செய்யுள் எழுதினன் அதனல்
புகழ்ச்சி விருப்பன் போலும்
இகழ்ச்சி யறியா என்பணிவோனே ”

எனச் சிவப்பிரகாச சுவாமிகளும்;

” கடையூழி வருந்தனிமை கழிக்கவன்ருே அம்பலத்தில்
உடையார் உன்வாசகத்தில் ஒருபிரதி கருதினதே ”

என மனோன்மணீய ஆசிரியர் சுந்தரம் பிள்ளையவர்களும் சிவபெருமான் திருவாசகத்தையும் திருச்சிற்றம்பலக் கோவை யையும் தமது திருக்கரத்தால் எழுதிய அற்புத நிகழ்ச்சியை நினைந்து உளமுருகிப் பாராட்டியுள்ளார்கள்.

‘ இருந்துதி யென்வயிற் கொண்டவன் ’ (300)

எனவும்,

‘ நினைவித்துத் தன்னையென் னெஞ்சத்திருந்தம்ப
புனைவித்த ஈசன் ’ (140)

எனவும் வரும் திருச்சிற்றம்பலக்கோவைத் தொடர்களாலும், "அன்பர் துதிப்ப அவர்வயின் தான் கொள்ளும் பெருந் துதியை என்வயின் உண்டாக்கிக் கொண்டவன்" எனவும், "தானே வந்திருந்து திருத்தவேண்டுதலின் என்னெஞ் சத்துப்புகுந்திருந்து தன்னை யான் நினையும் வண்ணஞ் செய்து அம்பலத்தின்கண் திருமேனிகாட்டி நின்று என்னால் தன்னைப் புகழ்வித்துக்கொண்ட ஈசன்'' எனவும் அத்தொடர் களுக்குப் பேராசிரியர் உரைத்த உரையாலும் சிவபெரு மானே போந்து இத்திருமுறையைப் பாடும்படி பணித்த திறம் இனிது புலனாதல் காணலாம்.

திருவாசகத்தையும் திருச்சிற்றம்பலக் கோவையையும் கேட்டு எழுதிக்கொண்டு மறைந்த இறைவன், அத்திருமுறை யேட்டினைத் தில்லைச் சிற்றம்பலத்தே வைத்தருளினாராக, மறுநாள் பொன்னம்பல வாணர்க்குப் பூசை செய்ய வந்த பூசகர் அதனைக்கண்டுவியந்து ஊர்மக்களுக்குத் தெரிவித்துத் திருவாதவூரடிகளையடைந்து அத்திருமுறைக்குப் பொருள் விரித்தருளும்படி வேண்டினரெனவும், அவ்வேண்டுகோளுக் கிசைந்த வாதவூரடிகள் அன்பரெல்லோரையும் அழைத்துக் கொண்டு தில்லைப் பொன்னம்பலத்தை யடைந்து 'இத்திரு முறைக்குப் பொருளாவார் தில்லைச் சிற்றம்பலவராகிய இவரே' எனச் சுட்டிக்காட்டி அங்குள்ளார் யாவருங் காணத் தில்லையம்பலத்திற் புக்கு இறைவன் திருவடி நீழலிற் கலந்து ஒன்றாயினர் எனவும் கடவுள்மாமுனிவர் கூறுவர். அடிகள் அருளிய மணிவார்த்தையாகிய திருப்பாடல்களின் பொருள் சிவானுபவத்தாலேயே முற்றுமுணர்தற்குரியதாக லானும் அவ்வனுபவத்திற்கு உள்ளீடாயிருப்பவன் தில்லைச் சிற்றம்பலவன் ஆகலானும் அவ்விறைவனையே திருவாசகத் திருமுறையின் பொருளென்று அடிகள் சுட்டியருளினார். திருவாசகம் திருச்சிற்றம்பலக் கோவை ஆகிய இத்திரு முறைக்கு இறைவனே பொருள் எனக் கூறிய இவ்வுண் மையை,

"பெருந்துறை புகுந்து பேரின்ப வெள்ளம்
மூழ்கிய புனிதன் மொழிந்த வாசகமே
வாசகம், அதற்கு வாச்சியம்
தூசக லல்குல்வேய்த் தோளிடத் தவனே"

எனச் சிவப்பிரகாச சுவாமிகளும்,

“ பைந்தமிழ் நவின்ற செந்நாப் புலவன்
ஐந்திணை யுறுப்பின் நாற்பொருள் பயக்கும்
காமஞ் சான்ற ஞானப் பனுவற்குப்
பொருளெனச் சுட்டிய ஒருபெருஞ் செல்வ ”

எனக் குமரகுருபர அடிகளும் தெளிவாகக் குறித்துள்ளமை அறிந்து மகிழத்தக்கதாகும்.

‘எண்ணிலியாகிய சித்திகள் வந்தெனை எய்துவ தாகாதே’ என்பது திருவாதவூரடிகள் வாய்மொழி. அடிகளது அனுபவவுரையாகிய இம்மெய்ம்மொழிக்கேற்பவே, அடிகளது திருமேனி பருப்பொருளாய் இம்மண்ணிற் கலவாது அருவாய் நுண்பூதத்தொடு கலக்க, அவரது நல்லுயிர் தில்லைச்சிற்றம்பலவன் திருவடி நீழலிற் கலந்து சிவானந்தப் பெருவாழ்வில் திளைத்தமையாகிய இவ்வற்புத நிகழ்ச்சியும் அமைந்துளது. அடிகள் முத்திபெற்ற இம் முறையை ஆன்ரேர் பலரும் வியந்து போற்றுவர். தில்லைச் சிற்றம்பலமாகிய சிதாகாசப் பெருவெளியிலே மணிவாசகப் பெருமான் கலந்து முத்தி பெற்ற திறத்தை,

‘வான்கலந்த மாணிக்கவாசக’

என வடலூர் இராமலிங்க அடிகள் அழைத்துப் போற்றும் அன்புரையாலும்,

‘மாணிக்கவாசகர் பேறெனக்குத்தர வல்லாயோ
அறியேன்
...
கற்பூர தீபம்போல் என்றனுடலைக் கனகசபையில்
கலந்து கொள்வாயே’

என வரும் முத்துத்தாண்டவர் இசைப்பாடலாலும் நன்குணரலாம்.

மாணிக்கவாசகர் காலம்

திருவாதவூரடிகளாகிய மணிவாசகப் பெருந்தகையார் வாழ்ந்த கால எல்லையைக் குறித்து அறிஞர் பலரும் தமக்குத் தோன்றிய பல வேறு முடிபுகளை வெளியிட்டுள்ளார்கள். மாணிக்கவாசகர் கடைச்சங்க காலமாகிய கி. பி. முதல் அல்லது இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவரெனத் திருமலைக்கொழுந்து பிள்ளையவர்களும்[1] கி. பி. மூன்றும் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவரென மறைமலையடிகளாரும், பேராசிரியர் கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்களும்[2], கி. பி. நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்தவரென K. G. சேஷையர் அவர்களும்[3] கி. பி. 792 முதல் 835 வரை ஆட்சி புரிந்த முதல் வரகுணபாண்டியன் காலத்தவரெனத் திருவாளர் T. V. சதாசிவ பண்டாரத்தாரவர்களும்[4] கி. பி. 862 முதல் 880 வரை ஆண்ட இரண்டாம் வரகுணபாண்டியன் காலத்தவரெனத் தஞ்சைச் சீநிவாச பிள்ளை, தெ. பொ. பழநியப்ப பிள்ளை முதலியவர்களும்[5] கி. பி. பத்தாம் நூற்றாண்டின் இறுதியிலும் பதினொராம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்தவரென அறிஞர் கோபிநாதராயரவர்களும்[6] ஆராய்ந்தெழுதியுள்ளார்கள்.

மேற்காட்டிய அறிஞர் பலருடைய முடிபுகளையும் இரண்டு வகையாக அடக்கலாம். ஒன்று தேவார ஆசிரியர் மூவர்க்கும் காலத்தால் முந்தியவர் மாணிக்கவாசகர் என்பது, மற்றொன்று தேவார ஆசிரியர் மூவர்க்கும் காலத்தாற்

1. Date of Manickavasagar by Tirumalaikolunthu Pillai.

2. மாணிக்கவாசகர் வரலாறுங் காலமும்.

3. 1904-ல் வெளிவந்த சென்னைக் கிறித்தவ கலாசாலைப் பத்திரிகை.

4. பாண்டியர் வரலாறு. (இரண்டாம் பதிப்பு) பக்கம் 61.

5. தமிழ் வரலாறு பிற்பாகம் (நான்காம் பதிப்பு) பக்கம் 85–142. Date of Manickavasagar, T. P. Palaniyappa Pillai Journal of Shri Venkatesvara Oriental Institute Vol. IV, Part I, page 152–182.

6. சென்னைக் கிறித்தவ கலாசாலைப் பத்திரிகை.

பிந்தியவர் மாணிக்கவாசகர் என்பதாகும். பல்லவபுரத்துப் பொதுநிலைக் கழக ஆசிரியர் மறைமலையடிகளாரவர்கள் தமது விரிந்த ஆராய்ச்சியின் பயனாக எழுதி வெளியிட்ட "மாணிக்கவாசகர் வரலாறுங் காலமும்" என்ற ஆராய்ச்சிப் பெருநூலில் தேவார ஆசிரியர் மூவர்க்கும் காலத்தால் முற்பட்டவர் திருவாதவூரடிகள் என்னும் தமது கொள்கையினைப் பலவகைச் சான்றுகளைக் காட்டி நிலைநாட்டியுள்ளார்கள். தஞ்சைச் சீநிவாச பிள்ளையவர்கள் தாமெழுதிய தமிழ் வரலாறென்னும் நூலில் மணிவாசகர் தேவார ஆசிரியர் மூவர்க்கும் காலத்தாற் பிற்பட்டவரென்பதனைச் சான்றுகள் காட்டித் தெளிவாக விளக்கியுள்ளார்கள். இவ்விருதிற முடிபுகளையும் காய்தலுவத்தலகற்றி ஆராய்ந்து திருவாதவூரடிகள் வாழ்ந்த காலம் இதுவென்பதனைத் திட்டமாக அறிந்து கொள்ளுதல் திருமுறை வரலாற்று ஆராய்ச்சிக்குப் பெரிதும் துணை செய்வதாகும்.

திருவாதவூரடிகள் தேவார ஆசிரியர் மூவர்க்கும் காலத்தால் முற்பட்டவரென்பதற்கு ஆசிரியர் மறைமலையடிகள் முதலியோர் கூறும் சிறப்புடைக் காரணங்களை முறையே ஆராய்வோம்.

(1) "மாணிக்கவாசகர் இந்நிலவுலகத்திற் பிறந்தருளுதற்கு முன் சிவபெருமானுக்கு அணுக்கராய் அவர் பாலிருந்தனர். பின்னர் அவரது கட்டளையால் மக்கட் பிறவிக்கு வரலாயினர்....மேலுலகத்திற் சிவபெருமான்மாட்டு அணுக்கராய் நிற்கும் தூய தொண்டர்கள் 'சிவகணங்கள்' என்று வழங்கப்படுவர். அச் சிவகணங்களுள் தலைவராய் நிற்குஞ் சிலர்க்கு 'நந்திகள்' என்னும் பெயருண்டு. அந் நந்திகளுள் ஒருவரே மாணிக்கவாசகராக இந்நிலவுலகிற் பிறந்தருளினர். அவ்வுண்மை கண்டே மாணிக்கவாசகர்க்குப் பின் வந்த திருநாவுக்கரசு நாயனார் 'குராமலரோடு அராமதியஞ் சடைமேற் கொண்டார் குடமுழநந்தீசனை வாசகனாக் கொண்டார்' என்று அருளிச் செய்தனர்"* என்பது.

திருவாதவூரடிகள் வரலாறு கூறும் பெரும்பற்றப் புலியூர் நம்பி திருவிளையாடல், திருவுத்தரகோசமங்கைப் புராணம், கடம்பவன புராணம் முதலிய நூல்கள் கணநாதர்

* மாணிக்க வாசகர் வரலாறுங் காலமும் (மூன்றும் பகுதி) பக்கம் 2 – 3.

ஒருவர் வாதவூரடிகளாக வந்து பிறந்தனரெனக் கூறு கின்றனவேயன்றி நந்திகளுளொருவர் மாணிக்கவாசகராக வந்து பிறந்தாரெனக் கூறுகின்றில. நந்தி யென்னும் பெயர் சிவகணத் தலைவர்களுக்குப் பொதுவாக வழங்குதற் குரியதெனக் கொள்ளினும் நந்தீசன் என்ற பெயரைச் சிவ கணத்தலைவர் பலர்க்கு முரிய பொதுப் பெயராகக் கொள்ளு தல் பொருந்தாது. நந்திகள் அனைவர்க்கும் தலைவராம் பெருமை நந்தீசரொருவர்க்கே யுரியதாகும். மறைமலை யடிகளார் கருதுமாறு பெரியதேவராகிய நந்தியெம்பெரு மானே மணிவாசகரெனப் பிறந்தருளினரென்பது உண்மை யாயின் அவரது வரலாறு கூறும் தமிழ் நூல்களெல்லா வற்றிலும் இச் செய்தி விரிவாக விளக்கப் பெற்றிருக்கும். நந்தீசரே மணிவாசகராகப் பிறந்தருளினரென்ற செய்தி தமிழ் நூல்களொன்றிலேனும் கூறப்படாமையால் அதனை உண்மையெனக் கொள்ளுதற்கில்லை. நந்திகள் நால்வர் எனத் தொகைகூறிய திருமூலதேவ நாயனாரும் அந் நந்திகள் கணத்தவராக இந்நிலவுலகிற் பிறந்த அடியார் களைக் குறிப்பிடுமிடத்துச் சிவயோக மாமுனி, பதஞ்சலி, வியாக்கிரர் ஆகிய மூவரோடு தம்மையுஞ் சேர்த்துக் கூறிய தன்றி அத்தகைய நந்திகளுள் ஒருவராகத் திருவாதவூரடி களைக் குறிப்பிடவேயில்லை.* ஆகவே திருவாதவூரடிகள் திருமூலர்க்குக் காலத்தால் முற்பட்டவராய்க் கி. பி. மூன்றும் நூற்றாண்டில் வாழ்ந்தாரெனக் கூறுதல் ஒரு சிறிதும் பொருந்தாது.

'வாசகன்' என்ற சொல் தூதுவன் என்ற பொருளி லும் புகழ்ந்தேத்துவோன் என்ற பொருளிலும் வழங்கும் சொல்லாகும். தனது திருக்கூத்துக் கேற்பக் குடமுழா முழக்கவல்ல நந்தி தேவரைத் திருக்கயிலைப் பெருமான் தன்னைத் தொழவந்த அடியார்களை இன்னின்னாரெனத் தெரிவித்துத் தனது அருளிப்பாடறிந்த பின் திருமுன்னர் அழைத்துவரும் பணிமேற் கொண்ட தூதுவனாக அமைத்துக் கொண்டாரென்பார்,

"குடமுழ நந்தீசனை வாசகனாக் கொண்டார்"

எனத் திருநாவுக்கரசடிகளார் குறிப்பிடுவாராயினர். இத் [illegible]ரிலமைந்த வாசகன் என்ற சொல், சிவபெருமானது

* [illegible]ிரம் 77.

திருமுன்னர் அப்பெருமானைப் போற்றிப் பரவி அவரது திருக்குறிப்பறிந்து ஏவல் செய்யும் தூதுவராய் நிற்கும் பதவிநிலையைக் குறித்த பெயராகும். இதனை ஒருவர்க் குரியதாய் வழங்கும் இயற்பெயரென்றே சிறப்புப் பெயரென்றே கொள்ளுதல் சிறிதும் பொருந்தாது. இறைவனை நன்மொழிகளாற் புகழ்ந்து போற்றும் மெய்யடியார் யாவராயினும் அவர்கள் வாசகர் என்ற சொல்லால் வழங்குதற்குரியவரென்பது திருநாவுக்கரசர் பாடியருளிய,

> " குசையும் அங்கையிற் கோசமுங்கொண்ட அவ்
> வசையில் மங்கல வாசகர் வாழ்த்தவே
> இசைய மங்கையும் தானுமொன் றாயினான்
> விசைய மங்கையுள் வேதியன் காண்மினே "*

எனவரும் திருவிசயமங்கைத் தேவாரத்தால் நன்கு உய்த்துணரப்படுகின்றது. மறைகளை நன்குணர்ந்து கையில் தருப்பையும் புத்தகமும் தாங்கியவர்களாகிய மறைமுனிவர்கள் குற்றமற்ற நன்மொழிகளைச் சொல்லி வாழ்த்தத் திருவிசயமங்கை யென்னும் திருப்பதியுள் இறைவன் உமையம்மையாருடன் ஒருங்கு வீற்றிருக்கும் அழகிய காட்சியை விளக்குவது இத்திருக் குறுந்தொகைப் பாடலாகும். இதன் கண் ' அவ் வசையில் மங்கலவாசகர் ' எனப் பன்மை கூறியவதனால் இறைவனை நன்மொழிகளாற் புகழ்ந்து போற்றுவோர் அனைவரையும் வாசகர் என்னும் இச்சொல் உணர்த்தி நின்றமை நன்கு தெளியப்படும். எனவே திருநாவுக்கரசர் திருப்பாடலில் வழங்கிய வாசகன் என்ற சொல் மாணிக்க வாசகப் பெருமானைக் குறிப்பதன்றென்பது நன்கு பெறப்படுதல் காண்க. திருவாதவூரடிகளுக்கு வழங்கும் மாணிக்கவாசகர் என்னும் பெயர் வழக்கம் கி பி. 15-ம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டதாதலின் அதனை முற்காலத்தவரான திருநாவுக்கரசர் வாசகன் என்று முதற் குறையாக வழங்கினாரென்பார் கூற்று சிறிதும் பொருந்தாதென்க.

(2) '' நரியைக் குதிரை செய்வானும் '' எனத் திருவாரூர்த் திருப்பதிகத்திலும் " மணியார் வைகைத் திருக்கோட்டில் நின்றதோர் திறமுந் தோன்றும் " எனத் திருப்பூவணத் திருத்தாண்டகத்திலும் திருநாவுக்கரசர் குறிப்பிட்ட

* திருநாவுக்கரசர் திருவிசையமங்கைத் திருக்குறுந்தொகை 1-ம் பாடல்.

செய்திகள் முறையே மணிவாசகர் பொருட்டு ஆலவாய்ப் பெருமான் நரியைப் பரியாக்கிய திருவிளையாடலையும் பிட்டுக்கு மண்சுமந்த திருவிளையாடலையும் குறிப்பன என்பர்.

> "நரியைக் குதிரை செய்வானும் நரகரைத் தேவுசெய்வானும்
> விரதங்கொண்டாட வல்லானும் விச்சின்றி நாறுசெய்வானும்
> முரசதிர்ந் தானைமுன் னோட முன்பணிந் தன்பர்களேத்த
> அரவரைச் சாத்திநின்றானும் ஆரூரமர்ந்த அம்மானே."

எனவரும் இத்திருப்பாட்டில் "காட்டில் அலைந்து பிணங்களைத் தின்று திரியும் இழிதொழிலுடைய தாழ்ந்த நரியையும் உயர்ந்தோர் மதிக்கும் பெருமை வாய்ந்த சிறந்த ஊர்தியாகிய குதிரையாகத் திருத்திப் பணிகொள்ளவல்ல தன் வயத்தனாகத் திகழ்பவனும், துன்பமே நுகர்தற்குரிய நிலையில் நிரயத்து வீழ்ந்த உயிர்த் தொகுதிகளை இன்பமே நுகர்தற்குரிய வானுறையுந் தெய்வங்களாக உயர்த்தி வாழ்விக்கும் பேரருளாளனும், இருவினைப் பாசத்தாற் கட்டுண்டு மயங்கும் மாந்தரைத் தவநெறியிற் புகுத்திச் சிவஞானத்தை யளித்தல் கருதி அவர் பொருட்டு எண்ணிலாத விரதநெறிகளைத் தானே மேற்கொண்டு அருள்புரியவல்ல விரதியாக விளங்குபவனும், வித்தாகிய காரணத்தைக்கொண்டு விளைவிப்பார் பிறராக, தான் எதனையும் வேண்டாமலே காரியமாகிய பயிர்களை விளைவிக்கவல்ல முடிவிலாற்றலுடையவனும் திருவாரூரில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள சிவபெருமான் ஒருவனே யென்னும் உண்மையைத் திருநாவுக்கரசடிகளார் இனிது விளக்கியுள்ளார். நரியைக் குதிரை செய்தல், நரகரைத் தேவு செய்தல், விரதங் கொண்டாடுதல், விச்சின்றி நாறு செய்தல் என்பவற்றை முன்னொரு காலத்திற் சிவபெருமான் நிகழ்த்திய திருவிளையாடல்களாகத் திருநாவுக்கரசர் கருதவில்லை யென்பதற்கு இச்செயல்களை இத்திருப்பாடலில் எதிர்காலத்தில் வைத்துக் கூறியருளியதே சிறந்த சான்றாகும். திருநாவுக்கரசர் காலத்திற்கு முன் இறைவன் செய்தருளிய திருவிளையாடல்களைக் குறிப்பது 'நரியைக் குதிரை செய்வானும்' எனத் தொடங்கும் திருப்பாடலன்றென்பதும் எண்குணத்தானாகிய இறைவனுடைய தன் வயத்தனாதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை முதலிய அருட் பண்புகளை விளக்குவதே இத்திருப்பாடலென்பதும் இதன் பொருளை ஆழ்ந்துணரவல்லார்க்கு இனிது புலனாம். இப்பாடலில் "விச்சின்றி

நாறு செய்வான்" எனத் திருநாவுக்கரசர் இறைவனது முடிவிலாற்றலுடைமையினை விளக்கியவாறே "விச்ச தின்றியே விளைவு செய்குவாய்"* எனத் தொடங்கும் திருச் சதகப் பாடலில் திருவாதவூரடிகளும் விளக்கிய திறம் இவண் ஒப்புநோக்கி யுணரத்தக்கதாகும். 'விச்சின்றி நாறு செய்தல்' என்ற தொடர் முன்னர் நிகழ்ந்த திருவிளை யாடல்களுள் எதனையும் குறித்து வழங்காமை போன்றே அதனோடு உடன் வைத்து ஓதப்பெற்ற நரியைக் குதிரை செய்தல், நரகரைத் தேவு செய்தல், விரதங் கொண்டாடுதல் என்பனவும் சிவபெருமானால் நிகழ்த்தப்பட்ட திருவிளை யாடல்களுள் எதனையும் குறித்து வழங்கியன அல்ல என்பது நன்கு தெளியப்படும்.

இனி "மணியார் வைகைத் திருக்கோட்டில் நின்ற தோர் திறமுந் தோன்றும்" எனவரும் திருப்பூவணத் திருத்தாண்டகத்தொடர், மதுரையிற் சோமசுந்தரப் பெரு மான் வந்தி யென்னும் தவப்பெருஞ் செல்விக்குக் கூலியா ளாகி மண் சுமந்து கூலி கொண்டு பிரம்படி பட்டு விளை யாடிய நிகழ்ச்சியைக் குறித்து நிற்பது தானா? என்பதும் ஈண்டு ஆராயத்தக்கதாகும். "வடிவேறு திரிசூலம் தோன் றும் தோன்றும்" எனத் தொடங்குந் திருப்பூவணத் திருத் தாண்டகத்தின் ஒன்பதாம் திருப்பாட்டில் "மணியார் வைகைத் திருக்கோட்டில் நின்றதோர் திறமும் தோன்றும்" என்ற இத்தொடர் அமைந்துளது. திருவாலவாய்ப் பெரு மானை இறைஞ்சிப் போற்றிய திருநாவுக்கரசர் திருப்பூ வணத்தை வழிபடச் சென்றபொழுது திருப்பூவணத் திறை வர் திருநாவுக்கரசர்க்கு நேரே தோன்றிக் காட்சியளித் தருளினாரென்பதும், அத்தெய்வக் காட்சியைக் கண்ணாரக் கண்டு இறைஞ்சிய தாண்டகவேந்தர் 'வடிவேறு திரிசூலம் தோன்றும் தோன்றும்' எனத் தொடங்குந் திருத்தாண்ட கத்தைப் பாடிப் போற்றினாரென்பதும் வரலாறு. இச் செய்தி,

> " திருவால வாயமர்ந்த செஞ்சுடரைச் செழும் பொருளால்
> தருவானை நேரிசையும் தாண்டகமு முதலான
> பெருவாய்மைத் தமிழ்பாடிப் பேணுதிருப் பணிசெய்து
> மருவார்தம் புரமெரித்தார் பூவணத்தை வந்தடைந்தார்"
> (பெரிய புராணம். திருநாவுக் - 406)

* திருவாசகம், திருச்சதகம் 96.

"கொடிமாடம் நிலவுதிருப் பூவணத்துக் கோயிலினுள்
நெடியானுக் கறிவரியார் நேர்தோன்றக் கண்டிறைஞ்சி
வடிவேறு திரிசூலத் தாண்டகத்தால் வழுத்திப்போய்ப்
பொடிநீடு திருமேனிப் புனிதர்பதி பிறபணிவார்" (ஷை 407)

எனவரும் பெரிய புராணச் செய்யுட்களால் நன்கு தெளியப் படும். திருப்பூவணத் திருக்கோயில் வைகையாற்றின் கரையிலே அமைந்ததாகும். இத்திருக்கோயிலில் இறைவன் தமக்கு நேர் தோன்றிக் காட்சி வழங்கிய திருவருட்டிறத்தையே "மணியார் வைகைத் திருக்கோட்டில் நின்றதோர் திறம்" எனத் திருநாவுக்கரசர் இத்திருத்தாண்டகத்துள் போற்றிப் பரவியுள்ளார். "மணியார் வைகைத் திருக்கோடு" என்பது மணிகள் நிறைந்த வையை யாற்றின் அழகிய கரை யென்னும் பொருள் தருவதாய் அக் கரையிலமைந்த திருப்பூவணத் திருக்கோயிலைக் குறித்து நின்றது. திருப்பூவணத்திறைவர் வையைக் கரையிலே தோன்றித் தமக்குக் காட்சி வழங்கிய செய்தியைத் திருநாவுக்கரசர் இத்தொடராற் குறிப்பிடுகின்றாரெனக் கொள்வதே இத்திருத்தாண்டகம் பாடப்பெற்ற செவ்விக்குப் பொருத்தமுடையதாகும். இஃதன்றிப் பிட்டுக்கு மண்சுமந்த திருவிளையாடலைக் குறித்தற்குரிய சொல்லமைப்பெதுவும் இத்தொடரிற் காணப்படவில்லை. ஆகவே இத்தொடரிற் பிட்டுக்கு மண்சுமந்த திருவிளையாடல் குறிக்கப்பட்டதென்பார் கூற்று நாவுக்கரசர் வரலாற்றுக்கு முரண்பட்டதாதல் நன்குபெறப்படும்.

(3) சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடிய திருத்தொண்டத் தொகைத் திருப்பதிகத்தில் 'பொய்யடிமையில்லாத புலவர்க்கும் அடியேன்' எனப் போற்றி வழிபடப்பெற்ற பொய்யடிமையில்லாத புலவரென்பார் மாணிக்க வாசகரே. மாணிக்க வாசகப் பெருமான் வடக்கிருந்து வந்த வீரசைவ மரபிற்கு உரியராய் அம்மரபினரால் தலைமையாசிரியராக வைத்துப் போற்றப்பட்டு வந்தமை கண்டே, தமிழ் நாட்டுச் சைவ சமயத் தெய்வ ஆசிரியரான சுந்தரமூர்த்தி நாயனார் தாம் அருளிச் செய்த திருத்தொண்டத்தொகையில் அவர் பெயரை வெளிப்படக்கிளந்து ஓதாது "பொய்யடிமையில்லாத புலவர்" என்று அவரைக் குறிப்பால் ஓதினர் என்பர் மறைமலையடிகளார்.

பொய்யடிமையில்லாத புலவர் எனத் திருத்தொண்டத் தொகையிற் போற்றப் பெற்றவர், மறைமலையடிகள் முதலி

யோர் கருதுமாறு தனியடியாராகிய ஒருவரல்லர். மெய்ம்மை நெறிநின்று இறைவனைப் போற்றிப் பரவும் பெருங்கூட்டத்தினராகிய பலரையும் இத்தொடர் குறித்து நிற்பதென்னும் உண்மையைத் திருத்தொண்டத்தொகைக்கு வகை நூலாகத் திருத்தொண்டர் திருவந்தாதி பாடிய நம்பியாண்டார் நம்பிகளும் விரிநூலாகத் திருத்தொண்டர் புராணம் பாடிய சேக்கிழாரடிகளும் தெளிவாகக் கூறியுள்ளார்கள். குடந்தை நகருக்கு அருகே இப்பொழுது தாராசுரமென மருவி வழங்கும் இராசராசேச்சுரத் திருக்கோயிலிற் சோழ மன்னரால் அமைக்கப்பட்ட திருத்தொண்டத் தொகையடியார்களைக் குறிக்கும் சிற்பங்களில் பொய்யடிமையில்லாத புலவரைக் குறித்த சிற்பத்தில் அடியார் பலர் குறிக்கப்பட்டிருத்தலைக் காண்கின்றோம் ஆதலால் பொய்யடிமையில்லாத புலவர் என்னுந்தொடர் தனியடியாரொருவரைக குறித்ததன்றென்பதும் தொகையடியார்களையே குறித்ததென்பதும் நன்கு தெளியப்படும் சிவபெருமானால் வலிய வந்து வழக்குப்பேசித் தடுத்தாட்கொள்ளப்பெற்ற வன்றொண்டர், மாணிக்கவாசகர் பெயரை வெளிப்படக் கிளந்தோதும் மனவலியின்றிப் 'பொய்யடிமையில்லாத புலவர்' எனக் குறிப்பால் உணர வைத்தாரென்னுங் கூற்று, வன்றொண்டரது மனவியல்புக்கு முற்றும் முரணாகும். சுந்தரர் காலம் முதல் இன்றுவரை பொய்யடிமையில்லாத புலவரைத் தொகையடியாராகவைத்து வழிபட்டு வரும் தொன்னெறி வழக்கிற்கும் இது முரண்படுகின்றது. அன்றியும் பாண்டி நாட்டுத் திருவாதவூரிற் பிறந்தருளிச் சைவ சித்தாந்த மெய்ந்நூ லிலக்கியமாகத் திகழும் திருவாசகச் செழுமறையைத் திருவாய் மலர்ந்தருளிய மணிவாசகப்பெருமானை வடக்கிருந்து வந்த வீரசைவ மரபினரெனத் துணிந்து கூறுதல் சிறிதும் ஏற்புடையதன்றாம்.

(4) மாணிக்கவாசகர் தேவார ஆசிரியர் மூவர்க்கும் காலத்தாற் பிற்பட்டவராயின் கண்ணப்ப நாயனார், சண்டீசப் பிள்ளையார் ஆகிய அடியார்களைத் தம் பாடல்களிற் போற்றிப் பரவிய அவ்வடிகள் சிவபெருமானது திருவருளை நிரம்பப் பெற்ற தேவார ஆசிரியர் மூவரையும் உளமுருகிப் போற்றியிருப்பார் தேவார ஆசிரியர்களைப் பற்றிய குறிப்பெதுவும் திருவாசகத்திலும் திருச்சிற்றம்பலக் கோவையிலும் காணப்படாமையால் மாணிக்கவாசகர் அம்மூவர்க்கும் காலத்தால் முற்பட்டவரென்பது நன்கு தெளியப்படும் என்பர்.

துணிதல் முறையாகுமா? அதுபோலவே விநாயகரைப் பற்றிக் குறிப்பிடாத மாணிக்கவாசகர் விநாயகர் வழிபாடு பரவத் தொடங்கிய கி. பி. ஆரும் நூற்ருண்டிற்கு முற்பட்டவ ரெனத் துணிதலும் முறையாகாதென்க.

(6) திருச்சிற்றம்பலக் கோவையாரில் 'வங்கமலி கலி நீர் தில்லை' (செ–85) எனவும், 'கடற்றில்லை' (122, 296) எனவும் 'புலியூர் சுற்றும் போர்க்கடலே' (183) எனவும் மணிவாசகப் பெருமான் கூறுதலால் அவர் காலத்தே தில்லை நகரின் அருகே கடல் நின்றதென்றும், "பாளையுடைக் கமு கோங்கிப் பன்மாட நெருங்கி யெங்கும், வாளையுடைப்புனல் வந்தெறி வாழ்வயற்றில்லை" எனத் திருநாவுக்கரசரும் "மையாரொண்கண்ணார் மாடநெடுவீதிக், கையாற் பந்தோச் சுங் கழிசூழ் தில்லை" எனத் திருஞானசம்பந்தரும் தில்லைநகர அமைப்பைக் கூறுதலால் அவ்விரு பெருமக்களும் வாழ்ந்த காலத்தே கடல் தில்லையை விட்டு ஒருகல் தொலைவில் விலகிச் செல்ல அது நின்றவிடத்தே உப்பங்கழி நீர் நிற்பதா யிற்றென்றும், இவ்வாறு கடல் விலகிச் செல்லுதற்கு 225 ஆண்டுகளாவது சென்றிருக்க வேண்டுமென்றும், எனவே மாணிக்கவாசகர் வாழ்ந்த காலம் கி பி. நான்காம் நூற் ருண்டுக்கு முற்பட்டதாமென்றும் கூறுவர் மறைமலையடிகள்.

திருவாதவூரடிகள் 'வங்கமலி கலிநீர் தில்லை' எனவும் 'கடற்றில்லை' எனவும் கூறியது தில்லை நகரத்தையொட்டிக் கடல் அமைந்திருந்தது என்பதைக் குறித்தற் பொருட்டன் ரும். கடலுக்கு ஐந்தாறு கல் தொலைவிலமைந்த ஊர்களையும் கடற்கரையூராகச் சிறப்பித்துரைக்கும் வழக்கம் இலக்கியங் களிற் பெருகிக் காணப்படுகின்றது. சீகாழிப்பதிக்குக் கிழக்கே ஐந்தாறு கல் தொலைவில் கடலமைந்திருப்பினும்,

"ஒன்னார் புரமூன்று மெரித்த வொருவன்
மின்னாரிடை யாளொடுங் கூடிய வேடந்
தன்னாலுறை வாவது தண்கடல் சூழ்ந்த
பொன்னார் வயற்பூம் புகலிந் நகர்தானே"*

எனத் திருஞானசம்பந்தப் பிள்ளையார் அதனைக் கடலொடு தொடர்புபடுத்திக் கூறியுள்ளார். அது போலவே தில்லை நகரத்தைச் சிறப்பிக்குந் திருவாதவூரடிகளும் கடலுக்கு மூன்று நான்கு கல் தொலைவிலுள்ள தில்லையைக் கடல் வளம்

* முதல் திருமுறை 30-ஆம் பதிகம் 2-ஆம் திருப்பாட்டு.

உடைய பதியாகக் குறிப்பிட்டுள்ளார். இங்ஙனம் மணிவாசகப் பெருமான் தில்லையைக் கடலொடு தொடர்புபடுத்திக் கூறினாற்போலவே கி. பி 10, 11-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருவிசைப்பா ஆசிரியர்களாகிய கருவூர்த் தேவரும் திருவாலி யமுதனாரும் "ஆர்த்துவந் தமரித் தமரரும் பிறரும் அலைகட லிடுதிரைப் புனிதத், தீர்த்த நீரரும்பும் பெரும்பற்றப் புலியூர்த் திருவளர் திருச்சிற்றம்பலமே"[1] எனவும் "சீர்வங்கம் வந்தணவும் தில்லைமா நகர்ச் சிற்றம்பலம்"[2] எனவும் முறையே கடலின் பாங்கர் அமைந்த ஊராகத் தில்லைப் பதியைக் குறிப்பிட்டுள்ளார்கள். எனவே மாணிக்கவாசகர் காலத்தில் மட்டுமன்றித் திருவிசைப்பா ஆசிரியர்களாகிய கருவூர்த்தேவர், திருவாலியமுதர் முதலியோர் வாழ்ந்த பிற்காலத்திலும் தில்லைப்பதி கடலொடு தொடர்புடையதாக வைத்துப் பாடப்பெற்றதென்பது நன்கு புலனாகின்றது. உண்மையாக நோக்குமிடத்துத் தேவார ஆசிரியர் காலத்தில் மட்டுமன்றி மாணிக்கவாசகர் வாழ்ந்த நாளிலும் சிதம்பரத்தையொட்டிக் கடல் இருந்ததில்லையென்பதும், கடலொடு தொடர்புடைய உப்பங்கழியே தில்லைநகரின் கீழ்த் திசையில் அமைந்திருந்ததென்பதும், தில்லையின் ஏனைய மூன்று பக்கங்களிலும் காவிரியாற்றின் நீர் கால்வாய் வழியே வளைந்தோடியதென்பதும், அந்நீரால் வளம்பெற்ற தில்லை நகரின் சுற்றுப்புறம் வயலும் சோலையுமுடைய மருத நிலமாய்த் திகழ்ந்ததென்பதும்,

"மாதுற்றமேனி வரையுற்ற வில்லிதில்லை நகர்சூழ்
போதுற்ற பூம்பொழில் காள்கழிகாள்"[3]

"பொன்னிவளைத்த புனல்சூழ்நிலவிப் பொலிபுலியூர்"[4]

"சிறைவான்புனற் றில்லைச்சிற்றம்பலம்"[5]

"குருநாண்மலர்ப் பொழில் சூழ்தில்லை"[6]

எனவரும் சிற்றம்பலக்கோவைத் தொடர்களாலும்,

1. கருவூர்த்தேவர் திருவிசைப்பா. கோயில் – 8.
2. திருவாலியமுதர் திருவிசையப்பா. கோயில் கோலமலர்-8.
3. திருச்சிற்றம்பலக்கோவை 174-ஆம் செய்யுள்.
4. திருச்சிற்றம்பலக்கோவை 317-ஆம் செய்யுள்.
5. திருச்சிற்றம்பலக் கோவை 20-ம் செய்யுள்.
6. திருச்சிற்றம்பலக் கோவை 44-ம் செய்யுள்.

"தேன்புக்க தண்பணைசூழ் தில்லைச் சிற்றம்பலவன்"[1]
"செறிபொழில் சூழ்தில்லை நகர்த் திருச்சிற்றம்பலம்"[2]

எனவரும் திருவாசகத் தொடர்களாலும் நன்கு விளங்கும். இங்கெடுத்துக் காட்டிய குறிப்புக்களால் தில்லை நகரத்திற்கும் கீழ்கடலிற்கும் உள்ள தொலைவு தேவாரஆசிரியர் காலத்திலும் மாணிக்க வாசகர் காலத்திலும் வேறுபட்ட தில்லை யென்பது தெளிவாகப் புலப்படுதலால் தேவார ஆசிரியர் மூவர்க்கும் மாணிக்க வாசகர் காலத்தால் முற்பட்டவர் என்பதற்குத் திருக்கோவையாரிலுள்ள நெய்தனில வருணனையைச் சான்றாகக்கொள்ளுதல் பொருந்தாதென்பது புலனும்.

(7) சாக்கியநாயனார், இடைக்காடர், காரைக்காலம்மையார் முதலிய அடியார்களை எடுத்தோதிய கல்லாடம் தேவார ஆசிரியர் மூவரையும் யாண்டும் குறிப்பிடாமையால் அந்நூல் தோன்றிய காலம் தேவார ஆசிரியர்க்கு முன் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டின் இறுதியும் ஆறாம் நூற்றாண்டின் தொடக்கமுமாமென்றும், ஆகவே அக்கல்லாட நூலிற் போற்றிப் புகழப்பட்ட மணிவாசகர் அம்மூவர்க்கும் முந்தியவரென்பது பெறப்படுமென்றும் மறைமலையடிகள் கூறுவர்.

திருஞானசம்பந்தர் காலத்துப் பாண்டியனுக்கு வெப்புத் தீர்த்த திருவிளையாடல், அக்காலத்துச் சமணர் கழுவேறினது, சேரமான் பெருமாள் நாயனார் காலத்தில் ஆலவாயிறைவன் பாணபத்திரர் பொருட்டுச் சாதாரி பாடியது ஆகிய இத்திருவிளையாடல்களெல்லாம் இறைவன் இயற்றிய அறுபத்து நான்கு திருவிளையாடலுள் அடங்கும் என்பவாதலின் "எட்டெட்டியற்றிய கட்டமர் சடையோன்"[3] என்ற தொடரால் அவ்வறுபத்து நான்கு திருவிளையாடல்களையுந் தொகுத்துக் கூறிய கல்லாட நூலானது திருஞானசம்பந்தர் முதலிய தேவார ஆசிரியர் காலத்திற்கு மிகவும் பிற்பட்டதென்பது துணியப்படும். சுந்தரர்க்குத் தோழராகிய சேரமான் பெருமாள் நாயனார் நடராசப் பெருமானது திருச்சிலம்பொலி கேட்ட வரலாற்றையும் ஆலவாயிறைவர் பாணபத்திரர் பொருட்டு அவ்வேந்தர் பெருமானுக்குத் திருமுகப்

1. திருவாசகம் – திருச்சாழல் 14.
2. திருவாசகம் – கண்டபத்து 6.
3. கல்லாடம் 97-ம் செய்யுள் 14-ஆம் அடி

பாசுரம் பாடிக் கொடுத்தருளிய செய்தியையும் கல்லாடத்தில் 13-ம் செய்யுளாக அமைந்த அகவல் விரித்துக் கூறு கின்றது.* எனவே கல்லாடம் என்னும் இந்நூல் சுந்தர மூர்த்தி சுவாமிகள் காலத்திற்குப் பின் தோன்றிய தென்பது நன்கு தெளியப்படும். இந்நூல் சொல் நடையாலும் பொருளமைதியாலும் கி. பி. பத்தாம் நூற்றாண்டளவில் இயற்றப்பட்டதென்பது இதனை யுற்றுணர்வார்க்கு இனிது விளங்கும். ஆகவே இது கொண்டு மாணிக்கவாசகர் காலம் தேவார ஆசிரியர்களுக்கு முற்பட்டதெனத் துணிதல் ஏற்புடையதன்றாம்.

இனி, மாணிக்கவாசகர் புத்தரொடு வாது நிகழ்த்திய நிகழ்ச்சியைக் கூர்ந்து நோக்குங்கால் தமிழ் நாட்டில் புத்த சமயம் தலை யெடுத்த காலமாகிய கி. பி. ஐந்தாம் நூற்றாண் டிற்கு முந்தியே திருவாதவூரடிகள் வாழ்ந்திருத்தல் வேண்டு மென்பர் மறைமலையடிகள். திருவாதவூரடிகளுடன் வாதஞ் செய்தவர்கள் தமிழ் நாட்டவர்களல்லரென்பதும் தமிழ் நாட் டில் சைவ சமயம் சிறப்புற்றிருந்த நிலையில் அச்சமயத்தின் கொள்கைகள் ஏற்புடையன அல்ல என வாதித்துத் தம் சம யத்தைப் பரப்புங் கருத்துடன் ஈழநாட்டிலிருந்து வந்தவர்க ளென்பதும் வாதவூரடிகள் வரலாற்றில் நன்கு விளக்கப் பெற்றுள்ளன. எனவே வாதவூரடிகள் காலத்தை நிச்சயித் தற்குப் புத்தரை வாதில் வென்ற இந்நிகழ்ச்சியை ஆதார மாகக் கொள்ளுதல் பொருந்தாது.

இதுகாறும் ஆராய்ந்த குறிப்புக்களால் மாணிக்கவாசகர் தேவார ஆசிரியர் மூவர்க்கும் முற்பட்டவரென்பார் கூறுங் காரணங்கள் நடுநிலையாளர்களால் ஏற்கத்தக்கன அல்ல வெனக் கண்டோம். இனி மாணிக்கவாசகர் தேவார ஆசிரி யர் மூவர்க்கும் காலத்தாற் பிற்பட்டவ ரென்பதற்குரிய கார ணங்களைக் காண்போம்.

* "பரிபுரக் கம்பலை யிருசெவியுண்ணும்
குடக்கோச் சேரன் கிடைத்திது காண்கென
மதிமலிபுரிசைத் திருமுகங்கூறி
அன்புருத் தரித்த இன்பிசைப் பாணன்
பெறநிதி கொடுக்கென வுறவிடுத்தருளிய
மாதவர் வழுத்துங் கூடற் கிறைவன்"

— கல்லாடம் 13-ம் செய்யுள் 25 - 30 வரிகள்.

(1) சைவ சமய குரவர் நால்வருள் மாணிக்க வாசக சுவாமிகளை நான்காமவராக வைத்துப் போற்றும் முறை உலக வழக்கும் செய்யுள் வழக்குமாகிய இருவகை வழக்கி லும் நிலைபெற்று வருகின்றது. அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் என உலக வழக்கில் வழங்கும் இம்முறை வைப்பு, சைவ சமய ஆசிரியராகிய அந்நால்வரும் ஒருவர் பின் ஒருவராக இவ்வுலகில் திருவவதாரஞ் செய்த கால அடைவினை யொட்டியது. திருஞானசம்பந்தர், திருநாவுக் கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் என நூல்களில் வழங்கும் வைப்புமுறை, அவ்வருளாசிரியர் நால்வரும் ஒருவர்பின் ஒருவராகச் சிவபெருமான் திருவடி நீழலிற் கலந்து இன் புற்ற கால அடைவினை யொட்டி யமைந்ததாகும். மேற் காட்டிய திருவவதார அடைவு, திருவடியடைவு என்னும் இரண்டனுள், திருவடியடைவு பெற்ற கால முறையினை யொட்டியே தேவாரத் திருப்பதிகங்கள் முதலேழு திருமுறை களாகவும், திருவாசகம் திருச்சிற்றம்பலக்கோவை யென்பன எட்டாந் திருமுறையாகவும் வகைப்படுத்தப்பெற்றன.

பட்டினத்தடிகள் பாடிய திருவிடைமருதூர் மும்மணிக் கோவையில்,

" வித்தகப் பாடல் முத்திறத்தடியரும்
திருந்திய அன்பிற் பெருந்துறைப்பிள்ளையும் "

எனச் சைவ சமய குரவர் நால்வரையும் முறையே குறிப் பிட்டுப் போற்றியுள்ளார். இவ்வாறே சைவ நூல்களெல் லாவற்றிலும் திருவாதவூரடிகளைச் சமய குரவருள் நாலாமவ ராக வைத்துப் போற்றும முறையினைக் காணலாம். எனவே தேவார ஆசிரியர் மூவர்க்குப்பின் திருவாதவூரடிகளை நாலா மவராக வைத்துப் போற்றும் இம்முறைவைப்பு சமய குரவர் நால்வரும் வாழ்ந்த கால அடைவினை யொட்டி ஏற்பட்ட தென்பது நன்கு துணியப்படும். இதனால் தேவார ஆசிரி யர்களாகிய மூவர் முதலிகள் காலத்திற்குப் பின்னும் பதி னோராந் திருமுறை யாசிரியர்களுள் ஒருவராகிய பட்டினத் தடிகள் காலத்திற்கு முன்னும் அமைந்த காலப் பகுதியே திருவாதவூரடிகள் வாழ்ந்த காலமென்பது தெளிவாகப் புல னாதல் காணலாம்.

(2) நம்பியாரூரர் தம் காலத்தில் வாழ்ந்த சிவனடியார் களையும் தமக்குக் காலத்தால் முற்பட்ட சிவனடியார்களையும் போற்றுங் கருத்துடன் திருத்தொண்டத் தொகைத் திருப்

பதிகத்தைப் பாடியருளினுரென்பது வரலாறு. நம்பியாரூரராற் பெயர் கூறிப் போற்றப்பட்ட தனியடியார்களுள் திருவாதவூரடிகளது பெயர் குறிக்கப்பெறவில்லை. தமக்குத் தெரிந்த சிவனடியார்க ளெல்லோரையும் போற்றிப் பரவுதலையே நோக்கமாகக்கொண்டு திருத்தொண்டத் தொகைத் திருப்பதிகத்தை அருளிச் செய்தவர் நம்பியாரூரராவர். அறிவினுற் சிவனே யெனப் போற்றப்பெறுஞ் சிறப்பமைந்த மாணிக்கவாசக சுவாமிகள் ஆரூரர்க்குக் காலத்தால் முற்பட்டிருந்திருப்பின் அப்பெருந்தகையாரையும் அவர் தமது திருத்தொண்டத் தொகையில் பெயர் கூறிப் பாராட்டிப் போற்றியிருப்பார். அடியார்க்குத் தொண்டுபட்டு அவர்களது பெரும் புகழையே பேசும் விருப்புடைய சுந்தரமூர்த்தி சுவாமிகள் தமது திருத்தொண்டத் தொகையில் திருவாதவூரடிகளைக் குறிப்பிடாமையால் அவ்வடிகள் சுந்தரமூர்த்தி சுவாமிகள் காலத்திலோ அன்றி அவர் காலத்திற்கு முன்னே வாழ்ந்தவரல்லரென்பதும் சுந்தரர்க்குக் காலத்தாற் பிற்பட்டவரென்பதும் நன்கு துணியப்படும்.

(3) தேவார ஆசிரியர் மூவர் காலம் வரையிலும் தில்லை நடராசப் பெருமான் திருக்கோயிலில் கோவிந்தராசப் பெருமாள் சந்நிதி இருந்ததில்லை யென்பதும், இதனை முதன் முதல் அமைத்தவன் கி. பி. 710 முதல் 775 வரை ஆட்சி புரிந்த பல்லவ வேந்தனுகிய நந்திவர்ம பல்லவமல்லனே யென்பதும் ஆராய்ச்சியாளர் துணிபாகும்.*

"பைம்பொன்னும் முத்தும் மணியுங் கொணர்ந்து
படை மன்னவன் பல்லவர்கோன் பணிந்த
செம்பொன் மணிமா டங்கள்சூழ்ந்த தில்லைத்
திருச்சித்திர கூடம் சென்று சேர்மின்களே"
(பெரிய திருமொழி 3-2-3)

எனத் தில்லைத் திருச்சித்திர கூடத்தைப்பற்றி நந்திவர்ம பல்லவமல்லன் காலத்தவராகிய திருமங்கை யாழ்வார் பாடிப் போற்றியுள்ளார். இங்கு ஆழ்வாராற் பாராட்டப்பட்ட பல்லவ வேந்தனுகிய நந்திவர்ம பல்லவன் முதலில் சைவ வைணவ சமயங்களிற் பொது நோக்குடையவனுக இருந்து பின் பரம வைஷ்ணவனுக மாறியவனென்பது, இவனளித்த

* திருவாளர் மு. இராகவையங்காரவர்களால் எழுதப்பட்ட 'திருச்சித்திரகூடம்' என்ற கட்டுரை பார்க்க. (The Annals of Oriental Research of the Madras University Vol. III (1938 Part I.

காசாக்குடி, உதயேந்திரம், தண்டந்தோட்டம், பட்டத்தாள் மங்கலம் ஆகிய ஊர்களிற் கிடைத்த செப்பேடுகளால் நன்கு புலனாகின்றது. இங்ஙனம் இவன் பரம வைஷ்ணவனாக மாறியதற்கு இவனாட்சியின் பிற்பகுதியில் சிறந்த திருமாலடியாராகத் திகழ்ந்த திருமங்கையாழ்வாரது புலமைத் திறமே காரணமாதல் வேண்டும். இவ்வேந்தன் பரம வைஷ்ணவனாக மாறிய காலமாகிய இவனாட்சியின் பிற்பகுதியிலேயே தில்லை நடராசர் திருக்கோயிலின் முகப்பில் திருச்சித்திர கூடமென்ற பெயருடைய இப்பெருமாள் சந்நிதியை ஏற்படுத்தினானென்று தெரிகிறது. எனவே தில்லை நடராசர் கோயிலிற் கோவிந்தராசப் பெருமாள் சந்நிதி யேற்பட்ட காலம் கி. பி. எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியே யெனத் திட்டமாகக் கூறலாம். இவ்வாறு கி. பி. எட்டாம் நூற்றாண்டின் இறுதியில் தில்லைக் கூத்தப்பெருமான் முன்றிலின் முகப்பே யமைக்கப்பட்ட இத்திருமால் சந்நிதியை,

“ புரங்கடந் தானடி காண்பான் புவிவிண்டு புக்கறியா
திரங்கிடெந் தாயென் றிரப்பத்தன் னீரடிக் கென்னிரண்டு
கரங்கள்தந் தானென்று காட்டமற் றாங்கதுங் காட்டிடென்று
வரங்கிடந் தான்தில்லை யம்பல முன்றிலம் மாயவனே ”
(திருக்கோவை - 86)

எனவரும் திருச்சிற்றம்பலக் கோவைச் செய்யுளில் திருவாதவூரடிகள் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். ஆகவே அவ்வடிகள் வாழ்ந்த காலம் இரண்டாம் நந்திவர்ம பல்லவன் காலமாகிய கி. பி. எட்டாம் நூற்றாண்டிற்கு முன்னாகாதென்பது நன்கு தெளியப்படும்.

(4) திருவாதவூரடிகள் தில்லையம்பலவனைப் பாட்டுடைத் தலைவனாகக்கொண்டு பாடிய திருச்சிற்றம்பலக் கோவையாரில் தம் காலத்தில் விளங்கிய வேந்தர் பெருமானாகிய பாண்டியனுடைய வெற்றித் திறத்தையும் சிவபத்தி மாண்பினையும் குறித்துப் போற்றியுள்ளார்.

“ மன்னவன் தெம்முனை மேற்செல் லுமாயினும் மாலரியே
றன்னவன் தேர்புறத் தல்கல்செல் லாது வரகுணனாந்
தென்னவ னேத்துசிற் றம்பலத் தான்மற்றைத்
தேவர்க்கெல்லாம்
முன்னவன் மூவலன் னாளுமற் றோர்தெய்வ முன்னலளே ”
(திருக்கோவை 306)

"புயலோங் கலர்சடை யேற்றவன் சிற்றம்பலம் புகழும்
மயலோங் கிருங்களி யானை வரகுணன் வெற்பின் வைத்த
கயலோங் கிருஞ்சிலை கொண்டுமன் கோபமுங் காட்டிவருஞ்
செயலோங் கெயிலெரித் தெய்தபி னின்றேர் திருமுகமே"
(கோ. 327)

எனவரும் திருச்சிற்றம்பலக்கோவைச் செய்யுட்களில் 'வர குணனும் தென்னவன் ஏத்து சிற்றம்பலத்தான்' எனவும் 'சிற்றம்பலம் புகழும் மயலோங்கு இருங்களியானை வர குணன்' எனவும் மணிவாசகப் பெருமான் தம் காலத்தில் வாழ்ந்த பாண்டியனை உளமாரப் பாராட்டிப் போற்றியுள் ளமை காணலாம். இங்ஙனம் திருவாதவூரடிகளாற் போற்றப் பெற்ற பாண்டிய மன்னன், வரகுணன் என்ற இயற்பெய ருடையவனென்பதும், தில்லைச் சிற்றம்பலப் பெருமானை இடைவிடாது ஏத்திப் புகழும் பெருவிருப்புடைய சிவநெறிச் செல்வனென்பதும் மேற்காட்டிய திருப்பாடல் தொடர்களால் நன்கு புலப்படுகின்றன. சிவபத்திச் செல்வம் வாய்ந்த இத் தென்னவர் பெருமானை,

"வெள்ளை நீறு மெய்யிற் கண்டு
கள்ளன் கையிற் கட்டவிழ்ப் பித்தும்
ஓடும் பல்நரி யூளை கேட் டரனைப்
பாடின வென்று படாம்பல அளித்தும்
குவளைப் புனலில் தவளை அரற்ற
ஈசன் றன்னை யேத்தின வென்று
காசும் பொன்னுங் கலந்து தூவியும்
வழிபடு மொருவன் மஞ்சனத் தியற்றிய
செழுவிதை யெள்ளைத் தின்னக் கண்டு
பிடித்தலும் அவன்இப் பிறப்புக் கென்ன
இடித்துக் கொண்டவ னெச்சிலை நுகர்ந்தும்
மருதவட்டத் தொருதனிக் கிடந்த
தலையைக் கண்டு தலையுற வணங்கி
உம்மைப் போல எம்மித் தலையும்
கிடக்க வேண்டுமென் றடுத்தடுத் திரந்தும்
கோயில் முற்றத்து மீமிசைக் கிடப்ப
வாய்த்த தென்று நாய்க்கட்ட மெடுத்தும்
காம்பவிழ்ந் துதிர்ந்த கனியுருக் கண்டு
வேம்புகட் கெல்லாம் விதானம் அமைத்தும்
விரும்பின கொடுக்கை பரம்பரற் கென்று
புரிகுழற் றேவியைப் பரிவுடன் கொடுத்த
பெரிய அன்பின் வரகுண தேவர்"*

* பதினொராந்திருமுறை-திருவிடைமருதூர் மும்மணிக்கோவை 28-ஆம் செய்யுள்.

எனப் பட்டினத்தடிகள் வியந்து பாராட்டியுள்ளார். இதன் கண் வரகுணபாண்டியன் செய்தனவாகப் பட்டினத்தடிகள் கூறிய செய்திகளைப் பெரும்பற்றப்புலியூர் நம்பி தாம் பாடிய திருவிளையாடற் புராணத்தில் வரகுணனுக்குச் சிவலோகங் காட்டிய திருவிளையாடலிற் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வரகுண பாண்டியன், உடல் முழுதும் திருநீறணிந்து பகைவருடன் போர் செய்து நின்ற காலத்து, இவன்மேல் பகைவர் குறிபார்த்து எய்த அம்பு, இவனது திருநீறு பூசிய மேனியிற் படாது ஆற்றல் குன்றி இவனது பாதத்தில் வந்து வீழ்ந்ததென்றும், அதனைக்கண்டு வியந்த இவ்வேந்தன், 'திருநீறணியும் தகுதிபெறாத எனது பாதத்தில் அம்பு தைத்தது பொருத்தமுடையதே' என்று சொல்லித் தான் அணிந்த சிவசாதனமாகிய திருநீற்றின் பெருமையை எல்லோர்க்கும் விளங்க எடுத்துரைத் தானென்றும் தெரிகிறது. இச்செய்தியினை,

"பொடியேர் தருமேனியனாகிப் பூசல் புகவடிக்கே
கடிசேர் கணைகுளிப்பக்கண்டு கோயிற் கருவியில்லா
அடியேபட அமையுங்களை யென்ற வரகுணன்றன்
முடியேதருகழல் அம்பலத் தாடிதன் மொய்கழலே"*

எனவரும் பாடலால் நம்பியாண்டார் நம்பி வியந்து போற்றியுள்ளார்.

பாண்டியர் குடியில் வரகுணன் என்ற பெயருடைய வேந்தர் இருவர் இருந்தனரென்பது கல்வெட்டுக்களாலும் செப்பேடுகளாலும் இனிது புலனாகின்றது. அவ்விருவருள் முன்னோனாகிய வரகுணன் என்பான் கி. பி. 792 முதல் 835 வரை ஆட்சிபுரிந்தவன். இரண்டாமவன் இம்முதல் வரகுணனது பேரனாவன். கி. பி. 862 முதல் 880 வரை பாண்டி நாட்டை ஆண்டவன் இரண்டாம் வரகுணனாவன். இவ்விருவருள் மாணிக்கவாசகராலும் பதினோராந் திருமுறை யாசிரியர்களாகிய பட்டினத்தடிகள் நம்பியாண்டார் நம்பி என்பவர்களாலும் போற்றப்பெற்ற சிவபத்திச் செல்வம் வாய்ந்த வரகுணன் யாவன் என்பதே இங்கு ஆராயத்தக்க செய்தியாகும்.

* கோயிற்றிருப்பண்ணியர் விருத்தம் 62-ஆம் செய்யுள். இப் பாடலில் கோயிற்கருவி யென்றது சிவசாதனமாகிய திருநீற்றை யெனக்கொள்க.

இரண்டாம் இராசசிம்ம பாண்டியனுடைய மகனுகிச் சடையவர்மன் என்ற பட்டம் புனைந்து ஆண்ட முதல் வரகுண வர்மனே திருச்சிற்றம்பலக் கோவையிலும் பதினேராந் திருமுறையிலும் சிறப்பிக்கப்பட்ட சிவபத்திச் செல்வம் வாய்ந்த வரகுண பாண்டியனுவனென்பது திருவாளர் சதாசிவ பண்டாரத்தாரவர்கள் துணிபாகும். இக்கொள்கையை வலியுறுத்தற்கேற்ற சான்றுகள் பல இவர்களால் தெளிவாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.[1] முதல் வரகுணனுகிய இவ்வேந்தனைக் "கொற்றவர்கள் தொழு கழற்காற் கோவரகுண மகாராசன்" எனச் சின்ன மனூர்ச் செப்பேடுகள் புகழ்ந்து கூறுகின்றன. இவனது ஆட்சியின் நாலாமாண்டுக் கல்வெட்டுக்கள் சோழ நாட்டில் திருவியலூர் திருநெய்த்தானம் என்ற ஊர்களிலும், ஆறு, எட்டு, பத்தாம் ஆண்டுக் கல்வெட்டுக்கள் முறையே ஆடுதுறை, கும்பகோணம், செந்தலை ஆகிய ஊர்களிலும் பதினேராம் ஆண்டுக் கல்வெட்டுக்கள் திருச்சிராப்பள்ளி, திருக்கோடிகா என்ற ஊர்களிலும் ஆண்டழிந்து போன கல்வெட்டொன்று திருச்சோற்றுத்துறையிலும் இருத்தலால் சோழ மண்டலம் முழுவதும் முதல் வரகுணனது ஆட்சிக் குட்பட்டிருந்ததென்பது நன்கு தெளியப்படும்.

கி. பி. 795 முதல் 846 வரையில் அரசுபுரிந்த தந்திவர்ம பல்லவனுடைய கல்வெட்டுக்கள் சோழநாட்டிற் காணப்பட வில்லை. முதல் வரகுண பாண்டியனுடைய கல்வெட்டுக்கள் சோழநாட்டிற் காணப்படுகின்றன. இவற்றைக் கூர்ந்து நோக்குங்கால் தந்திவர்ம பல்லவனது ஆட்சிக்காலத்தில் தான் இவ்வரகுண பாண்டியன் சோழ நாட்டின்மேற் படை யெடுத்துச் சென்று அதனைக் கைப்பற்றியிருத்தல் வேண்டு மென்பது நன்கு புலனுகும். இவ்வேந்தன் சோழநாட்டி லுள்ள வேம்பில்[2] என்னும் ஊரின் மதிலையழித்து நியமம் என்ற ஊரில் தங்கியிருந்த பொழுது திருச்சிராப்பள்ளி யிறைவற்குத் திருவிளக்கெரிக்க 25 கழஞ்சு பொன் நிபந்த மளித்துள்ளான்.[3] இம்மன்னன் தொண்டைமண்டலத்தில்

1. பாண்டியர் வரலாறு (இரண்டாம் பதிப்பு) பக்கம் 58 – 63.

2. வேம்பில் என்ற ஊர் இப்பொழுது திருவிடைமருதூரையடுத் துள்ள வேம்பத்தூரெனக் கருதப்படுகின்றது.

3. Annual Report on Archaeological survey of India 1903-04 Page 275.

பெண்ணையாற்றங்கரையிலுள்ள அரசூரில் தங்கியிருந்த பொழுது அம்பாசமுத்திரத் திருக்கோயிலுக்கு நாள் வழிபாட்டிற்கென 290 பொற்காசுகள் நிபந்தமளித்துள்ளான்.[1] திருவிடைமருதினையடுத்துக் காவிரிக்கு வடகரையிலமைந்த இடவையென்பது இவ்வேந்தன் காலத்தில் பாண்டியர் தங்கி ஆட்சிபுரிதற்குரிய அரணுடைய ஊராயிற்றென எண்ண வேண்டியுளது. இவ்வூரில் தங்கியிருந்த காலத்தில்தான் இவன் திருவிடைமருதீசர்பால் அளவிலாப் பேரன்பு வைத்து ஒழுகியிருத்தல் வேண்டும்.

பல்லவர் ஆட்சியைச் சோழ நாட்டிலிருந்து விலக்கிய பெருவீரனாகிய இவ்வேந்தன், சோழ நாட்டின் சிறப்புடைச் சிவதலமாகிய தில்லைப்பதியில் எழுந்தருளிய கூத்தப்பெருமானைப் போற்றிப் பரவுதலைத் தனக்குரிய நீங்காக் கடமையாகக் கொண்டிருந்தானென்பது திருச்சிற்றம்பலக்கோவையில் குறிப்பிடப்பட்டது. "வரகுணனும் தென்னவன் ஏத்து சிற்றம்பலத்தான்" எனத் திருவாதவூரடிகள் நிகழ்காலத்து வைத்து இவ்வேந்தனைச் சிறப்பித்தலால் திருவாதவூரடிகள் திருச்சிற்றம்பலக்கோவை பாடியது இவ்வேந்தன் காலத்திலென்று தெரிகிறது. அன்றியும் இவனைப் போற்றி வழிபடப் பெற்ற இடைமருதினையும் அதன் மருங்கே இவனுக்குரியதாய் விளங்கிய இடவையென்னும் நகரில் வாழ்ந்த மடநல்லாள் ஒருத்திக்கு இறைவன் அருள்செய்த திறத்தையும்[2] திருவாசகத்துள் அடிகள் குறித்துப் போற்றுதலும் இதனை வலியுறுத்தும்.

திருச்சிற்றம்பலக்கோவையாரிற் குறிக்கப்பட்ட வரகுண பாண்டியன் தமிழ்நாட்டில் கல்வெட்டுகள் உண்டாவதற்குமுன் அதாவது கி. பி. 4-ஆம் நூற்றுண்டுக்குமுன் இருந்தவன் என்பர் மறைமலையடிகள். கி. பி. நான்காம் நூற்றுண்டிற்கு முன்னிருந்த தமிழ் வேந்தரெல்லோரும் தனித் தமிழ்ப் பெயரால் வழங்கப்பெற்றுள்ளார்கள். அவர்களுள் எவரும் வடமொழிப் பெயர்களைத் தமக்குரிய பெயர்களாகப் புனைந்து

1. Ep. Ind. Vol. IX, No. 10. (Ins. 105 of 1905),

2. இடைமருதீசன் அருள் பெற்ற இடவை மடநல்லாள் எனத் திருவாதவூரடிகள் குறித்துப்போற்றிய அம்மையார் பட்டினத்தடிகள் கூறிய பெரிய அன்பின் வரகுண தேவரது புரிகுழற்றேவியாகவும் இருத்தல் கூடுமென்று எண்ண இடமுண்டு. இச் செய்தி அறிஞரது ஆராய்ச்சிக்குரியதாகும்.

கொண்டதில்லை. வரகுணன் என்ற பெயர் தமிழும் வட மொழியும் கலப்புற்ற காலத்தில் தோன்றிய பெயர். ஆகவே இப்பெயராற் குறிக்கப்படும் இப்பாண்டியனைப் பாண்டி நாட்டிற் களப்பிரர் ஆட்சிக்குப் பின் தோன்றிய பாண்டியர் களுள் ஒருவனாகவே கொள்ளுதல் வேண்டும்.

இனி, மணிவாசகராற் போற்றப் பெற்ற இவ் வரகுண பாண்டியனைக் கி பி. 880-ஆம் ஆண்டில் திருப்புறம்பயப் போரில் தோற்ற இரண்டாம் வரகுண பாண்டியனெனக் கொள்வர் தஞ்சைச் சீநிவாச பிள்ளை முதலியோர்.* வரகுண னது சிவபத்தி மாண்பினால் விளைந்த வெற்றித் திறத்தை நம்பியாண்டார் நம்பி தாம் பாடிய கோயிற்றிருப்பண்ணியர் விருத்தத்தில் இனிது விளக்குதலானும், தில்லையம்பல வாணனை இடைவிடாது போற்றும் இயல்புடையவனாகத் தம் காலத்து விளங்கிய தென்னவர் பெருமான் வரகுண பாண்டியன் என்பதனைத் திருவாதவூரர் தெளிவாகக் கூறுத லானும், பட்டினத்தடிகள் வாய்மொழியானும் பெரிய அன் பின் வரகுண தேவராகிய இவ்வேந்தர் பெருந்தகை நெடுங் காலம் சோழ நாட்டில் தங்கியிருந்த பெருவீரரென்பதும் தமிழ் வரலாறுடையார் கருதுமாறு திருப்புறம்பயப் போரில் தோற்றோடியவரல்லரென்பதும் நன்கு புலனாம். ஆதலால் 'கொற்றவர்கள் தொழுகழற்காற் கோ வரகுண மகாராசன்' எனப் பாராட்டப் பெற்ற முதல் வரகுண வர்மனே மாணிக்கவாசகர் காலத்து ஆட்சி புரிந்த பாண்டியன் எனக்கொள்ளுதல் வேண்டும். இம்முடிபினை வலியுறுத்து வதாக அமைந்த மற்றொரு செய்தியும் இங்கே குறிப்பிடத் தக்கதாகும். தமிழ் நாட்டிலிருந்து சைவாசாரியரொருவர் ஈழநாட்டிற்குச் சென்று அங்குள்ள பௌத்த மன்னனைச் சைவ சமயத்திற்குத் திருப்பினர் என ராஜ ரத்நாகரி யென்ற நூல் கூறுகிறதென்றும், அந்நூலிற் குறித்த காலம் கி. பி. 819-ம் ஆண்டினை யொட்டியதென்றும் நெல்சன் என்பார் மதுரைச் சரித்திரத்தில் (Madura manual) குறிப்பிட்டுள் ளார். மணிவாசகப் பெருமான் வாழ்ந்த காலத்தில் சிவனடி யாரொருவர் ஈழநாட்டிற்குச் சென்று 'பொன்னம்பலம்' என்ற திருப்பெயரைச் சொல்லி யிரந்துண்டு வந்தாரென் றும், அவரது செய்கையைக் கண்டு பொறாத இலங்கைப்

* தமிழ் வரலாறு பிற்பாகம் (நான்காம் பதிப்பு) பக்கம் 128–131.

புத்தர்கள் தமது மன்னனிடம் தெரிவிக்க மன்னன் அவ்வடியாரை யழைத்துப் 'பொன்னம்பலம்' என்றதன் வரலாற்றைக் கேட்டறிந்து தனது குருவுடனும் தான் பெற்ற ஊமைப் பெண்ணோடும் தில்லைப் பொன்னம்பலத்தை யடைந்து அங்குப் புத்த மதத்தை நிலைநாட்டுங் கருத்துடன் புறப்பட்டுத் தில்லையை யடைந்தனனென்றும், அப்பொழுது தில்லைப்பதியில் தங்கியிருந்த மணிவாசகப் பெருமான் புத்த குருவை வாதில் வென்று ஊமைப் பெண்ணையும் பேச வைத்து இலங்கை மன்னனைச் சைவனாக்கினாரென்றும் திருவாதவூரடிகள் புராணம் கூறுகின்றது.* இந்நிகழ்ச்சி மேற்காட்டிய ராஜ ரத்நாகரி யென்ற இலங்கைச் சரித நூல் கூறும் செய்தியுடன் ஒத்துக் காணப்படுதலால் அந்நூலிற் கூறப்படும் சைவாசாரியாரென்பவர் மணிவாசகப் பெருமானை வழிபட்ட அடியார் குழுவினைச் சார்ந்தவரென்பதும் இந்நிகழ்ச்சி நிகழ்ந்ததாக ராஜ ரத்நாகரி யென்ற நூல் குறிப்பிடும் காலப் பகுதியாகிய கி. பி 819-ம் ஆண்டு, முதல் வரகுண பாண்டியனது ஆட்சிக் காலத்துள் அடங்கியதாதலின், மணிவாசகர் காலத்து ஆட்சிபுரிந்த பாண்டியன் முதல் வரகுண பாண்டியனே யென்பதும் நன்கு தெளியப்படுமென்க.

(5) தேவார ஆசிரியர்கள் தம் காலத்து வழங்கிய அறுவகைச் சமயங்களையும் சைவ சமயத்தின் உட்பிரிவுகளாகிய அகச்சமயங்களையும் தம் பாடல்களிற் குறிப்பிட்டுள்ளார்கள். அவர்கள் காலத்தில் ஏகான்ம வாதமென்னும் மாயாவாத மதம் தமிழ்நாட்டில் தோன்றி வழங்கியதில்லை. சேரநாட்டிற் பிறந்த சங்கராச்சாரிய சுவாமிகள் தாம் ஏகான்ம வாதத்தைத் தென்னாட்டிலும் வடநாட்டிலும் சிறப்பாக நிலைபெறச் செய்தவரென்பது பலரும் அறிந்த செய்தியாகும். திருவாதவூரடிகள் தம் காலத்தில் மாயாவாதமென்னும் மதம் நாடு முழுதும் சண்டமாருதம் போல் விரைவிற் பரவி மக்கள் உள்ளத்தைக் கலக்கிய திறத்தை,

'மிண்டிய மாயாவாத மென்னும்
சண்டமாருதம் சுழித்தடித்தார்த்து'

என்ற தொடரால் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். எனவே அடிகள் வாழ்ந்த காலம் ஆதி சங்கரர் வாழ்ந்த காலத்தை

*[திருவா]தவூரடிகள் புராணம், புத்தரை வாதில் வென்ற

யொட்டியதென்பது பெறப்படும். சங்கரர் தாம் பாடிய சௌந்தரியலகரி என்ற நூலில் கவுணிய கோத்திரத்தவ ராகிய ஞானசம்பந்தப் பிள்ளையார்க்கு உமையம்மையார் ஞானப் பாலளித்த வரலாற்றைக் குறித்துப் பாராட்டி யுள்ளார். ஆகவே அவர் வாழ்ந்த காலம் திருஞான சம்பந்தப் பிள்ளையார் வாழ்ந்த காலமாகிய கி. பி. ஏழாம் நூற் ருண்டிற்குப் பிற்பட்டதென்று உறுதியாகக் கொள்ளலாம். சங்கரரது கொள்கையாகிய மாயாவாதத்தைக் குறிப்பிட்ட மணிவாசகரது காலம் தேவார ஆசிரியர்க்குப் பிற்பட்ட தென்பது சொல்லாமலே விளங்கும்.

(6) மாணிக்கவாசகப் பெருமான் தேவார ஆசிரியர் களாற் பாடிப் போற்றப்பெற்ற சிவ தலங்கள் சிலவற்றைத் தமது பாடல்களிற் குறிப்பிட்டதுடன் அவ்வாசிரியர்களாற் குறிக்கப்படாத புதிய திருக்கோயில்கள் சிலவற்றையும் குறிப்பிட்டுள்ளார். சிராப்பள்ளி யென்ற திருத்தலம் திரு நாவுக்கரசர் காலத்திற்கு முன் சமணப்பள்ளியாயிருந்து பின் அவராற் சைவனாக மாறிய மகேந்திர பல்லவனால் சிவன் கோயிலாக மாற்றப்பெற்றதென்பது ஆராய்ச்சி யாளர் துணிபாகும்.* "சிராப்பள்ளி மேவிய சிவனே போற்றி" எனத் திருவாதவூரடிகள் அத்திருப்பதியில் எழுந்தருளிய இறைவனைப் போற்றுதலால் சிராப் பள்ளியைச் சிவன் கோயிலாக மாற்றிய மகேந்திர வர்மனுக் கும் அவனால் வழிபடப்பெற்ற பெருந்தகையாராகிய திரு நாவுக்கரசர்க்கும் காலத்தாற் பிற்பட்டவர் மணிவாசகரென் பது நன்கு தெளியப்படும்.

(7) "கலையார் அரிகேசரியாய் போற்றி" எனவரும் போற்றித் திருவகவலில் கலையுணர்வு நிரம்பிய அரிகேசரி மன்னன் பெயரால் அமைக்கப்பட்ட ஊரிலே இறைவன் திருக்கோயில் கொண்டெழுந்தருளிய திறத்தை மணிவாசகர் குறித்துப் போற்றியுள்ளார். அரிகேசரி யென்ற பெயரு டைய பாண்டியன் திருஞானசம்பந்தரால் வெப்பு நோய் தீர்த்து ஆட்கொள்ளப்பெற்ற நின்றசீர் நெடுமாறனாவன். இவனது பெயராலமைக்கப்பட்ட ஊர் பாண்டி நாட்டிலுள்ள அரிகேசரி நல்லூர் என்பதாகும். இதனை இக் காலத்தார்

* திருவாளர் தி. வை. சதாசிவ பண்டாரத்தாரவர்கள் எழுதிய 'திருச்சிராப்பள்ளி' யென்ற கட்டுரை செந்தமிழ் 45-ம் தொகுதி, பக்கம் 77–82) நோக்குக.

சின்னமனூர் என வழங்குவர்.* அரிகேசரி யென்ற சிறப்புப் பெயருடைய நின்றசீர் நெடுமாறன் பெயராலமைந்த திருத் தலத்தைத் திருவாதவூரடிகள் குறிப்பிடுதலால் மாறவர்மன் அரிகேசரியாகிய நின்ற சீர் நெடுமாறனுக்கும் அவனை நல் வழிப்படுத்திய திருஞானசம்பந்தப் பிள்ளையார்க்கும் காலத் தார் பிற்பட்டவர் மாணிக்கவாசகர் என்பது ஒரு தலை.

தேவாரத் திருமுறைகளில் வழங்கப்பெறாத அஞ்ஞா னம், இருதயம், இந்தீவரம், சந்தீரம் சிந்தாகுலம், சூக்கம், தூலம், தோயம், துவந்துவம் நந்தீவரம், பயங்கரம், பயோ தரம், முதலிய வடமொழிச் சொற்களும், அச்சன், அச்சோ, அந்தோ, அதெந்துவே என்பன போன்ற திசைச் சொற் களும், குது குதுப்பு, விது விதுப்பு, கூவித்து, வேசறுவேன் சட்டோ, தகப்பன், துரை, எத்தன் என்பன போன்ற பிற் காலச் சொற்களும் திருவாதவூரடிகள் திருப்பாடல்களிற் காணப்படுகின்றன.

கோகழி, கல்லாடம், வேலம்புத்தூர், சாந்தம்புத்தூர், உத்தரகோசமங்கை, பூவலம், பட்டமங்கை, அரிகேசரி, ஓரியூர், பாண்டூர், கவைத்தலை, குவைப்பதி முதலாகத் திருவாசகத்திற் குறிக்கப்படும் ஊர்களும் சில்தல புராண வரலாறுகளும் தேவாரத் திருமுறைகளிற் காணப்படவில்லை. தேவார காலத்திற் காணப்படாத தசாங்கம் முதலிய பிரபந்த வகைகளும் அவை பற்றித் தோன்றிய புதிய யாப்பு விகற்பங் களிற் சிலவும் திருவாசகத்தில் உள்ளன. திருவாசகத்திற் கூறப்பட்ட பஞ்சமலம், வினையொப்பு முதலிய தத்துவ விளக்கங்கள் சில தேவார ஆசிரியர் காலத்திற்குப் பின் தோன்றியவை யெனத் தெரிகிறது

இதுகாறும் இங்கு எடுத்துக்காட்டிய ஏதுக்களால் மாணிக்கவாசக சுவாமிகள் தேவார ஆசிரியர்கள் மூவர்க்கும் காலத்தாற் பிற்பட்டவரென்னுங் கொள்கையே ஏற்றுக் கொள்ளத்தகுவதென்பதும், அடிகள் வாழ்ந்த காலம் கி. பி. 792 முதல் 835 வரை ஆட்சிபுரிந்த முதல் வரகுண பாண்டியனது ஆட்சிக்காலமே யென்பதும் தெளிவாகப் புலனாதல் காணலாம்.

* தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதி III பகுதி III 109-ம் கல்வெட்டு, பார்க்க. தொகுதி IV-ல் வெளிவந்த சின்னமனூர்ப் பட்டயத்தில் 'அள நாட்டுப் பிரமதேயம் அரிகேசரி நல்லூர்' என வரும் தொடரும் இதனை உறுதிப்படுத்துகின்றது.

திருவாதவூரடிகள் அருளிய அருள் நூல்கள்

திருவாதவூரடிகளால் திருவாய் மலர்ந்தருளப் பெற்று அழகிய திருச்சிற்றம்பலமுடையானாகிய சிவபெருமானது திருக்கரத்தாற் செவ்விதின் எழுதிக்கொள்ளப் பெற்ற சிறப்புடையன திருவாசகமும் திருச்சிற்றம்பலக்கோவையும் என்பது முன்னர் விளக்கப் பெற்றது. மதுரையிற் குதிரைச் சேவகனாக எழுந்தருளிய சிவபெருமான் வழங்கிய பேரானந்தமாகிய திருவருளின்பத்தைத் தூய தாமரை மலர் போலும் தமது திருவாயிலிருந்து வெளிப்படும் அழகிய சொற்களால் திருவாசகப் பனுவலாக அருளிச் செய்து, வஞ்சனையைத் தரும் பிறவித் துன்பத்தை நாம் அறியாவண்ணம் நம்மனோர்க்கு நன்னெறி காட்டியருளிய பெருந்தகையார் திருவாதவூரடிகளாவர். இவ்வுண்மையை,

> 'பாய்பரியோன் றந்த பரமானந் தப்பயனைத்
> தூயதிரு வாய்மலராற் சொற்செய்து—மாயக்
> கருவாதை யாமறியா வாறுசெய்தான் கண்டாய்
> திருவாத வூராளுந் தேன்'

என வரும் திருக்களிற்றுப்படியாரில் திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார் விரித்துரைத்தமை காண்க.

மணிவாசகப்பெருமான் பாடிய திருப்பாடல்கள், திருவாசகம் எனவும் திருச்சிற்றம்பலக்கோவை எனவும் இரு வேறு தலைப்பில் வைத்து எண்ணப்படினும் இவ்விரு நூல்களும் 'பேச்சிறந்த மாசில்மணியின் மணிவார்த்தை'யாகவே விளங்குதலால் திருவாசகம் என ஒரு பெயராலும் வழங்கப் பெற்று வந்துள்ளன. 'கோவைத் திருவாசகம்'* எனத் திருக்கோவையார்க்கு வழங்கும் பழம்பெயரால் இவ்வழக்கின் தொன்மை இனிது புலனாம். முத்தியாகிய பேரின்பத்தை அடைவதற்குரிய பத்திநெறியின் இலக்கியமாக விளங்குவது திருவாசகம். உலகியல் வாழ்வுக்கு இன்றியமையாத அன்பினை விளக்கும் அகனைந்திணை யொழுகலாற்றை விரித்துரைக்கு முகமாகப் பத்திநெறியின் பயனாகிய பேரின்ப வாழ்வின் அனுபவ நிலையை விளக்குவது திருச்சிற்றம்பலக் கோவை. எனவே திருவாசகமும் திருச்சிற்றம்பலக்கோவை

* *சிவப்பிரகாசம் – செய்யுள்–1. மதுரைச் சிவப்பிரகாசர் உரை.*

யும் பொருளால் ஒன்றேயென்பது நன்கு துணியப்படும். இவ்வருள் நூல்களிரண்டையும் 'எட்டாந் திருமுறை' என ஒரே திருமுறையாக முன்னுள்ள சான்றோர் தொகுத்தமைத் திருத்தலை ஊன்றி நோக்குங்கால் திருவாசகமும் திருக் கோவையாரும் ஆசிரியர் ஒருவராலேயே அருளிச் செய்யப் பெற்றன என்னும் உண்மை நன்கு விளங்கும்.

திருவாசகத்தை அருளிய திருவாதவூரடிகளே திருச் சிற்றம்பலக்கோவையையும் பாடியருளினார் என்ற செய்தி,

'வருவாசகத்தினின் முற்றுணர்ந் தோனை வண் தில்லைமன் னைத்
திருவாதவூர்ச்சிவ பாத்தியன் செய்திருச் சிற்றம்பலப்
பொருளார்தருதிருக் கோவைகண் டேயுமற் றப்பொருளைத்
தெருளாதவுள்ளத் தவர்கவிபாடிச் சிரிப்பிப்பரே'

என வரும் கோயிற்றிருப்பண்ணியர் விருத்தத்தில் தெளிவாகக் குறிக்கப் பெற்றுள்ளது. இதன்கண் 'வருவாசகம்' எனத் திருவாசகத்தையும் 'திருவாதவூர்ச் சிவபாத்தியன்' எனத் திருவாதவூரடிகளையும் நம்பியாண்டார் நம்பி குறித்துப் போற்றியுள்ளமை காணலாம். 'சிவபாத்தியன்' என்பதற்குச் (சிவனடி சென்னிவைத்தோன்) சிவனடித் தொடர்புடையோன் என்பது பொருள். சிவபெருமானே அருட்குரவனாக எழுந்தருளிவந்து மெய்ப்பொருளை உபதேசிக்கப்பெற்ற திருவாதவூரடிகள், தம்மை ஆட்கொண்டருளிய சிவபெருமான் திருவடிகளைச் சென்னியிற்கொண்டு இடைவிடாது போற்றுதலைத் தம் கடமையாக மேற்கொண்டொழுகினார் என்பது,

'பத்தர்சூழப் பராபரன் பாரில்வந்து பார்ப்பானெனச்
சித்தர்சூழச் சிவபிரான் தில்லைமூதூர் நடஞ்செய்வான்
எத்தனாகிவந் தில்புகுந்தெமை யாளுங்கொண்டெம்
பணிகொள்வான்
வைத்தமாமலர்ச் சேவடிக்கணஞ் சென்னிமன்னி மலருமே'

என வரும் அடிகளது வாய்மொழியால் நன்கு புலனாதலின் அடிகளைத் 'திருவாதவூர்ச் சிவபாத்தியன்' என நம்பியாண்டார் நம்பி குறித்துப் போற்றியது மிகவும் பொருத்தமுடையதேயாம். திருவாதவூரடிகளே திருச்சிற்றம்பலக் கோவையையும் பாடியருளினார் என்ற செய்தியை,

'உத்தர கோச மங்கை கழக்குன்றங் குருவங்கண்டு
சித்திரக் கோவை பாடித் தில்லையம்பலத்து வாவென்
றத்தன் வானத்துரைப்பப் போந்தருந் தமிழ்கள்பாடிப்
புத்தன்வாதையும் வென்றியாரும் போற்றுபொற்
பதமடைந்தார்'

என்ற பாடலில் பெரும்பற்றப் புலியூர் நம்பி தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். இச்செய்தியைப் பின் வந்த கடவுள் மாமுனிவர் திருவாதவூரடிகள் புராணத்து விரித்துக் கூறினமை முன்னர் விளக்கப்பெற்றது.

1. திருவாசகம்

திருவாசகம் என்ற பெயர், திருவுடைய சொற்களால் ஆகிய அருள் நூல் எனப் பொருள் தருவதாகும். இதன்கண் அடைமொழியால் நின்ற 'திரு' என்னுஞ் சொல், செல்வக் களிப்பால் மையலுறுதலும் அல்லல் மிகுதியாற் சோர்வடைதலும் இன்றி, எக்காலத்தும் ஒருதன்மையராய் வாழ்தற்குரிய உள்ளத்தின் நிறைவாகிய பேரழகினைக் குறிப்பதாகும். வாசகம்—சொல். திருத்தகவிற்றாகிய மனச்செம்மையினை வழங்கும் ஆற்றல் நிறைந்த சொற்களால் இயன்றமையின் இந்நூல் திருவாசகம் என்னும் பெயர்த்தாயிற்று. திருவாதவூரடிகளது திருவாய் மலரில் தோன்றிய திருவாசகமென்னும் இத்தேனனது, நெடுங்காலமாக உயிர்களைச் சூழ்ந்து பிணித்துள்ள பிறவியாகிய வலிய கட்டினை நீக்கித் துன்பத்திற்கேதுவாகிய அறியாமையை அகற்றிப் பேரின்பத்தைத் தரும் இயல்புடையதாகும். இவ்வியல்பினைத் திருவாசகத்தைப் பலகாலும் ஓதியுணர்ந்த பண்டைச் சான்றோரொருவர்,

> 'தொல்லை யிரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
> அல்லலறுத் தானந்த மாக்கியதே—எல்லை
> மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
> திருவா சகமென்னுந் தேன்'

என்ற பாடலில் இனிது விளக்கியுள்ளார். இறவாத இன்ப அன்பின் பயனாக விளங்கும் இத்திருவாசகச் செழும் பாடல்களை ஓதுந்தோறும் கேட்குந்தோறும் நினைக்குந்தோறும் நெஞ்சம் நெகிழ்ந்துருகக் கண்ணீர் பெருக நாவுரை குழற மெய்ம்மயிர் சிலிர்ப்பப் பேரின்ப வெள்ளம் கிளர்ந்தெழுதல் யாவரிடத்துங் காணப்படும் இயற்கை நிகழ்ச்சியாகும். இங்ஙனம் அன்பினால் ஓதுவார் கேட்பார் ஆகிய எல்லோருடைய உள்ளத்தையும் உருக்கவல்ல பேராற்றல் திருவாசகமாகிய அருள் நூலுக்கே உரிய தனிச் சிறப்பென்பது, தமிழ் நாட்டவரல்லாத வெளி நாட்டறிஞர்களாலும் ஒப்புக்கொள்ளப்பெற்ற உண்மையாகும்.

'திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்தும் உருகார்' என நம் தமிழகத்தில் நெடுங்காலமாக வழங்கி வரும் பழமொழியும்,

'திருவாசகம் இங்கு ஒருகால் ஓதிற்
கருங்கல் மனமும் கரைந்துகக் கண்கள்
தொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
அன்ப ராகுநர் அன்றி
மன்பதை யுலகில் மற்றையர் இலரே'

என வரும் சிவப்பிரகாச சுவாமிகள் வாய்மொழியும்,

'வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ் சுவைகலந்தென்
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே'

என வரும் இராமலிங்க அடிகளார் அனுபவ மொழியும் கற்பார் உள்ளத்தை உருகச் செய்து பேரின்ப வெள்ளத்தில் திளைத்தின்புறச் செய்யும் திருவாசகத்தின் சிறப்பினை நன்கு விளக்குவனவாகும்.

திருவாசகம், சிவபுராணம் முதல் அச்சோப்பதிகம் ஈறாக ஐம்பத்தொரு பகுதிகளாக முறைப்படுத்தப்பெற்று வழங்கி வருகின்றது. இம்முறை வைப்பு திருவாதவூரடிகள் பாடி அருளிய கால அடைவினைப்பற்றியதோ, அன்றி அவர்தம் திருப்பாடல்களால் உணர்த்தப்படும் பொருளடைவினைப் பற்றியதோ என்பது திட்டமாகத் தெரியவில்லை. திருவாசகப் பதிகங்கள் பாடப்பெற்ற சந்தர்ப்பங்களைக் குறித்துப் பெரும் பற்றப் புலியூர் நம்பியும் கடவுள் மாமுனிவரும் கூறும் குறிப்புக்கள் வேறுபட அமைந்துள்ளன.

திருவாசகத்தில் சென்னிப்பத்து, அச்சோப்பத்து, அதிசயப்பத்து, கோயிற்றிருப்பதிகம் (மாறி நின்றென்னை), புணர்ச்சிப்பத்து, செத்திலாப்பத்து, பிரார்த்தனைப்பத்து, ஆசைப்பத்து, உயிருண்ணிப்பத்து, திருப்புலம்பல், வாழாப் பத்து, எண்ணப்பத்து, திருவம்மானை, திருப்பொற்சுண்ணம், திருக்கோத்தும்பி, திருத்தெள்ளேணம், திருப்பூவல்லி, திருவுந்தியார், திருத்தோணோக்கம், திருவெம்பாவை, திருச் சதகம், திருப்பள்ளியெழுச்சி என்பன இம்முறையே திருப் பெருந்துறையிலும், குழைத்தபத்து, அருட்பத்து, அடைக் கலப்பத்து, குயிற்பத்து, அன்னைப்பத்து, பிடித்தபத்து, சிவ புராணம் என்பன மதுரையிலும், திருவாசகத்தின் ஏனைய

பகுதிகளும் திருக்கோவையாரும் மதுரையிலிருந்து புறப் பட்டு உத்தரகோசமங்கை முதலிய தலங்களை வணங்கிச் செல்லும் வழியிலும் தில்லைப்பதியிலும் பாடப்பெற்றன எனப் பெரும்பற்றப் புலியூர் நம்பி குறிப்பிட்டுள்ளார். எனவே திருவாசகப் பதிகங்களுள் முதன்முதற் பாடப்பெற்றது சென்னிப்பத்து என்பது அவர் கருத்தாதல் நன்கு பெறப் படும்.

இனி, திருவாதவூரடிகள் முதன்முதற் பாடிய பனுவல் சிவபுராணம் என்பது கடவுள் மாமுனிவர் கருத்தாகும். திருவாதவூரடிகள் திருப்பெருந்துறையில் இருந்த காலத்து, சிவபுராணம், அற்புதப்பத்து, அதிசயப்பத்து, குழைத்த பத்து, சென்னிப்பத்து, ஆசைப்பத்து, வாழாப்பத்து, அடைக்கலப்பத்து, செத்திலாப்பத்து, புணர்ச்சிப்பத்து, அருட்பத்து, திருவார்த்தை, எண்ணப்பத்து, திருவெண்பா, திருப்பள்ளியெழுச்சி, திருவேசறவு, ஆனந்தமாலை, உயி ருண்ணிப்பத்து, பிரார்த்தனைப்பத்து, திருப்பாண்டி விருத்தம் திருச்சதகம் ஆகிய பனுவல்களை முறையே பாடியருளினர் எனவும், பின்னர்த் திருவுத்தரகோசமங்கையில் நீத்தல் விண்ணப்பத்தையும், திருவாரூரில் திருப்புலம்பலையும், திருப் புகலியில் பிடித்தபத்தினையும், திருவண்ணாமலையில் திருவெம் பாவை திருவம்மானை என்பவற்றையும், திருக்கழுக்குன்றில் திருக்கழுக்குன்றப் பதிகத்தையும் அருளிச் செய்தாரெனவும், தில்லையில் கண்டபத்து, குலாப்பத்து, கோயில் மூத்த திருப் பதிகம், கோயிற்றிருப்பதிகம், கீர்த்தித் திருவகவல், திரு வண்டப்பகுதி, போற்றித்திருவகவல், திருப்பொற்சுண்ணம், திருத்தெள்ளேணம், திருவுந்தியார், திருத்தோணோக்கம், திருப்பூவல்லி, திருப்பொன்னூசல், அன்னைப்பத்து, திருக் கோத்தும்பி, குயிற்பத்து, திருத்தசாங்கம், அச்சப்பத்து, திருச்சாழல், திருப்படையாட்சி, திருப்படையெழுச்சி, அச்சோப்பத்து, யாத்திரைப்பத்து, திருச்சிற்றம்பலக்கோவை ஆகிய பனுவல்களை முறையே பாடியருளினர் எனவும் கடவுள் மாமுனிவர் கூறுவர். இங்ஙனம் கடவுள் மாமுனிவர் குறித்த திருவாசகப் பதிகத் தலைப்புகளில் 'பண்டாய நான் மறை' என்ற பகுதி விடுபட்டமைக்குரிய காரணம் விளங்க வில்லை.

இனி, சிவபுராணம் முதலாக அச்சோப்பதிகம் ஈறாக இப்பொழுது வழங்கும் திருவாசகப் பதிகங்களின் முறை

வைப்பு, மேற்குறித்தவண்ணம் பெரும்பற்றப் புலியூர் நம்பியும் கடவுள் மாமுனிவரும் கூறிய இரு வேறு முறைகளில் எதனுடனும் முழுதும் பொருந்தி வரவில்லை. எனினும் இம் முறைவைப்பே நெடுங்காலமாக நிலைபெற்று வழங்கி வருகிற தெனத் தெரிகிறது. ஆகவே இம்முறைவைப்பு அடிகள் பாடிய கால அடைவினையொட்டி முறைப்படுத்தப்பட்டதன் றென்றும் திருவாதவூரடிகள் சொல்ல அழகிய சிற்றம்பல முடையார் எழுதிக்கொண்ட முறையில் இயற்கையாக அமைந்ததே இம்முறைவைப்பு என்றும் கொள்ளுதல் ஏற்புடையதாகும்.

திருவாசகத்தில் சிவபுராணம் என்பது முதல் அச்சோப் பதிகம் ஈருகவுள்ள தலைப்புக்கள் ஐம்பத்தொன்றும் அவ்வப் பதிகங்களில் உள்ள சொற்றொடரையும் பொருட்பகுதியை யும் அடியொற்றி அமைந்தனவாகும். எனவே இத்தலைப்புக் கள் அடிகள் காலத்திலேயே அவ்வப்பதிகங்களுக்குரிய பெயர்களாக வழங்கப்பெற்றிருத்தல்கூடும் எனக் கருதுதல் பொருத்தமுடையதாகும். இனி, சிவபுராணம் முதலிய இப் பதிகப் பெயர்களையடுத்து இவற்றின் விளக்கமாக, 'சிவனது அநாதிமுறைமையான பழமை' என்பது முதலிய கருத் துரைப் பகுதிகள் திருவாசக ஏட்டுச்சுவடிகளிலும் அச்சுப் புத்தகங்களிலும் குறிக்கப் பெற்றுள்ளன. ஆயின் இக்கருத் துரைப் பகுதிகள் திருவாசக ஏடுகளில் மிகவும் பழமையான ஏடுகளிற் காணப்பெறவில்லை. இத்தகைய கருத்துரைப் பகுதியும் பா, பாவினம்பற்றிய குறிப்பும் பிற்கால ஏடுகளிலும் அச்சுப் புத்தகங்களிலுமே காணப்படுகின்றன. இவற்றைக் கூர்ந்து நோக்குங்கால் பதிகத் தலைப்பினையடுத்துக் காணப் படும் கருத்துரைப் பகுதிகள் பிற்காலச் சான்றோரொருவரால் நன்காராய்ந்து குறிக்கப்பெற்றன எனக் கொள்ளுதல் ஏற்புடையதாகும். திருப்பெருந்துறைக்குரிய பழைய புராண மொன்றில் திருவாசகப் பதிகங்களின் கருத்தினை விளக்கும் திருவாசக உண்மை என்ற பகுதி இடம் பெற்றுளது. இதற் கும் திருவாசக அச்சுப் புத்தகங்களிற் காணப்படும் கருத் துரைப் பகுதிக்கும் ஓரளவு தொடர்புண்டு. திருவாசகப் பதிக அடைவு முறையினை அறிதற்கும் பதிகங்களின் பொருளமைதியைத் தேர்ந்து துணிதற்கும் இக்குறிப்புக்கள் பெரிதும் பயன்படுவனவாகும்.

க. சிவபுராணம்

திருவாசகத்தின் முதற்கண் உள்ள சிவபுராணம், கீர்த்தித்திருவகவல், திருவண்டப்பகுதி, போற்றித்திருவகவல் என்ற நான்கும், திருக்குறளின் முதற்கண்ணவாகிய கடவுள் வாழ்த்து, வான் சிறப்பு, நீத்தார் பெருமை, அறன் வலியுறுத்தல் என்ற நான்கு அதிகாரங்களையும் போன்று தெய்வத் தமிழ்மறைக்குரிய பாயிரமாக அமைந்தன எனக் கொள்ளுதல் பொருந்தும். திருக்குறளில் முதற்கண் உள்ள கடவுள் வாழ்த்து என்ற அதிகாரத்தைப் போன்று திருவாசகத்தின் முதலில் அமைந்தது சிவபுராணமாகும். இஃது, எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானது அநாதி முறைமையான பழமையினை விரித்துரைப்பதாகலின், சிவபுராணம் என்னும் பெயர்த்தாயிற்று. 'சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை, முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பன் யான்' என இதன்கண் அடிகள் குறிப்பிடுதலால், சிவனது அநாதி முறைமையான பழமை யென்னும் ஒரு பொருளே நுதலியது இத்திருப்பாட்டு என்பது இனிது விளங்கும். தொண்ணூற்றைந்தடிகளை யுடைய இப்பாடல்,

> 'ஒருபொருள் நுதலிய வெள்ளடி யியலால்
> திரிபின்றி வருவது கலிவெண் பாட்டே' (செய்யுள்–153)

என்ற தொல்காப்பிய இலக்கணத்தின்படி அமைந்த கலிவெண் பாட்டாகும். 'இது கடவுட்பராய முன்னிலைக்கண் வந்த பாடாண் பாட்டு' என்பர் ஆசிரியர் மறைமலையடிகள்.

உலகிற்கு நிமித்த 'காரணனாகிய சிவபெருமான், திருவைந்தெழுத்தாகிய மந்திரப்பொருளாய் விளங்கி உயிர்களின் நெஞ்சத்தாமரையிலே நீங்காதெழுந்தருளியிருந்து உள்நின்று உபகரித்தருள்வதோடு புறத்தேயும் ஆசிரியத் திருமேனிகொண்டு எழுந்தருளி வந்து திருப்பெருந்துறையில் தமக்கு மெய்ப்பொருளை உபதேசித்தருளிய அருட்செய்தியும், அப்பெரியோன் அறிவுறுத்தருளிய மெய்ந்நூற் பொருளைச் சிந்தித்துணரும் நிலையில் அம் முதல்வன் ஆகமநூற் பொருளாகித் தம் நெஞ்சத்தே அண்ணித்திட்டு அமுதூறும் இனிமைத்திறமும், தனிமுதற் பொருளாகிய இறைவன் தன்னை அன்பினால் நினைந்துருகும் மெய்யடியார்கள் உள்ளத்தே அவரவர் நினைந்த திருமேனிகொண்டு விரைந்து அருள்புரிதல் வேண்டிப் பலவேறு திருக்கோலங்களைத்

தாங்கி எங்கும் நீக்கமறக் கலந்து நிற்கும் இயல்பும் ஆகிய இறைவனது பேரருட்டிறத்தை நினைந்துருகிய திருவாதவூரடிகள்,

‘ நமச்சிவாய வாஅழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்னெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவ னடிவாழ்க ’

எனச் சிவபுராணத்தின் முதற்கண் சிவபரம்பொருளின் திருவடிகளை வாழ்த்திப் போற்றுகின்றார்.

ஐம்புலன்களால் அலைக்கப்பட்டுப் புறத்தே விரைந்தோடும் மனத்தின் வேகத்தைக் கெடுத்துப் பொறிவாயிலாகச் செல்லும் அவா ஐந்தனையும் அடக்கி உயிர்களை ஒருநெறிப்படுத்தவல்ல பேராற்றலும், திருவருள்வழியொழுகும் அடியார்களது பிறவிப் பிணிப்பினை அறுக்கும் வன்மையும், யாவராயினும் அன்பரல்லாதாரால் அறியப்படாத அருமையும், கைகூப்பி வணங்கும் தொண்டர்களின் உள்ளத்திலே சிறந்து விளங்கிச் செந்தேன்பொழியும் இனிமைத் திறமும், தலைதாழ்த்து வணங்கும் தொண்டர்களைத் தேவர்களும் தொழுது போற்றும்வண்ணம் உயர் நிலையில் வைத்துச் சிறப்பிக்கும் அருள்நலமும் ஒருங்குடைய இறைவன் திருவடிச் சிறப்பினை,

‘ வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உண்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்குஞ் சீரோன் கழல் வெல்க ’

என வெற்றித்திறம் விளங்க விரித்துப் போற்றியுள்ளார்.

இவ்வாறு சிவபெருமான் திருவடிகளுக்கு வாழ்த்தும் வெற்றியும் கூறிய வாதவூரடிகள்,

‘ ஈசனடி போற்றி எந்தையடி போற்றி
தேசனடி போற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவனடி போற்றி
ஆராத இன்பம் அருளு மலைபோற்றி ’

எண்வகைப் போற்றி வாசகத்தால் எண்குணத்தானாகிய வணக்கமுங் கூறினார்.

'சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனல்
அவனருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பன்யான்

என இறைவன் திருவருட்டுணைகொண்டு தாம் சொல்லக் கருதிய பொருள் சிவபுராணம் என்பதனைத் தெளிவாக எடுத்துரைத்தார். இதனுல் சிவபுராணம் என்ற இப்பெயர், இம் முதற்பகுதிக்கேயன்றி அடிகள் அருளிய திருவாசகம் முழுவதற்கும் பொருந்துமெனக் கொள்ளுதற்கும் இடனுண்டு. இங்ஙனம் நுதலிய பொருளை முன்மொழிந்த வாதவூரடிகள்,

'கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய்
விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை யிலாதானே நின் பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்'

என்ற தொடரால் அவையடக்கமும் கூறினுராயிற்று. எனவே நூன்முகத்து உரைத்தற்குரிய வாழ்த்து, வணக்கம், வருபொருளுரைத்தல் ஆகிய மங்கல வாழ்த்தும் அவையடக்கமுமாக இச்சிவபுராணத்தின் முற்பகுதி அமைந்திருத்தல் காணலாம்.

உயிர்கள் புல் முதல் மக்கள் ஈருகவுள்ள உடம்புகளைப் பெற்றுப் பிறந்து ஓரறிவு முதல் ஆருவதறிவெனப்படும் மனவுணர்வு ஈருகப் படிப்படியே அறிவினுற் சிறந்து வளரும் வளர்ச்சி முறையும், இங்ஙனம் பலவகைப் பிறப்புக்களிலும் பிறந்துழன்று தூய்மையடைந்த நல்லுயிர்களுக்கு இறைவன் திருவடிப்பேறு நல்கி அவ்வுயிர்களை ஆட்கொண்டருளுதலும், அறிவுநூல்களாகிய வேதங்களாலும் உணர்தற்கரிய அப்பரம்பொருள் உயிர்களின் நலங்கருதிப் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்களையும் இயற்றுமுகமாக உயிர்களின் அறியாமையை அகற்றித் தூய்மை செய்து பேரின்பம் நல்கிப் பிறவிவேரறுக்கும் பெற்றியும், தாயிற்சிறந்த அருளாளனுகிய இறைவன் எல்லாமாய் அல்லவுமாய் நிற்குமியல்பும், தில்லைக்கூத்தனுகிய அவ்விறைவன் திருவடிகளை நெஞ்சம் நெக்குருகிப்பணிந்தேத்திப் பரவிய திருப்பாட்டின் பொருளுணர்ந்து சொல்லும் மெய்யடியார்கள் பல்லோரும் போற்றச் சிவனடிக்கீழ் வைகும் பேரானந்தப் பெருவாழ்வு எய்தி இன்புறுவர் என்பதும் ஆகிய

உண்மைகள் சிவபுராணமாகிய இத்திருப்பாட்டில் விரித்து உரைக்கப்பெற்றுள்ளன. இத்திருப்பாட்டு சிவனது அருவ நிலையைக் கூறுவதெனவும் "ஈசர் தமக்கியல்பான திருநாம முதலெவையும், மாசறவே வாழ்கவென வாழ்த்துகின்ற அருட் குறிப்பு" உடையதெனவும் சான்றோர் கூறுவர்.

உ. கீர்த்தித் திருவகவல்

திருவாசகத்தின இரண்டாந் திருப்பாட்டாகிய இவ்வகவல், சிவபெருமான் தன்பால் அன்புடைய மெய்யடியார்களுக்கு எளிவந்து அருள்சுரந்த புகழ்ச்செய்திகளை விரித்து உரைப்பதாகலின் கீர்த்தித் திருவகவல் என்னும் பெயர்த்தாயிற்று. கீர்த்தி – புகழ். இதற்குச் 'சிவனது திருவருட் புகழ்ச்சி முறைமை' என முன்னைச் சான்றோரொருவர் கருத்துரைத்துள்ளார். 'புகழ்பெருகுஞ் செய்கையெலாம் புகல் அகவல்' எனப் போற்றப்பெறுஞ் சிறப்புடையது இக் கீர்த்தித் திருவகவலாகும். நிலைமண்டில ஆசிரியப்பாவாக அமைந்த இப்பாடல் 146 அடிகளையுடையதாகும்.

தில்லை மூதூரில் ஐந்தொழிற் றிருக்கூத்தியற்றும் சிவபெருமான் உலகத்து உயிர்கள்தோறும் உயிர்க்குயிராய்த் திகழும் தன்னுடைய அருட்குணங்கள் யாண்டும் விளங்க இவ்வுலகில் அன்பிற்சிறந்த அடியார்கள்பொருட்டு நிகழ்த்தி அருளிய அற்புத நிகழ்ச்சியாகிய திருவிளையாடல்களை மணிவாசகப் பெருமான் இத் திருவகவலில் விரித்துரைத்துப் போற்றியுள்ளார். இதன்கண் குறிப்பிடப் பெற்ற அருட் செய்திகளின் விளக்கத்தைப் பெரும்பற்றப்புலியூர் நம்பி திருவிளையாடல், பரஞ்சோதி திருவிளையாடல், திருவுத்தர கோச மங்கைப் புராணம், திருப்பெருந்துறைப் புராணம் முதலிய நூல்களைக் கொண்டு ஒருவாறு உணர்ந்து கொள்ளலாம்.

திருப்பெருந்துறையில் அருட்குருவாகப்போந்து மெய்ப் பொருளை உபதேசித்தருளிய சிவபெருமான் வாதவூரடிகளை நோக்கி 'நலமலிதில்லையுட் கோலமார்தரு பொதுவினில் வருக' எனப் பணித்தருளி மறைந்தமையும், அந்நிலையில் உடனிருந்த அடியார்கள் இறைவனது பிரிவாற்றாது தம் உடம்பினைத் துறந்து இறைவனுடன் இரண்டறக்கலந்தமையும், அங்ஙனம் இறைவனையடையப் பெறாது எஞ்சி நின்ற

அடியார்கள் தீயிற்பாய்ந்து தம் உடம்பினை விடுத்து இறைவனை அடைந்தமையும், கயிலைப் பெருமானாகிய கடவுள் அன்பர்களுக்கு நேர்நின்று அருள்செய்தற் பொருட்டுப் புலியூர்ப் பொதுவாகிய பொன்னம்பலத்திலே புகுந்தருளினமையும் ஆகிய செய்திகள் இக் கீர்த்தித் திருவகவலின் இறுதிப் பகுதியிலே குறிக்கப் பெற்றுள்ளன. இக்குறிப்பினைக் கூர்ந்துநோக்குங்கால் திருப்பெருந்துறையில் அருட்குரவனாக எழுந்தருளிய இறைவன் பணித்தவண்ணம் வாதவூரடிகள் தில்லைக்கு வந்தபொழுது இக்கீர்த்தித் திருவகவல் அருளிச் செய்யப்பெற்றதென்பது நன்கு புலனாம்.

திருக்குறளில் கடவுள் வாழ்த்தினையடுத்து வான்சிறப்பு என்ற அதிகாரம் வைக்கப்பெற்றமை போன்று திருவாசகத்தில் கடவுள் இலக்கணமுணர்த்தும் சிவபுராணத்தையடுத்து இறைவனது இனிய திருவருளாகிய மழையின் சிறப்புணர்த்தும் கீர்த்தித்திருவகவல் அமைந்திருத்தல் அறிந்து மகிழத் தக்கதாகும்.

௩. திருவண்டப்பகுதி

எல்லாம் வல்ல இறைவன், உலகப் பெரும்பரப்பாகிய அண்டங்களெல்லாம் இல்நுழைகதிராகிய வெயிலொளியில் விளங்கித் தோன்றும் நுண்ணிய அணுக்களைப் போன்று மிகச் சிறியனவாகத் தோன்றத் தான் அவற்றினும் மிகமிகப் பெரியவனாகி எல்லா அண்டங்களுக்கும் அப்பாற்பட்டு விளங்குதலாகிய பருமை நிலையினையும், உயிர்க்குயிராய் உள்நின்று எவ்வகைப் பொருள்களையும் ஊடுருவி இயக்கியருளும் நுண்மை நிலையினையும் ஒருங்குடையவனாவன். இவ்வுண்மையை அவனருளாலே உணரப்பெற்ற வாதவூரடிகள், அம் முதல்வனது தூலசூக்கும நிலையை வியந்து போற்றுவதாக அமைந்தது திருவண்டப் பகுதியாகிய அகவலாகும். இஃது 'அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்' எனத் தொடங்கி அண்டப் பரப்பின் உள்ளும் புறம்பும் திகழும் இறைவனது பேராற்றலை விரித்துக் கூறுவதாதலின் 'திருவண்டப்பகுதி' என வழங்கப் பெறுவதாயிற்று. 'அண்டப் பகுதி' என்னும் இது, ஆத்திசூடி என்றாற்போலப் பாட்டின் முதற் குறிப்பாற் பெற்ற பெயராகும். இணைக்குறளாசிரியப்பாவாகிய இது, 182 அடிகளையுடையதாகும்.

திருவண்டப் பகுதியாகிய இவ்வகவல் 'சிவனுடைய தூலசூக்குமத்தை வியந்தது' என முன்னுள்ளோர் கருத்துரை வரைந்துள்ளனர். இறைவன் செய்தருளும் ஐந்தொழில்களில் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல் என்னும் நான்கினைப் பற்றிப் பொதுவாகவும் விரிவாகவும் தெரிந்துகொள்ளுதற்கேற்ற அரும்பொருள்கள் இதன்கண் விரித்துரைக்கப் பெற்றுள்ளன. இதன் பொருளமைதியை,

'திகழ்திருவண்டப் பகுதித் திருவகவல் செப்பியது
தகுசிருட்டி திதியொடுக்கஞ் சாற்றுதிரோ தம்பொதுவாய்
அகலமுறத் தேர்ந்திடவே யருளியநற் பொருளாகும்''

எனவரும் திருவாசக உண்மையால் இனிதுணரலாம்.

அளக்கலாகாப் பேரளவினவாகிய அண்டங்களெல்லாம் இறைவனது அருள்வெளிப்பரப்பினுள்ளே சிறிய அணுக்களை யொப்ப அடங்கித் தோன்றுதலின், அவ்விறைவனது பெருமை, சொல்லுக்கும் மனத்திற்கும் எட்டா இயல்பினது. அண்டங்களின் தலைவராக நியமிக்கப் பெற்ற தெய்வங்களாகிய நுண்ணிய உயிர்களாலும் அறியவொண்ணுத நிலையில் உயிர்க்குயிராய் உள்நின்று இயக்குவோன் இறைவன் ஒருவனேயாதலின் அப்பெருமான் 'நுண்ணியவற்றுளெல்லாம் மிகவும் நுண்ணியன். உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாச் சிறப்பினவாய் அண்டப் பரப்பில் திகழும் ஞாயிறு, திங்கள், வான், வளி, தீ, நீர், மண் முதலிய எல்லாப் பொருள்களுக்கும் ஆற்றலை வழங்கி அவற்றைத் தொழிற்படுத்துவோன் அம்முதல்வனே. பேரருளாளனுகிய அப்பெரியோன் அன்புடைய அடியார்களுக்கு அணுகி நின்றருளும் எளிமைத் திறமும் அன்பரல்லாதார்க்கு மிக மிகச் சேய்மையனுக அப்பாற்பட்டு நிற்கும் அருமைத்தன்மையும் ஒருங்குடையான். இறைவன் மாதொரு பாகனுக எளிவந்து தோன்றி வழங்கிய பேரின்பம், உடம்போடிருந்து பொறுத்தற்கு இயலாதபடி உள்ளம் முழுவதையும் அகத்திட்டுக் கொண்டது; என வாதவூரடிகள் தாம் பெற்ற அருளாரமுதப் பேரின்ப நுகர்ச்சியை இத் திருவகவலில் விரித்துக் கூறியுள்ளார்.

வேண்டுதல் வேண்டாமையிலான் ஆகிய இறைவன் திருவடிகளை இடைவிடாது போற்றும் பெரியோர்களே 'யான்' 'எனது' என்னும் இருவகைப் பற்றும் நீத்த நீத்தாராவர். புலன்களிற் செல்லும் அவா ஐந்தினையும் அடக்கிய

இப்பெருமக்களே சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் தன் மாத்திரைகள் ஐந்தனது கூறுபாட்டையும் உள்ளவாறு உணர வல்லவர்கள். அணுமுதல் அண்டம் ஈருகவுள்ள பொருள்களைப் பற்றிக் கூர்ந்து ஆராய்ந்து உணர்த்தவல்ல பேரறிவு, முற்றத்துறந்த முனிவர்களாகிய இப்பெரு மக்க ளுக்கே யுரியதாகும். இறைவன் திருவருள்வழி யொழுகும் நிறைமொழி மாந்தராகிய வாதவூரடிகள், அண்டப் பரப்பின் அகத்தும் புறத்தும் இடையீடின்றிக் கலந்து விளங்கும் இறைவனது இயல்பினை உணர்த்து முகமாக, அவனரு ளாலே அவன் தாள் வணங்கிய மெய்யடியார்களாகிய நீத் தார் பெருமையினையும் உடம்பொடு புணர்த்து விளக்கிய திறம் உணர்ந்து மகிழத்தக்கதாகும். நிறைமொழி மாந்தர் அருளிய மறைமொழியாக விளங்கும் இத்திருவகவல், திருக் குறளில் நீத்தார் பெருமை என்ற அதிகாரத்தைப் போன்று திருவாசகத்தில் மூன்ருந் திருப்பாட்டாக அமைக்கப் பெற்றிருப்பது, நீத்தார் பெருமை என்ற அதிகாரத்திற்கும் இதற்கும் உள்ள தொடர்பை இனிது புலப்படுத்துவதாகும். இந்நிலவுலகும் இதனைச் சூழ இயங்கும் ஏனை உலகங்களும் உருண்டை வடிவினவாய் ஒன்றனுக்கு ஒன்று ஈர்ப்பாற்றல் உடையனவாக இயங்கிவரும் அற்புதக் காட்சியினை வாத வூரடிகள் இவ்வகவலில் விளக்கிய திறம் வியந்து போற்றத் தக்கதாகும்.

ச. போற்றித் திருவகவல்

'நான்முகன் முதலா வானவர் தொழுதெழ' எனத் தொடங்கும் அகவல், வணக்கம் எனப் பொருள்படும் 'போற்றி' என்னும் தமிழ் மந்திரத்தால் இறைவனை முன் னிலைப் படுத்துப் போற்றுவதாதலின், 'போற்றித் திருவக வல்' என்னும் பெயர்த்தாயிற்று. 'நமச்சிவாய' என்னும் மந்திரத்தின் முன்னுள்ள 'நம' என்னுஞ் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல் 'போற்றி' என்பதாகும். போற்று தல் என்பது புகழ்தல், வணங்குதல், குறிக்கொண்டு பாது காத்தல் எனப் பலபொருள் தரும் ஒரு சொல்லாகும். போற்றி என்பது வணக்கம் என்ற பொருளிலும் எம்மைப் பாதுகாத்தருள்க என வேண்டிக்கோடற் பொருளிலும் வழங்கும் செந்தமிழ் மந்திரச் சொல் என்பது, போற்றித் திருவகவலாகிய இதனாலும், போற்றித் திருத்தாண்டகம்

முதலாக முன்னுள்ள திருமுறைகளிற் காணப்பெறும் அருட் பாடல்களாலும் நன்கு துணியப்படும்.

போற்றித் திருவகவல் ஆகிய இதற்குச் 'சகத்தின் உற்பத்தி' எனச் சான்றோரொருவர் கருத்துரை வரைந்துள்ளார். இங்கே 'சகம்' என்ற சொல், உலகத்தில் வாழும் உயிர்களை யுணர்த்தும் என்பர்.[1] உயிர்கள் இவ்வுலகிற் பிறந்து வீடு பேறடைதற்குரிய நெறிமுறைகளை அறிவுறுத்தும் நிலையில் இவ்வகவல் அமைந்திருத்தலால் 'முத்திபெறு நெறியறியும் மொழி போற்றித் திருவகவல்' என இதனைச் சிறப்பித்துரைப்பர் அறிஞர்.[2] இப்பாடல் இருநூற்றிருபத்தைந்தடிகளை யுடையதாகும். இதன்கண் உள்ள எல்லா அடிகளும் நாற்சீரால் இயன்றமையின் இது நிலை மண்டில ஆசிரியப்பாவாகும்.

நான்முகன் முதலிய தேவர்களால் வழிபடப் பெறும் சிறப்பமைந்த காத்தற் கடவுளாகிய திருமாலும் காணுதற்கரிய தன் திருவடியிணையை அன்பிற் சிறந்த மெய்யடியார்கள் கண்டு மகிழ்தற் பொருட்டுப் பேரருளாளனாகிய இறைவன் இந்நிலவுலகிலே எளிவந்தருளிய செய்தியும், உயிர்கள் பொறிகளாலும் உணர்வுகளாலும் வேறுபட்ட பல திற உடம்புகளிற் பொருந்தித் தோன்றிப் பெறுதற்கரிய மக்கட் பிறப்பினை யெய்தும் முறையும், மக்கட் பிறப்பில் தாய் வயிற்றிற் கருவாய்த் தங்கிய நாள்முதல் மகவாய் வெளிப்படும் வரையும் நேரும் பலவகைத் துன்பங்களிலும் உயிர்கள் தப்பிப் பிழைக்குமாறும், பிள்ளைப் பருவம் முதல் ஆண்மைப் பருவம் எய்துமளவும் நேரும் பலவகைத் தொல்லைகளும், அவற்றை யெல்லாந் தப்பி உலகியல் வாழ்வில் நன்றாக வாழும் நிலையில் தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாக, சிறப்புடைய அக்கருத்தினைக் கலைத்தற்கு முற்படும் பல் வேறு குழுவினரின் தீய முயற்சிகளும், அவற்றாற் சிறிதும் மனங்கலங்காது நனவிலும் கனவிலும் இறைவன்பால் இடையறாப் பேரன்புடையராம் வண்ணம் அவ்விறைவனே குருபரனாக எழுந்தருளிய செய்தியும், மெய்யன்பராகிய அடியார்களைத் தாய்போல் தலையளித்துக் காக்கும் இறைவனது

1. ...றமலையடிகள் எழுதிய திருவாசக விரிவுரை 2-ம் பதிப்பு

2. ...வாசக வுண்மை.

பெருங்கருணைத்திறமும் ஆகியவற்றை இவ்வகவலில் ஒன்று முதல் எண்பத்தாறு வரையுள்ள அடிகளால் மணிவாசகப் பெருமான் விரித்து விளக்குகின்றார். எண்பத்தேழாம் அடி முதல் இருநூற்றிருபத்தைந்தாம் அடிமுடியவுள்ள இவ் வகவலின் பிற்பகுதி, சிவபெருமானை முன்னிலைப்படுத்திப் போற்றும் மந்திர மொழியாக அமைந்துளது. இப்பகுதி வடமொழி எசுர் வேதத்தின் இடையே யமைந்த திருவுருத்திரத்தைப் போன்று சிவபரம் பொருளை மலர் தூவி வழிபடுதற்கேற்ற செந்தமிழ் மந்திரங்களாக அமைந்துளதென்றும், வாதவூரடிகள் திருவாய் மலர்ந்தருளிய தமிழ் மந்திரங்களாகிய இவை திருக்கோயில்களிலும் பிறவிடங்களிலும் இறைவனை வழிபடுதற்குரிய சிறப்புரிமை வாய்ந்தனவென்றும் ஆசிரியர் மறைமலையடிகளார் தாம் எழுதிய திருவாசக விரிவுரையில் நன்கு விளக்கியுள்ளார்கள்.

திருக்குறளில் உள்ள ‘அறன் வலியுறுத்தல்’ என்னும் அதிகாரத்தைப் போன்று திருவாசகத்தில் நான்காம் பனுவலாக முறைப்படுத்தப் பெற்றது இப் போற்றித் திருவகவலாகும். முற்றத்துறந்த முனிவர்களால் உணர்த்தப்படும் உறுதிப்பொருள்களுள் இம்மை மறுமை வீடு என்னும் மும்மை நலங்களையும் ஒருங்கே தருவது அறம் என்ற முதற்பொருளேயாகும். எனவே அவ்வறத்தின் பெருமையினை வலியுறுத்தும் நோக்கத்துடன் ‘நீத்தார் பெருமை’ என்ற அதிகாரத்தை யடுத்து ‘அறன் வலியுறுத்தல்’ என்ற அதிகாரம் வைக்கப்பட்டது. திருக்குறளில் அமைந்த இம்முறையினை யொட்டியே திருவாசகத்திலும் நீத்தாராகிய திருத்தொண்டர்களின் பெருமையினை விளக்கும் திருவண்டப் பகுதியின் பின் என்றும் மாறாத நல்லறத்தின் சிறப்பினை வற்புறுத்தும் இப்போற்றித் திருவகவல் வைக்கப்பெற்றுள்ளமை காணலாம். இவ்வைப்பு முறையின் அமைப்பினை உணர்தற்கு இப்போற்றித் திருவகவலுக்கும் அறன் வலியுறுத்தல் என்ற அதிகாரத்திற்கும் இடையே அமைந்த தொடர்பினை அறிந்து கொள்ளுதல் இன்றியமையாததாகும்.

குற்றமற்ற மனத்தினால் எண்ணித் துணிந்து இயற்றப் படுவதே அறமென்றும் அதுவும் பொறாமை, அவா, வெகுளி, கடுஞ்சொல் ஆகிய குற்றம் நான்கினையும் விலக்கிய நிலையில் நிகழ்வதென்றும் ஆசிரியர் திருவள்ளுவர் அறத்திற்கு இலக்கணம் கூறியுள்ளார். அறத்தின் இயல்பாக அமைந்

விலக்கணம் உலகியல் முறையினை உளங்கொண்டு கூறிய பொதுவிலக்கணமாகவே கொள்ளத்தகுவதாகும். தெய்வப் புலவராகிய திருவள்ளுவர், அறத்தின் சிறப்பிலக்கணத் தினைக் கடவுள் வாழ்த்தாகிய முதலதிகாரத்திலேயே தெளி வாகக் குறித்துள்ளார். நல்லறங்கள் எல்லாவற்றிற்கும் நிலைக்களமாக விளங்குவோன் அருளாளனாகிய இறைவனே என்ற உண்மையினை 'அறவாழி யந்தணன்' என்ற தொட ரால் பொய்யில் புலவர் நன்கு புலப்படுத்தியுள்ளார். எனவே அறக்கடலாய் விளங்கும் அருளாளனாகிய இறைவனது திரு வருளை எதிரேற்று நடக்கும் தூய உள்ளமுடைய பெரியோர் களால் இயற்றப்பெறுவது எதுவோ அதுவே உண்மை யான அறமாகும் என்பது திருவள்ளுவர் கருத்தாதல் நன்கு தெளியப்படும்.

இறைவனது திருவருளை எதிர் நோக்கி அதன் வழி யொழுகும் நன்னெஞ்சினோராகிய அடியார்களே உண்மை யான அறத்தினை மேற்கொண்டவராவர் என்ற இவ் வுண்மையினை,

'நின்குணம் எதிர்கொண்டோர் அறங்கொண்டோர்'* என்ற தொடரில் கடுவன் இளவெயினனார் என்ற சங்கப் புலவர் இனிது விளக்கியுள்ளார். 'இறைவனாகிய நினது திருவருட் குணத்தை ஏற்றுக்கொண்டு அவ்வருள் நெறியில் ஒழுகுவோரே உண்மையான அறவோர்' என்பது மேற் காட்டிய தொடரின் பொருளாகும்.

உயிர்கள் செய்யும் நலந்தீங்குகளை யெல்லாம் உள்ள வாறு அறிந்து அவற்றிற்கேற்ப இன்ப துன்பங்களாகிய இரு வினைப்பயன்களை நுகர்விக்க வல்ல தனிமுதல்வன் இறைவ னாதலின் அவன் திருவடிகளை அன்பினால் வழிபடும் கருத் துடன் மக்கள் தன்முனைப்பற்றுச் செய்யும் செயல்களெல் லாம் நல்லறமாகும். இவ்வாறன்றி இறைவனடிகளை மறந்து 'யான்' 'எனது' என்னும் செருக்குடன் செய்யும் செயல்கள் உலகியல் நெறியால் நோக்கும் நிலையில் நல்லன போற் காணப்பட்டாலும் உண்மையால் நோக்குங்கால் வீண் செயலெனவே கருதப்படும். ஒன்றினும் வேண்டுதல் வேண்டாமையின்றி எல்லாவுயிர்களிடத்தும் பேரருளுடைய னாய் வேண்டும் நலங்களை வழங்கி யருளும் இறைவன் திரு

* பரிபாடல் 5. 71.

வடிகளைப் போற்றி வழிபடுதலே எல்லா அறங்களுக்கும் மூலமான நல்லறமாகும் என்பது சான்றோர் துணிபாகும். அறத்தின் அடிப்படைக் கொள்கையாகிய இவ்வுண்மை யினை,

“காண்பவன் சிவனேயாகுல் அவனடிக் கன்பு செய்கை
மாண்பறம், அரன்றன்பாதம் மறந்துசெய் அறங்களெல்லாம்
வீண்செயல், இறைவன் சொன்ன விதி அறம்,
விருப்பொன்றில்லான்
பூண்டனன் வேண்டல் செய்யும் பூசனை புரிந்து கொள்ளே.*

எனவரும் செய்யுளில் அருணந்தி சிவனுர் திட்பமுற விளக்கி யுள்ளார்.

மேல் எடுத்துக் காட்டிய வண்ணம் முன்னைத் தமிழ்ச் சான்றோர் பலரும் அறத்தின் இலக்கணங்களாகக் கூறிய கருத்துக்களைத் தொகுத்து நோக்குவோமாளுல், உலக மக்கள் அறவாழியந்தணனுகிய கடவுளிடத்து நீங்காத பேரன்புடையராய் அருளாளனுகிய அவன் திருவடிகளை யிறைஞ்சித் தன்முனைப்பற்றுச் செய்யும் செயல்களே உண் மையான நல்லறங்களாம் என்பது நன்கு விளங்கும்.

இறைவன் திருவருளை நிலைக்களனுகக் கொண்டு நிகழும் அறத்தின் சிறப்பிலக்கணத்தினை உலக மக்களுக்கு உணர்த்தத் திருவுளங்கொண்ட மணிவாசகப் பெருமான், இப்போற்றித் திருவகவலால் மன்னிய திருவருள் மலை யெனத் திகழும் சிவபரம் பொருளை மறவாது போற்றி வழி படுமுகமாக வையத்து வாழ்வாங்கு வாழும் நல்லற நெறியை மக்கள் கடைப்பிடித்தொழுகுதல் வேண்டுமெனத் திட்பமுற வலியுறுத்தியுள்ளார். எனவே திருவாசகத்திலுள்ள போற் றித் திருவகவலாகிய இது, திருக்குறளில் அறன் வலியுறுத் தல் என்ற அதிகாரத்துடன் தொடர்புடையதென்பது இனிது புலனும்.

இதுகாறும் கூறியவாற்ருல் திருவாசகத்தில் முதற் கண் அமைந்த சிவபுராணம், கீர்த்தித் திருவகவல், திருவண்டப் பகுதி, போற்றித் திருவகவல் ஆகிய நான்கு திருப்பாடல்களும், திருக்குறளின் தொடக்கத்தே அமைந்த கடவுள் வாழ்த்து, வான் சிறப்பு, நீத்தார் பெருமை, அறன் வலியுறுத்தல் என்னும் நான்கதிகாரங்களைப் போன்று, திரு

* சிவஞான சித்தியார் - இரண்டாஞ் சூத்திரம் 27-ம் செய்யுள்.

வாசகச் செழுமறையின் பொருள் நலங்களைப் புலப்படுத்தும் பாயிரமாக முறைப்படுத்தப் பெற்றன என்பது ஒருவாறு புலனாதல் காணலாம்.

ரு. திருச்சதகம்

திருவாசகத்தில் ஐந்தாம் பனுவலாக அமைந்த இப் பகுதி, தெய்வத்தன்மை வாய்ந்த நூறு திருப்பாடல்களைத் தன்னகத்தே கொண்டு விளங்குதலால் திருச்சதகம் என்னும் பெயர்த்தாயிற்று. சதம் என்ற வடசொல் நூறு என்னும் எண்ணினைக் குறித்த பெயராகும். அது. நூறு திருப்பாடல் களைக் கொண்டது என்னும் பொருளில் 'க' என்னும் ஓர் இடைச்சொல்லைப் பெற்றுச் 'சதகம்' என வழங்கியது என்பர். இத்திருச்சதகம், 1. மெய்யுணர்தல், 2. அறிவுறுத் தல், 3. சுட்டறுத்தல், 4. ஆத்தும சுத்தி, 5. கைம்மாறு கொடுத்தல், 6. அநுபோக சுத்தி, 7. காருணியத்திரங்கல், 8. ஆனந்தத் தழுந்தல், 9. ஆனந்த பரவசம், 10. ஆனந்தா தீதம் எனப் பத்துத் தலைப்புக்களை யுடையதாய், ஒவ்வொரு தலைப்புக்கும் பத்துப் பத்துப் பாடல்களைக் கொண்டதாய்ப் பத்து யாப்பு விகற்பங்களைப் பெற்றுளது.

ஒரு பாடலின் இறுதியிலுள்ள சொற்றொடர், சொல், எழுத்து என்னும் இவற்றுள் ஒன்றை அடுத்த பாடலின் தொடக்கமாகக் கொண்டு பாடப் பெறுவது, அந்தாதி என் னும் சொற்றொடர் நிலைச் செய்யுளாகும். இத் திருச்சதகத்தி லுள்ள நூறு திருப்பாடல்களும் மேற்குறித்த வண்ணம் ஒரு செய்யுளின் ஈறு அடுத்த செய்யுளுக்கு முதலாக அமையும் முறையில் அந்தாதியாக அருளிச் செய்யப் பெற்றுள்ளன. 'மெய்தானரும்பி' எனத் தொடங்கும் இத் திருச்சதகத்தின் முதற்பாடலின் முதற் சொல்லொடு பொருந்தும் முறையில், இதன் நூறும் பாடலாகிய இறுதித் திருப்பாட்டு 'மெய்யர் மெய்யனே' என முடிந்து ஈறும் முதலும் ஒன்றாய் இணைந் திருத்தல் காணலாம். திருச்சதகமாகிய இதன் அமைப்பு முறையினை அடியொற்றிப் பிற்காலத்தில் தோன்றியதே பதிற்றுப் பத்தந்தாதி என்னும் பிரபந்தம் என்பது இங்கு நினைத்தற்குரியதாகும்.

திருப்பெருந் துறையிலே குருந்த மா நீழலில் அருட் குரவனாக எழுந்தருளித் திருவாதவூரடிகளுக்கு ஞானோப தேசம் வழங்கியருளிய குருமூர்த்தியாகிய இறைவன்

பால் திருவாதவூரடிகள் கொண்டுள்ள எல்லையற்ற பேரன்பினைப் புலப்படுத்தும் நிலையில் அமைந்தது இத் திருச்சதகமாகும். தம்மை ஆட்கொண்டருளிய பேரருளாளனாகிய இறைவனிடத்து வாதவூரடிகள் கொண்ட பேரன்பின் முதிர்ச்சியும், அதன் பயனாக 'யான்' 'எனது' என்னும் இருவகைப் பற்றுக்களும் அறவே நீங்க அடிகள்பால் நிகழ்ந்த வியக்கத்தக்க நற்செயல்களும் ஆகியவற்றைப் புலப்படுத்தும் முறையில் இப்பனுவல் அமைந்திருத்தலால், இதற்குப் 'பத்தி வைராக்கிய விசித்திரம்' என ஆன்றோர் கருத்துரை வரைந்தனர். இக்கருத்தினை,

"சத்திய ஞானந்தரு தேசிகர் மோகஞ் சதகமதாம்"

எனவரும் திருவாசக உண்மைத்தொடரும் வலியுறுத்தல் காணலாம்.

பத்தியாவது, அம்மையப்பனாகிய இறைவன் மன்னுயிர்கள்பால் வைத்த மாறிலாத மாக்கருணை வெள்ளமாகிய அருளின் நீர்மையை எண்ணிய அளவில், மெய்யடியார்கள் உள்ளத்தே தோன்றிப் பெருகும் பேரன்பாகும். வைராக்கியம் என்பது, அருளாளனாகிய இறைவன்பாற் செலுத்தும் பேரன்புக்குத் தடையாயுள்ள உலகப் பற்றுக்களையெல்லாம் அறவே வெறுத்தொதுக்கும் கடைப்பிடியாகிய மனவுறுதியாகும். விசித்திரம் என்பது, வியக்கத்தக்க தன்மை. பற்றற்றான் பற்றாகிய ஒரே பற்றினைத் துணையாகப்பற்றி நின்று ஏனைய உலகப் பற்றுக்களையெல்லாம் அறவே ஒழித்தலாகிய இச்செயல், சதுரப்பாடுடைய சிவஞானச் செல்வர்களாலன்றி ஏனையோரால் மேற்கொள்ளுதற்கரிய பெருமையுடையதாதலின் வியக்கத்தக்க தன்மையுடையதாயிற்று. அருட்குரவனாக எழுந்தருளி வந்து தம்மை ஆட்கொண்டருளிய இறைவன்பால் திருவாதவூரடிகள் கொண்ட பேரன்பின் உவப்பும், அத்தகைய அன்பிற்குத் தடையாய் நிகழும் உலகப் பொருள்களிடத்தே அடிகள் வைத்த உவர்ப்பும் ஒருங்கே புலப்படும் முறையில் இத் திருச்சதகம் அருளிச் செய்யப் பெற்றிருத்தல் உணர்ந்து போற்றத்தக்கதாகும்.

இனி, பழைய ஏட்டுச் சுவடிகள் சிலவற்றில் 'பத்து வகையாக இரட்சித்த முறைமை' என இத் திருச்சதகத்திற்குக் கருத்துரை வரையப்பெற்றுளது. மெய்யடியார்கள்பால் நிகழ்தற்குரிய செயல்கள் பத்தும் தம்பால் நிகழும்

வண்ணம் இறைவன் குருமூர்த்தியாக எளிவந்து தம்மை ஆட்கொண்டு பாதுகாத்தருளிய அருட்செயலை எடுத்துரைத்துப் போற்றும் முறையில் திருவாதவூரடிகள் இத் திருச்சதகத்தை அருளிச் செய்துள்ளார். எனவே இச் சதகத்திற்குப் ‘பத்து வகையாக இரட்சித்த முறைமை’ எனக் கருத்துரைத்தல் பொருத்தமுடையதாகவே தோன்றுகின்றது.

பத்துப் பாடல்கள் கொண்டது ஒரு பதிகம் என்ற முறையில் இத் திருச்சதகத்தில் பத்துப் பதிகங்கள் அமைந்து உள்ளன. ஒவ்வொரு பதிகமும் தனித்தனி யாப்பமைதி பெற்றுத் தனித்தனித் தலைப்புடன் விளங்குதல் காணலாம். இவற்றுள் ‘மெய்தானரும்பி’ எனத் தொடங்கும் முதற் பதிகம் ‘மெய்யுணர்தல்’ என்ற தலைப்பில் அமைந்துளது. மெய்யுணர்வாவது, தோற்றக் கேடுகளின்றித் தூய்தாய் என்றும் உள்ள மெய்ப்பொருளாகிய இறைவனை இடைவிடாது நினைந்து போற்றுதல். உடல், கருவி, நுகர்ச்சியாகிய உலகப்பொருள்களின் நிலையாமைகண்டு அவற்றின் பிணிப்பிலிருந்து விலகி, மெய்ப்பொருளாகிய கடவுளை அநுபவ வாயிலாக உணர்ந்து போற்றும் நிலையில் திருச்சதகத்தின் முதற்பதிகம் அமைந்துளது. ‘மெய்யுணர்தல்’ என்னும் இப்பதிகத் தலைப்புக்குத் ‘தேகாதி பிரபஞ்சங்களைக் கண்டு நீங்குதல்’ என முன்னோர் கூறிய விளக்கம் இத் திருப்பதிகக் கருத்தினை நன்கு புலப்படுத்துவதாகும்.

ஆருயிர்த் தலைவனை நினைந்த அளவில் உண்டாம் அன்புமேலீட்டால் உள்ளத்தே இன்பவுணர்வு தோன்றுதலும், அவ்வுணர்வின் வழிப்பட்ட மெய்ப்பாடாக உடம்பில் மயிர் சிலிர்த்தலும் நடுக்கம் உண்டாதலும், முன் தலைவன் செய்த தலையளியை எண்ணுந்தோறும் நெஞ்சம் நெகிழ்ந்து உருகப் பெறுதலும், அதன் பயனாகக் கண்ணீரரும்புதலும், தலைவனுடைய இனிய பண்புகளையுணர்ந்து இன்புறுதற்குத் தடையாயிருந்த இடையூறுகளெல்லாம் அறவே அகன்றொழிய அப்பெருமானது கருணைத் திறத்தினை யெண்ணி அகங்குழைந்து பாராட்டிப் போற்றுதலும் ஆகிய இச் செயல்கள் தலையாய அன்புடையார்பால் நிகழ்வனவாகும்.

வேர்க்குங்கண் ணீர்ததும்புங் கம்பித்து மெய்நடுங்கும்
வார்த்தை நழுவும் மனம்பதறும் – கார்க்கதமாய்க்
..ர் உரோமாஞ் சலியாகுங் காதலித்தார்க்
. மாமிவையெட் டும்.

எனவரும் வெண்பா அன்புடையார்பால் நிகழும் மெய்ப்பாடு களைத் தொகுத்துரைப்பதாகும். அன்புரிமைச் செயல் களாகிய இவையனைத்தும் திருவாதவூரடிகள்பால் நிகழும் நிலையில் அடிகள் இத் திருச்சதகத்தினை அருளிச் செய்துள் ளார். இச்செய்தி,

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த் துன்விரை யார்கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி சயசய போற்றி
யென்னுங்
கைதான் நெகிழ விடேனுடை யாயென்னைக் கண்டுகொள்ளே.

எனவரும் இத் திருச்சதக முதற்பாடலால் இனிது விளங்கும். இறைவனது திருவருளில் ஈடுபட்ட மெய்யடியார்கள்பால் நிகழும் அன்புரிமைச் செயல் முறைகளைப் புலப்படுத்தும் முறையில் இத்திருப்பாடல் அமைந்துளது. மெய்அரும்புதல், கைதலைவைத்தல், கண்ணீர்ததும்புதல், வெதும்புதல் என்பன மெய்யின் தொழில்கள் ; உள்ளம் பொய்தவிர்தல் மனத்தின்தொழில் ; 'போற்றி சய சய போற்றி' என்றல் வாக்கின்தொழில். எனவே மனமொழி மெய்யாகிய முக்கர ணங்களாலும் இறைவனை வழிபட்டமை புலனும். என்றும் மாருத மெய்ம்மைப் பொருளாகிய இறைவனை அன்பினால் அகங்குழைந்து போற்றும் திருவருள் வாழ்வின் சிறப்பினை உணர்ந்து, நிலையற்ற உலகியல் நடையாகிய பொய்ம்மை யைத் தவிர்ந்தொழுகும் உறைப்புடைய மெய்த்தொண்டர் வாழ்வின் இயல்பினை விளக்கும் நிலையில் அமைந்த இத்திருப் பாடல், 'பத்தி வைராக்கிய விசித்திரம்' என்னும் திருச்சதகப் பொருளையும், அதன்முதற்கண் அமைந்த 'மெய்யுணர்தல்' என்னும் திருப்பதிகம் நுதலிய பொருளையும், இத்தகைய திருவாசகச் செழுமறையினை அருளிச்செய்து அன்புரு வாகிய திருவாதவூரடிகளது திருவுருவ இயல்பினையும் ஒருங்கேயுணர்த்தி நிற்றல் காணலாம். அடிகளின் அன்பின் திருவுருவினை நம்மனோர் நெஞ்சக்கிழியில் ஓவியமாக எழுதி நினைவுகூரும் வகையில் அமைந்த இத்தகைய திருப்பாடல் களைத் தியான சுலோகம் எனப் போற்றுவர் வடமொழி அறிஞர்.*

" இறைவா, எங்கள் உத்தமனே, இந்திரன், திருமால் பிரமன் ஆகிய பெருந்தேவர்களது சிறப்புடைய வாழ்வையும்

* திருவாசகம், திருச்சதகம் – கதிர்மணி விளக்கம் – பக்கம் 12.

வண்ணம் இறைவன் குருமூர்த்தியாக எளிவந்து தம்மை ஆட்கொண்டு பாதுகாத்தருளிய அருட்செயலை எடுத்துரைத்துப் போற்றும் முறையில் திருவாதவூரடிகள் இத் திருச்சதகத்தை அருளிச் செய்துள்ளார். எனவே இச் சதகத்திற்குப் 'பத்து வகையாக இரட்சித்த முறைமை' எனக் கருத்துரைத்தல் பொருத்தமுடையதாகவே தோன்றுகின்றது.

பத்துப் பாடல்கள் கொண்டது ஒரு பதிகம் என்ற முறையில் இத் திருச்சதகத்தில் பத்துப் பதிகங்கள் அமைந்து உள்ளன. ஒவ்வொரு பதிகமும் தனித்தனி யாப்பமைதி பெற்றுத் தனித்தனித் தலைப்புடன் விளங்குதல் காணலாம். இவற்றுள் 'மெய்தானரும்பி' எனத் தொடங்கும் முதற் பதிகம் 'மெய்யுணர்தல்' என்ற தலைப்பில் அமைந்துளது. மெய்யுணர்வாவது, தோற்றக் கேடுகளின்றித் தூய்தாய் என்றும் உள்ள மெய்ப்பொருளாகிய இறைவனை இடைவிடாது நினைந்து போற்றுதல். உடல், கருவி, நுகர்ச்சியாகிய உலகப்பொருள்களின் நிலையாமைகண்டு அவற்றின் பிணிப்பிலிருந்து விலகி, மெய்ப்பொருளாகிய கடவுளை அநுபவ வாயிலாக உணர்ந்து போற்றும் நிலையில் திருச்சதகத்தின் முதற்பதிகம் அமைந்துளது. 'மெய்யுணர்தல்' என்னும் இப்பதிகத் தலைப்புக்குத் 'தேகாதி பிரபஞ்சங்களைக் கண்டு நீங்குதல்' என முன்னோர் கூறிய விளக்கம் இத் திருப்பதிகக் கருத்தினை நன்கு புலப்படுத்துவதாகும்.

ஆருயிர்த் தலைவனை நினைந்த அளவில் உண்டாம் அன்புமேலீட்டால் உள்ளத்தே இன்பவுணர்வு தோன்றுதலும், அவ்வுணர்வின் வழிப்பட்ட மெய்ப்பாடாக உடம்பில் மயிர் சிலிர்த்தலும் நடுக்கம் உண்டாதலும், முன் தலைவன் செய்த தலையளியை எண்ணுந்தோறும் நெஞ்சம் நெகிழ்ந்து உருகப் பெறுதலும், அதன் பயனாகக் கண்ணீரரும்புதலும், தலைவனுடைய இனிய பண்புகளையுணர்ந்து இன்புறுதற்குத் தடையாயிருந்த இடையூறுகளெல்லாம் அறவே அகன்றொழிய அப்பெருமானது கருணைத் திறத்தினை யெண்ணி அகங்குழைந்து பாராட்டிப் போற்றுதலும் ஆகிய இச் செயல்கள் தலையாய அன்புடையார்பால் நிகழ்வனவாகும்.

வேர்க்குங்கண் ணீர்ததும்புங் கம்பித்து மெய்நடுங்கும்
வார்த்தை நழுவும் மனம்பதறும் — கார்க்கதமாய்க்
காந்தும் உரோமாஞ் சலியாகுங் காதலித்தார்க்
கேய்ந்தகுண மாமிவையெட் டும்.

எனவரும் வெண்பா அன்புடையார்பால் நிகழும் மெய்ப்பாடு களைத் தொகுத்துரைப்பதாகும். அன்புரிமைச் செயல் களாகிய இவையனைத்தும் திருவாதவூரடிகள்பால் நிகழும் நிலையில் அடிகள் இத் திருச்சதகத்தினை அருளிச் செய்துள் ளார். இச்செய்தி,

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த் துன்விரை யார்கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி சயசய போற்றி
யென்னுங்
கைதான் நெகிழ விடேனுடை யாயென்னைக் கண்டுகொள்ளே.

எனவரும் இத் திருச்சதக முதற்பாடலால் இனிது விளங்கும். இறைவனது திருவருளில் ஈடுபட்ட மெய்யடியார்கள்பால் நிகழும் அன்புரிமைச் செயல் முறைகளைப் புலப்படுத்தும் முறையில் இத்திருப்பாடல் அமைந்துளது. மெய்அரும்புதல், கைதலைவைத்தல், கண்ணீர்ததும்புதல், வெதும்புதல் என்பன மெய்யின் தொழில்கள்; உள்ளம் பொய்தவிர்தல் மனத்தின்தொழில்; 'போற்றி சய சய போற்றி' என்றல் வாக்கின்தொழில். எனவே மனமொழி மெய்யாகிய முக்கர ணங்களாலும் இறைவனை வழிபட்டமை புலனும். என்றும் மாருத மெய்ம்மைப் பொருளாகிய இறைவனை அன்பினல் அகங்குழைந்து போற்றும் திருவருள் வாழ்வின் சிறப்பினை உணர்ந்து, நிலையற்ற உலகியல் நடையாகிய பொய்ம்மை யைத் தவிர்ந்தொழுகும் உறைப்புடைய மெய்த்தொண்டர் வாழ்வின் இயல்பினை விளக்கும் நிலையில் அமைந்த இத்திருப் பாடல், 'பத்தி வைராக்கிய விசித்திரம்' என்னும் திருச்சதகப் பொருளையும், அதன்முதற்கண் அமைந்த 'மெய்யுணர்தல்' என்னும் திருப்பதிகம் நுதலிய பொருளையும், இத்தகைய திருவாசகச் செழுமறையினை அருளிச்செய்து அன்புரு வாகிய திருவாதவூரடிகளது திருவுருவ இயல்பினையும் ஒருங்கேயுணர்த்தி நிற்றல் காணலாம். அடிகளின் அன்பின் திருவுருவினை நம்மனோர் நெஞ்சக்கிழியில் ஓவியமாக எழுதி நினைவுகூரும் வகையில் அமைந்த இத்தகைய திருப்பாடல் களைத் தியான சுலோகம் எனப் போற்றுவர் வடமொழி அறிஞர்.*

"இறைவா, எங்கள் உத்தமனே, இந்திரன், திருமால், பிரமன் ஆகிய பெருந்தேவர்களது சிறப்புடைய வாழ்வையும்

* திருவாசகம், திருச்சதகம் — கதிர்மணி விளக்கம் — பக்கம் 12.

ஒரு பொருளென மதித்து ஏற்றுக்கொள்ளமாட்டேன். நண்பு பூண்டொழுகுந் திறத்தில் என் குடும்பமே அடியோடு கெட்டொழியும் நிலை ஏற்படுமாயினும் நின்னுடைய அடியார்களோடன்றி நின்னை நினையாத பிறரோடு நட்புறவு கொள்ளமாட்டேன். நின் திருவருள் நினைவுடன் வாழும் வாய்ப்பு உளதாயின், நகரத்திற்புகினும் அதனை இகழ்ந்து விலக நினையேன். எவ்வுயிர்க்கும் உயிராய் விளங்கும் தனி முதல்வனாகிய நின்னையன்றிப் பிறிதொரு தெய்வம் உண்டென்று கனவிலும் கருதேன். என்னால் விரும்பத்தகும் இவ்வியல்பு என்பால் என்றும் அகலாது நிலைபெற்றிருக்க அருள் புரிவாயாக” என இறைவனை நோக்கி அடிகள் வேண்டுவதாக அமைந்தது,

“கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு, குடிகெடினும்
நள்ளேன் நினதடி யாரொடல்லால், நரகம்புகினும்
எள்ளேன் திருவருளாலே யிருக்கப்பெறின், இறைவா
உள்ளேன் பிறதெய்வம் உன்னையல்லாதெங்கள் உத்தமனே”

என்ற திருப்பாட்டாகும். இதன்கண் ‘குடிகெடினும் நினது அடியாரொடல்லால் நள்ளேன்’ எனவே, நின்னடியரல்லாத பிறரொடு நட்புக்கொள்ளுதலால் எனது குடி நெடுங்காலம் நிலைபெற்று வளரும் உயர்நிலை ஏற்படுவதாயினும் நின் அன்பரல்லாதார் நட்பை ஏற்றுக்கொள்ளேன் என்பதும், ‘நின் திருவருளாலே இருக்கப்பெறின் நரகம் புகினும் எள்ளேன்’ எனவே, நின் திருவருளை நினைந்து போற்றும் வாய்ப்பில்லையென்றால் புரந்தரன் மால் அயன் வாழ்வையும் பொருளெனக் கொள்ளமாட்டேன் என்பதும் இனிது புலனாதல் காணலாம்.

‘நாடகத்தால்’ எனத்தொடங்கும் இரண்டாம் பதிகம் ‘அறிவுறுத்தல்’ என்னுந் தலைப்புடையதாகும். இதற்குப் பொறியோடே கூட்டுதல் எனவும் அருள் தரிசனம் எனவும் குரு தரிசனம் எனவும் முன்னோர் கருத்துரைத்துள்ளார்கள். உயிர் தன்னறிவினால் உய்த்துணர்தற்கரியதாய சிவ போகத்தை உடலின்கண் பொருந்திய ஐம்பொறியளவிலும் _ணர்ந்து மகிழும் வண்ணம் இறைவன், திருவாதவூரடிளுக்குக் குருமூர்த்தியாக எழுந்தருளி வழங்கினான் ஆதலின், “உணர்வின்நேர்பெற வருஞ் சிவபோகத்தை ஒழிவின்றி உருவின்கண், அணையும் ஐம்பொறியளவினும் எளிவர”க் கண்ட அடிகள், தாம் நுகர்ந்த சிவபோகம் பொறியுணர்

வுக்கும் புலப்படும் நிலையில் இப்பதிகத்தால் இறைவனைப் பரவிப் போற்றியுள்ளார். இதுபற்றியே இப்பதிகத்திற்குப் பொறியோடே கூட்டுதல் எனக் கருத்துரைக்கப்பட்டது. இப் பதிகத்தில் ஒன்று முதல் எட்டு வரையுள்ள பாடல்கள் அடிகள் ஆண்டவனை நோக்கித் தம் இயல்பினையும் வேட்கை யினையும் வெளியிட்டுரைப்பனவாகவும், ஒன்பது பத்தாம் பாடல்கள் தம் நெஞ்சிற்கு அறிவுறுத்துவனவாகவும் அமைந் துள்ளன.

'பொன்னிலத்திலே அழகுடன் திகழும் மாணிக்கமலை போல்வானே! என்னை அடிமையாகவுடைய இறைவனே! யான், எனது நடிப்புத் திறத்தால் நின் மெய்யடியாரைப் போன்று திறம்பட நடித்து அவர்கள் திருக்கூட்டத்தின் இடையிலே ஒன்றி நின்று (அன்னோர் புகுதற்குரிய) பேரின்ப நிலையாகிய வீட்டுலகத்திற் புகுதல்வேண்டி மிகவும் விரைந்து முந்துகின்றேன். இந்நிலையில் எனது தகுதியின்மை வெளிப்படுவதன்முன் நின்பால் இடையறாது செலுத்தற் குரிய பேரன்பு எனது நெஞ்சத்திலே நிலைபெற்று உள்ளம் உருகும்படி அதனை அடியேற்குத் தந்தருள்வாயாக' எனத் தமக்கு மெய்யன்பு அருளவேண்டி இறைவனைப் பரவுவதாக அமைந்தது,

நாடகத்தால் உன்னடியார் போல்நடித்து நானடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றேன்
ஆடகச்சீர் மணிக்குன்றே இடையறா அன்புனக்கென்
ஊடகத்தே நின்றுருகத் தந்தருளெம் உடையானே.

எனவரும் திருப்பாட்டாகும்.

'வெள்ளந்தாழ் விரிசடையாய்' எனத்தொடங்கும் மூன் றும் பதிகம், சுட்டறுத்தல் என்னுந் தலைப்புடையதாகும். சுட்டறுத்தல் என்பதற்குத் தன் செயலறுத்தல்; அஃதாவது உலகப்பொருள்களைச் சுட்டியறிதலாகிய ஆன்மபோதத்தை ஒழித்தல் என்பது பொருள். உயிர்கள் ஐம்பொறிகள் முதலிய கருவிகளோடு கூடி நின்று அறியும் அறிவு, ஒன்றைச் சுட்டியறியும் சுட்டுணர்வு எனப்படும். இங்ஙனம் சுட்டுணர் வினால் அறியப்படும் பொருள்கள் அனைத்தும் அழியுந் தன்மையனவாம். ஆதலின் அவை அசத்து எனப்படுவன. ஐம்புலத் தொடக்கினின்றும் நீங்கிச் சுட்டிறந்து அறியும் அறிவு மெய்யுணர்வு எனப்படும். மெய்யுணர்வினால் அறியப் படுவதொன்றே சத்து எனப்படும் முழுமுதற் பொருளாகும்.

பொருள்தோறும் யாண்டும் நீக்கமறக்கலந்து நின்று என்றும் மாறுதுள்ள முழுமுதற்பொருளாகிய இறைவன், ஐம்புல அறிவாற் சுட்டியறியப்படுவான் அல்லன் என்பதனை, 'அனைத்துலகும் ஆய நின்னை ஐம்புலன்கள் காண்கிலா' எனவும்[1] 'ஐம்புலன்கள் நின்னைப் புணர்கிலாப் புணர்க்கையானே' எனவும்[2] வரும் தொடர்களால் அடிகள் தெளிவாகக் குறித்துள்ளார். இறைவனே ஆசிரியனாக எழுந்தருளி வந்து நற்பொருளை உபதேசிக்கப் பெற்ற வாதவூரடிகள், தமக்கு மெய்யுணர்வருளிய பெருமானைச் சுட்டுணர்வுக்கு எட்டாத பரம்பொருள் எனத் தெளிந்து தம் செயலற்று அவனருளே துணையாகக்கொண்டு பரவும் நிலையில் அமைந்தது இப்பதிகமாதலின், சுட்டறுத்தல் எனக் குறிக்கப் பெற்றது.

வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர்
பெருமானே யெனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப்
பள்ளந் தாழுறு புனலிற் கீழ்மேலாகப்
பதைத் துருகுமவர் நிற்க, என்னை ஆண்டாய்க்கு
உள்ளந்தாள் நின்று உச்சியளவும் நெஞ்சாய்
உருகாதால்; உடம்பெல்லாங் கண்ணாய் அண்ணா
வெள்ளந்தான் பாயாதால்; நெஞ்சம் கல்லாம்;
கண்ணிணையும் மரமாம் தீவினையினேற்கே.

எனவரும் திருப்பாடலில் பேரருளாளனாகிய இறைவனை உணர்ந்து போற்றுதற்கு நாம் பெற்றுள்ள கருவி கரணங்கள் போதிய ஆற்றல் வாய்ந்தவையல்ல என்பதை அடிகள் நன்கு புலப்படுத்தியுள்ளார்.

"கங்கைப் பெருவெள்ளம் தங்கிய விரிந்தசடையையுடையவனே! எருதினை ஊர்தியாகவுடையவனே! விண்ணோரும் தேவர்க்கெல்லாம் மேலாய் விளங்கும் பெருமானே! என இவ்வாறு நின் திருப்பெயர்களை அன்பர்கள் கூறக்கேட்ட அளவிலேயே பள்ளத்தில் விரைந்துபாயும் வெள்ளநீரைப் போன்று கீழ் மேலாகத் துடிதுடித்துப் புடைபட்டுருகும் மெய்யன்பர் பலரும் நின் திருவருளை எதிர்பார்த்து ஏக்கற்றிருக்க, அத்தகைய அன்பு சிறிதும் இல்லாத எளியேனை வலிய வந்து ஆட்கொண்டருளினாய். இங்ஙனம் அருளாளனாகிய நீ எனக்குச் செய்த பேருதவியை நன்றியுடன்

1. திருவாசகம் – திருச்சதகம் 76.
2. ,, 70.

நினைந்து உருகவேண்டுமாஞல், உள்ளங்கால்முதல் உச்சந் தலை வரையுள்ள என் உடம்பின் உட்பகுதியனைத்தும் நினைந்துருகுமியல்பினதாகிய நெஞ்சமாக அமையப்பெறு தல் வேண்டும். அத்தகைய நெஞ்சத்தின் கசிவாகிய அன் புடைமையினை யான் புலப்படுத்தவேண்டுமாஞல் உடம்பின் வெளிப்புறமெல்லாம் கண்களாக அமைந்து கண்ணீர் சொரியப்பெறுதல் வேண்டும். ஆஞல், யான் பெற்றுள்ள அணுவளவிற்ருகிய சிறிய நெஞ்சமும் வல்லென்ற கல்லின் தன்மை உடையதாதலின் உருகப் பெருதாயிற்று. தீவினை யேஞகிய எனக்குக் கிடைத்துள்ள இருகண்களுங்கூட அன்புநீர் சொரியும் தன்மையின்றி மரக்கண்களைப் போன்று உணர்ச்சியற்றனவாயின" என்பது இத் திருப்பாட்டின் பொருளாகும்.

சுட்டுணர்வுக்கு எட்டா இயல்பினஞகிய இறைவனது அருமையையும், அரியதில் அரிய அம்முதல்வன் மருவிய கருணைமலையாய் வெளிப்பட்டு ஐம்புலன்கள் ஆர ஆசிரியத் திருமேனி கொண்டு எழுந்தருளிவந்து அருள்புரிந்த எளிமைத் திறத்தையும், உயிராகியதாம், சுட்டுணர்வுடைய உலகம் போன்று அசத்தாகவோ சுட்டுணர்வுக்கு எட்டாத முதல்வனைப் போன்று சத்தாகவோ அமையாது, சத்தும் அசத்தும் ஆகிய அவ்விரண்டின்பாற்படாது தனித்துள்ள எளிமை நிலையையும்,

"வண்ணந்தான் சேயதன்று, வெளிதேயன்று,
அநேகன், ஏகன், அணு, அணுவிலிறந்தாய் என்று அங்கு
எண்ணந்தான் தடுமாறி இமையோர் கூட்டம்
எய்துமாறறியாத எந்தாய்! உன்றன்
வண்ணந்தான் அதுகாட்டி வடிவுகாட்டி
மலர்க்கழல்கள் அவைகாட்டி வழியற்றேனைத்
திண்ணந்தான் பிறவாமற் காத்தாட் கொண்டாய்
எம்பெருமான் என்சொல்லிச் சிந்திக்கேனே"

எனவும்,

"சிந்தனை நின் றனக்காக்கி நாயினேன்றன்
கண்ணிணை நின் திருப்பாதப் போதுக்காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கி ஐம்புலன்களார
வந்தனை ஆட்கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையேயுன்னைத்
தந்தனை செந்தாமரைக் காடனையமேனித்
தனிச்சுடரே இரண்டுமிலித்தனியே னேற்கே"

எனவும் வரும் திருப்பாடல்களில் அடிகள் தெளிவாகக் குறித்துள்ளமை அறியத்தக்கதாகும். "சத்தும் அசத்தும் ஆகிய இரண்டினையும் அறியுந்தன்மைத்தாய், அறிவிக்க அறிவதாகிய உபதேசியாய், நிலைபெற்ற சத்து, அசத்து இரண்டன்பாலும் அநுபவ அறிவுள்ளதாயுள்ள அதுவே சத்தும் அசத்தும் அல்லாத சதசத்தாகிய ஆன்மா" என்பர்.[1] ஆன்மாவுக்குரிய இவ்வியல்பினை 'இரண்டு மிலித்தனியனேன்' என்ற தொடரில் அடிகள் தெளிவாகச் சுட்டியுள்ளமை காணலாம். இவ்வாறே ஆசிரியர் மெய்கண்ட தேவரும் 'இருதிறன் அறிவுளது இரண்டலா ஆன்மா' என ஆன்மாவுக்குரிய சிறப்பிலக்கணம் உணர்த்தியுள்ளார். 'இரண்டு மிலித்தனியனேன்' என்ற திருவாசகத் தொடரை அடியொற்றி யமைந்ததே 'இரண்டலா ஆன்மா' எனவரும் சிவஞானபோதத் தொடராகும்.[2]

'ஆடுகின்றிலை' எனத் தொடங்கும் நான்காம் பதிகம் ஆத்தும சுத்தி என்னும் தலைப்பில் அமைந்ததாகும். ஆன்ம சுத்தியாவது, உயிர், பாச ஞானத்தாலும் பசு ஞானத்தாலும் அறியப்படாத முதல்வனை அவனருளிய சிவஞானத்தாலே தன்னறிவின்கண்ணே நாடிக்கண்டு அம்முதல்வன் அருள்வழி அடங்கி நிற்றலால் மனமாசு நீங்கித் தூய்மை பெறுதல். ஆன்மசுத்தி யென்பதற்கு அனுபவத்தழுந்தல் என முன்னோர் கருத்துரைப்பர். பதிஞானத்தாற் சிவபரம் பொருளைக்கண்ட காட்சி சலியாமைப் பொருட்டு அவ் விறைவன் செய்த பேரருளை நினைந்து அவனடிக்கு அன்புடையராய் ஆடுதல், என்புருகிப்பாடுதல், பாதமலர் சூடுதல் ஆகியவற்றை மேற்கொண்டு அவனருளில் அழுந்துதலே உயிர்கள் தூய்மை பெறுதற்குரிய நெறிமுறை என்பதனை,

ஆடுகின்றிலை கூத்துடை யான்கழற் கன்பிலை யென்புருகிப்
பாடுகின்றிலை பதைப்பதுஞ் செய்கிலை பணிகிலை பாதமலர்
சூடுகின்றிலை சூட்டுகின்றதுமிலை துணையிலி பிணநெஞ்சே
தேடுகின்றிலை தெருவுதோ றலறிலைசெய்வதொன் றறியேனே.

என இப்பதிகத்தின் முதற்பாடலில் அடிகள் தம் நெஞ்சிற்கு அறிவுறுத்தியிருத்தல் அறியத்தக்கதாகும். இங்ஙனம் இறைவனை நினைந்து போற்று முகத்தால் நெஞ்சந்தூய்மை

1. சிவஞானபாடியம், ஏழாஞ்சூத்திரம் 3-ஆம் அதிகாரம்.

2. சிவஞானபோதம், ஏழாஞ் சூத்திரம்.

பெறும் என்பதும், அத்தூய்மைதானும் இறைவனது திருவருளாலேயே உயிர்கள் பெறத்தக்கதென்பதும்,

‘நெஞ்சினைத் தூய்மை செய்து நினைக்குமா நினைப்பியாதே
வஞ்சமே செய்தியாலோ வானவர் தலைவனே நீ ’(4-23-9).

எனவரும் நாவுக்கரசர் வாய்மொழியாற் புலனும்.

‘அறிவிலாத எனைப்புகுந்து ஆண்டுகொண்டு அறிவதை யருளி, மேல்நெறியெல்லாம் புலமாக்கிய எந்தை’ எனவும், ‘நம் களவறுத்து நின்றாண்டமை கருத்தினுட் கசிந்துணர்ந் திருந்தேயும்........ பளகு அறுத்து உடையான் கழல் பணிந்திலை’ எனவும் வரும் தொடர்கள், ஆன்மா சிவனருளால் தூய்மை பெறுதலைச் சுட்டி நிற்பனவாம்.

‘இருகையானையை’ எனத்தொடங்கும் ஐந்தாம் பதிகம், ‘கைம்மாறு கொடுத்தல்’ என்னுந் தலைப்புடையதாகும். தன்னைச் சிவனிடத்திலே கொடுத்தல் என்பது இதன் பொருள். தன்னை முன்னம் நினைக்கத் தந்துதவிய இறைவனுக்கு ஆன்மா, தன் ஆற்றலற்ற நிலையினை யுணர்ந்து தன்னையே கைம்மாறாகக் கொடுத்து, இறைவன் அருள்வழி அடங்கி யொழுகும் நன்றியுணர்வினைப் புலப்படுத்தும் முறையில் அமைந்தது இப்பதிகமாதலின் கைம்மாறு கொடுத்தல் என்னும் பெயர்த்தாயிற்று. இறைவன் தமக்குப் புரிந்த பேரருளுக்குக் கைம்மாறாகத் தாம் ஒன்றும் செய்ய இயலாத எளிமை நிலையினை நினைந்திரங்கிய அடிகள், தம்மையே கைம்மாறாக ஏற்றுக்கொள்ளும்படி வேண்டிப் போற்றுகின்றார்.

‘என்னுளக்கருவை’ எனவும், ‘தொண்டனேற்கு உள்ளவா வந்து தோன்றினாய்’ எனவும், ‘யாவரும் சிந்தையாலும் அறிவருஞ் செல்வன், முந்தி என்னுள் புகுந்தனன்’ எனவும், ‘எட்டினோடு இரண்டும் அறியேனையே பட்டி மண்டபம் ஏற்றினை’ எனவும் இறைவனது கைம்மாறு வேண்டாக் கருணைத்திறத்தை நினைந்துருகிய வாதவூரடிகள், முட்டையினை விட்டு வெளியேறும் பறவைக்குஞ்சினைப் போன்று தம் யாக்கைத் தொடர்பினை உதறிவிட்டு இறைவனையே தஞ்சமெனப் பற்றியுய்யும் கருத்துடை[illegible] என்பது,

காணலாம் பரமே கட்கு இறந்ததொர்
வாணிலாப் பொருளே இங்கொர் பார்ப்பெனப்
பாணனேன்[1] படிற்றுக்கையை விட்டுனைப்
பூணுமாறறியேன் புலன் போற்றியே.

எனவரும் திருப்பாடலாற் புலனும். யாக்கையைத் துறந்து நின்கழலைப் பற்றிக்கொள்ளும் ஆற்றலில்லாத எளியேனை நின் அன்பர் கூட்டத்திற் கூவிப் பணிகொள்ளுதல் வேண்டும் என்பார், 'கொள்ளுங் கில்லெனை அன்பரிற் கூய்ப் பணி'[2] என இறைவனை வேண்டுகின்றார்.

'ஈசனே யென்னெம்மானே' எனத்தொடங்கும் ஆறும் பதிகம், அநுபோகசுத்தி என்னுந் தலைப்புடையதாகும். தன் வாழ்க்கை அநுபவங்களில் நேர்ந்த தவறுகளை யெண்ணி உள்ளங்கசிந்து இறைவனைப் போற்று முகத்தால் உயிர் தன் அநுபவங்களைத் தூய்மை செய்து கொள்ளுமாறு உணர்த்துவது இப்பதிகமாதலின் அநுபோக சுத்தியென்னும் பெயர்த்தாயிற்று. அநுபவம் தூய்மையடையவே அதனால் உயிர்க்கு இன்பம் மேலிடுதல் இயல்பாதலின் இதற்குச் 'சுகமேலீடு' எனப் பின்னுள்ளோர் கருத்துரைப்பர்.

'நான்யாது மொன்றல்லாப் பொல்லா நாயான
நீசனேனை ஆண்டாய்க்கு நினைக்க மாட்டேன்'

எனவும்,

'செய்வதறியாச் சிறுநாயேன் செம்பொற்பாத மலர்காணாப்
பொய்யர் பெறும் பேறத்தனையும் பெறுதற் குரியேன் பொய்யிலா
மெய்யர் வெறியார் மலர்ப்பாதஞ் சேரக்கண்டும் கேட்டிருந்தும்
பொய்யனேன் நான் உண்டுடுத்திங்கிருப்பதானேன் போரேறே'

எனவும்,

1. வாழ்நன் என்ற சொல் வாணன் எனத்திரிந்து நின்றாற் போன்று, பாழ்நன் என்பது பாணன் எனத்திரிந்து நின்றது. பாணனேன் என்புழி ஏன் தன்மையொருமை விகுதி. பாழ்நன் - வெறுவியன்.

2. '(நின்னையறிந்து பற்றிக்) கொள்ளும் ஆற்றலற்ற என்னை நின்னுடைய அன்பர் கூட்டத்திற் கூவியழைத்துப் பணிகொள்வாயாக' என்பது இத்தொடரின் பொருளாகும். இதற்கு இதுவே பொருளென்பது 'கேட்கவுங் கில்லேனே' (திருவாசகம் 33) என அடிகள் பிறண்டுங் கூறுதலாற் புலனும். கொள்ளுங்கில்லேனை என்பது, கொள்ளுங்கில்லெனை எனக் குறுகி நின்றது.

'மலமாக்குரம்பை இது மாய்க்க மாட்டேன் மணியே
யுனைக்காண்பான்
அலவா நிற்கும் அன்பிலேன்'

எனவும், 'ஊர்நாயிற் கடையானேன் நெஞ்சுருகாதேன் கல்லாமனத்தேன் கசியாதேன்' எனவும், 'சோரனேன் இங்கொருத்தி வாய்துடித்த வாறும் துகிலிறையே சோர்ந்த வாறும் முகங்குறுவேர், பொடித்த வாறும் இவையுணர்ந்து கேடென்றனக்கே சூழ்ந்தேனே' எனவும் அடிகள் தம் முடைய பிழைகளை நினைந்து வேசறுகின்றாராதலின், இங்ஙனம் அகங்கரைந்துருக வெளிவந்த இத்திருப்பதிகம், அநுபோக சுத்தி என்னுந் தலைப்புக்கு ஏற்புடையதாய்த் 'தேனைப்பாலைக் கன்னலின் தெளிவை யொளியைத் தெளிந் தார்தம் ஊனையுருக்கும் உடையானை' உள்கி உள்ளமுருகும் பெருங்காதலாகிய சுகமேலீட்டுக்குச் சிறந்த இலக்கிய மாயிற்று.

'தரிக்கிலேன் காயவாழ்க்கை சங்கராபோற்றி' எனத் எனத்தொடங்கும் ஏழாந்திருப்பதிகம், 'காருணியத்திரங்கல்' என்னுந் தலைப்புடையதாகும். காருணியமாவது இறைவன் உயிர்கள்பால் வைத்த பெருங்கருணைத்திறம். பாசத் தொடர்புகளை அறவேபோக்குவதாய்ச் சிவப்பேற்றுக்குக் காரணமாய் உள்ள இறைவனது திருவருள் பதியப்பெற்ற உயிர், முதல்வனது பெருங்கருணைத் திறமாகிய அதனையே நினைந்து போற்றும் முறையில் இரங்கி வேண்டுவதாக அமைந்தது இப்பதிகமாதலின், காருணியத்திரங்கல் எனக் குறிக்கப்பெறுவதாயிற்று. தம்முடைய இடர்களையெல்லாம் விரைந்து களைதல் வேண்டும் என்னும் துடிதுடிப்புடன் இறைவனது பேரருளை எதிர்நோக்கி அடிகள் இரங்கிப் போற்றும் முறையீடுகளாக இப்பதிகத் திருப்பாடல்கள் அமைந்துள்ளன.

போற்றியோ நமச்சிவாய புயங்கனே மயங்குகின்றேன்
போற்றியோ நமச்சிவாய புகலிடம் பிறிதொன்றில்லை
போற்றியோ நமச்சிவாய புறமெனைப் போக்கல்கண்டாய்
போற்றியோ நமச்சிவாய சயசய போற்றிபோற்றி.

எனத் திருவாதவூரடிகள் திருவைந்தெழுத்தா... மந்திரத்தை 'ஓம்' என்னும் பிரணவத்தினுடன் போ... உலகமுய்யத் திருவாய் மலர்ந்தருளிய அன்பின்திறம் நினைந்து போற்றத்தகுவதாகும். இங்ஙனம் இறை

பேரருளின் திறம் வெல்கவெல்க (சயசய) எனப் போற்றிப் பரவும் முறையீடாக அமைந்த இப்பதிகத்திற்குச் 'சிவனுடைய வெற்றிப் பாட்டிரங்கல்' எனக் கருத்துரைப்பர் பின்னுள்ளோர்.

'புணர்ப்பதொக்க' என்னும் முதற்குறிப்புடைய எட்டாந் திருப்பதிகம், 'ஆனந்தத் தழுந்தல்' என்னுந் தலைப்புடைய தாகும். இங்கு ஆனந்தம் என்றது, பொறிகளின் வாயிலாக உயிர்கள் நுகரும் உலக வாழ்வாகிய சிற்றின்பத்தையன்றி, மெய்யுணர்வின் வாயிலாக நுகரத்தக்க சிவானந்தமாகிய பேரின்பத்தினையேயாம். இதன் இயல்பினைப் 'பேரானந்தம்' எனவும் 'உலப்பிலா ஆனந்தத்தேன்' எனவும் 'அந்தமொன்றில்லா ஆனந்தம்' எனவும் அடிகள் விளக்கியுள்ளார். அழுந்தல் என்றது, தான் என்னும் உணர்வு அற அப் பேரின்பத்திற் படிதலை. திருவுடைய சிந்தையராகிய திருவாதவூரடிகள், தம்மை ஆண்டு கொண்டருளிய இறைவனை நோக்கி, "எம் பெருமானே, என்னை நின்னொடு பிரிவறக் கூட்டிக்கொள்வாய் போன்று என்னை அடிமை கொண்டு யான் நின்னையே தஞ்சமெனக்கொண்டு தொண்டு பூணும்வண்ணம் அருட்கண்ணால் நோக்கியருளினாய். என்னை நின்னுடன் இரண்டற இயைத்துக்கொள்ளுதற்கு இதுகாலமன்று எனக்கருதி நீ அதனைச் செய்யாது காலந்தாழ்த்தனையாயின், ஆண்டானாகிய நினக்கும் நின்னால் ஆட்கொள்ளப் பெற்ற அடிமையாகிய எனக்கும் உள்ள பண்டைத் தொடர்பு என்னாவது? அழகிய அருளாளனாகிய தலைவனே! நீ என்னை நின்னுடன் கூட்டிக்கொள்க; அல்லது கூட்டிக் கொள்ளாது தவிர்க (அதுபற்றி எனக்குக் கவலையில்லை). நின் திருவடிக்கண்ணே எனது அன்பு பொருந்தும்படி செய்வாயாக. அத்தகைய பேரன்பே மேலான சிவபோகத்தை அடியேற்கு அளிப்பதாகுக" எனப் போற்றும் நிலையில் அமைந்தது,

புணர்ப்ப தொக்க எந்தை யென்னை யாண்டுபூண நோக்கினாய்
புணர்ப்பதன்றி தென்றபோது நின்னொடென்னொ டென்னிதாம்
புணர்ப்பதாக அன்றிதாக அன்புநின் கழற்கணே
புணர்ப்பதாக அங்கணாள புங்கமான போகமே.

எனவரும் திருப்பாட்டாகும். இறைவன் திருவடிக்கண் செலுத்தும் அன்பொன்றே இந்திரன் முதலியோர் பதவிகளை எல்லாம் கீழ்ப்படுத்து எல்லா இன்பங்களுக்கும் மேலதாகிய

பேராவியற்கையாகிய பேரின்ப நிலையை[1] நல்க வல்லது என்பதனை,

> ' போகம்வேண்டி வேண்டிலேன் புரந்தராதி யின்பமும்
> ஏகநின் கழலிணையலா திலேன்என் எம்பிரான் '

எனவரும் தொடரில் அடிகள் தெளிவாகக் குறித்துள்ளார்.

' விச்சுக்கேடு ' எனத்தொடங்கும் ஒன்பதாம் பதிகம், 'ஆனந்த பரவசம்' என்னும் தலைப்புடையதாகும். மேற் பதிகத்திற் குறித்தவண்ணம் சிவானந்தமாகிய பேரின்பத் தில் தலைப்படக் கிடைத்த நல்லுயிர் மேன்மேலும் உலப்பிலா ஆனந்தமாகிய அதன்கண் ஈடுபட்டுத் தன்வசம் அழிதல் ஆனந்த பரவசம் ஆகும். பரவசம் என்பதற்குப் பிறர்வயப் படல் என்பது பொருள். ஆயினும் ஈண்டு அச்சொல் தன் வசம் அழிதல் என்ற கருத்தில் ஆளப்பெற்றுளது.[2] உயிர், கருவிகரணங்களின் சார்பு உண்மைபற்றுது சிவானந்தத்தில் தன்வசமழிந்து தோய்தலைக் குறித்தது இத்திருப்பதிக மாகும்.

' திருவாரூரிற் கோயில்கொண்டருளிய பிச்சைத்தேவ ஞகிய பெருமானே! இவ்வுலகிற் பொய்யாகிய பயிர்க்கு விதையில்லாமற்போதல் கூடாது என்னும் கருத்துடன் பொய்க்குரிய விதையாக என்னை இங்கே சேமித்துவைத்துள் ளாய். நின்பால் ஆராவிருப்புடைய மெய்யடியாரெல்லாரும் நின் திருவடியையடைந்து இன்புறுகின்ருர்கள். யானே நின் அருள் வெள்ளத்தில் அகப்பட்டும் அதனை நுகர்ந்தின் புறும் உணர்வின்றி எனது அறியாமையாலுளதாகிய அச்சங் காரணமாகத் துன்பத்துள் ஆழ்ந்துபோகின்றேன். ஆற்ற லற்ற யான் வேறு என் செய்யவல்லேன் ? நின் அருளாரின் பத்தை நுகர்தற்குரிய உபாயத்தை எளியேற்கு உரைத்தருள் வாயாக' எனத் திருவாதவூரடிகள் இறைவனை நோக்கி வேண்டுவதாக அமைந்தது,

> விச்சுக்கேடு பொய்க்காகா தென்றிங் கெனைவைத்தாய்
> இச்சைக்கானு ரெல்லாரும் வந்துன் ருள்சேர்ந்தார்
> அச்சத்தாலே யாழ்ந்திடு கின்றேன் ஆரூரெம்
> பிச்சைத் தேவா என்னுன் செய்கேன் பேசாயே.

1. ' ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த இன்பமே என்னுடையன்பே ' என்பர் பின்னும்.
2. திருவாசகம், திருச்சதகம், கதிர்மணி விளக்கம், பக்கப்

எனவரும் திருப்பாட்டாகும். இதன்கண் 'அச்சத்தாலே ஆழ்ந்திடுகின்றேன் நான் என்செய்கேன்' எனவரும் தொடர் அடிகளது பரவச நிலையைப் புலப்படுத்துவதாகும். இறைவனது பேரருளை நிரம்பப் பெற்ற அடிகள், 'மெய்யடியார்கள் எல்லோரும் நின் திருவடியைச் சார்ந்து பேரா இன்பத்தில் திளைத்து ஆனந்த பரவசராக அமர்ந்துள்ளார்கள். பொய்யனாகிய யான்மட்டும் புறமே போந்து தனித்து வருந்துகின்றேன்' என அருள்பெருதாரைப் போன்று அழுங்கிக் கூறுவனவாகிய திருப்பாடல்களையுடைய இத்திருப்பதிகம், அடிகள் ஆனந்த பரவசராய்த் தன் வசமழிந்த நிலையினை இனிது புலப்படுத்துவதாகும்.

'மாறிலாத மாக்கருணை வெள்ளமே' எனத்தொடங்கும் பத்தாந் திருப்பதிகம் 'ஆனந்தாதீதம்' என்னுந் தலைப்புடையது. ஆனந்தம் — மெய்யுணர்வினால் நுகரத்தகும் பேரின்பம். அதீதம் — கடந்தநிலை. அஃதாவது பேரின்பத்தின் உயர்ந்த எல்லை. இதனை 'அதீதநிலைக்கண்ணதாகிய சிவத்துவ விளக்கம் எனப்படும் பரமசுகம்' எனக் குறிப்பிடுபவர் சிவஞான முனிவர்.[1] இறைவனருளால் நிகழ்வது ஆனந்த விளக்கம். ஆனந்தத்தில் ஞானநிலையோடு தோய்தல் ஆனந்தத் தழுந்தல் என்றும், அத்தோய்வு முதிர முதிர ஆன்மா தன்வயமழிதல் ஆனந்த பரவசம் என்றும், இங்ஙனம் தன் வசம் அழிந்தநிலையில் ஏற்பட்ட அதித நிலையே ஆனந்தாதீதம் என்றும் கூறுவர்.[2] இந்நிலையில் காண்பான், காட்சி, காணப்படுபொருள் என்னும் வேறுபாடில்லையாகும். தன்வசமழிந்த நிலையில் ஒரோவழிப் பண்டைப் பாசத்தொடர்பால் 'இதனை யான் நுகர்கின்றேன்' எனக் கருதும் தன்னுணர்வு முற்படுதலுங்கூடும். அதீதமாகிய கடந்த நிலையில் இத்தகைய நினைவு நிகழ்தற்கு இடமில்லை. இத்தகைய அதீதத்தின் இயல்பினை 'எனைநானென்பதறியேன் பகலிரவாவதுமறியேன்' எனவரும் அடிகளது அநுபவ மொழியால் உணரலாம்.

அப்பனே யெனக்கமுதனே ஆனந்தனே அகம்
நெக அள்ளூறுதேன்
ஒப்பனே உனக்குரிய அன்பரில் உரியனாயுனைப்
பருக நின்றதோர்

1. சிவஞானபாடியம்.
2. திருவாசகம், திருச்சதகம், கதிர்மணி விளக்கம்.

துப்பனே சுடர் முடியனே துணையாளனே
தொழும்பாள ரெய்ப்பினில்
வைப்பனே எனைவைப்பதோ சொலாய் நையவையகத்
தெங்கள் மன்னனே.

எனவருந் திருப்பாடல், அடிகள் பெற்ற ஆனந்தாதீத நிலையினைக் குறித்தல் அறியத்தக்கதாகும்.

சு. நீத்தல் விண்ணப்பம்

திருப்பெருந்துறையில் ஆசிரியத் திருமேனிகொண்டு எழுந்தருளியிருந்து வாதவூரடிகளை ஆட்கொண்டருளிய சிவபெருமான், 'இன்னும் சிலநாள் இங்கிருப்பாய்' எனக் கூறி மறைந்தனனாக, ஆசிரியனது பிரிவாற்றாது மனங் கலங்கிய அடிகள், இறைவன் பணித்தவண்ணம் திருப்பெருந் துறையிலிருந்து திருவுத்தரகோசமங்கையை அடைந்து திருக்கோயிலிற்புகுந்தவர், தம்மை ஆண்டுகொண்டருளிய ஆசிரியத்திருமேனியைக் காணப் பெறாராய்ப் பெரிதும் வருந்தி, 'உத்தரகோசமங்கைக்கு அரசே, அடியேனைக் கை விட்டு விடுவாயோ?' என நெஞ்சம் நெக்குருகி நின்று நீத்தல் விண்ணப்பம் என்னும் பனுவலைப் பாடிப் போற்றினர் என்பதும், அந்நிலையில் உத்தரகோசமங்கைப்பெருமான் அடிகட்கு ஆசிரியத் திருக்கோலத்தைக் காட்டி அருள்புரிந்தான் என்பதும் வரலாறு. இச்செய்தி,

'உத்தரகோச மங்கை யூரினிற் சென்று புக்கார்'

எனவும்,

'சடையவர் கோயிலெய்தித் தம்மைவந் தடிமைகொண்ட
வடிவது காணாராகி மயங்கி வெய்துயிர்த்து வீழ்ந்து
'விடுதிகொல்என்னை' என்று, நீத்தல் விண்ணப்பம்என்னும்
தொடைகெழு பாடல் ஓதக் காட்டினார் தொல்லைமேனி'

எனவும் வரும் திருவாதவூரடிகள் புராணத்தால் அறியப் படும்.

நீத்தல் விண்ணப்பமாகிய இப்பனுவல், கட்டளைக் கலித் துறையாக அமைந்த ஐம்பது திருப்பாடல்களை உடையது; ஒரு பாடலின் இறுதி அடுத்த பாடலுக்கு ஆதியாக அமையக் 'கடையவனேனை' எனத் தொடங்கி 'அமுதுண்ணக்கடையவனே' என மண்டலித்து முடிந்துளது. 'நின் திருவடிக்குச் தொண்டுபட்ட என்னைக் கைவிட்டு விடுதலாகாது' வாதவூரடிகள் ஆண்டவனை நோக்கி வேண்டிக்கொள்

முறையில் அமைந்தமையால், இது ‘நீத்தல் விண்ணப்பம்’ என்னும் பெயர்த்தாயிற்று. இதன் முதல் இருபது பாடல் களிலும் நாற்பத்தெட்டாம் பாடலிலும் ‘உத்தரகோச மங்கைக்கு அரசே’ என இறைவனை அடிகள் அழைத்துப் போற்றுதலைக் கூர்ந்துநோக்குங்கால் நீத்தல் விண்ணப்ப மாகிய இப்பதிகம் திருவுத்தரகோசமங்கையில் அருளிச் செய்யப் பெற்றதென்பது இனிது புலனும்.

நீத்தல் விண்ணப்பத்திற்குப் ‘பிரபஞ்ச வைராக்கியம்’ என முன்னோர் கருத்துரை வரைந்துள்ளனர். ‘பிரபஞ்ச வைராக்கியம்’ என்னும் இத்தொடர்க்கு ‘உலக வாழ்க்கையிற் பற்றறுத்தலாகிய உறுதிப்பாடு’ என்பது பொருள். திருப் பெருந்துறையில் இறைவன் அந்தணனாகி வந்து அழகமர் திருவுருக்காட்டி ஆண்டருளிய பின்னர், உலகத்தொடர்பினை அறவே உதறிவிட்டு இறைவனோடு பிரிவறக்கலத்தலாகிய பேரின்ப நிலையினைத் தலைப்பட்டு இன்புறமுந்தும் அடிகளார், இறைவன் ‘இன்னும் சின்னாள் இங்கு இருத்தி’ எனக் கூறி மறைந்தனனாக, அப்பிரிவினைத் தினைத்தனைப்பொழுதும் தரித்திருக்க வொண்ணாராய், உலக வாழ்க்கையில் தமக்குள்ள வெறுப்பும், முதல்வன் திருவடியினைத் தலைப்படுதற்குரிய பேரன்பினைப்பெறுதல் வேண்டுமென்னும் பெருவேட்கையும் விளங்க அருளிய பனுவல் நீத்தல் விண்ணப்பம் ஆதலின் இதற்குப் ‘பிரபஞ்ச வைராக்கியம்’ என முன்னோர் கருத் துரை வரைந்தனர். ஆண்டவனது திருவடியைத் தலைப்படு தற்குச் சாதனமாகிய மெய்யன்பினது வியக்கத்தக்க திறத் தினை விளக்கும் திருச்சதகத்தினையடுத்து அதன் பயனாக உலக வாழ்க்கையிற் பற்றொழிவின் உறுதிப்பாட்டினைப் புலப் படுத்தும் நீத்தல் விண்ணப்பம் அமைந்திருத்தல் கூர்ந்து உணரத்தக்கதாகும்.

‘யாவர்க்குங் கடையேனாகவுள்ள எளியேனை நினது பெருங்கருணைத் திறத்தால் உளங்கலந்து நின்று ஆண்டு கொண்டருளிய ஏறூர்ந்த செல்வனே, என்னை இத்துயர் நிலையிற் கைவிட்டு விடுவாயோ? வளமிக்க புலியின் தோலை உடையாகக் கொண்டவனே, நிலைபெற்ற திருவுத்தரகோச மங்கையைத் தலைநகராகக் கொண்டு வீற்றிருந்தருளும் வேந்தனே, செஞ்சடைக் கடவுளே, அடியேன் பெரிதுந் தளர்வுற்றேன்; எம்பெருமானே, தளர்ச்சி நீக்கி அடியேனைத் தாங்கிக் காத்தருளவாயாக’ என்பார்,

கடையவ னேனைக் கருணையி னுற்கலந் தாண்டுகொண்ட
விடையவ னேவிட் டிடுதிகண் டாய் விறல்வேங்கையின்தோல்
உடையவ னேமன்னும் உத்தர கோசமங் கைக்கரசே
சடையவ னேதளர்ந் தேனெம்பி ரானென்னைத் தாங்கிக்
கொள்ளே.

எனத் திருவாதவூரடிகள் உத்தரகோசமங்கைப் பெருமானைப் பரிந்து வேண்டுகின்றார். இதன்கண் 'விட்டிடுதி' என்னும் இகரவீற்று முன்னிலை யொருமை எதிர்கால வினைச்சொல் 'கண்டாய்' என்னும் முன்னிலையசையினைப்பெற்று 'விட்டு விடுவாயோ' என ஒலி வேற்றுமையால் வினவாக நின்று 'விட்டு விடாதே' என்ற பொருளைத் தந்தது. இச்சொற்கு இதுவே பொருள் என்பதனை, 'விடுதிகொல் என்னையென்று நீத்தல் விண்ணப்பமென்னுந் தொடைகெழு பனுவல் ஓத' எனவரும் திருவாதவூரடிகள் புராணச் செய்யுளில் கடவுள் மாமுனிவர் தெளிவாகக் குறித்துள்ளமை காண்க.

நீத்தல் விண்ணப்பம் என்ற தொடர்க்கு, உலகப்பற்றை நீத்தற் பொருட்டு இறைவனிடத்து வேண்டிய வேண்டுகோள் எனவும், 'என்னை நீத்து விடாதே' என இறைவனை நோக்கிச் செய்துகொண்ட வேண்டுகோள் எனவும் இருவகையாக நம் முன்னோர் பொருள் கொண்டுள்ளார்கள் எனத் தெரிகிறது. இந்நுட்பம்,

'மித்தையுலகினை யகற்றி, விடாமல் எனை ஆண்டருளென்
றத்தர் அறிந்திட நீத்தல் விண்ணப்பம் அறைந்ததுவாம்'

எனவரும் திருவாசக உண்மையால் புலனாதல் காணலாம். இத்தொடர், 'மித்தை உலகினை அகற்றி எனை ஆண்டருள்' எனவும், 'விடாமல் எனை ஆண்டருள்' எனவும் இயைந்து இப்பனுவலில் அமைந்த இருவகை விண்ணப்பங்களையும் ஒருங்கு சுட்டிநிற்றல் அறியத்தக்கதாகும்.

எ. திருவெம்பாவை

திருவாதவூரடிகள் திருவண்ணாமலையினை யடைந்து இறைவனை வழிபட்டு அத்தலத்தில் தங்கியிருக்கும் நிலையில் மார்கழித் திங்கள் வந்ததாக, இளமகளிர் வைகறைப் பொழுதில் துயிலுணர்ந்தெழுந்து ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதியாகிய இறைவனது பொருள் புகழினைப் போற்றிசைத்துத் தம்மையொத்த மகளிரைத் துயி

லெழுப்பிக் கொண்டு சென்று பொய்கையில் நீராடி அண்ணு மலையானை அன்பினுற் பாடிப் போற்றி மார்கழி நீராடலாகிய நோன்பினைச் சிறப்புறக் கொண்டாடினர் எனவும், அவ்வழ கிய காட்சியைக் கண்ட மணிவாசகப் பெருமான், அம்மகளிர் வைகறைப் பொழுதில் ஒருவரை யொருவர் எழுப்பிச் சென்று ஆர்த்த பிறவித்துயர் கெடப் பூத்திகழும் பொய்கை யில் நீராடி இறைவனை யேத்தி வழிபடும் நிலையில் அம்மக ளிர் கூறும் உரைகளாக இத் திருவெம்பாவையைப் பாடி யருளினுரெனவும் கடவுள் மாமுனிவர் கூறுவர்.*

திருவெம்பாவை இருபது பாடல்களை உடையது. இப்பாடல்கள் யாவும் மகளிர் ஒருவரை யொருவர் நோக்கி 'எம்பாவாய்' என அழைத்துக் கூறும் முறையில் 'பாவைமார் ஆரிக்கும் பாடலாக' அமைந்திருத்தலால் திருவெம்பாவை யென்பது இதற்குரிய பெயராயிற்று. பாவை என்னும் ஐகார வீற்றுப்பெயர், 'ஐ ஆயாகும்' (தொல்-விளிமரபு. 4) என்னும் விதிப்படி 'பாவாய்' என விளியேற்றது. மகளிர் ஒருவரை யொருவர் துயலுணர்த்தி அழைத்து நீராடி இறைவனைப் போற்றும் முறையில் அமைந்த இப்பனுவலைப் 'பாவைப் பாட்டு' என வழங்குவர் பேராசிரியர். "தரவின்ருகித் தாழிசை பெற்றும்" (தொல்-செய்யுளியல் 149) எனவரும் சூத்திரவுரையில் "பாவைப் பாட்டும் அம்மானைப் பாட்டும் முதலாயின நான்கடியின் இகந்து வருவனவாயின." எனப் பேராசிரியர் குறித்துள் ளமை திருவாசகத்திலுள்ள திருவெம்பாவை, திருவம் மானை ஆகிய வைப்பு முறையினை யொட்டி அமைந்திருத்தல் காணலாம். பெரும்பற்றப்புலியூர் நம்பியும் 'திருந்து பூவல்லி யுந்தி தோணுேக்கம் சிறந்த பாவை' என இத்திருவெம்பா வையைப் 'பாவை' என்ற பெயராலேயே குறித்துள்ளார். திருமாலடியாராகிய ஆண்டாள் அருளிய பனுவல் திருப் பாவை என வழங்கப்பெறுதல் இப்பழைய வழக்கினை நினைவுபடுத்துவதாகும்.

இளமகளிர் இசையுடன் பாடியாடும் பல்வரிக் கூத்தாக அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார வுரையிற் காட்டியவற் றுள், அம்மானை, நல்லார்தந் தோள் வீச்சு (தோணுேக்கம்),

* திருவாதவூரடிகள் புராணம், திருவம்பலச்சருக்கம், செய் ள் 383-385.

சாழல், உந்தி, அவலிடி (பொற்சுண்ணம்), கொய்யு முள்ளிப்பூ (பூவல்லி) என்பவற்றுக்குரிய பாடல் வகைகள் திருவாசகத்தில் அமைந்துள்ளன. இவையேயன்றி, கோத் தும்பி, தெள்ளேணம், பொன்னூசல், குயிற்பத்து முதலிய மகளிர் விளையாட்டிற்குரிய இசைப்பாடல்களும் உள்ளன. இங்ஙனம் மணிவாசகப்பெருமான் இறைவனது பொருள்சேர் புகழை விரித்துரைக்கும் திருப்பாடல்களை விளையாடும் பருவத்து இளமகளிர் கூற்றில் வைத்து அருளிச் செய் துள்ளார்.

> " மனைகள் தொறும் இறைவனது தன்மைபாடிக்
> கருந்தடங்கண்ணார் கழல் பந்து அம்மானைப் பாட்டயருங்
> கழுமலமே "

எனவும்,

> " கருகு குழல் மடவார்கடி குறிஞ்சியது பாடி
> முருகன்னது பெருமைபகர் முதுகுன்றடைவோமே "

எனவும் வரும் ஆளுடைய பிள்ளையார் தேவாரத் தொடர் களைக் கூர்ந்து நோக்குங்கால், பண்டை நாளில் தமிழகத்தில் வாழ்ந்த இளமகளிர் இயலும் இசையும் பயின்று இறை வனைப் போற்றுதற்குரிய சமய ஒழுக்கங்களிற் சிறப்புற்றி ருந்தனர் என்பது நன்கு புலனும். காரைக்காலம்மையார், மணலாற் சிறு வீடு கட்டி விளையாடும் இளம் பருவத்திலேயே இறைவனது பொருள் சேர் புகழைப் போற்றிப் பயின்ற திறத்தை,

> ' வண்டல் பயில்வனவெல்லாம் வளர்மதியம் புனைந்தசடை
> அண்டர்பிரான் திருவார்த்தை யணைய வருவன பயின்று '

எனச் சேக்கிழாரடிகள் பாராட்டிப் போற்றியுள்ளார். மேல் எடுத்துக் காட்டிய குறிப்புக்களால் இளமகளிர் விளையாடல் களுள் ஒன்ருகிய பாவைப்பாட்டு முறையிலேயே இத்திரு வெம்பாவையும் இயற்றப் பெற்றிருத்தல் வேண்டுமென்பது இனிது புலனும்.

திருவெம்பாவை இருபது பாடல்களை யுடையது. இதன்கண் உள்ள பாடல்கள் யாவும் நான்கடிக்கு மேற்பட்டு எட்டடியால் இயன்ற கொச்சக வொருபோகு எனப்படும்.* இவற்றை இயற்றரவிணைக் கொச்சகக் கலிப்பா என வழங்கு

* தொல் – செய்யுளியல் 149-ஆம் சூத்திரம் பேராசிரியர் உரை.

வர் பிற்காலத்தார்.* திருவெம்பாவைக்குச் 'சத்தியை வியந்தது' என முன்னோர் கருத்துரை கூறுவர். சத்திகளாவார் அம்பிகை, கணாம்பிகை, கௌரி கங்கை, உமை, பராசத்தி, ஆதி சத்தி, ஞான சத்தி, கிரியாசத்தி என ஒன்பதின்மரென வும், மனோன்மனி, சர்வபூததமனி, பலப்பிரமதனி, பலவிகர்ணி, கலவிகர்ணி, காளி, ரௌத்திரி, சேஷ்டை, வாமை என ஒன்பதின்மரெனவும் வெவ்வேறு பெயரிட்டு வழங்குவர். உலகத் தோற்றத்திற்குக் காரணராகிய சத்திகள் ஒன்பதின் மரும் படைப்பு முதலிய தொழில்களை நிகழ்த்தல் கருதி ஒருவரை யொருவர் தூண்டிக் கிளர்ந்தெழச் செய்து தொழிற் படும் இயல்பினை உணர்த்துவது இத்திருவெம்பாவை என்றும், இதன் முதலிலுள்ள எட்டுத் திருப்பாடல்களும் மகளிர் ஒருவரையொருவர் துயிலெழுப்பும் நிலையில் அமைந் திருத்தலால் அங்ஙனம் எழுப்பப்பெற்ற மகளிர் எண்மரும் அவர்களை முதன் முதல் எழுப்பத் தொடங்கியவள் ஒருத்தி யும் ஆக ஒன்பதின்மர் தம்முள் உரையாடும் முறையில் அமைந்தது இப்பனுவல் என்றும், நவசத்திகளின் ஆற்றல் தொழிற்படும் இயல்பினைச் சுட்டிய இத்திருவெம்பாவை ஐந்தொழிற் றிருக்கூத்தியற்றும் அம்பலவாணர்க்குரிய மார் கழித் திருவாதிரைத் திருவிழாவிற் பத்து நாட்களிலும் தில்லைக் கூத்தன் திருமுன்னர் முறையே ஓதி வழிபடப் பெறும் சிறப்புடைத் தாயிற்றென்றும் கூறுவது மரபு.

மக்களுக்குரிய ஓராண்டு வானோர்க்கு ஒரு நாள். ஆடி முதல் மார்கழி முடியவுள்ள ஆறு திங்களும் இரவு; தை முதல் ஆனி முடிய ஆறு திங்களும் பகல். இவ்வகையில் மார்கழித் திங்கள் வானோர்க்குரிய வைகறைப் பொழுதாகக் கருதப்பெறுகிறது. கூத்தப்பெருமான் திருவுருவில் திகழும் திருவாதிரையானது, நிறைமதியுடன் கூடி விளங்கும் சிறப் புடைய திருநாளாக அமைவது மார்கழித்திங்களில் ஆதலின், மார்கழித் திருவாதிரைத் திருநாள் சிவபெருமானுக்குரிய திருநாளாகக் கொண்டாடப்பெற்று வருகிறது. இத்திரு விழாவின் சிறப்பினை,

"கனைக்கும் அதிர்குரல் கார்வானம் நீங்கப்
பனிப்படு பைதல் விதலைப் பருவத்து

* 'இப்பா கூன் பெற்று வந்த எட்டடிப் பஃறொடை வெண்பா' எனச் சீகாழித் தாண்டவராயர் உரையிற் காணப்படுங் குறிப்பு பொருத்தமுடையதாகத் தோன்றவில்லை.

ஞாயிறு காயா நளிமாரிப் பிற்குளத்து
மாயிருந் திங்கள் மறுநிறை யாதிரை
விரிநூ லந்தணர் விழவு தொடங்கப்
புரிநூ லந்தணர் பொலங்கலம் ஏற்ப
வெம்பா தாக வியனில வரைப்பென
அம்பா வாடலின் ஆய்தொடிக் கன்னியர்
முனித்துறை முதல்வியர் முறைமை காட்டப்
பனிப்புலர் பாடிப் பருமண லருவியின்
ஊதை யூர்தர வுறைசிறை வேதியர்
நெறிநிமிர் நுடங்கழல் பேணிய சிறப்பிற்
றையல் மகளிர் ஈரணி புலர்த்தர
வையை நினக்கு மடைவாய்த்தன்று"

(பரிபாடல் 11. 74 - 87)

என ஆசிரியர் நல்லந்துவனுர் குறித்துள்ளார்.

மேகம் பெய்யும் பருவத்தில் மழை பெய்து முடித்தமையால் தனது கடுங்குரல் நீங்கப் பனி மிகுதலால் குளிரால் நடுங்குதலையுடைய முன்பனிப் பருவம் வந்து எய்தியது. வெயில் கடுமையாகப் பரவாத மழையின் கடைப் பகுதியாகிய மார்கழி மாதத்தில் சந்திரன் முழுவதும் நிறைந்து மறுவுடன் விளங்கும் உவா நாளாகிய திருவாதிரைத் திருநாளின்கண் விரிநூலாகிய ஆகமங்களைக் கற்றுவல்ல அந்தணர்கள் திருவாதிரைக்குத் தெய்வமாகிய இறைவனுக்குத் திருவிழாவைத் தொடங்கிச் செய்தனர். அவ்விழாவில் முப்புரி நூலணிந்த வேதியர்கள் மக்கள் தானமாகத் தரும் பொருளை யேற்று மகிழ்ந்தனர். வளையலை யணிந்த கன்னிப் பெண்கள், 'இவ்வுலகம் வெயிலாலும் பனியாலும் வெதும்பாது மழையாற் குளிர்வதாகுக' என இறைவனை வேண்டி அம்பா வாடலாகிய நோன்பினை மேற்கொண்டு தவமுது மகளிர் அறிவுறுத்த நெறியிலே நின்று, பனிபெய்யும் விடியற் காலத்திலேயே பருமணலையுடைய வையை யாற்று நீரிலே முழுகி யெழுந்து குளிரும் வாடைக்காற்று வீசுவதால் வையைக் கரைக்கண் வேதியர் வளர்த்த வேள்வித் தீயைப் பேணிய சிறப்புடனே தமது ஈர அணியையும் புலர வைத்தனர். மையோலை பிடித்துக் கல்வி பயிலும் இளஞ் சிறுர்களுக்குப் போட்டியாக விடியற் காலையிலெழுந்து தாம் கற்ற கல்வியின் வழியொழுகும் நோன்பாகிய இவ்விளையா டிற் கலந்து கொண்ட கன்னிப் பெண்கள், தம் தாயின் கத்தே நின்று தமக்குரிய தவமாகிய தைந் நீராடலைச் தனர். இங்ஙனம் கடைச் சங்க காலத்தில் மதுரைமா

தில் வையை யாற்றின் கரையிலே நிகழ்ந்த அம்பா ஆடல் நிகழ்ச்சியை ஆசிரியர் நல்லந்துவனுர் பதிஞேராம் பரிபாட லில் சொல்லோவியமாகப் புனைந்துரைத்துள்ளார்.

"மையோலை பிடித்த இளைய புலவரது விளையாட்டிற்கு மாருயெழுந்து காமக் குறிப்பில்லாத விளையாட்டைச் செய் கின்ற ஆயத்தினராகிய கன்னிமகளிர் நீர்க்கண் தம்புலன்கள் அடக்கிச்செய்யுந் தவத்தை முன்னைப் பிறப்புக்களில் அடுத் தடுத்துச் செய்ததன் பயன்தானே தம் தாயின் அருகேநின்று தவமாகிய தைந்நீராடலை நின்கட் செய்யப்பெற்றனர்? வையையே கூறுவாயகக" என வையையை நோக்கி வினவு வதாக அமைந்தது,

'மையாட லாடல் மழபுலவர் மாறெழுந்து
பொய்யாட லாடும் புணர்ப்பி னவரவர்
தீயெரிப் பாலுஞ் செறிதவமுன் பற்றியோ
தாயருகா நின்று தவத்தைந்நீ ராடுதல்
நீ யுரைத்தி வையை நதி' (பரிபாடல் 11. 88–92)

என்பதாகும். இங்கெடுத்துக் காட்டிய பதிஞேராம் பரிபாடல், மார்கழி மாதத்துத் திருவாதிரையை யொட்டி நிகழும் மகளிர் நோன்பாகிய தைந் நீராடலின் சிறப்பினை விரித்துரைப்பதாகும். இப்பாடலில் 'குளம்' என்றது மார்கழி மாதத்தை. திருவாதிரை நிறைமதி நாளாங்கால் ஆதித்தன் (ஞாயிறு) பூத்தடத்தின்கண் (புனர் பூசத்தில்) நிற்கு மாதலின், அதனையுடைய மார்கழி மாதம் குளமெனப்பட் டது" என்பர் பரிமேலழகர். மார்கழித் திருவாதிரையில் தொடங்கித் தைத்திங்களில் நிறைவுபெறும் மகளிர் நோன் பானது, சங்க காலத்தில் தைந் நீராடல் எனவும், பிற்காலத் தில் மார்கழி நீராடல் எனவும் வழங்கப் பெற்றுள்ளது. இதனை மணிவாசகப் பெருமானும் திருமாலடியாராகிய நாச்சியாரும் மார்கழி நீராடல் என்றே வழங்கியுள்ளார்கள். நீராடலாகிய இந் நோன்பின் நிறைவு தைத்திங்களில் முற்றுப் பெறுதல் கருதித் தைந் நீராடல் எனச் சங்கப் புல வர்களும், நோன்பின் தொடக்கம் மார்கழியில் நிகழ்தல்பற்றி மார்கழி நீராடல் எனப் பின் வந்த பெருமக்களும் குறிப்பிட் டுள்ளார்கள். எனவே சங்கச் செய்யுட்களிற் குறிக்கப் பட்டுள்ள தைந் நீராடலும், திருவெம்பாவையிலும் திருப் பாவையிலும் குறிக்கப்பெற்ற மார்கழி நீராடலும் ஒரு நோன்பினையே குறித்து வழங்கும் இரு வேறு பெயர்கள்

என்பது பதினொராம் பரிபாடலால் இனிது புலனாதல் காணலாம்.

சிவபெருமானுக்குரிய திருவாதிரைத் திருநாளையே முதன்மையாகக் கொண்டு இந் நீராடல் நோன்பு நிகழும் என்பது,

'மார்கழித்திங்கள் மதி நிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்'

எனவரும் திருப்பாவையால் உய்த்துணரப்படும். கன்னியர் பலரும் கோலம் புனைந்து ஒருங்கு கூடிச் சென்று நீராடு தலும், பிறர் வீடுகளிற் பாடிச் சென்று ஐயமேற்றுத் தாம் பெற்ற பரிசிற் பொருள்களை வறியோர் பலர்க்கும் வழங்கி மகிழ்தலும், பாவையைச் சிறிய குழமகனைப் பேணிச் சீராட்டி அப்பிள்ளைக்கு மற்றொருத்தியின் பாவையை மண மகளாக்கிக் கோடற்குச் சிறு சோறு சமைத்து இளமகளிர் குழுவுடன் விருந்துண்டு மகிழ்தலும் சங்க காலத்தில் நிகழ்ந்த தைந் நீராடலிற் காணப்படும் சடங்குகளாகும். இவற்றுட் சில தைப்பொங்கலை யடுத்துக் கன்னிப் பொங்கல் நாளில் தமிழ் நாட்டிற் சில விடங்களில் இள மகளிரால் மேற்கொள்ளப்பெற்று வருதலை இக்காலத்துங் காணலாம். தைந் நீராடலாகிய இந்நோன்பின்கண் கன்னிப் பெண்கள் அழகிய பாவையினை அமைத்துச் செய்யும் சடங்குண்மை கருதி இந்நோன்பு 'அம்பாவாடல்' எனப் பெயரெய்தி யிருத்தல் வேண்டும். 'அம்பா – தாய். தாயோடு ஆடப் பெறுதலின் இப்பெயர்த்தாயிற்று' என்றார் பரிமேலழகர்.

"வையத்து வாழ்வீர்காள் நாமும் நம்பாவைக்குச்
செய்யுங் கிரிசைகள் கேளீரோ"

எனவும்,

"நாங்கள் நம் பாவைக்குச் சாற்றி நீராடினால்"

எனவும்,

"பிள்ளைகளெல்லாரும் பாவைக்களம் புக்கார்"

எனவும் வரும் திருப்பாவைத் தொடர்களால் இந்நோன்பில் பாவைக்குச் செய்யும் சடங்குண்மை புலனாம்.

இங்ஙனம் கன்னியர் நீராடி நோன்பு நோற்றலின் நோக்கம், நாடுமலிய மழை பெய்து நோயும் துன்பமும் நீங்கி இவ்வுலகம் இன்புறுதல் வேண்டும் என இறைவனை

வேண்டி அவனது திருவருளைப் பெறுதற் பொருட்டேயாம். தமிழ் நாட்டுச் சிறுமியர்களின் இவ்வுயர்ந்த அருள் நோக்கத்தினை,

'வெம்பாதாக வியனில வரைப்பென
அம்பா வாடலின் ஆய்தொடிக் கன்னியர்'

எனவரும் தொடரில் ஆசிரியர் நல்லந்துவனார் அழகுற விரித்துரைத்துள்ளார். உலகில் அறம் பொருள் இன்பங்களாகிய ஒழுகலாறுகள் தடையின்றி நிகழ்தற்கு உறுதுணையாவது மழை. மழையின்றேல் மாநில வாழ்க்கையில்லை. இறைவனது அருளின் நீர்மையாகிய மழையினைப் பெய்விக்கும் ஆற்றல் பெறுதற்குரியார் ஒருமை மகளிரே. ஆதலால் 'உலகம் மழையாற் குளிர்வதாக' என உலகநலங் கருதி நோன்பியற்றும் கடமையும் உரிமையும் அம்மகளிர்க்கே யுரியவாயின. ஒருமை மகளிர்க்குரிய இக்கடமை யுணர்வினை மணிவாசகப் பெருமான்,

முன்னிக்கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை யாளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை யாளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கும்
முன்னி யவள் நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய்.

எனவரும் திருவெம்பாவைச் செய்யுளால் எழில் பெற விளக்கியுள்ளார். இவ்வாறே ஆண்டாள் அருளிய திருப்பாவையிலும்,

'ஓங்கி யுலகளந்த யுத்தமன்பேர் பாடி
நாங்கள் நம் பாவைக்குச் சாற்றிநீ ராடினால்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள்மும் மாரிபெய்து
ஓங்கு பெருஞ்செந்நெ லூடு கயலுகளப்
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்பத்
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்கக் குடம்நிறைக்கும் வள்ளல்பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய்."

என 'உலகம் மழையாற் பல வளமும் பெறுக' என வாழ்த்துங் குறிப்புப் புலனாதல் காணலாம்.

சங்க நூல்களில் பாவையினை வைத்துச் செய்யும் சடங்கு முதலியன தைந் நீராடல் நோன்பிற்குரியவாகச்

சொல்லப்பட்டன. மகளிர்க்குரியனவாகச் சொல்லப்பட்ட அச்சிறிய சடங்குகளை விரித்துரையாமல், இருபாலாரும் இறைவனது திருவருள்பெற்று உய்யும் நோக்குடன் ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதியாகிய இறைவன் ஒருவனையே மனமொழி மெய்களால் இறைஞ்சிப் போற்றும் ஒருமைநிலை வளர இளமகளிர் விடியற் காலையிலேயே துயிலுணர்ந்தெழுந்து தம் தோழியர்களையும் எழுப்பிக் கொண்டு பொய்கையில் நீராடி இறைவனது பொருள்சேர் புகழை வாயாரப் பாடிப் போற்றும் முறையில் திருவாதவூரடிகள் இத்திருவெம்பாவையை அருளிச் செய் துள்ளார்.

இறைவனருளிய மெய்யுணர்வினால் மனமாசு நீங்கப் பெற்ற செம்புலச் செல்வராகிய அடியார்கள், ஆணவ மல மாகிய பேரிருளில் அழுந்தியுறங்கும் உயிர்களை அவ் வுறக் கத்தை விட்டு எழுப்பிப் 'பிறவி வெப்பந்தணிய இறைவனது திருவருளாகிய ஆனந்த வெள்ளத்தில் மூழ்கி யின்புற வருக' என அழைக்கும் முறையில் அமைந்தது, இத்திருவெம் பாவை யெனக் கூறுவர் பெரியோர்.

'மல விருளுற் றுறங்காமல் மன்னுபரிபாகர் அருள்
செலமுழுக வருகவெனச் செப்பல் திருவெம்பாவை'

எனவரும் திருவாசக வுண்மையில் இக்கருத்து இனிது விளக்கப்பெற்றிருத்தல் அறியத்தக்கதாகும்.

வைகறையில் துயிலெழுந்து இறைவனது மெய்ப் புகழை நெஞ்சநெக்குருக நினைந்து போற்றிவரும் இள மகளிர், தம் தோழியர்பால் வைத்த அன்பும் இறைவன் திரு வடிகளில் தாம் வைத்த பத்தித் திறமும் வளர ஒருவரை யொருவர் துயிலுணர்த்தும் முறையும், நகைச்சுவை பொருந்த உரையாடும் நிலையிலும் இறைவன்பாற் கொண்ட அன்பின் திறமே மேம்பட இனிமையாகப் பேசும் மொழித் திறமும், பொழுது புலர்வதன்முன் பூத்திகழும் பொய்கை குடைந்தாடி அண்ணாமலையான் அடிக்கமலஞ் சென் றிறைஞ்சி அம்முதல்வனைப் பண்ணார் தமிழாற் பாடிப் போற் றும் பாங்கும், உலகம் வெயிலாலும் பனியாலும் வெம்பாது நலம்பெற வேண்டி உலகம் ஈன்ற அன்னையாகிய இறைவி யின் திருவருளே யென்ன மழையைப் பெய்யப் பணிக்கும் மனவளமும், இறைவன்பால் அன்புடையவரையே தாம் கணவராகப் பெறுதல் வேண்டும் எனத் தம் மண வாழ்க்கை

குறித்து இறைவனை வேண்டிப் போற்றும் மனத்திட்பமும், மன்னுயிர்கள் உய்தற் பொருட்டு ஐந்தொழில் திருக்கூத்தி யற்றும் இறைவனது அருளியல்பினைப் போற்றி அம்மகளிர் தாம் மேற்கொண்ட மார்கழி நீராடல் நோன்பினை நிறைவு செய்து கொள்ளும் முறையும் திருவெம்பாவை யென்னும் இப்பனுவலிலே அன்பெனும் ஆறு கரையது புரள அடிக ளால் நன்கு அருளிச் செய்யப்பெற்றுள்ளன.

இதன்கண் 'ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதி' எனவும், 'மாலறியா நான்முகனுங் காணா மலை' எனவும், 'அண்ணாமலையான்' எனவும் திருவண்ணாமலைப் பெருமானை அடிகள் குறித்துப் போற்றுதலால், இத்திரு வெம்பாவை திருவண்ணாமலையில் அருளிச் செய்யப்பெற்ற தென்பது இனிது விளங்கும்.

அ. திருவம்மானை

அம்மானை என்பது, மகளிர் விளையாடல்களில் ஒன்று. அம்மனைக்காய் கொண்டு விளையாடும் இளமகளிர் தம்முள் உரையாடி மகிழும் முறையில் அமைந்த வரிப்பாடல்களே இலக்கியங்களில் அம்மானை என்ற பெயராற் சிறப்பித்து வழங்கப் பெற்றுள்ளன. மகளிர் அம்மனை ஆடுங்கால் இறைவனைப் பரவிய புகழ்ப் பாடல்களையும் அரசன் முதலிய தலைவரைப் பற்றிய புகழ்ப் பாடல்களையும் பாடி மகிழ்வர் என்பது,

'அம்மனை தங்கையிற் கொண்டங் கணியிழையார்
தம்மனையிற் பாடுந் தகையேலோ ரம்மானை'
(சிலப் – வாழ்த்துக்காதை)

எனவரும் சிலப்பதிகாரத் தொடரால் இனிது விளங்கும். 'அம்மனை' என்னும் விளையாட்டில் மகளிர் மூவர் உட னமர்ந்து விளையாடுவர். அம்மூவருள் ஒருத்தி பாட்டுடைத் தலைவன் புகழ்ச் செயலைக் குறித்து வினா நிகழ்த்த, இரண்டா மவள் அவ்வினாவிற்கு விடைகூற, மூன்றாமவள் அப்புகழ்ச் செயலைத் தொடர்ந்து கூறிப் பாராட்டும் முறையிலும், அம் மூவரும் ஒருங்கு சேர்ந்து பாட்டுடைத் தலைவன் புகழைப் பாடிப் போற்றும் முறையிலும் அம்மானைப் பாடல்கள் அமைதல் இயல்பு.

'வீங்குநீர் வேலி யுலகாண்டு விண்ணவர்கோன்
ஓங்கரணங் காத்த உரவோன்யார் அம்மானை

ஓங்கரணங்காத்த உரவோன் உயர்விசும்பில்
தூங்கெயில் மூன்றெறிந்த சோழன்காண் அம்மானை
சோழன் புகார்நகரம் பாடேலோர் அம்மானை'

எனச் சிலப்பதிகாரம் வாழ்த்துக் காதையில் வரும் அம்மானை வரிப்பாடல்கள் வினவும் விடையுமாக அமைந்தவை. திருவாசகத்தில் வரும் திருவம்மானைப் பாடல்கள் மகளிர் பலரும் ஒருங்கு சேர்ந்து பாடி மகிழும் நிலையில் அமைந்த வரிப் பாடல்களாகும். சிலப்பதிகாரத்திலுள்ள அம்மானைப் பாடல்கள் ஐந்தடிகளால் இயன்ற கொச்சக ஒருபோகாய் நாடாளும் வேந்தனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப் பெற்றவை. திருவாசகத்திலுள்ள திருவம்மானைப் பாடல்கள் ஆறடிகளாலியன்ற கொச்சக ஒருபோகாய் எல்லாவுலகிற்கும் முதல்வனாகிய சிவபெருமானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பெற்றனவாகும். இவ்வரிப் பாடல்களில் 'அம்மானை' என ஐயீறு இயல்பாகவும் 'அம்மானாய்' என ஆயீறாகத் திரிந்தும் வரும் விளிகள், அம்மனையாடும் மகளிர் தம்கையிற் கொண்ட அம்மனைக் காயினையும் தம்முடன் விளையாடும் தோழியையும் முன்னிலையாக்கும் நிலையில் அமைந்திருத்தல் அறியத்தக்கதாகும்.

தென்னன் பெருந்துறையான் அந்தணனாய் வந்து ஆட்கொள்ளப்பெற்ற திருவாதவூரடிகள், இறைவனது அம் கருணை வார்கழலால் தம் உள்ளத்தே ஊற்றெடுத்துப் பெருகிய பேரானந்தத்தில் திளைக்கும் நிலையில் இத்திருவம்மானையை அருளிச் செய்தமையால், இதற்கு 'ஆனந்தக் களிப்பு' என முன்னோர் கருத்துரை கூறினர். அந்தணர் வடிவுடன் வந்து ஆண்டுகொண்டருளிய இறைவனது பெருங்கருணைத் திறத்தை நினைந்து அருளிச் செய்யப் பெற்றது இத்திருவம்மானையென்பது,

'நலமுறும் அந்தணன் வடிவாய் நாரணன் காண்பரிய பதம்
நிலமதில்வந்து ஆள்கருணை நினைந்தாடல் அம்மானை'

எனவரும் திருவாசகவுண்மையால் அறியப்படும்.

மாலும் அயனும் காணுதற்கரிய வள்ளல், திருப்பெருந் துறையிற் குருவாக எழுந்தருளிச் சிந்தனையையுருக்கிப் பணிகொண்ட திறத்தினையும், பந்தமெலாம் நீங்கப் பரிமேலழகனாக எழுந்தருளி அளவிலா ஆனந்தம் அருளிய பான்மையினையும், கற்போலும் நெஞ்சத்தையுங் கனியச் செய்து தன் கருணை வெள்ளத்தில் ஆழ்த்தி வினைத்தொட

அறுத்த மேன்மையினையும், பெருந்துறையிற் குருவாய் வந்த பெரியோன் காட்டாதனவெல்லாங் காட்டிச் சிவம் காட்டித் தாட்டாமரை காட்டித் தன் கருணைத் தேன்காட்டி யாவரும் பெற்றறியா இன்பத்துள் வைத்த பேரருளின் பெற்றியையும், எவ்வுயிர்க்கும் தாயாகிய தலைவன் நாயான நம்மையெலாம் ஆண்டருள்புரியும் அருளின் திறத்தையும், கண்ணுதற்கடவுளாகிய அம்முதல்வன் வந்தியென்னும் செம் மனச் செல்வியார்க்கு அருள்புரிதல் வேண்டி மதுரையிற் கூலியாளாக வந்து வையைப் பெருவெள்ளத்தையடைத்தற் பொருட்டு மண்சுமந்தும் வந்தியம்மையார் தந்த பிட்டமு தினைக் கூலியாகக்கொண்டு நுகர்ந்து மகிழ்ந்தும்,பாண்டியன் தன் கைப்பிரம்பினால் அடித்த அடியினைத் தமது பொன்மேனி யிற் சுமந்தும் விளையாடிய எளிமைத் திறத்தையும், அண்ணா மலை யண்ணல் பெருந்துறையிற் கண்ணார் கழல்காட்டித் தம்மையாண்ட தகவினையும் திருவம்மானையாகிய இப்பனு வலில் அடிகள் நெஞ்சநெக்குருகிப் பரவிப்போற்றியுள்ளார்.

தப்பாமே தாளடைந்தார் நெஞ்சுருக்குந் தன்மையினா னாகிய இறைவன், அப்பாண்டி நாட்டைச் சிவலோகமாக்கிய பரிசும், இனிப்பிறவாமே காத்துத் தமக்கு வீட்டின்பம் நல்கிய தகவும், மெய்யர் மெய்யனாகிய இறைவன் ஐயாற்றில் அமர்ந் தருளிய வண்ணமும், அம்முதல்வனது திருவடிச்சிறப்பும், தன்னை மதியாது தக்கன் செய்த வேள்வியில் கலந்துகொண்ட இந்திரன், எச்சன், கதிரோன் முதலிய தேவர்களைத் தண்டித் துத் திசை திசையே ஓட்டிய வெற்றிப்பாடும், ஆனா அறிவாய் விளங்கும் அப்பெரியோன் அளவிறந்த பல்லுயிர்க்குங் கோனாகி நின்ற குறிப்பும், அத்திருவருட் குறிப்பினையுன்னி அடிகள் பெற்ற இன்ப அநுபவமும், என்னானை என்னப்பன் என்பார்கட்கு இன்னமுதாம் இறைவன் மன்னுயிர்களின் உள்ளத்துள்ளே ஒளியுருவாய்த் தோன்றி இன்னருள் சுரக் கும் இனிமைத் திறமும், மதுரையிற் குதிரைச் சேவகனாக எழுந்தருளிக் குற்றங்கள் நீக்கிக் குணங்கொண்டு கோதாட் டிய பெற்றியும் இத்திருவம்மானையில் விரித்துரைத்துப் போற்றப் பெற்றுள்ளன.

இதன்கண், ஐந்தாம் பாடலில் வரும் 'ஒல்லை விடை யான்' என்ற தொடர்க்கு, 'அடியாரை யிரட்சிக்கும் பொருட்டு விரைவாய்ச் சேறலுடைய புண்ணிய விடையை யுடையவன்' எனப் பொருள் கூறுவர் சீகாழித் தாண்டவராயர்.

" கவனமாய்ப் பாய்வதோர் ஏறுகந் தேறிய காள கண்டன் "
(2-79-1)

எனவரும் ஆளுடைய பிள்ளையார் வாய்மொழி இங்கு ஒப்பு நோக்கி உணரத்தக்கதாகும். இவ்வாறே 18-ஆம் பாடலில் வரும் 'வெளிவந்த மாலயனுங்காண்பரிய வித்தகனே' என்ற தொடர்க்கு, "உள்ளிருப்பதை வெளியிலே தேடியவராதலின்' வெளிவந்த மாலயன்' என்றார்" என நயவுரைபகர்வர் தாண்டவராயர்.

" தேடிக்கண்டுகொண்டேன் – திருமாலொடு நான்முகனும்
தேடித்தேடொணாத் தேவனையென் னுள்ளே – தேடிக்கண்டு
கொண்டேன் " (4-9-11)

எனவரும் அப்பர் அருண்மொழி இங்குச் சிந்தித்துணர்தற் குரியதாகும்.

'கேட்டாயோதோழி' எனத் தொடங்கும் ஆறும் பாடலில் உயிர்கள் மும்மலங்களும் நீங்க இறைவன் திருவடி யாகிய திருவருளிற் பிரிவறக்கலத்தலே வீடுபேறென்னும் மெய்ம்மையினை அடிகள் குறிப்பாக அறிவுறுத்தியுள்ளார்.

" சேவடி படருஞ் செம்ம லுள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்பிரிந் துறையுஞ்
செலவுநீ நயந்தனை யாயின் "

எனவரும் திருமுருகாற்றுப்படைத் தொடர்ப் பொருளை விளக்க வந்த நச்சினார்க்கினியர், "புலம்பிரிந்துறையும் அடி – மெய்ஞ்ஞானத்தான் அறிதலைக் கைவிட்டுத் தங்கும் அடி. திருவடியே வீடாயிருக்குமென்றார்; அது, 'தென்னன் பெருந் துறையான், காட்டாதனவெல்லாங் காட்டிச் சிவங்காட்டித், தாட்டாமரைகாட்டித் தன் கருணைத் தேன்காட்டி' என்பதனா னும், பிறரும் திருவடியைக் கூறுமாற்றானும் உணர்க" என இத்திருவம்மானைப் பாடலின் பொருள் நுட்பத்தினை விளக்கி யுள்ளமை உணர்ந்து போற்றத்தக்கதாகும்.

கூ. திருப்பொற்சுண்ணம்

திருக்கோயில்களில் இறைவனது திருமெய்ப்பூச்சுக் குரிய பொன்னிறமான மணப்பொடியினை இடிக்கும்பொழுது இளமகளிர் பாடும் வரிப்பாடலாகத் திருவாதவூரடிகள் அரு ளிய பனுவல் திருப்பொற்சுண்ணம் என்பதாகும். 'ஆட பொற்சுண்ணம் இடித்தும் நாமே' எனப் பாடல்தோ பயின்று வருதலால் பொற்சுண்ணம் என்பது இப்பனுவலுக்

குரிய பெயராதல் புலனும். நறுமணப்பொடிகளில் பொன்னிறச் சுண்ணமே சிறப்புடையதாகும்.

"பொன்காண் கட்டளை கடுப்பச் சண்பின்
புன்காய்ச் சுண்ணம்"

எனச் சிறுபாணாற்றுப்படையிற் பொன்னிறச் சுண்ணமே சிறந்தெடுத்துக் கூறப்பெற்றிருத்தல் காணலாம். பண்டைக் காலத்தில் உடற்பூச்சுக்கேற்ற நறுமணப் பொடியினை நன்முறையில் இடித்தமைக்கும் பயிற்சியினை மகளிரே மேற்கொண்டிருந்தனரென்பது,

"பலர் தொகு பிடித்த தாதுகு சுண்ணத்தர்"

எனவரும் மதுரைக்காஞ்சித் தொடரால் இனிது விளங்கும். இங்ஙனம் உடற்பூச்சுக்குரிய மணப்பொடியினை இடித்தமைக்குந் தொழிலில் ஈடுபட்ட மகளிரது உள்ளம் அந்நறுமணத்தின் தொடர்பால் மகிழ்ச்சி நிலையினை எய்துதல் இயல்பாகும். இங்ஙனமாகத் திருக்கோயிலில் இறைவனது திருமஞ்சனத்திற்குரிய நறுமணப்பொடியினை இடிக்குந் திருப்பணியில் ஈடுபட்ட மகளிரது உள்ளமோ வையத்து வாழ்வினை மறந்து இறைவன் திருவருளாகிய தெய்வ மணத்தில் ஒன்றித் திளைக்கும் பெருமகிழ்ச்சியைத் தலைப்படுதல் இயல்பாகும். எனவே திருப்பொற்சுண்ணமிடிக்கும் இளமகளிரது உரையாடலாக அமைந்த இப்பனுவலுக்கு 'ஆனந்த மனோலயம்' என முன்னோர் கருத்துரை கூறினர்.

நாம் பெற்றுள்ள உடல், கருவி, உலகு, நுகர் பொருள் ஆகிய இவை யாவும் தம்பாலுள்ள வாலாமை நீங்கித் தூயனவாய் இறைவனது திருமெய்ப்பூச்சுக்கு ஏற்ற இனிய நறுமணப் பொடியாய் நுணுகும்படி அவற்றை மாற்றியமைத்தருளும் வண்ணம் அருட்சத்திகளை அழைப்பது இத்திருப்பொற்சுண்ணத்தின் உட்கிடை என்பர் பெரியோர். இந்நுட்பம்,

"சத்திகளாற் றனுகரண புவனபோ கங்கள்தமை
அத்தனுக்குச் சுண்ணமவை யாயிடிக்கக் கூவுதலே
ஒத்ததிருச் சுண்ணம்"

எனவரும் திருவாசக உண்மையால் இனிது புலனாதல் காணலாம்.

மகளிர் உலக்கைகொண்டு நறுமணப்பொடியினை இடிக்கும் நிலையிற் பாடுவதாக அமைந்த இப்பனுவல், சிலப்பதி

காரத்தில் வரும் வள்ளைப்பாட்டினையும், அடியார்க்கு நல்லார் உரையில் மேற்கோளாகக் குறிக்கப்பட்ட அவலிடி என்னும் வரிப்பாடலையும் ஒத்த அமைப்புடையதாதல் உய்த்துணரத் தக்கதாகும். இதன்கண் பாடல்தோறும் 'ஆடப் பொற் சுண்ணம் இடித்தும் நாமே' எனவரும் தொடர் 'இறைவன் திருமஞ்சனம் ஆடுதற்பொருட்டுப் பொற்சுண்ணமாகிய மணப்பொடியை நாம் இடிப்போமாக' என மகளிர் கூறும் முறையில் அமைந்ததாகும்.

இறைவனது திருமஞ்சனத்திற்குரிய சுண்ணம் இடிக்குங் கால், அதற்குரிய இடத்தினை மெழுகித் தூய்மை செய்து முத்துமாலை முதலியவற்றால் அணிசெய்து முளைக்குடம் வைத்துத் தூப தீபம் முதலியன அமைத்துக் கவரி வீசிக் கொடியெடுத்துச் சிறப்புச் செய்தல் வேண்டுமென்பதும், சுண்ணமிடிக்கும் கருவியாகிய உரலுக்குப் பட்டுச்சாத்தி உலக் கைக்குப் பொற்பூண் முதலியன அணிந்து 'நேசமுடைய அடியார்கள் நீடு வாழ்க' என வாழ்த்தி இறைவனைப் பாடிச் சுண்ணமிடித்தல் மரபு என்பதும், பொற்சுண்ணத்திற்குரிய மணப்பொருள்களில் மஞ்சள் சிறப்புடையதென்பதும் இப் பதிகப் பாடல்களில் விளக்கப் பெற்றுள்ளன. சுண்ண மிடிக்கக் குழுவிய மகளிர்களாக சத்தி, சோமி, பார்மகள், நா மகள், சித்தி, கௌரி, பார்ப்பதி, கங்கை என எண்மர் இப் பதிகப் பாடலிற் குறிக்கப் பெற்றுள்ளனர். இக்குறிப்பினைத் துணையாகக்கொண்டு 'அட்ட சிவ சத்தியும் திருவையா றகலாத செம்பொற் சோதியை வணங்குதல்' என இப்பதிகத் திற்குக் கருத்துரைப்பர் சீகாழித் தாண்டவராயர்.

தில்லைவாணன் திருமஞ்சனம் ஆடுதற்குரிய அழகிய சுண்ணத்தினை அமைக்க வேண்டுமானால், அதற்கு உலகமே உரலாகவும் மேருமலையே உலக்கையாகவும் மெய்ம்மை யாகிய உயர்ந்த குணமே மஞ்சளாகவும் கொண்டு திருப் பெருந்துறையிற் கோயில் கொண்டருளிய இறைவனுடைய திருவடியினைப் பாடிப் பாடிச் செம்பொனுலக்கையை வலக் கையிற் கொண்டு இடித்தல் வேண்டும் என்பதனை,

'வையக மெல்லாம் உரலதாக
மாமேரு வென்னும் உலக்கை நாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறைய அட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்

செய்ய திருவடி பாடிப் பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கைபற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே'

எனவரும் திருப்பாடலில் அடிகள் அருளிச் செய்துள்ளார். இத்திருப்பாடல் இறைவனது பெருமையினையும் அப்பெருமானது திருமெய்ப் பூச்சுக்குரிய பொற்சுண்ண மிடித்தலாகிய திருப்பணியின் அருமையினையும் இனிது புலப்படுத்துதல் காண்க.

இறைவன் ஆணும் பெண்ணுமாய் உயிர்களுக்கு அருள் செய்யும் திருக்குறிப்புடன் சிவமும் சத்தியுமாகத் திகழ்தல் பற்றிச் சிவபெருமான் சத்திக்குக் கணவன் எனவும், சிவ தத்துவத்தினின்றும் சத்தி தத்துவம் தோன்றுதல் பற்றிச் சிவன் சத்திக்குத் தந்தை எனவும், சத்தி தத்துவத்தினின்றும் சதாசிவ தத்துவம் தோன்று முறைபற்றிச் சிவன் சத்திக்கு மகன் எனவும், சுத்த மாயையினின்றும் இறைவனது ஞான சத்தியின் தூண்டுதலால் சிவதத்துவமும் கிரியா சத்தியின் தூண்டுதலால் சத்தி தத்துவமும் முன் பின்னாகத் தோன்றும் முறைபற்றிச் சிவன் சத்திக்குத் தமையன் எனவும் அம்மையோடு அப்பனுக்குள்ள பிரிக்க வொண்ணாத தொடர்பினை உலகியல் உறவுமுறைபற்றி உருவகஞ் செய்துரைப்பதாக அமைந்தது, இப்பதிகத்தின் 13-ஆம் பாடலில் அமைந்த,

'எம் பெருமான், இமவான் மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன் தகப்பன் தமையன்'

எனவரும் தொடராகும். இத்தொடர்ப் பொருளினை,

'தவளத்த நீறணியுந் தடந்தோளண்ணல் தன்னொருபா
லவளத்தனு மகனுந் தில்லையான்'

(திருச்சிற்றம்பலக் கோவை. 112)

எனவரும் திருக்கோவையாரிலும் அடிகள் விளக்கியுள்ளமை இங்கு ஒப்புநோக்கத்தக்கதாகும். ஈசனது சுதந்தர வடிவமாகிய சுத்த தத்துவங்களின் தோற்றமுறை பற்றித் திருவாதவூரடிகள் கூறிய இவ்வுருவகத்தின் உட்கருத்தினை,

"சிவம் சத்திதன்னை யீன்றும் சத்திதான் சிவத்தை யீன்றும்
உவந்திருவரும் புணர்ந்திங் குலகுயி ரெல்லாமீன்றும்
பவன்பிரம சாரியாகும் பான்மொழி கன்னியாகும்
தவந்தரு ஞானத்தோர்க்கித் தன்மைதான் தெரியுமன்றே"

எனவரும் சிவஞான சித்தியார் (166) திரு விருத்தத்தில் அருணந்தி சிவாசாரியார் தெளிவாக விளக்கியுள்ளார்.

'கனகமார் கவின்செய் மன்றில்
அனக நாடகற்கெம் அன்னை
மனைவி தாய்தங்கை மகள்' (சிதம்பரச் செய்யுட்கோவை.)

எனவரும் குமர குருபர அடிகள் பாடலும் இங்கு ஒப்புநோக்கத்தக்கதாகும்.

ம. திருக்கோத்தும்பி

தும்பி என்பது ஒரு வகை வண்டு. தலைமையுடைய வண்டு கோத்தும்பி என வழங்கப்பெறும். நறுமலர்களிற் படிந்து தேனுண்டு மகிழ்ந்த தலைமை வாய்ந்த அரச வண்டு மகிழ்ச்சி மிகுதியால் தேனுள்ள மலரையே சுற்றிச் சுற்றிச் சுழன்று பறத்தலைப் போன்று, விளையாடும் பருவத்து இளமகளிர், மகிழ்ச்சி மிகுதியால் ஒருவர்க்கொருவர் கைகோத்துக் கொண்டு சுற்றி விளையாடும் விளையாட்டினைத் தும்பி பறத்தல் என்பர். இவ்விளையாட்டில் ஈடுபட்ட இளமகளிர், கோத்தும்பியை முன்னிலைப்படுத்தி, அம்பலவன் தேனார் கமலமாகிய திருவடித் தாமரையிலேயே சென்று படிந்து அவனது திருப்புகழாகிய இசையினையே இடைவிடாது இசைக்கும் வண்ணம் வேண்டிப் பாடுமாறு அமைந்த பனுவலாதலின், இது 'திருக்கோத்தும்பி' யென்னும் பெயர்த்தாயிற்று. திருவாதவூரடிகள் தமக்குக் கிடைத்த சிவபோதத்தை வண்டாக உருவகப்படுத்திச் சித்த விகாரமாகிய மனக்கலக்கம் நீங்க அவ் வண்டினைத் தம் ஆருயிர் நாயகனாகிய இறைவன்பால் தூதனுப்புவதாக அமைந்தது திருக்கோத்தும்பி யென்னும் இப்பனுவல் என்பர். இந் நுட்பம், 'உயர் போதமொரு வண்டாகச் சித்தவிகாரத் தூது செப்பிவிடல் கோத்தும்பி' எனவரும் திருவாசக வுண்மையால் இனிது புலனாம். இதற்குச் 'சிவனோடைக்கியம்' எனக் கருத்துரை வரைந்தனர் முன்னோர். சிவனுடன் இடையறுது நிற்றல் என்பது இத்தொடரின் பொருளாகும். "சடசித் தெங்கணும் தாமே நிறைந்த சிவாநுபவ சுவாநுபூதிகம் விளைந்த அடியார்கள், அவ்விளக்கம் 'எனக்குங் கிடைத்தது, உனக்குங் கிடைத்தது' என்று ஒருவர்க்கொருவர் மடிபிடித்துக் கொண்டு வண்டு சுழலுகிறது போலச் சுற்றும் விளையாட்டு" என இத் திருக்கோத்தும்பிக்கு விளக்கங் கூறுவர் சீகாழித் தாண்டவராயர்.

இதன்கண் சிவபெருமான் திருவடியின் அருமை பெருமைகளும், அப்பெருமான் ஆட எடுத்த அடிமலர் யான் எனது என்னும் செருக்குடையாரால் அறியப்படாத அருமையுடைத்தென்பதும், அத்திருவடி வழிபடும் அன்பர்களின் என்பினையுருக்கி ஆனந்தத் தேன்சொரியும் குனிப்புடையதென்பதும், கண்ணப்பனை யொத்த அன்புருவாகிய அடியார்களையுடைய பெருமான் அன்பென்பது ஒரு சிறிதும் இல்லாத தம்மையும் கருணையினால் ஆண்டுகொண்டான் என்பதும், மெய்த்தேவர் தேவனாகத் திகழும் முதல்வன் சிவபெருமான் ஒருவனே யென்பதும், அம்முதல்வனே தமது சித்த விகாரமாகிய கலக்கத்தை நீக்கித் தெளிந்த சிவஞானத்தைத் தமக்கு நல்கியருளினன் என்பதும், அவனைத் தியானிக்கும் அடியார்கள் உள்ளத்தில் ஆராத பேரின்பம் ஊற்றெடுத்துப் பெருகும் என்பதும், இறைவன் ஒருவனாக இருந்தும் எங்கும் நீக்கமற நிறைந்துள்ளான் என்பதும், அவனை வழிபடும் அடியார்களுக்கு மரணம் பிறப்பு என்பது பற்றிய அச்சத்தின் பயனாகிய மயக்கம் இல்லை யென்பதும் அம்முதல்வன் உலக உயிர்கள் அனைத்தையும் தாய்போல் தலையளிக்கும் பேரருளாளன் என்பதும், கற்போலும் நெஞ்சத்தையும் கசிந்துருகச் செய்து அருவாய் மறைபயில் அந்தணனாகி வந்து தம்மை ஆண்டுகொண்டருளினன் என்பதும், அப்பெருமானது திருவடி நினைப்பார் உள்ளத்தே தேனுந்து சேவடி என்பதும், பசுபோதக் கருவிகளால் உள்ளி உணரப் படாதவன் இறைவன் என்பதும், பொய்யாய செல்வத்தை மெய்யென நம்பி அதனுள் அழுந்திக்கிடந்த தம்மை அம்பலவனாகிய ஐயன் குருவாக வந்து ஆட்கொண்டு மெய்யுணர்வு அருளினன் என்பதும், மாதொரு பாகனாகிய அவனது தொன்மைக்கோலம் உள்ளுவாருள்ளத்துப் பிறவி வெப்பத்தை மாற்றித் தண்ணிழலாய் நின்று அருள் சுரக்குந் தன்மையுடையதென்பதும், அம்மையப்பராகிய அவருடைய திருவடிகள் தம் உள்ளத்துறு துயரத்தைப் போக்கி உய்வித்தன என்பதும், தீமேனியாகிய இறைவன் நாய்மேல் தவிசிட்டது போல் தம்மை நன்றுப் பொருட்படுத்தி இன்பமும் சிறப்பும் நல்கியருளினன் என்பதும் ஆகிய உண்மைகள் திருக்கோத்தும்பியாகிய இப்பனுவலில் திருவாதவூரடிகளால் விரித்துரைக்கப் பெற்றுள்ளன.

௰௧. திருத்தெள்ளேணம்

தெள்ளேணம் என்பது சிறுமியர்க்குரிய விளையாடல் களில் ஒன்ருகும். சிறுமியர் முச்சில் என்னும் சிறிய முறத் தைக் கையிற் கொண்டு தானியங்களைத் தெள்ளிக் கொழித்து விளையாடும் நிலையில் இறைவனது புகழ்த்திறங் களைத் தெளிந்துணர்ந்து பாடிப் போற்றுவதாக அமைந்தது இப்பனுவலாதலின், இது திருத்தெள்ளேணம் என்னும் பெயர்த்தாயிற்று. சிறிய முறத்தால் தெள்ளிப் புடைத்த லாகிய இது 'தெள்ளத்தெறுதல்' எனத் தாண்டவராயர் உரையிற் குறிக்கப்பெற்றுளது. தெள்ளுதல் என்பது, தானிய முதலியவற்றைக் கல்லும் மண்ணுமாகிய குற்றங் களைப் புடைத்தொதுக்கித் தூயனவாகத் தனியே பிரித் தெடுத்தல். 'தெள்ளத் தெறுதல்' என்னும் இச்சொல்லின் உண்மையுருவம் 'தெள்ளத்தேறுதல்' என்பதாகும். இந் நுட்பம், 'தெள்ளத் தேறித் தெளிந்து தித்திப்பதோர், உள்ளத்தேறல்' எனவரும் அப்பர் அருள் மொழியாலும், 'தெள்ளி வடித்தறிந்த பொருள் சிவன் கழலிற் செறி வென்றே கொள்ளும் உணர்வினில்' எனவரும் சேக்கிழார் வாய் மொழியாலும் இனிது புலனுதல் காணலாம். 'பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ' எனவரும் சொற் குறிப்புக்கொண்டு தெள்ளேணம் எனக் குறிக்கப்படும் இவ் விளையாட்டு பாட்டுக்கேற்பக் கைகொட்டியோ பறை கொட் டியோ இயற்றப்பெறும் விளையாட்டாக இருக்கலாம் எனக் கருதுதலும் உண்டு.

இதற்குச் 'சிவனோடடைவு' என முன்னோர் கருத் துரைத்தனர். ஆன்மாவாகிய தாம் ஆன்ம நாயகனுகிய சிவனுடனே கூடி இன்புறுந் திறத்தை உலகத்தார் அறிய விரித்துரைக்கும் முறையில் திருவாதவூரடிகள் திருத்தெள் ளேணம் என்னும் இப்பனுவலை அருளிச் செய்துள்ளார். இந்நுட்பம், 'நாம் ஒழிந்து சிவமாயவா பாடித் தெள்ளே ணம் கொட்டாமோ' எனவும் 'தேவானவா பாடி' எனவும் வரும் அடிகளது அநுபவ மொழியாலும்,

'பொன்னார் மெய்யண்ணலரும் போதவின்பமே மிகுந்து
தென்னா தென்னவென்று தெள்ளேணம் கொட்டியதாம்'

எனவரும் திருவாசக வுண்மையாலும் இனிது புலனும்.

ஊரும் பேரும் உருவும் இல்லாத இறைவன் ஊரும் பேரும் கொண்டு யாவராலும் போற்றப்பெறும் முறைமை

திருவடி ஞானம் பெற்றபின் சிவனை யன்றி மற்றொன்றையும் காணாமை, வாக்குமனங் கடந்த பரம்பொருள் உயிர்களின் மனத்துட் புகுந்து உருக்கிப் பணி கொள்ளுதல், அப்பரம் பொருளின் அருளால் உயிர் பசுத்துவம் நீங்கிச் சிவமாதல், அறிதற்கரிய பொருளாகிய சிவம் கருப்பிணி நீங்க உயிர் களின் உள்ளத்துள் அமர்தல், அம்மையப்பனாய் வந்து ஆட் கொண்டருளுதல், திருவடியைத் தரிசித்தவுடன் சீவன் சிவ னை முறைமை, இறைவன் தன் கழல் மறவா வண்ணம் நல்கிய திறம், கல்லில் நாருரித்தல் போன்று தன் பேராற்ற லால் உயிர்களின் கன்னெஞ்சத்தினையும் கனிவித்து ஆட் கொள்ளுதல், 'வானோர்க்குக் கனவிலும் அறியப்படாத அம் மெய்ப்பொருள் தமக்கு நனவிலேயே எளிவந்தருளினமை, தம் செயலற்று இறைவன் செயலிலேயே தம்முணர்வு அடங்கப் பெற்றமை, பத்திக்கடலுள் பதித்த பரஞ்சோதி தமக்குச் சிவானந்தம் விளைத்துத் தித்தித்திருக்கும் திறம், ஆன்ம போதத்தால் அறிய வொண்ணாத முழுமுதற் பொருள் திருவடி ஞானத்தால் நேர்பட்டருளுதல், நூலுணர் வால் உணரப்படாத செம்பொருள் அன்புடைய மெய்யடி யார்கள் அநுபவிக்க வெளிப்படுதல், பாசஞானத்தாலும் பசு ஞானத்தாலும் பார்ப்பரிய பரம்பரனைத் திருவடி ஞானத்தாற் சிந்தையிற் கண்டு போற்றுதல், ஒவ்வாத சமயக் கோட்பாடு களிலும் சாத்திரங்களிலும் மயங்கித் தடுமாறாது சிவபதம் பெறுதல், பசுபோதங்கெடுதல், காண்டற்கரிய கடவுளை அவ னருளாற் கண்ணாரக் கண்டு களித்தல், திருச்சிலம்போசை ஒலி வழியே சென்று நிருத்தனை நேர்பட்டு இறைஞ்சி மகிழ்தல் ஆகிய செய்திகள் இப்பனுவலில் விரித்துரைக்கப் பெற்றுள்ளன.

௰௨. திருச்சாழல்

சாழல் என்பது மகளிர் விளையாடல்களுள் ஒன்று. ஒருத்தி ஒரு கதையின் செயலைப்பற்றி வினா நிகழ்த்த, மற் றொருத்தி அக்கதையின் இடமாகத் தோற்றிய முரண்பாட் டினை நீக்கி அதன் உட்பொருளை விளக்கி விடை கூற, இவ் வாறு மகளிர் இருவர் ஒரு கதைபற்றி வினாவும் விடையும் நிகழ்த்தி உரையாடி விளையாடும் முறையில் அமைந்தது சாழல் என்னும் இவ்விளையாட்டாகும். 'நற்சாழல்' எனப் பல்வரிக் கூத்துள் ஒன்றாகச் சிலப்பதிகார வுரையிற் குறிக்கப் படுவது இதுவேயாகும்.

திருவாதவூரடிகள் தில்லையில் புத்தரொடு நிகழ்த்திய வாதில், ஈழநாட்டு மன்னன் வேண்டுகோட்கிரங்கி, அவன் மகளாகிய ஊமைப் பெண்ணைப் பேசுவிக்கத் திருவுளங் கொண்டு, அவ்வூமைப் பெண்ணை நோக்கிச் சிவபெருமானுடைய திருவருட் செயல்களின் உட்கருத்துப்பற்றி வினவியருள, பிறவி யூமையான அப்பெண் அவ்வினுக்களுக்கெல்லாம் தக்கவாறு விடை கூறினள் என்பதும், திருவாதவூரடிகள் தாம் கேட்ட வினக்களையும் அவ்வினக்களுக்கு அவ்வூமைப்பெண் கூறிய விடைகளையும் தொகுத்துத் 'திருச்சாழல்' என்னும் இப்பனுவலாக இயற்றியருளினரென்பதும் வரலாறு. இப்பனுவல், எல்லாம் வல்ல சிவபெருமானது முழுமுதற் றன்மையினையும் அம்முதல்வன் உயிர்கள்மேல் வைத்த பெருங்கருணைத் திறத்தையும் விரித்துரைக்கும் முறையில் அமைந்ததாகும். இதற்குச் 'சிவனுடைய காருணியம்' என முன்னோர் கருத்துரை வரைந்தனர். 'முன்னோர் கலையுமுணரா மூகையாமேடி, தன்னுற் பதிமுதன்மை சாற்றியதாந் திருச்சாழல்' என்பது திருவாசகவுண்மை. இப்பதிகம் 'கதையழித்துப் பொருள் சொன்னது' எனத் தாண்டவராயர் குறித்துள்ளார். சிவ புராணங்களின் உள்ளீடு இதுவெனத் தெரிவிக்கும் முறையில் திருவாதவூரடிகள் திருச்சாழலாகிய இதனை அருளிச் செய்துள்ளாரென்பது தாண்டவராயர் குறிப்பினல் இனிது புலனும்.

சிவபெருமான் திருநீறு பூசி அரவம்பூண்டு அருமறைகளை அருளிச் செய்தமை, கோவண ஆடையுடுத்தமை, சுடுகாடு கோயிலாகவும் புலித்தோல் உடையாகவும் கொண்டுள்ளமை, அயன், அநங்கன், அந்தகன், சந்திரன் முதலியோரை ஒறுத்தமை, அயனும் மாலும் அடிமுடிகாணுவண்ணம் ஆரழலாய் நிமிர்ந்து தோன்றினமை, கங்கையைச் சடையிற் கரந்தமை, ஆலகால நஞ்சினை உண்டமை, மாதொருபாகன் ஆனமை, அடியடைந்தாரை ஆனந்த வெள்ளத்தில் திளைக்கச் செய்தமை, தசை யொழிந்த உடலின் முழு எலும்பாகிய கங்காளத்தினை அணிந்தமை, காடு பதியாகவும் தோல் உடையாகவும் பிச்சை உணவாகவும் கொண்டமை, மலையரையன் மகளை மணந்தமை, திருநட்டம் ஆடினமை, இடபம் உகந்து ஏறினமை, அம்பலத்தே கூத்தாடி அமுது செயப் பிச்சை யேற்றுத் திரிந்தமை, சலந்தரனைத் தடிந்த சக்கரத்தை நாரணனுக்கு அருளினமை

ஆகிய திருவருட் செயல்களைப்பற்றிய விளக்கங்கள் இப்பனுவலில் இடம் பெற்றுள்ளன.

திருமுருகாற்றுப்படைக்கு உரை வரைந்த நச்சினார்க்கினியர், 'ஒரு முகம், குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின், மடவரல் வள்ளியொடு நகையமர்ந்தன்றே' (திருமுருகு – 100 – 102) எனவரும் தொடர்க்கு உரை கூறுமிடத்து "ஒரு முகம் குறவருடைய மடப்பத்தையுடைய மகளாகிய வல்லிபோலும் இடையினையுடைய வள்ளியுடனே மகிழ்ச்சியைப் பொருந்திற்று ; மடவரல் நகை எனக் கூட்டித் தனக்கு ஓரறியாமை தோன்றும் நகை யென்று கூறுக. அவளொடு நகை யமர்தலின் அறியாமை கூறினார் : காம நுகர்ச்சியில்லாத இறைவன் இங்ஙனம் நகையமர்ந்தான்; உலகில் இல்வாழ்க்கை நடத்தற்கென்றுணர்க. அது, 'தென்பாலுகந்தாடுந் தில்லைச் சிற்றம்பலவன்' என்பதனுள், 'பெண்பா லுகந்திலனேற் பேதாய் இருநிலத்தோர், விண்பாலி யோகெய்தி வீடுவர்காண் சாழலோ' என்பதனான் உணர்க" என இத் திருச்சாழலின் ஒன்பதாம் திருப்பாடலை எடுத்துக்காட்டி விளக்கியுள்ளமை ஈண்டு நினைக்கத் தக்கதாகும்.

திருவெம்பாவை முதல் திருச்சாழல் ஈருகவுள்ள பனுவல்கள் ஆறும் இருபது இருபது பாடல்களால் இயன்றுள்ளமையாலும் இளமகளிர் விளையாட்டாதல் ஒப்புமையானும்இம்முறையே இயைபு பெறஅமைந்துள்ளன.

ய௩. திருப்பூவல்லி

திருப்பூவல்லி என்பது, அழகிய பூக்களையுடைய கொடி எனப் பொருள்படும். இச் சொல், பூக்கொய்தலாகிய இளமகளிர் விளையாட்டினையும் அவ் விளையாட்டிற் பாடப்பெறும் வரிப்பாடலையும் குறித்த பெயராக இங்கு ஆளப்பெற்றது. சிலப்பதிகார வுரையில் அடியார்க்குநல்லார் குறித்த பல்வரிக் கூத்தினுள் ஒன்ருகிய 'கொய்யு முள்ளிப்பூ' என்பதுஇப் பூவல்லியாகிய விளையாட்டினைக் குறிக்குமெனக் கருதுதல் பொருந்தும். இறைவனுக்குச் சாத்துதற்கென நறுமலர் கொய்யும் சிறுமியர்கள் அம் முதல்வனது பெருங் கருணைத் திறத்தை வியந்து பாடும் முறையில் திருவாதவூரடிகள் இத் திருப் பூவல்லியினை அருளிச்செய்துள்ளார்.

இப்பதிகத்திற்கு 'மாயா விசயம் நீக்குதல்' அஃதாவது 'மாயையின் பலத்தை மறுத்தல்' என முன்னோர் கருத்துரைப்பர். வானோராலும் அறிய வொண்ணாத சிவபெருமான், மாயையின் தொடர்ச்சியுட்பட்டு மதிமயங்கும் மனிதர்களாகிய நம்மனோரை ஆட்கொள்ளுதல் வேண்டித் தன் பெருங்கருணையால் எளி வந்து மாயையின் வலியை நீக்கி ஆண்டுகொண்ட அருள் நலத்தினை அடியார் பலர்க்கும் ஆர்வமுடன் எடுத்துரைத்து அம்முதல்வனுக்குச் சாத்துதற்குரிய நறுமலர்களைக் கொய்வோமாக என அடியார் பலரையும் ஒருங்கு அழைத்தல் இத் திருப் பூவல்லியின் பொருளமைதியாகும். இந் நுட்பம், 'தேவரறியாத சிவம் தேடியே யாண்ட நலம், ஆவலொடுஞ் சொல்லி அடியாரொடுங் கூடிப், பூவியந்து கொய்தல் திருப்பூவல்லியாம்' எனவரும் திருவாசக வுண்மையால் இனிது புலனாம்.

இதன்கண் 'தேனாடு கொன்றைச் சடைக்கணிந்த சிவபெருமான், ஊனாடி நாடி வந்துள் புகுந்தான்' எனவும், 'இணையார் திருவடி என் தலைமேல் வைத்தலுமே, துணையான சுற்றங்கள் அத்தனையுந் துறந்தொழிந்தேன்' எனவும், 'எந்தை யெந்தாய் சுற்ற மற்றுமெல்லாம் என்னுடைய பந்தமறுத் தென்னையாண்டு கொண்ட பாண்டிப் பிரான்' எனவும், 'தாயிற் பெரிதுந் தயாவுடைய தம்பெருமான், மாயப் பிறப்பறுத் தாண்டான்' எனவும், 'பேராசையாமிந்தப் பிண்டமறப் பெருந்துறையான் சீரார் திருவடி என் தலைமேல் வைத்தபிரான்' எனவும் திருவாதவூரடிகள் குறிப்பிடுதலால், தேவராலும் அறிய வொண்ணாத இறைவன் தேடிவந்தாண்ட திறமும் 'மாயா விசயம் நீக்குதல்' என்னும் பதிகக் கருத்தும் இனிது புலனாதல் காணலாம்.

எண்குணத்தானாகிய இறைவனடிகளை வணங்குதற்கேற்ற தலைமை யமைந்த தலையும், அவனுடைய பொருள்சேர் புகழ்த்திறங்களை விரித்துரைத்தற்கேற்ற நாநலம் வாய்ந்த வாயும், இறைவன் திருவடிக்கேற்ற திருப்பணிகளை விருப்புடன் இணங்கிச் செய்தற்குரிய நேயமலிந்த அடியார் திருக்கூட்டமும் ஆகிய சாதனங்களைத் தந்தருளி, அருளுருவாகிய அம்மையுடன் கூடித் திருவம்பலத்திலே ஆடல் புரிந்தருளும் கூத்தப் பெருமானது திருவருட் குணத்தைப் பாடிப் பரவி, இறைவன் திருவடிகளில் அருச்சித்தற்குரிய நறுமலர்களைக்

கொய்வோமாக என அன்புடையாரை அழைக்கும் முறையில் அமைந்தது,

வணங்கத் தலைவைத்து வார்கழல்வாய் வாழ்த்த வைத்து
இணங்கத்தன் சீரடியார் கூட்டமும்வைத் தெம்பெருமான்
அணங்கொ டணிதில்லை யம்பலத்தே யாடுகின்ற
குணங்கூரப் பாடி நாம் பூவல்லி கொய்யாமோ.

என்ற திருப்பாடலாகும். இது,

'வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்தவா வினையே னெடுங்காலமே' (5 – 90 – 7)

எனவரும் அப்பர் அருளுரையினை ஒத்து அமைந்திருத்தல் நோக்கத்தக்கதாகும்.

இறைவன், என் உடலிடங்கொண்டு என்னுள்ளத்தே புகுந்தருளி என்னை ஆட்கொண்டருளினனாகவும், பெருந் தேவராகிய மாலயன் முதலியோர், உயிர்க்குயிராய் உள் நின்று அருள்புரியும் அம்முதல்வனது இருப்பினை யுணரப் பெறாது சிவபெருமான் திருவடிகளைப் புறத்தே காண முயன்று அறியாது அயர்த்தல் அழகோ? என இரங்கிக் கூறும் குறிப்புடையது,

முன்னாய மாலயனும் வானவருந் தானவரும்
பொன்னார் திருவடி தாமறியார் போற்றுவதே
என்னாகம் உள்புகுந் தாண்டுகொண்டான் இலங்கணியாம்
பன்னாகம் பாடி நாம் பூவல்லி கொய்யாமோ.

எனவரும் திருப்பாட்டாகும். இது,

'நாடி நாரணன் நான்முக னென்றிவர்
தேடி யுந்திரிந் துங்காண வல்லரோ
மாட மாளிகை சூழ்தில்லை யம்பலத்
தாடி பாதமென் னெஞ்சு ளிருக்கவே. (5 – 1 – 10)

எனவரும் திருக் குறுந்தொகைப் பொருளை அடியொற்றி அமைந்திருத்தல் அறியத்தக்கதாகும்.

அத்தி யுரித்தது போர்த்தருளும் பெருந்துறையான்
பித்த வடிவு கொண் டிவ்வுலகிற் பிள்ளையுமாம்
முத்தி முழுமுத லுத்தர கோச மங்கைவள்ளல்
புத்தி புகுந்தவா பூவல்லி கொய்யாமோ.

எனவரும் திருப்பாடல், சிவபெருமான் 'இலங்கையிலே அன்புள்ள வண்டோதரியம்மைக்கு அநுக்கிரகஞ் செய்ய

எழுந்தருளி, உபதேசஞ் செய்யும்போது, அன்புடைய இராவணன் வர, சுவாமி பாலகனுக்குத் திருமேனி கொள்ள, பார்ப்பதி தாய் போலக் குழந்தையை யெடுத்துக் கொண்டு இடுப்பில் வைத்து அன்பால் இன்புற்று எழுந்தருளிய' செயலைக் குறித்ததெனப் பொருள் கொள்வர் சீகாழித் தாண்டவராயர்.

திருப்பூவல்லி யென்னும் இப்பதிகமும் இதன் அடுத்த பதிகமாகிய திருவுந்தியாரும் பத்தொன்பது பத்தொன்பது திருப்பாடல்களையுடையனவாம். அச்சிட்ட பதிப்புக்கள் சிலவற்றில் இவ்விரு பதிகங்களில் முறையே 'மாவார வேறி' 'ஏகாசமிட்ட' என்னும் முதற் குறிப்புடைய பாடல்கள் இருபதாவது பாடல்களாகக் குறிப்பிடப் பெற்றுள்ளன. இப்பாடல்கள் இரண்டும் பழைய நல்ல பதிப்புக்களில் இடம் பெறாமையாலும் திருவாசகத்துக்குக் கிடைத்துள்ள உரைகளுள் மிகவும் பழைமையுடைய சீகாழித் தாண்டவராயர் உரையில், இவை இல்லாமையாலும் இவ்விரு பாடல்களும் பிற்காலத்தாரால் பாடிச் சேர்க்கப்பெற்ற மிகைப் பாடல்கள் எனவே கருத வேண்டியுளது.

கச. திருவுந்தியார்

உந்தி பறத்தல் என்பது மகளிர் விளையாட்டுக்களுள் ஒன்று. உந்தி பறத்தலாவது விளையாடும் பருவத்து இளமகளிர் பாட்டுடைத் தலைவனது வெற்றியை வாயாற் புகழ்ந்து கொண்டு உயர எழுந்து குதித்தலாகும். மகளிர் இருவர் சிவபெருமானுடைய வெற்றிச் செயல்களைச் சொல்லிக் கொண்டு துள்ளிக் குதித்து விளையாடும் முறையில் திருவாதவூரடிகளால் அருளிச் செய்யப்பெற்ற பனுவல் இத்திருவுந்தியாராகும். இதற்கு ஞானவெற்றி என முன்னோர் கருத்துரைத்தனர். அருட்சத்தியினுடைய சாமர்த்தியத்தைப் புலப்படுத்தும் நிலையில் அமைந்தது இப்பனுவலாகும். 'அரன்சீர் பாவமுறு தீமையறப் பாடல் திருவுந்தியதே' என்பது திருவாசகவுண்மை.

இதன்கண், சிவபெருமான் திரிபுரம் எரித்தருளியது (1 - 4ஆம் பாடல்கள்), தக்கன் வேள்வி தகர்த்தது (5 - 16ஆம் பாடல்கள்) பாலகனுர்க்குப் பாற்கடல் ஈந்தது (17ஆம் பாடல்), நான்முகனது தலையைக் கிள்ளியது (18ஆம் பாடல்), இராவணனை மலையின் கீழ் அடர்த்தது (19ஆம் பாடல்)

என்னும் பழைய வரலாறுகளாகிய இறைவனுடைய வெற்றிச் செயல்கள் விரித்துரைக்கப் பெற்றன.

சைவசித்தாந்த சாத்திரங்கள் பதினன்கினும் முதற்கண்ணதாய்த் திருவியலூர் உய்யவந்த தேவநாயனாரால் அருளிச் செய்யப்பெற்ற திருவுந்தியார் என்னும் மெய்ந்நூல், திருவாதவூரடிகள் அருளிய திருவுந்தியார் என்னும் இப் பனுவலை யாப்பினும் ஞானவெற்றியென்னும் பொருளினும் அடியொற்றி அமைந்திருத்தல் அறியத்தக்கதாகும்.

௰௫. திருத்தோணோக்கம்

தோள் நோக்கம் என்பது, மகிழ்ச்சிப் பெருக்கினால் தம் தோள்கள் பூரித்து மேலோங்க அவற்றை நோக்கிக் கைவீசியாடும் மகளிரது விளையாட்டு. இதனை 'நல்லார் தம் தோள் வீச்சு' எனக் குறிப்பிடுவர் அடியார்க்கு நல்லார். 'போற்று மடியாருள் நின்று நகுவேன் பண்டு தோள் நோக்கி' (திருச்சதகம் - 60) எனத் திருவாதவூரடிகள் அடியார் நடுவே நின்றமையால் தமக்குண்டான மகிழ்ச்சிப் பெருக்கைக் குறிப்பிடுதலாலும், 'குளிர்ந்து தோள் நோக்கினர்' (சீவக - 1843) எனவும், 'தாமின்னும் நின்றாராந் தோணோக்கி' (கம்ப - யுத்த மாயா சனக - 82) எனவும் பிறரும் கூறுதலானும் தோணோக்கம் என்பது, மகிழ்ச்சிப் பெருக்கினால் பூரித்த தோள்களை நோக்கியாடுதல் என்பது உய்த்துணரப்படும். திருத்தோணோக்கம் என்னும் இப்பனுவலுக்குப் பிரபஞ்ச சுத்தி எனக் கருத்துரைப்பர் முன்னோர். ஆன்மாக்களைச் சுத்திகரித்தல் என்பது இதன் பொருள்.

இதன்கண், தில்லையில் திருக்கூத்தியற்றியருளும் இறைவனது இயல்பும், அம்முதல்வன் அயனும் மாலும் தேடிக் காணுதற்கு அரியனாதலும், அன்புருவாகிய கண்ணப்பர் என்னும் அடியார்க்கு வெளிப்பட்டருளியதும், சொற்பதங்கடந்த கடவுள் கற்போலும் நெஞ்சைக் கனிவித்து நெஞ்சுட் புகுந்து சொல்லாற் போற்றப்பெறும் நிலையில் எளிவந்தருளிய செய்தியும், நிலம், நீர், நெருப்பு, காற்று, விசும்பு, திங்கள், ஞாயிறு, ஆன்மா என இறைவன் எண் பேருருவினனாய் நின்ற நிலையும், அடியார்களின் சித்தஞ் சிவமாக்கிய சீர்த்தியும், தாதையைத் தாளற வீசிய சண்டேசப் பிள்ளையார்க்கு அருள்புரிந்த தகவும், இறைவன் திருவடிகளையே சிந்திக்கும் இயல்பினராகிய மெய்யடியாரது

இயல்பும், திரிபுரம் தீப்பற்றி யெரியும் நிலேயில் சிவனே மறவாத சிந்தையினராகிய அவுணர் மூவர் அவனருளால் உய்ந்த வரலாறும், திருமால் சக்கரம் வேண்டித் தம் கண்ணேயே தாமரை மலராகக் கொண்டு அருச்சித்த சீர்த்தியும், தேவர்கள் சிவபெருமானே யிகழ்தலாகிய குற்றத்தைப் புரிந்து வீரபத்திரரால் தண்டிக்கப்பட்டுத் தூய்மை பெற்ற செய்தியும், திருமாலும் பிரமனும் தேடிக்காண வொண்ணுது அலுத்த நிலேயிற் சிவபெருமான் இலிங்கோற்பவராக வெளிப்பட்டருளிய வரலாறும், வாழ்நாள் வழியடைத்துப் பிறவிப் பிணியினேத் தீர்த்தருள வல்லோன் பரம்பரனுகிய இறைவனெருவனேயாதலின், வீழ் நாள் படாமை அவனே வழிபடுதல் வேண்டும் என்பதும், உரையிறந்த முதல்வனுகிய இறைவனே உள்ளத்தால் நினைந்த அளவில், காம வெகுளி மயக்கங்களாகிய நோய்கள் அறவே கெட்டொழிய ஐம்பொறிகளாகிய பறவைகள் வலிகுன்றியோட ஆன்மாவின் மிகுதிப் பாடாகிய பசுத்துவம் கெட்ட திறமும் பதினுன்கு திருப்பாடல்களால் விரித்துரைக்கப் பெற்றன. இப்பதிகப் பாடல் தோறும் 'ஆடுவாமோ' எனற்பாலதாகிய சொல் 'ஆடாமோ' எனத் திரிந்து நின்றது.

'சித்தஞ் சிவமாக்கிச் செய்தனவே புண்ணியமாய்
அத்தன் செயுங் கருணேக்கு ஆராமை யுண்மிகுந்து
பொத்திய கை கொட்டிப் புகழ்தல் தோணேக்கம்'

என்பது திருவாசகவுண்மை.

௧௬. திருப்பொன்னூசல்

ஊசல் - ஊஞ்சல். ஊஞ்சலில் ஏறியாடுதல் மகளிர்க்கு மன மகிழ்ச்சி விளேக்கும் விளேயாட்டாகும். இளமகளிர் ஊசலில் ஏறியாடுங்கால் பாட்டுடைத் தலேவனது புகழ்த் திறத்தைப் பாடிக் கொண்டு ஆடும் நிலேயில் அமைந்த இசைப்பாட்டு 'ஊசல் வரி' எனப்படும். சிலப்பதிகாரம் வாழ்த்துக் காதையில் ஊசல் வரிப்பாடல்கள் மூன்றும் சேர மன்னனேப் பாட்டுடைத் தலேவனுகக் கொண்டு பாடப் பெற்றவை. இவ்வாறே எல்லாம் வல்ல சிவபெருமானேப் பாட்டுடைத் தலேவனுகக்கொண்டு ஊஞ்சலாடும் மகளிர்பாடிப் பரவும் நிலேயில் திருவாதவூரடிகள் அருளிய பனுவல் திருப் பொன்னூசல் என்பதாகும். செல்வ மிகுதி தோன்ற ஆடும் மகளிரது ஊசல் பொன்னூசல் எனப்பட்டது. இதற்கு அருட்சுத்தி எனக் கருத்துரைத்தனர் சான்ருேர். அருட்

சுத்தியாவது ஆன்மா தன் முனைப்பழிய அருளோடு கூடுத லாகும். ஊசலில் அமர்ந்து ஆடும் மகளிர் தம் சார்பில் நில்லாது தமக்கு ஆதாரமாகிய ஊசலின் சார்பில் அமைந்து அதன் வழியே இயங்கி மகிழ்தல் போன்று, சிவ பெருமான்பால் நேயமிகுந்த அடியார்களும் தம்முணர்வின் வழி யொழுகாது எப்பொருட்குஞ் சார்பாகிய இறைவனது அருளே சார்பாகப் பற்றி நின்று யாண்டும் இயங்கி மகிழுந் திறத்தினை விளக்கும் நிலையில் அமைந்தது இத்திருப்பொன் னூசல் எனக் கருத்துரைத்தல் ஏற்புடையதாகும். "தன் வசமின்றி அருள்வசமாகும் காலம் சகலத்தின் செய்தியும் சுத்தத்தின் செய்தியும் சமானமாய் ஒன்றாகும் தன்மையாகிய அருளின் திறமை" எனச் சீகாழித் தாண்டவராயர் இதற்குக் கூறும் விளக்கம் இக்கருத்தினதாதல் அறியத்தக்கதாகும். இனி, 'அருட்சத்தி யிருந்தாடத் தாலாட்டல் பொன்னூசல்' எனத் திருவாசக வுண்மையிற் குறித்த கருத்து, ஊசலில் ஏறியிருந்து ஆடுவது அருட்சத்தியும், அங்ஙனம் ஆடத் தாலாட்டும் தொழிலினர் அன்புடைய மகளிரும் எனத் திருக் கோயிலில் நிகழும் பொன்னூசல் விழாவினை அடியொற்றி அமைந்ததெனக் கொள்ளுதல் பொருந்தும்.

திருப்பொன்னூசல் ஒன்பது திருப்பாடல்களையுடையது. இதன்கண், 'நாராயணனறியா நான்மலர்த்தாள் நாயடி யேற்கு ஊராகத்'தந்தருளினன் எனவும், 'வான் தங்கு தேவர்களும் காணுமலரடிகள் தேன் தங்கித் தித்தித்து அமு தூறித் தான் தெளிந்து அங்கு ஊன் தங்கி நின்றுருக்கும்' எனவும், 'தன் நீறு எனக்கருளித் தன் கருணை வெள்ளத்தே மன்ன வைத்தான்' எனவும், 'அஞ்சொலாள் தன்னொடும் நெஞ்சுளே நின்று அமுதமூறிக் கருணை செய்து துஞ்சல் பிறப்பறுப்பான்' எனவும், 'ஆனோ அலியோ அரிவையோ என்று இருவர் காணக் கடவுள்' எனவும், 'அடியாருட் கோதாட்டி நாயேனை யாட்கொண்டென் தொல் பிறவித் தீதோடாவண்ணந் திகழப் பிறப்பறுப்பான்' எனவும், 'பாவங்கள் பற்றறுப்பான்' எனவும், 'ஞாலமிகப் பரிமேற் கொண்டு நமையாண்டான்' எனவும், 'தங்குலவு சோதித் தனி யுருவம் வந்தருளி, எங்கள் பிறப்பறுத்திட்டு எந்தரமும் ஆட்கொள்வான்' எனவும் திருவாதவூரடிகள் தம்மை ஆட்கொண்ட உத்தரகோசமங்கைப் பெருமானைப் பரவிப் போற்றியுள்ளார்.

'சீரார் பவளங்கால் முத்தங் கயிருக
ஏராரும் பொற்பலகை ஏறி யினிதமர்ந்து'

எனவும்,

'அன்னத்தின் மேலேறி யாடுமணி மயில்போல்
... பொன்னூச லாடாமோ'

எனவும் வருதலால் பொன்னூசலின் வனப்பும் வடிவ அமைப்பும் அவ்வூசலில் மகளிர் ஏறி அமர்ந்தாடும் அழகும் இனிது புலனுதல் காணலாம்.

௰எ. அன்னைப் பத்து

திருப்பெருந்துறையிற் குருவாய் எழுந்தருளித் தம்மை ஆட்கொண்டருளிய இறைவன் மதுரை நகர வீதியிற் குதிரைச் சேவகனுக எழுந்தருளியபோது அவனது பேரழகில் ஈடுபட்டு அவன்பாற் காதல் கொண்ட தலைவி யொருத்தி தன் அன்னையை நோக்கிக் கூறும் கூற்றினைக் கொண்டு கூறும் முறையில் திருவாதவூரடிகள் அருளிய பனுவல் அன்னைப்பத்தாகும். இச் செய்தி,

'ஆங்கொரு சிறுமி தன்சீர் அன்னையை நோக்கிக்கூறும்
தாங்கிசை மொழியேயாகத் தகுமவை யீரைந் தோதி'

எனவரும் கடவுள் மாமுனிவர் வாய்மொழியால் இனிதுணரப்படும். தலைவி யொருத்தி தன் அன்னையை நோக்கிக் கூறும் கூற்றினைக் கொண்டு கூறும் நிலையிலமைந்த பத்துத் திருப்பாடல்களையுடைய பனுவலாதலின், இஃது அன்னைப் பத்து என்னும் பெயருடையதாயிற்று. இதன்கண் பாடல் தோறும் 'அன்னே யென்னும்' என்ற தொடர் இருமுறை பயின்று வருதல் காணலாம். ஐங்குறு நூற்றில் குறிஞ்சித் திணையின் இரண்டாம் பத்தாக அமைந்த 'அன்னுய்ப் பத்து' என்னும் பெயர்ப்பொருளமைதியினை இவ் அன்னைப்பத்து அடியொற்றி அமைந்திருத்தல் கூர்ந்து நோக்கத்தக்கதாகும். 'நேயமிகுந்த நிலை குலையக் கூடுதலை, ஆயவருள் தாய்க்கங் கறைதலன்னைப் பத்தாகும்' என்பது திருவாசக வுண்மை. அன்னைப் பத்தாகிய இப்பனுவலுக்கு 'ஆத்தும பூரணம்' என முன்னேர் கருத்துரைத்தனர். ஆத்தும பூரணமாவது 'ஆன்மா சிவனுடனே நிறைதல்' என்பதா[ம்.] இப்பனுவலில் அமைந்த பாடல்களில் இரண்டு மூன்[று] அடிகள் இடை மடக்காய் அமைந்திருத்தல் காணலாம்.

வெள்ளைக் கலிங்கத்தர் வெண்டிரு முண்டத்தர்
பள்ளிக் குப்பாயத்தர் அன்னே யென்னும்
பள்ளிக் குப்பாயத்தர் பாய்பரிமேற் கொண்டென்
உள்ளங் கவர்வரால் அன்னே யென்னும். (அன் - 7)

எனவரும் திருப்பாடல், குருவாய் வந்து அருள் புரிந்த இறைவன் மீண்டும் குதிரைச் சேவகனுக எழுந்தருளிய திருக்கோலத்தியல்பினை இனிது புலப்படுத்துவதாகும்.

தாளி யறுகினர் சந்தனச் சாந்தினர்
ஆளெம்மை யாள்வரால் அன்னே யென்னும்
ஆளெம்மை யாளும் அடிகளார் தங்கையில்
தாள மிருந்தவா றன்னே யென்னும். (அன் - 8)

எனவரும் திருப்பாடல், இறைவன் குருவாய் எழுந்தருளி வந்து திருவாதவூரடிகளை ஆட்கொண்ட நிலையில் அம் முதல்வன் 'பரமனையே பாடுவார்' என்னும் அடியார் திருக் கூட்டத்துள் ஒருவராய்த் தமது திருக்கையில் தாளத்தைக் கொண்டிருந்த தோற்றத்தினை நன்கு புலப்படுத்தல் காணலாம்.

௰அ. குயிற் பத்து

இறைவனைக் காதலித்தாள் ஒருத்தி, சோலையினிடத்தே வாழும் குயிலை நோக்கி, 'எங்கள் பெருமானுகிய இறைவனை என்பால் வரக் கூவுவாயாக' எனக் குறையிரந்து வேண்டும் முறையில் அமைந்த பத்துத் திருப்பாடல்களை யுடைமையால் இது 'குயிற் பத்து' எனப் பெயரெய்தியது.

'பொங்கரி னிடையே வாழும் பொற்பிளங் குயிலே கூவி
இங்கழை எம்பிரானை என்பது'

எனத் திருவாதவூரர் புராண முடையார் இதன் பொருள் அமைதியைக் குறித்துள்ளார். இதற்கு 'ஆத்தும இரக்கம்' என முன்னோர் கருத்துரைப்பர். ஆத்தும இரக்கமாவது, உயிர் சிவனைக் கண்டு அம்முதல்வனை விரைவில் அடையப் பெறுதல் வேண்டும் என்னும் வேட்கையால் இரங்குதல். "தூய அருட்குயிலே நற்சோதி யெனைக் கூடுதற்குன், வாயினுற் கூவென முன் வாழ்த்தல் குயிற் பத்தாமே" என்பது திருவாசகவுண்மை.

இதன்கண், இறைவனது சோதி மணிமுடி சொல் லிறந்து நின்ற தொன்மையது என்பதும், அம்முதல்வன் பாதமிரண்டும் பாதாளம் ஏழினுக்கப்பால் ஊடுருவிப் பரவிய

பெருமையுடையன என்பதும், பெருந்துறையிறைவன் ஆர்கலி சூழ் தென்னிலங்கை அழகமர் வண்டோதரிக்குப் பேரருளின்பமளித்த பெற்றியும், அப்பெரியோன் ஞாலம் விளங்கத் திருவுத்தரகோசமங்கையில் எழுந்தருளிய சிறப்பும், வள்ளலாகிய அவ்விறைவன் வான்பழித்து இம்மண் புகுந்து மனிதரை யாட்கொண்டு ஊன் பழித்து உள்ளம் புகுந்து உணர்வதுவாய்க் கலந்த திறமும், மூவரறியா முதல்வன் அந்தரத்தே நின்றும் இறங்கி வந்து அடியவர்களது ஆசையையறுத்த அருளின் சிறப்பும், கோகழிநாதன் நற்பரிமேல் வந்த பொற்பும், வள்ளன்மையும், மெய்ம்மையும், அன்பர்களது அகத்தாமரையில் எழுந்தருளிய இறைவன் உலகவர் கண்காண ஆசானாக எழுந்தருளி வந்து அழகிய சேவடி காட்டிப் பாசம் அறுத்துப் பணிகொண்டருளிய திறமும் ஆகிய திருவருள் நலங்களை அடிகள் இக்குயிற் பத்தில் நெஞ்சம் நெக்குருகிப் போற்றியுள்ளார்.

௰௯. திருத் தசாங்கம்

ஆட்சி புரியும் தலைவன் ஒருவனுக்குச் சிறப்பாகச் சொல்லத்தக்க பத்து அங்கங்களையும் எடுத்துரைத்துப் போற்றும் பனுவல் தசாங்கம் எனப் பெயர் பெறும். தன்னேரில்லாத் தலைவனாகிய சிவபெருமான்பாற் காதல் கொண்ட பெண் ஒருத்தி, கிளியை நோக்கிச் சிவபெருமானுக்குரிய பேர், நாடு, ஊர், ஆறு, மலை, ஊர்தி, படை, முரசு, தார், கொடி என்பன யாவை என வினவக்கேட்ட கிளியானது முறையே அவ் அங்கங்கள் இவை என விடை கூறும் முறையில் வினாவும் விடையுமாக அமைந்த பத்து நேரிசை வெண்பாக்களையுடையது இத்திருப்பதிகமாகும். தலைவி யொருத்தி கிள்ளையை நோக்கி வினா நிகழ்த்த, அவ்வினாவுக்குக் கிளி விடைகூறும்முறையில் இத்திருப்பதிகம் அமைந்திருத்தலால் இதனைக் 'கிள்ளைப்பத்து' என வழங்குதலும் பொருந்தும். எனினும் இத்திருப்பதிகத்தில் சிவபெருமானுக்குரிய பேர், நாடு, ஊர் முதலிய பத்து அங்கங்களைப் பற்றிய புகழ்ச்சியே சிறப்புடைய பொருளாக அமைந்திருத்தலால் இது திருத் தசாங்கம் என்னும் பெயருடையதாயிற்று.

> " பேர்நாடு ராறு மலை பெயரூர்தி படை முரசு
> தார்கொடி யெலாம் அரற்குச் சாற்றல் தசாங்கமதாம் "

எனத் திருப்பெருந்துறைப் புராணத்தில் இப்பதிகத்தின் பெயர்க் காரணம் இனிது விளக்கப்பெற்றது.

சிவபெருமானுக்குரிய சிறப்புடைய பத்து அங்கங்களுள்,

பேர் : ஆரூரன், எம்பெருமான், தேவர் பிரான்.

நாடு : தென்பாண்டி நாடு.

ஊர் : உத்தரகோச மங்கையூர்.

ஆறு : ஆனந்தமாகிய ஆறு.

மலை : இன்பமரும் முத்தியருளும் அருளாகிய மலை.

ஊர்தி : வான் புரவி.

படை : கழுக்கடை.

முரசு : நாதப்பறை.

தார் : தாளியறுகு.

கொடி : ஏறு.

எனத் திருவாதவூரடிகள் இத்திருப்பதிகத்திற் குறித்துப் போற்றியுள்ளார். இறைவன் பெருந்துறையிற் குருவாகத் தோன்றித் தம்மை ஆண்டு கொண்டருளிய நிலையில் அவனுக்குரிய பத்து அங்கங்களையும் விரித்துரைக்கு மிடத்து ஏற்றுக் கொடிக்கு இயையத் தூய நீற்றுக் கோடியினையும் தாளியறுகின்தாருக்கு இயையக் கழுநீர் மாலையினையும் கீர்த்தித் திருவகவலில் அடிகள் குறித்துள்ளமை இங்கு ஒப்பு நோக்கி உணரத்தகுவதாகும்.

“ ஆறும் மலையும் யானையும் குதிரையும்
நாடும் ஊரும் கொடியும் முரசும்
தாருந் தேரும் தசாங்கம் எனப்படும் ”

எனச்சேந்தன் திவாகரமுடையார் தசாங்கம் என்ற பிரபந்தத்திற்கு இலக்கணம் கூறியுள்ளார். இவற்றுள் தேரை நீக்கிப் படையைச் சேர்த்துரைப்பர் சூடாமணி நிகண்டுடையார். திருவாதவூரடிகள் குறித்த பத்து அங்கங்களுள் பேர், படை என்பன திவாகரத்தில் இடம் பெறவில்லை. அவ்விரண்டின் இடத்தில் யானை குதிரை என்பன சேர்க்கப்பட்டன. திருவாசகத்திற் குறிக்கப்பட்ட பேர் என்னும் அங்கம் சூடாமணி நிகண்டிற் குறிக்கப் பெறவில்லை; யானை என்னும் அங்கம் இடம் பெற்றுளது.

“ வழக்கொடு சிவணிய வகைமையான ”

(தொல்–புறத்திணை–31)

எனவரும் புறத்திணையியற் சூத்திரவுரையில், ‘ சிவணிய வகைமை ’ என்றதனானே முற்கூறியவற்றோடே நாடும் மலை

யும் யாறும் படையுங்கொடியும் குடையும் முரசும் நடைநவில் புரவியும் களிறும் தேரும் தாரும் பிறவும் வருவனவெல்லாங் கொள்க எனவும், "இவற்றுட் சிலவற்றை வரைந்து கொண்டு சின்னப்பூ வென்று பெயரிட்டு இக்காலத்தார் கூறுமாறுணர்க" எனவும் நச்சினார்க்கினியர் கூறுதலால், இவ்வாறு தசாங்கம் கூறுதல் பாடாண்டிணையில் உலக வழக்கொடு பொருந்தியதென்பதும், திருவாசகத்திற் காணப்படும் இத்திருத் தசாங்கம் பாடாண்டிணையில் கடவுள் வாழ்த்தின் பாற்படும் என்பதும் இனிது புலனும்.

உ0. திருப்பள்ளியெழுச்சி

"தாவில் நல்லிசை கருதிய கிடந்தோர்க்குச்
சூதர் ஏத்திய துயிலெடை நிலையும்" (தொல்-புறத்திணை-36)

என வரும் சூத்திரத்தில், "தமது வலியாலே பாசறைக்கண் ஒரு மனக்கவற்சியின்றித் துயின்ற அரசர்க்கு நல்ல புகழைக் கொடுத்தலைக் கருதிய சூதர், அத்துயிலெடுப்பின் ஏத்திய துயிலெடை என்ற துறையை ஆசிரியர் தொல்காப்பியனார் குறித்துள்ளார். "துயில் எடை—துயிலினின்றும் எழுப்புதல்; அஃதாவது பள்ளியெழுச்சி. துயிலெடை நிலையாகிய இத் துறை, அரசர்க்கு உரியதாய்த் தொன்றுதொட்டு வருமென் பதூஉம், சூதர், மாகதர், வேதாளிகர், வந்திகர் முதலாயி னோருள் சூதர் என்பவரே இங்ஙனம் வீரத்தால் துயின் றோரைத் துயிலெழுப்புவர் என்பதூஉம், யாண்டும் முன்னுள் ளாரையும் பிறரையும் கூறப்படுமென்பதூஉம் கொள்க" என்பர் நச்சினார்க்கினியர். "அவர் அங்ஙனம் துயின்றமை பிறர்க்கும் புலப்படப் புகழ்தல் அவர் கருத்தாகலின் ஒருதலைக் காமம் உளதாயிற்று" என்பது நச்சினார்க்கினியர் கருத் தாகும். 'ஞாலத்துவரூஉம் நடக்கையது குறிப்பிற் காலம் மூன்றொடு கண்ணியவரும்' புறத்திணைத்துறைகளுள் ஒன்றா கிய இத்துயிலெடைநிலை, உறங்கலும் விழித்தலும் உடைய ராய் உணர்த்த உணரும் இயல்பினராகிய அரசர் முதலிய மாந்தர்க்கே உண்மையாக உரியதாகும் உறங்கலும் விழித் தலும் இன்றி இமையா முக்கண்ணினனாய், தானே முழு துணரும் இயற்கையுணர்வினனாய், நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் இறைவனைத் துயிலெழுப்புவதென்பது, உண்மை நிகழ்ச்சியாதலின்றி வெறும் உபசாரமேயாகும். ஆயினும் 'துஞ்சும் பொழுதாடுஞ் சோதி' ஆகிய அம் முதல்வனை, உறங்கி விழிக்கும் இயல்பினராகிய மாந்தர் தாம் துயிலெழுங்

காலத்துத் தொழுதுகொண்டு எழுதல் இன்றியமையாததாத லின், அவனருளாலே அவன்தாள் வணங்கித் துயிலெழும் வழிபாட்டு நெறிமுறையினை மாந்தர்க்கு அறிவுறுத்தும் நோக்கத்துடன் திருவாதவூரடிகளால் திருவாய் மலர்ந்து அருளப்பெற்றது 'திருப்பள்ளியெழுச்சி' என்னும் இப்பனுவ லாகும். தூங்கி விழிக்கும் இயல்பினராகிய வேந்தர் முதலா யினரை எழுப்புந் துயிலெடைநிலை என்னும் துறையினும் இது வேறுபட்டதென்பது புலனாகச் சான்றோர் இதனைத் துயிலெடைநிலை யென்னாது திருப்பள்ளியெழுச்சியெனத் தொன்றுதொட்டு வழங்கி வருவாராயினர். இந்நுட்பம்,

> " நீறணிந்தார் அகத்திருளும் நிறைகங்குற் புறத்திருளும்
> மாறவருந் திருப்பள்ளி யெழுச்சி யினில் "
>
> (பெரிய-நாவுக்-68)

என வரும் சேக்கிழாரடிகள் வாய்மொழியில் இனிது புலனா தல் காணலாம்.

திருவாசகத்திலமைந்த திருப்பள்ளியெழுச்சி என்னும் இத்திருப்பதிகத்திற்குத் ' திரோதானசுத்தி ' என முன்னோர் கருத்துரை வரைந்தனர். திரோதானசுத்தி என்னும் இத் தொடர்க்கு, ' ஏகமாகிய திரோதாயி மறைப்பான மலம் நீங்கு தல் ' எனப் பொருள் உரைப்பர்.

> " ஏர்மருவு திருப்பள்ளி யெழுச்சி பணிவிடை கேட்டு
> ஆர்வமுடன் ஆண்ட அரற்கு அன்புசெயும் இயல்பே "

எனத் திருப்பெருந்துறைப் புராணமுடையார் இத்திருப் பதிகக் கருத்தினைத் தெளிவாகக் குறித்துள்ளார். திருப் பெருந்துறையில் இறைவனால் ஆட்கொள்ளப் பெற்ற திருவாதவூரடிகள், வைகறைப்பொழுதில் துயிலெழுந்து திருப்பெருந்துறை இறைவனைப் போற்றி அடியார்களாகிய தமக்கு அருள்புரிய எழுந்தருளுமாறு ஆண்டவனை வேண்டி யெழுப்பும் நிலையில் அருளிச் செய்யப்பெற்றது திருப்பள்ளி யெழுச்சி என்னும் இத்திருப்பதிகமாகும்.

முன்னிலைப்பரவலாக அமைந்த இத்திருப்பதிகத்தில், திருப்பெருந்துறையுறை சிவபெருமானை இறைஞ்சி 'எம் பெருமான் பள்ளி யெழுந்தருளாயே' எனப் பாடல்தோறும் அடிகள் இறைவனை வேண்டிப் போற்றுதல் காணலாம். இவ்வாறே திருமாலடியாரான தொண்டரடிப்பொடியாழ்வார், திருவரங்கப்பெருமானைப் போற்றித் திருப்பள்ளியெழுச்சி

பாடியுள்ளமை இங்குக் கருதத் தகுவதாகும். 'பள்ளி எழுந் தருளாய்' என்ற தொடர்க்கு 'எமதுள்ளத்தில் திருப்பள்ளி ஓலக்கம் கொள்ள எழுந்தருள்க' எனப் பொருளுரைப்பர் சீகாழித் தாண்டவராயர்.

'போற்றியென் வாழ்முதலாகிய பொருளே' எனத் தொடங்கும் இத்திருப்பதிக முதற்பாடலில், 'நின்திருமுகத்து எமக்கு அருள்மலரும் எழில்நகை கொண்டு நின் திருவடி தொழுகோம்' என்றது, இறைவனது திருமுகத்தின் முறுவல் நகையினைக் கண்டு அவனருளாலே அவன்தாள் வணங்க விரும்பும் அடியார்களது விருப்பத்தினைப் புலப்படுத்துவ தாகும். "முத்தா வுன்றன் முகவொளி நோக்கி முறுவல் நகை காண, அத்தா சால ஆசைப்பட்டேன்" (திருவாசகம் – ஆசைப்பத்து – 6) என அடிகள் தம் உள்ளத்தமைந்த ஆசையினை வெளியிட்டுள்ளமை இங்கு நினைக்கத்தக்க தாகும்.

'இன்னிசை வீணையர் யாழினர்' எனத் தொடங்கும் திருப்பாடல், வீணையர் – யாழினர், இருக்கு இயம்பினர் – தோத்திரம் இயம்பினர், துன்னிய பிணைமலர்க்கையினர் – தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஆக எதிர் எதிர் பணி புரியும் இருதிறத்து அடியார்களின் குழுவினைப்புலப்படுத்தும் நிலையில் அமைந்திருத்தல் காணலாம். இவ்வாறே,

"தம்மல ரடியொன் றடியவர் பரவத்
தமிழ்ச்சொலும் வடசொலும் தாணிழற் சேர
அம்மலர்க் கொன்றை அணிந்தஎம் அடிகள்
அச்சிறு பாக்கமது ஆட்சிகொண் டாரே"

என வரும் ஆளுடைய பிள்ளையார் வாய்மொழியும், ஆரியம் தமிழ் ஆகிய இரு மொழிகளாலும் அடியார்கள் ஒருங்கு நின்று இறைவனை வழிபட்டு மகிழும் திறத்தினைப் புலப் படுத்தி நிற்றல் உணர்ந்து போற்றத் தக்கதாகும்.

'பூதங்கள் தோறும் நின்றாய்' எனத்தொடங்கும் திருப் பாடல், மாற்ற மனங்கடந்த மறையோனாகிய இறைவனைக் குறித்துப் புலவர்கள் பாடிப் போற்றும் தோத்திரப் பாடல் களின் பொருளமைதியைச் சுட்டுவதாகும். 'பப்பற' என்னும் முதற் குறிப்புடைய திருப்பாடல், ஆண்டவனைக் காதலனாக வும் தம்மை அவனது அன்புக்குரிய காதலியாகவும் எண்ணி வழிபடும் அடியார்களது ஆராக் காதலைப் புலப்படுத்துவ தாகும். 'முந்திய முதல் நடு இறுதியுமானாய்' எனத்தொடங்

கும் பாடல், திருப்பெருந்துறையிற் சிவபெருமான் குருவாக எழுந்தருளித் தம்மை ஆண்டு கொண்டருளிய திறத்தை அடிகள் பரவிப் போற்றும் நிலையில் அமைந்துளது. விண்ணகத் தேவரும் நண்ணுதற்கரிய விழுப்பொருளாகிய சிவபெருமான், தம் கண்ணகத்தே நின்று களிதரு தேனுக எழுந்தருளிய சீர்த்தியினையும், நாம் வாழும் உலகமாகிய இப் பூமி சிவன் உய்யக்கொள்கின்ற நெறியாகத் திகழும் சிறப் பினையும் ஒன்பது, பத்தாம் பாடல்களில் அடிகள் குறித்துப் போற்றியுள்ளமை பாடி மகிழத் தக்கதாகும்.

உக. கோயில் மூத்த திருப்பதிகம்

"உடையாள் உன்றன் நடுவிருக்கும்" எனத்தொடங்கும் இத்திருப்பதிகம், தில்லைச் சிற்றம்பலத்தில் அருட்கூத்து இயற்றும் இறைவனது தொன்மை வாய்ந்த பொருள்சேர் புகழ்த் திறத்தை விரித்துரைக்கும் பெருமையுடைய திருப் பதிகமாதலின், 'கோயில் மூத்த திருப்பதிகம்' என வழங்கப் பெறுவதாயிற்று. காரைக்காலம்மையார் அருளிய திருவாலங் காட்டு மூத்த திருப்பதிகத்தினைப் போன்று, கோயில் எனச் சிறப்பிக்கப்பெறும் தில்லைச் சிற்றம்பலத்தைத் திருவாதவூர் அடிகள் பரவிப் போற்றிய இத்திருப்பதிகமும் பொருளால் முதன்மையுடையதாக அமைந்திருத்தலால் 'கோயில் மூத்த திருப்பதிகம்' என்னும் பெயருடையதாயிற்று எனக் கருது தல் பொருந்தும்.

இது, தில்லையில் அருளிச் செய்யப் பெற்றதென்பது, 'கோயில் மூத்த திருப்பதிகம் சிதம்பரத்தில் அருளடையுங் குறிப்பதாகும்' என வரும் திருப்பெருந்துறைப் புராணத் தொடரால் அறியலாம். இப்பதிகப் பாடல்கள் பத்தும் அந்தாதியாகத் தொடர்ந்தமைந்துள்ளன. இதற்கு 'அநாதி யாகிய சற்காரியம்' என முன்னோர் கருத்துரைப்பர். எல்லை யறிய வொண்ணுத தொல்லை நாள் தொட்டு இறைவன் உள் பொருளாகிய உலகுயிர்களைச் செயற்படுத்தி அருளும் முறைமையினை அறிவுறுத்தும் நிலையில் இப்பதிகம் அமைந் திருத்தல் கூர்ந்து நோக்கத் தக்கதாகும்.

இப்பதிகத்திற்குச் 'சத்தியும் சிவமும் ஒத்திரு பாலுற முத்தியாகும் முறைமையருளிய உண்மை' எனக் கருத்து உரைப்பர் சீகாழித் தாண்டவராயர். 'பொன்னம்பலத்திலே திருக்கூத்தியற்றியருளும் எம்பெருமானே! என்னை அடிமை

யாகவுடைய இறைவனாகிய நீ அம்மையோடு அப்பனாகி இரு வீரும் என் உள்ளத்தில் உயிர்க்குயிராய் எழுந்தருளியிருப் பது மெய்ம்மையானால், அடியேனாகிய யான் உன் மெய்யடி யாராகிய அன்பர் குழுவிலே ஒருவனாக அவர்கள் நடுவே வாழும் இன்ப அன்பினை எனக்கு அளித்தருளி எனது கருத் தினை முன்னின்று முடித்தருள்வாயாக' என அடிகள் தில்லைச் சிற்றம்பலப் பெருமானை இறைஞ்சி வேண்டுவதாக அமைந்தது,

'உடையாள் உன்றன் நடுவிருக்கும்
உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும்
இருப்பதானால் அடியேன் உன்
அடியார் நடுவுள் இருக்கும் அருளைப்
புரியாய் பொன்னம்பலத்தெம்
முடியா முதலே என் கருத்து
முடியும் வண்ணம் முன்னின்றே'

எனவரும் இப்பதிகத்தின் முதல் திருப்பாட்டாகும். சிவ மாகிய பரம் பொருளினின்றும் அதனிற் பிரிவிலாது விளங் கும் திருவருள் தோன்றுதலின் முழுமுதற் பொருளாகிய சிவம் அருளாகிய சத்திக்கு நிலைக்களமாகத் திகழ்வது என்ப தனை, 'உடையாள் உன்றன் நடுவிருக்கும்' என்றும், அவ் அருளே திருமேனியாகக் கொண்டு தோன்றி உயிர்களுக்கு எளிவந்தருளுதல் சிவத்தின் இயல்பாதலின் அத்தகைய சிவத்திற்கு அருளாகிய சிவசத்தியே நிலைக்களமாம் என்ப தனை 'உடையாள் நடுவுள் நீ இருத்தி' என்றும், இறைவன் சத்தியும் சிவமுமாகிய தன்மையால் அம்மையோடு அப்ப னாகி உயிர்தோறும் உயிர்க்குயிராய் எழுந்தருளியுள்ளான் என்பதனை, 'அடியேன் நடுவுள் இருவீரும் இருப்பதானால்' என்றும் திருவாதவூரடிகள் விளக்கிய திறம் ஆழ்ந்துணரத் தக்கதாகும். இனி, 'உடையாள் உன்றன் நடுவிருக்கும் உடையாள் நடுவுள் நீ இருத்தி, அடியேன் நடுவுள் இரு வீரும் இருப்பதானால்' எனவரும் இத்தொடர் முத்தி பஞ் சாக்கரத்தின் அமைப்பினைப் புலப்படுத்தும் நிலையில் அமைந்ததெனக் கூறுதலும் உண்டு.

'முன்னின்றாண்டாய் எனைமுன்னம் யானும் அதுவே முயல்வுற்றுப், பின்னின்றேவல் செய்கின்றேன்' எனவரும் இரண்டாந் திருப்பாட்டில் 'முன்னம்' எனக் குறித்தது மகாகேவலத்தை எனவும், 'முயல்வுற்று' என்றது தாமே

தருபவரைத் தம் வலியினுற் கருதல் (திருவருட் பயன் 70) எனவும் விளக்கங் கூறுவர் தாண்டவராயர்.

அன்புடைய அடியார்களுக்குக் காட்சி தந்து வெளிப் பட்டருளியும் தமக்கு ஓரளவு வெளிப்பட்டு முழுவதும் வெளிப்படாது மறைந்தும் நின்ற இறைவனது நிலையினை யெண்ணி ஏக்கற்ற உளத்தினராகிய அடிகள்,

"கரைசேர் அடியார் களிசிறப்பக்
காட்சி கொடுத்துஉன் னடியேன்பால்
பிரைசேர் பாலின் நெய்போலப்
பேசாதிருந்தால் ஏசாரோ"

எனப் பொன்னம் பலத்தாடும் அமுதினைப் போற்றியுள்ளார். பிரை – பாலைத் தயிராக்குதற் பொருட்டு அதன்மேல் தெளிக்கப்படும் மோர்த்துளி. பிரை சேர்ந்த பாலினகத்து நெய்யானது முழுவதும் வெளிப்படாது சிறிது புலப்பட்டுத் தோன்றுமாறு போன்று, இறைவனுகிய நீ எனக்குச் சிறி தளவே தோன்றி அருள் செய்து மறைந்துள்ளாய் என்பார், 'பிரைசேர் பாலின் நெய்போலப் பேசாதிருந்தால்' என்ருர்.

"விறகிற் றீயினன், பாலிற் படு நெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல்நட் டுணர்வு கயிற்றினுல்
முறுக வாங்கிக் கடைய முன்னிற்குமே"

எனவரும் அப்பர் அடிகள் வாய்மொழி இங்கு ஒப்புநோக்கி யுணர்தற்குரியதாகும்.

திருவாதவூரடிகள் அம்பலக் கூத்தனை நோக்கி,

"இரங்கும் நமக்கு அம்பலக் கூத்தன்
என்றென் றேமாந் திருப்பேனை
அருங் கற்பனை கற்பித்தாண்டாய்
ஆள்வாரிலி மாடாவேனோ"

என அன்பினுல் வினவி வேண்டுவதாக அமைந்தது இப்பதி கத்தின் ஏழாந் திருப்பாட்டாகும். இதன்கண் 'அருங் கற் பனை' என்றது, யாவராலும் முயன்று பெறுதற்கு அரியதாய், இறைவனே பெருந்துறையிற் குருவாக எழுந்தருளிக் கற்பித்தருளிய சிவஞான உபதேசத்தினை. ஆள்வாரிலி மாடு – மேய்ப்பாரில்லாத ஊர்க்காளை. மாடு ஆவேனோ என் புழி ஆக்கச் சொல் உவமப் பொருள் குறித்து நின்றது. 'கண் கெட்ட, ஊர் எருயிங்குழல் வேனோ' (திருச்சதகம். 53) என முன்னருங் கூறியுள்ளமை காண்க.

'சிரிப்பார் களிப்பார் தேனிப்பார்' (9), 'நல்காதொழி யான்' (10) எனவரும் திருப்பாடல்கள் இரண்டும் சிவஞானி களாகிய அடியார்களது அநுபவத்தை இனிது விளக்கும் நிலையில் அமைந்துள்ளன. சிரித்தல் - 'உள்குவார் உள்கிற் றெல்லாம் உடனிருந்தறிதி' என இறைவனது முற்றுணர் வினையும் அதனை அறியாது தாம் செய்த சிறுமையினையும் எண்ணி வெள்கிச் சிரித்தல். களித்தல் - 'சிறுமான் ஏந்தி தன் சேவடிக் கீழ்ச் சென்று அங்கு இறுமாந்திருக்கும்' நிலையை யெண்ணிக் களித்தல். தேனித்தல் - 'காணுங் கரணங்களெல்லாம் பேரின்பம் எனச் சிவபரம் பொருளையே பேணித் தியானித்து உள்ளம் அள்ளூறித் தித்திக்கப் பெறுதல்.

உஉ. கோயிற்றிருப்பதிகம்

கோயில் என்ற பெயர் தில்லைக்கே சிறப்பாக உரியதாயி னும் ஈண்டுக் கோயில் எனக் குறிக்கப்பெறுவது திருப்பெருந் துறையில் அமைந்த திருக்கோயிலே எனக் கருதவேண்டி யுளது. "செந்தழல் புரை திருமேனியுங் காட்டித் திருப் பெருந் துறையுறை கோயிலுங்காட்டி" (திருப்பள்ளி யெழுச்சி - 8) எனவரும் அடிகளது வாய்மொழியும் 'ஏயுங் கோயிற்றிருப்பதிகம் பெருந்துறைத்தேசிகர் மோகம் இயம்ப லாகும்' எனவரும் திருப்பெருந்துறைப் புராணத் தொடரும் இக்கருத்தினை வலியுறுத்தல் காணலாம். இப்பதிகத்தின் திருவுள்ளக்கிடை 'அனுபோக இலக்கணம்; சிவாநு பூதிக்கு அடையாளம்' என்பதாகும். திருவாதவூரடிகள் தாம் பெற்ற சிவாநுபவமாகிய அதனைக்கொண்டு இறைவனது அருளா ரின்பத்தின் இயல்பினைப் புலப்படுத்தும் நிலையில் அருளிச் செய்யப்பெற்றது இத்திருப்பதிகமாகும். இப்பதிகப் பாடல் கள் அந்தாதியாக அமைந்துள்ளன.

திருப்பெருந்துறையிற் குருவாய் எழுந்தருளிய பெரு மான், மாறி நின்று மயக்கிடும் ஐம்புல வழியை அடைத்து அடியார்களின் உள்ளத்தினுள்ளே தேறலின் தெளிவாய் அமுதே ஊறி நின்று இன்பஞ் செய்யுந் திறத்தினையும், உணர்ந்தார்க்குணர்வரிய பரம்பொருள் அன்புடைய அடி யார்களது ஆவியோடு ஆக்கை புரைபுரைகனிய உள்ளத்தி னுள்ளே புகுந்து நின்று உருக்கிப் பொய்யிருள் கடிந்து மெய்ச்சுடராய்ப் பிறப்பறுக்கும் நன்மருந்தாய்க் குறைவிலா

நிறைவாய்க் கோதிலா அமுதாய் மனத்திடை மன்னிச் சிந்தைவாய்ப் பாய்ந்து உள்ளே யெழுகின்ற சோதியாய், உலகப் பொருள்களெல்லாவற்றையும் தன்னகத் தடக்கிக் கொண்டு வெளிப்பட்டருளுந் திறத்தினையும், அத்தெய்வக் காட்சியை அடிகள் தம் கண்ணுரக் கண்டு மகிழ்ந்த திறத்தை யும், இருள் கடிந்து எழுகின்ற ஞாயிறே போன்று உள்ளத்தி னுள்ளே நின்ற அம் முதற் பொருளை ஆன்ம போதமாகிய நினைப்பறத் தாம் நினைந்து போற்றிய திறத்தினையும், மெய்ப்பொருளாகிய அது இவ்வுலகுயிர்களுக்கு ஆதார மாக வேறொரு பொருள் இல்லை யென்னும்படி பார்பதம் அண்டம் அனைத்துமாய் முளைத்துப் படரொளிப் பிழம்பாய் யாண்டும் பரவி நிற்கும் பெற்றியையும், அம்முதற் பொரு ளின் இயல்பினை அதனது அருள் வெள்ளம் பாய்ந்த சீருறு சிந்தையாலன்றி ஆன்ம போதத்தால் அறிதல் இயலா தென்பதனையும், ஆதி நடு அந்தமாய்த் தீதிலா நன்மைத் திருவருட் குன்றாய்த் திகழும் அப்பரம் பொருள் அன்புடைய அடியார்களின் பாசப் பிணிப்பினை அறுத்து அந்தமொன் றில்லாப் பேரானந்தப் பெருவாழ்வை வழங்கியருளும் பெற்றியுடைய தென்பதனையும், எல்லாவுயிர்கள் மாட்டும் காரணமின்றிச் செல்லும் அப் பேரருட்கு உயிர்கள் எத்த கைய கைம்மாறுகளையும் செய்யவல்ல ஆற்றலுடையன அல்ல என்பதனையும் அடிகள் அநுபவத்தின் துணை கொண்டு இத்திருப்பதிகத்தில் இனிது விளக்கியுள்ளார்கள்.

இப்பதிகத்தின் முதற் திருப்பாடலில் நான்காமடிக்கு 'ஈறிலாப் பதங்களாயவை கடந்த இன்பமே' எனப் பாடங் கொண்டு, "முடிவிலாத உலகாயதன் முதல் சிவாத்துவித பத வீடுமாய் அவைக்கு அப்பாலாய் நின்ற பேரின்ப சொரு பமே" எனப் பொருளுரைப்பர் தாண்டவராயர். மூன்றாந் திருப்பாடலில் 'பொய்யிருள் கடிந்த மெய்ச்சுடரே' என வரும் தொடரில் 'பொய்யிருள்' என்றது ஆணவமலத்தை. "பெத்தகாலத்து மேற்பட்டு நின்ற தனது சத்தி, முத்தி காலத்து ஒளிமுன் இருள் போல மடங்கிச் சூனியம் போல் நிற்றல் மாத்திரையே பற்றி உள் பொருளாகிய ஆணவ மலத்தினைப் பொய்யிருள் என்றார்" (சிவஞானபாடியம் சூத்திரம் 6.) என இத் தொடர்க்கு விளக்கம் கூறுவர் சிவஞான முனிவர். நிலையற்றமையாற் பொய்யாய செல்வத்தே புக்கழுந்தி (அவற்றை) மெய்யாக் கருதிக்

கிடக்கச் செய்தல் பற்றிப் பொய்ம்மையை விளைக்கும் இருள் என்னும் பொருளில் ஆணவமாகிய இருள் மலத்தினைப் 'பொய்யிருள்' எனக் குறித்தார் எனினும் பொருந்தும்.

பொருளையுங் காட்டாது தன்னையுங் காட்டாது உயிரறிவை மறைத்து நிற்கும் ஆணவமாகிய செறிந்த பேரிருளிலேயும் அதனாற் பிணிப்புற்ற உயிர்கள் தெளிவு பெற்றுத் தூய்மை பெறும் வண்ணம் இறைவனது சிவஞானமாகிய பேரொளி மேற்பட்டு விளங்குவதென்பார், 'திணிந்ததோர் இருளில் தெளிந்த தூவெளியே' (4) எனப் போற்றியுள்ளார். இத்தொடர்ப் பொருளை விளக்கும் முறையில்,

"ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றேயிடம், ஒன்று மேலிடிலொன்று
ஒளிக்கும் எனினும் இருளட ராதுள் ளுயிர்க்குயிராய்த்
தெளிக்கு மறிவு திகழ்ந்துளதேனுந் திரிமலத்தே
குளிக்கு முயிரருள் கூடும்படிக் கொடி கட்டினனே"
(கொடிக்கவி. 1)

எனவரும் பாடல் அமைந்திருத்தல் அறியத்தக்கதாகும்.

"இன்றெனக் கருளி இருள் கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலாற் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாந்
திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்றுநீ அல்லை அன்றியொன் றில்லை
யாருன்னை அறியகிற் பாரே" (7)

எனவரும் திருப்பாடல், திருவாதவூரடிகள் இறைவனது திருவருளாற் சுத்தாவத்தை அடைந்த நிலைமையினை இனிது புலப்படுத்தும் என்பர்.* நினைப்பற நினைதலாவது ஒரு பொருளைச் சுட்டியறியும் சுட்டுணர்வாகிய நினைப்பும் மறப்பும் அற்ற அதீத நிலையில் இறைவனது திருவருளில் அழுந்திநின்று உணர்தல். 'நினைப்பற உள்கில்' என்பது திருமந்திரம் (2666). 'நினைப்பற நினைந்தேன்' எனவரும் இத் திருவாசகப் பொருளைச் சிந்தித்துணர்ந்த தாயுமானார், 'நினைப்பறவே தானினைந்தேன் என்ற நிலை நாடி, அனைத்துமாம் அப்பொருளில் ஆழு நாள் எந்நாளோ' (அறிஞர் உரை) எனக் கூறியுள்ளமை இங்கு உணரத்தக்கதாகும். இறைவன் ஒவ்வொரு பொருள் தோறும் நீங்கா-

* ஞானவரண விளக்கம். பக்கம் 541.

நிலைபெற்றுப் பரவித்தோன்றும் பருமை நிலையினனாகவும், இங்ஙனம் எல்லாப் பொருள்களோடும் தான் பிரிவறக் கலந்து நிற்பினும் அவற்றின் தன்மை தனக்கு எய்தலின்றி அணுவினும் மிக நுண்ணியனாய் மிக மிக நுணுகி மறையும் நுண்மை நிலையினனாகவும் உலகெலாமாகி ஒருபொருளாய்த் திகழுந்திறத்தினை, 'சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்றும் திருப்பெருந் துறையுறை சிவனே' என வரும் தொடரில் அடிகள் புலப்படுத்தியுள்ளார். இவ்வாறு இறைவனாகிய நீ உலகெலாம் ஆகி நிற்பினும் உலகப் பொருள்க ளொன்றினுந்தோய் வின்றியுள்ளாய் என்பார் 'ஒன்றும் நீ அல்லை' என்றும், எவ்வகைப் பொருள்களும் நினது சார்பின்றித் தாமே தனித்து நிற்கும் ஆற்றல் உடையன அல்ல என்பார், 'அன்றி ஒன்று இல்லை' என்றும், இங்ஙனம் அனைத்துமாய் அவையல்லையாய் நிற்கும் நின்னைத் தம் ஆன்மபோதம் இழந்து நின்னருளின் வழி அடங்கிய சிவஞானிகளையன்றித் தம்முணர்வினராகிய ஏனை யாவரும் அறியவல்லாரல்லர் என்பார், 'யார் உன்னை அறியகிற்பாரே' என்றும் கூறினர். இங்ஙனம் இறைவனது அருள்வழி நின்று அவனை உணர்ந்து மகிழும் இந்நெறியின் சிறப்பினை, 'சென்று சென்றே யணுவாய்த் தேய்ந்து தேய்ந் தொன்றாகி, நின்றுவிடும் என்ற நெறி நிற்கு நாள் எந் நாளோ' (அறிஞர் உரை) எனத் தாயுமானார் விளக்கிய திறம் ஈண்டு நினைக்கத் தக்கதாகும்.

இறைவனே குருவாக எழுந்தருளி வந்து தம்மை அடிமையாகக் கொண்டபோதே தனது பாரங்கெட்டுச் சர்வமும் தம்பிரானார்க்கே பாரமாம் முறையில் தன்னை அவனுக்குத் தந்த முறையினையும் அதன் பயனாக இறைவன் அடிகள் செயலெல்லாந் தன் செயலே யாக்கித் தன்னை அடிகளுக்குத் தந்த சிறப்பினையும் புலப்படுத்தும் நிலையில் அமைந்தது,

'தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாது நீ பெற்றதொன் றென்பால்
சிந்தையே கோயில் கொண்ட எம்பெருமான்
திருப்பெருந்துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய்
யான் இதற்கிலன் ஓர் கைம்மாறே'

எனவரும் பத்தாந் திருப்பாடலாகும். இதன்கண் இறைவனருளால் பாசங்களினின்றும் விடுபட்டு நல்லறிவு பெற்றுச் சுதந்தர நிலையில் உள்ள உயிர், சிவாநுபவமாகிய பேரின்ப நுகர்ச்சி யொன்றுக்கேயுரிய தென்பதும், படைத்தல் முதலிய ஐந்தொழில் இயற்றும் இறைவனுக்கு உயிர்களாற் பெறத் தக்க பயன் எதுவும் இல்லை யென்பதும் தோன்ற, 'அந்தம் ஒன்றில்லா ஆனந்தம் பெற்றேன், யாது நீ பெற்றது ஒன்று என்பால்? என அடிகள் வினவிப் போற்றியுள்ளமை காணலாம்.

'நஞ்செயல் அற்றிந்த நாமற்றபின் நாதன்
தன்செயல் தானேயென் றுந்தீபற
தன்னையே தந்தானென் றுந்தீபற' (6)

என்வரும் திருவுந்தியார், அடிகளது அநுபவ மொழியை அடியொற்றியமைந்ததாகும்.

"உம்பர் பிரான் உற்பத்தி யாதிகளுக்குரியன், உயிர் தானும் சிவாநுபவம் ஒன்றினுக்கும் உரித்தே" (சித்தியார் - சுபக் - 319) என்னும் உண்மை அடிகளது சிவாநுபவத்தில் வைத்து உணரத்தக்க முறையில் இத்திருப்பாடலில் அமைந்திருத்தல் காணலாம்.

ஆன்ம போதங்கெட்டு அருளின் வழியொழுகும் அடியார்களது உள்ளத்தையும் உடம்பினையும் கோயிலாகக்கொண்டு அவர்தம் செயலெல்லாம் தன்செயலாகக்கொண்டு எழுந்தருளியிருக்கும் இறைவனது இயல்பினை, 'சிந்தையே கோயில்கொண்ட எம்பெருமான்....உடலிடங் கொண்டாய்.... யான் இதற்கு இலன் ஓர் கைம்மாறே' எனவரும் தொடரில் தமது அநுபவத்தின் வைத்து அடிகள் விளக்கியுள்ளார். "புகுந்தென் சிந்தைத் தன்னுருவைத் தந்தவனை" (6–27–4) எனவும், 'பொல்லாத புலாலுடம்பே புகுந்து நின்ற கற்பகமே' (6–95–4) எனவும் வரும் அப்பர் அருண்மொழிகள் இங்கு நினைக்கத் தக்கனவாகும்.

உ௩. செத்திலாப் பத்து

திருவாதவூரடிகள், திருப்பெருந்துறை மேவிய சிவபெருமானை நோக்கி, 'ஐயனே! ஆன்மபோதம் முற்றும்கெட நினது திருவருளிலே தோயப்பெற்றிலேனே. அத்தகைய நற்பேற்றினை எளியேற்கு அருள்புரிவாயாக' எனக் குறையிரந்து வேண்டும் முறையில் செத்திலாப்பத்தாகிய இதனை

அருளிச் செய்துள்ளார். ஈண்டுச் சாதல் என்றது, பசுபோதம் முற்றும்கெட இறைவனது திருவருளாகிய ஓங்குணர்வில் உள்ளடங்கித் தூங்குதல். அத்தகைய சாதல் எனக்கு வாய்க்கவில்லையே என ஏங்குதலாகிய ஒரு பொருள் நுதலிய பத்துப் பாடல்களையுடைமையால் இது 'செத்திலாப்பத்து' என்னும் பெயருடையதாயிற்று.

"பதிகம் என்பது பல்வகைப் பொருளையும் தொகுதியாகச் சொல்லுதல்" என்பவாகலின், செத்திலாமையாகிய ஒருபொருளே நுதலிய இது செத்திலாப்பதிகம் என்னுது செத்திலாப்பத்து எனக் குறிக்கப்பெறுவதாயிற்று. அன்னைப் பத்து, குயிற்பத்து என முன்வந்தனவற்றிற்கும் அடைக்கலப் பத்து முதலாக யாத்திரைப்பத்து ஈருகப் பத்தென்னும் பெயருடன் பின்வருவனவற்றிற்கும் இஃது ஒக்கும்.

பசுபோதத்தை வெறுத்துச் சிவனருளில் தோயப் பெற்றிலேனே என ஏக்கற்று வருந்தும் ஆற்ருமையுணர்வு, பேரானந்தம் அளவறுக்கொண்ணுதை மெய்யடியார்களிடத் தன்றி ஏனையோர்பால் தோன்ருதாதலால், திருவாதவூரடிகள் அத்தகைய ஆற்ருமை மீதூர அருளிச் செய்த செத்திலாப் பத்தென்னும் இதற்குச் 'சிவானந்தம் அளவறுக் கொண்ணுமை' என முன்னோர் கருத்துரை வரைந்தனர். 'சிவானந்தம் அணுகிச் செயிக்கப்படாமை' எனப் பின் வந்தோர் விளக்கமுங் கூறினர். "ஆயும் பசுபோதம் முற்றுங் கெட வேண்டலே செத்திலாப்பத்தாகும்" என்பர் திருப் பெருந்துறைப் புராண ஆசிரியர்.

தம்மை ஆண்டுகொண்டருளிய இறைவனைப் பிரிந்து கணமும் தரித்திருக்கப்பெருத திருவாதவூரடிகள், தமது ஆன்மபோதம் முற்றும் கெட்டொழிதல் வேண்டும் என இறைவனை வேண்டுபவர், அதற்கு நிலைக்களனுகிய தமது உடம்பும் பொன்றக்கெட இறந்துபடவில்லையே என இரங்கி இறைவனை நோக்கி முறையிடும் நிலையில் இதன் பத்துப் பாடல்களும் அமைந்திருத்தல் காணலாம்.

இதன் ஐந்தாந் திருப்பாடலில் உள்ள ஆட்டுத்தேவர், நாட்டுத்தேவர், சேட்டைத்தேவர் என்பன முறையே உயிர்களின் உள்ளத்தைப் பல துறைகளில் ஈர்த்து அலைக்கழித்து ஆட்டுவிக்கின்ற ஐம்புலன்களையும், வானநாட்டில் வாழ்வோராகிய இந்திரன் முதலிய தேவர்களையும், உலகங்களைத்

தொழிற்படுத்து இயக்கும் காரணேசுரர்களையும் குறிப்பன வாகும். இதன் ஏழாந் திருப்பாடலில், 'நமச்சிவாய வென் றுன்னடி பணியாப் பேயனுகிலும் பெருநெறி காட்டாய்' எனவரும் தொடர், திரு ஐந்தெழுத்து உயிர்களின் வாசனா மலத்தை ஒழிப்பதாய் இறைவனை வழிபட்டு இன்புறும் பெரு நெறிக்குச் சாதனமாம் என்னும் உண்மையினைப் புலப்படுத் தல் அறியத்தக்கதாகும்.

உச. அடைக்கலப் பத்து

பேரிடர் செய்யும் பசுபாசப்பிறப்பிற்கு அஞ்சிய திருவாத வூரடிகள் தம்மை அப் பிணிப்பினின்றும் நீக்கி உணர்வற்ற உடைமைப் பொருள்போல் ஏன்றுகொள்ளும்படி இறைவனை வேண்டி அடைக்கலம்புகும் நிலையிற் பரவிப்போற்றிய பனுவ லாதலின் இஃது அடைக்கலப்பத்து என்னும் பெயருடைய தாயிற்று. அடைக்கலமாவது, தனக்கு இன்றியமையாத உடைமைப்பொருளைப் பகைவர் முதலியோராலுளவாம் கேடு களை நீக்கிப் பாதுகாத்துத் தரவல்ல தக்கவர்பால் ஒப்படைத்த லாகும். அடிமையாகிய தன்னை உணர்வுடைய உயிராகக் கருதாது உணர்வற்ற உடைமைப்பொருள் போன்று எண்ணி ஏன்று கொள்ளுமாறு இறைவன்பால் அடைக்கலம் புகுதல் அன்பிற்சிறந்த மெய்யடியார்களின் இயல்பாகும்.

"படைக்கல மாகவுன் னாமத் தெழுத்தஞ்சென் னாவிற்
கொண்டேன்
இடைக்கல மல்லேன் எழுபிறப்பும் முனக்காட் செய்கின்றேன்
துடைக்கினும் போகேன் தொழுதுவணங்கித்தூ நீறணிந்துன்
அடைக்கலங் கண்டாய் அணிதில்லைச் சிற்றம்பலத்தரனே"
(4–81–8)

எனவரும் அப்பரடிகள் வாய்மொழி இங்கு நினைக்கத் தகுவ தாகும். பிறவித் துன்பத்திற்கு அஞ்சிய உயிர்கள் இறைவன்பால் அடைக்கலம் புகுதல் இன்றியமையாதது என்னும் உண்மையினை உலகினர்க்கு உணர்த்தும் முறையில் அடிகள் அடைக்கலப்பத்தினைப் பாடிப் போற்றியுள்ளார். இந்நுட்பம், 'ஓது வல்வாதனை வந்தணுகாமல் அடைக்கலப் பத் துரைத்ததாமே' என்னும் திருப்பெருந்துறைப் புராணத் தால் இனிது புலனாம். இதன் பாடல்தோறும் முடிவில் 'உடையாய் அடியேன் உன் அடைக்கலமே' என அடிகள் இறைவனை நோக்கி முறையிடுதல் காணலாம்.

அடைக்கலப்பத்திற்குப் ‘பக்குவநிண்ணயம்; அஃதாவது வித்தும் அங்குரமும்போல வென்றல்’ என முன்னோர் கருத்துரைப்பர். உயிர் தன்முனைப்படங்கித் தாழ்வெனுந் தன்மையோடும் இறைவனை அடைக்கலம் புகுதலாகிய இந் நிலை, மலமாசு நீங்கி இறைவனது அருளாரின்பப் பெரு வாழ்வை அடைதற்குரிய பக்குவத்தையடைந்தது என உறுதி செய்தற்குரிய அடையாளமாதலின், இதற்குப் பக்குவ நிர்ணயம் எனப் பண்டையோர் கொண்ட கருத்து மிகவும் பொருத்தமுடையதேயாகும்.

இதன்கண் அமைந்த பத்துப் பாடல்களும் யாப்பினும் பொருளினும் வேற்றுமையுடைய கொச்சகவொருபோகாய், ஓரோசையாக அமையாமல் அசையும் சீரும் இசையொடு புணர்த்து ஓதுமிடத்து, தாழிசை, கட்டளைக்கலித்துறை என இவ்வாறு வேறுபட்ட ஓசையுடைய பாடல்களாய் அமைந்தமையால் இப்பாடல்களைக் ‘கலவைப்பாட்டு’ என முன்னோர் குறித்துள்ளார்கள். இப்பாடல்கள் கலிவிருத்தம் எனத் தாண்டவராயர் உரையிற் குறிக்கப்பட்டிருத்தல் யாப்பிலக்கணப் பயிற்சியில்லாமையால் இடைக்காலத்தில் நேர்ந்த பிழையெனக் கருதவேண்டியுளது

இதன்கண் இறைவனது கருணையின் உயர்வும் அவனடி அடைந்த அடியார்களின் பெருமையும் தமது சிறுமையும் கூறி, உணர்வுடைய ஆன்மாவாகிய தம்மையும் உணர்வற்ற உடைமைப் பொருளாக எண்ணி ஏன்றுகொள்ளுதல் வேண்டும் எனத் திருவாதவூரடிகள் இறைவனை வேண்டிய திறம் உணர்ந்து போற்றற்குரியதாகும்.

உரு. ஆசைப் பத்து

திருவாதவூரடிகள், உலகப்பொருள்களில் தமக்குள்ள ஆசையை அறவே நீக்கித் திருவருளில் தாம் கொண்டுள்ள ஆசையை நிறைவேற்றி அருளும்வண்ணம் தம்மை ஆட்கொண்டருளிய இறைவனை இறைஞ்சி விண்ணப்பிக்கும் முறையில், பரவிப்போற்றிய பத்துத் திருப்பாடல்களையுடைய பதிகமாதலின், இஃது ஆசைப்பத்து என்னும் பெயருடைய தாயிற்று. இதற்கு ‘ஆத்துமவிலக்கணம்–அஃதாவது ஆன்ம ரூபத்தையறிதல்’ எனக் கருத்துரைப்பர் முன்னோர்.

“கருவியுறும் ஊனுடற்கண் வாராமல் திருவருளிற் கலப்பதற்கே
அரனடியைப் புகழ்ந்து பெருகார்வமொடு பாடுதலே
ஆசைப்பத்தாம்”

என்பது திருப்பெருந்துறைப் புராணமாகும். ஞானம்பெற்ற நல்லுயிரைக் கீழ்நிலைக்கு இழுத்துச்செல்லும் இழிநிலையின தாகிய ஊனுடற்கண் உள்ள ஆசையை விலக்கிப் பேரின்ப நிலையினை அருளவல்ல இறைவனது திருவருளைப் பெறுதற் கும், அவ்விறைவனது பொருள்சேர் புகழைப் பரவித் துதித் தற்கும், அவனருள் பெற்ற பழவடியார்களின் திருக்கூட்டத் தைக் கண்டு மகிழ்வதற்கும், பஞ்சேரடியாள் பங்கனாகிய இறைவன் திருவாயால் அஞ்சேல் என்னத் தம்மை அழைத்து அருள்புரிதற்கும் தம் மனத்தெழுந்த தூய ஆசையினை அடிகள் இப்பதிகப் பாடல்களில் விரித்துக் கூறியுள்ளமை காணலாம்.

"தன்னாலே தனையறிந்தால் தன்னையுந் தானே காணும்" (சிவப்பிரகாசம்–22) எனவும், 'அதிலறிவடங்கி மன்னிட வியாபியாய வான்பயன் தோன்றும்' (ஷை 28) எனவும் கூறுமாறு, எல்லாம்வல்ல இறைவனாகிய தலைவனையுணர்ந்து அவ்வுணர்வின் பயனாக ஆன்மாவாகிய தம்மியல்பினை உணர்தல்வேண்டும் என மெய்ந்நூல்கள் கூறுங்கூற்று, சிவ ரூபத்தால் ஆன்ம தரிசனமும், சிவ தரிசனத்தால் ஆன்ம சுத்தியும் ஆமாறு கூறிற்று என விளக்கங் கூறுவர் சிவஞான முனிவர். இங்ஙனம் சிவ ரூபத்தால் ஆன்ம தரிசனம் உணர்ந்த நிலையில், ஆன்மாவாகிய தம் இயல்பு விளங்கத் திருவாதவூரடிகளால் ஆசைப்பத்தாகிய இப்பதிகம் அருளிச் செய்யப்பெற்றமையால் இதற்கு 'ஆத்தும இலக்கணம்' என முன்னுள்ளோர் கருத்துரை வரைந்தமை மிகவும் பொருத்தமுடையதேயாகும்.

"மொய்ப்பால் நரம்பு கயிறாக மூளையென்பு தோல் போர்த்த, குப்பாயம் புக்கிருக்ககில்லேன்" (2) எனவும், "சீவார்ந்து ஈமொய்த்து அழுக்கொடு திரியும் சிறுகுடில்" (3) எனவும், "மிடைந்து எலும்பு ஊத்தை மிக்கு அழுக்கூறல் வீறிலி நடைக்கூடம்" (4) எனவும், "அளிபுண் ணகத்துப் புறந்தோல்மூடி அடியேனுடை யாக்கை" (5) எனவும் இவ்வாறு தமது உடம்பின் தூய்மையில்லாத் தன்மையும் தம் முயிரின் இயல்பும் பகுத்துணர்ந்து

"எய்த்தேன் நாயேன் இனி இங்கிருக்க கில்லேன் இவ்வாழ்க்கை
வைத்தாய் வாங்காய் வானோரறியா மலர்ச் சேவடியானே" (6)

என அடிகள் இறைவனை வேண்டிப் போற்றுதல் இங்கு நோக்கத்தக்கதாகும்.

உசு. அதிசயப் பத்து

அதிசயம் என்ற சொல், மிகுதியென்னும் பொருளுடைய தாகும். அச்சொல் ஒரு பொருளின் மிகுதியால் விளைந்த வியப்பு என்னும் பொருளில் உலக வழக்கில் ஆளப்பெற்று வருவதனை யாவரும் அறிவர். தமக்குத் திருவருள் சுரந்த இறைவனது திருவருட் பெருமையின் மிகுதியைக் குறித்துத் திருவாதவூரடிகள் வியந்து போற்றுவதாக அமைந்தது இப் பதிகமாதலின், இஃது அதிசயப்பத்து என்னும் பெயர்த்தா யிற்று. இந்நுட்பம்,

> " வெருவிமலத்தினைச் சீலத்தொன்றுகு மடியர்குழாத்துடனே கூட்டும்
> பரம ரருட் பெருமை மிகுதியைப் புகழ்ந்து பாடல் அதிசயப் பத்தாமே "

எனவரும் திருப்பெருந்துறைப் புராணத்தால் நன்கு புல னுதல் காணலாம்.

'உலக வாழ்க்கையிலேயே சிக்குண்டு இறைவனது திருவடிப்பணிக்கு உரிய தகுதியின்றி அல்லற்படும் எளி யேனை என் தந்தையாகிய இறைவன் தன்னருளால் எளி வந்து திருவடி நல்கி ஆட்கொண்டு நேயமிகுந்த மெய்யடியார் களோடு ஒருங்குகூட்டியருளிய வியத்தற்குரிய இச்செயலை நாம் கண்ணாரக் காணப்பெற்றோம்' என இறைவனது திரு வருளை வியந்து போற்றும் முறையில் திருவாதவூரடிகள் அதிசயப்பத்தினை அருளிச் செய்துள்ளார். இறைவனது அளத்தற்கரிய பெருமையும், தமது சிறுமையும், அம் முதல்வனது பேரருள் வெள்ளம் தம்பால் விரைந்து பரவிய புதுமையும், அதனால் விளைந்த பேரானந்தமாகிய ஆக்கமும் விளங்க அடிகள் இத்திருப்பதிகத்தினை அருளிச்செய்துள் ளமை காணலாம்.

> " புதுமை பெருமை சிறுமை ஆக்கமொடு
> மதிமை சாலா மருட்கை நான்கே " (தொல் - மெய் - 7)

எனத் தொல்காப்பியனார் குறித்த புதுமை, பெருமை, சிறுமை, ஆக்கம் என்னும் நால்வகைப் பொருள்பற்றியும் தம்பால் (வியப்புச்) சுவை தோன்றிய திறத்தை அடிகள் இப் பதிகத்திற் புலப்படுத்தியுள்ளமை அறியத்தக்கதாகும்.

அதிசயப்பத்தாகிய இதற்கு 'முத்தியிலக்கணம்' அஃ தாவது மோட்சத்தின் அடையாளம்' என முன்னோர்

கருத்துரை வரைந்து உள்ளனர். 'அத்தன் ஆண்டு தன் அடியரிற் கூட்டிய அதிசயங் கண்டாமே' என அடிகள் இறைவன் திருவருளால் பொய்ந்நெறியாகிய பிறவித் தொடர்ச்சியை விட்டு நீங்கிச் சித்தமலம் அற்றுப் பத்தர் இனத்தராய்ப் பரனுணர்வோடு ஒன்றியுணரும் மெய்த்தவச் செல்வராய் முத்தி நெறியில் திகழும் மாண் பினைப் புலப்படுத்துவனவாக இப்பதிகப் பாடல்கள் அமைந் திருத்தலால், இப்பாடல்கள் சீவன் முத்தரது இயல்பினை விளக்கும் சிறந்த இலக்கியமாகத் திகழ்கின்றன.

கந்தழி யெனப் போற்றப்பெறும் பரம்பொரு ளாகிய இறைவனது இயல்பினை விளக்கக் கருதிய நச்சினார்க் கினியர், "கந்தழியாவது ஒரு பற்றும் அற்று அருவாய்த் தானே நிற்குந் தத்துவங் கடந்த பொருள். அது,

"சார்பினுற் றோன்றாது தானருவா யெப்பொருட்குஞ்
சார்பென நின் றெஞ்ஞான்றும் இன்பந் தகைத்தரோ
வாய்மொழியான் மெய்யான் மனத்தா னறிவிறந்த
தூய்மையதா மைதீர் சுடர்"

என்பதாம். இதனை,

'உற்ற ஆக்கையின் உறுபொருள் நறுமலர் எழுதரு நாற்றம்போற்
பற்றலாவதோர் நிலையிலாப் பரம்பொருள்'

(திருவாசகம் அதிசயப் பத்து—9) என அதனை உணர்ந் தோர் கூறியவாற்றான் உணர்க" (திருமுருகாற்றுப்படை உரை) என இவ் அதிசயப்பத்தின் ஒன்பதாந் திருப்பாடலை எடுத்துக் காட்டியுள்ளமை இங்கு நினைக்கத் தகுவதாகும்.

உஎ. புணர்ச்சிப் பத்து

திருப்பெருந்துறையில் குருவாக எழுந்தருளி வந்து ஆட்கொண்டருளிய இறைவனைப் பிரியாது போற்றும் பேரன்பினராகிய திருவாதவூரடிகள், அம்முதல்வன் திருவடி களைப் பூண்டு அப்பெருமானைப் பிரிவின்றி ஒன்றியுடனும் பேரின்ப நிலையினை விரும்பி, 'என் பொல்லா மணியைப் புணர்ந்து புடைபட்டிருப்பது என்று கொல்லோ' என்று நெஞ்சம் நெக்குருகிப் போற்றும் நிலையில் இப்பதிகத்தினை அருளிச் செய்தமையின், இது புணர்ச்சிப்பத்து என்னும் பெயருடையதாயிற்று.

"ஆண்ட குருவைப் பிரியா தணைந்துபணி
புரிந்துமிகும் அன்போ டின்பம்
பூண்டு கிடக்கப் பெறுவ தென்றுகொலோ
எனும் விருப்பம் புணர்ச்சிப் பத்தாம்"

எனத் திருப்பெருந்துறைப் புராண ஆசிரியர் இதன் பொருளமைதியைக் குறித்துள்ளமை இங்கு நோக்கத் தக்கதாகும். இப்பதிகத்திற்கு 'அத்துவித இலக்கணம்; அஃதாவது ஒன்று மல்ல இரண்டு மல்ல என்றல்' என முன்னோர் கருத்துரை வரைந்தனர். ஆன்மாவும் சிவனும் ஒரு பொருளாகில் ஆன்மா சிவத்துடன் கூட வேண்டியதில்லை. பொருள் ஒன்று என்ற நிலையிற் பெறுவானும் பேறும் இல்லை. ஆன்மா வேறு சிவம் வேறு என இரண்டாய் நிற்கும் என்று சொல்லின், அந்நிலையைச் சாயுச்சியம் என்று சொல்லுதற்கு இடமில்லை. எனவே பொருட்டன்மையால் வேருகிய ஆன்மாவும் சிவமும் கலப்பினுல் ஒன்ருய்ப் பிரிவறக் கலந்து ஒன்றியுடனுகும் நிலையே அத்துவிதம் எனப்படும் என்பர் சைவ சித்தாந்திகள்.

இப்பதிகத்தில், 'விரையார் மலர் தூவிப் பூண்டு கிடப்பது என்று கொல்லோ என் பொல்லா மணியைப் புணர்ந்தே' (3) எனவும், 'சொல்லும் பொருளும் இறந்த சுடரை........ புல்லிப் புணர்வதென்று கொல்லோ என் பொல்லா மணியைப் புணர்ந்தே' (4) எனவும், இவ்வாறு ஆன்ம போதம் அடங்கி, அவனே தானேயாகிய அந்நெறி ஏகனுகி நிற்கும் அத்துவித இயல்பினைத் திருவாதவூரடிகள் தமது அருளனுபவத்தால் இத்திருப்பதிகத்தில் இனிது விளங்க அருளிச் செய்திருத்தல் கூர்ந்துணரத் தக்கதாகும்.

'அல்லிக் கமலத்தயனும் மாலும்
அல்லாதவரும் அமரர் கோனுஞ்
சொல்லிப் பரவும் நாமத்தானைச்
சொல்லும் பொருளும் இறந்த சுடரை
நெல்லிக் கனியைத் தேனைப் பாலை
நிறையின் னமுதை அமுதின் சுவையைப்
புல்லிப் புணர்வ தென்று கொல்லோ என்
பொல்லா மணியைப் புணர்ந்தே' (4)

எனவரும் திருப்பாடலில், தன்னடைந்தார்க்கு இன்பங்கள் தரும் இறைவனை நெல்லிக்கனி, தேன், பால், அமுது முதலிய இன்சுவைப் பொருளாக அடிகள் குறித்துப் போற்றியுள்ளார். ஈண்டு நெல்லிக்கனி என்றது, ஔவையுண்ட

நெல்லிக்கனி போன்று அமிழ்தாம் நிலையில் உள்ள சிறந்த கனியினை, 'அங்கை நெல்லியம் பழத்திடையமுதே' (7-54-3) என நம்பியாரூரர் இறைவனைப் போற்றியுள்ளமையும்,

'இரும்பைக் காந்தம் வலித்தாற் போலியைந் தங்குயிரை
எரியிரும்பைச் செய்வதுபோல் இவனைத்தானுக்கி
...
கரும்பைத் தேனைப்பாலைக் கனியமுதைக் கண்டைக்
கட்டியை ஒத்திருப்பன் அந்த முத்தியினிற் கலந்தே"
(சித்தியார் சுபக்கம் – 321)

என அருணந்தி சிவனார், இறைவன் உயிரின்கண் கலந்த வழி இவ் வியல்பிற்றெனப் பிரித்தறியவாராது ஆனந்த சொரூபமாய் நிற்கும் இயல்பினை விரித்துரைத்தமையும் இங்குச் சிந்தித்தற்குரியனவாகும்.

உஅ. வாழாப் பத்து

'இறைவனாகிய நினது பற்றினையன்றி இவ்வுலகப் பொருள்களிற் சிறிதும் பற்றுடையேன் அல்லேன்; உலக வாழ்க்கையிற் சிக்குண்டு மேலும் வாழ்தற்கு விரும்புகின்றிலேன்; எளியேனை நின்பால் 'வருக' என அழைத்தருளி நின் திருவடி நீழலிற் கூட்டி அருள்புரிவாயாக' என இறைவனை வேண்டி அழுதரற்றி முறையிடும் நிலையில் திருவாதவூரடிகளால் அருளிச் செய்யப்பெற்றது, 'வாழாப் பத்து' என்னும் இப்பனுவலாகும். உலக வாழ்க்கையில் உளவாகும் இன்னல்களை யெண்ணி 'இவ் வாழ்க்கையில் யான் வாழ்கிலேன்' என வாழ்வினை வெறுத்துரைக்கும் முறையில் அமைந்தமையின், இது வாழாப் பத்து என்னும் பெயர்த்தாயிற்று. வாழாப் பத்து - வாழ விரும்பாமையைப் புலப்படுத்தும் பத்துப் பாடல்களால் இயன்ற பனுவல்.

'நீண்ட வுலகத்தினிற் பற்றொன்றிலேன் இவ்வுடற்கண்
நின்று வாழேன்
மாண்டகு நின் பதநிழற்கீழ் வருக வருள் புரியெனுஞ்சொல்
வாழாப் பத்தே'

என்பது திருப்பெருந்துறைப் புராணம். இத்திருப்பதிகப் பாடல் தோறும், "திருப்பெருந்துறையுறை சிவனே! பற்று நான்மற்றிலேன் கண்டாய், உலகில் வாழ்கிலேன் கண்டாய், வருக என்று அருள் புரியாயே' என இறைவனை நோக்கி அடிகள் முறையிடுதல் காணலாம்.

இங்ஙனம் உலக வாழ்க்கையிற் பற்றின்றிப் பற்றற்றான் திருவடிகளையே தஞ்சமெனப் பற்றி எல்லாப் பற்றுக்களையும் விட்டொழித்த நிலையில் வீடுபேருகிய பேரின்பநிலை தானே வந்தெய்தல் உறுதியாதலின் அடிகளது பற்றறுதியினைப் புலப்படுத்தும் இத்திருப்பதிகத்திற்கு, 'முத்தியுபாயம் - பிரபஞ்சத்தை விட்டுப் பரபோகத்தைக் கூடுதற்கு உபாயம்' என முன்னோர் கருத்துரைப்பாராயினர்.

உகூ. அருட் பத்து

இறைவனது திருவருளை வேண்டிப் போற்றிய பத்துப் பாடல்களையுடைய பதிகமாதலின் 'அருட்பத்து' என்னும் பெயருடையதாயிற்று. திருப்பெருந்துறையிற் குருந்தமர நீழலில் குருவாக எழுந்தருளி வந்து தம்மை ஆண்டருளிய பெருமானை நோக்கிச் ''சோதியே சுடரே, சூழொளி விளக்கே, ஆதியே' என அன்பிறைல் அழைத்து '' அடியேன் ஆதரித்தழைத்தால் அதெந்துவே என்றருளாயே'' எனப் பாடல் தோறும் இறைவனது அருளை வேண்டிப் பரவிப் போற்றியுள்ளமை காணலாம்.

> ''சோதியே சுடர் விளக்கே துயர்ப் பிறவிக்
> கடல் விடுத்துன் நற்ருள் சேர்தற்கு
> ஆதியே ஆதரித்திங் குனையழைத்தால் அதெந்துவெனக்
> கேளெனுஞ்சொல் அருட்பத்தாகும்''

என்பது திருப்பெருந்துறைப் புராணம். திருப்பகத்திற் பாடல் தோறும் பயின்ற 'அதெந்துவே' என்ற திசைச் சொல்லுக்கு மலையாள மொழியில் 'அது என்ன' என்ற பொருளும், கன்னட மொழியில் 'அஞ்சாதே' என்ற பொருளும் வழங்கும் என்பர்.

ஒரு பற்றுக்கோடும் இன்றி அல்லலுறும் அடியேனை நோக்கி ஆண்டவனுகிய நீ 'வருந்துதல் எதற்கு, அஞ்சாதே' என ஆறுதல் மொழி பகர்ந்து அருள் புரிவாயாக' எனத் திருவாதவூரடிகள் திருப்பெருந்துறை யிறைவனது திருவருளை வேண்டிப் பரவிப் போற்றும் நிலையில் இப்பதிகப் பாடல்கள் அமைந்துள்ளன.

இறைவனது திருவருளையே வேண்டித் தம்முடைய கருவி கரணங்களுக்கு இடமாய மாமாயையைத் தூய்மை செய்து கொள்ளும் முறையில் அடிகளால் அருளிச் செய்யப் பெற்றது இப்பதிகமாதலின், இதற்கு 'மகாமாயா சுத்தி -

மாயையைச் சுத்தி பண்ணுதல்' என முன்னோர் கருத்துரை வரைந்தனர்.

திருப்பெருந்துறையிற் குருவாய் வந்து மெய்ப்பொருளை உபதேசித்தருளிய இறைவன், திருவாதவூரடிகளைத் தனித் திருக்கச் செய்து அடியார் குழுவுடன் மறைந்த பொழுது, இறைவனைப் பிரிந்துறைதலாற்றாத அடிகள், இறைவனது திருவருளை வேண்டி இப்பதிகத்தினைப் பாடிப் போற்றினர் என்பது,

"திருந்துவார் பொழில்சூழ் திருப்பெருந்துறையிற்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
இருந்தவா றெண்ணி யேசரு நினைந்திட்
டென்னுடை யெம்பிரானென் றென்
றருந்தவா நினைந்தே யாதரித் தழைத்தால்
'அலைகட லதனுளே நின்று
பொருந்தவா கயிலை புகுநெறி யிதுகாண்
போதராய்' என்றருளாயே" (அருட்பத்து – 10)

எனவரும் இப்பதிகப் பாடலால் இனிது விளங்கும். இதன் கண் 'அலைகடல்' என்றது, துன்ப அலைகளையுடைய பிறவிப் பெருங்கடலை. 'நாயேனைதோர் நாணமெய்தி நடுக்கட லுள் அழுந்தி நான், பேயேனை பெருந்துறைப் பெருந் தோணி பற்றியுகைத்தலும்' (திருக்கழுக்குன்றப் பதிகம் - 4) என அடிகள் இக்கடல் நடுவே தாம் சிக்கித் திருப்பெருந் துறையைத் தோணியாகப் பற்றி நின்ற திறத்தைக் குறித் துள்ளமை இங்கு ஒப்புநோக்கற் பாலதாகும்.

௩௰. திருக்கழுக்குன்றப் பதிகம்

திருவாதவூரடிகள் திருக்கழுக்குன்றத்தினை யடைந்து அங்குக் கோயில் கொண்டருளிய இறைவனை இறைஞ்சிப் போற்றித் 'திருப்பெருந்துறையிற் குருந்தமர நீழலில் குரு வாக எழுந்தருளி யிருந்து மெய்ப்பொருளை உபதேசித்தரு ளிய ஆசிரியத் திருக்கோலத்தை அடியேற்குக் காட்டியருள் வாயாக' என வேண்டி நின்றாராக, இறைவனும் அடிகள் விரும்பிய வண்ணமே திருப்பெருந்துறையில் தான் கொண்ட திருக்கோலத்தினை அடிகளுக்குக் காட்டியருளினன் என்ப தும், அத் திருக்கோலத்தினைக் கண்டு மகிழ்ந்த திருவாத வூரடிகள் திருக்கழுக்குன்றப் பதிகம் என்னும் இப்பனுவலைப் பாடிப் போற்றினர் என்பதும் வரலாறு. இச் செய்தி,

நீதிமறை பரவு திருப்பெருந்துறையிற்
குருவடிவாய் நிகழ்ந்த கோலம்
காதலொடுங் காட்டினையே யெனுங்களிப்புப்
பகர்தல் திருக்கழுக்குன் றுமே'

எனவரும் திருப்பெருந்துறைப் புராணத்தாலும், இப் பதிகப் பாடல் தோறும் பெருந்துறைப் பெருமானை முன்னிலையாக்கி, 'திருக்கோலம் நீ வந்து காட்டினாய் கழுக்குன்றிலே' என வாதவூரடிகள் மனம் நைந்துருகிப் போற்றுதலானும் இனிது புலனும். இப்பதிகம் ஏழு திருப் பாடல்களையுடையதாகும். அடிகள் தமக்கு அருள் சுரந்த குருவின் திருக்கோலத்தைத் தரிசித்த நிலையிற் பாடிய பதிகமாதலின் இதற்குக் 'குரு தரிசனம் – பசுத்துவம் கெட்ட இடம்' என முன்னோர் கருத்துரைத்தனர்.

காய்ந்து உலர்தல் இல்லாத நிலையில் உயிரோடு ஒற்றித்துள்ள ஆணவமலமாகிய விதை, மேல் விளைவெய்தித் துன்பங்களைப் பெருக்காதவாறு வறுத்த வித்துப் போல் ஆற்றல் குன்றியடங்க, இருவினை ஒப்பு எய்த, இறைவன் தம்மை ஆட்கொண்டருளிய செய்தியை,

"பிணக்கிலாத பெருந்துறைப் பெருமானுன் நாமங்கள் பேசுவார்க்
கிணக்கிலாததோர் இன்பமேவரும்; துன்பமே துடைத் தெம்பிரான்
உணக்கிலாததோர் வித்து மேல்விளையாமல் என்வினை ஒத்தபின்
கணக்கிலாத் திருக்கோலம் நீவந்து காட்டினாய் கழுக்குன்றிலே" (1)

எனவரும் திருப்பாடலில் அடிகள் எடுத்துரைத்துப் போற்றி யுள்ளார். இப்பாடலில் 'உணக்கிலாததோர் வித்து' என்றது, காய்ந்து உலர்தல் இல்லாத நிலையில் உயிர்களுடன் ஒற்றித்துள்ள ஆணவ மலமாகிய விதையினை. மேல் விளையாமல் வினை ஒத்தலாவது, ஆணவமாகிய அவ்விதை, வறுத்த வித்துப்போல் முளைக்கும் ஆற்றல் கெட்டு அடங்க, உயிர் இன்ப துன்பங்களை ஒன்றாக ஏற்று நுகரும் இருவினை யொப்பு அடையப் பெறுதல்.

சிவபெருமான் மதுரையில் தன்னை அன்பினால் வழி பட்டுப் பரவிய வந்தியென்னும் செம்மனச் செல்வியின் பொருட்டு அவ்வம்மையார் தந்த பிட்டினைக் கூலியாகப்

பெற்று மண்சுமந்த அருட்செய்தியினையும், இறைவன் தமது கலக்கத்தை மாற்றிக் கண்ணீர் துடைத்து அருள் சுரந்த பெருமையினையும், திருப்பெருந்துறை பிறவிப் பெருங்கடலைக் கடத்தற்குரிய தோணியாகத் தமக்கு வாய்த்த பெற்றியினையும், கொழுநனே சிவன் எனக் கொண்டு போற்றும் வண்ணம் பேதமில்லதோர் கற்பளித்த பெருமையினையும், இறைவன் தன்னை வழிபட்ட இயக்கிமார் அறுபத்து நால்வரும் தன் அருட்பண்புகளாகிய எண்குணங் களையும் பெற்றுச் சிவமேபெறுந் திருவினராய் விளங்கச் செய்தருளிய சீர்த்தியினையும் திருவாதவூரடிகள் இத்திருப் பதிகத்தில் உளமுருகிப் பரவிப் போற்றியுள்ளார்.

ஆருந்திருப்பாடலில் 'பேதமில்லதோர் கற்பளித்த பெருந்துறைப் பெருவெள்ளமே' என அடிகள் இறைவனைப் போற்றுகின்றார். பேதம் இல்லதோர் கற்பு – வேறுபாடில் லாத கற்பு; கொழுநன் வேறு, சிவன் வேறு என்னும் வேற்றுமையின்றிக் கொழுநனே சிவன் எனக்கொண்டு போற்றும் மகளிரது உள்ளத்திண்மை. இத்தகைய உள்ளத் திண்மையைத் தன்னை வழிபட்ட இராவணன் மனைவியாகிய வண்டோதரிக்கு இறைவன் அருள் புரிந்தான் என்பதனை,

> "ஏர்தரும் ஏழுலகேத்த எவ்வுருவுந் தன்னுருவாய்
> ஆர்கலி சூழ்தென்னிலங்கை அழகமர் வண்டோதரிக்குப்
> பேரருளின்ப மளித்த பெருந்துறை மேய பிரானைச்
> சீரிய வாயாற் குயிலே தென்பாண்டி நாடனைக் கூவாய்"
> (குயிற்பத்து – 2)

எனவரும் திருப்பாடலில் அடிகள் விரித்துரைத்தமை இங்கு நினைக்கத்தக்கதாகும். இனி, 'பேதமில்லதோர் கற்பளித்த' என்பதற்கு, 'பேதமில்லாத வண்ணம் ரிஷிபத்நிகளைப் பரமசிவனிடத்து வைத்த அன்பே கற்பென்னும்படி அவர் களாற் கொண்ட புருடன் ஏவல் கற்பைப் பொய்யெனக் காட்டி ஆண்ட" எனப் பொருளுரைப்பர் சீகாழித் தாண்டவராயர். அடியார்களைச் சிவனெனவே பேணிப் போற்றும் பேரன்பினைப் 'பேதமில்லதோர் கற்பு' என இத்தொடரில் அடிகள் குறித்தருளினர் எனக்கொள்ளுதலும் பொருந்தும்.

௩௧. கண்டபத்து

தில்லைப்பதியை யடைந்த திருவாதவூரடிகள் தில்லைச் சிற்றம்பலத்தில் இறைவன் இயற்றியருளும் ஆனந்தத்

திருக்கூத்தினைக்கண்டு மகிழ்ந்து கண்டபத்து என்னும் இத் திருப்பதிகத்தினைப் பாடிப் போற்றினார் என்பது வரலாறு. ஐம்புலன் வழியே சென்று மயங்கி அல்லற்படுந் தொல்லைகள் யாவும் நீங்கத் தில்லைச் சிற்றம்பலத்தே இறைவன் புரிந்தருளும் ஆனந்தத் திருக்கூத்தினைக் கண்டு மகிழ்ந்தேன் என்பதுபட 'அந்தமிலா ஆனந்தம் அணிகொள் தில்லை கண்டேனே' என்றாங்கு உவந்துரைக்கும் நிலையில் பத்துப் பாடல்களையுடைய திருப்பதிகமாக அமைந்தமையின் இது 'கண்டபத்து' என்னும் பெயருடையதாயிற்று. இதன் பொருளமைதியினை,

> "இந்திரிய வயமயங்கா தேயெடுத்துத் தாளுக்கு
> மெழிலானந்தம்
> கந்தமலி தில்லையினுட் கண்டேனென் றுவந்துரைத்தல்
> கண்டபத்தாம்"

எனவரும் திருப்பெருந்துறைப் புராணத்தால் அறியலாம். இதுபற்றி இப்பதிகத்திற்கு 'நிருத்த தரிசனம்' என முன்னோர் கருத்துரைத்தனர். திருநாவுக்கரசர் திருவையாற்றிற் கயிலைக்காட்சியைக் கண்டு பாடிய 'மாதர்ப் பிறைக்கண்ணியானை' என்னும் முதற் குறிப்புடைய திருப்பதிகப் பாடல் தோறும் 'கண்டேன் அவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்' எனத் தாம் கண்ட தெய்வக் காட்சியை விரித்துரைத்துப் போற்றியுள்ளமை இங்கு ஒப்பு நோக்கியுணரத் தக்கதாகும்.

௩௨. பிரார்த்தனைப் பத்து

பிரார்த்தனை — வேண்டுகோள். திருவாதவூரடிகள் தம்மை ஆட்கொண்டருளிய இறைவனைப் போற்றி 'நின்னை விட்டு நீங்காவண்ணம் அடியேனை நின் திருவருள் வெள்ளத்தில் ஆழ்த்தியருள்வாயாக' என வேண்டும் முறையில் இப்பதிகம் அமைந்தமையால் இது 'பிரார்த்தனைப் பத்து' எனப் பெயர் பெற்றது. இதன் பொருளமைப்பினை,

> "அந்தமிலா ஆனந்தத் தகலாம லெனையழுத்தி
> யாள்வாயென்று
> சிந்தைகலந் துரைத்ததுவே பிரார்த்தனைப் பத்தாய்ப்
> புகலுஞ் செய்கைத்தாமே"

என்னும் திருப்பெருந்துறைப் புராணத் தொடரால் உணரலாம்.

இதன்கண், 'ஆர்வங்கூர அடியேற்கே அருள்செய்யாய்' எனவும், 'கடியேனுடைய கடுவினையைக் களைந்துன் கருணைக்கடல் பொங்க, உடையாய் அடியேன் உள்ளத்தே ஓவாதுருக அருளாயே' எனவும், 'மெய்யன்பைப் பெற வேண்டும்' எனவும், 'பேரானந்தம் பேராமை வைக்க வேண்டும்' எனவும், 'ஊனேபுகுந்த உனையுணர்ந்தே உருகிப்பெருகும் உள்ளத்தைக் கோனே அருளுங்காலந்தான் கூடுதல் வேண்டும்' எனவும், 'உடையாயொடுகலந்து உள்ளுருகிப்பெருகி நெக்கு ஆடியாடி ஆனந்தம் அதுவேயாக அருள்கலந்து' ஒன்றியின்புறும் நிலை வேண்டும் எனவும் திருவாதவூரடிகள் இறைவனைப் பிரார்த்தித்துப் போற்றியுள்ளமை காணலாம். இப்பதிகம் திருப்பெருந்துறையில் அருளிச்செய்யப் பெற்றதாகும். இதற்குச் 'சதாமுத்தி – ஆன்மாக்களுக்கு முத்தி நிச்சயம் பண்ணுதல்' என முன்னோர் கருத்துரை வரைந்துள்ளனர்.

௩௩. குழைத்த பத்து

பண்டைக் கொடுவினை நோய்கள் தம்மைத் தொடர்ந்து வருத்தும் இன்னலுக்கு ஆற்றாது வருந்திய வாதவூரடிகள், அத்துன்பங்களுக்குக் காரணமாகத் தாம் செய்த பிழைகளை நினைந்திரங்கி இறைவனது கருணைத்திறத்தினையே தாம் உய்தி பெறுதற்குரிய சார்பாகக்கொண்டு இறைவனை நோக்கி மனம் நைந்து அரற்றிக்கூறும் முறையீடாக அமைந்தது, 'குழைத்தபத்து' என்னும் இப்பதிகமாகும்.

"இழைத்தேன் இவ் ஆக்கைபொறுத் தினிக்கணமும்
பொறுக்ககிலேன் ஏழையேனைக்
குழைப்பதேன் பிழைபொறுத்தாள் எனஇரங்கிக்
கூறுதலே குழைத்த பத்தாம்"

என்பது திருப்பெருந்துறைப் புராணம். இறைவனே ஆசிரியனாகத் தோன்றி மெய்ப்பொருளை அறிவுறுத்தருளலால் இருவகைப் பாசங்களுந் தீர்ந்து நற்பொருளைக் கேட்கும் முறையிற் கேட்டுச் சிந்திக்கும் முறையிற் சிந்தித்து ஆசிரியன்பாற் பேரன்புடையராய் ஆன்மபோதம் அடங்கப் பெற்ற வாதவூரடிகள், ஒன்றினும் தோய்வற நிற்கும் இறைவனாகிய முதற்பொருளோடு ஒற்றித்து நின்று 'கூடாதே வாடாதே குழைந்திருப்பதான' பேரன்பில் திளைத்திருக்கும் இயல்பினைப் புலப்படுத்தும் நிலையில்

அருளிய திருப்பதிகமாதலின் இது 'குழைத்தபத்து' என்னும் பெயருடையதாயிற்று. இதன்கண்,

" அன்றே யென்றன் ஆவியும் உடலும் உடைமை யெல்லாமுங்
குன்றே யனையாய் என்னை ஆட்கொண்ட போதே
கொண்டிலையோ
இன்றோர் இடையூ றெனக்குண்டோ எண்டோள் முக்கண்
எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ இதற்கு
நாயகமே'

எனவரும் திருப்பாடல் இங்குச் சிறப்பாகக் குறிக்கத்தக்க தாகும். இப்பாடல் ஆன்ம நிவேதனத்தின் இயல்பினை நன்கு புலப்படுத்தல் காணலாம்.

ஆன்ம நிவேதனமாவது, "விஞ்ஞான தீக்கையின் உடல் பொருள்களோடு ஒப்ப ஆன்மாவாகிய தன்னையும் சற்குரவன் கையில் தானஞ்செய்து அளித்தும், தானஞ் செய்து அளித்த பொருள் என்று அறியும் அறிவு சலியாமைப் பொருட்டு நாளும் நாளும் சிவபூசையில் செப கன்மங்களோடு ஒப்பச் 'சிவோதாதா' என்னும் மந்திரம் ஓதி ஆன்மாவையும் சிவன் உடைமையாகப் பூநீரொடு தானஞ்செய்து அளித்தல்" (சிவஞான பாடியம் – சூ– 6, அதி 2) என விளக்குவர் சிவஞான முனிவர்.

'எனது உயிரை ஆண்டவனாகிய உனக்கு உரிமை செய்து அளித்தபின் என்னுயிர்க்கு உளவாகும் இன்ப துன்பங்கள் அனைத்திற்கும் யான் பொறுப்பாளி அல்லன்' என்னை உடையானாகிய நீயே அவற்றுக்கு உரியவன்' என்பார், 'தீமை நன்மை முழுதும் நீ' என்றும், 'நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே' என்றும், 'ஆயக்கடவேன் நானோதான் என்னதோ இங்கு அதிகாரம், காயத்திடுவாய் உன்னுடைய கழற்கீழ் வைப்பாய்' என்றும் அடிகள் இறைவனை நோக்கி முறையிட்டருளிய திறம் இங்கு நினைத்தற்குரியதாகும்.

௩௪. உயிருண்ணிப்பத்து

இறைவன் தன் அருள் எங்கும் பரவ உயிரின்கண் கலந்தவழி இவ்வியல்பிற்றெனப் பிரித்தறியவாராது ஆனந்த சொரூபனாய் நிற்பன் ஆகலான், அங்ஙனம் உயிரின் அறிவாகிய பசுபோதத்தை உண்டு சிவபோதமே விளங்கித்

தோன்ற நிற்கும் நிலையினை அடிகள் தமது அநுபவத்தின் துணைகொண்டு உணர்த்தும் முறையில் அமைந்தது, உயிருண்ணிப்பத்து என்பதாகும்.

"தழைத்துவளர் பேரின்பந் தானாகி யுயிர்தோன்றாத்
தன்மையாய்த் துன்பு
ஒழித்து நிறைவைப் பெறுதல் உயிருண்ணிப்பத்தாய் இங்கு
உரைத்ததாமே"

என இப்பதிகத்தின் பொருளமைதியினைத் திருப்பெருந்துறைப் புராணம் விளக்குதல் காணலாம். இப்பதிகத்திற்குச் 'சிவானந்தம் மேலிடுதல் – நேயம் மேலிடுதல்' என முன்னோர் கருத்துரைத்தனர்.

சிவானந்த மேலீடாகிய இந்நிலையினை "இன்பேயருளி எனையுருக்கி உயிருண்கின்ற எம்மானே" (எண்ணப்பதிகம்-3) என்ற தொடரில் அடிகள் சுட்டியருள்கின்றார். சிவபெருமான், தமது ஆருயிரை அகத்திட்டுக் கொண்டருளிய திறத்தை 'ஊனாருடல் புகுந்தான் உயிர்கலந்தான் உளம்பிரியான்' எனவும், 'எனைத் தான் புகுந்து ஆண்டான் எனது என்பின் புரையுருக்கி.... மனத்தான் கண்ணினகத்தான் மறுமாற்றத் திடையானே' எனவும், 'கடலின் திரையதுபோல்வரு கலக்க மலமறுத்தென், உடலும் எனதுயிரும் புகுந்து ஒழியா வண்ணம் நிறைந்தான்' எனவும் வரும் தொடர்களில் அடிகள் தெளிவாகக்குறித்துள்ளமை காணலாம். 'இறைவன் தன் பேரருளால் என்னகத்து நிலைபெற்று, என்னைப்பற்றிய பாசப்பிணிப்பெலாம் அகல என்னுடன் வேற்றுமையின்றித் தோன்றுதலால் யானாகி நின்றான்' என்பார், "திருப்பெருந் துறையுறைவான் நிச்சம் என நெஞ்சின்மன்னி யானாகி நின்றானே" எனத் தமது சிவாநுபவ மேலீட்டினை அடிகள் புலப்படுத்தியதிறம் உய்த்துணரத் தக்கதாகும்.

சிவதீக்கையுற்றுத் தன்னையும் தலைவனையும் உணர்ந்து சிவோகம் பாவனையைத் தலைப்பட்ட உயிரிற் சிவபெருமான் பிரிவற உடனியைந்து ஒன்றாய் நிற்கும் இப்பெற்றியினை,

"அரக்கொடு சேர்த்தி அணைத்த அரக்கற்போல்
உருக்கி உடங்கியைந்து நின்று – பிரிப்பின்றித்
தானே உலகாம் தமியே னுளம்புகுதல்
யானே உலகென்பன் இன்று"

(சிவஞான போதம் சூ 2. அதிகரணம் 1.)

எனவரும் சிவஞானபோத உதாரண வெண்பாவாலும்,

'யானாகிய என்னை விழுங்கிவெறுந்
தானாய் நிலை நின்றது தற்பரமே' (கந்தரநுபூதி.)

எனவரும் அருணகிரிநாதர் வாய்மொழியாலும் இனிது துணரலாம்.

'உயிரை விட்டுச் சிவம் பிரியாது' என்னும் உண்மையை 'என்மெய்ந் நாள்தொறும் பிரியா வினைக்கேடா' (1) என்ற தொடரில் அடிகள் குறித்துள்ளார். சிந்தைக்கும் மொழிக்கும் எட்டாதவனாய்த் திகழும் இறைவனை இப்பதிகத்தின் மூன்றாந் திருப்பாடலில் 'மனவாசகங் கடந்தான்' என அடிகள் குறித்துள்ளமை 'மனவாசகங் கெட்ட மன்னனை' (திருமந்திரம் - 2575) எனவரும் திருமூலர் வாய்மொழியை நினைவுபடுத்துவதாகும்.

௩௫. அச்சப் பத்து

நேயமலிந்தவர்களாகிய அடியார் திருக்கூட்டத்துடன் சிவானந்தத்தில் திளைத்து மகிழும் நிலையில், 'அடியாரொருவர்தமர் நாம் அஞ்சுவது யாதொன்றுமில்லை அஞ்ச வருவதுமில்லை' என்றவாறு, வினைவயத்தால் உலகியலில் எத்தகைய இடையூறுகள் நேரினும் அவற்றுக்குச் சிறிதும் உளங்கலங்காத தமது உள்ளத் திண்மையையும், தெய்வம் ஒன்றேயென்றும் அதுவே சிவபரம்பொருள் என்றும் தெளிந்துணரும் அன்பில்லாதவரொடு பழகநேரின், அன்னோர், உயிர்க்குயிராய் நின்று உபகரித்துவரும் முதல்வனது பெருங்கருணையை மறக்குமாறுசெய்து தீநெறிக்கட்கொண்டு சென்று மலங்களானய பிறவிக்குழியில் வீழ்வித்துத் துயருறுத்துவராதலின், அவர்களே தம்மால் அஞ்சி விலகத் தக்க கொடியவர்களென்பதனையும் உலக மக்களுக்கு அறிவுறுத்தும் முறையில் அடிகள் இத்திருப்பதிகத்தினை அருளிச் செய்துள்ளார். இப்பதிகம் இவ்வுலக வாழ்க்கையில் அறிவுடையாரால் அஞ்சத்தக்கனவும் அஞ்சத்தகாதனவும் இன்ன இன்ன எனப் பகுத்துணர்த்துவதாகலின் அச்சப்பத்து என்னும் பெயருடையதாயிற்று.

"அடியார்களாகியயாம், வினைக்கடலுக்கும் மாதர் முறுவலுக்கும் பிணிகளுக்கும் ஐம்பூதங்களுக்கும் பழிகளுக்கும் களிறு புலி முதலிய கொடிய உயிர்களுக்கும் பகைவர் படைக்கலங்களுக்கும் சிறிதும் அஞ்சமாட்டோம்; ஆயினும் சிவபெருமானாகிய முழுமுதற் கடவுளையன்றி மற்றைத் தேவர் எத்

தேவர்? என ஏனைத் தெய்வங்களையெல்லாம் அருவருத் தொதுக்கவல்ல உள்ளத்தெளிவில்லாதவர்களும், இறைவனை ஏத்தி இனிது அருள்பருகமாட்டாதாராகிய அன்பில்லாதவர் களும், இறைவன் திருப்பாதங்களைப் பரவித் துளியுலாங் கண்ணராகித் தொழுதுஅழுது உள்ளம்நெக்கு இங்கு அளியிலாதவர்களும், திருவெண்ணீறு அணிகிலாதவர்களும், திருவடிக்கு மலர்மாலை புனைந்து ஆட்படாதவர்களும், முன்னவன் பாதம்ஏத்தி அகம்நெகாதவர்களும், செறிதரு கழல்கள் ஏத்திச் சிறந்து இனிது இருக்கமாட்டாத அறிவிலி களும், திரிபுண்டரம் அணிய அஞ்சுகின்றவர்களும், நினைந்து நைந்து உருகி நெக்குக் கண்கள் நீர்சோர வாழ்த்திநின்று ஏத்தமாட்டாத ஆணலாதவர்களும் ஆகியவர்களைக் கண்டால் ஐயோ பெரிதும் அஞ்சுகின்றோம்" என அடிகள் இத்திருப் பதிகப் பாடல்களில் அறிவுறுத்தியுள்ளார். உலக வாழ்க்கை யில் அஞ்சத்தக்க கொடியன எல்லாவற்றுள்ளும் இறைவன் பால் அன்பில்லாதவர்களே பெரிதும் அஞ்சி விலகத்தக்க கொடுமையுடையர் என்பது திருவாதவூரடிகள் கருத்தாதல் இதனாற் புலனாம். இக்கருத்து,

"தரையில் வளர் வினை முழுதும் வரினு மஞ்சேன்
சிவசமயத் தவஞ்சாராதார்
அருகின்வரக் காண்கின்மனம் அஞ்சும் என
இகழ்ந்துரைத்தல் அச்சப்பத்தாம்"

எனவரும் திருப்பெருந்துறைப் புராணத்தால் இனிது புலப் படுத்தப் பெற்றிருத்தல் அறியத்தக்கதாகும்.

சிவானந்தம் உற்றார்க்கன்றி இத்தகைய அஞ்சாமையும் அச்சமும் ஒருங்குநிகழாவாகலின் இப்பதிகத்திற்கு "ஆனந்த முறுதல்" என முன்னோர் கருத்துரை கூறினர்.

"அஞ்சுவ தஞ்சாமை பேதைமை அஞ்சுவ
தஞ்சல் அறிவார் தொழில்"

எனவரும் திருக்குறட்பொருளைத் தெளிவுறப் புலப்படுத்தும் முறையில் இப்பதிகத் திருப்பாடல்கள் அமைந்திருத்தல் காணலாம்.

௩௬. திருப்பாண்டிப்பதிகம்

"தென்னவன் சேரலன் சோழன்" என இவ்வாறு உலகபாலர் உருவாய்நின்று மன்னுயிர்களைக் காத்தருளுஞ் சிவபெருமான், தம்பொருட்டுப் 'பாண்டியன் தனக்குப் பரிமா

விற்'றல் வேண்டி மதுரை நகரத்தே குதிரைச் சேவகராய் எழுந்தருளிய தெய்வக்காட்சியில் திளைத்த திருவாதவூரடிகள் பரிப்பாகனாக எழுந்தருளிய இறைவனது திருக்கோலத்தின் பேரழகில் பாண்டிவேந்தனும் தாமும் மதுரை நகர மக்களும்ஈடுபட்டு நெஞ்சத்தினைப் பறிகொடுத்த பேரின்ப நிலையினை எடுத்துரைத்துப் போற்றும் நிலையில் அருளியது, திருப்பாண்டிப் பதிகமாகும். இறைவன் பாண்டிப் பிரானாக எழுந்தருளியபோது தமக்கு உண்டாகிய சிவானந்த விளைவினை அடிகள் விரித்துரைத்தலால் இதற்குச் 'சிவானந்த விளைவு – சுகமேலீடு' என முன்னோர் கருத்துரை வரைந்தனர். இது 'திருப்பாண்டி விருத்தம்' எனவும் வழங்கும்.

> "புரவியின்மேற் பாண்டியன்முன் வரும்பதத்தை
> யாம்பெறும் அற்புதம்போல் யாரும்
> விரவுமின்கள் என்றடியார்க் குறுதி சொலல்
> திருப்பாண்டி விருத்தமாமே"

எனவரும் திருப்பெருந்துறைப் புராணத்தொடர் இங்கு நோக்கத் தகுவதாகும்.

இதன்கண், 'பாண்டியற்கு ஆரமுதாம் ஒருவரை' என்றும், 'ஒருவரையன்றி உருவறியாது என்றன் உள்ளமதே' என்றும், 'மதுரையர் மன்னன் மறுபிறப்போட மறித்திடும்' என்றும், 'பாரின்ப வெள்ளங்கொளப் பரிமேற் கொண்ட பாண்டியனார், ஓரின்ப வெள்ளத்துருக்கொண்டு தொண்டரை யுள்ளங் கொண்டார்' என்றும், 'ஈண்டிய மாயா இருள்கெட எப்பொருளும் விளங்கத், தூண்டிய சோதியை மீனவனும் சொல்ல வல்லன் அல்லன்' என்றும், 'பரவிய அன்பரை என்புருக்கும் பரம் பாண்டியனார், புரவியின்மேல் வரப் புந்தி கொளப்பட்ட பூங்கொடியார், மரவியல் மேல்கொண்டு தம்மையும் தாம் அறியார் மறந்தே' என்றும் இறைவன் குதிரைச் சேவகனாக எழுந்தருளிய திருக்கோலத்தின் பேரழகினையும் அவ்வழகிலே பாண்டியனும் தாமும் இறைவனைக் காதலிக்கும் பரிபக்குவமுள்ள பேதை முதல் பேரிளம் பெண் ஈறாகவுள்ள மற்றை மாதர்களும் ஈடுபட்டு மெய்ம்மறந்த நிலையினையும் அடிகள் நினைந்துருகிப் போற்றியுள்ளமை காணலாம்.

இப்பதிகத்தின் இரண்டாந் திருப்பாடலில், குதிரையின் மேல் வந்தருளிய இறைவனைக் 'கதிரை மறைத்தன்ன சோதி' என்றும், அதனைச் சார்ந்தவர் தற்போதமிழந்து

ஞானப்பெரு வேட்கையால் மயங்கும் அருளநுபவத்தினை அடையப்பெறுவர் என்பதனைச் ‘ சார்ந்தவர் சதுரை மறந்து அறிமால் கொள்வர் ’ என்றும் அடிகள் குறித்துள்ளார். செஞ்ஞாயிற்றையும் சிவபெருமான் திருமேனியையும் ஒரு காலத்து ஒருங்கே காண நேர்ந்தால், இறைவன் திரு மேனியை நோக்க ஒளிப்பிழம்பாகிய சூரியனும் இருள் என்று சொல்லும்படி பொலிவிழந்து மறைவன் என்பது புலப் படுத்துவார் ‘ கதிரை மறைத்தன்ன சோதி ’ என்றார். கதிர்– சூரியன்.

இதன் நான்காந் திருப்பாடலில், தென்னன் நன்னாட்டு இறைவனாகிய சிவபெருமான், ‘ஆனந்த மாக் கடவி, அறிவு ஒண்கதிர்வாள் உறைகழித்து, எதிர்ந்தார் இருநிலத்துப் புரள, பிறப்பை எறியும்’ என உருவக அணி நலம் தோன்றப் பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பேரருள் நலத்தினை வியந்து போற்றியுள்ளார். ‘ எறிவது ஞானத்து உறைவாள் உருவி ’ (திருமந்திரம். 2645) எனத் திருமூலதேவர் சிவஞானத்தினை வாட்படையாக உருவகஞ் செய்துள்ளமை இங்கு ஒப்பு நோக்கத் தக்கதாகும்.

தன் திருவடிக்கண் அன்புசெய்யும் பாண்டிய மன்னனைப் பகைத்துவரும் பகைவனது படையை இறைவனே படைத் தலைவனாக எழுந்தருளித் தான் ஒருவனாகவே எதிரேற்றுத் தாக்கி வேந்தனுக்கு வெற்றி வழங்கிய செய்தியை ‘ ஓர் மீனவன்பால் ஏற்று வந்தார் உயிருண்ட திறல் ஒற்றைச் சேவகனே ’ எனவரும் தொடரில் அடிகள் குறித்துப் போற்றியுள்ளமை அறியத்தக்கதாகும்.

௩௭. பிடித்த பத்து

‘ எல்லாத் தொடர்பையும் விடுத்து நின் திருவடிகளையே சிக்கெனப் பிடித்துக்கொண்டேன் ’ என இறைவனைப் போற்றிப் பரவும் நிலையில் அடிகள் அருளிய திருப்பதிகம் பிடித்த பத்து என்பதாகும். மற்றைப் பற்றுக்களெல்லாம் அறவே நீங்குமாறு பற்றற்றான்பற்றினை இறுகப்பற்றிய பேரானந்தமாகிய முத்தியின்பத்தினைப் புலப்படுத்தும் முறை யில் அமைந்தது இத்திருப்பதிகமாதலின், இதற்கு ‘ முத்திக் கலப் புரைத்தல் ’ என முன்னோர் கருத்துரை வரைந் தனர்.

"மிக்கபிறவித் துயரெலாமொழித்து விபுத்துவமிங் களித்தலாலே
பிக்கறச் சிக்கெனப் பிடித்தே னுன்னையென்று துணிவு
செப்பல் பிடித்த பத்தாம்"

என்பது திருப்பெருந்துறைப் புராணம்.

இத்திருப்பதிகத்தில், 'எம்பொருட்டுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்' எனவும், 'இருளிடத்துன்னைச் சிக்கெனப் பிடித்தேன்' எனவும், 'எய்ப்பிடத்துன்னைச் சிக்கெனப் பிடித்தேன்' எனவும், 'இறவிலே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்' எனவும், 'இன்பமே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்' எனவும் அடிகள் இறைவனை நோக்கிப் போற்றுதலால், இறைவனைச் சிக்கெனப் பிடித்தமையால் ஆன்மாவாகிய தமக்கே இன்பம் என்பதன்றி, ஆன்மாவினால் இறைவனுக்கு எய்தக்கடவபேறு எதுவும் இல்லையென்பதும், ஆன்மா தன்னறிவுகொண்டு இறைவனையுணர்ந்து பற்றுதல் இயலாதென்பதும், ஆணவ இருளிடத்துக் (கேவலநிலையிற்) கிடந்த ஆன்மாவுக்கு இரங்கி இறைவனே எளிவந்து அருள் வழங்குகின்றான் என்பதும், உயிர் தனது ஆற்றலைக்கொண்டு அறிந்து உய்திபெற முயன்று முனைந்து அஃது இயலாது சோர்வுற்றுத் தற்போதம் அடங்கப்பெற்ற பிறகே இறைவன் திருவடியினைத் தஞ்சமெனப் பற்றும் நற்சார்பு பெற்று ஞானத்தை நண்ணும் என்பதும், இங்ஙனம் உயிர் தன் முனைப்புக்கெட்டு இறைவன் திருவடிகளில் தாடலைபோல் ஒன்றியுடனும் நிலையில் அத்திருவடிப்பேறு ஆருயிர்க்கு என்றும் அழிவில் பேரின்பமாய்த் திகழும் என்பதும் இனிது புலனாதல் காணலாம்.

இத்திருப்பதிகத்தில் 'செம்பொருட்டுணிவே சீருடைக் கழலே செல்வமே சிவபெருமானே' எனவும், 'செம்மையேயாய சிவபதமளித்த செல்வமே சிவபெருமானே' எனவும் வரும் தொடர்கள், 'சிறப்பென்னுஞ் செம்பொருள்' (திருக்குறள் – 358) எனவரும் தெய்வப்புலவர் வாய்மொழியையும், 'செம்பொருளான சிவமெனலாமே' (திருமந்திரம் – 2579) எனவரும் திருமூலர் வாய்மொழியையும் 'செம்மையாய சிவகதி சேரலாம்' (5–43–8) எனவரும் அப்பரருள்மொழியையும் அடியொற்றி அமைந்திருத்தல் அறியத்தக்கதாகும்.

௩அ. திருவேசறவு

'பேரருளாளனாகிய இறைவன் என் பொருட்டு இழிந்த நரிகளையெல்லாம் உயர்ந்த குதிரைகளாக்கியவாறு போன்று

மிகவும் கீழாகிய எளியேனுடைய இரும்புமனம் முதலிய இழிந்த கருவி கரணங்களையும் மிகவும் உயர்ந்தனவாகத் திருத்தித் தன் திருவடிக்கீழ் வைத்துப் பேரின்பம் அருளினன்' எனத் திருவாதவூரடிகள், தம் பொருட்டு எளிவந்தருளிய இறைவனது பெருங்கருணைத் திறத்தினை நினைந்து நினைந்து உள்ளங்குழைந்து இரங்கிப் போற்றும் நிலையில் அருளிய பனுவலாதலின், இது திருவேசறவு எனப் பெயர் பெறுவதாயிற்று. இச்செய்தி,

'தக்கபரியாய் நரியை யாக்குதல்போல் எனைப்பெரிய
தாக்கித் தாட்கீழ்
அக்கணம் வைத்தனையே யென்றிரங்கல்திரு
வேசறவென் றியம்பலாமே'

எனவரும் திருப்பெருந்துறைப் புராணத்தால் அறியப்படும். வேசறவு – மனங்குழைந்து இரங்குதல். இப்பொருளில் 'ஏசினும் யானுன்னை ஏத்தினும் என் பிழைக்கே குழைந்து, வேசறுவேனை' (நீத்தல் விண்ணப்பம் – 50) என அடிகள் இச்சொல்லினை ஆண்டுள்ளமை இங்கு நோக்கத்தக்கதாகும். இங்ஙனம் தம்பிழை நினைந்து இரங்கும் முறையில் அடிகள் அருளிய இப்பனுவல், ஆன்மா இறைவனது அருளின் வண்ணமாய் அடங்கித் தான் ஒன்றையும் சுட்டியறியாத நிலையினைப் புலப்படுத்தலால் இதற்குச் 'சுட்டறிவொழித்தல் – தன்செயலற நிற்றல்' என முன்னோர் கருத்துரைத்தனர்.

இதன்கண், இறைவன், தமது இரும்பு மனத்தினையும் ஈர்த்து ஈர்த்து என்பும் உருகச் செய்து தன் கழலிணைகளைக் காட்டிக் கரும்புதருசுவைகாட்டித் தமக்கு அருள்செய்த திறத்தினையும், நரிகளை எல்லாம் தம்பொருட்டுக் குதிரைகளாக்கிக் கொணர்ந்த பெற்றியையும், நாய்க்குப் பொற்றவிசு இடுமாறு போன்று தமக்குப் பொன்னருள்சுரந்து அஞ்சேல் என்றருளி அகம்நெகவேபுகுந்து ஆட்கொண்டருளிய சீர்த்தியையும், தமக்குத் திருவைந்தெழுத்தினை உபதேசித்தருளித் தானே உள்ளம்புகுந்து தேனாய் இன்னமுதமுமாய்த் தித்தித்தருளிய திறத்தினையும் திருவாதவூரடிகள் இத்திருப்பதிகப் பாடல்களில் எடுத்துரைத்துப் போற்றியுள்ளமை அன்பினால் ஓதி மகிழ்தற்குரியதாகும்.

" நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம வெனப்பெற்றேன்
தேனாயின் னமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள்செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே "

எனவரும் திருப்பாடல் திருவைந்தெழுத்து ஓது முறையினை இனிது விளக்கி நிற்றல் அறியத்தக்கதாகும்.

௩௧. திருப்புலம்பல்

புலம்பல் – தனிமையுற்று வருந்துதல். உயிர்களுக்கு இறைவனையன்றித் துணையாவார் பிறர் இலர் எனத் தெளிந் துணர்ந்த திருவாதவூரடிகள், தமக்குக் குருவாய் வந்தருளிய அம் முதல்வனைப் பிரிந்துறைய நேர்ந்த தமது தனிமை நிலைக்கு மிகவும் வருந்தி, 'தான் ஈன்ற இளங்கன்றினைப் பிரிந்து கதறியழைக்கும் தாய்ப் பசுவின் பேரன்பினையொத்த பேரன்பினை அடியேற்கு அருள்புரிவாயாக' என இறைவனை இரந்து வேண்டும்நிலையில் அருளிய பனுவலாதலின், இது திருப்புலம்பல் என்னும் பெயர்த்தாயிற்று.

> 'கரைந்துருகும் பேரன்புன் கழலிணைக்கே
> கற்றுவின் மனம் போலென்றும்
> திருந்தும்வகை யெனக்கருள்க எனக்கேட்டல்
> திருப்புலம்பலாகும்'

எனவரும் திருபெருந்துறைப் புராணத்தொடர், இதன் பொருளமைதியினைப் புலப்படுத்துவதாகும். இது மூன்று திருப்பாடல்களை உடையது. இப்பனுவல் திருவாரூரில் அருளிச்செய்யப் பெற்றதென்பர். இச்செய்தியினை இதன் முதற் பாடலில், 'ஓங்கெயில் சூழ் திருவாரூ ருடையானே' என அடிகள் திருவாரூர்ப்பெருமானை முன்னிலையாக்கிப் போற்றுங் குறிப்பினால் உய்த்துணரலாம். இதற்குச் 'சிவா னந்த முதிர்வு – சிவானந்தம் பெருவிச்சை' என முன்னோர் கருத்துரை வரைந்தனர்.

> 'உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன்
> பேர்வேண்டேன்
> கற்றாரை யான்வேண்டேன் கற்பனவும் இனியமையும்
> குற்றாலத் தமர்ந்துறையுங் கூத்தாவுன் குரைகழற்கே
> கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே'

எனவரும் மூன்றாந் திருப்பாடல், திருவாதவூரடிகள் உற்றார் ஊரார், கற்றார், புகழ், கல்வி முதலிய உலகியல் தொடர்புகளை அறவே விலக்கி இறைவன் திருவடிக்கே நெக்கு நெக்குக் கசிந்துருகும் நேயமலிந்த நெஞ்சத்தினராக விளங்கிய திறத் தினை இனிது விளக்கும் அநுபவ மொழியாகத் திகழ்தல் அறிந்து இன்புறற்பாலதாகும்.

'உற்றார் ஆருளரோ உயிர் கொண்டு போம்பொழுது
குற்றாலத்துறை கூத்தனல்லால் நமக் குற்றார் ஆருளரோ'

எனவும்,

'குற்றாலத் தமர்ந்துறையுங் கூத்தன் கண்டாய்' (6-81-4)

எனவும் வரும் அப்பரடிகள் வாய்மொழிகள் இங்கு ஒப்பு நோக்கி உணரத்தக்கனவாகும்.

சுய. குலாப்பத்து

தில்லையில் சிற்றம்பலவனது திருக்கூத்தினைக்கண்டு மகிழ்ந்த திருவாதவூரடிகள், 'அடியேற்கு உண்டாகிய மகிழ்ச்சியெல்லாம் தில்லைச் சிற்றம்பலத்துள் ஆடல்புரிந் தருளும் ஆண்டானைச் சார்ந்ததனால் ஆகியதேயாம்' எனத் தமது மகிழ்ச்சி மிகுதியை எடுத்துரைத்து அம்பலவனைப் போற்றும் முறையில் அருளிய திருப்பதிகம் குலாப்பத்து என்பதாகும். குலாவுதல் – மகிழ்தல். அஃது 'உலா' என்பது போன்று 'குலா' என முதல்நிலையளவாய் ஈண்டுப் பெயராய் நின்றது. 'நிலாவிரிமுற்றத்துக் குலாவோடேறி' (பெருங்கதை. வத்தவ–12–14) என்புழிக் குலா இப்பொருள தாதல் அறியலாம். திருப்பெருந்துறைப் புராண ஆசிரியர்

"உள்ளம்
விரும்பு சிவானந்த வெள்ளம் விழைந்த தில்லை நாயகனை
மிகக்கொண்டாடி
நிரம்புமனக் களிமிகுத்த இறுமாப்பே குலாப்பத்தாய்
நிகழ்த்தலாமே"

என இப்பதிகக் கருத்தினைக் குறித்துள்ளமை நோக்கத்தக்க தாகும். இப்பதிகத்திற்கு 'அனுபவம் இடையீடுபடாமை' என முன்னோர் கருத்துரை வரைந்தனர். இதன்கண் உள்ள திருப்பாடல்கள் யாவும் அடிகள்பால் சிவாநுபவம் இடையீடின்றி நிகழுந் திறத்தினை இனிது விளக்குகின்றன. 'குலாத் தில்லை யாண்டானைக் கொண்டன்றே' எனப் பாடல்தோறும் இறுதியிலமைந்த தொடர், 'என்பாலுளதாகிய இம்மகிழ்ச்சிப் பெருக்கு தில்லையம்பலவாணனாகிய ஆண்டவனைக்கொண்டு விளைந்ததேயாகும்' எனப் பொருள் தருவதாகும். குலா, எழுவாய். கொண்டன்று, பயனிலை. கொண்டன்று – கொண்டது. ஏகாரம் – தேற்றம். இனி, 'கொண்டு' என்பதனை மூன்றாமுருபின் பொருள்படவந்த சொல்லுருபாகக்கொண்டு, 'ஆடுங் குலா தில்லையாண்டானால் ஆயதல்லவா' எனப் பொருளுரைத்தலும் பொருந்தும்.

'ஓடுங் கவந்தியுமே உறவென் றிட் டுன்கசிந்து
தேடும் பொருளுஞ் சிவன்கழலே யெனத்தெளிந்து
கூடும் உயிரும் குமண்டையிடக் குனித்தடியேன்
ஆடுங் குலாத் தில்லையாண்டானைக் கொண்டன்றே'

என்பது இப்பதிகத்தின் முதல் திருப்பாட்டாகும். "திருவோடாகிய உண்கலனும் கந்தையாகிய கோவணமுமே என் தொடர்புடைய உறவெனக்கொண்டு துறவுநிலையில் நின்று உள்ளம் கசிந்துருகி உணர்வுடைய உயிரால் தேடியடையத் தக்க பெரும் பொருளாவன சிவபெருமானுடைய திருவடிகளே என்னுந் தெளிவுபெற்று உடம்பும் அதன்கண் நிலைபெற்ற உயிரும் உவகைக் கூத்தாட, அடியேன் ஆடும் கூத்தாகிய மகிழ்ச்சிப்பெருக்கானது, தில்லைத் திருமன்றிற் கூத்தியற்றி எளியேனை ஆட்கொண்டருளிய இறைவனைக் கொண்டு விளைந்ததாகும்" என்பது இதன் பொருளாகும். ஓடு – பிச்சை எடுத்தற்குரிய திருவோடு. கவந்தி – கந்தை; கோவணம். கூடு – உடம்பு. குமண்டை – கூத்து. திருவாதவூரடிகள் ஓடாகிய உண்கலனும் கோவண ஆடையும் கொண்டு துறவுநிலையில் ஒழுகியவர் என்பது இத்திருப் பாடலால் இனிது புலனாதல் காணலாம்.

சக. அற்புதப் பத்து

அற்புதம் – ஆச்சரியம். நிகழாதது ஒன்று உலகத்து நிகழ்ந்தால் தோன்றும் மருட்கைச் சுவையினை அற்புதம் என வழங்குவர். அதிசயம் என்பது ஒன்றின் மிகுதியைக் குறிப்பது. இறைவனது திருவருட் பெருமையின் மிகுதியினை அதிசயப்பத்தில் விரித்துப் போற்றிய அடிகள், 'தன் அருளைப்பெறுதற்குச் சிறிதும் தகுதியில்லாத என் பொருட்டு எல்லாம் வல்ல இறைவனே திருப்பெருந்துறையில் மானிட உருத்தாங்கி வெளிப்பட்டு அருள் புரிந்தான்' எனத் தம்மை அடிமைகொண்டருளிய அற்புத நிகழ்ச்சியினை வெளியிட்டு உரைக்கும் பனுவலாதலின், இஃது அற்புதப்பத்து என்னும் பெயர் உடையதாயிற்று.

அடிகள், இத்திருப்பதிகத்திற்பாடல்தோறும் தம்முடைய சிறுமையினையும், பெருமறை தேடிய அரும்பொருளாகிய இறைவன் தம்பொருட்டுக் குருமேனி கொண்டு வெளிப்பட்டுத் தோன்றிச் சிவஞானத்தை உபதேசித்தருளிய அற்புத நிகழ்ச்சியையும் ஒருங்கு குறித்துள்ளமை காணலாம்.

'மாயவுருக் கொண்டுளத்தை மயக்குமின்னார்
கண்வலையுள் மயங்குவேற்கிங்
காயுமறி வளித்தாளல் அதிசயமென்
றுரைத்தல் அற்புதப்பத்தாகும்'

எனத் திருப்பெருந்துறைப் புராணம் இப்பதிகக் கருத்தினைக் குறித்துள்ளமை அறியத்தக்கதாகும். இப் பதிகத்திற்கு 'அநுபவ மாற்ருமை – அநுபவம் முற்றுப்பெறுதலில் பொருமை விம்முதல்' எனக் கருத்துரைப்பர் முன்னையோர்.

"சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கியாங்கு இவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே" (குறுந்தொகை – 18)

என்ருற் போன்று, இறைவனருளால் தமக்குக் கிடைத்த சிவானந்த அநுபவம் தம்மாற் பொறுக்க ஒண்ணுதவாறு மிக்கு விளங்குவதனை அடிகள் இத்திருப்பதிகத்தில் வெளியிட்டருளினமை அறிந்து இன்புறத்தக்கதாகும். இப்பதிகத்தின் ஒன்பதாம் பாடலின் மூன்ரும் அடியில் "விச்சகத் தரியயனும்" எனப் பாடங்கொண்டு, "வித்தகராகிய அயனும் அரியும்" எனப் பொருளுரைப்பர் சீகாழித் தாண்டவராயர்.

சஉ. சென்னிப் பத்து

சிவபெருமான் குருவாகி வந்தருளித் தம் சென்னியில் திருவடி சூட்டியருளும் பேறுபெற்ற திருவாதவூரடிகள், அம் முதல்வனுடைய சேவடிகள் தமது சென்னியில் எப்பொழுதும் நிலைபெற்றுத் திகழும் அரிய சிறப்பினைத் தம்முடன் பொருந்திய அடியார்களுடன் மகிழ்ந்து பரவிப் போற்றிய திருப்பதிகம் சென்னிப்பத்து என்பதாகும். இறைவன் குருவாகி வந்து தன் திருவடிகளை அடிகளது சென்னியிற் சூட்டியருளிய இச் செய்தி, "என்னையும் ஒருவனுக்கி இருங்கழல், சென்னியில் வைத்த சேவக போற்றி" (போற்றித் திருவகவல்) எனவரும் அடிகளது வாய்மொழியாற் புலனும். இறைவன் தன் பொன்னுர் திருவடிகளைச் சூட்டி அருள்செய்தமையால் தமது சென்னிக்கு வாய்த்த பெருஞ் சிறப்பினை எண்ணி உவந்து போற்றிய பத்துப் பாடல்களையுடைய பதிகமாதலின், இது சென்னிப்பத்து என்னும் பெயருடையதாயிற்று.

இறைவன் திருவடிகளின் அருமையினைப் பரவிப் போற்றும் முறையில் அத்திருவடியினைப் பெற்ற தம் சென்னியின் சிறப்பினை அடிகள் இத் திருப்பதிகத்தில் விரித்துக் கூறியுள்ளார். இந்நுட்பம்,

" தூய வருட்குருபதத்தைச் சூட்டுதற்குப்
பெற்றவுயிர்ச் சுகத்தை நோக்கிச்
சேய மலர்ப் பதத்தருமை அடியரொடும்
வியந்துரைத்தல் சென்னிப்பத்தே "

எனவரும் திருப்பெருந்துறைப் புராணத்தால் இனிது புலனும்.

இறைவன் சேவடி தம்முடைய சென்னியில் மன்னி விளக்கும் பேரானந்தத்தை நினைந்து போற்றும் நிலையில் அடிகள் அருளிய பதிகம் ஆதலின், இதற்குச் ' சிவ விளைவு ' என முன்னோர் கருத்துரைத்தனர்,

'தேவதேவன் மெய்ச்சேவகன் தென் பெருந்துறை நாயகன்
மூவராலும் அறியொணுமுதலாய ஆனந்த மூர்த்தியான்
யாவராயினும் அன்பரன்றி அறியொணுமலர்ச் சோதியான்
தூய மாமலர்ச் சேவடிக்கணஞ் சென்னிமன்னிச் சுடருமே'

என்பது இப்பதிகத்தின் முதல் திருப்பாட்டாகும். இதன் கண் ' ஆனந்த மூர்த்தியாகுக விளங்கும் இறைவனுடைய தூயனவும் மென்மையுடையனவுமாகிய செந்தாமரை மலர் போலும் திருவடிகள், (தூய்மையற்றும் வல்லென்றும் உள்ள) என்னுடைய சிரசில் நிலைபெற்றுத் திகழ்கின்றன ' என அடிகள் குறித்துள்ளமை காண்க. இங்ஙனம் இறைவனுடைய திருவடிகள் என் சென்னியில் மன்னித் திகழ்தற்கு அத்திருவடிகளின் அருளின் நீர்மையே காரணம் அன்றி எனது தகுதி காரணமன்றும் என்றவாறு. ' ஆயிரந் தாமரை போலும் ஆயிரஞ் சேவடியானும் ' (4–4–8) என அப்பரடிகள் போற்றியவாறு எங்கும் நீக்கமற நிற்பன இறைவன் திருவடிகள் ஆதலின் ' சேவடிக்கணம் ' என்றூர். கணம்-தொகுதி. இனி, சேவடிக்கள் நம் சென்னி மன்னிச் சுடரும் ' எனப் பிரித்து, ஏனைய அடியார்களையும் தம்முடன் உளப்படுத்திக் கூறியதாகவும் கொள்ளலாம். இவ்வாறன்றி, சேவடிக்கண் நம் சென்னி மன்னிச் சுடரும் ' எனப் பிரித்துரைப்பின் மன்னுதலும் சுடர்தலும் ஆகிய நிலைபேறும் ஒளியுடைமையும் இறைவன் திருவடிக்கு ஆதலின்றித் தம் சென்னிக்கு ஆகுமாறு அடிகள் கூறியதாகக் கொள்ள வேண்டி நேரும். அங்ஙனம் கொள்ளுதல் அடிகளது மனவியல்புக்கு ஒவ்வாத தொன்றும். அன்றியும் "அப்பரமசிவனது மலர் மணம் ஒத்த பாத தாமரையான திருவருட் சோதி, என் போதச் சிரசிலே வியாபகமாகப் பிரகாசிக்கும் " எனச் சீகாழித்

தாண்டவராயர் மேற்காட்டிய தொடர்க்குப் பொருள் கூறி யிருத்தலும்,

'தூய அருட்பதத்து அருமை அடியரொடும்
வியந்துரைத்தல் சென்னிப்பத்தே'

எனத் திருப்பெருந்துறைப் புராணம் சுட்டிய பதிகக் கருத்தும் இங்கு நோக்கத் தக்கனவாகும். இதன் ஐந்தாந் திருப் பாடலில், 'திருப்பெருந்துறை மேவினன், காயத்துள் அமுது ஊற ஊற நீ கண்டுகொள் என்று காட்டிய தூய மாமலர்ச் சேவடிக்கணம்' என்றது, திருப்பெருந்துறை யிறைவன் குருவாக எழுந்தருளி வந்து அடிகளுக்கு உப தேசித்தருளிய திருவடி ஞானத்தை. ஆன்மாவாகிய சரீரத் துக்குள்ளே உயிராயிருக்கப் பெற்ற சிவஞானமாகிய தேனினைச் சொரியும் திருவடிப் பேரின்ப அநுபவத்தினை,

'காயத்துள் மெய்ஞ்ஞானக் கள்ளுண்ண மாட்டாதே
மாயக்கள் ளுண்டாரென் றுந்தீபற
வரட்டுப் பசுக்களென் றுந்தீபற' (43)

எனவரும் திருவுந்தியார் பாடலில் உய்யவந்த தேவநாயனார் வெளியிட்டுள்ளமை இங்கு ஒப்பு நோக்கி யுணரத்தக்க தாகும்.

'நங்கைமீர் எனை நோக்குமின்' எனத் தொடங்கும் மூன்றாந் திருப்பாடலில் அடிகள் தம்மை இறைவனாகிய ஆன்ம நாயகனைக் காதலித்த மகளிர் நிலையில் வைத்துக் கூறியுள்ளார்.

சுரு. திரு வார்த்தை

சிவபெருமான் பெருந்துறையிற் குருவாக எழுந்தருளி முழுமுதற் பொருளாகிய தன் உண்மையினை வெளிப்படுத்தி யருளியது முதலாகத் தன் சீரடியார்களுக்கு அருளிய திறங் களாகிய புகழ்ச் செயல்களைப் போற்றிப் பரவும் பொருளுரை யாக அமைந்தது, திருவார்த்தை என்னும் இத் திருப்பதிக மாகும். இறைவன் தன் அடியார் பொருட்டு எளிவந்தரு ளிய செயல்களைக் குறிக்கும் இப்புகழுரைகளை அறிந்து போற்றும் அடியார்கள் எம்பிரான் ஆவார் எனத் திருவாத வூரடிகள் இப்பதிகப் பாடல் தோறும் உளமுருகிப் போற்றி யுள்ளமை காணலாம்.

> " அறம் பெருகும் பெருந்துறையிற் றமையாண்ட
> செயல்முதலா அரன்சீ ராட்டின்
> திறமறிவார் எம்பிரா னவரென வுரைத்தல்திரு
> வார்த்தை யாகும் "

என்பது திருப்பெருந்துறைப் புராணம்.

மணிவாசகப் பெருமான், தாம் அருளிய திருவாசகத்தில் "வாக்கு உன் மணி வார்த்தைக்கு ஆக்கி" (30) எனவும், "வார்த்தையும் பேசி" (166) எனவும், "என்னை ஓர் வார்த்தை யுட்படுத்துப் பற்றினய்" (399) எனவும், வார்த்தை என்னும் சொல்லை இறைவனது பொருள்சேர் புகழ் என்ற பொருளிலும், இறைவன் அருளிய உபதேச மொழி என்ற பொருளிலும் ஆண்டுள்ளார். எனவே அவரருளிய திரு வார்த்தை என்பது, இறைவனது புகழை விரித்துரைக்கும் திருவுடைய வார்த்தை எனவும், இறைவனல் திருவாய் மலர்ந்தருளப் பெற்ற திருவுடைய உபதேச வார்த்தை எனவும், இருவகையாகப் பொருள் கொள்ளும் நிலையில் அமைந்து நின்றதெனக் கருதுதல் பொருந்தும்.

திருவள்ளுவர் குறித்த ஆதி பகவன் என்பதனை 'மாதிவர் பாகன்' எனவும், மலர்மிசை யேகினன் என்பதனை 'மாமலர் மேய சோதி' எனவும் இப்பதிக முதற் பாடலில் அடிகள் குறித்துள்ளமை காணலாம். ஆதி பகவனகிய முழு முதற் கடவுளின் இயல்பினை 'ஆதிப் பிரமம்' என்ற தொட ரால் அடிகள் குறித்துள்ளார்.

இறைவன் திருப்பெருந்துறையிலே தம் பொருட்டுக் குருவாக எழுந்தருளி ஆதிப் பிரமம் வெளிப்படுத்த அருள் திறமும், இடவை மடநல்லாட்குச் சீல மிகக் கருணையளித்த திறமும், பெண்பாலுகந்து மணி வலை கொண்டு மீன் விசி றும் வகையும், வேடுருவாகி மகேந்திரத்து ஆகமம் அருளிய பெருமான் ஆடலமர்ந்த பரிமா ஏறி ஏடர்களை எங்கும் ஆண்டு கொண்ட இயல்பும், உந்து திரைக் கடலைக் கடந்து அன்று இலங்கையதனில் பந்தணை மெல்விரலாள் ஆய வண்டோதரிக்கு அருளிய பரிசும், ஏவுண்ட பன்றிக்கு இரங்கிக் கேவலங் கேழலாய்ப் பால் கொடுத்த கிடப்பும், நாதமுடையதோர் நற்கமலப் போதினில் நண்ணிய நன்னு தலார் பொருட்டு மண்ணிடை வந்து தோன்றிப் பேதம் கெடுத்து அருள் செய்த பெருமையும், இருங்கடல் வாணற்குத் தீயில் தோன்றும் ஓவிய மங்கையர் தோள் புண

ரும் உருவும், காதல் பெருகக் கருணை காட்டித் தன் கழல் காட்டிக் கேதங் கெடுத்துத் தம்மை ஆண்டருளிய திறமும், பெருந்துறை யீசன் வண்சாத்திேைடும் மங்கையர் மல்கும் மதுரை சேர்ந்த வகையும் ஆகிய புகழ்ச் செய்திகளை அடிகள் இப்பனுவலிற் பரவிப் போற்றியுள்ளார்.

இதன்கண், 'ஆதிப்பிரமம்' என்பதும் 'கேவலம்' என்பதும் அடிகள் காலத்து வழங்கத் தொடங்கிய வடசொல் லாட்சியாகும். இறைவனே எளிவந்து உறுதிப் பொருளை அறிவிக்க அறிந்து அவன்பால் அன்பு மீதூரப்பெறும் நிலையில் அடிகள் அருளிய திருப்பதிகமாதலின், இதற்கு 'அறிவித்தன்புறுதல்' என முன்னோர் கருத்துரை வரைந்தனர்.

சச. எண்ணப்பதிகம்

திருவாதவூரடிகள் தமது உள்ளக் கருத்தினைத் தம்மை ஆட்கொண்ட வள்ளலாகிய இறைவனுக்குத் தெரிவிக்கும் முறையில் இப்பனுவலைப் பாடியிருத்தலால் இஃது எண்ணப் பதிகம் என்னும் பெயர்த்தாயிற்று. எண்ணம் - உள்ளக் கருத்து. இப்பதிகத்திற்கு 'ஒழியா இன்பத்து உவகை' என முன்னோர் கருத்துரை வரைந்தனர். அடிகள் தம்மை ஆட்கொண்டருளிய முதல்வனது திருவருளில் திளைத்துப் 'பாருருவாய பிறப்பற வேண்டும் பத்திமையும் பெற வேண்டும்' எனத் தம் மனத்திலுள்ள விருப்பத்தை இறைவனுக்கு அறிவித்து, 'நின் திருவருள் காட்டி என்னையும் உய்யக்கொண்டருளே' எனவும், 'நண்பே அருளாய்' எனவும், 'பிறப்பறுப்பாய்' எனவும், 'உடையவனே எனை ஆவ என்றருளாயே' எனவும் இறைவனை வேண்டிப் போற்றுகின்ருர்.

> "நிறம் வளரும் மலர்ப்பொழில் சூழ்ந் தோங்குதிருத்
> தில்லை மன்றுள் நிமல ஞமத்
> திறம் பெருகும் இன்பம் அருள் என்றல் எண்ணப்
> பத்தெனவும் நிகழ்த்த லாமே"

எனவரும் திருப்பெருந்துறைப் புராணத் தொடரால் அடிகளது எண்ணம் 'இன்பம் அருள்' என இறைவனை வேண்டுதல் என்பது இனிது புலனுகும். எண்ணப்பதிகம் ஆறு திருப் பாடல்களை யுடையதாகும்.

௪௫. யாத்திரைப் பத்து

உலகிற் பாசத் தொடர்பிலிருந்து விடுபட்டு ஈறிலாப் பேரின்ப வாழ்வாகிய வீடு பேற்றினை நச்சிச் சிவமாநகர்க்குச் செல்லும் நோக்குடன் அன்புடைய அடியார்களை அழைக்கும் நிலையில் அருளிய பத்துப் பாடல்களையுடைய பனுவலாதலின், இது யாத்திரைப் பத்து என்னும் பெயருடையதாயிற்று.

"பொல்லாத பவத்தை விட்டுச் சிவன்கழற்கீழ்ப்
புகுங் காலம் புகுந்தது எற்கு இங்கு
எல்லாரும் வாரும் எனக் கருணையினால்
அழைத்திடல் யாத்திரைப் பத்தாகும்"

என்பது திருப்பெருந்துறைப் புராணம்.

இதன்கண் திருவாதவூரடிகள் அன்பராகிய அடியார்களை நோக்கி, "பொய்விட்டு உடையான் கழல் புகக் காலம் வந்தது, போவோம், ஆட்பட்டீர் வந்து ஒருப்படுமின்" எனவும், 'நீர் புலன்களில் புகவே வேண்டா, புயங்கப் பெருமான் பூங்கழல்கள் மிகவே நினைமின், மிக்க எல்லாம் வேண்டா, போக விடுமின்கள்' எனவும், கோமான் பண்டைத் தொண்டரொடும் அவன்தன் குறிப்பே குறிக்கொண்டு, பொய் நீக்கிப் புயங்கன் ஆள்வான் பொன்னடிக்கே போமாறு அமைமின்' எனவும், 'அடியாரானீர் எல்லீரும் அகல விடுமின் விளையாட்டை; கடிசேர் அடியே வந்தடைந்து திருக்குறிப்பைக் கடைக்கொண்டு இருமின்' எனவும், வெகுளி வேட்கை நோய் விடுமின், மிக ஓர் காலம் இனி இல்லை, உடையான் அடிக்கீழ்ப் பெருஞ் சாத்தோடு உடன் போவதற்கே ஒருப்படுமின்' எனவும், புகழ்மின் தொழுமின் பூப்புனைமின், புயங்கன் தாளே புந்தி வைத்திட்டு எல்லா அல்லலையும் இகழ்மின், நாம் சீரார் சிவபுரத்துச் சென்று சிவன்தாள் வணங்கி நிகழும் அடியார் முன் சென்று நெஞ்சம் உருகி நிற்போமே' எனவும் அன்பினால் விரைந்து அழைக்கின்றார்.

உலகியற் பிணிப்பால் தாமதித்தோரது நிலைமைகண்டு இரங்கிய அடிகள், ஏனைய மெய்யடியார்களை நோக்கி, 'நிற்பார் நிற்க, நில்லா உலகில் நில்லோம் இனி நாம் செல்வோமே பிற்பால் நின்று பேழ்கணித்தால் பெருதற்கு அரியன் பெருமானே' எனவும், 'பெருமான் பேரானந்தத்துப் பிரியாது இருக்கப் பெற்றீர்காள்! அருமால் உற்றுப்

பின்னை நீர் அம்மா அழுங்கி அரற்றுதே, திருமாமணிசேர் திருக்கதவம் திறந்தபோதே சிவபுரத்துத் திருமால் அறியாத் திருப்புயங்கன் திருத்தாள் சென்று சேர்வோமே' எனவும், 'புயங்கன் அருளமுதம் ஆரப்பருகி ஆராத ஆர்வம்கூர அழுந்துவீர்! பொய்யிற் கிடந்து புரளாதே சிவன்கழற்கே போரப் புரிமின்' எனவும் அறிவுறுத்துகின்றார். 'போதர' என்றது 'போர' என இடைக்குறைந்து நின்றது. (திருக்கோவை 182 பேராசிரியர் உரை நோக்குக.)

இவ்வாறு தாம் அழைத்த நிலையிலும் பின்தங்கினாரது நற்பேறின்மையை நினைந்து வருந்திய அடிகள், 'இன்றே வந்து ஆளாகாதீர் மருள்வீர், பின்னை மதிப்பார் ஆர்? மதியுட் கலங்கி மயங்குவீர், தெருள்வீராகில் இது செய்ம்மின், திருப் புயங்கன் அருள் அகலிடத்தே ஆர் பெறுவார்? அந்தோ அந்தோ அந்தோவே' என அருள் மிகுதியால் அரற்றி அழைக்கும் நிலையில் இத்திருப்பதிகத்தை நிறைவு செய்கின்றார்.

இதன்கண் பாடல்தோறும் இறைவனைத் 'திருப்புயங்கன்' என்ற திருப்பெயருடன் அடிகள் குறித்துள்ளமை கூர்ந்து நோக்கற்பாலதாகும். 'பூவார் சென்னி மன்னன்' என்பதனால் வியாக்கிரபாதரையும், 'புயங்கப்பெருமான்' என்பதனால் பதஞ்சலி முனிவரையும் ஆட்கொண்டவன் இறைவன் என்ற குறிப்பினைச் சீகாழித் தாண்டவராயர் தம் உரையிற் குறிப்பிடுவர்.

சகூ. திருப்படை யெழுச்சி

'உலக வாழ்க்கையில் தீக்குணங்களாகிய மாயப் படைகள் அடர்ந்து நெருங்கி மன்னுயிர்களை வருத்தாதவாறு இறைவனைப் பரவும் அருளார்ந்த நல்லோர் யாவரும், திரு நீறாகிய கவசத்தை அணிந்து, இறைவன் அருளிய ஞானமாகிய வாட் படையினை ஏந்தி, மானம் என்னும் பெருங்குணமாகிய குதிரை மீது அமர்ந்து, மதிவெண்குடை கவிக்க, அருள்நாதப் பறை முழங்கப் புறப்படுங்கள்; நம்மைத் தடுக்கும் மாயப் படையினைப் புறங்கண்டு வானவூரைக் கைப்பற்றுவோம்' என்றும், "சரியையாளராகிய தொண்டர்களே! நீங்கள் தூசிப்படையாக முன்னே செல்லுங்கள்; பத்தி நெறியில் நிற்கும் பாங்குடையவர்களே; இரு பக்கங்

களிலும் சூழ்ந்து வளைக்க வல்ல கைகோட் படையாகச் செல் லுங்கள்; ஒண்மையும் ஆற்றலும் வாய்ந்த யோகியர்களே! நடுவிற் பெருஞ்சேனையாகச் செல்லுங்கள்; உரன் என்னும் திண்மையும் செயற்கரிய செய்யும் திறமையும் வாய்ந்த சித்தர் களே! நமது சேனை பின்னிடாதபடி பின்னணியாகிய கூழைப் படையாகக் கடைக்கண் நின்று செலுத்துங்கள்; அல்லற் படை வந்து நம்மை வருத்தாதபடி முன் சென்று விலக்கி நாம் அண்டர் நாட்டினைக் கைப்பற்றி ஆள்வோம்" என்றும் திருவுடைச் செல்வர்களாகிய சிவஞான வீரர்களது பெரும் படையினை எழுப்பிச் செலுத்தும் முறையில் திருவாத வூரடிகள் அருளிய பனுவல் திருப்படை யெழுச்சி என்ப தாகும். திருவுடைய பெருமக்களாகிய சிவஞானச் செல்வர் களது சேனை புறப்பட்டெழும்படி அறிவுறுத்தும் பனுவலாத லின், இது திருப்படை யெழுச்சி யென்னும் பெயருடைய தாயிற்று. முன்னோர் இதற்குப் 'பிரபஞ்சப் போர்' எனக் கருத்துரை வரைந்தனர். இருள் நிறைந்த வாழ்வில் மரு ளாளும் மாயப்படை ஆன்மாவைப் பற்றி அலைக்காதபடி அருள் மறவரது படை யெழுக எனத் தூண்டுவது இத்திருப் படை யெழுச்சி எனலாம்.

" அல்லாத துர்க்குண மாயப்படைகள் வாராமல்
அருள்வாள் ஏந்தி
நல்லார்கள் யாரும் எம்மோ டெய்துமெனப்
படையெழுச்சி நவிறலாகும் "

என்பது திருப்பெருந்துறைப் புராணமாகும்.

திருப்படையெழுச்சி இரண்டு பாடல்களையுடையது. முதற்பாடலில் படை வீரர்க்கு வேண்டிய போர்க் கருவிகள் இவை எனவும், இரண்டாம் பாடலில் தொண்டர், பத்தர், யோகிகள், சித்தர் ஆகிய நால்வகையினரும் முறையே தூசிப் படை (முன்னணிப் படை), கைகோட்படை (இரு பக்கங்களி லும் சென்று வளைக்கும் படை), பேரணி (நடுவே சென்று எதிர்க்கும் பெரும் படை), கூழைப்படை (பின்னணிப்படை) என அமைந்து மாயப்படையைப் புறங்கண்டு வானவூராகிய அண்டர் நாட்டைக் கைக்கொண்டு ஆளுதற்கேற்ற உரனு டைய சான்றோர் எனவும் அடிகள் அணி நலம் அமைய விளக்கிய திறம் உணரத் தக்கதாகும்.

சஎ. திருவெண்பா

திருவாதவூரடிகள் தாம் பெற்ற சிந்தையின் நிறைவாகிய சிவமே பெறுந் திருவினை, பெறாத ஏனையோரும் பெற்று மகிழுமாறு விளங்க அறிவுறுத்தும் அழகிய வெண்பாக்களாலாய பனுவலாதலின், இது திருவெண்பா என்னும் பெயர்த்தாயிற்று. அறிவினாற் சிவனேயாகிய மணிவாசகப் பெருந்தகையின் சிவமாந்தன்மைப் பெரு வாழ்வினைத் தெரிவிப்பது பற்றி இதற்கு 'அணைந்தோர் தன்மை' என முன்னோர் கருத்துரை வரைந்தனர்.

" தொந்தமா மலமறுத்துச் சுகம்பெருக்கிப்
பெருந்துறைவாழ் சோதி என்றன்
சிந்தையே ஊராகக் கொண்டிருந்தான்
என்றுரைத்தல் திருவெண்பாவாம் "

என்பது திருப்பெருந்துறைப் புராணம். திருவெண்பா என்னும் இப்பனுவல் பதினொரு வெண்பாக்களை யுடையதாகும். இதன்கண்,

'வாரா வழியருளி வந்தெனக்கு மாறின்றி
ஆரா அமுதாய் அமைந்தன்றே — சீரார்
திருத்தென் பெருந்துறையான் என்சிந்தை மேய
ஒருத்தன் பெருக்கும் ஒளி'

எனவும்,

'யாவர்க்கும் மேலாம் அளவிலாச் சீருடையான்
யாவர்க்குங் கீழாம் அடியேனை — யாவரும்
பெற்றறியா இன்பத்துள் வைத்தாய்க்கென் எம்பெருமான்
மற்றறியேன் செய்யும் வகை'

எனவும்,

'மூவரும் முப்பத்து மூவரும் மற்றொழிந்த
தேவரும் காணாச் சிவபெருமான் — மாவேறி
வையகத்தே வந்திழிந்த வார்கழல்கள் வந்திக்க
மெய்யகத்தே இன்பம் மிகும்'

எனவும்,

'இன்பம் பெருக்கி இருளகற்றி எஞ்ஞான்றும்
துன்பம் தொடர்வறுத்துச் சோதியாய் — அன்பமைத்துச்
சீரார் பெருந்துறையான் என்னுடைய சிந்தையே
ஊராகக் கொண்டான் உவந்து'

எனவும் வரும் திருவெண்பாக்கள் மணிவாசகப் பெருமான் பெற்ற சிவமேபெறுந் திருவாகிய பேரானந்தத்தினை இனிது புலப்படுத்தல் காணலாம்.

சஅ. பண்டாய நான்மறை

'பண்டாய நான்மறை' என்பது, முதற் குறிப்பாற் பெற்ற பெயர். பண்டு ஆய நான்மறை என்றது, இன்ன நாள் என்று ஒருவராலும் அளந்தறிய முடியாத தொன்மைக் காலத்தே இறைவனது வாய்மொழியாகத் தோன்றிய நான் மறைகளை. அத்தகைய வேதங்களும் தனது இயல்பினை அணுகி அறிய முடியாமல் ஐயா என ஓலமிட்டு அலற அவற்றுக்கு அகப்படாது மேலோங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியன் இறைவன் என்பார், 'பண்டாய நான்மறையும் பால் அணுகா' என்றார். உலகங்காக்கும் மூவருள் திருமாலும் அயனும் இறைவனாகிய பெருமானை உள்ளவாறு காணப் பெற்றிலர் என்பார், 'மால் அயனும் கண்டாரும் இல்லை' என்றார். இங்ஙனம் மாலும் அயனும் காணக் கடவுள் தன் கருணையினால் எளி வந்து தோன்றி என்னைத் தன் தொண்டனாக ஏற்றுக் கொண்டருளினான். அவனது கைம்மாறு வேண்டாக் கடப்பாடாகிய பேரருளுக்குக் கடையேன் செய்யும் கைம்மாறு எதுவும் இல்லை என்பார், கடையேனைத் - தொண்டாகக் கொண்டருளுங் கோகழி எம் கோமாற்கு நெஞ்சமே உண்டாமோ கைம்மாறு உரை' என்றார்.

இப்பனுவல், ஏழு வெண்பாக்களை யுடையது. இவ் வெண்பாக்கள் ஒன்றோடொன்று பொருட்டொடர்பு உடையனவாக அமைந்துள்ளன. திருப்பெருந்துறை இறைவனை நண்ணி வழிபடும் நம்மவராகிய அடியார்கள் அனைவரும் பாசத் தொடர்பற்று இடர்களெல்லாம் நீங்கிப் பேரின்ப வாழ்வு பெற்று இன்புறுவர் என்னும் மெய்ம்மையினை அடிகள் தமது அருளநுபவங்கொண்டு ஐயமின்றித் தெளிவிக்கும் முறையில் அமைந்தது இப்பனுவலாதலின், 'அநுபவத்துக்கு ஐயமின்மை உரைத்தல்' என இதற்குக் கருத்துரை வரைந்தனர் முன்னோர்.

'எந்தை திருப்பெருந்துறையை ஏத்தும் நமரே வாழ்வுற்
றிடர் சேர் பாச
பந்த மறுத்திடுவரெனப் பண்டாய நான்மறையும்
பகர்ந்ததாமே'

எனத் திருப்பெருந்துறைப் புராண ஆசிரியர் இப்பதிகக் கருத்தினைக் குறித்துள்ளார். இதன்கண்,

" உள்ள மலமூன்றும் மாய உகுபெருந்தேன்
வெள்ளந் தரும்பரியின் மேல்வந்த — வள்ளல்
மருவும் பெருந்துறையை வாழ்த்துமின்கள் வாழ்த்தக்
கருவும் கெடும்பிறவிக் காடு "

" வாழ்ந்தார்கள் ஆவாரும் வல்வினையை மாய்ப்பாரும்
தாழ்ந்துலகம் ஏத்தத் தகுவாரும் — சூழ்ந்தமரர்
சென்றிறைஞ்சி யேத்தும் திருவார் பெருந்துறையை
நன்றிறைஞ்சி யேத்தும் நமர் "

" காணுங் கரணங்கள் எல்லாம் பேரின்பமெனப்
பேணும் அடியார் பிறப்பகலக் — காணும்
பெரியானை நெஞ்சே பெருந்துறையில் என்றும்
பிரியானை வாயாரப் பேசு "

" பேசும் பொருளுக் கிலக்கிதமாம் பேச்சிறந்த
மாசின் மணியின் மணிவார்த்தை — பேசிப்
பெருந்துறையே யென்று பிறப்பறுத்தேன் நல்ல
மருந்தினடி யென்மனத்தே வைத்து "

எனவரும் திருப்பாடல்கள் திருவாதவூரடிகளது அநுபவத்தினை இனிது புலப்படுத்தும் நிலையில் அடைந்திருத்தல் காணலாம்.

உள்ளும் புறம்பும் ஒரு தன்மைக் காட்சியராய் இறை நிறைவில் அழுந்துதலாகிய ஞான நிட்டை மேவிய அடியார்களுக்குப் பண்டைப் பயிற்சி வயத்தால் சுட்டுணர்வு பற்றிப் பிரபஞ்ச வாழ்வு காட்சிப்பட வருமாறல், அவர்கள், அதனைக் காணும் பொழுதே இறைவன் அதற்கு உள்ளேயும் புறத்தேயும் நிற்கும் நிலையினைக்கண்டு அதனை அறிந்துகொள்ளுதல் அரிதாயின், பிண்டத்தில் நிற்கும் நிலையுள் ஒன்றின் வைத்து அறிந்து அது வாயிலாகப் புகுந்தாயினும் இறைவனது இயல்பினைத் தலைப்பட்டு அறிந்து அங்கே காணுங் கரணங்கள் எல்லாம் பேரின்பமெனப் பேணி இவ்வாறு கருவிகளோடும் கூடி நிற்பதாகிய நனவு நிலையிலேயே, கருவி யொன்றினோடும் கூடாது தொழிலிறந்து நிற்கும் நின்மல துரியாதீதம் எனப்படும் தூயநிலை கைகூடும்படி முயல்வோர், சிவானுபவம் தமதாகக் கொண்டு அநுபவிக்கப் பெறுவர். இந்நுட்பத்தினை,

" இந்நிலை தான் இல்லையேல் எல்லாம் ஈசன்
இடத்தினினும் ஈசன் எல்லா இடத்தினினும் நின்ற
அந்நிலையை அறிந்தந்தக் கரணங்கள் அடக்கி
அறிவதொரு குறி குருவின் அருளினல் அறிந்து

மன்னுசிவன் தனையடைந்து நின்றவன்றனாலே
மருவு பசு கரணங்கள் சிவகரணமாகத்
துன்னிய சாக்கிரமதனில் துரியா தீதம்
தோன்றமுயல் சிவானுபவம் சுவானு பூதிகமாம்"
(சித்தியார் – 286)

எனவரும் திருவிருத்தத்துள் அருணந்தி சிவாசாரியார் விளக்கியுள்ளார். இது 'கானுங் கரணங்களெல்லாம்' பேரின்பம் எனப் பேணும் அடியார்' எனவரும் தொடருக்கு அமைந்த விளக்கமாதல் அறிக.

சக. திருப்படையாட்சி

பாண்டி நன்னாடுடையானாகிய இறைவனுடைய படை வீரராம் திருத்தொண்டர்கள், மாயப் படையினை வென்று தம் தலைவனைக் கண்ணாரக் கண்டு, சீவோபாதி ஒழிந்து, சிவமாந்தன்மை யெய்தி ஒக்க உறைந்து, இவர் அவனோடு அவன் இவரோடு பிரிவறக் கூடி, அண்டர் நாடாளும் ஆட்சி யநுபவத்தினை எண்ணி வியந்துரைக்கும் பனுவலாதலின் இது திருப்படையாட்சி என்னும் பெயர்த்தாயிற்று, இந்நுட்பம், "பாண்டி நன்னாடுடையான் படையாட்சிகள் பாடுது மாகாதே" எனவரும் இப்பதிகத் தொடரால் இனிது விளங்கும்.

இதன்கண், 'மண்களில் வந்து பிறந்திடுமாறு மறந்திடு மாகாதே' எனவும், 'நன்றிது தீதென வந்த நடுக்கம் நடந்தன' எனவும், 'பந்த விகார குணங்கள் பறிந்து மறிந்திடும்' எனவும் 'இந்திரஞால இடர்ப் பிறவித்துயர் ஏகுவது' எனவும், 'மண்ணினில் மாயை மதித்து வகுத்த மயக்கறும்' எனவும், 'கண்ணிலி காலம் அனைத்தினும் வந்த கணக்கறும்' 'பெண்ணலி ஆணென நாம் என வந்த பிணக்கறும்' எனவும், 'சாதி விடாத குணங்கள் நம்மோடு சலித்திடும், அங்கிது நன்றிது நன்றெனும் மாயை அடங்கிடும்' எனவும் உயிர்கட்குத் தடையாக உள்ள தொல்லைகள் ஒழியும் முறையினை அடிகள் தெளிவாகக் குறித்தருள்கின்றார். இப்பொருளமைப்பினை யுணர்ந்த முன்னோர் இப்பதிகத்திற்குச் 'சீவோபாதி யொழிதல்' எனக் கருத்துரை வரைந்தனர். உயிர்கட்குத் தடையாகவுள்ள தொல்லைகள் நீங்கும் எனவே, உயிர்க்கு உறுதி பயப்பனவாகிய எல்லா நலங்களும் ஒருங்கு எய்தும் என்பதும் உடன் கூறியவாறாயிற்று. 'மாலறியா

மலர்ப் பாதம் இரண்டும் வணங்குதும்' 'என்றும் என் அன்பு நிறைந்த பராவமுது எய்துவது' 'பாவனையாய கருத்தினில் வந்த பராவமுது' 'அந்த மிலாத அகண்டமும் நம்முள் அகப்படும்' 'ஆதி முதற் பரமாய பரஞ்சுடர் அண்ணுவது' எல்லையில் மாக்கருணைக் கடல் இன்றினிதாடுதும்' 'நன்மணிநாதம் முழங்கி என் உள்ளுற நண்ணுவது' 'எண்ணிலியாகிய சித்திகள் வந்தெனை எய்துவது' 'வீணை முரன்றெழும் ஓசையில் இன்பம் மிகுத்திடும்' 'சொல்லியலாதெழு தூமணியோசை துவன்றிடும்' 'பண்டறியாத பரானுபவங்கள் பரந்தெழும்' 'சங்குதிரண்டு முரன்றெழும் ஓசை தழைப்பன' 'சீரடியார்கள் சிவானுபவங்கள் தெரிந்திடும்' எனவரும் தொடர்கள், அடியார்களாகிய படைவீரர்கள் சிவமா நகர் எய்தி நுகரும் சிவானுபவமாகிய பராவத்தை நிலையினை இனிது புலப்படுத்தல் காணலாம். இந்நிலையில் சிவயோகிகள் தம் அகத்தே கேட்டு மகிழும் பத்து வகை இன்னொலிகளையும்,

'மணிகடல் யானை வார்குழல் மேகம்
அணிவண்டு தும்பி வளைபேரிகை யாழ்
தணிந்தெழு நாதங்கள் தாமிவை பத்தும்
பணிந்தவர்க்கல்லது பார்க்கவொண்ணாதே'

(திருமந்திரம் 606)

எனவரும் பாடலில் திருமூல தேவர் தொகுத்துக் கூறியுள்ளார்.

"திருச்சிலம்போசை செவிவழியே சென்று
நிருத்தனைக் கும்பிடென் றுந்தீபற"

எனத் திருவியலூர் உய்யவந்த தேவநாயனாரும்,

"தூங்கிருள் நடுநல் யாமத்தே மழலையாழ் சிலம்ப
வந்தகம் புகுந்தோன்"

எனக் கருவூர்த்தேவரும் அருளிய பொருளுரைகள் இங்கு ஒப்புநோக்கி உணரத்தக்கனவாகும்.

"வாகுதிருப் பெருந்துறையார் எழுந்தருளப் பெறில்
எல்லா வளங்கள் முற்றும்
ஆகும் எமக்கு; அல்லாத தாகா தென்றியம்பல்
படையாட்சியாகும்"

எனத் திருப்பெருந்துறைப் புராணமுடையார் இப்பதிகக் கருத்தினை எடுத்துரைத்துள்ளார். இதன்கண் எட்டுத் திருப்பாடல்கள் உள்ளன. இறைவன் தன் படைவீரராகிய

அடியார்களைப் பேரின்ப வாழ்வில் நிலைபெறச்செய்து ஆளுந் திறன் நுதலியது இப்பனுவலாதலின் இதற்குத் திருப்படையாட்சி என்ற பெயர் மிகவும் பொருத்தமுடையதேயாம்.

இப்பதிகத்திற் பயின்று வரும் 'ஆகாதே' என்னும் சொல், அன்றே என்னும் சொற்போன்று 'அல்லவா' என வினவும் குறிப்புடைய இடைச்சொல்லாகும். "நின் கரு நெடுங்கண் புதைத்தது இவற்குப் பெரியதோர் ஆற்ருமையைச் செய்யுமென்ருகாதே? அவற்றின் பரத்தனவோ, சுரும்புடைக்கோதை நின்கரும்புடைத்தோள்" (களவியல் ௩-ஆம் சூத்திரவுரை) எனவரும் இறையனுர் களவியலுரையில் 'ஆகாதே' என்னும் சொல் இப்பொருளில் ஆளப்பெற்றிருத்தல் இங்கு நினைக்கத்தக்கதாம். "ஆரூரானை மறக்கலும் ஆமே, என்றமையானும் ஆமென்கிளவி அன்றெனவும் அன்றென்கிளவி ஆமெனவும் காணத்தக்கது" என இச்சொல்லுக்குப் பொருளமைதி கூறுவர் காழித் தாண்டவராயர்.

இப்பனுவலின் இரண்டாந் திருப்பாடலில் 'ஒன்றினேடொன்றும் ஓரைந்தினேடைந்தும்' என்ற தொடர், முப்பத்தாறு தத்துவங்களைக் குறித்ததெனக் கொள்வர் தாண்டவராயர். ஒன்று என்னும் எண்ணுடன் ஒன்றிய ஐந்தும் ஐந்தும் முறையே ஆறு ஆறு $6 \times 6 = 36$ என்ருகி, 'முதல் முப்பத்தாறே'. (திருமந்திரம் 125) எனத் திருமூலர் குறித்த முப்பத்தாறு தத்துவங்களையும் குறித்து நின்றன எனக்கொள்ளுதல் ஏற்புடையதேயாகும்.

"காரிகையார்கள் தம் வாழ்வில் என் வாழ்வு கடைப்படும் ஆகாதே" எனவும், "என்னணியார்முலை ஆகம் அளைந்துடன் இன்புறுமாகாதே" எனவும் அடிகள் தம்மை இறைவனைக் காதலித்த நாயகியின் நிலையில் வைத்துக் கூறியிருத்தலும், இவ்வாறே 'செந்துவர்வாய் மடவார் இடரானவை சிந்திடுமாகாதே சேலனகண்கள் அவன் திருமேனி திளைப்பனவாகாதே' எனவும், 'மின்னியல் நுண்ணிடையார்கள் கருத்து வெளிப்படுமாகாதே' எனவும், 'செங்கயலொண்கண் மடந்தையர் சிந்தை திளைப்பனவாகாதே' எனவும் தம்மையொத்த அடியார்களையும் இறைவனைக் காதலித்த மகளிர் நிலையில்வைத்துக் கூறியிருத்தலும் திருவாதவூரடிகள் இறைவனை ஆன்மநாயகனுகக்கொண்டு அயரா அன்பு செய் தொழுகிய சன்மார்க்க நெறியில் நின்றவர் என்பதனை நன்கு புலப்படுத்துவனவாகும்.

இதன் இரண்டாந் திருப்பாடலில் 'கன்றை நினைந்தெழு தாயெனவந்த கணக்கது வாகாதே' என்ற தொடர்,

'மன்று நிறைந்தது மாபர மாயது
நின்று நிறைந்தது நேர்தரு நந்தியும்
கன்று நினைந்தெழு தாயென வந்தபின்
குன்று நிறைந்த குண விளக்காமே' (திருமந்திரம் 2446)

எனவரும் திருமூலர் வாய்மொழியையும், ஐந்தாந் திருப் பாடலில் வரும் 'கண்ணலி காலம்' என்ற தொடர், 'கால னென்னுங் கண்ணிலி' (புறம் - 240) என்ற தொடர்ப் பொருளையும் அடியொற்றி அமைந்திருத்தல் இங்கு அறியத் தக்கதாகும்.

ருய. ஆனந்தமாலை

ஆரா அன்புடைய மெய்யடியார்களுடன் கூடிப் பெருமா னது பேரானந்தத்துப் பிரியாதிருக்கப்பெறும் இன்பத்தின் இயல்பினை விரும்பியுரைப்பதாதலின், இஃது 'ஆனந்தமாலை' என்னும் பெயருடையதாயிற்று. மாலை – இயல்பு. 'மாலை இயல்பே' (தொல்–சொல்–உரி–15) என்பது தொல்காப்பி யம். சிலப்பதிகாரத்தில் உள்ள 'துன்பமாலை' என்னும் தலைப்பினைப் போன்று இன்பத்தின் இயல்பினை விளக்கும் இப்பனுவல், ஆனந்த மாலை என்ருயிற்று. இதற்குச் 'சிவா நுபவ விருப்பம்' என முன்னோர் கருத்துரை வரைந்தனர். "மோகமிகும் அடியரொடுங் கூட விரும்பியது ஆனந்தம்" என்பது திருப்பெருந்துறைப் புராணம்.

ஆனந்த மாலை ஏழு திருப்பாடல்களை உடையது. இதன் முதற்பாடலாக அமைந்தது,

"மின்னேரனைய பூங்கழல்கள் அடைந்தார் கடந்தார் வியனுலகம்
பொன்னேரனைய மலர்கொண்டு போற்ரு நின்ருர் அமரரெல்லாம்
கன்னேரனைய மனக்கடையாய்க் கழிப்புண் டவலக் கடல்வீழ்ந்த
என்னேரனையேன் இனியுன்னைக் கூடும்வண்ணம் இயம்பாயே"

எனவரும் திருப்பாட்டாகும். 'மின்னேரனைய பூங்கழல் எனத்தொடங்குவதுபற்றி, இம் முதற்குறிப்பினையே இப் பதிகத் தலைப்பாகக் குறித்தலும் உண்டு.

'இனி உன்னைக் கூடும்வண்ணம் இயம்பாயே' எனவும், 'பன்னுளுன்னைப் பணிந்தேத்தும் பழைய அடியரொடுங் கூடாது, என் நாயகமே பிற்பட்டிங்கிருந்தேன் நோய்க்கு விருந்தாயே' எனவும், 'கோலங்காட்டி ஆண்டானைக் கொடியேன் என்றோ கூடுவதே' எனவும் வரும் தொடர்கள், அடியார்கள் பலரும் இறைவனைத் தலைப்பட்டு இன்புற, அவ் இன்பப்பேற்றில் திளைக்கும் நிலையை அவாவிய திருவாதவூரடிகளது சிவானுபவ விருப்பத்தினை நன்கு புலப்படுத்துவன வாகும்.

"நரியைக் குதிரைப் பரியாக்கி ஞாலமெல்லாம் நிகழ்வித்துப்
பெரியதென்னன் மதுரையெல்லாம் பிச்சதேற்றும் பெருந்
துறையாய்
அரியபொருளே அவிநாசியப்பா பாண்டி வெள்ளமே
தெரியவரிய பரஞ்சோதீ செய்வதொன்றும் அறியேனே"

எனவரும் திருப்பாடல், திருவாதவூரடிகள் பெற்ற பேரின்ப மாகிய ஆனந்த வெள்ளத்தின் இயல்பினைப் புலப்படுத்தல் காணலாம்.

'சீலமின்றி நோன்பின்றிச் செறிவேயின்றி யறிவின்றி' என்ற தொடர், 'செறிவறிந்து சீர்மை பயக்கும் அறிவறிந்து, ஆற்றின் அடங்கப்பெறின்' (123) எனவரும் திருக்குறளை அடியொற்றி அமைந்திருத்தல் அறியத்தக்கதாகும்.

ருக. அச்சோப்பதிகம்

யாவர்க்கும் மேலாம் அளவிலாச் சீருடையானாகிய சிவ பெருமான், தம்பொருட்டு எளிவந்தருளிய பேரருளின்பத்தில் திளைத்து மகிழும் திருவாதவூரடிகள், தாம் பெற்ற அருளா ரின்பத்தை வியந்து போற்றுவதாக அமைந்தது அச்சோப் பதிகமாகும். அச்சோ என்பது வியப்பினைப் புலப்படுத்தும் இடைச்சொல். இப்பதிகப்பாடல்கள்தோறும் இறைவன் 'எனக்கு அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே' என அடிகள் தாம் பெற்ற சிவானுபவத்தை வியந்து போற்றி மகிழ்தலால், இஃது அச்சோப்பதிகம் என்னும் பெயர்த்தா யிற்று. இஃது அச்சோப்பத்து எனவும் சில சுவடிகளிற் குறிக்கப்பெற்றுள்ளது. எனினும் பழைய சுவடிகளில் இப் பதிகத்திற்குரியனவாக ஒன்பது திருப்பாடல்களே காணப் படுதலால் அச்சோப்பதிகம் என்ற பெயரே பொருத்தமுடைய தாகத் தெரிகிறது.

"முத்திநெறி யறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி யறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தன் எனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே"

என்பது இப்பதிகத்தின் முதல் திருப்பாட்டாகும். இறைவனை அடைதற்குரிய நெறிகள் முத்தி நெறி, பத்தி நெறி என இரு வகைப்படும் என்பதும், அவற்றுள் முத்தி நெறி என்பது சரியை கிரியை யோக ஞானங்களால் முதிர்ந்த அறிவுடைய பெருமக்கள் மட்டுமே அறிந்து கடைப்பிடித்தற்குரிய அருமை உடையதென்பதும், பத்தி நெறி என்பது உலக மக்கள் அனைவரும் அன்பினாற் பின்பற்றுதற்குரிய எளிமை வாய்ந்த வழியென்பதும், முத்தி நெறியறியாத மூர்க்கரொடு கூடிக் காலங் கழிக்கின்ற தம்மை, இறைவன் தானே எளிவந்து பத்தி நெறி அறிவித்துப் பழவினைகளெல்லாம் அறவே சிதைந்தொழியச் சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி ஆண்டு கொண்டருளினான் என்பதும் ஆகிய உண்மைகளைத் திருவாதவூரடிகள் இத்திருப்பாடலில் வெளியிட்டு வியந்து போற்றியுள்ளார்.

அடிகள், சிவாநுபவமாகிய பேரின்பத்தினையடைதற்குத் தாம் மேற்கொண்ட சாதனங்கள் யாவை என எண்ணிப் பார்த்து, தாம் அதன் பொருட்டுச் செய்த முயற்சிகளாக எதுவும் புலப்படாமையால், முயற்சியும் உளப்பாடும் இன்றி இறைவனருளால் தமக்குக் கிடைத்த சிவாநுபவத்தை வியந்து உரைக்கும் முறையில் இப்பதிகப் பாடல்கள் அமைந்திருத்தலால் 'அநுபவ வழியறியாமை' என இதற்கு முன்னோர் கருத்துரை வரைந்தனர். 'மொழியும் ஈசர் போக சுகம் எனக்கு அளித்தார் ஆர்பெறுவார் எனும் அருமை புகறல் 'அச்சோ' என்பது திருப்பெருந்துறைப் புராணம்.

சிவபெருமானை அடைந்து இன்புறுதற்குரிய சாதனமாகிய திருவைந்தெழுத்தையும் குருவாய் எழுந்தருளி வந்து அவ் அருமறைப்பொருளை உபதேசித்தருளிய இறைவன் திருவருளையும் போற்றி, 'நமச்சிவாய வாஅழ்க, நாதன்தாள் வாழ்க' எனத் தொடங்கிய திருவாசகமாகிய அருள்நூல்,

'செம்மைநலம் அறியாத சிதடரொடுந் திரிவேனை
மும்மைமலம் அறுவித்து முதலாய முதல்வன்தான்
நம்மையும் ஓர் பொருளாக்கி நாய்சிவிகை ஏற்றுவித்த
அம்மை யெனக்கருளியவா றார்பெறுவார் அச்சோவே'

என, மும்மலங்களை அறவே களைந்து முதல்வன் திருவடி அடைந்து இன்புறும் சிவானந்தப் பேருகிய முடிபொருளை உணர்த்தும் திருப்பாடலுடன் நிறைவுபெற் றுள்ளமை உணர்ந்து மகிழத்தக்கதாகும்.

2. திருச்சிற்றம்பலக்கோவை

திருவாதவூரடிகள் தில்லையிற் புத்தர்களை வாதில் வென்று சிற்றம்பலவனை வழிபட்டுத் தவச்சாலையில் தங்கி யிருந்தபோது, அழகிய திருச்சிற்றம்பலமுடையானுகிய இறைவனே அடிகள்முன் அந்தணனுக வந்து தோன்றி, அடிகள் பாடியருளிய திருவாசகச் செழுமறையைத் தம் திருக்கையினுல் எழுதிக்கொண்டு, 'அகத்திணைக் கோவை யொன்று பாடித்தருக' என அடிகளை வேண்டிய நிலையில், அம்முதல்வனே தன் திருக்கரத்தால் எழுதிக்கொள்ளும்படி திருவாதவூரடிகள் திருவாய் மலர்ந்தருளிய தெய்வப்பனுவல் திருச்சிற்றம்பலக்கோவையாகும். இந்நூல், முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் உலகெலாம் உய்ய ஆனந்தத் திருக்கூத்தியற்றியருளும் திருவருள் நிலையமாகிய தில்லைத் திருச்சிற்றம்பலத்தைப் பரவிப் போற்றும் முறையில் அமைந்த அகத்திணைக்கோவை யாதலின் திருச்சிற்றம்பலக் கோவை யென்னும் பெயர்த்தாயிற்று. திருவாசகப் பனுவலைப்போன்று இத்திருக்கோவையும் வாதவூரடிகளது மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேனுகத் திகழ்தலால் இதனைக் கோவைத் திருவாசகம் எனச் சான்ருேர் சிறப்பித்துப் போற்றியுள்ளார்கள்.

அகப்பொருட்டுறைகளைப் பொருட்டொடர்பு அமையும் வண்ணம் ஒரு கோவைப்பட அமைத்துப் பாடப்பெறுவது கோவை என்னும் பிரபந்தமாகும். அகத்துறைகளை நிரல்படக் கோத்து அமைக்கப்பெறுதலின் கோவை என்பது காரணப்பெயர். தமிழ்மொழிக்கே சிறப்பாகவுரிய பனுவல்களுள் அகப்பொருட் கோவையும் ஒன்ருகும். சங்கத்தொகை நூல்களுள் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு ஆகிய தொகை

நூல்கள் ஐந்தும் அகப்பொரு ளொழுகலாற்றின் சிறப்பியல்பினை விரித்துரைக்கும் செந்தமிழ்ப்பனுவல்களாகும். பரிபாடல் என்னும் தொகைநூலிலும் சிலபகுதிகள் அகப்பொருளமைதியுடையனவாய் அமைந்திருத்தல் காணலாம். மேற்குறித்த அகத்திணைச் செய்யுட்கள் யாவும் அன்பும் அறமும் நிரம்பிய இன்ப வொழுக்கமாகிய இல்வாழ்க்கையின் இயல்பினை ஒத்த அன்புடைய ஒருவனும் ஒருத்தியும் ஆகிய இருவரது வாழ்க்கையில் வைத்து விளக்கும் இனிய செந்தமிழ் இலக்கியங்கள் என்பதனை அறிஞர் பலரும் நன்குணர்வர்.

இவ்வுலகியல் வாழ்வில் ஒருவன் ஒருத்தி என்னும் இருவரிடையே நிகழும் கூட்டுறவினை ஒருதலைக் காமமாகிய கைக்கிளை எனவும், ஒத்த காமமாகிய ஐந்திணை எனவும், ஒவ்வாக் காமமாகிய பெருந்திணை எனவும் பகுத்துரைத்தல் தமிழ் மரபு. ஒருவன் ஒருத்தி என்னும் இருவருள் ஒருவர் மட்டும் அன்பினாற் கூடி வாழ்தலில் அளவிறந்த வேட்கையுடையராய் ஒழுக, மற்றவர் அவரது அன்பின் திறத்தை உணர்ந்துகொள்ள முடியாத நிலையினராக இவ்வாறு அமைந்த தொடர்பு ஒருபக்கத்து உறவாதலின் அது கைக்கிளை எனப் பெயர் பெறுவதாயிற்று. கை – பக்கம். கிளை – உறவு. கைக்கிளை என்பது ஒருதலைக்காமம். இனி, ஒருவன் ஒருத்தியாகிய இருவரும் தம்முள் அன்பின்றிக் கூடிவாழும் ஒழுகலாறு பெருந்திணை எனப்படும். கணவன் மனைவியரிடையே நிகழும் இத்தகைய உளம்பொருந்தா வாழ்க்கை உலகியலிற் பெரும்பான்மையாகக் காணப்படுதலால் இதற்குப் பெருந்திணை யெனப் பெயரிட்டனர் முன்னோர். பெருந்திணை - உலகத்திற் பெரும்பான்மையாக நிகழும் ஒழுகலாறு. பெருந்திணை என்பது பொருந்தாக் காமம். பல பிறவிகள் தோறும் கணவனும் மனைவியுமாகப் பிரிவின்றி ஒன்றி வாழ்ந்தமையால் நிரம்பிய அன்புடையார் இருவர், வேறு வேறிடங்களிற் பிறந்து வளர்ந்தனராயினும், இறைவனது ஆணையாகிய நல்லூழின் செயலால் ஓரிடத்தெதிர்ப்பட்டு நெஞ்சுகலந்து ஒருவரையொருவர் இன்றியமையாதவராய் அன்பினாற் கூடிவாழும் ஒழுகலாறு அன்பின் ஐந்திணை எனப்படும். ஒத்த அன்பினராகிய இவ்விருவரும் அன்பினால் அளவளாவி ஒருங்கு கூடியிருத்தலும், இவருள் கணவன் உலகியற் கடமை கருதிச் சிலநாள் மனைவியைப் பிரிந்து,

என, மும்மலங்களை அறவே களைந்து முதல்வன் திருவடி அடைந்து இன்புறும் சிவானந்தப் பேருகிய முடிபொருளை உணர்த்தும் திருப்பாடலுடன் நிறைவுபெற் றுள்ளமை உணர்ந்து மகிழத்தக்கதாகும்.

2. திருச்சிற்றம்பலக்கோவை

திருவாதவூரடிகள் தில்லையிற் புத்தர்களை வாதில் வென்று சிற்றம்பலவனை வழிபட்டுத் தவச்சாலையில் தங்கி யிருந்தபோது, அழகிய திருச்சிற்றம்பலமுடையானுகிய இறைவனே அடிகள்முன் அந்தணனுக வந்து தோன்றி, அடிகள் பாடியருளிய திருவாசகச் செழுமறையைத் தம் திருக்கையினுல் எழுதிக்கொண்டு, 'அகத்திணைக் கோவை யொன்று பாடித்தருக' என அடிகளை வேண்டிய நிலையில், அம்முதல்வனே தன் திருக்கரத்தால் எழுதிக்கொள்ளும்படி திருவாதவூரடிகள் திருவாய் மலர்ந்தருளிய தெய்வப்பனுவல் திருச்சிற்றம்பலக்கோவையாகும். இந்நூல், முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் உலகெலாம் உய்ய ஆனந்தத் திருக்கூத்தியற்றியருளும் திருவருள் நிலையமாகிய தில்லைத் திருச்சிற்றம்பலத்தைப் பரவிப் போற்றும் முறையில் அமைந்த அகத்திணைக்கோவை யாதலின் திருச்சிற்றம்பலக் கோவை யென்னும் பெயர்த்தாயிற்று. திருவாசகப் பனுவலைப்போன்று இத்திருக்கோவையும் வாதவூரடிகளது மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேனுகத் திகழ்தலால் இதனைக் கோவைத் திருவாசகம் எனச் சான்ருேர் சிறப்பித்துப் போற்றியுள்ளார்கள்.

அகப்பொருட்டுறைகளைப் பொருட்டொடர்பு அமையும் வண்ணம் ஒரு கோவைப்பட அமைத்துப் பாடப்பெறுவது கோவை என்னும் பிரபந்தமாகும். அகத்துறைகளை நிரல்படக் கோத்து அமைக்கப்பெறுதலின் கோவை என்பது காரணப்பெயர். தமிழ்மொழிக்கே சிறப்பாகவுரிய பனுவல்களுள் அகப்பொருட் கோவையும் ஒன்ருகும். சங்கத்தொகை நூல்களுள் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு ஆகிய தொகை

நூல்கள் ஐந்தும் அகப்பொரு ளொழுகலாற்றின் சிறப்பியல்பினை விரித்துரைக்கும் செந்தமிழ்ப்பனுவல்களாகும். பரிபாடல் என்னும் தொகைநூலிலும் சிலபகுதிகள் அகப்பொருளமைதியுடையனவாய் அமைந்திருத்தல் காணலாம். மேற்குறித்த அகத்திணைச் செய்யுட்கள் யாவும் அன்பும் அறமும் நிரம்பிய இன்ப வொழுக்கமாகிய இல்வாழ்க்கையின் இயல்பினை ஒத்த அன்புடைய ஒருவனும் ஒருத்தியும் ஆகிய இருவரது வாழ்க்கையில் வைத்து விளக்கும் இனிய செந்தமிழ் இலக்கியங்கள் என்பதனை அறிஞர் பலரும் நன்குணர்வர்.

இவ்வுலகியல் வாழ்வில் ஒருவன் ஒருத்தி என்னும் இருவரிடையே நிகழும் கூட்டுறவினை ஒருதலைக் காமமாகிய கைக்கிளை எனவும், ஒத்த காமமாகிய ஐந்திணை எனவும், ஒவ்வாக் காமமாகிய பெருந்திணை எனவும் பகுத்துரைத்தல் தமிழ் மரபு. ஒருவன் ஒருத்தி என்னும் இருவருள் ஒருவர் மட்டும் அன்பினாற் கூடி வாழ்தலில் அளவிறந்த வேட்கையுடையராய் ஒழுக, மற்றவர் அவரது அன்பின் திறத்தை உணர்ந்துகொள்ள முடியாத நிலையினராக இவ்வாறு அமைந்த தொடர்பு ஒருபக்கத்து உறவாதலின் அது கைக்கிளை எனப் பெயர் பெறுவதாயிற்று. கை – பக்கம். கிளை – உறவு. கைக்கிளை என்பது ஒருதலைக்காமம். இனி, ஒருவன் ஒருத்தியாகிய இருவரும் தம்முள் அன்பின்றிக் கூடிவாழும் ஒழுகலாறு பெருந்திணை எனப்படும். கணவன் மனைவியரிடையே நிகழும் இத்தகைய உளம்பொருந்தா வாழ்க்கை உலகியலிற் பெரும்பான்மையாகக் காணப்படுதலால் இதற்குப் பெருந்திணை யெனப் பெயரிட்டனர் முன்னோர். பெருந்திணை - உலகத்திற் பெரும்பான்மையாக நிகழும் ஒழுகலாறு. பெருந்திணை என்பது பொருந்தாக் காமம். பல பிறவிகள் தோறும் கணவனும் மனைவியுமாகப் பிரிவின்றி ஒன்றி வாழ்ந்தமையால் நிரம்பிய அன்புடையார் இருவர், வேறு வேறிடங்களிற் பிறந்து வளர்ந்தனராயினும், இறைவனது ஆணையாகிய நல்லூழின் செயலால் ஓரிடத்தெதிர்ப்பட்டு நெஞ்சுகலந்து ஒருவரையொருவர் இன்றியமையாதவராய் அன்பினாற் கூடிவாழும் ஒழுகலாறு அன்பின் ஐந்திணை எனப்படும். ஒத்த அன்பினராகிய இவ்விருவரும் அன்பினால் அளவளாவி ஒருங்கு கூடியிருத்தலும், இவருள் கணவன் உலகியற் கடமை கருதிச் சிலநாள் மனைவியைப் பிரிந்து

செல்லுதலும், மனைவி அப்பிரிவுத் துன்பத்தைப் பொறுத்து ஆற்றியிருத்தலும், பிரிந்த கணவன் தான் வருவதாகக் குறித்த நாளில் வரத் தாமதிப்பின் ஆற்ருமை மிக்கு இரங்குதலும், பின் அவன் வந்தபோது அன்பினுற் பிணங்குதலும் என இவ்வொழுகலாறு முறையே குறிஞ்சி பாலை முல்லை நெய்தல் மருதம் என்னும் ஐந்து பகுதிகளாக வகுத்து விளக்கப்பெறுதலின் இஃது அன்பின் ஐந்திணை யெனப் பெயர் பெறுவதாயிற்று. திணை என்பது ஒழுக்கம் என்னும் பொருளுடைய சொல்லாதலின், அன்பின் ஐந்திணை என்பதற்கு அன்பினுல் நிகழும் ஐவகைப்பட்ட ஒழுகலாருகிய அகவொழுக்கம் எனப் பொருள் கொள்ளுதல்வேண்டும்.

ஒருவரை யொருவர் முன் அறியாத நிலையிற் காணும் முதற் காட்சியிலேயே பண்டைப் பிறப்பில் தம்மிருவர்க்கு மிடையே யமைந்த தொன்மை அன்பின் தொடர்புணர்ந்து கணவனும் மனைவியுமாக ஒருவரையொருவர் இன்றியமையா தொழுகும் பெருங்கேண்மையுடையார் இவ்வுலகத்து மிகவும் அரியராதலால், உலகத்து அருமையுடையராய்த் தோன்றிய அவர்களை அன்பிற் சிறந்த தலைமக்கள் எனப் பண்டைத் தமிழ்ச்சான்ருேர் பாராட்டிப் போற்றினர். எஞ்ஞான்றும் ஒத்த அன்பினராய் ஒழுகும் இத்தலைமக்களது வாழ்விலே மிக்குத்தோன்றும் பேரன்பின் திறத்தை எடுத்துக் கூறுமுகமாக, ஏனைப் பொதுமக்கள் வாழ்விற் பெருகிக் காணப்படும் ஒவ்வாக் காமத்தையும் ஒருபாற் காமத்தையும் விலக்கி, ஒத்தகாமமாகிய அன்பு நெறியிலே அவர்களைப் பயிற்றுதல் எளிதாம் எனக்கருதினர். இவ்வுயர்ந்த நோக்கத்தினுலேயே ஒத்த அன்பினராய தலைமக்களது வாழ்க்கையினைப் பொருளாகக் கொண்டு பண்டைத் தமிழ்ச் சான்ருேர்களால் அகத்திணைச்செய்யுட்கள் மிகுதியாகப் பாடப்பெறுவனவாயின.

ஒருவனும் ஒருத்தியுமாகிய இருவருள்ளத்தே தோன்றி வளரும் இன்ப அன்பின் திறத்தை இனிது விளக்குமுகத்தால் மக்கட் குலத்தாரனைவரும் வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து தெய்வத்திருவருளாகிய பேரின்ப நிலையை எய்தி இன்புறுதற்கு வழிவகுப்பன அகத்திணை பற்றியமைந்த தமிழ்ச் செய்யுட்களாகும். “கூறும் அருந்தமிழின் பொருளான” இவற்றின் குறிப்பினை நன்குணர்ந்தே தேவாரம்

திவ்வியப்பிரபந்தம் முதலிய தெய்வப் பனுவல்களைப் பாடியருளிய பெருமக்கள் பலரும், தன்னேரில்லாத் தலைவனுகிய இறைவனை ஆருயிர்க் காதலனுகவும் அவனருள் விழைந்த ஆன்மாக்களை அம்முதல்வனைக் காமுற்று வருந்தும் தலைவியாகவும் கொண்டு அகப்பொருள் துறையமையப் பல திருப்பாடல்களைப் பாடியுள்ளார்கள். திருவாசகப் பனுவலைப் பாடியருளிய திருவாதவூரடிகளும் சிவபெருமானைத் தம் ஆருயிர்க் காதலனுகவும் அவனது திருவடிப் பேரின்பத்தை விரும்பிய தம்மைத் தலைவியாகவும் கொண்டு நெஞ்சநெக்குருகிப் பல திருப்பாடல்களைப் பாடிப் போற்றியுள்ளமை காணலாம்.

"மூலமாகிய மும்மல மறுக்கும்
தூயமேனிச் சுடர்விடு சோதி
காதலனுகிக் கழுநீர் மாலை
ஏலுடைத்தாக எழில்பெற அணிந்தும்"
(கீர்த்தித்திரு அகவல் – 111-114)

எனவரும் அடிகள் திருவாக்கு, அவர் ஆண்டவனைத் தலைவனுகவும் தம்மை அவனருளுக்கு ஏக்கற்று வருந்தும் பெண்ணெருத்தியாகவும் கருதி நெஞ்சங்கரைந்து அன்பு நெறியில் நின்றெழுகியவர் என்பதனை நன்கு புலப்படுத்துவதாகும்.

"அடியவன் தன்னை ஒரு காதலியாகவும் ஆண்டானைக் காதலனுகவும் வைத்துரைத்தல் மரபாதலானும், நான்காவதாகிய சன்மார்க்கம் அல்லது ஞானமார்க்கத்தின்கண் ஆண்டானுக்கும் அடியவனுக்குமுள்ள நெருங்கிய இயைபினுக்குக் காதலன் காதலி என்னும் இருவர்க்குமுள்ள நெருங்கிய உறவினையே எடுத்துக்காட்டல் தொல்லாசிரியர் வழக்காய்ப் போதரலானும், அடிகளைச் சன்மார்க்கத்திற்குரியராகவே சான்றேரெல்லாம் கூறுதலானும், இக்கருத்துப் பற்றியே அடிகளும் திருச்சிற்றம்பலக்கோவையார் அருளிச் செய்தமையானும் ஈண்டுக் காதலனுகி என அருளிச் செய்தது பொருத்தம் உடைத்தேயாம்" என்பர் அறிஞர்.*

தில்லைச் சிற்றம்பலத்தில் ஆடல் புரிந்தருளும் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானே மதுரைத் தமிழ்ச்

* திருவாசக விரிவுரை (மறைமலையடிகள்)

சங்கத்திற் சங்கப்புலவர்கள் நடுவே தானும் ஒரு தமிழ்ப் புலவனாக வீற்றிருந்து தமிழ் மொழியிலுள்ள அகமும் புறமு மாகிய பொருட்கூறுகளை ஆராய்ந்து முறைப்படுத்தி யருளினான் என்ற செய்தியை,

> சிறைவான் புனற்றில்லைச் சிற்றம் பலத்துமென் சிந்தையுள்ளும்
> உறைவான் உயர்மதிற் கூடலின் ஆய்ந்த ஒண்டீந்தமிழின்
> துறைவாய் நுழைந்தனையோ வன்றியேழிசைச் சூழல்புக்கோ
> இறைவா தடவரைத்தோட் கென்கொலாம் புகுந்தெய்தியதே.

எனவரும் திருப்பாடலில் பாங்கன் வினாதல் என்னுந் துறையில் வைத்துத் திருவாதவூரடிகள் சுவைபெறக் குறித்துள்ளார். "தமிழின் துறைகளாவன ஈண்டு அகமும் புறமுமாகிய பொருட்கூறு" எனப் பேராசிரியர் கூறும் விளக்கம், தமிழுக்கும் அம்மொழியில் அமைந்த அகப்பொரு ளொழுகலாற்றிற்கும் உள்ள தொடர்பினை இனிது புலப் படுத்தல் காணலாம்.

அன்பிற் சிறந்த தலைமக்களது இன்ப அன்பின் ஒழுகலாறுகள் எனப் பழந்தமிழ் நூலாகிய தொல்காப்பியத் திலும் சங்கச் செய்யுட்களிலும் தனித்தனித் துறைகளாகக் குறிக்கப்பட்டுள்ள அகத்திணைத் துறைகளையெல்லாம் தெய்வம் கூட்ட ஒருவரையொருவர் கண்ட காட்சி முதலாக இருவரும் ஒருவரையொருவர் இன்றியமையாக் காதற் கேண்மையினராய் உலகத்தார் அறிய மணஞ் செய்து கொண்டு அன்பினால் ஊடியுங் கூடியும் மகிழ்தல் ஈறாக ஒரு கோவைப்படத் தொகுத்துக் கட்டளைக் கலித்துறை யாப்பினால் கூற்றும் மாற்றமும் அமைய நாடகக் காப்பியம் போன்று இயற்றப்பெறும் பொருட்டொடர் நிலைச்செய்யுள் அகத்திணைக் கோவையாகிய இப்பிரபந்தமாகும். இக் கோவைப் பிரபந்தம் தொடர்நிலைச் செய்யுள் வகையினைச் சார்ந்தது என்பது,

"கோவையுந் தொகையும் ஆவயின் வரையார்" என்ப தனால் இது தொடர்நிலைச் செய்யுளாதலின்'' (திருக்கோவை 252-ம் செய்யுள் உரை) எனப் பேராசிரியர் கூறுதலாற் புலனாம். இதன்கண் குறிஞ்சி முல்லை பாலை மருதம் நெய்தல் என்னும் ஐந்திணை யொழுகலாறுகளும் ஒருங்கேயமையப்

பாடப்பெறுதல் பற்றி இஃது ஐந்திணைக் கோவை எனவும் வழங்கப்பெறும்.[1]

அகத்திணைக் கோவையாகிய இப்பிரபந்தம் கட்டளைக் கலித்துறை யாப்பில் இயற்றப்பெறுதல் மரபு. அகப் பொரு ளொழுகலாற்றினைப் பாடுதற்குக் கலிப்பா, பரிபாடற்பா ஆகிய இருவகைப் பாக்களே சிறப்புரிமை யுடையன எனத் தொல்காப்பியனுர் கூறியுள்ளார். அவர் காலத்திற்குப் பின் தோன்றிய சங்கத்தொகை நூல்களுள் கலித்தொகையும் பரிபாடலும் தவிர ஏனைய தொகை நூல்கள் யாவும் ஆசிரியப்பாவாகிய யாப்பிலேயே இயற்றப் பெற்றுள்ளன. அகத்திணை யொழுகலாறுகளை ஒரு கோவைப்படத் தொகுத்துக் கோவைப் பிரபந்தம் பாட எண்ணிய பிற்காலச் சான்ருேர், தொல்காப்பியனுர் கருத் தினைப் பின்பற்றித் தாம் பாட எடுத்துக்கொண்ட கோவை யினைக் கலிப்பாவின் இனமாகிய கட்டளைக் கலித்துறை யாப்பில் அமைத்துப் பாடுதலை வழக்கமாகக் கொண்டனர். இவ்வாறு கட்டளைக் கலித்துறை யாப்பு அகத்திணைக் கோவைக்குச் சிறப்புரிமையுடையதாகக் கொள்ளப் பெற்ற மையால் அதற்குக் கோவைக் கலித்துறை என்றதொரு பெயரும் தோன்றி வழங்குவதாயிற்று.[2]

கலிப்பாவின் இனமெனப்படும் கட்டளைக் கலித்துறை யாப்பு காரைக்காலம்மையார் அருளிய திருவிரட்டை மணிமாலையில்தான் முதன்முதற் காணப்படுகிறது. கட்டளைக் கலித்துறையாப்பு கி. பி. ஏழாம் நூற்ருண்டில் தோன்றிய தேவாரத் திருமுறைகளிலும் திவ்யப் பிரபந்தங்களிலும் பயின்று வழங்கக் காண்கின்ருேம்.

1. "திருந்து தமிழிலக்கண ஐந்திணைக் கோவை
விருத்தகிரிச் செல்வற்கோதும்
பெருந்தகைமை யுடையம் யாம்"

எனவரும் துறைமங்கலம் சிவப்பிரகாசர் பாடலில் இப்பெயர் வழக்கம் இடம் பெற்றிருத்தல் காண்க.

ஐந்திணைக் கோவைத் துறைகளுள் ஒருதுறையினையே பொருளாகக் கொண்டு பிற்காலத்திற் பாடப் பெற்ற கோவைகள் ஒருதுறைக் கோவை என்ற பெயரால் வழங்கப் பெறுதலும் இங்கு நினைக்கத் தகுவதாகும்.

2. வீரசோழியம் யாப்புப் படலம் 17-ஆம் செய்யுள் உரை நோக்குக.

ஒத்த அன்பினராய தலைமக்களது உள்ளத்துயர்ச்சியைப் புலப்படுத்தும் அகனைந்திணை யொழுகலாற்றினைக் கற்றவர்களே யன்றி மற்றவர்களும் எளிதின் உணர்ந்து போற்றும் வண்ணம் இசைநலம் வாய்ந்த கட்டளைக் கலித்துறையாப்பினால் கோவைபாடும் முறை கி. பி. ஏழாம் நூற்ருண்டில் தோன்றியதெனத் தெரிகிறது. இங்ஙனம் தோன்றிய அகத்திணைக் கோவைகளுள் பாண்டியன் அரிகேசரியைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப் பெற்ற பாண்டிக் கோவையும் தில்லைச் சிற்றம்பலவனாகிய இறைவனைப் பாட்டுடைத்தலைவனாகக் கொண்டு மாணிக்க வாசகப் பெருமான் திருவாய் மலர்ந்தருளிய இத் திருச்சிற்றம்பலக் கோவையும் மிகவும் தொன்மை வாய்ந்தன வாகும். இவ்விரண்டினுள்ளும் 'அகத்திணைக் கோவை என்பது நானூறு துறைகளையுடையது' என்னும் இவ் வரையறைக்கமைந்த இலக்கியமாக முதன்முதல் இயற்றப் பெற்ற அகத்திணைக் கோவை திருச்சிற்றம்பலக் கோவையே யாகும்.

இறையனார் களவியலுரையில் விரித்துரைக்கப்படும் துறைகட்கு இலக்கியமாக அந்நூலில் உரையாசிரியராற் காட்டப்பெறும் மேற்கோட் செய்யுட்களில் கட்டளைக் கலித்துறையாப்பிலமைந்த கோவைச் செய்யுட்கள் 326-ம் பாண்டிக்கோவை என்ற பெயரால் வழங்கப் பெறுகின்றன. இப்பாடல்களிற் சிறப்பித்துப் போற்றப்பெறும் பாட்டுடைத் தலைவன் மாறவர்மன் அரிகேசரி என்னும் சிறப்புப் பெயருடையவனும் நெல்வேலிப் போரில் வெற்றிபெற்றவனு மாகிய நின்ற சீர்நெடுமாறனாவன். இவ்வேந்தன் திருஞான சம்பந்தர் காலத்துப் பாண்டியமன்னன் என ஆராய்ச்சி யாளர் கூறுவர். களவியலுரையில் மேற்கோளாகக்காட்டப் பெற்றுள்ள பாண்டிக் கோவைப்பாடல்களுள் ஒருதுறைக்கே ஒன்றுக்கு மேற்பட்ட பாடல்கள் உள்ளன.

பாண்டிக்கோவைச் செய்யுட்களாக 326 பாடல்கள் களவியலுரையிற் காணப்படினும் அப்பாடல்களால் விரித் துரைக்கப் பெறும் அகத்துறைகள் 175 துறைகளே யாகும். தொல்காப்பியத்திலோ இறையனார் களவியலிலோ அகத் திணைத்துறைகள் நானூறு என்னும் இவ்வரையறை இடம் பெறவில்லை. இறையனார்களவியலுரை நக்கீரனார்முதலாக முசிறியாசிரியர் நீலகண்டனார் வரை வந்த ஆசிரியர் பரம்

பரையில் செவிவாயிலாக அறிவுறுத்தப்பெற்று வழங்கிவந்து, முடிவில் இப்பொழுதுள்ளவாறு எழுத்துருவமைந்தகாலம் கி. பி. எட்டாம் நூற்றுண்டென்பர் அறிஞர். களவியலுரை எழுதப்பெற்ற இக்காலப்பகுதியை அடுத்துத் தோன்றியவர் திருவாதவூரடிகளாவர். ஆகவே அவ்வாசிரியர் தொல் காப்பியத்திலும் இறையனுர் களவியலுரையிலும் விரித் துரைக்கப்பெறும் அகத்திணைத்துறைகளை அடியொற்றி மேலும் பல அகத்துறைகளையமைத்துத் தாம்பாட எடுத்துக் கொண்ட திருச்சிற்றம்பலக் கோவையினை நானூறு துறை களை யுடைய அகப் பொருட் கோவையாக அழகுற இயற்றி யுள்ளார். களவியலுரையில் உரையாசிரியர் மேற்கோள் காட்டி விளக்கிய துறைகளேயன்றி அத்துறைகளின் தொடர்புடைய செயலாக அந்நூலுரையிற் குறிக்கப்பெற்ற நிகழ்ச்சிகள் சிலவும் இத்திருக்கோவையில் வாதவூரடிகளால் தனித்துறைகளாக வகுக்கப் பெறுவனவாயின. இறையனுர் களவியல் ஒன்பதாம் சூத்திரவுரையில், "மதியுடம் படுத்துத் தன்கருத்தறிவித்துப் பின்னைத் தழையும் கண்ணியும் கொண்டு பின்னிற்கும்" எனவரும் உரைத் தொடரினை அடியொற்றி மதியுடம் படுத்தலின் இறுதியில் 'கருத்தறி வித்தல்' என்னும் துறையினை அடிகள் அமைத்துள்ளமை காணலாம்.

இவ்வாறு அகத்திணையொழுகலாற்றினை நானூறு துறைகளாக வகுத்தமைத்துப் பொருட்டொடர் நிலையாக நானூறு செய்யுட்களால் முதன்முதற் கோவை பாடியவர் திருவாதவூரடிகளேயாவர். அடிகள் தாம் பாட எடுத்துக் கொண்ட அகப்பொருட் கோவைக்கு நானூறு என்னும் பாடற்றெகையினைத் தேர்ந்து கொண்டமைக்கு, நற்றிணை நானூறு, குறுந்தொகை நானூறு, நெடுந்தொகை நானூறு என அமைந்த சங்கத்தொகை நூல்களின் பாடற்றெகையே அடிப்படையாக அமைந்திருத்தல் வேண்டும்.

திருச்சிற்றம்பலக் கோவையிலுள்ள நானூறு திருப் பாடல்களுக்கும் அவற்றின் கருத்துரைப் பகுதிகளாக நானூறு கொளுக்கள் அமைந்துள்ளன. பாடல்களின் கருத் துரைப் பகுதிகளாகிய இக் கொளுக்களை அடியொற்றியே இப்பாடல்களுக்குத் துறைகள் வகுக்கப் பெற்றுள்ளன எனத்தெரிகிறது. 321, 366, 367-ஆம் பாடல்களுக்கு இரு வேறு துறைகள் அமையப் பொருள் வரையப் பெற்றிருத்த

லானும், அங்ஙனம் வகுத்துரைக்கப்பெறும் இருவேறு துறைகளுக்கும் அடிப்படையாக அவ்வப் பாடல்களுக்குரியகொளு ஒன்றே பொருந்தியமைந்திருத்தலானும், 370-ஆம் பாடலுரையில், "கயன்மணிக் கண்ணியென்பது பாடமாயின், பரத்தையர் சேரிக்கட் டலைமகனது தேர்செல்லத் தலைமகள் நொந்துரைத்ததாம்" எனப் பேராசிரியர் கொளுவினை அடியொற்றி வேறு துறைவிளக்கம் கூறுதலானும் இவ்வுண்மை உய்த்துணரப்படும்.

திருக்கோவையின் கருத்துரைப்பகுதிகளாகிய கொளுக்களைப் பாடிய ஆசிரியர் இன்னாரெனத் தெரியவில்லை. ஆயினும் இக்கொளுக்கள் திருவாதவூரடிகள் காலத்தையொட்டியோ அல்லது அவர்காலத்திற்குப்பின்னரோ கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டிற்கு முன்னரே இயற்றப்பெற்று இத்திருக்கோவையில் இடம் பெற்றிருத்தல் வேண்டுமென்று தெரிகிறது. திருக்கோவை 158-ஆம் பாடலுரையில், "இக்கருத்தேபற்றி உதவிநினைந்து குறை நயந்ததென்றது அவனது ஆற்றாமை நிலைமை கேட்டுக் குறைநயந்ததென்றார்" எனப் பேராசிரியர் வரைந்த உரைக்குறிப்பாலும் இவ்வாறே அவ்வாசிரியர் பாடல்தோறும் கொளுச் சொற்களுக்கு வரைந்துள்ள உரைக் குறிப்புக்களாலும் இக்கொளுக்களின் தொன்மை புலனாம். இத்தகைய கருத்துரைப் பகுதிகளாகிய கொளுக்களைப் புறப்பொருள் வெண்பாமாலை ஆசிரியராகிய ஐயனாரிதனார் தாம் சொல்லக்கருதிய துறையின் விளக்கமாகத் தம் நூலில் அமைத்துள்ளார். திருக்கோவையாருக்கு அமைந்த கொளுக்கள் அவ்வப் பாடல்களில் அமைந்த துறைகள் இவையென அறிந்து கொள்ளுதற்குக் கருவியாக அமைந்திருத்தலும், புறப்பொருள் வெண்பாமாலையிலுள்ள கொளுக்கள் அந்நூலிற் குறித்த துறைகளுக்குரிய விளக்கமாக அமைந்திருத்தலும் இங்கு ஒப்புநோக்கி யுணரத்தக்கனவாம்.

திருவாதவூரடிகள் அருளிய திருச்சிற்றம்பலக் கோவை இயற்கைப் புணர்ச்சி, பாங்கற் கூட்டம், இடந்தலைப்பாடு, மதியுடன்படுத்தல், இருவரும் உள்வழி அவன்வர வுணர்தல், முன்னுறவுணர்தல், குறையுற வுணர்தல், நாணநாட்டம், நடுங்க நாட்டம், மடல், குறைநயப்பித்தல், சேட்படை, பகற்குறி, இரவுக்குறி, ஒருவழித்தணத்தல், உடன்போக்கு, வரைவு முடுக்கம், வரைபொருட் பிரிதல், மணஞ்சிறப்புரைத்

தல், ஓதற்பிரிதல், காவற்பிரிதல், பகைதணி வினைப்பிரிதல், வேந்தற் குற்றுழிப்பிரிதல், பொருள்வயிற் பிரிதல், பரத்தை யிற் பிரிதல் என இருபத்தைந்து கிளவிக் கொத்துக்களாகப் பகுக்கப்பட்ட இருபத்தைந்து அதிகாரங்களையுடையதாகும்.

இயற்கைப் புணர்ச்சி யென்பது, அன்பினாலும் குணத்தி னாலும் கல்வியினாலும் உருவினாலும் திருவினாலும் பருவத்தி னாலும் ஒத்த ஒருவன் ஒருத்தியாகிய இருவரும், ஒருவரை யொருவர் முன் அறிந்து கொள்ளாத நிலையில் ஒரு பொழி லிடத்து எதிர்ப்பட்டுத் தெய்வம் இடை நிற்பப் பான்மை வழியோடி ஓர் ஆவிற்கு இருகோடு தோன்றினாற் போலத் தம்முள் ஒத்த அன்பினராய்க் கொடுப்பாரும் அடுப்பாரு மின்றித் தம்முள் தாமே கூடும் கூட்டம். இவ்விருவரும் இவ் வாறு இன்ன இடத்தில் இன்ன பொழுதிற் காணவேண்டும் என்னும் எண்ணமும் முயற்சியும் இன்றி நல்லூழின் செய லால் தம் இயல்பில் எதிர்ப்பட்டுக் கூடினாராதலின் இஃது இயற்கைப் புணர்ச்சி யெனப்பட்டது. இவ்வாறு ஒருவர்க்கு முயற்சியும் உளப்பாடும் இன்றி ஒரு காரியம் கைகூடின இடத்து அது தெய்வத்தினான் ஆயிற்று என்பது உலகிய லாதலின், இது தெய்வப் புணர்ச்சியெனவும் கூறப்படும். இது காட்சிமுதல் பாங்கியை யறிதல் ஈறாகப் பதினெட்டுத் துறைகளையுடையது.

இவ்வாறு இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த தலைமகன் தன் அன்புக்குரிய தலைவியை மணந்துகொண்டு இல்லறம் நடத்துதல்வேண்டும் என்னும் தெளிவு பெற்றுத் தலைமகளை மணந்து கொள்ளுதல் தக்கது. அங்ஙனம் தெளியானாயின் தன் பாங்கனாலாவது இடந்தலைப் பாட்டினாலாவது இவ் விரண்டனுள் ஒன்றால் தலைவியைச் சென்று எய்துதல் முறைமை என்பர்.

அவற்றுள், பாங்கற் கூட்டமாவது, தலைமகன் தன் அன்பிற்கினிய தோழனாகிய பாங்கனது இசைவு பெற்றுத் தலைமகளைக் கூடுங் கூட்டமாகும். பாங்கனை நினைதல் முதல் நின்றுவருந்தல் ஈறாகவுள்ள துறைகள் முப்பதும் பாங்கற்கூட்டத்திற்குரியனவாம்.

இனி, இடந்தலைப்பாடு, என்பது இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த தலைமகன் மறுநாளும் முன்தான் தலைமகளைக் கண்ட அதே இடத்தினைத் தலைப்பட்டுத் தலைமகளைக் கண்டு

மகிழ்தல். பொழிலிடைச் சேறல் என்னும் துறை இடந்தலைப் பாட்டிற்கே யுரியது. மேல், பாங்கற்கூட்டத்தில் ‘மின்னிடை மெலிதல்’ என்பது முதலாக ‘நின்று வருந்தல்’ என்பது ஈருகக் கூறப்பட்டதுறைகள் பன்னிரண்டும் இடந்தலைப் பாட்டிற்கும் உரியனவாம்.

இவற்றுள் பாங்கற்கூட்டம் நிகழாதாயின் இடந்தலைப் பாடுநிகழும்; இடந்தலைப்பாடு நிகழாதாயின் பாங்கற் கூட்டம் நிகழும். மேற்குறித்த இரண்டனுள் ஒன்ருற் சென்று எய்திய பின்னர்த் தலைமகன் தெளிவுபெற்று மணந்து கொள்ளுதல் தக்கது. தெளிந்து மணந்து கொள்ளானுயின் தலைமகள் கண்ணுற் காணப்பட்ட காதற் ருேழியை வழிபட்டுச் சென்று எய்துதல் முறைமை என்பர். காதற்ருேழியை வழிபடுதல் என்றது, தான் உற்றகுறை யினைத் தெளிவாக முன்னர்க்கூருது இரந்து நின்று கரந்த சொற்களால் தன் கருத்தினை அறிவித்துத் தோழியை ஐயவுணர்வினளாக்கி அதுவழியாகநின்று தன் குறை யினை அவளுக்குக் கூறுதல்.

மதியுடம்படுத்தல் என்பது, தலைமகன் தோழியின் கவர்த்த அறிவினை ஒருப்படுத்தல். இயற்கைப் புணர்ச்சி புணர்ந்தநாள் முதற்கொண்டு தலைமகளது கண் சிவந்து நுதல்வேறுபாடு காட்டிற்று. ‘இவளுக்கு இவ் வேறுபாடு தெய்வத்தால் ஆயிற்ருே அன்றி மக்களால் ஆயிற்ருே’ எனவும், ‘இனி இவனும் அதுமுதற்கொண்டு தழையும் கண்ணியும் கொண்டு பின்னிலை முனியாது நிற் கின்ருன். இவனது குறை யார்கண்ணதோ’ எனவும் தோழியின் அறிவு ஒன்றினும் துணிவுபிறவாது பலதலைப் பட்டு மயங்கியது. வேறுபட்ட அறிவினளாகிய தோழி, ‘இவள் வேறுபட்டது இவன் காரணமாகப் போலும், இவன் இரந்து பின்னின்றது இவள் காரணமாகப் போலும்’ என ஒருங்கு சிந்தித்து வேருக வகுத்துணரும்படி தலைமகன் குறையுற்று நிற்றல் மதியுடம்படுத்தல் எனப்படும். இது, பாங்கியிடைச் சேறல்முதல் இடைவினுதல் ஈருகப் பத்துத் துறைகளையுடையது.

பாங்கிமதியுடன்பாடு, இருவரும் உள்வழி அவன்வர வுணர்தல் முன்னுறவுணர்தல் குறையுறவுணர்தல் என மூன்றுவகைப்படும். அவற்றுள், இருவரும் உள்வழி அவன்

வரவுணர்தல் என்பது, தலைமகளும் தோழியும் உள்ள இடத்திற்சென்று தலைமகன் கரந்த மொழியால் தன்கருத் தறிவிக்க, தோழி அவனது நினைவினை ஆராய்ந்தறிதல். ஐயுறுதல், அறிவுநாடல் என்னும் துறையிரண்டும் இதன் பாற்படும்.

முன்னுறவுணர்தல் என்பது, இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த பின்னைத் தலைமகளது வேறுபாடுகண்ட தோழி, 'இவ்வேறுபாடு தெய்வத்தினுலாயிற்றே அல்லது மற்றொரு வாருயிற்றே' என ஐயுற்றுநிற்பது. வாட்டம் வினுதல் என்னும் துறை இதன் பாற்படும்.

குறையுறவுணர்தல் என்பது, தலைமகன் குறையுறத் தோழி அதனைத்துணிந்துணர்தல். இது, குறையுற்று நிற்றல், அவன் குறிப்பறிதல், அவள் குறிப்பறிதல், இருவர் நினைவும் ஒருவழியறிதல் என்னும் நான்கு துறைகளை யுடையதாகும்.

நாணநாட்டம் என்பது, இருவர் நினைவும் ஐயமறத் துணிந்த தோழி, அவரது கூட்ட முண்மைகாரணமாகத் தலைமகளை அவள் நாணும் வண்ணம் ஆராய்தல். இது, பிறைதொழு கென்றல் முதலாக மதியுடம் படுதல் ஈருக ஐந்து துறைகளையுடையது.

நடுங்கநாட்டம் என்பது, தலைமகள் பெருநாணினள் ஆகலானும் தோழியாகியதான் அவளது குற்றேவல் மகள் ஆகலானும் பின்னும்தான் சொல்லாடாது அவள்தன்னைக் கொண்டே கேட்பது காரணமாக நெருங்கிநின்று, 'ஒருபுலி ஒருவனை எதிர்ப்பட்டது' எனக்கூறித் தலைமகளை அவள் அஞ்சி நடுங்குமாறு ஆராய்தல். இது, புலிமிசை வைத் துரைத்தல் என்னும் ஒரு துறையினையுடையது.

"நாணவும் நடுங்கவும் நாடாள் தோழி
காணுங் காலைத் தலைமகள் தேளத்து"

என்பவாகலின் நாணவும் நடுங்கவும் நாடுதல் அகத்தமிழிலக் கணம் அன்றென்பது புலனும். ஆயினும் தலைமகள் தனக் குத் தலைவனேடுண்டாகிய புணர்ச்சி யொழுக்கத்துக்கு இவள் காவற்ருேழி யாகையால் இடையூரும் என்னும் உள்ளத்தளாய் நின்று, இவ்வொழுக்கத்தைத் தோழி அறியின் நன்று என்னும் நினைவு வாராநிற்க, அந்நிலையிலே தோழி அவளைச் சிறிது நாணமடையுமாறும் நடுக்கமுறு

மாறும் செய்து நலந்தரும் மென்மொழிகளால் நாடுதலின், இத்திருக்கோவையில் ‘நன்னிலை நாண நடுங்க நாடல்’ என அவ்விரண்டும் இடம்பெறுவனவாயின.

மடற்றிறம் என்பது, நடுங்க நாடுதலாற் பெருநாணின ளாய தலைமகள் தன் குறை சொல்லமாட்டாது நிற்ப, இனி இவள் இறந்து படவுங்கூடும் என எண்ணித் தலைமகனுடன் சொல்லாடத் தொடங்கிய தோழி, தானும் பெருநாண முடையளாதலின், மீண்டும் தலைமகள் குறையுற வேண்டி ஒன்றுங் கூறுதிருப்ப, அந்நிலைமைக்கண் தலைமகன் சென்று ‘இந்நாள் வரையும் எனது குறை நின்னால் முடியும் என்று நின்னை வந்து இரந்தேன்; இது நின்னால் முடியாமையின் யான் மடலூர்ந்தாயினும் இக்குறை முடித்துக் கொள்வேன்’ எனத் தோழிக்குக் கூறு நிற்றல். இது, தலைமகன் ஆற்று துரைத்தல் என்பது முதல் தோழி உடம்பட்டு விலக்கல் என்பது ஈறாக ஒன்பது துறைகளை யுடையதாகும்.

குறைநயப்புக் கூறல் என்பது, தலைமகனை மடலேறுத வாறு விலக்கி அவன் குறையினை முடிப்பதாக ஏற்றுக் கொண்ட தோழி, தலைமகளைக் குறை நயப்பிக்க அவனது குறையினைக் கூறுதல். இது, குறிப்பறிதல் முதல் மனத் தொடு நேர்தல் ஈறாக எட்டுத் துறைகளையுடையது.

சேட்படை என்பது, தலைமகளைக் குறைநயக்கும்படி செய்து தன்னினாகிய கூட்டத்தினைக் கூட்டுதற்கு இயைந்த தோழி, தலைமகளது பெருமையும் தனது முயற்சியது அருமையும் தலைமகனுக்குப் புலப்படும்படியும், ‘இத்துணை அருமையுடைய தலைவி இனி நமக்கு எய்துதற்கு அரியள்’ என்பதனை அவன் உணர்ந்து விரைந்து மணந்து கொள்ளுதல் வேண்டியும் அவனுக்குப் பொருந்த மறுத்துக் கூறி, அவன் தம்மை அணுகி நில்லாதவாறு அப்புறப் படுத்தல். இது, தழைகொண்டுசேறல்முதல் தழை விருப் புரைத்தல் ஈறாக இருபத்தாறு துறைகளை யுடையதாகும்.

பகற்குறி என்பது, தலைமகன் தந்த கையுறையாகிய தழையினைத் தலைமகள் ஏற்கும்படி செய்த தோழி, தலைமகனுடன் அவளைப் பகற்குறியிடத்து அளவளாவுமாறு கூட்டுதல். இது, குறியிடங் கூறல்முதல் பதிநோக்கி வருந்தல் ஈறாக முப்பத்திரண்டு துறைகளையுடையது.

இரவுக்குறி என்பது, பகற்குறியிடத்துத் தலைமகளைக் கண்டு அளவளாவிய தலைவன், அவளை மணந்து ஒழுகுதலே தக்கது என்னுந் தெளிவின்றி மீண்டும் தோழியை யடைந்து, 'இற்றை இரவிற்கு யான் உங்கள் சிற்றூர்க்கு விருந்தினன். என்னை ஏற்றுக்கொள்வாயாக' எனத் தோழியை வேண்டித் தலைமகளை இரவுக்குறியிடத்து எதிர்ப் பட்டுக் கூடுதல். இது, தலைவன் இரவுக்குறி வேண்டல் முதலாகத் தோழி அலரறிவுறுத்தல் ஈறாக முப்பத்து மூன்று துறைகளையுடையது.

இவ்வாறு தோழியின் இசைவுபெற்று இரவுக்குறியிடத் துத் தலைமகளைக் கண்டு அளவளாவி மகிழ்ந்த தலைமகன், அலர் எழுந்ததென்று விலக்கப்பட்ட பின்னர்த் தெளிவுற்று மணந்து கொள்ளுதல் தக்கது. அங்ஙனம் தெருளானாயின் அவ்அலர்மொழியடங்குமாறு சில நாள் ஒருவழித் தணந் துறைதல், தலைமகளை உடன் கொண்டுபோதல், தோழியால் வரைந்து கொள்ளும்படி தூண்டப்பட்டு அருங்கலம் அனுப்பித் தலைமகளை மணந்து கொள்ளுதல் இம்மூன்றினுள் ஒன்று செய்தல் முறையாகும் என்பர். அவற்றுள் ஒருவழித் தணத்தல் என்பது, தலைமகளை இரவும் பகலுமாகப் பல காலும் தான் எதிர்ப்படுதலால் உளவாம் பழிச்சொற்களுக்கு அஞ்சி விலகிய தலைமகன், அவளைக் காணாத நிலையில் நீங்கி ஓரிடத்து ஒதுங்கியுறைதல். இஃது அகன்றணைவு கூறல் முதல் வருத்த மிகுதி கூறல் ஈறாகப் பதின்மூன்று துறைகளை யுடையது.

இவ்வாறு ஒருவழித் தணத்தல் நிகழாதாயின் உடன் போக்கு நிகழும்.

உடன்போக்கு என்பது, தலைமகன், தோழியின் இசைவு பெற்றுத் தலைமகளை அவர்தம் பெற்றோரறியாதவாறு தன் னுடன் அழைத்துக்கொண்டு, நடத்தற்கரிய வழியிலே நடந்து வேற்றூர்க்குச் செல்லுதல். இது, பருவங்கூறல் முதல் அழுங்குதாய்க்குரைத்தல் ஈறாக ஐம்பத்தாறு துறை களையுடையதாகும்.

இவ்வாறு உடன்போக்கு நிகழாதாயின், மணஞ் செய்து கொள்ளுதல் நிகழும். அது நிகழுங்கால் தலைமகன் தலைமகளை மணந்து கொள்ளுமாறு தோழியால் விரைந்து தூண்டப்பட்டும், பொருள் தேடப் பிரிந்து வந்தும் மணம் நிகழும் என்பர்.

அவற்றுள் வரைவுமுடுக்கமாவது, தலைமகளை விரைந்து மணந்து கொள்ளும்படி தோழி தலைமகனை வற்புறுத்துதல். இது, வருத்தமிகுதி கூறி வரைவுகடாதல் முதல் பொலி வழிவுரைத்து வரைவுகடாதல் இறுதியாகப் பதினறு துறைகளையுடையது.

வரைபொருட் பிரிதல் என்பது, தலைமகளை மணந்து கொள்ளுதற்கு வேண்டிய பரிசப் பொருளை ஈட்டுதற் பொருட்டுத் தலைமகன் பிரிந்து செல்லுதல். இது, முலை விலை கூறல் முதல் நிதிவரவு கூருநிற்றல் ஈருக முப்பத்து மூன்று துறைகளையுடையதாகும்.

மணஞ் சிறப்புரைத்தல் என்பது, தலைமகன் தலைமகளை மணந்துகொண்டு மனையறம் நிகழ்த்துதலின் சிறப்பினை விரித்துரைப்பதாகும். இது, மணமுரசு கூறல் முதல் கலவியின்பங் கூறலீருக ஒன்பது துறைகளையுடையதாம்.

ஓதற் பிரிவு என்பது, தலைமகளை மணந்து வாழும் தலைமகன், கலை நூல்கள் பலவற்றை முன்னரே ஓதிமுடித்தா னாயினும், தான் ஓதிய நூற்பொருள்களினும் அமையாது மிக்குள்ள உறுதிப்பொருள்களை யறிவுறுத்தும் நூல்கள் மேலும் உளவோ என ஆராய்ந்துணருங் கருத்தினாலும், கல்வியால் தன்னில் தாழ்ந்தாரை அறிவுமிகுதி காட்டி அறிவித்தலாகிய அறநூல் விதி பற்றியும் ஓதுதல் கருதித் தலைமகளைப் பிரிந்து செல்லுதல். இது, கல்வி நலங்கூறல், பிரிவு நினைவுரைத்தல், கலக்கங்கண் டுரைத்தல், வாய்மொழி கூறித் தலைமகள் வருந்தல் என நான்கு துறைகளை யுடையது.

காவற் பிரிவு என்பது, எல்லாவுயிர்களையும் பாது காக்க வேண்டும் என்னும் அறநூல் விதிபற்றி நாடு காத்தற் பொருட்டுத் தலைமகன் தலைமகளைப் பிரிந்து செல்லு தல். இது, பிரிவறிவுறுத்தல், பிரிவு கேட்டிரங்கல் என்னும் இரு துறைகளையுடையது.

பகைதணி வினைப் பிரிவு என்பது, தம்முள் முரணிப் போர் செய்யக்கருதிய வேந்தர் இருவரையும் அவர்தம் பகைமை தணிந்து நட்பினராகுமாறு அன்பினாற் பொருந்தச் செய்தற் பொருட்டுத் தலைமகன் தலைமகளைப் பிரிந்து தூதாகச் செல்லுதல். பிரிவுகூறல், வருத்தந் தணித்தல் என்னும் துறையிரண்டும் இதன் பாற்படும்.

வேந்தற் குற்றுழிப் பிரிவு என்பது, ஒரு வேந்தனுக்கு ஒரு வேந்தன் தோல்வியுற்றுத் தன் துணையை நாடினால் அவனுக்கு உதவிசெய்தற்பொருட்டுத் தலைமகன் தலைமகளைப் பிரிந்து போர்த்தொழிலை மேற்கொண்டு செல்லுதல். இது, பிரிந்தமை கூறல் முதலாக மறவாமை கூறல் இறுதியாகப் பதினாறு துறைகளையுடையது.

பொருள் வயிற் பிரிதல் என்பது, தம் முன்னோர் தேடிய பொருள் கொண்டு இல்லறஞ் செய்தல் அறமன்றென வுணர்ந்த தலைமகன், தான் ஈட்டிய பொருள் கொண்டு இல்லறம் நிகழ்த்தும் கருத்துடையனாய்த் தானே முயன்று பொருள் தேடுதற் பொருட்டுத் தலைமகளைப் பிரிந்து செல்லுதல். இது, வாட்டங்கூறல் முதல் உண் மகிழ்ந் துரைத்தல் ஈறாக இருபது துறைகளையுடையது.

பரத்தையிற் பிரிவு என்பது, தலைமகன் தலைமகளை மணந்துகொண்டு மனைவாழ்க்கையினை நிகழ்த்தும் நிலையில், 'வைகலும் பாலே நுகர்வானொருவன் இடையே புளிங்காடியும் நுகர்ந்து, பாலின் இனிமையினையறிந்தாற்போல, அவள் நுகர்ச்சியினிமை யறிதற்கும், பண்ணும் பாடலும் முதலாயின காட்டிப் புறப் பெண்டிராய பரத்தையர் தன்னைக் காதலித்தால் தான் எல்லார்க்குந் தலைவனாதலின் அவர்க்கும் இன்பஞ் செய்தல் வேண்டியும், தலைமகளை யூடல் அறிவித்தற்கும் தலைமகளைப் பிரிந்து பரத்தையையடைதலாகும்' என்பர் பேராசிரியர், இது, கண்டவர் கூறல் முதல், ஊதியம் எடுத் துரைத்து ஊடல் தீர்த்தல் ஈறாக நாற்பத்தொன்பது துறைகளையுடையதாம்.

இருபத்தைந்து கிளவிக் கொத்துக்களாக மேற்குறித்த கிளவிப் பெயர்கள், இறையனார்களவியலுரையினை அடியொற்றி இத்திருக்கோவையில் அமைக்கப்பெற்றன எனத் தெரிகிறது. தெய்வப் புலவர் திருவள்ளுவர் தாம் கூற எடுத்துக்கொண்ட காமத்துப் பாலாகிய அகனைந்திணை யொழுகலாற்றினை இருபத்தைந்ததிகாரங்களாக வகைப் படுத்துரைத்தாற் போன்று, திருவாதவூரடிகளும் நானூறு துறைகளில் தாம் பாடக் கருதிய திருச்சிற்றம்பலக்கோவையினை மேற்குறித்தவாறு இருபத்தைந்து கிளவிக் கொத்துக் களாக வகைபெற அமைத்துள்ளமை ஒப்புநோக்கத்தக்க தாகும். பிற்காலக் கோவைகளிற் பல, கைக்கிளை முதல்

பொருள்வயிற் பிரிதல் ஈருக முப்பத்துமூன்று கிளவிக் கொத்துக்களாக வகுக்கப் பெற்றுள்ளன.

அகத்திணை யொழுகலாற்றில் உரையாடுதற் குரியவர் களுள் தலைவன், தலைவி, தோழி என்னும் இம்மூவருமே சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவராவர். திருக்குறள் காமத்துப் பாலில் அமைந்த கூற்றுக்கள் யாவும் மேற்குறித்த மூவர் கூற்றுள் அடங்குதல் காணலாம். இத்திருக்கோவையில் இன்னார் கூற்றென்னது துறை பற்றிய நிகழ்ச்சி யளவிற் குறித்த பாடல்களும் உள்ளன. அப்பாடல்களைத் 'துறை கூறிய கருத்து' என இந்நூலுரையாசிரியர் குறித்துள்ளார். 258-ஆம் திருப்பாடலுரையில், "இதுவும் துறை கூறிய கருத்து, 'மகிழ்வுற்றது' என, இன்னார் கூற்றென்னது துறை கூறினர்" எனவும், இவ்வாறே 366, 367, 397-ஆம் பாடல்களின் உரையிலும் அவ்வுரையாசிரியர் குறித்துச் செல்லுதலைக் கூர்ந்து நோக்குங்கால், அகத்திணைப் பாடல் களில் இன்னார் கூற்றெனத் தெளிவாக உணர்ந்துகொள்ளு தற்குரிய கூற்றென்னும் அகப்பாட்டுறுப்பின்றி, அத் துறைப் பொருளை மட்டும் விரித்துரைக்கும் நிலையில் அமைந்த அகப் பாடல்களைத் 'துறை கூறிய கருத்து' எனக் குறித்துரைக் கும் வழக்க முண்மை இனிது புலனும். இத்தகைய துறைப் பாடல்களாக வறிது நகை தோற்றல், முறுவற் குறிப் புணர்தல் என்பன பிற்காலக் கோவை நூல்களில் இடம் பெற்றுள்ளன. இவற்றுள் வறிது நகை தோற்றலைச் சிலர் தலைவன் கூற்ருகவும் சிலர் கவிக் கூற்ருகவும் அமைத்து உள்ளனர்.

அகனைந்திணைக் கோவையாகிய இப்பிரபந்தத்தில் பாடாண்டிணை யென்னும் புறத்திணை யமையப் புலவரற் பாராட்டப் பெறும் பாட்டுடைத் தலைவன் எனவும், கூற எடுத்துக்கொண்ட அகப்பொருளொழுகலாற்ருேடு தொடர்பு உடைய கிளவித் தலைவன் எனவும் இருவேறு தலைவர்கள் இடம் பெறுவர். அவருள் கோவைப்பனுவலாற் புறத்திணை யில் வைத்துப் புகழப்படும் தலைவன், பாட்டுடைத் தலைவன் ஆவன். கோவையிற் கூறும் அகப்பொருளொழுகலாற்றிற் குரியனுகப் பேசப்படும் தலைவன் கிளவித் தலைவன் எனப் படுவான். கிளவித் தலைவனது இயற்பெயர் கூறுதல் மரபன்று; வெற்பன், நாடன், விடலை, ஊரன், சேர்ப்பன்

முதலிய திணைநிலைப் பெயர்களாலேயே இத்தலைவன் குறிக்கப்பெறுவான்.

திருக்கோவையாகிய இப்பனுவலிற் போற்றியுரைக்கப் பெறும் பாட்டுடைத் தலைவன், தில்லைமூதூர்ப் பொதுவினில் தோன்றி எல்லையிலானந்த நடம்புரிகின்ற பரமகாரணனாகிய சிவபெருமானாவன். அம்முதல்வனது திருவடியைத் தன் சிந்தையிலும் சென்னியிலும் கொண்டு போற்றும் திருத்தகவுடைய தலைமகனே இத்திருக்கோவையில் விரித்துரைக்கப் பெறும் அகத்திணை யொழுகலாற்றுக்குரிய கிளவித் தலைவன் ஆவன்.

எல்லாம்வல்ல முழுமுதற் கடவுளாகிய தில்லைச் சிற்றம்பலவனே திருப்பெருந்துறையில் குருவாக எளிவந்து ஆட்கொண்டருளினமையால் பசுகரணங்களெல்லாம் பதி கரணங்களாக, ஐம்பொறியுணர்வுகளின் நீங்கிச் செம்புலச் செல்வராகிய மணிவாசகப் பெருந்தகையார், அறிவனூற் பொருளும் உலக நூல் வழக்கும் என இவ்விரு பொருள்களையும் விளக்கும் முறையில் இத்திருக்கோவையினை அருளிச் செய்துள்ளார்.

“ திருவாதவூரடிகள் இத்திருக்கோவையை என்னுதலி எடுத்துக்கொண்டாரோ எனின்,............

தில்லை மூதூர்ப் பொதுவினிற் றோன்றி
எல்லையி லானந்த நடம் புரிகின்ற
பரமகாரணன் திருவருளதனால்
திருவாதவூர் மகிழ் செழுமறை முனிவர்
ஐம்பொறி கையிகந் தறிவா யறியாச்
செம்புலச் செல்வராயினர் ஆதலின்
அறிவனூற் பொருளும் உலக நூல் வழக்கும் என
இருபொருளும் நுதலி யெடுத்துக்கொண்டனர் ”

என இந்நூல் உரைமுகத்தமைந்த பேராசிரியர் வாய்மொழி இவ்வுண்மையினைத் தெளிவுபடுத்தல் காணலாம்.

அறிவனூற் பொருளாவது, முற்றுணர்வினனாகிய இறைவன் அருளிச் செய்த ஆகமநூல்வழியிற் கூறப் பெற்ற ஞானயோக நுண்பொருள். உலக நூல் வழக்காவது, ஒத்த அன்புடைய ஒருவனும் ஒருத்தியுமாகிய இருவரும் நல்லூழின் செயலால் எதிர்ப்பட்டு ஒருவரை யொருவர் இன்றியமையாதவராய் மறைவிற் கலந்து அளவளாவிப்பின் உலகத்தார் அறிய மணந்துகொண்டு மனையறம் நிகழ்த்தி இன்புற்று வாழ்தலாகிய உலகியல் வாழ்வு. “உலகியல் வேத

நூல் ஒழுக்கம்" என்பவாகலின் தமிழியல் நூலாகிய தொல் காப்பியத்தினும் இறையனுர்களவியலினும் சங்கச் செய்யுட்க ளினும் உலகியலொழுகலாறு பற்றி எடுத்தோதப்பட்ட களவு கற்பு என்னும் அகத்திணையின் இன்ப வரலாறே இத்திருக்கோவையில் விரித்து விளக்கப்பெறும் உலகநூல் வழக்காகும்.

அறம் பொருள் இன்பம் வீடு என்னும் உறுதிப் பொருள் நான்கினும் இன்பத்தை நுதலிய களவொழுக்க மாகிய அகத்திணை யொழுகலாற்றினை விரித்துரைக்க எழுந்த நூல் இத்திருக்கோவையாயினும், இப்பனுவலின் பாட்டுடைத் தலைவனுகிய தில்லையம்பலக் கூத்தனையும், அம் முதல்வன் உலகெலாம் உணர்ந்து உய்யும் வண்ணம் ஐந் தொழில் திருக்கூத்தியற்றியருளும் பரஞான அருள் வெளி யாகிய தில்லைச் சிற்றம்பலத்தையும் போற்றிப் பரவும் முறையில் அமைந்த இந்நூற் பகுதிகள், அறம் பொருள் இன்பம் என்னும் மும்முதற் பொருளுடன் சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்தாகிய வீடுபேற்றின் திறத் தினையும் இனிது புலப்படுத்தும் முறையில் அமைந்திருத்த லால், அறம் பொருள் இன்பம் வீடென்னும் நாற்பொருள் களையும் பயக்கும் நிலையில் திருவாதவூரடிகளால் அருளிச் செய்யப் பெற்றது இத் திருச்சிற்றம்பலக் கோவை யெனக் கூறுதல் பொருந்தும்,

பாட்டுடைத் தலைவர்க்குரிய பெயரொடும் ஊரொடும் சார்த்திக் கூறும் அடைமொழி எதுவுமின்றித் திருக்கோவை எனவும், உயர்த்தற் பொருளதாகிய ஆர்விகுதி புணர்த்துத் திருக்கோவையார் எனவும், ஆன்ருேர் பலரும் இத் திருச் சிற்றம்பலக் கோவையினை வழங்கி வருதலால், அகத்திணைக் கோவைகள் எல்லாவற்றினும் மேம்பட்டு விளங்கும் தனிச் சிறப்பு வாய்ந்தது இத்திருச்சிற்றம்பலக் கோவையே என் பது நன்கு தெளியப்படும். உயர்வறவுயர்ந்த திருவருட் பனுவலாகிய இதன் சிறப்பினை,

'வருவாசகத்தினின் முற்றுணர்ந்தோனை வண்டில்லை மன்னைத்
திருவாதவூர்ச் சிவபாத்தியன் செய்திருச் சிற்றம்பலப்
பொருளார்தரு திருக்கோவை கண்டேயுமற்றப் பொருளைத்
தெருளாதவுள்ளத்தவர் கவிபாடிச் சிரிப்பிப்பரே'

(கோயிற்றிருப்பண்ணியர் விருத்தம்
செய்யுள் — 58)

எனவரும் திருப்பாடலில் நம்பியாண்டார் நம்பிகள் உளமுருகிப் பாராட்டியுள்ளமை இங்கு நோக்கத்தக்க தாகும்.

திருச்சிற்றம்பலக்கோவையின் பொருள் நலம் விளங்கும் வண்ணம் தெளிந்த செந்தமிழ் நடையில் திட்பமும் நுட்பமும் அமைய அழகியதோர் உரையினை வரைந்தவர் பேராசிரியர் ஆவர். இவ்வுரை, முதன்முதல் அச்சில் வெளிவந்த பொழுது நச்சினார்க்கினியர்உரை யெனக் கருதப்பட்டது. நச்சினார்க்கினியர் உரை வரைந்த நூல்களைத் தொகுத்துக் கூறும் பழைய வெண்பாவில் அவ்வாசிரியர் இத்திருக்கோவைக்கு உரைவரைந்தார் என்ற செய்தி குறிக்கப்படாமையாலும், பிரயோக விவேக நூலுடையார் திருக்கோவையாருரையிற் குறிக்கப்பெற்றுள்ள இலக்கணக் குறிப்புக்கள் சிலவற்றைத் தம் நூலில் எடுத்துக்காட்டுங்கால் திருக்கோவையார்க்கு அமைந்த இவ்வுரையினை யியற்றியவர் பேராசிரியர் எனத் தெளிவாகக் குறிப்பிடுதலாலும்[1] திருக்கோவையார் உரையாசிரியர் பேராசிரியரே என்பது நன்கு துணியப்படும்.[2]

பேராசிரியரால் இயற்றப்பெற்ற இவ்வுரை, இத்திருக்கோவையின் வாயிலாகத் திருவாதவூரடிகள் உணர்த்த எடுத்துக்கொண்ட அறிவனூற் பொருளும் உலகநூல் வழக்கும் ஆகிய இருதிறப் பொருள்களையும் இனிது விளக்கும் முறையில் அமைந்துள்ளது.

"ஆகமநூல் வழியின் நுதலிய ஞான
யோகநுண் பொருளினை யுணர்த்துதற்கு அரிது;
உலகநூல் வழியின் நுதலிய பொருள் எனும்
அலகில் தீம்பாற் பரவைக்கண் எம்
புலன் எனும் கொள்கலன் முகந்தவகை, சிறிது
உலையா மரபின் உரைக்கற் பாற்று"

1. பிரயோக விவேகம் 24-ம் பாடல் உரை.

2. தஞ்சைச் சரசுவதி மகால் நூல் நிலைய வெளியீடாகவும் பின் திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்தின் வெளியீடாகவும் வெளியிடப் பெற்ற திருக்கோவையார் – பழைய வுரை என்பது மேற்குறித்த பேராசிரியர் உரையினைத் தழுவிச் சுருக்கமும் எளிமையும் அமையப் பின் வந்த சான்றோரொருவரால் எழுதப்பட்ட புதிய வுரையாகும். இவ்வுண்மை அவ்வுரையில் ஆங்காங்கே விரவியுள்ள பிற்காலச் சொல் வழக்குக்களால் உய்த்துணரப்படும்.

எனப் பேராசிரியர் திருக்கோவையார் உரைமுகத்து அவையடக்கமாக நுதலிப்புகும் கருத்துரை, ஆகம நூல் வழியின் நுதலிய ஞானயோக நுண்பொருளாகிய அறிவனூற் பொருளில் அவர் கொண்டுள்ள நன்குமதிப்பும் நூற் பயிற்சியும், உலகநூல் வழியின் நுதலிய அகனைந்திணைப் பொருள் பற்றிய தமிழிலக்கிய நூல்களில் அவர்க்கிருந்த ஆழ்ந்த பயிற்சியும் புலமையும் ஆகியவற்றைப் புலப்படுத்துவதுடன், அறிவினுற் சிவனே யாகிய மாணிக்கவாசகப் பெருமான்பால் அவர் கொண்ட பத்தியினையும் அடிகள் திருவாய் மலர்ந்தருளிய அருள் நூலாகிய இத் திருச்சிற்றம்பலக் கோவையில் அவர் கொண்டுள்ள நன் மதிப்பினையும் இனிது விளக்கும் நிலையில் அமைந்திருத்தல் அறியத்தக்கதாகும்

இவ்வுரையாசிரியர், பாடல் தோறும் முதற்கண் அப் பாடலுக்குரிய துறை பற்றிய விளக்கமும், அதனையடுத்துக் கோவைப்பாடலும், அதன்பின் அதன் கருத்துரையாக அமைந்த கொளுவும், அதனையடுத்துப் பாடற்பொருளாகிய பொழிப்புரையும், அதன்பின் பாடலில் அமைந்த சொற் பொருள் நயங்களையும் கொளுவின் சொற்பொருளையும் விளக்கும் சிறப்புரையும் அமைய இம்முறையில் இத்திருக் கோவைக்கு உரை வரைந்துள்ளார். இவ்வுரையில் அகத்திணைக் கிளவிக் கொத்துக்கள் இருபத்தைந்தினைத் தொகுத்துக் கூறும் நூற்பாவும், அதன்கண் அமைந்த கிளவிக்கொத்துக்களின் துறைகளை விரித்துரைக்கும் நூற் பாக்களும் அவற்றிற்கமைந்த உரைப் பகுதிகளும் இடம் பெற்றுள்ளன. அகத்திணை யொழுகலாற்றினை வகுத்துக் கூறும் இச்சூத்திரங்களும் உரைப்பகுதிகளும் பேராசிரியராலேயே இயற்றப்பெற்று இத் திருக்கோவையுரையிற் சேர்க்கப்பெற்றிருத்தல் கூடும் எனக்கருதுதல் பொருந்தும்.

இறையனார் களவியலுரையினை எழுத்துருவில் அமைத்த உரையாசிரியர், அவ்வுரையிற் குறிக்கப்பெறும் அகத்துறைகளை விளக்கி அத்துறைகளுக்குரிய உதாரண இலக்கியமாகப் பாண்டியனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பெற்ற அகத்திணைக் கோவைச் செய்யுட்களையும் தொடர்புடைய சங்கச் செய்யுட்கள் சிலவற்றையும் எடுத்துக்காட்டி அகப்பொருளொழுகலாற்றின் இயல்பினை இலக்கியச் சான்றுடன் இனிது விளக்கியுள்ளார். அவ்

வுரையாசிரியர் காட்டிய அகப்பொருள் விளக்கங்களை நன் குணர்ந்த பேராசிரியர், அகப்பொருள் இலக்கியமாகிய இத் திருக்கோவையின் பாடற்பொருளை விளக்கும் நிலையில், அதற்கு இன்றியமையாத கிளவித்தொகை, துறை முதலியன பற்றிய இலக்கண விளக்கங்களைப் பாடல் தோறும் முன்னர்த் தந்து, அதன்பின் பாடற்பொருளையும் பொருள்நலம் அணிநலம் முதலியன பற்றிய விளக்க வுரையினையும் கருத்துரைப் பகுதியாகிய கொளுவின் அருஞ் சொற் குறிப்புக்களையும் உடன் வரைந்து, அகப்பொரு ளிலக்கியமாகிய இத்திருக்கோவையினைக் கற்போர் இதன் வாயிலாக அகப்பொருளிலக்கணத்தினையும் ஒருங்குணர்ந்து மகிழும் வண்ணம் இவ்வுரையினைத் திறம்பட அமைத் துள்ளார்.

இறையனார் களவியலுரையினை அடியொற்றித் திருக் கோவைக்கு உரைகாணக் கருதிய பேராசிரியர், தம் உரையின் இடையிடையே மாணுக்கர் வினவுமாறு போன்று உரிய தடைகளை நிகழ்த்தி அவற்றிற்குத் தக்க விடை கூறி யும், நோக்கு என்னும் செய்யுளுறுப்பினைக் கூர்ந்துணர்ந்து பாடற்றொடர்களை மறித்து நோக்கி அவற்றிலமைந்த நுண்பொருள்நயங்களைச் சுவைபெற விளங்க உணர்த்தியும், பாடல்களில் அமைந்த உள்ளுறையுவமை, ஏனையுவமை, உருவகம் சிலேடை முதலிய அணி நலன்களை எடுத்துக் காட்டி விளக்கியும், அடிகள் அருளிய இத்திருக்கோவைக்கும் திருவாசகத்திற்கும் உள்ள ஒப்புமைப் பகுதிகள் சிலவற்றை ஆங்காங்கே குறிப்பிட்டும், திருக்கோவைத் திருப்பாடல்களிற் பயின்ற திரு, செல்வு, சோத்தம், படிச்சந்தம் முதலிய சொற்களுக்குச் சிறந்த விளக்கங்கள் தந்தும் இனிய செந் தமிழ் நடையில் இவ்வுரையினை யமைத்திருப்பது, இத்திருக் கோவையினைக் கற்பார்க்குக் கற்குந்தோறும் கற்குந்தோறும் கழிபேருவகையினை விளைப்பதாகும்.

திருக்கோவையாருரையிற் பேராசிரியர் தந்த விளக்கங் கள் சிலவற்றை நாற்கவிராசநம்பி தாம் இயற்றிய அகப் பொருள் விளக்கத்திற் சூத்திரங்களாக எடுத்தாண்டுள்ளார். திருக்கோவையார் 70-ஆம் பாடலுரையில் "இவற்றுள் கைக்கிளை யென்பது ஒரு தலைக்காமம். பெருந்திணை யென் பது பொருந்தாக் காமம்" எனப் பேராசிரியர் குறித்த உரைத்தொடர்கள், நம்பியியற்றிய அகப்பொருள் விளக்கத்

தில் கைக்கிளை, பெருந்திணை என்பவற்றின் இலக்கணங் கூறும் இரு வேறு சூத்திரங்களாக அமைந்திருத்தல் காண்க.

இனி, பேராசிரியர் உரையினையுளத்துட் கொண்டு இத் திருக்கோவையின் பொருள் நலங்களை ஒரு சிறிது நோக்கு தல் இத்திருமுறையாராய்ச்சிக்கு இன்றியமையாததாகும்.

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு பொருளினும் இன்பத்தை நுதலி இத்திருக்கோவையின் கண் உரைக்கின்ற களவியற் பொருளினது பொழிப்பிலக் கணத்தினையும் அதற்கு உறுப்பாகிய கைக்கிளைத் திணையின் கண் முதற் கிடந்த காட்சி என்னும் ஒருதலைக் காமத்தினை யும் உடனிலைச் சிலேடையாக உணர்த்துவது,

> திருவளர் தாமரை சீர்வளர் காவிகள் ஈசர்தில்லைக்
> குருவளர் பூங்குமிழ் கோங்குபைங் காந்தள்கொண்
> டோங்குதெய்வ
> மருவளர் மாலையொர் வல்லியின் ஒல்கி அனநடைவாய்ந்
> துருவளர் காமன்றன் வென்றிக் கொடிபோன்
> றொளிர்கின்றதே.

எனவரும் முதல் திருப்பாட்டாகும். ஒப்பாரும் மிக்காரும் இல்லாத தலைமகனும் தலைமகளும் பண்டைப் பிறப்பிற் பழகிய நல்லூழின்பயனுகத் தத்தம் ஆயத்தின் நீங்கி ஒரு பொழிலகத்து எதிர்ப்பட்டு ஒருவரை யொருவர் தனிமையிற் கண்ணுற்றபொழுது, வேட்கைவயத்தனுகிய தலைமகன் தலைமகளைக் கண்டு வியந்து கூறுவதாக அமைந்தது, இத் திருப்பாடலாகும்.

"திருவளரும் தாமரைப் பூவினையும் அழகு வளரும் நீலப் பூக்களையும் இறைவரது தில்லையெல்லைக்கண் உண் டாகிய பூங்குமிழினது நிறம் வளரும் பூவினையும் கோங் கரும்புகளையும் செவ்விக்காந்தட் பூக்களையும் உறுப்பாகக் கொண்டு மேம்பட்ட தெய்வ மணம் வளரும் மாலையானது, ஒரு கொடிபோல நுடங்கி, அன்னத்தின் நடைபோலும் நடையினைப் பொருந்தி, வடிவு வளரும் மன்மதனது வெற்றிக்கொடி போன்று ஒளிமிக்கு விளங்குகின்றதே; இஃது என்ன வியப்பு" என்பது இதன் பொருள்.

திரு என்பது, கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்கம்; அஃதாவது அழகு. தாமரை, நெய்தல் (நீலம்),

குமிழ், கோங்கு, காந்தள் எனப் பல நிலங்களுக்கும் உரிய பூக்களைக் கூறிய அதனால் நிலமயக்கம் கூறியவாறாயிற்று. ஆகவே பல நிலங்களினுஞ்சென்று துய்க்கும் இன்பமெல்லாம் தில்லையின் வாழ்வார் ஆண்டு இருந்தே துய்ப்பர் என்பது போதரும். போதர, இம்மையின்பத்திற்குத் தில்லையே காரணம் என்பது கூறியவாறாயிற்று, ஈசர் தில்லை என்றதனான் மறுமையின்பத்திற்கும் காரணமாதல் சொல்லாமையே விளங்கும். தெய்வ மருவளர் மாலை என்றதனால், தாமரை முதலாயினவற்றான் இயன்ற பிற மாலையோடு இதற்கு வேற்றுமை கூறியவாறாம். உருவளர் காமன் தன் வென்றிக் கொடி என்றது, மன்மதன் சிவபெருமானது நெற்றிக் கண்ணினால் நோக்கப்பட்டு நீறாகி உருவிழப்பதன் முன் தோல்வியுறாத ஆணையுடையனாய் நின்று உயர்த்துள்ள வெற்றிக் கொடியினை. திருவளர் தாமரை, சீர்வளர் காவிகள் என்றாங்கு அவ்வப் பூக்களுக்குத் தக்க அடைமொழி கொடுத்துக் கூறிய ஆசிரியர், கோங்கு என அடைமொழியின்றிக் கூறியது, தனக்கெனத் தனி நிலம் பெறாத பாலை நிலஞ் சொல்லுதல் நோக்கி என்பர் பேராசிரியர்.

உடனிலைச் சிலேடையாவது, ஒரு பாட்டு இரண்டு வகையாற் பொருள் கொண்டு நிற்பது. அவ்விரண்டனுள் இத்திருக்கோவையின் உரைக்கின்ற முதற்பொருளாவது, காமனது வென்றிக் கொடி போன்று விளங்கி, அன்ன நடை யுடையதாய்த் தாமரை, காவி, குமிழ், கோங்கு, காந்தள் என்னும் ஐவகைப் பூக்களால் தொடுக்கப்பெற்று ஓங்கும் தெய்வ மருவளர் மாலையின் வியக்கத்தக்க தோற்றப் பொலிவாகும். இவற்றுள் தாமரை மலர் தலைமகளின் முகத்தினையும், காவிமலர் கண்களையும், குமிழமலர் மூக்கினையும், கோங்கரும்பு கொங்கையினையும், காந்தள்மலர் கைகளையும் ஆகுபெயராற் குறித்து நின்றன. தலைமகளைக் கண்டு வேட்கையுடையனாய் நின்ற தலைமகன், அவளை ஒரு தெய்வப் பூமாலையாக உருவகங்கொண்டு, காமனது வெற்றிக்கொடியோடு உவமித்துச் சொன்னான் என்பதாம். 'திருவளர் தாமரை' என்று முகம் முதலாக எடுத்துக்கொண்டு, 'அன்ன நடை' என்று பாதத்திலே முடித்தலால், இது கேசாதி பாதமாக வருணிக்கப்பட்டதென்றறிக.

தாமரை மருதநிலப்பூ. காவி (நீலம்) நெய்தல் நிலப்பூ. குமிழ் முல்லைநிலப்பூ. கோங்கு பாலைநிலப்பூ. காந்தள்

குறிஞ்சிநிலப் பூ. இந்த ஐந்து பூக்களாலும் முறையே மருதம், நெய்தல், முல்லை, பாலை, குறிஞ்சி என்னும் ஐந்திணையொழுகலாறுகளையும் குறிப்பாக உணர்த்தினர். பைங்காந்தள் என்று குறிஞ்சிக்குரிய பூவிலே முடித்தலால் புணர்தலும் புணர்தல் நிமித்தமும் ஆகிய குறிஞ்சியே கூறினர். "ஓரிடத்து ஒரு கலியாணம் உண்டானல் எல்லாரிடத்தும் உண்டாகிய ஆபரணங்களெல்லாம் அவ்விடத்துக்கூடி அக்கலியாணத்தைச் சிறப்பித்தாற் போலப் பல நிலங்களும் இக்குறிஞ்சியையே சிறப்பித்து நின்றன" என்பர் பேராசிரியர். உருவளர் காமன்றன் வென்றிக்கொடி என்றமையின், அன்பினனே நிகழ்ந்த காமப்பொருளாகிய இவ்வகத்திணையொழுகலாற்றைக் குறிப்பான் உணர்த்தினர். யாரும் கேட்பாரின்றித் தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொன்னமையின், கந்தருவர் ஒழுக்கத்தை ஒத்த களவொழுக்கத்தையே குறித்தார். ஈசர் தில்லை என்றமையின், வீடுபேற்றின் பயத்தது என்பதனையும் ஒருங்கு குறித்தாராயிற்று.

களவொழுக்கம் என்னும் பெயர் பெற்று, வீடுபேற்றின் பயத்ததாய், அன்பினல் நிகழ்ந்த காமப்பொருள் நுதலிக் கந்தருவரொழுக்கத்தோடு ஒத்துக் காமனது வென்றிக் கொடி போன்று ஐந்திணையின் கண்ணும் வென்று விளங்கா நின்ற கடிமலர்மாலையின் வரலாறு இத்திருக்கோவையின் கண் உரைக்கப்படுகின்றது என்றவாறு. களவொழுக்கத்தினை ஒரு மாலையாக உட்கொண்டு உருவகவாய்பாட்டான் உணர்த்தினர் என்பது இத்திருப்பாடற்குரிய இரண்டாவது பொருளாகும்.

இங்ஙனம் இத்திருக்கோவையின் முதற்கண் அமைந்த இத்திருப்பாடல், நூல்நுதல் பொருளைத் தன்னகத் தடக்கி உடனிலைச் சிலேடையாய் இருபொருள் தந்துநிற்குந் திறத்தினை இதனுரையிற் பேராசிரியர் இனிது விளக்கியுள்ளார்.

அகப்பொருளொழுகலாற்றில் வெளிப்படக் கூருது குறிப்பான் உணர்த்தத் தகுவனவற்றைக் கூறுதற்கு அமைந்தது உள்ளுறை யுவமமாகும். தெய்வம், உணவு, விலங்கு, மரம், பறவை முதலாகவுள்ள கருப்பொருள்களுள் தெய்வம் ஒழிந்த ஏனைய கருப்பொருள்களின் நிகழ்ச்சியினை எடுத்து உரைக்குமுகத்தால், அந் நிகழ்ச்சியினை உவமையாகக்

கொண்டு தலைவன் தலைவி ஆகிய அகத்திணை மக்களின் ஒழுகலாறுகளைக் கேட்போர் மனத்தினால் உய்த்துணர்ந்து கொள்ளுமாறு அமைதல் இவ்வுள்ளுறை யுவமத்தின் இயல் பாகும். "யான் வெளிப்படக் கூறிய இக்கருப்பொருள் நிகழ்ச்சியுடன் வெளிப்படக் கூறாத உவமிக்கப்படும் பொரு ளும் ஒத்துப் புலப்படுவதாகுக" எனப் புலவன் தன்னுள் ளத்தே கருதி, அதனைப் படிப்போர் கருதியுணர்தற்கேற்ற சொல்லெல்லாம் செய்யுளகத்தே அமையுமாறு கொண்டு கூறப்படுவதே உள்ளுறையுவமம் எனப்படும். இவ்வாறன்றி வண்ணம் வடிவு பயன் தொழில் என்னும் இப்பொதுத் தன்மைகளால் உவமிக்கப்படும் பொருளோடு இயைத்துக் கூறப்பட்டு வெளிப்படையாகப் பொருள் விளக்குவது ஏனை யுவமம் எனப்படும். இவ்விருவகை உவமங்களும் அகத் திணைப் பொருளையுணர்தற்குச் சிறந்த கருவியாம் என்பர் அறிஞர்.

அகத்திணை யிலக்கியமாகிய இத்திருக்கோவைக்கு உரை வரைந்த பேராசிரியர் அகப்பொருளையுணர்தற்குக் கருவி யாய் இந்நூலிற் பயின்ற உள்ளுறையுவமைகளை உய்த் துணர்ந்து விளக்கியுள்ளார். திருக்கோவையார் 99, 128, 133, 159, 168, 193, 250, 252, 254, 260, 262, 264, 265, 276, 369, 377, 380-ஆம் பாடல்களின் உரையில் அவ்வப் பாடல் களில் அமைந்த உள்ளுறையுவமை யிதுவெனத் தெளிவாக விளக்கப் பெற்றிருத்தல் காணலாம்.

களவொழுக்கம் ஒழுகாநின்ற தலைமகன் தலைமகளை யடைய விரும்பித் தோழியைக் குறையிரந்து வேண்டி நின்ரு ளுக, தோழி "யான் குற்றேவல் மகளாதலின் நினது குறை யினைத் தலைமகளிடத்துத் துணிந்து சொல்ல முடியாதவளாக உள்ளேன்; இனி நீயே அவள்பாற் சென்று நின்குறை யுள்ளது சொல்வாயாக" எனத் தான் உடம்படாது மறுத்துக் கூறுவதாக அமைந்தது,

> அந்தியின் வாயெழி லம்பலத்தெம்பரன் அம்பொன்வெற்பிற்
> பந்தியின்வாய்ப் பலவின்சுளை பைந்தேனொடுங் கடுவன்
> மந்தியின்வாய்க்கொடுத் தோம்புஞ்சிலம்ப மனங்கனிய
> முந்தியின்வாய்மொழி நீயேமொழி சென்றம்மொய்குழற்கே.
>
> (திருக்கோவை–99)

எனவரும் திருப்பாடலாகும். 'அந்திப்பொழுதின்கண் உண் டாகிய செவ்வானத்தின் எழிலையுடைய அம்பலத்தின்கண்

உளனாகிய எல்லாப் பொருட்கும் அப்பாலாயவனாகிய எம் முடைய இறைவனது அழகிய பொன்னையுடைய மலை யிடத்தே பந்தியாகிய நிரையின்கண்ணே ஆண் குரங்கானது இனிய பலாச்சுளையைச் செவ்விய தேனொடும் (தன் துணை யாகிய) பெண் குரங்கின் வாயிலே அருந்தக் கொடுத்துப் பாதுகாக்கும் மலைப் பக்கத்தையுடைய தலைவனே, அவளது மனம் நெகிழுமாறு இவ்வினிய மொழிகளை அம்மொய்த்த குழலையுடையாளாகிய தலைமகட்கு நீயே சென்று கூறு வாயாக' என்பது இதன் பொருளாகும். இத்திருப்பாடலில் 'பந்தியின்வாய்ப் பலவின் சுளை பைந்தேனொடுங் கடுவன், மந்தியின் வாய்க்கொடுத்து ஓம்பும்' என்றது, உள்ளுறை யுவமமாக வந்த கருப்பொருள் நிகழ்ச்சியாகும். மந்தி— பெண் குரங்கு. கடுவன்—ஆண் குரங்கு. "மந்தி உயிர் வாழ்வதற்குக் காரணமாகியவற்றைக் கடுவன் தானே கொடுத்து மன மகிழ்வித்தாற் போல, அவள் (தலைமகள்) உயிர் வாழ்வதற்குக் காரணமாகிய நின் வார்த்தைகளை நீயே கூறி அவளை மனமகிழ்விப்பாயாக' என உள்ளுறை யுவமங் கண்டு கொள்க" என்பது, இதற்குப் பேராசிரியர் தரும் விளக்கமாகும். இவ்வாறே ஏனைய திருப்பாடல்களில் உள்ள உள்ளுறையின் இயல்பினையும் பேராசிரியர் தெளிவாக விளக்கியுள்ளமை உணர்ந்து மகிழத் தக்க தாகும்.

செய்யுளில் வெளிப்படச் சொல்லப்பட்ட பொருளின் புறத்தே தங்கிய குறிப்புப் பொருளை இறைச்சி என வழங்கு தல் மரபு. "இறைச்சிப் பொருள் என்பது, உரிப்பொருளின் புறத்ததாகித் தோன்றும் பொருள்; அஃதாவது, கருப் பொருளாகி நாட்டிற்கும் ஊர்க்கும் துறைக்கும் அடையாகி வருவது" என்பர் இளம்பூரணர்.

களவொழுக்கம் ஒழுகாநின்ற தலைமகன், கழுநீர் மலரைக் கையுறையாகக் கொண்டு சென்று அதனை ஏற்றுக் கொள்ளும்படி தோழியை வேண்ட, அவள் 'தெய்வத்திற் குரிய அம்மலர் எங்குலத்திற்கு இசையாது' எனக் கூறி மறுப்பதாக அமைந்தது,

'நறமனை வேங்கையின் பூப்பயில் பாறையை நாகநண்ணி
மறமனை வேங்கையென நனியஞ்சு மஞ்சார் சிலம்பா
குறமனை வேங்கைச் சுணங்கொ டணங்கலர் கூட்டுபவோ
நிறமனை வேங்கையதள் அம்பலவன் நெடுவரையே' (96)

எனவரும் திருப்பாடலாகும். இதன்கண் நாகம் என்றது யானையை. அணங்கலர் என்றது, தெய்வத்திற்குரிய கழுநீர் முதலாகிய பூக்களை. 'தேனிற்கு இடமாகிய வேங்கைப் பூக்கள் நிறைந்துள்ள பாறையை யானை சென்றணைந்து (அப்பாறையைத்) தறுகண்மைக்கு இடனாகிய புலியென்று (எண்ணி) மிகவும் அஞ்சும் மேகந்தவழும் மலையினையுடைய தலைவனே, நிறந்தங்கிய புலித்தோலை அணிந்த அம்பலவனது நீண்ட இம்மலையின்கண்ணே குறவர் மனையில் உளவாகிய வேங்கையினது சுணங்குபோலும் பூக்களோடு தெய்வத்திற்குரிய கழுநீர் முதலாகிய பூக்களைக் கூட்டுவரோ கூட்டார்' என்பது இதன் பொருளாகும்.

இதன்கண் வேங்கை மலர்களால் மூடப்பெற்றுள்ள கற்பாறையைக் கண்ட யானையானது, அதனைப் புலியென எண்ணி அஞ்சும் நாடன் எனத் தலைவனுக்கு அமைந்த அடைமொழி, இறைச்சிப் பொருள்பட வந்ததாகும். 'ஒன்றனைப் பிறிதொன்றாகப் பிறழவுணரும் நாடன் ஆதலால், தெய்வத்திற்குரிய நறுமலரைச் சூடாத குறமகளிராகிய எம்மை அம்மலரைச் சூடுவேமாகப் பிறழ வுணர்ந்தாய்' என்பது இதன்கண் அமைந்த இறைச்சிப் பொருளாகும். 'ஒத்த தோற்றம் உடைமை ஒன்றேபற்றி, அஞ்சப்படாததனையும் அஞ்சுதற்கு இடனாயது எமது மலைநிலம் ஆதலால், எம் குலத்திற்கு ஏலாததாய் நீ தரும் தெய்வ மலரைச் சூடுதற்கு யாம் அஞ்சுதல் சொல்லவேண்டுமோ' எனக் கூறித் தோழி மறுத்ததாக இறைச்சிப் பொருள் கொள்ளினும் பொருந்தும் என்பர் பேராசிரியர்.

இத்திருக் கோவையிற் கூற எடுத்துக் கொண்ட அகத்திணையொழுகலாற்றினை உணர்தற்குக் கருவியாய உள்ளுறை, இறைச்சி என்பவற்றைப் போலன்றி, அவ்வொழுகலாற்றோடு தொடர்பில்லாததாய் இரட்டுற மொழிதலால் பிறிதொரு பொருள் விளங்கித் தோன்றும் பாடல்களும் உள்ளன. இவ்வாறு கூற எடுத்துக் கொண்ட அகப்பொருளொழுகலாற்றிற்கு அயன்மையுடையதாய்த் தோன்றும் இப்பொருளைப் பேராசிரியர் நுண்ணிதின் உணர்ந்து இவற்றை 'வேறும் ஒரு பொருள்' என எடுத்துக் காட்டியுள்ளார். இங்ஙனம் இத்திருக்கோவையாரில் வேறும் ஒரு பொருள் தோன்ற அமைந்தவை 39, 158, 281, 349, 352, 365, 394-ஆம் திருப்பாடல்களாகும்.

இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த தலைமகன் பின் பாங்கனைக் கண்டு அவனால் தெருட்டப் பெற்று அவனது இசைவு பெற்றுத் தான் முன்னாளில் தலைவியை எதிர்ப்பட்ட பொழிலையடைந்து அங்கு நின்ற தலைமகளைக் கண்ணுற்று 'என்னுயிர் இவ்வாறு செய்து நிற்பதோ' எனத் தலைவியைத் தனது உயிர் என வியந்து கூறுவதாக அமைந்தது,

> நேயத்ததாய் நென்னல் என்னைப் புணர்ந்து நெஞ்சந் நெகப்போய்
> ஆயத்ததாயமிழ் தாயணங்காயர னம்பலம்போல்
> தேயத்ததாய் என்றன் சிந்தையதாய்த் தெரியிற் பெரிதும்
> மாயத்ததாகி யிதோவந்து நின்றதென் மன்னுயிரே
> (திருக்கோவை–39)

எனவரும் திருப்பாடலாகும்.

"நெருநல் (நேற்று) உள்ளநெகிழ்ச்சியை யுடைத்தாய் என்னைக் கூடிப் பின் நேயம் இல்லது போல என் நெஞ்சு உடையும் வண்ணம் நீங்கிப் போய், ஆயத்தின்கண்ணதாய், இன்பத்தைச் செய்தலின் அமிர்தமாய், துன்பத்தைச் செய்தலின் அணங்காய், புலப்படும் தோற்றப்பொலிவால் இறைவனது பொன்னம்பலம்போலும் ஒளியையுடைத்தாய், புலப்படாது வந்து என் சிந்தையின் கண்ணதாய், ஆராயிற் பெரிதும் மாயத்தையுடையதாய் வந்து நின்றது இதுவோ எனது மன்னுயிர்" என்பது இதன் பொருளாகும். நேயமுடைமையும் நேயமின்மையும், இன்பஞ் செய்தலும் துன்பஞ் செய்தலும், புலப்படுதலும் புலப்படாமையும் ஒருபொருட்கு இயையாமையின், 'பெரிதும் மாயத்ததாகி' என்றான் தலைவன். தேயம்–ஒளி.

"என்மாட்டு அருளுடைத்தாய் முற்காலத்து என்னை வந்து கூடி, அருளில்லதுபோல என் நெஞ்சு உடையும் வண்ணம் போய்த், தன் மெய்யடியார் குழாத்ததாய், நினைதோறும் அமிர்தம்போல இன்பஞ்செய்து, கட்புலனாகாமையின் துன்பஞ்செய்து, அம்பலம் போலும் நல்ல தேசங்களின் கண்ணதாய் வந்து என் மனத் தகத்ததாய், இத்தன்மைத் தாகலின் பெரிதும் மாயத்தையுடைத்தாய் எனது நிலைபெறும் உயிர் வந்து தோன்றா நின்றது' என வேறும் ஒரு பொருள் விளங்கியவாறு கண்டுகொள்க" எனப் பேராசிரியர் இத் திருப்பாடலிற் றோன்றிய மற்றொரு பொருளை எடுத்துக் காட்டியுள்ளார்.

இப்பொருள், திருவாதவூரடிகள் திருப்பெருந்துறையில் தமக்குக் குருவாக எளிவந்து அருள் செய்து மறைந்தருளிய இறைவன், மீண்டும் தம் கண்காண எழுந்தருளிய அற்புத நிகழ்ச்சியினை நினைந்து வியந்து போற்றும் நிலையில் அமைந்திருத்தல் அறிந்து மகிழத்தக்கதாகும். அகத்திணையொழுகலாற்றுக்குரிய கிளவித்தலைவன், தலைவியைத் தன்னுயிரெனக் கண்டு வியந்துரைப்பதாக அருளிச் செய்யப் பெற்ற இத் திருப்பாடலில், அடிகள் தம்மை வலிய வந்து ஆண்டருளிய இறைவனை நினைந்து அம்முதல்வனது திருவருளை வியந்து போற்றுதலாகிய இப்பொருளும் வெளிப்பட்டுத் தோன்றுமாறு அமைத்த நுட்பம், உய்த்துணர்ந்து போற்றத்தக்கதாகும்.

'சிங்கங்கள் கூடி யானை வேட்டம் செய்யும் நள்ளிருளில் வள்ளலை வாவென்று சொல்லத்தகுமோ' என்று, வழியிடை நேரும் துன்பம் நினைந்து மறுத்த தலைமகள், தலைமகன் ஆற்ருனாகிய நிலைமையைத் தோழி சொல்லக் கேட்டு, இரவில் அவன் வருதற்கு உடம்பட்டு இசைந்துரைப்பதாக அமைந்தது,

ஓங்குமொருவிடம் உண்டம்பலத்தும்ப ருய்யவன்று
தாங்குமொருவன் தடவரை வாய்த்தழங் கும்மருவி
வீங்குஞ் சுனைப்புனல் வீழ்ந்தன் றழுங்கப் பிடித்தெடுத்து
வாங்கு மவர்க்கறியேன்சிறி யேன்சொல்லும் வாசகமே. (158)

எனவரும் திருப்பாடலாகும். "உலகம் முழுதையும் சுடும் வண்ணம் மேன்மேலும் வளரா நின்றதோர் நஞ்சினைத் தான் உண்டு, தேவரெல்லாம் உய்யும்வண்ணம் அந்நாளில் தாங்கிக் காத்தருளிய சிற்றம்பலத்தானாகிய ஒருவனது பெரிய மலையிடத்து, ஒலியாநின்ற அருவியாற் பெருகுகின்ற சுனைநீரின்கண்ணே அன்றொருநாள் யான் வீழ்ந்தழுந்தி இறக்கும் இடர்நிலையினேனாக, அந்நிலையில் என்னைப்பற்றி எடுத்துக் கரையேற்றி உய்வித்த பெரியோருக்குச் சிறியேனாகிய யான் சொல்லுவதோர் மறுமொழியை அறிந்திலேன்" என்பது இதன் பொருள். 'யான் சுனைப்புனல்வாய் வீழ்ந்து அழுங்கிய அன்று தாமே வந்து எடுத்து உய்வித்தாற்போல, வழங்கா இருள்நெறியில் தாம் வருதலால் எனக்கு வரும் இடுக்கணையும் தாமே நீக்கின் அல்லது யான் அறிவதொன்றில்லை' எனக் கூறித் தலைமகள் குறைநேர்ந்தாள் என்பதாம்.

தலைவன் செய்த பேருதவியை நினைந்து நெஞ்சம் நெக்குருகிய தலைமகள் கூற்ருக அமைந்த இத்திருப்பாடலில்,

"வீங்குஞ் சுனைப்புனல் வீழ்ந்தன் றழுங்கப் பிடித்தெடுத்து
வாங்குமவர்க்கு அறியேன் சிறியேன் சொல்லும் வாசகமே"

எனவரும் பின்னிரண்டடிகளும், திருவாதவூரடிகள் தம் ஆருயிர் நாயகனுகிய இறைவன் தமக்குச் செய்த பேருதவியை நினைந்து நெஞ்சங்கசிந்துருகிப் போற்றும் செய்ந்நன்றி மறவாக் குறிப்புடையனவாக அமைந்துள்ளன. இக்குறிப்பினைக் கூர்ந்துணர்ந்த பேராசிரியர், "பிறவிக் குட்டத்து யான் விழுந்து கெடப்புகத் தாமே வந்து பிடித்தெடுத்து அதனினின்றும் வாங்கிய பேருதவியார்க்குச் சிறியேனுகிய யான் சொல்வதறியேன்' என்று வேறுமொரு பொருள் தோன்றியவாறு கண்டுகொள்க" என எடுத்துக் காட்டி விளக்கியுள்ளார்.

கோவைத் திருவாசகமாகிய இந்நூல், இதன் ஒரு பகுதியாகிய திருவாசகத்தோடும் திருநாவுக்கரசர் அருளிய தேவாரத்தோடும் அறிவனூற்பொருளால் ஒத்துவிளங்கும் திறத்தினை இந்நூலுரையில் ஆங்காங்கே பேராசிரியர் எடுத்துக் காட்டியுள்ளமை இங்கு நோக்கத்தகுவதாகும்.

67-ஆம் பாடலுரையில்,

"மற்றை(ப் பொய்வானவர்) என்பது பாடமாயின், அல்லாத பொய்வானவர் என்றுரைக்க. இனமல்லராயினும் இனமாக உலகத்தாராற் கூறடுப்படுதலின் அவ்வாறு கூறிஞர். 'மூவரென்றே எம்பிரானெடும் எண்ணி'* என்பதூஉம் அக்கருத்தேபற்றி வந்தது. பிறர் கூறும் பெருமை அவர்க்கின்மையிற் பொய்வானவர் என்ருர்" எனப் பேராசிரியர் கூறும் விளக்கம், வாதவூரடிகள் கருத்தினை அடியொற்றியமைந்ததாகும்.

"தவளத்த நீறணியுந் தடந்தோளண்ணல், தன்னொருபா
லவள் அத்தனும் மகனும் தில்லையான்" (திருக்கோவை–112)

என உமையொருபாகனுகிய இறைவனை அடிகள் போற்றியுள்ளார். 'வெண்மையையுடைய திருநீற்றினையணிந்த பெரிய தோள்களையுடைய அண்ணல். தனது ஒருபாகத்து உள்ளவளாகிய உமாதேவிக்கு அப்பனும் ஆகி மகனும்

* திருவாசகம் – திருச்சதகம் 4

ஆகிய தில்லையம்பலவன்' என்பது இத்தொடரின் பொருளாகும். "சிவ தத்துவத்தினின்றும் சத்தி தத்துவம் தோன்றலின் அவள் அத்தனும் என்றும், சத்தி தத்துவத்தினின்றும் சதாசிவ தத்துவம் தோன்றலின் மகனும் என்றும் கூறினர் 'இமவான்மகட்குத் தன்னுடைக் கேள்வன் மகன் தகப்பன்'[1] என்பதூஉம் அப்பொருள்மேல் வந்தது" என இத்தொடர்ப்பொருளை விளக்குவர் பேராசிரியர்.

"தெவ்வரை மெய்யெரிகாய்சிலை யாண்டுஎன்னை ஆண்டு
செவ்வரை மேனியன்" (திருக்கோவை-114). [கொண்ட

எனவரும் தொடரில், அடிகள் தம்மை வலிந்து ஆண்டு கொண்டருளிய இறைவனது அருட்டிறத்தை வியந்து பாராட்டுகின்றார். 'பகைவரை மெய்யெரித்த மேருமலையாகிய வில்லைப் பணிகொண்டு பழகிப் பின் (வலிய நெஞ்சினனாகிய) என்னை அடிமை கொண்ட சிவந்த மலைபோலும் திருமேனியையுடையனாகிய இறைவன்' என்பது இத்தொடரின் பொருளாகும். "வலியனவற்றை வயமாக்கிப் பயின்று பின் என்னை ஆண்டான் என்பது போதர, காய்சிலை ஆண்டு என்னை ஆண்டு கொண்ட என்றார். என்னைத் தனக்கு அடிமை கொள்ளுதல் காரணமாக அல்லது தனக்கு ஒரு பகையுண்டாய்ச் செய்ததன்று போலும் என்பது கருத்து. 'கல்லை மென்கனியாக்கும் விச்சைகொண்டு என்னை நின் கழற்கு அன்பனாக்கினாய்'[2] என்பதும் அது" எனப் பேராசிரியர் தரும் விளக்கம், திருவாசகத்திற்கும் திருக்கோவைக்கும் உள்ள பொருளொற்றுமையினை இனிது புலப்படுத்துதல் காணலாம்

'தில்லையான் அருள் போன்று அலராய் விளைகின்றது அம்பல் கைம்மிக்கு ஐய மெய் அருளே' (திருக்கோவை-180) எனவரும் தொடர், இரவுக்குறி வந்தொழுகா நின்ற தலைமகனை நோக்கித் தோழி அலரறிவுறுத்துவதாகும். 'ஐயனே, நினது மெய்யாகிய அருள் தில்லையானருளைப் போன்று அரும்பாம் நிலைமையைக் கடந்து அலராய் விளைவதாயிற்று' என்பது இத்தொடரின் பொருளாகும். 'தில்லையான் அருள் பெற்றார் உலகியல்பினராய் நில்லாமையின், அவ்வருள் உலகத்தார்க்கு அலராம் என்பது கருத்து. 'நாடவர்

1. திருவாசகம் – திருப்பொற்சுண்ணம் 13.
2. ஷை – திருச்சதகம் 94.

நந்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப'[1] என்பதூஉம் அக்கருத்தேபற்றி வந்தது'என இத்தொடர்ப்பொருளை விளக்குவர் பேராசிரியர்.

116-ஆம் திருப்பாடலில், 'வான்உழைவாள், அம்பலத்து அரன்' எனவரும் தொடர்க்கு, "இருட்கு அப்பாலாகிய வானிடத்து உண்டாகிய ஒளி ; இவ்வண்ணம் சேயனாயினும் அணியனாய் அம்பலத்தின்கண் உளனாகிய அரன். 'அண்டமா ரிருளூடு கடந்தும்பர், உண்டுபோலும் ஓர் ஒண்சுடர்'[2] என்பதூஉம் அப்பொருள்மேல் வந்தது" எனப் பொருள் கூறி மேற்கோள் காட்டியிருத்தலும், 375-ஆம் திருப்பாடலில் வரும் 'தில்லையிறையமைத்த திறலியல்யாழ்' என்னுந் தொடர்க்கு "தில்லையிறையால் அமைக்கப்பட்ட வெற்றியியலும் யாழ்" எனப் பொருள் கூறி, "வெற்றி – வீணைகளுள் தலையாதல். 'எம் இறை நல் வீணை வாசிக்குமே'[3] என்பவாகலின் இறை அமைத்த யாழ் என்றார்" என விளக்கம் தந்திருத்தலும் திருநாவுக்கரசர் அருளிய தேவாரப் பதிகங்களில் பேராசிரியர்க்கு உள்ள பயிற்சியினை நன்கு புலப்படுத்துவனவாம்.

> 'சிலம்பணி கொண்டசெஞ் சீறடிபங்கன், தன்சீரடியார்
> குலம்பணிகொள்ள எனைக்கொடுத்தோன் கொண்டுதான் அணியும்
> கலம்பணிகொண்டு, இடம் அம்பலம்கொண்டவன்'

எனவரும் 54-ஆம் திருப்பாடலின் உரையில், "தனக்குத் தக்க தையலை இடத்து வைத்தானென்றும், தன்னடியார்க்குத் தகாத என்னை அவர்க்குக் கொடுத்தானென்றும், அணிதற்குத் தகாத பாம்பை அணிந்தானென்றும், தனக்குத் தகும் அம்பலத்தை இடமாகக் கொண்டானென்றும் மாறுபாட்டொழுக்கம் கூறியவாறும்" எனப் பேராசிரியர் அதன் பொருள் நயத்தினைப் புலப்படுத்தியுள்ளார். இதன்கண் 'தன்னடியார்க்குத் தகாத என்னை' என்ற குறிப்பு,

> 'புகவேதகேன் உனக்கன்பருள்யான், என்பொல்லாமணியே
> தகவே எனைஉனக்கு ஆட்கொண்ட தன்மை' (திருச். 10)

எனவரும் அடிகளது வாய்மொழியை யுளங்கொண்டு அவர் கருத்தினைப் புலப்படுத்தும் நிலையில் வரைந்த நுட்பவுரையாதல் காண்க.

1. திருவாசகம் – திருப்பொற்சுண்ணம் 7.
2. திருநாவுக்கரசர் தேவாரம் 5–97–2.
3. திருநாவுக்கரசர் தேவாரம் 4–112–7.

திருவாதவூரடிகள் தம்மை அருளால் ஈர்த்து ஆட்கொண் டருளிய சிவபெருமானை,

‘சுழியா வருபெரு நீர்சென்னி வைத்தென்னைத் தன் தொழும்பிற்
கழியா அருள்வைத்த சிற்றம்பலவன்’ (திருக்கோவை-261)

எனப் போற்றியுள்ளார். ‘சுழித்துக்கொண்டு வரும் பெரிய (கங்கையாற்றின்) நீரைத் திருமுடியின்கண் வைத்துத் தன் அடிமைத்திறத்தின்கண் என்னை நீங்காத அருளால் நிலைக் கச் செய்த திருச்சிற்றம்பலவன்’ என்பது இதன் பொருளா கும். “பரந்துவரும் பெரும்புனலை வேகம் தணித்துத் தன் சென்னியின்கண் வைத்தாற்போல, நில்லாது பரக்கும் நெஞ்சையுடையேனைத் தன்கண் அடக்கினன் என்பது கருத்து” என இத்தொடர்க்குப் பேராசிரியர் வரைந்த கருத்துரை,

“நில்லாத நீர்சடைமேல் நிற்பித்தானை
நினையாவென் னெஞ்சை நினைவித்தானை” (6—43—1)

எனவரும் திருத்தாண்டகத் தொடரை நினைப்பிக்கும் முறை யில் அமைந்திருத்தல் அறியத்தக்கதாகும்.

திருவாதவூரடிகள் தாம் இயற்றிய திருச்சிற்றம்பலக் கோவையில் பாட்டுடைத் தலைவனாகிய தில்லைச்சிற்றம்பலப் பெருமானைப் பரவிப் போற்றிய தொடர்கள், அடிகள் அருளிய திருவாசகப் பனுவலை யொத்துக் கற்போர் நெஞ்சைக் கனிந்துருகச் செய்வனவாகும்.

ஐந்தாம் திருப்பாடலில், “அணியும் அமிழ்தும் என் ஆவியும் ஆயவன், தில்லைச்சிந்தாமணி, உம்பரார் அறியா மறையோன்” என அடிகள் இறைவனைப் போற்றியுள்ளார். “எனக்கு ஆபரணமும் அமிழ்தும் என்னுயிரும் ஆயவன்; தில்லைக்கண் சிந்தாமணிபோல் அன்பர்க்கு நினைத்தவை கொடுப்போன்; அன்பரல்லாத தேவர்கள் அறியாத அந்தணன்” என்பது இத்தொடரின் பொருளாகும். தன்னை அன்பினால் வழிபடும் உயிர்கட்கு அழகு செய்தலால் ‘அணி’ என்றும், கழிபெருஞ் சுவையோடு உறுதி பயத்தலுடைமை யால் ‘அமிழ்து’ என்றும், காதலிக்கப்படும் பொருள்க ளெல்லாவற்றினும் சிறந்தமையால் ‘ஆவி’ என்றும், இறைவனை உவமித்துக் கூறிய நயம் உணர்தற்குரியதாகும். ஈறிலின்பம் பயக்கும் இறைவனொடு சார்த்தி நோக்குங்கால் அணியும் அமிழ்தும் ஆவியும் மிகத்தாழ்ந்தனவாயினும்,

சொல்வாரது கருத்து வகையாலும் உலகத்துப் பொருள்களுள் இவற்றைவிடச் சிறந்தன பிற இல்லாமையாலும் உயர்ந்தனவாய் இறைவனுக்கு உவமையாயின என்பர் பேராசிரியர்.

தம்மைச் சார்பாக எண்ணி வந்தடைந்தவர்கள், அறியாமை காரணமாகத் தம்பாற் பிழை செய்தனராயின், தலைமை வாய்ந்த பெரியோர்கள், அப்பிழை அவரது அறியாமையால் நேர்ந்தது எனத் தம் மனத்துட்கொண்டு அதனைப் பொறுத்தருள்வர். இடையாயினர், பிழை புரிந்தோரைத் தம்மொடு தொடர்பு கொள்ளாதவாறு நீக்கிவிடுவர். கடையாயினர், குற்றம் புரிந்தோரை ஒறுத்து அழிப்பர். எல்லாப்பொருட்கும் முன்னேனாகிய இறைவன், தன்பாற் பிழைசெய்த அன்பரிடத்து இம்மூவகைச் செயல்களையுஞ் செய்யாது, அவர் செய்த குற்றங்களை நீக்கிக் குணங்கொண்டு அன்னோரைப் பிறவித் துன்பத்துட் புகாவண்ணம் காக்கும் பேரருளுடையனாய்ச் சிற்றம்பலத்துள் ஆடல் புரிந்தருள்கின்றான். இவ்வாறு குற்றங்கள் நீக்கிக் குணங்கொண்டு கோதாட்டும் இறைவனது பேரருட்டிறத்தை,

"பிழைகொண் டொருவிக் கெடாதன்பு செய்யிற் பிறவியென்னும்
முழைகொண் டொருவன் செல்லாமைநின் றம்பலத்தாடு முன்னோன்" (திருச். 65)

எனவரும் திருப்பாடலில் அடிகள் உளமுருகிப் போற்றியுள்ளார். பிழை–குற்றம். ஒருவுதல்–துறத்தல். கெடுத்தல்–அழித்தல். 'பிழைகொண்டு, ஒருவிக், கெடாது' என்னும் தொடர்க்கு "அடைந்தார் பிழைப்பின், தலையாயினர் பிழையை உட்கொண்டு அமைதலும், இடையாயினர் அவரைத் துறத்தலும், கடையாயினர் அவரைக் கெடுத்தலும் உலகத்துண்மையின் அம்மூவகையுஞ் செய்யாது" எனப் பேராசிரியர் கூறிய விளக்கமும்,

"உவகைக் கண்ணீர்
ஆறாத ஆனந்தத் தடியார் செய்யும்
அனாசாரம் பொறுத்தருளி அவர்மேலென்றுஞ்
சீறாத பெருமானை" (6—80—5)

எனவரும் அப்பரடிகள் அருள்மொழியும் இங்கு ஒப்புநோக்கியுணரத்தக்கனவாகும்.

'நாணவும் நடுங்கவும் நாடாள்தோழி
காணுங் காலைத் தலைமகள் தேளத்து'

என்பது இறையனார் களவியலுரையில் மேற்கோளாகக் காட்டப்பட்ட பழஞ் சூத்திரமாகும். தலைமகள் தனக்குத் தலைமகனோடுண்டாகிய புணர்ச்சியொழுக்கத்துக்குக் காவற் றோழியாகிய இவளால் இடையூறுகும் என்னுமுள்ளத்தளாய் நின்று, ' இவ்வொழுக்கத்தைத் தோழியறியின் நன்று ' என்னும் நினைவினளாக, அந்நிலையில் தோழி அவளை நாணவும் நடுங்கவும் நாடுதல் இயல்பு என்றும், அவ்வகை நாட்டம் நன்னிலையுடையதே யென்றும் கருதிய திருவாதவூரடிகள், இத்திருக்கோவையில் நாண நாட்டம், நடுங்க நாட்டம் என்னும் இருவகைக் கிளவிகளையும் எழில்பெற அமைத்துள்ளார். தலைவி பெருநாணினள் ஆதலானும் தான் குற்றேவல் மகள் ஆதலானும் மறைவெளிப்படும் நிலையில் அவள்பால் தான் உரையாடாது அவளைக்கொண்டே கேட்பது காரணமாக அவளை நெருங்கி நின்று, ' புலியொன்று ஒருவனை எதிர்ப் பட்டது ' எனத் தோழி தலைமகள் உள்ளத்தில் நடுக்கந் தோன்றும்படி அவளை ஆராய்தல் நடுங்க நாட்டம் எனப் படும். இத்துறையில் அமைந்தது,

> ஆவா விருவ ரறியாவடிதில்லை யம்பலத்து
> மூவாயிரவர் வணங்கநின் றோனையுன் னாரின்முன்னித்
> தீவாயுழுவை கிழித்ததந்தோ சிறிதேபிழைப்பித்
> தாவாமணிவேல் பணிகொண்ட வாறின்றோராண்டகையே.
>
> (திருக்கோவை–72)

எனவரும் திருப்பாடலாகும். " ஆ ஆ! அயன் திருமால் ஆகிய அவ்விருவரும் அறியாத திருவடியினைத் தில்லைச் சிற்றம்பலத்திலே அந்தணர் மூவாயிரவரும் கண்ணாரக் கண்டு வழிபாடு செய்யும் வண்ணம் நின்றருளிய இறைவனை நினையாதாரைப்போலே வருத்தமுற ஒரு புலி எதிர்ப்பட்டுத் தனது கொடிய வாயை அங்காந்தது* (அவ்வாறு அது வாயினைத் திறந்ததாக அந்நிலையில்) ஆடவருட் சிறந்தான் ஒரு வீரன் அதனைச் சிறிதே தப்புவித்துத் தனது அழகிய வேற்படையினைப் பணிகொண்ட திறன் பெரிதும் வியக்கத் தக்கதாகும் " என்பது இதன் பொருள்.

' அயனும் அரியும் தில்லையம்பலத்திற் சென்று வணங் குமாறு அறிந்திலராகலின், ஆவா என்பது அருளின்கண் குறிப்பு ; இரக்கத்தின்கண் குறிப்பாய்த் தீவாய் உழுவை கிழித்தது என்பதனை நோக்கி நின்றதெனினும் அமையும்

* அங்காத்தல் - வாயைத் திறத்தல்.

உழுவை – புலி. இதன்கண் 'தீவாய் உழுவை கிழித்தது' எனத் தோழி கூறியதாக வரும் இத்தொடர், 'தனது கொடிய வாயைப் புலி அங்காந்தது' எனவும், 'புலியினது தீய வாயை வேறென்று கிழித்தது' எனவும், 'புலியினது தீயவாய் பிறிதொன்றனைக் கிழித்தது' எனவும் இவ்வாறு மூவேறு வகையாகப் பொருள்படுதலால், இதனைக் கேட்ட தலைமகள் உள்ளத்திலே 'இவ்வழியே நம்மை நாடி வரும் நம் தலைவர்க்கு இப்புலியால் ஏதேனும் இடர் விளைந்ததோ' என்னும் நினைவினால் நடுக்கம் உண்டாயிற்று. அதனைக் குறிப்பினால் உணர்ந்த தோழி, 'ஆவா மணி வேல் பணி கொண்ட வாறின்றோராண்டகையே' எனக் கூறி, ஆடவருட் சிறந்தானொரு வீரன் அப்புலியினைச் சிறிதே தப்புவித்துத் தன் கையிலுள்ள அழகிய வேற்படையால் அதனை வென்றடக்கிய திறம் மிகவும் வியக்கத்தக்கது என்பது தோன்றத் தலைமகளது நடுக்கத்தினை விரைந்து தீர்த்தாள் என அச்சமும் உவகையும் ஒருங்கமைய அடிகள் இத்திருப்பாடலை அருளிச் செய்த திறம் வியந்து போற்றத் தக்கதாகும்.

ஆண்டகையாகிய தலைவன் இவ்வாறு தன் கையிலுள்ள வேற்படையால் வேங்கையை வீழ்த்தும் பெருவீரனாதலை,

'சென்றெதிர்ந்த,
வேங்கையின்வாயின் வியன்கைம் மடுத்துக் கிடந்தலற
வாங்கயிலாற்பணி கொண்டது திண்டிறலாண்டகையே'
(திருக்கோவை–245)

எனவரும் திருப்பாடலில் அடிகள் புலப்படுத்தியுள்ளமை இங்கு ஒப்பு நோக்கி யுணரத்தக்கதாகும்.

தலைமகன் நிலைமையினைத் தோழி கூறக்கேட்ட தலைமகள், பெருநாணினள் ஆதலால் அதனை அறியாதாள்போல வேறொன்று கூறுவாளாய், அயலேயுள்ள கடலைச் சுட்டிக் காட்டி, 'தோழீ, பலவாய்ப் பெரியவாகிய மரக்கலங்கள் மிகப் பெற்ற தொன்மை வாய்ந்த இக்கடல், தில்லைப்பெருமானை ஒத்துத் தோன்றுவதாகும்' எனக் கூறுவதாக அமைந்தது,

சங்கந் தருமுத்தி யாம்பெற வான்கழி தான்கெழுமிப்
பொங்கும் புனற்கங்கை தாங்கிப் பொலிகலிப் பாறுலவு
துங்க மலிதலை யேந்தலின் ஏந்திழை தொல்லைப்பன்மா
வங்க மலிகலி நீர்தில்லை வானவன் நேர்வருமே'
(திருக்கோவை-85)

என்னும் திருப்பாடலாகும்.

இதன்கண் 'சங்கந் தருமுத்தி யாம்பெற' என்பது முதல் 'துங்கமலிதலை யேந்தலின்' என்பது வரையுள்ள தொடர், தில்லை யிறைவனுக்கும் கடலுக்கும் பொருந்தச் சிலேடையாய் வந்ததாகும்.

'சங்கு தரும் முத்துக்களை யாம்பெறப் பெரிய(உப்பங்) கழிகளைத் தான் பொருந்திப் பொங்கும் புனலையுடைய கங்கையைத் தாங்கிப் பொலிந்த ஆரவாரத்தையுடைய பாறு ஆகிய மரக்கலங்கள் இயங்கும் அலைகளின் மிகுதியை யுடைத்தாகலின்' எனக் கடலுக்கு ஏற்பவும்,

'திருவடிக்கண் உண்டாகிய பற்றுத்தரும் முத்தியை யாம் பெறும்வண்ணம் எல்லாப் பொருளையும் அகப்படுத்தி நிற்கும் ஆகாயத்தையும் கடந்து நின்ற தான் ஒரு வடிவு கொண்டுவந்து பொருந்திப் பொங்கும் புனலையுடைய கங்கையைச் சூடி, மிக்க ஆரவாரத்தையுடைய பாறு(பருந்து) ஆகிய பறவைகள் சூழ்ந்து நின்ற உயர்வுமிக்க தலையோட்டினை ஏந்துதலின்' எனத் தில்லையிறைவனுக்கு ஏற்பவும் இருவகையாகப் பொருள் கொள்ளும்படி இத்தொடர் சிலேடையணி பெற அமைந்துளது. பெருநாணினளாகிய தலைவி, தோழிக்கு வெளிப்படையாக மறுமொழி கூருது, அவள் கூற்றினை யறியாதாள்போல் வேருென்று கூறினுளாயினும், தான் கூறியதனைக் கேட்ட தோழி, இக்கூற்றில் உள்ள கருத்துக்களை ஆராய்ந்து இணைத்துநோக்கினுல் இதுவே அவளுக்குத் தான் கூறுதற்குரிய மறுமொழியாகவும் அமையும்படி கடலின்மேல் வைத்துக் கூறியுள்ளாள்.

'முன்னர் நீ புரிசேர் சடையோன் புதல்வன் என்றும் பூங்கணைவேள் என்றும் உயர்த்துக் கூறியனவெல்லாம் அத்தலைவனுக்கு உரியனவே. அத்தகைய பெரியோன் தன்மாட்டுண்டான புணர்ச்சியான பேரின்பத்தை நாம் பெறுகை காரணமாக இவ்வாறு எளிவந்து உன்னை அடைந்து நின்ருன்; அஃது எதுபோலவென்ருல், பெறுதற்கரிய சங்கு தருகிற முத்தினை நாம் பெறுதல் எளிதாகக் கடலானது பெரிய உப்பங்கழியை வந்தடைந்தாற்போல; இனி உனக்கு வேண்டியது செய்வாயாக' எனத் தலைவி தோழியை நோக்கிக் கூறிய மறுமொழியாகவும் அமையும் முறையில் அடிகள் இத்திருப்பாடலை அருளிச் செய்துள்ளமை அறிந்து மகிழத்தக்கதாகும்.

நாணத்தாற் குறைநேர மாட்டாது வருந்தும் தலைமகள், 'என் தோழியாகிய இவளும் பெருநாணினள் ஆதலால் என்னைக்கொண்டே சொல்லச் செய்து பின் தலைவனது குறை முடிக்கக் கருதுகின்றாள். இதற்கு யான் ஒன்றும் சொல்லாமலிருந்தால் எம்பெருமான் இறந்துபடுவான்' என உட்கொண்டு, தன் நாணத்தினை விட்டுப் பின்னும் வெளிப்படக் கூறமாட்டாது, 'பாங்கற்கூட்டம் பெற்ற தலைவன் இப்பொழுது தோழியிற் கூட்டத்திற்குத் துவள் கின்றான்' என்பது தோன்ற, மாயவன்மேல் வைத்து மறைத்துக் கூறுவதாக அமைந்தது,

> புரங்கடந் தானடி காண்பான் புவிவிண்டு புக்கறியா
> திரங்கிடெந் தாயென் றிரப்பத் தன்னீரடிக் கென்னிரண்டு
> கரங்கள்தந் தான்ஒன் றுகாட்ட மற்றாங்கதும் காட்டிடென்று
> வரங்கிடந்தான் தில்லையம்பல முன்றிலம் மாயவனே. (86)

எனவரும் திருக்கோவையாகும். "மாயவனாகிய திருமால், முப்புரங்களை வென்ற இறைவனுடைய திருவடிகள் இரண்டையுங் காணவேண்டி, நெறியல்லா நெறியால் நிலத்தைப் பிளந்துகொண்டு உள்ளே புகுந்து, காணாது, பின் அம்முதல்வனை வழிபட்டு, 'எந்தையே அருள் புரிதல் வேண்டும்' என இரந்து நின்று வேண்ட, தன் இரண்டு திருவடிகளையும் தொழுதற்கு என்னுடைய இரண்டு கைகளையும் தந்தவனாகிய இறைவன், சிறிது திருவுளமிரங்கி, ஒரு திருவடியைக் காட்டியருளினனாக, மற்றொரு திருவடியையும் காட்டியருளுதல் வேண்டும் என்று தில்லையம்பலத் திருமுற்றத்தின்கண் வரம் கிடக்கின்றான்" என்பது இதன் பொருள். இன்னும் வரங்கிடக்கின்றானாகலின் முன் கண்டது ஒன்றுபோலும் என்பது கருத்து.

"ஒன்று காட்ட மற்றாங்கதும் காட்டிடு, என்று மாயவன் தில்லையம்பல முற்றத்தே வரங் கிடந்தாற் போல, முன்னர்ப் பாங்கற் கூட்டம் பெற்றானாகிய தலைமகன், பாங்கியாலாகிய கூட்டம் பெறுகை காரணமாக நின்னிடத்து வந்து குறையுறா நின்றான்" எனத் தலைமகள் தோழிக்குத் தான் கூறும் மறுமொழியை வெளிப்படக் கூறாது மறைத்துக் கூறினாள் என்றவாறு.

"புரங்கடந்தானடிகளைக் காணுமாறு வழிபட்டுக் காண்கையாவது, அன்னத்திற்குத் தாமரையும், பன்றிக்குக் காடுமாதலால் இவர் இங்ஙனம் தத்தம் நிலைப் பரிசே தேடுதல்.

இவ்வாறு தேடாது தமது அகங்காரத்தினுன் மாறுபட்டுப் பன்றி தாமரையும், அன்னம் காடும் ஆகப் படர்ந்து தேடுதலாற் கண்டிலர். இது நெறியல்லா நெறியாயினவாறு" எனப் பேராசிரியர் கூறும் விளக்கம் இங்கு நினைக்கத் தக்கதாகும்.

உடன்போக்கில் தலைவனுடன் சென்ற தலைமகளைத் தேடிக்கொண்டு சென்ற செவிலித்தாய், தன் மகளையும் அவள் காதலனையும் ஒத்தகாதற்கேண்மையினராய்த் தனக்கு எதிரே வந்த காதலர் இருவரைக் கண்டு அணுகி வினவினுளாக, அவ்விருவருள் தலைவன் அவளுக்கு மறுமொழி கூறிய நிலையில் வினுவும் விடையுமாக அமைந்தது,

> மீண்டா ரெனவுவந்தேன் கண்டு நும்மை, இம்மேதகவே
> பூண்டாரிருவர் முன்போயினரே, புலியூரெனை நின்
> ருண்டான் அருவரை ஆளியன்னுனைக்கண்டேன் அயலே
> தூண்டா விளக்கனையாய் என்னையோ அன்னை சொல்லியதே
> (திருக்கோவை-244)

எனவரும் திருப்பாடலாகும். 'காதலராய் வரும் நும் இருவரது தோற்றத்தைக் கண்டு, என்னுல் தேடப்பெறும் மகளும் அவள் காதலனும் ஆகிய அவ்விருவரும் மீண்டு வந்தார்கள் என்று கருதி மகிழ்ந்தேன். இவ்வாறு நும்மோடொத்த பெருமை வாய்ந்த இவ்வொழுக்கத்தையே பூண்ட காதலர் இருவர் இவ்வருஞ்சுரத்தில் முன்னே நடந்து சென்றனரோ உரைமின்' எனச் செவிலி வினவுவதாக அமைந்தது, 'நும்மைக் கண்டு மீண்டார் என உவந்தேன்; இம்மேதகவே பூண்டார் இருவர் முன் போயினரே?' என்ற தொடராகும். செவிலி கூறிய அம்மொழியைக் கேட்ட அத்தலைவன், "புலியூர்க்கண் என்னை ஒரு பொருளாக மதித்து நின்று ஆண்ட இறைவனது கிட்டுதற்கரிய மலையில் சிங்கத்தினையொப்பாளுகிய தலைவனை யான் கண்டேன்' எனச் செவிலிக்கு மறுமொழி கூறியவன், தன் அருகே நின்ற காதலியை நோக்கி, 'தூண்ட வேண்டாத மணிவிளக்கினை ஒப்பாய், அத் தலைமகனது அயலே அன்னை சொல்லியது யாது? அதனை அன்னைக்கு விளங்கச் சொல்வாயாக' எனப் பணிக்கும் முறையில் அமைந்தது, 'புலியூர் எனை நின்று ஆண்டான் அருவரை ஆளி அன்னுனைக் கண்டேன்; தூண்டா விளக்கு அனையாய், அயல் அன்னை சொல்லியது என்னையோ?' என்ற தொடராகும்.

புணர்ந்துடன் வரும் தலைமகன் செவிலியை நோக்கிக் கூறியதாக அமைந்த இம்மறுமொழி, தன்னாற் காதலிக்கப் பட்ட மனைவி யொருத்தியை யன்றிப் பிறர்க்குரிய மகளிரைக் கண்ணாற் காணுதற்கும் எண்ணாத அவனது தூய நன்னெஞ் சத்தின் இயல்பினைப் புலப்படுத்துவதாய்க் கற்பினுக்கு அருங்கலமாய் அவனுடன் போந்த காதலியின் சிறப்பினையும் ஒருங்கு உணர்த்தும் நிலையில் அமைந்திருத்தல் காணலாம். தமிழ் இயல் வழக்கமாகிய அகத்திணையொழுகலாற்றில் தலைவன் தலைவியாகிய காதலர் இருவர்பாலும் அமைய வேண்டிய உயர்ந்த பண்புகளுள் நிறையும் கற்பும் ஆகிய இவை இன்றியமையாச் சிறப்பின என்னும் இவ்வுண்மை யினைத் திருவாதவூரடிகள் இத்திருப்பாடலில் தலைவன் கூற்றில் வைத்து விளக்கிய திறம் உணர்ந்து போற்றத் தக்கதாகும்.

திருவாதவூரிற் பிறந்த பொய்யா நாவின் அந்தணராகிய கபிலர் என்னும் புலவர் பெருமான், ஆரிய அரசன் பிரகத்தன் என்பானுக்குத் தமிழியல் வழக்கமாகிய அகனைந்திணை யொழுகலாற்றின் சிறப்பினை யுணர்த்தற் பொருட்டுக் குறிஞ்சிப்பாட்டினைப் பாடித் தந்தது போலவே, திருவாதவூர் மகிழ் செழுமறை முனிவராகிய மணிவாசகப்பெருமானும் அகனைந்திணை யொழுகலாற்றினை ஒரு கோவையாகப் பாடித் தருக என வேதியர் வடிவில் வந்து கேட்டருளிய இறைவன் வேண்டிய வண்ணம் நானூறு துறைகளமையத் திருச் சிற்றம்பலக்கோவை யென்னும் இத்திருக்கோவையினை இயற்றியளித்தருளிய செய்தி இங்கு ஒப்பு நோக்கி எண்ணத் தக்க தனிச் சிறப்புடையதாகும்.

திருவாதவூரடிகள் அருளிய இத்திருச்சிற்றம்பலக் கோவையின் சொற்பொருட் சுவைநலங்களில் திளைத்த பிற்காலச் சான்றோர்கள், அடிகள் அருளிய திருப்பாடற் பொருளைப் பின்பற்றி அகத்திணைச் செய்யுட்கள் பல இயற்றி யுள்ளார்கள். அவ்வகையில் தோன்றிய அகத்திணை நூல்க ளுள் கி. பி. பதினோராம் நூற்றாண்டினையடுத்து வாழ்ந்த கல்லாடர் என்னும் புலவர் பெருமானால் இயற்றப்பெற்ற கல்லாடம் என்பதும் ஒன்றாகும். இந்நூல் நூறு செய்யுட்களை யுடையது. இந்நூலாசிரியர் திருச்சிற்றம்பலக்கோவையினுள் நூறு திருப்பாடல்களுக்குரிய நூறு துறைகளைத் தேர்ந்து கொண்டு ஒவ்வொரு துறைக்கும் ஒவ்வோர் ஆசிரியப்பாவாக

நூறு ஆசிரியப் பாக்களால் இந்நூலைச் சுவைபெற இயற்றியுள்ளமை இங்குச் சிறப்பாகக் குறிக்கத்தக்க தாகும்.

தொல்காப்பியப் பொருளதிகாரம் நச்சினார்க்கினியர் உரையில் மேற்கோளாகக் காணப்படும் செய்யுட்களிற் சில, இத்திருக்கோவையின் சொற்பொருளமைப்பினைத் தழுவி இயற்றப்பட்டனவாகத் தோன்றுகின்றன.

உடன் போக்கிற் செல்லும் தலைவன் தலைவி ஆகிய இருவரும் ஒருவரையொருவர் காணும் விருப்பினாற் பின்னும் முன்னுமாக மாறி மாறிச் செல்லும் அழகிய தோற்றத்தினைக் கண்டோர் மகிழ்ந்துரைப்பதாக அமைந்தது,

அன்பணைத் தஞ்சொல்லி பின்செல்லும் ஆடவனீடவன்றன்
பின்பணைத் தோளிவரும் இப்பெருஞ்சுரஞ் செல்வதன்று
பொன்பணைத்தன்ன இறையுறை தில்லைப்பொலி மலர்மேல்
நன்பணைத் தண்ணற வுண்ணளி போன்றெளிர்
நாடகமே. (219)

எனவரும் திருக்கோவையாகும். "தலைமகளின் அழகிய முதுகினையும் அசை நடையினையும் காண விரும்பி ஆடவரிற் சிறந்தானாகிய தலைவன் அன்பால் அணைத்து அழகிய சொல்லையுடையாளாகிய தலைவியின் பின்னே செல்கின்றான். பசிய மூங்கில் போலும் தோளையுடைய தலைமகளோ அவ னுக்கு முன்னே செல்லுதற்கு நாணியவளாய், அவனது பீடு நடையினைக் காண விரும்பி அவன்பின்னே மெல்லச் செல்கின்றாள். இவ்வாறு இருவரும் ஒருவருக்கொருவர் பின்னே செல்லுதலில் விருப்பமுடையராக நின்று நின்று பின் தங்கிச் செல்லுதலை நோக்கின் இவரது செயல் இப் பெரிய சுரத்தை விரைவிற் கடந்து செல்லுதற்கு ஏற்றதாகக் காணப்படவில்லை. இவர் தம் தோற்றம், பொன் ஒரு வடிவு கொண்டு தோன்றினாற் போலும் கூத்தப்பெருமான் எழுந் தருளிய தில்லையில் நல்ல மருத நிலத்திற் பூத்த மலர்களிலே குளிர்ந்த தேனைப்பருகிய வண்டுகளை யொத்து இன்பக்களி யால் மயங்கி விளங்குவதொரு நாடகம் போன்று கண் டார்க்கு இன்பஞ் செய்வதாயிற்று' என்பது இத்திருப்பாட லின் பொருளாகும். இப்பொருளைத் தெளிய விளக்கும் நிலையில் அமைந்தது,

காண்பான் அவாவினுற் காதலன் காதலிபின் நடவாநிற்ப
நாண்பாலள் ஆதலால் நன்னுதல் கேள்வன்பின் நடவாநிற்ப
ஆண்பான்மை குன்ரு அயில்வேலவன் தனக்கும்
அஞ்சொலாட்கும்
பாண்பால வண்டினமும்பாட அருஞ்சுரமும்
பதிபோன்றன்றே. (தொல்-அகத்-40-நச்)

எனவரும் மேற்கோட் செய்யுளாகும். இதன்கண் மேற் காட்டிய திருக்கோவையிலுள்ள 'அஞ்சொல்லி' என்பது அஞ்சொலாள் எனவும், 'ஆடவன்' என்பது, ஆண்பான்மை குன்ரு அயில்வேலவன் எனவும் விளக்கமுற அவ்வாறே எடுத்தாளப் பெற்றிருத்தலையும், தலைவனும் தலைவியும் ஒருவர்பின் ஒருவர் செல்ல விரும்புதற்குரிய முறையிற் பேராசிரியர் இத்திருக்கோவையுரையிற் குறித்த காரணங்கள், 'காண்பான் அவாவினுல்' என்றும், 'நாண்பாலள் ஆதலால்' என்றும் அவ்வாறே இப்பாடலில் எடுத்தாளப் பெற்றிருத்தலையும் கூர்ந்து நோக்குங்கால், தொல்காப்பிய மேற்கோட் செய்யுளாகிய இது, மேற்குறித்த திருக்கோவைச் செய்யுளையும் அதற்குப் பேராசிரியர் எழுதிய உரையினையும் உளத்துட் கொண்டு இயற்றப்பெற்றதென்பது இனிது புலனும்.

பாலைநில வழியே தலைமகளைத் தேடிச் செல்லும் செவிலி, தன் மகளையும் அவள் காதலனையும் பற்றித் தன் எதிர் வருவோரைக் கண்டு வினவினுளாக, அவர்கள் அவளை நோக்கி "அன்னையே, நீ கூறிய கொள்கையினராகிய காதலர் இருவரையும் குன்றத்திடையே கண்டோம்; அவ்விருவரும் அன்பினுற் பிரிவின்றி இயைந்து ஒருங்கு செல்கின்றதனைக் கண்டு, எல்லாவற்றையும் உடையாளாகிய தன் தேவியுடன் ஒருவடிவாய் விளையாடும் புலியூரிறைவனுகிய உமையொருபாகனென்றே கருதி யாங்களெல்லாம் உள்ளம் ஒருப்பட்டு அவ்வழகினைத் தொழ நினைந்தோம். அந் நன்மை சொல்லால் வெளியிட்டுரைக்கும் எளிமையுடையதன்ரும்" என வியந்து கூறுவதாகவுள்ளது,

மின்ருெத் திடுகழல் நூபுரம் வெள்ளைசெம் பட்டு மின்ன
ஒன்ருெத்திட வுடையாளொடொன் ரும்புலியூரனென்றே
நன்ருெத் தெழிலைத் தொழவுற்ற னம்என்னதோர்
நன்மைதான்
குன்றத்திடைக் கண்டனம் அன்னை நீ சொன்ன
கொள்கையரே. (246)

எனவரும் திருக்கோவையாகும். இதனை அடியொற்றி யமைந்தது,

> சிலம்புஞ் சிறுநுதலும் சில்குழலும் பல்வளையும்
> ஒருபாற்றோன்ற
> அலங்கலந் திண்டோளும் ஆடெருத்தும் ஒண்குழையும்
> ஒருபாற்றோன்ற
> விலங்கலருஞ்சுரத்து வேறுருவின் ஓருடம்பாய்
> வருவோர்க்கண்டே
> அலங்கல விர்சடையெம் அண்ணல் விளையாட்டென்
> றகன்றேம் பாவம். (தொல்-அகத்-40-நச்)

எனவரும் மேற்கோட் செய்யுளாகும்.

தலைவன் வரைதல் வேண்டிப் பொருள் தேடச் சென்றானாகத் தலைமகள் பிரிவாற்றாது தன்னெஞ்சொடு வருந்தக் கண்ட தோழி, "மானினை எய்தற் பொருட்டு வில்லினை வளைத்த கொடுந் தொழிலாளராகிய கானவரும் அம்மானின் மருண்ட நோக்கத்தினை ஒத்ததென்று கருதித் தாம் வில்லிற் பொருத்திய அம்பினை எய்யாது மடக்கிக்கொள்ளும் மலையினராதலால் தலைவர் நீ இவ்வாறு வருந்தும்படி தாமதித்திரார்; வரைதற்கு விரைந்து வருவர்" என்று கூறி, அவளது வருத்தத்தைத் தீர்ப்பதாக அமைந்தது,

> கானமர் குன்றர் செவியுற வாங்கு கணைதுணையா
> மானமர் நோக்கியர் நோக்கென மானற் றொடை மடக்கும்
> வானமர் வெற்பர் வண்டில்லையின் மன்னை வணங்கலர்போற்
> றேனமர் சொல்லி செல்லார் செல்லல் செல்லல்
> திருநுதலே. (274)

எனவரும் திருக்கோவையாகும். இத்திருப்பாடலில் கானவரது இயல்பாக அடிகள் குறித்தருளிய அன்பின் செயலை நன்குணர்ந்த நக்கீர தேவர், தாம் பாடிய திருஈங்கோய் மலையெழுபதில்,

> எய்யத் தொடுத்தோன் குறத்திநோக் கேற்றதெனக்
> கையிற் கணைகளைந்து கன்னிமான் – பையப்போ
> என்கின்ற பாவனைசெய் ஈங்கோயே தூங்கெயில்கள்
> சென்றன்று வென்றான் சிலம்பு. (12)

எனவரும் திருப்பாடலிற் சொல்லோவியஞ் செய்து காட்டிய திறம் இங்கு ஒப்புநோக்கி யுணர்தற்குரியதாகும்.

இத்திருக்கோவையிற் பொருள் புலப்பாட்டிற்கு இன்றியமையாத சிறந்த உவமைகள் பலவற்றை அடிகள் எடுத்து

ஆண்டுள்ளார். அவ்வுவமைகளின் நுட்பங்களைப் பேரா சிரியர் தமது உரையில் நன்கு விளக்கியுள்ளமை காண்க. இதன்கண் இல்பொருளுவமை - அபூத உவமை, 125, 244, எதிர்காலக் கூற்றிடத்துக் காரியத்தின்கண் வந்த இரங்கல் விலக்கு, உபாய விலக்கு 157, பரியாயம் 161,289, புகழுவமை 162, அல்பொருட் டற்குறிப்பேற்றம் 185, ஒற்றுமைக் கொளுவுதல் 195, புகழாப் புகழ்ச்சி 202, கூற்றிடத் திரு பொருட்கண் வந்த உயர்ச்சி வேற்றுமை 217, முயற்சி விலக்கு, பொருள் முரண் 289, மிகைமொழி 295 ஆகிய அணிகள் பயின்றுள்ள திறத்தை அவ்வப் பாடல்களின் உரையிற் பேராசிரியர் குறித்துள்ளமை காணலாம். 399-ஆம் திருப்பாடலில் எண்ணலங்காரம் அமைந்துளது.

பாட்டுடைத் தலைவனாகிய இறைவன் திருக்கூத்தியற்றி யருளும் திருவருள் நிலையமாகிய திருச்சிற்றம்பலத்தின் சீர்த்தியினை அடிகள் இத்திருக்கோவையிற் பாடல் தோறும் துதித்துப் போற்றியுள்ளமை காணலாம். திருவளர் திருச் சிற்றம்பலத்தைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் பெரும் பற்றப் புலியூராகிய தில்லைப்பதி, சோலையும் தடாகமும் சேணுயர் மதிலும், அதனை யொட்டிய அகழும், பொன்னிப் புனல் பாயும் கால்வாய்களும் வயல்களும் புடை சூழப்பெற்ற தாய், உப்பங்கழிகளும் அவற்றையடுத்துள்ள கடற்கரைச் சோலையும் கடலும் அணுகப் பெற்றதாய் அமைந்துள்ள தோற்றத்தினை, 'குருநாண் மலர்ப்பொழில் சூழ்தில்லை '(44), 'திகழ்பொழிற்றில்லை' (166) எனவும், 'தில்லைத்தண் பூம் பணையுந்தடமும்' (183), 'புலியூர்ப் பழனத்து அகன் தாமரையன்னம்' (184) எனவும், 'சேடார்மதில் மல்லல் தில்லை' (161) 'கற்பாமதிற்றில்லை (310), 'வானக்கடிமதிற் றில்லை' (335) 'சேணுந் திகழ்மதிற்தில்லை' (341) எனவும் 'அகழும் மதிலும் அணிதில்லை' (181), எனவும், 'குரூஉக் கமலந், துன்றங்கிடங்கும் துறை துறைவள்ளை வெள்ளை நகையார், சென்றங்கடை தடமும் புடைசூழ்தரு சேணகரே' எனவும், 'பொன்னி வளைத்த புனல்சூழ்நிலவிப் பொலி புலியூர்' (317) எனவும், 'வடிவார் வயற்றில்லை' (139), 'வயல்கொண்ட தில்லைமல்கூரர்' (386) 'தில்லையின்வாய்த், தூண்டிலெடுத்த வரால் தெங்கொடெற்றப் பழம் விழுந்து, பாண்டிலெடுத்தபல் தாமரை கீழும் பழனங்களே' (240) எனவும், 'தில்லைமெல்லங் கழிசூழ் கண்டலையே கரியாக்

கன்னிப் புன்னைக் கலந்த கள்வர்' (178) 'தில்லைநகர்சூழ் போதுற்ற பூம்பொழில்காள் கழிகாள்' (174) 'புலியூர் ஓங் கணை மேவிப் புரண்டு விழுந்தெழுந் தோலமிட்டுத் தீங் கணைந்து ஓர் அல் லுந் தேருய் கலங்கிச் செறிகடலே' (179), 'புலியூர் சுற்றும் போர்க்கடலே' (183) 'உடையான் புலியூர்க் கொண்டலுற்றேறும் கடல்வர' (290) எனவும் வரும் தொடர் களால் அடிகள் நன்கு புலப்படுத்தியுள்ளார்.

புலியூராகிய தில்லைப்பதி, வானுற வுயர்ந்த மாட மாளிகைகளையுடையதாய் விளங்கிய திறத்தைப் 'பொன்னு ரணிமணி மாளிகைத் தென்புலியூர்' (217) எனவும் 'செழு மிய மாளிகைச் சிற்றம்பலவர்' (393) எனவும் வரும் தொடர் களால் அறியலாம். இத்தில்லை நகரத்தின் நடுவே விளங் கிய திருக்கோயில், நெடுந்தூரத்திலேயே ஒளியுடன் திகழும் செம்பொன் மாளிகையாகிய பொன்னம்பலத்தினைத் தன் னகத்தே பெற்றதாய், அழகிய சிற்பங்கள் பலவற்றை யுடையதாய் அமைந்திருந்த தென்பதும், அதன் நடுவே மாணிக்கக் கூத்தன் ஆடல் புரிந்தருளும் தில்லைச் சிற்றம்பல மாகிய திருமன்றம் அழகிய சிறந்த ஓவியங்கள் பல எழுதப் பெற்றுக் கவினுறத் திகழ்ந்ததென்பதும், 'சேணிற்பொலி செம்பொன் மாளிகைத் தில்லைச் சிற்றம்பலத்து மாணிக்கக் கூத்தன்' (23) எனவும், 'சிற்பந் திகழ்தரு திண்மதிற்றில்லை' (305) எனவும், 'சிற்றம்பலத்தெழுதும் ஓவியங் கண்டன்ன ஒண்ணுதலாள் (384) எனவும் வரும் திருக்கோவைத் தொடர் களால் அறியப்படும்.

தில்லையம்பலத்திலே அம்பலவாணர் சந்நிதி தென்திசை நோக்கி அமைந்துள்ள தன்மையினைத் 'தென்மாத்திசை வசை தீர்தரத் தில்லைச் சிற்றம்பலத்துள், என்மாத் தலைக் கழல்வைத் தெரியாடும் இறை' (338) என்பதனாலும், தில்லை யில் பதஞ்சலி முனிவர் தொழுது போற்ற இறைவன் ஆடல் காட்டியருளிய அற்புத நிகழ்ச்சியை 'நாகந்தொழவெழி லம்பலம் நண்ணி நடம்நவில்வோன்' (171) என்பதனாலும், தில்லையிற் கூத்தப்பெருமானை மூவாயிரவராகிய அந்தணர் கள் ஒருங்கே குழுமி நாளும் பூசனை செய்து வழிபடும் முறை யினை, 'தில்லையம்பலத்து மூவாயிரவர் வணங்க நின்றோனை' (72) என்பதனாலும், தம் காலத்தில் தில்லையம்பலத் திரு முற்றத்திலே திருமால் அறிதுயிலமர்ந்த கோலத்தில் திருவுருவமைக்கப் பெற்றிருந்த செய்தியினை, 'வரங்

கிடந்தான் தில்லையம்பல முன்றிலம் மாயவனே' (86) என்பதனாலும் திருவாதவூரடிகள் இத்திருக்கோவையிற் குறித்துள்ளமை அறியத் தக்கதாகும்.

தில்லைச் சிற்றம்பலத் திருக்கோயிலில் வழிபாட்டுக் காலங்களில் நாள்தோறும் குடமுழாமுழக்கப்பெறும் நிகழ்ச்சியினை, 'சிற்றம்பலத்து அடியேன், களிதரக் கார்மிடற்றேன் நடமாடக் கண்ணார் முழவம், துளிதரற் காரென ஆர்த்தன' (324) என்பதனாலும், தில்லைக்கோயிலில் நிகழும் சிறப்புடைய திருவிழாக் காலங்களில் இராப்பொழுது பல நிற மணிமாலைகளின் ஒளியாலும் பலவாக ஏற்றப்பட்ட விளக்குகளாலும் இருள் நீங்கிப் பகற்பொழுது போன்று விளங்கிய திறத்தினை, 'இன்னற வார்பொழிற் றில்லைநகர் இறைசீர் விழவிற் பன்னிற மாலைத்தொகை பகலாம் பல்விளக் கிருளின்' (175) என்பதனாலும், அக்காலத்தில் பாண்டிய நாட்டினையும் சோழ நாட்டினையும் ஆண்ட பெருவேந்தனாகிய வரகுணபாண்டியன் தில்லையம்பலப் பெருமானை மகிழ்ந்து போற்றும் பெரு வேட்கையுடையனாய் அன்பினால் ஏத்தி வழிபட்ட செய்தியை 'வரகுணனாந் தென்னவனேத்து சிற்றம்பலத்தான்' (306) 'சிற்றம்பலம் புகழும் மயலோங்கிருங்களியானை வரகுணன்' (327) எனவரும் தொடர்களாலும் மணிவாசகப்பெருமான் இத்திருக்கோவையில் இனிது விளக்கியுள்ளார்.

தில்லைக்கு மேற்கேயுள்ள கடம்பூரின் அருகே நீர் நிரம்பிய பெரிய தடாகம் ஒன்று அமைந்திருந்த செய்தியினைத் திருக்கோவை 220-ஆம் திருப்பாடலில் அடிகள் குறிப்பிட்டுள்ளமை நோக்கத் தக்கதாகும்.

தில்லைச் சிற்றம்பலத்தைச் சிறப்பித்துப் போற்றும் இத் திருக்கோவையில், அம்பர் (182), இடைமருது (268), ஈங்கோய்மலை (113, 204), ஏகம்பம் (268), கடம்பை (220), கழுக்குன்று (107), காழி (379), குற்றாலம் (94, 135), கூடல் (20, 376), கொடுங்குன்று (150), கயிலை (6, 16, 22, 25, 29, 30, 34, 37, 38, 54 – 56, 59, 62, 76, 120, 132, 138, 141, 145, 169, 245, 280, 294, 378, 383), சிவநகர் (209), சுழியல் (377), திருப்பனையூர் (137), பரங்குன்று (100, 144, 178, 279, 292), பூவணம் (305, 338), பெருந்துறை (104) பொதியில் - மலயம் (8, 91, 139, 140, 153, 154, 336, 392, 394, 15, 68), மூவல் (191, 304), வாஞ்சியம் (268), வெண்காடு (286)

ஆகிய திருத்தலங்கள் திருவாதவூரடிகளால் குறித்துப் போற்றப்பெற்றுள்ளன.

இறைவன், கயிலையையெடுத்த இராவணனைத் தன் திருவடிப் பெருவிரலொன்றினால் ஊன்றி மலைக்கீழ் அடர்த்தருளியது,[1] காமனை எரித்தது,[2] காலனைக் காய்ந்தது,[3] சலந்தரனைத்தலை யரிந்தது,[4] தக்கன் வேள்வி சிதைத்தது.[5] அவ்வேள்வியிற் சூரியன் பற்களைத் தகர்த்தது,[6] பகன் என்னும் ஆதித்தனது கண்ணைக் குருடாக்கியது,[7] மேருவை வில்லாக வளைத்தது,[8] திரிபுரம் எரித்தது,[9] அயனைச் சிரங்கொய்தது,[10] ஆலகால நஞ்சினையுண்டு மிடற்றிலடக்கியது,[11] யானையையுரித்தது[12] ஆகிய வீரச் செயல்களையும், முருகவேள் சூரபதுமனை அழித்தருளியது,[13] திருமால் பிரமர் அடிமுடி தேடியது,[14] திருமால் ஆயிரங்கைகளால் ஆயிரந்தாமரை மலர்களைக் கொண்டு நாள்தோறும் சிவபெருமானை அருச்சனை புரிந்தது,[15] ஒருநாள் ஆயிரமலர்களுள் ஒன்று குறையத் தன் கண்ணைத் தோண்டி மலராக இறைவனடியிற் சாத்திச் சக்கரப்படையினைப் பெற்றுக்கொண்டது,[16] உலகளந்தது,[17] ஆலிலையிற் பாலகனாகத் துயில்கொண்டது,[18] கண்ணனாகி நப்பின்னையை மணந்துகொண்டது,[19] திருமால் நரசிங்கமாக வந்தது[20] ஆகிய புராணச் செய்திகளையும் அடிகள் திருக்கோவையிற் குறித்துள்ளார்.

இத்திருக்கோவையில் ஆகம நூற் பொருள்களை அடிகள் எடுத்துக்கூறியுள்ளார் எனவும் அவற்றுள் தம் உளங்கொண்ட சிலவற்றையே தாம் உரையிற் குறிப்பதாகவும் பேராசிரியர் இந்நூல் உரை முகத்துக் கூறியுள்ளமை முன்னர் விளக்கப்பெற்றது. சிவபெருமானுடன் பிரிவற ஒன்றாயுள்ள பராசத்தியை 'யாவையுமாம் ஏகம்' என 71-ஆம் திருப்பாடலிலும், 'பிறத்தற்குக் காரணமாகிய மலங்கெட்டும் யாக்கைக்குக் காரணமாகிய மலத்துடனே வினை

(1) திருக்கோவையார் 59, 383. (2) 61, 70, 90, 95, 164, 179, 313, 352, 364, 367. (3) 150, 227, 286. (4) 209. (5) 4, 60, 92, 168, 184, 226, 234, 270. (6) 4, 60. (7) 184, 270. (8) 26, 98, 114, 152, 174, (9) 13, 18, 36, 55, 133, 137, 142, 167, 190, 213, 321, 357, 371, 372. (10) 321, 371. (11) 22, 27, 81, 158, 329. (12) 15, 55. (13) 285. (14) 86, 105, 107, 287. (15) 180. (16) 153, 163, 180, 230. (17) 42. (18) 105. (19) 273. (20) 225.

நிற்றலின், நிகழ்காலம் புலனாக 'என்பிறவி கெட்டு இன்று அழகின்றதாக்கிய தாள் அம்பலவன்' என 76-ஆம் பாடலிலும், சிவதத்துவத்தினின்றும் சத்திதத்துவமும் சத்தி தத்துவத்தினின்றும் சதாசிவ தத்துவமும் தோன்றும் என்பதனை 'தன்னொருபாலவள் அத்தனும் மகனும் தில்லை யான்' என 112-ஆம் பாடலிலும், பாசமாகிய தளையிற் பட்டுக்கிடத்தல் உயிரியல்பு என்பதும், உயிர்களின் பாசத் தளையறுத்து ஆண்டு அருள்புரிதல் இறைவன் இயல்பென் பதும் ஆகிய உண்மையினை, 'பாசத்தளையறுத் தாண்டு கொண்டோன்' என 115-ஆம் பாடலிலும், உயிர்கட்குப் புகலிடம் இறைவனே என்பதனை 143-ஆம் பாடலிலும், சிவத்தைத் தலைப்பட்டு இரண்டறக்கலந்த ஆன்மா மீளவும் அதனைவிட்டு நீங்கிப் பிறவியுட் புகுதல் இல்லை என்பதனைப் 'புகுநர்க்குப் போக்கரியோன்' என 188-ஆம் பாடலிலும், தில்லையம்பலத்தோனாகிய இறைவனது அருள் எல்லையினைத் தலைப்பட்டவர்களாகிய சீவன்முத்தரது இயல்பு உலக மெங்கும் பரவி அகண்ட பரிபூரணராய் இருத்தல் என்னும் மெய்ம்மையினை 'அம்பலத்தோன் எல்லை செல்குறுவோர் நலம் பாவிய முற்றும்' என 197-ஆம் பாடலிலும் அடிகள் குறித்துள்ள திறத்தினைப் பேராசிரியர் அவ்வத்திருப்பாடல் களின் உரையில் நன்கு விளக்கியுள்ளார்.

அகத்தமிழ்க்கோவையாகிய இந்நூலில் இடம் பெற்று உரையாடும் இயல்பினராகிய தலைவன், தலைவி, தோழி, செவிலி முதலிய அனைவரும், இந்நூலின் பாட்டுடைத் தலைவனாகத் திகழும் தில்லையம்பலவனாகிய இறைவனுடைய திருவடிகளில் அழுந்திய பேரன்பினராய், அம்முதல்வனுக் குத் தொண்டராய் ஒழுகும் சிவபத்திச் செல்வராகத் திகழ் கின்றார்கள். இவ்வுண்மை, அவர்கள் தத்தம் உரையாடல் களில் தில்லையம்பலப் பெருமானுக்கும் தமக்கும் உள்ள ஆண்டானடிமைத் தொடர்பினை ஆங்காங்கே குறித்துச் செல்லுதலால் நன்கு தெளியப்படும்.

இனி, இத்திருக்கோவையில் களவித்தலைவன் இயல்பாக வந்தனவெல்லாம் அடிகளது இயல்பு—அஃதாவது ஆன்மா வினது இயல்பு உணர்த்துவன எனவும், தலைவியின் இயல்பாக வந்தனவெல்லாம் இறைவனது இயல்பு உணர்த்துவன எனவும் பிற்காலச் சான்றோரொருவர் இத் திருக்கோவையாருக்குப் பேரின்பத்துறை வகுத்துள்ளார்.

இத்துறையமைப்புப் பற்றிக் கி. பி. 1834-ஆம் ஆண்டில் திருவாசக வியாக்கியானம் எழுதிய சீகாழித் தாண்டவராயர் கூறுங் கருத்துக்கள் இங்கு நோக்கத்தக்கனவாகும்.

"தோத்திரங்கள் அன்பினால் நிகழ்ந்த மொழியாதலின் துறைகளில் அமைந்தேயிருக்கும். துறையாவது அன்பு முதிர்ச்சி. நாயகன் நாயகி இவர்களின் அன்புத் தொடர்ச்சியை நானூறு விதமாகப் பாராட்டி வருணிக்கக் கூடும் ஆதலால் நாயன்மார்கள் திருவாக்குகள் அப்படியே இருக்கின்றன. பரமசிவன் மதுரைத் திருப்பதியில் தெய்வப் புலமையாகிய பொய்யடிமை யில்லாத புலவரான திருச் சங்கத்துள் இறையனார் என்று தாமும் ஒரு புலவராக எழுந் தருளியிருந்து நற்கீரர்க்கு அநுக்கிரகம் செய்யும் போது 'இறையனார் பொருள்' என்றே பஞ்ச விலக்கணத்தில் பொருளதிகாரக் கருத்து முழுவதும் இந்தத் துறையே விளங்கும்படி சூத்திரமாகத் திருவுளம் பற்றினார்.

அத்துறைகளில் நாயன்மார்கள் அருள் செய்த தோத்திரங்களில் சில துறைகள் வரும். வாதவூரடிகள் அருளிய கோவைத் திருவாசகத்தில் துறைகள் எல்லாம் அடங்கும்.

பத்திமுத்திக்கு உவமை பெத்தம்; பேரின்பத்துக்கு உவமை சிற்றின்பம் என வைத்து, உடம்பையுடைய யோகிகள்பால் உற்ற சிற்றின்பம், அடங்கத்தன் பேரின்ப மாக, பேரின்பமான பிரமக்கிழத்தியோடு ஓரின்பமான அன்பே சிவமாய், அருளே காரணமாக, சுத்தாவத்தையே நிலமாக, நாயகி பரம்பொருளாக, நாயகன் பக்குவான்மா வாக, தோழி திருவருளாக, தோழன் ஆன்ம போதமாக, நற்றாய் பரையாக, திரோதாயி செவிலித்தாயாக, மேலும் நாயகன் கூற்றெல்லாம் நாயகி கூற்றாகவும், நாயகி கூற்றெல்லாம் நாயகன் கூற்றாகவும் நிகழ்ந்து வரும். அவை அநுபூதியாற் காண்க.

நாயகியைச் சிற்றம்பலம் போல வருணிக்கையால் நாயகி பரம்பொருளாயிற்று. பெறுவான் நாயகனும், பேறு நாயகியு மாக இரசமும் நாவும் போல இருத்தலானும், கொத்தும் துறையும் கருப்பொருளும் உரிப்பொருளும் இடமும் எல்லாம் அருளின்பமெனக் கொள்க.

சுத்த சாக்கிரத்தானமே குறிஞ்சி நிலம்; சுத்த சொப்பனத்தானமே பாலைநிலம்; சுத்த சுழுத்தித்தானமே முல்லைநிலம்; சுத்த துரியத்தானமே மருத நிலம்; பரசிவ வின்ப சுகாதீதமே நெய்தல் நிலம். இப்படி ஐந்து நிலங்களும் சுத்தாவத்தைத் தானங்களாகவும், பஞ்ச சத்தி அதிட்டானத் தானங்களாகவும் காண்க''

என விளக்கங்கூறித் திருக்கோவையிலுள்ள இருபத்தைந்து கிளவிக் கொத்திற்கும் நானூறு துறைகளுக்கும் துறையன்பு முதிர்ச்சி என்னும் நூற்பாக்களையும், பேரின்ப நிட்டையன்பு விலாசம் என்னும் கொளுக்களையும் நமச்சிவாய வாழ்க என்ற பத வியாக்கியானத்தில் எடுத்துக் காட்டியுள்ளார்.

இப்பகுதி, திரு. சுவாமிநாத பண்டிதர் அவர்கள் பதிப்பித்த 'திருக்கோவையா ருண்மை' என்ற நூலிலும், இதன் கருத்து திரு. விசாகப்பெருமாளையர் அவர்கள் வெளியிட்ட 'திருக்கோவையார் உண்மைக் கருத்து' என்ற பகுதியிலும் சிற்சில வேறுபாடுகளுடன் காணப்படுகின்றன.

"இனிப் பேரின்பப் பொருள்தான் ஒத்த கிழவனும் கிழத்தியுந் தம்முள் அஃகா உழுவலன்பான் நுகர்ந்து போதரும் சிற்றின்பம்போல்வ தொன்றாகலின், மற்றது சிற்றின்பம் அகனைந்திணைபற்றி நிகழ்தல்போலக் குருதரிசன முன்னுன நின்மல சாக்கிராதி யைந்தும்பற்றி நிகழுநீரதாம். அங்ஙனம் நிகழ்வுழிப் பேரின்பக்கிழத்தி சிற்றம்பலமும், கிழவோன் முத்தான்மாவும் ஆம்'' எனச் சபாபதி நாவலரவர்கள் மேற்குறித்த கருத்தினையே சிறிது மாற்றிக் கூறியுள்ளார்.

திருச்சிற்றம்பலக் கோவைக்குப் பேரின்பப் பொருள் பற்றி யமைந்த இவ்விளக்கங்கள் திருக்கோவையார்க்கு உரை வரைந்த பேராசிரியர் காலத்தில் வழங்கியிருக்குமாயின், இவற்றை அவ்வாசிரியர் தமது உரையில் தெளிவாகக் குறித்திருப்பார். அத்தகைய குறிப்பெதுவும் அவரது உரையிற் காணப்படாமையால், பேரின்பத்துறை பற்றிய இவ்விளக்கம் மிகப் பிற்காலத்தறிஞ ரொருவரால் இயற்றப் பட்டதெனத் தெரிகிறது.

சரியை கிரியை யோகம் ஞானம் எனச் சைவசித்தாந்தம் கூறும் நால்வகை நெறிகளுள், நான்காவதாகிய ஞான நன்னெறியானது, எல்லாம்வல்ல முதல்வனை ஆன்ம நாயகனாக

வும் உயிராகிய தன்னை அவனைத் தலைப்பட்டு மகிழ விழைந்த தலைவியாகவும் கருதியொழுகும் இயல்பினதாகும். "முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள் தலைப்பட்டாள் நங்கை தலைவன்தாளே" (6-25-7) எனவரும் திருப்பாட்டும் இறைவனைக் காமுற்று வருந்தும் தலைமகள் நிலையில் நின்று அருளாசிரியர்கள் அருளிச் செய்த திருப்பாடல்கள் பலவும் தொன்றுதொட்டு வரும் இம்மரபினை வலியுறுத்துவனவாகும். கடவுள்மாட்டு மானிடப்பெண்டிர் நயந்த பக்கமாகிய பாடாண்டிணைப் பகுதியும் இம்மரபின் தொன்மையினைப் புலப்படுத்தல் அறியத் தக்கதாகும். இம்மரபு, சைவத் திருமுறைகளிலும் ஆழ்வார்கள் அருளிய திவ்யப் பிரபந்தத்திலும் இவற்றையடியொற்றித் தோன்றிய பிற்காலப் பனுவல்களிலும் சிறிதும் பிறழாதமைந்திருத்தல் காணலாம். இதற்கு மாருக இறைவனைத் தலைவியாகவும் அவனை அடைந்து மகிழ எண்ணிய ஆன்மாவைத் தலைவனுகவும் கொண்டு கூறும் கூற்று சைவத் தொன்னூல்களிற் காணப்படாத புதுமையுடையதொன்ரும். தலைவியை அவளிருக்குமிடம் நாடியடைந்து மணக்குந் தலைமைப்பாடும் ஊற்றமும் தலைவனுக்கே உண்டு அதுபோல் ஆன்மாக்களை வலியவந்து ஆட்கொண்டருளும் தலைமையும் தகவும் உயிர்த் தலைவனுகிய இறைவனொருவனுக்கே யுரியது. உயிர்கள் அவனருளாலேயே அவனை அடைந்து இன்புறுதற்குரியன. அவ்வுயிர்கட்கு எளிவந்து ஆட்கொண்டு இன்னருள் சுரக்கும் தலைமை இறைவனுக்கே யுரிய தொன்ருகலின் ஆண்டானுகிய இறைவனே தலைவன் என்றும் அவனுல் தலையளிக்கப்பெறும் ஆன்மா அவனருளை எதிர்நோக்கும் தலைவியென்றும் கொண்டு போற்றும் முறையே சைவ வைணவத் தமிழ் நூல்களில் உள்ள அகத்துறைப் பாடல்களிற் காணப்படுகின்றது.

திருவாதவூரடிகள், தாம் பாடியருளிய திருவாசகச் செழும்பாடல்களில், இறைவனைத் தலைவனுகவும் உயிராகிய தம்மை அவனருள் விழைந்த தலைவியாகவும் கொண்டு அன்புசெய்து போற்றியுள்ளார். அன்றியும் தாம் இயற்றிய திருக்கோவையில் வரும் அகப்பொருளொழுகலாற்றுக்குரிய தலைவியைப் 'பெருந்துறைப்பிள்ளை' என்ற பெயராற் குறித்துள்ளார். 'பெருந்துறைப்பிள்ளை' என்னும் இப்பெயர் திருவாதவூரடிகளைக் குறித்து வழங்கும் பெயரென்பது, 'திருந்திய அன்பிற் பெருந்துறைப்பிள்ளையும்' எனவரும்

திருவெண்காட்டடிகள் வாய்மொழியால் இனிது விளங்கும். திருந்திய அன்பு என்பது, இறைவனைத் தந்தையாகவும் தன்னை மகனாகவும், இறைவனை ஆண்டானாகவும் தன்னை அடிமையாகவும், இறைவனை நண்பனாகவும் தன்னைத் தோழனாகவும் இவ்வாறு பல படியாக வழிபட்டு வளர்ந்து, பின் இறைவனைத் தன் ஆருயிர் நாயகனாகவும் தன்னை அவனருள் விழைந்த பெண்ணொருத்தியாகவும் கருதித் தன் செயலற்றுத் தான் என்பது அற்று அவன்தன் செயலேயாக அடங்கி நின்றொழுகும் நிலையிற் செலுத்தப்பெறும் பேரன்பாகும். இம்முறையில், திருவாதவூரடிகள், தம்மையாட் கொண்டருளிய சிவபெருமானை ஆருயிர்நாயகனாகவும் தம்மை அவனது அருளாரின்பத்திற்கு ஏக்கற்றுநிற்கும் பெண்ணொருத்தியாகவும் கருதி அன்பு செலுத்தியவர் என்பது, மேற்குறித்த திருவெண்காட்டடிகள் வாய்மொழியால் நன்கு துணியப்படும். அன்றியும் 'புலியூரம்பலவர்க்குற்ற பத்தியர்போலப் பணைத்திறுமாந்த பயோதரத்தோர், பித்தி தன்பின்வர முன்வருமோ வொர்பெருந்தகையே' (242) எனவரும் திருக்கோவையில் பத்தியராகிய அடியார்களைத் தலைவிக்கும் அம்பலவனைத் தலைவனுக்கும் உவமித்து அடிகள் கூறியிருத்தலும், 'புலியூர், ஒருவனது அன்பரின் இன்பக் கலவிகள் உள்ளுருகத் தருவனசெய்து எனது ஆவிகொண்டு ஏகி, என்னெஞ்சில் தம்மை, இருவினகாதலர் ஏதுசெய்வான் இன்று இருக்கின்றதே' (281) எனத் தலைமகள், தன்னை அடியவரோடும் தன் காதலனாகிய தலைவனை இறைவனோடும் உவமித்துரைப்பதாக அடிகள் கூறியிருத்தலும், இறைவனை நாயகனாகவும் தம்மை அவனருள் விழைந்த பெண்ணாகவும் கருதி அடிகள் அன்புசெய்த திறத்தினை நன்கு வலியுறுத்துவனவாகும்.

ஆகவே, அருளாசிரியர் அருளிய அருள் நூல்களில் அமைந்த அகப்பொருள் துறைகளுக்கு இறைவனைத் தலைவியாகவும் ஆன்மாவைத் தலைவனாகவும் கொண்டு விளக்கம் கூறும் முறையில் இத்திருக்கோவைத் திருப்பாடல் களுக்குப் பேரின்பப்பொருள் கூறுதல், அகப்பொருளொழுக லாறாகிய தமிழிலக்கண மரபுக்கும் சைவசித்தாந்தவியல்பாகிய சமய மரபுக்கும் சிறிதும் ஒவ்வாததாகும். அன்றியும் திருக் கோவையாருரையிற் பேராசிரியர் 'அறிவனூற் பொருள்' என்றது, ஆகமநூல் வழியின் நுதலிய ஞானயோக நுண்

பொருளையேயன்றித் தலைவன் தலைவியொழுகலாருகிய இப் பொருளையன்ரும்.

இத்திருக்கோவைக்கண் இறைவன் இயல்புகளை விரித் துரைத்துப் போற்றுவனவாக அமைந்த தொடர்கள் யாவும் அறிவனூற்பொருள் பற்றியனவாகவும், தலைவன், தலைவி, தோழி முதலியோர் இயல்புரைப்பனவாக அமைந்த தொடர் கள் யாவும் உலகநூற்பொருள்பற்றியனவாகவும் பகுத்து உணர்தல் இத்திருக்கோவையின் பொருளையுணர்ந்து மகிழ் தற்கு மிகவும் துணைசெய்வதாகும்.

திருவாசகமும் கோவைத் திருவாசகமும்

முத்திநெறியாகிய பேரின்பநிலையை அடைவதற்குச் சாதனமாகிய பத்திநெறியின் இலக்கியமாகத் திகழ்வது திருவாசகம் என்பதும், உலகியல் வாழ்வுக்கு இன்றியமையாத இன்ப அன்பினை வளர்க்கும் அகத்திணை யொழுக லாற்றை விரித்துரைக்கும் வாயிலாகப் பத்திநெறியின் பயனாகிய பேரின்ப வாழ்வின் பெற்றியினை உய்த்துணர வைப்பது திருச்சிற்றம்பலக்கோவை என்பதும் முன்னர் விளக்கப்பெற்றன. இத்திருக்கோவையில், பாட்டுடைத் தலைவனாகிய தில்லைச் சிற்றம்பலவனைப் பரவிப் போற்றுவன வாக அமைந்த பகுதிகள்யாவும், அம்முதல்வனது பொருள் சேர் புகழ்த்திறத்தினை விளக்குவனவாய்க் கற்போர் நெஞ்சத் தைக் கசிந்துருகச் செய்வனவாம். திருக்கோவையிலுள்ள இப்பகுதிகள் திருவாசகத்தின் சொற்பொருள் நடையினை அடியொற்றியமைந்துள்ளமை பின்வரும் ஒப்புமைப்பகுதி களால் இனிது புலனாம். பின்வரும் தொடர்களில் முன் னுள்ள எண்கள் திருக்கோவையார் பாடல் எண்களாகும். பின்னுள்ளவை திருவாசகப் பாடல்களுக்குரிய எண்களாகும்.

4 அடையார் புரங்கள், இகல்குன்ற வில்லிற் செற்றோன்
தில்லையீசன் எம்மான் எதிர்ந்த, பகல்குன்றப் பல்லுகுத்தோன்.

60 "பல்லிலனாகப் பகலை வென்றோன்" —

'அந்தரமே செல்லும் அலர்கதிரோன் பல்தகர்த்து'

திருவம்மானை —15

67 மறந்து மற்றைப், பொய்வானவரிற் புகாதுதன் பொற்கழற்கே
அடியேன் உய்வான்புக ஒளிர்தில்லை நின்றோன்.

அத்தேவர் அவர்தேவ ரென்றிங்ஙன்
பொய்த்தேவு பேசிப் புலம்புகின்ற பூதலத்தே
பத்தேதும் இல்லாதென் பற்றறநான் பற்றிநின்ற
மெய்த்தேவர் தேவர்க்கே சென்றூதாய் கோத்தும்பீ.

—திருக்கோத்தும்பி-5

71 யாவையுமாம் ஏகத்தொருவன்.

'ஏகனனேக னிறைவனடி வாழ்க' – சிவபுராணம்

'தான் ஒருவனுமே பலவாகி நின்றவா'—திருத்தோணேக்கம்–5

73 பொருளாவெனைப் புகுந்தாண்டு புரந்தான் மாலயன்பால்
இருளாயிருக்கும் ஒளி.

'பொருளே தமியேன் புகலிடமே.................
இருளேவெளியே யிகபரமாகி யிருந்தவனே'—
நீத்தல் விண்ணப்பம்–17

'செங்கணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம் நம்பாலதா'
—திருவெம்பாவை–17

75 விண்ணைமடங்க விரிநீர்பரந்து வெற்புக்கரப்ப
மண்ணைமடங்க வருமொருகாலத்தும் மன்னிநிற்கும் அண்ணல்.

'ஊழிமுதல்வனுய் நின்ற ஒருவனே' —திருவெம்பாவை–8

86 தன்னீரடிக் கென்னிரண்டு கரங்கள் தந்தான்.

"வணங்கத் தலைவைத்து வார்கழல்வாய் வாழ்த்தவைத்து'
—திருப்பூவல்லி–7

91 அன்பர்க்கு ஆரத்தழை அன்பு அருளிநின்றேன்.

"தொண்டனேற்கும் உண்டாங்கொல், வேண்டாதொன்றும்
வேண்டாது மிக்க அன்பே மேவுதலே"
—பிரார்த்தனைப்பத்து–4

92 முன்தகர்த்தெல்லா இமையோரையும் பின்னைத் தக்கன்முத்தீச்,
சென்றகத்தில்லாவகை சிதைத்தோன்.

'சந்திரனைத் தேய்ந்தருளித் தக்கன்றன் வேள்வியினில்,
இந்திரனைத் தோள்நெரித்திட் டெச்சன் தலையரிந்து
அந்தரமே செல்லும் அலர்கதிரோன் பற்றகர்த்துச்,
சிந்தித் திசைதிசையே தேவர்களை ஓட்டுகந்த
செந்தார்ப்பொழில் புடைசூழ் தென்னன் பெருந்துறையான்'
—திருவம்மானை–15

102 மைத்தழையா நின்ற மாமிடற் றம்பலவன் கழற்கே
மெய்த்தழையா நின்ற அன்பினர்போல விதிர்விதிர்த்து.

"மெய்தானரும்பி விதிர்விதிர்த்துன் விரையார்கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்ததும்பி' —திருச்சதகம்–1

106 மத்தகஞ் சேர்தனி நோக்கினன் வாக்கிறந்தூறமுதே
ஒத்தகஞ் சேர்ந்தென்னை உய்யநின்றேன்.

"வாக்கிறந்தமுதம் மயிர்க்கால் தோறும்
தேக்கிடச் செய்தனன்' —திருவண்டப்பகுதி. 170, 171

112 தவளத்த நீறணியுந் தடந்தோளண்ணல் தன்னொருபா
லவள் அத்தனும் மகனும் தில்லையான்.

'இமவான்மகட்குத், தன்னுடைக்கேள்வன், மகன் தகப்பன்
தமையன்" —திருப்பொற்சுண்ணம்–13

114 தெவ்வரை மெய்யெரிகாய்சிலையாண்டென்னை யாண்டுகொண்ட
செவ்வரை மேனியன் சிற்றம்பலவன்.
'கல்லைமென் கனியாக்கும் விச்சைகொண்டு, என்னை
நின் கழற்கு அன்பனுக்கினும்' —திருச்சதகம்.—94

116 காதரந்தீர்ந்தருளும், தையல்வளர்மேனியன்.
'அச்சந்தீர்த்தாட்கொண்டான்' —திருச்சதகம்—29

118 தொழுதெழுவார், வினைவளம் நீறெழ நீறணியம்பலவன்.
'சிவனவன் திரள்தோள்மேல் நீறுநின்றது
கண்டனையாயினும் நெக்கிலை' —திருச்சதகம்—33

122 தண்ணறவுண் களிநீயெனச் செய்தவன்.
'கருணைமட்டுப் பருகிக்களித்து மிண்டுகின்றேனை'
—நீத்தல் விண்ணப்பம்—33

124 இப்பிறப்பில் அழுந்தாவகையென்னை யாண்டவன்.
'இப்பிறவியாட் கொண் டினிப்பிறவாமே காத்து'
—திருப்பொற்சுண்ணம்—12

127 முத்தன், முத்திவழங்கும்பிரான்.
'முத்தனே முதல் வா' — அருட்பத்து. 7
'முத்தி அருளும் மலை' — திருத்தசாங்கம். 5
'மூலபண்டாரம் வழங்குகின்றான் வந்து முந்துமினே'
—திருப்பாண்டிப் பதிகம்-5

129 உள்ளலரைக் கீடஞ்செய்து என்பிறப்புக்கெடத்
தில்லை நின்றோன்.
'ஆனையாய்க் கீடமாய் மானுடராய்த் தேவராய்
ஏனைப்பிறவாய்ப் பிறந்திறந் தெய்த்தேனை............
.. ...தன்தொழும்பிற்கொண்டருளும் வானவன்'
திருப்பொற்சுண்ணம்—14

140 நினைவித்துத்தன்னை யென்னெஞ்சத் திருந்தம்பலத்துநின்று
புனைவித்த ஈசன்.
'நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனை'
—திருக்கோத்தும்பி—12

147 ஆனந்தமாக்கடல் ஆடு சிற்றம்பலம்.
'பரமானந்தப் பழங்கடலதுவே' —திருவண்டப்பகுதி—66
'பரமானந்தப் பழங்கடல்'
'பேரா ஒழியாப் பிரிவில்லா, மறவா நினையா அளவிலா
மாளா இன்ப மாகடலே'
'கடலேயனைய ஆனந்தம்' —பிரார்த்தனைப்பத்து. 5, 6, 7.
வானுந்துமாமதி வேண்டியழும் மழப்போலும்.
(198) விசும்புற்ற திங்கட்கு அழும்மழப்போன்று.
'பைதலாவதென்று பாதுகாத்திரங்கு', —திருச்சதகம்—78

150 மாற்றேனென வந்தகாலனை ஓலமிட அடர்த்த
கோற்றேன்.
'கோற்றேன் எனக்கு என்கோ' —உயிருண்ணிப்பத்து-8

153 செம்மலராயிரந் தூய்க் கருமால் திருக்கண்ணணியும்
மொய்ம் மலரீர்ங்கழ லம்பலத்தோன்.

180 அலராயிரந்தந்து வந்தித்து மாலாயிரங்கரத்தால்
அலரார்கழல் வழிபடு செய்தாற்களவில் லொளிகள்
அலராவிருக்கும் படைகொடுத்தோன்.

'சலமுடைய சலந்தரன்றன் உடல்தடிந்த நல்லாழி
நலமுடைய நாரணற்கன் றருளியவாறென்னேடீ
நலமுடைய நாரணன்றன் நயனமிடந் தரனடிக்கீழ்
அலராகவிடவாழி அருளினன்காண் சாழலோ'—திருச்சாழல்

156 தில்லைமுன்னோன் கழற்கே, கோட்டந்தரும்நம்
குருமுடி வெற்பன்.
'பாவநாசாவுன்பாதமேயல்லாற் பற்றுநான்மற்றிலேன்
கண்டாய்'
'தொழுவனோ பிறரைத் துதிப்பனோ எனக்கோர்
துணையென நினைவனோ' —வாழாப்பத்து–9, 10.

160 முன்னுமொருவர் இரும்பொழில் மூன்றற்கும், முற்றும் இற்றாற்
பின்னும் ஒருவர்.
'முன்னைப்பழம் பொருட்கு முன்னைப்பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனே'
—திருவெம்பாவை–9

171 நாகந்தொழ வெழிலம்பலம் நண்ணிநடநவில்வோன்.
"பதஞ்சலிக்கருளிய பரமநாடக' —கீர்த்தித்திருஅகவல்–138

173 சோத்துன்னடியமென்றோரைக் குழுமித்தொல்வானவர்சூழ்ந்
தேத்தும்படி நிற்பவன்.
'சோத்தெம்பிரான்' —நீத்தல் விண்ணப்பம்–4-4
'சோத்தெம்பிரானென்று' —திருப்பொற்சுண்ணம்–8
'சோத்தமெம்பெருமானே' —ஆசைப்பத்து–4.

185 உள்ளும் உருகி யுரோமஞ் சிலிர்ப்ப வுடையவன் ஆட்
கொள்ளுமவரிலோர் கூட்டந்தந்தான்.

"என்புநைந் துருகி நெக்குநெக்கேங்கி
அன்பெனும் ஆறு கரையது புரள
நன்புல னொன்றி நாதவென் றரற்றி
உரைதடுமாறி உரோமஞ் சிலிர்ப்பக்
கரமலர் மொட்டித் திருதய மலரக்
கண்களிகூர நுண்துளி யரும்பச்
சாயா அன்பினை நாடொறுந் தழைப்பவர்"
—போற்றித்திருஅகவல் 80-86

'அடியேன் உன், அடியார் நடுவுளிருக்கும்
அருளைப்புரியாய்' —கோயில் மூத்ததிருப்பதிகம்–1
'ஆசைதீர்த்தடியாரடிக்கூட்டிய அற்புதமறியேனே'
—அற்புதப்பத்து–8.

194 ஒராகம் இரண்டெழிலாயொளிர்வோன்.
'தோலுந்துகிரும்.........தொன்மைக்கோலம்'
—திருக்கோத்தும்பி–18
'பைங்குவளைக்கார்மலரால் செங்கமலப்பைம்போதால்......
எங்கள்பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த'
—திருவெம்பாவை–13

195 நஞ்சமஞ்சி மறுகி விண்ணோர்பணியக் கருணை தரும்பரன்.
'நஞ்சமஞ்சி ஆவவெந்தாயென்றவிதாவிட' —திருச்சதகம்–4

204 தாயிற்சிறந்தன்று நாண்.
'தாயிற்சிறந்த தயாவான தத்துவனே' —சிவபுராணம்–61

214 எம்மைப்பிடித்தின், ருண்டெல்லை தீரின்பந்தந்தவன்.
'ஈர்த்தென்னையாட்கொண்ட எந்தைபெருமானே'-சிவபுராணம்
'அடித்தடித்து அக்காரமுன் தீற்றிய அற்புதமறியேனே'
—அற்புதப்பத்து–3

216 அம்பலத்தோன் அடித்தேரலரென அஞ்சுவன்.
'செறிதருகழல்களேத்திச் சிறந்தினிதிருக்கமாட்டா
அறிவிலாதவரைக்கண்டால் அம்மநாம் அஞ்சுமாறே'
—அச்சப்பத்து–8

217 தென்புலியூர் புகழ்வார், தென்னவென உடையான் நடமாடு
சிற்றம்பலமே.
'தென்னதென்னவென்று தெள்ளேணங்கொட்டாமோ'
—திருத்தெள்ளேணம்–9

232 நான் அணுகப்பெற்றேன் பிறவிபெருமற் செய்தோன்.
'இப்பிறவியாட் கொண் டினிப் பிறவாமேகாத்து'
—திருவம்மானை-12

234 அம்பலத்தானைப் பழித்துமும்மைத், தீயினதாற்றல்
சிரங்கண்ணிழந்து திசைதிசைதாம் போயின எல்லையெல்லாம்.
'சந்திரனைத் தேய்த்தருளித் தக்கன்றன்வேள்வியினில்
இந்திரனைத் தோள்நெரித்திட்டெச்சன் தலையரிந்து
அந்தரமே செல்லும் அலர்கதிரோன் பல்தகர்த்துச்
சிந்தித் திசைதிசையே தேவர்களை ஓட்டுகந்த
செந்தார்ப் பொழில்புடைசூழ் தென்னன் பெருந்துறையான்'
—திருவம்மானை–15

246 மின்றெத்திடுகழல் நூபுரம்வெள்ளை செம்பட்டுமின்ன
ஒன்றெத்திட வுடையாளொடொன்றும் புலியூரன்.
'தோலுந்துகிலும் குழையும் சுருள்தோடும்

பால்வெள்ளை நீறும்பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமுந் தொக்கவளையு முடைத்தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந் தூதாய் கோத்தும்பீ'
—திருக்கோத்தும்பி-18

270 சீரருக்கன் குருட்டிற்புகச் செற்றகோன்.
(184) பகன்தாமரைக்கண் கெடக்கடந்தோன்.
'உண்ணப்புகுந்த பகனொளித்தோடாமே
கண்ணைப் பறித்தாவா றுந்தீபற' —திருவுந்தியார்-12

293 மனக்களியாயின்றி யான்மகிழ்தூங்கத் தன்வார்கழல்கள்,
எனக்களியாநிற்கும் அம்பலத்தோன்.
'பித்தென்னையேற்றும் பிறப்பறுக்கும் பேச்சரிதாம்
மந்தமேயாக்கும் வந்தென்மனத்தை—அத்தன்'
—திருவெண்பா-4

298 என்கடைக்கண்ணினும் யான்பிற ஏத்தாவகையிரங்கித்
தன்கடைக்கண் வைத்ததண் தில்லைச் சங்கரன்.
'உள்ளேன் பிறதெய்வம் உன்னையல்லாதெங்கள் உத்தமனே'
—திருச்சதகம்-2

300 இருந்துதி யென்வயிற் கொண்டவன்.
'நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனை'
—திருக்கோத்தும்பீ-12

307 அம்பலஞ்சேர் ஆனந்தவெள்ளத் தறைகழலோனருள்
பெற்றவரின்
ஆனந்தவெள்ளம் வற்றாது முற்றாதிவ் வணிநலமே.
'தானந்தமில்லான் தனையடைந்த நாயகனை
ஆனந்தவெள்ளத் தழுத்துவித்தான் காணேடீ'
—திருச்சாழல்-10

310 கற்பாமதிற்றில்லைச் சிற்றம்பலமது காதல்செய்த
விற்பா விலங்கலெங்கோனை விரும்பலர்போல அன்பர்
சொற்பா விரும்பினர்.
'கல்வியென்னும் பல்கடற்பிழைத்தும்'
—போற்றித்திருஅகவல்-38
'கற்றுரையான்வேண்டேன் கற்பனவும் இனியமையும்'
—திருப்புலம்பல்-3

311 பிரியாமையுமுயிர் ஒன்றாவதும் பிரியிற்பெரிதுந்
தரியாமையு மொருங்கே நின்றுசாற்றினர்.
'உரியேனல்லே னுனக்கடிமை யுன்னைப்பிரிந்திங்
கொருபொழுதுந்
தரியேன் நாயேன் இன்னதென்றறியேன்
சங்கரா கருணையினாற்

பெரியோனொருவன் கண்டுகொளென்றுன் பெய்கழலடிகாட்டிப்
பிரியேனென்றென்றருளிய வருளும்பொய்யோ
எங்கள்பெருமானே ' —எண்ணப்பதிகம்-2

314 பல்பிறவித் தொகைதணித்தற்கென்னை யாண்டுகொண்டோன்.
(86) என்பிறவிகெட்டின், றழிகின்றதாக்கிய தாளம்பலவன்.
' பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள்வெல்க '
—சிவபுராணம்-7

' என்பிறவித் தாழைப் பறித்தவா '
—திருத்தோணோக்கம்-13

315 மிக்க, விருப்புறுவோரை விண்ணோரின்மிகுத்து.
' எப்புன்மையரை மிகவேயுயர்த்தி விண்ணோரைப்பணித்தி '
—திருச்சதகம்-10

326 கருமால் விடை யுடையோன்.
' இடபமதாய்த் தாங்கினன் திருமால்காண் '
—திருச்சாழல்-15

337 மூவர்நின்றேத்த முதலவனுட முப்பத்து மும்மைத்
தேவர் சென்றேத்துஞ் சிவன்.
'மூவரும் முப்பத்து மூவருமற்ருெழிந்த
தேவருங்காணுச் சிவபெருமான் ' —திருவெண்பா-9

338 தென்மாத்திசை வசைதீர்தரத்தில்லைச் சிற்றம்பலத்துள்
என்மாத் தலைக்கழல் வைத்தெரியாடும் இறை.
' தென்பாலுகந்தாடுந் தில்லைச் சிற்றம்பலவன் '
—திருச்சாழல்-9

343 நாய்வயினுள்ள குணமுமில்லேனை நற்ருெண்டு கொண்ட
தீவயின்மேனியன்.
' இங்கு, ஊர் நாயிற்கடையானேன் ' —திருச்சதகம்-56
' நாயிற்கடையாம் நாயேனை நயந்துநீயே ஆட்கொண்டாய் '
—குழைத்தபத்து-9

346 சுற்றம் பலமின்மை காட்டித்தன் தொல்கழல்தந்த
தொல்லோன்.
' இணையார் திருவடி யென்றலைமேல் வைத்தலுமே
துணையான சுற்றங்கள் அத்தனையும் துறந்தொழிந்தேன் '
—திருப்பூவல்லி-1

377 அம்பலத்தடியார், என்பிடைவந்து அமிழ்தூறநின்ருடி.
' அற்புதமான அமுததாரைகள்
எற்புத்துளைதொறும் ஏற்றினன் '
—திருவண்டப்பகுதி-174, 175.

தொல்காப்பியமும் திருக்கோவையாரும்

திருவாதவூரடிகள், தொல்காப்பியம், இறையனுர் களவியலுரை ஆகிய தமிழியல் நூல்களையும் சங்கச் செய்யுட்கள் திருக்குறள் முதலிய செந்தமிழிலக்கியங்களையும் நன்கு தேர்ந்து, தமிழியல் வழக்கமாகிய அகப்பொருளொழுகலாறு இத்தன்மையது என யாவரும் உணர்ந்து மகிழும்வண்ணம் அகத்திணைக் கோவையாகிய இத்திருக்கோவையை அருளிச் செய்துள்ளார். ஆகவே அடிகள் பாடியருளிய திருச்சிற்றம் பலக் கோவையில் அவர்க்கு முற்பட்ட செந்தமிழ்ச் சான்ருேராகிய தொல்காப்பியனுர், திருவள்ளுவர், கபிலர், ஒளவையார் முதலிய புலவர் பெருமக்களின் கருத்துக்களும் சொற்ருெடர்களும் பொன்னேபோற் போற்றி எடுத்தாளப் பெற்றிருத்தல் காணலாம். மதுரைத் திருவாலவாய்த் திருக்கோயிலில் எழுந்தருளிய சிவபெருமான் கூடலம்பதியில் நிறுவப்பெற்ற தமிழ்ச் சங்கத்திலே தானும் ஒரு தமிழ்ப் புலவராக வீற்றிருந்து தமிழாராய்ந்தருளிய அருள் நிகழ்ச்சியை அடிகள் இத்திருக்கோவையிற் குறித்துள்ளமை முன்னர் விளக்கப் பெற்றது. 'சிற்றம்பலத்தும் என் சிந்தையுள்ளும் உறைவான் உயர்மதிற் கூடலின் ஆய்ந்த ஒண் தீந்தமிழின் துறை' என அடிகள், தமிழ்நூற் பரப்பினை ஞானப் பொருளாய் நின்ற இறைவனுல் ஆராயத்தக்க ஆழமும் பரப்பும் உடையதாகக் குறித்தலால், சங்கத்தமிழ் நூல்களில் அடிகள் கொண்டுள்ள நன்மதிப்பும் ஆழ்ந்த புலமையும் இனிது விளங்கும்.

'மகளிர்க்கு உயிரைக் காட்டிலும் நாணம் சிறந்தது; அத்தகைய நாணத்தினும் கற்புச் சிறப்புடையது' என்னும் முன்ஞேர் மொழியைத் தலைமகள் தனது உள்ளத்துட் கொண்டு தலைவன் இருக்கும் இடத்தினை அடைய நினைத்தல் இயல்பு. கற்புடை மகளிர்க்குரிய இவ்வியல்பினை,

> "உயிரினுஞ் சிறந்தன்று நாணே நாணினுஞ்
> செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்றெனத்
> தொல்லோர் கிளவி புல்லிய நெஞ்சமொடு
> காமக் கிழவ னுள்வழிப் படினும்" (தொல்-களவியல்-23)

எனவரும் நூற்பாவில் ஆசிரியர் தொல்காப்பியனார் விரித்துக் கூறியுள்ளார். தலைமகளது உள்ளத்தமைந்த கற்புநலம் பற்றிய இக்கருத்தினை,

> தாயிற் சிறந்தன்று நாண்தைய லாருக்கந் நாண்தகைசால்
> வேயிற் சிறந்தமென் தோளிதன் கற்பின் விழுமிதன்று ; ஈங்
> கோயிற் சிறந்து சிற்றம்பலத் தாடும்எம் கூத்தப்பிரான்
> வாயிற் சிறந்த மதியிற் சிறந்த மதிநுதலே. (திருக்-204)

எனவரும் திருப்பாடலில் அடிகள் விரித்துக் கூறியுள்ளார்.

தலைமகனைப் போக்குஉடன்படுத்திய தோழி, தலைமகள் பாற் சென்று, 'மகளிரால் பாதுகாக்கப்படுவனவற்றுள் நாணத்தையொத்துச் சிறந்த பொருள் பிறிதொன்றில்லை. அத்தகைய நாணமும் கற்புப்போல அத்துணைச் சிறப்புடைய தன்று' என உலகியல் கூறுவாள் போன்று தலைமகள் உடன் போக்கிற்கு உடன்படுமாறு கற்பின் நலத்தினை வற்புறுத்துவதாக அமைந்தது மேற்காட்டிய திருப்பாடலாகும் இதன் கண் வரும் 'கூத்தப்பிரான் வாயிற் சிறந்த மதியிற் சிறந்த' என்ற தொடர்க்கு, "உயிரினுஞ் சிறந்தன்று நாணே நாணினுஞ், செயிர்தீர்காட்சிக் கற்புச் சிறந்தன்று' என்றாராகலின், தாய்போல நாண் சிறத்தலும் நாணினும் கற்புச் சிறத்தலும் ஆகிய இரண்டும் கூத்தப்பிரான் வாயிற் சிறந்த நூல்கள் இடத்துச் சிறப்புடைய பொருள்' என்று உரைப்பினும் அமையும்" எனப் பேராசிரியர் விளக்கம் கூறுவர். இவ் விளக்கத்தினைக் கூர்ந்து நோக்குங்கால், 'கூத்தப்பிரான் வாயிற் சிறந்த மதி' எனப்படும் அறிவு நூல்களுள் ஆசிரியர் தொல்காப்பியனார் இயற்றிய தொல்காப்பியமும் ஒன்றாகும் எனத் திருவாதவூரடிகள் இத்திருப்பாடலிற் குறித்துள்ளமை நன்கு புலனும். "ஒருநாட் பழகி யுயிரிற் பிரியாதுடன் வளர்ந்த அருநாண்" (திருக்கோவை-44) எனத் தலைமகள் கூற்றில் வைத்து உயிரினுஞ் சிறந்த நாணின் சிறப்பினை அடிகள் விளக்கிய திறம் இங்கு நினைத்தற்குரியதாகும்.

எல்லாவுயிர்க்கும் இன்பத்துன்பத்திற்குக் காரணமான இருவினையையும் வகுத்து நுகர்விப்பவன் எங்கும் நீக்கமற நிறைந்த இறைவனாகிய முழுமுதற்பொருளே என்பது, 'பால்வரை தெய்வம்' (தொல்-களவி-57) எனவரும் தொல் காப்பியத் தொடரால் அறியப்படும். 'பால்வரை தெய்வம்' என்னும் இத்தொடர், பால் வேறு, அதனை வரைந்து நுகர் விக்கும் தெய்வம் வேறு என்னும் மெய்ம்மையினைப் புலப்

படுத்தல் காணலாம். தெய்வத்தால் வகுக்கப்படும் முறையே பால் எனவும் வகை எனவும் ஊழ் எனவும் வழங்கப்படும். இந்நுட்பத்தினை,

'வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி
தொகுத்தார்க்குந் துய்த்த லரிது' (377)

என்னும் திருக்குறளில் திருவள்ளுவர் தெளிவாகக் குறித்துள்ளார். ஊழ்வினை தானேவந்து வினைசெய்த உயிரைப் பற்றி நுகர்விக்கும் உணர்வும் ஆற்றலும் உடையதன்று என்றும், இயங்குதிணை நிலைத்திணை ஆகிய எல்லாப் பொருள்களையும் ஓர் ஒழுங்குபட வகுத்து இயக்கி நிற்கும் இறைவனால் வகுக்கப்பட்ட முறைமையாகிய நியதியே ஊழ் என வழங்கப்படுவதென்றும் தெளிவுபடுத்த எண்ணிய திருவள்ளுவர், 'வகுத்தான் வகுத்த வகை' என்ற தொடரால், ஊழ்வினையாவது இத்தன்மையதென விளக்கியுள்ளார். இத்தொடரில் வகுத்தான் என்னும் சொல் இறைவனைக் குறிப்பது. வகுத்த வகை என்றது, இறைவனால் வகுக்கப்பட்ட நியதியாகிய ஊழினைக் குறிப்பதாகும் பகுத்தது பால் என வழங்கினாற்போல, வகுத்தது வகை என வழங்குவதாயிற்று. தொல்காப்பியனாரும் திருவள்ளுவரும் முறையே இறைவனைப் பற்றியும் ஊழைப்பற்றியும் கூறிய இக்கருத்தினை,

'யாழின்மொழி மங்கைபங்கன் சிற்றம்பலத்தான் அமைத்த
ஊழின் வழியதொன் றென்னை' (திருக்கோவை-350)

எனவரும் தொடரில் திருவாதவூரடிகள் தெளிவாக விளக்கியுள்ளமை உணர்ந்து மகிழத்தக்கதாகும். இதன்கண் 'ஊழிற் பெருவலியாவுள' (380) எனவரும் திருக்குறட் பொருளும் எடுத்தாளப்பட்டுள்ளமை காணலாம்.

முன்னைப் பிறப்பிற் பழகியவர்களை இப்பிறப்பிலும் முன் போல் ஒன்றுவிப்பதும் அன்றி வேறுபடுத்துப் பிரித்து வைப்பதும் எனப் பால் (ஊழ்) இருவகைப்படும் என்பதும், ஒன்றுவிக்கும் திறத்தால் உயர்ந்த ஊழின் வழியே நிகழும் இறைவனது ஆணையால், உருவும் திருவும் முதலிய நலங்களால் ஒத்த தன்மையினராகிய தலைவனும் தலைவியும் ஓரிடத்து எதிர்ப்பட்டு அன்பினால் ஒன்றுபடுவர் என்பதும் ஆகிய உண்மையினை,

'ஒன்றே வேறே யென்றிரு பால்வயின்
ஒன்றி யுயர்ந்த பால தாணையின்
ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப' (தொல்-களவு-2)

எனவரும் நூற்பாவில் தொல்காப்பியனுர் குறித்துள்ளார். இவ்வாறு இறைவனது ஆணையாகிய நல்லூழின் திறத்தால் ஒரு பொழிலகத்துத் தலைமகளை எதிர்ப்பட்டு அன்பினுற் கூடி மகிழ்ந்த தலைவன், தான்பெற்ற இன்பத்தியல்பினைக் கூறுவதாக அமைந்தது,

> சொற்பா லமுதிவள் யான்சுவை யென்னத் துணிந்திங்ஙனே
> நற்பால் வினைத்தெய்வம் தந்தின்று நானிவ ளாம்பகுதிப்
> பொற்பா ரறிவார் புலியூர்ப் புனிதன் பொதியில் வெற்பிற்
> கற்பா வியவரை வாய்க்கடி தோட்ட களவகத்தே. (8)

எனவரும் திருக்கோவையாகும். "புலப்படச் சொல்லும் போது 'அமிழ்தம் இவள், யான் அதன் சுவை' என்று துணிந்து சொல்ல, இவ்வண்ணமே நல்லூழின்பாற்பட்ட தெய்வம் தருதலால், இன்று (புணர்ச்சியால் வரும் இன்பம் துய்த்தற் பொருட்டாக, யானென்றும் இவளென்றும் வேறு பாட்டோடு கூடிய) அழகை (இதனை அனுபவிக்கின்ற யானே அறியினல்லது) பிறர் யார் அறிவார்?" எனத் தலைவன், தலைவியும் தானும் கூடிப்பெற்ற புணர்ச்சி இன்பத்தின் இயல்பினைக் கூறி மகிழ்கின்ருன்.

'சொற்பாலமுது இவள், யான் சுவை' என்றது, சுவையுடைய பொருளுக்கும் அதன்கண் பிரிவற அமைந்த சுவைக்கும் வேறுபாடு இல்லாதவாறுபோல, எனக்கும் இவளுக்கும் வேறுபாடில்லை என்றவாறு. இவ்வாறு தான் அவள் என்னும் வேற்றுமையின்றித் தலைவன் தலைவி இருவரும் எதிர்ப்பட்டு மகிழும் இயல்பினைத் 'தானே அவளே தமியர் காணக், காமப்புணர்ச்சி இருவயின் ஒத்தல்' (இறையனுரகப்பொருள் சூத்-2) எனவரும் நூற்பாவாலும், "தானே அவள், அவளே தான்; என்பது என் சொல்லியவாருே எனின், தான் அவள் என்னும் வேற்றுமையிலர் என்றவாறு" எனவரும் உரைப் பகுதியாலும் நன்குணரலாம். மேற்குறித்த இறையனுர் களவியல் நூற்பாவையும் அதன் உரை விளக்கத்தினையும், 'சொற்பாலமுது இவள், யான் சுவை' எனவும், 'நான் இவளாம் பகுதிப் பொற்பு' எனவும் வரும் தொடர்களில் அடிகள் குறித்தருளிய திறம் இங்கு உளங்கொளத் தக்கதாகும்.

———

இறையனுர் களவியலுரையும் திருக்கோவையாரும்

மணிவாசகப் பெருமான் இறையனுர் களவியலுரை யினை இலக்கணமாகக்கொண்டு திருச்சிற்றம்பலக்கோவை யென்னும் அகப்பொருளிலக்கியத்தினை இயற்றியுள்ளார் என்பது, களவியலுரையில் வரும் அகப்பொருட்டுறை களையும் உரைத்தொடர்களையும் கருத்துக்களையும் அவ்வாறே இத்திருக்கோவையில் அடிகள் எடுத்தாண்டிருத்தலால் இனிது புலனும்.

பொருவிறந்தாராகிய தலைமகனும் தலைமகளும் தத்தம் ஆயத்தின் நீங்கித் தமியராய் ஒரு பொழிலகத்து எதிர்ப்படு தற்கு, அவ்விருவரையும் இப்பிறப்பில் ஒன்றுவிக்கும் நல்லூழே காரணமாதலை விளக்கிய களவியலுரையாசிரியர், வேறு வேறிடங்களிற் பிறந்து வளர்ந்தாராகிய அவ்விரு வரும் ஓரிடத்து எதிர்ப்பட்ட தன்மையை, "வடகடலிட்ட ஒரு நுகம் ஒரு துளை, தென்கடலிட்ட ஒருகழி சென்று கோத்தாற் போலவும்.... தலைப்பெய்து ஒருவர் ஒருவரைக் காண்டல் நிமித்தமாகத் தமியராவர்" என உவமை கூறி விளக்கியுள்ளார். களவியலுரையாசிரியர் கூறும் இவ்விளக் கத்தை அடியொற்றி அமைந்தது,

வளைபயில் கீழ்கடல் நின்றிட மேல்கடல் வானுகத்தின்
துளைவழி நேர்கழி கோத்தெனத் தில்லைத்தொல்லோன்
கயிலைக்
கிளைவயி னீக்கியிக் கெண்டையங் கண்ணியைக்
கொண்டுதந்த
விளைவையல் லால்விய வேன்நய வேன்தெய்வ
மிக்கனவே (6)

எனவரும் திருக்கோவையாகும். களவியலுரையாசிரியர் பொதுவாக வடகடல், தென்கடல் எனக்குறித்தாராயினும் அவ்வுவமையினைத் தமிழ்நாட்டு மக்கள் புரிந்து கொள்ளும் முறையில் கீழ்கடல், மேல்கடல் என அடிகள் மாற்றி யமைத்த நுட்பம் அறிந்து மகிழ்தற்குரியதாகும்.

தலைமகனும் தலைமகளும் ஒருவரை யொருவர் எதிர்ப் பட்டுக் காணுங்கால் தம் உணர்வினரல்லராதற் றன்மையை

அங்ஙனங் காணுதற்கு முன்னரே பெற்றுடையர் என விளக்க எண்ணிய களவியலுரையாசிரியர், "ஏனுதி மோதிரஞ் செறித்த திருவுடையான் ஒருவன் ஏனுதி மோதிரஞ் செறிக்கும் அத்திரு, அவன் செறிக்கின்ற பொழுதே உண்டாயிற்றன்று; முற்கொண்டு அமைந்து கிடந்தது........அது பின்னை ஒரு காலத்து ஓரிடத்து ஒரு காரணத்தான் எய்துவிக்கும். அது போலே இன்ன நாள் இன்ன பக்குவத்து இன்னபொழுது இன்ன இடத்து இவள் காரணமாக இவன் தன்னுணர்வினன் அல்லனும் என்பதூஉம், இவன் காரணமாக இவள் தன்னுணர்வினள் அல்லளாம் என்பதூஉம் முன்னே முடிந்து கிடந்தன. அது பின்னுங் கொணர்ந்து எய்துவிக்கும்'' என எடுத்துக் காட்டுத் தந்து விளக்கியுள்ளார். இவ்விளக்கத்தின் சிறப் பினை உளங்கொண்ட திருவாதவூரடிகள், தாம் இறைவனால் ஆட்கொள்ளப்படுதற்கு முன்பே, தம்மை அடியவனாக ஆட்கொண்டருளுதல் வேண்டும் என்னும் நியதியை இறை வன் தனக்குரியதொரு முறைமையாகக் கொண்டுடையான் என்பதுபட,

'என்னை முன் ஆள் ஊழுடையான்' (திருக்கோவை - 7)

எனத் தம்மை ஆண்டுகொண்டருளிய இறைவனை உளங் கசிந்து போற்றுகின்றார். குருவாக எழுந்தருளிய இறை வனைத் தாம் எதிர்ப்பட்டு அம்முதல்வனுக்குத் தாம் அடிமைப் படுதற்கும் அம்முதல்வன் தம்மை அடிமையாக ஏற்று ஆண் டருளுதற்கும் அமைந்த திருவருள் முறைமையினைப் புலப் படுத்தும் நிலையில் அமைந்தது, 'என்னை முன் ஆள் ஊழு டையான்' என்னும் இத்தொடராகும். 'முன் என்னை ஆள் ஊழுடையான்' என்பதற்கு, 'எனக்கு ஆட்படுந்தன்மை உண்டாவதற்கு முன்னே என்னை ஆள்வதொரு புதிதாகிய முறைமையையுடையான்' எனப் பேராசிரியர் கூறிய விளக்கம் இங்கு நோக்கத்தக்கதாகும்.

'அன்பி னைந்திணைக் களவு' (களவியல் - 1) என இறையனார் குறித்தவாறு, திருவாதவூரடிகள், தாம் அன்பின் ஐந்திணைக் களவொழுக்கத்தினைப் பொருளாகக் கொண்டு பாடியருளிய இத்திருக்கோவையின் முதற் பாடலில், நூல் நுதல் பொருளாகிய அகனைந்திணை யொழுகலாற்றினை ஒரு மாலையாகக் கொண்டு உருவக அணியமையக் கூறியுள்ளார்.

திருக்கோவையாரிலுள்ள திருப்பாடல்களிற் சில இறையனார் களவியலுரையில் உரையாசிரியரால் மேற்கோளாகக் காட்டப்பட்ட பாண்டிக்கோவைச் செய்யுட்களின் சொற்பொருள் நடையினை ஒத்து அமைந்திருத்தல் காணலாம்.

'மேவியொன் றுரைவெண் மாத்துவென் றுன்கன்னி வீழ்பொழில்வாய்த்
தேவியென் றும்நின்னை யானினைக்கின்றது சேயரிபாய்
காவிவென் றுயகண்ணு யல்லையே லொன்று கட்டுரையாய்
ஆவிசென் றுற்பின்னை யாரேபெயர்ப்பர் அகலிடத்தே. (46)

எனவரும் பாண்டிக்கோவைச் செய்யுள், மொழிபெற வருந்தல் என்ற துறையில் அமைந்ததாகும். இத்துறையில் வரும்,

காவிநின் றேர்தரு கண்டர்வண் டில்லைக்கண் ணார்கமலத்
தேவியென்றே யையஞ் சென்றதன்றேயறியச் சிறிது
மாவியன் றன்னமென் னோக்கிநின் வாய்திற வாவிடினென்
ஆவியன் றேயமிழ் தேயணங்கே யின்றழிகின்றதே. (41)

என்ற திருக்கோவைப்பாடல் மேற்குறித்த பாண்டிக் கோவையினைச் சொற்பொருள் நடையால் பெரிதும் ஒத்தமைந்திருத்தல் கூர்ந்து நோக்கத்தக்கதாகும்.

'அவயவம் எழுதல் அரிதென விலக்கல்' என்ற துறையில் அமைந்தது,

அண்ணல் நெடுந்தேர் அரிகேசரியகன் ஞால மன்னுள்
வண்ணம் ஒருவா றெழுதினும் மாமணிவார் ந்தனைய
தண்ணென் கருங்குழல் நாற்றமு மற்றவள் தன்னடையும்
பண்ணென் மொழியும் எழுத வுளவோ படிச்சந்தமே. (82)

எனவரும் பாண்டிக்கோவையாகும். 'மொழிநடையெழுதல் அரிதென விலக்கல்' என்னும் துறையில் அமைந்தது,

'அடிச்சந்த மால்கண்டி லாதனகாட்டி வந்தாண்டு கொண்டென்
முடிச் சந்த மாமல ராக்குமுன் னோன்புலி யூர்புரையுங்
கடிச்சந்த யாழ்கற்ற மென்மொழிக் கன்னி யனநடைக்குப்
படிச்சந்த மாக்கும் படமுளவோ நும் பரிசகத்தே. (78)

எனவரும் திருக்கோவையாகும். இவையிரண்டும் பொருளால் ஒத்திருத்தல் காணலாம். 'படிச்சந்தம் என்பது ஒன்றன் வடிவையுடைத்தாய் அதுவென்றே கருதப்படும் இயல்பையுடையது' என்பர் பேராசிரியர். பரிசகம் - சித்திரசாலை. சிறந்த ஓவியம் எழுதப் புகுவோர், முதற்கண் தாம் எழுதக்

கருதிய ஓவியத்திற்கு முன்மாதிரியாக ஒரு வரைபடத்தினை அமைத்துக்கொண்டு அதனைப் பார்த்து அம்முறையில் எழுதுதல் மரபு. அங்ஙனம் முன்மாதிரியாகக் கொள்ளப் படும் வரைபடமே இங்குப் 'படிச்சந்தம்' எனக் குறிக்கப் பட்டது.

மேல் எடுத்துக் காட்டிய வண்ணம் பாண்டிக்கோவைச் செய்யுட்களும் திருச்சிற்றம்பலக்கோவைச் செய்யுட்களும் சொற்பொருள் நடையால் ஒத்துக்காணப்படினும், பாண்டிக் கோவைச் செய்யுட்களினும் திருச்சிற்றம்பலக்கோவைச் செய்யுட்கள், நவில் தொறும் சுவைமிகத்தரும் சொற் பொருள் நலங்களின் மேம்பட்டு விளங்குவனவாய் அடிகளது திருவருட் புலமையினை இனிது புலப்படுத்தி நிற்றல் அறியத்தக்கதாகும்.

பகற் பொழுதில் தலைமகளைக் கண்டு அளவளாவி மகிழ் தற்குரிய இடம் இதுவெனக் குறித்த தோழி, தலைமகளுடைய ஆயத்தாராகிய மகளிரைப் பல்வேறு விளையாடல்களைக் குறித்துத் தலைமகளை விட்டுத் தம்மியல்பால் பிரியச்செய்து, தமியளாய் நின்ற தலைமகளை உடன்கொண்டு, 'யாமும் போய் மயிலாடல் காண்போம்' எனக் கூறிக் குறித்த அவ்விடத்திற்கு அழைத்துச் செல்லும் நிலையில் அமைந்தது,

'தினைவளங் காத்துச் சிலம்பெதிர்கூஉய்ச் சிற்றில்
முற்றிழைத்துச்
சுனைவளம் பாய்ந்து துணைமலர் கொய்து தொழுதெழுவார்
வினைவளம் நீறெழ நீறணியம்பலவன்றன் வெற்பிற்
புனைவளர் கொம்பரன்னாய் அன்னகாண்டும்
புனமயிலே' (118)

எனவரும் திருக்கோவையாராகும். "இறைவனாகிய தன்னைத் தொழுது கொண்டு துயிலெழும் அன்பர்களது வினையினது பெருக்கம் பொடியாகச் சிதையுமாறு தன் திருமேனிக்கண் திருநீற்றையணியும் தில்லைச் சிற்றம்பலவனது மலையிலே அழகுபெற அணி செய்யப்பெற்று வளர்ந்த பூங்கொடியினை ஒப்பாய்! தினையாகிய வளத்தைக் காத்துச் சிலம்பிற்கு எதிரே (ஓசையுண்டாகக்) கூவியழைத்துச் சிறு வீட்டினை முழுவதுமாகச் செய்து முடித்து, சுனை நீரிற் பாய்ந்து விளை யாடி, அத்தன்மையவாகிய பொழிலிடத்தே (ஆடும்) மயிலைக் காண்போமாக" என்பது இதன் பொருளாகும். இதன் கண் 'அன்ன காண்டும் புனமயிலே' என்ற தொடர்க்கு

" அத்தன்மையவாகிய புனமயிலைக் காண்பேம் யாம் " எனப் பொருள் கூறி, அத்தன்மையவாகிய மயிலென்றது, பொருளதிகாரத்திற் கூறப்பட்ட தலைமகள், தான் தமியளாய் நின்று கண்ட மயிலை. இயற்கைப் புணர்ச்சியது இறுதிக்கண் தோழி தனது வாட்டத்தை வினவியபோது, 'யான் ஓர் இள மயில் ஆலுவது கண்டேன்; அதனை நீயும் காணப்பெற்றிலை என வாடினேன்' என்று உரைப்பக் கேட்டாளாதலான், அதனைப்பற்றி அம்மயிலைக் காண்டும் என்றாளாயிற்று " என விளக்கம் கூறுவர் பேராசிரியர். ஈண்டுப் பேராசிரியராற் பொருளதிகாரம் எனச் சுட்டப்பட்டது இறையனார் களவியலுரையாகும்.[1]

" பளிக்குப்பாறை மணித்தலத்துமிசை நீல ஆலவட்டம் விரித்தாற் போலத் தன் கோலக் கலாவங் கொளவிரித்து, முளையிள ஞாயிற்று இளவெயில் எறிப்ப ஓர் இளமயில் ஆடுவது கண்டு நின்றாள் " என்பது, இறையனார் களவியலுரை. இவ்வுரையிற் புனைந்து உரைக்கப்பட்ட மயிலையே, 'அன்னகாண்டும் புனமயிலே' எனத் தோழி கூற்றில் வைத்துத் திருவாதவூரடிகள் குறித்துள்ளார் என்பது பேராசிரியர் தரும் விளக்கத்தால் உய்த்துணரப் படும்.

1. இறையனார் களவியலுக்குப் 'பொருளதிகாரம்' என்னும் பெயருண்டென்பது, " இது பொருளதிகாரம்! நம் பெருமான் நமது இடுக்கண் கண்டு அருளிச்செய்தா னாகற்பாலது!" எனவரும் களவியலுரைப் பகுதியாற் புலனும்.

சங்க நூல்களும் திருக்கோவையாரும்

இயற்கைப் புணர்ச்சிகண் தலைமகளைக் கண்டு உவந்த நெஞ்சினனாகிய தலைமகன், அவளை ஒரு தெய்வப் பூமாலை யாக உருவகஞ் செய்து வியந்துரைப்பதாக அமைந்தது, "திருவளர் தாமரை' எனத் தொடங்கும் இத்திருக்கோவை யின் முதல் திருப்பாடலாகும். இங்ஙனம் தலைமகளை ஒரு மாலையாகக் கொண்டு உருவகித்தல் சங்ககாலந் தொட்டு நிலவிவரும் தமிழ் மரபாகும். இம்மரபு,

"கோடல் எதிர்முகைப் பசுவீ முல்லை
நாறிதழ்க் குவளையொ டிடைப்பட விரைஇ
ஐது தொடை மாண்ட கோதை போல
நறிய நல்லோள் மேனி
முறியினும் வாய்வது முயங்கற்கும் இனிதே" (குறுந் - 62)

என்னும் குறுந்தொகைச் செய்யுளில் இடம் பெற்றிருத்தல் காணலாம்.

'பூப்புனை மாலையும் மாலைபுனை மாதரும்
தோற்புனை வில்நாண் தொடர்கைக் கட்டியும்
கோச்சேரன் பெயருங் கோதை யென்ருகும்'
(திவாகரம் - 11)

என்பதனுற் பெண்ணுக்கு மாலை யென்று பெயராயிற்று" எனப் பேராசிரியர் கூறும் விளக்கம் இம்மரபினைப் புலப் படுத்துதல் அறியத்தக்கதாகும்.

இயற்கைப் புணர்ச்சியின்கண் தலைமகளைக் கண்டு அவளை அடையக் கருதிய தலைவன், தன்னிடத்து அவளுக்கு உண்டாகிய காதலை அவள் கண்ணிற் கண்டு தன் மனத்துட் கொள்வதாக அமைந்தது, 'அணியும் அமிழ்தும்' என்னும் முதற் குறிப்புடைய ஐந்தாந் திருப்பாடலாகும். இதன் கண்,

'பிணியும் அதற்கு மருந்தும் பிறழப் பிறழ மின்னும்
பணியும் புரைமருங்குற் பெருந்தோளி படைக்கண்களே'

எனவரும் தொடர்,

'மருந்தெனின் மருந்தே வைப்பெனின் வைப்பே
அரும்பிய சுணங்கி னம்பகட் டிளமுலைப்
பெருந்தோள் நுணுகிய நுசுப்பிற்
கல்கெழு கானவர் நல்குறு மகளே' (71)

எனவரும் குறுந்தொகைச் செய்யுளையும்,

'பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை
தன்நோய்க்குத் தானே மருந்து' (1102)

எனவரும் திருக்குறளையும் அடியொற்றி யமைந்திருத்தல் காணலாம்.

வாட்டம் வினவிய பாங்கனை நோக்கி, 'நெருநலை நாள் கைலைப்பொழிற்கட் சென்றேன். அவ்விடத்து ஒரு சிற்றிடைச் சிறுமான்விழிக் குறத்தியால் இவ்வாறு ஆயினேன்' எனத் தலைமகன், தனக்கு உற்றதனைக் கூறுவதாக அமைந்தது,

கோம்பிக் கொதுங்கி மேயா மஞ்ஞை குஞ்சரங் கோளிழைக்கும்
பாம்பைப் பிடித்துப் படங்கிழித் தாங்கப் பணைமுலைக்கே
தேம்பற் றுடியிடை மான்மட நோக்கிதில்லைச் சிவன்றுள்
ஆம்பொற் றடமலர் சூடுமென் ஆற்றல் அகற்றியதே. (21)

எனவரும் திருக்கோவையாகும். இச்செய்யுள்,

'சிறுவெள் ளரவின் அவ்வரிக் குருளை
கானயானை அணங்கி யாஅங்கு
இளையள் முளைவா ளெயிற்றள்
வளையுடைக் கையள் எம் அணங்கியோளே' (119)

எனவரும் குறுந்தொகைச் செய்யுட் பொருளை அடியொற்றி அமைந்ததாகும்.

கழறிய பாங்கற்குத் தலைமகன் கழற்றெதிர் மறுத்தது என்னுந்துறையில் அமைந்தது,

'அம்மவாழி கேளிர் முன்னின்று
கண்ட னிராயிற் கழறலிர் மன்னோ
...
மாதர் வாண்முகம் மதைஇய நோக்கே' (130)

எனவரும் அகநானூற்றுப் பாடலாகும். இதனை அடியொற்றி யெழுந்தவை,

'குண்டலம் சேர்ந்த மதிவாள் முகத்த கொழுங் கயற்கண்
கண்டிலிர் கண்டால் உரையீர் கழறிய கட்டுரையே' (31)

எனவரும் பாண்டிக்கோவையும்,

'பூணிற் பொலி கொங்கையாவியை ஓவியப்
பொற்கொழுந்தைக்
காணிற் கழறலை கண்டிலை மென்றேட் கரும்பினையே' (23)

எனவரும் திருக்கோவையும் என்பது இவற்றை ஒப்பு நோக்குங்கால் நன்கு புலனும்.

பாங்கற் கூட்டத்தின்கண் தலைமகன், தலைமகள்முன் நின்று தனது ஆற்றுமை மிகுதி கூறக்கேட்ட தலைமகள், தனக்குரிய நாணம் தன்னை விட்டு நீங்காநிற்க, அதற்கு வருந்துவதாக அமைந்தது,

குருநாண் மலர்ப்பொழில் சூழ்தில்லைக் கூத்தனை
ஏத்தலர் போல்
வருநாள் பிறவற்க வாழியரோ மற்றென் கண்மணிபோன்
றொருநாள் பிரியா துயிரிற் பழகி யுடன்வளர்ந்த
அருநாண் அளிய அழல்சேர் மெழுகொத் தழிகின்றதே. (44)

எனவரும் திருக்கோவையாகும். இது,

'அளிதோ தானே நாணே நம்மோடு
நனிநீ டுழந்தன்று மன்னே யினியே
வான்பூங் கரும்பின் ஓங்குமணற் சிறுசிறை
தீம்புனல் நெரிதர வீந்துக் காஅங்குத்
தாங்கு மளவைத் தாங்கிக்
காமம் நெரிதரக் கைந்நில் லாதே' (149)

என்னும் குறுந்தொகைச் செய்யுளை நினைவுபடுத்துவதாகும்.

பாங்கற் கூட்டத்து இறுதிக்கண், 'விசும்பும் நிலனும் ஒருங்குபெறவரினும் என் உயிரனைய இவளை மறந்து அதன்கண் முயலேன்' எனத் தலைமகன் தனது இன்றி யமையாமை கூறுவதாக அமைந்தது,

நீங்கரும் பொற்கழற் சிற்றம் பலவர் நெடு விசும்பும்
வாங்கிருந் தெண்கடல் வையமும் எய்தினும் யான்மறவேன்
தீங்கரும்பும் அமிழ்துஞ் செழுந்தேனும் பொதிந்து செப்புங்
கோங்கரும்புந் தொலைத் தென்னையும் ஆட்கொண்ட
கொங்கைகளே. (46)

எனவரும் திருக்கோவையாகும். இது,

'விரிதிரைப் பெருங்கடல் வளைஇய வுலகமும்
அரிதுபெறு சிறப்பிற் புத்தேள் நாடும்
இரண்டும் தூக்கிற் சீர் சாலாவே
பூப்போல் உண்கண் பொன்போல் மேனி
மாண்வரி யல்குற் குறுமகள்
தோண்மாறு படூஉம் வைகலொ டெமக்கே' (101)

எனவரும் குறுந்தொகையினை ஒத்திருத்தல் அறிக.

தலைமகளது புணர்ச்சி நிகழ்வினை ஆராய்ந்தறிய விரும்பிய தோழி, வானத்தில் தோன்றும் பிறைமதியைக் காட்டித் தான் தொழுது நின்று, 'நீயும் இதனைத் தொழுவாயாக' எனத் தலைவியை நோக்கிக் கூறுவதாக அமைந்தது,

மைவார் கருங்கண்ணி செங்கரம் கூப்பு மறந்து மற்றைப்
பொய்வா னவரிற் புகாதுதன் பொற்கழற் கேயடியேன்
உய்வான் புகவொளிர் தில்லை நின்றோன் சடை மேல தொத்துச்
செவ்வா னடைந்த பசுங்கதிர் வெள்ளைச் சிறுபிறைக்கே. (67)

எனவரும் திருக்கோவையாகும். இது,

'தொழுது காண் பிறை' (178)

எனவரும் குறுந்தொகைத் தொடருக்கமைந்த விளக்கமாக உள்ளமை உய்த்துணரத்தக்கதாகும். செவ்வானடைந்த வெள்ளைச் சிறுபிறை, உலகெலாம் உய்யத் தில்லைமன்றுள் ஆடல் புரிந்தருளும் இறைவனது செஞ்சடையின் கண்ண தாகிய வெண்பிறையினைப் போன்று விளங்குவதாதலின் அது யாவராலும் தொழத்தகும் பெருஞ் சிறப்பினையுடைய தாயிற்று எனத் திருவாதவூரடிகள் தரும் விளக்கம், அந்தியிற் பிறை தொழுதலாகிய இவ் வழிபாட்டிற்கும் சிவ வழிபாட்டிற்கும் உள்ள தொடர்பினைப் புலப்படுத்தும் முறையில் அமைந்ததாகும்.

தலைமகளை அடையப்பெறாது ஆற்றா நிலையினனாகிய தலைமகன், மடலூர்ந்தாயினும் தலைமகளை யடையவெண்ணிய தனது ஆற்றாமை தோன்ற, மடலூர்தலை உலகின்மேல் வைத்துக் கூறுவதாக அமைந்தது,

காய்சின வேலன்ன மின்னியல் கண்ணின் வலைகலந்து
வீசின போதுள்ள மீனிழந்தார் வியன்தென் புலியூர்
ஈசன சாந்தும் எருக்கும் அணிந்தோர் கிழிபிடித்துப்
பாய்சின மாவென ஏறுவர் சீறூர்ப் பனைமடலே.
(திருக்கோவை – 74)

எனவரும் திருப்பாடலாகும். இது,

'மாவென மடலும் ஊர்ப பூவெனக்
குவிமுகிழ் எருக்கங் கண்ணியுஞ் சூடுப
மறுகின் ஆர்க்கவும் படுப
பிறிதும் ஆகுப காமங்காழ்க் கொளினே' (17)

என்னும் குறுந்தொகைச் செய்யுளைத் தழுவியமைந்ததாகும். இதன்கண் தலைமகள் கண்ணினைக் 'கண்ணின் வலை' எனக்குறித்த உருவகம்,

'நுண்வலைப் பரதவர் மடமகள், கண்வலைப் படூஉம்' (184)

எனவரும் குறுந்தொகைத் தொடரில் அமைந்துள்ளமை இங்கு ஒப்புநோக்குதற்குரியதாகும்.

தலைமகனது குறையினை ஏற்றுக்கொண்ட தோழி, தலைமகளைக் குறை நயப்பிக்க வேண்டி வன்மொழியாற் கூறின் அவள் மனம் மெலியும் என்றஞ்சி, "ஒரு நண்டு தன் பெடை நண்டுக்கு நாவற்பழத்தை நல்குதலைக்கண்டு ஒரு பெரியோன் பேய் பிடித்தாற்போல நின்றான். அந்நிலையை நீ கண்டாயாயின் உயிர் வாழ மாட்டாய். யான் வன்னெஞ்சமுடையே னாதலின் வருத்தமின்றி மீண்டேன்" என மென்மொழியோடு சிறிது வன்மொழியும் அமைய விரவிக் கூறுவது,

'நீகண்டனை யெனின் வாழலை நேரிழை யம்பலத்தான்
சேய்கண் டனையன் சென் றாங்கோ ரலவன்றன்
சீர்ப்பெடையின்
வாய்வண் டனையதொர் நாவற்கனி நனி நல்கக்கண்டு
பேய்கண் டனையதொன் றாகிநின் றானப் பெருந்தகையே' (84)

என்னும் திருக்கோவையாகும். இஃது,

'அகலிலை நாவல் உண்டுறை யுதிர்த்த
கனிகவின் சிதைய வாங்கிக் கொண்டுதன்
தாழை வேரளை வீழ்துணைக் கிடூஉம்
அலவற் காட்டி நற்பாற் றிதுவென
நினைந்த நெஞ்சமொடு நெடிது பெயர்ந்தோனே' (380)

எனவரும் அகநானூற்றுப் பாடற்பொருளைத் தழுவி அமைந்ததாகும்.

'புணர்துணையோ டாடும் பொறியலவன் நோக்கி
இணர்ததையும் பூங்கானல் என்னையும் நோக்கி
உணர்வொழியப் போன ஒலிதிரைநீர்ச் சேர்ப்பன்
வணர்சுரியைம் பாலோய் வண்ணம் உணரேனால்'
(சிலப்பதிகாரம் 7 – 31)

எனவரும் கானல் வரிப்பாடல் இங்கு ஒப்புநோக்கி யுணரத் தக்கதாகும்.

தலைமகளது நாணுரைத்துக் கையுறை மறுத்த தோழி, "அவள் நாணம் ஒருபுறமிருக்கட்டும். குறக்குடியிற் பிறந்த

யாங்கள் வேங்கை மலரையன்றித் தெய்வத்திற்குரிய மலரைச்சூடுதற்கு அஞ்சுகின்றேம். ஆதலால் இக்கண்ணி எம் குலத்திற்கு இசையாது" எனத் தலைமகனை நோக்கி மறுத்துக் கூறுவதாக அமைந்தது,

நறமனை வேங்கையின் பூப்பயில் பாறையை நாகம் நண்ணி
மறமனை வேங்கை யெனநனியஞ்சு மஞ்சார் சிலம்பா
குறமனை வேங்கைச் சுணங்கொ டணங்கலர் கூட்டுபவோ
நிறமனை வேங்கை யதளம் பலவ னெடுவரையே.
(திருக்கோவை – 96)

என்னுந் திருப்பாடலாகும். இதன்கண் வேங்கை மலர் களால் மூடப்பெற்று மறைந்த பாறை, புலியினை யொத்துத் தோன்றியது என்னும் இவ்வுவமை,

'கருங்கால் வேங்கை வீயுகு துறுகல்
இரும்புலிக் குருளையிற் றேன்றும் காட்டிடை' (47)

எனவரும் குறுந்தொகைச் செய்யுளிற் குறிக்கப்பெற்றுள் ளமை காணலாம். "உறுபுலி யுருவேய்ப்பப் பூத்த வேங்கையை" (கலித்தொகை 38) என்பதும் ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கதாகும்,

தான் வேண்டிய இரவுக்குறியினை வழியருமை கூறித் தோழி மறுத்தாளாக, அதுகேட்ட தலைமகன், 'அடைதற்கு அரியளாகிய தலைவியை விரும்பி நீ மெலிகின்றாய். இதற்கு யான் ஆற்றேன்' எனத் தன்னெஞ்சிற்குக் கூறி வருந்துவ தாக அமைந்தது,

மாற்றே னெனவந்த காலனை ஓலமிட வடர்த்த
கோற்றேன் குளிர்தில்லைக் கூத்தன் கொடுங்குன்றி
னீள்குடுமி
மேற்றேன் விரும்பு முடவனைப் போல மெலியுநெஞ்சே
ஆற்றே னரிய அரிவைக்கு நீவைத்த அன்பினுக்கே. (150)

எனவரும் திருக்கோவையாகும். இச்செய்யுளில்,

'குறுந்தாட் கூதளி யாடிய நெடுவரைப்
பெருந்தேன் கண்ட விருக்கை முடவன்
உட்கைச் சிறுகுடைக் கோலிக் கீழிருந்து
சுட்டுபு நக்கியாங்கு' (குறுந்தொகை – 60)

எனத் தலைமகள்கூற்றில் வந்த உவமையைத் தலைவன் கூற்றிற்கேற்ப அடிகள் மாற்றி யமைத்திருத்தல் அறிந்து மகிழத்தக்கதாகும்.

தலைவனைக் காணப்பெறாது வருந்தும் தலைவி, கடலை நோக்கி, 'இன்றிரவெல்லாம் என்னைப்போல நீயும் துன்ப முற்றுக் கலங்கித் தெளிவுபெறாது அலைவுற்றனை. என்னைப் போல உன்னையும் பிரிந்து சென்றார் உளரோ' என்று தான் உற்ற துயரத்தைக் கடலுடன் சேர்த்துக் கூறுவதாக அமைந்தது,

பூங்கனை வேளைப் பொடியாய் விழவிழித் தோன் புலியூர்
ஓங்கனை மேவிப் புரண்டு விழுந்தெழுந் தோலமிட்டுத்
தீங்கனைந் தோரல்லுந் தேறாய் கலங்கிச் செறிகடலே
ஆங்கனைந் தார் நின்னையும் உளரோ சென்
றகன்றவரே. (179)

என்னும் திருக்கோவையாகும். இது,

'யாரணங் குற்றனை கடலே, பூழியர்
சிறுதலை வெள்ளைத் தோடுபரந் தன்ன
மீனார் குருகின் கானலம் பெருந்துறை
வெள்வீத் தாழை திரையலை
நள்ளென் கங்குலும் கேட்கும் நின்குரலே' (163)

என்னும் குறுந்தொகைச் செய்யுளை ஒத்தமைந்ததாகும்.

உடன்போக்கு அருமை கூறிய தலைவனை நோக்கி, 'தலைமகள் நின்னொடு போகப்பெறின் அவளுக்கு வெம்மை மிக்க பாலைநிலமும், குளிர்ந்த மருதநிலமும் தடாகமுமாம் ஆதலின், அவளை நின்னொடு உடன்கொண்டு போவாயாக' எனத் தோழி, தலைவியின் பெருவிருப்பத்தினைக் கூறுவதாக அமைந்தது,

பிணையுங் கலையும்வன் பேய்த்தேரினைப் பெரு நீர் நசையால்
அணையு முரம்பு நிரம்பிய அத்தமும் ஐய மெய்யே
இணையு மளவுமில்லா விறையோனுறை தில்லைத் தண்பூம்
பணையுந் தடமுமன்றே நின்னொ டேகினெம்
பைந்தொடிக்கே. (202)

எனவரும் திருக்கோவையாகும். இது,

'யானை கைமடித் துயவும்
கானமும் இனியவாம் நும்மொடு வரினே' (388)

என்னும் குறுந்தொகையினை ஒத்திருத்தல் அறியத்தக்கதாம்.

தலைமகளை நோக்கிக் கற்பு நலன் உரைத்த தோழி, 'எம் பெருமான் நின்னை நீரில்லாத வெய்ய பாலைநில வழியில் உடன் கொண்டுபோக எண்ணுகின்றான்' எனத் தலைமகனது நினைவு கூறுவதாக அமைந்தது,

குறப்பாவை நின்குழல் வேங்கையம் போதொடு
கோங்கம்விராய்
நறப்பாடலம் புனைவார் நினைவார் தம்பிரான் புலியூர்
மறப்பா னடுப்பதொர் தீவினை வந்திடிற் சென்று சென்று
பிறப்பா னடுப்பினும் பின்னுந் துன்னத்தகும்
பெற்றியரே. (205)

என்னுந் திருக்கோவையாகும். "குறக்குடியிற் பிறந்த பாவை போல்வாய், இறைவனது திருத்தலமாகிய பெரும் பற்றப்புலியூரை மறக்கக்கூடுவதொரு தீவினை விளைவு வருமாயின், பல பிறப்புக்களினுஞ் சென்று சென்று பிறக்கக் கூடினும் பின்னுஞ் சென்று சேரத்தகும் நற்பண்பினை யுடைய தலைவர், நின் கூந்தலின்கண் அணியப்பெற்ற வேங்கைப்பூவொடு கோங்கமலரைச் சேர்த்துத் தேனை யுடைய பாதிரிமலரை அணியக் கருதுகின்றார்" என்பது இதன் பொருள். இதன்கண் 'நின்குழல் வேங்கையம் போதொடு கோங்கம் விராய், நறப்பாடலம் புனைவார் நினைவார்' என்றது, 'குறிஞ்சி நிலத்தவளாகிய நின்னை நீரற்ற பாலைநில வழியிலே உடன்கொண்டு செல்லத் துணிந்தார்' என்பதனை உணர்த்தியவாறு. ஈண்டு வேங்கை குறஞ்சி நிலத்தையும், கோங்கம் பாடலம் (பாதிரி) என்பன பாலை நிலத்தையும் உணர்த்தி நின்றன. 'புலியூரை ஒருகால் நினைந்த துணையானே பிறவி கெடுமன்றே; அவ்வாறன்றி அதனை மறந்தவாற்றானே பிறக்கக் கூடினும் என்னுங் கருத்தால் 'பிறப்பான் அடுப்பினும்' என்றான். அலர்நாணி உடன் போகாது ஈண்டு இற்செறிக்கப்பட்டு அவரை எதிர்ப் படாதிருத்தல் அன்பன்று என்னுங் கருத்தால், 'பிறப்பான் அடுப்பினும் பின்னும் துன்னத்தகும் பெற்றியர்' என்றாள். தோழிகூற்றில் அமைந்த இத்தொடர்,

'இம்மை மாறி மறுமையாயினும்
நீயாகியர் என்கணவனை
யானாகியர் நின் னெஞ்சு நேர்பவளே' (குறுந்தொகை 49)

எனத் தலைவி கூற்றாக அமைந்த தொடர்ப் பொருளை அடி யொற்றியுள்ளமை கூர்ந்துணரத்தக்கதாகும்.

'மறைநிலை திரியினும் கடல் முழுதும் வற்றினும் இவளிடத்து நின் அருள்திரியாமற் பாதுகாப்பாயாக' எனத் தோழி தலைமகனுக்கு ஓம்படை கூறித் தலைமகளைக் கொடுப்பதாக அமைந்தது,

பறந்திருந் தும்பர் பதைப்பப் படரும் புரங்கரப்பச்
சிறந்தெரி யாடிதென் றில்லை யன்னுள் திறத்துச் சிலம்பா
அறந்திருந் துன்னருளும் பிறிதாயின் அருமறையின்
திறந்திரிந் தார்கலியும் முற்றும் வற்றுமிச்
சேணிலத்தே. (213)

என்னும் திருக்கோவையாகும். இது,

'நிலம்புடை பெயரினும் நீர்தீப் பிறழினும்
இலங்குதிரைப் பெருங்கடற் கெல்லை தோன்றினும்
...
கேடெவ னுடைத்தோ தோழி
...
ஓங்குமலை நாடனொ டமைந்த நம் தொடர்பே'
(குறுந்தொகை – 373)

எனவரும் பாடற்பொருளைத் தன்னகத்துக் கொண்டுள்ளமை காணலாம்.

உடன்போக்கில் தலைவனுடன் சென்ற தலைவியைத் தேடிச் சுரத்திடைச் சென்ற செவிலியை நோக்கிய சான்றோர், 'சந்தனமும் முத்தும் சங்கும், தாம் பிறந்த இடத்திற்குச் சிறிதும் பயன்படாது, தம்மை விரும்பி அணிவாரிடத்தே சென்று பயன்தருவனவாம். அதுபோல மகளிரும் தம்மை உற்ற கணவற்கு அன்றிப் பெற்றோர்க்குச் சிறிதும் பயன்பட மாட்டார்கள். ஆதலால் நீ கவலையடைதல் வேண்டா' என உலகியல்பு கூறுவதாக அமைந்தது,

சுரும்பிவர் சந்துந் தொடுகடல் முத்தும் வெண்சங்கும் எங்கும்
விரும்பினர் பாற்சென்று மெய்க்கணியாம் வியன்
கங்கையென்னும்
பெரும்புனல் சூடும் பிரான் சிவன் சிற்றம்பலமனைய
கரும்பன மென்மொழியாரும் அந்நீர்மையர் காணுநர்க்கே.
(248)

என்னும் திருக்கோவையாகும். 'எறித்தருகதிர்தாங்கி' (9) எனத் தொடங்கும் பாலைக்கலியில்

'பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க் கல்லதை
மலையுளே பிறப்பினும் மலைக்கவைதாம் என்செய்யும்
நினையுங்கால் நும்மகள் நுமக்கும் ஆங்கனையளே,

எனவும்,

'சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க் கல்லதை
நீருளே பிறப்பினும் நீர்க்கவைதாம் என்செய்யும்
தேருங்கால் நும்மகள் நுமக்கும் ஆங்கனையளே'

எனவும் வரும் இரண்டு தாழிசைப் பொருள்களும் இத்திருக் கோவையில் எடுத்தாளப் பெற்றிருத்தல் இங்கு ஒப்பிட்டு உணரத் தக்கதாகும். மேற்காட்டிய பாலைக்கலியில் மூன்ருந் தாழிசையிற் குறிக்கப்பட்ட ஏழ்புணரின்னிசை இத் திருக் கோவையிற் குறிக்கப் பெறவில்லை, பாலைக்கலியாசிரியர் குறித்த சந்தனமும் முத்தும் ஆகிய இரண்டையும் இத்திருப் பாடலில் எடுத்துக்காட்டிய திருவாதவூரடிகள், அவ்வாசிரிய ரால் மூன்ருவதாகக் குறிக்கப்பட்டுள்ள ஏழ்புண ரின்னி சையை எடுத்துக்காட்டாமல் அதனைக்குறிப்பிட வேண்டிய இடத்தில் வெண்சங்கினைக் குறித்துள்ளார். ‘உற்ருர்க்குரியர் பொற்ருெடி மகளிர்’ என்னும் ஒருண்மையினை வற்புறுத்தும் நோக்குடன் காட்டப்படும் இவ் ஏதுக்கள், ஊற்றுணர்ச்சி யுடைய மெய்க்கு அணியாம் ஒரு தன்மையினைக் குறித்தன வாகவே அமைதல் நன்றென்னும் கருத்தினுல், செவிக் கின்பந்தரும் ஏழ்புணர் இன்னிசையைக் குறிப்பிடாது மெய்க்கு அணிசெய்யும் வெண்சங்கினை அடிகள் இத் திருப்பாடலிற் சேர்த்துக் கூறியுள்ளமை கூர்ந்துணர்தற் குரியதாகும்.

‘இரவும் பகலும் இங்கு வாராது தவிர்க’ எனத் தலை வனை வரவுவிலக்கினதோழி, ‘இனி நீ தலைவியை மணத் தற்கு ஏற்றகாலம் இதுவாகும்’ என்றுரைத்து மணந்து கொள்ளத் தூண்டுவதாக அமைந்தது,

மையார் கதலி வனத்து வருக்கைப் பழம்விழுதேன்
எய்யா தயின்றிள மந்திகள் சோரும் இருஞ்சிலம்பா
மெய்யா அரியதென் அம்பலத்தான் மதியூர்கொள் வெற்பின்
மொய்யார் வளரிள வேங்கை பொன் மாலையின்
முன்னினவே. (262)

எனவரும் திருக்கோவையாகும். ‘இருள்நிரம்பிய வாழைக் காட்டின்கண் வருக்கைப் பலாவின் பழம் முதிர்ந்து விழுத லால் உண்டாகிய தேனை இளைய பெண்குரங்குகள் தேனென்று அறியாமல் (நீர் எனக்கருதி நிறையப்) பருகி, அதனுல் உண்டாகிய களிப்பினுல் மயக்கமுற்றுத் தளரும் மலையினையுடைய தலைவனே, வானத்தில் மதி வளர்ந்து நிரம்பாநின்றது; தில்லைச் சிற்றம்பலவனுகிய இறைவனுக் குரிய இம்மலையின்கண் செறிந்து வளர்ந்துள்ள வேங்கை மரங்கள் பொன்மாலைகள் போற் (கொத்தாகப்) பூத்துத் தோன்றுகின்றன. இப்பொழுது உண்மையாக(த் தலைவி

யின் நன்மை குறித்து' நின்னுற்) செய்தற்கு அரியது யாதுளது?' எனத் தலைவனை நோக்கித் தோழி வினவு கின்ருள். இத்திருப்பாடல்,

"கோழிலை வாழைக் கோண்முதிர் பெருங்குலை
யூழுறு தீங்கனி யுண்ணுநர்த் தடுத்த
சாரற் பலவின் சுளையோ டூழ்படு
பாறை நெடுஞ்சுனை விளைந்த தேறல்
அறியா துண்ட கடுவன், அயலது
கறிவளர் சாந்தம் ஏறல் செல்லாது
நறுவீ யடுக்கத்து மகிழ்ந்து கண்படுக்கும்
குறியா வின்பம் எளிதின் நின்மலைப்
பல்வேறு விலங்கும் எய்தும் நாட,
குறித்த வின்பம் நினக் கெவன் அரிய
... பைம்புதல்
வேங்கையும் ஒள்ளிணர் விரிந்தன
நெடுவெண் டிங்களும் ஊர்கொண் டன்றே' (அகம் —2.)

எனவரும் கபிலர் பாடலை அடியொற்றியமைந்துள்ளமை காணலாம். கடுவன் — ஆண்குரங்கு. "கடுவனனது தேனை அறியாது நுகர்ந்து, பின்பு தனது தொழிலாகிய மரமேறுதலும் செய்யமாட்டாது, தனக்கு அயலதாகிய சந்தனத்தின் நிழலிற் பூமேலே உறங்குகின்ருற்போல, நீயும் இக்களவொழுக்க மாகிய இன்பம் நுகர்ந்து நினது தொழிலாகிய அறநெறியையுந் தப்பி, இக்களவினை நீங்கி வரையவு மாட்டாது, இக் களவொழுக்கமாகிய இன்பத்திலே மயங்கா நின்ருய்' என்பது மேற்குறித்த அகப்பாட்டில் அமைந்த உள்ளுறையாகும். இதன்கண் பலவின் தேனை அறியாது பருகிக்களித்து மயங்குதலாகிய செயல், கடுவனுக் குரியதாகக் கூறப்பட்டிருக்கவும், திருவாதவூரடிகள் அச் செயலை மந்திகளுக்கு உரியதாக மாற்றியமைத்துள்ளமை கூர்ந்து நோக்கற் பாலதாகும். 'நின்மலைக்கண் வாழும் உணர்வில்லாத தாழ்ந்த விலங்கினத்தனவாகிய பெண் குரங்குகளும் இத்தன்மைத்தாகிய தேனை நிறையப் பருகித் தம்மைமறந்து இன்பவாழ்க்கையில் திளைத்தனவாய் மகிழா நிற்கவும் நின்னுற் காதலிக்கப்பெற்று நின்னுயிரிற்சிறந்தா ளாகிய தலைமகள் நின்னை மணந்து நின்மனைக்கண் இருந்து மகிழும் இன்பநிலையினை எய்தப் பெருமல் நின்பிரிவினுல் தனித்து வருந்த நீ இங்ஙனம் களவொழுக்கத்தில் நீட்டித்து ஒழுகுவது அடைந்தார்ப் புரக்கும் நினது அருட்பண்பிற்குச் சிறிதும் ஏற்புடையதன்ரும்' எனத் தோழி தலைமகனை

நோக்கி விரைவில் மணந்துகொள்ளுமாறு வற்புறுத்தினள் என்பதனை அறிவுறுத்தும் நோக்கத்தினாலேயே அடிகள் இவ்வாறு மாற்றியமைத்துள்ளார் எனக் கருதவேண்டியுளது. இந்நுட்பம், "நின்மலைக்கண் விலங்குகளும் இத்தன்மைத் தாகிய தேனைக் குறியாதுண்டு இன்புறுநின்றன வாகலின், குறித்தவற்றின் நினக்கு அரியாது யாது? இதுவன்றோ பருவமும்' என வரைவு பயப்பக் கூறியவாறு" என இத்திருக் கோவையுரையிற் பேராசிரியர் கூறும் விளக்கத்தால் இனிது புலனாதல் காணலாம்.

வரைவுடம்படாமையின் தோழி தலைமகனோடு புலந்து கூறக்கேட்ட தலைமகள், அக்குறிப்பறிந்து, 'கார்காலத்து மயிலை யொப்பாய், சிற்றம்பலவராகிய இறைவரை அடையா தாரைப் போன்று வருந்தச் சிங்கமானது கொல்லும் ஆண் யானையினைச் சென்றணுகாதவாறு பெண்யானை அவ்விரண் டற்கும் இடையே சென்று புகும் கல் நிரம்பிய வழியிலே நீர் வந்தவாறு என்? என்று வினவுவாரைப் பெற்றேமாயின், கரடியானது குரும்பியாகிய உணவு காரணமாகப் பாம்புப் புற்றினை அகழாநிற்கும் நள்ளிருளிலே அத்தலைவர் இருந்த இடத்திற்குச் செல்லுதல் அரிதன்று' எனத் தோழிக்குக் கூறுவதாக அமைந்தது,

> 'வல்சியி னெண்கு வளர்புற் றகழ மல்கும் மிருள்வாய்ச்
> செல்வரிதன் றுமன் சிற்றம்பலவரைச் சேரலர்போற்
> கொல்கரிசீயங் குறுகாவகை பிடிதானிடைச்செல்
> கல்லதரென்வந்த வாறென்பவர்ப்பெறிற் கார்மயிலே' (264)

எனவரும் திருக்கோவையாகும். இஃது,

> 'ஈயற் புற்றத் தீர்ம்புறத் திறுத்த
> குரும்பி வல்சிப் பெருங்கை யேற்றை
> தூங்கு தோற் றுதிய வள்ளுகிர் கதுவலிற்
> பாம்பு மதனழியும் பானாட் கங்குலும்
> அரிய வல்லம னிகுளை, பெரிய
> கேழலட்ட பேழ்வாயேற்றை
> பலாவம லடுக்கம் புலர வீர்க்கும்
> கழைநரல் சிலம்பி னுங்கண் வழையொடு
> வாழை யோங்கிய தாழ்கண் ணசும்பிற்
> படுகடுங் களிற்றின் வருத்தஞ் சொலியப்
> பிடிபடி முறுக்கிய பெருமரப் பூசல்
> விண்டோய் விடரகத் தியம்பு மவர் நாட்
> டெண்ணரும் பிறங்கல் மானதர் மயங்காது
> மின்னுவிடச் சிறிய வொதுங்கி மென்மெலத்

துளிதலைத் தலைஇய மணியே ரைம்பால்
சிறுபுறம் புதைய வாரிக்குரல் பிழியூஉ
நெறி கெட விலங்கிய நீயி ரிச்சுரம்
அறிதலு மறிதிரோ என்னுநர்ப்பெறினே' (8)

என்னும் அகநானூற்றுச் செய்யுளைப் பின்பற்றி அமைந்ததாகும்.

தலைவன் வரைபொருட்பிரிய ஆற்ருளாகிய தலைமகள், தனக்கு ஆறுதல் கூறி வற்புறுத்தும் தோழியை நோக்கி, ஆற்ருமையால் வருந்திக் கூறுவதாகவுள்ளது.

வந்தாய் பவரையில்லா மயின்முட்டை யிளையமந்தி
பந்தா டிரும்பொழிற் பல்வரை நாடன்பண்போ வினிதே
கொந்தார் நறுங்கொன்றைக் கூத்தன்றென் றில்லை
தொழார் குழுப்போற்
சிந்தாகுலமுற்றுப் பற்றின்றி நையுந் திருவினர்க்கே. (276)

எனவரும் திருக்கோவையாகும். "கொத்துக்களாகப் பொருந்திய நறுமணம் வாய்ந்த கொன்றைமலரையணிந்த கூத்தப் பெருமானுக்குரியதாய்த் தென்றிசைக்கண் அமைந்த தில்லைச் சிற்றம்பலத்தை வணங்காதார் ஆகிய குழுவினை யொத்து மனக்கலக்கத்தையுற்றுத் தமக்கு ஓர் பற்றுக்கோடின்றி வருந்தும் திருவினையுடையார்க்கு, சென்று ஆராய்ந்து பேணுவாரில்லாத மயிலின் முட்டையினை இளைய பெண் குரங்கு பந்தாடி விளையாடும் பெரிய பொழிலையும் பக்க மலைகளையும் உடைய நாட்டையுடைய தலைவனது இயல்பு இனிமையுடையதாகும்" என்பது இதன் பொருள். இதன்கண் 'நையுந் திருவினர்க்கு' என்றது, வருந்துமளவு இறந்துபடாது உயிர்தாங்கி யிருந்து, அவனது தலையளி பெற்றபொழுது இன்புறும் நல்வினையையுடைய மகளிர்க்கு என்றவாறு. எனவே, யான் அத்திருவினைப் பெற்றிலேன் எனத் தலைவி கூறினளாயிற்று.

'உற்றது ஆராய்ந்து ஓம்புவார் இல்லாத மயிலினது முட்டையால், ஈன்ற வருத்தமறியாத இளமந்தி, மயிலின் வருத்தமும் முட்டையின் மென்மையும் பாராது, பந்தாடுகின்ருற்போல, காதலரான் வினவப்படாத என் காமத்தை நீ இஃது உற்றறியாமையின், எனது வருத்தமும் காமத்தினது மென்மையும் பாராது, இவ்வாறு உரைக்கின்ருய்' என உள்ளுறை வகையால் தோழியை நெருங்கி வன்புறை எதிரழிந்தவாறு கண்டு கொள்க. அல்லதூஉம் வந்து

ஆய்பவர் தோழியாகவும், இளமந்தி தலைவனாகவும், பந்தாடுதல் தலைமகளது வருத்தம் பாராது தான் வேண்டியவாறு ஒழுகும் அவனது ஒழுக்கமாகவும் உரைப்பினும் அமையும்" எனப் பேராசிரியர் இத் திருக்கோவையின் உள்ளுறைப் பொருளை இனிது விளக்கியுள்ளார். இது,

'கான மஞ்ஞை யறையீன் முட்டை
வெயிலாடு முசுவின் குருளையுருட்டும்
குன்றநாடன் கேண்மை யென்றும்
நன்றுமன் வாழிதோழி யுண்கண்
நீரோ டொராங்குத் தணப்ப
உள்ளா தாற்றல் வல்லுவோர்க்கே' (குறுந்தொகை - 38)

எனவரும் கபிலரது பாடலின் பொருள் நலங்களை விரித்து விளக்கும் முறையில் அமைந்திருத்தல் அறிந்து மகிழத்தக்க தாகும்.

தலைவியின் மெலிவினைத் தணித்தற் பொருட்டு வெறியாடல் நிகழ்த்த வேலனை அழைத்து வருமாறு தாயர் கூறக் கேட்ட தலைமகள், 'எனது மெலிவு தீர்தல்வேண்டி நிகழ்த்தப் பெறும் இவ்வெறியாடலால் எனது உடல் மெலிவு நீங்காதாயின் என்னைக் குறித்து இவ்வூரவர் கூறும் அலர்மொழி உறுதியாகி விடும்; முருகனை வழிபட்டு நிகழ்த்தப்பெறும் இவ் வெறியாடலால் என் உடல்மெலிவு ஒருகால் நீங்கி விடுமாயின் அதனைக் கேள்வியுற்ற என் காதலர் 'இவளுக்கு இம்மெலிவு எனது பிரிவு காரணமாக உளதாயிற்றன்று போலும்' என எண்ணுதற்கு இடனாகி விடும். ஆகவே இவ்வெறியாடலால் எனது உடல் மெலிவு தீர்ந்தாலும் தீராவிட்டாலும் இருவகையாலும் எனக்கு உயிர்வாழும் நெறியில்லை' எனத் தன்னுள்ளே கூறி வருந்துவதாக அமைந்தது,

அயர்ந்தும் வெறிமறி யாவி செகுத்தும் விளர்ப்பயலார்
பெயர்ந்து மொழியா விடினென்னை பேசுவ பேர்ந்திருவர்
உயர்ந்தும் பணிந்து முணரான தம்பல முன்னலரிற்
றுயர்ந்தும் பிறிதி னெறியினென் னாதும்
துறைவனுக்கே. (287)

எனவரும் திருக்கோவையாகும். இத்திருப்பாடல்,

"பனிவரை நிவந்த பயங்கெழு கவாஅன்
...
செல்வன் பெரும்பெய ரேத்தி வேலன்

வெறியயர் வியன்களம் பொற்ப வல்லோன்
பொறியமை பாவையிற் றூங்கல்வேண்டின்
என்னுங் கொல்லோ தோழி, மயங்கிய
மையற் பெண்டிர்க்கு நொவ்வலாக
ஆடிய பின்னும் வாடிய மேனி
பண்டையிற் சிறவா தாயின் இம்மறை
அலராகாமையோ அரிதே, அஃதான்று
அறிவர் உறுவிய அல்லல்கண்டருளி
வெறிகமழ் நெடுவேள் நல்குவ னெனினே
செறிதொடி யுற்ற செல்லலும் பிறிதெனக்
கான்கெழு நாடன் கேட்பின்
யானுயிர் வாழ்தல் அதனினும் அரிதே' (98)

எனவரும் அகநானூற்றுப் பாடற் பொருளை அடியொற்றி அமைந்திருத்தல் நோக்கத்தக்கதாகும்.

உடம்பும் உயிரும் போன்று தலைவியுடன் கூடி மனையறம் நிகழ்த்தும் தலைமகன், தலைமகளது அன்பின் வழியே ஒழுகா நின்ற திறத்தினை, மணமனை காணவந்த செவிலிக்குத் தோழி எடுத்துரைப்பதாக அமைந்தது,

சீரியலாவியும் யாக்கையு மென்னச் சிறந்தமையாற்
காரியல் வாட்கண்ணி யெண்ணகலார் கமலங்கலந்த
வேரியுஞ் சந்தும் வியறந்தெனக் கற்பி னிற்பரன்னே
காரியல் கண்டர்வண் தில்லை வணங்குமெங் காவலரே. (301)

எனவரும் திருக்கோவையாகும். "அன்னையே, மழை போலும் மிடற்றினையுடைய இறைவனது வளமார்ந்த தில்லைப்பதியை வணங்கும் எம்முடைய தலைவர், சீர்த்திமிக்க உயிரும் உடம்பும் என்ன ஒருவரை யொருவர் இன்றியமையாமையால் கரிய வாள் போலும் கண்களையுடைய தலைவியின் கருத்துக்கு மாறுபடாது, தாமரைப்பூவைச் சேர்ந்த தேனும் சந்தனமரமும், இடத்து நிகழ்பொருளும் இடமுமாய் அமைந்து தம் பெருமையைப் புலப்படுத்தினாற் போல, இவளுடன் பிரிவறக்கூடி இவளது பண்பின் வழியே ஒழுகா நின்றார்' எனத் தோழி செவிலிக்குக் கூறும் நிலையில் அமைந்தது இத்திருப்பாடல்.

'தாமரைத் தண்தா தூதி மீமிசைச்
சாந்திற் றொடுத்த தீந்தேன் போலப்
புரைய மன்ற புரையோர் கேண்மை" (நற்றிணை 1)

எனத் தலைமகள் கூற்றாகவும்,

'உடம்போ டுயிரிடை யென்ன மற் றன்ன
மடந்தையொ டெம்மிடை நட்பு' (திருக்குறள் 1122)

எனத் தலைமகன் கூற்றாகவும் கூறப்பெற்ற உவமைகளைத் திருவாதவூரடிகள் இதன்கண் ஒருங்கே இணைத்துக் காட்டிய திறம் உணர்ந்து போற்றத்தக்கதாகும்.

'பொருளில்லாதார் இம்மை மறுமை யென்னும் இருமை இன்பத்தினையும் அறியாதவராவர்' எனக்கருதி நம் தலைவர் அருஞ்சுரம் போய்ப் பொருள்தேட நினைக்கின்றார்' எனத் தோழி தலைவிக்கு உரைப்பதாக அமைந்தது,

'வறியார் இருமை யறியார் என மன்னும் மா நிதிக்கு
நெறியா ரருஞ்சுரம் செல்லலுற்றார் நமர்'
(திருக்கோவை 333)

என்னுந்தொடராகும். இது,

'ஈதலுந் துய்த்தலும் இல்லோர்க் கில்லெனச்
செய்வினை கைம்மிக எண்ணுதி' (குறுந்தொகை 63)

எனத் தலைமகன் பொருள்தேடக்கருதிய தன்னெஞ்சிற்குச் சொல்லியதாக வரும் தொடர்ப்பொருளை தோழி உட்கொண்டு கூறும் முறையில் அமைந்திருத்தல் காணலாம். 'இல்லோர்க்கு ஈதலும் துய்த்தலும் இல்' என்னும் இத் தொடர்ப்பொருளை 'வறியார் இருமை யறியார்' என ஒரு பழமொழியாகத் திருவாதவூரடிகள் அமைத்துள்ளமை நோக்கத்தக்கதாகும்.

தலைவன் பிரிய ஆற்றாளாகிய தலைவி, 'அவர் இப்பொழுது என்னைப் பிரிவாரல்லர் என்றெண்ணி அவரது பிரிவிற் சிறிதும் கருத்தின்றியிருந்தேன்; அவரோ தமது பிரிவை யான் உணரின் சிறிதும் ஆற்றியிரேன் என்றெண்ணி அதனை எனக்குச் சொல்லுதலிற் கருத்தின்றிப் போயினார். எம்மிருவரது கருத்தின்மையும் ஒருங்கு சேர்ந்து என்னை இப்பொழுது வருத்துகின்றன' எனக் கலக்க முற்றுரைப்பதாக அமைந்தது,

பிரியா ரெனவிகழ்ந்தேன் முன்னம்யான் பின்னை யெற்பிரியிற்
றரியா ளெனவிகழ்ந்தார் மன்னர்தாந்தக்கன் வேள்வி மிக்க
எரியா ரெழிலழிக்கு மெழிலம் பலத்தோ னெவர்க்கும்
அரியான் அருளிலர்போல் அன்னவென்னை யழிவித்தவே.
(340)

என்னும் திருக்கோவையாகும். இது,

'செல்வா ரல்லரென் றியானிகழ் தனனே
ஒல்வா ளல்லளென் றவரிகழ்ந் தனரே
ஆயிடை, இருபேராண்மை செய்த பூசல்
நல்லராக் கதுவியாங் கென்
அல்லல் நெஞ்சம் அலமலக் குறுமே' (48)

எனவரும் குறுந்தொகையினையும், இதனைப் பின்பற்றி யமைந்த,

செல்லா ரவரென்றி யானிகழ்ந் தேன்சுரஞ் செல்லத் தன்கண்
ஒல்லா ளவளென் றவரிகழ்ந்தார் மற் றுவையிரண்டும்
கொல்லா ரயிற்படைக் கோனெடு மாறன் குளந்தை வென்ற
வில்லான் பகைபோ லெனதுள்ள ந் தன்னை மெலிவிக்குமே.
(43)

என்னும் பாண்டிக்கோவையினையும் சொற்பொருள் வகையால் ஒத்தமைந்திருத்தல் உணர்தற்குரியதாகும்.

தலைமகன், தலைவியைப் பிரிந்து பொருள்தேடக் கருதிய தன்னெஞ்சொடு புலந்துரைப்பதாக அமைந்தது,

நாய்வயி னுள்ள குணமுமில் லேனை நற்றொண்டு கொண்ட
தீவயின் மேனியன் சிற்றம்பல மன்ன சின்மொழியைப்
பேய்வயினும் மரிதாகும் பிரிவெளி தாக்குவித்துச்
சேய்வயிற் போந்த நெஞ்சே யஞ்சத்தக்கதுன் சிக்கனவே.
(திருக்கோவை 343)

எனவரும் திருப்பாடலாகும். இதன்கண், 'மல்குசுனை மலர்ந்த' (347) என்னும் குறுந்தொகைப் பாடலில் வரும் 'நன்றே நெஞ்சம் நயந்த நின் துணிவே' என்ற தொடர்ப் பொருளும், 'அரிதரோ பேயோ டேனும் பிரிவு' என்னும் பழமொழியும் இடம் பெற்றிருத்தல் அறியத்தக்கதாகும். சிலவாகிய மொழியினையுடைமை தலைமகளிர்க்குரிய சிறப்பியல்பாகும். இக்கருத்துப்பற்றியே தலைவியைச் 'சின்மொழி' எனக்குறித்து வழங்குதல் மரபு. 'வார்ந்திலங்கு வையெயிற்றுச் சின்மொழி யரிவையை' (குறுந்தொகை 14) எனவும், 'ஒத்ததோ சின்மொழி' (கலித்தொகை 1) எனவும் வரும் சங்கச் செய்யுள் மரபின்வழி அடிகள் தலைவியைச் 'சின்மொழி' எனக்குறித்துள்ளார்.

பள்ளியிடத்துத் தலைமகனொடு ஊடிய தலைமகள், 'தில்லையிலுள்ள தலைவனே, நின் காதலிமாராகிய பரத்தையர்கள் நினக்குப் புதிதாகச் செய்த அப்புல்லுதல்களை யாம் செய்யமாட்டேம்; அதனால் எமது மேகலையைத் தொடாதே' எனப் புலந்து கூறும் முறையில் அமைந்தது,

'தில்லையூர நின்சேயிழையார் நவம்செய்த புல்லங்கள்
மாட்டேம்; தொடல், விடு, நற்கலையே'
(திருக்கோவை 358)

என்னும் தொடராகும்.

'ஏதிலாளர் இவண்வரிற் போதிற்
பொம்ம லோதியும் புனையல்
எம்முந் தொடாஅல் என்குவெமன்னே' (குறுந்-191)

எனவரும் குறுந்தொகைத் தொடர் ஈண்டு ஒப்புநோக்குதற் குரியதாகும்.

தலைவன், பரத்தையரொடுகூடிப் புனலாடி மகிழ்ந்திருந் தானாக, அவனைப் பிரிந்தமையால் சூடுவாரின்றி மலர்ச் செப்பின்கண் வைத்து மூடப்பெற்று வறிதேவைகிய பூவினை யொத்து வாட்டமுற்ற தலைமகள், இச்செயல் தலைவர்க்குத் தகாத பழிவிளைப்பதாம் என நாணி அதனைத் தோழிக்கும் புலப்படாது மறைத்திருந்தாளாக, அதுகண்ட தோழி, அவளது கற்புநலத்தினை வியந்து பாராட்டுவதாக அமைந்தது,

வேயாது செப்பினடைத்துத் தமிவைகும் வீயினன்ன
தீயாடி சிற்றம்பல மனையாள் தில்லையூரனுக்கின்
றேயாப் பழியென நாணி யென்கண் ணிங்ஙனே மறைத்தாள்
யாயாமியல்பிவள் கற்புநற்பால வியல்புகளே.
(திருக்கோவை-374)

எனவரும் திருப்பாடலாகும். இது,

'யாயாகியளே மாஅ யோளே
மடைமாண் செப்பிற் றமிய வைகிய
பெய்யாப் பூவின் மெய்சாயினளே
...
தண்ணந் துறைவன் கொடுமை
நம்முன் நாணிக் கரப்பாடும்மே' (9)

எனவரும் குறுந்தொகைச் செய்யுளின் சொற்பொருள் நடையினை ஒத்து அமைந்துளது.

நாணத்துடன் தனித்து வருந்தும் தலைவியை நோக்கித் தோழி, பாணன் வரவு கூறுவதாக அமைந்தது,

விறலியும் பாணனும் வேந்தற்குத் தில்லையிறையமைத்த
திறலியல் யாழ்கொண்டு வந்துநின்றார், சென்றிராத்திசைபோம்
பறலியல் வாவல் பகலுறை மாமரம் போலுமன்றே
அறலியல் கூழைநல்லாய் தமியோமை யறிந்திலரே.
(திருக்கோவை 375)

என்பதாகும். 'இராப்பொழுதின்கண் பறந்து சென்று திசையைக் கடந்து இரைதேர்ந்துண்ணும் இயல்புடைய வெளவால், தான் இரைதேர்தற்குரிய காலமல்லாமையால் பகற்பொழுதில் வந்துதங்கியிருத்தற்கு இடனாகிய பெரிய மரத்தினை ஒத்து (இரவுப்பொழுதில்) தனித்துறையும் நமது இயல்பினையறியாது விறலியும் பாணனும் நம் தலைவர்க்குத் துயிலெழுமங்கலம் பாடுதல் கருதி இங்கு வந்ததன்றி, நமது ஆற்றாநிலைமைகண்டு நம்மை இகழ்ந்து நகைத்தற்பொருட்டு இங்கு வந்தவர்களல்லர்' எனத் தோழி பாணனது வரவுரைத்துத் தலைமகள்பால் தோன்றிய வெகுளியையும் உடனே தணித்தாள் என்பதாம். இதன்கண் "சென்று இராத்திசைபோம் பறலியல் வாவல் பகலுறைமாமரம் போலும்' என்றது, தன்கண் நிலையாக வாழும் வெளவால் இரவில் தன்னைவிட்டு நீங்கி இரைதேர்தற்பொருட்டுப் பறந்து செல்லத் தனித்துறைதல் அதற்கு இடந்தந்த முதுமரத்திற்கு இயல்பாதல் போலத் தலைவர் நீங்கத் தனித் துறைதல் நமக்கு இயல்பென்றும், பகலில் முதுமரத்தில் தங்கியிருந்து இரவில் இரைதேர்தற் பொருட்டுப் பறந்து செல்லும் வெளவாலைப்போன்று இம்மனைக்கண் பகலில் தங்குதலும் இரவில் நீங்கிச் செல்லுதலும் அவர்க்கியல் பென்றும் கூறியவாறு. இத்தொடர்,

'கொடுமென் சிறைய கூருகிர்ப்பறவை
அகலிலைப் பலவின் சாரல் முன்னிப்
பகலுறை முதுமரம் புலம்பப் போகும்
சிறுபுன்மாலை' (குறுந்தொகை 352)

எனவரும் பாடற்பொருளை உளங்கொண்டு கூறியதாகும்.

நிலமும் விசும்பும் அவற்றிடைப்பட்ட நீர், தீ, காற்று, நிலத்திலுள்ள மலை முதலியனவும் ஆகிய எல்லாப் பொருள் களையும் படைத்தளித்தவன் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானே என்னும் உண்மையினை,

'புணர்ப்போன் நிலனும் விசும்பும் பொருப்பும்'
(திருக்கோவை 17)

எனவரும் தொடரில் திருவாதவூரடிகள் குறித்துப் போற்றி யுள்ளார். இத்தொடர்,

'நீரும் நிலனும் தீயும் வளியும்
மாக விசும்போ டைந்துட னியற்றிய
மழுவாள் நெடியோன் தலைவனாக' (மதுரைக்–453-5)

எனவரும் மதுரைக் காஞ்சியினை நினைவுபடுத்தும் முறையில் அமைந்துள்ளமை அறியத்தக்கதாகும்.

"வெய்யோன் தான்நுழையா இருளாய்.........
எழில்காட்டும் ஓர் கார்ப்பொழிலே' (திருக்கோவை. 116)

என அடிகள் பொழிலின் இயல்புகூறிய இப்பகுதி,

'வெயில் நுழைபறியாக் குயினுழைபொதும்பர்'
(பெரும்பாணாற்றுப்படை. 374)

எனவும்,

'வெயிலொளியறியாத விரிமலர்த்தண்கா'
(கலித்தொகை. 30.7)

எனவும் வரும் தொடர்களை ஒத்துள்ளமை காணலாம்.

வெம்மைமிக்க பாலைநிலத்திலே கூரிய பருக்கைக் கற்கள் பரவிக்கிடக்கும் தோற்றம், சுடர்விட்டு எரியும் தீயின் மேற் பதிந்துள்ள கூரியவேல்களைப்போன்று அமைந்த தன்மையினை,

'எரியும் தீமேல் அயில்போற் செறிபரற்கான்'
(திருக்கோவை 228)

என்ற தொடரால் அடிகள் புலப்படுத்தியுள்ளார். இத்தொடர்,

'அயிலுருப் பனையவாகி யைதுநடந்து
வெயிலுருப்புற்ற வெம்பரல்' (சிறுபாண் 7, 8)

எனவும்,

'அயில் காய்ந்தன்ன கூர்ங்கல்' (மலைபடுகடாம் 378)

எனவும் வரும் சங்க இலக்கியத் தொடர்ப் பொருளை இனிது விளக்கும் முறையில் அமைந்திருத்தல் காணலாம்.

திருக்குறளும் திருக்கோவையாரும்

திருவாதவூரடிகள் தெய்வப் புலவர் திருவள்ளுவர் அருளிய திருக்குறட் கருத்துக்களையும் சொற்பொருள் நலங்களையும் தாம் இயற்றியருளிய அகப்பொருட்கோவையாகிய இத்திருக்கோவையில் ஆங்காங்கே எடுத்தாண்டுள்ளார்.

இயற்கைப் புணர்ச்சியில் தலைமகளைக் கண்ணுற்ற தலைமகன் 'இங்ஙனம் தோன்றுகின்ற இப்பெண், திருமகள் முதலாகிய தெய்வமோ அல்லது மக்கட்குலத்திற் பிறந்தாளொரு மங்கையோ' என ஐயுற்றுக் கூறுவதாக அமைந்தது,

போதா விசும்போ புனலோ பணிகளது பதியோ
யாதோ அறிகுவ தேதுமரிதி யமன்விடுத்த
தூதோ அனங்கன் துணையோ இணையிலி தொல்லைத்தில்லை
மாதோ மடமயிலோ எனநின்றவர் வாழ்பதியே.

(திருக்கோவை. 2)

என்ற திருப்பாடலாகும். 'இயமன் விடுத்த தூதோ, அனங்கன் துணையோ, தில்லைமாதோ மடமயிலோ என நின்றவர் வாழ்பதி, போதோ, விசும்போ, புனலோ, பணிகளது பதியோ, யாதோ, ஏதும் அறிகுவது அரிது' என இயைத்துப் பொருள் கூறுவர் பேராசிரியர். "யமனால் விடுக்கப்பட்ட தூதோ, வசித்தற்குரியாரை வசித்தற்கு மன்மதனுக்கு உண்டாகியதொரு துணையோ, ஒப்பிலாதானது பழம்பதியாகிய தில்லைக்கண் வாழ்வார் ஓர் மாதரோ, மடப்பத்தையுடைய மயிலோ என்று சொல்லும் வண்ணம் நின்ற இவரது வாழும் இடம், தாமரைப் பூவோ, ஆகாயமோ, நீரோ, பாம்புகளது பதியாகிய நாகருலகமோ, இவையன்றி வேறு யாதோ, சிறிதும் துணிதல் அரிது' எனத் தலைமகன் தலைமகளை ஐயுற்று நின்றான் என்பதாம். இத்திருப்பாடல்,

"அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலுமென் னெஞ்சு" (1081)

என்னும் திருக்குறளுக்குத் திருவாதவூரடிகள் அருளிச் செய்த விளக்கவுரையாகத் திகழ்தல் உணர்ந்து மகிழத் தக்க

தாகும். இத்திருக்குறளில் வந்த 'அணங்குகொல்' என்பதனை 'யமன் விடுத்த தூதோ, அனங்கன் துணையோ' எனவும், 'வாழ்பதி, போதோ, விசும்போ, புனலோ, பணிகளது பதியோ', எனவும் வரும் தொடர்களாலும், 'ஆய் மயில் கொல்லோ, கனங்குழை மாதர் கொல்' என்பதனை 'தில்லைமாதோ மடமயிலோ என நின்றவர்' என்ற தொடராலும் அடிகள் விரித்து விளக்கியுள்ளமை நோக்கத் தக்கதாகும்.

அறநூல் விதியால் நம் தலைவர் உலகத்தைக் காத்தற் பொருட்டுப் பிரியக் கருதுகின்றார் எனத் தலைமகன் நாடு காத்தற்குப் பிரியும் பிரிவினைத் தோழி தலைமகளுக்கு அறிவிப்பதாக அமைந்தது,

மூப்பானிளையவன் முன்னவன் பின்னவன் முப்புரங்கள்
வீப்பான் வியன்றில்லையானருளால் விரிநீருலகங்
காப்பான் பிரியக் கருதுகின்றார் நமர் கார்க்கயற்கட்
பூப்பா னலமொளிரும் புரிதாழ்குழற் பூங்கொடியே.
(திருக்கோவை. 312)

எனவரும் திருப்பாடலாகும். இதன்கண் தலைமகனுக்குரிய நாடு காத்தற் பிரிவு தில்லையானருளால் அளிக்கப்பட்டது என்னும் உண்மையினைத் 'தில்லையானருளால் விரிநீருலகங் காப்பான் பிரியக் கருதுகின்றார் நமர்' எனவரும் தொடரின் கண் அடிகள் தெளிவாகக் குறித்துள்ளார். 'தில்லைச் சிற்றம்பலத்தில் ஆடல் புரிந்தருளும் இறைவனது ஏவலால் நம் தலைவர் விரிந்த நீராற் சூழப்பட்ட உலகத்தைக் காத்தற் பொருட்டுப் பிரியக் கருதுகின்றார்' என்பது இத்தொடரின் பொருளாகும். 'தில்லையான் ஏவலாவது, எல்லா உயிர்களையும் அரசன் காக்க வேண்டுமென்னும் தரும நூல் விதி. காத்தலாவது, தன் வினை செய்வாரானும் கள்வரானும் பகைவரானும் உயிர்கட்கு வரும் அச்சத்தை நீக்குதல்' எனப் பேராசிரியர் இத்தொடர்பொருளை விளக்குவர். இத்தொடர்,

'முறை செய்து காப்பாற்று மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப் படும்' (388)

என்னும் திருக்குறட் பொருளை அடியொற்றி அமைந்திருத்தல் அறியத் தக்கதாகும். தான் முறை செய்து, பிறர் நலியாமற் காத்தலையுஞ் செய்யும் அரசன் பிறப்பால் மகனேயாயினும் செயலால் மக்களுக்குக் கடவுள் என்று வேறு பிரித்து மக்களிற் பிரித்து உயர்த்துப் போற்றப் பெறுவான் என்பது

இதன் பொருளாகும். இதனால் 'இறை' என்ற பெயர் எங்கும் நீக்கமற நிறைந்த பொருளாகிய இறைவனையே குறிப்பதென்பதும், அப்பெயரால் அரசனைக் குறிப்பிடுதல் உபசார வழக்கென்பதும், இறைவனுக்குரிய முறை செய்தற் றன்மை உலகபாலருருவாய அரசன் வாயிலாக நிகழ்கின்ற தென்பதும் புலப்படுத்தப் பெற்றுள்ளமை அறியத்தக்க தாகும். தெய்வப் புலவர் அருளிய இத்திருக் குறட் கருத் தினை உளங்கொண்டே வாதவூரடிகளும், 'தில்லையா னருளால் விரிநீருலகங் காப்பான்பிரியக் கருதுகின்றார் நமர்' எனத் தலைவனது நாடுகாத்தற் பிரிவுக்கு இறைவனது ஏவ லாகிய திருவருட் குறிப்பினை ஏதுவாக்கிக் கூறினாராதல வேண்டும்.

மணமனை கண்டு வந்த செவிலி, தலைமகனது காதல் மிகுதியை நற்றாய்க்கு எடுத்துரைப்பதாக அமைந்தது,

> பொட்டணியானுதல் போயிறும் பொய்போ லிடையெனப்
> இட்டணியான் தவிசின்மலரன்றி மிதிப்பக்கொடான் [பூண்
> மட்டணிவார்குழல் வையான்மலர் வண்டுறுதலஞ்சிக்
> கட்டணிவார்சடை யோன்தில்லை போலிதன் காதலனே.
> (திருக்கோவை-303)

என்னும் திருப்பாடலாகும். "தில்லையை ஒப்பாளாகிய தலைவியின் காதலன், பொய்போலும் இடை ஒடிந்துபோம் என்று கருதி அவளுக்கு அணிகலன்களைப் பூட்டியறியான்; மெல்லடி நோகும் என்று அஞ்சி அவள் தவிசில் மிதிக்கும் பொழுதும் மலரின் மேலன்றி அடி வைக்க விடமாட்டான்; வண்டுகள் பொருந்தி மொய்க்குமென்றஞ்சிக் கூந்தலின்கண் தேன் நிறைந்த மலர்களை வைத்து அணியமாட்டான்; இவை பற்றிச் சொல்லுகின்றதென்ன? நுதலின்கண் மகளிர் இன்றியமையாது அணிதற்குரியதாகிய பொட்டையும் பொறையாம் என்று கருதி அணிதலைச் செய்யான்" என் பது இதன் பொருளாகும். இதன்கண் 'பொட்டணியான்........ பூண் இட்டணியான்' எனவரும் தொடர்கள்,

> 'அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு
> நல்ல படாஅ பறை' (திருக்குறள் 1115)

என நலம்புனைந்துரைக்கும் தலைமகன் கூற்றிற் பயின்ற பொருளையுட் கொண்டு, அத்தகைய தலைவனொருவனது காதல் மிகுதியைப் புனைந்துரைக்கும் முறையில் அமைந் துள்ளமை காணலாம்.

தலைமகன் பொருள்வயிற் பிரியக் கருதுகின்றான் எனத் தோழி கூறக் கேட்ட தலைமகள், அச்சொற் கேட்டு ஆற்றாது புலம்புவதாக அமைந்தது,

சிறுவா ளுகிருற் றுறுமுன்னஞ் சின்னப் படுங்குவளைக்
கெறிவாள்கழித்தனன் தோழி யெழுதிற் கரப்பதற்கே
அறிவாள் ஒழிகுவ தஞ்சனம் அம்பலவர்ப்பணியார்
குறிவாழ்நெறிசெல்வ ரன்பரென் றம்ம கொடியவளே.
(திருக்கோவை–334)

எனவரும் திருப்பாடலாகும். "கண்ணிற்கு மையெழுது கின்ற அச்சிறிய பொழுதளவும் காதலர் தோன்றாமையால் மையெழுதற் றொழிலை யான் ஒழிந்திருத்தலைத் தோழியாகிய கொடியவள் அறிவாள். (அங்ஙனம் அறிந்திருந்தும்) அம்பலவரை வணங்காதார் அவ் வணங்காமைக்கு அறிகுறி யாக வாழும் வெம்மைமிக்க பாலைநில வழியில் அன்பர் செல்வர் என்று கூறி, ஒளியையுடைய நகம் சிறிது ஊன்று தற்கு முன்னமே கிழிந்து சிதையும் நீல மலரைப் பறித்தற்கு (மரம் முதலியவற்றை) வெட்டுதற்குக் கருவியாகிய வாளை உறையினின்றும் எடுத்தாள்" எனத் தலைமகள் ஆற்றாது புலம்புகின்றாள். இதன்கண், 'அஞ்சனம் எழுதின் (காதலர்) கரப்பதற்கே (அஞ்சனம் எழுதுதல்) ஒழிகுவது அறிவாள்' என்றது, 'கண்ணுக்கு மை எழுதப்புகின் எழுதுகின்ற காலம் அத்துணையும் காதலர் (கண்ணில்) தோன்றாமையால் யான் என் கண்ணுக்கு மை எழுதாதொழிந்திருத்தலை என்னுட னிருக்கும் தோழியாகிய அவள் நன்கு அறிவாள்' என்று தலைமகள் தலைமகனைக் கண்ணிமையாது காண்டலில் தனக் குள்ள வேட்கையினைப் புலப்படுத்தியபடியாம். இத்தொடர்,

'கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணும்
எழுதேங் கரப்பாக் கறிந்து' (1127)

எனவரும் திருக்குறட் பொருளைக் கொண்டு கூறியதாகும். 'காதலர் எப்பொழுதும் என் கண்ணில் உள்ளாராதலால் கண்ணினை அஞ்சனத்தால் எழுதுவதுஞ் செய்யேன்; அத் துணைக் காலமும் அவர் மறைதலையறிந்து' என்பது இதன் பொருளாகும்.

'தலைமகள் தன் கணவனையன்றி வேறொரு தெய்வத்தைத் தெய்வமாகக் கருதாளாதலால், தலைவன் தன்னை வணங்காத பகைவரைச் சென்று கிட்டித் திறை கொண்டுவந்து அவளது இல்லத்துத் தங்குவதல்லது புறத்தே தங்கி

அறியான். இஃது அவ்விருவரது இயல்பு' எனச் செவிலி தலைமகளது கற்பினை நற்றாய்க்கு அறிவிப்பதாக அமைந்தது,

தெய்வம் பணிகழலோன் தில்லைச் சிற்றம்பலமனையாள்
தெய்வம் பணிந்தறியாளென்று நின்று திறைவழங்காத்
தெவ்வம் பணியச் சென்றாலுமன் வந்தன்றிச் சேர்ந்தறியான்
பௌவம் பணிமணியன்னார் பரிசின்ன பான்மைகளே. (304)

எனவரும் திருக்கோவையாகும்.

'தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யுமழை'

என்னும் பொய்யில் புலவர் பொருளுரையினைத் தன்கண் பொதிந்துள்ளமை காணலாம்.

தலைவனுடன் கூடி மகிழ்ந்த தலைவி, தனக்கு அவன் செய்த தலையளியை நினைந்து, இவ்வாறு அருளும் இவனது அருள் ஒரு நாள் என்னை யொழியப் பிறர்க்கும் ஆகும் எனத் தன்னுள்ளத்துட்கொண்டு பொருமி அழுது புலந்தாள் எனத் தலைவன் தோழிக்கு உரைப்பதாக அமைந்தது,

செவ்வாய் துடிப்பக் கருங்கண் பிறழச் சிற்றம்பலத்தெம்
மொய்வார் சடையோ னருளின் முயங்கி மயங்குகின்றாள்
வெவ்வாயுயிர்ப்பொடு விம்மிக் கலுழ்ந்து புலந்துநைந்தாள்
இவ்வாறருள் பிறர்க்காகு மெனநினை ந் தின்னகையே.
(திருக்கோவை–366)

என்பதாகும். "தவறுபற்றிப் புலப்பள் என்று நீ கூறுகின்றாய். இவ்வாறு யான் செய்த அருள் பிறர்க்கும் ஆகும் என ஒன்றனை உட்கொண்டு இவள் புலக்கின்றாள்" எனத் தலைவன் தன் தவறின்மையையும் காரணமின்றியும் புலக்கும் தலைவியின் இயல்பினையும் தோழிக்குக் கூறினான் என்பதாம். இதன்கண், 'இவ்வாறு அருள் பிறர்க்காகும் என நினைந்து இன்னகை புலந்தாள்' எனவரும் தொடர்,

'தன்னை யுணர்த்தினுங்காயும் பிறர்க்கு நீர்
இந்நீர ராகுதி ரென்று' (1313)

என்ற திருக்குறளில் வரும், 'பிறர்க்கும் நீர் இந்நீரர் ஆகுதிர்' என்னும் புலவிக் குறிப்பினை அடியொற்றி அமைந்ததாகும்.

புலவி தீர்ந்து தானும் அவனுமேயாகிப் பள்ளியிடத்தாளாகிய தலைமகள், தலைவன்பால் பின்னும் ஒரு குறிப்பு வேறு

பாடு கண்டு புலந்து 'இப்பள்ளிக் கட்டில் பலரைத் தாங்காது' என்று சொல்லி இறங்கினளாக, இவ்வாறு இறங்குதற்குரிய காரணம் யாதோ? என்று அவளயலுள்ள ஆயத்தாராகிய மகளிர் தம்முட் கூறுவதாக அமைந்தது,

மலரைப் பொருவடி மானுந் தமியள் மன்னன் ஒருவன்,
பலரைப் பொருதென் றிழிந்து நின்றாள் பள்ளி, காமனெய்த
அலரைப் பொருதன் றழல்விழித்தோன் அம்பலம் வணங்காக்
கலரைப் பொருச் சிறியாள் என்னைகொல்லோ கருதியதே.
(திருக்கோவை-367)

என்பதாகும். 'மலரையும் மிதித்தற்குப் பொருத மெல்லிய பாதத்தினையுடைய மான்போல்வாளாகிய தலைவி தான் ஒருத்தியே; அவளருகில் கணவனாகிய மன்னன் ஒருவனே; (அங்குப் பிறர் யாருமிலர்) அங்ஙனமாகவும் அவள் 'இக் கட்டில் (நம்மிருவர்க்கும் மேலாகப்) பலரைத் தாங்கும் வன்மையுடையதன்று' என்று சொல்லி அப்பள்ளியினின்றும் விரைந்து இறங்கி நின்றாள்; மன்மதன் எய்த மலரம்பினைப் பொருது அன்று, அனற் கண்ணினைத் திறந்த இறைவனது சிற்றம்பலத்தைத் தொழாத தீய மக்கள் என்ற வார்த்தையையும் கேட்கப்பொருத அந்நங்கை இந் நிலைமைக்கண் எண்ணியது யாதோ' என்பது இதன் பொருளாகும்.

இழிந்து நின்றாள் என்பது, விரைய இழிந்தாள் என்னும் பொருள்பட நின்றது. கலர்-தீயோர். கலரைப் பொருச் சிறியாள் என்றது, தீமக்கள் என்ற வார்த்தையைக் கேட்டற்கும் பொருதவள், தீயோர் போன்று வெகுளியுடையளாய் இவ்வாறு செய்தாள் என்றவாறு. இங்ஙனம் தலைமகள் தான் புலத்தற்குக் காரணமாகத் தான் தலைமகன்பால் உய்த்துணர்ந்து கண்ட குறிப்பாவது, 'இவ்வாறு அருள் பிறர்க்கும் ஆகும் என நினைந்து இன்னகை புலந்தாள்' (திருக்கோவை-336) என்று தலைமகன் கூறிய கூற்றையே தவறாக நினைந்து, அவன் தனது அருளுக்குரியவராகப் பிறரும் உண்டாகக் கூறியதாகக்கொண்டு அவனோடு புலந்து, 'இந்த அமளி நம்மிருவரையன்றி நின்னெஞ்சத்தாராகிய மகளிரையும் ஒருசேரத் தாங்கும் வன்மையுடையதன்று என்பாள், 'பலரைப் பொருது' என்று சொல்லித் தலைவனொடு தான் அமர்ந்திருந்த கட்டிலை விட்டு விரைய இறங்கினாள் எனத் தலைமகளது புலவி நுணுக்கம் புலனாக அடிகள் இத் திருப்பாடலை அருளிச் செய்துள்ளார். இது,

'நினைத்திருந்து நோக்கினுங்காயும் அனைத்துநீர்
யாருள்ளி நோக்கினீ ரென்று' (1320)

எனவரும் திருக்குறட்பொருளைப் பின்பற்றியமைந்துள்ளமை கூர்ந்துணரத்தக்கதாகும். "யான் அவளுடைய அவயவங்களது ஒப்பின்மையை நினைந்து காதலால் அவற்றையே நோக்கினேனாக, அதுகண்ட தலைவி, 'என் அவயவமனைத்தையும் நோக்கிய நீவிர், அவற்றது ஒப்புமையால் எம்மகளிரை நினைந்து நோக்கினீர்' என நுண்ணியதோர் காரணங் கற்பித்துக்கொண்டு என்னொடு புலந்தாள்" எனத் தலைவன் கூறியதாக அமைந்தது இத்திருக்குறளாகும்.

பரத்தையைக் கண்டமை கூறிப் புலந்து வேறுபட்ட தலைமகளுக்கு 'நம் தலைவர் தம்மால் பாதுகாக்கத் தக்க எத்திறத்தார்க்கும் பயன் விளைப்பவராதலால் அன்பினாலன்றி அருளாற் பரத்தையர்க்கும் தலையளி செய்தல் அவர்தம் பொறுப்பல்லவா? பரத்தையரைப் போன்று நாம் அவரொடு பிணங்குந் தன்மையேம் அல்லேம்; அவர் வரும்பொழுது எதிர்தொழுதும், போம்பொழுது புறந்தொழுதும் மனையறக் கடமையினைச் செய்துகொண்டிருத்தல் அல்லவோ நமக்குக் கடனாவது' என்று தோழி தலைமகனது ஊதியம் எடுத்துரைத்துத் தலைமகளை ஊடல்தீர்த்து அவனோடு அன்பினால் இசைவிப்பது,

'காரணி கற்பகம், கற்றவர் நற்றுணை, பாணர் ஒக்கல்.
சீரணி சிந்தாமணி, யணிதில்லைச் சிவனடிக்குத்
தாரணி கொன்றையன், தக்கோர்தஞ் சங்கநிதி, விதிசேர்
ஊருணி யுற்றவர்க்கு, ஊரன் மற்றி யாவர்க்கும் ஊதியமே'
(திருக்கோவை-400)

எனவரும் திருப்பாடலாகும். "ஊரனாகிய தலைவன் (பிறர் வேண்டாமைக் கொடுத்தலால்) மேகத்தை யொப்பான். (இரவலர் வேண்டியனவற்றை மருது கொடுத்தலால்) கற்பகத்தை ஒப்பான்; (நுண்ணிய கல்வியுடையவனாதலால்) கற்றோர்க்கு ஐயந்தீர நற்பொருளுணர்த்தும் உசாத்துணையாவான்; (இசையுணர்வினாலும் அன்புடன் நெருங்கிப் பழகி ஆதரித்தலானும்) இசைவல்ல பாணர்க்கு அவர்தம் சுற்றத்தை ஒப்பான்; (நினைத்தது கொடுத்தலால், சிந்தித்தவெல்லாம் சிந்தையறிந்துதவும் தெய்வத்தன்மை வாய்ந்த) சிந்தாமணியை ஒப்பான்; அழகிய தில்லைக்கண் அருட்கூத்தியற்றியருளும் சிவபெருமானுடைய திருவடிகளை எக்காலத்

தும் சிந்தையினும் சென்னியினும் கொண்டு போற்றுதலால் அம்முதல்வனுடைய) திருவடிக்குத் தாராகி அவ் இறைவனல் அணியப்படும் கொன்றைப்பூவின் தன்மையையுடையான்; சான்ருேர் தமக்கு(க் குறையாத நிறைவுடைய நிதி போன்று இருமையும் விளேத்தலால்) சங்கநிதியை ஒப்பான்; (தன் நண்பர்க்கும் பகைவர்க்கும் முறையே இன்பமும் துன்பமுமாகிய இருவினேப் பயன்களேயும் தப்பாது கொடுத்தலால்) ஊழாகிய விதியினே ஒப்பான்; தன் (சுற்றத்தாரனேவர்க்கும் அணுகி நின்று வழங்கும் பேரருளாளனுகத் திகழ்தலால்) ஊரின் வாழ்வாரனேவர்க்கும் உண்ணீரளித்துதவும் ஊருணியை ஒப்பான்; (இங்ஙனம் குண நலங்களெல்லாம் ஒருசேர அமையப்பெற்றிருத்தலால்) எல்லார்க்கும் பயன்தரும் நற்பொருளாக உள்ளான் என்பது இத்திருப்பாடலின் பொருளாகும். 'இப்பாட்டு ஐவகைத்திணைக்கும் உரித்தாகலின் பொதுவகைத் தெனப் பெறும்' என்பர் பேராசிரியர். இதன்கண்,

> 'கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
> டென்னுற்றுங் கொல்லோ உலகு'

எனவரும் திருக்குறட் பொருளே நினேந்து, 'கார்' என்றும்,

> 'பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்ருற் செல்வம்
> நயனுடையான்கட் படின்'

என்பதனே யெண்ணி, 'அணிகற்பகம்' என்றும்,

> 'நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
> பண்புடையாளர் தொடர்பு'

என்பதனே யுளங்கொண்டு, 'கற்றவர் நற்றுணே' என்றும்,

> 'ஊருணி நீர்நிறைந் தற்றே யுலகவாம்
> பேரறிவாளன் திரு'

என்பதனேக்கருதி 'உற்றவர்க்கு ஊருணி' என்றும் ஒப்புரவாளனுகிய தலேமகன் குணங்களேக் கூத்தர் முதலியோர் பாராட்டியுரைக்கும் முறையில் திருவாதவூரடிகள் இத்திருப் பாடலே அருளிச்செய்துள்ளமை படித்து இன்புறற்பாலதாகும்.

தேவாரமும் திருக்கோவையும்

தேவாரத் திருமுறையிலுள்ள சொற்றொடர்களும் கருத்துக்களும் இத்திருக்கோவையில் எடுத்தாளப் பெற்றிருத்தல் பின்வரும் ஒப்புமைப் பகுதிகளால் இனிது விளங்கும்.

திருக்கோவையாரில் 'திருவளர் தாமரை' எனத் தொடங்கும் முதல் திருப்பாடல்,

'திருவமர் தாமரை சீர்வளர் செங்கழு நீர்கொள்நெய்தல்
குருவமர் கோங்கங் குராமகிழ் சண்பகங் கொன்றை வன்னி
மருவமர் நீள்கொடி மாடமலி மறையோர்கள் நல்லூர்
உருவமர் பாகத் துமையவள் பாகனை யுள்குதுமே'. (4-97-10)

எனத் திருநாவுக்கரசர் அருளிய திருவிருத்தத்தினைச் சொற்றொடர் வகையாலும் யாப்பினாலும் பெரிதும் ஒத்திருத்தல் அறியத்தக்கதாகும்.

'சிறைவான் புனற்றில்லைச் சிற்றம்பலத்தும்' (20)

எனவரும் திருக்கோவைத் தொடர்,

'சிறைகொள் நீர்த் தில்லைதன்னுள் திகழ்ந்த
சிற்றம்பலத்தே' (4-22-8)

எனவரும் திருநேரிசையினை ஒத்ததாகும்.

இறைவன் திருவடிகளை அடியார்கள் தம் சென்னியிற் கொண்டு முடிமலர் போன்று அணிந்து வழிபடும் முறை பற்றி,

'தில்லைச் சிவன்தாளாம் பொற்றடமலர்சூடும்
என்னாற்றல்' (21)

எனத் தலைவன் தனது ஆண்மை தோன்றக் கூறுவதாக அமைந்த திருக்கோவைத் தொடர்,

'அப்பூதி குஞ்சிப்பூவாய் நின்ற சேவடியாய்' (4-12-10)

எனவரும் அப்பர் அருண்மொழியினை நினைவுபடுத்தும் முறையில் அமைந்ததாம்.

இறைவனுடைய திருவடிக்குத் தொண்டு பட்டமையால் ஊழிபெயரினும் தான் பெயராத உறுதி படைத்த உள்ளத்தினனாகிய தலைமகனை நோக்கி,

'விலங்கலைக் கால்விண்டு மேன்மேலிட விண்ணு மண்ணு முந்நீர்க்
கலங்கலைச் சென்ற வன்றுங் கலங்காய்' (24)

எனப் பாங்கன் கூறுவதாக அமைந்த திருக்கோவைத் தொடர்,

'மண்பாதலம்புக்கு மால்கடல் மூடிமற் றேழுலகும்
விண்பால் திசைகெட் டிருசுடர்வீழினும் அஞ்சல்நெஞ்சே'
(4-94-9)

எனவும்,

'வானந் துளங்கிலென் மண்கம்ப மாகிலென் மால்வரையும்
தானந் துளங்கித் தலைதடு மாறிலென் தண்கடலும்
மீனம்படிலென் விரிசுடர் வீழிலென் வேலைநஞ்சுண்
டுனமொன் றில்லா ஒருவனுக் காட்பட்ட உத்தமர்க்கே'
(4-112-8)

எனவும் வரும் திருவிருத்தப்பாடல்களின் பொருளை அடியொற்றி யமைந்திருத்தல் காணலாம்.

உலக மக்களால் தத்தம் தெய்வமென்று மதித்து வணங்கப்பெறும் பல சமயத் தெய்வங்களாலும் இறைவன் எனக்கொண்டு வழிபடப் பெறும் முதன்மை, தேவதேவனாகிய சிவபெருமானொருவனுக்கே உரியதென்பதும், அம் முதல்வன் தன் திருவடிகளைப் பேரன்பினால் தலைதாழ்த்து வணங்கிப் போற்றும் மெய்யடியார்களை வானோராகிய தேவர்களும் தம் தெய்வமெனக் கொண்டு தொழுது போற்றும் வண்ணம் மேல்நிலையில் வைத்து அருள்புரிவான் என்பதும் ஆகிய உண்மையினை, 'தெய்வம் பணிகழலோன்' (304) எனவும், 'தாழச்செய்தார் முடி தன்னடிக் கீழ்வைத் தவரை விண்ணோர், சூழச் செய்தான்' (42) எனவும், 'சோத்துன்னடிய மென்றோரைக் குழுமித்தொல் வானவர்சூழ்ந், தேத்தும்படி நிற்பவன்' (173) எனவும் வரும் திருக்கோவைத் தொடர்களில் திருவாதவூரடிகள் நன்கு புலப்படுத்தியுள்ளார். இத் திருக்கோவைத் தொடர்கள்,

'தொழப் படுந் தேவர் தொழப்படுவானைத் தொழுதபின்னைத்
தொழப்படுந் தேவர்தம்மால் தொழுவிக்கும் தன்
தொண்டரையே' (4-112-5)

எனவரும் நாவுக்கரசர் தேவாரத்தையும்,

'சிலையால் எயிலெய்தான் சிற்றம்பலந்தன்னைத்
தலையால் தொழுவார்கள் தலையானார்களே' (1–80–7)

எனவரும் ஞானசம்பந்தர் தேவாரத்தையும் ஒத்தமைந் திருத்தல் உணரத்தக்கதாகும்.

அடியவரிடத்தே அவரோடு கூடிய களிப்பையுடையேனாகி யான் இன்று செம்மாந்து மகிழும் வண்ணம் இறைவன் எனக்கு இன்பத்தினைத் தந்தருளித் தில்லையம்பலத்தின் கண்ணே தீயேந்தி ஆடல் புரிகின்றான் என்பது பட,

'இருங்களியாயின் றியானிறுமாப்ப இன்பம் பணிவோர்
மருங்களியா அனலாட வல்லோன்' (திருக்கோவை - 52)

எனவரும் தொடர்,

'இறுமாந் திருப்பன்கொலோ ஈசன் பல்கணத்
தெண்ணப்பட்டு' (4–9–11)

என்னுந் திருவங்கமாலைத் தொடர்க்கு அமைந்த விளக்கமாகத் திகழ்தல் காணலாம்.

'தில்லைக் கூத்தனை ஏத்தாதார் துன்புறும் பிறவியிற் பிறப்பராதலின், அவர்களைப் போன்று இனிவரும் நாட்களில் நான் இவ்வாறு நாண்கெடப் பிறவா தொழிக' எனத் தலைமகள் தன் நாணத்தை விடுதற்கு வருந்திக் கூறுவதாக அமைந்தது,

'குருநாண்மலர்ப் பொழில் சூழ்தில்லைக் கூத்தனை
யேத்தலர்போல்
வரு நாள் பிறவற்க' (திருக்கோவை - 44)

என்ற தொடராகும். இது,

'பெரும் பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம்
பிறவா நாளே' (6–1–1)

எனவரும் திருத்தாண்டகத் தொடரை உளங்கொண்டு கூறியதாகும்.

உலகங்ளெல்லாம் அழியவரும் ஊழிக்காலத்திலும் அழிவின்றி நின்று நிலவும் முழுமுதற் கடவுள் தில்லைக் கூத்தனாகிய சிவபெருமானே என்னும் உண்மையினை அறிவுறுத்தும் நிலையில் அமைந்தது,

'விண்ணை மடங்க விரிநீர் பரந்து வெற்புக்கரப்ப
மண்ணை மடங்க வருமொரு காலத்தும் மன்னிநிற்கும்
அண்ணல் மடங்கலதள் அம்பலவன்' (திருக்கோவை - 75)

எனவரும் திருப்பாடலாகும். இது,

'பெருங்கடல் மூடிப் பிரளயங்கொண்டு பிரமனும்போய்
இருங்கடல் மூடி இறக்கும் இறந்தான் களேபரமும்
கருங்கடல் வண்ணன் களேபரமுங் கொண்டு கங்காளராய்
வருங்கடல் மீளநின் றெம்மிறை நல்வீணை வாசிக்குமே'
(4–112–7)

எனவரும் திருவிருத்தத்துடன் ஒப்புநோக்கி யுணர்தற் குரியதாகும்.

நெஞ்சிற் கள்ளத்தையுடைய வஞ்சகர்க்கு இரங்கி அருளாதவகையில் அவர்களால் உணர்தற்கு அரியவனாக இறைவன் மறைந்துள்ள தன்மையினை, 'கள்ளப் படிறர்க்கு அருளா அரன்' (திருக்கோவை – 87) என வரும் தொடரில் வாதவூரடிகள் குறித்துள்ளார். இத் தொடர்,

'உள்ள முள்கலந் துள்கவல் லார்க்கலால்
கள்ளமுள்ளவழிக் கசிவானலன்' (5–82–4)

எனவும்,

'கரவாடும் வன்னெஞ்சர்க் கரியானை' (4–7–1)

எனவும்,

'வஞ்சனையார் ஆர்பாடும் சாராத மைந்தனை' (4-19–8)

எனவும் வரும் தேவாரத் தொடர்களின் பொருளை அடி யொற்றி யமைந்திருத்தல் அறியத்தக்கதாகும்.

தில்லையம்பலவன் யாழோசை போலும் மொழியை யுடைய உமையை ஒரு பாகத்திற் கொண்டவன் என்றும் அலைகளையுடைய கடல்கள் ஏழும் உலகங்கள் ஏழுமாய் எங்கும் நீக்கமற விளங்குபவன் என்றும் இறைவனைப் போற்றுவதாக அமைந்தது,

'யாழார் மொழிமங்கை பங்கத் திறைவன் எறிதிரைநீர்
ஏழாய் எழுபொழிலா யிருந்தோன்' (93)

எனவரும் திருக்கோவையாராகும். இது,

'யாழைப் பழித்தன்ன மொழிபங்கன்' (7–71–1)

எனவும்,

'சூழொளி நீர்நிலந்தீத் தாழ்வளி யாகாசம்
வானுயர் வெங்கதிரோன் வண்டமிழ் வல்லவர்கள்
ஏழிசையை யேழ்நரம்பின் ஓசையை' (7–81–6)

எனவும் வரும் சுந்தரர் தேவாரத் தொடர்களுடன் ஒப்பு நோக்குதற்குரியதாகும்.

தில்லைச் சிற்றம்பலவனை 'அம்பலத்தாடும் எம்சோதி' (94) எனச் சோதியாய்த் தோன்றும் உருவமாக அடிகள் போற்றியுள்ளார். சோதிப் பொருளாகிய அவ்விறைவன் அன்பிற் சிறந்த அடியாருள்ளத்திலும் அம்பலத்திலும் ஒளியுருவினனாகத் திகழுந் திறத்தினை,

'உருகுதலைச் சென்ற உள்ளத்தும் அம்பலத்தும் ஒளியே
பெருகுதலைச் சென்று நின்றோன்' (திருக்கோவை – 104)

என அடிகள் உளங்கசிந்து போற்றியுள்ளார். இத்தொடர்,

'சுடர் விட்டுளன் எங்கள் சோதி'

எனவரும் திருப்பாசுரத் தொடர்ப் பொருளோடு ஒப்பு நோக்கி யுணரத்தக்கதாகும்.

இயல்பாகவே பாசங்களின் நீங்கினமையால் முத்தனாகவும் தன்னை அன்பினால் வணங்கும் அடியார்களின் பாசத்தனையறுத்து வீடு பேறளித்தலால் முத்தி வழங்கும் பிரானாகவும் திகழ்வோன் தில்லையம்பலவன் என்னும் உண்மையினை,

'முத்தன் முத்தி வழங்கும்பிரான்' (திருக்கோவை – 127)

எனவரும் தொடரால் வாதவூரடிகள் குறித்துள்ளார். இத்தொடர்,

'முத்தா முத்திதரவல்ல முகிழ்மென் முலையாள் உமைபங்கா'
(7–52–1)

எனவரும் சுந்தரர் தேவாரத்தை ஒத்தமைந் திருத்தல் காணலாம்.

'நட்புச் செய்தால் பேயோடாயினும் பிரிதல் அரிது' என்னும் வாய்மொழியினை,

'பிரிவு செய்தாலரிதே கொள்க பேயொடும் என்னும் பெற்றி'
(திருக்கோவை – 144)

எனவரும் தொடரில் அடிகள் எடுத்தாண்டுள்ளார். இப் பழமொழி,

'பேயோடேனும் பிரிதல் இன்னாது' (7–95–9)

என வரும் சுந்தரர் தேவாரத்திலும்,

'இன்னாதே, பேஎயோ டேனும் பிரிவு' (122)

என்னும் பழமொழியிலும் இடம் பெற்றிருத்தல் அறியத் தக்கதாகும்.

தில்லையம்பலவனுகிய இறைவன் எல்லாப் பொருட்கும் மேலாகிய விண்ணுக்கு மேலும் எல்லாப் பொருட்கும் கீழாகிய பாதலத்தின் கீழும் கடல் சூழ்ந்த இந்நிலவுலகின் நடுவிலும் ஆக இவ்வாறு யாண்டும் நீக்கமறக் கலந்து விளங்குந் திறத்தினை,

'விண்ணுக்கு மேல் வியன்பாதலக்கீழ் விரிநீருடுத்த
மண்ணுக்கு நாப்பண் நயந்து தென்றில்லை நின்றோன்' (162)

எனவரும் திருக்கோவையில் அடிகள் விரித்துக் கூறியுள்ளார். இத் தொடர்,

'விண்ணகத்தான் மிக்க வேதத்துளான் விரிநீருடுத்த
மண்ணகத்தான் திருமாலகத்தான்' (4–112–6)

எனவரும் திருவிருத்தத்தினை அடியொற்றியமைந்ததாகும்.

எல்லாப் பற்றுக்களையும் அறவே துறந்த சிவஞானிகள் அறிந்து பற்றுதற்குரிய பெரும் பொருளாகத் திகழ்பவன் தில்லைச் சிற்றம்பலவன் என்பதனை,

'பற்றென்றிலார் பற்றுந் தில்லைப்பரன்' (திருக்கோவை – 178)

எனவரும் தொடரில் அடிகள் குறித்துள்ளார். இக்குறிப்பு,

'அருந்துணையை அடியார்தம் அல்லல் தீர்க்கும்
அருமருந்தை யகன் ஞாலத் தகத்துட் டோன்றி
வருந்துணையும் சுற்றமும் பற்றும் விட்டு
வான்புலன்க ளகத்தடக்கி மடவாரோடும்
பொருந்தணைமேல் வரும்பயனைப் போக மாற்றிப்
பொது நீக்கித் தனைநினைய வல்லோர்க் கென்றும்
பெருந்துணையைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே' (6–1–5)

எனவரும் திருத்தாண்டகப் பொருளையும்,

'பற்றற்றார் சேர் பழம் பதியை' (4–15–1)

எனவரும் தொடரையும் சுட்டி நிற்றல் உணரத்தக்கதாகும்.

வளமாகிய நீர்த்துறையில் அமைந்த பொழிலிடத்தே வாழும் வண்டினங்கள் பாணரை யொத்துப் பாட, அது கேட்ட புன்னைமரங்கள் தாதாகிய பசும் பொன்னைத் தன்னகத்தே கொண்ட போதாகிய வெண்கிழியைத் தந்து வள்ளலை யொத்து விளங்கிய காட்சியை,

'பாணிகர் வண்டினம் பாடப் பைம்பொன்தரு வெண்கிழிதஞ்
சேணிகர் காவின் வழங்கும் புன்னைத்துறை'

(திருக்கோவை - 183)

எனவரும் தொடரில் அடிகள் புலப்படுத்தியுள்ளார். இத் தொடருடன்,

'புன்னை வெண்கிழியிற் பவளம்புரை பூந்தராய்' (2-1-1)

எனவும்,

'வண்டுபாட, விரைசேர்பொன் இதழிதர' (1-132-4)

எனவும் வரும் தேவாரத் தொடர்கள் ஒப்பு நோக்கியுணரத் தக்கனவாகும்.

தலைமகள், 'என்னை நீத்தகன்ற வள்ளலை உள்ளம் நெகிழ்வித்து இவ்விடத்தே தரவல்லையோ' எனக் கூடற் றெய்வத்தை வாழ்த்திக் கூடலிழைத்து வருந்துவதாக அமைந்தது, 'ஆழி திருத்தும்' (திருக்கோவை – 186) என்னும் முதற் குறிப்புடைய திருப்பாடலாகும். இது,

'மாடநீர் மருகற் பெருமான் வரிற்
கூடு நீயென்று கூட லிழைக்குமே' (5-88-8)

எனவரும் திருக்குறுந் தொகையினை நினைவுபடுத்தும் நிலையில் அமைந்துள்ளமை காண்க.

'பாலொத்த நீற்றம்பலவன்' (திருக்கோவை – 238)

எனவரும் தொடர்,

'பாலையன்ன வெண்ணீறு பூசுவர்' (2-89-3)

எனவரும் தேவாரத் தொடரினை அடியொற்றியமைந்த தாகும்.

'தில்லையம்பலவன்பால் பத்திமிக்க அடியவரைப் போன்று ஒரு பித்தி, தன் பின்னேவர, ஒரு பெருந்தகை முன்னே செல்லக் கண்டீரோ' எனச் செவிலித்தாய் விரதி யரை நோக்கி வினவுவதாக அமைந்தது,

'சுத்திய பொக்கணத் தென்பணி கட்டங்கஞ் சூழ்சடைவெண்
பொத்திய கோலத்தினீர், புலியூரம் பலவர்க்குற்ற
பத்தியர் போலப் பணைத்திறுமாந்த பயோதரத்தோர்
பித்திதற் பின்வர முன்வருமோவொர் பெருந்தகையே' (242)

எனவரும் திருக்கோவையாகும். இதன் முதலிரண்டடி களிற் குறித்த விரதியர் கோலத்தியல்பு,

'வித்தகக் கோல வெண்டலை மாலை விரதிகள்' (4-21-1)

எனவரும் தேவாரத் தொடரிலும், பின்னடிகளிற் குறித்த பத்தியர் நிலையினளாகிய பித்தியின் இயல்பு, 'முன்னமவ

னுடைய நாமங்கேட்டாள்' எனவரும் திருத்தாண்டகத்தில் 'பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள், தன்னை மறந்தாள் தன் நாமங்கெட்டாள் தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே' என வரும் தொடரிலும் இடம் பெற்றிருத்தல் ஒப்பு நோக்கத்தக்கதாகும்.

தன்பால் அன்புடைய அடியார்களது வாக்கிலும் மனத்திலும் பிரியாதெழுந்தருளியிருக்கும் இறைவனது அருட்டிறத்தை,

'வாயும் மனமும் பிரியா இறை' (திருக்கோவை - 289)

என அடிகள் புகழ்ந்து போற்றியுள்ளார். இத்தொடர்,

'மனத்தகத்தான் தலைமேலான் வாக்கினுள்ளான்
வாயாரத் தன்னடியே பாடுந் தொண்டர்
இனத்தகத்தான்' (6–8–5)

எனவும், 'வாயானை மனத்தானை மனத்துள் நின்ற கருத்தானை கருத்தறிந்து முடிப்பான்தன்னை' (6—19—8) எனவும் வரும் தேவாரத்தொடர்களை ஒத்தமைந்திருத்தல் உணர்தற்குரியதாம். இவ்வாறே 'செய்ம்முக நீல மலர் தில்லைச் சிற்றம்பலத்தரற்கு' (356) எனவரும் திருக்கோவைத் தொடர், 'செய்ந்நின்ற நீலமலர்கின்ற தில்லைச் சிற்றம்பலவன்' (4—80—5) என வரும் திருவிருத்த அடியினையும், 'தில்லையிறையமைத்த திறலியல்யாழ்' (375) எனவரும் திருக்கோவைத் தொடர், 'எம்மிறை நல்வீணை வாசிக்குமே' (4—112—7) எனவரும் திருவிருத்தத் தொடரையும் அடியொற்றியமைந்துள்ளமை ஒப்பு நோக்கத்தக்கதாகும்.

திருவாதவூரடிகள் மேற்கொண்டொழுகிய சிவநெறிக்கொள்கை

சைவ சமய குரவர் எனப் போற்றப்பெறும் நால்வருள் கால முறைப்படி நாலாமவராக வைத்து எண்ணப் பெறு பவர் திருவாதவூரடிகளாவர். அடிகள் தமக்கு முன்னுள்ள திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய தேவார ஆசிரியர் மூவரும் அம்மூவர்க்கும் காலத்தால் முற் பட்ட திருமூல நாயனரும் கொண்டொழுகிய சைவ சித்தாந்தம் எனப்படும் சிவநெறிக் கொள்கையினையே மேற்கொண்டொழுகியவராவர். இச்செய்தி, திருமந்திர மாலையிலும் தேவாரத்திருப்பதிகங்களிலும் உள்ள தொடர் களும் கருத்துகளும் அடிகள் அருளிய திருவாசகம் திருக் கோவையாகிய அருள் நூல்களில் அவ்வாறே எடுத்தாளப் பட்டிருத்தலால் இனிது விளங்கும்.

திருவாசகத்தில், பதிபசுபாசம் என்னும் முப்பொரு ளுண்மை பேசப்பட்டுள்ளது. பதி - இறைவன். பசு - ஆன்மா பாசம் - உயிர்களைப் பற்றியுள்ள ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலங்கள். அவற்றுள் மாயை யின் காரியமாகிய மாயேயத்தையும், இறைவனது சத்தி களுள் ஒன்ருகிய திரோதாயியையும் வேறு பிரித்து எண்ணி மலங்கள் ஐந்தெனக் கூறுதலும் உண்டு. இங்ஙனம் மும் மலம், ஐம்மலம் என வழங்கும் சைவ சித்தாந்தக் குறியீடு களும் இருவினையொப்பு முதலிய நுண்பொருள்களும் திருவாசகத்தில் இடம் பெற்றுள்ளமை காணலாம். இக் குறிப்புக்களை உற்று நோக்குங்கால் திருவாதவூரடிகள் திருமூலர் அருளிய சைவ சித்தாந்தத் தத்துவக் கொள்கை களை மேற்கொண்டொழுகிய செம்புலச் செல்வரென்பது நன்கு துணியப்படும்.

இனி, 'சிவமானவாபாடி' எனவும், 'சிவமாக்கி எனை யாண்ட' எனவும், 'சென்று சென்றணுவாய்த் தேய்ந்து தேய்ந்தொன்ரும் திருப்பெருந்துறையுறை சிவனே' என வும் திருவாசகத்தில் வரும் தொடர்கள், அடிகள் காலத்துப் பரவிய மாயாவாதக் கொள்கையினை ஓரளவு தழுவியமைந் தன எனக் கருதுவாருமுளர்.[1] இக்கருத்து ஒரு சிறிதும்

1. தஞ்சை K. S. ஸ்ரீநிவாச பிள்ளையவர்கள் எழுதிய தமிழ் வரலாறு. (நான்காம் பதிப்பு) - (பக்கம் 138, 139)

ஏற்றுக்கொள்ளத் தக்கதன்று என்பதனை ஆசிரியர் மறைமலையடிகளார் அவர்கள் தாம் இயற்றிய மாணிக்க வாசகர் வரலாறுங் காலமும் என்னும் ஆராய்ச்சி நூலில் தக்க காரணங்காட்டி விளக்கியுள்ளார்கள்.[1] திருமந்திரம் முதலிய ஏனைய திருமுறைகளையும் எட்டாந் திருமுறை யாகிய இத்திருவாசகப் பனுவலையும் ஒப்பு நோக்கிப் பயில் வார்க்குச் சைவத் திருமுறைகள் பன்னிரண்டும் சித்தாந்தச் செந்நெறியாகிய திருநெறியினைக் கடைப்பிடித்தொழுகிய அருளாளர்கள் அருளிய பொருளுரைகள் என்பது நன்கு புலனும்.

கடவுள், உயிர், உலகம் என்னும் இம்மூன்றும் என்றும் உள்ள பொருள்கள் என்பது சைவ சித்தாந்தக் கொள்கை. 'பிரமம் ஒன்றே உள்பொருள்; உலகம் வெறும் பொய்த் தோற்றமே' என்பது மாயாவாதக் கொள்கை. சிவனருள் பெற்ற செம்புலச் செல்வராகிய திருவாதவூரடிகள் மாயா வாதக் கொள்கையினையும் முப்பொருளுண்மையினை உடன் படாமையால் அதனோடொத்த உலோகாயதக் கொள்கை யினையும் அறவே வெறுத்து விலக்கியவர் என்பது,

'மிண்டிய மாயா வாத மென்னுஞ்
சண்ட மாருதஞ் சுழித்தடித் தாஅர்த்து
உலோகாயதனெனும் ஒண்டிறற் பாம்பின்
கலா பேதத்த கடுவிடம் எய்தி' (திருவா-போற்றித்-54-57)

எனவரும் திருவாசகத் தொடரால் இனிது விளங்கும்.

உயிர்கள் ஆணவம் மாயை கன்மம் என்னும் மும்மலங் களாற் பிணிக்கப்பட்டுள்ளன என்னும் இவ்வுண்மை,

ஆணவ மாயையுங் கன்மமு மாமலம்
காணு முளைக்குத் தவிடுமி யான்மாவும்
தாணுவை யொவ்வாமற் றண்டுல மாய்நிற்கும்
பேணுவாய் மற்றுநின் பாசம் பிரித்தே. (2192)

எனவரும் திருமந்திரத்திற் கூறப்படுதலால், சைவ சித்தாந்தங் கூறும் மும்மலங்களின் உண்மை தேவார ஆசிரியர்கள் காலத்திற்கு முன்பே சைவ நூல்களிற் பேசப் பெற்றுள்ளமை நன்கு புலனும். இம்மும்மலங்களைப் பற்றிய இயல்புகள் தேவாரத் திருப்பதிகங்களிற் குறிக்கப்

1. மாணிக்கவாசகர் காலம் – பக்கம் – 142 – 172.

பெற்றுள்ளன என்பது முன்னர் விளங்கப்பெற்றது.[1] உயிர்களின் அறிவை விளங்கவொட்டாது மறைத் திருத்தல் ஆணவ மலத்தின் செயல். எல்லா உயிர் களும், மாயையால் ஆக்கப்பட்ட உடல், கருவி, உலகு, நுகர் பொருள் என்பவற்றைப் பெற்று அவற்றின் உதவி யால் அறியாமை சிறிது சிறிதாக நீங்க அறிவு விளங்கப் பெறுவன. இங்ஙனம் உயிர்களது அறிவு விளங்குதற்குக் கருவியாய் நின்றுதவுதல் மாயையின் செயல். உயிர்கள் மலம் மாயை என்னும் இரண்டின் அகமாய் நின்று வினை செய்யுங்கால் நல்வினை தீவினை என்னும் இரு வினைகள் நிகழ்வன. இவ்வினைகளால் உண்டாகும் பழக்கத்தை உயிர்களின் அறிவிற் பதியும்படி செய்தல் கன்ம மலத்தின் செயலாகும்.

ஆணவ மலத்தால் அறியாமையும், மாயை கன்மங் களால் அவ்வறியாமை நீங்கி அறிவு விளங்கப் பெறுதலும் உயிர்கள்பால் இடையறாது நிகழ்வன. இவற்றுள் ஆணவ மலம் ஒன்றே செம்பிற் களிம்பு போன்று உயிரோடு ஒற்றித்து அதன் விழைவு அறிவு செயல் ஆகிய ஆற்றல் களைத் தொன்று தொட்டு மறைத்து நிற்பது. மாயையும் கன்மமும் அம்மல நீக்கத்திற்கும் உயிர்களின் அறிவு விளக்கத்திற்கும் துணை செய்வனவாய் இடையேயொரு காலத்து வந்து வாய்த்தனவாகும். மல நீக்கத்திற்கு உதவி செய்யும் இவ்விரண்டும், ஆணவ மலத்தோடு உடன் நின்று அதன் சார்பில் தாமும் ஒரோவொருகால் மயக்கத்தை விளைத்தல் பற்றி மலம் என வழங்கப்படுவனவாயின. அறியாமையைச் செய்யும் மலத்தின் வலியை ஒடுக்கி உயிர் கட்கு அறிவினை விளங்கச் செய்தற் பொருட்டே எல்லாம் வல்ல இறைவன் மாயையின் காரியமாகிய பல்வேறுடம்பு களையும் அவை தங்குதற்குரிய பல்வேறுலகங்களையும் அவை நுகர்தற்கேற்ற பல்வேறு நுகர் பொருள்களையும் மாயையாகிய முதற்பொருளினின்றும் படைத்து வழங்கு கின்றான். இவ்வாறு வழங்கும் இறைவனது நோக்கம், உயிர்கள் உலக நுகர்ச்சிகளால் நன்றுந் தீதுங் கண்டு அறிவு விளங்கப் பெற்றுத் தம்மைப் பிணித்துள்ள மும்மலப் பிணிப்பினின்றும் விடுபட்டுப் பேரின்ப வுருவினதாகிய சிவத்தோடு இரண்டறக் கலந்து தாமும் சிவமுமாய் நிலை

1. பன்னிரு திருமுறை வரலாறு முதற் பகுதி - பக்கம் - 674-676.

பெயராப் பேரின்ப நிலையில் இருத்தல்வேண்டும் என்பதே யாகும்.

இறைவனருளால் மாயை கன்மங்களின் உதவியினைப் பெற்றுச் சிறிது சிறிதாக அறியாமை தேய்ந்து அம் முறையே அறிவு விளங்கப் பெற்ற உயிர்கள், தமக்குத் தோன்றாத் துணையாய் நின்று அருள் புரியும் உண்மையறி வின்ப வுருவினனாகிய சிவபரம் பொருளை அடைந்து அம் முதல்வனருளில் இரண்டறக் கலந்து ஒன்றாதலிலேயே தமது நாட்டத்தைச் செலுத்தி, உலகியற் பொருள்களிலும் தம்மைச் சூழ்ந்துள்ள உற்றார் உறவினர் முதலியோரிடத்தி லும் தம் உடம்பிலும் உயிராகிய தம்மிலும் செல்லும் உணர்வை மடித்துத் திருப்பித் தம் உயிருணர்வுக்கு உணர் வாய் விளங்கும் சிவ பரம்பொருளிலே படியுமாறு செய்து, தாம் ஒரு பொருள் உண்டென்பதனை மறந்து சிவமாகவே அமர்ந்திருப்பன என்பர் பெரியோர். இவ்வாறு உயிர்கள் மும்மலப் பிணிப்பினின்றும் நீங்கிச் செம்பொருளாகிய சிவத்தைத் தலைக்கூடிச் சிவமெனத் தாமென வேறின்றி இரண்டறக் கலத்தலையே திருவாதவூரடிகள் ‘சிவமாதல்’ எனக் குறித்துள்ளார். ஆகவே மலம் மாயை என்னும் பாசங்களும், அவற்றோடு உடனாய் நிற்றல்பற்றிப் பசுவென வழங்கப்படும் உயிர்களும், இவை எல்லாவற்றையும் ஊடுருவி யாண்டும் நிறைந்து நின்றே ஒன்றினும் தோய் வற விளங்கும் பதியாகிய சிவமும் என இம்மூன்றும் என்றும் உள்பொருள்களேயாம் என்பதும், உயிர்கள் மலமாயை கன்மங்களின் பிணிப்பினின்றும் விடுபட்டுச் சிவத்தைத் தலைக்கூடுதல் என்பது, மும்மலங்களாற் கட்டுப்பட்டு அல்லற்படும் முன்னைய நிலையினின்றும் பெயர்ந்து என்றும் பேராவியற்கையாகிய பெருநிலையைப் பெற்றுப் பேரின்ப வுருவாய் நிற்கும் அவ்வளவே யல்லது, அவ்வுயிர்கள் தம் பொருண்மை கெட்டு ஒன்றுமேயில்லாத வெறும்பாழா யொழிதல் அன்று என்பதும், சைவ சித்தாந்தத்தின் தெளிந்த கொள்கைகளாகும்.

திருவாதவூரடிகள் அருளிய திருவாசகப் பனுவலில் சைவ சித்தாந்த நுண்பொருள்கள் ஆங்காங்கே தெளிவாக விளக்கப் பெற்றிருத்தல் காணலாம். உயிர்களின் அகத்தே அறிவை மறைத்து நிற்கும் மலமும் புறத்தே அவ்வுயிர் களின் கட்புலனை மறைத்து நிற்கும் இருளும் ஆணவ மலத்

தின் இரு வேறு திறங்கள் ஆதலின், அதனை 'இருள்' எனவும், அஃது அறியாமையைச் செய்தலின், 'அஞ்ஞானம்' எனவும், உயிர்களின் அறிவு செயல் முதலியன வெளிப்பட ஒட்டாது அவற்றைக் கயிறுபோல் இறுகப் பிணித்து நிற்றலின் 'பாசம்' எனவும், உயிர்கட்குக் கலக்கத்தை விளைவித்தலின் 'மலம்' எனவும், அம்மலத்தின் முனைப்பால் உயிர்கள்பால் நிகழும் வினைகள் கொடுமையுடையனவா யிருத்தலின் 'கடிய வினை' எனவும், இவ்வாறு தொன்று தொட்டு உயிர்களைப்பற்றிவருத்தும் பழைமையுடையதாதல் பற்றி அதனைப் 'பழமலம்' எனவும், உயிர்கள் அடையும் எல்லாத் துன்பங்கட்கும் காரணமாதல் பற்றிப் 'பாசவேர்' எனவும் திருவாதவூரடிகள் ஆணவமலத்தின் இயல்பினை விளங்க அறிவுறுத்தியுள்ளார். இந்நுட்பம்,

'வல்வினையேன் தன்னை, மறைந்திட மூடிய
மாய இருளை' (சிவ புராணம் – 50, 51)
'என்னுடை யிருளை ஏறத் துரந்தும்' (கீர்த்தித் – 6)
'அவன் வாங்கிய என் பாசத்திற் காரென்று
அவன் தில்லையின் ஒளி போன்று' (திருக்கோவை–109)
'அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே'
(சிவபுராணம்-40)
'பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே' (௸ 64)
'பாசத் தளையறுத்து ஆண்டுகொண்டோன்'
(திருக்கோவை–115)
'கடலின் திரையதுபோல்வரு கலக்க மல மறுத்து'
(உயிருண்ணிப்பத்து)
'கடிய வினையகற்றிப், பழமலம் பற்றறுத்தாண்டவன்'
(திருப்பாண்டிப் பதிகம்)
'பாசவேர் அறுக்கும் பழம்பொருள்' (பிடித்த பத்து)

என வரும் அடிகள் வாய்மொழிகளால் இனிது புலனுதல் உணரத்தக்கதாகும்.

உயிர்களைப் பொதிந்துள்ள மலத்தின் இயல்பினைக் கூறுமிடத்து, அம்மலத்தின் ஆற்றலைக் கெடுத்து உயிர்களை உய்வித்தருளும் சிவத்தின் இயல்பினை, 'அஞ்ஞானந்தன்னை அகல்விக்கும் நல்லறிவு' எனவும், 'மலம் அறுத்து என் உடலும் எனதுயிரும் புகுந்து ஒழியாவண்ணம் நிறைந் தான்' எனவும் 'கழிவில் கருணை' எனவும், 'பழம்பொருள்' எனவும் 'அவன் தில்லையின் ஒளி' எனவும் வரும் தொடர் களில் அடிகள் உடன் வைத்து உணர்த்தியுள்ளார். பழம் பொருளாகிய சிவம் என்றும் நல்லறிவுப் பொருளாகத்

திகழ்தலும், மலந்தீர்ந்த உயிர் தன் பொருட்டன்மை சிதையாதிருக்க, அவ்வுயிரின்கண் சிவம் புலப்பட்டுத் தோன்றி அதன் உடல், கருவி கரணங்களை அகத்திட்டு விளங்குதலும், பேரருளாளனாகிய இறைவன் உயிர்களின் மலத்துன்பத்தை நீக்கித் தன் பேரருளின்பத்தை உயிர்கட்கு வழங்கும் அருட் குறிப்புடையனாதலும், அம்முதல்வன் தன்பால் அன்புடைய அடியார்கட்கு அருள் வழங்குதற் பொருட்டுத் தில்லைச் சிற்றம்பலமாகிய அருள்வெளியில் ஒளி யுருவினனாகி நின்று ஆடல்புரிதலும் இங்கெடுத்துக் காட்டிய திருவாசகத் தொடர்களால் இனிது புலனாகும். உயிரும் சிவ மும் பொருட்டன்மையால் இரு வேறு பொருள்களாதலும், உயிர்கள் தொன்மையே மும்மலப் பிணிப்புடையனவா யிருக்க, முற்றுணர்வும் பேரருளும் அளவிலாற்றலும் வரம்பிலின்பமும் உடையனாய் இயல்பாகவே பாசங்களின் நீங்கிய இறைவன், உயிர்களை மும்மலப் பிணிப்பினின்றும் விடுவித்து அவ்வுயிர்களைச் சிவமாகிய தன்னுடன் பிரிவின்றி ஒன்றும்வண்ணம் தன் அருள் ஒளியில் அகத்திட்டுக் கொள் ளுதலும் மேற்குறித்த அடிகள் வாய்மொழிகளால் நன்கு பெறப்படுதலின், திருவாதவூரடிகள் சைவ சித்தாந்த சமயத் தினராதல் நன்கு தெளியப்படும். இறைவனது அருளுப காரத்தால் மும்மலப் பிணிப்பினின்றும் நீங்கிய தூய உயிர்கள்பால் அம்முதற்பொருளாகிய சிவம் முனைத்துத் தோன்றி அவ்வுயிர்களைத் தன்னுளடக்கித் தன்னையே காட்டி நிற்கும் என்பது,

> சுத்தச் சிவனுரை தானதில் தோயாமல்
> முத்தர் பதப்பொருள் முத்திவித்தாமூலம்
> அத்தகை யான்மா யரனை யடைந்தற்றுச்
> சுத்த சிவமாவரே சுத்த சைவரே. (திருமந்திரம்–1440)

எனவும்,

> அனாதி சீவனைம் மலமற்றப் பாலாய்
> மனாதியடங்கத் தனைக்கண்டரனாய்த்
> தனாதிமலங்கெடத் தத்துவா தீதம்
> வினாவுநீர் பாலாதல் வேதாந்த வுண்மையே. (ஷை – 2401)

எனவும்,

> உயிரைப் பரனை யுயர்சிவன் றன்னை
> அயர்வற் றறிதொந்தத் தசியதனாற்
> செயலற் றறிவாகி யுஞ்சென் றடங்கி
> அயர்வற்ற வேதாந்த சித்தாந்த மாமே. (ஷை – 2402)

எனவும் திருமூல நாயனாரும்,

ஆன்மா, தன் பொருட்டன்மையழிந்து சிவம் ஒன்றுமே ஒழியாமலும், சிவத்தின் வேருய்த் தான் தனித்து நில்லாமலும், பாலோடு அளாவிய நீர் தன் உண்மை கெடாமல் பாலின் தன்மையதாய் அதனுடன் பிரிவறக் கலந்து ஒன்றுதல் போன்று, மலம் நீங்கித் தூயதாகித் தன் உண்மை கெடாமல் சிவத்துடன் இரண்டறக் கலந்து ஒன்றுதலேயே சிவமாதல் எனச் சைவ சித்தாந்த நூல்கள் கூறும் என்பது மேற்காட்டிய திருமந்திரப் பாடலில் தெளிவாக விளக்கப்பட்டிருத்தல் காணலாம்.

"ஆதித்தப் பிரகாசம் காட்டாகப் பிரபஞ்ச ரூபத்தைப் பற்றிநின்ற கண்ணுனது, அந்த உருவங்களைவிட்டு அந்தப் பிரகாசத்துக்கு முதலாயிருக்கிற ஆதித்தனைக் கண்டு பிரிவற நின்றாற்போல, ஆன்மாவும் அருளிடமாகக் கூடி நின்று சத்தாதி விடயங்களைப் புசித்து நிற்கச் செய்தே அதனையும்விட்டு மனோவிகாரமும் அடங்கி அந்த அருளுக்கு முதலாயிருக்கிற சிவத்தோடும் அந்த அருள் காட்டாகச் சென்று கூடிப் பிறிவற்று இரண்டற நிற்கையால்" ஆன்மா அந்தச் சிவத்தோடுங் கூடிச் சிவமாய் நிற்கும் எனக் கூறி, அதற்குப் பிரமாணமாக,

'அவமாய தேவர் அவகதியி லழுந்தாமே
பவமாயங் காத்தென்னை யாண்டுகொண்ட பரஞ்சோதி
நவமாய செஞ்சுடர் நல்குதலும் நாமொழிந்து
சிவமானவா பாடித் தெள்ளேணங் கொட்டாமோ'

(திருவா-திருத்தெள்-4)

எனவரும் திருவாசகத் திருப்பாடலை எடுத்துக்காட்டுவர் மதுரைச் சிவப்பிரகாசர். "சிவமாய் என்றது ஆன்மா தற்போதமாய் நிற்பதுஞ் செய்யாமல் தானென்கிற முதல் கெடுவதுஞ் செய்யாமல் தற்போதங் கெட்டு அந்தச் சிவத்தோடுங் கூடி இரண்டற நின்று அநுபவித்தது என அறிக. அப்படிச் சிவமாய் என்ற சொல் அந்தச் சிவமாவதுஞ் செய்யாமற் பிறிந்து நிற்பதுஞ் செய்யாமல் நிற்கை என்பதற்குப் பிரமாணம் சங்கற்ப நிராகரணத்தில், 'ஆறாய் என்பதனைத்தும் அவ்வவை, தானாகாமையைச் சாற்றிடும் என்க, தாமே யெனுமித் தனியேகாரம், அழிந்திலர் அதுவே ஆய்த்திலர் அது விட்டொழிந்திலர் பிறிவிலர் எனுமிவை உணர்த்தும்" (சிவப்பிரகாசம் 80-ம் செய்யுள் உரை) எனச் சிவமாதல் என்னுஞ் சொல்லுக்கு அவ்வாசிரியர் கூறும் விளக்கம் இங்கு உணரத்தக்கதாகும்.

எம்பிரா னென்றதேகொண் டென்னுளே புகுந்துநின் றிங்
கெம்பிரா னாட்ட ஆடி யென்னுளே யுழிதர்வேனை
எம்பிரான் என்னைப் பின்னைத் தன்னுளே கரக்குமென்றால்
எம்பிரா னென்னி னல்லால் என்செய்கேன் ஏழையேனே.
(4-76-3)

எனவும்,

'தற்பரமாய்ச் சதாசிவமாய்த் தானும் யானும்
ஆகின்ற தன்மையனை' (6–98–7)

எனவும்,

'என்னானாய் என்னானாய்' (6–95–7

எனவும் திருநாவுக்கரசு நாயனாரும்,

'திகழ்ந்தமெய்ப் பரம்பொருள்
சேர்வார்தாமே தானாகச் செயுமவன்' (1–126–7)

எனவும்,

'அப்பரிசிற் பதியான அணிகொள் ஞானசம்பந்தன்' (1-54-11)

எனவும் ஆளுடையபிள்ளையாரும்,

'நாற்றானத் தொருவனை நானாயபரனை' (7-38-4)

எனவும்,

'என்னவனாம் அரன்' (7–39-11)

எனவும் நம்பியாரூரரும்,

நானவனென் றெண்ணினர்க்கு நாடுமுளம் உண்டாதல்
தானெனவொன் றின்றியே தானதுவாய்-நானெனவொன்
றில்லென்று தானே யெனுமவரைத் தன்னடிவைத்
தில்லென்று தானாம் இறை. (சிவஞானபோதம்-சூ. 10. வெ-1)

என மெய்கண்ட தேவநாயனாரும் ஓதியவாற்றால் நன்கு உணரப்படும். திருமூலர், வேதாந்தம் என்றது உபநிடதங்களை. மாயாவாதத்தை வேதாந்தமென வழங்குதல் பிற்கால வழக்கு.

சிவத்தின் திருவடியைச் சேர்தல் என்பது, இறைவன் திருவருளிற் பதிதலாதலின், அதனைச் சிவமாதல் என வழங்குதலும் திருமூலர் காலந்தொட்டு வழங்கிய சைவ சித்தாந்த வழக்கேயாகும். இவ்வுண்மை,

ஒன்றும் இரண்டும் இலதுமாய் ஒன்றாக
நின்று சமய நிராகாரம் நீங்கியே
நின்று பராபரை நேயத்தைப் பாதத்தாற்
சென்று சிவமாதல் சித்தாந்த சித்தியே. (1437)

எனவரும் திருமூலர் வாய்மொழியால் இனிது புலனாம்.

சிவமாகிய முழுமுதற்பொருள் ஒன்றையே குறிக்க வேண்டின் அதனை ஏகம் என்ற சொல்லாற் கூறுதல் அமையும். சிவமும் உயிரும் தனித்தனி வேருய் நிற்பின் துவிதம் என்ற சொல்லாற் சொல்லலாம். இவ்வாறு இறைவன் ஒன்ருயும் இரண்டாயும் நில்லாமல் உயிர்களோடு பிரிப்பின்றி உடனுய் நிற்றலால், அவ்விரண்டற்ற நிலையை வடமொழியில் ‘அத்து விதம்’ என்ற சொல்லாற் குறித்தனர் சான்ருேர். “சாந்தம் சிவம் அத்வைதம் சதுர்த்தம் ஆன்மா” என்பது மாண்டூக்ய உபநிடதம். அத்து விதம் என்ற சொல்லுக்கு ஏகம் (ஒன்று) என ஒரு சாராரும், துவிதம் (இரண்டு) என மற்ருெரு சாராரும் பொருள் கொண்டனர். ‘ஒன்றும் இரண்டும் ஆகா இரண்டற்ற தன்மை’ என இதற்கு உண்மைப் பொருள் கண்டார் மெய்கண்டார். இங்ஙனம் ஒன்றெனலும் ஆகாமல் இரண்டெனலுமாகாமல் தூய நல்லுயிர்கள் சிவத்தோடு இரண்டறக் கலந்து சிவத்தன்மையாய் அடங்கி ஒன்ருகும் வீடு பேற்றின் நிலையே ‘சிவமாதல்’ என்னும் சொற்ருெடரால் அறிவுறுத்தப்பெறும் சைவ சித்தாந்த முடி பொருளாகும். அம்முடிபினைத் தெளிவிக்கும் நிலையில் அமைந்ததே, ‘நவமாய செஞ்சுடர் நல்குதலும் நாம் ஒழிந்து சிவமான வாபாடி’ எனவரும் திருவாசகத் தொடராகும். இறைவனருளும் சிவஞானத்தால் உள்ளந் தெளிவு பெருதவர்கள் இங்ஙனம் சிவமாதலாகிய பேரின்ப நிலையை அடைய மாட்டார்கள் என்பதனை,

‘தெளி வறியாதார் சிவமாக மாட்டார்’ (1480)

என வரும் தொடரால் திருமூலநாயனுர் அறிவுறுத்தியுள்ளமை இங்கு ஒப்பு நோக்கத்தக்கதாகும்.

நிலநீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப் பகலோன்
புலனுய மைந்தனேடெண் வகையாய்ப் புணர்ந்துநின்ருன்
உலகேழெனத்திசை பத்தெனத்தா னெருவனுமே
பலவாகி நின்றவா தோணேக்கம் ஆடாமோ.

(திருவா - திருத்தோணேக்கம் - 5)

எனவரும் திருப்பாடல், இறைவன் ஐம்பூதங்கள், ஞாயிறு, திங்கள், ஆன்மா ஆகிய எல்லாப் பொருள்களிலும் பிரிவின்றிக் கலந்து விளங்குந் திறத்தினை விரித்துரைப்பதாகும். இறைவன் இவ்வாறு பொருள் தோறும் யாண்டும் நீக்கமறக் கலந்து உடனுய் நிற்கும் இயல்பினைக் கூறுவது,

'தான் ஒருவனுமே பலவாகி நின்றவா' என்ற இத்தொடராகும். 'இறைவனையன்றி வேறொரு பொருளும் இல்லாதிருக்க அவன் ஒருவனே உலகுயிர்களாகிய பல பொருள்களுமாய்க் காணப்படுகின்றான்' என இத் தொடர்க்குப் பொருள் கூறுதல் திருவாதவூரடிகள் கருத்துக்குச் சிறிதும் ஒவ்வாததாகும். ஒரு பொருளே பல பொருள்களாகத் தோற்றுதலும், ஒருபொருளே பல பொருள்களிலும் ஊடுருவி நிற்றலும் தம்முள் மாறுபட்ட இரு வேறு தன்மைகளாகும். இவ்விரண்டினுள் இத்திருப்பாடலில் திருவாதவூரடிகள் குறித்தது, ஒரு பொருளே தம்முள் வேறுபட்ட பல பொருள்களிலும் இரண்டறக்கலந்து நிற்கும் இயல்பினையேயாகும். இந்நுட்பம், எண்வகையாய் நின்றான் என்றது 'எண்வகையாய்ப் புணர்ந்து நின்றான்' எனத் தாம் கூறும் பொருள் இனிது விளங்க அடிகள் விரித்துரைத்தலால் உணரப்படும்.

புணர்ந்து நிற்றல் என்றது, ஒரு பொருள், தானல்லாத வேறு பொருளுடன் கூடி நிற்றலைக் குறிப்பதன்றி, ஒரு பொருளே பலவாய் விரிந்து தோன்றுவதனையோ ஒன்று மற்றொன்றாகத் திரிந்து தோன்றுவதனையோ குறிப்பதன்றாம். ஓர் உடம்பினுட் கலந்து நிற்கும் உயிர், அவ்வுடம்பின் ஐம்பொறிகளினும் ஐம்புல உணர்வினைத் தோற்றுவித்தல் பற்றி உடம்போடு ஒன்றாய்க் கலந்திருப்பினும் உண்மையால் நோக்கும்வழி அவ்வுயிர், உடம்பின் வேறாதல் போன்று, இறைவனும் உலகுயிர்கள் எல்லாவற்றினும் நீக்கமறக் கலந்து நின்று அவற்றை இயக்குவித்தல் பற்றி அவை பலவுமாய் விரவியிருப்பினும் உண்மையில் அம்முதல்வன் அவற்றின் வேறாய்த் தான் ஒருவனே யாவன் என்னும் மெய்ம்மையினையே 'தான் ஒருவனுமே பலவாகி நின்றவா' எனவரும் இத்தொடரில் அடிகள் விளக்கியுள்ளார். 'ஒருவன்' எனவே ஒருவன் என்னும் ஒருவனாகிய இறைவனும், 'பல' எனவே அவனல்லாத உலகு உயிர்களும், 'ஆகி' எனவே அவற்றோடு அத்துவிதமாய்க் கலந்து விளங்கும் அவனது தன்மையும் புலப்படுத்தப் பெற்றமை உணரத்தகுவதாகும். இக்கருத்தினை, "நள்ளுங் கீழுளும் மேலுளும் யாவுளும், எள்ளும் எண்ணெயும் போல் நின்ற எந்தையே"[1] என முன்னரும்

1. திருவா - திருச்சதகம் - 46.

அடிகள் வற்புறுத்தியுள்ளமை இங்கு ஒப்ப வைத்து உணர்தற் பாலதாகும்.

இறைவன் எல்லாப் பொருள்களுமாய்க் கலந்துள் ளான் என்று கூறிய அளவில், 'இறைவன் ஒருவனே உலகமாகவும் உயிர்களாகவும் தோன்றுகின்றான்; அவனே யன்றி வேறொரு பொருளும் இல்லை' எனப் பிறர் பிறழ வுணராதவாறு,

> 'நிரந்த ஆகாயம் நீர் நிலம் தீகால் ஆய், அவையல்லையாய்,
> ஆங்கே, கரந்ததோர் உருவே'

எனவும்,

> 'பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
> விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகி'

எனவும்,

> 'எல்லா வுயிருமாய்த் தழைத்துப்
> பிழைத்தவை யல்லையாய் நிற்கும், எத்தனே'

எனவும், அம்முதல்வன் கலப்பினால் ஒன்றாயும், பொருட்டன் மையால் வேறாயும், உயிர்க்குயிராதற்றன்மையால் உடனா யும் நிற்குந் திறத்தினைத் திருவாதவூரடிகள் விளக்கிய திறம் ஈண்டு நினைத்தற்குரியதாகும். இறைவன் கலப்பினால் உலகுயிர்களாக நிற்குந் திறத்தினை நின்ற திருத்தாண்ட கத்திலும், பொருட்டன்மையால் அவற்றின் வேறாதலை 'விரிகதிர் ஞாயிறல்லர்', 'மண்ணல்லை விண்ணல்லை' முதலிய திருப்பாடல்களிலும் திருநாவுக்கரசர் அறிவுறுத்தி யுள்ளமை இங்கு ஒப்பு நோக்கி யுணரத்தக்கதாம்.

கதிரவன் எழுந்த அளவில் உலகிற்புறவிருள் மறைந்து போக மக்கள் கண்ணறிவு விளங்கப்பெற்று எதிர்ப்பட்ட எல்லாப் பொருள்களையும் காணப்பெறுதல் போன்று, ஆன்மாவுக்கு இறைவனது அருளொளி தோன்றிய அளவில் இதற்கு முன் அதனைப் பற்றியிருந்த ஆணவ இருள் அகன்று மறைய அவ்வருளொளியின் உதவியால் ஆன்மா, தன்னையும் தன் முதல்வனையும் ஏனைய பொருள்களின் நிகழ்ச்சியினையும் உள்ளவாறு காணும் ஆற்றலைப் பெறு கின்றது. பளிங்கினில் விளங்கித் தோன்றிய மலர்களின் வடிவும் நிறமும் கதிரவன் வானின் உச்சியை யடையும் போது மெல்ல மெல்லக் குறைந்து உச்சிக்கு வந்த நிலையில் முற்றிலும் இல்லையாய் ஒழிதல்போன்று, செஞ்ஞாயிறாகிய

இறைவனது அருள் விளக்கம் உயிரின்கண் பதியுந் தோறும் பதியுந்தோறும் முன் ஆன்மாவைப் பற்றியிருந்த மாயை கன்மங்களின் சார்பும் அணுவணுவாய்த் தேய்ந்து, பின்னர் அவ்வருளொளி ஆன்மாவை முற்றிலும் அகத்திட்டுக்கொண்ட நிலையில் அவற்றின் பற்று ஆன்மாவை விட்டு முற்றிலும் இல்லையா யொழிந்துபோம். இவ்வாறு மாயை கன்மங்களின் சார்பு முற்றுங்கெடச் சிவனொளியில் ஒன்றித்துக் காணும் தூய நல்லறிவினராகிய சிவஞானிகட்கு மெய்ப்பொருளாகிய சிவபரம்பொருளையன்றி உயிராகிய தம்மைப்பற்றிய உணர்வும் ஏனைய உலகப் பொருள்களும் தோன்றாதொழியும். இவ்வுண்மையினை, ஐம்புலன் கையிகந்து சிவனருளில் திளைக்கும் செம்புலச் செல்வராகிய திருவாதவூரடிகள், தாம் பெற்ற சிவானுபவத்தில் வைத்து எடுத்துரைத்துப் போற்றுவதாக அமைந்தது,

இன்றெனக் கருளி யிருள்கடிந் துள்ளத்
 தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
 நீயலாற் பிறிது மற்றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றும்
 திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்றும் நீ யல்லை அன்றியொன் றில்லை
 யாருன்னை யறியகிற்பாரே.

(திருவாசகம்-கோயிற்றிருப்பதிகம்-7)

எனவரும் திருப்பாடலாகும். நின் திருவருளைப் பெறும் வாய்ப்பினைப் பெற்ற இக்காலத்து, அடியேற்கு நின் திருவருளை வழங்கி என்னை மறைத்துள்ள ஆணவ இருளை அகற்றி(ப் பளிங்கனைய) என்னுள்ளத்தின்கண்ணே எழுந்து தோன்றும் கதிரவனைப் போன்று (என்னுள்ளும் புறம்புமாக யாண்டும் நிறைந்து) நிற்கும் நினது இயல்பினை(ச் சுட்டுணர்விறல் வேறு வைத்துணரும்) நினைப்பு முற்றும் நீங்க (நின் அருளின் வண்ணமாய் ஒன்றியிருந்து) நினைப்பேனாயினேன். (அங்ஙனம் நினைத்த அளவிலே என்னை அகத்திட்டுக்கொண்டு விளங்கும்) நின்னையன்றி (மாயாகாரியமாகிய பொருள்களுள்) ஒன்றும் இல்லையென்னும்படி உலகெலாம் ஆகி யாண்டும் விரிந்து பரவிச் சென்று அணுவினும் மிக நுண்ணியனாய் உலகுயிர்கள் தோறும் ஊடுருவி மறைந்து (இங்ஙனம் உள்ளும்புறம்புமாய், யாண்டும் நீக்கமற நிறைந்து) யாவும் ஒன்றாய்ப் பிரிவின்றி விளங்கும்

திருப்பெருந்துறைப் பெருமானே, (நீ இவ்வாறு உலகெலாமாகி நிற்பினும் அவற்றின் தன்மை நினக்கு எய்தலின்றி அவற்றுள் ஒன்றினுந் தோய்வின்றியுள்ளாய் ஆதலால்) நீ அவற்றுள் ஒன்றும் ஆவாய் அல்லை. (உலகுயிர்கள் எல்லாவற்றிற்கும் ஆதாரமாகத் திகழ்வோன் நீயேயாதலின்) நின்னையன்றி அவற்றுள் ஏதொன்றும் இல்லை. (மும்மலப் பிணிப்புற்று நிற்கும் இக் கட்டுநிலையில் நின்னைத் தம்மின் வேருகக் காண்பார்க்கு அவர் காணும் காட்சியுள்ளாகவே நீ புலப்படாது மறைந்திருத்தலின் அன்னோர் நின்னை உள்ளவாறு காணுதல் இயலாது. இனி, நினதருளாற் பாசப் பிணிப்பினின்றும் விடுபட்டு நின்னருள்வழி நின்று காணும் சிவஞானிகட்கு மீட்டுணர்தற்குக் கருவியாகிய சித்தவிருத்தியும் ஒடுங்குதலால் அந்நிலையில் நீ வேறு தாம் வேருய்ப் பிரிந்து நின்று காணுதலும் இயல்வதன்று. எனவே) யார்தாம் நின்னியல்பினை உள்ளவாறு உணர வல்லார் ?' என்பது இதன் பொருளாகும்.

இதன்கண், 'சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்ரும்' என வரும் தொடர், 'நேரியனுய்ப் பரியனுமாய்', 'உலகெலாமாகி வேருய் உடனுமாய்' நிற்கும் இறைவனது இயல்பினை யுணர்த்துவதாகும். இந் நுட்பம், "திரண்டாம் பயனெனுந் திருவருள் தெளியிற், சென்று சென்றணுவாய்த் தேய்ந்து தேய்ந்தொன்ரும், என்றிறை யியற்கை இயம்புதல்" என உமாபதி சிவாசாரியார் தாம் இயற்றிய சங்கற்ப நிராகரணத்தில் இத் தொடரை இறைவனியல்புணர்த்தியாகக்கொண்டு எடுத்தாளுதலாலும், 'என்று திருவாதவூர் நயினர் கர்த்தாவினுடைய தன்மையை அருளிச் செய்தது' எனவரும் உரைக் குறிப்பாலும் உய்த்துணரப்படும்.

இறைவனது திருவருளுக்குரியராகிய சிவஞானிகள் முதல்வனுடன் பிரிப்பின்றி ஒன்றியுடனும் வீட்டு நிலையில், முதல்வனும் உளன்; அம் முதல்வனேடு ஒன்றிச் சிவானந்தம் நுகரும் உயிரும் உளது; முன் உயிரைப்பற்றி நின்று பின் அப்பிணிப்பினின்றும் விலகிச் செயலற்று அடங்கிய மலமாயை கன்மங்களும் உள்ளன. முன்பெல்லாம் உயிரை இறுகப் பிணித்து நின்ற மும்மலப் பிணிப்பு அவ்வுயிரை விட்டு நீங்கினமையால், உயிரானது முதல்வனது திருவருளில் மூழ்கி அவ்வருளே மேற்பட்டுத் தோன்றத்

தான் அதன்கண் பிரிவற இயைந்து பேரின்பம் நுகர்ந் திருக்கும். அவ்வளவே அவ்வுயிரின் முன்னைய நிலைக்கும் பின்னைய நிலைக்கும் உள்ள வேறுபாடாகும்.

'இன்றெனக்கருளி' என வரும் இத்திருப்பாடற் பொருள் நுட்பத்தையுணர்ந்து சிவஞானம் பெற்ற நல்லுயிர் தன்முனைப்படங்கி இறைவன் அருள்வழி யடங்கி ஒற்றித்து நிற்கும் திறத்தினை அறிவுறுத்துவது,

"அவனே தானே யாகிய அந்நெறி
ஏகனாகி இறைபணி நிற்க
மலமாயை தன்னொடுவல்வினையின்றே" (சிவஞானபோதம்-10)

எனவரும் சிவஞானபோதம் பத்தாஞ் சூத்திரமாகும். இறைவன், உயிர்களின் பெத்தநிலையில் அவற்றோடுங் கூடி நின்று காரியப்படுத்தும் பொழுதே தானொரு முதல் இல்லையென்னும்படி தோன்றாமல் நின்று காரியப்படுத்தினாற் போன்று, உயிராகிய நீயும் சிவனது ஞானத்தினாலல்லவோ காரியப்பட்டு வருகிறோம் என்பதை யுணர்ந்து ஆன்ம போதம் சீவியாமல் அவனருள்வழி யடங்கி நிற்பாயாக என அறிவுறுத்துவது, இச்சூத்திரமாகும். உயிர் தன்னைப் பிணித்துள்ள மும்மலப் பிணிப்பு அற்று நீங்கும்பொருட்டு, அவற்றின் இயல்போடு ஒன்றுபட்டு நில்லாது சிவத்தினியல் போடு ஒன்றியிருந்து அதுவே தானாய் நிற்கும் பயிற்சியினை இடையறாது மேற்கொள்ளுதல் வேண்டும். இடையறாது நிகழும் அப்பழக்கத்தினால், உயிரைப் பற்றியிருந்த மலத்தி னியல்பு அதனை விட்டு நீங்க, உயிர் செம்பொருளாய சிவத் தின் இயல்பில் அடங்கி நிற்கும். மலம் அறுதற்பொருட்டுச் செயற்பாலதாகிய இப்பயிற்சியினை,

'தானவனாகும் சமாதி கைகூடினால்
ஆன மலமறும் அப்பசுத் தன்மைபோம்' (2320)

எனவரும் திருமந்திரத்தில் திருமூல நாயனார் அருளிச் செய்துள்ளார்.

இறைவன் திருவருளிலே உறைத்து நிற்பார்க்குப் புறத்தே யுள்ள புறப்பொருள்களைப் பற்றிய உணர்வும், தம் மோடு உடனாய் நிற்கும் உடம்பைப் பற்றிய உணர்வும், தமக்கு அகக் கருவிகளாயமைந்த மனம் முதலியவற்றைப் பற்றிய உணர்வும், உயிராகிய தான் ஒரு பொருள் உண்டு என எண்ணுந் தன்னைப் பற்றிய உணர்வும் நிகழாத வண்ணம் அவையனைத்தும் மறக்கப்பட்டு மறைந்தொழித

வியல்பாதலின், இறைவனருளால் மலம் மாயை கன்மங்களின் பிணிப்பு நீங்கிய பொழுதே அவற்ருேடு உடனிகழும் இவ்வுணர்களும் அணுவணுவாய்த் தேய்ந்து தம்மை விட்டு ஒழிந்தன என்பதனை,

வான்கெட்டு மாருதமாய்ந்தழல்நீர் மண்கெடினும்
தான்கெட்டலின்றிச் சலிப்பறியாத் தன்மையனுக்கு
ஊன்கெட் டுயிர்கெட் டுணர்வுகெட்டென் உள்ளமும்போய்
நான்கெட்ட வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ.

எனவரும் திருப்பாடலில் திருவாதவூரடிகள் தமது சிவாநுபவத்தில் வைத்துத் தெளிய விளக்கியுள்ளார். பாசப் பிணிப்பினின்றும் விடுபட்டு இறைவன் திருவருளில் ஒன்றுபட்டுத் திளைத்தலாகிய வீட்டு நிலைக்கண் நிகழும் சிவாநுபவமாகிய இதனை,

'தானும் அழிந்து தனமும் அழிந்துநீ
டூனும் அழிந்து உயிரும் அழிந்துடன்
வானும் அழிந்து மனமும் அழிந்தபின்
நானும் அழிந்தமை நானறியேனே' (திருமந்திரம் - 2951)

எனவும்,

'இருளும் வெளியும் இரண்டையும் மாற்றிப்
பொருளிற் பொருளாய்ப் பொருந்தவுள்ளாகி
அருளா லழித்திடும் அத்தனடிக்கே
உருளாத கன்மனம் உற்று நின்றேனே' (ஷை 2952)

எனவும் வரும் திருப்பாடல்களில் திருமூலநாயனர் நன்கு விளக்கியுள்ளார்.

பாசப்பிணிப்பினின்றும் நீங்கிய தூய உயிர், இறைவனுடன் இரண்டறக் கலந்த நிலையில், இதற்கு முன் அதன்கண் நிகழ்ந்த புறப்பொருளுணர்வும் தன்னைப்பற்றிய உணர்வும் முற்றிலும் மறைந்தொழிய, இறைவனது மெய்யுணர்வு மட்டுமே மேற்பட்டு விளங்கத் தன்னுணர்வு அதனுள் அடங்கி, உரைவரம்பிகந்த சிவானந்தமாகிய பேரின்ப வெள்ளத்திற் படிந்து இன்புறும் இவ்வின்ப நிலையில், உயிரானது தன் பொருட்டன்மையிற் சிறிதும் கெடாதிருக்கும் என்பதனை,

'முத்திதனின் மூன்று முதலும் மொழியக்கேள்
சுத்தவனு போகத்தைத் துய்த்தலணு—மெத்தவே
இன்பங் கொடுத்தல் இறை இத்தை விளைவித்தல்மலம்
அன்புடனே கண்டுகொள் அப்பா' (உண்மை – 50)

எனவரும் உண்மை விளக்கப்பாடலில் திருவதிகை மனவாசகங்கடந்தார் தெளிய விளக்கியுள்ளமை அறியத்

தக்கதாகும். உலக நுகர்ச்சியிற் பதிந்த உணர்வோடு நிற்கும் உயிர்க்குச் சிவம் விளங்காது; சிவபோகத்திற் றிளைக்கும் உணர்வோடு கூடிய உயிர்க்கு உலகம் தோன்றுது. இவ்வாறு கட்டு நிலையிலும் வீட்டு நிலையிலும் இருதிறப்பட்டுச் சார்ந்ததன் வண்ணமாதல் உயிரின் இயல்பு என்பது,

'மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தின் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதற்பூதம்
பரத்தின் மறைந்தது பார்முதற் பூதமே. (திருமந்திரம்–2290)

எனவரும் திருமூலர் வாய்மொழியால் நன்கு தெளியப் படும். உயிர் சார்ந்ததன் வண்ணமாந் தன்மையது என்பதனை,

'நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகு மாந்தர்க்
கினத்தியல்ப தாகும் அறிவு' (திருக்குறள்–452)

எனத் திருவள்ளுவர் பொது முறையிலும்,

'யாதொன்று பற்றின் அதன் இயல்பாய் நின்று
பந்தமறும் பளிங்கனைய சித்துநீ'
(ஆகாரபுவனம்-சிதம்பர ரகசியம்)

எனத் தாயுமானுர் சிறப்பு முறையிலும் வைத்து அறிவுறுத்தியுள்ளமை இங்கு நினைக்கத்தக்கதாகும்.

சிவவுணர்வாய் நிற்றல் என்பது, மலம் மாயை கன்மங்களில் ஒன்றினிடத்தும் ஒரு சிறிதும் நினைவு செல்லாமல் உயிராகிய தன்னையும் நினையாமல் சுட்டுணர்வு அறச் சிவம் ஒன்றையே நினைந்திருத்தல். இங்ஙனம் சிவவுணர்வில் தலைப்பட்டிருக்கும் உயிர், இறைவனது திருவடி ஞானத்தால் சிவமேபெறுந் திருவுடையதாகத் திகழுந் திறத்தினை,

'திருவடி ஞானஞ் சிவமாக்குவிக்கும்' (திருமந்திரம் - 1598)

எனவரும் தொடரில் திருமூலர் தெளிய விளக்கியுள்ளமை காணலாம்.

"தற்சேட்டை கெட நின்றதே சிவாநுபவம் என்பதற்குப் பிரமாணம், தேவாரத்தில், 'தன்னை மறந்தாள் தன்னுமங் கெட்டாள் தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே' என்பதும், திருவாசகத்தினும்

'ஊன் கெட் டுயிர்கெட் டுணர்வுகெட்டென் உள்ளமும் போய்
நான் கெட்ட வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ'

என்பதும் கண்டு கொள்க" எனச் சிவப்பிரகாச வுரையில் மதுரைச் சிவப்பிரகாசர் கூறும் விளக்கம் இங்கு உளங் கொளத்தக்கதாகும்.

மிருந்த சிவஞானத்துள்ளே தம் அறிவானது அடங்கிச் சிவத்தோடு இரண்டறக் கலந்து காணும் இக்காட்சியையே உபநிடதங்கள் சோகம் பாவனை எனவும் சித்தாந்த மாமறையாகிய ஆகமங்கள் சிவோகம் பாவனை எனவும் கூறும். இந்நுட்பம்,

மன்னிய சோகமாம் மாமறையாளர்தம்
சென்னிய தான சிவோகமாம் ஈதென்ன
அன்னது சித்தாந்த மாமறை யாய்பொருள்
துன்னிய ஆகம நூலெனத் தோன்றுமே. (2403)

எனவரும் திருமந்திரத்தாற் புலனும்.

தம்மைப் பிணித்துள்ள பசுத்தன்மை பாசத் தன்மை களை அறுத்து இறைவன் தன் திருவடிக்கண்ணே தம்மைப் பிரிவறச் சேர்த்துக் கொண்டதனையும் அங்ஙனம் தமக்குத் திருவடி நல்கியதே தம்மைச் சிவமாக்கி யாண்டமை யாதலையும்,

"பத்திமையும் பரிசுமிலாப் பசுபாசமறுத்தருளி
...
சித்தமென்னுந் திண்கயிற்றால் திருப்பாதங் கட்டுவித்த
வித்தகனார்" (திருவாசகம். கண்ட—6)

எனவும்,

'சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட, அத்தன்' எனவும் வரும் தொடர்களில் திருவாதவூரடிகள் தெளிவாகக் குறித்துள்ளார். ஆன்மா இங்ஙனம் சிவத் தோடு ஒன்றியியைந்து சிவமாகிய நிலையிலும் இறைவனுக் குரிய ஐந்தொழிலியற்றல் முதலிய தொழிலினைச் செய்யாத தாய் அம்முத்தி நிலையிலும் இறைவனுக்கு அடிமையாய்ச் சிவாநுபவம் ஆகிய நுகர்ச்சி யொன்றிற்கே யுரியதாம் என்பது, 'சிவமாக்கி' என்ற அளவிலமையாது, 'எனை யாண்ட' என அடிகள் விதந்து கூறும் சொற் குறிப்பால் இனிது புலனும்.

'உம்பர்பிரான் உற்பத்தியாதிகளுக்குரியன்
உயிர்தானும் சிவாநுபவம் ஒன்றினுக்கு முரித்தே'
(சிவஞான சித்தியார் - சுபக்கம் 319)

எனவரும் அருணந்தி சிவாசாரியார் வாய்மொழி இங்கு நினைத்தற்குரியதாகும்.

ஒன்பதாந் திருமுறை

திருமாளிகைத் தேவர் முதல் சேதிராயர் ஈருகவுள்ள அருளாசிரியர் ஒன்பதின்மரும் திருவாய்மலர்ந்தருளிய இருபத்தெட்டுத் திருப்பதிகங்களைத் திருவிசைப்பா என்றும் சேந்தனுர் பாடிய பல்லாண்டிசையினைத் திருப்பல்லாண் டென்றும் வழங்குதல் மரபு. இவற்றைத் திருவிசைப்பா மாலை யென ஒன்ருக வழங்குவர் திருமுறைகண்ட புராண ஆசிரியர். சைவத் திருமுறை பன்னிரண்டினுள் எட்டாந் திருமுறையாகத் திகழும் திருவாசகம் திருச்சிற்றம்பலக் கோவை யென்பவற்றை யடுத்து ஒன்பதாந் திருமுறை யென முறை செய்து போற்றுஞ் சிறப்பியல்பு திருவிசைப்பா திருப்பல்லாண்டு ஆகிய இத் திருப்பதிகங்களுக்கு உரிய தாகும். ஒன்பதாந் திருமுறையில் இருபத்தொன்பது திருப்பதிகங்கள் உள்ளன. தேவாரத் திருப்பதிகங்களைப் போன்று இசைநலம் வாய்ந்தன இத் திருப்பதிகங்களாத லின் இவை திருவிசைப்பா என வழங்கப் பெறுவனவாயின. இத் திருமுறையின் இறுதியிலுள்ள இருபத்தொன்பதாந் திருப்பதிகம், எங்கும் நீக்கமறக் கலந்து விளங்கும் எல்லாம் வல்ல இறைவனுக்குப் பல்லாண்டிசை கூறி வாழ்த்துவ தாகலின் திருப்பல்லாண்டு என்னும் சிறப்புப் பெயரைப் பெறுவதாயிற்று. இவ்வொன்பாதாந் திருமுறை முந்நூற் ருெரு பாடல்களையுடையதாய் அளவிற் சிறியதாயினும் திருக்கோயில் வழிபாட்டிற் பஞ்சபுராணமென ஓதப்பெறும் திருமுறைப் பாடல்கள் ஐந்தினுள் திருவிசைப்பாவில் ஒன்றும் திருப்பல்லாண்டில் ஒன்றுமாக இரண்டு திருப் பாடல்களை இத்திருமுறையிலிருந்து ஓதிவருகின்றனர். இவ்வழக்கம், இத்திருமுறையில் மக்களுக்குள்ள ஈடு பாட்டினை நன்கு புலப்படுத்துவதாகும்.

திருவிசைப்பா - திருப்பல்லாண்டு என்னும் இத் திருப் பதிகங்களைப் பாடிய ஆசிரியப் பெருமக்கள் வாழ்ந்தகாலம், முதல் ஆதித்த சோழன்முதல் கங்கை கொண்ட சோழன் இறுதியாகவுள்ள சோழ மன்னர்களின் ஆட்சிக்காலம் என்பது, இவற்றின் பொருளமைதியால் இனிது விளங்கும் தேவார ஆசிரியர்கள் அருளிய பதிகப்பெருவழியை கடைப்பிடித்துச் சிவபரம் பொருளை வழிபட்டுப் போற் முகமாகத் தாம்பெற்ற உள்ளத்திண்மையால் தம

நாட்டில் அயலாரது ஆட்சியை அகற்றி மீண்டும் சோழர் பேரரசை நிறுவியபெருமை பிற்காலச் சோழர்களுக்குரிய தாகும். இங்ஙனம் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் தஞ்சையைத் தலைநகராகக்கொண்டு தோன்றிய சோழர் பேரரசு, கங்கைநதி பாயும் வடநாட்டிலும் கடல் கடந்த கடாரம் முதலிய பிறநாடுகளிலும் புகழுடன் பரவி நிலைபெற்ற காலம் கி. பி. பத்தாம் நூற்றாண்டும் பதினொன் றாம் நூற்றாண்டும் என்பது சரித்திரம் வல்லார் அறிந்த தொன்றாம். இங்ஙனம் பிற்காலச் சோழ மன்னர்கள் இவ்வுலகிற் பெறற்கரும் வெற்றியைப் பெற்றுச் சிறப்புடன் ஆட்சிபுரிந்த பொற்காலமே இத்திருவிசைப்பாத் திருமுறை தோன்றிய நற்காலமாகும். இத் திருமுறையானது தெய்வங் கொள்கையாகிய சிவநெறியினால் தமிழ் வேந்தர் பெற்ற வெற்றியையும் அவ்வெற்றியின் விளைவாகத் தமிழகத்தார் பெற்ற அமைதி நிலையையும் அவ்வமைதியை அடிப்படையாகக் கொண்டு வளர்ந்தோங்கிய சைவ சமயத்தின் உயர்ச்சியையும் நன்கு விளக்குந் திருவரு ளிலக்கியமாகத் திகழ்கின்றது.

தஞ்சைப் பெருவுடையார் திருக்கோயிலைக் கட்டிய முதலாம் இராசராச சோழனால் அத்திருக்கோயிலின் கண்ணே ஆடல் பாடல் நிகழ்த்துவதற்கென நியமிக்கப் பெற்ற தளிச்சேரிப் பெண்டுகளிற் சிலர், நீறணி பவளக் குன்றம், எடுத்த பாதம், மழலைச் சிலம்பு என இத் திருவிசைப்பாப் பாடல்களில் அமைந்த சொற்றொடர் களையே தமக்குரிய பெயராகப் பெற்றுள்ளனர். இவ்வாறே தருணேந்து சேகரன் முதலிய திருவிசைப்பாத் தொடர் களும் மக்களுக்குரிய பெயராக வழங்கப்பெற்றுள்ளன. இப்பெயர் வழக்கத்தை யூன்றிநோக்குமிடத்து முதலாம் இராசராசனது ஆட்சிக்காலத்து இத்திருவிசைப்பாவுக்கு அமைந்த தனிச் சிறப்பு இனிது புலனாகின்றது.

திருவிசைப்பாப் பெற்ற திருத்தலங்கள் தில்லைச் சிற்றம்பலம், திருவீழிமிழலை, திருவாவடுதுறை, திருவிடைக் கழி, திருக்களந்தையாதித்தேச்சரம், திருக்கீழ்க்கோட்டூர் மணியம்பலம், திருமுகத்தலை, திரைலோக்கியசுந்தரம், கங்கைகொண்டசோழேச்சரம், திருப்பூவணம், திருச் சாட்டியக்குடி, தஞ்சை இராசராசேச்சரம், திருவிடை மருது, திருவாரூர் எனப் பதினான்கு தலங்களாகும்.

இவற்றுள் தில்லைச் சிற்றம்பலத்திற்கு மட்டும் பதினாறு திருப்பதிகங்கள் அமைந்துள்ளன. ஏனைப் பதின்மூன்று திருத்தலங்களும் ஒவ்வொரு திருப்பதிகமே பெற்றுள்ளன. இங்ஙனம் இவ்வொன்பதாந் திருமுறையிற் பாதிக்கு மேலுள்ள பதிகங்கள் தில்லையில் அருளிச் செய்யப்பெற்றன வாகத் தெரிதலால் இவ்வொன்பதாந் திருமுறையைத் தில்லைத் திருமுறையென்றே கூறுதல் பொருந்தும்.

திருவிசைப்பா மாலையை அருளிச்செய்த ஆசிரியர்கள் திருமாளிகைத்தேவர், சேந்தனார், கருவூர்த்தேவர், நம்பி காடநம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலி யமுதர், புருடோத்தமர், சேதிராயர் ஆக இவர் ஒன்பதின்மர் என்பது,

"செம்பொன்மணி யம்பலத்து நிருத்த னார்க்குத்
திருவிசைப்பா வுரைத்தவர்தந் திருப்பேர் சொல்லிற்
பம்பு புகழ் செறிமாளிகைமெய்த் தேவர்
பரிவுடைய சேந்தனார் கருவூர்த்தேவர்
நம்பிகாடவர் கோன் நற்கண்ட ராதித்தர்
நன்குயர் வேணாட்டடிகள் திருவாலியமுதர்
அம்புவியோர் புகழ் புருடோத்தமர் சேதிராயர்
ஆகஇவர் ஒன்பதின்மர் தாம்முறைகண் டடைவே"

எனவரும் பழைய பாடலில் நன்கு விளக்கப் பெற்றது. இவ்வொன்பதின்மர்களுள் திருமாளிகைத்தேவர் பாடிய பதிகங்கள் நான்கும், சேந்தனார் பதிகங்கள் நான்கும், கருவூர்த்தேவர் பதிகங்கள் பத்தும், நம்பிகாடநம்பி பாடிய பதிகங்கள் இரண்டும், கண்டராதித்தர் பதிகம் ஒன்றும், வேணாட்டடிகள் பதிகம் ஒன்றும், திருவாலியமுதனார் பதிகங்கள் நான்கும், புருடோத்தமர் பதிகம் இரண்டும், சேதிராயர் பதிகம் ஒன்றும் ஆக இருபத்தொன்பது பதிகங்கள் இவ்வொன்பதாந்திருமுறையிற் சேர்க்கப் பெற்றுள்ளன. இப்பதிகங்களிலுள்ள பாடல்கள் முந்நூற்று அறுபத்தைந்தாகுமென்பர்.

"அடைவுறு மாளிகைத்தேவர் நான்கு, சேந்தர்
அன்புறுபல் லாண்டொன்றே டிசைப்பா மூன்று
திடமுடைய கருவூரர் பத்து, வீறிற்
சிறந்த காடவ ரிரண்டு, கண்டர் வேணாடர்
படி புகழொவ் வொன்று, திருவாலி நான்கு,
பன்னு புருடோத்தமனா ரிரண்டு, சேதிராயர்
உடையதிருக் கடைக்காப் பொன்றாக விருபத்தொன்பான்
ஓது செய்யுள் முந்நூற் றறுபதினோ டைந்தே".

எனவரும் பழைய பாடல் திருவிசைப்பாத் திருப்பதிக வகையினைக் குறிப்பிடுதல் காணலாம். இப்பாடலின்கண் ஒன்பதாந்திருமுறையிலுள்ள பாடல்கள் 365 எனத் தொகை கூறப்படினும் இப்பொழுதுள்ளவை 301 பாடல்களேயாம். எஞ்சிய அறுபத்துநான்கு பாடல்களும் ஏடுகளிற் சிதைந்திருத்தல் வேண்டும். அல்லது இப் பாடலிற்குறித்த 'முந்நூற்றறுபதிஞேடைந்தே' என்ற தொகை ஏடெழுதுவோராற் சிறிது மாறுபட்டிருத்தல் வேண்டும். பூந்துருத்தி நம்பிகாடநம்பி பாடிய திருவாரூர்த் திருவிசைப்பாப் பதிகத்தில் இப்பொழுது இரண்டு பாடல்களே காணப்படுகின்றன. இதனை நோக்குங்கால் இத்திருமுறையிற் சில பாடல்கள் சிதைந்து மறைந்து போயின என்பது விளங்கும்.

திருமாளிகைத் தேவர் பாடிய 'இணங்கிலாவீசன்' என்ற பதிகம் காந்தாரத்திலும், கருவூர்த்தேவர்பாடிய 'கணம் விரி', 'கலைகள் தம் பொருளும்' எனவரும் இரண்டு பதிகங்களும் புறநீர்மையிலும், 'நீரோங்கி வளர்கமலம்' என்பது காந்தாரத்திலும், நம்பிகாடநம்பி பாடிய 'முத்து வயிரமணி' என்பது சாளரபாணியிலும், வேணாட்டடிகள் பாடிய 'துச்சான' என்ற முதற் குறிப்புடைய பதிகம் புறநீர்மையிலும், திருவாலியமுதனர் பாடிய 'பவளமால் வரை' என்பது நட்டராகத்திலும், 'அல்லாய்ப்பகலாய்' என்பது இந்தளத்திலும் ஏனைய இருபத்தொருபதிகங்களும் பஞ்சமப்பண்ணிலும் இசையமைக்கப் பெற்றுள்ளன. இவ்விசையமைதி,

ஐந்துடனுல் வருமுரைத்த திருக்கடைக் காப்பிற்பண்
அறையின் மாளிகைத் தேவர் நான்கிலொன்று காந்தாரம்,
முந்து கருவூரர் பத்தின் இரண்டு புறநீர்மை
மொழிந்திடு காந்தாரமொன்று, காடவர்கோனிரண்டின்,
நந்தலில் சாளரபாணியொன்று, வேணாட்டடிகள்
நவின்றதொன்று புறநீர்மை, திருவாலியமுதர்
பந்தமறச் சொன்னுன்கிஞென்று நட்டராகம்
பகர்ந்திடிஞென்றிந்தளம், மற்றெவையும் பஞ்சமமே.

என்ற பழைய பாடலிற் குறிக்கப் பெற்றமை காண்க. எனவே திருவிசைப்பாவிலமைந்த பண்கள் காந்தாரம், புறநீர்மை, சாளரபாணி, நட்டராகம், இந்தளம், பஞ்சமம் என்ற ஆறுபண்களேயென்பதும் இவற்றுள் சாளரபாணி யொழிந்த ஐந்தும் தேவாரத்திருப்பதிகங்களிற் பயின்ற

பண்களென்பதும் நன்குபெறப்படும். இருபத்தொன்பது பதிகங்களுள் இருபத்தொருபதிகங்கள் பஞ்சமப்பண்ணிற் பாடப்பெற்றிருத்தலை உற்று நோக்குங்கால் இப்பண் சிந்தை தெளிந்து செம்பொருளாகிய இறைவனைப் போற்றுதற்குப் பெரிதும் ஏற்புடைய தென்பது இனிது புலனாகும். "பஞ்சமம் பாடியாடுந், தெள்ளியார் கள்ளந் தீர்ப்பார் திருச்செம்பொன் பள்ளியாரே" (4–29–3) என்பது திருநாவுக்கரசர் வாய்மொழி.

க. திருமாளிகைத் தேவர்

திருவிசைப்பா ஆசிரியர் ஒன்பதின்மருள் முதல்வராக எண்ணப்படுபவர் திருமாளிகைத் தேவர். இவர்பாடிய திருப்பதிகங்கள் நான்கும் ஒன்பதாந்திருமுறையின் முதற்கண் வைக்கப்பட்டுள்ளன. இவை நான்கும் தில்லைச் சிற்றம்பலத்தைப் பற்றியனவாக அமைந்திருத்தலால் இவ்வாசிரியர் தில்லைப்பதியைத் தமக்குரிய உறைவிடமாகக் கொண்டிருந்தாரென்று எண்ண இடமுண்டு. திருமாளிகைத் தேவரென்னும் பெயர் இயற்பெயராகத் தோன்றவில்லை. ஏதேனுமொரு காரணம் பற்றி வழங்கிய சிறப்புப் பெயராகவே இதனைக் கொள்ளுதல் பொருத்தமாகும். திருமாளிகையென்பது "மாடமாளிகைசூழ் தில்லையம்பலம்" [1] எனத் தேவார ஆசிரியராற் சிறப்பித்துப் போற்றப்பெற்ற தில்லைச் சிற்றம்பலப் பெருங்கோயிலைக் குறித்து வழங்கிய பெயரென்றும், அத்திருக்கோயிலிற் பிரியாதுறைந்து திருச்சிற்றம்பலவனைப் போற்றிய தெய்வ வாழ்க்கையுடையவராக இவர் திகழ்ந்தமைபற்றித் திருமாளிகைத் தேவரென அழைக்கப் பெற்றாரென்றும் கொள்ளுதல் ஏற்புடையதாகும்.

"வரந்தருந் தொல்லைத்தில்லை மாளிகை மடத்து மன்னும்
அருந்தவ முனிவெண்காடன் அருள் விநாயகன் மனத்தாற்
பரிந்தெனை யாண்டுகொண்ட படர்சடைக் கடவுள் நீதி
திருந்திய பரமஞான சிவனடி சென்னி சேர்ப்பாம்" [2]

எனப் பெரும்பற்றப் புலியூர் நம்பி, தம் ஆசிரியர்க்கு வணக்கங் கூறுதலால் அவர் வாழ்ந்த கி. பி. பதின்மூன்றும் நூற்

1. 'நாடிநாராணன்" என்ற முதற் குறிப்புடைய திருக்குறுந்தொகை.

2. திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம் கடவுள் வாழ்த்து 22-ம் செய்யுள்.

ருண்டில் 'மாளிகை மடம்' என்ற பெயரோடு சிதம்பரத்தில் ஒரு திருமடம் இருந்ததென்பதும், அம்மடத்தில் வாழ்ந்த தவச் செல்வர் வெண்காடரென்பவருடைய மாணுக்கருள் ஒருவராகிய விநாயகர் என்பவரே பெரும் பற்றப் புலியூர் நம்பிக்கு ஆசிரியரென்பதும் நன்கு புலனுகின்றன. சிதம்பரத்திலுள்ளதாகப் பெரும் பற்றப் புலியூர் நம்பி குறித்த மாளிகை மடமென்பது திருமாளிகைத் தேவரது அடியார் குழுவின் தொடர்பில் நிலை பெற்ற திருமடமாக இருத்தல் கூடும்.

திருமாளிகைத் தேவர், தாம் பாடிய திருவிசைப்பாப் பதிகங்களின் இறுதிச் செய்யுட்களில் 'மூர்க்கனேன் மொழிந்த புன்மொழிகள்' என்றும், 'சிவப்பெருந் தொண் டர் தொண்டனேன்' என்றும் தாழ்வெனுந் தன்மையோடும் சிவனடியார்க்குத் தொண்டுபட்ட தம்முடைய அடிமைத் திறத்தினைப் புலப்படுத்தியதன்றித் தம்முடைய ஊர், பேர், குடி முதலியன பற்றி எதுவும் சொல்லவில்லை. இந்நிலையில் இவர் பிறந்த குலம், ஊர் முதலிய வரலாற்றுக் குறிப்புக் களைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளுதற்கு இயலவில்லை. இனி இவரைப் பற்றிச் செவி வழியாக வழங்குஞ் செய்தி களை ஆராய்தல் இன்றியமையாததாகும்

திருமாளிகைத் தேவர் போக நாதரிடம் தீக்கை பெற்றுத் திருவாவடுதுறையில் தங்கியிருந்தார். இவர் தந்த சிவப் பிரசாதத்தைக் கருவூர்த் தேவர் மகிழ்ந்தேற்றுக்கொண்டார். கருவூர்த் தேவர் பராசத்தியை வழிபட்டுக் கொடுத்த பிரசாதத்தைத் திருமாளிகைத் தேவர் ஏற்றுக்கொள்ளவில்லை. இச்செய்தியைக் கருவூர்த் தேவர் தம் ஆசிரியர் போகநாதரிடம் தெரிவித்தார். அது கேட்ட போகநாதர் 'தூய்மை நெறியில் வழிபாடு செய்து திருமாளிகைத் தேவர் தந்த சிவப் பிரசாதத்தை நீ ஏற்றுக்கொள்ளுதல் தகும். நின்னுற் கொடுக்கப் பட்ட தூய்மை யில்லாத நிவேதனப் பொருளை அவர் விலக்கியது தவறன்று' என்று கருவூர்த் தேவருக்கு அமைதி கூறினர். திருமாளிகைத் தேவர் ஒருநாள் வழக்கம்போல் காவிரியில் நீராடி மலர் கொய்து வரும் பொழுது அடக்கஞ் செய்தற்கெனச் சிலர் பிணத்தைச் சுமந்து எதிரே வருதலைக் கண்டு தாம் சிவபூசைக்குக்

கொணர்ந்த மலர்கள் தூய்மையிழவாதபடி பூக்குடலையை விசும்பில் நிற்கப்பணித்துப் பின்பு பிணத்திற்கு உயிர் உண்டாக்கி அதனைச் சுடுகாடளவும் நடந்து செல்லும்படி கட்டளையிட்டார். இவரது பேரழகில் ஈடுபட்டு இவரையே இடைவிடாதெண்ணிய மகளிர் சிலர் இவரையொத்த சாயல் அமைந்த புதல்வர்களைப் பெற்றனர். அது கண்டு ஐயுற்று வெறுப்படைந்த வேதியர் சிலர், திருமாளிகைத் தேவர் கூடாவொழுக்கம் உடையவராயினர் என்று அரசனிடம் முறையிடுவாராயினர். அம்முறையீட்டைக்கேட்டு வருந்திய நரசிங்கராசன் திருமாளிகைத் தேவரைக் கயிற்ருற்பிணித்து வரும்படி ஏவலாளர் சிலரையனுப்பினன். அவர்கள் திருவாவடுதுறைக் கோயிலடைந்து அங்கு அமர்ந்துள்ள திருமாளிகைத் தேவரது திருமேனியைத் தாங்கள் கயிற்ருற் கட்டுவதாக நினைத்துத் தங்களுள் ஒருவரொருவரைக் கட்டிக்கொண்டு திரும்பினர். திருமாளிகைத் தேவர் வாராமை கண்டு சினமுற்றவேந்தன் அவரை வெட்டிக் கொணர்மின் என ஏவலாளர்க்குக் கட்டளையிட்டான். அரசன் கட்டளையாற் சென்ற ஏவலாளர், திருமாளிகைத் தேவரை வெட்டுவதாக எண்ணித் தங்களுள் ஒருவனையே வெட்டிக் கொணர்ந்தனர். அத்துன்ப நிலையைக் கண்டு வெகுண்ட வேந்தன், திருமாளிகைத் தேவரைக் கொல்லக் கருதிச்சேனையுடன் புறப்பட்டான். மன்னனதுசேனை தம்மை யழிப்பதற்கு வருவதனையுணர்ந்த திருமாளிகைத்தேவர் உமையம்மையார்பால் விண்ணப்பஞ் செய்ய, அம்மையார் திருவருளால் அத்திருக்கோயில் மதிலின்மேற் சுதையாற் செய்யப்பட்டிருந்த நந்திகள் உயிர்பெற்றெழுந்து சேனைகளையழித்து மன்னனைத் தோற்ருேடச் செய்து திரும்பின. சேந்தனுருடன் தில்லைக்குச் சென்ற திருமாளிகைத் தேவர் தில்லைத் திருவீதியில் ஓடாது தடைப்பட்டு நின்ற திருத் தேரை வடமின்றியோடி நிலைசேரத் திருப்பதிகம் பாடிப் போற்றினர். இவ்வாறு திருவருள் விளக்கமுடையராய்த் திகழ்ந்த திருமாளிகைத்தேவர் திருவாவடுதுறையிலமர்ந் திருந்து சிவனடி சேர்ந்தனர் என்பது இவரைப்பற்றி வழங் கும் கதையாகும். இக்கதையிற் குறிப்பிட்டசெய்திகள் சில,

“குடங்கர் விசும்பிடை நிறுவிக்
குணபநடந் திடவியக்கிக் கொடிஞ்சிப்பொற்றேர்
வடங்கழற்றி யோட்டி மதில்
நந்திகளை வரவழைத்து வரைநன்காட்டின்

உடம்பினெழு புகைமாற்றிக்
கொங்கணர் பாத்திரஞ் சுவற்றி யுணவதாய் வெந்
திடும் பயறு முளைசெய்தெமக்
கருள் திருமாளிகைத்தேவர் இணைத்தாள் போற்றி"

எனத் தொட்டிக்கலைச் சுப்பிரமணிய முனிவர் பாடியபாடலிற் பாராட்டிக் கூறப்பட்டுள்ளன. இதன்கண் 'குடங்கர் விசும்பிடை நிறுவி' என்றது, பூக்குடலையை ஆகாயத்தில் நிற்கும்படி செய்த செயலை. பிணத்தினை உயிர்பெற்றெழச் செய்து சுடுகாடளவும் நடக்கும்படி ஏவிய திறத்தினைக் 'குணபம் நடந்திட இயக்கி' என்ற தொடராற் குறிப்பித்தார். இச்செய்யுளில் திருமாளிகைத் தேவர் செய்தனவாகக் குறிக்கப்பட்ட செயல்களுள் நன்காட்டின் உடம்பினெழு புகைமாற்றியது, கொங்கணர் பாத்திரஞ் சுவறச் செய்தது, வெந்த பயற்றை முளைக்கச் செய்தது ஆகியன நிகழ்ந்த சந்தர்ப்பம் மேற்காட்டிய கதையிற் குறிக்கப்படவில்லை. அவ்வக்காலத்து மக்கள் தம் மனம் போனவாறு கட்டி வழங்கிய செய்திகள் இக்கதையிலிடம்பெற்றுக் கலந்தமையால் இக்கதை முழுவதையும் உண்மை வரலாறென்று ஏற்றுக் கொள்ளுதற்கியலவில்லை.

திருமாளிகைத் தேவர் போகநாதர் மாணவர் என இக் கதையிற் குறிக்கப்படுவதற்கு ஆதாரமாக,

"கலந்தருள் காலாங்கர் தம்பாலகோரர்
நலந்தரு மாளிகைத்தேவர் நாதாந்தர்
புலங்கொள் பரமானந்தர் போகதேவர்
நிலந்திகழ் மூலர் நிராமயத்தோரே. (102)

என்ற திருமந்திரச் செய்யுளைக் காட்டுவர் சிலர். இச்செய்யுள் திருமந்திரத்திற் குருமட வரலாறு என்ற தலைப்பிற் காணப்படுகின்றது. இதன் இரண்டாமடி 'நலந்தரு நமனிய தேவர் நாதாந்தர்' எனவும் சில சுவடிகளில் காணப்படுகின்றது. இதன்கண் 'நிலந்திகழ் மூலர் நிராமயத்தோரே' என்ற இறுதியடியை நோக்குங்கால் திருமூலர்க்கு நெடுங் காலம் பிற்பட்டுத் தோன்றிய சான்ருேரொருவரால் இயற்றப்பட்டது இச்செய்யுளென்பது நன்கு துணியப்படும். மூலன் மரபின் முதல்வராக விளங்கிய திருமூலரே தமக்கு நெடுங்காலம் பிற்பட்டுத் தோன்றித் தம்மரபில் வந்த திருமாளிகைத் தேவர் முதலியோரைத் தாம் பாடிய செய்யுளில் தொகுத்துக் கூறினுரென்று கொள்வது வரலாற்று முறைக்கு முற்றிலும் முரணுகும். ஆகவே திரு

மூலர் அறிவுறுத்தருளிய தவநெறியை மேற்கொண்டு வாழ்ந்த அடியார் பரம்பரையைக் குறித்துப் பிற்காலத்துச் சான்றோர் ஒருவராற் பாடிச் சேர்க்கப்பட்டனவே திருமந்திரத்திற் 'குருமட வரலாறு' என்ற தலைப்பிலமைந்த செய்யுட்களெனத் தெளிதல்வேண்டும். அன்றியும் திருமூலர் பரம்பரையில் வந்த அடியார்களுட் சிறப்புடையார் சிலரைக்கூறும் இப்பாடலில் காலாங்கர், பாலகோரர், மாளிகைத் தேவர், பரமானந்தர், போக தேவர் என்ற வழிமுறையிற் போகதேவருக்கு ஒரு தலைமுறை முந்தியவராகக் குறிக்கப்பட்ட மாளிகைத் தேவரைப் போகதேவர்க்கு மாணவரெனத் திட்டமாகக் கூறுதல் சிறிதும் பொருந்தாது. ஆகவே திருமாளிகைத் தேவர் போகநாதர்க்கு மாணவர் என்னுங் கதையினை ஏற்றுக் கொள்ளுதற்குச் சிறிதும் இடனில்லையென்பது தெளியப்படும்.

திருவாவடுதுறைக் கோயிலையொட்டித் திருமாளிகைத் தேவர்க்குத் திருக்கோயில் அமைந்துளது. இத்திருக் கோயிலைத் தன்னகத்துக்கொண்டு விளங்குவதே இப்பொழுது உள்ள திருவாவடுதுறைத் திருமடமாகும். இத்திருமடத்தின் அடியார்களுள் ஒருவராகிய தொட்டிக் கலைச் சுப்பிரமணிய முனிவரென்பார் திருமாளிகைத் தேவரைப் பரவி வழிபடு முகமாகத் திருமாளிகைத் தேவர் திருவிருத்தம் என்ற நூலைப் பாடியுள்ளார்.

முதல் இராசராச சோழன் ஆட்சியில் திருவீழிமிழலைத் திருக் கோயிலில் வரையப்பட்ட கல்வெட்டுக்களில், சிவஞானியும் திருமாளிகைத் தேவரென்று வழங்கப்பெற்றவருமாகிய ஜயந்தன் என்பார் திருவீழிமிழலைத் திருக் கோயிலுக்கு நுந்தா விளக்கு வைத்த செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது. ஜயந்தன் என்ற பெயர் தமிழிற் சேந்தன் என்று திரிதல் மரபு. திருவீழிமிழலைச் சாசனங்களிற் கண்ட ஜயந்தன் என்பார் சிவஞானியெனச் சிறப்பிக்கப் பெறுதலானும் திருவீழிமிழலைக்குச் சேந்தனார் பாடிய திருவிசைப்பாப்பதிகம் அமைந்திருத்தலானும் ஈண்டு ஜயந்தன் எனக் குறிக்கப்பட்டவர் சேந்தனாரேயாவர். திருமாளிகைத் தேவர் பாடிய திருவிசைப்பாப் பதிகங்கள் நான்கிலும் அமைந்த திருக்கடைக்காப்புச் செய்யுட்கள் ஒன்றிலேனும் திருமாளிகைத் தேவர் பெயர் கூறப்படவில்லை. அப்பதிகங்கள் நான்கினோடு சேந்தனார் பாடிய திருவிசைப்

பாப்பதிகங்கள் மூன்றும் சேர ஏழாவதாகவமைந்த திருவிடைக்கழித் திருவிசைப்பாவின் இறுதிச் செய்யுளிற்றான் சேந்தன் என்ற பெயர் கூறப்பட்டுளது. இதனை நுணுகி நோக்குங்கால் இவ்வேழு பதிகங்களும் சேந்தனாரென்னும் ஆசிரியர் ஒருவராலேயே பாடப்பட்டன என்பது புலனாதலின் திருமாளிகைத் தேவரும் சேந்தனாரும் ஒருவரே என ஐயுறுவாரும் துணிவாருமுளர்.

திருவிசைப்பாப் பாடிய ஆசிரியர்கள் ஒன்பதின்மர் என்பது தொன்று தொட்டு வழங்கி வரும் உண்மையாகும். திருக்கடைக்காப்புச் செய்யுளில் தம் பெயர் கூறும் வழக்கம் திருமுறையாசிரியர் எல்லாரிடத்தும் ஒப்பக் காணப்படுவதில்லை. திருமாளிகைத் தேவர் தாம் பாடிய திருவிசைப்பாப் பதிகங்களின் இறுதிச் செய்யுட்களில் தம் பெயரைக் கூற விரும்பாது 'மூர்க்கனேன்' என்றும், 'சிவப்பெருந் தொண்டர் தொண்டனேன்' என்றும் தம்மைப் பணிவுடன் குறிப்பிடுகின்றார். எனவே திருமாளிகைத் தேவர் தம் பெயரைத் தாம் பாடிய பதிகங்களில் வெளியிட்டுரைக்க விரும்பாத உள்ளமுடையவரென்பது நன்கு பெறப்படும். ஐயந்தன் என்ற சொல்லும் சேந்தன் என்ற சொல்லும் பொருளால் வேறுபட்ட இரு வேறு சொற்களாம். ஐயந்தன் என்பது வடசொல். சேந்தன் என்பது முருகக் கடவுளைக் குறித்து வழங்கும் செந்தமிழ்ச் சொல். ஆகவே சேந்தன் என்ற தமிழ்ச் சொல்லை ஐயந்தன் என்ற வடசொல்லின் திரிபாகக் கொண்டு திருமாளிகைத் தேவரும் சேந்தனாரும் ஒருவரென்று துணிதல் பொருந்தாதென்பது புலனாம்.

முதல் இராசராசன் ஆட்சிக் காலத்தில் திருவீழிமிழலைத் திருக் கோயிலில் வரையப்பட்டுள்ள கல்வெட்டுக்களில் திருமாளிகைத்தேவராகிய ஐயந்தன் எனக் குறிக்கப்படுதலால் திருமாளிகைத் தேவரென்பார் முதல் இராசராச சோழன் ஆட்சிக் காலத்தில் வாழ்ந்தவரென்றும் இவரது இயற் பெயர் ஐயந்தனென்றும் சிவஞானியாய்த் திகழ்ந்த காலத்து இவர்க்கு வழங்கிய பெயர் திருமாளிகைத் தேவரென்றும் திருவீழிமிழலைக் கோயிலுக்கு நுந்தா விளக்கு வைத்த இவர் பிறந்த ஊர் திருவீழிமிழலையை யடுத்திருத்

1. சாசனத் தமிழ்க் கவி சரிதம் பக்கம் 36.
பெரிய புராண ஆராய்ச்சி பக்கம் 71.

தல் கூடுமென்றும் கொள்ள இடமுண்டு. இவற்றை வலி யுறுத்தற்கு வேறு சான்றுகளும் வேண்டும்.

மூன்றாங் குலோத்துங்க சோழனது ஆட்சியின் மூன்றா மாண்டில் கோட்டூர்க் கோயிலுக்கு நுந்தாவிளக்கு வைத்த திருமாளிகைப் பிச்சரென்பவர் திருவிசைப்பா ஆசிரியராகிய திருமாளிகைத் தேவரது பெயரைத் தாங்கிய அரசியல் தலைவராவர். இவரைப் போன்று திருவீழிமிழலைத் திருக் கோயிற் கல்வெட்டிற் குறிக்கப்பட்ட ஜயந்தன் திரு மாளிகைத் தேவரென்பவரும் திருவிசைப்பா ஆசிரியரின் பெயரைத் தாங்கிய மற்றொரு தலைவராகவும் இருத்தல் கூடும்.

திருமாளிகைத்தேவர் பாடிய நான்கு பதிகங்களும் தில்லைக்குரியனவாக அமைந்திருத்தலால் இவர் நெடுங் காலம் தில்லையில் தங்கியிருந்து கூத்தப்பெருமானை வழிபட்டவராதல்வேண்டும். இவர் திருமூலர் பரம்பரையில் வந்தவராகப் பேசப்படுதலால் இவர் சிவயோக நெறிநின்ற தவ முனிவரென்றும் இவரது சமாதி திருவாவடுதுறையி லமைந்திருத்தலை நோக்குமிடத்து இவர் திருவாவடுதுறை யில் தங்கியிருந்தபொழுது இறைவன் திருவடியிற் கலந்திருத்தல் வேண்டுமென்றும்கொள்ளுதல் பொருத்த மாகும்.

திருமாளிகைத்தேவர் பாடிய பதிகங்கள் நான்கிலும் நாற்பத்தைந்து பாடல்கள் உள்ளன. உயிரை யின்றி யமையாத கண், ஓருருவத்தைக் காணுங்கால் உயிரானது கண்ணுடன் பிரிப்பின்றிக் கலந்து நின்று அவ்வுருவத்தைக் கண்ணுக்குக் காட்டித் தானும் காணுமாறுபோல, இறைவனை யின்றியமையாத உயிர், ஒரு பொருளை அறியுங்கால் இறைவனது பேரறிவானது, உயிரறிவோடு பிரிப்பின்றிக் கலந்து நின்று அப்பொருளை உயிர்க்கு அறிவித்துத் தானும் அதனோடு ஒருங்கறிந்து உதவும். உயிர்களுக்கு இறைவன் செய்யும் இப்பேருதவி, உயிர்கள் பாசத்தாற் பிணிக்கப்பட்டுள்ள பெத்த நிலையிலும் பாசம் நீங்கி யின்புறும் முத்தி நிலையிலும் ஒப்ப நிகழும் என்பர். தீயானது ஒரு பொருளிற் றங்கிநின்று சுட்டு ஒன்றுவித்த லாகிய தன் தொழிலை நிகழ்த்துமாறு போல, இறைவனும் ஆன்மாக்களினிடத்துப் பிரிப்பின்றித் தங்கி நின்றே

அவற்றின் பாசங்களை யகற்றி அருள்புரிதலாகிய தன் தொழிலை நிகழ்த்துவன். இவ்வாறு உயிர்க்குயிராய் உடனின்று உதவி புரியும் இறைவனது பெருங்கருணைத் திறத்தை யுணர்ந்து தம் செயலெல்லாவற்றையும் கைவிட்டு அப்பெருமானை இடைவிடாதெண்ணி அவனருளாலல்லது ஒன்றையுஞ் செய்யாராய் நின்ற திருமாளிகைத்தேவர், உயிர்கட்குக் கருணையான் உபகரித்துவரும் இறைவனது உரிமையை நோக்குந்தோறும் அப்பெருமான்பா லுள்ள பேரன்பு அடங்காது மீதூர்தலின் அப்பேரன்பே தானாக விளங்கித் தோன்றும் பேரானந்தத்தை நுகர்ந்து இன்புறும் நிலையில் 'ஒளிவளர் விளக்கே' யெனத் தொடங் கும் இத்திருவிசைப்பாத் திருப்பதிகத்தை உளங்குளிர்ந்து பாடியுள்ளார். இறைவனது பொருள்சேர் புகழை வாயாரப்பாடிப் போற்றுதற்கும் மனத்தால் நினைத்தற்கும் அப்பெருமானுக்குத் தொண்டுபட்டு அப்பெருமானை வணங்குதற்கும் அவனோடு பிரிவின்றி யொன்றி யின்புறு தற்கும் அப்பெருமானது காட்டும் உபகாரமேயன்றி அம் முதல்வன் உயிரோடு ஒற்றித்து நின்று காணும் உபகாரமும் இன்றியமையாததாகும் என்னும் இவ் வுண்மையை 'ஒளிவளர் விளக்கே' யென்று தொடங்கும் இத்திருவிசைப்பாத் திருப்பதிகம் இனிது விளக்கு கின்றது. "உயிர் ஒன்றனையறிதல் முதல்வன் உடனின்றறிதலை யின்றி அறிவித்தல் மாத்திரையான் அமையாது என்பது தொண்டனேன் நினையுமா நினையே, விரும்புமா விரும்பே, தொடருமாதொடரே, நுகருமா நுகரே என்றிவ்வாறு முத்திநிலை பற்றி யோதிய திருவாக்குக்களானுமறிக" (சூத்-11) என மாதவச் சிவஞான சுவாமிகள் சிவஞான போதச் சிற்றுரையில் இத்திருவிசைப்பாத் தொடர்களை 'முத்தி நிலைபற்றி யோதிய திருவாக்குக்கள்' என்று குறித்துள்ளமை உணர்ந்து இன்புறத்தக்கதாகும்.

'உயர் கொடி யாடை' என்ற திருப்பதிகம் தில்லைச் சிற்றம்பலவரது திருவடிமுதல் திருமுடிவரை அமைந்த திருக்கோலத்தின் பேரழகில் ஈடுபட்டுத் திளைத்து இன்புறுந்திறத்தை விளக்குவது. இதன்கண் தில்லைப் பதியின் வளமும் தில்லைவாழந்தணர்களது சிவபத்தி மாண்பும் விளக்கப்பெற்றுள்ளன.

'உறவாகிய யோகம்' என்ற மூன்றுந் திருப்பதிகம் தில்லையம்பலக்கூத்தன் மகேந்திர மலையில் எழுந்தருளிய திறத்தையும் அப்பெருமான் வேடுருவாகி விசயனுக்கருள் புரிந்த அருமையிலெளிய அழகினையும் நினைந்து இறைவன் பாற் காதல் கொண்டு வருந்தும் தலைவியின் மொழிகளை நற்றாய் எடுத்துரைப்பதாகப் பாடப்பெற்றது. எல்லா வுயிர்க்கும் உயிராகி உள்நின்று உறவாடி மகிழ்ச்சி விளைத்தலையே பயனாகக்கொண்டு நிகழும் இறைவனது திருக்கூத்துக்குத் தில்லைச் சிற்றம்பலம் நிலைக்களனாகத் திகழ்தல் கருதி அதனைக் 'குலாத்தில்லையம்பலம்' எனத் திருமாளிகைத்தேவர் இத்திருப்பதிகத்திற் சிறப்பித்துப் போற்றியுள்ளார். திருவாசகத்தில் குலாப்பத்திலுள்ள ஒவ்வொரு பாடலிலும் 'குலாத்தில்லையாண்டான்' எனத் திருவாதவூரடிகள் போற்றிய குறிப்பினையும் அவ்வடிகள் கூறுமாறு வேடுருவாகி மகேந்திரத்து வீற்றிருந்து அருள் செய்த இறைவனது அருட்பண்பினையும் இத்திருப் பதிகத்தில் திருமாளிகைத்தேவர் விளக்கியுள்ளமை ஒப்பு நோக்கி மகிழத்தக்கதாகும்.

'இணங்கிலாவீசன்' என்ற முதற்குறிப்புடைய நான்காந் திருப்பதிகத்தில் சிவநெறியையும் சிவனடியார் களையும் இகழ்ந்துரைக்கும் பேய்மக்களைத் தம் கண்கள் காணா வென்றும் வாய் அவரோடு உரையாடாதென்றும் திருமாளிகைத்தேவர் வற்புறுத்துக் கூறியுள்ளார்.

> 'மறப்பித்துத் தம்மை மலங்களின் வீழ்க்குஞ்
> சிறப்பில்லார் தந்திறத்துச் சேர்வை — அறப்பித்துப்
> பத்தரினத்தாய்ப் பரனுணர்வி னாலுணரும்
> மெய்த்தவரை மேவா வினை' (சிவஞானபோதம். வெ. 75)

என மெய்கண்டதேவர் அறிவுறுத்தருளிய சிவபத்தர் இலக்கணம் திருமாளிகைத்தேவர்பால் முழுதும் அமைந் துள்ளமை அவர் பாடிய இத்திருவிசைப்பாத் திருப்பதிகத் தால் இனிது புலனாதல் காணலாம்.

> 'சோதியே சுடரே சூழொளி விளக்கே'

எனத் திருவாதவூரடிகள் இறைவனைப் போற்றினாற் போன்று 'ஒளிவளர் விளக்கே' எனத் திருமாளிகைத் தேவர் உளங்கசிந்து போற்றுகின்றார். 'சிறந்தடியா ருள்ளத்துத் தேனூறி நின்று' என்ற திருவாசகத்தொடர்ப் பொருள், 'சித்தத்துள் தித்திக்குந் தேனே' எனத்

திருவிசைப்பாவில் எடுத்தாளப்பட்டது. 'தன்னைத்தந்த என்னாரமுதை' என்பது திருவாசகம். 'அற்பனென்னுள்ளத் தளவிலாவுன்னைத் தந்த பொன்னம்பலத்தாடீ' என்ற திருவிசைப்பாத் தொடர் அதற்குரிய விளக்கமாகும். 'தானொருவனுமே பலவாகி நின்றவா' என வாதவூரர் இறைவனியல்பினை விளக்கினாற் போன்று 'ஒருமையிற் பலபுக்கு உருவி நின்றாயை' எனத் திருமாளிகைத் தேவரும் விளக்கினமை காணலாம். இவ்வாறு திருவாசகத் திற்கும் திருமாளிகைத்தேவர் திருவிசைப்பாவுக்கும் உள்ள தொடர்பினை யுற்று நோக்குங்கால் திருமாளிகைத்தேவர் திருவாசகத்தில் தோய்ந்த உள்ளமுடையாரென்பது நன்கு விளங்கும்.

இவ்வாசிரியர் 'நீறணிபவளக் குன்றமே' என இறை வனது திருக்கோலத்தை நினைந்து போற்றிய குறிப்பு இவர் காலத்து வாழ்ந்த தமிழ் மக்களது உள்ளத்தை நெகிழ்வித்து அவர்களது மனத்தகத்தே இறைவனது திருவுருவினைப் புலப்படுத்தி யின்புறச் செய்தமை 'நீறணி பவளக் குன்றம்'[1] என அவர்கள் தம் மக்களுக்கு இட்டு வழங்கிய பெயரால் நன்கு புலனாகும்.

உ. சேந்தனார்

சேந்தன் என்ற பெயருடையார் பலர். திவாகரம் என்ற நிகண்டினைச் செய்வித்த சேந்தன் என்பான், அம்பர் கிழான் அருவந்தை யென்ற சங்ககாலத் தலைவனது வழியில் வந்தவன்; அம்பர் என்ற ஊரினன்; செந்தமிழ் ஆரியம் ஆகிய இருமொழிகளிலும் நிரம்பிய புலமை வாய்ந் தவன்; புலவர் பெருமக்களை ஆதரித்தவன்; சிவபெருமானது இடப் பாகங்கொண்ட அம்மைக்குச் செந்தமிழ் மாலை யந்தாதி புனைந்தவன் எனத் திவாகர நூலாசிரியர் கூறி யுள்ளார். வீரசோழிய உரை மேற்கோட் செய்யுட்களிற் பாராட்டப் பெற்ற பொன்பற்றி காவலன் சேந்தனென் பான், புலவர்களை ஆதரித்த குறுநில மன்னன்; புத்த சமயத்தைப் போற்றியவன் எனத் தெரிகிறது. இங்குக் கூறப்பட்ட இவ்விருவரும் திருவிசைப்பா ஆசிரியராகிய சேந்தனாரின் வேறானவரெனத் தெளிதல்வேண்டும். இனி

1. தெ. இ. கல்வெட்டுத்தொகுதி எண் II, கல்வெட்டு 66.

சேந்தனாரைக் குறித்துப் பின்வரும் கதையொன்று செவி வாயிலாக வழங்கப் பெற்று வருகின்றது.

சேந்தனார், பட்டினத்தடிகளுக்குக் கணக்கராக இருந்து அடிகள் கட்டளையிட்டவாறு நிதியறையைத் திறந்துவிட்டு அங்குள்ள செல்வ முழுவதையும் ஊரார் கொள்ளை கொள்ளச் செய்தார். இச் செய்தியைக் கேட்ட அரசன், இழந்த பொருள்களுக்குக் கணக்குக் காட்டுதல்வேண்டுமெனக் கூறிச் சேந்தனாரைச் சிறையிலிட்டனன். அதனால் வருத்தமுற்ற அவருடைய மனைவி மக்கள் பட்டினத்தடிகளைப் பணிந்து குறையிரந்து நின்றனர். அப்பொழுது, பட்டினத்தடிகள்,

"மத்தளை தயிருண் டானும் மலர்மிசை மன்னி னானும்
நித்தமுந் தேடிக்காணா நிமலனே யமலமூர்த்தி
செய்த்தலைக் கயல்பாய் நாங்கூர்ச் சேந்தனை வேந்தனிட்ட
கைத்தளை நீக்கியென்முன் காட்டுவெண் காட்டுளானே'

என்ற பாடலைப் பாடினார். அந்நிலையில் சிவபெருமானது கட்டளைப்படி விநாயகர் சேந்தனாரது விலங்கை முரித்துச் சிறைமீட்டருளினார். சிறையிலிருந்து மீண்ட சேந்தனார், பட்டினத்தடிகள் பணித்த வண்ணம் மனைவி மக்களுடன் தில்லைக்குச் சென்று விறகு விற்பதால் வரும் ஊதியத்தைக் கொண்டு நாடோறும் சிவனடியாரொருவர்க்கு உணவளிக்குங் கடமை மேற்கொண்டு வாழ்ந்திருந்தனர். பல நாட்கள் தொடர்ந்து மழை பெய்த நிலையில் பசியால் வருந்திய சேந்தனார், விறகு விற்றுக் கிடைத்த மாவினைத் தம் மனைவி கையிற் கொடுத்துக் களியாக்கச் செய்து சிவனடியாரை எதிர்பார்த்திருந்தார். சிவபெருமானே முதுமைப் பருவமுடைய அடியாராகச் சேந்தனார் வீட்டிற்குச் சென்று அவர் அன்பினாலளித்த களி யுணவையுண்டு மகிழ்ந்து அடுத்த வேளைக்கும் வேண்டுமென்பாராய் எஞ்சிய களியையும் பழங் கந்தையில் முடிந்துகொண்டு பொன்னம்பலத்தை யடைந்தனர். இஃது இவ்வாறாகத் தில்லையிற் கூத்தப்பெருமானுக்குத் தான் நடத்தும் நாள் வழிபாட்டில் திருச் சிலம்பொலி கேட்டு மகிழ்தலை நியதியாகக் கொண்ட சோழ மன்னன், அன்றிரவு முழுதுங் காத்திருந்தும் அவ்வொலியைக் கேட்கப் பெறாது வருந்தித் துயில் கொண்டான். கூத்தப் பெருமான் மன்னனது கனவில் தோன்றி "வேந்தனே கவலைகொள்ளற்க. இன்று

நாம் சேந்தன் அளித்த களியமுதை யுண்ணச் சென்றமையால் நீ நடத்தும் வழிபாட்டிற்கு வரத் தாழ்த்தோம்" என்று கூறி மறைந்தருளினர். அந்நிலையில் விழிப்புற்ற வேந்தன் சேந்தனரைக் காண விரும்பி விடியற் காலத்தே தில்லைச்சிற்றம்பலப் பெருமானை வணங்கச் சென்றவன், பொன்னம்பலத்திற் களியமுது சிந்திக் கிடத்தலைக் கண்டு தான் கண்ட கனவின் உண்மையைத் தில்லைவாழந்தணர் முதலிய எல்லார்க்குந் தெரிவித்தான். அதனையுணர்ந்த பலரும் சேந்தனராகிய அடியவரைக் கண்டு வழிபட வேண்டுமெனப் பெரிதும் விருப்புற்றிருந் தனர். மார்கழித் திருவாதிரைத் திருவிழாவில் மழை பெய்தமையால் திருத்தேர் சேற்றிலழுந்தி ஓடாது நின்ற பொழுது 'சேந்தா தேர்நடக்கப் பல்லாண்டு பாடுக' என்றதொரு வானெலி எல்லாருங் கேட்கும்படி தோன்றி யது. தேரிழுக்கும் அடியார் குழுவில் நின்ற சேந்தனர் 'மன்னுகதில்லை வளர்கநம் பத்தர்கள்' எனத் தொடங்கும் திருப்பல்லாண்டுத் திருப்பதிகத்தைப் பாடிப் போற்றினர். வடம் பிடிக்காமலே தேர் நிலைக்கு வந்து சேர்ந்தது. இவ்வற் புதத்தைக் கண்டார் அனைவரும் சேந்தனரது பேரன்பின் திறத்தை எண்ணி நெஞ்சம் நெக்குருகினர். இதுவே திருவிசைப்பா ஆசிரியராகிய சேந்தனரைக் குறித்து நெடுநாட்களாக வழங்கப்பெற்று வரும் கதை.

சேந்தன் என்ற அடியவர் தில்லையிற் கூத்தப் பெருமானுக்குக் களியமுது அருத்திய பேரன்பின் திறத்தை

"பூந்தண் பொழில்சூழ் புலியூர்ப் பொலிசெம்பொ னம்பலத்து
வேந்தன் றனக்கன்றி யாட்செய்வதென்னே விரிதுணிமே
லாந்தண் பழைய அவிழையன்பாகிய பண்டைப் பறைச்
சேந்தன் கொடுக்க அதுவுந் திருவமிர் தாகியதே" (26)

என வரும் கோயிற்றிருப்பண்ணியர் விருத்தத்தில் நம்பி யாண்டார் நம்பிகளும்,

"அவிழ்ந்த துணியில் அவிழ்ந்த அவிழை
அவிழ்ந்த மனத்தால் அவிழ்க்க — அவிழ்ந்தசடை
வேந்தனர்க் கின்னமுத மாயிற்றே மெய்யன்பிற்
சேந்தனர் செய்த செயல்." (53)

என வரும் திருக்களிற்றுப் படியாரில் உய்ய வந்த தேவ நாயனரும் முறையே பரவிப் போற்றியுள்ளார்கள்.

"வரையே றவிட்டமுதஞ் சேந்தனிட வுண்டனை வல்லின
மென்றாலும்
உரையே றவிட்டமுதலாகுமோ வெனைச்சித்தென் றுரைக்கி
லென்னும்
நரையே றவிட்டமுத னளவனுக் கொண்டுநறும் புலிசைமேவும்
கரையேற விட்டமுதல்வா வுன்னையன் றியுமோர் கதி
யுண்டாமோ"

எனச் சிவஞான முனிவர் பாடிய பாடலும் இவண் நோக்கத் தக்கதாகும்.

'பண்டைப் பறைச் சேந்தன்' என நம்பியாண்டார் நம்பிகள் கூறுதலால் தில்லையம்பலக் கூத்தனுக்குக் களியமுதருத்திய சேந்தனரென்பவர் பறையர் குலத்தவரென்பதும் நம்பியாண்டார் நம்பிக்குக் காலத்தால் முற்பட்டவ ரென்பதும் நன்கு துணியப்படும். இவ்வாறு களியமுது நிவேதித்த சேந்தனரும் திருப்பல்லாண்டு பாடிய சேந்தனரும் ஒருவரேயென முன்னோர் பலரும் கருதி வந்துள்ளார்கள். இக்கருத்தினை அப்படியே ஏற்றுக்கொள்ளுதற்கோ அன்றி மறுத்தற்கோ போதிய சான்றுகள் இதுகாறுங் கிடைக்கவில்லை.

நம்பியாண்டார் நம்பிகளுக்குக் காலத்தால் முற்பட்டவர் பட்டினத்தடிகளென்பது பதினொராந் திருமுறையிற் பட்டினத்தடிகள் நூல்களுக்குப் பின் நம்பியாண்டார் நம்பிகள் பாடிய நூல்கள் முறைப்படுத்தப்பட்டிருத்தலால் இனிது விளங்கும். பட்டினத்தடிகள்பால் சேந்தனர் பணிபுரிந்தாரென்பது நெடுநாட்களாக வழங்கி வருவதாதலின் சேந்தனரும் நம்பியாண்டார் நம்பிக்கு முன் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்தவரெனக்கொள்ளுதல் ஏற்புடையதாகும். திருமாளிகைத் தேவர் சேந்தனருடன் தில்லைக்குச் சென்று திருத்தேரை வடமில்லாது நிலையிற் சேர்ப்பித்தாரென்றதொரு கதை வழங்குதலால் திருமாளிகைத் தேவர் வாழ்ந்த காலமும் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியேயெனத் துணிய இடமுண்டு. கண்டராதித்தர் அல்லது சுந்தரசோழர் ஆட்சிக்காலத்ததெனக் கருதப்படும் கல்வெட்டொன்றில்[1] "கலி விசயன் தருணேந்துசேகரனேன்" என ஒருவன் தன் பெயரைக் குறிப்பிடுகின்றான். தருணேந்து சேகரன் என்னும்

1. தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதி XIII எண் 138.

இப்பெயர் சேந்தனார் பாடிய திருவாவடுதுறைத் திருவிசைப்பாவில் காணப்படுகின்றது. எனவே திரு விசைப்பா ஆசிரியராகிய சேந்தனார் முதற்கண்டராதித்த சோழர் காலத்துக்கு முற்பட்டிருந்தமை நன்கு தெளியப் படும்.

"செழுந்திரட்சோதிச் செப்புறைச் சேந்தன்"[1] எனவும் "செப்புறை அந்தமிலானந்தச் சேந்தன்"[2] எனவும் சேந்தனார் தம்மைப்பற்றிக் கூறுதலால் இவரது ஊர் 'செப்புறை' என்ற பெயருடையதெனத் தெரிகிறது. ஊர்ப்பெயர்கள் பல மாறி வழங்கும் இக்காலத்தில் அவ்வூர் இன்ன இடத்திலுள்ளதெனத் தெரிந்துகொள்ள இயல வில்லை. இனி செப்புறை யென்பதனை இவரது குடிப்பெய ராகக் கொள்ளினும் அமையும். திருவிடைக்கழி முருகப் பெருமானைப் பாடிப்போற்றும் சேந்தனார் அவ்வூர்த் திரு விசைப்பாவில் "மருண்டுறை கோயில் மல்கு நன்குன்றப் பொழில்வளர் மகிழ்திருப் பிடவூர், வெருண்டமான் விழி யார்க்கு அருள்செயாவிடுமே"[3] எனக் குறிப்பிடுதலால் இவரது ஊர் திருவிடைக்கழியை யடுத்துள்ள பிடவூரொடு தொடர்புடையதாயிருத்தல் வேண்டும். முடியுடை வேந் தர்க்கு மகட்குடைக்குரிய வேளாளர்கள் வாழும் ஊர்களாக நச்சினார்க்கினியர் குறித்த "சோழநாட்டுப் பிடவூரும் அழுந்தூரும் நாங்கூரும் நாவூரும் ஆலஞ்சேரியும் பெருஞ் சிக்கலும் வல்லமும் கிழாரும்" முதலிய பதிகளுள் இப் பிடவூர் முதலில் வைத்து எண்ணப்படுதல் காணலாம். நச்சினார்க்கினியர் கூறும் இவ்வூர்களனைத்தும் சோழ நாட்டின் கிழக்கே கடற்கரைப்பகுதியைச்சார்ந்த ஊர் களாதலால் பிடவூரும் இவ்வூர்களை யடுத்தே யமைந் திருத்தல் வேண்டும். திருச்சிராப்பள்ளி ஜில்லாவிலுள்ள பிடவூர்நாட்டுப் பிடவூர் இதனின் வேறெனவே கொள்ளப் படும். திருவிடைக்கழியின் அருகிலிருந்த இப்பிடவூர் அழிந்து போயிற்றென்றும் அங்கிருந்த கடவுட்படிமங்களைத் திருவிடைக்கழியிலுள்ள திருக்கோயிலிற் கொண்டு வந்து வைத்துள்ளார்களென்றும் முதியோர் சிலர் கூறுகின்றனர்.

1. திருவிடைக்கழி திருவிசைப்பாவின் திருக்கடைக்காப்பு.
2. திருப்பல்லாண்டின் திருக்கடைக்காப்பு.
3. திருவிடைக்கழி திருவிசைப்பா 10-ம் பாடல்.

பட்டினத்தடிகள் சேந்தனார் சிறைநீக்கப் பாடியதாகச் சொல்லப்படும் பாடலில் 'நாங்கூர்ச் சேந்தனே' எனக் குறிக்கப்படுதலால் சேந்தனார் சிலகாலம் நாங்கூரிலும் வாழ்ந்திருத்தல் கூடும் எனக் கருதுதல் பொருந்தும்.

சேந்தனார் பாடியனவாகத் திருவீழிமிழலை, திருவாவடு துறை, திருவிடைக்கழி என்ற தலங்களுக்குரிய திரு விசைப்பாப் பதிகங்கள் மூன்றும் திருப்பல்லாண்டுப் பதிக மொன்றும் ஆக நான்கு திருப்பதிகங்கள் உள்ளன. இவற்றில் நாற்பத்தேழு பாடல்கள் அமைந்துள்ளன.

செங்கண்மால் வழிபட வீழிமிழலையில் விண்ணிழி விமானத்திற் சிவபெருமான் வீற்றிருந்தருளுமியல்பும், பொய்த்தவ நெறிகளிற் புகாது தடுத்து மெய்த்தவ நெறி யாகிய சைவ சமயத்தில் தம்மை நிலைபெறச் செய்தருளிய அப்பெருமானது அருட்குணமும், சிவனடியார்களுக்குத் தாம் தொண்டுபட்டுய்ந்த திறமும், திருநாவுக்கரசர் திருஞானசம்பந்தர் ஆகிய பெருமக்களிருவர்க்கும் வீழி மிழலை யிறைவர் பரிசில்காசருளி அவர்கள் பாடிய பழுத்த செந்தமிழ் மலர்களைச் சூடி அவர்கள் திருவுள்ளத்தே நிறைந்து நின்ற பெருமையும் ஆகிய செய்திகளைத் திருவீழி மிழலைத் திருவிசைப்பாவிற் சேந்தனார் உளமுருகிப் போற்றும் முறை கற்போர் மனத்தைக் கனிவிப்பதாகும்.

"பண்டலர் அயன்மாற்கரிதுமாய் அடியார்க்
கெளியதோர் பவளமால் வரையை"

எனவும்,

"ஆயிரங்கமலம் ஞாயிருயிரமுக்
கண்முக கரசரணத்தோன்"

எனவும்,

"எண்ணில் பல்கோடி சேவடிமுடிகள்
எண்ணில் பல்கோடி திண்டோள்கள்
எண்ணில் பல்கோடி திருவுரு நாமம்
ஏர்கொள்முக் கண்முக மியல்பும்
எண்ணில் பல்கோடி யெல்லைக்கப்பாலாய்
நின்றைஞ்நூற் றந்தணரேத்தும்
எண்ணில் பல்கோடி குணத்தரேர் வீழி
யிவர் நம்மையாளுடையாரே"

எனவும் இவ்வாசிரியர் இறைவனைப் போற்றிய பகுதிகள் "வானோர்க்கரிய மருந்தே போற்றி ஏனோர்க்கெளிய

இறைவா போற்றி” என்ற திருவாசகத் தொடரையும்,

“ஆயிரந் தாமரைபோலும் ஆயிரஞ்சேவடியானும்
ஆயிரம் பொன்வரைபோலும் ஆயிரந்தோளுடையானும்
ஆயிரஞாயிறுபோலும் ஆயிரநீண் முடியானும்
ஆயிரம் பேருகந்தானும் ஆரூரமர்ந்தவம்மானே” (4–5–8)

எனவருந் திருநாவுக்கரசர் திருப்பாடலையும் நினைவுபடுத்துகின்றன. இவர் காலத்தில் திருவீழிமிழலையில் ‘ஐந்நூற்றுவர்’ என்ற தொகையுடைய வேதியர்கள் வீழிமிழலைப் பெருமான் வழிபாட்டில் ஈடுபட்டிருந்தமை ‘ஐஞ்ஞூற்றந்தணரேத்தும்’ என்ற தொடராற் புலப்படுகின்றது.

திருவாவடுதுறையில் எழுந்தருளிய மணவாள நம்பியைக் கண்டு காதல் கொண்ட தன் மகளது அன்பின் பாற்பட்ட மொழிகளையும் செயல்களையும் எடுத்துக்கூறித் தாயொருத்தி இரங்குவதாகப் பாடப்பெற்றது திருவாவடுதுறைத் திருவிசைப்பா. இதன்கண் அந்தாதித் தொடையமைந்துளது. திருவாவடுதுறை யென்பது கோயிற் பெயர். அக்கோயில் சாத்தனூரில் அமைந்துளது என்னும் உண்மையை “அழிவொன்றிலாச் செல்வச் சாந்தையூர் அணியாவடுதுறை” என்ற தொடராற் சேந்தனர் குறிப்பிட்டுள்ளார். “தென்கரைத் திரைமூர் நாட்டுப் பிரமதேயம் சாத்தனூர் ஸ்ரீ திருவாவடுதுறை” எனவரும் கல்வெட்டு[1] இக் குறிப்பினை நன்கு விளக்குவதாக அமைந்துளது. சாத்தனூர் என்பது சாந்தையென மருவியது. திருவாவடுதுறைக் கோயிலமைந்துள்ள ஊராகிய சாத்தனூரில் வேதியர் ஆயிரவர் வாழ்ந்தார்களென்றும் அவர்கள் திருவாவடுதுறையில் எழுந்தருளிய இறைவனுக்கு மெய்மைப்பணி புரிந்தார்களென்றும் இவ்வாசிரியர் கூறுகின்றார். “பொய்யாத வேதியர் சாந்தை மெய்ப் புகழாளர் ஆயிரம் பூசுரர், மெய்யே திருப்பணி செய்சீர் மிகுகாவிரிக் கரைமேய, ஐயா திருவாவடுதுறை யமுதே” எனவரும் பாடலில் இச்செய்தி குறிக்கப்பட்டமை காண்க.

திருவிடைக்கழி என்ற தலத்தில் திருக்குரா நீழலில் எழுந்தருளிய முருகப்பெருமானைக் கண்டு காமுற்ற தலைமகளின் ஆற்ருமையை நினைந்து இரங்கிய நற்ருய் கூறுவ

1. தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதி XIII எண் 18.

தாகச் சேந்தனர் பாடிய திருப்பதிகம், 'மாலுலாமனந் தந்து' எனத் தொடங்கும் திருவிசைப்பாவாகும். அரன் மதலேயும் கணபதி இளங்கிளேயுமாகிய முருகவேள், கங்கை தன் சிறுவனுக வளர்ந்து தேவர் சேனுபதியாய் அசுரர்மாள உழிஞை சூடிக் குன்றமெறிந்து சூர்மாவினேத் தடிந்து வள்ளியை மணந்து திருமால் மருகனுகித் திகழுஞ் சீர்த்தியும், சுப்பிரமணியனுகிய அத்தோன்றல் கவளமா கரிமேற் கவரிசூழ்குடைக்கீழ்த் திருவுலாவரும் சிறப்பும், அறுமுகச் செவ்வேளாகிய பெருமானது பேரழகில் ஈடுபட்ட மகளிர் மடல் தொடங்கிய நிலேயும், பிடவூர் வாழும் அம்மகளிர்க்கு அறுமுகப் பெருமானது திருவருள் கிடைத்தல் உறுதியென அவர்தம் தாயர் கொண்ட நம்பிக்கையும் இத் திருப்பதிகத்தில் விரித்துரைக்கப் பட்டுள்ளமை படித்து இன்புறுதற்குரியதாகும். திருவிடைக் கழி என்னும் இத்திருப்பதி மாயூரந் தாலுகாவில் உள்ளது. குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவன் என்ற சோழ மன்னனது பள்ளிப்படை இவ்வூரின் அருகே வீரசோழ ஞற்றங்கரையில் இன்றும் அமைந்துள்ளதெனக் கூறுவர். இதனேயுய்த்துணருங்கால் சங்க காலத்திற் குராப்பள்ளி யென்ற பெயரால் வழங்கியவூர் இத் திருவிடைக்கழியே யென்பது நன்கு புலனும். இவ்வூர்க் கோயிலில் முருகப் பெருமான் குரா மர நீழலிலமர்ந்திருத்தல் குராவுக்கும் இவ் வூருக்கும் அமைந்த தொன்மைத் தொடர்பினே மேலும் உறுதிப்படுத்துவதாகும்.

தில்லேயில் மார்கழித் திருவிழாவில் ஓடாமல் தடைப் பட்டு நின்ற திருத்தேர் ஓடும்படி பாடியது திருப் பல்லாண்டுத் திருப்பதிகமென்பது முன்னர் விளக்கப் பட்டது. இது பதின்மூன்று திருப்பாடல்களேயுடையது. நெடுங்காலம் வாழ்க என வாழ்த்துதற் பொருளிலமைந்த இசைப்பாட்டினேப் பல்லாண்டிசை என்பர்.

"பாடுவார் பணிவார் பல்லாண்டிசை
கூறுபத்தர்கள் சித்தத்துள்புக்குத்
தேடிக் கண்டுகொண்டேன் திருவாரூரம்மானே"

எனத் திருநாவுக்கரசடிகள் தம் காலத்துப் பல்லாண்டிசை பாடும் வழக்கமுண்டென்பதனே வெளியிட்டருளுதல் காண லாம். திருமாலடியார்களுள் ஒருவராகிய பெரியாழ்வார் பாடிய திருப்பல்லாண்டு இத்திருப்பல்லாண்டுடன் ஒப்பு

நோக்குதற்குரியதாம். பல்லாண்டென்னும் பதங்கடந்து என்றுமுள்ள பரம்பொருளாகிய இறைவனுக்குச் சேந்தனார் பல்லாண்டிசை பாடியதன் நோக்கம், எல்லாம் வல்ல அவ் விறைவனை வாழ்த்தும் மெய்யடியார்களெல்லோரும் உடல் நலமும் உள நலமும் ஒருங்கெய்தி நெடுங்காலம் வாழ்ந்து சிவநெறியை வளர்த்தல் வேண்டுமென்னும் பெரு வேட்கையேயாகும்.

'மிண்டுமனத்தவர் போமின்கள்' என விலக்கி 'மெய்யடியார்கள் விரைந்து வம்மின்' எனப் பேரன்பினால் அழைத்து, மழவிடையாற்கு வழிவழியாளாய் மணஞ்செய் குடிப்பிறந்த பழவடியார்களாகிய அப்பெருமக்களோடுங் கூடிநின்று, ஆவிக்கு அமுதாய் மனத்தகத்தே பாலும் அமுதமும் ஒத்துநின்று அண்ணித்து ஆரும் பெறாத அறிவு தந்து அடியார்க்கு அருள்புரியும் சிவலோக நாயகனாகிய பெருமானை உளமுருகிப் பல்லாண்டு கூறி வாழ்த்தும் இன்னிசைத் திருப்பதிகமாக விளங்குவது இத் திருப் பல்லாண்டாகும். இப்பதிகம் 'மன்னுக தில்லை வளர்க நம்பத்தர்கள்' எனத் தொடங்குவதனை யாழ்ந்து நோக்குங் கால் 'மன்றவாணன் மலர்திருவருளால் தென்றமிழ்ப் பெருமை சிவணிய செய்த அடியவர் கூட்டம்' தில்லைப் பதியில் நிலைபெற்றிருந்ததென்னும் செய்தி தெளிவாகப் புலப்படுகின்றது. இதனாலன்றோ,

"அகலோகமெல்லாம் அடியவர்கள் தற்சூழப்
புகலோகமுண்டென்று புகுமிடநீ தேடாதே
புவலோக நெறிபடைத்த புண்ணியங்கள் நண்ணியசீர்ச்
சிவலோக மாவதுவுந் தில்லைச் சிற்றம்பலமே"

எனப் பூந்துருத்திநம்பி காடநம்பியும் போற்றினரென்க.

காமக்கிழத்தியர் வடிவிற் காணப்படும் ஆடை சாந்து அணிகலன் முதலாயின காமுகரை வசீகரித்து இன்பஞ் செய்யுமாறுபோலச் சிவசாதனமாகிய திருவெண்ணீற்றுத் திருவேடம் மெய்யுணர்வுடையாரை வசீகரித்து இன்பஞ் செய்யுமென்பார்,

"சேலுங் கயலுந் திளைக்குங் கண்ணாரிளங்
கொங்கையிற் செங்குங்குமம்
போலும் பொடியணி மார்பிலங்குமென்று
புண்ணியர் போற்றிசைப்ப"

எனப் பாடுகின்றார்.[1] இத்தொடர் திருநீறு முதலிய சிவ சாதனங்களில் இவர் கொண்ட பேரார்வத்தினை இனிது புலப்படுவதாகும். திருப்பல்லாண்டின் இறுதித் திருப் பாடலில்,

> "எந்தையெந்தாய் சுற்றமுற்றும் எமக்கமுதாம் எம்பிரான் என்றென்று
> சிந்தைசெய்யும் சிவன் சீரடியா ரடிநாய் செப்புரை
> அந்தமிலானந்தச் சேந்தனெனை"

என இவ்வாசிரியர் தம்மைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். இதன்கண் சேந்தனாரால் 'சிவன் சீரடியார்' எனப் போற்றப்பட்டவர்,

> "எந்தையெந்தாய் சுற்ற மற்றுமெல்லாமென்னுடைய
> பந்தமறுத் தென்னை யாண்டுகொண்ட பாண்டிப்பிரான்"[2]

என இறைவனைப் பாடிப் போற்றிய திருவாதவூரடிகளே யெனக் கருத இடமுளது. இக்குறிப்பினை நோக்குமிடத்துத் திருவாதவூரடிகளுக்குப் பின் அவரடியார் குழுவின் வழி யொழுகியவர் சேந்தனாரென்பது நன்கு தெளியப்படும். சோழரது ஆட்சி பரவிய கடல் கடந்த வெளி நாடாகிய சயாம் நாட்டில் அரசர் குடும்பத்தில் நிகழ்த்தப்பெறும் சடங்குகளில் திருவெம்பாவை, திருவாய்மொழி என்பவற் றுடன் 'மன்னுகதில்லை' யெனத் தொடங்கும் இத்திருப் பல்லாண்டும் பாடப் பெறுதலுண்டென்ப.[3] இச்செய்தியை நோக்குங்கால் சேந்தனார் பாடிய திருப்பல்லாண்டில் நம் சோழ மன்னர்க்குள்ள ஈடுபாடு நன்கு விளங்கும்.

1. "காமக்கிழத்தியர் வடிவிற் காணப்படும் ஆடை சாந்து அணிகலன் முதலாயின காமுகரை வசீகரித்து இன்பஞ் செய்யுமாறு போல மெய்யுணர்வுடையாரைக் காட்சி மாத்திரையின் வசீகரித்து இன்பஞ் செய்தல் பற்றித் திருவேடத்தையும் சிவாலயத்தையும் என்றுபசரித்தார். அது 'சேலுங் கயலுந் திளைக்குங் கண்ணாரிளங் கொங்கையிற் செங்குங்குமம் போலும் பொடியணி மார்பிலங்கு மென்று புண்ணியர் போற்றிசைப்ப என்னுந் திருவாக்கானுமறிக" எனச் சிவஞானமுனிவர் கூறும் விளக்கம் இவண் கருதற்குரிய தாகும். (சிவஞானபோதச் சிற்றுரை 12-ம் சூத்திரம்)

2. திருவாசகம், திருப்பூவல்லி 2-ம் பாடல்.

3. சயாம் நாட்டு அரசாங்கச் சடங்குகளைப்பற்றி வெளிவந்து உள்ள 'State Ceremonies of Siam' என்ற ஆங்கில நூலில் இச் செய்தி குறிப்பிடப்பட்டது. திரு ஔவை. துரைசாமி பிள்ளையவர்கள் எழுதிய 'சைவ இலக்கிய வரலாறு' பக்கம் 394 பார்க்க.

௩. கருவூர்த்தேவர்

கருவூர்த்தேவர் பாடியனவாகத் திருவிசைப்பாவில் பத்துத் திருப்பதிகங்கள் காணப்படுகின்றன. அவை தில்லைச்சிற்றம்பலம், திருக்களந்தை ஆதித்தேச்சரம். திருக்கீழ்க்கோட்டூர் மணியம்பலம், திருமுகத்தலை, திரைலோக்கிய சுந்தரம், கங்கைகொண்ட சோழேச்சரம், திருப்பூவணம், திருச்சாட்டியக்குடி, தஞ்சை இராசராசேச்சரம், திருவிடைமருது என்னும் திருத்தலங்களிற் கோயில் கொண்டருளிய சிவபெருமானைப் பரவிப்போற்றியனவாக அமைந்துள்ளன. இத்திருப்பதிகங்களிற் காணப்படும் குறிப்புக்களைக் கொண்டு இவற்றைப் பாடியருளிய கருவூர்த்தேவரது வரலாற்றையும் ஓரளவு உணர்ந்து கொள்ளலாம்.

இவ்வாசிரியர் தாம் பாடிய பதிகங்களின் இறுதியில் உள்ள திருக்கடைக் காப்புச் செய்யுட்களில் கருவூரன் என்றும், கருவூரனேன் என்றும், கருவூர் என்றும் தம்மைக் குறிப்பிட்டுள்ளார். இக்குறிப்பினால் இவர் கருவூரிற் பிறந்து வளர்ந்தவரென்பதும் கருவூருடன் நெருங்கிய தொடர்புடைமையால் கருவூரன் என அழைக்கப்பெற்றாரென்பதும் நன்கு விளங்கும். கருவூரென்பது கொங்கு நாட்டுச் சிவதலங்களுள் ஒன்று. இவ்வூரிலுள்ள திருக்கோயில் திருவானிலையென வழங்கப்பெறும். இக்கோயிலினுள்ளே தென்மேற்குத் திசையில் கருவூர்த்தேவருக்குரிய கோயில் அமைந்துளது.

கருவூர்த் தேவர் வேதியர் குலத்தில் பிறந்தவர்; வேதங்களை முறைப்படியோதி வைதிக நெறியில் வழுவா தொழுகிய பெரியார். இச் செய்தி ‘ஆரணம் பிதற்றும் பித்தனேன்’ என்றும் ‘செழுமறை தெரியுந் திகழ் கருவூரனேன்’ என்றும் ‘கருவூர் ஆரணம் பொழிந்த பவளவாய்’ என்றும் இவ்வாசிரியர் தம்மைப்பற்றிக் கூறுங் குறிப்புக்களால் இனிது விளங்கும். இவர் மக்களுக்கு நலந்தருவனவாகிய கலைகள் பலவற்றையும் நன்கு பயின்றவர். ‘நலமலி கலைபயில் கருவூர்’ எனவும் ‘காட்டிய பொருட்கலை பயில்கருவூரன்’ எனவும் வருந் தொடர்களால் இச்செய்தி புலனாகின்றது.

வேதங்களை முறைப்படி ஓதியுணர்ந்த கருவூர்த் தேவர் தமது தாய் மொழியாகிய தமிழின் இனிமையினையும் எப் பொருளையுந் தெளிய அறிவிக்குந் தெளிவுடைமையினையும் நன்கு தேர்ந்து அமிழ்தினுமினிய தமிழ்ப் பாடல்களின் சுவை நலங்களைத் துய்த்து மகிழ்ந்தார். தமக்குமுன் வாழ்ந்த அருளாசிரியர்கள் இறைவனைப் போற்றி உள முவந்தபோதெலாம் உகந்துகந்து பாடிய செழும் பாடல் களைக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதி இன்புற்றார். இளமை, யாக்கை, செல்வம் என்பன என்றும் ஒரு நிலையில் நிற்பன அல்ல எனத் தெளிந்தார். நிலையா வாழ்க்கையில் ஈடுபடுவனல்லேன் எனத் துறவறமாகிய தூய நெறியினை மேற்கொண்டார். இறைவன் எழுந்தருளிய திருத்தலங்கள் தோறுஞ் சென்று அப்பெருமானை வழிபட்டுப் போற்றுதலே இம் மக்கட் பிறவியாற் பெறும் பெரும்பயனெனக் கருதி யொழுகினர். எல்லாம் வல்ல கடவுளை வாயாரப் பாடிப் போற்றுந் தொண்டர் கூட்டத்திலே கடவுளைக்கண்டு இன்புறலாமென்றும், இறைவனது பொருள்சேர்புகழை இனிய இசைத் தமிழ்த் திறத்தாற் பாடிப் போற்றும் மெய்யடியார்கள் கூட்டத்தைவிட்டு இறைவன் கணப் பொழுதும் பிரிந்துறைதல் இல்லை யென்றும் முன்னைப் பெரியோர்கள் பாடிய பாடற் பொருளை உளங் கொண்டு மெய்யடியார் கூட்டத்திற் கலந்து நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பி இறைவனை வழிபடுவதனையே தமக்குரிய சிறந்த கடமையாகக் கொண்டொழுகினர்.[1]

பகற்பொழுதெல்லாம் இறைவனை "இனிய தமிழாற் பாடிப் பரவுதலும் எல்லோரும் அயர்ந்து கண்ணுறங்கும் நள்ளிருட்பொழுதில் ஓரிடத்து உயிராவண்ணம் அமர்ந் திருந்து தம் உயிர்க்குயிராகிய இறைவனை யுற்றுநோக்கி உள்ளமாகிய கிழியிலே அப்பெருமானது திருவுருவை ஓவியமாக எழுதிப்பார்த்துச் சிவயோக நெறியில்

1. ‘கண்பனியரும்பக் கைகள் மொட்டித்தென்
 களைகணேயோலமென் றோலிட்டு
 என்பெலாம் உருகும் அன்பர்தங் கூட்டத்து
 என்னையும் புணர்ப்பவன்’.

—(கோயில்–திருவிசைப்பா–5)

என இவ்வாசிரியர் தமது அநுபவத்தைக் கூறுதல் காண்க.

நிலைபெற விருத்தலும் இவருடைய அன்றாட அலுவல் களாயின.[1]

இவ்வாறு இரவு பகலாக இறைவனது திருவருளை யெண்ணி மகிழுமியல்பினராகிய இப்பெரியார், உணர்வின் நேர்பெற வரும் சிவபோகமாகிய பேரின்ப நிலையைத் தம் ஐம்பொறிவாயிலாகவும் நுகர்ந்து இன்புறும் நற்பேறுடைய ரானார். மாற்ற மனங்கழிய நின்ற பெருமானைத் தம் கண்ணாரக் கண்டு பிறவிநோய் தீர்க்கும் அருமருந் தாகிய இறைவனது அருளாரமுதத்தை ஆரப்பருகி அல்ல லெலாந் தீரப்பெற்று அகமகிழ்ந்தார். தாம் பெற்ற பேரின்பத்தினை எல்லோரும் பெற்று இன்புறவேண்டுமென விரும்பினார். வேதமாகிய தேனை நிறையப் பருகியின்புற்ற இப்பெரியார், வேதங்கள் ஐயாவென ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனாகிய இறைவனது திருவருளை யடைந்தின்புறு தற்கு வீறுயர் செந்தமிழால் ஞானசம்பந்தப் பிள்ளையார் அமைத்த பதிகப் பெருவழியை நாடினார். இன்ன தன்மையன் என்று அறியவொண்ணாத இறைவனது பேரருட் பண்பினை இவ்வுலகோரனைவரும உணர்ந்து மகிழ்தற்கேற்ற வகையில் ஆலைப்படுகரும்பின் சாறு போன்றும் ஆராவமிழ்தம் போன்றும் அண்ணிக்கும் இனிய தமிழ்ப் பாடல்களைப் பாடியருளினார்.

இவ்வாசிரியர், சிவயோக நெறி நின்ற சித்தராய் நோய் முதுமை முதலிய துன்பமின்றி இவ்வுலகில் நெடுங்காலம் வாழ்ந்தவரென்பது "அருமருந்தருந்தி அல்லல்தீர் கருவூர் அறைந்த சொன் மாலை" என வருந்தொடரால் இனிது புலனாம். கருவூர்ச் சித்தராகிய இப்பெரியார் இவ்வுலகில் நெடுங்காலம் வாழ்ந்தமைக்கு அருமை நிறைந்த தமிழ்ப் பாடல்களால் இறைவனைப் பாடி மகிழவேண்டுமென்னும் பெருவிருப்பமே காரணமாகும். இதனை "ஆரணத் தேன்

1. 'ஒருங் கிருங்கண்ணின் எண்ணில் புன்மாக்கள்
உறங்கிருள் நடுநல்யாமத்தோர்
கருங்கணின்றிமைக்குஞ் செழுஞ்சுடர் விளக்கங்
கலந்தெனக் கலந்துணர் கருவூர்'

—(திருவிடைமருது-10)

என இவ்வாசிரியர் தமது அநுபவத்தை வெளியிட்டமை நினைந்து இன்புறத்தக்கது.

பருகியருந்தமிழ் மாலை பகரவருங் காரணத்தின் நிலைபெற்ற கருவூரன் தமிழ் மாலை" என வருந்தொடரால் இவ்வாசிரியரே உலகினர்க்கு விளங்க எடுத்துரைத்தமை காண்க.

உலக மக்களனைவரும் கண்ணயர்ந்துறங்கும் நடுயாமப் பொழுதிலே ஒன்றிய சிந்தையுடன் சிவயோக நிலையிலமர்ந்திருந்து எல்லாம் வல்ல சிவபெருமானை நினைந்துபோற்றி ஞாயிற்றினொளியும் கண்ணொளியும் ஒருங்கியைந்தாற் போன்று அப்பெருமானது திருவருளில் ஒற்றித்து இன்புறும் நிலையில் தாம் திருவிசைப்பாப் பாடிய திறத்தினை,

" ஒருங்கிருங்கண்ணின் எண்ணில் புன்மாக்கள்
உறங்கிருள் நடுநல் யாமத்தோர்
கருங்கணின்றிமைக்குஞ் செழுஞ்சுடர் விளக்கங்
கலந்தெனக் கலந்துணர் கருவூர்
தருங் கரும்பனைய தீந்தமிழ்மாலை "

எனவருந்தொடராற் கருவூர்த் தேவர் தெளிவாகக் கூறியுள்ளார். நீர்கலந்த பாலை நெருப்பில் வைத்துக் காய்ச்சுங்கால் நீர்முழுவதுஞ் சுண்டிப்போகப் பால் முன்னினும் பன்மடங்கு இன்சுவை பெறுதல்போல இறைவனது திருவருளாகிய தீயின் முன்னர்த் தம்பாலுள்ள நீரனைய தீவினை அறவே கெட்டொழியப் பாலனைய புண்ணியம் நன்ஞானமாகிய இன்சுவையுடையதாய் விளங்குமாறு தாம் சிவயோக நெறியில் ஒழுகிய திறத்தினையும், அந்நிலையில் இறைவன் யாவராலும் உணர்தற்கரிய தனது நுண்ணிய தன்மையினை அடியார்க்கெளிவரும் பெருங்கருணைத் திறமாகிய எளிமையினுள்ளே அடக்கிக் கொண்டு எளிவந்து தோன்றித் தம் கண்ணினுட் கருவிழியெனக் கலந்து அகலாது நின்று தனது திருவருட் கோலத்தைக் காட்டியருளிய திறத்தினையும்,

பண்ணிய தழல்காய் பாலளாம் நீர்போற்
பாவமுன் பறைந்து பாலனைய
புண்ணியம் பின்சென் றறிவினுக் கறியப்
புகுந்ததோர் யோகினிற் பொலிந்து
நுண்ணியை யெனினும் நம்பநின் பெருமை
நுன்னிடையொடுங்கநீ வந்தென்
கண்ணினுண் மணியிற் கலந்தனை கங்கை
கொண்ட சோழேச் சரத் தானே.

எனவரும் திருப்பாடலில் அழகு பெற விரித்துரைத்துள்ளார்.

கி. பி. 985 முதல் 1014 வரை தமிழகத்தை ஆட்சி புரிந்த பெருவேந்தன் முதலாம் இராசராச சோழனுவன். இவ்வேந்தர் பெருமான் தஞ்சை நகரத்தில் தக்கிணமேரு வென்னும் பெயருடன் இராசராசேச்சரத் திருக்கோயிலைக் கட்டினுன். இவ்வேந்தனுடைய அரும்பெறற் புதல்வனுகத் தோன்றிக் கங்கை யாறு பாயும் வடநாட்டு மன்னரைத் தன்னடிப் படுத்திக் கடல் கடந்து கடாரம் முதலிய வெளிநாடுகளையும் வென்று மேம்பட்ட கங்கைகொண்ட சோழனென்பான், தான் தன் பெயராற் புதுவதாக அமைத்த கங்கைகொண்டசோழபுரத்தினுள்ளே கங்கை கொண்ட சோழேச்சரம் என்ற திருக்கோயிலைக் கட்டினுன். இவ்வேந்தன் கி. பி. 1012 முதல் 1044-ம் ஆண்டுவரை தமிழகத்தை ஆட்சி புரிந்தான். இவ்விருபெருவேந்தர்களாலும் கட்டப்பெற்ற இரண்டு திருக்கோயில்களையும் நேரிற் கண்டு மகிழ்ந்த கருவூர்த் தேவர் அங்கு எழுந்தருளிய சிவபெருமானைத் திருவிசைப் பாப் பாடிப் பரவிப் போற்றியுள்ளார். எனவே இப்பெரியார் மேற்குறித்த முதலாம் இராச ராச சோழன் முதலாம் இராசேந்திரன் ஆகிய இரு பெருவேந்தர் காலத்தும் இருந்தவரென்பது நன்கு துணியப்படும். எனவே இவ்வாசிரியர் கி. பி. பத்தாம் நூற்ருண்டின் பிற்பகுதியிலும் பதினுேராம் நூற்ருண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்தவரெனக் கொள்ளலாம்.

முதலாம் இராசராச சோழன் தஞ்சையில் இராசராசேச்சரத் திருக்கோயிலைக்கட்டி முடித்து அக்கோயிலினுள்ளே பெருவுடையாரைப் பிரதிட்டை செய்யும்பொழுது அஷ்டபந்தன மருந்து இளகிச் சிவலிங்கத் திருவுருவம் மருந்தினுற் பிணிப்புருமையைக் கேள்வியுற்ற கருவூர்த் தேவர், தஞ்சைக்குச் சென்று தமது வாயிற் றம்பலத்தால் அஷ்டபந்தன மருந்தினை இறுகும்படி செய்து பெருவுடையாரை நிலைபெற நிறுத்தினுர் எனச் செவிவழிச் செய்தியொன்று வழங்கி வருகின்றது. தஞ்சை இராசராசேச்சரத் திருக்கோயிலின் திருப்பணி இராசராச சோழனது பத்தொன்பதாம் ஆட்சியாண்டில் தொடங்கப்பெற்று அவனது ஆட்சியின் இருபத்தைந்தாம் ஆண்டில் நிறைவேறிக் குடமுழுக்கு நடைபெற்றது. குடமுழுக்கு நிகழ்ந்த காலமாகிய கி. பி. 1010-ஆம் ஆண்டு தொடங்கிக் கங்கைகொண்ட சோழன் ஆட்சிக் காலமாகிய கி. பி. 1044-ம் ஆண்டுவரை

அப்பெருவேந்தர்களை நெருங்கி அளவளாவும் நிலையின ராய்க் கருவூர்த்தேவர் சிவநெறியினை வளர்த்து வந்தார். துறந்தார்தம் தூநெறிக்கட் சென்ற இப்பெரியார், சோழ மன்னர்பால் அளவற்ற பேரன்புடையராய் அவர்களுக்குச் சிவனது திருவருளில் நம்பிக்கை யுண்டாக்கிச் சிவநெறியில் தளராத உறுதியுடையராயொழுகப் பணித்தார். சோழரது பேரரசு நாடெங்கும் விரிந்து சிறத்தற்கு இன்றியமையாத தறுகண் உணர்வினைத் தமிழ் மக்கள் உள்ளத்தே கிளர்ந் தெழச் செய்தருளினர். முடிவேந்தர் அடிபணிந்து போற்றும் திருவருட் செல்வராகிய இச் சிவயோகியார், அரசர் பெருந்திருவினை நுகர்தற்கேற்ற நல்ல வாய்ப்பினைத் தாம் பெற்றிருந்தும், அவ் வாய்ப்பு தம்மை உலகியற் பாசத் திற் பிணித்துவிடுமெனத் தெளிந்தவராதலின், அரசர் பெருஞ்செல்வத்தை நுகருமுளமின்றிக் கையில் ஓட்டினை உண்கலனாக ஏந்திக்கொண்டு ஊர்தோறும் திரிந்து பிச்சை யேற்று உண்ணும் எளிய வாழ்க்கையினையே மேற்கொண் டொழுகினர்.

இங்ஙனம் தெருவிற் பிச்சையேற்றுத் திரியும் கருவூர்த் தேவரின் உள்ளத்துயர்ச்சியினை நன்குணர்ந்த கங்கை கொண்ட சோழன், அச்சிவயோகியாரைப் பணிந்து அவர் திருவாய் மலர்ந்தருளிய திருவிசைப்பாத் திருப்பதிகங்களை இறைவன் திருமுன்னர் அன்புடன் ஓதி வழிபடும் வாயிலாக இறைவனது திருவருளை நிரம்பப்பெற்று, வேந்தரெலாந் தன் ஆணைவழி யடங்கி யொழுகச் செய்யும் வீறுடைய பேரரசனாக விளங்கினன். இச்செய்தியினை,

“ மங்கையோ டிருந்தே யோகுசெய்வானை
வளரிளந்திங்களை முடிமேற்
கங்கையோ டணியுங் கடவுளைக் கங்கை
கொண்ட சோழேச் சரத்தானை
அங்கையோடேந்திப் பலிதிரிகருவூர்
அறைந்த சொன்மாலையால், ஆழிச்
செங்கையோ டுலகில் அரசுவீற்றிருந்து
திளைப்பதுஞ் சிவனருட்கடலே ”

எனவருங் கங்கைகொண்ட சோழேச்சரத் திருவிசைப் பாவின் திருக்கடைக்காப்புச் செய்யுளில் கருவூர்த்தேவரே தெளிவாக எடுத்துரைத்துள்ளார். சிவபெருமானுக்குக் கங்கைகொண்ட சோழேச்சரமெனத் தன் பெயராற் பெருங் கோயிலெடுத்து அப்பெருமான்பால் அளவிலாப் பேரன்

புடையவனுகி விளங்கிய கங்கைகொண்ட சோழன் எல்லாம் வல்ல இறைவனது திருவருளால் வேந்தரெலாம் வணங்கும் பெருவேந்தனுகி இவ்வுலகில் ஆணைச்சக்கரமாகிய ஆழியைச் செலுத்திப் பேரரசு புரிந்தும் அவ்வரசபோகமாகிய சிற்றின்பத்தி லழுந்தாது சிவனருட்கடலாகிய பேரின்பவெள்ளத்துள் திளைத்து இன்புற்ருன் என்ற நற்செய்தியை உலக மக்களுக்கு எடுத்துரைக்கு முகமாக எல்லோரும் சிவனது திருவருளை விரும்பிச் செம்மை நெறியில் ஒழுகுதல் வேண்டுமென்பதனை இத்திருக்கடைக் காப்புச் செய்யுளால் கருவூர்த்தேவர் அறிவுறுத்தருளிய திறம் என்றும் நினைந்து இன்புறுதற்குரியதாகும்.

கருவூர்த் தேவர் பாடிய பத்துப் பதிகங்களிலும் நூற்று மூன்று பாடல்கள் காணப்படுகின்றன. 'கணம் விரிகுடுமி' யெனத்தொடங்கும் திருவிசைப்பாப்பதிகம் தில்லைப் பெருங்கோயிலைப் போற்றுவதாகும். இதன்கண் அமைந்த பாடல்கள் யாவும் 'பெரும்பற்றப்புலியூர்த் திருவளர் திருச் சிற்றம்பலமே' என்ற முடிவுடன் அமைந்துள்ளன. கடத்தற்கரிய பிறவியாகிய இப்பெருங்கடலிற்கிடந்து கரை காணுது நீந்தி அலமரும் அறிவிலாதேனுகிய எளியேற்கு என்னுடன்தோன்றிய பொறிகளாகிய ஐவரும் நீங்காப் பகைவராய் மேன்மேலும் இடர்விளைக்கின்றனர். இத்துன்ப நிலையில் எளியேற்குத் துணையாய் நின்று இக்கடலினின்றுங் கரையேற்றி என்னை உய்விப்பார் நின்னைத் தவிர வேறு யாருளர்? என முறையிட்டால் அந்நிலையே தோன்றி, 'நீ ஒரு சிறிதும் அஞ்சற்க' என்று சொல்லித் திருவருள் புரியும் இறைவன் எழுந்தருளியகோயில் பெரும்பற்றப் புலியூரிலமைந்த திருவளர் திருச்சிற்றம்பலமே என்பதனை,

இவ்வரும் பிறவிப் பௌவநீர் நீந்தும்
 ஏழையேற் கென்னுடன் பிறந்த
ஐவரும் பகையே யார்துணை யென்ருல்
 அஞ்சலென் றருள்செய்வான் கோயில்
கைவரும் பழனங் குழைத்த செஞ்சாலிக்
 கடைசியர் களைதரு நீலஞ்
செய்வரம் பரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
 திருவளர் திருச்சிற்றம்பலமே.

எனவரும் அழகிய பாடலிற் கருவூர்த்தேவர் விளக்கியுள்ளார். இப்பாடல்,

"புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
யறிவழிந்திட் டைமேலுந்தி
அலமந்தபோதாக அஞ்சேலென் றருள்செய்வான்
அமருங்கோயில்"

என வரும் திருஞானசம்பந்தர் திருப்பாடற்பொருளை அடியொற்றி யமைந்திருத்தல் காண்க.

"பூத்திரளுருவஞ் செங்கதிர் விரியாப்
புந்தியில் வந்தமால் விடையோன்
தூத்திரட் பளிங்கிற்றோன்றிய தோற்றம்
தோன்ற நின்றவன்"

எனக் கருவூர்த்தேவர் இறைவனது தெய்வக்காட்சியை விளக்கும் பகுதி,

"இன்றெனக்கருளி யிருள்கடிந்துள்ளத்
தெழுகின்ற ஞாயிறேபோன்று
நின்றநின்றன்மை நினைப்பற நினைந்தேன்"

என்ற திருவாசகத் தொடரையும்,

"பளிங்கேபோல் அரிவைபாகம்
ஒத்தாறு சமயங்கட் கொருதலைவன்"

எனவரும் திருஞானசம்பந்தர் தேவாரத் தொடரையும் நினைவுபடுத்துகின்றது.

களந்தையென்பது தஞ்சை ஜில்லா திருத்துறைப் பூண்டி தாலுகாவிலுள்ள களப்பாள் என்ற ஊராகும். களப்பாள் களந்தையென மருவிற்று. இவ்வூரிலுள்ள கோயில்களுள் அழகியநாதசுவாமி திருக்கோயில் முதலாம் ஆதித்த சோழனாற் கட்டப்பெற்றமையால் ஆதித்தீச்சுரம் என வழங்கப்பெறுகின்றது. இச்செய்தி "களப்பாள் உடையார் திருவாதித்தீசுரமுடையார்"[1] என இக் கோயிலிற் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுத் தொடரால் உறுதியாதல் தெளியப்படும். கருவூர்த்தேவர் பாடிய 'கலைகள்தம்பொருளும்' என்ற முதற்குறிப்புடைய திருவிசைப்பாப்பதிகம் களப்பாள் என்ற ஊரிலுள்ள இவ்வழகியநாதசுவாமி கோயிலைப்பற்றிப் பாடப்பெற்ற தென்றே கொள்ளுதல் வேண்டும். இதன்கண்

1. தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதி VIII எண் 262.

"கலைகள் தம்பொருளும் அறிவுமாயென்னைக்
கற்பினிற்பெற்றெடுத்தெனக்கே
முலைகள் தந்தருளுந் தாயினும் நல்ல
முக்கணான்"

என இவ்வாசிரியர் இறைவன் உயிர்கள்மேல் வைத்த அளப்பரும் பேரன்பினைப் புலப்படுத்தும் பகுதி உள்ளத்தை யுருக்குவதாகும். 'தாயினும் நல்ல சங்கரன்' எனவும், 'பாலினை நூட்டும் தாயினுஞ் சாலப்பரிந்து' எனவும் வரும் அருளாசிரியர் வாய்மொழிக்குரிய விளக்கவுரையாக இத்திருவிசைப்பாத்தொடர் அமைந்துள்ளமை காணலாம்.

திருக்கீழ்க்கோட்டூர் மணியம்பலம் என்ற திருக் கோயிலைப் போற்றிக் கருவூர்த் தேவர் பாடிய திரு விசைப்பா கோட்டூர் என்னுந் திருத்தலத்தில் அமைக்கப் பட்டுள்ள மணியம்பலத்தில் திருநடஞ்செய்தருளும் கூத்தப் பெருமானைக் காதலித்த தலைவி, அப்பெருமான் தன்னுடைய மனத்திற் கலந்து தன்னை யுருக்கிய திறத்தையும், அப்பெரு மானை யடையப்பெறாது தான் வருந்துமியல்பினையும் தன் தோழி முதலியோர்க்குக் கூறுவதாக அமைந்துளது. தெளிவாகிய திருநீற்றை யணிந்த இறைவனது திருவெண் ணீற்றை யணிதற்கு என்னுடல் விரும்பும். என் செவி அவனது அறிவு நூல்களைக் கேட்டு மகிழும். வாய் அவ னது திருப்பெயரை மெல்லச் சொல்லி யின்புறும். கண்கள் அப்பெருமான் எழுந்தருளியுள்ள விமானத்தையே நோக்கி வெய்துயிர்க்கும். என் மனம் 'வள்ளலே மணியம்பலத்துள் நின்றாடும் மைந்தனே' என இடைவிடாது நினையாநிற்கும் எனத் தலைவி கூறுவதாக அமைந்த பாடல்[1] சிவபத்தரது இயல்பினை விளக்குவதாகும். திருக்கீழ்க்கோட்டூர் என ஈண்டுக் குறிக்கப்பட்ட ஊர் தஞ்சை ஜில்லா மன்னார்குடி தாலுகாவிலுள்ள கோட்டூரே என எண்ணவேண்டியுளது. "கோட்டூர்க் கொழுந்தே" எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் உளமுருகிப் போற்றிய கொழுந்தீசர் எழுந்தருளிய கோட்டூர் இதுவேயாகும். இதனை 'அருள்மொழிதேவ வளநாட்டு நென்மலி நாட்டுக் கோட்டூர்' எனக் கல்வெட்டுக்கள் குறிக்கின்றன. திருக்களந்தை யாதித் தேச்சரம், திருமுகத்தலை என்ற ஊர்களை வழிபட்டுத் திருவிசைப்பாப் பாடிய கருவூர்த்தேவர் அவ்வூர்களை

1. திருக்கீழ்க்கோட்டூர் மணியம்பலம் 4-ம் பாடல்.

யடுத்துள்ள இக்கோட்டூரையும் வழிபட்டுத் திருவிசைப்பாப் பாடியிருத்தல் பொருத்தமேயாம். இவ்வூர்க்கோயிலில் கூத்தப்பெருமானெழுந்தருளிய அம்பலம் கருவூர்த் தேவர் காலத்தில் மணியம்பலம் என்ற பெயரால் வழங்கப் பெற்றிருத்தல் வேண்டும்.

'புவனநாயகனே' எனத் தொடங்குந் திருவிசைப்பாப் பதிகத்தாற் போற்றப்பெற்ற திருமுகத்தலை யென்பது, தஞ்சை ஜில்லா திருத்துறைப்பூண்டி தாலுகாவிலுள்ளது. இவ்வூரிற் கோயில்கொண்டருளிய இறைவன் பன்னகாபரணேசுரர் எனப் போற்றப்பெறுகின்றார். இங்கெழுந் தருளிய இறைவனைக் கருவூர்த்தேவர் 'பன்னகாபரணா' என உளமுருகிப் போற்றுதலால் இப்பெயர் வழங்கிய தெனத் தெரிகிறது. திருமுகத்தலை யென்ற இவ்வூர் இக்காலத்தில் தன் பெயரை யிழந்து பன்னத்தெரு என்ற பெயரால் வழங்குகின்றது. பன்னகாபரணன் தெரு என்ற பெயரே பிற்றை நாளில் 'பன்னத் தெரு' எனச் சிதைந்து வழங்கியதாதல் வேண்டும். எல்லாப் புவனங்களுக்குந் தலைவனும் உயிர்களின் உள்ளத்தே இனிக்கும் அமுதான வனும் எங்கும் நீக்கமற நிறைந்தவனுமாகிய இறைவன் உலகத்திற்குக் கண்ணாகிய ஞாயிற்றைப் போன்று அறியாமையாகிய இருளையகற்றித் தம்முடைய உள்ளத்தி லும் திருமுகத்தலையிலுள்ள பூங்கோயிலிலும் எழுந்தருளிய தன்மையையும், அப்பெருமான் அடியார்க்கெளிவந்தருளும் பெருமையையும், தம் நெஞ்செலாம் நிறைந்து நின்று பவளம் போன்ற செவ்வாயினால் அருளுரை வழங்கித் தம்பக்கல் ஆனந்த வெள்ளம் இடையறுவண்ணம் பண்ணிய செய்தியையும், அப்பெருமான் தம் உடம்பினுள்ளே புகுந்து நின்றமையால் வினைப்பயனாய் வந்த தம்முடம்பு அவ் விறைவன் எழுந்தருளியிருத்தற்குரிய எழில்மிக்க விமான மாய் விளங்குமியல்பினையும் இத்திருப்பதிகத்தில் கருவூர்த் தேவர் உளமுருகிப் பாராட்டிக் கூறியுள்ளார்.

'நீரோங்கி வளர்கமலம்' என்ற முதற்குறிப்புடைய திருவிசைப்பாத் திருப்பதிகம் திரைலோக்கிய சுந்தரம் என்ற திருக்கோயிலில் எழுந்தருளிய இறைவனைப் போற்றிப் பாடப்பெற்றதாகும். இத்திருக்கோயிலமைந் துள்ள இடம் மண்ணிநாட்டு ஏமநல்லூராகும். ஏமநல்லூ ரென்பது 'எச்சில் இளமர் ஏமநல்லூர்' எனத் தேவாரத்திற்

குறிக்கப்பட்ட வைப்புத்தலமாகும். இது, 'மண்ணிநாட்டு ஏமநல்லூராகிய திரைலோக்கிய மாதேவிச் சதுர்வேதி மங்கலம்' (தெ. இ. க. தொகுதி 2. பக் – 331) எனக் கல்வெட்டிற் குறிக்கப்பட்டுளது. இவ்வூர் இக்காலத்துத் திருப்பனந்தாளுக்கு அண்மையில் திருலோக்கியென்ற பெயருடன் வழங்குகின்றது. இங்குச் சிவபெருமானுக்கு உரியனவாக இரண்டு திருக்கோயில்கள் உள்ளன. அவற்றுள் ஒன்று 'திரைலோக்கியமாதேவீச்சுரம்' என்பதாகும். முதல் இராச ராச சோழன் மனைவியருள் ஒருத்தியாகிய திரைலோக்கிய மாதேவியென்ற அரசியாற் கட்டப்பெற்றமையால் இது திரைலோக்கிய மாதேவிச்சுரம் எனப் பெயரெய்தியது. இங்கெழுந்தருளிய இறைவனைத் திரைலோக்கிய சுந்தரன் என்ற பெயராற் கருவூர்த் தேவர் போற்றியுள்ளார். கோடைத் திரைலோக்கிய சுந்தரம் எனக் குறிக்கப்படுதலால் இக்கோயிலமைந்த இடம் கோட்டூர் என்ற பெயருடையதாய் அது கோடை என மருவியதெனக் கொள்ளலாம். இறைவன்பாற் காதல் கொண்ட தலைவியின் கூற்றாகவும், அவள் பொருட்டு இறைவனைப் பரிந்து வேண்டும் தோழி முதலியோர் கூற்றாகவும் இத்திருப்பதிகம் அமைந்துள்ளது.

சூரியகாந்தமாகிய பளிங்குக் கல்லில் முன்னமே தீயுண்டாயினும் அக்கல் ஞாயிற்றொளியின் முன் சேர்ந்த நிலையில் அதனுள்ளே மறைந்திருந்த தீ புறத்தே வெளிப்பட்டு விளங்கினாற்போன்று, எங்கள் தலைவியினுள்ளத்தில் இறைவனாகிய நின்னைப் பற்றிய பேரன்பு கருவிலேயே அமைந்திருப்பினும், நீ திருவுலா எழுந்தருளிய இன்று நின் திருமுகத்தைக் கண்ட அளவே அக்காதல் பெருகி வெளிப்பட்டுச் 'சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கியாங்கு இவள் உயிர் தவச் சிறிது காமமோ பெரிதே' என்றவாறேயாய் இவளுயிர்க்குத் தாங்காச் சுமையாயிற்று எனத் தோழி இறைவனுக்கு அறிவுறுத்தி முறையிடுவதாக அமைந்தது,

அம்பளிங்கு பகலோன்பால் அடைப்பற்று யிவள் மனத்தின்
முன்பளிந்த காதலுநின் முகந்தோன்ற விளங்கிற்றால்
வம்பளிந்தகனியே யென்மருந்தே நல்வளர்முக்கட்
செம்பளிங்கே பொழிற்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே.

என்ற பாடல் ஆகும். இங்குப் பளிங்கு தலைவியின் உள்ளத்திற்கும், அதனகத்து என்றுமுள்ள தீ அவளுள்ளத்

தில் முன்னமே நிலைபெற்ற காதலுக்கும், பளிங்கினிடத்தே தீயைப் புலப்படச் செய்யும் ஞாயிறு தலைவியினுள்ளத்திற் காதலை வெளிப்படச் செய்யும் இறைவனது திருமுகத் திற்கும் உவமையாய் வந்தவாறு உணர்ந்து மகிழத் தக்க தாகும்.

'அன்னமாய் விசும்பு பறந்தயன்தேட' எனத் தொடங்குந் திருவிசைப்பா, கங்கைகொண்ட சோழேச் சரத்தில் எழுந்தருளியுள்ள இறைவனை உளமுருகிப் போற்றியதாகும். கங்கைகொண்ட சோழேச்சரத்துள் வீற்றிருக்கும் பெருமானை அன்போடு திருவைந்தெழுத்தா கிய சொல்லினிடத்துவைத்து ஓதி உள்ளம் இனிமையால் தேக்கெறியப்பெறும் அடியார்களுக்கு எண் திசையின்கண் உள்ள பொன் முதலிய பொருளும் அவைபற்றிய பல்வேறு பதவிகளின் தொகுதியும் பசும்பொன்னுல் அணி செய்யப் பெற்ற மாளிகைகளும், பவளம் போலுஞ் சிவந்தவாயினை யுடைய மகளிராற் பெறும் போக நுகர்ச்சியும், கற்பகச் சோலை சூழ்ந்த வானுலக ஆட்சியும் ஆகிய எல்லாப் பேறு களும் நிரம்பவுண்டாகும். இங்ஙனம் பிறரால் அரிதின் முயன்று பெறுவதற்குரிய இம்மை மறுமை யின்பங்களைத் தன்னை நினைந்து வாழ்த்திய அளவிலேயே எளிதின் அளித்தருளவல்ல இம் முழுமுதற் பொருளைவிட வியந்து போற்றுதற்குரிய பிறிதொரு தெய்வம் இல்லை யென்றும், மக்கள் கருதி வழிபடும் வேறுவேறு பெயருடைய எல்லாத் தெய்வங்களாகவும் விளங்கியருள் புரியும் இறைவனுவான் கங்கைகொண்ட சோழேச்சரத்தில் எழுந்தருளிய சிவ பெருமானேயென்றும், மிகப்பெரிய அண்டத்தையும் அணு வெனக் கருதுமாறு விரிந்து விளங்கும் பெருமையும் மிகச் சிறிய அணுவையும் அண்டமெனக் கருதுமாறு அதனிற் பன்னூருயிர மடங்கு நுணுகியூடுருவவல்ல நுண்மையும் ஒருங்குடையனுய் அடியார்கள் உண்டவூணும் தனக்காம் படி அவர்கள் உள்ளத்திற் பிரிவின்றி விளங்கும் பேரொளிப் பொருளாய்த் திகழுதல் இறைவனது இயல்பென்றும், மகளிர்பாற் செலுத்தும் விருப்பத்தினை நூருயிரம் பங்கு செய்து அவற்றுள் ஒருபங்கு அளவேனும் இறைவன் பால் மக்கள் அன்பு செலுத்துவாராயின் அவர்கள் தன் பால் வைத்த சிறிய அன்புக்கு மகிழ்ந்து மிகப் பெரிய தேவருலகத்தையே அவர்களுக்குரிய அன்பின் பரிசாக

அருளுதல் இறைவனது பேரருளின் பெருமையாமென்றும் இத்திருப்பதிகத்தில் சுவைபெற விரித்துக் கூறியுள்ளார்.

" அங்கைகொண்டமரர் மலர் மழைபொழிய
அடிச்சிலம் பலம்பவந் தொருநாள்
உங்கைகொண் டடியேன் சென்னி வைத்தென்னை
உய்யக்கொண் டருளினை "

என்றதொடரால் இறைவன் குருவாயெழுந்தருளிவந்து தீக்கைசெய்து தமக்கு நற்பொருளையுபதேசித்த திருவருட் செயலைக் கருவூர்த் தேவர் மனமுருகிப் பாராட்டியுள்ளார். இவ்வாறு இறைவன் திருவருட் பெருமையை எடுத்துக் கூறு முகத்தால் அப்பெருமான்பால் எல்லா மக்களும் பேரன்புடையராயொழுகவேண்டிய இன்றியாமையினையும் இத்திருப்பதிகத்தில் வற்புறுத்தினமை காணலாம்.

'திருவருள்புரிந்து' எனத் தொடங்கும் திருவிசைப்பாப் பதிகம், பாண்டி நாட்டுத்தலங்களுளொன்றாகிய திருப்பூவணத்திற் கோயில் கொண்டருளிய இறைவனைப் போற்றுவது. திருமால் பிரமன் முதலிய தேவர்களாலும் வேதங்களாலும் இன்ன தன்மையனென்றுணர முடியாத இறைவன் அடியார்க்கு எளிவந்தருள்புரியும் எளிமையினை இத் திருப்பதிகத்தில் தமது அநுபவத்தில் வைத்துக் கருவூர்த் தேவர் இனிது விளக்கியுள்ளார்.

" கடுவினைப் பாசக்கடல் கடந்தைவர்
கள்ளரைமெள்ளவே துரந்துன்
அடியிணையிரண்டும் அடையுமா றடைந்தேன்
அருள்செய்வாய் அருள்செயா தொழிவாய் "

என இறைவனை நோக்கி முறையிடும் பகுதி " நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோவிதற்கு நாயகமே" எனத் திருவாதவூரடிகள் கூறிய அன்புரையினை நினைவு படுத்துகின்றது.

'பெரியாவாகருணை' என்ற திருவிசைப்பா, சாட்டியக் குடியென்ற தலத்தில் எழுந்தருளிய இறைவன்மேற் பாடப் பெற்றதாகும். சாட்டியக்குடியென்னும் இவ்வூர் தஞ்சை சில்லாவில் நாகப்பட்டினந் தாலூகாவில் உள்ளது. இங்குள்ள திரு ஏழிருக்கை[1] என்னும் திருக்கோயிலில் எழுந் தருளிய இறைவனை 'ஏழிருக்கையிலிருந்த ஈசன்' என்றும் அப்பெருமானுக்கு இருமுகம், கழல் மூன்று, ஏழு கைத்தலம்

1. 'திரு ஏழிருக்கை' 484-1925-ம் ஆண்டு கல்வெட்டு அறிக்கை.

அமைந்துள்ளன என்றும் கருவூர்த் தேவர் இத்திருப் பதிகத்திற் குறிப்பிடுகின்றார். இத்திருவுருவம், தம்மை வழி படும் அடியார்களின் சுர நோயினைத் தீர்த்தருளும் முறை யில் அமைந்ததென்றும் சாட்டியம் என்பது சுர நோயைக் குறிப்பதென்றும், சுரந் தீர்த்தருளும் பெருமான் எழுந் தருளினமையால் இத்தலம் சாட்டியக்குடியெனப் பெயர் பெற்றதென்றும் கூறுவர்.

'எடுக்கின்ற பாதங்கள் மூன்றதெழுத்தைக்
கடுத்தமுகமிரண் டாறுகண் ணாகப்
படித்தெண்ணு நாவெழு கொம்பொருநாலும்
அடுத்தெழு கண்ணுன தந்தமிலாற்கே. (1030)

என வரும் திருமந்திரம் இத்திருவுருவின் இயல்பினைப் புலப்படுத்துவதாகும். அடியார்களது பேரன்பினால் அருவி போன்று இடையறாது வெளிப்பட்டொழுகும் கண்ணீரே இறைவனுக்குரிய திருமஞ்சன நீரென்றும், அன்பரானவர் பருகும் ஆரமுதமாக இறைவன் இன்பந்தருகின்றா னென்றும் இவ்வாசிரியர் கூறுவன நினைந்து மகிழத்தக்கன.

முதலாம் இராசராச சோழன் கட்டிய தஞ்சை இராசராசேச்சரத் திருக்கோயிலைப் போற்றிக் கருவூர்த் தேவர் பாடிய திருவிசைப்பாத் திருப்பதிகம், நூறாயிரகோடி ஞாயிறு சேர்ந்தாற் போன்று பேரொளி வீசும் சிவபெருமா னது திருமேனியின் பேரழகினையும் பழவடியார் பலர் நெடுங் காலமாகத் தொண்டு செய்து இறைவனைக் காணவேண்டுமென ஆசையால் ஏக்கற்றிருக்கவும் அப் பெருமான் தம்முடைய நெஞ்சத்தினைப் பெருங் கோயிலாகக் கொண்டு எழுந்தருளிய அருமையிலெளிய அருட்டிறத் தையும் தஞ்சை நகரத்தின் சிறப்பினையும் அங்கு எயில்சூழ அமைந்த இராச ராசேச்சரத் திருக்கோயிலில் ஆடல் பாடலில் வல்லமகளிர் நடம் பயிலுந் திறத்தினையும் இனிது விளக்குவதாகும். இதன்கண் "குடைகெழு நிருபர் முடியொடு முடிதேய்ந் துக்கசெஞ் சுடர்ப்படு குவையோங் கிடைகழி மாடத் திஞ்சிசூழ் தஞ்சை" எனவும் "உவரிமாகடலின் ஒலிசெய் மாமறுகில் உறு களிற் றரசினதீட்டம் இவருமால் வரைசெய் இஞ்சி சூழ் தஞ்சை" எனவும் வரும் தொடர்களால் அரசர் பலரும் வந்திறைஞ்ச இராசராச சோழன் தஞ்சையைத் தலை நகராகக்கொண்டு தமிழகத்தையாண்ட திறத்தினைக் கருவூர்த்தேவர் நன்கு புலப்படுத்தியுள்ளார்.

'வெய்ய செஞ்சோதி' என்ற முதற்குறிப்புடைய திருப்பதிகம் திருவிடை மருதில் எழுந்தருளிய இறைவனைப் போற்றியதாகும். இதன்கண் எல்லோரும் கண்ணயர்ந்துறங்கும் நள்ளிருட்பொழுதில் இறைவன் அம்மையப்பனாக எழுந்தருளிக் காட்சி தந்து தம்முள்ளத்திற் புகுந்தருளிய சிவயோக அநுபவநிலையைக் கருவூர்த்தேவர் குறிப்பிட்டுப்போற்றும் முறை படித்து இன்புறத்தக்கதாகும்.

அழகின்கண்ணே ஆழ்ந்த செயற்றிறம் வாய்ந்த சுடப்படாத பசுமண் பாண்டமானது, மழையினது மெல்லிய துளிபட்ட அளவே கரைந்து சிதையும்.[1] அப் பாண்டம் அழலின்கண் ஆழ்ந்து கிடந்து சூளையிற் சுடப்பட்டால் எத்தனையாண்டுகள் தண்ணீருள் அழுந்திக்கிடந்தாலும் கரையாது. அதுபோல, பெண்டிரது முயக்கத்தில் ஆழ்ந்து கிடக்கும் தமது உரனில்லாத நெஞ்சம், மெல்லிய மழைத்துளிபோன்ற சிறிய துன்பங்கள் வந்த அளவிலேயே தன் நிலை கலங்கியழியும் நிலைமையதாயினும், இறைவனது திருவருட்பெருந்தீயில் ஒடுங்கியாழ்தலால் நன்றாகப் பக்குவப்பட்டு உருவாகி உலகியலில் எத்தகைய இடர்கள் வந்தாலும் அவற்றால் நிலை கலங்காத் தன்மையடையும்படி இடைமருதீசன் தம்மை ஆட்கொண்டருளினன் என்பதனை,

எழிலையாழ் செய்கைப் பசுங்கலன் விசும்பின்
இன்றுளிபட நனைந்துருகி
அழலையாழ் புருவம் புனலொடுங்கிடந்தாங்
காதனேன் மாதரார் கலவித்
தொழிலையாழ் நெஞ்சம் இடர்படா வண்ணந்
தூங்கிருள் நடு நல்யாமத்தோர்
மழலையாழ் சிலம்ப வந்தகம் புகுந்தோன்
மருவிடந் திருவிடை மருதே.

எனவரும் அழகிய பாடலிற் கருவூர்த்தேவர் சுவைபெற விரித்துரைத்துள்ளார்.

முதலாம் இராசேந்திரனாகிய கங்கைகொண்ட சோழன், தான் எடுப்பித்த கங்கைகொண்ட சோழேச்சரத் திருக்கோயில் விமானத்தின் தென்கீழ்ப் பகுதியில் தனக்கு அருளாசிரியராய்த் திகழ்ந்த இக்கருவூர்த்தேவரது திரு உருவத்தைக் கல்லோவியமாக அழகுபெறச் செய்தமைத்து

1. 'பெயல்நீர்க்கேற்ற பசுங்கலம், குறுந்-29

உள்ளான். இத்திருவுருவமே கருவூர்த்தேவர்க்கமைந்த திருவுருவங்களுள் மிகப்பழையதெனத் தெரிகிறது. தஞ்சை இராசராசேச் சரத்திருக்கோயிலின் மேலைத்திருச்சுற்றிலும் இவரது திருவுருவம் அமைக்கப்பெற்று அன்பர்களால் வழிபாடு செய்யப்பெறுகின்றது.

இதுகாறுங் கூறியவற்ருல் சாதிகுலம் முதலிய தளைகளைக்களைந்து துறவுமேற்கொண்டு கையில் ஓடேந்திப் பிச்சையேற்றுண்டு இறைவனை இனிய தமிழாற்பாடிப் போற்றுதலையே தமக்குரிய சிறந்த குறிக்கோளாகக் கொண்டு, இராசராசசோழன், கங்கைகொண்ட சோழன் என்னும் முடிவேந்தர்களால் நன்கு மதித்து வழிபடப் பெற்ற அருளாசிரியராகித் திருநெறிய தமிழ் வளர்த்த தவப்பெருஞ்செல்வர் கருவூர்த்தேவரெனக் கண்டோம். இவரைக் குறித்துப் பொருந்தாத கதைகள் சில பிற்காலத் தவராற் புனையப்பட்டன. இவராற்பாடப்பெற்ற திரு விசைப்பாப் பாடல்களை நன்கு பயின்ற அறிஞர்கள் பிற்காலப் பொய்க்கதைகளை ஒரு சிறிதும் நம்பமாட்டார்க ளென்பது திண்ணம்.

ச. பூந்துருத்தி நம்பிகாடநம்பி

இவர், திருவையாற்றுக்கு அண்மையிலுள்ள திருப்பூந் துருத்தியிற் பிறந்தவர். காடன் என்னும் இயற்பெயர் உடையவர். இச்செய்தி ‘பூந்துருத்திக்காடன்’ என இவர் தம்மைக் குறிப்பிடுதலாற் புலனும். ஆடவரிற் சிறந்தோன் என்னும் பொருளைத் தரும் நம்பி என்ற சொல், இவரது இயற்பெயரின் முன்னும்பின்னும் இணைத்து வழங்கப்பெறுதலால், இவர்பாலமைந்த பெருஞ்சிறப்பு இனிது புலனுகும். இவர் பாடிய திருவிசைப்பாப் பதிகங்கள் இரண்டும் முறையே திருவாரூரையும் தில்லைச் சிற்றம்பலத்தையும் போற்றுவனவாக அமைந்துள்ளன. அவற்றுள் திருவாரூர்த் திருவிசைப்பாவில் இரண்டு திருப் பாடல்களே காணப்படுகின்றன. திருவாரூர் ஆதியாய் விளங்கும் வீதிவிடங்கப்பெருமான் பவனி போந்து நடங்குலாவிய சிறப்பினை இப்பாடல்கள் விரித்து உரைக்கின்றன.

பத்தியா யுணர்வோர் அருளைவாய்மடுத்துப்
பருகுதோ றமுதமொத் தவர்க்கே
தித்தியா விருக்குந் தேவர்கா ளிவர்தந்
திருவுரு விருந்தவா பாரீர்
சத்தியாய்ச் சிவமா யுலகெலாம் படைத்த
தனி முழுமுதலுமா யதற்கோர்
வித்துமா யாரூ ராதியாய் வீதி
விடங்கராய் நடங்குலாவினரே.

என்ற பாடல் படிக்குந்தோறுஞ் சுவைதருவதாய்ப் பூந்துருத்திநம்பிகாடநம்பி பெற்ற சிவாநுபவப் பயனைப் புலப்படுத்துகின்றது.

இவர் பாடிய கோயிற்றிருவிசைப்பா சாளரபாணி என்ற பண்ணுக்குரியதாக இசையமைக்கப்பெற்றது. தில்லையம்பலம் எல்லாம்வல்ல சிவபெருமான் ஆடல்புரியும் நாடக அரங்காக விளங்கிய பேரழகினை விரித்துரைப்பது இத்திருப்பதிகம். இதன்கண் 2-ம் பாடல் முதல் 5-ம் பாடல் வரையுள்ள நான்கு திருப்பாடல்களும் கண்ணப்பர், கணம்புல்லர், திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சேரமான் பெருமாள், நம்பியாரூரர் ஆகிய பெருமக்களுக்குத் தில்லையம்பலவன் உயர்ந்த வீடுபேருகிய பேரின்பத்தை வழங்கித் தில்லைச்சிற்றம்பலத்தில் குடிவாழ்க்கை கொண்டு விளங்கும் அருட்பண்பினை உளமுருகிப் போற்றுவனவாக அமைந்துள்ளன. இத் திருப்பதிகங்கள் இரண்டும் கண்டராதித்தர் திருவிசைப்பாவுக்கு முன் வரிசைப்படுத்தப் பட்டிருத்தலால் நம்பிகாடநம்பிகள் வாழ்ந்த காலம் கண்டராதித்த சோழரது ஆட்சிக்காலமாகிய கி.பி. பத்தாம் நூற்ருண்டின் இடைப்பகுதியெனக்கொள்ளுதல் பொருத்த மாகும்.

இனி, முதல் இராசாதிராசனது 32-ஆம் ஆட்சி ஆண்டில் (கி. பி. 1050) பொறிக்கப்பட்ட திருவையாற்றுக் கல்வெட்டொன்றில் "ஆத்திரேய கோத்திரத்து நம்பிகாட நம்பி" என்ற அர்ச்சகர் பெயர் காணப்படுதலாலும் இக் கல்வெட்டுத் திருப்பூந்துருத்தியையடுத்த திருவையாற்றுக் கோயிலிற் பொறிக்கப்பட்டிருத்தலாலும் இக்கல்வெட்டில் குறிக்கப்பட்ட நம்பிகாடநம்பியே திருவிசைப்பாப்பாடியவர் என்று நினைக்க இடமுண்டென்பர்.[1] திருவிசைப்பா

1. திரு. மா. இராசமாணிக்கம் பிள்ளை அவர்கள் எழுதிய பெரிய புராண ஆராய்ச்சி. பக். 72.

ஆசிரியர்களைப் பற்றியும் அவர்கள் பாடிய பதிகவகை பண் வகை பற்றியும் கூறும் பழைய பாடல்களில் ‘நம்பிகாடவர் கோன்’, ‘வீறிற் சிறந்த காடவர்’, ‘காடவர் கோன் என இவ்வாசிரியர் பல்லவர் குலத்தவராகப் பேசப் படுதலாலும் திருவிசைப்பா ஆசிரியர்களில் கங்கை கொண்ட சோழன் காலத்திற்குப் பிற்பட்டிருந்தவர் ஒருவருமில்லையெனத் தெரிதலாலும் முதல் இராசாதிராசன் காலத்துக் கல்வெட்டில் குறிக்கப்பட்ட நம்பிகாடநம்பி என்பார் திருவிசைப்பா ஆசிரியராகிய பூந்துருத்தி நம்பிகாடநம்பியின் பெயரைப் புனைந்து வாழ்ந்த மற்றொருவரென்று கொள்ளுதல் ஏற்புடையதாகும்.

சுந்தரர் வெள்ளானை மீதும் சேரமான் பெருமாள் குதிரைமீதும் அமர்ந்து திருக்கயிலாயத்தை அடைந் தார்கள் என்று திருத்தொண்டர் திருவந்தாதியில் நம்பி யாண்டார்நம்பிகள் கூறியிருத்தலையும் நம்பியாண்டார் நம்பிகள் கூறியபடியே தஞ்சைப்பெரிய கோயிலில் ஓவியம் எழுதப்பெற்றிருத்தலையும் நோக்காது, சுந்தரரும் சேரமானும் வெள்ளையானையின் மீது அமர்ந்து திருக் கயிலாயத்தை அடைந்ததாக நம்பிகாடநம்பிகள் தில்லைத் திருவிசைப்பாவில் பாடியுள்ளாரென்றும், இவர் கூறுமாறு சேரமான் யானைமீது திருக்கயிலை செல்வதாக அமைந்த ஓவியம் இரண்டாம் இராசராசன் கட்டிய இராசராசேச்சுர மாகிய தாராசுரத்திருக்கோயிலில் வரையப்பட்டுள்ளது என்றும், அவ்வோவியத்தை எண்ணியே நம்பிகாட நம்பிகளும் சேரமான் வெள்ளானைமீது சென்றதாகப் பாடியுள்ளார் என்றும், எனவே நம்பிகாடநம்பி என்பார் இரண்டாம் இராசராச சோழன் காலத்திலோ அன்றி அவன் காலத்திற்குப் பின்னரோ வாழ்ந்திருத்தல் வேண்டும் என்றும் கருதுவாருமுளர்[1]

‘களையாவுடலோடு சேரமான் ஆரூரன்
விளையா மதமாறா வெள்ளானை மேல்கொள்ள
முளையா மதிசூடி மூவாயிரவரொடும்
அளையா விளையாடும் அம்பல நின்னாடரங்கே’

எனவரும் இத்திருவிசைப்பாவில் வெள்ளானை மேல் கொள்ளுதலாகிய வினைக்கு ஆரூரன் எழுவாயாகவும் சேரமான் என்பது அவ்வாரூரனுக்கு அடைமொழியாய்

1. பெரிய புராண ஆராய்ச்சி. பக். 73.

நின்று சேரமானோடு கூடிய ஆரூரன் எனச் சிறப்பிக்கும் விசேடணமாகவும் நிற்றலால் சேரமான் வெள்ளானை மேற்சென்றார் என்றல் இவ்வாசிரியர் கருத்தன்றென்பது விளங்கும். கலையாவுடலோடு செல்லுதல் சேரமானுக்கும் ஆரூரனுக்கும் பொதுவாகிய நிகழ்ச்சியென்றும் வெள்ளானைமேல் செல்லுதல் ஆரூரனுக்கே உரிய சிறப்பு உடைய நிகழ்ச்சி என்றும் கொள்வதே நம்பிகாடநம்பியின் கருத்துக்கு ஏற்புடையதாகும்.

ரு. கண்டராதித்தர்

தில்லைச்சிற்றம்பலத்தில் திருநடம் புரிந்தருளும் கூத்தப்பெருமான் திருவடிகளிற் பெரிதும் ஈடுபாடு உடையராய் "மின்னாருருவ மேல் விளங்க" என்ற முதற் குறிப்புடைய திருவிசைப்பாத் திருப்பதிகத்தை அருளிச் செய்தவர் கண்டராதித்தர் என்னும் ஆசிரியராவர். இவர் சோழர் குடியிற் பிறந்து முடிவேந்தராய் ஆட்சி புரிந்தவர். இச்செய்தி

சீரான்மல்கு தில்லைச்செம்பொன் அம்பலத்தாடி தன்னைக்
காரார் சோலைக் கோழி வேந்தன் தஞ்சையர்கோன்கலந்த
ஆராவின்சொற் கண்டராதித்தன் அருந்தமிழ்மாலை

எனவரும் இப்பதிகத் திருக்கடைக்காப்பினாற் புலனாம். இதன்கண் 'கோழிவேந்தன், தஞ்சையர்கோன்' எனத் தம்மைப்பற்றி கூறுங் குறிப்பினால் இவர் தஞ்சையைத் தலைநகராகக்கொண்டு சோழநாட்டை ஆட்சிபுரிந்த முடி வேந்தர் என்பது இனிது புலனாதல் காண்க.

கண்டர் என்பது சோழ மன்னர்களுக்குரிய பொதுப் பெயர். ஆதித்தன் என்பது இவரது இயற்பெயராகும். மதுரையும் ஈழமுங்கொண்ட கோப்பரகேசரிவன்மராகிய முதற் பராந்தக சோழரது இரண்டாம் புதல்வராகக் கண்டராதித்தர் பிறந்தருளினார். இவர் இராசகேசரி என்ற பட்டத்துடன் கி. பி. 950 முதல் 957 வரை சோழ நாட்டை ஆட்சிபுரிந்துள்ளார். திருச்சிராப்பள்ளி ஜில்லா வில் திருமழபாடிக்கு மேற்கே ஒருகல் தொலைவிலுள்ள கண்டராதித்த சதுர்வேதிமங்கலம் என்ற ஊர் இவரால் புதுவதாக அமைக்கப்பெற்றதாகும்.[1] இவர் தம் பெயரால்

1. பிற்காலச் சோழர் சரித்திரம் பகுதி 1. பக்கம் 60.

கண்டராதித்தப் பேரேரி என்ற நீர்நிலை யொன்றை அமைத்த செய்தி தென்னார்க்காடு ஜில்லா உலகபுரத்துக் கல்வெட்டாற் புலனாகிறது.[1]

கண்டராதித்தர்க்கு வீரநாரணி, செம்பியன் மாதேவி என இரு மனைவியர் இருந்தனர். இவர்களுள் முதல் மனைவியாய் விளங்கிய வீரநாரணி என்பார் கண்டராதித்தர் முடிசூட்டப் பெறுதற்கு முன்னரே இறந்தனர். இவர் முடிசூடியபின் பட்டத்தரசியாகத் திகழ்ந்தவர் இரண்டாம் மனைவியாகிய செம்பியன்மாதேவியாரேயாவர். "மழவரையர் மகளார் ஸ்ரீ கண்ட ராதித்தப் பெருமாள் தேவியார் செம்பியன் மாதேவியார்"[2] எனவரும் கல்வெட்டுப் பகுதியால் இவ்வம்மையார் மழவர் குடும்பத்திற் பிறந்தவரென்று தெரிகின்றது. கண்ட ராதித்தர்க்கு இவ்வம்மையார்பாற் பிறந்த புதல்வர் ஸ்ரீ மதுராந்தக தேவரான ஸ்ரீ உத்தம சோழரென்பார்.

கண்ட ராதித்தர் தில்லைக் கூத்தப்பிரானிடத்து நிறைந்த பேரன்புடையவர். செந்தமிழ்ப் புலமை வாய்ந்தவர். இவ்வேந்தர் பெருமான் தில்லையம்பலவனைப் போற்றிப் பரவிய திருவிசைப்பாத் திருப்பதிகம் படிப்போருள்ளத்தை நெகிழ்வித்துத் தில்லையம்பலவனது ஆடல் கண்டின்புறும் பெருவேட்கையைத் தோற்றுவிப்பதாகும். இதன்கண் பத்துப் பாடல்கள் உள்ளன. மின்னற் கொடிகள் மேலே விளங்க வெண்கொடி கட்டிய மாளிகைகள் சூழ்ந்து நிற்கப் பொன்மலையொன்று வந்து நின்றாற்போன்று தில்லையிற் பொன்னம்பலம் விளங்குவதும், தில்லை வாழந்தணர்களாகிய மூவாயிரவர் நான்மறைகளோதி முத்தீவளர்த்துக் கூத்தப் பெருமானுக்கு வழிபாடு செய்வதும், திருமால் தில்லையம்பல முன்றிலிலே கூத்தப் பிரானது திருவருளை வேண்டி வரங்கிடப்பதும், பதஞ்சலி முனிவர் வேண்டுகோட்கிணங்கி இறைவன் என்றும் தில்லையிற் கூத்தியற்றுவதும் ஆகிய செய்திகள் இத்திருப் பதிகத்திற் கூறப்பட்டுள்ளன. பாண்டி நாட்டையும் ஈழ நாட்டையும் வெற்றி கொண்ட பெரு வீரமும் சிறந்த சிவபத்திச் செல்வமும் வாய்க்கப்பெற்ற முதற் பராந்தக

1. பிற்காலச் சோழர் சரித்திரம் பகுதி. 1. பக் 60.

2. S. I. I., VOL, III. No. 141.

சோழனாகிய தம் தந்தை தில்லைச் சிற்றம்பலத்திற்குப் பொன்வேய்ந்து பொன்னம்பலமாக்கிய திருப்பணியை,

"வெங்கோல் வேந்தன் தென்னாடும் ஈழமுங்கொண்டதிறற்
செகோற் சோழன் கோழிவேந்தன் செம்பியன்
பொன்னணிந்த
அங்கோல் வளையார் பாடியாடும் அணிதில்லையம்பலம்"

என்ற தொடராற் குறிப்பிட்டுப் போற்றியுள்ளமை இவர் தம் தந்தையின்பால் வைத்த நன்மதிப்பையும் தில்லையம்பலவன் திருப்பணியில் இவர்க்குள்ள ஈடுபாட்டினையும் நன்கு விளக்குவதாகும்.

சிதம்பரம் தாலுகா உடையார்குடியிற் காணப்படும் கல்வெட்டொன்று இவரை 'மேற்கெழுந்தருளியதேவர்' எனக் குறிப்பிடுகின்றது.[1] பங்களூர் ஜில்லாவிற் காணப்படும் மற்றொரு கல்வெட்டு இவரைச் 'சிவஞான கண்ட ராதித்தர்' எனச் சிறப்பித்துப் போற்றுகின்றது.[2] இவ்வேந்தரது படைத்தலைவர்களுள் ஒருவன் கங்கநாட்டில் மழவூர்க் கோயிலில் கண்ட ராதித்தவிடங்கரையும் உமாபரமேசுவரியையும் எழுந்தருளுவித்து வழிபாட்டிற்கு நிபந்தமளித்து உள்ளான். இக்குறிப்புக்களை நுணுகி நோக்குங்கால் கண்ட ராதித்தராகிய இவ்வேந்தர் சிவதலங்களை வழிபட வேண்டிச் சோழ நாட்டிற்கு மேற்கே சென்றிருத்தல் வேண்டுமென்றும், மைசூர் நாட்டில் நந்தியென்னும் ஊரிலுள்ள திருக்கோயிலில் சிவயோக நிலையிலமர்ந்திருக்கும் சோழமன்னர் உருவமும்[3] கோனேரிராசபுரத்தில் செம்பியன் மாதேவியார் எழுந்தருளுவித்த கண்டராதித்த தேவர் திருவுருவமும் ஒத்திருத்தலும் இதற்குச் சான்றுமென்றும் அறிஞர் தி. வை. சதாசிவ பண்டாரத்தார் அவர்கள் ஆராய்ந்து எழுதியுள்ளார்கள்.[4]

கண்ட ராதித்த சோழர் கி. பி. 957-ல் இறைவன் திருவடி நீழலெய்தினார். இவருடைய மனைவியார் செம்பியன் மாதேவியார் சிவஞானியாக விளங்கிய தம் கணவரை நினைவு கூர்ந்து போற்றும் நிலையிற் சிவபெருமானுக்குப் பலவகைத்திருப்பணிகளைப் புரிந்தமையால் மாதேவடிகள்

1. Ins. 540 of 1920.
2. Ep. Car., Vol. IX Chennapatinam. No. 92.
3. Portrait sculpture of South India. P. 29.
4. பிற்காலச் சோழர் சரித்திரம் பகுதி. 1. பக் 62–63.

எனப் போற்றப்பெறும் பெருஞ் சிறப்பினை யெய்தியுள்ளார். இவ்வம்மையார் கோனேரிராசபுரமென வழங்கும் திருநல்லத்திலுள்ள திருக்கோயிலைத் தம் கணவர் பெயராற் கண்டராதித்தம் என்ற கற்றளியாகப் புதுப்பித்துக் கண்டராதித்தராகிய தம் கணவர் சிவபெருமானை வழிபடும் நிலையில் அத்திருக்கோயிலில் அவர்க்கொரு படிமமும் அமைத்துள்ளார்கள். இச்செய்தி, "ஸ்வஸ்தி ஸ்ரீ கண்டராதித்த தேவர் தேவியார் மாதேவடிகளான ஸ்ரீ செம்பியன் மாதேவியார் தம்முடைய திருமகனார் ஸ்ரீ மதுராந்தக தேவரான ஸ்ரீ உத்தம சோழர் திரு ராஜ்யஞ் செய்தருளா நிற்க தம்முடையார் ஸ்ரீ கண்டராதித்ததேவர் திருநாமத்தால் திருநல்லமுடையார்க்குத் திருக்கற்றளி எழுந்தருளுவித்து இத்திருக்கற்றளியிலேய் திருநல்லமுடையாரைத் திருவடி தொழுகின்றாராக எழுத்தருளுவித்த ஸ்ரீ கண்டராதித்ததேவர் இவர்"[1] என அப் படிமத்தின்கீழ்ப் பொறிக்கப்பட்டிருத்தலால் நன்குணரப்படும்.

சிவஞான கண்டராதித்தராகிய இவ்வேந்தர் சைவ சமயத்திற் பேரீடுபாடுடையராயினும் நாடாளும் வேந்தர் என்ற முறைமையில் தம்நாட்டுக் குடிமக்கள் மேற்கொண்டொழுகிய வைணவம் சமணம் முதலிய பிற சமயங்களையும் இகழாது நன்கு மதித்து ஆதரித்துள்ளார். தம் பெயரால் அமைத்த கண்ட ராதித்த சதுர்வேதி மங்கலத்தில் கண்டராதித்த விண்ணகரம்[2] எனப் பெயரிய திருமால் கோயிலை இவர் கட்டியிருத்தலும், தென்னார்க்காடு ஜில்லாவிலுள்ள பள்ளிச்சந்தல் என்ற ஊரிற் கண்டராதித்தப் பெரும்பள்ளி[3] யென இவர் பெயராற் சமணப்பள்ளி யொன்று வழங்கப்பெறுதலும் இவரது சமயப் பொது நோக்கினைத் தெளிவாகப் புலப்படுத்துவனவாம்.

இனி, இத்திருவிசைப்பா ஆசிரியராகிய கண்டராதித்தரென்பார், முதல் இராசராசன் ஆட்சியில் திருக்கோயில்களை மேற்பார்க்கும் அதிகாரியாக விளங்கியவரும் உத்தமசோழன் புதல்வருமாகிய இரண்டாங் கண்டராதித்தரெனக் கருதுவர் சிலர்[4] திருவிசைப்பாப் பாடிய

1. S. I. I., Vol, III. No. 146.
2. Ins. 78. of 1920.
3. Ins. 448 of 1938.
4. சோழ வமிசச் சரித்திரச் சுருக்கம். பக் - 16.

கண்ட ராதித்தர் தாம் பாடிய பதிகத்தின் திருக்கடைக் காப்பில் சோழநாட்டை ஆட்சிபுரியும் முடிவேந்தராகத் தம்மைக் குறிப்பிட்டுள்ளார். உத்தமசோழன் புதல்வராகிய இரண்டாங் கண்ட ராதித்தர் இளவரசராகக்கூட இருந்த தில்லை. முதற் கண்ட ராதித்தர்க்கு மேற்கெழுந்தருளிய தேவர் எனவும் சிவஞான கண்டராதித்த ரெனவும் வழங்கும் பெயர்கள் சிவஞானமுடையவராய்த் திருவிசைப் பாப் பாடிய ஆசிரியர் அவரே யென்பதனை வலியுறுத்து கின்றன. இங்ஙனம் போற்றப் பெறுஞ்சிறப்பு இரண்டாங் கண்டராதித்தர்க்குரியதாக வழங்கினமைக்கு எத்தகைய சான்றுமில்லை. ஆகவே முதற் பராந்தக சோழன் தில்லை அம்பலத்திற்குப் பொன்வேய்ந்த திருத்தொண்டினைப் போற்றும் திருவிசைப்பாவைப் பாடிய ஆசிரியர் அவ் வேந்தனுடைய இரண்டாம் புதல்வராகிய முதற் கண்ட ராதித்த சோழரே யாவரென்பது நன்கு தெளியப்படும்.

௬. வேணாட்டடிகள்

வேணாடென்பது, தென் திருவாங்கூர்ப் பகுதிக்குரிய பழம் பெயராகும். செந்தமிழ்சேர் பன்னிரு நாடுகளுள் இவ் வேணாடும் ஒன்று. இந்நிலப் பகுதியை ஆண்ட அரசர்கள் வேணாட்டடிகளெனக் கல்வெட்டுக்களிற் குறிக் கப்பட்டுள்ளனர்.[1] எனவே திருவிசைப்பா ஆசிரியருளொரு வராகிய வேணாட்டடிகளென்பார் தென்திருவாங்கூர்ப் பகுதியிலுள்ள வேணாட்டில் அரசர் குடும்பத்திற் பிறந்து இறைவனை இன்னிசைத் தமிழாற் பரவிப் போற்றிய குறு நில மன்னரெனக் கொள்ளுதல் பொருந்தும்.

ஒன்பதாந் திருமுறையில் வேணாட்டடிகள் பாடியதாக ஒரு திருப்பதிகமே யுளது. தில்லைச் சிற்றம்பலவனைப் போற்றுவதாக அமைந்த இத்திருப் பதிகத்திற் பத்துப் பாடல்கள் உள்ளன. தில்லையில் நடம் பயிலும் கூத்தப் பெருமானோடு உரையாடும் முறையிலமைந்த இத்திருப் பதிகம், பழமொழிகள் பலவற்றைத் தன்பாற்கொண்டு விளங்குகின்றது. "வேப்பிலையும் வாழைக் கச்சையும் கசப்புடையனவாயினும் அவற்றை உலகத்தார் விரும்பி

1. திருவாங்கூர் கல்வெட்டுத் தொகுதி VI. 124-ம் கல்வெட்டில் 'வேணாட்டடிகளையும்' எனக் குறிக்கப்பெற்றுள்ளமை காண்க.

யேற்றுக் கறிக்குப் பயன்படுத்திக்கொள்வர். அதுபோல வெறுப்பனவே செய்யும் என் சிறுமையையும் பொறுத்து ஆட்கொள்ளுதல் பெரியோனாகிய உனது கடமையாகும்" என இவ்வாசிரியர் கூத்தப்பெருமானை வேண்டிப் போற்றும் முறை உள்ளத்தை யுருக்குகின்றது.

'தம்பானை சாயப்பற்றார்' என்பது ஒரு பழமொழி. தமக்குரிய சுற்றத்தாரது உணவுக்கு யாரும் இடையூறு செய்யமாட்டார்கள் என்பது இப்பழமொழியின் கருத்தாகும். எங்கள் பெருமானாகிய நீ வழியடியேனாகிய எனது பணியை உவந்தேற்றுக்கொள்ளாது புறக்கணித்தமையால் அப்பழமொழியும் என்னளவிற் பொய்யாய்ப் போயிற்று என்பார்,

"தம்பானை சாயப்பற்றாரென்னு முதுசொல்லும்
எம்போல்வார்க் கில்லாமை என்னளவே யறிந்தொழிந்தேன்"

என்றார். நிறைகுளம் தன் கரைக்கீழ் நின்ற கொம்புக்கு நீர் சுரத்தலியல்பு. அதுபோல் நின்கீழ்ப் பணிபுரியும் அடியோமை நின்னருளால் வளர்த்தல் வேண்டுமென்பார்,

"பொசியாதோ கீழ்க்கொம்பு நிறைகுளமென்றது போலத்
திசைநோக்கிப் பேழ்கணித்துச் சிவபெருமானே வெனினும்
இசையானலென் றிறத்தும் எனையுடையாள் உரையாடாள்
நசையானேன் திருத்தில்லை நடம்பயிலும் நம்பானே"

எனக் குறையிரந்து வேண்டுகின்றார்.

"இடுவதுபுல் ஓரெருதுக்கு ஒன்றினுக்கு வையிடுதல்"

என்பது, இணையொத்துத் தொழில் செய்யும் இரண்டெருதுகளுள் ஒன்றிற்குப் புல்லிடுவதும் மற்றொன்றுக்கு வைக்கோலிடுவதும் நடுவுநிலைமை ஆகாமைபோல, ஒருவரது நடுவு நிலைமையற்ற செயலைக் குறித்து வழங்கும் பழமொழியாகும். எல்லா வுயிர்களையும் அடிமையாகவுடைய இறைவன் அகத்திய முனிவர்க்கு ஞான நூல்களை யறிவுறுத்துவதும் என்போல்வாரைப் புறக்கணிப்பதும் இப்பழமொழிக்குரிய செயலாகாதோ என வினவுவது போன்று,

படுமதமு மிடவயிறுமுடைய களிறுடையபிரான்
அடியறிய வுணர்த்துவதும் அகத்தியனுக் கோத்தன்றே
இடுவது புல்லோரெருதுக் கொன்றினுக்கு வையிடுதல்
நடுவிதுவோ திருத்தில்லை நடம்பயிலும் நம்பானே.

எனப் பரிந்து வேண்டும் குறிப்பு படிப்போருள்ளத்தை யுருக்குவதாகும்.

நின் திருவருளுண்மையை ஆராய்ந்து தெளியாத புறச் சமயத்தவர் கண்முன்பு நின் திருவருளை நம்பிய அடியேனை நோய்கள் பெரிதும் வருத்துதலால் அவ்வருத்தத்தைக் கண்ட புறச்சமயத்தவர்கள், 'தொண்டனுகிய இவனை இவனுற் போற்றப்பெறும் இறைவனே இகழ்கின்ருன்' என்று நின்னைப் பழிதூற்றுதற்கு நாயேனைக் கருவியாக வைத்துவிட்டாய் என்பதுபட,

"ஆயாத சமயங்க ளவரவர்கண் முன்பென்னை
நோயோடு பிணிநலிய விருக்கின்ற வதனுலே
பேயாவித் தொழும்பனைத்தம் பிரான்இகழு மென்பித்தாய்
நாயேனைத் திருத்தில்லை நடம்பயிலு நம்பானே"

என இவ்வாசிரியர் இறைவனை நோக்கி முறையிடும் நிலையி லமைந்த பாடல், பிணி முதலிய துன்பங்களுக்கு உளம் வருந்து மியல்பு இவர்பால் இல்லை யென்பதையும், இறைவன் திருவருளில் நம்பிக்கையில்லாதார் சிலர் அடியார்களது உடற் பிணியை எடுத்துக்காட்டி இறைவ னுண்மையை மறுத்தற்கு இடனுயிற்றென்ற ஒரு நிலைக்கே இவர் வருந்துகின்ருரென்பதையும் புலப்படுத்து வதாகும்.

தில்லையில் நடம் பயிலும் பெருமானே, பத்தரடித் தொண்டனுகிய இவன் இன்னிசைத் தமிழ்ப்பாடல்களைப் பாடி என்னை இடையீடின்றி யழைக்கின்ருன் எனக்கருதி எனக்கு அருள் புரிந்தனையாயின் நின் செயல் இருவர்க்கும் நன்ருய் முடியும். அங்ஙனம் நீ அடியேற்கு அருளா தொழிந்தால் நின்னை யடைதற்குத் தடையாயுள்ள இவ் வுடலைத் துறந்து இறந்தேனும் நின்னைக் காண்பதென்று முடிவு செய்துவிட்டேன். இம்முடிபினை இனி நின்னுல் தடுத்தலியலாது என்பதுபட,

"பாவார்ந்த தமிழ்மாலை பத்தரடித் தொண்டனெடுத்
தோவாதே யழைக்கின்ரு னென்றருளின் நன்றுமிகத்
தேவேதென் றிருத்தில்லைக் கூத்தாடீ நாயடியேன்
சாவாயும் நினைக்காண்ட லினியுனக்குத் தடுப்பரிதே"

என இவ்வாசிரியர் இறைவனை நோக்கிக் கூறும் அறிவிப்பு, 'மூவாமுழுப்பழி மூடுங்கண்டாய்' எனவருந் திருநாவுக் கரசர் வாய்மொழியை நினைவுபடுத்துவதாய் இவரது உள்ளத்துறுதியைப் புலப்படுத்தல் காணலாம்.

எ. திருவாலியமுதனார்

திருவாலி நாடென்பது, சோழநாட்டிற் காவிரிக்கு வட கரையிலுள்ள உள்நாடுகளுள் ஒன்று. இந்நாட்டின் தலைநகர் திருவாலியென்பதாகும். இது சீகாழிக்கு 3 கல் தொலைவில் உள்ளது. திருவாலி யென்னும் இவ்வூரிற் பிறந்து அமுதனார் என்னும் பெயர் பெற்றமையால் இவர் திருவாலியமுதனார் என வழங்கப்பெற்றனர். இவர் அந்தணர் மரபினர். நான்கு வேதங்களையும் நன்கு பயின்றவர். சோழநாட்டிலுள்ள வளமார்ந்த ஊராகிய மயிலாடு துறையில் வாழ்ந்தவர். இச் செய்தி, “வரைசெய் மாமதில் மயிலையர் மன்னவன் மறைவல திருவாலி” என்றும், “தூநான்மறையான் அமுதவாலி” என்றும், “அறைசெந்நெல்வான் கரும்பின் அணியாலைகள் சூழ் மயிலை, மறைவலவாலி” என்றும் இவர் தம்மைப்பற்றிக் கூறுந் தொடர்களால் இனிது புலனாகும். மயிலை யென்பது மயிலாடுதுறை[1] யென்பதன் மரூஉ. இவர் வைணவராகத் தோன்றிப் பின்பு சிவபக்தியுடையவராகத் திகழ்ந்தாரென்ற செய்தி செவிவாயிலாகக் கேட்கப்படுவ தென்பர் சிலர். இதனைப் புலப்படுத்தற்குரிய எத்தகைய குறிப்பும் இவர் பாடல்களில் இல்லாமையால் இதனை ஒருதலையாகத் துணிதற்கில்லை.

திருவாலியமுதனார் பாடியனவாக ஒன்பதாந் திரு முறையில் நான்கு பதிகங்கள் உள்ளன. இவை யாவும் கோயிலென வழங்கும் தில்லையம்பலத்தைப் போற்றிப் பாடப்பெற்றனவாகும். இவற்றுள் ‘மையன்மாதொரு கூறன்’ என்ற முதற் குறிப்புடைய திருப்பதிகம், தில்லைச் சிற்றம்பலப் பெருமானுடைய திருவடிமுதல் பிறைமுடி யீறாக அமைந்த திருக்கோல முழுவதும் என் சிந்தையுள் இடம் பெற்று நிலைத்தது எனப் பாதாதி கேசமாக இவ்வா சிரியராற் பாடப் பெற்றுள்ளது.

‘பவளமால்வரை’ என்ற முதற் குறிப்புடைய பதிகம், தில்லையம்பலக் கூத்தனைக் காதலித்த இளமகளொருத்தி யின் கூற்றாக அமைந்துளது. இறைவனை நினைந்துருகும் தலைவி,

1. மயிலாடுதுறை இக்காலத்தில் மாயூரம் என வழங்குகின்றது.

" தேய்ந்து மெய்வெளுத் தகம்வளைந் தரவினை யஞ்சித்தா
னிருந்தேயும்
காய்ந்து வந்துவந் தென்றனை நலிசெய்து கதிர்நிலா
எரிதூவும் "

எனத் தனக்குச் சந்திரன் செய்யும் தீங்கினை யெடுத்துரைக்கும் பகுதி, தமது உடல்நலக் கேட்டையும் இகழ்ச்சியையும் பொருட்படுத்தாது பிறர்க்குத் தீங்கு செய்வதனையே தமது கடமையெனக் கொள்ளும் கீழோரது இயல்பினைச் சுவை பெற விளக்குகின்றது.

'அல்லாய்ப் பகலாய்' எனத் தொடங்கும் பதிகம், அருவாயுருவாய் ஆராவமுதமாய்த் திகழும் இறைவன் பதஞ்சலி முனிவர் பரவத் தென்னன் தமிழும் இசையுங் கலந்த தில்லைச் சிற்றம்பலத்திற் பல்லாயிரவர் காண வெளிப்பட்டு, நந்தி முழவங் கொட்டவும் ஆரூர் நம்பி இசை பாடவும் உமையம்மையார் கண்களிக்கத் திருநடஞ் செய்தருளும் அழகிய தோற்றத்தை உளங்கொள விரித்துரைக்கின்றது. இங்கே ஆரூர் நம்பியென்றது நம்பியாரூரராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளை. இப்பதிகத்தின் ஐந்தாம் பாடலில் 'வாமத்தெழிலார் எடுத்த பாதம் மழலைச் சிலம்பார்க்க' எனவருந் தொடர் கூத்தப்பெருமான் எழில் மிகத் தூக்கிய திருவடியாகிய இடப்பாதம் உமையம்மையார்க்குரியதாதலின் அதனை எழிலார் எடுத்த பாதம் என்றும் அதன்மேல் அணியப் பெற்ற மென்சிலம்பினை மழலைச் சிலம்பென்றும் இவ்வாசிரியர் போற்றியுள்ளார். இச்சொற்றொடர்களின் அழகில் ஈடுபட்ட மக்கள் இத்தொடர்களைத் தம் மக்கட்குரிய பெயராக இட்டு வழங்கியுள்ளார்கள். முதலாம் இராசராச சோழனால் தஞ்சைப் பெரிய கோயிலில் ஆடல் பாடல் நிகழ்த்துதற்கென நியமிக்கப்பெற்ற தளிச்சேரிப் பெண்டுகளிற் சிலர் எடுத்த பாதம், மழலைச் சிலம்பு என இத்திருவிசைப்பாத் தொடர்களைத் தமக்குரிய பெயராகப் புனைந்து கொண்டுள்ளார்கள். இக்குறிப்பினை நோக்குங்கால் இத்தொடர்களை முதன்முதல் வழங்கிய திருவாலிய முதனார் முதல் இராசராசன் காலத்திலோ அன்றிச் சிறிது முன்னரோ இவ்வுலகில் வாழ்ந்தவரென்பது நன்கு பெறப்படும்.

இறைவனைக் காதலித்த இளையாளொருத்தியின் கூற்றாக அருளிச் செய்யப்பட்டது 'கோல மலர் நெடுங்கண்'

என்ற பதிகமாகும். தில்லைச்சிற்றம்பலவனாகிய எம்பெருமானைக் காண்பது என்று கொலோ எனவும் அவன் மலர்ப் பாதங்களைச் சேர்ந்தின்புறு நாள் எந்நாளோ எனவும் தன் உயிர்க்குயிராகிய இறைவனை நினைந்து தலைமகள் கூறும் பரிவுரைகள் அவளது பேரன்பின் திறத்தை நன்கு புலப் படுத்துவனவாம்.

அ. புருடோத்தமநம்பி

"மாசிலா மறை பல ஓது நாவன் வண்புருடோத்தமன்" என்று இவ்வாசிரியர் தம்மைப்பற்றிக் கூறுதலால், இவர்க்கு பெற்றோர் இட்ட பெயர் புருடோத்தமன் என்பதும், இவர் நான்மறைகளைப் பிழையற ஓதும் நாவினராகிய வேதியர் குலத்திற் பிறந்தவரென்பதும் நன்கு தெளியப்படும். இவர் வைணவ சமயத்திற் பிறந்து சிவ பத்தராயினரென்பர் சிலர். இங்ஙனங் கருதுதற்கு இவரது பெயரொன்றைத் தவிரப் பிறிதொரு சான்றுமில்லாமையால் இதனை ஒருதலையாகத் துணிதல் பொருந்தாது. இவர் பாடியனவாக ஒன்பதாந் திருமுறையில் இரண்டு பதிகங்கள் உள்ளன. தில்லைச் சிற்றம்பலமாகிய கோயிலைப் போற்றுவனவாக அமைந்த இத்திருப்பதிகங்களிரண்டும் அந்தாதித் தொடையமையப் பாடப் பெற்றுள்ளன.

'வாரணி நறுமலர்' என்ற முதற் குறிப்புடைய பதிகம், சிற்றம்பலமேய செல்வனைக் காதலித்த மகளிர் அப்பெருமானை நோக்கி அகநெகிழ்ந்துரையாடுவதாக அமைந் துளது. தில்லைச் சிற்றம்பலத் தெங்கள் செல்வன்பால் யான் கொண்ட பெருங்காதல் எனது சிறிய உயிராற் பொறுக்கத்தக்க தன்றென்பாள், 'ஆவியின் பரமன்று என் ஆதரவே' எனத் தலைவி நைந்து இரங்குகின்றாள். இக் கருத்து "சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கியாங்கு இவள் உயிர் தவச் சிறிது காமமோ பெரிதே" எனவரும் குறுந் தொகைச் செய்யுட் பொருளைத் தழுவியதாகும்.

'தேவர்களாகிய வலிய பழிகாரர்கள் முன்னொரு காலத்தே இறைவனாகிய நின்னைப் பணிந்து வேண்டி உனக்கு நஞ்சை யூட்டினரென்று பழைய வரலாறு கூறுவார் சொல்லுவர். அது கேட்டு, முன் நீயுட்கொண்ட நஞ்சினால் நின் திருமேனிக்கு என்ன தீங்கு நேருமோ என மனந்

திடுக்கிட்டு, நீ தில்லையம்பலத்தின்கண்னே திருநடம் செய்தலைப் பார்த்திருந்தும் உயிர் தாங்கும் ஆற்றலற்றவளாயினேன். அம்பலத்திலே நினக்குத் தொண்டு புரிவோமென்று சொல்லிச் சூழ்ந்து நிற்கும் நஞ்சூட்டிய கொடியவர்களாகிய தேவர்களை உடனே விலக்கி விட்டு நின்பால் அன்புடைய பூதகணங்கள் நின்னைச் சூழ்ந்து பாதுகாத்து வர நினது பிரிவாலுளதாகிய எனது பசலைநிறந் தீரும்படி எங்கள் வீதி வழியே எழுந்தருளி வருவாயாக' எனத் தலைவியொருத்தி கூத்தப்பெருமானை வேண்டுவதாக அமைந்தது,

அம்பலத்தருநடம் ஆடவேயும்
 யாதுகொல் விளைவதென் றஞ்சி நெஞ்சம்
உம்பர்கள் வன்பழியாளர் முன்னே
 ஊட்டினர் நஞ்சையென்றேயு முய்யேன்
வன்பெரும் படையுடைப் பூதஞ்சூழ
 வானவர்கணங்களை மாற்றியாங்கே
என்பெரும் பயலைமை தீரும் வண்ணம்
 எழுந்தருளாய் எங்கள் வீதியூடே

என்ற திருவிசைப்பாவாகும். பழிவிளைக்கும் பகைவராயினும் ஒருவரது முன் நின்று நஞ்சினை உண்ணும்படி வேண்டமாட்டார்கள். கீழ்மக்களும் செய்ய வொருப்படாத நஞ்சூட்டுந் தீச்செயலைத் தம்மையாளும் கடவுளிடத்தே செய்ய உயர்ந்தோரெனப்படும் தேவர்களும் மனந் துணிந்தனரே எனவருந்துவாள் 'உம்பர்கள் வன்பழியாளர்' என்று இகழ்ந்தாள். தேவர்கள் நஞ்சூட்டிய செய்தியைக் கேட்டபொழுதே உயிரற்றவளாயினேன் என்பாள் 'ஊட்டினர் நஞ்சையென்றேயும் உய்யேன்' என்றாள். தேவர்கள் உண்பிக்க நஞ்சையுண்ட பெருமான் என் கண் காணத் தில்லையம்பலத்தே ஆடல்புரியக் காண்கின்றேனாயினும் அவனுக்கு ஊட்டிய நஞ்சு ஏனைய நஞ்சுபோல இதுகாறும் அவன் திருமேனிக்கு வருத்தந் தராதாயினும் ஒருகால் உள்ளேயேயிருந்து நாளடைவில் அவன் திருமேனிக்கு இடர் விளைத்தலுங்கூடுமே யென்று ஏங்குகின்றேனென்பாள் 'அம்பலத்து அருநடம் ஆடவேயும் யாதுகொல் விளைவதென்று நெஞ்சம் அஞ்சி உய்யேன்' என்றாள். அன்பர் போன்று கூடியிருந்து இடர்விளைக்கும் வானவர்கள் தம் பெருமானை இன்றும் சூழ்ந்து போற்றி நிற்பதறிந்து வருந்தியவள், அத்தகைய தீயோரை விலக்கி அவரால் வருந்தீங்கினைப் போக்கிப் பாதுகாக்க வல்ல

அன்புடைத் தொண்டர்களாகிய பூதகணங்கள் சூழ எங்கள் வீதி வழியே எழுந்தருள்வாயாக என அப்பெருமானை விரும்பிவேண்டுகின்றாள். இங்ஙனம், இறைவன்பாற் கொண்ட அன்பின் முதிர்வால் தலைவியொருத்தி வேண்டுவதாக இத்திருவிசைப்பாவைப் பாடிய புருடோத்தமனரது புலமை நலம் சுவைத்து இன்புறத் தக்கதாகும்.

"தாயினு மிக நல்லையென்றடைந்தேன் தனிமையை நினைகிலை சங்கரா" எனத் தலைவி கூறுவதாக அமைந்த தொடர் "தாயினும் நல்ல சங்கரன்" எனவரும் திருநாவுக்கரசர் தேவாரத் தொடரைத் தன்னகத்துக் கொண்டு விளங்குதல் காணலாம்.

"வானவர்கள் வேண்ட" என்ற திருப்பதிகத்தில் தேவர்கள் வேண்டிக்கொண்ட அப்பொழுதே நஞ்சையுண்டு அவர்களைக் காத்தருளிய இறைவன் ஒரு குற்றமும் புரியாத என்னுடைய தோள்வளைகளைக் கவர்ந்து எனக்கு இடர்விளைப்பாரோ எனத் தலைவி ஐயுறுவதும், யான் என்னுடைய தோள்வளைகளைத் தோற்றாலும் ஆடிவருங் காரரவும் ஐம்மதியும் பைங்கொன்றையும் சூடிவரும் நிலையில் அப்பெருமானைக் காணப் பெற்றேன் எனத் தலைவி பெருமகிழ்ச்சியடைவதும் ஆகிய பகுதிகள் படித்து மகிழ்தற்குரியன.

இவ்வாசிரியர் வாழ்ந்தகாலம் இதுவெனத் திட்டமாகச் சொல்லுதற்குரிய குறிப்புக்கள் கிடைக்கவில்லை. எனினும் இவர் கி. பி. 11-ம் நூற்றாண்டில் வாழ்ந்தவரெனக் கொள்ளுதல் பொருத்தமுடையதாகும்.

கூ — சேதிராயர்

இவர் சேதிநாட்டை யாண்ட குறுநில மன்னர் குடும்பத்திற் பிறந்தவராதலின் சேதிராயர் என வழங்கப் பெறுகின்றார். சேதி நாடென்பது தென்னார்க்காடு ஜில்லாவின் வடமேற்கிலமைந்த நிலப்பகுதியாகும். இது மலையமானாடு, மலாடு எனவும் வழங்கப்பெறும். இந்நாட்டின் தலைநகர் திருக்கோவலூர். "சேதி நன்னாட்டு நீடு திருக்கோவலூரின் மன்னி" என்பர் சேக்கிழார். திருத்தொண்டத் தொகையிற் போற்றப்பெறும் அடியார்களுள்

ஒருவராகிய மெய்ப்பொருள் நாயனரென்பவரும் இச்சேதி நாட்டையாண்ட குறுநில மன்னரேயாவர். இச்செய்தி,

"தத்தா நமரேயெனச் சொல்லி வானுலகம் பெற்றவன் சேதிபன் மெய்ப்பொருளாமென்று பேசுவரே" என வரும் திருத்தொண்டர் திருவந்தாதியால் நன்கு புலனும். திருவிசைப்பா ஆசிரியராகிய சேதிராயர் தாம் பாடிய தில்லைத் திருவிசைப்பாப் பதிகத்தின் திருக்கடைக் காப்பில் 'எழிற் சேதிபர்கோன்' எனத் தம்மைக் குறிப் பிட்டுள்ளார். எனவே, இவ்வாசிரியர் சேதிநாடாகிய மலையமானுட்டைத் திருக்கோவலூரிலிருந்து ஆண்ட குறுநில மன்னரென்பதும் செந்தமிழ்ப் புலமைமிக்க சிவநெறிச்செல்வர் என்பதும் நன்கு துணியப்படும். இவர் பாடியதாகத் திருவிசைப்பாப் பதிகம் ஒன்றே காணப்படுகின்றது. தில்லைக் கூத்தப்பெருமானைக் காத லித்த தலைவி, அப்பெருமானைக் காணப்பெரிதும் விரும்பி அவனை அடையப் பெருமையால் இளைத்து விம்மி விம்மி வெயிதுயிர்த்து அழுதலையும், அஞ்சலி கூப்பி அவனணிந்த கொன்றைமாலையை வேண்டி யிரத்தலையும், அவன் திருப் பெயரைக் கூறுகவென்று தன்னுல் வளர்க்கப்பட்ட கிளியை வேண்டுவதனையும், அப்பெருமானை முன்னிலைப் படுத்திக் கூறும் இனிய உரையாடல்களையும் அத்தலைவியைப் பெற்ற தாய் கொண்டு கூறி இறைவனை வேண்டுவதாக இத்திருப் பதிகம் பாடப்பெற்றுளது. இதன்கண் பத்துப்பாடல்கள் உள்ளன. இத்திருப்பதிகம் அந்தாதித் தொடையமையப் பாடப்பெற்றுள்ளது.

"அறவனே அன்று பன்றிப்பின்போகிய மறவனே" எனத்தலைவி ஆண்டவனை யழைக்கும் முறையில் "மறவனை யன்று பன்றிப்பின் சென்ற மாயனை நால்வர்க்கு ஆலின் கீழுரைத்த அறவனை" எனவரும் சுந்தரர் தேவாரத் தொடர் எடுத்தாளப்படுதல் காணலாம்.

இவ்வாசிரியர் வாழ்ந்த காலத்தை அறிதற்குரிய குறிப் பெதுவும் இத்திருப்பதிகத்திற் கிடைக்கவில்லை. எனினும் கி. பி. பதினெராம் நூற்ருண்டில் வாழ்ந்தவர் இவரெனக் கொள்ளுதல் தவருகாது.

முதற் குலோத்துங்கன் காலத்திற்குமுன் சேதிராயர் என்ற பட்டத்துடன் மலையமான்கள் குறிக்கப்பட்டிலரென்

றும் முதற்குலோத்துங்கன் காலமுதற்கொண்டே இவர்கள் சேதிராயர் என்ற பட்டத்துடன் கல்வெட்டுகளில் குறிக்கப்பட்டனரென்றும் ஆகவே திருவிசைப்பா ஆசிரிய ராகிய இச்சேதிராயரும் முதற் குலோத்துங்கசோழன் காலத்திலோ அன்றி அவன் காலத்திற்குச் சிறிது பின்னரோ வாழ்ந்தார் எனக்கொள்ளுதல் வேண்டுமே யன்றி அவ்வேந்தன் காலத்திற்கு முற்பட்டிருந்தவரெனக் கொள்ளுதல் பொருந்தாதென்றும் கூறுவர் சிலர்.[1]

இவ்வாசிரியர் தாம் பாடிய திருவிசைப்பாவின் திருக் கடைக்காப்பில் தம்மைச் சேதிராயர் என்னாது 'சேதிபர் கோன்' என்றே குறிப்பிடுகின்றார். இவ்வாசிரியர் கூறுமாறு போலவே இவர் குலத்து முன்னோராகிய மெய்ப்பொருள் நாயனாரைச் 'சேதிபன்' என நம்பியாண்டார் நம்பி குறிப்பிட்டுப் போற்றியுள்ளார். எனவே சேதிபன் என்னும் இப் பெயர்வழக்கம் கி. பி. பத்தாம் நூற்றாண்டி லேயே நிலவியிருந்தமை தெளிவாகத் தெரிதலால் சேதிராயர் என்ற பெயர் வழக்கத்தினை ஆதாரமாகக் காட்டி இவ்வாசிரியர் முதற் குலோத்துங்கன் காலத்திற்குப் பிற்பட்டவரெனத் துணிதல் ஏற்புடையதாகத் தோன்ற வில்லை.

1. பெரிய புராண ஆராய்ச்சி. பக்கம். 74.

பத்தாந் திருமுறை

திருமூல நாயனர் வரலாறு

சைவத் திருமுறை பன்னிரண்டனுள் பத்தாந் திருமுறையெனப் போற்றப்பெறும் திருமந்திரமாலையாகிய அருள் நூலை அருளிச்செய்தவர் சிவயோகியாராய் விளங்கிய திருமூல நாயனராவர். இவ்வாசிரியரை

"நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்"

என நம்பியாரூரராகிய சுந்தரர் திருத்தொண்டத் தொகை யிற் பரவிப் போற்றியுள்ளார். பன்னூும் பயில்யோக பரம்பரையில் விளங்கிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் தாம் கொண்டொழுகிய சிவயோக நெறிக்கு முதல்வராய் விளங்கிய திருமூல நாயனரை 'நம்பிரான் திருமூலன்' எனக் குறித்துப் போற்றியுள்ளமை இங்கு நோக்கத்தக்க தாகும். சுந்தரர் அருளிய திருத்தொண்டத் தொகையின் வகைநூலாகத் திருத்தொண்டர் திருவந்தாதி பாடியருளிய நம்பியாண்டார் நம்பிகள்,

குடிமன்னு சாத்தனூர்க் கோக்குல மேய்ப்போன் குரம்பைபுக்கு
முடிமன்னு கூனற் பிறையாளன் றன்னை முழுத்தமிழின்
படிமன்னு வேதத்தின் சொற்படியே பரவிட்டெனுச்சி
அடிமன்ன வைத்த பிரான் மூலனுகிய அங்கணனே.

(திருவந்தாதி – 36)

எனவரும் திருப்பாடலில் திருமூலர் வரலாற்றை வகுத்துக் கூறியுள்ளார். நற்குடிகள் நிலைபெற்ற சாத்தனூரில் பசுக் கூட்டத்தினை மேய்ப்பானுகிய இடையனது உடம்பிற் புகுந்து, சென்னியிலே நிலைபெற்ற வளைந்த பிறைச் சந்திரனை யணிந்தவனுகிய சிவபெருமானை (நாற்பொருள் களாற் குறைவின்றி நிறைந்த) முழுமை வாய்ந்த தமிழ் கூறிய வண்ணமே நிலைபெற்ற வேதங்கள் சொல்லியபடியே பரவிப் போற்றி எனது உச்சியிலே தன் திருவடியினை நிலைபெறச் செய்தருளிய பெருந்தகை மூலன் என்னும் பெயரையுடைய அருளாளனுவன் என்பது இத் திருவந் தாதியின் பொருளாகும்.

இதன்கண், பரவிட்டு என்னும் வினையை, முழுத் தமிழின்படி பரவிட்டு எனவும், வேதத்தின் சொற்படியே

பரவிட்டு எனவும் ஈரிடத்தும் சென்றியையும்படி நம்பி யாண்டார் நம்பிகள் கூறியிருத்தலால், திருமூல நாயனார் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நாற் பொருள்களும் நிரம்பப்பெற்ற தமிழ் மறைகளையும் வடமொழி வேதங்களை யும் தழுவித் தமிழாகமம் எனப் போற்றப்படும் இத் திருமந்திரப் பனுவலை இயற்றியருளினார் என்னும் மெய்ம்மை இனிது புலனாகும். அம்மையப்பனாகிய சிவபெருமான் தமிழும் ஆரியமும் ஆகிய இரு மொழிகளிலும் ஒப்ப அமையும்படி ஞானநூற் பொருள்களை உமாதேவியார் கேட்கத் திருவாய்மலர்ந்தருளினன் என்பதனை,

மாரியுங் கோடையும் வார்பனி தூங்கநின்
றேரியு நின்றங் கிளைக்கின்ற காலத்து
ஆரியமுந் தமிழும் உடனே சொல்லிக்
காரிகை யார்க்குக் கருணை செய்தானே. (திருமந்திரம் - 65)

எனவரும் திருப்பாடலில் திருமூல நாயனார் தெளிவாகக் குறித்துள்ளார். இக்குறிப்பினைக் கூர்ந்து நோக்குங்கால் முற்காலத்தில் இறைவனால் அருளிச் செய்யப்பெற்ற சிவாகமங்கள் தமிழிலும் வடமொழியிலும் ஒப்ப அமைந் திருந்தன என்பது நன்கு விளங்கும். இவ்வாறு இறைவ னியல்பினை உலக மாந்தர் உணர்ந்து உய்தி பெறும் வண்ணம் தமிழிலும் வடமொழியிலும் இறைவனூலாகிய அருள் நூல்கள் அமைந்திருந்தன என்பதனை,

அவிழ்க்கின்ற வாறும் அதுகட்டு மாறுஞ்
சிமிட்டலைப் பட்டுயிர் போகின்ற வாறும்
தமிழ்ச்சொல் வடசொல் லெனுமிவ் விரண்டும்
உணர்த்து மவனை யுணரலு மாமே. (திருமந்திரம் - 66)

என ஆகமச் சிறப்புணர்த்தும் பகுதியில் ஆசிரியர் விளங்கக் கூறியுள்ளார். அன்றியும் திருமந்திரம் நாலாந் தந்திரத்துள் 'வயிரவி மந்திரம்' என்ற பகுதியில்,

அந்த நடுவிரல் ஆதி சிறுவிரல்
வந்த வழிமுறை மாறி யுரைசெய்யும்
செந்தமி ழாதி தெளிந்து வழிபடு
நந்தி யிதனை நவமுரைத் தானே. (திருமந்திரம் - 1089)

எனத் திருமூலர் அறிவுறுத்தியருளுதலால் அவ்வழிபாட்டுக் குரிய மந்திரம் வடமொழியில் மட்டுமன்றித் தமிழிலும் அமைந்திருந்தமை நன்கு தெளியப்படும். திருமந்திரம் அருளிய திருமூல நாயனார் தமது வரலாறு கூறுவதாக அமைந்த பாயிரப் பகுதியில்,

நந்தி யிணையடி நான்தலை மேற்கொண்டு
புந்தியி னுள்ளே புகப்பெய்து போற்றிசெய்
தந்தி மதிபுனை அரனடி நாடொறுஞ்
சிந்தைசெய் தாகமஞ் செப்பலுற் றேனே.

(திருமந்திரம் – 73)

எனவும்,

'என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்ச் செய்யுமாறே' (திருமந்திரம் – 81)

எனவும் வரும் ஆசிரியர் வாய்மொழிகள், இந்நூல் தமிழாகமமாக அருளிச் செய்யப்பெற்றதென்பதனை இனிது புலப்படுத்துவனவாகும்.

'சதாசிவ தத்துவம் முத்தமிழ் வேத
மிதாசனி யாதிருந்தே னின்ற காலம்' (திருமந்திரம் – 76)

எனவும்,

தமிழ் மண்டலம் ஐந்துந் தாவிய ஞானம்
உமிழ்வது போல உலகந் திரிவர்
அவிழு மனமும் எம் ஆதி யறிவுந்
தமிழ் மண்டலம் ஐந்துந் தத்துவ மாமே.

(திருமந்திரம் - 1646)

எனவும் வரும் திருமூலர் வாய்மொழிகள், திருமந்திரத்திற் கூறப்படுந் தத்துவ வுண்மைகள் செந்தமிழ் நாட்டில் வாழ்ந்த சிவஞானிகளால் அருளிச்செய்யப்பெற்ற சிறப்புடையன வாதலை நன்கு வலியுறுத்துவனவாகும்.

வேதமோ டாகமம் மெய்யாம் இறைவன்நூல்
ஓதும் பொதுவுஞ் சிறப்புமென் றுள்ளன
நாதன் உரையவை நாடில் இரண்டந்தம்
பேதம தென்பர் பெரியோர்க் கபேதமே

(திருமந்திரம் - 2397)

எனவும்,

வேதத்தை விட்ட அறம் இல்லை வேதத்தின்
ஓதத்தகும் அறம் எல்லாம் உளதர்க்க
வாதத்தை விட்டு மதிஞர் வளமுற்ற
வேதத்தை ஓதியே வீடுபெற் றார்களே. (திருமந்திரம் - 51)

எனவும்,

அஞ்சன மேனி அரிவையோர் பாகத்தன்
அஞ்சொ டிருபத்து மூன்றுள ஆகமம்
அஞ்சலி கூப்பி யறுபத் தறுவரும்
அஞ்சா முகத்தில் அரும்பொருள் கேட்டதே.

(திருமந்திரம் – 57)

எனவும்,

பரனைப் பராபரங் காட்டி உலகிற்
றரனைச் சிவதன்மந் தானே சொல்காலத்
தரனை அமரர்கள் அர்ச்சிக்கு நந்தி
உரனாகி ஆகமம் ஓங்கிநின்றானே. (திருமந்திரம் – 61)

எனவும் இந்நூலில் ஆசிரியர் வேதநூற் பொருள்களையும் ஆகமநூற் பொருள்களையும் இறைவனூற் பொருள் எனக் கொண்டு, வேத சிவாகமங்களாகிய அவற்றைப் பொதுவும் சிறப்புமாகப் பொருளியைபுபெற எடுத்துரைத்தலால், வடமொழி வேதத்தைப் பொது நூலாகவும், தமிழிலும் வடமொழியிலும் உள்ள சிவாகமங்களைச் சிறப்பு நூலாகவும் கொண்டு இவ்விருதிறப் பொருள்களும் ஒருங்கமைய அருளிச் செய்யப்பெற்ற செந்தமிழ்ச் சிவாகமம் இத் திருமந்திரம் என்பது நன்கு துணியப்படும். இந்நுட்பத்தினை விளக்குதற் பொருட்டே, "முழுத்தமிழின்படி, மன்னுவேதத்தின் சொற்படியே பரவிட்டு என்னுச்சி அடிமன்ன வைத்த பிரான் மூலனாகிய அங்கணன்" என நம்பியாண்டார் நம்பிகள் திருமூல நாயனாரைக் குறித்துப் போற்றியுள்ளார் எனக் கருதுதல் பொருத்த முடையதாகும்.

திருத்தொண்டத் தொகையாகிய முதல்நூல், திருமூலரது பெயரும் சிவயோகப் பண்பும் எடுத்துரைத்தது. அதன் வகை நூலாகிய திருவந்தாதி, திருமூலரது உடம்பு சாத்தனூரிற் பிறந்த ஆனிரை மேய்ப்போனாகிய இடையனுடையதெனவும், இவ்வாசிரியர் அவ்வுடம்பிற் புகுந்து சிவாகம வேதப் பொருள்களைத் தமிழால் அருளிச் செய்த அருளாளர் எனவும் அவர்தம் ஊரும் பேரும் அருட்பண்பும் ஞான நூலருளிய திறமும் பிறவும் வகுத்துக் கூறுகின்றது. திருத்தொண்டத் தொகையின் விரிநூலாகச் சேக்கிழாரடிகள் தாம் இயற்றிய பெரிய புராணத்தில் திருமூலரது வரலாற்றினை 28 செய்யுட்களால் விரித்துக் கூறியுள்ளார்.

திருக்கயிலாயத்திலே சிவபெருமானது திருக்கோயிலுக்கு முதற் பெருங்காவல் பூண்ட திருநந்தி தேவரது திருவருள் பெற்ற மாணாக்கருள் ஒருவராய், அணிமா முதலிய எண்வகைச் சித்திகளும் கைவரப்பெற்ற சிவயோகியார் ஒருவர், அகத்திய முனிவர்பாற் கொண்ட நண்பினாலே அவருடன் சில நாள் தங்குதற்கு எண்ணி, அம்முனிவர் எழுந்தருளிய பொதியமலையை அடைதற் பொருட்டுத் திருக்கயிலையினின்றும் புறப்பட்டுத் தென்

திசை நோக்கிச் சென்றார். செல்லும் வழியில் திருக் கேதாரம், பசுபதிநேபாளம், அவிமுத்தம் (காசி), விந்தமலை, திருப்பருப்பதம், திருக்காளத்தி, திருவாலங்காடு ஆகிய திருத்தலங்களைப் பணிந்தேத்திக் காஞ்சி நகரை யடைந்து திருவேகம்பப் பெருமானை இறைஞ்சிப் போற்றி அந்நகரிலுள்ள சிவயோகியர்களாகிய தவமுனிவர்களுடன் அன்புடன் அளவளாவி மகிழ்ந்தார். பின்னர்த் திருவதிகையை யடைந்து புரமெரித்த பெருமானை வழிபட்டுப் போற்றி, இறைவன் அற்புதத் திருக்கூத்தாடி யருளும் திருவம்பலத்தினைத் தன்னகத்தே கொண்டு திகழும் பொற்பதியாகிய பெரும்பற்றப்புலியூரை வந் தடைந்தார். எல்லா வுலகங்களும் உய்யும்படி ஐந்தொழில் திருக்கூத்தியற்றியருளும் கூத்தப் பெருமானை வணங்கித் துதித்துச் சிந்தை களிகூர்ந்த சிவயோகியார், பசுகரணங் கள் சிவகரணங்களாகிய தூய நிலையில் தம்முள்ளத்தே பொங்கி யெழுந்த சிவபோதமாகிய மெய்யுணர்வினால் சிவானந்தத் திருக்கூத்தினைக் கண்டுகளித்து ஆராத பெரு வேட்கையினால் அத்திருத்தலத்தில் தங்கியிருந்தார்.

தில்லைத் திருநடங் கண்டு மகிழ்ந்த சிவயோகியார், அங்கிருந்து புறப்பட்டுக் காவிரியில் நீராடி அதன் தென் கரையினை யடைந்து, உமையம்மையார் பசுவின் கன்றாக இருந்து இறைவனை வழிபாடு செய்து அம் முதல்வனுடன் எழுந்தருளியிருந்து அருள் புரியும் திருவாவடுதுறையினை யணுகித் திருக்கோயிலை வலம்வந்து பசுபதியாகிய இறைவனை வழிபட்டு, அத்திருப்பதியினை விட்டு நீங்காத தொரு கருத்துத் தம் முள்ளத்தே தோன்ற அங்கே தங்கி யிருந்தார். ஆவடுதுறை யிறைவரை வழிபடுதலில் ஆராத பெருங் காதலையுடைய சிவயோகியார், அத்தலத்தை யகன்று செல்லும் பொழுது காவிரிக் கரையிலுள்ள பொழி லிடத்தே பசுக் கூட்டங்கள் கதறி அழுவதனை எதிரே கண்டார். அந்தணர்கள் வாழும் சாத்தனூரிலே தொன்று தொட்டு ஆனிரை மேய்க்கும் குடியிற் பிறந்த ஆயனாகிய மூலன் என்பான் அங்குத் தனியே வந்து பசுக்களை மேய்ப்பவன், தான் எடுத்த பிறவிக்குக் காரணமாகிய வினைகள் நுகர்ந்து தீர்ந்தமையால் அவனது வாழ்நாளைக் கூற்றுவன் வந்து கவர்ந்து கொள்ள உயிர் நீங்கி அங்கு நிலத்தில் வீழ்ந்து இறந்தானாக, அவனால் மேய்க்கப்பெற்ற

பசுக்கள் உயிர் நீங்கிய அவனது உடம்பினைச் சுற்றிச் சுழன்று வந்து மோப்பனவும் கதறுவனவுமாகி வருந்தின.

மேய்ப்பவன் இறந்தமையால் பசுக்களடைந்த துயரத்தினைக் கண்ட அருளாளராகிய சிவயோகியாரது உள்ளத்தில் 'இப்பசுக்கள் உற்ற துயரத்தை நீக்குதல் வேண்டும்' என்றதோர் எண்ணம் இறைவர் திருவருளால் தோன்றியது. 'இந்த இடையன் உயிர்பெற்றெழுந்தாலன்றி இப்பசுக்கள் துயரம் நீங்கா' எனத் திருவுளத்தெண்ணிய தவ முனிவர், தம்முடைய திருமேனியைப் பாதுகாவலான தோரிடத்து மறைத்து வைத்து விட்டுக் கூடுவிட்டுக் கூடு பாய்தல் (பரகாயப் பிரவேசம்) என்னும் பவன வழியினாலே தமது உயிரை அவ்விடையனது உடம்பிற் புகுமாறு செலுத்தித் திருமூலராய் எழுந்தார். எழுதலும் பசுக்களெல்லாம் தம் துயரம் நீங்கி அன்பினால் அவரது உடம்பினை நாத்தழும்ப நக்கி மோந்து கனைத்து மிகுந்த களிப்பினாலே வாலெடுத்துத் துள்ளிக்கொண்டு தாம் விரும்பிய இடத்திற் சென்று புல் மேய்ந்தன. திருமூல நாயனார் அதுகண்டு திருவுளம் மகிழ்ந்து ஆனிரைகள் மேயுமிடங்களிற் சென்று நன்றாக மேய்த்தருளினார். வயிறார மேய்ந்த அப்பசுக்கள், கூட்டமாகச் சென்று காவிரியாற்றின் முன்துறையிலே யிறங்கி நன்னீர் பருகிக் கரையேற, அப்பசுக்களைக் குளிர்ந்த நிழலிலே தங்கி இளைப்பாறும்படி செய்து பாதுகாத்தருளினார்.

சூரியன் மேற்றிசையை யணுக மாலைப் பொழுது வந்தது. பசுக்கள் தத்தம் கன்றுகளை நினைந்து தாமே மெல்ல நடந்து சாத்தனூரை அடைவனவாயின. அப்பசுக்கள் செல்லும் வழியிலே தொடர்ந்து பின் சென்ற சிவயோகியார், பசுக்கள் யாவும் தத்தமக்குரிய வீடுகளிற் சென்று சேர்ந்த பின்னர் அவ்வூர் வழியில் தனியே நிற்பாராயினர்.

அந்நிலையில், மூலனுடைய மானமிகு மனையறக்கிழத்தியாகிய நங்கை, 'என் கணவர் பொழுது சென்ற பின்னரும் வரத் தாழ்த்தனரே. அவர்க்கு என்ன நேர்ந்ததோ' என்று அஞ்சியவளாய்த் தன் கணவனைத் தேடிக்கொண்டு எதிர் செல்பவள், சிவயோகியார் நின்ற இடத்தை யடைந்தாள். தன் கணவனது உடம்பிற்றோன்றிய உணர்வு மாற்றத்தைக் கண்டு 'இவர்க்கு ஏதோ தீங்கு நேர்ந்திருத்தல் வேண்டும்' என்று எண்ணி, அவரைத் தளர்வின்றி

இல்லத்திற்கு அழைத்துச் செல்லும் கருத்துடன் அவருடம்பினைத் தொடுதற்கு நெருங்கினாள். திருமூலராகிய சிவயோகியார், அவள் தம்மைத்தீண்டவொண்ணாதவாறு தடுத்து நிறுத்தினார். தன் கணவனையன்றி மக்கள் முதலிய நெருங்கிய சுற்றத்தார் ஒருவருமின்றித் தனியளாகிய அவள், அவரது தொடர்பற்ற நிலைகண்டு அஞ்சி மனங் கலங்கினாள். 'நும் அன்புடைய மனைவியாகிய எளியேனை வெறுத்து நீங்குதலாகிய இதனால் எனக்கு எத்தகைய பெருந் துன்பத்தைச் செய்துவிட்டீர்' என்று கூறிப் புலம்பி வாட்டமுற்றாள். அந்நிலையில் நிறைதவச் செல்வராகிய திருமூலர், அவளை நோக்கி, 'நீ எண்ணியவாறு இங்கு உனக்கு என்னுடன் எத்தகைய உறவும் இல்லை' எனக் கூறிவிட்டு, அவ்வூரில் அருந்தவர் பலரும் தங்கியிருத்தற் கென அமைந்துள்ள பொதுமடத்திற் புகுந்து சிவ யோகத்து அமர்ந்திருந்தார்.

தன் கணவனது தன்மை வேறுபட்டதனைக்கண்ட மூலன்மனைவி, அதுபற்றி யாரிடத்தும் சொல்லாமலும் தவ நிலையினராகிய அவர்பால் அணையாமலும் அன்றிரவு முழுதும் உறங்காதவளாய்த் துயருற்றாள். பொழுது விடிந்ததும் தன் கணவர் நிலையை அவ்வூரிலுள்ள நல்லோர்பால் எடுத்துரைத்தாள். அதுகேட்ட சான்றோர், திருமூலரையணுகி அவரது நிலைமையை நாடி, 'இது பித்தினால் விளைந்த மயக்கமன்று; பேய் கோட்படுதல் முதலாகப் பிறிதொரு சார்பால் உளதாகியதும் அன்று; சித்தவிகாரக் கலக்கங்களையெல்லாம் அறவேகளைந்து தெளிவு பெற்ற நிலையில் சிவயோகத்தில் அழுந்திய கருத்து உடையவராய் இவர் அமர்ந்துள்ளார். இந்நிலைமை யாவராலும் அளந்தறிதற்கரியதாம்' எனத் தெளிந்தனர். "இவர் இருவகைப்பற்றுக்களையும் அறுத்து ஞானோபதேசத்தால் பரமர் திருவடியைப் பெற்ற சீவன் முத்தர்களைப் போன்று எல்லாவற்றையும் ஒருங்கேயறியவல்ல முற்றுணர்வுடையவராக விளங்குகின்றார். ஆகவே முன்னை நிலைமைப்படி உங்கள் சுற்றத் தொடர்பாகிய வாழ்க்கையில் ஈடுபடுவார் அல்லர்' என மூலன்மனைவிக்கு எடுத்துரைத்தார்கள். அதுகேட்ட அவள், அளவிலாத்துயரத்தால் மயக்கமுற்றாள். அருகேயுள்ளவர்கள் அவளைத்தேற்றி அவளது மனைக்கு அழைத்துச் சென்றார்கள்,

சாத்தனூர்ப் பொதுமடத்தில் சிவயோக நிலையில் அமர்ந்திருந்த திருமூலர், யோகுகலைந்து எழுந்து முதல் நாளிலே பசுக்கள் வந்த வழியே சென்று தம்முடம்பினைச் சேமமாக வைத்த இடத்திற் சென்று பார்த்து, அதனைக் காணுதவராகி, அதுமறைந்த செயலை மெய்யுணர்வுடைய சிந்தையில் ஆராய்ந்து தெளிந்தார். பிறைமுடிக்கண்ணிப் பெருமானுகிய இறைவன், உயிர்கள்பால் வைத்த பெருங் கருணையினுலே அருளிய சிவாகமங்களின் அரும் பொருள்களை இந்நிலவுலகில் திருமூலரது வாக்கினல் தமிழிலே வகுத்துரைக்கக் கருதிய திருவருட்டிறத்தால் சிவயோகியாரது முந்தைய உடம்பினை மறைப்பித்தருளினுர். இம்மெய்ம்மையினைத் திருமூலர் தமது முற்றுணர்வினல் தெளியவுணர்ந்தார். அந்நிலையில் தம்மைப்பின்தொடர்ந்து வந்த ஆயர்குலத்தவர்கட்கும் தமக்கும் எத்தகைய தொடர்பும் இல்லையென்பதனை அவர்கட்கு விளங்க அறி வுறுத்தினுர்; அவர்கள் எல்லோரும் தம்மைவிட்டு நீங்கிய பின் சிவபெருமான் திருவடிகளைச் சிந்தித்து அவ்விடத்தை விட்டகன்று திருவாவடுதுறைத் திருக்கோயிலையடைந்தார். அத்திருக்கோயிலில் வீற்றிருந்தருளும் அம்மையப்பராகிய இறைவரை வணங்கி அத்திருக்கோயிலின் மேற்கில் மதிற்புறத்தேயுள்ள அரசமரத்தின்கீழ்த் தேவாசனத்தில் சிவயோகத்து அமர்ந்து, உள்ளக்கமலத்தில் வீற்றிருந் தருளும் அரும்பொருளாகிய சிவபரம்பொருளோடு இரண்டறக்கூடி ஒன்றியிருந்தார்.

இங்ஙனம் சிவயோக நிலையில் அமர்ந்திருந்த திருமூல நாயனர், ஊனெடுதொடர்ந்த இப்பிறவியாகிய தீய நஞ்சினுலுளவாம் துயரம் நீங்கி இவ்வுலகத்தார் உய்யும் பொருட்டு ஞானம் யோகம் கிரியை சரியை என்னும் நால்வகை நன்னெறிகளும் நால்வகை மலர்களாக விரிந்து விளங்கும் நல்ல திருமந்திரமாலையாகிய பனுவலை இறை வன் திருவடிக்கு அணிந்து போற்றும் நிலையில்,

ஒன்றவன் தானே இரண்டவன் இன்னருள்
நின்றனன் மூன்றினுள் நான்குணர்ந்தான் ஐந்து
வென்றனன் ஆறு விரிந்தனன் ஏழும்பர்ச்
சென்றனன் தானிருந் தானுணர்ந் தெட்டே.

என்னும் திருப்பாடலைத் தொடங்கி ஓராண்டுக்கு ஒரு திருப்பாடலாக இவ்வாறு மூவாயிரம் ஆண்டுகள்

இவ்வுலகிற் சிவயோக நிலையில் அமர்ந்திருந்து மூவாயிரம் திருப்பாடல்களை அருளிச் செய்து, தமிழ் மூவாயிரமாகிய இத்திருமந்திரத் திருமுறையினை நிறைவுசெய்து சிவ பெருமான் திருவருளாலே திருக்கயிலையை அடைந்து அம்முதல்வனுடைய திருவடி நீழலில் என்றும் பிரியா துறையும் பேரின்பப் பெருவாழ்வினைப்பெற்று இனிதிருந் தார். திருமூலர் அருளிய திருமந்திரமாலை நலஞ்சிறந்த ஞான யோகக் கிரியா சரியையெலாம் மலர்ந்த மொழி மாலையாகத் திகழ்கின்றது.

இவ்வாறு சேக்கிழார்பெருமான் திருமூலரது வரலாற்றினை விரித்துக் கூறியுள்ளார். பெரியபுராண ஆசிரியர் விரித்துக் கூறிய இவ்வரலாற்று நிகழ்ச்சிகள் பலவற்றுக்குத் திருமூலநாயனர் அருளிய திருமந்திர மாலையில் நூலாசிரியராகிய அம்முனிவர் தம்வரலாறுகூறும் முறையிற்பாடியருளிய திருமந்திரப்பாடல்கள் அகச்சான்று களாக அமைந்துள்ளன.

மூலனுடம்பிற் புகுந்து தமிழ் மூவாயிரம் அருளிய முனிவர்பிரான், திருக்கயிலாயத்தில் நந்தியெம்பெருமான் பால் ஞானோபதேசம் பெற்ற நான்மறையோகிகளுள் ஒருவர் என்றும், அவர் பொதியமலையில் எழுந்தருளிய அகத்திய முனிவரைக்கண்டு அளவளாவும் விருப்பம் உடையராய்த் தென்றிசை நோக்கிச் செல்லும் வழியில் சாத்தனூரையடுத்துக் காவிரியின் தென்கரையிலுள்ள சோலையில் ஆக்களைமேய்ப்போனாகிய மூலன் என்னும் பெயருடைய இடையன் இறந்துபட அந்நிலையில் அவனால் மேய்க்கப்பெற்ற பசுக்கள் அவனுடம்பைச் சுற்றிக்கதறி வருந்தின என்றும், அப்பசுக்களின் துயரத்தை நீக்கத் திரு வுளங்கொண்ட அருளாளராகிய சிவயோகியார், தம் உடம் பினைப் பாதுகாப்பாக ஓரிடத்தில் மறைத்து வைத்து விட்டுத் தாம் கற்றறிந்த பரகாயப் பிரவேசம் (கூடுவிட்டுக் கூடு பாய்தல்) என்னும் சித்தித்திறத்தால் தமது உயிரை மூலனது உடம்பிலே புகச் செய்து திருமூலராய் எழுந்தார் என்றும் திருத்தொண்டத் தொகைக்கு வகைநூல் செய்த நம்பியாண்டார் நம்பிகளும் விரிநூல் செய்த சேக்கிழார் அடிகளும் தெளிவாகக் கூறியிருத்தலால், திருமந்திர நூலாசிரியர்க்குத் திருமூலர் என வழங்கும் இப்பெயர் அவர் மூலனுடம்பிற் புகுந்தபின்னரே உளதாயிற்று

என்பது நன்கு புலனும். நந்தி திருவருள் பெற்ற நான் மறையோகியராய் இருந்த இவர்தம் முன்னை நிலையில் இவர் பிறந்த ஊர், குடி, பேர் முதலியவற்றை அறிந்து கொள்ளுதற்கேற்ற வரலாற்றுச் சான்றுகள் தெளிவாகக் கிடைக்காமையால் அருண்மொழித் தேவராகிய சேக்கிழார் அடிகள், சிவயோகியார் திருமூலராதற்கு முன்னுள்ள அவர் தம் ஊர் பேர் குலம் முதலிய வரலாற்றுச் செய்திகளைக் குறித்து எதுவும் கூறாது விட்டார்.

திருமூலராகிய சிவயோகியார் திருக்கயிலையில் நந்தி யெம்பெருமான்பால் ஞான நூற்பொருள்களை ஓதியுணர்ந்த நான்மறையோகிகளுள் ஒருவர் என்பது,

'நந்தியருள்பெற்ற நாதரை நாடிடின்
நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி
மன்று தொழுத பதஞ்சலி வியாக்கிரர்
என்றிவர் என்னோடெண்மரு மாமே' (திருமந்திரம்-67)

எனவரும் அவர்தம் வாய்மொழியால் அறியப்படும். நந்தியருள் பெற்ற சிவயோகியார் அட்டமாசித்திகளும் கைவரப் பெற்றவர் என்பதும், ஆவுறுதுயரத்தினை நீக்குதற் பொருட்டே இறைவன் அருளின்வழி மூலன் என்னும் ஆயனது உடம்பிற்புகுந்து பசுக்களைச் சாத்தனூரிற் செலுத்தி மீண்டுவந்து தமது பழைய உடம்பினை வைத்த இடத்தில் வந்து பார்த்தபொழுது, அவ்வுடம்பினை இறைவன் மறைத்தருளினனாக, அவ்வுடம்பினைக் காணாதவராய், முன்னையுடம்பினாற் பயனில்லையெனவுணர்ந்து இறைவன் திருக்குறிப்பின் வண்ணம் மூலனுடம்பிலேயே நெடுங்காலம் விரும்பித்தங்கியிருந்தனர் என்பதும்,

'அரிய தெனக்கில்லை யட்டமாசித்தி
பெரிதருள்செய்து பிறப்பறுத்தானே' (திருமந்திரம்-641)

எனவும்,

குரவன் அருளிற் குறிவழி மூலன்
பரையின் மணமிகு சங்கட்டம் பார்த்துத்
தெரிதரு சாம்பவி கேசரி சேரப்
பெரிய சிவகதி பேறெட்டாஞ் சித்தியே. (642)

எனவும்,

நந்தி யருளாலே நாதனும் பேர்பெற்றோம்
நந்தியருளாலே மூலனை நாடினேம்
நந்தி அருளா அது என்செய்யும் நாட்டினில்
நந்தி வழிகாட்ட நானிருந்தேனே. (திருமந்திரம்-68)

எனவும் வரும் அவரது வாய்மொழிகளால் நன்கு விளங்கும். இத்திருப்பாடலில், 'நந்தி அருளா அது' என ஆசிரியர் சுட்டியது, இறைவனால் மறைக்கப்பட்ட தமது பழைய உடம்பினை. இவ்வாறு இறைவன் தம்முடைய பழைய உடம்பினை மறைத்து மூலனுடம்பிற் புகச் செய்தருளிய இப்படைப்பு, அம்முதல்வனது பொருள்சேர் புகழ்த்திறங் களைத் தமிழ்ப்பாக்களால் நன்றாகப் புனைந்து போற்றுதற் கேற்ற நலந்தரும் வாழ்வினை நல்குவதெனவுணர்ந்த திருமூலர், தாம் மேற்கொண்ட மூலனுடம்பினை 'எனது முன்னைத்தவத்தின் பயனாக எனக்கு இறைவனால் நன்றாகத் திருத்தமுறச் செய்தளிக்கப்பட்ட நல்லபடைப்பு இது வாகும்' எனக்கொண்டு போற்றி மகிழ்ந்தனர் என்பது,

பின்னை நின் றென்னே பிறவிபெறுவது
முன்னை நன்றாக முயல்தவஞ் செய்கிலர்
என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்ச் செய்யுமாறே. (திருமந்திரம்-81)

எனத் தமிழ்மாலைகளால் இறைவனைப் போற்றி மகிழும் நிலையில் தாம்பெற்றுள்ள உடம்பினை ஆசிரியர் பாராட்டி மகிழ்தலாற்புலனாம்.

இறைவன் திருவருளால் மூலனுடம்பிற்புக்க சிவ யோகியார், திருவாவடுதுறைத் திருக்கோயிலை அடைந்து அங்கு எழுந்தருளிய அம்மையப்பர் திருவடிகளைப் போற்றிப் பரவி, அத்திருக்கோயிலை அடுத்துள்ளதோர் சிவபோதியாகிய அரசமரத்தின் நீழலில் எண்ணில்லாத பல்லாண்டுகள் சிவயோகத்தில் அமர்ந்திருந்தார் என்பது,

சேர்ந்திருந் தேன் சிவ மங்கைதன் பங்கனைச்
சேர்ந்திருந் தேன் சிவ னாவடு தண்டுறை
சேர்ந்திருந் தேன் சிவ போதியி னீழலிற்
சேர்ந்திருந் தேன் சிவன் நாமங்கள் ஓதியே (திருமந்திரம்-79)

எனவும்,

இருந்தேன் இக்காயத்தே எண்ணிலிகோடி
இருந்தேன் இராப்பகல் அற்ற இடத்தே
இருந்தேன் இமையவர் ஏத்தும் பதத்தே
இருந்தேன் என்னந்தி இணையடிக் கீழே. (ஷை-80)

எனவும்,

ஞானத் தலைவிதன் நந்தி நகர்புக்கு
ஊனமில் ஒன்பது கோடி யுகந்தனுள்
ஞானப்பாலாட்டி நாதனை யர்ச்சித்து
நானு மிருந்தேன் நற் போதியின் கீழே. (திருமந்திரம்-82)

எனவும் வரும் திருமூலர் வாய்மொழிகளால் இனிது விளங்கும். இத்திருப்பாடலில் 'நந்திநகர்' என்றது திருஆவடுதுறையினை.

சைவ சமயத் தனிநாயகுகிய இறைவனுடைய திருவடிகளை இறைஞ்சிச் சிவயோகத்தமர்ந்து அம்முதல்வனருளிய சிவாகமப்பொருளை விரித்துரைக்கத் திருவுளங்கொண்ட திருமூலர், இறைவன் திருவருளை இடைவிடாது சிந்தித் திருந்து தமிழ் மூவாயிரம் ஆகிய திருப்பாடல்களை அருளிச் செய்தார் என்பதும், ஆசிரியர் இவ்வருள்நூலுக்கு இட்ட பெயர் திருமந்திரமாலை என்பதும்,

நந்தியிணையடி நான்தலை மேற்கொண்டு
புந்தியினுள்ளே புகப்பெய்து போற்றிசெய்து
அந்தி மதிபுனை அரனடி நாள்தொறும்
சிந்தைசெய் தாகமஞ் செப்பலுற்றேனே. (திருமந்திரம்-73)

எனவும்,

பிறப்பிலி நாதனைப் பேர்நந்தி தன்னைச்
சிறப்பொடு வானவர் சென்று கைகூப்பி
மறப்பிலர் நெஞ்சினுள் மந்திரமாலை
உறைப்பொடுங் கூடிநின் றோதலுமாமே. (ஷை-86)

எனவும் வரும் ஆசிரியர் வாய்மொழிகளால் நன்கு புலனும்.

தவமுனிவராகிய திருமூலர் தமிழாகமமாகிய இந்நூலை அருளிச் செய்த காலத்தில் தமிழ்மொழியிற் சைவ சமய நுண்பொருள்களை விரித்துரைக்கும் சாத்திர நூல்கள் சிலவாக அருகிக்காணப்பட்டன. ஆயினும் அந்நூல்களில் இல்லாத பொருள்கள் வேறெங்கும் இல்லை என்னும்படி உலக மக்கள் உணர்ந்து உய்திபெறுதற்குரிய அரும் பொருள்கள் அனைத்தும் இறைவனருளால் நிரம்பி யிருந்தன. இவ்வுண்மையினை,

அங்கி மிகாமை வைத்தான் உடல் வைத்தான்
எங்கு மிகாமை வைத்தான் உலகேழையும்
தங்கி மிகாமை வைத்தான் தமிழ்ச் சாத்திரம்
பொங்கி மிகாமை வைத்தான் பொருள்தானுமே. (ஷை-87)

எனவரும் திருப்பாடலில்[1] திருமூலர் தெளிவாக வெளியிட்டருளிய திறம் உணர்ந்து மகிழத்தக்கதாகும்.

அகத்தியமுனிவரைக் காணவிரும்பித் திருக்கயிலாயத்தினின்றும் தென்றிசை நோக்கிவந்த சிவயோகியார், சிவத்தலங்கள் பலவற்றையும் வழிபட்டு வருபவர் காஞ்சி நகரத்தையடைந்து அங்கு வாழும் சிவயோகியர் பலருடன் அளவளாவினர் எனத் திருத்தொண்டர் புராண ஆசிரியர் குறித்தலாலும், தென்றமிழ் நாட்டில் பொதியமலையில் எழுந்தருளியிருக்கும் அகத்திய முனிவரோடு பழகிய கேண்மையினால் அவரைக் கண்டு அளவளாவப்புறப்பட்டு வந்ததனாலும், தமிழகத்தின் தெற்கெல்லையாகிய குமரித்துறையில் அம்மை கோயில் கொண்டு எழுந்தருளியிருத்தலையும், தமிழகம் ஐந்து மண்டலங்களாகப் பகுக்கப்பட்டிருத்தலையும், வழிப் போவோர் அச்சமின்றிச் செல்லவொண்ணாதவாறு கொங்கு நாட்டில் வழிப்பறித் தொழில் நிகழ்தலையும் இந்நூலிற் குறிப்பிடுவதாலும், இந்நூலாசிரியராகிய சிவயோகியார் மூலனுடம்பிற் புகுவதற்கு முன்னரும் தமிழ் நாட்டிற் பல்லாண்டுகள் வாழ்ந்த பயிற்சியுடையாரென்பதும், சிவாகமப் பொருளை நன்றாகத் தமிழ்ச்செய்யுமாறு தம்மை இறைவர் நன்றாகப் படைத்தார் என அவரே தம்மைத் தமிழொடு தொடர்பு படுத்திக்கூறுதலால் அவர் தமிழ்க் குலத்திற் பிறந்தவரென்பதும், ஆகவே தென் தமிழ் நாட்டிலிருந்து வடகயிலையையடைந்து வாழ்ந்த தமிழ் முனிவர் திருமூலர் என்பதும் நன்கு துணியப்படும்.

திருமூலர் தம்முடன் நந்தியெம் பெருமான்பால் உபதேசம் பெற்றவர்களாக (ச் சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் என்னும்) நந்திகள் நால்வரையும் சிவயோக மாமுனி, தில்லையில் திருக்கூத்துத் தெரிசனம் கண்ட பதஞ்சலி முனிவர், வியாக்கிரபாத முனிவர் ஆகியவர்களையும் சேர்த்து எண்மராகக் குறித்துள்ளதனை நோக்குங்கால்,

1. ‘தமிழ் நூல்களும் அவற்றின் பொருள்களும், சில் வாழ் நாட் பல்பிணிச் சிற்றறிவினரான மக்கள் உணர்ந்து மெய்ப்பயன் பெறுதற்குத் தக்க அளவு வைத்து அறிவின் எல்லை கடவாமல் அழகுற அமைக்கப்பட்டன’ என இத்திருப்பாட்டிற்குக் கருத்துரைப்பர் மறைமலையடிகளார். (மாணிக்கவாசகர் காலம்-பக்கம். 179).

இவர் மேற்குறித்த சிவயோக மாமுனி, பதஞ்சலி, வியாக்கிர பாதர் ஆகிய முனிவர்கள் காலத்தை ஒட்டி வாழ்ந்த சிவாகமச்செல்வ ரென்பது நன்கு புலனாகும். அன்றியும் சிவயோகியராகிய இவர், தில்லையிற் பதஞ்சலி முனிவருடன் இறைவனது திருக்கூத்தினைக் கண்டு வழிபட்டு மகிழ்ந்தா ரென்பதும், தில்லையில் திருக்கூத்துக் கண்டபின் இவ்வுலகில் நெடுங்காலம் இருந்தவரென்பதும்,

செப்புஞ் சிவாகமம் என்னுமப் பேர்பெற்றும்
அப்படி நல்கும் அருள் நந்திதாள் பெற்றுத்
தப்பிலா மன்றில் தனிக்கூத்துக் கண்டபின்
ஒப்பில் எழுகோடி யுகமிருந்தேனே- (திருமந்திரம் 74)

என இவர் தமது வரலாறு கூறுதலால் இனிது விளங்கும் இவ்வாறு நெடுங்காலம் இந்நிலவுலகில் தாம் தங்கியிருந்த காரணம் இறைவனுடன் பிரிப்பின்றி விளங்கும் அருட் சத்தியாகிய புவனாபதியென்னும் அருந்தவச் செல்வியை வழிபட்டு அவ்வன்னையின் திருவருளால் இவ்வுலகிற் பத்தி நெறியையும் யோக நெறியையும் ஞான நெறியையும் நிலை பெறச் செய்து இறைவனது அருட்கூத்தினை விளக்கும் தமிழ் வேதமாகிய இத் திருமந்திரப் பனுவலை அருளிச் செய்தற் பொருட்டே என்பதனை,

இருந்தவக் காரணங் கேளிந் திரனே
பொருந்திய செல்வப் புவனா பதியாம்
அருந்தவச் செல்வியைச் சேவித்தடியேன்
பரிந்துடன் வந்தனன் பத்தியினாலே. (திருமந்திரம் 75)

எனவும்,

மாலாங்க னேயிங்கு யான்வந்த காரணம்
நீலாங்க மேனியள் நேரிழை யாளொடு
மூலாங்க மாக மொழிந்த திருக்கூத்தின்
சீலாங்க வேதத்தைச் செப்பவந்தேனே. (திருமந்திரம் 77)

எனவும் தன் மாணாக்கர்களாகிய இந்திரன், மாலாங்கன் என்பவர்களை நோக்கிக் கூறும் முறையில் அமைந்த இத் திருப்பாடல்களால் திருமூலர் நன்கு புலப்படுத்தியுள்ளார்.

திருமூலராகிய இச் சிவயோகியாரால் அன்புடன் ஆதரிக்கப்பெற்று அவர் அருளிய திருமந்திரப் பனுவற் பொருளைக் கேட்டுணர்ந்த மாணாக்கர்கள் மாலாங்கன், இந்திரன், சோமன், பிரமன், உருத்திரன், கந்துரு,

காலாங்கி, கஞ்சமலையன் என்னும் பெயரினராகிய எழுவர் ஆவர். இச் செய்தி,

மந்திரம் பெற்ற வழிமுறை மாலாங்கன்
இந்திரன் சோமன் பிரமன் உருத்திரன்
கந்துருக் காலாங்கி கஞ்ச மலையனோ
டிந்த எழுவரும் என்வழியாமே. (திருமந்திரம் 69)

எனவரும் பாடலால் அறியப்படும். மூலனுடலிற் புக்குத் திருமூலராயெழுந்த சிவயோகியார், இறைவனருளால் சதாசிவமூர்த்தியை யொத்துச் சிவாகமப் பொருளை அறிவுறுத்தும் முற்றுணர்வும் தேவர்க்கெல்லாம் முதன்மையும் உடையவராகத் தாம் திகழ்ந்த திறத்தினை,

நந்தியருளாலே மூலனை நாடிப்பின்
நந்தியருளாலே சதாசிவ னாயினேன்
நந்தியருளால் மெய்ஞ்ஞானத்துள் நண்ணினேன்
நந்தியருளாலே நானிருந்தேனே. (திருமந்திரம் 92)

எனவரும் திருப்பாடலிற் குறித்துள்ளார்.

திருமூல நாயனார் காலம்

கி. பி. எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த அருளாசிரியர் ஆகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள், தாம் பாடிய திருத்தொண்டத் தொகையில், 'நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்' எனத் திருமூல நாயனாரைப் பெயர் குறித்துப் போற்றியிருத்தலாலும், கி. பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த தேவார ஆசிரியர்களாகிய திருநாவுக்கரசர் திருஞானசம்பந்தர் ஆகிய பெருமக்கள் பாடியருளிய திருப்பதிகங்களில் திருமூலர் அருளிய திருமந்திரப் பாடல்களின் சொற்றொடர்களும் பொருள்களும் பலவிடங்களில் எடுத்தாளப்பட்டிருத்தலாலும் திருமந்திர மாலையின் ஆசிரியராகிய திருமூலநாயனாரது காலம் கி. பி. ஏழாம் நூற்றாண்டிற்கு முற்பட்டதாதல் நன்கு தெளியப்படும்.

நந்தியருள் பெற்ற நான்மறை யோகியார் மூலனுடம்பிற் புகுந்தபின் திருவாவடுதுறையில் மூவாயிரம் ஆண்டுகள் சிவயோகத்தமர்ந்து ஆண்டுக்கொரு திருப்பாடலாக மூவாயிரந் திருமந்திரப்பாடல்களை அருளிச்

செய்தார் எனச் சேக்கிழார் திருமூலநாயனுர் புராணத்திற் குறித்துள்ளார். இங்ஙனம் ஆண்டுக்கொரு பாடலாக மூவாயிரம் பாடல்களும் பாடப்பெற்றன என்பதற்குத் திருமந்திரத்தில் தெளிவான சான்றெதுவும் காணப்பட வில்லை. எனினும், சேக்கிழாரடிகள் கூறுமாறு திருமூலர் இந்நிலவுலகில் நெடுங்காலம் சிவயோகத்தில் அமர்ந்து இருந்தார் என்பது,

'ஒப்பில் எழுகோடி யுகமிருந்தேனே' (திருமந்திரம் 74)

எனவும்,

'இருந்தேன் இக்காயத்தே எண்ணிலிகோடி' (திருமந்திரம் 80)

எனவும் வரும் திருமூலர் வாய்மொழிகளால் நன்கு துணியப்படும். மேற்காட்டிய திருமந்திரத் தொடரில் ஆசிரியர் 'இக்காயத்தே' என்று சுட்டியது, சிவயோகியார் ஆகிய அவர், மூலன் என்னும் இடையனுடம்பிற் புகுந்து நிலைபெற்ற பின்னராதலின், அவரால் 'இக்காயம்' எனச் சுட்டப்பட்ட உடம்பு மூலனுடைய உடம்பெனக் கொள்ளுதல் பொருந்தும். எண்ணிலிகோடி என்றது அளவுட் படாத பல்லாண்டுகள் எனப் பொருள்தந்து நின்றது.

திருமூலர் திருமந்திரமாலையை அருளிச் செய்த காலத்து இந்நாட்டின் தாய்மொழியாகிய தமிழும் தமிழகத்தைச் சூழவுள்ள புறநாடுகளாகிய பதினேழ் நிலங்களின் தாய்மொழிகளாகிய பதினேழு மொழிகளும் ஆகப் பதினெண் மொழிகள் வாயிலாக வெளிவந்த மெய்ந்நூற் பொருள்களை உணர்ந்துகொள்வதில் அறிஞர் பலரும் ஆர்வமுடன் ஈடுபட்டிருந்தார்கள். வெவ்வேறு நாடுகளுக்கு உரியனவாய்ச் சொல்வகையால் வேறுபட்ட இப்பதினெண் மொழிகளையும் அண்ட முதல்வனுகிய இறைவனே மக்கட் குலத்தார் அறமுதற்பொருள்களை யுணர்ந்து உய்தி பெறுதற்குரிய சாதனங்களாகப் படைத்தளித்தனன் எனச் சான்ருேர் பலரும் நன்கு மதித்துப் போற்றினுர்கள். மேற் குறித்த பதினெண்மொழிகளில் கூறப்படும் அறமுதற் பொருள்களை உள்ளவாறு கேட்டு உணர்ந்தவர்களே பண்டிதர் என அக்காலத்திற் சிறப்பாக மதித்துப் பாராட்டப்பெற்றனர், இச்செய்தி,

பண்டித ராவார் பதினெட்டுப் பாடையுங்
கண்டவர் கூறுங் கருத்தறிவார் என்க
பண்டிதர் தங்கள் பதினெட்டுப் பாடையும்
அண்ட முதலான் அறஞ் சொன்னவாறே. (திருமந்திரம் 59)

எனவரும் திருமந்திரத்தால் இனிது புலனாதல் காணலாம். பதினெண்மொழிகளாவன இன்னவென்பது,

"அங்கம் வங்கம் கலிங்கம் கௌசிகம்
சிந்து சோனகம் திராவிடம் சிங்களம்
மகதம் கோசலம் மராடம் கொங்கணம்
துளுவம் சாவகம் சீனம் காம்போஜம்
பருணம் பப்பரம் எனப் பதினெண் பாடை".

எனவரும் சேந்தன் திவாகரத்தாலும், "ஒன்பதிற் றிரண்டி னிற் றமிழொழி நிலத்தினும்" (நன்னூல் சூ 272) என வரும் தொடர்க்கு, "தமிழொழி பதினேழ் நிலமாவன:

'சிங்களஞ் சோனகஞ் சாவகஞ்சீனந் துளுக்குடகங்
கொங்கணங் கன்னடங் கொல்லந் தெலிங்கம் கலிங்கம் வங்கம்
கங்க மகதங் கடாரங் கவுடங் கடுங்குசலந்
தங்கும் புகழ்த்தமிழ் சூழ் பதினேழ்புவி தாமிவையே'

என்பன. அருபணம், காம்போசம், ஈழம், கூவிளம், பல்லவம், அங்கம் என்பன முதலானவை இவற்றின் பரியாயமும் பேதமுமாய் இவற்றுள்ளே அடங்குமென்க" என மயிலைநாதர் கூறிய உரை விளக்கத்தாலும் உய்த்துணரப்படும்.

மேற்குறித்த பதினெண் மொழிகளுள் தமிழுடன் ஏனைய பதினேழு மொழிகளையும் இணைத்துப் பதினெண் மொழிகள் எனத் தொகைப்படுத்து வழங்கும் வழக்கம் தொல்காப்பியத்திலும் சங்க நூல்களிலும் காணப்படாமை யால், பதினெண்மொழிகளைக் குறித்த இத்திருமந்திரம் கடைச்சங்க காலத்திற்குப்பின் இயற்றப்பெற்றதெனக் கருதுதல் பொருந்தும்.

திருமூலர் அருளிய திருமந்திரமாலையில், திருவள்ளுவர் அருளிய திருக்குறளிலுள்ள சொற்றொடர்களும் பொருள் களும் அவ்வாறே எடுத்தாளப் பெற்றுள்ளன.

திருமூலர், தம் காலத்தில் நிலவிய தமிழ்நாட்டின் பகுதிகளைத் 'தமிழ் மண்டலம் ஐந்து' எனக் குறித்து உள்ளார். எனவே அவர் காலத்தில் தமிழகம் ஐந்து மண்டலங்களாகப் பகுக்கப்பட்டு ஆளப்பட்டதெனத் தெரி கிறது. ஆசிரியர் தொல்காப்பியனார் வாழ்ந்த காலத்தில்

தமிழகம் சேர சோழ பாண்டியர்களாகிய மூவேந்தர்களது ஆட்சிக்கு உட்பட்டதாய், மூன்று தனி நாடுகளாய் விளங்கியதென்பது, 'வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு' 'தொல்–செய்யுளியல்–சூ.–79) எனத் தொல் காப்பியனர் தமிழ்நாட்டினைக் குறிப்பிடுதலால் இனிது விளங்கும். சேர சோழ பாண்டிய நாடுகளாகிய இவை முறையே குடபுலம், குணபுலம், தென்புலம் எனவும் வழங்கப்பட்டன.

கடைச்சங்க காலத்திறுதியிற் சேர வேந்தர்க்குரிய குடபுலம் மலைநாடு கொங்குநாடு என இரு பகுதிகளாகவும், சோழவேந்தர்க்குரிய குணபுலம் சோழநாடு தொண்டை நாடு என இரு பகுதிகளாகவும் பிரிந்து தனித்தனி நாடுகளாயின. இவ்வாறு தமிழ்நாடு சேர மண்டலம், பாண்டி மண்டலம், சோழ மண்டலம், தொண்டை மண்டலம், கொங்கு மண்டலம் என ஐந்து மண்டலங்களாகப் பிரிந்து தனித்தனி ஆட்சியில் நிலைபெற்ற காலம் கடைச் சங்க காலத்திற்குப்பின் கி. பி. மூன்றும் நூற்றாண்டினை ஒட்டியதாதல் வேண்டும். இவ்வாறு தமிழகம் ஐந்து மண்டலங்களாகப் பிரிந்து இருந்த செய்தியைத் திருமூலர் தாம் அருளிச் செய்த திருமந்திரத் தில் குறிப்பிடுதலால், அந்நூல் தோன்றிய காலம் கி. பி. மூன்றும் நூற்றாண்டிற்குப் பிற்பட்டதென்பது ஒருவாறு துணியப்படும்.

கொங்குநாடு சேர வேந்தரது ஆட்சியிலிருந்து விலகித் தனியுரிமை பெற்ற அந்நாளில் அந்நாட்டினை அடுத்துள்ள புறநாடுகளிலிருந்து தமிழரல்லாத அயலவர் பலர் குடியேறத் தொடங்கினர். நாட்டில் அரசியலாட்சிக்கு உட்படாத அறைபோகு குடிகளும், வழிப்போவோரைத் துன்புறுத்திப் பொருள் கவரும் ஆறலைப்போரும் ஆங்காங்கே இடம் பெற்றனர். அதனல் அந்நாட்டில் மக்கள் அமைதியாகப் போக்குவரவு புரிதற்குரிய பாது காப்பு இல்லாது போயிற்று. வழிபோவோர் தம் கையிலுள்ள பொருள்களோடு தாம் உடுத்துள்ள ஆடையினையும் பறிகொடுக்க வேண்டிய அவல நிலைக்கு உள்ளாயினர். இங்ஙனம் ஆறலைப்போர் பல்கி வாழ்ந்த கொங்கு நாட்டிற் புதியராய்ச் சென்றோர் பாதுகாப்பற்ற நிலையிற் பெரிதும் வருத்தமுற்ற செய்தியை,

ஆர்வமுடையவர் காண்பர் அரன்தனை
ஈரமுடையவர் காண்பார் இணையடி
பார முடையவர் காண்பார் பவந்தன்னைக்
கோர நெறிகொடு கொங்கு புக்காரே. (திருமந்திரம் – 273)

எனவரும் திருப்பாடலில் திருமூலர் எடுத்துக்காட்டியிருத்தலும், கி. பி. ஐந்தாம் நூற்றுண்டிலிருந்தவராகக் கருதப்படும் முன்றுறையரையனுர் என்பார்,

'ஏமரார் கொங்கேறினுர்' (பழமொழி நானூறு – 282)

என இதனை ஒரு பழமொழியாக எடுத்தாண்டிருத்தலும் இங்கு ஒப்புநோக்கி யுணரத்தக்கனவாகும். இத்துயரநிலை சுந்தரமூர்த்தி சுவாமிகள் காலம் வரையிலும் தொடர்ந்திருந்ததென்பது.

'கொங்கேபுகினும் கூறைகொண் டாறலைப் பாரிலை' (7-92-3)

எனவரும் தேவாரத் தொடரால் உணரப்படும்.

திருமந்திரத்தில், தில்லைத் திருச்சிற்றம்பலத் திருக்கோயில் பொன்னம்பலம் எனப்போற்றப்பட்டிருத்தலால் தில்லையிற் கூத்தப்பெருமான் ஆடல் புரிந்தருளும் திருவம்பலம் பொன்வேயப்பெற்ற பின்னரே இத்திருமந்திரப் பனுவலைத் திருமூலர் இயற்றியிருத்தல் வேண்டும் எனக் கருதுதல் பொருத்த முடையதாகும். தில்லையிற் கூத்தப் பெருமான் அருட் கூத்தியற்றும் திருவம்பலத்திற்கு முதன் முதற் பொன்வேய்ந்து அதனைப் பொன்னம்பலமாக்கிய புகழுக்கு உரியவன் கி. பி. ஐந்தாம் நூற்றுண்டில் வாழ்ந்த பல்லவ மன்னனுகிய சிம்மவர்மன் என்பர் அறிஞர்.[1] எனவே அவ்வேந்தனுற் பொன்வேயப்பெற்ற திருவம்பலத்தைப் பொன்னம்பலம் என்ற பெயராற் போற்றிய திருமந்திரமாகிய இந்நூல், கி.பி. ஐந்தாம் நூற்றுண்டின் இறுதியிலோ அன்றி ஆரும் நூற்றுண்டின் முற் பகுதியிலோ நிறைவு பெற்றதெனக் கருதுதல் ஏற்புடையதாகும்.[2]

திருமூலர் இப்புவிமேல் மூவாயிரம் ஆண்டுகள் சிவயோகத்தமர்ந்திருந்து தமிழ் மூவாயிரம் ஆகிய திருமந்திர மாலையைப் பாடியருளினுர் எனச் சேக்கிழாரடிகள் கூறுதலால், திருமூலர் திருவாவடுதுறையிற் சிவபோதியின் கீழ்ச்

1. தி. வை. சதாசிவ பண்டாரத்தார் அவர்கள் எழுதிய தமிழிலக்கிய வரலாறு (இருண்ட காலம்) பக்கம் 83.

2. ஷை

சிவயோகத்தமர்ந்த காலம் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டிற்கு முன் பன்னூறாண்டுகளாகும் எனக்கருதுதல் பொருந்தும். எனவே எண்ணிலி காலம் சிவயோகத்தமர்ந்த அத் தவ முனிவர் கடைச்சங்கம் நிலவிய காலப் பகுதியிலும் தமிழ் நாட்டில் இருந்திருத்தல் கூடும் என எண்ணுதற்கு இட முண்டு. தொல்காப்பியம் புறத்திணையியல் 20-ஆம் சூத்திர வுரையில்,

"யோகிகளாய் உபாயங்களான் முக்காலமு முணர்ந்த மாமூலர் முதலியோர் அறிவன் தேயத்து அனைநிலை வகையோராவர். அவர்க்கு மாணாக்கராகத் தவஞ்செய் வோர் தாபதப் பக்கத்தராவர்"

என நச்சினார்க்கினியர் கூறும் விளக்கம், பெருமை வாய்ந்த சிவயோகியாராகிய திருமூலநாயனாரையும் அவர் தம் மாணாக்கர்களையும் குறித்ததெனக் கருதவேண்டியுளது.

யாப்பருங்கலம் செய்யுளியற் புறநடைச் சூத்திரவுரை யில் ஆரிடப்போலி என்னும் செய்யுளமைப்பினை விளக்கக் கருதிய யாப்பருங்கல விருத்தியுரையாசிரியர்,

"மனத்தது பாடும் மாண்பினோரும்
சினத்திற் கெடப்பாடுஞ் செவ்வியோரும்
முனிக்கணச் செய்யுள் மொழியவும் பெறுப'

என்பது பாட்டியல் மரபு" எனக்குறித்து,

'இலைநல வாயினும் எட்டி பழுத்தால்
குலைநல வாங்கனி கொண்டுணலாகா – விலையான்
முலைநலங் கொண்டு முறுவலிக் கின்ற
வினையுடை நெஞ்சினை வேதுகொளீரே'

இப்மூலர்வாக்கு மிக்குவந்தவாறு கண்டு கொள்க"[1] எனத் திருமந்திரம் 204ஆம் செய்யுளை எடுத்துக்காட்டியுள்ளார்.

1. இத் திருமந்திரத்தின் இரண்டாம் அடியின் இறுதியில் மிக்குவந்த 'விலையான்' என்ற தனிச்சொல், திருமந்திரச் சுவடி களிலும் வெளிவந்த பதிப்புக்களிலும் காணப்படவில்லை. மேற்குறித்த தனிச்சொல் இதன்கண் இன்றியமையாது இடம்பெறத்தக்க சொல் லும் அன்று. அன்றியும் தமிழ் மூவாயிரமாகிய திருமந்திரப் பாடல் களில் இவ்வாறு தனிச் சொற்பெற்று மிக்குவரும் நிலையில் இது போன்று வேறு ஒரு பாடல் கூடக் கிடைக்கவில்லை. எனவே யாப் பருங்கல விருத்தியுரையாசிரியரால் மிக்குவந்ததாகக் காட்டப்பெற்ற இப்பாடல், திருமந்திரம் 204ஆம் திருப்பாடலைத் தவறுபட மனப் பாடஞ் செய்தோர் வாயிலாகத் திரிந்து வழங்கிய பாடலெனக் கொள்ள வேண்டியுளது.

திருமூலர், வடமொழியும் தென்றமிழும் மறைகள் நான்கும் தெளிந்துணர்ந்த சிவஞானச் செல்வராய்த் தாம் சிந்தித்துணர்ந்த சிவாகம உண்மைகளை இமய முதற் குமரி வரையுள்ள இந்நாட்டவர் பலரும் ஓதியுணர்ந்து உய்தி பெறுதல் வேண்டும் என்னும் அருளுள்ளத்தால் இத்திரு மந்திர மாலையை அருளிச் செய்தாராதலின், அவரருளிய திருமந்திரப் பாடல்களில் சமய சாத்திரக் குறியீடுகளாகிய பதி, பசு, பாசம்; ஆணவம், கன்மம், மாயை; சித்து, அசித்து; சரியை, கிரியை, யோகம், ஞானம்; சத்து, அசத்து, சதசத்து; வேதாந்தம், சித்தாந்தம், நாதாந்தம், போதாந்தம், யோகாந்தம், கலாந்தம்; நாதம், விந்து, சத்தி, சாத்துமான், வயிந்தவம், சத்தாதி வாக்குமனாதிகள், சாக்கிராதீதம், சுத்தம், துரியம், விஞ்ஞானர், பிரளயா கலத்து அஞ்ஞானர், சகலத்தின் அஞ்ஞானர்; இயமம், நியமம், ஆதனம் பிராணயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி; கவச நியாசங்கள் முத்திரை; பத்மாசனம், பத்திராசனம், சிங்காதனம்; பூரகம், கும்பகம், ரேசகம் என்றாற்போலும் வட சொற்களும் தொடர்களும் அக்காலத்திற் பொதுமக்களிடையே வழங்கிய வழக்குச் சொற்கள் சிலவும் ஆங்காங்கே இடம் பெறுவனவாயின. தமிழ் வட மொழியாகிய இரு மொழிகளையும் கலந்து திருமூலர் தாமே படைத்துக் கூறிய அணுவன் (2501), மாயாள் (399) என்றாற் போலும் புதுச் சொற்களும் இடம் பெற்றுள்ளன. வேத ஆகமங்களின் முடிந்த முடிபாகிய சைவ சமயம் என்ற பொருளிற் சித்தாந்தம் என்ற வட சொற்றொடரை முதன் முதல் வழங்கியவர் திருமூலரேயாவர். சுந்தரர் காலத்துப் பல்லவ மன்னனாகிய இரண்டாம் நரசிங்கவர்மன், தான் காஞ்சியில் எடுப்பித்த கைலாசநாதர் கோயிலிற் பொறித் துள்ள வடமொழிக் கல்வெட்டில் சைவ சித்தாந்த நெறியைப் பின்பற்றுவன் எனத் தன்னைக் கூறியிருப்பது [1] இங்கு அறியத்தக்கதாகும்.

ஆரியமும் தமிழுமாகிய இருமொழிகளையும் நன்கு பயின்று வடநாடு தென்னாடுகளிற் போக்குவரவு புரிந்த தவமுனிவராகிய திருமூலர் அருளிய பாடல்களில் சமய சாத்திரக் குறியீடுகளாகிய வடசொற்களும் அக்காலத்திற்

1. தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதி I எண் 25.

பொதுமக்களிடையே வழங்கிய வழக்குச் சொற்கள் சிலவும் விரவிக் காணப்படுதல் இயல்பேயாகும். ஆகவே திருமந்திரப் பாடல்களின் சொல்லமைப்பு ஒன்றே பற்றித் திருமூலர் காலத்தின் தொன்மையினைக் குறித்து ஐயுறு தற்கு இடமில்லையென்க.

திருமூலர், தம் நூலில் ஆறு சமயங்கள் எனவும் அவற்றிற் பலவாகிய நூறு சமயங்கள் எனவும் நாட்டில் வழங்கிய பிற சமயங்கள் பற்றிக் குறித்துள்ளார் ஆயினும் வேத வழக்கொடு மாறுபட்ட புறச் சமயங்களாகிய புத்த சமண மதங்களைப்பற்றிய குறிப்பு எதுவும் திருமந்திரத்தின் புறச்சமய தூடணம் பற்றிய பாடல்களில் இடம் பெற வில்லை. இதனைக் கூர்ந்து நோக்குங்கால், புத்த சமண மதங்கள் தமிழ்நாட்டிற் புகுந்து யாண்டும் பரவி வேரூன்றி நிலைபெறுதற்கு முன்னரேயே சிவயோகியாராகிய திரு மூலர், சிவாகமப் பொருள் குறித்த இத்திருமந்திரப் பனு வலை இயற்றியருளினார் என்பது இனிது விளங்கும்.

திருமூலர், மூலனுடம்பிற் புகுமுன் தமக்குரிய முன்னைய உடம்புடன் கூடிய நிலையில் அவர் பாண்டி நாட்டிற் பிறந் தவரென்றும், அவர்க்குப் பெற்றோர் இட்ட பெயர் சுந்தரன் என்பதாமென்றும், அவர் பொதியமலையில் அகத்தியர் பால் தமிழ்க் கல்வி பயின்றாரென்றும், பின் அவரருளாற் கயிலை சார்ந்து நந்தி பெருமான்பால் ஞான நூல்களைக் கற்று நாதர் என்னும் சிறப்புப் பெயர் பெற்றாரென்றும், அவர் திருக்கயிலையிலிருந்து தென்றிசை போந்தது கி. மு. 6000-க்கும் கி. மு. 3100-க்கும் இடைப்பட்ட காலம் என்றும் கி. மு. 6000 இல் திருக்கயிலையிலிருந்து பதஞ்சலி வியாக்கிர பாதர் ஆகிய முனிவர்களுடன் தில்லைக்கு வந்து நடன தரி சனங்கண்டு வடகயிலை சென்று தவமிருந்தாரென்றும், கி. மு. 3100 இல் அகத்திய முனிவரைக் காணவேண்டி இரண்டாம் முறையாகத் தென்றிசைக்கு வந்தாரென்றும், வரும் வழியில் சாத்தனூரில் ஆவுறு துயரங்கண்டு மூல னுடம்பிற் புகுந்து திருவாவடுதுறையில் 3000 ஆண்டுகள் சிவயோகத்தமர்ந்திருந்து மூவாயிரம் திருமந்திரங்களை அருளிச்செய்து கி. மு. 100 ஆம் ஆண்டில் மீளவும் வட கயிலை சென்று பிறவாநெறி பெற்றாரென்றும் திருமூலராகிய சிவயோகியாரது முன்னைய உடம்பின் பிறப்புப் பற்றியும்

அவர் வாழ்ந்த காலம் பற்றியும் ஊகித்து ஆராய்ந்து முடிவு கூறுவாருமுளர்.[1] இவர்களது ஆராய்ச்சியிற் கண்ட முடிபுகள் இவர்தம் கருதலளவையின் துணை கொண்டே வெளியிடப் பெற்றனவெனக் கொள்ளவேண்டியுளது.

திருமூலராகிய சிவயோகியார் முந்தைய உடம்புடன் இருந்த காலத்து அவர் பிறந்த நாடு ஊர், குடி, பெற்றோர் முதலிய வரலாற்று நிகழ்ச்சிகளைக் குறித்துத் திருத்தொண்டர் புராண ஆசிரியராகிய சேக்கிழாரடிகள் திருமூல நாயனார் புராணத்தில் ஒன்றும் கூறவில்லை. திருக்கயிலாயத்தில் 'நந்தி திருவருள் பெற்ற நான்மறையோகிகள் ஒருவர்; அவர்தாம் அணிமாதி சித்தி பெற்றுடையார்; 'குறுமுனிபால் உற்றதொரு கேண்மையினால் உடன் சில நாள் உறைவதற்கு நற்றமிழின் பொதியமலை நண்ணுதற்கு வழிக்கொண்டார்' என்ற அளவே சிவயோகியாரது முன்னையுடம்பிற்குரிய வரலாற்றுக் குறிப்புக்களைச் சேக்கிழார் குறித்துள்ளார். திருமூலராகிய சிவயோகியார் முந்தையுடம்புடன் இருந்த காலத்து அவர்க்குப் பெற்றோர் இட்ட பெயர் சுந்தரன் என்பதாம் எனத் துடிசைக் கிழாரவர்கள் துணிந்து கூறுதற்குச் சான்றாக அமைந்தது,

> வந்த மடமேழு மன்னுஞ்சன் மார்க்கத்தின்
> முந்தியுதிக்கின்ற மூலன் மடவரை
> தந்திரம் ஒன்பது சார்வு மூவாயிரஞ்
> சுந்தர வாகமச் சொல்மொழிந்தானே. (திருமந்திரம் – 101)

எனவரும் திருப்பாடலாகும். இது திருமந்திரத்திற் குருமட வரலாறு என்னுந் தலைப்பிலுள்ள இரண்டு பாடல்களுள் ஒன்று. இது திருமூலர் வாக்கன்று என்பதும் திருமூலர் வழியிற் பின் வந்தோர் ஒருவர் அவரது நூலைக் குறித்துக் கூறியதென்பதும் 'மூலன்...மொழிந்தான்' எனப் படர்க்கையில் அமைந்திருத்தலால் நன்கு துணியப் படும். இதன்கண் 'மூலன்...சுந்தர ஆகமச் சொல் மொழிந்தானே' என்ற தொடரில் உள்ள 'சுந்தர' என்ற சொல் 'சுந்தர ஆகமம்' என ஆகமத்துக்கு அடைமொழியாய் 'இறைவனருளிய திவ்யாகமம்' என்னும் சிறப்புணர வந்ததாகும். ஆகவே இதனைத் திருமூலரது முந்தையாக்கையிற்

1. துடிசைக்கிழார் அ. சிதம்பரனாரவர்கள் எழுதிய திருமூலர் வரலாறு நோக்குக.

பெற்றோர் இட்ட பெயர் எனத் துணிந்து கூறுதல் சிறிதும் பொருந்தாது. இப்பாடலின் நான்காமடிக்கு உரியதாக அவர் கொண்ட 'சுந்தரனாகமச் சொல் மொழிந்தானே' என்ற பாடம் எந்தச் சுவடியிலும் இருப்பதாகத் தெரியவில்லை. அவ்வாறு பாடங்கொண்டாலும், 'சுந்தரன் ஆகமம்' என்ற தொடர்க்குச் சுந்தரனாகிய சிவபெருமானால் அருளிச் செய்யப்பெற்ற ஆகமம் எனப்பொருள் கொள்ளுதலே ஏற்புடையதாகும்.

வைத்த பரிசே வகைவகை நன்னூலின்
முத்தி முடிவிது மூவாயிரத்திலே
புத்திசெய் பூர்வத்து மூவாயிரம் பொது
வைத்த சிறப்புத் தருமிவைதானே.
(திருமந்திரம் - பாயிரம் - 100)

எனவரும் திருப்பாடல் திருமந்திரப் பொருளின் சிறப்பினை அறிவுறுத்துவதாகும். நன்னூலாகிய சிவாகமங்களில் நிரல்பட வைத்து ஓதிய முறையானே முத்தியின் முடிந்த பொருளாகிய சைவ சித்தாந்தமாகிய இது, தமிழ் மூவாயிரமாகிய இந்நூலிலே விளங்கக் கூறப்பட்டதாகும். முன்னுள்ள ஆகமங்களைச் சிந்தையிற் கொண்டு அறிவினால் ஆராய்ந்து அருளிச் செய்யப்பெற்ற இம் மூவாயிரம் திருப்பாடல்களும், உலகியல் வேத நூலொழுக்கமாகிய பொதுவும் நிலவு மெய்ந்நெறியாகிய சைவத்தின் சிறப்பும் ஆகிய இவ் விருதிறப் பொருள்களையும் தரும் என்பது இதன் பொருள்.

திருமந்திர நூலமைப்பு

திருமூலநாயனார் அருளிய திருமந்திரம் தமிழாகமமாக விளங்குதலை யாவரும் அறிவர். சிவாகமங்கள், தந்திரம், மந்திரம், உபதேசம் என மூவகை உரையளவைகளையும் உறுப்பாகக்கொண்டன. அவற்றுள் தந்திரகலையாவது, வேத ஆகமங்களின் வகையாகிய கருமகாண்டம் ஞான காண்டம் உபாசனா காண்டம் என்னும் மூவகைகளுள் கரும காண்டம் பற்றிப் பின்னெடுமுன் மாறுகோளின்றி அனுட்டித்தலை அறிவுறுத்துவது. மந்திரகலை என்பது, உபாசனா காண்டம் பற்றி மன முதலியன அடக்கித் தெய்வத்தை வழிபடும் முறையினை விரித்துரைப்பது. உபதேசகலை என்பது, ஞானகாண்டம் பற்றித் தனக்கு முதலும் முடிவுமில்லாத

இறைவன் தன்னின் வேறல்லாத எண்குணமுடையனுதல், தன்னின் வேருகிய பசு பாசங்களை யுடையனுதல் முதலிய தன்மைகளைத் தான் உணருமாறும் பிறர்க்கு உணர்த்துமாறும் விளங்க அறிவுறுத்துவதாகும்.[1] இனி, "சாத்திரங்களை முன்னெடுபின் மலைவறக் கொள்ளுகிறது தந்திர கலையாம் என்றும், கரணங்களுடைய வியாபாரங்களை அடக்கி அவரவர் தங்களுக்கு வேண்டின தெய்வங்களை அந்தந்த மந்திரங்களினுலே வழிபடுகிறது மந்திரகலையாம் என்றும், தனக்கு முதலும் முடிவுமில்லாத பரமேசுவரனுடைய சிவஞானத்தைப் பக்குவான்மாக்களுக்குப் போதிப்பது உபதேசகலையாம் என்றும்"[2] ஞானகாண்டம் ஒன்றே பற்றி இம் மூவகைக் கலைகளின் இலக்கணங்களைப் பகுத்துரைத்தலும் ஏற்புடையதேயாகும். ஆகமங்களுக்கு அங்கமாகிய இம் மூவகை உரையளவைகளையும்,

> அனாதியே யமலனுய அறிவனூ லாகமந்தான்
> பிளுதி மாறின்றிப் பேணல் தந்திரம், மந்திரந்தான்
> மனுதிகள் அடக்கித் தெய்வம்வழிபடும் வாய்மைபாகும்,
> தனுதி யீறிலான்றன் தன்மை யுணர்த்துதல் உபதேசந்தான்.
> (சித்தியார்–சுபக்கம்–13)

எனவரும் திருவிருத்தத்துள் அருணந்தி சிவாசாரியார் சுருக்கமுந் தெளிவும் பொருந்த விளக்கியுள்ளார்.

மேற்குறித்த தந்திரம், மந்திரம், உபதேசம் எனப்படும் மூவகை உரைத்திறங்களும் ஒருங்கமைந்த செந்தமிழ்ச் சிவாகமமாகத்திகழ்வது, திருமூல நாயனுர் அருளிய இத் திருமந்திரமாலையாகும். தந்திரம், மந்திரம், உபதேசம் எனப்படும் மூன்றனுள் நடுவே நின்ற மந்திரம் என்பது, முன்னுள்ள தந்திரத்தோடும் பின்னுள்ள உபதேசத்தோடும் பிரிவின்றியியைந்த தொடர்பினதாகிய தலைமை பற்றித் திருமூலர் இறைவன் திருவருளாற் சிந்தைசெய்து அருளிய இத் தமிழாகமத்தை 'மந்திரமாலை' எனக் குறித்துள்ளார்.[3] தமிழ் மூவாயிரமாகிய இத்திருமந்திரப் பாடல்கள் ஒன்பது தந்திரங்களாக வகுக்கப் பெற்றன என்பது,

1. சிவஞான சித்தியார், சுபக்கம். பிரமாண இயல் 13. சிவஞான முனிவருரை.

2. ஷை நிரம்ப அழகிய தேசிகர் உரை.

3. திருமந்திரம் 86.

"மூலன்....தந்திரம் ஒன்பது சார்வு மூவாயிரம் சுந்தர வாகமச் சொன்மொழிந்தானே" (101) எனவரும் இந் நூலின் பாயிரப் பாடலால் அறியப்படும்.

சைவ சமயத்துட் கூறப்படும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நால்வகை நன்னெறிகளையும் செந்தமிழ்ப் பாடல்களால் அறிவுறுத்த எண்ணிய திருமூலர், நாற்சீரடி நான்கு கொண்ட கலிவகை யாப்பினால் இத்திருமந்திர மாலையை அருளிச்செய்துள்ளார். ஒற்றுநீக்கி எழுத்து எண்ணுங்கால் அடிதோறும் பன்னிரண்டெழுத்தும் ஈற்றடி நேரசையினைக் கொண்டு தொடங்கியதாயின் பதினொர் எழுத்தும் பெற்று வெண்டளை பிழையாது வருவது இத் திருமந்திரயாப்பாகும்.[1] செப்பலோசை தழுவிய இக் கலிப்பாவகை திருமூலர் திருமந்திரத்தில்தான் முதன் முதற் காணப்படுகின்றது. எனவே இதனைத் திருமந்திர யாப்பு என வழங்குதல் தகும்.[2]

இந்நூலுக்கு ஆசிரியர் இட்டபெயர் திருமந்திரமாலை என்பதாகும். 'ஞானமுதல் நான்குமலர் நற்றிரு மந்திர மாலை' எனச் சேக்கிழாரடிகள் இந்நூற் பெயரைக் குறித் தருளினார். 'மூலர் திருமந்திரமாலை' என்றார் உமாபதிசிவம். 'ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்' (திருமந்-85) எனவும், 'மறப்பிலர் நெஞ்சினுள் மந்திரமாலை, உறைப் பொடுங்கூடி நின்றோதலுமாமே' (திருமந்-86) எனவும் இந் நூற்பாயிரம் கூறுதலால், இந்நூலுக்கு ஆசிரியர் இட்ட பெயர் திருமந்திரமாலை என்பது நன்கு தெளியப்படும். இந்நூல், மூவாயிரந் தமிழ்ப்பாடல்களை யுடைமைபற்றித் 'தமிழ் மூவாயிரம்' என வழங்குதலும் உண்டு. 'முன்னிய அப்பொருண்மாலைத் தமிழ்மூவாயிரஞ் சாத்தி' என்பது பெரிய புராணம்.

இந்நூல், தொல்காப்பியனார் கூறிய எழுநிலத்து எழுந்த செய்யுட்களுள் மறைமொழிகிளந்த மந்திரத் தான[3] செய்யுளின்பாற்படுதலின், திருமந்திரம் என

1. பன்னிரு திருமுறை வரலாறு முதற்பகுதி பக்கம் 396.

2. விபுலானந்தர் – யாழ்நூல் – பக்கம் 231.

3. தொல்–செய்யுளியல் சூ–165.

திருமந்திரப் பாடற்றொகை

திருமந்திரம் மூவாயிரம் திருப்பாடல்களையுடைய தென்பது, 'முன்னிய அப்பொருண்மாலைத் தமிழ்மூவாயிரஞ் சாத்தி' எனவரும் சேக்கிழார் வாய்மொழியாலும் 'மூலனுரைசெய்த மூவாயிரந்தமிழ்' (திருமந்திரம்–99, 3046) 'முத்திமுடிவிது மூவாயிரத்திலே' (ஷை 100) 'தந்திரம் ஒன்பது சார்வு மூவாயிரம்' (ஷை 101) எனத் திருமந்திரப் பாயிரத்திலும் நூன்முடிவிலும் வரும் பாடற்றொடர்களாலும் அறியப்படும். இப்போது திருமந்திர நூலில் உள்ளனவாக வழங்குவன காப்புச்செய்யுளோடு சேர்த்து 3048 பாடல்களாகும். திருமந்திரச் செய்யுட்கள் என வேறு நூல்களில் மேற்கோளாகக் காட்டப்பட்டுத் திருமந்திரச் சுவடிகளிலும் வெளிவந்த பதிப்புக்களிலும் நூலுட் சேர்க்கப்படாதுள்ளவை 11 பாடல்கள். சில ஏட்டுச் சுவடிகளில் இருந்து அச்சில் வெளிவராதனவாய்ச் சைவசித்தாந்த சமாசப் பதிப்பில் வெளியிடப்பெற்றவை 17 பாடல்கள். இவற்றின்மேலாக வெள்ளியம்பலவாணத் தம்பிரான் சுவாமிகளால் ஞானாவரண பாடியத்திலும் முத்தி நிச்சயப் பேருரையிலும் மேற்கோளாகக் காட்டப்பட்ட திருமந்திரப் பாடல்களில் இதுவரை வெளிவராதனவாக உள்ளவை ஏறக்குறைய முப்பது திருப்பாடல்களாகும். இவையெல்லாவற்றையும் சேர்த்தெண்ணுங்கால் திருமந்திரப் பாடல்களின் தொகை 3100 ஆக உயர்கின்றது.

இவ்வாறு திருமந்திரப் பாடற்றொகை மூவாயிரத்திற்கும் மேலாக மிகுந்து காணப்படுதற்கு இவற்றுட் சில பாடல்கள் பொருளியல்பு பற்றி இருமுறையும் மும்முறையுமாக இடம்பெற்றிருத்தலும், சில பாடல்கள் பாட பேதங்களால் உருத்திரிந்து வெவ்வேறு பாடல்களாக எழுதப் பெற்றிருத்தலும், திருமந்திரத்தைப் பயின்ற பிற்காலச் சான்றோர் சிலர் அவ்வருள்நூலின் சொற்பொருள் நடையினை அடியொற்றிப் பாடிய பாடல்கள் சில யாப்பு ஒப்புமை பற்றித் திருமந்திரம் என்ற பெயராற் குறிக்கப் பட்டிருத்தலும் அவற்றுட்சில இந்நூலில் ஆங்காங்கே இடைச் செருகலாக இடம் பெற்றிருத்தலும்[1] காரணங்களாகும்.

1. "இந்நூலிற் காணப்படும் ஒட்டியாணம் (818), கடுக்கன் (1424), மல்லாக்கத்தள்ளல் (199), வட்டி (260), பொதுக்கென (2950),

திருமூலநாயனார் இத் திருமந்திர மாலையை 'ஒன்றவன்றான்' என்ற திருப்பாடலை முதலாகக்கொண்டு தொடங்கி மூவாயிரந் திருப்பாடல்களால் நிறைவேற்றி அருளினார் என்பது,

> 'ஏனவெயி றணிந்தாரை ஒன்றவன்றானென வெடுத்து'
> 'முன்னிய அப்பொருண் மாலைத்தமிழ் மூவாயிரஞ்சாத்தி'

எனச் சேக்கிழாரடிகள் கூறுதலால் இனிது விளங்கும். 'ஒன்றவன்றான்' எனவரும் இத்திருப்பாடலுக்கு முன்னே,

> ஐந்து கரத்தனை யானை முகத்தனை
> இந்தி னிளம்பிறை போலு மெயிற்றனை
> நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
> புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

எனவரும் விநாயகர் வணக்கத் திருப்பாடல் இத்திருமந்திரத்திற் காப்புச் செய்யுளாக இடம் பெற்றுள்ளது. மூத்த பிள்ளையாராகிய யானைமுகக் கடவுளது வழிபாடு கி.பி. ஆறும் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்தே தமிழ்நாட்டில் நிலைபெறுவதாயிற்றென்பது ஆராய்ச்சியாளர் துணிபாதலானும், திருமந்திர நூலினுள்ளே சிவபெருமானது திருக்குமாரராகிய அறுமுகச் செவ்வேளையும் ஐயனாரையும் குறித்த திருமூலர், மூத்த பிள்ளையாரெனப் போற்றப்பெறும் விநாயகக் கடவுளைப்பற்றி ஒன்றும் குறிப்பிடாமையானும், ஒன்றவன்றான் என்ற பாடலையே திருமந்திரத்தின் முதற் பாடலாக ஆசிரியர் சேக்கிழார் குறித்தமையானும் 'ஐந்து கரத்தனை' என்னும் இத்திருப்பாடல் பின் வந்த சான்றோரொருவரால் இந்நூற்குக் காப்புச் செய்யுளாகப் பாடிச் சேர்க்கப்பட்டதாதல் வேண்டும்.[1]

சிதம்பரம் (1726. 2653, 2722) முதலான சொல் வழக்கு இதில் இடைச் செருகலாகச் சேர்க்கப்பட்ட சில பாடல்கள் உண்டு என்பதை உறுதிப்படுத்தல் அறியத் தக்கது"

(தி. வை. சதாசிவ பண்டாரத்தார் எழுதிய தமிழ் இலக்கிய வரலாறு. இருண்டகாலம் – பக்கம் – 81).

1. ஆசிரியர் மறைமலையடிகளார் எழுதிய மாணிக்கவாசகர் காலம் பக்கம் – 81.

திருமந்திரத்தின் பாயிரப் பகுதியிலுள்ள 112 பாடல்களில் 67 பாடல்களே திருமூலர் வாக்கென்றும், ஏனைய 45 பாடல்களும் இடைச்செருகல்கள் என்றும், அவற்றைத் திருமூலருடைய மாணாக்கர்கள் பாடியிருத்தல் கூடுமென்றும் கருதுவாருமுளர்.[1] திருமந்திர நூலின் தொடக்கத்திலமைந்த கடவுள் வாழ்த்துப் பாடல்களும், ஆசிரியர் தமது குருமரபின் வழிமுறை கூறும் குருபாரம்பரியமும், ஆசிரியர் தாம் இந்நூலை இயற்றுதற்குரிய இயைபினைப் புலப்படுத்தும் முறையில் தமது வரலாற்றினைத் தாமே கூறுவதாக அமைந்த திருமூலர் வரலாறும், ஆசிரியர் கூறும் அவையடக்கமும் ஆகிய பகுதிகள், இந்நூலின் தொடக்கத்தே ஆசிரியர் வாய்மொழியாக விரித்துரைக்கத் தக்க பாயிரப் பொருள்களாதலின், இவை திருமூலநாயனார் வாக்காகவே கொள்ளத்தக்கன என்பதிற் சிறிதும் ஐயமில்லை.

‘ சிந்தைசெய் தாகமம் செப்பலுற்றேனே ’ (திருமந்திரம் - 73)
‘ ஒப்பில் எழுகோடி யுகமிருந்தேனே ’ (ஷை 74)
‘ சேர்ந்திருந்தேன் சிவனுவடுதண்டுறை ’ (ஷை 79)
‘ இருந்தேன் இக்காயத்தே எண்ணிலிகோடி ’ (ஷை 80)
‘ என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்ச்செய்யுமாறே ’ (ஷை 81)
‘ நானுமிருந்தேன் நற்போதியின் கீழே ’ (ஷை 82)

என்றாங்கு இந்நூலாசிரியர் தம்மைப்பற்றித் தன்மையொருமையில் வைத்துக்கூறும் இவ் அகச்சான்றுகளைப் பின்வந்தோர் கூற்றாக ஒதுக்கித் தள்ளுதல் சிறிதும் அடாததொன்றாம். திருத்தொண்டர் புராண ஆசிரியராகிய சேக்கிழார், திருமூலர் வரலாற்றினை விரித்துரைத்தற்குத் திருமந்திர நூலில் ஆசிரியர் கூற்றாக அமைந்துள்ள இத்திருப் பாடல்களையே ஆதாரமாகக் கொண்டுள்ளார் என்பது, இத்திருமந்திரப் பாடல்களையும் திருமூலநாயனார் புராணத்தினையும் ஒப்புநோக்கிப் பயில்வார்க்கு இனிது விளங்கும்.

இனி, இப்பாயிரத்திறுதியில் திருமந்திரப்பாடல் தொகையினையும் பொருட்சிறப்பினையும் கூறும் 99,100-ஆம்

1. மாவை. விசுவநாத பிள்ளையவர்கள் வெளியிட்ட திருமந்திரப் பதிப்பில் அறிஞர் ரமண சாஸ்திரியாரவர்கள் எழுதிய முகவுரை.

பாடல்களும், குருமட வரலாறு கூறும் 101,102-ஆம் பாடல் களும் இந்நூலின் பாடற்றெகையினையும் பொருட்சிறப் பினையும் இந்நூலை அருளிச் செய்த திருமூலநாயனரது வழி முறையில் வந்த மாணாக்கர்கள் வழியாக நிலைபெற்ற திரு மடங்களின் அமைப்பினையும் புலப்படுத்தும் முறையில் அமைந்திருத்தலால் இப்பாடல்கள் நான்கும் ஆசிரியர் கூறிய தற்சிறப்புப்பாயிரத்தின் புறத்தேயமைந்த மற்றெரு பாயிரமாய்ப் பிற்காலச் சான்றோராற் பாடப்பெற்று இப் பாயிரத்திற் சேர்க்கப்பட்டன எனக் கொள்ளுதல் தகும். இவ்வாறே இந்நூலின் இறுதியில் 3046-ஆம் பாடலாக வுள்ள 'மூலனுரை செய்த மூவாயிரந்தமிழ்' என்ற பாட லும் 'வாழ்கவே வாழ்க' என்னும் வாழ்த்துப்பாடலும் திருமூலநாயனருடைய மாணாக்கரால் இயற்றப்பெற்றன எனக்கொள்ளுதல் ஏற்புடையதாகும்.

'மூல னுரைசெய்த மூவாயிரந்தமிழ்
மூல னுரைசெய்த முந்நூறுமந்திரம்
மூல னுரைசெய்த முப்பதுபதேசம்
மூல னுரைசெய்த மூன்றுமொன்றுமே' (3046)

எனவரும் இப்பாடலை ஆதரவாகக்கொண்டு, திருமூலர் மூவாயிரந் தமிழாகிய இத்திருமந்திர மாலையுடன் முந்நூறு மந்திரம், முப்பதுபதேசம் என வேறு இரண்டு நூல்களையும் அருளிச் செய்தாரென்றும், பிற் குறித்த இரண்டு நூல் களும் திருமூலராகிய சிவயோகியார் மூலனுடம்பிற் புகுதற்கு முன் தமக்குரியதாயிருந்த பழைய உடம்பிலிருந்த போதே செய்யப்பட்டன என்றும் கூறுவாருமுளர். அன் னோர் கூறுமாறு இந்நூலாசிரியராகிய திருமூலர் திருமந் திரத்தையன்றி முந்நூறு மந்திரம், முப்பதுபதேசம் ஆகிய வேறு இரு நூல்களையும் செய்திருப்பாராயின் திருமூலரது வரலாற்றினை விரித்துரைத்த சேக்கிழாரடிகள் இச்செய் தியைக் கூருது விடுதற்கு இடமில்லை. சேக்கிழாரடிகள் குறிப்பிடாத நிலையில் முந்நூறு மந்திரம், முப்பதுபதேசம் எனப்படும் இரு நூல்களும் திருமூலநாயனரால் அருளிச் செய்யப்பட்ட வேறு நூல்கள் எனத் துணிந்து கூறுதல் பொருந்தாது. ஆகவே 'மூலனுரை செய்த' என்னும் இத் திருப்பாடலிற் குறிக்கப்பெற்ற மூவாயிரந் தமிழ், முந்நூறு மந்திரம், முப்பதுபதேசம் என்னும் இம்மூன்றும் திருமந்திர மாலையாகிய இந்நூலில் அமைந்த மூவகைப்

பொருட் கூறுகளையே குறித்தன எனக் கருதவேண்டி யுளது. இக்கருத்தினை உறுதிப்படுத்தும் நிலையில் இந் நூலில் முதல் தந்திரத்தின் தொடக்கத்தில் உள்ள முப்பது திருப்பாடல்களும் உபதேசம் என்ற தலைப்பில் அமைந் திருத்தல் அறியத்தக்கதாகும். இது போலவே முந்நூறு மந்திரம் என்பதும் இத்திருமந்திரத்திலுள்ள மற்றொரு பகுதியாய் அடங்கியிருத்தல் வேண்டும். மூவாயிரம் பாடல் களையுடைய இந்நூல், முப்பது உபதேசமும் முந்நூறு மந்திரங்களும் உடையதாய்த் தந்திரம் மந்திரம் உபதேசம் எனப்படும் மூவகை யுறுப்புக்களையும் பெற்று ஒப்பற்ற தமிழாகம நூலாக அமைந்துள்ள தென்பதே இப்பாடலின் கருத்தாகும்.

திரு. விசுவநாத பிள்ளையவர்கள் பதிப்பில் நான்காந் தந்திரத்தில் திருவம்பலச் சக்கரம் 89 பாடல்கள், வயிரவி மந்திரம் 50 பாடல்கள், ஏரொளிச் சக்கரம் 36 பாடல்கள், வயிரவச் சக்கரம் 6 பாடல்கள், சாம்பவி மண்டலச் சக்கரம் 10 பாடல்கள், புவனபதிச் சக்கரம் 12 பாடல்கள், நவாக் கரிச் சக்கரம் 100 பாடல்கள் ஆக 303 பாடல்களே முந்நூறு மந்திரம் எனவும், முதல் தந்திரத்தில் உபதேசம் என்ற தலைப்பில் அமைந்த முப்பது பாடல்களே முப்பதுபதேசம் எனவும் வெளியிடப் பெற்றிருத்தல் இக்கருத்தினை வலி யுறுத்துவதாகும்.

பொதுவாக நோக்குமிடத்துச் சிவாகமங்களுக்குரிய தந்திரம், மந்திரம், உபதேசம் என்னும் மூவகையுரைத் திறங்களாகத் திருமூலர் அருளிய மூவாயிரந் திருப்பாடல் களில் மந்திரப் பகுதிகளாக அமைந்தவற்றுட் குறிக் கொண்டு போற்றுதற்குரிய மந்திரங்கள் முந்நூறு எனவும் உபதேசப் பொருள்களாகிய செம்பொருள்களுள் முதலில் வைத்து எண்ணத்தக்கவை முப்பது உபதேசங்கள் எனவும் இந்நூலைப் பயின்ற ஆசிரியரொருவர் இந்நூற் பொருளை மூவகையாக வகைப்படுத்துக்கூறும் நிலையில் அமைந்தது மேற்குறித்த 3046-ஆம் பாடல் எனக்கொள்ளுதல் பொருந் தும். எனவே இப்பாடலை யாதாரவாகக்கொண்டு திருமந் திர மாலையின் வேருக முந்நூறு மந்திரம், முப்பதுபதேசம் என்னும் இரண்டு நூல்கள் திருமூலராகிய சிவயோகி யாரால் செய்யப்பட்டன எனக் கூறுதற்குச் சிறிதும் இட மில்லை என்பது நன்கு புலனும்.

தமிழாகமமாகிய இந்நூல், இறைவனருளை நிரம்பப் பெற்ற சிவயோகியாராகிய திருமூலநாயனாரால் தமிழ்மொழியில் முதல்நூலாக அருளிச் செய்யப்பெற்றதென்பது, தொன்று தொட்டு வழங்கிவரும் வரலாற்றுண்மையாகும். அங்ஙனமாகவும், திருமூலராகிய சிவயோகியார் தாம் கயிலையிலிருந்து வரும் பொழுதே 'மந்திர மாலிகா' என்றொரு வடமொழி நூலைக் கொண்டு வந்து தமிழில் மொழிபெயர்த்தாரென்றும், உபமன்யு பக்த விலாசத்திற் கூறப்படும் அவரது வரலாற்றை நோக்கின் இதன் முதல்நூல் வடமொழியில் உள்ளதென்பது போதரும் என்றும் அறிஞரொருவர் எழுதியுள்ளார்.[1] உபமன்யு பக்த விலாசம் என்பது சேக்கிழார் அருளிய திருத்தொண்டர் புராணமாகிய பெரிய புராணத்தை அடியொற்றி வடமொழியில் அமைந்த மொழிபெயர்ப்பு நூலென்பது, காய்தலுவத்தலகற்றி ஆராயவல்ல நல்லறிஞர் பலருக்கும் ஒப்பமுடிந்த உண்மையாகும். வடமொழியில் அமைந்த அந்நூலில் திருமந்திரமாலை என்னும் இந்நூலின் பெயர், 'ஸ்ரீ மந்த்ர மாலிகா' என வடமொழி மரபிற்கேற்ப மொழிபெயர்த்தமைக்கப்பெற்றது. 'திருமந்திர மாலை' என்னும் தமிழ் நூற்பெயர் வடமொழி நூலில் அம்மொழி மரபிற்கேற்ப 'ஸ்ரீ மந்த்ர மாலிகா' எனக் குறிக்கப்பட்டிருத்தலை ஆதாரமாகக் கொண்டு திருமூல நாயனாரால் முதல்நூலாக அருளிச் செய்யப்பெற்ற இத்திருமந்திர மாலையை வடமொழி நூலொன்றின் மொழிபெயர்ப்பெனத் துணிந்து கூறுதல், நடுநிலையில் நின்று ஆராய்ந்து உண்மை காணும் கடப்பாடுடைய ஆராய்ச்சியாளர்க்கு அடாத செயலாகும். ஆரியமும் தமிழும் இறைவனால் அருளிச் செய்யப்பெற்ற ஆற்றல் மிக்க நன்மொழிகள் என்னும் உண்மை தெளிந்து அவ்விரு மொழி நூல்களையும் கற்றுணர்ந்த சிவயோகியாராகிய திருமூலநாயனார் தாம் அருளிய இந்நூல், வடமொழி நூலொன்றின் மொழிபெயர்ப்பாக இருக்குமானால் இந்நூல் அருளிச் செய்யவந்த வரலாற்றினை விரித்துரைக்கும் பாயிரப் பகுதியில் இச்செய்தியைத் தெளிவாக விளக்கியிருப்பார். அவ்வாசிரியருடைய வாய்மொழிகளை அகச்சான்று

1. திரு. விசுவநாத பிள்ளையவர்கள் பதிப்பித்த திருமந்திரப் பதிப்பில் டாக்டர் V. ரமண சாஸ்திரியாரவர்களால் எழுதப்பட்ட ஆங்கில முகவுரை.

களாகக் கொண்டு அவரது வரலாற்றினை விரித்துரைத்த சேக்கிழாரடிகளும் இக்குறிப்பினைத் தம் நூலில் தெளிவாக விளக்கியிருப்பர்.

நந்தி இணையடி நான்தலை மேற்கொண்டு
புந்தியினுள்ளே புகப்பெய்து போற்றி செய்து
அந்திமதிபுனை அரனடி நாள்தோறும்
சிந்தை செய்தாகமஞ் செப்பலுற் றேனே. (73)

எனவும்,

ஆரறிவார் எங்கள் அண்ணல் பெருமையை
ஆரறிவார் இந்த அகலமும் நீளமும்
பேரறியாத பெருஞ்சுடர் ஒன்றதின்
வேரறியாமை விளம்புகின் றேனே. (95)

எனவும் திருமூல நாயனார் இந்நூற்பொருளைத் தாம் சிந்தித்துணர்ந்த அநுபவ மொழிகளில் வைத்து அருளிச் செய்திருத்தலானும், திருவாவடுதுறையில் மூவாயிரம் ஆண்டுகள் சிவயோகத் தமர்ந்திருந்த திருமூல நாயனார், உலக மக்கள் உய்திபெறுதல் வேண்டும் என்னும் பேரருளால் தம் திருவுள்ளத்தே தோன்றிய எண்ணங்களை ஓராண்டுக்கு ஒரு திருப்பாடலாகக் கொண்டு மூவாயிரந் திருப்பாடல்களையுடைய தமிழ் முதல் நூலாகிய திருமந்திர மாலையைத் திருவாய்மலர்ந்தருளிய திறத்தினை,

ஆவடுதண் டுறையணைந்தங் கரும்பொருளை யுறவணங்கி
மேவுவார் புறக்குடபால் மிக்குயர்ந்த அரசின்கீழ்த்
தேவிருக்கையமர்ந்தருளிச் சிவயோகம் தலைநின்று
பூவலரும் இதயத்துப் பொருளோடும் உணர்ந்திருந்தார்.
ஊனுடம்பிற் பிறவிவிடந் தீர்ந்துலகத் தோருய்ய
ஞானமுதல் நான்குமலர் நற்றிருமந்திரமாலை
பான்மைமுறை ஓராண்டுக் கொன்றாகப் பரம்பொருளாம்
ஏனவெயிறணிந்தாரை 'ஒன்றவன்றான்' எனஎடுத்து,
முன்னிய அப்பொருள்மாலைத் தமிழ் மூவாயிரஞ்சாத்தி
மன்னிய மூவாயிரத் தாண் டிப்புவிமேல் மகிழ்ந்திருந்து
சென்னிமதி யணிந்தார்தந் திருவருளால் திருக்கயிலை
தன்னிலணைந் தொருகாலும் பிரியாமைத் தாளடைந்தார்.
(பெரிய - திருமூல. 24, 25, 26)

எனவரும் பாடல்களில் அருண்மொழித் தேவராகிய சேக்கிழார் நாயனார் தெளிவாக விளக்கியிருத்தலானும் செந்தமிழ் முதல்நூலாகிய இத்திருமந்திர மாலையை வடமொழி நூலொன்றின் மொழிபெயர்ப்பெனக் கருதுதற்கு ஒரு சிறிதும் இடமில்லையெனத் தெளிக. அன்றியும்

'ஸ்ரீமந்த்ர மாலிகா' என்ற பெயருடன் வடமொழியில் ஒரு நூல் இருப்பதாகவோ அன்றி ஒரு காலத்து இருந்த தாகவோ கொள்ளுதற்குரிய சான்றினை அவர் குறிப் பிடாமையும் ஈண்டு நோக்கத்தக்கது.

இறைவனூலாகிய சிவாகமங்கள் இருபத்தெட்டென் பதும், அவை அம்முதல்வனது ஈசான முகத்திலிருந்து அருளிச் செய்யப்பெற்றன என்பதும்,

அஞ்சன மேனி அரிவையோர் பாகத்தன்
அஞ்சொ டிருபத்து மூன்றுள ஆகமம்
அஞ்சலி கூப்பி அறுபத் தறுவரும்
அஞ்சா முகத்தில் அரும்பொருள் கேட்டதே. (57)

எனவரும் திருமந்திரத்தாற் புலனும். இறைவனருளிய ஆகமங்கள் இருபத்தெட்டிற்கு மேலும் எண்ணிலவாக உள்ளன என்பதும், அவ்வாகமப் பொருள்களை யெல்லாம் பல ஆண்டுகளாகச் சிந்தித்துணர்ந்ததன் பயனாகவே திருமூலர் இத்திருமந்திரத்தை அருளிச் செய்தார் என் பதும்,

அண்ணல் அருளால் அருளுஞ்சிவாகமம்
எண்ணில் இருபத்தெண் கோடி நூறுயிரம்
விண்ணவர் ஈசன் விழுப்பம் உரைத்தனர்
எண்ணிநின் றப்பொருள் ஏத்துவன் நானே. (58)

எனவரும் அவரது வாய்மொழியாற் புலனும்.

இறைவனிடமிருந்து சத்தியும், சத்தியிடமிருந்து சதாசிவமும், அவர்பால் மகேசுரரும், அவரிடமிருந்து ஸ்ரீகண்ட உருத்திரரும், அவர்பால் திருமாலும், அவரிட மிருந்து பிரமதேவரும், அவரிடமிருந்து உருத்திரரும் இம் முறையே உபதேசம் பெற்றனரென்றும், இவர்கள் தனித் தனியே உபதேச வாயிலாகப் பெற்றுணர்ந்த காரணம், காமிகம், வீரம், சிந்தியம், வாதுளம், வியாமளம், காலேத் தரம், சுப்பிரம், மகுடம் என்னும் இவ்வொன்பது ஆகமங் களையும் நந்திபெருமான் இறைவனருளால் ஒருங்கு கைவரப்பெற்றாரென்றும், திருமூலதேவர் ஆகமச்சிறப்பினை அறிவுறுத்தும் முறையில் அமைந்தன,

சிவமாம் பரத்தினிற் சத்தி சதாசிவம்
உவமா மகேசர் உருத்திர தேவர்
தவமால் பிரமீசர் தம்மில் தாம்பெற்ற
நவ ஆகமம் எங்கள் நந்திபெற்றனே. (62)

எனவும்,

பெற்றநல் லாகமங் காரணங் காமிகம்
உற்றநல் வீரம் உயர்சிந்தம் வாதுளம்
மற்றவ் வியாமள மாகுங்காலோத்தரம்
துற்றநற் சுப்பிரம் சொல்லு மகுடமே. (63)

எனவும் வரும் திருமந்திரப் பாடல்களாகும். மேற்குறித்த ஒன்பது ஆகமங்களின் சாரமாகவே இந்நூல் ஒன்பது தந்திரங்களையுடையதாய் அமைந்துளது எனக் கருதுவாருமுளர். இந்நூலில் உள்ள ஒன்பது தந்திரங்களும் முறையே ஒவ்வோராகமத்தின் சாரம் எனக்கொள்வதைக் காட்டிலும் திருமூலர் சிவாகமங்களின் நுண்பொருள்களை ஒன்பது தந்திரங்களாக வகைப்படுத்து மூவாயிரந் திருப் பாடல்களில் வைத்து உணர்த்தியருளினர் எனக்கொள்ளுதலே ஏற்புடையதாகும் என்பர் அறிஞர்.

சிவாகமங்கள், உண்மைப் பொருளைச் சரியை கிரியை யோகம் ஞானம் என நான்கு பாதங்களாக வகுத்துரைப்பன. இந்நூலில் வேதச்சிறப்பும் ஆகமச்சிறப்பும் ஒருங்கே உணர்த்தப்பெற்றன. இவ்விருவகை நூல்களும் இறைவன் நூல்கள் எனவும், அவற்றுள் வேதம் பொதுநூல் ஆகமம் சிறப்பு நூல் எனவும் ஆசிரியர் விளக்குதலால், இந்நூலில் சிறுபான்மை வேதப்பொருளும் பெரும்பான்மையும் சிவாகமப்பொருளும் ஆக எடுத்தோதப் பெற்றன எனக்கொள்ளுதல் பொருந்தும். இந்நூலின் பெரும் பிரிவினைத் தந்திரம் எனவும் இவற்றுள் அடங்கிய திருப்பாடல்களை மந்திரம் எனவும் வழங்குதல் மரபு.

சிவாகமங்களின் ஞானபாதத்தில் உளவாகும் மலைவு தீர்த்தற் பொருட்டு இறைவர் அருளத் தாம் கேட்டுத் தெளிந்த நுண்பொருள்களை நந்திபெருமான் சனற்குமாரர் முதலிய முனிவர்களுக்கு உபதேசித்தருளினர். அவர்பால் உபதேசம் பெற்றவர் திருமூலர். நந்தி பெருமான்பால் தாம் உணர்ந்த சிவாகமப்பொருளைத் திருமந்திரங்களாக்கி அவற்றை ஒன்பது தந்திரங்களாக வகுத்துத் தமிழ் மூவாயிரமாக அருளிச் செய்வாராயினர். திருமூலர் அருளிய இத்திருமந்திரம் பதிபசுபாசம் என்னும் முப்பொருளுண்மையினையும் சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நால்வகை நன்னெறிகளையும் அறிவுறுத்தும் நிலையில் அமைந்துளது. இவ்வுண்மை,

'உள்ளுணர்வான ஞான முதலிய ஒரு நான்குண்மை
தெள்ளுதீந் தமிழாற் கூறுந்திருமூலர்'

எனவும்,

'நலஞ்சிறந்த ஞானயோகக்கிரியா சரியையெலாம்
மலர்ந்த மொழித் திருமூலதேவர்'

எனவும் இந்நூலாசிரியரைக் குறித்தும்,

'ஞானமுதல் நான்குமலர் நற்றிருமந்திரமாலை'

என இந்நூலைக் குறித்தும் சேக்கிழாரடிகள் சிறப்பித்துப் போற்றுதலால் இனிது விளங்கும் 'ஞானமுதல் நான்கு மலர் நற்றிரு மந்திரமாலை' என்றமையால், ஞான நன்னெறியினை விளக்கும் முறையில் ஞானத்திற் சரியை, ஞானத்திற் கிரியை, ஞானத்தில் யோகம், ஞானத்தில் ஞானம் ஆகிய நால்வகை நன்னெறிகளையும் திருமூல தேவர் இத்திருமந்திரப் பனுவலில் அருளிச் செய்துள்ளார் என்பது நன்கு புலனும்.

சிவாகம உண்மைகளை உலகமக்களுக்கு அறிவுறுத்த வந்த திருமூலர், தாம் கூறும் மந்திரப்பொருளை மக்கள் அனைவரும் விரும்பிக் கேட்பதிலும் கேட்டு அவ்வழியில் ஒழுகிப் பயன் பெறுவதிலும் மனவெழுச்சியும் உறுதிப்பாடும் உடையராதற் பொருட்டுத் தாம் இந்நூல் வாயிலாக உணர்த்த எடுத்துக்கொண்ட வேத சிவாகமப் பொருள் ஆகளின் சிறப்பும், கமப்பொருள் தமக்குக் கிடைத்த வழி முறையும், தாம் கேட்டுணர்ந்த ஆகமப்பொருளைத் திருமந் திரமாலையாகத் தமிழிற் சொல்ல நேர்ந்த காரணமும் என இந்நூலைப் பயில்வோர் இன்றியமையாது முதற்கண் அறிந்துகொள்ளுதற்குரிய செய்திகளை அறிவுறுத்தும் முறையில் அமைந்தது திருமந்திரத்தின் முதற்கண் உள்ள பாயிரப் பகுதியாகும்.

வேதம் ஆகமம் ஆகிய இருவகை நூல்களும் இறைவனால் அருளிச் செய்யப்பட்ட அருள் நூல்களாகும். இவற்றுள் ஒழுக்க நெறியினை விரித்துரைப்பதாகிய வேதம் பொதுநூல் எனப்படும். மெய்ந்நெறியாகிய சிவநெறியினை அறிவுறுத்துவதாகிய சிவாகமம் சிறப்புநூல் எனப் படும். இங்கு வேதம் என்றது வேதசிரம் எனவும் வேதாந் தம் எனவும் போற்றப் பெறும் ஞானபாதங்களாகிய உபநிடதங்களை என்பர் பெரியோர்.

பிறவியாகிய துன்பத்தினின்றும் நீங்கி வீடுபெறுதலே அறிவுடைய மக்களின் கடமையும் செயலுமாகும். அந்நிலை சிவனையடைந்தாலன்றிக் கைகூடாது. சிவன் ஒருவனே எல்லார்க்குந் தலைவன். சிவனோடொக்கும் தெய்வம் தேடினும் இல்லை. அவன் மூவர்க்கும் முதல்வன். தாயினும் நல்லன். தேவர் முதலிய யாவரும் அவனைத் தொழுவ தல்லது அவனால் தொழப்படுவார் ஒருவருமிலர். இடியும் முழக்கமும் ஈசன் உருவம். அயன் அரி அரன் ஆகிய மூவரும் ஆராய்ந்து நோக்குங்கால் இறைவனது அருளா கிய தொடர்ச்சியால் ஒருவரேயாவர். சிவனருளல்லது வேறு தெய்வமில்லை. சிவபெருமான் உயிர்கள்மேல் வைத்த பெருங்கருணையால் மன்னுயிர்கள் பாசப் பிணிப் பினின்றும் நீங்கி வீடுபேறடைதற் பொருட்டு வேத சிவா கமங்களை அருளிச் செய்துள்ளார். அவற்றின் வழியொழுகிப் பிறவிப்பெருங்கடல் நீந்தி வீடு பெறுதற்கு வேண்டிய நற் செயல்களே அறிவுடைய நன்மக்களால் மேற்கொள்ளத் தக்கன. சிவபெருமான் ஆகமப் பொருளை நந்திபெரு மானுக்கு உபதேசித்தருளினர். அவர் கயிலையில் சனற் குமாரர் முதலிய நால்வர்க்கும் பதஞ்சலி வியாக்கிரர் ஆகிய முனிவர்களுக்கும் அவ்வழியே எனக்கும் உபதேசித்தருளி னர். ஆகமப்பொருளைத் தமிழில் சொல்லும் பொருட்டே என்னை இம்மூலனுடம்பிலிருக்குமாறு இறைவர் பணித்தரு ளினர். அவருடைய அருளால் யான் மூலனுடம்பிற்புகுந்து திருவாவடுதுறையிற் பல்லாண்டுகள் சிவயோகத்தமர்ந் திருந்தேன். அரனடி நாள்தோறும் சிந்தை செய்து ஆகமம் செப்பலுற்றேன். இறைவன் ஆடியருளும் திருக் கூத்தின் சிறப்பினை அறிவுறுத்தும் மறை நூலாகிய இதனைச் செப்புதற் பொருட்டே யான் இங்கு வந்தேன். நான் பெற்ற இன்பம் இவ்வையகம் பெறுவதாகுக. யான் கூறிய ஞானம் மிக்க இம்மந்திரங்களை உளம் பொருந்திக் கேட்டுணர்வோர் இறைவனுடைய திருவடிகளில் தலைப் பெய்து இன்புறுவர்'' என இப்பாயிரப் பகுதியில் திருமூலர் அறிவுறுத்தியருள்கின்றார்.

இந்நூலிலுள்ள ஒன்பது தந்திரங்களுள் முதல் நான் கும் சிவஞானத்தைப் பெறுதற்கு விரும்பியவர் தம்மை உள்ளும் புறம்பும் தகுதியுடையவராக்கிக் கொள்ளுதற்குரிய சாதனங்களையும், நடுவணதாகிய ஐந்தாந் தந்திரம் சைவத்

தின் முடிந்த முடிபாகிய சைவசித்தாந்த உண்மைகளேயும், 6 முதல் 9 வரையுள்ள நான்கு தந்திரங்களும் ஞானம்பெறும் நிலையில் உணர்ந்து பெறத்தக்கனவாயுள்ள நற்பயன்களே யும் பற்றி விரித்துக் கூறும் முறையில் அமைந்துள்ளன.

ஞானம் பெற முயல்வோர் அதற்குத் தகுதியுடையா ராகத் தம்மைத் தூய நல்லொழுக்க நெறியில் நிலைக்கச் செய்து கொள்ளுதல் வேண்டும் என வற்புறுத்தி அதற் குரிய சாதனங்களேயும் உபதேசிப்பது இந்நூலின் முதல் தந்திரமாகும். இஃது இருபத்து நான்கு அதிகாரங்களாகப் பகுக்கப்பெற்றுள்ளது. இதன் தொடக்கத்திலுள்ள முப்பது திருப்பாடல்களும் உபதேசம் என்ற தலைப்பில் அமைந்துள் ளன. இதனை யடுத்து யாக்கை நிலையாமை, செல்வம் நிலை யாமை, இளமை நிலையாமை என்பன உலகியலில் வைத்து அறிவுறுத்தப்பெற்றுள்ளன. ஐந்தாவதாகவுள்ள உயிர் நிலை யாமை என்ற தலைப்பில் பத்துத் திருப்பாடல்கள் உள்ளன. உயிர்கள் என்றும் அழியாத நிலையுடைய பொருள் என்பது சைவ சித்தாந்தக் கொள்கையாதலை யாவரும் அறிவர். அங்ஙனமாகவும் இங்கு உயிர்நிலையாமை என்றது மன் னுயிர் தான் எடுத்துள்ள ஓருடம்பிலேயே விரும்பி நிலை பெற்றிருக்க இயலாத தன்மையைக் கூறுவதாகும். "வீயாது, உடம்பொடு நின்றவுயிருமில்லை, மடங்கலுண்மை மாயமோவன்றே" (363) எனவரும் புறப்பாடற்றொடர் ஈண்டு நினைக்கத்தக்கதாகும். இதனையடுத்துக் கொல்லாமை, புலால் மறுத்தல், பிறன்மனை நயவாமை, மகளிர் இழிவு, நல்குரவு ஆகிய அதிகாரங்களில் அமைந்த பாடல்கள் உள்ளன. இவை தமிழ் மறையாகிய திருக்குறளின் அதி காரத் தலைப்பினையும் பொருளமைதியையும் அடியொற்றி அமைத்திருத்தல் காணலாம். இவற்றையடுத்து அக்கினி காரியம், அந்தணரொழுக்கம், என்ற தலைப்புக்களிலமைந்த பாடல்கள் வேதப்பொருள்களை உளங்கொண்டு கூறியன வாகும். அடுத்து அரசாட்சி முறை, வானச்சிறப்பு, தானச் சிறப்பு, அறஞ்செய்வான்திறம், அறஞ்செயான் திறம், அன்புடைமை, கல்வி, கேள்வி, கல்லாமை, நடுவுநிலைமை, கள்ளுண்ணாமை ஆகிய தலைப்புக்களில் அமைந்த பாடல்கள் உலகியலொழுக்கமாகத் தெய்வப் புலவர் திருவள்ளுவர் அருளிய பொருளுரைகளை அகத்துட்கொண்டு அப்பொருள் களை உலகியலின் உயிர்நிலையாய் நிலவும் மெய்ந்நெறி

யாகிய சைவசித்தாந்த நெறிக்குப் பொருந்தும் வண்ணம் விரித்துக் கூறும் முறையில் அமைந்திருத்தல் அறியத்தக்க தாகும். இங்குத் திருமூலர் கூறும் கல்வியாவது சிவபரம் பொருளைச் சிந்திக்கும் நிலையில் அமைந்த கல்வியே. கேள்வி என்றது அம்முதல்வனது பொருள் சேர் புகழ்த் திறங்களைக் கேட்டுணரும் கேள்வியினை. இங்ஙனமே நடுவு நிலைமை, அன்புடைமை முதலாக இத் தந்திரத்தி லுள்ள ஏனைய அதிகாரப் பொருள்களையும் சிவநெறியி லொழுகுவோர்க்குரிய சிறப்பியல்பினவாக ஆசிரியர் கூறி யுள்ளமை கருதத்தக்கதாகும்.

வேதசிவாகமங்களின் ஒன்றுபட்ட துணிபு சிவனேபரம் பொருள் என்று முன்பாயிரத்திற் கூறியபொருளை ஆசிரியர் சிறப்பு முறையில் விரித்துரைப்பதாக அமைந்தது திருமந் திரத்தின் இரண்டாந் தந்திரமாகும். இஃது அகத்தியம் என்பது முதல் பெரியாரைத் துணைக்கோடல் ஈறாக இருபத்தைந்து தலைப்புக்களையுடையது. இறைவன் வேண்டுதல் வேண்டாமையிலான் ஆயினும் தம் போன்ற எண்ணிலாவுயிர்கள் உய்திபெறுதற் பொருட்டுத் தனது இயல்பாகிய பேரருளால் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்களைச் செய்து கொண்டிருக்கின்றான். அம்முதல்வன் செய்யும் ஐந்தொழில் களுட்படுவன, உயிர்கள் எடுத்துள்ள உடம்பும், அதன் அகக்கரணங்களும், புறக்கரணங்களும், உயிர்கள் வாழ்தற் கிடனாகிய புவனங்களும், உயிர்கள் நுகர்தற்குரிய நுகர் பொருள்களும் ஆகும். உடலும் உயிருமாகச் சேர்த்துப் படைக்கப்பெறும் நிலை 'கருவுற்பத்தி' என்ற தலைப்பிற் பேசப்படுகிறது. உயிர்கள் ஒருமலமுடையன, இருமல முடையன, மும்மலமுடையன என்னும் பாகுபாட்டினால் முறையே விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என மூவகைப்படும் என்றும், அவற்றுள் முத்தியில் விருப்ப முடைய சகல வர்க்கத்தார் நூற்பொருளைக் கேட்டற் குரியர் என்றும் அறிவுறுத்தும் நிலையில் அமைந்தது 'மூவகைச் சீவவர்க்கம்' என்ற பகுதியாகும்.

சகல வர்க்கத்தினராகிய மக்கட்குலத்தார் இவ்வுலகில் நன்னெறியறிந்து ஒழுகிப் பிறவாநெறியாகிய வீடுபேற் றின்பத்தை அடைதற்குரியராதலின், தம்மால் வேண்டும் பொருளளித்து வழிபட்டு நற்பொருளைக் கேட்டுணர்தற்

குரிய மெய்யுணர்வுடைய பெரியோர்களையறிந்து வழி பட்டும் மனமாசகற்றும் தீர்த்தத்தின் இயல்பு தெரிந்தும் தம்மைத் தூய்மை செய்து கொள்ளுதல் வேண்டும் என் பதும், மன்னுயிர்கள் உய்தற் பொருட்டு இறைவன் அன்பர்க்கு எளிவந்து அருள்புரியும் அருள் நிலையங்களாகிய திருக்கோயிலின் பண்பு தெரிந்தும், அங்கு நிலையாக வீற்றிருந்து உயிர்களின் இடரகற்றி இன்பமளிக்கும் இறைவனது அதோமுகத்து இயல்பு கண்டும், அம்முதல் வனை வழிபட்டுச் சிவநிந்தை, குருநிந்தை, மாகேசுவர நிந்தை ஆகிய தீமைகளினின்றும் நீங்கிப் பொறையென் னும் அணிகலனைப் பூண்டு, பெரியோரையறிந்து அவர் களைத் துணையாகக் கொண்டு நன்னெறியில் ஒழுகி உய்தி பெறுதல் வேண்டுமென்றும் ஆசிரியர் இத் தந்திரத்தில் அறிவுறுத்தியுள்ளார்.

மூன்றாந்தந்திரம் அட்டாங்கயோகம் முதல் சந்திர யோகம் ஈறாக இருபத்தொரு தலைப்புக்களையுடையது. இதன்கண் எண்வகை யோகஉறுப்புக்களாகிய இயமம், நியமம், ஆதனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பனவும், இவற்றை மேற்கொண்டோர் அடையும் பேறுகளும், அணிமா, லகிமா, மகிமா, பிராத்தி, கரிமா, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் ஆகிய எண் வகைச் சித்திகளின் இயல்பும் பயன்களும், கலைநிலை, காய சித்தி உபாயம் முதலியனவும் விரித்துரைக்கப்பட்டுள்ளன. இத் தந்திரப் பகுதியின் உள்ளுறையாவது சரீர சித்தி உபாயமாகும். உடம்பின்றி உயிர்தனித்து நின்று தொழில் புரிதல் இயலாது. உயிர் அறம் முதலிய உறுதிப்பொருளைப் பெறவேண்டுமாயின் அதற்குரிய முயற்சிகளை உடம்பொடு கூடி நின்றே செய்தல் வேண்டும். ஆகவே உயிர்க்கு ஞான சாதனமாகவுள்ள உடம்பினைப் பேணுதல் இன்றியமை யாதது என்னும் உண்மையினை,

உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாய மறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே. (724)

உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக்குள்ளே யுறுபொருள் கண்டேன்
உடம்புளே யுத்தமன் கோயில்கொண்டா னென்
றுடம்பினை யானிருந் தோம்புகின்றேனே. (725)

எனவரும் திருமந்திரங்களால் திருமூலர் அறிவுறுத்தியுள்ளமை நோக்கத் தக்கதாகும்.

இங்ஙனம் இயமம் நியமம் முதலிய யோகவுறுப்புக்களால் உடம்பினை நன்கு பேணிச் சரியை கிரியை ஆகிய நெறிகளில் பயின்ற பின்னர்ச் சிவயோகத்தில் நிலைபெற்று நின்று சிவஞானமாகிய பயனைப் பெறுதற்கு நிறைமொழி மாந்தரருளிய மறைமொழிகளாகிய மந்திரங்களின் சாதகமும் அவற்றின் வலிமையும் பெறுதல் இன்றியமையாததாகும். ஆகவே இந்நூலின் நான்காந் தந்திரத்துள் திருவம்பலச் சக்கரம் முதலிய மந்திரச் சக்கரங்களின் உபாசனை முறைகள் விரிவாக விளக்கப்பெற்றுள்ளன. இத்தந்திரம், அசபை என்பது முதல் நவாக்கரிசக்கரம் ஈருகப் பதின்மூன்று தலைப்புக்களையுடையதாகும். இதன்கண் மந்திரச் சக்கரங்களின் வடிவம், அளவு, வரைகள், அவற்றில் அடைக்கப்பெறும் மந்திர எழுத்துக்கள், உரிய மந்திரங்கள், வழிபாட்டு முறைகள், அவ்வவற்றின் அதிதெய்வம், வலிமை, பயன் முதலியன விரித்துரைக்கப் பெற்றுள்ளன. இன்னசக்கரத்தை இன்ன சாதனத்தில் எழுதி இன்ன இடத்தில் இன்னவாறு மேற்பூச்சும் அணியும் மலரும் முதலியன சாத்தி இன்னபடி இத்தனை காலம் வழிபட்டால் வசியம் முதலாகச் சொல்லப்படும் உலகியற் பயன்களுள் இன்னின்ன பயன்களை எளிதிற் பெறலாம் என்ற உண்மையினை ஆசிரியர் இத்தந்திரத்தில் விரித்துக் கூறியுள்ளார்.

நன்னெறியினை நாடிய சாதகன், தான் இப்பிறப்பிற் கொண்டுள்ள ஓர் உடம்பில் நின்றே விரும்பிய பயன்களைப் பெறவேண்டியவனுவன். ஆகவே அவ்வுடம்பினைக் கெடாது நெடுங்காலம் நிலைபெறக் கொண்டு வையத்து வாழ்வாங்கு வாழ்தற்கேற்ற பயன்களையும் விரும்புதல் இயல்பாதலால், ஞான நூலாகிய இவ்வாகமங்களிலும் உலகியற் பயன்களைப் பற்றிய இவ்வழிமுறைகள் இடம் பெறுவனவாயின. இறைவன் தனது திருவருளாகிய சத்தியின் மூலமாகவே மன்னுயிர்கட்கு அருள்புரிவானுதலின் இத்தந்திரத்திற் கூறப்படும் மந்திரச் சக்கரங்களிற் பெரும்பாலன அவனது திருவருளாகிய சத்தி பேதங்களைப் பற்றியனவாக அமைந்துள்ளன.

மக்கள் வேண்டிய வேண்டியாங்கு எய்தற் பயத்த வாகிய இம் மந்திரங்கள், நம் நாட்டில் மக்களிடையே நெடுங்காலமாக நிலைபெற்று வழங்கி வந்துள்ளன என்பது, "கோவலன் நாவிற் கூறிய மந்திரம், பாய்கலைப்பாவை மந்திரமாதலின்" (காடுகாண் 196–7) எனவும், "அருமறை மருங்கின் ஐந்தினும் எட்டினும், வருமுறை யெழுத்தின் மந்திர மிரண்டும், ஒருமுறையாக வுளங்கொண் டோதி" (காடுகாண் 128–130) எனவும் வரும் சிலப்பதிகாரத் தொடர்களால் இனிது விளங்கும். இக் குறிப்புக்களைக் கூர்ந்து நோக்குங்கால், இத்தகைய தெய்வ மந்திரங்கள் பல உபதேச முறையில் தமிழகத்தில் நெடுங்காலமாக நிலைபெற்று வழங்கி வந்துள்ளன என்பது இனிது புலனும். ஆகவே திருமூல நாயனரால் திருமந்திரம் நாலாந் தந்திரத்திற் குறிக்கப்பெற்றுள்ள இம் மந்திரங்கள் பலவும் தென்றமிழ் நாட்டில் வழங்கிய தொன்மையுடையன என்பது நன்கு துணியப்படும். இந்நூலாசிரியர் ஆரியமும் செந்தமிழும் கற்றுவல்ல சிவயோகியாராதலால் இமய முதல் குமரிவரையுள்ள நிலப்பகுதியில் வாழும் மக்களனை வர்க்கும் பயன்படும் முறையில் தமிழும் ஆரியமுமாகிய இருமொழி எழுத்துக்களும் விரவிய நிலையில் அகர முதலாகிய ஐம்பத்தோரெழுத்துக்களால் ஆகிய மந்திரங்களை இந்நூலில் வகுத்துக் கூறியுள்ளார். நாலாந் தந்திரத்திலுள்ள அதிகாரங்களிலமைந்த பாடல்களிற் பல அந்தாதித் தொடையமையப் பாடப்பெற்றுள்ளன. ஆயினும், பல இடங்களில் பாட பேதங்களால் பாடல்கள் முன்பின்னுக மாறி யெழுதப் பெற்றமையாலும் இடைச் செருகலாகச் சில பாடல்கள் இடம் பெற்றமையாலும் இடையிடையே அவ்வந்தாதித் தொடர்புகள் சிதைந்தன எனக் கருத வேண்டியுளது.

ஐந்தாந் தந்திரம், சுத்த சைவம் முதலாக உட் சமயம் ஈருக இருபது உட் பிரிவுகளையுடையதாகும். இதன்கண் நால்வகைச் சைவங்களும், சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நால்வகை நன்னெறிகளும், அவைபற்றியமைந்த சன்மார்க்கம், சகமார்க்கம், சற்புத்திர மார்க்கம், தாச மார்க்கம் என்ற நெறிமுறைமைகளும், அந்நெறிகளில் நின்றோர் பெறுதற்குரிய சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம் என்னும் நால்வகைப் பேறுகளும், மந்தம், மந்த

தரம், தீவிரம், தீவிரதரம் என்னும் நால்வகைச் சத்திநி பாதப் பக்குவ நிலைகளும் அறிவுறுத்தப் பெற்றுள்ளன. புறச் சமயங்களின் ஒவ்வாத் தன்மைகளைப் புலப்படுத்தும் நிலையில் அமைந்தது, புறச்சமய தூடணம் என்பதாகும். இத்தந்திரத்தில் திருமூல தேவர் கூறியுள்ள முறைமையினை அடியொற்றியே அருணந்தி சிவாசாரியார் தாம் இயற்றிய சிவஞான சித்தியாரில் சரியை முதலிய நால்வகை நெறிகளையும், இந்நெறிகள் நான்கும் ஒவ்வொன்றும் நந்நான்காய் விரியும் முறைமையினையும் விரித்துக் கூறியுள்ளமை இங்கு ஒப்புநோக்கி யுணரத்தக்கதாகும்.

பதி பசு பாசம் என்னும் மூன்றும் என்றும் உள்ள பொருள்களாகும். பதி-இறைவன். இறைவன் ஒருவனே. பசு-உயிர். உயிர்கள் எண்ணில்லாதன. அவை அநாதியே மலத்தாற் கட்டுப்பட்டுள்ளன; அருளாளனாகிய இறைவன் உயிர்கள் உய்யும் பொருட்டு வினைக்கீடாகிய பிறவிகளில் அவற்றைச் செலுத்துகின்றான். உயிர்கள் பல்வகைப் பிறவிகளிலும் வந்து பிறந்து நல்வினை தீவினைகளைச்செய்து உழல்வன. இவ்வாறு மாறி மாறிப் பிறந்திறந்து வரும் உயிர்கள், பிறவித் துன்பங்கள் நீங்கி என்றும் பேராவியற்கையாகிய நிலையான பேரின்பத்துள் இருக்க முயல்வதுவே நல்லுணர்வு பெற்ற அவற்றின் குறிக்கோளாக அமைதல் வேண்டும். அத்தகைய நன் முயற்சிகளையும் நற்பணிகளையும் மேற்கொள்ளுதற்குக் குருவின் அருளும் திருவைந்தெழுத்து, திருநீறு முதலிய சிவ சாதனங்களுமே துணையாவன. அத்துணையினைக்கொண்டு சிவநெறியில் ஒழுகினால் உலக மக்கள் துன்பம் நீங்கி நிலையான பேரின்பத்தைப் பெறலாம். அவ்வனுபவம் மாறாதிருக்க அடியார்களுடன் இருக்கும் பழக்கம் இன்றியமையாததாகும். என்னும் சைவ வுண்மைகள் இந்த ஐந்தாந்தந்திரத்திற் கூறப்பெற்றுள்ளன:

சைவ சித்தாந்த முடிபுகளை உபதேச வாயிலாகக் கேட்டறிந்தோர் அவற்றைச் சிந்தித்துத் தெளிந்துணர்தற்குரிய பொருள்களாகிய ஞானம் பெறும் சாதனங்களை உணர்த்துவது, ஆறாந் தந்திரமாகும். இது, சிவகுரு தரிசனம் முதல் பக்குவன் என்ப தீறாகப் பதினான்கு உட்பிரிவுகளையுடையது. இதன்கண் சிவகுரு தரிசனம், திருவடிப்பேறு, ஞாதிரு ஞான ஞேயம், துறவு, தவம், அருளுடைமையின் ஞானம் வருதல், அவ வேடம், தவ

வேடம், அபக்குவன், பக்குவன் என்ற தலைப்புக்களில் வைத்து ஞான சாதனங்கள் விரித்துரைக்கப் பெற்றன.

ஆன்மாக்கள் உய்தி பெறுதற் பொருட்டு இறைவன் தன் அடியார் திறத்தே நிகழச்செய்யும் தச காரியம் என்னும் பத்து வகைச் செயல்களும், இத் தந்திரத்திலும் பின்வரும் ஏழு, எட்டு, ஒன்பதாந் தந்திரங்களிலும் கூறப் படும் பொருள்களால் உணர்த்தப் பெறுகின்றன.

ஏழாந்தந்திரம், ஆறுதாரம் முதல் இதோபதேசம் ஈருக முப்பத்தெட்டு உட்பிரிவுகளையுடையதாகும். இதனுட் கூறப்படும் பொருள்களுள் ஆறுதார நிலைகள், சிவலிங்க பேதங்கள், அருளொளி, குருலிங்க சங்கம வழிபாடு, ஆதித்தர் வகை, ஐம்பொறிகளையடக்கும் முறை, சற்குரு இதோபதேசம் என்பன சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன வாகும். இவை மேற்குறித்த தச காரியங்களுள் சிவரூபம், சிவ தரிசனம் என்னும் இரண்டையும் விளக்குவன. போசன விதி, பிட்சா விதி, பூரணக் குகைநெறிச் சமாதி, சமாதிக்கிரியை, விந்துச்சயம் என்பன, ஞானம் பெறுதற்குத் துணையாகவுள்ள நல்லொழுக்க நெறிகளை அறிவுறுத்து வனவாகும். மூலாதாரம் முதலிய ஆறு ஆதாரங்களுள் வைத்து அண்டலிங்கம் முதலிய அறுவகை இலிங்கங்களை யும் கண்டு வழிபடுதலும், அருளொளிக்குள் ஒடுங்கியிருந்து குரு லிங்க சங்கமம் என்னும் மூன்றிடங்களிலும் சிவபெரு மானை வெளிப்படக்கண்டு வழிபடுதலும் ஆகிய இவை, அகமும் புறமுமாகச் செய்தற்குரிய வழிபாடுகள் எனச் சைவ நூல்கள் கூறும். ஐந்திந்திரியம் அடக்கும் முறை, கூடா வொழுக்க நீத்தல், கேடு கண்டிரங்கல் என்ற தலைப்புக்களிலுள்ள திருமந்திரப் பாடல்கள், நல்லொழுக்க நெறியில் நின்று இறைவனை வழிபடுவோர்பால் குற்றங்கள் நீங்க இன்றியமையாது இருத்தற்குரிய நற்பண்புகளை விளக்குவனவாகும். இத் தந்திரத்தின் இறுதியிலுள்ள இதோபதேசம் என்ற பகுதி பொதுவாக உலக மக்களனை வரும் சிறப்பாகச் சிவநெறிச் செல்வர்களும் அன்புடன் கடைப்பிடித்தொழுகி உய்தி பெறுதற்குரிய நல்லுரைகளைத் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது.

செல்லு மளவுஞ் செலுத்துமின் சிந்தையை
வல்ல பரிசால் உரைமின்கள் வாய்மையை
இல்லை யெனினும் பெரிதுளன் எம்மிறை
நல்ல வரனெறி நாடுமி னீரே. —(திருமந்திரம்–2103)

ஒன்றே குலனும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணுமே
சென்றே புகுங்கதி யில்லைநும் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந் துய்மினே. (ஷை 2104)

இக்காய நீக்கி யினியொரு காயத்திற்
புக்குப் பிறவாமற் போம்வழி நாடுமின்
எக்காலத் திவ்வுடல் வந்தெமக் கானதென்
றக்கால முன்ன அருள் பெறலாமே. (ஷை 2106)

கூடியும் நின்றுந் தொழுதெம் மிறைவனைப்
பாடியுளே நின்று பாதம் பணிமின்கள்
ஆடியு ளேநின் றறிவுசெய் வார்கட்கு
நீடிய வீற்றுப் பசுவது வாமே. (ஷை 2109)

சார்ந்தவர்க் கின்பங் கொடுக்குந் தழல் வண்ணன்
பேர்ந்தவர்க் கின்னாப் பிறவி கொடுத்திடும்
கூர்ந்தவர்க் கங்கே குரைகழல் காட்டிடும்
சேர்ந்தவர் தேவரைச் சென்றுணர்வாரே. (ஷை 2114)

எனவரும் திருமந்திரப் பாடல்கள் இங்கு நினைக்கத் தக்கனவாகும்.

எட்டாந் தந்திரம் உடலிற் பஞ்சபேதம் என்பது முதல் சோதனை என்பது ஈருக நாற்பத்து மூன்று உட்பிரிவுகளை யுடையது. இதன்கண் உடலிற் பஞ்சபேதம் சாக்கிரம் முதலிய அவத்தை பேதங்கள், கேவல சகல சுத்தம் என்னும் மூவகை நிலைகள், அறிவுதயம், ஆறந்தம், மகாவாக்கியம், வாய்மை, அவாவறுத்தல், பத்தியுடைமை, சோதனை முதலிய பொருள்கள் விரித்துரைக்கப் பெற்றுள்ளன. சிவ தரிசனத்தின் பின் சிவனொடு கூடுதல் என்னும் சிவயோக நிலையினை உணர்த்துதல் எட்டாந் தந்திரத்தின் கருத்தென்பர் பெரியோர். இத் தந்திரத்திற் கூறப்படும் சிவ யோக நிலைகள் பற்றிய அரும்பொருள்களும், மேற் கூறப் பட்ட அட்டாங்கயோகம் முதலிய நுண்பொருள்களும், அநுபவமுடைய ஆசிரியர்களை வழிபட்டு அவர்கள் அறிவுறுத்திய நெறியில் நின்று உணர்ந்து கொள்ளத் தக்கன வன்றி ஏனையோரால் எளிதில் உணரத்தக்கன அல்ல.

இத் தந்திரத்தில் அடித்தலையறியுந் திறங்கூறல் என்ற பகுதி, ஆன்மா இறைவன் திருவருளில் தலைப்பட்டுத் தாடலை போல் அடங்கி நிற்றலாகிய அத்துவித நிலையினைப் புலப்படுத்துவதாகும். மகா வாக்கியம் என்ற பகுதியில் 'தத்துவமசி' எனவும் சிவாத்துவிதம் எனவும் அருமறை

களிற் கூறப்படும் சித்தாந்த நுண்பொருள் விரித்துரைக்கப் படுகின்றது. வாய்மைவழி நின்று தன்னையறிந்திடும் தத்துவ ஞானிகள், அவாவறுத்து இறைவன்பால் எல்லையற்ற பத்தியுடையராய்ச் சிவயோகத்தின் முடிந்த நிலையில் நிற்கும் திறத்தினை விளக்குவன. இத் தந்திரத்தினுள் வாய்மை, ஞானி செயல், அவா வறுத்தல், பத்தியுடைமை சோதனை என்ற தலைப்புக்களில் அமைந்த திருமந்திரப் பாடல்களாகும்.

மெய்கலந் தாரொடு மெய்கலந் தான்மிகப்
பொய்கலந் தாருட் புகுதாப் புனிதனைக்
கைகலந் தாவி யெழும்பொழு தண்ணலைக்
கைகலந் தார்க்கே கருத்துற லாமே. (2601)

தன்னையறிந்திடுந் தத்துவ ஞானிகள்
முன்னை வினையின் முடிச்சை யவிழ்ப்பர்கள்
பின்னை வினையைப் பிடித்துப் பிசைவர்கள்
சென்னியில் வைத்த சிவனரு ளாலே. (2611)

ஆசை யறுமின்கள் ஆசை யறுமின்கள்
ஈசனோ டாயினும் ஆசை யறுமின்கள்
ஆசை படப்பட வாய்வருந் துன்பங்கள்
ஆசை விடவிட வானந்த மாமே. (2615)

அடியா ரடியா ரடியார்க் கடிமைக்
கடியனாய் நல்கிட் டடிமையும் பூண்டேன்
அடியா ரருளால் அவனடி கூட
அடியா னிவனென் றடிமைகொண் டானே. (2624)

ஆன்கன்று தேடி யழைக்கு மதுபோல்
நான்கன்றாய் நாடி யழைத்தேனென் நாதனை
வான்கன்றுக் கப்பாலாய் நின்ற மறைபொருள்
ஊன்கன்றா னாடிவந் துள்புகுந் தானே. (2627)

முத்தியில் அத்தன் முழுத்த அருள்பெற்றுத்
தத்துவ சுத்தி தலைப்பட்டுத் தன்பணி
மெய்தவஞ் செய்கை வினைவிட்ட மெய்யுண்மைப்
பத்தியி லுற்றோர் பரானந்த போதரே. (2633)

பெம்மான் பெருநந்தி பேச்சற்ற பேரின்பத்
தம்மா னடிதந் தருட்கட லாடினோம்
எம்மாய மும்விடுத் தெம்மைக் கரந்திட்டுச்
சும்மா திருந்திடஞ் சோதனை யாகுமே. (2635)

எனவரும் திருமந்திரத் திருப்பாடல்கள் உணர்ந்து போற்றத்தக்கனவாகும்.

இந்நூலின் முடிவிலுள்ள ஒன்பதாந்தந்திரம், தச காரியத்துள் ஒன்றாகிய சிவபோகம் என்னும் பேரின்ப நிலையை விளக்கும் முறையில் அமைந்துள்ளது. ஈண்டுச் சிவபோகம் என்றது, உயிர் யோகத்தாற் சிவத்துடன் கூடிய நிலையில் தன்னை மறந்து அம் முதல்வனது பேரருளில் திளைத்து இன்புறுதலாகிய சிவசாயுச்சிய நிலையினை. இத் தந்திரம் குருமடதரிசனம் என்பது முதலாகச் சர்வ வியாபி என்பதீறாக இருபத்திரண்டு உட்பிரிவுகளையுடையதாகும். இதன்கண் கூறப்படும் குருமடதரிசனம், ஞானகுரு தரிசனம், திருக்கூத்துத் தரிசனம், ஆகாசப்பேறு, ஞானோதயம், சத்திய ஞானானந்தம், சொரூப உதயம், சிவதரிசனம், சிவரூப தரிசனம் என்னும் பகுதிகள், சிவயோகியர்களின் அநுபவ நிலைகளைக் குறிப்பன ஆகும். பிரணவ சமாதி, தூல சூக்கும அதி சூக்தம பஞ்சாக்கரங்கள், மோனசமாதி என்னும் பகுதிகள், எல்லாப்பொருள்களையுந் தன்னகத்தே அடக்கியுள்ள திருவைந்தெழுத்தினை அவ்வத்தானங்களில் வைத்துத் தியானிக்கும் நிலையிற் சிவபோகத்து அழுந்துந் திறனைத் தெளிய அறிவுறுத்துவன ஆகும். திருவைந்தெழுத்தினைக் குறித்துத் திருமூலதேவர் இந்நூலில் அறிவுறுத்திய உண்மைகள், உண்மை விளக்கம், சிவப்பிரகாசம், திருவருட்பயன் முதலிய மெய்கண்ட நூல்களில் எடுத்தாளப்பெற்று உள்ளமை உணர்ந்து போற்றத் தக்கதாகும். திருக்கூத்துத்தரிசனம் என்ற பகுதி சைவத்தின் மிகச்சிறந்த நுண்பொருள்களை விளக்குவது. இதில் சிவானந்தக் கூத்து என்றது, சிவஞானிகள் என்றும் தம் மெய்யுணர்வினிற் கண்டு அநுபவிக்கத்தக்க நித்தியமாகிய ஆனந்தக் கூத்தாகும். இதன் நுட்பத்தினை,

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த பொன்சடை
பின்றயங்க ஆடுவாய் பிஞ்ஞகா பிறப்பிலீ
கொன்றையம் முடியினாய் கூடலாலவாயிலாய்
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (3-52-6)

எனவரும் திருப்பாடலில் ஆளுடையபிள்ளையாரும்,

'குறியொன்றுமில்லாத கூத்தன்றன் கூத்து' (திருவாசகம்)

எனத் திருவாதவூரடிகளும் குறித்துப் போற்றியுள்ளமை நினைக்கத்தக்கதாம். பக்குவமுடைய சிவஞானிகளுக்குச் சிறப்பு முறையில் நிகழ்த்தப்பெறும் இத்திருக்கூத்தினையன்றி, உலக உயிர்கள்யாவும் நலம்பெற்றுய்தல் வேண்டும்

என்னும் பொதுநிலையில் இறைவனால் நிகழ்த்தப்பெறுந் திருக்கூத்து, சுந்தரக்கூத்து, பொற்பதிக் கூத்து, பொற்றில்லைக்கூத்து, அற்புதக்கூத்து என்னும் தலைப்புக்களில் வைத்து இத் தந்திரத்தில் விரித்துரைக்கப்பெறுகின்றது.

இதன்கண்வரும் சூனியசம்பாஷணை என்ற பகுதி, உணர்தற்கரிய உயர்ந்த ஞான நுண்பொருள்களைக் கேட்போர் எளிதின் மனங்கொள்ளும் வண்ணம் உருவக வாய்பாட்டால் மறைத்துக்கூறும் மறைபொருட் கிளவிகள் ஆக அமைந்துளது. பொருள்களை ஆராய்ந்துபார்க்கும் அறிவுடைய ஆன்மாவின் உறையுளாகிய உடம்பின் கண்ணே உயிர்க்கு நற்பயன்தரும் அறிகருவிகளாகிய ஐம்பொறிகள் உள்ளன. அவை ஐந்தும் தம்மை நல்வழியிற் செலுத்தும் ஆசிரியனைப் பெறுமையால் சீவபோதமாகிய வெறிகொண்டு புலன்களின்வழியே உழல்கின்றன. அவை, தீதொரீஇ நன்றின்பாற் செலுத்தவல்ல ஆசிரியனைப் பெற்று அவனது உபதேசத்தின்வழி தற்போதம் அடங்கப் பெறின், அவை ஐந்தும் உயிர்க்குச் சிவஞானமாகிய பாலை நிரம்பத்தருவன என்னும் அரிய உண்மையினை விளக்கும் விடுகதைபோன்று அமைந்தது,

> பார்ப்பான் அகத்திலே பாற்பசு ஐந்துண்டு
> மேய்ப்பாரை யின்றி வெறித்துத் திரிவன
> மேய்ப்பாரும் உண்டாய் வெறியும் அடங்கினாற்
> பார்ப்பான் பசுஐந்தும் பாலாச் சொரியுமே. (2883)

எனவரும் திருமந்திரமாகும். இதுபோன்று இப்பகுதியில் வரும்பாடல்கள் ஒப்பொடுபுணர்ந்த உவமம், தோன்றுவது கிளந்த துணிவு ஆகிய பிசி என்னும் செய்யுள்வகையினை ஒத்து அமைந்திருத்தல் காணலாம். இவ்வாறு மறைபொருட்கிளவிகளாக வரும் திருமந்திரப் பாடல்களுக்கு அநுபவம் உடைய நல்லறிஞர்களைக்கொண்டு தெளிவான முறையில் பொருள்விளக்கங் காணுதல் தமிழ்வளர்ச்சிக்கும் சமய வளர்ச்சிக்கும் ஆக்கந்தரும் நற்பணியாகும்.

இவ் ஒன்பதாந் தந்திரத்தின் இறுதியிலமைந்த வரையுறைமாட்சி, அணைந்தோர்தன்மை, தோத்திரம், சர்வவியாபி என்னுந் தலைப்புக்களில் உள்ள திருமந்திரப்பாடல்கள், பசுகரணங்களெல்லாம் சிவகரணங்களாகப் பெற்றுச் சிவபோகத்தில் திளைத் தின்புறும் அருளாளர்கள் ஆகிய சீவன் முத்தர்களது இயல்பினை இனிது புலப்படுத்துவனவாகும்.

திருமந்திரமும் திருக்குறளும்

திருமூலநாயனுர் அருளிய திருமந்திரமாலையில் தெய்வப்புலவர் திருவள்ளுவர் அருளிய திருக்குறளிலுள்ள சொற்றொடர்களும் கருத்துக்களும் ஆங்கு ஆங்கே இடம் பெற்றுள்ளன. அவற்றுள் தெளிவாகத் தெரிந்தவற்றை இங்குத் தொகுத்து நோக்குதல் இன்றியமையாத தாகும்.

1. 'ஆரும் அறியரார் அகரம் அவனென்று - (1751)
'அகரமுதலாய் அனைத்துமாய் நிற்கும்' திருமந்திரம் (1753)

அகரமுதலவெழுத் தெல்லாமாதி
பகவன் முதற்றே யுலகு. —திருக்குறள்–1

2. 'ஓதியுணரவல்லோமென்பர் உள்நின்ற
சோதி நடத்தும் தொடர் வறியாரே' —திருமந்திரம்–319

கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின். – திருக்குறள்–2

3. 'போதுகந் தேறும் புரிசடையான்' —632
'மலருறை மாதவன்' (1531)
'கமலத்துறையீசனை' (2092)
'உடந்த செந்தாமரையுள்ளுறு சோதி
நடந்த செந்தாமரை' —திருமந்திரம் (2484)

மலர்மிசை யேகினுன் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார். —திருக்குறள்–3.

4. 'ஐந்து வென்றனன்' —திருமந்திரம்–1

'பொறிவாயில் ஐந்தவித்தான்' —திருக்குறள்–5

5. 'தன்னை யொப்பாயொன்றும் இல்லாத் தலைமகன்'
—திருமந்திரம்–7

'தனக்கு உவமை யில்லாதான்' —திருக்குறள்–7

6. பிறவாநெறிதந்த பேரருளாளன்
மறவா அருள் தந்த மாதவன் நந்தி
அறவாழி அந்தணன் ஆதிபராபரன்
உறவாகி வந்தென் உளம் புகுந்தானே. —திருமந்திரம்–1803

அறவாழி யந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லாற்
பிறவாழி நீந்த லரிது. —திருக்குறள்–8

7. 'சிறப்பொடு பூசனை செய்ய நின்றூர்க்கே' —திருமந்திரம்-1524
'சிறப்பொடு பூசனை செல்லாது' —திருக்குறள்-18

8. ' இறப்பும் பிறப்பு மிருமையும் நீங்கித்
துறக்குந் தவங்கண்ட சோதிப் பிரானை
மறப்பிலராய் நித்தம் வாய்மொழி வார்கட்
கறப் பயன் காட்டும் அமரர் பிரானே — திருமந்திரம்-1614

இருமை வகை தெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு. — திருக்குறள்-(23)

9. ' ஆக மதத்தன ஐந்துகளிறுள
ஆகமதத்தறி யோடணை கின்றில
பாகனு மெய்த்தவை தாமு மிளைத்தபின்
யோகு திருந்துதல் ஒன்றறி யோமே ' (2023)

' ஆனைகள் ஐந்தும் அடக்கி
வானகமேற வழியெளிதாமே ' — திருமந்திரம்-2316

உரனென்னுந் தோட்டியான் ஓரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து. — திருக்குறள்-24

10. ' ஆமே சுவையொளி யூறோசை கண்டவள் ' — திருமந்திரம்-1350

சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு — திருக்குறள்-27

11. ' அந்தண்மை பூண்ட அருமறை யந்தத்துச்
சிந்தைசெய் அந்தணர் ' — திருமந்திரம்-234

அந்தண ரென்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான். — திருக்குறள்-30

அந்தணர் என்பதற்கு அழகிய தண்ணளியினை யுடையார் எனத் திருவள்ளுவர் குறித்த காரணத்துடன் வேதத்தின் அந்தத்தை அணவுவோர் என மற்றொரு காரணத்தினையும் இயைத்துக்கூறும் நிலையில் அந்தண்மை பூண்ட அந்தணர், அருமறை யந்தத்துச் சிந்தைசெய் அந்தணர் எனத் திருமூல நாயனுர் கூறிய விளக்கம் இங்கு உணரத்தக்கதாகும்.

12. ' சிறந்தநீர் ஞாலஞ் செய்தொழில் யாவையும்
அறைந்திடில் வேந்தனுக் காறிலொன் றுமே '
— திருமந்திரம்-244

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்
கைம்புலத்தா றோம்பல் தலை. — திருக்குறள்-43

' ஐவகையும் அறஞ்செய்தற்கிடனுதலின் ஐம்புலம் என்றார். அரசனுக்கு இறைப்பொருள் ஆறில் ஒன்று யிற்று ; இவ்வைம்புலத்திற்கும் ஐந்துகூறுவேண்டுத லான் என்பதறிக ' எனப் பரிமேலழகர் கூறும் விளக்கம் இங்கு நினைத்தற்குரியதாகும்.

13. 'யாவர்க்குமாம் பிறர்க் கின்னுரை தானே' —திருமந்திரம்-252
'யார்மாட்டும் இன்புறூஉம் இன்சொலவர்க்கு' திருக்குறள்-94

14. 'ஒருமையு ளாமைபோல் உள்ளைந் தடக்கி
இருமையுங் கேட்டிருந்தார்புரையற்றே' (133)
'ஆமை யகத்தினி லஞ்சு மடங்கிடும்' —திருமந்திரம்-2158

ஒருமையு ளாமைபோல் ஐந்தடக்க லாற்றின்
எழுமையும் ஏமாப்புடைத்து. —திருக்குறள் 126.

15. இன்பம் இடரென் றிரண்டுற வைத்தது
முன்பவர் செய்கையினாலே முடிந்தது
இன்பம் அதுகண்டும் ஈகிலாப் பேதைகள்
அன்பிலார் சிந்தை அறம் அறியாரே. —திருமந்திரம்-267.

ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்கணவர். —திருக்குறள்-228.

16 தவமிக்கவரே தலையான வேடர்
அவமிக்கவரே அதிகொலை வேடர்
அவமிக்கவர் வேடத் தாகாரவ் வேடந்
தவமிக் கவர்க்கன்றித் தாங்கவொண் ணாதே.
—திருமந்திரம்-1661.

வேடநெறிநில்லார் வேடம்பூண் டென்பயன்
வேடநெறிநிற்பார் வேடம் மெய் வேடமே
வேடநெறிநில்லார் தம்மை விறல்வேந்தன்
வேடநெறி செய்தால் வீடது வாகுமே. —திருமந்திரம்-240.

தவமுந் தவமுடையார்க் காகு மவமதனை
அஃதிலார் மேற்கொள் வது. —திருக்குறள்-262.

17. 'கூற்றன் வருங்கால் குதிக்கலு மாமே' (172)
'காற்றைப் பிடிக்குங் கணக்கறி வாளர்க்குக்
கூற்றை யுதைக்குங் குறியது வாமே' —திருமந்திரம்-(571)

கூற்றங் குதித்தலுங் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு. —திருக்குறள்-269.

18. 'பறக்கின்ற ஒன்று பயனுறவேண்டின்
இறக்கின்ற காலத்தும் ஈசனையுள்கும்' (2108)
'உடம்போ டுயிரிடை நட்பறியாதார்
மடம்புகு நாய்போல் மயங்குகின்றாரே' —திருமந்திரம்.(2148)

குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
உடம்போ டுயிரிடை நட்பு. —திருக்குறள்-338)

19. பதமுத்தி மூன்றும் பழுதென்று கைவிட்
டிதமுற்ற பாச இருளைத் துரந்து
மதமற் றெனதியான் மாற்றி விட்டாங்கே
திதமுற் றவர்கள் சிவசித்தர் தாமே. —திருமந்திரம்-2525.

யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த வுலகம் புகும். —திருக்குறள்-346.

20. 'பற்றது பற்றிற் பரமனைப் பற்றுமின்' (298)
'பற்றற் றவர்பற்றி நின்ற பரம்பொருள்'—திருமந்திரம் (2865)

பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு. —திருக்குறள்-350.

21. 'சிந்தையுறவே தெளிந்திருள் நீங்கினால்' (1460)

இருள் நீக்கி எண்ணில் பிறவிகடத்தி
அருள் நீங்கா வண்ணமே ஆதியருளும்
மருள் நீங்கா வானவர் கோனொடுங் கூடிப்
பொருள் நீங்கா இன்பம் புணர்ந்தயின்றேனே —திருமந்திரம்.
(1516)

இருள்நீங்கி யின்பம் பயக்கும் மருள்நீங்கி
மாசறு காட்சி யவர்க்கு. —திருக்குறள்-352.

22. 'சத்தமுதல் ஐந்தும் தன்வழித் தான்சாரில்
சித்துக்குச் சித்தன்றிச் சேர்விடம் வேறுண்டோ'
—திருமந்திரம். (135)

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. —திருக்குறள்-354.

23. 'செம் பொருளான சிவமெனலாமே' (2573)

பிறந்தும் இறந்தும்பல் பேதைமை யாலே
மறந்து மலவிருள் நீங்க மறைந்து
சிறந்த சிவனருள் சேர்பருவத்துத்
துறந்த வுயிர்க்குச் சுடரொளியாமே. —திருமந்திரம். (1615)

பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ்
செம்பொருள் காண்ப தறிவு. —திருக்குறள்-358.

24. 'கலங்கிடுங் காம வெகுளிமயக்கம்' (1340)
காம வெகுளி மயக்க மிவைகடிந்
தேமம் பிடித்திருந் தேனுக் கெறிமணி
ஓமெனு மோசையி னுள்ளே யுறைவதோர்
தாம மதனைத் தலைப்பட்ட வாறே. —திருமந்திரம். (2436)

காம வெகுளி மயக்க மிவைமூன்றன்
நாமங் கெடக்கெடும் நோய். —திருக்குறள்-360

25. கணக்கறிந்தார்க் கன்றிக் காணவொண்ணாது
கணக்கறிந் தார்க்கன்றிக் கைகூடா காட்சி
கணக்கறிந் துண்மையைக் கண்டண்ட நிற்குங்
கணக்கறிந் தார்கல்வி கற்றறிந் தாரே —திருமந்திரம். (316)

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டுங்
கண்ணென்ப வாழு முயிர்க்கு. —திருக்குறள் 391.

26. 'துணையது வாய் வருந் தூயநற் கல்வியே'—திருமந்திரம். (294)

ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற்
கெழுமையு மேமாப் புடைத்து. —திருக்குறள்-398

27. 'கற்றவர் பேரின்பம் உற்றுநின்றுரே' —திருமந்திரம். (298)
தாமின் புறுவ துலகின்புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந்தார். —திருக்குறள்-399.

28. ஆர்க்கும் இடுமின் அவரிவர் என்னன்மின்
பார்த்திருந் துண்மின் பழம்பொருள் போற்றன்மின்
வேட்கை யுடையீர் விரைந்தொல்லை உண்ணன்மின்
காக்கை கரைந்துண்ணுங் கால மறிமினே.
—திருமந்திரம்-250.

செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு. (86)

பாத்தூண் மரீஇ யவனைப் பசி யென்னுந்
தீப்பிணி தீண்ட லரிது. (227)

காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்னநீ ரார்க்கே யுள. —திருக்குறள். (527)

29. தத்தஞ் சமயத் தகுதிநில் லாதாரை
அத்தன் சிவன் சொன்ன ஆகம நூல்நெறி
எத்தண்டமுஞ் செயும் உம்மையில், இம்மைக்கே
மெய்த்தண்டஞ் செய்வதவ் வேந்தன் கடனே.
—திருமந்திரம்-247.

குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்
வடுவன்று வேந்தன் றொழில். —திருக்குறள்-549.

30. நாடோறும் மன்னவன் நாட்டில் தவநெறி
நாடோறும் நாடி யவனெறி நாடானேல்
நாடோறும் நாடு கெடுமூட நண்ணுமால்
நாடோறுஞ் செல்வம் நரபதி குன்றுமே.
—திருமந்திரம்-239.

நாடொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாடொறும் நாடு கெடும். —திருக்குறள்-553.

31. 'ஒன்றேகுலனும் ஒருவனே தேவனும்' —திருமந்திரம். (2104)
'பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்' —திருக்குறள். (972)

திருமந்திரமும் ஏனைய திருமுறைகளும்

திருமந்திரம் :

1. ஒன்றவன் தானே இரண்டவன் இன்னருள்
நின்றனன் மூன்றினுள் நான்குணர்ந்தான் ஐந்து
வென்றனன் ஆறு விரிந்தனன் ஏழும்பர்ச்
சென்றனன் தானிருந் தானுணர்ந் தெட்டே.

ஈறாய்முத லொன்றாயிரு பெண்ணாண்குண மூன்றாய்
மாறாமறை நான்காய்வரு பூதம்மவை யைந்தாய்
ஆறார்சுவை ஏழோசையோ டெட்டுத்திசை தானாய்
வேறாயுட னானானிடம் வீழிம்மிழ லையே. (தேவாரம். 1–11–2)

இவ்விரு திருப்பாடல்களிலும் ஒன்றுமுதல் எட்டு வரையுள்ள எண்கள் எண்ணலங்காரம் அமையப் பயின்றுள்ளமை ஒப்புநோக்கத் தக்கதாகும்.

'வென்றவன் புலனைந்தும்' (தே. 1–113–10)
'வென்றானைப் புலனைந்தும்' (தே. 5–98–7)

7. முன்னை யொப்பாயுள்ள மூவர்க்கு மூத்தவன்
தன்னை யொப்பா யொன்றும் இல்லாத் தலைமகன்
தன்னை யப்பா வெனில் அப்பனுமாயுளன்
பொன்னையொப்பாகின்ற போதகத்தானே.

'மற்றாருந் தன்னொப்பா ரில்லாதானை' (தே. 6–1–2)

என்னையப்பாவஞ்ச லென்பவ ரின்றிநின் றெய்த்தலைந்தேன்
மின்னையொப்பாய் விட்டிடுதி கண்டாய் உவமிக்கின்மெய்யே
உன்னையொப்பாய் மன்னும் உத்தரகோச மங்கைக்கரசே
அன்னையொப்பாயெனக் கத்தனொப்பாயென் அரும்பொருளே.
(திருவாசகம்-நீத்தல் விண்ணப்பம். 16)

8. 'தாயினும் நல்லன்'
தாயினும் நல்லதலைவர்' (தே. 3–123–5)
'தாயினும் நல்ல சங்கரனுக்கன்பர்' (தே. 5–100–9)

9. 'எம்மிறை, தன்னால் தொழப்படுவா ரில்லைதானே'.
'சேர்ந்தறியாக் கையானை' (திருவாசகம், திருவம்மானை-13)

10. 'தானே மழைபொழி தையலுமாய் நிற்கும்'.
'முன்னியவள் நமக்கு முன் சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோரெம்பாவாய்'
(திருவாசகம்-திருவெம்பாவை-16)

29. 'நாணநில்லேன் உனை நான் தழுவிக்கொள'
'நாணது வொழிந்து நாடவர்பழித்துரை
பூணது வாகக் கோணுதலின்றி' (திருவா-போற்றி-69,70)

30. 'ஆனின் றழைக்கு மதுபோல் என்னந்தியை
நானின் றழைப்பது ஞானங் கருதியே'
'கற்று மனமெனக் கதறியும் பதறியும்' (திருவா-போற்றித்-73)
'கற்றுவின் மனம்போலக் கசிந்துருகவேண்டுவனே'
(திருவா-திருப்புலம்பல்-2)

31. மண்ணகத்தா னொக்கும் வானகத்தா னொக்கும்
விண்ணகத்தா னொக்கும் வேதகத்தா னொக்கும்
பண்ணகத் தின்னிசை பாடலுற் றானுக்கே
கண்ணகத்தே நின்று காதலித் தேனே.

விண்ணகத் தான்மிக்க வேதத்துளான் விரிநீருடுத்த
மண்ணகத் தான்திரு மாலகத்தான்மரு வற்கினிய
பண்ணகத் தான்பத்தர் சித்தத்துளான்பழ நாயடியேன்
கண்ணகத் தான் மனத்தான் சென்னியானெங் கறைக்
கண்டனே. (தே. 4-112-6)

34. 'ஆர்ந்த சுடரன்ன ஆயிர நாமமும்'
'ஆயிரம் பேருகந்தானும் ஆரூரமர்ந்த அம்மானே' (தே.4-4-8)

36. 'எப்பரிசாயினும் ஏத்துமின் ஏத்தினால்
அப்பரிசீசன் அருள் பெறலாமே'

'அஞ்சியாகிலும் அன்புபட்டாகிலும்
நெஞ்சம்வாழி நினைநின்றி யூரை நீ' (தே. 5-23-6)

38. 'பிதற்றொழியேன் பெரியான் அரியானை'
'அரியானை அந்தணர்தஞ் சிந்தையானை...
பெரியானைப் பெரும் பற்றப் புலியூரானை' (தே. 6-1-1)

40 'குறைந்தடைந்தீசன் குரைகழல் நாடும்'
'குறைந்தடைந்தார் பாவம் போக்க கிற்பானை' (தே. 6-67-2)

50 சூடுவன் நெஞ்சிடை வைப்பன் பிரானென்று
பாடுவன் பன்மலர் தூவிப் பணிந்து நின்
றாடுவன் ஆடி அமரர் பிரானென்று
நாடுவன் யானின் றறிவது தானே.

'சூடுவேன் பூங்கொன்றை சூடிச் சிவன் திரள்தோள்
கூடுவேன் உள்ளுருகித்
தேடுவேன் தேடிச் சிவன் கழலே சிந்திப்பேன்
(திருவா-திருவம் மானை-17)

54 'திருநெறியாவது'
'திருநெறிய தமிழ்' (தே. 1-1-11)

61. 'சிவதன்மந்தானே சொல்காலத்தரனுய்'
'அறங்கொண்டு சிவதன்ம முரைத்தபிரான்' (தே. 2-43-6)

95. 'ஆரறிவார் எங்கள் அண்ணல் பெருமையை'
'இவர்தன்மை அறிவாரார்' (தே. 3-112-1)
'ஆரொருவர் அவர் தன்மையறிவார்' (தே. 6-11-8)

118. 'மலங்கள் ஐந்தாமென மாற்றி அருளி'
'மலங்கள் ஐந்தாற் சுழல்வன்' (திருவா-நீத்தல்-29)

123. 'அளித்தான் உலகெங்குந்தானானவுண்மை'
'உலகத்து, ஒரு நீயாகித் தோன்ற விழுமிய
பெறலரும் பரிசில் நல்குமதி' (திருமுருகாற்றுப்படை-293)

128. 'சோம்பர் கண்டாரச் சுருதிக்கண் தூக்கமே'

129. 'தூங்கிக் கண்டார் சிவலோகமுந்தம்முளே'

'சொற்பாவும் பொருள் தெரிந்து தூய்மை நோக்கித்
தூங்காதார் மனத்திருளை வாங்காதானை' (தே. 6-67-2)

130. 'மன்றுள் உமைகாண ஆடிடும்
செவ்வானிற் செய்ய செழுஞ்சுடர் மாணிக்கம்'
'அருமான வாண்முகத்தாள் அமர்ந்துகாண
அமரர்கணம் முடிவணங்க ஆடுகின்ற, பெருமானை'
(தே. 6-1-3)

134. 'புரையற்ற பாலினுள் நெய்கலந்தாற்போல்'
'கறந்த பால் கன்னலொடு நெய்கலந்தாற்போல'
(திருவா-சிவபுராணம்-46)

138. 'திருவடியேசெல் கதியது செப்பில்
திருவடியே தஞ்சம் உள்தெளிவார்க்கே'

"தென்னன் பெருந்துறையான்......
தாட்டாமரை காட்டித் தன் கருணைத் தேன்காட்டி"
(திருவா-திருவம்மானை-6)

"சேவடி படருஞ் செம்மலுள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்பிரிந்துறையுஞ்
செலவுநீ நயந்தனை யாயின்" —திருமுருகாற்றுப்படை.

143. மண்ணொன்றுகண்டீர் இருவகைப் பாத்திரந்
திண்ணென் றிருந்தது தீயினைச் சேர்ந்தது;
விண்ணின்று நீர்விழின் மீண்டுமண்ணானாற் போல்
எண்ணின்றி மாந்தர் இறக்கின்ற வாறே.

'புனல்பட வுருகி மண்டழல் வெதும்பிப் பூம்புனல்
பொதிந்துயிரளிக்கும்
வினைபடு நிறைபோல் நிறைந்தவேதகத் தென்மனம்
நெகமகிழ்ந்த பேரொளியே' (திருவிசைப்பா-5-6)

'எழிலையாழ் செய்கைப் பசுங்கலன் விசும்பி
னின்றுளிபட நனைந்துருகி
அழலையாழ் புருவம் புனலொடுங் கிடந்தாங்
காதனேன் மாதரார்கலவித்
தொழிலையாழ்நெஞ்சம் இடர்படா வண்ணந்
தூங்கிருள் நடுநல்யாமத்தோர்
மழலையாழ் சிலம்ப வந்தகம் புகுந்தோன்
மருவிடந் திருவிடைமருதே' (திருவிசைப்பா-10-7)

151. 'ஒன்பது வாசலும் ஒக்க அடைந்தன'
'ஒன்னுளே ஒன்பதுவாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும்போ துணரமாட்டேன்' (தே. 6-99-1)

182. 'சாலுமவ் வீசன் சலவியனாகிலும்
ஏல நினைப்பவர்க் கின்பஞ்செய் தானே'

'சலமிலன் சங்கரன் சார்ந்தவர்க்கலால்
நலமிலன் நாடொறும் நல்குவான் நலன்' (தே. 4-11-6)

230. 'நூலுஞ்சிகையும் நுவலிற் பிரமமோ'
'நூலும் வேண்டுமோ நுண்ணுணர்ந்தோர்கட்கே'
(தே. 5-39-8)

297. 'வழித்துணையாம் பெருந்தன்மை வல்லானே'
'வழித்துணையாம் மழபாடி வயிரத்தூணே' (தே. 6-40-10)
'வானநாடனே வழித்துணைமருந்தே' (தே. 7-70-9)

303. 'பெருமானிவனென்று பேசியிருக்குந்
திருமானிடர் பின்னைத்தேவருமாவர்'
'திருவாய்பொலியச் சிவாயநமவென்று
சிந்தைசெய்தேன்' (தே. 4-94-6)
'சிவமேபெறுந் திருவெய்திற்றிலேன்'
(திருவா-திருச்சதகம்-5)

304. 'வாச மலர்க்கந்த மன்னிநின்றானே'
'பூவினாற்றம் போன்றுயர்ந் தெங்கும்
ஒழிவற நிறைந்து மேவியபெருமை'
(திருவா-திருவண்டப்-115,6)

319. 'ஆதிப்பிரான்' 'ஆதியனாதிரையன்' (தே. 3-61-1,7-97-1)

339. 'கருத்துறை யந்தகன்... வருத்தஞ்செய்தானென்று...
குருத்துயர் சூலங்கைக்கொண்டு நின்றானே'

'இருள்மேவும் அந்தகன்மேற் றிரிசூலம் பாய்ச்சி'
(தே. 7-16-2)

340. 'கொலையிற் பிழைத்த பிரசாபதியைத்
தலையைத் தடிந்திட்டுத் தானங்கியிட்டு
நிலையுலகுக்கிவன் வேண்டுமென்றெண்ணித்
தலையை யரிந்திட்டுச் சந்திசெய்தானே'

'தக்கனையும் எச்சனையும் தலையறுத்துத்தேவர்கணம்
தொக்கனவந்தவர் தம்மைத் தொலைத்தது தானென்னேடீ
தொக்கனவந் தவர்தம்மைத் தொலைத்தருளியருள்
கொடுத்தங்
கெச்சனுக்கு மிகைத்தலைமற் றருளினன்காண் சாழலோ'
(திருவாசகம்-திருச்சாழல்-5)

341. 'அயன் தலை முன்னற, அங்கச்சுதனை உதிரங்கொண்டானே'
'அன்றயன் பொய்ச்சிரம், அயனகவ்வதறிந்து மற்றதில்
ஊனுகந்த அருத்தியே' (தே. 3-38-6)
'அயன்றலைகொண்டு செண்டாடல்பாடி'
(திருவா-திருப்பொற்-18)

342. 'பொங்குஞ்சலந்தரன் போர்செய்ய நீர்மையின்
அங்கு விரற்குறித் தாழி செய்தானே'
'செருமேவுசலந்தரனைப் பிளந்தசுடராழி' (தே. 7-16-2)
'சலமுடைய சலந்தரன்றன் உடல்தடிந்தநல்லாழி'
(திருவா-திருச்சாழல்-18)

345. 'காலுற்றுக் காலனைக் காய்ந்தங்கி யோகமாய்
ஞாலக் கடவூர் நயமாய் இருந்ததே.'
'அருமுனிக்காய்ச்
சூலமும் பாசமுங் கொண்டு தொடர்ந்தடர்ந்தோடிவந்த
காலனைக் காய்ந்தபிரான் கடவூருறை யுத்தமனே'
(தே. 4-107-6)

347. அடிசேர்வன் என்ன எம் ஆதியைநோக்கி
முடிசேர் மலைமகனார் மகளாகித்
திடமார் தவஞ்செய்து தேவரறியப்
படியார அர்ச்சித்துப் பத்திசெய்தாளே.

'குரும்பைமுலை மலர்க்குழலி கொண்டதவங்கண்டு
குறிப்பினொடுஞ் சென்றவள் தன் குணத்தினை நன்கறிந்து
விரும்புவரங் கொடுத்தவளை வேட்டருளிச் செய்த
விண்ணவர் கோன் கண்ணுதலோன்' (தே. 7-16-1)

351. உறுவ தறிதண்டி ஒண்மணற் கூட்டி
அறுவகை ஆனைந்தும் ஆட்டத்தன் தாதை
செறுவகை செய்து சிதைப்ப முனிந்து
மறுமழு வால்வெட்டி மாலைபெற் றானே.

தழைத்ததோ ராத்தியின்கீழ்த் தாபர மணலாற் கூப்பி
அழைத்தங்கே யாவின்பாலைக் கறந்துகொண் டாட்டக்கண்டு
பிழைத்ததன் தாதை தாளைப் பெருங்கொடு மழுவால் வீசக்
குழைத்ததோ ரமுதமீந்தார் குறுக்கைவீ ரட்டனாரே.
(தே. 4-49-3)

358. அரிபிரமன் தக்கன் அருக்கனுடனே
வருமதி வாலை வன்னிநல் லிந்திரன்
சிரமுக நாசி சிறந்தகை தோள்தான்
அரனரு ளின்றி யழிந்தநல் லோரே.

'அங்கி அருக்கன் இராவணன் அந்தகன் கூற்றன்
செங்கண் அரியயன் இந்திரனுஞ் சந்திரனும்
பங்கமில் தக்கனும் எச்சனுந்தம பரிசழியப்
பொங்கியசீர் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ'
(திருவா-பூவல்லி-15)

409. அப்பரி செண்பத்துநான்கு நூருயிரம்
'உரைசேரும் எண்பத்து நான்கு நூருயிரமாம்
யோனி பேதம்' (தே. 1-132-4)

434 'ஆண்பெண் அலியுருவாய்நின்ற ஆதியை'
'ஆணொடு பெண் அலியல்லராஞர்' (தே 6-75-5)

504. 'காவலன் பேர்நந்தி காட்டித்துக் கண்டவன்
ஏவன செய்யும் இளங்கிளையோனே'
'இளங்கிளை யாரூரன்' (தே. 7-29-10)

513. 'கடலிற் கெடுத்துக் குளத்தினிற் காண்டல்'
'ஆற்றிற்கெடுத்துக் குளத்தினிற்றேடிய ஆதரைப்போல்'
(தே. 4-97-6)

803. 'மூவரும் முப்பத்து மூவரும்' திருவாசகம்

1064. 'புளியுறு புன்பழம் போலுள்ளே நோக்கி'
'அளிபுண்ணகத்துப் புறந்தோல்மூடி யடியேனுடையாக்கை
புளியம்பழமொத்திருந்தேன்' (திருவா-ஆசைப்பத்து-5)

1078,1079. 'தென்னன்'
'தென்னவனெனை யாளுஞ்சிவனவன்' (தே. 5-21-5)
'தென்ஞடுடைய சிவனே போற்றி' (திருவா-போற்றித்-)

1105. 'இனிய தென்மூலை யிருக்குங் குமரி'

1099. 'கன்னித்துறை' 'குமரித்துறை' (தே. 5-99-2)

1100. 'நீலக்குவளை மலரன்ன கண்ணிஞள்'
'சுனையுள் நீலஞ்சுளியும் நெடுங்கண்ணுள்' தே. 5-23-5)

1104. 'வேயனதோளி'—'வேயனைய தோளுமை' (தே. 3-69-4)
'வேயுறு தோளி' (தே. 2-85-1)

1158. வெள்ளடையான்—'வெள்ளடை நீயன்றே' (தே. 7-29-1)

1178. 'வாயுமனமுங் கடந்த மனோன்மனி...
அரனுக்குத், தாயும் மகளும நல்தாரமும் ஆமே'
'எம்பெருமான் இமவான்மகட்குத்
தன்னுடைக்கேள்வன் மகன் தகப்பன் தமையன்'
(திருவா-பொற்-13)

1243. 'அவிக்கொண்ட சோதிக்கோர் அர்ச்சனை தானே'
'பூசனையீசனுர்க்குப் போற்றவிக் காட்டினோமே'
(தே. 4-76-4)

1245. 'நயனங்கண் மூன்றுடை, விற்கொடி மாது'
'நயனங்கண் மூன்றுடைய நாயகன்'
(திருவா-திருச்சாழல்-4)

1309. ஏகபராசத்தி யீசற்காம் அங்கமே.
'யாவையுமாம் ஏகத்தொருவன்'
(திருச்சிற்றம்பலக்கோவை-7)

1330. 'பரமாய பரஞ்சுடர்'
'பண்ணுரின்றமிழாய்ப் பரமாய பரஞ்சுடரே' (தே. 7-24-5)

1423. இணையார் திருவடி. (திருவா-திருப்பூவல்லி-1)

1433. 'சிந்தையைத்தேற்றிச் சிவமாக்கி'
'சிந்தையுந் தெளிவுமாகித் தெளிவினுட் சிவமுமாகி'
(தே. 4-48-5)

1437. 'சென்று சிவமாதல் சித்தாந்த சித்தியே'
'சிவமானவாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ'
(திருவா-திருத்தெள்-4)

1455. 'சித்தங் குருவருளாற் சிவமாகுமே'
'சித்தஞ் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கும்
அத்தன்' (திருவா-திருத்தோணுேக்கம்-6)

1459. 'பூவினிற்கந்தம் பொருந்தியவாறுபோற்
சீவனுக்குள்ளே சிவமணம் பூத்தது'
'உற்ற வாக்கையி னுறுபொருள் நறுமல ரெழுதரு
நாற்றம்போற்
பற்றலாவதோர் நிலையிலாப் பரம்பொருள்'
(திருவா-அதிசயப்பத்து-9)

1486. 'பசுபாசம் நீக்கிப் பதியுடன் கூட்டி'
'பசுபாசம் அறுத்தருளி' (திருவா-கண்டபத்து-7)

1520. 'செய்யன் கரியன் வெளியன் நற்பச்சையன்'
'வெளியாய் கரியாய் பச்சையனேசெய்ய மேனியனே'
(திருவா-நீத்தல்-31)

1527. 'இருவினை நேரொப்பில் இன்னருட்சத்தி
குருவென வந்து'
'உணக்கிலாததொர் வித்துமேல் விளையாம லென்வினை
ஒத்தபின்
கணக்கிலாத் திருக்கோல நீவந்து காட்டினுய்
கழுக்குன்றிலே'
(திருவா-திருக்கழுக்குன்றப் பதிகம்-1)

1529. 'நாதன் என்னுள்புகுந்து, ஊனைவிளக்கியுடனிருந்தானே'
'ஊனினை யுருக்கியுள்ளொளி பெருக்கி' (திருவா-பிடித்த-9)

1530. 'ஆயத்துள் நின்ற அறுசமயங்களும்
காயத்துள் நின்ற கடவுளைக் காண்கிலா'
'இருமுச் சமயத்தொரு பேய்த்தேரினை'
(திருவா-திருவண்டப்-79)
'காயத்துள் எமுதூறவூறநீ கண்டுகொள்'
(ஷை சென்னிப்-5)

1534. 'சிவமல்லதில்லை யறையே'
'சிவனெனும் ஓசையல்ல தறையோ' (தே. 4-8-1)

1538. ‘குற்றந் தெளியார் குணங்கொண்டு கோதாட்டார்’
‘குற்றங்கள் நீக்கிக் குணங்கொண்டு கோதாட்டி’
(திருவா-திருவம்மானை-20)

1542. ‘பேதஞ்செய்யாதே பிரானென்று கைதொழில்
ஆதியும் அந்நெறியாகி நின்றானே’

‘எங்கேனும் யாதாகிப் பிறந்திடினுந் தன்னடியார்க்கு
இங்கேயென் றருள்புரியும் எம்பெருமான்’ (தே, 2-40-6)
‘யாதொர் தேவ ரெனப்படுவார்க்கெலாம்
மாதேவன்னலால் தேவர்மற்றில்லையே’ (தே. 5-100-4)

1556. ‘ஓங்காரத்துள்ளொளி யுள்ளே யுதயமுற்
றுங்காரமற்ற அநுபவம்’
‘உய்ய வென்னுள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற’
(திருவா-சிவபுராணம் 33,34)

1557. ‘சமையங்க ளாறுந்தன் தாளிணை நாட’
‘திருத்தகும் அறுவகைச் சமயத் தறுவகையோர்க்கும்
வீடு பேறாய் நின்ற’ (திருவா-திருவண்டப்-17,18)

1568. ‘எத்தவ மாகிலென் எங்குப் பிறக்கிலென்
ஒத்துணர்வார்க் கொல்லை யூர்புகலாமே’
‘எத்தவத்தோர்க்கும் இலக்காய்நின்ற எம்பெருமான்’
(தே 1-4-10)
‘எங்கேனும் யாதாகிப் பிறந்திடினும்’ (தே· 2-40-6)

1582. ‘சித்தம் யாவையும் திண்சிவமானக்கால்
அத்தனு மவ்விடத்தே யமர்ந்தானே’
‘சித்தஞ்சிவமாக்கிக் செய்தனவேதவமாக்கும், அத்தன்’
(திருவா-திருத்தோ-6)

1590. ‘தாள்தந்தபோதே தலைதந்த எம்மிறை’
‘தாழ்த்தச் சென்னியுத் தந்த தலைவனை’ (தே. 5-90-7)

1595. ‘என்னைச் சிவமாக்கி’
‘சிவமாக்கி எனையாண்ட அத்தன்’ (திருவா-அச்சோப்-1)

1604. ‘மந்திரமாவதும்’ ‘மந்திரமாவது நீறு’ (தே. 2-66-1)

1608. ‘அச்சங்கெடுத்தென்னையாண்டனன் நந்தியே’

2456. ‘அச்சமறுத்தென்னை யாண்டனன் நந்தியே’
‘அச்சந்தீர்த் தாட்கொண்டான்’ (திருவா-திருச்சதகம் 29)

1616. ‘அறவன் பிறப்பிலி யாருமிலாதான்
உறைவதுகாட்டகம் உண்பது பிச்சை’
‘உண்பது மூரிடு பிச்சை’ (தே. 1-39-2)
‘மூப்பதுமில்லை பிறப்பதுமில்லை யிறப்பதில்லைச்
சேர்ப்பது காட்டகத்தூரினும்’ (தே. 7-18-1)

1631. சாத்திரம் ஓதுஞ்சதுர்களை விட்டுநீர்
மாத்திரைப்போது மறித்துள்ளே நோக்குமின்
பார்த்தஅப் பார்வை பசுமரத் தாணிபோல்
ஆர்த்த பிறவி யகலவிட் டோடுமே.

'சாத்திரம் பல பேசுஞ் சழக்கர்காள்
கோத்திரமுங் குலமுங் கொண் டென்செய்வீர்
பாத்திரஞ் சிவமென்று பணிதிரேல்
மாத்திரைக்குள் அருளுமாற் பேறரே' (தே. 5-60-3)

'பசுமரத்தாணி யறைந்தாற்போல' (திருவா. போற்றித்-65)
'ஆர்த்தபிறவித் துயர்கெட' (ஷை திருவெம்பாவை-12)

1689. 'மன்னும் மலம் ஐந்தும்'
'மலங்கள் ஐந்தாற் சுழல்வன்' (திருவா. நீத்தல்-29)

1693. 'கொள்ளினும் நல்ல குருவினைக் கொள்ளுக'
உள்ளபொருளுடல் ஆவியுடனீக'

1778 'உடல்பொருளாவி யுதகத்தாற்கொண்டு'
'அன்றேயென்றன் ஆவியும் உடலும் உடைமையெல்லாமுங்
குன்றேயனையாய் என்னையாட்கொண்டபோதே
கொண்டிலையோ' (திருவா. குழைத்த-7)

1715. 'அண்டங்கடந்தப்புற நின்றுகாத்தனன்'
'அண்டமாரிருளூடுகடந்தும்பர்
உண்டுபோலுமோ ரொண்சுடர்' (தே. 5-97-2)

1781. 'தட்டொக்க மாறினன் தன்னையும் என்னையும்
வட்டம தொத்தது வாணிபம் வாய்த்ததே'
'தந்ததுன்றன்னைக் கொண்டதென்றன்னைச் சங்கரா
ஆர்கொலோ சதுரர்
அந்தமொன்றில்லா ஆனந்தம் பெற்றேன் யாதுநீ
பெற்றதொன்றென்பால்' (திருவா. கோயிற்-10)

1788. 'நானென நீயென வேறில்லை'
'நிச்சம் என நெஞ்சின் மன்னி யானாகி நின்றானே'
(திருவா. உயிருண்ணிப்-9)

1796. 'ஊனே யுருகி யுணர்வை யுணர்ந்தபின்
தேனே யனையனந் தேவர்பிரானே'
'ஊனினையுருக்கி யுள்ளொளிபெருக்கி யுலப்பிலா
ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம்புறந்திரிந்த செல்வமே'
(திருவா. பிடித்த-9)

1797. 'ஊனறிந்துள்ளே யுயிர்க்கின்ற ஒண்சுடர்
தானறியான்பின்னை யாரறிவாரே'
'என்னைத்தன்னடி யானென் றறிதலும்
தன்னை நானும் பிரானென் றறிந்தேனே' (தே. 5-91-8)

1798. 'அருளெங்குங் கண்ணுன தாரறிவாரே'
'அவனருளே கண்ணுகக் காணினல்லால்' (தே. 6-97-10)

1812. 'நேயத்தே நின்றிடும் நின்மலன்'
'நேயத்தே நின்ற நிமலனடி போற்றி' (சிவபுராணம்–13)

1815 'வாராவழிதந்த மாநந்தி' 'பேராயிரமுடைப்பெம்மான்'
'வாராவழியருளி' (திருவா. திருவெண்பா-7)
'பேராயிரமுடைப் பெம்மான்போற்றி' (ஷை போற்றித் 200)

1820. 'புறமே திரிந்தேனைப் பொற்கழல்சூட்டி'
'புறமே போந்தேன் யான்' (ஷை திருச்சதகம்–87)

1823. உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பாலயம்
வள்ளற்பிரானுர்க்கு வாய்கோபுரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்துங் காளாமணி விளக்கே.

1824. 'பாட்டவி காட்டுதும் பாலவியாமே'
காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி யிலிங்கமாக
நேயமே நெய்யும் பாலா நிறைய நீரமைய வாட்டிப்
பூசனை யீசனுர்க்குப் போற்றவிக் காட்டினோமே'(தே.4-76-4)

1828. 'புண்ணியஞ் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு'
'இட்டுக்கொள்வன பூவுள நீருள' (தே. 5-91-6)

1836. 'நயனங்கள் மூன்றுடையான்'
'நயனங்கள் மூன்றுடைய நாயகனே' (திருவா. திருச்சாழல்)

1838. 'பூவொடு நீர்சுமந்தேத்தி'
'போதொடு நீர்சுமந்தேத்தி' (தே. 4-3-1)

1857. 'படமாடக் கோயிற்பகவர்'
'பராவுசிவர்' (தே. 3-67-6)

1890. அங்கார்பசியும் அவாவும் வெகுளியுந்
தங்கார் சிவனடியார் சரீரத்திடைப்
பொங்கார் புவனத்தும் புண்ணிய லோகத்தும்
தங்கார் சிவனைத் தலைப்படுவாரே.

'மண்புகார் வான்புகுவர் மனமிளையார் பசியாலுங்
கண்புகார் பிணியறியார் கற்றுருங் கேட்டாரும்
விண்புகார் எனவேண்டா வெண்மாட நெடுவீதித்
தண்புகார்ச் சாய்க்காட்டெந் தலைவன்தாள் சார்ந்தாரே'
(தே. 2-41-1)

1891. 'மெய்யக ஞானமிகத் தெளிந்தார்களுங்
கையக நீண்டார் கடைத்தலைக்கே செல்வர்'
'அங்கையோடேந்திப் பலிதிரி கருவூர் அறைந்தசொன் மாலையாலாழிச்
செங்கையோ டுலகில் அரசுவீற்றிருந்து திளைப்பதுஞ்
சிவனருட்கடலே' (திருவிசைப்பா-1)

2031. 'குட்ட மொருமுழ முள்ள தரைமுழம்
வட்ட மமைந்ததோர் வாவியுள் வாழ்வன'
'ஒருமுழ முள்ள குட்டம் ஒன்பது துறையுடைத்தாய்
அரைமுழம் அதனகலம் அதனில் வாழ் முதலை யைந்து'
(தே. 4-44-2)

2067, கண்காணி யில்லென்று கள்ளம்பல செய்வார்
கண்காணியில்லா விடமில்லை காணுங்கால்
கண்காணியாகக் கலந்தெங்கு நின்றானைக்
கண்காணி கண்டார் களவொழிந்தாரே.

'கள்ளனேன் கள்ளத்தொண்டாய்க் காலத்தைக் கழித்துப் போக்கித்
தெள்ளியே னாகிநின்று தேடினேன் நாடிக்கண்டேன்
உள்குவார் உள்கிற்றெல்லாம் உடனிருந் தறிதியென்று
வெள்கினேன் வெள்கிநானும் விலாவிறச் சிரித்திட்டேனே'
(தே. 4-75-3)

2071. 'தேயத்துளே யெங்குந் தேடித் திரிவர்கள்
காயத்துள் நின்ற கருத்தறியாரே'

'தேடிக்கண்டுகொண்டேன்-திருமாலொடு நான்முகனுந்
தேடித் தேடொணாத் தேவனை என்னுளே,
தேடிக்கண்டு கொண்டேன்' (தே. 4-9-12)

2085. 'வாதுசெய்தென்னோ மனிதர்பெறுவது'
'வாதுசெய்து மயங்கும் மனத்தராய்' (5-100-4)

2097. இருந்தேன் மலரளை ந் தின்புற வண்டு
பெருந்தேன் இழைக்கின்ற பெற்றிமை யோரார்
வருந்தேன் நுகராது வாய்புகு தேனை
அருந்தேனை யாரும் அறியகிலாரே,

'தினைத்தனை யுள்ளதோர் பூவினிற்றே னுண்ணாதே
நினைத்தொறுங் காண்டொறும் பேசுந்தொறு மெப்போதும்
அனைத்தெலும் புண்ணெக ஆனந்தத் தேன் சொரியுங்
குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ'
(திருவா. திருக்கோத்தும்பி)

2103. 'செல்லு மளவுஞ் செலுத்துமின் சிந்தையை'
'செல்லுமா செல்லச் செலுத்துமா றறியேன்'
(தே 7-67-6)

2107. 'சாகின்றபோதுந் தலைவனை நாடுமின்'

2110. 'இறக்கின்ற காலத்தும் ஈசனையுள்கும்'
'நாமம் பரவி நமச்சிவாயவென்னும் அஞ்செழுத்தும்
சாமன் றுரைக்கத் தருதிகண்டாயெங்கள் சங்கரனே'
(தே. 4-103-3)

2114. 'சார்த்தவர்க்கின்பங் கொடுக்குந் தழல்வண்ணன்
பேர்ந்தவர்க் கின்னுப் பிறவி கொடுத்திடும்'
'சார்ந்தவர்க் கின்பங்கள் தழைக்கும்வண்ணம் நேர்ந்தவன்'
(தே 1·113-5)

'சலமிலன் சங்கரன் சார்ந்தவர்க்கலால்
நலமிலன் நாடொறும் நல்குவான் நலன்' (தே. 4-11-6)

2115. 'முத்தியை ஞானத்தை முத்தமிழ் ஓசையை'
'நெய்த்தலைப்பால்போல்'
'பலவோசைத் தமிழவையும்...ஆனுன்' (தே. 1-11-4)
'பிரைசேர் பாலின் நெய்போல'
(திருவாச. கோயின்மூத்த-5)

2117. 'நஞ்சற்றவர்க்கன்றி நாடவொண்ணுதே'
'உருகி நைபவர்க்கல்லால் ஒன்றுங்கைகூடுவதன்ருல்'
(தே. 2-90-5)

2171. 'பிச்சன் பெரியன் பிறப்பிலி'
'பிச்சன் பிறப்பிலி பேர்நந்தி' (தே. 4·80-4)

2175. 'ஆவன ஆவ அழிவ அழிவன'
'ஆவதும் அழிவதெல்லாம் அவர் செயல்'
(பெரிய. திருஞான-736)

2185. 'நாடிய மண்டல மூன்று'

2219. 'மண்டல மூன்றினுள் மாயநன் ஞடனை

'என்னிடைக்கமலம் மூன்றினுள் தோன்றி
யெழுஞ்செழுஞ் சுடரினை' (திருவிசைப்பா. 5·4)

2244. முர்மலங்கூடி முயங்கி மயங்குவோர்
அம்மெய்ச் சகலத்தர்.
'மும்மை மலமறுவித்து' (திருவா. அச்சோப்-9)
'மும்மை மாமலங்களற வீடருள்தில்லை'
(பெரிய தடுத்தாட்-92)

2313. 'கறங்கோலை கொள்ளிவட்டம் கடலில்திரை
'கறங்கோலை போல்வதோர் காயப் பிறப்போடிறப்
பென்னும்' (திருவா. திருத்தெள்-8)

2316. 'ஆனைகள் ஐந்தும் அடக்கி'
'ஞானத்திரியைக் கொளுவி'
'தொண்டரஞ்சு களிறும் அடக்கி' (தே. 2·114-1)
'ஞானவிளக்கினையேற்றி' (தே 2·22-3)

2330. 'தத்துவஞானந்' (தே. 5-46-7)

2331. 'தன்னையறிந்து சிவனுடன்தாருக
மன்னுமலங் குணமாளும் பிறப்பறும்'

2337. ‘சேருஞ் சிவமானார் ஐம்மலந் தீர்ந்தவர்’
‘சிவமானவாபாடித் தெள்ளேணங்கொட்டாமோ’
(திருவாசகம்)

2340. ‘அவமும் சிவமும்’
‘அவம்பெருக்கும் புல்லறிவின்
சிவம் பெருக்கும் பிள்ளையார்’ (பெரிய. திருஞான–26)

2349. ‘தன்னில் தன்னையறியும்’

இத்திருப்பாடல் சில சொல் வேறுபாட்டுடன் திருநாவுக்கரசர் குறுந்தொகைத் திருப்பாடலாக (தே. 5-97-29) அமைந்துள்ளமை முன்னர் விளக்கப்பெற்றது 1

2366. ‘என்னை யறிந்திலேன் இத்தனை காலமும்
என்னையறிந்தபின் ஏது மறிந்திலேன்
என்னையறிந்திட் டிருத்தலுங் கைவிடா
தென்னையிட் டென்னை உசாவுகின் றானே.

2428. ‘எந்தையும் என்னையறியகிலாளுகில்
எந்தையை யானும் அறியகிலேனே’
‘என்னையேதும் அறிந்திலன் எம்பிரான்
தன்னை நானும் முன் ஏது மறிந்திலேன்
என்னைத் தன்னடி யானென் றறிதலும்
தன்னை நானும் பிரானென் றறிந்தெனே’ (தே. 5-91-8)

2397. ‘வேதமோடாகமம் மெய்யாம் இறைவனூல்
ஓதும் பொதுவுஞ் சிறப்புமென்றுள்ளன’
‘வேதநெறிதழைத்தோங்க மிகுசைவத்துறைவிளங்க’
(பெரிய-திருஞான–1)
‘வேதப்பயனுஞ்சைவமும்போல்’ (ஷை-சண்டேச–9)

2446. ‘கன்று நினைந்தெழு தாயென வந்தபின்’
‘கன்றை நினைந்தெழு தாயென வந்த கணக்கது வாகாதே’
(திருவாசகம்-திருக்கழுக்குன்றப்)

2453. ‘ஆதியும் அந்தமும் இல்லா அரும்பதி
சோதிப் பரஞ் சுடர்’

2963 ‘அந்தமும் ஆதியும் இல்லா அரும்பொருள்’
‘ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை’ (திருவா-திருவெம்–1)
‘சோதியே சுடரே’ (ஷை அருட்பத்து–1)

2455. ‘செம்மை முன்னிற்பச் சுவேதந் திரிவபோல்
அம்மெய்ப் பரத்தோ டணுவனுள்ளாயிட’
‘மெய்த்தாறு சுவையுமேழிசையுமெண்குணங்களும் விரும்பு நால்வே
தத்தாலு மறிவொண்ணு நடைதெளியப்
பளிங்கே போல் அரிவை பாகம்
ஒத்தாறு சமயங்கட் கொருதலைவன்’ (தே. 1–131–1)

1, பன்னிரு திருமுறை வரலாறு முதற் பகுதி, பக்கம்–563,

2457. 'தன்னை யளித்தான் றற்பரமாகவே'
'தன்னைத்தந்த என்னாரமுதை' (திருவா-புணர்ச்சிப்-1)

2477. பெத்தம் அறுத்த பெரும் பெருமானே.
'பெரும் பெருமான் என் பிறவியை வேரறுத்துப்பெரும்பிச்சுத்
தரும் பெருமான்' (திருவா-அடைக்கலப்-3)

2499. 'சிவாயநம வெனத் தேறிலே'

2709. 'தெளிய வோதிச் சிவாயநம வென்னுங்
குளிகையிட்டுப் பொன்னாக்குவன் கூட்டையே'
'திருவாய்ப்பொலியச் சிவாயநமவென்று சிந்தைசெய்தேன்'
(தே. 4-94-6)
'நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநமவெனப்பெற்றேன்'
(திருவா-திருவேசறவு-10)

2515. 'என்னிலும் என்னுயிராய இறைவனை'
'என்னிலாரு மெனக்கினியாரில்லை
என்னிலும் இனியானொரு வன்னுளன்
என்னுளே யுயிர்ப்பாய்ப்புறம் போந்துபுக்
கென்னுளே நிற்கும் இன்னம்ப ரீசனே' (தே. 5-21-1)

2520. 'கன்று மனத்தார் தங் கல்வியுள் நல்லவன்'
'கற்றகல்வியிலும் இனியானை' (தே. 7-56-5)

2529. 'மொட்டலர் தாமரை மூன்றுள மூன்றினும்
விட்டலர்கின்றனன் சோதி விரிசுடர்'

2432. 'ஒன்றுண்டு தாமரை ஒண்மலர் மூன்றுள'
'பூவானமூன்றும் முந்நூற்றறுபதுமாகும் எந்தை'
(தே. 4-29-9)
'என்னிடைக்கமல மூன்றினிற்றேன்றி
யெழுஞ்செழுஞ்சுடரினை' (திருவிசைப்பா. 5-4)

2531. திசையெட்டுந் தேரெட்டுந் தேவதையெட்டும்
வசையெட்டுமாய் நின்ற ஆதிப்பிரானை
வகையெட்டு நான்குமற் றுங்கே நிறைந்து
முகையெட்டு முள்நின் றுதிக்கின்றவாறே
'புகையெட்டும் ... திசையெட்டுந்தெரிப்பதற்கு'
(தே. 6-34-9)

2573. 'செம்பொருளான சிவமெனலாமே'
'செம்மையேயாய சிவபதம்' (திருவா-பிடித்த-3)

2575. 'மனவாசகங் கெட்டமன்னனை'
'மனவாசகங்கடந்தான்' (திருவா-உயிருண்ணிப்-3)

2581. 'அறிவானிருந்தங் கறிவிக்கினல்லால்
அறிவானறிந்த அறிவறியோமே'
'காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக்காலே'
(தே. 6-95-3)

2592. ' இரும்புண்ட நீரென என்னையுள் வாங்கி
... இதயத்துளானே '
' ஏதிலென் மனத்துக்கோ ரிரும்புண்ட நீரை ' (தே. 7-58-1)

2594. ' அந்தமுமாதியும் ஆகும் பராபரன் '
' அந்தமுமாதியுமாகிய அண்ணலார் ' (தே. 1-39-1)

2600. ' மெய்கலந்தாரொடு மெய்கலந்தான் றன்னைப்
பொய்கலந்தார் முன் புகுதா வொருவனை '

2601, 2604-ஆம் பாடல்கள்.

' பொய்யர்தம் பொய்யனை மெய்யர்மெய்யை '
(திருவா-திருப்பொற்-12)

2607. ' வம்புபழுத்த மலர்ப்பழம் ஒன்றுண்டு '
' கொம்பி லரும்பாய்க் குவிமலராய்க் காயாகி
வம்பு பழுத்துடலம் மாண்டிங்ஙன் போகாமே '
(திருவா-குலாப்-6)

2615. மாடத்து ளானலன் மண்டபத் தானலன்
கூடத்து ளானலன் கோயிலுள் ளானலன்
வேடத்து ளானலன் வேட்கைவிட் டார்நெஞ்சின்
மூடத்து ளேநின்று முத்திதந் தானே.

' மாடத்தாடு மனத்துடன் வைத்தவர்...
வேடத்தார்தொழும் வீழி மிழலையே ' (தே. 5-12-4)

2615. ' ஆசை யறுமின்கள் ஆசை யறுமின்கள்
ஈசனோ டாயினும் ஆசை யறுமின்கள் '
' பாச மற்றில ராயினும் பார்மிசை
யாசை சங்கரற் காயின தன்மையால்
தேசு மிக்க திருவுருவானவர் ' (பெரிய-திருஞான-189)

2616. ' அடுவன பூதங்கள் ஐந்தும் உடனே '
' அடுவன அஞ்சுபூதம் அவைதமக்காற்றலாகேன் '
(தே. 4-76-10)

2617. ' உவாக்கடல் '
' உவாக்கடல் நள்ளுநீ ருள்ளகந் ததும்ப '
(திருவா-திருவண்டப்-169)

2622. ' கந்த மலரிற் கலக்கின்ற நந்தியை '
' பூவினுற்றம் போன்றுயர்ந்தெங்கும்
ஒழிவற நிறைந்து மேவியபெருமை '
(திருவா-திருவண்டப்-115, 116)

2624. ' அடியா ரடியா ரடியார் அடிமைக்
கடியனாய் நல்கிட் டடிமையும் பூண்டேன் '
' தில்லைவாழந்தணர்தம் அடியார்க்கும் அடியேன் '
(தே. 7-39-1-11)
' அத்தா ஆலங்காடாவுன் னடியார்க் கடியே னாவேனே '
(தே. 7-52-1)

2626. 'பத்தர்தம் பத்தியிற் பாற்படி னல்லது'
'பத்திவலையிற் படுவோன் காண்க'
(திருவா-திருவண்டப்-42)

2627. 'ஆன்கன்று தேடி யழைக்கு மதுபோல்
நான் கன்றாய்நாடி யழைத்தேனென் னுதனை'
'கற்று மனமெனக்கதறியும் பதறியும்' (திருவா-போற்றித்-73)

'கற்றாவின் மனம் போலக் கசிந்துருக வேண்டுவனே'
(ஷை-திருப்புலம்பல்-1)

2639. 'காலினில் ஊறும் கரும்பினிற் கட்டியும்
பாலினுள் நெய்யும் பழத்துள் இரதமும்
பூவினுள் நாற்றமும் போலுளன் எம்மிறை'

2857. } 'துணரின்மலர்க்கந்தந் துன்னி நின்றானே'
3035. }

'காலினூக்கங் கண்டோன்' (திருவா-திருவண்டப்-24)
'கரும்பினிற் கட்டி போல்வார் கடவூர் வீரட்டனாரே'
(தே. 4-31-4)
'பாலினெய்யாம் பழத்துளிரத மாம்' (தே. 6-15-1)
'பூவினாற்றம் போன்றுயர் ந்தெங்கும்
ஒழிவற நிறைந்து மேவிய பெருமை'
(திருவா-திருவண்டப்-115, 116)
'பூக்குளால் வாசமாய் மன்னிநின்ற கோத்தானும்'
(தே. 6-15-3)

2640. 'பொருப்பகஞ்சேர்தரு பொற்கொடிபோல, இருப்பர்'
'பொற்குன்றஞ் சேர்ந்த காக்கைபொன்னாமதுவே
புகல்' (தே. 7)
'காய்சினவானை வளருங் கனக மலையருகே
போயின காக்கையும் அன்றே படைத்தது
பொன்வண்ணமே' (பொன் வண்ணத்தந்தாதி-100)

2645. 'எறிவது ஞானத் துறைவாள் உருவி'

2968. 'நமன்வரின் ஞானவாள் கொண்டே எறிவன்'
'ஞானவாள் ஏந்தும் ஐயர்' (திருவா-திருப்படை-1)
'அறிவொண் கதிர் வாளுறை கழித்து' (ஷை திருப்பாண்டிப்-4)

2646. 'சோதிப்பன் அங்கே சுவடுபடா வண்ணம்
ஆதிக்கட் டெய்வ மவனிவனாமே'
'என்மனமே யொன்றிப் புக்கனன்போந்த சுவடில்லையே'
(தே. 4-81-3)

2651. 'நாடும் பெருந்துறை நான்கண்டு கொண்டபின்
கூடுஞ்சிவனது கொய்ம்மலர்ச் சேவடி'

'கொய்ம்மலர்ச் சேவடியிணையே குறுகினோமே' (தே. 6-98-1)
'பெருந்துறையுள்மேய பெருமான் பிரியா
திருந்துறையும் என்னெஞ்சத் தின்று'
(திருவா-திருவெண்பா-5)

2657. 'துரியங்கள் மூன்றுங் கடந்தொளிர் சோதி'
'துரியமு மிறந்த சுடரேபோற்றி' (திருவா-போற்றித்-195)

2658 ஆயன நந்தி யடிக்கென் தலைபெற்றேன்
வாயன நந்தியை வாழ்த்தவென் வாய்பெற்றேன்
காயன நந்தியைக் காணவென் கண்பெற்றேன்
சேயன நந்திக்கென் சிந்தைபெற்றேனே.

'வாழ்த்தவாயும் நினைக்க மடநெஞ்சுந்
தாழ்த்தச் சென்னியுந் தந்ததலைவனை'
(தே. திருக்குறுந் தொகை)

'சிந்தனைசெய்ய மனமமைத்தேன் செப்ப நாவமைத்தேன்
வந்தனை செய்யத் தலையமைத்தேன் கைதொழ
வமைத்தேன்' (பொன் வண்ணத்தந்தாதி-92)

2665. 'மருவிப்பிரியா எங்கள் மாநந்தி'
'மருவிப்பிரியாத மைந்தர்போலும்' (தே. 6-89-9)
'கலந்தபின் பிரிவதிலலை' (தே. 4-40-4)
'மருவிப்பிரிய மாட்டேனுன்' (தே. 7-77-3)
'மேவினர் பிரிய மாட்டா விமலன்' (பெரிய-கண்ணப்ப-174)

2666. 'நிலைப்பெறநாடி நினைப்பற வுள்கில்'
'நின்ற நின்றன்மை நினைப்பற நினைந்தேன்'
(திருவா-கோயிற்-7)

2670. 'சுந்தரச் சோதியுட் சோதியுமாமே'
'சுடர்ச் சோதியுட் சோதியான்' (தே. 1)

2676. 'ஓமெனும் ஓங்காரத்துள்ளே'
'ஓங்காரன் காண்' (தே. 6-24-2)
'ஓங்காரத்துட் பொருளாய் நின்றான்கண்டாய்'
(தே. 6-39-10)

'உய்யவென் னுள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா' (திருவா-சிவபுராணம்-33, 34)

2682. 'தாமரையிலே, இகலொளி செய்தெம்பிரானிருந்தானே'
'எரியாய தாமரைமேல் இயங்கினரும்
இடைமருதுமேவிய ஈசனாரே' (தே. திருத்தாண்டகம்)

2690. 'வளங்கொளியா நின்ற மாமணிச் சோதி'
'மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்'
(தே திருக்குறுந் தொகை)

2691. 'கலங்கிருள் நட்டமே கண்ணுதலாட'
'நள்ளிருளில் நட்டம் பயின்றாடு நாதனே'–(திருவா. சிவ-89)

2695. 'ஒளிபவளத்திருமேனி வெண்ணீற்றன்'
'சினபவளத் திண்டோண்மேற் சேர்ந்திலங்கு
வெண்ணீற்றனென்கின்றாளால்' –(தே. 4-6-1)

2699. நகாரமுதலாகு நந்திதன்னாமமே.
'நந்திநாம நமச்சிவாயவெனும்' –(தே. 3-49-11)
'நந்திதன்னாம நமச்சிவாய வென்பார் நல்லரே' (தே.)

2702. 'மரணங்கைவைத்துயிர் மாற்றிடும்போதும்
அரணங்கை கூட்டுவ தஞ்செழுத்தாமே'

'துஞ்சலுந் துஞ்சலிலாத போழ்தினும்
நெஞ்சக நைந்து நினைமி னாடொறும்
வஞ்சக மற்றடி வாழ்த்த, வந்தகூற்
றஞ்ச வுதைத்தன அஞ் செழுத்துமே. (தே. 3–22–1)

2704. 'தெள்ளமு தூறச் சிவாய நமவென்
றுள்ளமு தூறவொருகால் உரைத்திடும்'

'தெள்ளத் தேறித் தெளிந்து தித்திப்பதோர்
உள்ளத்தேற லமுதவொளி வெளி' (தே. 5–91–10)

'ஆலைப்படுகரும்பின் சாறுபோல
அண்ணிக்கும் அஞ்செழுத்தி னமத்தான் காண்' (தே. 6)

2730. பூதங்க ளைந்திற் பொறியிற் புலனைந்தில்
வேதங்க ளைந்தின் மிகுமா மகந்தன்னில்
ஓதுங் கலைகாலம் ஊழியுடன் அண்டப்
போதங்க ளைந்திற் புணர்ந்தாடுஞ் சித்தனே

'பூதங்க ளைந்தாகிப் புலனாகிப் பொருளாகிப்
பேதங்க ளனைத்துமாய்ப் பேதமிலாப் பெருமையனைக்
கேதங்கள் கெடுத்தாண்ட கிளரொளியை மரகதத்தை
வேதங்கள் தொழுதேத்த விளங்குதில்லை கண்டேனே'
(திருவா–கண்ட–10)

2732. 'கண்டங் கரியான் கருணை திருவுருக்
கொண்டங் குமைகாணக் கூத்துகந்தானே'

'அருமான வாண்முகத்தா ளமர்ந்து காண
அமரர்கணந் தொழுதேத்த ஆடுகின்ற பெருமானை'
(தே 6–1–3)

2740. 'அடியார் பொன்னம்பலத் தாடல் கண்டாரே'
'அடியார் நடுவுளிருக்கும் அருளைப் புரியாய்
பொன்னம்பலத் தெம் முடியாமுதலே'
(திருவா–கோயில்–மூத்த–1)
'அரைசேபொன்னம்பலத்தாடும் அமுதே' (ஷை–5)

2743. 'மாணிக்கக் கூத்தனை வண்டில்லைக்கூத்தனை'
'சேணிற் பொலிசெம்பொன் மாளிகைத்தில்லைச்
சிற்றம்பலத்து
மாணிக்கக் கூத்தன்' (திருக்கோவையார் 23)

2746. 'காளியோடாடி'
'ஆடினார்காளிகாண ஆலங்காட் டடிகளாரே' (தே. 4–68–8)
'கனிதரு செவ்வா யுமையொடு காளிக்
கருளிய திருமுகத் தழகுறு சிறுநகை இறைவன்'
(திருவா–கீர்த்தித்–142–44)

2758. ‘ஆறுமுகத்தி லதிபதி நானென்றும்’
‘தேறினர் தெற்குத் திரு அம்பலத்துளே’
‘வள்ளி வளைத்தோள் முதல வன்றன்னை’ (தே. 6–3–2)
‘தென்பாலுகந்தாடுந் தில்லைச்சிற்றம்பலவன்’
(திருவா–திருச்சாழல்–9)

2814. ‘அரியன் பெரியனென் றுட்பட்டதல்லால்
கரியன்கொல் சேயன்கொல் காண்கின்றிலேனே’
‘அன்றுந் திருவுருவங் காணாதே யாட்பட்டேன்
இன்றுந் திருவுருவங்காண்கிலேன் – என்றுந்தான்
எவ்வுருவோ னும்பிரா னென்பார்கட் கென்னுரைக்கேன்
எவ்வுருவோ நின்னுருவ மேது’ (அற்புதத்-61)
‘கீதங்கள் பாடுத லாடுத லல்லாற்
கேட்டறியோமுனைக் கண்டறிவாரை’(திருவா-திருப்பள்ளி 5)

2831. பாலொடு தேனும் பழத்து ளிரதமும்
வாலிய பேரமு தாகு மதுரமும்
போலுந் தூரியம் பொடிபட வுள்புகச்
சீல மயிர்க்கால் தொறுந் தேக்கிடுமே.
‘வாக்கிறந்தமுதம் மயிர்க்கால் தோறுந்
தேக்கிடச் செய்தனன்’ (திருவா–திருவண்டப்–170–1)

2820. ‘நானென்றுந் தானென்றி ரண்டில்லை யென்பது
நானென்ற ஞான முதல்வனே நல்கினான்’
‘நாற்றானத் தொருவனை நானுய பரனை’ (தே. 7–38–4)
‘தாமென்ன நாமென்ன வேறில்லை’
(பரணதேவர்–சிவபெருமான் திருவந்தாதி–34)

2840 ‘உருவன்றியே நின் றுருவம்புணர்க்கும்
கருவன்றியே நின்றுதான் கருவாகும்’
‘கருவி னுலன்றியே கருவெலாம் ஆயவன்
உருவினுலன்றியே யுருவுசெய்தானிடம்’ (தே. 3–35–3)

2846. ‘ஏமாப்பதில்லை யினியோ ரிடரில்லை’
‘ஏமாப்போம் பிணியறியோம்......
இன்பமே எந்நாளுந் துன்பமில்லை’ (தே. 6–98–1)

2850. வானின் றிடிக்கிலென் மாகடல் பொங்கிலேன்
கானின்ற செந்தீக் கலந்துடன் வேகிலென்
தானொன்றி மாருதஞ் சண்டம் அடிக்கிலென்
நானொன்றி நாதனை நாடுவன் நானே.

2851. ‘ஆனை துரக்கிலென் அம்பூ டறுக்கிலென்
கானத் துழுவை கலந்து வளைக்கிலென்’
வானந்துளங்கிலென் மண்கம்ப மாகிலென் மால்வரையுந்
தானந் துளக்கித் தலைதடு மாறிலென் தண்கடலும்
மீனம் படிலென் விரிசுடர் வீழிலென் வேலைநஞ்சுண்
டூனமொன் றில்லா ஒருவனுக் காட்பட்ட உத்தமர்க்கே.
(தே. 4–112–8)

2853. 'சிந்தைய தென்னச் சிவனென வேறில்லை'
'சிந்தையுந் தெளிவுமாகித் தெளிவினுட் சிவமுமாகி'
(தே. 4-48-5)

2854. 'வாக்கு மனமு மிறந்த மறைப்பொருள்'
'மாற்ற மனங்கழிய நின்றமறையோனே' (திருவா-சிவ-45)

2890. 'பத்திவலை' 'முத்தக்கயிறு'
'பத்திவலையிற் படுவோன்' (திருவா-திருவண்டப்-42)
'முத்தங்கயிறாக' (ஷை திருப்பொன்னூசல்-1)

2900. 'காப்பிடு கள்ளரை வெள்ளர் தொடர்ந்திட்டு'
'கள்ளரோ புகுந்தீரென்ன...வெள்ளரோம் என்றுநின்றார்'
(தே. 4-75-9)

2931. 'தாதவிழ் புன்னை தயங்கு மிருகரை'
'தாதவிழ் புன்னை தயங்குமலர்ச்சிறை' (தே. 1-136-1)

2953, 'ஒன்றிநின் றுள்ளே யுணர்ந்தேன்'
'ஒன்றியிருந்து நினைமின்கள்' (தே. 4-81-2)

2958. 'கடவுளும் நானு மொன்றானேன்'
'நானுயபரனை' (தே, 7-38-4)

2960. 'சீரார் பிரான் வந்தென் சிந்தைபுகுந்தனன்...
யார்பாடுஞ்சாரா அறிவறிந்தேனே'
'சிந்திப்பார் மனத்தான் சிவன்' (தே, 5-97-1)
'சீரார் பெருந்துறையான் என்னுடைய சிந்தையே
ஊராகக் கொண்டா னுவந்து' (திருவா-திருவெண்பா-11)
'ஆர்பாடுஞ்சாரா வகையருளி' (ஷை திருத்தெள்-13)

2962. 'நன்றுகண்டீர் நல் நமச்சிவாயப்பழந்
தின்றுகண்டேற்கிது தித்தவாறே'
'மனிதர்காளிங்கேவம் ...
புனிதன்பொற்கழ லீசனெனுங்கனி
இனிது சாலவும் ஏசற்றவர்கட்கே' (தே 5-91-7)

2969. 'சித்தஞ்சிவமாய் மல மூன்றுஞ்செற்றவர்'

2977. 'செய்வனவெல்லாம் சிவமாகக் காண்டலால்'
'சித்தஞ் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கும் அத்தன்'
(திருவா-திருத்தோணோக்கம்-6)

2984. 'அத்தனைக் காணு தரற்றுகின்றேனையோர்
பித்த னிவ னென்று பேசுகின்றாரே'
'பித்தனிவ னெனவென்னை யாக்குவித்து' (திருவா-கண்ட-7)

2986 பூதக்கண்ணாடியிற் புகுந்திலன் போதுளன்
வேதக் கண்ணாடியின் வேறே வெளிப்படும்
நீதிக் கண்ணாடி நினைவார் மனத்துளன்
கீதக் கண்ணாடியிற் கேட்டுநின்றேனே'
'பூம்படிமக்கலம் பொற்படி மக்கலம்......
தமிழ்மாலைகளால் நாம் படிமக்கலம் செய்து' (தே-4-102-3)

2992. 'கைத்தலஞ் சேர்தரு நெல்லிக் கனியொக்கும்'
'அங்கை நெல்லியம் பழத்திடை யமுதே' (தே. 7-54-3)
'நெல்லிக்கனியைத் தேனைப்பாலை' (திருவா-புணர்ச்சிப்-4)

2994. 'கள்ளப்பெருமக்கள் காண்பர்கொலோவென்று
உள்ளத்தினுள்ளே யொளித்திருந் தாளுமே'

'நாடி நாரணன் நான்முக னென்றிவர்
தேடியுந் திரிந்துங் காணவல்லரோ
மாட மாளிகை சூழ்தில்லையம்பலத்
தாடி பாதமென் னெஞ்சு ளிருக்கவே' (தே. 5-1-10)

3000. 'கடல் நஞ்சுண்ட கண்டனை'
'கண்காள் காண்மின்களோ கடல்நஞ்சுண்ட கண்டன்
றன்னை' (தே. 4-9-2)

3011. 'சிவன்றான் பலபல சீவனுமாகி, நவின்றான்'
'தான்ஒருவனுமே பலவாகி நின்றவா'
(திருவா-திருத்தோணோக்கம்-5)

3015. 'இல்லனு மல்லன் உளனல்லன் எம்மிறை'
'உண்மையுமாய் இன்மையுமாய்க் கோனாகி'
(திருவா-திருச்சதகம்-15)

3016. 'கள்ளத்தலைவன்'
'உள்ளங்கவர் கள்வன்'
'ஒளிக்குஞ் சோரனைக் கண்டனம்'
(திருவா-திருவண்டப்-141)

3031. 'பரமாய பரஞ்சுடர்'
'பண்ணாரின் றமிழாய்ப் பரமாய பரஞ்சுடர்' (தே-7-24-5)

3033. 'போக்கும் வரவும் புணரவல்லான்'
'போக்கும் வரவும் புணர்வும்' (திருவா-சிவ-77)

3041. எண்ணும் எழுத்தும் இனஞ்செயல் அவ்வழிப்
பண்ணுந் திறனும் படைத்த பரமனை
'எண்ணுமொ ரெழுத்து மிசையின் கிளவி தேர்வார்
கண்ணுமுதலாய கடவுட் கிடமதென்பர்' (தே-2-34-7)

566. 'புள்ளினும் மிக்க புரவியை'

எனவரும் திருமந்திரத் தொடர், 'புள்ளியற்கலிமா' (கற்பியல்—53) என்ற தொல்காப்பியத் தொடரை அடியொற்றியமைந்ததாகும்.

1964. 'வித்துக்குற்றுண்பான் விளைவறியாதவன்'

எனவரும் திருமந்திரத் தொடர்,

'விரகின்மையின் வித்தட்டுண்டனை' (227)

எனவரும் புறநானூற்றுத் தொடரை ஒத்தமைந்ததாகும்.

2592. ‘இரும்பிடை நீரென என்னையுள்வாங்கி’
என்னும் திருமந்திரம்,

‘இரும்புண் நீரினும் மீட்டற் கரிதென’ (21)
என்ற புறப்பாடற்றொடரை ஒத்தமைந்ததாம்.

167. காக்கை கவரிலென் கண்டார் பழிக்கிலென்
பாற்றுளி பெய்யிலென் பல்லோர் பழிச்சிலென்
தோற்பையுள் நின்று தொழிலறச் செய்தூட்டும்
கூத்தன் புறப்பட்டுப் போன இக் கூட்டையே.

எனவரும் திருமந்திரப் பாடலை அடியொற்றயமைந்தது,

‘நார்த்தொடுத் தீர்க்கிலென் நன்றாய்ந் தடக்கிலென்
பார்க்குழிப் பெய்யிலென் பல்லோர் பழிச்சிலென்
தோற்பையுள் நின்று தொழிலறச் செய்தூட்டும்
கூத்தன் புறப்பட்டக் கால்’

(நாலடி – யாக்கை நிலையாமை – 6)

எனவரும் நாலடியார் பாடலாகும்.

171. ஈட்டிய தேன்பூ மணங்கண் டிரதமும்
கூட்டிக் கொணர்ந்தொரு கொம்பிடை வைத்திடும்
ஓட்டித் துரந்திட் டது வலியார்கொளக்
காட்டிக் கொடுத்தது கைவிட்டவாறே.

எனவரும் திருமந்திரப் பாடற்பொருளை அடியொற்றியமைந்தது,

உடாஅது முண்ணாதுந் தம்முடம்பு செற்றுங்
கெடாஅத நல்லறமுஞ் செய்யார் – கொடாஅது
வைத்தீட்டி னாரிழப்பர் வான்றோய் மலைநாட
உய்த்தீட்டுந் தேனீக் கரி’

(நாலடி – செல்வ நிலையாமை –10)

எனவரும் நாலடியார் செய்யுளாகும்.

172. ‘கூற்றன் வருங்கால் குதிக்கலுமாமே’
எனவரும் திருமந்திரத் தொடர்ப் பொருளை விளக்கும் முறையில் அமைந்தது,

இழைத்த நாளெல்லை யிகவா பிழைத்தொரீஇக்
கூற்றங் குதித்துய்ந்தா ரீங்கில்லை – யாற்றப்
பெரும்பொருள் வைத்தீர் வழங்குமின் நாளைத்
தழீஇந்தழீஇந் தண்ணம் படும்.

(செல்வ நிலையாமை – 6)

எனவரும் நாலடியார் செய்யுளாகும்.

இவ்வாறே, ‘கரியுண் விளவின் கனிபோல்’ (2593)
எனத் திருமந்திரத்துள் வரும் உவமையினை

'வெஞ்சினவேழமுண்ட விளங்கனிபோன்று' (சீவக - 1122)
எனத் திருத்தக்கதேவர் எடுத்தாண்டுள்ளமை இங்கு ஒப்பு நோக்கத் தகுவதாகும்.

திருமந்திரமும் மெய்கண்ட நூல்களும்

திருமூலர் அருளிய திருமந்திரம் சைவ சித்தாந்தத் தத்துவ உண்மைகளை விளக்கும் சாத்திர நூலாகவும், சைவ நெறியில் நின்று சிவபரம்பொருளை மனமொழி மெய் களால் சிந்தித்து வாழ்த்தி வழிபடுதற்குச் சாதனமாகிய தோத்திர நூலாகவும் விளங்கும் தனிச்சிறப்புடையதாகும். தத்துவ உண்மைகளை விளக்கும் நிலையில் பிற்காலத்துத் தோன்றிய சிவஞானபோதம் முதலிய மெய்கண்ட நூல்கள் பதினுன்கிற்கும் முதல் நூலாக விளங்குவது இத்திநமந் திரமேயாகும். என்றும் மாருநிலையினதாகிய மெய்ப் பொருளை மாறுந்தன்மையனவாகிய ஏனையபொருள்களி னின்றும் பிரித்துக்காணும் மெய்யுணர்வினை வழங்க வல்லவை சிவஞானபோதம் முதலிய சித்தாந்த நூல்களா தலின் இவை மெய்கண்ட நூல்கள் எனச் சிறப்பித்துப் போற்றப் பெறுவனவாயின.

சிவஞானம் பெற்ற உயிர், தன் உடம்பையும் கருவி கரணங்களையும் ஏனைய தத்துவங்களையும் தன்னின் வேருகப் பகுத்துணர்ந்து என்றும் மாருதுள்ள சிவபரம் பொருளே மெய்ப்பொருளெனக் கண்டு தெளியுமாயின், அது மெய்கண்டது எனச் சிறப்பித்துப் பாராட்டப்பெறும். இந்நுட்பம்,

மெய்வாய்கண் மூக்குச் செவியென்னும் மெய்த்தோற்றத்
தவ்வாய அந்தக் கரணம் அகிலமும்
எவ்வா யுயிரும் இறையாட்ட ஆடலாற்
கைவா யிலாநிறை எங்குமெய் கண்டதே.

(திருமந்திரம் - 2586)

எனவரும் திருமந்திரத்தால் உய்த்துணரப்படும். இத்திருப் பாடற்பொருளை அடியொற்றியமைந்தது,

பன்னிறங் காட்டும் படிகம்போல் இந்திரியம்
தன்னிறமே காட்டுந் தகைநினைந்து - பன்னிறத்துப்
பொய்ப்புலனை வேறுணர்ந்து பொய்பொய்யா மெய்கண்டான்
மெய்ப்பொருட்குத் தைவமாம் வேறு

(சிவஞானபோதம் வெண்பா - 50)

எனவரும் சிவஞானபோத வெண்பாவாகும்.

தேவர் முதலிய யாவராலும் அறிதற்கரிய சிவபரம் பொருள் உயிர்கட்கு அருள்செய்தல் வேண்டி ஆசிரியத் திருமேனி கொண்டு எழுந்தருளிவந்து பாசங்களை நீக்கி மெய்யுணர்வு அளித்தருள்வான் என்பது சிவநெறிச் செல்வர்களது துணிபாகும். இக்கருத்து,

குருவே சிவமெனக் கூறினன் நந்தி
குருவே சிவமென் பதுகுறித் தோரார்
குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்
குருவே யுரையுணர் வற்றதோர் கோவே. (1581)

எனவரும் திருமந்திரத்தில் விரித்துரைக்கப்பட்டுள்ளமை காணலாம். இவ்வுண்மையினை,

'அகளமா யாரும் அறிவரி தப்பொருள்
சகளமாய் வந்ததென் றுந்தீபற
தானாகத் தந்ததென் றுந்தீபற' (திருவுந்தியார் – 1)

எனவரும் பாடலில் திருவியலூர் உய்யவந்த தேவ நாயனாரும்,

'அகளமய மாய்நின்ற அம்பலத்தெங் கூத்தன்
சகளமயம் போலுலகில் தங்கி – நிகளமாம்
ஆணவ மூல மலமகல ஆண்டான்காண்
மாணவக என்னுடனாய் வந்து'

(திருக்களிற்றுப் படியார் – 4)

எனவரும் பாடலில் திருக்கடவூர் உய்யவந்த தேவ நாயனாரும் விளக்கியுள்ளனர். திருவுந்தியார் திருக்களிற்றுப் படியார் ஆகிய இவ்விரு நூல்களும் திருமூல நாயனார் அருளிய திருமந்திரத்திற் கூறப்படும் சிவாநுபவ உண்மைகளை விரித்துரைக்கும் அநுபூதி நூல்களாகும்.

சிவஞானம் பெற்ற நல்லுயிர்கள் தன்முனைப்பு அற்றுச் சிவபரம்பொருளோடு வேறற ஒன்றி நிற்கும் இயல்பினை விளக்குவது,

வித்துமதன் அங்குரமும் போன்றிருக்கும் மெய்ஞ்ஞானம்
வித்துமதன் அங்குரமும் மெய்யுணரில் – வித்ததனிற்
காணாமை யாலதனைக் கைவிடுவர் கண்டவர்கள்
பேணாமை யாலற்றார் பேறு. (திருக்களிற்றுப்படியார் – 57)

எனவரும் திருப்பாடலாகும். விதையினுள்ளே முளையென்று ஒரு முதல் வெளிப்படாது ஒன்றாயடங்கியிருத்தல் போன்று சிவஞானம் பெற்ற ஆன்மாக்களும் தாம் என்றொரு முதன்மைகெடச் சிவபரம் பொருளிடத்திலே வேறற அடங்கியிருப்பார்கள் என்பது இதன் பொருளாகும். இது,

வித்தினி லன்றி முளையில்லை யம்முளை
வித்தினி லன்றி வெளிப்படு மாறில்லை
வித்தும் முளையும் உடனன்றி வேறல்ல
அத்தன்மை யாகும் அரநெறி காணுமே. (3192)

எனவரும் திருமந்திரத்தை அடியொற்றியமைந்திருத்தல் அறியத்தக்கதாகும்.

'எல்லாரறிவுகளின் தாற்பரியம் என்னறிவு
செல்லு மிடத்தளவுஞ் சென்றறிந்தேன்'
(திருக்களிற்றுப்படியார்—56)

எனவரும் தொடர்,

'செல்லுமளவுஞ் செலுத்துமின் சிந்தையை' (2103)

எனவரும் திருமந்திரத் தொடரை அடியொற்றியமைந்ததாகும்.

பதி பசு பாசம் எனப்பட்ட மூன்று பொருள்களும் என்றும் நிலையாகவுள்ள உண்மைப்பொருள்கள் என்பதனை,

'பதி பசு பாசம் எனப்பகர் மூன்றிற்
பதியினைப் போற் பசு பாசம் அனாதி' (திருமந்திரம்-115)

எனவரும் தொடரில் திருமூலர் தெளிவாக அறிவுறுத்தியுள்ளார். இவ்வுண்மையினை,

'நெல்லிற் குமியும் நிகழ்செம் பினிற்களிம்பும்
சொல்லிற் புதிதன்று தொன்மையே—வல்லி
மலகன்மம் அன்றுளவாம் வள்ளலாற் பொன்வாள்
அலர்சோகஞ் செய்கமலத் தாம்'
(சிவஞானபோதம்—வெண்பா-12)

எனவரும் வெண்பாவில் மெய்கண்ட தேவர் எடுத்தாண்டுள்ளமை இங்கு நோக்கத்தக்கதாகும்.

உயிர், தூலம் சூக்குமம் ஆகிய இருவேறு உடம்புகளினின்றும் பிரிந்து செல்லுதலை விளக்குவதாக அமைந்தது,

அரவுதன் தோலுரிவும் அக்கனவும் வேறு
பரகாயம் போய்வருமப் பண்பும்—பரவிற்
குடாகாய ஆகாயக் கூத்தாட்டா மென்ப
தடாதுள்ளம் போமா றது.
(சிவஞானபோதம்—வெண்பா-14)

எனவரும் வெண்பாவாகும். உயிர் தூலவுடம்பினைவிட்டு நீங்கிச் செல்லுதற்குப் பாம்பு தன் சட்டையைக் கழற்றிப் புதியதொரு தோல் போர்த்துச் செல்லுதலும், புருடன் நனவுடம்பின் நீங்கிக் கனவுடம்பிற் செல்லுதலும், யோகி

கள் தம் உடம்பு நீங்கி வேறோருடம்பிற் சென்று மீளுதலும் உவமையாகும். குட ஆகாயம் குடம் உடைந்தவிடத்து ஆகாயத்தோடு கூடுதல் என்றது, உயிர் சூக்கும உடம்பை விட்டுப் போதற்கு உவமையாகும். இவ்வுவமைகள்,

நாகமுடலுரி போலு நல் லண்டச
மாக நனுவிற் கனுமறந் தல்லது
போகலுமாகு மரனரு ளாலே சென்
றேகு மிடஞ்சென் றிருபய னுண்ணுமே. (2132)

உண்டு நரக சுவர்க்கத்தி லுள்ளன
கண்டு விடுஞ் சூக்கம் காரணமாச்செலப்
பண்டு தொடரப் பரகாய யோகிபோற்
பிண்ட மெடுக்கும் பிறப்பிறப் பெய்தியே. (2133)

எனவரும் திருமந்திரப் பாடற் பொருளைப் பின்பற்றி அமைந்தனவாகும்.

திருமூலநாயனர், மாயையின் காரியமாய் உயிர்நிலை பெறுதற்கு இடனுகிய உடம்பினை 'மாயாபுரி' (25, 28) என்ற தொடராற் குறித்துள்ளார். இத்தொடரை அடியொற்றியமைந்தது, 'மாயா இயந்திர தனு' (சூத்திரம் 3) எனவரும் சிவஞான போதத் தொடராகும்.

"அறிவு விளக்கமில்லாத காலத்துப் பதி, மனைவி முதலிய புறப்பொருள்களைத் தனித்தனியே எனது எனது எனத் தற்கிழமைப் பொருளாகக் கூறிக் கொண்டு நின்றாற் போல, உனதல்லாத உன் கை கால் உடம்புகளைத் தனித் தனியே 'எனது' என்றும், அங்ஙனம் அறிந்த பாச அறிவை 'என்னறிவு அது' என்றும் தற்கிழமைப் பொருளாகக் கூறிக்கொண்டு நீ ஒரு பொருள் வேறு நிற்கின்றாய். ஏதுக்கள் முதலியவற்றால் ஆராய்ந்து பார்ப்பாயாயின் அக் கைகால் முதலியன உயிராகிய உனக்கு வேறுவன" என அறிவுறுத்துவதாக அமைந்தது,

'எனதென்ற மாட்டின் எனதலா தென்னு
துனதலா துன்கைகால் யாக்கை—எனதென்றும்
என்னறிவ தென்றும் உரைத்துநீ நிற்றிகாண்
உன்னிலவை வேறும் உணர்'
(சிவஞானபோதம்—வெண்பா-17)

எனவரும் வெண்பாவாகும். இது,

'உன்னை யறியா துடலைமுன் நானென்றாய்
உன்னை யறிந்து துரியத்துற நின்றாய்' (2279)

எனவரும் திருமந்திரத் தொடர்ப் பொருளை விளக்கும் முறையில் அமைந்திருத்தல் காண்க.

பாச ஞானத்தாலும் பசு ஞானத்தாலும் அறியப்படுவதாய் அழியுந்தன்மைத்தாகிய பிரபஞ்சத்தை 'அசத்து' எனவும், அழிவின்றி என்றும் உள்ளதாய்ப் பதிஞானம் ஒன்றினுலேயே அறியப்படும் பரம்பொருளைச் 'சத்து' எனவும், 'சிவசத்து' எனவும், சத்தினைச் சார்ந்த நிலையிற் சத்தாகவும் அசத்தினைச் சார்ந்த நிலையில் அசத்தாகவும் நின்று அவ்விருதிறப்பொருளையும் அறியுந்தன்மைத்தாகிய உயிரைச் 'சதசத்து' எனவும், அறிவே உருவாகிய பரம்பொருளைச் 'சித்து' எனவும், அறிவற்றதாகிய பாசத்தை 'அசித்து' எனவும் குறியிட்டு வழங்குதல் சைவசித்தாந்த நூன்மரபாகும்.

'சத்தும் அசத்தும் சதசத்துந் தான்கண்டு
சித்தும் அசித்துஞ் சேர்வுரு மேநீத்த
சுத்தம் அசுத்தமும் தோய்வுரு மேநின்று
நித்தம் பரஞ்சுத்த சைவர்க்கு நேயமே. (1420)

'சத்தும் அசத்தும் சதசத்துந் தான்கூடிச்
சித்தும் அசித்தும் சிவசத்த தாய்நிற்கும்
சுத்தம் அசுத்தம் தொடங்காத் துரியத்துச்
சுத்தரா மூன்றுடன் சொல்லற் றவர்களே. (2328)

'தானே யறியான் அறிவிலோன் தானல்லன்
தானே யறிவான் அறிவு சதசத்தென்
றானல் இரண்டும் அரனரு ளாய்நிற்கத்
தானே யறிந்து சிவத்துடன் தங்குமே. (2329)

எனவரும் திருமந்திரப் பாடல்களில் மேற்காட்டிய குறியீடுகள் இடம் பெற்றிருத்தல் காணலாம்.

'உணருரு அசத்தெனின் உணரா தின்மையின்
இருதிற னல்லது சிவசத் தாமென
இரண்டு வகையின் இசைக்கு மன்னுலகே'
(சிவஞானபோதம் சூ—6)

எனவும்,

'யாவையுஞ் சூனியஞ் சத்தெதி ராகலிற்
சத்தே யறியா தசத்தில தறியா
திருதிறன் அறிவுள திரண்டலா ஆன்மா' (ஷை-சூ-7)

எனவும் வரும் சிவஞானபோத நூற்பாக்கள் மேற்குறித்த திருமந்திரப் பாடல்களில் உள்ள குறியீடுகளையும் இலக்கணங்களையும் அடியொற்றியமைந்திருத்தல் ஈண்டு ஒப்பு நோக்கி யுணரத்தக்கதாகும்.

உடம்பின் கண்ணதாகிய பிராரத்த வாசனை உயிர்க்குத் தாக்குவதாக உள்ள அளவும் அதனால் வரும் விருப்பு வெறுப்புக்களும் அவைபற்றிக் காட்சிப்படும் மண்முதல் மாயைகளும் அவை பற்றி நிகழும் விபரீதவுணர்வும் ஆகிய அசத்துக்கள் நீங்கிய வழியும் மீண்டும் உயிரை வந்து கூடுமியல்பினவாதலால், அதற்கெல்லாம் மூலமாகிய பிராரத்த வாசனை அடியோடு நீங்கினாலன்றி அவ் அசத்தைக் கீழ்ப்படுத்து மெய்யுணர்வு மேலோங்குதல் இயலாது. ஆகவே அவ்வாசனை பற்றறக் கழிதற் பொருட்டு மெய்யுணர்வுடையாரை நாடி வழிபடுதல் வேண்டும். அங்ஙனம் வழிபடவே அவ்வினை நீங்கி, மெய்யுணர்வு மேம்பட்டு நிகழும். ஆதலால் அன்பினால் மெய்யுணர்வுடைய சிவ ஞானிகளை வழிபடுவாயாக என அறிவுறுத்தும் நிலையில் அமைந்தது,

'வினையா லசத்து விளைதலான் ஞானம்
வினைதீரின் அன்றி விளையாவாம் —வினைதீர
ஞானத்தை நாடித் தொழவே அதுநிகழும்
ஆனத்தால் அன்பிற் றொழு.
(சிவஞானபோதம்—வெண்பா-79)

எனவரும் சிவஞானபோத உதாரண வெண்பாவாகும். இது,

வினையா மசத்து விளைவ துணரார்
வினைஞானந் தன்னில் வீடலுந் தேரார்
வினைவிட வீடென்னும் வேதமும் ஓதார்
வினையாளர் மிக்க விளைவறி யாரே. (2557)

என்னுந் திருமந்திரத்தின் சொல்லையும் பொருளையும் பின்பற்றி அமைந்திருத்தல் காணலாம். இவ்விரண்டின் சொற்பொருளமைதியை ஒப்பவைத்து நோக்குங்கால் மேற்குறித்த திருமந்திரத்தின் முதலடி 'வினையாலசத்து விளைவதுணரார்' என்றிருத்தல் வேண்டும் என்பது நன்கு தெளியப்படும்.

ஆன்மாக்கள் பாசப்பிணிப்போடுள்ள கட்டுநிலையில் உயிர்க்குயிராகிய இறைவன் அவ்வான்மாவாய் ஒற்றித்து உயிர்க்குள் அடங்கி நின்றவாறுபோல, பாசப்பிணிப்பினின்றும் நீங்கி ஆன்மாச் சுத்தனாகிய நிலையில் உயிர், முதல்வனோடு ஒன்றித் தன்முனைப்பற்று அடங்கி நிற்றலாகிய முறையினை அறிவுறுத்துவது,

'அவனே தானே யாகிய அந்நெறி
ஏகனாகி இறைபணி நிற்க
மலமாயை தன்னொடு வல்வினை யின்றே'
(சிவஞானபோதம் சூ—10)

எனவரும் நூற்பாவாகும். இது,

தானென் றவனென் றிரண்டென்பர் தத்துவந்
தானென் றவனென் றிரண்டற்ற தன்மையை
தானென் றிரண்டுன்னார் கேவலத் தானவர்
தானின்றித் தானாகத் தத்துவ சுத்தமே. (2348)

என்னும் திருமந்திரப் பொருளை அடியொற்றி அமைந்த தாகும்.

உயிர்களைப் பற்றிய மயக்கவுணர்வு அவ்வுயிரோடு உடனாய் நிற்கும் முதல்வனாகிய இறைவனையும் பற்றிநிற் கும்போலும் என நிகழும் ஐயத்தை நீக்கும் முறையில் அமைந்தது,

மெய்ஞ்ஞானந் தன்னில் விளையா தசத்தாதல்
அஞ்ஞானம் உள்ளம் அணைதல்காண் – மெய்ஞ்ஞானந்
தானே உளவன்றே தண்கடல்நீர் உப்புப்போல்
தானே உளம்உளவாத் தான்.
(சிவஞானபோதம்–வெண்பா-44)

எனவரும் செய்யுளாகும் 'மயக்கமாவது, ஒரு பெற்றித் தாய அறிவெனப்படும் சிவத்தின்முன் கதிர்முன் இருள் போல நிலையுதல் இல்லது; ஆதலின், அம்முதல்வன்கண் உளதாதலின்றி, அச்சிவம் என்று உள்ளதோ அன்றே தான்பொருந்துதற் குரிமையுடைய உயிர்கள் உள்ளனவாக அவ்வுயிர்களைப் பற்றி நிற்பதாகும். அஃது எதுபோல் எனின், தண்ணிய கடலின்கண் உளதாதலின்றி, அக்கட லிடத்துளதாகிய நீரைப்பற்றி நிற்கும் உப்புப்போல் என்று அறிவாயாக' என்பது இவ்வெண்பாவின் பொருளாகும். இங்குக் கடல் என்றது, கடல் நீரையுணர்த்தாது அந் நீருக்கு இடந்தந்து அமைந்த பெருவெளியாகிய ஆகா யத்தை உணர்த்தியது. கடல் நீரிலுள்ள உப்பு அந்நீரைப் பற்றுவதன்றி அந்நீர்க்கு இடனாய் விளங்கும் பெருவெளி யாகிய ஆகாயத்தைப் பற்றாதவாறுபோல, உயிரின் கண்ணதாகிய மயக்கவுணர்வு, அவ்வுயிரைப் பற்றுவதன்றி அவ்வுயிர்க்குச் சார்பாயுள்ள முதல்வனைப் பற்றுவதன்று என்பதாம். இக்கருத்தினை விரித்துரைக்கும் முறையில் அமைந்தது,

'சுத்தமெய்ஞ்ஞான மேனிச் சோதிபால் அசத்தஞ் ஞானம
ஒத்துரு குற்றமெல்லாம் உற்றிடும் உயிரின்கண்ணே
சத்துள போதே வேறும் சதசத்தும் அசத்தும் எல்லாம்
வைத்திடும் அநாதியாக வாயுநீர் லவணம் போலும்'
(சிவஞான சித்தியார்–251)

என்னும் சித்தியார் செய்யுளாகும். 'தண்கடல் நீருப்புப் போல்' எனமெய்கண்டாரும், 'வாரிநீர் லவணம் போலும்' என அருணந்தி சிவாசாரியாரும் காட்டிய இவ் உவமை, பதி பசு பாசம் என்னும் முப்பொருள்களும் வியாபக வியாப்பியங்களாய் நிற்குமாறு உணர்த்தியதாகும். கடலும் நீரும் உப்பும் ஒருங்குகூடிய நிலையிலும் உப்பானது கடலிலுள்ள நீரைப் பொருந்துவதன்றி அந்நீர்க்குஇடமாகிய கடற்பரப்பினைப் பொருந்தாதவாறுபோலப் பாசமும் உயிரைப் பொருந்தி நிற்பதன்றி உயிர்க்குச் சார்பாகிய இறைவனைப் பொருந்தாது என்பது இவ்வுவமையால் அறிவுறுத்தப்படும் கருத்தாகும். இவ்வுவமை,

'அப்பினில் உப்பென அத்தன் அணைந்திட்டுச்
செப்பு பராபரஞ் சேர்பரமும் விட்டுக்
கப்புறு சொற்பத மாளக் கலந்தமை
எப்படி யப்படி யென்னுமவ் வாறே' (2945)

என்னும் திருமந்திரப் பாடற்பொருளை உளங்கொண்டு கூறியதாதல் உணர்தற் பாலதாகும்.

சுட்டியறியப்பட்ட இப்பிரபஞ்சத்தை, 'இது மெய்ப் பொருளன்று, இது மெய்ப் பொருளன்று' என்று இவ்வாறு ஒவ்வொன்றாக வைத்து நோக்கி, மெய்ப் பொருளன்று எனக் கழித்து நீக்கி, அவ்வாறு கண்டு நீங்கிய ஆன்மாவாகிய தன்னறிவின்கண்ணே சுட்டுணர்வு இன்றி நின்ற கடவுளை ஆராய்ந்து, 'அது நானானேன்' என ஒருவன் பாவிப்பானாயின், அப் பாவனையால் வேறன்றியுடனாய் விளங்கித் தோன்றும் முதன்வனது அருளால், தொன்மையே கூடிநின்ற தனது பொதுவியல்பைத் தான்விட்டு நீங்க வல்லனாவன். இவ்வாறு உயிர் தன்னுடன் வேறன்றித் தோன்றும் முதல்வனருளால், தான் பாசப்பிணிப்பினின்றும் நீங்குதல், ஒள்ளிய கருடதியானத்தில் விளங்கித் தோன்றும் கருடனால், தியானிப்போனாகிய பாவகன் பாம்பின் விடத்தைத் தீர்த்துக்கொள்ளுமாறு போலாம். இக் கருத்தினை விளக்கும் நிலையிலமைந்தது,

'கண்டதை யன்றன் றெனவிட்டுக் கண்டசத்தாய்
அண்டனை ஆன்மாவில் ஆய்ந்துணரப்-பண்டணைந்த
ஊனத்தைத் தான்விடுமா றுத்தமனின் ஒண்கருட
சானத்தில் தீர்விடம்போற் றன்.

(சிவஞானபோதம்–வெண்பா–58)

என்னும் செய்யுளாகும். இதன் பொருளை விரித்துரைக்கும் முறையில் அமைந்தது,

'கண்ட இவை யல்லேன் நான் என்றகன்று, காணுக்
கழிபரமும் நானல்லேன் எனக்கருதிக் கசிந்த
தொண்டினொடும் உளத்தவன்றான் நின்றகலப் பாலே
சோகமெனப் பாவிக்கத் தோன்றுவன் வேறின்றி
விண்டகலும் மலங்களெலாம் கருடதியானத்தால்
விடமொழியும் அதுபோல விமலதையும் அடையும்
பண்டை மறைகளும் அது நானனே னென்று
பாவிக்கச் சொல்லுவதிப் பாவகத்தைக் காணே.

(சிவஞான சித்தியார்-298)

எனவரும் சித்தியார் திருவிருத்தமாகும். இவையிரண்டும்,

நீயது வானு யெனநின்ற பேருரை
ஆயது நானுனேன் என்னச் சமைந்தறச்
சேய சிவமாக்குஞ் சீர்நந்தி பேரருள்
ஆயது வாயனந் தானந்தி யாகுமே. (2577)

எனவும்,

கருடன் உருவங் கருதும் அளவிற்
பருவிடந் தீர்ந்து பயங்கெடு மாபோல்
குருவின் உருவங் குறித்தஅப் போதே
திரிமலந் தீர்ந்து சிவனவ னுமே. (2659)

எனவும் வரும் திருமந்திரப் பாடல்களின் பொருளை அடியொற்றியமைந்திருத்தல் அறியத் தக்கதாகும்.

ஆன்மா, சிவனுக்கு உடைமையாதலை அஞ்செழுத்து உச்சரிக்கும் நிலையில் வைத்துநோக்கித் தன் உடம்பினுள்ளே இதயம் பூசைத்தானமாகவும், உந்தி ஓமத்தானமாகவும், புருவநடு தியானத் தானமாகவும் கொண்டு, புறம்பே ஞானபூசை செய்யும் முறைப்படி உள்ளத்தாமரையில் திருவைந்தெழுத்தாகிய திருமேனியில் அம் முதல்வனைத் தியானித்து, கொல்லாமை, ஐம்பொறியடக்கல், பொறை, அருள், அறிவு, வாய்மை, தவம், அன்பு என்னும் எண்வகை மலர்களால் அருச்சித்து, அத்திரமந்திரத்தாலே குண்டலித்தானமாகிய உந்தியிலே ஞான அனலை

எழுப்பி, அதன்கண் விந்துத்தானத்து அமிழ்தமாகிய நெய்யைச் சுழுமுனை நாடி இடைநாடியாகிய சுருக்கு சுருவங்களால் சொரிந்து ஓமஞ் செய்து, விந்துத்தானமாகிய புருவநடுவிலே சிகர யகர வகரங்கள் மூன்றும் முறையே அதுவெனும் (தற்பரப்) பொருளும் நீயெனும் (துவம்பதப்) பொருளும் ஆகின்றாய் எனும் (அசிபதப்) பொருளும் ஆம் முறைநோக்கி அதனால் சிவோகம் பாவனை செய்வனாயின், அப் பாவனைக்கண் அம்முதல்வன் விளங்கித் தோன்றுவன். அப் பாவகன் ஆண்டான் அடிமைத்திறத்தால் அடிமை யாவன். இவ்வுண்மையினை அறிவுறுத்துவது,

அஞ்செழுத்தா லுள்ளம் அரனுடைமை கண்டரனை
அஞ்செழுத்தால் அர்ச்சித் திதயத்தில் – அஞ்செழுத்தால்
குண்டலியிற் செய்தோமம் கோதண்டம் சானிக்கில்
அண்டனும் சேடனும் அங்கு. (சிவஞானபோதம்-வெண்பா)

என்னும் செய்யுளாகும். இறைவனைத் திருவைந்தெழுத்தின் துணையால் புருவத்தின் இடைவெளியாகிய விந்துத்தானத்திற் கண்டு வழிபடும் இம்முறை,

நெற்றிக்கு நேரே புருவத் திடைவெளி
உற்றுற்றுப் பார்க்க ஒளிவிடு மந்திரம்
பற்றுக்குப் பற்றாய்ப் பரம னிருந்திடஞ்
சிற்றம்பலமென்று சேர்ந்துகொண் டேனே. (2770)

எனவரும் திருமந்திரத் திருப்பாடலில் விளக்கப் பெற்றிருத்தல் அறியத் தக்கதாகும்.

நெல்லுக்குத் தவிடும் உமியும் அநாதியாயிருந்தும் ஒருகாலத்திலே நீங்குந் தன்மைபோல, உயிர்களுக்கு மல மாயை கன்மங்கள் தொன்மையே யுள்ளன என்றும், அவை தத்தம் காரியத்தைச் செய்தல் முதல்வன் ஆணையால் என்றும், வீடுபெற்ற உயிர்களிடத்தில் அவை இல்லையா யிருப்பினும் பாசப் பிணிப்புடைய உயிர்களிடத்தே நீங்காது நிற்றலால் அவற்றின் உண்மைத் தன்மை அழியாதென்றும் அறிவுறுத்துவது,

'நெல்லிற் குமியும் நிகழ்செம் பினிற்களிம்பும்
சொல்லிற் புதிதன்று தொன்மையே – வல்லி
மலகன்மம் அன்றுளவாம் வள்ளலாற் பொன்வாள்
அலர் சோகஞ் செய்கமலத் தாம்'
(சிவஞானபோதம் – வெண்பா – 12)

எனவரும் செய்யுளாகும். "நெல்லின்கண் உமியும் செம்பின்கண் களிம்பும் எக்காலத்து உளவாயின என்று ஆராய்ந்து சொல்லுங்கால், அந்நெல்லும் செம்பும் உளவாயின அன்றே அவையுள்ளன அன்றி இடையே வந்தன அல்ல எனல் வேண்டும். அதுபோல மாயை ஆணவமலம் கன்மம் என்னும் மும்மலங்களும் அநாதியே யுள்ளனவாம். முன்னேயுளதாகிய தாமரைப்பூ மலர்தலும் குவிதலும் கதிரவனாற் செய்யப்படுமாறு போல அவை தத்தம் காரியங்களைச் செய்தல் இறைவனாலே யாகும்" என்பது இதன் பொருளாகும். மாயை இறைவனுக்குப் பரிக்கிரக சத்தியாதலின் வல்லி என்றார். மலம் – ஆணவம். கன்மம் – வினை.

"மூலமலத்தின் காரியம் மோகம் மதம் முதலாயின. இருவினையின் காரியம் இன்ப துன்ப முதலாயின. மாயையின் காரியம் தனுகரணம் முதலாயின. வள்ளலால் ஆம் எனவே திரோதான சத்தியது உண்மையும் பெற்றும். அது, பாகம் வருவித்தற் பொருட்டு மலத்தின் வழிநின்று மோகம் முதலியவற்றைத் தொழிற்படுத்துவதாகிய சிவசங்கற்பத்திற்கு ஏதுவாதல் பற்றி, மலம் என்று உபசரித்துக் கூறப்படும். இவ்வாறு மல, கன்ம மாயை, திரோதானம், மாயாகாரியம் என்னும் ஐவகைப் பாசமும் கண்டுகொள்க" என விளக்குவர் சிவஞான முனிவர்.

ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலங்களும் நெல்லில் அமைந்த முளை, தவிடு, உமி என்பவற்றைப் போன்று உயிரை முறையே பிணித்து மறைத்துள்ளன என்பது,

"மும்மலநெல்லினுக்கு முளையொடு தவிடுமிபோல்
மம்மர்செய் தணுவி னுண்மை வடிவினை மறைத்துநின்று"
(சிவஞானசித்தியார்–176)

எனவரும் அருணந்தி சிவாசாரியார் வாக்காலும்,

"உயிருண்டாவே யுளதுமலம் மல முளதா யொழிந்தவெல்லாம்
நெல்லின்முளை தவிடுமிபோல் அநாதியாக
நிறுத்திடுவர் இதுசைவம் நிகழ்த்துமாறே"
(சிவப்பிரகாசம்–25)

எனவரும் உமாபதி சிவாசாரியார் வாய்மொழியாலும் உணரப்படும். 'நெல்லின்முளைதவிடுமிபோல்' என்னும் இவ்வுவமையில் நெல்லினுள்ளேயுள்ள அரிசி ஆன்மா

விற்கு உவமை. அரிசியைப்பற்றியுள்ள தவிடு ஆணவ மலத்திற்கு உவமை. அதன் நுனியிலுள்ள முளை கன்மத்திற்கு உவமை. அதற்கு இடனாகிய உமி மாயைக்கு உவமை என விளக்குவர் மதுரைச் சிவப்பிரகாசர். மும் மலங்களைப் பற்றிய இவ்விலக்கணம்,

ஆணவ மாயையுங் கன்மமு மாமலங்
காணு முளைக்குத் தவிடுமி யான்மாவும்
தாணுவை யொவ்வாமற் றண்டுல மாய்நிற்கும்
பேணுவாய் மற்றுநின் பாசம் பிரித்தே. (2192)

எனவரும் திருமந்திரப் பாடற்பொருளை அடியொற்றிக் கூறப்பட்டுள்ளமை அறியத்தக்கதாகும்.

'ஆணவம் பிண்டி. அருமாயை தான்உமி,
காமியம் மூக்கென்று காண்'

எனவரும் வீட்டுநெறிப்பால் ஈண்டு நினைக்கத்தக்கதாகும். 'நெல்லின் உமிபோனால் முளை சீவியாதற்போலக் கன்மமும் மாயை ஆதாரமாக ஒடுங்கி மீளவும் மாயை ஆதாரமாகச் சீவிக்கும். கன்மமில்லாதபோது மாயையும் சீவிப்பற்றுப் போம்' என மதுரைச் சிவப்பிரகாசர் கூறும் விளக்கம் இங்கு உளங்கொளத் தக்கதாகும்.

ஆணவம், கன்மம், மாயை என்னும் இம் மும்மலங்களுடன் மலத்தைப் பரிபாகம் செய்யும் இறைவனது சத்தியாகிய திரோதான சத்தியையும், மாயையின் காரியங்கள் ஆகிய மாயேயத்தையும் சேர்த்து மலம் ஐந்து எனக் கூறுதல் மரபு.

மோகமிக உயிர்கள்தொறும் உடனாய் நிற்கும்
மூல ஆணவம்ஒன்று, முயங்கி நின்று
பாகமிக உதவுதிரோ தாயி ஒன்று,
பகர்மாயை ஒன்று, படர்கன்மம் ஒன்று,
தேகமுறு கரணமொடு புவனபோகச்
செயலாரு மாமாயைத் திரட்சி ஒன்றென்(று)
ஆகமலம் ஐந்தென்பர் ஐந்தும் மாறு(து)
அருளென்ப தறிதென்பர் அறிந்துளோரே'

(சிவப்பிரகாசம்–32)

எனவரும் செய்யுள் இம்மரபினை விரித்து விளக்குவதாகும் இவ்வாறு மலங்கள் ஐந்து என்னும் மரபு, 'மாருமலம் ஐந்தால்' (திருமந்திரம்-2160) எனவும் "நேராமலமைந்து" (ஷை 2166) எனவும், "வணங்கிடும் ஐம்மலம்" (ஷை–2177) எனவும், "ஐம்மலந்தான்விட்டு" (ஷை–2207) எனவும்,

“ஒத்துறுபாசம் மலம் ஐந்தொ டாரூறு, தத்துவ பேதம்” (ஷை–2211) எனவும், “நந்திபராவத்தை நாடச் சுடர் முனம், அந்தி யிருள் போலும் ஐம்மலம் மாறுமே” (ஷை 2293) எனவும் திருமந்திரப் பனுவலில் முதன்முதற் காணப்படுவதாகும்.

ஞானமே திருமேனியாகவுடைய இறைவன் சமயங்கள்தோறும் அருளிச்செய்த ஆகமங்களிலெல்லாம் கூறப்பட்ட மெய்யுணர்வு பற்றிய முடிபுகள் எல்லா ஆகமங்களினும் ஒத்துச்சென்று முழுமுதற் பொருள் ஒன்றையே நோக்கி முடியும் என்பது,

‘சுத்தவடி வியல்பாகவுடைய சோதி
சொல்லிய ஆகமங்களெல்லாம் சூழப்போயும்
ஒத்துமுடி யுங்கூட ஓரிடத்தே
ஒருபதிக்குப் பலநெறிகள் உளவானற்போல்’
(சிவஞானசித்தியார் பரபக்கம்–9)

எனவரும் அருணந்தி சிவாசாரியார் வாய்மொழியால் நன்கு உணரப்படும். இவ்வுண்மை

‘ஒன்றது பேரூர் வழியா றதற்குள
என்றது போல இருமுச் சமயமும்’ (1558)

எனவரும் திருமந்திரத் தொடரில் விளக்கப்பெற்றிருத்தல் காணலாம்.

அறிவிற் சிறந்தோரும் அறிவற்றயர்வோரும் ஆகிய இவர்கட்கன்றி, அறிவும் அறியாமையும் ஒருங்குடையார்க்குப் பயன்படும் நோக்கத்துடனேயே நூல்கள் இயற்றப்படும் என்பதனை,

‘போதமிகுத்தோர் தொகுத்த பேதைமைக்கே
பொருந்திஞே ரிவர்க்கன்றிக் கதிப்பாற் செல்ல
ஏதுநெறிஎனும் இவர்கட் கறிய முன்னாள்
இறைவன் அருள் நந்திதனக் கியம்ப’
(சிவஞானசித்தியார் பரபக்கம்–10)

எனவரும் திருவிருத்தத்தில் அருணந்தி சிவாசாரியார் தெளிவாகக் குறித்துள்ளார். இக்கருத்து,

அறிவிக்க வேண்டாம் அறிவற் றயர்வோர்க்கும்
அறிவிக்க வேண்டாம் அறிவிற் செறிவோர்க்கும்
அறிவுற் றறியாமை யெய்திநிற் போர்க்கே
அறிவிக்கத் தம்மறி வாரறி வோரே. (2327)

எனவரும் திருமந்திரப் பாடலில் இடம் பெற்றிருத்தல் கூர்ந்துணரத்தக்கதாகும்.

ஆதிநடு வந்தமிலா அளவில் சோதி
அருண் ஞான மூர்த்தியாய் அகில மீன்ற
மாதினையும் ஒருபாகத் தடக்கி வானோர்
மகுட சூடாமணியாய் வையம் போற்றப்

பாதிமதி யணிபவளச் சடைகள் தாழப்
படரொளியம் பலத்தாடும் பரனார் பாதத்
தாதுமலி தாமரைகள் சிரத்தே வைத்துத்
தளராத பேரன்பு வளரா நிற்பாம். (சித்தியார்-1)

எனவரும் சிவஞானசித்தியார் கடவுள் வாழ்த்துப் பாடல், திருமந்திரத்தில்,

தேவர்கள் தானவர் சித்தர் வித்தியாதரர்
மூவர்க ளாதி முப்பத்து மூவர்கள்
தாபதர் சத்தர் சமயஞ் சராசரம்
யாவையும் ஆடிடும் எம்மிறையாடவே. (2731)

தத்துவ மாடச் சதாசிவந் தானுடச்
சித்தமு மாடச் சிவசத்தி தானுட
வைத்த சராசர மாட மறை ஆட
அத்தனு மாடினான் ஆனந்தக் கூத்தே. (2789)

எனவரும் திருக்கூத்துத் தரிசனப் பகுதியை நினைவு படுத்துவதாகும். "திருவம்பலத்து நிருத்தம் பண்ணுகை யாவது, பூமிக்குச் சுழுமுனை நாடி சிதம்பரமாதலால் அதில் ஆடுகை. அஜபாஸ்வர இயமாம் இரண்டக்கரமாகிய திரு வடிகளால் ஆடுவதனால் உலகத்திற்குயிநமாய் நிற்பன் என்பது கருத்து. உயிர்களுக்குப் பலமாயிருப்பனென்பது அஷ்டமூர்த்தி வடிவாதலால் 'தானுடத் தசையாடும்' என்னும் பழவார்த்தையும் இதனை நோக்கியெனக் கொள்க' என விளக்கம் கூறுவர் சிவாக்கிரயோகியார்.

இறைவன், புறத்தே திருக்கோயிலுள் இருக்குந் திருமேனியும் நேயமலிந்த அடியார்களாகிய திருவேடமும் ஆதாரமாகக்கொண்டு நின்றும், அகத்தே உயிரை இடமாகக் கொண்டு நின்றும், இங்குள்ளார் செய்யும் பூசையினை ஏற்றருள்வன் என்பது,

"தாபர சங்கமங்கள் என்றிரண் டுருவில் நின்று
மாபரன் பூசைகொண்டு மன்னுயிர்க் கருளைவைப்பன்"
(118)

எனவரும் சிவஞான சித்தியார் திருவிருத்தத்தால் உணர்த்தப்பட்டது. இச்செய்யுள்,

தாபரத் துண்ணின் றருளவல் லான்சிவன்
மாபரத் துண்மை வழிபடு வாரில்லை
மாபரத் துண்மை வழிபடு வாளர்க்குப்
பூவகத் துண்ணின்ற பொற்கொடி யாமே. (1717)

படமாடக் கோயிற் பகவற்கொன் றீயின்
நடமாடக் கோயில் நம்பர்க்கங் காகா
நடமாடக் கோயில் நம்பர்க்கொன் றீயில்
படமாடக் கோயிற் பகவற்க தாமே. (1857)

எனவரும் திருமந்திரப் பாடல்களை அடியொற்றி யமைந்ததாகும்.

சிவஞ்சத்தி நாதம் விந்து சதாசிவன் திகழும் ஈசன்
உவந்தருள் உருத்திரன்தான் மால்அயன் ஒன்றின்ஒன்றாய்ப்
பவந்தரும் அருவம்நால் இங்குருவம்நால் உபயம்ஒன்றாய்
நவந்தரு பேதம் ஏகநாதனே நடிப்பன் என்பர்.
(சிவஞானசித்தியார்-164)

எனவரும் செய்யுள், இறைவன் ஒருவனே இவ்வாறு அருவம் உருவம் அருவுருவம் எனப்படும் மூத்திறத்து ஒன்பது திருமேனியினும் வேற்றுமையின்றி நின்று இவ்வுலகினை இயக்கியருள்கின்றான் என அறிவுறுத்துவது ஆகும். இது,

சிவமொடு சத்தி திகழ்நாதம் விந்து
தவமான ஐமுகன் ஈசன் அரனும்
பவமுறு மாலும் பதுமத்தோன் ஈறு
நவமவை யாகி நடிப்பவன் தானே. (1807)

தலையான நான்கும் தனதரு வாகும்
அலையா அருவுரு வாகும் சதாசிவம்
நிலையான கீழ்நான்கு நீடுரு வாகும்
துலையா இவைமுற்று மாயல்ல தொன்றே. (1810)

எனவரும் திருமந்திரத்திருப்பாடல்களின் பொருளைத் தொகுத்துரைக்கும் முறையில் அமைந்திருத்தல் அறியத் தக்கதாகும்.

ஆன்மா, அரசும் அமைச்சரும் போல் மாயா கருவிகளைப்பற்றி உடன்நின்று அறியுங்கால் அரசன்போல் அவற்றை விட்டுவிட்டுச் சென்று ஐவகை அவத்தைகளை அடைவதாகும். அந்நிலையில் நனவு நிலையாகிய சாக்கிரத்தில் நுதல் இடமாக முப்பத்தைந்து கருவிகளும், கனவு நிலையில் கண்டம் இடமாக இருபத்தைந்து கருவிகளும், உறக்கநிலையில் நெஞ்சம் இடமாக மூன்று கருவிகளும்,

பேருறக்கநிலையில் கொப்பூழ் இடமாக இரண்டு கருவிகளும், துரியாதீதம் எனப்படும் உயிர்ப்படக்க நிலையில் மூலம் இடமாக ஒரு கருவியும் நிற்கும் என்பர். உயிர் கருவிகளோடு கூடி அறியும் நிலையில் உள்ள அவத்தை நிலைகளாகிய இவற்றை,

ஒன்றணையா மூலத் துயிரணையும் நாபியினில்
சென்றணையும் சித்தம் இதயத்து — மன்றவே
ஐயைந்தாம் நன்னுதலிற் கண்டத்தின் வாக்காதி
மெய்யாதி விட்டகன்று வேறு.

(சிவஞானபோதம்-வெண்பா-28)

எனவரும் சிவஞானபோதமும்,

சாக்கிரம் முப்பத்தைந்து நுதலினிற், கனவு தன்னில்
ஆக்கிய இருபத்தைந்து களத்தினில், சுழுனை மூன்று
நீக்கிய இதயந்தன்னில், துரியத்தில் இரண்டுநாபி,
நோக்கிய துரியாதீதம் நுவலின் மூலத்தின் ஒன்றே.

(சிவஞானசித்தியார்—சுபக்–223)

எனவரும் சிவஞானசித்தியாரும் வகைபெறக்கூறியுள்ளன, இங்குக் கூறப்பட்ட அவத்தை நிலைகளை விளக்கும் முறையில், சிவஞானசித்தியார் உரையாசிரியராகிய மறைஞானதேசிகர்,

முப்பதோ டைந்தாய் முதல்விட்டங் கையைந்தாய்
செப்பதின் மூன்ருய்த் திகழ்ந்திரண் டொன்றதாய்
இப்பதி நின்ற இயல்பை யறிந்தவர்
அப்பதி நின்றமை ஆய்ந்துகொள் ளீரே. (2143)

இந்திய மீரைந் தீரைந்து மாத்திரை
மந்திர மாய்நின்ற மாருதம் ஈரைந்தும்
அந்தக் கரணம் ஒருநான்கும் ஆன்மாவும்
பந்தவச் சாக்கிரப் பாலது வாகுமே. (2144)

மனவகத்தே......இருபத்தைஞ்சதாமே. [1]

சுழுனையைச் சேர்ந்துள மூன்றுடன் காட்சி
கெழுமிய சித்தம் பிராணன்றன் காட்சி
ஒழுகக் கமலத்தின் உள்ளே யிருந்து
விழுமப் பொருளுடன் மேவிநின் ருனே. (2156)

கருவரம் பாகிய காயந் துரியம்
இருவரும் கண்டிடிற் பிறப்பிறப் பற்றவர் [2]
குருவரம் பெற்றவர் கூடிய பின்னை
இருவருமின்றி யொன்ருகி நின்ருரே. (2280)

1. இப்பாடல் முழுவதும் கிடைக்கவில்லை.
2. மறைஞான தேசிகர் கொண்ட பாடம்.

எனவரும் திருமந்திரப் பாடல்களை உதாரணமாகக் காட்டியுள்ளமை இங்கு ஒப்புநோக்கி யுணரற்பால தாகும்.

உயிரானது, மேற்குறித்த காரிய அவத்தைகளை அடைதற்குக் காரணமாகக் கேவலம், சகலம், சுத்தம் என்னும் மூன்று அவத்தைகளை அடையும். அவற்றுட் கேவலம் என்பது, உயிர் தனக்குரிய விழைவு, அறிவு, செயல் என்பவற்றின் நிகழ்ச்சி சிறிது மின்றித் தனித்துத் தன்னளவில் நிற்கும் நிலையாகும். சகலம் என்பது, உடல் கருவிகள் முதலியவற்றோடுங் கூடி விழைவு அறிவு செயல் ஆகிய அவை ஒரு சிறிது விளங்க நிற்கும் நிலை. சுத்தம் என்பது, உயிர் தன்னைப் பற்றிய ஐவகை மலங்களும் நீங்கிச் சிவத்தோடுகூடி விழைவு அறிவு செயல்கள் எங்கு மாய்ப் பரவி விளங்கும் நிலையாகும். இம் மூவகை நிலை களையும் விளக்கும் முறையில் அமைந்தது,

> கேவல சகல சுத்தம் என்று மூன்றவத்தை ஆன்மா
> மேவுவன். கேவலம் தன்னுண்மை, மெய் பொறிகளெல்லாம்
> காவலன் கொடுத்த போது சகலமும், மலங்களெல்லாம்
> ஓவினபோது சுத்தம் உடையன் உற்பவந் துடைத்தே. (227)

எனவரும் சிவஞான சித்தியார் திருவிருத்தமாகும். இது,

> தற்கேவலம் முத்திதானே தனிமையாம்
> பிற்பால் சகலம் கலாதிப் பிறழ்வதாம்
> தப்பால் புரிசுத்த கேவலஞ் சாக்கிரத்
> தப்பாற் புரிய அதிசுத்த மாமே. (2246)

எனவரும் திருமந்திரத்தைப் பின்பற்றியமைந்த தாகும்.

உயிரானது ஒரு செயலு மின்றி ஆணவமலத்தோடு மட்டும் கூடிய நிலையாகிய கேவலத்தின் இயல்பினை விரித் துரைப்பது,

> அறிவிலன் அமூர்த்தன் நித்தன் அராகாதி குணங்களோடுஞ்
> செறிவிலன் கலாதியோடுஞ் சேர்விலன் செயல்கள் இல்லான்
> குறியிலன் கருத்தா அல்லன் போகத்திற் கொள்கையில்லான்
> பிறிவிலன் மலத்தினோடும் வியாபி கேவலத்தில் ஆன்மா. (228)

எனவரும் சிவஞான சித்தியாராகும். இது,

அறிவிலன் அமூர்த்தன்[1] அராகாதி சேரான்
குறியொன் றிலான் நித்தன் கூடான் கலாதி
செறியுஞ் செயலில்லோன் திண்கர்த்தா அல்லோன்
கிறியின் மலன் வியாபி கேவலத் தோனே. (2247)

எனவரும் திருமந்திரத்தின் சொல்லையும் பொருளையும் அவ்வாறே அடியொற்றியமைந்திருத்தல் காணலாம்.

ஆன்மா, உடல் கருவி முதலியவற்றைப் பெற்றுப் போகம் நுகர்ந்து ஓரளவு அறிவு விளங்கப் பெற்ற நிலையாகிய சகலத்தின் இயல்புரைப்பது,

உருவினைக் கொண்டுபோக போக்கியத் துன்னல் செப்பல்
வருசெயல் மருவிச் சத்த மாதியாம் விடயந்தன்னில்
புரிவதுஞ் செய்திங் கெல்லா யோனியும் புக்குழன்று
திரிதரும் சகலமான அவத்தையிற் சீவன் சென்றே. (229)

என்னும் சிவஞான சித்தியாராகும். இஃது,

உருவுற்றுப் போகமே போக்கியந் துற்று
மருவுற்றுப் பூத மனாதியான் மன்னி
வருமச் செயல்பற்றிச் சத்தாதி வைகிக்
கருவுற் றிடுஞ் சீவன் காணுஞ் சகலத்தே. (2261)

எனவரும் திருமந்திரப் பொருளை விரித்துரைப்பதாகும்.

உயிரானது குருவின் திருவருளைச் சார்ந்து தூய்மை பெறும் நிலையாகிய சுத்தாவத்தையினை விளக்குவது,

இருவினைச் செயல்கள் ஒப்பின் ஈசன்றன் சத்திதோயக்
குருவருள் பெற்று ஞான யோகத்தைக் குறுகி முன்னைத்
திரிமலம் அறுத்துப் பண்டைச் சிற்றறி வொழிந்து ஞானம்
பெருகி நாயகன்றன் பாதம் பெறுவது சுத்தமாமே. (230)

என்னும் சிவஞான சித்தியார் செய்யுளாகும். இஃது.

இருவினை நேரொப்பி லின்னருட் சத்தி
குருவென வந்து குணம்பல நீக்கித்
தரும் அரன் ஞானத்தால் தன் செயலற்றால்
திரிமலம் நீங்கிச் சிவனாதல் சுத்தமே (1527. 2262.)

எனவரும் திருமந்திரப் பொருளை விரித்துரைக்கும் முறையில் அமைந்ததென்பது, இச்செய்யுளுரையில் மறை ஞான

1. 'அறிவின்றிமுத்தன்' எனத் திருமந்திரம் அச்சுப் புத்தகங்களில் உள்ள பாடம் பிழைபட்டதாகும். 'அறிவிலன் அமூர்த்தன்' எனச் சிவஞான சித்தியார் மறைஞான தேசிகர் உரையிற்கண்ட பாடமே திருந்திய பாடமாகும் என்பது இங்கு எடுத்துக் காட்டிய ஒப்புமைப் பகுதியால் இனிது புலனாதல் அறிக.

தேசிகர் இத்திருமந்திரத்தை மேற்கோளாகக் காட்டியிருத்தலால் இனிது விளங்கும்.[1]

ஆணவமலம் ஒன்றேயுடைய உயிர்களை விஞ்ஞானகலர் எனவும், ஆணவம் கன்மம் என்னும் இருமலமுடைய உயிர்களைப் பிரளாயாகலர் எனவும், ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலமுடைய உயிர்களைச் சகலர் எனவும் உயிர்களை மூவகையாகப் பகுத்துரைத்தல் சைவ சித்தாந்த மரபாகும்.

'மெய்ஞ்ஞானந் தானே விளையும் விஞ்ஞானகலர்க்
கஞ்ஞான வச்சகலர்க் கக்குருவாய்—மெய்ஞ்ஞானம்
பின்னுணர்த்து மன்றிப் பிரளயா கலருக்கு
முன்னுணர்த்துந் தான்குருவாய் முன்,'

(சிவஞானபோதம்-வெண்பா-47)

எனவும்,

உரைதரும் இப்பசுவர்க்கம் உணரின் மூன்றும்
உயரும் விஞ்ஞானகலர் பிரளயா கலர்சகலர்
நிரையின் மலம் மலங்கன்மம், மலங்கன்ம மாயை
நிற்கும், முதலிருவர்க்கும் நிராதாரமாகிக்

கரையிலருட் பரன் துவிதா சத்திநி பாதத்தால்
கழிப்பன் மலம், சகலர்க்குக் கன்ம வொப்பில்
தரையில் ஆசான்மூர்த்தி ஆதாரமாகித்
தரித்தொழிப்பன் மலம் சதுர்த்தா சத்திநி பாதத்தால்.

(சிவஞான சித்தியார்-சுபக்கம்-254)

எனவும்,

மூவகை ஆருயிர் வர்க்கம் மூலமலத்தார், கன்ம
மூலமலத்தார், மூன்று முடையாரன்றே,
தீவகமாம் எனவுருவாய் வந்து நாதன்
திருநோக்கால் பரிசத்தால் திகழும் வாக்கால்

பாவனையால் மிகு நூலால் யோகப் பண்பால்
பரவிவரும் அவுத்திரியாற் பாசநாசம்
மேவ அருளுதவும், அவுத்திரியிரண்டு திறனும்
வியன்கிரியை ஞானமென விளம்புமாறே.

(சிவப்பிரகாசம 8)

1. இத்திருமந்திரம் இப்பொழுதுள்ள அச்சுப்புத்தகங்களில்,
இருவினை யொத்திட இன்னருட்சத்தி
மருவிட ஞானத்தில் ஆதன மன்னிக்
குருவினைக் கொண்டருள் சத்திமுன் கூட்டிப்
பெருமலம் நீங்கிப் பிறவாமை சுத்தமே. (திருமந்திரம் 2262)

எனக் காணப்படுகின்றது.

எனவும் வரும் மெய்கண்ட நூற் செய்யுட்கள்,

விஞ்ஞானர் நால்வரு மெய்ப்பிரளயாகலத்
தஞ்ஞானர் மூவருந் தங்குஞ் சகலத்துள்
அஞ்ஞானர் மூவரு மாகப் பதின்மராம்
விஞ்ஞான ராதியர் வேற்றுமை தானே. (493)

மும்மலங் கூடி முயங்கி மயங்குவோர்
அம்மெய்ச் சகலத்தர் தேவா சுரர் நரர்
மெய்மையின் வேதா வரிமிரு கீழந்தத்
தம்முறை யோனிபுக் கார்க்குஞ் சகலரே. (2244)

எனவரும் திருமந்திரப் பாடல்களின் பொருளை மேற் கொண்டு கூறுவனவாகும்.

வேதம் சிவாகமம் என்னும் இருதிற நூல்களும் சிவ பெருமானால் அருளிச் செய்யப்பெற்ற முதல்நூல்கள் எனவும், வேறுரைக்கும் எல்லா நூல்களும் இவற்றை முதலாகக் கொண்டு இயற்றப்பட்ட வழிநூல்கள் எனவும், வேதம் உலகத்தார் உய்தற்பொருட்டுப் பொதுநூலாகவும் சிவாகமம் சத்திநிபாதர் உய்தற்பொருட்டுச் சிறப்பு நூலாகவும் அருளிச் செய்யப் பெற்றன எனவும் அறிவுறுத்து முறையிலமைந்தது,

வேதநூல் சைவநூல் என்றிரண்டே நூல்கள்
 வேறுரைக்குநூ லிவற்றின் விரிந்த நூல்கள்
ஆதிநூல் அநாதி யமலன் தருநூ லிரண்டும்
 ஆரணநூல் பொது, சைவம் அருஞ் சிறப்பு நூலாம்
நீதியினால் உலகர்க்கும் சத்திநி பாதர்க்கும்
 நிகழ்த்தியது, நீண்மறையி னொழிபொருள் வேதாந்தத்
தீதில்பொருள் கொண்டுரைக்கும் நூல் சைவம், பிறநூல்
 திகழ்பூர்வம், சிவாகமங்கள் சித்தாந்தமாகும். (267)

எனவரும் சிவஞான சித்தியாராகும். இது,

வேதமோ டாகமம் மெய்யாம் இறைவ னூல்
ஓதும் பொதுவுஞ் சிறப்புமென் றுன்னுக
நாத னுரையிவை நாடி லிரண்டந்தம்
பேதமதென்னிற் பெரியோர்க் கபேதமே. (2397)

என்னும் திருமந்திரப் பொருளை விரித்துரைக்கும் முறையில் அமைந்ததாகும்.

சித்தாந்தத்தே சிவன்றன் திருக்கடைக்கண் சேர்த்திச்
 செனன மொன்றிலே சீவன் முத்தராக
வைத்தாண்டு மலங்கழுவி ஞான வாரி
 மடுத்தானந் தம் பொழிந்து வரும் பிறப்பை யறுத்து

முத்தாந்தப் பாதமலர்க் கீழ்வைப்ப னென்று
மொழிந்திடவும் உலகரெலாம் மூடராகிப்
பித்தாந்தப் பெரும்பிதற்றுப் பிதற்றிப் பாவப்
பெருங் குழியில் வீழ்ந்திடுவர் இதுவென்ன பிராந்தி. (268)

எனவரும் சிவஞான சித்தியார் செய்யுள்,

'சித்தாந்தத்தே சீவன் முத்திசித் தித்தலால்
சித்தாந்தத் தேநிற்போர் முத்திசித்தித்தவர்'
(திருமந்திரம் - 2394)

என்னும் திருமூலர் வாய்மொழியினை மேற்கொண்டு கூறிய விளக்கமாக அமைந்திருத்தல் அறியத்தக்கதாகும்.

"தானமியாகந்தீர்த்தம்' (277) எனவரும் சிவஞான சித்தியாரில் 'அரன் முனிலா தொழியில் உற்பவித்து ஞான நெறி யடைந்தடைவர் சிவனை' என்ற தொடர், சரியை முதலிய சிவபுண்ணியங்களைச் செய்தவர் போகத்தில் விருப் புடையராயின், விசிட்டமான கன்மபரிபாகத்தாலே புரியட் டக உடலை யெடுத்துப் பொல்லாதென்ற சகல யோனிகளைப் புசித்துத் தொலைந்தவாறே பிரளயாகலராய்ப் பின்பு விஞ் ஞானகலராய் ஞானநெறியைத் தலைப்பட்டுச் சிவனடியை அடைவார்கள் என்பதனை அறிவுறுத்துவதாம். இது,

விஞ்ஞான கன்மத்தான் மெய்யட்டகங் கூடி
யஞ்ஞான கன்மத்தாற் சகல யோனிபுக்
கெஞ்ஞானமு மெய்தி யிடையிட்டு மீண்டுபோய்
விஞ்ஞான ராய்ச் சிவ மேவுவ துண்மையே. (499)

என்னும் திருமந்திரப் பாடலை உளங்கொண்டு கூறிய விளக்கமாதல் அறியலாம்.

சிவஞானச் செயலுடையோர் கையில்தானம்
திலமளவே செய்திடினும் நிலமலைபோல் திகழ்ந்து
பவமாயக் கடலினமுந் தாதவகை யெடுத்துப்
பரபோகந் துய்ப்பித்துப் பாசத்தை யறுக்கத்

தவமாரும் பிறப்பொன்றிற் சாரப் பண்ணிச்
சரியை கிரியா யோகந் தன்னினும் சாராமே
நவமாகும் தத்துவ ஞானத்தை நல்கி
நாதனடிக் கமலங்கள் நணுகுவிக்குந் தானே. (278)

எனவரும் சிவஞான சித்தியார் விருத்தம்,

அகர மாயிரம் அந்தணர்க் கீயிலென்
சிகர மாயிரஞ் செய்து முடிக்கிலென்
பகரு ஞானி பகலூண் பலத்துக்கு
நிகரில்லை யென்பது நிச்சயந் தானே. (1860)

என்ற திருமந்திரப் பாடற்கு அமைந்த விரிவுரை போன்றிருத்தல் உணர்ந்து மகிழத்தக்கதாகும்.

சூரியனது சந்நிதியளவிலே சூரியகாந்தக் கல்லில் நெருப்பு விளங்கித் தோன்றுமாறு போல, ஞானசிரியன் முன்னிலையிலே மாணக்கனுள்ளத்தே சிவஞானம் விளங்கித் தோன்றும். அது தோன்றவே பதி பசு பாசம் ஆகிய முப்பொருள்களின் இயல்புகளும் நன்கு விளங்கும் என அறிவுறுத்துவது,

சூரியகாந் தக்கல்லி னிடத்தே செய்ய
சுடர்தோன்றியிடச் சோதி தோன்றுமாபோல்
ஆரியனும் ஆசான்வந் தருளால் தோன்ற
அடிஞானம் ஆன்மாவில் தோன்றும், தோன்றத்

தூரியனும் சிவன் தோன்றும் தானுந் தோன்றும்
தொல்லுலக மெல்லாந்த னுள்ளே தோன்றும்
நேரியனைப் பரியனுமாய் உயிர்க்குயிராய் எங்கும்
நின்றநிலை யெல்லாம் முன் நிகழ்ந்து தோன்றும் (280)

எனவரும் சிவஞான சித்தியார் செய்யுளாகும். இது

சூரிய காந்தமுஞ் சூழ்பஞ்சும் போலச்
சூரிய காந்தஞ் சூழ் பஞ்சைச் சுடமாட்டா
சூரியன் சன்னிதியிற் சுடுமாறுபோல்
ஆரியன் தோற்ற முன் அற்ற மலங்களே. (117)

எனவரும் திருமந்திரத்தின் சொற்பொருள்களை அவ்வாறே அடியொற்றியமைந்துள்ளமை காணலாம்.

'ஆசிரியனது அருள்நோக்கத்தால் இருவகைப் பாசங்களும் நீங்கிக் கேட்கும்முறையில் கேட்டுச் சிந்திக்கும் முறையிற் சிந்தித்து அன்புசெய்து அருள்வழியடங்கி நிற்கும் இயல்பினர்க்கு இறைவனியல்பு கேட்கும் காலத்துப் பொருட்டன்மைபற்றிப் பேதமாய்த்தோன்றியும் சிந்திக்குங் காலத்துக் கலப்புப்பற்றி அபேதமாய்த் தோன்றியும், தெளிந்தபின்னர் இவ்விரண்டுமின்றி நுண்ணியனும் பரியனுமாயதோர் முறைமைபற்றி எவற்றினும் ஒற்றித்து நின்றே ஒன்றிலுந் தோய்விலனாய்ப் பேதாபேதமாய்த் தோன்றியும் நிற்கும் அம்முதல்வனது தன்மை இனிது விளங்கும் என இவ்வாறு தெளிதலின் இயல்பினை உணர்த்துவது,

அறியாமை யறிவகற்றி யறிவி னுள்ளே
அறிவுதனை அருளினுன் அறியாதே யறிந்து
குறியாதே குறித்தந்தக் கரணங்க ளோடும்
கூடாதே வாடாதே குழைந்திருப்பை யாகில்

பிறியாத சிவன்தானே பிறிந்து தோன்றிப்
பிரபஞ்ச பேதமெலாந் தாளுய்த் தோன்றி
நெறியாலே இவையெல்லாம் அல்லவாகி
நின்றென்றுந் தோன்றிடுவன் நிராதார னுயே. (282)

என்னும் சிவஞானசித்தியாராகும். இச்செய்யுள்,

அறிவறியாமை யிரண்டு மகற்றிச்
செறிவறிவாயெங்கும் நின்ற சிவனைப்
பிறவறியாத பிரானென்று பேணுங்
குறியறியாதவர் கொள்ளறி யாரே. (2580)

எனவரும் திருமந்திரப்பாடலை அடியொற்றியமைந்து இருத்தல் அறியத்தக்கதாகும்.

புண்ணிய பாவம் என்னும் இருவினைத் தளைகளையும் ஞானபூசையின் பயனுகத் தெளிதலுணர்வெனப்படும் ஞான அரத்தால் அறுத்து ஞான நிட்டையில் நின்றோர், கரணங்களின் வயத்தராதலின்றி, இறைவனது வியாபகத்தைத் தலைப்பட்டு ஒருவாற்ருனும் குறைவின்றி இம்மையே சீவன் முத்தராகி, இவ்வுடம்பு நீங்கப்பெறும் பரமுத்தி நிலையில் தமது வியாபகம் எங்கணும்ஆகி அறிவு விளங்கப்பெற்று முதல்வனேடு ஒன்றி ஒத்து நிற்பர் என உணர்த்துவது,

புண்ணியமேல் நோக்குவிக்கும் பாவங்கீழ் நூக்கும்
புண்ணியனைப் பூசித்த புண்ணியத்தி னுலே
நண்ணிய ஞானத்தினல் இரண்டினையும் அறுத்து
ஞாலமொடு கீழ்மேலும் நண்ணு னுகி

எண்ணுமிக லோகத்தே முத்திபெறும் இவன்றன்
எங்கெழிலென் ஞாயிறெமக் கென்றுகுறை வின்றிக்
கண்ணுதல்தன் நிறைவதனிற் கலந்து காயம்
கழிந்தக்கால் எங்குமாய்க் கருதரன்போல் நிற்பன். (283)

எனவரும் சிவஞானசித்தியாராகும். இது,

முப்பது மாறும் படிமுத்தி யேணியாய்
ஒப்பிலாப் பேரண்டத் துள்ளொளி புக்குச்
செப்பவரிய சிவங்கண்டு நின்றவர்
அப்பரி சாகி யமர்ந்துநின் ருரே. (126)

என்னும் திருமந்திரத்திற்கு அமைந்த விரிவுரையாகத் திகழ்தல் இங்கு ஒப்புநோக்கி யுணர்தற் குரியதாகும்,

தத்துவங்களும் தத்துவகர்த்தாக்களும் நீங்கியே முத்தி என்பதற்கு இத்திருமந்திரத்தினை மேற்கோளாகக் காட்டுவர் மதுரைச் சிவப்பிரகாசர்.

பொன்னம்பலத்தில் ஐந்தொழிற் றிருக்கூத்தியற்றியருளும் இறைவன் தன் திருவடியிலே நகரமும், திருவுந்தியிலே மகரமும், திருத்தோளிலே சிகரமும், திருமுகத்திலே வகரமும், திருமுடியிலே யகரமும், திருவாசி ஓங்காரமும், அதன்கண் உள்ள சுடர்கள் ஓங்காரத்தை விட்டு நீங்காத பஞ்சாக்கரமும் ஆக அமைய இவ்வாறு திருவைந்தெழுத்தினையே தனக்குத் திருமேனியாகக் கொண்டு ஆடல் புரிந்தருளுந்திறத்தினை அறிவுறுத்துவன,

ஆடும்படி கேள் நல் லம்பலத்தான் ஐயனே
நாடுந் திருவடியி லே நகரம் — கூடும்
மகரம் உதரம், வளர்ந்தோள் சிகரம்,
பகரு முகம்வா, முடி யப்பார். (உண்மை-32)

எனவும்,

ஓங்கார மேநற் றிருவாசி, உற்றதனில்
நீங்கா எழுத்தே நிறைசுடராம் — ஆங்காரம்
அற்றார் அறிவர் அணி அம்பலத்தான் ஆடலிது
பெற்றார் பிறப்பற்றார் பின். (உண்மை-34)

எனவும்வரும் உண்மை விளக்கச் செய்யுட்களாகும். அம்பலக்கூத்தனாகிய இறைவன், ஒலிக்கின்ற உடுக்கை ஏந்திய திருக்கரத்திலே சிகாரமாகவும், வீசிய திருக்கரத்திலே வகாரமாகவும், அஞ்சலென்று அமைத்த திருக்கையிலே யகாரமாகவும், அக்கினியேந்திய திருக்கரத்திலே நகாரமாகவும், முயலகனை மிதித்து ஊன்றிய திருவடியிலே மகாரமாகவும், கொண்டருளி ஆடல்புரிந்தருளுவதனையும், உடுக்கையேந்திய கையினாலே மாயையை நீக்கி, தீயேந்திய திருக்கரத்தினாலே வல்வினையைச் சுட்டெரித்து, ஊன்றிய திருவடியினாலே மலம் சாய அமுக்கி அருளே தநுவாக நிறுத்தி, அமைத்த திருக்கரத்தினாலே ஆன்மாக்களை ஆனந்த வெள்ளத்தில் அழுத்துதல் இறைவனது திருக்கூத்து முறைமை என்பதனையும் விரித்துரைப்பன,

சேர்க்குந் துடிசிகரம், சிக்கனவா வீசுகரம்,
ஆர்க்கும் யகரம் அபயகரம் — பார்க்கிலிறைக்(கு)
அங்கி நகரம், அடிக்கீழ் முயலகனார்
தங்கும் மகரமது தான். (உண்மை விளக்கம்–33)

மாயை தனையுதறி வல்வினையைச் சுட்டுமலம்
சாய அமுக்கி அருள்தானெடுத்து — நேயத்தால்
ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத் தானழுத்தல்
தானெந்தை யார்பரதம் தான். (ஷை-36)

எனவரும் செய்யுட்களாகும். இவை,

மருவுந் துடியுடன் மன்னிய வீச்சு
மருவிய அப்பும் அனலுடன் கையும்
கருவின் மிதித்த கமலப் பதமும்
உருவில் சிவாய நமவென ஓதே. (திருமந்திரம்-2798)

எனவும்,

திருந்துநற் சீயென் றுதறிய கையும்
அருந்தவர் வாவென் றணைத்த மலர்க்கையும்
பொருந்தில் இமைப்பிலி யவ்வென்ற பொற்கையும்
திருந்தத்தீ யாகும் திருநிலை மவ்வே. (ஷை-2797)

எனவரும் திருமந்திரப்பாடல்களின் பொருளை அடியொற்றி யமைந்த விளக்கங்களாகும்.

அரன்துடி தோற்றம், அமைத்தல் திதியாம்,
அரன் அங்கிதன்னில் அறையிற் சங்காரம்
அரனுற் றணைப்பில் அமருந்திரோதாயி
அரனடி யென்றும் அனுக்கிரகம் என்னே. (2800)

எனவரும் திருமந்திரத்தைச் சொற்பொருளால் ஒத்து அமைந்தது,

தோற்றந் துடியதனில், தோயுந் திதியமைப்பில்,
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் — ஊற்றமா
ஊன்று மலர்ப்பதத்தே உற்றதிரோதம் முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு. (உண்மை விளக்கம்-41)

எனவரும் உண்மை விளக்கமாகும்.

சிவன், அருள், ஆன்மா, திரோதம், மலம் என்னும் இவ்வைந்தும் சிவாயநம என்னும் திருவைந்தெழுத்தின் பொருள் முறையாம். பக்குவப்பட்ட ஆன்மா நகரம் முதலாக ஓதாது சிகாரம் முதலாக ஓதுதலே திருவருளைப் பொருந்தும் முறை என அறிவுறுத்துவது,

சிவனருள் ஆவி திரோதமலம் ஐந்தும்
அவனெழுத் தஞ்சின் அடைவாம் — இவனின்று
நம்முதலா ஓதிலருள் நாடாது நாடும்அருள்
சிம் முதலா ஓதுநீ சென்று. (41)

எனவரும் உண்மை விளக்கமாகும். இது,

சிவனரு ளாய சிவன்றிரு நாமஞ்
சிவனரு ளான்மாத் திரோத மலமாயை[1]
சிவன்முதலாகச் சிறந்து நிரோதம்[2]
பவம தகன்று பரசிவ னுமே (2711)

என்னும் திருமந்திரத்தைத் தழுவி யமைந்திருத்தல் கூர்ந்துணர்தற்குரியதாகும்.

வாக்கு மனமிறந்த வரன்கருணை யாளன்உருத்
தாக்கறவே நிற்குந் தனிமுதல்வா — நீக்காப்
பதியினைப்போல் நித்தம் பசுபாச மென்றாய்
கதியிடத்து மூன்றினையுங் காட்டு. (உண்மை விளக்கம்–49)

எனத் திருவதிகை மனவாசகங்கடந்தார் தம் ஆசிரியரை நோக்கிக் கூறுவதாக அமைந்த இச்செய்யுளில், 'பதியினைப் போல் நித்தம் பசுபாசம் என்றாய்' எனவரும் மூன்றாமடி,

"பதியினைப்போல் பசுபாசம் அனாதி" (115)

எனவரும் திருமந்திரத் தொடரை ஆசிரியர் தமக்கு அறிவுறுத்திய மேற்கோளாகக் கொண்டுகூறும் முறையில் அமைந்திருத்தல் காணலாம்,

அன்றிய பாச இருளும் அஞ்ஞானமும்
சென்றிடு ஞானச் சிவப்பிரகாசத்தால்
ஒன்று மிருசுட ராமரு ளோதயந்
துன்றிருள் நீங்குதல் போலத் தொலைந்ததே. (2001)

எனவரும் திருமந்திரப் பொருளை உளங்கொண்ட உமாபதி சிவாசாரியார், கருத்திலுறை திருவருளும் இறைவனூலுங் கலந்து தாம் இயற்றிய சார்புநூலுக்குச் சிவப்பிரகாசம் எனப் பெயரிட்டுள்ளார்.

சிவனுடைய அருளிடமாக நின்று ஆன்மசுத்தி பண்ணினவர்கள் தத்துவம் முப்பத்தாறோடும் கூடி நிற்கும் பொழுதே அவற்றோடும் கூடிச் சீவிப்பதும் செய்யாமல் அறிவு குலைவதும் செய்யாமல் சிவத்துடன்கூடி நிற்கும் நிலையே சாக்கிரத்தில் அதீதம் என்னும் முறைமையை அறிவிப்பது,

1. 'மலமாகும்' என்பதே திருந்திய பாடம்,
2. 'நிரோதம்' என்பது, 'நீரோதப்' என்பதன் சிதைவாகும்.

பொற்புறு கருவியாவும் புணராமே, அறிவிலாமற்
சொற்பெறும் அதீதம் வந்துதோன்றுமே, தோன்றிநின்ற
சிற்பர மதனால் உள்ளச் செயலறுத்திட உதிக்கும்
தற்பரமாகி நிற்றல் சாக்கிரா தீதந்தானே. (80)

எனவரும் சிவப்பிரகாசச் செய்யுளாகும். இதன்கண் குறித்தவாறு தத்துவம் முப்பத்தாறும் நீங்கியே முத்தி யென்பதற்கு,

முப்பது மாறும் படிமுத்தி யேணியாய்
ஒப்பிலாப் பேரண்டத் துள்ளில் வெளிபுக்குச்
செப்பவரிய சிவங்கண்டு தான் தெளிந்
தப்பரி சாகி யமர்ந்திருந்தாரே. (126)

என்னும் திருமந்திரத்தையும், ஆணவமலத்தால் மறைப்புண்டு அறியாமையாய்க் கிடப்பதுஞ் செய்யாமல் உட்கரணம் புறக்கரணங்களோடுங்கூடிச் சகலனாய்ச் சத்தாதி விடயங்களோடுங்கூடிச் சீவிப்பதுஞ் செய்யாமல் நின்ற இடமே சாக்கிராதீதம் என்பதற்கு,

நினைப்பு மறப்பு மிலாத விடத்தே
வினைப்பற் றறுக்கும் விமலனிருப்பன்
வினைப்பற் றறுக்கும் விமலனை நாடி
நினைக்கப் புகிலவன் நீளியனாமே. (2970)

இரவும் பகலு மிலாத விடத்தே
குரவஞ் செய்கின்ற குழலியை நாடி
அரவஞ் செய்யாதவ ளோடுஞ் சந்திக்கிற்
பரவஞ் செயாவகைப் பாலனுமாமே. (1134)

நின்றவச் சாக்கிரந் துரியம தானால்
மன்றனு மங்கே மணஞ்செயா நின்றிடு
மன்றன் மணஞ்செயின் மாயையு மாய்ந்திடும்
அன்றே யிவனும் அவனென லாமே. (2277)

என்னும் திருமந்திரப் பாடல்களையும், நிஷ்டாபரராகைக்குப் பக்குவரானவர்கள் ஆசாரியனிடத்திலே உண்மையைப் பெற்று அநுபவத்தில் அறிகிறதொழிய நூல்களினாலே அறியப்படாதென்பதற்கு,

காட்டுங் குறியுங் கடந்தவர் காரணம்
ஏட்டின் புறத்தி லெழுதிவைத் தென்பயன்
கூட்டுங் குருநந்தி கூட்டிடி னல்லது
ஆட்டின் கழுத்தின் அதர்கறந் தற்றே. (2937)

என்னும் திருமந்திரத்தையும் மதுரைச் சிவப்பிரகாசர் பிரமாணமாகக் காட்டியுள்ளார்.

தத்துவங்களும் ஆன்மாவும் தம்மிற்கூடிச் சீவிக்கும் முறைமையும், அவ்வாறு சீவிக்கும் பொழுதே அவை இரண்டும் பகல்விளக்குப்போலத் தற்போதம் சீவியாமல் நிற்க அருள் மேலிட்ட நிலையில் ஆன்மா அவ்வருளோடுங் கூடிச் சிவாநுபவத்தைப் பெறும் முறைமையும் அறிவுறுத்துவது,

பற்றிடுங் கருவியாவும் படர்ந்துணர் வளிக்குங்காலை
உற்றறிந் திடுவதொன்றின் உணர்வினின் உண்மையாகும்
மற்றது பகல்விளக்கின் மாய்ந்திட வருவதுண்டேல்
பெற்றிடும் அதனை மாயப்பிறப்பினை யறுக்கலாமே, (82)

எனவரும் சிவப்பிரகாசமாகும். இதன்கண் பகல் விளக்குப் போல என்றது, தற்போதங் கெட்டுநிற்றலை. இதற்கு

'ஒத்திட் டிருக்க வுடம்போ டுயிர்தான்
செத்திட்டிருப்பர் சில சிவயோகிகள்' (121)

எனவரும் திருமந்திரத் தொடரைப் பிரமாணமாகக் காட்டுவர் மதுரைச் சிவப்பிரகாசர்.

இறைவனது திருப்பெயராகிய திருவைந்தெழுத்தினைச் சிவமுதலாக உச்சரித்து நிட்டையைப் பொருந்தினால் பிறப்பிறப்புக்களாகிய துன்பம் நீங்கும். இதுவே திருவைந்தெழுத்தினை ஓதும் முறை என அறிவுறுத்துவது,

சிவ முதலே ஆமாறு சேருமேல் தீரும்
பவம், இதுநீ ஓதும் படி. (திருவருட்பயன்–87)

என்னும் செய்யுளாகும். இது,

நமவென்னு நாமத்தை நாவில் ஒடுக்கிச்
சிவவென்னு நாமத்தைச் சிந்தையு ளேற்றப்
பவமது தீரும், பரிசும தற்றால்
அவமது தீரும் அறும்பிறப் பன்றே. (2717)

எனவரும் திருமந்திரப்பொருளை உட்கொண்டு கூறியது ஆகும்.

வகாரமாகிய அருள், சிகாரமாகிய சிவத்தை ஆன்மாவுக்குக் கொடுத்துப் பேரின்பத்தை விளைக்கும் குற்றமற்ற அந்த ஆன்மா சிவத்துக்குத் திருமேனியாகும். என்றும், ஆன்மா மலத்துக்குந் திரோதானத்துக்கும் நடுவே பொருந்தாமல் குருவருளினால் அருளுக்கும் சிவத்துக்கும் நடுவே நிற்கிறது முறைமையென்றும்,

வாசி யருளியவ்வை வாழ்விக்கும் மற்றதுவே
ஆசில் உருவமுமாம் அங்கு. (திருவருட்பயன்-88)

ஆசில்நவா நாப்பண் அடையா தருளினால்
வாசியிடை நிற்கை வழக்கு. (ஷை-89)

எனவரும் செய்யுட்களில் உமாபதி சிவாசாரியார் நுண்ணிய திருவைந்தெழுத்தின் இயல்பினைத் தெளிவாக விளக்கி யுள்ளார். இவ்விளக்கம்

சிவாய நமவெனச் சித்தம் ஒருக்கி
அவாய மறவே யடிமைய தாக்கிச்
சிவாய சிவசிவ என்றென்றே சிந்தை
அவாயங் கெடநிற்க ஆனந்த மாமே. (2718)

என்னுந் திருமந்திரப் பொருளை உளங்கொண்டு கூறிய தாதல் உணர்ந்து போற்றத்தக்கதாகும்

இதுகாறும் எடுத்துக்காட்டிய ஒப்புமைப் பகுதிகளைக் கூர்ந்து நோக்குங்கால், சிவஞானபோதம் சிவஞான சித்தியார் முதலிய சைவ சித்தாந்த சாத்திரங்களாகிய மெய்கண்ட நூல்கள் எல்லாவற்றிற்கும் சைவத் திருமுறை பன்னிரண்டனுள் பத்தாந் திருமுறையாக விளங்கும் இத் திருமந்திரமே முதல் நூலாகத் திகழும் சிறப்புடையது என்பது நன்கு புலனாதல் காணலாம்.

பதினொராந் திருமுறை

திருவாலவாயுடையார் திருவாய் மலர்ந்தருளிய திருமுகப் பாசுரம் முதலாக நம்பியாண்டார் நம்பிகள் பாடிய திருநாவுக்கரசுதேவர் திருவேகாதச மாலையீருக உள்ள நாற்பது பிரபந்தங்களின் தொகுதியே பதினொராந் திருமுறையென வழங்கப்பெறுகின்றது. இத்திருமுறையிற் சேர்க்கப்பெற்ற பிரபந்தங்களைப் பாடிய அருளாசிரியர்கள் திருவாலவாயுடையார், காரைக்காலம்மையார், ஐயடிகள் காடவர்கோன் நாயனர், சேரமான் பெருமாள் நாயனர், நக்கீரதேவர், கல்லாடதேவர், கபிலதேவர், பரணதேவர், இளம்பெருமானடிகள், அதிராவடிகள், பட்டினத்துப் பிள்ளையார், நம்பியாண்டார் நம்பி எனப் பன்னிருவராவர். இவர்களுள் திருவாலவாயுடையாரென்பவர், சிவநெறிச் செல்வர்களாகிய திருவருட் பெரியோர்களால் வழிபடப் பெறும் முழுமுதற்பொருளாய், மதுரைத் திருவாலவாய்த் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் சோமசுந்தரக் கடவுளாவர். ஏனைய ஆசிரியர்கள் அனைவரும் அப்பெருமானது திருவருள் பெற்ற மெய்யடியார்களாவர். எனவே வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவனுகிய சிவபெருமானும் அம்முழுமுதற் பொருளது திருவருளை நிரம்பப் பெற்ற மெய்யடியார் பதினொருவராலும் அருளிச் செய்யப் பெற்ற செழும்பாடல்களைத் தன்னகத்துக் கொண்டு திகழ்வது இப்பதினொராந் திருமுறையென்பது பெறப்படும்.

செந்தமிழ்ப் பாண்டி நாட்டின் தலைநகராகிய கூடலம் பதியிலே சங்கப்புலவர்களுடன் தானும் ஒரு புலவனுக வீற்றிருந்து தமிழாராய்ந்து 'கொங்குதேர் வாழ்க்கை' யென்ற செழும்பாடலையும் அன்பின் ஐந்திணையின் இயல்பினை விளக்கும் அறுபது சூத்திரங்களால் இயன்ற களவியலென்னும் அகப்பொருளிலக்கண நூலையும் இயற்றியருளிய திருவாலவாயுடைய சிவபெருமானே, தன்னை இன்னிசைத் தமிழாற் பரவிப் போற்றிய பாணபத்திரர் பொருட்டுப் பாடித்தந்த திருப்பாட்டு, மதிமலிபுரிசையெனத் தொடங்கும் திருமுகப் பாசுரமாகும். இறைவனது திருவருள் மொழியாகிய இத்திருமுகப் பாசுரத்தை முதற்கண் பெற்று

விளங்குதல் பதினோராந் திருமுறைக்கமைந்த தனிச்சிறப் பாகும். கடைச்சங்கப் புலவராகிய நக்கீரர் முருகப்பெரு மான்பால் அன்பர்களை ஆற்றுப்படுத்திப் பாடியதும் பத்துப் பாட்டுள் முதலாவதாக விளங்குவதுமாகிய திருமுரு காற்றுப்படை இத்திருமுறையில் இடம் பெற்றுள்ளது.

பதினோராந் திருமுறை ஆசிரியர்களுள் காலங்கடந்து என்றுமுள்ளவர் திருவாலவாயுடையாராகிய சிவபெருமானு வர். காரைக்காலம்மையார், ஐயடிகள் காடவர்கோன் நாயனர், சேரமான் பெருமாள் நாயனர் ஆகிய இம்மூவரும் சுந்தரர் பாடிய திருத்தொண்டத் தொகைத் திருப்பதி கத்திற் போற்றப் பெற்ற அடியார்களாவர். இவர்களுள் காரைக்காலம்மையாரென்பவர் தேவார ஆசிரியர் மூவர்க் கும் காலத்தால் முற்பட்டவர். ஐயடிகள் காடவர்கோன் நாயனர் நாவுக்கரசர் சம்பந்தராகிய இருவர் காலத்திற்கும் சுந்தரர் காலத்திற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் வாழ்ந்தவர். சேரமான் பெருமாள் நாயனர் நம்பியாரூர ராகிய சுந்தரர்க்குத் தோழராய் அவரோடு திருக்கயிலை சார்ந்தவர், ஏனை எண்மரும் சுந்தரர் காலத்திற்குப்பின் கி. பி. பத்தாம் நூற்றுண்டு முடிய அமைந்த காலப்பகுதி யில் வாழ்ந்தோராவர். ஆகவே இப்பெருமக்கள் பாடிய திருப்பாடல்களைத் தன்பாற்கொண்டு திகழும் இப்பதி ஞெராந்திருமுறை கி.பி. ஐந்தாம் நூற்றுண்டு முதல் கி.பி. பத்தாம் நூற்றுண்டு முடியவுள்ள காலப்பகுதியிற் சிவநெறி யும் செந்தமிழும் பெற்ற வளர்ச்சியை அறிந்துகொள்ளுதற் குப் பெரிதும் துணைபுரியுமென்பது திண்ணம்.

இத்திருமுறையிலமைந்த நாற்பது பிரபந்தங்களில் முழுமுதற்பொருளாகிய சிவபெருமானைப் போற்றிய பிரபந் தங்கள் இருபத்தைந்தாகும். சிவபெருமான் அருளிய இளைய பிள்ளையாராகிய முருகப்பெருமானைப் போற்றுவது திருமுருகாற்றுப்படையென்ற பாடல். தன்னை வழிபடும் அடியார்களின் இடர் தீர்த்தல் கருதிச் சிவபெருமான் தோற்றுவித்தருளிய மூத்த பிள்ளையாராகிய யானைமுகக் கடவுளைப் போற்றுவன மூத்தநாயனர் திருவிரட்டை மணி மாலை, மூத்த பிள்ளையார் திருமும்மணிக்கோவை, விநாய கர் திருவிரட்டை மணிமாலை என்ற மூன்று பிரபந்தங்களும். ஏனைப் பதினொரு பிரபந்தங்களும் இறைவனது திருவருள்

பெற்ற திருத்தொண்டர்களாகிய சிவனடியார்களின் சிறப்பினை விரித்துரைப்பனவாகும், இறைவனுக்கு ஆட்பட்ட தன் பயன் அவனடியார்களுக்குத் தொண்டுபட்டுய்தலே யென்பது நம்பியாரூரர் முதலிய திருவருட்செல்வர்களின் துணிபாகும். இத்துணிபினை விளக்குதற் பொருட்டே சிவனடியார் பெருமையினை விரித்துரைக்கும் இப்பதினொரு பிரபந்தங்களும் இத்திருமுறையிற் சேர்க்கப்பெற்றுள்ளன. சிவனருளாற் செயற்கரிய செய்து சிவநெறி வளர்த்த திருத்தொண்டர்களின் வரலாற்றினை விரித்துரைக்கும் பெரிய புராணமாகிய திருத்தொண்டர் புராணத்திற்கு இன்றியமையாத வரலாற்றுச் செய்திகள் இப்பதினொரு நூல்களிலும் வகைபெற விளக்கப்பெற்றுள்ளன. அடியார் பெருமையினை விளக்கும் இப்பிரபந்தங்களைப் பன்னிரண்டாந்திருமுறையாகிய திருத்தொண்டர் புராணத்திற்கு முன் பதினொராந் திருமுறையின்கண் தொகுத்துதவிய சான்றோரது உளக்குறிப்பு உணர்ந்து இன்புறத்தக்கதாகும்.

அந்தாதி, இரட்டை மணிமாலை, உலா, கலம்பகம், மும்மணிக்கோவை, நான் மணி மாலை, எழுகூற்றிருக்கை எனப் புதுவது புனைந்த யாப்புப் பற்றியும், வெண்பா, விருத்தம், கலிவெண்பா எனச் செய்யுள்வகை பற்றியும், காரெட்டு, ஒருபா ஒருபது, ஏகாதச மாலை, திருவீங்கோய் மலையெழுபது என எண் பற்றியும், ஆற்றுப்படை, கோபப் பிரசாதம், கண்ணப்ப தேவர் திருமறம், திருமுகப் பாசுரம், திருத்தொகை எனப் பொருள்வகை பற்றியும், பெருந்தேவ பாணி என இயலிசை பற்றியும் பெயரெய்திய பிரபந்தங்கள் இத்திருமுறையில் இடம் பெற்றுள்ளன. இங்கெடுத்துக் காட்டிய பிரபந்த வகைகள் சிலவற்றுக்குரிய மூல இலக்கியமாக இப்பதினொராந்திருமுறை விளங்குகின்றது. இதன்கண் தொகுக்கப்பெற்ற நாற்பது நூல்களிலும் உள்ள பாடல்களிற் சிதைவுற்றனபோக இப்பொழுது கிடைத்துள்ளவை ஆயிரத்து நானூற்று முப்பது திருப்பாடல்களாகும்.

இத்திருமுறையைத் தொகுத்துதவியவர், இதன் இறுதிக்கண் அமைந்த திருநாரையூர் விநாயகர் திருவிரட்டைமணிமாலை முதலாகத் திருநாவுக்கரசு தேவர் திருவேகாதசமாலையீருகவுள்ள பத்துப் பிரபந்தங்களையும்

பாடிய நம்பியாண்டார் நம்பியேயாவரென்பது முன்னோர் கருத்தாகும். திருவிசைப்பா திருப்பல்லாண்டு என்பவற்றை ஒன்பதாந்திருமுறையென எண்ணிய பின்னரே திருமந்திரம் பத்தாந்திருமுறையென்ற பெயரையும் திருமுகப்பாசுரம் முதலிய இப்பிரபந்தங்கள் பதினொராந் திருமுறையென்ற பெயரையும் எய்தியிருத்தல் வேண்டுமென்பது இவை தோன்றிய காலத்தை ஆராய்வார்க்கு நன்கு புலனும். ஆகவே நம்பியாண்டார் நம்பியால் இத் திருமுறை தொகுக்கப்பெற்றதென்பதைவிட அவர்க்கு நெடுங்காலம் பிற்பட்டுத் தோன்றிய பெரியோர்களாற் பதினொராந்திருமுறையென்ற பெயருடன் தொகுக்கப் பெற்றிருத்தல் வேண்டுமெனக் கருதுதல் பொருத்தமுடையதாகும். இனி இத்திருமுறையாசிரியர்களின் வரலாறுகளையும் அவர்கள் பாடிய பிரபந்தங்களின் பொருளமைதியையும் ஆராய்தல் முறையாகும்.

1. திருவாலவாயுடையார்

திருவாலவாயென்பது செந்தமிழ்ப் பாண்டி நாட்டின் தலைநகராகிய மதுரையிற் சிவபெருமானுக்கமைந்த திருக்கோயிலாகும். எல்லாம் வல்ல இறைவன் அத்திருக்கோயிலில் என்றும் விளக்கமுற வீற்றிருந்து அடியார்களுக்கு அருள் சுரத்தல் பற்றி அப்பெருமானுக்குத் திருவாலவாயுடையாரென்பது பெயராயிற்று. மதுரைத் திருவாலவாயின்கண் எழுந்தருளியுள்ள சிவபெருமான் அருளிச் செய்ததாகப் பதினொராந் திருமுறையின் முதற்கண் அமைந்த செய்யுள் திருமுகப்பாசுரம் என்பது முன்னர்க் கூறப்பெற்றது, அறிவாற்றல்களிற் சிறந்த பெரியோர்கள் எழுதியனுப்பும் ஓலையைத் திருமுகம் என வழங்குதல் நம் நாட்டிற் பண்டுதொண்டு வழங்கிவரும் வழக்கமாகும். தனக்குவமையில்லாத தனிமுதல்வனாகிய சிவபெருமான் தன்பால் அன்புடைய தமிழ் வேந்தராகிய சேரமான் பெருமாளுக்கு எழுதிய திருமுகமாக இசை நலம் பொருந்த இச் செய்யுள் அமைந்தமையால் இது திருமுகப் பாசுரம் என வழங்கப் பெற்றது. சில ஏடுகளில் இது திருமுகப்பாயிரம் என்றும் குறிக்கப்பெற்றுள்ளது. இங்ஙனம் ஒருவர்க்கு ஓலையிற் செய்தியை வரைந்து தெரிவிக்கும் நிலையில்

அமைந்த செய்யுட்களை ஓலைத்தூக்கு[1] என முன்னோர் வழங்கியுள்ளார்கள். இக்காலத்தார் சீட்டுக்கவியென வழங்குவர்.

கழறிற்றறிவாராகிய சேரமான் பெருமாள் நாயனார் கொடுங்கோளூராகிய வஞ்சியைத் தலைநகராகக் கொண்டு சேரநாட்டை ஆட்சி புரியும் காலத்திற் பாண்டி நாட்டின் தலைநகராகிய மதுரையம்பதியிற் பாணபத்திரனென்னும் பெயருடைய இசைப்பாணரொருவர் வாழ்ந்திருந்தார். அவர் பாண்டிய மன்னனால் நன்கு மதிக்கப்பெற்றவர். திருவாலவாயிறைவற்கே இசைத்தொண்டு புரியுங் கடமை பூண்டவர். அரசர் முதலியோரை யணுகாது பரமனையே பாடுவாராகிய அப்பாணர்க்கு வறுமைநிலை யுண்டாகியது. பாடுவார் பசிதீர்ப்பாராகிய திருவாலவாயிறைவர், பாணபத்திரரது வறுமையை நீக்கத் திருவுளங் கொண்டார். வேண்டுவார் வேண்டுவதே யீந்தருள்புரியுந் தாமே எல்லாங் கொடுக்க வல்லராயினும் தம்பாற் பேரன்புடைய சேரமான் பெருமாளைக் கொண்டு பாணபத்திரரது வறுமையைத் தீர்த்து உதவி புரிய வேண்டுமென்பது இறைவரது பெருவேட்கையாயிற்று. திருவாலவாயிறைவர் ஒரு நாள் இரவு பாணபத்திரரது கனவிலே தோன்றினார். "அன்பனே, என்பால் நிலைபெற்ற பேரன்புடையவன் சேரமான் பெருமாளென்னும் வேந்தன். அவன் உனக்குப் பொன், பட்டாடை, நவமணி பதிக்கப் பெற்ற அணிகலன்கள் முதலாக நீ வேண்டியவெல்லாங் குறைவறக் கொடுப்பான். அதன் பொருட்டு அவனுக்கு ஒரு திருமுகம் எழுதித் தருகின்றோம். நீ அதனைக் கொண்டு விரைந்து மலைநாடு சென்று பொருள் பெற்று வருக" என்று கூறி,

மதிமலி புரிசை மாடக் கூடற்
பதிமிசை நிலவு பானிற வரிச்சிற
கன்னம் பயில்பொழில் ஆல வாயில்
மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்
குரிமையின் உரிமையின் உதவி யொளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்
செருமா வுகைக்குஞ் சேரலன் காண்க

1. 'மன்னுடைமன்றத்து ஓலைத்தூக்கினும்'
(நன்னூல், பாயிரம் 52-ம் சூத்திரம்)

பண்பா லியாழ்பயில் பாண பத்திரன்
தன்போல் என்பால் அன்பன், தன்பாற்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப்பதுவே,

எனவரும் அழகிய திருப்பாடலையெழுதிய திருமுகத்தைக் கொடுத்தருளினார்.

இவ்வாறு திருவாலவாயிறைவர் தந்த திருமுகத்தைப் பெற்றுத் தலைமேற் கொண்டு போற்றிய பாணபத்திரர், அப்பொழுதுதே மலைநாட்டிற்குப் புறப்பட்டுச் சென்று சேரர் தலைநகராகிய கொடுங்கோளூரையடைந்தார். சேரமான் பெருமாள் அரசு வீற்றிருக்குந் திருமாளிகையின் முன் சென்று தமது வருகையை வாயில்காவலர் மூலம் வேந்தர் பெருமானுக்கு அறிவித்தார். பரமனையே பாடுவாராகிய பாணபத்திரரது வருகையை அறிந்த சேரமான் பெருமாள் விரைந்து வந்து அவரை வணங்கினார். அடியேனையும் பொருளாக மதித்துத் திருமுகங்கொண்டு தாங்கள் இங்கு எழுந்தருளியது யான் செய்த தவப் பேறும் எனக் கூறி அன்போடு வரவேற்று இருக்கை நல்கி உபசரித்தார். பாணபத்திரர் தாம் கொணர்ந்த திருமுகத்தை வேந்தர்பெருமான் கையிற் கொடுத்தார். பாணர் தந்த திருமுகத்தை ஆர்வமுற வாங்கி முடிமேற் கொண்ட சேரர் பெருமான், ஆனந்தக் கூத்தாடி மொழி குழறக் கண்ணீர் சொரியப் பலமுறை நிலமுறப் பணிந்தார். தமக்கு இறைவர் தந்த திருமுகப் பாசுரத்தைப் பல முறை படித்து உளமுருகினார். அப்பாசுரத்தைப் படியெடுத்துக் கொள்ளும்படி உரிய வகையால் எடுத்துரைத்து இறைவனது திருவருளை நினைந்து மகிழ்ந்து உரிமைச் சுற்றத்தாரையும் அமைச்சரையும் அழைத்துத் தமது நிதியறையிலுள்ள பலவகைப் பொருள்களையும் பொதி செய்து கொணரும்படி கட்டளையிட்டார், அங்ஙனமே அவர்களும் நிதியறையுட் புகுந்து எண்ணிறந்த பெரும் பொருளைப் பொதி செய்து கொணர்ந்தனர். அங்குக் கொண்டுவரப்பட்ட பொருளின் பரப்பையெல்லாம் சேரமான் பெருமாள் பாணபத்திரர்க்குக் காட்டினார். 'இப்பெரும் பொருளையும் யானை குதிரை முதலிய சேனைகளையும் இச்சேரநாட்டு ஆட்சியுரிமையையும் தாங்களே ஏற்றருள வேண்டும்' என வேண்டி நின்றார். சேரமான் பெருமாளது அளவிலாப்

பேரன்பின் கொடைத் திறத்தைக் கண்டு வியந்த பாண பத்திரர், 'வேந்தர் பெருமானே, என்னுடைய சுற்றத் தாரைப் பேணுதற்குப் போதுமான பொருள்களை மட்டும் அடியேன் தங்கள்பால் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பது திருவாலவாய்ப் பெருமானது ஆணை. ஆதலால் அரசாட்சி யும் அதற்கு இன்றியமையாத உறுப்புக்களாகிய படை முதலிய அங்கங்களும் ஆகிய இவற்றைத் தாங்களே கைக்கொண்டருளுதல் வேண்டும்' என்று கூறிச் சேரர் பெருமானை வணங்கினர். இறைவரது ஆணையெனப் பாணபத்திரர் கூறியதனைக் கேட்ட சேரமான் பெருமாள் அவ்வாணையை மறுத்தற்கு அஞ்சிப் பத்திரரது வேண்டு கோளுக்கு உடன்படுவாராயினர். பாணபத்திரரும் தமக்கு வேண்டிய பெரும் பொருளையேற்றுக்கொண்டு சேரமன்னர் பால் விடைபெற்று யானைமீதமர்ந்து மதுரையையடைந்து இறைவனை இன்னிசையாற் பரவிப் போற்றியிருந்தார் என்பது வரலாறு. இதனைச் சேக்கிழார் சுவாமிகள் கழறிற் றறிவார் நாயனார் புராணத்துள் 26 முதல் 38 வரையுள்ள செய்யுட்களில் விரித்துக்கூறியுள்ளார். பெரும்பற்றப்புலி யூர்நம்பி பாடிய திருவிளையாடற் புராணத்தில் திருமுகங் கொடுத்த திருவிளையாடல் என்ற படலத்திலும், பரஞ்சோதி முனிவர் பாடிய திருவிளையாடற் புராணத்தில் திருமுகங் கொடுத்த படலத்திலும் இவ்வரலாறு புனைந்து கூறப் பெற்றுள்ளது. பாணபத்திரர் பொருட்டு இறைவனே விறகாளாய்ச் சென்று மதுரைத் திருவீதியில் விறகு விற் றுழன்று சாதாரிபாடி வடபுலத்துப்பாணனைத் தோற்றோடச் செய்தனனென்றும், ஒரு நாளிரவு பெருமழை பெய்யவும் அதனைப் பொருட்படுத்தாது ஆலவாய்ப் பெருமானைப் பாணபத்திரர் பாடி நின்றாராக, அவர் கையிலேந்திய யாழ்க் கருவியின் நரம்பு மழைநீரால் நெகிழ்ந்து கட்டழி யாதபடி ஆலவாயிறைவன் அவர்க்குப் பொற்பலகையிட்ட ருளினனென்றும், பாணபத்திரருடைய கற்பிற் சிறந்த மனைவியார் பாடினியார்க்கும் பாண்டியனது ஆதரவு பெற்ற பாடினியொருத்திக்கும் நிகழ்ந்த இசைவாது நிகழ்ச்சியில் இசை நலந்தெரிந்து கூறும் நடுவனாக ஆலவாயிறைவனே அமர்ந்து உண்மை கூறினனென்றும் பெரும்பற்றப்புலியூர் நம்பியும் பரஞ்சோதி முனிவரும் தாம் பாடிய நூல்களில் விரித்துக்கூறியுள்ளார்கள்.

இனித் திருவாலவாயிறைவர் பாடிக் கொடுத்தருளிய திருமுகப் பாசுரத்தின் பொருளை ஒரு சிறிது நோக்குவோமாக. "திங்கள் தங்கிய மதிலாற் சூழப்பட்ட மாடங்களையுடைய கூடல் நகரத்திலே நிலைபெற்ற பால்போலும் வெண்ணிறச் சிறகுகளையுடைய அன்னங்கள் பயின்று வாழும் நீர்நிலையோடு கூடிய சோலை சூழ்ந்த திருவாலவாயென்னுந் திருக்கோயிலிலே நிலைபெற வீற்றிருக்கும் இறைவனாகிய யான் வரைந்த இம்மொழியினைப், பருவ காலத்து மேகத்தையொப்பப் பாவன்மையுடைய பெரும் புலவர்களுக்கு அன்புரிமையினால் தன்பாலுள்ள பெரும் பொருளை அவர்கள் போதுமென மறுக்கவும் உரிமையோடு நிறையக் கொடுத்துப் புகழொளி பரவ நிறந்தங்கிய திங்களை யொத்து விளங்கும் வெண்கொற்றக் குடை நிழற்கீழ்ப் போர்ப்பரி செலுத்தும் ஆற்றல் மிக்க சேரலன் காண்பானாக. பக்கத்தா ரியல்பறிந்து பழகும் இனிய பண்பினோடு யாழினை வாசிக்க வல்ல பாணபத்திர னென்பான் சேரமானாகிய தன்னைப்போல என்பாற் பெருகிய அன்புடையான். வேந்தர் பெருமானாகிய தன்னைக் காணவேண்டுமென்னும் பேரார்வத்தால் அங்கு வருகின்றான். ஈவோனும் ஏற்போனுமாகிய நும்மிருவர் மாண்பினையும் நோக்கி அம் மாண்புக்குத் தக்க பெரும்பொருளைக் கொடுத்து அவனை என்பால் வரும்படி விடுத்தல் செய்யத் தகுவதாம்" என்பது இதன் பொருளாகும்.

பன்னிரண்டடிகளால் இயன்ற நேரிசை ஆசிரியப் பாவாகிய இப்பாடலில், முதல் நான்கடிகளில் இதனைப் பாடிய தலைவனாகிய சிவபெருமானது சிறப்பும் அடுத்துள்ள நான்கடிகளில் அவ்விறைவனாற் பாடப்பெறும் புகழமைந்த பாட்டுடைத் தலைவராகிய சேரமான் பெருமாளது சீர்த்தியும் பின்னுள்ள நான்கடிகளில் இதனைப் பாடுதற்குக் காரணராகிய பாணபத்திரனென்னும் அடியவரது அன்புரிமைச் சிறப்பும் அவருக்குப் பொருளைக் கொடுத்தனுப்புக என்னும் ஆணையும் குறிக்கப் பெற்றுள்ளமை காணலாம்.

மதிமுடிக் கடவுளாகிய தன்னைப்போன்று மதிதவழும் மாடங்களோடு கூடி விளங்குவது கூடல் நகரமாகிய மதுரையென்றும், நிலனாவிற்றிரிதரும் நீண்மாடக் கூடலாராகிய அந்நகர் வாழ்வார் புலனாவிற் பிறந்த சொற்புதி துண்ணும் மதி நலமுடையாரென்றும் விளக்குவார், 'மதி

மலிபுரிசை மாடக் கூடற்பதி' எனச் சிறப்பித்தார். குற்றங்கள் நீக்கிக் குணங்கொண்டு பாராட்டுதலாலும் வெண்ணீறணிதலாலும் அன்னப்பறவையைப் போன்று உள்ளும் புறமும் பால் போலுந் தூய்மையாளராகிய மெய்யடியார்கள் இடைவிடாது குழுமி இறைவனை வழிபாடு செய்து போற்றுமிடமாக விளங்குவது மதுரையிலுள்ள திருவாலவாய்த் திருக்கோயிலாதலின், அங்கு என்றும் நீங்காது நிலைபெற்றிருப்பது எனது குடிவாழ்க்கை யென்பார், 'பால்நிற வரிச்சிறகு அன்னம் பயில்பொழில் ஆலவாயின் மன்னிய சிவன்யான்' என்றார். 'சிவன்யான் மொழிதரு மாற்றம்' என்றது, சொல் நிகழ்ச்சிக்கு இடனாகிய தன்மை முன்னிலை படர்க்கை யென்னும் இடவரம்பின்றி உயிர்க்குயிராய் யாண்டும் நீக்கமறக்கலந்து விளங்கும் இறைவன் சிவனாகிய யான் என்று தன்னைத் தன்மையிடத்தில் வைத்துக் கூறிப் புறத்தேதோன்றிப் படர்க்கையிலுள்ளாரோடு உரையாடுமளவுக்குத் தன்னடியார் பொருட்டு எளிவந்தருளிய அருட் பண்பினைப் புலப்படுத்துவதாகும்.

கைம்மாறு கருதாது பொழிதல் மாரியின் இயல்பாயினும் அவ்வியல்பு பருவகாலமாகிய கார்காலத்திலன்றி ஏனைக் காலங்களில் மாரியின்பால் மாறாது காணப்படுவதில்லை. சேரமான் பெருமாளாகிய வேந்தர் பெருமானே பருவ காலத்து மழைமேகத்தைப் போன்று பாவலர்க்கு உரிய காலத்தில் வேண்டும் பொருள்களை அவர்கள் கேளாமுன் உரிமையுடன் வரையாது வழங்கும் பெருங்கொடையாளராய் மன்னுயிர்க்கு நிழல்தரும் அளியும் இகல் தீர்க்கும் சேனையுமுடையராய்த் திகழ்கின்றாரென்பார், 'பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்கு, உரிமையின் உரிமையின் உதவி ஒளிதிகழ், குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச். செருமா உகைக்குஞ் சேரலன்' என அவ்வேந்தர் பெருமானுடைய கொடையும் அளியும் தெறலும் முதலிய புகழ்த்திறத்தை விரித்துப் பாராட்டினார். மக்களும் மற்றைய அஃறிணையுயிர்களும் தம்முள் உரையாடுங்கால் அவ்வுயிர்கள் கூறிய குறைகளெல்லாவற்றையும் நன்குணர்ந்து எவ்வுயிர்க்கும் இடரகற்றி இன்பஞ் செய்யும் சேரமான் பெருமாளது அரசியல் மாண்பினை அவரது குடைமேலேற்றி 'ஒளிதிகழ் குருமா மதிபுரை குலவியகுடை' யென அதற்குக் குளிர்ந்த நிலவொளி வீசுந் திங்களை உவமை கூறிச் சிறப்

பித்தார். பகைவரொடு பொரும் போரிலே மாற்ருரது முடிமேல் அடிவைத்துப்பாயும் ஆற்றல்பெற்ற பரியைச் செலுத்தும் சேர வேந்தரது போர் வன்மையைப் புகழ்வார் 'செருமா உகைக்குஞ் சேரலன்' என்ருர் போர்க் களத்திலே தொழில் புரிதற்குரிய பேராற்றல் பெற்ற தமது குதிரைக்கு எதிர்காலத்தில் நல்லக விளக்காகிய நமச்சி வாய மந்திரத்தை உபதேசித்துத் திருக்கயிலைக்குச் செலுத்தவல்ல உரவோன் என்பார், 'ஒளிதிகழ்....செருமா வுகைக்குஞ் சேரலன்' என்ருரெனினும் அமையும். இவ் வாறு திருவாலவாயிறைவர் சேரமான் பெருமாளது புகழ்த் திறத்தை விளக்கிப் பாடிய இத்திருமுகப் பாசுரப் பொருளை யுளங்கொண்ட நம்பியாரூரர், 'கார்கொண்ட கொடைக் கழறிற் றறிவார்க்கும் அடியேன்' எனச் சேரமான் பெரு மாளைத் திருத்தொண்டத் தொகையிற் பரவிப் போற் றினமை இங்கு ஒப்பு நோக்கி யுணரத்தக்கதாகும்.

உலகத்தாரோடு அன்பாற் பழகி யாழிசைத்து இசை வளர்க்கும் பெருமை மிக்க பாணனுக விளங்குபவன் இப் பாணபத்திரன் ஆதலானும், வேந்தர் பெருமானுகிய தன்னைப்போல் என்பாற் பெருகிய அன்புடையனுதலாலும், என்பாலன்புடைய நீவிர் இருவீரும் ஒருவரொருவரைக்கண்டு உரையாடி அள வளாவி மகிழ்தல் வேண்டுமாதலாலும், அவன் எனது ஆணையால் வேந்தனுகிய நின்னைக்காண வருகின்ருனென் பார், 'பண்பால் யாழ்பயில் பாணபத்திரன், தன்போல் என்பால் அன்பன், தன்பால் காண்பது கருதிப் போந்தனன்' என்ருர். அறநெறியை முதலாகக்கொண்ட அரசியல் வினைவாலுண்டாகிய மாண்புடையது சேரமான் பெருமாள் பொருளாதலின், அதனை 'மாண்பொருள்' என்றும், தான் சிறிதாயினும் தக்கார்கைப் பட்டக்கால் வான் சிறிதாக வளர்ந்தோங்குதல் பொருளினியல்பு ஆதலின் அப்பொருள் மேன்மேலும்பெருகி மாட்சிமைப்பட அதனைப் பெறுவதற்குரிய தகுதியுடையவன் என்பால் அன்புடைய பாணபத்திரனுதலின் அவனுக்குக் கொடுத்தல் வேண்டுமென்பார், 'மாண்பொருள் கொடுத்து' என்றும், மாண்பொருளெனவே உலகிற்பெரிதும் மாட்சிமையுடைய அரசாட்சியை அவனுக்குக் கொடுக்கச் சொல்வதாக எண்ணிப் பாணபத்திரனுக்கு நினது அரசாட்சியை வழங்கி

அவனை நின்னாட்டிலேயே இருத்திவிடுதல் கூடாது என அறிவுறுத்துவார், மாண்பொருள் கொடுத்து என்ற அளவிலமையாது 'மாண்பொருள் கொடுத்து வர விடுப்பதுவே' என்றும் பணித்தருளினர். வேந்தர் பெருமானாகிய நின்பாலமைந்த உயர்ந்த குண நலங்களில் ஈடுபட்ட பாணபத்திரன் நின்னைப் பிரிந்து மீண்டும் என்பால் திரும்பி வருதலை மறந்து ஆண்டுத் தங்கினும் தங்கிவிடுவான், அவனது யாழிசையிலும் பேரன்பிலும் ஈடுபட்ட யான் அவனைக் கணப்பொழுதும் பிரிந்துறைதல் இயலாது. ஆகவே அவன் வேண்டிய பொருளை அவனுக்குக் கொடுத்து அவனை உடனே மதுரைக்கு மீளுமபடி செய்வதும் நினது கடமையாமென்பார் 'கொடுத்து விடுப்பது' என்ற அளவிலமையாது 'கொடுத்து வரவிடுப்பதுவே' என அறிவுறுத்தருளினமை உய்த்துணர்வார்க்குப் பெரிதும் சுவை பயப்பதாகும்.

இன்ன தன்மையன்என யாவராலும் உணரமுடியாத இறைவன், தன்னை இன்னிசையாற்போற்றிய பாண பத்திரரது வறுமைத் துயரை நீக்கிப் பெருஞ்செல்வம் வழங்குதற் பொருட்டும் தன்னை இடைவிடாது வழிபடும் சேரமான் பெருமாளாகிய வேந்தர்பெருமானுடைய வரையா ஈகையினையும் சிவபத்தியினையும் விளக்குதற் பொருட்டும் தண்ணார் தமிழளிக்கும் தண்பாண்டி நாட்டில் தானும் ஒரு தமிழ்ப்புலவனாகத் திருமேனிகொண்டு தோன்றி, மதிமலிபுரிசையென்ற இத்திருமுகப் பாசுரத்தைப் பாடிக்கொடுத்தான் என்ற வரலாறு, அடியார்க் கெளிய பெருமானாகிய அவ்விறைவனது அருமையிலெளிய அழகினை இனிது விளக்குவதாகும். நாடு மொழி முதலிய கட்டுப்பாடு எல்லாவுலகத்துக்குந் தலைவனாகிய இறைவ னுக்கு என்றும் இல்லை. எனினும் ஆட்கொள்ளுதற்குரிய மக்கள் அப்பிரிவின் வழியுள்ளார்கள். அவர்களை உய்வித்தற் பொருட்டு அருளே திருமேனியாகக் கொண்டு எழுந் தருளும் இறைவனும் அவர்களுள் ஒருவனாக நடித்து அவர்கள் பேசும் மொழியிற் பேசியும் எழுதியும் செய்யுள் முதலியன இயற்றியும் நட்புக்கொண்டு உறவாடி உலக மக்களுக்கு ஞானம் உண்டாக்கி நலம் புரிகின்றான். இவ் வுண்மையை விளக்கும் சிறந்த இலக்கியமாக இத்திருமுகப் பாசுரம் விளங்குகின்றது. 'தில்லைவாழந்தணர்தம் அடி

யார்க்கும் அடியேன்' என நம்பியாரூரர்க்கு அடியெடுத்துக் கொடுத்து அடியார் பெருமையினைக் கூறப்பணித்த சிவ பெருமான் இத்திருமுகப் பாசுரத்தால் சேரமான் பெருமாள் நாயனாரது பெருமையினை விரித்துக் கூறியமையால், இப்பாசுரத்தாற்போற்றப்பெற்ற பாட்டுடைத் தலைவர் சேரமான் பெருமாளென்பதும், அவரைப்பாடிய புலவர் ஆலவாயில் அவிர்சடைக் கடவுளென்பதும் நன்கு புலனாதல் காணலாம்.

2. காரைக்காலம்மையார்

சோழநாட்டிற் கடற்றுறைப் பட்டினமாய்த் திகழும் காரைக்கால் என்னும் வளம்பதியிலே தனதத்தன் என்ற பெயருடைய வணிகனொருவன் வாழ்ந்திருந்தான். பெருஞ் செல்வமுடைய அவ்வணிகனுக்குத் திருமகளையொத்த பேரழகுடைய பெண்மகவொன்று பிறந்தது. தவப்பயனாகத் தோன்றிய அக்குழந்தைக்குப் புனிதவதியெனப் பெயர் இட்டார்கள். புனிதவதியார் மணலாற் சிறுவீடு கட்டி விளையாடும் பிள்ளைமைப் பருவத்திலேயே சிவபெருமான் திருவடிகளுக்குத் தொண்டுபட்டொழுகும் அன்புரிமை யுடையராய் அப்பெருமானது பொருள்சேர் புகழாகிய திருவார்த்தைகளைப் பேசும் பயிற்சியும் சிவனடியார்களைக் கண்டால் சிவனெனவே தெளிந்து வழிபடுந்திறமும் வாய்க்கப் பெற்றவராய் அழகின் கொழுந்தென வளர்ந்து திருமணப் பருவமடைந்தார்.

நாகப்பட்டினத்திலே வாழும் நிதிபதியென்ற வணிகன் தன்மகன் பரமதத்தனுக்குப் புனிதவதியாரை மணஞ் செய்விக்க எண்ணி முதியோர் சிலரைத் தனதத்தன்பால் அனுப்பினான். வந்த மூதறிவோரை வரவேற்றுபசரித்த தனதத்தனும் தன்மகளைப் பரமதத்தனுக்குத் திருமணஞ் செய்துதருவதாக இசைந்தான். இருமுதுகுரவர் இசைவினால் திருமணம் காரைக்காலிற் சிறப்பாக நிறைவேறியது. தனதத்தனுக்குப் புனிதவதியாரைத் தவிர வேறு பிள்ளைப் பேறில்லாமையால் அவன் தன் மகளையும் மருமகனையும் நாகப்பட்டினத்திற்கு அனுப்ப மனமின்றி அவர்களிருவரும் காரைக்காற் பதியிலேயே தங்கியிருந்து மனையறம் நிகழ்த்துதற்கு வேண்டிய தனிவீடும் பெரும் பொருளும்

தந்து வேறுபடு திருவின் வீறுபெறக்காண அவ்விருவரையும் தன்னூரிலேயே இருக்கச் செய்தான்.

புனிதவதியாருடைய கணவனாகிய பரமதத்தன், தன் மாமன் தந்த பெரும்பொருளை வாணிகத்தின் முதலாகக் கொண்டு அதனைப் பன்மடங்காகப் பெருக்கி வாணிகத் துறையில் மேம்படுவானாயினன். அவன் மனைவியார் புனிதவதியார், எவ்வுயிர்க்குந் தாயுந் தந்தையுமாகிய இறைவன் திருவடிகளிலே வைத்த அன்பு மேன்மேற் பெருகி முதிரச் சிவனடியார்களுக்குத் திருவமுதளித்தும் வேண்டும் பொருள் கொடுத்தும் இல்லறத்திற்குத் தக்க நற்குண நற்செய்கைகளை யுடையராய்த் தமக்கும் தம் உயிர்த்துணைவனாகிய கணவனுக்கும் புகழ் பெருக மனை யறம் நிகழ்த்துவாராயினர்.

இங்ஙனம் நிகழு நாட்களில் ஒரு நாள் பரமதத்தனைக் காண வந்தவர்களிற் சிலர் அவனுக்கு இரண்டு மாங்கனி களைக் கொடுத்தார்கள். அக்கனிகளைப்பெற்று அவர்கள் வேண்டும் காரியத்தை முடித்தனுப்பிய பரமதத்தன் மாங்கனிகள் இரண்டையும் தன் வீட்டிற்கு அனுப்பி வைத்தான். புனிதவதியார் அப்பழங்களை வாங்கி வைத்த னர். அந்நிலையிற் சிவனடியாரொருவர் பசியால் வருந்தி இளைப்புற்றவராய் அவ்வீட்டிற்குச் சென்றார். அடியவரு டைய தளர்வைக் கண்ட புனிதவதியார், அவர்க்கு உண வளிக்க எண்ணினார். அந்நேரத்திலே திருவமுதுமட்டும் சமைக்கப்பெற்றிருந்தது. கறியமுது பாகம் பண்ணப் பெறவில்லை. இந்நிலையிற் சிவனடியவரே பெறுதற்கரிய விருந்தினராய் வந்தபொழுது இதனினும் பெறத்தக்க பேறு பிறிதொன்றில்லையெனத் தெளிந்த பேரறிவினராகிய புனிதவதியார், தம்கணவன் அனுப்பிய மாங்கனிகள் இரண்டினுள் ஒன்றைக் கொண்டு வந்து திருவமுதுடன் படைத்து அடியவரை உண்ணச் செய்தார். பசி தீர்ந்த அடியவர் புனிதவதியாரது விருந்து புறந்தரும் பேரன்பின் திறத்தை யுணர்ந்து உளமகிழ்ந்து போயினர்.

பரமதத்தன் நண்பகலில் வீட்டிற்கு வந்து வழக்கம் போல் நீராடி உணவுண்ண அமர்ந்தான். புனிதவதியார் தம் கணவனுக்குத் திருவமுது கறியமுது முதலியவற்றைப் படைத்து அவன் அனுப்பிய மாங்கனிகள் இரண்டில் அடி

யார்க்களித்தது போக எஞ்சியிருந்த மற்றொரு கனியைக் கொண்டு வந்து வைத்து உண்ணச் செய்தார். அப்பழத்தினை நுகர்ந்த பரமதத்தன், அதன் இனிய சுவையில் அடங்காத வேட்கையுடையவனாகி, 'இதனையொத்த சுவையும் மணமுமுடைய மற்றொருபழம் உளது, அதனையுங் கொண்டுவந்து வைப்பாயாக' எனப்பணித்தான். கணவனது சொல்வழியொழுகும் கற்பிற்சிறந்த புனிதவதியார், கணவனாற் குறிப்பிடப்படும் மாங்கனியைத் தாம் முன்னமே அடியார்க்கு அளித்திருந்தும் அதனைக் கணவனுக்கு உரைப்பின் அவனது சுவையுணர்வைக் கெடுத்ததாக முடியுமென்று அஞ்சி, அவன் சொல்லிய மாங்கனியை எடுத்துக்கொண்டு வரச்செல்பவர்போல் மனையினுள்ளே சென்று ஒரு புறம் நின்று வருந்தினார்; அன்புடையார்க்குத் துன்பம் வந்துற்ற காலத்து அத்துன்பத்தைத் துடைத்து வேண்டுவன புரிந்துதவும் சிவபெருமானுடைய திருவடிகளைத் தம்மனத்துட் சிந்தித்துப் போற்றினார். அந்நிலையில் இறைவனது திருவருளால் அவர் கையகத்தே சுவை மிக்கதொரு மாங்கனி வந்தமர்ந்தது. அதனைக் கொணர்ந்து கணவனுடைய உண்கலத்திலே மகிழ்ச்சியுடன் படைத்தார். அதனையுண்ட நிலையில் அதன் சுவை தேவரமிழ்தினும் மேற்பட்டமையுணர்ந்த பரமதத்தன், 'இது முன் நான் தந்த மாங்கனியன்று. இது மூவுலகங்களிலும் பெறுதற்கரியது. இதனை நீ வேறு எங்கே பெற்றாய்' எனத் தம் மனைவியாரை நோக்கி வினவினான். அதனைக் கேட்ட புனிதவதியார், அருளேயுருவாகிய இறைவனது செம்மை நெறியிற் பொருந்திய திருவருட் செயல் பிறர்க்கு விளங்க எடுத்துரைக்கும் எளிமையதன்று என்பது கருதி அதனைத் தம் கணவனுக்குச் சொல்லமாட்டாமலும், உயிரினுஞ் சிறந்த ஒழுக்கத்தின்பாற்பட்ட தமது கற்புமேம்பாட்டினாலும் கணவனது சொல்வழியொழுகாமை நல்வழியன்று என்னுங் கருத்தினாலும் நிகழ்ந்தது கூறுதலை விடுதற்கியலாமலும், இவ்விருநிலையினுட்பட்டு நடுக்கமுறுவாராயினர். முடிவில் நடந்தபடி சொல்லுவதே கடனென்று துணிந்த புனிதவதியார், சிவனடியாரொருவர் பசியால் வருந்தி வீட்டிற்கு வந்ததும் கறியமுது சமைக்கப்படாத நிலையில் திருவமுதுடன் மாம்பழத்தில் ஒன்றை அவர்க்குப் படைத்ததும், 'இனையதொரு பழம் இன்னும் உளது அதனையிடுக' எனக் கணவன் கூறிய ஆணையை நிறை

வேற்ற வேண்டித் தாம் ஒருபுறஞ் சென்று நின்று இறைவனை வேண்ட அவனது திருவருளால் இவ்வினியசுவையினதாகிய மாங்கனி தம் கையகத்தே வந்தமர்ந்த வியப்புடை நிகழ்ச்சியும் ஆகிய செய்தியைத் தம் கணவனுக்கு எடுத்துரைத்தார். அது கேட்ட பரமதத்தன், புனிதவதியார் குறித்த திருவருள் நிகழ்ச்சியைத் தெரிந்து தெளிதற்குரிய ஆற்றலில்லாதவனாகி அவரை நோக்கி 'இந்தக்கனி சிவபெருமானுடைய திருவருளினாலே உனக்குத் கிடைத்த தாயின் இதுபோன்று இன்னும் ஒரு கனியை அவனருளால் அழைத்து அளிப்பாயாக' எனக்கூறினான். புனிதவதியார் அவ்விடத்தைவிட்டுத் தனியிடத்திற் சென்று நின்று சிவபெருமானையிறைஞ்சி 'இன்னம் ஒரு பழத்தை இப்பொழுது தந்தருளாதொழியின் ஈசனருள் என்னும் உண்மை மறுக்கப்பட்டு அடியேனுடைய வார்த்தை பொய்யாய்விடும்' என விண்ணப்பஞ்செய்தார். அடியார்க்கெளிய பெருமானாகிய இறைவனது திருவருளால் அவர் கையகத்தே மற்றொரு மாங்கனியும் வந்திருந்தது. அதனைக் கணவன் கையிற் கொடுக்க, அவனும் வியப்புற்று வாங்கினான். அக்கனி சிறிது நேரத்திற்குள் அவன் கையினின்று மறைந்து விட்டது. அதுகண்டு அஞ்சிய பரமதத்தன் மனத்தடுமாற்ற மெய்தித் தன் மனைவியாரை வேறொரு தெய்வமென்றே கருதினான். அவரைப் பிரிந்து வாழவேண்டுமென்னுந் துணிபுடையனானான். தன் கருத்தினைப் பிறரெவர்க்கும் வெளிப்படுத்தாமல் மனைவியென்னும் உறவுத் தொடர்பின்றியொழுகினான்.

இக் கருத்துடைய பரமதத்தன் கடல்கடந்து வாணிகஞ் செய்து வருவேன் எனச் சுற்றத்தார்க்குச் சொல்லி, அவர்கள் அமைத்துத்தந்த மரக்கலத்தில் வெளிநாட்டார் விரும்பி வாங்கும் அரிய பண்டங்களை நிரம்ப ஏற்றிக் கொண்டு கடல்கடந்து வெளிநாடு சென்றான். சில நாள் அங்கிருந்து பெரும்பொருளீட்டிய பின்பு மீண்டும் அம்மரக்கலத்திலேறிப் பாண்டி நாட்டிலுள்ள துறைமுகப்பட்டினமொன்றை அடைந்தான் இரண்டாம் முறையாக மணந்து கொண்ட அம்மனைவி வயிற்றில் ஒரு பெண்குழந்தை பிறந்தது. அம்மகவுக்குத் தான் தெய்வமெனக் கருதி விலகிய முதல் மனைவியாரது பெயராகிய புனிதவதியார் என்ற பெயரையே இட்டு வளர்த்து வந்தான்.

இங்ஙனமாகப் புனிதவதியாருடைய சுற்றத்தார்கள் வாணிகத்தின் பொருட்டுக் கடல்கடந்து சென்ற பரமதத்தன் பாண்டி நாட்டிலேயுள்ள பட்டினமொன்றில் வாழ்கின்றானெனக் கேள்வியுற்றுச் சிலரையனுப்பி அவனுடைய நிலையையுணர்ந்து வருத்தமுற்றார்கள். புனிதவதியாரை அவன்பாற் கொண்டுபோய்விட வேண்டும் என நினைத்து அவரைச் சிவிகையிலேற்றிக் கொண்டு அவனிருக்கின்ற நகரத்தை அணுகினார்கள். அவர்களது வருகையையறிந்த பரமதத்தன் அச்சமுடையவனாகித் தன்னுடைய இரண்டாம் மனைவியோடும் மகளோடும் புனிதவதியாரையடைந்து 'அடியேன் உம்முடைய அருளால் வாழ்கின்றேன். இவ் விளங் குழந்தைக்கும் உம்முடைய பெயரையே இட்டேன்' என்று சொல்லி அவருடைய திருவடிகளில் விழுந்து வணங்கினான். அதுகண்ட புனிதவதியார் தம்முடைய சுற்றத்தார்பால் அச்சமோடு ஒதுங்கி நின்றார். அந்நிலையிற் சுற்றத்தார்கள் நாணமுற்றுப் பரமதத்தனை நோக்கி 'நீ உன் மனைவியை வணங்குவது எது கருதி' என வினவினார்கள். அதுகேட்ட பரமதத்தன் 'இவர் நம் போன்ற மக்கட் பிறப்பினரல்லர். கருதியது அளிக்க வல்ல தெய்வமாந்தன்மை இவர் பாலுண்மையை யான் அறிந்து அஞ்சி விலகியபின்பு என்றாற் பெறப்பட்ட இப் பெண்மகவுக்கு இவர்தம் அருமைத் திருப்பெயரையிட்டுப் போற்றியுள்ளேன். ஆதலால் நீங்களும் இவருடைய திருவடிகளைப் போற்றி வழிபடுங்கள்' என்றான்.

சுற்றத்தார்கள் இஃது என்ன வியப்பு எனத் திகைத்து நின்றார்கள். கணவன் சொல்லிய வார்த்தையைக் கேட்ட புனிதவதியார், சிவபெருமானுடைய திருவடிகளை ஒன்றிய சிந்தையினாற் போற்றி 'இறைவ, என் கணவனாகிய இவன் கருதிய கொள்கை இதுவாகும். இனி இங்கு இவன் பொருட்டுச் சுமந்துள்ள அழகு மிக்க தசைப் பொதியைக் கழித்து நீக்கிச் சொல்லும் மனமுங் கடந்து அப்பாற்பட்டுத் திகழுந் தூயோனாகிய நின் திருவடிகளைச் சூழ்ந்து போற்ற வல்ல நின் கணங்களுளொன்றாகிய பேய் வடிவினை அடியேனுக்குத் தந்தருளல் வேண்டும்' எனப் பரமர் தாள் பரவி நின்றார். அந்நிலையில் அம்பலத்து ஆடல்புரியும் அண்ணலார் திருவருளால் வீட்டு நெறியை யளித்தற்குரிய மெய்யுணர்வாகிய சிவஞானம் மிகுதலால் வேண்டிய வேண்டி

யாங்கெய்தும் தவச்செல்வியாராகிய புனிதவதியார் தம் உடம்பின் ஊன்பொதிந்த தசைப் பொதியினை உதறிவிட்டு எற்புடம்பே கொண்டு வானுலகத்தவரும் மண்ணுலகத்த வரும் வணங்கிப் போற்றும் பேய்வடிவம் பெற்று விளங் கினர். அவ்வடிவத்தைக் கண்டு அஞ்சிய சுற்றத்தார்கள் அவரை வணங்கி அகன்று போனார்கள்.

பின்னர்ப் புனிதவதியார், இறைவன் திருவருளால் தம்முள்ளத்துத் தோன்றி யெழுந்த சிவஞானத்தின் ஒருமைப்பாட்டினால் அற்புதத் திருவந்தாதி யென்ற பிரபந் தத்தை அருளிச் செய்தார். அதன்கண் 'இறைவனுடைய அழகு நிரம்பிய செந்தாமரை மலர்போன்ற திருவடிகளைப் போற்றிப் பரவும் நல்ல சிவகணங்களுள் நானும் ஒன்றா னேன்' என்ற கருத்தமைய,

> பெறினும் பிறிதியாதும் வேண்டேம் நமக்கீ
> துறினும் உருதொழியு மேனும் - சிறிதுணர்த்தி
> மற்றொருகண் நெற்றிமேல் வைத்தான்றன் பேயாய
> நற்கணத்தி லொன்றாய நாம்.

என்ற திருப்பாடலையும் அருளிச் செய்தனர். பின்பு திரு விரட்டை மணிமாலை யென்னும் பிரபந்தத்தைப் பாடிப் போற்றிச் சிவபெருமான் வீற்றிருந்து அருள் புரியுஞ் சிறப் பமைந்த திருக்கயிலையை யடைதற்கு இறைவனது திரு வருள் துணை நின்றமையால் அத்திருமலையை வழிபடுதற்கு வடக்கு நோக்கிப் புறப்பட்டார். புனிதவதியாரது பேய் வடிவத்தைக் கண்ட மக்கள், அவர் பேய் வடிவங்கொண்ட கருத்தை உள்ளபடி சொல்லக் கேட்டு வியப்பும் அச்சமுங் கொண்டு அகன்று ஓடினார்கள். அதுகண்ட புனிதவதியார் அண்டங்களெல்லாவற்றுக்குந் தலைவராகிய சிவபெருமான் என்னை அறிந்து அருள்புரிவராயின் உண்மையுணராத இவ்வுலகத்தவர் கண்முன் யான் எவ்வுருவாய்த் தோன்றினா லென்னை' எனக் கூறி வடதிசைத் தேசமெல்லாம் மனத் தினுங் கடிது சென்றார். இறைவன் எழுந்தருளிய திருக் கயிலையின் மருங்கு சென்ற அவர், தூய்மையுடைய அத்திரு மலையைத் தம் கால்களால் மிதித்தேறுதல் கூடாதெனக் கருதித் தலையினால் நடந்தார். இங்ஙனம் தலையினால் நடந்து திருக்கயிலை மலையின்மேல் ஏறும்பொழுது இறை வனது திருவருள் நோக்கம் அவர்மேற் பொருந்தியது. மேலான சுகசொரூபமாகிய சிவபோகத்தைத் தன்னடியார்

களுக்கு அளித்தருளும் அருட்சத்தியாகிய மலைமகளார் புனிதவதியாரது அன்பின் திறத்தைக் கண்டு வியந்தருளி இறைவனை நோக்கி 'எம்பெருமானே, தலையினால் நடந்து இம்மலைமேல் ஏறிவரும் எற்புடம்பின் அன்பின்திறம் என்னே' என வினவினார். அது கேட்ட சிவபெருமான் 'உமையே இங்குவரும் இவள் நம்மை அன்பினாற் பேணும் அம்மையாவாள். இப்பெருமை பொருந்திய பேய்வடிவத்தையும் நம்பால் தானே வேண்டிப் பெற்றனள்' என்று சொல்லி, அருகு வந்தணைந்த புனிதவதியாரை நோக்கி, 'அம்மையே' என்னும் செம்மொழியால் உலகமெல்லாம் உய்ய அழைத்தருளினார். அருட்கடலாகிய இறைவன் அம்மையே யென்று அழைக்கக் கேட்ட புனிதவதியார் அப்பா என்று சொல்லிக்கொண்டு அவருடைய திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார். இறைவன் அவரை நோக்கி 'நம்பால் இங்கு வந்து நீ வேண்டிப் பெறக் கருதியது யாது' என வினவக் காரைக்காலம்மையாரும் இறைவனைப் பணிந்து 'அறக்கடலாகிய பெருமானே நின் திருவடிக்கண் குறையாத பேரன்பு என்பாலமைதல் வேண்டும். எனது பிறவி நோய் ஒழிதல் வேண்டும். மீண்டும் வினைவயத்தால் எனக்குப் பிறப்பு நேருமாயின் நின்னைமறவாது போற்றும் மெய்யுணர்வினை அடியேற்கு வழங்கியருளுதல் வேண்டும். நீ திருநடனஞ் செய்யும்பொழுது யான் நினது திருவடிக் கீழ் இன்புற்றிருத்தல் வேண்டும்' எனவேண்டிப் போற்றினார். அம்மையார் வேண்டியன வெல்லாம் அவர்க்குக் கூடுமாறு அருள்செய்த இறைவன், அம்மையாரை நோக்கித் 'தென்னாட்டிற் சிறப்புற்று விளங்குந் திருவாலங்காட்டில் யாம் ஆடியருளுந் திருக்கூத்தினைக் கண்டு நீ என்றும் எம்மைப் பாடிப் போற்றியிருப்பாயாக' எனப் பணித்தருளினார். அம்மையார் கயிலைப் பெருமான்பால் விடை பெற்றுத் தென்னாடடைந்து திருவாலங் காட்டிற்குத் தலையால் நடந்து சென்றார். அண்டமுற நிமிர்ந்தாடும் ஆலங்காட்டிறைவனது திருக்கோலத்தைக் கண்டு உள முருகி வழிபட்டுக் 'கொங்கைதிரங்கி' யென்ற முதற்குறிப்புடைய மூத்த திருப்பதிகத்தையும் 'எட்டியிலவம்' என்ற முதற் குறிப்புடைய திருப்பதிகத்தையும் பாடிப் போற்றினார். கண்ணுதற் பெருமான் இனிய தமிழால் அம்மையே யென அழைக்கப்பெற்ற காரைக் காலம்மையார் ஆலங்காட்டடிகளது தூக்கிய திருவடிக்கீழ் என்றும் நீங்காதுறைந்து

அப்பெருமானைப் பாடிப் போற்றும் பெருவாழ்வைப் பெற்றார் என்பது வரலாறு. இதனைச் சேக்கிழாரடிகள் திருத்தொண்டர் புராணத்தில் அறுபத்தைந்து திருப் பாடல்களால் விரித்துக் கூறியுள்ளார்கள்.

'அப்பனை அணிதிருவாலங் காட்டுள் அடிகளைச் செடி தலைக் காரைக்காற் பேய் செப்பிய செந்தமிழ்' எனக் 'கொங்கை திரங்கி' யென்ற முதற் குறிப்புடைய மூத்த திருப்பதிகத்தின் இறுதிப் பாடலாகிய திருக்கடைக் காப் பிலும், 'ஆடும் அரவம் அரையில் ஆர்த்த அடிகள் அருளாலே, காடுமலிந்த கனல்வா யெயிற்றுக் காரைக் காற்பேய் தன் பாடல்' என 'எட்டியிலவம்' என்ற திருப் பதிகத்தின் திருக்கடைக் காப்பிலும், 'உரையினால் இம்மாலை அந்தாதி வெண்பாக் கரைவினாற் காரைக் காற்பேய் சொல்' என அற்புதத் திருவந்தாதியின் இறுதிச் செய்யுளிலும் அம்மையார் தம்மைக் 'காரைக்காற் பேய்' எனக் குறித் துள்ளார்கள். இங்கெடுத்துக் காட்டிய அகச்சான்றுகளால் அம்மையார் பிறந்தருளிய திருப்பதி சோழ நாட்டிலுள்ள காரைக்கால் என்னும் ஊரென்பதும், அவர்க்கு வழங்கிய பெயர் பேயார் என்பதும் நன்கு புலனாகும். நம்பியாரூரர் தாம் பாடிய திருத்தொண்டத் தொகையில் 'பெருமிழலைக் குறும்பர்க்கும் பேயார்க்கும் அடியேன்' என அம்மையாரைப் பேயார் என்ற பெயராற் போற்றி யுள்ளமையால், காரைக்காலம்மையார்க்குப் பேயார் என்ற பெயர் பெருக வழங்கினமை புலனாகும். பேயார் என்னும் இப்பெயர் இவருடைய பெற்றோரிட்ட இயற்பெயரன்றென் பதும், இவர் இல் வாழ்க்கையிற் பற்றற்று இறைவனை வழி படும் நற்கணத்தி லொன்றாய காலத்துப் பெற்ற காரணப் பெயரென்பதும், 'மற்றொருகண் நெற்றிமேல் வைத் தான்றன் பேயாய, நற்கணத்தி லொன்றாய நாம்' என அம்மையார் தம்மைப்பற்றிக் கூறிக் கொள்ளுதலால் நன்கு துணியப்படும். காரைக்காலம்மையார்க்குப் பெற்றோர் இட்ட பெயர் புனிதவதியார் என்பதும், அவர்க்கு அம்மையார் என வழங்கும் இப்பெயர் திருக் கயிலையில் வீற்றிருந்தருளும் சிவபெருமானால் இட்டழைக்கப்பெற்ற சிறப்புப்பெய ரென்பதும் சேக்கிழாரடிகள் பாடிய திருத் தொண்டர் புராணத்தில் காரைக்காலம்மையார் புராணத் தால் நன்கு விளங்கும். இவர் பேய்வடிவம் பெற்றனர்

என்றது, உடலில் தசை மிகவுங் குறைந்து போக ஊனினைச் சுருக்கி உள்ளொளி பெருக எற்புடம்பினராக நிலவினர் என்பதை உணர்த்துவதாகும்.

காரைக்காலம்மையார் இறைவனை வேண்டிப்பெற்ற பேய் வடிவம், பேராசையால் விரும்பியவற்றை நுகரப் பெருது அலைந்து திரியும் அழுக்குடைய உயிர்களுக் கமைந்த இழிதகவிற்ருகிய பேய் வடிவம் அன்றென்பதும், சிவபெருமானைச் சூழ்ந்து நின்று பரவிப் போற்றும் தூய்மை வடிவினராகிய பதினெண் கணங்களுளொன்ருகிய மேன்மையுடையதென்பதும் விளங்க, 'வானமும் மண்ணு மெல்லாம் வணங்கு பேய் வடிவம்' எனச் சேக்கிழார் பெருமான் சிறப்பித்துப் போற்றுகின்ருர். இவ்வுண்மை 'மற்ருெருகண் நெற்றி மேல் வைத்தான்றன் பேயாய நற்கணத்தி லொன்ருய நாம்' என முன்னர்க் குறித்த அம்மையார் வாய்மொழியாலும் இனிது புலனுதல் காண்க.

அம்மையார் தளர்நடை கொண்டு விளையாடும் பிள்ளைமைப் பருவத்திலேயே சிவபெருமானது திருவடித் தொண்டில் ஈடுபட்டு அப்பெருமானுடைய திருப்பெயர் களைப் பயின்ற திறத்தைப்

'பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாங் காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன்—நிறந்திகழும்
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே
எஞ்ஞான்று தீர்ப்ப திடர்'

எனவரும் அற்புதத் திருவந்தாதிப் பாடலால் நன் குணரலாம்.

மனையறக் கடமையாகிய விருந்தோம்பலும் சமயவழி பாடாகிய அடியார்ப் பேணலும் சிவனடியார்க்குத் திருவமு தளித்தலாகிய இவ்வொரு செயலாலே நிறைவேறுமென் பது புனிதவதியாரது துணிபாதலின், கணவன் கொடுத் தனுப்பிய மாங்கனியிலொன்றை அடியார்க்கு அளித்தனர். அன்புடையார்க்குத் துன்பம் வந்துற்றகாலத்து அதனை அறவே நீக்கி வேண்டுவன புரிதல் இறைவனது இயல் பென்பது புனிதவதியார்க்கு இருமுறை மாங்கனி தந்துத விய அருட் செயலால் இனிது பெறப்படும். முதன் முறை யிற் புனிதவதியார் இறைவன்பாற் பெற்றுத் தந்த பழத் தினை இது திருவருளாற் கிடைத்ததோ என்னும் ஆராய்ச்சி

யின்றித் தான் அனுப்பிய கனியாகவே பரமதத்தன் கருதினமையாலும், சிவனடியார்க்கு உணவாகிய அவனது பொருள் மீண்டும் பயன் வகையால் நுகரப்படுதல் முறையாதலாலும், அஃது அவனுக்கு உணவாயிற்று. இரண்டாம் முறையாக வேண்டிப் பெற்ற கனி, பரமதத்தன் இறைவனது திருவருளை ஐயுற்றுச் சோதித்தற்பொருட்டு மீண்டும் மனைவியாரைக் கொண்டு வேண்டிய நிலையில் அவனது ஐயத்தைத் தீர்த்த லொன்றேகருதி அளிக்கப்பட்டதாகலின், அவனது நுகர்ச்சி யொடுபட்ட ஆராய்ச்சிக்கு அகப்படாது காணுமல் மறைந்து விட்டது. புனிதவதியாரது திருவருட் பேற்றினை நேரிற் கண்டுணர்ந்த பரமதத்தன் அவரைத் தன் மனைவியாகக் கருதாது வேருெரு தெய்வமென்றே கருதி விலகி யொழுக நினைத்தது வியப்பென்னும் மெய்ப்பாடாகும்.[1]

சிவநெறிச் செல்வராகிய திருஞானசம்பந்தப் பிள்ளையார் திருவாலங்காட்டிறைவரை வழிபடச் சென்றபொழுது காரைக்காலம்மையார் தலையாலே நடந்து போற்றும் சிறப்புடைய அம்மையப்பர் திருவாலங்காடாம் இதுவென நினைந்து அம்மூதூரினை மிதிக்க அஞ்சி அதன் மருங்குள்ளதோர் ஊரில் அன்றிரவு துயில் கொண்டனரென்றும், அந்நிலையில் ஆலங்காட்டில் எழுந்தருளிய இறைவர் ஆளுடைய பிள்ளையார் கனவில் தோன்றி நம்மைப் பாடுதற்கு மறந்தனையோ என வினவி நின்றுரென்றும், இறைவனது திருவருளே இதுவெனவுணர்ந்த ஆளுடைய பிள்ளையார் நள்ளிரவில் துயில் நீங்கி யெழுந்து 'துஞ்ச வருவார்' என்ற முதற் குறிப்புடைய திருப்பதிகத்தைப் பாடி ஆலங்காட்டடிகளைப் போற்றினரென்றும் சேக்கிழாரடிகள் திருஞானசம்பந்தர் புராணத்திற் கூறியுள்ளார்.[2] இச்செய்தி 'துஞ்ச வருவாரும் தொழுவிப்பாரும் வழுவிப் போய், நெஞ்சம் புகுந்தென்னை நினைவிப்பாரும்' எனவரும் இத் திருப்பதிகத்தின் முதற் பாடலாலும், 'ஆந்தண்

1. தொல்காப்பியனுர் காமக் குறிப்பாகாதன இவை யென விலக்கிய மெய்ப்பாடுகளுள் இவ்வியப்பும் ஒன்ருகும் 'வியப்பு – தலைமகள்பால் தெய்வத்தன்மை கண்டான் போல் வியந்தொழுகுதல்' என்பர் பேராசிரியர். (தொல் - மெய்ப். 26-ம் சூத்திரவுரை)

2. பெரிய புராணம் – திருஞானசம்பந்தர் புராணம் 1008, 1009, 1010-ஆம் செய்யுட்கள்,

பழையனூர் ஆலங்காட்டெம் அடிகளை, வேந்தன் அருளாலே விரித்த பாடல் இவை' எனவரும் இதன் திருக்கடைக் காப்புப் பகுதியாலும் இனிது புலனாகும். திருவாலங்காட்டுப் பெருமான் தனது தூக்கிய திருவடிக் கீழமர்ந்து தாழ்ந்து வணங்குஞ் சிறப்புடைத் தொண்டராகிய காரைக்காலம்மையார் நாடோறும் பாடிப் போற்றும் தோத்திரப் பாடல்களையும் வாழ்த்தினையும் கேட்டு அப் பாடல்களின் இசைக்குத்தக அண்டமுற நிமிர்ந்தாடுகின்றான் என்னும் உண்மையினை,

'வணங்குஞ் சிறுத்தொண்டர் வைகலேத்தும்
வாழ்த்துங் கேட்டு
அணங்கும் பழையனூர் ஆலங்காட்டெம் அடிகளே'[1]

எனவரும் தொடரால் திருஞானசம்பந்தர் குறிப்பிட்டருளிய திறம் நினைந்து போற்றத் தக்கதாகும். இச்செய்தி 'அறவா நீ ஆடும்போது உன்னடியின்கீழிருக்க'[2] என அம்மையார் வேண்டிய வேண்டுகோளாலும் 'குலவிய தாண்டவத்தில் அவர் எடுத்தருளுஞ் சேவடிக்கீழ் என்றுமிருக்கின்றார்'[3] எனச் சேக்கிழாரடிகள் கூறிப் போற்றுதலாலும் நன்கு துணியப்படும்.

மேற்காட்டிய வரலாற்றுக் குறிப்பால் திருஞான சம்பந்தர்க்குக் காலத்தால் முற்பட்டவர் காரைக்காலம்மையாரென்பது நன்கு தெளியப்படும். சைவ சமய குரவருளொருவராகிய திருஞானசம்பந்தர் கி. பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்தவரென்பது வரலாற்றாராய்ச்சியாளர் துணிபாதலின் அவராற் போற்றப் பெற்ற காரைக்காலம்மையார் வாழ்ந்த காலம் அவர்க்கு நெடுங்காலத்திற்கு முன் எனக் கொள்ளுதல் வேண்டும். காரைக்காலம்மையார் பாடிய நூல்களின் யாப்பமைதியையும் பின்வந்த தேவார ஆசிரியர்கள் பாடிய திருமுறைகளின் சொற்பொருளமைதியையும் உற்றுநோக்குங்கால் இருண்ட காலப் பகுதி யெனப்படும் கி. பி. நான்கு, ஐந்தாம் நூற்றாண்டுகளாகிய காலப்பகுதியில் வாழ்ந்தவர் காரைக்காலம்மையாரெனக் கொள்ளுதல் மிகவும் பொருந்தும்.

1. திருஞானசம்பந்தர் முதல் திருமுறை 45-ம் பதிகம் 7-ம் பாடல்.
2. பெரிய. காரைக்காலம்மையார் புராணம் 50-ம் செய்யுள்.
3. " " 65-ம் செய்யுள்.

காரைக்காலம்மையார் அருளிச் செய்தனவாகத் திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் இரண்டும் திருவிரட்டை மணிமாலை, அற்புதத்திருவந்தாதியென்ற பிரபந்தங்கள் இரண்டும் ஆக நான்கும் பதினொராந்திருமுறையில் முறையே தொகுக்கப் பெற்றுள்ளன. திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகமாகிய 'கொங்கைதிரங்கி' என்ற முதற்குறிப்புடையபதிகம் பதினொரு பாடல்களாலியன்றது. இவ்வாறே 'எட்டியிலவம்' என்ற இரண்டாந் திருப்பதிகமும் பதினொரு பாடல்களையுடையதாகும். இப்பதிகங்கள் இரண்டிலும் பதினொராந் திருப்பாடலாக அமைந்த செய்யுட்கள் இரண்டும் இப்பதிகங்களைப் பாடியோர் பெயரும் இவற்றைப் பாடும் அடியார்கள் பெறும் பயனும் கூறும் திருக்கடைக்காப்புச் செய்யுளாகும். இத்திருக்கடைக்காப்பு நீங்கலாக ஒவ்வொரு திருப்பதிகத்திலும் பத்துப் பாடல்களே அமைந்துள்ளன. இவற்றைக் கூர்ந்து நோக்குங்கால் பத்துப் பாடல்களால் இயன்றனவற்றைப் பதிகமென்ற பெயரால் வழங்குதல் அம்மையார் காலத்துத் தோன்றி நிலைபெற்ற வழக்கமாதல் நன்கு புலனும்.

'கொங்கைதிரங்கி' யென்ற முதற் குறிப்புடைய திருப்பதிகம் நைவளம் என்ற நட்டபாடைப்பண்ணிலும் 'எட்டியிலவம்' என்ற பதிகம் இந்தளம் என்ற பண்ணிலும் பாடப்பெற்றுள்ளன. எனவே இப் பண்சுமந்த பாடல்களைப் பாடிய காரைக்காலம்மையார் இயற்றமிழிலும் இசைத்தமிழிலும் நிரம்பிய புலமையுடையாரென்பது நன்கு துணியப்படும். நம்பியாரூரரால் திருத்தொண்டத் தொகையிற் போற்றப் பெற்ற அடியார்களில் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், காரைக்காலம்மையார் ஆகிய இம்மூவரும் கற்கும் இயற்றமிழிலும், இசைத்தமிழிலும் வல்லவர்களென்பது 'கவுணியர் நாவுக்கரசர் பேயார் இம்மூவர் கற்கும் இயல் இசைவல்லோர்'[1] எனவரும் சேக்கிழார் புராணத்தாற் புலனாகும். திருஞானசம்பந்தர் முதலிய தேவார ஆசிரியர்கள் பதிகப்பெருவழியால் இறைவன் திருவருளைத் தமிழகமெங்கும் பரப்புதற்குமுன் பண்ணார்ந்த பாடல்களால் இறைவனைப் பாடிப் போற்றும் திருநெறிய தமிழ் நெறியை முதன்முதல் தோற்றுவித்த அருளாசிரியர்

1. சேக்கிழார் புராணம் 46-ம் செய்யுள்.

காரைக்காலம்மையாரேயாவார். ஆகவே அம்மையார் திருவாய்மலர்ந்தருளிய இயலிசைத் தமிழ்ப்பதிகங்களாகிய திருவாலங்காட்டுத் திருப்பதிகங்களிரண்டும் மூத்ததிருப் பதிகங்கள் என வழங்கப்பெறுவனவாயின.

சிவபெருமானைப் போற்றும் நற்கணத்திலொருவராகிய காரைக்காலம்மையார் ஆலங்காட்டிறைவன் ஈமம் இடு சுடு காட்டகத்தே தாழ்சடையெட்டுத் திசையும் வீசி ஆடியரு ளுந்திருக்கூத்தின் இயல்பினையும் அண்டமுற நிமிர்ந் தாடும் அப்பெருமானுக்கு ஆடரங்காகத்திகழும் சுடுகாட் டின் அமைதியையும் அங்கு வாழும் பேய்களின் செய்கை களையும் இத்திருப்பதிகங்களிற் சுவை பெற விரித்துரைக் கின்றார்.

ஊழ்வயத்தால் இறந்த உயிர்கள் உள்ளங் குளிர்ந்து அமைதியடையும்படி உயிர்க்குயிராகிய சிவபெருமான் இடு காட்டில் ஆடியருள்கின்றான் என்பது, 'ஈமம் இடு சுடுகாட்ட கத்தே ஆகங்குளிர்ந்தனலாடும் எங்கள் அப்பன்'[1] என அம்மையார் இறைவனைப் போற்றுதலாற் புலனும். திரு வாலங்காட்டிறைவன் காளியுடன் நிருத்தவாதஞ் செய்து ஆடியருளிய ஊர்த்துவ தாண்டவத்தின் இயல்பினை, 'மண்டலம் நின்று அங்குளாளம் இட்டு வாதித்து வீசி யெடுத்த பாதம், அண்டமுற நிமிர்ந்தாடும் எங்கள் அப்ப னிடம் திருவாலங்காடே'[1] என்ற தொடரால் அம்மையார் புலப்படுத்தினமை காணலாம்.

'காடும் கடலும் மலையும் மண்ணும் விண்ணுஞ்சுழல அனல் கையேந்தி ஆடும் அரவப் புயங்கன்'[2] என்றும், 'பேய் முழவங் கொட்டக் கூளிப்பாடக் குழகன் ஆடும்'[3]. என்றும், ஆலங்காட்டிறைவனது திருநடனத்தின் இயல் பினை விளக்கிய அம்மையார், 'மாயன் ஆட மலையான் மகளும் மருண்டு நோக்குமே'[4] என்ற தொடராற் பிற ரெவருங் காண முடியாத இறைவனது அருட்கூத்தினை மலைமகளாராகிய உமையம்மையாரது திருவருள் நோக்கத்

1 திருவாலங் காட்டு மூத்த திருப்பதிகம் க–3–ம் பாடல்.

1. ,, ,, 4–ம் பாடல்
2. ,, ,, 8–ம் பாடல்
3. ,, II 1–ம் பாடல்
4. ,, ,, 8–ம் பாடல்

தால் தாம் காணப் பெற்று மகிழ்ந்த திறத்தை உய்த்துணர வைத்தமை நினைந்து போற்றத்தக்கதாகும்.

திருவிரட்டை மணிமாலையென்பது, கட்டளைக் கலித்துறை முன்னும் வெண்பா பின்னுமாக முறையே தொடர்ந்து அந்தாதித் தொடையால் மாலைபோன்றமைய இருபது செய்யுட்களால் இயற்றப்பெறுவதாகும். இதனை 'ஆய்ந்தசீர் இரட்டைமாலையந்தாதி'[1] எனச் சேக்கிழாரடிகள் குறிப்பிட்டுள்ளார்கள். இரட்டை மணிமாலை யென்ற பிரபந்தத்தை முதன்முதற் பாடியவர் காரைக்காலம்மையாரேயாவார். இப்பொழுது நமக்குக் கிடைத்துள்ள தமிழ் நூல்களிற் கட்டளைக் கலித்துறையென்னும் யாப்புக்கு மூல இலக்கியமாக விளங்குவன காரைக்காலம்மையார் பாடிய இத்திருவிரட்டை மணிமாலையிலுள்ள கட்டளைக் கலித்துறைச் செய்யுட்கள் பத்துமேயாகும்.

இவ்வுலக வாழ்விற் கொடிய துன்பங்கள் வந்து தாக்கும்பொழுது உளந்தளராது ஈசனையே வாழ்த்துதல் வேண்டும். ஈசனாகிய அவனையன்றி இவ்வுலகத்து எதுவும் இயங்காதெனவுணர்ந்து மறவாது போற்றும் அடியார்களை இறைவன் மீண்டும் பிறவாவண்ணம் காத்தருள் புரிவான். அவன் அடியார்களது இடர்கண்டு தரித்திருப்பானல்லன். தன்னைத் தஞ்சம் புகுந்தார் துயர்க்கடலில் அழுந்தா வண்ணம் எளிவந்து காத்தருளும் வல்லாளனாகிய அப்பெருமானை நெஞ்சத்தால் இடைவிடாது சிந்தித்துப் போற்றுதல் வேண்டும். படைத்தற்கடவுளும் ஆதிரை முதல்வனாகிய அவ்விறைவனைச் சோதித்துக் காண மாட்டாது ஆற்றகில்லேன் அம்மா என்று தளர்ந்து வருந்தினன். எண்தோளீசனாகிய இறைவனுடைய பொன்னடிகளைப் பணிந்து போற்றுவோர் கடலையனைய துன்பங்கள் அத்தனையுந் தள்ளிக் கடந்து ஈறில்லாத இன்பக்கரையெய்தி மகிழ்வர். எல்லா மந்திரங்களினும் மேலான திருவைந்தெழுத்தினை ஓதித் தலையாயினை உணர்ந்தோர் ஈசன கழல் கண்டுணர்வர். அத்தகைய மெய்யடியார்களைப் போற்றியவரது உடம்பின் நிழலைக் கண்டபோதே வினைகளெல்லாம் நில்லாதொழியும், அங்ஙனமாகவும் மலர்தூவி வழிபடும் அடியார்களது பழ

1. பெரிய. காரைக்காலம்மையார் புராணம் 53-ம் செய்யுள்.

வினை நில்லாதெனச் சொல்லவும் வேண்டுமோ ? தொல்லை வினை வந்து நம்மைச் சூழ்தற்குமுன் கூற்றுவனைக் காய்ந்த பெருமானை நினைந்து அன்பு செய்து அவனது திருநாம மாகிய திருவைந்தெழுத்தினை ஓதி யின்புறுதல் வேண்டும். உத்தமராய் வாழ்வார்கள் இறந்த பின்னர்ப் பட்டமரமாகிய விறகினை யடுக்கிச் சுடுவர் உலகத்தார். அத்தகைய சாக் காடு வருதற்கு முன்னரே ஒருவரும் உண்ணாத நஞ்சை யுண்டு உலகத்துயிர்களைக் காத்தருளிய சிவபெருமானது பொருள்சேர் புகழைக் கேட்டுச் சிந்தித்துப் போற்றுதல் வேண்டும் என்பனபோன்ற உயர்ந்த கருத்துக்கள் இத் திருவிரட்டை மணிமாலையில் விரித்துரைக்கப் பட்டுள்ளன.

'முனியத்தக்க அவுணர்களுடைய முப்புரங்களையும் ஓரம்பினால் தீ மூட்டியழித்து உயிர்களுக்கு இன்பமளிக்க வல்ல எம்பெருமானே, நீ நினது நீண்ட சடையிற் பிறரறி யாது வைத்திருக்கும் கங்கையாகிய நங்கையை நின் திரு மேனியின் ஒரு பாகத்திலுள்ள உமை நங்கை கண்டால் நினதுகள்ளத்தை எங்ஙனம் மறைப்பாய்' என இறைவனை நோக்கிக் காரைக்காலம்மையார் வினவுவதாக அமைந்தது,

'இனிவார் சடையினிற் கங்கையென்பாளை அங்கத்திருந்த
கனிவாய் மலைமங்கை காணில் என்செய்தி கையிற் சிலையால்
முனிவார் திரிபுரம் மூன்றும் வெந்தன்று செந்தீயின் மூழ்கத்
தனிவார் கணையொன்றினால் மிகக் கோத்தஎம் சங்கரனே'

என்ற பாடலாகும்.

'வங்கமலி கடல் நாகைக்கா ரோணத்தெம் வானவனே
எங்கள் பெருமானோர் விண்ணப்ப முண்டது கேட்டருளீர்
கங்கை சடையுட் கரந்தாய் அக்கள்ளத்தை மெள்ள உமை
நங்கை யறியிற் பொல்லாது கண்டாய் எங்கள் நாயகனே'

எனத் திருநாவுக்கரசடிகளார் பாடிய திருவிருத்தம் இப் பாடற் பொருளை யடியொற்றியமைந்திருத்தல் காணலாம். இவ்வாறே 'ஏறலால் ஏறமற்றில்லையே' என அம்மையார் கூறிய வாய்மொழியை 'ஏறலால் ஏறலில்லை' எனத் திரு நாவுக்கரசடிகள் பொன்னே போல் எடுத்தாளுதல் காணலாம்.

'உரைக்கப் படுவதும் ஒன்றுண்டு கேட்கிற் செவ்வான் தொடைமேல்
இரைக்கின்ற பாம்பினை என்றும் தொடேல்'

எனக் காரைக் காலம்மையார் இறைவனை நோக்கிக் கூறும் அறிவிப்பு, அன்பிற் சிறந்த தாய் தன் குழந்தைக்கு இடர் நேரா வண்ணம் விரைந்து கூறும் அறிவுரையை நினைவு படுத்துவதாகும்.

இறைவனருளால் வானமு மண்ணுமெல்லாம் வணங்கு பேய் வடிவம் பெற்ற அம்மையார், முதன்முதல் திருவாய் மலர்ந்தருளிய சிறப்புடைய பிரபந்தம் அற்புதத் திருவந்தாதி யென்பதாகும். அற்புதம் என்பது ஈண்டு யாவராலும் வியந்து போற்றுதற்குரிய சிவஞானம் என்ற பொருளைத் தருவதாகும். 'அற்புத மூர்த்தி' என்னும் நன்னூற் சிறப்புப் பாயிரத்தொடர்க்கு 'ஞானமே திருமேனியாக வுடையான்' எனச் சங்கர நமச்சிவாயர் கூறும் பொருள் இங்கு ஒப்புநோக்கத் தகுவதாகும்.[1] இறைவனருளால் தம் உள்ளத்துத் தோன்றிய சிவஞானத்தின் ஒருமைப் பாட்டினால் உமையொரு கூறனாகிய இறைவனைப் பாடிப் போற்றிய அந்தாதியாதலின் இஃது அற்புதத் திருவந்தாதி யென்னும் பெயர்த்தாயிற்று. இந்நுட்பம்,

'உற்பவித்தெழுந்த ஞானத் தொருமையின் உமை
கோன்றன்னை
அற்புதத் திருவந்தாதி அப்பொழு தருளிச் செய்வார்'[2]

எனவரும் சேக்கிழார் வாய்மொழியால் இனிது புலனாகும்.

தொல்காப்பிய உரையாசிரியர்களாகிய பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் தொல்காப்பியர் கூறிய எண்வகை வனப்புக்களுளொன்றாகிய விருந்தென்பதற்குப் 'பொய்கை யார் முதலாயினார் செய்த அந்தாதிச் செய்யுளை' உதாரண மாகக் குறிப்பிட்டுள்ளார்கள். காரைக் காலம்மையார் பாடிய இவ்வற்புதத் திருவந்தாதி விருந்தென்னும் வனப் புக்குரிய சிறந்த இலக்கியமாகும். சங்கத்தொகை நூல்களு ளொன்றாகிய பதிற்றுப் பத்திற் காப்பியாற்றுக் காப்பியனார் பாடிய நான்காம்பத்து அந்தாதித் தொடையமையப் பாடப் பெற்றதாகும். எனினும் இப்பத்தின் இறுதிச் செய்யுளின் இறுதியடி முதற் செய்யுளின் முதலடியுடன் மண்டலித்து முடியவில்லை. அந்தாதித் தொடையமைய நூற்றொரு வெண்பாக்களால் இறுதியும் முதலும் மண்டலித்து முடியக்

1. நன்னூற் சிறப்புப் பாயிரம், சங்கர நமச்சிவாயர் உரை.
2. பெரிய. காரைக் காலம்மையார் புராணம் 52-ம் செய்யுள்.

காரைக் காலம்மையார் பாடிய அற்புதத் திருவந்தாதி யென்னும் இந்நூல் அந்தாதியிலக்கியத்துள் தொன்மையும் சிறப்பும் வாய்ந்த விருந்துநூ லென்பது அறிஞர் துணி பாகும்.

திருவருள் ஞானம் பெற்றவர் காரைக்காலம்மையார் என்பது, 'திருவருள் ஞானமாவது முதலிகள் மூவர் காரைக் காலம்மை முதலாயினோர்க் குண்டாகிய ஞான மென அறிக' எனச் சிவப்பிரகாசம் 10-ம் செய்யுளுரையில் மதுரைச் சிவப்பிரகாசர் கூறும் விளக்கத்தால் இனிது புலனும். அம்மையார் இறைவனருளாற் பெற்ற திருவருள் ஞானத்தின் பயனாகத் திகழ்வது அற்புதத் திருவந்தாதி. இந்நூல் ஓதுதற்கு இனிமையும் எளிமையும் உடையதாய் உணர்தற்கரிய உயர்ந்த சிவஞானத்தியல்பினைத் தெளிவு படுத்துவது. காதலாகி ஓதும் அன்பர்களது உள்ளத்தை உருக்குவது. அம்மையார் தாம் பெற்ற திருவருள் அநுபவத் தினைத் தன்மை நிலையில் வைத்து உலகத்தார்க்குத் தெளி யவுணர்த்தும் பாடல்களும், தம் நெஞ்சத்திற்கு அறிவுறுத் தும் பாடல்களும், தம்மையொத்த அடியார்களின் இயல்பினை விரித்துரைக்கும் பாடல்களும், இறைவனுடைய அருட்கோ லங்களையும் திருவருட் செயல்களையும் நினைந்து அப்பெரு மானை முன்னிலைப் படுத்து அழைத்து உரையாடி மகிழும் நிலையிற் பாடப் பெற்ற திருப்பாடல்களும், இறைவனது பொருள்சேர் புகழ்த்திறத்தை யாவரும் உணர்ந்து போற் றும் வண்ணம் அப்பெருமானைப் படர்க்கையில் வைத்துப் போற்றும் பாடல்களும் இதன்கண் அமைந்துள்ளன.

எம்பெருமானாராகிய இறைவர் எனக்குண்டாகிய இடையூறுகளை நீக்காராயினும் யான் படுந் துன்பத்திற்கு உளமிரங்காராயினும் துன்பங்களை விலக்கியுய்ந்து போதற் குரிய நல்வழியைக் காட்டாராயினும் எனது நெஞ்சத்தில் நீங்காது வீற்றிருக்கும் அவர்பால் யான் வைத்துள்ள அன்பு ஒருபொழுதும் குறையாது.[1] எப்பொருளிலும் நீக்க மறத் தங்கியிருத்தலால் இறைவன் என்ற காரணப் பெய ருடைய கடவுள், உயிர்களுக்கு உடல், கருவி, உலகு, நுகர்பொருள் என்பவற்றைப் படைத்தளிக்க வல்லவன். அவற்றை மீண்டும் ஒடுக்குதலைச் செய்பவனும் அவ்விறை

1. அற்புதத் திவந்தாதி 2

வனே. எம்தந்தையே யெனப் போற்றி வழிபடும் உயிர்களாகிய எங்கள்மேல் பொறுத்தற்கரிய துன்பங்கள் வந்து வருத்துங்கால் அவற்றை மாற்றி இவ்வுலகில் நிலை பெறவாழச்செய்து காப்பவனும் அவ்விறைவனே ஆவன்[1]. ஞானமே திருமேனியாகவுடைய இறைன் நம்மால் அணுக முடியாத பரவெளியிலும் தேவருலகத்தும் உள்ளான் என்று சொல்லுவார் சொல்லுக. அப்பெருமான் எனது நெஞ்சமாகிய அணிய இடத்திலிருந்து அன்பர்களுக்கு அருள்புரிகின்றான் என்றே யான் கூறுவேன்[2]. கண்ணுதற் கடவுளாகிய சிவபெருமானுக்கு ஆட்பட்டமையால் யானே தவமுடையேனாயினேன். அப்பெருமானை இடைவிடாது எண்ணிப்போற்றுதலால் எனது நெஞ்சமே நல்ல நெஞ்சமாயிற்று. அவனது திருவருள் வழி நிற்றலால் காரண காரியத் தொடர்ச்சியாய்க் கரையின்றி வரும் பிறவித் தொடர்ச்சியை யறுத்தற் கெண்ணும் உறுதியுடையேனாயினேன்.[3] உலகமெல்லாவற்றையும் ஆள்விப்பதும் உயிர்களின் பிறவி நோயைப் பொன்றக் கெடுப்பதும் ஈசனது திருவருளேயாகும். அத் திருவருளின் துணை கொண்டே மெய்ப்பொருளாகிய சிவபரம்பொருளை உள்ளவாறு கண்டு வழிபடும் நற்பேறுடையேனாயினேன். அடியேற்கு எக்காலத்தும் எல்லாப் பொருளாகவும் நின்று துணை புரிவது அத்திருவருளேயாகும்.[4] என்றும் எனக்கினிமை தரும் பெருமானாகிய இறைவனை வைப்புநிதியாக என் மனத்துட் கொண்டு போற்றி வழிபடும் அடியேனுக்குக் கிடைத்தற்கரியது எதுவுமில்லை.[5] இறைவனுக்கு ஆட்பட்டுத் தொண்டு புரிதலாகிய ஒன்றையே நினைந்து அதனையே உறுதிப் பொருளாகத் துணிந்து என்னுள்ளத்திற் கொண்டுள்ளேன்.[6] இறைவனை நினைந்த எனது நெஞ்சம் தனக்குரிய பெருஞ் சேமத்தைத் தானே தேடிக் கொண்டது.[7] தேவர்கள் தம்முணர்வினால் இறைவனைத் தியானித்து மலர் தூவி வழிபட்டும் அப்பெருமானுடைய திருவடியைத் தலைப்படும் ஆற்றலற்றவராயினர். வலியற்ற மனத்தால் நினைந்திருந்து, மின்னலோடு விளங்கும் செவ்

1. அற்புதத் திருவந்தாதி 5
2. அற்புதத் திருவந்தாதி 6
3. அற்புதத் திருவந்தாதி 7
4. ஷை 9
5. ஷை 10
6. ஷை 11
7. ஷை 14

வானத்தைப் போலும் சிவந்த சடையினையுடையவனே, வேதப் பொருளானவனே என வாயாற் சொல்லி யேத்தும் எளியேனுக்கு அப்பெருமான் எங்ஙனம் அருள் செய்வானோ.[1] முன்னாளில் திருமாலும் நான்முகனுங் கூடித் தேடி அளத்தற்கரியவனும் எல்லா வுலகங்களுமாய்க் கலந்து விளங்குபவனும் ஆகிய இறைவனைக் கண்டு தெளியும் அறிவு அத்தேவர் இருவருக்கும் அக்காலத்து அரிதாயினும் இறைவனது திருவருளைப் பெற்ற இன்று நம்மைப் போன்ற அடியார்களுக்கு எளிதாயிற்று.[2] இறைவர் எமது துயர் கண்டு இரங்கி அருள் புரியாவிட்டாலும் உலக முய்ய நஞ்சுண்ட அப்பெருமானுக்கு ஆளாகும் பேறு பெற்றோமென்னும் பெருமித வுணர்வுடன் எமது பொத்துப் படாத உறுதியுடைய உள்ளம் மகிழ்ச்சியோடிருக்கின்றது.[3] எம்பெருமானாகிய இறைவன் தக்கார் தகவிலரென்னும் வேறுபாடின்றி எங்குஞ் சென்று பிச்சையேற்றுத் திரிவதும் இருள்மிக்க இடுகாட்டி லாடுவதுமாகிய இச்செயல்கள் என்ன பயன் கருதிச் செய்யப்படுவன என்பதை நாம் அப்பெருமானைக் காணலுற்ற நாளில் நேரில் அப்பெருமானைக் கேட்டு ஆராய்ந்து தெரிந்து கொள்ளலாம். அவனைக் காணப்பெருத நாளில் அச்செயல்களைக் குறித்து நாம் இங்கிருந்து பேசுதற்கு என்ன இருக்கிறது?[4] இறைவனைக் கண்டு போற்றும் பெருநெறியை விரும்பி அவனது திருவருளை வேண்டி அப்பெருமான் எங்கே எழுந்தருளியுள்ளான் என வினவும் அன்பர்களே, அவன் இங்கு என்னைப்போன்ற எளியோரது சிந்தையிலும் விரும்பி வீற்றிருக்கின்ருன். அவனைக் காண வேண்டுமென்னும் ஆர்வத்தால் அவன் திருவருளே கண்ணாகக் கொண்டு காணுமாறு காணும் மெய்யன்பர்களுக்கு அவனைக் கண்டு இன்புறுதல் மிகவும் எளிது.[5] இறைவனுடைய திருவடிகளை மலர் தூவிப் பணிந்தும் அங்ஙனம் பணிந்த மெய்யடியார்களை ஏத்தி வழிபடுதலை செய்யத் தகுவதெனத் துணிந்தும் எம்பிரானாகிய இறைவனுக்கு அடிமை செய்யப்பெற்ற இதுவே எனது சிந்தையார்க்குள்ள பெருமிதத்தின் பயனாகிய களிப்புக்குக் காரணமாதல் கூடும்.[6] பெரியோனாகிய இறைவனை யான் புறத்தே காணப்பெறுவேனாயின் அவனது திருமேனியின் அழகினை என் கண்களால் நிறையப்

1. அற்புதத் திருவந்தாதி 15,19,23,25,45,79.

பருகியும் அவன் திருவடிகளை என் கைகளாற் பலமுறை தொழுதும் அப்பெருமானது திருவருட்டிறத்தை நெஞ்சங் குளிர நினைந்தும், விண்ணகத்தில் விளங்குபவனே! எரியினில் ஆடல் புரிபவனே! என அப்பெருமானுடைய திருநாமங்களை என் நாவினாற் பலமுறை சொல்லியும் இன்புறுவேன் அல்லவா? என இவ்வாறு காரைக்காலம்மையார் தாம் பெற்ற சிவாநுபவப் பயனை வெளியிட்டுரைக்கும் பகுதிகள் படிப்போருள்ளத்தை நெகிழ்வித்து இறைவன் திருவருளில் திளைத்தின்புறச் செய்வனவாம்.

நெஞ்சமே, நாம் இறைவன் திருவடிகளை இடையீடின்றி நினைக்கப் பெற்றேமாதலின் மீளாப் பிறவிக் கடலை நீந்தி உய்ந்தோமாயினேம்.[1] நெஞ்சே மக்கட் பிறப்பினருள் ஒருவர்க்குரிய மனமாக நீ விளங்குகின்றாய். ஆதலால் ஏனை அஃறிணை யுயிர்களின் நெஞ்சம் போலன்றிப் பெரிய பாதுகாவலைப் பெற்றுள்ளாய். இவ்வுயர்நிலை நினக்குக் கிடைத்தது கருதி மகிழ்வாயாக. எவருடைய எலும்பாலும் அவற்றை அன்போடியைதற்கு வந்த சாதனமாகக் கருதித் தம் திருமேனியில் அணிந்து ஆடல் புரிவாராகிய சிவபெருமானுக்குத் தொண்டு செய்தற்குரிய பேரன்பினையே மேன்மேலும் பெருக்கிக் கொள்வாயாக.[2] உமையொரு பாகனாகிய இறைவனுடைய திருவடிகளைச் சிந்தித்துப் போற்றும் செல்வ வாழ்வினை அவனது திருவருள் நெறியாற் பெறுவதல்லது நினது முயற்சியாற் பெறுதல் இயலாது.[3] கங்கை முடிக்கு அணிந்த கண்ணுதற் பெருமானது திருவடித் தாமரையை எஞ்ஞான்றும் நினைந்து ஓதிப் போற்றுவாயாயின் நீ கருதியவாறெல்லாம் திருத்தமாகச் செய்து பயன் பெற முடியும்.[4]

எளியேனை ஆளாகவுடையவனும் தனக்குவமையில்லாத தனி முதற் பொருளாய் விளங்குபவனும் தன் பெருமை தானறியாத் தன்மையனும் பொன்னாற் சுருள் படச் செய்தமைத்தது போன்று திகழும் செஞ்சடையுடன் அருளுருவாகிய உமை நங்கையை இடப் பாகத்திற் கொண்டு விளங்கும் சிவபெருமானவன். அவனே வானோர் தலைவன். பவளம் போன்று சிவந்து தோன்றும்

1. அற்புதத் திருவந்தாதி 16. 2. ௸ 31.
3. ௸ 47. 4. ௸ 73.

திருமேனியையும் நீலமணி போலும் மிடற்றினையும் உடைய பெருமான் அவனே. நீ அவன்பால் மெய்யன்புடையையா யிருப்பாயாக. உலகியலிற் செல்லும் நினைவினைத் தடுத்து அடியாரது புகழ்த்திறத்தை நினைந்து போற்றி வாயினாலும் மகிழ்ந்து ஏத்தி இறைவனுக்காட்பட்ட தொண்டர் திருவடிகளைக் குறிக்கொண்டு தொழுவாயாக. யாவராலும் மனத்தாற் சிந்தித்துணர முடியாத பிறைமுடிக் கண்ணிப் பெரியோனாகிய இறைவனது பொருள்சேர் புகழை ஒரு சிறிதும் நினையாத தீயோரது கூட்டத்தை விட்டு விலகி உய்வாயாக. என இவ்வாறு அம்மையார் தம் நெஞ்சத்தை நோக்கிக் கூறும் அறிவுரைப் பகுதிகள் உளங்கொண்டு போற்றத்தக்கனவாகும்.

முக்கட் பகவனாகிய இறைவனுடைய வீட்டின்பம் வழங்கும் நலம் பொருந்திய திருவடிகளைத் தலைக்கு அணியாகக் கொண்டமையால் எம்முயிரைக் கொள்ளவரும் கூற்றுவனைப் பொருளாக எண்ணி நடுங்க மாட்டோம். இவ்வுலகிற் சிவனடியார்களைக் கண்டாற் சிவனெனவே தெளிந்து தலைதாழ்த்து வணங்கும் திருத்தொண்டின் நெறியினை மேற்கொள்ளப் பெற்றோம். இனி எமக்கு எத்தகைய அவலமுமில்லை. திரிபுரத்தவுணர் அவிந்தழியத் தீயம்பு எய்த இறைவனுடைய திருவடித் தாமரைகளைச் சார்ந்தமையால் காலனையும் வென்றோம். கடிய நரகத் துயரை விட்டு நீங்கினோம். பிறவிக்கு வித்தாய்த் தொன்று தொட்டுத் தொடர்ந்து வருத்தும் நல்வினை தீவினைகளாகிய இரு வினைகளையும் வேரறக் களைந்தோம். செஞ்சடையீசன் திருவடிக்கே ஆட்பட்டு அவனது இயல்புரைக்கும் நூல்களைக் கற்று இறைவனது அருள் நலங்களை யுணரப் பெற்றோம். இவ்வுலக வாழ்விற்கும் இனிவரும் மறுமை வாழ்விற்கும் வேண்டிய எல்லா நலங்களும் அமையப் பெற்றுள்ளோம். எங்களைப் புறங்கூறி யிகழ்தற்குக் காரணமாகிய எத்தகைய குற்றமும் எம்பால் இல்லை. எல்லாவுலகங்களையுந் தோற்றுவித்துக் காத்து முடிவில் ஒடுக்குதலால் அரன் என்னுந் திருநாமமுடைய இறைவனை அன்பாகிய போர்வையினாலே போர்த்து அவனது மெய்ப் புகழைக் கற்றுவல்லோம் என்ற உரிமை காரணமாக அவனைப் பிறரறியாதவாறு நம்முடைய நெஞ்சினுள்ளேயே அடைத்து மறைத்து விட்டோம். இனி அப்பெருமானைக்

காணவல்லார் யாவர்? என இவ்வாறு காரைக்கால் அம்மையார் இறைவனுக்கு ஆட்பட்ட மெய்யடியார்களின் இயல்பினை விரித்துரைக்கும் திருப்பாடல்கள் அவரது உள்ளத் துறுதியினை இனிது விளக்குவனவாகும்.

செம்மேனிப் பேராளனாகிய இறைவன் திருமாலை வலப் பக்கத்திலும் உமையம்மையாரை இடப்பாகத்திலும் கொண்டு விளங்கும் திருக்கோலத்தின் வனப்பினைக் குறித் தும், திருமிடற்றில் நஞ்சினையடக்கிய அப்பெருமான் செஞ் சடையில் திங்களையும் அதற்குப் பகையாகிய பாம்பினையும் கங்கையையும் சேர அணிந்த திறத்தைக் குறித்தும், அரவணிந்து தலையோடேந்தி ஊர்தோறும் பலி திரிவதும் பேய்கள் சூழ ஈமவனத்தே தீயேந்தி ஆடுவதுமாகிய செயல்களைக் குறித்தும் காரைக்காலம்மையார் இறை வனை நோக்கி உரையாடும் நிலையிற் பாடிய திருப் பாடல்கள் தன்மை உவமை முதலிய அணிகளுக்கும் நகை உவகை முதலிய சுவைகளுக்கும் சிறந்த இலக்கிய மாக விளங்குகின்றன. 'இறைவ, நின் திருவடிக்கு ஆளா கிய அந்நாளிலும் நினது திருவுருவத்தை நேரிற் காணா மலே நினக்குத் தொண்டுபட்டேன். நினக்குப் பன்னாள் அடித்தொண்டு செய்து பழகிய இந்நாளிலும நினது திரு வுருவத்தினைக் காணப் பெற்றேனல்லேன். 'நும் பெரு மானாகிய இறைவன் எத்தகைய திருவுருவத்தையுடையான்' என்று என்னை நோக்கி வினவும் உலகத்தார்க்கு நினது திருவுருவத்தியல்பினை எவ்வாறு விளங்கச் சொல் வேன்? நினது திருவுருவம் எவ்வுருவோ? வானிடத்தே யியங்கும் பிறைத்திங்களையணிந்த பெருமானே, ஏழுலகங் களையும் கண்ணெனப் பாதுகாக்க வல்ல கடவுளே, உயிர்க்குயிராகிய நின்னை நின் திருவருளாற் காணப் பெற்று, என் தந்தையேயென்று துதித்து வணங்கி என்னா லியன்ற கைத்தொண்டுகளைச் செய்து மகிழேனாயின் அண்டங்களை யெல்லாம் ஆளும் உயர்ந்த பதவி தானே கிடைத்தாலும் அதனை ஒரு பொருளாக விரும்பமாட்டேன். இதுவே அடியேனது உள்ளக் கருத்தாகும் இறைவ நின் திருவடி சிறிது இடம் பெயருமாயினும் கீழுலகமாகிய பாதாளம் நிலை தளர்ந்து சிதறும். நின் திருமுடி சிறிதே அசையுமாயின் அண்டமுகடு பிளந்துபோம். கடகமணியப் பெற்று வீசியாடுதற்குரிய நின்கைகள் சிறிதசைந்தாலும்

வானவருலகும் எண்திசைகளும் சிதர்ந்தழிவன. நீ திரு நடம் புரிந்தருளுதற்கு நிலைக்களமாய் விளங்கும் இவ்வுலக மாகிய அரங்கம் நினது திருக்கூத்தினைப் பொறுத்தற் கேற்ற வலியுடையதன்று. ஆகவே இதன் வலியின்மை யறிந்து குறிக்கொண்டு ஆடுவாயாக என அம்மையார் இறைவனை நோக்கிக் கூறும் அன்புரைகள், இறைவனது, திருமேனியைத் தாம் காண்பதுடன் உலகத்தார்க்குங் காட்டுதல் வேண்டுமென்னும் பேரார்வத்தையும், கூடும் அன்பிற் குப்பிடலேயன்றி வீடும் வேண்டாவிறலின் விளங்கிய அம்மையாரது திருத்தொண்டின் திறத்தையும் இறைவனது பெருந்திருக்கூத்தின் இயல்பினையும் இனிது புலப்படுத்துவனவாகும்.

அகக்கண்ணால் தன்னைச் சிந்தித்துக் காண வல்ல தவச்செல்வர்களுக்கு அவர்கள் உள்ளத்துள்ளே பேரொளிப் பிழம்பாகத் தோன்றியருள்புரிதல் இறைவனது இயல்பாகும். அப்பெருமானைப் புறத்தே கண்களாற் கண்டு மகிழவேண்டுமென விரும்புவார்க்கும் அவர்கள் விரும்பிய வண்ணமே எதிர்தோன்றிக் காட்சியளிக்க வல்ல எளிமைத் தன்மை வாய்ந்த அருளாளன் அவன். அவனைக் கைதொழுது போற்றும் மெய்யடியார்களுக்கு அவனது திருவுருவத்தைக் காணுதல் இயலும். அறியும் இயல்புடைய ஆன்மாவேயாய் ஒற்றித்து நிற்பவனும் அவனே. அங்ஙனம் உயிர்களோடு வேறறக் கலந்து நிற் பினும் உயிர்களாகிய அவற்றின் தன்மை தனக்கெய்த லின்றித் தான் அவற்றின் வேருக நின்று அவ்வுயிர்களுக் குப் பொருள்களின் இயல்பினை உள்ளவாறு அறிவித்தருள் பவனும் அவனே. கண்களுக்குப் பொருள்களின் இயல் பினை உள்ளவாறு காட்டித் தானும் உடனின்று காணும் உயிர்போல, உயிர்களுக்குப் பொருளின் இயல்பினை அறி வுறுத்தி அவற்ருேடு பிரிப்பின்றி உயிர்க்குயிராய் உட னிருந்து அறிந்து உதவி செய்பவனும் அவ்விறைவனே. உயிர்கள் இடைவிடாது சிந்தித்துத் தெளிந்து போற்றுதற் குரிய நிலைத்த உண்மைப் பொருளாக விளங்குபவனும் அவனே. ஒளிதரும் சுடர்ப்பொருள்களும் நிலனும் வானு மாகிய உலகியற்பொருள்களோடு விரவி நின்று உலகத்தை இயக்கி நிற்பவனும் அவனே.[1] பிறரால் அறிந்துகொள்ள

1. அற்புதத்—20.

முடியாத பெருமையையுடையவனும் பிறர் அறிதற்குக் கருவியாகிய மெய்யுணர்வாக விளங்குபவனும் எம்பெருமானுகிய இறைவனேயாவன். நுண்ணறிவு வாய்க்கப் பெருதார் தாம்கற்ற நூற்புலமையொன்றனையே கருவியாகக் கொண்டு தமக்குத் தோன்றியன பலவும் பேசித்திரிக. நீலமணிபோலும் கண்டத்தினையுடைய சிவபெருமானுகிய இறைவனது பெருமையே தனக்கு மேலாவதொன்றுமின்றி உயர்ந்து விளங்குவது. தவச்செல்வராகிய பெருமக்கள் எந்தச்சமய வேடத்தை மேற்கொண்டு தன்னை எந்த உருவத்திற் சிந்தித்துப் போற்றுகின்றார்களோ அன்பால் நினைந்து வழிபடும் அடியார்களாகிய அவர்களுக்கு அவர்கள் நினைந்த திருமேனி கொண்டுதோன்றி அருள் வழங்குபவன் அப்பெருமானேயாவன். மதிவளர் சடைமுடியிறைவனை அறிவினாலும் எற்புச் சட்டமாகிய உடம்பினாலும் இகழாது போற்றி வழிபடும் அன்பர்கள் அவனது திருவடியினையடைந்து இன்புறுவதல்லது. இவ்வுலகில் எலும்போடியைந்த யாக்கையைப் பெற்று மீளப்பிறவார். எம்பெருமானை உள்ளத்தே நினைந்து போற்றும் சிந்தையுடையராய் வாழுந்திறம் அவனது திருவருளாற் கிடைத்தற்குரியதன்றி மக்களால் முயன்று பெறுதற்குரிய எளிமையுடையதன்று. இறைவனது திருமேனி செங்கதிர் தோன்றும் காலைப் பொழுதினைப் போன்று ஒளி திகழும் செம்மேனியாகும். அதன்கண் பூசப்பெற்று விளங்குந் திருநீறு நண்பகற் பொழுதினையொத்து வெண்மையான ஒளியை வீசுகின்றது. இறைவனது செஞ்சடை மாலைப்பொழுதிற் செவ்வானத்தின் தோற்றமுடையதாய்த் திகழ்கின்றது. உலகமுய்ய நஞ்சினையுண்டடக்கிய அப்பெருமானது திருநீலகண்டம் நள்ளிருட்பொழுதின் தோற்றமுடையதாய் விளங்குகின்றது. என இவ்வாறு காரைக்காலம்மையார் இறைவனைப் படர்க்கையில் வைத்துப் பாடிப் போற்றுந் திருப்பாடற் குறிப்புக்களால், இயல்பாகவே பாசங்களின் நீங்கிய இறைவன் உலகப்பொருளொன்றினுந்தோய்வின்றிச் சிவம் எனத்தனித்து நிற்கும் இயல்பும், உலகெலாமாகி வேருய் உடனுமாய் உயிர்களுக்கு அருள்வழங்குமாற்றால் சிவத்துடன் பிரிக்க முடியாத திருவருட் சத்தியாக விளங்குஞ் சிறப்பும், உலகத்தைப் படைத்துக் காத்து ஒடுக்கி இயக்குதலாற் பதியெனப் பெயர்பெற்றுத் தனிமுதல்வனுக விளங்குந் தகவும், உலகமே உருவமாக விளங்கும், அம்

முதல்வனது திருவுருவத்தைக் கண்டு வழிபடுந்திறமும் இனிது புலனுதல் காணலாம்.

இனி, பூதத்தாரும் காரைக்காற்பேயாரும் சேர்ந்து பாடிய ஆரிடவெண்பாவாக,

> கறைப்பற் பெருமோட்டுக் காடு கிழவோட்
> கரைத்திருந்த சாந்தைத்தொட் டப்பேய்
> மறைக்க வறியாது மற்றுந்தன் கையைக்
> குறைக்குமாங் கூர்ங்கத்தி கொண்டு

என்ற பாடலை யாப்பருங்கலவிருத்தி யுரையாசிரியர் எடுத்துக்காட்டியுள்ளார். யாப்பருங்கலவிருத்தியில் காரைக்காற் பேயார் என்றது காரைக்காற்பேயம்மையார் என்ற பாட பேதத்துடன் காணப்படுதலால் இவ் ஆரிட வெண்பாவைப் பாடிய காரைக்காற்பேயாரென்பவர் காரைக்காலம்மை யாரேயாவரெனக் கொள்ளுதற்கு இடமுளது. இவருடன் இவ்வெண்பாவைப் பாடிய பூதத்தார் என்பவர் முதலாழ்வார் மூவருளொருவராகிய பூதத்தாழ்வாரெனத் திரு. மு. இராகவையங்காரவர்கள் கருதுவர். மாமல்லனு கிய நரசிம்மபல்லவன் தன் பெயரால் அமைத்த மாமல்ல புரத்தை 'மாமல்லை கோவல் மதிற் குடந்தை' என்ற பாடலிற் பூதத்தாழ்வார் குறிப்பிட்டுப் போற்றுதலால் அவர் வாழ்ந்த காலம் மாமல்லனுகிய நரசிம்மபல்லவனது ஆட்சிக்காலமாகிய கி. பி. ஏழாம் நூற்றுண்டிற்கு முந்திய தன்றென்பது நன்கு துணியப்படும். கி. பி. ஆறும் நூற்றுண்டின் இறுதியிலும் ஏழாம் நூற்றுண்டின் இடையிலும் வாழ்ந்த தேவார ஆசிரியர்களாகிய திருநாவுக்கரசர்க்கும் திருஞானசம்பந்தர்க்கும் சில நூற்றுண்டுகளுக்கு முற்பட்ட காலப்பகுதியில் வாழ்ந்தவர் காரைக்காலம்மையாரென்பது முன்னர் விளக்கப்பட்டது, ஆகவே வேறுவேறு காலத்தவராகிய காரைக்காலம்மை யாரும் பூதத்தாழ்வாரும் மேற்காட்டிய ஆரிடவெண்பாவைப் பாடினுர்களெனக் கொள்ளுதல் ஏற்புடையதாகத் தோன்றவில்லை. யாப்பருங்கலவிருத்தியிற் குறிக்கப்பட்ட பூதத்தார் பூதத்தாழ்வாரின் வேறெனவே கொள்ளுதல் வேண்டும். அல்லது இவ் ஆரிட வெண்பா இவ்விருபெரு மக்கள் பாடியதாகப் பிற்காலத்துப் புலவரொருவராற் பாடப்

பட்டதாதலும் கூடும். இதனைக் காரைக்காலம்மையார் பாடினாரெனத் துணிந்து கூறுவதற்கு அம்மையார் வரலாற்றில் எத்தகைய சான்றுமில்லை.

3. ஐயடிகள் காடவர்கோன் நாயனார்.

பதினோராந் திருமுறையில் ஐந்தாவது பிரபந்தமாகத் தொகுக்கப்பெற்றுள்ள க்ஷேத்திரத் திருவெண்பாவை அருளிச் செய்தவர் ஐயடிகள் காடவர்கோன் நாயனாராவர். இவரை 'ஐயடிகள் காடவர்கோன் அடியார்க்கும் அடியேன்' எனத் திருத்தொண்டத் தொகையில் நம்பியாரூரர் போற்றிப் பரவியுள்ளார்.

உலகிற்புகழ் நிலவ அரசு புரிந்த பல்லவர் குலத்திலே ஐயடிகள் தோன்றினார். நாட்டில் வறுமையும் பகையும் தோன்றிக் குடிமக்களை வருத்தா வண்ணம் சிவனடித் தொண்டு பூண்டொழுகும் நீதிநெறியினை மேற்கொண்டு செவ்விய முறையில் ஆட்சி புரிந்தார். எங்கும் திருத்தக விற்றாகிய செல்வப் பொலிவுடன் புகழ் வளரவும் எல்லாவுயிர்களும் பெருமைக்குக் காரணமாகிய நற்பண்புகளுடன் இன்புற்று வாழவும் பகைப்புலமாகிற பிற நாடுகளையும் வென்று அடிப்படுத்து இவ்வுலகில் அறநெறியும் அருள் நெறியாகிய சைவத் திருநெறியும் அருமறையின் துறைகளும் விளக்கமுற அரசியலை நிகழ்த்துவாராயினர். மன்னரெலாம் தம் ஆணைவழி நின்று பணிபுரியவும் வடநூல் தென்றமிழ் முதலாகிய கலைத்தொண்டு நிகழவும் குடிமக்களை நன்முறையிற் பேணிக்காத்த இவ்வேந்தர் பிரானார், தம்பாலமைந்த அரசுரிமையாகிய ஆட்சிக் கடமை தாம் மேற்கொண்டுள்ள சிவத்தொண்டிற்குத் தடையாய்த் துன்பம் விளைப்பதெனக் கருதி, அரசுரிமையைத் தம் அருமைப் புதல்வன்பால் ஒப்படைத்து விட்டுச் சிவநெறித் திருத்தொண்டினையே விருப்பி மேற்கொள்வாராயினர். தொண்டுரிமை பூண்ட இவ்வேந்தர் அண்டர் பிரானாகிய சிவபெருமான் அமர்ந்தருளுந் திருக்கோயில்களைக் கண்டு வணங்கித் திருத்தொண்டு செய்து ஒவ்வொரு திருத்தலங்களையும் ஒவ்வொரு வெண்பாவினாற் பாடிப் போற்றும் பேரார்வமுடையராய்ப் பெரும்பற்றப் புலியூராகிய தில்லையை யடைந்தார். திருச்சிற்றம்பலமாகிய ஞான வெளி

யிலே அருட் கூத்தியற்றும் நிருத்தனரது திருக்கூத்தினை நேரேகண்டு மகிழ்ந்தார். பேராத காதலால் தாம் பாடிய செந்தமிழ் வெண்பாவாகிய மென்மலரால் அப்பெருமானை அருச்சித்துப் போற்றினர். தில்லைப் பெருமானதருள் பெற்ற ஐயடிகள், இறைவன் கோயில்கொண்டருளிய ஏனைத் திருத்தலங்கள் பலவற்றையும் பணிந்து திருத்தொண்டு செய்து அத்திருத்தலங்களை எவ்வுலகத்தவரும் புகழ்ந் தேத்தும் இனிமை வாய்ந்த ஒவ்வொரு தமிழ் வெண்பாவி னுற் பாடிப் போற்றினர். இவ்வாறு செந்தமிழாற் சிவ நெறி வளர்த்த ஐயடிகள் காடவர்கோன் நாயனர், அடியார் பலரும் இன்புறத் தமக்கு இயைந்த திருப்பணிகள் பல வற்றையும் நெடுங்காலம் செய்திருந்து பின்பு சிவலோ கத்து இறைபணிபுரியும் அடியார்களுடன் கூடிப் பரமர் திருவடி நிழற்கீழ் அமர்ந்து ஈறிலாப் பேரின்ப வாழ்வினைப் பெற்றார் என்பது வரலாறு. இவ்வரலாற்றினைத் தொண்டர் சீர்பரவுவாராகிய சேக்கிழார் சுவாமிகள் திருத்தொண்டர் புராணத்தில் விரித்துக் கூறியுள்ளார்கள்.

காடவரென்பது, பல்லவ குலத்தார்க்கு வழங்கும் பொதுப்பெயர். பல்லவர்குடியிற் பிறந்து தொண்டை நாட்டினையாளும் வேந்தர் பெருமானாக விளங்கினமையால் இவர் காடவர்கோன் என அழைக்கப்பெற்றார். இவர் காஞ்சியைத் தலைநகராகக்கொண்டு அரசுபுரிந்தவரென்பது 'கன்னிமதில் சூழ்காஞ்சிக் காடவர் ஐயடிகளார்' எனச் சேக்கிழாரடிகள் கூறுதலாற் புலனும். காடவர்கோனாகிய இவர் அரசியல் வாழ்வு துன்பந்தருவதெனவுணர்ந்து அரசுரிமையைத் தன் புதவன்பால் ஒப்புவித்து விட்டுப் பற்றற்ற சிந்தையராய்ச் சிவத்தொண்டு புரிந்து வாழ்ந்த நாளில் இவர்க்கு வழங்கிய சிறப்புப் பெயர் ஐயடிகள் என் பதாகும். ஐயன் அடிகள் என்ற தொடரே ஐயடிகள் என்று மருவியதெனத் தெரிகிறது. எவ்வுயிர்க்குந் தலைவனாகிய இறைவனையும் அவனடியார்களையும் உலகினையாளும் அர சனையும் அடிகள் என்ற சொல்லாற் குறிப்பிட்டுப் போற்று தல் நெடுங்காலமாகத் தமிழகத்தில் நிலைபெற்று வரும் வழக்காறுகும். இம்மரபின்படி ஆற்றல் மிக்க வேந்தராகவும் சிறந்த சிவனடியாராகவுந் திகழ்ந்த காடவர்கோன் நாயனர் அடிகள் என்ற பெயரால் அழைக்கப்பெற்றமை பெரிதும் பொருத்தமுடையதேயாம். அரசியல் ஆட்சி

முறையில் ஆட்சியை மேற்கொண்டிருக்கும் வேந்தன் தன் தந்தையை ஐயன் எனக் குறிப்பிடும் வழக்க முண்டென்பது பல்லவர் கல்வெட்டுக்களாலும் சோழர் கல்வெட்டுக் களாலும் நன்கு புலனாகின்றது. காடவர்கோனாகிய இப் பல்லவ வேந்தர், அரசாட்சி தம்முடைய தொண்டுக்கு இடையூறுவதெனத் தெளிந்து, தம் மைந்தன்பால் அரசு ரிமையை ஒப்புவித்து விட்டு நெடுநாள் சிவத்தொண்டு புரிந்திருந்தாரெனச் சேக்கிழார் தெளிவாகக் கூறுதலால், இவர், தம் மைந்தனது ஆட்சிக் காலத்தில் ஐயனடிகள், ஐயடிகள் என அரசனாலும் குடிமக்களாலும் அழைக்கப் பெற்றார் எனக் கொள்ளுதல் பொருந்தும்.

இனி, ஐயடிகள் காடவர்கோன் எனச் சிறப்பிக்கப் பெற்ற பல்லவ வேந்தர் யாவரென்பதும் அவர்க்கு மைந்த ராக விளங்கி அரசு புரிந்தவர் யாவரென்பதும் இங்கு ஆராயத் தக்கனவாகும். சிவனடியார்களுள் ஒருவரும் தம காலத்தில் அரசு வீற்றிருந்த பல்லவ வேந்தருமாகிய கழற்சிங்க நாயனாரைப் போற்றக் கருதிய நம்பியாரூரர்

'கடல் சூழ்ந்த உலகெலாங் காக்கின்றபெருமான்
காடவர் கோன் கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன்'

எனத் திருத்தொண்டத் தொகையிற் பாராட்டிப் போற்றி யுள்ளார். இங்கே கழற்சிங்கன் என்ற பெயராற் குறிக்கப் பட்ட பல்லவ வேந்தனாவான் க்ஷத்திரிய சிம்மன், நரசிம்மன் இராசசிம்மன் எனச் சிங்கன் என்ற பெயரால் இணைத்துப் போற்றப்படும் இராசசிம்ம பல்லவனே யென்பது முன்னர் ஆராய்ந்து விளக்கப்பட்டது. கழற்சிங்கனாகிய இப்பல்லவ வேந்தன் காடவர்கோன் என்னும் பெயருடைய வேந்த னுக்கு மகனென்பது 'காடவர்கோன் கழற்சிங்கன்' என இவனை நம்பியாரூரர் குறித்துப் போற்றுதலாற் புலனாம். ஆகவே கழற்சிங்கனுக்குத் தந்தையாகிய காடவர்கோன் என்பார், ஐயடிகள் காடவர்கோனாகிய இவ்வேந்தர் பெரு மானே என்பது நன்கு பெறப்படும். காஞ்சியிற் கயிலாய நாதர் திருக்கோயிலைக் கட்டிய இராசசிம்ம பல்லவனே திருத்தொண்டத் தொகையிற் போற்றப்பெற்ற கழற்சிங்க நாயனாராதலின், அவருடைய தந்தையெனக் கருதப்படும் ஐயடிகள் காடவர்கோன் நாயனார் இராசசிம்ம பல்லவ னுடைய தந்தையாகிய முதலாம் பரமேசுரவர்மனே யென் பதும், அவர் தம் மைந்தனுடைய ஆட்சிக் காலத்திலும்

வாழ்ந்து பணிசெய்தவராதலின் அப்பெருந்தகையாரை அரசனும் குடிமக்களும் ஐயடிகள் என மதித்துப் போற்றினார்களென்பதும், சுழற்சிங்கன் ஆட்சிக் காலத்தில் வாழ்ந்த நம்பியாரூரர் இப்பெயர் வழக்கத்தை நன்கறிந்தவராதலின் ஐயடிகள் காடவர்கோன் என அவரைத் திருத்தொண்டத் தொகையிற் சிறப்பித்தருளினரெனபதும் ஈண்டு உய்த்துணரத் தக்கனவாகும்.

இராசசிம்ம பல்லவனுடைய தந்தையாகிய பரமேசுரவர்மன், இரண்டாம் மகேந்திரனுடைய மகனாவன். இவன் கி. பி. 670 முதல் 685 வரை ஆட்சிபுரிந்தானென்பர். இவனது ஆட்சிக் காலத்தில் இரண்டாம் புலிகேசியின் மைந்தனாகிய விக்கிரமாதித்தன் என்னும் சளுக்க வேந்தன் காஞ்சியின்மேற் படையெடுத்துச் சென்று பல்லவனை வென்று காஞ்சியைக் கைப்பற்றிச் சோழ நாட்டையும் கைக்கொண்டு காவிரிக்குத் தென்கரையிலுள்ள உரகபுரத்தில் (உறையூரில்) தங்கியிருந்த செய்தி அவன் அளித்த கத்வால் சாசனத்தால் அறியப்படும். இங்ஙனம் சோழ நாட்டிற் புகுந்த விக்கிரமாதித்தன், பாண்டி நாட்டையும் கைப்பற்றக் கருதிப் போருக்கு எழுந்த பொழுது பாண்டியன் நெடுமாறன் மகனாகிய கோச் சடையன் என்பான் திருச்சிராபபள்ளிக்கு அருகிலுள்ள மருதூரில் விக்கிரமாதித்தனது சேனையைத் தேக்கி மங்கலபுரத்தில் அவனை வென்றமையால் இரணதீரன் என்ற சிறப்புப் பெயரைப் பெற்றான் என்ற செய்தி வேள்விக்குடிச் செப்பேட்டிற் குறிக்கப்பட்டுளது. விக்கிரமாதித்தன் காஞ்சி நகரைக் கைப்பற்றியபோது அவன்பால் தோல்வியுற்றோடிய, பரமேசுரவர்மன் தன்னுடைய சேனைகளை ஒருங்கு திரட்டிக் கொண்டு சென்று திருச்சிராப்பள்ளிக்கு அருகிலுள்ள பெருவளநல்லூரில் விக்கிரமாதித்தனை எதிர்த்துப் பொருதான். இங்கு நிகழ்ந்த கடும்போரில் தன்னுடைய சேனைகளையெல்லாம் இழந்து தோல்வியுற்ற விக்கிரமாதித்தன் தன்னந்தனியே ஒரு கந்தையைப் போர்த்துக் கொண்டு போர்க்களத்திலிருந்து தப்பியோடினான் எனக் கூரம் சாசனம் கூறுகின்றது. காஞ்சியிலுள்ள கயிலாசநாதர் கோயிலில் வரையப்பட்ட கல்வெட்டொன்றில் ரணரசிகபுரமர்த்தனன் எனப் பரமேசுரவர்மன் குறிக்கப்படுதலால், இவன் ரணரசிகனாகிய விக்கிரமாதித்

தனைத் துரத்திச் சென்று அவனது தலைநகராகிய வாதாபியை அழித்துத் திரும்பியிருத்தல் வேண்டுமென உய்த்துணர்ந்துரைப்பர் சிலர். பரமேசுரவர்மன் சளுக்க வேந்தனாகிய விக்கிரமாதித்தனோடு புரிந்த இப்போர்ச் செயல்களையே 'வெய்யகலியும் பகையும் மிகை யொழியும் வகையடக்கி......... ஐயடிகள் நீதியால் அடிப்படுத்துஞ் செங்கோலார்' எனவும், சேணிலத்தில் எவ்வுயிரும் பெருமையுடன் இனிதமரப் பிறபுலங்கள் அடிப்படுத்து' எனவும் வரும் தொடர்களால் திருத்தொண்டர் புராண ஆசிரியர் குறித்தனரெனக் கொள்ளுதல் பொருத்தமாகும்.

பரமேசுர வர்மனாகிய இப்பல்லவ வேந்தன் சிவபெருமான்பால் அளவிலாப் பேரன்பு செலுத்திய சிறந்த சிவனடியானென்பது, இவன் கூரம் என்ற ஊருக்குப் பரமேசுர மங்கலமெனப் பெயர் தந்து அதன்கண் விச்சாவிநீத பல்லவ பரமேச்சுரக் கிருகம் என்ற சிவாலயத்தைக் கட்டியிருத்தலாலும், மாமல்லபுரத்தில் இவன் பாட்டனாகிய நரசிம்ம வர்மனாலமைக்கப்பட்டதும் இவனால் முற்றுவிக்கப் பெற்றதுமாகிய அத்யந்த காம பல்லவேச்சுரகிருகம் என்ற சிவாலயத்தை யடுத்த கணேசாலயம் என வழங்கும் ஒரு கற்கோயிலிற் பொறிக்கப் பெற்றுள்ள வடமொழிச் சுலோகங்கள், பக்தி நிறைந்த மனத்திற் பவனாகிய சிவனை இடைவிடாது சிந்தித்துக் கொண்டிருப்பவனென்றும் சிவ வழிபாட்டிற் பேரார்வமுடையவனென்றும் இவனது சிரசின் மேல் சங்கரன் எப்போதும் குடிகொண்டெழுந்தருளியுள்ளானென்றும் இவனைச் சிறந்த சிவனடியானாகக் குறித்துப் போற்றுதலாலும் நன்கு விளங்கும். கருங்கற்களை வெட்டியெடுத்து அடுக்கிக் கட்டிய தமிழகத்தின் முதற் கற்கோயிலாகத் திகழ்வது கூரத்தில் பரமேசுர வர்மனால் நிறுவப்பெற்ற விச்சாவிநீத பல்லவ பரமேச்சுர கிருகமேயாகும். இவ்வாறு சிவபெருமானுக்குப் புதிய முறையிற் கற்றளி யமைத்துச் சிவநெறியைக் கடைப்பிடித்து அறம் வளர ஆட்சி புரிந்த இம்மன்னர் பெருமானை 'செய்ய சடையார் சைவத் திருநெறியால் அரசளிப்பார்' எனவும் 'தருமநெறி தழைத்தோங்கத் தாரணிமேற் சைவமுடன் அருமறையின் துறை விளங்க' அரசளித்தாரெனவும் சேக்கிழார் பெருமான் குறிப்பிட்டாரெனக் கொள்ளுதல் பெரிதும் ஏற்புடையதாகும். மாமல்ல புரத்திலுள்ள

கணேசாலயத்திற் பொறிக்கப் பெற்றுள்ள வடமொழிச் சுலோகங்கள் பரமேசுரவர்மனாகிய இவ் வேந்தனுக்கும் இவனால் வழிபடப்பெறும் தனி முதற் பொருளாகிய சிவ பெருமானுக்கும் பொருந்தும்படி சிலேடைப் பொருள் தருவனவாக அமைந்திருத்தலை நோக்குங்கால் அச் சுலோகங்களின் பொருள் நலங்களை யுணர்ந்து மகிழும் வடமொழிப்புலமை இவ்வேந்தன்பால் அமைந்திருந்த தென்பது நன்கு புலனும். 'வட நூல் தென்றமிழ் முதலாம் பன்னுகலைப்பணி செய்யப் பாரளிப்பார்' என ஐயடிகளைக் குறித்துச் சேக்கிழார் கூறும் வாய்மொழி இவ்வேந்தனுக்கு முழுதும் ஏற்புடையதாதல் காணலாம். மேல்எடுத்துக் காட்டிய குறிப்புக்களால் சிறந்த சிவ பத்தனாகவும் வேந்தர் வேந்தனாகவும் விளங்கிய இப்பரமேசுரவர்மன் சிவனரு ளால் மெய்யுணர்வு கைவரப்பெற்றுத் தனது அரசுரி மையைத் தன் புதல்வனும் பெரு வீரனுமாகிய ராஜ சிம்ம பல்லவன்பால் ஒப்புவித்துத் துறவு நெறியை மேற் கொண்டு திருநெறிய தமிழ் வளர்க்கும் சிவஞானியாகி ஐயடிகள் காடவர்கோன் எனப் போற்றப் பெற்றிருத்தல் வேண்டுமென்பது இனிது புலனாதல் காண்க.

இனி, ஐயடிகள் காடவர் கோனாகிய இப்பல்லவ வேந்தர் வடமொழிப் புராணமொன்றில் சிம்ஹாங்க, பத சிம்ஹா பஞ்சபத சிம்ஹா என்ற பெயர்களையுடையவராகக் குறிக்கப்பட்டுள்ளாரெனவும் அவருடைய மகனை பீமவர்மன் என அந்நூல் கூறுகின்றதெனவும் பல்லவர்குடிவழியில் பீமவர்மன் சிம்ம விஷ்ணு என்பவர்களுக்குத் தந்தையாகக் குறிக்கட்பட்டோன் மூன்றும் சிம்ம வர்மனாதலால் அவனே ஐயடிகள் காடவர் கோனாவனெனவும், ஆகவே ஐயடிகள் காடவர்கோன் நாயனார் என்னும் இவ்வாசிரியர் தேவார ஆசிரியர் மூவர்க்கும் முற்பட்டவராய்க் கி. பி. 550–575ல் வாழ்ந்தவரெனவும் கூறுவாருமுளர்.[1]

கி. பி. ஏழாம் நூற்றாண்டிற்கு முற்பட்ட பல்லவ மன்னர்கள் தமிழ் மொழியில் பற்றில்லாதவரென்பதும் தமிழை நன்கு பயிலாதவரென்பதும் அவர்களது ஆட்சிக் காலத்தில் வெளிவந்த சாசனங்கள் யாவும் தமிழல்லாத

1. டாக்டர் மா. இராசமாணிக்கனார் எழுதிய பெரிய புராண ஆராய்ச்சி பக்கம் 95, 96.

வேற்று மொழியிற் காணப்படுதலாலும் அவர்கள் புனைந்து கொண்ட பட்டங்களுளொன்றேனும் தமிழாக இல்லாமையாலும் நன்கு துணியப்படும். கி. பி. ஏழாம் நூற்றாண்டு தொடங்கியே பல்லவர்கள் தமிழ மொழியிலும் சிவநெறியிலும் பற்றுடையராய்த் தமிழ் வேந்தர்களாக மாறினார்களென்பது அவர்களது ஆட்சி முறையினையும் அவரளித்த சாசனங்களையும் நோக்குவார்க்கு நன்கு புலனாம். எனவே க்ஷேத்திரத் திருவெண்பாவாகிய இனிய செந்தமிழ்ப் பாடல்களை அருளிச்செய்த புலமைச்செல்வராகிய ஐயடிகள் காடவர்கோன் நாயனார் கி. பி. ஏழாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டுத் தோன்றியவரெனக் கொள்ளுதலே ஏற்புடையதாகும். கி. பி. 600 முதல் 630 வரை ஆட்சி புரிந்த மகேந்திர பல்லவன் என்பான் முதலிற் சமண சமயத்தை மேற்கொண்டொழுகிப் பின்பு திருநாவுக்கரசடிகளது திருத்தொண்டின் திறத்தாற் சைவனாகிச் சிராப்பள்ளிக்குன்றில் இப்பொழுதுள்ள சிவாலயத்தைக் கட்டினான் என்பதும் இக்கோயில் கட்டப்பெறுதற்கு முன்பு இம்மலை சிரா என்னும் சமண முனிவருடைய தவப்பள்ளியாகத் திகழ்ந்ததென்பதும் ஆராய்ச்சியாளர் துணிபாகும்.[1] மகேந்திரவர்மன் சைவனாகத் திருந்திய பின் அமைத்த இத் திருச்சிராப்பள்ளித் திருக்கோயிலை ஐயடிகள் தாம் பாடிய க்ஷேத்திரத் திருவெண்பா 17-ம் பாடலிற் குறிப்பிடுதலால், அவர் மகேந்திர வர்மனுக்குக் காலத்தாற் பிற்பட்டவரென்பது நன்கு தெளியப்படும். ஆகவே ஐயடிகள் என்ற பெயரை வடமொழிப் புராணமொன்றில் தெளிவின்றிக் கூறப்பட்ட பஞ்சபத சிம்ஹா என்பதன் மொழி பெயர்ப்பாகக் கொண்டு மூன்றாம் சிம்மவர்மனே ஐயடிகள் காடவர்கோன் என்பார் கூற்று சிறிதும் பொருந்தாதென்பது திண்ணம்.

வேந்தர் பெருமானாக, விளங்கிய ஐயடிகள் காடவர்கோன் என்பார், அரசியலாட்சியைத் துறந்து தில்லைத் திருச்சிற்றம்பலம் முதலாகவுள்ள சிவாலயங்கள் பலவற்றையும் நேரில் கண்டு வணங்கி ஒவ்வொரு திருத்தலத்தினையும் ஒவ்வொரு வெண்பாவினாற் பாடிப் போற்றினார்

1. திருவாளர் தி. வை. சதாசிவப் பண்டாரத்தாரவர்கள் ஆராய்ந்தெழுதிய 'திருச்சிராப்பள்ளி' (செந்தமிழ் 45-ம் தொகுதி பக். 77-82) என்ற கட்டுரையை நோக்குக.

என்பது வரலாறு. இவ்வாறு ஐயடிகள் காடவர்கோன் நாயனர் சிவபெருமான் எழுந்தருளியிருக்குந் திருத்தலங்களைப் போற்றிப் பரவிய இனிய தமிழ் வெண்பாக்களின் தொகுதியே க்ஷேத்திரத் திருவெண்பா என்ற பிரபந்தமாகும். உலமக்களுக்கு அருள் புரிதற் பொருட்டு இறைவன் திருக்கோயில் கொண்டெழுந்தருளியுள்ள சிவதலங்கள் யாவும் மேலான வீட்டுலகமாக விளங்கும் மெய்ம்மையை அறிவுறுத்தும் வெண்பாக்களால் இயன்றமையால்[1] இந்நூல் க்ஷேத்திரத் திருவெண்பா என வழங்கப் பெறுவதாயிற்று. வேந்தர் பெருமானுகவும் சிறந்த செந்தமிழ்ப் புலவராகவும் விளங்கிய இவ்வாசிரியர், தமிழ்நாட்டிலுள்ள திருத்தலங்கள் பலவற்றையும் நேரிற் கண்டு வெண்பா மலர்களால் அருச்சித்துப் போற்றியிருத்தல் கூடுமாதலின் இவராற் பாடப்பெற்ற திருப்பாடல்கள் நூற்றுக் கணக்கின வெனக்கொள்ள இடமுண்டு. எனினும் இவர் பாடியனவாக இப்பொழுது இருபத்து நான்கு வெண்பாக்களே கிடைத்துள்ளன. எஞ்சிய பாடல்கள் தமிழ் மக்களது விழிப்பின்மையால் பேணப்படாது மறைந்தன போலும்.

சிவபெருமான் திருக்கோயில் கொண்டு வீற்றிருந்து அருள் வழங்குஞ் சிறப்புடைய திருத்தலங்களை நெஞ்சினல் நினைந்தும் வாயினல் வாழ்த்தியும் அடைந்து மெய்யினல் தொண்டு புரிந்தும் போற்றுமுகமாகப் பிறவித் துயர் நீங்கி இறைவன் திருவடிகளைச் சார்ந்து இன்புறலாமென்பது க்ஷேத்திரத் திருவெண்பாக்களிலமைந்த திரண்ட கருத்தாகும். மறவாத பேரன்பினல் இறைவனது திருவருள் ஞானத்தால் சிவானந்த அநுபூதியைத் தலைப்பட்ட மெய்யடியார்கள் சிவ வேடத்தையும் திருக்கோயில்களையும் சிவனெனவே தெளிந்து வழிபடுவரெனபதற்குச் சிவாலயங்களமைந்த திருத்தலங்களைப் பாடிப் பரவிய ஐயடிகள் காடவர்கோன் நாயனர் சிறந்த இலக்கியமாகத் திகழ்கின்ருர். இவராற் பாடப்பெற்ற வெண்பாக்கள் யாவும் யாக்கை நிலையாமையையும் இளமை நிலையாமையையும் செல்வம் நிலையாமையையும் நன்கு வற்புறுத்துவனவாகவும், நோயி

1. ‘சத்தித் தடக்கைக் குமரனற்ருதைதன் தானமெல்லாம்
முத்திப் பதமொரோர் வெண்பா மொழிந்து’

என்பர் நம்பியாண்டார் நம்பிகள்.

னாலும் முதுமையினாலும் உடல் தளர்ந்த நிலையில் மனை மக்கள் முதலிய சுற்றத்தார் அழுதிரங்க உயிர் உடலை விட்டுப் பிரிவதற்கு முன்னரே இறைவன் கோயில்கொண் டருளிய திருத்தலங்களை வழிபட்டுய்தல் வேண்டுமென அறிவுறுத்துவனவாகவும் மோனை, எதுகை, யமகம், திரிபு முதலிய அணிநலங்களைப் பெற்று விளங்குகின்றன.

எங்கும் ஓடித்திரிந்து தொழில் புரியும் ஆற்றல் உடம்பிற் குறைந்தபோது, முன்பு சொல்வழி நடந்த சுற்றத்தார்களும் மனம் மாறுபடுகின்றனர். முதுமையும் விரைந்து பற்றுகின்றது. தேடிப்பெறுதற்குரிய நல்ல மக்கட் சட்டகமாகிய இவ்வுடம்பு சிதைந்து பொதுவிட மாகிய சுடுகாட்டிற் சுடப்பட்டழிதற்கு முன் இறைவன் திருக்கூத்தியற்றும் தில்லைச் சிற்றம்பலத்தை நெஞ்சமே நினைந்து போற்றுவாயாக என்பார்,

ஓடுகின்ற நீர்மை ஒழிதலுமே உற்றாருங்
கோடுகின்றார் மூப்புங் குறுகிற்று – நாடுகின்ற
நல்லச்சிற் றம்பலமே நண்ணாமுன் நன்னெஞ்சே
தில்லைச்சிற் றம்பலமே சேர்.

எனத் தம் நெஞ்சத்திற்கு அறிவுறுத்துவதாக அமைந்த பாடல், ஐயடிகள் பெற்ற உலக அனுபவத்தினை நன்கு தெளிவிப்பதாகும்.

இருந்த இடத்தைவிட்டெழுவதற்கு வலியின்றி அவ் விடத்தில் இருந்தும் உடல் கூனி வளைய ஒருகையிற் கோலூன்றித் தள்ளாடி நடந்து இருமல் நோயாற் பெரிதும் வருந்தி நுரைத்துக் கோழை ஆறுபோல் வாய் வழியே பாய்வதற்குமுன் ஐயாறு என்னும் திருத்தலத்தினை வாயாற்சொல்லி வழிபட்டு உய்வாயாக என அறிவுறுத்துவ தாக அமைந்தது,

குந்திநடந்து குனிந்தொருகை கோலூன்றி
நொந்திருமி யேங்கி நுரைத்தேறி – வந்துந்தி
ஐயாறு வாயாறு பாயாமுன் நெஞ்சமே
ஐயாறு வாயால் அழை.

என்ற திருவெண்பாவாகும். இத்திருப்பாடல் முதுமை நோய் முதலியவற்றால் மக்கள் யாக்கை யெய்தும் இழி நிலையை விளக்கி இளிவரல் என்னுஞ்சுவைக்கு எடுத்துக் காட்டாக விளங்குதல் காண்க,

உடம்பைவிட்டு உயிர் பிரிந்த நிலையில் அவ்வுடம்பு விறைத்துக்கொள்ளாதபடி ஆடையின் கரைகளைக் கிழித்து அவற்றால் கால்களையும் கைகளையும் கட்டிப் பிணமாகிய அதற்கு மாலை தலைக்கணிந்து கண்ணில் மையெழுதிக் கோலஞ்செய்து அதன்மேற் பருநூலால் நெய்த கோடித் துணியைப் போர்த்து மகளிர் பலர் கூடியிருந்து அழுது அரற்றும் துன்பநிலையினதாகிய சாக்காடு நேர்தற்குமுன் இறைவன் எழுந்தருளிய திருக்கோடிகா என்னுந் திருத் தலத்தினை யடைந்து வழிபட்டு உய்திபெறுதல் வேண்டும் என வற்புறுத்துவது,

> காலைக் கரையிழையாற் கட்டித்தாங் கையார்த்து
> மாலை தலைக்கணிந்து மையெழுதி – மேலோர்
> பருக்கோடி மூடிப் பலரழா முன்னம்
> திருக்கோடி காவடை நீ சென்று,

என்ற திருவெண்பாவாகும். இவ்வாறு ஒருவனது உயிர் உடம்பைவிட்டு நீங்கியபின் அவனுடைய வாழ்க்கைத்துணை ஆகிய இல்லாளும் அவன் ஈட்டிய பெரும்பொருளும் மனை யின் அளவே அமைவதன்றி அவனைத் தொடர்ந்து செல்லு தலில்லை. அவனைப் பற்றிப் புகழ்ந்தும் இகழ்ந்தும் கூறு கின்ற சொற்களும் அவனை நன்கறிந்து பழகிய அயலாரது நெஞ்சத்துடிப்பளவேயன்றி நெடுங்காலம் நிற்பன அல்ல. அவனுடைய நல்ல சுற்றத்தார்களும் அவனையடக்கஞ் செய்து அன்று நீரில் முழுகிய அளவே அவனைப் பற்றிய நினைப்பை மறப்பராதலின் அவர்களும் அக்குளத்தின் நீரளவன்றி அவனைத் தொடர்வதில்லை. நெஞ்சமே இவ்வுண்மையை யுணரவல்லாயாயின், வளைகுளம் என்னும் திருத்தலத்தில் எழுந்தருளிய ஈசனை நினைந்து வாழ்த்தி உய்திபெறுவாயாக என்பார்,

> இல்லும் பொருளும் இருந்த மனையளவே
> சொல்லும் அயலார் துடிப்பளவே – நல்ல
> கிளைகுளத்து நீரளவே கிற்றியே நெஞ்சே
> வளைகுளத்துள் ஈசனையே வாழ்த்து,

எனத் தம் நெஞ்சத்திற்கு அறிவுறுத்துகின்றார். இத் திருப்பாடல் உயிர்களுக்கு இறைவனைத் தவிரத் துணை யாவார் எவருமிலர் என்னும் உண்மையைத் தெளிவாக அறிவுறுத்துவதாகும்.

மணம் பொருந்திய இதழ்களையுடைய கொன்றை மலர் மாலையையணிந்த பேரொளிப் பிழம்பாகிய சிவபெரு

மானுக்கு ஆளாகி ஊர்தோறும் கையில் ஓடேந்திப் பிச்சை யேற்றுண்டுமகிழும் தொண்டர் வாழ்வே இவ்வுலக முழு வதும் தமது வெண்கொற்றக் குடைநிழற்கீழடங்கி வாழப் பாரெலாம் ஆளும் முடிவேந்தரது அரசியற் பெருஞ்செல் வத்தைக் காட்டிலும் மும்மடங்கு உயர்ந்ததென்பது, வேந்தர்பெருமானாக விளங்கிய ஐயடிகள் காடவர்கோன் நாயனாரது உள்ளத் துணிபாகும். இங்ஙனம் இறைவனுக்கு ஆட்பட்டு வாழும் தொண்டர் வாழ்வு, முடிவேந்தர் வாழ் வினும் மும்மடங்கு சிறந்ததென்பதனைத் தம்முடைய அநுபவத்தால் அறிந்ததனால்தான் முடிவேந்தராக விளங் கிய இக் காடவர்கோமான் தமது அரசபதவியினைத் துறந்து ஐயடிகள் எனப்போற்றப்பெறும் சிவனடியாராயினார் என்ற செய்தி,

> படிமுழுதும் வெண்குடைக்கீழ்ப் பாரெலாம் ஆண்ட
> முடியரசர் செல்வத்து மும்மை—கடியிலங்கு
> தோடேந்து கொன்றையந்தார்ச் சோதிக்குத் தொண்டுபட்
> டோடேந்தி யுண்ப துறும்.

எனவரும் இவரது வாய்மொழியாலும், இவ் வாய்மொழிப் பொருளையும் இவரது வரலாற்றையும் உணர்த்தப் போந்த நம்பியாண்டார் நம்பிகள் தாம் பாடிய திருத்தொண்டர் திருவந்தாதியில்,

> சத்தித் தடக்கைக் குமரனற் றாதைதன் தானமெல்லாம்
> முத்திப்பதமொரோர் வெண்பா மொழிந்து முடியரசா
> மத்திற்கு மும்மைநன் றால்அரற்காய் ஐய மேற்றலென்னும்
> பத்திக்கடல் ஐயடிகளாகின்ற நம் பல்லவனே.

எனக்கூறி இவரைப் பத்திக்கடல் எனப்பாராட்டிப் போற்று தலாலும் நன்கு விளங்கும்.

வெம்மை மிக்க நஞ்சினையுண்டு மிடற்றிலடக்கி விண் ணோர்களை உய்வித்தருளிய இறைவன் வீற்றிருக்கும் திரு வொற்றியூரை வழிபட்டுப் பிச்சையேற்றுண்ணுந் துறவி யாக இருக்கப்பெறுவேனாயின், பற்றுக்கோடாக மூவுலகங் களையும் ஆட்சி புரிந்து குடிமக்களைப் பாதுகாத்து இறவா திருக்கும் வாழ்வு எனக்குத் தானேவந்து கிடைத்தாலும் அதனை ஒரு பொருளாக எண்ணி விரும்பியேற்றுக்கொள்ள மாட்டேன் என ஐயடிகள் காடவர்கோன் நாயனார் துறவு நெறியில் தமக்குள்ள பெருவேட்கையை விரித்துரைப்ப தாக அமைந்தது,

தஞ்சாக மூவுலகும் ஆண்டு தலையளித்திட்
டெஞ்சாமை பெற்றிடினும் யான்வேண்டேன்—நஞ்சங்
கரந்துண்ட கண்டர்தம் ஒற்றியூர் பற்றி
இரந்துண் டிருக்கப் பெறின்.

என்ற திருவெண்பாவாகும். காடவர் கோனாகிய இவ் வேந்தர் பெருமான், தம் வாழ்நாளின் பிற்பகுதியில் அரச பதவியினைத் துறந்து இறைவனைப் போற்றியவரென்பது இத் திருப்பாடலால் நன்கு புலனாதல் காணலாம். பல யுகங்கள் அரச பதவியில் வீற்றிருந்து பெறும் எல்லாச் செல்வங்களையும் இறைவனது பொருள்சேர் புகழ்ப் பாடலைக் கேட்டு மகிழுங் கண நேரமே விளைவிக்க வல்ல தென்பதை,

நூற்றனைத்தோர் பல்லூழி நுண்வயிர வெண்குடைக்கீழ்
வீற்றிருந்த செல்வம் விளையாதே—கூற்றுதைத்தான்
ஆடரவங் கச்சா அரைக்கசைத்த அம்மான்றன்
பாடரவங் கேட்ட பகல்.

என்ற பாடலில் ஐயடிகள் வியந்து போற்றியுள்ளார். இதன்கண் பகல் விளையாதே எனக் கொண்டு கூட்டி, விளையாதே என்பதற்கு விளைக்கவல்ல தல்லவா? எனப் பொருளுரைத்தல் வேண்டும். ஈண்டு பகலென்றது 'நடுநாள் யாமத்தும் பகலுந் துஞ்சான்' என்புழிப் போலக் கணப் பொழுது என்ற பொருளில் வழங்கியதாகும். இறைவனது பொருள்சேர் புகழ்ப்பாடலைச் செவிமடுத்தலில் ஐயடிகள் காடவனார்க்குள்ள தணியாக் காதலை இத் திருப்பாடல் இனிது புலப்படுத்துதல் காண்க. இங்ஙனமே க்ஷேத்திரத் திருவெண்பாவாகிய இப் பிரபந்தத்திலமைந்த ஒவ்வொரு பாடலும் இப் பிரபந்தத்தைப் பாடிய ஐயடிகளது உலக அநுபவத்தினையும் அவர் பெற்ற மெய்யுணர்வினையும் ஒருங்கு விளக்குவனவாக அமைந்துள்ளன.

4. சேரமான் பெருமாள் நாயனார்

கார் கொண்ட கொடைக் கழறிற்றறிவார்க்கும் அடியேன் என நம்பியாரூரராற் போற்றப் பெற்ற இப்பெரியார், தம் தோழராகிய நம்பியாரூருடன் திருக்கயிலை சார்ந்தவ ரென்பதும், பாணபத்திரர் பொருட்டுத் திருவாலவாயுடையார் பாடியருளிய திருமுகப்பாசுரத்தைப் பெற்றுப்

பரமனையே பாடுவாராகிய அப்பாணர்க்குப் பெரும்பொருளை வரையாது வழங்கியவரென்பதும், தொண்டை நாட்டில் இராசசிம்மபல்லவனும் பாண்டி நாட்டிற் கோச்சடையன் ரணதீரனும் அரசுவீற்றிருந்த காலமாகிய கி.பி. 670—710ல் மலைநாட்டையாளும் வேந்தர் பெருமானாக விளங்கியவ ரென்பதும் முன்னர் விளக்கப்பெற்றன. இவரது வரலாறு சுந்தரமூர்த்தி சுவாமிகள் வரலாற்றுடன் பிரிவின்றி இணைந்துளது. திருத்தொண்டர் புராண ஆசிரியராகிய சேக்கிழார் சுவாமிகள் சேரமான்பெருமாள் நாயனார் புராணம், வெள்ளானைச் சருக்கம் என்ற இருபகுதிகளிலும் இதனை விரித்துக் கூறியுள்ளார்.

வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பாகிய தமிழ கத்திற் குடபுலம் எனப்படும் மலைநாட்டிலே கொடுங்கோளூரிலே படைப்புக் காலந்தொட்டு நிலை பெற்றுவரும் சேரர் குடியிலே சேரர் குலமும் உலகமும் செய்த பெருந்தவத்தின் பயனாகப் பெருமாக் கோதையார் என்ற புதல்வர் பிறந்தார். அரசகுமரராகிய அவர், மண் மேற் சைவநெறி வாழ வளர்ந்து, முன்னைப் பல பிறவி களிலும் பெற்ற பேரன்பினாற் கண்ணுதற் பெருமானாகிய சிவ பெருமானுடைய திருவடிகளையே பரவும் கருத்துடைய ராயினார். தமக்குரிய அரசியற்றொழிலை விரும்பாமல் திரு வஞ்சைக்களமென்னுந் திருக்கோயிலையடைந்து சிவபெரு மானுக்குத் திருத்தொண்டு புரிந்துறைதலை விரும்பினார். உலகின் இயல்பும் அரசியல்பும் உறுதியல்ல எனவுணர்ந்த அப்பெருந்தகையார், நாடோறும் விடியற்காலத்தே துயில் நீத்தெழுந்து நீராடித் திருவெண்ணீறணிந்து மலர் கொய்து மாலை தொடுத்தமைத்துத் திருவஞ்சைக் களத் திருக்கோயிலில் திருவலகும் திருமெழுக்குமிட்டுத் திருமஞ் சனங்கொணர்ந்து இறைவனுக்கு நீராட்டி, முன்னை அரு ளாசிரியர் திருவாய் மலர்ந்தருளிய திருப்பாட்டினை ஒரு நெறியமனம் வைத்து ஓதி அருச்சித்து வழிபாடு புரிந்து வந்தார். இங்ஙனம் நிகழும் நாளில் மலைநாட்டையாட்சி புரிந்த செங்கோற் பொறையன் என்ற சேரவேந்தன் 'வையமுந் தவமுந் தூக்கின் தவத்திற்கு ஐயவியனைத்தும் ஆற்றாது' என்ற உண்மையையுணர்ந்தவனாகித் தனது அரச பதவியினைத் துறந்து தவஞ்செய்தற் பொருட்டுத் தவவனத்தினைச் சார்ந்தனன்.

இந்நிலையில் அரசியல் நூல் நெறியில் வல்ல அமைச்சர்கள் சேர நாட்டின் அரசியல் நலங்குறித்துச் சில நாள் ஆராய்ந்தனர். பண்டைச் சேர மன்னர் மேற்கொண்டொழுகிய பழைய முறைமைப்படி அந்நாட்டின் ஆட்சியுரிமை திருவஞ்சைக் களத்திலே திருத்தொண்டு புரிந்து வரும் சேரர்குலத் தோன்றலாகிய பெருமாக் கோதையார்பால் நிலைபெற்றிருத்தலை நன்குணர்ந்தனர். திருவஞ்சைக் களத்தையடைந்து பெருமாக் கோதையாரை இறைஞ்சிப் போற்றினர். 'தொன்மை மரபின்படி இம் மலை நாட்டின் ஆட்சியுரிமை தங்கள்பால் அமைந்திருத்தலால் தாங்களே இம் மலைநாட்டினைப் புரக்கும் வேந்தர் பெருமானாக முடிசூடி ஆட்சிபுரிந்தருளுதல் வேண்டும்' என அவரைப் பணிந்து வேண்டினர். இந்நிலையிற் பெருமாக் கோதையார் 'மேன்மேலும் பெருகும் இன்ப மயமாகிய சிவத்தொண்டுக்கு இடையூறேற்படும் நிலையில் சேர நாட்டு ஆட்சியுரிமையை ஏற்றுக்கொள்ளும்படி இவ்வமைச்சர்கள் என்னை வற்புறுத்துகின்றார்கள். எவ்வுயிர்க்கும் அன்பு செலுத்துமியல்பினதாகிய இச்சிவத் தொண்டிற்குச் சிறிதும் தடை நேராதபடி அடியேன் இந்நாட்டையாட்சிபுரிய இறைவனது திருவருள் துணைபுரிவதானால் அப்பெருமானது திருவுள்ளக் கருத்தையுணர்ந்து நடப்பேன்' எனத் தம்முள்ளத்தில் எண்ணிக் கொண்டு திருவஞ்சைக் களத் திருக்கோயிலிற் புகுந்து இறைவன் திருமுன்னர்ப் பணிந்து நின்றார். இறைவனது திருவருளால் தமக்குரிய அரசுரிமையில் வழுவாது ஆட்சி புரிந்து இறைவனைப் பேரன்பினால் விரும்பி வழிபடுமியல்பும், புல் முதல் யானையீறாகவுள்ள எவ்வுயிர்களும் மக்கள் யாவரும் தம்நாட்டு அரசியலின் நலந்தீங்கு குறித்துக் கூறுவனவற்றை மனத்தினால் உய்த்துணர்ந்துகொள்ளும், நுண்ணுணர்வும், கெடாத தறுகண்மையும், கைம்மாறு கருதாது இரவலர்க்கீயவல்ல குறையாத பெருவண்மையும், நாடாள் வேந்தர்க்கு இன்றியமையாத படை ஊர்தி முதலிய அரசுறுப்புக்களும் ஆகிய எல்லா நலங்களும் தம்பால்வந்து பொருந்தப்பெற்றார் பெருமாக் கோதையார். இங்ஙனம் அஃறிணையுயிர்களும் உயர்திணை மக்களும் கூறிய சொற்பொருளையுய்த்துணரும் நுண்ணறிவினைப் பெற்றவர் பெருமாக்கோதையாராதலின் அவர்க்குக் கழறிற்றறிவார் என்பது காரணப்பெயராயிற்று.

நிலத்துயிர் கழறுஞ்சொற்கள் அனைத்தையும் உணரும் ஆற்றல்பெற்ற பெருமாக்கோதையார், அரசுரிமையை யேற்று நடத்துதல் தாம்மேற்கொண்ட சிவத்தொண்டிற்கு தடைவிளைப்பதெனினும் தாம் முடிசூடிச் சேரநாட்டினை ஆட்சிபுரிதல் வேண்டுமென்பது சிவபெருமான் திருவுள்ளக் கருத்தாதலை உணர்ந்து திருவஞ்சைக்களத்திறைவனை வணங்கி அமைச்சர் வேண்டுகோளுக்கு இசைந்தருளினார். அவரது இசைவுபெற்று மகிழ்ந்த அமைச்சர்கள் வேண்டு வனசெய்ய உரிய நன்னாளில் திருமுடி சூடி இவ்வுலகத்தை யும் சிந்தைசெல்லாச் சேணெடுந்தூரத்து அந்தமில் இன்பம் வழங்கும் மறுமையுலகத்தையும ஒருசேர ஆட்சி புரியும் பெருவேந்தராயினார். மலைநாட்டரசராய் மணிமுடி சூடிய சேரமான் பெருமாள் நாயனார், திருவஞ்சைக்களத் திருக்கோயிலை வலம்வந்து வணங்கிப் பட்டத்து யானைமீது அமர்ந்து கொற்றக்குடையும் வெண்சாமரையும் பரிசனங் கள் தாங்கிவர, நகரில் திருவுலாப் போந்தபோது உவர்மண் பொதியைத் தோளிலே சுமந்துகொண்டுவரும் வண்ணான் ஒருவன் கண்ணெதிர்ப்பட்டான். மழையில் நனைந்துவந்த அவனது சரீரம் உவர்மண் படிந்து வெளுந்திருத்தமையால் உடல் முழுதுந் திருநீறு பூசிய சிவனடியார் வேடத்தைப் போன்று விளங்கியது, அதனைச் சிவனடியார் திருவேடம் எனக்கொண்ட சேரமான் பெருமாள் விரைந்து யானையி னின்றும் இறங்கிச்சென்று வண்ணானை வணங்கினார். அரசர்பெருமான் தன்னை வணங்கக்கண்டு சிந்தை கலங்கி அச்சமுற்ற வண்ணான், சேரமானைப் பணிந்து 'அடியேன் தங்கள் அடித்தொழில் புரியும் வண்ணான்' என்றான். அது கேட்ட சேரர்பிரான் 'அடியேன் அடிச்சேரன்' காதலாற் பணிந்து போற்றுதற்குரிய சிவனடியார் திருவேடத்தை அடியேன் நினைக்கும்படி செய்தீர். இதுபற்றி மனம் வருந்தாது செல்வீராக' என அவ் வண்ணானுக்குத் தேறுதலுரை பகர்ந்து அனுப்புவாராயினர். இச்செய்தி,

> மன்னர் பிரானெதிர் வண்ணா னுடலுவர் ஊறிநீரர்
> தன்னர் பிரான்றமர் போல வருதலுந் தான்வணங்க
> என்னர் பிரான்அடி வண்ணான்என அடிச் சேரனெனுந்
> தென்னர்பிரான் கழறிற்றறி வானெனுஞ் சேரலனே.

எனவருந் திருத்தொண்டர் திருவந்தாதியாலும் 'வண்ணானைக் கும்பிட்டார்' எனச் சேரமான் பெருமாளுக்கு வழங்கும் பெயராலும் நன்கு துணியப்படும்.

அன்பு நிரம்பிய சேரமான் பெருமாளது அடியார் பத்தியைக்கண்டு வியந்த அமைச்சரனைவரும் அப்பெருந் தகையாரை வணங்கிப் போற்றினர்கள். சேரமான் பெருமாள் யானைமீது அமர்ந்து நகர்வலஞ் செய்து அரண்மனையையடைந்து மன்னர் போற்றிட அரியணையில் வீற்றிருந்து அரசுபுரிந்தருளினர். குடபுலவேந்தராகிய இப்பெருந்தகையார் குணபுலவேந்தராகிய சோழ மன்ன ரோடும் தென்புல வேந்தராகிய பாண்டிய மன்னரோடும் கெழுதகை நண்பராக விளங்கித் தமிழ்நாட்டின் மூவேந்தர் எனப போற்றப்பெற்றுத் தமிழகத்தின் அகத்தும் புறத்தும் உள்ள பகைகளைக் களைந்து திருநீற்றொளியாகிய சிவநெறி வளரவும் வேதநெறி வளரவும் அறநூல்முறையே ஆட்சி புரிந்தனர். சேர சோழ பாண்டியரெனச் சிறப்பித்துப் போறறும் நிலையில் தமிழகத்தின் ஒற்றுமை வளர மலை நாட்டை ஆட்சிபுரியும் பெருமாக்கோதையார் தாய்பெற்ற அரச பதவியின் பயனும் நிறைந்த தவமும் தேடும் பொருளும் பெருந்துணையும் ஆகிய இவையெல்லாமாக விளஙகுவது தில்லைச சிறறம்பலத்தில் ஆடல்புரிந்தருளும் திருவடித்தாமரையெனத் தெளிநதார். கூத்தப்பிரானது எடுத்த திருப்பாதத்தினை நாள் தோறுந் தவறாது வழிபடுதலைத் தமக்குரிய கடமையாக மேற்கொண்டார். சேரமான் பெருமாள் செய்யும் அன்பு நிறைந்த வழிபாட்டினை யேற்றுக்கொண்ட இறைவர் தமது திருவடிச் சிலம்பின் ஒலியினைச் சேரமான் செவிகுளிரக்கேட்டின்புறும் வண்ணம் ஒலிப்பித்தலை வழக்கமாகக் கொண்டருளினர்.

இவ்வாறு சிவபூசையிலீடுபட்ட சேரமான் பெருமாள் சிவனடியார்களுக்கு வரையாது கொடுத்தும் சிவவேள்வி கள் செய்தும் எவ்வுயிர்க்கும் நலஞ்செய்து வந்தார் இந் நிலையில் பாண்டியனது தலைநகராகிய மதுரையம்பதியிலே திருவாலவாயென்னுந் திருக்கோயிலிலே எழுந்தருளி யிருக்கும் சோமசுந்தரக் கடவுள் தம்மை இன்னிசையாற் பரவிப்போற்றும் பாணபத்திரனென்னும் இசைப் பாணரது வறுமையை நீக்கத் திருவுளங்கொண்டு அவரது கனவிலே தோன்றி, 'அன்பனே, என்பாற் பேரன்புடைய சேரமான் பெருமாளென்னும் வேந்தன் உனக்குப் பொன், பட்டாடை நவமணிக்கலன்கள் முதலாக நீ வேண்டியவெல்லாங் குறைவறக் கொடுப்பான். அவனுககு ஒரு திருமுகம்

எழுதிக் கொடுக்கின்றேம். நீ அதனைப் பெற்றுக்கொண்டு மலை நாடு சென்று பொருள் பெற்று வருவாயாக' எனக் கூறி 'மதிமலிபுரிசை' யெனத் தொடங்கும் திருப்பாடல் வரையப் பெற்ற திருமுகத்தைக் கொடுத்தருளினர். திரு வாலவாயுடையார் அருளிய திருமுகப் பாசுரத்தைப் பெற்ற பாணபத்திரர், சேர நாட்டையடைந்து சேரமான் பெருமானைக் கண்டார். பாணர் தந்த திருமுகத்தை வாங்கி முடிமேற் கொண்ட சேரர் பெருமான் அப்பாசுரத்தைப் பல முறை படித்து உள்ளமுருகினர். அமைச்சர் முதலியோரை யழைத்துத் தமது நிதியறையிலுள்ள பலவகைப் பொருள்களையும் பொதி செய்து கொணரச் செய்து 'இப்பெரும் பொருளையும் யானை குதிரை முதலிய சேனைகளையும் இம் மலை நாட்டு ஆட்சியுரிமையினையும் தாங்களே ஏற்றருள வேண்டும்' எனப் பாணபத்திரரை வேண்டி நின்றார். அவரது கொடைத் திறத்தைக் கண்டு வியந்த பாண பத்திரர் 'என் குடும்ப வாழ்விற்குப் போதுமான பொருள் களை மட்டும் அடியேன் தங்கள்பால் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பது இறைவனது ஆணையாதலின், அரசாட்சி யும் அதற்கு இன்றியமையாத அரசுறுப்புக்களுமாகிய இவற்றைத் தாங்களே கைக்கொண்டருளுதல் வேண்டும்' என்று கூறினர். இறைவரது ஆணையெனக் கேட்ட சேர மான் பெருமாள், அவ்வாணையை மறுத்தற்கு அஞ்சிப் பாணபத்திரரது வேண்டுகோளுக்கிசைந்தனர். பாணரும் தமக்கு வேண்டிய பொருள்களை மட்டும் பெற்றுக்கொண்டு அன்பினால் தம்மைப் பின்தொடர்ந்து வந்து வழியனுப்பிய சேரமான்பால் விடை பெற்று மதுரை நகரத்தையடைந் திருந்தார்.

கழறிற்றறிவாராகிய சேரமான் பெருமாள், என்றும் போல ஒரு நாள் சிவபூசை செய்து கொண்டிருந்தபொழுது வழிபாட்டில் நாடோறுங்கேட்டின்புறுவதாகிய திருச்சிலம் பொலியை அன்று கேட்கப் பெருது பெரிதும் மனங்கலங் கினர். அடியேன் என்ன பிழை செய்தேனே எனப் பொரு மினர். இறைவனை வழிபடும் ஆசை காரணமாக யான் சுமந்துள்ள இவ்வுடம்பினுல் அடியேன் பெறுதற்குரிய இன்பம் வேறென்னவிருக்கிறது எனக்கவன்று தம் உயிரைப் போக்கிக்கொள்ளும் எண்ணத்துடன் உடை வாளையுருவித் தம் மார்பிலே நாட்டப் புகுந்தார். அந்நிலை

யில் அருட்கடலாகிய கூத்தப்பெருமான் விரைந்து தமது திருவடிச்சிலம்பொலியைச் சேரமான் பெருமாள் செவி குளிரக் கேட்டு மகிழும் வண்ணம் மிகவும் ஒலிக்கச் செய்தார். சிலம்பொலியைக் கேட்டு மகிழ்ந்த சேரவேந்தர் தமது கையிற் கொண்ட உடைவாளைக் கீழே எறிந்து விட்டுத் தலைமேற் கைகுவித்து வணங்கி நின்று, 'தேவர்களுந் தேடிக் காணுதற்கரிய பெருமானே இத்திருவருளை முன்பு செய்யாது தவிர்ந்தது எது கருதி' என வினவினர். அந்நிலையில் தோன்றாத்துணையாக மறைந்து நின்றருளிய இறைவர், சேரனே, வன்றொண்டனாகிய சுந்தரன் தில்லையம்பலத்திலே நாம் புரியும் திருக்கூத்தினைக் கண்டு ஐம்புலன்களும் ஒன்றியவுணர்வுடன் நின்று புகழமைந்த திருப்பதிகத்தால் நம்மைப் பரவிப் பாடினன். அவன் பாடிய தீஞ்சுவைப் பாடலில் நாம் திளைத்திருந்தமையால் இங்கு நீ புரியும் வழிபாட்டிற்கு உரிய நேரத்தில் வரத் தாழ்த்தோம்' எனத் திருவாய் மலர்ந்தருளினர். அவ்வருள் மொழியைச் செவிமடுத்த சேரமான் பெருமாள் 'அடியார்களுக்கு அருள் புரியும் இறைவனது கருணைத்திறம் என்னே' என வியந்து உளமுருகினர். இறைவன் திரு நடம்புரிந்தருளும் பெரும்பற்றப்புலியூரிலமைந்த பொன்னம்பலத்தையும் அங்கே இறைவனது ஆடல் கண்டு மகிழ்ந்த தன்னேரில்லாப் பெரியோராகிய வன்றொண்டரையும் கண்டு வழிபடுதல் வேண்டுமெனக் கருதிச் சோழ நாட்டிற்குச் செல்ல விரும்பினர். திருவஞ்சைக் களத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவனை வழிபட்டுச் சேனைகளுடன் புறப்பட்டுக் கொங்கு நாட்டைக் கடந்து சிவனடியார்கள் எதிர்கொண்டு போற்றச் சோழ நாட்டை அடைந்தார். காவிரியில் நீராடி அதனைக் கடந்து தில்லைமூதூரின் எல்லையையணுகினர். அந்நிலையில் தில்லைவாழந்தணர்களும் சிவனடியார்களும் எதிர்கொண்டு வரவேற்றனர். அடியார்களோடு தில்லைத் திருவீதியை வலம்வந்து எழுநிலைக் கோபுரத்தை வணங்கி உட்புகுந்த சேரமான் பெருமாள் நாயனர் திருப்பேரம்பலத்தையிறைஞ்சியுட் புகுந்து இறைவன் ஆடல் புரியும் திருச்சிற்றம்பலத்தின் முன் அணைந்தார். அளவிலின்பப் பெருங்கூத்தராகிய இறைவரது திருக்கூத்தினை ஐம்புலனும் ஒன்றிய ஒருமையுணர்வாற் கண்டு உருகிப் போற்றித் திருவருளின்பக்கடலில் திளைத்து இன்புற்றார். தாம் பெற்ற பேரின்பத்தினை வையகத்தா

ரனைவரும் பெற்று மகிழும் வண்ணம் கூத்தப்பெருமானது சீர்த்தியை விரித்துரைக்கும் செந்தமிழ்ப் பனுவலாகிய பொன்வண்ணத் திருவந்தாதியைப் பாடிப் போற்றினர். சேரர்பெருமான் பாடிய திருவந்தாதியினைக் கேட்டு மகிழ்ந்த தில்லையம்பலவர் அதற்குரிய பரிசிலாகத் தூக்கிய திருவடியிலணியப் பெற்ற திருச்சிலம்பொலியை நிகழ்த்தியருளினர். ஆடற்சிலம்பினொலியினைச் செவிமடுத்து அளவிலாப் பேருவகையுற்ற சேரமான் பெருமாள் காலந்தோறும் கூத்தப்பெருமானை இறைஞ்சிப் போற்றித் தில்லைப்பதியிற் சில நாள் தங்கியிருந்தார்.

பின்பு நம்பியாரூரைக் கண்டு வணங்குவதற்கு விரும்பித் தில்லையினின்றும் புறப்பட்டுப் பல தலங்களை வணங்கி மகிழ்ந்து திருவாரூரையடைந்தார். சேரமான் பெருமாளது வருகையையுணர்ந்த நம்பியாரூரர், சிவனடியார்களுடன் அவரை எதிர்கொண்டழைத்தார். நம்பியாரூரைக் கண்ட சேரவேந்தர் நிலமிசை விழுந்திறைஞ்சினர், தம்மை வணங்கிய சேரமான் பெருமாளைத் தாமும் வணங்கித் தம் இரு கைகளாலும் முகந்தெடுத்துத் தழுவிக் கொண்டார் சுந்தரர். இவ்விருபெருமக்களும் ஒருவரொருவரிற் கலந்த பெருங்கேண்மையினராய்ப் பெருமகிழ்ச்சியுற்றனர்கள். இங்ஙனம் இருவரும் உயிர் ஒன்றி உடம்பும் ஒன்றும் என அன்பினால் அளவளாவி மகிழும் தோழமைத் திறத்தைக் கண்ணுற்ற சிவனடியார்கள், நம்பியாரூரைச் 'சேரமான் தோழர்' என்ற பெயரால் அழைத்து மகிழ்ந்தார்கள். சேரமான் தோழராகிய சுந்தரர் 'கார் கொண்ட கொடைக் கழறிற்றறிவார்' என முன் தாம் பாராட்டிய சேரமான் பெருமாளது கையினைப்பற்றி அழைத்துச் சென்றார். இருவரும் திருவாரூர்த் திருக்கோயிலையடைந்து அடியார்கள் வீற்றிருக்கும் தேவாசிரிய மண்டபத்தைப் பணிந்து திருக்கோயிலை வலம் வந்தனர். சேரமான் பெருமாள் உடைய நம்பியாகிய சுந்தரரைத் தொடர்ந்து சென்று பூங்கோயிலமர்ந்த பெருமானை நிலமிசைப் பலமுறை விழுந்திறைஞ்சினர். புற்றிடங்கொண்ட பெருமானைப் போற்றிக் கண்களில் அன்புநீர் பொழியத் திருமும்மணிக்கோவையென்னுஞ் செஞ்சொல் மாலை புனைந்தேத்தினர். தாம்பாடிய செந்தமிழ்ப்பனுவலைத் தம் தோழராகிய சுந்தரர் திருமுன்பு நன்மை விளங்கக் கேட்பித்தார்.

ஆரூரிடங்கொண்ட இறைவரும் சேரவேந்தர் பாடிய தெய்வத் தமிழ்ப்பனுவலை விரும்பியேற்றுக் கொண்டருளினார்.

பின்பு சுந்தரர் சேரமான் பெருமானை அழைத்துக் கொண்டு நங்கை பரவையார் திருமாளிகைக்குச் சென்றார். பரவையார், திருவிளக்கு நிறைகுடம் முதலிய மங்கலப் பொருள்களுடன் சேரமான் பெருமானை வரவேற்று வணங்கிச் சேரர் பெருமானுக்கும் சிவனடியார்களுக்கும் உடன் வந்த பரிசனங்களுக்கும் தக்கவகையால் திருவமுது அமைத்து அன்புடன் உபசரித்தார். ஆண்டநம்பியும் சேரமான் பெருமாளும் உடனிருந்து திருவமுது செய்தருளினார்கள். இவ்வாறு சேரமான் பெருமாளும் நம்பியாரூரரும் திருவாரூரில் தங்கியிருக்கும்பொழுது பாண்டி நாட்டிலுள்ள திருவாலவாய் முதலிய திருத்தலங்களை வழிபட வேண்டுமென்ற எண்ணம் சுந்தரர்க்கு உண்டாயிற்று. அவர்தம் விருப்பத்தினைச் சேரமான் பெருமாளுக்குத் தெரிவித்தார். வன்றொண்டரைப் பிரியாத பெருங்கேண்மையராகிய சேரமான் பெருமான் தமக்கு மதிமலிபுரிசைத் திருமுகம் பாடியனுப்பியருளிய திருவாலவாய்ப் பெருமானை இறைஞ்சிப் போற்ற வேண்டுமென்னும் பேரார்வத்தால் தாமும் அவருடன் செல்லத் துணிந்தார். ஒத்த உள்ளமுடையார் இருவரும் அடியார் புடைசூழத் திருமறைக்காடு திருக்கோடிகுழகர் முதலிய தலங்களை வணங்கித் தென்றமிழ்ப் பாண்டி நாட்டின் தலைநகராகிய மதுரையை அடைந்தார்கள். அப்பொழுது நாடாள் வேந்தனாகிய பாண்டியனும், பாண்டியன் மகளை மணந்து மதுரையில் வேட்டகத்தில் தங்கியிருந்த சோழ மன்னனும் எதிர் சென்று இவ்விரு பெருமக்களையும் வரவேற்றுத் திருவாலவாய்த் திருக்கோயிலுக்கு அழைத்துச் சென்றனர். நம்பியாரூரருடன் திருவாலவாய்ப் பெருமானைக் கண்டு மகிழ்ந்த சேரமான் பெருமாள், 'அடியேனையும் ஒரு பொருளாக எண்ணித் திருமுகம் அருளிய பேரருளின் எல்லையை அறிந்திலேன்' என உரை தடுமாறிக் கண்ணீரரும்ப ஆலவாய்க் கடவுளைப் பரவிப்போற்றினார். பாண்டியன் இவ்விரு பெருமக்களையும் தன் அரண்மனைக்கு அழைத்துச் சென்று உபசரித்துப் போற்றினான்.

இங்ஙனம் சேர சோழ பாண்டியர்களாகிய தமிழ் வேந்தர் மூவரும் நம்பியாரூரராகிய சுந்தரரும் ஒருவரோடொருவர் அன்பினால் அளவளாவிப் பாண்டி நாட்டுத்

தலங்களைப் பணிந்து இன்புற்றனர். சேரமான் பெருமாளும் சுந்தரரும் பாண்டியர் சோழராகிய இருபெருவேந்தர்களிடத்தும் விடைபெற்றுத் திருவாரூரை அடைந்தனர். சேரமான் பெருமாள் அங்குச் சில நாள் தங்கியிருந்து தம் தோழராகிய நம்பியாரூரரைத் தங்கள் நாட்டிற்கு எழுந்தருள வேண்டுமென்று பல முறை வேண்டிக்கொண்டார். அவ்வேண்டுகோளுக்கிணங்கிய சுந்தரர், பரவையாரது இசைவு பெற்றுச் சேரவேந்தருடன் புறப்பட்டார். இருவரும் வழியிலுள்ள தலங்களை வணங்கிப் போற்றி மலைநாட்டவர் எதிர்கொள்ளக் கொடுங்கோளூரை அடைந்தனர். சேரமான் பெருமாள் தம் ஆருயிர்த் தோழராகிய நம்பியாரூரரை அரியணையில் அமரச் செய்து, தம் தேவிமார்கள் பொற்குடத்தில் நன்னீர் ஏந்தி நிற்க நம்பியாரூரருடைய திருவடிகளை விளக்கி மலர்தூவி வழிபட்டு அவருடன் உடனிருந்து அமுதருத்தி உபசரித்தார். செண்டாடுந் தொழில் மகிழ்வும் சிறுசோற்றுப் பெருவிழாவும் பாடல் ஆடல் இன்னியங்கள் முதலாகப் பலவகை விளையாடல்களும் நிகழச்செய்து தம் தோழரை மகிழ்வித்து அளவளாவி மகிழ்வாராயினர்.

இங்ஙனம் நண்பர் இருவரும் அளவளாவி மகிழு நாட்களில் நம்பியாரூரர்க்குத் திருவாரூர்ப் பெருமானைக் கண்டு வணங்க வேண்டுமென்ற நினைவு தோன்றியது. அந்நினைவு மீதூரப்பெற்ற சுந்தரர், 'பொன்னும் மெய்பொருளுந் தந்து போகமும் திருவும் புணர்த்தருளும் ஆரூர்ப் பெருமானை மறத்தலும் ஆமே' எனப்பாடித் தமது ஆற்றாமையைத் தம் தோழராகிய சேரமானுக்கு உணர்த்தி விடைபெற முயன்றார். சுந்தரரின் உளக்குறிப்பறிந்த சேரமான் பெருமாள், 'இன்று உமது பிரிவாற்றேன் என்செய்கேன்' என்றுரைத்து மிகவும் வருந்தினர். நம்பியாரூரர் தம் தோழரை நோக்கி 'இந்நாட்டிற்கு உளவாம் இடர்நீங்கப் பகைநீக்கி அரசாளுதல் உமது கடன்' என அறிவுறுத்தார். அதனைக்கேட்ட வேந்தர் பெருமான் 'இவ்வுலக ஆட்சியும் வானுலக ஆட்சியுமாக அமைந்து எனக்கு இன்பஞ் செய்வன உம்முடைய திருவடித் தாமரைகளே. திருவாரூர்க்கு எழுந்தருள வெண்ணிய நும் மனவிருப்பத்தை நீக்கவும் அஞ்சுகின்றேன்' என்றார். 'என்னுயிருக்கு இன்னுயிராம்

எழிலாரூர்ப் பெருமானை வன்னெஞ்சக் கள்வனேன் மறந்திரேன். நீவிர் சிவபெருமான் திருவருளால் அரசுபுரிந்து இங்கிருப்பீராக' என்றுரைத்து வணங்கினார் வன்றொண்டர். சேரர் பெருமானும் வன்றொண்டரை வணங்கித் தம்முடைய திருமாளிகையிலுள்ள பெரும் பொருள்களைப் பொதிசெய்து ஆட்களின்மேல் ஏற்றுவித்து நெடுந்தூரஞ் சென்று வழியனுப்பினார். சுந்தரரும் தம் தோழரைத்தழுவி விடைபெற்றுத் திருவாரூரை அடைந்தார். சேரமான் பெருமாள் தம் தோழராகிய நம்பியாரூரரை மறவாத சிந்தையுடன் கொடுங்கோளூரிலிருந்து மலைநாட்டை ஆட்சி புரிந்திருந்தார்.

நெடுநாளாயின பின் சுந்தரர் மீண்டும் கொடுங்கோளூருக்கு வந்து தம் தோழராகிய சேரமன் பெருமானுடன் பல நாட்கள் அளவளாவி மகிழ்ந்திருந்தார். ஒரு நாள் சேரமான் பெருமாள் திருமஞ்சனசாலையில் நீராடிக் கொண்டிருந்த பொழுது சுந்தரர் திருவஞ்சைக்களத் திருக்கோயிலையடைந்து அஞ்சைக்களத்து இறைவனை வழிபட்டுத் 'தலைக்குத் தலைமாலை' என்ற முதற் குறிப்புடைய திருப்பதிகத்தைப் பாடிப் போற்றி நின்றார். அந்நிலையில் அவரது பாசத்தளையை அகற்றிப் பேரருள் புரிய விரும்பிய சிவபெருமான், சுந்தரரை அழைத்துவருமாறு திருக்கயிலாயத்திலிருந்து வெள்ளையானையுடன் தேவர்களைத் திருவஞ்சைக்களத்திற்கு அனுப்பியருளினார். வெள்ளை யானையுடன் திருவஞ்சைக்களத் திருக்கோயில் வாயிலையடைந்த தேவர்கள் நம்பியாரூரரைப் பணிந்து நின்று 'தாங்கள் இவ் வெள்ளையானையின்மீது அமர்ந்து திருக்கயிலைக்கு உடனே புறப்பட்டு வருதல் வேண்டுமென்பது இறைவனது அருளிப்பாடு' என விண்ணப்பஞ் செய்தார்கள். இந்நிலையில் நம்பியாரூரர் செய்வதொன்றும் அறியாது தம் உயிர்த் தோழரும் மன்னுயிர்கள் கூறும் மர்றத்தை உயத்துணர வல்ல திருவருட் செல்வருமாகிய சேரமான் பெருமானைத் தம் மனத்திற் சிந்தித்துக் கொண்டு வெள்ளையானையின் மீது ஏறிச் செல்வாராயினர்.

இவ்வாறு தம் உயிர்த்தோழராகிய சுந்தரர் தம்மை நினைத்துச் செல்லும் பேரன்பின் திறத்தைத் திருவருளாற்றலால் விரைந்துணர்ந்த கழறிற்றறிவாராகிய சேர வேந்தர், பக்கத்தில் நின்ற குதிரையின் மீது ஏறித்

திருவஞ்சைக்களத் திருக்கோயிலுக்கு விரைந்து சென்றார். வெள்ளை யானையின் மீதமர்ந்து விசும்பிற் செல்லும் தம் தோழரைக் கண்டார். தமது குதிரையின் செவியிலே திருவைந்தெழுத்தினை உபதேசித்தார். அவ்வளவில் குதிரை வான்மீதெழுந்து வன்றொண்டர் ஏறிச்செல்லும் வெள்ளையானையை வலம் வந்து அதற்கு முன்னே சென்றது. அப்பொழுது சேரமான் பெருமானைப் பின் தொடர்ந்து சென்ற படைவீரர்கள், குதிரை மீது செல்லும் தம் வேந்தர் பெருமானைக் கண்ணுக்குப் புலப்படும் எல்லை வரையிற் கண்டு பின் காணப்பெறாது வருத்தமுற்றார்கள். தம் வேந்தர் பெருமானைத் தொடர்ந்து செல்ல வேண்டுமென்ற மனத்திட்பமுடையராய் உடைவாளினால் தம் உடம்பை வெட்டி வீழ்த்து வீரயாக்கையைப் பெற்று விசும்பின் மீதெழுந்து தம் அரசர் பெருமானைச் சேவித்துச் சென்றனர். சேரமான் பெருமாளும் சுந்தரரும் திருக்கயிலாயத்தின் தெற்கு வாயிலை யணுகிக் குதிரையிலிருந்தும் யானையிலிருந்தும் இழிந்து வாயில்கள் பலவற்றையுங் கடந்து திருவணுக்கன் திருவாயிலை அடைந்தார்கள். சேரமான் பெருமாள் உள்ளே புக அனுமதியின்றி வாயிலில் தடைப்பட்டு நின்றார். அவருடைய தோழராகிய சுந்தரர் உள்ளே போய்ச் சிவபெருமான் திருமுன்னர்ப் பணிந்தெழுந்தார். 'கங்கை முடிக்கணிந்த கடவுளே! தங்கள் திருவடிகளை யிறைஞ்சுதற் பொருட்டுச் சேரமான் பெருமாள் திருவணுக்கன் திருவாயிலின் புறத்திலே வந்து நிற்கின்றார்' என விண்ணப்பஞ் செய்தார். சிவபெருமான், பெரிய தேவராகிய நந்தியை அழைத்துச் சேரமானைக் கொணர்க எனத் திருவாய்மலர்ந்தருளினார். அவரும் அவ்வாறே சென்று அழைத்து வந்தார்.

சேரமான் பெருமாள் இறைவன் திருமுன்பு பணிந்து போற்றி நின்றார். இறைவன் புன் முறுவல் செய்து சேரமானை நோக்கி, 'இங்கு நாம் அழையாதிருக்க நீ வந்தது எது கருதி' என வினவியருளினார். அது கேட்ட சேரவேந்தர் இறைவனைப் பணிந்து "செஞ்சடைக் கடவுளே! அடியனேன் நம்பியாரூரருடைய திருவடிகளைப் போற்றி அவர் ஏறிவந்த வெள்ளை யானைக்கு முன் அவரைச் சேவித்துக்கொண்டு வந்தேன். தங்களது திருவருட் பெருவெள்ளம் அடியேனை முன்கொண்டு

புகுதலால் இங்கு நும் திருமுன்பு வரப்பெற்றேன். அடியேன் இங்குத் தெரிவித்துக்கொள்ளும் வேண்டுகோள் ஒன்றுளது. எனது பாசத்தளையை அகற்றுதற் பொருட்டு வன்றொண்டரது தோழமையை அருளிய பெருமானே, மறைகளாலும் முனிவர்களாலும் அளவிடுதற்கரிய பெரியோனாகிய நின்னைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு திருவுலாப்புறம் என்ற செந்தமிழ்ப்பனுவல் ஒன்றைப் பாடி வந்துள்ளேன். இத்தமிழ்ப் பனுவலைத் தேவரீர் திருச்செவி சாத்தியருளல் வேண்டும் என்பதே எனது வேண்டுகோளாகும்' என்று விண்ணப்பஞ்செய்தார். அப்பொழுது சிவபெருமான். 'சேரனே அவ்வுலாவைச் சொல்லுக' எனப் பணித்தருளினார். சேரமான் பெருமாள் நாயனாரும் தாம் பாடிய திருவுலாப்புறமாகிய செந்தமிழ்ப் பிரபந்தத்தைக் கயிலைப் பெருமான் திருமுன்னர் எடுத்துரைத்து அரங்கேற்றினார். சேரர் காவலர் பரிவுடன் கேட்பித்த திருவுலாப்புறத்தை ஏற்றுக் கொண்ட இறைவன், அவரைநோக்கிச் 'சேரனே நம்பியாரூரனாகிய ஆலால சுந்தரனுடன் கூடி நீவிர் இருவீரும் நம்சிவகணத் தலைவராய் இங்கு நம்பால் நிலைபெற்றிருப்பீராக' எனத் திருவருள் செய்ய, வன்றொண்டர் அணுக்கத் தொண்டு புரியும் ஆலாலசுந்தரராகவும் சேரமான் பெருமாள் சிவகணத் தலைவராகவும் கயிலையில் திருத்தொண்டு புரிந்திருப்பாராயினர்.

சேரமான் பெருமாள் பாடிய திருக்கயிலாய ஞான உலாவைக் கயிலாயத்திலே அரங்கேறிய நாளாகிய அன்று இறைவன் திருமுன்பு இருந்து கேட்ட மாசாத்தனார் அவ்வுலாவை உளத்துட்கொண்டு சோழ நாட்டிலுள்ள திருப்பிடவூரிலே வெளிப்படச் சொல்லி அவ் அருள் நூலை இவ்வுலகில் வழங்கும்படி செய்தனர். இங்கு எடுத்துக் காட்டிய வண்ணம் சேரமான் பெருமாள் நாயனார் வரலாறு திருத்தொண்டர் புராணத்திலே சேக்கிழாரடிகளால் விரித்துரைக்கப்பெற்றுளது.

சேரமான் பெருமாள் நாடோறும் கூத்தப் பெருமானை வணங்கிச் செய்யும் சிவபூசையிலே அப்பெருமானது திருவடிச் சிலம்பொலியைக் கேட்டு மகிழும் இயல்புடையாரென்பதும் பாணபத்திரர் பொருட்டுத் திருவாலவாயுடையாராகிய இறைவரே சேரமான் பெருமாளுக்கு 'மதிமலிபுரிசை'

யெனத்தொடங்கும் திருமுகப் பாசுரத்தை யெழுதி அனுப்பினரென்பதும்,

பரிபுரக்கம்பலை யிருசெவி யுண்ணும்
குடக்கோச் சேரன் கிடைத்திது காண்கென
மதிமலி புரிசைத் திருமுகங் கூறி
அன்புருத் தரித்த இன்பிசைப் பாணன்
பெறநிதி கொடுக்கென உறவிடுத் தருளிய
மாதவர் வழுத்துங் கூடற்கிறைவன்

(கல்லாடம் 13-ம் அகவல்)

எனவரும் தொடரால் நன்கு விளங்கும். சிவபெருமான் அனுப்பிய வெள்ளை யானைமீது கயிலைக்குச் செல்லும் சுந்தரரால் நினைக்கப்பெற்ற சேரமான் பெருமாள் தம்முடைய குதிரைக்குத் திருவைந்தெழுத்தினை உபதேசித்து அக்குதிரையை விசும்பின்வழியே செலுத்தி நம்பியாரூரரைத் தாங்கிச் செல்லும் தெய்வத்தன்மை வாய்ந்த வெள்ளை யானைக்குமுன் செல்லப் பணித்தவரென்பது,

சேரற்குத் தென்னாவலர் பெருமாற்குச் சிவனளித்த
வீரக்கடகரி முன்பு தம் பந்தி யிவுளிவைத்த
வீரற்கு வென்றிக் கருப்புவில்வீரனை வெற்றி கொண்ட
சூரற்கெனதுள்ளம் நன்றுசெய்தாய் இன்று தொண்டுபட்டே,

எனவரும் நம்பியாண்டார் நம்பி வாய்மொழியாலும், சுந்தரர் ஏறிய வெள்ளையானைக்குமுன் இவரது குதிரை செல்லும் நிலையில் தஞ்சைப் பெரியகோயிலில் வரையப்பெற்றுள்ள இராசராச சோழன் காலத்து ஓவியத்தாலும் நன்கு தெளியப்படும்.

சேரமான் பெருமாளும் அவர் தோழராகிய சுந்தரரும் தாம் இவ்வுலகில் தாங்கியிருந்த மக்கள் யாக்கையுடனேயே திருக்கயிலாயத்தை யடைந்து சிவனருளில் திளைத்த பெரியோர்களென்பது,

ஞான வாரூரரைச் சேரரையல்லது நாமறியோம்
மானவ ஆக்கையொடும் புக்கவரை வளரொளிப்பூண்
வானவராலும் மருவற்கரிய வடகயிலைக்
கோனவன் கோயிற் பெருந்தவத்தோர் தங்கள்
கூட்டத்திலே. (86)

எனவரும் திருத்தொண்டர் திருவந்தாதியாலும்,

'களையாவுடலோடு சேரமான் ஆரூரன்
விளையாமதமாரு வெள்ளானைமேல் கொள்ள'

எனவரும் திருவிசைப்பாத் தொடராலும் நன்குவலியுறுத்துக்கூறப்பட்ட மெய்ம்மை வரலாறுதல் தெளிக.

சேரமான் பெருமாள் நாயனார் திருவாய்மலர்ந்தருளிய செந்தமிழ் நூல்களாகப் பதினொராந் திருமுறையில் தொகுக்கப்பெற்றுள்ளவை பொன்வண்ணத்தந்தாதி, திருவாரூர் மும்மணிக்கோவை, திருக்கயிலாய ஞானவுலா என்ற மூன்றுமாகும். சேரமான் பெருமாள் தில்லைச் சிற்றம்பலத்தை யிறைஞ்சித் தில்லையம்பலவனது அருட்கூத்தினைக்கண்டு மகிழ்ந்த நிலையிற் பாடிய செந்தமிழ்ப் பனுவல் பொன்வண்ணத்தந்தாதி யென்பர் சேக்கிழார். கட்டளைக் கலித்துறை யாப்பினால் அமைந்த இந்நூலில் நூறு செய்யுட்கள் உள்ளன. பொன்னார் மேனியனாகிய சிவபெருமானைக்கண்டு காமுற்று அவனை அடையப் பெருமையாற் பசலை நிறங்கொண்டு உடல் வேறுபட்ட தலைவியொருத்தி, தானும் தன்னாற் காதலிக்கப்பட்ட தலைவனாகிய சிவபெருமானும் பொன்வண்ணமாகிய ஒரே நிறத்தினைப் பெற்று விளங்கும் உருவொப்புமையை யெண்ணி உளங்குளிர்ந்துரைப்பதாக அமைந்தது இப்பிரபந்தத்தின் முதற் செய்யுளாகும். பொன்வண்ணம் என்ற தொடரை இம் முதற்பாட்டின் முதற் சீராகக்கொண்டு தொடங்கி இதன் இறுதிச் செய்யுளாகிய நூறாவது செய்யுளைக் 'கனகமலை யருகே போயின காக்கையு மன்றே படைத்தது பொன் வண்ணமே' என முடித்து, அந்தாதித் தொடையமைய இப்பனுவலைச் சேரமான் பெருமாள் திருவாய்மலர்ந் தருளினமையால் இந்நூல் பொன்வண்ணத்தந்தாதி யென்னும் பெயர்த்தாயிற்று. இதனைச் 'சீரார்வண்ணப் பொன்வண்ணத்திருவந்தாதி' எனச் சிறப்பித்துப் போற்றுவர் சேக்கிழார். பிற்காலத்து ஒளவையார் பாடிய ஆத்திசூடி, கொன்றைவேந்தன் என்ற நீதிநூல்களும் ஒன்பதாந்திருமுறையில் திருமாளிகைத் தேவர் பாடிய உயர் கொடியாடை, உறவாகிய யோகம் இணங்கிலாவீசன் என்ற திருவிசைப்பாப் பதிகங்களும் திருவாலியமுதனார் பாடிய பவளமால்வரை யென்றபதிகமும் இப்பொன்வண்ணத் தந்தாதியைப் போன்று முதற்பாடலிலமைந்த முதற் சொற்றொடராற் பெயர்பெற்றுள்ளமை இவண் ஒப்புநோக்கத்தக்கது.

செம்மேனிப் பேராளனாகிய சிவபெருமானைக் காதலித்த தலைவி, அப்பெருமான் ஓடேந்து செல்வராகத் தாருகா வனத்துச் சென்றபொழுது அம்முதல்வனது பேரழகில் ஈடுபட்டு மயங்கிய முனிவர்மகளிர் நிலையில் நின்று கூறு வனவாகவும் தலைவியின் உளக்கவலையையும் உடல் மெலிவையும் எண்ணி வருத்தமுற்ற தோழி செவிலி முதலி யோர் இறைவனை நோக்கிக் கூறுவனவாகவும் அமைந்த அகத்துறைப் பாடல்களும், இறைவன் செய்தருளிய அருட் செயல்களையும் அப்பெருமானது திருமேனியழகினையும் அம்முதல்வன் ஆட்பாலவர்க்கு அருள்புரியும் இயல்பினையும் அவனது இறைமைத் தன்மையினையும் விளங்க விரித் துரைக்கும் பாடல்களும், இறைவனுக்குத் தொண்டுபடும் முறையினையும் அங்ஙனந் தொண்டுபட்ட மெய்யடியார் களது இயல்பினையும் விரித்துரைக்குந் திருப்பாடல்களும் இந்நூலில் அமைந்துள்ளன. இதன்கண் அமைந்த செய்யுட்கள் யாவும் மோனைஎதுகை முதலிய தொடைநலம் வாய்ந்தனவாய், நிரனிறை முதலிய பொருள்கோளும் தன்மை உவமை முதலிய பொருளணிகளும் யமகம் திரிபு முதலிய சொல்லணிகளும் அமையப்பெற்றுள்ளன.

மக்களைப் பொருளாகக் கொண்டு பாடுதற்குரிய காமப் பகுதியினைக் கடவுளைப் பொருளாகக்கொண்டு பாடினும் அறிஞர் நீக்காது ஏற்றுக்கொள்வர் என்பதும், கடவுளைத் தலைவனாகவும் தம்மைத் தலைவியாகவும் கருதி மக்கள் விரும்பியொழுகியதாகச் செய்யுள் செய்தலும் நீக்கப்படா தென்பதும் தொல்காப்பியனார் கருத்தாகும். இவ்விருவகைக் காமப் பகுதியினையும் முறையே கடவுள்மாட்டுத் தெய்வப் பெண்டிர் நயந்த பக்கமெனவும், கடவுள்மாட்டு மானிடப் பெண்டிர் நயந்த பக்கமெனவும் வழங்குவர் இளம்பூரணர். இவ்விருதிறக்காமப் பகுதிகளும் பாடாண்டிணை யெனும் புறத்திணைக்குரிய பொருள் வகைகளாகத் தொல்காப்பியத் துட் கூறப்பட்டன. காமமாகிய அகவொழுக்கமும் வீர மாகிய புறவொழுக்கமும் பாடாண்டிணைக்குரிய பொருள் களாமென்பது ஆசிரியர் தொல்காப்பியனார் கருத்தாகலின் கடவுளைக் காமுறும் பகுதியாக மேற்குறித்த இரண்டும் அகத்திணையொழுகலாறெனவே கொள்ளுதல் பொருந்தும். கடவுள் மாட்டு மானிடப் பெண்டிர் நயந்தபக்கமெனப்படும் காமப் பகுதியில் தலைவனாகிய இறைவன் பெயரேயன்றித்

தலைவியின் பெயர் சுட்டப்படாமையால் சுட்டி யொருவர் பெயர் கொளப்படாத அகனைந்திணை யெனவே கொள்ளப் படும் சிறப்புடைத்தெனவும், கடவுள்மாட்டுத் தெய்வப் பெண்டிர் நயந்தபக்கமெனப்படும் காமப் பகுதி மக்கள் நுதலிய தல்லாமையாலும் சுட்டியொருவர் பெயர் கொளப்படுதலானும் அத்துணைச் சிறப்புடைத்தன்றென வும் கருதிய தேவார ஆசிரியர்கள், எல்லாம்வல்ல இறை வனைத் தலைவனாகவும் அவனது திருவடியைத் தலைப்பட்டுப் பிரிவறநின்று இன்புறுதற்குரிய உயிர்களாகிய தம்மை அவனருள் வேட்ட தலைவியாகவும் கொண்டு உளமுருகிப் பாடிய செழும்பாடல்கள், இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு அன்பொடு புணர்ந்த அகனைந்திணையின் முடிந்த பொருளாய்ச் சிறந்தது பயிற்றலாகிய உயர்ந்த பேரின்பத்தை வழங்கும் இலக்கியமாகத் திகழ்கின்றன. இவ்வாறு தேவார ஆசிரியர்கள் வகுத்துக்காட்டிய அன்பு நெறியை உளத்துட்கொண்டு சேரமான் பெருமாள் நாயனார் இறைவனைத் தலைவனாகவும் அவனருள் வேட்ட உயிரைத் தலைவியாகவும் கொண்டுபாடிய அகத்துறைப் பாடல்கள் பொன்வண்ணத் தந்தாதியில் நாற்பதுக்குமேல் உள்ளன. இவையாவும் இளம்பூரணர் கருத்துப்படி கடவுள் மாட்டு மானிடப் பெண்டிர் நயந்த பக்கம் என்ற வகையில் அடங்குவனவாகும்.

நிலவுலகமே திருவடியாகவும், ஞாயிறு திங்கள் தீ யென்னுஞ் சுடர்கள் கண்களாகவும், இடைவிடாது வீசுங் காற்று உயிர்ப்பாகவும், அலையோங்கிய பெருங்கடல் ஆடை யாகவும், அண்டமுகடு திருமுடியாகவும், அருமறைகள் திருமுகங்களாகவும், எண்திசைகள் தோள்களாகவும், உலகத்து வழங்கும் பலமொழிகளும் இன்னிசைப் பாடலாக வும், தன் கண் அமைய விளங்குவது, சிவபெருமானது பேருருவமாகும். யாவராலும் காண்டற்கரியதும் அடைதற் கரியதும் ஆகிய பேருருவமுடைய சிவபெருமானைக் காதலித்து வருந்தும் தன் மகளது எளிமைத் தன்மையை நினைந்து நற்றாய் இரங்குவதாக அமைந்தது,

பாதம் புவனி சுடர்நயனம் பவனம் உயிர்ப்போங்
கோதம் உடுக்கை யுயர்வான் முடிவிசும்பே யுடம்பு
வேத முகந்திசை தோள்மிகு பன்மொழி கீதமென்ன
போத மிவற்கோர் மணிநிறம் தோற்பது பூங்கொடியே. (19)

என்ற பாடலாகும். இத்திருப்பாடற் பொருள்,

மாநிலஞ் சேவடி யாகத் தூநீர்
வளைநரல் பவ்வம் உடுக்கையாக
விசும்புமெய் யாகத் திசைகையாகப்
படர்கதிர் மதியமொடு சுடர்கண்ணாக
இயன்ற வெல்லாம் பயின்றகத் தடக்கிய
வேத முதல்வ னென்ப
தீதற விளங்கிய திகிரியோனே.
(நற்றிணை, கடவுள் வாழ்த்து)

எனவரும் பெருந்தேவனார் பாடற் பொருளுடன் ஒத்து விளங்குதல் அறிந்து இன்புறத்தக்கதாகும்.

இறைவனது பேரழகில் ஈடுபட்ட தலைவி யொருத்தி அப்பெருமானையே இரவும் பகலும் இடைவிடாது சிந்தித்துக் கொண்டிருப்பவள் காமவேள் அம்பினால் தான் படுந் துயரத்தை எடுத்துரைத்து வருந்துவதாக அமைந்தது,

எண்ணம் இறையே பிழைக்குங்கொலாம்
இமையோரிறைஞ்சுந்
தண்ணம் பிறைச்சடைச் சங்கரன் சங்கக்குழையன் வந்தென்
உள்நன்குறைவ தறிந்தும் ஒளிமா நிறங்கவர்வான்
கண்ணு முறங்கா திராப்பக லெய்கின்ற காமனுக்கே. (44)

என்ற பாடலாகும். காமனைக் காய்ந்த பெருமானாகிய சங்கரன் என்னுள்ளத்தில் இடைவிடா தெழுந்தருளி யிருத்தலைத் தெரிந்திருந்தும் அப்பெருமான்பாற் சார்புடைய என்மேல் இரவும் பகலும் காமன் அம்பினைச் சொரிந்து நிற்கின்றான். அவன் இங்ஙனம் என்பால் தீமை செய்தொழுகுதலின் காரணம் பெண்ணாகிய என்னைத் தப்பியுய்யலாம் என்ற எண்ணத்தினாற் போலும். தன்னை யடைந்தார் துயர் தீர்த்தருளும் எம்பெருமானது ஒறுத்தலுக்கு இலக்காகாது காமனாகிய இவன் உய்தல் கூடுமோ? எனத் தலைவி அவனை அச்சுறுத்துங் குறிப்பு இப் பாடலிற் புலனாதல் காண்க.

இறைவன் தாருகாவனத்து முனிவர் மகளிர் காமுற்று மயங்க ஓடேந்து செல்வராகப் பிச்சைக்குச் சென்ற பொழுது அப்பெருமான் மேற்கொண்ட பிச்சைக் கோலத்தின் பேரழகில் ஈடுபட்ட தலைவி அத்திருக்கோலத்தையே இடைவிடாது எண்ணுகின்றாள். இறைவன் தன்பாற் பிச்சை யேற்க வருவது போலவும் தான் அவனது பேரழகி

வீடுபட்டு அவன் பின்னே செல்வது போலவும் அது கண்ட தாய் தன்னைத் தடுத்து நிறுத்தியது போலவும் கனவொன்று காணுகின்றாள். தலைவி தான் கண்ட கனு நிகழ்ச்சியைத் தோழிக்குக் கூறுவதாக அமைந்தது,

ஈசனைக் காணப் பலிகொடுசெல்ல எற்றேயிவளோர்
பேயனைக் காமுறு பிச்சிகொலாமென்று பேதையர்முன்
தாயெனை யீர்ப்பத் தமியேன்தளரவத் தாழ்சடையோன்
வாவெனைப் புல்லவென்றான் இமைவிண்டன வாட்கண்களே.

என்ற பாடலாகும். ஈசனைக் காணும் விருப்புடன் உணவாகிய பலியைக் கையிலேந்தி வெளியே சென்றேன். அது கண்டு 'பேய்களோடாடும் ஒருவனைக் காதலித்த பித்துடையளாயினாள் இவள்' என்று கூறி என் தாய் மகளிர் முன்னே என்னைப் பிடித்திழுத்தாள். நாணிழந்து தனிமையுற்ற யான் அப்பெருமானை அணுகுதற் கியலாது தடைப்பட்டு வருந்தினேன். அப்பொழுது இறைவனே என்முன் வந்து நின்று என்னைத் தழுவ வருக என அழைத்தருளினான் அந்நிலையில் என் கண்கள் இமை திறந்து விழித்தன என்பது இதன் பொருளாகும்.

பிச்சைக் கோலமுடைய பெருமானுடன் உரையாடி மகிழ்ந்த மகளிர் மூவருள் ஒருத்தி தமக்குள் நிகழ்ந்த உரையாடலைத் தெரிவிப்பதாக அமைந்தது,

காமனை முன்செற்ற தென்றாள் அவள், இவள் காலனென்னுந்
தாமநன் மார்பனை முன்செற்ற தென்றுதன் கை யெறிந்தாள்
நாமுனஞ் செற்றதன் றுரையென்றேற் கிருவர்க்கு மஞ்சி
ஆமெனக் கிற்றிலர் அன்றெனக் கிற்றிலர் அந்தணரே. (45)

என்ற பாடலாகும். அந்தணராகிய இவர் முதலில் அழித்தது மன்மதனையே என எங்களுளொருத்தியாகிய அவள் கூறினாள். மற்றொருத்தியாகிய இவள் அஃது உண்மையன்று; இவர் முன் அழித்தது காலனையே என்று தன்கையறைந்து உறுதி கூறினாள். இவ்விருவர்க்கும் நடுவாகிய யான் அப்பெருமானை நோக்கித் தாங்கள் முதலிற் செற்றது காமனையா அன்றிக் காலனையா என்று வினவினேன். இறைவர் அவ்விருவர்க்கும் அஞ்சி இன்னது ஆம், இன்னது அன்று என உறுதியாக மறுமொழி சொல்ல மாட்டாமல் தயங்கினர் என்பது இதன் பொருள்.

காமன், காலன் ஆகிய இவ்விருவருள் நும்மால் முன்னர்க் கொல்லப்பட்டார் யாவர் என்ற இவ்வினவுக்கு முதலாமவள் கருத்தின்படி காமனையே முன்பு அழித்தது என அவ்வந்தணராகிய இறைவர் மறுமொழி கூறின் மற்றொருத்தி நும்மால் முன்னரே கொல்லப்பட்ட காமன் இன்று என்மேல் அம்பினைத் தூவி வருத்தி நிற்றலெவ்வாறு என வினவுவாள். இரண்டாமவள் கருத்தின்படி காலனையே முதலில் அழித்தது என மறுமொழி கூறின் நும்மைக் காமுற்று வருந்தும் எனக்கு நும்மால் முன்னரே அழிக்கப்பட்ட காலனாலுளதாம் சாக்காடு போல்வதோர் துன்பநிலை இன்றெய்திய தெங்ஙனம் என வினவுவாள். இந்நிலையில் இவ்விருவருள் யார் பக்கஞ் சார்ந்து கூறினும் மற்றொருத்திக்கு மறுமொழி கூறும் வழியில்லாமையால் 'அவ்விருவர்க்கும் அஞ்சி ஆமெனக் கிற்றிலர் அன்றெனக் கிற்றிலர் அந்தணரே' என்றாள் மூன்றாமவள். இங்கே முன் கொன்றது பின் கொன்றது என்ற இரண்டும் கொலைத் தொழில்களேயாதலானும் இவ்விரண்டினுள் எதனை முன்னிகழ்ந்ததாகக் கூறினும் அக்கொடுந் தொழிலாகிய கொலையைத் தாமே செய்ததாக உடன்பட வேண்டியிருத்தலானும் அருள் நிரம்பிய அந்தண வேடத்துடன் வந்த இறைவர் இவ்விரண்டனுள் ஒன்றனை ஆமென்றும் மற்றொன்றனை அன்றென்றும் சொல்ல இயலாது தயக்கமுற்றாரென்றும், அந்தணராகிய இவர் இங்கு வந்ததன் நோக்கம் நம் உள்ளத்தையும் உயிரையும் வருத்துவதேயன்றிப் பிறிதன்றென்றும் மகளிர் நகையாடியவாறு. காலதத்துவத்தைக் கடந்து விளங்கும் இறைவனுடைய செயல்களைக் காலவரம்பினுள் அடக்கிக் கூறுதலியலாதென்பதனை இப்பாடலிற் சேரமான் பெருமாள் குறிப்பாற் புலப்படுத்தினமை காண்க.

பிச்சைக் கோலமுடைய இறைவனைக் கண்டு காதல் கொண்ட தலைவி அப்பெருமானுடன் தான் நிகழ்த்திய உரையாடல்களைத் தன் தோழிக்கு அறிவுறுத்து முகமாகத் தன் உள்ளங்கவர்ந்த தலைவன் இன்னான் என உடம்பட்டு உரைப்பதாக அமைந்தது,

அந்தண ராமிவர் ஆரூர் உறைவதென்றேன் அதுவே
சந்தனை தோளியென்றார் தலையாய சலவரென்றேன்
பந்தணை கையா யதுவுமுண் டென்றா ருமையறியக்
கொந்தணை தாரீர் உரைமினென்றேன் துடிகொட்டினரே.

என்ற பாடலாகும். அழகிய தண்ணளியுடையவராகிய தாங்கள் விரும்பித் தங்கியிருப்பது யாருடைய ஊர் என்று வினவும் நிலையில் 'ஆரூர் உறைவது' என்று கேட்டேன். அது கேட்ட தலைவர் பெண்ணே நீ கூறிய அதுவே (ஆரூர் என்பதே) எனது ஊராகும் என்றார். நுமது ஊரை யான் தெரிந்து கொள்ளாதபடி கவர்பொருள்பட உரையாடுதலால் நீர் முதன்மையான வஞ்சகராகவுள்ளீர் என்ற பொருளில் அவரை நோக்கித் 'தலையாய சலவர்' எனக் கூறினேன். அதற்கு (த்தலையிற் பொருந்திய கங்கை நீரையுடையவர் என) வேறு பொருள் கொண்ட அவர், சந்தனம் பூசிய தோளினையுடையாய் நீ கூறியபடி அதுவும் (தலையாய சலமும்) என்பால் உண்டு என்றார். மணம் பொருந்திய மாலையை யணிந்தீர் உம்மை யான் இன்னார் என்று தெரிந்து கொள்ளும்படி எனக்கு விளங்கச் சொல்லும் என்ற பொருளில் 'கொந்தணை தாரீர் உமையறிய உரைமின்' என்றேன். அதற்கு (நும் தேவியாகிய உமையம்மையார் அறிய மெய்ம்மையாகச் சொல்லும் என உறுதிமொழி செய்யச் சொல்லுவதாகப் பொருள் கொண்டு) மறுமொழி கூற வழியறியாது தன் கையிலேந்திய உடுக்கையை யொலித்து இவ்வுரையாடலை மேலும் வளர விடாது தடுத்து விட்டார் எனத் தலைவி தோழிக்குரைத்ததாக அமைந்த இச் செய்யுளில், ஆரூர், தலையாய சலவர், உமையறிய உரைமின் என்ற தொடர்கள், இரு பொருள் தந்து, இங்ஙனம் தன் அன்பிற்குரிய தலைமகளோடு உரையாடிய தலைவராவார் திருவாரூரில் நீங்காதெழுந்தருளியிருப்பவரும் தலையிற் கங்கையைத் தரித்தவரும் உமையொரு பாகரும் ஆகிய சிவபெருமானே என்ற உண்மையினைத் தோழிக்கு விளங்க அறிவுறுத்து நிற்றல் உணர்ந்து இன்புறத்தக்கதாகும்.

தலைமகள், தன்னாற் காதலிக்கப்பட்ட இறைவனைக் கனவிற்கண்டு உரையாடிய திறத்தைத் தன் தோழிக்குப் பின்வருமாறு எடுத்துரைக்கின்றாள்: பண்டரங்க வேடத்தானாகிய இறைவன் என்னருகே வந்து நின்று என் பற்களைப் பார்த்து நின் பல்லின் தன்மை இதுவா என நகையாடுங் குறிப்புடன் 'பலிதா' என்று சொல்லிப் பிச்சை கேட்டான். அதுகேட்ட யான் 'பல் இந்தா' என்று கூறிப் பற்கள் சிலவற்றை என்பால் அவன் தர

வருவதாகப் பொருள் கொண்டு, இறைவனே நீ தர விரும்பிய பற்களைத் தக்க யாகத்தில் நின்னாற் பல்லுடைபட்ட சூரியனுக்கே கொடுத்துவிடு என்று கூறினேன். அண்டங்களுக்கெல்லாம் அப்பாற்பட்டு விளங்குபவனும் அவ்வண்டங்களையெல்லாம் படைத்தருளியவனுமாகிய அப் பெருமான் மீண்டும் என்னை நோக்கித் தான் என்பால் வேண்டியது உணவு என்பது புலப்பட 'அன்னம்' என்று கூறினான். அது கேட்ட யான், நீ கூறும் அன்னம் என்பது பிரமனது ஊர்தியாகிய பறவையல்லவா என்றேன். மீண்டுமவன், என்னை நோக்கி நங்கையே யான் கூறும் சொற் பொருளை உணர்ந்துகொண்டு உன்பாலுள்ள உணவை யிடுக என்ற பொருளில் 'உன் ஐயம்பெய்' என்றான். அத் தொடர்க்கு 'உன்பால் உள்ள ஐந்து அம்புகளையும் எய்க' என அவன் கூறுவதாகப் பொருள் கொண்ட யான், அவனை நோக்கி, நின்னாற் குறிக்கப்பட்ட ஐந்தம்புகளையும் உடையவன் மன்மதனே என்றேன். அதுகேட்ட இறைவன் என்னை நோக்கி, நீ யான் கேட்ட வண்ணம் பலியிடாது போயினும் நின்னுடன் உரையாடிய இவ்வளவிலேயே உண்டு பசி தீர்ந்த அமைதி நிலை எனக்குளதாயிற்று என்ற பொருளில், 'உண்டு இங்கு அமைந்தது' என்றான். அதனைக் கேட்டு உறக்கம் நீங்கி விழித்துக்கொண்டேன் என இங்ஙனம் தலைவி தோழிக்குத் தன் கனவு நிலையைப் புலப்படுத்தும் நிலையில் அமைந்தது,

'பண்டங்கன்வந்து பலிதாஎன்றான் பகலோற் கிடென்றேன்
அண்டங்கடந்தவன் அன்னமென்றான் அயன் ஊர்தி என்றேன்
கொண்டிங்குஐயம் பெய்என்றான் கொடித்தே ரனங்கனென்றேன்
உண்டிங்கமைந்ததென்றாற் கதுசொல்ல வுணர்வுற்றதே'.

என்ற பாடலாகும்,

'வண்டுகள் தேன் நுகரும் கொன்றை மலர் மாலையை யணிந்த பெருமானே, நின் திருவடிகளை யடைந்து மலர் தூவிக் கைதொழுத மெய்யடியார்களுக்கு இடமகன்ற இப் பெரிய வுலகத்தைஆளக் கொடுததும் அடியேன் பெற்ற மாவடு வகிர்போலுங் கண்களையுடைய என்மகள் நின்னைக் கைகளால் தொழுதகாலத்து அவளுடைய கைவளைகளைப் பறித்துக்கொண்டும் இங்ஙனம் இருவேறுபட்ட மன நிலையையுடையையாய் ஓரூரில் ஒரு பொருளை இரு விலைக்கு விற்பது போலும் நினது நடுவு நிலைமையற்ற செயலைப்

புலப்படுத்தினை. அறவுருவாகிய இடபத்தைக் கொடிமேற் கொண்டு நற்குணங்களாற் சலியாத பெருமையுடைய னாகத் திகழும் நினக்கு இச் செயல் தகுவதோ' என இறைவனை நோக்கித் தன் மகளது ஆற்ருமை கூறிச் செவிலி இரங்குவதாக அமைந்தது,

அடிக்கண்ணி கைதொழுதார்க்ககன் ஞாலங்
கொடுத்தடி நாய்
வடிக்கண்ணி நின்னைத் தொழ வளைகொண்டனை வண்டுண்
கொன்றை
முடிக்கண்ணியா யெமக்கோரூ ரிரண்டகம் காட்டினையாற்
கொடிக்கண்ணி மேல்நல்ல கொல்லே றுயர்த்த
குணக்குன்றமே. (73)

என்ற பாடலாகும். ஓரூர் இரண்டகம் காட்டல் என்பது ஒரு பழமொழி. அகம் – முறைமை. மக்களெல்லோரும் அன்பினால் ஒத்து வாழ்தற்குரிய ஒரே ஊரில் ஒரு பொருள் பற்றி இரு வேறு முறையில் நடந்துகொள்ளும் மன நிலையுடைய வஞ்சகரது கொடுஞ்செயலைக் குறிப்பது இப் பழமொழி. இஃது ஓரூர் இரண்டகம் காட்டுதல் எனவும் வழங்கும். இத்தொடர்க்கு ஓரூரில் ஒரு பொருள் பற்றி இருவேறு மனநிலையுடையராக நடத்தல் எனப் பொருள் கொள்ளுதல் பொருத்தமுடையதாகும். இறைவனாகிய நீ நின்னை வழிபட்ட கோச் செங்கட் சோழர் மூர்த்திநாயனார் முதலிய மெய்யடியார்களுக்கு உலகாளும் அரசுரிமையை வழங்கி இன்பஞ் செய்தும், நின்னை அன்பினால் அடைந்து மகிழ்தற்கு ஏக்கற்றிருக்கும் என் மகளது கைவளைகளைக் கவர்ந்து அவளுக்குத் துன்பஞ் செய்தும், இவ்வாறு ஒத்த அன்புடையார்களிடத்திலேயே இரு வேறு உள்ளத்துடன் நடந்துகொள்ளுகின்ருய், இம் முறையற்ற செயல் நினது இறைமைத் தன்மைக்கு ஏற்றதாகாது எனச் செவிலி இறைவனை நோக்கி முறையிடும் இம் மொழிகளில், அடியார்க்கு உலகெலாம் ஆளக் கொடுக்கும் இறைவனது பெருவண்மையும், அருளாளனாகிய அப்பெருமானை நினைந்து தளரும் தலைவியின் மெலிவும் ஒருங்கு புலப்படுதப் பெற்றமை காண்க. இப்பாடலிற் குறிக்கப்பட்ட ஓரூரிண்டகம் காட்டுதல் என்ற பழமொழியைத் திருத்தக்க தேவர் தாம் இயற்றிய சீவகசிந்தாமணி யென்னும் பெருங் காப்பியத்துள் சுரமஞ்சரியாரிலம்பகம் 93-ஆம் பாடலில் எடுத்தாண்டுள்ளார்.

தலைமகளது ஆற்றாமை கண்ட தோழி இறைவனை நோக்கி உரையாடுவதாக அமைந்தது,

தறித்தாய் அயன்றலை சாய்த்தாய் சலந்தரனைத் தழலாப்
பொறித்தாய் அனங்கனைச் சுட்டாய் புரம் புனலுஞ்சடைமேற்
செறித்தாய்க் கிவைபுக ழாகின்ற கண்டிவள் சில்வளையும்
பறித்தாய்க் கிதுபழி யாகுங்கொலா மென்று பாவிப்பனே. (81)

என்ற பாடலாகும். 'பிரமனது தலையை அரிந்தாய். சலந்தரனை அழித்தாய். காமனை எரித்தாய். முப்புரங்களையும் சுட்டு நீறாக்கினாய். கங்கையாகிய பெருவெள்ளத்தின் வேகத்தைக் குறைத்து அதனை நினது சடையில் அடக்கினாய். நீ செய்த ஒறுத்தலாகிய இச் செயல்கள் நினக்குப் புகழ் விளைப்பனவாக உலகத்தாரால் நன்கு மதிக்கப்படுதலைக் கண்டு, மேலும் இத்தகைய ஒறுத்தற்றொழிலால் புகழ் பெறுதலையே விரும்பி நின்னருளுக்குரியளாகிய இத் தலைவியின் சிலவாகிய வளைகளையும் பறித்துக் கொண்டாய் போலும். நின்பால் அன்புடையாள்பால் நீ செய்த இச்செயல் பொருள்சேர் புகழாளனாகிய நினக்குப் பழி விளைவிப்பதாகுமே எனச் சிற்றறிவுடைய யான் எண்ணுகின்றேன்' என இறைவனை நோக்கித் தோழி நயம்பெற உரையாடிய திறம் நினைந்து மகிழத்தக்கதாகும்.

தலைமகளுக்கு உற்ற நோயை யறிந்து தணிக்க எண்ணிய தோழியை நோக்கித் தலைவி தான் உற்ற துயரைப் புலப்படுத்துவதாக அமைந்தது,

செறிவளையாய் நீவிரையல் குலநலங் கல்விமெய்யாம்
இறையவன் தாமரைச் சேவடிப் போதென்றெல் லோருமேத்தும்
நிறையுடை நெஞ்சிது வேண்டிற்று வேண்டிய நீசர்தம்பாற்
கறைவளர் கண்டனைக் காணப்பெரிதுங் கலங்கியதே. (85)

என்ற பாடலாகும். 'செறிந்த வளையலணிந்த தோழியே! குடிப்பிறப்பு, நல்லொழுக்கம், கல்வி, வாய்மை ஆகிய நற்பண்புகளுக்கெல்லாம் நிலைக்களமாகத் திகழ்வது எங்கும் நீக்கமற நிறைந்த இறைவனுடைய தாமரை மலர்போலுந் திருவடியே யெனப் பெரியோர் பலரும் போற்றிப் புகழும் நிறையுடைமையில் நிலைபெற்றுள்ள எனது நெஞ்சம், என் ஆருயிர் நாயகனாகிய நீலகண்டமுடைய பெருமானைத் தாம் விரும்பியனவற்றை விரும்பிய வண்ணஞ் செய்தொழுகும் நிமித்திகன் முதலிய கீழ்மக்களது முயற்சியாற் காண முயலும் அன்னையின் செயல் கண்டு மிகவுங் கலக்கமடை

கின்றது. இதுவே எனது நோய்க்குரிய காரணமாகும். இதனை யறிதற்கு நீ நிமித்திகர் முதலியோரை நாடி விரையற்க.' என்பது இதன் பொருளாகும். ஆருயிர் நாயகனுகிய இறைவனை அடைய இயலாமையால் வளைகழல உடல் மெலிந்து வருந்துகின்ற எனக்கு நிறையுடைய நெஞ்சினுல் துணைபுரிவார் என்னுயிர்த் தோழியாகிய நின்னைத் தவிர வேறு யாருமிலர் என்பதனைக் குறிப்பான் அறிவுறுத்துவாள் தன் தோழியைச் செறிவளையாய் எனத் தலைவி அழைத்தமை நினைக்கத் தகுவதாம்.

தலைவனோடு உடன் போதற்கு ஒருப்பட்ட தலைமகளைத் தோழி வழிப்படுத்துரைப்பதாக அமைந்த பாடல்,

ஓதவனுமம் உரையவன் பல்குணம் உன்னை விட்டேன்
போதவன் பின்னே பொருந்தவன் வாழ்க்கை திருந்தச்சென்று
மாதவ மாகிடு மாதவ மாவளர் புன்சடையான்
யாதவன் சொன்னுன் அதுகொண் டொழியினி யாரணங்கே.

என்பதாகும். 'அரிய தெய்வப்பெண் போல்வாய்! நின் தாய் தந்தை ஆயத்தார் முதலியோர் பெயர் குணங்களைக் கூறுதலை விடுத்து நின் ஆருயிர் நாயகனுகிய இறைவனுடைய திருப்பெயர்களையே இடைவிடாது சொல்வாயாக. குணங்களாற் சலியாத பெரிய மலை போன்று விளங்கும் அப் பெருமானுடைய அருட் குணங்களையே பேசுக. நின்னைப் பிரிவின்றியிருந்த யானும் நீ அவ்விறைவனுடன் சேர்ந்த இந்நிலையில் நின்னை நீங்கி நிற்கின்றேன். இனி நீ நின்னுயிர்த் தலைவனுகிய இறைவன்பின்னே செல்வாயாக. அவனது அருள்வழியொழுகும் நல் வாழ்க்கையில் திருத்தமுறச் சென்று பொருந்தி வாழ்வாயாக. இங்ஙனம் ஒழுகுவாயாயின் நின்செயல்களால் இவ்வுலகத்திற்குப் பெருகிய தவப் பயன் உளதாகும். பெருந்தவத்தின் உருவாக விளங்குஞ் செஞ்சடைக் கடவுளாகிய இறைவன் நீ எதனைச் செய்ய வேண்டுமென்று நினக்குப் பணித்தருளினனே அப்பணியையே குறிக்கொண்டு போற்றிப் பிறவற்றை நீங்கி ஒழுகுவாயாக' எனத்தோழி தலைவிக்கு அறிவுறுத்துகின்ருள். எவ்வுயிர்க்கும் அன்புடையராய் ஒழுகும் ஈசனடியாரைத் தோழியாகவும், அவரால் நல்வழிப் படுத்தற்குரிய தகுதிவாய்ந்த நல்லுயிரைத் தலைமகளாகவும் கொண்டு, இப்பாட்டின் துறைப்பொருளைக் கூர்ந்து

நோக்குமிடத்து, மக்களெல்லோரும் தம்முடைய பாசத் தொடர்பொழிந்து இறைவனுடைய திருவடிக்கண் தலைப் படுதலாகிய ஈறிலாப் பேரின்ப வாழ்வை யடைந்து இன்புறு தற்குரிய நெறிமுறைகள் திருவருட் செல்வராகிய சேரமான் பெருமாள் நாயனாரால் இத்திருப்பாடலில் உலக மக்களுக்கு அறிவுறுத்தப் பெற்றுள்ளமை நன்கு புலனும்.

இவ்வுலகத்தைத் தோற்றுவித்துக் காத்து மீண்டும் ஒடுக்கி உயிர்களை உய்விக்கும் மும்மூர்த்திகளாக விளங்கும் இறைவன் எல்லாம்வல்ல சிவபெருமானே என்பார்,

வீரன் அயன் அரி வெற்பலர் நீரெரி பொன்னெழிலார்
காரொண் கடுக்கை கமலந் துழாய்விடை தொல்பறவை
பேரொண் பதிநிறந் தாரிவ ரூர்திவெவ் வேறென்பரால்
யாரு மறியா வகையெங்க ளீசர் பரிசுகளே. (95)

என அவ்விறைவனதியல்பை விளக்குகின்றார் சேரமான் பெருமாள் நாயனார். அரன் அயன் அரி என்பன சிவபெருமானுக்குரிய பெயர்களென்றும், கயிலைமலையும் தாமரை மலரும் பாற்கடலும் முறையே அவ்விறைவன் எழுந்தருளிய இடங்களென்றும், தீவண்ணம், பொன் வண்ணம், கார்வண்ணம் என்பன அவ்விறைவனுடைய திருமேனி நிறங்களென்றும், கொன்றைமலர், தாமரை, துழாய் என்பன முறையே அப்பெருமான் அணிதற்குரிய மாலைகளாமென்றும, இடபம் அன்னம் கருடன் என்பன முறையே அப்பெருமானுக்குரிய ஊர்திகளாமென்றும் நிரனிறைப் பொருள்கோள் அமையக்கூறி, இவ்வாறு எங்கள் பெருமானாகிய ஈசனுக்குரிய தன்மைகள் யாவரும் அறியாவகையில் வேறுவேறாக உள்ளனவாயினும், இவையெல்லாவற்றுக்கும் உரிய முதல்வன் ஒருவனே யென்று இத்திருப்பாடலில் சேரமான்பெருமாள் விரித்துக் கூறினமை நினைந்து போற்றத் தக்கதாகும். அயன் அரி அரன் என்னும் மும்மூர்த்திகளாக விளங்குபவன் சிவபெருமான் ஒருவனே யென்ற உண்மையை,

'பவமலிதொழிலது நினைவொடு பதுமநன்மலரது மருவிய
சிவன்'

எனவும்

'உலகுகள் நிலைபெறுவகை நினைவொடு மிகும் அலைகடல்நடு
அறிதுயிலமர் அரியுருவியல்பரன்'

எனவும்

முழுவதும் அழிவகைநினைவொடு முதலுருவியல்பரன்'

எனவும் ஆளுடைய பிள்ளையார் தெளிவாக விளக்கி யருளினமை காண்க.[1]

உலகு உடல் கரணம் நுகர்பொருள் என்பவற்றை உயிர்களுக்குத் தந்து அவற்றைப் பிறப்பித்தற்கு முன்னரே தனது இச்சையாற்கொண்ட அருளாகிய திருமேனியை யுடையவன் இறைவனாதலின், முதுமைக்கு முதல்வனாக வுள்ளவன் அவனே. பழைமையுடைய நான்மறைகளை யருளிய முதல்வனாகிய அப்பெருமான் எழுகடல்களையுந் துறைகளாகக்கொண்ட ஏழுலகங்களுக்குந் தலைவனாயினும் கயிலைமலையின் உச்சியில் விரும்பி வீற்றிருக்கின்றான். இங்ஙனந் தன்னால் தோற்றுவிக்கப்பட்ட உலகத்தை இடமாகக்கொண்டு எழுந்தருளியிருப்பினும் இவ்வுலகங் களெல்லாந் தன்னால் தோற்றுவிக்கப்படுதற்குமுன் தான் எல்லாவுயிர்களிடத்தும் கொண்ட நடுவு நிலைமையோடு கூடிய திருவருளாகிய தொன்மை இயல்பினின்றும் சிறிதும் வழுவாது யாண்டும் எல்லாவுயிர்களின் உள்ளத்தும் ஒப்ப வீற்றிருந்து அருள் புரிதலால் இறைவன் என்னும் காரணப்பெயரையுடையவன். தன் வயத்தனாதல் முதலிய எண் குணங்களைத் தனக்கே சிறப்புரிமையாகக் கொண்ட மையால் எல்லார்க்கும் நல்லருள் சுரக்கும் ஈசனாகத் திகழ்பவன். தன்னை இடைவிடாது நினைந்து போற்றும் மெய்யடியாருள்ளத்தைக் கோயிலாகக் கொண்டு விரும்பி வீற்றிருப்பவன். நஞ்சுடைய பாம்பினையும் வெறுத்து விலக்காமல் அணிகலனாக விரும்பி யணிந்தருளிய அருளாளன். இங்ஙனம் காலம் இடம் பொருள் ஆகிய எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்டு விளங்கும் முழுதற் கடவுளாகிய சிவபெருமானை இவ்வரம்புகளுட்பட்டு வழங்குஞ் சொற்களால் சொல்லித் துதித்தல் நம்மனோர்க்கு இயலாதென்பார்,

முறைவனை மூப்புக்கு நான்மறைக் கும்முத லேழ்கடலந்
துறைவனைச் சூழ்கயிலாயச் சிலம்பனைத் தொன்மை குன்றா
இறைவனை யெண்குணத் தீசனை யேத்தினர் சித்தந்தம்பால்
உறைவனைப் பாம்பனை யாம்பின்னை யென்சொல்லி
யோதுவதே. (53)

1. திருச்சிவபுரத்துத் தேவாரம் 'புவம் வளிகனல்' என்ற முதற்குறிப்புடைய திருப்பதிகம் 1, 2, 3ம் திருப்பாடல்களை நோக்குக

என்ற திருப்பாடலால் சொலற்கரிய சூழலாய் விளங்கும் இறைவனது இயல்பினைச் சேரமான் பெருமாள் அறிவுறுத்தி யருளினமை நினைந்து போற்றத் தக்கதாகும்.

உலக உயிர்கள் ஆணும் பெண்ணுமாய் அன்பினாற் கலந்து உலகியல் நிகழ்த்தி இன்புற்று உய்யும் வண்ணம் உயிர்க்குயிராகிய இறைவன் அம்மையப்பனாகத் திருமேனி கொண்டு தோன்றி எல்லாவுயிர்களுக்கும் அருள்புரி கின்றான் என்னும் உண்மையினை நம் தமிழகத்தே தோன்றி அப்பெருமானது திருவருள் நெறியாகிய சிவநெறியில் நின்றொழுகிய செர்புலச் செல்வர்கள் அனை வரும் நன்குணர்ந்து வெளியிட்டுள்ளார்கள். அப்பெரு மக்கள் மேற்கொண்டொழுகிய சிவநெறியினைக் கடைப் பிடித்து ஒழுகிய சேரமான் பெருமாள் நாயனார், தாம் இறை வனருளாற் கண்டுணர்ந்த மாதொருபாகர் திருக்கோலத் தியல்பினை,

வலந்தான் கழலிடம் பாடகம் பாம்பு வலமிடமே
கலந்தான் வலநீ றிடஞ்சாந் தெரிவலம் பந்திடமென்
பலந்தார் வலமிட மாடகம் வேல்வல மாழியிடம்
சலந்தாழ் சடைவலம் தண்ணங் குழலிடஞ் சங்கரற்கே. (65)

என்ற பாடலால் நம்மனோர்க்கு விளங்க அறிவுறுத்து கின்றார். எல்லாவுயிர்க்கும் இன்பத்தைத் தருதலாற் சங்கரன் எனப்போற்றப் பெறும் சிவபெருமானுக்கு வலப் பக்கத்துத் திருவடியில் அணியப் பெற்றுள்ளது ஆடவர் அணியாகிய வீரக்கழல். இடப்பக்கத்துத் திருவடியிலுள்ளது மகளிர் அணியாகிய பாதசரம். வலப்பக்கத்தே அணிவது பாம்பாகிய அணிகலன். இடப்பக்கத்துள்ளவை மணிகள் பதிக்கப்பெற்ற அணிகலன்கள். வலப்பாலிற் பூசுவது திருநீறு. இடப்பாலிற் பூசுவது செஞ்சாந்து. வலப்பால் திருக்கையில் ஏந்தியது தீ. இடப்பால் திருக்கையில்ஏந் தியது பந்து. வலப்பக்கத்தே பூண்பது எலும்பாகிய உலர்ந்த மாலை. இடப்பக்கத்தே பூண்பது பொன்னரி மாலை. வலம் ஏந்தியது வேற்படையாகிய சூலம். இடம்ஏந்தியது சக்கரப்படை. வலப்பக்கத்தது தாழ்சடை. இடப்பக்கத்தது கருங்குழல் என்பது இத்திருப்பாடலின் பொருளாகும் இத் திருக்கோலத்தைத் தொன்மைக் கோலம் எனப் போற்றுவர் திருவாதவூரடிகள்.

இங்ஙனம் சிவபெருமானது இடப்பக்கத்து எழுந்தருளிய உமையம்மையாரே திருமால என்ற திருவுருவத்துடனும் இறைவனது இடப்பக்கத்தில் விளங்குகின்ருர் என்ற மெய்ம்மையைத் தெரிவிப்பது,

இடமால் வலந்தான் இடப்பால் துழாய் வலப்பாலொண் கொன்றை
வடமா லிடந்துகில் தோல்வலம் ஆழியிடம் வலமான்
இடமால் கரிதால் வலஞ்சே திவனுக் கெழினலஞ்சேர்
குடமாலிடம் வலங் கொக்கரை யாமெங்கள் கூத்தனுக்கே. (6)

என்ற பாடலாகும். எங்கள் கூத்தப்பிராஞகிய இறைவனுக்கு இடப்பாகம் திருமால்; வலப்பாகம் தான். இடப்பாலணிந்தது துழாய்மாலே; வலப்பாலது கொன்றை மலர் மாலே. இடப்பக்கத்திலுடுக்கப்பெற்றது பொன்ஞடை; வலப்பக்கத்தது புலித்தோல். இடது திருக்கையில் ஏந்தப்பெற்றுள்ளது சக்கரப்படை; வலப்பக்கத்தது இடபக்கொடி. இடப்பாகத்துத் திருமேனி கரியது; வலப்பாகத் திருமேனி செம்மை நிறமுடையது. இடப்பாகத்தின் ஆடலுக்கேற்றது குடம்; வலப்பாகத்தின் ஆடலுக்கேற்றது கொக்கரையென்னும் வாத்தியமாகும் என்பது இத்திருப்பாடலின் பொருள்.

சிவபெருமான் உயர்த்த கொடியில் எழுதப்பெற்ற இடபமும் அப்பெருமான் உடுத்த கோவணவுடையும் அவ்விறைவனது சென்னியில் அணியப்பெற்று விளங்கும் கொக்கிறகும் அவன் திருவடியிலணிந்த வீரக்கழலும் அவன் மார்பிற் பூசப்பெற்று விளங்கும் திருநீறும் மாலேயாக விளங்கும் ஐந்தலேயரவும் முடிமேல் விளங்கும் பிறைமதியும் மணநாறும் கொன்றைமலர் மாலேயும் அப்பெருமான் திருக்கையில் விளங்கும் மூவிலேச் சூலமும் ஆகிய இத்திருக்கோலம் எப்பொழுதும் தம் கட்புலஞகத் திகழக்கண்ட சேரமான் பெருமாள் நாயனுர் தாம் கண்ட அவ்வழகிய காட்சியை,

கொடிமேல் இடபமுங் கோவணக் கீளுமோர் கொக்கிறகும்
அடிமேற் கழலும் அகலத்தினீறுமை வாயரவும்
முடிமேல் மதியும் முருகலர் கொன்றையும் மூவிலேய
வடிவேல் வடிவுமென் கண்ணுளெப் போதும் வருகின்றவே. (20)

என்ற பாடலால் ஏனேயோர்க்கும் விளங்க எடுத்துரைக்குந் திறன் படிப்போருள்ளத்தை உருக்குவதாகும்.

கதிர் விரிகின்ற செஞ்ஞாயிறுபோன்று ஒளிர்வது இறைவனது சிவந்த திருமேனி. ஞாயிற்றைச் சூழ்ந் தொளிரும் ஒளிக்கற்றைகள்போல்வது அப்பெருமானது செஞ்சடை. ஞாயிற்றின் கதிர்க்கு ஆற்றாதோடிய காரிருள் போன்று திகழ்வது நஞ்சக்கறையுடைய திருநீலகண்டம். அவ்விருளின் கீழ் விளங்கும் வெண்மேகம் போன்றது அப் பெருமான் திருமேனியிற் பூசப்பெற்றுத் திகழும் திரு வெண்ணீறு எனச் சேரமான் பெருமான் தாம் கண்ட தெய்வக்காட்சியை உவமை கூறி விளக்குவதாக அமைந்தது;

விரிகின்ற ஞாயிறு போன்றதுமேனியஞ் ஞாயிறு சூழ்ந்
தெரிகின்ற வெங்கதி ரொத்தது செஞ்சடை யச்சடைக்கீழ்ச்
சரிகின்ற காரிருள் போன்றது கண்டமக் காரிருட்கீழ்ப்
புரிகின்ற வெண்முகில் போன்றுளதாலெந்தையொண்
பொடியே (26)

என்ற திருப்பாடலாகும்.

இருள் நிறந்தங்கிய திருமிடற்றினால் இரவாகவும், தன் செம்மேனியொளியாற் பகலாகவும், வேதப்பொருளாக மேன்மேலுயர்ந்து சலிப்பின்றி விளங்குதலால் (மரையாகிய மானைத் தாங்குதலால்) மலையாகவும், திருவைந்தெழுத்தின் பொருள் நிரம்பிய திருவடையாளமாகிய கொன்றை மலர் மாலையையணிந்தமையால் கொன்றை பூத்து விளங்கும் முல்லை நிலமாகவும், பாம்புகள் ஊர்ந்து தவழ்தலால் புற்றாகவும், மதிசூடுதலால் விசும்பாகவும் கங்கை நீரை யேற்றலாற் கடலாகவும், ஆட்பாலவர்க்கருளும் அருள் காரணமாகப் பலவேறு திருவுருவங்களை மேற்கொள்ளுத லால் இங்குக் கூறப்படாத வேறுபல வண்ணங்களாகவும் சிவபெருமான் விளங்குமியல்பினை

இருளார் மிடற்றால் இராப் பகல்தன்னால், வரைமறையாற்,
பொருளார் கமழ் கொன்றையால் முல்லை, புற்றரவாடுதலால்,
தெருளார் மதிவிசும்பாற், பௌவந்தெண்புனல்
தாங்குதலால்,
அருளாற் பலபல வண்ணமுமா அரனாயினனே. (57)

என்ற பாடலால் விரித்துரைப்பர்.

தன்னை வழிபடும் மெய்யடியார்களைச் சாதற்றுன்பத்தி னின்றும் நீக்கி நிலமிசை நீடுவாழச் செய்தலாற் காலகால னாகவும், பிறவிப்பிணி தீர்த்தலால் நன்மருந்தாகவும், அடி-

யார்கள் மனத்தால் நினைத்தனவற்றை நினைத்தபொழுதே வரையாது வழங்குதலாற் சிந்தாமணியாகவும், தன் பொருள்சேர் புகழை நாவாரப் பேசுங்கால் தெவிட்டாத இன்சுவை பயத்தலால் வானோரமுதமாகவும், தலைதாழ்த்து வணங்கும் அன்பர்களது உள்ளத்தைக் கவர்ந்து உவகை தருதலால் ஆருயிர் நாயகனாகவும், இங்ஙனம் இறைவன் தன்னடியார்களுக்கு அருளுந்திறம் பலபல வண்ணங்களா மென்பார், அவனை நினைந்து மால்கொண்ட தலைவி கூற்றில் வைத்து,

> சந்தித்த கூற்றுக்குக் கூற்றும் பிணிக்குத் தனிமருந்தாம்
> சிந்திக்கிற் சிந்தா மணியாகித் தித்தித் தமுதமுமாம்
> வந்திக்கின் வந்தெனைமால் செயும் வானோர் வணங்க நின்ற
> அந்திக்க ணுடி யரனடியார்களுக் காவனவே. (83)

எனப் பாடிப் போற்றுகின்றார்.

மக்கள் விரும்பி வேண்டுமியல்பினதாகிய வாழ்நாளிற் பாதிப்பகுதி உறக்கத்திற்குரிய இராப்பொழுதாய்ப் பயனின்றிக் கழிவது. எஞ்சிய பாதி நாட்களில் நெருங்கி வருத்தும் கொடிய நோய்களும் ஒன்றுமறியாப் பிள்ளைமைப் பருவமும் எதுவுஞ் செய்தற்கியலாத முதுமையும் விரவி வருத்துவன. அன்றியும் அச்சம் வெகுளி அவா பொறாமை முதலிய தீக்குணங்கள் பல செறிந்து உள்ளம் உரை செயல்களை மாசு படுத்துவன. ஆதலின் இங்ஙனம் துயரி லங்கும் உலக வாழ்வினைப் பற்றுக்கோடாக எண்ணிச் சாராது என்றும் நிலைபேறுடைய இறைவன் திருவடிகளைச் சார்ந்து உய்திபெறுவோமாக என உலக மக்களை அழைத்துக் கூறும் அறிவுரையாக அமைந்தது,

> வேண்டிய நாட்களிற் பாதியுங்கங்குல் மிகவவற்றுள்
> ஈண்டிய வெந்நோய் முதலது பிள்ளைமை மேலதுமூப்
> பாண்டின அச்சம் வெகுளி அவா அழுக்கா றிங்ஙனே
> மாண்டன சேர்தும் வளர்புன் சடை முக்கண் மாயனையே (99)

என்ற பாடலாகும்.

வழிபட வேண்டுமென்னும் பேரன்பினால் நெஞ்சங் குழைந்து தளிர்க்கவும் கண்களினின்று அன்புநீர் ததும்பி வழியவும் முகம் தாமரை மலரின் பொலிவுடையதாக விளங் கவும் அழகிய சிவந்த மலர்போலும் கைகள் குவிய எட்டுறுப்பும் நிலத்திற் பொருந்த வீழ்ந்து திருவடிகளைப் பணிந்து தம் சொற்களாகிய மலர்களால் அருச்சித்து வழி

பட வல்ல அடியார்கள் தங்குதற்கென்றே தாழ் சடை யாளுகிய இறைவன் வஞ்சனை முதலிய குற்றங்களைக் கடிந்து எல்லாவுலகிற்கும் மேலதாகிய வீட்டுலகத்தைத் திருத்தமுற அமைத்து வைத்துள்ளான் என்பார்,

நெஞ்சந் தளிர்விடக் கண்ணீர் ததும்ப முகமலர
அஞ்செங் கரதலங் கூம்ப அட்டாங்க மடிபணிந்து
தஞ்சொல் மலரால் அணியவல் லார்கட்குத் தாழ்சடையான்
வஞ்சங் கடிந்து திருத்திவைத் தான்பெரு வானகமே. (11)

எனப் பாடிப் போற்றுகின்றார். இத்திருப் பாடலில் இறைவன்பால் நேயமிக்க அடியார்களது இயல்பும் அவர்களுக்கு இறைவன் ஈறிலாப் பேரின்ப வாழ்வை வகுத்தருளிய திறமும் இனிது விளக்கப் பெற்றிருத்தல் அறிந்து இன்புறத் தக்கதாகும்.

சிவபெருமானுக்கு அடியராயினோர் பெறும் இன்ப நிலையும் அவ்விறைவனது அருள்வழி நில்லாத தீயோர் அடையுந் துன்ப நிலையும் இன்னவென விளக்குவது,

வானக மாண்டு மந்தாகினியாடி நந்தாவனஞ் சூழ்
தேனக மாமலர் சூடிச்செல்வோருஞ் சிதவல் சுற்றிக்
கானகந் தேயத் திரிந்திரப் போருங் கனக வண்ணப்
பானிற நீற்றற் கடியரு மல்லாப் படிறருமே. (12)

எனவரும் பாடலாகும் வானுலகத்தையாண்டு ஆகாய கங்கையின் தூய நன்னீரிற் குளித்து அங்குள்ள நந்தவனங்களில் அலர்ந்த தேனிறைந்த நறுமலர்களைச் சூடித் தேவராய்த் துறக்கவின்பங்களை நுகர்பவரும், இவ்வுலகிற் கந்தைத் துணியைச் சுற்றிக்கொண்டு காலிலுள்ள நகந் தேய ஊர் தோறுந் திரிந்து இரந்துண்போரும் முறையே யாவரெனின், பால்போலும் நிறந்தங்கிய திருவெண்ணீற்றினையணிந்த சிவபெருமானுக்கு அடியராயினோரும் அவரல்லாத தீயோருமெனத் தெளிதல் வேண்டும் என்பது இதன் பொருளாகும்.

இறைவனை நினைத்தலும் வாழ்த்தலும் வணங்கலும் ஆகிய வழிபாட்டை மேற்கொள்ளுதற் பொருட்டே இம்மக்கட் பிறவி நமக்கு அளிக்கப்பெற்றுள்ள தென்பதனையும் பெறுதற்கரிய தம்முடம்பினைக் கடவுள் வழிபாட்டிற் பயன் படுத்தாமையால் மனிதர்க்குளதாம் தாழ்வினையும் புலப் படுத்துவது,

சொல்லாதன கொழுநா, வல்லசோதியுட் சோதிதன்பேர்
செல்லாச் செவிமரம், தேறித்தொழாதகை மண், திணிந்த
கல்லாம் நினையாமனம், வணங்காத்தலையும் பொறையாம்,
அல்லா அவயவந்தானும் மனிதர்க் கசேதனமே. (42)

என்ற பாடலாகும். ஞாயிறு திங்கள் விண்மீன்கள் ஆகிய சுடர்ப் பொருள்கள் எல்லாவற்றினுள்ளும் ஆன்மாக்களது அறிவினுள்ளுங் கலந்து நின்று ஒளிதரும் பேரொளிப் பிழம்பாகிய இறைவனது திருப்பெயரைச் சொல்லும் பயிற்சி பெருத மனிதரது நா அவிழ்ச் சுவையின்றித் தமிழ்ச் சுவை யறியாமையால் மண்ணை யுழுதற்குரிய கலப்பையின் கண் அமைந்த இருப்புக்கொழுவெனக் கொள்ளத்தக்க தாகும். இறைவன் திருப்பெயரைக் கேட்டலிற் பழகாத செவி உணர்ச்சியற்ற மரமாம். எவ்வுயிர்க்குந் தலைவன் இறைவனே எனத் தெளிந்து தொழாதவர் தம் கைகள் தமக்குரிய தொழிலைச் செய்யும் ஆற்றல் பெருமையின் மண்ணுல் இயன்றனவேயாம். இறைவனை நினைந்துருகாத மனம் தனக்குரிய அன்பின் நெகிழ்ச்சியினைப் பெருமையால் வலிய கல்லெனவே கொள்ளத்தகும். இறைவனைத் தாழ்ந்து வணங்காத்தலையும் கல்வியறிவின் பயனுகிய பெருமையை எய்தப் பெருமையின் வெறுஞ்சுமையேயாகும். இங்ஙனமே இறைவன் திருவுருவினைக்காணும் பயிற்சியில் லாத கண்கள் அப்பெருமானெழுந்தருளிய திருக்கோயில் களைச் சூழ்ந்து வலம்வராத கால்கள் ஆகிய பிற பொறிகளும் தத்தமக்கேற்ற புலன்களைக்கொள்ளும் ஆற்றல் பெருமையால் அறிவற்றனவெனவே கொள்ளுதற்குரியன என்பது இத்திருப்பாடலின் பொருள். 'கோளில்பொறியிற் குண மிலவே எண்குணத்தான், தாளை வணங்காத் தலை' என்ற திருக்குறளுக்குச் சேரமான் பெருமாள் நாயனர் கூறிய சிறந்த விரிவுரையாக இத்திருப்பாடல் அமைந்துள்ளமை நினைந்து மகிழ்தற்குரியதாகும்.

அழியுமியல்பினதாகிய பயனற்ற உடம்பினைப் பேணிப் பாதுகாத்தற் பொருட்டு நாளும் பொய்யே பேசிப் பலருடைய வீடுகள்தோறுஞ் சென்றிரந்து துன்புறுதற்கிடனுகிய இவ்வுலக வாழ்வில் அழுந்தித் தளராது உய்திபெறுவோம். நெஞ்சே துயர்நீங்கி எழுவாயாக. முன்னெரு காலத்திற் கடலிற் பரவியெழுந்த கொடிய நஞ்சினையுட் கொண்டு தன் மிடற்றிலடக்கிய இறைவன் திருவடிகளைப் புகலாக அடைந்துய்தலே இவ்வுலகிற் பெறுதற்கரிய மக்கள்

யாக்கையை நாம் பெற்றுள்ளமையால் அடைதற்குரிய பெரும் பயனும் என்ற மெய்ம்மையை நினக்குச் சொன் னேன் எனச் சேரமான் பெருமாள் தம் நெஞ்சத்திற்குக் கூறும் அறிவுரையாக அமைந்தது,

படிறுயின சொல்லிப் பாழூடலோம்பிப் பலகடைச்சென்
றிடறு தொழிதும் எழுநெஞ்சமே எரியாடி யெம்மான்
கடறுயின நஞ்ச முண்டபிரான் கழல் சேர்தல்கண்டாய்
உடறு னுளபய னுவசொன்னேனிவ் வுலகினுள்ளே. (13)

என்ற திருப்பாட்டாகும்.

என் நெஞ்சமே இறைவனது திருவடியைப் பணிவா யாக. அப்பெருமானது மெய்ப்புகழை இசை பொருந்தப் பாடியாடுக. குளிர்ந்த நறுமலரால் மாலை புனைந்து அப் பெருமானுக்கு அணிக. சூரியனுடைய பற்களைத் தகர்த்த அவ்விறைவனுக்கே அடிமை செய்யத் துணிக. உடம்பில் திருநீற்றை நிறையப்பூசி அவ்விறைவனது திருவடித் தொண்டினையே விரும்பிச்செய்க. இங்ஙனஞ் செய்வா யாயின் நல்லன வெல்லாம் நிறைந்த சிவலோக வாழ்வை நினக்குக் காட்டியருள்புரிவான். நின் கவலையை நீக்குக எனத் தம் நெஞ்சிற்கு அறிவுறுத்துவதாக அமைந்தது,

பணிபதம் பாடிசை யாடிசையாகப் பனிமலரால்
அணிபதங் கன்பற்கொள் அப்பனை யத்தவற்கேயடிமை
துணிபதங் காமுறு தோலொடு நீறுடல் தூர்த்துநல்ல
தணிபதங் காட்டிடும் சஞ்சல நீயென் றனிநெஞ்சமே (10)

என்ற பாடலாகும். பெரும்பொருளைத் தேடிப் பெற்றும் பெருமையால் செயலொழிந்து நின்றும் திரிந்தும் நோயிற் கிடந்தும் மீண்டும் அலைந்து திரிந்தும் வருந்துதற்கு இடனாகிய இவ்வுலக வாழ்க்கையை விட்டொழிப்பாயாக. மாதொரு கூறனாகிய இறைவன் நாம் பக்குவம் பெற உள் ளந்திருந்திய காலத்தே நம்முடைய தீவினைகளைக் களைந்து அருள்புரிவான் எனத் தம் நெஞ்சத்திற்கு உரைப்பதாக அமைந்தது,

இருந்தன மெய்தியு நின்றுந் திரிந்துங் கிடந்தலைந்தும்
வருந்திய வாழ்க்கை தவிர்த்திடுபோக நெஞ்சே மடவாள்
பொருந்திய பாகத்துப் புண்ணியன் புண்ணியல்
சூலத்தெம்மான்
திருந்திய போதவன் தானேகளையுநந் தீவினையே. (17)

என்ற திருப்பாட்டு. உலக வாழ்க்கை துன்பத்திற் கிடனுவ தென்பதும், உயிர்கள் தம் முயற்சி யொன்றினுலேயே வினைத் தொடக்கினின்றும் மீளமுடியாதென்பதும், வினையின் நீங்கி விளங்கிய அறிவினனுகிய இறைவனே உயிர்களின் உளத்தூய்மைக்கேற்ப அவ்வுயிர்களைப் பாசப்பிணிப்பினின்றும் விடுத்தருளிப் பேரின்பம் வழங்க வல்லவன் என்பதும் ஆகிய உண்மைகள் இத்திருப்பாடலாற் புலப்படுத்தப்பட்டமை காணலாம்.

சேரமான் பெருமாள் நாயனூர் பொறிவாயிலைந்தவித்தானுகிய இறைவன் அருளிய திருவருள் நெறியில் தாம் சென்ற அநுபவத்தை விரித்துரைப்பன,

தீவினையேனை நின்றைவ ரிராப் பகல் செத்தித்தின்ன
மேவின வாழ்க்கை வெறுத்தேன் வெறுத்து விட்டேன் வினையும்
ஓவினது உள்ளந் தெளிந்தது கள்ளங் கடிந்தடைந்தேன்
பாவின செஞ்சடை முக்கண னரணன் பாதங்களே. (18)

சிந்தனை செய்ய மனமமைத்தேன் செப்ப நாவமைத்தேன்
வந்தனை செய்யத் தலையமைத்தேன் கைதொழவமைத்தேன்
பந்தனை செய்வதற் கன்பமைத்தேன் மெய்யரும்ப வைத்தேன்
வெந்த வெண்ணீறணி யீசற்கிவையான் விதித்தனவே. (92)

எனவரும் பாடல்களாம். கொடுவினையேனுகிய என்னை ஐம்புலன்களாகிய வேடர் ஐவரும் செத்தித் தின்னுதலால் அவர்களது தொல்லைக்குட்பட்டு உடலொடு வாழும் இவ்வாழ்க்கையை அருவருத்தேன். வெறுத்து ஒழித்து விட்டேன். எனது பழவினையாகிய பகையும் என்னைவிட்டொழிந்தது. அதனுல் என்னுள்ளமும் தெளிவு பெற்றது. உள்ளத்திலுள்ள வஞ்சனை முதலிய மாசுகளைத் தூவரத்துடைத்து முக்கட்பகவனுகிய சிவபெருமானுடைய திருவடிகளைப் பற்றுக்கோடாகக் கொண்டேன். அப்பெருமானைச் சிந்தித்தற்கென்றே என் மனத்தைத் திருத்தமுடையதாகச் செய்தேன். அவனது பொருள்சேர் புகழைச் சொல்லுதற்கே என் நாவை உரிமைப்படுத்தினேன். அவன் திருவடிகளைத் தொழுதற்கே என் தலையை உரிமையாக்கினேன். அவனைத் தொழுதலாகிய திருப்பணிக்கே என் கைகளைப் பயன்படச் செய்தேன். அவனது திருவருளைக் கடைப்பிடியாகப் பற்றுதற்பொருட்டே

எனது அன்பினை அமைத்தேன். அவனது திருவருட் பண்பினை எண்ணிய அளவே என்னுடல் சிலிர்க்கும் நெகிழ்ச்சியுடையனாயினேன். எல்லாப் பாவங்களையும் சுட்டெரிக்கும் அருள் வண்ணமாகிய திருவெண்ணீற்றினை யணிந்த சிவபெருமானை வழிபடுதற்கு அடியேன் மேற்கொண்ட நியமங்கள் இவையாகும் எனச் சேரமான் பெருமாள் நாயனார் மேற்காட்டிய திருப்பாடல்களால் தாம் பெற்ற பேரின்பத்தினை ஏனையோரும் பெற்று இன்புற வழி கூறய திறம் நினைந்து போற்றத் தக்கதாகும்.

இவ்வுலக வாழ்விலும் மறுமை வாழ்விலும் வேண்டுவார் வேண்டுவதே ஈந்தருளும் பேரருளும் பேராற்றலுமுடையோன் இறைவன் ஒருவனேயாதலின் அவனை வழிபடுவோர்யாண்டும் என்றும் இன்பமே நுகர்வரென்றும் அப்பெருமானை வழிபடாது அவனடியார்களுக்குத் துன்பஞ் செய்யுங் கொடியோர் மீளா நரகத்தில் வீழ்ந்திடர்ப்படுவரென்றும் உலகமக்களுக்கு அறிவுறுத்தக் கருதிய சேரமான் பெருமாள் நாயனார்,

> உலகாளுறுவீர் தொழுமின் விண்ணாள்வீர் பணிமினித்தம்
> பலகாமுறுவீர் நினைமின் பரமனொடொன்ற லுற்றீர்
> நலகாமலரால் அருச்சிமின் நாணரகத்து நிற்கும்
> அலகாமுறுவீர் அரனடியாரை யலைமின்களே. (14)

என நயமுறக்கூறுகின்றார். உலகாளும் பெருவிருப்புடையீர், நும் விருப்பம் ஈடேற வேண்டின் எவ்வுயிர்க்கும் தலைவனாகிய இறைவனைக் கைகூப்பித் தொழுவீராக. வானுலக ஆட்சியை விரும்பியவர்களே இறைவனடிகளில் வீழ்ந்து பணிமின்கள். நாள்தோறும் இவ்வுலகிற் புதிய புதிய இன்பங்களை நுகர விரும்புவீராயின் இறைவனை இடைவிடாது நினைந்து போற்றுமின்கள். ஈசனோடு பிரிப்பின்றியொன்றி இன்புறக் கருதுவீராயின் நறுமலர்களால் அப்பெருமானை நாடோறும் அருச்சித்து வழிபாடு செய்வீராக. நாளும் மீளா நரகினையடைந்து இடர்ப்பட விரும்புவீராயின் இறைவனடியார்களை நாளுந் துன்புறுத்துவீராக என்பது இதன் பொருள். சிவனடித் தொண்டினாற் பெருஞ்சிறப்பெய்திய சேரமான் பெருமாள் நாயனார் 'நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற அருளுக்கத்துடன் உலக மக்களை நோக்கிக் கூறிய அறிவுரையாக அமைந்தது,

கூறுமின் ஈசனைச் செய்மின் குற்றேவல் குளிர்மின் கண்கள்
தேறுமின் சித்தம் தெளிமின் சிவனைச் செறுமின் செற்றம்
ஆறுமின் வேட்கை அறுமின் அவலம் இவைநெறியா
ஏறுமின் வானத் திருமின் விருந்தா விமையவர்க்கே. (70)

என்ற திருப்பாட்டாகும். ஈசனது பொருள்சேர் புகழை நாவாரக் கூறுமின். அவனுக்கே அடித்தொண்டு செய்மின். அவனது திருமேனியைக் கண்டு கண்குளிரப் பெறுமின். சிந்தையை ஒரு நெறியில் வைத்துத் தெளிவுபெறுமின். சிவனே முழுமுதற் கடவுளென்று தெளியுங்கள். சினத்தைத் தணிமின். உலகியற் பொருளிற் செல்லும் அவாவை அகற்றுமின். துக்கத்தை நீக்குமின். இங்குக் கூறிய இந்நியமங்களையே வழியாகக் கொண்டு துறக்கஞ் சென்று இன்பமே நுகருந்தேவர்க்கு விருந்தினராகத் தங்கி அவர்களால் உபசரிக்கப் பெறுவீராக என்பது இதன் பொருளாகும். இங்ஙனமே இப்பொன்வண்ண தந்தாத்தியின் பொருள் நலங் காணப் புகின் மிகவிரியுமாதலின் இவ்வளவில் அமைகின்றேம்.

தீவினையின் பயனுகத் தப்பி உய்தற்கியலாத கொடிய நரகத்தையடைந்து துன்புற்ருலும், அன்றி நல்வினை காரணமாக அத்துன்பத் தொடர்பினின்று நீங்கிஞலும், மீளவும் இவ்வுலகிற் போந்து ஊர்வன நடப்பன பிறப்பன பறப்பனவாகிய ஆற்றலற்ற தாழ்ந்த பிறவிகளிற் பிறந்திறந்து வருந்திஞலும், இவ்வரச வாழ்வில் நெடுங்காலம் நிலை பெற்றிருந்தாலும், உயிர்களுக்கு நல்லறிவு வளர நான்மறைகளை அருளிச் செய்தவனும் சாதல் நீங்க நஞ்சினையுண்டாக்கிய கரிய திருமிடற்றையுடையவனுமாகிய இறைவனுடைய திருவடிகளை மறவாது நினைந்து போற்றுதலொன்றே இறைவன்பால் வேண்டத்தகும் முடிவான வரமாகுமென்று எண்ணியொழுகியவர் சேரமான் பெருமாள் நாயனுர். இச்செய்தி,

பொய்யா நரகம் புகினுந் துறக்கினும் போந்து புக்கிங்
குய்யா வுடம்பினெ டூர்வ நடப்ப பறப்ப வென்று
நையா விளியினும் நானில மாளினும் நான்மறைசேர்
மையார் மிடற்ரு னடிமறவா வரம் வேண்டுவனே. (98)

எனவரும் அவரது வேண்டுகோளால் இனிது புலனுதல் காணலாம். எந்நிலையிலிருந்தாலும் இறைவன் திருவடியை

மறவாதிருத்தலே உயிர்களுக்குரிய உறுதிப் பொருளாகும் என்ற மெய்ம்மையினையறிவுறுத்தும் இத்திருப்பாடல்,

புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா வுன்னடி யென்மனத்தே
வழுவா திருக்க வரந்தர வேண்டுமிவ் வையகத்தே
தொழுவார்க் கிரங்கி யிருந்தருள் செய்பாதிரிப் புலியூர்ச்
செழுநீர்ப் புனற் கங்கை செஞ்சடைமேல் வைத்த
தீவண்ணனே.

எனவரும் திருநாவுக்கரசர் வாய்மொழியை அடியொற்றி அமைந்தமை உணர்ந்து மகிழத்தக்கதாகும்.

மும்மணிக்கோவையென்பது, வேறுவேறு நிறமுடைய மூவகை மணிகளாற் கோக்கப் பெற்ற மாலைபோன்று ஆசிரியம் வெண்பா கட்டளைக் கலித்துறை என்ற மூவகைச் செய்யுட்களால் அந்தாதித் தொடையமைய இயற்றப்பெறும் செந்தமிழ்ப் பிரபந்தமாகும். இப்பிர பந்தம் முப்பது பாடல்களால் நிறைவுபெறுதல் வேண்டு மென்பது விதி. இப்பொழுது கிடைத்துள்ள தமிழ் நூல் களுள் மும்மணிக்கோவையென்னும் இப்பிரபந்தத்திற்குரிய மூல இலக்கியமாக விளங்குவது சேரமான் பெருமாள் நாயனார் அருளிச்செய்த திருவாரூர் மும்மணிக்கோவை யொன்றேயாம். திருவாரூரிற் கோயில் கொண்டு எழுந் தருளிய சிவபெருமானைப் போற்றுவதாதலின் இது திரு வாரூர் மும்மணிக்கோவையென்னும் பெயர்த்தாயிற்று. தில்லைச் சிற்றம்பலத்தையடைந்து பொன் வண்ணத் திரு வந்தாதி பாடிப் போற்றிய சேரமான் பெருமாள் நாயனார் திருவாரூரையடைந்து நம்பியாரூரைத்தோழராகப் பெற்று அவருடன் பூங்கோயிலமர்ந்த பெருமானைப் போற்றிப் பரவும் நிலையில் இத்திருமும்மணிக்கோவையைப் பாடியரு ளினரென்பதும், தம் தோழராகிய நம்பியாரூரர் கேட்டு மகிழ இதனை இறைவர் திருமுன்பு அரங்கேற்றினரென் பதும் வரலாறு. கட்டளைக் கலித்துறையும் வெண்பாவு மாகிய இருவகைப் பாக்களும் ஒன்றன்பின் ஒன்றாக அந்தாதித் தொடையால் தொடுத்துவர இருபது செய்யுட் களால் இயன்றது இரட்டைமணிமாலையென்பதும், அதனை முதன் முதல் அருளிச் செய்தவர் காரைக்காலம்மையார் என்பதும் முன்னர்க்கூறப்பட்டன. அவ்விருவகைப் பாக் களுடன் ஆசிரியப் பாவையும் ஒரு மணியாகக் கொண்டு மும்மணிக் கோவையென்ற செந்தமிழ்ப் பனுவலை முதன்

முதல் இயற்றியவர் சேரமான் பெருமாள் நாயனுரேயாவர். நக்கீர தேவ நாயனுர் பாடிய திருவலஞ்சுழி மும்மணிக் கோவை, இளம்பெருமானடிகள் பாடிய சிவபெருமான் திருமும்மணிக்கோவை, அதிராவடிகள் பாடிய மூத்த பிள்ளையார் திருமும்மணிக்கோவை பட்டினத்தடிகள் பாடிய திருக்கழுமல மும்மணிகோவை, திருவிடைமருதூர் மும்மணிக்கோவை, நம்பியாண்டார் நம்பி பாடிய ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக்கோவை ஆகிய இவை யாவும் சேரமான் பெருமாள் பாடிய இத் திருவாரூர் மும்மணிக் கோவையின் அமைப்பை அடியொற்றியெழுந்த செந் தமிழ்ப்பனுவல்களேயாம்.

திருவாரூர் மும்மணிக்கோவையிலுள்ள செய்யுட்கள் முப்பதும் அன்பினைந்திணையாகிய அகத்திணையைப் பொருளாகக் கொண்டு பாடப்பெற்றனவாகும். திருவாரூரில் திருக்கோயில் கொண்டருளிய சிவபெருமானைப் பாட்டுடைத் தலைவனுகக்கொண்டு உலக நூற்பொருளாகிய அகத்திணையொழுகலாற்றைப் புலப்படுத்துவது இம்மும்மணிக்கோவையாதலின், அறிவனூற்பொருளும் உலகநூல் வழக்கும் என இருபொருளும் நுதலி இயற்றப்பெற்றது இதுவெனல் பொருந்தும். உமையொருபாகத்திறைவனுகிய சிவபெருமான் வானின்றிழிந்த கங்கைப் பெருவெள்ளத்தின் வேகத்தைக் கெடுத்து அதனைத் தன் செஞ்சடைக்கண் அடக்கியருளியதும், தேயுந்திங்களை யணிந்து உய்வித்ததும், ஒருவரும் உண்ணுத நஞ்சினையுண்டு மிடற்றிலடக்கி விண்ணேரை வாழ்வித்ததும், மேருமலையை வில்லாக வளைத்ததும், திரிபுரத்தை யெரித்ததும், தக்கனது வேள்வியைச் சிதைத்ததும், கூற்றெனப் பெரிய கொடுந்திறலாளனது ஆற்றலையழித்ததும், மன்மதனை எரித்ததும், யானையையுரித்துப் போர்த்ததும் அருச்சுனற்கு அருள் செய்ததும் ஆகிய செய்திகளும், அண்டத்துக்கு அப்பாலனுகிய அவ்விறைவன் அடியார்களது பிறவிநோய் நீங்க அருள்புரிதற் பொருட்டு அரிவை பாகத்து அண்ணலாய்த் திருவுருக்கொண்டு திருவாரூரிற் கோயில் கொண்டெழுந்தருளிய எளிமைத் திறமும், உலக மக்களை வஞ்சித்தலை மேற்கொண்டு பொய்யே வழிபாடு செய்தொழுகும் வஞ்சகரையும் மெய்யடியாராகத் திருத்தி ஆட்கொள்ளும் பேரருளாளனுக விளங்கும் அவனது அருளின் நீர்மையும், திருக்கடவூர், சிராமலை,

திருமறைக்காடு, திருமாந்துறை என்ற திருத்தலங்களில் அப்பெருமான் வீற்றிருந்து அருள் புரிதலும் ஆகிய செய்திகள் இப்பிரபந்தத்துள் ஆங்காங்கே குறிக்கப் பெற்றுள்ளன.

திருவாரூரெல்லையில் தெய்வங்களுக்கு உணவு படைத்தற்குரிய பலிபீடக்கல் அமைந்தமையும் (1) தேவர்கள் சிவபெருமானை வழிபடுதற்பொருட்டு நள்ளிரவில் இவ்வுலகத்திற்கு வருதலும் (9) பகைவரொடுபொருது இறந்துபட்ட வீரருடைய பெயரும் அவர்கள் போர்க்களத்திற் காட்டிய பேராற்றலுமாகியவற்றைக் கல்லிற் பொறித்து அக்கல்லைத் தெய்வமாக நட்டு வழிபடும் வழக்கமுண்மையும் (16) திருவாரூர்க் கடைவீதியிற் கண்ணாடியிற் பதுமையின் நிழல் படியப் பாவைக்கூத்து நிகழும் செய்தியும் (49) திருவாரூரில் திண்ணிதின் அமைந்த கரைகளையுடைய பெருங்குளம் இருந்தமையும் (22) அவ்வூரில் பெருவிழாவின் ஆரவாரமும் (25) இம் மும்மணிக்கோவையிற் குறிக்கப் பட்டன.

கார்ப்பருவங் கண்டிரங்கிய தலைமகளது பிரிவாற்றாமை கண்டு தோழி கவல்வதாக அமைந்தது, இம் மும்மணிக் கோவையின் முதற்பாடல். "விரிந்து பரந்த பெருங்கடலை முகந்து சேறுபட்டாற்போன்று விளங்குங் கருநிற மேகமானது மலைமுகட்டிலேறி நுண்ணிய மழைத்துளிகளைப் பொழிந்தது. அது கண்ட தலைமகள் காதிலணிந்த குழைகள் மின்னலையொத்து விளங்கவும் புருவம் வானவில்லை ஒத்துத் தோன்றவும் சிவந்தவாய் இந்திரகோபப் பூச்சியின் நிறத்தினைப் புலப்படுத்தவும் கைகளாகிய காந்தள் மலரவும் பற்களாகிய முல்லைகள் அரும்பவும் கூந்தலும் தேமலும் கொன்றையைப் போன்று தோன்றவும் வனப்புமிக்க மேனியின் சாயல் மயிலின் தோற்றத்தினைப் புலப்படுத்திக் காட்டவும் உள்ளத்தே நிரம்பிய ஆற்றாமையால் உளதாகிய பெருமூச்சு ஊதைக்காற்றினையொத்து மேன்மேல் எழுந்து இயங்கவும் கண்ணீராகிய பெருமழையைப் பொழிந்தமையால், அந்நீர் பெருகிக் கண்ணிற் பூசப்பெற்ற அஞ்சனச் சேற்றையலப்பி மார்பிலணியப்பெற்ற மணி பொன் வயிரம் அகில் சந்தனம் ஆகியவற்றையலைத்துக் கொங்கைகளாகிய மலைமுகட்டிடையே இழிதரக் கார்ப்பருவத்தின் தோற்றம் உடையளாயினள். அவளைப் பிரிந்துசென்ற காதலர் தாம்

குறித்த பருவத்தே வாராமையால் அவரதுமனம், பொங்கி வரும் கங்கை வெள்ளத்தின் வேகத்தைத்தணித்த நீண்ட சடையினையுடைய உமையொருபாகத்து இறைவர் கோயில் கொண்டருளிய திருவாரூரெல்லையிற் சிறுதெய்வங்களுக்கு உயிர்ப்பலியிடுதற்பொருட்டமைந்த பலிபீடக்கல்தானோ" எனத் தோழி படருழந்து வருந்துகின்றாள். கருநிறமேகம் மலைமுகடேறி நுண்துளி பொழிதலாகிய முதல்மழையைக் கண்ட அளவே தலைமகள் கார்ப்பருவத்தின் முதிர்ந்த நிலையினையொத்துக் கண்ணீர் சொரிந்து வருந்துகின்றாள்; இப்பருவம் முதிர்ந்தால் இவள்நிலை யாதாகுமோ எனவும், இறைவன் கங்கைப்பெருவெள்ளத்தின் வேகத்தையடக்கி உமாதேவியாரை ஒருபாகத்திற்கொண்டு பிரியாது விளங்குதல் போல இவளது கண்ணீர்ப் பெருவெள்ளத்தைத் தவிர்த்து இவளைப்பிரியாதுஉடனுறைந்து தலையளிசெய்தற்குரிய காதலர் தமது கடமையை மறந்து உரிய காலத்தில் வாராது தாழ்த்தமையால் அவரதுமனம் அன்புடையாரது துயர்கண்டு நெகிழும் மென்மையுடையதன்றெனவும், சிற்றுயிர்களைப் பலியிடுதற்கிடனாகத் திருவாரூரெல்லையில் அமைந்த பலிபீடக்கல்லோ இதுவென ஐயுறுதற்குரிய கொடுமையுடையதாயிற்றெனவும் தோழி நினைத்திரங்குங் குறிப்பு இப்பாடலில் இனிது புலனாதல் காணலாம்.

தெய்வத்தின் திருவருளால் ஒருபொழிலிடை உருவும் திருவுமிக்க தலைமகளொருத்தியைக் கண்ணுற்றுக் கூடிப் பிரிந்ததலைமகன், தன்னுயிரினுஞ்சிறந்த அவளை மீண்டும் அடைதற்கியலாத அருமைநிலையை எண்ணி வாட்டமுற, அதுகண்டு அவனது உளநிலையை வினவியறிந்த பாங்கன், 'இத்துயர்நிலை நினது தலைமைப்பாட்டிற்கு ஏலாது' என அவனை இடித்துக்கூறக்கேட்ட தலைவன் எதிர்மறுத்துக் கூறுதலும், தலைமகளது உயிர்த்தோழியின் உடன்பாடு பெற்றுத் தலைவியையடையக் கருதிய தலைமகன், தலைவியும் தோழியும் ஒருங்கிருந்த புனத்திடைச்சென்று 'என்னால் துரத்தப்பட்டோடிய மதயானை இங்கு வந்ததோ' என வினவுதலும், இங்ஙனம் இரந்துபின்னின்ற தலைவனது பேரன்பினையுணர்ந்த தோழி தலைமகளைக் குறைநயப்பித்தலும், தன் ஆயத்திடையே விருந்தினனாகப் புக்க தலைவனால் தான் அடைந்த வேறுபாட்டினைத் தலைவி தோழிக்குக் கூறுதலும், நள்ளிரவில் தலைவனது தேர் வரவினைத் தோழி

தலைவிக்கு அறிவித்தலும், இரவுக்குறி வந்தொழுகுந் தலைவனை நோக்கி வழியிடையுளவாந் தீங்கு நினைந்து இரங்கும் தலைமகளது ஆற்றாமை கூறி இரவு வருதலைத் தவிர்க என விலக்குமுகத்தால் தலைவியை விரைந்து மணந்துகொள்க எனத் தோழி தலைவனை வற்புறுத்தலும் ஆகிய குறிஞ்சித்திணை பற்றிய செய்திகளும், களவொழுக்க மொழுகிய தலைமகன் தலைமகளை ஒருவருமறியாதவாறு உடனழைத்துச் சென்றவழி அஃதுணர்ந்த நற்றாய் செவிலித்தாய் ஆகிய இருவரும் சுரத்து அருமையும் தலைமகளது மென்மைத் தன்மையும் நினைந்து வருந்துதலும், தலைமகளைச் தேடிச்சென்ற செவிலி சுரத்திடைக் குரவொடு புலம்புதலும் ஆகிய பாலைத்திணை பற்றிய செய்திகளும், தலைவியை மணந்து மனையறம் நிகழ்த்தும் தலைவன் பொருள் முதலியன கருதிப் பிரிந்து செல்லுங்கால் அவன் மீண்டு வருவதாகக் குறிக்கப்பட்ட கார்காலத்தின் வரவும், அப்பருவத்தே தலைவனது வருகையை எதிர்நோக்கிய தலைமகள் அவன் வாராமையெண்ணி வருந்துதலும், குறித்த வண்ணம் தலைமகனது தேர்வரக் கண்ட தலைமகள் மெலிவு அகன்று பொலிவு பெற்றமைகண்டு தோழி மகிழ்தலும் ஆகிய முல்லைத்திணைபற்றிய செய்திகளும், தலைவன் பரத்தையிற் பிரிந்தவழி வருத்தமுற்ற தலைவி அவனை இடைவிடாதெண்ணிய தன்னெஞ்சொடுபுலத்தலும், அவ்வழி வாயிலாகப்புக்க பாணனை வெகுண்டுரைத்தலும், தலைவன் ஆற்றாமையே வாயிலாகத் தன்னையணைந்தவழி ஊடுதலும் ஆகிய மருதத்திணை பற்றிய செய்திகளும், தலைவனைப் பிரிந்துறைதலாற்றாத தலைமகள் கடலொடு கூறி வருந்துதலாகிய நெய்தற்றிணை பற்றிய செய்தியும் என அன்பினைந் திணைபற்றிய ஒழுகலாறுகளை இத் திருவாரூர் மும்மணிக் கோவையில் விரித்துரைக்கப் பெற்றுள்ளன. இந்நூல் பத்துப்பாட்டும் எட்டுத்தொகையுமாகிய சங்க இலக்கியங் களிற் சேரமான் பெருமாள் நாயனார்க்கு உள்ள நிரம்பிய பயிற்சியையும் மக்களைப் பொருளாகக் கொண்டு பாடுதற்கு உரிய அகனைந்திணைப் பாடல்களில் எல்லாம் வல்ல இறைவனைப் பாட்டுடைத் தலைவனாக வைத்துப் போற்று முகத்தால் உலகநூல் வழக்கும் அறிவனூற் பொருளும் ஆகிய இருதிறமும் விரவப் புலனெறிவழக்கங் கண்ட அவரது திருவருட் புலமைத் திறத்தையும் இனிது விளக்குவதாகும்.

தலைமகனது பேரன்பினைத் தலைமகளுக்கு எடுத்து உரைத்துக் குறைநயப்பிக்கக் கருதிய தோழி, இதனைத் தலைமகளுக்கு வெளிப்படச் சொல்வேனாயின் இவள் மறுக்கவும் கூடுமெனக் கருதி, "ஆரூர்ப்பெருமான்றன் அரும்பெறல் மகனாகிய முருகவேளைப் போன்று பேரழகு உடையனாய் வேலேந்திய ஒருவன் நம் புனத்தின்கண் பலகாலும் வந்தொழுகுகின்றான். பகற்பொழுது கழிந்தாலும் இப்புனங்காக்குந் தொழிலை விட்டு நீங்காதுள்ளான். அவன் திறத்து நாம் செய்யத்தக்கது யாது" எனத் தலைமகளோடு உசாவி, அவள் உள்ளக் குறிப்பினை அறிவதாக அமைந்தது,

> பொழுது கழிந்தாலும் பூம்புனங்காத் தெள்கி
> எழுது கொடியிடையாய் ஏகான் — தொழுதமரர்
> முன்னஞ்சேர் மொய்கழலான் முக்கணான் நான்மறையான்
> மன்னுஞ்சேய் போலொருவன் வந்து.

என்ற பாடலாகும்.

> தாதேய் மலர்க்குஞ்சி யஞ்சிறை வண்டுதண் டேன்பருகித்
> தேதே யெனுந்தில்லை யோன்சே யெனச்சின வேலொருவர்
> மாதே புனத்திடை வாளா வருவர்வந் தியாதுஞ் சொல்லார்
> யாதே செயத்தக் கதுமது வார்குழ லேந்திழையே.

எனவரும் திருச்சிற்றம்பலக் கோவைச் செய்யுள் குறிப்பறிதலென்னும் துறையில் மேற்காட்டிய செய்யுளின் விளக்கமாய் அமைந்திருத்தல் காணலாம்.

தலைமகன் தலைமகளை ஒருவரும் அறியாவாறு உடனழைத்துச் சென்றவழிச் சுரத்தருமை நினைந்து செவிலித்தாய் வருந்துகின்றாள். "புனத்தில் வாழும் மயில் போலுஞ் சாயலையும் மலரணிந்த கூந்தலையும் உடைய என்மகள், தன் மனைப் பெருஞ்செல்வத்தில் மகிழ்ச்சியடையாதவளாய், அயலானொருவன் தன் காதலனாக அவன்பின்னே ஞாயிறு நடுநின்று கடுவெயிலெறிப்பச் செல்வோரது உடல் நிழல் அடியகத்தே மறையும் அனல் வீசும் பாலை நிலத்திடையே கொடுந்தொழில் புரியும் வேடுவரது துடியோசைக்கு அஞ்சி மெய்நடுங்குந் தன்மையளாகி முள்ளுடைய ஈந்தும் உலர்ந்த அடியுடைய இலவ மரமும் விளா மரமும் பரவிய வெளியிடத்தே கடுங் குரலுடைய நாய்களைக் கட்டிய கயிற்றால் உராயப்பட்டுத் தேய்ந்த கம்பத்தின்மேல் மரைமான் தோலால் வேயப்

பெற்ற சிறு குடிசையிலே வாழும் நரைமூதாட்டியராகிய மறத்தியர்க்கு விருந்தாயினள் போலும்'' எனச் செவிலி நினைந்திரங்குவதாக அமைந்தது

புனமயிற் சாயற் பூங்குழல் மடந்தை
மனைமலி செல்வ மகிழா ளாகி
ஏதில னொருவன் காதலனாக
விடுசுடர் நடுவணின் றடுதலி னிழலும்
அடியகத் தொளிக்கும் ஆரழற் கானத்து
வெவ்வினை வேடர் துடிக்குரல் வெரீஇ
மெய்விதி ரெறியுஞ் செவ்வியளாகி
முள்ளிலை யீந்து முளிதா ளிலவமும்
வெள்ளிலும் பரந்த வெள்ளிடை மருங்கிற்
கடுங்குரற் கதநாய் நெடுந்தொடர் பிணித்துப்
பாசந் தின்றதேய்கா லும்பர்
மரையதள் வேய்ந்த மயிர்ப்புன் குரம்பை
விரிநரைக் கூந்தல் வெள்வாய் மறத்தியர்
விருந்தாயினள் கொல் தானே, திருந்தாக்
கூற்றெனப் பெயரிய கொடுந்தொழி லொருவன்
ஆற்றல் செற்ற அண்ண லாரூர்ச்
செய்வளர் கமலச் சீறடிக்
கொவ்வைச் செவ்வாய்க் குயின்மொழிக் கொடியே.

என்ற பாடலாகும். இஃது அகநானூற்றிற் குடவாயிற் கீரத்தனர் பாடிய 315-ம் பாடலோடு ஒப்புநோக்கி யுணரத் தகுவதாகும்.

''நீர்மலி வேணியனாகிய இறைவனால் தலையளிக்கப் பெற்ற மதிபோலும் முகத்தினையுடைய என்மகள் என்னுடன் மலரணையிலே துயிலுங்கால் அவ்வணையிற் பிரிந்து இடப்பக்கமாக யான்மாறினும் அஞ்சுமியல் பினள். அத்தகையவள் இப்பொழுது நடத்தற்கரிய வெம்மை மிக்க பெரிய சுரத்திடையே சென்றனள். என் மகளுக்கு நேர்ந்த இத்துயரங்கள் அவளால் பொறுக்கத்தக்கன அல்லவே'' என மகட்போக்கிய செவிலித்தாய் வருந்துவதாக அமைந்தது,

தடப்பாற் புனற்சடைச் சங்கரன் தண்மதி போன்முகத்து
மடப்பான் மடந்தை மலரணைச் சேக்கையிற் பாகம்பிரீஇ
இடப்பாற் றிரியின் வெருவும் இருஞ்சுரஞ் சென்றனளால்
படப்பாலனவல்ல வாற்றமியேன்தையல் பட்டனவே,

என்ற பாடலாகும்.

தலைவனுடன் சென்ற தலைவியைத் தேடிச் சுரத்திடைச் சென்ற செவிலி, குரவொடு வருந்திக் கூறுவதாக அமைந்தது,

பட்டோர் பெயரும் ஆற்றலு மெழுதி
நட்ட கல்லும் மூதூர் நத்தமும்
பரலமுரம் பதரு மல்லது படுமழை
வரன்முறை யறியா வல்வெயிற் கானத்துத்
தேனிவர் கோதை செல்ல மானினம்
அஞ்சிலோதி நோக்கிற் கழிந்து
நெஞ்செரி வுடைமையின் விலக்காது விடுக
கொங்கைக் கழிந்து குன்றிடை யடைந்த
கொங்கிவர் கோங்கமுஞ் செலவுடன் படுக
மென்றோட் குடைந்து வெயினிலை நின்ற
குன்ற வேய்களுங் கூற்றடைந் தொழிக
மாயிருங் கடற்றிடை வைகலாயிரம்
பாவையை வளர்ப்போய் அண்ணணிப் பாவையை
விலக்காது பிழைத்தனைமாதோ நலத்தகு
அலைபுன லாரூர் அமர்ந்துறையமுதன்
கலையமர் கையன் கண்ணுதலெந்தை
தொங்கலஞ் சடைமுடிக் கணிந்த
கொங்கலர் கண்ணி யாயின குரவே.

எனவரும் செய்யுளாகும். 'அலைமறியும் புனல் சூழ்ந்த திருவாரூரில் எழுந்தருளிய அமுதம் போல்வானும் கலை மானையேந்திய கையினனும் ஆகிய கண்ணுதற் பெருமானது சடைமுடியில் அணியத் தக்க நறுமலர்களைப் பூக்கும் குரவே, போர்க்களத்திற் பொருதுபட்ட வீரர்களது பெயரையும் பேராற்றலையும் பொறித்து நடப்பட்ட நடுகற் களும் பழமையுடையதாயமைந்த ஊரிற் குடியிருப்பிடங் களும் பருக்கைக் கற்கள் நிரம்பிய வன்னிலவழியும் அன்றி மழை பெய்த வளமறியாத வெயிலாற் கொதிக்கும் இவ் வெஞ்சுரத்தே தேனிறைந்த மாலையை யணிந்த என் மகள் செல்லக்கண்டும் அவளது கண்ணழகிற்குத் தாம் தோற்றமை பற்றி மானினங்கள் விலக்காதுவிடுக. கொங்கைக்குத் தோற்றமையால் குன்றிடையடைந்து நோற்கும் கோங்கமும் அவளது போக்கிற்கு உடன்படுக. அவளுடைய தோளிற்குத் தோற்று வெயிலிடை நோற்று நின்ற மூங்கில்களும் வாயடைத்திருந்திடுக. பெரிய சுரத் தினிடையே நாள்தோறும் ஆயிரக்கணக்கான பாவைகளை (பாவைபோலும் நறுமலர்க் காய்களை) ஈன்று வளர்க்கும்

இயல்புடைய தாயகிய நீ, நினக்கு மிகவும் அணியளாய் வந்த என் பாவையைத் தடுத்து நிறுத்திக் காக்கத் தவறி விட்டாய். அருளாளனாகிய சிவபெருமானது சடைமுடிக்கு அணியாகும் சிறப்புடைய நறுமலர்களைப் பூக்கும் நினக்கு இது நன்றாமோ" எனச் செவிலி குரவை நோக்கி வருந்தியதாக அமைந்த இப்பாடல், சங்க இலக்கியத்திற் பாலைநில இயல்புரைக்கும் செய்யுட்களை அடியொற்றிய தாய்ச் சிவபெருமானது அருளின் நீர்மையையும் புலப் படுத்தி நிற்றல் அறிந்து இன்புறத்தக்கதாகும்.

பரத்தையிற் பிரிந்த தலைவன் பொருட்டு வாயிலாக வந்த பாணனொடு தோழி வெகுண்டு கூறுவதாக அமைந்தது,

மனையுறை குருவி வளைவாய்ச் சேவல்
சினைமுதிர் பேடைச் செவ்வி நோக்கி
ஈனி லிழைக்க வேண்டி யாறு
அன்பு பொறைகூர மேன்மேல் முயங்கிக்
கண்ணுடைக் கரும்பி னுண்டோடு கவரும்
பெருவளந் தழீஇய பீடுசால் கிடக்கை
வருபுன லூரன் பார்வையாகி
மடக்கொடி மாதர்க்கு வலையாய்த்தோன்றிப்
படிற்று வாய்மொழி பலபா ராட்டி
உள்ளத் துள்ளது தெள்ளிதிற் கரந்து
கள்ள நோக்கமொடு கைதொழு திறைஞ்சி
எம்மிலோயே பாண, அவனேல்
அமரரு மறியா ஆதிமூர்த்தி
குமரன் றாதை குளிர்சடை யிறைவன்
அறைகழ லெந்தை யாரூராவணத்
துறையிற் றூக்கும் எழில்மென் காட்சிக்
கண்ணடி யனைய நீர்மைப்
பண்ணுடைச் சொல்லியர் தம்பாலோனே.

என்பதாகும். "பாணனே, வீட்டின் இறப்பில் வாழும் வளைந்த வாயினையுடைய குருவிச் சேவலானது தன்பெடை கருமுற்றிய செவ்வி நோக்கி, அது தங்கிக் கருவுயிர்த்தற் குரிய அறையினை யமைக்கக் கருதி நீங்காத பேரன்பினால் தன்பேடையைப் பலகாலுந் தழுவி அரிதிற் பிரிந்து சென்று கரும்பினது நுண்ணிய பூந்தோடுகளைக் கவர்ந்துவரும் நீர்வளம் நிறைந்த ஊரினையுடைய தலைவனுக்கு அவன் விரும்பிய பரத்தையரைப் பிணித்தற்குரிய பார்வை விலங்காகவும் இளமை பொருந்திய பூங்கொடி போலும்

பரத்தையர்கள் தலைவனை அகப்படுத்தற் பொருட்டு விரித்த வலையாகவும் தோன்றி வஞ்சனை மொழிகள் பலவற்றை அடுத்தடுத்துரைத்து உள்ளக் கருத்தினை யுணராதபடி மறைத்துக்கொண்டு கள்வனைப் போல விழித்துக் கைகளால் தொழுது வணங்கி நீ எமது மனை வாயிலில் நிற்கின்றாய். நின்னை இங்குத் தூதாக அனுப்பிய தலைவனோவெனில் தேவர்களால் அறியப்படாத முழுமுதற் கடவுளும் முருகனுக்குத் தந்தையும் ஆகிய இறைவன் வீற்றிருந்தருளுந் திருவாரூர்க் கடைவீதியில் அமைக்கப் பட்டுள்ள வனப்புமிக்க கண்ணாடி தனக்குரிய தன்மை யென்பதொன்று மின்றித் தன்னெதிர்ப்பட்ட பொருளின் தன்மையுடையதாய் விளங்குதல் போலத் தனக்குரிய இயல்பு ஒரு சிறிதுமின்றிப் பண்ணுடைச் சொல்லியராகிய பரத்தையர் தன்மையனாய் அவர் கருத்தின்வழி யடங்கி ஒழுகுகின்றான். இந்நிலையில் நின்னுடைய வாய்மை போலும் பொய்மொழிகளை யாம் ஏற்றுக்கொள்ள மாட்டோம்' எனத் தோழி பாணனைச் சினந்து கூறு கின்றாள். இதன்கண் சேவற் குருவி கருமுற்றிய தனது பேடைக்கு ஈனில் (கருவுயிர்க்கும் அறை) அமைத்துப் பாதுகாத்தலைப் போன்று தன் காதலி கருவுயிர்த்தற்கு முன்னரே வேண்டுவன செய்து மனைவயிற்றங்கிப் பாது காத்தற்குரிய தலைவன், உரிய காலத்தில் தான் செய்ய வேண்டிய கடமையை மறந்தது மன்றிப் புறத்தொழுக்கிற் சென்று தன் காதலிக்கு மேலுந் துன்பம் விளைக்கின்றான் இது நன்றாமோ? எனத் தோழி தலைவனது புறத்தொழுக் கினைக் குறிப்பால் இகழ்ந்துரைத்தல் காணலாம். வாயில் வேண்டிச் சென்ற பாணற்குத் தோழி சொல்லி வாயில் மறுத்ததாகக் குறுந்தொகையிலமைந்த

> யாரினு மினியன் பேரன் பினனே
> உள்ளூர்க் குரீஇத் துள்ளுநடைச் சேவல்
> சூன்முதிர் பேடைக் கீனி லிழைஇயர்
> தேம்பொதிக் கொண்ட தீங்கழைக் கரும்பின்
> நாறு வெண்பூக் கொழுதும்
> யாணரூரன் பாணன் வாயே.

என்ற பாடற் பொருளை இச்செய்யுள் அடியொற்றி அமைந்துள்ளது. இவ்வாறே இத் திரு மும்மணிக்கோவை யில் வரும் திருப்பாட்டுக்கள் பலவும் சங்கத் தொகை

நூற் கருத்துக்களை உட்கொண்டனவாதல் அறிந்து மகிழத் தக்கதாகும்.

கரிய மேகத்திடையே தோன்றிய மின்னலுக்கு உறையினின்றும் உருவிய வாளினையும், தலைவனுந் தலைவியும் உடன் போகிய வெஞ்சுரத்திற்கு மன்மதன் வெந்து நீருக இறைவன் கடைக்கண்ணிற் றேன்றிய தீயினையும், தலைவியின் நிறை நீங்கா நெஞ்சத்திற்குத் திருவாரூரிற் சிறை நீங்காச் செம்புனலையும், இறைவனது திருநீல கண்டத்திற்குக் கரும்பாம்பு பிறையைக் கவ்விய காட்சியினையும், பரதவர்கள் கடலில் வீசிய வலையை யிழுத்தற்குக் குடரை யிழுக்குந் தோற்றத்தினையும், ஆயத்திடையே விருந்தினனுகப் புக்க தலைவனது நோக்கினுல் தலைவி யடைந்த மெய் வேறுபாட்டிற்கு நீரிற்பட்ட எண்ணெய்த் துளி அந்நீர் முழுதும் பரவி யொன்ருகிய காட்சியினையும் உவமைகளாக எடுத்தாண்ட இம் மும்மணிக்கோவைப் பகுதிகள் படித்து இன்புறத் தக்கனவாம்.

உலா என்பது, தமிழிலுள்ள தொண்ணூற்ருறு பிரபந்தங்களுள் ஒன்று. பேதை முதல் பேரிளம்பெண் ஈருகவுள்ள ஏழு பருவத்து மகளிரும் கண்டு காதல்கூரும் நிலையில் தன்னிகரற்ற தலைவனொருவன் நகரில் உலாப்போந்த அழகிய தோற்றத்தைக் கலிவெண்பாவில் அமைத்துப் பாடப் பெறுவதே உலாவென்னும் பிரபந்தமாம்.

> 'திறந்தெரிந்த பேதை முதலெழுவர் செய்கை
> மறந்தயர வந்தான் மறுகென்—றறைந்தகலி
> வெண்பா உலாவாம்'

என இதற்கு இலக்கணங் கூறுவர் வச்சணந்தி மாலை ஆசிரியர். இப்பிரபந்தம் உலாச்செய்யுளெனவும் உலாப்புறமெனவும் வழங்கப்படும். ஏழு பருவத்து மகளிரும் தன்னைக் கண்டு காமுற்று மயங்கும் நிலையில் தலைவனெருவன் உலாப்போந்தான் என்ற செய்தியைத் தெரிவிப்பது உலா வென்னும் பிரபந்தமாதலின், இஃது ஒரு தலைக் காமமாகிய கைக்கிளைத் திணையைச் சார்ந்ததாகும்.

> 'ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப'

எனவரும் தொல்காப்பியப் புறத்திணையியற் சூத்திரத்திற்கு 'ஊரிற் பொதுமகளிரொடு கூடி வந்த விளக்கமும் பாடாண்டிணைக்கு உரித்தென்று கூறுவர் ஆசிரியர்' எனப்

பொருள் கூறிய நச்சினார்க்கினியர், தோற்றமுமென்றது, அக்காமம் தேவரிடத்தும் மக்களிடத்தும் விளங்கும் விளக்கத்தை; அது பின்னுள்ளோர் ஏழு பருவமாகப் பகுத்துக் கலிவெண்பாட்டாகச் செய்கின்ற உலாச் செய்யுளாம்' என்றும்,

'வழக்கொடு சிவணிய வகைமையான'

எனவரும் அடுத்த சூத்திரத்திற்கு, 'கடவுள் வாழ்த்தும் அறுமுறை வாழ்த்தும் முதலாக ஊரொடு தோற்ற மீறாகக் கிடந்தனவெல்லாம் சான்றோர் செய்த புலனெறி வழக்கோடே பொருந்தி வந்த பகுதிக் கண்ணேயான பொருள்களாம்' என்றும், 'இனி ஊரொடு தோற்றமும் பரத்தையர்க்கு அன்றிக் குலமகளிர்க்குக் கூறப்படாது' என்றும் பொருளும் விளக்கமுங் கூறியுள்ளார். எனவே உலாவாகிய இப் பிரபந்தம் மக்களைப் பொருளாகக் கொண்டு பாடப் பெறுவதுடன் தெய்வத்தைப் பொருளாகக் கொண்டு பாடப் பெறுதலு முண்டென்பதும், இதன்கண் கூறப்படுங் கைக்கிளைச் செய்திகள் பரத்தையர்க்கு அன்றிக் குலமகளிர்க்குக் கூறப்படாவென்பதும் நச்சினார்க்கினியர் கருத்தாதல் நன்கு பெறப்படும்.

இவ்வாறு பாடப்பெற்ற உலாப் பிரபந்தங்களுள்ளே தொன்மையும் பொருட் சிறப்பும் வாய்ந்தது, சேரமான் பெருமாள் நாயனார் பாடியருளிய திருக்கயிலாய ஞானவுலா வாகும். நம்பியாரூரர் சேரநாட்டின் தலைநகராகிய கொடுங்கோளூரிலுள்ள திருவஞ்சைக் களமென்னுந் திருக்கோயிலிலே சிவபெருமானை வழிபட்டுத் திருப்பதிகம் பாடிக் கொண்டிருக்கும் நிலையில், தேவர்கள் சிவபெருமானால் அனுப்பப்பெற்ற வெள்ளையானையோடு அங்கு வந்து சுந்தரரைப் பணிந்து திருக்கயிலைக்குப் புறப்படும்படி வேண்டிக் கொண்டனர். இறைவன் பணித்த வண்ணம் வெள்ளையானையின் மீதமர்ந்து கயிலைக்குப் புறப்படும் சுந்தரர், தம் தோழராகிய சேரமான் பெருமாளை உள்ளத்தால் நினைக்க, திருமஞ்சன சாலையில் நீராடிக் கொண்டு இருந்த சேரமான் பெருமாள் நாயனார், அந்நினைவினை யோகக் காட்சியால் விரைந்துணர்ந்து தமது குதிரைக்குத் திருவைந்தெழுத்தினை யுபதேசித்து அதனை விரைந்து செலுத்தினர். வான்வழியே செல்லும் அக் குதிரை, சுந்தரரைக்கொண்டு செல்லும் வெள்ளை யானையை வலம்

வந்து அதன் முன்னர்ச் சென்றது. இருவரும் கயிலை மலையை யடைந்து சிவபெருமானைப் பணிந்து போற்றினர். சேரமான் பெருமாள் நாயனார் இறைவனது திருவுலாக் காட்சியைப் பொருளாகக் கொண்டு தாம் வழியிடையே பாடிவந்த திருவுலாப் புறமாகிய செந்தமிழ்ப் பனுவலைக் கயிலாயத்தில் இறைவன் திருமுன்னர் அரங்கேற்றினர் அங்கு உடனிருந்து கேட்டு மகிழ்ந்த மாசாத்தனார் அப் பிரபந்தத்தை மனத்திற் கொண்டு சோழ நாட்டில் திருப் பிடவூரில் உலக மக்களறிய வெளிப்படுத்தி யுதவினர் என் பது வரலாறு. திருக்கயிலாய ஞான உலாவாகிய இப்பிர பந்தத்தின் தோற்றத்தைக் குறித்து வழங்கும் இவ்வர லாற்றினைச் சேக்கிழார் திருத்தொண்டர் புராணத்தில் விரித்துக் கூறியுள்ளார்.

சேரமான் பெருமாள் பாடியருளிய இவ்வுலா, தமிழி லுள்ள உலாப் பிரபந்தங்க ளெல்லாவற்றிற்கும் காலத் தால் முற்பட்டுத் தோன்றிய மூல இலக்கியமாதலின், ஆதி யுலாவென வழங்கப் பெறுவதாயிற்று. இரட்டைப் புல வர்கள் பாடிய ஏகாம்பர நாதருலாவில் "பொன்வண்ணத் தந்தாதி ஆதியுலாவோ டமைத்தானும்" என இந்நூலா சிரியராகிய சேரமான் பெருமாள் நாயனார் போற்றப் பெற்றுள்ளார். இத்தொடரில் இவ்வுலா 'ஆதியுலா' என்ற பெயராற் குறிப்பிடப் பெற்றமை காணலாம். காலத் தால் முற்பட்டுத் தோன்றிய இவ்வுலாவினை யொத்த சுவை நயமுடைய மற்றோருலா இதுகாறும் தோன்றவில்லை யாதலின் இப்பிரபந்த வளர்ச்சியில் இவ்வுலாவே முடிந்த நிலையில் விளங்குவதென்பதும், இப்பனுவலை வழி நடையில் விரைந்து பாடியருளிய சேரமான் பெருமாள் ஆசுகவிப் புலவராவரென்பதும் ஆகிய உண்மையினை 'ஆதியந்த வுலா ஆசு பாடிய சேரர்' எனவருந் தொடரால் அருணகிரி நாதர் தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளார். இதனைத் திருவுலாப்புறம் எனக் குறிப்பிடுவர் சேக்கிழாரடிகள். இனி ஆதியுலா என்பதற்கு ஆதி பகவனாகிய இறைவனைத் தலைவனாகக்கொண்டு பாடப்பெற்ற உலா எனப் பொருள் கூறுதலும் உண்டு.

கைக்கிளைப் பொருள்பற்றிக் கலிவெண்பாவில் அமை தற்குரிய இவ்வுலாச் செய்யுள் அடிவரையறை யின்றி இரண்டுறுப்பாயும் ஒருறுப்பாயும் பாவும் பொருளும் வேறு

பட்டு வெள்ளடியின் இகந்துவரும். "இரண்டுறுப்பாயும் ஓருறுப்பாயும் பாவும் பொருளும் வேறுபட்டு வெள்ளடியின் இகந்துருங் கலிவெண்பாவாகிய உலாச்செய்யுள் அடிவரையன்றி வருமாறும் பெருந்திணைப் பொருள் மேல் வரும் மடற் செய்யுளும் ஓருறுப்பாய் அடியிகந்து வருமாறும் இக்காலத்தார் கூறுகின்றவற்றுட் காண்க. அது திரு வுலாப்புறத்துள்ளும் 'வாமான வீசன் வரும்' என முடிந்து மேல் வேறோருறுப்பாயவாறும், ஒழிந்த வுலாக்களுள் வஞ்சி யுரிச்சீர் புகுந்தவாறும் அடிவரையறை யின்மையுமாம்" என்பர் நச்சினார்க்கினியர். எனவே அவர் காலத்தில் இவ் இவ்வுலா 'வாமான வீசன் வரும்' என 58-ஆம் கண்ணி வரை ஓருறுப்பாக முடிந்து, 'வாமான வீசன் மறுவில்சீர் வானவர்தங், கோமான் படை முழக்கங் கேட்டலுமே' எனவரும் 59-ஆம் கண்ணி முதலாக வேறோருறுப்பாகியும் வழங்கியதெனவும், 58,59-ஆம் கண்ணிகளுக்கு நடுவே 'போழ்திற் - சேமேலே' என்ற தொடர் இவ்விரண்டுறுப் புக்களையும் இணைத்தற் பொருட்டுப் பிற்றை நாளில் இயைத்துரைக்கப் பெற்றிருத்தல் வேண்டுமெனவும் கருதுதல் பொருந்தும்.

திருமாலும் நான்முகனுந் தேடிக்காண வொண்ணாத பெருமானாகிய இறைவன், சீரார் சிவலோகத்துள் சிவபுர மென்னுந் தலைமைப் பதியிலே அழகிய திருக்கோயிலி னுள்ளே அம்மையப்பனாக வீற்றிருக்கின்றான். இறை வனைக் காண வேண்டுமென்னும் பேரார்வமுடைய தேவர்கள் திருக்கோயிற்புற முன்றிலிலே நின்று 'எங்க ளுக்குக் காட்சி தந்தருள்க' எனக் குறையிரந்து வேண்டு கின்றனர். தேவர்களது வேண்டுகோளுக்குத் திருவுள மிரங்கிய சிவபெருமான், ஒரு நாள் பட்டுடுத்துப் பொன்னும் மணியுமாகிய அணிகலன்களைப் பூண்டு மலர்மாலை யணிந்து வடிவுடைய கோலம் புனைந்து நந்திமா காளராய சிவகணத் தலைவர் கொணர்ந்த அடிநிலை மேல் திருவடி வைத்துத் திருக்கோயிலின் வாயிலை யடைந் தருளி, வசுக்கள் தோத்திரஞ் சொல்லவும் முனிவர் எழுவர் வாழ்த்துரைக்கவும், ஆதித்தர் பன்னிருவர் பல்லாண்டு பாடவும், அகத்தியர் யாழ் வாசிக்கவும், தீக் கடவுள், நறும்புகையேந்தவும், இயமன் மங்கல வாழ்த்துப் பாடவும் நிருதி முதலியோர் அணிகலன்களைத் தாங்கி

வரவும், வருணன் நிறைகுடநீர் தாங்கவும் காற்றுத் தெரு வினைக் கூட்டித் தூய்மை செய்யவும், மேகம் மழைநீர் தெளித்துப் புழுதியினை யடக்கவும் சந்திரன் குடைபிடிக் கவும், ஈசானன் அடைப்பையேந்தவும், அசுவினி தேவர்கள் மந்திரத்தால் வாழ்த்துரைக்கவும், உருத்திரர்கள் தோத் திரம் சொல்லவும் குபேரன் வேண்டும் பொருள்களை வழங்கி வரவும், கங்கை யமுனை முதலிய தீர்த்தங்களாகிய மங்கையர்கள் வெண்சாமரை வீசவும், திசையானைகள் தொழுதிறைஞ்சவும், மேகமே நீல விதானமாகவும், மின்னல் கொடிகளாகவும் இடி முரசமாகவும் அமையத் தும்புருநாரதர் இசைபாட வானர மகளிர் நடமாடவும், ஞானமே யுருவாகிய இடபத்தின் மேலமர்ந்து ஏழுவாயில் களையுங்கடந்து திருவுலாப் புறப்பட்டருளினன். தேவ சேனாபதியாகிய முருகன் மயில்மீதமர்ந்து முன் செல்லத் தேவர் தலைவனாகிய இந்திரன் வெள்ளையானைமீது பின்னே வர நான்முகன் அன்னப்பறவைமீதமர்ந்து வலப்பக்கத்தே வர, திருமால் கருடன்மீதமர்ந்து இடப்பக்கத்தே வர, மதன் கரும்பு வில்லும் மலரம்புந்தாங்கி முன்னே செல்ல, மாசாத்தன் குதிரையூர்ந்து செல்ல இறைவனது திருவுலாப் புறப்பாடாயிற்று.

யானைமுகக் கடவுளாகிய விநாயகனோடு சத்தமாதர் களும் தன்னைச் சூழ்ந்துவர நீலமேனியுடைய கொற்றவை சிங்கத்தின்மீதமர்ந்து உடன் வருகின்றாள். விச்சாதரர் இயக்கர் கின்னரர் கிம்புருடர் சாரணர் அரக்கர் அசுரர் முதலிய பதினெண் கணத்தவர்களும் சல்லரி தாளம் தகுணிதம் தத்தளகம் கல்லலகு கல்வடம் மொந்தை தட்டழி சங்கம் சலஞ்சலம் தண்ணுமை பேரி குடமுழவம் கொக்கரை வீணை குழல் யாழ் தடாரி படகம் மத்தளம் துந்துபி முருடு ஆகிய இவ்வாத்திய வகைகளால் திசை தோறும் இசை முழக்கஞ் செய்கின்றனர். மங்கலம் பாடு வார் இறைவனை யடைந்து வணங்குகின்றனர். மற்போரும் விற்போரும் செய்யவல்ல வீரர்கள் தத்தம் தொழிற்றிறமை யைக்காட்டி ஆரிவாரித்து வருகின்றனர். அறுவகைப் பெரும் பொழுதுகளும் யோகமும் தவமும் ஞானமும் மந்திர மும் மூன்று காலமும் குணங்களும் வாலகிலியராகிய முனி வர்களும் முன்வந்து குழுமி நின்று 'இமையோர் பெரு மானே போற்றி, உமையாள் மணவாளா போற்றி' என

இவ்வாறு இறைவனது பொருள்சேர் புகழை யெடுத்துரைத்துப் போற்றி மலர்தூவி வழிபடுகின்றனர். இடபக் கொடியும் பிறகொடிகளும் குடையும் தொங்கலும் சூழ்ந்து தோன்றுகின்றன. பூவணிந்த கரிய கூந்தலையுடைய மகளிரது உள்ளத்தே மேன்மேலும் முதிர்ந்து தோன்றும் பேரன்பினைப் புதிதுண்ண வேண்டித் தாவும் மானைத் தாங்கிய சிவபெருமான் இங்ஙனம் உலாவருகின்றான்.

இத்திருவுலா ஆரவாரத்தைக்கேட்ட அளவில் மாட நடுவில் வாழ்பவராகிய பேதைமுதலாகப் பேரிளம் பெண் ஈருகவுள்ள ஏழுபருவத்து மகளிரும் தம்மைப் பல்வகை யணிகளாற் கோலஞ்செய்துகொண்டு மாளிகையின் மேலும் தெருவிலும் எம்மருங்கும் கூட்டமாகக் குழுமி நின்று இறைவனது பேரழகில் ஈடுபட்டு மயங்கி அப்பெருமான் பால் கண்ணென்னும் பெருவலையை வீசித் தம் உள்ளத்து நிறையென்னும் கதவின்தாளைத் திறந்திட்டார்கள்.

அவருள், வெண்மணலாற் சிறு சோறமைத்து விளையாடுமியல்புடைய பேதைப் பருவத்தினளாகிய பெண் ஒருத்தி[1] தன் உடல் வளர்ச்சியாலும் நடை யுடை சொல் கோலம் முதலியவற்றாலும் மைந்தரது மனங்கவரும் பக்குவமில்லாதவள். வாயொன்று சொல்லக் கையொன்று செய்ய மனமொன்று நினைக்க நிகழும் விளையாட்டுப் பருவத்தினள். அவள் தாலியைக் கழுத்திலணிந்து சந்தனத்தை உடம்பிற்பூசி நீலச்சிற்றாடையை விரித்துடுத்துக்கொண்டு பாவையொன்றை வைத்து விளையாடுகின்றாள். அவளை நோக்கி இப்பாவைக்குத் தந்தையாவார் யாவர்? என ஒருத்தி வினவினாள். ‘இப்பாவைக்குத் தந்தையாவான் சிவபெருமானே’ என்றாள் தாய். அம்மொழியைக் கேட்ட இவள், இறைவன் இடபத்தின் மேலெழுந்தருளி வருதலைக் கண்டு காமநூலாகிய கலையினை இதற்குமுன் உணரப் பெறாதவள் இப்பொழுது சிறிது உணரத் தொடங்கினாள்.

பேரொளிசேர்காட்சிப் பெதும்பைப் பருவத்தினளாகிய பெண்ணொருத்தி,[2] தோழியரும் தானுமாய்த் தூய வெண்

1. பேதை - ஐந்துமுதல் ஏழாண்டு வரையுள்ள பருவமுடைய பெண்.

2. பெதும்பை - எட்டாண்டு முதல் பதினோராண்டு வரையுள்ள பருவத்தினளாகிய பெண்.

மணலால் காமனது உருவத்தை யெழுதி அவன் கையில் தாங்கிய கரும்பு வில்லையும் மலர்க்கணைகளையும் எழுதத் தொடங்குமளவில் சிவபெருமான் எருதேறி உலாவருதலைக் கண்டு, நன்றறிவார் சொன்ன நலத்தினையிழந்து நாணி ழந்து அறிவு நிறை ஓர்ப்பு கடைப்பிடி முதலியன நீங்கக் கைவளை கழல மயக்கமுற்று வறிதே நின்றொழிந்தாள்.

மங்கைப் பருவத்தினளாகிய பெண்ணொருத்தி,[1] தான் வளர்த்த நாகணவாய்ப் பறவையோடு உரையாடிக் கொண்டிருக்கும்போது செம்மேனியம்மானாகிய இறைவன் வெள்விடைமேல் உலாவருகின்றான். வெள்ளிமலையில் வீற்றிருக்கும் ஞாயிற்றைப்போன்ற அப்பெருமானது சடை முடியைக்கண்ட அம்மங்கை, மனநெகிழ்ந்து இறைவன் அணிந்த கொன்றை மாலையையும் தானணிந்த மாலையை யும் அவனது மேனியழகையும் தனது மேனி வனப்பினை யும் ஒப்புநோக்கித் தன் நாணழிதலை நோக்காது உள்ளம் உருக ஒழியாத வேட்கையாகிய பெருவெள்ளத்திடையே வீழ்ந்து வெய்துயிர்த்தாள்.

தீந்தமிழின் தெய்வ வடிவினைப்போலும் அறிவு நலஞ் சான்ற மடந்தைப் பருவத்தாள் ஒருத்தி,[2] தன்னையொத்த தோழியர்கள் புடைசூழ அமர்ந்து யாழ் நரம்பினை இசைத் துச் சிவபெருமானைக் குறித்துப்பாடப்பட்ட மடல் என்னும் பிரபந்தத்தினையும் கண்பாடலையும் பாடி மகிழ்கின்றாள். அந்நிலையில் இறைவன் உலாவர, அவன் ஊர்ந்தருளிய இடபத்தின் மணியொலியைக்கேட்டு விரைந்தெழுந்து அப்பெருமானைக் கண்டு காதல்கூர்ந்து தன்மேனியழகினை இறைவனது கொன்றைமாலை கவர்ந்து கொள்ளத் தான் அக்கொன்றைமலரின் நிறம்போலும் பசலை நிறத்தை மேற் கொண்டு பெரிதும் வருத்தமுற்றாள்.

அரிவைப் பருவத்தினளாகிய பெண்ணொருத்தி,[3] தான் பயின்ற இன்னிசை வீணையை யெடுத்து இறைவனது

1. பன்னிரண்டு வயதுமுதல் பதின்மூன்று வயதுவரையுள்ள பெண் மங்கைப் பருவத்தினளாவாள்.

2. பதினான்குமுதல் பத்தொன்பது வயது வரையுள்ள பெண் மடந்தைப் பருவத்தினளாவாள்.

3. இருபதுமுதல் இருபத்தைந்து வயது வரையுள்ள பெண் அரிவைப் பருவத்தினளாவாள்.

புகழ்ப்பாடலைப் பாடத்தொடங்குமளவில் பரஞ்சோதியாகிய சிவபெருமான் மால்விடைமேல் உலாவருதலைக் கண்டாள். தான் பாடத்தொடங்கிய இனிய இசையினையும் தான் பிறந்த குடிப்பிறப்பின் உயர்வினையும் இவ்விரண்டையுங் கெடாது பேணுமியல்புடைய பெருமைவாய்ந்த தமிழ்ப் பாடலையும் இசைத்தற்குரிய கருவியாகிய வீணையினையுங் கைநெகிழ விட்டாள். தன் தோழியரை நோக்கிப் 'பொன்னனையீர், இன்றன்றே காண்பது எழில் நலம் கொள்ளேனேல் நன்றன்றே பெண்மை நமக்கு' என்று சொல்லிப் பெருவேட்கையுடையளாய்த் தன்னையறியாது நெகிழும் உடையைச் செறியவுடுக்கும் ஆற்றலற்றவளாய்க் கழலுமியல்பினவாகிய வளையல் கழலாதபடி இறைவனைத் தொழுது காப்பாற்றிக்கொண்டு தனது உடல் வனப்பினை யிழந்தாள்.

தெரிவைப் பருவத்தாளொருத்தி,[1] ஆராவமுதமே ஓருருவெடுத்து வந்தாலொத்த சுவைக்கினிய வடிவினை யுடையாள். செங்கழுநீர்ப் பட்டுடுத்துக் கழுநீர்மாலையை யணிந்து தன் தோழியர்களுடன் விளையாடிக்கொண்டிருக் கின்றாள். அந்நிலையில் தோற்றம் நிலையிறுதியாகிய முத் தொழிலுக்கும் காரணமாய் நின்ற திருவடியையுடைய சிவ பெருமான் உலாவருகின்றான். அவனது சடைமுடியைக் கண்ட தெரிவை அவனைக் காமுறுகின்றாள். "என் உயிரி னுஞ்சிறந்த குணமாகிய நாணே இனி என்னைவிட்டு விரைவிற் செல்க. அறிவு நிறை முதலிய நலத்தார்க்கு என்பால் இடமில்லை. தன்னைத்தான் கொண்டொழுகுத லாகிய பெருமை என்னைவிட்டொழிக. எனது மேனி வனப்பும் ஒழிதற்குரியதே. நீங்காமற் பேணத்தக்க நற் பண்புகள் அகல நீங்குக. குற்றங்களை வம்மின். நன்மைக்கு உறைவிடமாகிய தோழியர்களே என்னை மறவாது நினை யுங்கள்" என்று கூறித் "தேவர்களுக்கெல்லாந் தலைவ னாகிய சிவபெருமானே இங்கு உலாப்போந்தானாயின் அவ்விறைவனும் தானணிந்த கொன்றை மலர் மாலையை எனக்கு அருளாது போவானாயின் அவனைக் கண்டால் இன்னது செய்வதென்பதை யான் நன்கறிவேன்" எனச் சொல்லிக் கைசோர்ந்து தன் வனப்பினை யிழந்தாள்.

1. இருபத்தாறு வயதுமுதல் முப்பத்திரண்டு வயதுவரையுள்ள பெண்பாற் பருவம் தெரிவைப் பருவம் எனப்படும்.

பெண்ணரசாய்த் தோன்றிய பேரிளம் பெண் ஒருத்தி[1] 'கண்டு கேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம் புலனும், ஒண்டொடி கண்ணே யுள' வென்று பண்டு திருவள்ளுவர் கூறிய பொருளுரைக்கு இலக்கியமாகத் திகழ்பவள். அவள் பண்கவருஞ் சொல்லாராகிய தன் தோழியர்கள் போற்ற வீற்றிருந்து,

> கண்ணவனை யல்லது காணு செவியவன
> தெண்ணருஞ்சீ ரல்ல திசைகேளா—அண்ணல்
> கழலடி யல்லது கைதொழா அஃதால்
> அழலங்கைக் கொண்டான்மாட் டன்பு.

என்றதோர் அழகிய வெண்பாவினால் இறைவனைப் போற்றி அப்பாடலின் பொருளைத் தன் தோழியருக்கு விரித்துரைத்துக் கொண்டு இருக்கின்றாள். அப்பொழுது கறைக்கண்டனாகிய சிவபெருமான் மாட மறுகில் உலா வந் தருளினன். அவனைக் கண்ட அவள் 'அண்ணலே நினது திருவுலாவிற் பல பருவத்து மகளிரும் கண்ணுற் பருகிய நின் திருமேனி யழகாகிய எச்சிலை எங்களுக்கு ஊட்டக் கருதி இங்கு வந்தாய். கைவளையலைக் கவர்ந்தாய். மயக் கத்தையும் தீராத் துயரத்தையும் தந்தாய். இது நினக்கு தகுதியாமோ" என வருந்தி முறையிட்டுச் செயலற்று உடல் வெளுத்து மயக்கமுற்றாள்.

மேகங்கள் தவழும் நீண்ட சிகரங்களையுடைய திருக் கயிலைமலையில் வீற்றிருந்தருளும் பிறைதவழ் செஞ்சடையா னாகிய சிவபெருமான் திருவுலாப் போந்த தெரு, பண்ணின் தன்மை வாய்ந்த இனிய மொழிகளைப் பேசுமியல்பினராகிய மகளிரின் பேராரவாரத்தை யுடையதாயிற்று. என்பது இவ்வுலாவின் தொகைப் பொருளாகும்.

எல்லாம் வல்ல இறைவனைத் தலைவனாகவும் அவனருள் வேட்ட மன்னுயிர்களை அத் தலைவன்பாற் காதல் கொண்டு மயங்கிய மகளிராகவும் வைத்துப் பாடப்பெற்றது திருக் கயிலாய ஞான வுலா வென்னும் இப்பிரபந்தமாகும். இதன்கண் எழுவகைப் பருவத்து மகளிரென்றது எழு வகைத் தோற்றத்தனவாகிய உயிர்களை யெனவும், பேதை முதல் தெரிவை யீருகச் சொல்லப்பட்ட அறுவரும் ஓரறி

2. முப்பத்து மூன்று வயது முதல் நாற்பது வயது வரையுள்ள பருவத்தினள் பேரிளம் பெண் எனப்படுவாள்.

வுயிராகிய புல் முதல் ஆறறிவுயிராகிய மக்கள் ஈருகவுள்ள அறுவகை யுயிர்களெனவும், பேரிளம் பெண்ணென்றது தேவர் முனிவர் முதலிய சிறப்புடை யுயிர்களை யெனவும், எல்லா வுலகங்களையும் தோற்றுவித்து இயக்கியருளும் பேரருளாளனாகிய இறைவனது அருமையிலெளிய அழகில் எல்லா வுயிர்களும் திளைத்தின்புறும் மனநிலையே இவ் வுலாவிற் சிறப்பித்துரைக்கப்பட்ட பொருளெனவும் அறிவ னூற்பொருள்பற்றிய விளக்கங் கூறுவர் சான்றோர்.

தெருவில் உலாப் போந்த தலைவனொருவனைக் கண்டு காமுற்று வருந்திய எழுவகைப் பருவத்து மகளிரது மன நிலையினை விரித்துரைப்பதாகிய இவ்வுலாவில், அவ்வப் பருவத்து மகளிரது பருவ நிலைக்கேற்ற உடல் வனப்பும் உடை வகையும் அணிவகைகளும் விளையாட்டு முதலிய தொழிற்றிறமும் உள்ளவாறு விளக்கப் பெறுதலும், அம் மகளிரது உரையாடல் வாயிலாக அவர்களது மன வளர்ச்சியை உய்த்துணரச் செய்தலும், ஏழு பருவத்து மகளிருள்ளத்திலும் அத்தலைவனது பேரழகு நிலைபெற்ற தெனக் கூறு முகமாகப் பாட்டுடைத் தலைவனது தன் னிகரில்லாத் தலைமைப் பண்பினை இனிது விளக்குதலும் ஆகிய இந்நலங்கள் யாவும் அமைதல் வேண்டுமென்பது இவ்வுலாப்பிரபந்தத்தைத் தோற்றுவித்த தமிழ்ச் சான்றோ ரது புலமை நோக்கமாகும். இந் நோக்கம் சேரமான் பெருமாள் நாயனார் பாடிய ஆதியுலாவாகிய இவ்விலக்கியத் தால் இனிது நிறைவேறியுள்ளமை காணலாம். இவ் வுலாவில்,

“திருமாலு நான்முகனுந் தேர்ந்துணரா தன்றங்
கருமா லுறவழலாய் நின்ற—பெருமான்
பிறவாதே தோன்றினான் காணாதே காண்பான்
துறவாதே யாக்கை துறந்தான்—முறைமையால்
ஆழாதே ஆழ்ந்தான் அகலா தகலியான்
ஊழா லுயராதே யோங்கினான்—சூழொளிநூல்
ஓதா துணர்ந்தான் நுணுகாது நுண்ணியான்
யாது மணுகா தணுகியான்—ஆதி
அரியாகிக் காப்பான் அயனாய்ப் படைப்பான்
அரனா யழிப்பவனுந் தானே—பரனாய
தேவ ரறியாத தோற்றத்தான் தேவரைத்தான்
மேவிய வாறே விதித்தமைத்தான்—ஓவாதே

எவ்வுருவில் யாரொருவர் உள்குவா ருள்ளத்தே
அவ்வுருவாய்த் தோன்றி யருள்கொடுப்பான்—எவ்வுருவும்
தானேயாய் நின்றளிப்பான் தன்னிற் பிறிதுருவம்
ஏனோர்க்குங் காண்பரிய எம்பெருமான்"

என வரும் தொடராற் சிவபெருமானது முழுமுதற் றன்மையினைச் சேரமான் பெருமாள் நாயனார் விளக்கிய திறம் உணர்ந்து இன்புறத் தக்கதாகும். 'பிறவாதே தோன்றிய பெம்மான் தன்னை' 'நோக்காதே யெவ்வளவும் நோக்கினானை' 'துறவாதே கட்டறுத்த சோதியானை, 'ஆரொருவருள்குவா ருள்ளத்துள்ளே அவ்வுருவாய் நிற்கின்ற அருளுந் தோன்றும்' என வரும் திருநாவுக்கரசர் வாய்மொழிகளை உளத்துட் கொண்டு,

பிறவாதே தோன்றினான் காணாதே காண்பான்
துறவாதே யாக்கை துறந்தான்..........
எவ்வுருவில் யாரொருவ ருள்குவா ருள்ளத்தே
அவ்வுருவாய்த் தோன்றி யருள்கொடுப்பான்

எனவும்,

'அரனென்கோ நான்முகன் என்கோ அரிய
பரனென்கோ பண்புணர மாட்டேன்'

என வரும் அம்மையார் வாய்மொழியை யுளத்துட்கொண்டு,

அரியாகிக் காப்பான் அயனாய்ப் படைப்பான்
அரனா யழிப்பவனுந் தானே'

எனவும் இறைவனது இயல்பினை விரித்துக் கூறிய திறம் ஒப்பு நோக்கி மகிழத்தக்கதாகும். இங்ஙனமே சேரமான் பெருமாள் நாயனார் தமக்கு முன் வாழ்ந்த திருமுறையாசிரியர்கள் அருளிய பொருளுரைகளை இவ்வுலாவிற் பலவிடங்களிலும் எடுத்தாண்டுள்ளார்.

மடந்தைப் பருவத்தினளாகிய பெண்ணின் வனப்பினை விளக்கக் கருதிய சேரமான் பெருமாள் நாயனார், 'ஒள்ளிய தீந்தமிழின் தெய்வ வடிவாள்' எனப் புனைந்துரைத்தலை யுற்று நோக்குங்கால், தமிழ் ஒண்மையும் இனிமையுமுடைய மொழி யென்றும், தெய்வத் தன்மை வாய்ந்த மொழியென்றும் உலக மக்களுக்கு அறிவுறுத்துதல் அவரது நோக்கமென்பது நன்கு விளங்கும்.

'இல்லாரை யெல்லாரும் எள்குவார் செல்வரை
எல்லாருஞ் செய்வர் சிறப்பென்னுஞ்—சொல்லாலே
அல்குற்கு மேகலையைச் சூழ்ந்தாள் அணிமுலைமேல்
மல்கிய சாந்தொடு பூண்புனைந்து நல்கூர்
இடையிடையே யுள்ளுருகக் கண்டாள்'

என அரிவையின் அணிநலங்களைப் புலப்படுத்துமிடத்தும்

கண்டு கேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனும்
ஒண்டொடி கண்ணே யுளவென்று—பண்டையோர்
கட்டுரையை மேம் படுத்தாள்

எனப் பேரிளம் பெண்ணின் இயல்புரைக்குமிடத்தும் இவ்வாசிரியர் திருக்குறளை மேற்கோளாக எடுத்தாண்டுள்ளமை பொய்யில் புலவர் அருளிய திருக்குறளில் இவர் கொண்ட பேரார்வத்தை இனிது புலப்படுத்துவதாகும்.

5. நக்கீர தேவ நாயனுர்

நக்கீரர் பாடியனவாகக் கயிலைபாதி காளத்தி பாதியந்தாதி, திருவீங்கோய்மலை யெழுபது, திருவலஞ்சுழி மும்மணிக்கோவை, திருவெழு கூற்றிருக்கை, பெருந்தேவபாணி, கோபப் பிரசாதம், காரெட்டு, போற்றித் திருக்கலிவெண்பா, திருமுருகாற்றுப்படை, திருக்கண்ணப்ப தேவர் திருமறம் எனப் பத்துப் பிரபந்தங்கள் பதினொராந் திருமுறையிற் சேர்க்கப் பெற்றுள்ளன. இப் பிரபந்தங்களைப் பாடிய ஆசிரியராகிய நக்கீரரைப்பற்றியும் இப் பிரபந்தங்கள் பாடப்பெற்ற சந்தர்ப்பங்களைக் குறித்தும் தம்முள் முரண்பட்ட கதைகள் சில வழங்கி வருகின்றன. இக் கதைகள் பதினொராந் திருமுறையாசிரியருள் ஒருவராகிய நக்கீரரது மெய்மை வரலாற்றினை அறிந்து கொள்ளுதற்கு எந்த அளவு பயன்படுவன என்பதை ஈண்டு ஆராய்ந்தறிதல் இன்றியமையாததாகும்.

(1) நக்கீரரைப்பற்றிப் பெரும்பற்றப்புலியூர் நம்பி கூறுவன

மதுரையில் தமிழ்ச்சங்கப் புலவர் வேண்டுகோட்கிரங்கிப் புலவர்களின் புலமை வரம்பினை அறுதியிட்டுக் காட்டும் சங்கப் பலகையினைத் தந்தருளிய திருவாலவாயிறைவர், சங்கப் புலவர் பழந்தமிழ்ச் செய்யுட்களின் பொருள் நலங்களை வரையறுத்து ஆராய்ந்து அமைதி காண இயலாது மனங்கவன்ற காலத்துத் தாமும் ஒரு

தமிழ்ப் புலவராகத் தோன்றி 'அன்பினைந்திணை' யெனத் தொடங்கும் அகப்பொரு ளிலக்கண நூலை இயற்றியளித் தார். தாம் பாடிய அகத்திணைப் பாடல்கள் யாவும் இறைவர் இயற்றிய அகப்பொரு ளிலக்கணத்தின்படி அமைந்திருத்தலை யறிந்து சங்கப் புலவர்கள் மகிழ்ச்சியுற் றூர்கள். அவர்களில் ஒருவராகிய நக்கீரனர் மட்டும் அழுக் காறுடையராய் அதனைக் குறை கூறினர். அதனையறிந்த இறைவர் சிரித்து, 'இந் நக்கீரன் என்றுமே பொருமை யுடையவன் என்பதை இங்குள்ளவர்களில் அறியாதார் யாவர்? நக்கீரன் உண்மை உணர்ந்து அமைதியுறுதற்கு வேண்டும் அறிவுரைகளைப் புலவர்களாகிய நீங்களே அவ னுக்குச் சொல்லுங்கள்' எனக் கூறியருளினர். அப் பொழுது விசும்பிலே ஓர் அருள் வாக்குத் தோன்றியது. 'சங்கப் புலவர்களே, நுமக்குள் தமிழ் மொழியின் இலக் கண அமைதி குறித்துத் தோன்றிய வழக்கினைத் தீர்த்தற் பொருட்டுத் திருவாலவா யிறைவனுகிய சிவபெருமானே இவ்வாறு நும்முன் புலவனுக எழுந்தருளியுள்ளான். நுமது அறியாமையை விடுத்து அப்பெருமானைப் பணிந்து போற்றுமின் என விசும்பிடைத் தோன்றிய அருள் மொழி யினைக் கேட்டு அச்சமும் வியப்பு மெய்திய நக்கீரர், 'அடி யேன் அறியாது கூறிய பிழையுரைகளைப் பொறுத்தருள வேண்டும்' எனக் கூறிப் புலவராய் வந்த இறைவனைப் பணிந்து போற்றினர். இறைவனும் சங்கப் புலவர்களுக்கு அருள் செய்து மறைந்தருளினன்.

மதுரை நகரின்கண் அரசு வீற்றிருக்கும் பாண்டிய மன்னன் தன் தேவியொடும் தனித்து உலவிய பொழுது அவளது கூந்தலிலிருந்து தோற்றிய நறுமணத்தினை யுணர்ந்தான். அந்நறுமணம் பூவோடியைந்தமையாற் கூந்தலுக்குளதாகிய செயற்கை மணமோ அன்றிக் கூந்த லின் இயல்பாகிய மணந்தானே என்பதோர் ஆராய்ச்சி அவன் மனத்திடையே நிலைபெறுவதாயிற்று. 'யான் என் மனத்திற் கொண்ட பொருளைக் குறிப்பானுணர்ந்து அழகிய செய்யுளொன்று பாடித்தருவோர் யாவராயினும் அவர்கள் பெறுதற்குரியது இப் பொற்கிழி' யென்று சொல்லி ஆயிரம் பொன்னிறைந்த கிழி யொன்றைச் சங்க மண்டபத்தே வேந்தன் கட்டி வைத்தனன். பெரும் புலவர் பலரும் அரசனது உள்ளக் கருத்தினை யறிய முயன்று

தாம் பாடிய பாடலை அவனுக்குக் காட்டி அவனது பாராட்டு தலைப் பெருது வறிதே திரும்பினர்.

இஃது இங்ஙனமாக, சிவபெருமானை வழிபடும் நல்லொழுக்கமுடைய பிரமசாரியாகிய தருமி யென்னும் அந்தணன், பெற்றேரில்லாமையால் நெடுங்காலம் மணஞ் செய்யப்பெருது, திருமணத்தினை நிறைவேற்றுதற்குரிய பொருளைத் தந்தருளும்படி திருவாலவா யிறைவன்பாற் குறையிரந்து நின்முன். அவனது வேண்டுகோளை நிறைவேற்றக் கருதிய இறைவன், 'கொங்குதேர் வாழ்க்கை யெனத் தொடங்கும் செய்யுளைப் பாடிக் கொடுத்துத் 'தருமியே நீ இச்செய்யுளைச் சங்கப் புலவர் பேரவையிற் படித்துக் காட்டி இதற்குரிய பொற்கிழியைப் பெற்றுக் கொள்வாயாக. இச்செய்யுளுக்கு யாரேனுங் குற்றங் கூறுவாருளராயின் யாமே அங்கு வந்து இதன் பொருளமைதியை விளக்கிக் கூறி நினக்கு உதவி செய்வோம்' எனக் கூறி விடை கொடுத்தனுப்பினர். தருமி, சங்கப் புலவர்களிடஞ் சென்று அச் செய்யுளைக் காட்டினன். அவர்கள் தம்மனத்துள்ளே அதன் பொருள் நயங்களை யெண்ணி வியந்தனராயினும் அதுபற்றி வெளிப்பட எதுவுஞ் சொல்லாதிருந்தனர். அதனையறிந்த தருமி அப் பாடலைப் பெற்றுச் சென்று பாண்டிய மன்னனுக்குக் காட்டினன். அச்செய்யுளைப் படித்துணர்ந்த வேந்தன் தனது உள்ளக்குறிப்பு அச்செய்யுளிற் புலப்படுத்தப் பெற்றிருத்தலை யறிந்து பெரிதும் வியந்தான். 'பாவலரே நீர் விரைந்து சென்று சங்க மண்டபத்திற் கட்டப் பெற்றுள்ள பொற் கிழியைக் கைக்கொள்வீராக' எனத் தருமியை நோக்கிக் கூற அவனும் அரசனது இசைவு பெற்றுச் சங்க மண்டபத்தை யடைந்து பொற் கிழியை எடுக்கப் புகுந்தான். அது கண்ட நக்கீரர், அவனைத் தடுத்து நிறுத்தி, 'பாவின் சொற்பொருளறியாத நீ இதனைத் தொடுதலாகாது. நின் கவி குற்றமுடையது. இச்செய்யுளை உனக்குப் பாடிக் கொடுத்த புலவனை இங்கு அழைத்துவா' எனக் கூறினர். அது கேட்டு வருத்தமுற்ற தருமி, ஆலவா யிறைவர் திருமுன் சென்று 'எம்பெருமானே, நும்முடைய கவிக்குச் சிற்றறிவுடைய மாந்தர் குற்றங் கூறினரே' எனக்கூறி முறையிட்டான். அந்நிலையில் ஆலவாயில் எழுந்தருளிய சிவபெருமானே செந்தமிழ்ப்

புலவனாகத் திருமேனி தாங்கிச் சங்க மண்டபத்தை யடைந்து, 'என் கவிக்குக் குற்றங் கூறினான் யாவன்' என வினவ, 'நானே குற்றங் கூறினேன்' என்றார் நக்கீரர். அது கேட்ட இறையனார்,

அங்கங் குலுங்க வரிவாளி னைய்த்தடவிப்
பங்கம் படவிரண்டு கால்பரப்பிச்—சங்கைக்
கீர்கீ ரெனவறுக்குங் கீரனோ வென்கவியை
ஆராயு முள்ளத் தவன்,

என்ற செய்யுளைப் பாட, அதற்கு மறுமொழியாக,

சங்கறுப்ப தெங்கள்குலம் தம்பிராற் கேதுகுலம்
பங்கமுறச் சொன்னாற் பழுதாமோ—சங்கை
யரிந்துண்டு வாழ்வோம் அரனாரைப் போல
இரந்துண்டு வாழ்வ திலை.

என்ற செய்யுளைப்பாடினார் நக்கீரர். அவரை நோக்கிய இறைவர் 'யான் பாடிய செய்யுளிலுள்ள குற்றம் யாது' என வினவினார். பூசுவன பூசிப் புனைவன புனைந்து கை செய்யாது விடிற் சிக்குண்டு நாறு மியல்பினதாகிய மகளிரது கூந்தலுக்கு இயற்கை மண முண்டெனச் செப்பும் இச்செய்யுள் பொருட்குற்ற முடையது என்றார் நக்கீரர். அம்மொழி கேட்ட இறைவர், 'தெய்வமாதர் கூந்தற்கும் நறுமணமில்லையோ' என வினவ, இல்லை யென்றார் நக்கீரர். கவுரியாகிய உமா தேவியின் கூந்தலும் அப்படியோ என்றார் இறைவர். அதுவும் அப்படியே யென்றார் நக்கீரர். இந்நிலையிற் புலவராக வந்த இறைவர் தம் சடை முடியைப் புலப்படுத்தினார். அதனையுணர்ந்த நக்கீரர் 'தமிழ் வல்ல என்னை நும் சடையினைக் காட்டி வெருட்ட வேண்டாம்' என்றார். சினமுற்ற இறைவர் நெற்றிக் கண்ணைக் காட்டினார். நெற்றிக் கண்ணழலால் வெதுப்புற்ற நிலையிலும் அச்சமுறாத நக்கீரர் 'நும் உடல் முழுதும் நெருப்புக்கண்ணேயாயினும் குற்றங் குற்றமே' யென இறைவனை நோக்கிக் கூறினார். அம்மொழிகளைக் கேட்ட இறைவர், நக்கீரரை நோக்கி 'நன்னெறி வழக்கினை அறியாதவனே, வழிபடு தெய்வமாகிய கவுரியின் கூந்தலை மற்றை மாதரது கூந்தலையொப்ப இழிவாகக் கருதினையோ? மறைகள் ஞானப் பூங்கோதை யென்ற பொருளில் உமாதேவியைப் போற்றும் மொழியினை உணர்ந்திலையோ? மடம் நாணம் முதலிய குணங்கள்

மகளிர்க்கியல்பு ஆமாறுபோல இயற்கையில் மணம் வீசுங் கூந்தல் கவுரிக்கு உண்டென்பதனை யாரறியார்' என வினவினர். இம்மொழிகளுக்கு விடை கூற அறியாத நக்கீரர் இறைவரது நெற்றிக் கண்ணழலால் தமக்குள தாகிய வெப்பத்தைப் பொறுக்கமாட்டாது பொற்ருமரைத் தடாகத்திற் போய் வீழ்ந்தார். தருமி தனக்குரிய பொற் கிழியைத் தடையின்றிப் பெற்றுச் சென்றனன். நக்கீரரது துன்பத்தினைக் கண்டு ஆற்ருெணுத் துயரமடைந்த சங்கப் புலவர்கள் திருவாலவாயிறைவரை வணங்கி நின்று, 'தையல்பாகனே, நக்கீரன் அறியாமையால் நின் முன்னர்ப் பிழைபடப் பேசினன். திருக்கயிலையும் திருக்காளத்தியும் தேவரீர் அன்புடன் வீற்றிருந்தருள்புரியும் திருத்தலங்க ளெனத் தெரிந்து இப்பொழுது அவ்விருதலங்களையும் போற்றி ஓரந்தாதி பாடியுள்ளான். எங்கள் பெருமானுகிய நீ அவனது பிழை பொறுத்து அருள்புரிதல் வேண்டும்' எனப் பரவிப் போற்றினர்கள். அவர்களது வேண்டு கோளுக்கிரங்கிய இறைவர் அங்கயற்கண்ணியம்மை யொடும் பொற்ருமரைத் தடாகத்தை அடைந்தார். 'சொல்லும் பொருளுமே' என்ற தொடரை முதலாகக் கொண்டு நக்கீரர் பாடிய கயிலைபாதி காளத்தி பாதி யந்தாதியைச் செவிமடுத்து மகிழ்ந்து அருள்தருகை கொடுத்து அவரைக் கரையேற்றினர். நெற்றிக்கண் ணழ லாலுற்ற அவரது உடல் வெப்பத்தையுந் தீர்த்தருளினர். இங்ஙனம் தமது உடல் வெப்பத்தைத் தீர்த்தருளிய ஆல வாயிறைவரை அகங்குழைந்து வழிபடுதலை நாடொறும் செய்தற்குரிய நியமமாகக் கொண்டொழுகினர் நக்கீரர். அவரது அறியாமை யகற்றி நற்பொருளையுபதேசிக்கத் திருவுளங் கொண்ட ஆலவாயிறைவர், பொதியமலையில் வாழும் அகத்திய முனிவரையழைத்துத் தமிழியல் நூற் பொருளை அவருக்கு அறிவுறுத்தி, 'இப்பொருளை நக்கீர னுக்கு உணர்த்துக' எனப் பணித்தருளினர். அகத்திய முனிவரும் தாம் இறைவன்பாற் கேட்ட தமிழியல் நுட்பத்தை நக்கீரருக்கு உபதேசித்தருளினர்.

அகத்தியர்பால் தமிழுணர்ந்த நக்கீரர், சங்கப் புலவர் மதிக்க வாழும் நாளில், இறையனருளிய அகப்பொருள் நூலுக்கு மெய்யுரை தந்தருளும்படி புலவர்கள் இறைவனை வேண்டினர்கள். இறைவன் பணித்தவண்ணம் வணிக

ளுகிய உப்பூர் கிழான் மகனும் ஐந்தாட்டைப் பருவத்தினனும் ஊமைப் பிள்ளையுமாகிய உருத்திரசன்மனைப் பாவறிமண்டபத்தின் நடுவே அரியாசனத் தமர்த்தி வழிபட்டுப் புலவர்கள் தாம் தாம் கருதியவற்றைப் பொருளாக உரைத்தனர். அவற்றைக்கேட்ட உருத்திர சன்மன் அவ்வுரைகளைப் பற்றியெதுவும் புலப்படுத்தாது, நக்கீரர், கபிலர், பரணர் ஆகிய இம்மூவரும் உரைகூறிய அளவில் அவர்தம் உரைகளை விருப்புடன் கேட்டு மெய்ம் மயிர் சிலிர்த்துக் கண்ணீரரும்பி இவ்வுரைகளே மெய்ம்மை யுடையன எனப் புலப்படுத்தினன். இதுவே நக்கீரரைப் பற்றித் திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்திற் கூறப்படுங் கதையாகும். இக்கதையினையே பரஞ்சோதி முனிவரும் தாம் பாடிய திருவிளையாடற் புராணத்திற் சிறிது வேறுபட விரித்துக் கூறியுள்ளார்.

(2) பரஞ்சோதி முனிவர் கூறுவன

நெற்றிக் கண்ணின் வெப்பத்திற்கு ஆற்றாது பொற்றாமரைத் தடாகத்தில் வீழ்ந்து வருந்திய நக்கீரர், சங்கப் புலவர் வேண்ட அங்கு எழுந்தருளிய அம்மையப்பராகிய இறைவரது திருவருள் நோக்கினால் கருவி கரணங்கள் தூய்மையடையப்பெற்றுத் திருக்கயிலையிலுந் திருக்காளத்தியிலும் இறைவன் வீற்றிருந்தருள் புரியுந்திறத்தினை அடுத்தடுத்துப் போற்றுங் கருத்துடையராய்ச் 'சொல்லும் பொருளுமே' எனத் தொடங்கும் திருவந்தாதியைப் பாடிப் போற்றினரென்றும், அப்பனுவலைக் கேட்டருளிய இறைவர் நக்கீரரைக் கரையேற்றியருளினரென்றும், கரையேறிய நக்கீரர் இறைவரைப் பணிந்துநின்று, சிவபெருமானுகிய பெரியோன் தீமையும் நன்மையும் புரிந்தவர்களுக்கு முறையே சினத்தையும் அருளையும் மேற்கொண்டு நிகழ்த்திய செயல்களைப் பொருளாகக்கொண்டு கோபப்பிரசாதம் என்ற பிரபந்தத்தையும் பெருந்தேவபாணி திருவெழுகூற்றிருக்கை ஆகிய பிரபந்தங்களையும் பாடிப்போற்றினரென்றும் பரஞ்சோதி முனிவர் தாம் இயற்றிய திருவிளையாடற் புராணத்திற் குறிப்பிட்டுள்ளார்.

(3) கல்லாட நூலாசிரியர் கூறுவன

நக்கீரர் இறைவனது நுதல் விழியின் வெப்பத்திற்கு ஆற்றாது பொற்றாமரைத் தடாகத்து அமிழ்ந்த நிலையில்

கயிலைபாதி காளத்தி பாதி யந்தாதி யென்னும் பிரபந்தத்தைப் பாடி இறைவனைப் போற்றினர் என்னும் இச்செய்தி,

‘ அருந்தமிழ்க் கீரன் பெருந்தமிழ்ப் பனுவல்
வாவியிற் கேட்ட காவியங் களத்தினன் ’ (52)

எனக் கல்லாடச் செய்யுளிலும் இடம் பெற்றுளது.

இறைவன் தருமியின் பொருட்டு நன்பாட்டுப் புலவனாகச் சங்கமேறிப் பொற்கிழி வாங்கித்தந்தருளினர் என்ற செய்தியினை,

‘ நன் பாட்டுப் புலவனாய்ச் சங்கமேறி
நற்கனகக் கிழிதருமிக் கருளினோன் காண் ’

எனத் திருநாவுக்கரசடிகளார் குறிப்பிட்டுப் போற்றியுள்ளார். சங்கத்தொகை நூலாகிய குறுந்தொகையுள் இரண்டாவது செய்யுளாகக் கோக்கப்பெற்ற ‘ கொங்குதேர் வாழ்க்கை ’ யென்ற செய்யுளே இறைவன் தருமியின் பொருட்டுப் பாடித்தந்த செய்யுளென்பது கல்லாட நூலாசிரியர் கருத்தாகும்.

‘ பொதியப் பொருப்பன் மதியக் கருத்தினைக்
கொங்குதேர் வாழ்க்கைச் செந்தமிழ்கூறிப்
பொற்குவை தருமிக் கற்புட னுதவி
யென்னுளங் குடிகொண் டிரும் பய னளிக்குங்
கள்ளவிழ் குழல்சேர் கருணையெம்பெருமான் ’ (கல் – 1)

எனவருங் கல்லாடச் செய்யுளடிகளில் இக்கருத்து விரித்துரைக்கப்பெற்றமை காணலாம்.

நக்கீரரைப் பற்றிய இக்கதை பிற்காலத்தில் மேலும் சில புனைந்துரைகளைப் பெற்று வளர்வதாயிற்று.

(4) சிவப்பிரகாச சுவாமிகள் கூறுவன

உமாதேவியாரது கூந்தலுக்கும் இயற்கை மணமில்லை யென நக்கீரர் தருக்குற்றுப்பேசியது கண்டு சினமுற்ற புலவராகிய சிவபெருமான், நக்கீரரை நோக்கி, ‘ மறைகளில் மணங் கமழ் குழலாள் எனச் சிறப்பித்துப் போற்றப் பெறும் உமாதேவியாகிய இறைவியின் கூந்தலை நீ பழித்தமையால் குட்டநோய் கொண்டு அலைந்து வருந்துக ’ என வெகுண்டுரைத்தனர். அதனைக் கேட்டு நடுக்கமுற்ற

நக்கீரர் 'நாயினுங்கடையேன் அறியாமையாற் கூறிய வற்றைப் பொறுத்தருளவேண்டும்' என இறைவனைப் பணிந்து வேண்டினார். உளமிரங்கிய இறைவனும் 'நீ கயிலையைக்கண்டு வணங்கினால் இந்நோய் தீரும்' எனச் சொல்லி மறைந்தனன். குட்ட நோயினால் வருத்தமுறும் நக்கீரர் கயிலையைக்கண்டு தம் நோயைத் தீர்த்துக் கொள்ள எண்ணி மதுரையிற் சங்கப் புலவர்பால் விடை பெற்றுப் பல தலங்களை வணங்கி வடநாடு சென்று கங்கையில் நீராடிக் காசி, கேதாரம் முதலிய தலங்களை இறைஞ்சி உள்ளங்கால் வெள்ளெலும்பு தேயக் கயிலையை நோக்கிச் சென்றார். வானவராலும் அடைதற்கரிய கயிலையை நோக்கிச் செல்லும் நக்கீரர், வழியிடையமைந்த தடாக மொன்றைக்கண்டு அதன்கரையிலுள்ள ஆலமரத்தின் நிழலிற் சிறிது நேரம் இளைப்பாறுவாராயினர். அந்நிலையில் அவ்வாலமரத்திலிருந்து உதிரும் இலையொன்று ஒருபாதி நீரிலும் மற்றொரு பாதி நிலத்திலுமாக விழுந்தது. நீரிற்படிந்த இலைப்பகுதி மீனாகவும் நிலத்திற் படிந்தபாதி பறவையாகவும் மாறி ஒன்றையொன்று இழுத்தலைக்கும் விநோதத்தைக் கண்ட நக்கீரர், அவ்வதிசயக் காட்சியில் ஈடுபட்டுத் தம்மை மறந்தார். அந்நிலையில் அங்குள்ள பூதமொன்று விரைந்துவந்து நக்கீரரைப் பிடித்துச் சென்று தான்முன் மலைமுழையொன்றிற் சிறைப்படுத்தியுள்ள தொளாயிரத்துத் தொண்ணூற்றொன்பதின்மருடன் இவரையும் சிறையிட்டு இவ்வாயிரவரையும் ஒருசேர வுண்ணுங் கருத்தினால் நீராடி வரச் சென்றது. மலைமுழையில் முன்னரே சிறைப்பட்டிருந்தவர்கள், தம்முன் புதியராய் வந்த நக்கீரரை நோக்கி, 'நீயொருவன் இங்கு வந்தமையால் அல்லவோ நாங்கள் ஆயிரவர் என்னுந் தொகையினராகி இப்பொழுது பூதத்துக்கு இரையாகப் போகின்றோம்' என மனநொந்து கூறினார்கள். அவர்களது துயர்க்கு இரங்கிய நக்கீரர், தமிழ்த் தெய்வமாகிய முருகப் பெருமானை நினைந்து திருமுருகாற்றுப் படையென்னும் செழும்பாடலைப் பாடிப் போற்றினார். செந்தமிழ்ச் சுவையில் விருப்புற்ற அறுமுகச் செவ்வேள், வேலேந்தி நீலமயில் மீதேறி நக்கீரர் முன்னே வந்து தோன்றிப் பூதத்தையழித்து நக்கீரரையும் ஏனையோரையும் சிறையினின்றும் விடுவித்தருளினார். நக்கீரர் தம்துயர் தீர்த்தருளிய முருகப்பெருமானையிறைஞ்சி

'என் அறியாமை யாலுளதாகிய குட்டநோய் இறைவன் பணித்த வண்ணங் கயிலையைக் கண்டாலன்றித் தீராது, பெரும் பெயர் முருகனாகிய நீ எளியேற்குத் திருக்கயிலையைக் காட்டி எனதுபிணியைத் தீர்த்தருளல் வேண்டும்' எனக் குறையிரந்தார். அவரது வேண்டுகோட்கிரங்கிய முருகப்பெருமான், அவரைநோக்கி, 'எந்தையாகிய சிவபெருமான் இன்னதிசையிலுள்ள கயிலையைக்கண்டு வழிபடுக என நினக்குத் திசைகூறிக் குறிப்பிடாமையால் நீ தென்கயிலையாகிய திருக்காளத்தியைக் கண்டாலும் நினது குட்டநோய் தீரப்பெறுதல் உறுதி. ஆகவே இங்குள்ள குளத்தில் மூழ்கித் தென்கயிலையைக்கண்டு நோய் நீங்கி இன்புறுவாயாக' எனப் பணித்தருளினன். முருகப் பெருமான் பணித்தவண்ணம் நக்கீரர் அங்குள்ள தடாகத்தில் மூழ்கித் தென்கயிலையாகிய திருக்காளத்தியிற் பொன்முகலியாற்றில் எழுந்தார். நோய்நீங்கித் தூய உடம்பு பெற்ற நக்கீரரது உள்ளத்திலே கயிலைவேறு காளத்தி வேறு என்னும் வேற்றுமை நீங்கிக் காளத்தியே கயிலையாகத்தோன்றினமையாற் கயிலைபாதி காளத்திபாதி அந்தாதியென்னுஞ் செழுந்தமிழ்பாடி இறைவனைப் போற்றினர். அந்நிலையில் இறைவன் அம்மையப்பனாகக் காட்சி தந்து என்றும் பிரியாது திருவடி நீழலில் இன்புற்றுறையும் பேரானந்தப் பெருவாழ்வை அவர்க்கு வழங்கியருளினன் என்பது பிற்காலத்தில் தோன்றிய மற்றொரு கதையாகும். இக்கதை சீகாளத்தி புராணம் நக்கீரச் சருக்கத்திற் கூறப் பெற்றுளது. இது பெரும்பற்றப் புலியூர் நம்பிதிருவிளையாடலுக்கும் பரஞ்சோதி முனிவர் திருவிளையாடலுக்கும் முற்றிலும் மாறுபட்டதாகும்.

(5) நிரம்ப அழகிய தேசிகர் கூறுவன

சங்கப்புலவராகிய நக்கீரர் சிவபெருமான் பாற் பேரன்புடையராய் நாடோறும் திருப்பரங்குன்றத்தை யடைந்து சரவணப் பொய்கையில் நீராடித் திருவைந்தெழுத்தோதிச் சிவபூசை செய்து மதுரைக்கு வருதலை நியமமாகக் கொண்டிருந்தார். அவர் சிவபெருமானொருவனையே வழிபடு தெய்வமாகக் கொண்டு அப்பெருமானையும் அவனருள்பெற்ற பாண்டியனையுமன்றிப் பிறதெய்வங்களையும் மக்களையுங் குறித்துச் செய்யுள் பாடுவதில்லையென்ற உறுதியுடையராய் ஒழுகினர். அதுகண்ட முருகப்

பெருமான் நக்கீரர் தம்மையுணர்ந்து தமிழ்ப்பாடல் பாடுதற்கேற்ற சந்தர்ப்பமொன்றை யுண்டாக்கும்படி அண்டாபரணன் உக்கிரன் ஆகிய பூதகணத் தலைவர்களுக்குக் கட்டளையிட்டருளினர். என்றும்போல ஒருநாள் நக்கீரர் திருப்பரங்குன்றத்தினை யடைந்து சரவணப் பொய்கையில் நீராடி அதன் கரையிலுள்ள அரசமரத்தின் நீழலிலே திருவைந்தெழுத்தை ஓதிக் கொண்டிருந்தார். அப்பொழுது அங்குள்ள பூதமொன்று அரசமரத்திலுள்ள இலையொனறைக் கிள்ளியெறிந்தது. அவ்விலை நீரிற் பாதியும் நிலத்திற்பாதியுமாக விழுந்தது. நீரிலமிழ்ந்திய பகுதி மீனாகவும் நிலத்திற்படிந்த பகுதி பறவையாகவும் மாறி அவ்விரண்டும ஒன்றையொன்று யிழுத்துக்கொண்டு துன்புற்றன. அவற்றின் துயரத்தைக்கண்டு மனம் பதைத்த நக்கீரர், அவ்விரண்டையும் பிரித்துவைக்க எண்ணி நகத்தாற்கிள்ளி விலக்கினர். அவ்விரண்டும் பதைத்துப் புரண்டு அப்பொழுதே இறந்துபோயின. அந் நிலையில் அண்டாபரணன் உக்கிரன ஆகிய பூதகணத் தலைவர்கள் நக்கீரரையடைந்து 'நீ முருகன் எழுந்தருளிய இத்தலத்திற் கொலைபுரிந்தமையால் தீவினையையுடைய யானாய்' எனக்கூறி நக்கீரரது முதுகிற் புடைத்து அவரை மலைமுழையொன்றிற் சிறைப்படுத்தினர். நக்கீரர் தாம் அடைந்த துன்பத்திற்குரிய காரணத்தைச் சிந்தித்தார். முருகப்பெருமானைச் செந்தமிழ்ப் பனுவல்களாற் பாடிப் போற்றாமையால் நேர்ந்துன்ப மிதுவாமெனத் தெளிந்து உலகமுவப்ப எனத்தொடங்கி மலைகிழவோனே யென முடியும திருமுருகாற்றுப் படையினைப்பாடி முருகனை வழிபட்டு நோற்றிருந்தார். முருகன் அவரது கனவிலே தோன்றி, நீ என்னைக்கிழவோனே என அழைத்துள்ளாய் யான் கிழப்பருவமடைந்த நிலையில் நின்னை நோக்கிவரச் சிலநாளாகும்.' எனக் கூறி மறைந்தனர். அதுகண்டு திடுக்குற்று விழித்த நக்கீரர் 'என்றும் இளையாய்' எனப் பாடிப் போற்றினர். அப்பாடலைக் கேட்டு மகிழ்ந்த முருகப் பெருமான் தனது திருக்கரத்தில் தாங்கிய வேற்படையால் மலைமுழையைப் பிளந்து நக்கீரரைச் சிறையினின்றும் மீட்டுத்தனது மூவா இளநலமாகிய தெய்வக்கோலத்தைக் காட்டித் திருவருள் புரிந்தான் எனவரும் இக்கதை நிரம்பவழகிய தேசிகர் பாடிய திருப்பரங்கிரிப் புராணத்து நற்கீரச் சருக்கத்தில் விரித்துரைக்கப்பட்டுளது.

இக்கதை சில வேறுபாடுகளுடன் திருவால வாயுடையார் திருவிளையாடற் புராணத்தில் இந்திரன் முடிமேல் வளையெறிந்த திருவிளையாடலிற் காணப்படினும் இக்கதை நிகழ்ச்சி பற்றிய செய்யுட்கள் சில ஏடுகளில் இல்லாமையாலும் இவை முன்னும்பின்னுந் தொடர்பின்றிக் காணப் படுதலாலும் இது பிற்காலத் தொருவராற் சேர்க்கப்பட்டதெனவே கருதவேண்டியுளது. இந்திரன் முடிமேல் வளையெறிந்த திருவிளையாடலுக்கும் நக்கீரர் திருமுருகாற்றுப் படை பாடிய செவ்வியினை விளக்கப்புகுந்த இக்கதைக்கும் யாதோரியைபுமில்லாமையும் இக்கதைக்குரிய உஉ முதல் உஅ வரையுள்ள ஏழு செய்யுடகளையும் நீக்கிப்படித்த அளவில் இந்திரன் முடிமேல் வளையெறிந்த திருவிளையாடலாகிய கதை தொடர்புபெற விளங்குதலும் இவண் நோக்கத்தக்கனவாம்.

திருவாலவாய்ப் பெருமான் தருமியின் பொருட்டு நன்பாட்டுப் புலவனைச் சங்கமேறித் தருமிக்குப் பொற்கிழி வாங்கித்தந்தருளினர் என்ற செய்தியினைத் திருநாவுக்கரசு சுவாமிகள் திருப்புத்தூர்த் திருத்தாண்டகத்திற்குறிப்பிடுதலால் அச்செய்தி திருநாவுக்கரசர் காலமாகிய கி. பி. ஏழாம் நூற்ருண்டிலேயே நிலைபெற்று வழங்கிய பழைய வரலாறென்பது இனிது பெறப்படும். தருமிக்குப் பொற்கிழி தந்தருளிய இத்திருவிளையாடலில் இறைவனது செய்யுளுக்குக் குற்றங்கூறியவர் நக்கீரரென்றும் சிவபெருமான் சடைமுடியும் நெற்றிக் கண்ணுங் காட்டி நக்கீரரை அச்சுறுத்தினனென்றும் நெற்றிக் கண்ணழலால் வெதும்பிய நக்கீரர் உடல் முழுதும் நெருப்புக் கண்களைக் காட்டினும் குற்றங்குற்றமேயெனக் கூறிப் பொற்ருமரைத் தடாகத்தில் வீழ்ந்தனரென்றும் பின்பு சங்கடபுலவர்களது வேண்டுகோளால் அங்கெழுந்தருளிய இறைவனது அருள் நோக்கம் பெற்ற நிலையிற் கயிலை பாதி காளத்திபாதியந்தாதி முதலிய பிரபந்தங்களைப் பாடித் துதித்து இறைவனருளாற் கரையேறி யுய்ந்தனரென்றும் பெரும்பற்றப் புலியூர் நம்பியும் பரஞ்சோதி முனிவரும் தாம் பாடிய திருவிளையாடற் புராணத்துக்கூறும் இக்கதை நிகழ்ச்சிகளுக்குக் கி. பி. பதின்மூன்ரும் நூற்ருண்டிற்கு முற்பட்டுத் தோன்றிய தமிழ் நூலகளில் எத்தகைய ஆதாரவும் காணப்படவில்லை. இக்கதை நிகழ்ச்சிகளைப் பிற்காலத்

தவராகிய நிரம்ப அழகிய தேசிகரும் தாம் பாடிய திருப் பரங்கிரிப் புராணத்து நக்கீரச் சருக்கத்திற் குறிப்பிட வில்லை. திருப்பரங்குன்றத்திற் பூதத்தாற் சிறையிடப் பட்டு வருந்திய நக்கீரர் திருமுருகாற்றுப்படை பாடி முருகனருள் பெற்றாரென்னும் மற்றொரு புதுக்கதையினை நிரம்ப அழகிய தேசிகர் தமது நூலிற் குறித்துள்ளார். நக்கீரரைப் பற்றித் திருவிளையாடற் புராணத்திற் சொல்லப் பட்ட கதை நிகழ்ச்சிகளையும் திருப்பரங்கிரிப் புராணத்திற் கூறப்பட்ட கதை நிகழ்ச்சியையும் தொகுத்து நோக்கிய துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள், நக்கீரர் இறைவ னொடு வாது செய்தமையால் குட்ட நோயினைப் பெற்று இறைவன் பணித்த வண்ணம் அந்நோய்தீரத் திருக் கயிலாயத்தைத் தரிசிக்க வெண்ணி வடநாட்டுத் தலங்களை வணங்கிச் செல்லும் வழியில் ஒரு பூதத்தாற் பற்றப்பட்டு மலைமுழையில் அடைக்கப்பட்டுத் துன்புறும் நிலையில் திருமுருகாற்றுப்படையினைப் பாடி முருகனருளாற் சிறை நீங்கியுய்ந்து அப்பெருமான்பணித்த வண்ணம் அங்குள்ள தொரு தடாகத்தில் மூழ்கிப் பொன்முகலியாற்றில் நோய் நீங்கிய தூய வுடம்புடன் எழுந்து திருக்காளத்தியாகிய தென் கயிலாயத்தைக் கண்டு கயிலை பாதி காளத்தி பாதி யந்தாதி பாடினார் என மற்றொரு புதுக்கதையை உருவாக்கி யுள்ளார்.

நக்கீரனாராகிய சங்கப்புலவரது வரலாற்றினை விரித் துரைக்க விரும்பிய இப்பெருமக்கள், திருத்தொண்டர் புராண ஆசிரியர் சேக்கிழார் மேற்கொண்ட உண்மை வரலாற்று நெறிமுறையைப் பின்பற்றி, நக்கீரர் பாடல் களிற் காணப்படும் அகச்சான்றுகளையும் அவரைப்பற்றி அவர் காலத்துப் பெருமக்கள் கூறியனவாகிய புறச்சான்று களையும் ஆதாரவாகக் கொண்டு நூல் செய்திருப்பின் அந் நூல்கள் தமிழ்ப் பெருமக்கள் வரலாறுகளை யறிதற்குப் பெரிதும் உதவி செய்திருத்தல் கூடும். இவ்வாசிரியர்க ளெல்லோரும் வரலாற்று நெறியிற் கருத்தின்றி மக்களது மனவியல்புக்கும் இறைவனது திருவருள் நெறிக்கும் முரணாகப் பிற்காலத்தார் சிலர் புனைந்துரைத்த வடமொழித் தலபுராணங்களையும் காலந்தோறுந் திரிபுற்று வழங்கிய புனைந்துரைக் கதைகளையும் மெய்யென நம்பி நூலியற்றி யுள்ளார்கள். புலமை நிரம்பிய இப்பெருமக்கள் பாடிய

தலபுராணங்களை இலக்கிய நயங்கருதிப் படித்தின்புறுதற் குரிய நூல்களெனக் கொள்வதன்றிப் பழந்தமிழ்ப் புலவர் களது உண்மை வரலாற்றினை யுணர்தற்குத் துணைபுரியும் நூல்களெனக் கொள்ளுதற்கில்லை.

நக்கீரர் பாடியனவாகப் பதினொராந் திருமுறையிற் சேர்க்கப்பெற்றுள்ள பத்துப் பிரபந்தங்களில் ஒன்பதாவது பிரபந்தமாக அமைந்தது திருமுருகாற்றுப்படை. சங்கத்துச் சான்றோர் இப்பாட்டினைப் பத்துப் பாட்டில் முதலாவது பாட்டாகக் கோத்தமைத்துள்ளார்கள். இதனைப் பாடியவர் மதுரைக் கணக்காயனர் மகனர் நக்கீரனராவர். 'ந' என்பது சிறப்புப் பொருளைத் தருவதோர் இடைச்சொல். கீரன் என்பதே இவரது இயற்பெயர். இதன்முன் நல் என்னும் அடைமொழி புணர்த்து நற்கீரனர் என வழங்கு தல் பிற்கால வழக்காகும். நக்கீரர் பாடியனவாகப் பத்துப் பாட்டுள் திருமுருகாற்றுப்படை, நெடுநல்வாடை என இரண்டு பாடல்களும், எட்டுத்தொகையில் முப்பத்து நான்கு தனிப்பாடல்களும் கிடைத்துள்ளன. இறையனரகப் பொருளுக்கு முதலுரை கண்டவர் இவரேயெனக் களவிய லுரை கூறும். கடைச்சங்கப் புலவராகிய இவரது காலம் கி. பி. இரண்டாம் நூற்றுண்டெனக் கொள்ளுதல் பொருந்தும்.

நக்கீரனர் பாடிய திருமுருகாற்றுப்படைக்கும் பதி னொராந் திருமுறையில் நக்கீர தேவர் பாடியனவாகக் குறிக்கப்பட்ட ஏனை ஒன்பது பிரபந்தங்களுக்கும் சொல் வழக்கும் பொருளமைதியும் வரலாற்று நிகழ்ச்சிகளும் முற்றிலும் வேறுபட்டுள்ளன.

திருமுருகாற்றுப்படையில், கோயம், அங்குசம் முதலிய ஒருசில வட சொற்களே அருகிக் காணப்படுகின்றன. கயிலை பாதி காளத்திபாதியந்தாதி முதலிய ஏனைய ஒன்பது பிரபந்தங்களிலும் அர்ச்சனை, அலங்கரித்து, இரவி, இலக்கியம், இலிங்கம், உன்றனக்கு, ஓங்காரம், கங்காளர், கதை, கரம், காகோதரம், காமாதி, கோபப் பிரசாதம், சங்கரன், சடலம், சரணம், சாதி, சித்திரம், சிரம், சுந்தர விடங்கன், தக்கிணம், தயா, திக்கு, தியானிப்பார், துந்துபி, தேவாதிதேவன், நித்தியம், நேசம், பவம், பாசம், பாசுபதம், பாதம், பாதாரவிந்தம், பாவம், பாவனை,

பாவித்து, பிரமன், பிராணி, புண்டரிகம், போனகம், மாயம், மானுடவர், முத்தி, மூர்க்கமாக்கள், மூர்த்தி, வாசகம், விடம், விண்ணப்பம் முதலிய வடசொற்களும் பிற்காலச் சொல்வழக்குக்களும் பெருகிக் காணப்படு கின்றன. அன்றியும் இப்பிரபந்தங்களில் கண்ணப்பர் வரலாறு, சண்டேசர் சரிதம், அருச்சுனற்குப் பாசுபத மளித்தது, சிலந்தியைக் கோச்செங்கணுனுகப் பிற பித் தருளிய சிறப்பு, மார்க்கண்டேயர் கதை, உபமன்னிய முனிவர்க்குப் பாற்கடலீந்தது, சாக்கிய நாயனுர் வரலாறு, நந்திக்கு அருளியது, புலிக்கால் முனிவர், பிங்கிருடி முதலியோர்க்கு அருள் செய்தது, திருமால் பிரமர் அடிமுடி தேடியது, கடவூரிற் காலனையுதைத்தது, காமனையெரித் தது, முயலகனை மிதித்தது, தாருகனைக் கொன்ற காளியின் வேகந்தவிர்த்தது, நாமகளை மூக்கரிந்தது, திரிபுரத்தவுணர் மூவர்க்கு அருள் செய்தது, அந்தகாசுரனைக் கொன்றது, யானையையுரித்தது, ஆலின்கீழ் நால்வர்க்கு அறமுரைத் தது முதலிய புராணச் செய்திகளும் பிற்கால வரலாறுகளும் பேசப்படுகின்றன.

திருமுருகாற்றுப்படையில் தமிழ்நாட்டுப் பழங்குடி மக்கள் மேற்கொண்டு போற்றிய பழைய வழிபாட்டு முறை களே விரித்து விளக்கப்பெற்றிருக்கவும், நக்கீர தேவர் பாடிய திருக்கண்ணப்ப தேவர் திருமறத்தில் ஆகமச் செயல் முறைகளே விரித்துரைக்கப்பட்டுள்ளன. திருமுரு காற்றுப்படை செறிவுந்திட்பமும் வாய்ந்த சொன்னடை யில் அமைந்திருக்கவும் நக்கீரதேவர் பிரபந்தங்கள் இளகிய எளிய நடையில் அமைந்துள்ளன. அன்றியும் நக்கீரதேவர் பாடல்களில் தேவார திருவாசகச் சொற் ருெடர்களும் கருத்துக்களும் அவ்வாறே யெடுத்தாளப் பெற்றுள்ளன. ஆகவே கயிலை பாதி காளத்தி பாதயந்தாதி முதலிய பதிஞெராந் திருமுறைப் பிரபந்தங்களைப் பாடிய நக்கீரதேவரென்பார், திருமுருகாற்றுப்படை யாசிரியரும் கடைச்சங்கப் புலவருமாகிய மதுரைக் கணக்காயனர் மகனர் நக்கீரனரல்லர் என்பதும், தேவார ஆசிரியர் மூவர்க்கும் காலத்தாற் பிற்பட்ட மற்ருெருவரென்பதும் நன்கு தெளியப்படும்.

திருவீங்கோய்மலைத் திருக்கோயிலிற் கருப்பக்கிருகத் தின் வடபுறத்திற் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டொன்

றில் பதினெராந்திருமுறையாசிரியருளொருவரும் திருவீங் கோய்மலையெழுபது என்னும் பிரபந்தத்தால் அத்திருத் தலத்திறைவரைப் போற்றியவருமாகிய நக்கீரதேவரை அத்திருக்கோயிலில் எழுந்தருளுவித்த செய்தி குறிக்கப் பட்டுள்ளது. மூன்றாங் குலோத்துங்க சோழனது 36ஆம் ஆட்சியாண்டில் இராஜராஜ வளநாட்டுமலை ஸ்ரீஜயங் கொண்ட சோழச் சதுர்வேதி மங்கலத்துப் பெருங்குறி மகாசபையார், உடையார் திருவீங்கோய் ஊருடையார் கோயிலில் எழுந்தருளுவித்த ஆளுடைய பிள்ளையார்க்கும் திருநாவுக்கரசு தேவர்க்கும் ஆலால சுந்தரப் பெருமானுக்கும் திருநற்கீர தேவர்க்கும் திருப்படி மாற்றுக்கும் விஞ்சநத்துக்கும் உடலாக (முதற் பொருளாக) நிலம் அளித்தமையே இக் கல்வெட்டிற் குறிக்கப்பட்ட சிறப்புடைய நிகழ்ச்சியாகும்* இக் கல் வெட்டினைக் கூர்ந்து நோக்குங்கால் இதன்கண் குறிக்கப் பெற்ற திரு நற்கீர தேவரென்பார், பதினெராந் திருமுறை யாசிரியருள் ஒருவரென்பதும் இவ்வாசிரியர் திருவீங்கோய் மலை யெழுபது என்னும் பிரபந்தத்தைப் பாடி இத் திருத் தலத்தைப் போற்றினமையால் இவரது திருவுருவம் திருக் கோயிலில் எழுந்தருளச் செய்யப்பட்டு வழிபடப் பெறுவ தாயிற்றென்பதும் நக்கீர தேவராகிய இவ் வாசிரியரைத் தேவார ஆசிரியர் மூவர்க்கும் பின்னுக இதன்கண் குறித் திருத்தலால் இத் திருநற்கீர தேவரென்பார் தேவார ஆசிரியர் மூவர்க்குங் காலத்தாற் பிற்பட்டவரென்பதும் இனிது புலனுதல் காணலாம். திருஞானசம்பந்தர் திரு நாவுக்கரசர் சுந்தரர் ஆகிய மூவர் திருவுருவங்களையும் எழுந்தருளுவித்து வழிபாடு நிகழ்த்தும் முறை சிவ பெருமானுக்குரிய எல்லாத் திருக்கோயில்களிலும் தவருது போற்றப்பெற்றுவரும் பொது நிகழ்ச்சியாகும். திருவீங் கோய்மலை யெழுபது பாடிய திரு நற்கீரதேவரை அவ்வூர்த் திருக்கோயிலில் எழுந்தருளுவித்து நாள் வழிபாட்டிற்கு நிலமளித்த இச்செய்தி அவ்வூர்த் திருக்கோயிலுக்கே யுரிய சிறப்புடைய நிகழ்ச்சியாகும்.

நக்கீர தேவராகிய இவ்வாசிரியர் பிறந்த நாடு, ஊர், குலம், பெற்ற தாய் தந்தை இன்னுர் என்பது முதலிய

* செந்தமிழ், பதினேழாந்தொகுதி 313-ம் பக்கம்,

வாழ்க்கை வரலாற்றினைப் பற்றித் தெளிவாகத் தெரிந்து கொள்ளுதற்குரிய சான்றுகள் கிடைக்கவில்லை. நக்கீர தேவர் என இவர்க்கு வழங்கும் பெயர் மதுரைக்கணக்காய ஞர் மகனுர் நக்கீரனராகிய பழைய சங்கப் புலவரது பெயரையொட்டி இவர்க்குப் பெற்றேரா லிடப்பெற்று வழங்கியதெனத் தெரிகிறது. இது போலவே இப் பதினேராந் திருமுறையிற் குறிக்கப்பெற்ற கல்லாட தேவர், கபில தேவர், பரண தேவர் எனவரும் பெயர்களும் கடைச்சங்கப்புலவர்களாகிய கல்லாடர், கபிலர், பரணர் என்னும் பெருமக்களை நினைவுகூர்தற்பொருட்டு அவர்தம் பெற்ரேர்களால் இடப் பெற்று வழங்குவனவென்றே கொள்ளத்தக்கன. இளமைப்பருவத்தே நக்கீரர், கல்லாடர், கபிலர், பரணர் எனச் சங்கப்புலவர் பெயர்களால் அழைக்கப்பெற்று வந்த இவர்கள், திருவருட் புலமையிற் சிறந்து இப்பதினேராந் திருமுறையிலுள்ள பிரபந்தங் களைப் பாடிய காலத்தில் தெய்வத்தன்மையை விளக்குதற் குரிய தேவர் என்னும் சிறப்பினையும் பெற்று நக்கீர தேவர், கல்லாட தேவர், கபில தேவர், பரண தேவர் என உலக மக்களால் அழைக்கப்பெற்ருர்களெனக் கொள்ளுதல் ஏற் புடையதாகும். தேவார ஆசிரியர் காலத்திற்குப்பின் தோன்றிய இப்பெருமக்கள் பண்டைநாளில் வாழ்ந்த சங்கப்புலவர் பெயர்களைத் தமக்குரியனவாகக்கொண்டு திகழ்தலை நோக்குங்கால் இவர்கள் வாழ்ந்த காலப்பகுதி யில் தமிழ் மக்களிடையே சங்கப் புலவர்கள் செய்த தமிழ்த் தொண்டுபற்றிய மனவெழுச்சி தோன்றியதென்பதும் தம் பிள்ளைகளுக்குப் பண்டைத்தமிழ்ப் புலவர்களின் பெயரை இட்டு அழைக்குமுகமாக அப் புலவர்பெருமக்களது புலமைத்திறத்தில் தம்மக்களை ஈடுபடுத்தல் வேண்டுமென் னும் பெருவேட்கை அக்காலத் தமிழ் மக்களிடையே நில வத் தொடங்கிய தென்பதும் நன்கு புலனும். எனவே நக்கீர தேவராகிய இவ்வாசிரியர் நல்ல தமிழ்ப்பற்றுடைய குடும்பத்திற் பிறந்து வளர்ந்து தமிழ்ப்புலமையிற் சிறந்தன ரெனக் கொள்ளுதல் மிகவும் பொருந்துவதாகும். திருவீங் கோய்மலையிற் பொறிக்கப்பெற்றுள்ள கல்வெட்டில் நக்கீர தேவராகிய இவ்வாசிரியர் தேவார ஆசிரியர் மூவர்க்கும் பின்னே குறிக்கப்பெற்றிருத்தலையும் பதினேராந் திரு முறையிற் சேரமான் பெருமாளருளிய பிரபந்தங்களின் பின்னே இவருடைய பிரபந்தங்கள் முறைப்படுத்தமைக்கப்

பெற்றிருத்தலையும் நோக்குமிடத்து இவ்வாசிரியர் வாழ்ந்த காலம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டினை யொட்டியதென்பது நன்கு உய்த்துணரப்படும்.

இவ்வாசிரியர் திருக்காளத்தி, திருவீங்கோய்மலை, திருவலஞ்சுழி ஆகிய திருத்தலங்களைப் போற்றிப் பிரபந்தங்கள் பாடியிருத்தலையும் இவர் பாடிய பிரபந்தங்களில் திருவாலவாய், திருமறைக்காடு, திருவண்ணாமலை ஆகிய திருத்தலங்கள் குறிக்கப்பட்டிருத்தலையும் நோக்குங்கால் இவர் மேற்குறித்த திருத்தலங்களில் பல நாட்கள் தங்கியிருந்து சிவபெருமானை வழிபட்டவரென்பது நன்கு பெறப்படும். இவர் பாடிய திருவெழுகூற்றிருக்கையென்னும் பிரபந்தத்தின் இறுதியிலே,

> பணிந்தேனின் பாதம் பரமேட்டி பால்நீ
> றணிந்தால வாயில் அமர்ந்தாய் – தணிந்தென்மேல்
> மெய்யெரிவு தீரப் பணித்தருளு வேதியனே
> ஐயுறவொன் றின்றி யமர்ந்து.

என்ற செய்யுள் காணப்படுகின்றது. இதன்கண் 'மெய்யெரிவு' எனக் குறிக்கப்படுவது வெப்புநோய்போல்வதோர் உடற்பிணியாகும். இந்நோயால் வருந்திய நக்கீர தேவர் திருவாலவாயிறைவனைப் பணிந்து திருவெழுகூற்றிருக்கையென்னும் பிரபந்தத்தைப்பாடி நோய்நீங்கியின்புற்றார் எனக்கருதுதல் பொருத்தமாகும். 'கொங்குதேர் வாழ்க்கை' யென்ற பாடலுக்கு நக்கீரர் குற்றங் கூறியது கண்டு சினமுற்ற இறைவர் நெற்றிக்கண்ணைக் காட்ட அவர்தம் கண்ணழலால் நக்கீரர்க்குண்டாகிய அழற்சியே இப்பாடலில் மெய்யெரிவு எனக் குறிக்கப்பட்டதெனக் கருதுவர் சிலர். பிற்காலத்தாராற் புனைந்துரைக்கப்பட்ட இக்கதை நக்கீர தேவரது மனநிலைக்கும் இறைவனது அருளியல்புக்கும் முற்றிலும் மாறுபட்டிருத்தலால் இக்கருத்தினை உண்மையெனக்கொள்ளுதற்கில்லை.

இனி, தருமியின் பொருட்டு இறைவன் பாடித்தந்த கொங்குதேர் வாழ்க்கையென்ற தமிழ்ச்செய்யுளை நக்கீரர் பழித்தனரென்பதற்கு,

> 'கூடலாலவாய்க் குழகனது
> தறியாதருந்தமிழ் பழித்தன னடியேன்'

என நக்கீர தேவர் பாடிய பெருந்தேவபாணியை அகச் சான்ருகக் காட்டுதலுங்கூடும். இதுவே நக்கீர தேவரது கருத்தென்பாருளராயின், இதனையடுத்து

'ஈண்டிய சிறப்பி னிணையடிக்கீழ்நின்று
வேண்டுமது வினிவேண்டுவன் விரைந்தே'

என இறைவனை வேண்டிப் போற்றும் பகுதிக்கு நக்கீரர் அருந்தமிழ் பழித்தலையே மீளவும் வேண்டினுரென உரை கூறவேண்டிவரும். 'திருவால வாயில் எழுந்தருளிய இறைவனுகிய நீ சொல்லின் எல்லையைக் கடந்து விளங்குந் தொன்மையுடையாய் என்பதனையுணரப் பெருது அடியேன் நின்பெருமைகளை அருமையுடைய தமிழ்ப் பாடல்களால் போற்றித் துதித்தேன். எல்லாப் பொருளும் ஒருசேரத் தங்குதற்கு ஆதாரமாகவுள்ள நின் திருவடிக் கீழ்நின்று நின்னருளால் வேண்டக்கத் தக்கதனை இனி விரைந்து வேண்டிப்பெறும் அவாவுடையேன்' என நக்கீரதேவர் திருவாலவாயிறைவனைப் பணிந்து வேண்டுவதாக அமைந்ததே,

சொலற்கருந் தொன்மைத் தொல்லோய் நீயே அதனல்
கூடலால வாய்க் குழகனுவ
தறியாதருந் தமிழ் பழிச்சின னடியேன்
ஈண்டிய சிறப்பின் இணையடிக் கீழ்நின்று
வேண்டுமது வினி வேண்டுவன் விரைந்தே.

எனவரும் பெருந்தேவ பாணியாகும். இதன்கண் அருந் தமிழ் பழிச்சினன் என்ற தொடரையே பிற்காலத்தார் அருந்தமிழ் பழித்தனன் எனத் தவருகப் பாடங்கொண்டு மேற்குறித்த புனைந்துரைக் கதைக்கு இடஞ்செய்து தந்தனரெனக் கருதவேண்டியுளது.

நக்கீரதேவர் பாடிய பிரபந்தங்களை நுணுகி நோக்குங் கால் அவர் சங்க காலத்தில் வாழ்ந்தவரல்லரென்பதும், தேவார ஆசிரியர் மூவர்க்குங் காலத்தாற் பிற்பட்டவ ரென்பதும் இறைவன் தருமிக்குப் பொற்கிழி யளித்த திருவிளையாடலுக்கும் கைலைபாதி காளத்திபாதி யந்தாதி முதலிய பிரபந்தங்களைப் பாடிய நக்கீரதேவரது வரலாற்றுக்கும் எத்தகைய தொடர்புமில்லை யென்பதும் நன்குபுலனும். இனி நக்கீரதேவர் பாடிய பிரபந்தங்களை முறையே நோக்குவோமாக.

1. கைலைபாதி காளத்திபாதி யந்தாதி

எல்லாம்வல்ல சிவபெருமான் வடதிசையிலுள்ள திருக்கயிலாய மலையில் அம்மையப்பனாக வீற்றிருந்து எவ்வுயிர்க்கும் அருள் சுரத்தல் போன்று, தென்றிசையிலுள்ள திருக்காளத்தி மலையிலும் மாதொருபாகனாக வீற்றிருந்து மன்னுயிர்க்கு அருள்சுரக்கின்றான் என அப்பெருமானது அருமையில் எளிய அருளின் நீர்மையைப் புலப்படுத்துங் கருத்துடன் நக்கீரதேவர் அருளிய செந்தமிழ்ப் பனுவல் கயிலைபாதி காளத்திபாதியந்தாதி யாகும். இந்நூல் அந்தாதித் தொடையமைய நூறு வெண்பாக்களால் இயன்றுளது. இதன்கண் ஒற்றைப் படையெண்களிலமைந்த வெண்பாக்கள் ஐம்பதும் திருக் கயிலையைப் போற்றுவனவாகவும், இரட்டைப்படை யெண்களிலமைந்த வெண்பாக்கள் ஐம்பதும் திருக்காளத்தியைப் போற்றுவனவாகவும் அடுத்தடுத்து அமைந்திருத்தலால் இது கயிலைபாதி காளத்திபாதி யந்தாதி யெனப் பெயரெய்துவதாயிற்று.

திருக்காளத்தி யிறைவரைப் பரவிப் போற்றிய திருநாவுக்கரசர், தென்திசையிலுள்ள அத் திருக்காளத்தி மலையில் வீற்றிருந்தருளும் இறைவனைப் பணிந்த குறிப்பினால் வடதிசையிலுள்ள திருக்கயிலையில் இறைவன் வீற்றிருந்தருளும் பெருந் திருக்கோலத்தையும் கண்டு வழிபட விரும்பி வடதிசை நோக்கிப் புறப்பட்டருளினார் என்பது வரலாறு.

> சேணிலவு திருமலையில் திருப்பணியாயின செய்து
> தாணுவினை அம்மலைமேல் தாள்பணிந்த குறிப்பினால்
> பேணுதிருக் கயிலைமலை வீற்றிருந்த பெருங் கோலங்
> காணுமது காதலித்தார் கலைவாய்மைக் காவலனார்.

எனவருஞ் சேக்கிழார் வாய்மொழியால் இச்செய்தி புலனாதல் காணலாம். திருக்காளத்தி மலையை வழிபட்ட திருநாவுக்கரசர் திருவுள்ளத்தே தென்றிசையிலுள்ள அம்மலையைப் போன்று வடதிசையில் திகழும் திருக்கயிலை மலை நினைவுக்கு வந்ததென்னும் இச்செய்தியினைக் கூர்ந்து நோக்குமிடத்து, வடதிசையில் திகழும் திருக்கயிலை மலையை யொத்த பெருஞ்சிறப்பு தென்றிசையில் விளங்கும் திருக்காளத்தி மலைக்கு உண்டென்பது திருநாவுக்கரசர் திருவுள்ளக் குறிப்பாதல் நன்கு பெறப்படும். இக்குறிப்பினை,

மனத்தகத்தான் தலைமேலான் வாக்கினுள்ளான்
வாயாரத் தன்னடியே பாடுந் தொண்டர்
இனத்தகத்தான் இமையவர்தஞ் சிரத்தின்மேலான்
ஏழண்டத் தப்பாலான் இப்பாற் செம்பொற்

புனத்தகத்தான் நறுங்கொன்றைப் போதினுள்ளான்
பொருப்பிடையான் நெருப்பிடையான் காற்றினுள்ளான்
கனத்தகத்தான் கயிலாயத் துச்சியுள்ளான்
காளத்தியா னவனென் கண்ணுளானே.

எனவருந் திருத்தாண்டகத்தில் திருநாவுக்கரசர் தெளிவாகப் புலப்படுத்தருளினமை காணலாம். இவ்வாறு ஒரு திருப்பதியில் தங்கி இறைவனை இறைஞ்சுங்கால் அதனையொத்த ஏனைத்திருப்பதியும் நினைவுக்குவர அவ்விரண்டினையும் சேர்த்துப் பாடிப்போற்றும் வழக்க முண்டென்பது, திருப்புன்கூரும் திருநீடூரும் ஆகிய இருதலங்களையும் பற்றித் திருநாவுக்கரசர் பாடிய திருத் தாண்டகத்தாலும், திருப்புகலியும் திருவீழிமிழலையும், திருமருகலும் திருச்செங்காட்டங்குடியும், திருநள்ளாறும் திருவாலவாயும், என இரண்டிரண்டு தலங்களைப்போற்றித் திருஞானசம்பந்தப் பிள்ளையார் பாடிய திருப்பதிகங் களாலும் இனிது புலனாகின்றது. இவ்வழக்கத்தை யொட்டியே கயிலைபாதி காளத்திபாதியந்தாதி யென்னும் இப்பிரபந்தமும் தோன்றியிருத்தல்வேண்டும். தென்னாட் டிலுள்ள திருக்காளத்தி மலையினை அடைந்து அங்கெழுந் தருளியுள்ள அம்மையப்பரை வணங்கிப்போற்றிய நக்கீர தேவரது உள்ளத்தில், திருநாவுக்கரசடிகளார் திருவுள்ளத் திற்றோன்றியவாறு வடதிசையிலுள்ள கயிலைமலையைப் பற்றிய எண்ண முண்டாக, அவ்வெண்ணத்தால் திருக் கயிலையைப்பற்றி யொரு பகுதியும் அம்மலையை நினைக்கத் தூண்டிய திருக்காளத்தியைப்பற்றி மற்றொரு பகுதியுமாக கயிலைபாதி காளத்தி பாதியந்தாதி யென்னும் இப்பனுவலைப் பாடிப் போற்றினாரெனக் கருதுதல் பொருந்தும்.

இறைவனது திருவருளின் திறத்தை நினைந்துருகிய நக்கீர தேவர், இறைவனுடைய அருட்கோலங்களையும் திருவருட் செயல்களையும் அவனை வழிபடுவதன் இன்றியமை யாமையினையும் விரித்துணர்த்தும் நிலையிற் பாடிய பாடல் களும், தம் நெஞ்சத்திற்கு அறிவுறுத்தும் நிலையிற்பாடிய பாடல்களும், இறைவனை நோக்கி உரையாடும் நிலையிற்

பாடிய பாடல்களும், இறைவனைக் காதலித்த தலைவியின் ஆற்ருமையினையும் பேரன்பின் திறத்தினையும் புலப்படுத்தும் நிலையிற் பாடிய பாடல்களும் இதன்கண் அமைந்துள்ளன. தூய்மையுடைய சொற்களையே திரியாகவும் அவற்ருலுணர்த்தக் கருதிய நற்பொருளையே நெய்யாகவும் தீய சொற் பயிலாத தூய்மையுடைய நல்ல நாவினையே அகலாகவுங் கொண்டு நக்கீர தேவர் வெண்பா அந்தாதியாகிய இச் சுடர்விளக்கினை மாதொரு பாகனுகிய இறைவன் திருமுன்னே ஒளிபெருக ஏற்றி வழிபட்டார் என்பது,

சொல்லும் பொருளுமே தூத்திரியு நெய்யுமா
நல்லிடிஞ்சில் என்னுடைய நாவாகச் – சொல்லரிய
வெண்பா விளக்கா வியன் கயிலை மேலிருந்த
பெண்பாகர்க் கேற்றினேன் பெற்று.

எனவரும் அவரது வாய்மொழியால் இனிது விளங்கும்

காளத்தியிறைவனைக் கண்டு வணங்க வல்ல ஆற்றலுடையதாயின் நாம் பெற்ற இம்மனிதப் பிறவி மிகவும் இனிமையுடையதே யென்பதனை,

இனிதே பிறவி இனமரங்க ளேறிக்
கனிதேர் கடுவன்கள் தம்மின் – முனிவாய்ப்
பிணங்கிவருந் தண்சாரற் காளத்தி பேணி
வணங்கவல்ல ராயின் மகிழ்ந்து.

எனவரும் பாடலில் நக்கீரர் குறிப்பிட்டுள்ளார். காளத்தி மலையிற் கனிகளைப் பறிக்கச் செல்லும் குரங்குகள் தம்மிற் சினந்து பிணங்கி மாறுபடுதல் போன்று உலகியலின்பத்தைக் கருதி ஒருவரோடொருவர் பகைகொண்டு திரியும் நிலையினராகிய மக்கள், தம்முட் பகைமை நீங்கி எவ்வுயிர்க்கும் இன்பமளிக்கும் இறைவன் எழுந்தருளிய திருக்காளத்தியை வணங்க வல்லராயின் அவர் பெற்ற மனிதப் பிறவி மிகவும் இனிமையுடையதேயென்பது இத்திருப்பாட்டின் கருத்தாகும். இது 'மனித்தப் பிறவியும் வேண்டுவதே யிந்த மாநிலத்தே' எனத் திருநாவுக்கரசர் கூறிய வாய்மொழிப் பொருளைத் தன்பாற் கொண்டிருத்தல் அறிந்து மகிழத்தக்கதாகும்.

அறிவு நூல்களைக் கற்ற பெரியோர்களால் ஏத்தி வழிபடப்பெறும் காளத்தியிறைவனையடைந்து அடித்தொண்டு செய்யும் பேறுபெற்றேன். இவ்வுலகத்திற் பெறுதற்கரிய

மக்கட் பிறப்பினாலடைதற்குரிய பெரும்பயன் இதுவன்றோ என நக்கீர தேவர் வியந்து கூறுவதாக அமைந்தது,

> பெற்ற பயனிதுவே யன்றே பிறந்தியான்
> கற்றவர்க ளேத்துஞ்சீர்க் காளத்திக் – கொற்றவர்க்குத்
> தோளாகத் தாடரவம் சூழ்ந்தணிந்த அம்மானுக்
> காளாகப் பெற்றேன் அடைந்து.

என்ற பாடலாகும். இதன்கண் 'கற்றவர்களேத்துஞ்சீர்க் காளத்திக் கொற்றவர்' என்றது, 'கற்றல்கேட்டலுடையார் பெரியார் கழல் கையால் தொழுதேத்தப், பெற்ற மூர்த்த பெம்மான்' எனத் திருஞான சம்பந்தர் கூறிய பொருளுரையை நினைவுபடுத்தல் காணலாம்.

இறைவன் தன்னை அன்பினால் நினைந்து போற்றும் மெய்யடியார்க்கு அருள் செய்தல் கருதி அவரவர் விரும்பிப் போற்றிய பலவேறு திருவுருவங்களைக் கொண்டு தோன்றினும் யாவராலும் உணர்தற்கரிய இறைமைத் தன்மையுடைய முதல்வன் ஒருவனே யென்பார்,

> 'உருவு பலகொண் டுணர்வரிதாய் நிற்கும் ஒருவன்'

என்றார் நக்கீரர். 'தானொருவனுமே பலவாகி நின்றவா' எனவரும் திருவாசகத்தொடர் ஈண்டு நினைவுகூரத் தக்கதாகும்.

அமிழ்தத்தைப் பெறவிரும்பித் தேவரும் அசுரரும் கூடிப் பாற்கடலைக் கடைந்தனர். அந்நிலையிற் கடலிடையே கருமலையொன்று வெளிப்படுவது போன்று ஆலகால நஞ்சு கிளர்ந்தெழுந்தது. நஞ்சினைக் கண்டு அஞ்சிய அவர்கள் தப்பிச் செல்லுதற்குரிய வழியறியாது நடுக்கமுற்றனர். அவர்தம் துன்பத்தைக் கண்டு உளமிரங்கிய சிவபெருமான் அந்நஞ்சினையுண்டு மிடற்றிலடக்கினான். அப்பெருமானது பேரிரக்கத்தாலும் அருட்செயலாலும் இவ்வுலகம் அழியாது நிலைபெற்று வருவதாயிற்று. இச்செய்தினை,

> மலைவரும்போல் வானவரும் தானவரும் எல்லாம்
> அலைகடல்வாய் நஞ்செழல்கண் டஞ்சி - நிலைதளரக்
> கண்டமையால் தண்சாரற் காளத்தி யாள்வார்நஞ்
> சுண்டமையால் உண்டிவ் வுலகு.

எனவரும் பாடலில் நக்கீரதேவர் சுவைபெற விரித்துக் கூறியுள்ளார். இச்செய்யுள்,

'பண்புடையார்ப் பட்டுண் டுலகம், அதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன்'

என்ற திருக்குறளையும் இதற்கு விரிவுரையாக அமைந்த 'உண்டாலம்ம விவ்வுலகம் தமக்கென முயலா நோன்றாட் பிறர்க்கென முயலுநர் உண்மையானே' என்ற புறநானூற்றுச் செய்யுளையும் நினைவுபடுத்துவதாகும்.

இறைவன் சொல்லும் பொருளும் போலவும் உடலும் உயிரும் போலவும் எங்கும் நீக்கமறநிறைந்து விளங்குகின்றானென்பதும் எனினும் மக்கள் தம் ஐம்புலன்களாற் பற்றி யுணர்தற்குரிய நிலையின்றி ஒன்றினுந் தோய்வின்றிப் புலனுணர்வுக்கு அப்பாற்பட்டுள்ளானென்பதும் ஆகிய உண்மையினை,

'உரையும் பொருளும் உடலும் உயிரும்
விரையும் மலரும்போல் விம்மி—புரையின்றிச்
சென்றவா றெங்குந் திருக்கயிலை யெம்பெருமான்
நின்றவா றெங்கும் நிறைந்து.'

எனவும்,

'நிறைந்தெங்கும் நீயேயாய் நின்றாலும் ஒன்றின்
மறைந்தைம் புலன்காண வாராய்.'

எனவும் வருந் தொடர்களால் நக்கீரதேவர் விரித்துக் கூறியுள்ளார். ஒருபற்றுமற்று அருவாய்த் தானே நிற்குந் தத்துவங்கடந்த பொருளாகிய இறைவனை,

'உற்ற ஆக்கையின் உறுபொருள், நறுமலரெழுதரு
நாற்றம்போல்
பற்றலாவதோர் நிலையிலாப் பரம்பொருள்'

எனத் திருவாதவூரடிகள் உணர்ந்து போற்றுங் குறிப்பு இவண் ஒப்புநோக்கியுணரத்தக்கதாகும்.

இறைவனது பொருள்சேர்புகழை நாவாரப் பேசா திருப்பார் உலகத்தின் திலகமென விளங்கும் செல்வமுஞ் சிறப்புமுடையராயினும் அவரது பிறப்பு மிகவும் இழிவுடையதே. இறைவனுக்கு ஆட்பட்ட மெய்யடியார்களைப் போற்றி வழிபடும் இயல்பிலாதார் குடிப்பிறப்பு கல்வி செல்வம் முதலிய பிறநலங்களாற் சிறப்புற்று விளங்கினும் அன்னோர் பெரிதும் இழிவுடையவரே. இறைவனைப் போற்றாது வீணே பொழுது போக்குவாராகிய அவர்களும் மனிதப் பிறவியாலுளதாம் பயனையடைந்து சிறப்பெய்திய

வர் ஆவரோ? இறைவனைக் கைதொழுவார்க்கு மீண்டும் பிறவியில்லை. வஞ்சனையைச் செய்து ஐம்புல வேடர் பணித்த தீய வழிகளிற் சென்று இவ்வுடம்பினை நிலையுடைய தென எண்ணிக் களிப்புமிக்கு ஆடித்திரிதல் அறிவுடைமை யாகாது. இவ்வுடம்பு நிலையுடையதன்று. ஆதலால் தூயோனாகிய இறைவனது பெரும்புகழைப் பயின்றேத்தி வழிபடுதலே அறிவு நூல்களைக் கற்றதனாலாய நற்பயனாகும். வானோர்தம் சிந்தையாலும் அறிவருஞ் செல்வனாகிய இறைவன், தன்னடியார்களுக்கு முன்னின்று அருள்புரிதலால் அருமையிலெளிய அழகனாகத் திகழ்கின்றான். தன்னொப்பாரில்லாத அவ்வொருவனே பிரமன், திருமால், அமரர்கோன் முதலிய பலராய்க் கலந்து நின்று இவ்வுலகத்தைப் படைத்துக் காத்து ஆண்டு எல்லாம் ஒடுங்குதற்குரிய பேருழிக் காலத்தே தானொருவனுமேயாகி மீளவும் இவ்வுலகத்தைத் தோற்றுவித்து இங்ஙனம் பலவேறு திருமேனிகளைத் தாங்கி அருள்புரிகின்றான். அவனைக் கைதொழுவோர்க்கு மீண்டும் பிறவியில்லை. அப்பெருமானைக் கைதொழாதார் பல பிறவிகளிலும் பிறந்துழலுவதன்றி அமைதியான பேரின்ப வாழ்வினை அடைதல் இல்லை. எல்லாப் பொருட்கும் சார்பாகிய செம்பொருளையுணர்ந்து சார்ந்த மெய்யடியார்களை எத்தகைய இடர்களிலும் சிக்குறாமற் காப்பனவும் தம்மையடைந்து அன்பு செய்தார்க்கு வீடுபேறாகிய பேரின்பத்தை வழங்குவனவும் தம் உள்ளத்துள்ளே அன்புமீதூர நினைந்துபோற்றுவார்முன் தோன்றித் துணைபுரிவனவும் காளத்தியிறைவனுடைய திருவடிகளேயாகும். காலமறிந்து உயிரை உடம்பினின்றும் பிரிக்குந் தொழிலை மேற்கொண்ட கூற்றுவனார் ஊழால் நமக்கு வகுக்கப்பட்டுள்ள வாழ்நாளைக் கணக்குப் பார்த்துக்கொண்டிருந்து அக்காலம் நேர்பட்ட அளவில் நம்மை வணக்கித் துன்பவலையுட்படுத்தற்கு எதிர் பார்த்து நிற்கின்றார். அவர் வருதற்கு முன்னமே இறைவனைத் தொழுதுய்தல் வேண்டும். உயிர் உடம்பைவிட்டு நீங்கிய அளவில் ஊரார் அவ்வுடம்பினைச் சுடுகாட்டிற்கு எடுத்துச் சென்று அடக்கஞ் செய்ய அவ்வுடம்பு தீயில் வேதலைக் கண்டிருந்தும் இறைவனையேத்துதற்கு மனம் ஒருப்படவில்லையே? இறைவனது திருப்பெயராகிய திருவைந்தெழுத்து வாயாற் சொல்லுமளவில் வானோரமிழ்தத்தையொத்து அண்ணிப்பதாகிக் கொடிய பிறவி நோயைத்

தீர்த்து இன்பஞ்செய்வதாகும். அருமறைப் பொருளாய்ச் சிறந்து விளங்குவது திருவைந்தெழுத்தே. இதனைப் பயிலுதலால் யாவராலும் காணுதற்கரிய இறைவனை அடைந்தின்புறுதற்கரிய பெருநெறி மிகவும் அணிமையதா மாதலின் திருவைந்தெழுத்தினைச் சோராமல் எப்பொழுதும் சொல்லுதல் வேண்டும். பெறுதற்கரிய மக்கட்பிறப்பினைப்பெற்ற மாந்தர்பலர் கொன்னே காலத்தைக் கழிக்கின்றார்கள். அந்தோ இவர்கள் பிறருடைய மாயத்துட்பட்டு மயங்கினர்போலும். காளத்தி யிறைவர்க்கு அன்பினால் நெருங்கித் தொண்டுபுரிந்த கண்ணப்ப நாயனரது பேரன்பின் திறத்தை இன்னோர் கேட்டு உய்தியடைய மாட்டார்களா? அருச்சுனன் தன் உயிர்த்தோழனாகிய கண்ணபிரானோடுஞ் சென்று கயிலையையடைந்து சிவபெருமானைப் பணிந்து அப்பெருமான்பால் பாசுபதப் படையைப் பெற்றுப் பகைவரையழித்து வெற்றி பெற்ற திறத்தைப் பாரதக் கதையிலே கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள். இறைவன் தன்னை மெய்ம்மையாக வழிபடுவோர் யாவராயினும் அவருடைய துன்பங்களை இம்மையேதீர்த்து அருள்புரிவன். சிவபெருமானே யாவர்க்கும் முழுமுதற் கடவுள். இவர் கடவுள் அவர் கடவுள் என்று சொல்லி இருநிலைப்பட்டு ஐயுறாமல் நீங்கள் விரும்பியதொரு தெய்வத்தை உள்ளத்தால் நினைந்து போற்றுவீராயின், காளத்தியிறைவராகிய சிவபெருமானே அத்தெய்வமாக வந்து உங்கட்கு அருள்புரிவார். கழிந்தநாள் போகட்டும்; இனிமேல் எஞ்சியுள்ள நாட்களிலேனும் கயிலைப்பெருமானை நண்ணி வழிபடுதல் நமக்குச் சிறந்த பேரின்பத்தினை நல்குவதாகும். வாழ்நாள் மேலும் உள்ளனவென்று கருதி நாம் உலக நுகர்ச்சியிலே அழுந்திக்கிடத்தல் தவமாகாது. நிலைபேறில்லாத இப்பொய்வாழ்வினைப் பொருளெனப் பேணாது கயிலைப் பெருமானை இடைவிடாது நினைந்து வழிபடுதல் அறிவின் பயனாகும். ஐம்புலன்களையும் வென்று காம முதலிய குற்றங்களை வேரறுத்து இறைவனது திருவருள் ஒன்றையே இடைவிடாது நினைத்திரேல் கயிலைப் பெருமானுடைய கழலடைந்து இன்புறலாம் என நக்கீர தேவர் உலக மக்களை நோக்கியும் தம் உள்ளத்தை நோக்கியும் கூறும் அறிவுரைகள் திருக்குறள், தேவாரத்திருப்பதிகங்கள், திருவாசகம் முதலிய பண்டைப் பனுவல்களின் தெளிபொருளாகத் திகழ்தல் உணர்ந்து மகிழத்தக்கதாகும்.

கயிலைப் பெருமானாகிய இறைவனே, நின்னைத் தம் முடைய ஆன்ம போதத்தாற் காண முயன்றாரது ஆராய்ச்சிக்கு நெடுந் தொலைவிலும் நின்னருளே கண்ணாகக்கொண்டு காணும் தகுதிவாய்ந்த மெய்யடியார் களுக்கு அண்மையிலும் விளங்குகின்றாய் என நின்னை உணர்ந்தோர் கூறுதலால், தன்னறிவொன்றே கருவி யாகக் கொண்டு நின்னை ஆராய்ந்துகாண முற்பட்டாரொரு வர்க்கு நீ நின்ற நிலையினை அறிதல் கூடுமா? நின்னை ஆதாரமாகக்கொண்டு நின்னிடத்தினின்றும் வெளிப் பட்டுத் தோன்றிய ஏழுலகங்களும் மீண்டும் நின்பால் ஒடுங் குதலை இயல்பாகவுடையன என்னும் இவ்வுண்மையினை ஆராய்ந்து நோக்குங்கால் நினது இறைமைத் தன்மையை உள்ளவா றுணர்வார் நின்னையன்றி வேறு யாருளர்? என இறைவனை நோக்கி வினவுவதாக அமைந்தன,

கருத்துக்குச் சேயையாய்க் காண்டக்கோர் காண
இருத்தி திருக்கயிலை யென்றால் — ஒருத்தர்
அறிவா னுறுவார்க் கறியுமா றுண்டோ
நெறிவார் சடையாய் நிலை. (கயிலைபாதி 15)

நின்னியல்பை யாரே அறிவார் நினையுங்கால்
மன்னிய சீர்க் காளத்தி மன்னவனே — நின்னில்
வெளிப்படுவ தேழுலகும் மீண்டே யொருகால்
ஒளிப்பதுவு மானால் உரை. (கயிலைபாதி-46)

எனவரும் பாடல்களாகும். இப்பாடல்களில்,

'நின்னளந் தறிதல் மன்னுயிர்க் கருமையின்
நின்னடி யுள்ளி வந்தனன்'

எனவரும் திருமுருகாற்றுப்படையின் கருத்தும்,

'காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக்காலே'

எனவரும் திருநாவுக்கரசர் பொருளுரையும்,

'அவனருளாலே யவன்றாள் வணங்கி'[3]

எனவரும் திருவாதவூரடிகள் அருள்மொழியும் இடம் பெற்றிருத்தல் காணலாம்.

'என்னுடைய நல்வாழ்விற்குரிய முதற்பொருளாக விளங்கும் பெருமானே! நாயினுங்கடையேனாகிய அடியேன் எந்தக்காலத்தில் எந்தப் பிறவியை யடைந்தாலும் யாண்டும் நின்னை மறவாது கண்டு ஏத்துதலே எனது பெருவிருப்பமாகும்' என இறைவனை வேண்டுவதாக அமைந்தது,

வைத்த இருநிதியே என்னுடைய வாழ்முதலே
நித்திலமே காளத்தி நீள்சுடரே — மொய்த்தொளிசேர்
அக்காலத் தாசை அடிநாயேன் காணுங்கால்
எக்காலத் தெப்பிறவி யான்.

என்ற பாடலாகும். இது,

'புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியாவுன்னடி யென்மனத்தே
வழுவாதிருக்க வரந்தரல் வேண்டும்'

எனவரும் திருநாவுக்கரசர் வாய்மொழியையும்

'நின்திருவடிக்காம் பவமே யருளுகண்டாய்'

எனவருந் திருவாசகத்தொடரையும் நினைவுபடுத்துவதாகும்.

திருக்காளத்தியி லெழுந்தருளிய சிவபெருமானைக் கண்டு காதலித்த தலைவியொருத்தி இறைவன் தெருவழியே திருவுலாப்போகும் நிலையில் அப்பெருமானைத் தாங்கிச் செல்லும் எருதினை நோக்கிக் கூறுவதாக அமைந்தது,

செய்ய சடைமுடியென் செல்வனையான் கண்டெனது
கையறவும் உண்மெலிவும் யான்காட்டப் — பையவே
காரேறு பூஞ்சோலைக் காளத்தி யாள்வார்தம்
போரேறே யித்தெருவே போது.

என்ற பாடலாகும். 'காளத்தியிறைவரது ஊர்தியாகிய போர்வலி வாய்ந்த ஆனேறே, சிவந்தசடைமுடியுடைய எம்பெருமானை யான் நேரே கண்டு எனது செயலற்ற தன்மையையும் உள்ளத்தின் மெலிவையும் தெளிய அறிவிக்கும் நிலையில் நீ இத்தெருவழியே பையச் செல்வாயாக' என்பது இதன்பொருள். பாண்டியன் உலாவருங்கால் அவன் ஊர்ந்து வரும் ஊர்தியாகிய பெண்யானையை நோக்கி 'எம் பலகணிக்கு அருகே செல்வாயாக' எனத் தலைவியொருத்தி வேண்டுவதாக அமைந்தது,

துடியடித் தோற்செவித் தூங்குகைந் நால்வாய்ப்
பிடியேயான் நின்னை யிரப்பல் — கடிகமழ்தார்ச்
சேலேக வண்ணனொடு சேரி புகுதலுமெஞ்
சாலேகஞ் சார நட.

என்ற முத்தொள்ளாயிரச் செய்யுளாகும். இவ்விரு செய்யுட்களும் பொருளால் ஒத்துநிற்றல் அறிந்து இன்புறத் தக்கதாகும்.

இறைவனைக் காதலித்த தலைவி கிளி குயில் என்பவற்றை நோக்கி இறைவனது திருநாமத்தைக் கூறியழைக்கும்படி வேண்டும் பகுதி திருவாசகத்திலுள்ள குயிற்பத்து திருத்தசாங்கம் முதலிய பகுதிகளை நினைவு படுத்துவதாகும். 'தூயவெள்ளை நிறம் வாய்ந்த இளங் குருகே, நீ ஒருபால் கூசித் தங்கியிருக்கின்றாய். கயிலைப் பெருமானது திறம் நினைந்து வருந்தும் எம்மைப் போல் நீயும் அப்பெருமானைக் காமுற்றனையோ'' எனக் குருகை நோக்கியும், 'கருங்கடலே, உலக வுயிர்களெல்லாம் கண்ணுறங்கும் இருள் நிறைந்த நள்ளிரவிலும் நீ துயிலாது அலமருகின்றாய். நீயும் எம்மைப்போல் காளத்தியிறைவனைக் காமுற்றனையோ' எனக் கடலை நோக்கியும் தலைவி கூறுவதாக அமைந்த பாடல்களும், மேகத்தை நோக்கியும் இளம்பிறையை நோக்கியும் இறைவன்பால் தனது ஆற்றாமையைத் தெரிவிக்கும்படி தலைவி குறையிரந்து வேண்டுவதாக அமைந்த பாடல்களும் படிப்போருள்ளத்தை உருக்குவனவாகும். கயிலைபாதி காளத்திபாதி யந்தாதியாகிய இப்பனுவலை இடைவிடாது பயில்வோர் இறைவனது திருவருள் நலத்தினை உள்ள வாறு உணர்ந்து இன்புறுவரென்பது திண்ணம்.

2. திருவீங்கோய்மலையெழுபது

திருவீங்கோய்மலையிற் கோயில் கொண்டருளிய சிவ பெருமானைப் போற்றிப் பரவிய எழுபது வெண்பாக்களை யுடையதோர் பிரபந்தமாதலின் இது திருவீங்கோய்மலை யெழுபது எனப்பெயர்பெறுவதாயிற்று. சங்கத்துச் சான் றோரால் தொகுக்கப்பெற்ற பண்டைத் தொகை நூல்களின் பாடற்றொகையினை அடியொற்றிப் பிற்காலத்துப பல்வேறு பிரபந்தங்கள் தோன்றி வழங்குவனவாயின. முன்னையோர் அன்பினைந்திணைபற்றிய அகவற்பாக்களை அடிவரையறை கருதி நெடுந்தொகை நானூறு, குறுந்தொகை நானூறு, நற்றிணை நானூறு என நானூறு நானூறு பாக்களாகத் தொகுத்த முறையினை உளங் கொண்ட பிற்காலப் புலவர்கள், அகனைந்திணை பற்றித் தாம் பாடக்கருதிய அகப் பொருட் கோவையினை நானூறு துறைகளமைய இயற்றுவா ராயினர். 'நூற்றைம்பது கலி' யென வழங்கும் கலித் தொகைப் பாடற்றொகையினை அடியொற்றி அத்தொகை

யமையத் திணைமாலை நூற்றைம்பது என்னும் அகத்திணை நூல் இயற்றப்பெறுவதாயிற்று. 'எழுபது பரிபாடல்' எனக் களவியலுரையாசிரியராற் பாராட்டப்பெறும் பரிபாடலின் பாடற்றொகையினை யுளத்துட் கொண்டே 'ஐந்திணையெழு பது' என்னும் அகத்திணை நூல் பாடப்பெற்றிருத்தல் வேண்டும். தொன்று தொட்டு வழங்கிவரும் இத்தொகை நிலையைப் பின்பற்றியே 'திருஈங்கோய்மலையெழுபது' என்னும் இப்பிரபந்தத்தினை நக்கீர தேவர் பாடியிருத்தல் வேண்டுமெனக் கருதுதல் பொருந்தும்.

ஈங்கோய் மலையைப் போற்றிய எழுபது வெண்பாக் களாலாகிய இந்நூல் 48-ம் பாடலின் இரண்டாவது அடி முதல் 62-ம் பாடலின் முதலடி முடியவுள்ள பகுதி சிதைந்து மறைந்தமையால் இப்பொழுது சிதையா நிலையிற் கிடைத் துள்ளவை ஐம்பத்தைந்து வெண்பாக்களேயாம். இப் பாடல்கள் யாவும் ஈங்கோய்மலையின் இயற்கை வளத்தை யும் அங்குக் கோயில்கொண்டருளிய முழுமுதற்கடவு ளாகிய சிவபெருமானது திருவருட்டிறத்தையும் சுவை நலம் பெருக இனிது சிறப்பித்துரைப்பனவாகவுள்ளன.

திருவீங்கோய்மலை குறிஞ்சிநிலமாதலின் அங்கு வாழும் மக்கள் குறவர் குறத்தியரெனக் குறிக்கப்பெறுவர். மலைநிலத்துக்கு உரியனவாகிய யானை, புலி, கேழல் (பன்றி), ஆளி, அரி (சிங்கம்), மான், மரை, மயில் முதலி யன ஈங்கோய் மலையிற் பொருந்தி வாழுமியல்பினை நக்கீர தேவர் இப்பனுவலிற் பல பாடல்களில் விரித்துக் கூறியுள் ளார். 'பூமியிலீதாதை' (பொலிவார்ந்த மயிலை ஊர்தி யாகப் பெற்றோனாகிய முருகனுக்குத் தந்தை) எனவும், 'குமரன் முதுதாதையார்' எனவும் சிவபெருமானைப் போற்றுமுகத்தால் குறிஞ்சி நிலத்திற்குச் சிறப்புடைத் தெய்வமாகிய முருகப்பெருமானையும் ஆசிரியர் புகழ்ந்து போற்றியுள்ளார்.

மலைநிலத்தவராகிய குறவர்கள் சிங்கம், யானை, மான் முதலிய விலங்குகளை வேட்டையாடுமியல்பும், மலையுச்சியிற் கட்டப்பட்ட தேனடைகளை அழித்துத் தேனெடுத்தலும், புனத்தை உழுது தினை விதைத்தலும், குறமகளிர் யானைத் தந்தத்தை உலக்கையாகக்கொண்டு கல்லுரலிற் செந்தினை யிடித்தலும், அங்ஙனம் இடிக்கப்பட்ட தினைமாவினைக்

குறவர் கொணர்ந்த தேனொடு கலந்து விருந்தினர்க்கு அளித்துச் சுற்றத்தாரொடு உண்டு மகிழ்தலும், சுனை நீராடி நறவுண்டு மகிழ்ந்து தம் நிலத் தெய்வத்தைப் பாடிக் குரவையாடுதலும் ஆகிய செய்திகள் இந்நூலிற் சுவை பெருக விளக்கப் பெற்றுள்ளன.

சந்தனமுந் தண்பலவும் கொன்றையும் கோங்கமுந் தேக்கும் வேங்கையும் வாழையும் மாவும் மூங்கிலும் எழில் பெற வளர்ந்தோங்கிய சாரலையும், தேனறு பாய்ந்து தித்திக்குந் தாமரைத் தண்சுனையினையும், கார்க்கொடி முல்லை மலர்ந்த கள்ளொழுகு முல்லைப்புறவத்தினையும், தீயென மலர்ந்த செங்காந்தட் பூக்களையும் தன்பாற் கொண்டு திகழும் ஈங்கோய்மலையின் இயற்கை வனப்பினை நக்கீர தேவர் இந்நூலிற் சொல்லோவியஞ் செய்து காட்டுகின்றார். இயற்கை வனப்பிலே தெய்வவனப்பினைக்கண்டு மகிழுந்திறம் புலமை நிரம்பிய மெய்யடியார்கள்பால் மிக்குத் திகழ்வதாகும். ஈங்கோய்மலையில் எழுந்தருளிய இறைவனைப் போற்றக் கருதிய இந்நூலாசிரியர், தாம் பாடிய வெண்பாக்களில் ஈங்கோய்மலையின் இயற்கையழகினை முதல் மூன்றடிகளாலும் அங்கு எழுந்தருளிய இறைவனது பேரருட்டிறத்தை இறுதியடியாலும் விளக்கிப் போற்றுதலை முறையாகக் கொண்டுள்ளார். இவர் பாடிய பாடல்கள் யாவும் படிப்போரை இயற்கை வனப்பினுளீர்த்துத் தெய்வ வனப்பில் திளைக்கச் செய்யும் செம்மை நலமுடையனவாய்த் திகழ்கின்றன.

சிவபெருமான், ஓங்காரமாகிய பிரணவ உருவாய் விளங்குதலும், எல்லாவுயிர்களுக்குந் தோன்றாத் துணையாய் நின்று அவ்வுயிர்களுக்கு நேருந் துன்பங்களை நீக்கி அருள் புரிதலும், தன்னை அன்பினால் வழிபடும் அடியார்களை வினைத்துன்பம் சாராதபடி பாதுகாத்து, மனக்கவலை தீர்த்து அருள் செய்தலும், உயிர்களுக்கு நலஞ்செய்தற் பொருட்டு வேதமும் கலைகளும் அருளிச் செய்தலும் ஆகிய திருவருட் பண்புகளை இந்நூலாசிரியர் உளமுருகிப் போற்றுகின்றார். சிவபெருமான் மேருமலையை வில்லாக வளைத்துத் திரிபுரமெரித்தமை, அடியவர்க்காகக் கூற்றுவனை உதைத்தமை, காமனைக் காய்ந்தமை, திங்களைச் சடையிலணிந்து தேயாமற் பாதுகாத்தமை, பெருகிவருங்

கங்கை வெள்ளத்தைத் தன் செஞ்சடையிற் கரந் தருளினமை, ஆலின் கீழமர்ந்து அறமுதல் நாற் பொருள் களே முனிவர்களுக்கு அருளிச் செய்தமை, சாவாமைக்குக் காரணமாகிய அமுதத்தை வேண்டித் தேவரும் அசுரரும் பாற்கடலைக் கடைந்த நிலையில் அங்குத் தோன்றிய ஆல கால நஞ்சினைக் கண்டு நடுங்கிச் சரணடைந்த அவர்களை உய்வித்தல் வேண்டி அந்நஞ்சினையுண்டு மிடற்றிலடக்கித் திருநீலகண்டனாகத் திகழ்ந்தமை, திருமாலுந் தேடொணு நிலையில் நின்றமை முதலிய சிவபுராணங்களை நக்கீர தேவர் இப்பிரபந்தத்தில் நயம்பெற எடுத்துரைத் துள்ளார்.

அடியார்களை வினைத்துன்பம் சாராவண்ணம் பாது காக்கும் இறைவனது அருட் சிறப்பினை 'நம்மேல் மறுதலை நோய் தீர்ப்பான்', 'நம்மேல் வரலா நோய் தீர்ப்பான்' 'நந்தம் வினைக் குவால் வீட்டுவிப்பான்', 'எவ்வுயிர்க்கும் வாட்டங்கள் தீர்ப்பான்' என இந்நூலாசிரியர் பலபடி யாகப் பாராட்டுகின்ருர். கடவுள் வழிபாட்டினுல் வினைத் துன்பங்கள் அறவே ஒழிந்துபோம் என்னுந் திட்ப வுணர் வினை இவ்வாசிரியர் தெளிவிக்கும் முறை,

'ஒருவனுரடியாரை ஊழ்வினை நலியவொட்டாரே'
'செய்வினை வந்தெமைத் தீண்டப்பெரு திருநீலகண்டம்'

என ஆளுடைய பிள்ளையாரும், 'அல்லலென்செயும் அரு வினை யென்செயும், தொல்லை வல்வினைத் தொந்தந்தா னென்செயும், தில்லைமாநகர்ச் சிற்றம் பலவனுர்க், கெல்லை யில்லதோரடிமை பூண்டேனுக்கே' என ஆளுடைய அரசும் அறிவுறுத்திய பொருளுரைகளை நினைவுபடுத்துவதாகும்.

மன வுணர்வுடைய மக்களின் ஒழுகலாறுகளை வரம் பாகக்கொண்டு அஃறிணையுயிர்களாகிய விலங்கு பறவை முதலியவற்றின் செயற்றிறங்களை ஒப்புநோக்குங் குறிப் புடன் நக்கீரதேவர் புனைந்துரைக்கும் பகுதிகள் மிகவும் சுவையுடையனவாம். அஃறிணை யுயிர்களில் மக்களை யொத்த உடலமைப்பும், அவர்கள் செய்வனவற்றைப் பார்த்திருந்து அவ்வாறே தாமும் செய்ய முயலும் ஒத்த செயலும் உடையன குரங்குகளேயாகும். இத்தகைய குரங்கின் இயல்பினை நக்கீர தேவர் விரித்துரைக்குந் திறம் பெரிதும் நயமுடையதாகும்.

திருவீங்கோய் மலையில் வாழும் மந்தி (பெண் குரங்கு) தன் சிறிய குட்டிக்குத் தேனடையிலுள்ள தேனை விரலால் தோய்த்து ஊட்டுங் காட்சியினை இந்நூலின் ஒன்பதாம் பாடல் புலப்படுத்துகின்றது. இத்தோற்றம் தாயொருத்தி தன் இளங்குழந்தைக்கு உணவருத்தும் இயல்பினை நினைவுபடுத்துகின்றது. மலையின் ஒருபுறத்தே இலவமரம் ஒன்று இலையெலாம் உதிர்ந்த நிலையில் செந்நிறப் பூக்களைப் பூத்து விளங்குகின்றது. அம்மரத்திற் பூத்துக் காணப்படும் பூவினைக்கண்ட ஆண் குரங்கு, அதனை அம் மரத்திற் பற்றிய தீப்பொறியெனக் கருதி, அருகேயுள்ள மூங்கிலின் தழையினை யொடித்துப் புடைத்து அத்தீயினை அவிக்க முயன்றதென இந்நூல் 17ம் பாடல் கூறுகின்றது. தீயை யவித்தற்குப் பசிய மூங்கிற்றழையைத் தேர்ந்து கொண்ட இயற்கையுணர்வு அக்குரங்கின்பால் அமைந்திருத்தலை இப்பாடல் இனிது புலப்படுத்தல் காணலாம்.

மலைச்சாரலின் ஒரு புறத்தே பளிக்குப்பாறை அமைந்துளது. மலையின் மேற்சரிவிலே வளர்ந்தோங்கிய மாமுதலிய மரங்களின் நிழல் தன்கண் படும்படியாக மலைச்சரிவின் தாழ்வில் விளங்குவது அப் பளிங்குப் பாறையாகும். பயன் மரங்கள் பழுத்து விளங்கும் பருவ காலத்தில் அவ்விடத்திற் பழகாத குரங்கொன்று அப்பாறையை யடைந்தது. அந் நிலையில் மேற் சரிவிலுள்ள மரத்திற் பழுத்த பழத்தின் சாயல் கதிரவனொளியால் அப்பளிங்குப் பாறையிலே படிந்து தோன்றியது. பளிங்குப் பாறையிற் படிந்து தோன்றிய பழத்தின் சாயலைக் கண்ட குரங்கு, அதனை உண்மையான பழமென்றே கருதிச் சுவைக்கினிய கனியினைத் தான் கண்ட வியப்புடைச் செய்தியைத் தன் இனத்திற்குஞ் சொல்லி அழைத்து வந்து காட்டிற்று. அங்கு வந்த எல்லாக் குரங்குகளும் கனியின் நிழல் படிந்த பளிங்குப் பாறையினைத் தம் கைவிரல் நகங்கள் வருந்த விரைந்து தோண்டிப் பார்ப்பனவாயின. இச்செய்தியை,

> கல்லாக் குரங்கு பளிங்கிற் கனிகாட்ட
> எல்லா குரங்கும் உடனீண்டி - வல்லே
> இருந்துகிராற் கற்கிளைக்கும் ஈங்கோயே மேனி
> பொருந்தவராப் பூண்டான் பொருப்பு.

எனவரும் பாடலால் நகைச்சுவை பொருந்த நக்கீரதேவர் எடுத்துரைக்கின்றார். எட்டாத கனியின் நிழலைக் கனி

யென நம்பி அதனைத் தோண்டி யெடுக்க முயலும் குரங்குகளின் பேதைமையினைக் கூறுமுகத்தால் இவ்வுலகில் இன்பமில்லாத போலித் தோற்றங்களை உண்மையென நம்பி ஒரு நிலைப்படாது அலமந்து திரியும் பேதை மாந்தரது இழிதகவினை ஆசிரியர் குறிப்பால் அறிவுறுத்துந்திறம் பெரிதும் வியக்கத்தக்கதாகும்.

மென்மையான இதழ்களையுடைய செங்காந்தள் மலரின் மேல் கருவண்டு மொய்த்திருந்த தோற்றத்தைக் கண்ட முதிய பெண்குரங்கொன்று, செங்காந்தள் மலரைத் தீயென மருண்டு அதன்கண் படிந்த வண்டினை அத்தீயில் அகப்பட்டு வருந்துவதாக எண்ணி அவ்வண்டின்பால் வைத்த இரக்கத்தால் அதனைத் தீயிலிருந்து காப்பாற்ற வேண்டுமெனத் துணிந்து அதன் அருகே நெருங்கிச் சென்றதாயினும் அத்தீ தன்னைச் சுடுமென்ற அச்சத்தினலே இன்னது செய்வதென்றறியாது உளந்துணுக்குற்று எழுந்து எழுந்து தன் கையை நெறித்துக் கொள்கின்றது. பிறிதின் நோய் தன்னேய் போற் போற்றும் இக்குரங்கின் இரக்கவுணர்வினை,

வழகிதழ்க் காந்தள்மேல் வண்டிருப்ப வொண்தீ
முழுகியதென் றஞ்சி முதுமந்தி – பழகி
எழுந்தெழுந்து கைநெறிக்கும் ஈங்கோயே திங்கட்
கொழுந்தணிந்த செஞ்சடையான் குன்று.

எனவரும் பாடலால் ஆசிரியர் அறிவுறுத்திய முறை உள்ளத்திற்குப் பேருவகை யளிப்பதாகும். பிறர் துயர்க்கிரங்கும் இரக்கவுணர்வு உயிர்க்குணமாயினும் அப்பண்பினை முடிவு போகச் செயற்படுத்தும் நல்லறிவும் உள்ளத்துறுதியும் உயிர்களுக்கு இயல்பாக அமைந்தன வல்ல என்பதும் அச்சந் தீர்த்து நல்லறிவு வழங்கி எல்லாவுயிர்களையும் உய்விக்க வல்ல பேரருளும் வரம்பிலாற்றலு முடையோன், தன் குற்றத்தால் தேய்ந்து சிறுகும் மதியினை நிறைமதியாக வளர்வித்த செஞ்சடையானகிய சிவபெருமானே யென்பதும் ஆகிய உண்மைகளைக் குரங்கின் செயலில் வைத்து இந்நூலாசிரியர் குறிப்பினுணரவைத்த நுட்பம் உய்த்துணர வல்லார்க்குப் பெரு மகிழ்ச்சி தருவதாகும்.

"குழலிசைய வண்டினங்கள் கோழிலைய செங்காந்தட்
குலைமேற்பாய
அழலெரியின் மூழ்கினவால் அந்தோ அளியவென்
றயல்வாழ்மந்தி

கலுழ்வனபோல் நெஞ்சயர்ந்து கல்லருவி தூஉம்
நிழல்வரை நன்னாடன் நீப்பனோ அல்லன்"

எனவரும் யாப்பருங்கல விருத்தி மேற்கோட் செய்யுளில் மேற்குறித்த முதுமந்தியின் செயல் மேலுந் திருத்தம் பெறக் காண்கின்றோம். நக்கீரதேவர் பாடலிற் குறிக்கப் படும் மந்தி செங்காந்தள் மலரிற் படிந்த வண்டினைக்கண்டு தீயில் வீழ்ந்து வருந்துவதாக மருண்டு செய்வதறியாது மனந் துணுக்குற்றுக் கைகளை நெறித்துக் கொள்கிறது. 'குழலிசைய' எனத் தொடங்கும் பாடலிற் குறிக்கப்பெற்ற மந்தி அதே காட்சியைக் கண்டு வருந்தியதாயினும், தீயினைத் தண்ணீரால் அவித்து விடலாமெனத் தெரிந்து விரைந்து அருவி நீரைக் கைகளால் முகந்து அத்தீயினை அணைக்க முயலுந் தெளிவு பெற்றுத் திகழ்வதைக் காண் கின்றோம். நக்கீரதேவர் பாடலிற் குறித்த குரங்கின் செயல் அஃறிணை யுயிர்களின் இயற்கைக்கு ஒத்த தன்மைநவிற்சி யாகவும், யாப்பருங்கல மேற்கோட் செய்யுளிற் குறித்த குரங்கின் செயல் அதன் இயற்கை யறிவுக்கு மேற்பட்டுத் தோற்றும் உயர்வு நவிற்சியாகவும் விளங்குதலை நோக்குங் கால் முன்னர்க் காட்டிய நக்கீரதேவர் பாடலே பின் தோன்றிய யாப்பருங்கல விருத்தி மேற்கோட்செய்யுளுக்கு நிலைக்களமாக அமைந்ததென்பது நன்கு துணியப்படும்.

தன் இனத்தைப் பாதுகாக்குந் தொழிலில் மக்களைப் போன்று நல்லறிவு பெற்றுத் திகழும் விலங்கு குறிஞ்சி நிலத்திற்குச் சிறப்புரிமையுடைய யானையாகும். யானை யைக் குறித்து ஈங்கோய்மலை யெழுபதிற் கூறப்படுஞ் செய்திகளை ஒரு சிறிது நோக்குவோம்.

பிடியின்பாற் காதல்கூர்ந்த களிறொன்று, காற்றின்றி வருந்தும் தனது பிடியின் வருத்தத்தைத் தணித்தல் கருதித் தனது நீண்ட கையினால் மாக்கிளைகளை முறித்து அவற் றின் தழைகளால் வீச, அப்பெண் யானை மென்காற்றினை யேற்று உலவி மகிழும் காதல் நிலை ஈங்கோய்மலை யெழு பதின் 25-ஆம் பாடலில் விளக்கப்பெறுகின்றது. மலை வாணர்கள் தாம் விதைத்த தினைக்கொல்லையில் யானைகள் புகுந்து உழக்காதபடி அக்கொல்லையின் ஓரமாக அமைந்த வழியிடையே பெரிய குழிகளை வெட்டி அவற்றைத் தழை களால் மூடி மறைத்தல் வழக்கம். ஒருமுறை அவர்களது

செயலைக் கண்டுகொண்ட யானையொன்று, அப்புனத்தில் உலவுங்கால் அவர்கள் பறித்த குழிகளில் வீழ்ந்தகப்படாமல் தன்னைக் காத்துக்கொள்ளக் கருதித் தனது நீண்ட கையிலே தடியொன்றைப் பற்றிக்கொண்டு தரையில் ஊன்றிச் சென்ற திறத்தை இந்நூல் 36-ஆம் பாடலில் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். தீங்குவரு முன்னர்க் காக்கும் நல்லறிவினை யானையானது தன் வாழ்க்கை யனுபவத்தாற் பெற்றமுறை அறிஞர்களாற் பாடப்பெறுஞ் சிறப்புடையதே யாகும்.

மூங்கிற் காடுகளினிடையே யமைந்த தினைப்புன மொன்றில் தன் பிடியொடு புகுந்துண்ணத் தொடங்கிய களிற்றின்மேல் புனங்காக்கும் வேடன் அம்பினைச் செலுத்துகின்றான். அத்துன்ப நிலையிலிருந்து தப்பியோடக் கருதிய ஆண்யானை, முதலில் தனது அன்பிற்குரிய பெண் யானையைப் பாதுகாத்தலே தன் கடமையென வுணர்ந்து அங்கு வளர்ந்துள்ள நீண்ட மூங்கிலை வளைத்து அதன் தோகையால் பெண்யானையை அவ்விடத்தினின்றும் ஓட்டிப் பாதுகாக்குஞ்செயலை இந்நூல் 69-ஆம் பாடல் குறிப்பிடுகின்றது. இங்ஙனம் களிற்றின்பால் அமைந்த இவ்வாண்மைச்செயல் ஆண்கடனிறுக்கும் பெருவீரர்கள் பால் அமையவேண்டிய நற்பண்பாகும். "உரிமை முன் போக்கியல்லால் ஒளியுடை மன்னர் போகார்" எனச் சச்சந்தன் தன் மனைவி விசயையை நோக்கிக் கூறும் அறிவுரை இவண் ஒப்புநோக்குதற்குரியதாகும்.

மலைச்சாரலின் ஒருபக்கத்தே கரிய மேகத்தைக் கண்டு களிப்புமீதூர்ந்த மயிலொன்று, தன் கோலச்சிறகை விரித்தாடுகின்றது. அவ்விடத்தே செங்காந்தள் மலர்கள் கைகளைப்போன்று பூத்துக் காணப்படுகின்றன. அம்மலர்களின்மேல் பொன்போன்ற இதழ்கள் உதிரும் நிலையில் கொன்றைமரம் ஒன்று நிறையப்பூத்து மணங்கமழ்கின்றது. தோகைவிரித்து ஆடும் மயில் ஆடல் மகளாகவும் பொன்போன்ற பூக்களைச் சொரியுங் கொன்றைமரம் அக்கூத்தினைக்கண்டு பரிசில்தருஞ் செல்வராகவும் அம்மரத்தினின்று உதிரும் கொன்றை மலர்களைத்தாங்கி விரிந்த செங்காந்தள்மலர், செல்வர்தரும் பொன்களை யேற்கும் கையாகவும் தோன்றும் அழகிய காட்சியினை,

'காந்தளங் கைத்தலங்கள் காட்டக் களிமஞ்ஞை
கூந்தல் விரித்துடனே கூத்தாடச் – சாய்ந்திரங்கி
ஏர்க்கொன்றை பொன் கொடுக்கும் ஈங்கோயே
செஞ்சடைமேற்
கார்க் கொன்றை யேற்ருன் கடறு.

எனவரும் பாடலால் ஆசிரியர் புலப்படுத்துகின்ருர்.

'வரைசேரும் முகில் முழவ மயில்கள் பல நடமாட வண்டுபாட
விரைசேர் பொன் இதழிதர மென்காந்தள் கையேற்கும்
மிழலையாமே'

எனவரும் ஆளுடைய பிள்ளையார் திருப்பாடலிற் குறிக்கப் பட்ட அழகிய காட்சியை நக்கீர தேவர் மேற்காட்டிய பாடலிற் புலப்படுத்தியுள்ளமை உணர்ந்து இன்புறத் தக்கதாகும்,

இலைகளெலாம் உதிர்ந்த நிலையில் தீப்போலும் செந் நிற மலர்களைப் பூத்து விளங்கும் முள்ளிலவ மரத்தின்மேல் ஏறிய மயில், அப்பூக்களின் தோற்றத்தைக் கண்டு அஞ்சி நடுங்காது அப்பூக்களின் நடுவே அமைதியாக அமர்ந் திருக்கின்றது. இவ்வழகிய தோற்றம், தன் ஆருயிர்க் கணவன் இறந்தானுக அவனது பிரிவாற்ருது உயிர்விடக் கருதிய கற்புடை மங்கையொருத்தி பெருந்தீயினை வளர்த்து அதன் நடுவே அச்சமின்றியமர்ந்து உயிர்விடும் நிலையினை யொத்து விளங்குகின்றது. இவ்வழகிய காட்சியை,

முள்ளார்ந்த வெள்ளிலவ மேறி வெறியாது
கள்ளார்ந்த பூப்படியுங் கார்மயில்தான்—ஒள்ளார்
எரிநடுவுட் பெண்கொடியா ரேய்க்கும் ஈங்கோயே
புரிநெடுநூல் மார்பன் பொருப்பு.

என்ற பாடலால் ஆசிரியர் அழகுபெற எழுதிக்காட்டு கின்ருர். இப்பாடல் ஐங்குறு நூற்றின் ஏட்டுச் சுவடியிற் காணப்பட்ட,

'உள்ளார் கொல்லோ தோழி முள்ளுடை
இலவ மேறிய கலவ மஞ்ஞை
எரிபுகு மகளி ரேய்க்கும்
அரில்படு கள்ளியங் காடிறந்தோரே'

என்ற பழம் பாடலை முழுவதும் அடியொற்றியதாக அமைந் திருத்தல் காணலாம். இலவமரத்திற் பூத்துள்ள சிவந்த பூக்களிடையே அமர்ந்த மயிலின் இயற்கை வனப்பாகிய

புறக்காட்சியைப் பொருளாகக் கொண்டு, தன் ஆருயிர் நாயகனது பிரிவாற்ருது நளியிரும்பொய்கையையும் தீயையும் ஒன்ருகக் கருதித் தீப்பாயுங் கற்புடை மகளது உளங் கலங்கா நிலைமையாகிய கற்பென்னுந் திண்மையினைத் தெளிவித்த புலமைத் திறம் வியந்து பாராட்டுதற்குரிய தாகும்,

மலையில் வாழுங் குறமகளிர் தம் தாய்மை அன்பினுல் அஃறிணையுயிர்களிடத்துக் கொண்ட இரக்கவுணர்வும், அம் மகளிர்பால் அவ்வுயிர்கள் அன்பினுல் அடங்கியொழுகுந் திறமும் ஈங்கோய்மலையெழுபதில் நன்கு விளக்கப் பெற்றுள்ளன. யானையின் இளங்கன்று தன்னினத்திலிருந்தும் பிரிந்து வழிதவறி வந்துவிட்டது. தன் தாயைப் பிரிந்தறியாத அக்கன்றினைக் கண்டு உளமுருகிய குறவர்மகளிர், சந்தன மரத்தின் இலைகளைத் தேனில் தோய்த்து அக் கன்றுக்கு ஊட்டுகின்ருர்கள். இச்செய்தி இந்நூல் 2-ம் பாடலிற் கூறப்பட்டுளது.

குறிச்சியில் வாழும் குறமகளிர் சந்தன மரத்தின் இலையிலே தினைமாவைத் தேனெடு கலந்து அங்குள்ள மந்திக் குங்கொடுத்துத் தாமும் சுற்றத்தொடு கூடியிருந்து உண்கிருர்கள். அவர்களிடம் பங்கு வாங்கிக்கொண்ட பெண் குரங்கு தினைமாவினைத் தானே தனித்துண்ணுமல் அச் சிற்றூரில் விளையாடிக்கொண்டிருக்கும் சிறுமகளிரின் வாயிலே ஊட்டித் தானும் உடனிருந்து உண்ணத் தொடங்குகிறது. இவ்வரிய நிகழ்ச்சியை விளக்குவது,

> சந்தின் இலையதனுட் டண்பிண்டி தேன்கலந்து
> கொந்தியினி துண்ணக் குறமகளிர்—மந்தி
> இளமகளிர் வாய்க்கொடுத்துண் ஈங்கோயே வெற்பின்
> வளமகளிர் பாகன் மலை.

என்ற செய்யுளாகும், மலைவாணர் மகளிரொடு பழகிய மந்தியும் பகுத்துண்டு பல்லுயிரோம்பும் நல்லறத்திற் சிறப்புற்றுத் திகழ்தலை யுணர்த்துமுகத்தான் ஈங்கோய் மலையில் வாழும் மகளிரது மனைத்தக்க மாண்பினை உய்த்துணர வைத்தமை நினைந்து மகிழ்தற்பாலதாகும்.

மலைவாணராகிய வேடுவர்கள் விலங்குகளை இரக்கமின்றிக் கொல்லுங் கொடுந்தொழிலை மேற்கொள்ள வேண்டிய இன்றியமையாமை உடையராயினும், தமது

அன்புமிகுந்த இல்வாழ்க்கையின் பயிற்சியால் அவ்விலங்குகளிடத்தும் அருள்மீதூர்ந்த ஈரநெஞ்சத்தினராயிருந்தனர் என்னும் உண்மையினை இந்நூலில் நக்கீர தேவர் இனிது விளக்குகின்றார். ஈங்கோய் மலையில் வேட்டைமேற் சென்ற குறவனொருவன், செய்மையிலே மேய்ந்து திரியும் மானொன்றைக் கண்டு வில்லை வளைத்து அம்பினைத் தொடுத்து அம் மானின்மேல் எய்தற்கு நெருங்கிச் செல்பவன், அது கன்னியிளமானதலையும் அதனது மருண்ட பார்வை தன்னாற் காதலிக்கப்படும் குறத்தியின் அழகிய நோக்கினை ஒத்திருத்தலையும் கண்டு, உவகை நிரம்பிய உள்ளத்தனாகி, தான் முன்னர் எய்தற் பொருட்டுக் கையிலெடுத்த அம்பினைத் தூணியிற் செருகிவிட்டு, அவ்வழகிய மானை நோக்கி, 'இளமை பொருந்திய மானே, நின்னைத் துன்புறுத்த மாட்டேன். நீ பயப்படாது மெல்லச் செல்வாயாக' என வழியனுப்புங் குறிப்புடன் அருள்மீதூர்ந்த உள்ளமுடையனாய் நின்றான். அன்பினால் உள்ளத்தை நெகிழ்விக்கும் அக்குறவனது அருட்பண்பினை,

எய்யத் தொடுத்தோன் குறத்திநோக் கேற்றதெனக்
கையிற் கணைகளைந்து கன்னிமான்—பையப்போ
என்கின்ற பாவனைசெய் ஈங்கோயே தூங்கெயில்கள்
சென்றன்று வென்றான் சிலம்பு.

எனவரும் பாடலில் ஆசிரியர் விரித்துரைத்த நயம் படித்து இன்புறுதற்குரியதாகும்.

முதுமை மீதூரத் தளர்நிலையெய்திக் கூனியவுடம்பினனாகிய வேடனொருவன், யானைக் கூட்டத்தினிடையே அகப்பட்ட இளநங்கையொருத்தியை உய்வித்தல் கருதி அங்குள்ள யானைகளைத் தானொருவனேயாக நின்று விலக்கி அவளை மீட்டுக் கொணர்ந்தான் என்ற செய்தியை இந்நூல் 13-ஆம் பாடல் விளக்குகின்றது. கூழை முதுவேடனது பேராண்மையே இங்ஙனமானால் அடலேறு போலும் உடலுரன் பெற்று வாழ்ந்த இளைஞர்களின் தறுகண்மையினை எடுத்துரைத்தலெங்ஙனம்?

இளவேனிற் காலத்துப் பூத்து விளங்கும் மாம் பொழிலினிடையே தென்றற் காற்று வந்து நுழைகின்றது. அங்ஙனம் நுழையும் தென்றல்தானும் பகலிற் பலருங் காண நுழையாமல் இரவுப்பொழுதில் நுழைகிறது. பிறர்

அறியாமல் இரவில் நுழையும் இத்தென்றல் களவொழுக்க முடையதாக இருத்தல் வேண்டுமெனக் கருதிய ஆசிரியர்,

> வளர்ந்த விளங்கன்னி மாங்கொம்பின் கொங்கை
> அளைந்து வடுப்படுப்பான் வேண்டி—இளந்தென்றல்
> எல்லிப் புகநுழையும் ஈங்கோயே தீங்கருப்பு
> வில்லிக்குக் கூற்றானான் வெற்பு.

எனவரும் பாடலால் அதன் களவினைப் புலப்படுத்துகின்றார். இதன்கண் 'வளர்ந்த இளங்கன்னி மாங்கொம்பின் கொங்கை அளைந்து வடுப்படுப்பான் வேண்டி' என்ற தொடர், களவொழுக்கத்தில் இரவுக் குறியில் வந்தொழுகும் தலைவனுக்கும், இளவேனிற் பருவத்தில் மாம்பொழிலினிடையே நுழையும் இளந்தென்றலுக்கும் பொருந்தும் வண்ணம் இருபொருள் தருவதாக அமைந்துளது. இத்தொடர் தலைவனுக்குச் சொல்லுங்கால் 'பருவமுடையளாய் வளர்ந்த இளங்கொம்பு போல்வாளாகிய கன்னிமை நீங்கா இளநங்கையின் ஆகத்தைச் சேர்ந்து மகிழ விரும்பி' எனவும், தென்றலுக்குச் சொல்லுங்கால் 'நன்றாய் வளர்ந்து முதன் முதல் பூத்த முதிராத இளைய மாமரத்தின் கிளையிலரும்பிய பூக்களிலுள்ள மகரந்தப் பொடியினை ஒன்றினொன்று கலக்கச் செய்து அப்பூவினை மாவடுவாகக் கருக்கொள்ளச் செய்ய வேண்டி' எனவும் இருவேறு பொருள்களைத் தந்து நிற்கிறது. 'கொங்கை அளைந்து' என்னுந் தொடர் தலைவனுக்குக் கூறுங்கால் 'ஆகத்தைத் தழுவி' என இரண்டாம் வேற்றுமைத் தொகையாகவும், தென்றலுக்குக் கூறுங்கால் கொங்கினை (மகரந்தப் பொடியைக்) கலக்கச் செய்து' என்னும் பொருளில் இரண்டாம் வேற்றுமை விரியாகவும் கொள்ளுதல் வேண்டும். முன்னதற்கு கொங்கையென்பதே பெயராகவும் பின்னதற்குக் கொங்கு என்பது பெயராக ஐ இரண்டாம் வேற்றுமையுருபாகவும் அமைந்தமை கருதற்குரியது. 'வடுப்படுத்தல்' என்னுஞ் சொல் முறையே நகக்குறி செய்தலையும், பூவை மாவடுவாகச் செய்தலையும் குறிப்பதாகும். இளையோனொருவன் தன் காதலையுணர்ந்து மகிழும் பருவமுடையளாய் வளர்ந்த கன்னியொருத்தியின் ஆகத்தைச் சேர்ந்து இன்புறும் உள்ளத்தனாய்ப் பிறரறியாதபடி இரவுக் குறியில் வந்து பெயர்தல் குறிஞ்சி நிலத்துக்குரிய களவொழுக்கமாகும். மலைநிலத்திற்கே சிறப்புரிமையுடைய இக்களவொழுக்

கத்தை அம்மலையிற்புகுந் தென்றலும் மேற்கொள்வ தாயிற்று என்னும் பொருளிற் சிலேடை நயமமைய நக்கீர தேவர் இப்பாடலை இயற்றிய நுட்பம் நினைக்குந்தோறும் வியப்பினை விளைப்பதாகும்.

இறைவன் உயிர்களின் நன்மை குறித்து வழங்கிய உடம்பு, பொறிகள், உட்கருவிகள் ஆகியவற்றை நன் முறையிற் பழக்கி எல்லாம்வல்ல அம் முழுமுதற் பொருளை வழிபட்டு இன்புறுதலே மக்கட் பிறவியால் வரும் பயனாகும் என வற்புறுத்தக் கருதிய ஆசிரியர், மனவுணர்வில்லாதன என இழித்துரைக்கப்படும் அஃறிணையுயிர்களும் ஈங்கோய் மலையில் எழுந்தருளிய இறைவனை அன்பினால் வழிபடும் நன்ஞானம் பெற்று விளங்குமியல்பினை எடுத்துரைக்கு முகத்தால் நம்மனோரை இறைவனது திருவருட்பணியில் ஈடுபடுத்துகின்றார். சிங்கமும் புலியும் யாளியும் ஆகிய கொடு விலங்குகள் தம் கொடுந் தொழிலை மறந்து இறைவன்பால் பேரன்புடையனவாய் நறுமலர்களைப் பறித்துக்கொண்டு ஈங்கோய் மலையின்மீதேறி இறைவனை அருச்சித்து வழிபடுந் திறத்தினையும் அவை அன்பினாற் செய்யும் வழிபாட்டினைக்கண்டு இறைவன் மகிழ்ந்து அருள் செய்யும் இயல்பினையும்,

> அரியும் உழுவையும் ஆளியுமே ஈண்டிப்
> பரியிட்டுப் பன்மலர்கொண் டேறிச்—சொரிய
> எரியாடி கண்டுகக்கும் ஈங்கோயே கூற்றந்
> திரியாமற் செற்றான் சிலம்பு

என்ற பாடலால் ஆசிரியர் அறிவுறுத்துகின்றார். புனத்தில் திரியும் யானையானது இறைவனை வழிபட விரும்பி அங் குள்ள வேங்கை மரத்தின் பூங்கொத்துக்களைப் பறித் தெடுத்துக்கொண்டு மலையின்மீதுள்ள குளிர்ந்த சுனை நீரைத் திருமஞ்சனமாகப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்ற நினைவுடன் ஈங்கோய்மலையில் விரைந்தேறும் காட்சியினை,

> கொல்லை யிளவேங்கைக் கொத்திறுத்துக் கொண்டுசுனை
> மல்லல்நீர் மஞ்சனமா நாட்டிக்கொண் – டொல்லை
> இருங்கைக் களிறேறும் ஈங்கோயே மேல்நோய்
> வருங்கைக் களைவான் மலை.

என்ற பாடலால் அழகுறப் புலப்படுத்துகின்றார். இங்ஙனமே அம்மலையில் வாழும் குரங்குகள் மலையுச்சியில்

முறையாக அமர்ந்து இறைவனது திருமேனியைத் தீண்டி வழிபடுங் கருத்தினல் ஆடிப்பாடி ஆரவாரிக்கும் இயல்பினை 64-ஆம் பாடல் அறிவுறுத்துவதாகும்.

மணமாகாத குறமகளிர், காதலன் களவில் வந்து செல்வதனுலுண்டாகிய பழிச்சொல்லை நீக்கி அவனை என்றும் பிரியாது கலந்து மகிழும் நிலையில் தமது திருமணத்தினை விரைவில் நிறைவேற்றியருளுதல் வேண்டுமென ஈங்கோய் மலை யிறைவர் திருவடிகளிற் செந்நிறத்த நறு மலர்களைச் சொரிந்து வழிபாடு செய்கின்றனர்கள். இங்ஙனம் வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்குத் துணைபுரியும் மகளிரது வழிபாட்டு முறையினை,

> கொவ்வைக் கனிவாய்க் குறமகளிர் கூந்தல்சேர்
> கவ்வைக் கடிபிடிக்குங் காதன்மையாற்—செவ்வை
> யெறித்தமலர் கொண்டுவிடும் ஈங்கோயே அன்பர்
> குறித்தவரந் தான்கொடுப்பான் குன்று.

எனவரும் பாடலால் நக்கீரதேவர் புலப்படுத்துகின்றனர்.

> "யாம் எம்காதலரைக் கனவிலே மணந்தது பொய்யாகாமல்,
> நனவின்கண் திருமணத்தினை நிறைவேற்றியருளுக"

என மகளிர் முருகப்பெருமானைப் போற்றி வரங்கொண்ட செய்தி எட்டாம் பரிபாடலிற் குறிக்கப்பெற்றமை இங்கு ஒப்புநோக்கத்தகுவதாகும்.

திருவலஞ்சுழி மும்மணிக் கோவை

திருவலஞ்சுழியிற் கோயில்கொண்டருளிய சிவபெருமானைப் போற்றிப் பரவுங்கருத்துடன் நக்கீரதேவர் பாடிய பிரபந்தம் திருவலஞ்சுழி மும்மணிக் கோவையாகும். திருவலஞ்சுழியென்பது, சோழநாட்டிற் காவிரியாற்றின் தென்கரையில் அமைந்ததோர் ஊர். இவ்வூர் காவிரியாறு வலமாகச் சூழ்ந்து செல்லும் இடத்தில் அமைந்திருத்தல்பற்றி வலஞ்சுழியென்ற பெயரால் வழங்கப்பெறுவதாயிற்று. 'மன்னு காவிரி சூழ் திருவலஞ்சுழி' யெனத் திருஞானசம்பந்தர் தேவாரத்தும், 'காவிரிமடந்தை வார்புனல் உடுத்த மணி நீர்வலஞ்சுழி' யென மும்மணிக் கோவையிலும் இவ்வூரின் இயற்கைவளம் கூறப்படுதல் கொண்டு வலஞ்சுழி யென்னும் இவ்வூரின் பெயர்க்காரணத்தை நன்குணரலாம்.

ஆசிரியப்பா, வெண்பா, கட்டளைக்கலித்துறை ஆகிய மும்மணிகளால் அந்தாதித் தொடையமையத் தொடுக்கப் பெற்றமையால் இது மும்மணிக் கோவை யென்னும் பெயர்த்தாயிற்று. மும்மணிக்கோவையாகிய இப் பிரபந்தம் முப்பது செய்யுட்களால் இயன்றிருத்தல் வேண்டுமென்பது வச்சணந்திமாலை, சிதம்பரப் பாட்டியல் முதலிய பிற்காலப் பாட்டியல் நூலோர்கொண்ட வரையறையாகும். நக்கீர தேவர் பாடிய இத்திருவலஞ்சுழி மும்மணிக்கோவை 'வணங்குதும் வாழிநெஞ்சே' யெனத்தொடங்கி, 'வலஞ் சுழியானை அண்ணாமலைமேல், வம்பார் நறுங்கொன்றைத் தாருடையானை வணங்குதுமே' என முடிந்து, அந்தம் ஆதியாகப் பதினைந்து பாடல்களால் நிறைவு பெற்றுளது. இதனை நோக்குங்கால், மும்மணிக்கோவை யென்னும் பிரபந்தம் முப்பது பாடல்களால் இயற்றப்பெறுதல் வேண்டு மென்னும் வரையறை இந்நூலாசிரியர் காலத்தில் நன்கு நிலைபெறவில்லை யென்பது புலனாம்.

திருவலஞ்சுழியில் எழுந்தருளிய சிவபெருமானைக் கண்டு அவ்விறைவனது பேரழகில் ஈடுபட்டுக் காதல் கொண்டு வருந்தும் தலைவியின் அன்பின் திறத்தைப் புலப் படுத்தும் பாடல்களும், உலகியல் வாழ்வில் ஒருவனும் ஒருத்தியும் அன்பினால் இன்புற்று வாழும் அகத்திணை யொழுகலாறுகளைப் புலப்படுத்தும் நிலையில் திருவலஞ்சுழி யிறைவனைப் பாட்டுடைத் தலைவனாக வைத்துப் போற்றும் அகத்துறைப்பாடல்களும் இம் மும்மணிக் கோவையில் இடம் பெற்றுள்ளன. ஓடேந்து செல்வனாக எழுந்தருளி வந்த இறைவனது பேரழகில் ஈடுபட்ட பெண்ணொருத்தி, அப்பெருமான் விரைந்து மறைந்தானாக, அவனைக் காணப் பெறாது கைவளைகள் கழல வருத்த முறுகின்றாள். அங்ஙனம் வருத்தமுறுபவள் தனது உடல்மெலிவிற்குரிய காரணத் தைத் தன் தோழிக்குரைப்பதாக அமைந்தது.

> பொருட்டக்கீர் சில்பலிக்கென் றில்புகுந்தீ ரேனும்
> மருட்டக்கீர் யாதும்மூர் என்றேன்—மருட்டக்க
> மாமறையம் என்றார் வலஞ்சுழி நம் வாழ்வென்றார்
> தாம்மறைந்தார் காணேன்கைச் சங்கு.

எனவரும் பாடலாகும். 'நன்கு மதிக்கத்தக்க பெரியீர், நீவிர் சிலவாகிய பொருளை இரந்துபெறுதற்பொருட்டுப் பிச்சைக் கோலத்துடன் எமது இல்லினுள் நுழைந்தீ

ரெனினும், எல்லாச் செல்வங்களுக்குங் காரணமாகிய பெருந்திருவுடன் வியக்கத்தக்க தோற்றமுடையீராய்த் திகழ்கின்றீர். உம்முடைய ஊர்யாது? என்று வினவினேன். அது கேட்ட அவர் வியக்கத்தக்க மாமறையம் (பெருமைதங்கிய மறைக்காட்டிடத்தோம், பெரிய வேதங்களின் இடத்தோம்) என்றார். நாம் விரும்பி வாழும்பதி வலஞ்சுழி யென்றுகூறி விரைந்து மறைந்தார். யான் அணிந்துள்ள கைவளையல்களைக் காணேனாயினேன்' என்பது இதன் பொருளாகும்.

'தான் ஏறி நடத்தும் ஊர்தியாகிய இடபத்தைக் கைகளால் தொழுதேனல்லேன். தன் சடைமேல் விளங்கும் தேனிறைந்த கொன்றைமலரைக் குறித்து எதுவும் பேசினேனல்லேன். இங்ஙனமாகவும் வலஞ்சுழி யிறைவன் என் கை வளையல்களைக் கவர்ந்தது எது கருதி' எனத் தலைமகள் நினைந்து கவன்று கூறுவதாக அமைந்தது,

தானேறும் ஆனேறு கைதொழேன் தன்சடைமேல்
தேனேறு கொன்றைத் திறம்பேசேன் — வானேறு
மையாருஞ் சோலை வலஞ்சுழியான் என்கொல்என்
கையார் வளைகவர்ந்த வாறு.

என்ற பாடலாகும்.

பரத்தையிற் பிரிந்த தலைவன், தலைவியது ஊடலைத் தணிவிக்கவேண்டிப் பாணனைத் தூதாக அனுப்புகின்றான். விறலியொடுகூடி வாயிலாக வந்த பாணனை நோக்கித் தலைவி கூறுவதாக அமைந்தது,

நெறிதரு குழலி விறலியொடு புணர்ந்த
செறிதரு தமிழ்நூற் சீறியாழ்ப் பாண
பொய்கை யூரன் புதுமணம் புணர்தர
மூவோம் மூன்று பயன்பெற் றனமே, நீயவன்
புனைதார் மாலை பொருந்தப் பாடி
இல்லதும் உள்ளதும் சொல்லிக் கலலல்
வாசகம் வழாமற் பேச வன்மையில்
வானர மகளிர் வான்பொருள் பெற்றனை, அவரேல்
எங்கையர் கொங்கைக் குங்குமம் தழீஇ
விழையா இன்பம் பெற்றனர், யானேல்
அரனமர்ந் துறையு மணிநீர் வலஞ்சுழிச்
சுரும் பிவர் நறவயிற் சூழ்ந்தெழு தரும்பிற்
றீநீ ரன்ன வாய்நீர் சோருஞ்
சிலம்புகுரற் சிறுபறை பூண்ட
அலம்புகுரற் கிண்கிணிக் களிறுபெற் றனனே.

எனவருஞ் செய்யுளாகும். 'விறல்பட ஆடவல்ல விறலி யொடுகூடிய பொருள்செறிந்த இசைத்தமிழ்த் திறத்திற் பயின்று சீறியாழ் என்னும் இசைக் கருவியை வாசிக்கவல்ல பாணனே, பொய்கை சூழ்ந்த ஊரனாகிய என் கணவன் பரத்தையரைப் புதுமணம் புணர்ந்தமையால் நீயும் அவனும் யானும் ஆகிய நாம் மூவரும் மூவகைப் பயன்களைப் பெற்றோம். இசைத் திறத்திற் பயின்ற பாணனாகிய நீயோ, அவன் அணிந்த மணமாலையை இசைபொருந்தப் பாடிப் பொய்யும் மெய்யுமாகிய இருவகை நிகழ்ச்சிகளையும் கூட்டித் திறம்படப் பேசும் சொல்வன்மையுடையை யாதலின் வானரமகளிர் போல்வாராகிய அப்பரத்தையரைப் போன்று அவனிடத்திருந்து மிகுதியான பொருளைப் பரிசிலாகப் பெற்றனை. என் கணவராகிய அவரோ பரத்தையரைத் தழுவித் தாம் விரும்பிய இன்பத்தைப் பெற்றனர். அவரைப் பிரிந்துறையும் யானோ சிவபெருமான் வீற்றிருந் தருளும் புனல்சூழ்ந்த திருவலஞ் சுழியில் வண்டுகள் ஆரவாரிக்க மரப்பொதும்பரிடைக் கட்டப்பட்ட தேனடை யிலுள்ள நறுந் தேனையொத்து அண்ணிக்கும் வாய் நீரையும் ஒலிக்கும் சிறுபறையினையும் ஆரவாரிக்கும் கிண் கிணியையும் உடைய புதல்வனாகிய மழவிளங்களிற்றினைப் பெற்று மகிழ்கின்றேன்.' என்பது இதன் பொருள். 'பரத்தையரது முயக்கினையே பெறுபயனாகக் கொண்டவர் என் கணவர். அவர் விரும்பிய பழிவழியினையே நன்றெனக் கூறி அவராற்பெறும் பரிசிற் பொருளைப் பெறுபயனாகக் கொண்டுவாழும் இயல்புடையாய் பாணனாகிய நீ. அவரது புறத்தொழுக்கினால் வருந்தி அவ்வருத்தத்தை மறக்கும் நிலையில் செயிர்தீர் காட்சிப் புதல்வனைப் பேணி வளர்த் தலையே வாழ்க்கைப் பேறாகக் கருதி வாழ்பவள் யான். இந்நிலையில் தலைவர் நின்னை இங்கு வாயிலாக அனுப்புதற் குரிய இன்றியமையாமை எதுவும் இல்லையே' எனத் தலைவி வாயிலாக வந்த பாணனைக் குறிப்பால் மறுத்துரைத்ததிறம் பெரிதுஞ் சுவை தருவதாம்.

திருவெழு கூற்றிருக்கை

எழு கூற்றிருக்கை யென்பது மிறைக்கவி (சித்திரகவி) வகைகளுள் ஒன்று. ஒன்றென்னும் எண்ணினை முதலாகக் கொண்டு தொடங்கிப் படிப்படியே ஒவ்வோரெண்ணாகக்

கூட்டியும் அம்முறையே ஒன்றொன்றாக ஒன்று முடியக் குறைத்தும் இங்ஙனம் ஒன்றுமுதல் ஏழீறாக எண்ணும் நிலையில் அமைந்த செய்யுள் எழுகூற்றிருக்கை யெனப்படும். "எழுகூற் றிருக்கையாவது ஏழறையாக்கி முறையானே குறுமக்கள் முன்னின்றும் புக்கும் போந்தும் விளையாடும் பெற்றியான் வழுவாமை ஒன்று முதலாக ஏழிறுதியாக முறையானே பாடுவது" என்பர் யாப்பருங்கல விருத்தி யுரையாசிரியர். இங்ஙனம் எண்ணப்படும் எண்களை இரத பந்தத்தில் அடக்குமிடத்து மையத்திற் பத்தி யிரண்டு பத்தியாய்க் கீறி வலத்திலும் இடத்திலும் முறையே எண்ணிச் செல்லும்படி மையத்திலொன்று பதின்மூன்றாகவும் அதன் அயல் இரு பத்தியில் இரண்டும் பன்னிரண்டாகவும் ஒழிந்த மூன்று முதலிய வெண்ணும் பத்திதொறும் இரண்டு குறைந்து ஏழென்னுந்தொகை பொருந்தி முதலிலே நின்ற ஒன்றில் வந்து முடியுமெனவும் இங்ஙனம் செய்யுளகத்து எடுத்தாளப்படும் எண்ணுப் பெயர்கள் இரட்டுற மொழிதலாகவும் ஈறுதிரிந்தும் வருமெனவுங் கூறுவர் மாறனலங்கார ஆசிரியர்.

எழு கூற்றிருக்கை யென்னுஞ் சித்திரகவியின் மூல இலக்கியமாகத் திகழ்வது, திருஞானசம்பந்தர் அருளிய திருவெழு கூற்றிருக்கையாகும். அதனை யடியொற்றியதே பதினொராந் திருமுறையிலுள்ள இத்திருவெழு கூற்றிருக்கை. இவ்விரண்டின் சொற்பொருள் நலங்களை உய்த்துணருங்கால் திருஞானசம்பந்தர் பாடிய திருவெழு கூற்றிருக்கையினைப் பின்பற்றியே நக்கீர தேவர் இத்திரு வெழு கூற்றிருக்கையினைப் பாடியுள்ளாரென்பது நன்கு புலனும். நக்கீர தேவர் பாடிய இச்செய்யுளை யாப்பருங்கல விருத்தியுரையாசிரியர் மேற்கோளாக எடுத்துக் காட்டி யுள்ளார். பதினொராந்திருமுறை அச்சுப் புத்தகத்திற் காணப்படும் பாடத்திற் சிறிது வேறுபட அமைந்தது யாப் பருங்கல விருத்தியிற் காணப்படும் பாடமாகும்.

ஓருடம் பிருவரா யொன்றி யொன்றுபுரிந்
தீரிதழ்க் கொன்றை சூடினை, மூவிலைச்
சூலமேந்தினை, சுடருஞ் சென்னி மிசை
இருகோட் டொருமதி யெழில்பெற மிலைச்சினை
ஒருகணை யிருதோள் செவியுற வாங்கி
மூவெயில் நாற்றிசை முனையரண் செகுத்தனை
யாற்ற முந்நெறி பயந்தனை தேற்றி

இரண்டி னீக்கி யொன்றி னென்ற
விரண்டு மில் லோர்க்கு
முந்நெறி யுலகங் காட்டினை யந்நெறி
நான்கென வூழி தோற்றினை வாள்செலும்
ஐந்தலை யரவரைக் கசைத்தனை நான்முகன்
மேன்முகக் கபால மேந்தினை நூலின்
முப்புரி மார்பினை மூவா மேனியை
இருவரை குடையா வேந்திய வாற்றல்
ஒருபெருங் கடவு ளொருவ னுயினை
யாங்கு நிற் காணு
திருவரு மூவுல கியைந்துடன் றிரிதர
நாற்றிசை,
ஐம்பெருங் குன்றத் தழலாய்த் தோன்றினை
யாறுநின் சடைய தைந்துநின் றுறையே
நான்குநின் வாய்மொழி மூன்றுநின் கண்ணே
யிரண்டுநின் படையே யொன்றுநின் னேறே
யொன்றியல் காட்சி யுமையவள் நடுங்க
விருங்களிற் றுரிவை போர்த்தனை நெருங்கிய
முத்தீ நான்மறை யைம்புல னடக்கிய
அறுதொழிலாளர்க் குறுதுயர் தீர்த்தனை
ஏழிய லின்னரம் பியக்கினை தாழா
வாறின் னமுதம் பயந்தனை யைந்தினில்
வீறுமா கோவை[1] விழுத்தக வேந்தினை
யால நீழ லருந்தவர்க் கறநெறி
நால்வர் கேட்க நன்கினி துரைத்தனை
நன்றியின்,
முந்நீர்ச் சூர்மா முரணறக்கொன்றங்
கிருவரை யெறிந்த வொருவன் றுதையை
யொருமிடற் றிருவடி வாக்கினை தரும
மூவகை யுலகுட னுணரக் கூறினை
நால்வகை யிலக்கண விலக்கிய நலம்பட
மொழிந்தனை யைங்கணைக் காமற்காய்ந்தனை
அறுவகைச் சமயமு நெறியுளி வகுத்தனை
ஏழிசை யிராவணன் பாடத்
தாழாக் கேட்டவன் றலைநனிபொருந்தி
யாறிய சினத்தை யாகி யைங்கதித்
தேரொடு மற்றவன் செல்கென விடுத்தனை
நாற்கூருள் நளனே நந்திபிங் கிருடியென்
றுற்றற் பூத மூன்றுடன் பாட
விருகண் மொந்தை யொருகண் கொட்ட
மட்டவிழ் கோதை மலைமகள் காண
நட்ட மாடிய நாதனீ யதனுல்

1. வீறுயர் கோவை. பா. வே.

மண்டிணி ஞாலத்து மன்னுயிர்க்கெல்லா
மூழி நின்னடி யேததிநின்றபல்
லூழியும் பொன்னுல கெய்துவர்காண்பர்

அதனல்,

அறியேன் சொன்ன வறிவில் வாய்மொழி
வறிதெனக் கொள்ளா யுலகம் வேண்டும்
வெறிகமழ் கொன்றையொடு வெண்ணிலவணிந்து
கீதம் பாடிய வண்ணல் நின்
பாதம் பரவுதுஞ் சென்னியிற் பணிந்தே.

என யாப்பருங்கல விருத்தியுரையில் இத் திருவெழு கூற்றிருக்கை மேற்கோளாகக் காட்டப்பெற்றுளது. இப் பாடத்திற்கும் பதினொராந் திருமுறை அச்சுப்புத்தகத்திற் காணப்படும் பாடத்திற்கும் பெரிதும் வேறுபாடுளது. எனினும், எழுகூற்றிருக்கைக்குரிய எண்கள் இயல் பிறழாது அமைந்துள்ளன. இவ்விருவேறு பாடங்களையும் ஒப்புநோக்கி உண்மைப்பாடத்தினைக் கண்டுணர்தல் அறிஞர்கடனாகும்.

மாதொருபாகனுக விளங்கும் சிவபெருமானது அருளுருவத்தோற்றத்தினையும் அவ்விறைவன் உயிர்களின் நலங்கருதிச் செய்தருளிய அருட்செயல்களையும் நக்கீர தேவர் இத்திருவெழுகூற்றிருக்கையில் தெளிவாக விரித் துரைத்துள்ளமை படித்தின்புறத்தக்கதாகும்.

பெருந்தேவபாணி

நக்கீரதேவர் திருவாலவாயிறைவனை முன்னிலைப் படுத்துப் பரவிப் போற்றிய இசைப்பாட்டு பெருந்தேவ பாணியென்பதாகும். இஃது அறுபத்தேழடிகளாலியன்ற ஆசிரியப்பாவாக அமைந்துள்ளது.

தெய்வத்தை முன்னிலையில் வைத்துப் பரவிய பாடல் தேவபாணியெனப்படும். பாணி—பண்ணேடு கூடிய பாட்டு. இதனை.

'ஏனையொன்றே
தேவர்ப் பராஅய முன்னிலைக் கண்ணே.

எனவருஞ் செய்யுளியற் சூத்திரத்துள் ஒத்தாழிசைக் கலியின் வகையாகக் குறிப்பிடுவர் தொல்காப்பியர்.

1. ஒருமிட திருவடி வாக்கினை. பா. வே,

எனவே தெய்வத்தை முன்னிலையாகச் சொல்லப்பட்டன அன்றி அல்லன தேவபாணியெனத் தகா' என்பது அவர் கருத்தாதல் இனிதுபுலனும். தேவபாணியாகிய இஃது இயற்றமிழில் வருங்கால் கொச்சக வொருபோகாய்ப் பெருந்தேவபாணி சிறுதேவபாணியென இருவகைத்தாய் வருமென்றும், அங்ஙனம் வரும் தரவினை நிலையெனவடக்கி முகத்திற்படுந் தரவினை முகநிலையெனவும் இடை நிற்பன வற்றை இடைநிலையெனவும் இறுதியில் நிற்பனவற்றை முரிநிலையெனவும் பரவுதற்பொருண்மையாற் செய்யுள் இயலின்கண் பெயர் கொடுத்தாரென்றும், அடியார்க்கு நல்லார் கூறுவர். இசைப்பா இசையளவுபா என்னும் இரு பகுதியுள் இத்தேவபாணி இசைப்பாவின் பகுதி யென்றும், செந்துறை, வெண்டுறை, பெருந்தேவபாணி, சிறுதேவபாணி, முத்தகம், பெருவண்ணம், ஆற்றுவரி, கானலவரி, விரிமுரண், தலைபோகுமண்டிலம் என இசைப்பா பத்துவகைப்படுமென்றும் கூறுவர் ஒருசா ராசிரியர்.

'செந்துறை வெண்டுறை தேவபாணியிரண்டும்
வந்தன முத்தகமே வண்ணகமே—கந்தருவத்
தாற்றுவரி கானல் வரிமுரண் மண்டிலமாத்
தோற்று மிசையிசைப்பாச் சுட்டு'

என்றார் இசை நுணுக்கமுடைய சிகண்டியார். இனி சுத்தம் சாளகம் தமிழ் எனனுஞ் சாதியோசைகள் மூன்றினுடனும் கிரியைகளுடனும் பொருந்தும் இசைப்பாக்கள் சிந்து, திரிபதை, சவலை, சமபாத விருத்தம், செந்துறை, வெண்டுறை, பெருந்தேவபாணி, சிறுதேவபாணி, வண்ணம் என ஒன்பது வகைப்படுமென்றலும் உண்டு.

செப்பரிய சிந்து திரிபதை சீர்ச்சவலை
தப்பொன்று மில்லாச் சமபாத-மெய்ப்படியுஞ்
செந்துறை வெண்டுறை தேவபாணி வண்ணமென்ப
பைந்தொடியாய் இன்னிசையின் பா.

என்றார் பஞ்சமரபுடைய அறிவனார்.

இத்தேவபாணி இயற்றமிழிலக்கணத்தின்படி கலிப்பா வகையைச்சார்ந்தனவென்பது, 'ஏனையொன்றே, தேவர்ப் பராஅய முன்னிலைக்கண்ணே' எனவருஞ் செய்யுளியற் சூத்திரத்தானும், 'ஏனையொன்று எனப்பட்ட தேவபாணி ஒத்தாழிசை' எனவும், 'வெண்பாவினுன் முடியுங் கொச்சக

வொருபோகு தேவபாணியாய் வந்தன கண்டுகொள்க' எனவும், 'தலையளவு வண்ணகப் பெருந்தேவபாணி' எனவும் வரும் பேராசிரியர் உரைத்தொடர்களாலும் நன்கு துணியப்படும். சிறுதேவபாணி, பெருந்தேவபாணியென்ற பெயர்களிற் குறிக்கப்படும் சிறுமை பெருமையென்பன செய்யுளின் அடிச்சிறுமையையும் பெருமையையும் முறையே குறித்து நின்றன வெனக் கொள்ளுதல் பொருந்தும்.

தொல்காப்பியனர் கூறுமாறு கலிப்பா வகையிலமைதற்குரிய தேவபாணியாகிய இசைப்பாட்டு பிற்காலத்தில் யாப்புவேறுபட்டு ஆசிரியம் முதலிய பிறபாக்களிலும் இயற்றப் பெறுவதாயிற்றென்பது நக்கீரதேவர் இத்தேவபாணியை ஆசிரியப் பாவினுற் பாடியிருத்தலாற்புலனும். நக்கீரதேவர் பாடிய இவ்வாசிரியப்பாட்டு, அறுபத்தேழடிகளால் நீண்ட பெருமையுடையதாய், முழுமுதற்கடவுளாகிய சிவபெருமானை முன்னிலைப்படுத்து அவ்விறைவனது திருவருட்டிறத்தைப் பண்பொருந்தப்பரவிப் போற்றுவதாதலின் பெருந்தேவபாணி யெனப் பெயர்பெறுவதாயிற்று. தொல்காப்பியச் செய்யுளியலுரையில் மேற்கோளாகக் காட்டப்பெற்றுள்ள பெருந்தேவபாணியாகிய பாடல்களுக்குப் பண்ணுந் தாளமும் வகுக்கப்பெற்றுள்ளன. அவற்றை நோக்குங்கால் நக்கீரதேவர்பாடிய இப்பெருந்தேவபாணிக்கும் பண்ணுந்தாளமும் வகுக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பது நன்குபுலனும். இப்பாடலுக்கு முன்னேர் வகுத்த பண்ணுந் தாளமும் பயில்வாரில்லாமையால் ஏடுகளிற் குறிக்கப்படாது மறைந்தனபோலும்.

இறைவனுடைய திருப்பெயர்களையும் மன்னுயிர்களை உய்வித்தல் வேண்டி அவ்விறைவன் செய்தருளிய அருட்செயல்களையும் உலகெலாமாகி வேருய் உடனுமாய் யாண்டும் நீக்கமற நிறைந்துள்ள இறைவனது மெய்ம்மைத் தன்மையையும் நக்கீரதேவர் இப்பெருந்தேவபாணியில் எடுத்துரைத்துப் போற்றியுள்ளார். நக்கீர தேவர் திருவாலவாயிறைவனை நோக்கி, 'சொலற்கருந்தன்மைத் தொல்லோனுகிய நீ, உயர்மதிற் கூடலின் ஒள்ளிய தீந்தமிழை ஆராய்ந்த பெரியோன் என்பதனையுணராது நின்னை அருமைநிறைந்த தமிழ்ப்பாடலாற் போற்றிப் பரவினேன் அடியேன். எல்லா நூற்பொருளுந் தன் பொருளேயாகத் திரண்டு கூடிய சிறப்பினையுடைய நின்

இணையடிக்கீழ் அடங்கி நின்று நின்னைப்பரவிப்போற்றுவ தாகிய இவ்வரத்தினையே மேன்மேலும் நின்பால் வேண்டு கின்றேன்' என்பார்,

சொலற்கருந் தன்மைத் தொல்லோய் நீயே
கூட லாலவாய்க் குழகனை வ
தறியா தருந்தமிழ் பழிச்சினன் அடியேன்
ஈண்டிய சிறப்பின் இணையடிக்கீழ் நின்று
வேண்டுமது வினிவேண்டுவன் விரைந்தே.

எனப் பரவிப் போற்றியுள்ளார்.

இறைவனை முன்னிலைப் படுத்துப் பரவிப்போற்றும் இத்தேவபாணியில் வரும் நீலகண்டன், நெற்றியோர் கண்ணன், பால் வெண்ணீற்றன், நூலணிமார்பன் முதலிய அன்னீற்று ஆண்பாற் படர்க்கைப்பெயர்கள் அன்விகுதியின்மேல் ஐகாரவிகுதி பெற்று முன்னிலை யொருமைப் பெயர்களாய்த் திரிந்துள்ளன. இங்ஙனம் படர்க்கையிடத்திற்குரிய ஆண்பாற்சொல் ஐ விகுதிபெற்று முன்னிலைச் சொல்லாய் மாறும் இச் சொல்வழக்கு சங்கத்தொகை நூல்களிற் காணப் படாத புதுமையுடையதாகும். 'நினைப்பவர் மனங் கோயிலாக் கொண்டவன்' என்ற திருநாவுக்கரசர் வாய்மொழியை யுளத்துட்கொண்டு, 'நேசனை நினைப்பவர் நெஞ்சத்துள்ளனை' யென்றும், 'தாயும் நீயே தந்தை நீயே சங்கரனே' எனத் திருஞானசம்பந்தப் பிள்ளையார் அன்பினு லழைத்த திறத்தினை நினைந்து 'தாயும் நீயே தந்தையும் நீயே' யென்றும், 'சொற்பதங் கடந்த தொல்லோன் காண்க' எனத் திருவாதவூரடிகள் அருளிய மெய்ம் மொழியை எண்ணிச் 'சொலற்கருந் தன்மைத் தொல்லோய் நீயே' யென்றும் இத்தேவபாணியில் நக்கீரதேவர் போற்றி யுள்ளமை காணலாம். இத் தேவபாணியை யடுத்து,

விரைந்தேன் மற்றெப்பெருமான் வேண்டியது வேண்டா
திகழ்ந்தேன் பிழைத்தேன் அடியேன் — விரைந்தென்மேற்
சீற்றத்தைத் தீர்த்தருளு தேவாதி தேவனே
ஆற்றவுநீ செய்யும் அருள்.

எனவரும் வெண்பா அமைந்துள்ளது. 'என்னிலும் இனிய எம்பெருமானாகிய நீ என் பொருட்டு விரும்பி யறிவுறுத்திய நல்வழியை யான் விரும்பாது அதற்கு மாறான தீயவழியில் விரைந்து சென்றேன். நினது அருளாணை வழி ஒழுகாது

சோர்வுற்றமையால் தவறுசெய்தே னுயினேன். நினது அருளாணைக்கு மாறுபட நடந்த எளியேன்பாற் கொண்ட சினத்தை யொழித்து அடியேற்கு அருள் செய்வாயாக. இதுவே உயிர்கள்பாற் பேரிரக்கமுடையனுகிய நினது அருளின் நீர்மையைப் புலப்படுத்துவதாகும்' என இறைவனைப் பரிந்து வேண்டுவது இத்திருப்பாட்டாதலின் இதுவும் நக்கீரதேவர் வாக்கே யெனக் கொள்வது ஏற்புடையதாகும்.

கோபப் பிரசாதம்

வேண்டுதல் வேண்டாமையிலானுகிய சிவபெருமான் தன் திருவருளாணைவழி நில்லாத தீயோரைக் கோபித்தும் தனது அருள்வழியொழுகும் நல்லோரைக் காத்தும் மன்னுயிர்களின் நலங்கருதிச் செய்தருளிய தெறலும் அளியுமாகிய இருவகைச் செய்திகளையும் அடுத்தடுத்து எடுத்துரைப்பது நக்கீரதேவர் பாடிய கோபப் பிரசாதம் என்னும் பிரபந்தமாகும். இது தொண்ணூற்றென்பது அடிகளால் இயன்ற ஆசிரியப்பாவாகும். இதன்கண் இறைவன் அவ்வக்காலந்தோறும் செய்தருளிய அளியும் தெறலுமாகிய செய்திகள் பலவற்றைக் குறிப்பிட்டு 'இன்னவை பிறவும் எங்களீசன் கோபப் பிரசாதம்' என நக்கீரதேவர் கூறுதலால் இப்பாட்டிற்கு அவ்வாசிரியர் இட்ட பெயர் 'கோபப் பிரசாதம்' என்பது நன்கு புலனுகின்றது. ஈண்டுக் கோபம் என்றது வெகுளியின் விளைவாகிய ஒறுத்தற்றொழிலையும் பிரசாதம் என்றது அருளின் விளைவு ஆகிய அளித்தற்றொழிலையும் உணர்த்துதல் காண்க.

தம்பால் அடைக்கலமெனச் சார்ந்தாரைக் காப்பது தலையாய பெருமக்களது கடமையாதலானும், தன் ஆணை வழியடங்காத கொடியோரை ஒறுத்தல் வேந்தனது முறைமையாகலானும் எவ்வுயிர்க்குந் தலைவனுகிய இறைவனும் தன்பால் அன்புடையராய் அருளாணைவழி அடங்கியொழுகும் மெய்யடியார்களைக் காத்தலும் அருள் ஆணைவழியொழுகாத தீயோரைச் சினந்து ஒறுத்தலும் ஆகிய இவ்விரு தொழில்களையும் தனக்குரிய கடமையும் முறைமையுமாக மேற்கொண்டுள்ளான். அளியுந் தெறலுமாகிய இத்தொழில்களை இறைவன் மேற்கொள்ளுதற்குக்

காரணமாவன உயிர்கள் செய்த நன்றுந் தீதுமாகிய இரு வினைகளேயாம். இருவினைப் பயன்களை உயிர்களுக்கு அருத்துதல் முதல்வனது அருளாணையாதலின் அப் பயன்களை நுகர்விக்கும் நிலையில் ஒருதிறத்தாரை விரும்புத லும் மற்றொருதிறத்தாரை வெறுத்தலும் ஆகிய மனக் கோட்டம் இறைவனுக்கு உண்டாதலில்லை. எவ்வுயிர்க்கும் இன்பந்தருதலாற் சங்கரன் என்பது இறைவனுக்குரிய காரணப் பெயராகும். எனவே அவ்விறைவனாற் செய்யப் படும் ஒறுத்தற்றொழிலும் அருளின் வழிப்பட்டதேயாம். இறைவனது திருவருளாணை வழி அடங்கி யொழுகுவோர் செய்வனவெல்லாம் அறத்தின்பாற்பட்டன. அவ்வருள் ஆணை வழி அடங்கி நில்லாதோர் தன்முனைப்பினாற் செய்யுந் தொழில்கள் தீமையுடையன என்பது திருநெறித் தமிழ் வல்ல சான்றோர்களது கொள்கையாகும். இவ்வுண்மையை உளத்துட்கொண்டு நக்கீரதேவர் பாடிய கோபப் பிரசாதம் என்னும் இத்திருப்பாடலின் பொருளை ஆராய்ந்துணர்தல் அறிஞர் கடனாகும்.

'தவறுபெரிதுடைத்தே தவறுபெரிதுடைத்தே' என இப்பாடலைத் தொடங்கிய நக்கீரதேவர், 'மூர்க்க மாக்களை இன்னேகொண்டேகாக்கூற்றம், தவறு பெரிதுடைத்தே' என முடிக்கின்றார். இறைவன் அவ்வக்காலந்தோறும் செய்தருளிய அளியுந் தெறலுமாகிய செயல்கள் இப் பாடலின் முதற்கண் முறைப்படச் சொல்லப்பெற்றுள்ளன.

இறைவன் செய்தருளும் அருட்செயல்களை நான்முகன் இந்திரன் முதலிய தேவர்கள் ஓரளவு எடுத்துரைத்தற்கு ஏற்ற அறிவுடையாரெனினும் பெருங்கடல் நீரைக் கையினால் இறைக்க முயன்ற குருடனைப் போன்று அதனை முற்றமுடித்தற்கேற்ற அறிவாற்றல் பெறாதுள்ளார்கள். ஐம்பொறி வழியாகச் செல்லும் ஐந்தவாவினையும் அடக்கும் அறிவாற்றல் பெறாதமாந்தர் தம்மையொத்துப் புலனடக்கம் பெறாத இந்திரனைப் பரம்பொருள் எனக்கூறுவர். இன்ன தன்மையன் என அறியவொண்ணாதபடி வாக்கும் மனமுங் கடந்து விளங்கும் முழுமுதற் பொருள் ஆகிய சிவபெரு மானைச் சரணெனச் சாராது ஏனைப் பிறந்திறந்துழலுந் தேவர்களைக் கடவுளாக நினைப்பார் முயலைத்தொடராது இழிந்த காக்கையைப் பிடிக்கச் செல்லும் வேடர்களாகிய மூடர்களைப் போன்றும் குளிர் நீங்கச் சுடர்வழங்க வல்ல

விளக்கிருக்கவும் அதனைச்சார்ந்து பயன்பெருது மின்மினிப் பூச்சியைத் தீயென மயங்கிக் குளிர்காய நினைக்கும் பேதையரைப் போன்றும் காலத்தை வீணே கழிக்கின்ருர்கள். தன்னை வழிபடுபவரது இடர்களைக் களையமாட்டாது தான் முந்துறும் முழுமுதற் பொருளாகிய இறைவனை எண்ணுது இடர்நீக்கும் ஆற்றலற்ற ஏனைக் கொச்சைத் தேவரைக் கடவுளென்றெண்ணிப் பித்தேறியவர்களாய் ஆரிய மொழியில் தாம் பயின்று பெற்ற புத்தகப்படிப்பையே பேய் போன்று விடாப்பிடியாகப் பற்றிக்கொண்டு இன்னோர் திறம்பட வாதஞ்செய்வர். தாம் விரும்பியவற்றைப் பேசி வடிவால் மக்களே போன்று திரியும் இவர்கள் மிகவும் அறியாமையுடையர். இவ்வுலகில் ஒருவன் மற்றொருவனைப் பார்த்து உனது தலையிலுள்ள மூளைப்பகுதி மீனின் தலையை விட எட்டுப்பலம் மிகுதியுடையது எனக் கூறினல் அது சரிதானு எனத் தெரிந்துகொள்ள விரும்பி அவனுற்சுட்டப் பட்டவனது தலையை யறுத்துச் சரிபார்த்தற்கு யாரும் உடன்பட மாட்டார்கள். இவ்வாறு மக்களது அநுபவ உணர்வுக்கு ஒவ்வாதவகையிற் புனைந்துரை வழக்கிற் பேசப்படும் சிறுதேவர்கள் முழுமுதற் கடவுளென்பது உண்மையாளுல் அத்தேவர்கள் தமது ஆற்றலால் இன்னுரை அழித்தார்களெனவும் இன்னுரைப் பாது காத்தார்களெனவும் அன்னோர் தம்மை வழிபட்டாரை வாழ்வித்தல் வேண்டி மேற்கொண்ட ஒறுத்தற் செயல்களையும் அளித்தற்செயல்களையும் உலகமக்களறியத் தெளிவாக எடுத்துரைத்தல் வேண்டும். இங்ஙனம் இவர்கள் தம் கொள்கையினை ஏதுவும் எடுத்துக்காட்டும் தந்துரைப்பது இல்லை. எனினும் உரனில்லாத ஆடுகளைப் போல அச்சத்தாற் கூடிக்கதறியும் ஏனைவிலங்குகளைப் போல ஐம்புல வேட்கையிற் சிக்குண்டு வருந்தியும் இவ்வுலக வாழ்வில் தாம்பெற்ற சிற்றறிவையே பேரறிவெனக் கொண்டு மயங்கியும் உயிர்க்குயிராகிய இறைவனை இன்ன தன்மையன் என அவனருளால் உணர்ந்துகொள்ள மாட்டாத மூர்க்கர்களாக உள்ளார்கள். இத்தகைய தீயோர்களால் இவ்வுலகிலுளவாந் தொல்லைகளுக்கு எல்லையேயில்லை ஆதலின் இத்தகையோரது உயிரை இப்பொழுதே கவர்ந்து செல்லுதல் கூற்றுவனது கடமையாகும். இக்கடமையை உரிய காலத்தில் செய்யாத கூற்றம்

பெரிதும் குற்றமுடையதே' என நக்கீரதேவர் மனம் வருந்திக் கூறுவதாக அமைந்தது இப்பாட்டு.

'முயல்விட்டுக் காக்கைப் பின்போதல்' என்பதொரு பழமொழி. வேட்டைக்குச் செல்வோன் தன்னால் தொடர்ந்து பிடித்தற்குரியதும் நிறைந்த தசையுடையதும் ஆகிய முயலைத் தொடராமல் தசைப்பற்றில்லாத பறவை யாகிய இழிந்த காக்கையை நாடித்திரிதல் பயனில்லாத முயற்சியாகும். பயனுடைய நற்செயல்களை விடுத்துப் பயனில்லாத வெறுஞ்செயல்களிற் காலத்தைக் கழிக்கும் வீணர்களின் இயல்பினை விளக்குவதற்கெழுந்த பழமொழி களில் இதுவும் ஒன்று. 'விளக்கிருக்கமின்மினித் தீக் காய்தல்' என்ற பழமொழியும் இக்கருத்தில் வழங்குவதே யாகும். இப் பழமொழிகள் திருநாவுக்கரசர் பாடிய பழமொழித் திருப்பதிகத்தில் எடுத்தாளப்பெற்றுள்ளன. நாவுக்கரசர் பதிகத்திற் காணப்படும் இப்பழமொழிகளை நக்கீரதேவர் தாம் பாடிய கோபப் பிரசாதத்தில் எடுத்து ஆண்ட திறம் கூர்ந்துணரத் தக்கதாகும்.

பரம்பொருளாகிய தெய்வம் தன்னை வழிபட்டாரது குடும்பத்தை மேன்மேல் உயர்த்தும் பேராற்றலும் பெருங் கருணையுமுடையதென்னும் உண்மையினை,

> குடிசெய்வ லென்னு மொருவற்குத் தெய்வ
> மடிதற்றுத் தான் முந்துறும்.

எனவருந் திருக்குறளில் தெய்வப்புலவர் தெளிவாக எடுத் துக்கூறியுள்ளார். திருவள்ளுவர் கூறிய இத் தெய்வத் தன்மை இந்திரன் முதலிய தேவர்களுக்கில்லையென்பார், 'கச்சங்கொண்டு கடுந்தொழில் முடியாக் கொச்சைத் தேவர்' என்றார் நக்கீரதேவர். கச்சம்–ஆடை. கச்சங் கொண்டு என்பதற்கு ஆடையை இறுகவுடுத்து என்பது பொருள். தான் ஐம்புலன்களை அடக்காமல் சாபமெய்தி நின்று, புலன் அடக்கிய கௌதம முனிவனது ஆற்றலை விளக்கியவன் இந்திரனாதலின் 'ஒடுங்காப்பெருமை உம்பர் கோன்' என்றார் 'ஐந்தவித்தானாற்றல் அகல் விசும்புளார் கோமான் இந்திரனே சாலுங்கரி' என்றார் திருவள்ளு வரும்.

> 'உள்ளமுள் கசிந் துள்க வலார்க்கலாற்
> கள்ளமுள்ள வழிக்கசி வானலன்'

எனத் திருநாவுக்கரசரும்,

'தாயேயாகி வளர்த்தனை போற்றி'
'மாற்றமனங்கழிய நின்ற மறையோனே'

எனத் திருவாதவூரடிகளும் அருளிய பொருளுரைகளை,

'கள்ளங் கைவிட் டுள்ளம துருகிக்
கலந்து கசிந்துதன் கழலிணையவையே
நினைத்திட வாங்கே தோன்று நிமலனே'
'தாயாய் மன்னுயிர் தாங்குந் தலைவனே'
'வாக்கு மனமும் இறந்த மைந்தனே'

எனவருங் கோபப் பிரசாதத் தொடர்கள் நினைவுபடுத்தல் காணலாம்.

காரெட்டு

தலைவனது பிரிவினுல் வருத்தமுற்ற தலைமகளை நோக்கிக் 'கார்ப்பருவம் வந்தது, இனித் தலைவரும் வந்துவிடுவார்' என்று கூறித் தோழி வற்புறுத்துவதாக அமைந்தது, நக்கீர தேவர் பாடிய காரெட்டு என்னும் இப் பிரபந்தமாகும். இந்நூல் கார்ப்பருவ வரவினைக்கூறும் எட்டுப் பாடல்களால் இயன்றமையாற் காரெட்டு என்னும் பெயருடையதாயிற்று. கார்ப்பருவ வரவினைக் கூறும் நாற்பது பாடல்களாலியன்ற கீழ்க்கணக்கு நூல் கார் நாற்பது எனப் பெயர் பெற்றமைபோலக் கார்கால வரவினைக் கூறும் எட்டுப் பாடல்களாலியன்ற இப்பிரபந்தமும் காரெட்டு எனப் பெயர் பெற்றதெனத் தெரிகிறது. உலகமும் அதற்குறுதியாகிய அறம்பொருளின்பங்களும் நடத்தற்கேதுவாகிய மழையினது வரவினை எடுத்து உரைக்குமுகத்தால் அம்மழைக்குக் காரணமாகிய இறைவனது திருவருள் வண்ணத்தை நினைப்பிப்பது இப்பிரபந்தம் ஆகும்.

மேகமானது சிவபெருமானது திருநீலகண்டத்தைப் போன்று கருநிறமுடையதாய், இறைவன் கையிலேந்திய வில்லினைப்போன்ற வானவில்லைத் தாங்கி, ஐந்தலையரவினை அணிகலனுகப் பூண்ட அப்பெருமானது ஒளிகிளர் சடைக்கற்றையினையொத்து மின்னி, அவன் திருவடியில் அணியப்பெற்றுள்ள வீரக்கழலினையொத்து முழங்கிய தோற்றத்தினை,

மையார் மணிமிடறு போற்கருகி மற்றவன்றன்
கையார் சிலைவிலகிக் காட்டிற்றே — ஐவாய்
அழலரவம் பூண்டான் அவிர்சடைபோல் மின்னிக்
கழலரவம் காண்புற்ற கார்.

எனவரும் பாடல் சுவைபெற விரித்துரைப்பதாகும். இது போன்றே இந்நூலிலுள்ள ஏனைய பாடல்களும் கார் காலத்து மேகத் தோற்றத்தைப் புனைந்துரைக்கும் வாயில் ஆகத் 'தொண்ட வுழவர் ஆரத்தந்த அண்டத்தரும்பெறல் மேகன்' எனப் போற்றப்பெறும் சிவபெருமானது அருளின் நீர்மையைப் புலப்படுத்தும் முறையில் அமைந்துள்ளமை படித்து இன்புறத்தக்கதாகும். இந்நூலின் நான்காம் பாடலின் இறுதியடியாகிய 'காம்பினங்கடோளீயக்கார்' என்பது, 'காம்பினங்கொள் தோளீயக் கார்' என்றிருத்தல் வேண்டும். காம்பினங்கொள் தோளீ என விளியாக்கி அக்கார் ஆர்த்தது என வினைமுடிபு செய்க.

போற்றித் திருக்கலிவெண்பா

சிவபெருமான் உலக உயிர்களுக்கு அருள்புரிதல் வேண்டி அவ்வக் காலந்தோறும் செய்தருளிய அருட் செயல்களை எடுத்துரைத்துப் போற்றுங் கருத்துடன் நக்கீர தேவர் பாடிய பிரபந்தம் போற்றித் திருக்கலிவெண்பா என்பதாகும். இறைவனது பொருள்சேர் புகழைப் போற்றிப் பரவுங் கருத்துடன் திருநாவுக்கரசர் பாடிய திருத்தாண்டகம் போற்றித்திருத்தாண்டகம் எனவும் திருவாதவூரடிகள் பாடிய அகவல் போற்றித்திருவகவல் எனவும் பெயர்பெற்று வழங்குமாறு போல, நக்கீரதேவர் பாடிய இக்கலிவெண்பாவும் போற்றித் திருக்கலிவெண்பா எனப் பெயர்பெற்று வழங்குவதாயிற்று.

இக் கலிவெண்பா நாற்பத்தைந்து கண்ணிகளை உடையது. இதன்கண் சிவபெருமான் செய்தருளிய அருட் செயல்கள் விரித்துரைத்துப் போற்றப் பெற்றுள்ளன.

" நேசத்தால்
வாயினீர் கொண்டு மகுடத் துமிந்திறைச்சி
ஆயசீர்ப் போனகமா அங்கமைத்துத் — தூயசீர்க்
கண்ணிடந்த கண்ணப்பர் தம்மைமிகக் காதலித்து
விண்ணுலகம் ஈந்த விறல்போற்றி — மண்ணினைமேற்

காளத்தி போற்றி கயிலைமலை போற்றியென
நீளத்திஞல் நினைந்து நிற்பார்கள் — தாளத்தோ
டெத்திசையும் பன்முரசம் ஆர்த்திமையோர் போற்றிசைப்ப
அத்தனடி சேர்வார்க ளாங்கு"

என இந்நூல் முடிவுபெறுதலை நோக்குங்கால் இந்நூலின் ஆசிரியராகிய நக்கீர தேவர் திருக்காளத்தியை அடைந்து கண்ணப்ப நாயனுரால் வழிபாடு செய்யப்பெற்ற சிவ பெருமானைப் பணிந்து போற்றும் நிலையில் போற்றித் திருக்கலிவெண்பாவென்னும் இந்நூலைப் பாடியிருத்தல் வேண்டுமென்பது புலனுகும்.

திருமுருகாற்றுப்படை

தன்னிகரற்ற தலைவனெருவன்பால் பரிசில் பெற்று வரும் கூத்தர், பாணர், பொருநர், விறலி முதலிய பரிசில் வாணர்கள் வழியிடையே தம்மையெதிர்ப்பட்ட இரவலர் களது துயர்கண்டிரங்கித் தாம்பெற்ற பெருஞ்செல்வத்தை அவர்களும் பெற்று மகிழும்படி வழிகூறியனுப்புதல் ஆற்றுப்படை யெனப்படும். ஆற்றுப்படை யென்பதற்கு வழிப்படுத்தல் என்பது பொருள். வரையாது வழங்கும் வள்ளலொருவனை யடைந்து வளம்பெற்ற வாழ்க்கைநிலை யெய்திய பரிசிலர்கள், தாம் பெற்ற பெருவளத்தை ஏனையோரும் பெற்று இன்புறுமாறு வழிகூறியனுப்புத லாகிய இப்பேருதவியை,

"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெருஅர்க் கறிவுறீஇச்
சென்றுபய னெதிரச் சொன்ன பக்கமும்"

எனப் புறத்திணையியலிற் பாடாண்டிணைத் துறைகளுள் ஒன்ருகக் குறிப்பிடுவர் தொல்காப்பியனுர். ஆடுதற் ருெழிலில் வல்ல கூத்தரும், பண்ணெடு பாடுதலில் வல்ல பாணரும், பிறர் மனத்துக் கொண்டதனைக் குறிப்பால் அறிந்து இசைபட நடித்துக் காட்டவல்ல பொருநரும், மனக்குறிப்பு மெய்க்கண் புலப்பட ஆடவல்ல விறலியும் என்னும் நால்வகையோரும் தமது செல்வப் பொலிவும் தம்மெதிர்ப்பட்ட பரிசிலர்களது வறுமைத் தோற்றமும் ஒன்றிெனென்று மாறுபட்டுத் தோன்ற, வழியிடையே சந்தித்தபொழுது, தமக்கு இத்தகைய பெருஞ்செல்வத்தை

வழங்கியவர் இன்னாரெனவும் அவரை யடைந்து பரிசில் பெறுதற்குரிய வழிமுறைகள் இவையெனவும் தம்மை யெதிர்ப்பட்ட பரிசிலர்க்கு அறிவுறுத்தி, அன்னோர் தாம் கூறிய நெறியே சென்று பரிசில்பெற வழிசொல்லி அனுப்பிய பகுதி ஆற்றுப்படை யென்னுந் துறையாம் என்பது மேற்காட்டிய தொல்காப்பியத் தொடரின் பொருளாகும். இத்தொடரிற் கூறிய இலக்கணத்தின்படி அமைந்த ஆற்றுப்படைகளாவன கூத்தராற்றுப்படை, பாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை, விறலியாற்றுப்படை யென்பனவாம். இவற்றுக்குரிய இலக்கியங்களாகப் பத்துப் பாட்டில் பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, மலைபடுகடாமென்னுங் கூத்தராற்றுப்படை ஆகிய பாடல்களையும் புறநானூற்றில் விறலியாற்றுப்படையென்ற துறையிலமைந்த பாடல்களையும் கொள்ளலாம்.

வாழ்க்கைத் துறையில் வளம்பெற்றோர், தம்போல் வளம்பெறாதாரை நோக்கி, வளம்பெற்று வாழ்தற்கேற்ற வழிமுறைகளைத் தெரிவிப்பதே ஆற்றுப்படை யென்னும் இப்புறத்துறையின் நோக்கமாகும். யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்றெண்ணிப் பரந்தவுள்ளத்துடன் ஒருவர்க்கொருவர் தத்தம் அநுபவங்களை எடுத்துரைத்து வையத்து வாழ்வாங்கு வாழ வழிகாட்டியுதவும் இத்தெய்வ அருட்குறிப்பினை,

> ஆற்றிடைக் காட்சியுறழத் தோன்றிப்
> பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்
> சென்று பயனெதிரச் சொன்ன பக்கம்

எனவருந் தொடரால் ஆசிரியர் தொல்காப்பியனார் இனிது விளக்கியுள்ளார். இத்தொடர்ப் பொருளை ஊன்றி நோக்குங்கால் இங்குக் கிளந்தோதப் பெற்ற கூத்தர், பாணர், பொருநர், விறலி யென்னும் இவர்களே யன்றி இவர்களைப்போன்று ஏனைக் கலைத்துறைகளிற் பயிற்சி யுடைய பிறரும் தம் எதிர்ப்பட்ட மக்களை மேன்மேலுயரச் செய்தல் வேண்டுமென்னும் அருள் நோக்குடன் நல் வழியிற் செலுத்துதற்குரியரென்பதும், இங்ஙனம் வெவ்வேறு கலைத்துறைகளில் வல்ல சான்றோர் பலரும் தத்தம் பயிற்சி நிலையையும் வாழ்க்கை அனுபவத்தையும் எடுத்துரைத்துத் தம்மையொத்த மக்களை நல்வழிப்படுத்து

தலாகிய பல்வேறு முயற்சிகளும் ஆற்றுப்படையாகிய இத்துறையில் அடங்குமென்பதும் ஆசிரியர் கருத்தென்பது நன்கு விளங்கும். ஆகவே அவர் கிளந்தோதிய கூத்தர் பாணர் பொருநர் விறலியென்போர் கூற்ருக அமைந்த ஆற்றுப்படைகளே யன்றிப் புலவர் முதலியோர் கூற்ருக அமைந்த ஏனைய ஆற்றுப்படைகளும் தொல்காப்பியனர் அறிவுறுத்திய ஆற்றுப்படை யிலக்கணத்தின் படி யமைந்த ஆற்றுப்படைகளெனவே கொள்ளுதல் வேண்டும்.

இவ்வாறு ஆற்றுப்படையென்னுந் துறையிலமைந்த செய்யுட்களின் பொதுவியல்பினைக் கூர்ந்து நோக்குங்கால் பத்துப் பாட்டுள் முதற் பாட்டாகவும் பதினொராந் திருமுறையிற் பதினேழாவது பிரபந்தமாகவும் தொகுக்கப் பெற்றுள்ள திருமுருகாற்றுப்படையென்ற பனுவல், தொல் காப்பியனர் கூறிய ஆற்றுப்படை யிலக்கணத்தின்படி யமைந்ததே யென்னும் உண்மை நன்கு தெளியப்படும். இங்ஙனம் எல்லாவகையான ஆற்றுப்படைகளுக்கும் பொதுவிலக்கணமாக அமைந்ததே "ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப், பெற்ற பெருவளம் பெருஅர்க்கு அறிவுறீஇச், சென்று பயனெதிரச் சொன்ன பக்கம" என வரும் தொல்காப்பியத் தொடராகும். இத்தொடர்க்கு,

"இல்லறத்தை விட்டுத் துறவறமாகிய நெறியில் நிற்றல் நன்றென்றும் கண்ட காட்சி தீதென்றும் மாறுபடத் தோன்றுகையினலே தான் இறைவனிடத்துப் பெற்ற கந்தழியாகிய செல்வத்தை யாண்டுந் திரிந்து, பெருதார்க்கு 'இன்னவிடத்தே சென்ருற் பெறலாம்' என்று அறிவுறுத்தி, அவரும் ஆண்டுச் சென்று அக் கந் தழியினைப் பெறும்படி சொன்ன கூறுபாடு" எனப் பொருள் கூறித் தெய்வத்தினிடத்து ஆற்றுப்படுத்துவதாகிய ஆற்றுப்படைக்குரிய சிறப்பிலக்கணமாகக் கொண்டார் நச்சினர்க்கினியர். இங்ஙன மன்றி இதனை ஆற்றுப் படையின் பொதுவிலக்கணமாகவே கொள்ளினும் தெய் வத்தின்பால் உய்ப்பதாகிய இத் திருமுருகாற்றுப்படை அப்பொது விலக்கணத்தின்படி யமைந்த ஆற்றுப்படைகளு ளொன்ருதல் புலனும்.

முருகாற்றுப்படை யென்பதற்கு முருகன்பால் வீடு பெறுதற்குச் சமைந்தானேர் இரவலனை வீடுபெற்ருர

ஞெருவன் முருகனிடத்தே ஆற்றுப்படுத்த தென்பது பொருளாகக் கொள்க என்பர் நச்சினர்க்கினியர். இதனைப் புலவராற்றுப்படை யென்றபெயரால் வழங்குதல் வேண்டு மெனக்கருதுவர் சிலர். கூத்தராற்றுப்படை, பாணுற்றுப் படை, பொருநராற்றுப்படை, விறலியாற்றுப்படையென ஏனைய ஆற்றுப்படைகளெல்லாம் ஆற்றுப்படுத்துவோர் தலைமைதோன்ற அவர்பெயரால் வழங்குமாறு போல, முருகன்பால் முதுவாயிரவலனுகிய புலவனைப் புலமைச் செல்வரொருவர் ஆற்றுப்படுத்துவதாக அமைந்த இத் திரு முருகாற்றுப்படையும் ஆற்றுப்படுத்துவோராகிய புலவர் பெயராற் புலவராற்றுப்படையென வழங்கப்பெறுதல் வேண்டுமென்பது அன்னேர்கருத்தாகும். புலவராற்றுப் படை யென்றபெயரால் நூல் நுதலிய சமயப்பொருள் விளங்கமாட்டாது போகவே, அப்பொருள் எளிதில் விளங்குமாறு பாட்டுடைத்தெய்வத்தின் பெயரொடு சார்த்தி இப்பனுவல் வழங்கலாயிற்றென்றும், இப்புது வழக்கம் பரவிவிட்ட காரணத்தால் புலவராற்றுப்படை யென்ற பழம்பெயர் வழக்கு வீழ்ந்ததாதல் வேண்டு மென்றும் மேற்கூறிய கருத்திற்கு விளக்கங் கூறுவதும் உண்டு. புலவராற்றுப்படை யென்றபெயர் திருமுருகாற்றுப் படைக்கு என்றும் வழங்கியதில்லை. நச்சினர்க்கினியர் காலத்தில் வாழ்ந்த அறிஞர் சிலர் புலவராற்றுப்படை யென்றபெயரால் திருமுருகாற்றுப்படையை வழங்கத் தொடங்கிய நிலையில் ஆசிரியர் நச்சினர்க்கினியர் திரு முருகாற்றுப்படைக்கு அப்புதுப்பெயர் பொருந்தாதென எடுத்துக்காட்டித் தெருட்டி உள்ளார். "இதனைப் புலவராற்றுப்படையென்று உய்த்துணராது பெயர் கூறுவார்க்கு முருகாற்றுப்படையென்னும் பெயரன்றி அப்பெயர் வழங்காமையான் மறுக்க" எனப் புறத்திணை இயல் 36-ஆம் சூத்திரவுரையில் அவ்வாசிரியர் கூறுதலால் இச்செய்தி புலனுதல் காணலாம்.

மக்களுட் சிறப்பு உடைய தலைவனெருவன்பால் இரவலரை ஆற்றுப்படுத்தக்கருதிய கூத்தர் பாணர் முதலியோர், வறியோர்க்கு வழங்கும் அத்தலைவனது பெருவண்மையையும் தமக்கு அவன் அன்பினுற்செய்த பேருதவியையும் அவனையடைதற்குரிய வழிதுறைகளைத் தாம் நன்குணர்ந்த பயிற்சியினுல் ஏனை இரவலரை அவன்

பாற் செலுத்தவல்ல தலைமை தமக்கு உண்டென்பதனையும் எண்ணி, வறியோர்க்கு வழிகூறியனுப்புதல் உலகியலுக்கு ஒத்ததாகலின், கூத்தர் முதலியோர் கூற்ருகப் புலவர் பாடிய அவ்வாற்றுப்படைகள் யாவும் ஆற்றுப்படுத்துவோ ராகிய கூத்தர் முதலியோர் பெயராற் பெயர் பெற்று வழங்குவனவாயின. இங்ஙனம் கூத்தர் முதலிய பிறர் கூற்ருகச் செய்யுள் செய்யுங்கால் தம் தலைமை தோன்ருது ஆற்றுப்படுத்தவல்ல புலனுடைய மாந்தர் ஏனைப் பொதுமக்களைப் போன்று தம்தலைமை தோன்றத் தம்மையொத்த புலவரை ஆற்றுப்படுத்திஞரென்றல், கற்றவழி யடங்கியொழுகும் அவரது மன நிலைக்கு ஏற்புடையதன்ரும். அங்ஙனமாகவும் மெய்ஞ்ஞானத்தால் உயிர்முனைப்படங்கி இறைவனுடைய திருவடிகளை இடை விடாதெண்ணும் நலம்புரிகொள்கைப் புலவஞெருவன் இறைவன்பால் ஆற்றுப்படுத்தற்குரிய தகுதியுடையேன் யான் என்னும் ஆன்மபோதத்துடன் முருகனையடைதற்கு உரிய நெறிமுறையைப் பிறர்க்கு அறிவுறுத்திஞனென்றல் சீவன்முத்தனுகிய அவனது சிறப்பியல்புக்குச் சிறிதும் ஒவ்வாது. ஆகவே இவ்வாற்றுப்படை அப்புலவனது தலைமை தோன்றப் புலவராற்றுப்படையெனப் பெயர் பெருதாயிற்று. அன்றியும் எல்லாம் வல்ல இறைவனுகிய முருகனையடையும் நெறியறிந்து சென்று சேர்தல் சில் வாழ்நாட் பல்பிணிச் சிற்றறிவினராகிய மக்களால் இயலா தென்பதும், அரும்பெறல் மரபின் பெரும்பெயர் முருகனுகிய அவ்விறைவனே தன் அருள்காரணமாக நம்மை நோக்கி எளிவந்து தோன்றி அருள்புரியுமியல்பினன் என்பதும், அப்பெருமான் நம்பால் எளிவந்து தோன்றி அருள் புரியும்படி அவனை நம்வழிப்படுத்தும் வழிபாட்டு முறைகளை உணர்த்தும் நிலையில் இப்பாடல் அமைந் தமைபற்றி இது முருகாற்றுப்படையென்னும் பெயர்த் தாயிற்றென்பதும் பண்டைச் சான்ருேர் துணிபாகும். இந்நுட்பம்,

‘ குறமகள்
முருகியம் நிறுத்து முரணின ருட்க
முருகாற்றுப்படுத்த உருகெழு வியனகர் ’

எனவரும் இத்திருமுருகாற்றுப்படைத் தொடராலும்,

> "களநன்கிழைத்துக் கண்ணிசூட்டி
> வளநகர் சிலம்பப் பாடிப் பலிகொடுத்
> துருவச் செந்தினை குருதியொடு தூஉய்
> முருகாற்றுப்படுத்த உருகெழு நடுநாள்"

எனவரும் வெறிபாடிய காமக்கண்ணியார் பாடலாலும் நன்கு புலனுதல் காணலாம்.

'முருகாற்றுப்படுத்த' எனவரும் இத்தொடர்க்குப் 'பிள்ளையார் வரும்படி வழிப்படுத்தின' என்று பொருள் கூறுவர் நச்சினுர்க்கினியர்.

இனி, முருகன் எழுந்தருளிய ஆறுபடை வீடுகளைப் பற்றிக் கூறுவது இத் திருமுருகாற்றுப்படையெனக் கொண்டு இவ்வொரு பாடலை ஆறுபகுதிகளாகப் பகுத்து வழங்குவாருமுளர். முருகன் வீற்றிருந்தருள்புரியுந்திருப் பதிகளாக இத்திருமுருகாற்றுப்படையிற் சிறப்பிக்கப் பட்டவை திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவி நன்குடி, திருவேரகம் என்னும் நான்கு திருப்பதிகளே யாகும். அன்னோர் ஐந்தாவதாகக் கூறும் 'குன்று தோருடல்' என்பது ஒரு தனித்திருப்பதியன்று. முருகப் பெருமான் குறிஞ்சிநிலத் தெய்வமாதலால் அப் பெருமானுக்கு எல்லாமலைகளும் விரும்பி விளையாடுதற் குரிய சிறப்புடைய திருத்தலங்களே யென்னுங்கருத்திஞல் "குன்றுதோருடலும் நின்றதன்பண்பே" என்றுர் ஆசிரியர். 'மலைகள் தோறும் சென்று விளையாடுதலும் முருகப் பெருமானுக்கு நிலைபெற்ற பண்பாம்' என்பது இத் தொடரின் பொருளாகும். இவ்வாறே குறிஞ்சிக்கிழவன் என்ற பொருள்படப் 'பழமுதிர் சோலை மலை கிழவோன்' எனமுருகவேளை இந்நூலாசிரியர் இத் திருமுருகாற்றுப் படையின் இறுதியடியிற் குறிட்பிட்டு உள்ளார், இங்குக் கூறப்பட்ட பழமுதிர் சோலைமலை யென்பதனை இப்பொழுது அழகர்மலையென வழங்குந் திருப்பதியாகக் கொள்வதுமுண்டு. இம்மலை சங்கத்தொகை நூலாகிய பரிபாடலில் திருமாலிருஞ்சோலையென்ற பெயரால் திரு மாலுக்குரிய சிறப்புடைய திருப்பதியாகப் போற்றப்பெற் றுளது. பழமுதிர் சோலைமலையென அதனைத் தனியே எண்ணுமல் அம்மலையை முருகனுக்கு உரிமையாக்கிப் 'பழ முதிர்சோலை மலைகிழவோன்' என அவ்விறைவனை நக்கீரர் குறித்துப் போற்றுதலால் 'பழமுதிர்சோலைமலை யென்ற

தொடர் திருமாலிருஞ் சோலையைமட்டுங் குறித்ததெனக் கொள்ளாமல் இழுமென இழிதரும் அருவியையுடைய வளமார்ந்த எல்லாமலைகளையுங் குறித்து நின்றதெனக் கொள்ளுதலே ஆசிரியர் கருத்துக்கு ஏற்புடையதாகும். 'பழமுதிர்சோலை மலைகிழவோன்' என உடம்பொடு புணர்த்தமையால் பழமுதிர்சோலைமலையின்கண்ணே எழுந்தருளி யிருத்தலும் உரியன்" எனப் பொருள்கொண்டு இதனை ஒரு தனித்திருப்பதியாகக் கொள்வார்க்கும் இத்திருமுருகாற்றுப்படையிற் சிறப்பிக்கப்பெற்ற திருத்தலங்கள் ஐந்தெனக் கொள்வதன்றி ஆறுபடைவீடெனக் கொள்ளுதற்குச் சிறிதும் இடமில்லையென்பது திருமுருகாற்றுப்படையை முறையே ஓதுவார்க்கு இனிது விளங்கும்.

திருமுருகாற்றுப் படையினை இயற்றிய ஆசிரியராவார் 'மதுரைக்கணக்காயனார் மகனார் நக்கீரனார்' எனப் பத்துப் பாட்டுரையில் உரையாசிரியர் நச்சினார்க்கினியர் தெளிவாகக் கூறியுள்ளார். கடைச் சங்கப் புலவராகிய இவரே பாண்டியன் நெடுஞ்செழியனைப் பாட்டுத் தலைவனாகக் கொண்டு நெடுநல்வாடை யென்ற பாடலையும் பாடியுள்ளாரென்பது பத்துப்பாட்டுளொன்றாகிய அதற்கு நச்சினார்க்கினியரெழுதிய வுரைப்பகுதியில் "பாண்டியன் நெடுஞ்செழியனை மதுரைக்கணக்காயனார் மகனார் நக்கீரனார் பாடிய நெடுநல்வாடை" என வருந்தொடரால் இனிது விளங்கும்.

பத்துப்பாட்டுள் முதலாவதாகிய திருமுருகாற்றுப் படையிலும் ஏழாவதாகிய நெடுநல்வாடையிலும் முறையே பேரின்பமாகிய வீடுபேற்றினையும் சிற்றின்பமாகிய உலகியல் வாழ்வினையும் நாடி வாழ்ந்த இருவேறு மனநிலை புலப்படுதலாலும் இவ்விருபாடல்களிடையே மொழிநடை முதலியன சிறிது வேறுபாட்டிருத்தலாலும் இப்பாடல்கள் இரண்டும் ஒரு புலவராற் பாடப்பெற்றிருத்தல் இயலாதென்றும், நெடுநல்வாடையை இயற்றிய நக்கீரனாரென்பவர் கடைச்சங்க காலத்திலும் திருமுருகாற்றுப்படை பாடிய நக்கீரனாரென்பவர் கி. பி. ஐந்தாம் நூற்றுண்டிலும் வாழ்ந்தவரெனக் கொள்ளுதலே ஏற்புடையதாமென்றும் அறிஞரொருவர் ஆராய்ந்தெழுதியுள்ளார்.[1]

1. திருமுருகாற்றுப்படை உரையாசிரியருரையுடன் முன்னுரை (மதுரைத் தமிழ்ச் சங்கச் செந்தமிழ்ப் பிரசுரம்—68.) பார்க்க.

வையத்து வாழ்வாங்குவாழும் உயர்ந்த ஒழுகலா றுடைய பெரும்புலவரது வாழ்க்கையில் நெறிமுறைபிறழா உலகியற் செயல்களும் வீடுபேற்றிற்குக் காரணமாகிய மெய்ந்நெறிச் செயல்களும் படிகால் முறையே ஒருங்கு நிகழுதல் இயல்பாதலால் வையத்து வாழ்வாங்கு வாழ்ந்த தெய்வப்புலவராகிய நக்கீரனார் உலகியல் வாழ்வில் நின்ற நிலையிலேயே எங்கும் நிறைந்த பெரும் பொருளாகிய இறைவனை யுணர்ந்து பேரின்பமெய்தும் வழிபாட்டு முறை களைத் திருமுருகாற்றுப்படையில் விளக்கியுள்ளார். வள்ளல் களை நாடிச் செல்லும் பரிசிலர்வாழ்க்கையைப் பற்றியும் போகநுகர்ச்சியாகிய இல்வாழ்க்கையைப் பற்றியும் அவர் சிறிதும் இழித்துரைத்திலர். பத்துப்பாட்டில் தொகுக்கப் பெற்றுள்ள இவ்விரு பாடல்களும் “மதுரைக் கணக்காய னார் மகனார் நக்கீரனார்” என வழங்கும் ஒருவராலேயே பாடப்பெற்றனவாகப் பண்டையோர் தெளிவாகக் குறிப் பிட்டுள்ளார்கள். கடைச்சங்க காலத்தவராகிய நல்லந்து வனார் என்ற புலவர் பாடிய பாடல்களுள் பரிபாடலில் தொகுக்கப்பட்ட பாடல்களையும் கலித்தொகையிலுள்ள பாடல்களையும் ஏனைத்தொகை நூல்களில் தொகுக்கப்பட்ட பாடல்களையும் ஒப்புநோக்குங்கால் அப்பாடல்கள் பொரு ளமைதியிலும் மொழிநடையிலும் சிறிது சிறிது வேறுபடக் காண்கின்றோம். சொல்ல எடுத்துக்கொண்ட பொருள் காரணமாக யாப்பியலும் மொழிநடையும் வேறுபடுதல் இயல்பேயாம். இங்ஙனமே பாண்டியன் நெடுஞ்செழியனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடிய நெடுநல்வாடை யும், முருகன்பால் முதுவாயிரவலனை ஆற்றுப் படுத்தும் நிலையிற்பாடிய திருமுருகாற்றுப்படையும் எடுத்துக் கொண்ட பொருள்வகையால் வேறுபட்டனவாதலின், அவற்றிடையே சிறிது வேறுபாடு காணப்படுதல் ஏற்புடை யதேயாம். கடைச் சங்கச் செய்யுட்களில் இடைச் சங்கத் தொடக்கத்தில் எழுந்த தமிழியல் நூலாகிய தொல்காப்பியத்திற் சுட்டப்படாத மொழி வழக்குகள் சில புதியன புகுதலாக ஆங்காங்கே இடம்பெற்றிருத் தலைக் காண்கின்றோம். புதியன புகுதலாகிய இவ் வழக்கிற்குத் திருமுருகாற்றுப் படையும் விலக்கான தன்று. இத்தகைய சிறிய வேறுபாட்டினை ஆதரவாகக் கொண்டு, இவ்விரு பாடல்களையும்

பாடிய ஆசிரியராகிய மதுரைக் கணக்காயனர் மகனர் நக்கீரனரை வேறுவேறு காலத்து வாழ்ந்த இருவரெனக் கூறுதல் சிறிதும் பொருந்தாது. திருமுருகாற்றுப்படை பாடிய நக்கீரனும் நெடுநல் வாடை பாடிய நக்கீரனரும் மதுரைக் கணக்காயனர் மகனராகிய ஒருவரேயென்பது 'மதுரைக் கணக்காயனர் மகனர் நக்கீரனர்' என இப் பாடலின் உரைகளில் தந்தை பெயரோடிணைந்து ஒரே தொடராற் குறிக்கப்படுதலாலும், இவர் பாடிய திருமுருகாற்றுப்படையிலும் நெடுநல் வாடையிலும் பிற செய்யுட்களிலும் சொல் வழக்குகள் ஒத்து நிற்றலாலும் [1] நன்குணரப்படும். "சூர்மருங்கறுத்த சுடரிலை நெடுவேல்" (அகநானூறு-50) என மதுரை மருதனிளநாகனரும், "உருவச் செந்தினை குருதியொடு தூஉய், முருகாற்றுப் படுத்த உருகெழு நடுநாள்" (அகநானூறு-22) என வெறிபாடிய காமக் கண்ணியாரும் கூறும் தொடர்கள் திருமுருகாற்றுப்படையில் "சூர்முதல் தடிந்த சுடரிலை நெடுவேல்" (முருகாற்.–46) எனவும், "உருவப்பல் பூ தூஉய் வெருவரக் குருதிச் செந்தினை பரப்பிக் குறமகள், முருகியம் நிறுத்து முரணினருட்க, முருகாற்றுப் படுத்த வுருகெழு வியனகர்" (முருகாற்.–241–247) எனவும் வரும்தொடர்களோடு ஒத்துநிற்றலைக் கூர்ந்து நோக்குங்கால், இப் புலவர்களனைவரும் கடைச்சங்க காலத்தில் வாழ்ந்தவர்களென்பது நன்குபுலனமாதலானும், மதுரைக் கணக்காயனர் மகனர் நக்கீரனரே இத் திருமுருகாற்றுப்படையைப் பாடியவரென்றும் இவரே பாண்டியன் நெடுஞ்செழியனைப் பாட்டுடைத் தலைவனகக் கொண்டு நெடுநல் வாடையைப் பாடியவரென்றும் பண்டையோர் கூறும் கொள்கை உறுதிப் படுதல் காண்க. மதுரைக் கணக்காயனர் மகனர் நக்கீரனர் பாடியனவாக நற்றிணையில் ஏழு செய்யுட்களும், குறுந்தொகையில் எட்டும், அகநானூற்றிற் பதினேழும், புறநானூற்றில் மூன்றும் தொகுக்கப்பெற்றுள்ளன. கீரன் என்பது இவரது பெயர். 'ந' என்பது சிறப்புணர்த்தும் அடைமொழி. மதுரைக் கணக்காயனர் மகனர் நக்கீரனர்

1. பெரும்பேராசிரியர் உ. வே. சாமிநாத ஐயரவர்கள் தாம் பதிப்பித்த பத்துப்பாட்டின் இரண்டாம் பதிப்பிலே 'பாடினோர் வரலாறு' என்னுந் தலைப்பில் நக்கீரரைக் குறித்து எழுதுங்கால் இத்தகைய ஒப்புமைப் பகுதிகளைத் தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளார்கள். ஆண்டுக் காண்க.

என இவர் சுட்டப்படுதலால் இவருடைய ஊர் மதுரையென்பதும் இவருடைய தந்தையார் மாணக்கர்களுக்கு கல்வி பயிற்றும் ஆசிரியராகத் திகழ்ந்தவரென்பதும் நன்கு புலனும். இவர் இறையனூரகப் பொருளுக்கு நல்லுரை கண்டு அவ்வுரையினைத் தம் புதல்வராகிய கீரங்கொற்றனூர்க்குரைத்தார் என இறையனூர் அகப்பொருளுரைகூறும். இவர் மதுரைப் பட்டிமண்டபம் புகுந்து வடமொழியே சிறந்தது தமிழ் தாழ்ந்ததெனக்கூறிய குயக்கோடன் என்பவனை இறக்கப் பாடிப் பின்பு சிலர் வேண்ட அவனைப் பிழைக்கவும் பாடினூர் என்றதொரு செய்தி தொல்காப்பியச் செய்யுளியலுரையிற் பேராசிரியர் மேற்கோளாகக் காட்டிய நக்கீரர் அங்கதப் பாடல்களால் நன்கு புலனுகின்றது. பதினொராந்திருமுறையில் நக்கீரர் பாடியனவாகத் தொகுக்கப் பெற்ற பிரபந்தங்களில் திருமுருகாற்றுப்படை யொன்றே மதுரைக் கணக்காயனூர் மகனூர் நக்கீரனூராகிய சங்கப் புலவர் பாடிய பனுவலாகும். ஏனைய ஒன்பது பிரபந்தங்களும் கி. பி. ஒன்பதாம் நூற்றுண்டில் வாழ்ந்தவராகக் கருதப்படும் நக்கீரதேவ நாயனூராற் பாடப்பெற்றனவாகுமென்பது முன்னர் விளக்கப்பெற்றது.

பூதத்தால் மலைமுழையிலடைக்கப்பட்டு வருந்திய நிலையில் நக்கீரனூர் இத்திருமுருகாற்றுப்படையைப் பாடி முருகப்பெருமானூற் சிறைவீடு செய்யப்பெற்று உய்ந்தார் எனப் பிற்காலத்தார் கூறுங்கதை நக்கீரனூர் மனநிலைக்கும் வரலாற்று நெறிக்கும் முற்றிலும் மாறுபட்டதென்பது முன்னர் விளக்கப்பட்டது. முருகன் திருவருளால் வீடுபேற்றுக்குரிய திருவடிஞானம் கைவரப்பெற்ற சீவன் முத்தராக மதுரையில் வாழ்ந்த நக்கீரனூரென்னும் புலவர் பெருமான் முருகப்பெருமானது திருவடிப் பேரின்பத்தை யடைய விரும்பிய முதுவாயிரவலனை நோக்கி 'நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்னும் அருட்குறிப்புடன் முருகப்பெருமானது பேரருளின்பத்தையெடுத்துரைத்து அவ்விறைவன்பால் ஆற்றுப்படுத்தும் நிலையில் இத்திருமுருகாற்றுப்படையைப் பாடியுள்ளாரென்பதே நச்சினூர்க்கினியர் முதலிய பண்டைச் சான்றோரது துணிபாகும்.

உலகத்துப் பல்லுயிர்களும் மகிழ நீலக்கடல்மேல் தோன்றும் காலையிளங் கதிரவனைப் போன்று நீல மயிலின் மேல் செம்மேனிப் பேரொளியினூகத் திகழ்வோன் முருக

பெருமான். தன்னைச் சேர்ந்தவர்களது தீவினையைப் போக்கி அவரைத் தாங்கிய ஆற்றல் மிக்க திருவடியினையும் அழித்தற்கரியகொடியோரை அழித்த கையினையும் உடையவன். அறக்கற்பினையுடைய தெய்வயானையார் கணவன். செங்கடம்பின் மாலையசையும் மார்பினையுடையவன். வண்டுகள் மொய்க்காத தெய்வத் தன்மை வாய்ந்த செங்காந்தட் பூவாலாகிய கண்ணியைச் சூடிய திருமுடியையுடையவன். கடல் நடுவிற் புகுந்து சூரபன்மாவாகிய தலைவனைக் கொன்ற சுடர்விடும் நெடிய வேலாலே, அவுணரது நல்ல வன்மையெல்லாம் அழியும்படி கீழ் நோக்கின பூங்கொத்துக்களையுடைய மாமரத்தைப் பிளந்த குற்றமில்லாத வெற்றியினையும், ஒருவராலும் அளந்தறியவொண்ணாத பொருள்சேர் புகழினையும் உடையவன். சிவந்த வேற் படையைத் தாங்கிய சேயோனாகிய முருகப்பெருமானுடைய திருவடியிற் செல்லுதற்குக் காரணமான நல்வினைகளைப் பல பிறப்புக்களினும் விரும்பிப் புரிந்த தலைமை பெற்ற உள்ளத்துடனே அப்பெருமான்பாற் செல்லுதற்கு நீ விரும்பி விட்டாயாயின் நினது நல்ல நெஞ்சத்தினது இனிய விருப்பம் ஈடேற நீ கருதிய வீடுபேற்றின்பத்தை இப்பொழுதே தப்பாமற் பெறுவாய். வெற்றியாலும் செல்வத்தாலும் விளக்கமுற்ற கூடல் நகரத்துக்கு மேற்றிசையிலுள்ளதும், இரவெல்லாம் தாமரை மலரில் உறங்கிய வண்டினங்கள் விடியற்காலத்தே நெய்தற் பூவை யூதி ஞாயிறு தோன்றின காலத்தே கண்ணைப் போன்று மலர்ந்த சுனைப்பூக்களிலே சென்று ஆரவாரிக்கும் வளமார்ந்ததுமாகிய திருப்பரங்குன்றத்திலே இறைவனாகிய முருகன் மனம் விரும்பி எழுந்தருளியிருத்தலும் உரியன். அதுவன்றி, ஆறு திருமுகங்களும் பன்னிரண்டு திருக்கரங்களும் தத்தமக்கேற்ற தொழில் செய்ய யானையின் மேலெழுந்தருளி வான்வழியாகத் திருச்சீரலைவாய் என்ற திருப்பதியையடைதலும் அவனுக்கு நிலை பெற்ற பண்பாகும். அதுவன்றிப் படைத்தற் கடவுளாகிய நான்முகனுக்கேற்பட்ட சாபத்தை நீக்குதற் பொருட்டுத் திருமால் சிவபெருமான் இந்திரன் ஆகிய தெய்வங்களும் முப்பத்துமுக்கோடி தேவர்களும் பதினெண்கணங்களும் துனியில் காட்சி முனிவர் முற்புகக் கந்தருவர் யாழிசைக்க உடன் வந்து காணத் திருவாவி நன்குடியில் தன் தேவியுடன் சில நாள் அமர்ந்திருத்தலும் உரியன். அதுவன்றி

இருபிறப்பாளராகிய அந்தணர்கள் நீராடி ஈர ஆடை உடுத்து ஆறெழுத்து மந்திரமாகிய மறையையோதி மலர் தூவி வணங்க அவ்வழிபாட்டை விரும்பியேற்று ஏரகம் என்னுந் திருப்பதியில் எழுந்தருளியிருத்தலும் உரியன். அதுவன்றி, குறமகளிராடுங் குரவைக் கூத்துக்கு முதற்கை கொடுத்து அம்மகளிருடன் மலைகள்தோறும் விரும்பி விளையாடுதலும் அவன்பால் நிலைபெற்ற அருட்குணமாகும். அதுவேயுமன்றி, ஊர்கள்தோறும் மக்கள் கொண்டாடுந் திருவிழாக்களிலும் அன்புடைய அடியார்கள் உளமுருகிப் போற்ற அமைந்த இடங்களிலும் முருக பூசை புரியும் வேலனென்பான் வேலேந்தி வெறியாடுகளத்திலும் காடுகளிலும் இளமரச் சோலைகளிலும் ஆற்றிடைக் குறையிலும் குளங்களிலும் வேறுபல எழில் மிக்க இடங்களிலும் பல தெருக்கள் ஒன்று கூடும் சந்திகளிலும் புதுப்பூ மலருங் கடம்ப மரங்களிலும் மன்றங்களிலும் பொதுவாகிய அம்பலங்களிலும் தெய்வம் உறையுந் தூண்கள் நிலைபெற்ற இடங்களிலும் குறையிரந்து வேண்டும் அன்பர்கள் தாம் விரும்பியவாறே பெற்று நின்று வழிபட அவ்வவ்விடங்களிலே நிலைபெற எழுந்தருளியிருத்தலும் திருவருட் பெரியோர் அறிந்து கூறிய மெய்ந்நெறியாகும். யான் முற்கூறிய அவ்வவ்விடங்களிலேயாயினுமாக, அல்லது பிற இடங்களிலேயாயினுமாக, நீ முற்பட அம்முருகப் பெருமானைக் கண்டபொழுது முகம் விரும்பித் துதித்துக் கைகளைத் தலைமேற் குவித்து நின்று வாழ்த்திப் பின்பு அவன் திருவடிகளிலே தலைபொருந்தும்படி வீழ்ந்து வணங்கி,

"நெடும் பெருஞ் சிமையத்து நீலப்பைஞ்சுனை
ஐவருள் ஒருவன் அங்கை யேற்ப
அறுவர் பயந்த ஆறமர் செல்வ
ஆல்கெழு கடவுட் புதல்வ மால் வரை
மலைமகள் மகனே மாற்றோர் கூற்றே
வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ
இழையணி சிறப்பிற் பழையோள் குழவி"

என்பன முதலாக யான் அறிந்து நினக்குக் கூறிய அளவாலே நீயும் நினக்குத் தெரிந்த பலவற்றையும் கூறிப் புகழ்ந்து, "நின்னோடு ஒப்பாரில்லாத மெய்ஞ்ஞானத்தையுடைய பெருமானே, நின்தன்மையெல்லாம் முழுதும் அளந்தறிதல் நிலைபெற்ற எவ்வுயிர்க்கும் அரிதாகை

யினாலே நின் திருவடியைப் பெற வேண்டுமென்று நினைந்து வந்தேன்" என அவ்இறைவனை நோக்கி நினது வேட்கையினைத் தெரிவிப்பாயாக. நீ அங்ஙனம் தெரிவித்தற்கு முன்னரே முருகனைச் சேவித்து நிற்போராகிய மெய்யடியார்கள், அங்கே பொலிவுடன் வந்து தோன்றி அவ்விறைவனை நோக்கிப் 'பெருமானே, அறிவு முதிர்ந்த வாய்மையுடைய இப்புலவன் நினது பொருள்சேர் புகழுரையினைக் கூற விரும்பிக் கேட்டோர்க்கு இனியனவும் உறுதி பயப்பனவுமாக மிக்க பலவற்றை வாழ்த்தி வந்துள்ளான். இவன் நின்னால் அளிக்கத் தக்கவன்" என நின் பொருட்டுக் குறையிரந்து நிற்பர். அந்நிலையில் இழுமென இழிதரும் அருவி நீரையும் பழம் முதிர்ந்த சோலைகளையும் உடைய மலைக்கு உரியவனாகிய முருகப்பெருமான், தெய்வத்தன்மை யமைந்த பேராற்றல் விளங்கும் வடிவினையும் வானளவோங்கிய வளர்ச்சியையு முடையனாகி அவ்விடத்தே வந்து தோன்றித் தனது பேருருவம் மக்கள் கண்களாற் காண்டற்கரியதாதலின் அப்பெரிய வடிவத்தை உள்ளடக்கிக் கொண்டு தனது பழைய வடிவாகிய இளமைக் கோலத்தினை நினக்குக் காட்டி, "நீ வீடுபெற நினைந்து வந்த வருகையை யான் முன்னரே யறிவேன். அது நினக்கு எய்துதற்கரிதென்று அஞ்சுதலைத் தவிர்க" என்று நின்பால் அன்புடைய நல்ல வார்த்தைகளைப் பலமுறையும் அருளிச் செய்து, கடல் சூழ்ந்த இவ்வுலகிலே நீ ஒருவனுமே பிறர்க்கு வீடளித் தற்கு உரிமையுடையையாய்க் கேடின்றித் தோன்றும்படி பிறரால் பெறுதற்கரிய சிறப்பாகிய வீடு பேற்றின்பத்தை நினக்குத் தந்தருளுவான் என்பது இத்திருமுருகாற்றுப் படையின் திரண்ட பொருளாகும்.

எல்லாப் பொருளினும் சிறந்ததாகிய வீடு பேற்றினை 'விழுமிய பெறலரும் பரிசில்' என நக்கீரனார் இத்திருமுரு காற்றுப் படையிற் சிறப்பித்துள்ளார். விழுமிய பரிசில், பெறலரும் பரிசில் என இயையும். வீடு பேற்றினுஞ் சிறந்தது பிறிதொன்றின்மையின் அதனை விழுமிய பரிசில் என்றும், அவ்வீடுபேறுதானும் இறைவனது திருவருளாற் கிடைக்கப் பெறுவதன்றி உயிர்கள் தாமே தமது முயற்சி யாற் பெறுதற்குரிய எளிமைத் தன்மைத்து அன்றாதலின்

அதனைப் பெறலரும் பரிசில் என்றும் நக்கீரனார் குறித்த திறம் நினைந்து மகிழத் தக்கதாகும்.

கந்தழியைப் பெற்றானொருவன் அதனைப் பெறாதான் ஒருவனுக்குப் பெறுமாறு கூறி அவனை வழிப்படுத்துக் கூறுவானென்பது பற்றி நக்கீரனார் இத்திருமுருகாற்றுப் படையைப் பாடியுள்ளாரென்பர் நச்சினார்க்கினியர். "கந்தழியாவது ஒரு பற்றுமற்று அருவாய்த் தானே நிற்குந் தத்துவங் கடந்த பொருள்; அது,

'சார்பினாற் றோன்றாது தானருவா யெப்பொருட்குஞ்
சார்பெனநின் றெஞ்ஞான்று மின்பந் தகைத்தரோ
வாய்மொழியான் மெய்யான் மனத்தா னறிவிறந்த
தூய்மையதா மைதீர் சுடர்'

என்பதாம் இதனை,

'உற்ற வாக்கையினுறுபொருள் நறுமலரெழுதரு
நாற்றம்போல்
பற்றலாவதோர் நிலையிலாப் பரம்பொருள்'

என அதனை உணர்ந்தோர் கூறிய வாற்றான் உணர்க" என நச்சினார்க்கினியர் கூறிய விளக்கம், இத் திருமுருகாற்றுப்படையும் திருவாசக முதலிய திருமுறைகளும் போற்றும் முழுமுதற் கடவுள் ஒன்றேயென்பதனை இனிது புலப்படுத்துதல் காணலாம்.

இறைவன் திருவடியே உயிர்களுக்கு வீடாயிருக்கும் என்பதனைத் "தென்னன் பெருந்துறையான், காட்டாதன வெல்லாங் காட்டிச் சிவங்காட்டித், தாட்டாமரை காட்டித் தன் கருணைத் தேன் காட்டி" எனவருந் திருவாசகத் தொடரால் திருவாதவூரடிகள் தெளிவாக அறிவுறுத்தியுள்ளார்.[1] இங்ஙனம் இறைவனடி சேர்தலே வீடுபேறாகும் என சைவத்திருமுறையாசிரியர்கள் தாம் பெற்ற திருவருள் அனுபவத்தால் உணர்ந்து கூறிய அடிசேர் முத்தியினையே "சேவடிபடருஞ் செம்மல் உள்ளமொடு நலம்புரிகொள்கைப் புலம் பிரிந்துறையுஞ் செலவு" என வருந் தொடரில் நக்கீரனார் தெளிவாகக் குறிப்பிட்டு உள்ளார்.

1. இறைவனடி சேர்தலொன்றையே சிறந்த வீடு பேறாகப் பண்டைத் தமிழ் மக்கள் கருதி வந்துள்ளார்களென்பது திருக்குறள் கடவுள் வாழ்த்தில் இறைவனடி சேர்தல், தாள்சேர்தல் எனக் குறிக்கப்படும் சொல் வழக்குக்களால் நன்கு தெளியப்படும்.

காமநுகர்ச்சியில்லாத இறைவனுகிய முருகப்பெருமான் குறவர் மகளாகிய வள்ளி நாச்சியாருடன் கூடித் தனக்கோர் அறியாமை தோன்ற நகையமர்ந்து விளையாடுவதனை விளக்குவது,

"ஒருமுகம், குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின்
மடவரல் வள்ளியொடு நகையமர்ந்தன்றே"

எனவரும் திருமுருகாற்றுப்படைத் தொடராகும். முருகப் பெருமான் வள்ளியொடு நகையமர்ந்து கூடியிருத்தலின் குறிப்பு உலகத்துப் பல்லுயிர்களும் ஆணும் பெண்ணுமாய் அன்பினாற்கலந்து இன்புற்று இல்வாழ்க்கை நடத்தற் பொருட்டேயாம் என்பதனைத்,

'தென்பாலுகந்தாடுந் தில்லைச்சிற் றம்பலவன்
பெண்பா லுகந்தான் பெரும்பித்தன் காணேடி
பெண்பா லுகந்திலனேற் பேதா யிருநிலத்தோர்
விண்பா லியோகெய்தி வீடுவர்காண் சாழலோ'

எனவரும் திருவாசகச் செழும்பாடலை எடுத்துக் காட்டி நச்சினுர்க்கினியர் நன்கு விளக்கியுள்ளார்.

ஆதிபகவனுகிய பெருமான் தன் அடியார்கட்கு அருளும் முறையும் அங்ஙனம் அருளவல்ல அவ்விறைவனது இயல்பும் இன்னதன்மையவென யாவராலும் அளந்தறிந்து ஓதுதற்குரிய எல்லையைக் கடந்து நிற்பனவாதலின் அவை பற்றிச் சிற்றறிவினராகிய உயிர்களாற் செய்யப்படும் ஆராய்ச்சி யாதுமில்லை. அங்ஙனமாதலின் கல்வி கேள்விகளால் தகுதியுடைய பெரியோர்கள் பிறவி நிலைக் கோள்களான் வரும் இடையூறுகள் தம்மையடைந்து நலியாதபடி முதல்வனுகிய இறைவன் திருவடியைச்சார்ந்து அப்பெருமான் அடியார்க்கு அருளும் வண்ணமும் அவ் இறைவனது திருவருள் மாண்பும் அவன்பால் கேட்டுணர்தற்குரியர் எனத் திருப்பாசுரப்பதிகத்தில் ஆளுடையபிள்ளையார் அறிவுறுத்தியுள்ளார்.[1] பாச ஞானத்தாலும் பசு ஞானத்தாலும் உணர்தற்கரிய பரம்பொருளைப் பதிஞானமாகிய திருவருள் ஞானமொன்றினுலேயே உணர்ந்து உய்தி பெறுதல் கூடுமென்ற இவ்வுண்மை,

"நின்னளந்தறிதல் மன்னுயிர்க் கருமையின்
நின்னடியுள்ளிவந்தனன் நின்னெடு
புரையுநரில்லாப் புலமையோய்"

1. திருஞான சம்பந்தர் தேவாரம், திருப்பாசுரம் 4-ம் பாடல்

எனவரும் திருமுருகாற்றுப்படையடிகளில் தெளிவாக விளக்கப் பெற்றிருத்தல் காணலாம். எல்லையில் காலமாகப் பல்வகைப் பிறப்புக்களிலும் பிறந்து பிறந்து அல்லற்படும் மன்னுயிரெல்லாம் தன் திருவடிக் கீழடங்க இறைவனாகிய தான் அவற்றைத் தன்னுளொடுக்கி மேற்பட விரிந்து விளங்குவோனாதலின், அவனுடைய பண்பெல்லாம் மன்னுயிர்களால் அளந்தறியப்படுவன அல்லவென்பார் 'நின்னளந்து அறிதல் மன்னுயிர்க்கு அருமையின்' என்றும், இறைவனது அருமையுணர்ந்து உயிர்களாற் செய்யத்தகுவது இறைவனுடைய திருவடியினை வணங்குவதன்றி வேறில்லை யென்பார், 'நின்னடியுள்ளிவந்தனன்' என்றும், ஒரு வாற்றானுந் தனக்கு நிகராவார் பிறரின்றி ஞானத்தால் மேற்படத் திகழும் தனிமுதல்வன் இறைவன் என்பார். 'நின்னொடு புரையுநரில்லாப் புலமையோய்' என்றும் இறைவனதியல்பை விளக்கினார் நக்கீரனார்.

இங்ஙனம் சைவத்திருமுறையாசிரியர் மேற்கொண்டொழுகிய சமயதத்துவங்கள் பல பண்டைச் சங்கப்பனுவலாகிய இத்திருமுருகாற்றுப்படையில் இடம் பெற்றிருத்தலாலும் சேயோனாகிய முருகனும் செம்மேனிப்பேராளனாகிய சிவபெருமானும் முறையே காலையிளங்கதிரவனும் மாலை ஞாயிறும் போன்ற தோற்றத்தையுடையவரென்பதும் பொருளால் ஒருவரேயென்பதும் தமிழகத்தில் நெடுநாட்களாக நிலவிவரும் பழங்கொள்கையாதலாலும் சிவபெருமானைப்பற்றிய அருள்நூல்களின் தொகுதியாகிய பதினொராந் திருமுறையினுள்ளே முருகவேளைப் பரவிய இத் திரு முருகாற்றுப்படையும் இடம்பெறுவதாயிற்று.

இயற்கை வனப்பும் தெய்வ வனப்பும் அமைய நக்கீரனார் பாடிய திருமுருகாற்றுப்படையென்ற செழும் பாடல் நவில்தொறும் இன்பந்தரும் சுவை நயமுடையதாகும். இப்பாட்டின் சுவை நலங்களை நச்சினார்க்கினியர் எழுதிய உரைகொண்டு பயின்று தெளிதல் அறிஞர்க்குப் பெருவிருந்தாகும்.

இத்திரு முருகாற்றுப்படையின் பின் 'குன்றமெறிந்தாய்' என்பது முதலாக 'முருகனே செந்தில் முதல்வனே' என்பதீறாக ஏழுவெண்பாக்கள் உள்ளன. முருகப் பெருமானை முன்னின்றுபோற்றுந் தோத்திரங்களாக

இவை அமைந்துள்ளன. இப்பாடல்கள் பத்துப்பாட்டும் உரையும் சேர்ந்துள்ள பழைய ஏட்டுப் பிரதிகளில் இல்லை. திருமுருகாற்றுப்படை மட்டுமுள்ள பிற்கால ஏட்டுச் சுவடிகளிலும் பதினொராந் திருமுறை அச்சுப் பிரதிகளிலுமே உள்ளன. இவ்வேழு வெண்பாக்களையும் அடுத்துக் 'காக்கக்கடவிய நீ' 'பரங்குன்றில்' 'நக்கீரர் தாமுரைத்த' என்ற முதற்குறிப்புடைய வெண்பாக்கள் மூன்றும் சில ஏடுகளிற் காணப்படுகின்றன. இப்பாடல்கள் மூன்றும் ஆறுமுக நாவலரவர்கள் பதிப்பித்த பதினொராந் திருமுறைப்பதிப்பிலும் திருமயிலை செந்தில்வேலு முதலியாரவர்கள் பதிப்பித்த பதினொராந்திருமுறைப்பதிப்பிலும் இடம்பெறவில்லை. நாடோறும் திருமுருகாற்றுப்படையைப் பாராயணஞ் செய்வோரடையும் பயனை அறிவுறுத்துவனவாகிய இப்பாடல்கள் பிற்காலத்தவராற் பாடப்பெற்றன எனக்கொள்ளுதல் ஏற்புடையதாகும்.

திருக்கண்ணப்பதேவர் திருமறம்

மறம் என்ற சொல்லுக்கு வீரம் என்பது பொருள். தறுகண் மறவரது வீரச்செயலை விளக்கும் புறத்துறைகளுள் மறம் என்பதும் ஒன்று. உயர்ந்த புகழைப் பெற விரும்பிப் பலவகை இன்னல்களுக்கிடையே பகைவர் சேனையைத் தடுத்துநிறுத்தும் போர்ச்செயலில் ஈடுபட்ட வீரனொருவன் பகைவருடைய மாறுபாட்டிற்குப் பொருதவனாகிப் பகைவரது வேல் பாய்ந்தமையால் தன்மார்பின்கண் உண்டாகிய புண்ணைக்கிழித்து இறக்கும் நிலை மறக்காஞ்சி யென்னும் புறத்துறையாகும். காஞ்சித்திணையின் துறையாகிய இதனியல்பினை,

"பண்புற வருஉம் பகுதி நோக்கிப்
புண்கிழித்து முடியும் மறத்தி னனும்."

என்ற தொடரால்[1] தொல்காப்பியனர் இனிது விளக்கியுள்ளார். நன்றாகிய பண்பு உலகில் நிலைபெறுவதற்கேற்ற வழிதுறைகளை யாராய்ந்து அதன் நிலைபேற்றிற்குச் சிறிதும் பயன்படாத தன்னுயிரைப் போக்கிக்கொள்ள முயலும் வீரனது மனத்திண்மை இத்துறையிற் புலப்படுதல் காணலாம். இப்புறத்துறையைப் பொருளாகக்கொண்டு

1. தொல், பொருள், புறத்திணை 16-ம் சூத்திரம்,

பாடப்பட்ட தமிழ்ப் பனுவலும் மறம் என்ற பெயரால் வழங்கப்படும்.[1]

எல்லாப் பொருளினுஞ் சிறந்த சிறப்பென்னுஞ் செப் பொருளைப் பெறுதல் வேண்டி நில்லாத உலகியலில் நேரும் பல்வகைத் துன்பங்களையும் பொறுத்து நிற்குங் குறிக்கோளுடைய திண்ணனாராகிய வேடர் பெருமான் தம்மால் வழிபடப் பெறுந் திருக்காளத்தியிறைவருடைய கண்களில் குருதிநீர் வழிதலைக் கண்டு சிறிதும் பொறாராய் அத்துன்ப நிலையைக் கண்கொண்டு காண்பதைவிடக் கண்ணையிழந்து இறத்தலே நலமென்று எண்ணித் தமது கண்ணைத் தோண்டிக் காளத்தியிறைவனது கண்ணில் அப்பிய பேரன்பின்பாற்பட்ட வீரச்செயல், போர்க்களத்திற் பகைவரது சேனையைத் தடுத்து நின்று போர்புரியும் வீரன் ஒருவன் பகைவர் சேனையைத் தடுத்துநிறுத்தலாற்றா நிலையில் தன் மார்பிற் புண்ணைக் கிழித்துக்கொண்டு உயிர் துறத்தலாகிய வீரச்செயலோடு ஒத்ததாகலின், இதனை மறம் என்னும் புறத்துறையின் பாற்படுத்துதல் ஏற்புடைய தாகும். திருக்கண்ணப்பதேவரது வீரச்செயலைப் போற்றிப் பரவும் நோக்கத்துடன் மறம் என்னுந்துறையமைய நக்கீர தேவர் பாடிய பிரபந்தம் திருக்கண்ணப்பதேவர் திருமறம் என வழங்கப் பெறுவதாயிற்று.

நல்லறங்களைச் செய்வதற்கேயன்றி மறமாகிய வீரச் செயலை மேற்கொள்ளுவதற்கும் அன்பாகிய பண்பே துணை செய்வதென்பது,

'அறத்திற்கே யன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை' (திருக்குறள்-76)

எனவரும் தெய்வப்புலவர் வாய்மொழியாற் புலனும்,

'ஈர அன்பினர் யாதுங் குறைவிலார்
வீரம் என்னால் விளம்புந் தகையதோ'

எனச் சேக்கிழார் நாயனார் திருத்தொண்டர்களின் சிறப்பினை விரித்துரைக்கும் பகுதி, ஈர அன்பே குறையாத வீரத்திற்குங் காரணமாம் என்பதனை நன்கு புலப்படுத்தல் காணலாம்.

1. "மின்னிழை விறலியர் நின்மறம் பாட" (பதிற்றுப்பத்து 54-ம் பாடல்).

தாக்கிக் கொல்லும் புலிகள் உறுமும் மலையிடையமைந்த காடு. அவன் வளர்ப்பது, சிவந்த கண்களையுடைய வேட்டை நாயொடு விலங்குகளைப் பிடிப்பதற்காகப் பழக்கப்பட்ட பார்வை மிருகங்களே. அவன் பயின்ற கல்வியோ வில் வேல் வாள் முதலிய படைக்கலப் பயிற்சி. வேட்டத்தாற் கொன்ற விலங்குகளை யறுத்த தசைத் துண்டங்கள் நிரம்பப் பெற்றுக் குருதி நீர் நிறைந்த குடங்களையும் குருதிக் கறைபடிந்த படைக்கலங்களையும் உடைய தாய்ப் புல்லும் மயிற் பீலியும் வேயப்பெற்ற மேற்கூரை பிரிந்த நிலையிற் காணப்படும் வெளியிடமே அவன் தங்கி யிருக்கும் மனையாகும். புலித்தோலும் வாரும் தனக்குரிய உடையும் கச்சுமாக விளங்க, இரவும் பகலும் நீங்காத முயற்சியோடு வில்லிற் கோத்து எய்யப்படும் அம்பினாலும் திண்ணிய குற்றுடை வாளினாலும் விலங்குகள் பலவற்றை இனத்தொடும் பதை பதைப்பக் கொல்லுதலே அவன் மேற்கொண்ட தொழிலாகும். அவனது வடிவோ, வீர மிக்க புலியாற் கடிக்கப் பெற்ற நிலையில் வடுவடைந்த வலிய முன்கையும் மாற்றார் எய்த படைக்கலங்களாற் போழப்பட்ட நிலையில் வடுப்பெற்று விளங்கும் திண்ணிய மலையனைய மார்பும் கூரிய பற்களையுடைய கரடியைப் பற்றியதால் வடுவடைந்த நெற்றியும் வலிய தந்தத்தை யுடைய பன்றியைப் பற்றிப் படுத்தமையால் வடுப்பட்ட தொடையும் செடிகளின் புதரெனத் திகழும் செங்குஞ்சியும் சிவந்த கண்களும் இடியென வியம்பும் வெஞ்சொற்களைப் பேசும் வாயும், கரு நிறமும் கொல்லும் படைக்கலங்களைத் தாங்கும் பெருவன்மையும் உடையதாய்த் திகழ்வதாகும். அவனது மனமோ வேட்டத்தால் விலங்குகளைக் கொல்லுந் தொழிலில் வேட்கையுடையதாய்த் தன்பால் அகப்பட்ட உயிர்கள்படுந் துன்பத்தைக் கண்டு மகிழும் இயல்பின தாகும். இதுவே அக் கானவர் தலைவனாகிய வேடனது இயல்பு.

தாய்ப் பசுவினிடத்து ஆர்வத்தால் விரைந்து செல்லும் இளங்கன்றினைப் போன்று மலைமகள் பங்கனாகிய சிவபெருமான்பால் விரைந்து சென்று அவ்விறைவனுடைய திருவடிகளை இறைஞ்சிப் பூசனை செய்த பின்பு உண்பதல்லது அவ் வழிபாட்டிற்கு முன்னர் உணவு கொள்ளும் வழக்கத்தினை அறியாதவன் அவ் வேடுவன். தீப்பிழம்பெனக் கடுவெயில்

வீசும் உச்சி வேளையிலே தரையிற் பாதம் படுந்தோறும் தசை தீய்ந்து நாறும் கடுஞ்சுர வழியில் முதிர்ந்து காய்ந்த மரங்கள் நிறைந்த முள் நிரம்பிய சூழலிலே விலங்கினங் களை அவற்றின் இனக் குரலோசையால் எழுப்பி அவற்றைத் தனது வேட்டை நாய் கடித்து இழுக்கும்படி அவற்றின் மேற் கூரிய அம்புகளை எய்து கொல்வான். அங்ஙனம் தன்னாற் கொல்லப்பட்ட விலங்கின் தசையினை அறுத்தெடுத்து விறகினைக் கடைந்து மூட்டிய தீயிலே காய்ச்சி அவற்றுள் நறுமணமும் சுவையுமுடைய இறைச்சி களைத் தான் சுவைத்துப் பார்த்து நல்லனவற்றைக் காளத்தி யிறைவனுக்குரிய திருவமுதாக வேறு வைத்துக் கொள்வான். பின்னர்க் குளிர்ந்த சுனையிலேயுள்ள நீரை இறைவனுக்குரிய திருமஞ்சனமாகத் தன் வாயே கலசமாக முகந்து கொண்டு அருச்சனைக்குரிய நறுமலராகச் செந் நிறப் பூங்கொத்துக்களைத் தன் செந்நிற மயிர் முடியிற் செருகிக் கொண்டு, ஒரு கையில் திருவமுதாகிய இறைச்சி யையும் மற்றொரு கையில் வில்லையும் அம்பையும் ஏந்திக் கடுங்குரலுடைய வேட்டை நாய் தன்னைப் பின் தொடர்ந்து வரத் திருக்காளத்தி யிறைவனை வழிபடுதற் பொருட்டுக் கடும் பகலிலே சென்றனன்.

நாட்காலையிலே காளத்தியிறைவனுக்குப் பூசனைபுரியுங் கடமையுடையவனாகிய மறையோன், திருப் பரிவட்டத்தை யணிந்து திருமஞ்சனமாட்டி நறுமலர், நறும்புகை, விளக்கு, திருவமுது எனச் சிவாகம நூல்களிற் சொல்லிய முறையிற் சிறிதும் குறையாதவாறு கொண்டு திருமேனி யிற் பொருந்த அணிந்த மலர்மாலையும் மேலே தூக்கிக் கட்டிய நறுமலர்த் தொடையும் அமைய அணிசெய்து அருச்சித்து இறைவன் திருமுன்னர்ச் சிறப்பொடு தெரி வித்தற்குரிய கையடையாளங்களாகிய முத்திரைகளைத் திருத்தமுறக் காட்டிச் சிவமந்திரங்களையோதி இறை வனைத் தியானித்து வலம் வந்து வழிபட்டுச் சென்றனன். அவன் சென்ற பின்னர் ஒரு கையில் ஊனமுதமும் மற்றொரு கையில் வில்லும் அம்பும் கொண்டு அங்கு வந்த வேடுவன் சிவலிங்கப்பெருமான் முடிமீது அணியப் பெற்றிருந்த மாலை முதலியவற்றைச் செருப்பணிந்த காலினல் நீக்கித் தன் வாயிற் கொணர்ந்த நீரைத் திருமஞ்சனமாக ஆட்டினன். தனது தலைமுடியிற் செருகிய பூங்கொத்துக்களை இறைவன்

வீசும் உச்சி வேளையிலே தரையிற் பாதம் படுந்தொறும் தசை தீய்ந்து நாறும் கடுஞ்சுர வழியில் முதிர்ந்து காய்ந்த மரங்கள் நிறைந்த முள் நிரம்பிய சூழலிலே விலங்கினங் களை அவற்றின் இனக் குரலோசையால் எழுப்பி அவற்றைத் தனது வேட்டை நாய் கடித்து இழுக்கும்படி அவற்றின் மேற் கூரியஅம்புகளை எய்து கொல்வான். அங்ஙனம் தன்னுற் கொல்லப்பட்ட விலங்கின் தசையினை அறுத்தெடுத்து விறகினைக் கடைந்து மூட்டிய தீயிலே காய்ச்சி அவற்றுள் நறுமணமும் சுவையுமுடைய இறைச்சி களைத் தான் சுவைத்துப் பார்த்து நல்லனவற்றைக் காளத்தி யிறைவனுக்குரிய திருவமுதாக வேறு வைத்துக் கொள்வான். பின்னர்க் குளிர்ந்த சுனையிலேயுள்ள நீரை இறைவனுக்குரிய திருமஞ்சனமாகத் தன் வாயே கலசமாக முகந்து கொண்டு அருச்சனைக்குரிய நறுமலராகச் செந் நிறப் பூங்கொத்துக்களைத் தன் செந்நிற மயிர் முடியிற் செருகிக் கொண்டு, ஒரு கையில் திருவமுதாகிய இறைச்சி யையும் மற்றொரு கையில் வில்லையும் அம்பையும் ஏந்திக் கடுங்குரலுடைய வேட்டை நாய் தன்னைப் பின் தொடர்ந்து வரத் திருக்காளத்தி யிறைவனை வழிபடுதற் பொருட்டுக் கடும் பகலிலே சென்றனன்.

நாட்காலையிலே காளத்தியிறைவனுக்குப் பூசனைபுரியுங் கடமையுடையவனுகிய மறையோன், திருப் பரிவட்டத்தை யணிந்து திருமஞ்சனமாட்டி நறுமலர், நறும்புகை, விளக்கு, திருவமுது எனச் சிவாகம நூல்களிற் சொல்லிய முறையிற் சிறிதும் குறையாதவாறு கொண்டு திருமேனி யிற் பொருந்த அணிந்த மலர்மாலையும் மேலே தூக்கிக் கட்டிய நறுமலர்த் தொடையும் அமைய அணிசெய்து அருச்சித்து இறைவன் திருமுன்னர்ச் சிறப்பொடு தெரி வித்தற்குரிய கையடையாளங்களாகிய முத்திரைகளைத் திருத்தமுறக் காட்டிச் சிவமந்திரங்களையோதி இறை வனைத் தியானித்து வலம் வந்து வழிபட்டுச் சென்றனன். அவன் சென்ற பின்னர் ஒரு கையில் ஊனமுதமும் மற்றொரு கையில் வில்லும் அம்பும் கொண்டு அங்கு வந்த வேடுவன் சிவலிங்கப்பெருமான் முடிமீது அணியப் பெற்றிருந்த மாலை முதலியவற்றைச் செருப்பணிந்த காலினுல் நீக்கித் தன் வாயிற் கொணர்ந்த நீரைத் திருமஞ்சனமாக ஆட்டினுன். தனது தலைமுடியிற் செருகிய பூங்கொத்துக்களை இறைவன்

முடிமீது சொரிந்து இறைச்சியினைத் திருவமுதாகப் படைத்தான். காளத்தியிறைவனைக் கண்டு கண்டு உளங்கசிந்து காதலாற் கூத்தாடினான். இறைவன் திருவடிகளை அன்பினால் இறுகப் பற்றிப் பணிந்து பிரிதற்கியலாத பேரன்பினன் ஆனான்.

அவன் அம்மலையைவிட்டு வேட்டைமேற் சென்ற பின்னர் மறுநாள் வைகறைப் பொழுதிலே நீராடிக் காளத்தியிறைவனை அன்பினால் வழிபடுங் கடமையுடைய அந்தணன், வந்து பார்த்து நேற்றுத் தான் இறைவனுக்குச் செய்த பூசனை சிதைந்த நிலையினைக் கண்டு, 'யான் பூசனை செய்த பின்னரும் ஆகம நெறிக்கு முரணாக மறித்தும் இவ்வாறு பூசை செய்தார் யாவர்'' என ஐயுற்று அதன் உண்மையைக் கண்டு தெளிதல் வேண்டி அவ்விடத்தே மறைந்திருந்தான். அந்நிலையில் வேடனொருவன் வருதலைக் கண்டு நடுங்கி அவன் வாய் நீராட்டி ஊனமுது படைத்து வழிபட்டதனைக் கண்டு மனம் பொருது வருந்தித் தன் குடிலை அடைந்தான். மறுநாள் விடியற்காலையிலே நீராடி இறைவனைப் பூசித்தற்பொருட்டுக் காளத்திமலையை யடைந்த அந்தணன், முன்னை நாளிற் போன்று வேடனாற் படைக்கப்பட்டிருந்த ஊன் முதலியவற்றை விலக்கித் தூய்மை செய்து நன்னீராட்டிக் காளத்தியிறைவனுக்குப் பூசனை செய்து, 'இறைவா, இந்நிலை உனக்கு அழகாகுமா? நாள்தோறும் நான் செய்யும் பூசனையை இவ்விடத்தே யுள்ள வேடுவனொருவன் நாயொடும் புகுந்து மிதித்துத் தனது செருப்புக்காலால் நின்முடிமீதணிந்த மலர்களைத் தள்ளித் தன் வாய்நீரை நின்மேல் உமிழ்ந்து தலையிற் கொணர்ந்த சருகிலையை உதிர்த்து இவ்வண்ணமாக நின் திருக்கோயிலில் அநுசிதமாகிய இறைச்சியையும் இட்டுச் செல்கின்றானே. இச்செயல் இறைவனாகிய நினக்கு என்றும் இனியதுதானா? அவ்வேடன் என்னைக் காணிற் கொன்று விடுவான். அருவருக்கத்தக்க இச்செயலை யாவரும் தடுத்து விலக்குதற்கியலாத நிலையில் முரண்பட்ட குணத்தனாக அவன் உள்ளான்'' எனத் திருக்காளத்தியிறைவனை நோக்கி முறையிட்டுவிட்டுத் தனது இருப்பிடத்தை அடைந்தான்.

காளத்தியப்பனாகிய இறைவன், தன்னை விரும்பி வழிபடும் அந்தணனது கனவிலே பிறைதிகழ் சடையும் நீல

கண்டமும் மான்மழுவேந்திய கைகளும் நெற்றியிற் கண்ணும் நீறணிந்த திருமேனியும் ஒற்றைவெள்விடையும் உமையொருபாகமும் உடையவனாகத் தோன்றியருளினான். "என்பால் பேரன்புடன் பூசனை புரியும் வில்வேடனுடைய குணங்கள் இவையெனக் கேட்பாயாக. அவன் என்பால் அன்புரிமையிற் சிறந்த பெருந்தவ முனிவன் என்பதை நன்குணர்க. அவன் விரும்பியுறையும் இடமெதுவோ அதுவே தவமுனிவர் வாழும் தவவனமாகும். செருப்பணிந்த அவனது அடியே யான் விரும்பியணியும் நறுமலர். அவனது வாயே பொன்னுலாகிய அழகிய திருமஞ்சனக் குடமாகும். அவ்வாயினுள்ளே தங்கிய நீர் கங்கையாற்றின் நீரெனத் தூய்மையுடையதாகும். அவன் வாயிலுள்ள பற்கள் திருமஞ்சன நீர்க்குடத்துள் மந்திரம் ஓதி இடுதற்குரிய நனமணிகளாம். அவ்வாயினகத்து விளங்கும் நாவானது திருமஞ்சன நீரில் இடுதற்குரிய நறுமலராம். அவன் தனது வாய் நீரை என் மேனியில் உமிழுங்கால் அந்நீரொடு தோய்ந்து விளங்கும் அவன் முகத்து மீசையாகிய புன்மயிர் மந்திரவிதிப்படி அமைந்த தருப்பையைக் காட்டிலும் நம் முடிக்கு மிகவும் இனிமையுடையதாகும். அவன் தலைமுடியிற் கொணர்ந்த சருகிலை தருப்பையினுற் பொதிந்து கொணரப்பட்ட கற்பக மலரேயாம். அவன் எனக்கு அன்பினுற் படைத்த பன்றி முதலிய விலங்குகளின் இறைச்சி பெருந்தவ முனிவர்கள் எனக்குப் படைத்த நெய்யும் பாலுமாகிய தூயதிருவமுதின் இயல்பினதாம். வேடனாகிய அவனது செயலைக்குறித்து யான் கொண்ட கருத்து இதுவே. அவனது அன்பின் திறத்தை உனக்குத் தெளிவாகக் காட்டுவேன். நாளை நீ முறைப்படி பூசனையைச் செய்து முடித்தபின் அங்கேயே ஓரிடத்தில் மறைந்திருப்பாயாக" எனக் காளத்தியிறைவன் அந்தணனுக்கு அறிவுறுத்தி மறைந்தருளினான்.

துயிலுணர்ந்தெழுந்த அந்தணன், மனத்திற் கூச்சம் அடைந்து வைகறைப் பொழுதிலே நன்னீரிற் குளித்துக் காளத்திமலையை யடைந்து தான் நாள்தோறும் செய்து வருவதாகிய பூசனையை அமைதியாகச் செய்துமுடித்து ஒருவர்க்கும் தோன்ருதபடி அங்கு ஒரு பக்கத்தே மறைந்திருந்தான். ஞாயிறு உச்சியையடைந்த நண்பகலிலே கானவர் தலைவனாகிய வேட்டுவன், தான் வேட்டையில்

அகப்படுத்திக்கொண்ட உடும்பொடு வில்லும் அம்பும் உடையனுய்ச் செருப்பணிந்து தன்னைத் தொடர்ந்துவரும் நாயொடும் காளத்தியிறைவனை வழிபடச் சென்றபொழுது, இறைவன் சிவலிங்கத்திருமேனியிலுள்ள மூன்றுகண்களில் (வலப்பக்கத்ததாகிய) ஒருகண்ணிலே குருதிநீரொழுக இருந்தனன். அதனைக்கண்ட வேடன், உடல் நடுக்கம் உற்றுப் பதைபதைத்து மனஞ்சுழன்று தன்வாயிற் கொணர்ந்த திருமஞ்சனநீர் சிந்தத் திருவமுதாகிய ஊனுடன் வில்லும் அம்பும் கைகளிலிருந்து நழுவிச்சிதற நிலத்தின்மீது செயலற்று விழுந்தான். சிறிது நேரத்திற்குப்பின் தெளிவுற்றெழுந்தான். 'எம்பெருமானுகிய இறைவனுக்கு இத்தீங்கிழைத்தவர் இம்மலையைச்சார்ந்த காட்டகத்து இருத்தல் கூடுமோ' என ஐயுற்று எல்லாப் பக்கமும் அலைந்து தேடினுன். ஒருவரையுங் காணவில்லை. பின்பு ஒருவாறு தேறி இறைவன் கண்ணில் இடைவிடாது ஒழுகும் குருதியை நிறுத்தத்தக்க பலவகை நன் மருந்துகளைத் தேடிக்கொணர்ந்து பிழிந்து பார்த்தான். அம் மருந்துகளாற் சிறிதும் பயனின்மைகண்டு மனம் தளர்ந்து 'என் அத்தனுகிய இறைவனுக்கு அடுத்த நோய் ஏதுவோ' என உளங்கனன்று கதறினுன். 'இத்துன்பத்தினைக்காணுமளவுக்குப் பொறேன். இதனைக் காணுதற்கு உரிய தீவினையுடைய எனது கண்ணைத் தோண்டியெடுத்துக் கடவுளது கண்ணிலுள்ள புண்ணில் அப்பியும் பார்ப்பேன்' எனத்துணிந்து அம்பினுல் தன் கண்களில் ஒன்றைத் தோண்டியெடுத்து இறைவனது குருதிபடிந்த கண்ணில் அப்பினுன். அவ்வளவில் குருதிநீர் வழிதல் நின்றமையால் நன்ருயிற்று. இறைவனது மற்ருெரு கண்ணிலும் இங்ஙனம் குருதிநீரொழுகக்கண்ட வேட்டுவன் தக்கநன்மருந்து கண்டமைக்குத் தான் பெரிதும் உளமகிழ்ந்து மற்றைக் கண்ணையும் தோண்டி இறைவனது கண்ணில் அப்பக்கருதி அம்பினுல் தோண்டப்புக்கான். அந்நிலையில் காளத்தியப்பனுகிய சிவபெருமான், "நில்லுகண்ணப்ப, நில்லுகண்ணப்ப என் அன்புடைத் தோன்றல் நில்லுகண்ணப்ப" என்ற இன்மொழியோடு சிவலிங்கத்தினிடமாகத் தோன்றிய தனது மலர்போலும் திருக்கரத்தால் வேடர் தலைவனது கையினை அம்புடன்சேரப் பிடித்துத் தடுத்தருளினுன். வானவர் மலர்மழை பொழிந்தனர் சங்கு, படகம், துந்துபி முதலிய மங்கள வாத்தியங்கள் இயம்பின. சிறப்புடைய

தவமுனிவர்களும் கானவர் தலைவனாகிய கண்ணப்பனது பேரன்பின் திறத்தை இன்னிசையால் ஏத்திமகிழ்ந்தனர். திருக்கண்ணப்பனாகிய அத்தோன்றல் இறைவனோடு பிரிவறக்கலத்தலாகிய சிவகதியைப்பெற்று ஈறிலாப் பேரின்ப வாழ்வினை யெய்தினன்."

என்பது திருக்கண்ணப்ப தேவர் திருமறமென்னும் இப்பனுவலில் விரித்துரைக்கப்பெற்ற செய்தியாகும். 'கலை மலிந்த சீர்நம்பி கண்ணப்பர்' என நம்பியாரூரராற் போற்றப்பெற்ற கண்ணப்ப நாயனாரைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புக்கள் தேவாரத் திருப்பதிகங்களிலும் திருவாசகத்தும் ஓரளவு சுருக்கமாகக் குறிப்பிடப்பெற்று உள்ளன. கண்ணப்பரது வரலாற்றை முதன்முதலாக விரித்துக்கூறிய பெருமை இத்திருமறமென்னும் பனுவலை இயற்றிய நக்கீரதேவர்க்கே யுரியதாகும். இவராற் பாடப் பெற்ற இத் திருமறம் கண்ணப்பரது வரலாற்றைச் சேக்கிழார் பெருமான் பெரிய புராணத்தில் விரித்துக்கூறுவ தற்குப் பெரிதும் ஆதரவாயமைந்ததென்பது பெரிய புராணத்திற் கண்ணப்பநாயனார் புராணத்தையும் இத் திருமறத்தையும் ஒப்புநோக்கி ஆராய்வார்க்கு இனிது விளங்கும்.

6. கல்லாட தேவ நாயனார்

பதினோராந் திருமுறையாசிரியர்களுள் கல்லாட தேவ நாயனாரும் ஒருவர். இவர் பாடிய பிரபந்தம் திருக்கண்ணப்ப தேவர் திருமறம் என்பது. இந்நூல் பதினோராந் திரு முறையிற் பத்தொன்பதாவது பிரபந்தமாகத் தொகுக்கப் பெற்றுளது நக்கீரதேவ நாயனார் பாடிய திருக்கண்ணப்ப தேவர் திருமறத்தை யடுத்து அதே பெயருடையதாய்த் திகழும் இந்நூல் முறைப்படுத்தப் பெற்றிருத்தலை யுற்று நோக்குங்கால், இப்பனுவலைப் பாடிய கல்லாட தேவரென் பார் நக்கீர தேவர் காலத்திலோ அன்றிச் சிறிது பிற்பட்ட காலத்திலோ வாழ்ந்தவராதல் வேண்டுமென்பது நன்கு பெறப்படும். எனவே இவ்வாசிரியர் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவரெனக் கொள்ளுதல் பெரிதும் பொருத்தமுடையதாகும்.

கல்லாடர் என்னும் பெயர் கடைச் சங்கப் புலவரொரு வரையும் பிற்காலப் புலவர் சிலரையும் குறித்து வழங்கக்

காண்கின்றோம். கடைச்சங்கப் புலவரு ளொருவராகிய கல்லாடனார், பாண்டியன் தலையாலங் கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியனைப் பாடியவர். பொறையாற்றுக் கிழான், அம்பர் கிழான் அருவந்தை என்னும் சோழ நாட்டு வள்ளல்களால் ஆதரிக்கப் பெற்றவர். இவர் பாடியனவாகச் சங்கத் தொகை நூல்களில் பதினான்கு பாடல்கள் உள்ளன. இவர் வாழ்ந்தது கி. பி. இரண்டாம் நூற்றாண் டிற்கு முற்பட்ட காலப் பகுதியாகும். பதினொராந் திரு முறையாசிரியராகிய கல்லாட தேவரும் கல்லாடம் என்னும் அகப்பொருட் பாடற் கோவையைப் பாடிய கல்லாடரும் தொல்காப்பியச் சொல்லதிகாரவுரையாசிரியர்களு ளொரு வராகிய கல்லாடர் என்பவரும் கடைச்சங்கப் புலவராகிய கல்லாடனாரது பெயரைப் புனைந்து வாழ்ந்த பிற்காலப் புலவர்களாவர். தமிழிலக்கியத் துறையிற் கல்லாடர் என்னும் பெயருடன் பேசப்படுவோர் இங்கு எடுத்துக் காட்டிய இந்நால்வருமேயாவர். கடைச்சங்கப் புலவராகிய கல்லாடனாரது மொழிநடைக்கும் அவரது பெயர் தாங்கிய ஏனை மூவரது மொழிநடைக்கும் வேற்றுமை பெரிதாகலின் சங்கப் புலவராகிய கல்லாடனார் ஏனைக் கல்லாடர் மூவர்க்கும் நெடுங்காலம் முற்பட்டவர் என்பது எல்லார்க்கும் ஒப்பமுடிந்த கொள்கையாகும். இனி, பிற்காலத்தினராகப் பேசப்படும் கல்லாடர் மூவரும் ஒரு வரோ இருவரோ அன்றி வெவ்வேறு புலவரோ என்னும் ஐயமும் அறிஞர்களிடையே நிலவக் காண்கின்றோம். கல்லாட தேவ நாயனார் பாடியதாகப் பதினொராந் திரு முறையில் தொகுக்கப் பெற்றுள்ள திருக்கண்ணப்ப தேவர் திருமறம் என்ற பிரபந்தத்தையும் கல்லாடர் பாடிய கல்லாடம் என்ற நூலையும் ஒப்பு நோக்குங்கால் அவ்விரு நூல்களும் மொழிநடையிற் சிறிது வேறுபட்டிருத்தல் புலனாகும். அன்றியும் பதினொராந் திருமுறையாசிரியர்களு ளொருவராகிய கல்லாட தேவ நாயனாரும் கல்லாட நூலின் ஆசிரியராகிய கல்லாடரும் ஒருவரென்பது உண்மையா யிருக்குமானல் பதினொராந் திருமுறையில் திருக் கண்ணப்ப தேவர் திருமறத்தையடுத்துக் கல்லாடத்தி லுள்ள செய்யுட்களும் சேர்க்கப் பெற்றிருக்கும். திருவாதவூரடிகள் அருளிய திருச்சிற்றம்பலக் கோவையை யடியொற்றி அறிவனூற் பொருளாகிய சிவசமயச் செய்தி

களும் உலக நூல் வழக்காகிய அகப்பொருளொழுகலாறும் ஒருங்கமைந்து விளங்கும் கல்லாடச் செய்யுட்கள் சைவத் திருமுறையிற் சேர்த்து ஓதியுணரத்தக்க சிறப்புடையன என்பதை மறுத்தற்கில்லை. இறைவனது அருட் புகழை விரித்துரைக்கு மியல்பினவாகிய கல்லாடச் செய்யுட்களை முன்னோர் பதினோராந் திருமுறையிற் கல்லாட தேவ நாயனார் பிரபந்தத்துடன் தொகுக்காது விட்டதனை நுணுகி நோக்குமிடத்துக் கல்லாட தேவ நாயனாரும் கல்லாட நூலாசிரியரும் ஒருவரல்லரென்பதும், கல்லாட தேவ நாயனார்க்குக் காலத்தாற் பிற்பட்டவர் கல்லாட நூலாசிரியரென்பதும் நன்கு புலனாம். தொல்காப்பியத்திற்கு முதன் முதல் உரைகண்ட உரையாசிரியர் இளம்பூரண அடிகளே யென்பது எல்லோர்க்கும் ஒப்பமுடிந்த கொள்கையாகும். அங்ஙனமாதலின் தொல்காப்பியச் சொல்லதிகாரத்துக்கு உரையெழுதிய கல்லாடரென்பார் இளம் பூரணர்க்குக் காலத்தாற் பிற்பட்டவரென்பது நன்கு துணியப்படும். பதினோரந் திருமுறையிற் கல்லாட தேவ நாயனார்க்குப் பின் குறிக்கப்படும் கபிலதேவ நாயனார் பாடல்களைத் தொல்காப்பியப் பொருளதிகாரவுரையில் இளம் பூரணர் மேற்கோளாகக் காட்டுதலால், கபில தேவ நாயனாரும் அவர்க்கு முன்னே குறிக்கப்பட்ட கல்லாட தேவ நாயனாரும் இளம் பூரண அடிகளுக்குக் காலத்தால் முற் பட்டவராதல் வேண்டும். எனவே இளம் பூரணர்க்குக் காலத்தால் முற்பட்ட கல்லாட தேவ நாயனாரும் அவ்வுரை யாசிரியர்க்குப்பின் சொல்லதிகாரத்திற்கு உரை வரைந்த கல்லாடரும் ஒருவரல்லர் என்பது நன்கு துணியப்படும்.

கல்லாடம் என்பது தமிழகத்திலுள்ளதோர் ஊர். சிவ பெருமான் கோயில் கொண்டருளுஞ் சிறப்புடைய திருத்தலங்களுள் கல்லாடம் என்னும் பெயருடைய திருத்தலமுமொன்றென்பது,

> "கல்லாடத்துக் கலந்தினி தருளி
> நல்லாளோடு நயப்புற வெய்தியும்" (கீர்த்தித்திரு அகவல்)

எனவரும் திருவாசகத் தொடரால் இனிது விளங்கும். செங்கற்பட்டு சில்லா பொன்னேரி தாலுகாவைச் சேர்ந்த மீஞ்சூர் என்னும் ஊரிலுள்ள சோழகுல சுந்தரவிண்ணகர் எனும் பழம் பெயருடைய வரதராசப்பெருமாள் கோயிலில் வரையப்பட்ட கல்வெட்டு ஒன்றில் 'கல்லாடைச்

சுரமுடையார் கோயில்' குறிப்பிடப்பட்டுள்ளது. கல்லாடீச்சுரம் என்ற பெயருடைய இத்திருக்கோயில் இப்பொழுது எவ்விடத்துள்ளதெனத் தெரிந்துகொள்ளுதற்கியலவில்லை. கல்லாடீச்சுரம் என்பது ஆதித்தேச்சுரம் இராசராசேச்சுரம் மெய்கண்டீச்சுரம் என்பவற்றைப்போன்று அமைந்த பெயராகும். இராசராசன் கட்டிய திருக்கோயில் இராசராசேச்சுரம் எனப்பெயரெய்தியது போன்று கல்லாடர் என்ற பெரியவர் அமைத்ததிருக்கோயில் கல்லாடீச்சுரம் எனப் பெயரெய்தியதெனக் கருதவேண்டியிருத்தலால், மீஞ்சூர் வரதராசப்பெருமாள் கோயிற் கல்வெட்டிற் குறிக்கப்பட்ட கல்லாடீச்சுரம் என்ற திருக்கோயிலமைந்த இடத்தைத் திருவாசகத்திற் கூறப்பட்ட கல்லாடம் என்ற திருப்பதியென உறுதியாகக் கூறுதற்கிடமில்லை. முற்காலத்தில் கல்லாடம் என்ற ஊரில் வாழ்ந்திருந்தமை பற்றிக் கல்லாடனார் என வழங்கிய பெயர் பிற்காலத்தில் பலர்க்கும் இட்டு வழங்குதற்குரிய பெயராயிற்றெனவும், கல்லாடம் என்ற திருப்பதியிற் கோயில்கொண்டு விளங்குதல் கருதிக் கல்லாடர் என அவ்வூர் இறைவனுக்கு வழங்கிய பெயர் பின்னர் மக்களுக்கு இட்டு வழங்குதற்குரிய பெயராயிற்றெனவும் இருவகையாகக்கொள்ளுதல் பொருந்தும்.

கல்லாட தேவநாயனார் பாடிய திருக்கண்ணப்பதேவர் திருமறம் என்பது முப்பத்தெட்டடிகளாலியன்ற ஆசிரியப் பாவாக அமைந்துளது. கண்ணப்பநாயனாரது அன்பின் வழிப்பட்ட வீரச்செயலையுணர்த்துவதாகலின் இது திருக்கண்ணப்ப தேவர் திருமறம் என்னும் பெயர்த்தாயிற்று. பரிவின் தன்மை யுருவுகொண்டனைய திண்ணனார், விலங்கினங்களை வேட்டையாடச் சென்றபொழுது, சிவபெருமானது திருவுருவாகிய சிவலிங்கத்திருமேனியைக் கண்டு உளமுருகி வாய்க்கலசத்தால் மஞ்சன நீராட்டி ஊனமுதருத்தி வழிபட்டார். அங்ஙனம் வழிபட்டுவரும் நாட்களில் ஒருநாள் இறைவன் அவ்வேடரது அன்பின் திறத்தைச் சிவகோசரியாரென்னும் மறையவர்க்குப் புலப்படுத்தத் திருவுளங்கொண்டு தம் வலக்கண்ணிற் குருதிநீர் வழியச் செய்தமையும், அதுகண்டு நடுக்கமுற்ற திண்ணனார் இறைவன்பால் வைத்த நீங்காத பேரன்பினால் அழுதரற்றித் தம் கையிலுள்ள அம்பினால் தமது கண்ணொன்றைத்

தோண்டியெடுத்து இறைவனது கண்ணில் அப்பிய செய்தியும், அந்நிலையில் இறைவனது கண் நலம்பெற மற்ருரு கண்ணிலும் குருதி நீரொழுகக் கண்ட திண்ணனுர் தமது மற்ருெரு கண்ணையும் தோண்டத் தொடங்கியபொழுது சிவபெருமான் தன்னுடைய திருக்கையினுல் திண்ணனுருடைய இருகைகளையும் சேரப்பிடித்துக்கொண்டு "நம் கண்ணின் புண் விரைவில் நீங்கி நலம் பெற்றதனைக் காண்பாயாக. நீ மிகவும் நல்லை" எனப் பாராட்டித் திருவருள் புரிந்தமையும் ஆகிய வரலாற்றுச் செய்திகள் இத்திருமறம் என்னும் பிரபந்தத்தில் சுருக்கமாகவும் சுவை பொருந்தவும் விரித்துரைக்கப்பட்டன. அன்பின் வடிவாகிய கண்ணப்பரென்னும் திருவேட்டுவரது திருவடியைக் கைதொழுத அளவில் கரையின்றி மேன்மேலுளவாம் பிறவிப்பிணிக்குக்காரணமாகிய வினைத்தொடர்பு அறவே கெட்டுப்போம் என்ற உண்மையை இப்பிரபந்தத்தின் முடிந்த பொருளாகக் கல்லாட தேவர் நன்கு அறிவுறுத்தி உள்ளமை கண்ணப்பநாயனுர்பால் அவர் கொண்ட பேரன்பினை இனிது விளக்குவதாகும்.

திண்ணனுர், காளத்தி மலைமீதமர்ந்த சிவலிங்கப் பெருமானைக்கண்டு வழிபட்டுத் தமது கண்ணைத்தோண்டி அப்பிக்கண்ணப்பராயினுர் என்பதேவரலாறு கல்லாடதேவ நாயனுராகிய இவ்வாசிரியர், திண்ணனுர் கானப் பேருறை கண்ணுதலை வழிபட்டாரென இப்பிரபந்தத்திற் குறிப்பிட்டு உள்ளார் கானப்பேர் என்பது இக்காலத்திற் காளையார் கோயில் என வழங்கும் பாண்டிநாட்டுத் திருத்தலமாகும். இத்தலத்திற்கும் கண்ணப்பர் வரலாற்றிற்கும் யாதொரு தொடர்புமில்லை. அங்ஙனமாகவும் கண்ணப்பரது வழிபாட்டினையேற்றுக்கொண்ட சிவபெருமானைக் குறிக்குமிடத்துக் கானப்பேருறைகண்ணுதல் என இவ்வாசிரியர் கூறியுள்ளார். கண்ணப்பர்க்கு அருள்செய்த காளத்திப் பெருமான் பாண்டி நாட்டின் கண்ணதாகிய கானப்பேர் என்ற திருத்தலத்திலும் தன்னடியார்களுக்கு அருள் சுரக்கும் திருக்குறிப்புடன் எழுந்தருளியுள்ளான் எனக் கூறும் வாயிலாகத் தாம் கானப்பேர் என்ற தலத்திற் கொண்டுள்ள பேரீடுபாட்டினைப் புலப்படுத்தி மகிழ்தல் இவ்வாசிரியரது நோக்கமெனத் தெரிகிறது. எனவே கல்லாடதேவ நாயனுராகிய இவ்வாசிரியர் பாண்டிநாட்டில்

வாழ்ந்தவரென்றும் அந்நாட்டுத் திருத்தலங்களுள் ஒன்றாகிய கானப்பேரென்னும் திருப்பதியிலே அளவிலாப்பற்றுடையவரென்றும் கருதுதல் பொருத்த முடையதாகும்.

7. கபில தேவ நாயனார்

இவர் பாடிய நூல்கள் மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலை, சிவபெருமான் திருவிரட்டை மணிமாலை, சிவ பெருமான் திருவந்தாதி என்பன. இம்மூன்று பிரபந்தங் களும் பதினொராந் திருமுறையில் முறையே 20, 21,22-ஆம் பிரபந்தங்களாகச் சேர்க்கப் பெற்றுள்ளன.

இவற்றுள் மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலை யென்பது, அன்பினால் வழிபடும் அடியார்களது இடர் தீர்த்தருள் புரிதல் வேண்டிச் சிவபெருமானால் தோற்று விக்கப்பெற்ற யானைமுகப் பெருமானாகிய மூத்த பிள்ளை யாரைப் போற்றிப் பரவும் பனுவலாகும். மூத்த நாயனா ரென்பது மூத்த பிள்ளையாராகிய விநாயகர்க்குரிய பெய ராகும்.[1] வெண்பாவும் கட்டளைக் கலித்துறையும் அடுத் தடுத்துத் தொடுத்துவர இருபது செய்யுட்களால் அந் தாதித் தொடையாக அமைந்த இப்பிரபந்தம், இருவகை மணிகளாற் நோக்கப்பெற்ற மாலை போன்று விளங்குவ தாதலின் இரட்டை மணிமாலை யென்னும் பெயர்த்தாயிற்று.

யானைமுகக் கடவுளாகிய விநாயகப் பெருமான் தன்னை அன்பினால் வழிபடு மியல்புடைய மெய்யடியார்களுக்கு இவ்வுலகில் வேண்டும் செல்வங்களை மேன்மேல் உள வாகச் செய்தும் அவர்கள் தொடங்கிய நற்செயல்களை இடையூறின்றி இனிது நிறைவேற்றியும் நலம் பெருகிய சொல்வன்மையும் பெருமைக்குரிய நற்பண்புகளும் பெருகச் செய்தும் அழகுபெற வாழ்விக்க வல்ல அருளாளனாகத் திகழ்வோனாதலின் அப்பெருமானை வானுலகத்தவராகிய தேவர்களும் காதலாற் கைகுவித்து வணங்குவர் என் பதனை,

1. நாயனார் என்ற சொல் வழிபடத்தக்க இறைவன் என்ற பொருளில் வழங்குவதாகும் "சிராப்பள்ளி மேவிய நாயனாரென நம் வினை நாசமே" (திருநாவுக்கரசர் தேவாரம்) என வருதல் காண்க.

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் உருவாக்கும்
ஆதலால் வானேரும் ஆனை முகத்தானைக்
காதலாற் கூப்புவர்தங் கை.

என இவ்விரட்டை மணிமாலையின் முதற் பாடலில் ஆசிரியர் அறிவுறுத்துகின்ருர்

விநாயகப் பெருமானை வாயாரப் போற்றி உளங் குளிர்ந்து வழிபடும் அடியார்கள் சிந்தையின் நிறைவாகிய செல்வத்தைப் பெற்றவர்களாதலின் அவர்கள்பால் செல்வத்திற்குத் தெய்வமாகிய திருமகள் விரும்பி யுறைவாள் எனவும் அங்ஙனம் வழிபடாதார் மனத்தில் திருமகள் கணப்பொழுதும் தங்கியிருக்க மாட்டாளெனவும் அறிவுறுத்துவது,

நல்லார் பழிப்பி லெழிற்செம் பவளத்தை நாணநின்ற
பொல்லா முகத்தெங்கள் போதகமேபுர மூன்றெரித்த
வில்லா னளித்த விநாயக னேயென்று மெய்ம்மகிழ
வல்லார் மனத்தன்றி மாட்டா ளிருக்க மலர்த்திருவே.

எனவரும் இப்பிரபந்தத்தின் இறுதிச் செய்யுளாகும். இவ்வாறே இத்திருவிரட்டை மணிமாலையிலுள்ள செய்யுட்கள் யாவும் விநாயகப் பெருமானை வழிபடுதலா லுளவாம் பெரும்பயன்களை விரித்துரைப்பனவாக அமைந்துள்ளன.

பத்துப் பாட்டும் எட்டுத் தொகையுமாகிய பழைய சங்க நூல்களிற் சிவபெருமானுக்குரிய மகனுராகப் போற்றப்பெறுந் தெய்வம் குறிஞ்சி நிலக் கடவுளாகிய முருகப் பெருமானேயாவர். யானைமுகப் பெருமானுகிய விநாயகரது வழிபாடு சங்க நூல்களிற் கூறப்படவில்லை. விநாயகர் வழிபாடாகிய இது கி. பி. ஏழாம் நூற்ருண்டின் தொடக்கத்திலே தமிழ் நாட்டில் இடம் பெற்றிருத்தல் வேண்டுமென்பது வரலாற்ருராய்ச்சியாளர் துணிபாகும். எனவே மூத்த பிள்ளையார் திருவிரட்டை மணிமாலை யென்னும் இப்பிரபந்தம் கி. பி ஏழாம் நூற்ருண்டிற்குப் பிற்பட்டதென்பது நன்கு பெறப்படும். இப்பிரபந்தம் கி.பி. ஒன்பதாம் நூற்ருண்டில் வாழ்ந்த நக்கீர தேவர் கல்லாட தேவர் என்ற பெருமக்கள் பாடிய பிரபந்தங்களை யடுத்துப் பதினெராந் திருமுறையில் முறைப்படுத்தப் பெற்றிருத்தலையும் கி. பி பத்தாம் நூற்ருண்டில் வாழ்ந்த இளம்பூரண அடிகள் இவ்விரட்டை மணிமாலையிலுள்ள ‘கனிய நினை

வொடு,' 'நல்லார் பழிப்பில்' என்னும் முதற் குறிப்புடைய செய்யுட்கள் இரண்டினைத் தொல்காப்பியச் செய்யுளியல் 175-ஆம் சூத்திரவுரையில் நெடிலடி நான்கினுல் வரும் கலித்துறைக்கு உதாரணமாகக் காட்டியிருத்தலையும் உற்று நோக்குங்கால் இந்நூலாசிரியராகிய கபில தேவ நாயனுர் கி. பி. ஒன்பதாம நூற்றுண்டினை யடுத்து வாழ்ந்தவரென்பது நன்கு புலனுகும்.

பதினோராந்திருமுறையாசிரியருள் ஒருவராகிய கபில தேவநாயனுரும் கடைச்சங்கப் புலவராகிய கபிலரும் ஒருவரேயெனக் கருதுவாருமுளர். கட்டளைக் கலித்துறை யென்னும் செய்யுள் வகை கடைச் சங்க காலத்தில் இல்லாத புதிய யாப்பாகும். இரட்டைமணிமாலையென்பது இப்புதிய யாப்பாகிய கட்டளைக் கலித்துறையும் பழைய யாப்பாகிய வெண்பாவும் என இருவகைச் செய்யுட்களும் விரவத் தொடுத்த புதிய பிரபந்தமாகும். இப்பிரபந்தத்தை முதன்முதல் அருளிச் செய்தவர் காரைக்காலம்மையாரென்பதும் இப்பிரபந்தம் கடைச்சங்க காலத்தில் வழங்கப் பெருத விருந்து என்னும் பனுவல் வகையைச் சார்ந்ததென்பதும் முன்னர் விளக்கப்பெற்றன. எனவே திருவிரட்டைமணிமாலையென்னும் பிற்காலப் பிரபந்தத்தைப் பாடிய கபிலதேவநாயனுரைக் கடைச்சங்கப் புலவராகிய கபிலர் எனக்கொள்ளுதல் ஒரு சிறிதும் பொருந்தாதென்க. அன்றியும் அஞ்சலி, அரன், அநங்கன், ஆலிங்கனம், இச்சை, ஏகதந்தம், கணபதி, கட்டங்கம், காபாலி, சரணம், சலம், சிங்கம், சித்தம், ஞானம், திக்கு, நாமம், பரஞ்சோதி, பாகீரதி, பாவனை, புண்டரிகம், போகபந்தம், போதகம், மதுகரம், மைத்துனன், வார்த்தை, விதிவசம், விநாயகன் முதலிய வடசொற்களும், உற்றனங்கள், எத்துக்கு வந்தாய், காண்கிடாய் முதலிய பிற்காலச் சொல் வழக்குகளும், சண்டீசர் வரலாறு முதலிய புராணச் செய்திகளும் கபிலதேவ நாயனுர் பாடல்களில் இடம் பெற்றுள்ளன. இக்குறிப்புக்களை நோக்குமிடத்து இவ்வாசிரியர் கடைச்சங்கப் புலவராகிய கபிலரல்லரென்பதும் அப்புலவர் பெருமானது பெயரைத் தமக்குரிய பெயராகப் பெற்றுக் கி. பி. ஒன்பதாம் நூற்றுண்டின் இறுதிப் பகுதியில் வாழ்ந்த திருவருட் செல்வரென்பதும் இனிது புலனுகும்.

கபிலதேவநாயனர் பாடிய சிவபெருமான் திருவிரட்டை மணிமாலையில் முட்பத்தேழு பாடல்கள் காணப்படுகின்றன. வெண்பாவும் கட்டளைக்கலித்துறையுமாகிய இருவகை மணிகளால் தொடுக்கப்படும் இரட்டைமணிமாலையில் இரு திறப்பாக்களும் ஒத்த எண்ணிக்கையுடையனவாய் அமைந் திருத்தல் வேண்டுமென்பது விதி. சிவபெருமான் திரு விரட்டை மணிமாலையாகிய இதன்கண் பத்தொன்பது வெண்பாக்களும் பதினெட்டுக் கலித்துறைகளுமே உள் ளன. 'அந்திமதிமுகிழான்' என்ற பாடலை முதலாகக் கொண்டு அந்தாதித் தொடையுடன் அமைந்த இப்பனுவ லின் இறுதியிலுள்ள 37-ஆம் செய்யுளின் அந்தம் முதற் செய்யுளின் ஆதிச்சொல்லுடன் மண்டலித்து முடியும் நிலை யில் அமையவில்லை. எனவே இத்திருவிரட்டை மணிமாலை யின் இறுதியிலுள்ள செய்யுட்கள் சில காலப் பழமையால் ஏடுகள் சிதைந்த நிலையில் மறைந்திருத்தல் வேண்டு மெனக் கருத வேண்டியுளது. இரட்டைமணிமாலையென் னும் பிரபந்தம் இருபது செய்யுட்களால் அமைதல் மரபு. இரட்டைமணிமாலையைச் சிவபெருமானுக்கு அணிந்து மகிழக் கருதிய கபிலதேவநாயனர் அம்மணிமாலை இரட்டை வடமாக அமையும் வண்ணம் நாற்பது செய்யுட்களாற் பாடியணிந்தாரெனக் கருத இடமுண்டு. இக்கருத்துப் பொருந்துவதாயின் இதன்கண் மறைந்துபோன செய் யுட்கள் 38, 39, 40 என்னும் எண் பெற்றன எனக்கூறுதல் பொருந்தும். காரைக்காலம்மையார் பாடிய திருவிரட்டை மணிமாலை கட்டளைக் கலித்துறை முன்னும் வெண்பா பின் னுமாகத் தொடுக்கப்பெற்றிருத்தலையும் கபிலதேவநாயனர் பாடிய திருவிரட்டைமணிமாலை வெண்பா முன்னும் கட்டளைக் கலித்துறை பின்னுமாகத் தொடுக்கப்பெற்றிருத் தலையும் நோக்குமிடத்துக் கட்டளைக் கலித்துறை வெண்பா என்னும் இருவகை மணிகளுள் எந்த மணியை முதலாகக் கொண்டு தொடுப்பினும் அவ்விருவகைமணிகளாற் றொடுக் கப்பெற்ற மாலை இரட்டைமணிமாலையென்னும் பெயர்க் குரியதாம் என்பது நன்கு தெளியப்படும்.

சிவபெருமான் திருவிரட்டைமணிமாலையில் அமைந்த செய்யுட்கள் யாவும் நவில்தொறும் சுவை பயப்பனவாக வுள்ளன. இறைவனை நோக்கிப், 'பெருமானே நீ நினது

ஊரை எப்பொழுது ஒற்றியூராக்கினாய்' என வினவும் நிலையிலமைந்தது,

> அடியோமைத் தாங்கியோ ஆடை யுடுத்தோ
> குடியோம்ப மாநிதியங் கொண்டோ—பொடியாடும்
> நெற்றியூர் வாளரவ நீள்சடையாய் நின்னூரை
> ஒற்றியூ ராக்கிற் றுரை.

எனவரும் பாடலாகும். சிவபெருமான் கோயில் கொண்டருளிய திருத்தலங்களுள் திருவொற்றியூரும் ஒன்று. ஒற்றி யென்ற சொல்லுக்கு அடைமானம் என்பது பொருள். அங்ஙனங்கொள்ளவே ஒற்றியூர் என்பது ஒருவர்பால் கடனுக்கு அடைமானமாக ஒற்றி வைக்கப்பட்ட ஊர் எனப் பொருள்படும். தன்னைச்சார்ந்த சுற்றத்தார் ஏவலாளர் முதலியோரை உணவு அளித்துப் பாதுகாத்தற் பொருட்டோ அன்றித் தான் ஆடையணிகலன் முதலியவற்றை நன்றாக அணிந்து செல்வ வாழ்வு வாழ்தற் பொருட்டோ அன்றி வறுமையில் தாழ்வடைந்த தனது குடும்பத்தை உயர்நிலையில் வைத்துப் பாதுகாத்தற் பொருட்டோ இவற்றுள் ஏதாவதொரு காரணத்தைக் கொண்டு தன்னிடத்துள்ள நிலம் முதலிய பொருள்களை ஒற்றி வைத்துக் கடன்வாங்குதல் உலகத்தாரியல்பாகும். மேற்குறித்த காரணங்களுள் எந்தக் காரணங் கருதி இறைவா நினது ஊரை ஒற்றியூராக்கினாய்? எனக் கபில தேவ நாயனார் இறைவனை வினவி மகிழுந்திறம் உணர்ந்து இன்புறத்தக்கதாகும்.

இவர் பாடிய சிவபெருமான் திருவந்தாதி 'ஒன்று முதலாக' எனத் தொடங்கி 'ஒன்று' என முடியும் நூறு வெண்பாக்களால் இயன்றதாகும். இந்நூலில் 62-ஆம் பாடலின் இரண்டாமடி சிதைந்துளது. ஆரூர், ஒற்றியூர், ஆவூர், அண்ணாமலை, ஆமாத்தூர், வேங்கடம், கூடல், வெண்காடு, மறைக்காடு, சிராமலை, பூம்புகார், கானப்பேர், இடுமணல், ஆக்கூர், புறந்தை, காரோணம், ஆடானை, பழனம், புன்கூர், மண்டளி, கோகரணம், கோப்பாடி, குற்றாலம், கோவணம், புகலூர், களந்தை, தாங்கால், தலையாலங்காடு, திருமாலுமங்கை, செங்குன்றூர், புலிப் பொது, மேற்றளி என்ற திருத்தலங்கள் எதுகை நயம் பொருந்த எடுத்துரைத்துப் போற்றப் பெற்றுள்ளன. இத்திருவந்தாதியிலுள்ள செய்யுட்கள்சில ஏடெழுது

வோர் கைத்திறத்தால் உருமாறி யிருத்தலால் அவற்றின் உண்மைப் பொருளை அறிந்துகொள்ள இயலவில்லை.

கபிலதேவநாயனர் பிரபந்தங்களில் அவர்க்குக் காலத்தால் முற்பட்ட காரைக்காலம்மையார், திருநாவுக்கரசர் முதலிய ஏனைத்திருமுறையாசிரியர்கள் திருவாய் மலர்ந்தருளிய திருப்பாடல்களின் சொற்பொருள் நலங்கள் ஆங்காங்கே இடம் பெற்றுள்ளன.

> "தெளியாய் மடநெஞ்சே செஞ்சடையான் பாதந்
> தெளியாதார் தீநெறிக்கட்செல்வர்"

எனவரும் சிவபெருமான் திருவந்தாதிச் செய்யுள், 'திருவீழிமிழலையானைச் சேராதார் தீநெறிக்கே சேர்கின்றாரே' எனவரும் திருநாவுக்கரசர் வாய்மொழிப் பொருளைத் தன்பாற்கொண்டு திகழ்தல் காண்க.

இவ்வாசிரியர் பிறந்த நாடு, ஊர், குலம் முதலிய செய்திகளை யறிந்துகொள்ளுதற்குரிய சான்றுகள் கிடைக்க வில்லை. இவர் தம் பாடல்களிற் போற்றிப் பரவிய சிவ தலங்களைப்பற்றிய குறிப்புக்களைக் கூர்ந்து நோக்குங்கால் இவர் சிவதல யாத்திரையினை மேற்கொண்டு வாழ்ந்த சிவநெறிச் செல்வரென்பது நன்கு விளங்கும். இவராற் போற்றப்பெற்ற திருத்தலங்களுட் பெரும்பாலன சோழ நாட்டூர்களாக இருத்தலை நுணுகி நோக்குமிடத்து இவ் வாசிரியர் சோழநாட்டில் நெடுங்காலம் வாழ்ந்தவரென்பது ஒருவாறு உய்த்துணரப்படும்.

8. பரண தேவ நாயனர்

பதினொராந் திருமுறையில் இருபத்து மூன்றும் பிரபந்தமாக முறைப்படுத்தப்பட்டுள்ள சிவபெருமான் திருவந்தாதி யென்ற பனுவல் பரணர் என்னும் பெயருடைய புலவர் பெருமானால் பாடப்பெற்றதென்பது,

> ஒன்றைப் பரணர் உரைத்த அந்தாதிபல
> ஒன்றைப் பகரில் ஒருகோடி—ஒன்றைத்
> தவிரா துரைப்பார் தளரார் உலகில்
> தவிரார் சிவலோகந் தான்.

என அவ்வந்தாதியின் இறுதியிலுள்ள வெண்பாவினால் இனிது விளங்கும். திருவருட் செல்வராகிய இந்நூலாசிரியர் கடைச்சங்கப் புலவராகிய பரணரது பெயரைத் தமக்

குரிய பெயராகப் பெற்றமை கருதிப் பரண தேவ நாயனர் என அழைக்கப் பெற்றனரெனக் கொள்ளுதல் பொருந்தும்.

இவ்வாசிரியர் பிறந்த நாடு, ஊர், குலம் முதலியன பற்றித் தெரிந்து கொள்ளுதற்குரிய சான்றுகள் கிடைக்க வில்லை. நக்கீர தேவர், கல்லாட தேவர், கபில தேவர் என்போர் பாடிய பிரபந்தங்களின் பின் இவர் பாடிய சிவ பெருமான் திருவந்தாதி வரிசைப்படுத்தப் பெற்றிருத்தலை நோக்குங்கால் பரண தேவ நாயனரெனப் போற்றப்பெறும் இவ்வாசிரியர் முற்கூறிய பெருமக்கள் வாழ்ந்த கால மாகிய கி. பி. ஒன்பதாம் நூற்ருண்டின் இறுதியில் வாழ்ந்தவரென்பது நன்கு பெறப்படும். கபில தேவ நாயனர் பாடிய சிவபெருமான் திருவந்தாதியை அடியொற்றி இவர் பாடிய சிவபெருமான் திருவந்தாதியும் 'ஒன்றுரைப்பீர்' என ஒன்று முதலாகத் தொடங்கி 'ஓரைந் துரைக்க வல்லார்க்கு ஒன்று' என ஒன்றீருக மண்டலித்து முடிந்துளது. இவ்வந்தாதி நூறு - வெண்பாக்களால் இயன்றுளது. இதன்கண் 5-ஆம் பாடலின் மூன்ருமடியும் 14-ஆம் பாடலின் முதலடியும் 42-ஆம் பாடல் மூன்ருமடியின் இறுதிச் சீரும் சிதைந்துள்ளன.

எல்லாம்வல்ல முழுமுதற்கடவுளாகிய சிவபெருமானது இறைமைத்தன்மையும் அவ்விறைவன் கோயில்கொண்டு வீற்றிருந்தருளுந் திருப்பதிகளும் ஆட்பாலவராகிய அடியார்களுக்கு அருள்புரிதல் வேண்டி இறைவன் செய்தருளிய அருட்செயல்களும் அம்மையப்பனுகிய இறைவனை வழிபடும் நெறிமுறைகளும் அங்ஙனம் வழி படுதலால் இவ்வுலகமக்கள் அடைதற்குரிய இம்மைமறுமை இன்பங்களும் இவ்வந்தாதியில் விரித்துரைக்கப் பெற்று உள்ளன.

'தத்துவத்தின் உட்பொருள்' எனவும் 'பெண் ஆண் அலியென்று பேச்சுக் கடந்த பெருவெளி' எனவும் 'சொல்லாயம் இன்றித் தொலைவின்றித் தூநெறிக்கட் சொல்லாய்ப் பரந்த சுடரொளி' எனவும் 'தாமேயவாறு சமய முதற்பொருளுந்-தாமேய வாறு தழைக்கின்ருர்' எனவும் 'உருவுபலகொண்டொருவராய் நின்ருர்-உருவு பலவாம் ஒருவர்' எனவும் இவ்வந்தாதியில் வரும் தொடர்கள் சிவநெறிச் செல்வர்களாற் போற்றிவழிபடப்

பெறும் முழுமுதற் கடவுளதியல்பினைத் தெளிவாக விளக்குவனவாகும்.

தன்னை அன்பினால் வழிபாடு புரிந்த சண்டேசப் பிள்ளையார்க்கு இறைவன் அருள் செய்த திறத்தினை யெண்ணியுளமுருகிய பரண தேவநாயனார்,

அடைந்துன்பால் அன்பாய் அணிமணிகொண் டர்ச்சித்
தடைந்துன்பால் மேலுகுத்த மாணிக்-கடைந்துன்பால்
அவ்வமுதம் ஊட்டி அணிமலருஞ் சூழ்ந்தன்று
அவ்வமுத மாக்கினாய் காண்.

என இறைவனை நோக்கி உளமுவந்து போற்றியுள்ளார். இவ்வாறே கண்ணப்ப நாயனார் காளத்தியிறைவனை வழிபட்ட முறையினையும் அன்புருவமாகிய அவர்க்கு இறைவன் அருள்செய்த சிறப்பினையும்,

சென்றுசெருப் புக்காலாற் செல்ல மலர்நீக்கிச்
சென்று திருமுடிவாய் நீர்வார்த்துச்-சென்றுதன்
கண்ணிடந்தன் றப்புங் கருத்தற்குக் காட்டினான்
கண்ணிடந்தன் றப்பாமைப் பார்த்து.

எனவரும் பாடலால் இவ்வாசிரியர் போற்றிப்பரவிய திறம் படித்து மகிழ்தற்குரியதாகும்.

அட்ட வீரட்டம், அண்ணாமலை, அம்பர் மாகாளம், ஆமாத்தூர், ஆரூர்மூலட்டானம், ஆலங்காடு, ஆலந்துறை, ஆலவாய், ஆனைக்கா, இடைமருது, ஈங்கோய்மலை, எழிலவாய் (?) ஏகம்பம், ஒற்றியூர், கடவூர், கடனாகைக் காரோணம், கயிலை, கழிப்பாலை, கழுமலம், காவாத்தலை, காளத்தி, காறை (காறாயில்), கானப்பேர், கோளிலி, சாய்க்காடு, சிராமலை, செங்காட்டங்குடி, சேதுக்கரை, சோற்றுத்துறை, திருமீச்சூர், தில்லைப்பொன்னம்பலம், பாசூர், புகலூர், பூவணம், பைஞ்ஞீலி, மருகல், மறைக்காடு, வஞ்சி, வலஞ்சுழி, வெண்காடு ஆகிய திருத்தலங்களை ஆசிரியர் இத்திருவந்தாதியிற் குறித்துப் போற்றியுள்ளார். இவற்றுட் சிலதலங்களின் பெயர்களைச் சிலேடைப் பொருளனவாகக்கொண்டு மோனை எதுகைமுரண் முதலிய தொடைநயங்களும் வேறுபிற அணிநலங்களும் அமையப் போற்றியுள்ளமை படித்துமகிழத்தக்கதாகும்.

திருக்கழிப்பாலையிறைவரைக் காமுற்ற தலைமகள் அவ்விறைவரது பிரிவாற்றாது வருந்திக் கூறுவதாக அமைந்தது,

தாமென்ன நாமென்னவேறில்லை தத்துறவில்
தாமென்னை வேறுத் தனித்திருந்து-தாமென்
கழிப்பாலை சேருங் கறைமிடற்றூர் என்னே
கழிப்பாலை சேருங் கடன்.

எனவரும் பாடலாகும். மென்கழியாகிய கரும்பின் சாறு போன்றினிக்கும் பாலைப்பண்ணினைப் பாடவல்ல நஞ்சக் கறையொடு விளங்கும் திருமிடற்றினையுடைய இறைவர், கடவுளாகிய தாமென்றும் உயிர்களாகிய நாமென்றும் இருதிறமாகப் பிரித்துரையாதபடி நம்முடன் பிரிவறக் கலந்திருப்பவராயினும் வருத்தமில்லாத தாம் தம்மைக் காதலித்து வருந்துபவளாகிய எளியேனைத் தனித்திருந்து வருந்தச்செய்து தாம்மட்டும் வேருகப்பிரிந்து திருக்கழிப் பாலையெனும் திருத்தலத்தைச் சேர்ந்து இனிதமர்ந்து இருத்தல் முறையாதல் எவ்வாறு என்பது இதன் பொருள். மென்கழியென்றது மெல்லிய கழையாகிய கரும்பினை. பாலை — பாலையென்னும் பெயருடைய பண். ஈண்டு கருப்பஞ்சாறு போன்று இனிக்கும் பாலைப் பண் என்றது இறைவன் பாடிய சாமவேதமாகிய இன்னிசையினை. 'பாலையாழ்ப் பாட்டுகந்தான்' என ஆளுடைய பிள்ளையாரும், 'பாடினார் சாமவேதம்' என ஆளுடைய அரசரும் இவ்வின்னிசையினைக் குறிப்பிடுதல் காணலாம். இறைவன் திருமிடறு பாலையாழாகிய இன்னிசையும் நஞ்சக்கறையும் பொருந்தி விளங்கும் இயல்பினை 'யாழ்கெழு மணிமிடற் றந்தணன்' எனவரும் அகநானூற்றுக் கடவுள் வாழ்த்தால் அறியலாம்.

பரண தேவராகிய நூலாசிரியர் தம் நெஞ்சத்திற்கு அறிவுறுத்துவதாக அமைந்தது,

கரியார் தாஞ் சேருங் கலைமறிகைக் கொண்டே
கரியார் தாஞ் சேருங் கவாலி — கரியாகி
நின்ற கழிப்பாலை சேரும் பிரான்நாமம்
நின்ற கழிப்பாலை சேர்.

எனவரும் திருப்பாட்டாகும். உள்ளத்தே வஞ்சனையுடைய ராகிய தாருகாவனத்து முனிவர்கள் தாமென்னும் அகந்தை யினுற் புரிந்த அபிசார வேள்வியிலிருந்து தோன்றித் தன் பாற் சேர்ந்த கலைமான் கன்றினைத் தன் கையிலேந்திக் கரிய திருமேனியுடைய திருமால் தன்னொரு பாகத்திலே சேரப்பெற்று விளங்கும் கபாலியென்ற திருப்பெயரினை

யுடையவனும் மகாசங்கார காலத்தே உலகப் பொருள் களெல்லாம் தீந்து கரியாகிய பெருஞ் சுடுகாட்டகத்தே சேர்ந்து ஆடல்புரியும் பெருமானும் ஆகிய இறைவன் புகழுடன் நிலைபெற எழுந்தருளிய திருக்கழிப் பாலையெனுந் திருப்பதியினை நெஞ்சமே இடைவிடாது நினைந்து போற்று வாயாக என்பது இதன் பொருளாகும். இதன்கண் 'கரியாகி நின்ற கழிப்பாலை' யென்றது, மகாசங்கார காலத்தே எல்லாவுலகங்களும் வெந்து நீருகிய பேரிமப் புறங்காட்டினை. இவ்வாறு இருபொருள்பட ஊர்ப் பெயர்களை எடுத்துரைத்துப் போற்றும் பாடல்கள் இத்திரு வந்தாதியில் இன்னும் பலவுள்ளன.

'செல்லுமளவுஞ் சிதையாமற் சிந்திமின்'

எனவரும் இவ்வந்தாதியின் 70–ஆம் பாடல் 'செல்லு மளவுஞ் செலுத்துமின் சிந்தையை' (2103) என்ற திருமந் திரப் பாடலை யடியொற்றியமைந்ததாகும். 'நானுடை மாடே யென்ஞானச் சுடர்விளக்கே' எனவும் 'ஆமாத்தூர் அம்மானே' எனவும் 'புகலூரா புண்ணியனே' எனவும் 'மறைக்காடு சேரும் மணாளர்' எனவும் இறைவனைக் குறித்து இவ்வந்தாதியில் வழங்கப்பெற்ற தொடர்கள் 'நானுடை மாடெனவே நன்மைகொளும்பரனை' (சுந்தரர்) எனவும் 'ஞானச்சுடர் விளக்காய் நின்றான் தன்னை' (நாவுக்கரசர்) எனவும் 'ஆமாத்தூ ரம்மானைக் காணாத கண்ணெல்லாங் காணாத கண்களே' (திருஞானசம்பந்தர்) எனவும்,

'பூம்புகலூர் மேவிய புண்ணியனே'
'மறைக் காட்டுறையும் மணாளன்றானே'

(திருநாவுக்கரசர்) எனவும் வரும் தேவாரத் திருப்பதிகங் களின் தொடர்மொழிகளை நினைவுறுத்துவனவாக அமைந் துள்ளன. இவ்வந்தாதியில்,

ஆய்ந்துன்றன் பாதம் அடைய வருமென்மேல்
ஆய்ந்தென்றன் பாச மலமறுத் தாய்ந்துன்றன்
பாலணையச் செய்த பரமா பரமேட்டி
பாலணையச் செய்தாய் பரம்.

எனவரும் அறுபதாம் பாடல்,

'பல்லோருங்காண என்றன் பசுபாச மறுத்தானை'

எனவும்,

'வாங்கி வினைமலமறுத்து வான்கருணை தந்தானை'

எனவும் வரும் திருவாசகத் தொடர்ப் பொருளை விரித்துரைக்கும் நிலையில் அமைந்திருத்தல் காணலாம்.

இனி, கடைச் சங்கப் புலவராகிய பரணரும் பதினொராந் திருமுறையாசிரியராகிய இப் பரண தேவ நாயனரும் ஒருவரேயெனக் கருதுவாருமுளர். மேலெடுத்துக் காட்டிய குறிப்புக்களால் திருமூலர், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், நம்பியாரூரர், திருவாதவூரடிகள் ஆகிய பெருமக்களுக்குக் காலத்தாற் பிற்பட்டவர் பதினொராந் திருமுறையாசிரியராகிய பரணதேவ நாயனரென்பது இனிது புலனுதலானும், இவர் பாடிய சிவபெருமான் திருவந்தாதியில் வடசொற்களும் பிற்காலச் சொல் வழக்குகளும் காணப்படுதலானும் இவர் சங்கப் புலவராகிய பரணரல்லரென்றும் அவர் பெயர்தாங்கிக் கி. பி. ஒன்பதாம் நூற்ருண்டில் வாழ்ந்த சிவநெறிச்செல்வ ரென்றும் கொள்ளுதலே எற்புடையதாகும்.

9. இளம்பெருமானடிகள்

பதினொராந் திருமுறையாசிரியர்களுள் இளம் பெருமானடிகளும் ஒருவராவர். இவர் பாடிய பனுவல் சிவபெருமான் திருமும்மணிக்கோவையென்பதாகும். பெருமானடிகள் என்பது இறைவனைக் குறித்து வழங்கும் பெயராகும். 'வரியமறையார்' என்னும் முதற் குறிப்புடைய திருக்கடவூர்த் தேவாரத் திருப்பதிகத்திற் பாடல்தோறும் 'அவரெம்பெருமானடிகளே' எனத் திருஞானசம்பந்தப் பிள்ளையார் சிவபெருமானைப் போற்றியுள்ளார். என்றும் இளமை குன்ரு இறைவனகைச் சிவபெருமான் பெற்றருளிய முருகப் பெருமானை இளம்பூரணன் என்ற திருப்பெயராற் சான்ருேர் போற்றிப் பரவக் காண்கின்ருேம். இளமை குன்ரு இறைவன் என்ற இப்பொருளிலேயே இளம் பெருமானடிகள் என்ற பெயரும் முருகக் கடவுளுக்கு வழங்கப் பெற்றிருத்தல் கூடும். கடவுட் பெயரை மக்களுக்கு இட்டழைக்கும் வழக்கப்படி இளம்பெருமானடிகள் என்ற பெயர் பெற்ருேரால் இவ்வாசிரியர்க்கு இடப்பட்டதெனக் கொள்ளுதல் பொருந்தும். இனி, பெருமானடிகள் என்னும் பெயருடையார் இருவராக அவர்களுள் இவர் இளையவர் என்பது தோன்ற இளம்பெருமானடிகள் என இவ்

வாசிரியர் அழைக்கப்பெற்றுரெனக் கருதுதற்கும் இடமுண்டு. இவ்வாசிரியர் பிறந்த நாடு, ஊர், குலம் முதலியன இவையெனத் தெரிந்து கொள்ளுதற்குரிய சான்றுகள் கிடைக்கவில்லை. இவர் பாடிய திருமும்மணிக்கோவை திருவெண்காட்டடிகள் அதிராவடிகள் ஆகிய பெருமக்கள் பனுவல்களுக்கு முன்னே தொகுக்கப்பெற்றிருத்தலால் இவர் வாழ்ந்த காலம் கி. பி. ஒன்பதாம் நூற்றுண்டின் இறுதியும் பத்தாம் நூற்றுண்டின் தொடக்கமுமாமெனக் கூறுதல் பொருந்தும்.

அகவல், வெண்பா, கட்டளைக்கலித்துறையாகிய மும் மணிகளால் இயன்றதாய்ச் சிவபெருமானுக்கு அணியும் அழகிய மணிவடமாகத் திகழ்வதாகலின் இவர் பாடிய பனுவல் திருமும்மணிக்கோவையென்னும் பெயர்த்தாயிற்று. இந்நூல் முப்பது பாடல்களையுடையது; பதினொராந்திருமுறையில் இருபத்துநான்காம் பிரபந்தமாக வரிசைப்படுத்தப் பெற்றுள்ளது. இதன்கணுள்ள பாடல்கள் யாவும் சொற்செறிவும் பொருட்செறிவுமுடையனவாய்த் திகழ்கின்றன. நிரம்பிய இலக்கியப் பயிற்சியுடையார்க்கே இப்பாடல்களின் பொருள் இனிது விளங்கும். இறைவனை முன்னிலைப்படுத்து உரையாடி மகிழும் நிலையிற் பாடிய பாடல்களும் இறைவனைக் கண்டு காமுற்ற தலைவியினது துயர்கிளந்துரைக்கும் அகத்துறைப் பாடல்களும் இம்மும்மணிக் கோவையில் இடம்பெற்றுள்ளன.

படைத்தலாகிய முதற்றெழிலையுடைய நான்முகன் இயற்றிய கொடுங்கையொடு திகழும் மாடம்போல்வதாகிய இந்நிலப்பரப்பிலே நிறுவிய தெய்வத்தன்மை வாய்ந்த தகழியினுள்ளிடத்தே செந்நிற மேகம் பொழிந்த மழை வெள்ளமெனத்தக்க பேரளவிற்றுகிய நெய்யினை நிரப்பித் தேவருலகளவும் ஓங்கியொளிர ஏற்றியதும், முத்தின் குளிர்ச்சியையுடையதாய்த் திகழ்வதும், பெருமலைகளைப் பெயர்த்தெறிவதாகிய கடுங்காற்று வீசினும் சிறிதும் நடுக்கமுருது சுடர்விட்டொளிர்வதுமாகிய பேரொளி விளக்கினைப்போன்று[1] அண்டத்தின் புறத்திலும் அன்பருள்

1. 'சுடர்விட்டுளன் எங்கள் சோதி' என ஆளுடைய பிள்ளையாரும், 'சுடர்க்கொழுந்தைத் துளக்கிலா விளக்கை' என ஆளுடைய அரசும் இறைவனைச் சுடர் விளக்காகப் போற்றிய தொடர்கள் இவண் ஒப்பு நோக்கத் தக்கனவாம்.

ளத்திலும் நிலைபெற்றுத் தோன்றும் ஆதிமுதல்வனாகிய நினது திருவடி நீழல், உடல்தேய்ந்து நின்னைத் தஞ்சம் புகுந்த திங்கட்செல்வனை அளிக்கத் தக்கன அல்லவோ? அங்ஙனமாகவும் ஒளிதிகழும் வெள்ளிய சங்கினைப்போலும் வெண்ணிற மலர்களின் நிறத்தையுடையதாய் நிலவொளியைப் பரப்பிய திங்கட் கண்ணியை நின்திருமுடிமேல் அணிந்தது எக்காரணத்தால்? எனச் சிவபெருமானை நோக்கி வினவும் நிலையில் அமைந்தது,

முதல்வன் வகுத்த மதலை மாடத்
திடவரை யூன்றிய கடவுட் பாண்டிற்
புத்தேள் நிவந்த முத்த மாச்சுடர்
எறிவளி யெடுப்பினுஞ் சிறுநடுக் குறுநின்
அடிநிழல் அளியவோ வைத்த முடிமிசை
இலங்குவளைத் தனிப் போது விரித்த
அலங்குகதி ரொலியல்நீ அணிந்த தென்மாறே.

எனவரும் இத்திரு மும்மணிக் கோவையின் முதற் பாடலாகும். "எம்பெருமானாகிய நீ நின்னைச் சரணடைந்தார்க்கு நின் திருவடி நீழல் தந்து அருள் புரிதலே முறையாகவும் நின்னைத் தஞ்சம் புகுந்த வெண்மதிக்குத் திருவடி நீழல் அருளாது அம்மதியை நின்முடிமிசை வைத்தது எது கருதி" என இளம் பெருமானடிகள் சிவபெருமானை நோக்கி வினவிய வினா, "தேய் மதியனாகிய சந்திரன் தன் திருவடியால் முன்னொரு காலத்தில் தேய்க்கப்பட்டு வருந்தியவனாதலின் தன் திருவடி அவனுக்கு மேலும் அச்சத்தைத்தரும் என்ற அருட் குறிப்பின் காரணமாகவே சிவபெருமான் சந்திரனைத் தன் முடிமிசை வைத்தருளினன் என்ற குறிப்பினை இனிது புலப்படுத்தல் காண்க.

சிவபெருமானது தாழ்சடை குளிர்ந்த கங்கை நீரைத் தன்பாற் கொண்டிருந்தும் நெருப்புப் போலும் செந்நிறமுடையதா யொளிர்தலும், அப்பெருமானது கண்டம் ஆலகால நஞ்சினைத் தன்பால் அடக்கியிருந்தும் வானோரமிழ்தினை யொத்துக் கண்டோரது பிணி நீக்கிச் சாவா மூவாப் பெருவாழ்வு தந்து திகழ்தலும், அவ்விறைவனது திருவடி வெம் சுடர் விட்டெரியுந் தீயை யொத்த தோற்றமுடையதாயிருந்தும் தளிரினுந் தண்மையுடையதாய்க் கண்டோர் கண்களுக்குக் குளிர்ச்சி தந்து விளங்குதலும், இறைவனுடைய திருவடி கூற்றுவனைச் சினந்துதைத்த பெருவன்மையுடையதாயினும் செந்தாமரை மலரையும் கீழ்ப்

படுக்கும் மென்மையும் வனப்புமுடையதாய் மிளிர்தலும் என இங்ஙனம் ஒன்றேடொன்று ருவ்வா இயல்பினவாதலை யெண்ணி யுளமுருகிய இளம் பெருமானடிகள், சூலப்படை யானுகிய இறைவனை நோக்கி 'நின் திருவுருவின் இயல்பு களை இனையவென்றறியும் திறனுடையோ மல்லோம்' என்று கூறிப் போற்றுவதாக அமைந்தது,

'சடையே, நீரகந்ததும்பி நெருப்புக்கலிக்குமே
மிடறே, நஞ்சகந் துவன்றி அமிர்து பிலிற்றுமே
வடிவே, முளியெரிகவைஇத் தளிர் தயங்குமே
அடியே, மடங்கல் மதஞ்சீறி மலர்பழிக் கும்மே
அஃதான், றினையவென் றறிகிலம் யாமே முனைதவத்
தலை மூன்று வகுத்த தனித்தாட்
கொலையூன்று குடுமி நெடுவே லோயே.

என்ற பாடலாகும்.

"மாதொரு பாகனுகிய பெருமானே, கடல் முகடும் விசும்பும் ஒன்றுய்க்கலந்த ஊழிக் காலப் பெருவெள்ளத்தில் உலகெலாம் மறைய நீ ஒருவனே தனித்து நின்றனை யென்பர். அத்தகைய வெள்ளப் பெருக்கினை இப்பொழுது எங்கே மறைத்து வைத்துள்ளாய்? அதனை எங்களுக்குச் சிறிது சொல்வாயாக" என இறைவனை நோக்கி வினவு வதாக அமைந்தது.

வேலை முகடும் விசும்பகடுங் கைகலந்த
காலைநீர் எங்கே கரந்தனையால்—மாலைப்
பிறைக்கீறு கண்ணுதலா பெண்பாகா ஐயா
இறைக் கூறுய் எங்கட்கிது.

என்ற பாடலாகும். இதனை வீர சோழிய வுரையாசிரியர் தமது உரையில் மேற்கோளாக எடுத்தாண்டுள்ளார்.

புலியினது தோலை உடையாக உடுத்த சிவபெருமா னது திருக்கோலத் தோற்றத்தை யெண்ணிய இவ்வா சிரியர், "செஞ்சடைத் தீவண்ணரே, இமயத்தரசியாகிய உமையம்மையாரை நீவிர் திருமணம் புரிந்த நாளாகிய திருமணக் காலத்திலும் நுமக்குரிய திருமணவுடையாகத் திகழ்ந்தது இப்புலித்தோல் தானே?" என இறைவனை நோக்கி வினவும் நிலையில்,

இதுநீர் ஒழிமின் இடைதந் துமைஇமை யத்தரசி
புதுநீர் மணத்தும் புலியதளேயுடை பொங்குகங்கை
முதுநீர் கொழித்த இளமணல் முன்றில் மென் றேட்டதிங்கட்
செதுநீர் ததும்பத் திவளஞ்செய் செஞ்சடைத் தீவண்ணரே.

என்ற பாடலைப் பாடியுள்ளார். இச்செய்யுள்,

கடும்பகல் நட்ட மாடிக் கையிலோர் கபாலமேந்தி
இடும்பலிக் கில்லந் தோறும் உழிதரும் இறைவனீரே
நெடும் பொறைமலையர் பாவை நேரிழை நெறிமென் கூந்தற்
கொடுங்குழை புகுந்த அன்றுங் கோவணம் அரையதேயோ.

எனவரும் திருநாவுக்கரசர் திருப்பாடற் பொருளை அடி யொற்றி யமைந்ததாகும். இவ்வாறே இத்திரு மும்மணிக் கோவையில்,

இவளப் பனிமால் இமையத் தணங்குகற் றைச்சடைமேல்
அவளப்புத் தேளிர் உலகிற்கரசி அதுகொண்டென்னை
எவளுக்கு நீநல்ல தியாரைமுன் னெய்திற்றெற் றேயிதுகாண்
தவளப் பொடிச் செக்கர் மேனிமுக் கண்ணுடைச் சங்கரனே,

எனவரும் பாடலும்,

ஒருத்திதன் தலைச்சென் ருளைக் கரந்திட்டான் உலக மேத்த
ஒருத்திக்கு நல்லனாகி மறுப்படுத் தொளித்து மீண்டே
ஒருத்தியைப் பாகம் வைத்தான் உணர்வினால் ஐயமுண்ணி
ஒருத்திக்கு நல்லனல்லன் ஒற்றியூருடைய கோவே,

என்ற திருநேரிசைப் பாடற்பொருளைப் பின்பற்றி யமைந் திருத்தல் காணலாம்.

சிவவழிபாடு இத்தமிழகத்துத் தோன்றி நிலைபெற்ற தெய்வவழிபாடுகளெல்லாவற்றோடும் நெருங்கிய தொடர்பு உடையதாய்த் தமிழரனைவர்க்கும் பொதுவாகிய வழிபாடு என்பதனை,

'வேந்துக்க மாக்கடற் சூரன்முன் னாள்பட வென்றிதந்த
சேந்தற்குத்தாதை, இவ்வையமளந் தெய்வத்திகிரி
ஏந்தற்கு மைத்துனத் தோழன், இன்றேன்மொழிவள்ளி
யென்னுங்
கூந்தற் கொடிச்சிதன் மாமன்வெம்மால்விடைக்
கொற்றவனே'

எனவும்,

'கொற்றத் துப்பின் ஒற்றை யீன்ற
துணங்கையஞ் செல்வத் தணங்குதரு முதுகாட்டுப்
பேய்முதிர் ஆயத்துப் பிணவின்கொழுந'

எனவும் வரும் பாடற்றொடர்களால் இவ்வாசிரியர் சுவை பெற விளக்கியதிறம் உளங்கொளத்தக்கதாகும்.

இனி, இளம்பெருமானடிகள் என்பார் சிலப்பதிகார ஆசிரியராகிய இளங்கோவடிகளாக இருத்தல் கூடுமோ

என ஐயுறுவாருமுளர்.[1] கடைச்சங்க காலத்திலில்லாத கட்டளைக்கலித்துறையாப்பும் விநாயகர் வழிபாடும் இவர் பாடிய திருமும்மணிக் கோவையில் இடம் பெற்றிருத்தலாலும் கி. பி. ஒன்பது பத்தாம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த ஆசிரியர்கள் பாடிய பிரபந்தங்களுக்கிடையே இவர் பாடிய மும்மணிக்கோவை முறைப்படுத்தப் பட்டிருப்பதாலும் இதனைப்பாடிய இளம்பெருமானடிகள் இளங்கோவடிகள் அல்லர் என்பதும் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டினிறுதியும் பத்தாம் நூற்றாண்டின் தொடக்கமுமாகிய காலப்பகுதியில் வாழ்ந்த திருவருட்செல்வர் இளம்பெருமானடிகள் என்பதும் நன்கு தெளியப்படும்,

10. அதிராவடிகள்

பதினொராந் திருமுறையில் இருபத்தைந்தாம் பனுவல் ஆகத் தொகுக்கப்பெற்றுள்ள மூத்த பிள்ளையார் திருமும்மணிக்கோவையைப் பாடியவர் அதிராவடிகளாவர். கல்வி கேள்விகளில் வல்லவராகிய இவ்வாசிரியர் தனக்குவமை இல்லாதவனாகிய இறைவன் திருவடிகளை இடைவிடாது நினைத்து மனக்கவலை மாற்றியவராதலின் வினைத்துன்பங்களைக்கண்டு துளங்காத சிந்தையுடைய இவரை அதிராவடிகளென்ற பெயரால் ஆன்றோர் குறித்துப் போற்றுவார் ஆயினர். அதிர்ச்சி – நடுக்கம். அதிரா அடிகள் – துளக்கமில்லாத சிந்தையினராகிய பெரியார். எதிர்காலத்தில் வரக்கடவதாகிய இடையூற்றினை முன்னரே அறிந்து தடுக்கவல்ல நல்ல அறிவினையுடையார்க்கு அவர் நடுங்கும்படி வருவதொரு துன்பமும் இல்லையென்பார்,

> 'எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை
> அதிர வருவதோர் நோய்'

என்றார் திருவள்ளுவர். தெய்வப்புலவர் அருளிய இப் பொய்யாமொழியின் வண்ணம் இடையூறு நீக்குவோராகிய மூத்தபிள்ளையாரைப் பணிந்து பின்வரக்கடவதுன்பங்களை முன்னறிந்து காக்கும் நிலையில் அகவல், வெண்பா, கட்டளைக் கலித்துறை யென்னும் மும்மணிகளால் இயன்ற மும்மணிக்கோவை யென்னும் பாமாலையை மூத்த பிள்ளையார்க்கு அணிந்த இப்புலவர் பெருமானை அதிரா

1. தமிழ்ப்பொழில் 17–ம் துணர் பக்கம் 72. 'ஒருதிருவருட்பா உரை' யென்ற கட்டுரை நோக்குக.

வடிகளென அழைத்தமை பெரிதும் பொருத்தமுடையதே யாம். இவ்வாசிரியர் பிறந்த ஊர் குலம் முதலியன இவை எனத் தெரிந்துகொள்ள இயலவில்லை. இவ்வாசிரியர் வாழ்ந்த காலம் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதியும் பத்தாம் நூற்றாண்டின் தொடக்கமுமாமெனக் கொள்ளுதல் ஏற்புடையதாகும்.

மூத்தபிள்ளையார் திருமும்மணிக்கோவை முப்பது பாடல்களால் இயன்றுளது. இந்நூலின் ஏடுகள் சிதைவு உற்றமையால் இதன்கண் 24 முதல் 30 வரையுள்ள பாடல்கள் ஏழும் கிடைக்கவில்லை. கிடைத்த பாடல்களிலும் சில தொடர்கள் பொருள்விளங்கா நிலையிற் சிதைந்துள்ளன.

காமனைக்காய்ந்த கடவுளாகிய சிவபெருமான் பெற்றருளிய புதல்வர் யானைமுகக் கடவுளாகிய மூத்தபிள்ளையாராவர். அவருடைய திருவடித்துணையின்றி உயிர்கட்கு வேறு துணையில்லை. தன்னை அன்பினால் வழிபடும் மெய்யடியார்களின் பிறவிப்பிணியைப் போக்கவல்லார் அவர். அவருடைய திருவடியைச் சிந்தித்து வாழ்வார்க்கு மனக்கவலையில்லை. யாம் மூத்தபிள்ளையாருடைய திருவடியை இறுகப்பற்றினேமாதலால் மனக்கவலையால் மதிமயங்கும் இயல்புடையேமல்லேம் என அதிராவடிகள் இத் திருமும்மணிக்கோவையிற் கூறுங்கருத்துக்கள் மூத்தபிள்ளையார் வழிபாட்டினால் மக்கள் அடைதற்குரிய பெருநலங்களை அறிவுறுத்துவனவாகும்.

மூத்தபிள்ளையார் இருகைகளையுஞ் சேர்த்துத் தட்டிச் சப்பாணி கொட்டுதலும், திருமுகம் அசையச் செங்கீரையாடுதலும் ஆகிய பிள்ளை விளையாட்டினை மேற்கொண்டு உலகவுயிர்களுக்கு இன்பஞ்செய்யும் திறத்தை,

> நிலந்துளங்க மேருத் துளங்க நெடுவான்
> தலந்துளங்கச் சப்பாணிகொட்டும் — கலந்துளங்கொள்
> காமாரி யீன்ற கருங்கைக் கடதடத்து
> மாமாரி யீன்ற மணி.

எனவும்,

> இக்கயங்கொள் மூவலயஞ் சூழேழ் தடவரைகள்
> திக்கயங்கள் பேர்ந்தாடச் செங்கீரை — புக்கியங்கு
> தேனுடை வண்டாடச் செங்கீரை யாடின்றே
> வானுடன் பெற்ற வரை.

எனவும் வரும் பாடல்களால் அதிராவடிகள் சுவை பெற விரித்துரைத்துள்ளார். செங்கீரையாடுதலும் சப்பாணி கொட்டுதலுமாகிய பிள்ளைத் தமிழுறுப்புக்களை இத்திருமும் மணிக்கோவையில் ஆசிரியர் குறிப்பிட்டுப் போற்றுதலால் இவர் வாழ்ந்த காலமாகிய கி. பி. ஒன்பதாம் நூற்ருண்டின் இறுதியிலேயே செந்தமிழ் மொழியின் சிறப்புடைப் பனுவலாகிய பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தம் இயற்றப்பெற்று வழங்கியிருத்தல் வேண்டுமென்பது நன்கு துணியப்படும்.

வேத முதல்வனுகிய பிரமனைக்கொன்ற பழியுடையோனுக்குப் புதல்வனுகப் பிறந்ததும் அன்றித் தானே நூலியற்றும் ஆற்றலின்றிப் பரதவர் மகள் புதல்வனுகிய இழிந்தோனொருவன் சொல்லிய கதையினை மேருமலையிற் கைவருந்த எழுதிய யானைமுகக் கடவுளை யாம் பெரிதும் போற்றுவது எது கருதி? எனப் பழித்துரைப்பது போன்றமைந்தது,

மின்னெடுங் கொண்ட லந்நெடு முழக்கத்
தோவற விளங்கிய துளைக்கைக் கடவுளை
யாமிக வழுத்துவ தெவனோ அவனோற்
பிறந்ததிவ் வுலகின்பெருமூ தாதை
உரந்தரு சிரமரிந் தவற்கே, வரைந்தது
மேருச் சிமையத்து மீமிசை
வாரிச் செல்வன் மகள் மகன் மொழியே.

என்ற பாடலாகும். படைத்தற் கடவுளாகிய நான்முகனைச் சினந்த பேராற்றல் மிக்க முழுமுதற் கடவுளின் திருமகனுராகத் தோன்றியவர் மூத்த பிள்ளையாரென்றும், வேதப் பொருளாய் விளங்கும் விநாயகப் பெருமான் தன்னை வழிபடும் மெய்யடியாராகிய வியாச முனிவர்க்கு எளிவந்து தோன்றி அவர் சொல்லிய மாபாரதக் கதையினை மேருமலையில் எழுதியருளினுரென்றும் அக்கடவுளது அருமையிலெளிய அழகினை இத்திருப்பாடலில் அதிராவடிகள் போற்றிப் புகழ்ந்துள்ளமை காணலாம். இதன்கண் பழிப்பதுபோலப் புகழ்தல் என்னும் அணிநலம் அமைந்திருத்தல் காண்க. ஈண்டு 'வாரிச்செல்வன் மகள்' என்றது கடலில் மீன்பிடிக்குந் தொழிலுடைய பரதவனுக்கு மகளாகிய மச்சகந்தியை. பராசர முனிவர் அவளைக் கூடிய நிலையிற் பிறந்த புதல்வர் வியாச முனிவராதலின் அவரை 'வாரிச் செல்வன் மகள் மகன்' என்ருர் ஆசிரியர்.

சிந்தையும் மொழியும் செல்லாத நிலையில் அப்பாற்பட்டுத் திகழ்தலும், ஞாயிறு திங்கள் தீயென்பவற்றைக் கண்களாகக் கொண்டு உலகத்திற்கு விளக்கந் தருதலும், கல்லால் நீழலில் முனிவர் நால்வர்க்கு அறமுதலாகிய அருமறைப் பொருளைத் தெளிய அறிவுறுத்தலும் ஆகிய சிவபெருமானுக்குரிய இயல்புகளை அவர் பெற்றருளிய மூத்த பிள்ளையார்க்கு இயைத்துரைப்பதாக அமைந்தது,

மொழியின் மறைமுதலே முந்நயனத் தேறே
கழிய வருபொருளே கண்ணே – தெழிய
கலாலயனே எங்கள் கணபதியே நின்னை
அலாதையனே சூழாதென் அன்பு.

என்ற பாடலாகும். சிவபெருமானும் அவர் பெற்றருளிய மூத்த பிள்ளையாரும் பொருளால் ஒருவராதலேயன்றிப் பண்பு உறுப்பு செயல் என்பவற்றாலும் ஒருவராயுள்ள இயைபினை இத் திருப்பாடல் அறிவுறுத்தல் காணலாம். இவ்வாறே இம்மும் மணிக்கோவையின் பத்தாம் பாடலும் 'மஞ்சேறு கயிலை மலைகிழவோயே' என விநாயகப் பெருமானைக் கயிலை மலையில் வீற்றிருக்கும் கடவுளாகப் போற்றி அழைக்கின்றது. இக்குறிப்புக்களை ஊன்றி நோக்குங்கால் சிவபெருமானும் மூத்தபிள்ளையாரும் ஒரு பரம்பொருளே யென்றவுண்மையை யுணர்ந்து வழிபட்ட திருவருட்செல்வர் அதிராவடிகளென்பது நன்கு விளங்கும்.

சிவபெருமான் தன் கையிலுள்ளதோர் மாங்கனியை மூவுலகங்களையும் விரைவிற் சுற்றி வருவார்க்குத் தருவதாகக் கூறினரென்றும், அதனைக் கேட்ட முருகப்பெருமான் மயில் மீதிவர்ந்து மூவுலகங்களையும் விரைவிற் சுற்றிவரச் சென்றனரென்றும், அந்நிலையில் விநாயகப் பெருமான் எல்லா வுலகமுமாய் விளங்கும் தம் தந்தையாகிய சிவபெருமானை வலம் வந்து அம் மாங்கனியை எளிதிற் பெற்றனரென்றும் வழங்கும் புராண கதையினை,

சுடர்ப்பிழம்பு தழைத்த அழற்றனி நெடுவேற்
சேய்மூ வுலகம் வலம்வர ஏய
கொன்றையம் படலந் துன்றுசடைக் கிடந்த
ஓங்கிருந்தாதையை வளாஅய் மாங்கனி
அள்ளற் றீஞ்சுவை யருந்திய
வள்ளற் கிங்கென் மனங்கனிந்திடுமே.

எனவரும் பாடலில் இந்நூலாசிரியர் குறிப்பிட்டுப் போற்றியுள்ளார். இறைவன் திரிபுரத்தை அழிக்கச் சென்ற

பொழுது விநாயகப் பெருமான் துணைபுரிந்த செய்தி இம் மும்மணிக்கோவையின் ஒன்பதாம் பாடலிற் குறிக்கப் பெற்றுளது. விநாயகப் பெருமானது திருமேனியின் தோற்றத்தைக் குறித்து இவ்வாசிரியர் புனைந்துரைப்பன கற்போர்க்குப் பெரிதும் சுவைபயப்பனவாம்.

10. திருவெண்காட்டடிகள்

திருவெண்காட்டடிகளென்பார் பதினொராந் திருமுறை ஆசிரியர்களுள் ஒருவராவர். இவர் சோழ நாட்டின் கடற்றுறைப்பட்டினமாகிய காவிரிப்பூம் பட்டினத்திற் பிறந்தமையாற் பட்டினத்துப்பிள்ளையாரெனவும் வழங்கப் பெறுவர். இவர்க்குப் பெற்றோர் இட்ட பெயர் திருவெண் காடர் என்பது. செல்வக் குடும்பத்திற் பிறந்து மனைத்தக்க மாண்புடைய மங்கையை மணந்து மனைவாழ்க்கை நடத்திய இப்பெரியார், பிறவிநோய்க்குக் காரணமாகிய அவாவை அறவே நீத்துத் துறவறத்தை மேற்கொண்டமையால் திருவெண்காட்டடிகளெனவும் பட்டினத்தடிகளெனவும் அடிகள் என்ற சொல்லாற் போற்றப் பெறுவாராயினர். அடிகள் என்ற இச்சொல் துறவறநெறியில் நின்றார்க்கே சிறப்பாக வுரியதென்பது "குணவாயிற் கோட்டத்து அரசு துறந்திருந்த, குடக்கோச் சேரல் இளங்கோவடிகட்கு" எனவரும் சிலப்பதிகாரப் பதிகத் தொடராலும் "அடிகள் என்றது துறத்தலான்" என அடியார்க்கு நல்லார் எழுதிய விளக்கவுரையாலும் நன்கு தெளியப்படும்.

பதினொராந் திருமுறையுள் திருவெண்காட்டடிகள் இயற்றியனவாகக் கோயில் நான் மணிமாலை, திருக்கழு மலமும்மணிக்கோவை, திருவிடைமருதூர் மும்மணிக் கோவை, திருவேகம்பமுடையார் திருவந்தாதி, திரு வொற்றியூர் ஒருபா ஒருபது என ஐந்து பிரபந்தங்கள் சேர்க்கப் பெற்றுள்ளன. இப்பனுவல்கள் யாவும் சொற் செறிவும் பொருட்பொலிவு முடையனவாய்க் கற்பார்க்கு நவிலுந்தோறும் சுவைபயப்பனவாக வுள்ளன. இப் பிரபந்தங்களை அன்றி அடிகள் பாடியனவாக வேறுபல தனிப்பாடல்கள் 'பட்டினத்துப்பிள்ளையார் பாடற் றிரட்டு என்ற பெயருடன் வழங்குகின்றன. பதினொராந் திருமுறையில் திருவெண்காட்டடிகள் பாடிய பிரபந்தங் களும் மேற்குறித்த பட்டினத்துப்பிள்ளையார் திருப்பாடற்

றிரட்டிலுள்ள பாடல்களும் சொல்நடை பொருளமைதி என்பவற்றாற் பெரிதும் மாறுபட்டுள்ளன. பட்டினத்துப் பிள்ளையார் திருப்பாடற்றிரட்டில் ஏகரித்து, ஒப்பாரி, ஒய்யாரம், கலங்கிறண்டா, சவ்வாது, சலவை, சொகுசு, தாவாரம், பல்லாக்கு, பொக்கசம். பொம்மலாட்டம், போச்சுதடி, மாய்கை, மாங்கிஷம், முழித்திருந்து, வங்கிஷம் வேட்டி, வேலை மினக்கிட்டு முதலிய பிற்காலச் சொற்களும் பிழைபட்ட சொல்லுருவங்களாகிய இழிசினர் வழக்குச் சொற்களும் இடம்பெற்றுள்ளன. பதினொராந் திருமுறையில் சேர்க்கப்பெற்றுள்ள திருவெண்காட்டடிகள் பிரபந்தங்கள் ஐந்தும் சங்கச்சான்றோர் மேற்கொண்ட தூய செந்தமிழ் நடையில் அமைந்துள்ளன. எனவே 'பட்டினத்துப் பிள்ளையார் திருப்பாடற் றிரட்டு' என்ற பெயருடன் வழங்கும் பாடற்றொகுதி பதினொராந் திருமுறையாசிரியருள் ஒருவராகிய திருவெண்காட்டடிகள் வாக்கல்ல என்பதும் இத்திருப்பாடற்றிரட்டிலுள்ள பாடல்களைப் பாடிய சான்றோர் திருவெண்காட்டடிகளுக்கு நெடுங்காலம் பிற்பட்டுத் தோன்றிய வேறொருவரென்பதும் நன்கு துணியப்படும்.

திருவெண்காட்டடிகளது உண்மை வரலாற்றினை அறிந்துகொள்ளுதற்குரிய சான்றுகள் கிடைக்கவில்லை. அடிகளது வரலாற்றை விரித்துரைக்கும் நோக்கத்துடன் பிற்காலத்தில் இயற்றப்பட்ட நூல் பட்டினத்துப்பிள்ளையார் புராணம் என்பது. பட்டினத்தடிகள் மரபினராய்த்தில்லையில் வாழ்ந்த வணிகர்களது வேண்டுகோளின்படி இப் புராணத்தைப்பாடியதாக இந்நூலாசிரியர் கூறுகின்றார். இவ்வாசிரியரது பெயர் தெரியவில்லை. பட்டினத்தடிகள் வரலாறுகளாகத் தம் காலத்தில் வழங்கிய செய்திகளை இவ்வாசிரியர் இப்புராணத்தில் தொகுத்துக்கூறியுள்ளார்.

காவிரிப்பூம்பட்டினத்தில் வணிகர் குடும்பத்திலே திருவெண்காடர் அவதரித்தார். அவர் வாணிகத்தாற் பெரும் பொருளீட்டிச் சிவனடியார்களை உபசரித்து வந்தார். திருவிடைமருதூரில் எழுந்தருளிய சிவபெருமான் தன்னை அன்பினால் வழிபாடுசெய்யும் சிவசருமரது வறுமையைப் போக்கி அருள் புரியக்கருதி மருதவாணர் என்னும் பார்ப்பனப் பிரமசாரியாய் வந்து தன்னை விற்றுப் பொருள்

பெறுக எனச் சிவசருமர்க்குக்கூறி அவருடன் காவிரிப்பூம் பட்டினத்தை அடைந்து திருவெண்காடரிடம் விலையாகக் கொடுக்கப் பெற்றுச் சிவசருமர்க்குப் பெரும் பொருளைத் தரும்படி செய்தருளினர். பொருளைப் பெற்று மகிழ்ந்த சிவசருமர் இடைமருதினை அடைந்து திருமணஞ் செய்து கொண்டு சிவபூசையினைத் தவருது செய்து வந்தார்.

திருவெண்காடர் தம் புதல்வனெனப் பேரன்புடன் பேணிப் போற்ற வளர்ந்த மருதவாணர், வாணிகத் துறையில் வல்லவராய்ப் பெரும் பொருளீட்டித் தம் தந்தையை மகிழ்வித்தார். வணிகர் சிலருடன் கடல் கடந்து சென்று வணிகம் புரிந்து வரும் நாட்களில் மருதவாணர் தாம் ஈட்டிய பொருளைத் திருக்கோயிற் பணிக்கும் சிவனடியார்களுக்கும் செலவிட்டார். எஞ்சிய பொருளைக்கொண்டு எருமுட்டைகளை நிறைய வாங்கிக் கொண்டு உடன்வந்த வணிகருடன் ஊர்க்குத் திரும்பினர். வரும் வழியில் அவர்கள் ஏறிய கப்பல் திசைமாறிப் போயிற்று. உடன் வந்த வணிகர்கள் உணவு சமைத்தற்கு விறகின்றி மருதவாணர் கொணர்ந்த எரு முட்டைகளைக் கடனகக் கேட்டுப் பெற்றனர். ஊர் சென்றவுடன் அவற்றுக்கு ஈடு தருவதாக உறுதிச் சீட்டும் எழுதிக் கொடுத்தார்கள். சில நாளில் அவர்களெல்லோரும் காவிரிப் பூம்பட்டினத்தை அடைந்தார்கள். மருதவாணர் தாம் கொணர்ந்த எருமுட்டைகளை இல்லத்திற் கொண்டு சேர்த்தார். அவருடன் வந்த வணிகர் சிலர் திருவெண்காடரை யடைந்து மருதவாணர் வீணே பொருளைச் செலவிட்டுப் பித்தராஞர் எனத் தெரிவித்தார்கள். மருதவாணர் கொணர்ந்த வரட்டிகளுள் ஒன்றைத் திருவெண்காடர் சோதித்தபொழுது அதனுள்ளே மாணிக்க மணியிருத்தலைக் கண்டு வியந்தார். அஃதுணர்ந்த வணிகர்கள் தாம் கடனகப் பெற்ற எருமுட்டைகளின் விலை மதிப்பினையெண்ணிக் கவலையுற்ருர்கள். அவர்கள் சென்றபின் திருவெண்காடர் எல்லா வரட்டிகளையும் சோதித்துப் பார்த்தார். அவற்றுளொன்றிலேனும் மாணிக்க மணிகளில்லாமை தெரிந்து வருத்தமுற்ருர். இவ்வாறு பிழைபட நடந்த மருதவாணரை தண்டிக்குங் கருத்துடன் தனியறையினுள்ளே பூட்டி வைக்கச் செய்தார். திருவெண்காடரது மனைவியார் தமது வளர்ப்புப் புதல்வராகிய மருதவாணரைக்

காணச் சென்றார். சிவபெருமான் முருகவேள் நடுவாக உமையம்மையாருடன் எழுந்தருளிய திருக்கோலத்தைக் கண்டு மகிழ்ந்து அவ்வியப்புடைய செய்தியைத் தம் கணவர்க்கும் தெரிவித்தார். அவ்வருட்காட்சியைக் கண்ட திருவெண்காடர், அவ்வறையைத் திறந்து பார்த்தபொழுது மருதவாணர் மட்டும் தனித்திருத்தலைக் கண்டார். தாம் செய்த பிழையினைப் பொறுத்தருளும்படி மருதவாணரைப் பணிந்து வேண்டினர். மருதவாணர் மெய்ந்நூற் பொருளைத் திருவெண்காடர்க்கு உபதேசித்தார். எனினும் பெருஞ்செல்வராகிய திருவெண்காடர்க்கு உலகப் பற்றொழியவில்லை. அப்பற்றினை யொழித்தற்கு மருதவாணர் ஓர் உபாயஞ் செய்தார். காதற்றவூசியை இழை பிரிந்த நூலுடன் பட்டுத்துணியில் மடித்துப் பெட்டியில் வைத்து அப்பெட்டியை அவர் மனைவியார் கையிற் கொடுத்து 'நுமது கணவர்க்குரிய பொருள் இதுவாகும். இதனை அவரிடம் கொடுப்பீராக' எனச் சொல்லி அவ்விடத்தை விட்டு அகன்று மறைந்தருளினர்.

திருவெண்காடர் தம் மனைவியார் தந்த பெட்டியைத் திறந்து பார்த்து அதனுள்ளே காதற்ற ஊசியும் நூற்சரடும் இருத்தல் கண்டு நெடிது நினைந்து இறைவனது திருக்குறிப்பை உணர்ந்து கொண்டார். நிலையில்லாத இவ்வுலக வாழ்வை நிலையுடையதென எண்ணி மகிழ்தல் தவறெனவுணர்ந்தார். யான் எனது என்னும் இருவகைப் பற்றுக்களையும் அறவே நீத்துத் துறவறமாகிய தூய நெறியினை மேற்கொண்டார். தமது மாளிகையைத் துறந்து ஊரம்பலத்தையடைந்தார். 'நீர் துறவடைந்து பெற்ற பயன் யாது' என அரசன் வினவியபொழுது 'நீ நிற்கவும் யாம் இருக்கவும் பெற்ற தன்மையே அது' என மறுமொழி பகர்ந்து மோன நிலையில் அமர்ந்திருந்தார்.

அடிகள் பலர் வீடுகளிலும் பிச்சையேற்றலைக் கண்டு வெறுப்புற்ற உறவினர் சிலர் அவரது தமக்கையாரைக் கொண்டு நஞ்சு கலந்த அப்பமொன்றை அடிகளுக்குக் கொடுக்கச் செய்தனர். அதனையுணர்ந்த அடிகள் 'தன்வினை தன்னைச்சுடும் ஓட்டப்பம் வீட்டைச் சுடும்' என்று சொல்லி அதனை வீட்டின் இறப்பிற் செருகினர். வீடு தீப்பற்றியெரிந்தது. அடிகள் சில நாள் அங்கமர்ந்திருந்து தம் தாயார் இறந்தபொழுது சில பாடல்கள் பாடி அவருடல்

வெந்து நீறாகும்படி செய்தார். இவ்வாறு தாயார்க்கு ஈமக்கடனை முடித்த அடிகள், திருவெண்காட்டீசரைப் பணிந்து திருவிடைமருதூரையடைந்து மருதப்பிரானை வழிபட்டிருந்தார். ஒரு நாள் நீர் வேட்கையால் வருந்திய பொழுது இடைமருதீசனே தண்ணீர் கொணர்ந்து தரப் பருகி மகிழ்ந்தார். பின்பு திருவாரூர் முதலிய தலங்களை வணங்கிப் பல அற்புதங்களை நிகழ்த்தித் திருவெண்காட்டில் தங்கியிருந்தார். தம் தலைமைக் கணக்கராகிய சேந்தனாரை அரசன் சிறைப்படுத்தின செய்தியை அவர் புதல்வன் சொல்லக் கேள்வியுற்ற அடிகள், 'மத்தளை தயிருண்டானும்' என்ற பாடலைப் பாடினார். அப்பொழுதே சிவகணங்கள் சேந்தனாரைச் சிறையினின்றும் மீட்டு அடிகள் திருமுன்னர்க் கொணர்ந்து நிறுத்தின. சேந்தனாரும் அடிகளைப் பணிந்து பிறவிச் சிறையிலிருந்து உய்தற்குரிய நெறிமுறைகளை உணர்ந்து மகிழ்ந்தார். பின்பு திருவெண்காட்டடிகள் சீகாழிப்பதியையடைந்து தோணியப்பரைப் பாடிப் போற்றினார். தில்லைக்குச் சென்று பொன்னம்பலவாணனையிறைஞ்சிக் கோயில் நான்மணிமாலை பாடினார். அங்கு அடிகள் பசியால் வருந்தியபோது சிவகாமியம்மையே உணவளித்துப் பசிதீர்த்தருளினார். பின்பு பல தலங்களைப் பரவிப் போற்றிக் காஞ்சியையடைந்தது திருவேகம்பவாணரைத் தரிசித்துத் திருவேகம்பர் திருவந்தாதி பாடினார். திருவொற்றியூரையடைந்து ஒருபா ஒருபது என்னும் பிரபந்தத்தைப் பாடி இறைவனைப் போற்றி மகிழ்ந்தார்.

இவ்வாறு திருவெண்காட்டடிகள் திருவொற்றியூரில் தங்கியிருக்கும் நாட்களில் ஒரு நாள் கடற்கரையையடைந்து அங்கு விளையாடும் சிறுவர்களுடன் தாமும் விளையாடுவார் போன்று திடீரென ஒரு மணற் குன்றில் தோன்றி மறைந்து வேறொரு பக்கம் வெளிப்பட்டார். அதனைக் கண்டு அதிசயித்த சிறுவர்களை யழைத்துத் தம்மை மணலால் மூடச்செய்து வெளிவருவதும் மறைவதுமாக விளையாட்டுக் காட்டி, முடிவில் வெளிப்படாது மறைந்தனர். அடிகளைக் காணாது சிறுவர்கள் மணலைத் தோண்டிப் பார்த்தபொழுது அடிகள் சிவலிங்கமாக வெளிப்பட்டனர்" எனப் பட்டினத்துப் பிள்ளையார் புராணம் கூறும்.

இனி, திருவெண்காட்டடிகள் சரித்திரமெனப் பிற் காலத்தார் பலரும் வழங்கிவரும் கதை மேற்காட்டிய பட்டினத்தடிகள் புராணத்திற்குச் சிலவிடங்களில் மாறு பட்டிருத்தலைக் காணலாம்.

மண்ணுலகிலுள்ள திருத்தலங்கள் பலவற்றிலும் அம்மையப்பராகிய இறைவனது திருக்கோலத்தைக்கண்டு வழிபட எண்ணினான் குபேரன். செல்வத்தோழனாகிய அவனது விருப்பத்தை நிறைவேற்றத் திருவுளங்கொண்டு இறைவர் உமையம்மையாருடன் விடைமீதமர்ந்து காசி, காளத்தி, காஞ்சி, தில்லை முதலிய திருப்பதிகளில் எழுந் தருளிக் கயிலைக்காட்சியை வழங்கித் திருவெண்காட்டிற்கு எழுந்தருளினார். திருவெண்காட்டில் தங்கி இறைவனை வழிபாடுபுரியுங் குபேரன் அதனருகேயுள்ள காவிரிப்பூம் பட்டினத்தின் இயற்கையெழிலையும் செல்வப்பொலிவையும் கண்டு அங்குப் பலநாள் தங்கியிருக்க விரும்பினான். 'நீ காவிரிப்பூம் பட்டினத்தில் விருப்பம் வைத்தமையால் அங்குப் பிறப்பாயாக' என இறைவர் பணித்தருளினார். அம்மொழிகேட்டு மனங்கலங்கிய குபேரன் 'சிறியேன் மானிடப்பிறவியால் மதிமயங்குங் காலத்து அடியேனைத் தடுத்தாட்கொண்டு அருள்புரிதல் வேண்டும்' எனச் சிவபெருமானைப் பணிந்து வேண்டினான். இறைவரும் அங்ஙனமே அருள்புரிவதாகத் திருவாய்மலர்ந்து திருக் கயிலைக்கு எழுந்தருளினார்.

காவிரிப்பூம் பட்டினத்திற் சிவநேசர் என்ற வணிகர் ஞானகலாம்பை யென்னும் மங்கையை மணந்து மனையறம் நிகழ்த்திவந்தனர். ஆண்மகவின்றி வருந்தும் அவ்விருவரது குறையினைப் போக்கக்கருதிய இறைவர், குபேரனை அவ் இருவர்க்கும் புதல்வனாகப் பிறப்பித்தருளினார். திருவெண் காடர் திருவருளாற் பிறந்த குழந்தைக்குத் திருவெண் காடரெனப் பெயரிட்டார்கள். வெண்காடர்க்கு ஐந்து வயது நிரம்பும் நிலையில் அவர்தம் தந்தையாராகிய சிவநேசர் இறைவனடிசேர்ந்தார். அன்னையார் திருவெண் காடரைப் பள்ளியிலமர்த்திக் கல்விபயிலச் செய்தார். கல்வி கேள்விகளில் வல்ல திருவெண்காடர் கற்றதனாலாய பயன் கடவுளடிதொழுதுய்தலே யெனத் தெளிந்தார், ஒருநாள் சிவபெருமான் வெண்காடர் கனவில் அந்தணராகத்

தோன்றி ' நாளை நீ திருவெண்காடு சென்று இறைவனை வழிபடுக. அங்கு வேதியரொருவர் வந்து நினக்குச் சிவ தீக்கை செய்வார் ' எனச் சொலலி மறைந்தனர். வெண் காடரும் தாம் கண்ட கனவை அன்னையாருக்குச் சொல்லி மறுநாட்காலை திருவெண்காட்டை யடைந்தார். அந் நிலையில் கனவில் தோன்றிய அந்தணரே அங்கு வந்து திருவெண்காடர்க்குச் சிவதீக்கை செய்து தாம் கொணர்ந்த சம்புடத்தை அவர் கையில் தந்தருளினர். அச் சம்புடத்தை வெண்காடர் வாங்கிய அளவில் அது, தானே திறந்து கொண்டது. அதனுள்ளே சிவலிங்கத் திருமேனியும் விநாயகர் திருவுருவும் இருந்தலைக்கண்ட திருவெண்காடர் ஆசிரியர் கற்பித்தவண்ணம் அத்திருவுருவங்களை நாள் தோறும் பூசித்து வருவாராயினர். இறைவன் வெண்காடர் மாளிகையில் பொன்னினொடு நவமணிகள் பொலிந்து விளங்கச் செய்தருளினன். திருவெண்காடர் சிவகலை யென்னும் நங்கையை மணந்து மனையறம் நிகழ்த்தி வருங்கால் மகப்பேறின்றி வருந்தி இறைவனைப் பூசித்து வந்தார்.

திருவிடைமருதூரில் மகாலிங்கப் பெருமானை வழிபடும் சிவசருமரென்பார் சுசீலையம்மையை மணந்து அரன் பூசையிலும் அடியார்க்குத் திருவமுதளித்தலிலும் தம்மிடத் துள்ள பொருளைச் செலவிட்டுவந்தார். வறுமையால் வருந்தும் அவ்வேதியரது வருத்தத்தை நீக்கத் திருவுளங் கொண்ட இடைமருதீசன் அவரது கனவில் தோன்றி 'அன்புமிக்கீர் நமது தீர்த்தக்கரையிலுள்ள வில்வமரத்து அடியில் நாமே ஒரு குழந்தையாக வந்துள்ளோம். நீவிர் அக்குழந்தையை எடுத்துக்கொண்டு காவிரிப்பூம்பட்டி னத்தை யடைந்து வெண்காடரென்னும் வணிகரிடங் கொடுத்து அக்குழந்தையளவு நிறையுள்ள பொன்னைப் பெற்று உமது வறுமையைத் தவிர்ப்பீராக ' என்று கூறி மறைந்தார். அம்மொழியினைக் கேட்ட சிவசருமர் மனைவி யுடன் வில்வமரத்தடியை யடைந்து குழந்தையைக் கண்டு எடுத்து மகிழ்ந்தார். அவ்விருவரும் குழந்தையை விற்க மனமிலராய் வீடுதிரும்ப எண்ணினராயினும் இறைவன் அருளால் வழிதவறிச்சென்று முடிவில் காவிரிப்பூம்பட்டி னத்தை யடைந்தனர். அவர்களது வரவினை இறைவர் கனவிடைச் சென்று அறிவிக்க வுணர்ந்த திருவெண்காடர்

அவர்களை வரவேற்று உபசரித்துக் குழந்தையளவு நிறை உள்ள பொன்னைக் கொடுத்துக் குழந்தையைப் பெற்றுக் கொண்டார். பொன்பெற்ற சிவசருமர் மனைவியுடன் திருவிடைமருதூரை யடைந்து இறைவனை வழிபட்டு வாழ்ந்திருந்தார்.

திருவெண்காடர் இடைமருதீசனருளாற் கிடைத்த குழந்தைக்கு மருதப்பிரான் எனப் பெயரிட்டு வளர்த்து வந்தார். பெற்றோர் மகிழப் பல அற்புதங்களை நிகழ்த்திய மருதப்பிரான், வாணிகத்துறையில் வல்லவராய்ப் பெரும் பொருளீட்டித் தந்தையை மகிழ்வித்தார். அவர் ஒருமுறை வணிகர் சிலருடன் கடல்கடந்து வாணிகம் நடத்திய பொழுது கிடைத்த ஊதியத்தை எல்லாம் திருக்கோயிற் பணிக்கும் சிவனடியார்க்குஞ் செலவிட்டு எஞ்சிய பொருளுக்கு வரட்டியும் அவல் கடலையும் வாங்கிக்கொண்டு ஊர் திரும்பினர். வரும்வழியிற் கடல்நடுவே கப்பல் திசை மாறினமையால் அவருடன் வந்த வணிகர்கள் உணவுப் பொருளும் விறகுமின்றி வருந்தினர்கள். அவர்கள் விரும்பிய வண்ணம் கடன் பத்திரம் எழுதி வாங்கிக் கொண்டு வரட்டிகளை அவர்களுக்குக் கடனாகக் கொடுத்தார். எல்லோரும் ஊர்க்கு வந்துசேர்ந்தார்கள். உடன் வந்த வணிகர் சிலர் திருவெண்காடரை யடைந்து அவருடைய மகன் மருதப்பிரானது செய்கையைக் கூறினார்கள். திருவெண்காடர் மருதப்பிரான் கொணர்ந்த வரட்டிகளு ளொன்றைச் சோதித்து அதனுள்ளே மாணிக்கமணி யிருத்தலைக் கண்டு வியந்தார். மருதப்பிரானைக் காண விரும்பித் தம் மாளிகையுட் சென்று எங்குந் தேடினார். அந் நிலையில் அவருடைய மனைவியார் எதிரே வந்து 'நம் புதல்வன் மருதப்பிரான் இப் பெட்டியைத் தங்களிடம் சேர்க்கும்படி சொல்லி வெளியே சென்றான்' என்று கூறிப் பெட்டியை அவரிடங் கொடுத்தார். திருவெண்காடர் பெட்டியைத் திறந்து பார்த்தார். அதனுள்ளே காதற்ற வூசியும் ஓலைச் சுருளொன்றும் இருந்தன. 'காதற்ற வூசி யும் வாராது காணுங் கடை வழிக்கே' என்ற தொடர் ஓலையில் எழுதப்பட்டிருந்தது. அதனைப்படித்த திருவெண் காடர் இவ்வுலக நிலையாமையை நன்குணர்ந்தார். உணர்ந்த அப்பொழுதே துறவறத்தை மேற்கொண்டார். தம் தலைமைக் கணக்கராகிய சேந்தனாரை யழைத்துத்

தமது நிதியறையை எல்லாருங் கொள்ளை கொள்ளத் திறந்து விடும்படி கட்டளையிட்டார். தமது மாளிகையைத் துறந்து ஊரம்பலத்தை யடைந்து சிவயோக நிலையில் அமர்ந்திருந்தார்,

திருவெண்காட்டடிகள் வீடு தோறுஞ் சென்று பிச்சை யேற்றுண்டலைக் கண்டு வெறுப்புற்று அடிகளைக் கொல்லத் துணிந்த அவருடைய தமக்கையார், நஞ்சு கலந்த அப்ப மொன்றை யுண்ணும்படி சொல்ல, அதனை யுணர்ந்த அடிகள், அப்பத்தைப் பிட்டு ஒருபாதியைத் தமக்கையார் குடியிருக்கும் வீட்டிறப்பிற் செருகினர். அவ்வளவே வீடு தீக்கு இரையாயிற்று. சில நாட் கழித்து அடிகளது அன்னை யார் சிவபதமடைந்தார். அவருடலை அடக்கஞ் செய்யக் கருதிய சுற்றத்தார் அதனைச் சுடுகாட்டிற்கு எடுத்துச் சென்று வழக்கம் போல விறகுகளை யடுக்கி அவற்றின் மேல் வைத்தார்கள். அந்நிலையில் அங்குப் போந்த திருவெண்காட்டடிகள் விறகுகளை நீக்கி அவற்றுக்கு மாறாக வாழைப் பட்டைகளை யடுக்கிச் சில பாடல்களைப் பாடி ஞானத்தீயால் தாயாருடல் வெந்து நீறாகும்படி செய்து ஈமக்கடனை நிறைவேற்றினர். மருதப்பிரானை வணங்க விரும்பித் திருவிடை மருதூரடைந்து சில நாள் தங்கி யிருந்தார். பின்பு பல தலங்களை வணங்கிக் கோகரணம் பணிந்து உஞ்சேனை மாகாளத்தை யடைந்து இறைவனை வழிபட்டு அந்நகரின் புறத்தேயுள்ள சிறு காட்டில் விநாயகர் ஆலயத்தில் சிவயோக நிலையில் அமர்ந் திருந்தார். இரவில் பத்திரகிரி மன்னன் அரண்மனையிற் புகுந்து அணிகலங்கள் பலவற்றைத் திருடிவரும் கள்ளர் கள் தாம் வேண்டிக்கொண்டபடி விநாயகர் அருள் செய்தமை யெண்ணி அவ்வழியிலுள்ள விநாயகர் கோயிலை யடைந்து விலைமதிப்பரிய மணிமாலை யொன்றைப் பிள்ளை யார்க்குப் போட்டு விட்டுச் சென்றார்கள். அப்போது இருட் போதாதலால் அவர்கள் சாத்திய மாலை கணபதி யருகே யோகநிலையி லமர்ந்திருக்கும் பட்டினத்தடிகள் கழுத்தில் விழுந்தது. யோக நிலையிலிருக்கும் அடிகள் அதனையறிந்திலர். சிறிது நேரத்திற்கெல்லாம் கள்வரைத் தொடர்ந்து பிடிக்க வந்த காவலர்கள் கணபதியாலயத் துள்ளிருக்கும் அடிகள் கழுத்தில் மணிமாலையைக் கண்டு இவனே கள்வனென்று சொல்லிப் பிடித்துச் சென்றனர்.

அடிகளைக் களவுப் பொருளுடன் கண்ட அரசனாகிய பத்திர கிரி மன்னன் அவரைக் கழுவேற்றுமாறு கட்டளையிட்டனன். காவலர் அடிகளைக் கழுமரத்தின் முன்னே கொண்டு நிறுத்தினர். அடிகள் தம் முன்னேயுள்ள கழுமரத்தைப் பார்த்து 'என் செயலாவது யாதொன்றுமில்லை' என்ற பாடலைப் பாடினார். கழுமரம் தீப்பற்றி யெரிந்தது. அதனை யுணர்ந்த பத்திரகிரி மன்னன் தன் பிழையைப் பொறுத் தருள வேண்டி அடிகளைப் பணிந்தான். தனது அரசியலைத் துறந்து அடிகளுக்கு மாணவனாயினன். அடிகள் தம் மாணாக்கராகிய பத்திரகிரியாரைத் திருவிடைமருதூர்க்குச் செல்லப் பணித்துத் தாம் பல தலங்களை வணங்கச் சென்றனர். தென்னாடடைந்த திருவெண்காட்டடிகள் திருவிடைமருதூரை யடைந்தார். அங்கு வந்த பத்திர கிரியாரை மேலைக்கோபுரவாயிலில் இருக்கப் பணித்துத் தாம் கீழைக் கோபுரவாயிலில் அமர்ந்திருந்தார். பத்திர கிரியார் நாடோறும் பிச்சை யேற்று வந்து தம் ஆசிரியர்க்கு அருத்திய பின் தாம் உண்டு எஞ்சியதைப் பசியால் வருந்தி அங்கிருந்த பெண் நாய்க்கு இட்டார். அன்று முதல் அந் நாய் அவரைப் பிரியாதிருந்தது. ஒரு நாள் சிவபெருமான் சித்தராக வந்து தாம் பசியால் வருந்துவ தாகப் பட்டினத்தடிகளிடம் கூறினர். அது கேட்ட அடிகள் 'யான் கந்தையும் மிகையென்ற எண்ணமுடையேன். என்பால் ஒன்றுமில்லை. மேலைக்கோபுரவாயிலில் ஒரு குடும்பியுள்ளான். அவன் உமது பசியைத் தீர்ப்பான்' என்றார். சித்தரும் அவர் சொல்லிய மொழியினை மேலைக் கோபுர வாயிலிருந்த பத்திரகிரியாரிடம் சொல்லி நின்றார். அம்மொழியினைக் கேட்ட பத்திரகிரியார் 'இரந் துண்ணும் ஓடும் எச்சிலுண்ணும் நாயுமா என்னைக் குடும்பி யாக்கி விட்டன' என்று வருந்தித் தம் கையிலுள்ள ஓட்டைக் கீழே யெறிந்தார். அவ்வோடு சிதைந்து நாயின் மேற்பட, நாய் இறந்து போயிற்று. அடியார்களது சேடத்தை யுண்டமையால் அந்நாய் காசியரசனுக்கு மகளாகப் பிறந்து வளர்ந்தது. மங்கைப் பருவமெய்திய பெண் தன் பழம் பிறப்புணர்ச்சியால் தாய் தந்தையருடன் திருவிடை மருதூரை அடைந்து பத்திரகிரியாரைப் பணிந்து நின்று 'அடி நாய் மீண்டும் திருவடிப் பேற்றுக்கே வந்தது' என்று கூறினள். பத்திரிகிரியார் அப்பெண்ணை யழைத்து வந்து பட்டினத்தடிகள் திருமுன்னர் நின்று

'எம்பெருமான் எச்சிலுண்ட நாய்க்கும் இப்பிறவி வரலாமோ' என வருந்தி முறையிட்டார். அடிகளும் சிவன் செயலுக்கு என் செய்யலாம்' என இறைவனைச் சிந்தித்தார். அப்பொழுது ஒரு பெருஞ் சோதி தோன்றியது. அச் சோதியில் இறைவன் ஆணையின்படி பத்திரகிரியார் அப்பெண்ணுடன் சென்று மறைந்தனர். சிவபிரானது பெருங் கருணைத்திறத்தை நினைந்துருகிய பட்டினத்தடிகள் 'இன்னும் என்னையும் என் வினையையும் இங்கு இருத்திவைத்தனைபோலும்' என இரங்கிக் கூறினார். அந் நிலையில் 'ஒற்றியூர்க்கு வா' என ஓர் அசரீரிஉண்டாயது. பின்பு அடிகள் திருவெண்காடு சென்று சேந்தனாரைச் சிறைமீட்டருளிச் சீகாழி, தில்லை, அண்ணாமலை, காஞ்சி முதலிய தலங்களைப்பணிந்து போற்றித் திருவொற்றியூரை அடைந்து இறைவனையிறைஞ்சி வரும் நாளில் ஒருநாள் கடற்கரையில் இடைச்சிறுவர்களுடன் விளையாடிக் கொண்டிருக்கும் நிலையில் மணலில் மறைந்து சிவலிங்கமாய் முளைத்தனர். பட்டினத்தடிகளைக்குறித்து அறிஞர்பலரும் எழுதிவரும் வரலாறு இதுவேயாகும்.

மேற்குறித்தவற்றுட் காணப்படாத செய்திகள் சில புலவர் புராணத்தில் பட்டினத்தடிகள் வரலாற்றில் இடம் பெற்றுள்ளன. சிவபெருமானே மருதப்பிரானாக வந்து உபதேசித்தும் திருவெண்காடர் உலகப்பற்றொழியவில்லையென்றும், அவருடைய நண்பராகவும் தையற்றொழிலில் வல்லவராகவும் விளங்கிய வயது முதிர்ந்த பாணரொருவர், தாம் இறக்குங்கால் தம் கையிலுள்ள காதற்றவூசிகளை எல்லாங்கொட்டி, 'போங்கால் இவைகூட வாரா' என்றொரு சீட்டெழுதிவைத்து எல்லாவற்றையுஞ் சேர்த்து முடிந்து தம் மனைவி கையில் தந்து, இம்முடிச்சினை வெண்காடரிடம் கொடுப்பாயாக என்றுசொல்லி இறந்தாரென்றும், அதனைப் பெற்ற திருவெண்காடர் உலக நிலையாமையை யுணர்ந்து துறவடைந்தார் என்றும் புலவர் புராணமுடையார் கூறுகின்றார். இச்செய்தி பட்டினத்தடிகள் புராணத்திலும் தொழூவூர் வேலாயுத முதலியார் முதலிய அறிஞர்கள் எழுதிய திருவெண்காட்டடிகள் சரித்திரத்திலும் காணப்படவில்லை. பட்டினத்தடிகள் தமக்கு முத்திப் பேறு எங்கு நிகழும் என ஐயுற்றுவருந்தியபோது சிவபெருமான் அடிகளிடம் பேய்க்கரும்பொன்றைத்தந்து 'இது

எந்தத் தலத்தில் தித்திக்குமோ அந்தத்தலமே உனக்குச் சிவகதியையளிக்குந்தலம்' எனக்கூறி மறைந்தருளினர் என்றும், அவர் தந்த நாணற்கரும்பினைக் கைக்கொண்ட அடிகள், தாம் சென்றதலங்கள் தோறும் அதனைமென்று சுவைபார்த்து முடிவில் திருவொற்றியூரை யடைந்த பொழுது அது தித்தித்தமையால் அவ்வூரில் தங்கியிருந்து கடற்கரையிற் சிவலிங்கமாயினரென்றும் புலவர் புராணம் கூறுகின்றது. இக்கூற்றிற்கேற்பப் பட்டினத்தடிகளின் திருவுருவத்தினை வரைந்தோர் அடிகள் திருக்கரத்திற் கரும்பினைத்தந்து எழுதியுள்ளார்கள். இனி, திருவெண் காட்டடிகள் திருவண்ணுமலையை யடைந்தபொழுது அங்கெதிர்ப்பட்ட உருத்திரகணிகையொருத்தியை விரும்பி அழைத்தனரென்றும், அவள் மறுத்து ஓடிய நிலையில் தம்பால் வெளிப்பட்ட சுக்கிலத்தை இலைக்கலத்திற் பெய்து விட்டு அடிகள் யோக நிலையில் அமர்ந்திருந்தாரென்றும், பின் அவள் இசைந்துவந்தபொழுது அடிகள் குறிப்பின்படி இலைக்கலத்திற் பெய்துவைத்திருந்ததனை விழுங்கிக் கருக் கொண்டு திருப்புகழாசிரியராகிய அருணகிரிநாதரைப் பெற்ருளென்றும் ஒரு கதை வழங்குகின்றது.

இங்கெடுத்துக்காட்டிய இக்கதைகளுட் பல பிற் காலத்தவரால் தம்மனம் போனவாறு புனைந்துரைக்கப் பட்டனவாகும்.

> "பாரனைத்தும் பொய்யெனவே பட்டினத்துப் பிள்ளையைப்போல்
> ஆரும் துறக்கை யரிதரிது"

எனத் தாயுமானப் பெருந்தகையாரால் வியந்து போற்றப் பெற்ற தூய துறவறச் செல்வராகிய பட்டினத் தடிகள் கணிகையொருத்தியைக் கண்டு கழிகாமுகராகி உள்ளத்துறுதியை யிழந்தாரெனக் கூறும் இக்கதையினை அறிஞர் அருவருத்தொதுக்குவர் என்பது திண்ணம். அன்றியும் பட்டினத்தடிகள் கி. பி. பத்தாம் நூற்ருண்டின் தொடக்கத்தில் இருந்தவர். திருப்புகழாசிரியராகிய அருணகிரிநாதரோ கி. பி. பதினைந்தாம் நூற்ருண்டில் வாழ்ந்தவர். இவ்விருவர்வாழ்ந்தகாலப் பகுதிக்கிடையே நானூருண்டுகள் இடையிட்டுள்ளன. இந்நிலையினை யுணர்வோர் மேற்காட்டிய கதை வரலாற்று முறைக்கு மாறுபட்டதென்பதனை நன்கு தெளிந்து கொள்வார்கள்.

இனி, பட்டினத்தடிகள் வரலாற்ரோடு தொடர்பு உடையனவாக வழங்கப்பெறுவனவற்றுள் அடிகளுடைய வாய்மொழிகொண்டு துணியத்தக்க வரலாற்றுக்குறிப்புகள் இவையென அறிந்து கொள்ளுதல் இன்றியமையாத தாகும்.

நெடுங்காலமாகச் சிவநெறியைக் கடைபிடித்து வந்த பண்புமிக்க பழங்குடியிற் பிறந்தவர் திருவெண்காட்டு அடிகளென்பது.

'ஆளெனப் புதிதின் வந்தடைந்திலம் அத்தநின்
தாளின் ஏவல் தலையின் இயற்றி
வழி வழி வந்த மரபினம்'

என அடிகள் இறைவனை நோக்கித் தம் குடும்ப இயல்பினைத் தெரிவித்துக்கொள்ளுதலாற் புலனும். தாம் செல்வக்குடும்பத்திற் பிறந்தமையும், மனைத்தக்க மாண்பு உடைய மனைவியொடுகூடி மனையறம் நிகழ்த்தினமையும், இரவலர்பலர்க்கும் வரையாது வழங்கி மக்களும் சுற்றமும் மகிழவாழ்ந்தமையும், அங்ஙனம் இல்லறத்தில் வாழும் நிலையிலே சிவபெருமானது திருப்பெயராகிய திருவைந்தெழுத்தினை அன்பினல் மறவாது ஓதிச் சித்தத்தைச் சிவன்பால் வைத்து வழிபட்டுவந்தமையும் ஆகிய தம் வாழ்க்கை அனுபவத்தினை,

"யாங்க ளெல்லாம்
பழுதின்றுயர்ந்த எழுநிலை மாடத்தும்
செந்தா துதிர்ந்த நந்தன வனத்தும்
தென்ற லியங்கும் முன்றி லகத்தும்
தண்டாச் சித்திர மண்டப மருங்கிலும்
பூவிரி தரங்க வாவிக் கரையிலும்
மயிற்பெடை யாலக் குயிற்றிய குன்றிலும்
வேண்டுழி வேண்டுழி யாண்டாட் டிட்ட
மருப்பினியன்ற வாளரி சுமந்த
விருப்புறு கட்டில் மீமிசைப் படுத்த
ஐவகை யமளி யணைமேற் பொங்கத்
தண்மலர் கமழும் வெண்மடி விரித்துப்
பட்டினுட் பெய்த பதநுண் பஞ்சின்
நெட்டணை யருகாக் கொட்டைகள் பரப்பிப்
பாயல் மீது பரிபுரம் மிழற்றச்
சாயல் அன்னத்தின் தளர்நடைபயிற்றி
...
மதியென மாசறு வதனம் விளங்கப்

புதுவிரை யலங்கல் குழல்மிசைப் பொலியும்
அஞ்சொல் மடந்தையர் ஆகந் தோய்ந்தும்
சின்னம் பரப்பிய பொன்னின் கலத்தில்
அறுசுவை யடிசில் வறிதினி தருந்தாது
ஆடினர்க் கென்றும் பாடினர்க் கென்றும்
வாடினர்க் கென்றும் வரையாது கொடுத்தும்
பூசுவன பூசியும் புனைவன புனைந்தும்
தூசு நல்லன தொடையிற் சேர்த்தியும்
ஐந்து புலன்களும் ஆர ஆர்ந்தும்
மைந்தரும் ஒக்கலும் மகிழ மனமகிழ்ந்
திவ்வகை யிருந்தோம் ஆயினும் அவ்வகை
மந்திர எழுத்தைந்தும் வாயிடைமறவாது
சிந்தை நின்வழிச் செலுத்தலின் அந்த
முத்தியும் இழந்திலம் தழுல்வ''

எனத் திருவிடைமருதூர் மும்மணிக் கோவையில் திருவெண்காட்டடிகள் விரித்துக் கூறியுள்ளார். அளவின் மிக்க பெருஞ் செல்வமுடையாரை உலக மக்கள் குபேரர் எனப் பாராட்டிப் போற்றுதலை இன்றும் காண்கின்றோம். நிதியின் கிழவனாகிய அளகை வேந்தனைப் போன்று வளமிகப்பெற்ற திருவெண்காட்டடிகளைப் பின்வந்தோர் குபேரனது அவதாரமென்றே புனைந்துரைத்துள்ளார்கள். அன்னோர் கூற்றினை உபசாரமெனக் கொள்வதல்லது உண்மை வரலாறாகக் கொள்ளுதற்கில்லை.

அடிகட்குப் பெற்றோர் இட்ட பெயர் 'வெண்காடன்' என்பதாகும். அடிகள் தமக்கு எளிவந்து அருள்புரிந்த இறைவனை நோக்கி 'வெண்காடனென்னுந் தரத்தினு மாயது நின்னடியாந் தெய்வத் தாமரையே' எனத் திருவிடைமருதூர் மும்மணிக் கோவையின் இறுதிப் பாடலில் உளமுருகிப் போற்றியுள்ளார். 'வெண்காடனாகிய என் தரத்திலும் நின் திருவடித்தாமரை எளிவந்து அருள் புரிந்தமைக்கு எளியேன் என்ன கைம்மாறு செய்ய வல்லேன்' என மருதப்பிரானை அடிகள் மகிழ்ந்து போற்றுதலால், அடிகளது பெயர் திருவெண்காடன் என்பது நன்கு புலனாதல் காண்க.

திருவெண்காடர் தரை வழியாகவும் கடல் வழியாகவும் பிறநாடுகட்குச் சென்று பெரும் பொருளை ஈட்டியவ ரென்பதும், தரை வழியாகச் செல்லுங்கால் கள்வர் முதலா யினரால் நேரும் துன்பங்களையும் கடல் வழியாகச்

செல்லுங்கால் கடல் நடுவே நேரும் இடையூறுகளையும் நன்குணர்ந்தவரென்பதும்,

அருளா வயவர் அம்பிடை நடந்தும்
இருளுறு பவ்வத் தெந்திரங் கடாஅய்த்
துன்றுதிரைப் பரப்பிற் குன்று பார்த் தியங்கியும்

எனவரும் அடிகளது வாய்மொழியால் உய்த்துணரப்படும். அன்றியும் அடிகள் தாம் பாடிய கோயில் நான் மணிமாலை 16–ஆம் பாடலில் உடம்பினை மரக்கலமாக உருவஞ் செய்து பிறவிப்பெருங் கடலில் அது கவிழும் நிலையினைச் சுவை பெறக் கூறியுள்ளார். முற்றுருவக அணியமைந்த அப் பாடற் பொருளைக் கூர்ந்து நோக்குங்கால் அதனைப் பாடிய திருவெண்காட்டடிகளுக்குக் கப்பல் யாத்திரையில் நிரம்பிய பயிற்சியுண்டென்பது இனிது விளங்கும்.

சேணுயர் மருத மாணிக்கத் தீங்கனியை விளைவித்துக் கொள்ள முயன்ற மேலோராகிய தொண்டரது உழவு முறையையும், அவ்வுழவினில் ஈடுபடாது மனமெனும் புனத்தை வறும் பாழாக்கிய ஏனைக் கயவரது இழிவையும் திருவிடைமருதூர் மும்மணிக் கோவையின் பத்தாம் பாடலில் அடிகள் நயம்பெற விளக்கியுள்ளார். அடிகள் உழவு தொழிலையும் நன்றாக உணர்ந்தவரென்பதற்கு இப்பாடல் தக்க சான்றாதல் காணலாம்.

திருவெண்காடர் தம் குலம் விளங்குதற்குரிய மக்கட் பேறின்றி வருத்தமுற்றாரென்றும், அவரது துயரைப்போக்கத் திருவுளங் கொண்ட இடைமருதீசனே சிவசருமரென்னும் வேதியர்பால் குழந்தையாக வந்து தன்னைத் திருவெண்காடர்க்கு விற்கும்படி செய்து வெண்காடரால் வளர்க்கப் பெற்றுப் பல திருவிளையாடல்களை நிகழ்த்தி மறைந்தருளினனென்றும் வழங்கும் கதையினைப் பட்டினத்தடிகள் வரலாறு கூறுவோர் அனைவரும் விடாது கூறி வருகின்றார்கள். இத்தகைய திருவிளையாடல்களை இறைவன் தன்னடியார்க்கு அருள் செய்தற்பொருட்டு எக்காலத்தும் செய்தருள்வானென்பதிற் சிறிதும் ஐயமில்லை. இது கொண்டு அடியார் வரலாறுகள் எல்லாவற்றிலும் இறைவனுடைய அற்புத நிகழ்ச்சிகளைப் புகுத்திக் கூறுவதென்பது பிற்காலத் தலபுராண ஆசிரியர்களிடை வழக்கமாக நிலைபெற்றுவிட்டது.

'மைந்தரும் ஒக்கலும் மகிழ மனமகிழ்ந்து
இவ்வகை யிருந்தோம்'

எனத் திருவெண்காட்டடிகள் தம் வாழ்க்கையனுபவத்தினை விரித்துக் கூறினமை முன்னர் விளக்கப்பெற்றதாதலின் அடிகளுக்கு மைந்தரில்லையென ஒருதலையாகத் துணிந்து கூறுதற்கு இடமின்மையுணர்க.

உயிர்க்குயிராகிய சிவபெருமானே புறத்தே ஆசிரியத் திருமேனி கொண்டு எழுந்தருளி வந்து மெய்ப்பொருளை அறிவுறுத்தித் திருவெண்காடரை ஆட்கொண்டருளினன் என்பது,

நானே பிறந்து பயன் படைத்தேனயன் நாரணனெங்
கோனே யெனத்தில்லையம்பலத்தே நின்று கூத்துகந்த
தேனே திருவுள்ளமாகி யென்தீமை யெல்லாமறுத்துத்
தானே புகுந்தடியேன் மனத்தே வந்து சந்திக்கவே.

எனவரும் கோயில் நான்மணிமாலைப் பாடலாலும்,

கரத்தினில் மாலவன் கண்கொண்டு நின்கழல் போற்ற நல்ல
வரத்தினை யீயும் மருதவப்பா மதியொன்று மில்லேன்
சிரத்தினு மாயென்றன் சிந்தையுளாகி வெண்காடனென்னுந்
தரத்தினு மாயது நின்னடி யாந்தெய்வத் தாமரையே.

எனவரும் திருவிடைமருதூர் மும்மணிக் கோவையின் இறுதிச் செய்யுளாலும் நன்கு புலனாதல் காண்க.

திருவெண்காடர் துறவடைந்தமைக்குக் "காதற்ற வூசியும் வாராது காணுங் கடை வழிக்கே" என்ற தொடர் எழுதப்பட்ட ஓலைச்சீட்டும் அதனுடன் இருந்த காதற்ற வூசியுமே காரணமாயின எனக்கூறுங் கதை அவரது மன வியல்புக்கு ஏற்புடையதாகத் தோன்றவில்லை. இத் தொடரே அவரைத் துறவடையத் தூண்டியிருக்குமாயின் இத்தொடர்ப் பொருளைத் தாம் பாடிய பதினொரா ந் திரு முறைப் பனுவல்களில் யாண்டேனும் அடிகள் சிறப்பாகக் குறிப்பிட்டிருப்பர். இத்தொடர் அடிகள் திருவாக்காகிய பதினொராந் திருமுறைப் பிரபந்தங்களில் எங்கும் குறிக்கப்படவில்லை. இத்தொடர்ப் பொருளுக்கு முரணாகச் செல்வம் நிறைந்த மனைவாழ்க்கையிலிருந்து கொண்டே திருவைந்தெழுத்தோதிச் சிவபெருமானை வழிபட்டு இம்மையின்பமும் வீடுபேறாகிய பேரின்பமும் ஒருங் கெய்தும் நிலையில் தாம் வையத்து வாழ்வாங்கு

வாழ்ந்த திறத்தினைத் திருவிடைமருதூர் மும்மணிக் கோவையில் 19–ஆம் பாடலில் அடிகள் தெளிவாக விளக்கியுள்ளார். திருவெண்காடர் மனந்திடுக்குற்ற நிலையில் திடீரெனத் துறவெய்தியவர் அல்லரென்பதும் மனை வாழ்க்கையில் வாழும் முறைப்படி வாழ்ந்து முறையாகத் துறவடைந்தவரென்பதும் அவர் பாடிய பிரபந்தங்களை ஊன்றிப் பயில்வார்க்கு இனிது விளங்கும். திருவெண்காடர் முதலிற் கடும்பற்றுள்ளமுடையராய் வாழ்ந்து தையற்றொழிலாளரும் தமக்கு நண்பராய் நற்பொருளைக்கூறி வந்தவருமாகிய பாணர் செய்த உபாயத்தால் விரைவில் துறவு பெற்றாரெனப் புலவர் புராணமுடையார் கூறுங் கதை,

> 'அறுசுவையடிசில் வறிதினி தருந்தாது
> ஆடினர்க்கென்றும் பாடினர்க்கென்றும்
> வாடினர்க்கென்றும் வரையாதுகொடுத்தும்
>
> இவ்வகையிருந்தோம்'

என அடிகள் தம் வாழ்க்கையனுபவத்தைப் பற்றிக் கூறும் வாய்மொழிக்கு முற்றிலும் முரணுதல் காண்க.

இனி, திருவெண்காட்டடிகளுக்குப் பத்திரகிரியார் மாணவர் என வழங்கும் கதைக்குத் தக்க சான்றுகள் கிடைக்கவில்லை.

> "ஒட்டுடன் பற்றின்றி யுலகைத் துறந்த செல்வப்
> பட்டினத்தார் பத்திரகிரி பண்புரைப்ப தெந்நாளோ"

எனத் தாயுமான அடிகள், செல்வர் வாழ்வில் வாழ்ந்து அதன்கண் ஒரு சிறிதும் பற்று வையாது உள்ளத்துறவுடையராய் வாழ்ந்த சான்றோர்களாகப் பட்டினத்தடிகளையும் பத்திரகிரியாரையும் ஒருங்கு கூறிப் பாராட்டிப் போற்றியுள்ளார். தாயுமான அடிகளாற் போற்றப் பெற்ற பத்திரகிரியார் என்பவரைப் பற்றிய தெளிவான வரலாற்றுக் குறிப்புக்கள் கிடைக்கவில்லை. பத்திரகிரியார் பாடியதாக அச்சிடப்பெற்று வழங்கும் மெய்ஞ்ஞானப் புலம்பலின் சொல் நடையினையும் பொருளமைதியினையும் கருத்தூன்றி ஆராயுங்கால் அந்நூலைப் பாடிய பத்திரகிரியார் திருவெண்காட்டடிகள் காலததிற்குப் பன்னூறாண்டுகள் காலத்தாற் பிற்பட்டவரென்பது நன்கு புலனாகும். பட்டினத்தடிகளையும் பத்திரகிரியாரையும் தாயுமான அடிகளார் ஒருங்கு கூறிப் போற்றிய குறிப்புக்கொண்டு அவ்விருவரும் ஒரு

காலத்திலிருந்தவர்களென்றும் பட்டினத்தடிகள்பால் உபதேசம் பெற்றுத் துறவு நிலையினை மேற்கொண்டு வாழ்ந்தவர் பத்திரகிரியாரென்றும் எண்ணுதற்கு இடமுண்டு. எனினும், இக் கதையினை வலியுறுத்தற்குரிய சான்றுகள் இல்லாமையினாலும் பத்திரகிரியார் பாடியதாக வழங்கி வரும் மெய்ஞ்ஞானப் புலம்பலின் சொற்பொருளமைதியினை நோக்குங்கால் அதனைப் பாடியவர் திருவெண்காட்டடிகள் காலத்தவரல்லரென்பதும் அடிகளுக்கு நெடுங்காலம் பிற்பட்டவரென்பதும் நன்கு துணியப்படுமாதலானும் பதினொராந் திருமுறையாசிரியர்களு ளொருவராகிய திருவெண் காட்டடிகளும் மெய்ஞ்ஞானப் புலம்பல் பாடிய பத்திரகிரியாரும் வேறு வேறு காலத்தில் வாழ்ந்தவரெனக் கொள்ளுதலே ஏற்புடையதாமென்க.

இனி, திருவெண்காட்டடிகள் திருவொற்றியூரிற் சிவப்பே றெய்தினர் என வழங்குஞ் செய்தி அடிகளது வரலாற்றொடு தொடர்புடைய தெனவே தெரிகிறது. இக்காலத்தில் திருவொற்றியூர்க் கடற்கரையில் பட்டினத்தடிகள் சமாதி யென்ற பெயருடன் திகழும் கோயில் பிற்காலத்திற் கட்டப்பட்டதென்றும் அடிகளது உண்மைச் சமாதியைக் கடல் கொண்டதென்றும் கூறுவர் சிலர். திருவொற்றியூரில் இப்பொழுதுள்ள சமாதியின் அமைப்பு முறையினைக் காண்போர் இக்கூற்றினை ஒருவாறு ஒப்புக் கொள்வார்கள். அடிகள் பாடிய பிரபந்தங்கள் ஐந்தினுள் இறுதிக்கண் அமைந்தது திருவொற்றியூர் ஒருபா ஒருபது என்பது பதினொராந் திருமுறைப் பிரபந்தங்களின் வைப்பு முறையினாற் புலனாகின்றது. எனவே அடிகள் திருவொற்றியூரில் தங்கி இறைவனை வழிபட்டிருக்கும் நாட்களில் இப்பிரபந்தத்தைப் பாடிப் போற்றித் திருவொற்றியூரிலேயே சிவபரம் பொருளோடு இரண்டறக் கலந்தனரெனக் கூறுதல் பெரிதும் பொருத்தமுடையதேயாகும்.

பட்டினத்துப் பிள்ளையார் திருப்பாடற்றிரட்டு என வழங்கும் பாடற்றொகுதியிலுள்ள பாடல்கள் திருவெண்காட்டடிகள் வாக்கல்ல வென்பதும், இத் திருப்பாடல்கள் பட்டினத்தார் என்ற பெயருடன் பிற்காலத்தில் வாழ்ந்த துறவறச் செல்வரொருவராற் பாடப்பெற்றன வென்பதும் முன்னரே விளக்கப்பட்டன. இப்பாடல்களை ஆதாரவாகக்

கொண்டு பட்டினத்துப் பிள்ளையார் புராணம், திருவெண் காட்டடிகள் சரித்திரம், புலவர் புராணம் என்னும் நூல் களில் திருவெண் காட்டடிகள் வரலாருகச் சொல்லப்பட்ட செய்திகள் அடிகளது உண்மை வரலாருகக் கொள்ளத் தக்கன அல்ல எனத் தெளிந்து கொள்ளுதல் வேண்டும்.

திருவிடைமருதூர் மும்மணிக் கோவையில்,

“ வித்தகப் பாடல் முத்திறத்தடியரும்
திருந்திய அன்பிற் பெருந்துறைப் பிள்ளையும்
...
விரும்பின கொடுக்கை பரம்பரற்கென்று
புரிகுழற் றேவியைப் பரிவுடன் ஈந்த
பெரிய அன்பின் வரகுண தேவரும்”

என இறைவனது பேரருள் பெற்ற பெருமக்களாகத் தேவார ஆசிரியர் மூவரையும் திருவாதவூரடிகளையும் வரகுண பாண்டியரையும் திருவெண்காட்டடிகள் குறிப் பிட்டுப் போற்றியுள்ளார். இங்குப் ‘பெரிய அன்பின் வர குண தேவர்’ என அடிகளாற் பாராட்டிப் போற்றப் பெற்றவர் கி. பி. எட்டாம் நூற்ருண்டின் இறுதியிற் பாண்டி நாட்டையும் சோழநாடு தொண்டை நாடுகளையும் ஆட்சி புரிந்த வேந்தர்பெருமாளுகிய முதல் வரகுண பாண்டிய ராவர். திருவெண் காட்டடிகள் வரகுண பாண்டியரது சிவபத்தியின் திறத்தைத் தம் பாடலிற் குறித்துப் போற்று தலை நோக்குங்கால் அடிகள் காலத்தில் வரகுண பாண்டிய ரது அன்பின் திறம் தமிழ் மக்களால் மறவாது போற்றப் பெற்று வந்தமை நன்கு புலனும். கி. பி. பத்தாம் நூற்ருண்டில் வாழ்ந்த நம்பியாண்டார் நம்பியருளிய பிரபந்தங்களுக்கு முன்னே திருவெண்காட்டடிகள் அருளிய பிரபந்தங்கள் பதினொராந் திருமுறையில் வரிசைப்படுத்தப் பெற்றிருத்தலை நோக்குங்கால் அடிகள் நம்பியாண்டார் நம்பிக்குக் காலத்தால் முற்பட்டவரென்பது நன்கு விளங்கும். ஆகவே திருவெண்காட்டடிகள் வாழ்ந்த காலம் கி. பி. ஒன்பதாம் நூற்ருண்டின் இறுதியும் பத்தாம் நூற்ருண்டின் தொடக்கமுமாம் எனக் கொள்ளுதல் பொருத்தமுடையதாகும்.

இனி, அடிகள் அருளிச் செய்தனவாகப் பதினொராந் திருமுறையில் கோயில் நான்மணிமாலை, திருக்கழுமல மும்மணிக்கோவை, திருவிடைமருதூர் மும்மணிக்கோவை,

திருவேகம்பமுடையார் திருவந்தாதி, திருவொற்றியூர் ஒருபாவொருபது என்னும் ஐந்து நூல்கள் சேர்க்கப் பெற்றுள்ளன. இப்பிரபந்தங்களிலுள்ள பாடல்கள் யாவும் இனிய ஓசையும் விழுமிய பொருளும் உடையனவாய்ப் படிக்குந்தோறும் சுவை நலங்களைத் தந்து இன்பஞ் செய் வனவாகும். முழுமுதற் பொருளாகிய சிவபெருமான் தில்லைச் சிற்றம்பலம், திருக்கழுமலம், திருவிடைமருது, திருச்கச்சி யேகம்பம், திருவொற்றியூர் முதலிய திருத்தலங்களிற் கோயில் கொண்டெழுந்தருளிய சிறப்பும், ஆட்பாலவராகிய மெய்யடியார்களுக்கு இறைவன் அருள் புரியும் திறமும், பிறவிப் பெருங்கடலில் வீழ்ந்து கரை காணாது நெடுங்காலமாகத் துன்புற்றுழலும் உயிர்களை அத் துன்பக்கடலினின்றும் இன்பக்கரையிற் கொண்டு சேர்க்கும் இனிய தெப்பமாகத் திகழ்வது இறைவனது திருவடித் துணையேயாமென்பதும், திருவைந்தெழுத்தாகிய மந்திரத் தினை மறவாது ஓதி இறைவனைச் சிந்தித்து வழிபடுமியல் புடையோர் இல்லறம் துறவறமாகிய எந்த நிலையிலிருந்தா லும் அழிவிலாப் பேரின்பவாழ்வைப் பெற்றின்புறுவரென்ப தூஉம், இறைவனடியார்க்குத் தொண்டுபட்டு வீடுதோறும் பிச்சையேற்றுண்டு திரியும் வாழ்வு வேந்தர் வாழ்க்கை யினும் மேம்பட்ட பெருமிதத்தை விளைக்குமென்பதும், உயிர்களின் நலங்கருதி இறைவன் உலகங்களைத் தோற்று வித்துக் காத்து ஒடுக்கி அருள்புரிவன் என்பதும் முதலிய உயர்ந்த உண்மைகள் இப்பிரபந்தங்களில் தெளிவாக அறிவுறுத்தப்பெற்றுள்ளன. இப்பனுவல்கள் திருவெண் காட்டடிகளது செந்தமிழ்ப் புலமையினையும் நுண்ணறிவின் மாட்சியினையும் உலகியல் வாழ்வில் அவர் பெற்ற சிறந்த அனுபவங்களையும் திருவருட் பேற்றினையும் இனிது புலப் படுத்துவனவாதல் உணர்ந்து மகிழ்தற்பாலதாகும்.

சிறந்தோனாயெ இறைவன் எழுந்தருளியிருக்குமிடம் கோயில் எனப்படும். சிவநெறிச் செல்வர்களாற் கோயில் எனச் சிறப்பித்துப் போற்றப்பெறுவது பெரும்பற்றப் புலியூ ராகிய தில்லைச் சிற்றம்பலப் பெருங்கோயிலேயாம். உல கெலாம் உணர்ந்து ஓதற்கரிய இறைவன் அளவில் பேரொளி திகழ ஐந்தொழிற்கூத்தியற்றி எவ்வுயிர்க்கும் அருள்சுரக்கும் பேரருள் நிலையமாகிய தில்லையம்பலத்தைப் போற்றுங் கருத்துடன் திருவெண்காட்டடிகள் பாடிய

செந்தமிழ்ப்பனுவல் கோயில் நான்மணிமாலை யென்ப தாகும். வெண்பா, கலித்துறை, விருத்தம், அகவல் என்னும் நால்வகைப்பாக்களும் ஒன்றன்பின்னொன்றாக அந்தாதித் தொடையமையத் தொடுத்துவர வெவ்வேறு நிறமுடைய நால்வகை மணிகளால் தொடுக்கப்பெற்ற மாலை போன்று திகழ்வதாதலின் இது நான்மணிமாலையென்னும் பெயர்த் தாயிற்று. இது நாற்பது செய்யுட்களாற் பாடப்பெற்றுளது. நான்மணி மாலையென்னும் செந்தமிழ்ப் பனுவலுக்குரிய மூல இலக்கியமாக நமக்குக் கிடைத்துள்ள பிரபந்தம் இக் கோயில் நான்மணிமாலையே எனக் கூறுதல் பொருந்தும்.

"சொல்லின் அளவும் பொருளின் அளவுமாகிய இரு வகை எல்லைகளையுங் கடந்து தங்களை மறந்து நின்னையே நினைப்பவர்களாகிய மெய்யடியார்களுடைய தூயவுள்ளத்திலும் செம்பொன்னாலாகிய தில்லையம்பலத்திலும் திருநடனம் செய்தருளும் சிவபெருமானே, நீ மலையரையன் மகளும் திருமாலின் தங்கையுமாகிய பார்வதியைத் திருமணம் புணர்ந்த நாளில் நினக்குரிய கொன்றைமலர்மாலை, இடபக் கொடி, தமருகப்பறை, கங்கையாறு, விரையாக்கலியென்னும் திருவாணை, அயிராவணமாகிய வெள்ளை யானை, வேதமாகிய குதிரை, வானநாடு, மேருமலை, தில்லைப்பதி என்னும் பத்துறுப்புக்களையும் நினக்குரிய பதினாயிரம் பெயர்களுடன் புகழ்ந்து பாடித் திருமணப்பந்தரில் தேவர்களுக்கு முன்னே புகுந்து நின்னை அறுகும் மலரும் புனைந்து வாழ்த்திய மெய்யடியார்களாகிய நின் சுற்றத்தார்கள் நினக்குத் திருமணப் பரிசளித்துத் தாம் கலந்து கொண்ட செய்தியினை அங்கு எல்லோருங் காண வைக்கப்பட்டிருந்த வரிநெடும் புத்தகத்தில் எழுதி இருப்பார்களல்லவா? அவர்களுடைய பெயர்கள் வரையப்பெற்ற திருமணப் பட்டோலைப் புத்தகத்திலே அடியேனது பெயரையும் சேர்த்தெழுதும்படி வேண்டிக் கொள்கின்றேன். நினது திருவருளாணையிற்படின் கண்ணுக்குப் புலப்படாத சிறிய அணுவும் பேரண்டமாக வளர்ந்து தோற்றும். காட்டில் வாழும் சிறிய கொசுவும் கருடனாக உயர்ந்து பறக்கும். ஆதலால் காலங்கடந்த நினது திருமண வாழ்த்தில் எளியேனையும் கலந்துகொள்ளச் செய்வதென்பது நின் திருவருளால் முடியாத செயலன்று என்பதனை அடியேன் நன்குணர்வேன்" எனத் தில்லையம்பலவாணனை நோக்கித் திருவெண்

காட்டடிகள் வேண்டிக்கொள்வதாக அமைந்தது கோயில் நான்மணிமாலையிலுள்ள 'உரையின் வரையும் பொருளின் அளவும்' என்னும் முதற் குறிப்புடைய அகவலாகும். இதன்கண்,

"தம்மை மறந்து நின்னை நினைப்பவர்
செம்மை மனத்தினும் தில்லைமன்றினும் நடம்
ஆடும் அம்பல வாண"

என அடிகள் இறைவனைப் போற்றிய இத்தொடர்,

'நினைப்பவர் மனங்கோயிலாக் கொண்டவன்
அனைத்தும் வேடமாம் அம்பலக்கூத்தன்'

என ஆளுடைய அரசும்,

'சிறைவான் புனற்றில்லைச் சிற்றம்பலத்தும்
என்சிந்தையுள்ளும் உறைவான்'

எனத் திருவாதவூரடிகளும் அருளிய பொருளுரைகளை நினைந்து கூறிய குறிப்பினதாதல் காண்க.

தில்லையம்பலவன் ஆடல் புரியுங்கால் அப்பெருமான் நிலத்தே யூன்றிய திருவடி கீழுலகம் ஏழினையுங் கடந்து சென்றது. அவனது திருமுடி எல்லாவுலகங்களையும் கடந்துசென்று அண்டத்திற்கு அப்பால் விளங்கியது. இறைவன் வீசியாடுந் தோள்கள் எட்டுத்திசைகளின் புறத்தன. இவ்வழகிய தோற்றத்தை விளக்குவது,

அடியொன்று பாதல மேழிற்கும் அப்புறம் பட்டதிப்பால்
முடியொன்றிவ் வண்டங்க ளெல்லாங் கடந்தது முற்றும் வெள்ளைப்
பொடியொன்று தோளெட்டுத் திக்கின் புறத்தன பூங்கரும்பின்
செடியொன்று தில்லைச்சிற் றம்பலத் தான்றன் திருநடமே.

என்ற பாடலாகும். உலகமே யுருவாகிய இறைவன் ஆடுங்கால் அவனது கூத்தினைப் பொறுத்துக்கொள்ளும் நோன்மை இவ்வுலகத்திற்கில்லை யென்பது இதன்கருத்து. இப்பாடல்,

அடிபேரிற் பாதாளம் பேரும் அடிகள்
முடிபேரின் மாமுகடு பேரும்—கடகம்
மறிந்தாடு கைபேரின் வான்திசைகள் பேரும்
அறிந்தாடும் ஆற்ற தரங்கு.

என அம்மையார் அருளிய அற்புதத்திருவந்தாதியை அடியொற்றியமைந்ததாகும்.

இறைவனை நினைந்து வழிபடாது தமது வயிறோம்புதற் பொருட்டுப் பிறவுயிர்கட்குத் தீங்குசெய்து வாழ்வோர் உலகநிலையாமையைச் சிறிதும் உணராதவர் என்பதை விளக்குவது,

நஞ்சுமிழ் பகுவாய் வெஞ்சின மாசுணம்
தன்முதல் முருக்க நென்முதற் சூழ்ந்த
நீர்ச்சிறு பாம்புதன் வாய்க்கெதிர் வந்த
தேரையை வவ்வியாங்கியாம்முன்
கருவிடை வந்த ஒருநாள் தொடங்கி
மறவா மறலி முறைபிறழ் பேழ்வாய்
அயிற்றலை யன்ன எயிற்றிடைக் கிடந்தாங்
கருள் நனியின்றி ஒருவயி றோம்பற்குப்
பல்லுயிர் செகுத்து வல்லிதின் அருந்தி
அயர்த்தனம் இருந்தும் போலும் பெயர்த்துநின்
றெண்டோள் வீசிக் கண்டோர் உருகத்
தொல்லெயில் உடுத்த தில்லை மூதூர்
ஆடும் அம்பலக் கூத்தனைப்
பாடுதல் பரவுதல் பணிதலோ விலமே.

என வரும் பாடலாகும். "நஞ்சினைக் கக்கும் பிளந்த வாயினையுடைய பெரும்பாம்பு தன் உடலைக் கவ்வி ஈர்க்க நெற்பயிரின் வேரிற்சுற்றிக்கிடக்கும் சிறிய நீர்ப்பாம்பானது தன் வாய்க்கெதிரே வந்த தவளையைக் கவ்வியது போன்று யாங்கள் கருவினின்றும் வெளிப்பட்டுப்பிறந்த நாள் தொடங்கி வாழ்நாள் கொள்ளுதலை மறவாத கூற்றுவனது வாயினுள்ளே வேல்நுதியையொத்து விளங்கும் பற்களினிடையே அகப்பட்டுக்கிடந்து பிறவுயிர்களிடத்துச் சிறிதும் இரக்கமின்றி இழிந்த வயிறொன்றை வளர்த்தற் பொருட்டுப் பலவுயிர்களின் உடம்பினைக் கொன்று தின்று பின்விளைவறியாது அயர்வுற்றிருந்தோம் போலும்; பழமை வாய்ந்த மதிலாற்சூழப்பெற்ற தில்லைமூதூரிலே ஒரு திருவடியையூன்றி மற்றொரு திருவடியைத்தூக்கி எட்டுத் தோள்களையும் வீசிநின்று காண்போர் மனங் கசிந்துருகத் திருக்கூத்தியற்றும் அம்பலவாணனை வாயாற்பாடுதலும் மனத்தாற்பரவுதலும் மெய்யாற் பணிதலுமாகிய இத்திருப் பணிகளுள் ஒன்றையுஞ் செய்திலோம்" என உலக மக்களின் நிலையா வாழ்வினையெண்ணி அடிகள் உளமுருகுந் திறத்தை இப்பாடல் புலப்படுத்தல் காண்க.

"மறையவர் போற்றத் தில்லைமன்றில் ஆடல் புரியும் பெருமானே, உலகுகுழைத்துண்ட ஒரு பெருங்கடவுளாகியு

திருமாலும் தேடிக்காணவண்ணம் பாதாளம் ஏழினுங்கீழ் ஆழ்ந்துசென்ற திருவடியும் உலகினைப்படைத்த நான்முகன் அன்னமாய்மேலே பறந்து சென்றுங் காண முடியாத திருமுடியுங் கொண்டு நீ தில்லைப்பதியிற் சிறிய அம்பலத்திலே யாவருங்காண ஆடியருள்வது அதிசயம் விளைப்பதன்று. பொய்மை, அச்சம், பேராசை முதலிய தீக்குணங்களால் நிரம்பப்பெற்றுச் சிறிதும் இடமின்றி ஐம்பொறிகளாற் சுழற்றப்பட்டு விரைந்து சுழலும் அணுவினுஞ்சிறிய எனது நெஞ்சத்திலே நுழைந்து, நினது விரித்த செஞ்சடையும் சிவந்தவாயும் திருநீல கண்டமும் நெற்றிக்கண்ணும் தூக்கிய திருவடியும் அஞ்சல் என்று அமைத்த திருக்கையும் புள்ளித்தோலாடையும் தெளிவாக ஒளியுடன் திகழ ஆடியருள்கின்றனை. இச் செயலே எனக்கு அதிசயத்தை விளைக்கின்றது" எனக் கூத்தப்பெருமானை நோக்கி அடிகள் வியந்துரைப்பதாக அமைந்தது, 'வரையொன்று நிறுவி' யென்ற முதற் குறிப்புடைய அகவலாகும். இதன்கண் திருமால் தேவர் பொருட்டுப் பாற்கடலைக் கடைந்து அமுதளித்ததும், கடையுகத்திறுதியில் தோன்றிய பெருவெள்ளப்பரப்பில் உலகம் அமிழாதபடி சேல்மீனின் உருவுகொண்டு தனது சிறிய செதிளினுள்ளே உலகத்தையடக்கிக் காப்பாற்றியதும், ஒரு கறபத்தில் உலகங்களையெல்லாந் திரட்டி உண்டதும், குறுமாணுருவனாகி இவ்வுலகை மூவடியால் அளக்கப் புக்குழித் தன்னுடைய ஈரடிகளுக்கு இடனின்றி உலகஞ்சுருங்கத் தான் உயர்ந்து தோன்றியதும் ஆகிய செய்திகள் சுவைபெற விரித்துரைக்கப் பெற்றுள்ளன.

அறிவற்ற செய்கையும் பொய்மையும் கொடிய பிணிகளும் துன்பத் தொகுதியுமாகிய பல சரக்குகளையேற்றித் தீவினையென்னும் மீகாமன் கருப்பையென்னும் பெரிய பட்டினத்தின் துறைமுகத்தை நோக்கிச் செலுத்த ஐம்புலன்களாகிய பெரிய சுறு மீன்கள் தொடர்ந்து தாக்கப் பிறப்பென்னும் பெரிய கடலிற் புகுந்து துன்பமாகிய அலைகளின் பெருக்கினால் நிலைபெயர்ந்தலைந்து குடும்பமென்னும் வலிய பாறையிலே மோதுண்டு நிறையென்ற பாய்மரம் முரிய அறிவென்னும் பாய் கிழிந்து தீமையுற்ற உடம்பாகிய மரக்கலம் கவிழ்ந்து சிதைவுற்று அமிழ்வதன்முன்னே தில்லையம்பலவாணனாகிய நீ நின்திருவருளாகிய பெரிய

வடக்கயிற்றைப் பூட்டியிழுத்து நின்திருவடியாகிய நீண்ட கரையிலே சேரும்படி செய்து எங்களை உய்வித்தருளல் வேண்டும் என இறைவனை வேண்டுவதாக அமைந்தது,

அறிவில் ஒழுக்கமும் பிறிதுபடு பொய்யும்
கடும்பிணித் தொகையும் இடும்பை யீட்டமும்
இனையன பலசரக் கேற்றி வினையெனும்
தொன்மீ காமன் உய்ப்ப அந்நிலைக்
கருவெனு நெடுநகர் ஒருதுறை நீத்தத்துப்
புலமெனுங் கோண்மீன் அலமந்து தொடரப்
பிறப்பெனும் பெருங்கடல் உறப்புகுந் தலைக்கும்
துயர்த்திரை யுவட்டிற் பெயர்ப்பிடம் அயர்த்துக்
குடும்பம் என்னும் நெடுங்கல் வீழ்த்து
நிறையெனுங் கூம்பு முறிந்து குறையா
உணர்வெனும் நெடும்பாய் கீறிப் புணரும்
மாயப் பெயர்ப்படு காயச் சிறைக்கலம்
கலங்குபு கவிழா முன்னம் அலங்கல்
மதியுடன் அணிந்த பொதியவிழ் சடிலத்துப்
பையர வணிந்த தெய்வ நாயக
தொல்லெயி லுடுத்த தில்லை காவல
வம்பலர் தும்பை யம்பல வாண நின்
அருளெனு நலத்தார் பூட்டித்
திருவடி நெடுங்கரை சேர்த்துமா செய்யே.

எனவரும் ஆசிரியப்பாவாகும்.

நுரையும் அலையும் சுழற்சியும் எல்லையற்ற நீர்த்திவலைகளும் ஒலிக்குங் கடலிடத்தே பெருத்துஞ் சிறுத்தும் எண்ணிலவாய்த் தோன்றி மீளவும் அக்கடலின்கண்ணே அடங்குமாறுபோன்று, இயங்குவன நிற்பனவாகிய உலகத் தொகுதியனைத்தும் இறைவனிடத்தே தோன்றி மீளவும் அவன்கண் ஒடுங்குவனவெனவும், தான் ஒன்றினுந் தோன்றி யொடுங்காத தனிமுதற் பொருளாகத் திகழ்வோன் இறைவனெனவும் விளக்கக் கருதிய திருவெண்காட்டடிகள்,

நுரையுந் திரையும் நொப்புறு கொட்பும்
வரையில் சீகர வாரியுங் குரைகடற்
பெருத்துஞ் சிறுத்தும் பிறங்குவ தோன்றி
எண்ணில வாகி யிருங்கட லடங்குந்
தன்மை போலச் சராசரம் அனைத்தும்
நின்னிடைத் தோன்றி நின்னிடை யடங்கும்நீ
ஒன்றினுந் தோன்ருய் ஒன்றினும் அடங்காய்

என அம்பலத்தாடும் உம்பர் நாயகனாகிய சிவபெருமானைப் போற்றிப் பரவுகின்றார். உலகனைத்தும் இறைவன்பால் தோன்றியொடுங்குவன என்னுங் கருத்தமைந்த இத்தொடரை ஆதாரமாகக் காட்டிப் பிரபஞ்சத்திற்கு இறைவனே முதற்காரணமென்பது அடிகள் கருத்தெனச் சாதிப்பாரும் உளர். அன்னோர் கூறிய வண்ணம் இப்பிரபஞ்சம் இறைவனாகிய முதற் காரணத்திலிருந்து தோற்றியதென்பது உண்மையாயிருக்குமானால் முதற்காரணத்தின் குணங்களோடு ஒத்த குணங்களே அதனிற்றோன்றிய காரியத்திற்கும் உளவாதல் வேண்டுமென்னும் நியமம் பற்றி இறைவனிடத்திற்றோன்றிய பிரபஞ்சம் அறிவுடைய சித்துப் பொருளாதல் வேண்டும். உலகம் அறிவற்ற சடப்பொருள் என்பது யாவர்க்கும் உடம்பாடாதலின், சடப்பொருளாகிய அது, சித்துப்பொருளாகிய இறைவனை முதற் காரணமாகக் கொண்டு தோன்றியதெனக் கூறுதல் பொருந்தாது. பிரபஞ்சம் மாயையாகிய உள்பொருளிலிருந்து தோன்றி விரிந்து மீளவும் அதன்கண் ஒடுங்குமென்பதே திருமூலர் முதலிய திருமுறையாசிரியர்களின் துணிபாகும். கிழங்காகிய மூலத்திலிருந்து முளைத்த தாமரையைக் கிழங்கிற்கு ஆதாரமாகிய சேற்றில் முளைத்தது என்ற பொருளிற் 'பங்கஜம்' என வழங்குவதுபோன்று, மாயையாகிய உள்பொருளிலிருந்து தோன்றி மீளவும் அதன்கண் ஒடுங்குவதாகிய உலகத் தொகுதியை மாயைக்கு ஆதாரமாகிய முதல்வனிடத்துத் தோன்றியொடுங்குவதாகக் கூறுதல் வழக்கியல் மரபாகும். இம்மரபின்படி நீரில் தோன்றியொடுங்கும் நுரை அலை முதலியவற்றை நீர்க்கு இடமாகிய கடலிலே தோன்றியொடுங்குதல்போல் எனத் திருவெண்காட்டடிகள் உவமையாக எடுத்தாளுதலால், சராசரமாகிய உலகத்தொகுதிக்கு இறைவன் ஆதாரமாவதன்றி முதற் காரணமாகான் என்பதே அடிகள் கருத்தென்பது இனிது புலனாகின்றது. "நின்னிடைத் தோன்றி நின்னிடையொடுங்கும்" என்றது மாயைக்குத் தாரகமாதல் பற்றியென்றுணர்க. அக்கருத்து உணர்ந்து கோடற்கன்றே நீரிற்றோன்றி யொடுங்கும் நுரை முதலியவற்றை நீர்க்கிடமாகிய கடலிற்றோன்றி யொடுங்குதல் போல் என்று உவமை கூறினாராகலின், ஆண்டு ஆசங்கைக் கிடமின்மையுணர்க"[1] எனச் சிவஞான

1. சிவஞானபோதப் பேருரை, 2-ம் சூத்திரம் 2-ம் அதிகரணம்.

சுவாமிகள் இத்தொடர்ப் பொருளைத் தெளிவுபடுத்தினமை இவண் கருதத்தகுவதாம்.

இங்ஙனமே கோயில் நான்மணி மாலையிலுள்ள பாடல்கள் யாவும் உயர்ந்த நுண்பொருளை யறிவுறுத்தி நிற்றல் அறிந்து மகிழ்தற் பாலதாகும். இந் நான்மணிமாலையிலுள்ள சந்த விருத்தங்கள் அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ் யாப்பிற்கு அடிப்படையாக அமைந்துள்ளன. தாளத்தொடு பொருந்த அமைந்த இச் சந்த விருத்தங்களின் யாப்பமைதியினைப் பின்பற்றி அடிதோறும் இறுதிக்கண் தொங்கல் என வழங்கும் தனிச் சொற்களைச் சேர்த்து நோக்குங்கால் இத்தகைய திருப்புகழ்ச் சந்தங்கள் உருவாதல் காணலாம்.[1] செந்தமிழ்ப் பாடல்களின் தாளவமைதிக்குச் சிறந்து விளங்கும் இவ்வகைப் பாடல்கள் செந்தமிழ்க் கடவுளாகிய முருகப்பெருமானது பொருள்சேர் புகழைச் சீர்பெற விரித்துரைத்தற்கு ஏற்றனவாக அமைந்தமையால் இவ்வகைப் பாடல்களையே அருணகிரிநாதர் முருகன் புகழ் பாடுதற்குரிய சந்தப் பாடல்களாகத் தெரிந்தெடுத்துக் கொள்வாராயினர். இத்திருப்புகழ் யாப்பு முதன் முதல் இக் கோயில் நான்மணி மாலையிலே கருக்கொண்டு தோன்றிப் பின்னர் அருணகிரிநாதரது வாக்கின் திறத்தால் திருப்புகழ்ப் பாடல்களாக உருப்பெற்று வளர்ந்ததெனக் கூறுதல் பொருந்தும்.

திருக்கழுமல மும்மணிக்கோவை

கழுமலம் என்பது சீகாழிக்குரிய பன்னிரண்டு பெயர்களுள் ஒன்று. இறைவன் கோயில் கொண்டெழுந்தருளிய திருக்கழுமலம் என்னும் சீகாழிப்பதியை அகவல், வெண்பா, கலித்துறையாகிய மூவகைப் பாக்களாற் போற்றிப் பரவிய பாமாலையாதலின் இது திருக்கழுமல மும்மணிக்கோவை யென்னும் பெயர்த்தாயிற்று. ‘திருவளர் பவளப் பெருவரை’ யெனத் தொடங்கும் பாடலை முதலாகக் கொண்டு திகழும் இப்பனுவலில் இப்போது பன்னிரண்டு பாடல்களே கிடைத்துள்ளன. பன்னிரண்டாம் பாடலின் இறுதிச்சீர் முதற் பாடலின் முதற் சீரோடு மண்டலித்து முடியாமையாலும் மும்மணிக்கோவை யென்

1. யாழ்நூல் 388 – 390-ஆம் பக்கங்களைப் பார்க்க.

னும் பிரபந்தம் முப்பது பாடல்களால் அமைதல் வேண்டு மென்பது பாட்டியல் மரபாதலாலும் இந்நூலின்கண் 13 முதல் 30 வரையுள்ள பதினெட்டுப் பாடல்களும் ஏடுகளின் சிதைவால் மறைந்து போயின வெனக் கருத வேண்டியுளது.

இனி, ஆ. சிங்காரவேலு முதலியாரவர்கள் எழுதிய உரையுடன் வெளிவந்த பட்டினத்துப் பிள்ளையார் பிரபந்த வுரைப் புத்தகத்தில் திருக்கழுமல மும்மணிக்கோவைக் குரிய 13 முதல் 30 வரையுள்ள பதினெட்டுப் பாடல்களும் உரையுடன் வெளியிடப்பெற்றுள்ளன. இப்பாடல்கள் பதினெட்டும் ஆறுமுக நாவலரவர்களாலும் பின் வந்தவர்களாலும் வெளியிடப்பெற்ற பதினொராந் திருமுறைப் பதிப்புக்களில் இடம் பெறவில்லை. இவற்றின் சொல் நடையையும் பொருளமைதியையும் மேற்போக்காக நோக்குங்கால் இவை திருவெண்காட்டடிகள் வாக் கெனவே சொல்லத் தோன்றும். இப்பாடல்களில் அருட் கலாமதி, அன்னசத்திரம், இரத குளிகை, உபகரணம், கஸ்தூரி, கருட தியானம் சந்திரவிம்பம், பாநு, பூதசாரதநு பூத மகாதநு, பூத பரிணமம், வயிடூரியம், வித்துருமம் முதலிய வட சொற்களும், பணம் காசு, நங்குரம் முதலிய பிற்காலச் சொல் வழக்குகளும் உள்ளன. திருவெண் காட்டடிகள் பாடிய ஏனைப் பிரபந்தங்களில் ஒரோ விடங் களில் வடசொல் விரவப்பெற்றிருத்தல் உண்மையாயினும் இங்கெடுத்துக் காட்டியன போன்ற புதிய வழக்குக்கள் அப்பிரபந்தங்களில் இல்லை யென்பது அவற்றைப் பயில் வார்க்கு நன்கு புலனும். ஆகவே உரைப்பதிப்பிற் காணப் படும் பதினெட்டுப் பாடல்களும் பிற்காலத்துப் புலவரொருவராற் பாடிச் சேர்க்கப்பட்டனவெனக் கொள்ளுதலே பொருத்தமுடையதாகும். அடிகள் அருளிய பனுவல்களை ஓதியின்புறும் புலவரொருவர் திருக்கழுமல மும்மணிக் கோவையிற் சிதைந்து மறைந்த பதினெட்டுப் பாடல்களுக் கீடாகத் தாம் பதினெட்டுப் பாடல்களைப் பாடிச் சேர்த்து அப்பனுவலை நிறைவு செய்த திறம் வியந்து பாராட்டத் தக்கதாகும்.

பிரமபுரத்துறை பெம்மானாகிய இறைவன் பெரிய பெருமாட்டியுடன் தோணி மீது வீற்றிருந்தருளுந் திருக்கோலத்தை அழகிய சொல்லோவியமாகப் புனைந்து காட்டுவது

இம் மும்மணிக் கோவையின் முதற் பாடலாகும். சிவபாத விருதயர் பெற்ற தவப்புதல்வராகிய தளர்நடைப் பருவத்து இளங்குழந்தை பிரம தீர்த்தத்துள் முழுகி மந்திரம் செபிக்கும் தம் தந்தையைக் காணுது பசியால் வருந்தி அம்மே அப்பா என அழைத்து அழுத ஓசையைக்கேட்டுத் தோணி புரத்தில் எழுந்தருளிய பெருமான் பெரிய பெருமாட்டியாகிய உமையம்மையாருடன் விடையின் மீதெழுந்தருளிப் பிரமதீர்த்தக் கரையை யடைந்து அங்கு நின்று அழுது கொண்டிருந்த பிள்ளைக்கு ஞானப்பாலடிசிலைக் குழைத் தூட்டியருளிய செய்தியையும், அங்ஙனம் ஆளுடைய பிள்ளையாராகிய திருஞானசம்பந்தர் எச்சில் மயங்கிட நினக்கு இதனைக் கொடுத்தார் யாவர் என வெகுண் டுரைக்கும் தம் தந்தையை நோக்கி 'எம்மை யிது செய்தபிரான் இவனே' எனக் கையாற் சுட்டிக்காட்டித் 'தோடுடைய செவியன்' என்னுந் திருநெறிய தமிழால் அடையாளங்களுடன் வெளியிட்டருளிய திறத்தையும்,

தாதையொடு வந்த வேதியச் சிறுவன்
தளர்நடைப் பருவத்து வளர்பசி வருத்த
அன்னையோ வென்றழைப்ப முன்னின்று
ஞானபோனகத் தருளட்டிக் குழைத்த
ஆனந்தத்திரளை அவன் வயினருள
அந்தணன் முனிந்து தந்தா ரியாரென
அவனைக் காட்டுவன் அப்ப வானூர்
தோடுடைய செவிய னென்றும்
பீடுடைய பெம்மானென்றும்
கையிற் சுட்டிக் காட்ட
ஐயநீ வெளிப்பட் டருளினை ஆங்கே.

என அடிகள் இம்முதற்பாடலில் உளங்குழைந்து போற்றி யுள்ளார்.

'ஆரணம் நான்கிற்கும் அப்பாலவன்' 'அந்தக்கரணங் கடந்த அரும்பொருள்' என மாற்ற மனங்கழிய நின்ற இறைவனது திறத்தினை விரித்துரைத்த அடிகள், தம் உயிர்க்குயிராகிய இறைவனை நினைத்தற்குத் தடையாயுள்ள மனமாசுகளைக்களைந்து இறைவன் வீற்றிருத்தற்குத் தக்கதாகத் தம் நெஞ்சத்தினைத் தூய்மைப்படுத்திய திறத்தை விரித்துரைப்பது,

கருமுதற் றொடங்கிப் பெருநாளெல்லாம்
காமம் வெகுளி கழிபெரும் பொய்யெனும்
தூய்மையில் குப்பை தொலைவின்றிக் கிடந்ததை
அரிதின் இகழ்ந்து போக்கிப் பொருதிறன்
மையிருள் நிறத்து மதனுடை அடுசினத்து
ஐவகைக் கடாவும் யாப்பவிழ்த் தகற்றி
அன்புகொடு மெழுகி அருள்விளக் கேற்றித்
துன்ப இருளைத் துரந்து முன்புறம்
மெய்யெனும் விதானம் விரித்து நொய்ய
கீழ்மையிற் றொடர்ந்து கிடந்தவென் சிந்தைப்
பாழறை யுனக்குப் பள்ளியறை யாக்கிச்
சிந்தைத் தாமரைச் செழுமலர்ப் பூந்தவிசு
எந்தை நீ இருக்க இட்டனன் இந்த
நெடுநில வளாகமும் அடுகதிர் வானமும்
அடையப் பரந்த ஆதி வெள்ளத்து
நுரையெனச் சிதறி இருசுடர் மிதப்ப
வரைபறித் தியங்கும் மாருதங் கடுப்ப
மாலும் பிரமனும் முதலிய வானவர்
காலம் இதுவெனக் கலங்கா நின்றுழி
மற்றவர் உய்யப் பற்றிய புணையாய்
மிகநனி மிதந்த புகலி நாயக
அருள்நனி சுரக்கும் பிரளய விடங்கநின்
செல்வஞ் சிலம்பு மெல்லென மிழற்ற
அமையாக் காட்சி யிமையக்
கொழுந்தையும் உடனே கொண்டிங்கு
எழுந்தருளத் தகும் எம்பெருமானே.

எனவரும் பாடலாகும். தாழ்ந்த குணங்களிலே பிணிப் புற்றுக்கிடந்த என் மனமாகிய பாழறையிலே கருவுற்ற நாள்முதலாக இன்றுவரை கழிந்த காலங்களிலெல்லாம் காமம் வெகுளி பொய் என்னும் இக்குற்றங்களால் விளைந்த தீமையாகிய இழிந்த குப்பைகள் மூடிக்கிடந்தவற்றை அரிதின் நீக்கி, எதிர்த்துத் தாக்கும் வன்மைமிக்க ஐம் புலன்களாகிய கடாக்கள் கட்டப்பட்டு நின்றனவற்றைக் கட்டவிழ்த்துத் துரத்தி, அவற்றாற் புழுதியான அவ் விடத்தை அன்பெனும் நீரால் மெழுகித் தூய்மைசெய்து, அருளாகிய விளக்கை ஒளிபெற ஏற்றிவைத்து, துன்ப மாகிய இருளைப்போக்கி, வாய்மையாகிய மேற்கட்டியை மேலேவிரித்து, என் சிந்தையாகிய அறையை எந்தை யாகிய நீ இனி தமர்தற்கு ஏற்ற பள்ளியறையாகச்செய்து, அதன் நடுவே அகத்தாமரையாகிய பூந்தவிசினை இட்டு வைத்துள்ளேன். எம்பெருமானாகிய நீ நின் செல்வச் சிலம்பு

மெல்லென மிழற்ற உமையம்மையாருடன் அடியேனது உள்ளமாகிய இவ்விடத்திலே எழுந்தருளுதல் வேண்டும்" என அடிகள் புகலிநாயகனை வேண்டுகின்றார். இவ்வேண்டு கோள் உலக மக்கள் மனந்திருந்தி இறைவனை வழிபட்டுய் யும் முறையினை நன்கு அறிவுறுத்துவதாகும். சீகாழியாகிய திருத்தலம் ஓர் ஊழிக்காலத்திலே தேவர் முதலியோர்க்குப் பற்றுக்கோடாகி ஊழிப்பெருவெள்ளத்திலே தோணியாய் மிதந்த வரலாறு இப்பாடலில் 14 முதல் 21 வரையுள்ள அடிகளில் விரித்துரைக்கப் பெற்றமை காண்க.

"மாதொருபாகனாகிய பெருமானே, நினது திரு வுள்ளக் குறிப்பால் இவ்வுலகம் தோன்றிய நாள் தொடங்கி வேறு வேறியல்பினவாகிய பலவகைப் பிறப்புக் களிலும் உயர்திணை மக்களாகவும் அஃறிணை உயிர் களாகவும் தோன்றிய யாரும் யாவையுமாகிய உயிர்த் தொகுதியில் எனக்குத் தனித்தனியே தந்தையாகியும் தாயாகியும் வந்து உறவுகொள்ளாதவர் ஒருவருமில்லை. யானும் அவ்வுயிர்களுக்குத் தந்தையாகியும் தாயாகியும் பிறந்து உறவுகொள்ளாததுமில்லை. உலகில் யான்பிறவாத இடமுமில்லை இறவாதஇடமுமில்லை. எனது உடம்பைத் தின்னாத உயிர்களுமில்லை. அவற்றின் உடம்புகளை யான் தின்னத்தவறியதுமில்லை. இங்ஙனமே காலமெல்லாங் கழிந்தன. இவ்வாறு நெடுங்காலமாகப் பிறவிச் சுழலில் தடுமாறும் பழக்கம் பெற்ற யான் இனி இதற்குச் சோர்ந்து இளைக்கும் இயல்புடையனல்லேன். சோதியாய் விளங்கும் நினது திருநாமமாகிய திருவைந்தெழுத்தினை உணர்ந்தோதும் அருள்நூல்களைப் பயின்றேனல்லேன். அந்நூல்களைப் பயின்ற ஆசிரியர்களை அடைந்து கேட்டு அறிந்தவனும் அல்லேன். நாயேன் இங்ஙனம் நின்னை வழிபடுதற்குரிய தகுதியற்றவனாயினும் எனக்கு ஒய்வான காலத்தில் அடியேன் நின்னை நினைந்து இட்டது பச்சிலை யாயினும் அதனை நறுமணமலராகவும், யான் நின்னை நினைந்து சொல்வது பிழைமலிந்த சொல்லாயினும் நின்னை வழிபடுதற்குரிய திருமந்திரமாகவும் கொண்டு எளியேனைப் பிறப்பிறப்பென்னும் பெருங்கடலில் ஆழாதவண்ணம் நின் திருவடியாகிய நெடுங்கரையிற் சேர்த்துக் காத்தல் அருளாளனாகிய நினக்குரிய கடமையாகும்" எனக் கழுமல வாணனை நோக்கி அடிகள் வேண்டிக்கொள்வதாக

அமைந்தது 'அருள் நனிபழுத்த' என்னும் முதற் குறிப்புடைய அகவலாகும்.

இறைவனது திருவருளாகிய கண்ணின் உதவியைப் பெறுதற்குமுன் இல்லன உளவாய் உள்ளன காணுது தாம் அறியாமையாகிய இருளிற்பட்டு அல்லற்பட்ட தன்மையையும், திருவருளாகிய ஞானநாட்டம் பெற்ற பின்பு அசத்தாடய உலகத்தொகுதி மறைய இறைவனுகிய மெய்ப்பொருள் எங்குமாய் விளங்கித் தோன்றிய தன்மையினையும் இப்பிரபந்தத்தின் பத்தாம் பாடலில் அடிகள் தெளிவாக விளக்கிய திறம் படித்துணர்ந்து மகிழத் தக்கதாம்.

போதும் பெறுவிடிற் பச்சிலையுண்டு புனலுண்டெங்கும்
ஏதும் பெறுவிடில் நெஞ்சுண்டன்றேயினை யாகச் செப்பும்
சூதும் பெருமுலை பங்கர்தென் தோணி புரேசர்வண்டின்
தாதும் பெருத அடித்தா மரைசென்று சார்வதற்கே.

எனவரும் திருப்பாடல் 'யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை' என்ற திருமந்திரப் பொருளை அடியொற்றி இறைவனடி சேர்தற்கென யாவரும் மேற்கொள்ளுதற்குரிய எளிய வழிபாட்டுமுறையை விளக்குதல் காண்க.

திருவிடை மருதூர் மும்மணிக்கோவை

சிவபெருமான் கோயில்கொண்டருளிய திருவிடை மருதென்னும் திருப்பதியை அகவல், வெண்பா, கட்டளைக் கலித்துறையென முறைப்படத் தொடுத்த முப்பது செய்யுட்களாற் போற்றிப்பரவிய பனுவலாதலின் இது திருவிடைமருதூர் மும்மணிக்கோவை யென்னும் பெயர்த் தாயிற்று.

'தெய்வத்தாமரை செவ்வியின் மலர்ந்து' எனத் தொடங்கும் இப்பிரபந்தத்தின் முதற்பாடல் உமையொரு பாகராகிய அர்த்தநாரீச்சுரர் திருக்கோலத்தின் இயல்பினை அழகுற விரித்துரைக்குந்திறம் படிக்குந்தோறும் இன்பந் தருவதாகும்.

அடியார்கள் பிறிதொன்றில் ஆசையின்றிப் பருகி மகிழ்தற்குரிய பெருந்தேனுக இறைவன் இடைமருதில் வீற்றிருந்து அருள்புரியும் சிறப்பினையும் அத்திருப்பதியை

அடைந்து இறைவனை வழிபட்டதனால் தாம் பெற்ற பெரு நலங்களையும் அடிகள் விரித்துரைப்பதாக அமைந்தது,

> வருந்தேன் இறந்தும் பிறந்தும் மயக்கும் புலன்வழிபோய்ப்
> பொருந்தேன் நரகிற் புகுகின்றிலேன் புகழ் மாமருதிற்
> பெருந்தேன் முகந்துகொண் டுண்டு பிறிதொன்றி
> இருந்தேன் இனிச் சென்றிரவேன் ஒருவரை [லாசையின்றி
> யாதொன்றுமே.

எனவரும் பாடலாகும். 'அந்த இடைமருதில் ஆனந்தத் தேனிருந்த, பொந்தைப்பரவி நாம் பூவல்லி கொய்யாமோ' என்ற திருவாசகத் தொடர்ப்பொருளை உளங்கொண்ட திருவெண்காட்டடிகள் இப்பாடலில் 'புகழ்மாமருதிற் பெருந்தேன்' என இடைமருதீசனைப் போற்றியதிறம் நினைந்து மகிழத்தகுவதாம்.

"இடைமருதினை இடமாகக்கொண்டு எழுந்தருளிய என்தந்தையே, அடியேன் பிறவிச்சுழியில் அகப்பட்டுத் தடுமாறும்போது யானுற்ற துன்பத்தினையும் என்னைப் பெறும் நிலையில் என்தாயுற்ற துன்பத்தினையும் உள்ளவாறு அறிவார் உயிர்க்குயிராகிய நின்னைத்தவிர வேறு யாருளர்? பெருகிய துன்பத்தருவதாகிய இப்பிறவிச் சுழலிற்பட்டு யான் இனிப்பிறக்கும் வலியுடையேனல்லேன். நின்னை உறுதுணையாகப்பற்றிவழிபடும் ஒரு நெறியைத் தவிரப் பிறவிநோய் களைதற்குப் பிறிதொரு வழியும் இல்லை. மீண்டுவாராவழி அருளும் நின் திருவருள் நெறியில் ஒழுகுதற்கு விருப்பு வெறுப்பற்ற ஒருமை மனம் வேண்டும். ஐம்புல வேடர்களின் ஆணைவழி கட்டுப்பட்டு நின்று தானல்லாதவற்றைத் தானெனக் கருதும் மயக்க நிலையினையுடையது என்மனம். இம் மனத்தைக் கொண்டு நின்னை நினைந்துபோற்றுதல் எங்ஙனம் இயலும்? கல்லைத்தெப்பமாகக் கொண்டு கடலைக் கடக்க வெண்ணிய பேதையர் என்னைத்தவிர வேறு யாருளர்? பிறப்பெனும் பெருங்கடலை அடியேன் கடத்தலும் வேண்டும். அங்ஙனங் கடத்தற்கு உறுதுணையாக நின்னை நினைத்தலும் வேண்டும். ஒரு நெறியில் நின்று நின்னை நினைந்து போற்றும் வண்ணம் என் மனத்தை நீ திருத்தியருளுதலும் வேண்டும்" எனத் திருவெண்காட்டடிகள் இடைமருதீசனை வேண்டுவதாக அமைந்தது இம்மும் மணிக் கோவையின் நான்காம் பாடலாகும். "அவனரு

ளாலே அவன்றாள் வணங்கி" எனத் திருவாதவூரடிகள் அருளிய வண்ணம் இறைவனை நினைந்து போற்றுதற்கும் அவனருள் வேண்டும் என்ற உண்மை இப்பாடலில் நன்கு அறிவுறுத்தப் பெற்றமை காணலாம்.

செல்வத்துடன் வாழ்ந்திருக்கின்றோமெனச் செருக்குற்று இரவலர்க்கு உதவாது தன்னுயிரைப் பாதுகாத்தலொன்றையே குறிக்கொண்டு தன்னால் ஏனையுயிர்கள் படுந் துன்பத்தினைச் சிறிதும் பொருட்படுத்தாது இம்மைப் பயனும் மறுமைப் பயனும் இல்லையென்று துணிந்து தாம் விரும்பியவாறு செய்தொழுகி மின்னலைப்போல் தோன்றி யழியும் இயல்பினவாகிய உலகியற் செல்வத்தை நிலைபேறுடையதாக விரும்பித் தன்னையும் ஒப்பற்ற பெருந்தலைவராக மதித்து வாழ்தல் கீழ்மக்கள் வாழ்வாகும். இறைவனுடைய திருவடியைப் பற்றி நின்று உலகியலில் நேரும் இடையூறுகளைக் கண்டு அஞ்சுதலைவிடுத்து மக்கள் மனைவி சுற்றம் செல்வம் என்பவற்றைப் பொருளெனக் கருதாது இறைவனது திருவருளையே பொருளாக எண்ணி இந்திர பதத்தால் அடையும் பெருஞ்செல்வமும் எட்டுச்சித்திகளும் தாமே வந்த காலத்தும் அவற்றை மறுத்தொதுங்கிக் கிழிந்த கந்தையும் ஒட்டிட்டுத் தைத்த கோவணமும் அறுந்த கீளுடையுமாகக் கிடைத்தவற்றை யுடுத்துச் சிதைவுற்ற ஓடொன்றை உண்கலனாகக் கையில் ஏந்தித் தம்மை நோக்கிவந்து பிச்சையிடுவோர் உளராயின் அவர் தந்தவற்றை நின்ற நிலையிலேயே யுண்டு தரையையே பாயாகக்கொண்டு நீங்காத சாந்தம் என்னும் மனையைக் கூடி எவ்வுயிர்களையும் தம்மக்களெனக் கருதி யாவரிடத்தும் ஒப்ப அன்பு செய்தல் அருட்செல்வர்களாகிய கடவுட் டொண்டர்களின் உயர்ந்த வாழ்வாகும். இவ்விருவகை வாழ்க்கையினையும் ஆராய்ந்து நோக்குங்கால், விலங்குகளது காலின் குளம்படியாகிய சிறிய பள்ளத்தில் தங்கிய நீரும் ஊழிக்காலத்தில் அளப்பரியதாய்ப் பொங்கிய பெருங் கடல் நீரும் நீரென்ற பொதுமையான் தம்முள் ஒக்குமாயினும் அளவாற் சிறிதும் ஒவ்வாதனவாம். ஆதலின் சிவனடியார்களுக்குத் தொண்டுபட்டு அவர்கள் குணத்துடன் நெடுங்காலம் பழகி அன்னோர் காலாலிட்ட பணியைத் தலையாலே செய்து அத்தொண்டினாலுளதாம் பேற்றினை அடைந்து இன்புறுதலொன்றைத் தவிரப் பெறத்

தக்கபேறு பிறிதொன்று மில்லை என அடிகள் இடைமருதீசனைப் பணிந்து போற்றுவதாக அமைந்தது, இம் மும்மணிக் கோவையின் ஏழாம் பாடலாகும். இதன்கண் தாம் மேவன செய்தொழுகும் கயவர் வாழ்வும் இறைவனது அருள் வழியொழுகும் மெய்த்தொண்டர் வாழ்வும் இன்னவென அடிகள் விளக்கிய திறம் அடிகளது செம்மை மனத்தின் சிறப்பினை இனிது புலப்படுத்தல் காணலாம்.

மருதமாணிக்கத் தீங்கனியாகிய சிவபோகத்தை விளைக்குந் தொழிலினராகிய தொண்டரது உழவின் திறத்தையும், அவ்வுழவினை மேற்கொள்ளாது மனமெனும் புனத்தை வறும் பாழாக்கித் தமக்கும் பிறர்க்கும் பயனின்றிக் கழியும் ஏனையோரது இழிவையும் புலப்படுத்துவது, இம்மும்மணிக் கோவையின் பத்தாம் பாடலாகும். மனமெனும் புனத்தில் முளைத்துள்ள வஞ்சனையாகிய மரத்தை வேருடன் அகழ்ந்து நீக்கி, அன்பெனும் பாத்தி கோலி மெய்மையாகிய எருவிட்டுப் பத்தியென்னும் விதையை விதைத்து, ஆர்வமாகிய நீரைப் பாய்ச்சி, ஐம்பொறிகளென்ற பட்டி மாடுகள் உள்ளே நுழையாதபடி சாந்தமாகிய வேலியை அமைத்துக் காக்க, ஞானமெனும் முளை முளைத்தெழுந்து, அருளாகிய பசுந்தளிர்கள் தளிர்த்து விளங்க, ஒழியாத காமம் வெகுளியாகிய களைகளைக் களைந்தெறிந்து சேமமாகக் காத்துவரும் நிலையில் அப்பயிர் செம்மையாக வளர்ந்து மெய்மயிர் முகிழ்த்துக் கண்ணீரரும்பிக் கடிமலர் மலர்ந்து திருவைந்தெழுத்தெனுங் காய் தோன்றி, நீலகண்டமும் முக்கண்ணும் எட்டுத் தோள்களும் ஐந்து திருமுகமும் பவளம்போலும் செந்நிறமுமுடையதாய் வெள்ளை நீறுபூசி அறுசுவையதனினும் மிக்க சுவையுடையதாய்க் காணினும் கேட்பினும் கருதினும் இனிமை தருவதாய் நிலவெல்லையைக் கடந்து உயர்ந்த மருத மாணிக்கமென்னும் இனிய கனி மெல்ல மெல்லமுற்றிப் பழுத்து எளிதிற் கைவரப் பெற்றுத் தொண்டவுழவராகிய மெய்யடியார்கள் அக்கனிலனை இனிதின் அருந்திச் செம்மாந்திருப்பார்கள். இங்ஙனமாகவும் சிலர் தம் மனமாகிய புனத்தைப் பண்படுத்தாது வறும்பாழாக்கிக் காமக் காடுமூடி ஐம்புல வேடர்கள் ஆறலைத்துத் திரியவும் சிற்றின்பமாகிய கானல் நீர் ஓடவும் கல்லாவுணர்வாகிய மானினம் வருந்தியுழலவும் ஆசையெனும் விதை

விழுந்து யானெனப் பெயர் கூறப்பட்ட நச்சு மரமாக முளைத்து நீண்டு வளர்ந்து பொய்மையாகிய கிளைகளை எம்மருங்கும் விட்டுப் பாவமாகிய தழைகளைத் தழைத்துப் பூவென்று சொல்லும்படி கொடுமை யென்ற அரும்புகளை யீன்று தீமை மலர்ந்து துன்பமாகிய பல காய்களைக் கொத்தாகத் தாங்கிப் பின்பு அவை மரணமெனும் கனியாகப் பழுத்து உதிர நரகிடை வீழ்ந்து தமக்கும் பிறர்க்கும் பயனின்றிக் கணப்பொழுதில் இறந்தொழிகின்றார்கள்" என உருவக அணியமைய இப்பாடலில் அடிகள் விரித்துக் கூறியுள்ளார். இதன்கண் தொண்ட உழவரது அரிய முயற்சியாக அடிகள் வெளியிட்டருளிய செய்திகள்,

மெய்ம்மையாம் உழவைச்செய்து விருப்பெனும்
வித்தை வித்திப்
பொய்ம்மையாங் களையைவாங்கிப் பொறையெனு
நீரைப் பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக்கண்டு தகவெனும் வேலியிட்டுச்
செம்மையுள் நிற்பராகிற் சிவகதி விளையுமன்றே.

எனவரும் திருநாவுக்கரசர் திருப்பாடற்குச் சிறந்த விளக்க வுரைப் பகுதியாக அமைந்தமை ஒப்புநோக்கி யுணரத் தகுவதாகும்.

உயிர் எவ்வியல்பினது என ஆராயப்புகுந்து தத்துவ சோதனை செய்து தம்மியல்பினையுணராது வருந்திய அடிகள், இறைவனது திருவருள் நாட்டம் பெற்றவுடனே உயிராகிய தம்மையும் இறைவனையும் உணரப்பெற்ற திறத்தை விரித்து உரைப்பது, 'மேவிய புன்மயிர்த் தொகையோ' எனத் தொடங்கும் பதின் மூன்றாம் பாடலாகும். "நாடி, எலும்பு, நரம்பு முதலிய உடலுறுப்புக்களுள் உயிராகிய யான் யார்? என்று என்னைத் தேடிப் பார்த்தும் என்னைத் தெளிய அறிந்துகொண்டேனல்லேன். இவ்வாறு தம்மைப்பற்றி ஆராய்ந்தறிகின்ற ஆராய்ச்சி யறிவின் கண்ணே இதனைத் தெளிவிப்பதாகிய அறிவு வேறு உண்டென்று ஆராய்ந்து நோக்கி அவ்வாறு நாடுங்கால் விளங்கித் தோன்றும் இறைவனது திருவடி ஞானத்தால் அம்முதல்வனையும் உணர்ந்து அவனது பேரறிவினுள்ளே தாம் அடங்கி நின்று அங்ஙனம் அறியும் பொருளாகிய தம்மையும் உணர்ந்துகொள்ளுதல் வேண்டும். அங்ஙனம் உணரும் பயிற்சி பெறுதார் உயிராகிய தம்மை அறிய வல்லுநரல்லர் என்பதனை,

நாடியோ என்போ நரம்புசீக் கோழையோ
தேடி யெனையறியேன் தேர்ந்தவகை—நாடி அரன்
தன்னாலே தன்னையுங் கண்டு தமைக்காணார்
என்னும் என அறிவார் இன்று.

எனவரும் வெண்பாவில் ஆசிரியர் மெய்கண்ட தேவ நாயனார் தெளிவாக விளக்கியுள்ளார். இவ்வெண்பா திருவிடைமருதூர் மும்மணிக் கோவையில் வரும் ‘ மேவிய புன்மயிர்த் தொகையோ ’ என்ற முதற் குறிப்புடைய திருப்பாடற் பொருளை அடியொற்றியமைந்த தென்பது இவ்விரு செய்யுட்களையும் ஒப்புநோக்கி யுணர்வார்க்கு இனிது விளங்கும். “ நின்னைக் காணுமாந்தர், தன்னையுங் காணுத் தன்மையோரே ” என ஓதியவாற்றான் ஏனைப் பசு பாசங்களும் சிவஞானத்தானன்றி அறியப்படாவென்பது போதரும் ” என்றும், “ ஆன்மா பிற வுயிர்களைத் தனித்த முதலாய்ப் பிரித்தறியுமாறு இல்லையாயினும் சிவத்தைத் தரிசிக்கும் வழித் தான் அதுவாய் நின்று தனையறியுமாறு போலப் பிறவுயிர்களையும் அச் சிவத்தின் வண்ணமாய்க் கண்டறிதல் அமைவுடைத்தென்பது,

‘ என்னையுங் கண்டேன் பிறரையுங் கண்டேன்
நின்னிலை யனைத்தையுங்கண்டேன் என்னே
நின்னைக் காணுமாந்தர்
தன்னையுங் காணுத் தன்மையோரே ’

என்பதனாற் புலனும் ” என்றும் சிவஞான முனிவர் இத் திருப்பாடற் பொருளை இனிது விளக்கியுள்ளார். சிவரூபத் தால் ஆன்ம தரிசனமும் சிவ தரிசனத்தால் ஆன்ம சுத்தியும் ஆமாறு கூறிற்று இப்பாடல் எனக்கொள்ளுதல் பொருந்தும்.

சிவபெருமானை நினையாமலும் திருவைந்தெழுத்தினை முறைப்படி ஓதாமலும் பச்சிலையும் நீருங்கொண்டு வழிபாடு செய்யாமலும் வேறு யாராகவோ நினைக்கும் புறச்சமயத்தா ருள்ளத்திலும் இடை மருதீசன் பொன்னார் திருவடியே நண்ணி அருள் வழங்கும். ஆறு சமயத்தார் செய்யும் வழி பாடுகளெல்லாம் இடைமருதீச னொருவனையே வந்து சார்வன என்னும் உறுதியுடையவர் திருவெண்காட்டடிக ளென்பது,

ஓராதே யஞ்செழுத்து முன்னாதே பச்சிலையும்
நேராதே நீரும் நிரப்பாதே—யாராயோ

எண்ணுவா ருள்ளத் திடைமருதர் பொற்பாதம்
நண்ணுவா மென்னுமது நாம்.

அன்றென்றும் ஆமென்றும் ஆறு சமயங்கள்
ஒன்ருென்ரு டொவ்வா துரைத்தாலும்—என்றும்
ஒருதனையே நோக்குவா ருள்ளத் திருக்கும்
மருதனையே நோக்கி வரும்.

எனவரும் மும்மணிக்கோவைச் செய்யுட்களால் இனிது புலனும். இப்பாடல்கள்,

'எங்கேனும் யாதாகிப் பிறந்திடினுந் தன்னடியார்க்
கிங்கேயென் றருள்புரியும் எம்பெருமான்'

என ஆளுடைய பிள்ளையாரும்,

"விரிவிலா அறிவினர்கள் வேருெரு சமயஞ்செய்து
எரிவினற் சொன்னரேனும் எம்பிராற் கேற்றதாகும்"
"ஆறுசமயத் தவரவரைத் தேற்றுந் தகையன"
"ஆரொருவ ருள்குவா ருள்ளத்துள்ளே
அவ்வுருவாய் நிற்கின்ற அருளுந்தோன்றும்"

என ஆளுடைய அரசரும் அருளிய பொருளுரைகளை இனிது புலப்படுத்தி அடிகளது சமயப் பொதுமையை நன்கு அறிவுறுத்துவனவாதல் காண்க.

உயிர்களது நலங்கருதி உடல், கருவி, உலகு, நுகர் பொருள் என்பவற்றைத் தந்தருளிய இறைவன், தன் அருளாரின்பப் பெருவாழ்வை எவ்வுயிர்க்கும் உரியதாக அமைத்து வைத்துள்ளானுதலின், அவன்பால் ஒரு சிறிதும் குற்றமில்லை. அப்பெருமானை நினைந்து போற்றி அவனருளால் இடர்ப்பகைகளைக் களைந்து கூற்றுவனது ஆற்றலையழித்து இறப்பையும் பிறப்பையும் இகழ்ந்து வானேரது பசுவாகிய காமதேனுவின் கன்றைப்போன்று கவலையற்றுத் திரியும் பேரின்ப வாழ்வினைப்பெறும் வசதி, எல்லா மக்களுக்கும் பொதுவாக இறைவனுல் அளிக்கப்பெற்றுளது. அவ்வசதியைப் பயன்படுத்திக்கொள்ளாத தீவினையாளர் கண்ணதே குற்றம். அஃது எவ்வாறென்ருல், அறுசுவையுடன் கூடிய நல்ல உணவு சமைக்கப் பெற்றிருக்கவும் அதனைப் புசியாது ஒருவன் பசியால் வருந்துதல் அவ்வுணவின் குற்றமன்று. நல்ல மணப் பொருள் விரவிய இன்சுவைத் தண்ணீர் இருக்கவும் நீர்வேட்கையுடையானெருவன் அந்நீரைப் பருகாது வருந்துதல் நீரின் குற்றமன்று. நன்னிழலைத்தரும் குளிர் பூஞ்சோலை வழியிடையேயிருக்க

அவ்வழியே செல்வாரொருவன் அதன்கண் தங்கி இளைப் பாருது உடல் வியர்க்கக் கடுவெயிலில் நடந்து வருந்துதல் நிழலின் குற்றமன்று என இவ்வாறு சார்ந்தவர்க்கு நலஞ்செய்யும் சங்கரனாகிய இறைவன் எவ்வுயிர்க்கும் தன்னருளை உரிமைப்படுத்தி வைத்துள்ள திறத்தையும் அப்பெருமானை நினைந்து உய்தி பெருத தீவினையாளர் களது அறியாமையையும் கூறி இரங்குவதாக அமைந்தது, இம்மும்மணிக்கோவையின் பதினாரும் பாடலாகும்.

இறைவனது திருநாமமாகிய திருவைந்தெழுத்தை யோக ஞானங்களால் முதிர்ந்த துறவிகள் ஓதினாலும் அன்றி மனைவி மக்களொடுவாழும் ஏனையோர் ஓதினாலும் அவ்விருதிறத்தாரும் இறைவனருளில் திளைத்தலுறுதி யென்பது திருவெண்காட்டடிகள் கருத்தாகும். உடல் வலியிற் சிறந்தாரொருவனால் உயர வீசியெறியப்பட்டு விரைந்து சென்ற கல்லும், வலியில்லாதாரொருவனால் வீசப்பட்டுத் தாமதித்து மேலே சென்ற கல்லும் நிலத்தின் இயல்பாகிய ஈர்ப்பாற்றலால் நிலத்தின்கண் ஒருங்கு விழக் காண்கின்றோம். அதுபோல இறைவனது திருநாமமும் தன்னையோதுவாரது ஞானத்தின் வன்மை மென்மை காரணமாக மாறுபடாது தனக்கு ஆதாரமாகிய இறைவ னருளால் ஈர்க்கப்பட்டு ஓதுவாரனைவர்க்கும் ஒப்ப நலஞ் செய்யுஞ் சிறப்புடைத்தென்பதனை,

வல்லா னொருவன் கைம்முயன் றெறியினும்
மாட்டா ஒருவன் வாளா எறியினும்
நிலத்தின் வழாஅக் கல்லேபோல்
நலத்தின் வழார்நின் நாமம் நவின்றோரே.

எனவருந் தொடரால் அடிகள் விளக்கிய திறம் வியந்து போற்றத்தக்கதாகும்.

இறைவனை வழிபட்டு வரம் பல பெற்ற வானவர் முனிவர் அடியார்கள் இன்னின்னாரெனக் குறித்துப் போற்றுவது, இம் மும்மணிக்கோவையின் இருபத் தெட்டாம் செய்யுளாகும். இதன்கண்

வித்தகப் பாடல் முத்திறத் தடியரும்
திருந்திய அன்பிற் பெருந்துறைப் பிள்ளையும்
அத்தகு செல்வத் தவமதித் தருளிய
சித்தமார் சிவ வாக்கிய தேவரும்

எனச் சைவ சமய குரவர் நால்வரையும் பெருஞ்செல்வத்தைத் துறந்த செம்மனச் செல்வராகிய சிவ வாக்கிய தேவரையும் குறித்துப் போற்றிய அடிகள்,

"வெள்ளை நீறு மெய்யிற் கண்டு
கள்ளன் கையிற் கட்டவிழ்ப் பித்தும்
ஓடும் பல்நரி யூளைகேட் டரனைப்
பாடின வென்று படாம்பல வளித்தும்
குவளைப் புனலில் தவளை அரற்ற
ஈசன் றன்னை யேத்தின வென்று
காசும் பொன்னுங் கலந்து தூவியும்
வழிபடும் ஒருவன் மஞ்சனத் தியற்றிய
செழுவிதை யெள்ளைத் தின்னக் கண்டு
பிடித்தலும் அவன் இப் பிறப்புக்கென்ன
இடித்துக் கொண்டவன் எச்சிலை நுகர்ந்தும்
மருத வட்டத் தொருதனிக் கிடந்த
தலையைக் கண்டு தலையுற வணங்கி
உம்மைப் போல எம்மித் தலையும்
கிடத்தல் வேண்டுமென் றடுத்தடுத் திரந்தும்
கோயில் முற்றத்து மீமிசைக் கிடப்ப
வாய்த்த தென்று நாய்க்கட்ட மெடுத்தும்
காம்பவிழ்ந் துதிர்ந்த கனியுருக் கண்டு
வேம்புகட் கெல்லாம் விதானம் அமைத்தும்
விரும்பின கொடுக்கை பரம்பரற் கென்று
புரிகுழற் றேவியைப் பரிவுடன் கொடுத்த
பெரிய அன்பின் வரகுண தேவர்"

எனச் சிவபத்திச் செல்வராகிய வரகுண தேவர் செய்த பேரன்பின் செயல்களை விரித்துரைத்துப் போற்றியுள்ளார். இங்குப் புகழ்ந்து போற்றப்பெற்ற பெரிய அன்பின் வரகுணதேவராவார்

"புயலோங் கலர் சடை யேற்றவன் சிற்றம்பலம் புகழும்
மயலோங் கிருங்களியானை வரகுணன்"

எனவும்,

"வரகுணனுந் தென்னவன் ஏத்து சிற்றம் பலத்தான்"

எனவும் திருவாதவூரடிகளாற் போற்றப் பெற்ற முதல் வரகுண பாண்டியர் என்பது முன்னர் விளக்கப்பெற்றது.

திருவேகம்பமுடையார் திருவந்தாதி

அந்தாதித் தொடையமைய நூறு பாடல்களைத் தன்னகத்தே கொண்டு திகழும் இந்நூல், காஞ்சி நகரிலுள்ள திருவேகம்பம் என்னும் திருக்கோயிலில் எழுந்தருளிய

சிவபெருமானைப் போற்றிப்பரவுவதாகலின் திருவேகம்ப முடையார் திருவந்தாதி யென்னும் பெயர்த்தாயிற்று. இப்பனுவல் இறைவனது திருவருட்டுணைகொண்டு பாடப் பெற்றதென்பதும், இவ்வந்தாதி நூறு பாடல்களால் இயன்றமைபற்றி இதற்குப் பதிற்றுப்பத்து என அடிகள் பெயரிட்டனரென்பதும்,

காட்டிவைத்தார் தம்மை யாங்கடிப் பூப்பெய்யக்
காதல்வெள்ளம்
ஈட்டிவைத்தார் தொழும் ஏகம்பர் ஏதும் இலாதஎம்மைப்
பூட்டி வைத்தார்தமக் கன்பது பெற்றுப் பதிற்றுப்பத்துப்
பாட்டிவைத்தார் பரவித்தொழுதாம் அவர் பாதங்களே.

எனவரும் இந்நூல் 99-ஆம் பாடலால் இனி விளங்கும்.

"திருக்கச்சி யேகம்பத்தில் எழுந்தருளிய பெருமானே, மெய்ஞ்ஞானத்தால் நின்னை வழிபட்டொழுகும் மெய்த் தொண்டர்கள் செல்லும் ஞானநெறி யிதுவென உணர்ந்தி லேன். சரியை கிரியையாகிய கைத்தொண்டு செய்து நின்கழல் போற்றும் அடியார்கள் தொண்டினை உவந்து மேற்கொண்டேனல்லேன். உடல் வளர்க்கும் உண வினையே விரும்பிப் பொய்யேயுன்னைப் போற்றிப் புறமே திரியும் இத்தொண்டனேனாகிய எளியேனது பணியையும் ஏற்றுக்கொள்வாயோ" என அடிகள் திருவேகம்பப் பெருமான் முன்னின்று குறையிரந்து வேண்டுவதாக அமைந்தது,

மெய்த்தொண்டர் செல்லும் நெறியறியேன் மிக நற்பணிசெய்
கைத்தொண்டர் தம்மிலும் நற்றொண் டுவந்திலன்
உண்பதற்கே
பொய்த்தொண்டு பேசிப் புறம்புறமே உன்னைப் போற்றுகின்ற
இத்தொண்டனேன்பணி கொள்ளுதியோகச்சி யேகம்பனே

எனவரும் இத்திருவந்தாதியின் முதற்பாடலாகும்.

சிவபெருமானுக்குத் தொண்டுபட்டதன் பயன் அவனடியார்களுக்குப் பணிசெய்தொழுகுதலே யென்பதும், அடியார்களது திருவடித்தூளியைத் தலைமேற்கொள் வாருள்ளம் தெளிவுபெறுமாதலால் அவர்கள் சிவனருள் பெறுதல் ஒரு தலையென்பதும், சிவபெருமான் திருவடியை வணங்குதற்கே தம்தலையினைப் பயன்படுத்தும் பெரு வேட்கையுடைய மெய்யடியார்களோடு இணங்கிப் பழகுவ தன்றி ஏனையரோடு தாம் நெருங்கிப்பழகுவது இல்லை

யென்பதும், பிறதெய்வங்களை இறைவனாக எண்ணிப் புலமைமிக்கோர் பாடும் செய்யுட்பொருள் முடிவில் ஏகம்ப வாணனாகிய முழுமுதற்பொருளைச் சென்று சார்வதால் நூலென மதிக்கப்படுவது அன்றிச் சார்தலில்லையாயின் அவ்வாறு மதிக்கப்படாதென்பதும் ஆகியவுண்மைகளை இவ்வந்தாதியில் 3, 4, 7-ஆம் பாடல்களில் திருவெண் காட்டடிகள் முறையே குறிப்பிட்டுள்ளார். இச்செய்யுட்களை நோக்குமிடத்து அடியார்க்குத்தொண்டுபட்டு வாழ்தலில் அடிகள் மேற்கொண்டிருந்த மனவுறுதி நன்கு புலனாதல் காணலாம்.

பகைவேந்தரைப் பொருதுவெல்லும் ஆற்றல் மிக்க நால்வகைச் சேனைகளையுடைய பெருவேந்தராயினும் எவ்வுயிர்க்கும் இறைவராகிய ஏகம்பவாணரது திருவருள் வண்ணமாகத்திகழும் திருநீற்றினைத் தம் நெற்றியில் அணிந்து அப்பெருமானை வழிபாடு செய்யாராயின் அவ்வேந்தரது அரசியலாட்சியும் அவர்தம் வீரம் நியாயம் கொடை முதலியவற்றுக்கு அடையாளமாக முழங்கும் முரசும் இவ்வுலகில் நிலைபெறா என்பதனை,

அன்றும் பகையடர்க்கும் பரிமாவும் மதவருவிக்
குன்றும் பதாதியும் தேரும்குலவிக் குடைநிழற் கீழ்
நன்றும் பொலியினும் கம்பர் நன்னீறு நுதற்கிலரேல்
என்றும் அரசும் முரசும் பொலியா இருநிலத்தே.

எனவரும் பாடலால் அடிகள் தெளிவாகக் கூறியுள்ளார். இத்திருப்பாடல், திருவெண்காட்டடிகள் காலத்தில் தமிழகத்தை யாண்ட மன்னர்களிற் சிவநெறியைக் கடைப்பிடித்தொழுகாதவர்கள் அடைந்த தோல்வியையும் சிவநெறியைக் கடைப்பிடித்தொழுகியவர்கள் பெற்ற வெற்றியையும் குறிப்பான் அறிவுறுத்துவதாய், உலகியலில் மக்கள் பெறும் வெற்றிக்கெல்லாம் உறுதுணையாய் விளங்குவது இறைவனது திருவருளே யென்ற உண்மையைப் புலப்படுத்தி நிற்றல் அறிந்து மகிழத் தக்கதாம்.

நிலத்தேவர் எனப் போற்றப்பெறும் தலைமையைப் பிறப்பினாலடைந்து வேதங்களை மறவாதோதி வேள்விகளை முறைப்படி செய்து வந்தாலும், திருவேகம்பப்பெருமானைப் பண்டைக் குலத்தை மறந்த தொண்டர்களோடும் கூடித் தொழும் திருவருள்நலம் வாய்க்கப்பெறாதவர்கள், காடு

களில் வேட்டையாடித்திரியும் வேடுவர்களோடு வைத்து எண்ணப்படும் தாழ்வுடையராவரென்பது அடிகள் கருத்தாகும்.

நிலத்திமை யோரில் தலையாய்ப்பிறந்து மறையொடங்கம்
வலத்திமைப் போதும் பிரியா எரிவளர்த்தாலும் வெற்பன்
குலத்துமை யோர்பங்கர் கச்சியுளேகம்பங் கூடித்தொழும்
நலத்தமையாதவர் வேட்டுவர் தம்மின் நடுப்படையே.

எனவரும் பாடலில் இக்கருத்துப் புலனுதல் காண்க.

சீலமின்றி அறிவின்றிக் கொலைகளவு முதலிய தீமை புரிந்தொழுகும் கீழ்ச்சாதி மக்களாயினும் ஏகம்ப வாணனுகிய இறைவனுடைய திருவடிக்கு அன்புடைய தொண்டராயின் அவர்களே யாவர்க்கும் மேலாகிய உத்தமராகப் போற்றத்தக்காரென்பதனை,

படையால் உயிர்கொன்று தின்று பசுக்களைப்போலச்செல்லும்
நடையால் அறிவின்றி நட்பிடைப் பொய்த்துக் குலங்களினும்
கடையாய்ப் பிறக்கினுங் கச்சியுளேகம்பத் தெங்களையா
ளுடையான் கழற்கன்பரேல் அவர் யாவர்க்கும் உத்தமரே.

என்ற பாடலில் அடிகள் குறிப்பிட்டுள்ளார். இறைவனடிக்குத் தொண்டு பூண்டொழுகுபவர் முன்னர் எத்தகைய குற்றமுடையராயினும் அவர்கள் இறைவனுக்கு ஆட்பட்டபின்னர் அக்குற்றங்களெல்லாம் எரி முன்னர்ப் பஞ்சுத்துய் போல வெந்து நீருக, எல்லா நற்பண்புகளும் பெற்று மேம்படுவாராதலின் 'ஆளுடையான் அடிக்கு அன்பரேல் அவர் யாவர்க்கும் உத்தமரே' என்ருர். இத் திருப்பாடல்,

'அங்கமெலாங் குறைந் தழுகு தொழுநோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனுங்
கங்கைவார் சடைக் கரந்தார்க் கன்பராகில்
அவர்கண்டீர் நாம் வணங்குங் கடவுளாரே'

எனத் திருநாவுக்கரசடிகளார் அருளிய பொருளுரையைத் தன்னகத்துக் கொண்டு திகழ்கின்றது.

திருவேகம்பப் பெருமானைப் பாட்டுடைத் தலைவனுகக் கொண்டு குடும்ப வாழ்க்கையில் தலைவன் தலைவி யென்பவர்களது அன்பின் திறத்தைப் புலப்படுத்துவனவாக அமைந்த அகத்துறைப் பாடல்கள் பல இத்திருவந்

தாதியில் இடம் பெற்றுள்ளன. இப்பாடல்கள் திருவாதவூரடிகள் திருவாய் மலர்ந்தருளிய திருச்சிற்றம்பலக் கோவையை நினைவுபடுத்துவனவாக வுள்ளன.

உடன்போக்கில் தலைவனொடு சென்ற தலைவியைத் தேடிச் சென்ற செவிலித்தாய், தன் மகளும் அவள் காதலனும் போலவே வழியில் எதிர்ப்பட்ட காதலர்களாகிய அயலார் இருவரைக் கண்டு 'நும்மையொத்த அன்பினராகிய இருவர் இவ்வழியே போகக் கண்டீரோ' என வினவுகின்றாள். அதுகேட்ட தலைமகன், 'இறைவன் ஊர்ந்தருளும் ஆனேற்றினையொத்த ஆற்றல் மிக்க தலைமகனைக் கண்டேன். நும்மால் வினவப்பட்ட இருவருள் மற்றொருவரை என்னுடன் வரும் மானேக்கினளாகிய இம் மங்கையைக் கேட்டுத் தெரிந்துகொள்மின்' என மறுமொழி கூறுகின்றான். இவ்வழகிய காட்சியை,

துணையொத்த கோவையும் போலெழிற் பேதையுந்
தோன்றலுமுன்
இணையொத்த கொங்கையொ டேயொத்த காதலொ
டேகினரே
அணையத்தர் ஏறொத்த காளையைக் கண்டனம் மற்றவரேல்
பிணையொத்த நோக்குடைப் பெண்ணிவள் தன்னொடும்
பேசுமினே,

எனவரும் பாடல் நன்கு புனைந்துரைத்தல் காணலாம். இப்பாடல்,

மீண்டா ரெனவுவந் தேன்கண்டு நும்மையிம் மேதகவே
பூண்டா ரிருவர்முன் போயினரே, புலியூரெனை நின்
றாண்டா னருவரை யாளியன் னானைக் கண்டேனயலே
தூண்டா விளக்கனையாய் என்னையோ அன்னை சொல்லியதே.

எனவரும் திருச்சிற்றம்பலக் கோவையை யடியொற்றி அன்பினைந்திணை யொழுகலாற்றுக்குரிய தலைவனது உள்ளத்து நிறையை நன்கு புலப்படுத்துவதாகும்.

இவ்வந்தாதியில் 38 முதல் 44 முடியவுள்ள பாடல்களில் மாதொரு பாகராகிய அர்த்த நாரீச்சுரர் திருக்கோலத்தியல்பு விரித்துரைக்கப் பெற்றுளது. இறைவன் கோயில் கொண்டருளிய திருத்தலங்களாக இவ் அந்தாதியில் அறுபத்தொன்பது தலங்கள் குறிக்கப் பெற்றுள்ளன. அவற்றுள் இமயம், கொல்லி, பொதியம், விந்தம், மந்தரம், மகேந்திரம், கருங்குன்றம், வெண்

குன்றம், செங்குன்றம், நெடுங்குன்றம், நற்குன்றம், திருவிற்பெரும்பேறு, புலிவலம், வில்வலம், திருக்காரிகரை, திருப்போந்தை, முக்கோணம் என்பவை வைப்புத் தலங்க ளெனக் கொள்ளத் தக்கன.

உடன்போக்கிற் சென்ற தலைவன் தன்னுடன் வரும் தலைவிக்குக் காஞ்சி நகரத்தின் எழில் நலங்களைக் காட்டிக் கூறுவனவாக அமைந்தன 75 முதல் 85 வரையுள்ள பாடல்களாம். காஞ்சி நகரத்தின் எழில்நலம் அந்நகரி லுள்ள திருக்காமக் கோட்டம், கச்சி அறச்சாலை, ஊரகம் பாடகம் முதலிய திருக்கோயில்கள் ஆகியவற்றைத் திரு வெண்காட்டடிகள் தாம் நேரிற்கண்ட வண்ணம் இத்திருப் பாடல்களிற் சொல்லோவியஞ் செய்துகாட்டிய திறம் உணர்ந்து மகிழத் தக்கதாகும்.

உடன் போக்கில் தலைவியை உடனழைத்துச் சென்ற தலைவன் காஞ்சி நகரத்தை யடைந்து அங்கு உமையம்மை யார் வெண்மணலாற் சிவலிங்கம் அமைத்து இறைவனை வழிபட்ட காலத்துப் பெருவெள்ளம் பெருக்கெடுத்துவரக் கண்டு அஞ்சித் தான் வழிபடும் சிவலிங்கத் திருமேனிக்கு ஊறுநேரா வண்ணம் தழுவிக்கொள்ள, அந்நிலையில் உமாதேவியாரது தனத்தழும்பும் வளைத்தழும்பும் தன் திருமேனியில் விளங்கச் சிவபெருமான் குழைந்து காட்டிய பேரன்பின் திறத்தைத் தன்னுடன் வரும் தலைவிக்கு எடுத்துரைத்து 'இத்தகைய திருவேகம்பத் திருக்கோயிலை இறைஞ்சப் பெற்றமையால் இவ்வுலகில் மக்கட் பிறப்பினு லடைதற்குரிய பெரும் பயனை நாம் பெற்றுள்ளோம்' என உண் மகிழ்ந்துரைப்பதாக அமைந்தது,

> தளராமிகு வெள்ளங் கண்டுமை யோடித் தமைத்தழுவக்
> கிளையார் வளைக்கை வடுப்படும் ஈங்கோர் கிறிபடுத்தார்
> வளமாப் பொழில்திரு வேகம்பம் மற்றிது வந்திறைஞ்சி
> உளரா வதுபடைத்தோம் மடவாய் இவ்வுலகத்துளே.

என்ற பாடலாகும். அன்பின் திறத்தாற் பிரிவின்றியுடன் சென்ற காதலர்கள், பிரியா நங்கையாகிய பெருமாட்டியார் வழிபட அன்பேயுருவாகிய பெருமான் அவர்க்கு அருள் செய்த திருக்கோயிலாகிய திருவேகம்பத்தைக் கண்டு வழி பட்டு மகிழ்ந்த திறம் இத் திருப் பாடலில் இனிது புலனுதல் காண்க.

திருவொற்றியூர் ஒருபாவொருபது

திருவொற்றியூரிற் கோயில்கொண்டெழுந்தருளியுள்ள சிவபெருமானது பொருள்சேர் புகழை விரித்துரைக்கும் ஆசிரியப்பாவாகிய பத்துப் பாடல்களால் அந்தாதித் தொடைபெறவமைந்த பனுவலாதலின், இது திருவொற்றியூர் ஒருபாவொருபது என்னும் பெயர்த்தாயிற்று. இதன்கண் உள்ள பாடல்கள் பத்தும் ஒற்றியூரிறைவனை முன்னிலைப்படுத்துப் போற்றுமியல்பினவாய், உணர்தற்கரிய சைவசித்தாந்த வுண்மைகளைத் தெளிவாக விளக்குவனவாகவுள்ளன.

உலகமே யுருவமாகத்திகழும் இறைவனது பெருந்திருவுருவின் இயல்பினை இப்பனுவலின் முதற் பாடலில் அடிகள் இனிது புலப்படுத்தியுள்ளார். சிவபெருமான் சமயங் கடந்த தனிமுதற் பொருளாக விளங்கும் மாட்சியினை,

இடத்துறை மாதரோ டிருடம்பென்றும்
நடத்தினை நள்ளிருள் நவிற்றினை யென்றும்
புலியதள் என்பொடு புனைந்தோ யென்றும்
பலிதிரி வாழ்க்கை பயின்றோ யென்றும்
அருவமும் உருவமும் ஆனாயென்றும்
திருவமர் மாலொடு திசைமுக னென்றும்
உளனே யென்றும் இலனே யென்றும்
தளரா னென்றும் தளர்வோ னென்றும்
ஆதியென்றும் அசோகின னென்றும்
போதியிற் பொலிந்த புராண னென்றும்
இன்னவை முதலாத் தாமறி யளவையின்
மன்னிய நூலின் பன்மையுள் மயங்கிப்
பிணங்கு மாந்தர் பெற்றிமை நோக்கி
அணங்கிய அவ்வவர்க் கவ்வவையாகி அடையப்
பற்றிய பளிங்கு போலும்
ஒற்றி மாநக ருடையோய் உருவே.

எனவரும் இரண்டாவது பாடலில் விரித்துக் கூறுவர்.

"திருவொற்றியூரில் எழுந்தருளிய பெருமானே, மாதொருபாகனாகிய நின்னைத் திருமாலென்றும் பிரமனென்றும் அருகனென்றும் புத்தனென்றும் பல்வேறு பெயர்களாற் சமய வாதிகள் பலர் மாறுபடக் கூறினாலும் யாவர்க்கும் மேலாம் இறைவனாகிய நீ, அவ்வச் சமயத்தவர்களுக்கு அவரவர் நினைந்த திருமேனி கொண்டு தோன்றி அருள்

புரிகின்றாய். பளிங்கு தன்கண் சார்ந்த பொருளின் தன்மையைப் புலப்படுத்தி அவற்றின் தன்மை தனக்கெய்தலின்றித் தனித்து விளங்குமாறுபோன்று மேம்பட்டு விளங்குதல் நின்திருவுருவின் இயல்பென வுணர்ந்தோம்" என்பது இப்பாடலின் பொருளாகும். இச்செய்யுள்,

"மெய்த்தாறு சுவையுமேழிசையு மெண்குணங்களும்
விரும்பு நால்வே
தத்தாலும் அறியவொண்ணு நடைதெளியப் பளிங்கே
போல் அரிவைபாகம்
ஒத்தாறு சமயங்கட் கொருதலைவன்"

எனவரும் திருஞானசம்பந்தர் திருப்பாடற் பொருளை விரித்துரைத்தல் காண்க.

எல்லாப் பொருள்களிலும் நீக்கமறக்கலந்து விளங்கும் இறைவனுக்கு உலகமே யுருவமாதலின், அப்பேருரு வினை விட்டு விலகிநிற்கும் பொருள்கள் உலகில் இல்லை. ஆதலால் உலகப் பொருள்கள்யாவும் இறைவன் திருவுருவத்தின் அவயவங்களாகவே கொள்ளத்தக்கன. திரிபுர மெரித்தது, தக்கன்தலை யரிந்தது, இந்திரனைத் தோள் நெரித்தது, பிரமன் தலைகளிலொன்றைக் கிள்ளியது, மன்மதனை யெரித்தது, இராவணனை விரலால் அடர்த்தது, கூற்றுவனை யுதைத்தது முதலாக இறைவன் செய்த வீரச்செயல்களெனப் போற்றப்பெற்றுவரும் இச்செயல்களெல்லாம், இறைவன் உலகத்தை இயக்குங்கால் அவனருளினை யெதிரேற்றுக் கொள்ளாதார் செய்த வினைவயத்தால் நிகழ்ந்த நிகழ்ச்சிகளெனக்கொள்வதல்லது, இறைவன் தனக்குப் புகழுண்டாக விரும்பிச் செய்த வீரச்செயல்களென மெய்யுணர்வுடையோர் கொள்ளமாட்டார்கள். இவ்வுண்மையினை,

உருவாம் உலகுக் கொருவனாகிய
பெரியோய் வடிவிற் பிறிதிங் கின்மையின்
எப்பொரு ளாயினும் இங்குள தாமெனின்
அப்பொருள் உனக்கே அவயவ மாதலின்
முன்னிய மூவெயில் முழங்கெரி யூட்டித்
தொன்னீர் வையகந் துயர்கெடச் சூழ்ந்ததும்
வேள்வி மூர்த்திதன் தலையினை விடுத்ததும்
நீள்விசும் பாளிதன் தோளினை நெரித்ததும்
ஓங்கிய மறையோற் கொருமுகம் ஒழித்ததும்
பூங்கணை வேளைப் பொடிபட விழித்ததும்

திறல்கெட அரக்கனைத் திருவிர லுறுத்ததும்
குறைபடக் கூற்றினைக் குறிப்பினில் அடர்த்ததும்
என்றிவை முதலா ஆள்வினை யெல்லாம்
நின்றுழிச் செறிந்த நின்செய லாதலின்
உலவாத் தொல்புக ழொற்றியூர
பகர்வோர் நினக்கு வேறின்மை கண்டவர்
நிகழ்ச்சியின் நிகழி னல்லது
புகழ்ச்சியிற் படுப்பரோ பொருளுணர்ந்தோரே.

என்ற பாடலில் அடிகள் தெளிவாக விளக்கிய திறம் அறிந்து மகிழத்தக்கதாகும்.

தற்போதத்தால் மெய்ப்பொருளையுணர முற்பட்டு உயர்ந்த நான்முகன் முதலாக அறியாமையாகிய இருளொடு ஒற்றித்து நின்று யாக்கையுட்பட்டு வாழும் எல்லாயுயிர்களும், உருவம் உணர்வு, பெருமை, ஆற்றல் செல்வம், வன்மை, செய்யும் தொழில்வகை ஆகியவற்றால் வேறு பட்டனவாகி வினைத்தொடர்பினின்றும் நீங்காது ஒன்றை யொன்றொவ்வாதனவாய்க் கூடி நிற்பது இவ் வுலகத் தொகுதி. இதன்கண் வாழும் உயிர்களின் ஒழுக லாறுகள், நிலைபெற்ற பெருங்கடலுள் உயர்ந்து தோன்றும் அலைகளைப் போன்று இறைவனாகிய முழுமுதற் பொருளை யாதாரமாகக் கொண்டு தோன்றி, அப்பொருளினது வியா பகத்தினிடையே வளர்ந்து விரிந்தும் ஒடுங்கியும் இடம் பெயர்ந்தும் கலந்தும் ஒன்றிலும் தோய்வின்றி விளங்கும் அம்முதல்வனது இயல்பினை விளக்கி நிற்பன. இங்ஙனம் இறைவனது வியாபகத்துள்ளே இவ்வுலகந் தோன்றி நின் றொடுங்கித் தொழிற்படும் இயல்பினை இறைவனது திருவருள் ஞானம்பெற்ற பெரியோர்கள் அறிவதல்லது திருவருள் பெறாத ஏனையோர் அறிதலியலாது. இவ் வுண்மையினை,

பொருளுணர்ந் தோங்கிய பூமகன் முதலா
இருள்துணை யாக்கையில் இயங்கு மன்னுயிர்
உருவினும் உணர்வினும் உயர்வினும் பணியினும்
திருவினும் திறலினும் செய்தொழில் வகையினும்
வெவ்வேறாகி வினையொடும் பிரியா
தொவ்வாப் பன்மையுள் மற்றவர் ஒழுக்கம்
மன்னிய வேலையுள் வான்திரை போல
நின்னிடை யெழுந்து நின்னிடை யாகியும்
பெருகியுஞ் சுருங்கியும் பெயர்ந்துந் தோன்றியும்
விரவியும் வேறாய் நின்றனை விளக்கும்

ஓவாத் தொல்புகழ் ஒற்றியூர
மூவா மேனி முதல்வ நின்னருள்
பெற்றவர் அறியினல்லது
மற்றவர் அறிவரோ நின்னிடை மயக்கே.

எனவரும் பாடலில் அடிகள் தெளிவாக விளக்கியுள்ளார். மாற்றம் மனங்கடந்து விளங்கும் இறைவனதியல்பினை உள்ளவாறுணரவல்லார்க்குப் பிறவிப்பிணி அறுதல் உறுதியென்பதனை ஐந்தாம் பாடலில் அறிவுறுத்தியுள்ளார்.

சிவபெருமானது திருக்கோலத்தில் அமைந்துள்ள பொருள் நுட்பத்தை,

தூமதி சடைமிசைச் சூடுதல் தூநெறி
ஆமதியானென அமைத்தவாறே
அறனுரு வாகிய ஆனே றேறுதல்
இறைவன் யானென இயற்றுமாறே
அது அவள் அவனென நின்றமை யார்க்கும்
பொதுநிலை யானென உணர்த்திய பொருளே
முக்கணன் என்பது முத்தீ வேள்வியில்
தொக்கதென்னிடை யென்பதோர் சுருக்கே
வேத மான்மறி யேந்துதல் மற்றதன்
நாதன் நானென நவிற்று மாறே
மூவிலை யொருதாட் சூல மேந்துதல்
மூவரும் யானென மொழிந்த வாறே
எண் வகை முர்த்தி யென்பதிவ் வுலகினில்
உண்மை யானென உணர்த்திய வாறே.

என ஆறும் பாடலில் அடிகள் தெளிவாக உணர்த்துகின்றார்.

இறைவனாகிய நின்னியல்பு சொல்லினெல்லைக்கு அப்பாற்பட்டு விளங்குவதாதலின் அதனை யறிந்துரைப்பார் ஒருவருமிலர் என ஏழாம் பாடலிலும், 'உடலாகிய கடலிற்பட்டுத் தடுமாறும் அடியேனை நினது திருவடிப் புணையைத் தந்து உய்வித்தருள்க' என எட்டாம் பாடலிலும் குழந்தை அழும் அழுகை யொலியைக் கேளாத தூரத்தே தாய் சென்றாளாயினும் பிள்ளையின் பசிநேரத்தை யெண்ணி அவள் தானே விரைந்து வந்து பசி வருத்தத்தைத் தீர்த்தல் போன்று, பல பிறவிகளிலும் உழன்று மயங்கிச் செய்வதறியாது திகைக்கும் எளியேற்கு இறைவனாகிய நீயே யெளி வந்து எனது பாசப் பிணிப்பினை நீக்கி யருள் புரிவாயாக' என ஒன்பதாம் பாடலிலும் அடிகள் இறைவனை

வேண்டும் முறை படிப்போருள்ளத்தை யுருக்குவதாகும். இறைவனது மெய்ப்புகழைப் போற்றிப் பரவுவதாக அமைந்தது இப்பனுவலின் பத்தாம் பாடலாகும். இது திருவாசகத்திலுள்ள போற்றித் திருவகவலை யொத்து அமைந்துளது. திருவாசக முதலிய முன்னைத் திருமுறைகளில் திருவெண்காட்டடிகள் கொண்டுள்ள பேரார்வம் அவர் பாடிய செழும் பாடல்களால் நன்கு புலனாதல் காணலாம்.

12. நம்பியாண்டார் நம்பி

பதினொராந் திருமுறை யாசிரியர்களுள் நம்பியாண்டார் நம்பியும் ஒருவர். இவர் திருநாரையூரில் ஆதி சைவமரபில் தோன்றியவர். இளம் பருவத்திலேயே திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளையாரால் ஆட்கொள்ளப் பெற்றமையால் நம்பியாண்டார் நம்பி யென வழங்கப் பெற்றார். கருவிலே திருவுடையராய்ச் செந்தமிழ்ப் புலமையும் செம்பொருட்டுணிபும் நன்கு வாய்க்கப்பெற்ற இவ்வாசிரியர், தேவாரத் திருமுறையும் திருத்தொண்டர் வரலாறும் உலகமெங்கும் பரவுதல் வேண்டுமென விரும்பிய இராசராச அபயகுல சேகரனென்னும் சோழ மன்னனது பேரார்வத்தை இனிது நிறைவேற்றுதல் வேண்டிப் பொல்லாப் பிள்ளையார் திருவருள் பெற்று மன்னனுடன் தில்லைக்குச் சென்று தேவாரத் திருமுறையைக் கண்டு அவற்றை முன் போல ஏழு திருமுறைகளாக வகுத்துதவிய செய்தி திருமுறை கண்ட புராணத்தில் விரித்துரைக்கப் பெற்றுளது. நம்பியாண்டார் நம்பியாகிய இத்திருவருட் செல்வர் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதியும் பத்தாம் நூற்றாண்டின் தொடக்கமுமாகிய காலப் பகுதியில் வாழ்ந்தவரென்பது முன்னர் ஆராய்ந்து விளக்கப்பெற்றது.[1] இவர் இயற்றியருளிய பனுவல்களாகப் பதினொராந் திருமுறையிற் பத்துப் பிரபந்தங்கள் சேர்க்கப்பெற்றுள்ளன.

(1) திருநாரையூர் விநாயகர் திருவிரட்டைமணிமாலை

இப்பிரபந்தம் திருநாரையூரிற் கோயில் கொண்டருளிய பொல்லாப் பிள்ளையாராகிய விநாயகப் பெருமானைப்

1. பன்னிரு திருமுறை வரலாறு, முதற் பகுதி பக்கம் 15–20.

போற்றிப் பரவுவதாய், வெண்பா, கட்டளைக் கலித்துறை யென்னும் இருவகைப் பாக்களால் அந்தாதித்தொடை பெறத்தொடுக்கப் பெற்றதாதலின் திருநாரையூர் விநாயகர் திருவிரட்டை மணிமாலை யென்னும் பெயர்த்தாயிற்று. திருநாரையூர்ப் பொல்லாப்பிள்ளையார் திருவருளால் இளம் பருவத்திலேயே செந்தமிழ்ப் புலமை வாய்க்கப்பெற்ற நம்பியாண்டார் நம்பி யென்பார் தாம்பெற்ற திருவருட் புலமையின் பயனாக முதன்முதற் பாடிய திருப்பாடல்,

என்னை நினைந்தடிமை கொண்டென் இடர்கெடுத்துத்
தன்னை நினையத் தருகின்றான்—புன்னை
விரசு மகிழ் சோலை வியனாரை யூர்முக்கண்
அரசு மகிழ் அத்திமுகத்தான்.

என்பதாகும். "புன்னை மரங்களும் மகிழ மரங்களும் அடர்ந்த சோலையாற் சூழப்பெற்ற திருநாரையூரிற்கோயில் கொண்டருளும் முக்கட்பெருமானாகிய சிவபெருமான் மகிழும் மூத்தபிள்ளையாராகிய யானைமுகப் பெருமான், யான் அவனை நினைக்கும் ஆற்றல் பெறுதமுன்னே என்மேல் வைத்த பெருங்கருணையால் என்னை நினைந்து ஆட்கொண்டு, அடியேனது பிறவித் துயரைப்போக்கி இறைவனாகிய தன்னை இடைவிடாது நினைந்து பரவும் சிவஞானத்தை அடியேற்கு மேலும் மேலும் வழங்கியருள் கின்றான்" என நம்பியாண்டார் நம்பிகள் தாம்பெற்ற திருவருளனுபவத்தை இத் திருப்பாடலில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். இதன்கண் 'அரசு மகிழ் அத்தி முகத்தான்' என்ற தொடரில் அரசு, மகிழ், அத்தி என்ற சொற்கள் அவ்வப் பெயருடைய மரங்களையும் குறிட்பால் அறிவுறுத்தி நிற்றல் அறிந்து மகிழத்தக்கதாகும். இவ் வெண்பாவினால் தன்னைப் போற்றியதற்கு உளமிக மகிழ்ந்த விநாயகப்பெருமான், திருமாலின் தோற்றமெனப் போற்றப் பெறுந் திருவுடை மன்னனாகிய இராசராச அபயகுல சேகரனென்னும் சோழமன்னனுக்குத் தில்லையில் தேவாரத்திருமுறைகள் சேமிக்கப்பெற்றிருந்த செய்தி யினையும் திருத்தொண்டத் தொகையிற் போற்றப்பெறும் அடியார்களது வரலாற்றினையும் தம் வாயிலாகப் புலப் படுத்தியருளிய உண்மை வரலாற்றினை,

யானேத் தியவெண்பா என்னை நினைந்தடிமை
தானே சனார்த்தனற்கு நல்கினான்—தேனே
தொடுத்தபொழில் நாரையூர்ச் சூலம் வலன் ஏந்தி
[illegible]டுத்த மதமுகத்த ஏறு.

எனவரும் இவ்விரட்டைமணிமாலையின் 13-ம் பாடலால் நம்பியாண்டார்நம்பி உய்த்துணரவைத்தமை நினைந்து போற்றத்தக்கதாகும். இப்பாடலில் சனார்த்தனன் என்றது, திருமாலின் தோற்றமெனக் குடிமக்களாற் போற்றப் பெற்றவனும் இந்நூலாசிரியராகிய நம்பியாண்டார் நம்பியைப்போற்றித் தேவாரத்திருமுறையை யாண்டும் பரவச் செய்தவனுமாகிய சோழ மன்னனை யெனக் கொள்ளுதல் பொருந்தும்.

விநாயகர் திருவிரட்டை மணிமாலையாகிய இப்பனுவல் கபில தேவ நாயனார் பாடிய மூத்த பிள்ளையார் திருவிரட்டை மணிமாலையை யடியொற்றி அமைந்த தாகும். நம்பியாண்டார்நம்பி முதன் முதற்பாடிய 'என்னை நினைந்தடிமைகொண்டு' என்ற வெண்பாவை முதற் பாடலாகக்கொண்டு இவ்விரட்டை மணிமாலை தொடுக்கப் பெற்றிருத்தலால், நம்பியாண்டார்நம்பி இளம் பருவத்தில் முதன்முதற் பாடிய செந்தமிழ்ப் பிரபந்தம் இதுவென்பது நன்கு பெறப்படும்.

சிவபெருமானிடமிருந்து தீஞ்சுவை மிக்கதொரு மாங்கனியைப் பரிசாகப் பெறுதற்பொருட்டு முருகப் பெருமானும் மூத்தபிள்ளையாராகிய விநாயகரும் உலகத்தை விரைவிற் சுற்றிவரும் போட்டியில் ஈடுபட்டனரென்பதும் அவருள் இளையபிள்ளையாராகிய முருகன் மயில்மீதமர்ந்து உலகத்தைச் சுற்றிவரச்செல்ல விநாயகர் உலகமே உருவாகிய சிவபெருமானை வலம்வந்து மாங்கனியை எளிதிற்பெற்று மகிழ்ந்தனரென்பதும் புராணவரலாறாகும். இச்செய்தியினை,

> கொம்பனைய வள்ளிகொழுநன் குறுகாமே
> வம்பனைய மாங்கனியை நாரையூர்—நம்பனையே
> தன்னவலஞ் செய்துகொளும் தாழ்தடக்கையாயென்னோ
> பின்னவலஞ் செய்வதெனோ பேசு.
>
> மலஞ்செய்த வல்வினை நோக்கி உலகை வலம்வருமப்
> புலஞ்செய்த காட்சிக் குமரற்கு முன்னே புரிசடைமேற்
> சலஞ்செய்த நாரைப் பதியரனைத் தன்னைக் கனிதரவே
> வலஞ்செய்து கொண்ட மதகளிறே யுன்னை வாழ்த்துவனே.

எனவரும் பாடல்களால் ஆசிரியர் உளமுருகிப்போற்றி யுள்ளார். இவ்வாறு இத்திருவிரட்டை மணிமாலையிலுள்ள திருப்பாடலைக் கூர்ந்து நோக்குங்கால் திருநாரையூர்ப்

பொல்லாப்பிள்ளையாரை வழிபடு கடவுளாகக் கொண்டு சிவநெறி பரப்பிய திருவருட் செல்வர் நம்பியாண்டார் நம்பியென்பது நன்கு புலனும்.

(உ) கோயிற் றிருப்பண்ணியர் விருத்தம்

சிவநெறிச் செல்வர்களாற் கோயில் எனச் சிறப்பித்துப் போற்றப்பெறும் பெரும்பற்றப்புலியூராகிய தில்லைச் சிற்றம்பலத்திலே எழுந்தருளியுள்ள கூத்தப்பெருமானைப் போற்றும் கட்டளைக்கலித்துறையாகிய திருவிருத்தங்களால் இயன்ற பனுவலாதலின் இது கோயிற் றிருப்பண்ணியர் விருத்தம் என யாப்பினுற் பெயர் பெறுவதாயிற்று. பண்ணோடியன்ற பாடல் என்ற பொருளிற் பண்ணியல் விருத்தமென்பது, லகரத்திற்கு ரகரம் போலியாய்ப் பண்ணியர் விருத்தமென்ருகித் திருப்பண்ணியர் விருத்தமென வழங்கப் பெற்றதெனக் கொளளுதல் பொருந்தும். கட்டளைக் கலித்துறையைத் திருவிருத்தமென வழங்கும் வழக்கம் உண்மை திருநாவுக்கரசர் அருளிய திருவிருத்தமாகிய திருப்பதிகங்களின் பெயராலும் நம்மாழ்வார் அருளிய திருவிருத்தம் என்ற பிரபந்தத்தின் பெயராலும் இனிது புலனும். இனி, 'கோயில் திருப்பண்ணியர்' என்ற தொடர்க்குத் 'தில்லைப் பெருங்கோயிலில் எழுந்தருளியிருந்து உயிர்களுக்குத் திருத்தகவிற்ருகிய இன்னருளைப் புரிவார்' எனப் பொருள் கொண்டு, பாட்டுடைத் தலைவனுகிய இறைவன் பெயரால் கோயிற்றிருப்பண்ணியர் விருத்தமென இந்நூல் பெயரெய்தியதெனக் கொள்ளினும் அமையும். அந்தாதியாகவமைந்த இப்பிரபந்தம், எழுபது கட்டளைக்கலித்துறைகளையுடையதாகும். திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளையார் அறிவுறுத்தியபடி தில்லைப் பெருங் கோயிலையடைந்து தேவாரத் திருமுறைகளைக் காண விரும்பிய நம்பியாண்டார் நம்பிகள் இப்பனுவலைப் பாடித் தில்லைச்சிற்றம்பலவனையிறைஞ்சிப் போற்றினர் என்பது வரலாறு.

'முற்காலத்திலே தேவர்கள் உய்யும் வண்ணம் ஆலகால நஞ்சினையுண்டு மிடற்றிலடக்கிய பெரியோனே, தில்லைச்சிற்றம்பலத்தில் திருக்கூத்தியற்றிநின்ற செம்பவளம்போலும் நிறமமைந்த திருமேனியையுடைய சிவபெருமானே, எனதுள்ளத்திலுள்ள வஞ்சனை முதலிய

குற்றங்களை நீக்கி நெஞ்சத்தை நினது திருவடிக்கீழ் நிலைபெறவைத்து மலர்போலுங் கண்களில் கண்ணீர் ததும்ப நின்னை வணங்கிப் போற்றினேனல்லேன். ஒரு சிறிதும் தகுதிபெருத எளியேனையும் நீ ஆட்கொண்டருளி ஞய். நினது திருவருட்கு யான் என்ன தகுதியுடையேன் என என்னைக் கண்ட பிறரெல்லாம் நின்னைக் கடிந்துரைப்ப ரல்லரோ' எனத் தில்லைப்பெருமானை நோக்கி நம்பியாண் டார் நம்பிகள் உளமுருகிப் போற்றுவதாக அமைந்தது,

> நெஞ்சந் திருவடிக் கீழ்வைத்து நீண்மலர்க் கண்பனிப்ப
> வஞ்சங் கடிந்துன்னை வந்தித்திலேன் அன்று வானருய்ய
> நஞ்சங் கருந்து பெருந்தகையே நல்ல தில்லைநின்ற
> அஞ்செம் பவளவண்ணு அருட்கியானினி யாரென்பரே.

எனவரும் இப்பிரபந்தத்தின் முதல் திருவிருத்தமாகும்.

இறைவன் உயிர்களது பிறவி நோயைக் களைதற் பொருட்டே தில்லைச்சிற்றம்பலத்தில் திருக்கூத்தியற்று கின்ருன். எவ்வுயிர்க்குந் தாயுந் தந்தையுமாகிய அவ் விறைவனது திருவடியே அடியேற்குத் தலைமறை நன்னிழ லாவது. காளத்திமலையில் தன்னை வழிபட்ட வேடுவராகிய கண்ணப்பர்க்குவேண்டும் வரமருளிப் பொருவில் அன்புருவ மாகிய தெய்வத் தன்மையை வழங்கிய பேரருளாளன் அவ்விறைவனுவன். பொன்னம்பலத்துறை புண்ணியனு கிய அவனுக்குப் பண்டைப் பறைச் சேந்தன் அன்பினுல் அளித்த பழைய சோறும் திருவமுதாயிற்று. அம்பலவாண ஞகிய அவனருளால் நம்பியாரூரராகிய சுந்தரரும் கழறிற் றறிவாராகிய சேரமான் பெருமாளும் முறையே வெள்ளை யானை மீதும் குதிரை மீதும் அமர்ந்து மக்கள் யாக்கை யோடு திருக்கயிலையையடைந்து இன்புற்ருர்கள். கல்லா லெறிந்த சாக்கியஞர்க்கும் இறைவன் எதிர் தோன்றி இன்னருள் புரிந்தான். கண்ணப்பர் அன்பினுற் படைத்த இறைச்சியையும் அதிபத்தரென்பார் விடுத்த மீனையும் இழிதொதுக்கத்தக்கன எனவெண்ணுது ஏற்றுக்கொண்ட மையால் உயிர்கள் செய்யும் பழிக்கத்தக்க செயல்களையும் இகழாத பண்புடையான் இறைவன் என்பது புலனும். தன்னை வழிபடுவாரனைவர்க்கும் மீளாவழியாகிய பேரின் பத்தை வழங்கவேண்டிச் சிவபெருமான் மன்ருடவும் சில ஊமர்கள் அவ்விறைவன் திருவருளில் நாட்டமின்றிப் பிறப்பிறப்பில் வீழ்ந்து தடுமாறுதல் அந்தோ இரங்கத்

தக்கது. தில்லைமன்னனாகிய சிவபெருமானைத் தம் சித்தகக் கோயிலில் இருத்தி வழிபடும் ஆகமசீலர்க்கன்றி நூல்களைக் கற்றும் கற்றவழியடங்கி நில்லாத வெறும் புத்தகப் பேய்களுக்கு அவன் பொன்னடி புலப்படுதலில்லை என நம்பியாண்டார் நம்பிகள் இந்நூலில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

திருவாதவூரடிகளாகிய மாணிக்க வாசக சுவாமிகள் இறைவன் திருவடிக்கே பொருளமைத்து அகனைந்திணையாகிய இன்பத்துறையிற் பாடிய திருச்சிற்றம்பலக் கோவையாகிய செந்தமிழ்ப் பனுவல் உயர்வறவுயர்ந்த நலமுடையதென்றும், அதன் பொருள் நலங்களைத் தெளிந்து கொள்ளும் வன்மை பெறாத புலவர் சிலர் அகப்பொருட்டுறையமையத் தாமும் பல பாடல்களைப் பாடுதல் அறிஞரது நகைப்பிற்கு இடந்தருவதாமென்றும் விளக்குவதாக அமைந்தது,

> வருவாசகத்தினின் முற்றுணர்ந்தோனை வண்தில்லைமன்னைத்
> திருவாதவூர்ச் சிவபாத்தியன் செய்திருச் சிற்றம்பலப்
> பொருளார்தருதிருக் கோவை கண்டேயும் மற்றப்பொருளைத்
> தெருளாத வுள்ளத்தவர் கவிபாடிச் சிரிப்பிப்பரே.

என்ற பாடலாகும். திருச்சிற்றம்பலக்கோவையில் நம்பியாண்டார் நம்பிகள் கொண்ட பெருமதிப்பு இச்செய்யுளால் இனிது புலனாதல் காண்க.

'பெரிய அன்பின் வரகுணதேவர்' எனப் பட்டினத்தடிகளாற் போற்றப் பெற்ற வரகுணபாண்டியர் திருநீற்றின்மேல் வைத்த உறைப்புடைய பேரன்பைப் புலப்படுத்தும் வரலாற்று நிகழ்ச்சியினை,

> பொடியேர் தருமேனியனாகிப் பூசல்புகவடிக்கே
> கடிசேர் கணைகுளிப்பக்கண்டு கோயிற் கருவியில்லா
> அடியேபட வமையுங்கணையென்ற வரகுணன்றன்
> முடியே தருகழல் அம்பலத்தாடிதன் மொய்கழலே.

எனவரும் பாடலில் நம்பியாண்டார் நம்பிகள் குறிப்பிட்டுப் போற்றினமை முன்னர் விளக்கப் பெற்றது.[1]

1. பன்னிரு திருமுறை வரலாறு, இரண்டாம் பகுதி பக்கம் – 98.

(3) திருத்தொண்டர் திருவந்தாதி

திருவாரூர்ப் பெருமான் 'தில்லை வாழந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்' என அடியெடுத்துக் கொடுக்க நம்பியாரூரர் திருவாய் மலர்ந்தருளிய திருத்தொண்டத் தொகையென்னுந் திருப்பதிகத்திற் போற்றப் பெற்ற திருத்தொண்டர்களின் வரலாற்றைச் சுருக்கமாக வகுத்துக் கூறும் கருத்துடன் நம்பியாண்டார் நம்பி பாடிய பனுவல் திருத்தொண்டர் திருவந்தாதி யென்பதாகும். சோழ மன்னன் வேண்டிக் கொண்டபடி தில்லையில் தேவாரத் திருமுறையைக் கண்டு ஏழு திருமுறைகளாக வகுத்து உதவிய நம்பியாண்டார் நம்பி தமக்குப் பொல்லாப் பிள்ளையார் உபதேசித்தருளியபடி திருத்தொண்டத் தொகையை முதனூலாகக் கொண்டு தனியடியார் அறுபதின்மரும் ஒன்பது திருக்கூட்டத்தாரும் ஆகிய திருத்தொண்டர்களுக்குரிய ஊர், நாடு, மரபு முதலியவற்றையும் அவர்கள் மேற்கொண்டொழுகிய திருத்தொண்டின் நெறியினையும் அதனால் அவர்கள் பெற்ற பேற்றினையும் வகுத்து விளக்கும் நிலையில் கலித்துறைத் திருவந்தாதியாகிய இப் பனுவலைப் பாடியருளினாரென்பது,

> ஆக்கியபின் திருத்தொண்டத் தொகையடைவை யருளாலே
> நோக்கியபின் நாயன்மார் நுடங்கடைவுந்-தொழிற்பேறும்
> பாக்கியத்தால் இபமுகந்தோன் அருள்செய்த பகுதியினால்
> வாக்கியல்சேர் அந்தாதிநம்பி யடைவே வகுத்தார்.

எனவரும் திருமுறை கண்ட புராணச் செய்யுளாலும்,

> பொன்னி வடகரை சேர் நாரையூரிற் புழைக்கைமுக
> மன்னன் அறுபத்து மூவர் பதிதேம் மரபுசெயல்
> பன்ன அத்தொண்டத்தொகைவகை பல்கு மந்தாதி தன்னைச்
> சொன்ன மறைக்குல நம்பிபொற் பாதத்துணை துணையே.

என நம்பியாண்டார் நம்பிக்குரிய வணக்கமாக இத்திருவந்தாதியின் இறுதியிற் காணப்படும் பழம் பாடலினாலும் இனிது விளங்கும்.

நம்பியாரூரர் பாடிய திருத்தொண்டத் தொகையிற் போற்றப் பெற்ற அடியார்களின் வரலாறுகளை வகுத்துக் கூறுவது இத் திருவந்தாதியாதலின், இதனைத் 'திருத்தொண்டத் தொகைவகை' யென வழங்குதல் உண்டென்பதும், முதனூலாகிய திருத்தொண்டத் தொகையையும்

அதன் வகையாகிய இத்திருவந்தாதியையும் ஆதாரமாகக் கொண்டு இயற்றப் பெற்றது திருத்தொண்டர் புராணமா தலின் அதற்குத் ' திருத்தொண்டத் தொகைவிரி ' யென்ற தோர் பெயரும் உண்டென்பதும்,

அந்தமெய்ப் பதிகத் தடியார்களை
நந்தம் நாதனும் நம்பியாண்டார் நம்பி
புந்தியாரப் புகன்ற வகையினால்
வந்தவாறு வழாமல் இயம்புவாம்.

எனவும்,

தொன்றுசீர்த் திருத் தொண்டத் தொகைவிரி
இன்றெனுதர வாலிங் கியம்புகேன்

எனவும் வரும் சேக்கிழாரடிகள் வாய்மொழியால் உய்த் துணரப்படும்.

திருத்தொண்டத் தொகைத் திருப்பதிகத்தினை அடி யொற்றி அதன்கண் போற்றப்பெறும் அடியார்களின் வரலாறுகளை இத்திருவந்தாதி வகுத்துக் கூறுகின்றது. இதன்கண் எண்பத்தொன்பது கட்டளைக் கலித்துறைகள் உள்ளன. திருத்தொண்டத் தொகைத் திருப்பதிகத்தி லுள்ள பதினொரு பாடல்களிலும் ' ஆரூரன் ஆரூரில் அம் மானுக்காளே ' யென நம்பியாரூரர் தம்மைத் தொண் டர்க்குத் தொண்டராகக் குறிப்பிடுகின்றார். இப்பதினோரி டங்களிலும் சுந்தரர் வரலாற்று நிகழ்ச்சிகளைக் குறித்துப் போற்றும் பதினொரு பாடல்கள் இத்திருவந்தாதியில் முறையே அமைந்துள்ளன. திருநாவுக்கரசர், திருஞான சம்பந்தர், சேரமான் பெருமாள், கோச் செங்கட் சோழர் ஆகிய பெருமக்களின் வரலாறுகள் இரண்டிரண்டு பாடல் களிலும், ஏனைப் பெருமக்களின் வரலாறுகள் ஒவ்வொரு பாடலிலும் குறித்துப் போற்றப்பெற்றன. திருத்தொண்டத் தொகையிற் போற்றப்பெறும் தனியடியார் தொகையடியார் இத்துணையரென்பதை ஒரு பாடலிலும், அத்திருப்பதிகத்தி லுள்ள பாடல்களின் முதற்குறிப்பினை ஒரு பாடலிலும் இத் திருவந்தாதியை ஓதுதலால் வரும் பயனை ஒரு பாடலிலும் கூறி நம்பியாண்டார் நம்பிகள் இத்திருவந்தாதியினை நிறைவு செய்துள்ளார். இதன் அமைப்பினைக் கூர்ந்து நோக்குங்கால் இத்திருவந்தாதி திருத்தொண்டத் தொகையின் விளக்கமாக இயற்றப்பெற்றதென்பது நன்கு

விளங்கும். இதன் முதனூலாகிய திருத்தொண்டத் தொகையையும் இதனை விரித்துரைக்கும் முறையில் தோன்றிய விரிநூலாகிய பெரிய புராணத்தையும் ஒப்பு நோக்கிப் பயில்வார்க்கு இத்திருவந்தாதியின் பொருள் நலங்கள் இனிது புலனாகும்.

(4) ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி

வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத்துறை விளங்கச் சீகாழிப்பதியில் அவதரித்து உமையம்மையார் அளித்த ஞானப்பாலைப்பருகி மூன்றும் வயதிலேயே 'தோடுடைய செவியன்' என்னுந் திருநெறிய தமிழ்பாடிச் சிந்தையும் மொழியும் செல்லா நிலையில் அப்பாற்பட்டு விளங்கும் சிவ பரம் பொருளைப் 'பிரமாபுரம் மேவிய பெம்மான் இவனன்றே' எனத் தம் தந்தையார்க்குச் சுட்டிக்காட்டிய சிவஞானச் செல்வர் திருஞானசம்பந்தரென்பது முன்னர் விளக்கப் பெற்றது. ஆளுடைய பிள்ளையாராகிய அப்பெருந்தகை யாரைத் தம் ஞானகுருவாகக் கொண்டு வழிபட்டு இறை வன் திருவருளைப் பெற்றவர் நம்பியாண்டார் நம்பிகளென் பது அவர் அருளிச்செய்த ஆளுடைய பிள்ளையார் திரு வந்தாதி, திருச்சண்பை விருத்தம், திருமும்மணிக்கோவை, திருவுலாமாலை, திருக்கலம்பகம், திருத்தொகை என்னுஞ் செந்தமிழ்ப் பனுவல்களால் நன்கு விளங்கும். இப் பிரபந்தங்கள் ஆறும் திருஞானசம்பந்தப் பிள்ளையாரைப் பாட்டுடைத் தலைவராகக்கொண்டு பாடப்பெற்றனவாத லின், ஆளுடையபிள்ளையாராகிய அவர் திருப்பெயருடன் இயைத்து வழங்கப் பெறுவனவாயின. திருஞானசம்பந்தப் பிள்ளையாரது வரலாற்றிற் காணப்படும் சிறப்புடைய நிகழ்ச்சிகள், பிள்ளையார் பிறந்தருளியதன் பயனாகத் தமிழகத்தார்பெற்ற பெருநலங்கள், சிவஞானச் செல்வ ராகிய பிள்ளையாருடைய திருவருட்பண்புகள், அவர் திருவாய் மலர்ந்தருளிய செந்தமிழ்த் திருப்பதிகங்களின் பொருள் நலங்கள், அத்திருப்பதிகங்களால் தமிழ் நாட்டில் நிகழ்ந்த அற்புத நிகழ்ச்சிகள் முதலியவற்றை இப் பிரபந்தங்களில் நம்பியாண்டார் நம்பி விரித்துரைத்துப் போற்றியுள்ளார்.

ஆளுடையபிள்ளையார் திருவந்தாதி யென்பது நூறு கட்டளைக் கலித்துறைகளால் இயன்ற பிரபந்தமாகும்.

நம்பியாண்டார் நம்பி சோழமன்னன் வேண்டுகோட்கிணங்கிப் பொல்லாப்பிள்ளையார் அறிவுறுத்தியபடி தில்லையில் தேவாரத் திருமுறைகளைக்கண்டு வகைப்படுத்தித் திருத்தொண்டர் திருவந்தாதி யென்னும் பிரபந்தத்தைப் பாடுதற்கு முன்னரே 'ஆளுடையபிள்ளையார் திருவந்தாதி' யெனவழங்கும் இப்பிரபந்தத்தைப் பாடித் திருஞானசம்பந்தப் பிள்ளையாரைச் சிறப்பு முறையிற் போற்றி வழிபட்டுள்ளார். இச்செய்தி,

பந்தார் விரலியர் வேள்செங்கட் சோழன் முருகன் நல்ல
சந்தா ரகலத்து நீலநக்கன் பெயர்தான் மொழிந்து
கொந்தார் சடையர் பதிகத்திலிட்டடி யேன்கொடுத்த
அந்தாதி கொண்டபிரான் அருட்காழியர் கொற்றவனே.

எனவரும் திருத்தொண்டர் திருவந்தாதியாற் புலனும். 'காழியர்கொற்றவனாகிய திருஞானசம்பந்தப் பெருமான் கோச்செங்கட்சோழர், முருகநாயனார், நீலநக்கர் ஆகிய மெய்யடியார்களின் திருப்பெயர்களைத் தான் இறைவனைப் போற்றிப் பரவிய திருப்பதிகங்களிலே யெடுத்துரைத்துப் போற்றி, அடியேன் பாடிய அந்தாதியாகிய பிரபந்தத்தினைத் தான் ஏற்றுக்கொண்டான்' என்பது இத்திருப்பாடலின் பொருளாகும். எனவே நம்பியாண்டார்நம்பி திருத்தொண்டர் திருவந்தாதியைப் பாடுதற்குமுன் ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதியினைப் பாடியுள்ளாரென்பது இனிது புலனாதல் காண்க. இத்திருவந்தாதியின் இறுதியில்

பாரகலத் துன்பங் கடந்தமர ராற்பணியும்
ஏரகலம் பெற்றாலும் இன்னாதால்—காரகிலின்
தூமங் கமழ்மாடத் தோணி புரத்தலைவன்
நாமஞ் செவிக்கிசையா நாள்.

என்றதொரு வெண்பா அமைந்துள்ளது. துயரிலங்கும் இவ்வுலக வாழ்க்கையைத் துறந்து தேவர்களாற் போற்றப் பெறும் வானுலக வாழ்வினைப் பெற்றாலும் தோணிபுரத் தலைவராகிய திருஞானசம்பந்தப் பிள்ளையாரது திருப்பெயரினைச் செவியாற் கேட்டு மகிழப் பெறாதரது வாழ்நாள் துன்ப நாட்களென்றும், அவரை ஏத்தும் நாட்கள் இன்ப நாட்களென்றும் கருதிய உறுதிப் பாடுடையவர் இந்நூலாசியரென்பது நன்கு பெறப்படும்.

வாழ்க்கைக்குத் துணைபுரியும் சுற்றத்தார்களும் அவர் துணை கொண்டு ஈட்டப்படும் பொருளும் அப்பொருளால்

நுகர்தற்குரிய போகமும் விலங்கினின்று மக்களைப்பிரித்து உயர்த்தும் கல்வியும் அக்கல்விப் பயனுலுளதாகும் துறவுள்ளமும் துறவினுலடைதற்குரிய பேராவியற்கையெனப் படும் வீடுபேறும் ஆகிய எல்லா நலங்களையும் திருஞானசம்பந்தப் பிள்ளையாருடைய திருநாமங்கள் ஒருங்கே தருவன எனத் தெளிந்து நம்பியாண்டார் நம்பிகள் ஆளுடைய பிள்ளையாரை வழிபட்டு வந்தனரென்பது,

> உறவும் பொருளுமொண் போகமுங் கல்வியுங் கல்வியுற்ற
> துறவும் துறவிப்பயனும் எனக்குச் சுழிந்தபுனற்
> புறவும் பொழிலும் பொழில்சூழ் பொதும்பும் ததும்ப வண்டின்
> நறவும் பொழிலெழிற் காழியர் கோன் திருநாமங்களே.

எனவரும் அவரது வாய்மொழியால் நன்கு தெளியப்படும்.

தம் நெஞ்சத்திலே திருஞானசம்பந்தப் பெருமான் குருவாகத்தோன்றியருள்புரிந்த செய்தியினை,

> 'பொருளென என்னைத்தன் பொற்கழல்காட்டிப்
> புகுந்தெனக்கிங்
> கருளிய சீர்த்திரு ஞானசம்பந்தன்'

என்ற தொடரால் நம்பியாண்டார் நம்பி குறிப்பிட்டுள்ளார். உமையம்மையாரளித்த ஞானப்பாலைப்பருகித் திருநெறிய தமிழால் யாவரும் சிவபெருமானது திருவருளையுணர்ந்து இன்புறுதற்குரிய பதிகப்பெருவழியினைத் தோற்றுவித் தருளிய திறத்தால் தமிழ்மக்களுக்கு ஞானக்கண்ணுகவும் சாதிசமய வேற்றுமையின்றி யாவரும் இறைவனடி சேர்ந்து இன்புறுதற்குரிய உயர்ந்த உண்மைகளை அருளிச் செய்யும் அருட்பண்பினுல் விரிந்த உள்ளத்தினராகவும் உலகமக்களனைவரும் உளமுவந்து போற்றும் உயர்ந்த குணநலங்களைப் பெற்றுவிளங்கிய திருவருட் செல்வர் ஆளுடையபிள்ளையாராதலின் அப்பெருந்தகையாரை,

> 'பதிகப் பெருவழிகாட்டப் பருப்பதக்கோன்பயந்த
> மதியத்திருநுதல் பங்கன் அருள்பெறவைத்த எங்கள் நிதி'

எனவும்,

> 'தீந்தமிழோர் கண்ணெனவோங்குங் கவுணியர் தீபன்'

எனவும்,

> 'குறுமனமுன் கலவாத் தமிழாகரன்'

எனவும்,

> 'உலகம் பரசுங் குணந்திகழ் ஞானசம்பந்தன்'

எனவும் இத்திருவந்தாதியில் ஆசிரியர் பாராட்டிப் போற்றி உள்ளார். கவுணியர் கோத்திரத்திலே தோன்றிச் சமணம் பௌத்தம் என்னும் புறச்சமயங்களை வாதில் வென்று செந்தமிழ்ப் பதிகங்களால் சிவநெறிபரப்பிய திருஞானசம்பந்தர்க்குக் கவுணியர்தீபன், பரசமயகோளரி, அருகாசனி, தமிழாகரன், தமிழ்விரகன், சைவசிகாமணி முதலிய சிறப்புப் பெயர்கள் இத்திருவந்தாதியில் வழங்கப்பெற்றுள்ளன.

சிவபெருமானையன்றிப் பிறரெவரையுங் கருதாத ஒருநெறிய மனமுடையார் திருஞானசம்பந்தப் பிள்ளையாராதலின் அவர் திருப்பாதங்களைப் பணிந்து போற்றும் அடியார்கள் இறைவனது திருவருளை எளிதிற் பெறுவார்கள் எனவும், திருஞானசம்பந்தர்பால் அளவிலாப் பேரன்புடையார் சிறுத்தொண்டநாயனாராதலின் அவரைப் போற்றுவோர் திருஞானசம்பந்தர் திருவடித்துணையை எளிதிற்பெறுவர் எனவும், திருமாலும் நான்முகனுந் தேடிக் காணுதற்கரிய சிவபெருமானைத் தம் கண்களாற்கண்டு தந்தைக்குங்காட்டிய ஞானச்செம்மலாராகிய ஆளுடைய பிள்ளையாரைச் செந்தமிழ்ப் பாடல்களால் போற்றிப் பரவுதற்குத் தாம் எத்துணையோ தவஞ் செய்திருத்தல் வேண்டும் எனவும், தமிழ்க்கடலாகிய ஞானசம்பந்தரையன்றிப் பட்டத்து யானைமீது உலாவரும் பெருவேந்தராயினும் பிறரெவரையும் தாம் பாடுவதில்லையெனவும் நம்பியாண்டார் நம்பிகள் இத்திருவந்தாதியில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். திருஞானசம்பந்தரைப் பாட்டுடைத் தலைவராகவும் கிளவித்தலைவராகவும் கொண்டு பாடப் பெற்ற அகத்துறைச் செய்யுட்கள் இத் திருவந்தாதியில் இடம்பெற்றுள்ளன.

"புகழ் நிரம்பிய திருஞானசம்பந்தப் பெருமானை அடியேன் பரவிப்போற்றிய இச்செந்தமிழ்ப்பாடல்களைக் கற்றுவல்லவர்கள் பெறுதற்கரிய பேரின்பவுலகத்தையே தங்களுக்குத் தந்தருளும்படி திருமாலும் பிரமனும் சிவபெருமானை நன்னீரும் நறுமலருங்கொண்டு வழிபட்டு வேண்டிக்கொள்வார்கள்' என்பார்,

சேரும்புகழ்த்திரு ஞானசம்பந்தனை யானுரைத்த
பேருந்தமிழ்ப்பா இவைவல்லவர் பெற்ற இன்புலகம்
காருந் திருமிடற்றாய் அருளாயென்று கைதொழுவர்
நீருமலருங் கொளாநெடுமாலும் பிரமனுமே.

எனவரும் பாடலால் இத்திருவந்தாதியினைக் காதலாகி ஓதுவோர் பெறும் பேரின்பநிலையினை இனிது புலப் படுத்தியுள்ளார்.

(5) ஆளுடைய பிள்ளையார் திருச்சண்பை விருத்தம்

சண்பையென்பது சீகாழிப்பதிக்குரிய பன்னிரண்டு திருப்பெயர்களுள் ஒன்று. ஆளுடையபிள்ளையார் பிறந் தருளிய சண்பையென்னும் தலத்தினைக் கட்டளைக்கலித் துறையாகிய திருவிருத்தத்தாற் போற்றுவது இப்பிரபந்த மாதலின் ஆளுடையபிள்ளையார் திருச்சண்பை விருத்தம் எனவழங்கப்பெறுவதாயிற்று. இதன்கண் பத்துப்பாடல்கள் உள்ளன. பதினொராம் பாடலாக அமைந்த இதன இறுதிச்செய்யுள் மேற்கூறிய பத்துப்பாடல்களின் முதனினைப்புச் செய்யுளாகும்.

ஆளுடைய பிள்ளையார் இளம்பருவத்திலேயே உமையம்மையாரளித்த பாலடிசிலுண்டு சிவஞானம் பெற்றதும், தன்கணவன் பாம்புதீண்டியிறந்தமைகண்டு அல்லலுற்றழுத மங்கையொருத்தியின் வருத்தம் நீங்க விடந்தீர்த்ததிருப்பதிகத்தையருளியதும், பாலை நிலமாக உருத்திரிந்த திருநனிபள்ளியை நெய்தல் நிலமாக வளம் பொருந்தப்பாடியதும், ஆன்மாக்கள் பிறவித்துயர்நீங்கி இன்புறும் வண்ணம் வினையினைப் போக்கும் இறைவ னடிக்கே செந்தமிழ்ப்பாமாலைகளைப் புனைந்து போற்றியதும், திருமறைக்காட்டில் திருக்கதவம் அடைக்கப் பாடியருளிய தும், வையையாற்றில் எதிரேறிச் செல்லும்படி திருப்பதிகம் பாடி அமணர்களை வென்று அன்னோர்கழுவேறக்கண்டதும், நல்லூர்ப்பெருமணத்தில் வாழ்க்கைத் துணைவியொடும் இறைவனது ஈறில்பெருஞ் சோதியிற்புக்கு ஒன்றி யின்புற்றதும் ஆகிய செய்திகள் இப்பனுவலில் குறித்துப் போற்றப்பெற்றுள்ளன.

(6) ஆளுடைபிள்ளையார் திருமும்மணிக்கோவை

ஆளுடைபிள்ளையாரது திருப்புகழை விரித்துரைப்ப தாகிய இப்பனுவல், அகவல், வெண்பா, கட்டளைக் கலித்துறையாகிய மூவகைப் பாக்களால் இயன்று மூவகை மணிகளாலாகிய அழகிய மணிவடம் போன்று திகழ்வு

தாகலின் ஆளுடையபிள்ளையார் திருமும்மணிக்கோவை யென்னும் பெயர்த்தாயிற்று. இதன்கண் முப்பது பாடல்கள் உள்ளன. ஆளுடைபிள்ளையாரது வரலாற்று நிகழ்ச்சிகளைக் குறித்துப் போற்றும் பாடல்களும், அவர் திருவாய் மலர்ந் தருளிய செந்தமிழ்ப் பதிகங்களின் சிறப்பினை விரித்து உரைக்கும் பாடல்களும், பிள்ளையாரைக் காதலித்த தலைமகளது துயர்கிளந்துரைக்கும் அகத்துறைப் பாடல் களும், அவரைப் பாட்டுடைத் தலைவராகக்கொண்டமைந்த அகத்துறைப் பாடல்களும் இம் மும்மணிக்கோவையில் இடம் பெற்றுள்ளன.

திருஞானசம்பந்தப் பிள்ளையார் சிவனருளால் இவ் வுலகிற் செய்தருளிய அற்புத நிகழ்ச்சிகள் பலவற்றைத் தொகுத்துரைத்துப் போற்றுவது,

அடுசினக் கடகரி யதுபட வுரித்த
படர்சடைக் கடவுள்தன் திருவருளதனாற் பிறந்தது
கழுமலமென்னுங் கடிநகரதுவே, வளர்ந்தது
தேங்கமழ் வாவிச் சிலம்பரையன்பெறு
பூங்குழல் மாதிடுபோனகம் உண்டே, பெற்றது
குழகனைப் பாடிக் கோலக்காப்புக்
கழகுடைச் செம்பொற் றாளமவையே, தீர்த்தது
தாதமர் மருகற் சடையனைப் பாடிப்
பேதுறுபெண்ணின் கணவனைவிடமே, அடைத்தது
அரைசோ டிசையா அணிமறைக் காட்டுக்
குரைசேர் குடுமிக் கொழுமணிக்கதவே, ஏறிற்று
அத்தியும் மாவும் தவிர அரத்துறை
முத்தின் சிவிகை முன்னாட்பெற்றே, பாடிற்று
அருமறை ஒத்தூர் ஆண்பனை யதனைப்
பெருநிறம் எய்தும் பெண்பனை யாவே. கொண்டது
பூவிடு மதுவிற் பொறிவண் டுழலும்
ஆவடு துறையிற் பொன்னா யிரமே, கண்டது
உறியொடு பீலி ஒருகையிற் கொள்ளும்
பறிதலைச் சமணைப் பல்கழு மிசையே, நீத்தது
அமிழ்ச்சுவை யேயறிந் தரனடி பரவுந்
தமிழ்ச்சுவை யறியாத் தம்பங்களையே. நினைந்தது
அள்ளற் பழனக் கொள்ளம் புதூர்
இக்கரை ஓடம் அக்கரைச்செலவே, மிக்கவர்
ஊனசம்பந்தம் அறுத்துயக் கொளவல
ஞானசம்பந்தன் இஞ்ஞாலத்திடையே.

எனவரும் இம் மும்மணிக்கோவைப் பாடலாகும். 'எண்ணி லாத ஆன்மாக்களின் ஊனசம்பந்தமாகிய பிறவிப்

பிணியைப்போக்கி உய்வித்தருளவல்ல திருஞானசம்பந்தப் பெருமான் சிவனருளால் இவ்வுலகில் திருவவதாரஞ் செய்தருளிய திருத்தலம் திருக்கழுமலம். அவர் வளர்ந்தது, மலையரையன் மகளார் உமாதேவியாரளித்த ஞானப்பால் அடிசிலை உணவாகக்கொண்டு. அவர் இறைவனைப் பாடிப் பெற்றது, திருக்கோலக்காவில் செம்பொன்னாலாகிய தாளத்தினை. அவர் தீர்த்தது, திருமருகலில் வருத்தமுற்ற பெண்ணொருத்தியின் துயர்க்கிரங்கி அவள் கணவனது விடத்தினை. அவர் அடைத்தது, திருநாவுக்கரசரொடுகூடித் திருமறைக்காட்டில் திருக்கதவினை. அவர் ஊர்தியாகக் கொண்டேறியது, யானையுங் குதிரையுமன்றித் திருவரத்துறையண்ணல்பால் முன்னாள்பெற்ற முத்துச்சிவிகையினை. அவர் பாடியது, திருவோத்தூரில் ஆண்பனை பெண்பனை ஆக. அவர் பெற்றுக்கொண்டது, திருவாவடுதுறையில் ஆயிரம்பொன்னிறைந்த பொற்கிழியினை. அவர் கண்டது, உறியையும் பீலியையும் கையிற்கொண்ட சமணர்கள் கழுவேறிய துன்பக்காட்சியினை. அவர் விடுத்து நீங்கியது, உணவின் சுவையொன்றையே யறிந்து அவ்வளவில் அமைந்து சிவனடிபரவும் செந்தமிழ்ப் பாடல்களின் சுவை நலத்தினைச் சிறிதும் உணரப்பெறாத தம்பம் போன்ற மடவோரை. அவர் திருவுள்ளத்தில் நினைத்தருளியது, திருக்கொள்ளம்பூதூரில் ஆற்றின் இக்கரையிலே நின்ற ஓடம் அக்கரையிலே சென்று சேர்தலை' என்பது இதன் பொருள். இதன்கண் 'அவிழ்ச்சுவையே யறிந்து அரனடி பரவுந் தமிழ்ச்சுவையறியாத் தம்பங்கள்' என்றது, இறைவனது பொருள்சேர் புகழினை விரித்துரைக்கும் செந்தமிழ்ப் பாடலின் சுவைநலத்தினை யறிந்துமகிழும் மதுகையின்றித் தம் வயிறுகிய தூராக்குழியைத் தூர்த்தற் பொருட்டு உணவின் சுவையொன்றினையே விரும்பிவாழும் வாயுணர்வின் மாக்களை. 'செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள், அவியினும் வாழினும் என்' எனத் திருவள்ளுவர் கூறிய வாய்மொழி ஈண்டு நினைக்கத்தக்கது. பிணம்போல்வாராகிய இம்மாக்களது கூட்டுறவு அறியாமையை விளைவிப்பதாதல் உணர்ந்து ஆளுடைபிள்ளையார் இத்தகைய மாக்களை விலக்கியொழுகினர் என்பது, 'நீத்தது, அவிழ்ச்சுவையேயறிந்து அரனடி பரவுந் தமிழ்ச்சுவையறியாத்தம்பங்களையே' எனவரும் இத் தொடரால் நன்கு புலனாகும்,

திருஞானசம்பந்தப் பெருமான் திருவாய் மலர்ந் தருளிய தேவாரப் பதிகங்களாகிய ஞானத் தமிழ், பிறவி யாகிய பெருங்கடலை நீந்திக் கடக்குங்கால் உள்ளே நீர் கசிந்து அமிழாதபடி தோலாற் பொதிந்து அமைக்கப்பட்ட அழகிய தோணி போல் நின்று உதவும் என்பதனை,

பிறவியெனும் பொல்லாப் பெருங்கடலை நீந்தத்
துறவியெனுந் தோற்றோணி கண்டீர் -- நிறையுலகிற்
பொன்மாலை மார்பன் புனற்காழிச் சம்பந்தன்
தன்மாலை ஞானத் தமிழ்.

என்றபாடலால் அறிவுறுத்துவர் ஆசிரியர். உலகில் தீமை யெல்லாம் நீங்கத் திருவவதாரஞ் செய்தருளிய சைவசிகா மணியாகிய திருஞானசம்பந்தப் பெருமான் திருவடிகள், எக்காலத்தும் அடியார்கள் உள்ளத்தே அகலாதிருந்து இன் பஞ்செய்தும், இவ்வுலகில் வாழும் மக்கள் நல்லமலர்களைக் கொண்டு அருச்சித்து வழிபடும் நிலையில் வெளிப்பட்டும் நன்மை நிறைந்த கல்விக்கழகத்தே அன்பினால் அளா வளாவி மகிழும் புலவர்கள் பாடும் செய்யுட்களுக்கு ஏற்ற உரிமையுடையனவாகவும் விளங்குமியல்பினை,

என்றும் அடியவர் உள்ளத் திருப்பன இவ்வுலகோர்
நன்று மலர்கொடு தூவித் துதிப்பன நல்லசங்கத்
தோன்றும் புலவர்கள் யாப்புக்குரியன ஒண்கலியைப்
பொன்றுங் கவுணியன் சைவசிகாமணி பொன்னடியே.

என்ற பாடலால் நம்பியாண்டார்நம்பி விரித்துரைத்துப் போற்றியுள்ளார்.

திருஞானசம்பந்தப் பெருமானது பேரழகில் ஈடுபட்டு அப்பெருமானையணையப்பெறாது வருந்தும் தன் மகளது ஆற்றாமைகண்டு வருந்திய நற்றாய், ஞானசம்பந்தப்பெரு மானை யடைந்து தன் மகளது பேதுறவைத் தீர்த்தருளும்படி வேண்டுவதாக அமைந்தது,

[5] தனமலி கமலத் திருவெனுஞ் செல்வி
விருப்பொடு திளைக்கும் வியா இன்பத்
தாடக மாடம் நீடுதென் புகலிக்
காமரு கவினார் கவுணியர் தலைவ
பொற்பமர் தோளா நற்றமிழ் விரக
மலைமகள் புதல்வ கலைபயில் நாவ, நினது
பொங்கொளிமார்பில் தங்கிய திருநீறு
ஆதரித் திறைஞ்சிய பேதையர் கையில்
வெள்வளை வாங்கிச் செம்பொன் கொடுத்தலிற்
பிள்ளையாவது தெரிந்தது பிறர்க்கே.

என்ற பாடலாகும். 'கலைபயில் நாவினனாகிய கவுணியர் தலைவனே, நினது பேரொளிதிகழுந் திருமார்பிற் பூசப் பெற்று விளங்கும் திருவருள் வண்ணமாகிய திருநீறறினைப் பெற விழைந்து நின்னை வந்திறைஞ்சிய இளமகளிர்களின் கைகளிலணியப்பெற்ற வெள்ளிய வளையல்களை வாங்கிக் கொண்டு அவற்றிற்கு ஈடாகச் செம்பொன்னைத் தருதலால், மலைமகள் புதல்வனாகிய நீ வினவு தெரியாத பிள்ளைமைப் பருவத்தினனென்பது, நின்னை ஏமாற்றிச் செம்பொன்னைப் பெற்ற அம்மகளிர்க்கேயன்றி, அன்னோர் பெற்ற பொன் னின் மிகுதியால் பிறரெல்லார்க்குந் தெளிவாகத் தெரிந்து விட்டதே' என்பது இப்பாடலின் பொருளாகும். இதன்கண் ஞானசம்பந்தப் பிள்ளையாரைக்கண்டு காமுற்ற மகளிர் அப்பெருமானது திருமேனிப் பேரழகில் உள்ளத்தைப் பறிகொடுத்தமையால் கைவளைகள் கழல உடலிளைத்து நிறம் வேறுபட்டு வருந்து மியல்பினைக்கூறக் கருதிய நற்றாய், அம்மகளிர் செயலை அவர்களாற் காதலிக்கப்பெற்ற பிள்ளையார் மேலேற்றிக் 'கவுணியர் தலைவனாகிய நீ மகளிர் கைவளைகளை வாங்கிக்கொண்டு செம்பொன்னைத் தரு கின்றாய்' எனக்கூறியது, தன்மகள் ஒரு குற்றமுமறியாள் எனச்சாதிக்கும் தாயுள்ளத்தை நன்கு புலப்படுத்துதல் காண்க. 'வாணிகம் புரிவோர் சங்க வளையல்களுக்கு ஈடாகப் பொன்னைக்கொடுத்து ஏமாறமாட்டார்கள். பாலரு வாயனாகிய நீயோ பேதையர் கைவளைகளுக்கு ஈடாகப் பொன்னைக் கொடுத்து ஏமாந்தனை. இவ்வாறு நீ ஏமாந்த செய்தி ஏனையோர்க்குந் தெரிந்துவிட்டதே' என நற்றாய் ஞானசம்பந்தப்பெருமானை நோக்கி நகைச்சுவைபெற வுரையாடியதாக நம்பியாண்டார்நம்பி இப்பாடலிற் புலப் படுத்திய திறம் நினைந்து மகிழத்தக்கதாகும்.

(7) ஆளுடைய பிள்ளையார் திருவுலாமாலை

திருஞானசம்பந்தப் பிள்ளையார், பேதை முதல் பேரிளம் பெண் ஈறாகவுள்ள ஏழு பருவத்து மகளிரும் காதல் கூர்ந்து தளர்வுறச் சீகாழிப் பதியிலே திருவுலாப் போந்தருளிய இயல்பினை விரித்துரைத்துப் போற்றுவது இப்பிரபந்தமாதலின், ஆளுடைய பிள்ளையார் திருவுலா மாலை யென்னும் பெயர்த்தாயிற்று. உலாப் பிரபந்தத்திற் குரிய மரபின்படி கலிவெண்பாவினால் அமைந்த இப்

பிரபந்தம் ஆளுடைய பிள்ளையார் திருவுலாமாலை யென மாலை யென்ற பெயரால் வழங்கப்பெற்றமை கூர்ந்து நோக்கத்தக்கதாகும் உலாப் பிரபந்தங்களிற் பாட்டுடைத் தலைவனது இயல்பு பேசப்படுதலேயன்றி அத்தலைவனைக் கண்டு காதலித்து மயங்கிய பேதை முதல் பேரிளம் பெண் ஈருகவுள்ள ஏழு பருவத்து மகளிர் செய்திகளும் தனித் தனியே விரித்துரைக்கப்படுதல் மரபு. பாட்டுடைத் தலைவனியல்பினையும் அவனைக்கண்டு காமுற்ற எழுவகைப் பருவத்து மகளிர் செய்திகளையும் ஒப்ப விரித்துரைப்பன வாகிய உலாப் பிரபந்தங்கள் திருக்கயிலாய ஞானவுலா, திருவாரூருலா எனப் பாட்டுடைத் தலைவனது ஊரொடு சார்த்தி வழங்கப்பெறுதலும், விக்கிரம சோழனுலா, குலோத்துங்க சோழனுலா எனப் பாடுடைத் தலைவன் பேரொடு சார்த்தி வழங்கப் பெறுதலுமாகிய இருதிறத்தன வாகக் காணப்படுகின்றன.

ஆளுடை பிள்ளையார் திருவுலாமாலை யெனும் இப் பிரபந்தத்திற் பாட்டுடைத் தலைவராகிய ஆளுடை பிள்ளையாரது இயல்பே பெருக விரித்துரைக்கப் பெற்றுளது. பிள்ளையாரைக் காதலித்த எழுவகைப் பருவத்து மகளிர் செய்திகளும் உலாக்களில் வரும் குழாங்கள் என்ற அளவிற் பொதுவகையிற் கூறப்பட்டதன்றிப் பேதை முதலிய ஏழு பகுதிகளாகத் தனித்தனியே வகுத்துக் கூறப்பட வில்லை. எழுவகைப் பருவத்து மகளிரும் காமுற்று வருந்தத் திருஞானசம்பந்தப் பிள்ளையார் திருவுலாப் போந்தருளினர் என்னும் ஒரு பொருளையே கருதிய இயல் புடையது இப்பிரபந்தமாதலின், ஏனைய உலாக்களைப் போன்று உலாவென்னும் பெயரால் வழங்கப்பெருது, உலா மாலை யென வழங்கப் பெறுவதாயிற்று. இங்ஙனம் ஒரு பொருளையே கருதிக் கூறிய செய்யுள், இயல்பு என்னும் பொருளுடைய மாலை யென்ற பெயரால் வழங்கப்படுதலுண் டென்பது, சிலப்பதிகாரத்திலுள்ள துன்பமாலை, வஞ்சின மாலை[1] யென்ற பெயர் வழக்கத்தால் நன்கு துணியப்படும்.

ஆளுடைய பிள்ளையார் திருவுலா மாலையாகிய கலி வெண்பா 143 கண்ணிகளையுடையதாகும். சீகாழிப்பதியின்

1. "இக்கலிவெண் பாட்டுப் பத்தினித் தன்மைத்தாகிய ஒரு பொருளையே கருதிக் கூறிய இயலபை யுடைத்தாகலின் மாலை யென்ருர்" என்பர் அடியார்க்கு நல்லார். (சிலப், பதிக, 80)

எழில் நலங்களும், அந்நகரத்தே பிறந்து நான்கு மறைகளையும் பல கலைகளையும் கற்றுணர்ந்து நான்முகனையொத்த பெருஞ் சிறப்புடையராய் நன்னெறியிலொழுகும் நானூற்றுவராகிய மறையவர்களின் மாண்பும், பன்னிரண்டு திருப்பெயர்களையுடைய காழிப்பதியிலே கவுணியர் குலத்தில் தோன்றிய ஆளுடைய பிள்ளையார் சிவபெருமானருளால் அழகிய பொற் கிண்ணத்திலே உமையம்மையார் அளித்த ஞானவாரமுதத்தைப் பருகித் திருஞானசம்பந்தர் என்னும் திருப்பெயர் பெற்றுத் திருநெறிய தமிழாகிய இன்னிசைத் திருப்பதிகங்களால் உமையொரு பாகத்து அண்ணலைப் பாடிப் போற்றிப் பல அற்புதங்களை நிகழ்த்தி மதுரையிற் சமணரை வாதில் வென்று சிவநெறி பரப்பிய சீர்த்தியும் இத்திருவுலா மாலையின் முற்பகுதியிலே சுவை பெற விரித்துரைக்கப் பெற்றன.

நான்மறைவல்ல வேதியர்களும் நாற்பத் தெண்ணாயிர முனிவர்களும் புடை சூழ்ந்து போற்றத் திருஞானசம்பந்தப் பிள்ளையார் திருவோலக்கத்தில் எழுந்தருளியிருத்தலும், அத் திருவோலக்கத்திற் புகுந்து ஆளுடைய பிள்ளையாரைச் சேவித்து மகிழ்ந்த புகலி நகரத்துப் பூசுரர்கள் தாம் கண்ட அவ்வழகிய காட்சியைத் தம் நகர மக்கள் அனைவரும் காண வேண்டுமென்னும் பெருவேட்கையுடையராய்ப் பிள்ளையாரைப் பணிந்து 'சீகாழிப்பதியின் வீதியிலே திருவுலாப் போந்து எங்களுக்குக் காட்சி தந்தருளல் வேண்டும்' என விண்ணப்பஞ் செய்தலும், அவர்களது வேண்டுகோட்கு இசைந்த ஆளுடைய பிள்ளையார் மன்னவர் திருவும் தங்கள் வைதிகத்திருவும் விளங்கச் சிறந்த அணிகலன்களை யணிந்தருளிச் சிறுத்தொண்டர் முதலிய நண்பு மிக்க அடியார்கள் உடன்வரப் பல இன்னியங்கள் முழங்க யானைமீதமர்ந்து சீகாழிப் பதியின் திருவீதியிலே திருவுலாப் போந்தருளுதலும், பேதை முதல் பேரிளம் பெண் ஈருகவுள்ள ஏழு பருவத்து மகளிரும் அத்திருவுலாவில் ஆளுடைய பிள்ளையாரைக் கண்டு கைதொழுது தம் கைவளைகள் கழல நாணிழந்து மெய் சோர்ந்து தமக்குட் பலவாருகப் பேசி மையலுற்று வருந்துதலும் ஆகிய செய்திகள் இத்திருவுலா மாலையின் பிற்பகுதியிற் கூறப்பெற்றுள்ளன.

இதன்கண் திருஞானசம்பந்தப் பிள்ளையார் விருந்தென்னும் வனப்பமையப்பாடிய திருவிராகம், திருவிருக்குக்குறள், திருப்பாசுரம், பல்பெயர்ப்பத்து யாழ்முரி, சக்கரமாற்று, ஈரடி முக்கால் முதலிய யாப்புவிகற்பங்களை,

“எப்பொழுதும்
நீக்கரிய இன்பந்திராகம் இருக் குக்குறள்
நோக்கரிய பாசுரம் பல்பத்தோடும்—ஆக்கரிய
யாழ்முரி சக்கரமாற் றீரடி முக்காலும்
பாழிமையாற் பாரகத்தோர் தாமுய்ய—ஊழி
உரைப் பமரும் பல்புகழால் ஓங்க வுமைகோனைத்
திருப்பதிகம் பாட வல்ல சேயை”

எனவரும் தொடரால் நம்பியாண்டார் நம்பி எடுத்துரைத்துப் போற்றினமை உணர்ந்து மகிழத்தக்கதாகும்.

(8) ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம்

கலம்பகம் என்பது தமிழிலுள்ள பிரபந்தவகைகளுள் ஒன்று. புயம், தவம், வண்டு, அம்மனை, பாண், மதங்கு, கைக்கிளை, சித்து, ஊசல், களி, மடக்கு, ஊர், மறம், காலம், தழை, இரங்கல், சம்பிரதம், கார், என்னும் இப்பதினெட்டுறுப்புக்களையும் பெற்று வருவது கலம்பகம் என்னும் பிரபந்தமாகும். இதன் முதற்கண் ஒருபோகு, வெண்பா, கலித்துறையெனும் இம்மூன்றும் முதலுறுப்பாய் வருமெனவும், இவற்றின்பின் ஆசிரிய விருத்தம், ஆசிரியப்பா, வஞ்சித்துறை, வஞ்சி விருத்தம், வெண்டுறை, வெண்பா, மருட்பா, கலித்தாழிசை, கலித்துறை, கலி விருத்தம் என்ற பாக்கள் ஏற்றவாறு வருமெனவும் வெண்பாப் பாடியலுடையார் கலம்பகத்தின் இலக்கணத்தினை விரித்துரைப்பர். இப்பிரபந்தத்திலுள்ள பாடல்கள் அந்தாதியாகத் தொடுக்கப்பெற்று இறுதிப் பாடலின் இறுதி முதற் பாடலின் முதற் சொல்லுடன் மண்டலித்து முடிதல் வேண்டுமென்பது விதி.

இப்பொழுது கிடைத்துள்ள கலம்பகங்களுள் தெள்ளாறெறிந்த நந்திவர்மனென்னும் பல்லவ மன்னனைப் பாட்டுடைத் தலைவனைக் கொண்டு புலவரொருவர் பாடிய நந்திக் கலம்பகமே காலத்தால் முற்பட்டதாகும். அதனையடுத்துப் பழமையுடையதாக எண்ணத்தகுவது பதினெ

ராந் திருமுறையிலுள்ள ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகமென்னும் இப்பிரபந்தமேயாகும். திருஞானசம்பந்தப் பிள்ளையாரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப் பெற்றமையின் இஃது ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம் என்னும் பெயர்த்தாயிற்று. இதன்கண் ஒன்றுமுதல் நாற்பத்தொன் பதுவரையுள்ள பாடல்களே இப்பொழுது கிடைத்துள்ளன. நாற்பத்தொன்பதாம் பாடல் 'எழிலிணையடி யிசைமினே' என முடிகின்றது. இவ்விறுதி 'அலையார்ந்த' எனத் தொடங்கும் முதற் பாடலின் முதற் சொல்லோடு மண்டலித்து முடியவில்லை. அன்றியும் இப் பிரபந்தத்தின் முதற் பாடலாகிய ஒருபோகின்கண் தரவென்னும் உறுப்புக் காணப்படவில்லை. எனவே இக்கலம்பகத்தின் முதற் பாடலின் முதலுறுப்பாகிய தரவும் நாற்பத்தொன்பதாம் பாடலுக்குப் பின்னுள்ள ஏனைய பாடல்களும் ஏடுகளின் சிதைவினால் மறைந்தன வெனக் கருதவேண்டியுளது. தேவர்க்கு நூறு செய்யுளும் முனிவர்க்குத் தொண்ணூற்றைந்தும் அரசர்க்குத் தொண்ணூறும் அமைச்சர்க்கு எழுபதும் வணிகர்க்கு ஐம்பதும் ஏனையோர்க்கு முப்பதும் என்ற வரையறையுடன் கலம்பகமாகிய இப்பிரபந்தம் இயற்றப்பெறுதல் வேண்டுமெனப் பிற்காலத்தில் வெண்பாப் பாட்டியலுடையார் வகுத்த சாதிபற்றிய பாட்டியல் மரபு அவர்க்குப் பன்னூருண்டுகள் முற்பட்டுத் தோன்றிய தெள்ளாறெறிந்த நந்திவர்மன் காலத்தும் நம்பியாண்டார் நம்பிகள் காலத்தும் நிலவியதெனக் கொள்ளுதற்கில்லை.

சிவபெருமானருளால் சீகாழிப்பதியிற்றோன்றி, உமையம்மையார் அளவிறந்த ஞானத்தை அமிர்தாக்கிப் பொற்கிண்ணத் தளித்தருளப் பாலமுதாகிய அதனை நுகர்ந்து, தேவராலும் காணுதற்கரிய கடவுளைத் 'தோடுடைய செவியன்' என்ற திருப்பதிகத்தால் 'எமக்கு அருள்புரிந்த பெருமான் பிரமாபுரமேவிய இவனே' எனத் தம் தந்தையார்க்கு அடையாளங்களுடன் சுட்டிக்காட்டிய திருஞானசம்பந்தப் பிள்ளையார், திருத்தலங்கள் தோறுஞ் சென்று அங்கங்கே வாழும் மக்கள் இறைவனது திருவருள் நெறியைக் கடைப்பிடித்து இடர் நீங்கி யின்புறுதல் வேண்டி நிலையான திருப்பதிகங்களை யருளிச்செய்து உலகத்தார்க்கு இறைவன் திருவடிகளிற் பத்திமையை

விளைவித்த வரலாறு, இக்கலம்பகத்தின் முதற் பாடலிற் குறித்துப் போற்றப் பெற்றுளது.

பலமலி தருந் தமிழ், முத்தமிழ், செழுமலயத்தமிழ் அறிவாகி யின்பஞ்செய் தமிழ், பயனிலவு ஞானத் தமிழ், வீறதார் தமிழ் எனத் தமிழின் சிறப்பினை நம்பியாண்டார் நம்பி இக்கலம்பகத்தில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். திருஞானசம்பந்தப் பிள்ளையார் இங்ஙனம் அறிவாகி இன்பஞ்செய் தமிழ்மொழியின் துணைகொண்டே வடமொழியில் வல்ல சமணர்களை வாதில் வென்றார் என்பதனை,

அறிவாகி யின்பஞ்செய் தமிழ்வாதில் வென்றந்த
அமணான வன்குண்டர் கழுவேற முன்கண்ட
செறிமாட வண்சண்பை நகராளி என்தந்தை
திருஞானசம்பந்தன்

எனவருந் தொடரால் இனிது விளக்கியுள்ளார். இக்கலம்பகத்திலுள்ள செய்யுட்கள் ஆளுடைய பிள்ளையார் செய்தருளிய அருட் செயல்களையும் அவர் திருவாய் மலர்ந்தருளிய திருப்பதிகங்களின் சிறப்பினையும் புலப்படுத்துவனவாகவுள்ளன.

பெறுபயன் மிகப்புவியுள் அருளுவன, பிற்றை முறை
பெறுநெறியளிப்பன, பல்பிறவியை ஒழிச்சுவன,
உறுதுய ரழிப்பன, முன் உமைதிரு வருட்பெருக
வுடையன, நதிப்புனலினெதிர்பஃறி உய்த்தன, புன்
நறுமுறுகுறைச் சமணை நிரைகழு நிறுத்தியன,
நனிகதவடைத்தன, துனருவிடம் அகற்றியன,
துறுபொழில் மதிற்புறவ முதுபதிமன் ஒப்பரிய
தொழில்பல மிகுத்ததமிழ் விரகன கவித்தொகையே.

எனவரும் பாடல், தமிழ் விரகராகிய ஆளுடைய பிள்ளையார் திருவாய்மலர்ந்து அருளிய திருப்பதிகங்களால் நிகழ்ந்த அற்புதங்களை விரித்துரைத்தல் காண்க.

“கொடிநீடு விடையுடைய பெருமானை அடிபரவு
குணமேதை, கவுணியர்கள் குலதீப சுபசரிதன்
அடியேன திடர்முழுதும் அறவீசு தமிழ்விரகன்”

எனவும்,

கழுமல நாதன் கவுணியர் குலபதி
தண்டமிழ் விரகன் சைவ சிகாமணி
பண்டிதர் இன்பன் பரசமய கோளரி
என்புனை தமிழ்கொண் டிரங்கி எனனுள்ளத்
தன்பினை அருளிய ஆண்டகை’

எனவும் ஆளுடை பிள்ளையாரை நம்பியாண்டார்நம்பிகள் உளமுருகிப் போற்றுதலைக் கூர்ந்து நோக்குங்கால், பிள்ளையார்பால் இவர்க்கிருந்த ஈடுபாடு நன்கு புலனாகும். 'இடபக்கொடியினையுடைய சிவபெருமானொருவனையன்றிப் பிறரெவரையும் தெய்வமாப் பேணாத தெளிவுடையார் திருஞானசம்பந்தராதலின் 'கொடிநீடு விடையுடைய பெருமானை யடிபரவு குணமேதை' என இந்நூலாசிரியர் அவரைப் பாராட்டிப் போற்றியுள்ளார். "வம்பறுவரி வண்டுமண நாறமலரும், மதுமலர் நற்கொன்றையான் அடியலாற்பேணா, எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்" எனத் திருத்தொண்டத் தொகையில் நம்பியாரூரர் ஆளுடைய பிள்ளையாரைப் போற்றிய குறிப்பு இவண் நினைக்கத்தகுவதாகும்.

இக் கலம்பகத்திலுள்ள ஆசிரிய விருத்தங்கள் பல திருவெண்காட்டடிகள் பாடிய கோயில் நான்மணிமாலையிலுள்ள சந்தப்பாடல்களை அடியொற்றியனவாய் இயலிசைத் திறங்களிற் சிறந்து திகழ்கின்றன.

(9) ஆளுடைய பிள்ளையார் திருத்தொகை

இப்பனுவல் திருஞானசம்பந்தப் பிள்ளையார் வரலாற்று நிகழ்ச்சிகளைத் தொகுத்துரைப்பதாதலின் ஆளுடைய பிள்ளையார் திருத்தொகை யென்னும் பெயர்த்தாயிற்று. சிவனடியார்களாகிய திருத்தொண்டர்களைத் தொகுத்துரைத்துப் போற்றுங்கருத்துடன் நம்பியாரூர் பாடிய திருப்பதிகம் திருத்தொண்டத்தொகை என வழங்கப் பெறுதல் போன்று ஆளுடையபிள்ளையார் வரலாற்று நிகழ்ச்சிகளைத் தொகுத்துக் கூறுவதாகிய இப்பிரபந்தமும் திருத்தொகையென வழங்கப்பெற்றதெனக் கருதுதல் பொருந்தும். கலிவெண்பாவாகிய இப்பனுவல் அறுபத்து ஐந்தடிகளால் இயன்றதாகும்.

திருஞானசம்பந்தப் பிள்ளையார், சிவனருளால் உமையம்மையாரளித்த திருமுலைப்பாலைப் பருகி, ஊழிமுதல்வனாகிய இறைவனைப் 'பிரமாபுரமேவிய பெம்மான் இவனன்றே' யெனத் தம் தந்தையார்க்குச் சுட்டிக்காட்டியது முதல் திருநல்லூர்ப் பெருமணத்தில் நிகழ்ந்த தமது திருமணத்தில் தம் வாழ்க்கைத் துணைவியாருடனும் திரு

மணங்காணவந்த எல்லா மக்களோடும் ஈறில்பெருஞ் சோதியிற்புகுந்து அந்தமிலின்பத்தமர்ந்தது வரையுள்ள எல்லாச் செய்திகளையும் படிப்போருளமுருக இத்திருத் தொகையில் நம்பியாண்டார்நம்பி எடுத்து உரைத்துப் போற்றியுள்ளார்.

(10) திருநாவுக்கரசு தேவர் திருவேகாதசமாலை

'வித்தகப்பாடல் முத்திறத்து அடியரும்' எனப் போற்றப்பெற்ற தேவார ஆசிரியர்கள் மூவருள் திருஞான சம்பந்தப் பிள்ளையாரைத் திருவந்தாதி, திருச்சண்பை விருத்தம், திருமும்மணிக்கோவை, திருவுலாமாலை, திருக் கலம்பகம், திருத்தொகையென மேற்காட்டிய ஆறுபிரபந் தங்களாற் போற்றிப் பரவிய நம்பியாண்டார்நம்பிகள் இங்ஙனமே திருநாவுக்கரசர் நம்பியாரூரர் ஆகிய இருபெரு மக்களைக் குறித்தும் தனிப்பிரபந்தங்கள் பலவற்றைப் பாடியிருத்தல் கூடும். நம்பியாரூரைப் போற்றிய தனிப் பிரபந்தமெதுவும் கிடைக்கவில்லை. திருநாவுக்கரசடி களாரது சிறப்பினை விரித்துரைப்பதாகத் திருநாவுக்கரசு தேவர் திருவேகாதசமாலை யென்ற பிரபந்தமொன்றே இப்பொழுது கிடைத்துளது. பதினோராந்திருமுறையின் இறுதிக்கண் அமைந்த பிரபந்தமாகத் திகழ்வது இத்திரு ஏகாதசமாலையே யாகும். ஏகாதசம் – பதினொன்று. திரு நாவுக்கரசரைப் போற்றிப் பரவும் பதினொரு பாடல்களை யுடைய செந்தமிழ்மாலையாக விளங்குவது இப்பிரபந்த மாதலின் இது திருநாவுக்கரசு தேவர் திருவேகாதசமாலை யென வழங்கப்பெறுவதாயிற்று. இதன்கண் அமைந்த பாடல்கள் பதினொன்றேயினும் திருநாவுக்கரசரது வரலாற்றி லமைந்த சிறந்த உண்மைகளும், அப்பெருந்தகை யாரை வழிபடுவதனாலுளவாம் பெருநலங்களும், அரசர் திருவாய்மலர்ந்தருளிய திருப்பதிகங்களின் சிறப்பும், இப்பாடல்களில் தெளிவாக அறிவுறுத்தப் பெற்றுள்ளன.

"ஐம்புலன்களின் வழியே அலைந்து திரியும் மனமுடைய மாந்தர் செய்யும் குற்றங்களை நீக்கியருளுந் தூய பேரன் போடு தம் தமக்கையாராகிய திலகவதியாரைப் பணிந்து அவர் திருவைந்தெழுத்தோதிக் கொடுத்த திருவெண் ணீற்றினையணிந்து சூலைநோய் நீங்கப்பெற்று அமண் சமயத் தொடர்பகற்றிய உறுதிப்பாட்டுடன் இறைவனது

திருவருட் பெருவெள்ளத்திலே திளைத்த தவப்பெருஞ் செல்வர் திருநாவுக்கரசடிகளாவர். மெய்ப்பொருளைப் போற்றிய திருப்பாடல்களில் உலகினரது பாசம் நீங்குதற் குரிய பேருண்மைகளை வெளியிட்டருளிய அப்பெருந் தகையார் அளவிலா ஞானப்பெருங்கடலிடையே திகழும் பேரமிழ்தமாகிய சிவப்பேரொளியிற் புகுந்தின்புறும் பெரு வாழ்வினை அடியேங்களுக்கு வழங்கியருளினார்.

திருநாவுக்கரசர்க்குத் தொண்டுபட்ட மெய்யடியார்கள், தெளிந்த தேன்போலும் இனிமை வாய்ந்த மொழி களைப் பேசவல்ல ஊர்வசி முதலிய வானுலக மாதர் பாடி யாடித் தம்மை வசப்படுத்தற் பொருட்டுக் கூறிய நயவுரை களைத் துகளெனவொதுக்கி, ஞானத்திரளாய் நின்ற புகலூர்ப்பெருமானை நினைந்து நெஞ்ச நெக்குருகக் கண் ணீர் ததும்ப உழவாரப் படையால் திருக்கோயிற் பணி புரிந்த அப்பெருந்தகையார் திருவாய் மலர்ந்தருளிய திருப் பதிகங்களை அருட்குருவின் உபதேச மொழிகளாகக் கொண்டு, சிவபெருமான் திருவடிகளைச் சென்னியிற் சூடிப் பேரின்ப வாழ்வில் திளைத்து மகிழ்வார்கள்; துன்பத்திற்குக் காரணமாகிய பிறவிச் சூழலிற் புகுவாரல்லர். திருநாவுக் கரசரை நினைந்து போற்றுதலே பிறவிப் பிணியைப் போக் குதற்குரிய அருமருந்தாகும்.

அன்புருவாகிய திருநாவுக்கரசர்பாற் பற்றுடையராய் நறுமலர்களால் அருச்சனை புரிந்து வழிபடாதவர் நிலையாத யாக்கையினை நிலையென நம்பி வயிற்றுக்கு இரை தேடி யுழலும் பித்தராவர்.

சிவபூசை கற்ற தூயபேரறிவினையுடையராய் இவ்வுல கிலேயே வீடுபேற்றின்பினை நுகர்ந்த திருநாவுக்கரசர், பிறவியாகிய பெருங்கடலிலே நெல்லாகிய உணவின் துணை கொண்டு மிதந்துழலாமல் திருவைந்தெழுத்தினை யோதிக் கல்லே தெப்பமாகக் கொண்டு கரையேறிய வித்தகர். அவர் திருவாய் மலர்ந்தருளிய தமிழ் மாலை யாகிய திருப்பதிகங்கள் உலகத்தார்க்குப் பெருநிதியமாகப் பயன் தருவன.

'பதிகம் ஏழெழுநூறு பகரும் மா கவியோகி' யாகிய நாவரசருடைய திருவடிகளைத் தலைமேற் கொண்டு வழிபடு வோர், செல்வம், புகழ், மெய்ந்நெறி, வினை நீங்கிய

தூய்மை, மெய்ஞ்ஞானம், சிவனடித் தொண்டு, துறக்க வாழ்வு, தலையாய மனிதர்க்குரிய சால்பு ஆகிய எல்லா நலங்களையும் பெற்றின்புறுவர். என்னைக் குடிமுழுதுய்யக் கொண்ட திருநாவுக்கரசடிகளின் திருவடிமலர்கள், சார்ந்த அடியார்களின் இடர்களையகற்றுவன ; களங்கமற்ற, நிறை மதிகள் பத்துக் கூடி நிலவெறித்தாற் போன்று தண் ணொளி பரப்புவன ; தூய்மையேயுருவாகத் திகழ்வன ; தவமுனிவர்கள் தொழுது போற்றுவன; குற்றமற்ற பெருங் குணங்களுக்கு நிலைக்களமாகத் திகழ்வன.

தேவர்க்கும் அரிதாகிய சிவலோகக்கதி திருநாவுக் கரசரருளால் அடிநாயாகிய எளியேற்கு எளிதிற் கைவந் தது. திருநீற்றுக் கவசமணிந்து சிவனடியே சிந்திக்கும் மனமுடையராய்ச் சமணர்கள் அமைத்த நீற்றறையிலே தங்கிக் கந்தைமிகையாங் கருத்துடையராய் விளங்கிய புலமைச் செல்வராகிய திருநாவுக்கரசர், வஞ்சனையின்றித் தம்மை வழிபடும் அடியார்களுக்குப் பசுபந்தத்தினை நீக்கும் பரிசினைப் பணித்தருள் புரியும் பேரருளாளராவர். அப் பெருந்தகையார்தம் இணையடித் தாமரைகளைப் பேரன்பு டன் தலைமேற் கொண்டு உய்வதன்றி வேறொரு சாதனமுங் கண்டிலோம். மற்றுள்ளன எவையும் வேண்டோம். ஆதலால் ஐம்புலன்களின் வழியே சென்று இறப்பார் செல்லும் தீய வழிகளிற் செல்ல மாட்டோம் ".

என நம்பியாண்டார் நம்பிகள் இத்திரு ஏகாதசமாலை யில் திருநாவுக்கரசு தேவரை உளங்கசிந்து போற்றியுள் ளார்.

அப்பரடிகளுக்குத் திருவதிகையிறைவர் அளித்தருளிய 'திருநாவுக்கரசு' என்ற திருப்பெயரின் சிறப்பினை,

இலைமா டென்றிடர் பரியார், இந்திர
 னேயொத் துறு குறை வற்றாலும்
நிலையா திச் செல்வ மெனவே கருதுவர்,
 நீள் சன்மக்கட லிடையிற் புக்
கலையார், சென்றரன் நெறியா குங்கரை
 அண்ணப் பெறுவர்கள், வண்ணத்தின்
சிலை மாடந்திகழ் புகழா மூருறை
 திருநாவுக்கர சென் போரே.

எனவரும் திருப்பாடல் இனிது விளக்குவதாகும். "நிறந் தீற்றிய திண்மை மிக்க மலைபோன்று மாளிகைகள்

உயர்ந்து விளங்கும் புகழ்மிக்க திருவாமூரிற் பிறந்தருளிய பெருமான் திருநாவுக்கரசு என அப்பெருந்தகையாரது திருப்பெயரை அன்பினுல் ஓதுவார், 'நம்மிடத்துச் செல்வ மில்லையே' யென இடருற்று வருந்தார்; வானுலக வேந்தனுகிய இந்திரனைப் போன்று குறைவின்றி நிரம்பிய செல்வமுடையவராகத் தாம் இருந்தாலும் தம்மிடத்துள்ள செல்வம் நிலையாதெனக் கருதும் மெய்யுணர்வையே கொண்டு திகழ்வார்கள்; பிறவியாகிய பெருங்கடலுள் வீழ்ந்து துன்புற மாட்டார்கள்; பிறவித் துன்பத்தினின் றும் நீங்கிச் சிவனது திருவருள் நெறியாகிய இன்பக்கரை யினையடைந்து மகிழ்வார்கள் என்பது இத்திருப்பாடலின் பொருளாகும். இதன்கண் திருநாவுக்கரசர்க்குத் தொண்டு பூண்ட அடியார்களின் இயல்பாகச் சொல்லப் பெற்றன யாவும் நாவரசரைத் தெய்வமாகக்கொண்டு போற்றிய அப்பூதியடிகளின் பெருமையினை நினைவு படுத்துவனவாக அமைந்துள்ளன. இந்நுட்பத்தினை உளங்கொண்ட துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் தாம்பாடிய நால்வர் நான்மணிமாலையில்,

> உற்ருனலன் தவம், தீயில்நின்ருனலன் ஊண்புனலா
> அற்ருனலன் நுகர்வும் திருநாவுக் கரசெனுமோர்
> சொற்ருனெழுதியுங் கூறியுமே யென்றுந்துன்பில்பதம்
> பெற்ருன் ஒருநம்பி அப்பூதியென்னும் பெருந்தகையே.

என அப்பூதியடிகளாரை உளமுருகிப் போற்றுமுகமாகத் 'திருநாவுக்கரசு' என்னும் திருப்பெயரின் மாண்பினை விளக்கிய திறம் இங்கு ஒப்புநோக்கியுணரத்தகுவதாகும்.

பன்னிரண்டாந் திருமுறை

சேக்கிழார் நாயனார் வரலாறு

'தெய்வ மணக்குஞ் செய்யுளெலாம்' எனப் போற்றப் பெற்ற சிறப்புடையது திருத்தொண்டர் புராணமாகிய பெரியபுராணம். இவ்வருள் நூலை இயற்றியுதவிய பெரியார் அருண்மொழித் தேவரென்னும் பெயருடைய சேக்கிழார் நாயனாராவர். இவரது வரலாற்றை விரித்துக் கூறும் நூல் திருத்தொண்டர்புராண வரலாறு எனப் பெயரிய சேக்கிழார் புராணமாகும். இதனை இயற்றியவர் சைவ சமய சந்தானாசாரியருள் ஒருவராகிய கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியார் என முன்னோர் கூறுவர். இந்நூல், பாயிரம் உட்பட நூற்று மூன்று செய்யுட்களால் இயன்றது இந்நூலிற் சொல்லிய வண்ணம் சேக்கிழார் நாயனாரது வரலாற்றை ஒரு சிறிது நோக்குவோமாக.

பாலாறு பாய்ந்து வளஞ்சுரக்கும் சிறப்புடைய தொண்டை நாட்டினைப் பண்டையோர் இருபத்து நான்கு கோட்டங்களாகப் பகுத்தனர். அங்ஙனம் பகுக்கப்பட்ட இருபத்து நான்கு கோட்டங்களுள் புலியூர்க் கோட்டமும் ஒன்று. அக்கோட்டத்தைச் சேர்ந்த குன்றைவள நாட்டின் தலைநகராகத் திகழ்வது குன்றத்தூர். இவ்வூரில் வேளாளர் குடும்பங்களில் ஒன்றாகிய சேக்கிழார் குடியினர் சிறப்புற்று வாழ்ந்தனர். பண்டை நாளிற் சோழன் கரிகாற் பெருவளத்தான் தொண்டை நாட்டிற் குடியேற்றிய நாற்பத்தெண்ணாயிரம் வேளாளர் குடும்பங்களுள் இச் சேக்கிழார் குடும்பமும் ஒன்றாகும். இவ்வாறு சோழ மன்னர்களால் நன்கு மதிக்கப்பெற்ற குன்றத்தூர்ச் சேக்கிழார் குடும்பத்திலே அருண்மொழித் தேவர், பாலறாவாயர் என்னும் இருவரும் சகோதரராய்ப் பிறந்து வளர்ந்தார்கள். இவ்விருவருள் மூத்தவர் அருண்மொழித் தேவர். அவர்க்கு இளையவர் பாலறாவாயர். இவ்விருவரும் கல்வித்துறையில் தேர்ச்சி பெற்று விளங்கினார்கள். அருண்மொழித் தேவருடைய கல்வியறிவொழுக்கங்களை நன்குணர்ந்த சோழ மன்னன், அவரைத் தன் அரசியலில்

அமைச்சராக நியமித்து அவருக்கு உத்தம சோழப் பல்லவன் என்ற பட்டத்தையுந் தந்து சிறப்பித்தான். அமைச்சுரிமை பூண்டு சோழ நாட்டில் தங்கிய அருண்மொழித் தேவர், அந்நாட்டுத் திருத்தலங்களுள் ஒன்றாகிய திருநாகேச்சரத்திற் கோயில் கொண்டருளிய இறைவன்பால் பேரன்பு நிறைந்தவராய் மாநாகம் அருச்சித்த மலர்க்கமலத் தாள்வணங்கி நாடோறும் போற்றி வழிபட்டு வந்தார். நாகேச்சரத்திறைவர்பால் வைத்த அளவிலாப் பேரன்பினால் சோழநாட்டுத் திருநாகேச்சரத் திருக்கோயிலைப் போன்ற அமைப்பிலேயே தம்முடைய ஊராகிய குன்றத்தூரிலும் திருநாகேச்சரம் என்ற பெயரால் ஒரு திருக்கோயிலைக் கட்டி அங்கு நாள் வழிபாடும் திருவிழாக்களும் நடைபெற ஏற்பாடு செய்தார்.

அந்நாளில் சைவ சமயத்தார் பலர் மெய்ந்நூலாகிய தங்கள் சைவ நூல்களின் பெருமையினை யுணராது சமணர்கள் புனைந்துரைத்த சீவகசிந்தாமணிக் கதையை மெய்யென நம்பி அக்காவியச் சுவையில் ஈடுபட்டுத் தம் சமய பெரியோர்களின் வரலாறுகளை மறந்தனர். சோழ மன்னனும் சீவகசிந்தாமணிக் கதையை மெய்யென நம்பி மனமகிழ்ந்து பாராட்டிக் கேட்பானாயினன். அதுகண்ட அருண்மொழித் தேவராகிய சேக்கிழார், அரசனை நோக்கி 'வேந்தர் பெருமானே நீவிர் சைவ சமயத்தினராயிருந்தும் இம்மை மறுமை வீடென்னும் மும்மை நலங்களையுந் தரும் சிவனடியார்களின் மெய்ம்மை வரலாறுகளைக் கேளாது நமது முழுமுதற் பொருளாகிய சிவபெருமானை நிந்திக்கும் புறச்சமயத்தவர்களாகிய சமணர்களுடைய பொய்க் கதையாகிய இதனை மெய்யென நம்புதல் தகுதியன்று' என அறிவுறுத்தினர். இதனைக் கேட்ட சோழ மன்னன் 'நீவிர் சொல்லிய சிவகதை யாது? அதன் வரலாறென்ன? அதனை விளங்கச் சொல்வீராக' என வினவினான். அது கேட்ட சேக்கிழார் பெருமான், 'திருவாரூரிலே கோயில் கொண்டருளிய தியாகேசப் பெருமான் தம்முடைய அடியார்களின் பெருமையை விரித்துரைத்துப் பாடிப் போற்றுக என்று கூறித் 'தில்லைவாழந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்' என அடியெடுத்துக் கொடுக்க நம்பியாரூராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளால் திருவாய் மலர்ந்தருளப் பெற்றது திருத்தொண்டத் தொகையென்னுந் திருப்பதிக

மாகும். அடியார்களின் புகழ்த்திறத்தினைப் போற்றிப் பரவும் அத் திருத்தொண்டத் தொகைக்குத் திருநாரையூரி லெழுந்தருளிய பொல்லாப்பிள்ளையார் பொருளருளிச் செய்யக் கேட்டுணர்ந்த நம்பியாண்டார் நம்பிகள், அத்திருப்பதிகத்திற் போற்றப்பெற்ற சிவனடியார்களின் வரலாற்றை வகைப்படுத்து விளக்கு முகத்தால் திருத்தொண்டர் திருவந்தாதி யென்றதொரு வகை நூலைச் செய்துதவினுர். அத் திருவந்தாதியைத் திருமுறை கண்ட ராசராச தேவர், சிவாலய தேவர் முதலாகவுள்ள பெரியோர்கள் அனைவரும் உளமுவந்து இனிமையுடைய தெனப் பாராட்டினுர்கள்' எனக்கூறினுர். அதுகேட்ட சோழன், அத் திருவந்தாதியை ஓதிப் பொருள் கூற வேண்டுமென வேண்டினுன். அருண்மொழித் தேவரும் அந்நூற் பொருளை மன்னனுக்கு எடுத்துரைத்தார் திருத்தொண்டத் தொகையிற் கூறப்பெற்ற சிவனடியார் களின் உண்மை வரலாறுகளைக் கேட்டு உளமுருகிய வேந்தன், இறைவனது திருவருளை நினைந்து "திருத் தொண்டர் வரலாறுகளை யாவரும் தெளிவாய் அறிந்து கொள்ளும்படி சுவைமிக்க செந்தமிழ்ப் பெருங்காப்பிய மாகப் பாடி உதவுதல் வேண்டும்" எனத் தன் அமைச்ச ராகிய சேக்கிழாரை வேண்டிக் கொண்டு பெரும்பொருளை யும் வழங்கினுன். அரசனது வேண்டுகோளுக்கிணங்கிய அருண்மொழித் தேவர், தில்லையை யடைந்து சிவகங்கை யிலே நீராடித் தில்லையம்பலவாணனைத் தொழுது போற்றி, "பெருமானே, நின்பால் அன்புமிக்க அடியார்களின் வரலாறுகளைப் பெருங்காப்பியமாக அடியேன் விரித்துப் பாடுதற்கு அடியெடுத்துக் கொடுத்தருளல் வேண்டும்" என உளங்கசிந்து வேண்டி நின்ருர். அந்நிலையில் அங்குள்ளார் அனைவரும் கேட்கத் தில்லையம்பலவன் திருவருளால் 'உலகெலாம்' என்ருெரு வானெலி யெழுந் தது. அதனைக் கேட்டு மகிழ்ந்த தில்லைவாழந்தணர்கள், கூத்தப்பெருமானுக்குச் சாத்திய திருநீற்றையும் திருமாலை யையும் திருப்பரிவட்டத்தையும் அருண்மொழித் தேவர்க் குச் சாத்தினர். அருண்மொழித் தேவர், திருநெறித் தலைவராகிய திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் சுந்தரர் ஆகிய மூவரையும் வணங்கிப் போற்றிச் சிவசின்னங்கள் அணிந்து ஆயிரக்கால் மண்டபத்தில் அமர்ந்திருந்து,

இறைவன் அருளிய 'உலகெலாம்' என்ற சொல்லையே முதன் மொழியாகக் கொண்டு திருத்தொண்டர் புராண மென்னுந் தெய்வத்தமிழ்ப் பெருங்காப்பியத்தைப் பாடி முடித்தார்.

நூல் இனிது நிறைவேறிய திறத்தைக் கேள்வியுற்ற சோழ மன்னன் தில்லைப்பதியை யடைந்தான். சேக்கிழாரும் தில்லை வாழந்தணர்களும் தவச்செல்வரும் மன்னனை எதிர்கொண்டழைத்தார்கள். அருண்மொழித் தேவருடைய சிவவேடப் பொலிவழகை நேரிற்கண்ட மன்னன், அவருடைய திருவடிகளில் வீழ்ந்து வணங்கித் தில்லையம்பல முன்றிலில் வந்து நின்றான். அந்நிலையில் "வளவனே, நாம் நம் வாக்கினால் 'உலகெலாம்' என்று அடியெடுத்துக்கொடுக்கச் சேக்கிழான் நம்முடைய தொண்டர்களது அடிமைத் திறத்தை விரித்து நூலாகச் செய்து முடித்தான். நீ அதைக்கேட்பாயாக" என்றதொரு வானொலி திருச்சிலம்பொலியுடன் யாவரும் கேட்பத் தோன்றியது. அதனைக்கேட்டு வியப்புற்ற அரசன், திருத்தொண்டர் புராணத்தைக் கேட்க வரும் பொருட்டுச் சிவனடியார்கள் எல்லோர்க்கும் திருமுகம் அனுப்பினான். திருமுறைகளில் வல்லவர்களும் சிவாகமங்களைக் கற்றவர்களும் வேதங்களில் வல்லவர்களும் இலக்கண இலக்கியங்களை நுனித்துணர்ந்த புலவர் பெருமக்களும் தில்லையை அடைந்தார்கள். தில்லையம்பலவாணர் திருமுன்னர்த் திருத்தொண்டர்புராண விரிவுரை நிகழ்தற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளும் குறைவறச் செய்யப்பட்டன. அருள் நடம் புரியும் நடராசப் பெருமானுக்குரிய சிறப்புடையதும், சீகாழிப்பதியில் திருஞானசம்பந்தப் பிள்ளையார் திருவவதாரஞ் செய்ததும், அவர் மூன்றும் வயதிலே ஞானப்பால் அளிக்கப்பெற்றதும் ஆகிய பெருமை வாய்ந்தது, திருவாதிரைத் திருநாளாகும். அச்சிறப்புடைமை கருதித் திருத்தொண்டர் புராண விரிவுரையைத் திருவாதிரைத் திருநாளில் தொடங்குதல் வேண்டுமெனக் கருதினர். சேக்கிழார் பெருமானால் சித்திரைத் திருவாதிரை நாளில் தொடங்கப்பெற்ற திருத்தொண்டர் புராண விரிவுரை, அடுத்த ஆண்டு சித்திரைத் திருவாதிரை நாளில் இனிது நிறைவெய்தியது. அதனைக்கேட்ட சோழ மன்னரும் மற்றவர்களும் இன்பக்கடலில்

திளைத்தனர். தில்லை வாழந்தணர்கள் திருத்தொண்டர் புராணத்தைச் சிவனெனவே கருதிச் சிவமூல மந்திரத் தால் அருச்சனை செய்து இறைஞ்சினர்கள். சோழ மன்னன், திருத்தொண்டர் புராணத்தை யானை மீது ஏற்றிச் சேக்கிழார் பெருமானையும் அதன் மீது எழுந் தருளச் செய்து, தானும் அவர்பின் ஏறியமர்ந்து தன்னுடைய இரண்டு கைகளாலும் வெண்சாமரை வீசு வானுகி, இறைவனது திருவருளை நினைந்து 'இதுவன்றே நான் செய்த தவப்பயன்' என்று கூறி உளமுருகினன். யானை திருவீதியை வலம் வந்து பொன்னம்பலத்தின் முன்னே வந்து நின்றது. அடியார் பலரும் சேக்கிழாரைச் சூழ்ந்து போற்றி நின்ருர்கள். அரசரோடு யானையி லிருந்து இறங்கிய அருண்மொழித்தேவர் கனகசபையிலே சென்று திருத்தொண்டர் புராணத் திருமுறையை முன்னே வைத்தார். மன்னர் பெருமான் சேக்கிழார் பெருமானுக்குத் தொண்டர்சீர் பரவுவார் என்ற திருப்பெயர் சூட்டி இறைஞ் சிப் போற்றினன். அங்கு வந்திருந்த அன்பரெல்லோரும் தொண்டர்சீர் பரவுவாரை உளமுருகித் தொழுது போற்றி ஞர்கள். அநபாய சோழன் திருத்தொண்டர் புராணத் தைச் செப்பேட்டிலெழுதி முன்னுள்ள பதினொரு திரு முறைகளுடன் சேர்த்துச் சிறப்புச் செய்தனன். ஆகவே இத் திருத்தொண்டர் புராணம் பன்னிரண்டாம் திரு முறையெனப் போற்றப் பெறுவதாயிற்று.

பின்பு, அநபாய சோழன் அங்கிருந்தவர்களை நோக்கி இத் தொண்டர் சீர்பரவுவாருடைய தம்பியார் பாலருவாயர் இப்பொழுது எங்கேயுள்ளார் என வினவினன். அங் கிருந்தவர்கள், 'பாலருவாயர் குன்றத்தூரிலே திருக்குளம் அமைத்தபின் அங்குத் திருநாகேச்சுரப் பெருமானுக்குத் திருத்தொண்டு செய்துகொண்டிருக்கிருர்' என மறுமொழி பகர்ந்தனர். அதனைக் கேட்ட அரசர் பெருமான், பாலரு வாயரை அழைத்துவரச் செய்து அவருக்குத் தொண்டை மான் என்ற பட்டமும் சூட்டித் தனக்குரிய அமைச்சராக அமைத்துக்கொண்டான். அங்ஙனம் அமைச்சர் பதவி பெற்ற பாலருவாயர், தொண்டை நாட்டில் பெரும் பஞ்ச மொன்று வந்தபொழுது உளங்கலங்காமல் அங்குள்ள மக்களுக்கு வேண்டும் வசதிகளைச் செய்து பசிப்பிணி நீக்கிய அருஞ்செயலால் 'தொண்டை மண்டலம் நின்று

காத்த பெருமான்' என எல்லாராலும் போற்றப்பெறும் பெருஞ் சிறப்பு எய்தினர்.

தொண்டர் சீர்பரவுவாராகிய சேக்கிழார் பெருமான், தில்லைநகரிலேயே தங்கியிருந்து தேவார ஆசிரியர் மூவராலும் போற்றப் பெற்ற அடியார்களது திருத்தொண்டின் பெருமைகளை இடைவிடாது உணர்ந்து போற்றிச் சிவனடியார்களோடு தவநிலையிலமர்ந்து தில்லைச்சிற்றம்பலப் பெருமானது தூக்கிய திருவடி நீழலையடைந்து இன்புற்றார்.

இவ்வரலாற்றினை விரித்துக் கூறுவதே சேக்கிழார் புராணமாகும். சிந்தாமணியைச் சோழன் படித்துப் பொழுது போக்கியதைக் காணப்பொறாத சேக்கிழார், அதனைச் சமணர் கட்டிய பொய்க்கதையெனக் கூறி மறுத்து அதற்கு மாறாகப் பெரிய புராணத்தைப் பாடினர் என இந்நூல் கூறியிருப்பதற்குப் பெரிய புராணத்தில் ஆதரவில்லையென்றும், கொடும்பாளூரையாண்ட சிற்றரசராகிய இடங்கழியாரை முடிமன்னர் அறுவருள் ஒருவரெனவும் பல்லவர் குலத்துத் தோன்றிய பெருவேந்தராகிய ஐயடிகள் காடவர்கோன், கழற்சிங்கர் என்னும் இருவேந்தர்களையும் குறுநில மன்னரெனவும் இந்நூல் கூறுங் கூற்று பெரிய புராணத்திற்கு மாறுபட்டதென்றும், அப்பர் சம்பந்தர் காரைக்காலம்மையார் இம்மூவரும் இயலிசைத் தமிழ் வல்லோரெனவும், நாளைப்போவார், ஆனாயர், நீலகண்ட யாழ்ப்பாணர் இம்மூவரும் இசைத் தமிழ் வல்லோரெனவும் ஐயடிகள் திருமூலர் சேரமான் பெருமாள் இம்மூவரும் இயற்றமிழ் வல்லோரெனவும் வகுத்துக் கூறிய இந்நூலாசிரியர், சுந்தரரை இப்பிரிவுகளிற் சொல்லாமல் விட்டதும் நந்தனாரை இசைத்தமிழ் வல்லோர் என ஆதரவின்றிச் சேர்த்துக் கூறியிருப்பதும் தவறென்றும் ஆகவே திருத்தொண்டர் புராண வரலாறு என்னும் இந்நூல், உமாபதி சிவாசாரியாராற் பாடப்பட்டதன்றென்றும், மிகுந்த சைவப்பற்றும் சமண சமய வெறுப்புங்கொண்ட ஒருவரால் உமாபதி சிவாசாரியர் காலத்திற்கு முன்பே பாடப்பட்டதென்றும் கூறுவாருமுளர்.[1]

1. டாக்டர் மா. இராசமாணிக்கனார் M.O.L எழுதிய பெரிய புராண ஆராய்ச்சி பக்கம் 11—15.

இக்கூற்று பொருத்தமுடையதாகத் தோன்றவில்லை. சேக்கிழார் சீவகசிந்தாமணிக் கதையை மெய்யென நம்புதல் கூடாதென விலக்கியதாக இந்நூல் கூறுகிறதே தவிர அதன்கண் அமைந்த காவியச்சுவை நலங்களை இழித்துரைத்ததாகக் கூறவில்லை. 'பொய்தருமாலுள்ளத்துப் புன்சமணர்' எனவும் 'பொய்ம்மைச் சமயம்' எனவும் சமணர்களையும் அவர் தம் சமய நூல்களையும் இழித்துரைக்கும் குறிப்புக்கள் பெரிய புராணத்திற் காணப்படுகின்றன. இக்குறிப்பினையுற்று நோக்குவோர், சமணசமயத்தார் புனைந்துரைத்த கதைகளைப் படித்துப் பொழுதுபோக்குஞ் செயலைச் சேக்கிழார் வெறுத்துரைக்கும் உள்ளமுடையவரென்பதனை நன்குணர்வார்கள். ஆகவே சீவகசிந்தாமணிக் கதையைப் படித்து அக்கதையினை மெய்யெனக் கருதிப் பொழுது போக்கிய மக்களைத் திருத்துதற்குச் சேக்கிழார் முயன்றார் எனச் சேக்கிழார் புராண ஆசிரியர் கூறுவதில் தவறில்லையென்பது பெறப்படும்.

"ஆதித்தன் புகழ்மரபிற் குடிமுதலோர் இடங்கழியார்" என ஆசிரியர் சேக்கிழார் கூறுதலால் இடங்கழி நாயனுர் சோழர் குடியிற் பிறந்தவரென்பது நன்கு பெறப்படும்.

திருத்தொண்டர் திருவந்தாதியில்,

'சிங்கத்துருவனைச் செற்றவன் சிற்றம்பல முகடு
கொங்கிற்கனக மணிந்த ஆதித்தன்குல முதலோன்
திங்கட் சடையர் தமரதென் செல்வமெனப் பறைபோக்
கெங்கட் கிறைவன் இருக்கு வேளூர்மன் இடங்கழியே'

என நம்பியாண்டார் நம்பிகளும் இடங்கழிநாயனுரைச் சோழர் குடியிற் பிறந்தவரென்றே தெளிவாகக் கூறியுள்ளார். ஆகவே சேக்கிழார் புராண ஆசிரியர் இடங்கழி நாயனுரை முடிமன்னருள் ஒருவரெனக் கூறியது, சேக்கிழார் நம்பியாண்டார்நம்பி ஆகிய இருவர் கருத்துக்கும் ஒத்ததென்பது நன்கு புலனுகும். சேர சோழ பாண்டியர்களாகிய தமிழ் மூவேந்தர்கள் குறுநிலப் பரப்பைஆண்ட காலத்தும் அவர்களை முடிவேந்தரெனப் போற்றியுரைத்தல் பண்டைத் தமிழராட்சியிற் பற்றுடைய முன்னேரது செயலாகும். தமிழ் மூவேந்தரல்லாத பிறர் தம் காலத்துப் பெருநிலப்பரப்பையாளும் பேராற்றல் பெற்று விளங்கினும்

வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பாகிய இத்தமிழகத்தில் அன்னோரை மூவேந்தரைப் போன்று முடிமன்னர் எனப் பாராட்டிக் கூறும் வழக்கத்தினைத் தமிழ் மக்கள் மேற்கொண்டதில்லை. களந்தை மன்னவனாகிய கூற்றுவர் என்பார், சோழநாட்டின் ஒரு பகுதியைக் கைப்பற்றித் தில்லை வாழந்தணர்களைக் கொண்டு தில்லையில் முடிசூட்டிக் கொள்ள விரும்பியபொழுது, 'நாங்கள் சோழகுலத்தாருக்கேயன்றி மற்றவர்களுக்கு முடிசூட்ட மாட்டோம்' என மறுத்துரைத்துத் தில்லைவாழந்தணர்கள் சேரநாட்டிற்குச் சென்று தங்கினர் எனப் பெரிய புராணத்திற் கூறப்படுதலால் இச்செய்தி இனிது விளங்கும். எனவே ஐயடிகள் காடவர்கோன், கழற்சிங்கன் என்னும் பல்லவ மன்னர்கள் பெருவேந்தராயினும் அவர்களது மரபு, தமிழ் மூவேந்தர் மரபினைப் போன்று படைப்புக்காலந்தொட்டு அரசு புரிந்து வரும் பழங்குடியெனத் தமிழ் மக்களால் மதிக்கப் பெறாமையின், பல்லவ மன்னராகிய இவ்விருவரையும் சேக்கிழார் புராண நூலாசிரியர் குறுநிலமன்னரெனவே குறிப்பிடுவாராயினரென்க.

நம்பியாரூரர் பாடிய திருத்தொண்டத் தொகையில் அவரால் புகழ்ந்து போற்றப் பெற்ற அடியார்கள் அறுபதின்மரையே இயலிசை வல்லோர், இசை வல்லோர், இயல் வல்லோர் என இந்நூலாசிரியர் வகுத்துக் கூறுகின்றாராதலின், அவ்வடியார்களைப் போற்றிய சுந்தரரை அவர்களோடு சேர்த்து இன்னதுறையில் வல்லவரெனச் சொல்ல வேண்டிய இன்றியமையாமையில்லை. திருநாளைப் போவார், திருக்கோயிலில் வீணைக்கும் யாழுக்கும் வேண்டிய நரம்பு போர்வைத்தோல் முதலியன் கொடுத்துவுதலும் ஆடுதலும் பாடுதலுமுடையராய்த் தொண்டு செய்திருந்தார் என ஆசிரியர் சேக்கிழார் கூறுதலால் நந்தனார் இசையில் வல்லவர் எனச் சேக்கிழார் புராண நூலாசிரியர் குறித்தது மிகவும் பொருத்தமுடையதேயாகும். சேக்கிழார் புராணமென வழங்கும் திருத்தொண்டர் புராண வரலாற்றினைப் பாடியவர் கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியார் என முன்னோரனைவரும் உடன்பட்டுரைத்தலானும்,

திருக்கிளரும் கயிலைமலைக் காவல் பூண்ட
செல்வமலி திருநந்தி மரபில் வந்து
கருக்குழியில் எமை வீழா தெடுத்தாட்கொள்ளும்
கருணைமிகு மெய்கண்ட தேவர் தூய

மருக் கிளர்தாள் பரவும் அருணந்திதேவர்
மகிழுமறை ஞானதே வருக்கன் பாகி
இருக்கு முமாபதி தேவர் சேக்கிழார் தம்
இசைப்புராணம் உரைத்தார் என்ப மாதோ.

என ஏடுகளிற் காணப்படும் இந்நூற் சிறப்புப்பாயிரத் தானும் சேக்கிழார் புராண நூலாசிரியர் உமாபதி சிவா சாரியரென வழங்கும் பழங்கொள்கையே உண்மையாதல் காணலாம்.

சேக்கிழார் நாயனர் காலம்

இத் திருத்தொண்டர் புராணம் பாடிய ஆசிரியர் சேக்கிழார் வாழ்ந்த காலத்தைக் குறித்து ஆராய்ச்சியாளர் பலரும் வெவ்வேறு கருத்துக்களை வெளியிட்டுள்ளார்கள். கோயமுத்தூர் சில்லா தர்மவரந் தாலுகா முத்தூர்ச் சிவா லயத்திலே வீர ராஜேந்திர சோழனது 4-ம் ஆட்சி யாண்டிற் பொறிக்கப்பட்ட கல்வெட்டொன்றில் உத்தம சோழப் பல்லவராயனுடைய மைந்தர் திருநுந்தா விளக்கு வைத்த செய்தி குறிக்கப்பெற்றுளது. இங்குக் குறிக்கப் பட்ட வீர ராசேந்திரன் என்பான் கங்கை கொண்ட சோழன் மக்களு ளொருவனாகிய வீர ராசேந்திர சோழ னென்றும், உத்தம சோழப் பல்லவரையர் என்பார் பெரிய புராண ஆசிரியராகிய சேக்கிழாரென்றும், ஆகவே சேக்கிழார் வீர ராசேந்திர சோழன் காலத்திற்கு முன் கங்கை கொண்ட சோழன் காலத்தில் இருந்திருத்தல் வேண்டும் என்றும் அறிஞர் ஒருவர் எழுதியுள்ளார். இங்குக் குறிக்கப்பட்ட முத்தூர்ச் சாசனத்திற் சொல்லப் படும் வீர ராசேந்திரன் என்பான் கி. பி. 1207 முதல் 1252 வரை கொங்கு நாட்டை யாண்ட கொங்குச் சோழன் என் பதும் இவன் தனக்கு முன் கி பி. 1149 முதல் 1163 வரை கொங்கு நாட்டில் ஆட்சி புரிந்த தன் முன்னேனாகிய குலோத்துங்க சோழ தேவன் தன் பெயரால் அமைத்த கேயிலுக்கு நிபந்தம் வழங்கியுள்ளமை முத்தூர்ச் சாச னங்களால் அறியப்படுதலின் இவனை முதற் குலோத்துங்க சோழனுக்கு முன் சோழநாட்டை ஆட்சி புரிந்த வீர ராசேந்திர சோழனாகக் கொள்ளுதல் பொருந்தாதென்றும், கொங்குச் சோழர் கல்வெட்டிற் காணப்படும் உத்தம சோழப் பல்லவராயன் என்னும் பெயர் பெரிய புராண

ஆசிரியர் சேக்கிழார் நாயனுரைக் குறித்து வழங்கியதன் றென்றும் அறிஞர் மு. இராகவையங்காரவர்கள் தெளி வாக விளக்கியுள்ளார்கள்.[1] அறிஞர் அ. கோபிநாதராய ரவர்கள் தாமெழுதிய சோழவமிச சரித்திரச் சுருக்கத்தில் முதற் குலோத்துங்க சோழன் வேண்டுகோளின் மேல் சேக்கிழார் பெரிய புராணம் பாடினுர் எனக் குறிப்பிட்டுள் ளார்கள்.[2] சேக்கிழார் தம் காலத்துச் சோழ வேந்தனைத் தம் நூலுள் அநபாயன் என்ற சிறப்புப் பெயராற் சிறப் பித்துப் போற்றியுள்ளார். அநபாயன் என்னும் இப்பெயர் முதற் குலோத்துங்க சோழன் காலத்து வழங்கியதன் றென்பதும் இரண்டாம் குலோத்துங்க சோழனைக் குறித்தே முதன் முதல் வழங்கத் தொடங்கிய தென்பதும் கல்வெட்டுக்களாலும் குலோத்துங்க சோழனுலாவாலும் இனிது புலனுதலின் சேக்கிழார் முதற் குலோத்துங்க சோழன் காலத்தில் வாழ்ந்தவரல்லரென்பது நன்கு தெளியப்படும்.

சேக்கிழார் புராண ஆசிரியர், சேக்கிழார் காலத்துச் சோழ மன்னனை அபயன் எனவும் அநபாயன் எனவும் குறித்துப் போற்றியுள்ளார். சேக்கிழார் நாயனுர் தம்மை ஆதரித்துப் போற்றிய சோழ வேந்தனைத் தாம் பாடிய திருத்தொண்டர் புராணத்துள் பத்து இடங்களிற் பாராட்டியுள்ளார். அப்பாடல்களுள் அநபாயன் என்ற பெயரையே சிறப்பாகக் குறித்துள்ளார். இச்செய்யுட் களில் சேக்கிழார் நாயனுர் சோழ மன்னனைக் குறித்து வெளியிட்ட செய்திகளும் ஒட்டக்கூத்தர் தம்மை ஆதரித்த அநபாய மன்னனுகிய இரண்டாங் குலோத்துங்கனைப் பாராட்டிக் கூறிய பகுதிகளும் ஒத்துக் காணப்படுகின்றன. இவ்விரண்டாங் குலோத்துங்கன் மகனுகிய திரிபுவனச் சக்கரவர்த்தி இரண்டாம் ராசராச சோழனது 17-ம் ஆட்சியாண்டில் திருமழபாடித் திருக்கோயிலிற் பொறிக்கப் பெற்றுள்ள கல்வெட்டொன்றில் "ஜயங்கொண்ட சோழ மண்டலத்து குன்றத்தூர்ச் சேக்கிழான் மாதேவடிகள் ராம தேவனுன உத்தம சோழப் பல்லவராயன்" என்பார் திருமழபாடித் திருக்கோயிலுக்குத் தொண்ணூறு

1. சாசனத் தமிழ்க் கவி சரிதம் பக் - 75,76.
2. சோழ வமிசச் சரித்திரச் சுருக்கம் பக் - 32,33.

பேராடுகள் உதவிய செய்தி குறிக்கப்பட்டுளது. சேக்கிழார் புராணத்தே உமாபதி சிவாசாரியார்,

அத்தகைய புகழ்வேளாண் மரபிற் சேக்கி
 ழார் குடியில்வந்த அருண்மொழித்தே வர்க்குத்
தத்துபரி வளவனுந்தன் செங்கோலோச்சுந்
 தலைமையளித் தவர்தமக்குத் தனது பேரும்
உத்தம சோழப்பல்ல வன்றனென்னும்
 உயர்பட்டங் கொடுத்திட ஆங்கவர் நீர்நாட்டு
நித்தனுறை திருநாகேச் சுரத்திலன்பு
 நிறைதலினல் மறவாத நிலைமை மிக்கார்

எனச் சேக்கிழார் நாயனரது வரலாறு கூறுகின்றனர். அவ்வாசிரியர் கூறுமாறு சேக்கிழார் குடியிற் பிறந்து உத்தம சோழப் பல்லவனென்னும் பட்டம் பெற்றுத் திகழ்பவர், திருமழபாடிக் கோயிலுக்கு விளக்கெரிக்க நிபந்தம் வழங்கிய 'குன்றத்தூர்ச் சேக்கிழான் மாதேவடிகள் ராமதேவனை உத்தம சோழப் பல்லவராயன்' என்னும் இத்தலைவராவார். இவர் சேக்கிழான் மாதேவடிகள் எனச் சிறப்பிக்கப் பெற்றிருத்தலைக் கூர்ந்து நோக்குங்கால், சேக்கிழார் குடியிற் பிறந்து மாதேவனாகிய சிவபெருமானிடத்து ஒன்றிய சிந்தையராய்ப் பேரன்பு செலுத்தியவர் இவரென்பது நன்கு புலனும். இவரது இயற்பெயர் ராமதேவன் என இக்கல்வெட்டுக் கூறுகின்றது. (சேக்கிழாரது இயற்பெயர் அருண்மொழித் தேவன் என உமாபதி சிவாரியார் கூறுவர். அருண்மொழித் தேவன் என்பது, முதல் இராசராச சோழனது பெயராகும். அதுவே சேக்கிழார்க்கும் உரிய இயற்பெயராக அவருடைய முன்னேர்களால் இட்டு வழங்கப்பெற்றிருத்தல் கூடும்.) சேக்கிழான் மாதேவடிகள் இராமதேவனென்பார், திரிபுவனச் சக்கரவர்த்தி ராஜ ராஜ சோழனது 17-ம் ஆட்சியாண்டில் திருமழபாடிக் கோயிலுக்கு நிபந்தம் அளித்துள்ளமையால் இரண்டாங் குலோத்துங்கனுக்கு மகனாகிய இரண்டாம் ராச ராச சோழனது 17-ம் ஆட்சியாண்டின் பின்னரும் வாழ்ந்திருந்தவரென்பது பெறப்படுகின்றது. சேக்கிழார் காலத்துச் சோழ மன்னன் அநபாயன் என்ற சிறப்புப் பெயர் கொண்டவனென்பதும், குலோத்துங்கனென்னும் இயற்பெயருடையவனென்பதும், அவனது சிவபத்தி மாண்பினைச் சிறப்பித்துப் போற்றும் பெரிய புராணச் செய்யுட்களால் நன்கு தெளியப்படும். அநபாயன் என்னும் சிறப்புப்

பெயர் இரண்டாங் குலோத்துங்கனுக்கு உரியதென்பது கல்வெட்டுக்களாலும், ஒட்டக்கூத்தர் அவனைக் குறித்துப் பாடிய நூல்களாலும் தெளிவாகத் தெரிகின்றது. ஆகவே சேக்கிழாரைக்கொண்டு பெரிய புராணம் பாடுவித்த வேந்தன் இரண்டாங் குலோத்துங்க சோழனென்பது நன்கு துணியப்படும். இச்செய்தி இரண்டாம் ராச ராசனுக்குப் பின் வந்த இரண்டாம் ராசாதி ராசனது ஒன்பதாம் ஆட்சியாண்டில் திருவொற்றியூர்க் கோயிலிற் பொறிக்கப்பட்ட கல்வெட்டினாலும் உறுதிப்படுகின்றது.

“திருப்பங்குனி யுத்திரத்து ஆரூந்திருநாளான புதன் கிழமையும் ஏகாதசியும் பெற்ற ஆயில்யத்தினன்று படம் பக்க நாயகதேவர் திருமகிழின்கீழ்த் திருவோலக்கஞ் செய்தெழுந்தருளியிருந்து ஆளுடைய நம்பி ஸ்ரீ புராணங் கேட்டருளாநிற்க” எனவரும் அக் கல்வெட்டுப் பகுதியால் இரண்டாம் ராசாதிராச சோழன் தனது ஒன்பதாம் ஆட்சியாண்டில் திருவொற்றியூர்த் திருக்கோயிலில் நிகழ்ந்த பங்குனியுத்திரத் திருநாளுக்கு வந்திருந்தனனென்பதும், ஆரூந் திருநாளில் ஆளுடைய நம்பி ஸ்ரீ புராணம் படிக்கப்பெற்றதென்பதும் அதனை அரசனுடனிருந்து கேட்டவர்கள் அவ்வூர்த் திருமடத்தின் தலைவர் சதுரானன பண்டிதரும் சோம சித்தாந்தம் வக்காணிக்கும் வாகீச பண்டிதரும் கோயிலதிகாரிகள் பிறரும் என்பதும் நன்கு புலனும். ஆளுடைய நம்பி யென்பது சுந்தரரது பெயர். அவரைப் பற்றிய புராணமே திருவொற்றியூர்க் கோயிலிற் படிக்கப்பட்டதென்று தெரிகிறது. இங்குக் குறிப்பிடப் பட்ட ஆளுடைய நம்பிகள் ஸ்ரீ புராணமென்பது சேக்கிழாரியற்றிய திருத்தொண்டர் புராணத்துளடங்கிய சுந்தரர் புராணமாகவே இருத்தல் வேண்டும்.

இரண்டாம் ராசராச சோழனது 19-ம் ஆட்சியாண்டில் குன்றத்தூர்ச் சேக்கிழான் பாலறுவாயன் களப்பாளராயன் என்பார், திருவரத்துறையில் நிகழும் மாசி வைகாசி திருவிழாக்களில் ஆளுடைய பிள்ளையார் மாறன்பாடிக்கு எழுந்தருளுதற்கு நிலமளித்துள்ளார். இவரே மூன்றாங் குலோத்துங்க சோழனது இரண்டாம் ஆட்சியாண்டில் கோட்டூர்க் கோயிலில் திருவிளக்கெரிக்கச் சில பொற் காசுகள் வழங்கியுள்ளார். பெரிய புராண ஆசிரியராகிய

சேக்கிழார்க்குப் பாலறுவாயர் என்ற பெயருடைய தம்பி யொருவர் இருந்தமையும் அவர், தம் தமையன் மேற் கொண்டிருந்த அமைச்சர் பதவியை அவருக்குப் பின் ஏற்று நடத்தினமையும் சேக்கிழார் புராணத்தால் அறியப் பட்டவை. ஆகவே இச்சாசனங்களிற் குறிக்கப்பட்ட பாலறுவாயரே சேக்கிழார்க்குத் தம்பியாராகச் சேக்கிழார் புராணங் கூறும் பாலறுவாயர் எனக் கொள்ளுதற்குப் பெரிதும் பொருத்தமுளது. குன்றத்தூர் என்ற ஊர்ப் பெயரும் சேக்கிழாரென்ற குடிப்பெயரும் பாலறுவாயர் என்ற இயற்பெயரும் காலமும் சேக்கிழார் புராண வர லாற்றுக்கு இயைய அமைந்துள்ளன. எனவே இரண்டாங் குலோத்துங்கனாகிய அநபாயனது ஆட்சியின் (கி. பி. 1133–1146) இடைக்காலந் தொடங்கி மூன்றாங் குலோத்துங்க னது ஆட்சித் தொடக்கம் வரை 35, 40 ஆண்டுகள் வாழ்ந்த வர் இப்பாலறுவாயரென்பது நன்கு பெறப்படும். அநபாய சோழன் பாலறுவாயர்க்குத் தொண்டைமான் என்ற பட்டம் அளித்து அவரைத் தன் அமைச்சராக்கிக்கொண்ட னன் எனச் சேக்கிழார் புராணங் கூறுதற்கேற்ப இரண்டாங் குலோத்துங்கனது 12-ம் ஆட்சியாண்டில் அமைந்த சாசனம் ஒன்றினால் அம்மன்னன் தன் அமைச்சனை தொண்டைமானுக்குச் சில கட்டளைகள் நிறைவேற்றுதற்கு ஆணையிட்ட செய்தி தெரிகின்றது.

இதுகாறும் எடுத்துக்காட்டிய குறிப்புக்களால் இரண் டாம் ராசராசனது 17-ம் ஆட்சியாண்டில் திருமழபாடிக் கோயிலுக்கு நிபந்தமளித்த 'குன்றத்தூர்ச் சேக்கிழான் மாதேவடிகள் ராமதேவனை உத்தமசோழப் பல்லவ ராயன்' என்பவரே பெரியபுராணம் பாடிய சேக்கிழார் நாயனாரென்பதும், அவரை ஆதரித்துப் பெரியபுராணத்தை இயற்றச் செய்த அநபாயசோழன் என்பவன் இரண்டாங் குலோத்துங்கனே யென்பதும், ஆசிரியர் சேக்கிழார் இரண்டாங் குலோத்துங்கசோழனுக்குப் பின் அவன் மகன் இரண்டாம் ராசராசனது 17ம் ஆட்சியாண்டிலும் வாழ்ந்தவ ரென்பதும், சேக்கிழாருடைய தம்பியார் பாலறுவாயர் எனக் கூறப்படுபவர் குன்றத்தூர்ச் சேக்கிழான் பாலறுவா யன் களப்பாளராயன் எனக் கல்வெட்டிற் குறிக்கப்பட்டவ ரென்பதும் அவர் இரண்டாங் குலோத்துங்கனது ஆட்சி யின் இடைப்பகுதி தொடங்கி மூன்றாங் குலோத்துங்கன்

ஆட்சியின் முற்பகுதிவரை வாழ்ந்தவரென்பதும் நன்கு பெறப்படுமென்பது அறிஞர் மு இராகவையங்கார் டாக்டர் மா. இராசமாணிக்கனார் முதலிய ஆராய்ச்சியாளர்களது கொள்கையாகும். இக்கொள்கையே இப்பொழுது பெரும் பாலோரால் ஒப்புக்கொள்ளப்பட்டு வழங்கி வருகிறது.

இரண்டாங் குலோத்துங்கனுக்கு ஆசிரியராகவும் அவைக்களப் புலவராகவும் அவன் ஆட்சிக்காலம் முழுதும் நிலவியவர் ஒட்டக்கூத்தர். சைவசமயத்திற் பேரீடுபாடு டைய ஒட்டக்கூத்தருடைய மாணவனாகக் கல்வி பயின்ற இரண்டாங் குலோத்துங்கசோழன், சைவசமய அடியார் களின் மெய் வரலாறுகளை அறியாது சமணர்களால் புனைந் துரைக்கப்பட்ட சீவக சிந்தாமணிக் கதையை மெய்யென நம்பிப் பொழுது போக்கினான் என்றற்குச் சிறிதும் இடமில்லை. அன்றியும் இரண்டாங் குலோத்துங்கனுக்குப் பிறகு அவன் புதல்வன் இரண்டாம் ராசராசன் ஆட்சிக் காலத்தும் வாழ்ந்திருந்து இராசராசன் உலாவும் தக்க யாகப்பரணியும் இயற்றியவரும் தம் நூல்களில் இறைய னாகப் பொருள், களவழிநாற்பது, கலிங்கத்துப்பரணி ஆகிய நூல்களை மனமாரப் பாராட்டும் இயல்புடையவரும் சிவபத்திச் செல்வம் வாய்ந்தவரும் ஆகிய ஒட்டக்கூத்தர், தம் காலத்தில் திருத்தொண்டர் புராணம் பாடப் பெற்றிருப் பின் பத்திச்சுவை யொழுகும் அவ்வரிய நூலையும் அதனைப் பாடிய சேக்கிழாரையும் அந்நூல் தோன்றுதற்குக் காரண மாக இருந்த சோழ மன்னனையும் தாம் இயற்றிய நூல் களில் புகழ்ந்து போற்றியிருப்பரென்பது திண்ணம். அப் புலவர் பெருமான் தம் நூல்களில் திருத்தொண்டர் புராணத்தைக் குறிப்பிடாமையின், அந்நூல் அவர் காலத் திற்குப் பின்னரே இயற்றப் பெற்றிருத்தல் வேண்டுமென்று கருதவேண்டியுளது. சேக்கிழாரடிகள் கூறியுள்ள பேரம் பலம் பொன்வேய்ந்த அநபாயன் மூன்றாங் குலோத் துங்கனேயாவன். இவன் எதிரம்பலம் பொன்வேய்ந்தான் என்று இவன் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன. எதிரம் பலமே பேரம்பலம் என்று வழங்கியதென்பது அறியற் பாலது. எனவே எதிரம்பலம் பொனவேய்ந்த மூன்றாங் குலோத்துங்கனே பேரம்பலம் பொன்வேய்ந்த அநபாயன் என்பதும் இவ்வேந்தனே சேக்கிழாரடிகளைக் கொண்டு திருத்தொண்டர் புராணம் இயற்றுவித்தவன் என்பதும்

தெள்ளிதிற் புலனுகுமென்பது ஆராய்ச்சிப் பேரறிஞர் சதாசிவ பண்டாரத்தாரவர்கள் கருத்தாகும்.[1] இக்கருத்தினை உறுதிப்படுத்தும் நிலையில் அவர்கள் கூறும் காரணங்களை நோக்குதல் இன்றியமையாததாகும்.

1. சேக்கிழார் தம் காலத்தில் வாழ்ந்த சோழ மன்னனைத் திருத்தொண்டர் புராணத்தில் பத்து இடங்களிற் பாராட்டியுள்ளார். அப்பாடல்களில் அபயன், அநபாயன், குலோத்துங்க சோழன் என்ற பெயர்களால் அவ்வேந்தன் குறிக்கப்பெற்றுள்ளான். மேற்குறித்த மூன்று பெயர்களுள் அபயன் என்பது முதற் குலோத்துங்க சோழனுக்குரிய சிறப்புப் பெயர். அநபாயன் என்பது இரண்டாங் குலோத்துங்கனுக்குரிய சிறப்புப் பெயர். குலோத்துங்கன் என்பது முதற்குலோத்துங்கன் இரண்டாங் குலோத்துங்கன், மூன்ருங் குலோத்துங்கன் ஆகிய மூவர்க்கும் உரிய இயற்பெயராகும். இம் மூன்று மன்னர்களின் ஆட்சிக் காலங்களில் வரையப்பட்ட கல்வெட்டுக்களையும் இவர்களைப் பாராட்டிப் போற்றிய தமிழ் நூல்களையும் ஆராய்வார்க்கு இப்பெயர் வழக்கம் இனிது புலனுகும். முதற் குலோத்துங்கனுக்குரிய அபயன் என்ற சிறப்புப் பெயர் அவன் மகன் வயிற்றுப் பேரன் இரண்டாங் குலோத்துங்க சோழனுக்கும் வழங்குகின்றது. இதனை யுற்றுநோக்குங்கால் சோழ மன்னர்களை அவர்தம் முன்ஞேர்க்குரிய சிறப்புப் பெயர்களாற் போற்றும் வழக்கமுண்டென்பது நன்கு புலனுகின்றது. சேக்கிழார் தம் காலத்துச் சோழ மன்னனை இரண்டாங் குலோத்துங்கனுக்குரிய சிறப்புப் பெயராகிய அநபாயன் என்ற சொல்லாற் போற்றியதுடன் முதற் குலோத்துங்க சோழனுக்குரிய அபயன் என்ற பெயராலும் இயைத்துப் போற்றியுள்ளார். இங்ஙனமே இரண்டாங் குலோத்துங்கனுக்குரிய அநபாயன் என்ற பெயரும் அவன் மரபிற்ருேன்றிய பின்ஞேரொருவனுக்கும் உரித்தாகி வழங்கியிருத்தலுங் கூடும். ஆகவே அநபாயன் என்னும் பெயர் வழக்கமொன்றே கொண்டு சேக்கிழாரால் அநபாயன் எனப் பாராட்டப் பெற்றவன் இரண்டாங் குலோத்துங்கனே என ஒருதலையாகத் துணிதற்கியலவில்லை.

1. பிற்காலச் சோழர் சரித்திரம். இரண்டாம் பகுதி. பக் - 167, 168.

திருப்புறம்பயத்திறைவர்க்குக் கொடுத்த நிபந்தமும், இரண்டாங் கல்வெட்டில் அவனும் காடுடையான்குற்றி திருச்சிற்றம்பலமுடையான் என்பவனும் சேர்ந்தளித்த நிபந்தமும் முறையே குறிக்கப்பெற்றுள்ளன. எனவே இக்கல்வெட்டிரண்டும் காலமுறைப்படி ஒன்றன்பின்னொன்றாக வெட்டப்பட்டனவே என்பது நன்கு தெளியப்படும். ஆகவே கல்வெட்டுத் துறையினர் கருதுமாறு இக் கல் வெட்டுக்களிரண்டும் முறை மாறி வெட்டப்பட்டன என்று சொல்லுதற்குச் சிறிதும் இடமில்லை யென்பது நன்கு புலனும். முதற்கல்வெட்டிற் குறிப்பிட்ட திரிபுவனச் சக்கரவர்த்திகள் ராஜராஜதேவனை மூன்றும் ராஜராஜ னெனக்கொண்டால் அவனுக்குப்பின் குலோத்துங்க னென னும் பெயருடைய சோழமன்னர் எவரும் இல்லை. இந்நிலையில் குலோத்துங்கன் ஆட்சிக்காலத்துக் கல் வெட்டினைப் பின்னர்ப் பொறிப்பதற்கு எத்தகைய இயை பும் இல்லாமற் போகிறது. அன்றியும் கல்வெட்டுத்துறை யாளர் கருதுமாறு முதற்கல்வெட்டிற் குறிப்பிட்ட இராச ராசனை மூன்றும் ராசராசனெனவும் இரண்டாம் கல்வெட் டிற் குறிக்கப்பட்ட பேரம்பலம் பொன்வேய்ந்த சோழனை இரண்டாங் குலோத்துங்கனெனவும் கொண்டால் இரண் டாங் குலோத்துங்கனது ஏழாவது ஆட்சியாண்டில் திரும் புறம்பயத்திருக்கோயிலுக்கு நிபந்தமளித்த ஆலங்குடை யான் அடிகள் புறம்பியனென்பான், மூன்றும் ராசராசனது பதின்மூன்றும் ஆட்சியாண்டிலும் இருந்து நிபந்தமளித் தான் என்று கொள்ளுதல் வேண்டும். இரண்டாங்குலோத் துங்கனது ஏழாவது ஆட்சியாண்டாகிய கி. பி. 1140-ம் ஆண்டிற்கும் மூன்றும் ராசராசனது பதின்மூன்றும் ஆட்சி யாண்டாகிய கி. பி. 1229-ம் ஆண்டிற்கும் நடுவே எண்பத் தெட்டாண்டுகள் இடைவெளியேற்படுகின்றது. ஆலங் குடையான் அடிகள் புறம்பியன் என்பான் முதல்நிபந்த மளித்த நாளில் அவனுக்கு ஏறக்குறைய இருபது வய தென்று வைத்துக்கொண்டாலும் அவன் இவ்வுலகில் வாழ்ந்த ஆண்டு 109 ஆகிறது. ஆகவே கல்வெட்டுத்துறை யாளர் கூற்று ஏற்புடையதன்றென்பதும் மேற்காட்டிய திருப்புறம்பயக் கல்வெட்டிற் குறித்த இராசராசன் இரண் டாம் ராசராசனேயென்பதும் அவனது கல்வெட்டிற்கு அடுத்துவரையப்பட்ட கல்வெட்டிற் குறிக்கப்படும் பேரம்

பலம் பொன்வேய்ந்த சோழன் மூன்ருங்குலோத்துங்கனே யென்பதும் இனிது புலனுதல் காணலாம். இங்ஙனம் கொள்ளுங்கால் இரண்டாம் ராசராசனது 13-ம் ஆண்டாகிய கி. பி. 1159-ல் முதல் நிபந்தமளித்த ஆலங்குடையான் அடிகள் புறம்பியன் என்பான் மூன்ருங்குலோத்துங்கனது 7-ம் ஆட்சியாண்டாகிய கி. பி. 1185-ல் இரண்டாவது நிபந்தமளித்தான் என்பது முடிபாகின்றது. முதல் நிபந்தமளிக்கும் பொழுது அவனுக்கு வயது 40 எனக் கொண்டாலும் இரண்டாம் நிபந்தம் 66-ம் வயதில் அளித்தான் எனக்கொள்வது பெரிதும் பொருத்த முடையதே யாகும்.

4. சோழமன்னர்கள் ஆட்சியில் தானமாக அளிக்கும் ஊர்களுக்கு அவர்களது பெயரிட்டுக் கொடுக்கும் வழக்கமுண்டென்பது அவர்களுடைய கல்வெட்டுக்களால் நன்கறியப்படுகின்றது. இரண்டாங்குலோத்துங்க சோழன் தனது ஆட்சியின் ஏழாம் ஆண்டிற் பொறிக்கப்பட்ட திருமாணிகுழிக் கல்வெட்டில் ''எதிரிலிசோழநல்லூரென்று நம்பேரால்" எனக்குறித்தல் காணலாம். இவ்வாறே மூன்ருங்குலோத்துங்கனது ஆட்சியின் மூன்ருமாண்டில் திருமாணிகுழியில் வெட்டப்பட்ட மற்ருெரு கல்வெட்டில் "உள்ளூர் திருப்பேரம்பலம் பொன்வேய்ந்தபெருமான் நல்லூர்" என்ற பெயரால் அம்மன்னனது அதிகாரி மோகன் ஆட்கொள்ளியான குலோத்துங்க சோழக்காடவராயன் என்பான் அவ்வூர்க்குப் பெயரிட்டு வழங்குகின்ருன். திருமாணிகுழியென்னும் இவ்வூர் விக்கிரம சோழனுட்சியின் மூன்ருமாண்டில் முன்னுடையாரும் பழம்பெயரும் நகரமாய் வருகின்றபடியுந்தவிர்த்து விக்கிரமசோழநல்லூர் என்னும் திருநாமத்தால் வேறுபிரித்து வழங்கப்பட்டதென்பதும், நீர் நிலம் பத்தேமுக்காலேகாணியும் புஞ்சை நிலம் ஐம்பத்திரண்டரையும் இவ்வூரின் பரப்பென்பதும், இந்நிலவெல்லைக்குள் இத்தேவர் ஸ்ரீ கோயிலும் திருமுற்றமும் மடை விளாகமும் உள்ளிட்டு ஒன்றேகால் நீக்கி நின்ற நிலம் அறுபத்திரண்டும் காணியும் என்பதும் இவ்வூர்க் கல்வெட்டொன்றிற் குறிக்கப்பட்டுள்ளன. இவ்வூர் பேரம்பலம் பொன்வேய்ந்த பெருமாள் நல்லூர் என இரண்டாங்

குலோத்துங்கன் கல்வெட்டுக்களிற் குறிக்கப்படவில்லை. இது மூன்றுங்குலோத்துங்கசோழன் காலத்தில்தான் பேரம்பலம்பொன்வேய்ந்தபெருமாள்நல்லூர் என்ற பெயரால் வழங்கியதென்பது அவன்காலத்துக் கல்வெட்டால் தெரிகிறது. எனவே மூன்றுங்குலோத்துங்கனுக்குப் பேரம்பலம் பொன்வேய்ந்தபெருமாள் என்றதொரு சிறப்புப் பெயருண்மை புலனாகின்றது. தென்னிந்தியக் கல்வெட்டு ஏழாந்தொகுதியில் 1044-ம் எண்ணுள்ள கல்வெட்டு 'பூமன்னுதென்கவிர்நாட்டு' எனத்தொடங்குதலின் அது இரண்டாங்குலோத்துங்கன் காலத்ததென்பது உய்த்துணரப்படும். அதன்கண் "பேரம்பலம் பொன்மேய்ந்த கோராஜகேசரிபத்மரான" எனக்காணப்படுந்தொடர் அக்கல்வெட்டின் உண்மை வடிவமன்று. "பொ[ன்ன]ம்பலம் பொன்மேய்ந்த கோராஜகேசரிபத்மரான" என்பதே அதன் உண்மைவடிவாகுமென்பது புதுக்கோட்டைச் சமஸ்தானத்தார் வெளியிட்ட கல்வெட்டுத்தொகுதியில் 120-ம் எண்ணுள்ள இக்கல்வெட்டினைப் படிப்பார்க்கு இனிது விளங்கும். ஆகவே பேரம்பலம் பொன்மேய்ந்தபெருமாள் என்ற சிறப்புப் பெயராற் குறிக்கப்பட்டவன் இரண்டாங்குலோத்துங்கன் அல்லன் என்பதும் மேற்குறித்த திருப்புறம்பயக் கல்வெட்டிலும் திருமாணிகுழியிலுள்ள கல்வெட்டிலும் கண்டபடி அச்சிறப்புப்பெயர் மூன்றுங்குலோத்துங்க சோழனுக்கேயுரியதென்பதும் நன்கு துணியப்படும்.

திரிபுவனவீரேச்சுரத்திற் பொறிக்கப் பெற்ற வடமொழிச் சுலோகங்களில் மூன்றுங்குலோத்துங்கன் பேரம்பலம் பொன்வேய்ந்தசெய்தி கூறப்படவில்லையென்றும் அவன் பேரம்பலத்தைப் பொன்வேய்ந்தவனல்லனென்றும் கூறுவாருமுளர்,[1] "எத்தரையுந்தொழுமிறைவற் கெதிரம்பலஞ் செம்பொன்வேய்ந்து" என்பது மூன்றுங்குலோத்துங்கனது மெய்க்கீர்த்தி யாதலின் பேரம்பலம் பொன்வேய்ந்தவன் மூன்றுங் குலோத்துங்கனே யென்பது தேற்றம். அன்றியும் திரிபுவனவீரேச்சுரத்திற் பொறிக்கப்பட்ட வடமொழிச்சுலோக மொன்றில் மூன்றுங்குலோத்துங்கன் தில்லையில் முகமண்டபத்தைப் பொன்மயமாக்கிய

1. பெரியபுராண ஆராய்ச்சி பக். 21.

செய்தி கூறப்பட்டுளது. அச்சுலோகத்திற் குறிக்கப்பட்ட முகமண்டபம் என்பது யாது? அதுவே எதிரம்பலமெனப் படும் பேரம்பலமாகும். மூன்றாங்குலோத்துங்கன் எதிரம் பலத்தைப் பொன்வேய்ந்தபோது அதன்குறட்டிலே முன்னுளிற் பொறிக்கப்பட்டிருந்த பழைய கல்வெட்டுகளைப் படியெடுத்து வேறோரிடத்திற் பொறிக்கச்செய்தனனென் பது தில்லைத் திருக்கோயிலிலுள்ள கல்வெட்டொன்றிற் கூறப்பட்டுள்ளது.[1]

5. சேக்கிழார் சோழநாட்டுத் திருநாகேச்சரத்திருக் கோயிலில் வைத்துள்ள பேரார்வத்தால் தம்முடைய சொந்த ஊராகிய குன்றத்தூரிலும் திருநாகேச்சரமெனப் பெயரிய திருக்கோயிலைக்கட்டினுர் எனச் சேக்கிழார் புராணம் கூறும். இங்ஙனம் குன்றத்தூரிற் சேக்கிழாராற் கட்டப்பட்ட திருநாகேச்சரத் திருக்கோயிலிற் பொறிக்கப் பட்ட கல்வெட்டுகளில் மிகவும் பழமையுடையன மூன்றாங் குலோத்துங்கன் காலத்துக் கல்வெட்டுகளேயாகும். இங் ஙனமாகவும் "குன்றத்தூர்த் திருநாகேச்சரத் திருக்கோயிலி லுள்ள 44 கல்வெட்டுக்களைக் காணின் அவற்றில் பழமை யானவை இரண்டாங்குலோத்துங்கன் காலத்தனவே யாம்"[2] என உறுதியாகக் கூறுவாருமுளர். அவர்கள் கூறு மாறு அக்கல்வெட்டுகளை இரண்டாங் குலோத்துங்கன் காலத்தன எனக்கொள்ளுதற்கு இயலவில்லை. ஏனெனின், அத்திருக்கோயிலில் மூன்றாங்குலோத்துங்கனது 2-ம் ஆண்டு முதல் 33-ம் ஆண்டுவரையமைந்த கல்வெட்டுக்கள் சிலவும் தொடர்ச்சியாக வரையப்பட்டுள்ளன. மூன்றாங் குலோத்துங்கனுக்கு முந்திய இரண்டாம் ராசாதிராசனு டைய கல்வெட்டுக்களோ அவனுக்கு முந்திய இரண்டாம் ராசராசனுடைய கல்வெட்டுக்களோ இத்திருக்கோயிலிற் பொறிக்கப்பெறவில்லை. இக்கோயில் இரண்டாங்குலோத் துங்கன் காலத்திலேயே கட்டப்பெற்றிருக்குமாயின் அவ் வேந்தன் காலத்திலோ அவன் மகன் இரண்டாம் ராச ராசன் காலத்திலோ அன்றி அவனுக்குப்பின் ஆட்சிபுரிந்த இரண்டாம் ராசாதிராசன் காலத்திலோ இக்கோயிலுக் கென வழங்கப்பெற்ற நிபந்தங்களைக் குறித்த கல் வெட்டுக்கள் இக்கோயிலில் வரையப்பெற்றிருக்கும்.

1. தென்னிந்தியக் கல்வெட்டு தொகுதி IV எண் 222.
2. பெரிய புராண ஆராய்ச்சி, பக். 42.

அன்னோர்காலத்துக் கல்வெட்டெதுவும் இக்குன்றத்தூர்த் திருநாகேச்சரக் கோயிலிற் பொறிக்கப்படாமையால் இத் திருக்கோயில் மூன்றாங்குலோத்துங்க சோழனது ஆட்சி யின் தொடக்கத்திலேதான் கட்டப்பெற்றிருத்தல் வேண்டு மென்பது நன்கு துணியப்படும். அன்றியும் இரண்டாம் ராசராசன் காலத்தில் சிறப்புற்று விளங்கிய சேக்கிழார் குடும்பத்தவர் திருப்பாசூரிலுள்ள திருக்கோயிலுக்கு நிபந்தமளித்து உள்ளனர். இத்திருநாகேச்சரத் திருக் கோயிலுக்கு மூன்றாங் குலோத்துங்கன் காலத்திற்குமுன் சேக்கிழார் குடும்பத்தவர்களோ அன்றி ஏனைய அன்பர் களோ எத்தகைய நிபந்தமும் அளித்ததாகத் தெரியவில்லை. மூன்றாங் குலோத்துங்கனுக்குப்பின் அவன்மகன் மூன்றாம் இராசராசனது 25-ம் ஆட்சியாண்டில் தான் சேக்கிழான் வரந்தரு பெருமாள் திருவூரகப் பெருமாள் என்பவர் இத் திருக்கோயிலுக்கு நிபந்தமளித்துள்ளார்.

1929-ம் ஆண்டு அறிக்கையிற் குறிக்கப்பட்ட 221-ம் எண்ணுள்ள கல்வெட்டு திரிபுவனச் சக்கரவர்த்திகள் ராச ராசதேவரது 19-ம் ஆண்டில் திருவரத்துறையிலிருந்து திருஞான சம்பந்தப்பிள்ளையார் மாசி வைகாசி விழாக் காலங்களில் மாறன் பாடிக்கு எழுந்தருளுவதற்கும் பிற பணிகளுக்குமாகச் சேக்கிழான் பாலறாவாயன் களப்பாள ராயன் என்பார் நிலதானஞ் செய்தனரெனக் குறிப்பிடு கின்றது. திரிபுவனச் சக்கரவர்த்திகள் ராசராசன் எனச் சிறப்பிக்கப்படுவோர் இரண்டாம் ராசராச சோழனும் மூன்றாம் ராசராச சோழனுமேயாவர். அவருள் இரண்டாம் ராசராசசோழன் தனது பதினாறாம் ஆட்சியாண்டு நிறைந்து பதினேழாம் ஆட்சியாண்டின் தொடக்கத்திலேயே இறந்துபோயினனென்பது ஆராய்ச்சியாளர் துணிபாகும்.[1] ஆகவே 19-ம் ஆட்சியாண்டில் திருவரத்துறையில் வரையப்பட்ட கல்வெட்டின் காலத்தவன் மூன்றாம் ராச ராசன் எனக் கொள்ளுதலே பெரிதும் பொருத்தமுடைய தாகும். திருவாளர் நீலகண்ட சாத்திரியாரவர்களும் இதனை மூன்றாம் ராசராசன் காலத்துக் கல்வெட்டாகவே கொண்டுள்ளார். இப் பாலறாவாயன் என்பார் மூன்றாங் குலோத்துங்கனது ஆட்சியின் இரண்டாமாண்டில் கோட்டூர்க்கோயிலில் நுந்தா விளக்கெரிக்கப் பொருள்

1. பிற்காலச் சோழர் சரித்திரம் பகுதி II பக். 125.

வழங்கியுள்ளார். இவரது தமையனாராகக் கருதப்படும் "ஜயங்கொண்ட சோழமண்டலத்துக் குலோத்துங்க சோழவள நாடான புலியூர்க் கோட்டத்துக் குன்றத்தூர் நாட்டுக் குன்றத்தூர்ச் சேக்கிழான் மாதேவடிகள் ராம தேவனான உத்தமசோழப் பல்லவராயன்" என்பார் திரிபுவனச் சக்கரவர்த்தி ராசராசதேவரது 17-ம் ஆட்சி ஆண்டில் திருமழபாடித் திருக்கோயிலுக்குத் திருநொந்தா விளக்கின் பொருட்டுத் தொண்ணூறு ஆடுகள் வழங்கிய செய்தி அவ்வூர்க் கோயிலில் வரையப்பெற்றுள்ள கல்வெட்டிற்குறிக்கப்பட்டுள்ளது.[1] மூன்றாம் குலோத்துங்கன் ஆட்சியின் இரண்டாம் ஆண்டிலும் மூன்றாம் ராசராசனது ஆட்சியின் பத்தொன்பதாம் ஆண்டிலும் முறையே கோட்டூரிலும் திருவரத்துறையிலும் நிபந்தமளித்த சேக்கிழான் பாலறுவாயன் களப்பாளராயன் என்பார் சேக்கிழார் புராணங் கூறியபடி உத்தம சோழப் பல்லவனென்னும் பட்டம் பெற்ற சேக்கிழார் நாயனாருடைய தம்பியெனக் கொள்ளுதல் பெரிதும் பொருத்தமுடையதாகும். இவர் மூன்றாம் குலோத்துங்கன் ஆட்சியின் இரண்டாம் ஆண்டிலேயே திருக்கோயிலுக்கு நிபந்தமளிக்கத்தக்க சமயப்பயிற்சியுடையவராகத் திகழ்தலாலும் இவருடைய தமையனாராகக் கருதப்படும் சேக்கிழான் மாதேவடிகள் ராமதேவனான உத்தமசோழப் பல்லவர்ாயர் இரண்டாம் இராசராசசோழனது ஆட்சியின் இறுதிக் காலத்திலேயே திருமழபாடித் திருக்கோயிலுக்கு நிபந்தமளித்திருப்பதாலும் மூன்றாங்குலோத்துங்க சோழனது ஆட்சிக்கு முன் அவன் தந்தை இரண்டாம் ராசராச சோழனது ஆட்சியின் இறுதியிலேயே சேக்கிழார் சோழர் ஆட்சியிற் பணிமேற்கொண்டனரென்பது நன்குபெறப்படும்.

6. இரண்டாம் ராசராச சோழன் இறக்குங்கால் அவனுடைய பிள்ளையாகிய மூன்றாங் குலோத்துங்கனுக்கு மூன்றுவயது நிகழ்ந்ததென்பதும், அக்குழந்தை ஆட்சிக்கு உரியபருவம் அடையும் வரையில் இரண்டாம் ராஜாதிராஜனே ஆளுதல் வேண்டுமென இரண்டாம் ராசராசன் நியமித்துவிட்டு இறந்தானென்பதும், பல்லவராயன் பேட்டைக் கல்வெட்டால் நன்குபுலனும்.[2] இளம்பருவத்தவ

1. M. E. R. No. 95 of 1920.
2. Ep. Ind., vot. XXI, No. 31.

ளுகிய மூன்ருங் குலோத்துங்கனுக்குத் தமிழ் மொழியிலும் சிவநெறிப்பனுவலாகிய அருள் நூல்களிலும் பற்றுண்டாகச் செய்தவர் உத்தமசோழப் பல்லவராகிய சேக்கிழாரென்று எண்ண இடமுண்டு. சோழகுமாரன் சீவக சிந்தாமணிக் கதையை மெய்யென நம்பி அதனையே படித்துப் பொழுது போக்கியதைக் கண்ட சேக்கிழார், சமணராற் புனைந்துரைக்கப்பட்ட அக்கதை இம்மை மறுமைக்கு ஒரு சிறிதும் பயன்படாதெனத் தெருட்டியதோடு அம்மன்னன் வேண்டுகோட்கிணங்கி மும்மைக்கும் பயன்தரும் சிவகதையாகிய திருத்தொண்டர்களின் வரலாற்றை விரித்துரைக்கும் பெரிய புராணத்தை இயற்றினுரெனச் சேக்கிழார் புராணங் கூறும். இவ்வாறு சிவகதையிற் கருத்தின்றிச் சிந்தாமணிக்கதையை மெய்யென நம்பிப் பயிலும் சூழ்நிலை, சிறந்த சிவநெறிச் செல்வராகிய ஒட்டக்கூத்தரின் மாணுக்களுகிய இரண்டாங் குலோத்துங்கனுக்கு என்றும் நேர்ந்ததில்லை. ஒட்டக்கூத்தர் இயற்றிய நூல்களை ஊன்றிப் பயில்வார்க்கு இவ்வுண்மை நன்குவிளங்கும். எனவே சேக்கிழார் இரண்டாங் குலோத்துங்கனைத் திருத்துதல் வேண்டிப் பெரிய புராணம் பாடினுரென்பதற்குச் சிறிதும் இடமில்லை என்பது புலனும். மூன்ருங் குலோத்துங்கனுடைய தந்தையாகிய இரண்டாம் ராசராசன் குலோத்துங்கனது மூன்ரும் வயதிலேயே விட்டிறந்தனென்பது பல்லவராயன் பேட்டை கல்வெட்டாற் புலனுதலின்[1] இரண்டாம் ராசாதிராசனது ஆட்சியில் இராசராசபுரத்து அரண்மனையிற் பாதுகாவலில் வளர்ந்த இளைஞனுகிய மூன்ருங் குலோத்துங்கன் இளம் பருவத்தே கல்விபயிலுங்கால் சீவக சிந்தாமணிக்கதையை மெய்யென நம்பி அக்கதையைப் படித்து இன்புறுதலிற் பொழுது போக்கியிருத்தல் கூடும். அவனது உளநிலையையுணர்ந்த சேக்கிழார் இலக்கிய நயம் ஒன்றே கருதிப் புனைந்துரையாகிய கதையை மெய்யென நம்புதல் கூடாதெனவும் தமிழகத்தில் உண்மையாக நிகழ்ந்த மெய் வரலாறுகளைத் தெரிந்து கொள்ளுதல் இன்றியமையாதெனவும் கூறி அவ்வரச குமாரனைத் தெருட்டினுர் என்பதும் அவரது அறிவுரையை யேற்றுக் கொண்ட அவ்வரசிளங் குமரன் தனது ஆட்சியின் தொடக்கத்தே புலவர் பெருமானுகிய சேக்கிழாரைக் கொண்டு திருத்தொண்டர்

1. பிற்காலச் சோழர் சரித்திரம் 2-ம் பகுதி பக். 123-, 145, 146.

புராணமென்னும் பெருங்காப்பியத்தைப் பாடச் செய்தனன் என்பதும் வரலாற்றுக்கு ஒத்த நிகழ்ச்சிகளேயாகும்.

7. திருத்தொண்டர் புராண வரலாற்றை விரித்துப் பெருங்காப்பியமாக இயற்றித் தருதல் வேண்டுமென்னும் மன்னனது வேண்டுகோட்கிணங்கிய சேக்கிழார், தில்லைக்குச் சென்று கூத்தப் பெருமானையும் திருமுறை ஆசிரியர் களையும் இறைஞ்சிப் போற்றித் தில்லையம்பலவன் திருமுன் நின்று, "எம்பெருமானே, அடியேன் உம்முடைய அடியார் களாகிய திருத்தொண்டர்களது அடிமைத் திறத்தை விரித்துப் பெருங்காப்பியமாகப் பாடுதற் பொருட்டு அடியெடுத்துத் தந்தருளவேண்டும், என வேண்டி நிற்க அந்நிலையில் 'உலகெலாம்' என்றதொரு வானிழலொலி தோன்றியதென்றும், அதனை முதலாகக் கொண்டு ஆயிரக் கால் மண்டபத்திலிருந்து திருத்தொண்டர் புராணத்தைப் பாடி முடித்தாரென்றும் சேக்கிழார் புராணம் கூறும். ஆயிரக்கால் மண்டபத்தை முதன் முதற் கட்டி நிறை வேற்றியவன் மூன்றாங் குலோத்துங்க சோழனுவன். இவன் காலத்திற்கு முன்பு ஆயிரக்கால் மண்டபம் யாண்டும் கட்டப்பெற்றிருந்ததில்லை யென்பது ஆராய்ச்சியாளர் துணிபு.[1] இவ்வேந்தனது படைத்தலைவன் அம்மையப்பன் பாண்டிநாடு கொண்டானுகிய கண்டர் சூரியன் என்பான் திருவக்கரையில் தன் பெயரால் கண்டர் சூரியன் என்ற ஆயிரக்கால் மண்டபத்தைக் கட்டிமுடித்தனென்று அவ் வூர்க் கல்வெட்டொன்று[2] கூறுகின்றது. திருவாரூரில் ஆயிரங்கால்களை யுடையதாய் விளங்கும் சபா மண்டபத் தைக் கட்டியவன் இம்மூன்றாங் குலேத்துங்கனேயாவன். இச்செய்தி திரிபுவன வீரேச்சுரத்திலுள்ள வடமொழிக் கல்வெட்டால் அறியக்கிடக்கின்றது.[3] திருவாரூரிலுள்ள இச்சபா மண்டபத்தினையே ஆசிரியர் சேக்கிழார்

1. ஆயிரக்கால் மண்டபம் விஜயநகர வேந்தர் காலத்தில்தான் முதன் முதல் கட்டப்பட்டதென்பர் சிலர். ஆன்றோர் கூற்றுப் பொருந்தாதென்பது, மூன்றாங் குலோத்துங்கன் காலத்திலேயே திருவாரூர், திருவக்கரை, தில்லை முதலிய இடங்களில் ஆயிரக்கால் மண்டபம் கட்டப் பெற்றிருத்தலால் நன்கு புலனும்

2. Ins. 190 of 1904.

3. Ins. 190 of 1907.

முதலிகளில் ஒருவனாகிய எதிரிகள் நாயன் பொத்தப்பிச் சோழன் என்பான், திருமுதுகுன்றமுடையார்க்கு விளக்கெரிக்க விட்ட நிபந்தம் அவ்வூர்க் கல்வெட்டிற் குறிக்கப் படுவதுடன் திருமுதுகுன்றத்துக் கோயிலிலுள்ள அளவு கருவி தேவாஸ்ரயன் என்ற பெயரால் வழங்கப்படுகின்றது.[1] கோப்பெருஞ்சிங்கன் சோழ ராட்சிக்கு மாறாகத் தனியாட்சி நிறுவிய பிற்காலத்திலும் தேவாஸ்ரயன் என்னும் இப்பெயர் வழக்கத்தைத் தன் கல்வெட்டுக்களில் மேற்கொண்டு குறிப்பிட்டுள்ளான்.[2] எனவே தேவாஸ்ரயன் என்னும் இப்பெயர், இவனால் மதித்துப் போற்றுதற்குரிய மூன்றாங் குலோத்துங்கனது சிறப்புப்பெயராக இருத்தல் வேண்டும் என உய்த்துணரலாம். தேவாஸ்ரயன் என்ற சொல் தேவர்களால் விரும்பி அடையத்தக்கவன் என்ற பொருளைத் தருவதாகும். திருவாரூரில் எழுந்தருளிய இறைவர் தம் கோயில் தானத்தார்க்கு அருளிய உத்தரவொன்றில் இவ்வரசர் பெருமானை 'நம் தோழன்' எனக்கூறியுள்ளனரென்று அவ்வூரிலுள்ள இவனது இருபத்து நான்காம் ஆட்சி யாண்டுக் கல்வெட்டொன்று[3] கூறுகின்றது. நம்பியாரூரராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குத் திருவாரூர்ப்பெருமான் "தோழமையாக உனக்கு நம்மைத் தந்தனம்" எனத் திருவாய்மொழிந்தமையால் அவர் 'தம்பிரான் தோழர்' என அழைக்கப்பெற்ற வரலாறு பெரிய புராணத்திற் கண்டதாகும். சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குப் பின் சிவபெருமானுக்குத் தோழனாகும் பேறு பெற்றவன் இம்மூன்றாங் குலோத்துங்க சோழனாதலால்[4] இவனைத் தேவாஸ்ரயன் என்ற சிறப்புப் பெயராற் போற்றுதல் பெரிதும் பொருத்தமுடையதேயாகும். சேக்கிழார் கூறும் தேவாசிரியன் என்னும் பெயர் இவ்வேந்தனைக் குறித்த சிறப்புப் பெயராயினும் அன்றி வேறோர் ஏதுப் பெயராயினும் ஆகுக, அப்பெயராற் குறிக்கப்படும் சபா மண்டபமாகிய ஆயிரக்கால் மண்டபத்தைக் கட்டியவன் இம் மூன்றாங் குலோத்துங்கனே யென்பது திரிபுவன வீரேச்சுரக் கல்வெட்டால் இனிது

1. கல்வெட்டுத் தொகுதி VII. எண் 149.
2. கல்வெட்டுக் தொகுதி XII. எண் 118.
3. Ins. 554 of 1904.
4. பிற்காலச் சோழர் சரித்திரம் IIம் பகுதி. பக். 160, 161.

பெறப்படுதலின், சேக்கிழார் இம்மூன்றாங் குலோத்துங்கன் காலத்திற் பெரிய புராண மியற்றினரெனக் கொள்ளுதல் பெரிதும் பொருத்தமுடையதாகும்.

தில்லைத் திருக்கோயிலிற் சேக்கிழார் பெருமான் அமர்ந்து திருத்தொண்டர் புராணத்தை இயற்றுதற்கு இடமாக விளங்கிய ஆயிரக்கால் மண்டபமும் இம்மூன்றாங் குலோத்துங்கன் ஆட்சியில் கட்டப்பெற்றிருத்தல் வேண்டும். இவ்வேந்தர் பெருமானைத் 'தில்லைச் சிற்றம்பல வாணருடைய ஏகபக்தன்' எனத் திரிபுவன வீரேச்சுரத்தி லுள்ள கல்வெட்டொன்று கூறுதலால்[1] இவ்வரசர் பெருமான் தில்லைப் பெருங்கோயிலிற் பல திருப்பணிகளைச் செய்து நிறைவேற்றியவனென்பது நன்கு துணியப்படும். சேக்கிழார் பெருமான் அமர்ந்திருந்து திருத்தொண்டர் புராணம் பாடிய இடம் "ஐயிரு நூறுகால் மணிமண்டபம்"[2] எனச் சேக்கிழார் புராணங் கூறுதலானும், சேக்கிழார் தாம் இயற்றிய பெரியபுராணத்தில் மூன்றாங் குலோத்துங்கனாற் கட்டப்பெற்ற திருவாரூர்ச் சபாமண்டபத்தைக் குறிப்பிடு தலானும் அவ்வாசிரியர் திருத்தொண்டர் புராண மியற்றிய காலம் மூன்றாங் குலோத்துங்கன் ஆட்சிக் காலமே என்பது உறுதியாகத் தெரிகின்றது.

சோழ மன்னனுக்கு அமைச்சுரிமைபூண்ட சேக்கிழார் அம்மன்னனது தலைநகராய் விளங்கிய பழையாறை, இராசராசபுரம் (தாராசுரம்) என்னும் பதிக்கு அண்மையி லுள்ள திருநாகேச்சரத்தில் தங்கியிருந்தாரெனத் தெரி கிறது. அங்ஙனம் தங்கிய காலத்துத் திருநாகேச்சரத் திறைவரை நாடோறும் போற்றி வழிபடுதலில் விருப்ப மிக்க சேக்கிழார் தாம் பிறந்த ஊராகிய குன்றத்தூரிலும் சோழ நாட்டிலுள்ள திருநாகேச்சரத்தைப் போன்ற அமைப்பில் திருநாகேச்சரம் என்னும் பெயருடைய திருக் கோயிலைக் கட்டி நாள் வழிபாடும் திருவிழாவும் நடைபெறச் செய்தார் எனச் சேக்கிழார் புராணங் கூறுஞ் செய்தி முன்னர் விளக்கப்பட்டது. இங்ஙனம் சேக்கிழார் தம் சொந்த ஊராகிய குன்றத்தூரில் திருநாகேச்சரம் என்ற

1. 1908ம் ஆண்டின் தென்னிந்தியக் கல்வெட்டுத்துறையின் ஆண்டறிக்கை IIம் பகுதி 64ம் பாரா நோக்குக.

2. சேக்கிழார் புராணம் 35ம் செய்யுள்.

திருக்கோயிலைக் கட்டிய காலம் மூன்றாம் குலோத்துங்கனது ஆட்சியின் தொடக்கமாக இருத்தல் வேண்டும். குன்றத்தூர்த் திருநாகேச்சரத்திலுள்ள 44 கல்வெட்டுக்களிலும் மிகவும் பழமையானது மூன்றாங் குலோத்துங்கனது ஆட்சியின் இரண்டாம் ஆண்டில் வரையப்பட்ட கல்வெட்டேயாகும்.[1] மூன்றாங் குலோத்துங்க சோழன் அவ்வூரிற் சில நிலங்களால் வரும் வரிப்பொருளைக்கொண்டு குன்றத்தூர்த் திருநாகேச்சரமுடைய இறைவர்க்கு மாதந்தோறும் ரேவதி நக்ஷத்திரத்தில் சிறப்பு முறையில் வழிபாடு நிகழச் செய்ததனைக் குறிப்பிடுவது அக்கல்வெட்டு. இதுவே இக்கோயிலுக்கு வேந்தனால் முதன் முதல் அளிக்கப்பட்ட நிபந்தமாகும். இதனால் இவ்வேந்தன் சேக்கிழாரையும் அவரால் நிறுவப்பட்ட இத்திருக்கோயிலையும் நன்கு மதித்துப் போற்றியவனென்பது நன்கு புலனாகிறது. இவ்வேந்தன் இருபத்து நாலாவது ஆட்சியாண்டில் திரிபுவன வீரதேவன் என்னும் சிறப்புப் பெயரை யெய்தினான். இவன் தனக்குரிய இச்சிறப்புப் பெயராற் கட்டிய திரிபுவன வீரேச்சுரம் என்ற திருக்கோயில் சோழ நாட்டில் திருநாகேச்சரம் என்ற ஊருக்கு அண்மையில் ஒரு கல் தொலைவில் அமைந்துள்ளது. சேக்கிழார் திருநாகேச்சரத்தில் தங்கியிருந்த காலத்தில் இத்திரிபுவன வீரேச்சுரத் திருக்கோயிற் பணியும் தொடங்கி நடைபெற்றிருத்தல் கூடும்.

மூன்றாங் குலோத்துங்கன் ஆட்சியில் சேக்கிழான் வைராதராயன் என்பார் தில்லையில் 'தொண்டர் சீருரைத்தான் நந்தவனம்' என்ற நந்த வனத்தை அமைத்துள்ளார்.[2] இங்கே "தொண்டர் சீருரைத்தான்" எனக் குறிப்பிடப்படும் இப்பெயர் திருத்தொண்டர் புராண மியற்றிய ஆசிரியர் சேக்கிழாரைக் குறித்து வழங்கும் சிறப்புப் பெயராகும். சேக்கிழார் குடும்பத்திற் பிறந்த வைராதராயன் என்பார், தம் குடும்பத் தலைவராகிய சேக்கிழார்க்குரிய தொண்டர் சீருரைத்தான் என்னும் திருப்பெயரால் சேக்கிழார் விரும்பி வாழ்ந்த தில்லையிலே திரு நந்தவனம் அமைத்திருத்தலை யுற்றுநோக்கின் இச்செய்தி பெரிய புராண ஆசிரியர் வாழ்ந்த காலத்தை யொட்டியே நிகழ்ந்த

1. 1029-30ம் ஆண்டறிக்கை. கல்வெட்டெண் 200.
2. தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதி VIII. எண் 48.

தென உய்த்துணரலாம். திருத்தொண்டர் புராணத்திற்குச் சேக்கிழார் பொருள் விரித்தருளிச் செய்தபின் சோழ மன்னனும் சிவனடியார்களும் சேக்கிழார் பெருமானைத் தில்லையம்பலவர் திருமுன்னே 'தொண்டர்சீர் பரவுவார்' எனச் சிறப்பித்து ஞானமுடி சூட்டிப் போற்றினர் எனச் சேக்கிழார் புராணம் கூறும். தொண்டர்சீர் பரவுவார் என்ற சிறப்புப் பெயரோடு பொருளால் ஒற்றுமையுடையதே தொண்டர் சீருரைத்தான் என்ற இப்பெயருமாகும். ஆகவே சேக்கிழார் தம் காலத்திலேயே தொண்டர் சீருரைத்தான் எனச் சிறப்பித்துப் போற்றப்பெறும் பெருஞ் சிறப்பெய்தினமை மேற்காட்டிய கல்வெட்டினுற் புலனுதல் காணலாம்.

இனி, சேக்கிழாருடைய தம்பியாராகக் கருதப்பெறும் சேக்கிழான் பாலருவாயன் களப்பாளராயன் என்பார், இரண்டாங் குலோத்துங்கனது 12-ம் ஆண்டில் களத்தூரில் வெட்டப்பட்ட கல்வெட்டொன்றில் தொண்டைமான் என்ற பட்டமுடைய அரசியலதிகாரியாகக் குறிக்கப் பட்டுள்ளார் எனக் கருதுவாருமுளர்.[1] திரிபுவனச் சக்கரவர்த்தி கோனேரின்மை கொண்டானது 12-ம் ஆண்டில் வெட்டப்பட்ட இக்கல்வெட்டில், களத்தூரைச் சூழ்ந்த சில நிலங்களை ஒன்று சேர்த்துக் குலோத்துங்க சோழன் திருத்தொண்டத் தொகை நல்லூர் என்று பெயரிட்டுப் பெருந்திருக் கோயிலுடைய மகாதேவர்க்குத் திருமட விளாகமாகவும் நந்தவனமாகவும் பயன்படுத்தும்படி தொண்டைமான் என்னும் தலைவனுக்கு அரசாங்க உத்தரவு வந்த செய்தி குறிக்கப்பெற்றுளது. இக்கல்வெட்டிற் குறிக்கப்படும் அரசியலதிகாரியாகிய தொண்டைமான் என்பவர் குன்றத்தூர்ச் சேக்கிழார் குடும்பத்தைச் சார்ந்தவரென்றோ பாலருவாயரென்னும் இயற்பெயருடையவரென்றோ எதுவுங் கூறப்படவில்லை. இந்நிலையில் தொண்டைமான் என்ற பெயரொன்றே பற்றி அவரைச் சேக்கிழார்க்குத் தம்பியெனத் துணிதல் கூடாது.

இரண்டாம் இராசாதிராச சோழனது ஒன்பதாம் ஆட்சியாண்டில் திருவொற்றியூர்க் கோயிலில் வெட்டப் பட்ட கல்வெட்டில் திருப்பங்குனி உத்தரத்து ஆருந் திரு

1 சாசனத் தமிழ்க்கவி சரிதம் பக்கம் 77.

நாளான புதன்கிழமையும் ஏகாதசியும் கூடிய ஆயில்யத்தி னன்று சதுரானன பண்டிதர் வாகீச பண்டிதர் இரண்டாம் ராசாதிராசன் முதலியவர்கட்கு முன் "படம்பக்க நாயக தேவர் திருமகிழின்கீழ்த் திருவோலக்கம் செய்து எழுந் தருளியிருந்து ஆளுடைய நம்பி ஸ்ரீ புராணம் கேட்டருளா நிற்க" என்ற அரிய செய்தி காணப்படுகின்றதென்றும் அக்கல்வெட்டிற் குறித்த ஆளுடைய நம்பி ஸ்ரீ புராணமென் பது சேக்கிழார் செய்த பெரிய புராணத்துள் அடங்கிய சுந்தரர் புராணமாகவே இருத்தல் வேண்டுமென்றும் கூறுவர் சிலர்.[1] இக்கல்வெட்டிற் குறிக்கப்படும் ஆளுடைய நம்பி ஸ்ரீ புராண மென்பது சேக்கிழார் பாடிய திருத் தொண்டர் புராணமே எனத் துணிந்து கூறுதற்கு இயல வில்லை. கன்னிவன புராணம், இறையானரையூர் புராணம் எனக் கல்வெட்டுக்களிற் குறிக்கப்படும் தல புராணங்களைப் போன்று திருவொற்றியூர்க்குரிய தனிப் புராணத்திற் கூறப்படும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் வரலாற்றுப் பகுதியே இங்குக் குறிக்கப்பட்ட ஆளுடைய நம்பி ஸ்ரீ புராணமெனத் தெரிகின்றது. ஆசிரியர் சேக்கிழார் தாம் இயற்றிய பெரிய புராணத்திற்குத் திருத்தொண்டர் புராணமென்ற பெயரையே வழங்கியுள்ளார். அதனை ஸ்ரீ புராணம் என்ற பெயரால் யாரும் வழங்கியதில்லை. கவிச் சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் தாம் பாடிய தக்கயாகப்பரணியில் திருஞான சம்பந்தப் பிள்ளையார் வரலாற்றை விரித்துக் கூறியது போன்று, ஆளுடைய நம்பியாகிய சுந்தரமூர்த்தி சுவாமி களது வரலாற்றை விரித்துக்கூறும் தனிப் புராணமே இக் கல்வெட்டிற் குறிக்கப்படும் ஆளுடைய நம்பி ஸ்ரீ புராணம் ஆக இருத்தல் வேண்டும். கல்வெட்டிற் காணப்படும் கன்னிவன புராணம் இறையானரையூர் புராண முதலியன போன்று ஆளுடைய நம்பி ஸ்ரீ புராணம் என்னும் இதுவும் இக்காலத்திற் கிடைக்கவில்லை. ஆகவே திருவொற்றி யூர்க் கோயிலிற் படிக்கப்பெற்ற ஆளுடைய நம்பி ஸ்ரீ புராணமென்பது சேக்கிழார் பாடிய பெரிய புராணம் எனத் துணிந்து கூறுதற் கிடமில்லை. இரண்டாம் ராசராச சோழனாற் கட்டப்பெற்ற இராச ராசபுர (தாராசுர)த் திருக்கோயிலில் திருத்தொண்டத் தொகையிற் கூறப்படும்

பெரிய புராண ஆராய்ச்சி பக். 30 (டாக்டர் மா. இராச

அடியார்களின் திருவுருவங்களும் அவ்வத் திருவுருவத்தின் கீழ் அவரவர்களுடைய வரலாற்றுக் குறிப்பொடு தொடர்ந்த பெயர்களும் பொறிக்கப் பெற்றிருத்தலை எடுத்துக்காட்டி, இரண்டாம் ராசராச சோழன் காலத்திற்கு முன்பே சேக்கிழார் பெரிய புராணம் பாடியிருத்தல் வேண்டுமென்பர்.[1] இங்கே குறிக்கப்பெற்ற இத் திருவுருவங்களை அமைத்தற்கும் பெயர் பொறித்தற்கும் வேண்டிய வரலாற்றுக் குறிப்புக்கள் யாவும் இரண்டாம் ராசராசன் காலத்திற்கு முன்னரே பெருக வழங்கியன என்பது நம்பியாண்டார் நம்பிகள் பாடிய திருத்தொண்டர் திருவந்தாதி முதலிய திருமுறைகளாலும், இவ்வேந்தன் காலத்துக்கு முற்பட்ட சோழ மன்னர்களின் கல்வெட்டுக்களில் திருத்தொண்டத் தொகையடியார்களைக் குறித்து ஆங்காங்கே காணப்படும் குறிப்புக்களாலும் நன்கு புலனாகும். ஆகவே இத் திருவுருவங்களை அமைத்தற்குச் சேக்கிழார் பெரிய புராணமே வழிகாட்டியாயிருந்ததென்று உறுதியாகச் சொல்லுதற்கில்லை. அன்றியும் "தாரணி கொள் திருத்தாதைக்கும் இராச ராசீச்சுரத்தார்க்கும், காரணச் சிறந்த கோயில் அணி திகழ் பொன்வேய்ந்தருளி" எனவரும் மூன்றாங் குலோத்துங்கனது மெய்க் கீர்த்தியால் அவ்வேந்தன் தன் தந்தையாகிய இராசராச சோழனாற் கட்டப் பெற்ற இராச ராசபுரத் திருக்கோயிலை மேலும் விரிவுபடுத்தினனென்ற செய்தி புலப்படுத்தப்பட்டுளது. இவனாற் கட்டப்பட்ட திரிபுவன வீரேச்சுரத் திருக்கோயிலுக்குக் கடவுள் மங்கல விழாவைச் சிறப்புற நிகழ்த்தியவரும் இவன் குருவுமாகிய ஈசுர தேவரென்னும் ஈசான தேவர்க்கு இராச ராசபுரத் திருக்கோயிற் கோபுரத்தில் படிமம் அமைக்கப்பெற்றுளது. இவ்வரலாற்றுக் குறிப்புக்களை உற்று நோக்குங்கால் திருத்தொண்டத் தொகையிற் போற்றப்பெறும் அடியார் திருவுருவங்களை இராச ராசபுரத் திருக்கோயிலில் அமைத்தவன் மூன்றாங் குலோத்துங்க சோழனாகவும் இருத்தல் கூடும் எனக் கருத இடமுண்டு.

சேக்கிழார் இரண்டாங் குலோத்துங்கன் காலத்தில் இத்திருத் தொண்டர் புராணத்தைப் பாடியிருப்பாராயின் அவன் காலத்துக் கல்வெட்டுக்களிற் குறிக்கப்பட்ட திருத்

1. பெரிய புராண ஆராய்ச்சி பக். 28, 29 (மா. இராசமாணிக்கனார்)

தொண்டத் தொகை அடியார்களின் வரலாற்றுக் குறிப்புக் களைத் தமது நூலில் விரிவாக எடுத்துரைத்திருப்பார். ஒரு பசுவின் கன்றுக்காகத் தன் மகன்மேல் தேரூர்ந்த மனுச் சோழனுடைய மகன் பெயர் பிரியவரதன் என்பதும், அவனுடைய மந்திரி பாலையூருடையான் என்பதும், நம்பியா ரூரராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளின் தாயார் இசை ஞானியாரென்பவர் திருவாரூரிற் கௌதம கோத்திரத்து ஞான சிவாசாரியார்க்கு மகவாகத் தோன்றியவரென்பதும் இரண்டாங் குலோத்துங்க சோழன் காலத்தில் வரையப் பெற்ற திருவாரூர்க் கல்வெட்டுக்களிற் குறிக்கப் பெற் றுள்ளன. இக்குறிப்புக்களுள் எதனையும் சேக்கிழார் பெரிய புராணத்திற் குறிப்பிடவேயில்லை. ஆவின் கன்றுக்காகத் தன் மகன்மேல் தேரூர்ந்த அரசனைச் சூரிய வமிசத்து முதல்வனாகிய மனுவென்று கவிச் சக்கரவர்த்தி சயங் கொண்டாரும் ஒட்டக்கூத்தரும் தம் நூல்களில் கூறியுள் ளார்கள். அங்ஙனமாகவும் இவ் வேந்தன் ஆதி மனுப் பெற்ற பெயரைத் தன் பெயராகக் கொண்ட மற்றொரு சோழ மன்னன் எனச் சேக்கிழார் பெரிய புராணத்தில் விளக்கியுள்ளார். மேற்காட்டிய வண்ணம் இரண்டாங் குலோத்துங்க சோழன் ஆட்சியில் அரசியலாதரவு கொண்டு வரையப்பட்ட திருவாரூர்க் கல்வெட்டுக்களிற் குறிக்கப்படும் திருத்தொண்டர் வரலாற்றுக் குறிப்புக்கள் பெரிய புராணத்தில் இடம் பெறாமையின் இக் குறிப்புக்கள் இரண்டாங் குலோத்துங்க சோழன் காலத்தில் பெரிய புராணம் இயற்றப்பெற்ற தென்பதற்குச் சிறப்புடைய சான்றாதல் இல்லை.

மேற் குறித்த செய்திகளால் 'சென்னி அபயன் குலோத்துங்க சோழன், தில்லைத் திருவெல்லை பொன்னின் மயமாக்கிய வளவர் போரேறு, என்றும் புவிகாக்கும் மன்னர் பெருமான்' என ஆசிரியர் சேக்கிழாராற் பாராட்டிப் போற்றப்பெறும் சோழ மன்னன் இரண்டாம் இராசராச சோழன் மகனாகிய மூன்றாங் குலோத்துங்கனே என்பதும், இவ்வேந்தனே சேக்கிழார் பெருமானை ஆதரித் துத் திருத்தொண்டர் புராணம் என்னும் பெருங்காப்பி யத்தை இயற்றுவித்த பெருந்தகை யென்பதும், திருத் தொண்டர் புராணமாகிய அருள் நூலினை இயற்றியருளிய திருவருட் செல்வராகிய சேக்கிழார் மூன்றாங் குலோத்

துங்கனுக்குத் தந்தையாகிய இரண்டாம் இராசராசன் ஆட்சியின் இறுதியிலும் இம் மூன்றாங் குலோத்துங்கன் ஆட்சிக் காலத்திலும் அரசியலதிகாரியாகவும் அருளாசிரிய ராகவும் விளங்கியவரென்பதும் நன்கு புலனும் என்பர் ஆராய்ச்சிப் பேரறிஞர் தி. வை. சதாசிவ பண்டாரத்தா ரவர்கள்.

"சென்னி அபயன் குலோத்துங்க சோழன்" எனச் சேக்கிழாரடிகளாற் பாராட்டப்பெற்ற குலோத்துங்கன் என்னும் சோழ மன்னன், இரண்டாங் குலோத்துங்கனே அன்றி மூன்றாங் குலோத்துங்கனே என்பது மேலும் ஆராய்ச்சிக்குரிய தொன்றாம். ஆயினும், திருத்தொண்டர் புராண ஆசிரியராகிய சேக்கிழாரடிகள், இரண்டாங் குலோத்துங்கனுக்கு மகனும் மூன்றாம் குலோத்துங்க னுக்குத் தந்தையும் ஆகிய இரண்டாம் இராசராச சோழன் ஆட்சியின் 17ம்-ஆண்டில் திருமழபாடித் திருக்கோயிலிற் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டிற் குறித்தவாறு அத்திருக் கோயிலுக்குத் தொண்ணூறு பேராடுகளை நிபந்தமாக வழங்கிய ஜயங்கொண்ட சோழ மண்டலத்துக் குன்றத்தூர் நாட்டுக் குன்றத்தூர்ச் சேக்கிழான் மாதேவடிகள் ராமதேவனை உத்தம சோழப் பல்லவராயன் என்பவரே என்பதனை மேற்குறித்த ஆராய்ச்சியாளர் பலரும் ஐயுறவுக் கிடனின்றி ஒத்துக் கொள்கின்றனர். ஆகவே, இரண்டாம் இராசராசனது ஆட்சியின் இறுதியாண்டாகிய பதினேழாம் ஆண்டில் திருமழபாடித் திருக்கோயிலுக்கு நிபந்தம் வழங்கிய சேக்கிழான் மாதேவடிகள் எனக் கருதப்படும் சேக்கிழார் நாயனார், அம்மன்னனது தந்தையாகிய இரண்டாங் குலோத்துங்க சோழனது ஆட்சியின் பிற்பகுதி யிலும் இரண்டாம் ராசராசனது மைந்தனாகிய மூன்றாங் குலோத்துங்க சோழனது ஆட்சியின் முற் பகுதியிலும் வாழ்ந்திருந்தவர் எனக் கொள்ளுதல் பெரிதும் பொருத்த முடையதாகும்.

திருத்தொண்டர் புராணம்

நூலமைப்பு

அருண் மொழித் தேவராகிய சேக்கிழாரடிகள், தில்லைச்சிற்றம்பலவன், 'உலகெலாம்' என்று அடியெடுத்துக் கொடுக்கப் பெற்றுப் பாடியருளிய சிறப்புடையது, திருத்தொண்டர் புராணமாகிய பெரிய புராணமாகும். இந்நூல், தமிழ்நாட்டில் நிகழ்ந்த உண்மை நிகழ்ச்சிகளாகிய வரலாறுகளைக் கருவாகக் கொண்டு இயற்றப் பெற்ற செந்தமிழ்க் காப்பியமாகும். நம் தமிழக வரலாறுகளை விரித்துக் கூறும் முறையில் பிறமொழிச் சார்பு எதுவுமின்றித் தமிழில் முதல் நூலாகத் தோன்றிய சிறப்புடைய செந்தமிழ்க் காப்பியங்கள் சில. அவற்றுள், சிலப்பதிகாரம் திருத்தொண்டர் புராணம் என்னும் இரண்டுமே மிகச் சிறந்தனவாகும். சேரமுனிவர் இளங்கோவடிகள், இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழ்த் திறங்களும் இனிது விளங்க அருளிய பெருங் காப்பியம் சிலப்பதிகாரமாகும். அதனுடன் ஒருங்கு வைத்து எண்ணத்தகும் பெருமை வாய்ந்தது, குன்றை முனிவராகிய சேக்கிழார் நாயனார் அருளிய இத்திருத் தொண்டர் புராணமாகும்.

இவ்விரு பெருங்காப்பியங்களையும் இயற்றியளித்த இப்பெருமக்கள் இருவரும், நாடாளும் மன்னர்களால் நன்கு மதிக்கப் பெற்றவர்கள்; உலக மக்கள் அனைவரும் பசி பிணி பகை என்னும் துன்பங்கள் இன்றி, என்றும் இன்பம் பெருகும் நல்லியல்பினால் நிலை பெற்று வாழ்தல் வேண்டும் என்னும் திருவுள்ளத்துடன் துறவற நெறியினை மேற்கொண்ட அருளாளர்கள்; தமிழ் நாட்டில் தமிழ் வேந்தரும் மக்களும் ஒற்றுமையுணர்வுடன் அன்பினால் கலந்து வாழ்தல் வேண்டும் என்னும் நன்னோக்குடன், தமக்குக் கிடைப்பதாக இருந்த சேரநாட்டின் அரச பதவியை வெறுத்து விலக்கி இளம் பருவத்திலேயே துறவற நெறியினை மேற்கொண்டவர் இளங்கோவடிகள். தமிழ் நாட்டில் தொன்று தொட்டு மேற்கொள்ளப் பெற்று

வரும் சிறப்பினதாகிய தமிழ் மக்களது தெய்வங் கொள்கையாகிய சிவநெறி உலகமெலாம் சிறந்து வளர வேண்டும் என்னும் உயர்ந்த குறிக்கோளினைச் சோழ மன்னன் உள்ளத்தில் நிலைபெறச் செய்து அவனது இசைவுடன் தமது அமைச்சர் பதவியைத் துறந்து துறவற நெறியில் நின்றவர் சேக்கிழாரடிகள். ஆகவே இவ்விரு பெருமக்களும் தமிழகம் வாழப் புலமைத் திருப்பணிபுரிந்த திருவருட் செல்வர்கள் எனப் போற்றத்தகும் பெருமையுடையராவர். இவ்விருவரும் இயற்றியளித்த காப்பியங்கள் தாம் தோன்றும் பொழுதே தமிழில் முதல் நூலாகத் தோன்றிய தனிச் சிறப்புடையன. இந்நூல்களிற் கூறப்படும் வரலாற்று நிகழ்ச்சிகளும் வரலாற்றுக்குரிய மூலங்களும் தமிழ் மொழியோடும் தமிழ் நாட்டோடும் பிரிவின்றி நெருங்கிய தொடர்புடையனவாகும்.

கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சேரநாட்டை ஆட்சி புரிந்த இமயவரம்பன் என்னும் சேர மன்னனின் இளையமைந்தராய்ச், செங்குட்டுவன் என்னும் மன்னனுக்கு அன்பிற் சிறந்த தம்பியாய் விளங்கியவர் இளங்கோவடிகள். சிந்தை செல்லாச்சேணெடுந்தூரத்து அந்தமில் இன்பத்து அரசாள் வேந்தராகிய அடிகள், 'வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு' ஆகிய தமிழகம் பிறநாட்டாரும் மதித்துப் போற்றும் முறையில் அரசியலாட்சியிலும் கலைத்துறைகளிலும் வீறுபெற்று விளங்கவும், தமிழ்வேந்தர் மூவரும் தம்முள் ஒற்றுமையுணர்வுடன் திகழ்ந்து தமிழகத்தை வளம் பெற ஆட்சி புரியவும், இயல் இசை நாடகம் ஆகிய முத்தமிழ்த்துறைகளும் சிறந்து வளரவும் வேண்டித் தக்கதொரு பெருங் காப்பியத்தை இயற்றியளிக்கத் திருவுளங் கொண்டார்; தென்றமிழ்ப்பாவை செய்த தவக் கொழுந்து எனவும் கற்புக்கடம் பூண்ட பொற்புடைத் தெய்வம் எனவும் போற்றத்தகும் சிறப்புடைய கண்ணகியாரைப் பாட்டுடைத் தலைவியாகக் கொண்டு சிலப்பதிகாரம் என்னும் செந்தமிழ்க் காப்பியத்தை நவில்தொறும் சுவை நலம் பெருகும் வண்ணம் வனப்புற இயற்றியுதவினர். இளங்கோவடிகள் காலத்திற்கு ஆயிரம் ஆண்டுகள் பிற்பட்டுத் தோன்றியவர் சேக்கிழாரடிகள். அருள் மொழித் தேவராகிய இவர், தமிழ் நாட்டின் அரசியல் நெறியும், அந்நெறியினை வரம்புற

வளர்த்தற்குரிய தெய்வங் கொள்கையாகிய சிவநெறியும், இவற்றுக்கு உறுதுணையாய் மக்களது அறிவினை வளப் படுத்தும் தமிழ் மொழியும் சிறந்து விளங்கவேண்டும் என்னும் உயர்ந்த குறிக்கோளுடையவர். இக்குறிக் கோளுடன் தமிழ் நாட்டிற் பிறந்து தெய்வமுண்டென்னுந் தெளிவுடையராய்ச் செயற்கருஞ் செயல் பல புரிந்து சிவனருளில் திளைத்த திருவருட் செல்வர்களாகிய திருத் தொண்டர்களின் வரலாறுகளை விரித்து விளக்கும் முறையில் பெரிய புராணமாகிய இக்காப்பியத்தை இயற்றி யுள்ளார். இக்காப்பியம் பத்திச் சுவை நலம் ஊற்றெடுத்துப் பெருகும் ஆராத பேரன்பினை விளக்கும் இலக்கியமாகத் திகழ்கின்றது. அம்பலவர் அருள் மொழியை முதலாகக் கொண்டு தொடங்கப் பெற்ற இந்நூல், திசையனைத்தின் பெருமையெலாம் தென்றிசையே வென்றேறவும், அசைவில் செழுந்தமிழ் வழக்கே அயல் வழக்கின் துறைவெல்லவும், தமிழ் மொழியிலே இசை முழுதும் மெய்யறிவும் இடங்கொள்ளும் நிலை பெருகவும் தமிழ் நாட்டிற்கும் தமிழ் மொழிக்கும் தமிழர் சமுதாயத்திற்கும் ஆக்கந்தரும் முறையில் அமைந்துளது.

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நால் வகை நன்னெறிகளையும் மேற்கொண்டொழுகி, நிலை பெற்ற பேரன்பின் திறத்தால் எல்லாம் வல்ல சிவபரம் பொருளைச் சிந்தையிற் கொண்டு போற்றி, அம்முதல் வனது திருவருளுக்குரியராகிய அடியார்களை வழிபட்டு, மகவெனப் பல்லுயிரனைத்தையும் ஒக்கப் பார்க்கும் திருவருட் பண்புடையராய்த் தத்தமக்கேற்ற திருத் தொண்டுகளைப் புரிந்து சிவனடி சேர்ந்தவர்கள் திருத் தொண்டர்களாவர். ஐம்புல வழியடைத்த செம்புலச் செல்வர்களாகிய இத் திருத்தொண்டர்களின் திருப் பெயர்களை எடுத்துரைத்துப் போற்றும் முறையில் அமைந்தது, நம்பியாரூரர் அருளிய திருத்தொண்டத் தொகை என்னும் திருப்பதிகமாகும். திருவாரூர்ப் பெருமான், 'தில்லை வாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்' என அடியெடுத்துக் கொடுக்க, நம்பியாரூர ராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் இத்திருப்பதிகத்தினைப் பாடிப் போற்றினர் என்பது வரலாறு. இப்பதிகத்தில்

தில்லைவாழந்தணர், பொய்யடிமையில்லாத புலவர், பத்தராய்ப் பணிவார்கள், பரமனையே பாடுவார், சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார், திருவாரூர்ப் பிறந்தார்கள், முப்போதும் திருமேனி தீண்டுவார், முழு நீறு பூசிய முனிவர், அப்பாலும் அடிச்சார்ந்தார் ஆகிய ஒன்பது திருக்கூட்டத்தாரையும், திருநீலகண்டக் குயவனார் முதல் திருநீலகண்டத்துப்பாணனார் ஈருகவுள்ள தனியடியார்கள் அறுபதின்மரையும் பெயர்கூறி வழிபடும் நிலையில் அவர்க்கெல்லாம் தனித்தனியே அடியேன் அடியேன் எனக்கூறி நம்பியாரூரர் பரவிப் போற்றி யுள்ளார். சுந்தரர் அருளிய திருத்தொண்டத் தொகைத் திருப்பதிகம் பதினொரு திருப்பாடல்களையுடையதாகும். இதன் இறுதிப் பாடலாகிய பதினோராம் திருப்பாடலில், 'என்னவனாம் அரனடியே அடைந்திட்ட சடையன் இசை ஞானி காதலன் திருநாவலூர்க்கோன் அன்னவனாம் ஆரூரன்' என நம்பியாரூரர், தம்மையும், தம் தந்தை சடையனார், தாய் இசை ஞானியார் ஆகிய தம்பெற்றோர் களையும் குறித்துள்ளார். ஆகவே திருத்தொண்டத் தொகையில் அடியேன் என வணக்கச் சொல்லொடு புணர்த்துப் போற்றப் பெறும் சிவனடியார்கள் அறுபதின் மராயினும், அப்பதிகத்தை அருளிச் செய்த நம்பியாரூரர், அவர் தந்தையார் சடையனார், தாயார் இசை ஞானியார் என அப்பதிகத்தால் அறியப்படும் மூவரையும் சேர்த்து எண்ணித் தனியடியார் அறுபத்துமூவர் என அழைக்கும் வழக்கம் சுந்தரர் காலத்திற்குப் பின் தோன்றி நிலை பெறுவதாயிற்று.

நம்பியாரூரர் வாழ்ந்த காலப்பகுதியாகிய கி. பி. எட்டாம் நூற்றுண்டிலும் அதற்குமுன் பல்வேறு காலங் களிலும் தோன்றிச் சிவனடி மறவாச் சிந்தையராய் உலகம் உய்ய நற்பணி புரிந்த திருவருட் செல்வர்களாகிய சிவனடியார்களின் திருப்பெயர்களை எடுத்தோதிப் போற்றும் வாயிலாகத் தமிழகம் உய்யப் பல வேறு திருப்பணிகளைப் புரிந்த அப் பெருந்தகையார்களின் வரலாறுகளைப் பின்னுள்ளோர் உணர்தற்குச் சாதனமாக அமைந்தது நம்பியாரூரர் அருளிய இத்திருத்தொண்டத் தொகைத் திருப்பதிகமேயாகும். தமிழக வரலாற்றிற் சிறப்பாக இடம் பெறத்தக்க திருவருட் செல்வர்களின்

வரலாறுகளை அறிவுறுத்தும் முறையில் அமைந்த இத் திருப்பதிகத்தினை, 'தென்றமிழ்ப் பயனாய் வந்த திருத் தொண்டத்தொகை' எனவும், 'மூலமான திருத்தொண்டத் தொகை' எனவும், இதனைத் திருவாய் மலர்ந்தருளிய சுந்தரமூர்த்தி சுவாமிகளைத் 'தேசம் உய்யத் திருத் தொண்டத் தொகை முன்பணித்த திருவாளன்' எனவும் சேக்கிழாரடிகள் உளமுவந்து போற்றியுள்ளார்.

இத்திருத்தொண்டத் தொகைப் பொருளை வகுத்து விளக்கும் முறையில் அமைந்தது, நம்பியாண்டார் நம்பி அருளிய திருத்தொண்டர் திருவந்தாதியாகும். திருத் தொண்டத் தொகையிற் போற்றப் பெற்றுள்ள சிவனடி யார்களின் வரலாறுகளைத் திருநாரையூரிற் கோயில் கொண்டருளும் பொல்லாப்பிள்ளையார் அருளால் உணர்ந்து தெளிந்த நம்பியாண்டார் நம்பிகள், திருத் தொண்டர்கள் பிறந்த ஊர், நாடு, மரபு, அருஞ்செயல் ஆகிய வரலாற்றுக் குறிப்புக்களை வகுத்துரைக்கும் முறையில் திருத்தொண்டர் திருவந்தாதி என்னும் நூலைச் செய்தருளினர் என்பது வரலாறு.

நூலமைக்கும் முறை நால் வகைப்படும். அவை யாவன விரிந்து பரந்த பொருள்களைத் தொகுத்துக் கூறுவதும், தொகுத்துச் சொல்லப்பட்டவற்றை வகைப் படுத்து விளக்குவதும், தொகுத்துச் சொல்லப்பட்டவற்றை விரித்து விளக்குவதும், பிறமொழி நூல்களை அடியொற்றி மொழிபெயர்த்துரைப்பதும் ஆகும். அவற்றுள் நம்பியாரூரர் அருளிய திருத்தொண்டத் தொகை அடியார் திருப்பெயர் களைத் தொகுத்துரைப்பதாதலின் தொகை நூல் எனப் படும். அத்தொகையிற் போற்றப் பெற்ற அடியார்களின் வரலாறுகளை வகைப்படுத்துரைப்பது நம்பியாண்டார் நம்பி அருளிய திருத்தொண்டர் திருவந்தாதியாகும். இது வகைநூல் எனப்படும். 'நந்தம் நாதனும் நம்பியாண்டார் நம்பி, புந்தியாரப் புகன்ற வகையினால்' (பெரிய-திருமலைச் -39) எனச் சேக்கிழாரடிகள் இத்திருவந்தாதியை 'வகை' யெனக் குறித்துள்ளமை இப்பெயர் வழக்கினை வற்புறுத் துதல் காண்க. மேற்குறித்த திருத்தொண்டத் தொகை யையும் அதன் வகையாக அமைந்த திருத்தொண்டர் திருவந்தாதியையும் ஆதரவாகக் கொண்டு, அடியார்களின்

வரலாறுகளை விரித்துரைக்கும் விரிநூலாகச் சேக்கிழார் அடிகள் இத்திருத்தொண்டர் புராணத்தை இயற்றியுள்ளார். இந்நுட்பம், 'திருத்தொண்டத் தொகை விரி இன்று என் ஆதரவால் இங்கு இயம்புகேன்' எனவும், "மற்றிதற்குப் பதிகம் வன்றொண்டர்தாம், புற்றிடத்தெம் புராணர் அருளினால், சொற்ற மெய்த் திருத்தொண்டத் தொகை யெனப், பெற்ற நற்பதிகம் தொழப் பெற்றதாம்" எனவும்,

"அந்த மெய்ப்பதிகத் தடியார்களை
நந்தம் நாதனும் நம்பியாண்டார் நம்பி
புந்தியாரப் புகன்ற வகையினால்
வந்தவாறு வழாமல் இயம்புவாம்" (திருமலைச் 37 – 39)

எனவும் வரும் அவருடைய வாய் மொழிகளால் இனிது விளங்கும்.

திருத்தொண்டத் தொகையைப் பதிகமாகவும், திருத் தொண்டர் திருவந்தாதியை வகை நூலாகவும் கொண்டு, திருத்தொண்டத் தொகையின் விரியாகப் பெரிய புராணத்தை இயற்றியளித்த சேக்கிழாரடிகளை,

'தொகையா நாவலூராளி தொடுத்த திருத்தொண்டப் பெருமை
வகையால் விளங்க வுயர் நம்பியாண்டார் வகுப்ப மற்றதனைத்
தகையா அன்பின் விரித்துலகோர் தம்மையடிமைத் திறப்பாட்டின்
உகையா நின்ற சேக்கிழான் ஒளிர்பொற் கமலத்தாள் பணிவாம்'

எனக் கச்சியப்ப முனிவர் போற்றியுள்ளமை இங்குக் கருதத் தகுவதாகும்.

தமிழகத்திற் பல காலங்களிலும் பல ஊர்களிலும் பல வேறு குடும்பங்களிலும் பிறந்தருளி, எல்லாம் வல்ல இறைவன் திருவடிகளிலும் அவனைப் போற்றுமியல்பின ராகிய மெய்யடியார்கள் திறத்தும் பேரன்புடையராய், ஐம்புலவுணர்வுகளை யடக்கி நன்னெறிக்கண் ஒழுகும் செம்புலச் செல்வர்களாகிய சிவனடியார்களின் வரலாறு களைத் தொகுத்து ஆராய்ந்து உயர்வு நவிற்சியின்றி மெய்ம்மை வரலாறுகளை விரித்துரைக்கும் முறையில் இனிய, எளிய, தூய செந்தமிழ் நடையிற் பெருங்காப்பிய மாக இயற்றிய பெருமை அருண்மொழித் தேவராகிய சேக்கிழாரடிகட்கேயுரிய தனிச் சிறப்பாகும்.

சேக்கிழார் இயற்றிய இத் திருத்தொண்டர் புராணம், 'உள்ளோன் தலைவனுக உள்ளது புணர்த்தல்' என்னும் முறையிலமைந்த வரலாற்றுக் காப்பியமாகும். இந்நூலிற் போற்றப்பெறும் திருத்தொண்டர் யாவரும் இந்நாட்டிற் பிறந்து வாழ்ந்தவர்களே. அவர்களைக் குறித்து இந் நூலிற் கூறப்பெறும் உலகியற் செய்திகள் யாவும் உண்மை யாக நிகழ்ந்த செய்திகளே என்பது, அச்செய்திகளிற் பல தமிழக வரலாற்றிற் கல்வெட்டுச் சான்றுகளோடும் தமி ழிலக்கியச் சான்றுகளோடும் தொடர்புடையனவாய் நெடுங்காலமாக வழங்கிவரும் முறைமை கொண்டு நன்கு துணியப்படும்.

மக்கள் வாழ்க்கையின் உளவியல் நுட்பங்களையும் அறிவின் திறங்களையும் செயலாற்றல்களையும் நுணுகி ஆராய்ந்து அவற்றை இனிது விளக்கும் முறையில் வாழ்க்கை வரலாறுகளைச் சொல்லோவியஞ் செய்து காட்ட வல்ல பேராசிரியர்களே பெரும்புலவர் எனப் போற்றத் தகும் சிறப்புடையராவர். வையத்து வாழ்வாங்கு வாழ்ந்த மெய்யடியார்களின் உலகியல் வாழ்வினை உள்ளவாறு விளக்குமுகமாக, உலக மக்களால் தெய்வத்துள் வைத்துப் போற்றப்பெற்ற அப்பெருமக்களது அருள் வாழ்வினை அறி வுறுத்துவது, சேக்கிழார் அருளிய திருத்தொண்டர் புராணமாகும். இந்நூல்,

> 'வையத்து வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்
> தெய்வத்துள் வைக்கப்படும்'

என்னும் திருவள்ளுவர் வாய்மொழிப் பொருளை விளக்கும் வாழ்க்கை நூலாகத் திகழ்கின்றது.

'பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்' எனக் கூறிய திருவள்ளுவர், ஒத்த பிறப்பினராகிய மக்களுள், மனத்தைத் தீயநெறியினின்றும் விலக்கி நன்றின்பாற் செலுத்துத லாகிய அரிய செயல்களைச் செய்வோரே பெரியர் எனவும், அவ்வாறு மனத்தை ஒரு நெறிப்படுத்தும் அறிவு வன்மை யின்றி மனம் போனபடி எளிய செயல்களையே செய்வோர் சிறியர் எனவும் செய்தொழில் வேற்றுமையால் உலக மக்களை இருவகையினராகப் பகுத்துள்ளார்.

'செயற்கரிய செய்வார் பெரியர், சிறியர்
செயற்கரிய செய்கலாதார்' (26)

எனவரும் திருக்குறள், மக்கட் குலத்தாருள் பெரியர் எனப் போற்றத்தக்கார் இவ்வியல்பினர், சிறியர் என விலகி யொழுகத்தக்கார் இவ்வியல்பினர் என வகுத்துரைக் கின்றது. "செயற்கெளிய வாவன மனம் வேண்டியவாறே அதனைப் பொறிவழிகளால் புலன்களிற் செலுத்துதலும், வெஃகலும் வெகுடலும் முதலாயின. செயற்கரியவாவன இயமம் நியமம் முதலாய எண்வகை யோகவுறுப்புக்கள்" எனப் பரிமேலழகர் கூறும் விளக்கம் இங்கு நினைக்கத் தகுவதாகும். எளியவற்றைச் செய்யாது அரியவற்றைச் செய்த பெருமக்களே திருத்தொண்டத் தொகையிற் போற்றப்பெற்ற சிவனடியார்களாதலின், அவர்களது வரலாறுகளை விரித்துரைக்கும் திருத்தொண்டர் புராண மாகிய இந்நூல் பெரிய புராணம் என வழங்கப்பெறுவ தாயிற்று. இந்நூலை 'எடுக்கு மாக்கதை' என ஆசிரியர் குறித்துள்ளமையும் பெரிய புராணம் என்ற இப்பெயர் வழக்கத்திற்குப் பொருந்திய சான்றாகும். இந்நூலுக்கு ஆசிரியர் இட்ட பெயர் திருத்தொண்டர் புராணம் என்ப தாகும். இவ்வுண்மை,

'இங்கிதன் நாமங் கூறின் இவ்வுலகத்து முன்னாள்
தங்கிருள் இரண்டின் மாக்கள் சிந்தையுட் சார்ந்து நின்ற
பொங்கிய இருளை ஏனைப் புறவிருள் போக்குகின்ற
செங்கதிரவன்போல் நீக்குந் திருத்தொண்டர் புராணம்
என்பாம்'

என இந்நூற்பாயிரத்தில் ஆசிரியர் குறித்துள்ளமையால் நன்கு விளங்கும். உலகிற் பரவியுள்ள புறவிருளைப் போக்குகின்ற கதிரவனைப் போன்று மக்களின் சிந்தையிற் செறிந்துள்ள ஆணவமாகிய அகவிருளைப் போக்குவது திருத்தொண்டர் புராணமாகிய இந்நூல் என ஆசிரியர் இந்நூலின் பெயர் கூறும் பொழுதே இந்நூலின் பயனையும் ஒருங்கு கூறியுள்ளமை காணலாம்.

திருத்தொண்டத் தொகையிற் போற்றப்பெற்றுள்ள அடியார்களின் வரலாறுகளையெல்லாம் விரித்துணர்த்தும் முறையில் அழகியதொரு செந்தமிழ்க் காப்பியத்தை ஆக்கி யுதவ எண்ணிய ஆசிரியர் சேக்கிழார், தம் காப்பியத்திற்கு

மூலமாகிய திருத்தொண்டத் தொகையினைத் திருவாய் மலர்ந்தருளிய நம்பியாரூரரையே தம் காப்பியத்துக்குரிய பாட்டுடைத் தலைவராகக் கொண்டார். தன்னே ரில்லாத் தலைவராகிய நம்பியாரூரரது வரலாற்றின் இடையே அவர் திருவாய் மலர்ந்தருளிய திருத்தொண்டத் தொகையின் பொருளை விரித்துரைக்கும் முறையில் அத்திருப்பதிகத்திற் போற்றப்பெற்றுள்ள திருத்தொண்டர்களின் வரலாறுகளை நிரல்பட அமைத்து, நம்பியாரூரர் தம் தோழராகிய சேரமான் பெருமாளுடன் திருக்கயிலாயத்தைச் சேர்ந்து இறைவன் திருவருள் பெற்று இன்புற்ற செய்தியுடன் இக்காப்பியத்தை நிறைவு செய்துள்ளார்.

இந்நூல், திருமலைச் சருக்கம் முதல் வெள்ளானைச் சருக்கம் ஈருகப் பதின்மூன்று சருக்கங்களையுடையது. முதற்கண் உள்ள திருமலைச் சருக்கம் திருமலைச் சிறப்பு, திருநாட்டுச் சிறப்பு, திருநகரச் சிறப்பு, திருக்கூட்டச் சிறப்பு, தடுத்தாட்கொண்ட புராணம் என ஐந்து பகுதிகளைக் கொண்டதாகும். திருக்கயிலாயத்தில் சிவபெருமானுக்கு அணுக்கத் தொண்டுபுரிந்த ஆலாலசுந்தரர், உமையம்மையாருடைய சேடிகளாகிய கமலினி அனிந்திதையாகிய மாதர் இருவர் மேலும் மனத்தினைச் செலுத்தினமையால், 'நீ மாதர் மேல் மனம் வைத்தனை ஆதலால் தென்புவி மீது தோன்றி, அம் மெல்லியலாருடன் காதலின்பம் கலந்தணைவாய்' என இறைவன் பணித்த வண்ணம் திருமுனைப்பாடி நாட்டில் திருநாவலூரில் மாதொருபாகனுர்க்கு வழிவழி அடிமை செய்யும் ஆதி சைவ வேதியர் மரபில் சடையனுர்க்கும் இசைஞானியார்க்கும் மகவாகத் தோன்றினுர்; நரசிங்க முனையரையரால் அன்புடன் வளர்க்கப்பெற்றுர்; புத்தூர்ச் சடங்கவி சிவாசாரியாருடைய மகளை மணம் பேசித் திருமணம் செய்யும் நிலையில், வெண்ணெய் நல்லூர் அருட்டுறையிறைவர் கிழவேதியராகத் தோன்றி, 'ஆரூரனே! நீ எனக்கு வழி வழி யடியவன்' என ஆவண வோலைகாட்டித் திருவெண்ணெய் நல்லூர்ச் சபையில் வழக்குரைத்துத் தடுத்தாட்கொள்ளப்பெற்றுர்; 'நமக்கு அன்பிற் பெருகிய சிறப்பின் மிக்க அர்ச்சனை பாட்டேயாகும், ஆதலால் மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுக' என அருட்டுறை யிறைவர் பணித்த வண்ணம், மெய்த்தாயினும் இனிய அப்பெரு

மானைப் 'பித்தா பிறைசூடி' எனப் பெரிதாம் திருப்பதிகத்தாற் பாடிப் போற்றினர்; பல தலங்களை வணங்கித் திருவாரூரை அடைந்து தம்பிரான் தோழரானர்; கமலினியாராகிய பரவையாரை நற்பெரும் பான்மை கூட்டக்கண்டு காதல் கொண்டு இறைவன் அருளால் திருமணம் செய்து கொண்டார். பரவையார் கேள்வராகிய சுந்தரர், திருவாரூர்த் திருக்கோயிலின் திருமுற்றத்திலுள்ள தேவாசிரிய மண்டபத்தில் எழுந்தருளியிருக்கும் அடியார் திருக்கூட்டத்தினை நோக்கி அன்பு நீங்கா அச்சமுடையராய், 'இவர்க்கு யான் அடியாகைப் பண்ணும் நாள் எந்நாள்?' என்று பரமர் தாள் பரவித் திருக்கோயிலினுள்ளே சென்றார். புற்றிடங்கொண்ட பெருமானாகிய இறைவன், நம்பியாரூரர்க்கு எதிரே தோன்றி அடியார் பெருமையினை எடுத்துரைத்துத் 'தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்' என அடியெடுத்துக் கொடுத்தருளினர். சிவனருள் பெற்ற திருவாளராகிய நம்பியாரூரரும் அத்தொடரினை முதலாகக்கொண்டு, நேசம் நிறைந்த உள்ளத்தால் ஈசனடியார் பெருமையினை எல்லாவுயிரும் தொழ எடுத்துத் தேசம் உய்யத் திருத்தொண்டத் தொகையினைப் பாடிப் போற்றினர். இச்சிறப்புடைய நிகழ்ச்சியினைக் காப்பியச் சுவை நலம் பொருந்த விரித்துக் கூறுவது, இந்நூலின் முதற்கண் திருமலைச் சிறப்பு முதல் தடுத்தாட் கொண்ட புராணம் வரை அமைந்த பகுதியாகும்.

இதனையடுத்துத் திருத்தொண்டத் தொகையின் பதினொரு பாடல்களிலும் போற்றப் பெற்றுள்ள தில்லைவாழந்தணர், திருநீலகண்டக் குயவனர் முதல் திருநீலகண்டப் பாணர் ஈருகவுள்ள அடியார்களின் வரலாறுகள், அவ்வத் திருப்பாடற்குரிய முதற் குறிப்பினையே பெயராகக் கொண்டு, தில்லைவாழந்தணர் சருக்கம் முதல் மன்னிய சீர்ச் சருக்கம் ஈருகப் பதினொரு சருக்கங்களில் வகுத்துரைக்கப்பெற்றன.

சேரமான் தோழராகிய சுந்தரர், சேரநாட்டுத் தலைநகராகிய கொடுங்கோளூரில் திருவஞ்சைக்களத் திருக்கோயிலில் எழுந்தருளிய இறைவனைப் பாடிப் பரவியிருக்கும் நிலையில், கயிலைப் பெருமானுல் அனுப்பப்பெற்று அங்கு வந்த வெள்ளை யானையின் மீதமர்ந்து, தம்தோழ

ராகிய சேரமான் பெருமாள் பரிமீதமர்ந்து உடன்வரத் திருக்கயிலாயத்தை அடைந்து அம்மையப்பரைக் கண்டு வழிபட்டுத் தம் தோழர் சேரமான் பாடிய திருக்கயிலாய ஞானவுலா இறைவன் திருமுன்னர் அரங்கேறக் கேட்டு மகிழ்ந்து முன்புபோல் தத்தமக்குரிய அணுக்கத் திருத் தொண்டினையேற்று இன்புற்ற செய்தியை விரித்துரைக்கும் பகுதி வெள்ளானைச் சருக்கம் என்பதாகும்.

நூலின் முடிபொருளாக அமைந்த இந்நிகழ்ச்சி யினையே முதலாகக்கொண்டு ஆசிரியர் சேக்கிழார் இக் காப்பியத்தைத் தொடங்கியுள்ளமை கூர்ந்து நோக்கத் தகுவதாகும்.

திருமலைச் சிறப்பு

பொன்னின்மேல் வெண் திருநீறு புனைந்தாற் போன்று நீண்ட பனிமலையாகிய இமயமலையின் உச்சியில் விளங்குவது திருக்கயிலாயமலை. அத் திருமலையானது, தன்னை இன்னதன்மையன் என யாவராலும் உணர்தற் கரிய சிவபெருமான் என்றும் அகலாது எழுந்தருளி யிருக்கும் தனிச் சிறப்புடையது; உலக மக்கள் செய்த புண்ணியங்கள் யாவும் ஒருங்கு திரண்டாற் போன்று பொலிவுபெற்று விளங்குவது; தேவர் முனிவர் யாவரும் மலர் தூவி வணங்கி வழிபடும் மேன்மையுடையது; உலக நிலைகளையே மாற்றவல்ல சிவ கணங்களாகிய கோடி கோடி குறட்சிறு பூதங்கள் இறைவன் புகழைப் பாடியாடும் இடப்பரப்பினை யுடையது. அத்தகைய திருக் கயிலாய மலையின் தாழ்வரையின் கண்ணே சிவனடியே சிந்திக்கும் சிவஞானச் செல்வரும் கண்ணனுக்குச் சிவ தீக்கை செய்தருளியவரும் பாலனாகிய பருவத்தே திருப்பாற் கடலைப் பருகி வளர்ந்தவரும் ஆகிய உபமன்னிய முனிவர், பத்திமையிற் சிறந்த பல்லாயிரம் முனிவர்களும் சுத்தயோகி களும் சூழ எழுந்தருளியிருக்கின்றார். அப்பொழுது ஆயிரம் சூரியர்கள் ஒருங்கு தோன்றினாற் போன்ற பேரொளிப் பிழம்பு தென் திசையிலே தோன்றியது. அதனைக் கண் ணுற்ற முனிவர் முதலியோர் 'இங்கு இது என்ன அதிச யம்'? என உபமன்னிய முனிவரை நோக்கி வினவினார்கள். உபமன்னிய முனிவர் பிறையணி வார் சடையான் திருவடி களைச் சிந்தித்து, 'மாதவம் செய்த தென்றிசை வாழ்ந்திட்த்

திருநாவலூரில் திருவவதாரம் செய்தருளிய வன்றொண்டனாகிய சுந்தரன் எம் பெருமான் திருவருளால் மீண்டும் கயிலைக்கு எழுந்தருளுகின்றான்' என உணர்ந்து, இரண்டு கைகளையும் தலைமேற்குவித்து எழுந்து வணங்கி, உவகைக் கண்ணீர் தம் மெய்யெலாம் படிய, நம்பியாரூரரை வரவேற்றுப் போற்றும் கருத்துடன் எதிர் செல்வாராயினார். அப்பொழுது அவரைச் சூழ இருந்த முனிவர்கள், முனிவர் பெருமானாகிய அவரை நோக்கி, 'எம்பெருமானே! சிவபெருமானது செந்தாமரை மலர் போலும் திருவடிகளையன்றி வேறு யாவரையும் தலை தாழ்த்தி வணங்காத தேவரீர் கை கூப்பி எழுந்து வணங்கும் இது என்னே?' எனத் தம் உள்ளத்தில் தோன்றிய ஐயம் நீங்க வியப்புற்று வினவினார்கள். தம்பிரானாகிய சிவபெருமானைத் தன் உள்ளத்திற் கொண்டு போற்றும் பேரன்புடைய பெரியோன் இப்பொழுது இங்கு எழுந்தருளி வரும் நம்பியாரூரனாவான். அவன் முற்றத் துறந்த முனிவர்களாகிய நம் எல்லோராலும் தொழப்பெறும் தகுதியுடையனாவான்' என உபமன்னிய முனிவர் நம்பியாரூரது பெருமையினை ஏனைய முனிவர்களுக்கு அறிவுறுத்தியருளினார். ஆரூரரது பெருமையினை உளங் கொண்ட அம் முனிவர்கள், 'வென்ற பேரொளியாராகிய வன்றொண்டரது மேலாகிய தவத்தின் பெற்றியினைப் பெரிதும் கேட்டுமகிழும் பெருவேட்கையுடையோம். அதனை இன்று எங்களுக்கு விரித்து உரைத்தருளுதல் வேண்டும்' என உபமன்னிய முனிவரை இறைஞ்சி வேண்டினார்கள். முனிவர் பெருமானும் அம் முனிவர்களுக்கு வன்றொண்டர் வரலாற்றை உள்ளவாறு விரித்துக் கூறியருளினார். அது கேட்ட முனிவர்கள், 'பாசப் பிணிப்புடைய மக்கட் குலத்தார் வாழும் தென் திசை, இவ்வாறு ஆலால சுந்தரர் அவதரித்தருளும் நிலையில் இந் நிலவுலகில் எண் திசைகளிலும் மேற்பட்டு விளங்குதற்கு வந்த புண்ணியச் சிறப்பினையுடையதாதல் எவ்வாறு?' என மீண்டும் வினவினார்கள். அது கேட்ட மாதவச் செல்வராகிய உபமன்னிய முனிவர், 'ஒப்பற்ற தவப் பெருஞ் செல்வராகிய எம் தந்தையார் புலிக்கால் முனிவர் இறைவனை வழிபட்டுப் போற்றிய பெருமையுடையதும் ஈசனுக்கே அன்புடைய ஒருமையாளராகிய அந்தணர்கள் விருப்புடன் தங்கிய சிறப்புடையதுமாகிய பெரும் பற்றப் புலியூர் என்ற திருத்தலம் தென் திசையிற் சிறப்புற்று ஓங்கியுள்ளது. அத் திருப்பதி

யிலே தான் நம் பெருமானுகிய இறைவன், நம்மை ஆளு டைய தவச் செல்வியாகிய உமையம்மையார் கண்டு மகிழ, விருப்புடன் திருக்கூத்து ஆடியருள்கின்ருன். இத்தகைய திருவருட் சிறப்பு தென்றிசைக்கல்லது வேறு எந்தத் திசைக்கு அமைந்துள்ளது? எல்லா உயிர்களுக்கும் உள் ளிருந்து விரியும் உள்ளக் கமலத்தைப் போன்று, மறை முதற் பொருளாகிய இறைவன் வெளிப்பட்டு எழுந்தருளி யிருத்தற்குரியதாய் உலகமாகிய மங்கையின் உள்ளத் தாமரையாகத் தென் திசையில் திருவாரூர் திகழ்கின்றது. எமது பெருமாட்டியும் ஏழுலகங்களையும் பெற்றெடுத்த அன்னையும் ஆகிய காமாட்சியம்மையார், தம் பெருமானுகிய இறைவனை நோக்கித் தவமியற்றிக் கம்பையாற்றின் கரை யிலே வெளிப்படக் கண்டு வழிபட்டுப் போற்றுதற்கு இட ஞகிய காஞ்சிப் பதியினைத் தன்பாற் கொண்ட சிறப் பினது அத் தென் திசையே. நமது குருநாதராகிய நந்தி தேவர் தவம் செய்து நிறைந்த திருவருளைப் பெற்ற பொலி வுடைய திருவையாறு என்ற திருப்பதியும் இத் தென் றிசைக்கண் உள்ளதே. இவ்வாறு தேசங்கள் எல்லா வற்றையும் விளக்கிய தென் திசையிலே, ஈசர்க்கு விருப் புடைய தோணிபுரம் முதலாகச் சிவபெருமானைப் பூசித்த தற்குப் பொருந்திய திருத்தலங்கள் பல உள்ளன. திசைக ளின் உயர்வினைக் குறித்துப் பேசப் புகின் அத்தென் திசைக்குப் பிற திசைகள் சிறிதும் ஒப்பாகமாட்டா" என்று பெருந்தவச் செல்வராகிய உபமன்னிய முனிவர் சிவமே நிலவிய தென்றமிழ் நாட்டின் சிறப்பினை வடகயிலையில் வாழும் முனிவர்களுக்கு விளங்க எடுத்துரைத்தருளினர்.

"அன்று, திருக்கயிலையில் உபமன்னியர் தம்மை வின விய முனிவர்கட்கு வன்ருெண்டர் வரலாற்றை விரித்துக் கூறிய முறைப்படி திருத்தொண்டத் தொகை விரியாகிய இந்நூலினை எனது விருப்பத்தினுற் கூறத் தொடங்கி னேன். இதற்குப் பதிகமாக அமைந்தது, திருவாரூரிற் புற்றிடங் கொண்ட பெருமானருளால் ஆரூரர் பாடிய திருத் தொண்டத் தொகையாகும். அப்பதிகத்திற் போற்றப் பெற்ற அடியார்களை நம்முடைய நாதராகிய நம்பியாண் டார் நம்பிகள் போற்றிப் பரவிய திருத்தொண்டர் திருவந் தாதி என்னும் வகை நூலினை ஆதரவாகக் கொண்டு திருத்தொண்டர் வரலாறுகளை இனி முறையே கூறத்

தொடங்குவோம். உலக உயிர்கள் பிறவிப் பிணிப்பி னின்றும் நீங்கி உய்தி பெறவும் திருநெறியாகிய சைவ சமயம் உலகில் நிலை பெற்று வளர்ந்தோங்கவும் எல்லையில் புகழாளராகிய நம்பியாரூரர் பாடிப் போற்றிய சிவனடி யார்கள் திருக்கூட்டம் நிறைந்துறையும் பெருமையினைப் பெற்ற புனல் நாடாகிய சோழ நாட்டின் சிறப்பினை இனிக் கூறுவோம்" என ஆசிரியர் சேக்கிழாரடிகள் தாம் இயற்றத் தொடங்கிய வரலாற்றுக் காப்பியமாகிய திருத்தொண்டர் புராணத்தின் முன்னுரையாகத் திருக்கயிலாயத் திருமலை யின் சிறப்பினை முதற்கண் அமைத்துள்ளார்.

இவ்வாறு சேக்கிழாரடிகள் தாம் பாட எடுத்துக் கொண்ட காப்பியத்தின் தலைவராகிய நம்பியாரூரரது வரலாறு திருக்கயிலாயத் திருமலையிலே மாதவ முனிவர்க்கு முதன் முதலாக விரித்துரைக்கப் பெற்ற சிறப்புடைய தெனத் தோற்றுவாய் செய்து கொள்வதற்கு அகச் சான்றாக அமைந்தது,

> ' இந்திரன் மால்பிரமன் எழிலார் மிகு தேவ ரெல்லாம்
> வந்தெதிர் கொள்ள வென்னை மத்த யானையருள் புரிந்து
> மந்திர மாமுனிவர் இவன் ஆர் என எம்பெருமான்
> நந்தமரூரனென்றான் நொடித்தான் மலையுத்தமனே' (7-100-9)

என வரும் நம்பியாரூரர் வாய்மொழியாகும். வெள்ளையானை மீது அமர்ந்து திருக்கயிலாயத்தையடையும் நம்பியாரூர ரைக் கண்ட மாதவ முனிவர், 'இங்கு வரும் இவன் யார்?' என வினவிய நிலையில் 'இவன் நந்தமர் ஊரூரன்' எனச் சிவபெருமான் திருவாய் மலர்ந்தருளினார் என்பதனை இத் திருப்பாடலில் நம்பியாரூரர் தெளிவாகக் குறித்துள்ளமை அறியத் தகுவதாகும். இங்ஙனம் சிவபெருமானது அருளால் நம்பியாரூரரது வரலாற்றை முதன் முதல் அறியப் பெற்ற பெருந்தவ முனிவராவார் உபமன்னிய முனிவரே என்ப தனை 'மந்திர மாமுனிவர்' என்னும் சிறப்புடைய மொழி களால் உய்த்துணர்ந்த சேக்கிழாரடிகள், அம் முனிவர் பெருந்தகையார் தம்மைச் சூழ்ந்து கொண்டு ஐயம் நீங்க வினவிய ஏனைய முனிவர்களுக்கு வன்றொண்டரது வர லாற்றை விரித்துக் கூறிய முறையில் திருத்தொண்டத் தொகை விரியாகிய இக் காப்பியத்தை அமைத்துள்ளார். இந் நுட்பம்,

'என்று மாமுனி வன்றொண்டர் செய்கையை
அன்று சொன்ன படியால் அடியவர்
துன்று சீர்த்திருத் தொண்டத் தொகை விரி
இன்றென் றாதர வாலிங் கியம்புகேன்' (திருமலைச் சிறப்பு-37)

என ஆசிரியர் தம் காப்பியத்திற்குத் தோற்றுவாய் செய்து கொள்ளுதலால் இனிது விளங்கும் நம்பியாரூரர் திருப் பாடலில் 'மந்திரமா முனிவர்' என வரும் குறிப்பு உப மன்னிய முனிவரையே குறித்ததாகச் சேக்கிழாரடிகள் கருதினர் என்பது, இப் பாடலில் 'மாமுனி' என அதே தொடரால் உபமன்னிய முனிவரைக் குறித்துள்ளமையால் இனிது புலனாம்.

திருநாட்டுச் சிறப்பு

காப்பியம் இயற்றும் ஆசிரியர்கள் தாம் இயற்றும் காப்பியத்தின் தொடக்கத்திலேயே அக்காப்பியத்தலைவர்க் குரிய நாட்டைப் பற்றியும் அவர் பிறந்த நகரத்தைப் பற்றியும் விரித்துரைப்பது இயல்பு. திருத்தொண்டர் புராணமாகிய இக்காப்பியத்தின் பாட்டுடைத்தலைவராவார் நம்பியாரூரராவர். அவர் அவதரித்தருளிய நாடு திருமுனைப்பாடி நாடு; ஊர் அந்த நாட்டின் தலைநகர மாகிய திருநாவலூர். ஆகவே இக்காப்பியத்தில் முதற் கண் சிறப்பித்துரைக்கத்தக்கன திருமுனைப்பாடி நாடும் திருநாவலூருமே என்பது தெளிவு. எனினும் சேக்கிழா ரடிகள் தம்காப்பியத்துக்குச் சிறப்புரிமையுடைய நாடாகச் சோழ நாட்டையும் சிறந்த பேரூராகத் திருவாரூரையும் கொண்டுள்ளார். இவ்வாறு இக்காப்பியத்திற் சோழ நாடும் அந்நாட்டுப் பேரூர்களில் திருவாரூரும் சிறப்பிடம் பெறுதற்குரிய காரணம், திருத்தொண்டத் தொகை விரியாகிய இக்காப்பியத்தாற் போற்றப் பெறும் சிவனடி யார்களது திருக்கூட்டம் நிறைந்து விளங்கும் சிறப் புடையது புனல் நாடாகிய சோழ நாடாகவும், சிவ பெருமான் தன்னடியார்களுக்கு என்றும் எளிவரும் பெருமையுடைய பழம்பதி திருவாரூராகவும் அமைந் துள்ளமையே என்பதனை,

'உலக முய்யவும் சைவநின் றோங்கவும்
அலகில் சீர் நம்பியாரூரர் பாடிய
நிலவு தொண்டர்தம் கூட்டம் நிறைந்துறை
குலவு தண்புனல் நாட்டணி கூறுவாம்'

எனத் திருமலைச் சிறப்பின் இறுதியில் தோற்றுவாய் செய்து கொள்ளுதலாலும், இவ்வாறே திருநாட்டுச் சிறப்பினையடுத்து,

'சொன்ன நாட்டிடைத் தொன்மையின் மிக்கது
மன்னு மாமல ரான்வழி பட்டது
வன்னி யாறு மதிபொதி செஞ்சடைச்
சென்னி யார்திரு வாரூர்த் திருநகர்'

எனத்திருநகரச் சிறப்பினைத் தொடங்குதலாலும் சேக்கிழா ரடிகள் இனிது புலப்படுத்தியுள்ளார்,

தமிழ்நாடு அயல்வேந்தர் ஆட்சியுட்பட்டமையால் தமிழ்மொழியும் தமிழ் மக்களது தெய்வ வழிபாட்டு நெறி முறையும் சிதைவுறும் நிலையினை எய்திய அல்லற் காலத்திலும் தமிழகத்தின் நெஞ்சத் தாமரையாக விளங்கிய இச்சோழ நாட்டில் தமிழ் மொழியும் தமிழர்க்குச் சிறப்புரிமையுடைய சிவநெறியும் தளர்வுறாது பேணப்பட்டு வந்தமையால் தமிழகத்திற் பல் வேறூர்களிலிருந்தும் வந்த சிவநெறிச் செல்வர் பலர் இந்நாட்டில் விரும்பித் தங்கியிருந்தார்கள். இச்செய்தி திருத்தொண்டர் புராணத்தில் இடம் பெற்றுள்ள வரலாற்று நிகழ்ச்சிகளாலும் அக்காலத்தில் சோழ நாட்டில் வாழ்ந்த காரைக்காலம்மையார் திருமூலர் முதலிய அருளாசிரியர்கள் அருளிய திருமுறைகளாலும் இனிதுணரப்படும். இவ்வாறு செந்தமிழும் சிவநெறியும் வளம்பெற்று வளர்தற்குரிய நிலைக்களமாகச் சோழநாடு திகழ்ந்தமை பற்றி இந்நாடு 'செந்தமிழ் நிலம்' எனப் பிற்காலவுரையாசிரியர்களாற் போற்றப் பெறும் பெருஞ் சிறப்பினையும் எய்துவதாயிற்று. இவ்வுண்மை, "செந்தமிழ் நிலம் என்பது வையை யாற்றின் வடக்கு, மருதயாற்றின் தெற்கு, கருவூரின் கிழக்கு, மருவூரின் மேற்கு" (தொல் – எச்ச – ஆ - 2) எனவரும் இளம் பூரணர் உரையாலும், I

'மன்றவாணன் மலர்திரு வருளாற்
றென்றமிழ் மகிமை சிவணிய செய்த
அடியவர் கூட்டமும் ஆதிச் சங்கமும்
படியின்மாப் பெருமை பரவுறு சோழனும்
சைவமாத வரும் தழைத்தினிதிருக்கும்
மையறு சோழ வளநாடென்ப"

என யாப்பருங்கலக்காரிகையுரையாசிரியர் காட்டும் மேற்கோட் செய்யுளாலும் நன்கு புலனாதல் காணலாம்.

புனல் நாடாகிய சோழ நாட்டின் சிறப்பினை விரித்துரைக்கப் போந்த ஆசிரியர் சேக்கிழார், அந்நாட்டினைத் தன்னகத்தே கொண்டு விளங்குவதாய் முடிகெழு வேந்தராகிய தமிழ் வேந்தர் மூவர்க்கும் உரியதாய்த் திகழும் தமிழகத்தின் எல்லையைக் குறிப்பிட்டு, அவ்வெல்லைக்கு மேலாக வடவிமயம் வரை சென்று அம்மலையிற் புலியிலச்சினையைப் பொறித்த பெருவிறல் படைத்த சோழ மன்னருக்குச் சிறப்புரிமையுடைய சென்னி நன்னாட்டினையும், அந்நாடு வளம் பெறுவதற்குக் காரணமாயமைந்த காவிரித்தாயாகிய பொன்னிநதியின் சிறப்பினையும், அந்நன்னீரால் உளவாகிய நாட்டு வளம், குடிச்சிறப்பு, கூழின் பெருக்கம், தெய்வ வழிபாடு ஆகிய சிறப்புக்களையும், அவற்றுக்குக் காரணமாயமைந்த சோழ மன்னனது அறநெறியில் இயன்ற ஆட்சித்திறத்தினையும் விளக்கும் முறையில் 'திருநாட்டுச் சிறப்பு' என்ற பகுதியை அமைத்துள்ளார்.

> 'பாட்டியற் றமிழுரை பயின்ற வெல்லையுட்
> கோட்டுயர் பனிவரைக் குன்றி னுச்சியிற்
> சூட்டிய வளர்புலிச் சோழர் காவிரி
> நாட்டியல் பதனையான் நவில லுற்றனன்''

என ஆசிரியர் சேக்கிழாரடிகள், தாம் இயற்ற எண்ணிய காப்பியத்திற்குரிய நாட்டின் எல்லையினை நன்கு வரையறுத்துரைப்பது, நாடாள் வேந்தர்க்கு அமைச்சராய் விளங்கிய அவ்வாசிரியரது அரசியல் நெறி முறையுடன் இயைந்த வரலாற்றுணர்ச்சியினை நன்கு புலப்படுத்துதல் காணலாம். தமிழ் நாட்டின் எல்லை இதுவென விளக்க முற்பட்ட சேக்கிழாரடிகள், 'வட வேங்கடம் தென்குமரி' எனப்படும் அவ்எல்லை, சங்கச் செய்யுட்களாகிய பழம் பாட்டிலும், இயற்றமிழ் இலக்கணமாகிய தொல்காப்பியம் முதலிய தொன்னூல்களிலும், அவற்றுக்கு அமைந்த பழைய உரைகளிலும் வரன்முறையே பயின்று வந்த தொன்மையுடையது என்பார்,

"பாட்டு, இயற்றமிழ், உரை, பயின்ற எல்லை'' எனத் தெளிவாகக்குறித்தார். மேற் குறித்த செந்தமிழ் நாட்டின்

எல்லையுட்பட்ட காவிரிநாட்டின் இயல்பினையே இங்குச் சொல்லத் தொடங்குகின்றேன் என நுதலிப்புகும் ஆசிரியர், அந்நாட்டினையாளும் சோழமன்னரது வெற்றித் திறத்தினை விளக்கும் முறையில் 'கோட்டுயர்பனிவரைக் குன்றின் உச்சியில், சூட்டிய வளர்புலிச் சோழர்' எனச் சிறப்பித்தார். பண்டைச் சோழ மன்னர்களிற் கரிகாற் பெருவளத்தான் வடநாட்டின்மேற் படையெடுத்துச் சென்று வடவேந்தர்களைப் புறங்கண்டு இமயமலையின் மேல் தனது புலிக்கொடியாகிய இலச்சினையைப் பொறித்த செய்தியினை,

"இருநில மருங்கிற் பொருநரைப் பெறுஅச்
செரு வெங்காதலிற் றிருமா வளவன்
வாளுங் குடையு மயிர்க்கண் முரசு
நாளொடு பெயர்த்து நண்ணார்ப் பெறுக விம்
மண்ணக மருங்கினென் வலிகெழு தோளெனப்
புண்ணிய திசைமுகம் போகிய வந் நாள்
அசைவி லூக்கத்து நசைபிறக் கொழியப்
பகைவிலக் கியதிப் பயங்கெழு மலையென
இமையவ ருறையுஞ் சிமையப் பிடர்த்தலைக்
கொடுவரி யொற்றிக் கொள்கையிற் பெயர்வோற்கு"
(சிலப் - இந்திர - 89 - 98)

எனவும்,

"பொன்னிமயக் கோட்டுப் புலிபொறித்து மண்ணாண்டான்
மன்னன் வளவன் மதிற்புகார் வாழ்வேந்தன்"
(சிலப் - கானல்வரி - உள்வரி வாழ்த்து - 2)

எனவும் வரும் தொடர்களில் இளங்கோவடிகள் தெளிவாகக் குறித்துள்ளார். சோழன் கரிகாலனைப் பற்றிய தொன்மை வரலாற்றை யுளங்கொண்ட சேக்கிழாரடிகள்,

"இலங்கு வேற் கரிகாற் பெரு வளத்தோன்
வன்றிறற் புலி இமயமால் வரைமேல் வைக்க ஏகுவோன்"
(திருக்குறிப்புத் — 85)

எனவும்,

"புண்டரிகம் பொன்வரைமேல் ஏற்றிப் புவியளிக்கும்
தண்டரள வெண்கவிகைத் தார் வளவர் சோணாட்டில்"
(ஏனாதி — 1)

எனவும் வரும் தொடர்களிற் குறித்துள்ளமை இங்கு ஒப்பு நோக்கியுணர்தற்குரியதாகும்.

சூரபன்மன் முதலிய அவுணர்களுக்கு அஞ்சிச் சீர்காழியை யடைந்து இறைவனை வழிபட்டிருக்கும் இந்திரன், தான் இறைவனுக்கென வைத்த நந்தவனம் நீரின்றி வாடியதனால் விநாயகப் பெருமானைக் குறை யிரந்து வேண்டினன். அப்பொழுது அகத்திய முனிவர் தம் கமண்டலத்திலே ஆகாய கங்கையைக்கொண்டு தென்றிசை நோக்கிப் போந்தவர் சையமலையில் தங்கினார் அந் நிலையில், விநாயகர் காகவுருக் கொண்டு அவருடைய கமண்டலத்தைக் கவிழ்க்க, அதன் நீர் காவிரியாறாகப் பரந்து ஓடிச் சோழ நாட்டிற் புகுந்து இந்திரனது நந்த வனத்தைச் செழிக்கச் செய்தது எனக் கந்தபுராணம் கூறும். காந்தன் என்னும் சோழ மன்னனது வேண்டு கோளுக்கிரங்கிய அகத்திய முனிவர், தமது கமண்டலத் திலுள்ள நன்னீரைக் காவிரியாறாக நிலத்திற் பெருகச் செய்தார் என மணிமேகலைப் பதிகம் கூறும்.

‘செங்கதிர்ச் செல்வன் திருக்குலம் விளக்குங்
கஞ்ச வேட்கையிற் காந்தமன் வேண்ட
அமர முனிவன் அகத்தியன் றனாது
கரகங் கவிழ்த்த காவிரிப்பாவை’ (9 – 12)

என்பது மணிமேகலைப் பதிகமாகும். இங்ஙனம் அகத்திய முனிவரது கமண்டலத்திலுள்ள நீரே காவிரியாறாகப் பெருக்கெடுத்தது என்ற பழங்கதையினை யுளங்கொண்ட சேக்கிழாரடிகள், அப்பேராறு நிலத்திற் பரவி யோடிய நிலையில் நிலமடந்தையின் மார்பில் அணியப் பெற்ற அழகிய முத்துமாலையினை யொத்து விளங்கிய தோற்றத்தை,

‘ஆதிமா தவமுனி யகத்தியன் தரு
பூதநீர்க் கமண்டலம் பொழிந்த காவிரி
மாதர்மண் மடந்தைபொன் மார்பிற் றாழ்ந்ததோர்
ஓதநீர் நித்திலத் தாமம் ஒக்குமால்’ (பெரிய – திருநாட்டு-2)

எனவரும் பாடலில் அழகாகப் புனைந்துரைக்கின்றார். இச்செய்யுளின் பின்னிரண்டடிகள்,

“மணிமலைப் பணைத் தோள் மாநில மடந்தை
அணிமலைத் துயல்வரும் ஆரம் போலச்
செல்புனலுழந்த சேய்வரற் கான்யாற்று” (சிறுபாண் 1–3)

எனவரும் சிறுபாணாற்றுப்படைத் தொடரை அடியொற்றி யமைந்துள்ளமை காண்க

வானத்தின் கண்ணே விளங்கும் வெள்ளியாகிய மீன் தான் நிற்றற்குரிய வடதிசையில் நில்லாமல் தென்றிசைக் கண்ணே சென்றாலும், மேகம் தன் துளிகளை யுணவாகக் கொண்ட வானம்பாடி வாட்டமுறப் பெய்தலைத்தவிர்ந்து வற்கடகாலம் ஏற்பட்டாலும், தான் பொய்யாமற் காலந் தோறும் வருகின்ற நீர்மையை யுடையது குடகமலை யிடத்தே தலையினையுடையதாய்க் கடலிடத்தே செல்கின்ற புகழ்மிக்க காவிரியாறு என்பதனை,

'வசையில் புகழ் வயங்கு வெண்மீன்
திசைதிரிந்து தெற்கேகினும்
தற்பாடிய தளியுணவின்
புட்டேம்பப் புயன்மாறி
வான் பொய்ப்பினும் தான் பொய்யா
மலைத்தலைய கடற்காவிரி' (பட்டினப்பாலை – 1-6)

எனவரும் தொடர்களிற் கடியலூர் உருத்திரங் கண்ணனார் தெளிவாகக் குறித்துள்ளார். இங்ஙனம் என்றும் பொய்யா தளிக்கும் காவிரியின் புகழ்த்திறத்தினை,

" கரியவன் புகையினும் புகைக் கொடி தோன்றினும்
விரிகதிர் வெள்ளி தென்புலம் படரினும்
கால்பொரு நிவப்பிற் கடுங்குர லேற்றொடுஞ்
சூன்முதிர் கொண்மூப் பெயல் வளஞ் சுரப்பக்
குடமலைப் பிறந்த கொழும்பஃறாரமொடு
கடல் வளனெதிரக் கயவாய் நெரிக்குங்
காவிரிப்புது நீர் " (சிலப் - நாடுகாண் 103 – 108)

என இளங்கோவடிகளும் குறித்துப் போற்றியுள்ளார்.

சையமலையினின்றும் பெருக்கெடுத்து வரும் தலைமை வாய்ந்த காவிரியாறு, உலகில் உள்ள எல்லாவுயிர் களையும் வளரச் செய்து நாள்தோறும் அவ்வுயிர்கள் உய்யும்படி அருள் சுரந்து ஊட்டும் நன்னீர்மையால் செம்மை வாய்ந்த நிலமகளுக்குச் செவிலித்தாய் போன்றுள்ளது என்பார்,

" பூந்தண் பொன்னி எந்நாளும் பொய்யாதளிக்கும்
புனல் நாட்டு" (பெரிய–சண்டேசர் – 1)

எனவும்,

'பருவமறுப் பொன்னி' (சம்பந் – 338)

எனவும் வரும் தொடரிற் சேக்கிழாரடிகளும் குறித் துள்ளமை காணலாம். இவ்வாறு வான் பொய்ப்பினும்

தான் பொய்யாத வளமுடையதாய், மன்னுயிர்களைப் புரக்கும் பொன்னி நதியினை நம் முன்னோர் தெய்வத் தன்மை வாய்ந்த திருநதியாகப் பரவிப் போற்றி யுள்ளார்கள் என்பது,

"தெய்வக்காவிரித் தீதுதீர் சிறப்பும்"
(சிலப் - நாடுகாண் - கட்டுரை - 8)

எனவரும் இளங்கோவடிகள் வாய் மொழியாலும்,

"வருநாளென்றும் பிழையாத் தெய்வப் பொன்னி"
(பெரிய - மங்கை - 3)

எனவரும் சேக்கிழாரடிகள் வாய் மொழியாலும் நன்கு புலனாம்.

"சையமால் வரைபயில் தலைமை சான்றது
செய்யபூ மகட்குநற் செவிலிபோன்றது;
வையகம் பல்லுயிர் வளர்த்து நாடொறும்
உய்யவே சுரந்தளித் தூட்டு நீரது" (திருநாட்டுப் - 3)

எனக் காவிரியன்னையைச் சேக்கிழாரடிகள் சிறப்பித் துள்ளார். இவ்வாறே சேரமுனிவராகிய இளங்கோவடி களும்,

"வாழியவன்றன் வளநாடு மகவாய், வளர்க்குந் தாயாகி
ஊழியுய்க்கும் பேருதவி யொழியாய் வாழி காவேரி"
(சிலப் - கானல்வரி -)

எனக் காவிரியை நிலமடந்தைக்குச் செவிலித் தாயாகக் கொண்டு போற்றியுள்ளமை இங்கு ஒப்பு நோக்கியுணரத் தகுவதாகும்.

காவிரியாறு நான்முகனையும் கங்கையையும் ஒக்கும் எனச் சிலேடையுவமையாற் செப்பிய சேக்கிழார், அத்தெய்வ நதியின் ஒழுக்கத்திற்கு, வண்ண நீள் வரைதர வந்து எண்ணில் பேரறங்களும் வளர்க்கும் உமையம்மையாரின் கருணையின் ஒழுக்கினை உவமை கூறிவிளக்கும் முறையில் அமைந்தது,

"வண்ணநீள் வரைதர வந்த மேன்மையால்
எண்ணில் பேரறங்களும் வளர்க்கும் ஈகையால்
அண்ணல் பாகத்தை யாளுடைய நாயகி
உண்ணெகிழ் கருணையின் ஒழுக்கம் போன்றது"
(திருநாட்டுச் - 6)

எனவரும் செய்யுளாகும். குளிர்ந்த நன்னீரையுடைய காவிரியாறு, நறுமணம் பொருந்திய மலர்களையும்

நன்னீரையும் கொண்டு தன் செம்பொன்மயமான இரு கரைகளிலும் அமைந்த எண்ணில்லாத சிவாலயங்களிலே இறைவனை இறைஞ்சிச் செல்லுதலால் ஈசனுக்கு அன்புடைய சிவனடியார்களையும் ஒத்து விளங்குகின்றது என்பார்,

"வம்புலா மலர் நீரால் வழிபட்டுச்
செம்பொன் வார்கரை யெண்ணில் சிவாலயத்
தெம்பிரானை யிறைஞ்சலின் ஈர்ம்பொன்னி
உம்பர் நாயகற் கன்பரும் ஒக்குமால்" (திருநாட்டுச் – 7)

என ஏதுவுவமை என்னும் அணிநலம் பொருந்தக் கூறினர். காவிரியின் புது வெள்ளப் பெருக்கினைக் கூறுமிடத்து, ஒளிமிக்க அப்பொன்னி நதியின் நன்னீர் தெளிவின்றிக் கலங்கி வருதற்குரிய காரணம் கூறுவாராய்,

"வாசநீர் குடைமங்கையர் கொங்கையிற்
பூசு குங்குமமும் புனை சாந்தமும்
வீசு தெண்டிரை மீதழிந் தோடு நீர்
தேசுடைத் தெனினுந் தெளிவில்லதே" (திருநாட்டுச் – 8)

என அந்நீரின் இயல்பினை இனிது புலப்படுத்தியுள்ளார்.

காவிரியாற்றின் வருகையை எழில்பெறப் புனைந்துரைக்கும் முறையில்,

"மருங்கு வண்டு சிறந்தார்ப்ப மணிப்பூவாடையது போர்த்துக்
கருங் கயற்கண் விழித்தொல்கி நடந்தாய் வாழி காவேரி"
(சிலப் – கானல்வரி – 25)

என இளங்கோவடிகள் காவிரியை வாழ்த்துகின்றார். இதனை நினைவு கூரும் முறையில்,

"மாவிரைத் தெழுந்தார்ப்ப வரைதரு
பூவிரித்த புதுப் புனல் பொங்கிட
வாவியிற் பொலி நாடு வளந்தரக்
காவிரிப் புனல் கால் பரந்தோடுமால்" (திருநாட்டுச் – 9)

எனச் சேக்கிழாரடிகள் காவிரிப் புதுப் புனல் வெள்ளத்தைக் குறித்துள்ளார். காவிரியிற் புதுப்புனல் வரக் கண்ட உழவர்களின் ஆரவார ஓசையினையும் அப்புனல் மதகின் வழியாகப் புகுந்து பாய்வதன் ஓசையினையும்,

"உழவரோதை மத கோதை யுடைநீரோதை தண்பதங்கொள்
விழவரோதை சிறந்தார்ப்ப நடந்தாய் வாழி காவேரி"
(சிலப் – கானல் வரி – 4)

எனவரும் வரிப்பாடலில் இளங்கோவடிகள் குறித்துள்ளார் இவ்வரிப் பாடலையுளங் கொண்ட சேக்கிழாரடிகள்,

" ஒண்டு றைத்தலை மாமத கூடுபோய்
மண்டு நீள் வயலிற்புக வந்தெதிர்
கொண்ட மள்ளர் குரைத்த கையோசை போய்
அண்டர் வானத்தின் அப்புறஞ்சாருமால் " (திருநாட்டுச்-10)

எனக் காவிரிப் புதுப்புனல் வருகையினை எதிர் கொண்ட உழவரது ஆரவாரத்தைச் சிறப்பித்துரைத்த திறம் உணர்ந்து மகிழத்தக்கதாகும்.

சோழ நாட்டின் சிறப்பினை விரித்துரைக்கத் தொடங்கிய அருண்மொழித்தேவர், அந்நாட்டினை வளர்க்குந் தாயாகிய காவிரியின் இயல்பினை இப் படலத்தின் முதற்பத்துப் பாடல்களிற் சிறப்பித்துப் போற்றியுள்ளார்.

இனி, பொன்னி நன்னீரால் நற்பயன் விளைக்கும் உழவர்களின் தொழில் முயற்சியினையும் அவர்தம் முயற்சிக்கு மேலாகப் பயன்தரும் அந்நாட்டின் வளத்தினையும் இப்படலத்தில் 11 முதல் 20 முடியவுள்ள பத்துச் செய்யுட்களில் ஆசிரியர் விரித்துக்கூறியுள்ளார். அழகிய நாற்றுக்களைப் பறிப்பவர் மாண்பும், அந்நாற்று முடிகளை நீரிற் சேர்ப்பவர்களது செய்கையும், ஆரவாரம் உடையராய் வயலை உழுபவர்களது வரிசையும் காண்பார்க்கு மேன்மேலும் அன்பினை விளைக்கும் தோற்றப் பொலிவினையுடையனவாக எங்கும் காணப்பட்டன என்பார்,

' மாதர் நாறு பறிப்பவர் மாட்சியும்
சீத நீர்முடி சேர்ப்பவர் செய்கையும்
ஓதையார்செய் யுழுநர் ஒழுக்கமும்
காதல் செய்வதோர் காட்சி மலிந்தவே '

என்கிறார். நாறு—நாற்று. செய்—வயல். நாறு பறித்தல், முடிசேர்த்தல், செய் உழுதல் என்னும் இத்தொழில்கள் இவைபோன்று,

' மெய்ம்மையாம் உழவைச் செய்து விருப்பெனும் வித்தை
பொய்ம்மையாங் களையை வாங்கிப் பொறையெனும் [வித்திப் நீரைப்பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக் கண்டு தகவெனும் வேலியிட்டுச்
செம்மையுள் நிற்ப ராகிற் சிவகதி விளையுமன்றே ' (4-76-2.)

எனத் தொண்டவுழவர் செய்யும் ஞானவுழவின் நன் முயற்சியினை நினைவுபடுத்தி, இறைவனிடத்து ஆருயிர்கள் காதல் செய்வதோர் மெய்யுணர்வினை வழங்கும் நிலையில் அமைந்தன என்பார், 'காதல் செய்வதோர் காட்சி மலிந்தவே' என்றார்.

'வேந்தன் மேய தீம்புனலுலகம்' என மருத நிலத்துக்குத் தெய்வமாக இந்திரனைக் குறிப்பிடுவர் தொல்காப்பியர். மருதவளம் நிறைந்த சோழநாட்டின் தலைநகராகிய காவிரிப்பூம் பட்டினத்தில் மருதநிலத் தெய்வமாகிய இந்திரனுக்குத் திருவிழா நிகழ்ந்த சிறப்பினைச் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் விரித்துரைக் கின்றன. பண்டைநாளில் மருதநிலத்தில் நிகழ்ந்த இந்திர வழிபாட்டின் இயல்பினையுணர்ந்த சேக்கிழாரடிகள்,

'இந்திர தெய்வதம், தொழுது நாறு நடுவார் தொகுதியே,
பழுதில் காவிரிநாட்டின் பரப்பெலாம்'

என அந்நிலக் கருப்பொருள்களுள் ஒன்றாகிய தெய்வத் தினைக் குறித்துள்ளமை இங்கு நினைக்கத் தகுவதாகும்.

நெற்பயிர்கள் வளர்ந்து முற்றிய திறத்தினைச் சொல்ல வந்த திருத்தக்கதேவர்,

'சொல்லருஞ் சூற்பசும் பாம்பின் தோற்றம் போல்
மெல்லவே கருவிருந் தீன்று மேலலார்
செல்வமே போற்றலை நிறுவித் தேர்ந்த நூற்
கல்விசேர் மாந்தரி னிறைஞ்சிக் காய்த்தவே; (சீவக-53)

எனவரும் செய்யுளில் உவமைவாயிலாக இனிது விளக்கி யுள்ளார். இவ்வாறு திருத்தக்கதேவர் நெற்பயிர் வளர்ச்சிக்கு உலகியல் நெறிபற்றி உவமை கூறினாராக, அருண்மொழித் தேவராகிய சேக்கிழாரடிகள் நிலவுமெய்ந் நெறியாகிய சிவநெறிபற்றி உவமங்காட்டி விளக்கும் முறையில் அமைந்தன,

'சாலிநீள் வயலின் ஓங்கித் தந்நிக ரின்றிமிக்கு
வாலிதாம் வெண்மை உண்மைக் கருவினும் வளத்தவாகிச்
சூல்முதிர் பசலைகொண்டு சுருள்விரித்தரனுக் கன்பர்
ஆலின சிந்தைபோல அலர்ந்தனகதிர்களெல்லாம்'

'பத்தியின் பாலராகிப் பரமனுக் காளாம் அன்பர்
தத்தமிற் கூடினார்கள் தலையினால் வணங்கு மாபோல்
மொய்த்தநீள் பத்தியின்பால் முதிர்தலை வணங்கி மற்றை
வித்தகர் தன்மைபோல விளைந்தன சாலியெல்லாம்'

எனவரும் செய்யுட்களாகும். ''நெற்பயிர்கள் நீண்ட வயலிடத்தே ஓங்கி வளர்ந்து, தமக்கு ஒப்பில்லாமல் மிகுந்து, தூய வெள்ளிய உண்மைக் கருவின் வளத்தை யுடையனவாகிப் பின்னர்க் கருமுதிர்வதனால் பசலைநிறம் அடைந்து இலையாகிய சுருளைவிரித்துச் சிவபெருமானுக்கு அன்பராயினாரது விரிந்த மனத்தினையொத்துக் கதிர்க ளெல்லாம் விரியப்பெற்றன. இறைவன்பாற் செலுத்தும் பேரன்பாகிய பத்திநெறியின் வழிப்பட்டவராய் இறை வனுக்கு ஆட்பட்ட அன்புடைய அடியார்கள் தாங்கள் ஒருங்கு எதிர்ப்பட்டபொழுது ஒருவர்க்கொருவர் தாளில் தலைபொருந்த வீழ்ந்து வணங்குவது போன்று, செறிந்து நீண்ட வரிசைகளிலே இனிய பால் ஊறி முதிர்ந்த கதிர்களாகிய தலைகளைத் தாழ்த்தி, அந்தச் சிவஞானிகளின் பால் சிவபோகமாகிய பேரின்பம் விளைவது போன்று நெற்கதிர்களெல்லாம் முதிர்ந்து போகம் விளைந்தன என்பது இச்செய்யுட்களின் பொருளாகும்.

சோழநாட்டு உழவர்கள், நெல்லையும் மீனையும் முத்தினையும் மலரினையும் மலைகள் போற்குவித்த திறத்தினையும், நெற்போர்மலையை முகடு சாய்த்துக் கரிய எருமைகளைக் கொண்டு மிதித்துச் சூழச்செய்தலையும், வைக்கோலைப் பிரித்தெடுத்து வேறிடத்திற்போக்கி நெல்லைத்தூற்றிப் பொன்மலையும் நவமணிக்குன்றுகளும் போன்று குவித்துள்ளமையால் அந்நாடு நிறைந்த மலைகளைத் தன்பாற் கொண்ட குறிஞ்சிநிலம் போன்று திகழும் காட்சியையும் ஆசிரியர் இப்படலத்தில் 23 முதல் 25 முடியவுள்ள செய்யுட்களில் புனைந்துரைத்துள்ளமை படித்து இன்புறத்தகுவதாகும்.

சோழநாட்டுக் குடிமக்களின் அரசியல் மாண்பினையும் அறத்தின்வழி யொழுகும் அவர்தம் வாழ்க்கை முறை யினையும செல்வ வளததையும்,

> 'அரசுகொள் கடன்க ளாற்றி மிகுதிகொண் டறங்கள் பேணிப்
> பரவருங் கடவுட் போற்றிக் குரவரும் விருந்தும் பண்பின்
> விரவிய கிளையுந்தாங்கி விளங்கிய குடிகள் ஓங்கி
> வரைபுரை மாடம் நீடி மலர்ந்துள பதிகள் எங்கும்'

எனவரும் செய்யுளில் அழகுறப் புலப்படுத்தியுள்ளார். தமது நன்முயற்சியால் விளைந்த நெல்லில் அரசர்க்குச்

செலுத்தவேண்டிய ஆறிலொன்ருகிய கடமையினை முதற்கண் செலுத்தி, எஞ்சியவற்றைக்கொண்டு செய்யத் தகுந்த நல்லறங்களை விரும்பிச் செய்து, பரவி வழிபடுதற்குரிய அருமைவாய்ந்த கடவுட் பூசனையினைப் போற்றிச் செய்து, தம்குலத்து முன்னேர்களையும் விருந்தினரையும் நற்பண்புடன் கூடிய சுற்றத்தார்களையும் பாதுகாத்துப் புகழால் விளக்கமுற்று வாழும் குடிமக்களால் நிரம்பப்பெற்று மலைபோன்று உயர்ந்த மாடமாளிகைகள் சோழநாட்டு ஊர்கள்தோறும் தொடர்ந்து நிலைபெற்று உள்ளன என்பது இச்செய்யுளின் பொருளாகும். இச் செய்யுள்,

> 'தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்ருங்
> கைம்புலத்தா றேம்பல் தலை'

எனவரும் திருக்குறளுக்கு விரிவுரைபோன்று அமைந் துள்ளமை காணலாம். உலகியலில் மக்கள் வாழ்க்கை செவ்விதின் நிகழ்தற்கு அரணுயமைந்தது அரசியல் நெறியாகும். எனவே அந்நெறிமுறையினைப் பேணிக் காக்கும் அரசர்க்குரிய கடமையினை ஆற்றுதல் குடிமக்களது முதற்கடமை என்பார், 'அரசுகொள்கடன்கள் ஆற்றி' என அதனை முதலாவதாகக் குறித்தார். கடவுள்–தெய்வம் குரவர்–தம் குடியின் முன்னேர். விருந்து–விருந்தினர். கிளை–சுற்றத்தார். தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல், தான் என்னும் ஐந்திற்கும் ஐந்துகூறு வேண்டுதலால் அரசர்க்குத் தருதற்குரிய வரிப்பொருள் ஆறில் ஒன்ருயிற்று என்னும் உண்மையினைப் புலப்படுத்தும் நிலையில் சேக்கிழாரடிகள் இச்செய்யுளை அமைத்துள்ளமை உணர்ந்து மகிழத்தகுவதாகும்.

சோழநாட் டூர்களின் உள்ளேயுள்ள மாடங்களிலும் புறத்தேயுள்ள சோலைகளிலும் மிக்குச் சூழ்ந்துள்ள புகைகளின் திறத்தால் அந்நாட்டுக் குடிமக்களின் அறம் பொருளின்பச் சிறப்பினையும் அவற்றுக்குக் காரணமாகிய வான் சிறப்பினையும் வகுத்துரைப்பதாக அமைந்தது,

> "கரும்படு களம ராலைக் கமழ்நறும் புகையோ மாதர்
> சுரும்பெழ வகிலா லிட்ட தூபமோ யூப வேள்விப்
> பெரும்பெயர்ச் சாலை தோறும் பிறங்கிய புகையோ வானின்
> வருங்கரு முகிலோ சூழ்வ மாடமுங் காவு மெங்கும்"

என்ற செய்யுளாகும். உழவர்கள் கருப்பஞ்சாற்றினைக் காய்ச்சுதலால் கரும்பாலைகளிலிருந்து எழும் நறிய புகையோ அன்றி மாதர்கள் தம் கூந்தலிலணிந்த மலர் களில் மொய்த்துள்ள வண்டுகள் மேலெழும்படி அகிலைக் கொண்டு புகைத்துள்ள நறுமணப் புகையோ தூணங்களை யுடைய வேள்விச்சாலைதோறும் பெரும்பொருளாகிய இறைவனை நோக்கிச் செய்யும் வேள்வியிற் பிறங்கிய புகையோ அன்றி வானத்தே எழுந்த கரிய மேகத்தின் கூட்டமோ மாடங்களிலும் சோலைகளிலும் மிக்குச் சூழ்ந்துள்ளவை இவையெனப் பிரித்துணர வொண்ணாத வாறு அமைந்துள்ளன என்பது இச்செய்யுளின் பொரு ளாகும்.

ஆலைக் கமழ்நறும் புகை உழவர்களது பொருள் முயற்சியினையும், மாதர் அகிலால் இட்ட தூபம் இன்ப நுகர்ச்சியையும், வேள்விப் பெரும் பெயர்ச்சாலை தோறும் பிறங்கிய புகை மெய்ப்பொருளை யுணர்ந்து இயற்றும் அறச் செயலினையும், வானின் வரும் கருமுகில் இவ்வுறுதிப் பொருட்குக் காரணமாய் இறைவனது அருளெனப் பொருந்திய வான்சிறப்பினையும் இனிது புலப்படுத்தும் முறையில் அமைந்துள்ளமை உணர்ந்து மகிழத்தகு வதாகும். இவ்வாறே மதுரைநகர மாந்தரின் அறம் பொருளின்பத்தொடு பொருந்திய இனிய வாழ்க்கை வளத்தினை,

“அட்டிற் புகையும் அகல் அங்காடி
முட்டாக் கூவியர் மோதகப் புகையும்
மைந்தரும் மகளிரும் மாடத் தெடுத்த
அந்தீம் புகையும் ஆகுதிப் புகையும்” (சிலப்—புறஞ்சேரி 122 – 125)

எனப் பல்வேறு பூம்புகையால் இளங்கோவடிகள் புலப் படுத்தியுள்ளமை இங்கு ஒப்புநோக்கி யுணர்தற்பாலதாகும்.

சோழ நாட்டிலுள்ள இளமரச் சோலைகளில் நாளி கேரம் செருந்தி, சூத பாடலம் முதலிய மரங்கள் எழில் பெறச் செறிந்துள்ளன. எங்குபார்த்தாலும் மங்கல வினைகளும் மணஞ்செய் கம்பலைகளும் நிரம்பியுள்ளன. அந்நாட்டு மங்கையர்கள் மலர்ந்த முகமும் இன்சொல்லும் சிறந்த அணிநலங்களுமுடையவராய்ச் செல்வ வாழ்வு

வாழ்கின்றனர். நாடெங்கும் வேத முழக்கமும் வேள்விச் சடங்குகளும் யோகமும் தவமும் போகமும் பொலிவு பெற்று விளங்குகின்றன: யாழும் குழலும் ஆகியவற்றின் இன்னிசையும் வேதியர் வேத ஓசையும் எங்கும் மிக்குத் தோன்றுகின்றன. மனைகள் தோறும் மகளிர் அம்மனைபயின்று துணைவருடன் மாலையணிந்து மகிழ் கின்றனர். வீதிகள் தோறும் திருவிழா ஆரவாரமும் வீடுகள்தோறும் விருந்தோம்பும் ஆரவாரமும் மிக்குள்ளன. மக்கட் குலத்தார் அனைவரும் தத்தமக்குரிய ஒழுக்க நெறியில் தவருது ஒழுகுகின்றனர். பிள்ளைகள் தாய் சொல்லின் வழி அடங்கி ஒழுகுகின்றனர். பறவைகளும் விலங்குகளும் வேறு நிலத்தை நாடாதனவாய்ப் பகை நீங்கித் தத்தம் வரம்பில் அமைந்து வாழ்கின்றன. நாட்டில் வாழும் நன்மக்கள் இடைவிடாது திருவைந் தெழுத் தோதி இறைவனை வழிபடுமியல்புடையராயிருத் தலால் கொடிய நோய்கள் அந்நாட்டிற்புக அஞ்சி விலக அந்நாட்டவர் அனைவரும் பிணியற்ற நல்வாழ்வுடைய ராய்த் திகழ்கின்றனர் என்னும் இச்சிறப்புக்களை இப் படலத்தில் 28 முதல் 34 வரையுள்ள செய்யுட்களில் ஆசிரியர் இனிது விளக்கியுள்ளார்.

இவ்வாறு, சோழநாடு பசியும் பிணியும் பகையும் இன்றிப் பல்வகை வளங்களைப் பெற்று விளங்குதற்குக் காரணமாயமைந்தது, அந்நாட்டினை ஆளும் சோழ மன்னரது அறத்தொடு பொருந்திய ஆட்சி முறையே என அறிவுறுத்துவார்,

“ நற்றமிழ் வரைப்பின் இங்கு நாம் புகழ் திருநாடென்றும்
பொற்றடந் தோளால் வையம் பொதுக்கடிந் தினிது காக்கும்
கொற்றவன் அநபாயன் பொற் குடைநிழற் குளிர்வ
தென்றல்
மற்றதன் பெருமை நம்மால் வரம்புற விளம்பலாமோ ”

எனத் தம்மை ஆதரித்த அநபாயன் என்னும் சோழ மன்னனது குடை நிழல் மாண்பினை இனிது புலப்படுத்தி இத்திருநாட்டுச் சிறப்பினை ஆசிரியர் நிறைவு செய்கின்றார். செங்கோற் சோழ மன்னரது வெண் கொற்றக் குடைநிழல் திங்களைப் போன்று குளிர்ச்சி தருவதாய்ப் பல்லுயிர்க்கும் தண்ணளி செய்து பாதுகாக்குந் தன்மையது என்பதனை,

"திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றதும்
கொங்கலர் தார்ச் சென்னி குளிர்வெண் குடைபோன்றிவ்
வங்கண் உலகளித்தலான்"

எனத் தாம் இயற்றும் முத்தமிழ்க் காப்பியத்தின் தொடக்கத்திலேயே இனிது புலப்படுத்தியுள்ளமை இங்கு ஒப்பு நோக்கத் தகுவதாகும்.

திருநகரச் சிறப்பு

கயிலைமலையும் சோழநாடும் இத்திருத்தொண்டர் புராணமாகிய காப்பியத்திற்குரிய மலையும் நாடும் ஆகும் என்பது திருமலைச் சிறப்பு, திருநாட்டுச் சிறப்பு என மேற் குறித்த பகுதிகளால் இனிது விளங்கும். முதனூலாகிய திருத்தொண்டத் தொகை அருளிச் செய்யப்பெற்ற திருத் தலமும் சிவனடியார்கள் நிறைந்து வீற்றிருக்கும் சிறப் புடைய தெய்வப் பதியும் திருவாரூரே யாதலின், இக் காப்பியத்திற்குரிய நகரம் திருவாரூர்த் திருநகரேயாயிற்று. திருவாரூர்ச் சிறப்பினை ஐம்பது செய்யுட்களால் ஆசிரியர் விரித்துக் கூறியுள்ளார். திருநாட்டுச் சிறப்பினை அடுத்து அமைந்த இப்பகுதி, திருநகரச்சிறப்பு–திருவாரூர்ச் சிறப்பு–தேரூர்ந்த புராணம், மனுநீதிச் சோழர் புராணம், மனுநீதி கண்ட புராணம் என்ற தலைப்புக்களோடு ஏடுகளிற் குறிக்கப் பெற்றுள்ளது. ஆயினும் திருநகரச் சிறப்பு என்ற தலைப்பே முன்னுள்ள தலைப்புக்களோடு ஒத்ததாக அமைந்துளது.

"சொன்ன நாட்டிடைத் தொன்மையின் மிக்கது
மன்னு மாமல ராள் வழி பட்டது
வன்னி யாறு மதிபொதி செஞ்சடைச்
சென்னியார் திருவாரூர்த் திருநகர்.

என இப்படலத்தின் முதற் செய்யுள் அமைந்திருத்தல் 'திருநகரச் சிறப்பு' என்னும் தலைப்புக்குப் பொருத்த முடையதாதல் காணலாம்.

திருவாரூர் சோழநாட்டுப் பேரூர்களில் மிகவும் தொன்மை வாய்ந்தது என்பது,

"தேசமுமை யறிவதற்கு முன்னே பின்னே
திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே" (6–34–10)

என்றுங்குவரும் திருத்தாண்டகத் தொடர்களால் இனிது புலனும்.

திருவாரூரில் திருமகள் அம்மையப்பரை வழிப்பட்ட செய்தியினை, 'ஓர் மாதோர் பாகம், திருவினுள் சேர்வதற்கு முன்னே பின்னே திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே' (6-34-1) எனவரும் அப்பர் அருள்மொழியால் உய்த்துணர்ந்த ஆசிரியர், 'மன்னு மாமலராள் வழிபட்டது' என்ற தொடரில் அதனைப் பொன்னேபோற் போற்றி யுள்ளார்.

திருப்பாற் கடலில் அறிதுயில் கொள்ளும் திருமாலின் மார்பிலே வீற்றிருந்தருளும் தியாகேசப் பெருமான், இந்திரனது வேண்டுகோட் கிரங்கித் தேவருலகில் எழுந் தருளிப் பின்பு முசுகுந்த மன்னன் பேரன்பிற்கிசைந்தருளி அமரர் நாட்டினின்றும் இத்திருவாரூர்த் திருக்கோயிலுக்கு எழுந்தருளியுள்ளார் என்பது கந்த புராணத்தால் அறியப் படும் பழைய வரலாருகும். இத்தொன்மை வரலாறு,

"பையஞ்சுடர்விடு நாகப் பள்ளிகொள்வா னுள்ளத்தானும்
ஐயஞ்சின் அப்புறத்தானும் ஆரூரமர்ந்த அம்மானே"

எனவும்,

"அயிரா வணமேரு தானே றேறி
அமரர்நாடாளாதே ஆரூராண்ட
அயிராவணமே என்னம்மானே" (6-25-1)

எனவும் வரும் திருநாவுக்கரசர் திருப்பாடல்களில் இடம் பெற்றுள்ளமை இங்கு நினைக்கத் தகுவதாகும்.

வேத வோசையும் வீணையி னோசையும்
சோதி வானவர் தோத்திர வோசையும்
மாத ராடல் மணிமுழ வோசையும்
கீத வோசையுமாய்க் கிளர் வுற்றதே. (திருநகரச்-2)

எனவரும் இரண்டாம் பாடல்,

'கெண்டை கொண்டலர்ந்த கண்ணினர்கள் கீத
வோசைபோய்
அண்டரண்ட மூடறுக்கும் அந்தணரு ரென்பதே' (2-101-2)

எனவரும் ஆளுடைய பிள்ளையார் திருப்பாடற் றெடரை விரித்துரைக்கும் முறையில் அமைந்திருத்தல் காணலாம்.

பல்லியங்கள் பரந்த வொலியுடன்
செல்வ வீதிச் செழுமணித் தேரொலி
மல்லல் யானை யொலியுடன் மாவொலி
எல்லை யின்றி யெழுந்துள வெங்கணும் (திருநகரச்-3)

எனவரும் மூன்றும் பாடல், இங்குச் சொல்லப்பெறும் மனுநீதி கண்ட வரலாற்றின் முற்குறிப்பாக அமைந்துள்ளமை கூர்ந்து நோக்கத் தகுவதாகும்.

மாட மாளிகை சூளிகை மண்டபம்
கூட சாலைகள் கோபுரம் தெற்றிகள்
நீடு சாளர நீடரங் கெங்கணும்
ஆடல் மாதர் அணிசிலம் பார்ப்பன. (திருநகரச்-4)

எனவரும் நான்காஞ் செய்யுள்,

"மாட மாளிகை கோபுரங் கூடங்கள் மணியரங் கணிசாலை
பாடு சூழ்மதிற் பைம்பொன்செய் மண்டபம்" (2-109-7)

எனவரும் ஆளுடை பிள்ளையார் தேவாரத் தொடரை அடியொற்றியமைந்திருத்தல் காணலாம்.

திருநகரச் சிறப்பின் ஐந்தாம் செய்யுளில் 'சம்புவின் பங்கினுள் திருச்சேடிப் பரவையாம் மங்கையார் அவதாரஞ் செய் மாளிகை'யைப் பற்றியும், ஆறுஞ் செய்யுளில், 'வன்றொண்டர்க்குத் தூதுபோய் நடந்த செந்தாமரையடி நாறும்' திருவீதியைப் பற்றியும் ஆசிரியர் சிறப்பாகக் குறித்துள்ளமை, காப்பியத் தலைவராகிய நம்பியாரூரர், நங்கை பரவையார் ஆகிய இருவருடன் இத்திருவாரூர்க்கு அமைந்த தொடர்பினை நினைவுபடுத்துவதாகும்.

திருவாரூர்ப் பெருமான் நம்பியாரூரரது வேண்டுகோட்கிரங்கி நங்கை பரவையாரின் ஊடலைத் தணித்தற் பொருட்டு நள்ளிரவிலே ஒருமுறைக் கிருமுறை தூது நடந்தருளிய திருவருட் செய்தியைக் குறிப்பிடும் முறையில் 'போய் நடந்த' என இருமுறை கூறினார். பின்னுளில் சிறப்புமுறையாக நிகழ்ந்த இந்நிகழ்ச்சிக்கு,

'அணியுடைய நெடுவீதி நடப்பர் போலும்
அணியாரூர்த் திருமூலட்டான னாரே' (6)

எனத் திருவீதியில் திருவுலாப் போந்தருளும் முன்னுளைய பொது நிகழ்ச்சி ஆதரவாக அமைந்திருத்தலும் இங்குக் கருதத் தகுவதாகும்.

"உடந்த செந்தாமரை யுள்ளூறு சோதி
நடந்த செந்தாமரை" (2484)

எனவரும் திருமந்திரத் தொடரை ஆசிரியர் இச்செய்யுளிற் பொருத்தமுற எடுத்தாண்டுள்ளமை காணலாம்.

அன்புடையராய்க் கேட்டோரது உள்ளத்தினையுருக்க வல்ல தேவாரத் திருப்பதிகங்களை ஆர்வமுடன் பயின்று ஓதும் அன்பர்கள் விரும்பியுறையும் சிறப்புடையது திருவாரூர் என்பதனை,

"உள்ள மாருரு காதவ ரூர்விடை
வள்ள லார்திரு வாரூர் மருங்கெலாம்
தெள்ளு மோசைத் திருப்பதி கங்கள்பைங்
கிள்ளை பாடுவ கேட்பன பூவைகள்" (திருநகரச்-8)

எனவரும் செய்யுளில் சேக்கிழாரடிகள் கற்போர் மனங் கசிந்துருக எடுத்துரைத்துள்ளார். இச்செய்யுள்,

'பாரிசையும் பண்டிதர்கள் பன்னாளும் பயின்றோதும்
ஓசைகேட்டு
வேரிமலி பொழிற்கிள்ளை வேதங்கள் பொருட்சொல்லும்
மிழலையாமே' (1-132-1)

எனவும்,

'வேதத்தொலியாற் கிளிசொற் பயிலும் வெண்காடே'
(2-6-2)

எனவும் வரும் திருப்பதிகத் தொடர்ப் பொருளை நினைவு கூரும் முறையில் அமைந்துள்ளமை உணர்ந்து மகிழத் தக்கதாகும். சிவமுயன்றடையும் தெய்வக்கலையினைத் திருத்தமுறப் பயிலுதலே நகர் வாழ்வார்க்குரிய சிறப்பாகும். இச்சிறப்பினை,

'தண்ணென்சோலை யெம்மருங்கும் சாருமடமென்
சாரிகையின்
பண்ணின்கிளவி மணிவாயும் பதிகச் செழுந்தேன்
பொழியுமால்' (பெரிய - முருக - 3)

என முருகநாயனார் புராணத்தில் ஆசிரியர் குறித்துள்ளமை இங்கு நினைக்கத் தக்கதாகும்.

ஒளிதிகழும் அணிகலன்களாலும் பேராரவாரத்தாலும் வழங்கக் குறையாத பண்டங்களின் மிகுதியாலும் திருவாரூரில் உள்ள ஆவண வீதிகள் கடல் போன்று விளங்குதலை,

விளக்க மிக்க கலன்கள் விரவலால்
துளக்கில் பேரொலி யால்துன்னும் பண்டங்கள்
வளத்தொடும்பல வாறு மடுத்தலால்
அளக்கர் போன்றன ஆவண வீதிகள். (திருநகரச் – 9)

எனச் சிலேடையணி பொருந்தக் கூறியுள்ளார்.

பல்வகை விளக்குகளைக் கொண்ட மரக்கலங்களையும் மாற்ற வொண்ணாத பேரொலியினையும் உடைமையும் நிறைந்த பல பண்டங்களையுடைமையும் பல ஆறுகள் கலக்கப்பெறுதலும் கடலுக்கமைந்த இயல்பு. ஒளிதிகழும் அணிகலன்களையுடைமையும் மாருத பேராரவார முடைமையும் உலகிற் பல்வேறிடங்களிலும் நிறைந்த பண்டங்கள் பல்வேறு வழிகளில் வந்து ஒருங்கு நிறைந்துள்ளமையும் திருவாரூர் ஆவண வீதியின் சிறப்பாகும். 'விளக்கமிக்க கலன்கள்' என்ற தொடர் கடலுக்குக் கொள்ளுங்கால் மரக்கலங்களையும், ஆவண வீதிக்குக் கொள்ளுங்கால் ஒளி திகழும் அணிகலன்களையும், 'பலவாறு மடுத்தல்' என்ற தொடர், கடலுக்குக் கொள்ளுங்கால் பல ஆறுகள் வந்து கலத்தலையும், ஆவண வீதிக்குக் கொள்ளுங்கால் பல வழிகளால் வந்து நிறைதலையும் குறிக்கும் முறையில் இச்செய்யுள் செம்மொழிச்சிலேடை என்னும் அணி நலம் பொருந்த அமைந்துள்ளமை அறியத்தகுவதாம்.

திருவாரூரில் செந்தமிழ்ப் பாடல்களேயன்றி நான் மறைகளின் ஒலியும் விடியற்காலத்தே கோழியின் குரலுடன் மாறியொலித்தலை,

"ஆரணங்களே யல்ல மறுகிடை
வாரணங்களும் மாறி முழங்குமால்" (திருநகரச் – 10)

எனவரும் தொடரிற் கூறியுள்ளார். இத்தொடர்,

"நான் மறையோசையல்லது
வாழியும் வஞ்சியுங் கோழியும் போலக்
கோழியின் எழாதெம் பேரூர் துயிலே"

எனவரும் பாடற் பொருளை யுளங்கொண்டு கூறியதுபோல் அமைந்துள்ளது.

ஆறு சமயத் தொண்டர்களும் பிறரும் அன்புடன் உறையும் பல்வேறிடங்களைத் தன்பாற் கொண்டு திகழும் சிறப்புடையது திருவாரூர் என்பதனை,

தாழ்ந்த வேணியர் சைவர் தபோதனர்
வாழ்ந்த சிந்தை முனிவர் மறையவர்
வீழ்ந்த இன்பத் துறையுள் விரவுவார்
சூழ்ந்த பல்வே றிடத்ததத் தொன்னகர். (திருநகரச் - 11)

எனவரும் செய்யுளில் ஆசிரியர் விரித்துக் கூறுவர். இச்செய்யுள்,

"அருமணித்தடம் பூண்முலை யரம்பையரோ டருளிப்பாடியர்
உரிமையிற் றொழுவார் உருத்திர பல்கணத்தார்
விரிசடை விரதிகள் அந்தணர் சைவர் பாசுபதர் காபாலிகள்
தெருவினிற் பொலியுந் திருவாரூரம்மானே" (4-20-3)

எனவரும் அப்பர் தேவாரத்தை அடியொற்றியமைந் துள்ளமை காணலாம்.

நிலமகட்குத் திலகம் ஒப்பது செம்பியர் வாழ்பதி. மலர்மகட்குத் தாமரை போல் மலர்ந்து விளங்குவது திருவாரூர். என இவ்வாறு பன்னிரண்டு செய்யுட்களால் திருவாரூர்ச் சிறப்பினை விரித்துக்கூறிய ஆசிரியர், அந் நகரில் அரசு வீற்றிருந்த மனுச் சோழனது மாண்பினை நான்கு செய்யுட்களில் விரித்துரைக்கின்றார்.

'அன்ன தொன்னகருக்கு அரசாயினன் மனு வேந்தன்; அவன் செங்கதிரோன் வழித்தோன்றினன்; மன்னுசீர் அநபாயன் வழிமுதல்; மண்ணில் வாழ்தரும் மன்னுயிர்கட்கு எலாம் கண்ணும் ஆவியும் ஆம் பெருங் காவலன்; விண்ணுளார் மகிழ்வு எய்திட வேள்விகள் எண்ணிலாதன இயற்றினன்; செற்றம் நீக்கிய செம்மையின் மெய்ம்மனுப் பெற்ற நீதியும் தன்பெயராக் கினன்; புற்றிடங் கொண்டவர் பூசனைக்கு ஆகமம் சொன்ன முறைமையால் அங்கண் வேண்டும் நிபந்தம் ஆராய்ந்துளான்' எனத் திருவாரூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த மனுச்சோழனது மாண்பினை ஆசிரியர் தொகுத்துக் கூறியுள்ளார்.

நாட்டின் ஒழுகலாற்றிற்கு இன்றியமையாத வேந்தனை உலகத்திற்கு உயிராகக் கூறுதல் பழைய தமிழ் மரபு. 'மன்னனுயிர்த்தே மலர் தலையுலகம்' என்பது புற நானூற்றுத் தொடர். இறைவன் கண்ணொளியும் ஆன்ம போதமும் போல உயிருடன் கலந்து நின்று நல்லனவும் தீயனவும் இவை யெனக்காட்டி நல்வழிப் படுத்துவது

போன்று, நாட்டின் ஆட்சித்தலைவனாகிய மன்னனும் தன்னாட்டில் வாழும் குடிமக்களுக்கு நன்மை தீமைகள் இவையெனக் காட்டி நன்னெறிப் படுத்துந் திறத்தில் குடிமக்களுக்குக் கண் போன்று உதவி செய்பவன் என்பார்,

'மண்ணில் வாழ்தரும் மன்னுயிர்கட்கெலாம்
கண்ணும் ஆவியும் ஆம் பெருங்காவலன்'

என்றார். பழைய மனு என்னும் வேந்தன் அறிவுறுத்திய அரசியல் நெறியானது, பிற்காலத்தில் வழங்கிய ஒரு குலத்துக்கொரு நீதியாகாது விருப்பு வெறுப்பின்றி எல்லா மக்களுக்கும் ஒத்த பொதுவறமாகத் திகழுந்தன்மைய தெனவும், அத்தகைய தொன்மை நீதியினையே மனுச் சோழன் தன்னாட்சிக்குரியதாகக் கடைப்பிடித்தொழுகினமையால் அத்தொன்மை வாய்ந்த மனுமுறை இம்மனுச் சோழன் பெயருடன் இணைத்து வழங்கப் பெறுவதாயிற்று எனவும் விளக்குவார்,

'செற்றம் நீக்கிய செம்மையின் மெய்ம்மனுப்
பெற்ற நீதியும் தன்பெயராக்கினான்'

என்றார்.

"மனுதருமசாத்திரம் அக்காலத்துக்கு ஏற்ப வகுக்கப் பெற்றது. ஆகலின் இந்நாளில பலரும் மயங்கியறிவது போல அது கொண்டு செற்றமும் பூசலும் விளைத்தல் பொருந்தாது என்க. 'செற்ற நீக்கிய செம்மை' என்றும், 'மெய்ம்மனு' என்றும் கூறிய குறிப்புக்கள் ஆசிரியரது தெய்வ வாக்காதலால், அவை இந்நாளில் விளையும் மனுவைப் பற்றிய போரட்டங்களை விலக்கவே எழுந்தன போலவும் தொனிக்கின்றன. தன் பெயராக்கினான் - முன் மனு அரசன் செலுத்திய நீதி ஆட்சியைப் போலவே இவ்வேந்தனும் செலுத்தியதனால் அப்பெயருடன் சேர்த்துச் சொல்லப் பெற்றான். இக்காலத்துக்கு முன் சொல்லிய அத்தரும சாத்திரம் ஏலாதென்று காலத்திற் கேற்பப் பராசரர் சுமிருதி வகுத்தார் என்றும், அதனாலே 'கலௌ பராசர' என விதித்தனரென்றும் கூறுவர். மனு - எல்லோராலும் நினைக்கத்தக்கவன்; நினைக்க வேண்டிய வற்றையே நினைப்பவன் என்பன பொருளாம்" எனச் சிவக்கவிமணியவர்கள் கூறிய விளக்கம் இங்கு எண்ணத் தகுவதாகும்.

மனுச்சோழன் அறம் பொருள் இன்பம் என்ற இவற்றை அறநெறியில் வழுவாது மேற்கொண்டு அறத்திற்கு மாருன தீயனவற்றை விலக்கி அரசர்கள் போற்ற ஆட்சி புரியும் நாளில் அவனது முன்னைத் தவத்தின் பயனுக அவனது பட்டத்தரசியின் வயிற்றில் இளஞ்சிங்கம்போல் வானுகிய மைந்தனெருவன் பிறந்தான். தவப்பயனுகத் தோன்றிய அப்புதல்வன் சிவபரம்பொருளைச் சிந்தித்து அடைதற்குரிய தெய்வக்கலைகள் பலவற்றையும் திருத்தமுறப் பயின்று போரில் குதிரை, யானை, தேர், படை ஆகியவற்றை நடத்துதலாகிய தொழிற் கல்வியும் கற்றுத் தேர்ந்து இப்பிறவியைப் பெற்றதும் வீட்டின்பமாகிய பெரும் பேறேயாயிற்று என்று பாராட்டும் தன்மையுடையனுக வளர்ந்து வந்தான். எல்லையில்லாத பழமையான கலைகளில் நிரம்பிப் பெறலருந் தந்தையுளமகிழ, உயர்ந்த நற்குணங்களை யுடையவனுகி இளரவசு என்னும் பதவியை அடைதற்குரிய பக்குவமுடையவனுக வளர் இளம் பருதிபோன்று விளங்கினுன். அம்மைந்தன், ஒரு நாள், அரசர் மாளிகையினின்றும் புறப்பட்டு அரசகுமரர்களும் சேனைகளும் தன்னைச் சூழ்ந்துவரத் தேரில் ஏறி அரச வீதியில் உலாப் போந்தான் அங்ஙனம் செல்லும்பொழுது வீதியிலே ஒரு பசுக்கன்று துள்ளிக்கொண்டு குறுக்கே போய் அவனது தேர்க்காலின் அடியில் அகப்பட்டு இறந்தது. அதுகண்டு நெஞ்சம் நெக்குருகிய அக்கன்றின் தாய்ப்பசு மனம் வெதும்பிற்று ; அலறிற்று ; தளர்ந்து மெய் நடுக்கமுற்று வீழ்ந்தது. அத்துயர நிகழ்ச்சியைக் கண்ணுற்ற அரசகுமரன் ' இங்கு அபாயம் வந்ததே ' என்று உரை தடுமாறி மனத்துயரங்கொண்டு அறிவு கலங்கி 'பசுவும் கன்றும் இன்று எனது உணர்வாகிய பெருமை யழிந்தொழியச் சிதைத்தன. இனி என் செய்கேன் ' என்று தேரினின்றும் இறங்கி விழுந்தான். அவ்வாறு விழுந்த அரச குமரன், கன்றையிழந்து அலறும் தாய்ப்பசுவை நோக்கி உயிர் பதைபதைத்துச் சோர்வான் ; நிலத்தில் இறந்து கிடக்கின்ற கன்றை நோக்கிப் பெருமூச்சுவிட்டு நிற்பான் ; ' மன்னுயிரனைத்தையும் தன்னுயிரெனப் பேணிக் காக்கும் மனு என்னும் என் தந்தைக்கு உலகத்தில் இத்தகைய பெரும் பழி வந்து அடையும்படி நானெருவன் மைந்தனுகப் பிறந்தது எத்தகைய தீவினையோ ' என

உளங்கவல்வான்; எதிர்பாராத நிலையில் ஏற்பட்ட இப் பழியினை மாற்றும் வகையை மறைகளைக் கற்று வல்ல அந்தணர்கள் விதித்த வண்ணம் செய்வது அறநெறியா யிருக்குமானால் என்னுடைய தந்தை இதனை அறிதற்கு முன்னமே இக்கொலைப் பாவத்திற்குரிய கழுவாயைச் செய்து முடிப்பேன்' என்று துணிந்து மறையுணர்ந்த அந்தணர் முன்னே சென்றான்.

தன் கன்றையிழந்து வருந்திய தாய்ப்பசு, அத்துயரத் தைப் பொருது பெருமூச்செறிந்து விம்மி முகத்திற் கண்ணீர் வழிய, மன்னுயிர் காக்கும் மனுச்சோழனது அரண்மனை வாயிலையடைந்து அவ்வாயிலிற் கட்டப் பெற்றிருந்த மணியினைத் தன் கொம்பினால் அசைத்து அடித்தது. பழிப்பறை முழக்கம்போலவும் பாவத்தின் ஆரவாரம் போலும் மறலியூர்தியின் கழுத்தின் அணியிலணி யப்பட்ட மணியின் ஓசை போலவும் தோன்றிய அந்த மணியின் ஒலியைக் கேட்ட மன்னன், அரியணையினின்றும் விரைந்திறங்கி அரண்மனை வாயிலை அடைந்தபொழுது, வாயில் காவலர் எதிரே வந்து வணங்கி, 'அரசே! இங்கே ஒரு பசு வந்து நின்வாயிலில் தொங்கிய மணியினைத் தன் கொம்பினாற் புடைத்தது' என்றனர். அரசன், காவலாளர் கூறியதைக் கேட்டு, தன் முன்னர் வருந்தி நின்ற பசுவை நோக்கி, 'இப்பசுவிற்கு என்ன துன்பம் நேர்ந்தது?' என வினவும் முறையில் அமைச்சரை இகழ்ச்சியுடன் நோக்கினான். அந்நிலையில் முன்னர் நிகழ்ந்தன எல்லாவற்றை யும் அறிந்தவனாகிய அமைச்சனொருவன், அரசனடிகளை வணங்கி நின்று, 'அரசே! நின்மைந்தன் மணிகள் கட்டிய அழகிய தேர்மீதேறியமர்ந்து அளவில்லாத தேர்ப்படைகள் தன்னைச் சூழ்ந்துவர' அரசர் உலாவரும் பெரு வீதியிலே உலாப் போகுங்காலத்து இளைய பசுக்கன்று தேர்க்காலி னுள்ளே புகுந்து இறந்துபட்டதாக, அது கண்டு தளர்ந்த தாய்ப் பசுவாகிய இது, இங்கே வந்து இத்தன்மையைச் செய்தது' என்று விண்ணப்பஞ் செய்தான். அம்மொழி யினைச் செவிமடுத்த மன்னன் கன்றையிழந்த அப்பசு அடையும் துயரத்தைத் தான் மேற்கொண்டு கொடிய நஞ்சு தலைக்கேறினாற்போலும் பெருந்துன்பம் மிகுந்து இத்தீ வினை விளைந்தவாறு என்னே என்று இரங்கி ஏங்கி, 'என் செங்கோல் முறைமை மிகவும் நேர்மையுடையது' என்

பான்; 'இது யாது செய்தால் தீரும்' என்பான்; 'நிலை பெற்ற உயிர்களையெல்லாம் இடர்நீக்கிப் பாதுகாத்து அறத்தின் வழியிலே நிகழ்ந்த எனது அரசாட்சி மிகவும் நன்று' என்பான்; (பசுவின் துயராகிய) இது என்ன செய்தால் தீரும் என்பான்; தன்னுடைய இளங்கன்றினைக் காணாத தாய்ப்பசுவைப் பார்த்துச் சோர்வடைவான். இவ்வாறு அந்நிலையில் அரசன் உற்ற துன்பம் ஓர் எல்லை யுட்படாததாயிற்று.

மந்திரிகள், மன்னனது துயர மிகுதியைக் கண்ணுற்று மன்னனை வணங்கி, 'அரசே! சிந்தை தளர்ந்து வருந்துவது இதற்குத் தீர்வாகாது. பசுவதை செய்தார்க்கு மறை நூலந்தணர்கள் விதித்த வழியே நின்மைந்தனை முறை செய்வது அறமாகும்' என்றனர். அதுகேட்ட மனுச் சோழன், மந்திரிகளைப் பார்த்து, 'நீங்கள் மறைமுறைப் படி கழுவாய் தேடுதலே அறத்தொடுபட்ட வழக்கு என்று கூறுவீராயின், மறை விதிப்படி செய்யும் அக் கழுவாய் இளங்கன்றை இழந்து வருந்தும் பசுவின் துயரத்தைப் போக்குதற்குரிய மருந்தாகுமோ? நான் என் மைந்தனை இழக்க இருக்கின்றேன் என்ற நிலையில் நீங்கள் எல்லீரும் ஒன்று பட்டுரைத்த இப்பிழையுரைக்கு உடன்பட்டுத் தீர்வு காண்பேனுல் அறக்கடவுள் என் செயல் குறித்து வெறுப்புருதோ? பெருநிலப்பரப்பினைக் காவல் புரியும் மன்னன் என்பவன், தன் ஆட்சிக்குட்பட்ட உயிர்களைக் காக்குங்கால், அவ்வுயிர்களுக்கு அரசனுகிய தன்னுலும் தன்னுடைய சுற்றத்தாராலும் குற்றம் மிக்க பகைவர்களாலும் கள்வர்களாலும் பிற உயிரினங்களாலும் உண்டாகும் ஐவகை அச்சங்களையும் போக்கி இடையூறு நீக்கி அறத்தின் வழியே காக்கும் கடமையுடையவன் அல்லனே? அரசனுகிய யான், என் மைந்தன் செய்த கொலைக்குற்றத்திற்குக் கழுவாயாகப் பெரிய தவச்செயல்களைச் செய்ய உடன்பட்டு, எனது நாட்டில் அயலானொருவன் ஒருயிரைக் கொன்ருல் அவனுக்குக் கொலைத் தண்டம் விதிப்பேனுயின், 'தொன்று தொட்டு நிலைபெற்று வந்த மனுவின் அறநெறி, மனு என்னும் பெயருடைய சோழனுல் அறவே அழிக்கப்பட்டது' என்ற பழிச்சொல்லை நிலைபெற்ற இவ்வுலகில் யான் பெறும் நிலையில் மந்திரிகளாகிய நீங்கள் வழக்கின் நிலையினை எனக்கு எடுத்துரைத்தீர்கள்' என்று இகழ்ந்து கூறினுன்.

அதுகேட்டு எதிர்நின்ற மதிநூல் வல்ல அமைச்சர்கள், 'தொன்மையுடையதாய் நிலைபெற்றுவரும் நாட்டினை ஆளும் வேந்தர் பெருமானே! நிலைபெற்றுள்ள இந்நீதி முறையினையொட்டிய வழக்கு உலகத்தில் இதுபோல் முன்பு நிகழ்ந்துள்ளது. ஆகவே இதற்காக அரசகுமரனைக் கொல்வித்தல் முறையாகாது' எனக்கூறினர்.

அறத்தின் மெய்ம்மைத்தன்மையினை நன்குணர்ந்த மனுச்சோழன், அவ்வாறு தொழுதுரைத்த அமைச்சர்களை வெகுண்டு நோக்கி, 'அறமே கூறும் நாவினையுடைய அமைச்சராகிய நீவிர் இவ்வாறு அறத்திற்கு மாறான மொழியினையும் சொல்லத் துணிந்தீர். வேத வழிப்பட்ட மிருதி நூல்களிற் சொல்லப்பட்டு வரும் விதிகள் ஒருபுறம் கிடக்க, அறநெறியின் செம்மை வழிப்பட்ட உண்மை நிலையினை நீங்கள் சிந்தித்துணராது பேசுகின்றீர்கள். எந்த உலகத்தில் எந்தப் பசு இத்தகைய கன்றையிழந்த துன்பத்தினால் வெதும்பிப் பெருமூச்சு விட்டுக் கதறிக்கொண்டு சென்று அரசரது வாயிலிற் கட்டப்பெற்றிருந்த மணியினை அடித்துத் தளர்ந்து வீழ்ந்தது? இதனை ஆராய்ந்து சொல்லுங்கள். அன்றியும், இந்திரன் மால் பிரமன் முதலிய தேவர்கள் போற்றிப் புகழ்ந்திறைஞ்ச வீற்றிருந்தருளும் தியாகேசப் பெருமான் விரும்பிக் கோயில்கொண்டருளிய திருவாரூரிலே பிறந்த சிறப்புடைய நல்லுயிரை எனது மைந்தன் கொன்றான் ஆதலால் அவனைக் கொல்வதே இங்குத் துணிதற்குரிய வினையாகும் என நினைமின்' என்று கூறினான். 'என் மைந்தன் செய்த கொலைக் குற்றத்துக்கு இதுவே தக்க தண்டனையாகும். இப்பசு மனம் வருந்தும் பெருந்துயரத்தை நீக்க முடியாத யான் வருந்தும் அளவில் நில்லாது இப்பசு உற்ற துன்பத்தை யானும் மேற்கொண்டு வருந்துதலே என்னாற் செய்தற்குரிய செயலாகும்' என்று எண்ணிய மனுச் சோழன், எவ்விடத்தும் எக்காலத்தும் எவராலும் செய்தற்கரிய செய்கையைச் செய்யத் துணிந்தான். அதனையுணர்ந்த அமைச்சர்களும் அவன் முன் நிற்றற்கு அஞ்சி அவ்விடத்தை விட்டு அகன்றார்கள்.

பின்னர் மனுச்சோழன், தன் மைந்தனை அங்கு அழைத்துவரச் செய்து, அமைச்சனொருவனை நோக்கி, 'புதல்வனாகிய இவனை அந்த வீதியிலேயே தேர்க்காலின்

கீழ்க் கிடத்தித் தேரை இவன் மீது செலுத்துக' எனப் பணித்தனன். அதனை நிறைவேற்றவொண்ணாத நிலையின னாகிய அமைச்சன் அவ்விடத்தைவிட்டு அகன்று தனது இன்னுயிரைத் துறந்தான். அதனையுணர்ந்த மனுச் சோழன், தன் குலத்துக்கு ஒருமகனாகத் தான் பெற்ற மைந்தனைத் தானே அழைத்துக்கொண்டு அவ்வீதியினை அடைந்தான். தன்னுடைய குலத்துக்கு ஒரே மைந்தனாக இவன் உள்ளான் என்பதனையும் மனங்கொள்ளாது அறத் தின் வழிச் செல்லுதலே தனது கடமையென்று உணர்ந்து, தன் மகனது மார்பின்கண்ணே தேர்ச்சக்கரம் பொருந்தும் படி அவன்மீது தேரைச் செலுத்தினான் மனுவேந்தன். உலகிற்கு அருமருந்து போன்ற அரசாட்சி என்பது யாவ ராலும் மேற்கொண்டு நிகழ்த்துதற்கேற்ற எளிமையுடை யதோ ? அருமையுடையதல்லவோ ?

எவ்வுயிர்க்கும் அருளாளனாகிய மனுச்சோழனது செய் தற்கரிய இச்செயலைக்கண்டு பொருது மண்ணுலகத்தவர்கள் கண்ணீராகிய மழையினைச் சொரிந்தார்கள். வானவராகிய தேவர்கள் மலர்மழை பொழிந்தார்கள். பெரியோனாகிய அம்மன்னனது கண்ணெதிரில் வீதிவிடங்கப்பெருமானாகிய இறைவன் அழகிய அவ்வீதியிலே விண்ணவர்கள் போற்ற விடையின்மீது எழுந்தருளி நின்றான். சடையின் ஒரு பக்கத்து இளையபிறைச் சந்திரனும் தனித்துவிழிக்கும் திரு நெற்றியும் இடப்பாகத்தில் உமையம்மையும் எல்லாப் பக்கங்களிலும் பூதகணங்களும் சூழ்ந்து போற்றும் பெருமை யும் ஆகிய தெய்வக் காட்சியைக் கண்டு மன்னன் போற்றித் துதித்தனன். விடைமீதெழுந்தருளிய சிவபெருமானும் அறத்தின் வெற்றியையுடைய மனுச்சோழனுக்குத் திரு வருள் புரிந்தான். அந்நிலையிலேயே, தேர்க்காலிற்பட்டு இறந்த பசுவின் கன்றும், அரசனது அரசாட்சிக்கு உரிமை யுடைய மைந்தனாகிய கன்றும், இறந்த அமைச்சனும் உயிர் பெற்றெழுந்தனர். அது கண்ட மன்னன் இன்னதன்மை யினை அடைந்தான் என்று அறியாதவனாய்ப் பெரு மகிழ்ச்சியில் திளைத்தனன். எல்லார்க்கும் முதல்வனாகிய இறைவனே முற்பட்டு எழுந்தருளினால் நிறைவேறாத செய லும் உளதோ ? எல்லாம் இனிதின் நிறைவேறுமன்றோ !

மனுவேந்தன் தன் பாதங்களில் வீழ்ந்து வணங்கிய மகனை எடுத்து மார்புறத் தழுவிப் பெருமகிழ்ச்சியுற்றுப்

பசுவின் துயரத்தால் விளைந்த தனது முன்னைத் துயரத்தினின்றும் நீங்கினான். தனது மடியிலே சுரந்து பெருகிய இனிய பாலினை உயிர்பெற்றெழுந்த இளங்கன்று மகிழ்ந்து பருகி எஞ்சிய பால் நிலத்தினை நனைக்கும் வண்ணம் அங்கு வந்த பசுவும், தனது கன்றை இழந்த முன்னைத் துன்பத்தினின்றும் நீங்கி இன்புற்றது.

இங்ஙனம், திருவாரூர்ப் பூங்கோயிலில் வீற்றிருந்தருளும் இறைவன், வெற்றித் திறம்வாய்ந்த மனுச்சோழனுக்குத் திருவாரூர்த் திருவீதியிலே யாவரும் காணக் காட்சி தந்து திருவருள் புரிந்து சென்றருளிய பெருங்கருணைத் திறத்தைக் கண்டு, அவ்விறைவன் என்றும் இவ்வாறே தன்னடியார்களுக்கு எளிவந் தருள்புரியும் பெருமையினை ஏழுலகத்தாரும் எடுத்துரைத்துப் பாராட்டிப் போற்றுவாராயினர். இவ்வாறு அறநெறியில் அளவிலாத உயிர்களுக்கு அருள்புரிந்து யாவர்க்கும் முதல்வராகிய வீதிவிடங்கப் பெருமான் மகிழ்ந்து வீற்றிருந்தருளும் பெருமை வாய்ந்த திருவாரூர்மேற் சிறப்பித்துரைக்கும் புகழுரை நமது அளவுபட்ட சொல்லின் எல்லையுள் அடங்குவதோ? அத்தகைய சிறப்பமைந்த திருநகரத்துக்கு அகமலர்போல் விளங்குவது அறமேயுருவாகிய இறைவன் எழுந்தருளிய பூங்கோயிலாகும்; என மனுச்சோழனது இறைவன் திருவருள் வழிப்பட்ட அறத்தொடு பொருந்திய அரசியல் நீதி முறையினை விரித்துரைக்கு முகமாகத் திருவாரூர்த் திருநகரத்தின் சிறப்பினை ஆசிரியர் சேக்கிழாரடிகள் இனிது விளக்கியுள்ளார்.

இவ்வாறு மன்னுயிரனைத்தையும் தன்னுயிர்போற் பேணிக்காத்து முறைசெய்த மனுச்சோழனது வரலாற்றை அறிதற்கு ஆதாரமாய் அமைந்தது, இளங்கோவடிகள் அருளிய சிலப்பதிகாரமாகும். கோவலனைக் கள்வனென்று கொண்டு ஆராயாது கொலைபுரிந்த பாண்டியனது அவையிற் சென்று, தன் கணவன் கள்வனல்லன் என வழக்குரைக்க முற்பட்ட கண்ணகி தேவியார், 'நீர்வார் கண்ணை எம் முன் வந்தோய்! யாரையோ நீ' என வினவிய நெடுஞ்செழியனை நோக்கித் தன் நாடும் ஊரும் தன் நாட்டு வேந்தரது அறநெறிபிறழா அரசியல் முறையும் இவையெனப் புலப்படுத்தும் நிலையில்,

'தேரா மன்னு செப்புவ துடையேன்
எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்பப்
புள்ளுறு புன்கண் தீர்த்தோன் அன்றியும்
வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி யுகுநீர் நெஞ்சு சுடத் தான்தன்
அரும்பெறற் புதல்வனை ஆழியின் மடித்தோன்
பெரும்பெயர்ப் புகார் என்பதியே' (சிலப் – வழக் – 50 – 56)

எனப் புறவின் துயர்களைந்த சிபிச்சோழனது அருளின் திறத்தையும், ஆவின்துயர் துடைத்த மனுச்சோழனது அரச நீதியினையும் அறிவுறுத்துவதாக இளங்கோவடிகள் குறித்துள்ளார். 'கறவை முறை செய்தோன்', 'கறவை முறை செய்த காவலன்' (சிலப் – வாழ்த்துக் காதை – அம்மானைவரி) எனச் சிலப்பதிகாரத்திலும்,

'சால மறைந்தோம்பிச் சான்றவர் கைகரப்பக்
காலை கழிந்ததன் பின்றையும் - மேலைக்
கறவைக்கன் றூர்ந்தானைத் தந்தையும் ஊர்ந்தான்
முறைமைக்கு மூப்பிளமை யில்' (93)

எனப் பழமொழியிலும் கூறப்பெற்றுள்ள மனுச்சோழன் வரலாறு,

'இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின்' (547)

எனவரும் திருக்குறளுக்குச் சிறந்த எடுத்துக் காட்டாகத் திகழ்கின்றது. 'வையகத்தையெல்லாம் அரசன் காக்கும்; அவன்றன்னை அவனது செங்கோலே காக்கும்; அதனை முட்டவந்துழியும் முட்டாமற் செலுத்துவனாயின். முட்டாமற் செலுத்தியவாறு மகனை முறைசெய்தான்கண்ணும் தன்கை குறைத்தான்கண்ணும் காண்க' எனப் பரிமேலழகர் தரும் பொருள்விளக்கம் இங்கு நினைக்கத் தகுவதாகும்.

முறைவேண்டினோர் யாவரும் தமது குறையினை மணியடிப்பதன் மூலம் எளிதில் தெரிவித்துக் கொள்ளும் பொருட்டு அரண்மனை வாயிலில் ஆராய்ச்சிமணி கட்டப் பெற்றிருத்தல் அக்காலத் தமிழ்வேந்தரது நீதிமுறை வழக்கமாகும். பாண்டியன் நெடுஞ்செழியன் மறை நாவோசையை யல்லது அல்லலுற்று முறை வேண்டினோர் அடிக்கும் இத்தகைய மணிநாவோசையை என்றும் கேட்ட தில்லை யென்பதுபட,

"காதின் மறைநாவோசையல்ல தியாவதும்
மணிநாவோசை கேட்டது மிலனே" (கட்டுரை - 30-32)

என மதுரைமா தெய்வம் கண்ணகியை நோக்கிக் கூறுவதாக அமைந்த இத்தொடர், பண்டைத் தமிழ் வேந்தரது அரண்மனை வாயிலில் மணி கட்டப்பெறும் வழக்கத்தினை நன்கு புலப்படுத்துவதாகும். இவ்வாறே தேவர் முதலியோர் தம் குறையினைத் தெரிவித்துக் கொள்ளுதற்கு வாய்ப்பாகச் சிவபெருமான் திருக்கோயில் வாயிலிலும் மணி கட்டப்பெற்றிருந்த தென்பதனை,

"மூவா வுருவத்து முக்கண் முதல்வமீக் கூரிடும்பை
காவாயெனக் கடை தூங்கு மணியைக் கையாலமரர்
நாவா யசைத்த வொலியொலி மாறிய தில்லையப்பாற்
றீவா யெரிந்து பொடியாய்க் கழிந்த திரிபுரமே" (4-113-3)

எனத் திருநாவுக்கரசர் வெளியிட்டருளிய திறம் இங்கு ஒப்பு நோக்கத் தகுவதாகும்.

வாயிற்கடை மணியின் ஒலி மன்னன் செவியிற்பட்ட தன்மையினை,

'பழிப்பறை முழக்கோ ஆர்க்கும் பாவத்தின் ஒலியோ வேந்தன்
வழித்திரு மைந்தன் ஆவி கொளவரு மறலியூர்திக்
கழுத்தணி மணியின் ஆர்ப்போ என்னத்தன் கடைமுன் கேளாத்
தெழித்தெழும் ஓசை மன்னன் செவிப்புலம் புக்கபோது'
(திருநகரச் – 28)

எனவரும் செய்யுளில் மன்னன் மன நிலைக்கு ஏற்ப ஆசிரியர் கூறும் திறம் உற்றுணரத் தகுவதாகும். 'என் இதற்கு உற்றது?' என மன்னன் அமைச்சரை இகழ்ந்து நோக்கிய நிலையில், முதிர்ந்த கேள்வித் தொன்னெறி அமைச்சன் ஆராய்ந்து கூறும் மறுமொழியாக அமைந்தது,

"வளவநின் புதல்வன் ஆங்கோர் மணிநெடுந் தேர்மேல் ஏறி
அளவில்தேர்த் தானைசூழ அரசுலாந் தெருவிற் போங்கால்
இளைய ஆன் கன்று தேர்க்கா லிடைப்புகுந் திறந்த தாகத்
தளர்வுறும் இத்தாய் வந்து விளைத்ததித் தன்மையென்றான்"
(திருநகரச் – 31)

என்ற செய்யுள். அரசுலாந் தெருவில் அரச குமரர்களும் அளவில்லாத தேர்ப்படைகளும் புடைசூழ, மணிகள் கட்டப் பெற்ற தேர்மேல் உலாப்போந்த அரசகுமாரன்மேற்

சிறிதும் குற்றம் இல்லை என்பதனையும், விளைவறியாத பசுவின் இளங் கன்று துள்ளிக் குதித்தோடித் தேர்க்காலில் அகப்பட்டிறந்த இத்துன்ப நிகழ்ச்சி எதிர்பாராத நிலையில் தன்னியல்பில் நிகழ்ந்ததென்பதனையும் அரசனுக்குக் குறிப்பாக விளங்கவுணர்த்தும் முறையில் இச்செய்யுள் அமைந்துள்ளமை காணலாம்.

மலர் தலையுலகிற்கு உயிரெனச் சிறந்த மன்னன், என் நாட்டில் வாழும் உயிர்க்கெல்லாம் யானே உயிராவேன் எனக் கொண்டு காக்கும் கடமையுணர்வுடையானாதலின் 'அவ்வுரை கேட்ட மன்னன் ஆவுறு துயரம் எய்தி'னான் என்றார். மைந்தன் செய்த குற்றம் தந்தையையும் சாரும் என்றுணர்ந்த மன்னன், தன் மகன் செய்த குற்றத்திற்கு மந்திரிகள் கூறிய வண்ணம் மறையவர்கள் விதித்த விதிப்படி கழுவாய் செய்ய உடன்படாது,

> "இழக்கின்றேன் மைந்தனையென்று எல்லீரும் சொல்லிய இச்
> சழக்கின்று நான் இசைந்தால் தருமந்தான் சலியாதோ"

என மறுத்துரைக்கின்றான்.

தன்கீழ் வாழ்வார் குற்றஞ் செய்தால் அக்குற்றத்தை நாடி, யாவரிடத்தும் கண்ணோட்ட மின்றி நடுவு நிலையைப் பொருந்தி, அன்னோர் செய்த குற்றத்திற்குச் சொல்லிய தண்டனையை அமைச்சர் முதலியோருடன் ஆராய்ந்து செய்வதே அரசனது நீதி முறையாகும் என்பது,

> 'ஓர்ந்து கண்ணோடா திறைபுரிந் தியார் மாட்டும்
> தேர்ந்துசெய்வஃதே முறை' (541)

எனவரும் திருக்குறளால் அறிவுறுத்தப் பெற்றது. இத்திருக்குறளுக்குரிய விளக்கவுரை போன்று அமைந்தன,

> 'மாநிலங் காவலனாவான் மன்னுயிர்காக்குங்காலைத்
> தானதனுக் கிடையூறு தன்னால்தன் பரிசனத்தால்
> ஊனமிகு பகைத்திறத்தாற் கள்வரால் உயிர்தம்மால்
> ஆனபயம் ஐந்துந்தீர்த் தறங்காப்பான் அல்லனோ' (36)

> 'என்மகன்செய் பாதகத்துக் கிருந்தவங்கள் செய இசைந்தே
> அன்னியனோர் உயிர்கொன்றால் அவனைக்கொல் வேனானால்
> தொன்மனுநூற் றொடைமனுவால் துடைப்புண்ட தெனும் வார்த்தை
> மன்னுலகிற் பெற மொழிந்தீர் மந்திரிகள் வழக்கென்றான்' (37)

எனவரும் செய்யுட்களாகும். இங்குத் 'தொன் மனுநூல் தொடை' என்றது, இடைக்காலத்தில் தோன்றிய ஒரு குலத்துக் கொருநீதி கூறும் மனு மிருதியை விலக்கி, எக்குலத்தார்க்கும் எவ்வுயிர்க்கும் இசைய அறவாழியந் தணன் அருளிய அறநெறியின் வழியமைந்த ஆதிமனு நீதியைச் சுட்டியது.

'மறைமொழிந்த அறம் புரிதல் தொன்று தொடுநெறி' என்ற அமைச்சர்களை நோக்கி, 'இவ்வண்ணம் பழுதுரைத் தீர்' என வெகுண்டு முகம் புலர்ந்த மனுச் சோழன்,

> 'அவ்வுரையில் வருநெறிகள் அவைநிற்க, அறநெறியின்
> செவ்விய உண்மைத்திறம் நீர் சிந்தைசெயா துரைக்
> கின்றீர்' (40)

எனவும்,

> 'திருவாரூர்த் தோற்றமுடையுயிர் கொன்றான் ஆதலினால்
> துணிபொருள்தான், ஆற்றவுமற்றவற் கொல்லும்
> அதுவேயாம்'

எனவும்,

> 'இவ்ஆன், மனமழியும் துயரகற்ற மாட்டாதேன் வருந்துமிது
> தனதுறு பேரிடர் யானும் தாங்குவதே கருமம்' (42)

எனவும் தெளிந்துரைக்கின்றான். தான் அனுபவிக்கும் மகிழ்ச்சி பிறர் தம்மோடுகூடி அனுபவித்த போது இன்பம் மிகுதலும், துயரம் அனுபவிக்கும் போது பிறரோடு கலந்து நுகரும் நிலையில் அத்துன்பம் குறைதலும் உலகியலிற் கண்ட உண்மையாகும். இவ்வியல்பினை உளத்திற் கொண்டு, 'தனது கன்றையிழந்து வருந்தும் இப்பசு உற்ற பெருந் துன்பத்தை அகற்ற மாட்டாத நிலையில் அத்துயரை யானும் தாங்கி நின்று அதனோடு அனு பவித்துப் பங்கு கொண்டு குறைப்பேன்' என்பது படத் 'தனதுறு பேரிடர் யானும் தாங்குவதே கருமம்' என்கின்றான்.

கொலை முதலிய பெருங்குற்றஞ் செய்தாரைப் பிறர்க்கு எடுத்துக்காட்டாக இருக்கும் நிலையில், அக்குற்றம் நிகழ்ந்த இடத்திலேயே பலருங்காணுமாறு தண்டித்தல் அக்கால நீதி முறையாகும். 'செய்தார்க்குச் செய்தபடியே தண்டம் விதித்தல்' என்னும் தண்டநூல் விதிப்படி பசுவின் இளங் கன்று தேர்க்காலில் ஊரப்பட்டு இறந்த அந்த இடத்

திலேயே தன்மைந்தனையும் தேர்க்காலிலிட்டு ஊர்தல் வேண்டும் என்பான், 'முன் இவனை அவ்வீதி முரண் தேர்க்கால் ஊர்க' என்றான். அரசன் துணிந்ததும் அணைந்ததும் ஊர்ந்ததும் ஆகிய செயல்கள் ஒன்றன்பின் ஒன்றாய் விரைந்து முடிந்தன என்பார், 'அனகன் அரும் பொருள் துணிந்தான், மறுகணைந்தான், தன் மைந்தன் மருமம் தன்தேராழி உற ஊர்ந்தான்' என முற்றுச் சொற்களால் அடுக்கிக் கூறினார் ஆசிரியர்.

"அரும்பெறற் புதல்வனை ஆழியின் மடித்தோன்" என்ற சிலப்பதிகாரத் தொடர்ப் பொருளை விரித்துரைக்கும் முறையில் அமைந்தது,

> "ஒரு மைந்தன் தன்குலத்துக் குள்ளானென்பது முணரான்
> தருமம்தன் வழிச்செல்கை கடனென்று தன்மைந்தன்
> மருமம் தன் தேராழியுறவூர்ந்தான் மனுவேந்தன்
> அருமந்த அரசாட்சி அரிதோமற் றெளிதோதான்" (44)

என்ற செய்யுளாகும். 'பிழையுயிரெய்திற் பெரும் பேரச்சம்' (சிலப் – காட்சிக்-101.) ஆதலின், அரசாட்சி எளிதோ என்றார். பிறர் எண்ணுவது போல அத்துணை எளியதன்று; மிகவும் அரிதேயாம் என்பது கருத்து.

தண்ணளிவெண்குடை வேந்தன் செயல் கண்டு வீதி விடங்கப் பெருமான் விடைமீது அம்மையப்பராய் எதிர் தோன்றி அருள் செய்தபொழுது 'அந்நிலையே உயிர்பிரிந்த ஆன் கன்றும் அவ்வரசன் மன்னுரிமைத் தனிக்கன்றும் மந்திரியும் உடன் எழுந்த' செய்தியைக் கற்போர் உளம் அமைதியுறும் நிலையில் ஆசிரியர் சுவை பெறக் குறித்துள்ளார். பசுவின் துயரத்தை அகற்ற மாட்டாது வருந்திய மன்னவன் அப்பசுவின் துயர் அகன்ற பிறகே மனமகிழ்வான் ஆதலானும், பசுவின்கன்று உயிர்பெற்றெழாத நிலையில் பசுவின் துயரும் அதுகாரணமாக மன்னன் மனத்துயரும் நீங்கும் வழியில்லையாதலானும், எல்லாத் துயர்க்கும் காரணமாய் முதற்கண் இறந்தது பசுவின் கன்றேயாதலானும் கன்று உயிர்பெற்றெழுதலை முதற்கண் கூறினார். அரசகுமரனது உயிரைப் போக்குதற்கு அஞ்சியே தன்னுயிர் துறந்தவன் மந்திரியாதலான், அவன் மைந்தனை உயிருடன் கண்டாலல்லது உயிர் தாங்கியிரான். ஆகவே அவன் அரச குமரனை உயிருடன் கண்டு தன் துயரினைப் போக்கி

மகிழ்தற்கேற்ற வகையில் மைந்தன் உயிர்பெற்றெழுந்த தனை முற்கூறினர். அரச குமாரன் உயிர் நீத்தது காலத் தாற் பிற்பட்ட நிகழ்ச்சியாயினும், அது மந்திரி உயிர் நீத்ததற்குக் காரணமாய் முன்னின்றதென்க. ஆன் கன்றும் அரசன் மன்னுரிமைத் தனிக்கன்றும் மந்திரியும் உயிர்பெற்றெழுதலாகிய இந்நிகழ்ச்சிகள் ஒரே நேரத்தில் ஒருசேர நிகழ்ந்தனவாயினும் காரணகாரிய இயைபுபற்றி வரிசைப்படுத்துக் கூறினர்.

"மடி சுரந்து பொழி தீம்பால், வரும்கன்று மகிழ்ந்து உண்டு
படிநனைய, அரும்பசுவும் பருவரல் நீங்கியது"

என்றது, நுண்ணுணர்வுடைய அருமை வாய்ந்த பசு, இறந்த கன்று உயிர்பெற்றெழுந்தமையா லுண்டாகிய பெரு மகிழ்ச்சியையும் தன் கன்றினிடத்தே கொண்ட பேரன்பினையும் இனிது புலப்படுத்துவதாகும்.

திருத்தொண்டர் புராணமாகிய இக்காப்பியத்தில் திருநகரச்சிறப்பு உரைக்கும் நிலையில் மனுச்சோழரது வரலாற்றினை ஆசிரியர் விரித்துரைத்தது ஏன்? எனக் கற்போர்க்கு ஐயம் நிகழ்தல் இயல்பேயாகும். காப்பிய ஆசிரியர்கள் தாம் இயற்றும் காப்பியத்தில் காப்பியத் தலைவரது வாழ்க்கையினை வளம்படுத்தும் நிலையில் அமைந்த அவர் நாட்டு அரசியல் நெறிமுறையினை நகரச் சிறப்பினையொட்டி விரித்துக் கூறுதலை மரபாகக் கொண்டுள்ளார்கள். இம்மரபினைச் சீவகசிந்தாமணி, சூளாமணி, கம்பராமாயணம் போன்ற செந்தமிழ்க் காப்பியங்களிற் காணலாம். அறவாழியந்தணனாகிய இறைவனது திருவருள் வழிப்பட்ட அறநெறியினையே அரசியல் நெறியினும் மேலாகத் தமது வாழ்க்கைக்குரிய நல்லற நெறியாகக் கொண்டு வாழ்ந்தவர்கள் திருத்தொண்டத் தொகையிற் போற்றப் பெற்ற சிவனடியார்கள் ஆவர். 'அறக்கண் என்னத்தகும் அடிகள் ஆரூரரை' (7–37–2) நீதியுருவினராகக் கொண்டு எவ்வுயிர்க்கும் அருளுடையராய், அறநெறி வழுவாது திருவாரூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தவர் மனுச்சோழராதலின், இறைவனது திருவருளின்வழி நிகழும் அரசியல் நெறிமுறைக்கு வரம்பாக மனுச்சோழரது சரிதம் திருத்தொண்டர் வரலாறு கூறும் இப்புராணத்தின் தொடக்கத்தே திரு நகரச் சிறப்பில் விரித்துரைக்கப் பெறுவதாயிற்று.

உலக முதல்வனாகிய இறைவன் திறத்தும் அவன்பால் மாறா அன்பினராகிய அடியார் திறத்தும் குற்றம் புரிந்தாரை ஒறுத்தலாகிய தண்டனை, இப்பிறப்பில் அவர்தம் பாவத்தைப் போக்கி மறுமையில் அவர்களை நற்கதியடைவிப்பதென்பது, ஞாலமறியப் பிழை புரிந்த எச்சதத்தன் என்னும் மறையவன் சண்டேசரது கோலமழுவால் எற்றுண்டு குற்றம் நீங்கிச் சுற்றமுடன் சிவலோகம் எய்தப்பெற்றான் என்றும், இயற்பகையாருடன் போர் செய்திறந்த சுற்றத்தார் 'வானிடையின்பம் பெற்றார்' என்றும் இக்காப்பியத்தில் ஆசிரியர் கூறுதலால் இனிது புலனாகும். மற்றைக் காப்பியங்களிலெல்லாம் உலகியலாட்சிக்கு இன்றியமையாத அரசியலைக்கூறி அதனையடியொற்றிய நிலையில் காப்பியச் செய்திகள் விரித்துரைக்கப்படுவன. திருத்தொண்டர் புராணமாகிய இக்காப்பியத்தில், உலகியலாட்சிக்கெல்லாம் உறுதுணையாய் நின்று என்றும் மாறா இயல்பினதாகிய திருவருளின் வழிப்பட்ட அருளியலாட்சியை முற்கூறி, அதன் வழி நிகழும் அடியார் செய்கைகள் விரித்துரைக்கப் பெறுவன.

மனுவேந்தனுக்கு ஆரூரிறைவன் வெளிப்பட்டருள் புரிந்த இவ்வரலாற்றை ஆசிரியர் முதற்கண் கூறியது இறைவன் தன்பால் அன்புடைய அடியார்களுக்கு என்றும் எளிவந்தருளும் பெருமையாகிய பெருங்கருணைத் திறத்தினை உலக மக்கள் யாவரும் உணர்ந்து போற்றுதற் பொருட்டேயாகும். இந்நுட்பத்தினை,

> "பொன்தயங்கு மதிலாரூர்ப் பூங்கோயில் அமர்ந்தபிரான்
> வென்றிமனு வேந்தனுக்கு வீதியிலே யருள்கொடுத்துச்
> சென்றருளும் பெருங்கருணைத் திறங்கண்டு தன்னடியார்க்
> கென்றுமெளிவரும் பெருமை ஏழுலகும் எடுத்தேத்தும்"

எனவரும் செய்யுளில் ஆசிரியர் புலப்படுத்தியுள்ளமை கூர்ந்துணரத் தகுவதாகும்.

மக்கள் வாழும் ஊருக்குச் செல்வப் பொலிவினை வழங்குவது அங்குள்ள திருக்கோயிலாகும். 'திருக்கோயிலில்லாத திருவிலூரும்' எனவரும் அப்பர் அருள்மொழி திருக்கோயிலைத் தன்னகத்தே கொண்டுள்ள ஊர்களே திருவுடைய ஊர்களாம் என்பதனை எதிர்மறை முகத்தால் அறிவுறுத்துவதாகும். திருவாரூர் நகரின் சிறப்புணர்த்தப்

போந்த சேக்கிழாரடிகள், மலர்தலையுலகிற்கு உயிரெனச் சிறந்த மனுவேந்தனது அரசியல் மாண்பினை விரித்துரைத்து, அவனது வென்றிச் சிறப்புக்கு உறுதுணையாக அகத்தும் புறத்தும் அருள் வழங்கிய அறவனார் எழுந்தருளிய பூங்கோயில் திருவாரூர் நகரத்துக்கு அகமலராகத் திகழும் சிறப்பினை முடிபொருளாக அமைத்துக் கூறியுள்ளமை கூர்ந்து சிந்திக்கத் தகுவதாகும்.

"அறவனாரடி சென்று சேர்வதற் கியாது மையுறவில்லையே"

என்ற தொடரில் இறைவனை 'அறவனார்' என்ற பெயரால் நம்பியாரூரர் போற்றுதலும், 'அறவாழியந்தணன்' எனத் திருவள்ளுவர் குறித்துள்ளமையும் இச்சரிதத்தின் கருப்பொருளாய் அமைந்திருத்தல் இக்காப்பியத்தைப் பயில்வோர் உளங்கொளத்தக்க சிறப்பினதாகும்.

திருக்கூட்டச் சிறப்பு

திருவாரூர்ப் பூங்கோயிலின் முன்றிலில் உள்ள தேவாசிரிய மண்டபத்திலே எழுந்தருளியிருக்கும் அடியார் திருக்கூட்டத்தின் சிறப்பினை விளக்கும் பகுதியாதலின் இது, திருக்கூட்டச் சிறப்பு என்னும் பெயர்த்தாயிற்று. பதினொரு செய்யுட்களால் இயன்றது இப்பகுதி.

திருவாரூர்ப் பூங்கோயிலின் திருமதில் வாயிலையடுத்துத் திருக்கோயிலின் முன்றிலிலே நான்முகன் இந்திரன் திருமால் முதலிய தேவர்கள் ஓவாது நிறைந்துறையும் சிறப்பினது தேவாசிரியன் என்னும் திருமண்டபமாகும். துன்பத்தைத் தீர்க்க வல்ல அருளாளர்களாகிய சிவனடியார்களின் திருமேனியின்மேல் நிரம்பிய திருநீற்றின் ஒளியாலும் உள்ளத்தூய்மையாலும் அன்புடன் ஓதும் திருவைந்தெழுத்தின் ஓசை பொலிதலாலும் பரவிய ஆயிரம் பாற்கடல்கள் ஒன்று சேர்ந்தாற் போன்று விளங்குவது அத்திருமண்டபமாகும். எல்லா உலகங்களுக்கும் முதல்வராகிய இறைவரது திருவடிகளைத் தொழுது இங்கு எழுந்தருளியிருக்கும் திருத்தொண்டர்களே எல்லாவுலகங்களையும் ஆளுதற்குரியவர்கள் என்றுணர்ந்து இவர்களை இறைஞ்சிப் போற்ற எல்லாவுலகங்களிலுள்ளாரும் இங்கு வந்து நிறைதலால் இத்திருமண்டபத்தின் இடப்பரப்பு

எல்லாவுலகங்களையும் ஒத்து விரிந்து விளங்குவதாகும். இவ்வாறு இதன் முதலிலுள்ள நான்கு செய்யுட்களால் தேவாசிரிய மண்டபத்தின் சிறப்பினை ஆசிரியர் விளக்கு கின்றார். இதன்கண் 5 முதல் 10 வரையுள்ள ஆறு செய்யுட்கள் இங்கு எழுந்தருளிய திருத்தொண்டர்களின் இயல்பினைத் தொகுத்துரைக்கும் முறையிலமைந்துள்ளன. 11-ஆம் செய்யுள் அடுத்துவரும் தடுத்தாட்கொண்ட புராணத்திற்குத் தோற்றுவாயாக அமைந்துளது.

தேவாசிரிய மண்டபத்தில் எழுந்தருளியிருக்கும் அடியார்கள், அம்மையப்பராகிய இறைவரால் விரும்பி ஆட்கொள்ளப் பெற்றவர்கள்; தம்திருமேனியில் மயிர் சிலிர்த்தலும் விதிர் விதிர்ப்பும் தோன்ற, இறைவன்பால் பேரன்பு மிக்குத் தோன்றும் சிந்தையினர்; தம்மால் இயன்ற கைத்திருத் தொண்டு செய்தலையே தமது கடமை யாகக் கொண்டவர்கள்; இத்தன்மையராகிய அடியார்கள் எண்ணிலாதவராக உள்ளார்கள். குற்றமில்லாத உருத் திராக்க மணிகள் விளங்கும் தம் திருமேனியின் மேல் பூசப் பெற்று விளங்கும் தூயதிருநீற்றினைப் போலவே உள்ளத் திலும் தூய்மையுடையவர்கள்; தமது ஒளியினால் எல்லாத் திசைகளையும் இருள்நீங்கி விளக்கமுறச் செய்தவர்கள்; சொல்லினால் அளவிட்டுரைக்க வொண்ணாத பெருமையுடன் திகழ்பவர்கள்; ஐம்பெரும் பூதங்களும் தத்தம் நிலையிற் பிறழ்ந்தாலும் தாம் சிறிதும் மனங்கலங்காது மாதொரு பாகராகிய இறைவரது செந்தாமரை மலர் போலும் திருவடிகளை மறவாத இயல்புடையவர்கள்; இறைவனது பொருள்சேர் புகழ்த்திறத்தினையே காதலாகிக் கசிந்து ஓதும் உறுதியுடையராய் நன்னெறியில் நிலைபெற நிற்பவர்கள்; குற்றமில்லாத குணங்களின் குன்றெனத் திகழ்பவர்கள்; ஒருகாற் கெட்டொழிதலும் ஒருகால் உளதாதலும் இல்லாத திருவாகிய நிறையுடைய பெருஞ் செல்வத்தை நிலையாகப் பெற்றவர்கள்; மட்பாண்டத்தின் சிதைவாகிய இழிந்த ஓட்டினையும் உலகமக்களால் மதிக்கப் பெறும் செம் பொன்னையும் ஒருதன்மையவாக நோக்கும் உள்ளமுடையவர்கள்; இறைவனுடன் பிரிவற ஒன்று தற்குக் காரணமாகிய அன்பின் திறத்தாலே அம்முதல்வனை ஆண்டானாகவும் தம்மை அடிமையாகவும் கருதிக் கைகளாற்றொழுது போற்றும் தொண்டின் திறத்தையே

என்றும் விரும்பி வேண்டுவதன்றி அம்முதல்வனோடு பிரிவற ஒன்றிப் பெறும் வீடுபேற்றின்பத்தையும் வேண்டாத வீறுபெற்று விளங்குபவர்கள். அவர்கள் தம் மெய்க் கணியாக விரும்பிப் பூணும் ஆரம் உருத்திராக்க மாலையே. உடுப்பது கந்தை உடை. தாம் செய்தற்குரிய கடமைப் பாரமாக மேற்கொண்டிருப்பது இறைவன் திருவடிப் பணியன்றி வேறொன்றும் இல்லாதவர்கள். இத்தகைய பெருமக்களது வீரம் என்னால் அளவிட்டுச் சொல்லுந் தன்மையதோ? தாண்டவப் பெருமான் தனித்தொண்டராகிய இவர்கள் கண்டார் விருப்புறும் நிலையில் தாம் தாம் விரும்பிய கோலங்களைக் கொண்டவர்கள்; நெடிதாய்த் தொன்று தொட்டு உளதாகி வரும் புகழை உடையவர்கள். இப்பெருமக்களின் திருத்தொண்டின் நிலைமையை இங்கு வாழ்த்தப் புக்கேனாகிய எளியேன் எங்ஙனம் அறிந்து துதிக்கவல்லேன்?" என அடியார் திருக்கூட்டத்தின் சிறப்பினை விரித்துரைத்த ஆசிரியர், "இத்தகைய பெருந் தவச் செல்வர்களாகிய அடியார் திருக்கூட்டத்தினரை முடிவில்லாத புகழினையுடைய ஆலால சுந்தரன் என்னும் பெருந்தகை இவ்வுலகிலே வந்து சுந்தரத் திருத்தொண்டத் தொகைத் தமிழ் பாடிய வரலாற்றை இனிச் சொல்லத் தொடங்குவோம்" என அடுத்துவரும் தடுத்தாட் கொண்ட புராணத்திற்குத் தோற்றுவாய் செய்து கொள்கின்றார்.

'திருக்கூட்டச் சிறப்பு' என்னும் இப்பகுதி, திருக்குறளில் உள்ள 'நீத்தார் பெருமை' என்னும் அதிகாரத்தை அடியொற்றி, இத் திருத்தொண்டர் புராணத்திற் போற்றப் பெறும் அளவிலாத பெருமையராகிய அளவிலா அடியார்களின் பெருமையினைத் தொகுத்து விளக்கும் முறையில் அமைந்ததாகும். திருத்தொண்டர்களின் பெருமையினை அவர் தம் திருக்கூட்டத்துடன் இயைத்துப் பொதுவகையாற் கூறும் பகுதியில் சிவனடியார் இயல்புகளாகத் தொகுத்துரைக்கப்பட்டவை, இதன் பின்னர்க் கூறப்படும் தனியடியார் வரலாறுகளில் அவரவர்பால் அமைந்த சிறப்பியல்புகளாகத் தனித்தனியே வகுத்து விளக்கப் பெற்றுள்ளன. இக்காப்பியத்தில் பின்னர் விரித்துரைக்கப் பெறும் அடியார்களின் வரலாற்றுப் பண்புகளின் தொகுப்பே திருக்கூட்டச் சிறப்பு

என்னும் இப்பகுதியெனக் கொள்ளுதல் பொருந்தும். இப்பகுதியிற் கூறப்பெறும் திருத்தொண்டர் இயல்புகள் அப்பெருமக்கள் திருக்கூட்டமாகக் கூடியுள்ள நிலையில் அவர்தம் சமூகத் தோற்றத்தைப் பொது வகையாற் புலப் படுத்தும் முறையிலமைந்த பொதுநிலைக் காட்சியாகும். பின்வரும் சரிதங்களில் தனித்தனியே வகுத்துரைக்கப் பெறும் அடியார் இயல்புகள், அந்த அந்த அடியார்களின் தனிநிலைத் தோற்றத்தைத் தெளிவுபடுத்திக் காட்டும் முறையில் அமைந்த தனிநிலைக் காட்சிகளாகும். பொதுவும் சிறப்புமாகிய இவ்விருவகைக் காட்சிகளையும் முறையே அடியார்களின் சமூக தரிசனம், தனித்தரிசனம் எனப் பெயரிட்டு வழங்குவதும் உண்டு.

இறைவனருள் வாய்க்கப் பெற்ற திருத்தொண்டர் களே எல்லாவுலகங்களையும் இடர் நீக்கி ஆளுதற் குரிய தகுதிவாய்ந்தவர்கள் என்பதனை,

“ அகில காரணர்தாள் பணிவார்கள்தாம்
அகில லோகமும் ஆளற்குரியர் ’

எனவரும் தொடரில் சேக்கிழாரடிகள் அறிவுறுத்துகின்றார். இவ்வறிவுரை,

“ நீலமாமிடற், றால வாயிலான்
பாலதாயினார், ஞால மாள்வரே ”

என்னும் ஆளுடைய பிள்ளையார் வாய்மொழியைத் தழுவி அமைந்திருத்தல் அறியத்தகுவதாகும்.

இத்திருத்தொண்டர்கள், இறைவர் தாமே எளிவந்து விரும்பி ஆட்கொள்ளப் பெற்ற சிறப்புடையவர்கள் என்பார், ‘அத்தர் வேண்டி முன் ஆண்டவர்’ என்றார். இத்தொடர், வெண்ணெய்நல்லூர் இறைவர் நம்பியா ரூரரைத் தடுத்தாட் கொண்டருளிய வரலாற்றினை நினைவு படுத்துவதாகும். ‘வேண்டி என்னைப் பணிகொண்டாய்’ (குழைத்த-6) எனவும், ‘தானே வந்தெம்மைத் தலையளித் தாட் கொண்டருளும் வான்வார் கழல்’ (திருவெம்பாவை-6) எனவும் வரும் திருவாசகத் தொடர்கள் இங்கு நினைக்கத் தக்கன. “அன்பினால் மெய்த்தழைந்து விருப்புறு சிந்தையார் என்பது,

" தூய வெண்ணீறு துதைந்த பொன்மேனியும் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவரு சிந்தையும் நைந்துருகிப்
பாய்வது போல் அன்புநீர் பொழிகண்ணும் பதிகச் செஞ்
சொல்
மேய செவ்வாயும் உடையார் புகுந்தனர் வீதியுள்ளே"
(பெரிய – திருநாவுக்கரசு-140)

என்றாங்கு இக்காப்பியத்திற் கூறப்படும் அடியார்களது அன்பின் திறத்தைப் புலப்படுத்துவதாகும்.

'கைத்திருத்தொண்டு செய் கடப்பாட்டினர்' என்றது, "என்கடன் பணிசெய்து கிடப்பதே' (5-19-9) எனவும்,

" கண்டெந்தை யென்றிறைஞ்சிக் கைப்பணியான்
செய்யேனேல்
அண்டம் பெறினும் அது வேண்டேன்" (அற்புதத்திரு–72)

எனவும் திருத்தொண்டில் உறைத்து நிற்கும் உள்ள முடையராய், "ஐயனார்க்கு ஆளாகி அன்புமிக்கு அகங் குழைந்து மெய்யரும்பி அடிகள் பாதம் கையினாற் றொழும் அடியார்" களாகிய திருத்தொண்டர்களைக் குறித்தது.

"மாசிலாத மணிதிகழ், மேனிமேல் பூசு நீறுபோல் உள்ளும் புனிதர்கள்" என்றது, 'சுத்தமதாவது நீறு' எனப்பெற்ற தூய வெண்ணீறு துதைந்த பொன் மேனிய ராய்க் காம வெகுளி மயக்கங்களாகிய மனமாசு நீங்கி நாயகன் சேவடி தைவரும் தூய சிந்தையினராகிய அடியார்களைக் குறித்தது. 'தேசினால் எத்திசையும் விளக்கினார்' என்றது, தாம் இவ்வுலகில் உள்ள காலத் திலேயே எத்திசைகளையும் விளக்கும் ஒளிமிக்க திருமேனி யுடையவர்கள் என்றவாறு. திருக்காளத்திமலையில் இறைவனை அன்பினால் வழிபட்டு அல்லுறங்காது நிற்கும் திண்ணனாரது திருமேனியொளியினால் இரவின் இருள் இல்லையாயிற்று என்பதனை,

" ஐந்துமா றடக்கியுள்ளார் அரும்பெருஞ் சோதியாலும்
எந்தையார் திருக்காளத்தி மலையினில் இரவொன்றில்லை"
(பெரிய - கண்ணப்பர் 13)

எனவரும் தொடரில் ஆசிரியர் புலப்படுத்தியுள்ளமை இங்கு நோக்கத்தகுவதாகும்.

அளவிலாத பெருமையராகிய அளவிலா அடியார்களது பெருமை சொல்லால் அளவிட்டுரைக்குந்தரத்த தன்று என்பார், 'பேச ஒண்ணுப் பெருமை பிறங்கினுர்' என்ருர்.

"துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்
திறந்தாரை யெண்ணிக்கொண் டற்று" (திருக்குறள் – 22)

என்பது இங்கு ஒப்பு நோக்குதற்குரியதாகும்.

ஐம்புலன்களை யடக்கிய செம்புலச் செல்வர்களாகிய இத்திருத்தொண்டர்கள் இவ்வுலகில் ஐம்பெரும் பூதங்கள் தம் நிலையினின்று மாறுபடும் அல்லற் காலத்தும் நிலைகலங்காத உள்ளத்திண்மையுடையராய்ச் சித்தத்தைச் சிவன்பாலே வைத்த மெய்த்தவச் செல்வர்கள் என்பது,

"பூதம் ஐந்தும் நிலையிற்கலங்கினும்
மாதொர் பாகர் மலர்த்தாள் மறப்பிலார்"

என்பதனுல் உணர்த்தப்பட்டது.

"வானந் துளங்கிலென் மண்கம்ப மாகிலென் மால் வரையுந்
தானந் துளங்கித் தலைதடு மாறிலென் தண்கடலும்
மீனம் படிலென் விரிசுடர் வீழிலென் வேலை நஞ்சுண்
டூனமொன் றில்லா ஒருவனுக் காட்பட்ட உத்தமர்க்கே"
(4 – 113 – 8)

என்ருங்கு வரும் அப்பர் அருள் மொழியாலும்,

'கால நிலைமையால் உங்கள் கருத்தில் வாட்டமுறீர்' என வீழிமிழலையிறைவர் ஆளுடைய பிள்ளையார்க்கும் ஆளுடைய அரசர்க்கும் கனவில் தோன்றியருளியதாகப் பின்னர்க் கூறப்படும் வரலாற்றுக் குறிப்பினுலும் இவ்வியல்பு இனிது புலனுதல் காணலாம்.

எத்தகைய இடர்கள் அடுக்கி வரினும் இறைவனது திருப்பெயரை இடைவிடாது ஓதும் பெருங்காதலாகிய உறுதிப்பாட்டில் தளராது நிற்பவர்கள் திருத்தொண்டர்கள் என்பது தோன்ற, 'ஓதுகாத லுறைப்பின் நெறிநின்ருர்' என்ருர். இத்தொடர்,

"கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணையாவது நமச்சிவாயவே" (4–11–1)

என இறைவனைப் பாடிப் போற்றி, 'ஒன்றிய மன்னவன் சூட்சி திருத்தொண்டின் உறைப்பாலே வென்றவ'ராகிய

அப்பரடிகளது உள்ளத்துறுதியினைப் புலப்படுத்தும் முறையில் அமைந்திருத்தல் காணலாம். 'கோதிலாத குணப்பெருங் குன்றனார்' என்றது, "குணமென்னுங் குன்றேறிநின்றார்" (திருக்குறள் - 29) எனவரும் தெய்வப் புலவர் வாய்மொழியைப் பொன்னேபோற் போற்றியதாகும்.

'கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்' என்றது, சிவமே பெறுந்திருவினர் என்பதாம். 'ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்' எனவரும் இத்தொடர்ப் பொருளை,

"புல்லோடும் கல்லோடும் பொன்னோடும் மணியோடும்
சொல்லோடும் வேறுபாடிலாநிலைமை துணிந்திருந்த
நல்லோர்" (திருநாவுக்கரசர் புராணம் - 418)

எனவரும் பாடலில் ஆசிரியர் விரித்து விளக்கியுள்ளார்.

"கூடும் அன்பினிற் கும்பிடலேயன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்'

என்றது,

"கண்டெந்தை யென்றிறைஞ்சிக் கைப்பணியான் செய்யனேல்
அண்டம் பெறினும் அதுவேண்டேன்" (அற்புத - 72)

எனவரும் அம்மையார் வாய்மொழியை அடியொற்றி யமைந்தமையும், இக்கருத்து,

'தங்குபிறப்பே வீட்டினுக்கு மேலாம் பெருமை சாதித்தார்'
(பெரிய - திருநாவுக் - 312)

எனப் பின்னர் விளக்கப்பெற்றுள்ளமையும் இங்கு மனங்கொளத் தக்கனவாகும்.

'ஆரங்கண்டிகை ஆடையுங் கந்தையே
பாரம் ஈசன் பணியல தொன்றிலார்
ஈர அன்பினர் யாதுங் குறைவிலார்
வீரம் என்னால் விளம்புந்தகையதோ'

என அடியார் இயல்பாக இங்குக் கூறியதனை,

'சிந்தையிடை யறுஅன்பும் திருமேனி தனிலசைவும்
கந்தைமிகையாங் கருத்தும் கையுழவாரப்படையும்
வந்திழி கண்ணீர்மழையும் வடிவிற்பொலி திருநீறும்
அந்தமிலாத் திருவேடத் தரசுமெதிர் வந்தணைய'
(பெரிய - சம்பந் - 270)

எனத் திருநாவுக்கரசரது செயல் முறையில் வைத்து ஆசிரியர் விளக்கியுள்ளமை அறியத் தகுவதாகும்.

'ஒன்றினுற் குறையுடையோ மல்லோமன்றே' (6-98-5)

என அப்பரடிகள் தம்மையொத்த அடியார் இயல்பாகக் கூறியதனை யுளங்கொண்டு 'யாதுங் குறைவிலார்' என்ற தொடர் அமைந்திருத்தல் காணலாம்.

ஈண்டு வீரம் என்பது, தமது கொள்கைக்கும் குறிக்கோளுக்கும் மாருக எத்தகைய இடையூறுகள் வந்தாலும் அஞ்சாது அவற்றை எதிர்த்து நின்று வெற்றி பெறுதற்குரிய மனத்திண்மையாகும். இத்தகைய திண்மை,

'அஞ்சுவதியாதொன்றுமில்லை அஞ்சவருவதுமில்லை'

என அப்பரடிகள் வரலாற்றில் இடம் பெற்றுள்ளமை காணலாம். சிவகாமியாண்டாரது பூக்குடலையைப் பறித்துச் சிதறியது அரசரது பட்டத்து யானையென்றறிந்தும் அதனை மழுவால் எறிந்து வீழ்த்திய எறிபத்த நாயனுர் செயலும், திருக்கோயிற் பூமண்டபத்து மலரையெடுத்து மோந்தவள் பல்லவ வேந்தனுடைய பட்டத்தரசி யென்றறிந்திருந்தும் அவளது மூக்கினையரிந்த செருத்துணை நாயனுர் செய்கையும், இவ்வாறே தம்முயிரைப் பொருட்படுத்தாது செயற்கரிய செயல்களைச் செய்து நிறை வேற்றிய ஏனை நாயன்மார்கள் திருப்பணிகளும் அடியார்களின் வீரத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டுக்களாகும். "அழியாவீரத்தார் எல்லார்க்கும் தனித்தனி வேறடியேன் என்று, ஆர்வத்தால் திருத்தொண்டத் தொகைப்பதிகம் அருள் செய்தார்" எனப் பின்னரும் ஆசிரியர் இவ்வீரவுணர்வினைச் சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளமை கூர்ந்துணரத் தகுவதாகும்.

'வேண்டுமாறு விருப்புறு வேடத்தர்
தாண்டவப் பெருமான் தனித்தொண்டர்கள்'

என்பது அடியார் திருவேடமானது காண்பாருள்ளத்தில் விருப்பினை விளைக்கவல்லதென்பதனைப் புலப்படுத்துவதாகும்.

"கண்டகவுணியக்கன்றும் கருத்திற்பரவும் மெய்க்காதற்
றெண்டர் திருவேடம் நேரேதோன்றிய தென்னத்"

தொழுதார் எனத் திருவேடத்தின் சிறப்பினை ஆசிரியர் பின்னர் விளக்கியுள்ளமை காணலாம்.

தொண்டர்சீர் பரவுவாராகிய சேக்கிழார், 'இந்த மாதவர் கூட்டத்தை' எனத் தம் நூல் நுதல்

பொருளாகிய திருத்தொண்டர் திருக் கூட்டத்தின் பெருமையினையும், "எம்பிரான் அந்தமில் புகழ் ஆலால சுந்தரன்' என 'இக்காப்பியத்திற்கு மூலமான திருத்தொண்டத் தொகையினையருளிய ஆசிரியரும் இக்காப்பியத் தலைவரும் ஆகிய நம்பியாரூரரது பெருமையினையும்', 'சுந்தரத் திருத்தொண்டத் தொகைத் தமிழ்' என ஆரூரர் அருளிய திருப்பதிகத்தின் பெருமையினையும், 'வந்து பாடிய வண்ணம் உரை செய்வாம்' என இத்திருப்பதிகம் தோன்றிய வரலாற்றினையும் குறித்து அடுத்து வரும் பகுதிக்குத் தோற்றுவாய் செய்து கொள்கின்றார்.

தடுத்தாட்கொண்ட புராணம்

திருவெண்ணெய் நல்லூர் அருட்டுறைத் திருக்கோயிலில் எழுந்தருளிய இறைவர், அற்புதப்பழ ஆவணங் காட்டி நம்பியாரூரரைத் தடுத்தாட் கொண்டருளிய செய்தியை விரித்துரைக்கும் பகுதியாதலின் இது தடுத்தாட்கொண்ட புராணம் என்னும் பெயர்த்தாயிற்று. நம்பியாரூரர் திருக்கயிலாயத்தில் இறைவனுக்கு அணுக்கத் தொண்டரான ஆலால சுந்தரராய் விளங்கிய முன்னைய நிலையில் நிகழ்ந்த வரலாறு திருமலைச் சிறப்பிற் கூறப் பட்டது. கயிலாயத்திற் கமலினி அனிந்திதை என்னும் மாதர் மேல் மனம் வைத்த ஆலால சுந்தரர், இறைவன் பணித்தவண்ணம் தென்புவிமீது திருமுனைப்பாடி நாட்டின் தலைநகராகிய திருநாவலூரிலே மாதொருபாகனார்க்கு வழி வழியடிமை செய்யும் வேதியர் குலத்திலே மேம்படு சடையனாருக்கும் ஏதமில் கற்பின் மிக்க மனைவியார் இசை ஞானியார்க்கும் மகவாகத் தோன்றி, இறைவனால் தடுத்தாட் கொள்ளப்பெற்று அருட்டுறை யீசனைப் பித்தா பிறை சூடி எனப் பெரிதாம் திருப்பதிகத்தாற் பாடிப் போற்றித் திருத்துறையூர் திருவதிகை, தில்லைச் சிற்றம்பலம் முதலிய திருத்தலங்களை இறைஞ்சிப் பாடித் திருவாரூரையடைந்து தம்பிரான் தோழராய், நற்பெரும் பான்மை கூட்டக் கமலினியாராகிய நங்கை பரவையாரைக் கண்டு காதல் கொண்டு திருமணம் புணர்ந்து ஆரூரிறைவர் அருளால் அடியார் புகழ் பரவும் திருத்தொண்டத் தொகைத் திருப்பதிகத்தினைத் திருவாய் மலர்ந்தருளியது வரையுள்ள செய்திகளை இத் தடுத்தாட் கொண்ட புராணத்தில் விரித்துரைக்கப் பெறுகின்றன.

இதன்பின் தில்லை வாழந்தணர் முதலாகத் திருநீல கண்டப் பெரும்பாணர் ஈறுகத் திருத்தொண்டத் தொகையிற் போற்றப்பெற்றுள்ள அடியார்களின் வரலாறுகள், தில்லை வாழந்தணர் சருக்கம் முதலாக மன்னிய சீர்ச்சருக்கம் ஈறுகப் பதினொரு சருக்கங்களில் முறையே விரித்துரைக்கப் பெறுகின்றன. பரவையார் கேள்வராகிய நம்பியாரூரர், திருத்தொண்டத் தொகை யருளிய பின் திருவாரூரினின்றும் புறப்பட்டுப் பல தலங்களைப் பண்பொருந்திய செந்தமிழ்ப் பாமாலை களாற் பாடிப் போற்றித் திருவொற்றியூரையடைந்து அனிந்திதையாராகிய சங்கிலியாரை இறைவனருளாற் கண்ணுற்றுக் காதல்கொண்டு மணந்து அவருடன் பல நாள் இன்புற்று மகிழ்பவர், அவரைப் பிரிந்து திருவாரூரை யடைந்து பரவையாரது புலவியைத் தீர்த்தல் வேண்டி நள்ளிரவிலே ஆரூரிறைவரை இருமுறை தூதாக அனுப்பி, அது காரணமாக ஏயர்கோன் கலிக்காம நாயனுர் தம்மீது கொண்ட வெகுளியை இறைவனருளால் தணிவித்து, அவரது அரிய நண்பினைப்பெற்று மகிழ்ந்தது வரையுள்ள செய்திகள் ஏயர்கோன் கலிக்காம நாயனுர் புராணத்தில் இடம்பெற்றுள்ளன. பின்பு நம்பியாரூரர், திருவாரூரில் தம்மை அன்புடன் காண வந்த கழறிற்றறிவார் நாயனுரது நட்புப்பெற்றுச் சேரமான் தோழராய், அவருடன் சோழ நாட்டிலும் பாண்டிய நாட்டிலுமுள்ள பல தலங்களை வணங் கிப் பாடிச் சேர நாட்டின் தலைநகராகிய கொடுங்கோளூரை யடைந்து சேரமான் பெருமாளால் உபசரிக்கப்பெற்று மீண்டும் திருவாரூருக்குத் திரும்பியது வரையுள்ள செய்திகள் கழறிற்றறிவார் நாயனுர் புராணத்தில் விரித்துரைக்கப் பெற்றன.

திருவாரூரிற் பரவையாருடன் கூடி வாழ்ந்து புற்றிடங்கொண்ட பெருமானைப் போற்றியிருந்த நம்பி யாரூரர், தம் அன்புடைத் தோழராகிய சேரமான் பெருமானைக் காண விரும்பிப் புறப்பட்டுக் கொங்கு நாட்டை யடைந்து திருப்புக்கொளியூர் அவிநாசிபடுவில் முதலையால் விழுங்கப்பட்ட அந்தணச் சிறுவனை மீட்டருளிச் சேரமான் பெருமாள் உவந்து வரவேற்கக் கொடுங்கோளூரை யடைந்து திருவஞ்சைக்களத் திருக் கோயிலில் எழுந்தருளிய பெருமான் யிறைஞ்சித் தமது

பாசத் தொடர்பினை நீக்கியருளும்படி திருப்பதிகம் பாடி வேண்டியபொழுது, கயிலைப்பெருமான் வெள்ளையானையை அனுப்பியருள அதன்மீது அமர்ந்து களையாவுடலோடு சேரமான் பெருமாள் குதிரைமீதேறித் தம்மைத் தொடர்ந்து உடன் வரத் திருக்கயிலாயத்தை யடைந்து அம்மையப்பரை இறைஞ்சிப் போற்றித் தமக்குரிய அணுக்கத் திருத்தொண்டில் அமர்ந்தது வரையுள்ள செய்திகள், இக்காப்பியத்தின் இறுதியிலுள்ள வெள்ளானைச் சருக்கத்தில் விரித்துக் கூறப்பெற்றன. ஆகவே திருத்தொண்டர்புராணமாகிய இக்காப்பியத்தில் முதலிலும் நடுவிலும் முடிவிலும் இக்காப்பியத் தலைவராகிய நம்பியாரூரரது வரலாறு இடையீடின்றித் தொடர்ந்து அமைய, அவர் அருளிய திருத்தொண்டத் தொகையிற் போற்றப் பெற்ற தில்லைவாழ் அந்தணர் முதல் திருநீலகண்டப் பெரும்பாணர் ஈருகவுள்ள திருத்தொண்டர்களின் வரலாறுகள் தொடர்ந்து கூறப்பெற்றுள்ளமை, இக்காப்பியத்திற் போற்றப்பெறும் தன்னேரில்லாத் தலைவர் நம்பியாரூரரே என்னும் உண்மையினை நன்கு புலப்படுத்துதல் காணலாம்.

திருத்தொண்டர் புராணக் காப்பியத்தின் தலைவராகிய சுந்தரர் வரலாறும், இவரால் திருத்தொண்டத் தொகையிற் போற்றப்பெற்றுள்ள திருமுறையாசிரியர்களாகிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், திருமூலர், காரைக்காலம்மையார் ஐயடிகள் காடவர்கோன் நாயனார், சேரமான் பெருமாள் நாயனார் ஆகிய அடியார்களின் வரலாறுகளும் இந்நூலாசிரியராகிய அருண்மொழித் தேவர் வாக்கினை அடியொற்றி முன்னர் விரிவாக ஆராய்ந்து விளக்கப் பெற்றுள்ளன. இனி, தில்லைவாழந்தணர் முதல் உள்ள ஏனைய அடியார்களின் வரலாற்றுக் குறிப்புக்கள் முறையே இங்குச் சுருக்கமாகத் தரப்பெறும்.

தில்லைவாழந்தணர்

அருமறைகளை நன்குணர்ந்து தில்லைப்பதியில் வாழும் அந்தணர்களாகிய இவர்கள், தில்லைச் சிற்றம்பலத்தில் ஆடல் புரிந்தருளும் கூத்தப்பெருமானுக்கு அகம்படித் தொண்டு புரியும் திருக்கூட்டத்தினராவர். திருவாரூர்ப்

பெருமான் நம்பியாரூரர் திருத்தொண்டத் தொகையினைப் பாடுதற்கு அடியெடுத்துக் கொடுத்தருளும்போது 'தில்லை வாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்' என இத் திருக்கூட்டத்தாரையே முதற்கண் போற்றி யெடுத் தருளினார் என்பது,

'தொல்லைமால் வரைபயந்த தூயாள்தன் திருப்பாகன்
அல்லல்தீர்ந் துலகுய்ய மறையளித்த திருவாக்கால்
தில்லைவா ழந்தணர்தம் அடியார்க்கும் அடியேனென்
றெல்லையில் வண் புகழாரை யெடுத்திசைப்பா
மொழியென்றான்' (தடுத்தாட் - 199)

எனவரும் செய்யுளாற் புலனும்.

திருத்தொண்டத் தொகையிற் போற்றப்பெறும் திருக் கூட்டத்தார் ஒன்பதின்மருள் ஒரு கூட்டத்தாராகிய இவர்கள், மூவாயிரவர் என்னும் தொகையினராவர் என்பது,

"முட்டாத முச்சந்தி மூவாயிரவர்க்கு மூர்த்தியென்னப்
பட்டானை" (7-90-7)

எனவரும் நம்பியாரூரர் வாய்மொழியாலும்,

"தில்லையம்பலத்து மூவாயிரவர் வணங்க நின்றோனை" (72)

எனவரும் திருக்கோவைத் தொடராலும்,

"முடியா முத்தீவேள்வி மூவாயிரவரொடும்
குடிவாழ்க்கை கொண்டு நீ குலவிக் கூத்தாடினையே"

எனவரும் திருவிசைப்பாத் தொடராலும் இனிதுணரப் படும். தில்லைப்பதியிற் செழுமறையோராகிய இவர்கள் கூத்தப்பெருமானுக்கு உரிமைத் தொழில் புரிவோர் என்பர் நம்பியாண்டார் நம்பிகள்.

'தில்லைவாழந்தணராகிய இவர்கள் நீற்றினால் நிறைந்த கோலத்தினர்; நிருத்தனுக்கு உரிய தொண்டாம் பேற் றினையுடையவர்கள்; பெருங்குணங்களுக்கு எல்லையாய் விளங்குபவர்கள்; இறைவன்பாற் பெருகிய அன்பினால் அடித்தவம் புரிந்து வாழ்பவர்கள்; தில்லைத் திருக்கோயிலி னுள்ளே தங்கள் தங்களுக்கேற்ற திருப்பணிகளை மேற் கொண்டு அகம்படித் தொண்டு செய்பவர்கள்; முத்தீ வளர்த்து வேள்வி செய்பவர்கள்; எவ்வுயிர்க்கும் அரு ளுடையராய் அறத்தையே தமக்குரிய பொருளாகக்

கொண்டு தத்துவ நெறியில் நிற்பவர்கள்; நான்கு வேதங்களையும் ஆறு அங்கங்களையும் கற்று வல்லவர்கள்; தில்லைப் பொன்னம்பலத்தில் திருநடம் புரியும் செல்வன் கழலேத்துஞ் செல்வத்தையே செல்வமெனக்கொண்ட திருவுடையந்தணர்கள்; மறுவற்ற குடும்பத்திலே பிறந்து மாறிலா நல்லொழுக்கத்தையே அணிகலனாகப் பூண்டவர்கள்; ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்னும் அறுதொழில் ஆட்சியினால் கலியின் தீமையை நீக்கியவர்கள்; தம்மால் மேற்கொள்ளத் தக்கது திருநீறு உருத்திராக்கமாகிய சிவ சாதனமே எனவும், பெறத்தக்க நற்பேறுவது சிவன்பால் அன்புடைமையே யெனவும் கொண்டு வாழ்பவர்கள்; ஞானம், யோகம், கிரியை, சரியை ஆகிய நால்வகை நன்னெறிகளையும் குற்றமறத் தெரிந்து மேம்பட்டவர்கள்; தானமும் தவமும் வல்லவர்கள்; ஊனம் சிறிதும் இல்லாதவர்கள்; உலகெலாம் புகழும் வண்ணம் மானமும் பொறையும் தாங்கி மனையறம் புரிந்து வாழ்பவர்கள். செம்மையால் மிக்க சிந்தைத் தெய்வ வேதியராகிய இவர்கள், தாங்கள் எப்பொழுதும் போற்றி வணங்கும் நிலையில் முதல்வனாகிய இறைவனை இப்பிறப்பிலேயே தமக்குரியனாகப் பெற்று வாழ்பவர்கள்; இதனினும் சிறந்ததாக இனிமேற் பெறுதற்குரிய பேறெதுவும் இல்லாதவர்கள். அன்று, வன்றொண்டர் திருத்தொண்டத் தொகையினைப்பாட ஆரூர் அண்ணல் திருவாக்கால் முன்னர்க் குறிக்கப்பெற்ற முதற் பொருளாக இவர்கள் அமைந்தார்கள் என்றால், இன்று இவர்தம் பெருமை எம்மால் சொல்லும் தரத்ததாகுமோ? உலகெலாம் புகழும் திருமறையோராகிய இவர்கள் என்றும் பொதுநடம் போற்றி வாழ்வார்களாக' எனத் தொண்டர் சீர்பரவுவாராகிய சேக்கிழாரடிகள் தில்லைவாழந்தணர் பெருமையினை விரித்துக் கூறியுள்ளார்.

திருநீலகண்டக் குயவ நாயனார்

இவரைத் 'திருநீலகண்டத்துக் குயவனார்க்கு அடியேன்' எனப் போற்றுவர் நம்பியாரூரர். சாதிகுலம் முதலிய வேற்றுமைகளைக் கடந்தவர்கள் திருத்தொண்டர்கள். ஆகவே அவர்களை அவர்தம் குலத்துடன் இணைத்துப் பேசுதல் மரபன்று. எனினும் திருத்தொண்டத் தொகை

யில் திருநீலகண்டர் என்னும் பெயருடன் பேசப்பெறும் அடியார்கள் இருவர் இருத்தலால், அவ்விருவரையும் வேறு பிரித்துணர்தல் வேண்டித் 'திருநீலகண்டக் குயவனார்' எனவும் 'திருநீலகண்டத்துப் பாணனார்' எனவும் அவர் தம் குலத்தோடு இணைத்துப் போற்றுதல் மரபாயிற்றெனத் தெரிகிறது.

திருநீலகண்டக் குயவனார் தில்லைப்பதியிற் பிறந்தவர் என்பது, 'தில்லைத் திருநீலகண்டக்குயவனும் செய்தவனே' என நம்பியாண்டார் நம்பிகள் போற்றியுள்ளமையாற் புலனும். வேட்கோவர் குலத்தில் தோன்றிய இந்நாயனார்க்கு வழங்கும் திருநீலகண்டர் என்பது, இவரது இயற் பெயரன்று; பாற்கடலில் தோன்றிய ஆலகால நஞ்சினை உலகெலாம் உய்ய உட்கொண்டு அடக்கிய அருளாளனாகிய இறைவனது திருநீலகண்டத்தின்கண்ணே தாம் கொண்ட பேரார்வத்தின் காரணமாகத் திருநீலகண்டம் என்னும் திருப்பெயரை இடைவிடாது ஓதும் இயல்புடையராதல்பற்றித் திருநீலகண்டர் என்பது இவர்க்குக் காரணப் பெயராயிற்று.

திருநீலகண்டராகிய இப்பெருந்தகையார், தில்லைச் சிற்றம்பலத்தே அம்மை காண அற்புதத் தனிக் கூத்தாடும் நாதனார் கழல்கள் வாழ்த்தி வழிபடும் நலத்தின் மிக்கவர்; பொய்கடிந்து அறத்தின் வாழ்பவர்; இறைவன்பால் மெய்யன்புடைய அடியார்களுக்கு ஏற்ற பணியினைச் செய்யும் விருப்புடையவர்; சைவ மெய்த்திருவின் சார்பே பொருளெனக்கொண்டு வையகம் போற்றும் வாழ்க்கை மனையறம் புரிந்து வாழ்பவர்; தம் மரபுக்கு ஏற்ப மட்பாண்டங்களைச் செய்து விற்று அதனால்வரும் பொருளினைக்கொண்டு வாழ்க்கை நடத்துபவர்; சிவனடியார்களுக்கு உண்கலமாகிய திருவோட்டினை அளித்தலைத் தமது அன்பின் கடமையாகக்கொண்டு ஒழுகுபவர். அவருடைய மனைவியார் அருந்ததியை ஒத்த கற்பினையுடையவர். இளமை மீதூர இன்பத்துறையில் எளியராகிய திருநீலகண்டர், ஒருநாள் பரத்தைபால் அணைந்து தம் மனைவியாரை அணுகிய நிலையில், அவரது புறத்தொழுக்கினையறிந்த அவ்வம்மையார், தம் கணவரைநோக்கி, 'எம்மைத் தீண்டுவீராகில் திருநீலகண்டம்' எனத் திருநீலகண்டத்தின்

மேல் ஆணையிட்டுக் கூறினர். அதனைக்கேட்ட நாயனர் தம்மனைவியாரை அயலவர்போல நோக்கி, 'எம்மை' எனப் பன்மைச் சொல்லாற் கூறினமையால், மற்றை மாதர் களையும் என்மனத்தாலும் தீண்டேன்' என உறுதி கூறினர். கற்பிற்சிறந்த அவர்தம் மனைவியார் தம் கணவனர்க்கு இயைந்த பணிகளையெல்லாம் நாள் தோறும் விருப்புடன் செய்துவர, திருநீலகண்டத்தின்பால் அன்புடைய அவ்விருவரும் உடனுறைவின்றி, அற்புறு புணர்ச்சியின்மை அயலறியாது வாழ்ந்து வந்தனர். இளமையில் மிக்குள்ளாராகிய இவ்விருவரும் திருநீல கண்டம் என்னும் ஆணைமொழியினை வழுவாது போற்றி ஆண்டுகள் பலவும் செல்லத் தமது இளமை நீங்க முதுமை நிலையெய்தி உடல்தளர்ச்சியுற்ற பின்னரும் இறைவன் பால் வைத்த அன்பின் திறத்தில் தளராதவர்களாய் ஒழுகினர்.

இவ்வாறு ஒழுகிவரும் நாளில், நிறையினும் கற்பினும் வழுவாத இவர்தம் இல்வாழ்க்கைச் சிறப்பினை உலகத்தார் அறிந்து உய்யும் வண்ணம் புலப்படுத்தத் திருவுளங் கொண்ட சிவபெருமான், சிவயோகியார் வேடங்கொண்டு திருநீலகண்டர் மனையை அடைந்து, தம்பாலுள்ள திருவோடு ஒன்றினை அவரிடம் தந்து 'நம்பி! நீ இதனை உன்பாற்பாதுகாத்து வைத்திருந்து நாம் வேண்டும்போது தருக' என்று சொல்லிச் சென்றார். சென்ற சிவயோகியார் பல நாட்கள் கழிந்தபின்பு தாம் கொடுத்திருந்த திரு வோட்டினை வைத்த இடத்தில் இல்லாமல் மறையச்செய்து, திருநீலகண்டரை அணுகி, 'யான் முன்பு உன்னிடம் தந்த ஓட்டினைத்தருக' எனக்கேட்டார். தாம் பாதுகாத்து வைத் திருந்த இடத்திற்சென்று ஓட்டினைக் காணப்பெருது அதனைப் பலவிடங்களிலும் தேடித்திகைப்புற்ற திருநீல கண்டநாயனர், சிவயோகியாரை வணங்கி, 'எம்பெருமானே! நீர்தந்த திருவோட்டினை யான்பாதுகாத்து வைத்திருந்த இடத்திலும் வேறிடங்களிலும் பலமுறை தேடியும் காணப் பெற்றிலேன். அதனினும் சிறப்புடைய நல்ல பாத்திரம் தருகின்றேன். அதனை ஏற்றுக்கொண்டு எனது பிழை யினைப்பொறுத்தருளவேண்டும்' என இரந்து வேண்டினர். அதுகேட்ட சிவயோகியார், 'யான்தந்த மண்ணோட்டினை யன்றி நீ பொன்னினுற்செய்து தந்தாயாயினும் அதனை

ஏற்றுக்கொள்ளமாட்டேன். முன்பு நான்தந்த ஓட்டினையே கொண்டுவா' என்றார். அதுகேட்ட திருநீலகண்டர், 'கேடிலாப் பெரியோய்! நீ என்பால் வைத்த ஓடுகெட்டதனால் அதனைத் தேடியும் காணாத நிலையில் அதனினும் நல்லதாய் நீண்ட நாளைக்குப் பயன்படும் திருவோட்டினைத் தருகின்றேன் என்று யான் கூறவும் இவ்வாறு பிணங்கிக்கூறியது என் உணர்வையெல்லாம் ஒழித்தது' எனவருந்திக்கூறினர். புண்ணியப்பொருளாய் வந்த இறைவர், நாயனாரைநோக்கி, 'யான் உன்பால் வைத்த அடைக்கலப் பொருளைக் கவர்ந்து கொண்டு பாவத்திற்குச் சிறிதும் அஞ்சாது பலவகைப் பொய்ம்மொழிகளைப் பகர்கின்றாய். யாவரும் காண உன்னைத் தப்பவொட்டாமல் மறித்து எனது திருவோட்டினை வாங்கிக்கொண்டல்லது இவ்விடத்தைவிட்டுப் போக மாட்டேன்' என்றார். 'வளத்தினால் மிக்க திருவோட்டினை யான் கவர்ந்தேனல்லேன்; என் உள்ளத்திலும் களவில்லாமையை எவ்வாறு தெரிவிப்பேன்' என்றார் நாயனார். 'உன் காதல்மைந்தனைப்பற்றிக் குளத்தினில் மூழ்கிச் சத்தியஞ்செய்' என்றார் சிவயோகியார். 'அப்படிச் செய்தற்கு எனக்குப் புதல்வன் இல்லையே' என்றார் வேட்கோவர். 'மைந்தனில்லையாயின் மனைவியின் கையைப்பிடித்துக் குளத்தில் மூழ்கிச் சத்தியஞ்செய்' என்றார் சிவயோகியார். 'நானும் என்மனைவியும் எங்களிடையே யுள்ளதொரு சபதத்தால் உடன் மூழ்க இசைவில்லை. யானே புனலில் மூழ்கி உறுதி செய்கிறேன். என்னுடன் வாரும்' என்றார் நாயனார் 'நான் முன்னே உன்பால் தந்துசென்ற திருவோட்டினைத்தராமலும், அதனை நீ கவர்ந்துகொள்ள வில்லையென்றால் உன்மனைவியின் கைப்பிடித்துச் சத்தியஞ் செய்யாமலும் சிந்தை வலித்திருக்கின்றாய். தில்லை வாழந்தணர்கள் வந்து கூடியிருக்கும் பேரவையிலே இவ் வழக்கினைச் சொல்வேன்' என்று சிவயோகியார் சொல்லத் திருநீலகண்டரும் அதற்கிசைந்து அவருடன் சென்றார்.

தில்லை வாழந்தணர்களின் அவையினையடைந்த சிவயோகியார், "இந்த வேட்கோவன்பால் யான்வைத்த பாத்திரத்தைத் தந்தொழியான்; கெடுத்தானேல் தன் மனைவி கைப்பற்றி வந்து மூழ்கியும் தாரான்; வலிசெய்கின்றான்" என்று தம் வழக்கினைக் கூறினர். அதுகேட்ட அந்தணர்கள், திருநீலகண்டரை நோக்கி, 'நிறையுடைய

வேட்கோவரே! நீர் நிகழ்ந்ததைச் சொல்வீராக' என்றனர். 'அருமறை அந்தணர்களே! இங்கு நிற்கின்ற சிவயோகியார் பொன்னினும் மணியினும் போற்றத்தக்கதென்று சொல்லி என்பால் தந்த திருவோடு நான் பேணிப் பாதுகாத்து வைத்த இடத்திலிருந்து இடம் பெயர்ந்து காணுமற்போய் விட்டது' என்றூர் திருநீலகண்டர். "இவர் தாம் வைத்த ஓட்டினைக் கெடுத்தீராஞல் தரும் இவர் 'குளத்தில் மூழ்கித் தருக' என்று உரைத்தாராயின் மனைவியோடு மூழ்கி உறுதி கூறுதல் முறையேயாகும்" என்று தில்லை வாழ்ந்தணர் முடிவு கூறிஞர்கள்.

அதுகேட்ட திருநீலகண்டர் தம் மனைவியாரைத் தீண்ட இயலாமைக்குரிய சபதத்தை வெளிப்படுத்த இயலாதவராய்ப் 'பொருந்தியவகையால் மூழ்கித் தருகின் றேன்' என்று சொல்லி, சிவயோகியாருடன் தம் வீட்டினை யடைந்து மனைவியாரை அழைத்துக்கொண்டு தில்லைத் திருப்புலீச்சுரத்திருக்கோயிலின் முன்னுள்ள குளத்தினை யடைந்தார்; திருநீலகண்டத்தின் ஆணையினை வழுவாது காக்கும் நிலையில் மூங்கிற்கோலின் ஒருமுனையினைத் தாமும் மற்ரெரு முனையினைத் தம் மனைவியாரும் பற்றிக்கொண்டு குளத்தில் மூழ்கப்புக்கபொழுது, சிவ யோகியார் 'மாதைத்தீண்டிக்கொண்டு உடன்மூழ்குவீராக' என்று வற்புறுத்த, அவ்வாறு செய்தற்குத் தடையாகத் தங்களிடையேயுள்ள சபதத்தை அங்குள்ளார் கேட்ப எடுத்துச்சொல்லித் திருநீலகண்டர் மனைவியாருடன் குளத்தில் மூழ்கிஞர். வாவியில் மூழ்கிக் கரையேறும் கணவரும் மனைவியாரும் மேவிய முதுமை நீங்கி விருப்புறும் இளமை பெற்றுத் தோன்றிஞர்கள். அந்த அற்புதக் காட்சியைக் கண்டார் அனைவரும், அங்கு நின்ற சிவயோகியாரைக் காணுது மருண்டு நின்றனர். மறைந்த இறைவர், அம்மையப்பராக விடைமேல் தோன்றித் திருநீலகண்டரையும் அவர்தம் மனைவியாரை யும் நோக்கி 'ஐம்புலன்களை வென்றவர்களே! என்றும் இவ்விளமை நீங்காது நம்பால் விருப்புடன் இருப்பீராக' என அருள்புரிந்து மறைந்தருள, அவ்விருவரும் இவ் வுலகில் திருவருள் வழிப்பட்ட நற்பணிகள் பல புரிந்து சிவலோகத்தினையடைந்து பெறலரும் இளமை பெற்றுப் பேரின்பம் உற்ருர்கள்.

இயற்பகை நாயனூர்

'இல்லையே யென்னுத இயற்பகைக்கும் அடியேன்' என நம்பியாரூரராற் போற்றப் பெற்ற இந்நாயனூர், சோழ நாட்டின் கடற்றுறைப் பட்டினமாகிய காவிரிப்பூம்பட்டினத் திலே வணிகர் குலத்திலே தோன்றியவர்; மாறிலாத நன்னெறியினில் விளங்கும் மனையறம்புரி மகிழ்ச்சியின் பேறெலாம் இறைவனடியார் ஏவின செய்யும் பெருமையே எனப் பேணி வாழ்பவர். அரனடியார்க்கு அடித்தொண்டு புரியும் அடிமைத் திறத்தில் நிலைபெற்றெழுகும் இவர், தம்பால் உள்ளன எல்லாவற்றையும் அடியார்களுக்கு இல்லையென்னுது வழங்கும் இயல்பினராய்த் தந்நலங் கருதாது உலகியற்கைக்கு மாருக ஒழுகினமைபற்றி 'இயற்பகையார்' என அழைக்கப்பெற்ருர்.

"மிக்க சீரடியார்கள் யாரேனும் வேண்டும் யாவையும்
இல்லையென்னுதே
இக்கடற்படி நிகழ முன்கொடுக்கும் இயல்பின்
நின்றவர் உலகியற் பகையார்"

எனவரும் தொடரில் இயற்பகையார் என்னும் பெயர்க் காரணத்தைச் சேக்கிழாரடிகள் குறிப்பாக விளக்கியுள்ளமை கூர்ந்துணரத் தகுவதாகும்.

இயற்பகை நாயனூரது ஈகைத்திறத்தினை உலகத் தார்க்கு உணர்த்தத் திருவுளங்கொண்ட சிவபெருமான் தூயநீறு பொன்மேனியில் அணிந்த தூர்த்த வேடமுடைய வேதியர்கோலத்தினராய், இயற்பகையாரது வீட்டினை அடைந்தார். நாயனூர் அவ்வடியாரைச் சிந்தையன்புடன் எதிர்கொண்டு, 'முனிவர் இங்கு எழுந்தருளியது என் பெருந்தவத்தினுலன்ருே' என்று வரவேற்று வழிபட்டு நின்ருர். நின்ற அன்பரை அவ்வேதியர் நோக்கி, 'சிவ னடியார்கள் குறித்து வேண்டினவற்றையெல்லாம் குண மெனக் கொண்டு ஒன்றும் மறுக்காது உவந்தளிக்கும் நுமது ஈகைத் திறத்தினைக் கேள்வியுற்று நும்மிடத்திலே ஒரு பொருளை விரும்பி இன்று நான் இங்கு வந்தேன். அதனை நீர் அளித்தற்கு இசையலாம் என்ருல் அதனை நான் வெளியிட்டுச் சொல்லலாம்' எனக்கூறினூர். அது கேட்ட இயற்பகையார், 'எந்தப் பொருளாயினும் என்பா லிருக்குமாயின் அஃது எம்பெருமானுகிய இறைவனடி

யாரது உடைமை. இதிற் சிறிதும் சந்தேகமில்லை. நீர் விரும்பியதனை அருளிச் செய்வீராக' என்றார். அதுகேட்ட வேதியர், 'மன்னுகாதல் உன் மனைவியை வேண்டி வந்தது இங்கு' எனச்சொன்னார். அதுகேட்ட நாயனார் முன்னையினும் மகிழ்ச்சியுடையராய், 'எம்பிரான் என்னிடம் உள்ள பொருளையே வேண்டியது எனது புண்ணியப் பயனாகும்' என்று கூறி, விரைந்து வீட்டினுள்ளே புகுந்து கற்பிற் சிறந்த மனைவியாரை நோக்கி, 'விதிமணக் குல மடந்தையே! இன்று உன்னை இம்மெய்த்தவர்க்கு நான் கொடுத்தனன்' என்றார். அதுகேட்ட மனைவியார், மனங் கலங்கிப் பின் மனந்தெளிந்து தம் கணவரை நோக்கி, 'என் உயிர்க்குத் தலைவரே! என் கணவராகிய நீர் எனக்குப் பணித்தருளிய கட்டளை இதுவாயின் நீர் கூறிய தொன்றை நான் செய்யும் அவ்வளவல்லது எனக்கு வேறுரிமை உளதோ?' என்று சொல்லித் தன் தனிப் பெருங்கணவராகிய இயற்பகையாரை வணங்கினார். இயற்பகையாரும் இறைவனடியார்க்கெனத் தம்மால் அளிக்கப் பெற்றமை கருதி அவ்வம்மையாரை வணங்கினார். திருவினும் பெரியாளாகிய அவ்வம்மையார், அங்கு எழுந்தருளிய மறை முனிவர் சேவடிகளைப் பணிந்து திகைத்து நின்றார்.

மறை முனிவர் வேண்டிய வண்ணம் மாது தன்னைக் கொடுத்து மகிழும் மாதவராகிய இயற்பகையார், வேதியரை நோக்கி, 'இன்னும் யான் செய்தற்குரிய பணி யாது?' என இறைஞ்சி நின்றார். வேதியராக வந்த இறைவர், 'இந்நங்கையை யான் தனியே அழைத்துச் செல்லும் நிலையில் நின் அன்புடைய சுற்றத்தாரையும் இவ்வூரையும் கடத்தற்கு நீ எனக்குத் துணையாக வருதல் வேண்டும்' என்றார். அதுகேட்ட இயற்பகையார், 'யானே முன்னறிந்து செய்தற்குரிய இப்பணியை விரைந்து செய்யாது எம்பெருமானாகிய இவர் வெளியிட்டுச் சொல்லுமளவுக்குக் காலந்தாழ்த்து நின்றது பிழையாகும்' என்று எண்ணி, வேறிடத்திற்புக்குப் போர்க்கோலம் பூண்டு வாளும் கேடகமுந்தாங்கி வந்து வேதியரை வணங்கி மாதினையும் அவரையும் முன்னே போகச் செய்து அவர்க்குத் துணையாகப் பின்னே தொடர்ந்து சென்றார்.

இச்செய்தியை அறிந்த மனைவியார் சுற்றத்தாரும், வள்ளலார் சுற்றத்தாரும் 'இயற்பகை பித்தனுனல் அவன் மனைவியை மற்றொருவன் கொண்டு போவதோ?' என வெகுண்டு தமக்கு நேர்ந்த பழியைப் போக்குதற்குப் போர்க் கருவிகளைத் தாங்கி மறையவரை அணுகி 'தூர்த்தனே! போகாதே நற்குலத்திற் பிறந்த இப்பெண்ணை இங்கேயே விட்டுவிட்டு எமது பழி போக இவ்விடத்தைவிட்டு ஒழிக' எனக்கூறி அவரைத் தடுத்து நிறுத்தினர். மறை முனிவர் அதுகண்டு அஞ்சியவரைப்போன்று மாதினைப் பார்த்தார். மாதரும் 'இறைவனே அஞ்ச வேண்டாம் இயற்பகை வெல்லும்' என்றார். வீரக் கழலணிந்த இயற்பகையார், 'அடியனேன் அவரையெல்லாம் தறையிடைப்படுத்துகின்றேன்' என வேதியர்க்குத் தேறுதல் கூறி, பழிக்கு அஞ்சிப் போருக்கு வந்த தம் சுற்றத்தாரை நோக்கி, 'ஒருவரும் எதிர் நில்லாமே ஓடிப்பிழையும்! அன்றேல் என் வாட்படைக்கு இலக்காகித் துடிப்பீர். என்று அறிவுறுத்தினர். அதுகேட்ட சுற்றத்தார், 'ஏடா' நீ என்ன காரியத்தைச் செய்து இவ்வாறு பேசுகின்றாய். நின்செயலால் இந்நாடு அடையும் பழியையும் இது குறித்து நம் பகைவராயினர் கொள்ளும் இகழ்ச்சிச் சிரிப்பினையும் எண்ணி நாணுது உன் மனைவியை வேதியனுக்குக் கொடுத்து வீரம் பேசுவதோ? யாங்கள் போரிட்டு ஒரு சேர இறந்தொழிவதன்றி நின் மனைவியை மறையவனுக்கு கொடுக்க ஒரு பொழுதும் இசையோம்' என்று வெகுண்டு கூறினர். அதுகேட்ட இயற்பகையார், 'உங்கள் உயிரை விண்ணுலகுக்கு ஏற்றி இந்த நற்றவரைத் தடையின்றிப் போக விடுவேன்' என்று கூறி, உறவினரை எதிர்த்துப் பொருதற்கு முந்தினர். உறவினர்கள் மறையவரைத் தாக்குதற்கு முற்பட்டனர். அதுகண்டு வெகுண்ட இயற்பகையார், சுற்றத்தார்மேற் பாய்ந்து அனைவரையும் வாளினுற் கொன்று வீழ்த்தினர். எதிர்ப்பவர் ஒருவருமின்றி நின்ற இயற்பகையார், வேதியரை நோக்கி 'அடிகள் நீர் அஞ்சா வண்ணம் இக்காட்டினைக் கடக்கும் வரை உடன் வருகின்றேன்' என்று கூறித் திருச்சாய்க்காடுவரை துணை வந்தபொழுதில், மறைமுனிவர் 'நீர் வீட்டிற்குத் திரும்பிச் செல்லலாம்' எனக்கூறினர். இயற்பகையாரும் அவரை வணங்கி ஊருக்குத் திரும்பினுர்.

மனைவியை அடியார்க்கு உவகையுடன் அளித்துத் திரும்பிப் பாராது செல்லும் நாயனாரது அன்பின் திறத்தை எண்ணி மகிழ்ந்த இறைவர், மெய்ம்மையுள்ளமுடைய நாயனாரை மீளவும் அழைக்கத் தொடங்கி, 'இயற்பகை முனிவா ஓலம் ஈண்டு நீவருவாய் ஓலம் அயர்ப்பிலாதானே ஓலம் அன்பனே ஓலம் ஓலம் செயற்கருஞ் செய்கை செய்த தீரனே ஓலம் ஓலம்' என அழைத்தருளினர். அழைத்த பேரோசையினைக் கேட்ட இயற்பகையார், 'அடியனேன் வந்தேன் வந்தேன். தீங்கு செய்தவர் உளராயின் அன்னோர் என் கைவாளுக்கு இலக்கா கின்றார்' என்று கூறி விரைந்து வந்தார். மாதொரு பாகனாகிய இறைவனும் தனது தொன்மைக் கோலத்தைக் கொள்ளுதற்கு அவ்விடத்தைவிட்டு மறைந்தருளினன். சென்ற இயற்பகையார் முனிவரைக் காணாது அவருடன் சென்ற மாதினைக் கண்டார்; விசும்பின் கண்ணே இறைவர் மாதொருபாகராக விடைமேல் தோன்றியருளும் தெய்வக் கோலத்தைக் கண்டார்; நிலமிசைப் பலமுறை விழுந்து தொழுதார்; எல்லையில் இன்பவெள்ளம் அருளிய இறைவனை உளங்கசிந்து போற்றி வாழ்த்தினர். அப் பொழுது அம்மையப்பராகிய இறைவர், 'பழுதிலாதாய், நின் அன்பின் திறங்கண்டு மகிழ்ந்தோம். நின் மனைவி யுடன் நம்பால் வருக' எனத் திருவருள் புரிந்து மறைந் தருளினர். செயற்கருஞ் செய்கை செய்த திருத்தொண்ட ராகிய இயற்பகையாரும் தேற்றம் மருவிய தெய்வக் கற்பினை யுடைய அவர் தம்மனைவியாரும் ஞானமா முனிவர் போற்ற நலமிகு சிவலோகத்தில் இறைவனைக் கும்பிட்டு உட னுறையும் பெருவாழ்வுபெற்றனர். அவர்தம் சுற்றத்தா ராய் அவருடன் போர்செய்து உயிர் துறந்தவர்கள் வானுலகடைந்து இன்புற்றனர்.

இளையான்குடி மாறநாயனர்

'இளையான்றன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்' என இந்நாயனர் திருத்தொண்டத் தொகையிற்போற்றப் பெறுதலால், இவர் அவதரித்த திருத்தலம் இளையான்குடி என்பதும், இவரது இயற்பெயர் மாறன் என்பதும் இனிது புலனாகும்.

இளையான்குடி என்ற ஊர் சோழநாட்டில் திருநள்ளாற்றுக்கு மேற்கே இரண்டு நாழிகை தூரத்தில் உள்ளது என்றும், பத்தகுடி இருப்புப்பாதை நிலையத்திலிருந்து முக்கால் நாழிகை தூரத்தில் இவ்வூரையடையலாம் என்றும் கூறுவர் சிலர். இவ்வூரில் பழைய சிவாலயம் ஒன்று உண்டு. இந்நாயனார் புராணத்திற்குறிக்கப்பெறும் நாற்றங்கால் இக்கோயிலுக்குத் தெற்கில் உள்ளது. இதனை முளைவாரிக்குட்டை – முளைவாரி நாற்றங்கால் என அவ்வூர்மக்கள் வழங்குகின்றார்கள். சோழமண்டல சதகமும் இளையான்குடி மாறனார் பிறந்ததலம் சோழ நாட்டைச் சேர்ந்ததாகக் குறிப்பிடுகிறது. இவ்வாறாகவும் தொண்டை மண்டல சதக ஆசிரியர் இளையன்குடி மாறனார் வரலாற்றுப்பெருமை தொண்டை நாட்டிற்குரியதாகக் கூறுகின்றார்.

இனி, இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த பரமகுடிக்கு வடகிழக்கே ஏழு நாழிகை தூரத்திலுள்ள இளையான்குடி என்ற ஊரே இந்நாயனாரது ஊரென்றும், இவ்வூரில் 'முளைவாரிய முதளித்த நாற்றங்கால்' என்ற பெயரால் ஒரு சருவமானிய நிலம் வழங்கப் பெறுகிற தென்றும், மாறன் என்பது பாண்டியர்க்குரிய பெயராய் அந்நாட்டிலுள்ளார்க்கு இடப்பெற்று வழங்கப்பெறுதல் பாண்டி நாட்டில் அவதரித்த திருமாலடியாராகிய நம்மாழ்வார் மாறன் என்னும் பெயருடையராகப் போற்றப் பெறுதலாற் புலனாமென்றும் கூறுவர் சிலர்.

திருத்தொண்டர்கள் திருவவதாரம் செய்தருளிய திருப்பதிகளுள் இன்னஇன்ன திருப்பதி இன்னஇன்ன நாட்டின் கண்ணது என அந்தந்த நாயனார் புராணத்தில் இடஞ்சுட்டி விளக்குதலை மரபாகக் கொண்ட சேக்கிழாரடிகள், மாறநாயனார் பிறந்தருளிய இளையான்குடி என்னும் ஊர் இன்ன நாட்டின்கண் உள்ளது எனத் தெளிவாகக் குறிப்பிடாமையால் இவ்வூர் இதுதான் எனத் துணிந்துரைத்தற்கு இயலவில்லை.

இளையான்குடி என்னும் ஊரிலே வேளாளர் மரபிலே தோன்றியவர் மாறநாயனார். ஏரின்மல்குவளத்தினால் எல்லையில்லாத செல்வமும் சிவபெருமான்பால் நிறைந்த

பேரன்பும் வாய்ந்த இவர், சிவனடியார் யாவராயினும் தம்மனைக்கண் இன்மொழியுடன் எதிர்கொண்டு போற்றி ஆசனத்திருத்தி அருச்சித்து வழிபட்டு அறுசுவை நிறைந்த திருவமுதினை அன்புடன் அருத்தி மகிழ்பவர். அடியார்க்குத் திருவமுதளித்தலாகிய இத்திருப்பணியைச் செல்வக் காலத்திலே மட்டுமன்றி நல்குரவாகிய அல்லற்காலத்திலும் விடாது செய்ய வல்லவர் இந்நாயனர் என்னும் உண்மையினை உலகத்தார்க்கு அறிவுறுத்தத் திருவுள்ளங் கொண்ட இறைவர், இளையான்குடிமாறர் வாழ்க்கையில் செல்வம் குறைய வறுமையுண்டாகும் வண்ணம் செய்தருளினர். இவ்வாறு செல்வ வளம் சுருங்கவும் தம் மனஞ்சுருங்குதலின்றித் தம்மிடமுள்ள நிலங்கள் முதலியவற்றை விற்றும் தம்மையே விற்றும் கொடுக்கத் தக்க அவ்வளவு கடன்களை வாங்கியும் அடியார்க்கு அமுதளித்தலாகிய பணியை விடாது செய்து வந்தார்.

இளையான்குடிமாறர், மழைக்காலத்திலே ஒரு நாள் பகல் முழுவதும் உணவின்றிப் பசிமிக்கு வீட்டின் கதவைத் தாளிட்டிருக்கும் நிலையில், மழை பெய்துகொண்டிருக்கும் நள்ளிரவிலே சிவபெருமான் அடியார் கோலங்கொண்டு மாறனரது மனைக்கு எழுந்தருளிக் கதவைத் தட்டி அழைத்தார். மாறனர் கதவைத் திறந்து அடியாரை வீட்டினுள்ளே அழைத்துச் சென்றார்; மழையினால் நனைந்த அடியார் திருமேனியை ஆடை கொண்டு துவட்டி இருத்தற்கு இடங்கொடுத்தார்; அடியார்க்குத் திருவமுது செய்வித்தல் வேண்டுமென்னும் பெருவிருப்புடன் தம் மனைவியாரை நோக்கி, 'அடியார் மிகவும் பசித்துள்ளார். என் செய்வது? முன்னமே நமக்கு இங்கு உணவில்லை. ஆயினும் இறைவனடியார்க்கு அமுதளித்தல் வேண்டுமே? இதற்கு யாது செய்வோம்?' என வினவினர். அது கேட்ட மனைவியார், 'நம் வீட்டில் மற்றென்றும் காண்கிலேன். ஏதிலாரும் இனித்தருவாரில்லை. பகற்பொழுதும் போயிற்று. தேடிப்போதற்குரிய இடமும் வேறில்லை. தீவினையேன் என் செய்வேன்?' என்று சொல்லி, 'இன்று பகற்பொழுதிலே வறுமை நீங்க வயலில் விதைக்கப்பட்ட செந்நெல் முளைகொண்டுள்ளவற்றை வாரிக்கொணர்ந்தால் இயன்ற அளவில் அமுதாகச் சமைத்தலும் கூடும். இதுவன்றி வேறு வழியறியேன்' என்றார்.

அதுகேட்டு மகிழ்ந்த மாறனார், மைக்குழம்பு போன்ற நள்ளிருளிலே இறைகூடையைத் தலையிற் கவித்துக் கொண்டு வயலையடைந்து காலினால் தடவிச் சென்று மழை நீரில் மிதந்த நெல்முளைகளைத் தம்கைகளால் வாரிக் கூடையில் நிறைத்துக் கொண்டு விரைந்து வீடு திரும்பினார். மனை வாயிலிலே கணவரை எதிர்நோக்கி நின்ற மனைவியார், நென்முளையை வாங்கிச் சேறுபோக நீராற் கழுவிச் 'சோறு சமைத்தற்கு விறகு இல்லையே' என வருத்த முற்றாராக, மாறனார் தம் வீட்டுக் கூரையில் சிதைந்து விழும் அலக்கினைப் பிரித்தார். மனைவியார் அவற்றைக் கொண்டு அடுப்பு மூட்டி நெல் முளையை ஈரம்போக வறுத்துக் குற்றி அரிசியாக்கி உலையிலிட்டுச் சோறு சமைத்து, 'இனி, கறிக்கு யாது செய்வோம்' எனக் கவலையுற்றார். அப்பொழுது மாறனார், வீட்டுத் தோட்டத்திற்குச் சென்று, குழி நிரம்பாத புன்செய்ப் பயிரினைக் கைகளால் தடவிப் பிடுங்கிக் கொணர்ந்தார். மனைவியார் அவற்றை வாங்கி ஆய்ந்து தம் கைத்திறத்தால் வெவ்வேறு கறியமுதாகச் செய்து முடித்து 'இனிச் சிவனடியாரைத் திருவமுது செய்ய அழைப்போம்' என்றார். மாறனார் தம் மனைக்கண் எழுந்தருளிய சிவனடியாரை எழுப்பி, 'அடியனேன் உய்ய என்பால் எழுந்தருளிய பெரியோய்! அமுது செய்தருள்க' என வேண்டி நின்றார். அப்பொழுது அடியாராக வந்திருந்த பெருமான், சோதிப் பிழம்பாய் எழுந்து தோன்றினார். அது கண்டு மாறனாரும் மனைவியாரும் திகைத்து நின்றனர். சிவபெருமான் உமா தேவியாருடன் விடைமேல் தோன்றி, 'அன்பனே! அன்பர்பூசை அளித்தநீ நின் மனைவியோடும் என்பெரும் உலகமாகிய சிவலோகத்தினை எய்தி இருநிதிக் கிழவனாகிய குபேரன் நினது ஏவல் கேட்ப இன்பம் ஆர்ந்திருப்பாயாக' என்று அருள் செய்து மறைந்தருளினார்.

மெய்ப்பொருள் நாயனார்

'வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக்கு அடியேன்' என நம்பியாரூரராற் போற்றப்பெற்ற இந்நாயனார், சேதி நாட்டிலே திருக்கோவலூரிலே மாதொரு பாகனார்க்கு வழி வழியாக அன்பு செலுத்தும் மலையமான் குடியிற்

பிறந்தவர். குறுநில மன்னராகிய இவரது இயற்பெயர் இதுவெனத் தெரியவில்லை. சிவனடியார் வேடத்தையே மெய்ப்பொருள் எனச் சிந்தித்துப் போற்றி வந்தமையால் மெய்ப்பொருள் நாயனார் என்பது இவர்க்குக் காரணப் பெயராயிற்று. அறநெறி வழாமல் அரசுபுரியும் இவ் வேந்தர் பெருமான், பகைவரை வென்று வேத நன்னெறி யின் மெய்ம்மை விளங்கிடத் தாம் தேடிய பொருள்களும் நீடு செல்வமும் தில்லைமன்றுள் ஆடிய பெருமான் அன் பர்க்கு ஆவன ஆகும் என்று கொண்டு சிவனடியார்களுக்கு வேண்டுவனவற்றைக் குறைவறக் கொடுத்து வந்தார்.

இவ்வாறொழுகும் நாளில் இவருடன் பகைமை கொண்டு பலமுறை போர் செய்து தோற்று அவமானப் பட்டோடிய முத்தநாதன் என்னும் மன்னன், இவரது அடியார் பத்தியை யறிந்து இவரை வஞ்சனையாற் கொன் றொழிக்க எண்ணினான். சிவனடியாரைப் போல மெய் யெலாம் நீறுபூசிச் சடைமுடி தரித்துக் கையிலே புத்தக முடிப்பென்று அதனுள்ளே ஆயுதத்தினை மறைத்து வைத்துக்கொண்டு, சேதிபர் பெருமானது அரண்மனை வாயிலை அடைந்தான். அவனைச் சிவனடியாரெனக் கருதிய வாயில்காவலர், கைதொழுது உள்ளே புக விட்டனர். இவ்வாறு அடியார் வேடத்துடன் அரண்மனை வாயில்களைக் கடந்து செல்லும் முத்தநாதன், மெய்ப் பொருள் வேந்தர் தங்கிய அறையின் நுழைவாயிலை அடைந்தபொழுது அங்கே நின்ற தத்தன் என்னும் வாயில் காவலன், 'அரசர் இப்பொழுது துயில்கொள்கின்றார். தாங்கள் காலமறிந்து செல்லுதல் வேண்டும்' என்று சொல்லித் தடுத்தான். அந்நிலையிற் பொய்த்தவனாகிய முத்தநாதன், 'யான் அரசற்கு உறுதிப்பொருளை உப தேசித்தல் வேண்டும். தடுக்காமல் இங்கு நிற்பாயாக' எனத் தத்தனுக்குச் சொல்லிவிட்டு உள்ளே புகுந்து, அரசி உடனிருக்க அரசு கட்டிலிலே துயிலமர்ந்த அரசரை அணு கினான். அது கண்டு அரசியார், விரைந்தெழுந்து அர சரைத் துயிலெழுப்பினார். விழித்தெழுந்த வேந்தர், சிவனடியார் வந்தார் என்று தலைமேற் கைகுவித்து எதிர் சென்று வணங்கி, 'மங்கலம் பெருக என் வாழ்வு வந்தணைந் தது என்னத் தாங்கள் இங்கு எழுந்தருளப் பெற்றேன்' என்று கூறி வரவேற்றார். 'உங்கள் நாயனார் உரைத்

தருளிய ஆகமநூல் எங்கும் இல்லாதது ஒன்றைக் கொண்டு வந்தேன்' என்றான் முத்தநாதன். அது கேட்ட வேந்தர், 'மாறில் ஆகமத்தை வாசித்து அருள்செய வேண்டும்' என வேண்டினர். 'நின்பட்டத்தரசி இல்லாமல் நீயும் நானும் வேறிடத்து இருத்தல் வேண்டும்' என்றான் முத்தநாதன். அது கேட்ட வேந்தர், மனைவியாரை அந்தப்புரத்திற்குச் செல்லப் பணித்து, வந்த அடியாரை ஆசனத்து அமர்த்தித் தாம் கீழிருந்து 'ஆகமப் பொருளை அருள் செய்யவேண்டும்' என வேண்டிக் கொண்டார். அடியார் வேடத்தில் வந்த முத்தநாதன், தன் மடிமீது வைத்துப் புத்தகக் கட்டை அவிழ்ப்பவன் போல் உள்ளிருந்த வாளினை எடுத்துத் தான் நினைந்த தீச்செயலை நிறைவேற்றினன். வாளினற் குத்தப்பட்ட வேந்தர் 'சிவ வேடமே மெய்ப்பொருள்' என்று அவனை வணங்கி வென்றார். பொய் வேடத்தவனாகிய முத்தநாதன் உள்ளே புகுந்த பொழுதே அங்கு என்ன நிகழ்கின்றதோ எனத் தன் மனத்தைச் செலுத்திய தத்தன் என்னும் வாயில் காவலன், அந்நிலையில் விரைந்து உள்ளே புகுந்து தன் கை வாளினால் பகைவனை வெட்டச் சென்றான். அது கண்ட வேந்தர் 'தத்தா! இவர் நம்மவர்' எனத் தடுத்து வீழ்ந்தார். அங்ஙனம் வீழ்கின்ற வேந்தரைத் தலையினால் வணங்கித் தாங்கிய தத்தன், 'யாது நான் செய்கேன்?' என்றான். அது கேட்ட வேந்தர் 'எம்பிரான் அடியாராகிய இவர் இவ்விடத்தினை விட்டுச் செல்லுதற்குத் தடை நிகழா வண்ணம் இவரைக் கொண்டு போய் விடுவாயாக' எனப் பணித்தார். அவ்வாறே தத்தன், முத்தநாதனை அழைத்துக் கொண்டு செல்லும்பொழுது, இந்நிகழ்ச்சியைக் கேள்வியுற்ற மக்கள் பலரும் 'அரசனுக்குத் தீங்கு செய்த இக்கொடியோனைக் கொன்றொழிப்போம்' எனச் சூழ்ந்து கொண்டார்கள். தத்தன், 'இத் தவவேடத்தான் இவ்விடத்தை விட்டுத் தீங்கின்றிச் செல்வது நம் வேந்தரது ஆணையாகும்' என்று கூறி அவர்களைத் தடுத்து நிறுத்தி வஞ்சனை வேடத்தானாகிய அவனை ஆட்கள் நடமாட்டமில்லாத காட்டு வழியிலே விட்டு விட்டு, அவனுக்குத் தீங்கின்மையறிய உயிர் தாங்கியிருக்கும் மெய்ப்பொருள் வேந்தரை விரைந்து அணுகி, 'தவ வேடங்கொண்டு வென்றவற்கு இடையூறின்றி விட்டு வந்தேன்' என்றான். அது கேட்ட

மெய்ப்பொருள் நாயனர், 'இன்று எனக்கு ஐயன் செய்த இப்பேருதவியை வேறு யார் செய்ய வல்லார்கள்' என்று சொல்லி அவன்பால் நிறைபெருங் கருணையுடையராய், அரசாட்சிக்குரிய புதல்வர் முதலியோர்க்கும் தமது பிரிவினல் வருந்தும் சுற்றத்தவர்க்கும் பொருந்திய கடமைகளை யெல்லாம் விரித்துரைப்பவர், 'விதி முறைப்படிப் பரவி யணியத்தக்க திருநீற்றின் மேல் வைத்தற்குரிய அன்பின் திறத்தை எக்காலத்தும் நெகிழாது பேணிப் போற்றுவீர்களாக' என்று அறிவுறுத்திப் பொன்னம்பலத்தில் ஆடல் புரிந்தருளும் திருவடிகளைச் சிந்தித்தார். அப்பொழுது அம்மையப்பராகிய இறைவர் மெய்ப்பொருள் நாயனர்க்குத் தமது திருக்கோலத்தைக் காட்டியருளி அண்டவானவர்கட்கு எட்டாத தம்முடைய திருவடி நிழலிலே தங்கிக் கும்பிட்டுறையும் பெருவாழ்வை அவர்க்கு அளித்தருளினர்.

விறன்மிண்ட நாயனர்

'விரிபொழில் சூழ்குன்றையார் விறன்மிண்டர்க்கு அடியேன்' எனப் போற்றப்பெற்ற இவர், சேரர்க்குரிய மலைநாட்டிலே திருச்செங்குன்றூரிலே வேளாளர் குலத்திலே தோன்றியவர். இவர், சிவபெருமான் திருவடிகளையே பற்றுகப் பற்றி ஏனைய பற்றுக்களை யெல்லாம் அறுத்தொழிக்கும் விறலுடையார் ஆதலால் விறன்மிண்டர் என அழைக்கப்பெற்ருர். அடியார் பத்தியிலே சிறந்த இவர், சிவனுறையும் திருத்தலங்களை யெல்லாம் வழிபட்டுச் செல்லுங்காலத்து அடியார் திருக்கூட்டத்தின் எதிர் சென்று அன்பினல் பரவிப் போற்றிய பின்னரே ஆலயத்துள் எழுந்தருளியிருக்கும் இறைவன் திருவடிகளை வணங்கும் இயல்பினையுடையவர். ஈசனிடத்து நேசமுடையராகிய இவர், மலைநாட்டிலிருந்து புறப்பட்டுப் பல தலங்களை வணங்கிக்கொண்டு திருவாரூரையடைந்து அங்குத் தேவாசிரிய மண்டபத்தில் வீற்றிருக்கும் சிவனடியார்களை வழிபட்டிருந்தார்.

ஒரு நாள், சுந்தரமூர்த்தி நாயனர், திருவாரூர்ப் பெருமானை வழிபடச் செல்பவர், அத் தேவாசிரிய மண்டபத்திலுள்ள சிவனடியார்களை அணுகி வழிபடாது ஒரு வழியாக ஒதுங்கிச் செல்வதைக் கண்ட விறன்மிண்டர், 'சிவனடியார் திருக்கூட்டம், இதனைப் பேணுது ஒதுங்கிச்

செல்லும் ஆரூரனுக்கும் அவனை வலிய ஆட்கொண்ட சிவ பெருமானுக்கும் புறகு (புறம்பானது)' என்று கூறினர். அப்பொழுது ஞாலம் உய்யவும் நாம் உய்யவும் சைவ சமயத்தின் சீலம் விளங்கவும் திருத்தொண்டத் தொகை பாடும்படி ஆரூர்ப் பெருமான், தம்மை வழிபட வந்த வன்றெண்டர்க்கு முன்னேதோன்றி 'நாம் அடியார் திருக்கூட்டத்தினுள்ளே உள்ளோம்' என்று அருள் செய்தார். சுந்தரர் அவ்வடியார்களைப் பணிந்து திருத் தொண்டத் தொகை என்னும் திருப்பதிகத்தைப் பாடிப் போற்றினர். அதைக்கேட்ட விறன்மிண்டர் மிக மகிழ்ந்து ஆரூர்ப்பெருமான் வன்றெண்டர் ஆகிய அவர்களது மாறிலாப் பேரருளுக்கு உரிய பெருமையுடையராய் விளங் கினர். திருத்தொண்டத் தொகையால் உலகம் நலம் பெற்று விளங்குதற்குக் காரணராகிய விறன்மிண்ட நாயனர், தம்பெருமான் அருளினலே அம்முதல்வன் தாள் நிழற் கீழ் இனிது அமரும் சிவகணத் தலைவராம் பெரு வாழ்வு பெற்று இன்புற்றார்.

அமர்நீதி நாயனர்

'அல்லிமென் முல்லையந்தார் அமர் நீதிக்கு அடியேன்' எனப் போற்றப் பெற்ற இந்நாயனர், சோழநாட்டிலே பழையாறை என்னும் பழம்பதியிலே வணிகர் குலத்தில் தோன்றியவர். சிவனடியார்களுக்குக் கோவணமும் கீளும் கொடுக்கும் கடப்பாட்டினை மேற்கொண்ட இந்நாயனர், திருநல்லூரில் சிவனடியார்கள் திருவமுது செய்தற்பொருட் டுத் திருமடங்கட்டித் திருவிழாக் காலத்தில் தம்முடைய சுற்றத்தாரோடும் அங்குத் தங்கியிருந்து அடியார்களுக்குத் திருவமுது அளித்து வந்தார்.

ஒரு நாள் சிவபெருமான், அமர்நீதியார்க்கு அருள் புரியத் திருவுளங்கொண்டு, அந்தணர் குலத்துப் பிரமசாரி யாகக் கோலம் கொண்டு வந்து, தாம் தண்டில் முடித்து வைத்திருந்த கோவணங்கள் இரண்டினுள் ஒன்றைப் பாதுகாப்பாக வைத்திருக்கும்படி அமர்நீதியாரிடம் கொடுத்துவிட்டுக் காவிரியில் நீராடச் சென்றார். சென்றவர், தாம் அமர்நீதியாரிடம் கொடுத்த கோவ ணத்தை மறையும்படி செய்து, சிறிது நேரத்திற்குள் மழை

யில் நினைந்தவராய், அமர்நீதியாரை யணுகி 'யாம் கொடுத்த கோவணத்தைக் கொண்டுவாரும்' என்றார். வைத்த இடத்திற் கோவணத்தைக் காணாது மனங்கலங்கிய அமர்நீதியார், 'ஐயா, நீர் தந்த கோவணத்தை வைத்த இடத்திற் கண்டிலேன். இதனை ஒளித்து வைத்தவர் யாருமில்லை. வேறு நல்லதோர் கோவணம் தருகின்றேன்' எனக் கூறினார். அது கேட்டு வெகுண்டார் அந்தணர். அது கண்டு பொறி கலங்கிய உணர்வினரான அமர்நீதியார், அடியாரைப் பணிந்து போற்றி 'தாங்கள் தந்த கோவணத்துக்கு ஈடாக விரும்பத் தகுந்த நல்ல பட்டாடைகள் மணிகள் முதலியவற்றை ஏற்றுக்கொண்டு சிறியேனது பெரும் பிழையைப் பொறுத்தருளுதல் வேண்டும்' என வேண்டினார். நீர் 'தந்த மணியும் பொன்னும் எனக்கு என்ன பயனைச் செய்வன? நான் உம்மிடம் தந்த கோவணத்துக்கு ஒத்தது தண்டில் உள்ள இந்தக் கோவணம். இந்தக் கோவணத்துக்கு எடையான கோவணத்தைக் கொடுப்பீராக' என்று கூறினார் அந்தணர். 'நன்று' என ஏற்றுக்கொண்ட அமர்நீதியார், ஒரு தராசினை அங்குக் கொண்டுவந்து நிறுத்தி, ஒரு தட்டில் அடியார் தந்த கோவணத்தை வைத்து, அதற்கு ஈடாகத் தம்மிடம் உள்ள நெய்த கோவணத்தை மற்றொரு தட்டில் வைத்தபொழுது அது நிறை போதாமையால் மேலெழுந்தது. அதுகண்ட அமர்நீதியார், தாம் அடியார்களுக்குக் கொடுத்தற்பொருட்டு வைத்திருந்த கோவணங்களையும் பூந்துகிற்பொதி முதலியவற்றையும் ஒவ்வொன்றாக இட்ட நிலையிலும் அன்பரது தட்டுமேற்பட அடியாரது கோவணத்தட்டு நிறையால் கீழே தாழ்ந்தது. அந்நிலையில் அமர்நீதியார், அந்தணராகிய அடியாரது உடன்பாடு பெற்றுத் தம்மிடமுள்ள பொன், வெள்ளி, நவமணித் திரள் முதலிய பலவகை அரும் பொருள்களையும் பின்பு தம் மனைவி புதல்வன் ஆகியவர்களையும் துலையில் அமர்த்தியும், தட்டு நேர் நில்லாமை கண்டு, 'யாங்கள் இழைத்த அன்பினில் இறை திருநீற்று மெய்யடிமை பிழைத்திலோம் என்றால் இத்தராசின் தட்டு சமமாக நிற்பதாகுக' என்று திருவைந்தெழுத் தோதித் தாமும் அதன்கண் ஏறி அமர்ந்தார். அந்நிலையில் இறைவரது திருவரைக் கோவணமும் அமர்நீதியாரது அடிமைத் தொண்டும் ஒத்தலால் அத்தராசுத் தட்டுக்கள் இரண்டும்

சமமாய் நேர் நின்றன. அடியாராக வந்த இறைவர், திருநல்லூரிற் பொருந்திய அம்மையப்பராகிய திருக் கோலத்தை அமர்நீதியார்க்குக் காட்டியருளினார். அத்தெய்வக் காட்சியைக் கண்ட அமர்நீதியாரும் மனைவியாரும் மைந்தரும் அம்மையப்பரை வணங்கிப் போற்றித் தாம் அமர்ந்துள்ள தராசுத் தட்டே விமானமாகி மேற் செல்ல, என்றும் இறைவனைக் கண்டு வணங்கி மகிழும் அழிவில்லாத சிவலோக வாழ்வினைப்பெற்று இன் புற்றார்கள் என்பது வரலாறு.

இவ்வரலாறு, வழி வழியாக உலக மக்களால் வியந்து பேசப்பெற்று வருதலைத் திருநல்லூரிற் சென்று அறிந்த திருநாவுக்கரசர்,

'நாட்கொண்ட தாமரைப் பூத்தடஞ் சூழ்ந்தநல் லூரகத்தே
கீட்கொண்ட கோவணங் காவென்று சொல்லிக்
கிறிபடத்தான்
வாட்கொண்ட நோக்கி மனைவியொடு மங்கொர் வாணிகனை
ஆட்கொண்ட வார்த்தை யுரைக்குமன் றேவிவ் வகலிடமே'

எனவரும் திருநல்லூர்த் திருவிருத்தத்தில் இதனைக் குறித்துப் போற்றியுள்ளார். அமர்நீதியார் வரலாற்றில் நிகழ்ந்த இவ்வியப்புடைய நிகழ்ச்சி திருநல்லூரில் நிகழ்ந்த தென்பதற்கு இத்திருவிருத்தம் சான்றாக அமைந்துள்ளமை காணலாம்.

எறிபத்த நாயனார்

'இலை மலிந்த வேல் நம்பி எறிபத்தர்க்கு அடியேன்' எனப் போற்றப்பெற்ற இந்நாயனார், சிவனடியார்களுக்கு ஓர் இடர் வந்து உற்றவிடத்து உதவும் இயல்பினை யுடையவர்; சோழ மன்னர்களுக்கு உரிமையுடைய பெரு நகரமாகிய கருவூரிலே, ஆனிலை என்னும் திருக்கோயிலில் எழுந்தருளிய பெருமானை வழிபட்டுச் சிவனடியார்களுக்குத் திருத்தொண்டு செய்பவர். அடியார்களுக்கு இடையூறு வந்த காலத்து அங்கு விரைந்து சென்று அடியார்க்குத் தீங்கு புரிந்த கொடியோரைப் பரசு என்னும் மழுப்படையினால் எறிந்து தண்டிக்கும் இயல்பினராதலின், எறிபத்தர் என அழைக்கப்பெற்றார். இலைத் தொழிலமைந்த வேல் போலும் கூர்மைவாய்ந்த மழுப்படையினைத் தாங்கினமையால் இலை மலிந்த வேல் நம்பி எனச் சிறப்பிக்கப்பெற்றார்.

கருவூர்த் திருவானிலைத் திருக்கோயிலில் இறைவர்க்குத் திருத்தொண்டு புரியும் சிவகாமியாண்டார் என்னும் முதிய அடியவர், வைகறையில் துயிலெழுந்து நீராடித் தூய்மையுடையராய் வாயைத் துணியாற் கட்டித் திரு நந்தவனஞ் சென்று மலர்கொய்து பூக்குடலையில் நிறைத்து அக்குடலையைத் தண்டின் மேல் உயரத் தாங்கிக் கொண்டு திருக்கோயிலை நோக்கி விரைந்து சென்றார். மகாநவமியின் முதல் நாள் (அட்டமி) ஆன அன்று அந்நகரில் அரசு வீற்றிருக்கும் புகழ்ச் சோழரது பட்டத்து யானை, ஆற்றில் நீராடி அலங்கரிக்கப்பெற்று மதச்செருக்குடன் பாகர்க்கு அடங்காது விரைந்து செல்லும் நிலையில், சிவகாமியாண்டார் கையிலுள்ள பூக்குடலையைப் பறித்துச் சிதறியது. யானை மேலுள்ள பாகர்கள் யானையை விரைந்து செலுத்திச் சென்றனர். சிவகாமியாண்டாராகிய அடியவர், இறைவர்க்குச் சாத்தும் திருப்பள்ளித் தாமத்தைச் சிதறிய யானையின் செயல் கண்டு வெகுண்டு அதனைத் தண்டு கொண்டு புடைக்க முற்பட்டு விரைந்து ஓடி, முதுமை காரணமாக இடறிவிழுந்து, இறைவனை நினைந்து 'சிவதா சிவதா' என முறையிட்டு அரற்றினார். அடியாரது அரற்றொலியைக் கேட்டு விரைந்து அங்கு வந்த எறிபத்தர், யானையின் செய்கையையறிந்து வெகுண்டார்; யானையைப் பின்தொடர்ந்து சென்று யானையின் துதிக் கையை மழுவினால் துணித்தார்; அதற்கு முன்னும் இருமருங்கும் செல்லும் குத்துக்கோற்காரர் மூவரையும் யானை மேலுள்ள பாகர் இருவரையும் மழுவினால் வெட்டி வீழ்த்தி நின்றார்.

தமது பட்டத்து யானையும் பாகர் ஐவரும் பட்டு வீழ்ந்த செய்தியைக் கேட்டு வெகுண்ட புகழ்ச் சோழர், 'இது பகைவர் செயலாகும்' என்றெண்ணி, நால்வகைச் சேனைகளுடன் அவ்விடத்தை அடைந்தார்; யானையும் பாகரும் வெட்டப்பட்டிறந்த அவ்விடத்தே பகைவர் எவரையும் காணாதவராய் இருகையானைபோல் தனித்து நிற்கும் எறிபத்தராகிய சிவனடியாரைக் கண்டார். தம் யானையையும் பாகர்களையும் கொன்றவர் அங்கு நிற்கும் அடியவரே என அங்குள்ளார் கூறக் கேட்டறிந்த வேந்தர், 'சிவபெருமானுக்கு அன்பராம் பண்புடைய அடியார்கள் பிழைகண்டாலல்லது இவ்வாறு

கொலைத்தண்டம் செய்யமாட்டார்கள். எனவே என்னுடைய யானையும் பாகர்களும் பிழை செய்திருத்தல் வேண்டும்' எனத் தம்முள்ளே எண்ணியவராய், தம்முடன் வந்த சேனைகளைப் பின்னே நிறுத்தி விட்டுக் குதிரையினின்று இறங்கி, 'மலைபோலும் யானையை இவ்வடியவர் நெருங்கிய நிலையில், அவ் யானையால் இவர்க்கு எத்தகைய தீங்கும் நேராது விட்ட தவப்பேறுடையேன். அம்பலவாணரடியார் இவ்வளவு வெகுளியை யடைதற்கு நேர்ந்த குற்றம் யாதோ? என்று அஞ்சி எறிபத்தரை வணங்கினர். எறிபத்தர், யானையின் சிவாபராதச் செயலையும் பாகர் விலக்காதிருந்ததனையும் எடுத்துரைத்தார். அதனை யுணர்ந்த புகழ்ச் சோழர், 'சிவனடியார்களுக்குச் செய்த இப்பெருங் குற்றத்திற்கு இந்தத் தண்டனை போதாது; இக்குற்றத்திற்குக் காரணமாகிய என்னையும் கொல்லுதல் வேண்டும். ஆனல் மங்கலம் பொருந்திய மழுப் படையினுற் கொல்வது மரபன்று. வாட்படையாகிய இதுவே என்னைக் கொல்லுதற்கு ஏற்ற கருவியாம்' என்று தமது உடைவாளை ஏற்றுக்கொள்ளும்படி எறிபத்தரிடம் நீட்டினர்.

அதுகண்ட எறிபத்தர், 'கெட்டேன், எல்லையற்ற புகழாளராகிய வேந்தர்பெருமான் சிவனடியார்பால் வைத்த அன்புக்கு அளவில்லாமையை யுணர்ந்தேன்' என்று எண்ணி, மன்னர் தந்த வாட்படையை வாங்கமாட்டாத வராய்த் தாம் வாங்காதுவிட்டால் மன்னர் அதனைக் கொண்டு தம்முயிரைத் துறந்துவிடுவார் என்று அஞ்சித் தீங்கு நேராதபடி அதனை வாங்கிக்கொண்டார். அது கண்ட புகழ்ச் சோழர், அடியாரை வணங்கி 'இவ்வடியார் வாளினுல் எனது குற்றத்தைத் தீர்க்கும் பேறு பெற்றேன்' என உவந்து நின்ருர். அதுகண்ட எறிபத்தர், "தமது பட்டத்து யானையும் பாகரும் என் மழுப்படையால் மடிந் தொழியவும் உடைவாளைத் தந்து, 'எனது குற்றத்தைப் போக்க என்னையும் கொல்லும், என்று வேண்டும் பேரன்புடைய இவர்க்கு யான் தீங்கு நினைத்தேன்" என்று மனம் வருந்தி, 'இவ்வாளினுல் எனது உயிரை முடிப்பதே இனிச் செய்யத் தக்கது' என்று எண்ணி, வாட்படையினைத் தம் கழுத்திற் பூட்டி அரிதற்கு

முற்பட்டார். அந்நிலையிற் புகழ்ச் சோழர், 'பெரியோர் செய்கை இருந்தவாறு இது. கெட்டேன்' என்று எதிரே விரைந்து சென்று வாளையும் கையையும் பிடித்துக் கொண்டார்.

அப்பொழுது சிவபெருமான் திருவருளால், 'யாவரா லும் தொழத்தகும் பேரன்புடையவர்களே! உமது திருத் தொண்டின் பெருமையினை உலகத்தார்க்குப் புலப்படுத்தும் பொருட்டு இன்று வெகுளி மிக்க யானை பூக்குடலையைச் சிதறும்படி இறைவரருளால் நிகழ்ந்தது' என்று அங்கு ஓர் அருள்வாக்கு எழுந்தது. அதனுடனே பாகர்களுடன் யானையும் உயிர்பெற் றெழுந்தது. எறிபத்தர் வாட் படையை நெகிழவிட்டுப் புகழ்ச் சோழர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினர். வேந்தரும் வாட்படையைக் கீழே எறிந்து விட்டு எறிபத்தர் திருவடிகளைப் போற்றி நிலமிசை வீழ்ந்து இறைஞ்சினர். இருவரும் இறைவன் அருள்மொழியினை வியந்து போற்றினர். இறைவர் திருவருளால் சிவகாமியாண்டாரது பூக்கூடையில் முன்போல் தூய நறுமலர்கள் வந்து நிரம்பின. பாகர்கள் யானையை நடத்திக்கொண்டு மன்னரை யணுகினர். எறிபத்தர் புகழ்ச் சோழரை வணங்கி, 'அடியேன் உளங்களிப்ப இப்பட்டத்து யானைமேல் மகிழ்ந்து எழுந்தருளுதல் வேண்டும்' என்று வேண்டிக் கொண்டார். புகழ்ச் சோழர் எறிபத்தரை வணங்கி யானை மேலமர்ந்து சேனைகள் சூழ அரண்மனையை யடைந்தார். சிவகாமியாண்டார் திருப்பூங் கூடையைக் கொண்டு இறைவர்க்குத் திருமாலை தொடுத்தணிதல் வேண்டித் திருக்கோயிலை யடைந்தார். எறிபத்த நாயனர் இவ்வாறு அடியார்களுக்கு இடர் நேரும்பொழுதெல்லாம் முற்பட்டுச் சென்று தமது அன்பின் மிக்க ஆண்மைத் திறத்தால் இடையூறகற்றித் திருக்கயிலையை யடைந்து சிவகணத் தார்க்குத் தலைவராக அமர்ந்தார்.

ஏனாதிநாத நாயனர்

'ஏனாதிநாதன்றன் அடியார்க்கும் அடியேன்' எனப் போற்றப் பெற்ற இந்நாயனர், சோழநாட்டில் எயின னூரிலே சான்றார் குலத்தில் தோன்றியவர். தொன்மைத் திருநீற்றுத் தொண்டின் வழிபாட்டில் நிலைத்து நின்ற

இவர், அரசர்களுக்கு வாட்படைப் பயிற்சி யளிக்கும் போர்த்தொழில் ஆசிரியராய் அத்தொழிலால் வரும் பொருள்வளங்களால் சிவனடியார்களை உபசரிக்கும் பேரன்பினராய் விளங்கினர். ஏனாதி என்பது சிறந்த படைத்தலைவர்களுக்கு அரசர் வழங்கும் பட்டமாகும். ஏனாதி நாதர் என இவர் அழைக்கப்பெறுதலால் இவர் சேனாதிபதி களில் தலைசிறந்தவர் என மன்னனால் நன்கு மதிக்கப்பட்ட படைத்தலைவர் என்பது இனிதுபுலனாகும்.

ஏனாதிநாதர், வாட்படை பயிற்றும் ஆசிரியத் தொழிலை மேற்கொண்டு வாழும் காலத்துப் போர்ப் பயிற்சி பெற விரும்பிய பலரும் அவரையே சார்ந்து பயின்றமையால், அவரது தாயமுறையினனான அதிசூரன் என்பானுக்கு அத் தொழிலில் வருவாய் குறைவதாயிற்று. அதனால் ஏனாதி நாதர்பால் பொருமையுற்ற அதிசூரன், 'வாள் கொண்ட தாயம் வலியாரே கொள்வது' என அவரைப் போருக்கு அறை கூவியழைத்தான்; 'நாம் இருவரும் சேனைகளை அணிவகுத்துப் போர் செய்வோம். போரில் வென்றார் யாரோ அவரே வாள் பயிற்றும் உரிமையைக் கைக்கொள்ள வேண்டும்' என்றான். ஏனாதிநாதரும் அதற்கு இசைந் தார். இருவரிடையே நிகழ்ந்த வாட் போரில் அதிசூரன் தோற்றோடினன்.

தோற்றோடிய அதிசூரன், ஏனாதிநாதரை வஞ்சனையாற் கொல்ல எண்ணினன்; 'நம் இருவருக்குத் துணைவருவார் யாருமின்றி நாம் இருவர் மட்டும் நாளை விடியற்காலத்தே வேறோரிடத்திற் போர்செய்வோம், வாரும்' என்று ஒருவனைக் கொண்டு ஏனாதிநாதர்க்குச் சொல்லியனுப் பினன். அது கேட்ட ஏனாதிநாதர், சுற்றத்தார் யாரும் அறியாதபடி அவன் குறித்த போர்க்களத்திற் சென்று அவனுடைய வரவை எதிர்பார்த்து நின்றார். தீங்கு குறித்தழைத்த அதிசூரனாகிய தீயோன், 'திருநீறுதாங்கிய நெற்றியினரை எவ்விடத்தும் கொல்லாத இயல்புடையார் ஏனாதிநாதர்' என அறிந்து, முன் எப்பொழுதுமே திருநீறிடாத அவன், வெண்ணீறு நெற்றி விரவப்புறம் பூசி நெஞ்சத்தே வஞ்சனையாகிய கறுப்பினையுட் கொண்டு வாளும் கேடகமும் தாங்கித் தான் குறித்த இடத்திற்குப் போய் அங்கு நின்ற ஏனாதிநாதரைக்கண்டு அவரை

அணுகும்வரை தனது நெற்றியைக் கேடகத்தால் மறைத்துக் கொண்டு அவருக்கு முன்னே முடுகி நடந்தான். ஏனாதிநாதர் சமயந்தெரிந்து அவனை எதிர்த்துப் பொருதற்கு முற்பட்ட அளவில், அதிசூரன் தன் முகத்தை மறைத்த கேடகத்தைச் சிறிது விலக்கினனாக, அவனது நெற்றியிலே திருநீற்றினைக் கண்ணுற்றார் ஏனாதி நாதர். கண்ட பொழுதே 'கெட்டேன். இவர் சிவபெருமானுக்கு அடியவராகிவிட்டார். ஆதலால் இவர்தம் உள்ளக் குறிப்பின் வழியே நிற்பேன்' என்று தம் கையிலுள்ள வாளையும் கேடகத்தையும் நீக்கக் கருதியவர், 'ஆயுதம் இல்லாதவரைக் கொன்றார்' என்றபழி இவரை அடையாதிருத்தல் வேண்டும்' என்று எண்ணி, வாளையும் பலகையையும் கையிற் பற்றியபடியே போர் செய்வார்போல் வாளா எதிர் நின்றார். அந்நிலையில் முன்னே நின்ற தீவினையாளனாகிய அதிசூரனும் கொலை செய்ய வேண்டும் என்ற தனது எண்ணத்தினை எளிதில் நிறைவேற்றிக் கொண்டான். சிவபெருமான் ஏனாதி நாதர்க்கு எதிர்தோன்றி, பகைவனுடைய கையிலுள்ள வாட் படையினால் பாசம் அறுத்து உயர்ந்த அன்பராகிய ஏனாதிநாதரை என்றும் உடன் பிரியாப் பேறளித்து மறைந்தருளினார்.

கண்ணப்ப நாயனார்

"கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பர்க்கடியேன்" எனப் போற்றப் பெற்ற இந்நாயனார், பொத்தப்பி நாட்டினைச் சார்ந்த உடுப்பூரிலே வேடர் தலைவனாக விளங்கிய நாகன் என்பானுக்கு அவன் மனைவி தத்தை என்பவள்பால் மகவாகத் தோன்றியவர். இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் திண்ணனார் என்பதாகும். மலையுறை மக்கள் வாழ்த்தச் சிலை பயின்று கலைவளர் திங்களே போற் பதினாறாண்டு நிரம்பிய திண்ணனார், முதுமையால் தளர்ச்சியுற்ற தந்தை பணித்த வண்ணம் வேடர்குலக் காவல் பூண்டார். வேடர்கள் சூழ வேட்டைக்குச் சென்று காட்டிலுள்ள கொடிய விலங்குகளை எய்து கொன்றார். காட்டில் விரித்த வலையினையறுத்து ஓடிய வலிய பன்றியொன்றைத் துரத்திச் சென்று குற்றுடை வாளால் இருதுணிபடக் குத்திக்

கொன்ற திண்ணனர், களைப்புற்றவராய் நீர்வேட்கையால் பொன் முகலியாற்றை அடைந்தார்; எதிரே தோன்றும் காளத்திமலையினைக் கண்டார். அம்மலைமேல் 'குடுமித் தேவர் இருப்பர் கும்பிடலாம்' என்ற நாணன் வழி காட்டிச் செல்ல மலைமீதேறிக் குடுமித் தேவராகிய ஏகநாயகரைக் கண்டார்; பேருவகையால் ஓடிச் சென்று தழுவிக் கொண்டார். இறைவரது அருள் நோக்கத்தால் அன்புருவம் பெற்ற திண்ணனர், அண்ணலைப் பிரியமாட்டாதவராய், 'இவர்தமக்கு இறைச்சி கொண்டு இங்கு எய்துதல் வேண்டும்' என்று மலையினின்றும் இறங்கிப் பொன் முகலியின் கரையேறிக் காடன் என்பான் கொத்தி வைத்திருந்த பன்றி யிறைச்சியைத் தீயிலிட்டுக் காய்ச்சிப் பல்லிஞல் அதுக்கிச் சுவையும் பதமும் அறிந்து அவ்வூன முதத்தை ஒருகையிலும் வில்லை மற்றொருகையிலும் ஏந்தி, இறைவர்க்குரிய திருமஞ்சன நன்னீரைத் தமது வாயிலும் திருப்பள்ளித்தாமமாகிய பூவினைத் தமது தலையிலும் கொண்டு, காளத்தி மலைமீது ஏறிச்சென்ருர். சென்றவர், காளத்தி நாதர் முடிமீது அணியப் பெற்ற பச்சிலைகளைச் செருப்பணிந்த பாதங்களால் விருப்புறத்தள்ளித் தம் வாயிலுள்ள நன்னீரைத் திருமஞ்சனமாக ஆட்டித் தலையிலுள்ள மலர்களை இறைவர்க்குச் சாத்திப் பன்றி யிறைச்சியினைத் திருவமுதாகப் படைத்து மகிழ்ந்தார்.

இவ்வாறு காளத்தியிறைவர்பாற் பேரன்புடையராய திண்ணனர், தமது பெற்ருேர் அழைக்கவும் செல்லாது, அல்லும் பகலும் காளத்தியிறைவரைப் பிரியாது வழிபட்டு நின்ருர். திண்ணனரது பேரன்பின் திறத்தைச் சிவ கோசரியார்க்கு அறிவுறுத்தத் திருவுளங்கொண்ட காளத்தியிறைவர், ஒருநாள் தமது வலக்கண்ணில் உதிரம் பெருகி ஒழுகும்படி செய்தார். அது கண்டு 'என் அத்தனுக்கு அடுத்த தென்னே' எனச் சிந்தை கலங்கிய திண்ணனர், எங்கும் சென்று பச்சிலைகளாகிய நன் மருந்தினைத் தேடிக் கொணர்ந்து பிழிந்தும் உதிரம் நில்லாமையாற் பெரிதும் வருந்திஞர். "உற்ற நோய் தீர்ப்பது ஊனுக்கு ஊன்" என்னும் பழமொழி நினைவுக்கு வந்தமையால், தமது வலக்கண்ணைப் பிடுங்கிச் சிவலிங்கத் திருவுருவில் அப்பினர். குருதி நின்றது. அந்நிலையில் இறைவரது இடத் திருக்கண்ணில் குருதி வழியத் தொடங்

கியது. மருந்து கைகண்ட திண்ணனார், இறைவரது குருதி சோர் கண்ணில் தமது மற்றொரு கண்ணையும் அப்ப எண்ணினார். இறைவரது கண்ணின் இடமறியச் செருப் பணிந்த தம்காலை அவ்விடத்தில் ஊன்றிக் கொண்டு தமது இடக்கண்ணையும் அம்பினால் தோண்ட முற்பட்டார். அந்நிலையில் காளத்தியிறைவர், "நில்லுகண்ணப்ப" என மும்முறைகூறித் தம் திருக்கையினால் திண்ணனார் கையைப் பிடித்துக் கொண்டு, 'மாறிலாப் பேரன்பனே என் வலப்பக்கத்தில் நிற்பாயாக' என்று திருவாய் மலர்ந்து நிலைபெற்ற பேரருளைப் புரிந்தார் என்பது வரலாறு. இவ்வரலாறு பதினொராந்திருமுறையில் நக்கீர தேவர் பாடிய திருக்கண்ணப்ப தேவர் திருமறத்திலும், கல்லாட தேவர் பாடிய திருமறத்திலும் விரித்துரைக்கப் பெற்றுள்ளமை முன்னர் விளக்கப் பெற்றது.

வேடர் குலத்தலைவராம் திண்ணனார், காளத்தி யிறை வரைக்கண்டு வழிபட்டு ஆராத பேரன்பினால் தம் கண்ணை யிடந்து அப்பிக் கண்ணப்பர் எனப் போற்றப் பெறும் பெருஞ்சிறப்பினைப் பெற்ற அருள் நிகழ்ச்சியினை அரனருள் பெற்ற திருமுறையாசிரியர்கள் பலரும் உளமுவந்து போற்றியுள்ளார்கள்.

"வாய்கலசமாக வழிபாடு செயும் வேடன்மலராகு நயனம்
காய்கணையி னாலிடந் தீசனடி கூடுகாளத்திமலையே"
'கானலைக்கும் மவன் கண்ணிடந்தப்ப நீள்
வானலைக்குந் தவத் தேவுவைத் தானிடம்"

என ஆளுடைய பிள்ளையாரும்,

'காப்பதோர் வில்லும் அம்பும் கையுடை யிறைச்சிப்பாரம்
தோற்பெருஞ் செருப்புத்தொட்டுத் தூயவாய்க் கலசம் ஆட்டித்
தீப்பெருங் கண்கள் செய்ய குருதிநீ ரொழுகத்தன்கண்
கோப்பதும் பற்றிக்கொண்டார் குறுக்கை வீரட்டனாரே' (4-49-7)
'குவப்பெருந் தடக்கை வேடன் கொடுஞ்சிலை யிறைச்சிப்பாரம்
துவர்ப்பெருஞ் செருப்பால் நீக்கித் தூயவாய்க் கலசம் ஆட்ட
உவப்பெருங் குருதிசோர ஒருகணை யிடந்தங்கப்பத்
தவப்பெருந் தேவு செய்தார் சாய்க்காடு மேவினாரே' (4-65-8)
'கண்ணப்பன் கண்ணப்பக் கண்டுகந்தார்'

என ஆளுடைய அரசரும்,

'இடந்த கண்ணப்பன்'
'கணைகொள் கண்ணப்பன்'

என ஆளுடைய நம்பியும்,

'கண்ணப்ப னொப்பதோர் அன்பின்மை கண்டபின்
என்னப்பன் என்னொப்பில் என்னையும் ஆட்கொண்டருளி
வண்ணப் பணித்தென்னை வாவென்ற வான்கருணைச்
சுண்ணப்பொன் நீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ'

என ஆளுடைய அடிகளும் கண்ணப்பரது அன்பின் பெருமையினை உளமுருகிப் போற்றியுள்ளமை இங்கு நினைத்தற்குரியதாகும். காளத்தி யிறைவரைக் கண்ட ஆறே நாளில், தன்பரிசும் வினையிரண்டும் சாரும்மலம் மூன்றும் அற அன்புருவாகித் தம் கண்ணை இடந்து அப்பிய கண்ணப்பரது செயற்கருஞ் செய்கையினை,

'நாளாறிற் கண்ணிடந்தப்ப வல்லேனல்லன்'

எனப் பின்வந்த சான்றோர் நெஞ்சம் நெக்குருகிப் பாராட்டியுள்ளமையும் இங்கு நினைக்கத் தகுவதாகும்.

குங்குலியக் கலய நாயனார்

காலனைக் காய்ந்த பெருமான் வீற்றிருந்தருளும் திருக்கடவூரிலே அந்தணர் குலத்தில் தோன்றியவர் குங்குலியக் கலயநாயனார். சிவனடி பரவி உருகிய அன்பு கூர்ந்த சிந்தையராகிய இவர் திருக்கடவூர்த் திருக்கோயிலில் நாளும் குங்குலியத் தூபம் இடும் பணியினைத் தமது தலையாய தொண்டாகக் கொண்டிருந்தார். இறைவனருளால் இவர்க்கு வறுமை வந்துற்றது. அவ்வறுமை நிலையிலும் செம்மையுடைய சிந்தையராகிய கலயனார், தமக்குரிய நிலம் முதலிய உடைமைகளை விற்றுத் தாம் செய்தற்குரிய குங்குலியப் பணியைத் தவறாது செய்து வந்தார். மக்களும் சுற்றமும் பசியால் வருந்தினர். அந்நிலையில் கலயனார் மனைவியார், கணவனார் கையில் மங்கல நாணாகிய தாலியைக் கொடுத்து 'நெற்கொள்ளும்' என்றார். தாலியைப் பெற்று நெல் வாங்கச் சென்ற கலயனார், வழி யெதிரே குங்குலியப் பொதி கொண்டு வந்த வணிகனை நோக்கி, 'இப்பொதி என்கொல்' என வினவினார். வணிகனும் 'இது குங்கு

லியப் பொதி' என்ருன். அது கேட்டு மகிழ்ந்த கலயனுர், 'பொன்தரத்தாரும்' என்று அவனிடம் தாலியைத்தந்தார். அதனைப் பெற்றுக்கொண்டு வணிகன் குங்குலியப் பொதியைத் தந்தான். அதனைப் பெற்றுக் கொண்ட கலயனுர், விரைந்து கடவூர்த் திருவீரட்டானத் திருக் கோயிற் பண்டாரத்திலே அதனை ஒப்படைத்துவிட்டு இறைவனருளைப் போற்றி அத்திருக்கோயிலிலே இருந்தார்.

இறைவன் பணியினுல் இருநிதிக் கிழவனுகிய குபேரன், கலயனுர் திருமனையில் பொன்பயில் குவையும் நெல்லும் பொருவில் பல்வளனும் பொங்க மன்பெருஞ் செல்வமாக்கி வைத்தனன். அன்று நள்ளிரவில் இறைவன் அருள்புரியத் துயிலுணர்ந்தெழுந்த கலயனுர் மனைவியார், வீட்டிலுள்ள பெருஞ் செல்வத்தினைக்கண்டு 'எம்பிரான் அருளாம்' என்று இருகரம் குவித்துப் போற்றித் தம் பெருங்கணவனுர்க்குத் திருவமுதமைக்கச் சார்ந்தார். வீரட்டப்பெருமான், கலயனுர் அறியும்படி 'சால நீ பசித்தாய். நின் மனையில் நண்ணிப் பாலின் இன்னடிசில் உண்டு துன்பந் தவிர்க' எனப் பணித்தருளினுர். இறைவரது அருள் மறுத்திருக்க அஞ்சிய கலயநாயனுர், தமது வீட்டினையடைந்து அங்குள்ள பெருஞ் செல்வத்தைக் கண்டு தம் மனைவியாரை நோக்கி, 'வில்லொத்த நுதலாய்! இந்த வினைவெலாம் என்கொல்?' என வினவ, அவரும் 'எம்மான் அருள்தர வந்தது' என்ருர். இறைவன் அருளிய பெருஞ் செல்வத்தினை நோக்கி வியந்த கலயனுர், வறுமைத்துயர் தவிர்ந்து அப்பெருஞ் செல்வத்தைக் கொண்டு சிவனடியார்களுக்கு இன்னமுதருத்தி இனிது வாழ்ந்தார்.

அந்நிலையில், திருப்பனந்தாள் தாடகை யீச்சரத்துச் சிவலிங்கத் திருமேனியின் சாய்வு நீக்கிப் பெருமானைச் செவ்விதின் நிறுத்தி வழிபட எண்ணிய மன்னன் தன் பெருஞ்சேனைகளையும் யானைகளையும் பூட்டி இழுப்பித்தும் நேர்நில்லாமையாற் பெரிதும் வருந்திய செய்தியைக் கேள்வியுற்ருர். மன்னனது துயரகற்றிச் சிவலிங்கத் திருமேனியைச் செவ்விதின் நிறுத்தி வழிபட வெண்ணிய கலயனுர், திருப்பனந்தாளை அடைந்தார். சேனையும் யானைகளும் வலித்திழுக்கவும் திருமேனி எழாமை நோக்கி,

'யானும் இவ்வினைப்புற்று எய்க்கும் இதுபெற வேண்டும்' என்ற உள்ளத்தராய்ச் சிவலிங்கத் திருமேனியிற் சேர்க்கப் பெற்ற பூங்கச்சினைத் தமது கழுத்திற் பூட்டி வருந்தி யிழுத்தார். அவரது வருத்தம் நீங்கத் திருப்பனந்தாள் இறைவர் சாய்வு நீங்கி நிமிர்ந்தருளினர். அது கண்டு மகிழ்ந்த கலயனர், இறைவன் திருவருளைப் போற்றித் திருக்கடவூரையடைந்து தாம் மேற்கொண்ட திருப்பணி யினைச் செய்திருந்தார்.

அக்காலத்தில் ஆளுடைய பிள்ளையாரும் திருநாவுக் கரசரும் திருக்கடவூர்க்கு எழுந்தருளினர். குங்குலியக் கலயனர் மாறிலா மகிழ்ச்சி பொங்க அவ்விரு பெருமக்களை யும் அடியார் திருக்கூட்டத்துடன் எதிர்கொண்டு போற்றித் தம் மனையில் திருவமுது செய்வித்து அவர்களது அருள் பெற்று மகிழ்ந்தார். பின்பு திருப்பணி பல புரிந்து சிவபத நீழலிற் சேர்ந்து இன்புற்ருர்.

மானக்கஞ்சாற நாயனர்

கஞ்சாறு என்னும் ஊரில் வேளாண் மரபில் அரசர் சேனுபதியாம் குடிவிளங்கத் தோன்றியவர் மானக் கஞ் சாறனர். மெய்ப்பொருளை அறிந்துணர்ந்த பெருஞ் செல்வராகிய இவர், சிவனடியார்க்கு ஏவல் செய்யும் இயல் பினராய், அடியார்கள் குறிப்பறிந்து அவர்கள் வேண்டுவன கொடுப்பவர். இவருக்கு இறைவனருளால் ஒரு பெண் மகவு பிறந்தது. அப்பெண் வளர்ந்து மணப்பருவம் எய்திய நிலையில் சிவநேசச் செல்வராகிய ஏயர்கோன் கலிக்காமனர்க்கு மகட்பேசப் பெரியோர்கள் வந்தார்கள். வந்த மூதறிஞர்க்கு மானக் கஞ்சாறனர் தமது இசை வினைத் தெரிவித்தார். திருமணம் உறுதி செய்யப்பெற் றது. கஞ்சாறூரில் மண நாளில் வெண்முளைப் பெய்து மண அணி செய்யப்பெற்றன. மணமகனராகிய ஏயர் கோன் கலிக்காமர் மணமுரசியம்பக் கஞ்சாறு நகரின் அருகே வந்தணைந்தார்.

அந்நிலையில், சிவபெருமான் மானக்கஞ்சாறரது அடி யார் பத்தியினைப் புலப்படுத்தத் திருவுளங்கொண்டு, மாவிரத வேடமுடைய அடியவராகக் கஞ்சாறரது இல்லத்

திற்கு எழுந்தருளினர். மாவிரத முனிவரைக் கண்ட மானக்கஞ்சாறர் எழுந்து எதிர் சென்று உருகிய அன்புடன் பணிந்தார். வந்த அடியவர், 'இங்கு நிகழும் மங்கலச் செயல் யாது ? என வினவினர், 'அடியேன் பெற்றமகளது திருமணம்' என மறுமொழி பகர்ந்தார் கஞ்சாறனர். அது கேட்ட அடியவர், 'நுமக்கு மங்கல முண்டாகுக' என வாழ்த்தினர். கஞ்சாறனர், திருமணக்கோலம் புனைந்த தம் மகளை அழைத்து வந்து சிவனடியாரை வணங்கச் செய்தார். பரவ அடித்தலம் கொடுப்பாராகிய அவ் வடியவர், மஞ்சுதழைத்தென வளர்ந்த மணமகளது மலர்க் கூந்தலை நோக்கி, 'இவள்தன் கூந்தல் நமக்குப் பஞ்ச வடிக்கு ஆம்' என்றார். அது கேட்ட கஞ்சாறர், தம் மகள் கூந்தலை உடைவாளால் அடியோடு அரிந்து அடியவரிடம் கொடுத்தார். அடியாரும் அதனை வாங்குவார்போல் மறைந்து விசும்பிலே உமையம்மையாருடன் விடைமேல் தோன்றி, 'நம்பால் உனக்குள்ள பேரன்பினை இச் செழும் புவனங்களில் ஏறச் செய்தோம்' என்று மானக் கஞ்சாறர்க்கு அருள் செய்து மறைந்தருளினர்.

அங்கு வந்தணைந்த ஏயர்கோன் கலிக்காமனராகிய மணமகனர், அவ்வியப்புடைய நிகழ்ச்சியைக் கேள்வியுற்று உளமுவந்தார்; அத்தெய்வக் காட்சியைத் தாம் காணுமற் போனதற்கு மனந்தளர்ந்தார்; இறைவர் அருளிய திரு வார்த்தையின் திறங்கேட்டு இடர் நீங்கினர்; வானவர் நாயகர் அருளால் மலர் புனைந்த கூந்தல் வளரப்பெற்ற பூங்கொடி போல்வாளாகிய நங்கையை உலகெலாம் போற்றத் திருமணம் புணர்ந்து தம்முடைய மூதூர்க்குச் சென்றணைந்தார்.

அரிவாட்டாய நாயனர்

சோழ நாட்டில் கணமங்கலம் என்னும் பதியில் வேளாண்குடியில் தோன்றியவர் தாயனர் என்னும் இந் நாயனராவர். சிவபெருமான் திருவடிகளில் தொடர்ந்த சிந்தையினராகிய இவர், சிவபெருமானுக்குச் செந் நெல்லும் செங்கீரையும் மாவடுவும் நாள்தோறும் திருவமுது செய்விக்கும் திருப்பணியை மேற்கொண்டொழு கினர். இந்த நன்னிலை இன்னல் வந்தெய்திய காலத்தும் சிந்தை நீங்காச் செயலின் உவந்திடத் திருவுளங்கொண்ட

இறைவர், தாயனாரது பெருஞ்செல்வம் குறையுமாறு செய் தருளினர். அவ்வறுமை நிலையிலும் தாயனர் கூலிக்கு நெல்லறுத்துச் செந்நெலெல்லாம் சிவனுக்குரிய என்று திருவமுது செய்வித்தார். கூலிக்குக் கிடைத்த நெல்லெல் லாம் செந்நெல்லேயாக அமைந்தமையால் அந்நெல்லைத் தம் குடும்பத்துக்குப் பயன்படுத்தாமல், தம் மனைவியார் அடகு கொய்து அமைத்த உணவினையே தாம் உண்டு இத்திருப்பணியைத் தடையின்றிச் செய்துவந்தார்.

தாயனர், என்றும்போல் ஒருநாள் செந்நெல்லரிசி செங்கீரை மாவடு இவற்றைக் கூடையிற் சுமந்தவராய்த் தம் மனைவியார் இறைவன் திருமஞ்சனத்துக்கேற்ற பஞ்ச கௌவியம் கொண்டு பின்னேவர, முன்சென்றார். அங்ஙனம் செல்லும் நாயனர், கால் இடறிக் கீழே விழப் பின் வந்த மனைவியார் மட்கலத்துடன் வருந்தி வீழ்பவர் கையினல் அணைத்துப் பிடித்தும் சிவனுக்கு அமுதாகிய செந்நெல் முதலிய அனைத்தும் வயல்வெடிப்பிற் சிதறி வீழ்ந்தன. அந்நிலையில் தாயனர், 'இறைவன் திருவமுது செய்தருளும் பேறுபெற்றிலேன்' என்று வருந்தித் தம் கையிலுள்ள அரிவாளால் தமது கழுத்தினை அரியத் தொடங்கினர். அந்நிலையில், அவரது கையினைப் பற்றிப் பிடித்து அம்பலத்தாடும் அண்ணலது திருக்கையும், மாவடுவினை அமுது செய்யும் நிலையில் விடேல் விடேல் என்னும் ஓசையும், அவ்வயல் வெடிப்பினின்றும் ஒருசேர எழுந்தன. இறைவனது அருட்பெருங் கருணை நோக்கி அஞ்சலி கூப்பி நின்ற தாயனர், 'அடியனேன் அறிவி லாமை கண்டும் என் அடிமைவேண்டிப் படிமிசைக் கமரில் வந்து இங்கு அமுதுசெய் பரனே போற்றி' என்று இறைவனைப் பரவிப் போற்றினர். அந்நிலையிற் சிவபெருமான் இடபவாகனராய்த் தோன்றி, 'நீபுரிந்த செய்கை நன்று, நின் மனைவியுடன் சிவலோகத்தில் என்றும் வாழ்வாயாக' என்று அருள்செய்து மறைந் தருளினர்.

'இறைவர் அமுது செய்யப் பெற்றிலேன்' என்ற ஏக்கத்தால் தம் கழுத்தினை அரிவாள் பூட்டி அரிதலால் தாயனாராகிய இவர் 'அரிவாள் தாயர்' என அழைக்கப் பெற்றார்.

ஆனாய நாயனார்

மேல் மழநாடு என்னும் நீர்நாட்டிலே மங்கலம் என்னும் மூதூரிலே ஆயர்குலத்தில் தோன்றியவர் ஆனாயர். மனமொழி மெய்களால் சிவபெருமானை வழிபடு மியல்பினராகிய அவர், ஆனிரைகளை அன்புடன் மேய்த்து வருதலைத் தொழிலாகக் கொண்டவர். தீய விலங்கு களால் வரும் இடர் நீக்கிப் பசுக்களைப் புற்கள் வளர்ந்த நிலத்தில் மேய்த்துவரும் ஆனாயர், சிவனடியில் அன்பு மீதூர்ந்த சிந்தையுடன் இன்னிசைத் திறத்தில் வல்ல வராய் இறைவனது திருவைந்தெழுத்தினை வேய்ங் குழலில் வைத்து வாசித்து எவ்வுயிரும் உளமுருக இசையமுதளித்தலைத் தமது பொழுது போக்காகக் கொண்டிருந்தார். கார் காலத்திலே ஒருநாள் ஆயர்கள் பசு நிரைகளைச் சூழ்ந்துகொண்டு செல்ல, ஆனாயர் கையிலே கோலும் வேய்ங் குழலும் கொண்டு நிரை காத்தற்குக் காட்டினை அடைந்தார். அப்பொழுது அங்குக் கொன்றை மரமானது நீண்ட பூங்கொத்துக்களை யுடையதாய்த் தாழ்சடைக் கடவுளாகிய சிவபெருமானை யொத்துப் பொலிவுற்றுத் தோன்றியது. அதனைக்கண்டு இறைவன்பால் உருகிய உள்ளத்தினராகிய ஆனாயர், நறுங் கொன்றையினை நேர்நோக்கி நின்று, அன்பூறி மிசைப் பொங்கும் அமுத இசைக்குழலாகிய வேய்ங் குழலில் இறைவனது திருவைந்தெழுத்தினை இசை நூல் முறைப்படி இனிமையுடன் வாசித்தார். அவரது வேய்ங் குழலிலிருந்து வெளிப்பட்ட இசை வெள்ளமானது எவ்வகைப்பட்ட உயிர்களின் செவியிலும் கற்பகத்தருவின் விளைதேனைத் தெள்ளமுதினுடன் கலந்து வார்த்தாற் போன்று புகுந்தது. ஆனிரைகள் அறுகருந்தி அசை விடாமல் அவரை அணைந்து நின்றன. பால் குடித்துக் கொண்டு நின்ற கன்றுகள் குடித்தலை மறந்து இசையில் ஈடுபட்டன. எருதுகளும் மான் முதலிய காட்டு விலங்கு களும் மயிர் சிலிர்த்து வந்தணைந்தன. ஆடுகின்ற மயிற் கூட்டங்களும் ஆடுதலொழிந்து அவர் பக்கத்தை அடைந்தன. பறவைகள் இசையில் திளைத்து அவரருகே வந்தன. நிரை மேய்க்கும் இடையர்கள் எல்லாரும் தம் தொழிலை மறந்து இசையினைக் கேட்டு நின்றார்கள். நாகலோகத்தார், வரையர மகளிர், சாரணர், கின்னரர்,

தேவர் முதலிய யாவரும் ஒருங்கு வந்து ஆனாயரது வேய்ங் குழலின் ஏழிசையமுதம் செவிமடுத்துப் பருகினர். பிறரை வருத்தும் வலியவர்களும் பிறரால் துன்புறுத்தப்படும் மெலியவர்களும் இசையின் வயப்பட்டு ஒத்த உணர் வினரானமையால், பாம்புகள் பயமின்றி மயில்களின்மீது மருண்டு விழும்; சிங்கமும் யானையும் ஒருங்கே கூடிவரும்; புல்லருந்திய வாயினவாகிய மான்கள் புலியின் பக்கத்திலே செல்லும்; மரக்கொம்புகள் சலியாதிருந்தன. இவ்வாறு நிற்பன நடப்பனவாகிய எல்லா உயிர்களும் ஆனாய நாயனாரது வேய்ங் குழலிசையைக்கேட்டு இசைமயமாயின. மெய்யன்பர் மனத்து அன்பின் விளைந்த இசையானது வையந்தன்னையும் மறைத்து வானந் தன்மயமாக்கிப் பொதுவில் நடமாடும் ஐயனாகிய இறைவன் திருச் செவியின் அருகு அணையப் பெருகியது. ஆனாயர் குழலோசை கேட்டருளிய இசையுருவாகிய இறைவன், உமையம்மையாருடன் விடைமீதமர்ந்து விசும்பின் வழியே வந்து தோன்றி ஆனாய நாயனாரை அருளுடன் நோக்கி, 'அன்பனே, செம்மனச் செல்வராகிய நம்முடைய அடியார்கள் நினது வேய்ங் குழலிசையைக் கேட்டு மகிழ இவ்விடத்து வாசித்து நின்ற இந்நிலையிலேயே நம் மிடத்துக்கு வருவாயாக' என்று திருவாய்மலர்ந் தருளினார். ஆனாய நாயனாரும் வேய்ங்குழல் வாசித்துக் கொண்டு இசை விரும்புங் கூத்தனாருடன் சென் றணைந்தார்.

மூர்த்தி நாயனார்

சீர்மன்னு செல்வக்குடி மன்னிய சிறப்பின் ஓங்கும் பாண்டி நாட்டிலே ஞாலமளந்த மேன்மைத் தெய்வத் தமிழ் வளரும் மதுரையம்பதியிலே வணிகர் குடியில் தோன்றியவர் மூர்த்தி நாயனார். எப்பற்றினையும் அறுத்து இறைவன் திருவடிகளே மெய்ப்பற்றெனப் பற்றிய இப்பெருந்தகையார், திருவாலவாயில் எழுந்தருளிய சொக்கலிங்கப்பெருமானுக்கு நாளும் திருமெய்ப் பூச்சுக்குச் சந்தனம் அரைத்துத் தருதலைத் தமது சிந்தைக்கினிய திருப்பணியாகக்கொண்டு செய்துவந்தார்.

அக்காலத்தில் வடுகக்கருநாடர் மன்னன், படை யெடுத்து வந்து பாண்டி நாட்டைக் கைப்பற்றி

அந்நாட்டின் அரசனாயினான். சமண் சமயச் சார்புடைய னாகிய அவன், சமணர் சொற் கேட்டுச் சிவனடியார்களது திருத்தொண்டுக்கு இடர்கள் பல செய்தான். அவ்விடர் நிலையிலும் மூர்த்தி நாயனார் ஆலவாய்ப் பெருமானுக்குச் சந்தனக் காப்பணிதலாகிய தமது திருத்தொண்டினை விடாது செய்துவந்தார். மன்னன் அவரது திருப் பணிக்குத் தடையாக அவர்க்கு எங்குஞ் சந்தனக் கட்டை கொடுக்காதபடி தடுத்தனன். எங்குஞ் சந்தனக் கட்டையைத்தேடிப் பெறாது சிந்தைநொந்த மூர்த்தியார், 'இப்பாண்டி நாடு கொடுங்கோல் மன்னனாகிய இவன் இறந்தொழியத் திருநீற்றுச் சார்புடைய செங்கோல் வேந்தரால் ஆளப்பெறுவது எப்பொழுது?' என்று ஏங்கிப் பகல் முழுதும் சந்தனக் கட்டைதேடி அலுத்துப் பின்பு திருவாலவாய்த் திருக்கோயிலை யடைந்தார்; 'இறைவன் திருமெய்ப் பூச்சுக்குரிய சந்தனக் கட்டைக்கு முட்டு வந்தாலும் அதனைக் கல்லிலிட்டுத் தேய்க்கும் கைக்கு முட்டுப் பாடில்லை' என்று சந்தனக் கல்லிலே தமது முழங்கையை வைத்து, தோலும் நரம்பும் எலும்பும் தேய்ந்து குறையும்படி தேய்ப்பாராயினார். அந்நிலையில் ஆலவாயிறைவர் திருவருளால் 'அன்பனே! நீ என்பால் வைத்த அன்பின் உறுதிப்பாட்டால் இத்தகைய செய்கையைச் செய்யற்க. உனக்கு இடுக்கண் செய்த கொடுங்கோல் மன்னன் பெற்ற நாடு முழுதும் நீயே கைக்கொண்டு அவனால் இந்நாட்டிற்கு நேர்ந்த கொடுமைகள் எல்லாவற்றையும் நீக்கிக் காத்துப் பின்பு உன் திருப்பணியைச் செய்து நமது சிவலோகத்தை அடைவாயாக' என்றதோர் அருள்வாக்கு எழுந்தது. இவ்வண்ணம் எழுந்த அருள்மொழியைச் செவிமடுத்த மூர்த்தி நாயனார், அஞ்சித் தமது கையைத் தேய்த்தலை நிறுத்தினார். அவரது கையானது தேய்ந்த புண் ஊறு தீர்ந்து நலம்பெற்றது. அந்நாள் இரவில் அமண்சார் பினனான கருநாடர் மன்னன் இறந்து, சிவனடியார்களுக்கு இடர் விளைத்ததன் காரணமாகக் கொடிய நரகத்தை யடைந்தான். மறுநாள் விடியற் காலை அமைச்சர்கள் கூடி அரசனுக்கு இறுதிக் கடன் செய்தனர். அவனுக்கு மைந்தர் இல்லாமையால் வேறொருவரை அரசனாக நியமிக்க எண்ணினர்; "யானையைக் கண்கட்டி விட்டால் அந்த யானை எவரை எடுத்து வருகிறதோ அவரே

இந்நாட்டின் வேந்தராவார்" என்று கொண்டு பட்டத்து யானையை அருச்சித்து 'நீ இந்த நாட்டை ஆளுதற்குவல்ல ஒருவரை ஏந்திக்கொண்டுவா' என்று சொல்லித் துணியினைக்கொண்டு கண்ணைக்கட்டி விடுத்தனர். அந்த யானை மதுரை நகர வீதிகளிலெல்லாம் திரிந்து சென்று திருவாலவாய்த் திருக்கோயிலின் கோபுர வாயிலின் முன் சென்றது. முதல் நாள் இரவில் ஆலவாயிறைவரது அருள் மொழியினைச் செவிமடுத்து மனத்துயரம் நீங்கியிருந்த மூர்த்தி நாயனார், 'எம் பெருமானது திருவருள் இதுவானால் இந்நாட்டினை யாளும் தொழிலை மேற்கொள்வேன்' என்று திருக்கோயிற் புறத்திலே நின்றார். யானையானது அவர் திருமுன்னே சென்று தாழ்ந்து அவரைத் தன் முதுகின்மேல் ஏற்றிக்கொண்டது. அதுகண்ட அமைச்சர்கள் மூர்த்தியாரை வணங்கி யானையின் முதுகினின்றும் இறக்கி அழைத்துச் சென்று முடிசூட்டு விழாவிற்கு ஏற்றன செய்யத் தொடங்கினார்கள். அதுகண்ட மூர்த்தியார் அமைச்சர்களை நோக்கி 'அமண் சமயம் நீங்கிச் சைவம் ஓங்கில் இந்நாட்டினை அரசு புரிதற்கு உடன்படுவேன்' என்று கூறினார். அமைச்சர்களும் அவரது ஆணைக்கு இசைந்து நடப்பதாகக் கூறி வணங்கி நின்றார்கள். பின்பு மூர்த்திநாயனார் அமைச்சர்களை நோக்கி 'யான் அரசு புரிவேனாகில் திருநீறே எனக்குச் செய்யும் அபிடேகத்திரவியமாகவும் உருத்திராக்கமே பூணும் அணிகலமாகவும் சடைமுடியே மணிமுடியாகவும் ஆதல் வேண்டும்' என்றுகூற, அமைச்சர்களும் அவர் கருத்திற்கிசைந்து முடி சூட்டு விழாவுக்கு ஆவன செய்தார்கள். நற்றவ வேந்தராகிய மூர்த்தியார், திருவாலவாயிறைவரைச் சென்று வணங்கி யானைமீது உலாப் போந்து நிலவுந்திருநீற்று நெறித்துறை நீடுவாழ உலகெங்கும் நிரம்பிய சைவம் உயர்ந்து விளங்கத் திருநீறு கண்டிகை சடைமுடி ஆகிய மூவகைச் சிவ சின்னங்களுடன் தவ வேந்தராகப் பாண்டி நாட்டினை அருள் ஆட்சி புரிந்திருந்து பின்னர் இறைவன் திருவடி நீழலில் என்றும் பிரியாதுடனுறையும் பெருவாழ்வு பெற்றார். இங்ஙனம் மூர்த்தி நாயனாராகிய இப்பெருந்தகையார், திருநீறு கண்டிகை சடை முடியாகிய மூவகைச் சிவசின்னங்களுடன் அரசு புரிந்தமையால் 'மும்மையால் உலகாண்ட மூர்த்

திக்கும் அடியேன்' என நம்பியாரூரராற் போற்றப் பெறுவாராயினர்.

முருக நாயனார்

சோழ நாட்டிற் பொய்கை சூழ்ந் அந்தணர் மரபில் தோன்றியவர் முருகநாயனார். ஞான வரம்பின் தலைநின்ற இப்பெருந்தகையார், இறைவன் திருவடிக்கீழ் ஊனமின்றி நிறை அன்பால் உருகும் மனத்தார். நாள் தோறும் விடியற்காலையிலெழுந்து நீரில் மூழ்கிக் கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ, எனப் படும் நால்வகைப் பூக்களில் உரிய பூக்களைக் கொய்து திருப்பூங்கூடைகளிற் கொணர்ந்து தனியிடத்திலிருந்து கோவை, இண்டை, தாமம், மாலை, கண்ணி, பிணையல், தொடையல் எனப் பலவகைப்பட்ட திருமாலைகளாகத் தொடுத்துத் திருப்புகலூர் வர்த்தமானீச்சரத் திருக் கோயிலில் உள்ள சிவபெருமானுக்குச் சாத்தி அர்ச்சனை செய்தும் திருவைந் தெழுத்தோதியும் வழிபடும் இயல்பின ராய் வாழ்ந்தார். இவர், திருப்புகலூர்ப் பெருமானை வழிபடத் திருஞானசம்பந்தப்பிள்ளையார் எழுந்தருளிய போது பிள்ளையாரை எதிர்கொண்டழைத்துத் தமது திருமடத்தில் அமர்த்தி உபசரித்துப் போற்றியவர்; அடியார் குறிப்பறிந்து அவர்களுக்கு வேண்டுவன நல்கும் பேரன்புடையவர். முருகநாயனார் நாள் தோறும் விடியற் காலையிலெழுந்து பொய்கையில் மூழ்கி நறுமலர் கொய்து மாலை தொடுத்தணிந்து வர்த்தமானீச்சரப் பெருமானை முப்போதும் அன்பினால் வழிபட்டுப் போற்றிய திறத் தினையும், அவ்வழிபாட்டில் இறைவனது திருக் கோலத்தைச் சிவனடியார்கள் கண்டு கண்டு உளங்களிப் புற்ற திறத்தினையும்,

" தொண்டர் தண்கயம் மூழ்கித் துணையலுஞ் சாந்தமும் புகையும்
கொண்டு கொண்டடி பரவிக்குறிப்பறி முருகன்செய் கோலம்
கண்டு கண்டு கண்குளிரக் களிபரந் தொளிமல்கு கள்ளார்
வண்டு பண்செயும் புகலூர் வர்த்தமானீச்சரத் தாரே "

எனவும்,

'மூசுவண்டறை பொய்கை முருகன் முப்போதுஞ்செய் முடிமேல்
வாச மாமலருடையார் வர்த்தமானீச்சரத்தாரே'

எனவும் ஆளுடைய பிள்ளையார் உளமுவந்து பாராட்டிப் போற்றியுள்ளார். முருகநாயனார் திருமடத்தில் திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சிறுத்தொண்டர், திருநீல நக்கர் முதலிய சிவனடியார்கள் பலரும் விரும்பி மகிழ்ந்து உரையாடி உளங்கலந்துறையும் பெருவாழ்வினைப் பெற்றனர் எனவும், திருஞானசம்பந்தருக்கு நண்பராம் பெருமை பெற்ற முருகநாயனார், திருஞானசம்பந்தப் பிள்ளையார்க்குத் திருநல்லூர்ப் பெருமணத்தில் நிகழ்ந்த திருமண விழாவிற் கலந்துகொண்டு தங்கள் பெருமானடி நீழல் தலையாம் நிலைமை சார்வுற்றார் எனவும் பெரிய புராணம் கூறும்.

உருத்திர பசுபதி நாயனார்

இவர் சோழ நாட்டில் திருத்தலையூரில் வேதியர் மரபிலே தோன்றியவர்; சிவபெருமான் திருவடிகளிலே நிறைந்த அன்பினையே தமக்குச் செல்வமாகக் கொண்டவர்; பசுபதியார் என்னும் இயற்பெயருடையவர். இவர் தாமரைத்தடாகத்திலே கழுத்தளவு தண்ணீரில் இரவு பகலாக நின்றுகொண்டு இருகைகளையும் தலைமேலேறக் குவித்துச் சிவனை மறவாத சிந்தையராய் அருமறைப் பயனாகிய திருவுருத்திரத்தை வழுவாது ஓதும் நியதியுடைய ராயிருந்தமையால் உருத்திர பசுபதியார் எனப் போற்றப் பெற்றார். இவர்தம் அருந்தவப் பெருமையையும் வேத மந்திர நியதியின் மிகுதியையும் விரும்பிய இறைவர் இந் நாயனார்க்குத் தீதிலாச் சிவலோக வாழ்வினை நல்கி யருளினார்.

திருநாளைப் போவார் நாயனார்

நந்தனார் என்னும் பெயருடைய இந்நாயனார், மேற்கா நாட்டில் கொள்ளிடத்தின் கரையில் உள்ள ஆதனூர் [1] என்னும் பகுதியில் புலையர் குலத்திலே தோன்றியவர்; மெய்ப்பரிவு சிவன் கழற்கே விளைத்த உணர்வோடும் வந்தவர்; அப்பகுதியில் ஊர்ப்புலைமை ஆன்ற தொழில்

1. ஆதனூர் என்பது சிதம்பரத்தை யடுத்துள்ள ஓமாம் புலியூர்க்கும் கடம்பூர்க்கும் நடுவில் கொள்ளிடக்கரையில் அமைந்த ஊராகும்.

தாயத்தார்; பிறந்தது முதல் சிவபெருமான்பால் கொண்ட பேரன்பின் திறத்தால் மறந்தும் அயல் நினைவின்றிப் பிறப்பின் வழிவந்த செயலாகிய அறத்தினைச் செய்பவ ராகவே சிவனடித் தொண்டிலும் சிறந்து விளங்கினார். அவ்வூரிலே மானியமாகத் தமக்கு விடப்பட்ட பறைத் துடவையாகிய நிலத்தின் விளைவினையே தமக்குரிய உணவுரிமையாகக் கொண்டு தமது தொழில் முயற்சியாற் சிவாலயங்கள் தோறும் பேரிகை முதலிய தோற்கருவி களுக்குரிய தோலும் வாரும் வீணைக்கும் யாழுக்கும் நரம்பும், அர்ச்சனைக்குக் கோரோசனையும் கொடுத்தலைத் தமது கடமையாகக்கொண்டு திருக்கோயிலின் புறவாயிலில் நின்று அன்பின் மேலீட்டினால் சிவனைப் போற்றி ஆடுதலையும் இசையுடன் பாடுதலையும் உடையவரா யிருந்தார்.

அவர், ஒருநாள் திருப்புன்கூர் சென்று சிவலோக நாதர் திருக்கோயில் வாயிலிலே நின்று கொண்டு சீரேறும் இசைபாடிப் பெருமானை நேரே கும்பிட வேண்டும் என நினைந்தார். அந்நிலையிற் சிவபெருமான் அவரது விருப்பத் திற்கு இசைந்தருளித் தம் திருமுன்புள்ள நந்திதேவரைச் சிறிது விலகச் செய்து சிவலிங்கத் திருமேனியினைப் புலப் படுத்தி அருள் செய்தார். சிவலோகமுடைய பெருமானை நேரே கண்டு கும்பிட்டு மகிழ்ந்த நந்தனார், அப்பகுதியில் திருக்கோயிலுக்கு அண்மையில் ஒரு குளத்தினைத் தோண்டிப் பணிசெய்து அத்திருக்கோயிலை வலம் வந்து தம்மூர்க்குச் சென்றார். இவ்வாறு இறைவன் எழுந் தருளும் திருத்தலங்கள் பலவற்றுக்குஞ் சென்று வணங்கிய நந்தனாரது உள்ளத்திலே ஒருநாள் திருத்தில்லைத் திருமன்றினைச் சென்று இறைஞ்ச வேண்டும் என்னும் பெருங்காதலுணர்வு இடைவிடாது எழுந்தது. அன்று இரவு முழுவதும் கண்ணுறங்காத நந்தனார் பொழுது விடிந்த பொழுது, 'தில்லைத்திருமன்றினை அடைதற்கு யான் பிறந்த குலத்துடன் பொருத்தமில்லையே' என்று எண்ணினார். 'சென்று வழிபட வேண்டும் என்னும் இந்நினைவும் எம்பெருமானாகிய இறைவனது கட்டளையே' என்னும் பெருங்காதல் மேலிடுதலால் 'நாளைப் போவேன்' என்று அடிக்கடி கூறி, நாள்கள் பல

கழித்தார். அதனால் அவருக்கு நாளைப்போவார் என்னும் பெயர் உண்டாயிற்று.

திருநாளைப் போவாராகிய நந்தனார், ஒருநாள் தில்லைச் சிற்றம்பலத்தைக் கண்டு இறைஞ்ச வேண்டும் என்னும் பெருவிருப்பம் தம்மைப் பிடித்துத் தள்ளுதலால் ஆதனூரை விட்டுப் புறப்பட்டுத் தில்லையின் எல்லையை அடைந்தார். அத்திருப்பதியில் வேள்விப் புகையும் அந்தணர் வேத மோதுமிடங்களும் நெருங்கினமை கண்டு தாம் பிறந்த குலத்தினை நினைந்து அதனுள்ளே புகுதற்கு அஞ்சி நின்றார். அங்ஙனம் நின்ற நந்தனார் தில்லையின் பெருமையினை நினைப்பாராய்ப் புறமதிலைக் கடந்து ஊரைச் சுற்றிய மதிலின் திருவாயிலினுள்ளே புகுபவர் 'அந்தணர் மாளிகைகள் வேள்வி மண்டபங்கள் நிறைந்த இவ்விடத்தில் எனக்கு அடைதல் அரிது' என்று அஞ்சி அப்பதியின் மதிற் புறத்தே ஆராத பெருங்காதலால் உள்ளுருகிக் கைதொழுது அப்பதியை வலங் கொண்டு சென்றார். இவ்வாறு இரவு பகல் தில்லைப்பதியைப் புறத்தே வலம் வந்தவர் 'மைவண்ணத் திருமிடற்றார் மன்றில் நடங் கும்பிடுவது எவ்வண்ணம்?' என்று எண்ணி ஏக்கத்துடன் துயில் கொண்டார். 'இன்னல் தரும் இழிபிறவாகிய இது, இறைவன் ஆடல் புரியும் பொன்னம்பலத்தை வழி படுதற்குத் தடையாயுள்ளதே?' என்று வருந்தித் துயில் கொள்வாராகிய நந்தனாரது வருத்தத்தை தீக்கியருள் புரியத் திருவுளங் கொண்ட தில்லைக்கூத்தப் பெருமான், 'என்று வந்தாய்' என்னும் புன்முறுவற் குறிப்புடன் நாளைப் போவாரது கனவில் தோன்றி, "இப்பிறவி போய் நீங்க எரியினிடை, நீ மூழ்கி, முப்புரிநூல் மார்பருடன் முன்னணைவாய்" என மொழிந்து அப்பரிசே வேள்வித்தீ அமைக்கும்படி தில்லை வாழந்தணர்க்கும் கனவில் தோன்றி அருள் புரிந்து மறைந்தருளினார்.

அந்நிலையில், தில்லை வாழந்தணர்கள் எல்லோரும் விழித்தெழுந்து கூத்தப் பெருமானது கட்டளையினை யுணர்ந்து திருக்கோயில் வாயிலிலே வந்து கூடினார்கள். 'எம்பெருமான் அருள் செய்த பணிசெய்வோம்' என்று ஏத்திப் பெருங்காதலுடன் வந்த திருத்தொண்டராகிய திருநாளைப் போவாரை அடைந்து, 'ஐயரே, அம்பலவர்

திருவருளால் உமக்கு வேள்வித்தீ அமைத்துத் தருதல் வேண்டி இங்கு வந்தோம்' என்றார்கள். அது கேட்ட நந்தனார் 'நான் உய்ந்தேன்' என வணங்கினார். தெய்வ மறை முனிவர்களும் தென் திசையின் மதிற்புறத்துத் திருவாயில் முன்பு தீயமைத்தார்கள். நாளைப் போவார் அத்தீக்குழியினையடைந்து இறைவன் திருவடிகளை மனத்திற்கொண்டு எரிசூழ வலங்கொண்டு ஆடல் புரிந்தருளும் திருவடியை நினைந்து கை தொழுது அதனுள்ளே புகுந்து புண்ணிய மாமுனி வடிவாய் மெய்யில் வெண்ணூல் விளங்க வேணிமுடிகொண்டு மேலே எழுந்து செம்மலர் மேல் வந்தெழுந்த அந்தணனாகிய பிரமனை யொத்துத் தோன்றினார். அது கண்டு தில்லைவாழந்தணர்கள் கைதொழுதார்கள். திருத்தொண்டர்கள் வணங்கி மனங் களித்தார்கள். வேள்வித்தீயின் மூழ்கி வெளிப்பட்ட திருநாளைப் போவராம் மறைமுனிவர் அருமறைசூழ் திருமன்றில் ஆடுகின்ற கழல் வணங்க வருபவர் தில்லைவாழந்தணர் உடன் செல்லத் திருக்கோயிற் கோபுரத்தைத் தொழுது உள்ளே புகுந்தார். உலகுய்ய நடமாடும் எல்லையினைத் தலைப்பட்டார். உடன் வந்தோர் யாவரும் அவரைக் காணாதவராயினர். நாளைப் போவார் அம்பலவர் திருவடியிற் கலந்து மறைந்தமை கண்டு தில்லைவாழ் அந்தணர்கள் அதிசயித்தார்கள். முனிவர்கள் துதித்துப் போற்றினார்கள். வந்தணைந்த திருத்தொண்டராகிய நந்தனாரது வினைமாசறுத்துத் தம்முடைய திருவடிகளைத் தொழுது இன்புற்றிருக்க அந்தமிலா ஆனந்தப் பெருங்கூத்தர் அருள்புரிந்தார்.

'நற்றமிழ் வல்ல ஞானசம் பந்தன்
நாவினுக் கரையன் நாளைப் போவானும்
குற்றஞ் செய்யினுங் குணமெனக்கருதும்
கொள்கைகண்டு நின் குரைகழலடைந்தேன்'

என நம்பியாரூரர் திருப்புன்கூர்ப் பெருமானைப் போற்றும் பாடலில் நாளைப்போவார் இறைவன்பாற் கொண்ட குற்ற மிலாப் பேரன்பின் திறத்தை உளமுவந்து போற்றியுள்ளமை இங்கு நினைத்தற்குரியதாகும்.

திருக்குறிப்புத் தொண்ட நாயனுர்

தொண்டை நன்னுட்டில் காஞ்சி நகரத்திலே ஏகாலியர் மரபில் தோன்றியவர்; செவ்விய அன்புடையவர்; நல்லொழுக்க நெறி நின்றவர்; சிவனடித் தொண்டு புரிபவர்; மனமொழி மெய்யாகிய மூக்கரணங்களும் அண்ணலார் சேவடியின் சார்வாக அணைவிப்பவர்; சிவனடியார் திருக்குறிப்பறிந்து போற்றும் உள்ளத்திண்மையினுல் திருக்குறிப்புத் தொண்டர் என அழைக்கப்பெறும் சிறப்புப் பெயருடையவர். இவர் சிவனடியார்களது ஆடையினைத் துவைத்துக் கொடுத்தலைத் தமது முதற் பணியாகக் கொண்டிருந்தார். அடியவரது அன்பின் பெருமையை உலகத்தார்க்கு அறிவிக்கத் திருவுளங்கொண்ட திருவேகம்பப் பெருமான், குளிர் காலத்திலே ஒரு நாள் சிவனடியார் திருமேனிகொண்டு, அழுக்கடைந்த கந்தையுடன் திருக் குறிப்புத் தொண்டரை யடைந்தார். தளர்ந்த திருமேனியுடைய சிவனடியாராகிய அவரைக் கண்ட திருக்குறிப்புத் தொண்டர், அன்பினுல் எதிர்கொண்டு வணங்கி இன்மொழி பகர்ந்து அவரது குறிப்பறிந்து 'தாங்கள் உடுத்துள்ள இக்கந்தையைத் துவைத்தற்குத் தாருங்கள்' என்று கேட்டார். வந்த சிவனடியார் 'யான் உடுத்துள்ள இந்தக் கந்தை அழுக்கேறி எடுத்தற்குத் தகுதியில்லாத நிலையிலிருப்பினும் உடம்பினை வருத்தும் குளிருக்குப் பயந்து கைவிடாது உடுத்துள்ளேன். மாலைப் பொழுதாவதற்குள் தருவீராயின் விரைந்து கொண்டு போய்த் துவைத்துத் தருவீராக' என்று கூறினுர். அது கேட்ட திருக்குறிப்புத் தொண்டர் 'அடியேன் காலந்தாழ்க்காமல் மாலைப் பொழுதிற்குள் விரைவில் வெளுத்துத் தருகின்றேன், தந்தருள்வீராக' என்று வேண்டினுர். வந்த அடியவர், 'கந்தையாகிய இதனை விரைவில் துவைத்து உலர்த்தித் தாராதொழிவீராயின் இந்த உடம்புக்கு இடர் செய்தீராவீர்' என்று சொல்லித் தாம் உடுத்திருந்த கந்தையை அவர் கையிற் கொடுத்தார். அதனைப் பெற்றுக்கொண்ட திருக்குறிப்புத் தொண்டர், குளத்திற்குச் சென்று முன் சிறிது அழுக்கைப் போக்கி வெள்ளாவியில் வைத்துப் புழுக்கித் துவைக்கப் புகுமளவில், பெருமழை விடாது பெய்வதாயிற்று. அது கண்ட திருக்குறிப்புத் தொண்டர் சிவனடியார்க்குத் தாம் சொன்ன உறுதிமொழியை எண்ணி 'இனி

நான் யாது செய்வேன்' என்று கவலையுற்று, மழை விட்டு விடுவதை எதிர்பார்த்து அங்கேயே நின்றார். மழையோ நிற்கவில்லை. இரவுப் பொழுதும் அணுகுவதாயிற்று. திருக் குறிப்புத் தொண்டர் 'குளிரால் திருமேனி நடுங்குகின்ற சிவனடியார்க்கு நான் செய்ய விரும்பிய அடிமைப்பணி அந்தோ! தவறிப்போயிற்றே' என்று நிலமிசை வீழ்ந்தார்; 'மழையோ விடவில்லை; அடியார் சொல்லிய கால எல்லையும் கழிந்து விட்டது. முன்னமே அவரது உடையினைத் துவைத்துக் காற்றில் உலர்த்திக் கொடுப்பதனை அறிந்திலேன். அடியார் திருமேனி குளிரால் வருந்தத் தீங்கு புரிந்த கொடியேனுக்கு இனி இதுவே செயல்' என்று எழுந்து 'துணி துவைக்கும் கற்பாறையிலே எனது தலையைச் சிந்தும்படி மோதுவேன்' என்று தமது தலையை மோதினார். அப்போது அப்பாறையின் அருகே திரு ஏகம்பரது திருக்கை தோன்றி அவரைப் பிடித்துக் கொண்டது. விசும்பில் விடாது பெய்த நீர்மழை நீங்க மலர் மழை பொழிந்தது. உமையொருபாகராய் இறைவன் விடைமேல் எழுந்தருளிக் காட்சி கொடுத்தருளினார். அத்தெய்வக்காட்சியைக் கண்ட திருக்குறிப்புத் தொண்டர் அன்புருகக் கைதொழுது தனி நின்றார். சிவபெருமான் அவரை நோக்கி, 'உனது அன்பின் திறத்தை மூவுலகத்தாரும் அறியச் செய்தோம். இனி நீ நம்முடைய உலகத்தையடைந்து நம்மைப் பிரியாது உறைவாயாக' என்று திருவருள் புரிந்து மறைந்தருளினார்.

சண்டேசுர நாயனார்

பொன்னிநாட்டில் மண்ணியாற்றின் தென்கரையிலமைந்த சேய்ஞலூரில் பெருமை விளங்கும் வேதியர் மரபிற் காசிபகோத்திரத்தில் எச்சதத்தன் என்பானுக்கு அவன் மனைவி பவித்திரை வயிற்றில் தோன்றியவர் விசாரசருமனார். அக்குழந்தைக்கு ஐந்து வயது நிரம்பிய அளவில் முந்தை அறிவின் தொடர்ச்சியினால் வேத சிவாகமங்களின் உணர்வு சிந்தையில் தோன்றி வளர்ந்தது. பெற்றோர்கள் ஏழாம் வயதில் உபநயனம் முடித்துக் கல்விப் பயிற்சியைத் தொடங்குவித்தார்கள். குலவுமறையும் பல கலையும் சொல்லிக் கொடுப்பதற்கு முன்னமே விரைந்து மனங் கொள்ளும் அக் குழந்தையின் அறிவின் திறங்கண்டு

அந்தணர்கள் அதிசயமடைந்தார்கள். சிறிய பெருந்தகை யாராகிய விசாரசருமனுர் அளவில்லாத கலைகளின் பொருட் கெல்லாம் எல்லையாய் விளங்குவது அம்பலவரது எடுத்த பொற்பாதமே எனத் தம் சிந்தையில் தெளிந்துணர்ந்தார். 'நடமே புரியும் சேவடியார் ஆகிய இறைவன் உயிர்க ளாகிய நம்மை ஆளாகவுடையார்' என்னும் உறுதிப் பாட்டினையுடையராய் விசாரசருமர் ஒழுகிவரும் நாளில் ஒரு நாள், வேதம் ஓதுகின்ற இடத்திற்கு மறைச் சிறுவர் களுடன் சென்றுர். அப்பொழுது தெருவில் ஊர்ப் பசுக் களை மேய்த்தற் பொருட்டு ஓட்டிச் செல்லும் இடைச்சிறுவன் தன்னைக் கொம்பால் முட்டவந்த ஈற்றுப் பசுவைக் கோலினுல் நையப்புடைத்தான். அது கண்டு பொருத விசாரசருமர், அவனை வெகுண்டு விலக்கி, இறை வனுக்குத் திருமஞ்சனத்துக்குப் பால் தயிர் நெய் முதலிய ஐந்தினையளிக்கும் பசுவின் பெருமையினை உள்ளவாறு உணர்ந்து தாமே அவ்வானிரைகளை மேய்க்க விரும்பி அவ்விடையனை நோக்கி 'நீ பசுநிரை மேய்த்தலை ஒழிவா யாக; இன்று முதலாக யானே இவற்றை மேய்ப்பேன்' என்றுர். அது கேட்ட இடைச்சிறுவன் அஞ்சி அகன்றுன்.

விசாரசருமர் பசுக்களை அவற்றுக்குரிய அந்தணர் களின் இசைவு பெற்று நாள்தோறும் மண்ணியாற்றின் கரையிலுள்ள காடுகளிலும் வயலோரங்களிலும் புல் நிறைந்த இடங்களில் வயிருர மேயவிட்டுத் தண்ணீருட்டி உச்சி வேளையில் நிழலில் தங்கச் செய்து நன்ருகக் காப் பாற்றி, சமித்துக்கள் ஒடித்துக்கொண்டு மாலையில் அப் பசுக்களை அவரவர் வீட்டுக்கு ஓட்டிப் போய் விட்டுத் தமது வீட்டுக்குச் செல்லுதலை வழக்கமாகக் கொண்டார். இவ் வாறு மறைச்சிறுவரால் மேய்க்கப்பெற்ற பசுக்கள் மடி சுரந்து பாலை மிகப் பொழிந்தன. அப் பசுக்கள் தம் கன்றைப் பிரிந்தாலும் தம்மை அன்புடன் மேய்த்துக் காக்கும் மறைக்கன்ருகிய விசாரசருமரைப் பிரிய மனமில்லா தனவாய் அவரருகே சென்று அன்பினுற் கனைத்துத் தாமே மடிசுரந்து பால் பொழியும் தாயன்புடையனவாயின. தம்மால் மேய்க்கப்பெறும் பசுக்கள் கறவாமே பால் பொழியக்கண்ட விசாரசருமர், அவற்றின்பால் நிலத்தில் வீழ்ந்து வீணுகாமல் இறைவனுக்குத் திருமஞ்சனமாதல் வேண்டும் என எண்ணினுர். அந்நிலையில் அவருள்ளத்

நான் யாது செய்வேன்' என்று கவலையுற்று, மழை விட்டு விடுவதை எதிர்பார்த்து அங்கேயே நின்றார். மழையோ நிற்கவில்லை. இரவுப் பொழுதும் அணுகுவதாயிற்று. திருக் குறிப்புத் தொண்டர் 'குளிரால் திருமேனி நடுங்குகின்ற சிவனடியார்க்கு நான் செய்ய விரும்பிய அடிமைப்பணி அந்தோ! தவறிப்போயிற்றே' என்று நிலமிசை வீழ்ந்தார்; 'மழையோ விடவில்லை; அடியார் சொல்லிய கால எல்லை யும் கழிந்து விட்டது. முன்னமே அவரது உடையினைத் துவைத்துக் காற்றில் உலர்த்திக் கொடுப்பதனை அறிந்திலேன். அடியார் திருமேனி குளிரால் வருந்தத் தீங்கு புரிந்த கொடியேனுக்கு இனி இதுவே செயல்' என்று எழுந்து 'துணி துவைக்கும் கற்பாறையிலே எனது தலையைச் சிந்தும்படி மோதுவேன்' என்று தமது தலையை மோதினார். அப்போது அப்பாறையின் அருகே திரு ஏகம்பரது திருக்கை தோன்றி அவரைப் பிடித்துக் கொண்டது. விசும்பில் விடாது பெய்த நீர்மழை நீங்க மலர் மழை பொழிந்தது. உமையொருபாகராய் இறைவன் விடைமேல் எழுந்தருளிக் காட்சி கொடுத்தருளினார். அத்தெய்வக்காட்சியைக் கண்ட திருக்குறிப்புத் தொண்டர் அன்புருகக் கைதொழுது தனி நின்றார். சிவபெருமான் அவரை நோக்கி, 'உனது அன்பின் திறத்தை மூவுலகத் தாரும் அறியச் செய்தோம். இனி நீ நம்முடைய உலகத்தையடைந்து நம்மைப் பிரியாது உறைவாயாக' என்று திருவருள் புரிந்து மறைந்தருளினார்.

சண்டேசுர நாயனார்

பொன்னிநாட்டில் மண்ணியாற்றின் தென்கரையி லமைந்த சேய்ஞலூரில் பெருமை விளங்கும் வேதியர் மரபிற் காசிபகோத்திரத்தில் எச்சதத்தன் என்பானுக்கு அவன் மனைவி பவித்திரை வயிற்றில் தோன்றியவர் விசார சருமனார். அக்குழந்தைக்கு ஐந்து வயது நிரம்பிய அளவில் முந்தை அறிவின் தொடர்ச்சியினால் வேத சிவாகமங்களின் உணர்வு சிந்தையில் தோன்றி வளர்ந்தது. பெற்றோர்கள் ஏழாம் வயதில் உபநயனம் முடித்துக் கல்விப் பயிற்சியைத் தொடங்குவித்தார்கள். குலவுமறையும் பல கலையும் சொல்லிக் கொடுப்பதற்கு முன்னமே விரைந்து மனங் கொள்ளும் அக் குழந்தையின் அறிவின் திறங்கண்டு

அந்தணர்கள் அதிசயமடைந்தார்கள். சிறிய பெருந்தகை யாராகிய விசாரசருமனார் அளவில்லாத கலைகளின் பொருட் கெல்லாம் எல்லையாய் விளங்குவது அம்பலவரது எடுத்த பொற்பாதமே எனத் தம் சிந்தையில் தெளிந்துணர்ந்தார். 'நடமே புரியும் சேவடியார் ஆகிய இறைவன் உயிர்க ளாகிய நம்மை ஆளாகவுடையார்' என்னும் உறுதிப் பாட்டினையுடையராய் விசாரசருமர் ஒழுகிவரும் நாளில் ஒரு நாள், வேதம் ஓதுகின்ற இடத்திற்கு மறைச் சிறுவர் களுடன் சென்றார். அப்பொழுது தெருவில் ஊர்ப் பசுக் களை மேய்த்தற் பொருட்டு ஓட்டிச் செல்லும் இடைச்சிறுவன் தன்னைக் கொம்பால் முட்டவந்த ஈற்றுப் பசுவைக் கோலினால் நையப்புடைத்தான். அது கண்டு பொறாத விசாரசருமர், அவனை வெகுண்டு விலக்கி, இறை வனுக்குத் திருமஞ்சனத்துக்குப் பால் தயிர் நெய் முதலிய ஐந்தினையளிக்கும் பசுவின் பெருமையினை உள்ளவாறு உணர்ந்து தாமே அவ்வானிரைகளை மேய்க்க விரும்பி அவ்விடையனை நோக்கி 'நீ பசுநிரை மேய்த்தலை ஒழிவா யாக; இன்று முதலாக யானே இவற்றை மேய்ப்பேன்' என்றார். அது கேட்ட இடைச்சிறுவன் அஞ்சி அகன்றான்.

விசாரசருமர் பசுக்களை அவற்றுக்குரிய அந்தணர் களின் இசைவு பெற்று நாள்தோறும் மண்ணியாற்றின் கரையிலுள்ள காடுகளிலும் வயலோரங்களிலும் புல் நிறைந்த இடங்களில் வயிறார மேயவிட்டுத் தண்ணீரூட்டி உச்சி வேளையில் நிழலில் தங்கச் செய்து நன்றாகக் காப் பாற்றி, சமித்துக்கள் ஒடித்துக்கொண்டு மாலையில் அப் பசுக்களை அவரவர் வீட்டுக்கு ஓட்டிப் போய் விட்டுத் தமது வீட்டுக்குச் செல்லுதலை வழக்கமாகக் கொண்டார். இவ் வாறு மறைச்சிறுவரால் மேய்க்கப்பெற்ற பசுக்கள் மடி சுரந்து பாலை மிகப் பொழிந்தன. அப் பசுக்கள் தம் கன்றைப் பிரிந்தாலும் தம்மை அன்புடன் மேய்த்துக் காக்கும் மறைக்கன்றாகிய விசாரசருமரைப் பிரிய மனமில்லா தனவாய் அவரருகே சென்று அன்பினாற் கனைத்துத் தாமே மடிசுரந்து பால் பொழியும் தாயன்புடையனவாயின. தம்மால் மேய்க்கப்பெறும் பசுக்கள் கறவாமே பால் பொழியக்கண்ட விசாரசருமர், அவற்றின்பால் நிலத்தில் வீழ்ந்து வீணாகாமல் இறைவனுக்குத் திருமஞ்சனமாதல் வேண்டும் என எண்ணினார். அந்நிலையில் அவருள்ளத்

திலே சிவபூசனை செய்யும் பேரார்வம் தலைப்பட்டது. உடனே அவர் மண்ணியாற்றின் கரையிலமைந்த மணல் திட்டிலே திருவாத்தி மரத்தின் கீழே வெண்மணலால் சிவலிங்கம் அமைத்து, திருக்கோயிலும் கோபுரமும் மதிலும் வரைந்து, திருவாத்திப்பூ முதலிய நறுமலர்களைப் பறித்துக் கூடையிற் கொணர்ந்தார். புதிய குடங்களைத் தேடிக் கொணர்ந்து பசுக்கள் ஒவ்வொன்றினிடமும் ஒருமுறை சென்று மடியைத் தீண்டிய அளவில் அவை குடம் நிறையப் பாலைப் பொழிந்தன. அப்பாற் குடத்தினைக் கொண்டுபோய் மணலால் அமைத்த ஆலயத்தில் தாபித்து மலர் தூவி அருச்சித்து வெண்மணலால் அமைத்த சிவலிங்கப் பெரு மானுக்குத் திருமஞ்சனம் ஆட்டி வழிபாடு செய்தார். அடியார் அன்புக்கு எளிவரும் சிவபெருமானும் அவ்வி லிங்கத் திருமேனியில் நின்று விசாரசருமரது வழிபாட்டினை ஏற்றருளினார்.

இவ்வாறு விசாரசருமர் பல நாட்களாகப் பார்ப்பவர் களுக்கு விளையாட்டுப்போலத் தோன்றுகின்ற சிவபூசை யைச் செய்துவரும்பொழுது அதனைக்கண்ட ஒருவன் அதன் உண்மையையறியாது அச்செய்தியை அவ்வூர் அந்தணர் களிடம் தெரிவித்தான். அவர்கள் ஊர்ச்சபையாரிடம் கூறினர். சபையார் எச்சதத்தனை அழைத்து ‘ அந்தணர் ஆகுதியின் பொருட்டுப் பால் கறக்கும் பசுக்களை நின்மைந்தன் மேய்ப்பதாகச் சொல்லிக்கொண்டு சென்று பாலைக் கறந்து வீணே மணலிற் கொட்டுகின்றான் ’ என்றனர். அதுகேட்டு அஞ்சிய எச்சதத்தன் ‘ சிறுபிள்ளை செய்த இக்குற்றத்தைப் பொறுத்தருள வேண்டும் ’ என்று இரந்து வணங்கி, ‘ இனி அவன் அவ்வாறு செய்தால் அது என் குற்றமாம் ’ என்று சொல்லிவிட்டு வீடு திரும்பினான்.

எச்சதத்தன் மறுநாட் காலை அதன் உண்மையை அறிந்துகொள்ள எண்ணிப் பசு மேய்க்கச் செல்லும் விசார சருமர் அறியாதபடி அவர் பின்னே சென்று அங்கு நிகழ் வதை அறியக் குராமரத்தில் ஏறி ஒளித்திருந்தான். விசாரசருமர் நீராடி முன்போல மணலால் சிவலிங்கம் அமைத்து மலர் பறித்து வந்து பாற்குடத்தினைக் கொணர்ந்து அருச்சனைக்கு வேண்டிய பிறவற்றையும் அமைத்துச் சிவலிங்கப்பெருமானுக்குப் பாலைத் திருமஞ்சன

மாக ஆட்டினர். குராமரத்தில் ஒளித்திருந்த எச்சதத்தன் வெகுண்டு இறங்கிச் சென்று தன் கையிலுள்ள தண்டினல் விசாரசருமருடைய முதுகிலே அடித்துக் கொடுஞ்சொற் கூறினன். அவருடைய மனம் சிவபூசையில் ஒன்றியிருந் தமையால் அவன் செய்ததெதுவும் அவருக்குத் தோன்ற வில்லை. மேலாம் பெரியோர் தந்தை வெகுண்டு பலகால் தன்னை அடிக்கவும் அதனையுணராராகி இறைவனுக்குப் பாலார் திருமஞ்சனம் ஆட்டும் பணியிற் சலியாதிருந்தனர். அதுகண்டு செற்றங்கொண்ட எச்சதத்தன் திருமஞ்சனக் குடப்பாலைக் காலால் இடறித் தள்ளினன். பால் சிந்தியது கண்ட விசாரசருமர் அதனையிடறித் தள்ளியவன் தன் தந்தையென அறிந்து அவனுடைய கால்களைத் துணித்தல் தகுதி என்று எண்ணி அருகே கிடந்த கோலொன்றை எடுக்க, இறைவரருளால் அதுவே மழுப்படையாயிட, அது கொண்டு தந்தையின் கால்களை வெட்டி வீழ்த்தினர். மறையோனும் வீழ்ந்தான். சிவபூசைக்கு நேர்ந்த இடர் அகற்றிய விசாரசருமர் மீண்டும் சிவபூசையினைச் செய்ய லுற்ருர். அந்நிலையிற் சிவபெருமான் உமையம்மையா ரோடும் விடைமேல் எழுந்தருளினர். பூதகணங்கள் புடைசூழ முனிவர் முதலோர் போற்றிசைப்ப இறைவன் வெளிப்பட்டருளுவது கண்ட பத்திமுதிர்ந்த பாலகனர், இறைவன் பாத மலர்கள்மேல் விழுந்து வணங்கினர். சிவபெருமானும் தம் திருவடிக்கீழ் வீழ்ந்த விசாரசருமரை வாரி எடுத்து அருள்நோக்கஞ் செய்து, ‘நம் பொருட்டு நின்னைப் பெற்ற தந்தையை மழுவினல் எறிந்தாய். இனி உனக்கு அடுத்த தந்தை நாம்’ என்று அருள் செய்து அணைத்தருளிக் கருணையால் தடவி உச்சி மோந்து மகிழ்ந்தருளினர்.

சிவபெருமானது திருக்கைகளால் தீண்டப்பெற்ற வேதியச் சிறுவராய விசாரசருமர், மாயையாக்கையின்மேல் அளவின்றுயர்ந்த சிவமயமாகித் திருவருளில் மூழ்கிப் பேரொளிப் பிழம்பாகத் தோன்றினர். அண்டர்பிரானகிய சிவபெருமானும் அவரைத் தொண்டர்க்குத் தலைவனுக்கி, ‘அனைத்தும் நாம் உண்ட கலமும் உடுப்பனவும் சூடுவன வும் உனக்காகச் சண்டீசனும் ஆம் பதம் தந்தோம்’ என்று திருவாய் மலர்ந்து தம்முடைய சடையில் அணிந்துள்ள கொன்றை மலர் மாலையை எடுத்து அப்புதல்வர் திருமுடி

யிற் சூட்டியருளினர். தொண்டர்கணத் தலைவராய சேய்ஞலூர்ப் பிள்ளையார், எல்லாவுயிரும் மகிழச் சிவ கணங்கள் பாடியாடிக் களிகூரச் சைவசமயம் நிலைபெற் ருேங்க இறைவனைத் தொழுது சண்டீசுரபதத்தை அடைந் தார். அவருடைய தந்தையாகிய எச்சதத்தர் சிவபூசைக் குக் கேடு சூழ்ந்தும் சண்டீசநாயனராலே தண்டிக்கப் பெற்றமையால் அக்குற்றம் நீங்கிச் சுற்றத்துடன் சிவலோகத்தை அடைந்தார் எனப் பெரியபுராணம் கூறும்.

இவ்வாறு சேய்ஞலூர்ப் பிள்ளையார் வெண்மணலாற் சிவலிங்கம் அமைத்துப் பாலால் திருமஞ்சனமாட்டி வழி பட்ட திறத்தையும், அவ்வழிபாட்டினைச் சிதைத்த தம் தந்தையின் கால்களைத் தடிந்து சிவபெருமானுக்குரிய மைந்தராய்ச் சண்டீசப்பேறு பெற்ற திறத்தையும் திரு முறையாசிரியர்கள் பலரும் உளமுருகிப் போற்றியுள் ளார்கள்.

" வந்தமண லாலிலிங்க மண்ணியின்கட் பாலாட்டும்
சிந்தை செய்வோன் தன்கருமம் தேர்ந்து சிதைப்பான் வருமத்
தந்தைதனைச் சாடுதலுஞ் சண்டீச னென்றருளிக்
கொந்தணவு மலர்கொடுத்தான் கோளிலியெம் பெருமானே " (1 – 62 – 4)

" சென்றுதாதை யுகுத்தனன் பாலையே சீறியன்பு செகுத்தனன் பாலையே
வென்றிசேர் மழுக்கொண்டு முன்காலையே வீடவெட்டிடக் கண்டு முன்காலையே
நின்றமாணியை யோடினகங்கையால் நிலவமல்கி யுதித்தன கங்கையால்
அன்றுநின்னுருவாகத் தடவியே ஆலவாயரனகத் தடவியே " (3 – 115 – 5)

" பீரடைந்த பாலதாட்டப் பேணுதவன் தாதை
வேரடைந்து பாய்ந்ததாளை வேர்த்தடிந்தான் றனக்குத்
தாரடைந்த மாலைசூட்டித் தலைமை வகுத்ததென்னே
சீரடைந்த கோயில்மல்கு சேய்ஞலூர் மேயவனே "
(1 – 48 – 7)

" தோத்திரமா மணலிலிங்கந் தொடங்கிய ஆனிரையிற்பால்
பாத்திரமா ஆட்டுதலும் பரஞ்சோதி பரிந்தருளி "
(3 - 66 - 3)

என ஞானசம்பந்தப் பிள்ளையாரும்,

" அண்டமா ரமரர் கோமான் ஆதியெம் அண்ணல் பாதம்
கொண்டவன் குறிப்பினாலே கூப்பினான் தாபரத்தைக்
கண்டவன்தாதை பாய்வான் காலற வெறியக்கண்டு
தண்டியார்க் கருள்கள் செய்த தலைவர் ஆப்பாடியாரே "
(4 – 48 – 4)

" தழைத்ததோ ராத்தியின்கீழ்த் தாபர மணலாற்கூப்பி
அழைத்தங்கே யாவின்பாலைக் கறந்துகொண் டாட்டக் கண்டு
பிழைத்ததன் தாதைதாளைப் பெருங்கொடு மழுவால்வீசக்
குழைத்ததோர் அமுதமீந்தார் குறுக்கை வீரட்டனாரே "
(4 – 49 – 3)

" ஆமலி பாலும் நெய்யும் ஆட்டி அர்ச்சனைகள் செய்து
பூமலி கொன்றை சூட்டப் பொறாததன் தாதைதாளைக்
கூர்மழு வொன்றால் ஓச்சக் குளிர்சடைக் கொன்றைமாலைத்
தாமநற் சண்டிக்கீந்தார் சாய்க்காடு மேவினாரே "
(4 – 65 – 6)

" மாணிபால் கறந்தாட்டி வழிபட
நீணுலகெலாம் ஆளக்கொடுத்தவன் " (5 – 2 – 4)

" ஆங்கணைந்த சண்டிக்கும் அருளியன்று
தன் முடிமேல் அலர்மாலையளித்தல் தோன்றும் "
(6 – 8 – 10)

என ஆளுடைய அரசரும்,

" இண்டைமலர் கொண்டுமண லிலிங்கமதியற்றி
இனத்தாவின் பாலாட்ட இடறிய தாதையைத்தாள்
துண்டமிடு சண்டியடி யண்டர்தொழு தேத்தத்
தொடர்ந்தவனைப் பணிகொண்ட விடங்கன் "
(7 – 16 – 3)

" மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினாலெறிந்த
அம்மையான் அடிச்சண்டிப் பெருமானுக்கடியேன் "
(7 – 39 – 3)

என ஆளுடைய நம்பியும்,

" தீதில்லைமாணி சிவகருமஞ் சிதைத்தானைச்
சாதியும் வேதியன் தாதைதனைத் தாளிரண்டும்
சேதிப்ப ஈசன் திருவருளாற் றேவர்தொழப்
பாதகமே சோறு பற்றியவா தோணோக்கம் " (திருவாசகம்)

என ஆளுடைய அடிகளும் சண்டேசப்பிள்ளையாரது சிவபத்தித்திறத்தைப் பாராட்டிப் போற்றியுள்ளார்கள். சண்டேசப் பிள்ளையாரது வரலாறு திருஞானசம்பந்தப் பிள்ளையார் காலத்திற்கு முன்பே அறிஞர்களாற் செவி வழிச் செய்தியாக வழங்கப்பெற்ற தொன்மையுடைய தென்பது,

"கடிசேர்ந்த போதுமலராயின கைக்கொண்டு நல்ல
படிசேர்ந்த பால்கொண்டங் காட்டிடத் தாதைபண்டு
முடிசேர்ந்த காலையற வெட்டிட முக்கண்மூர்த்தி
அடிசேர்ந்த வண்ணம் அறிந்தார் சொலக் கேட்டுமன்றே'
(3-54-7)

எனவரும் திருப்பாசுரத்தால் இனிது விளங்கும்.

சண்டீசப்பிள்ளையார் மண்ணியாற்றின் கரையில் வெண் மணலாற் சிவலிங்கம் அமைத்து வழிபட்ட அருள்நிலையமே திருவாப்பாடி யென்னும் திருத்தலமாகும்.

திருநாவுக்கரசு நாயனார்

'திருநின்ற செம்மையே செம்மையாக்கொண்ட
திருநாவுக்கரையன்றன் அடியார்க்கும் அடியேன்'

எனத் திருத்தொண்டத் தொகையிற் போற்றப்பெற்ற திருநாவுக்கரசரது வரலாறு முன்னர் (பன்னிருதிருமுறை வரலாறு முதற்பகுதி 136–198ஆம் பக்கங்களில்) விரிவாக ஆராய்ந்து விளக்கப்பெற்றது.

குலச்சிறை நாயனார்

'பெருநம்பிகுலச் சிறைதன் அடியார்க்கும் அடியேன்'

எனப் போற்றப்பெற்ற இப்பெருந்தகையார் பாண்டி நாட்டில் மணமேற்குடியிற் பிறந்தவர். இவர் பிறந்த மரபு இதுவெனத் தெரியவில்லை. குலச்சிறையாராகிய இவர், அரசனாற் பெருநம்பி எனச் சிறப்பிக்கப்பெற்றவர்; திருத் தொண்டில் வழுவாத திண்மையுடையவர்; சிவனடியாராக யார்வந்தாலும் அவர்களை அன்புடன் வணங்கி இன்னுரை பகரும் இயல்பினர்; உலகரால் மதிக்கப்பெறும் நால்வகைக் குலத்திற் பிறந்தவராயினும் அன்றி அக்குலத்தில் நீங்கிய வராயினும் சிவபெருமானுக்கு அடியார் என்றால் அவர்களைப் பணிந்து ஏத்தும் தொழிலுடையவர்; சிவனடியார்கள் நலமுடையராயினும் நலமிலராயினும் அவர்களைப் பணிதலே தவமெனக்கொண்டவர்; அடியார்கள் தனித்து வரினும் கூட்டமாய் வரினும் அன்பினால் எதிர்கொண்டு திருவமுதூட்டும் இயல்புடையவர்; திருநீறும் சாதனமும் உடையராய்த் திருவைந்தெழுத்தினையோதும் நாவணக்கத் தினையுடைய அடியார்களின் திருவடிகளை நாளும்பரவிப்

போற்றுபவர். இத்தகைய நற்பண்புகளையுடைய குலச்சிறையார் பாண்டியனுடைய அமைச்சர்களுள் முதல்வராய் விளங்கினர்; பாண்டிமாதேவியாராகிய மங்கையர்க்கரசியாரது திருத்தொண்டுக்குத் துணைபுரியும் மெய்த்தொண்டராயினர்; சமணர்களது பொய்ம்மைச் சமயம் தென்னாட்டைவிட்டு அகலவும் தென்னாடு திருநீற்றின் ஒளிபெறவும் திருஞானசம்பந்தப் பிள்ளையாருடைய திருவடிகளைச் சென்னி சேர்த்தி வழிபட்ட சிறப்பினையுடையார்; வாதில் தோல்வியுற்ற அமணர்களை அவர்கள் சபதஞ் செய்தவண்ணம் வலிய கழுவிலே ஏற்றுவித்தார். இவரது அடியார்பத்தியினையும் அருங்குணங்கள் பலவற்றையும் ஆளுடைய பிள்ளையார் தாம்பாடிய 'மங்கையர்க்கரசி' என்னும் முதற்குறிப்புடைய திருப்பதிகத்தில் 2, 4, 6, 8, 10-ஆம் திருப்பாடல்களிற் சிறப்பித்துப் போற்றியுள்ளமை காணலாம். இவர் அரசரால் அளிக்கப்பெற்ற 'பெருநம்பி' என்ற சிறப்பினைப் பெற்றவர் எனத் தெரிகிறது.

பெருமிழலைக்குறும்ப நாயனர்

சோழநாட்டின் உள்நாடாகிய மிழலைநாட்டிற் பெருமிழலை என்னும் ஊரின் தலைவராய் விளங்கியவர் மிழலைக் குறும்பனர் ஆவர். இவர் சிவனடியார்க்கான திருப்பணிகளை விருப்புடன் செய்பவர்; சிவபெருமான் திருவடிகளை நெஞ்சத்தாமரையில் இருத்தி வழிபாடு செய்பவர்; மெய்யடியார் சித்தம் நிலவும் திருத்தொண்டத்தொகை பாடிய நம்பியாரூரரைப்பணிந்து அவருடைய திருவடிகளை நினைந்து போற்றுதலை நியமமாகக் கொண்டவர்; நம்பியாரூரர் திருவடிகளைக் கையால் தொழுது வாய் வாழ்த்தி மனத்தால் நினைக்குங் கடப்பாட்டினல் இதுவே சிவபெருமான் திருவடிகளை அடைதற்குரிய நெறியாகும் என்று அன்பினல் மேற்கொண்டவர்; நம்பியாரூரர் திருப்பெயரினை நாளும் நவின்ற நலத்தால் அணிமா முதலிய எண்வகைச் சித்திகளும் கைவரப்பெற்றவர்; இறைவனது திருவைந்தெழுத்தினை இடைவிடாது நினைந்து போற்றுபவர்.

இத்தகைய நியமங்களையுடையராய்ப் பெருமிழலைக் குறும்பர் வாழ்ந்துவரும் நாளில், சுந்தரமூர்த்தி நாயனர்

திருவஞ்சைக்களத்திற் சென்று திருப்பதிகம்பாட அவருக்குச் சிவபெருமானருளால் வடகயிலையை அடையும் பேறு மறுநாள் கிடைக்கவிருப்பதனைத் தம்முடைய ஊரிலிருந்து கொண்டே யோகக்காட்சியால் முதல்நாளில் அறிந்து கொண்டார்; 'திருநாவலூரர் திருக்கயிலை நாளை எய்த நான் அவரைப் பிரிந்து கண்ணிற் கரியமணிகழிய வாழ்வார்போல வாழேன்' என்று எண்ணி 'இன்றே யோகத்தால் சிவன்தாள் சென்றடைவேன்' என்று சொல்லி, நாற்கரணங்களும் ஒரு நெறிப்பட்டு நல்லறிவு மேற்கொண்டு பிரமநாடியின் வழியே கருத்தைச் செலுத்த, யோக முயற்சியினாலே பிரமரந்திரம் திறப்ப, உடலி னின்றும் பிரிந்து திருக்கயிலையில் வீற்றிருந்தருளும் சிவபெருமானுடைய திருவடியை அடைந்தார்.

காரைக்காலம்மையார்

'பேயார்க்கும் அடியேன்' எனப் போற்றப்பெற்ற அம்மையார் வரலாறு இந்நூல் 519–544 ஆம் பக்கங்களில் விரித்துரைக்கப் பெற்றது.

அப்பூதியடிகள் நாயனார்

சோழ நாட்டில் திங்களூரில் அந்தணர் குலத்தில் தோன்றியவர் அப்பூதியார் என்பவர். எல்லையில் தவத்தின் மிக்கவராகிய இவர், தாண்டவம் புரிய வல்ல தம்பிரானுக்கு அன்பர்; திருநாவுக்கரசரைக் காணுதற்கு முன்னமே அவருடைய திருவடிகளை அரணாகப்பற்றி அவரைக்காண வேண்டும் என்னும் ஆர்வம் மேற்பட உள்ளங்கலந்த அன்பினராயுள்ளவர்; களவு பொய் காமம் கோபம் முதலிய குற்றங்களைக்கடிந்து விலக்கியவர்; தம்மனையிலுள்ள அளவைகள், நிறைகோல், மக்கள், ஆவொடு மேதி மற்றும் உள்ள பொருள்களெல்லாவற்றிற்கும் திருநாவுக்கரசின் பெயரிட்டழைக்கும் இயல்பினையுடையவர். திருநாவுக் கரசரை நேரிற்காணாதவராயினும் அப்பரடிகளாகிய அப் பெருந்தகையார் இறைவன்பாற் கொண்டுள்ள அடிமைத் திறமும் அவர்க்கு இறைவன் அருளும் பெருங்கருணைத் திறமும் ஆகியவற்றை அறிந்தோர் சொல்லக்கேட்டுத்

திருநாவுக்கரசர் திருப்பெயரால் திருமடங்கள் தண்ணீர்ப் பந்தர்கள் முதலாகவுள்ள அழிவில்லாத நல்லறங்கள் பல செய்து வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து வரும் நாளில் ஒரு நாள் திருநாவுக்கரசர் திருப்பழனம் என்னும் திருத்தலத்தை வணங்கிக்கொண்டு பிறதலங்களையும் வணங்கும்பொருட்டுத் திங்களூரின் அருகே வந்தருளினர். வரும்வழியில் தம் பெயரால் தண்ணீர்ப்பந்தல் இருப்பதைக் கண்டு அதனை அமைத்தார் யார் என அங்குள்ளவரைக் கேட்டறிந்து அப்பூதியடிகளது திருமனையின் வாயிலை அடைந்தார். உள்ளிருந்த அப்பூதியார், சிவனடியா ரொருவர் வாயிலில் வந்துள்ளார் என்றறிந்து விரைந்து சென்று அவர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினர். திருநாவுக்கரசர் அப்பூதியடிகளை நோக்கி, ' வழிக்கரையில் நீர்வைத்த தண்ணீர்ப்பந்தரும் கண்டு அத்தகைய அறம்பிறவும் கேட்டு நும்மைக் காண வந்தோம். சிவனடியார் பொருட்டு நீர்வைத்த தண்ணீர்ப்பந்தரில் நும்முடைய பெயர் எழுதாது வேருெருபேர் முன்னெழுத வேண்டிய காரணம் யாது?' என வினவினர். அதுகேட்ட அப்பூதியார், ' நன்மொழியினைப் பகர்ந்திலீர். நாணில்லாத கொடியோராகிய அமணர்களுடன் கூடிய மன்னவன் செய்த இடர்களையெல்லாம் திருத்தொண்டின் உறைப்பாலே வென்றவர்தம் திருப்பேரோ வேருெருபேர்?' என்று வெகுள்வாராகி, 'சிவனடித்தொண்டிஞலே இம்மையினும் பிழைக்கலாம் என்னும் உண்மையினை என்போல்வாரும் தெளியும் பொருட்டு அருள்புரிந்த திருநாவுக்கரசர் திருப்பெயரையான் எழுத இந்தக் கொடுஞ்சொல்லை நான் கேட்கும்படி கூறினீர். கல்லே மிதவையாகக் கொண்டு கடலைக்கடந்த அப்பெருந்தகையாரது பெருமையினை இவ்வுலகில் அறியாதார் யார்? மங்கலமாம் சிவவேடத் துடன் நின்று இவ்வாறு பேசும் நீர் எங்குறைவீர்? நீர் தாம் யார்?' என்ருர். அப்பூதியாரது அன்பின் பெருமையையறிந்த திருநாவுக்கரசர், 'புறச்சமயச் சூழலினின்றேற அருளுபெருஞ்சூலையிஞல் ஆட்கொள்ள அடைந்துய்ந்த தெருளுமுணர்வில்லாத சிறுமையேன் யான்' என்ருர். அதுகேட்ட அப்பூதியார், இருகைகளும் தலைமேற்குவிய, கண்ணீர் சொரிய, உரைதடுமாற நிலமிசை வீழ்ந்து திருநாவுக்கரசின் திருவடித்தாமரை களைப் பூண்டார். அப்பரடிகள் அவரை எதிர்வணங்கி

எடுத்தருளினர். அப்பூதியடிகள் வறியோர் பெருஞ்செல்வம் பெற்ருற்போன்று மகிழ்ந்து ஆடிப்பாடினர்; வீட்டினுள்ளே புக்கு மனைவி மக்கள் முதலிய சுற்றத்தார்க்குத் திருநாவுக்கரசரின் வருகையுரைத்து அரசரை உள்ளே அழைத்துச் சென்று அவர் திருவடிகளை விளக்கிய திருவடிநீரை உள்ளும் புறம்புந்தெளித்து உளமகிழ்ந்தார்; தேசமுய்ய வந்த திருநாவுக்கரசரைத் தம் மனையில் திருவமுது செய்தருளவேண்ட அரசரும் அதற்கு இசைந்தார். அப்பூதியாரும் அவர்தம் மனைவியாரும் அரசர் அமுது செய்யும் பேறுபெற்ரேம் என்னும் உவகையுடன் திருவமுதமைத்து மூத்த திருநாவுக்கரசை வாழைக்குருத்தரிந்து வரும் பொருட்டு அனுப்ப, அவர் விரைந்து தோட்டத்துட் சென்று இலையினை அரியும்பொழுது, ஒரு பாம்பு அவரைத் தீண்டி அவரது கையிலே சுற்றிக்கொண்டது. மூத்த திருநாவுக்கரசு அதனை உதறி வீழ்த்திவிட்டு விட வேகம் தலைக்கேறுவதன் முன் விரைந்து ஓடி வாழையிலையினைத் தாயிடம் தந்து கீழே வீழ்ந்து இறந்தார். அடியார் திருவமுது செய்யத் தாழ்த்தல் கூடாதென்றெண்ணிய பெற்ரேர், மைந்தனது உடம்பினை வீட்டுப்புறத்தில் பாயில் மறைத்து வைத்து விட்டுத் திருநாவுக்கரசரை அமுது செய்ய அழைக்க, அரசரும் இசைந்து ஆசனத்திலமர்ந்து திருநீறளிக்கும் பொழுது, மூத்த திருநாவுக்கரசைக் காணுது 'அவனை அழையும்' என்ருர். அது கேட்ட அப்பூதியார் 'அவன் இங்கு இப்போது உதவான்' என்ருர். அந்நிலையில் இறைவரருளால் நாவுக்கரசர் திருவுள்ளத்தே ஒரு தடுமாற்றம் தோன்ற, அரசர் அப்பூதியாரை நோக்கி, 'அவன் என் செய்தான்? உண்மையைச் சொல்வீராக' என்ருர். அவரும் அஞ்சி நடுங்கி நிகழ்ந்தது கூறினர். அது கேட்ட நாவுக்கரசர் 'நன்று நீர் புரிந்த வண்ணம், யாவர் இத்தன்மை செய்வார்?' என்று எழுந்து சென்று மூத்த திருநாவுக்கரசின் உயிர் நீங்கிய உடம்பினை நோக்கி இறைவன் அருள்புரியும் வண்ணம் 'ஒன்று கொலாம்' என்னும் திருப்பதிகம் பாடி விடந் தீர்த்தருளினர். அந்நிலையில் உறக்கம் நீங்கி எழுவானைப் போன்று உயிர் பெற்றெழுந்த மூத்த திருநாவுக்கரசு, திருநாவுக்கரசு நாயனர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினன். திருநாவுக்கரசர் திருநீறளித்தருளினர். அப்பூதி நாயனரும் அவர் மனைவியாரும் தம் மைந்தன் உயிர் பெற்றெழுந்தமை

குறித்து மகிழாமல் நாயனூர் திருவமுது செய்தருளத் தாழ்த்தமை குறித்து மனம் வருந்த, அவர்களது வருத்த மறிந்து நாவுக்கரசர் அவர்களோடும் மனைக்கண் சென்று அப்பூதியாரோடும் அவர் தம் மக்களுடனும் ஒருங்கமர்ந்து திருவமுது செய்தருளினூர். பின்பு சில நாள் அங்கிருந்து அப்பூதியடிகளுடன் திருப்பழனப் பெருமானை வழிபட்டுப் பாடிய திருப்பதிகத்தில் 'அஞ்சிப் போய்க் கலிமெலிய அழலோம்பும் அப்பூதி குஞ்சிப் பூவாய் நின்ற சேவடியாய்' என இறைவனையும் அப்பெருமான் சேவடிகளைச் சென்னியிற் கொண்ட அப்பூதியடிகளையும் சிறப்பித்துப் போற்றியுள்ளார். திருநாவுக்கரசர் திருப்பெயரையே ஏத்தி அவர் திருவடிகளே எல்லாப் பொருளுமாம் எனக்கொண்டு போற்றுதலே செந்நெறியாகக்கொண்டு அப்பூதியடிகள் தில்லைமன்றுள் ஆடும் திருவடிகளை அடைந்தார்.

'' உற்றுனலன் தவம், தீயினின்றுனலன், ஊண்புனலா
அற்றுனலன் நுகர்வும், திருநாவுக்கரசெனுமோர்
சொற்றுன் எழுதியுங் கூறியுமே என்றுந் துன்பில்பதம்
பெற்றுன் ஒருநம்பியப்பூதி யென்னும் பெருந்தகையே ''

எனச் சிவப்பிரகாசர் நால்வர் நான்மணி மாலையில் அப்பூதியடிகளைக் குறித்துப் போற்றியுள்ளமை இங்கு நினைத்தற் குரியதாகும்.

திருநீலநக்க நாயனூர்

காவிரி நாடாகிய சோழநாட்டில் சாத்தமங்கை என்னும்பதியிலே அந்தணர் குலத்தில் தோன்றியவர் திருநீலநக்கர். 'ஒலிபுனல் சூழ் சாத்தமங்கை நீலநக்கற் கடியேன்' எனவரும் திருத்தொண்டத் தொகை இவரது ஊர் சாத்தமங்கை எனத் தெளிவாகக் குறித்தல் காணலாம். நீலநக்கராகிய இப் பெருந்தகையார், வேதத்தின் உள்ளுறையாவது சிவபெருமானையும் சிவனடியார்களையும் அன்பினூல் அருச்சித்து வணங்குதலே எனத் தெளிந்து நாள்தோறும் சிவாகம விதிப்படி சிவபூசை செய்து அயவந்தியீசரை வழிபட்டுச் சிவனடியார்களுக்குத் திருவமுது செய்வித்தல் முதலாக எவ்வகைப்பட்ட திருப்பணிகளையும் செய்து வந்தார்.

திருநீலநக்கர் அவ்வாறு ஒழுகும் நிலையில் திருவாதிரை விண்மீன் கூடிய ஒரு நாளிலே சிவபூசையை முடித்துக்கொண்டு சாத்தமங்கையில் அயவந்தி என்னும் திருக்கோயிலிலே எழுந்தருளியுள்ள பெருமானை அருச்சிக்க விரும்பினார். பூசைக்கு வேண்டும் பொருள்களைத் தம் மனைவியார் எடுத்துக்கொண்டு உடன்வரத் திருக்கோயிலையடைந்து அயவந்தி யீசரை முறைப்படி பூசித்து இறைவர் திருமுன் இருந்து திருவெழுத்தினைச் செபித்தார். அப்பொழுது சிலந்தியொன்று அயவந்தியீசர் திருமேனியில் விழுந்தது. அதுகண்ட நீலநக்கர் மனைவியார், விரைந்து சென்று அதனைப் போக்க வாயினால் ஊதித் துமிந்தார். நாயனார் அச்செயலைக் கண்டு தம் கண்ணைப் புதைத்து 'அறிவிலாதாய்! நீ இவ்வாறு செய்தது ஏன்' என்று வினவ, 'சிலம்பி விழுந்தமையால் ஊதித் துமிந்தேன்' என்றார் மனைவியார். 'நீ சிவலிங்கத்தின் மேல் விழுந்த சிலந்தியை வேறொரு பரிசால் விலக்காமல் முற்பட்டு ஊதித் துமிந்தாய். இத்தகைய அருவருக்குஞ் செய்கை செய்த உன்னையான் இனித் துறந்தேன். நீங்கி விடு' என்றார் கணவர். மனைவியாரும் அது கேட்டு அஞ்சி ஒரு பக்கம் விலகினார். நீலநக்கர் பூசையை முடித்துக் கொண்டு வீட்டிற்குத் திரும்பி விட்டார். மனைவியார் அஞ்சி ஆலயத்தில் தங்கியிருந்தார். அன்று இரவு நீலநக்கர் துயிலும்போது அயவந்திப் பெருமான் கனவில் தோன்றித் தம் திருமேனியைக் காட்டி 'உன் மனைவி ஊதித் துமிந்த இடம் தவிர எல்லா இடங்களிலும் சிலந்தியின் கொப்புளம்' என்று சொல்லியருளினார். நீலநக்கர் வணங்கி விழித்தெழுந்து ஆடிப்பாடி நின்று இறைவனது திருவருளை வியந்து உள்ளமுருகினார். விடிந்தபின் ஆலயத்திற்குச் சென்று இறைவனை யிறைஞ்சி மனைவியாரையும் உடனழைத்துக்கொண்டு வீட்டிற்குத் திரும்பினார்.

நீல நக்கர் சிவபூசையும் அடியார் பூசையும் செய்து கொண்டு சாத்தமங்கையில் இருக்கும் நாளில், அங்கு எழுந்தருளிய திருஞானசம்பந்தப் பிள்ளையாரை அடியார் திருக்கூட்டத்துடன் எதிர்கொண்டு வரவேற்றுத் தம்மனைக்கண் திருவமுது செய்வித்து உபசரித்தார். ஆளுடைய பிள்ளையார் விரும்பிய வண்ணம் திருநீலகண்டப் பெரும்பாணரும் அவர் மனைவியார் மதங்க சூளாமணியாரும்

இரவில் துயில் கொள்ளத் தம் மனையில் இடம்தர எண்ணித் தாம் வேத விதிப்படி தீயோம்பும் வேதிகையின் பக்கத்திலேயே அவ்விருவர்க்கும் இடந்தந்து தவினர். அந்நிலையில் வேதிகையிலுள்ள நித்தியாக்கினி முன்னையிலும் மேலாக வலஞ்சுழித்து ஒளி வீசியது. ஆளுடைய பிள்ளையார் அயவந்தி யீசரைப் பாடிப் பரவிய திருப்பதிகத்தில் 'அடிகள் நக்கன்' எனவும், 'நிறையினர் நீலநக்கன்' எனவும் சிறப்பித்துப் பாராட்டியுள்ளார். ஞானசம்பந்தப் பிள்ளையார்க்கு நண்பராகிய திருநீலநக்க நாயனர் திருஞானசம்பந்தப் பிள்ளையாரது திருமணத்தினைக் காணத் தம் மனைவியாருடன் சென்று அத்திருமணத்தில் வேத விதிப்படியமைந்த சடங்குகளை முன்னின்று நிகழ்த்தித் திருநல்லூர்ப் பெருமணத்தில் ஈறில் பெருஞ் சோதியினுள் உடன்புகுந்தார் என்பது திருஞானசம்பந்தர் புராணத்திற் கூறப்பெற்றது.

நமிநந்தியடிகள் நாயனர்

சோழநாட்டில் ஏமப் பேறூரில் அந்தணர் குலத்தில் தோன்றியவர் நமிநந்தியடிகள். நம்பி நந்தி என்னும் பெயரே நமிநந்தி எனத் திரிந்து வழங்கியதெனத் தெரிகிறது. நமிநந்தியடிகள் இரவும் பகலும் பிரியாது சிவபெருமானைப் பூசித்து மகிழும் சீலமுடையவர். அவர் பல நாளும் திருவாரூர்க்குச் சென்று புற்றிடங்கொண்ட பெருமானைப் போற்றி வருவார். ஒரு நாள் திருவாரூர்த் திருக்கோயிலின் ஒருபக்கத்தே அமைந்த அரனெறி என்னும் திருக்கோயிலை வழிபடச் சென்றார். அங்கு விளக்கேற்றி வழிபட வேண்டும் என்ற விருப்பம் அவருள்ளத்தெழுந்தது. அப்பொழுது மாலைக்காலம் ஆனமையால் தம்மூர்க்குச் சென்று எண்ணெய் கொணர எண்ணது திருவாரூரிலேயே ஒரு வீட்டிற் சென்று விளக்கிற்கு எண்ணெய் வேண்டினர். அவர் சென்று கேட்ட வீடு சமணர்கள் வீடு. அங்குள்ள சமணர்கள் நமிநந்தியடிகளை நோக்கி, 'கையிலே ஒளிவிட்டு விளங்கும் தீயினை யேந்திய உங்கள் இறைவற்கு விளக்கு தேவையற்றது. நெய் இங்கு இல்லை. விளக்கெரிப்பீராகில் நீரை முகந்து எரிப்பீராக' என்றனர். அது கேட்டுப் பொருத நமிநந்தியடிகள் அரனெறிப் பெருமான் திருமுன் சென்று வீழ்ந்து வணங்கினர். அப்பொழுது

'நமி நந்தியே! நினது கவலையை மாற்றுக. இதன் அயலே யுள்ள குளத்தின் நீரை முகந்து வந்து வார்த்து விளக் கேற்றுக' என்றதொரு அருள்மொழி விசும்பில் தோன்றி யது. அது கேட்டு மகிழ்ந்த நமிநந்தியடிகள், இறைவ னருளே இதுவாம் என்றெண்ணிக் குளத்தின் நடுவே புகுந்து நாதர் நாமமாகிய திருவைந்தெழுத்தோதி நீரை முகந்துகொண்டு கரையேறிக் கோயிலையடைந்து உலகத் தார் அதிசயிப்ப அகலில் திரியிட்டு நீர் வார்த்து விளக் கேற்றினர். சோதி விளக்கு ஒன்று ஏற்றுதலும் சுடர்விட் டொளிர்வது கண்டு அமணர் காண நாதரருளால் திரு விளக்குகள் பல விடியுமளவும் நீரால் எரித்தார்.

இவ்வாறு ஆரூர் அரனெறியப்பர்க்கு நாளும் இரவில் நீரால் திருவிளக்கிட்டுத் தம்முடைய ஊராகிய ஏமப் பேறூர்க்குச் சென்று சிவபூசை முடித்துத் திருவமுது செய்து துயில் கொள்ளும் வழக்கமுடையராயிருந்தார். அப்பொழுது தண்டியடிகள் நாயனரால் சமணர்கள் கலக்கம் விளைந்து அவ்வூரைவிட்டு அகன்றனர். திருவாரூர் நீற்றின் பெருமை பெற்று விளங்கியது. நீதிவளவன் ஆரூர்ப்பெருமானுக்கு நிபந்தம் பல அளித்துப் பங்குனி யுத்திரப் பெரு விழாவைச் சிறப்புறச் செய்தற்கு நமி நந்தியடிகள் உறுதுணையாய் விளங்கினர். திருவாரூர்ப் பெருமான் திருவிழா நாட்களில் ஒரு நாள் மணலி என்ற ஊருக்குத் திருவுலா எழுந்தருளினர். எல்லாக் குலத்து மக்களும் இறைவனை உடன் சேவித்துச் சென்றார்கள். நமிநந்தியடிகளும் அவர்கள் எல்லாருடனும் உடன்சென்று திருவோலக்கம்கண்டு மகிழ்ந்தார். இறைவர் திரும்பித் திருக்கோயிலிற்புக மாலைப்பொழுதாயிற்று. நமிநந்தியடிகள் நள்ளிருளில் தமது ஊரையடைந்து வீட்டி னுள்ளே புகாமல் புறக்கடையிலே படுத்துத் துயின்றார். அந் நிலையில் அவர் மனைவியார் வந்து அவரைத் துயிலு ணர்த்தி 'வீட்டினுள்ளே எழுந்தருளிச் சிவார்ச்சனையையும் தீவளர்த்தலையும் முடித்துக்கொண்டு பள்ளிகொள்ளலாம்' என்றார். அதுகேட்ட நமிநந்தியடிகள், 'இன்றையதினம் ஆரூர்ப்பெருமான் திருமணலிக்கு எழுந்தருளியபோது யானும் உடன்சேவித்துச் சென்றேன். அக்கூட்டத்தில் எல்லாச்சாதியாரும் கலந்திருந்தமையால் தீட்டுண்டா யிற்று. ஆதலால் நீராடிய பின்னரே மனைக்குள் வருதல்

வேண்டும். குளித்தற்குத் தண்ணீர் கொண்டுவா' என்று சொல்ல மனைவியாரும் விரைந்து சென்றார். அதற்கிடையில் நமிநந்தியடிகளுக்குச் சிறிது உறக்கம் வந்தது. அப்பொழுது வீதிவிடங்கப்பெருமான் கனவில் தோன்றி, 'அன்பனே, திருவாரூரிலே பிறந்தார் எல்லோரும் நம்முடைய கணங்கள். அதை நீகாண்பாய்' என்று சொல்லி மறைந்தருளினார். உறக்கம் நீங்கி விழித்தெழுந்த நமிநந்தியடிகள், தாம் அடியார்களிடையே சாதிவேறுபாடு நினைந்தது தவறென்றுணர்ந்து எழுந்தபடியே வீட்டினுள்ளே சென்று சிவபூசையை முடித்து மனைவியார்க்கு நிகழ்ந்ததைச் சொல்லினார். பொழுது விடிந்தபின் திருவாரூர்க்குச் சென்றார். அப்பொழுது திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லாரும் சிவசாரூபம் பெற்றவர்களாகத் தோன்றக்கண்டார். 'அடியேன் செய்த பிழையினைப் பொறுத்தருளவேண்டும்' என்று ஆரூர்ப்பெருமானை இறைஞ்சிப் போற்றினார். நமிநந்தியடிகள் பின்பு திருவாரூரிலேயே குடிபுகுந்து தம்முடைய திருத்தொண்டுகளைச் செய்துகொண்டிருந்தார். இவ்வாறு சிவனடியார்களுக்கு வேண்டுவன எல்லாம் நியதியாக நெடுங்காலம் செய்திருந்து திருநாவுக்கரசரால் 'தொண்டர்க்கு ஆணி' எனச் சிறப்பிக்கப்பெறும் பேறு பெற்றுத் திருவாரூர்ப் பெருமான் திருவடி நீழலையடைந்தார்.

திருவாரூர்ப்பெருமானை வழிபட்ட திருநாவுக்கரசர் அத்திருக்கோயிலில் நீரால் திருவிளக்கிட்டுப் பங்குனியுத்திரப்பெருவிழாவைச் சிறப்புறச் செய்த நமிநந்தியடிகளாரது திருத்தொண்டு நாடறிந்த தென்பதனை யறிவுறுத்தி அத்திருத்தொண்டுகளைச் செய்த திண்மை மெய்த்தவராகிய நமிநந்தியடிகள் தொண்டர்க்கெல்லாம் ஆணிப்பொன் ஆவார் எனச் சிறப்பித்துப்போற்றும் நிலையில்,

> 'ஆராய்ந் தடித்தொண்ட ராணிப்பொன் ஆரூரகத்தடக்கிப்
> பாரூர் பரிப்பத்தம் பங்குனியுத்திரம் பாற்படுத்தான்
> நாரூர் நறுமலர் நாதன் அடித்தொண்டன் நம்பிநந்தி
> நீராற் றிருவிளக் கிட்டமை நீணா டறியு மன்றே' (4–102–2)

எனவரும் திருவிருத்தத்தை அருளிச் செய்துள்ளார்.

நமிநந்தியடிகள் திருவாரூரிற் சிவனடியார்கள் செய்யும் திருப்பணிக்கெல்லாம் உறுதுணையாயுள்ள செய்தியை,

'துடிக்கின்ற பாம்பரையார்த்துத் துளங்கா மதியணிந்து
முடித்தொண்ட ராகி முனிவர் பணிசெய்வ தேயுமன்றிப்
பொடிக்கொண்டு பூசிப் புகுந்தொண்டர் பாதம் பொறுத்த
பொற்பால்
அடித்தொண்டன் நந்தியென் பானுளன் ஆரு ரமுதினுக்கே'
(4-102-4)

எனவரும் திருவிருத்தத்தில் திருநாவுக்கரசர் குறித்துள்ளமை காணலாம்.

நமிநந்தியடிகள் திருவாரூரில் தங்கிய காலத்தில் சமணத்துறவிகளிற்பலர் கொடி, விதானம், பறை, சங்கம், கைவிளக்கு ஆகிய குறைவில்லாத பெருஞ்செல்வத்தைப் பெற்றுத் திருவாரூர்க்குள்ளே வாழ்ந்தனராயினும் நமிநந்தியடிகள் புறப்பட்டுவந்தால் அவ்வமணர்களது செல்வப் பொலிவனைத்தும் திருநீறிட்ட சிவனடியார்களுக்கு முன்னே அகத்திருளும் புறத்திருளும் கெடுமாறுபோன்று விரைந்து கெடும்நிலையில் அவ்வமணர்கள் ஓடிமறைந்தனர். இச்செய்தியினை,

'கொடிகொள் விதானங் கவரி பறைசங்கம் கைவிளக்கோ
டிடிவில் பெருஞ்செல்வ மெய்துவ ரெய்தியு மூனமில்லா
அடிகளும் ஆரூர் அகத்தின ராயினும் அந்தவளப்
பொடிகொண் டணிவார்க் கிருளொக்கும் நந்திபுறப்படிலே'
(4-102-6)

எனவரும் திருப்பாடலில் திருநாவுக்கரசர் குறித்துள்ளமையால் அடிகள் காலத்தை யொட்டித் திருநாவுக்கரசர் திருவாரூரை வழிபட்டார் என்பதனை ஒருவாறு உணர்ந்து கொள்ளலாம்.

திருக்கோளிலியிறைவனை வணங்கிப் பரவும் திருஞானசம்பந்தப்பிள்ளையார், அவ்வூர்ப் பெருமான் நமிநந்தியடிகளுக்கு அருள்புரிந்த திறத்தை,

'தாவியவ னுடனிருந்தும் காணாத தற்பரனை
ஆவிதனி லஞ்சொடுக்கி அங்கணனென் றாதரிக்கும்
நாவியல்சீர் நமிநந்தி யடிகளுக்கு நல்குமவன்
கோவியலும் பூவெழுகோற் கோளிலியெம் பெருமானே'
(1-62-6)

எனவரும் திருப்பாடலிற் போற்றியுள்ளார். இத்திருப்பாடலின் ஈற்றடியினைக் கூர்ந்து நோக்குங்கால் கோளிலிப் பெருமானாகிய இறைவன் நமிநந்தியடிகளுக்குத் தலைமைச்

சிறப்பளிக்கும் நோக்குடன் பூத்தொழிலமைந்தகோலொன் றினை அருளிய திறம் குறிக்கப்பெற்றுள்ளமை புலனாகும்.

'அருநம்பி நமிநந்தி அடியார்க்கும் அடியேன்'

எனத்திருத்தொண்டத் தொகையிற் போற்றப்பெறுதலால் இவர் அரசரால் அளிக்கப்பெறும் நம்பி என்னும் பட்டத்தினைப் பெற்றாரெனக் கருதவேண்டியுளது. இவரை 'நம்பிநந்தி' என நாவுக்கரசர் போற்றியுள்ளமையும் இக்கருத்தினை வலியுறுத்துவதாகும். இவர்காலத்தில் தண்டியடிகள் நாயனாரும் திருவாரூரில் திருப்பணி புரிந்திருந்தார் என்பதனைச் சேக்கிழாரடிகள் இவரது வரலாற்றிற் குறிப்பிடுதலால் இவ்விருவரும் ஒரு காலத்தவர் என்பது நன்கு விளங்கும்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

"வம்பரு வரிவண்டு மணநாற மலரும்
மதுமலர்நற் கொன்றையான் அடியலாற் பேணா
எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்"

எனநம்பியாரூராற் போற்றப்பெற்ற திருஞான சம்பந்தப் பிள்ளையாரது வரலாறு முன்னர் (பன்னிருதிருமுறை வரலாறு முதற்பகுதி 49–135ஆம் பக்கங்களில்) விரிவாக ஆராய்ந்து விளக்கப்பெற்றது.

ஏயர்கோன்கலிக்காம நாயனார்

சோழநாட்டில் காவிரி வடகரைக் கீழ்பாலுள்ள திருப் பெருமங்கலம் என்னும் பதியில் சோழமன்னர்க்குச் சேனாபதித் தொழில்பூண்ட பொன்னிநாட்டு வேளாண்மை யிற்சிறந்த ஏயர்கோக்குடியில் தோன்றியவர் கலிக்காமனார் ஆவர். சிவபத்தியிலும் அடியார்பத்தியிலும் சிறந்த இவர் மானக்கஞ்சாற நாயனாரது மகளைமணந்துகொண்ட செய்தி முன்னர் விளக்கப்பெற்றது. ஏயர்கோன் கலிக்காம நாயனார் திருப்புன்கூர்ப்பெருமானுக்குப் பல திருப்பணிகள் புரிந்தார். 'நிதியமாவன நீறுகந்தார் கழல்' என்று சிவபெருமானைத் துதியினாற் பரவித்தொழுது இன்புறுந் தன்மையராய் வாழ்ந்தார். அங்ஙனம் வாழும் நாளில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் சிவபெருமானைப் பரவையாரிடத்

தில் தூதுவிட்ட செய்தியைக் கேள்வியுற்று 'ஆண்டவனே அடியான் ஏவும் செயல் நன்று' எனவெகுண்டு நம்பியாரூரர் மேற் செற்றங்கொண்டார். அதுகேட்டுத் தன்பிழையினை யுணர்ந்த வன்றொண்டர் ஆரூரிறைவரைப் போற்றிக் கலிக்காமரது செற்றத்தைத் தீர்த்தருளும்படி வேண்டிக் கொண்டார். சிவபெருமான் அவ்விருவரையும் நண்பராக்கத் திருவுளங்கொண்டு, ஏயர்கோன் கலிக்காமர்க்குச் சூலை நோயினைத்தந்து, வன்றொண்டன் தீர்ப்பினன்றி முந்துற ஒழியாது' என்றருள, அதுகேட்ட கலிக்காமர் 'அவ்வன் றொண்டன் தீர்க்கத் தீர்வதைக்காட்டிலும் அந்நோய் தீராது என்னைவருத்துதலே நன்று' என்றார். சிவ பெருமான் வன்தொண்டர் முன்தோன்றி, 'இன்று நம் ஏவலாலே ஏயர்கோன் உற்றசூலை சென்று நீ தீர்ப்பாய்' எனப்பணித்தருளினார். நம்பியாரூரரும் விரைந்து தாம் சூலை நோய் தீர்க்கவருஞ் செய்தியை ஏயர்கோனார்க்கு முந்துறச் சொல்லியனுப்பினார். அதனைக்கேட்ட கலிக்காமர் 'மற்றவன் வந்து தீர்ப்பதன் முன்னம் என்னை நீங்காப் பாதகச் சூலை தன்னை உற்ற இவ் வயிற்றினோடும் கிழிப் பேன்' என்று உடைவாளாற் கிழித்திட உயிரினோடு சூலையும் தீர்ந்தது.

கலிக்காமர் இறத்தல்கண்டு மனைவியார் உடனுயிர் விடத் துணிந்தார். அப்பொழுது சுந்தரமூர்த்தி சுவாமிகள் அண்மையில் வந்து விட்டார் என்று வந்தோர் சொல்லக் கேட்டுத் தம் கணவர் உயிர் துறந்த செய்தியை மறைத்து நம்பியாரூரரை எதிர்கொள்ளும்படி சுற்றத்தார்களை ஏவி னார். அவர்களும் நம்பியாரூரரை எதிர்கொண்டு அழைத்து வந்து ஆசனத்தில் இருத்தி வழிபட்டுப் போற்றினர். அவர் களது வழிபாட்டினை ஏற்றுக்கொண்ட சுந்தரர் 'கலிக்காம னாருடைய சூலையை நீக்கி அவருடன் இருத்தற்கு மிக முயல்கின்றேன்' என்றார். அப்பொழுது கலிக்காமரது மனைவியார் ஏவலால் வீட்டிலுள்ள பணியாளர்கள் வணங்கி நின்று 'சுவாமீ! அவருக்குத் தீங்கெதுவுமில்லை. உள்ளே பள்ளி கொள்கின்றார்' என்றனர். கேட்ட வன்றொண்டர், 'தீங்கொன்றும் இல்லையென்றீர்கள். ஆயினும் என் மனம் தெளிவு பெறவில்லை. ஆதலால் அவரை நான் விரைந்து காணுதல் வேண்டும்' என்றார்.

அது கேட்டு அவர்கள் கலிக்காமனாரைக் காட்டினர். கலிக்காமர் குடர் சொரிந்து உயிர் பொன்றிக் கிடத்தலைக்கண்ட சுந்தரர் 'நிகழ்ந்தது நன்று. யானும் இவர்போல் இறந்தொழிவேன்' என்று குற்றுடைவாளைப் பற்றினார். உடனே இறைவரருளால் கலிக்காமர் உயிர் பெற்றெழுந்து சுந்தரர் கையிலுள்ள வாளைப் பிடித்துக்கொள்ள, ஆரூரர் விழுந்து வணங்கினார். கலிக்காமரும் வாளை விட்டொழித்து நம்பியாரூரர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார். இருவரும் எழுந்து ஒருவரொருவரை அன்பினால் தழுவிப் பிரியா நண்பராகித் திருப்புன்கூர்ப் பெருமான் திருவடிகளை வணங்கிப் போற்றினார்கள். நம்பியாரூரருடன் சென்று திருவாரூர்ப்பெருமானை வழிபட்டு அங்குத் தங்கிய ஏயர் கோன் கலிக்காமர் ஆரூரர் இசைவு பெற்றுத் தம்முடைய ஊர்க்குத் திரும்பித் தமக்கேற்ற திருத்தொண்டுகளைப் புரிந்திருந்து சிவபெருமான் திருவடியைச் சேர்ந்து இன்புற்றார்.

திருமூல நாயனார்

'நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்' என நம்பியாரூரராற் போற்றப்பெற்ற திருமூல நாயனாரது வரலாறு (இந்நூல் 402 – 416 ஆம் பக்கங்களில்) முன்னர் விரிவாக ஆராய்ந்து விளக்கப்பெற்றது.

தண்டியடிகள் நாயனார்

தண்டியடிகள் என்பவர் திருவாரூர்ப் பிறக்கும் பெருமைத் தவமுடையார். இறைவன் திருவடிகளை மனத்துட்கொண்டு நோக்கும் அகநோக்கேயன்றிப் புறம் நோக்கும் உணர்வினை விட்டொழித்தார்போன்று பிறந்த பொழுதே கண்காணாத பிறவிக் குருடர். இவர் திருவாரூர்ப் பூங்கோயிலில் தேவாசிரியனை முன் இறைஞ்சி வலம் வந்து காதலாகி நமச்சிவாய நற்பதமே எடுத்தோதித் திருவாரூர்ப் பெருமானடிகள் திருவடிக்கே அன்புடையராய்த் திருத்தொண்டுகள் பல செய்து வந்தார். ஆரூர்த் திருக்கோயிலின் மேற்புறத்திலுள்ள திருக்குளத்தின் பக்கமெங்கும் சமணர்களுடைய பாழிகள் பெருகிக் குளத்தின் இடம் வரவரக் குறைவடைந்தது. அதனையறிந்த தண்டி

யடிகள், திருக்குளத்தை முன்போற் பெருகத் தோண்ட எண்ணினார். குளத்தில் தறிநட்டுக் கயிறு கட்டிக் கரையிலும் தறிநட்டு அக் கயிற்றை வலிந்து கட்டி மண் வெட்டியுங் கூடையுங் கொண்டு குளத்திலிறங்கி மண்ணை வெட்டி யெடுத்துக் கயிற்றைப்பற்றி ஏறிக் கரையிலே போடுவாராயினார். இவ்வாறு நாள்தோறும் தண்டியடிகள் குளத்தினைத் தோண்டக் கண்டு சமணர்கள் பொருது அவரையடைந்து 'மண்ணைத் தோண்டினால் சிற்றுயிர்கள் இறந்துபடும் வருத்தல் வேண்டாம்' என்றனர். அது கேட்ட தண்டியடிகளார் 'திருவில்லாதவர்களே, இந்தச் சிவத்தொண்டின் பெருமை உங்களுக்குத் தெரிய வருமோ' என்றார். அமணர்கள் அவரை நோக்கி, 'சிந்தித்து இந்த அறத்தினைக் கேளாத நீ செவியும் இழந்தனையோ' என்று இகழ்ந்துரைத்தனர். அது கேட்ட தண்டியடிகள், 'மந்த உணர்வும் விழிக்குருடும் கேளாச் செவியும் உமக்கேயுள்ளன. சிவனுடைய திருவடிகளையல்லால் வேறு காணேன் யான். அதனை அறிதற்கு நீர் யார்? உங்கள் கண் குருடாகி என் கண்கள் உலகெல்லாம் காண யான் கண்டால் நீர் என் செய்வீர்?' என்றார். அதனைக் கேட்ட சமணர்கள், 'நீ உன் தெய்வத்தருளால் கண் பெற்றாயாகில் யாங்கள் இவ்வூரில் இருக்க மாட்டோம்' என்று சொல்லி அவர் கையிலுள்ள மண் வெட்டியைப் பறித்து, நட்ட தறிகளையும் பிடுங்கி எறிந்தனர். தண்டியடிகள் ஆரூர்ப்பெருமான் திருமுன் சென்று, 'ஐயனே! இன்று அமணர்களால் அவமதிக்கப்பட்டு வருந்தினேன். இவ் வருத்தத்தைத் தீர்த்தருளல்வேண்டும்' என முறையிட்டுத் தமது மடத்திற்குச் சென்றார். அன்றிரவு ஆரூரிறைவர் அவரது கனவில் தோன்றி, 'தண்டியே, நின் மனக்கவலை தவிர்க. நின்கண்கள் காணவும் அமணர் கண்கள் மறையுமாறும் செய்கின்றோம்' என்று அருள் செய்து, சோழ மன்னன்பால் கனவில் தோன்றி 'தண்டி என்பவன் நமக்குக் குளந்தோண்ட அதற்குச் சமணர்கள் இடையூறு விளைத்தனர். நீ அவனிடத்திலே சென்று அவன் கருத்தை முடிப்பாயாக' என்று பணித்து மறைந்தருளினார்.

வேந்தன் விழித்தெழுந்து இறைவர் திருவருளைப் போற்றிப் பொழுது புலர்ந்ததும் தண்டியடிகளை யடைந்து

அவர் நிகழ்ந்தன சொல்லக்கேட்டு அமணர்க்கும் தண்டி யடிகளுக்கு மிடையே நிகழ்ந்த அவ்வழக்கைத் தீர்க்க எண்ணி, அமணர்களை அழைத்து அவர்கள் கருத்தையும் அறிந்துகொண்டான். பின்னர் அமணர் தன்னுடன் வரத் தண்டியடிகளாருடன் குளக்கரையை அடைந்து தண்டி யடிகளை நோக்கி, 'பெருகுந்தவத்தீர் நீர் சிவனருளாற் கண்பெறுதலைக் காட்டுவீராக' என்றான். அது கேட்ட தண்டியடிகளார், 'யான் சிவனுக்குப் பொருந்திய அடி யேன் என்றால் இன்று என் கண்கள் ஒளி விளங்கப்பெற்று அமணர்கள் தம் கண்களை யிழப்பார். அதனால் ஆராய்ந்த மெய்ப்பொருளும் சிவபதமே ஆகும்' என்று சொல்லித் திருவைந்தெழுத்தை எடுத்தோதிக் குளத்தில் மூழ்கிக் கண்ணொளி பெற்று எழுந்தார். அங்கிருந்த அமணர்கள் கண்ணொளியிழந்து வழி தெரியாமல் தடுமாற்றமுற்றார்கள். 'பழுது செய்த அமண் கெட்டது' என்றுணர்ந்த மன்னன், தன் ஏவலாளரைப் பார்த்து, 'தண்டியடிகளோடு ஒட்டிக் கெட்ட சமணர்களைத் திருவாரூரினின்றும் அகன்று போம்படி துரத்துவீராக' எனப் பணித்துத் திருக்குளத் தின் கரைகளைச் செம்மைபெறக் கட்டித் தண்டியடிகளை வணங்கிச் சென்றான். அகக்கண்ணேயன்றிப் புறக்கண் ணும் பெற்று 'நாட்டமிகு தண்டி' என நம்பியாரூராற் போற்றப்பெறும் சிறப்புவாய்ந்த தண்டியடிகளார் இறை வனைப் போற்றித் திருவைந்தெழுத்தோதித் திருப்பணிகள் பல புரிந்து சிவபதம் அடைந்தார்.

மூர்க்க நாயனார்

'கற்ற சூதன்' எனக் குறிக்கப்பெற்ற மூர்க்க நாயனார், தொண்டை நாட்டில் பாலாற்றின் வடகரையிலுள்ள திருவேற்காடு என்னும் ஊரில் வேளாளர் மரபிற் பிறந்தவர். 'ஆதி முதல்வர் திருநீற்றின் அடைவே பொருள்' என்றறிந்து சிவனடியார்களுக்கு அறுசுவைப் போனகம் அருத்திப் பின் உண்ணுதலைத் தமது நியமமாகக் கொண்டிருந்தார். நாடோறும் அடியார்களை அமுது செய் விப்பதில் தம்முடைய நிலம் பொருள் யாவும் செலவழிந் தமையால் தாம் முன் கற்றுள்ள சூதாட்டத்தில் ஈடுபட்டு அப்பொருளைக்கொண்டு சிவனடியார்களுக்கு அமுது செய் விக்க எண்ணினார். தம்மூரில் தம்முடன் சூதுக்கு வரு

வோர் இல்லாமையால் சிவத்தலங்கள் தோறும் சென்று இறைவனைப் பணிந்து சில நாளிற் குடந்தையை யடைந்து அங்குள்ள அம்பலத்தே தங்கிச் சூதாடிப் பொருள் தேடி நாள்தோறும் சிவனடியார்களுக்குத் திருவமுதளித்து வந்தார். சூதாடுதலில் வல்ல இவர், முதலாட்டத்தில் தாம் தோற்றுத் தம்மிடமுள்ள பொருளைப் பிறர்கொள்ளச் செய்து, பின்னிகழும் ஆட்டங்களிலெல்லாம் தாமே வென்று தம் வெற்றியை உடன்படாது மறுத்தாரைக் குற்றுடை வாளாற் குத்துமியல்பினராதல்பற்றி மூர்க்கர் என அழைக்கப்பெற்றார். மூர்க்கராகிய இவர், சூதினில் வென்ற பொருள்களைத் தாம் தொடாது சிவனடியார்க்கு அமுதாக்குவார் கொள்ளச்செய்து அடியார் திருவமுதுண்ட பின் தாம் கடைப்பந்தியிலிருந்து உண்ணும் பழக்கமுடையார். இவ்வாறு பல்லாண்டுகள் சிவனடித் தொண்டு புரிந்த மூர்க்க நாயனார் ஏதங்கள் போயகல இவ்வுலகை விட்டதற்பின் பூதங்கள் இசைபாட ஆடுவார் பதியாகிய சிவலோகத்தை அடைந்தார்.

சோமாசிமாற நாயனார்

'அம்பரான் சோமாசி மாறனுக்கும், அடியேன்' எனப் போற்றப்பெற்ற இவர், சோழநாட்டில் திருவம்பர் என்னும் ஊரிலே அந்தணர் குலத்திலே தோன்றியவர், சிவபத்தி யுடையராய்ச் சிவனடியார்களுக்குத் திருவமுதளிக்கும் இயல்புடையவர்; உமையொரு பாகனாகிய சிவபெருமானையே முதல்வனெனக்கொண்டு போற்றும் வேள்விகள் பலவற்றை உலகங்கள் ஏழும் உவப்ப விதிப்படி செய்தவர்; 'ஈசனுக்கன்பர் என்பேர் எக்குலத்தவராயினும் அவர்கள் நம்மை ஆளாகவுடையவர்கள்' என்று உறுதியாகத் தெளிந்தவர்; சிவன் அஞ்செழுத்தும் சித்தந் தெளிய வோதும் நித்த நியமம் உடையவர். இவர், சீரும் திருவும் பொலியும் திருவாரூரை அடைந்து, தம்பிரான் தோழராகிய வன்றொண்டர்க்கு அன்பினால் நெருங்கிய நண்பரானார்; அங்குத் தங்கி அவர் தம் திருவடிகளைப் பணிந்து போற்றிய சிறப்பினால் என்றும் நிலவும் சிவலோகத்தில் இன்பம் உற்றார்.

சாக்கிய நாயனார்

திருச் சங்க மங்கையில் வேளாளர் குடியிற் பிறந்த இவர், எவ்வுயிர்க்கும் அருளுடையராய்ப் பிறவா நிலைபெற விரும்பிக் காஞ்சி நகரத்தையடைந்து புத்த சமயத்தை மேற்கொண்டிருந்தமை பற்றிச் சாக்கியர் என அழைக்கப் பெற்றார். இறைவன் திருவருள் கூடுதலாற் புத்தம் முதலிய புறச் சமயச் சார்புகள் பொருள் அல்ல என்றும் ஈறில் சிவநன்னெறியே பொருளாவதென்றும் நாட்டும் நல்லுணர்வு கைவரப் பெற்றார். "செய்யப்படும் வினையும், அவ்வினையைச் செய்கின்ற உயிரும், அவ்வினையின் பயனும், அப்பயனைச் செய்த உயிருக்கே சேர்ப்பிக்கும் இறைவனும் எனச் சைவ சமயத்தில் கூறப்பட்ட பொருள் நான்காகும். இப்பொருட் பாகுபாடு சிவ நெறியல்லாத பிறசமயத்தில் இல்லை. உயிர்களை உய்விக்கும் மெய்ப் பொருள் சிவமே. எந்த நிலையில் நின்றாலும் எக்கோலங் கொண்டாலும் சிவனடியினை மறவாது போற்றுதலே உறுதிப் பொருளாகும்" என்று ஆராய்ந்து துணிந்து, தாம் கொண்ட புத்த சமய வேடத்துடனேயே சிவபெருமானை மறவாது போற்றுவாராயினர்.

அருவமாகியும் உருவமாகியும் உள்ள எல்லாப் பொருள்களுக்கும் காரணமாய் இறைவனுக்குத் திருமேனி யாகிய சிவலிங்கத்தின் பெருமையுணர்ந்து நாள்தோறும் அதனைக் கண்டு வழிபட்ட பின்னரே உண்ணுதல்வேண்டும் என விரும்பினார். தாம் இருக்கும் இடத்திற்கு அண்மையில் வெட்ட வெளியிலே அமைந்துள்ள சிவலிங்கத்தினைச் சென்று கண்டு பெரு மகிழ்ச்சி கொண்டவராய் அம்மகிழ்ச்சி யின் விளைவாக ஒன்றுந் தோன்றாது அருகிற் கிடந்த செங்கற் சல்லியை எடுத்து அதன் மேல் எறிந்தார். இளம் புதல்வர் இகழ்வனவே செய்தாலும் அச் செயல் தந்தையர்க்கு உவப்பாதற் போன்று, சாக்கியர் செய்த இதுவும் சிவபெருமானுக்கு உவப்பாயிற்று. இறைவன் அவர் அன்பினாலெறிந்த கற்களை நறுமலர்களாகவே ஏற்றுக் கொண்டார். சாக்கியர் அன்று போய் மறுநாள் அங்கு வந்த பொழுது முதல்நாள் தாம் சிவலிங்கத் திருமேனியின்மேற் செங்கல் எறிந்த குறிப்பினை எண்ணி, 'நேற்று இந்த எண்ணம் நிகழ்ந்தது இறைவன் திருவருளே' என்று

துணிந்து அதனையே தாம் செய்யும் வழிபாடாகக் கருதி எப்பொழுதும் அப்படியே செய்துவந்தார்.

ஒரு நாள் சாக்கியர் அச் செயலை மறந்து உண்ணப் புகுந்த போது 'இன்று எம்பெருமானைக் கல்லால் எறிய மறந்து விட்டேனே' என்று எழுந்து விரைந்தோடிச் சிவலிங்கத்தின் திருமுன் சென்று ஆராத வேட்கையினால் ஒரு கல்லை எடுத்து அதன்மேல் எறிந்தார். அவரது அன்பிற்கு உவந்த சிவபெருமான் நெடு விசும்பில் விடை மீது உமையம்மையாருடன் தோன்றியருளினார். அத் தெய்வக் காட்சியைக் கண்ட சாக்கிய நாயனார், தலைமேல் இரு கைகளையும் குவித்து நிலமிசை வீழ்ந்திறைஞ்சினார். சிவபெருமான் சிவலோகத்தில் தம் பக்கத்தேயிருக்கும் பெருஞ்சிறப்பினை அவர்க்கு அருளி எழுந்தருளினார்.

'வார் கொண்ட வனமுலையாள் உமைபங்கன்கழலே
மறவாது கல்லெறிந்த சாக்கியர்க்கும் அடியேன்'

என நம்பியாரூரர் சாக்கியனார் செயலைக் குறித்துப் போற்றியுள்ளார். சாக்கியர் தம்மீது எறிந்த சல்லிகளைச் சிவபெருமான் நறுமலர்களாக ஏற்றருளியதிறத்தை,

'புத்தன் மறவாதோடி, எறிசல்லி புதுமலர்களாக்கினான்
காண்' (6-52-8)

எனவும், கஞ்சி உண்பதன் முன் கல்லெறிந்து வழிபட்ட சாக்கிய நாயனார்க்கு இறைவன் வீடு பேறருளியதிறத்தை

'கல்லினாலெறிந்து கஞ்சி தாம் உணும் சாக்கியனார்
நெல்லினார் சோறுணாமே நீள்விசும் பாளவைத்தார்'
(4-49-6)

எனவும் திருநாவுக்கரசர் உளமுவந்து போற்றியுள்ளமை இங்கு நினைக்கத் தகுவதாகும்.

சிறப்புலி நாயனார்

பொன்னி நன்னாட்டில் 'இன்மையாற் சென்றிரந் தார்க்கு இல்லையென்னாது ஈந்து உவக்கும் தன்மையார்' வாழும் திரு ஆக்கூரிலே அந்தணர் குலத்திலே தோன்றியவர் சிறப்புலி நாயனார். 'சீர் கொண்ட புகழ் வள்ளல்' எனச் சிறப்பிக்கப் பெற்ற இப்பெருந்தகையார், சிவனடியார்கள்பாற் பேரன்புடையராய் அடியார்களை

எதிர்கொண்டு வணங்கி இன்னுரை பகர்ந்து திருவமுது செய்வித்து அவர்கள் விரும்புவனவற்றைக் குறைவறக் கொடுத்து மகிழ்பவர். இவர் திருவைந்தெழுத்தோதிச் சிவபெருமானைக் குறித்துச் செய்தற்குரிய வேள்விகள் புரிந்து இடையருப் பேரன்பால் நல்லறங்கள் பல செய்து சிவபெருமான் திருவடி நீழலை யடைந்தார்.

சிறுத்தொண்ட நாயனர்

காவிரித் திருநாட்டில் திருச்செங்காட்டங்குடியில் மாமாத்திரர் குலத்தில் தோன்றியவர் பரஞ்சோதியார். இவர் ஆயுள் வேதக்கலையிலும் வடநூற்கலையிலும் படைக் கலத் தொழிலிலும் நிரம்பிய பயிற்சியுடையவர்; யானை யேற்றம் குதிரை யேற்றம் ஆகியவற்றிலும் வல்லவர். உள்ளம் நிறை கலைத் துறைகள் ஒழிவின்றிப் பயின்ற வற்ருல் சிவன் கழலைச் சிந்தித்துப் போற்றுதலே மெய்ந் நெறியாவதெனத் தெளிந்தவர்; ஈசனடியார்க்குப் பணி செய்தலை இயல்பாகக்கொண்டு மன்னனுக்குச் சேனுதிபதி யாய்ப் போர்முனையிற் பகையரசர்களைப் பொருது வென்று அரசனுல் நன்கு மதிக்கப் பெற்ருர். இவர், மன்னன் பொருட்டு வடபுலத்திற் படையெடுத்துச் சென்று வாதாவி நகரத்தை அழித்து அங்கிருந்து பலவகை நன்மணிகளையும் செல்வங்களையும் யானை குதிரை முதலியவற்றையும் கைப்பற்றித் தம் வேந்தன் பாற் கொணர்ந்தார். அரசன் இவரது களிற்றுரிமை ஆண்மையினை அதிசயித்துப் புகழ்ந்து பாராட்டினுன். அந்நிலையில் பரஞ்சோதியாரை நன்குணர்ந்த அமைச்சர்கள், 'அரசே! இவர்பால் சிவபெரு மானது திருத்தொண்டின் வன்மை நன்கு வாய்த்திருத் தலால் இவரைப் போரில் எதிர்க்க வல்லார் இவ்வுலகில் யாருமில்லை' என்ருர்கள். பரஞ்சோதியாரைத் தம்பெருமான் திருத்தொண்டர் எனக் கேள்வியுற்ற மன்னன், 'உம்பர் பிரான் அடியாரை உணராதே கெட்டொழிந்தேன், வெம்பு கொடும் போர்முனையில் விட்டிருந்தேன்' என அஞ்சிப் பரஞ்சோதியாரை நோக்கி, 'எம் பெருமானே; எனது பிழையைப் பொறுத்தல்வேண்டும்' என்று இறைஞ்சினுன்.

மன்னன் இறைஞ்சுதலும் பரஞ்சோதியாரும் முன் வணங்கி 'அரசே! எனது உரிமைத் தொழிற்கடுத்த

பணியினைச் செய்வேன். அதற்கு என்ன தீங்கு' என்றார். அறம்புரி செங்கோலாகிய வேந்தன், அவருக்கு நிறைந்த நிதிக் குவைகளையும் நீடு விருத்திகளையும் அளித்து வணங்கி, 'நீர் உம்முடைய திருத்தொண்டின் நிலைமையினை யானறியாதபடி கொண்டு நடத்தினீர். இனி எம்முடைய மனக்கருத்துக்கு இசைந்து உமது மெய்ம்மைபுரி செயல் விளங்க நும் விருப்பப்படியே செம்மைநெறித் திருத் தொண்டு செய்வீராக' என விடை கொடுத்தனுப்பினான்.

மன்னவன்பால் விடைபெற்ற பரஞ்சோதியார், தமது பதியாகிய திருச் செங்காட்டங் குடியினை யடைந்து கணபதீச்சரத்து இறைவரை யிறைஞ்சிச் சிவ நெறித் தொண்டுகளை வழுவாது செய்திருந்தார். திருவெண் காட்டு நங்கையாருடன் மனையறத்தினை நிகழ்த்தி நாள் தோறும் சிவனடியார்களைத் திருவமுது செய்வித்துப் பின்பு தாம் உண்ணுதலை வழக்கமாகக் கொண்டார். பரஞ் சோதியார் சிவனடியார்களை விரும்பி வழிபடுங்கால் அவர் முன் மிகச் சிறியராய்ப் பணிந்து ஒழுகினமையால் சிறுத் தொண்டர் என அழைக்கப் பெற்றார். கணபதீச்சரப் பெருமான் திருவருளால் சிறுத்தொண்டர்க்குத் திருவெண் காட்டு நங்கையார்பால் சீராளதேவர் என்னும் திரு மைந்தர் அவதரித்தார். அப்பிள்ளைக்கு ஐந்து வயதடைந்த பொழுது பள்ளியிற் கல்வி பயில வைத்தார். அந்நாளில் திருஞானசம்பந்தப்பிள்ளையார் இறைவனை வழிபடத் திருச் செங்காட்டங்குடிக்கு எழுந்தருளினார். சிறுத்தொண்டர் ஞானசம்பந்தரை எதிர்கொண்டு அழைத்துப் போற்றினார். ஆளுடைய பிள்ளையாரும் பேரன்பிற் சிறந்த சிறுத் தொண்டருடன் நண்பினால் அளவளாவிக் கணபதீச்சரப் பெருமானைத் தாம்பாடிய 'பைங்கோட்டு மலர்ப் புன்னை' என்னும் முதற்குறிப்புடைய திருப்பதிகத்தில் சிறுத் தொண்டரைச் சிறப்பித்துப் பாராட்டினார்.

சிறுத்தொண்டரது மெய்த்தன்மையன்பு நுகர்ந்தருளு தற்கு விரும்பிய கயிலைப்பெருமான், பைரவ சமய அடியா ராகத் திருவேடந்தாங்கித் திருச்செங்காட்டங்குடியை யடைந்தார். சிறுத்தொண்டரது மனைவாயிலை நண்ணி, 'தொண்டனோர்க்கு எந்நாளும் சோறளிக்கும் சிறுத் தொண்டர் இம்மனையினுள் உள்ளாரோ?' என வினவி

நின்றார். அம்மொழியினைக் கேட்ட சந்தனத் தாதியார் முன்வந்து வணங்கி, 'அவர் அடியாரைத் தேடிப் புறத்தே சென்றுள்ளார். எம்மை ஆளாகவுடையவரே! அகத்துள் எழுந்தருள்வீராக' என வேண்டினார். வந்த பைரவர் அவரை நோக்கி, 'மாதர்கள் இருந்த இடத்தில் யாம் தனியே புகமாட்டோம்' என்றார். அதுகேட்ட திருவெண் காட்டு நங்கையார் 'இவ்வடியவர் போய்விடுவாரோ' என்று அஞ்சி விரைந்து மனைவாயிலில் வந்து 'எம்பெரு மானே! அம்பலவர் அடியாரை அமுது செய்விப்பாராய் அடியார் யாரையும் காணமல் புறத்தே தேடிச் சென்றுள்ளார்; தேவரீர் இங்கு எழுந்தருளியதனைக் கண்டால் தாம்பெற்ற பெரும்பேறெனக் கொள்வார். இனிச் சிறிதும் தாமதிக்க மாட்டார்; இப்பொழுதே வந்தணைவார் தேவரீர் மனைக்கண் எழுந்தருளியிருப்பீராக' என விண்ணப்பஞ் செய்தார். அதுகேட்ட பைரவர், 'ஒப்பில் மனையறம் புரப்பீர், யாம் உத்தராபதியுள்ளோம். சிறுத் தொண்டரைக் காண வந்தோம். எவ்வகையாலும் அவரின்றி இங்குத் தங்கமாட்டோம். கணபதீச்சரத்தில் ஆத்திமரத்தின்கீழ் இருக்கின்றோம். அவர் வந்தால் நாம் இருந்த செய்தியைச் சொல்வீராக' என்று கூறித் திரு வாத்தியையடைந்து அதன்கீழ் அமர்ந்தருளினர்.

அடியார்களைத் தேடிப் புறத்தே சென்று மீண்ட சிறுத் தொண்டர் அடியார் ஒருவரையும் காணமையை மனைவி யார்க்குச் சொல்லி வருந்தினர். அந்நிலையில் மனைவியார், 'உத்தராபதியாராகிய பைரவ சமய அடியார் ஒருவர் இங்கு வந்து, நாங்கள் இங்கு எழுந்தருளியிருக்கும்படி வேண்ட அதற்கிசையாது கணபதீச்சரத்திலுள்ள திருவாத்தியின் கீழ்ச்சென்று தங்கியுள்ளார்' என்றார். சிறுத்தொண்டர் விருப்பினுடன் விரைந்துசென்று ஆத்தியின் கீழமர்ந்த அடியார் திருவடிகளைப் பணிந்து நின்றார். நின்ற தொண்டரை நோக்கிய பைரவர் 'நீரோ பெரிய சிறுத் தொண்டர்?' என வினவினர். சிறுத்தொண்டர் அவரை வணங்கி, 'பூதிசாதனமுடைய அடியார்களைப் பணிந்து போற்றுதற்குரிய தகுதி நிரம்பப் பெறுதேனாயினும் சிவனடியார்கள் கருணையினால் என்னை அவ்வாறு அழைப் பார்கள். இன்று சிவனடியார்களை அமுது செய்விக்க விரும்பி எங்கும் தேடியும் காணப்பெற்றிலேன். தவத்தால்

நும்மைக் கண்டேன். அடியேன் மனையில் எழுந்தருளி அமுது செய்தருளல் வேண்டும்' என்று வேண்டிக் கொண்டார். அதுகேட்ட உத்தராபதியார், சிறுத் தொண்டரை நோக்கி, 'தவச்செல்வரே! உம்மைக் காணும் விருப்புடன் இங்கு வந்தோம். யாம் உத்தராபதி யோம். எம்மைப் பரிவுடன் உண்பிக்க நும்மால் முடியாது; செய்கை அரியது; ஒண்ணாது' என்று கூறினர். 'தேவரீர் அமுது செய்யும் இயல்பினை அருளிச் செய்யும். விரைந்து உணவு அமைக்கச் செய்வேன். சிவனடியார் கிடைக்கப் பெற்றால் தேட ஒண்ணாதனவும் எளிதிலுளவாகும். அருமையில்லை' என்றார் சிறுத் தொண்டர். அதனைக்கேட்ட பயிரவக்கோலப் பெருமான், 'எம் அன்புக்குரிய தொண்டரே! யாம் ஆறு மாதத்துக்கு ஒரு முறை பசுவைக் கொன்று உண்பது; அதற்கு உரிய நாளும் இந்நாளே யாகும். உம்மால் எம்மை உண்பிக்க முடியாது' என்றார். அதுகேட்ட சிறுத்தொண்டர், 'மிகவும் நன்று. மூவகைப் பசு நிரையும் உடையேன். பெரியீர்! நுமக்கு அமுதாகும் பசு இதுவெனத் தெரிவித்தால் யான்போய் அமுது விரைந்தமைத்துக் காலந் தப்பாமே வருவேன்' என்று கைதொழுதார். அவரை நோக்கி பைரவர், 'நாம் உண்ணப் படுக்கும் பசு நரபசு; உண்பது அஞ்சுபிராயத்துள்; உறுப்பில் மறுவில்லாதிருக்குமானல். புண்ணில் வேலெறிந்தாற் போன்று மேலும் சொல்ல வேண்டியது ஒன்றுண்டு' என்றார். கேட்ட சிறுத்தொண்டர் 'யாதும் அரியதில்லை. அருளிச் செய்யும்' என்றார். இறைவரும் ஒரு குடிக்கு நல்ல சிறுவன் ஒரு மகனைத் தாதை அரியத் தாய்பிடிக்கும்பொழுது தம்மில் மனமுவந்து குற்றமின்றி அமைத்த கறியினை யாம் இட்டு உண்பது' என மொழிந்தார். அம்மொழியினைக்கேட்ட சிறுத்தொண்டர் 'எம்பெருமான் அமுது செய்யப் பெறில் அதுவும் அரிதன்று' என்று, அடியவர் இசையப் பெற்றகளிப்பால் அவர் திருவடிகளை வணங்கி விரைந்து மனையினை யடைந்தார்.

மனைவாயிலில் கணவர் வருகையை எதிர்நோக்கி நின்ற திருவெண்காட்டு நங்கையார், அவரது மலர்ந்த முகங்கண்டு வந்த அடியாரைப் பற்றி வினவினர். 'ஒரு மகனாய் ஐந்து வயதுடையனாய் அவயவப் பழுதில்லாத

வனுயுள்ள பிள்ளையைத் தாய் பிடிக்க உவந்து பிதா அரிந்து சமைக்கப் பெற்ருல் அடியார் திருவமுது செய்தற்கு இசைந்தருளினுர்' என்ருர் சிறுத்தொண்டர். அதுகேட்ட கற்பிற் சிறந்த மனைவியார், 'பெரிய பயிரவத் தொண்டர் அமுது செய்யப் பெறுவதற்கு இங்கு உரிய வகையால் அமுதமைப்போம்' எனத் தமது இசைவினை முன்னர்ப் புலப்படுத்தி, 'ஒருவனுகி ஒருகுடிக்கு வரும் அச்சிறுவனைப் பெறுவது எவ்வாறு?' என்று வணங்கினுர். சிறுத்தொண்டர் மனைவியார்தம் முகம் நோக்கி, 'இத்தன்மையுடைய பிள்ளையை நினைவு நிரம்ப நிதி கொடுத்தால் தருவார் உளரோ? நேர் நின்று தம் பிள்ளையைத் தாமே அரியும் தாய் தந்தையர் இருக்க மாட்டார்கள். ஆகவே யான் உய்ய நீ பெற்றமைந்தனை இங்கு அழைப்போம்' என்ருர். மனைவியார் கணவரை நோக்கி 'நம்மைக் காக்கவரும் மைந்தனைப் பள்ளியிற் சென்று அழைத்து வாரும்' என்ருர். சிறுத்தொண்டர் மன மகிழ்ந்து தம் மைந்தர் ஓத அணைந்த பள்ளிக்குச் சென்ருர். பாதச்சதங்கை மணியொலிப்பச் சீராளதேவராகிய பிள்ளை ஓடிவந்து தந்தையைத் தழுவிய நிலையில், சிறுத்தொண்டர் மைந்தனையெடுத்துக்கொண்டு வீட்டிற்கு விரைந்தார். மைந்தனை எதிர் சென்று வாங்கிய வெண்காட்டு நங்கையார் பிள்ளையைக் குஞ்சிதிருத்தி முகந்துடைத்துத் திருமஞ்சனமாட்டிக் கோலஞ் செய்து கணவர் கையிற் கொடுத்தார்.

பிள்ளையைக் கையிற்கொண்ட சிறுத்தொண்டர், அடியார்க்குக் கறியமுதாம் என்று மைந்தனை உச்சி மோவாது மார்பிலணைத்து முத்தங்கொள்ளாது அடியார்க்கு அமுதமைக்க அடுக்களையிற் செல்லாது வேறிடத்திற் செல்வாராயினர். ஒன்றிய உள்ளத்தாராகிய சிறுத் தொண்டரும் அவர்தம் மனைவியாரும் தாம் செய்யப்போகும் செயலின் உண்மையினை உலகத்தார் உள்ளவாறு அறியும் உணர்வுடையாரல்லர் என்று கருதி, மறைவிடத்திற் சென்று புக்கனர். பிள்ளையைப் பெற்ற தாயார் பாத்திரங்களைக் கழுவிக்கொணர்ந்தார். உலகை வென்ற தந்தையார் பிள்ளையின் தலையைப் பிடித்தார். மெய்த்தாயார் பிள்ளையின் கிண்கிணிக் கால் இரண்டினையும் மடியின் புடையில் இடுக்கிக்கொண்டார். அதனைக்கண்ட மைந்தன் பெற்ருேர்

முகம் நோக்கி மகிழ்ந்து நகைத்தனன். தனிமா மகனைத் தந்தையார் கருவிகொண்டு தலையரிவாராய் இருவர் மனமும் பேருவகை யெய்தி அரிய வினைசெய்தார்கள். வெண்காட்டு நங்கையார், அறுத்த தலையின் இறைச்சி திருவமுதுக்கு ஆகாதென்று கழித்து அதனை மறைத்து நீக்கச் சந்தனத்தாதியார் கையில் கொடுத்துவிட்டு மற்றை உறுப்புக்களின் இறைச்சிகளெல்லாவற்றையும் அறுத்துப் பாகம் பண்ணி வேறு கறிகளும் சமைத்துச் சோறும் சமைத்துக் கணவர்க்குத்தெரிவித்தார்.

சிறுத்தொண்டர், ஆர்வத்துடன் விரைந்து சென்று திருவாத்தியின் கீழிருந்த பயிரவரை வணங்கி, தேவரீர் அடியேன்பால் நண்ணி அமுது செய்தருள வேண்டும் என்னும் ஆர்வத்தால் தேவரீர் பசித்தருளக் காலந் தாழ்த்தேனுயினும், தேவரீர் சொல்லிய வண்ணம் திருவமுது சமைத்தேன். எண்ணம் வாய்ப்ப எழுந்தருள வேண்டும்' என வேண்டி, வறியோன் இரு நிதியும் பெற்று வந்தாற்போல அடியவரைத் தம் மனைக்கு அழைத்து வந்தார். வெண்காட்டு நங்கையார் கொணர்ந்த தூய நீரால் அடியார் பாதங்களை விளக்கிய சிறுத் தொண்டர் அந்நீரை உள்ளும் புறம்பும் தெளித்தார். தூப தீபங் காட்டி வணங்கினுர். மனைவியாருடன் அடியவரை யிறைஞ்சி நின்று 'திருவமுது படைக்கும் வகை எவ்வாறு' என வினவ 'இனிய அன்னமுடன் கறிகள் எல்லாம் ஒக்கப்படைக்க' என்றுர் பயிரவர். அவர் கூறிய வண்ணம் திருவெண்காட்டு நங்கையார் பரிகலந் திருத்திப் பாவாடையில் ஏற்றிச் செந்நெற் சோறும் கறியமுதும் படைத்தார். அதனைக்கண்ட பயிரவர் அவரை நோக்கி, 'சொன்ன முறையிற் கொன்ற பசுவினது உறுப்பு எல்லாவற்றையும் கொண்டு சுவை நிரம்பக் கறியாக்கி வைத்தீரோ?' என்றுர். 'தலை யிறைச்சி திருவமுதுக்கு ஆகாதென்று கழித்துவிட்டோம்' என்றுர் வெண்காட்டு நங்கையார். 'அதுவும்கூட நாம் உண்பது' என்றுர் பயிரவர். அது கேட்டுச் சிறுத் தொண்டரும் மனைவியாரும் திகைத்து நின்றனர். அப்பொழுது சந்தனத் தாதியார், 'அந்தத் தலையிறைச்சி வந்ததொண்டர் அமுது செய்யும்பொழுது நினைக்க வரும் என்று முந்தவே கறியாக்கி வைத்துள்ளேன்' என்று

சொல்லி எடுத்துக் கொடுத்தார். திருவெண்காட்டு நங்கையார் முகமலர்ந்து அதனை வாங்கிப் பரிகலத்திற் படைத்தார். அதன்பின் பயிரவர் சிறுத்தொண்டரைப் பார்த்து 'இங்கு நமக்குத் தனியே உண்ண ஒண்ணாது. இறைவனடியார் இப்பக்கத்தே யுள்ளாரை அழைத்து வாரும்' என்றார். கேட்ட சிறுத்தொண்டர் 'அடியார் அமுது செய்ய இடையூறு இதுவோ' என்று வருந்தி, வீட்டின் புறத்தே சென்று பார்த்தார். அடியார் ஒருவரையும் காணாது முகத்தில் வாட்டம் பெருக முதல்வரை வணங்கி 'இகத்தும் பரத்தும் இனியாரைக் காணேன். யானும் திருநீறு இடுவாரைக் கண்டு இடுவேன்' என்றார். அதுகேட்ட பயிரவர் 'உம்மைப்போல நீறிட்டார் உளரோ? நீர் உடன் உண்பீர்' என்று கூறித் திருவெண்காட்டு நங்கையாரை நோக்கி, வேறொரு பரிகலம் இடச்செய்து 'வெம்மையிறைச்சிச் சோறு இதனில் மீட்டுப் படையும்' என்றார். அவரும் அவ்வாறே படைத்தார். உடனமர்ந்த சிறுத்தொண்டர், அடியாரை உண்பிக்க வேண்டித் தாம் உண்ணப் புகுந்தார். அதுகண்ட பயிரவர் அவரைத் தடுத்தருளி, 'ஐயா, யாம் ஆறுமாதம் கழித்து உண்போம், நாம் உண்ணுமளவும் பொறுத்திராது சோறுநாளும் உண்ணும் நீர் முன்பு உண்பது ஏன்? நம்முடன் இருந்துண்ண மகவினைப்பெற்றீராயின் அம் மைந்தனை அழையும்' என்றார். அதனைக்கேட்ட சிறுத்தொண்டர் 'இப்பொழுது அவன் உதவான்' என்றார். 'நாம் இங்கு உண்பது அவன் வந்தால்தான். நாடி அழையும்' என்றார் பயிரவர். அச்சொற்கேட்டுத் தரியாது சிறுத்தொண்டர் மனைவியாரொடும் புறத்தேபோய் அழைக்கும்போது சிறுத்தொண்டர் 'மைந்தா வருவாய்' என அழைத்தார். அவர் மனைவியாரும் தலைவர் பணியில் தலைநிற்பவராய் அழைப்பவர், 'செய்ய மணியே! சீராளா! வாராய். சிவனார் அடியார் யாம் உய்யும் வகையால் உடனுண்ண அழைக்கின்றார்' என்று ஓலமிட்டழைத்தார். அப்பொழுது பரமர் அருளால் பள்ளிக் கூடத்தினின்று ஓடி வருவானைப் போன்று வந்த புதல்வனைத் தாயார் தழுவியெடுத்துச் 'சிவனடியார் அமுது செய்யப் பெற்றோம்' என்னும் மகிழ்ச்சியால் கணவனார் கையிற்கொடுத்தார்.

வந்தமைந்தனை அழைத்துக்கொண்டு அடியாரை அமுது செய்வித்தற்கு உள்ளே புகுந்த சிறுத்தொண்டர் முன்னமே மறைந்தருளிய பயிரவக்கோலத் தொண்டரைக் காணாதவராய்ச் சிந்தை கலங்கித் திகைத்து வீழ்ந்தார்; மனஞ் சுழன்றார். வெந்த இறைச்சிக் கறியமுதினையும் கலத்திற் காணாது வெருவுற்றார். 'செய்ய மேனிக் கருங் குஞ்சிச் செழுங் கஞ்சுகத்துப் பயிரவர் யாம் உய்ய அமுது செய்யாது ஒளித்தது எங்கே?' எனத் தேடி மயக்கங் கொண்டு புறத்திற் சென்று பார்த்தார். அப்பொழுது மறைந்த அம்முதல்வர் உமையம்மையாரோடும் முருகனாகிய குழந்தையுடனும் விடைமீதமர்ந்து 'இனிய கறியும் திருவமுதும் அமைத்தார்காண எழுந்தருளித் திருவருள் நோக்கம் செய்தருளினார். அன்பின் வென்ற தொண்டராகிய சிறுத்தொண்டரும் அவர் மனைவியாரும் மைந்தரும் தம் முன்னே தோன்றிய பெருமானை என்பும் மனமும் கரைந்துருக நிலமிசை வீழ்ந்து துதித்துப் போற்றினார்கள். சிவபெருமானும் உமாதேவியாரும் முருகவேளும், அங்குத் தம்மை வழிபட்டு நின்ற சிறுத்தொண்டர் அவர் மனைவியார் மகனார் தாதியார் நால்வரையும் தம்மை என்றும் பிரியாது இறைஞ்சியிருக்கும் வண்ணம் உடன் கொண்டு திருக்கயிலையை அடைந்தருளினர்.

சிவனடியார்கள் செய்கின்ற செயல்களை மெல்வினை என்றும் வல்வினையென்றும் இருதிறனாகப் பகுத்துரைப்பர் சான்றோர். இறைவனை வழிபடுதற்கு உலகத்தார் எல்லோராலும் மேற்கொள்ளத் தக்க அன்பின் வழிப்பட்ட செயல் முறைகள் மெல்வினை எனப்படும். இறைவன்பால் அன்பின் ஊற்றத்தால் தம்மை மறந்து செய்யும் அரிய செயல்கள் வல்வினை எனப்படும். இவ்விரண்டினையும் முறையே பத்தி வைராக்கியம் எனவும் வழங்குதலுண்டு. வரங்கள் தரும் பயிரவ வேடத்தைப் பூண்ட சிவபெருமானுக்குக் கறியமுது சமைக்கும் பொருட்டு இளங்குழந்தை என்று இரங்காமல் சிறுத்தொண்டரும் வெண்காட்டு நங்கையும் ஆகிய தந்தை தாய் இருவரும் தங்கள் கையினாலே பிள்ளையை யறுத்து அடியார்க்கு அமுதாக்கிய இச் செயல், மேற்குறித்த வல்வினையின் பாற்படும். இந்நுட்பம்,

'வரங்கள் தரும் செய்ய வயிரவர்க்குத் தங்கள்
கரங்களினால் அன்று கறியாக்க — இரங்காதே

கொல்வினையே செய்யுங் கொடுவினையே யானதனை
வல்வினையே என்றதுநான் மற்று' (திருக்களிற்றுப்–18)

எனத்திருகடவூர் உய்ய வந்த தேவநாயனாரால் விளக்கப் பெற்றுள்ளமை இங்கு நினைக்கத் தகுவதாகும். சிவ பூசைக்கு இடர்விளைத்த தந்தையின் கால்களை வெட்டிய சண்டீசர் செயலும், இறைவனுக்குத் திருவமுதாதற் பொருட்டுத் தாம் கொணர்ந்த படிக்கட்டளைப் பொருள்கள் வயல் வெடிப்பிற் சிந்தினமையால் தமது ஊட்டியை அறுத்த அரிவாட்டயர் செயலும் மேற்குறித்த வல்வினை யைச் சார்ந்தன என்பது திருக்களிற்றுப்படியார் 19 20ஆம் வெண்பாக்களால் அறியப்படும்.

சேரமான் பெருமாள் நாயனார்

பதினொராந் திருமுறையாசிரியர்களுள் ஒருவரும் நம்பியாரூரர்க்குத் தோழராய் அவருடன் திருக்கயிலை சார்ந்தவரும் ஆகிய இவரது வரலாறு (இந்நூல் 555, 567ஆம் பக்கங்களில்) முன்னர் விளக்கப்பெற்றது.

கணநாத நாயனார்

ஆளுடையபிள்ளையார் அவதரித்தருளிய காழிப்பதி யிலே அந்தணர் மரபில் தோன்றியவர் கணநாதர். அவர் திருத்தோணியப்பருக்கு நாளும் அன்புடன் நல்ல திருப் பணிகள் செய்பவர்; தம்மை விரும்பி வந்தடைந்தவர்களை நல்ல நந்தவனப் பணி செய்தல், நறுமலர் கொய்தல், மாலை தொடுத்தல், திருமஞ்சனமெடுத்தல், திருவல கிடுதல், திருமெழுக்கிடுதல், திருவிளக்கிடுதல், திருமுறை எழுதுதல், வாசித்தல் முதலிய திருத்தொண்டுகளிற் பழக்கிச் சிவனடியார்களாக்கி அவர்களுக்கு வேண்டும் வசதிகளைச் செய்து கொடுப்பவர்; இங்ஙனம் மனையறத்தி லிருந்து கொண்டு சிவனடியார்களை வழிபடுந் தொழிலின ராகிய கணநாதர், திருஞானசம்பந்தப்பிள்ளையார் திருவடி களை நாள்தோறும் முப்போதும் விதிப்படி பூசை செய்து போற்றுபவர். ஆளுடைய பிள்ளையாரை வழிபட்டு அலகில் தொண்டருக்கு அறிவளித்தவராகிய கணநாதர், இறைவர் திருவருளால் கயிலைமால்வரையெய்திச் சிவ கணங்களுக்கு நாதராம் நிலைபெற்றார்.

கூற்றுவ நாயனார்

களந்தை என்னும் பதியிலே குறுநிலமன்னர் குடியிலே தோன்றியவர் கூற்றுவ நாயனார். இவர், பகைவர்களைப் போரில் வென்று சிவபெருமானது திருநாமமாகிய திருவைந்தெழுத்தை நாளும் நவின்று சிவனடியார்களைப் பணிந்தேத்தித் திருத்தொண்டு செய்பவர்; திருவருள் வலியால் அரசர் பலரையும் வென்று நால்வகைச் சேனைகளும் நிரம்பப்பெற்று வீரச்செருக்கின் மேலானார். வேந்தர் பலரொடும் போர் புரிந்து வாகை மாலை புனைந்து அரசர்க்குரிய முடி ஒன்றும் நீங்கலாக வேந்தர்க்குரிய எல்லாச் செல்வங்களும் எய்தினார். உலகங்காக்கும் அரசராகிய கூற்றுவனார் தில்லைவாழந்தணரையடைந்து தமக்கு முடி சூட்டும்படி வேண்டினார். அந்தணர்கள் 'சோழ மன்னர்க்கன்றி வேறு யார்க்கும் நாங்கள் முடிசூட்ட மாட்டோம்' என்று கூறி, தங்களுள் ஒரு குடியை முடியைக் காத்துக் கொள்ளும்படி இருத்திச் சேரநாட்டையடைந்தார்கள்.

ஐயுற்று மனந்தளரும் கூற்றுவனார், தில்லையம்பலப் பெருமானை மனங்கொண்டு 'அடியேன் தனக்கு முடியாக நின் திருவடிப்போதினைப் பெற வேண்டும்' என்று பரவித் துயில்கொண்டார். அந்நிலையில் கூத்தப்பெருமான் அவரது கனவில் தோன்றித் தம்முடைய திருவடியை முடியாகச் சூட்டியருளினார். கூற்றுவனார் அம்பலவர் திருவடிகளை முடியாகத் தாங்கி உலகமெலாம் தனியாட்சி புரிந்து திருத்தலங்களெல்லாம் சென்று சிவபரம் பொருளை வழிபட்டு அரசுபுரிந்து உமையொருபாகர் திருவடியை அடைந்தார்.

பொய்யடிமையில்லாத புலவர்

'பொய்யடிமை யில்லாத புலவர்க்கும் அடியேன்' என நம்பியாரூரராற் போற்றப் பெற்ற இப்புலவர் பெருமக்கள் திருத்தொண்டத் தொகையிற் குறிக்கப் பெற்ற ஒன்பது திருக்கூட்டத்தாருள் ஒரு திருக்கூட்டத்தார் ஆவர். நம்பியாண்டார் நம்பிகள்,

> "தரணியிற் பொய்ம்மையிலாத் தமிழ்ச் சங்கமதிற் கபிலர்
> பரணர் நக்கீரர்முதல் நாற்பத் தொன்பது பல்புலவோர்
> அருள்நமக் கீயுந் திருவால வாயரன் சேவடிக்கே
> பொருளமைத் தின்பக் கவிபல பாடும் புலவர்களே"

எனத் திருத்தொண்டர் திருவந்தாதியில் இவர்களைக் குறித்துப் போற்றியுள்ளார். எனவே மதுரைத் திருவால வாயில் நிலைபெற்ற தமிழ்ச்சங்கத்திலிருந்து திருவால வாயரன் சேவடிக்கே பொருளமைத்து அகப்பொருட் செய்யுட்களைப் பாடிய சங்கப்புலவர்களாகிய கபிலர் பரணர் நக்கீரர் முதலிய நாற்பத்தொன்பது புலவர்களும் அவர் களைப் போன்று பொய்ப் பொருட்கு அடிமைப்படாது மெய்ப் பொருளாகிய இறைவனுக்கே அடித்தொண்டு செய்யும் இயல்புடைய புலவர்கள் பலரும் பொய்யடிமையில்லாத புலவர் என நம்பியாரூரராற் போற்றப் பெற்றனர் என்பது வகைநூல் செய்த நம்பியாண்டார் நம்பிகள் கருத்தாதல் நன்கு விளங்கும். நம்பியாரூரர் காலத்திற்கு முன்னிருந்த தமிழ்ச் சங்கப் புலவர்களோடு நம்பியாரூரர் காலத்தும் அவர்க்குப் பின்னும் மெய்ப்பொருள் துணிபுடையராய் இறைவனுக்குத் தொண்டுபட்டிருக்கும் தமிழ்ப் புலவர்கள் எல்லோரும் 'பொய்யடிமை யில்லாத புலவர்' எனத் திருத் தொண்டத் தொகையிற் போற்றப்பெற்றுள்ளார் என்னும் உண்மையினை விரித்துரைக்கும் முறையில் அமைந்தது,

"செய்யுள் நிகழ் சொற்றெளிவும் செவ்வியநூல் பலநோக்கும்
மெய்யுணர்வின் பயனிதுவே, எனத்துணிந்து விளங்கியொளிர்
மையணியுங் கண்டத்தார் மலரடிக்கே யாளானார்
பொய்யடிமை யில்லாத புலவரெனப் புகழ்மிக்கார்"

எனவரும் பெரிய புராணச் செய்யுளாகும்.

புகழ்ச்சோழ நாயனார்

இமயமலையிற் புலி பொறித்து உலகாண்ட வண்டமிழ்ச் சோழர்க்குரிய சோழவள நாட்டிலே உலகில் வளர் அணிக்கெல்லாம் உள்ளுறையூராகத் திகழும் உறையூரிலே சோழர்குடியில் தோன்றியவர் புகழ்ச் சோழர். அவர் உலகமெலாஞ் செங்கோலின் வழிநிற்ப அருமறைச் சைவந்தழைப்ப அரசு புரிந்தார். சிவாலயங்களில் நாள் வழிபாடு செம்மையாக நிகழச் செய்து சிவனடியார்க்கு வேண்டுவன கொடுத்துத் திருநீற்று நெறிமுறையே நாட்டினை ஆட்சிபுரியும் நாளில் கொங்கர்களும் குடநாட்டு வேந்தர்களும் தரும் திறைப் பொருள்களை வாங்கும் பொருட்டுத் தங்கள் குலத்தார்க்கு உரிமையுடைய கருவூரிலே சென்று ஆனிலையண்ணலையிறைஞ்சித் தங்கள் மாளிகையில் அரியாசனத்தில் வீற்றிருந்தார். அப்

பொழுது குடபுல மன்னவர் கொணர்ந்த திறைப்பொருள் களைக் கண்டு திறைகொணர்ந்த அரசர்க்குச் செயலுரிமைத் தொழில் அருளி, அமைச்சர்களை நோக்கி, 'நம்முடைய ஆணைக்கு அடங்காத அரசர்கள் வாழும் அரணங்கள் உள வாயின் தெரிந்து கூறுங்கள்' என்று சொல்லி அங்கே சில நாட்கள் தங்கியிருந்தார். அப்பொழுது ஒரு நாள் சிவ காமியாண்டார் கொண்டு வந்த பூக்களைச் சிதறிய தம் முடைய யானையையும் பாகர்களையும் கொன்ற எறிபத்த நாயனுரையணைந்து 'என்னையும் கொன்றருளும்' என்று தம்முடைய வாளைக் கொடுத்துச் சிவத்திருத்தொண்டிலே சிறந்து விளங்கினர்.

அமைச்சர்கள் திறைகொணராத பகையரசனெருவ னுளன் என்று புகழ்ச்சோழரையிறைஞ்சி அறிவித்தார்கள். அதுகேட்ட புகழ்ச்சோழர் 'ஆங்கு அவன் யார்?' என வினவினர். 'அதிகன் அவன்; அணித்தாக ஓங்கெயில் சூழ் மலையரணத்துடன் உறைவான்' என்றனர் அமைச்சர். வேந்தர் அமைச்சர்களை நோக்கி, 'ஈங்கு உங்களுக்குத் தடையாக நிற்கும் அரணும் உளதோ? படையுடன் சென்று அவ்வரணத்தைத் துகளாக்கி அழிப்பீராக' எனப் பணித்தார். அமைச்சர்கள் கடல் போன்ற பெருஞ்சேனை யுடன் புறப்பட்டுச் சென்று அதிகனது மலையரணைப் பொடி யாக்கி அவனுடைய சேனைகளை வளைத்துக்கொண்டார்கள். அதிகன் அஞ்சி ஓடிப்போய்ச் சுரத்தில் ஒளிந்து கொண்டான். சோழரது படை வீரர்களிற் பலர் அதிக னுடைய படை வீரர்களின் தலைகளையும் மற்ற வீரர்கள் நிதிக்குவியல்களையும் யானை குதிரை முதலிய சேனைகளை யும் கொண்டு கருவூர்க்கு வந்து சேர்ந்தார்கள்.

புகழ்ச் சோழர், தமக்கு முன்னே படைவீரர் கொணர்ந்த பகைவர் தலைகளின் நடுவே சடை முடித்தலை ஒன்றிருத்தலைக் கண்டார். கண்டபொழுதே நடுங்கிமனங் கலங்கிக் கண்ணீர் சொரிந்து 'இவ்வுலகில் திருநீற்றின் நெறி புரந்து யான் அரசு புரிந்த முறை மிகவும் நன்று' என வருந்தினர். 'சீர்தாங்கும் இவர் வேணிச் சிரந்தாங்கி வரக்கண்டும், பார்தாங்க இருந்தேனே பழிதாங்குவேன்' என்று இரங்கினர். ஒன்று செய்யத் துணிந்து அமைச்சரை நோக்கி, 'மன்றில் நடம்புரிவார்தம் வழித்தொண்டின்வழி நாட்டினைக் காத்து அரசளிக்கும்படி என் மைந்தனுக்கு

முடிபுனைவீராக' என்று செந்தீவளர்க்கும்படி செய்து திருநீற்றினையணிந்து சடைத்தலையினை ஒரு பொற்கலத்தில் ஏந்தித் தம் முடியிலே தாங்கிகொண்டு தீயினை வலம் வந்து திருவைந்தெழுத்தோதி அத்தீயினுள்ளே புகுந்து இறைவன் திருவடிநிழற்கீழ் அமர்ந்திருந்தார். இச்செய்தி

'பொழிற் கருவூர்த் துஞ்சிய புகழ்ச்சோழர்க்கடியேன்'

எனவருந் திருத்தொண்டத் தொகையிற் குறிக்கப் பெற்றுள்ளமை கூர்ந்துணரத் தகுவதாகும்.

நரசிங்கமுனையரைய நாயனார்

நீதிமுறை வழுவாது அரசு புரியும் முனையரையர் குடியிற் பிறந்து திருமுனைப்பாடி நாட்டினைத் திருநாவலூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தவர் நரசிங்க முனையரையர். இவர் பகைவரைப் போரிற் புறங்கொண்ட பெருவீரர்; சிவனடியார் அடிபணிதலையே அரும்பெரும் பேறெனக் கொண்டவர்; சிவபெருமான் திருக்கோயில் தோறும் திருச்செல்வம் பெருகத் திருத்தொண்டுகள் பல புரிந்தவர். திருவாதிரை நாள்தோறும் சிவனடியார்களைத் திருவமுது செய்வித்து அவர்கட்குத் தனித்தனியே நூறு பொன் கொடுத்து வந்தார். அவ்வாறு கொடுத்துவரும் நாளில் ஒருநாள் தூர்த்த வேடமுடைய ஒருவர் திருநீறு அணிந்து அடியார் குழுவிற் சேர்ந்து கொண்டார். அவருடைய தூர்த்த வேடத்தைக் கண்டு அருகே நின்றவர்கள் இகழ்ந்து ஒதுங்கினர். அதுகண்ட நரசிங்க முனையரையர் அவ்வடியாரை எதிர்சென்று வணங்கி அழைத்துக் கொண்டுபோய் நன்றாக உபசரித்தார். சீலமில்லாதவர்களேயாயினும் திருநீறு அணிந்தவர்களை உலகத்தார் இகழ்ந்து நரகத்தில் வீழாதபடி அவ்வடியார்க்கு இருநூறு பொன் கொடுத்து அவரை வணங்கி இன்மொழி பகர்ந்து விடை கொடுத்து அனுப்பினார். இவ்வாறு செவ்விய அன்பினில் திருத்தொண்டுகள் பல புரிந்து திருந்திய சிந்தையராகிய நரசிங்கமுனையரையர் சிவபெருமான் திருவடி நீழலையடைந்து மீளாத நிலைபெற்றார்.

இவர் நம்பியாரூரரை மகன்மை முறையிற் பெற்று வளர்த்தமை முன்னர்க் கூறப்பட்டது.

அதிபத்த நாயனார்

பொன்னி நாட்டில் நாகப்பட்டினத்தில் பரதவர் குலத்தில் தோன்றியவர் அதிபத்தர். பரதவர் தலைவராய்ச் சிவபத்தியிற் சிறந்த இவர், நாள்தோறும் கடலில் மீன் பிடிக்குங்கால் வலையில் அகப்படும் மீன்களில் முதல் மீனை 'இது சிவனுக்கு' என்று அன்பினால் விட்டுவந்தார். இவ்வாறு ஒழுகும் நாளில் பல நாட்களில் ஒவ்வொரு மீனே வலையிலகப்பட அதனைக் கடலிலே விட்டுவந்தார். வலை வளம் குறைந்து வறுமையெய்தித் தம் சுற்றத்தார்கள் உணவின்றி வருந்தவும் தாம் வருந்தாது நாளும் ஒவ்வொன்றாகக் கிடைத்த மீனை இறைவனுக்கென்றே விட்டு மகிழ்ந்தார்.

இப்படி நிகழும் நாளில் வேறு ஒருநாள் இவருடைய ஏவலராகிய பரதவர்கள் கடலில் வலைவீசியபொழுது உலகெலாம் விலையெனக் கொள்ளத்தக்க நவமணிகளால் உறுப்பமைந்த பொன்மீனொன்று அகப்பட்டது. பரதவர்கள் அதனை எடுத்து 'ஒரு மீன் படுத்தோம்' என்றனர். அதிபத்த நாயனார், ஞாயிறு போன்று ஒளி வீசும் மீனைக் கண்டு 'இது என்னை ஆட்கொண்டருளிய சிவனுக்கே யுரியதாகும், ஆதலால் அவர் திருவடியைச் சேர்க' என்று கடலிலே விட்டார். அப்பொழுது சிவபெருமான் விடை மீது விசும்பில் தோன்றியருளி, அஞ்சலிகூப்பி நின்று பணிந்த அதிபத்த நாயனாரைச் சிவலோகத்திலே அடியார்களுடன் அமர்ந்திருக்க அருள் புரிந்து மறைந்தருளினார்.

கலிக்கம்ப நாயனார்

தில்லையின் மேல்பாலுள்ள திருப்பெண்ணாகடத்திலே வணிகர் குலத்தில் தோன்றியவர் கலிக்கம்ப நாயனார். இவர் அவ்வூரிலுள்ள திருத்தூங்கானை மாடத்து அமர்ந்த பெருமானுக்குத் திருத்தொண்டு செய்பவர்; சிவனடியார்களுக்குத் திருவமுதளித்து வேண்டும் பொருள்களைக் கொடுக்கும் இயல்புடையவர் ஒருநாள் தமது வீட்டிலே திருவமுது செய்யவந்த சிவனடியார் எல்லாரையும் முறைப்படி திருவமுது செய்யத் தொடங்குவித்தற்கு முன்பு தமது மனைவியார் கரக நீர்வார்க்க அவர்களுடைய

திருவடிகளை விளக்கினர். அப்பொழுது, முன் தமது இல்லத்திற் பணியாளராயிருந்து பணியினை வெறுத்துச் சிவனடியாரான ஒருவர் வர அவருடைய திருவடிகளையும் விளக்கப் புகுந்தார். மனைவியார் அவ்வடியவரைக் கண்டு 'இவர் நம் வீட்டிற் பணி செய்தவர் போலும்' என்று சிந்தித்தலால் கரக நீர்வார்க்கச் சிறிது நேரம் தாமதித்தார். அதுகண்ட கலிக்கம்பர் 'இவள் இச்சிவனடியாருடைய முன்னைய நிலையைக் குறித்து வெள்கி நீர் வாராதொழிந்தாள்' என்று துணிந்து தம் மனைவியார் கையிலுள்ள கரகத்தை வாங்கி வைத்துவிட்டு அக்கையை வாளால் தறித்துக் கரக நீரைத் தாமே எடுத்துக்கொண்டு அவ்வடியார் திருவடிகளை விளக்கி அடியார்கள் அமுது செய்தற்கு வேண்டுவன எல்லாம் ஆர்வத்துடன் செய்து அவ்வடியார்களைத் திருவமுது செய்வித்தார். அடியார் பத்தியின் மேலீட்டால் கலிக்கம்பர் செய்த இச்செயலை, நம்பியாரூரர்

'கை தடிந்த வரிசிலையான் கலிக்கம்பன்'

எனத் திருத்தொண்டத் தொகையிற் குறித்துள்ளார். அடியார் வேடமென்று உணராத மனைவியாரது கைதடிந்த கலிக்கம்ப நாயனர் சிவனடித் தொண்டுகள் பலபுரிந்து சிவபதம் அடைந்தார்.

கலிய நாயனர்

தொண்டை நாட்டில் திருவொற்றியூரிலே தயில வினைத் தொழிலுடைய வணிகர் மரபிலே தோன்றியவர் கலிய நாயனர். கோடிக்கணக்கான செல்வமுடைய இவர் சிவபெருமானுக்கு உரிமைத் திருத்தொண்டில் ஈடுபட்டுத் திருவொற்றியூர்த் திருக்கோயிலில் உள்ளும் புறம்பும் அல்லும் பகலும் திருவிளக்கிடும் திருத்தொண்டினைச் செய்து வந்தார். இவரது உண்மைத் தொண்டின் பெருமையைப் புலப்படுத்தத் திருவுளங்கொண்ட சிவபெருமான் திருவருளால் இவரது செல்வமனைத்தும் குறைய வறுமை நிலையுண்டாயிற்று. அந்நிலையில் தமது மரபிலுள்ளார் தரும் எண்ணெயை வாங்கி விற்று அதனற் கிடைத்த பொருளால் தாம் செய்யும் திருவிளக்குப் பணியை வழுவாது செய்தார். பின்பு எண்ணெய் தருவார் கொடாமையால் கூலிக்குச் செக்காடி அக்கூலிகொண்டு விளக்கெரித்

தார். வேலையாட்கள் பெருகித் தம்மைக் கூலிக்கு அமர்த்திக்கொள்வார் இல்லாமையால் வீடு முதலிய பொருள்களை விற்றும் முடிவில் தம் மனைவியாரை விற்பதற்கு நகரெங்கும் விலை கூறி வாங்குவாரில்லாமையால் மனந்தளர்ந்தார். திருவிளக்கேற்றும் வேளையில் ஒற்றியூர்த் திருக்கோயிலை அடைந்து 'திருவிளக்குப் பணி தடைப்படின் இறந்து படுவேன்' எனத்துணிந்து, திரியிட்ட அகல்களைப் பரப்பி வைத்து எண்ணெய்க்கு ஈடாகத் தமது உதிரத்தையே நிறைத்தற்குக் கருவி கொண்டு தமது கழுத்தை அரிந்தார். அந்நிலையில் அருட்கடலாகிய சிவபெருமான் விடைமீது தோன்றியருள, உடம்பின் ஊறு நீங்கித் தலைமேற் கை குவித்து வணங்கி நின்றார். சிவபெருமான் அவரைப் பொற்புடைய சிவபுரியிற் பொலிந்திருக்க அருள்புரிந்தார்.

சத்தி நாயனார்

சோழநாட்டில் வரிஞ்சையூரில் வேளாண் மரபில் தோன்றியவர் சத்தி நாயனார். சிவனடிக்குத் தொண்டு புரியும் இவர், சிவனடியார்களை யாரேனும் இகழ்ந்துரைப் பாராயின் அக்கொடியோரது நாக்கை அறுத்தற்கென எப்பொழுதும் கையிற் கத்தியுடன் இருப்பவர் ஆதலாற் 'சத்தியார்' என அழைக்கப் பெற்றார். இவர் அடியார்களை அவமதித்துத் தீமொழி புகன்ற தீயோர் நாக்கினைக் குறட்டாற் பற்றி இழுத்துக் கையிலுள்ள கத்தியினால் அரிதலாகிய ஆண்மைத் திருப்பணியை நெடுங்காலம் அன்பினோடு செய்திருந்து சிவபெருமான் திருவடியை அடைந்தார்.

ஐயடிகள் காடவர்கோன் நாயனார்

பதினொராந் திருமுறையாசிரியர்களுள் ஒருவரும் பல்லவவேந்தரும் ஆகிய இவரது வரலாறு இந்நூலில் (544–555ஆம் பக்கங்களில்) முன்னர் விளக்கப்பெற்றது.

கணம்புல்ல நாயனார்

வடவெள்ளாற்றுத் தென்கரையிலே அமைந்த இருக்குவேளூரிலே அவ்வூர்க் குடிமக்களுக்குத் தலைவராய் விளங்கி

யவர் கணம்புல்ல நாயனர். கணம் புல்லர் என்பது பிற் காலத்தில் இவர்க்கு உண்டாகிய காரணப்பெயர். இவரது இயற்பெயர் தெரிந்திலது. பெருஞ்செல்வத்தினராகிய இவர் 'எப்பொருளும் ஆவன ஈசர்கழல்' என்று கொண் டவர்; 'பெருஞ்செல்வம் பெற்ற பயன் இது' வென்று சிவன் திருக்கோயிலில் திருவிளக்கெரிக்கும் பணியினை ஆர்வ முடன் செய்து வந்தார். நெடுங்காலம் சென்று வறுமை யெய்திய நிலையில் தில்லையையடைந்து தம் வீடு முதலிய வற்றை விற்ற பொருளைக்கொண்டு திருப்புலீச்சரத் திருக் கோயிலில் திருவிளக்கெரித்து வந்தார். பிறர்பால் இரந்து பொருள் பெற நினையாது, 'கணம்புல்' என்ற ஒருவகைப் புல்லை அரிந்து விற்று, அதனால் கிடைத்த பொருளைக் கொண்டு நெய் வாங்கி, திருவிளக்கேற்றி வந்தார். ஒரு நாள் தாமரிந்த கணம்புல் விலைக்கு விற்காதொழிய, அந்தப் புல்லினையே கொண்டு திருக்கோயிலில் விளக்காக எரித் தார். விளக்கெரிக்கும் யாமம் வரையிலும் அப்புல் விளக் கெரிக்கப்போதாமையால் அதனுடன் தமது திருமுடியையும் சேர்த்து எரித்தார். அப்பொழுது சிவபெருமான் முன்வந்து பேரருள் புரிந்தருளக் கணம் புல்லராகிய அவ்வடியார் முதல்வரை வணங்கிச் சிவலோகத்தை அடைந்தார்.

காரி நாயனர்

மறையாளர் வாழும் திருக்கடவூரில் தோன்றிய காரியா ராகிய இப்பெரியார், வண்டமிழின் துறையான பயன் தெரிந்து சொல் விளங்கிப் பொருள் மறையக் காரிக் கோவையெனத் தமிழ்க்கோவை ஒன்றைத் தம்பெயரால் செய்தமைத்துத் தமிழ்நாட்டு மூவேந்தர்களிடமும் சென்று அவர்கள் மகிழும்படி அதற்குப் பொருள் விரித்துரைத்து அவ்வேந்தர்கள் தந்த பெரும்பொருளைக் கொண்டு சிவ பெருமானுக்குத் திருக்கோயில்கள் பல கட்டுவித்தார். நாட்டுமக்கள் யாவரும் மனமுவக்கும்படி செய்யுட்களுக்குச் சுவை விளங்கப் பொருள் கூறிப் பெற்ற பொருள்களைச் சிவனடியார்களுக்கு அளித்து இறைவன் எழுந்தருளிய திருக்கயிலையை மறவாத சிந்தையராய் வாழ்ந்தார். கடல் சூழ்ந்த உலகெங்கும் தமது புகழை நிலைபெறச் செய்த காரி நாயனர், சிவனருளால் வாய்ந்த மனம்போல் உடம்பும் வட கயிலைமலை சேர்ந்தார்.

நின்றசீர் நெடுமாற நாயனார்

பாண்டிநாட்டிலே மதுரையம்பதியிலே அரசுபுரிந்த கூன்பாண்டியன் சமணர்களது சூழ்ச்சியிலகப்பட்டுச் சமண சமயத்தை மேற்கொண்டு அந்நாளில் ஆளுடைய பிள்ளையார் திருவருளால் சைவசமயத்தை மேற்கொண்டு கூன் நிமிர்ந்து நெடுமாற நாயனார் எனப் பெயர்பெற்ற செய்தி திருஞானசம்பந்தப் பிள்ளையார் வரலாற்றில் விரித்துரைக்கப்பெற்றது. ஆளுடையபிள்ளையார் அருளால் தென்னாடு சிவம்பெருகச் செங்கோல் செலுத்திய நெடுமாறனார், வட நாட்டிலிருந்து போர் வேண்டி வந்தெதிர்த்த வடபுலவேந்தரைச் சோழ நாட்டிலுள்ள நெல்வேலிப் போர்க்களத்திலே எதிரேற்றுப் பெரும்போர் செய்து பகைப்புலத்தார் வலியிழந்து தோற்றோட வெற்றி மாலை புனைந்தார். நெடுமாறர் நெல்வேலிப் போரில் வெற்றிபெற்ற திறத்தினை,

> 'நிறைக்கொண்ட சிந்தையான் நெல்வேலிவென்ற
> நின்ற சீர்நெடுமாறன் அடியார்க்கும் அடியேன்'

என நம்பியாரூரர் திருத்தொண்டத் தொகையிற் குறித்துப் போற்றியுள்ளார். வளவர்பிரான் திருமகளாராகிய மங்கையர்க் கரசியாரை மணந்து சிவபெருமானுக்கேற்ற திருத்தொண்டுகள் புரிந்து அருள்பெருக நெடுங்காலம் அரசளித்த நின்றசீர் நெடுமாற நாயனார் இறைவரருளால் சிவலோகத்தினையெய்தி இன்புற்றார்.

வாயிலார் நாயனார்

தொண்டை நாட்டிலே மயிலாப்பூரிலே வேளாளர் குலத்திலே வாயிலார்குடியிலே தோன்றியவர் வாயிலார் நாயனார். சிவனடித்தொண்டில் விருப்புடையராகிய இப் பெரியார், மறவாமையால் அமைத்த மனக்கோயிலினுள்ளே இறைவனை இருத்தி ஆண்டான் அடிமை உறவினையுணர வல்ல ஞானமாகிய திருவிளக்கினை ஏற்றி, அழியாத ஆனந்தமாகிய திருமஞ்சனம் ஆட்டி, அன்பாகிய திருவமுதினை அமைத்து வழிபாடு செய்தலாகிய அகப் பூசையினை நெடுநாட்கள் வழுவாது செய்திருந்து சிவ பெருமான் திருவடி நிழற்கீழ்ச் சென்றடைந்தார்.

முனையடுவார் நாயனார்

இவர், சோழநாட்டில் திருநீடூரில் வேளாண் குலத்தில் தோன்றியவர்; சிவபெருமான் திருவடியில் நிறைந்த பேரன்புடையவர்; பகைவர்களைப் போர்முனையில் வென்று பெற்ற பெருநிதியங்களைச் சிவனடியார்க்கு மாறாதளிக்கும் வாய்மையுடையார்; போரில் மாற்றார்க்குத் தோற்றவர்கள் தம்மிடம்வந்து துணைவேண்டினால் நடுவு நிலையில் நின்று அவர்களோடு ஆள்வினையாற் கூலிபேசிக்கொண்டு அவர்களுக்காகப் போர்செய்து பொருள்ஈட்டிச் சிவனடியார்களுக்குச் சொன்ன சொன்னபடியே நிறையக் கொடுத்து அவர்களை அறுசுவைக்கறிகளுடன் திருவமுது செய்வித்துக் கொண்டிருந்தார். அதனால் இவருக்கு முனையடுவார் என்னுந் திருப்பெயர் உண்டாயிற்று. இவரது இயற்பெயர் இதுவெனத்தெரியவில்லை. முனையடுவார் நாயனார் நெடுங் காலம் ஈசனடியார்க்கான திருப்பணி புரிந்திருந்து உமையொருபாகர் திருவருளாற் சிவலோகத்துப் பிரியாது உறையும் பெருவாழ்வு பெற்றார்.

கழற்சிங்க நாயனார்

"கடல்சூழ்ந்த உலகெலாங்காக்கின்ற பெருமான் காடவர்கோன் கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன்" என நம்பியாரூராற் போற்றப்பெற்ற இந்நாயனார், பல்லவர் குலத்திலே தோன்றியவர்; சிவனடியன்றி வேறொன்றை அறிவினிற் குறியாதவர்; வடபுலவேந்தரை வென்று அறநெறியில் நின்று நாடாளும் வேந்தராகிய இவர் ஒருநாள் திருவாரூரை அடைந்து திருக்கோயிலை வணங்கச் சென்றார். அப்பொழுது திருக்கோயிலை வலம் வந்து திருப்பூ மண்டபத்தை அடைந்த பட்டத்தரசி அங்குக் கீழே வீழ்ந்து கிடந்த மலரொன்றை எடுத்து மோந்தாள். அவள்கையிற் புதுமலரைக்கண்டு அங்கு வந்த செருத்துணையார் என்னும் சிவனடியார் 'இவள் இறைவனுக்குச் சாத்தும் மலரை மோந்தாள்' என்று வெகுண்டு அம்மலரை எடுத்து மோந்த அவள் மூக்கினைக் கத்தியால் அரிந்தார். பட்டத்தரசி கீழே வீழ்ந்து அரற்றினாள். உள்ளே பூங்கோயிலிறைவரைப் பணிந்து வெளியே வந்த கழற்சிங்கர், அரசியின் புலம்பலையறிந்து

வந்து மிகவும் வெகுண்டு 'அச்சமின்றி இக்கொடுஞ் செய்கையைச் செய்தார் யார்?' என வினவினர். அருகே நின்ற செருத்துணையார், 'இவள் இறைவர்க்குச் சாத்துதற் குரிய மலரை எடுத்து மோந்தமையால் நானே இப்படிச் செய்தேன்' என்றார். அப்போது கழற்சிங்கர் அவரை நோக்கி, 'பூவை எடுத்த கையையன்றோ முதலில் தடிதல் வேண்டும்?' என்று சொல்லித் தம் உடைவாளை உருவிப் பட்டத்தரசியின் கையைத் தடிந்தார், இத்தகைய அரிய திருத்தொண்டினைச் செய்த கழற்சிங்க நாயனார் சைவ நெறி தழைத்தோங்க அரசாண்டு சிவபெருமான் திருவடி நீழலில் அமர்ந்திருக்கும் பெருவாழ்வு பெற்றார்.

இடங்கழி நாயனார்

இவர், தில்லையம்பலத்துக்குப் பொன்வேய்ந்த ஆதித்த னுக்கு முன்னோராகச் சோழர் குடியில் தோன்றியவர்; கோனாட்டின் நலைநகராகிய கொடும்பாளூரில் தங்கியிருந்து வேளிர்குலத்து அரசினை ஏற்று ஆட்சிபுரிந்தவர்; சைவ நெறி வைதிகத்தின் தருமநெறியொடு தழைப்பத் திருக் கோயில்கள் எங்கும் வழிபாட்டு அர்ச்சனை விதிப்படி நிகழச்செய்தவர்; சிவனடியார்கள் வேண்டுவனவற்றை விரும்பிக்கொடுப்பவர். இவர் அரசுபுரியும் நாளில் சிவனடியார்க்குத் திருவமுதளிக்கும் தவமுடைய அடியார் ஒருவர், உணவமைத்தற்குரியன எங்கும் கிடைக்காமை யால் மனம் தளர்ந்து அடியாரை அமுதுசெய்வித்தலிலுள்ள பேரார்வத்தால் செய்வதறியாது அரசர்க்குரிய நெற் பண்டாரத்திலே நள்ளிரவிற் புகுந்து நெல்லைக் களவு செய்தார். அந்நிலையிற் காவலர்கள் அவரைப்பிடித்து இடங்கழியார் ஆகிய மன்னர் முன் கொண்டுவந்தார்கள். இடங்கழியார், அவரைப்பார்த்து 'நீர் ஏன் நம்முடைய நெற்பண்டாரத்தைக் கவர்ந்தீர்' என வினவினர். அது கேட்ட அடியவர் 'நான் சிவனடியார்களைத் திருவமுது செய்வித்தற்குப் பொருளில்லாமையால் இவ்வாறு செய்தேன்' என்றார். அதுகேட்டு இரங்கிய இடங்கழி நாயனார் 'எனக்கு இவரன்றோ பண்டாரம்' என்று சொல்லிப்பாராட்டிப் படைத்த நிதிப்பயன் கொள்வாராய், 'சிவனடியார்களெல்லாரும் எனது நெற்பண்டாரம் மாத்திர மன்றி நிதிப்பண்டாரங்களையும் கவர்ந்து கொள்க' என

எங்கும் பறையறைவித்தார். அருள்வேந்தராகிய இவர் தண்ணளியால் நெடுங்காலம் திருநீற்றின் ஒளிதழைப்ப அரசுபுரிந்திருந்து சிவபதம் அடைந்தார்.

செருத்துணை நாயனர்

சோழ நாட்டின் அகநாடுகளுள் ஒன்ருகிய மருகல் நாட்டைச் சேர்ந்த தஞ்சாவூரிலே வேளாளர் குலத்திலே தோன்றியவர் செருத்துணையார். இறைவன் திருவடியில் மெய்யன்புடைய சைவராகிய இவர், திருவாரூரை அடைந்து புற்றிடங்கொண்டாரைக் காலந்தோறும் போற்றித் திருத்தொண்டு புரிந்திருந்தார். அங்ஙனம் இருக்கும் நாளில் பல்லவர் கோக்கழற்சிங்கர் உரிமைப் பெருந்தேவி திருக்கோயிற் பூமண்டபத்தின் கீழ் வீழ்ந்து கிடந்த புதுமலரை எடுத்து மோந்ததைக்கண்டு 'இவள் இறைவர்க்குச் சாத்தும் புதுமலரை மோந்தாள்' என்று கொண்டு அவளது மூக்கை அரிந்தவர். இவ்வாறு உறுதிப் பணிபுரிந்து இறைவர் திருவடி நிழல் அடைந்து இறவா இன்பம் எய்தினர்.

புகழ்த்துணை நாயனர்

சோழநாட்டில் அரிசிற்கரைப்புத்தூர் எனவழங்கும் செருவிலிபுத்தூரில் சிவமறையோர்குலத்தில் தோன்றியவர் புகழ்த்துணையார். இவர் சிவாகம விதிப்படி அரிசிற் கரைப்புத்தூரில் இறைவனைப் பூசித்துவந்தார். அக் காலத்திற் பஞ்சம் உண்டாயினமையால் உணவின்றி வாட்டமுற்ற நிலையிலும் 'எம் இறைவனை வழிபடாது விடுவேனல்லேன்' என்னுந் துணிவினராய் அல்லும் பகலும் வழிபட்டு வந்தார். ஒருநாள் இறைவனுக்குத் திருமஞ்சனம் ஆட்டும்பொழுது பசிநோயினற் கைசோர்ந்து திருமஞ்சனக்குடம் இறைவன் திருமுடிமேல் விழத் திருவடியில் வீழ்ந்து அயர்ந்தார். அப்பொழுது இறைவ னருளால் உறக்கம்வர, இறைவன் கனவிலே தோன்றி 'பஞ்சம் நீங்கும் வரையும் நாம் நாடோறும் இங்கு ஒவ்வொரு காசு வைப்போம்' என்று அருள்செய்தார். புகழ்த்துணை நாயனர் துயிலுணர்ந்தெழுந்து பெற்றமுகந் தேறுவார் பீடத்தின்கீழ் ஒருகாசு இருக்கக்கண்டு அதனைக்

கைக்கொண்டு மகிழ்ந்தார். அந்நாள் முதல் எந்நாளிலும் அவ்வாறு ஒவ்வொரு காசுபெற்று இறைவனைப் பூசித்துப் பஞ்சம் நீங்கியபின்னும் நெடுநாட்கள் சிவபெருமானுக்குப் பூசனைபுரிந்து புனிதர் அடிநீழல் சேர்ந்தார்.

புகழ்த்துணை நாயனார் அரிசிற்கரைப்புத்தூர் இறைவர் பால் நாடோறும் படிக்காசு பெற்று வழிபட்ட இச் செய்தியினை,

'அலந்த அடியான் அற்றைக் கன்றேர் காசெய்திப்
புலர்ந்த காலை மாலை போற்றும் புத்தூரே' (2-63-7)

என ஞானசம்பந்தப் பிள்ளையாரும்,

'அகத்தடிமை செய்யும் அந்தணன் தான்
அரிசிற்புனல் கொண்டு வந்தாட்டுகின்றான்
மிகத்தளர்வெய்திக் குடத்தையுநும்
முடிமேல் விழுத்திட்டு வணங்குதலும்
வகுத்தவனுக்கு நித்தற்படியும்
வருமென்றொரு காசினை நின்ற நன்றிப்
புகழ்த்துணை கைபுகச் செய்துகந்தீர்
பொழிலார் திருப்புத்தூர்ப் புனிதனீரே' (7-9-6)

எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் குறித்துப் போற்றி யுள்ளார்கள்.

கோட்புலி நாயனார்

நலம்பெருகும் சோழநாட்டிலே நாட்டியத்தான் குடியில் வேளாண்குலம் பெருக வந்து தோன்றியவர் கோட்புலி நாயனார். சோழர் சேனாபதியாராகிய இவர், மன்னன்பால் தாம் ஊதியமாகப் பெற்ற பொருளைக் கொண்டு சிவாலயங்களுக்குத் திருவமுதுக்கென நெல்லை வாங்கி நெற்கூடுகளிற் சேமித்து வைக்குந் திருப் பணியைப் பல காலமாகச் செய்து வந்தார்.

இவ்வாறொழுகும் நாளில், அரசனது ஏவலினால் போர் முனையிற் செல்லும் கோட் புலியார், தம் சுற்றத் தாரை நோக்கி 'இறைவர்க்கு அமுதுபடி வைத்துள்ள இந்நெல்லை எடுத்தல் கூடாது. திருவிரையாக்கலி என்னும் ஆணை' எனத் தனித்தனி சொல்லிச் சென்றார். சில நாளிலே நாட்டிற் கடும் பஞ்சம் வந்தது. பசியால்

வருந்திய சுற்றத்தார்கள் 'நாம் உணவின்றி இறப்பதைவிட இறைவர்க்கு வைத்த நெல்லைக் கொண்டாகிலும் பிழைத்து உயிர் தாங்கியிருந்து பின்னர்க் குற்றந்தீரக் கொடுத்து விடுவோம்' என்று நெற்கூட்டைத் திறந்து நெல்லைச் செலவழித்தார்கள். அரசனுடைய பகைவரைப் போர் முனையில் வென்று அரசன்பால் நிதிக்குவைபெற்று மீண்ட கோட்புலியார், தம் சுற்றத்தார் செய்த தீமையை யுணர்ந்து அவர்கள் அறியாத வகையில் அவர்களைத் தண்டிக்க எண்ணினார். தம் மாளிகையை அடைந்து 'நம் சுற்றத்தார்க் கெல்லாம் ஆடையணிகலன் கொடுக்க அவர்களை அழைத்து வாருங்கள்' என்று அவர்களை உள்ளே அழைத்து அவர்களில் எவரும் ஓடிவிடாதபடி வாயிலிற் காவலனை நிறுத்தி வைத்துச் சிவபெருமானுக்குரிய நெல்லையுண்ட தந்தை, தாய், உடன் பிறந்தார், மனைவி, ஏவலர் முதலிய எல்லோரையும் வாளாற்கொன்று அங்குள்ள குழந்தையையும் கொல்லத் துணிந்தார். அப்பொழுது வாயில்காவலன் 'இக்குழந்தை நெல்லினலாகிய அன்னத்தை யுண்டதன்று, ஒருகுடிக்கு ஒரு பிள்ளையாகிய இதனைக் கொல்லாது அருள் செய்யும்' என வேண்டினன். 'இக்குழந்தை இந்நெல் உண்டவளுடைய முலைப்பாலை உண்டது' என்று அதை மேலே எடுத்தெறிந்து வாளால் இருதுணியாக விழ ஏற்றார். அந்நிலையில் சிவபெருமான் அன்பரெதிரே வெளிப்பட்டுத் தோன்றி 'உன்னுடைய கை வாளால் பிறவிப்பாசம் அறுத்தநின் சுற்றத்தார் பொன்னுலகின் மேலுலகம் புக்கு அணையப் புகழுடைய நீ இந்நிலையே நம்முடன் அணைவாயாக' என அருள்புரிந்து மறைந்தருளினார்.

கோட்புலி நாயனார் ஆகிய இப்பெரியார், நம்பியாரூரைப் பணிந்து தாம்பெற்ற வனப்பகை, சிங்கடி என்னும் பெண்கள் இருவரையும் பணிப்பெண்களாக ஏற்றருளும்படி வேண்ட, நம்பியாரூரர் அவ்விரு பெண்களையும் தம்முடைய பேரன்புக்குரிய மக்களாக ஏற்றுக் கொண்டு தம்மை அப்பெண்களுக்குத் தந்தையெனக் கூறி மகிழ்ந்தமை முன்னர் விளக்கப்பெற்றது.

'கூடாமன்னரைக் கூட்டத்து வென்ற கொடிறன் கோட்புலி'
(7-15-10)

எனச் சுந்தரமூர்த்திசுவாமிகள் கோட்புலியாரது போர்வீரத்தைச் சிறப்பித்துள்ளமை இங்கு நினைக்கத் தகுவதாகும்.

பத்தராய்ப் பணிவார்

ஈசனுக்கே அன்புடைய சிவனடியாரைக் கண்டால் அவருடைய சாதி முதலியன விசாரியாமல் அவர்களை இறைவனெனவே கொண்டாடி, தாய்ப் பசுவின்பின் கன்று சென்றாற் போன்று பெருவிருப்புடன் அணைந்து பணிவுடையராய் இன்னுரை பகரும் இயல்புடையவர்கள்; பேரன்பினால் சிவபெருமானை எவ்விடத்தும் யாவரும் வழிபடக் கண்டால் இனிது மகிழ்ந்து பாவனையால் நோக்கினால் பலர் காணப் பயன்பெறுபவர்; அன்பினால் யாவர்க்கும் மேம்பட்டவர்களாய்ச் சிவபெருமானையும் சிவனடியார்களையும் ஆராத காதலினால் உவகையுடன் விரும்பி வழிபடுபவர்கள்; தம் உடம்பினாற் செய்வினைகள் யாதாயினும் அவ்வினையால் உளவாகும் நற்பயன்களைச் சிவபெருமான் திருவடிக்கே உரிமை செய்து கொடுப்பவர்கள்; சிவபெருமானது புகழ்ச்செயல்களை அறிந்தார் சொல்ல விரும்பிக் கேட்குந் தன்மையராய் இறைவன் திருவடித் தாமரையினைச் சேர்வதற்கு உரியவர்கள்: ஈசனையே பணிந்து உருகி இன்பம் மிகக் களிப்பெய்தி, வாய்தழுதழுப்பக் கண்ணீர் அருவிபோற் சொரிய, மெய்ம்மயிர் சிலிர்ப்ப அன்பினால் விதிர் விதிர்க்கும் குணத்தால் மிக்கவர்கள்; நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும் மென்றாலும் துயின்றாலும் விழித்தாலும் மன்றாடும் இறைவன் திருவடிகளை மறவாத உணர்வுடையவர்கள்; சிவபெருமானுக்கு ஆட்பட்ட தம் அடிமைத் திறத்தைப் பிறர்க்குப் புலப்படுத்தி அதனாற் பயன் கொள்ளாத தூய நெஞ்சமுடையவர்கள். மேற் குறித்த எண்பெருங் குணங்களாலும் இவ்வுலகினை விளக்கும் பெருமை வாய்ந்த அடியார்களே பத்தராய்ப் பணிவார் ஆகிய திருக்கூட்டத்தாராவர்

பரமனையே பாடுவார்

தென் தமிழும் வடமொழியும் ஏனைய திசைமொழியும் ஆகியவற்றில் இறைவனையே பொருளாகக் கொண்டு இயற்றப் பெற்ற இயல் இசைப் பாடல்களை ஒன்றிய மெய்யுணர்வினோடும் இசைகற்கும் வகையால் உள்ளம் உருகிப் பாடும் அடியார்கள் பரமனையே பாடுவார் ஆவர்.

சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்

படைத்தல் முதலிய ஐந்தொழில் செய்யும் பிரமன் முதலிய ஐம்பெருங் கடவுளர்களும் இருக்கும் ஐவகைத் தாமரைப் பீடங்களையுடைய பதவிகளைக் கடந்து, அட்டாங்க யோகத்துள் இயமம் நியமம் ஆசனம் பிராணாயாமம், பிரத்தியாகாரம் என்னும் ஐந்தினையும் பயின்று சித்தத்தை ஒரு வழி நிறுத்தலாகிய தாரணையால், சுயஞ் சோதியாய் உள்ள சிவம் ஞானஒளி வீசி விளங்கும் நாதாந்தத்தில் சித்தத்தை நிறுத்துதலினாலே சிவத்தினிடத்தே நிலைபெற்ற சித்தத்தையுடையவர்கள் சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார் எனப் போற்றப் பெறுவர். இவர்கள் வேத காரணராகிய அம்பலவர் திருவடித்தொண்டின் வழி நின்று அம்முதல்வரை அடைந்தவராவர்.

திருவாரூர்ப் பிறந்தார்கள்

அருவமாயும் உருவமாயும் எல்லாப்பொருளாயும் நின்ற பெருமானும் உமையம்மை மணவாளனும் மகிழ்ந்து வீற்றிருந்தருளும் திருவாரூர்த் தலத்திலே பிறக்கும்பேறு பெற்றவர்கள் எல்லோரும் திருக்கயிலை வீற்றிருந்த சிவபெருமான் திருக்கணத்தாராவர். அவர்கள் திருவடிகளை வணங்கி ஒன்றிய மனத்தினையுடையார்க்கு உயர்ந்த வீட்டு நெறி அணிமையுடையதாகும்.

திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லாரும் சிவகண நாதர்கள் என்பதனைச் சிவபெருமான் நமிநந்தியடிகள் நாயனார்க்குப் புலப்படுத்தியருளிய செய்தி முன்னர்க் கூறப்பெற்றது.

முப்பொழுதுந் திருமேனி தீண்டுவார்

எக்காலத்தும் உயிர்களுக்கு இனிமையே புரிந்தருள்வாராகிய சிவபெருமானது திருவருளினாலே பெருகி உண்மையான சிவாகம ஞான நெறியின்படி வந்த முறைமை தவறாமல் அவ்வக் காலங்கள் தோறும் வழிபாட்டில் ஆசைமிகும் பேரன்புடையராய் நாள்தோறும் காலை நண்பகல் மாலை என்னும் மூன்று காலங்களிலும்

திருக்கோயில்களிற் சிவலிங்கத் திருமேனியைத் தீண்டி அருச்சிப்பவர்கள் ஆதிசைவர்களாகிய முனிவர்கள். முப்பொழுதும் இறந்த காலம் நிகழ் காலம் எதிர் காலமாகிய எக்காலத்திலும் வழி வழியாகச் சிவபெருமானது அகம்படித் தொண்டில் விரும்பிய வழிபாட்டு அருச்சனைகள் சிவமறையோர்களுக்கே உரியனவாகும். அப்பெருந்தகையாளர்களின் பெருமை சொல்லாற் புகழ்தற்கு எளியதன்று.

முழுநீறு பூசிய முனிவர்

குலப் பிறப்பிற்கேற்ற தலைமையான அறவொழுக்கத்தை உடையவர்களாய்த் தத்துவ நெறியினை நன்குணர்ந்து, நீதி நெறியிற் சிறிதும் தவறாதவர்களாய்த் தொன்றுதொட்டு வரும் மும்மலங்களை அறுத்த வாய்மையையுடைய அரு முனிவர்கள் நியமம் தவறாது செய்யும் நித்தியாக்கினியில் விளைத்தெடுத்த திருநீற்றினைப் புதிய பாத்திரத்தில் வைத்துக்கொண்டு சிவபெருமானை வணங்கி அவரது திருவருள் வண்ணமாகிய திருநீற்றினை உடல் முழுதும் பூசிக்கொள்வர். இப்பெரியோர்களே முழுநீறு பூசிய முனிவர் எனப்போற்றப் பெறும் திருக்கூட்டத்தவராவார்கள்.

இத்திருநீறு கற்பம், அநுகற்பம், உபகற்பம் என மூவகைப்படும். கன்றீன்ற பசுவின் சாணத்தைச் சத்தியோசாத மந்திரத்தினால் ஏற்றுச் சிவமந்திரங்களால் உண்டாக்கப்பட்ட சிவாக்கினியில் இட்டெடுத்த திருநீறு கற்பம் எனப்படும். காட்டில் உலர்ந்த பசுச் சாணத்தைக் கொண்டுவந்து கோசலத்தை விட்டுப் பிசைந்து அத்திர மந்திரம் ஓதி உண்டையாகப் பிடித்து ஓமத்தீயில் இட்டுச் சிறப்புற வெந்தநீறு அநுகற்பம் எனப்படும். காட்டில் மரங்கள் பற்றி எரிந்தமையால் வெந்த நீறும் கொட்டில் முதலிய இடவகைகள் தீப்பற்றிக்கொள்ள வெந்த நீறும், செங்கற்களைச் சுட்ட தீயினால் விளைந்த நீறும் ஆகிய இவற்றை உண்டையாக்கித் திருமடங்களில் விளங்கும் சிவாக்கினியினால் விதிப்படி நீறுக்கப்பட்டவை உபகற்பமெனப்படும். இவ்வாறு அமைந்த திருநீற்றினை இறைவன் முன்னும் தீயின் முன்னும் குரு முன்னும் தூய்மையற்ற நிலத்தும் வழிநடக்கும்போதும் அணியாமல் ஓரிடத்து

அமைதியாக இருந்து சிந்தாமற் பூசிக்கொள்ளுதல் வேண்டும் என்றும், நீரிற்குழைக்காமல் பொடியாய்ப் பூசுதல், நீரிற் குழைத்துப் பூசுமிடத்து மூன்று கீற்றுகவும் பிறைவடிவமாகவும் முக்கோணமாகவும் வட்டமாகவும் பூசுதல் எனத் திருநீறணியும் திறம் பல வகைப்படும் என்றும் கூறுவர் பெரியோர். உடல் முழுவதும் திருநீறு பூசிய முனிவர்களே முழுநீறு பூசிய முனிவர் எனப் போற்றப்பெறுவர்.

அப்பாலும் அடிச்சார்ந்தார்

சேரசோழ பாண்டியர்களாகிய மூவேந்தர்க்கும் உரிய தமிழ்நாட்டுக்கு அப்பாலுள்ள பிறநாடுகளிற் பிறந்து சிவ பெருமான் திருவடிகளை அடைந்தவர்களும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய திருத்தொண்டத் தொகையிலே போற்றப்பெற்ற சிவனடியார்கள் வாழ்ந்த காலத்துக்கு முன்னும் பின்னும் தோன்றிச் சிவபெருமானுடைய திருவடிகளைச் சார்ந்தவர்களும் அப்பாலும் அடிச்சார்ந்தார் என்னும் திருக்கூட்டத்தினராவர்.

பூசலார் நாயனர்

தொண்டை நாட்டில் திருநின்றவூரிலே மறையவர் குலத்தில் தோன்றியவர் பூசலார் என்னும் பெருந்தகை யார். இவர் சிவனடியாராகிய அன்பர்க்கு ஏற்றபணி செய்தலே பிறவிப்பயன் எனக்கொண்டு பொருள்தேடி அடியார்க்கு அளித்து வந்தார். சிவபெருமானுக்குத் திருக் கோயில் அமைத்துப் பணிசெய்ய விரும்பிய இவர், தம் மிடத்துப் பொருள் இல்லாமையால் அதற்குரிய பொருளை வருந்தித் தேடியும் பெற இயலாதவராயினர். இந்நிலையில் மனத்தினலே சிவபெருமானுக்குத் திருக்கோயில் அமைக்க எண்ணினர். மனத்தின்கண் சிறிதுசிறிதாகப் பெரும் பொருள் சேர்த்தார். திருப்பணிக்கு வேண்டிய கல் மரம் முதலிய சாதனங்களையும் பணிசெய்தற்குரிய தச்சர் முதலிய பணியாளர்களையும் தம்மனத்தில் தேடிக் கொண்டார். நல்லநாள் பார்த்துத் திருக்கோயிற் பணியைத் தம்மனத்தி னுள்ளே தொடங்கி இரவிலும் துயிலாமல் அடிப்படை முதல் உபானம் முதலிய வரிசைகளை அமைத்து உரிய

அளவுப்படி விமானமும் சிகரமும் அமைத்து அதன்மேல் தூபியும் நட்டனர். சுதைவேலையை முடித்து அக்கோயிலி னுள்ளே கிணறு திருக்குளம் மதில்முதலாக எல்லாம் வகுத்தமைத்து இவ்வாறு தம்மனத்தில் உருவாகிய திருக் கோயிலினுள்ளே சிவபெருமானை எழுந்தருளச் செய்வதற் கேற்ற நல்லநாளும் வேளையும் நிச்சயித்தனர்.

இவரது திருப்பணி இவ்வாறு நிகழ்ந்து கொண்டிருக் கும் நிலையில், காடவர்கோனாகிய வேந்தர்பெருமான் காஞ்சி நகரத்திலே இறைவனுக்குத் திருக்கற்றளி அமைத்துத் தன் பெரும்பொருள்முழுவதும் அத்திருக்கோயிற் பூசனைக் கென்று வகுத்துத் தான் அமைத்த கற்றளியிலே சிவபெரு மானை எழுந்தருளுவித்தற்குப் பூசலார் மனத்தில் வகுத்த அந்த நாளையே குறித்தனன். பூசலாரது அன்பின் திறத்தை உலகத்தார்க்கு அறிவிக்கத் திருவுளங் கொண்ட சிவபெருமான், அந்தநாளின் முதல்நாளிரவில் காடவர்கோமான்முன் கனவில் எழுந்தருளி 'நின்ற வூர்ப்பூசல் அன்பன் நெடிதுநாள் நினைந்து செய்த நன்மை நீடு ஆலயத்து நாளை நாம் புகுவோம்; நீஇங்குச் செய்யத் துணிந்த தாபனத்தை நாளையதினத்தில் வைத்துக் கொள்ளாது பின்னர் மற்றொரு நாளிற் செய்வாயாக' என்று பணித்தருளி மறைந்தருளினார்.

பல்லவர்கோன், துயிலுணர்ந்தெழுந்து இறைவர் உளமுவக்கும் வண்ணம் பெரியதிருக்கோயிலை அமைத்த பெருந்தகையாரைச் சென்று காணவிரும்பித் திருநின்ற வூரை அடைந்தான். அங்கு அருகணைந்தவர்களை நோக்கி, பூசலார் அமைத்த கோயில் எங்கே உள்ளது? என்று வினவினான். அதுகேட்ட நின்றவூர் மக்கள், 'பூசலார் இவ்வூரிற் கோயில் எதுவும் கட்டவில்லை' என்றனர். மன்னன் அவ்வூர் மறையவர்களையழைத்து 'பூசலார் யார்' எனக் கேட்டறிந்து, ஆசில் வேதியராகிய அவர் இருக்கு மிடத்திற்குத் தானே சென்று அவரை வணங்கி, 'தேவரீர் அமைத்த திருக்கோயில் யாது? அக்கோயிலில் சிவபெரு மானை எழுந்தருளச் செய்யும்நாள் இந்தநாள் என்று இறைவர் தெரிவித்தருளத் தெரிந்து உம்மைக்கண்டு பணிதற்கு வந்தேன்' என்றான். பூசலார், அரசன் உரை கேட்டு மருண்டு, 'இறைவர் என்னையும் பொருளாக அருள்செய்தாராயின் அகக்கோயிலின் பெருமை எத்தகை

யது ' என்று தமக்குள்ளே சிந்தித்துத் தாம் மனத்தால் முயன்று செய்த திருக்கோயிலின் அமைப்பினை மன்னனுக்கு விளங்க எடுத்துரைத்தார். அரசன் அதிசயித்துப் பூசலாரை நிலமுறத் தாழ்ந்து வணங்கித் தனது நகருக்குச்சென்றான்.

பூசலார் நாயனார் தாம் கட்டிய மனக்கோயிலிலே குறித்த நற்பொழுதில் சிவபெருமானைத் தாபித்துப் பூசனைகள் எல்லாம் பெருஞ்சிறப்புடன் பலநாட்கள் பேணிச் செய்திருந்து சிவபெருமான் திருவடிநீழ லடைந்தார்.

மங்கையர்க்கரசியார்

'வரிவளையாள் மானி' எனத் திருத்தொண்டத் தொகையிற் குறிக்கப்பெற்ற இவ்வம்மையார், வளவர் திருக்குலத்தில் மணிமுடிச் சோழன் மகளாராகத் தோன்றியவர்; செந்தாமரைமலரில் வீற்றிருக்கும் திருமகள் எனத்தகும் பொலிவுடையார்; பாண்டியர் குலத்துக்கு நேர்ந்த பழியினைத் தீர்த்த தெய்வப்பாவை; திருஞான சம்பந்தப் பிள்ளையார் திருவருளினாலே செந்தமிழ்ப் பாண்டி நாட்டின் புறச்சமய இடர் நீக்கித் திருநீற்றினைப் பரவச் செய்தவர்; புகலி வேந்தராகிய ஆளுடையபிள்ளையார் தூய திருவாக்கினால், 'மங்கையர்க்கரசி வளவர்கோன் பாவை' எனத் திருப்பதிகத்திற் சிறப்பித்துப் பாராட்டப் பெறும் பெருந்தவத்தினையுடையார். பாண்டிமாதேவியா ராகிய இவ்வம்மையார் தம் கணவர் நின்றசீர் நெடுமாற னுக்குச் சைவ வழித்துணையாய் நெடுங்காலம் வாழ்ந்து தூயநன்னெறியாகியசிவநெறியில் நின்று அவரோடுங்கூட ஈசர்திருவடி நிழற்கீழ் அமர்ந்திருக்கும் நற்பேறுபெற்றார்.

ஆளுடைய பிள்ளையார் தாம்பாடிய 'மங்கையர்க்கரசி' என்னும் முதற்குறிப்புடைய திருவாலவாய்த் திருப்பதி கத்தின் 1, 3, 5, 7, 9-ஆம் திருப்பாடல்களில் மங்கையர்க் கரசியார் திருவாலவாய்ப் பெருமானைப் பணிந்து போற்றிச் சிவநெறி வளர்த்த சீர்த்தியினை உளமுவந்து பாராட்டி யுள்ளமை இங்கு நினைக்கத்தகுவதாகும்.

நேச நாயனார்

காம்பீலி என்னும் பழம்பதியில் அறுவையர் (சாலியர்) குலத்திலே தோன்றியவர் நேசநாயனார். தங்கள்தொழில்

மரபில் மேம்பாடுபெற்ற இந்நாயனார், சிவனடியார் திருவடிகளைச் சென்னியிற் கொண்டு போற்றும் புகழுடையார். இவர் தம்முடைய மனத்தின் செய்கையைச் சிவபிரானது திருவடிமலர்க்கு உரியதாக்கி, வாக்கின் செய்கையைத் திருவைந்தெழுத்துக்கு உரியதாக்கி, கைத்தொழிலின் செய்கையைச் சிவனடியார்களுக்கு ஆக்குவாராகி உடையும் கீளும் கோவணமும் நெய்து, தம்பால்வரும் சிவனடியார்களுக்கு இடையருது கொடுத்து நாளும் அவ்வடியார் திருவடிகளை இறைஞ்சியேத்தி அரனடிநீழல் சேர்ந்தார்.

இந்நாயனார் அவதரித்த காம்பீலி என்ற ஊர் பல்லாரி ஜில்லாவிலுள்ள காம்பீலி தாலுகாவின் தலைநகரமாகும்.

கோச் செங்கட் சோழநாயனார்

தன்னை அடைக்கலம்புக்க புருவுக்காக அதன் எடைக்குத் தகத் தனது உடம்பினை அரிந்து கொடுத்துத் துலையில் ஏறிய பெருமை வாய்ந்த சிபி மன்னன் தோன்றிய சோழர் குடியினர்க்கு உரிமையுடைய சோழநாட்டிலே காவிரிக்கரையில் சந்திர தீர்த்தத்தின் அருகிற் பெரு மரங்கள் நிறைந்த நீண்ட குளிர்ந்த சோலையொன்றுளது. அதன்கண் வெண்ணாவல் மரத்தடியில் வெளிப்பட்டருளிய சிவலிங்கத் திருமேனியைக் கண்டு பெருந்தவத்தையுடைய வெள்ளை யானை தன் துதிக்கையினால் நன்னீரைமுகந்து நாள்தோறும் திருமஞ்சனஞ் செய்து மலர்தூவி வழிபாடு செய்தது. அதனால் அவ்விடத்திற்குத் திரு ஆனைக்கா என்னும் பெயருண்டாயிற்று. அங்கே மெய்யுணர்விற் சிறந்த சிலந்தியொன்று இறைவன் திருமுடிமேல் சருகு முதலியன உதிராவண்ணம் தன் வாயின்நூலினால் மேற் கட்டி போன்ற அழகிய பந்தர் அமைத்தது. யானை வழிபடச் சென்றபோது சிலந்தி வாய்நீர் நூலால் அமைத்த அப்பந்தரினைத் தூய்மையற்றதென்று நினைத்துச் சிதைத்தது. அது கண்ட சிலந்தி யானையின் கைசுழன்றமையாற் பந்தர் சிதைந்ததென்றெண்ணி மீளவும் தன்வாய் நூலால் அழகியபந்தர் செய்தது. அதனை மறுநாளும் யானை அழித்துப் போக்கியது. அதுகண்ட சிலந்தி 'இறைவர் திருமுடிமேற் சருகுமுதலியன விழாதபடி நான்வருந்தி யிழைத்த நூற்பந்தரை இவ்வாறு அழிப்பதோ? என வெகுண்டு யானையின் துதிக்கையினுள்ளே புகுந்து

கடித்தது. அந்நிலையில் வருத்தம் பொறுத யானை தன் துதிக் கையினை நிலத்தில் மோதி அறைந்து வீழ்ந்திறந்தது. அதன் துதிக்கையினுள்ளே புகுந்து கடித்த சிலந்தியும் உயிர் துறந்தது. ஆனைக்கா இறைவர் அருள்புரியும் நெறி யால் அவ்வெள்ளையானைக்கு வீடுபேறளித்தருளினர்.

அக்காலத்திற் சோழ மன்னனாகிய சுபதேவன் என் பான் தன்பட்டத்தரசி கமலவதி என்பவளுடன் திருத் தில்லை சார்ந்து கூத்தப்பெருமானை வழிபட்டிருந்தனன். நெடுங்காலமாக மக்கட் பேறில்லாத அவ்விருவரும் இறை வரை வழிபட்டுப் போற்றிய நிலையில் இறைவர் அவர்கட்கு அருள்புரிந்தார். அதன்பயனாகக் கமலவதி கருவுற்றாள். திருவானைக்காவிற் பெருமானுக்குப் பந்தரிழைத்து வழி பட்ட சிலந்தி சோழன்மனைவி கமலவதியின் கருப்பத்துள் மகவாய்ச் சார்ந்தது. கருமுதிர்ந்து மகப்பெறும் வேளைவந்த போது, 'இன்னும் ஒருநாழிகை கழித்துக் குழந்தைபிறக்கு மானால் இக்குழந்தை மூன்றுலகமும் அரசாளும்' எனச் சோதிடர்கள் கூறினார்கள். அச்சொற் கேட்ட கமலவதி 'அவ்வாறு ஒரு நாழிகை கழித்துப் பிள்ளை பிறக்கும்படி என்காலைப் பிணித்துத் தலைகீழாக மேலே தூக்கி நிறுத் துங்கள்' என்று சொல்ல, அவ்வாறே செய்தனர். குறித்த வண்ணம் ஒரு நாழிகை கழித்து ஆண் குழந்தை பிறந்தது. கால நீடிப்பால் அக்குழந்தையின் கண்கள் சிவந்திருந் தன. ஈன்ற தாய் அக்குழந்தையைக் கண்டு 'என் கோச் செங்கணானே' என அருமை தோன்ற அழைத்து உடனே உயிர் நீங்கினாள். மன்னன் தன் குழந்தையைத் தன் உயிரெனக் காத்து வளர்த்து உரிய பருவத்தில் நாடாள் வேந்தனாக மைந்தனுக்கு முடிசூட்டித் தான் தவநெறியைச் சார்ந்து சிவலோகஞ் சார்ந்தான்.

கோச்செங்கட் சோழர், சிவபெருமானது திருவருளி னாலே முன்னைப்பிறப்பின் உணர்வொடு பிறந்து சைவத் திருநெறி தழைக்கத் தம் நாட்டில் சிவாலயங்கள் பலவற்றைக் கட்டுந் திருப்பணியினை மேற்கொண்டார்; திருவானைக்காவில் தாம் முன்னைப் பிறப்பில் சிலந்தியாக இருந்து இறைவர் திருமுடிமேல் நூலாற் பந்தரிழைத்து அருள் பெற்ற வரலாற்றினை அறிந்தவராதலால், அங்கு இறைவன் வீற்றிருந்தருளும் ஞானச் சார்புடைய வெண்

ணுவல் மரத்தினுடனே கூடத் தம்பெருமான் வீற்றிருந் தருளும் நிலையில் அதனைப் பெருந்திருக்கோயிலாக அமைத் தார். அமைச்சர்களை ஏவிச் சோழ நாட்டின் உள்நாடுகள் தோறும் சிவபெருமான் அமர்ந்தருளும் அழகிய திருக் கோயில்கள் பலவற்றை அமைத்து அக்கோயில்களில் நிகழும் பூசனைக்கு வேண்டிய அமுதுபடி முதலான படித்தரங்களுக்குப் பெரும்பொருள் வகுத்துச் செங்கோல் முறையே நாட்டினை ஆட்சிபுரிந்தார். பின்னர் இறைவன் திருநடம் இயற்றும் தில்லைப்பதியை அடைந்து பொன்னம் பலத்தே ஆடல்புரியும் பெருமான் திருவடிகளை வணங்கிப் போற்றி அங்குத் தில்லைவாழந்தணர்களுக்குத் திரு மாளிகைகள் கட்டுவித்துப் பின்னும் பல திருப்பணிகளைச் செய்துகொண்டிருந்து தில்லையம்பலவாணர் திருவடிநீழலை அடைந்தார்.

திருவானைக்காவில் தன் வாயின் நூலால் திருநிழற் பந்தர் செய்து வழிபட்ட சிலந்தியைச் சிவபெருமான் சோழர் குலத்திற் கோச்செங்கணுனைப் பிறப்பித்தருளிய இச்செய்தியை,

"சிலந்தி செங்கட் சோழனுகச் செய்தான்" (2-63-7)

எனத் திருஞானசம்பந்தரும்,

"சிலந்தியும் ஆனைக்காவிற் திருநிழற்பந்தர் செய்து
உலந்தவ ணிறந்த போதே கோச்செங்கணுனுமாகக்
கலந்தநீர்க் காவிரிசூழ் சோணுட்டுச் சோழர் தங்கள்
குலந்தனிற் பிறப்பித்திட்டார் குறுக்கை வீரட்டனுரே"
(4-49-4)

எனத் திருநாவுக்கரசரும்,

"தெருண்ட வாயிடை நூல்கொண்டு சிலந்தி
சித்திரப் பந்தர் சிக்கென வியற்றச்
சுருண்ட செஞ்சடையாய் அது தன்னைச்
சோழனுக்கிய தொடர்ச்சிகண் டடைந்தேன்" (7-66-2)

"திருவும் வண்மையுந் திண்டிற லரசும்
சிலந்தியார் செய்த செய்பணி கண்டு
மருவுகோச் செங்கணுன் றனக்களித்த
வார்த்தைகேட்டு நுன்மலரடியடைந்தேன்" (7-65-1)

எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் போற்றியுள்ளமை காணலாம். திருவம்பர்ப் பெருந்திருக்கோயில், வைகல்

மாடக்கோயில், தண்டலை நீணெறி, நன்னிலத்துப் பெருங் கோயில் முதலிய மாடக்கோயில்களைத் தமிழகத்தில் முதன் முதல் கட்டிய பெருமை கோச்செங்கட் சோழர்க்கே உரியதாகும். கோச்செங்கட் சோழநாயனார் தமிழ்நாடு முழுவதும் சிவபெருமானை வழிபடுதற்கென எழுபது மாடக் கோயில்களை அமைத்தார் என்பதும், சிவனடியாராகிய அவர் திருமாலுக்கும் திருநறையூரில் மணிமாடம் என்ற திருக்கோயிலைக் கட்டினார் என்பதும்,

"இருக்கிலங்கு திருமொழிவாய் எண்தோள் ஈசற்கு
எழில்மாடம் எழுபது செய்து உலகம் ஆண்ட
திருக்குலத்து வளச் சோழன் சேர்ந்த கோயில்
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே"
(பெரிய திருமொழி 6-6-8)

எனவரும் திருமங்கையாழ்வார் அருளிச் செயலால் அறியப் படும்.

சங்க காலச் சோழ மன்னருள் ஒருவராகிய கோச்செங் கட் சோழர் சேரமான் கணைக்காலிரும்பொறையை வென்று சிறைப்படுத்தியபொழுது பொய்கையார் என்னும் புலவர் களவழி நாற்பது என்னும் பனுவலைப் பாடிச் சேரனைச் சிறையினின்றும் விடுவித்தார் என்பது, புறநானூறு 74-ஆம் பாடலுக்கமைந்த உரைக்குறிப்பினாலும்,

"களவழிக் கவிதை பொய்கையுரை செய்ய உதியன்
கால்வழித் தளையை வெட்டியர சிட்டவவனும்"

எனவரும் கலிங்கத்துப் பரணியாலும் உணரப்படும்.

சோழர் குலத்தோன்றலாகிய கோச்செங்கட் சோழர் தமக்குரிய சோழ நாட்டுடன் பாண்டியர்க்குரிய தென்னாட் டையும் கைக்கொண்டு வேப்பமலர் மாலை சூடி ஆட்சி புரிந்தார் என்பது,

"தென்னவனா யுலகாண்ட செங்கணாற் கடியேன்"

எனவரும் திருத்தொண்டத் தொகைத் தொடராலும் அதற்கு வகையாகத் திருவந்தாதி பாடிய நம்பியாண்டார் நம்பிகள், 'நிம்ப நறுந்தொங்கற் கோச்செங்கணான்' எனக் குறிப்பிட்டுரைக்கும் அடைமொழியாலும் உய்த்துணரப் படும்.

திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனுர்

நடு நாட்டிலே திருவெருக்கத்தம்புலியூரிலே யாழின் வழியே இன்னிசை வளர்க்கும் பெரும்பாணர்குலத்திற் பிறந்தவர் திருநீலகண்ட யாழ்ப்பாணர். இவர் சிவபெருமானுடைய திருப்புகழை யாழிலிட்டு இசைப்பவராகி ஏழிசையில் வல்ல தம் மனைவியார் மதங்க சூளாமணியாருடன் சோழ நாட்டிலுள்ள திருத்தலங்களையிறைஞ்சிப் பாண்டி நாட்டின் தலைநகராகிய மதுரையையடைந்து திருவாலவாய்த் திருக்கோயில் வாயிலின்முன் நின்று இறைவரது பொருள்சேர் புகழ்த்திறங்களை யாழிலிட்டு இசைத்துப் போற்றினுர். அவ்வின்னிசையைக் கேட்டு மகிழ்ந்த ஆலவாய் இறைவர், அன்றிரவு தம் தொண்டர்க்கெல்லாம் கனவில் தோன்றித் திருநீலகண்டப்பெரும்பாணரைத் தமது திருமுன்பு கொண்டு புகும்படி பணித்தருளினுர். அவ்வாறே பாணனுர்க்கும் உணர்த்தியருளினுர். இறைவன் பணித்தவண்ணம் திருநீலகண்டப்பாணர் திருவாலவாய்த் திருக்கோயிலுள் இறைவன் திருமுன்பு புகுந்திருந்து அவரது மெய்ப்புகழை யாழிலிட்டு இசைத்துப் போற்றினுர். தரையினிற் சீதம் தாக்கில் சந்தயாழ் நரம்பு தளர்ந்து நெகிழும் என்று பாணர்க்குப் பலகையிடும்படி இறைவர் அசரீரி வாக்கினுல் அருள் செய்தார். அவ்வாறே தொண்டர்கள் பாணர்க்குப் பொற்பலகை இட்டார்கள். பாணரும் பொற்பலகையில் ஏறியமர்ந்து உமையொருபாகர் வண்ணங்களை உலகெலாம் அறிய இசைத்துப்போற்றினுர்.

ஆலவாயிறைவரைப் போற்றி யருள்பெற்ற பெரும்பாணர் பல தலங்களையும் வழிபட்டுத் திருவாரூரையணைந்து தமது குலமரபின்படி கோயில் வாயிலின் முன் நின்று இறைவர் புகழ்த்திறங்களை யாழிலிட்டு இசைத்தார். பாணரது இன்னிசைக்கு உவந்த ஆரூரண்ணலார், பாணர் உட்சென்று வழிபடுவதற்காக வடதிசையில் வேறொரு வாயில் வகுத்தருளினுர். பெரும் பாணர் அவ்வாயிலின் வழியே புகுந்து ஆரூர்த்திருமூலட்டானத்து அமர்ந்த இறைவர்முன் சென்று வணங்கி மகிழ்ந்தார். பின்பு பல தலங்களையும் பணிந்து போந்து ஆளுடைய பிள்ளையாரை வணங்கும் விருப்புடன் காழிப்பதியை அடைந்தார். திருஞானசம்பந்தப் பிள்ளையார் திருநீலகண்டப் பெரும்

பாணர்க்குத் தக்கவாறு சிறப்புச் செய்தருளித் தாம் பாடியருளுந் திருப்பதிகங்களை யாழிலிட்டு இசைத்துத் தம்மைப் பிரியாதுடனிருக்கும் பேற்றினை வழங்கியருளினுர். அவ்வாறு ஆளுடைய பிள்ளையாருடன் சிவபெருமானுறையும் திருத்தலங்களை வணங்கி இன்னிசைத் திருத்தொண்டு புரிந்து வரும் திருநீலகண்ட யாழ்ப்பாணர், தமது மனைவியார் மதங்க சூளாமணியாருடன் திருநல்லூர்ப் பெருமணத்தில் ஆளுடைய பிள்ளையார் திருமணத்தைக் கண்டு அவருடனே கூட அடியார் திருக்கூட்டத்துடன் ஈறில்பெருஞ் சோதியினுள்ளே புகுந்து ஈறிலாப் பேரின்ப வாழ்வு பெற்ருர்.

திருநீலகண்ட யாழ்ப்பாணர் வாசித்த யாழ்க்கருவி பதினுன்கு நரம்புகளையுடைய 'செம்முறைக் கேள்வி' என்னும் சகோட யாழாகும். ஆசிரியர் சேக்கிழார் திருநீலகண்டப் பெரும்பாணரைச் 'சகோட யாழ்த்தலைவர்' எனக் குறித்துள்ளார். திருவாலவாயிறைவர் திருநீலகண்ட யாழ்ப்பாணருக்கு அருளிய சிறப்பினை ஞானசம்பந்தப் பிள்ளையார் சமணரை வென்று தென்னவன் கூனிமிர்த்தருளியபின் ஆலவாய்ப் பெருமானைப் பரவிப் பாடிய திருவியமகப் பதிகத்தில்,

'தக்க பூமனைச் சுற்றக் கருளொடே
தார முய்த்தது பாணர்க் கருளொடே'

என்ற தொடரிற் போற்றிய செய்தி பெரிய புராணத்தில் திருஞானசம்பந்தர் புராணத்தில் விளக்கப்பெற்றது. திருநீலகண்டப் பெரும்பாணர் பத்திமையால் இசைபாட இறைவன் அவர்க்கு அருள் புரிந்த செய்தியை,

"பாணனிசை பத்திமையாற் பாடுதலும் பரிந்தளித்தான்
கோணலிளம் பிறைச் சென்னிக் கோளிலியெம் பெருமானே"
(1-62-9)

எனவரும் தொடரில் ஆளுடைய பிள்ளையார் குறித்துப் போற்றியுள்ளமை காணலாம்.

சடைய நாயனுர்

திருநாவலூரிலே ஆதி சைவ மரபிலே தோன்றியவர் சடையனுர். இவர் இசை ஞானியாரை மணந்து உலகமெலாம் மெய்ஞ்ஞான ஒளியைப் பரப்பும் நம்பியாரூரரை மகவாகப் பெற்றுத் தந்த பெருமையையுடையவர்.

இசை ஞானியார்

சடைய நாயனாரது உரிமைத் திருமனைவியாராகிய இசை ஞானியம்மையார், சைவ முதல்வராகிய ஆளுடைய நம்பிகளைப் பெற்ற பெருமையுடையவர்; திருவாரூர் இறைவர் திருவடிகளை மறவாத நெஞ்சமுடையவர்.

சுந்தரமூர்த்தி சுவாமிகளின் தாயாராகிய இசை ஞானியார் கமலாபுரத்தில் (திருவாரூரில்) கௌதம கோத்திரத் தவரான ஞானசிவாசாரியார் என்பவருடைய மகள் என்று திருவாரூர்க் கல்வெட்டொன்றிற் குறிக்கப்பெற்றுளது.[1]

திருத்தொண்டர் புராணத்திற் போற்றப்பெற்ற நாயன்மார்களின் காலம்

நாயன் என்பது தலைவன் என்ற பொருளில் வழங்கும் சொல். 'நாயனை அடியான் ஏவும் காரியம் நன்று' என இச்சொல்லை இப்பொருளிற் சேக்கிழாரடிகள் வழங்கி யுள்ளார். நாயன் என்னும் சொல் உயர்த்தற்கண் விகுதியாகிய ஆர்விகுதியைப்பெற்று நாயனார் என வழங்கியது. நாயனார் என்னும் பெயர் எல்லாம் வல்ல சிவபெருமானைக் குறித்து வழங்கிய சிறப்பினதாகும்.

'தேயநாதன் சிராப்பள்ளிமேவிய
நாயனாரென நம் வினை நாசமே.'

எனத் திருநாவுக்கரசர் சிராப்பள்ளியிறைவரை நாயனார் என்ற பெயராற் போற்றியுள்ளார். தலைமைபற்றிச் சிவபெருமானுக்கு வழங்கிய இப்பெயர் இறைவன்பாற் பேரன்புடையராய்ச் சித்தஞ் சிவமாகப் பெற்ற சிவனடி யார்கள் அறுபத்து மூவர்க்கும் உரியதாய் வழங்கப் பெறுவதாயிற்று.

திருத்தொண்டத் தொகையிற் போற்றப்பெறும் நாயன்மார்களாகிய அறுபத்துமூவர் வாழ்ந்தகாலம், கடைச் சங்ககாலத்தின் இறுதிமுதல் இரண்டாம் நரசிங்க வர்மனாகிய இராசசிங்க பல்லவன் வாழ்ந்த எட்டாம் நூற்றாண்டு முடியவுள்ள காலப்பகுதியாகும்.

1. தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதி II, பகுதி II எண். 38

'தென்னவனாயுலகாண்ட செங்கணாற் கடியேன்'

எனப் போற்றப்பெற்ற கோச்செங்கட் சோழர் சங்க காலத்தில் வாழ்ந்த சோழமன்னர் என்பதும், அவ்வேந்தர் பெருமான் சேரமான் கணைக்கா லிரும்பொறையொடு பொருது வென்று அம்மன்னனைக் குடவாயிலிற் சிறைப் படுத்தியவர் என்பதும், பொய்கையார் என்னும் புலவர் சேரமன்னனைச் சிறைவீடு செய்தற்பொருட்டுச் சோழரது போர்க்கள வெற்றியைப் புகழ்ந்து 'களவழி நாற்பது' என்னும் பனுவலைப்பாடினார் என்பதும் குடவாயிலிற் சிறைப்பட்டிருந்த சேரமான் கணைக்காலிரும்பொறை சிறைக்காவலனைத் தண்ணீர்தாவெனக் கேட்டு அவன் காலந்தாழ்த்துக்கொணர அத்தண்ணீரை யுண்ணாது பாடிய 74-ஆம் புறப்பாடலாலும் அதன் அடிக்குறிப்பினாலும் கலிங்கத்துப்பரணி மூவருலா முதலிய பிற்கால வரலாற்று இலக்கியங்களாலும் நன்குணரப்படும்.

கோச் செங்கணான் என்னும் சோழ மன்னனுக்கு 'நல்லடி' என்னும் பெயருடைய மைந்தனொருவன் இருந்தான் என்ற செய்தி திருவாலங்காட்டுச் செப்பேட்டிற் குறிக்கப்பெற்றுள்ளது. நல்லடி என்னும் மன்னனைப் பற்றிய குறிப்பு,

'நற்றேர்க், கடும்பகட்டியானைச் சோழர் மருகன்
நெடுங்கதிர் நெல்லின் வல்லங்கிழவோன்
நல்லடியுள்ளானாகவும்' (அகம் - 356)

எனப் பரணர் பாடிய அகநானூற்றுப்பாடலிற் காணப் படுகிறது. எனவே கோச்செங்கட் சோழர் சங்ககாலத்தவர் என்பது நன்கு விளங்கும். அவ்வேந்தர் பெருமான் தமிழகத்தில் முதன்முதற்கட்டிய மாடக்கோயில்களைப் பின்வந்த தேவார ஆசிரியர்கள் மூவரும் திருமங்கை யாழ்வாரும் குறித்துப் போற்றியுள்ளமை முன்னர்க் கூறப்பெற்றது.

இனி, சண்டேச நாயனார் காலமும் கண்ணப்பநாயனார் காலமும் தேவார ஆசிரியர்களுக்குப் பன்னூறாண்டுகள் முற்பட்ட தொன்மையனவென்று தெரிகிறது.

'மும்மையாலுலகாண்ட மூர்த்தியார்' எனப் போற்றப் பெற்ற மூர்த்திநாயனார், பாண்டிநாட்டிற் கி. பி. மூன்றாம்

நூற்றாண்டில் ஏற்பட்ட களப்பிரர் ஆட்சியில் வாழ்ந்தவ ரென்பதும், இவ்வடியார் மேற்கொண்ட சிவப்பணிக்கு இடர்விளைத்த வடுகக் கருநாடர் மன்னன் தீவினையால் இறந்தொழிய, இம்மூர்த்திநாயனார் பாண்டிநாட்டில் அரசு வீற்றிருந்து மும்மையால் உலகாண்டார் என்பதும் மூர்த்தி நாயனார் வரலாற்றால் அறியப்படும். எனவே இவர் வாழ்ந்த காலம் பாண்டிநாட்டிற் களப்பிரர் ஆட்சியொழிந்து கடுங்கோன் என்னும் பாண்டியனது ஆட்சி தொடங்கு தற்கு இடையே அமைந்த காலப்பகுதி எனக் கொள்ளுதல் பொருத்தமுடையதாகும்.

திருமூலர், காரைக்காலம்மையார் காலம் கி. பி. ஐந்து ஆறும் நூற்றாண்டென்பது (இந்நூலில் 416-23, 529 ஆம் பக்கங்களில்) முன்னர் விளக்கப்பட்டது.

கணம்புல்லர், சாக்கியர், அமர்நீதியார், தண்டியடிகள், நமிநந்தியடிகள் ஆகிய அடியார்களைத் திருநாவுக்கரசர் பெயர் குறித்துப் போற்றியுள்ளமையாலும், 'கரும்பு பிடித்தவர் காயப்பட்டார் அங்கொர் கோடலியால் இரும்பு பிடித்தவர் இன்புறப்பட்டார்' (4-102-5) எனவரும் திருவிருத்தத்தில் எறிபத்த நாயனாரைப்பற்றிய குறிப்பு அமைந்திருத்தலாலும் எறிபத்தர்காலத்தவர் புகழ்ச்சோழ நாயனார் ஆதலாலும் இவ்வெழுவரும் அப்பருக்கு முன் கி. பி. ஆறும் நூற்றாண்டளவில் இருந்தவர்கள் எனக் கொள்ளலாம்.

கி. பி. ஏழாம் நூற்றாண்டில் நிலவிய திருநாவுக்கரசர் திருஞானசம்பந்தர் ஆகிய இவ்விருபெருமக்களுடன் சமகாலத்தவராக விளங்கிய நாயன்மார்கள், அப்பூதி யடிகள், திருநீலகண்டயாழ்ப்பாணர், திருநீலநக்கர், முருகனார், சிறுத்தொண்டர், குங்குலியக்கலயர், குலச் சிறையார், மங்கையர்க்கரசியார், நின்றசீர் நெடுமாறர் என்போராவர்.

அப்பர் சம்பந்தர் இருவராலும் குறிக்கப்படாமல் சுந்தரரால் மட்டும் குறிக்கப்பட்ட நாயன்மார்களில் ஐயடிகள் காடவர்கோன், கணநாதர், காரியார், அதிபத்தர், கலிக்கம்பர், கலியர், அரிவாட்டாயர், கூற்றுவநாயனார்,

வாயிலார், முனையடுவார், இடங்கழியார், இயற்பகையார், நேசநாயனார், இளையான்குடி மாறர், மெய்ப்பொருள் நாயனார், திருநாளைப்போவார், ஏனாதிநாதர், ஆனாயர், உருத்திரபசுபதியார், திருக்குறிப்புத்தொண்டர், மூர்க்க நாயனார், சிறப்புலிநாயனார், திருநீலகண்டக்குயவனார், புகழ்த்துணையார் ஆகிய அடியார்கள் திருநாவுக்கரசர் திருஞானசம்பந்தர் வாழ்ந்த காலப்பகுதியை யொட்டிச் சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு முற்பட்ட காலப்பகுதியில் வாழ்ந்தவர்கள். மேற்குறித்த அடியார்களுள் ஐயடிகள் காடவர்கோனாயனார்,[1] கணநாதர் இருவரும் அப்பர் சம்பந்தர் காலத்திற்கும் சுந்தரர் காலத்திற்கும் இடைப் பட்ட காலத்தில் வாழ்ந்தவர்களாவர்.

நம்பியாரூரர் வரலாற்றுடன் தொடர்புடையவர் களாகிய சடையனார், இசை ஞானியார், நரசிங்க முனையரையர், விறல்மிண்டர், கோட்புலியார், ஏயர்கோன் கலிக்காமர், மானக்கஞ்சாறர், பெருமிழலைக்குறும்பர், சோமாசிமாறர், சேரமான்பெருமாள் ஆகிய நாயன்மார் பதின்மரும், நம்பியாரூரர் காலத்துப் பல்லவவேந்தராகக் குறிக்கப்பெற்ற கழற்சிங்க நாயனாரும் அவர் வரலாற்றுடன் தொடர்புடைய பூசலார், செருத்துணையார் ஆகிய திருத் தொண்டர்களும் சுந்தரர் காலத்தில் வாழ்ந்த நாயன் மார்கள் ஆவர்.

தில்லைவாழந்தணர், பொய்யடிமையில்லாத புலவர், பத்தராய்ப்பணிவார்கள், பரமனையே பாடுவார், சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார், திருவாரூர்ப் பிறந்தார்கள், முப்போதும் திருமேனிதீண்டுவார், முழுநீறுபூசிய முனிவர், அப்பாலும் அடிச்சார்ந்தார் என்னும் தொகையடியார் களாகிய ஒன்பது திருக்கூட்டத்தாரும் திருத்தொண்டத் தொகையருளிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் காலத்திற்கு முன்னும் சுந்தரர் காலத்திலும் அவருடைய காலத்திற்குப் பின்னும் ஆக முக்காலங்களிலும் நிலைபெற்றுவரும் திருத் தொண்டர்களாவர்.

1 ஐயடிகள் காடவர்கோன் நாயனார்காலம் இதுவென்பது இந்நூலின் 544 – 555-ஆம் பக்கங்களில் முன்னர் விளக்கப்பெற்றது.

திருத்தொண்டர் குலம்

சிவபெருமான் திருவடிகளை வழிபட்டு உய்யும் நற்பேறுடைய அருளாளராகிய சிவனடியார்களிடையே குலம்பற்றிய உயர்வுதாழ்வுக்கு இடமில்லை. அவர்கள் எல்லோரும் தாம்பிறந்த பண்டைக்குலத்தின் தொடர்பினை யறுத்து இறைவனுக்குத் தொண்டுபட்ட திருக்குலமாகிய தொண்டக்குலத்தினர் ஆவர். அறுபத்து மூவராகிய நாயன்மார்களில் அந்தணர் முதல் புலையர் ஈருகவுள்ள எல்லாக்குலத்தவரும் உள்ளார்கள்.

ஆதிசைவ அந்தணர் நால்வர்: புகழ்த்துணை நாயனார், சடையனார், இசை ஞானியார், நம்பியாரூரர்.

வேதியர் பன்னிருவர்: குங்குலியக்கலயர், முருகனார், உருத்திரபசுபதியார், சண்டேசுர நாயனார், அப்பூதியடிகள், திருநீலநக்கர், நமிநந்தியடிகள், திருஞான சம்பந்தர், சோமாசிமாறர், சிறப்புலி நாயனார், கணநாத நாயனார், பூசலார் நாயனார்.

மாமாத்திரர் ஒருவர்: சிறுத்தொண்ட நாயனார்.

முடிவேந்தர் அறுவர்: சேரமான் பெருமாள், புகழ்ச் சோழர், நெடுமாறர், இடங்கழியார், மங்கையர்க்கரசியார், கோச்செங்கட்சோழர்.

குறுநிலமன்னர் ஐவர்: மெய்ப்பொருள் நாயனார், கூற்றுவநாயனார், நரசிங்கமுனையரையர், ஐயடிகள் காடவர்கோன், கழற்சிங்க நாயனார்.

வணிகர் ஐவர்: இயற்பகை நாயனார், அமர்நீதி நாயனார், மூர்த்திநாயனார், காரைக்காலம்மையார், கலிக் கம்பநாயனார்.

வேளாளர் பதின்மூவர்: இளையான்குடி மாறனார், விறன்மிண்டர், மானக்கஞ்சாறர், அரிவாட்டாயர், திருநாவுக்கரசர், ஏயர்கோன்கலிக்காமர், மூர்க்க நாயனார், சாக்கிய நாயனார், சத்தி நாயனார், வாயிலார் நாயனார், முனையடுவார் நாயனார், செருத்துணை நாயனார், கோட்புலி நாயனார்.

இடையர் இருவர்: திருமூல நாயனார், ஆனாய நாயனார்.

குயவர் – திருநீலகண்ட நாயனார்

பாணர் – திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார்

பரதவர் – அதிபத்த நாயனார்

வேடர் – கண்ணப்ப நாயனார்

சான்றார் – ஏனாதிநாத நாயனார்

சாலியர் – நேச நாயனார்

செக்கார் – கலிய நாயனார்

ஏகாலியர் – திருக்குறிப்புத்தொண்ட நாயனார்

புலையர் – திருநாளைப்போவார் நாயனார்

மரபறியாத அடியார்கள் அறுவர்: எறிபத்த நாயனார், குலச்சிறை நாயனார், பெருமிழலைக் குறும்ப நாயனார், தண்டியடிகள் நாயனார், கணம்புல்ல நாயனார், காரி நாயனார்.

திருக்கூட்டத்தார் ஒன்பதின்மரில் ஆதிசைவர்: முப்போதும் திருமேனி தீண்டுவார்.

வேதியர் - தில்லை வாழந்தணர்

மரபில் அடங்காத திருக்கூட்டத்தார் எழுவர்: பொய்யடிமை யில்லாத புலவர், பத்தராய்ப் பணிவார், பரமனையே பாடுவார், சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார், திருவாரூர்ப் பிறந்தார், முழுநீறு பூசிய முனிவர், அப்பாலும் அடிச்சார்ந்தார்.

திருத்தொண்டர்கள் வீடுபெற்ற திறம்

திருத்தொண்டத் தொகையிற் போற்றப்பெற்ற சிவனடியார்கள் குரு லிங்க சங்கமங்களை வழிபட்டு முத்தி யடைந்தவர்களாவர். அவர்களுள், குருவருளால் முத்தி பெற்றவர் பன்னிருவர்: சுந்தரமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசர், குலச்சிறையார், பெருமிழலைக் குறும்பர், அப்பூதியடிகள், திருஞானசம்பந்தர், திருமூலர், சோமாசி மாறர், கணநாத நாயனார், நெடுமாற நாயனார், மங்கையர்க் கரசியார், திருநீலகண்ட யாழ்ப்பாணர்.

சிவலிங்கத்தால் முத்தி பெற்றவர் முப்பதின்மர்: எறிபத்தர், கண்ணப்பர், குங்குலியக்கலயர், அரிவாட்

டாயர், ஆயனார், மூர்த்தியார், முருகர், உருத்திர பசுபதியார், திருநாளைப்போவார், சண்டேசர், திருநீலநக்கர், நமிநந்தியடிகள், ஏயர்கோன் கலிக்காமர், தண்டியடிகள், சாக்கிய நாயனார், சிறப்புலி நாயனார், சேரமான் பெருமாள், கூற்றுவ நாயனார், அதிபத்த நாயனார், கலிய நாயனார், ஐயடிகள் காடவர்கோன், கணம்புல்லர், காரிநாயனார், வாயிலார் நாயனார், கழற்சிங்க நாயனார், செருத்துணை நாயனார், புகழ்த்துணை நாயனார், கோட்புலி நாயனார், பூசலார் நாயனார், கோச்செங்கட் சோழநாயனார்.

சிவனடியாரை வழிபட்டு முத்திபெற்றவர் பத்தொன்பதின்மர்: திருநீலகண்டர், இயற்பகையார், இளையான்குடிமாறர், மெய்ப்பொருள் நாயனார், விறன்மிண்ட நாயனார், அமர்நீதி நாயனார், ஏனாதிநாத நாயனார், மானக்கஞ்சாற நாயனார், திருக்குறிப்புத் தொண்டர், காரைக்காலம்மையார், மூர்க்க நாயனார், சிறுத்தொண்ட நாயனார், புகழ்ச்சோழ நாயனார், நரசிங்க முனையரையர், கலிக்கம்ப நாயனார், சத்தி நாயனார், முனையடுவார் நாயனார், இடங்கழி நாயனார், நேசநாயனார்.

தொகைவகை விரிநூல்களில் முரண்பாடின்மை

சோழ மன்னனுக்கு அமைச்சராகிய சேக்கிழாரடிகள் உலகியலறிவும் நூலுணர்வும் மதிநுட்பமும் நிரம்பப்பெற்ற அருளாளர். திருத்தொண்டத் தொகை, திருத்தொண்டர் திருவந்தாதி, திருத்தொண்டர்களைக் குறித்து நாட்டில் வழங்கும் செவிவழிச் செய்திகள், திருமுறைகள், கல்வெட்டுக்கள் என்பவற்றைத் துணையாகக்கொண்டு திருத்தொண்டர் வரலாறுகளைத் தம் நூலில் விரித்துக் கூறியுள்ளார். எனவே திருத்தொண்டர்களைக் குறித்துத் தொகை வகை நூல்களினால் அறிந்துகொள்ள முடியாத செய்திகளும் விளக்கங்களும் இந்நூலில் இடம்பெற்றுள்ளமை காணலாம்.

சுந்தரர் வரலாற்றில் நரசிங்க முனையரையர் நம்பியாரூரரை மைந்தராக ஏற்று வளர்த்த செய்தி,

"நாதனுக்கூர் நமக்கூர் நரசிங்கமுனையரையன்
ஆதரித்தீசனுக்காட் செயுமூ ரணிநாவலூரென்
றோதநற்றக்க வன்றொண்டன் ஆரூரன்"

எனவரும் சுந்தரர் வாய்மொழியால் அறியப்படும்.

மூர்த்தி நாயனார் காலத்திற் பாண்டி நாட்டின் குழப்ப நிலை, 'மும்மையால் உலகாண்ட மூர்த்தி' எனவரும் அடைமொழியாலும், 'அவந்திரிகுண்டம ணவதின்மாள்வ னென்று......உலகாண்ட ஒண்மூர்த்தி' என்னும் திருவந் தாதியாலும் உய்த்துணரப்படும்.

மகேந்திர பல்லவனுன குணபரன் சைவனானமை அவன் கட்டிய 'குணபர வீச்சரம்' என்னும் கோயிற் பெய ராலும் திருச்சிராப்பள்ளிக் கல்வெட்டினாலும் துணியப்படும்.

பழையாறையில் அப்பரடிகளது உண்ணா நோன்பின் வரலாறு அவர் அப்பொழுது பாடிய 'தலையெலாம் பறிக் குஞ் சமண்கையர்' என்னும் முதற் குறிப்புடைய திருக் குறுந் தொகையால் இனிது புலனாம்.

அப்பூதியடிகள் மைந்தன் மூத்த திருநாவுக்கரசு அப்பரை அமுது செய்விக்க வேண்டிப் படப்பையிற் சென்று வாழைக் குருத்தையரியும் நிலையில் விடந்தீண்டி யிறந்து பின் திருநாவுக்கரசரால் உயிர்பெற்றுய்ந்தமை திருப்பனந்தாள் திருக்கோயிலிலுள்ள திருத்தொண்டத் தொகையடியார் சிற்பங்களில் அப்பூதியடிகள் வரலாறு பற்றிய சிற்ப அமைப்பாலும் அப்பொழுது திருநாவுக்கரசர் திருவாய்மலர்ந் தருளியதாகவுள்ள 'ஒன்று கொலாம்' என்னும் திருப்பதிகச் சொற்பொருளமைப்பாலும் இனி துணரப்படும்.

திருவாரூரில் தண்டியடிகள் நாயனார்க்கும் சமணர்க்கும் நடந்த வாத நிகழ்ச்சி, 'நாட்டமிகுதண்டிக்கும்' எனத் திருத்தொண்டத் தொகையிலுள்ள அடைமொழியாலும்

'கண்ணார் மணியொன்று மின்றிக் கயிறு பிடித்தரற்குத்
தண்ணார் புனற்றடந் தொட்டலுந் தன்னை நகுமமணர்
கண்ணாங் கிழப்ப அமணர் கலக்கங்கண் டம்மலர்க்கண்
விண்ணா யகனிடைப் பெற்றவன் ஆரூர் விறற்றண்டியே'

எனவரும் திருவந்தாதியாலும் நன்கு புலனாம்.

மறை வல்ல மாமாத்திர மரபிற் றோன்றிய பரஞ்சோதி யாராகிய சிறுத்தொண்டர் சேனாபதியாக விளங்கிய செய்தி,

'கன்னவில் தோட் சிறுத்தொண்டன்' (3-63-2)

'செருவடி தோட் சிறுத்தொண்டன்' (3-63-7)

என ஞானசம்பந்தப் பிள்ளையார் சிறுத்தொண்டரது போர் வன்மையைப் பாராட்டுதலால் இனிது விளங்கும்.

சேரமான்பெருமாள் சுந்தரரைச் சந்தித்து அவருடன் பலதலங்களையும் பணிந்து பாண்டி நாட்டிற் பரங்குன்ற மேய பரமனைப் பணிந்த செய்தி,

'முடியால் உலகாண்ட மூவேந்தர் முன்னே'

என நம்பியாரூரர் அவ்வூர்த் திருப்பதிகத் திருக்கடைக் காப்பிற் குறிப்பிடுதலால் உணரப்படும்.

ஐயடிகள் காடவர்கோன் நாயனார் தாம் க்ஷேத்திரத் திருவெண்பாவை அருளிச் செய்தற்குமுன் பல்லவ வேந்த ராயிருந்து அரசுபுரிந்த செய்தி அவரைக் 'காடவர்கோன்' என நம்பியாரூரர் குறித்த அடைமொழியால் உய்த்துணரப் படும்.

காடவர்கோன் கழற்சிங்கன் வடபுல வேந்தரைப் போரில் வென்றமை, 'கடல் சூழ்ந்த உலகெலாங் காக் கின்ற பெருமான் காடவர்கோன் கழற்சிங்கன்' என அவ் வேந்தர்பெருமானது உலகங் காத்தல் வன்மையை நம்பியாரூரர் சிறப்பித்துரைத்தலால் நன்குணரப்படும்.

கோட்புலியார் சோழ மன்னனுக்குப் படைத் தலைவ ராய்ப் போர் மேற்கொண்டு சென்று வென்றமை,

'கூடாமன்னரைக் கூட்டத்துவென்ற கொடிறன் கோட்புலி சென்னி
நாடார் தொல்புகழ் நாட்டியத்தான்குடி' (7-15-10)

என நம்பியாரூரரும்,

'குற்ற மறுக்குநங் கோட்புலி'

என நம்பியாண்டார் நம்பியும் கூறுதலால் புலனாம்.

காஞ்சியிற் கற்றளிகட்டிய காடவர் கோனுக்கு இறைவன் கனவில் தோன்றி அருள் புரிந்தமை காஞ்சிக் கயிலாச நாதர் கோயிற் கல்வெட்டுக் குறிப்புக்களால் உய்த்துணரப்படும்.

மேற்குறித்த இச்செய்திகள் திருத்தொண்டத் தொகையிலும் திருவந்தாதியிலும் குறிப்பாக உணர்த்தப் பெற்று நாட்டில் வெளிப்பட வழங்கிய பழஞ் செய்தி

களாதலால் ஆசிரியர் சேக்கிழார் தம் நூலில் இவற்றை விரித்துக் கூறுவாராயினர்.

இனி நம்பிகூற்றுக்கு மாருகச் சேக்கிழார் சிலவற்றை மாற்றிக் கூறியதாகக் கருதுவாருமுளர். வகை நூலையும் விரிநூலையும் ஒப்பவைத்து நோக்குங்கால் அக்கருத்து தவருதல் நன்கு புலனும்.

(1) அடியாரது கோவணத்துக்கு ஈடாகத் தன்பெருஞ் செல்வத்தையும் தன்னையும் தன் மனைவியையும் அமர் நீதியார் ஈந்தனர் என நம்பியாண்டார் நம்பி குறித்தனர். அவரால் 'தன் பெருஞ் செல்வமும்' எனக் குறிப்பிட்ட செல்வத்துள், 'தம் பொருளென்ப தம்மக்கள்' என்ற வண்ணம் மக்கட் செல்வமும் அடங்கும் எனவுணர்ந்த சேக்கிழார், அமர்நீதியார் மனைவியார் மைந்தர் ஆகிய மூவரும் அடியார் கோவணத்துக்கு ஈடாகத் துலையில் ஏறினர் என விளக்கமாகக் கூறியுள்ளார். சேக்கிழார் குறித்தவண்ணம் அமர்நீதியார்க்குக் குழந்தையுண் டென்பது, பழையாறை வடதளியில் அமர்நீதியார் மனைவி யாருடன் இறைவனை யிறைஞ்சும் நிலையில் அமைந்த சிற்பத்தில் அமர்நீதியார் மனைவியார் தம்மைந்தனுகிய குழந்தையை இரு கைகளிலும் ஏந்திய நிலையிற் காணப் படுவதாலும் இராசராசேச்சரத்திலுள்ள அமர்நீதியார் சிற்பத்தில் தராசுத் தட்டிலே தாய் தந்தை நடுவில் குழந்தை காணப்படுவதாலும் நன்கு விளங்கும்.

(2) திருஞானசம்பந்தர் விடமேறிய பெண்ணை எழுப் பினர் என நம்பியாண்டார் நம்பி குறித்திருக்கவும் எலும்பைப் பெண்ணுக்கியதாகச் சேக்கிழார் மாற்றிக் கூறி யுள்ளார் என்பாருமுளர். இக்கருத்து ஏற்புடையதன்று. 'வெய்யவிடம், மேவியிறந்த அயில் வேற்கண் மடமகளை வாவென் றழைப்பித்திம் மண்ணுலகில் வாழ்வித்த சீர் நின்ற செம்மைச் செயலுடையான்' என நம்பியாண்டார் நம்பிகள் இச்செய்தியை விரித்துக் கூறியுள்ளார். 'இறந்த மடமகளை வாவென்று அழைப்பித்து இம் மண்ணுலகில் வாழ்வித்த சீர் நின்ற செம்மைச் செயல்' எனக் குறித்தமை யால், விடந்தீண்டி இறந்த பெண் அப்பொழுது உடம்புடன் அங்கில்லை யென்பதும் ஆளுடையபிள்ளையார் அப்பெண்ணை வா என்று அழைப்பித்து இம்மண்ணுலகில் வாழ்வித்தார்

என்பதும், எலும்பைப் பெண்ணாக்கிய அற்புத நிகழ்ச்சியையே 'சீர்நின்ற செம்மைச் செயல்' என நம்பியாண்டார் நம்பிகள் சிறப்பித்தார் என்பதும் நன்கு புலனும்.

(3) மூர்க்க நாயனாரைத் திருவேற் காட்டூர் மன்னர் என நம்பியாண்டார் நம்பி குறித்தது அவர் அரசர் குடியிற் பிறந்தவர் என்ற கருத்தினாலன்று. வேற் காட்டூர் மன்னர் என்றது அவ்வூரில் அவதரித்த தலைமைச் சிறப்புடையார் என்னும் பிறப்புரிமை பற்றியதாகும். ஞானசம்பந்தர் புகலி மன்னவன் (2—33—11) எனக் குறிக்கப் பெற்றமை கொண்டு அந்தணராகிய அவரை அரசர் மரபினர் எனக் கூறமுடியாது. அவ்வாறே வேளாண் மரபினராகிய செருத்துணை நாயனார் தஞ்சையில் தோன்றிய தலைவர் என்னுங் கருத்தில் 'தஞ்சை மன்னவனாஞ் செருத்துணை' எனத் திருத்தொண்டத் தொகையிற் போற்றப் பெற்றுள்ளமை இங்கு ஒப்பு நோக்கியுணர்தற்குரியதாகும்.

(4) சங்கப் புலவர் 49 பேரே பொய்யடிமையில்லாத புலவர் என்பது நம்பி கூற்று. 'சங்கப்புலவர்' என்ற தொடரே சேக்கிழார் காட்டவில்லை. அவர் கூற்றை உற்று நோக்கின் பொய்யடிமையில்லாத புலவர் ஒருவரோ என்று ஐயுற வேண்டியதாகவுள்ளது" என டாக்டர் இராச மாணிக்கனார் கருதுவர். திருத்தொண்டர் திருவந்தாதியையும் பெரிய புராணத்தையும் இணைத்து நோக்கும் வழி நம்பியின் கருத்தும் சேக்கிழார் கருத்தும் ஒன்றே யென்பது நன்கு விளங்கும்.

"தரணியிற் பொய்மையிலாத் தமிழ்ச் சங்க மதிற் கபிலர்
பரணர் நக்கீரர் முதல் நாற்பத்தொன்பது பல் புலவோர்" (49)

எனவரும் திருவந்தாதியில் நாற்பத்தொன்பது புலவோர் எனச் சங்கப்புலவரை மட்டும் குறிப்பிடாமல், சங்கப் புலவரல்லாத எண்ணிறந்த ஏனைய புலவர்களையும் உளப் படுத்திப் 'பல்புலவோர்' எனக் குறித்தார் நம்பியாண்டார் நம்பிகள். கபிலர் பரணர் முதலிய சங்கப்புலவர் என்பவர்கள் கடைச்சங்க காலத்தில் இருந்தவர்கள். அவர்களோடு தங்காலத்தில் உள்ளவர்களையும் தமக்கும் பிற்காலத்தில் இனித் தோன்றுபவர்களையும் இணைத்துப் போற்றும் முறையில் சுந்தரராற் குறிக்கப்பட்டதொகையடியார்களே பொய்யடிமையில்லாத புலவர் என்னும் உண்மை

யினை நம்பியாண்டாரும் சேக்கிழாரடிகளும் ஒப்ப விளக்கியுள்ளார்கள். கபிலர் பரணர் முதலிய கடைச்சங்கப் புலவர்களை எடுத்துரைத்து அவர்களைப் போன்றுள்ள நிகழ்காலப் புலவர்களையும் எதிர்காலப் புலவர்களையும் இயைத்துக் கூறும் முறையில் 'நாற்பத் தொன்பது பல் புலவோர்' எனக் குறித்தார் நம்பியாண்டார் நம்பிகள். நம்பிகள் வெளிபடக் கூறிய சங்கப் புலவர்களை மட்டும் தனித்தெடுத்துக்கூருது முக்காலப் புலவர்களையும் ஒப்பக் கூறும் முறையில் பொய்யடிமையில்லாத புலவராவார் இத்தன்மையர் எனச் சேக்கிழாரடிகள் விளக்கம் தந்துள்ளார்.

'தரணியிற் பொய்ம்மையில்லாத் தமிழ்ச்சங்க மதிற் கபிலர் பரணர் நக்கீரர் முதல் நாற்பத்தொன்பது பல் புலவோர்' எனப் புலவர் பெயர்களை எண்ணிய நம்பியாண்டார் நம்பிகள், முதலிற் குறித்த சங்கப்புலவர்கள் இன்ப வொழுக்கமாகிய அகத்திணை பற்றிப் பாடிய பாடல்கள் மேற்போக்காக நோக்கும்வழி உலகியல் பற்றிய அகத்திணை யொழுகலாற்றை உணர்த்துவன வாகவும், அன்புநெறிப் பாடல்களாகிய அவற்றைக் கூர்ந்து நோக்கும்வழி எவ்வுயிர்க்கும் இன்பம் நல்கும் அன்புருவாகிய இறைவனையே ஆன்மநாயகனைக்கொண்டு அன்புசெய்து அவன் திருவடிகளையடைதற்குரிய அருள் நெறிக்குத் துணைசெய்வனவாகவும் அமைந்த நுட்பத்தினை,

"அருள் நமக்கீயும் திருவாலவாயரன் சேவடிக்கே
பொருளமைத்தின்பக் கவிபல பாடும் புலவர்களே"

எனவரும் தொடரிற் குறித்து அப்புலவர் பெருமக்களது சிறப்பியல்பினை இனிது விளக்கியுள்ளார். சங்கப்புலவர்களுக்குரியனவாக நம்பிகள் குறித்த இச்சிறப்பியல்புகளை,

"நாதமறைதந் தளித்தாரை நடைநூற்பாவில் நவின்றேத்தும்
போதமருவிப் பொய்யடிமையில்லாப் புலவர்"

எனவும்,

"செய்யுள் நிகழ் சொற்றெளிவும் திருந்தியநூல் பல நோக்கும்
மெய்யுணர்வின் பயனிதுவே எனத்துணிந்து விளங்கியொளிர்
மையணியுங் கண்டத்தார் மலரடிக்கே யாளானார்
பொய்யடிமை யில்லாத புலவரெனப் புகழ்மிக்கார்"

எனவும் சேக்கிழாரடிகள் அவ்வாறே எடுத்தாண்டுள்ளமை இங்குக் கூர்ந்து நோக்கத்தகுவதாகும்.

'பொய்யடிமையில்லாத புலவர்' என்னும் இத்தொடர் தனியடியாரைச் சுட்டாது திருக்கூட்டத்தாராகிய தொகையடியார்களையே சுட்டிய தென்பது, கபிலர் பரணர் நக்கீரர் முதல் நாற்பத்தொன்பது பல் புலவோர்' என நம்பியும் அவர் கருத்தையடியொற்றிய நிலையிற் சேக்கிழாரடிகளும் கூறிய விளக்கங்களால் இனிது விளங்கும். இத்தொடர் இக்காலத்தில் ஒரு சிலர் கருதுவது போன்று மாணிக்க வாசகர் போன்ற தனியடியார் ஒருவரைக் குறித்த தொடராக இருந்திருக்குமானால், 'தனியடியார் அறுபத்து மூவர்; தொகையடியார் ஒன்பதின்மர்' என இந்நாட்டில் நெடுங்காலமாக வழங்கிவரும் வழக்குக்கு மாறாகத் தனியடியார் அறுபத்து நால்வர், தொகையடியார் எண்மர் எனச் சொல்ல வேண்டிய குழப்பநிலை ஏற்பட்டு விடும்.

இரண்டாம் இராசராசசோழன் குடந்தையையடுத்துத் தன் பெயரால் அமைத்த இராசராச புரத்தில் கட்டிய இராசராசேச்சரத் திருக்கோயில் விமானத்தில் திருத்தொண்டத் தொகையடியார்களின் பெயரும் பீடும் பொறித்தமைத்த சிற்பங்களில் 'பொய்யடிமையில்லாத புலவர்' எனக்குறித்த சிற்பத்தில் அடியார்கள் ஒன்பதின்மர் இடம் பெற்றுள்ளனர். நம்பிகள் குறித்த சங்கப்புலவர் நாற்பத தொன்பதின்மரைச் சுட்டும் முறையில் அமைந்த அச்சிற்பத்தில் ஒன்பதின்மரை வெளிப்பட அமைத்து நாற்பதின்மரை உய்த்துணர வைத்த திறம் வரலாற்று ஆராய்ச்சியாளருக்குப் பெருமகிழ்ச்சி யளிப்பதாகும். இவ்வாறு தொகை வகை, விரியாகிய நூல்களோடும் வரலாற்றுச் சிற்பத்துடனும் ஒப்புநோக்கும்வழி பொய் யடிமையில்லாத புலவர் என்பார் தொகையடியார் களேயன்றித் தனியடியாரல்லர் என்பது ஐயத்திற் கிடனின்றித் தெளிந்துணரப்பெறும் வரலாற்றுண்மை யாதல் காணலாம்.

5. "காரியார் சிவனைப்பாடிக் கயிலை புக்கவர் என்பது நம்பி கூற்று. அவர் மூவேந்தர் மீது கோவை பாடிப் பெற்ற பொருளைக்கொண்டு சிவன் கோயில் கட்டி முத்திபெற்றவர் என்பது சேக்கிழார் கூற்று" என மாறுபாடு காட்டுவர் டாக்டர் இராசமாணிக்கனர்.

"புல்லன வாகா வகையுலகத்துப் புணர்ந்தனவும்
சொல்லினவும்நய மாக்கிச் சுடர்பொற் குவடுதனி
வில்லனை வாழ்த்தி விளங்குங்கயிலைபுக் கானென்பரால்
கல்லன மாமதிற் சூழ்கட லூரினிற் காரியையே"

எனவரும் திருவந்தாதியிற் குறிக்கப்பட்ட குறிப்பினை ஆதரவாகக் கொண்டே, காரியார் மூவேந்தர்பாற் கோவை பாடி நயவுரை பகர்ந்து சிவப்பணி புரிந்தார் என்ற செய்தியைச் சேக்கிழாரடிகள் தெளிவுபடுத்தியுள்ளார். இப் பாடலில்,

'புல்லன ஆகாவகை உலகத்துப் புணர்ந்தனவும்
சொல்லினவும் நயமாக்கி'

என்ற தொடரை உளத்துட்கொண்டு,

"வண்டமிழின், துறையான பயன்தெரிந்து...தமிழ்க் கோவை
தம்பெயராற் குலவும்வகை, முறையாலே தொகுத்தமைத்து"

எனவும், 'சொல்லினவும் நயமாக்கி' என நம்பி கூறிய தனை யுளங்கொண்டு,

"அடுத்த உரை நயமாக்கி"
"யாவர்க்கும் மனமுவக்கும் இன்பமொழிப் பயனியம்பி"

எனவும்,

'சுடர் பொற்குவடுதனி வில்லனை வாழ்த்தி'

எனவரும் அந்தாதித் தொடரை மனங்கொண்டு

"மன்னவர்பாற்பெற்ற நிதிக்குவை கொண்டு......
சங்கரனார் இனிதமருந் தானங்கள் பல சமைத்தார்".

எனவும், 'விளங்குங் கயிலைபுக்கான்' என்னும் நம்பி கூற்றினை அடியொற்றி,

"வாய்ந்த மனம்போ லுடம்பும் வடகயிலைமலை சேர்ந்தார்"

எனவும் அருண்மொழித் தேவர் காரி நாயனார் வரலாற்றை விரித்துக் கூறியுள்ளமை காணலாம்.

6. 'தஞ்சை மன்னவனாம் செருத்துணை' எனத் திருத்தொண்டத் தொகையிற் போற்றப்பெற்ற செருத்துணை நாயனார் தோன்றிய திருப்பதியாகிய தஞ்சை என்றது, பிற்காலச் சோழமன்னர்க்குத் தலைநகராயமைந்த வெண்ணிநாட்டுத் தஞ்சையை அன்றெனவும், செருத்துணை நாயனார் பிறந்த தஞ்சை சோழநாட்டின் அகநாடு

களுளொன்ருகிய மருகல் நாட்டைச்சார்ந்த தஞ்சை எனவும் விளக்கும் முறையில்

'செழுநீர் மருகல் நன்னுட்டமர் தஞ்சைச் செருத்துணையே'

எனக் குறித்தார் நம்பியாண்டார் நம்பிகள். இக்குறிப்பினை யுளங்கொண்டு

"பொன்னிநீர் நாட்டு மருகல்நாட்டுத் தஞ்சாவூர்"

என ஆசிரியர் சேக்கிழார் குறித்துள்ளமை இங்கு ஒப்பு நோக்கத்தகுவதாகும்.

இனி, கண்ணப்ப நாயனுரைப்பற்றி நக்கீர தேவரும் கல்லாட தேவரும் கூறியவற்றிற்கும் சேக்கிழார் கூறியவற்றிற்கும் வேறுபாடுகள் உள்ளன என்றும், 1. கண்ணப்பர் நாடோறும் சிவனைப் பூசித்தமை, 2. அவர் நாயுடனே காளத்தி மலைமீது இறைவன்முன் இருந்தமை, 3. லிங்கத்தின் ஒரே கண்ணில் திண்ணனுர் தம் இரு கண்களையும் அப்ப முயன்றமை என்பன பெரிய புராணத்திற்கு மாருகப் பதினொராந் திருமுறையிற் காணப்படும் வேறுபாடுகள் என்றும் அறிஞர் இராசமாணிக்கனுர் அவர்கள் எடுத்துக் காட்டியுள்ளார்கள்.

1. கண்ணப்பர் காளத்தியப்பரை வழிபட்ட ஆறு நாட்களில் இறுதிநாளாகிய ஆரும் நாள் நீங்கலாக ஏனைய ஐந்து நாட்களிலும் இடையீடின்றி வழிபட்ட செய்தியைக் குறிக்கும் முறையில் 'நாடொறும்' என்று கூறப்பட்டது.

2. திண்ணனுருடன் வேட்டை நாயும் காளத்தி மலையிற் சென்றது என்ற செய்தியைச் சேக்கிழாரடிகள் சிறப்பின்மை கருதி வெளிப்படக் கூருதுவிட்டாலும், இறைவனை வழிபடச் சென்ற சிவகோசரியார், 'இறைச்சி எலும்புடன் இலையும் செருப்படியும் நாயடியும் திருவலகால் மாற்றிய' செய்தியைச் சேக்கிழார் தெளிவாகக் குறித்துள்ளமையால் 'கண்ணப்பருடன் வேட்டை நாயும் சென்றது' எனப் பதினொராந் திருமுறையிலுள்ள அச் செய்தி சேக்கிழார்க்கு உடன்பாடாதல் இனிது புலனும்.

3. லிங்கத்தின் ஒரே கண்ணில் திண்ணனுர் தம் இரண்டு கண்களையும் அப்ப முயன்ருர் என்று நக்கீரரோ

கல்லாடரோ தம் பாடல்களிற் குறிப்பிட்டதாகக் கூறுதற்கு இடமில்லை.

முக்கணப்பனுகிய காளத்தியிறைவர், தம் ஒரு கண்ணில் உதிரம் ஒழுக இருந்த நிலை கண்டு மனங்கலங்கிய திண்ணனுர், தமது கண்ணென்றை அம்பினல் இடந்து காளத்தியப்பரது புண்பட்ட கண்ணில் அப்பி உதிரம் நின்றமை கண்டு மனம் மகிழ்ந்த செய்தியினை,

'இதுதனைக் கண்ட என்
கண்தனை யிடந்து கடவுள்தன் கண்ணுறு
புண்ணில் அப்பியுங் காண்பனென்ருெரு கண்ணிடைக்
கணையது மடுத்துக் கையில் வாங்கி
அணைதர அப்பினன் அப்பலும் குருதி
நிற்பதொத் துருப்பெறக்கண்டு நெஞ்சுகந்து'

என்ற தொடரில் முடித்துக்காட்டி, இறைவரது மற்றைக் கண்ணிலும் அவ்வாறே குருதியொழுகத் தன் மற்ருெரு கண்ணைப் பெயர்த்து எடுத்தற்கு முற்பட்ட செய்தியை

'மற்றைக் கண்ணிலும் வடிக்கணை மடுத்தனன்'

என்ற தொடரினல் நக்கீரர் வேறு பிரித்துக் கூறியுள்ளமையும், இவ்விரு செய்திகளையும்,

'முக்கணப்பனுக் கொருகணில் உதிரம்
தக்கிணத்திடை யிழிதர அக்கணம்
அழுதுவிழுந்து தொழுதெழுந் தரற்றிப்
புன்மருந்தாற்றப் போகாதென்று
தன்னை மருந்தென்று மலர்க்கண் அப்ப
ஒழிந்தது'

எனவும்,

'மற்றை ஒண்திருநயனம்
பொழிந்த கண்ணீர்க் கலுழிபொங்க
அற்றதென்று மற்றைக் கண்ணையும்
பகழித் தலையால் அகழ'

எனவும் வரும் தொடர்களில் கல்லாட தேவர் முறையே குறித்துள்ளமையும் இங்குக் கூர்ந்துணரத் தக்கனவாகும்.

சம்பந்தர் பசி வருத்த அழுதார் என்று பட்டினத்தடிகள் கூறியதை, நீரில் மூழ்கிய தந்தையாரைக் காணுத அச்சத்தால் அழுதார் என்று சேக்கிழாரடிகள் மாற்றி அமைத்தார் என்பர் அறிஞர் இராசமாணிக்கனுர். ஆளு

டைய பிள்ளையார் அழுததற்குக் காரணம் தந்தையாரைக் காணாத அச்சமே எனச் சேக்கிழாரடிகள் கூறவேயில்லை. தந்தையார் குளத்தில் மூழ்கிய நிலையில் அவரைப் பிரிந்துறைதலாற்றாத தனிமை நிலையினைத் தலைக்கீடாகக் கொண்டு ஈசர் கழலிடத்தே முன்னைப்பிறப்பிற் கொண்டுள்ள முன்னுணர்வு மூளுதலால் பிரமதீர்த்தக் கரையில் நின்றருளும் பிள்ளையார் அழத்தொடங்கினார் என்ற செய்தியை,

"மறைமுனிவர் மூழ்குதலு மற்றவரை முற்காணா
திறைதரியா ரெனுநிலைமை தலைக்கீடா ஈசர்கழல்
முறைபுரிந்த முன்னுணர்வு மூளஅழத் தொடங்கினார்
நிறைபுனல் வாவிக்கரையில் நின்றருளும் பிள்ளையார்"

எனவரும் பாடலில் ஆசிரியர் தெளிவாகக் குறித்துள்ளார். ஆகவே ஆளுடைய பிள்ளையார் அழுததற்குக் காரணம் தந்தையைப் பிரிந்த அச்சமன்றென்பதும், தந்தையைப் பிரிந்தமை தலைக்கீடாக, ஈசர்கழல் முறை புரிந்த முன்னுணர்வு பிள்ளையார்பால் மூண்டெழுந்தமையே அவர் அழுததற்குக் காரணம் என்பதும் சேக்கிழார் கருத்தாதல் நன்கு புலனாம்.

இனி, ஆளுடைய பிள்ளையார் அழுதமைக்குக் காரணமாகப் பட்டினத்தடிகள் குறித்த பசி என்பது இவ்வுலகில் ஏனைய பிள்ளைகள்பால் இயல்பாகத்தோன்றும் அயர்ச்சியை விளைக்கும் பசியாகாமல் ஞானத்தின் திருவுருவாகிய பிள்ளையாரை மேன்மேல் வளர்த்தற்குரிய மெய்யுணர்வுப் பசியாக அமைந்த திறத்தையும், அப்பசியைத் தணித்தற்கு இறைவரருளால் அம்மையார் குழைத்தளித்த பாலமுதம் வெறும் உடற்பசியைத் தணிக்கும் ஊனப்பாலாகாமல் மெய்யுணர்வு வேட்கையை நிறைவுசெய்தற்குரிய ஞானப்பாலாக அமைந்த தன்மையினையும்,

"தாதையொடு வந்த வேதியச் சிறுவன்
தளர்நடைப் பருவத்து வளர்பசி வருத்த
அன்னையோ வென்றழைப்ப முன்னின்று
ஞான போனகத்தருள் அட்டிக் குழைத்த
ஆனாத் திரளை அவன்வயின் அருள"

எனவரும் தொடரில் திருவெண்காட்டடிகள் தெளிவாக விளக்கிய திறம் உணர்ந்து போற்றத் தகுவதாகும். ஆளுடைய பிள்ளையார்க்கு உமையம்மையார் அளித்த ஞானபோனகத்தியல்பினை,

"மலையரையன் மடப்பாவை
நற்கண்ணி அளவிறந்த ஞானத்தை அமிர்தாக்கிப்
பொற்கிண்ணத் தருள்புரிந்த போனகம்"

என நம்பியாண்டார் நம்பிகள் சிறப்பித்துக் கூறியுள்ளமை திருவெண்காட்டடிகள் கருத்திற்கியைந்த சிறந்த விளக்கமாகும்.

ஒன்பதாந் திருமுறையில் நம்பிகாடநம்பி என்பார், சுந்தரரும் சேரமானும் வெள்ளானைமீது இவ்வுடலோடு சென்றனர் எனத் தெளிவாகக் கூறியுள்ளார் என்பர் டாக்டர் இராசமாணிக்கனார். இக்கூற்று ஏற்புடையதன்றென்பது (இந்நூல் 387-ம் பக்கத்தில்) முன்னர் எடுத்துக் காட்டி விளக்கப்பட்டது.

சேக்கிழாரடிகள் தம் நூலில் புதிய செய்திகள் சிலவற்றைச் சேர்த்துக் கூறினாரென்றோ தொகை வகையாகிய முன்னூல்களின் செய்திகள் சிலவற்றை மாற்றிக் கூறினாரென்றோ எண்ணுதற்குச் சிறிதும் இடமில்லையென்பதும், முன்னோர் நூலின் மொழிவழி நின்று திருத்தொண்டர்களின் மெய்ம்மை வரலாறுகளைத் தம் நூலில் விரித்துக் கூறியுள்ளார் என்பதும் மேல் எடுத்துக் காட்டிய குறிப்புகளால் இனிது விளங்கும்.

சேக்கிழார் எடுத்தாண்ட முன்னூற் சான்றுகள்

தெய்வப்புலமைச் சேக்கிழார் நாயனார், தாம் இயற்றிய வரலாற்றுக் காப்பியமாகிய திருத்தொண்டர் புராணத்தில், பழந்தமிழ் இலக்கணமாகிய தொல்காப்பியம் முதல் தம் காலத்திற்குச் சிறிது முன் தோன்றிய நூல்களீறாகவுள்ள செந்தமிழ்த் தொன்னூல்களின் கருத்துக்களையும் சொற்பொருள் நலங்களையும் பொன்னேபோற் போற்றி எடுத்தாண்டுள்ளார்.

ஒருவனும் ஒருத்தியுங் கூடிவாழும் மனையறத்தின் பயனாக அவ்விருவரையும் பிறப்புத்தோறும் சேர்த்து வைப்பதும், பிரித்து விலக்குவதும் ஆகிய இருவகை ஊழினும் இருவருள்ளமும் எக்காலத்தும் ஒன்றி வாழ்தற்கு உயர்த்தும் நல்லூழின் ஆணையினால் ஒத்த அன்புடைய தலைவனும் தலைவியும் ஓரிடத்து எதிர்ப்பட்டுக் காண்பர் என்பதனை,

"ஒன்றே வேறே என்றிரு பால்வயின்
ஒன்றி யுயர்ந்த பாலது ஆணையின்
ஒத்த கிழவனும் கிழத்தியுங் காண்ப" (தொல் – களவு – 2)

எனவரும் நூற்பாவில் தொல்காப்பியர் இனிது விளக்கியுள்ளார். திருவாரூர்ப் பெருமானை வழிபடச் சென்ற நம்பியாரூரராகிய சுந்தரரும் நங்கைபரவையாரும் ஒருவரையொருவர் முன்னறியாத நிலையில் திருவாரூர்த் திருக் கோயிலில் எதிர்ப்பட்டுக் கண்ணுற்றுக் காதல் கொண்ட திறத்தினை,

"புற்றிடம் விரும்பினாரைப் போற்றினர் தொழுதுசெல்வார்
சுற்றிய பரிசனங்கள் சூழஆளுடைய நம்பி
நற்பெரும் பான்மை கூட்ட நகைபொதிந் திலங்கு செவ்வாய்
விற்புரை நுதலின் வேற்கண் விளங்கிழை யவரைக்
கண்டார்"

எனவும்

"தண்டரள மணித்தோடுந் தகைத்தோடுங் கடைபிறழும்
கெண்டைநெடுங் கண்வியப்பக் கிளரொளிப்பூ ணுரவோனை
அண்டர்பிரான் திருவருளால் அயலறியா மனம் விரும்பப்
பண்டைவிதி கடைகூட்டப் பரவையாருங் கண்டார்"

எனவும் வரும் பாடல்களில் சேக்கிழாரடிகள் விரித்துக் கூறியுள்ளார். இவ்வாறு நம்பியாரூரரும் நங்கைபரவை யாரும் ஒருவரையொருவர் எதிர்ப்பட்ட முதற் காட்சியிலேயே ஒருவரையொருவர் இன்றியமையாத காதலுடையராதற்கு அவ்விருவரும் முன்னைப் பிறவியிற் பயிலியது கெழீஇய நட்பின் பயனாகிய நல்லூழின் ஆணையே காரணம் என்பதனை, "நற்பெரும்பான்மை கூட்ட" "பண்டை விதிகடை கூட்ட" எனவரும் தொடர்களில் ஆசிரியர் புலப்படுத்தியுள்ளார். 'ஒன்றியுயர்ந்த பால்' எனத் தொல் காப்பியர் குறித்த நல்லூழினையே 'நற்பெரும்பான்மை' எனவும் 'பண்டை விதி' எனவும் சேக்கிழார் குறித் துள்ளமை இங்கு ஒப்பு நோக்கியுணரத் தகுவதாகும்.

மேற்குறித்த இருவகைப் பால்களாகிய இருவினையின் பயன்களைச் செய்த உயிர்களே நுகரும் வண்ணம் வகுத்து நுகர்வித்தல் தெய்வத்தின் செயலாம் என்பதனைப் 'பால் வரை தெய்வம்' (தொல் - சொல் – கிளவி 57) எனவரும் தொடரால் ஆசிரியர் தொல்காப்பிரும் 'வகுத்தான் வகுத்த வகை' (திருக்குறள் 377) என்பதனால் திருவள்ளுவரும்

தெளிவாகக் குறித்துள்ளார்கள். எனவே ஊழ்வினை தானே வந்து உயிர்களைப் பற்றும் உணர்வுடையதன்றென் பதும், உயிர்கள் செய்யும் நலன் தீங்குகளாகிய இருவினை களுக்கேற்ப அவற்றின் பயன்களை வகுத்து, அவ்வவ் வுயிர்கள் செய்த வினைப்பயன்களை அவ்வவ்வுயிர்களே நுகருமாறு நுகர்விக்கும் முதல்வனொருவன் உளனென் பதும் தொல்காப்பியர் திருவள்ளுவர் முதலிய பண்டைத் தமிழ்ச் சான்றோர் துணிபாதல் புலனாகும். தமிழகத்திற் பன்னெடுங் காலத்திற்கு முன்னரே நிலைபெற்று வழங்கிய இவ்வுண்மையினை,

"செய் வினையுஞ்செய்வானும் அதன் பயனுஞ் சேர்ப்பானும்
மெய் வகையால் நான்காகும் விதித்தபொருள் எனக்கொண்டே
இவ்வியல்பு சைவநெறி யல்லவற்றுக் கில்லையென
உய்வகையாற் பொருள் சிவனென் றருளாலே
உணர்ந்தறிந்தார்"
(பெரிய – சாக்கிய – 5)

எனவரும் செய்யுளில் சேக்கிழாரடிகள் தெளிவாக விரித் துரைத்தமை இங்கு ஒப்பு நோக்கத் தகுவதாகும்.

ஆசிரியர் தொல்காப்பியனார் வகுத்துரைத்த தமிழ்ப் பொருளிலக்கண மரபினை அருண்மொழித் தேவராகிய சேக்கிழாரடிகள் தாம் இயற்றிய திருத்தொண்டர் புராணத் தில் ஆங்காங்கே எடுத்தாண்டுள்ளார். திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணத்தில் திருத்தொண்டை நன்னாட்டு நானிலத்து ஐந்திணைவளங்களையும் ஆசிரியர் தெளிவாக எடுத்துக்காட்டி விளக்கியுள்ளமை உணர்ந்து மகிழத்தகுவதாகும்.

காடுறையுலகம், மைவரையுலகம், தீம்புனலுலகம், பெருமணலுலகம் என நிலத்தை நான்காகப் பகுத்து, அந் நால்வகை நிலங்களுக்கும் அகனைந்திணைகளுள் முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் என்னும் நால்வகையொழுக்கங் களையும் உரிமை செய்துணர்த்திய தொல்காப்பியர், நில மில்லாத பாலைத்திணைக்கு,

"நடுவுநிலைத் திணையே நண்பகல் வேனிலொடு
முடிவுநிலை மருங்கின் முன்னிய நெறித்தே"
(தொல் – அகத் – 11)

எனவரும் நூற்பாவில் இடமும் காலமும் வகுத்துக்கூறி யுள்ளார். "முல்லை குறிஞ்சி பாலை மருதம் நெய்தல் என

வரும் ஐந்திணைகளுள் நடுவண் நிற்பதாகிய பாலைத்திணை, நண்பகற்பொழுது வேனிற்காலத்துடன் கூடிய நிலையிற் கருதிச் செல்லும் வழியினை இடமாகவுடையது" என்பது இந்நூற்பாவின் பொருளாகும். எனவே தமிழகத்திற் பாலை என்பதோர் தனி நிலம் இல்லையென்பதும் வேனில் வெப்பத்தால் வளங்குன்றிய வெவ்விய சுரவழியே பாலைத் திணைக்குரியதென்பதும் தொல்காப்பியனார் கருத்தாதல் பெறப்படும்.

"வானமூர்ந்த வயங்கொளி மண்டிலம்
நெருப்பெனச் சிவந்த உருப்பவி ரங்காட்
டிலையில மலர்ந்த முகையி லிலவம்" (அகநானூறு - 11)

எனவரும் பாடல், காடுறையுலகமாகிய முல்லை நிலம் வேனில் வெப்பத்தால் தன்னியல்பு திரிந்து பாலையாயின செய்தியைப் புலப்படுத்துகின்றது.

"முக்கண்ணான் மூவெயிலும்
உடன்றக்கால் முகம்போல வொண்கதிர் தெறுதலிற்
சீறருங் கணிச்சியோன் சினவலின் அவ்வெயில்
ஏறுபெற் றுதிர்வனபோல் வரைபிளந்து, இயங்குநர்
ஆறுகெட விலங்கிய அழலவிர் ஆரிடை" (பாலைக்கலி-1)

என்பது, மைவரையுலகமாகிய குறிஞ்சி நிலம் வேனிற் பொழுதிற் கதிரவன் வெம்மையால் தன்னியல்பு திரிந்து பாலையாயின செய்தியைப் புலப்படுத்துகின்றது. இவ்வாறு முல்லையும் குறிஞ்சியும் வேனில் வெப்பத்தால் தம்மியல்பு திரிந்து பாலையாயினவாறுணர்ந்த இளங்கோவடிகள்,

"வேனலங் கிழவனொடு வெங்கதிர் வேந்தன்
தானலந் திருகத் தன்மையிற் குன்றி
முல்லையுங் குறிஞ்சியு முறைமையிற் றிரிந்து
நல்லியல் பிழந்து நடுங்குதுய ருறுத்துப்
பாலை என்பதோர் படிவங் கொள்ளுங்
காலை" (சிலப் - காடுகாண் 62-7)

என வேனிற் பருவத்தே நண்பகற்பொழுதிற் கதிரவன் வெம்மையால் தன்மை திரிந்த சுரத்தினைப் பாலை என்ற பெயராற் குறித்துள்ளார்.

"குறிஞ்சியும் முல்லையும் அடுத்த நிலமே காலம் பற்றிப் பாலையாகும்...... தொல்காப்பியனார் பாலைக்கு நிலம் வேண்டிற்றிலர். வேண்டாமையின் தெய்வமும் வேண்டிற்றிலர். பிறர் பகவதியையும் ஆதித்தனையும்

தெய்வம் என்று வேண்டுவர்" என்பர் இறையனூர் களவியலுரையாசிரியர். அவ்வாசிரியர் குறித்த வண்ணம் பகவதியாகிய கொற்றவையைப் பாலைநிலத் தெய்வமாக இளங்கோவடிகள் சிலப்பதிகார வேட்டுவ வரியிற் போற்றி யுள்ளமையும், முல்லை நிலத்தெய்வமாகிய மாயோனுக்குத் தங்கையும் குறிஞ்சி நிலத் தெய்வமாகிய சேயோனுக்குத் தாயும் ஆகிய கொற்றவை முல்லையுங் குறிஞ்சியும் திரிந்த பாலை நிலத்திற்குத் தெய்வமாதல் பெரிதும் பொருத்த முடைமையும் எண்ணிய சேக்கிழாரடிகள் பாலை நிலத் தெய்வமாகக் கொற்றவையைக் குறித்துள்ளார். கதிரவன் வெம்மையினுல் கடும்பகற் பொழுதில் அழகிய முல்லை நிலமும் குறிஞ்சி நிலமும் திரிந்து வளங்குறைந்த சில இடங்கள், காடுகிழாள் ஆகிய பகவதி கோயில்களைத் தன்னகத்தே கொண்டு, பாலையென்று பெயர் சொல்லுதற் குரியனவும் தொண்டை நாட்டில் உள்ளன என்பதனை,

"கோல முல்லையுங் குறிஞ்சியுந் திரிந்தசில் லிடங்கள்
நீல வாட்படை நீலிகோட் டங்களும் நிரந்து
கால வேனிலிற் கடும்பகற் பொழுதினைப் பற்றிப்
பாலையுஞ் சொல லாவன வுளபரன் முரம்பு"

எனவரும் பாடலிற் குறித்துள்ளார். இங்ஙனம் பாலை யெனப் பெயர் பெறுதற்குரிய இடமும் பொழுதுமாகிய இவற்றைக் குறித்துத் தொல்காப்பியனாரும் சங்கப்புலவர் களும் இளங்கோவடிகளும் களவியலுரையாசிரியரும் கூறிய கருத்துக்கள் எல்லாவற்றையும் வரலாற்று முறையில் தொகுத்துரைப்பதாக மேற் குறித்த பெரிய புராணச் செய்யுள் அமைந்திருத்தல் காண்க.

காடுறையுலகமாகிய முல்லை நிலத்திற்கு மாயோனாகிய திருமால் தெய்வம் என்பதனை,

'மாயோன் மேய காடுறையுலகமும்' (தொல்-அகத்-5)

எனவரும் தொல்காப்பியத் தொடர் எடுத்துரைக்கின்றது. இவ்வாறு அருந்தமிழ் நூலாகிய தொல்காப்பியத்தில் முல்லை நிலத் தெய்வமாகச் சிறப்பித்துரைக்கப் பெற்ற செங்கண்மாலால் தொழப் பெற்ற பெருமை வாய்ந்த சிவபெருமான் மகிழ்ந்து வீற்றிருக்குஞ் சீர்த்தி வாய்ந்தது தொண்டை நாட்டில் உள்ள திருமுல்லை வாயில் என்ற திருத்தலம் என்பார்,

" அங்கண் முல்லையின் தெய்வமென் றருந்தமி ழுரைக்கும்
செங்கண் மால்தொழுஞ் சிவன்மகிழ் திருமுல்லை வாயில் "
(பெரிய - திருக்குறிப்புக் – 18)

என்றார் சேக்கிழாரடிகள்.

ஒரு திணைக்கண்ணே நிலைத்து வாழும் மக்கட் பெயர் நிலப்பெயரும் தொழிற்பெயரும் என இருவகைப்படும். ஆயர் என்பது முல்லை நிலத்தில் வாழ்வாரைக் குறித்து வழங்கும் நிலப் பெயராகும். வேட்டுவர் என்பது வேட்டைத் தொழில் செய்வாரைக் குறித்து வழங்குந் தொழிற் பெயராகும், இவையே யன்றிக் குழுப்பற்றியும் மக்களுக்குப் பெயர் அமைதலுண்டு. இப்பெயர் வகையினை,

" ஆயர் வேட்டுவர் ஆடூஉத் திணைப் பெயர்
ஆவயின் வரூஉங் கிழவரு முளரே " (தொல் – அகத் – 21)

எனவரும் நூற்பாவிலும்,

" நிலப்பெயர் குடிப்பெயர் குழுவின் பெயரே
வினைப்பெயர் உடைப்பெயர் பண்புகொள் பெயரே "
(தொல் – பெயர் 11)

எனவரும் நூற்பாவிலும் தொல்காப்பியர் விரித்துரைப்பார். இங்ஙனம் நானில மக்கள் தாம் வாழும் நிலம்பற்றியும் மேற்கொண்ட தொழில் பற்றியும் பெயர் கூறப் பெற்றுப் பல் வேறு குலத்தினராகப் பரவி வாழும் இயல்பினை,

" ஆய நானிலத் தமைதியில் தத்தமக் கடுத்த
மேய செய்தொழில் வேறுபல் குலங்களின் விளங்கித்
தீய என்பன கனவிலும் நினைவிலாச் சிந்தைத்
தூய மாந்தர் வாழ் தொண்டைநாட் டியல்பு சொல்
வரைத்தோ "
(பெரிய – திருக்குறிப்பு – 47)

எனத் தொண்டை நாட்டியல்பில் வைத்து அருண் மொழித் தேவர் விளக்கியுள்ளமை அவர்தம் தொன்னூற் பயிற்சியினையும் நாட்டின் நடைமுறையினை நன்குணர்ந்த அவரது உலகிய லறிவையும் நன்கு புலப்படுத்துவதாகும்.

வண்புகழ் மூவராகிய சேர சோழ பாண்டியர் என்னும் மூவேந்தர்களால் ஆளப்பெறும் தமிழகத்திலே அவ் வேந்தர்க்குரிய படைவீரர்கள் முறையே பனம்பூவையும் வேப்பம்பூவினையும் ஆத்திப்பூவினையும் தத்தமக்குரிய அடையாளப் பூவாகக் கொண்டனர் என்பது,

"போந்தை வேம்பே ஆர் எனவரூஉம்
மாபெருந் தானையர் மலைந்த பூவும்" (தொல் - புறத் - 5)

எனவரும் தொடராற் புலனும். நின்றசீர் நெடுமாறனாகிய பாண்டியன் நெல்வேலிச் செருக்களத்தில் வடபுல வேந்தர்களைப் பொருது வென்று வாகைமாலை சூடுபவன், தன் குடிக்குரிய வேப்பமாலையுடன் அதனைச் சூடிக்கொண்டான் என்பதனை,

"பனைநெடுங்கை மதயானைப் பஞ்சவனார் படைக் குடைந்து
முனையழிந்த வடபுலத்து முதல் மன்னர் படைசரியப்
புனையுநறுந் தொடைவாகை பூழியர்வேம்புடன் புனைந்து"

எனவரும் தொடரில் சேக்கிழாரடிகள் குறித்துள்ளார்.

புறத்திணை ஏழனுள் ஒன்றாகிய உழிஞைத்திணைக்குரிய துறைகளுள் 'அகத்தோன் வீழ்ந்த நொச்சி' என நொச்சியை ஒரு துறையாகக் கூறுவர் தொல்காப்பியர். பகைவரது சேனை தன்னகர்ப் புறத்தே சூழ்ந்து முற்றுகையிட்ட நிலையில் அகத்தேயுள்ள மன்னன் தனக்குரிய அரணைக்காத்து நிற்றலாகிய செயல் நொச்சி யெனப்படும் என்பதும், அத்தொழிலில் ஈடுபட்டுள்ள படைவீரர்கள் அதற்கு அடையாளமாக நொச்சிப் பூவைச் சூடிக் கொள்வர் என்பதும் சங்க இலக்கியங்களால் அறியப் படும் போர்முறையாகும். "நொச்சியாவது காவல்; இதற்கு நொச்சி ஆண்டுச் சூடுதலுங் கொள்க ... இக் கருத்தானே "நொச்சி வேலித் தித்தன் உறந்தை" (அகநா - 122 என்றார் சான்றோரும்" என நச்சினார்க் கினியர் தரும் விளக்கம் இங்கு நினைக்கத் தக்கதாகும். புகழ்ச்சோழருடைய பெருஞ்சேனைவீரர்கள் வஞ்சி சூடி அதிகர்கோன் நாட்டின் மேற் சென்று அதிகர்கோனது குறும்பொறையூரை முற்றுகையிட்டு அந்நகரத்தின் மதிலைக் கட்டழித்து அதனைக் காவல் செய்திருந்த நொச்சி வீரர்களை வீழ்த்திய திறத்தினை,

"முற்றும்பொரு சேனைமுனைத் தலையில்
கற்றிண் புரிசைப் பதிகட் டழியப்
பற்றுந்துறை நொச்சி பரிந் துடையச்
சுற்றும் படை வீரர் துணித்தனரே" (பெரிய - புகழ்ச் - 28)

எனவரும் பாடலில் சேக்கிழார் குறித்துள்ளார். ஆசிரியர் சேக்கிழார் பன்னிருபடல முடையார் கொள்கையின்படி எயில் காத்தலை நொச்சித்திணை எனத் தனியொரு

திணையாகக் கொள்ளாமல் தொல்காப்பியர் கொள்கைப்படி உழிஞைத்திணையில் அடங்கிய ஒரு துறையாகவே கொண்டார் என்பது, 'பற்றுந்துறை நொச்சி' எனக் குறித்துள்ளமையால் இனிது விளங்கும்.

காதலனை இழந்த மனைவி தவம்புரிந்தொழுகுதலாகிய முறையினைக் 'காதலன் இழந்த தாபத நிலை' எனக் காஞ்சித் திணைத்துறைகளுள் ஒன்றாகக் கூறுவர் தொல்காப்பியர். மருள் நீக்கியாரது தமக்கையாராகிய திலகவதியார், தமக்குக் கணவராக மணம் பேசிய கலிப்பகையார் திருமணம் நிகழ்தற்கு முன்னே வேந்தற் குற்றுழி வட நாட்டின்மேற் போருக்குச் சென்றவர் போர்க்களத்தில் உயிர் கொடுத்துப் புகழ்கொண்டாராகத் தாமும் உயிர்விடக் கருதினர். 'தம்பியார் உளராகவேண்டும்' என வைத்த பேரருளால் திலகவதியார் அம்பொன் மணி நூல் தாங்காது அனைத்துயிர்க்கும் அருள்தாங்கி மனைத்தவம் புரிந்தார் ஆதலால் அவர்கொண்ட தவநிலை தொல்காப்பியர் குறித்த தாபதநிலையின் பாற்படும் என்பது விளங்க அவருக்குத் 'தாபதியார்' (பெரிய—திருநாவுக் - 78) என்ற பெயரினைச் சேக்கிழார் படைத்து வழங்கியுள்ளமை கூர்ந்து நோக்கத் தகுவதாகும்.

எல்லாம்வல்ல கடவுளை நாயகனாகவும் உயிராகிய தம்மைத் தலைவியாகவும் கருதி இன்றியமையாத அன்புரிமையினால் கடவுளை விரும்பி வழிபடும் மரபு தொல்காப்பியனார் காலத்திலேயே தமிழகத்தில் நிலைபெற்று வழங்கியதென்பது,

"காமப் பகுதி கடவுளும் வரையார்
ஏனோர் பாங்கினும் என்மனார் புலவர்" (28)

எனவரும் புறத்திணையியற் சூத்திரத்தால் உய்த்துணரப் படும். திருஞானசம்பந்தப் பிள்ளையார் உமையம்மையார் அளித்த ஞானப்பாலைப் பருகித் தமக்கு அருள்புரிந்த இறைவனைத் தம் தந்தையார்க்கு 'எம்மை இது செய்த பிரான் இவன்' எனக் காட்டும் நிலையிற் பாடியருளிய 'தோடுடைய செவியன்' என்னுந் திருப்பதிகம், பிரமபுரத்துறையும் பெருமானைக் காதலித்த தலைவியொருத்தி தன் உள்ளங் கவர்கள்வனாகிய அம்முதல்வனை நினைந்திரங்கும் நிலையில அகப்பொருட்டுறை அமையப்பெற்றதென்ப

தனையும், இத்திருப்பதிகத்தில் அமைந்துள்ள இனிய தமிழியல் வழக்காகிய அகப்பொருட் குறிப்பினைப் பிள்ளையாரின் தந்தையாகிய சிவபாத விருதயர் ஓர்ந்து உணர்ந்து கொண்டார் என்பதனையும்,

'தாதையார்க்கு, எம்மையிது செய்தபிரான் இவனன்றே
எனவிசைத்தார்'

எனவும்,

'கூறு மருந்தமிழின்பொருளான குறிப்போர்வார்'

எனவும் வரும் தொடர்களில் ஆசிரியர் குறித்துள்ளமை, திருமுறை நூல்களில் இறைவனைத் தலைவனாகக் கொண்டமைந்த பாடற் பொருள்களையறிந்து கொள்ளுதற் குரிய சிறந்த விளக்கமாதல் உணர்ந்து மகிழ்தற்குரிய தாகும்.

வாகைத்திணையுள் ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்னும் அறுதொழிலிற் சிறந்தோரது வென்றியை 'அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கம்' என்ற தொடரில் தொல்காப்பியர் குறிப்பிடுவர். இத்தொடரினை அடியொற்றி 'அறு தொழிலோர்' எனக் குறித்தார் திருவள்ளுவர். முன்னோர் குறித்த இக் கருத்தினையுளங்கொண்டு,

"அறுதொழிலின் வைதிக மாநெறி"
(பெரிய - சம்பந்தர் – 1158)

என வேத நெறியைச் சிறப்பிப்பார் சேக்கிழாரடிகள்.

முடியுடை வேந்தருங் குறுநில மன்னரும் முதலாயினோர் ஆடல் பாடல் முதலிய கலைத்திறங்களைக் கண்டுங் கேட்டும் மகிழும் இன்ப விளையாட்டினைப் 'பண்ணைத் தோன்றிய' (தொல் – மெய்ப் – 1) எனவரும் நூற்பாவிற் 'பண்ணை' என்ற சொல்லாற் குறித்தார் தொல்காப்பியர். அச்சொற் பொருளை விளக்கும் முறையில் அமைந்தது,

"பாடலாடல் இன்னியங்கள் பயிறல் முதலாம்
பண்ணையினில், நீடு மினிய விநோதங்கள்"
(பெரிய - கழறிற் - 154)

எனவரும் பெரிய புராணத் தொடராகும்.

நிறைமொழி மாந்தராகிய பெரியோர், 'இவ்வாறு ஆகுக' எனத் தகது ஆணையாற் சொல்லப்பட்டு,

அவ்வாற்றல் அனைத்தையும் தன்கண் பொதிந்து வைத்துள்ள செறிவுடைய நன்மொழியே மந்திரம் எனப்படும் என்பதனை,

'நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப' (தொல் - செய் - 171)

எனத் தொல்காப்பியரும், அவரது வாய்மொழியை அடியொற்றி,

'நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டிவிடும்' (திருக்குறள் –28)

எனத் திருவள்ளுவரும் குறித்துள்ளார்கள். இறைவன் திருவருள் பெற்ற திருஞானசம்பந்தர், 'எந்தை நனி பள்ளியுள்க வினைகெடுதல் ஆணை நமதே' (2–84–11) எனவும், 'ஆனசொன் மாலையோதும் அடியார்கள் வானில் அரசாள்வர் ஆணை நமதே' (2–85–11) எனவும் தம்மேல் ஆணையிட்டும், 'செய்வினை வந்தெமைத் தீண்டப்பெறா திருநீலகண்டம்' என இறைவனது திருநீலகண்டத்தின் மேல் ஆணையிட்டும அருளிக் கூறிய மொழிகள், ஆசிரியர் தொல்காப்பியனார் குறித்த மந்திரச் செய்யுள் வகையில் அடங்குவன என்பதனை,

'ஆயகுறிப்பினில் ஆணைநிகழ அருளிச்செய்து
தூயபதிகத் திருக்கடைக் காப்புத் தொடுத்தணிய
மேய அப் பொற்பதி வாழ்பவர்க்கேயன்றி மேவும் அந்நாள்
தீயபனிப்பிணி அந்நாடடங்கவும் தீர்ந்ததன்றே'
(பெரிய - சம்பந்தர் – 336)

எனவரும் பாடலில் சேக்கிழார் புலப்படுத்தியுள்ளமை காணலாம்.

பல பிறப்புக்களிலும் நல்லறங்களை விரும்பி நிகழ்த்திய நற்றவத்தின் பயனாகச் செம்மை மனத்துடனே ஐம்புலவுணர்களைத் துறந்து மெய்யுணர்வு பெற்று இறைவன் திருவடி நீழலில் இன்புற்றுறைதலே வீடுபேறாகும் என்பதனை,

'சேவடி படருஞ் செம்மல் உள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்பிரிந்துறையும் செலவு'
(திருமுருகாற் – 62-64)

என நக்கீரர் குறித்துள்ளார். திருநாளைப் போவார்க்குத் தில்லையம்பலவர் வீடுபேறருளிய திறத்தை,

'வந்தணைந்த திருத்தொண்டர் தம்மைவினை மாசறுத்துச்
சுந்தரத் தாமரை புரையுந் துணையடிகள் தொழுதிருக்க
அந்தமிலா ஆனந்தப் பெருங்கூத்தர் அருள்புரிந்தார்'
(பெரிய—திருநாளைப்-36)

எனச் சேக்கிழாரடிகள் குறித்துள்ளமை இவ்வீடு பேற்றின் திறத்தினை விளக்குமுறையில் அமைந்திருத்தல் காணலாம்.

"திருவடியே வீடாயிருக்கும் என்றூர்; அது 'தென்னன் பெருந்துறையான், காட்டாதன வெல்லாங் காட்டிச் சிவங்காட்டித் தாட்டாமரை காட்டித் தன் கருணைத் தேன் காட்டி' (திருவாசகம், 180) என்பதனுனும் பிறரும் திருவடியைக் கூறுமாற்றுனும் உணர்க' என மேற்காட்டிய திருமுருகாற்றுப்படைத் தொடர்க்கு நச்சினுர்க்கினியர் கூறும் விளக்கம் இங்கு நினைக்கத்தகுவதாகும்.

சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த பாண்டியர்களின் தலைநகராகிய மதுரையினை,

'கண்ணார் கண்ணிக் கடுந்தேர்ச் செழியன்
தமிழ் நிலைபெற்ற தாங்கரு மரபின்
மகிழ்நனை மறுகின் மதுரை' (சிறுபாண் 65 – 67)

என நல்லூர் நத்தத்தனுர் சிறப்பித்துள்ளார். 'கண்ணிற்கு அழகு நிறைந்த முடிமாலையினையும் விரைந்து செல்லும் தேரினையும் உடைய பாண்டியனது தமிழ்மொழி வீற்றிருந்த பொறுத்தற்கரிய பெரு மகிழ்ச்சியினைப் பொருந்திய தெருவினையுடைய மதுரை' என்பது இத் தொடரின் பொருளாகும். தமிழ் நிலைபெற்றிருத்தலால் அந்நகரம் தாங்குதற்கு அரிய மிக்க மகிழ்ச்சியையுடையதாயிற்று என்பதாம். இவ்வாறு பாண்டியர்க்குரிய மதுரை நகரத்தில் பாண்டியர் நிறுவிய தமிழ்ச் சங்கத்தில் ஆலவாயிறைவர், புலவர்களோடு ஒருங்கிருந்து தமிழ் ஆராய்ந்த தனுல் தமிழ் சிறப்பாக நிலைபெற்றிருத்தலும் தமிழைப் பயில்வார் உள்ளத்தே ஈரமுடைமையாகிய அன்பு நிரம்பி மகிழ்ச்சி பெருகுதலும் ஆகிய தன்மையினை,

'மொய்வைத்த வண்டின் செறிசூழல் முரன்றசந்தின்
மைவைத்த சோலை மலயந்தர வந்த மந்த
மெய்வைத்த காலும் தரும்; ஞாலமளந்த மேன்மைத்
தெய்வத்தமிழும் தரும்; செவ்வி மணஞ்செய் ஈரம்'

'சால்பாய மும்மைத் தமிழ் தங்கிய அங்கண்மூதூர்
நூல்பாயிடத்தும் உள; நோன்றலை மேதிபாயப்
பால்பாய் முலைத்தோய் மதுபங்கயம் பாய எங்குஞ்
சேல்பாயிடத்தும் உள; செய்யுண்மிக்கேறு சங்கம்'

'மும்மைப் புவனங்களின் மிக்கதன்றே அம்மூதூர்
மெய்ம்மைப் பொருளாந் தமிழ்நூலின் விளங்கு வாய்மைச்
செம்மைப் பொருளுந் தருவார் திருவால வாயில்
எம்மைப் பவந்தீர்ப்பவர் சங்கம் இருந்ததென்றால்'
(பெரிய – மூர்த்தி. 3, 5, 7)

என மூர்த்தி நாயனார் புராணத்தில் ஆசிரியர் விரித்துக் கூறியுள்ளார்.

'அழல் திகழ்ந்து இமைக்கும் அஞ்சுவரு நெடுவேல்' (94) எனவரும் சிறுபாணாற்றுப்படைத் தொடர்க்கு, "தன்னிடத்துறையும் கொற்றவையுடைய கோபத்தின் மிகுதியினாலே தான் விளங்கும் அச்சந் தோன்றும் நெடியவேல்" எனப் பொருளுரைப்பர் நச்சினார்க்கினியர். இங்ஙனம் ஆயுதங்களிற் கொற்றவையிருத்தலை "வென்றி மங்கை வேடர்வில்லின் மீதுமேவு பாதம்முன், சென்று மீளுமாறு போல்வ" (கண்ணப்பர் – 69) என உவமையாக ஆசிரியர் குறித்துள்ளமை ஒப்புநோக்கத் தகுவதாகும்.

கடியலூர் உருத்திரங் கண்ணனார் நெடிய குளத்திலே மலர்ந்த செந்தாமரை மலரைக் குறிக்குங்கால்,

'நீத்துடை நெடுங்கயந் தீப்பட மலர்ந்த
கடவுள் ஒண்பூ' (பெரும்பாண் – 289 – 290)

எனக் கூறியுள்ளார். 'நீந்துதற்குரிய பெருக்கினையுடைய நெடிய குளத்திலே நெருப்பின் தோற்றம் நீரிலேயுண்டாகப் பூத்த கடவுள் சூடுதற்குரிய ஒள்ளிய தாமரைப்பூ' என்பது மேற்காட்டிய தொடரின் பொருளாகும். இத் தொடர்ப் பொருளை நினைப்பிக்கும் முறையில் அமைந்தது,

'நிரைநெடுங்கயல் நீரிடை நெருப்பெழுந் தனைய
விரைநிகழ்ந்த செங்கமலமென் பொய்கை' (உருத்திர – 5)

எனவரும் பெரிய புராணத் தொடராகும்.

'வருணன் மேய பெருமணலுலகம்' எனப்படும் நெய்தல் நிலத்து வாழும் மக்கள் தம்சுற்றத்துடன் கூடிச் சுறுமீனின் கொம்பினை நட்டு நெய்தல்நிலத் தெய்வமாகிய வருணனுக்குப் பரவுக் கடன் கொடுத்தலை,

" சினைச் சுறவின் கோடு நட்டு
மனைச் சேர்த்திய வல்லணங்கினான்
மடற்றாழை மலர் மலைந்தும்" (பட்டினப் - 86 - 88)

எனவரும் தொடரிற் கடியலூர் உருத்திரங்கண்ணனார் குறித்துள்ளார். நெய்தனில மக்கள் செய்யும் இவ்வழி பாட்டினை,

" சுறவமுள் மருப்பு அணங்கு அயர்வன கழிச்சூழல்" (7)

எனத் திருக்குறிப்புத் தொண்டர் புராணத்தில் ஆசிரியர் குறித்துள்ளமை காணலாம்.

' விழவறா வியலாவணத்து ' (பட்டினப் – 158)

எனவரும் பட்டினப்பாலைத் தொடரை அடியொற்றி யமைந்தது,

' விழவறாதன விளங்கொளி மணிநெடு வீதி' (பெரிய - ஏயர் - 3)

எனவரும் பெரிய புராணத் தொடராகும்.

' அமரர்ப் பேணியும் ஆவுதி யருத்தியும்
நல் லானொடு பகடோம் பியும்
நான் மறையோர் புகழ் பரப்பியும்' (பட்டினப் 200 – 2)

எனவரும் பட்டினப்பாலைத் தொடரை நினைவு படுத்தும் முறையிலமைந்தன, சண்டேசுர நாயனார் புராணத்தில்

" யாகம் நிலவு சாலைதொறும் மறையோர் ஈந்த அவியுணவின்
பாகம் நுகரவரும் மாலும் அயனும் " (4)

எனவும்,

' தீம்பாலொழுகப் பொழுது தொறும் ஓமதேனுச்
செல்வனவும் ' (5)

எனவும் வரும் தொடர்களாகும்.

மழை பெய்யும் பருவத்துப் பெய்யாது பொய்க்குமாயின் மழைத்துளியை உணவாகக் கொள்ளும் வானம்பாடி என்னும் பறவை வாட்டமுற்று வருந்தும் என்பது,

" தற்பாடிய தளியுணவின், புட்டேம்பப்புயல் மாறி (பட்டினப் –3–4)

எனவரும் பட்டினப்பாலைத் தொடரால் அறியப்படும். தளியுணவின் புள் தேம்ப ' எனவரும் இத்தொடரை,

' உறையுணவு கொள்ளும் புள்தேம்ப' (பெரிய–சம்பந்ர்–387)

எனச் சேக்கிழாரடிகள் எடுத்தாண்டு பொருள் விரித்துள்ளமை அறிந்து மகிழத் தக்கதாகும்.

'ஊடியார் நலந்தேம்ப ஒடியெறிந்து' (கலி – 68)

எனவரும் கலித்தொகைத் தொடரில் ஒடிய எறிந்து என்பது 'ஒடியெறிந்து' என விகாரமாயிற்று. இங்ஙனம் சிதைந்து வழங்கும் இச்சொற்றொடரை,

'ஒடியெறிந்து வாரொழுக்கி' (கண்ணப்பர் – 75)

எனக் கண்ணப்ப நாயனார் புராணத்தில் ஆசிரியர் எடுத்தாண்டுள்ளார்.

அகநானூற்றுக் கடவுள் வாழ்த்தில்,

"கார்விரி கொன்றைப் பொன்னேர் புதுமலர்த்
தாரன் மாலையன் மலைந்த கண்ணியன்"

எனச் சிவபெருமானுக்கு ஓர் விசேடமாக இட்ட தாரும் அழகுக்கு இடும் மார்பின் மாலையும் போர்ப்பூவாக முடியிற் சூடும் கண்ணியும் குறிக்கப் பெற்றன. இத்தொடர்க்குப் பழைய குறிப்புரை யாசிரியர் "இனித் தார் சேர்ப்பதாகவும், மாலை கட்டுவதாகவும், கண்ணி தனித்துத் தொடுப்பதாகவும் இவ்வேறுபாடுகள் என உரைப்பாரும் உளர்" என வேறொரு விளக்கமும் தந்துள்ளார். இவ்வாறே புறநானூற்றுக் கடவுள் வாழ்த்திலும்,

'கண்ணி கார் நறுங் கொன்றை காமர்
வண்ணமார்பிற் றாருங் கொன்றை"

எனக் கண்ணி தார் என்பன குறிக்கப்பெற்றன. இவ்வாறு நால்வகைப் பூக்களால் தொடுக்கப்படும் மாலைகள் தொடுத்தல் வேறுபாட்டாற் பலதிறப்படுதலை, முருக நாயனார் புராணத்தில்,

"கொண்டு வந்து தனியிடத்தி னிருந்து கோக்கும்
கோவைகளும்
இண்டைச் சுருக்கும் தாமமுடன் இணைக்கும் வாசமாலைகளும்
தண்டில் கட்டும் கண்ணிகளும் தாளிற் பிணைக்கும்
பிணையல்களும்
நுண்டா திரைக்குந் தொடையல்களும் சமைத்து நுடங்கும்
நூன்மார்பர்" (9,

எனவரும் செய்யுளில் ஆசிரியர் வகைப்படுத்தி விளக்கியுள்ளார்.

செவ்வானத்தையொத்து விளங்கும் சிவபெருமானது திருமேனியில் மார்பில் அணியப்பெற்று விளங்கும் பன்றிக் கொம்புக்கு அத்தகைய செவ்வானத்திலே விளங்கும்

வெண்பிறை உவமையாம் என்பது, 'அவ் வான் இலங்கு பிறையன்ன விலங்குவால் வையெயிற்று............... அந்தணன்' (அகம்-கடவுள் வாழ்த்து) எனவரும் பெருந் தேவனார்பாடலால் அறியப்படும். திண்ணனாரது வேட்டைக் கோலத்தைப் புனைந்துரைக்கும் ஆசிரியர், திண்ணனார் மார்பில் அணியப்பெற்றுள்ள பன்றிக்கொம்பு வெள்ளிய பிறைச் சந்திரனையொத்து விளங்கிய தோற்றத்தினை,

'ஏனக்கோடு, துண்டப்பிறைபோல்வன தூங்கிட' (பெரிய. கண்ணப்பர்-59) எனக்குறித்துள்ளமை இங்கு ஒப்புநோக்கத் தகுவதாகும்.

அரசர்க்குப் படைவலி சிறந்திருப்பினும் அவரது வெற்றி அறத்தையே முதலாகவுடையது என்பதனை,

'கடுஞ்சினத்த கொல்களிறும் கதழ்பரிய கலிமாவும்
நெடுங்கொடிய நிமிர்தேரும் நெஞ்சுடைய புகன்மறவரும் என
நான்குடன் மாண்டதாயினும் மாண்ட
அறநெறி முதற்றே அரசின் கொற்றம்' (புறம் 55)

என்பர் மதுரை மருதன் இளநாகனார். அரசியல் ஆட்சிக்கு அறநெறியே அடிப்படையாயமைதல் வேண்டும் என்னும் இக்கருத்தினை யொட்டி அரசியல் நெறியாற் காக்கத்தக்கது அறநெறியே என்னும் உண்மையினையும்,

'அரசியல் நெறியின் வந்த அறநெறி வழாமற் காத்து
வரைநெடுந் தோளால் வென்று மாற்றலர் முனைகள் மாற்றி
உரைதிறம் பாத நீதி ஓங்கு நீர்மையினில் மிக்கார்
திரைசெய் நீர்ச் சடையான் அன்பர் வேடமே சிந்தை
செய்வார்' (பெரிய - மெய்ப் - 2)

எனவரும் செய்யுளில் ஆசிரியர் அறிவுறுத்தியுள்ளார்.

ஒரு நாடு எல்லாவளங்களும் பெற்றிருப்பினும் குடிமக்கள்பால் அருளுடன் ஆட்சிபுரியத் தக்க தலைவனாகிய வேந்தனைப் பெறாதாயின் அவ்வளங்களாற் சிறிதும் பயனுடையதன்று என்பது,

'ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமை வில்லாதநாடு' (திருக்குறள் - 740)

எனவரும் திருவள்ளுவர் வாய்மொழியாற் புலனாம். இவ்வுலகில் வாழ்வார்க்கு உயிர்வாழ்க்கைக்கு இன்றியமையாதன நெல் முதலிய உணவுப் பொருள்களும் நீரும்

ஆயினும் அவர்களுக்குப் பகை முதலியவற்ருல் வரும் இடர் நீக்கி மன்னுயிர்களைத் தன்னுயிர் போற் பேணிக்காப்பவன் வேந்தனே ஆதலின் அவனே மலர்தலை உலகிற்கு உயிரெனச் சிறந்தவன் ஆவன். இதனை,

‘நெல்லு முயிரன்றே நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலையுலகம்
அதனுல், யானுயி ரென்பதறிகை
வேன்மிகு தானை வேந்தர்க்குக் கடனே’ (புறம் – 186)

எனவரும் பாடலில் மோசிகீரனுர் அறிவுறுத்தியுள்ளார். இப்பாடற் பொருளை,

‘மண்ணுக்குயி ராமெனு மன்னவனுர்’ (பெரிய – புகழ்ச் – 33)

என உடன்பாட்டு முகத்தானும்,

“பன்முறை ஞாலமெல்லாம் பாலித்து ஞாலங்காப்பான்
தன்னெடுங் குடைக்கீழ்த் தத்தம் நெறிகளிற் சரித்துவாழும்
மன்னரையின்றி வைகு மண்ணுல கெண்ணுங்காலை
இன்னுயிரின்றி வைகும் யாக்கையை ஒக்கும் என்பார்”
(பெரிய – மூர்த்தி 29)

என எதிர்மறை முகத்தானும் ஆசிரியர் எடுத்தாண்டுள்ளமை மனங்கொளத்தக்கதாகும்.

‘வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு’ எனத் தொல்காப்பியனுராற் குறிக்கப் பெற்ற தமிழ் வேந்தர் மூவருள்ளும் சோழரது அரசியல் முறை சிறந்து விளங்கிய திறத்தினை,

‘மண்டிணி கிடக்கைத் தண்டமிழ்க் கிழவர்
முரசு முழங்குதானை மூவருள்ளும்
அரசெனப்படுவது நினதே பெரும’ (புறம் – 35)

என வெள்ளைக்குடி நாகனுர் சிறப்பித்துள்ளார். தொன்று தொட்டு வரும் இச் சிறப்பினை நினைவு கூர்ந்து புகழ்ச் சோழரைப் போற்றும் முறையில் அமைந்தது,

“முரசங்கொள் கடற்ருனை மூவேந்தர் தங்களின்முன்
பிரசங்கொள் நறுந்தெரியல் புகழ்ச்சோழர் பெருமையினைப்
பரசுங்குற் றேவலினல் அவர்பாதம் பணிந்தேத்தி”
(பெரிய–புகழ்ச்–41)

எனவரும் பெரிய புராணத் தொடராகும்.

பருந்துக்கு அஞ்சித் தன்னை அடைக்கலம் புகுந்த புருவினது வருத்தத்தைப் போக்குதல் வேண்டி அதற்கு

ஈடாகத் தன்னுடம்பினையே அரிந்து கொடுத்துத் தானே துலாத்தட்டில் ஏறிய சிபி என்னும் சோழ மன்னனது சீர்த்தியினை,

' அவிர்சடை முனிவரு மருளக் கொடுஞ் சிறைக்
கூருகிர்ப் பருந்தி னேறுகுறித் தொரீஇத்
தன்னகம் புக்க குறுநடைப் புறவின்
தபுதி யஞ்சிச் சீரைபுக்க
வரையா ஈகை உரவோன் ' (புறம் – 43)

எனவும்,

' புறவுநிறைபுக்குப் பொன்னுலக மேத்தக்
குறைவி லுடம்பரிந்த கொற்றவன் ' (சிலப் – வாழ்த்து – 17)

எனவும் பண்டைப் புலவர் பெருமக்கள் பாராட்டியதனை உளங்கொண்ட சேக்கிழாரடிகள்,

' துலையிற் புறவின் நிறையளித்த சோழர் ' (பெரிய-கோச்செ-1)

எனச் சோழர் குடியின் பெருமையினைக் குறித்துள்ளார்.

' புகழெனின் உயிருங் கொடுக்குவர் ' (புறம் – 182)

எனவரும் தொடர்ப் பொருளுக்கு இலக்கியமாக அமையும் நிலையில்,

' மருவார்மேல் மன்னவற்கா மலையப்போங் கலிப்பகையார்
பொருவாரும் போர்க்களத்தில் உயிர்கொடுத்துப்
புகழ் கொண்டார் ' (பெரிய - திருநா – 30)

எனக் கலிப்பகையார் செயலை ஆசிரியர் குறித்துள்ளமை அறியத்தகுவதாம்.

தமிழ் நாட்டில் முடிபுனைந்து ஆட்சிபுரியும் பெரு வேந்தர்களாகச் சேர சோழ பாண்டியர்களாகிய மூவேந்தர் குடியிற் பிறந்தவர்களையே தமிழ்மக்கள் தொன்றுதொட்டுப் போற்றி வந்துள்ளார்கள். இம் மரபு,

' முடிகெழு வேந்தர் மூவர்க்கும் உரியது ' (சிலப்பதிகாரப் பதிகம்)

எனவும்,

' முடிமன்னர் மூவரும் காத்தோம்புந் தெய்வ
வடபேரிமயமலை ' (சிலப் – வாழ்த்துக் – 2)

எனவும் வரும் தொடர்களால் அறியப்படும். சுந்தரமூர்த்தி சுவாமிகள் தாம் திருப்பரங்குன்றத் திறைவனைப் பாடிய பதிகம் சேர சோழ பாண்டியர்களாகிய, முடிவேந்தர்

மூவரும் உடனிருந்த காலத்திற் பாடப் பெற்றது என்பதனை,

'முடியால் உலகாண்ட மூவேந்தர் முன்னே' (7—2—11)

என அப்பதிகத் திருக்கடைக்காப்பிற் குறிப்பிடுதலும் இம் மரபினை வற்புறுத்துதல் காணலாம். செம்பியனார் செழியா சேரருடன் சுந்தரர் திருப்பூவணப் பெருமானை வழிபட்டதனைக் கூறும் ஆசிரியர்,

'வென்றிமுடி வேந்தருடன் போந்தங்கண் பேவினார்'
(பெரிய-கழறிற்-99)

என இம்மரபினை அடியொற்றிக் கூறியுள்ளார். அன்றியும் தமிழகத்தில் மூவேந்தரல்லாத ஏனைக் குறுநில மன்னராயினார்க்கு முடியணியும் சிறப்பில்லை யென்பதனை,

'வென்றிவினையின் மீக்கூர வேந்தர் முனைகள் பலமுருக்கிச்
சென்று தும்பைத் துறை முடித்துச் செருவில் வாகைத்
திறங் கெழுமி
மன்றல்மாலை மிலைந்தவர்தம் வளநாடெல்லாங் கவர்ந்து முடி
ஒன்றும் ஒழிய அரசர் திருவெல்லாம் உடையராயினார்'
(பெரிய-கூற்றுவ - 3)

எனக் கூற்றுவ நாயனார் புராணத்தில் தெளிவாகக் குறித்துள்ளமையும் இங்கு எண்ணத்தகுவதாகும்.

மகளிர்க்குப் பன்னிரண்டு வயது மணப்பருவம் என்பதனை,

'ஈகைவான் கொடியன்னாள் ஈராறாண்டகவையாள்'
(சிலப் - மங்கல)

எனவரும் தொடரில் இளங்கோவடிகளும்,

'அம்முறைப் பன்னிரண்டாண்டள வணைந்து'
(பெரிய-சம்பந்தர்–1091)

எனச் சேக்கிழாரடிகளும் குறித்துள்ளமை காணலாம்.

மகளிரது கற்புக்கு வடமீனாகிய அருந்ததியை உவமையாகக் கூறுதல் தொன்று தொட்டுவரும் மரபாகும்.

'வடமீன்புரையங் கற்பின் மடமொழி' (புறம் – 122)

'தீதிலா வடமீனின் திறம் இவள் திறம்' (சிலப்-மங்கல)

'சாலியொருமீன் தகையாளை' (சிலப்-மங்கல)

எனவரும் தொடர்கள் இம்மரபினை அறிவுறுத்துவன.

'வடநெடு வானமீனே அனையவர்' (பெரிய-அரிவாட் - 13)

எனவரும் பெரிய புராணத் தொடரில் இம்மரபு எடுத்தாளப் பெற்றிருத்தல் காணலாம்.

கண்ணகியை மணந்து மகிழும் கோவலன் அவளது நலத்தினைப் பாராட்டிக் கூறும் முறையில் அமைந்தது,

'அடையார் முனையகத்து அமர்மேம் படுநர்க்குப்
படை வழங்குவ தோர் பண்புண்டாகலின்
உருவிலாளன் ஒருபெருங் கருப்புவில்
இருகரும் புருவமாக ஈக்க' (சிலப்-மனையறம் 42-45)

எனவரும் சிலப்பதிகாரத் தொடராகும். 'பகைவர் முனையிடத்தே தம்மை மேம்படுத்தும் தறுகண் வீரர்க்குப் படைக்கலம் முதலியன கொடுத்தல் அரசர்க்கு இயல்பாதலால், மன்மதன் போர் செய்தற்கு எடுத்த ஒப்பில்லாத கருப்புவில் ஒன்றையும் கரிய இரண்டு புருவங்களாகத் திருத்தித் தருவானாக' என்பது இதன் பொருளாகும். காமனுக்குக் காமநூலும் கரும்பும் ஆகிய இரண்டும் வில்லாயினும் (பூவாகிய) காமநூலினும் கரும்பு வலியதாதலின் முனிவராகிய முரட்பகையை அழித்தற்கு வலிய வில்லே வேண்டுதலின் 'ஒரு பெருங் கருப்பு' வில் என்றார். 'ஒரு பெருங் கருப்புவில் இருகரும் புருவமாக' என்றது, சேம வில்லையுங் கூட்டி; 'வானார்கமழ் மதுவுஞ் சாந்துமேந்தி மதுத்துளித்து வண்டுஞ் சுரும்பு மூசும், தேனார் பூங்கோதாய் நினக்குக் காமன் சிலையிரண்டுஞ் செவ்வனே கோலித்தந்தான், தானாரப்பண்ணித் தடறு நீக்கித்தண் குருதி தோய்த்துத் தகைமை சான்ற, ஊனார்ந்த ஒரிணை அம்புந்தந்தான் என்னை யுள்ளாக வேண்டினானே' (சீவக - 2065) என்றாராதலின்" என்பது அடியார்க்கு நல்லார்தரும் விளக்கமாகும். திருமயிலையில் திருஞானசம்பந்தர் திருப்பாடலால் உருப்பெற்றெழுந்த பூம்பாவையின் புருவப் பொலிவினை விளக்குமிடத்து,

'புருவமென் கொடிகள் பண்டு புரமெரித் தவர்தம் நெற்றி
ஒருவிழி எரியின் நீருய் அருள்பெற உளனாங் காமன்
செருவெழுந் தனுவ தொன்றும் சேமவில் லொன்றும் ஆக
இருபெருஞ் சிலைகள் முன்கொண் டெழுந்தன போல ஏற்ப"
(பெரிய-சம்பந்தர் - 1097)

எனவரும் பெரிய புராணச் செய்யுள் மேற்குறித்த சிலப்பதிகாரத் தொடர்ப் பொருளை அடியொற்றி அமைந்திருத்தல் உணரத் தகுவதாகும்.

சிலப்பதிகாரம் அரங்கேற்று காதையில்

" ஈரேழ் தொடுத்த செம்முறைக் கேள்வி " (சிலப். அரங் – 70)

என இளங்கோவடிகள் பதினுன்கு நரம்புடைய சகோட யாழினைக் குறிப்பிடுவர். 'பதினுற் கோவையாகிய சகோடயாழை' என அடியார்க்கு நல்லார் கூறுதலால் சகோடயாழில் பதினுன்கு நரம்புகள் கட்டப் பெற்றிருந்தன என்பது தெளியப்படும். சகோடயாழ்த் தலைவராகிய திருநீலகண்ட யாழ்ப்பாணர், திருவாலவாய்த் திருக்கோயிலில் யாழிசைத்த முறையினை,

" ஆலவா யமர்ந்தார் கோயில் வாயிலை யடைந்து நின்று
பாலை யீரேழு கோத்த பண்ணினிற் கருவி வீக்கிக்
கோலமாதரித்த பண்ணிற் கைபல முறையு மாராய்ந்
தேலவார் குழலாள் பாகர் பாணிகள் யாழி லிட்டார் "
(பெரிய-திருநீலகண்ட யாழ்ப் – 2)

எனவரும் செய்யுளில் சேக்கிழார் குறித்துள்ளார்.

இச் செய்யுளில் 'பாலையீரேழு கோத்த பண்ணினிற் கருவி' என்றது இளங்கோவடிகள் குறித்த 'ஈரேழ் தொடுத்த செம்முறைக் கேள்வி' யாகிய சகோட யாழினையே என்பது இத்தொடர்களை ஒப்புநோக்குவார்க்கு இனிது புலனாகும்.

காதலரைப் பிரிந்தோர்க்கு வருத்தம் விளைக்கும் மாலைக்காலத்திற்குப் பேரரசர் இல்லாத நிலையிற் குடிகளைத் துன்புறுத்தும் குறுநில மன்னரை உவமையாகக் கூறும் நிலையில் அமைந்தது,

'வலம்படுதானை மன்னர் இல்வழிப்
புலம்பட விறுத்த விருந்தின் மன்னரின்
...
மல்லன் மூதூர்மாலை வந்திறுத்தென '
(சிலப்–அந்திமாலை – 11–20)

எனவரும் தொடராகும். பாண்டி நாட்டினைக் கைப்பற்றி இடர் விளைத்த வடுகக் கருநாடர் மன்னன் இறந்தொழிய, அன்றுமாலைப் பொழுது கழிந்த நிலையைச் சொல்லக் கருதிய ஆசிரியர்,

" முழுதும் பழுதேபுரி மூர்க்கன் உலந்த போதின்
எழுதுங் கொடிபோல்பவர் உட்பட ஏங்கு சுற்றம்
அழுதும் புலர்வுற்றது மற்றவன் அன்னமாலைப்
பொழுதும் புலர்வுற்றது செங்கதிர் மீது போத "
(பெரிய-மூர்த்தி – 26)

என அம்மன்னனுக்கு அந்திமாலையை உவமையாகக் கூறியுள்ளமை ஒப்பு நோக்கற் பாலதாகும்.

புலியைத் தன்னிடத்தே யுடைய கொடியை யுயர்த்த தேரையுடைய உரவோனாகிய சோழனது கொற்றத் துடனே மழைக்குக் கருப்பத்தைத் தோற்றுவிக்கும் யாகத் தீயினை வளர்க்கின்ற வேள்விச் சாலையிலே மறையோரால் உண்டாக்கப்பட்ட தேவர் உணவின் ஆவிகள் எங்கும் போர்த்தலால் அம்மாடங்கள் மேகந்தவழும் மலைபோலத் தோன்றும் பெருமை வாய்ந்தன சோழ நாட்டில் மங்கல மறையோர்கள் வாழும் ஊர்கள் என்பதனை,

"உழைப்புலிக் கொடித்தேர் உரவோன் கொற்றமொடு
மழைக் கருவுயிர்க்கும் அழற்றிகழ் அட்டில்
மறையோர் ஆக்கிய ஆவுதி நறும்புகை
இறையுயர் மாடம் எங்கணும் போர்த்து
மஞ்சு சூழ் மலையின் மாணத் தோன்றும்
மங்கல மறையோர் இருக்கை" (சிலப்-நாடுகாண்-142-148)

எனவருந் தொடரில் இளங்கோவடிகள் சிறப்பித்துரைக் கின்றார். இளங்கோவடிகள் வாய்மொழியை அடியொற்றித் தொண்டை நாட்டில் மறையவர் வாழும் செழும்பதிகளைச் சிறப்பிக்கும் முறையில் அமைந்தது,

"தொல்லை நான்மறை முதற்பெருங் கலையொலி துவன்றி
இல்லறம் புரிந்தாகுதி வேள்வியில் எழுந்த
மல்குதண் புகை மழைதரு முகிற்குலம் பரப்பும்
செல்வ மோங்கிய திருமறையவர் செழும் பதிகள்"
(பெரிய-திருக்குறிப்பு - 29)

எனவரும் பெரிய புராணச் செய்யுளாகும்.

பாண்டியர்கள் தமிழ் வளர்ச்சி கருதி மூன்று முறை சங்கம் வைத்துத் தமிழாராய்ந்த பெருமையினைக்கருதி அவர்களால் ஆளப்படும் பாண்டி நாட்டினைத் 'தமிழ் நாடு' எனச் சிறப்பாக வழங்கும் வழக்கம் இளங்கோவடிகள் காலத்தில் நிலைபெற்றிருந்த தென்பது,

"தென்றமிழ் நன்னாட்டுத் தீது தீர் மதுரைக்கு
ஒன்றிய வுள்ளம் உடையேன் ஆகலிற்
போதுவல் யானும்" (சிலப்-நாடுகாண் - 58-60)

எனக் கவுந்தியடிகள் கூற்றில் வைத்து அடிகள் கூறுதலால் இனிது புலனும். இப்பெயர் வழக்கினை,

'பண்புடைய பாண்டிமா தேவியார் தம்பரிவும்
நண்புடைய குலச் சிறையார் பெருமையும் ஞானத்தலைவர்
எண்பெருக உரைத்தருள எல்லையில்சீர் வாகீசர்
மண்குலவும் தமிழ்நாடு காண்பதற்கு மனங்கொண்டார்''
(பெரிய–திருநாவுக் – 400)

எனவரும் பாடலில் சேக்கிழாரடிகள் எடுத்தாண்டுள்ளமை காணலாம்.

புகார் நகரத்திலிருந்து மதுரைக்கு நடந்துசெல்லும் கோவலன், கண்ணகி, கவுந்தியடிகள் என்போர், மருதநில மாகிய சோழ நாட்டினைக் கண்டு இன்புற்றவர்கள் பாண்டி நாட்டிற்குச் செல்லும் வழியில் பாலை நிலமாகிய காட்டினைக் கண்டு வருந்திய செய்தியை நாடுகாண்காதையை அடுத்துள்ள காடுகாண்காதையில் இளங்கோவடிகள் விரித்துக் கூறியுள்ளார். இவ்வாறே திருமறைக்காடு என்னும் தலத்தி னின்றும் புறப்பட்டுச் சோழ நாட்டுத் தலங்கள் பலவற்றை வணங்கிப் பாண்டி நாட்டின் தலைநகரமாகிய மதுரையை நோக்கிச் சென்றருளும் திருஞானசம்பந்தப் பிள்ளையார், நீர் நாடாகிய சோழநாட்டெல்லையைக் கடந்து பாண்டிநாட் டெல்லையுட் புகுந்து, காட்டினையும் வேடுவர் வாழும் சுரத்தினையும் கடந்து சென்ற செய்தியை,

'நீர்நாடு கடந்தருளி நெடும்புறவிற் குறும்புதல்கள்
கார்நாடு முகைமுல்லைக் கடிநாறு நிலங்கடந்து
போர்நாடுஞ் சிலைமறவர் புன்புலவைப் பிடைபோகிச்
சீர்நாடுந் தென்பாண்டி நன்னாடு சென்றணைவார்'
(பெரிய - சம்பந்தர் - 628)

எனவரும் பாடலில் சேக்கிழாரடிகள் குறித்துள்ளார்.

கோவலன் கண்ணகி கவுந்தியடிகள் மூவரும் ஐயை கோட்டத்தில் தங்கியிருந்தபொழுது நிகழ்ந்த கொற்றவை விழாவில் வேட்டுவ மகளாகிய சாலினி தெய்வம் ஏறப் பெற்று, கணவனோடிருந்த கண்ணகியைச் சுட்டி,

'இவளோ, கொங்கச் செல்வி குடமலையாட்டி
தென்றமிழ்ப் பாவை செய்த தவக்கொழுந்து
ஒருமா மணியாய் உலகிற்கோங்கிய
திருமாமணி' (சிலப் – வேட்டுவவரி – 47 – 50)

எனப் புகழ்ந்துரைப்பதாகக் கற்புடைத் தெய்வமாகிய கண்ணகி தேவியைப் இளங்கோவடிகள் பாராட்டிப் போற்றி யள்ளார். 'தென்றமிழ்ப் பாவை செய்த தவக்கொழுந்து'

எனக் கண்ணகியாரைக் குறித்தமைந்த இப்பாராட்டு, வண்டமிழ் செய்தவம் நிரம்ப வந்து தோன்றித் திசையனைத் தின் பெருமையெல்லாம் தென்றிசையேவென்றேற அசை வில் செழுந்தமிழ் வழக்கே அயல் வழக்கின் துறைவெல்லத் தென்றமிழ் நன்னாட்டில் தெய்வநெறிச் சிவம் பெருக்கிய திருஞானசம்பந்தப்பிள்ளையார்க்கு முற்றிலும் பொருத்த முடையதெனக் கொண்ட சேக்கிழாரடிகள்,

'தென்தமிழ் நாடுசெய்த செய்தவக்கொழுந்து போல்வார்'
(பெரிய – சம்பந்தர் – 750)

என ஆளுடைய பிள்ளையாரைப் பாராட்டிப் போற்றி யுள்ளார்.

மதுரையிலிருந்து வீசும் தென்றலின் சிறப்பினை,

'மலயத் தோங்கி மதுரையின் வளர்ந்து
புலவர் நாவிற் பொருந்திய தென்றல்'
(சிலப் – புறஞ்சேரி – 25, 26)

எனத் தமிழின் தோற்ற வளர்ச்சியுடன் இளங்கோவடிகள் இயைத்துரைத்தமையுணர்ந்த சேக்கிழாரடிகள் அத்தென் றலைத் 'தமிழ் மாருதம்' (பெரிய – தடுத்தாட் – 167) எனத் தமிழுடன் இயைத்துப் போற்றுகின்றார். ஞானசம்பந்தப் பிள்ளையார் மதுரைக்கு எழுந்தருளியபோது தமிழ்த் தென்றல் பிள்ளையாரை எதிர்கொண்டு வரவேற்ற திறத்தினை,

'செந்தமிழ் மாருதம் எதிர்கொண்டு
எம்மருங்குஞ் சேவிப்ப' (பெரிய – சம்பந்தர் – 649)

எனவரும் தொடரிற் சேக்கிழாரடிகள் புனைந்துரைத் துள்ளார்.

சிலப்பதிகாரம் வேட்டு வரியிற் கூறப்படும் சாலினியின் தெய்வக்கோலமும் கண்ணப்ப நாயனார் புராணத்திற் கூறப்படும் தெய்வநிகழ் குறமுதியாள் கோலமும் ஒப்பு நோக்கியுணரத் தக்கனவாகும்.

பரிசனங்கள் சூழ மலைவளங் காணச் செல்லும் செங்குட்டுவனுக்கு,

'வளமலர்ப் பூம்பொழில் வானவர் மகளிரொடு
விளையாட்டு விரும்பிய விறல்வேல் வானவன்
— — — — —
பெருமால் களிற்றுப் பெயர்வோன் போன்று'
(சிலப் – காட்சி – 10, 16)

என இந்திரனை உவமையாகக் கூறுவர் இளங்கோவடிகள். உறையூரில் அரசு வீற்றிருக்கும் புகழ்ச் சோழர், தங்கள் குலமரபின் முதற்றனியூராங் கருவூரில், மங்கல நாளில் அரசுரிமைச் சுற்றமுடன் வந்தணைந்த உலாத் தோற்றத் தினுக்கு,

'வானவர் சூழ்
இந்திரன்வந்து அமரர்பதி எய்துவான்என எய்தி'
(பெரிய - புகழ்ச் - 12)

என இந்திரனது உலாத் தோற்றத்தைச் சேக்கிழார் உவமை கூறியுள்ளமை இங்கு ஒப்பு நோக்கத் தகுவ தாகும்.

வேந்தன் பகைவர் நாட்டின்மேற் படையெடுத்துச் செல்லுதலை வஞ்சித்திணையெனவும், அங்ஙனம் தன்னாட்டின் மேற் படையொடு வந்தவனை நாட்டுக்குரியவன் படை யொடு எதிர்சென்று தடுத்துப்பொருதலைக் காஞ்சித் திணை யெனவும் கூறுவர். இவற்றுக்கு அடையாளமாக முறையே வஞ்சிப் பூவையும் காஞ்சிப் பூவையும் சூடிக்கொள்ளுதல் புறத்திணை மரபாகும். இங்ஙனம் வஞ்சியும் காஞ்சியும் தம்முள் மாறுபட்ட இருவேறு போர்த்தொழில்களாதலை,

'தென்றிசை யென்றன் வஞ்சியொடு வடதிசை
நின்றெதி ரூன்றிய நீள்பெருங் காஞ்சியும்'
(சிலப் - காட்சி - 135, 136)

எனச் செங்குட்டுவன் கூற்றில் வைத்து இளங்கோவடிகள் குறிப்பிடுவர். இக்குறிப்பினை அடியொற்றி அமைந்தது,

'வளவனார் பெருஞ்சேனை வஞ்சிமலர் மிலைந்தேற
அளவிலரணக் குறும்பின் அதிகர்கோன் அடற்படையும்
உளநிறை வெஞ்சினந்திருகி உயர்காஞ்சி மிலைந்தேறக்
கிளர்கடல்கள் இரண்டென்ன இருபடையும் கிடைத்தனவால்'
(பெரிய - புகழ்ச் - 19)

எனவரும் பெரிய புராணச் செய்யுளாகும்.

மலைவளங் காணச் சென்ற செங்குட்டுவனைக் காண வந்த மலைவாணர்கள்,

'யானைவெண் கோடும் அகிலின் குப்பையும்
மான்மயிர்க் கவரியும் மதுவின் குடங்களும்
சந்தனக் குறையுஞ் சிந்துரக் கட்டியும்
— — — — —

கூவை நூறுங் கொழுங்கொடிக் கவலையும்
தெங்கின் பழனுந் தேமாங் கனியும்
பைங்கொடிப் படலையும் பலவின் பழங்களும்
பீலி மஞ்ஞையும் நாவியின் பிள்ளையும்'
(சிலப் - காட்சி - 37 - 53)

முதலியவற்றைக் கையுறைப் பொருள்களாகக் கொண்டு சென்றதனை இளங்கோவடிகள் குறித்துள்ளமையும், திண்ணனாரது வில் விழாக்காண விரும்பிய வேடர்கள் பொருள் பலகொண்டு வந்த செய்தியை,

'மலைபடு மணியும்பொன்னும் தரளமும் வரியின்தோலும்
கொலைபுரிகளிற்றுக்கோடும் பீலியின் குவையும் தேனும்
தொலைவில்பல் நறவும் ஊனும் பலங்களுங் கிழங்குந்துன்றச்
சிலைபயில் வேடர்கொண்டு திசைதொறும் நெருங்கவந்தார்'
(பெரிய - கண்ணப்பர் - 30)

எனவரும் பாடலிற் சேக்கிழாரடிகள் குறித்துள்ளமையும் ஒப்பு நோக்கத் தக்கனவாம்.

செங்குட்டுவன் வடநாட்டின் மேற் படையொடு செல்லுங்கால், அவனுடைய பெருஞ்சேனைகள் மலையும் நிலமும் ஒன்றுருகும்படி சென்ற தன்மையினை,

'தண்டலைத் தலைவருந் தலைத்தார்ச் சேனையும்
வெண்டலைப் புணரியின் விளிம்புசூழ் போத
மலைமுதுகு நெளிய நிலைநா டதர்பட
உலக மன்னவன் ஒருங்குடன் சென்று'
(சிலப் - கால்கோள் - 80, 83)

என இளங்கோவடிகள் குறிப்பிடுவர். இவ்வாறே சேரமான் பெருமாளாகிய வேந்தர் பெருமான் தில்லையம்பலத்தினைப் போற்ற விரும்பி வஞ்சியினின்றும் புறப்பட்டுச் செல்லுங்கால் அவரது பெருஞ்சேனை சென்ற தன்மையினை

'மிசையும் அவலும் ஒன்றுக
நிரவிப் பரந்த பெருஞ்சேனை நேமிநெளியச்
சென்ற னவால்' (பெரிய - கழறிற் - 49)

எனச் சேக்கிழாரடிகள் குறித்துள்ளமையும் காண்க.

செங்குட்டுவன் கண்ணகியார் படிமம் அமைத்தற்குக் கற்கொணர வேண்டி வடநாட்டின்மேற் படையொடு சென்று பகைவரை வென்று பத்தினிக் கல்லொடு மீளா நின்றுனாக, அவனைப் பிரிந்த கோப்பெருந்தேவி குறிஞ்சி முதலாக நாலு நிலத்துப் பாணியும் ஓர்த்து உறங்காதே

யிருந்த நிலையில், செங்குட்டுவன் வஞ்சியுட் புகுந்தனன் என நீர்ப்படை காதை கூறுகின்றது. இதனால் சேர நாட்டின் தலைநகராகிய வஞ்சி நகரம் குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் ஆகிய நானிலப் பகுதிகளும் அடுத்தடுத்து அமையப்பெற்றது என்பது நன்கு புலனாகும். இவ்வாறு நானில வளங்களும் அடுத்தடுத்து அமையப் பெற்ற மலை நாட்டின் இயற்கையமைப்பினை,

'திரைசெய் கடலின் பெருவளனும் திருந்து நிலனின்
செழுவளனும்
வரையின் வளனும் உடன்பெருகி மல்குநாடு மலைநாடு'
(பெரிய – விறன் – 1)

எனவருந் தொடரிற் சேக்கிழாரடிகள் நன்கு விளக்கி யுள்ளமை அறிந்து மகிழத்தகுவதாகும்.

இனி, இறையனார் களவியல் என்னும் அகப்பொருள் நூல் ஆலவாயிற் பெருமானடிகளால் அருளிச் செய்யப் பெற்றதென்பது களவியல் உரைமுகத்து விரித்துரைக்கப் பெற்றது. இச்செய்தியினை,

'திருவால வாயமர்ந்த செழுஞ்சுடரைச் செழும்பொருள்நூல்
தருவானை' (பெரிய – திருநாவுக் – 406)

எனவும்,

'மெய்ம்மைப் பொருளாந் தமிழ்நூலின் விளங்குவாய்மைச்
செம்மைப் பொருளுந் தருவார் திருவாலவாயில்
எம்மைப் பவந்தீர்ப்பவர் சங்கம் இருந்தது'
(பெரிய – மூர்த்தி – 7)

எனவும்,

'நூலின்கட் பொருள்பாடி நூலறிவார்க் கீந்தானை'
(பெரிய – சம்பந்தர் – 883)

எனவும் வருந்தொடர்களில் ஆசிரியர் குறித்துள்ளமை காணலாம்.

"தலைச்சங்கம் இடைச்சங்கம் கடைச்சங்கம் என மூன்று சங்கம் இரீஇயினார் பாண்டியர். அவருள் தலைச் சங்கம் இருந்தார் அகத்தியனாரும் திரிபுரமெரித்த விரி சடைக் கடவுளும், குன்றெறிந்த முருக வேளும் முரஞ்சியூர் முடி நாகராயரும், நிதியின் கிழவனும் என இத்தொடக் கத்தார் ஐஞ்ஞூற்று நாற்பத்தொன்பதின்மர் என்ப" என வரும் களவியலுரையில் திரிபுரமெரித்த விரிசடைக் கடவுள்

தலைச்சங்கப் புலவராகக் குறிக்கப்பெற்றிருத்தலை யுளங் கொண்ட சேக்கிழார் நாயனார், ஆலவாயிறைவரைத்,

'தலைச் சங்கப் புலவனார்' (பெரிய – சம்பந்தர் – 667)

எனக் குறித்துப் போற்றியுள்ளார்.

கூடலம்பதியில் நிலைபெற்ற கடைச் சங்கத்தில் திருவால வாயுடையார் ஆகிய இறையனாரும் சங்கப் புலவருள் ஒருவராக எழுந்தருளித் தமிழாராய்ந்தார் என்பது,

'சிறைவான் புனற்றில்லைச் சிற்றம்பலத்துமென்
சிந்தையுள்ளும்
உறைவான் உயர்மதிற்கூடலின் ஆய்ந்தவொண்
தீந்தமிழின்துறை' (திருக்கோவை)

எனவரும் மணிவாசகர் வாய்மொழியால் அறியப்படும். இச்செய்தியினை,

'சென்றணைந்து மதுரையினிற் றிருந்தியநூற் சங்கத்துள்
அன்றிருந்து தமிழாராய்ந்தருளிய அங்கணர்'
(பெரிய – திருநாவுக் – 403)

எனச் சேக்கிழாரடிகள் குறித்துப் போற்றியுள்ளமை இங்கு நினைத்தற்குரியதாகும்.

உடும்பு உடல் சிதையப் பறித்து இழுத்த நிலையிலும் தான்வாழும் இடத்தைவிட்டுப் பெயராது உறுதியாகப் பற்றிக்கொள்ளும் தன்மையதாகும். குடும்ப வாழ்க்கையினையே விடாது பற்றிக் கிடக்கும் மக்களுக்கு அளையை விட்டுப்போகாத உடும்பினை உவமையாக எடுத்துரைப்பர் திருத்தக்கதேவர்.

'தணக்கிறப் பறித்தபோதும் தானளை விடுத்தல்செல்லா
நிணப்புடை யுடும்பனாரை யாதினா னீக்கலாகும்'
(சீவக – முத்தி – 289)

என்பது திருத்தக்கதேவர் வாக்காகும். திண்ணனார் திருக் காளத்தி மலையில் குடுமித்தேவரைக் கண்டு அவரை விட்டுப் பிரியாது நின்ற நிலையினை நாணன் காடனுக்கு எடுத்துரைக்குமிடத்து,

'அங்கிவன் மலையில்தேவர் தம்மைக் கண்டணைத்துக்கொண்டு
வங்கினைப் பற்றிப் போதா வல்லுடும்பென்ன நீங்கான்'
(பெரிய – கண்ணப்பர் – 116)

என இவ்வுவமையை எடுத்தாண்டுள்ளார். வேடுவன் உவமை கூறுங்கால் வாழ்க்கையில் தனக்கு நன்ருகத் தெரிந்த பொருளே உவமை கூறியதாகவுரைத்த ஆசிரியரது புலமைத் திறம் பாராட்டத் தகுவதாகும்.

சரவணப் பொய்கையிற் பதுமப்பாயலிற் பிறந் தோனுகிய முருகப்பெருமானை,

'பூவுனுட் பிறந்த தோன்றற் புண்ணியன்' (சீவக – 316)

எனத் திருத்தக்கதேவர் குறிப்பிடுவர்.

'தாமரை மிசைத் தனிமுதற்குழவி' (பெரிய – சம்பந்தர் – 41)

எனவரும் பெரிய புராணத்தொடர் மேற்குறித்த சீவக சிந்தாமணித் தொடரை அடியொற்றி யமைந்திருத்தல் காணலாம்.

பருந்தும் அதன் நிழலும் போல மிடற்றுப் பாடலும் யாழிசையும் பொருந்தியிருத்தல் வேண்டும் என்பதனை,

'பருந்தும் நிழலும்போற் பாட்டும் எழாலும்
திருந்துதார்ச் சீவகற்கே சேர்ந்தன' (சீவக – 730)

எனவரும் தொடரில் திருத்தக்கதேவர் குறித்துள்ளார்.

'பருந்து பறக்குமிடத்து முறையே உயர்ந்து அந்நிலத்தின்கண் நின்று ஆய்ந்து பின்னும் அம்முறையே உயர்கின்ருற்போலப் பாடவேண்டுதலின் பாட்டிசைக்குப் பருந்தும், அதனுடன் பிரிவின்றி யிசைந்த யாழிசைக்குப் பருந்தின் நிழலும் உவமையாயின' திருநீலகண்டப் பாணர் மதங்க சூளாமணி யாருடன்பாடி யாழ் வாசித்த பொழுது அவ்விருவரது மிடற்றுப் பாடலும் யாழிசையும் ஒன்றியிசைந்த மாட்சியினை,

'யாழிலெழும் ஓசையுடன் இருவர் மிடற்றிசை யொன்றி
வாழிதிருத்தோணியுளார் மருங்கணையும் மாட்சியினைத்
தாழுமிருசிறைப் பறவை படிந்ததனி விசும்பிடைநின்
றேழிசைநூற் கந்தருவர் விஞ்சையரும் எடுத்திசைத்தார்'
(பெரிய – சம்பந்தர் – 136)

எனவரும் பாடலிற் சேக்கிழாரடிகள் விளக்கியுள்ளமை ஒப்புநோக்குதற் குரியதாகும்.

சச்சந்தன் மனைவியாகிய விசயை என்பாள் தான் கண்ட தீக்கனுவினைத் தன்கணவனுக்கு எடுத்துரைப்பவள்,

தான் கண்ட கனக்களுள் ஒன்றாக அருகதேவர் அமர்ந்தருளும் அசோக மரம் முறிந்து வீழ்ந்ததனைக் கூறுகின்றாள்.

'தொத்தணி பிண்டி தொலைந்தற வீழ்ந்தது' (சீவக – 223)

என அவள் கூறியது போலவே, மதுரையில் வாழும் சமண முனிவர்கள் தாம் கண்ட தீக்கனக்களைக் கூறுங்கால்

'சீர்மலி அசோகு தன்கீழ் இருந்தநந்தேவர்மேலே
வேரொடு சாய்ந்துவீழக் கண்டனம்'
(பெரிய – சம்பந்த – 637)

எனக் கூறியதாக ஆசிரியர் குறித்துள்ளமை அறியத் தக்கதாகும்.

முதலாம் இராசாதி ராசன் சளுக்கியர் மேற் படையெடுத்துச் சென்று கம்பிலி நகரத்திலிருந்த சளுக்கியர் மாளிகையைத் தகர்த்து அங்கு வெற்றித் தூண் நிறுவிய செய்தியினை, *

'கம்பிலிச் சயத்தம்பம் நட்டதும்'
(இராசபாரம்பரியம் – பா. 26)

எனக் கலிங்கத்துப்பரணியாசிரியர் பாராட்டியுள்ளார். இங்ஙனம் சோழ மன்னர்கள் திசையெங்கும் தம் ஆணை நிலவச் சயத்தம்பம் நாட்டிய சிறப்பினை

'கோல் ஒன்றில் எண்திசை யளவும் ஆணைச் சயத்தம்பம்
நாட்டிய வளவர்' (பெரிய – சத்தி – 1)

எனச் சேக்கிழார் உளமுவந்து பாராட்டியுள்ளார்.

இதுகாறும் எடுத்துக் காட்டிய குறிப்புக்களால் அருண்மொழித் தேவராகிய சேக்கிழார் நாயனார் பண்டைத் தமிழிலக்கண நூலாகிய தொல்காப்பியம் முதலாகத் தம் காலத்திற்குச் சிறிது முன் தோன்றிய நூல்கள் ஈறாகவுள்ள சிறந்த தமிழ் நூல்களில் நிரம்பிய தேர்ச்சியுடையார் என்பதும், தெய்வப் புலமை வாய்ந்த அப்பெருந்தகையார் தாம் கற்றுணர்ந்த நூல் நயங்களை வரலாற்றுச் செய்திகளுடன் இயைத்து நோக்கித் திருத்தொண்டர் புராணம் எனனும் இவ்வரலாற்றுக் காப்பியத்தை இயற்றியுள்ளார் என்பதும் நன்கு புலனாதல் காணலாம்.

* S. I. I., Vol. V, No. 978 ; Vol. VIII, No. 199.

திருத்தொண்டர் புராணச் சிறப்பு

திருத்தொண்டர் புராணமாகிய இக்காப்பியம், தமிழ் நாடு, தமிழ்மொழி, தமிழ் மக்கள் சிறப்பாக மேற்கொண்டொழுகிய சைவ சமயம் ஆகியவற்றின் தொன்மைச் சிறப்பினையும், தமிழகத்திற் கி. பி. இரண்டாம் நூற்றாண்டு முதல் கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு முடியவுள்ள காலப் பகுதியில் நிகழ்ந்த அரசியலாட்சி முறை, மக்களது தெய்வங் கொள்கையொடு தொடர்புடையனவாய் நிகழ்ந்த சமுதாய வாழ்க்கை நிகழ்ச்சிகள், எல்லோரும் இன்புற்றிருத்தல் வேண்டும் என்னும் உயர்ந்த குறிக்கோளுடையராய் நாடும், மொழியும் சமயமும் வளம்பெறத் தொண்டாற்றி வாழ்ந்த திருவருட் செல்வர்களின் வாழ்க்கை நடைமுறைகள் ஆகிய வரலாற்றுண்மைகளையும் தெளிவாக அறிவுறுத்தும் முறையில் அமைந்த வரலாற்றுக் காப்பியம் என்பது முன்னர் விளக்கப்பெற்றது. சைவசமயச் சான்றோர்களாற் பன்னிரு திருமுறைகள் எனப் போற்றப் பெறும் அருள் நூல்களிற் பன்னிரண்டாந் திருமுறையாக அமைந்த இந்நூல், இதற்கு முன் தோன்றிய ஏனைய பதினொரு திருமுறைகளின் சொற்பொருள் அமைப்பினை அடியொற்றியதாய், அத்திருமுறைகளின் பொருள் நலங்களை விரித்துரைக்குந் தனிச் சிறப்புடையதாகத் திகழ்கின்றது.

தில்லையம்பலவர் திருவருளால் 'உலகெலாம்' எனத் தோன்றிய அருள் மொழியினை முதலாகக் கொண்டு,

> "உலகெலா முணர்ந் தோதற் கரியவன்
> நிலவு லாவிய நீர்மலி வேணியன்
> அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
> மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்"

என அருள்மொழித் தேவராகிய ஆசிரியர் இந்நூலைத் தொடங்கியுள்ளார் என்பது வரலாறு. 'ஆதிபகவன் முதற்றே உலகு' எனத் திருவள்ளுவரும், 'உலகம் உவப்ப' என நக்கீரரும் உலகம் என்பதனை முதலாகக் கொண்டு தம் நூலைத் தொடங்கியுள்ளமை இங்கு ஒப்பு நோக்கத் தகுவதாகும். "உயிர்கள் எல்லாவற்றாலும் மனத்தால் உணர்தற்கும் வாய்மொழிகளால் ஓதுதற்கும் அரியவனும், பிறைச் சந்திரன் உலவுதற்கு இடமாய்க்

கங்கை நீர் நிறைந்த சடையுடன் பொருந்திய திரு மேனியையுடையவனும், அளவில்லாத பேரொளிப் பிழம் பாகத் திகழ்பவனும், ஞானமயமான தில்லைச் சிற்றம் பலத்திலே ஆடல் புரிந்தருள்பவனும் ஆகிய இறை வனுடைய செந்தாமரை மலர்போலும் சிலம்பணிந்த திருவடிகளை வாழ்த்தி வணங்குவோம்' என்பது இத்திருப் பாடலின் பொருளாகும். இச்செய்யுள், தெய்வ வணக்கமும் செயப்படு பொருளும் எய்தவுரைக்கும் தற்சிறப்புப் பாயிர மாய் இந்நூலின் மங்கல வாழ்த்தாக அமைந்துளது. இதன்கண் 'உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன், நிலவு உலாவிய நீர்மலி வேணியன், அலகு இல் சோதியன் அம்பலத்து ஆடுவான்' எனப் பொருளியல்பு உரைத்தலும், 'மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்' என வாழ்த்தும் வணக்கமும் அமைந்திருத்தல் காணலாம். இங்கு உலகு என்றது உயிர்களை, உணர்தல் – மனத்தின் தொழில்; அஃது உயிரறிவாகிய பசுஞானத்தைக் குறித்தது. ஓதுதல் – வாக்கின் தொழில்; அது நூலறிவாகிய பாச ஞானத்தைக் குறித்தது. பசு ஞானத்தாலும் பாச ஞானத்தாலும் பார்த்தற்கரியவன் பரம்பரனாகிய இறைவன் என்பார் 'உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்' என்றார். இதனால் இறைவனது உண்மையியல்பு (சொரூப இலக்கணம்) உணர்த்தப்பட்டது.

'அரியானை ... யார்க்கும் தெரியாத தத்துவனை' (6-1-1)

எனவும்,

'காண்டற்கரிய கடவுள் கண்டாய்'

எனவும்,

'இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன்
இவன் இறைவன் என்றெழுதிக் காட்டொணாதே'

எனவும்,

'அரியகாட்சிய ராய்த்தம தங்கை சேர்
எரியர் ஏறுகந் தேறுவர் கண்டமும்
கரியர் காடுறை வாழ்க்கைய ராயினும்
பெரியர் ஆரறிவாரவர் பெற்றியே' (3-54-2)

எனவும் வரும் திருப்பதிகப் பொருளை அறிவுறுத்தும் முறையில் அமைந்தது, 'உலகெலாம் உணர்ந்தோதற் கரியவன்' என்ற தொடராகும். இங்ஙனம் மனத்தால் உணர்தற்கும் வாக்கால் ஓதுதற்கும் அரியனாய் மாற்ற

மனங் கடந்து நிற்கும் அம்முதல்வன் தன்னடியார்க்கு எளிவந்து அருள்புரியுங்கால் உருவத் திருமேனி தாங்கி எழுந்தருளுவன் என்பார், 'நிலவுலாவிய நீர்மலி வேணியன்' என்றார். அருமையில் எளிய அழகனாகிய அவன் எவ்வுயிர்க்கும் அருளுடையராய் வாழும் அறவோர் சிந்தையினையே கோயிலாகக்கொண்டு எல்லையற்ற சோதிப்பொருளாய் எழுந்தருளியுள்ளான் என்பார் 'அலகில் சோதியன்' என்றார். 'நினைப்பவர் மனங் கோயிலாக கொண்டவன்' எனவும் 'அந்தணர் தஞ் சிந்தையானை' எனவும், 'சிந்தைதனை மயக்கந் தீர்க்கும் ஏரொளியை' எனவும் 'தூண்டு சுடரனைய சோதி கண்டாய்' எனவும் வரும் அப்பர் அருள்மொழிகளும்,

'ஏதுக்களாலும் எடுத்தமொழியாலும் மிக்குச்
சோதிக்கவேண்டா சுடர்விட்டுளன் எங்கள்சோதி'
(3 54–5)

எனவரும் ஆளுடையபிள்ளையார் அருளுரையும்,

'ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்சோதி'

எனவரும் திருவெம்பாவைத் தொடரும் இங்கு நினைக்கத் தக்கனவாகும். 'அரியவன்' என்றதனால் அருவமும், 'வேணியன்...... அம்பலத்து ஆடுவான்' என்றதனால் உருவமும், 'அலகில் சோதியன்' என்றதனால் அருவுருவும் என மூவகைத் திருமேனிகளையும் ஒருங்குடையான் இறைவன் எனப் புலப்படுத்தியவாறு.

" அம்பலத்தாடும் தூரிய அதிகார சிவனை முழுமுதல்வன், உலகெலாம் உணர்ந்தோதற்கரிய சொருப சிவமாயும், அலகில் சோதிமயமான இலய சிவனாயும், நிலவுலாவிய நீர்மலி வேணியுடைய போக சிவனாயும் நின்றானாதலின், யாம் இவ்வருட் காவிய இலக்கியம் இனிது முடிதற் பொருட்டு அவன் மலர் சிலம்படியினை வாழ்த்தி வணங்குவாம்" (திராவிடப் பிரகாசிகை) எனச் சபாபதி நாவலர் அவர்கள் இச்செய்யுட் பொருளை விளக்குவர்.

அம்பலவர் அருளால் தோன்றிய 'உலகெலாம்' என்பதில், நாத மாத்திரையாய் எல்லா எழுத்துக்களுக்கும் முதலாகவுள்ள அகரத்துடன் முதலில் உகரமும் இறுதியில் மகரமெய்யும் ஆக அகர உகர மகாரங்களாகிய பிரணவத்தின் உருவம் அமைந்திருத்தலும், திருத்தொண்டர்

புராணத்தின் முதலில் உள்ள 'உலகெலாம்' என்னும் இம் மறைமொழி,

'சோதி முத்தின் சிவிகைசூழ் வந்துபார்
மீது தாழ்ந்து வெண் ணீற்றொளி போற்றிநின்
ருதி யாரரு ளாதலின் அஞ்செழுத்
தோதி யேறினர் உய்ய வுலகெலாம்' (பெரிய-சம்பந்தர்-216)

என இந்நூலின் நடுவிலும்,

'என்றுமின்பம் பெருகு மியல்பினால்
ஒன்றுகாதலித் துள்ளமும் ஓங்கிட
மன்றுளார் அடியாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவியுலகெலாம்'

என இந்நூலின் முடிவிலும் அமைந்திருத்தலும், தோடுடைய செவியன்' என ஆளுடைய பிள்ளையாரால் எல்லையிலா மறைமுதல் மெய்யுடன் எடுத்த எழுதுமறை யாகிய திருமுறை, அருண்மொழித் தேவராகிய சேக்கிழா ரடிகளால் 'உலகெலாம்' என நிறைவு செய்யப்பெற்று முதலும் முடிவும் பிரணவவுருவாய்த் திகழ்தலும், தேவாரம் முதலாகத் திருத்தொண்டர் புராணம் ஈறாகவுள்ள சைவத் திருமுறைகள் பன்னிரண்டும் அருமறைப் பொருளாம் பிரணவ உருவின என்னும் மெய்ம்மையினை இனிது புலப் படுத்தல் காணலாம். ஆசிரியர் சேக்கிழார் தில்லையம் பலவர் அருளால் தோன்றிய உலகெலாம் என்னும் மெய்ம் மொழியினைத் தம் நூலின் முதல் இடை கடையாகிய மூவிடங்களிலும் எடுத்தாண்டுள்ளார். *

'அருமறை முதலில் நடுவினில் கடையில் அன்பர்தம் சிந்தையில் அலர்ந்த திருவளர் ஒளிசூழ் திருச்சிற்றம்பல முன்' தோன்றிய திருத்தொண்டர் புராணமாகிய இத்திரு முறையில் திருவைந்தெழுத்தின் பெருமையினையும் திரு நீற்றின் சிறப்பினையும் ஆசிரியர் ஆங்காங்கே குறித் துள்ளமை மனங்கொளத் தகுவதாகும்.

'இழைத்த அன்பினில் இறைதிரு நீற்றுமெய் யடிமை
பிழைத்தி லோமெனிற் பெருந்துலை நேர்நிற்க, என்று

* பெரிய புராணத்தில் உலகெலாம் என்ற சொல் பயின்ற இடங்கள்: 1·1, 7·7, 10·15, 18·36, 25·48, 27·371, 30·51, 34·216, 36·641, 34·859, 35·88, 49·16, 75·7, 78·40, 7·53, (ஆக 15 இடங்கள்)

மழைத்தடம் பொழில் திருநல்லூர் இறைவரை வணங்கித்
தழைத்த அஞ்செழுத் தோதினர் ஏறினர் தட்டில்' (43)

என அமர்நீதி நாயனர் புராணத்தும்,

'திருக்கயிலைக் குன்றுடையார் திருநீற்றை
அஞ்செழுத் தோதிக் கொடுத்தார்' (66)

'சொற்றுணை வேதியன் என்னுந் தூமொழி
நற்றமிழ் மாலையா 'நமச்சிவாய' என்
றற்றமுன் காக்குமைந் தெழுத்தை அன்பொடு
பற்றிய உணர்விஞற் பதிகம் பாடினர்' (125)

எனத் திருநாவுக்கரசர் புராணத்தும்,

'அஞ்செழுத் தோதி ஏறினர்உய்ய உலகெலாம்' (216)

'ஒருநாமத் தஞ்செழுத்தும் ஓதி வெண்ணீற்
றொளிவிளங்குந் திருமேனி தொழுதார் நெஞ்சில்
வருநாமத் தன்புருகுங் கடலாமென்ன
மாதவரார்ப்பொலி வையம் நிறைந்த தன்றே' (618)

'அழகினுக் கணியாம் வெண்ணீறு அஞ்செழுத்தோதிச்
சாத்தி' (1217)

எனத் திருஞானசம்பந்தர் புராணத்தும்,

'ஏய்ந்த அடிமை சிவனுக்கியான் என்னில் இன்றென்
கண்பெற்று
வேந்தன் எதிரே திருவாரூர் விரவுஞ் சமணர் கண்ணிழப்பார்
ஆய்ந்த பொருளுஞ் சிவபதமே ஆவதென்றே அஞ்செழுத்தை
வாய்ந்த தொண்டர் எடுத்தோதி மணிநீர் வாவி
மூழ்கினர்' (19)

எனத் தண்டியடிகள் நாயனர் புராணத்தும்,

'அண்டர்பிரான் திருநாமத் தஞ்செழுத்து மெடுத்தோதி
மண்டுதழற் பிழம்பினிடை மகிழ்ந்தருளி உள்புக்கார்' (39)

எனப் புகழ்ச் சோழ நாயனர் புராணத்தும்,

'விட்ட வெம்பரிச் செவியினிற் புவிமுதல்
வேந்தர் தாம் விதியாலே
இட்டமாஞ் சிவமந்திர மோதலின்
இருவிசும் பெழப் பாய்ந்து
மட்ட விழ்ந்தபைந் தெரியல் வன்தொண்டர்மேற்
கொண்ட மாதங்கத்தை
முட்ட எய்திமுன் வலங்கொண்டு சென்றது
மற்றதன் முன்னக' (36)

என வெள்ளானைச் சருக்கத்தும் திருவைந்தெழுத்தின் சிறப்பினை ஆசிரியர் விளக்கியுள்ளமை அறியத்தகுவதாகும்.

நம்பியாரூரர் அடியார் கூட்டத்துடன் குருகாவூர்ப் பெருமானை வழிபடச் செல்பவர், வழியிடையில் பசியால் இளைப்புற்றபொழுது, குருகாவூர்க் குழகராகிய இறைவர் மறைவேதியராய்த் தோன்றித் தண்ணீர்ப்பந்தர் அமைத்துப் பொதி சோறுடன் நம்பியாரூரரை எதிர்பார்த்திருந்தாராக, அங்கு அடியார்களுடன் வந்த நம்பியாரூரர் அத்தண்ணீர்ப் பந்தரில் அமரும்போது திருவைந்தெழுத்தினை ஓதிக் கொண்டு அமர்ந்தார் என்பதனை,

"குருகாவூர் அமர்ந்தருளுங் குழகர்வழி பார்த்திருப்பத்
திருவாரூர்த் தம்பிரான் தோழர் திருத்தொண்டருடன்
வருவார் அப்பந்தரிடைப் புகுந்து திருமறையவர்பால்
பெருகார்வஞ் செலவிருந்தார் 'சிவாயநம' எனப்பேசி"
(ஏயர்கோன் – 164)

எனவரும் பாடலில் ஆசிரியர் கூறியுள்ளார். இத்திருப் பாடலில்,

"திருவாய்ப்பொலியச் சிவாயநமவென்று நீறணிந்தேன்"
(4 – 94 – 6)

எனவும்

"வல்லவாறு சிவாயநமஎனு
நல்ல மேவிய நாதனடி தொழ" (5 – 43 – 6)

எனவும்,

"நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநமவெனப் பெற்றேன்"
(திருவாசகம் – 552)

எனவும் சைவ சமய குரவர்களால் ஓதுமுறையிதுவென அறிவுறுத்தப் பெற்ற சிறப்புடைய மந்திரமாகிய திருவைந்தெழுத்தின் அமைப்பு இனிது விளக்கப்பெற்றுள்ளமை உணர்ந்து போற்றத்தகுவதாகும்.

'திருவாளன் திருநீறு' எனவும், 'உறுவது நீற்றின் செல்வம் எனக்கொளும் உள்ளம் மிக்கார்' (பெரிய – தில்லை வாழ் – 6) எனவும், 'ஆய்ந்த மெய்ப்பொருள் நீறு என வளர்க்கும் அக்காப்பின், ஏய்ந்த மூன்று தீ வளர்த்துளார்' (திருநீலநக்கர் – 3) எனவும்,

"தொன்மைத் திருநீற்றுத் தொண்டின் வழிபாட்டின்
நன்மைக்கண் நின்ற நலமென்றுங் குன்றுதார்" (ஏனாதி–3)

எனவும்,

"விதியினாலே
பரவிய திருநீற்றன்பு பாதுகாத் துய்ப்பீர்" (மெய்ப் - 22)

எனவும்,

"தூய்மைத் திருநீற்றடைவே மெய்ப்
பொருளென்றறியுந் துணிவினர்" (நமிநந்தி - 5)

எனவும்,

"ஆதிமுதல்வர் திருநீற்றின் அடைவே பொருள்"
(மூர்க்க - 3)

எனவும் திருவருள் வண்ணமாகிய திருநீற்றின் சிறப்பினை ஆசிரியர் இக்காப்பியத்தில் ஆங்காங்கே விளக்கியுள்ளமை காணலாம். இவ்வாறே சிவசாதனமாய் இறைவனது பேரருளின் வெற்றிக்கு அடையாளமாகிய உருத்திராக்கம் மகவெனப் பல்லுயிரனைத்தையும் ஒக்கப் பார்க்கும் செல்வக் கடவுட்டொண்டர்களாகிய சிவனடியார்களுக்குச் சிறப்புடைய அணிகலனாகத் திகழும் தன்மையது என்பதனை,

"ஆரங் கண்டிகை ஆடையுங் கந்தையே"
(பெரிய - திருக்கூட்டச் - 9)

எனவும்,

"தூயவெண்ணீறு துதைந்தபொன் மேனியும் தாழ்வடமும்"
(பெரிய - திருநாவுக் - 40)

எனவும்,

"திருக்கழுத் தாரந் தெய்வக் கண்டிகை மாலைசேர"
(பெரிய-சம்பந்தர் 1214)

எனவும்,

"கடிகொள் செங்கமலத் தாதின்
செவ்விநீள் தாம மார்பர் திருவடையாள மாலை
எவ்வுலகோரும் ஏத்தத்தொழுதுதாம் எடுத்துப் பூண்டார்"
(,, 1216)

எனவும்,

"மிக்கெழும் அன்பர்கள் அன்பு திருமேனி விளைந்ததென
அக்குமணியாற்சன்ன வீரமும் ஆரமும் வடமும்
கைக்கணிகொள்வளைச் சரியும் அரைக்கடி சூத்திரச்சரியும்
தக்கதிருக் காற்சரியும் சாத்திய ஒண்சுடர் தயங்க"
(பெரிய - சிறுத் - 32)

எனவும் வரும் தொடர்களில் ஆசிரியர் இனிது விளக்கியுள்ளமை காணலாம்.

சைவ சமயத்தில் இறைவனையடைதற்குரிய நெறிகளாகச் சரியை கிரியை யோகம் ஞானம் என நால்வகை நெறிகள் வகுக்கப் பெற்றுள்ளன. இந்நால் வகை நெறிகளையும் படிகால் முறையாக மேற்கொண்டு ஞான நெறியினைக் கடைப்பிடித்தொழுகும் சிவஞானிகளாகிய திருத்தொண்டர்கள் உலக மக்கள் உய்தல் வேண்டி மேற்குறித்த நால்வகை நெறிகளுள் ஒன்றினைத் தமக்குச் சிறப்புடைய வாழ்க்கை நெறியாக மேற்கொண்டு வாழ்ந்து காட்டிய வரலாற்று நிகழ்ச்சிகளைச் சேக்கிழாரடிகள் திருத்தொண்டர் புராணத்தில் விரித்துக்கூறியுள்ளார்.

"ஞானமுதல் நான்குமலர் நற்றிருமந்திரமாலை"
(பெரிய – திருமூலர் – 26)

"நலஞ்சிறந்த ஞான யோகக் கிரியா சரியையெலாம்
மலர்ந்தமொழித் திருமூலர்" (பெரிய – திருமூலர் – 28)

எனவரும் தொடர்களில் ஞான நெறியினை அடிப்படையாகக் கொண்டு நிகழும் சரியை கிரியை யோகம் ஞானம் எனும் சிறப்புடைய நால்வகை நெறிகளையும் குறித்துள்ளமை காண்க.

வேதசிவாகமங்களிலும் தேவார திருவாசகம் முதலிய அருள் நூல்களாகிய திருமுறைகளிலும் நிரம்பிய பயிற்சியும் ஈடுபாடும் உடைய சேக்கிழார் அடிகள், வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத்துறை விளங்கத் தாம் இயற்றிய காப்பியத்தில் உலகியல் வேதநூலொழுக்கமாகிய வைதிக நெறியையும் அதனினும் சிறப்புடையதாகத் தமிழ்ச் சான்றோர்களால் பன்னெடுங்காலமாகப் பேணி வளர்க்கப் பெற்று என்றும் நின்று நிலவும் பெருமை வாய்ந்த மெய்ந்நெறியாகிய சிவநெறியினையும் அந்நெறிகளில் வழுவா தொழுகிச் சிவபெருமான் திருவருளுக்குரியராகிய ஆளுடைய பிள்ளையார், திருநாவுக்கரசர், நம்பியாரூரர், திருமூலர், காரைக்காலம்மையார், ஐயடிகள் காடவர்கோன், சேரமான்பெருமாள் நாயனர் ஆகிய அருளாசிரியர்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளிலும் ஏனைய திருத்தொண்டர்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளிலும் வைத்து இனிது விளக்கியுள்ளார்.

தமிழகத்திற் சைவ சமயச் சான்றோர்களால் இறைவன் திருவருள் கொண்டு போற்றி வளர்க்கப் பெற்ற சைவ

சித்தாந்த தத்துவ உண்மைகள் பல இக்காப்பியத்தில் இலக்கியச் சுவையமைய நன்கு விளக்கப்பெற்றுள்ளன.

கன்னி வேட்டைக்குச் சென்ற திண்ணனூர் காளத்தி மலையினைக் கண்டு அம்மலைமேல் எழுந்தருளிய குடுமித் தேவரை வழிபடுதல் வேண்டும் என்னும் பெருவேட்கை யுடன் நாணனைத் துணையாகக் கொண்டு காளத்தி மலையின் மேல் ஏறிச்சென்ற அன்பின் திறத்தினை,

"நாணனும் அன்பும் முன்பு நளிர்வரை ஏறத்தாமும்
பேணுதத்துவங்கள் என்னும் பெருகுசோபானம் ஏறி
ஆணையாம் சிவத்தைச்சார அணைபவர்போல ஐயர்
நீணிலை மலையை ஏறி நேர்படச் செல்லும்போதில்"
(பெரிய – கண்ணப்பர் – 103)

எனவரும் பாடலில் ஆசிரியர் விளக்கியுள்ளார். 'தம் தோழனாகிய நாணன் என்பவனும் தாம் குடுமித் தேவர்பால் வைத்த அன்பும் தமக்கு முன்னே குளிர்ந்த மலையின்மேல் ஏறிச்செல்ல, உயிர்களைப் பேணி வளர்க்கும் தத்துவங்கள் என்கின்ற பெருகும் படிகளை ஏறி, அருளே வடிவமாகிய சிவபரம்பொருளைச்சார அணைபவர்களாகிய சிவயோகிகளைப் போல, திண்ணனூராகிய தலைவர் நீண்ட நிலைமையினை யுடைய திருக்காளத்தி மலையின்மேல் ஏறிக் குடுமித் தேவரை நேர்படச் சென்றார்' என்பது இச்செய்யுளிற் குறிக்கப்பெற்ற செய்தியாகும். சுத்தம் அசுத்தம் என்ற இருவகை மாயையினின்றும் தோன்றிய நிலம் முதல் சிவம் ஈறாக உள்ள தத்துவங்கள் முப்பத்தாறும் சகல நிலையில் உயிர்களின் அறிவு இச்சை செயல்களின் வளர்ச்சிக்குக் கருவியாய் அவ்வுயிர்களை வளர்த்தலின் 'பேணுதத்து வங்கள்' எனப்பட்டன. இவை எல்லாவுயிர்களுக்கும் போகத்தைக் கொடுப்பனவாய்ப் பிரளய காலம்வரை நிலைத் திருக்கும் உண்மைப் பொருள்களாதலின் தத்துவம் எனப் பெயர் பெற்றன. நிலம் முதலாகவுள்ள இத் தத்துவங்கள் அனைத்தையுங் கடந்து மேற்சென்று தத்துவங்கடந்த செம் பொருளாகிய இறைவனை அணைதற்கு இத் தத்துவங்கள் படிபோன்று மேன்மேல் விரிவுடையனவாக அமைதலின் 'தத்துவங்கள் என்னும் பெருகு சோபானம்' என்றார். சோபானம் – படி. சிவபரம்பொருளாகிய இறைவன் தனது அருளாகிய சத்தியுடன் நீக்கமின்றி நிற்றலால் சிவமும் சத்தியும் ஒன்றே என்பார் 'ஆணையாம் சிவம்'

என்றூர். புறப்பொருளை நோக்காது பேரறிவுமாத்திரமாய் நிற்கின்ற முழுமுதற்பொருளே சிவம் எனவும், அச் சிவம் உயிர்களுக்குப் பசுத்துவத்தை விளக்குதலிற் கொண்டுள்ள அருளே சத்தியெனவும் கூறப்படும். "தன்னை விளக்குவதூஉம் விடயங்களை விளக்குவதூஉம் தானேயாகிய ஞாயிருென்றுதானே விடயங்களை விளக்குழிக் கதிர் எனவும், தன்னை விளக்குழிக் கதிரோன் எனவும் தாதான்மியத்தான் இருதிறப்பட்டு இயைந்து நிற்கும்; அதுபோலப் புறப்பொருளை நோக்காது அறிவு மாத்திரையாய்த் தன்னியல்பின் நிற்பதூஉம், புறப்பொருளை நோக்கி நின்றுணர்த்துவதூஉம் ஆகிய இரண்டியல்புடைய பேரறிவாகிய சைதன்னியம் ஒன்றே, அங்ஙனம் புறப்பொருளை நோக்கி நிற்கும் நிலையிற் சத்தி எனவும், புறப்பொருளை நோக்காது அறிவு மாத்திரையாய் அவாவாது நிற்கும் நிலையிற் சிவம் எனவும் தாதான்மியத்தான் இருதிறப்பட்டு நிற்கும்" எனச் சிவஞான முனிவர் கூறும் விளக்கம் இங்கு நோக்கத்தகுவதாகும். சிவயோகிகள் நிலமுதற் சிவமீருகிய முப்பத்தாறு தத்துவங்களையும் படிமுறையானே ஏறிக்கடந்து சிவத்தை அணையுமாறுபோலத் திண்ணஞரும் காளத்தி மலையிற் படிவழியே ஏறிச்சென்று குடுமித் தேவரைச் சார்ந்தார் எனச் சைவ சித்தாந்தத் தத்துவ உண்மையினை உவமையாக ஆசிரியர் எடுத்தாண்டுள்ள திறம் ஈண்டு உணரத் தகுவதாகும்.

ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலங்களும் உயிர்களை அநாதியே பற்றியுள்ளன என்பதும், முற்றுணர்வும் வரம்பிலாற்றலும் பேரருளும் உடைய இறைவன் உயிர்களை அநாதியே பிணித்துள்ள மலப் பிணிப்பு நீங்க உயிர்களுக்கு உலகு உடல் கருவி நுகர்பொருள்கள் ஆகியவற்றைப் படைத்துக் கொடுத்து இவ்வுலகில் வாழ்வாங்கு வாழச் செய்து பாசப்பிணிப் பொழித்து மீண்டும் பிறவா நெறியாகிய வீடுபேற்றினைத் தந்தருள்கின்ருன் என்பதும், உயிர்கள் தம்மைப் பற்றியுள்ள பாசப் பிணிப்பு அகல அருளேயுருவாகிய ஈசனை அன்பினுல் மறவாது வழிபடுதல் வேண்டுமென்பதும் சைவ சித்தாந்த நூற்றுணிபாகும். இதனை,

'தொழுவார்கள் தம் மும்மை
மாமலங்களற வீடருள் தில்லை மல்ல லம்பதியின்
எல்லை வணங்கி' (பெரிய தடுத்தாட் – 92)

எனவும்

'தொல்லைவினை, ஆசுடைய மலமூன்றும் அணையவரும்
பெரும்பிறவி, மாசுதனை விடக்கழித்து'
(பெரிய – திருக்குறிப்பு – 114)

எனவும்,

'மருள்பொழிமும்மலஞ் சிதைக்கும் வடிச்சூலம்'
(சிறுத்தொண்டர் – 35)

எனவும் வரும் தொடர்களில் ஆசிரியர் குறித்துள்ளார்.

மேற்குறித்த மூன்று மலங்களுடன், ஆணவ மலத்துடன் கூடி நின்று அதனைக் கழலும் பக்குவமுடையதாகச் செய்யும் இறைவனது மறைப்புச் சத்தியாகிய திரோதமலத்தினையும் ஆன்மாக்களுக்குத் தனுகரண புவன போகங்களாய்க் காரியப்படும் சுத்தமாயையின் திரட்சியாகிய சுத்த தத்துவங்களையும் கூட்டி மலம் ஐந்து எனப் பகுத்துரைக்கும் வழக்கம் உண்டென்பது,

'மலங்கள் ஐந்தாற் சுழல்வன் தயிரிற்பொரு மத்துறவே'
(நீத்தல் விண்ணப்பம் – 29)

எனவரும் திருவாசகத் தொடரால் அறியப்படும்.

'தன்பரிசும் வினையிரண்டும் சாருமலம் மூன்றும் அற
அன்பு பிழம்பாய்த் திரிவார்' (பெரிய – கண்ணப்பர் – 154)

எனவும்,

'இருவினைப்பாச மும்மலக்சல் ஆர்த்தலின்
வருபவக் கடலில்வீழ் மாக்கள் ஏறிட
அருளுமெய் யஞ்செழுத் தரசை யிக்கடல்
ஒருகல்மேல் ஏற்றிடல் உரைக்க வேண்டுமோ'
(திருநாவுக் – 129)

எனவும் வரும் தொடர்களில் ஐவகை மலங்கள் குறிக்கப் பெற்றுள்ளமை உய்த்துணரத் தகுவதாகும்.

இருவினைகளைச் செய்கின்ற உயிர்களும், அவ்வுயிர்களாற் செய்யப்படும் நன்றுந் தீதுமாகிய வினைகளும், அவ்வினை காரணமாக உயிர்களைச் சேர்தற்குரிய இன்ப துன்பங்களாகிய நுகர்ச்சிகளும், உயிர்கள் செய்த வினைப் பயன்

களைச் செய்த உயிர்களே நுகரும்படி நியமித்து நுகரச் செய்பவனாகிய இறைவனும் எனச் சைவசமயச் சான்றோர் களால் ஆராய்ந்து நிச்சயிக்கப்பட்ட பொருள்கள் நான் காகும். இவ்வுண்மையினை,

> 'செய்வினையுஞ் செய்வானும் அதன்பயனுங் கொடுப்பானும்
> மெய்வகையால் நான்காகும் விதித்தபொருள் எனக்கொண்டே
> இவ்வியல்பு சைவநெறி யல்லவற்றுக் கில்லையென
> உய்வகையாற் பொருள் சிவனென் றருளாலே
> உணர்ந்தறிந்தார்' (பெரிய - சாக்கிய - 5)

எனச் சாக்கிய நாயனார் இறைவனருளால் உணர்ந்ததாகச் சேக்கிழார் அறிவுறுத்தியுள்ளார். அருண்மொழித்தேவர் சைவ சமயத்தின் துணிபொருளாக அறிவுறுத்திய இப் பொருள் வகையினை,

> 'செய்வானுஞ் செய்வினையுஞ் சேர்பயனுஞ் சேர்ப்பானும்
> உய்வா னுளனென் றுணர்' (திருவருட்பயன் - 53)

என உமாபதி சிவாசாரியார் எடுத்தாண்டுள்ளமை மனங் கொளத்தகுவதாகும். இதன்கண் 'செய்வான்' என்றது இருவினைகளைச் செய்துழல்வானாகிய புருடனை. செய்வினை, உயிர்களாற் செய்யப்படும் நன்றும் தீதும் ஆகிய வினைகள். சேர்பயன் – தாம் செய்த நல்வினை தீவினைகள் காரணமாக உயிர்களைச் சேர்தற்குரிய இன்ப துன்பங்களாகிய நுகர்ச்சிகள். சேர்ப்பவன், உயிர்கள் செய்த இருவினைப் பயன்களைச் செய்த உயிர்களே நுகர்ந்து கழிக்கும்படி நியமித்து நுகரச் செய்பவனாகிய இறைவன். தாம் செய்த நல் வினை தீவினைகளின் பயனைத் தாமே அறிந்து எடுத்துக் கொண்டு நுகரும் உணர்வுவன்மையும் வினைப்பயன் களாகிய இன்பதுன்பங்களில் விருப்பு வெறுப்பற்ற தன்மை யும் உயிர்களுக்கு இல்லை. செய்த வினைப்பயன்களைச் செய்த உயிர்களே நுகரும்படி சென்று சேரும் உணர்வு வினைக்கு இல்லை. எனவே உயிர்கள் செய்த வினைப்பயன் களை அவ்வுயிர்களே நுகர்ந்து கழிக்குமாறு வரையறுத்து நுகர்விப்பவன் இறைவன் ஒருவனே என்பது சைவ சமயச் சான்றோர் துணிபாகும்.

உயிர்களுக்கு உலகு உடல் கருவி நுகர்பொருள்களைப் படைத்தளிப்பவன் இறைவன் ஆதலால் அவனே எல்லாப் பொருள்களையும் தனக்கு உடைமையாகக் கொண்ட உடை யான் என்றும், உலகப் பொருள்கள் யாவும் அவனது

உடைமை என்றும், உயிர்கள் ஆண்டவனுகிய அம்முதல்வனுக்கு அடிமையென்றும் உணர்ந்து இறைவனது திருவருளின்வழி அடங்கிநடத்தலே மெய்யுணர்வுடையோர் செயலாகும். இதனை,

'எப்பொருளும் ஆக்குவான் ஈசனே எனுமுணர்வும்
அப்பொருள்தான் ஆளுடையான் அடியார்கள் எனுமறிவும்
இப்படியால் இதுவன்றித் தம்மிசைவு கொண்டியலும்
துப்புரவில்லார் துணிவு துகளாகச் சூழ்ந்தெழுந்தார்'

(பெரிய – சம்பந்தர் – 71)

எனவும்,

'தம்மை யுள்ளவா றறிந்தபின் சங்கரற் கடிமை
மெய்ம்மையே செயும் விருப்புடன்மிக்கதோ ரன்பால்
பொய்ம்மைநீங்கிய பொருளிதுவெனக் கொளும் பொற்பால்
செம்மையே புரி மனத்தினர் சிவநேசரென்பார்'

(பெரிய – சம்பந்தர் – 1035)

எனவும் வரும் திருப்பாடல்களில் ஆசிரியர் தெளிவாக அறிவுறுத்தியுள்ளமை உணரத்தகுவதாகும். மேற்குறித்த 'தம்மையுள்ளவாறறிந்தபின்' என்னும் பெரிய புராணச் செய்யுட் பொருளை அடியொற்றிய நிலையில்,

'தம்மையுணர்ந்து தமையுடைய தன்னுணர்வார்
எம்மையுடைமை யெமையிகழார் – தம்மை
உணரார் உணரார் உடங்கியைந்து தம்மிற்
புணராமை கேளாம்புறன்'

(சிவஞானபோதம் – அவையடக்கம்)

என மெய்கண்ட தேவர் அவையடக்கங் கூறியுள்ளமை இங்கு ஒப்புநோக்கி யுணரற்பாலதாகும்.

உயிர்கட்கு இருவினையொப்பு உண்டாகிய நிலையில் ஆணவமலம் தனது ஆற்றல் தேய்தற்குரிய துணைக் காரணங்கள் எல்லாவற்றோடும் கூடுதலாகிய மலபரிபாகமும், மலபரிபாகம் காரணமாகச் சத்திநிபாதமும் உளவாகும். 'ஒன்றில் விருப்பும் ஒன்றில் வெறுப்பும் ஆதல் இன்றிப் புண்ணிய பாவம் இரண்டினும் அவற்றின் பயன்களினும் ஒப்ப உவர்ப்பு நிகழ்ந்து விடுவோனது அறிவின்கண் அவ்விருவினையும் ஒப்ப நிகழ்தலே ஈண்டு இருவினையொப்பு என்பதற்குப் பொருள்" என்பர் சிவஞான முனிவர். திருஞான சம்பந்தப் பிள்ளையார் திருக்கரத்தால் திருநீறு பூசப்பெற்ற கூன்பாண்டியன் முன்னை வினை நீங்கி

இருவினையொப்பு உடையனும் இறைவனையறியும் தன்மை யினைப் பெற்றான் என்பதனை,

'தென்னவன் மாறன்தானுஞ் சிரபுரத்தலைவர் தீண்டிப்
பொன்னவில் கொன்றையார்தந் திருநீறுபூசப்பெற்று
முன்னை வல்வினையும் நீங்கி முதல்வனை யறியுந்தன்மை
துன்னினான் வினைகள்ஒத்துத் துலையென நிற்றலாலே'
(பெரிய - சம்பந்தர் - 819)

எனவரும் பாடலில் ஆசிரியர் தெளிவாக விளக்கி யுள்ளார்.

மலபரிபாகம் வருமளவும் மலத்திற்கு அநுகூலமாய் நின்று நடத்திய இறைவனது திரோதானசத்தி, மலம் பரிபாகம் எய்திய நிலையில் கருணைமறமாகிய செய்கை மாறிக் கருணை யெனப்படும் முன்னைப் பராசத்தி ரூபமாய் உயிர்கள்மாட்டுப் பதிதலே சத்திநிபாதம் எனப்படும். இறைவனது அருட்சத்தி பக்குவமுடைய உயிர்கள்பாற் பதிதலால் அவ்வுயிர்கள் பாசத் தொடர்பினின்றும் விலகி இறைவன் திருவருளில் தோய்வன. இவ்வுண்மையினை,

'திங்கள்சேர் சடையார் தம்மைச் சென்றவர்காணுமுன்னே
அங்கணர் கருணைகூர்ந்த அருள்திரு நோக்கம் எய்தத்
தங்கிய பவத்தின்முன்னைச் சார்புவிட்டகல நீங்கிப்
பொங்கிய ஒளியினீழல் பொருவிலன்புருவமானார்'
(பெரிய - கண்ணப்பர் - 104)

எனவும்,

'அந்நிலையில் திருத்தோணிவீற்றிருந்தார் அருள்நோக்கால்
முன்னிலைமைத் திருத்தொண்டு முன்னியவர்க்கருள்புரிவான்
பொன்மலை வல்லியுந்தாமும் பொருவிடைமேல் எழுந்தருளிச்
சென்னியிளம் பிறைதிகழச் செழும்பொய்கை
மருங்கணைந்தார்' (பெரிய - சம்பந்தர் - 64)

எனவும் வரும் திருப்பாடல்களில் ஆசிரியர் புலப்படுத்தி யுள்ளார்.

தாள் + தலை என்னும் இவ்விரு சொற்களும் புணருங் கால் நிலைமொழியீற்றில் நின்ற ளகரமும் வருமொழி முதலில் வந்த தகரமும் தம்மிற் பிரித்தறிய வொண்ணாத வாறு டகரமாகிய ஓரெழுத்தாக ஒன்றுபட்டு நிற்கும். அது போல, ஆன்மாவும் சிவமும் அவை எனவும் தான் எனவும் வேறு பிரித்து உணர வொண்ணாதவாறு அவையே தானே யாய்ப் பிரிவற ஒன்றாகிய நிலையில் ஆன்மாவின்கண்

நிகழ்வதே சிவாநுபவம் இதனை அறிவுறுத்தும் முறையில் அமைந்தது,

‘ தாடலைபோற் கூடியவை தானிகழா வேற்றின்பக்
கூடலைநீ ஏகமெனக் கொள் ’ (74)

எனவரும் திருவருட் பயனுகும். இவ்விளக்கம்,

‘ தங்கள்பெருமான் அடிநீழல் தலையாம் நிலைமை சார்வுற்ருர் ’
(பெரிய-முருக-13)

எனவரும் சேக்கிழார் வாக்கினை அடியொற்றி அமைந் திருத்தல் அறியத் தகுவதாகும்.

ஆன்மா சிவத்தோடும் கூடும் நிலையில் ஒன்ருகி உயிர் என்ற பொருள் கெட்டழிவதுமில்லை; இரண்டாகிப் பிரிவதும் இல்லை; இரண்டற்ற நிலையில் அத்துவிதமாய் நின்று அநுபவிக்கும் என்பதனை,

‘ ஒன்ருலும் ஒன்ரு திரண்டாலும் ஓசையெழா
தென்ருலொன் றன்றிரண்டும் இல் ’ (75)

எனவரும் திருவருட் பயனில் உமாபதிசிவம் இனிது விளக்கியுள்ளார். சைவசித்தாந்த முத்திநிலை பற்றிய இவ்விளக்கம்,

‘ நண்ணரிய சிவானந்த ஞானவடி வேயாகி
அண்ணலார் சேவடிக்கீழ் ஆண்டவர சமர்ந்திருந்தார் ’
(பெரிய-திருநாவுக்-427)

எனவும்,

‘ காதலியைக் கைப்பற்றிக் கொண்டுவலங் கொண்டருளித்
தீதகற்ற வந்தருளுந் திருஞானசம்பந்தர்
நாதனெழில் வளர்சோதி நண்ணியதனுட் புகுவார்
போதநிலை முடிந்தவழிப் புக்கொன்றி யுடனுனர் ’
(பெரிய-சம்பந்தர்-1253)

எனவும் அருண்மொழித் தேவர் கூறிய வீடுபேற்றியல்பினை விளக்கும் முறையில் அமைந்திருத்தல் காணலாம்.

இங்ஙனம் திருத்தொண்டர் புராணத்தில் சைவ சித்தாந்த நுண்பொருள்கள் பலவற்றை இனிது விளக்கிச் செல்லும் சேக்கிழாரடிகள், சமணம் பௌத்தம் ஆகிய புறச் சமயங்களின் கொள்கைகளையும் ஆங்காங்கே எடுத்துக் காட்டி அவை மக்கள்வாழ்வுக்கு உறுதியற்றனவாதலை விளக்கியுள்ளார். வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சந்

தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனாகிய இறைவனை மறந்து தெய்வமுண்டென்னுந் தெளிவின்றி அற முதலிய வற்றை மட்டும் வற்புறுத்தும் புறச்சமயங்கள், உயிர்க் குயிராகிய முதல்வன் எல்லையற்ற பேரருளால் உயிர் களுக்குச் செய்துவரும் பேருதவியை மறந்தன ஆதலால், சமண முதலிய புறச்சமயங்களை 'நன்றியில்லாத சமயம்' என ஆசிரியர் குறித்திருப்பது அறிஞர்களால் ஊன்றி நோக்கத் தக்கதாகும்.

'நன்றியில் நெறியில் அழுந்திய நாடும்'

(பெரிய-சம்பந்தர்-659)

என்புழிச் சமண சமயம் 'நன்றியில் நெறி' எனக் குறிக்கப்பெற்றிருத்தல் காணலாம். ஆளுடைய பிள்ளையார் அடியார் திருக்கூட்டத்துடன் திருத்தெளிச் சேரியினை அடைந்தபொழுது பிள்ளையார்பால் அன்புடைய அடியார் களில் ஒருவர் சாரிபுத்தனுடன் சமயவாதம் நிகழ்த்திய செய்தியினைக் கூறுமிடத்துப் புத்தர் கூறும் கணபங்க வாதத்தை விரிவாக எடுத்துக் காட்டி மறுத்திருப்பது கொண்டு சேக்கிழாரடிகளது தத்துவநூற் புலமையினை நன்குணரலாம்.

வடுகக் கருநாடர் மன்னன் பாண்டிய நாட்டைக் கைப் பற்றியதும், பரஞ்சோதியார் பல்லவ வேந்தனது சேனைத் தலைவராய் வடநாட்டின்மேற் படையெடுத்துச் சென்று வாதாவி நகரத்தை யழித்து மீண்டமையும், நின்றசீர் நெடுமாறன் நெல்வேலிப் போர்க்களத்தில் பகைவரை வென்றதும், பிற்காலச் சோழ மன்னர்கள் வடநாட்டிற் சென்று சயத்தம்பம் நாட்டியதும் முதலிய தமிழக வரலாற்றுச் செய்திகளை ஆசிரியர் தம் நூலில் ஆங்காங்கே குறித்திருப்பதும், திருத்தொண்டத் தொகையடியார்களின் வரலாறு கூறும் நிலையில் தம் காலத்திற்கு முன்னுள்ள இலக்கியச் சான்றுகளையும் கல்வெட்டுச் சான்றுகளையும் துணையாகக்கொண்டு உண்மைச் செய்திகளை ஆராய்ந்து கூறியிருப்பதும் ஆசிரியரது வரலாற்றுப் புலமைக்குச் சிறந்த சான்றுகளாகும்.

தேவார ஆசிரியர்கள் மூவரும் தலங்கள் தோறும் சென்று இறைவனை வழிபட்டுத் திருப்பதிகப் பாமாலை பாடி வழிபட்ட செய்தியினை விரித்துரைக்கும் நிலையில்

அவர்கள் சென்ற வழியின் அமைப்பு அடுத்தடுத்துள்ள திருத்தலங்கள், அவற்றை யடுத்தமைந்த ஆறுகள் தல புராணக் குறிப்புக்கள் முதலியனவற்றைக் கற்போர் தெளிவாக அறிந்துகொள்ளும் முறையில் விரித்துக் கூறியிருப்பதுகொண்டு குமரி முதல் இமயம் வரையுள்ள நம் நாட்டின் அமைப்பினை உள்ளவாறுணர்ந்த அவரது நிலநூற் பயிற்சியினை நன்குணரலாம்.

இந்நூலில் ஆனாயர் குழலோசையின் இசை அமைப்பினையும், திருநீலகண்ட யாழ்ப்பாணரது யாழ் வாசிப்பினையும் தேவாரத் திருப்பதிகங்களில் அமைந்த பண்கள் தாளங்கள் ஆகிய இசை நலங்களையும் விரித்துரைக்கும் பகுதிகள் சேக்கிழாரது இயலிசைப் புலமைக்குச் சான்றாக அமைந்துள்ளன. தேவாரத் திருப்பதிகங்கள் பாடப் பெற்ற செவ்வியினைப் புலப்படுத்தும் நிலையில் அத்திருப் பதிகச் சந்தங்களிலே செய்யுட்களை அமைத்திருத்தலையும், நாடக அமைப்புக்கேற்ற உரையாடல்கள் இக்காப்பியத்தில் ஆங்காங்கே இடம் பெற்றிருத்தலையும் கூர்ந்து நோக்கு வோர் இத்திருத்தொண்டர் புராணம் முத்தமிழ்க் காப்பிய மாகிய சிலப்பதிகாரத்தைப் போன்று அமைந்த இயலிசை நாடகப் பொருட்டொடர் நிலை என்பதனை நன்குணர்வர்.

'புலன்கொளுவ மனமுகிழ்த்த சுருள்நீக்கி மலர்விக்கும்
கலைபயிலத் தொடங்குவித்தார்' (பெரிய-திருநாவுக்-20)

எனக் கல்விப் பயிற்சியின் இயல்பினையும்,

'சிந்தைமலர்ந்தெழும் உணர்வின் செழுங்கலையின்
திறங்களெலாம்' (,, ,, 21)

என அப்பயிற்சியினால் உளவாம் கலைத் திறங்களையும் உறுப்பு நூல், மருத்து நூல், கட்டிடக்கலை முதலிய வற்றையும் இந்நூலில் ஆங்காங்கே ஆசிரியர் குறித்துச் செல்லும் குறிப்புகள் அவரது பல்கலைத் திறத்திற்குச் சிறந்த சான்றாகத் திகழ்கின்றன.

திருத்தொண்டர் புராணத்தின் செய்யுள் தொகை 4253 எனச் சேக்கிழார் புராணம் கூறும். இப்பொழுது 4286 செய்யுட்கள் இந்நூலில் உள்ளன. எனவே 33 பாடல்கள் இடைச்செருகலாகப் பின்வந்தோரால் பாடிச் சேர்க்கப் பெற்றன எனக் கருதவேண்டியுளது. திருமலைச் சருக்கத்தில்

9 முதல் 12 வரையுள்ள 5 பாடல்களும் கண்ணப்ப நாயனூர் புராணத்தில் 158 முதல் 162 வரையுள்ள பாடல்களும் சருக்கங்களின் முடிவில் அமைந்த கூற்றுவர், கணம் புல்லர், முனையடுவார், கோட்புலியார் புராணங்களில் அடுத்துவரும் புராணங்களுக்குத் தோற்றுவாயாகவுள்ள நான்கு செய்யுட்களும் சில பிரதிகளில் இல்லாமையால் இவை வெள்ளி பாடல்கள் எனக் கருதப் பெறுகின்றன. 4253 செய்யுட்களால் அமைந்த இத்திருத்தொண்டர் புராணத்தில் ஆசிரியர் எடுத்தாண்டுள்ள இயலிசை யாப்பு விகற்பங்கள் நாற்பத்தெட்டாகும். இவை சந்தமலி செந் தமிழ்ப் பாடல்களாகிய தேவாரத் திருப்பதிகங்களின் இய லிசைத் திறத்தில் சேக்கிழார்க்குள்ள ஈடுபாட்டிற்கும் புலமைத் திறத்திற்கும் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ் கின்றன.

மனு நீதிச் சோழர் வரலாற்றில் பண்டைத் தமிழ் வேந்தர்களது அறனெடுபுணர்ந்த திறனறி செங்கோல் முறையினையும், தடுத்தாட்கொண்ட புராணத்தில் அக் காலத்தில் நம் நாட்டில் திருவெண்ணெய் நல்லூர் முதலிய ஊர்களில் நிலவிய ஊர்ச் சபைகளின் வழக்கியல் முறை யினையும் விரித்துக் கூறியிருப்பது கொண்டு சோழ மன்னர்க்கு அமைச்சராய் விளங்கிய ஆசிரியரது அரசியற் புலமையினை நன்கு உணரலாம். தமிழ் நாட்டின் அக நாடுகளையும் அதனகத்து அடங்கிய ஊர்களையும் தெளிவாகக் குறிக்கும் முறையில்,

> 'மருகல் நாட்டுத் தஞ்சாவூர்' 'மிழலை நாட்டுப் பெருமிழலை' 'மழநாட்டுப் பெருமங்கலம்' 'கோனாட்டுக் கொடிநகரம் கொடும்பாளூர்', 'மேற்கா நாட்டு ஆதனூர்' 'சோழர் நீர்நாட்டிடைக் காவிரிவடகரைக் கீழ்பால் திருப்பெரு மங்கலம்', 'வடவெள்ளாற்றுத் தென்கரைப்பால்...... இருக்கு வேளூர்' 'பெருந் தொண்டை வள நாடதனில் பாலிநதியின் வடபால் நலங்கொள்பதி வேற்காடு'

என இவ்வாறு இடஞ்சுட்டி விளக்கும் பகுதிகள் ஆசிரிய ரது நாடறி புலமையினை அறிந்துகொள்ளுதற்குச் சிறந்த சான்றாக அமைந்துள்ளன.

தமிழ்நாட்டில் திருவதிகையினை அடுத்துள்ள சித்தவட மடம், திருநல்லூரில் அமர்நீதி நாயனார் கட்டிய திரு மடம், திருப்புகலூரில் முருகநாயனார் திருமடம், திருப்பூந்

துருத்தியில் திருநாவுக்கரசர் திருமடம், திருமருகல், திருவாரூர், திருவீழிமிழலை, திருமறைக்காடு, காஞ்சி, காளத்தி, மதுரை, நல்லூர்ப்பெருமணம் முதலிய தலங்களில் அமைந்த திருமடங்கள் ஆகியவற்றைப் பற்றிக் கூறும் குறிப்புக்கள் அக்காலத்தில் திருமடங்களில் தங்கியிருந்து சிவநெறி வளர்த்த திருத்தொண்டர்களின் சைவ சமயத் திருத்தொண்டுகளைப் புலப்படுத்துவனவாகும். சீகாழி, தில்லை, திருவீழிமிழலை, திருவாக்கூர், திருக்கடவூர் முதலிய தலங்களில் வாழும் அந்தணர்களைப் பற்றி ஆசிரியர் கூறும் குறிப்புக்கள் அக்காலத்தில் வேதநெறி தழைத்தோங்க விளங்கிய சீலமுடைய வேதியர்களின் ஒழுகலாற்றினை நன்கு விளக்குவனவாகும்.

நம்பியாரூரரை வலிய ஆட்கொள்ள வந்த கிழவேதியர் கோலம் பற்றியும் அமர்நீதி நாயனார்க்கு அருள்புரிய வந்த மறைக்குலத்துப் பிரமசாரியின் வடிவு பற்றியும், திருநீலகண்டக் குயவர்பால் எழுந்தருளிய சிவயோகியார் வடிவு பற்றியும், மானக்கஞ்சாறர்பால் வந்த மாவிரத முனிவர் கோலம் பற்றியும், சிறுத்தொண்டர்பால் எழுந்தருளிய பயிரவ சமய அடியார் கோலம் பற்றியும் சேக்கிழார் சொல்லோவியஞ் செய்து காட்டிய பகுதிகள் அக்காலத்து வாழ்ந்த அகச்சமய அடியார்களின் திருக்கோலப் பொலிவினைக் கற்போர் உளக்கண்ணின் முன் நிறுத்தும் கற்பனைத் திறம் மிக்கன ஆகும்.

> 'தூயவெண்ணீறு துதைந்த பொன்மேனியும் தாழ்வடமும்
> நாயகன் சேவடி தைவருசிந்தையும் நைந்துருகிப்
> பாய்வது போலன்பு நீர்பொழிகண்ணும் பதிகச்செஞ்சொல்
> மேயசெவ்வாயும் உடையார் புகுந்தனர் வீதியுள்ளே'
>
> (பெரிய - திருநாவுக் - 148)

எனத் திருநாவுக்கரசரது திருவேடப் பொலிவினை விளக்கிய சேக்கிழார், அப்பெருந்தகையாரது அருள் வேடத்தைக் கண்ட ஆளுடைய பிள்ளையார் தம் நெஞ்சக் கிழியிலே வரைந்து நெடுங்காலமாக வழிபடப்பெற்று வந்த அடியார் திருவேடமே இப்பொழுது திருநாவுக்கரசராகப் புறத்தே உருப்பெற்று எதிரே எழுந்தருளியது என எண்ணி அப்பர் திருவேடத்தினைத் தொழுது மகிழ்ந்த செய்தியினை,

> 'சிந்தையிடையறா அன்புந் திருமேனி தனிலசைவும்
> கந்தைமிகையாங் கருத்தும் கையுழ வாரப்படையும்

வந்திழிகண்ணீர் மழையும் வடிவிற்பொலி திருநீறும்
அந்தமிலாத் திருவேடத்தரசும் எதிர் வந்தணைய'

'கண்டகவுணியக் கன்றும் கருத்திற்பரவு மெய்க்காதல்
தொண்டர்திருவேடம் நேரே தோன்றிய தென்னத்
தொழுதே'

(பெரிய - சம்பந்தர் - 270, 271)

எனவரும் பாடல்களில் விரித்துக் கூறியுள்ளார். இங்ஙனம் மெய்ஞ்ஞானம் கைவரப் பெற்ற ஞானசம்பந்தர் அடியார் திருவேடத்தினையும் திருக்கோயிலையும் அரனெனவே கண்டு தொழுத இவ்வரலாற்றுச் செய்தியை அடிப்படையாகக் கொண்டதே சிவஞானபோதத்தில்,

'செம்மலர் நோன்றாள் சேரலொட்டா
அம்மலங் கழீஇ அன்பரொடு மரீஇ
மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந்தானும் அரனெனத் தொழுமே'

எனவரும் பன்னிரண்டாஞ் சூத்திரமாகும். பன்னிரண்டாந் திருமுறையாகிய பெரிய புராணத்தில் அமைந்த அடியார் செய்திகள் சிவஞான போதம் பன்னிரண்டாஞ் சூத்திரப் பொருளுக்குரிய இலக்கியங்களாக அமைந்திருத்தலையுணர்வோர் பன்னிரு திருமுறைகளின் பயனாக அமைந்ததே சிவஞான போதம் என்னும் மெய்ம்மையினைத் தெளிவாக உணர்வார்கள்.

மக்களது ஆக்கப் பொருளாய் வழங்கும் மொழி, அதனைத் தாய் மொழியாகக் கொண்ட மக்களது மன வளர்ச்சிக்கு ஏற்ப வளம் பெற்றுயர்வதாகும். என்றுமுள தென்தமிழாகிய நம் தமிழ் மொழியும் செயற்கரிய செய்வாராகிய திருத்தொண்டர்களின் அருள் வாழ்க்கையின் பயனாக அன்பு முதலிய நற்பண்புகளை நிரம்பப் பெற்றதாய், 'ஞாலமளந்த மேன்மைத் தெய்வத் தமிழ்' எனப் பாராட்டிப் போற்றும் பெருஞ்சிறப்பினைப் பெற்ற திறத்தினையும், அக்காலத்தில் ஆட்சி மொழியாய் தமிழ் விளங்கிய முறையினையும் அருண்மொழித் தேவராகிய சேக்கிழாரடிகள் தாம் இயற்றிய திருத்தொண்டர் புராணத்தில் இனிது விளக்கியுள்ளார். ஆசிரியர் திருத்தொண்டர்களின் வரலாற்றினை விரிக்குமிடங்களில் எல்லாம் தமிழில் உயர்த்தற்கண் விகுதியாகிய ஆர் விகுதியினைப் பெய்து இக்காப்பியத்தினை வேத்தியல் தமிழ் நடையில் அமைத்

துள்ள சொல்வனப்பு நல்லிசைப் புலவர்களால் வியந்து பாராட்டுதற்குரியதாகும். காப்பியத்தைப் பயில்வோருள்ளத்தில் அதிர்ச்சியை விளைக்கும் துன்ப நிகழ்ச்சிகளைக் கூறுமிடத்து,

'பவ்வத்தில் மன்னவன் சொன்னபடி முடித்தார் அப்பதகர்'
(திருநாவுக் - 124)

'பத்திரம் வாங்கித் தான்முன் நினைந்த அப்பரிசே செய்ய'
(மெய்ப் - 15)

'முன்னின்ற பாதகனுந் தன்கருத்தே முற்றுவித்தான்'
(ஏனாதி - 40)

என மங்கல மொழியால் மறைத்துக் கூறுதல் ஆசிரியரது மொழித் திறத்தினை நன்கு விளக்குவதாகும்.

'அசைவில் செழுந்தமிழ் வழக்கே அயல் வழக்கின் துறை வெல்ல'த் தோன்றிய இக்காப்பியத்தில் தமிழ் மக்களின் சென்ற காலத்தின் பழுதிலாத் திறமும் இனி எதிர்காலத்தின் சிறப்பும் ஆகியவற்றை வரலாற்று முறையில் உணர்ந்து நிகழ்காலச் சமுதாயத்தைத் திருத்தி அமைத்துக்கொள்ளுதற்கேற்ற உயர்ந்த கருத்துக்கள் இடம்பெற்றுள்ளன.

தெய்வம் உண்டெனத் தெளிந்த நல்லறிஞர்கள் எத்துணையிடர்கள் அடுக்கி வந்தாலும் வாழ்க்கையில் பிறர் யார்க்கும் அடிமைப்படாது எவ்வுயிர்க்கும் முதல்வனாகிய இறைவன் ஒருவனுக்கே தொண்டுபட்டு வாழும் உரிமையுணர்வும், தொழில்களில் உயர்வு தாழ்வு கருதாமையும், தாம் பல்வேறு தொழில்களைச் செய்தும் அவற்றால் வரும் ஊதியத்தைத் தமக்கென வைத்துக்கொள்ளாமல் அரனடியார்களாகிய அன்பர்களுக்கு ஈந்துவக்கும் மகிழ்ச்சியும், 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்னும் உயர்ந்த நோக்கத்துடன் வாழ்க்கையில் தாம் கொண்ட குறிக்கோளை உயிரைக் கொடுத்தாயினும் நிறைவேற்றும் உள்ளத்து உரனுடைமையும், நேயமலிந்த அடியார்களை இறைவனெனவே தெளிந்து வழிபடும் தெளிவுடைமையும், இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யும் சால்புடைமையும், இவ்வுலகியலில் நேரும் இடர்களுக்கு உறுதுணையாக இறைவனுளன் என உளம்பொருந்தி இன்ப துன்பங்களை ஒப்ப அனுபவிக்க இசையும் மன அமைதியும்,

அமைதி முறையில் நின்று உண்ணுமை முதலிய நோன்பு களால் உலகில் தீமைகளை எதிர்த்து விலக்கும் திறமும், தவறு செய்வோர் யாவராயினும் விருப்பு வெறுப்பின்றி ஒப்பநாடி அதற்குத் தக ஒறுக்கும் உளத்திட்பத்தினைக் குடிமக்கள் அனைவருள்ளத்திலும் நிலைபெறச் செய்யும் வன்மையும், உலகியலிற் பொருளாட்சி யொன்றையே பெரிதெனமதியாது அருளாட்சியே சிறந்ததென நிலை நாட்டும் ஆற்றலும், வாழ்வெனும் மையல் விட்டு வறுமை யாம் சிறுமை நீக்கிக் குலப்பிரிவுகளாலும் செல்வ வறுமை களாலும் வேறுபடாது 'ஒன்றே குலனும் ஒருவனே தேவனும்' எனவுணர்ந்து எவ்வுயிர்க்கும் நன்றே புரியும் சமநிலைச் சமுதாயத்தை நாட்டில் உருவாக்கும் நெறிமுறை களும், யாவருடனும் உயர்வாகவும் இனிமையாகவும் உரை யாடும் மொழித்திறமும், குமரி முதல் இமயம் வரை பரவி யுள்ள நம் நாட்டில் வடக்குந் தெற்கும் ஒத்த தகுதியுடை யனவே எனக்கருதி யொழுகும் ஒருமைப் பாட்டுணர்வும், நாட்டுமக்கள் தமது உலகியற் போகத்தில் நாட்டங் கொண்டு தத்தமக்குரிய கொள்கைகளை மாற்றிக்கொள் ளாமல் தமக்குரிய மொழி, சமயம் ஆகியவற்றைப் பேணிப் போற்றுமுகத்தால் மற்றவர்கள் மதிக்க வாழ்தல் வேண்டும் என்னும் ஊக்கமும், அரசியல் வளர்ச்சிக்குரிய நீதிகளும், சமய நிந்தனையின்றி எல்லாச் சமயங்களும் தத்தம் வரம் பில் நின்று வளர்தற்கு இடந்தரும் முறையில் அரசியல் ஆட்சி அமைதல் வேண்டும் என்பதும், நல்லோர் திருக் கூட்டம் நாட்டைத் திருத்தி நலம் வழங்கும் என்பதும் ஆகிய உயர்ந்த உண்மைகள் பல இக்காப்பியத்தில் நன்கு விளக்கப்பெற்றுள்ளன.

மக்களது மொழித்திறத்தால் அவர்களது வாழ்க்கை திருந்துதல் உண்டென்பதனைத் திருநீலகண்டக் குயவ நாயனுர் புராணத்தில் ஆசிரியர் இனிது விளக்கி யுள்ளார்.

'எம்மைத் தீண்டுவீராயின் திரு நீலகண்டம்'

எனத் தம் மனைவியார் கூறிய திருவருள் ஆணைக்கு அடங்கி,

'எம்மை என்றதனுல் மற்றைமாதரார் தமையும்
என்றன் மனத்தினும் தீண்டேன்'

என்று உறுதி பூண்ட திருநீலகண்டக் குயவனாரும் அவர் தம் அன்புடைய மனைவியாரும் மெய்யுறு புணர்ச்சியின்றி வளமலி இளமை நீங்கி வடிவுறு மூப்புவந்து தளர்வொடு சாய்ந்தும் தம்பிரான் திறத்து அன்பு நீங்காமல் இல் வாழ்க்கை நெறியினை இனிது நிகழ்த்திய முறையினையும், அவ்விருவரது தூய அன்பின் திறத்தினைச் சிவபெருமான் சிவயோகியாராக எழுந்தருளி 'ஞாலத்தார் விரும்பியுய்யும் நன்னெறி இதுவாம்' எனக்காட்டிய திறத்தினையும் சேக்கிழார் விரித்துக் கூறும் பகுதி,

'அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்ப தில்லாயின் நன்று'

எனவரும் திருக்குறளுக்குரிய சிறந்த விளக்கவுரை போன்றமைந்திருத்தல் அறிந்து மகிழத் தகுவதாகும்.

முற்காலத் தமிழ் மக்கள் வாழ்க்கையில் அன்பினால் ஒருவனும் ஒருத்தியும் கலந்து வாழும் காதல் வாழ்விலும் கூட உயிர்க்குயிராகிய கடவுட்பற்றே மேம்பட்டு விளங்கிய தென்பதனை,

'அண்ணலவன் தன்மருங்கே அளவிறந்த காதலினால்
உண்ணிறையும் குணம் நான்கும் ஒருபுடைசாய்ந்தன
எனினும்
வண்ணமலர்க் கருங்கூந்தல் மடக்கொடியை வலிதாக்கிக்
கண்ணுதலைத்தொழும் அன்பே கைக்கொண்டு செலவுய்ப்ப'
(பெரிய - தடுத்தாட் - 145)

எனவரும் பாடலில் ஆசிரியர் நன்கு விளக்குகின்றார்.

அன்புடையாரிருவர் ஒருவரையொருவர் இன்றியமையாதாராய்க் கலந்து வாழ்தற்கு ஏக்கற்று வருந்தும் துயர் நிலையிலும், தாம் வாழும் தமிழ்நாட்டையும் தம் தாய்மொழியாகிய தமிழையும் மறவாது போற்றும் பண்பினராக வாழ்ந்த அக்காலத் தமிழ் மக்களது இயல்பினை,

'பிறந்ததெங்கள் பிரான்மலயத் திடைச்
சிறந்தணைந்தது தெய்வநீர் நாட்டினில்
புறம்பணைத்தடம் பொங்கழல் வீசிட
மறம் பயின்ற தெங்கோ தமிழ் மாருதம்'
(பெரிய - தடுத்தாட் - 167)

என நாவலூர் நம்பியைக் காதலித்த நங்கை பரவையார் தமிழ்த் தென்றலை நோக்கி இரங்கிக் கூறுவதாக அமைந்த

பாடலில் சேக்கிழார் புலப்படுத்திய திறம் கூர்ந்துணரத் தகுவதாகும்.

இந்நூலில், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், நம்பியாரூரர், திருமூலர், காரைக்காலம்மையார், ஐயடிகள் காடவர்கோன், சேரமான் பெருமாள் ஆகிய திருமுறை யாசிரியர்களின் வரலாறுகளை விரித்துக்கூறும் நிலையில் அவ்வாசிரியர்கள் திருவாய் மலர்ந்தருளிய தேவாரப் பதி கங்கள் முதலாகவுள்ள திருமுறைப் பனுவல்களின் சொற் பொருள் நலங்களையும் கருத்துக்களையும் எடுத்துக்கூறும் முறையில் அமைந்த பகுதிகள் அத் திருமுறைகளுக்கு அருண்மொழித்தேவர் அப்பெருமக்கள் திருவடிகளை வணங்கி அவர்தம் திருவருட்டுணைகொண்டு கண்டுணர்த் திய சிறந்த உரை விளக்கங்களாகத் திகழ்கின்றன.

இலக்கியங்களுக்கு அழகுதரும் தன்மை உவமை உரு வகம் சிலேடை முதலிய பொருளணிகளையும் மடக்கு முதலிய சொல்லணிகளையும் தன்னகத்தே கொண்டு நவில் தொறும் சுவைமிகப் பயப்பதாய், பத்திச் சுவை ஊற்றெடுத் துப்பாயும் திருவருட் கடலாய், தித்திக்குந் தெள்ளமுதாய்த் திகழும் திருத்தொண்டர் புராணமாகிய செந்தமிழ்க் காப்பி யத்தைத் தமிழ் மக்களும் சிறப்பாகத் தமிழ் பயிலும் மாணவர் அனைவரும் ஆர்வமுடன் கற்றுப் பயன்பெறுதல் வேண்டுமெனத் தொண்டர்சீர் பரவுவாராகிய சேக்கிழார் பெருமான் திருவடிகளை இறைஞ்சிப் போற்றுகின்றேன்.

'என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித் துள்ளமும் ஓங்கிட
மன்றுளாரடியாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவியுலகெலாம்'

திருச்சிற்றம்பலம்

தாராசுரம் இராசராசேச்சுரத் திருக்கோயிலிலுள்ள திருத்தொண்டத் தொகையடியார்களின் வரலாற்றுச் சிற்பங்கள்

கும்பகோணத்தை அடுத்துத் தென்மேற்கே ஒருகல் தொலேவில் உள்ளதும், இக்காலத்தில் தாராசுரம் என வழங்கப்பெறுவதும் ஆகிய ஊர், முற்காலத்தில் சோழர் தலே நகரங்களுள் ஒன்ருய் விளங்கிய பழையாறை நகரின் வடகீழ்ப் பகுதியாகும். கி. பி. 1146 முதல் 1163 வரை சோழநாட்டினே ஆட்சி புரிந்த இரண்டாம் இராசராச சோழன் பழையாறை நகரினே வடகீழ்த்திசையில் மேலும் விரிவடையச் செய்து இராசராசபுரம் எனத் தன் பெயரால் வழங்கும் வண்ணம் அதனேத் தனது தலே நகராகக் கொண்டான். அந்நகரத்தின் வடகீழ்த்திசையில் தன் பெயரால் இராசராசேச்சரம் என்னும் சிவாலயத்தினே அமைத்து, அதன்கண் இராசராசேச்சர முடையாராகிய இறைவரை எழுந்தருளுவித்து நாள் வழிபாடும் திருவிழாக் களும் சிறப்புற நிகழச் செய்தான். இவ்வேந்தனுக்கு அவைக்களப் புலவராக விளங்கிய ஆசிரியர் ஒட்டக்கூத்தர், தக்கனது யாகம் வீரபத்திரக் கடவுளால் அழிக்கப்பட்ட பொழுது, உமாதேவியார்க்குப் போர்க்களங் காட்டி அங்கு இறந்தோர் எல்லோர்க்கும் அருள்புரியும் பொருட்டுச் சிவ பெருமான் எழுந்தருளினுர் எனக்கூறும் நிலேயில், இங்குள்ள இராசராசபுரியீசர் எழுந்தருளினுர் என்று தாம் இயற்றிய தக்கயாகப் பரணியிற் கூறியிருப்பது இத்திருக் கோயிலின் சிறப்பினே நன்கு புலப்படுத்துவதாகும்.[1] இரண்டாம் இராசராச சோழனுல் அமைக்கப்பெற்ற இராச ராசேச்சரமாகிய மாடக்கோயில் கண்டோர் கண்களேயும் கருத்தினேயும் ஈர்க்கும் சிற்பத்திறம் வாய்ந்ததாகும். முற் காலத்தில் மன்னர் போற்றும் பெருமையுடன் விளங்கிய

1. ஆராய்ச்சிப் பேரறிஞர் தி. வை. சதாசிவ பண்டாரத்தார் இயற்றிய பிற்காலச் சோழர் சரித்திரம், பகுதி II பக்கம் 115, 116.

அத்திருக்கோயில் இக்காலத்தில் தன் சிறப்பனைத்தும் இழந்து பழுதடைந்து அழிவுற்ற நிலையில் உளது. எனினும் இத்திருக்கோயிலிலுள்ள கருப்ப இல்லின் புறச் சுவரில் திருத்தொண்டத் தொகை அடியார்களின் வரலாறு களைப் புலப்படுத்தும் முறையில் அமைக்கப் பெற்றுள்ள சிவனடியார் சிற்பங்களும், திருச்சுற்று மாளிகையிலும் இராசகெம்பீரன் திருமண்டபத்திலும் அமைந்த அழகிய சிற்பங்களும் இன்றும் அத்திருக்கோயிலின் பழைய பெருமைகளை அறிவுறுத்திக்கொண்டு அதனை அமைத்த இராசராச சோழனுடைய புகழ்த்திறங்களாக நிலை பெற்றுள்ளன.

வரலாற்றுச் சிறப்புடைய இத்திருக்கோயில் விமானத் தின் புறச்சுவரில் அடித்தளத்தின் மேலும் மாடப்புரை களின் கீழும் ஆக ஆறங்குல உயரம் அமைந்துள்ள அடிப் பக்கத்துப் பட்டியலாகிய நடுப்பத்தியில் தென்கிழக்கு முனையிலிருந்து வடகிழக்கு முனை முடியத் திருத்தொண்டத் தொகை அடியார்களின் வரலாறுகள் கருங்கல்லிற் புடைப்புச் சிற்பங்களாக அமைக்கப் பெற்றுள்ளன. இச் சிற்ப வரிசைக்குமேல் மரச்சட்டம் போன்று அமைந்த கற்பத்தியில் இவற்றுக்குரிய அடியார்களின் பெயரொடு தொடர்ந்த குறிப்புக்கள் தமிழ் எழுத்திற் பொறிக்கப் பெற்றுள்ளன. இச் சிற்பங்களின் இடையே யமைந்த மூலை முடுக்குகளாகிய இடை வெளிகளில் அழகுக்கெனச் செதுக்கப்பெற்ற பூவேலைப்பாடுகளுடன் கூடிய வேறு சில சிற்பங்களும் தெய்வத் திருவுருவங்கள் சிலவும் இடம் பெற்றுள்ளன.

'தில்லைவாழந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்' எனத் திருத்தொண்டத் தொகையில் அடியார்கள் போற்றப் பெற்றுள்ள முறையினை அடியொற்றித் தில்லைவாழந்தணர் என்னும் தொகையடியார் முதலாக, அன்னவனும் ஆரூரன் எனக் குறிக்கப்பட்ட நம்பியாரூரர் ஆகிய தனியடியார் ஈருக வமைந்த நாயன்மார்களுக்குரிய சிற்பங்கள் இவ் விமானத் தின் தென்கீழ் மூலை தொடங்கி வடகீழ் மூலை முடியத் தொடர்ச்சியாக அமைக்கப்பெற்றுள்ளன. நம்பியாரூரர் அருளிய திருத்தொண்டத் தொகையின் பெயர் முறையினை ஒட்டியமைந்த இச் சிற்பங்களின் வரிசையில் அரிவாட்டாய

நாயனாரைக் குறித்த சிற்பம் ஒன்று மட்டும் உருத்தெரியாத வாறு சிதைந்துள்ளது. திருநாவுக்கரசரைக் குறித்த சிற்பத்துள் ஒரு பகுதி சிதைய ஒரு பகுதி மட்டுமே சிதையாமல் எஞ்சியுள்ளது. இவற்றுள் ஐம்பது சிற்பங்களுக் குரிய கல்வெட்டுக் குறிப்புக்கள் மட்டும் அழியாதுள்ளன. ஏனையவற்றின் எழுத்துக்கள் சிதைவுற்றமையால் அக் குறிப்புக்கள் இவை யென்று தெளிவாக அறிதற்கு இயல வில்லை. இவ்வாறு கல்வெட்டுக் குறிப்புக்கள் சிதைந்து மறைந்தாலும் திருத்தொண்டத் தொகையின் வரிசை முறையினை உளங்கொண்டு இச்சிற்பங்களை நோக்குங்கால் இவை இன்ன இன்ன நாயன்மார்க்குரிய சிற்பங்களாகும் எனத் திட்டமாகத் தெரிந்துகொள்ளுதற்குரிய அடையாளங்கள் இச் சிற்பங்களில் தெளிவாகப் புலனாதல் காணலாம்.

மேற்குறித்த சிற்பங்களில் அவற்றின் மேற் பொறிக்கப் பெற்றுள்ள கல்வெட்டுக் குறிப்புக்களைக்கொண்டு இது இன்ன நாயனாரைக் குறித்தது எனத் தெளிவாகக் கூறுதற் குரிய ஐம்பது சிற்பங்களை மட்டும் தென்னிந்தியக் கல் வெட்டுத் துறையினர் வரி ஓவியம் (Line Block) ஆக வரைந்து அவற்றுக்குரிய கல்வெட்டுக் குறிப்புக்களுடன் 1920-ஆண்டின் அறிக்கையில் வெளியிட்டுள்ளார்கள். அறிஞர் பிலியோசா (Jean Filliozat) அவர்கள் தலைமையிற் புதுவை மாநிலத்திற் கலைப்பணி புரியும் பிரஞ்சிந்தியக் கலைக் கழகத்தார், இராசராசபுரத்து இராசராசேச்சரத் திருக்கோயிலில் உள்ள இச்சிற்பங்களைச் சிறந்த முறையில் நிழற்படம் எடுத்துள்ளனர். அவர்கள் எடுத்த நிழற்படங்கள் அவர்களது இசைவுபெற்று அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தாரால் அச்சுப் படங்களாக்கப் பெற்றுத் திருத்தொண்டத் தொகை வரிசையில் இந்நூலில் முதன் முதலாக வெளி யிடப் பெற்றுள்ளன.

இச் சிற்பங்களுக்குரிய கல்வெட்டுக் குறிப்புக்கள் பல சிதைவுற்றழிந்த நிலையில், இச் சிற்பங்களிற் குறிக்கப்பட்ட வரலாற்றுச் செய்திகள் இவை யெனத் துணிதற்கு இச் சிற்பங்களை நேரிற் கண்டு அறிதல் இன்றியமையாத ...ந் நோக்கத்துடன் இராசராசபுரத் திருக் ... சென்று அங்குள்ள இந்தச் சிற்பங்களின்

அமைப்புக்களைக் கூர்ந்து நோக்கித் திருத்தொண்டத் தொகை, திருத்தொண்டர் திருவந்தாதி, திருத்தொண்டர் புராணம் ஆகிய திருமுறைகளுடன் ஒப்புநோக்கி ஆராய்ந்த போது இதுவரை விளக்கம் பெருத செய்திகள் சில நன்கு புலனாயின. இச் சிற்பங்களில் சேரமான் பெருமாள் கதை பற்றிய சிற்பத்தினைக் குறித்தும் உடைய நம்பிகளுக்குரிய சிற்பங்களுள் ஒன்றைக் குறித்தும் கல்வெட்டுத் துறை யினரும் இக்கால வரலாற்றுராய்ச்சியாளர் சிலரும் எழுதிய குறிப்புக்கள் சில பொருத்தமற்றன என்பது புலனாயிற்று.[1] திருத்தொண்டத் தொகையடியார்களின் வரலாற்று நிகழ்ச் சியைக் குறித்தமைந்த இச் சிற்பங்களைக் கூர்ந்து நோக் கியபொழுது இவை தொண்டர்சீர் பரவுவாராகிய சேக் கிழார் நாயனார் காலத்திலேயே வரலாற்று முறையினை ஆராய்ந்து அமைக்கப்பெற்ற தொன்மை வாய்ந்தன என்னும் உண்மை இனிது புலனாயிற்று.

இச் சிற்பங்கள் யாவும், குறித்த அடியாரை மட்டும் குறிப்பிடும் முறையில் தனித் திருவுருவமாக அமைக்கப் படாமல், அத்திருத் தொண்டரது சிறப்புக்குரிய வாழ்க்கை நிகழ்ச்சியினிடையே அவ்வடியவரைக் குறித்துக்காட்டும் முறையில் வரலாற்றுச் சிற்பங்களாக அமைக்கப்பெற்றுள் ளன. இச் சிற்பங்களிற் குறிப்பிடுதற்குரிய நாயனரது திருவுருவத்துடன் அவரது வாழ்க்கை நிகழ்ச்சியிற் பிணைந் துள்ள பிறரது உருவமும் செயல்களும் செயல்களுக்குரிய சூழ்நிலைகளும் அவரவர் உள்ளக் குறிப்புக்களின் வெளிப் பாடாகிய மெய்ப்பாடுகளுடன் தெளிவாக அமைத்துக் காட்டப் பெற்றுள்ளன. அன்றியும் அவ்வச் சிற்பத்திற் சிறப்பாகக் குறிப்பிடுதற்குரிய திருத்தொண்டரது திரு வுருவம் அவருடைய வெவ்வேறு நிகழ்ச்சிகளைக் குறிப்பிடும் நிலையில் நிகழ்ச்சிகள் தோறும் தொடர்ந்து இடம் பெற்றி ருத்தலையும், அத்திருத்தொண்டர் வழிபட்ட திருக்கோயி

1. இச் சிற்பங்களைக் குறித்துத் திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரி முதல்வர் திரு. K. M. வேங்கடராமையா M.A., B.O.L., அவர்கள் 1961 ஜனவரியில் வெளிவந்த 'திருக்கோயில்' பத்திரிகை யில், 'தாராசுரத்து இராசராசேச்சுரம்' என்ற தலைப்பில் வெளி யிட்டுள்ள கட்டுரை, இச் சிற்பங்களின் வரிசை முறையினைப் பிற ழாது அறிந்து கொள்ளுதற்கு உறுதுணையாக அமைந்துள்ளமை இங்குக் குறிப்பிடத் தகுவதாகும்.

லும் அவர்க்கு அருள்புரியும் நிலையில் இறைவன் அம்மை யப்பராக விடை மீது எழுந்தருளிக் காட்சி நல்குதல் ஆகிய சிறப்புடைய நிகழ்ச்சியும் இடம் பெற்றிருத்தலையும் இச் சிற்பங்களிற் காணலாம். திருத்தொண்டத் தொகை யிற் போற்றப் பெற்றுள்ள அடியார் வரலாறுகளிற் சிறப் புடைய வரலாற்று நிகழ்ச்சிகளை உருவாக்கிக் காட்டும் முறையில் அமைந்த இச் சிற்பங்கள் சேக்கிழாரடிகள் அருளிய திருத்தொண்டர் புராணமாகிய சொல்லோவியத் துடன் ஒருங்கு வைத்துணரத் தக்க கல்லோவியமாகத் திகழ்கின்றன.

திருத்தொண்டத் தொகையடியார்களைக் குறித்த இச் சிற்பங்களின் நிழற் படங்கள் தில்லை வாழந்தணர் முதலாக உடைய நம்பியாகிய சுந்தரமூர்த்தி நாயனார் ஈறாக 1 முதல் 72 முடியவுள்ள எண் வரிசையில் வெளியிடப் பெற்றுள்ளன வாதலின் அச்சிற்பங்களுக்குரிய விளக்கங்கள் 1 முதல் 72 முடியவுள்ள எண் வரிசையிற் பின்வருமாறு குறிக்கப் பெறும். குறித்த எண்முறைப்படி யுள்ள இவ்விளக்கக் குறிப்புக்களையும் இக்குறிப்புக்களுக்குரிய எண்வரிசையி லுள்ள நிழற் படங்களையும் முறையே ஒப்ப வைத்துணரு மிடத்து இச்சிற்பங்களை அமைத்த சிற்பியின் வரலாற் றுணர்வும் கலைத்திறமும் இவற்றை முன்னின்று அமைக்க அறிவுறுத்திய சோழ மன்னனது சிவநெறிப்பற்றும் இனிது விளங்கும்.


1. தில்லைவாழந்தணர் :

இராச ராசபுரத் திருக்கோயில் விமானத்தின் வெளிப் புறத்தில் அடிப்பக்கத்துப் பட்டியல் பகுதியில் தென்கீழ் முனையிலிருந்து தொடங்கி வடகீழ் முனையில் முடியும் திருத்தொண்டத் தொகையடியார்களின் சிற்ப வரிசையில் தென்கீழ் முனையில் முதலாவதாக அமைந்தது, தில்லை வாழந்தணர்க்குரிய சிற்பமாகும். இதன்கண் வலமிருந்து இடம் முதற்கண் கோயிலும், அதனை நோக்கி முறையே குடையும் சாமரையும் திருவமுதும் தாங்கி நிற்கும் நிலையில் முந்நூலணிந்த அந்தணர் மூவரும் உள்ளமை காணலாம்.


'பொங்கிய திருவில்நீடும் பொற்புடைப் பணிகள் ஏந்தி
மங்கலத் தொழில்கள் செய்து மறைகளால் துதித்துமற்றும்



1. தில்லைவாழந்தணர்



2. திருநீலகண்டர்



3. இயற்பகை நாயனர்



3–A. இயற்பகை நாயனர்

தங்களுக் கேற்ற பண்பில் தகும்பணி தலைநின் றுய்த்தே
அங்கணர் கோயி லுள்ளா அகம்படித் தொண்டுசெய்வார்'

எனச் சேக்கிழாரடிகள் குறித்த முறையில் கூத்தப் பெருமான் திருக்கோயிலில் அணுக்கத் தொண்டினுக்கு உரியராய் விளங்கும் தில்லைவாழந்தணர்களாகிய திருக் கூட்டத்தினைக் குறித்தமைந்த இச்சிற்பத்தில், ஆயிர வர்க்கு ஒருவர் என்ற கருத்தில் மூவாயிரவரையும் குறிக்க அந்தணர் மூவர் இடம்பெற்றுள்ளமை காணலாம். இவ்வாறே திருப்பனந்தாள் திருக்கோயிலில் உள்ள திருத் தொண்டத் தொகைச் சிற்ப வரிசையிலும் தில்லைவாழந் தணரைக் குறிக்கும் கருத்தில் அந்தணர் மூவர் அமர்ந் துள்ளமை ஒப்புநோக்குதற் குரியதாகும்.

2. திருநீலகண்ட நாயனார் :

திருநீலகண்டக் குயவரும் அவர் தம் மனைவியாரும் கோலைப் பிடித்துக்கொண்டு திருப்புலீச்சரத் திருக் கோயிலின் முன்னுள்ள திருக்குளத்தில் மூழ்கியெழும் நிலையில் அமைந்தது இச்சிற்பமாகும்.

3. இயற்பகை நாயனார் :

வலமிருந்து இடம் : தூர்த்த வேடத்துடன் தம் இல்லத்திற்கு எழுந்தருளிய சிவனடியாரை இயற்பகையார் இருகைகளையும் குவித்து வரவேற்றல். "எந்தை எம் பிரான் அடியவர் அணைந்தார் என்று நின்றதோர் இன்ப ஆதரவால், சிந்தை அன்பொடு சென்றெதிர் வணங்கி......'முந்தை என்பெருந் தவத்தினாலன்றோ முனிவர் இங்கெழுந்தருளியது' என்றார்" (பெரிய – இயற் – 5). இடமிருந்து வலம் : இயற்பகையார் தம் மனைவியாரை அடியார்க்கு அளித்தலும் அவர் ஏற்றுக் கொள்ளுதலும். நடுவே நிற்பவர் இயற்பகையார் மனைவியார். இயற்பகையார் திருவுருவத்தில் குடுமி வலப் பக்கத்திலும், தூர்த்த வேடத்தினராகிய அடியார் திருவுருவத்தில் குடுமி இடப் பக்கத்திலும் அவ்விரு வரையும் வேறுபடுத்திக் காட்டும் அடையாளங்களாகத் திகழ்தல் காண்க.

(3) A. இறைவன் அம்மையப்பராய் விடைமீது தோன்றி இயற்பகையார்க்கு அருள்புரிதல்.

4. இளையான்குடி மாற நாயனார் :

'இளைய மாறன்குடி மாறர் கதை' என இதன் மேற்பொறிக்கப் பெற்றுள்ளது. வலமிருந்து இடம்: இளையான்குடி மாறனார் வயலில் நெல்முளை வாரிக்கொண்டு வர அக்கூடையினை அவர் தம் மனைவியார் எதிர்சென்று வாங்குதல்; அந்நெல்லினைத் திருவமுதாக்கி அம்மையார் பரிகலத்தில் இட்டுப்படைத்து அமுது செய்தருள்க என வேண்டும் நிலையில் அங்கு எழுந்தருளியிருக்கும் அடியவர் சோதியாய் எழுந்து தோன்றுதலும் பின் உமையம்மை யாருடன் விடையின்மேல் தோன்றி அருள்புரிதலும். அமர்ந்திருக்கும் அடியார் சோதியாய் எழுந்து மறைந்தார் என்பதனைக் குறிக்கும் அடையாளமாக இச்சிற்பத்தில் அமர்ந்திருக்கும் அடியார் முடிக்கு மேலாகச் சோதிச் சுடர்ப்பிழம்பு பொறிக்கப்பெற்றுள்ளமை காண்க.

5. மெய்ப்பொருள் நாயனார் :


வலமிருந்து இடம்: பொய்த்தவ வேடங்கொண்டு புகுந்த முத்தநாதன் தவிசின்மேல் அமர்ந்திருக்க, மெய்ப் பொருள் நாயனார் நிலத்தின்மிசையிருந்து ஆகமப்பொருளை வினவிய நிலையில் முத்தநாதன் புத்தகக் கவளியில் மறைத்து வைத்திருந்த வாளினை உருவி மெய்ப் பொருளாரைக் குற்றுதலும், அதுகண்டு பொருது அவனைக் கொல்லுதற்கு வாட்படையுடன் விரைந்த வாயில் காவலனாகிய தத்தனை நோக்கிய மெய்ப்பொருளார் 'தத்தா நமர்' எனக்கூறித் தம் வலக்கையினால் தடுத் தலும், மன்றுளாடும் திருவடிகளைச் சிந்தித்த மெய்ப் பொருளார்க்கு இறைவன் விடைமேல் அம்மையப்பராகத் தோன்றுதலும்.

6. விறன்மிண்ட நாயனார் :


வலமிருந்து இடம்: தேவாசிரிய மண்டபத்துள் அடியார்கள் அமர்ந்திருக்க, நம்பியாரூரர் திருவாரூர்ப் பூங்கோயிலில் இறைவனை வணங்குதற்கு ஒருபால் ஒதுங்கிச் செல்லுதலும், அம்மண்டபத்திலுள்ள அடியார் களில் ஒருவராகிய விறன்மிண்டர் அதனைக் காணுதலும். தேவாசிரிய மண்டபத்தில் அமர்ந்திருக்கும் அடியார்




4. இளையமாறன்குடி மாறர் கதை



5. மெய்ப்பொருள் நாயனர்




6. விறன் மிண்ட நாயனார்



7. அமர்நீதி நாயனார்



8. எறிபத்த நாயனர்



8-A. எறிபத்த நாயனர்

களுக்குப் பின்புறமாக எழுந்து நிற்கும் முறையில் உள்ள திருவுருவமே விறன்மிண்ட நாயனரைக் குறிப்பதாகும்.

7. அமர்நீதி நாயனர் :

அமர்நீதியார், பிரமசாரியாக வந்த இறைவர் பணித்த வண்ணம் அவரது கோவணத்தினைத் துலையின் (தராசின்) ஒரு தட்டில் வைத்து அதன் மற்றொரு தட்டிலே தம்பாலுள்ள பொன்னெடு நவமணித்திரள் முதலிய பல வகைப் பொருள்களையும் வைத்திடவும் கோவணத் தட்டு நேர் நில்லாது தாழ்ந்தமையால் இறைவரது இசைவு பெற்று மனைவியும் தாமும் அத்துலையினை வலங்கொண்டு ஏறியமர்ந்த நிலையில் துலையின் இரண்டு தட்டுகளும் ஒத்து நேர் நிற்றலும், நல்லூர் இறைவன் அம்மையப்பராக விடையின்மேல் தோன்றி அருள்புரிதலும்.

தராசின் வலப்பக்க முள்ள தட்டில் பொன் முதலிய பொருள்களுடன் அமர்நீதியாரும் அவர் மனைவியாரும் அவ்விருவர்க்கும் நடுவே ஒரு குழந்தையும் இருத்தலும், இடப்பக்கமுள்ள தட்டிலே இறைவரது கோவணம் ஒன்று மட்டுமிருத்தலும், அத்தட்டின் அருகே மறைக்குலத்துப் பிரமசாரியின் உருவில் இடக்கையிற் கோலுடன் இறைவன் நிற்கும் கோலமும், அதனையடுத்து மாதொருபாகராகிய இறைவர் விடைமேல் தோன்றியருளிய கோலமும் இச் சிற்பத்தில் நன்கு புலனுதல் காணலாம்.

8. எறிபத்த நாயனர் :

வலமிருந்து இடம் : தம் கையிலுள்ள தண்டில் தொங்கிய பூக்குடலையை யானை பறித்துச் சிதறினமையால் செயலற்று வருந்திய சிவகாமியாண்டார் தம் இரு கைகளையும் உயரத் தூக்கிச் 'சிவதா, சிவதா' என முறையிடுதலும், அதனை யறிந்து வெகுண்ட எறிபத்தர் வலக் கையிலுள்ள மழுப்படையினுல் யானையையும் பாகர்களையும் துணித்தற்கு முற்படுதலும்.

(8) A. எறிபத்தரால் கை துணிக்கப்பட்ட யானையும் அதன்மேல் உள்ள பாகர் இருவரும் மழுவினுல் வெட்டுண்டு இறந்து கிடத்தலும் அயலே மழுப்படையுடன்

நிற்கும் எறிபத்தரைக் கண்ணுற்ற புகழ்ச் சோழராகிய மன்னர், 'யானை செய்த குற்றத்துக்காக என்னையும் கொன்று தண்டித்தல் வேண்டும்' என்று தம் கையிலுள்ள உடை வாளினை எறிபத்தரிடம் தர, மன்னர் தம்முயிரைத் துறவாதவாறு எறிபத்தர் அவ்வாளினை வாங்கிக் கொள்ளுதலும். (இக்காட்சி அடுத்து வரும் 9–ஆம் படத்தில் தெளிவாக விளங்குதல் காணலாம்).

9. ஏனாதிநாத நாயனார் :


இச்சிற்பத்தின் நடுவில் வாட் படையினையும் கேடகத்தினையும் பற்றிய வண்ணம் இரு கைகளையும் தாழவிட்டுக் கொண்டு நிற்பவர் ஏனாதிநாத நாயனார். அவர்க்கு எதிரே என்றுமில்லாத வகையில் தன் நெற்றியில் வெண்ணீறு விளங்குமாறு கேடகத்தினையும் வாட் படையினையும் உயர்த்துப் பிடித்து நிற்பவன் அதிசூரன் என்னும் பகைவன். அருகே இறைவன் அம்மையப்பராக ஏனாதிநாதர்க்குத் தோன்றியருள்புரியுங்கோலம் அமைந்துள்ளமை காணலாம்.

10. கண்ணப்ப நாயனார் :

காளத்தியப்பர் வலத்திருக் கண்ணில் உதிரம் ஒழுகிய நிலையில் தமது வலக்கண்ணினை அப்பி மருந்து கைகண்ட கண்ணப்பர், காளத்தியப்பரது இடத்திருக் கண்ணிலும் குருதி யொழுகிய நிலையில், அவ்விடத்தினை நேர்பட்டறிய வேண்டித் தமது இடது காலை ஊன்றிக்கொண்டு அம்பினால் தமது இடக் கண்ணினையும் தோண்டி இறைவரது இடத்திருக் கண்ணில் அப்புதற்கு முற்படுதல்.

> 'கண்ணுதல் கண்ணில் தங்கண் இடந்தப்பின் காணும்நேர்பா
> டெண்ணுவார் தம்பிரான் தன் திருக்கண்ணில் இடக்காலூன்றி
> உள்நிறை விருப்பினோடும் ஒடுதனிப் பகழிகொண்டு
> திண்ணனார் கண்ணில் ஊன்றத் தரித்திலர் தேவதேவர்'
> (பெரிய – கண்ணப்பர் – 182)

என வரும் சேக்கிழார் வாய்மொழிக்கு ஏற்ப இச்சிற்பம் அமைந்திருத்தல் அறியத் தகுவதாகும்.



9. ஏனாதிநாத நாயனார் (நடுவிலுள்ளது)



10. கண்ணப்ப நாயனார்



11 குங்குலியக்கலய நாயனார்



12. மானக்கஞ்சாற நாயனார்

(13. அரிவாட்டாய நாயனார் திருவுருவம் சிதைந்தமையால் எடுக்கப்பெறவில்லை.)



14. ஆனாய நாயனார்



15. மூர்த்தி நாயனார்

11. குங்குலியக் கலய நாயனார் :

திருப்பனந்தாள் தாடகையீச்சரத்திலுள்ள சிவலிங்கத் திருமேனியின் சாய்வு நீங்க வேந்தன் யானைகளைப் பூட்டி யிழுக்கவும் நிமிர்ந்து நேர்படா நிலையில் இளைப்புற்றமை யறிந்து வருந்திய குங்குலியக் கலயனார், 'யானும் இவ் விளைப்புற்று எய்க்கும் இதுபெற வேண்டும்' என்று சிவ லிங்கத் திருமேனியொடு பொருந்திய கச்சினைத் தம் கழுத் திற்பூட்டி யிழுத்துச் சிவலிங்கத் திருமேனியை நிமிர்த்தல்.

12. மானக்கஞ்சாற நாயனார் :

தம் மகளை ஏயர்கோன் கலிக்காமர்க்குத் திருமணஞ் செய்து கொடுப்பதாக இசைந்து திருமணம் நிகழ இருக்கும் நாளில், இறைவன் மாவிரத முனிவர் வடிவில் அங்கு வந்து, நம்மை வணங்கிய மணமகள் கூந்தலை நோக்கி வியந்து 'இது பஞ்சவடிக்கு ஆகும்' என, அது கேட்ட மானக்கஞ்சாறர் தம் மகளது கூந்தலை அரிதல். இச் சிற்பத்தில் இடமிருந்து வலம்: மகளது கூந்தலையரியும் நிலையில் மானக்கஞ்சாறனாரது திருவுருவமும், அவர்க்கு எதிரே அதனைப் பெறுதற் பொருட்டு இரு கைகளையும் ஏந்திய நிலையில் மாவிரத முனிவர் திருவுருவமும், நடுவில் இறைவன் அம்மையப்பராக விடைமேல் தோன்றி அருள் புரியும் திருக்கோலமும் இடம் பெற்றிருத்தல் காணலாம்.

13. அரிவாட்டாய நாயனார் :

இறைவனுக்கு அமுதாகத் தாம் கொண்டு சென்ற செந்நெற் போனகமும் மாவடுவும் கமரிற்புகத் தளர்ந்து வீழ்ந்த அரிவாட்டாயர் தமது ஊட்டியினை அரியும் நிலையில் அமைந்த சிற்பம் உருத்தெரியாது சிதைந்துள்ளமையால் படமாக எடுக்கப்பெறவில்லை.

14. ஆனாய நாயனார் :

இச்சிற்பத்தின் நடுவில் வேய்ங்குழலிசைக்கும் ஆனாய நாயனாரும், அவரது குழலிசையில் உருகிய நிலையில் பறவை முதலியனவும் அவர் வலப்பக்கத்தில் படமெடுத் தாடும் பாம்பும் அவரது இசையிற் கட்டுப்பட்டு நிற்றலும்,

இசை விரும்புங் கூத்தனுர் உமாதேவியாருடன் விடைமீது எழுந்தருளுதலும் ஆகிய காட்சிகள் இடம் பெற்றுள்ளமை காணலாம்.

15. மூர்த்தி நாயனுர் :

வலமிருந்து இடம்: திருவாலவாய்க் கோயிலில் சந்தனத் திருத்தொண்டு புரியும் மூர்த்தி நாயனுர் வடுகக் கருநாட மன்னன் சந்தனக்கட்டை கிடைக்காதவாறு தம் திருத்தொண்டுக்கு இடையூறு விளைத்த நிலையில், தமது கையின் பணிநிலை மாருதவாறு தம் கையினைச் சந்தனக் கல்லில் தேய்த்தலும், அந்நாளிரவிலே கொடுங்கோல் மன்னன் இறந்தொழிய நாடடு மக்கள் வேண்டுகோட்கிசைந்து, திருநீறே அபிடேகமாகவும், உருத்திராக்கமே அணிகலனுகவும், சடைமுடியே மணிமுடியாகவும் கொண்டு பாண்டிநாட்டின் நற்றவ வேந்தராக அமர்ந்திருத்தலும்.

16. முருக நாயனுர் :


இடமிருந்து வலம்: முருக நாயனுர் இறைவனுக்கு மலர்மாலை தொடுத்தலும், திருப்புகலூர் வர்த்தமானீச்சரத்திலுள்ள பெருமானுக்கு வாசமா மலர்மாலை யணிந்து வழிபாடு புரிதலும் ஆகிய இருவகை நிலைகள் இச்சிற்பத்தில் அமைக்கப்பெற்றுள்ளன.

17. உருத்திர பசுபதி நாயனுர் :


வலமிருந்து இடம்: உருத்திர பசுபதியார் பொய்கையில் மார்பளவு நீரில் நின்று உச்சிமேற் கைகுவித்து அருமறைப் பயனுகிய திருவுருத்திரத்தை இடைவிடாது ஓதுதலும் அவர்க்கு எதிரே இறைவன் அம்மையப்பராக விடைமீது எழுந்தருளி அருள்புரிதலும்.

18. திருநாளைப் போவார் :


நந்தனுர் தில்லையின் எல்லையிலே இறைவன் பணித்த வண்ணம் தில்லைவாழந்தணர்கள் அமைத்த வேள்விக் குண்டத்தில் மூழ்கிப் பழைய உருவொழித்துப் புண்ணியமா முனிவடிவுடன் மார்பில் வெண்ணூல் விளங்க வேணிமுடி கொண்டெழுதல். வலப்பக்கம் இருவரும் இடப்பக்கம்




16. முருக நாயனார்




17. உருத்திர பசுபதி நாயனார்




18. திருநாளைப் போவார்




19. திருக்குறிப்புத் தொண்டர்




18. திருநாளைப் போவார்



19. திருக்குறிப்புத் தொண்டர்



20–A, சேய்ஞலூர்ப் பிள்ளையார்



20. சேய்ஞலூர்ப் பிள்ளையார்

ஒருவரும் ஆக அமைந்த அந்தணர் வடிவங்கள் மூன்றும் மூவாயிரவராகிய தில்லைவாழந்தணரைக் குறிப்பன. அடுத்துள்ளது தில்லைப் பெருங்கோயிலின் தெற்குக் கோபுர வாயில். அதனுட்புறத்தே திருநாளைப் போவராம் மறைமுனிவரை வணங்கி வரவேற்கும் நிலையில் அமைந்தது தில்லைவாழந்தணர் திருவுருவமாகும்.

19. திருக்குறிப்புத் தொண்ட நாயனார் :

வலமிருந்து இடம் : கோலூன்றி நிற்பவர் சிவனடியாராக வந்த இறைவர். அவரது ஆடையினைத் துவைத்துத்தரும் கருத்துடன் எதிர் நின்று வாங்குபவர் திருக்குறிப்புத் தொண்டர். எதிர்பாராது பெய்த மழையினால் குறித்த காலத்தில் துவைத்து உலர்த்திக்கொடுக்க இயலாத நிலையினராகிய திருக்குறிப்புத்தொண்டர் தம் தலையைப் பாறையில் மோதப்புகுதலும், அப்பாறையின் மருங்கு திருவேகம்பரது திருக்கை வந்தெழுந்து அவர் தலையினைப் பிடித்தலும் ஆகிய காட்சி அடுத்து அமைக்கப் பெற்றுளது. (அடுத்துள்ளது சேய்ஞலூர்ப் பிள்ளையாராகிய சண்டேசர் திருவாத்தியின் கீழ்ச் சிவலிங்கப் பெருமானுக்குப் பாலாட்டி வழிபடுங் காட்சியாகும். இது 20, 20 A என்னும் எண்ணுள்ள சேய்ஞலூர்ப் பிள்ளையார் (சண்டேசர்) கதையின் முற்றொடர்ச்சியாகும்.)

20. சேய்ஞலூர்ப் பிள்ளையார் கதை :

வலமிருந்து இடம்: சண்டேசர், சிவலிங்கத் திருமேனியின் மேல் பாலாட்டுதலும் அது கண்டு வெகுண்ட தந்தை எச்சதத்தன் பாற்குடத்தைக் காலால் இடறுதலும்.

(20) A. பாற்குடத்தைக் காலால் இடறிய தந்தையின் இருகால்களையும் சண்டேசர் மழுவினால் வெட்டுதலும், அம்மையப்பராகிய இறைவர் தம் சடைமுடிமே லுள்ள கொன்றை மாலையினை வாங்கிப் பிள்ளையார் முடியிற் சூட்டி அருள்புரிதலும். இச்சிற்பம் "மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க, வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினால் எறிந்த அம்மையான் அடிச்சண்டிப் பெருமானுக்கடியேன்" எனவரும் திருத்தொண்டத் தொகைக்குரிய விளக்கமாக அமைந்துள்ளமை காணலாம்.

21. திருநாவுக்கரசு நாயனார் :

அப்பர் நல்லூர் இறைவரால் திருவடி சூட்டப்பெறுதல். அருகே உள்ளது நல்லூர்த் திருக்கோயில். அம்மையப்பராகிய சிவபெருமான் தமது வலத்திருவடியினைத் திருநாவுக்கரசர் முடிமேற் சூட்டியருளுதலும் அந்நிலையில் நாவுக்கரசர் 'நனைந்தனைய திருவடி யென்தலைமேல் வைத்தார் நல்லூரெம்பெருமானார் நல்லவாறே' என உளங்குளிர்ந்து பாடி அத்திருவடியினைத் தலைமேற்கொண்டு போற்றும் முறையில் திருநாவுக்கரசர் திருவுருவம் இறைவன் திருவடியின்கீழ் அமைந்திருத்தலும் இச்சிற்பத்தில் நோக்கத் தகும் சிறப்புடைய நிகழ்ச்சியாகும். இந்நிகழ்ச்சி இராசராசபுரமாகிய பழையாறையை அடுத்துள்ள திருநல்லூரில் நிகழ்ந்த சிறப்புடைமைபற்றி இங்குக் குறிக்கப்பெற்றிருத்தல் வேண்டும். இச்சிற்பம்,

"பெருவிர லிறைதா னூன்றப் பிறையெயி றிலங்க வங்காந்
தருவரை யனைய தோளான் அரக்கனன் றலறி வீழ்ந்தான்
இருவரும் ஒருவனுய வுருவமங் குடைய வள்ளல்
திருவடி சுமந்துகொண்டு காண்க நான் திரியுமாறே"
(4-75-10)


எனவரும் அப்பர் அருண்மொழிக்கு உரிய இலக்கியமாக அமைந்துள்ளமை அறிந்து மகிழ்தற்குரியதாகும்.

22. குலச்சிறை நாயனார்


இடமிருந்து வலம் : குலச்சிறையார், ஆளுடைய பிள்ளையாரும் சமண முனிவர்களும் தத்தம் சமய வுண்மையினை எழுதிய ஏடுகளை வைகைநதியில் இட்டபொழுது, பிள்ளையார் ஏடு ஆற்றில் எதிர் ஏறிச் செல்லுதலைக் காணுதலும் புனல்வாதில் தோல்வியுற்ற சமணர்கள் கழுவேறக் காணுதலும். (இச்சிற்பத்தில் இடமிருந்து வலமாக முதலிலும் வலமிருந்து இடமாக ஐந்தாம் நிலையிலும் அமைந்துள்ள உருவங்கள் இரண்டும் குலச்சிறையாரைக் குறிப்பன.

23. பெருமிழலைக் குறும்ப நாயனார் :


இதன்கண், நாயனார் சிவயோக நிலையில் அமர்ந்திருக்கும் நிலையிலும், சிவயோக முறையில் பிரமநாடி வழியே



21. திருநாவுக்கரசர்
(நல்லூர் இறைவரால் திருவடி சூட்டப் பெறுதல்)




22. குலச்சிறை நாயனர்




23 பெருமிழலைக் குறும்பர்




24. காரைக்காலம்மையார்
(தலையால் நடந்து கயிலையைக் காணல்)




25. அப்பூதியடிகள்



26. திருநீலநக்கர்



27. நமிநந்தியடிகள்
(நீரால் திருவிளக்கு எரித்தல்)



28. ஆளுடைய பிள்ளையார்

கருத்தைச் செலுத்திக் கபாலநடு மறைமூலந் திறப்ப உயிரைச் செலுத்திக் கயிலையை யடைந்து அம்மையப்பர் திருவடிகளை இறைஞ்சி நிற்கும் நிலையிலும் இருவடிவங்கள் அமைந்துள்ளமை காண்க.

24. காரைக்காலம்மையார் :

காரைக்காற் பேயாராகிய அம்மையார், இரு கைகளையும் தரையிலூன்றித் தலையால் நடந்து கயிலாய மலையை நோக்கிச் செல்லுந் திருக்கோலம் இச்சிற்பத்தின் நடுவிலே அமைக்கப்பெற்றிருப்பதும், அம்மையார் தலையால் நடந்து செல்லும் வழி காடும் மலையுமாக அமைந்தமை புலப்பட அதன் இரு பக்கங்களிலும் மான் யானை முதலிய விலங்குகள் அமைக்கப் பெற்றிருப்பதும் காணத்தக்கன.

25. அப்பூதியடிகள் :

வலமிருந்து இடம்: (1) அப்பூதியடிகள் தண்ணீர்ப் பந்தரில் வழியிற் செல்வார்க்கு நீர்வார்த்தல்; (2) (நடுவில்) திருநாவுக்கரசர் அமர்ந்திருந்து திருநீறளிக்கும் நிலையில் மேலும் கீழுமாக இருவகைத் திருக்கோலம், (கீழேயுள்ளது மூத்த திருநாவுக்கரசு எங்கே என உளத்தடுமாற்றத்துடன் வினவும் நிலையையும், மேலேயுள்ளது, 'ஒன்றுகொலாம்' எனப் பதிகம்பாடி அவன் உயிர் பெற்றெழ இறைவனருளில் திளைத்திருக்கும் நிலையையும் குறிக்கும் முறையில் அமைக்கப்பெற்றிருத்தல் கூடும்); (3) தலைமேற் குவித்த கையினராகி நிற்கும் அப்பூதியடிகள் தாளமிட்டுத் திருப்பதிகம் பாடும் திருநாவுக்கரசருடன் திருப்பழனப் பெருமானைப்பரவிப் போற்றுதல் என இச்சிற்பத்தில் மூவகைக் காட்சிகள் அமைக்கப்பெற்றுள்ளமை காண்க.

26. திருநீலநக்க நாயனார் :

திருநீலநக்கர் திருச்சாத்த மங்கைத் திருக்கோயிலில் இறைவனுக்கு வழிபாடு செய்து முடித்துத் திருவைந்தெழுத்தோதி அமர்ந்திருக்கும் நிலையில், சிவலிங்கத் திருமேனியிற் சிலந்தியொன்று விழுதலைக் கண்ட அவர்தம் மனைவியார் அன்புடன் விரைந்து சென்று சிவலிங்கத் திருமேனியில் வாயினால் ஊதித் துமிய, அதுகண்டு பொறாது அனுசிதம் செய்தார் என்று அவரைப் பிடித்து விலக்குதல்.

27. நமிநந்தியடிகள் :

வலமிருந்து இடம்: திருவாரூர்த் திருக்குளத்தில் நமிநந்தியடிகள் நீரை முகத்தலும், அந்நீரினால் திருவாரூர் அரனெறித் திருக்கோயிலில் திருவிளக்கேற்றுதலும்.

28. ஆளுடைய பிள்ளையார் :


வலமிருந்து இடம்: பிரமதீர்த்தத்தில் மூழ்கிக் கரையேறிய சிவபாதவிருதயர், உமையம்மையார் அளித்த சிவஞானப் பாலைப் பருகிய நிலையிற் பொற்கிண்ணத்துடன் தோன்றிய பிள்ளையாரை நோக்கி, 'நீ யாரளித்த பாலடிசில் உண்டனை? எச்சில் மயங்கிட உனக்கு ஈது இட்டாரைக் காட்டுக' என்று கையிற் சிறிய குச்சியினை எடுத்து அடிக்க ஓங்குதலும், சிவஞானசம்பந்தராகிய பிள்ளையார், 'எம்மையிது செய்தபிரான் இவனன்றே!' என்று திருப்பதிகம் பாடித் தம்முன் விடைமேல் தோன்றிய அம்மையப்பரைத் தந்தையார்க்கு ஒரு திருவிரலாற் சுட்டிக்காட்டுதலும்.

29. ஏயர்கோன்கலிக்காம நாயனார் :


வலமிருந்து இடம்: வயிற்று வலியால் வருந்திய ஏயர்கோன்கலிக்காம நாயனார், 'தூதனாய் எம்பிரானை ஏவினான் வந்து தீர்ப்பதன்முன் என்னைப்பற்றி நின்று நீங்காப் பாதகச் சூலைதன்னை உற்ற இவ்வயிற்றினோடுங் கிழிப்பேன்' என்று தமது உடைவாளாற் குற்றிக்கொண்டு இறந்துகிடத்தலும், அத்துயர்நிலையினைக் கண்ணுற்ற வன்றொண்டர் 'நானும் இவர்க்கு முன் இறந்தொழிவேன்' எனத்துணிந்து அக் குற்றுடை வாளைப் பற்றித் தம் உயிரைத் துறக்க முற்படும்போது இறைவரருளால் ஏயர்கோன்கலிக்காமர் உயிர்பெற்றெழுந்து வந்து வன்றொண்டர் கையிலுள்ள வாளினைப் பிடித்துக்கொள்ளுதலும்

30. திருமூல நாயனார் :

திருவாவடுதுறைப் பெருமானை இறைஞ்சிய திருமூலர் அங்குள்ள அரச மரத்தின் அடியில் சிவயோக நிலையில் அமர்ந்திருத்தல். இச்சிற்பத்தில் திருமூலர்க்கு இடப் பக்கம் திருவாவடுதுறைத் திருக்கோயிலும், வலப்பக்கம் அரச மரமும் அம்மரத்தடியில் திருமூலரும் இருத்தல் காண்க.




29. ஏயர்கோன் கலிக்காமாண்டார்



30. திருமூல நாயனர்



31. தண்டியடிகள்



32. மூர்க்க நாயனார்



33 சோமாசிமாற நாயனார்



34. சாக்கிய நாயனார்

31. தண்டியடிகள் நாயனார் :

பிறவிக் குருடராகிய தண்டியடிகள், திருவாரூர்த் திருக்குளத்தினைத் தோண்டும் பணியில் ஈடுபட்டு மண்ணை வெட்டியெடுக்கும் குழியிடத்தே முளையடித்துக் கயிறு கட்டி அக்கயிற்றைப் பற்றிக்கொண்டு மண்ணை அப்புறத்திற் கொண்டு செல்லுதலும், அதுகண்டு பொறாத சமணர்கள் அத்திருப்பணிக்குத் தடையாய் நிற்றலும். (தண்டியடிகள் பிறவிக்குருடர் என்பது புலப்பட இச்சிற்பத்திலுள்ள அவர் முகத்தில் கண்கள் உட்குழிந்தனவாய் அமைக்கப் பெற்றுள்ளமை காண்க.)

32. மூர்க்க நாயனார் :

இச்சிற்பத்தில் மேலும் கீழுமாக இரண்டு நிகழ்ச்சிகள் குறிக்கப்பட்டுள்ளன. கீழுள்ள சிற்பம் மூர்க்க நாயனார் சூதாடிப் பொருளீட்டலைக் குறிப்பது. மூர்க்க நாயனார் தாம் சூதாட்டத்தால் ஈட்டிய பொருளைச் சிவனடியார்க்குத் திருவமுதாக்க அளிக்கும் முறையில் அமைந்தது மேலுள்ள சிற்பமாகும்.

33. சோமாசிமாறனார் :

தம் மனைவியாருடனிருந்து சிவபெருமானைப் போற்றும் வேள்வியைச் செய்தல். இச்சிற்பத்தில் உயர்ந்த ஆசனத்தில் அமர்ந்து வேள்வி செய்பவர் சோமாசி மாறர். அவர்க்கு எதிரே வேள்வித் தீயினை வழிபடும் நிலையில் குவித்த கைகளுடன் மற்றோர் ஆசனத்தில் அமர்ந்திருப்பவர் அவருடைய மனைவியாராவர். இவ்விருவர்க்கும் நடுவே வேள்விக் குண்டத்தில் வேள்வித்தீ சுடர்விட்டு மேலோங்கியெழுதல் காண்க.

34. சாக்கிய நாயனார் :

சாக்கியனார் உமையொருபாகனாகிய இறைவனை மறவாது கல்லெறிந்து வழிபடுதல். (சிவலிங்கத் திருமேனியிற் சாக்கியர் கல்லெறிந்து வழிபட்டதனைக் குறிக்கச் சிற்பத்தில் உள்ள சிவலிங்கத் திருமேனியின்மேல் இரண்டு கற்கள் புலப்படும் நிலையில் இச்சிற்பம் அமைக்கப்பெற்றிருத்தல் நோக்குக.)

35. சிறப்புலியாண்டார் :


இடமிருந்து வலம்: 'சீர்கொண்ட புகழ் வள்ளல்' எனத் திருத்தொண்டத் தொகையிற் சிறப்பிக்கப் பெற்ற சிறப்புலி நாயனர் சிவனடியார்க்குப் பொருள் வழங்குதலும், சிவனடியார் இருவர் அவர் தரும் பொருளை வலக்கையினை நீட்டி வாங்குதலும்.

36. சிறுத்தொண்டர் கதை :

இத்தலைப்பில் அமைந்த சிற்பம் மேற்பக்கத்தில் இரண்டு நிகழ்ச்சிகளையும் அவற்றின் நேரே கீழ்ப்பக்கத்தில் இரண்டு நிகழ்ச்சிகளையும் கொண்டு நான்கு பிரிவுகளாக அமைக்கப்பெற்றுளது. அவற்றுள் வலமிருந்து இடமாக முகற்கண் கீழும் மேலுமாக அமைந்த 1. 3 ஆகிய இரு பிரிவுகள் மட்டும் 36-ஆம் எண்ணுள்ள இப்படத்தில் இடம் பெற்றுள்ளன. இதன்கண் கீழுள்ள சிற்பத்தில் வல மிருந்து இடம்: திருவெண்காட்டு நங்கையார் தம் மைந்தன் சீராளனுடைய கால்கள் இரண்டினையும் பிடித்துக் கொள்ளச் சிறுத்தொண்டர் சீராளன் தலையினைக் கருவி கொண்டு அரிதலும், திருவெண்காட்டு நங்கையார் கறியமுது அமைத்தலும். இதற்கு நேரே மேலுள்ள சிற்பத்தில் திருவெண்காட்டு நங்கையார், 'செய்ய மணியே சீராளா வாராய்; சிவனுரடியார் யாம் உய்யும் வகையால் உடனுண்ண அழைக்கின்றார்' என்று ஓலமிட்டு அழைக்கப் பரமரருளால் பள்ளியினின்று ஓடி வருவான்போல் வந்த சீராளனை இரு கைகளால் எடுத்துத் தழுவுதலும். இவ் விருகாட்சியினை அடுத்து அமைந்த சிற்பப்பகுதி (36–A) இங்குப் படமாக எடுக்கப்பெறவில்லை. விடுபட்ட அப்பகுதி யில் கீழுள்ள சிற்பத்தில் சிவனடியார் ஒருவர் அமர்ந்திருத் தலையும் அவர்முன் அன்னமும் கறிகளும் படைக்கப் பெற்றிருத்தலையும், 'நாம் இங்கு உண்பது நும் மைந்தன் வந்தால்; அவனை நாடி அழையும்' என அவ்வடியார் தமது இடக் கையினைக் காட்டி அறிவித்தலையும். அதன் மேலுள்ள சிற்பத்தில் இறைவன் அம்மையப்பராக விடையின்மீது தோன்றியருள் புரிதலையும் காணலாம்.

37. சேரமான் பெருமாள் கதை :


இதன்கண் வலமிருந்து இடம்: சேரமான் பெருமான் பட்டத்து யானைமேல் அமர்ந்து, தனக்குப்பின் ஏவல



35. சிறப்புலியாண்டார்



36. சிறுத்தொண்டர் கதை



37 சேரமான் பெருமாள் கதை

ரொருவர் அமர்ந்து குடைபிடிக்க, உரிமைப் பரிசனர்கள் உடன்வர நகர்வலம் வரும் காட்சியும், இங்ஙனம் யானை மேல் உலாவரும் சேரமான், உவர் ஊறி மேனி வெளுத்த வண்ணுனொருவனை நெடுந்தொலைவிற் கண்டு சிவனடியார் எனக்கொண்டு யானையின் கழுத்தினின்றும் இறங்கி நின்று இருகைகளையும் தலைமேற் குவித்துத் தொழ, அதுகண்டு சிந்தை கலங்கிய வண்ணான், 'யாரென்று அடியேனைக் கொண்டது? அடியேன் அடிவண்ணான்' என்று சொல்லி இறைஞ்சி நிற்க, 'அடியேன் அடிச்சேரன்' என்று கூறி நிற்கும் காட்சியும் இதன்கண் இடம் பெற்றுள்ளமை காணலாம். இதன்கண் அடியார் வேடத்தை நினைப்பித்த வண்ணானது உருவம் இங்குள்ள நிழற்படத்தில் எடுக்கப் படாது விடுபட்டது. இச்சிற்பம் பெரிய புராணம் சேரமான் பெருமாள் நாயனார் புராணத்தில் 17, 18, 19-ஆம் செய்யுட் களிற் கூறப்பட்ட நிகழ்ச்சியினை விளக்கும் முறையில் அமைந்திருத்தல் அறியத்தகுவதாகும்.

கழறிற்றறிவாராகிய இவர் சேரநாட்டு வேந்தராய் முடி சூட்டப்பெற்றுத் திருவீதியில் உலாவரும்போது உவர் மண்ணூறிய மேனியினையுடைய வண்ணானைக் கண்டு சிவனடியார் வேடம் என்று தொழுத அன்பின் பெருமை குறித்து இவ்வேந்தர் பெருமானுக்கு வண்ணானைக் கும்பிட் டார்[1] என்றதொரு பெயரும் வழங்குவதாயிற்று.

இனி, இச்சிற்பம் சேரமான் பெருமாள் பாணபத்திரரை வரவேற்ற செய்தியைக் குறிப்பதென்று தென்னிந்தியக் கல்வெட்டுத் துறையினரும்[2] சுந்தரரும் சேரமானும் யானையின்மீது அமர்ந்து திருக்கோயிலுக்கு ஏகியதைக் குறிப்பதென்று டாக்டர் மா. இராசமாணிக்கனார் அவர் களும்[3] கருதுவர். திருவாலவாயிறைவர் அருளிய திருமுகத்துடன் வந்த பாணபத்திரர் சேரமான் பெருமாளது அரண்மனையை யடைந்து தாம் வந்த செய்தியை வாயில் காவலர் மூலம் அரசர்க்கு அறிவிக்க அறிந்த சேரமான் மாளிகையின் புறத்தில் எதிர்வந்து பாணபத்திரரை

1. S. I. I. Vol. VIII No. 533.

2 தென்னிந்தியக் கல்வெட்டுத்துறை, 1920-ஆம் ஆண்டு அறிக்கை.

3. பெரிய புராண ஆராய்ச்சி, பக்கம் 72, 73.


வணங்கி வரவேற்று மாளிகைக்குள் அழைத்துச் சென்ருர் எனப் பெரிய புராணம் கூறும்.[1] யானையுடன் எதிர்சென்று அழைத்ததாகப் பெரிய புராணத்திற் சேக்கிழாரடிகள் கூற வில்லை. இச்சிற்பத்தில் இரண்டு யானைகள் இடம் பெற்றிருத்தலை எண்ணி, ஒரு யானையின்மேல் நம்பி யாரூரும் மற்ருென்றின்மேல் சேரமான் பெருமாளும் செல்லும்நிலையில் அமைந்ததாகக் கருதுதல் இச்சிற்பத்தின் அமைப்பினைக் கூர்ந்துநோக்காமையால் நேர்ந்த பிழையே யாகும். இச் சிற்பத்தில் வலமிருந்து இடமாக முதற்கண் அமைந்த யானையில் சேரமான் உலாவரும் செய்மைக் காட்சி யும், அதனையடுத்து அவ்வேந்தர் பெருமான் யானையை விட்டுக் கீழிறங்கி நிலமிசை நின்று அடியார் வேடத்தைக் கும்பிடும் அண்மைக் காட்சியும் என இருவகை நிகழ்ச்சிகள் இடம் பெற்றுள்ளமை நுணுகி நோக்கி அறியத் தகுவ தாகும். செய்மையில் உள்ள யானையின்மேல் ஏவலாள் ஒருவன் பின்னிருந்து குடைபிடிக்க யானையின் பிடரிற் சேரமான் அமர்ந்திருத்தலும், அண்மையிலுள்ள யானையின் மேல் குடை பிடிக்கும் ஏவலன் மட்டும் அமர்ந்திருக்கச் சேரமான் யானையை விட்டுக் கீழிறங்கித் தலைமேற் கைகுவித்து வணங்கி நிற்றலும் ஆகிய வேறுபாட்டினைக் கூர்ந்து நோக்குங்கால் யானையொடு தொடர்ந்த இவ்விரு காட்சிகளும் சேரமான் பெருமாளாகிய ஒருவர் செயலையே குறித்தன என்னும் உண்மை இனிது புலளுகும்.

38. கணநாதாண்டார் கதை

இடமிருந்து வலம்: நீர் கொணரும் அடியார் வடிவம் ஒன்றும், அதனையடுத்து நூற்பொருளைக் கேட்டு நிற்கும் அடியார் வடிவம் ஒன்றும், நூற்பொருளை விரித்துரைக்கும் முறையில் அமர்ந்துள்ள அடியார் உருவம் ஒன்றும், அதனை யடுத்து உழவாரமும் கமண்டலமும் கொண்டுள்ள அடியார் உருவமும் அதனையடுத்து நிற்கும் அடியார் உருவமும், (இதன் முதற்கண் பூக்கொய்யும் நிலையிலுள்ள அடியார் உருவம் நிழற் படத்தில் விடுபட்டது)

38 A – படத்தில் மேற் குறித்த திருப்பணிகளைச் செய்யும் முறையில் அவ்வடியார்களைப் பயிற்றிப் பணி செய்


1. கழறிற்றறிவார் நாயனர் புராணம் – செய்யுள் 29, 30.




38 கணநாதாண்டார் கதை




38–A. கணநாதாண்டார் கதை



39. கூற்றுவ நாயனார்



40. பொய்யடிமையில்லாத புலவர்



40-A. பொய்யடிமையில்லாத புலவர்

விக்கும் நிலையிற் கணநாத நாயனார் திருவுருவம் ஒன்றும், அம்மையப்பராய் விடைமேற் றோன்றும் இறைவனைக் கண்டு கைகுவித்து நிற்கும் நிலையிற் கணநாத நாயனார் திருவுருவம் ஒன்றும் இடம் பெற்றுள்ளமை காண்க.

39. கூற்றுவ நாயனார் :

வலமிருந்து இடம் : கூற்றுவ நாயனார் அரசவையில் வீற்றிருத்தல்; கை குவித்த நிலையில் இருவர் எதிரே நிற்க மூவர் அமர்ந்திருத்தல்.

40, 40 A– பொய்யடிமையில்லாத புலவர் :

வலமிருந்து இடம் : திருவாலவாய்த் திருக்கோயிலும் புலவர் ஐவரும், 40 A-படத்திற் புலவர் நால்வரும் சங்கப் பலகையும் அமைந்திருத்தல் காணலாம். (40 - ஆம் படத்தில் வலமிருந்து இடம் ஆருவதாகத் தெரியும் புலவர் உருவம் 40-A படத்தில் இடமிருந்து வலம் நான்காவதாக அமைந்த உருவமே என்பது நோக்கத் தக்கது)

திருத்தொண்டத் தொகையிற் 'பொய்யடிமையில்லாத புலவர்' என்றது, சங்கப்புலவர் நாற்பத்தொன்பதின்மர் முதலாகவுள்ள புலவர் பலர் அடங்கிய திருக்கூட்டத்தினை என்பார் "தரணியிற் பொய்ம்மையில்லாத் தமிழ்ச் சங்க மதிற் கபிலர் பரணர் நக்கீரர் முதல் நாற்பத்தொன்பது பல்புலவோர்" எனக் குறித்தார் நம்பியாண்டார் நம்பிகள். நம்பியாண்டார் நம்பி குறித்த நாற்பத் தொன்பதின்மர் ஆகிய புலவர் பெருமக்களைக் குறிக்கும் முறையில் நாற்பத் தொன்பது என்னும் தொகையின் எச்சமாகப் புலவர்கள் திருவுருவம் ஒன்பதும், சென்ற காலத்தவராகிய அப் புலவர்கள் பொய்ம்மையில்லாத் தமிழ்ச் சங்கத்திலிருந்து புலமைத் திருப்பணி புரிந்தவர்கள் என்பது புலப்படச் சங்க மண்டபமும், அப்புலவர் பெருமக்கள் திருவால வாயரன் சேவடிக்கே பொருளமைத்து இன்பக் கவி பாடும் இயல்பினர் என்பது புலப்படத் திருவாலவாய்த் திருக் கோயிலும் இச்சிற்பத்தில் இடம் பெற்றுள்ளமை காண்க. இதனால், பொய்யடிமையில்லாத புலவர் என்போர் தனியடியாரல்லர் தொகையடியார்களாகிய திருக் கூட்டத் தினரே என்னும் உண்மை நன்கு வலியுறுதல் காணலாம்.

41. 41, A – புகழ்ச் சோழ நாயனார்

41 - ல் வலமிருந்து இடம்: சேனைத் தலைவர் நால்வர் நிற்கப் புகழ்ச்சோழர் அமர்ந்திருத்தலும், 41,A-ல் போரில் வெட்டப்பட்ட பகைவர் தலைகள் குவிந்து கிடத்தலும், அத்தலைக் குவியலுள் நெற்றிக் கண்ணும் சடைமுடியும் உள்ள தலையொன்றைப் புகழ்ச் சோழர் நின்று காணுதலும் சடைத் தலையைத் தம்முடிமேற் கொண்டு புகழ்ச் சோழர் தீயிற் புகுதலும், அந்நிலையில் இறைவன் அம்மையப்பராக விடைமேல் தோன்றி அருள் புரிதலும் காணலாம்.

42. நரசிங்க முனையரைய நாயனார்


வலமிருந்து இடம்: அமைச்சர் ஒருவர் நின்று பொன்களை அள்ளித்தர அப்பொன்களை நரசிங்க முனையரையர் சிவனடியார் அறுவர்க்கு அளித்தல். பொன் பெறும் நிலையில் உள்ள அடியார் திருவுருவங்கள் ஆறும் சைவத்தில் அகச்சமயங்கள் ஆறினையும் மேற்கொண்டொழுகும் அடியார்களைக் குறிக்கும் முறையில் அமைந்தன எனக் கருதுதல் பொருந்தும்.

43. அதிபத்த நாயனார் :


வலமிருந்து இடம்: அதிபத்தர் ஏவலால் வலைஞர் மூவர் கடலில் வலையினை வீசி மீன் பிடித்தலும், அவ் வலையில் அகப்பட்ட கிடைத்தற்கரிய நவமணி மீனினை வாங்கிய அதிபத்தர், 'இது என்னை யாளுடைய இறைவர்க் குரியதாகும்' எனக் கடலில் விடுதலும், அந்நிலையில் மாதொரு பாகராக விடைமீது எழுந்தருளிய இறைவனைக் கண்டு அதிபத்தர் தலைமேற் கைகுவித்து வணங்கி நிற்றலும் ஆகிய காட்சிகள் இச் சிற்பத்தில் இடம் பெற்றுள்ளமை காணலாம்.

44, 44 A. கலிக்கம்பாண்டார் கதை :


44 – ஆம் படத்தில் வலமிருந்து இடம்: சிவனடியார் மூவர் அமர்ந்திருத்தலும், கலிக்கம்பர் மனைவியார் திருவமுதமைத்து அடியார் திருவடிகளை விளக்கக் கரக நீரளித்தலும், 44-A ல் கலிக்கம்பர் அடியார் ஒருவரை ஆசனத்



41 புகழ்ச் சோழனார்




41-A. புகழ்ச் சோழனார்




42. நரசிங்கமுனையரையர்




43. அதிபத்தர் கதை




44. கலிக்கம்பாண்டார் கதை



44-A. கலிக்கம்பாண்டார் கதை



45. கலியநாயனர்




45-A. கலியநாயனர்




46. சத்தியாண்டார்




47 ஐயடிகள் காடவர் கோனயனர்



47-A ஐயடிகள் காடவர் கோனயனர்



48. கணம்புல்லாண்டார்



49. காரியார்

தமர்த்தித் திருவடிகளை விளக்கப்புகும் நிலையில் மனைவியார் அவ்வடியவரைப் பழைய ஏவலாள் எனத் தெரிந்து தண்ணீர் வார்க்கத் தாழ்க்கக் கலிக்கம்பர் மனைவியின் கையினை வாளினால் தடிதலும், இறைவன் மாதொரு பாகராக விடைமேல் வந்தருள் புரிதலும்.

45, 45-A. கலியநாயனார்

வலமிருந்து இடம். 45-ல் கலியனார் செக்கு ஆட்டுதலும், 46-A இல் பொருளின்றி எண்ணெய் கிடைக்கப் பெறாத நிலையிற் கலியனார் திருவொற்றியூர்த் திருக்கோயிலில் அகல் அமைத்துத் திரியிட்டுத் தம் உடம்பின் உதிரத்தால் திருவெளக்கெரிக்க எண்ணித் தமது மிடற்றினைக் கருவியினால் அரியத் தொடங்குதலும். (மிடற்றை அரியப் புகும் கலியனார் திருவுருவத்தின் முன் திருவொற்றியூர்த் திருக்கோயிலும் அக்கோயிலிற் சர விளக்கும் அமைக்கப் பெற்றிருத்தல் காண்க)

46. சத்தியாண்டார் :

இடமிருந்து வலம்: வணங்கிய கையினராய் நிற்கும் சிவனடியாரை இகழ்ந்த ஒருவனது நாவினை வாங்கு தண்டாயமாகிய குறட்டால் வலித்திழுத்துச் சத்தியார் கத்தியால் அரிதலும் அவ்வாண்மைத் திருப்பணியைச் சிவனடியார் மூவர் உடனின்று காணுதலும்.

47, 47-A. ஐயடிகள் காடவர்கோன் நாயனார்

ஐயடிகள் காடவர்கோன் நாயனார் ஒவ்வொரு திருக்கோயிலின் முன் நின்றும் ஓரோர் வெண்பாப்பாடி இறைவனை வழிபடும் நிலையில் நான்கு சிற்பங்கள் அமைந்துள்ளன. ஐயடிகள் நாற்றிசைகளிலும் உள்ள திருத்தலங்களைப்பாடி வழிபட்டுப் போற்றினார் என்னும் குறிப்புணர இவ்வாறு நான்கு சிற்பங்கள் அமைக்கப் பெற்றிருத்தல் கூடும் எனக் கருத வேண்டியுளது.

48. கணம்புலாண்டார் :

வலமிருந்து இடம்: தில்லையிலுள்ள திருப்புலீச்சரத் திருக்கோயிலில் யாமந்தோறும் திருவிளக்கேற்றும் இயல்

புடைய கணம்புல்ல நாயனார், தாம் விற்கும் கணம்புல் விலைபோகாத நிலையில் அப்புல்லினையே விளக்காக எரித்தலும், அப்புல்லும் எரிக்கப் போதாத நிலையில் தமது முடிச்சிகையினையே எரித்தலும். (கணம்புல்ல நாயனார்க்கு முன்னே திருப்புலீச்சரத் திருக்கோயிலும் அக்கோயிலின் பின் அங்குப் பூசனைபுரியும் பூசகர் உருவமும் இருத்தல் காண்க.)

49. காரியார் :


காரிநாயனாரைக் குறிக்கும் இச்சிற்பத்தில் ஒரே இயல்புடைய இரு திருவுருவங்கள் அமைக்கப் பெற்றுள்ளன. இவ்விரு வடிவங்களுள் வலமிருந்து இடமாக முன்னுள்ள வடிவத்தில் நாயனாரில் இடதுகை ஏடு போன்றதொரு பொருளைப் பிடித்த நிலையில் நெஞ்சினைச் சார்ந்தும், வலக்கை மேல்நோக்கி மறித்த நிலையிலும் அமைந்துள்ளமையும், அதனையடுத்துள்ள வடிவத்தில் இடதுகை பொருள்விளங்க விரிந்தும் வலக்கை சுட்டுவிரலும் பெருவிரலும் பொருளை விரித்துரைக்கும் முறையில் இணைந்தும் அமைந்துள்ளமையும் இவ்விரு வடிவங்களுக்கிடையே காணப்படும் சிறிய வேறுபாடாகும். இச்சிற்பத்தில் முதலில் உள்ள உருவம், "வண்டமிழின் துறையான பயன் தெரிந்து சொல் விளங்கிப் பொருள் மறையத் தமிழ்க் கோவை பாடிய" திறத்தையும், அடுத்துள்ள வடிவம் மூவேந்தர்பால் அவர் பயிலுங்கால் அவ்வேந்தர்கள் மகிழும் வகை 'அடுத்த உரை நயமாக்கி' விளக்கிக் கூறும் முறையினையும் புலப்படுத்தும் நிலையிலமைந்த கருத்தியற் சிற்பங்கள் எனக் கொள்ளுதல் பொருந்தும்.

50. நெடுமாறனார் :

நின்றசீர் நெடுமாற நாயனார் பரிசனங்களுடன் அரசு வீற்றிருத்தல்.

51. வாயிலார் :

வாயிலார் நாயனார், மறவாமையால் அமைத்த மனக்கோயிலினுள் இறைவனை அமர்ந்தருளச் செய்து அகப் பூசை செய்தல்.




50. நெடுமாறனர்



51. வாயிலார்



54. இடங்கழியாண்டார்



55-A. செருத்துணையாண்டார்



55 செருத்துணையாண்டார்

52. முனையடுவார் :

வலமிருந்து இடம் : முனையடுவார் நாயனார் போரிற் பகைவனொருவனை வேற்படையாற் பொருது அழித்த வீர நிலையிலும், பகைவரை வென்று தாம் பெற்ற பொருளைக் கையிற்கொண்டு ஈசனடியார்க்கு அன்புடன் அளிக்கும் ஈர அன்பின் நிலையிலும் முனையடுவாரைக் குறித்து இருவேறு திருவுருவங்கள் இச்சிற்பத்தில் இடம் பெற்றுள்ளமை காணலாம்.

53. கழற்சிங்கனார் :

கழற்சிங்க நாயனார், தம் பட்டத்தரசி திருவாரூர்த் திருக்கோயிற் பூமண்டபத்திற் கீழே கிடந்த மலரொன்றை எடுத்து மோந்தமையறிந்து, அப்பூவினை எடுத்த அவளுடைய கைகளை வாளால் தடிதல். (இச்சிற்பத்தில் பட்டத்தரசியின் இரு கைகளிலும் வாளின் வெட்டுப் பதிவுகள் புலப்பட அமைக்கப்பட்டமை காண்க.)

54. இடங்கழியாண்டார் :

வலமிருந்து இடம் : ஆசனத்தில் அமர்ந்திருப்பவர் இடங்கழி நாயனாராகிய வேந்தர். அவர் அருகே நிற்பவர் பறையறையும் ஏவலர். பஞ்ச காலத்தில் இறைவனடியாரை அமுது செய்விக்கும் தமது செயல் தடைப்படாதபடி அன்பரொருவர் அரசர்க்குரிய நெற்கூட்டில் நள்ளிரவிற் புகுந்து களவுகொண்டமையறிந்த இடங்கழி நாயனார், 'இவரன்றோ எனக்குப் பண்டாரம்' எனக்கூறி, 'என் செல்வமனைத்தும் சிவனடியார்கள் கவர்ந்து கொள்க' எனப் பறையறையச் செய்த வரலாற்றினை விளக்கும் முறையில் இந்தச் சிற்பம் அமைந்திருத்தல் அறியத் தகுவதாகும்.

55, 55 A. செருத்துணையாண்டார் :

படம் 55-ல் வலமிருந்து இடம் : திருவாரூர்த் திருக்கோயிலின் திருப்பூமண்டபத்தில் அடியாரொருவர் அமர்ந்து மலர்மாலை தொடுத்தலும், பல்லவ மன்னன் தேவி அங்குக் கீழே வீழ்ந்து கிடந்த மலரைக் கையால் எடுத்து முகர்தலும்,

(படம் 55 A-ல் இடமிருந்து வலம்) அதுகண்ட செருத்துணை நாயனார் அவளருகே நிற்கும் கணவனாகிய வேந்தன்காண அவளது மூக்கினை அரிதலும்.

56, 56 A புகழ்த்துணையார் :


படம் 56-ல் (இடமிருந்து வலம்) புகழ்த்துணை நாயனார், அரிசிற்கரைப் புத்தூர்த் திருக்கோயிலில் இறைவர்க்குத் திருமஞ்சனம் ஆட்டும்போது பசியின் தளர்ச்சியால் திருமஞ்சனக் குடத்தைத் தாங்கமாட்டாமல் இறைவன் முடிமீது வீழ்த்தி வீழ்ந்தயர்தலும். அவ்வயர்ச்சியில் தோன்றிய உறக்கத்திலுளதாகிய கனவில் இறைவன் தோன்றி, 'பஞ்சம் நீங்கும் வரையிலும் நித்தமும் உனக்குப் படிக்காசு தருகின்றோம்' எனப் பணித்த வண்ணம் இடர் நீங்கி எழுந்து நந்தியை நோக்கிச் செல்லுதலும், (படம் 56-A) இறைவரருளால் பலிபீடத்தின்மேல் வைக்கப்பெற்றிருந்த காசினை எடுத்துக் கொள்ளுதலும். (சிவலிங்கத்தின் முடிமீது குடம் விழுந்த தோற்றம் குறிக்கப்பெற்றமை காண்க)

57. கோட்புலி நாயனார் :

வலமிருந்து இடம்: கோட்புலியார் தாம் இறைவனுக்கு அமுது படிக்காக வைத்துவிட்டுச் சென்ற நெல்லினை 'திருவிரையாக்கலி' என்னும் ஆணையினை மீறி எடுத்துப் பயன்படுத்திய சுற்றத்தாரைக் கொன்று, தமது குடும்பத்துக்கு ஒரே குழந்தையாய்ப் பால் பருகும் நிலையிலுள்ள பேரனையும் வாளால் வீசுதலும், அந்நிலையிற் சிவபெருமான் அம்மையப்பராய் விடைமீது தோன்றி அருள்புரியக் கண்டு கோட்புலியார் வணங்கி நிற்றலும்.

58, 58 A. பத்தராய்ப்பணிவார்கள் :

இச்சிற்பத்தில் பத்தராய்ப்பணிவார்க்குரிய இயல்புகளைக் குறித்த திருக்கோலங்களில் பத்துத் திருவுருவங்கள் அமைக்கப்பெற்றுள்ளன. அவை முறையே இடமிருந்து வலம்: முதலில் நிற்கும் அடியவர் தம் இரு கைகளிலும் பாத்திரம் ஒன்றினை ஏந்தியுள்ளார். இரண்டாமவர் அப் பாத்திரத்தில் ஒருபிடி வலக்கையிற் பிடித்தெடுக்கின்றார்.




56·A. புகழ்த்துணையார்



56 புகழ்த்துணையார்




57. கோட்புலியாண்டார்






58. பத்தராய்ப்பணிவார்



58-A. பத்தராய்ப்பணிவார்



59. பரமனையே பாடுவார்



59-A. பரமனையே பாடுவார்

மூன்றுமவர் வலக்கை ஞான முத்திரையுடன் மார்பில் அணைய இடக்கை தொடைமீது விளங்கத் தியானத்தில் அமர்ந்துள்ளார். நான்காமவர் இரு கைகளையும் தலைமேற் குவித்து வழிபடுகின்றார். ஐந்தாமவரும் ஆறுமவரும் இரு கைகளையும் குவித்து நெஞ்சொடு பொருந்த வைத்து வணங்குகின்றார்கள். ஏழாமவர் சிவலிங்கத்தினை நெற்றிக்கு நேரே வைத்து வழிபடுகின்றார். எட்டாமவர் சிவலிங்கத்தினை நெஞ்சுக்கு நேரே வைத்து வழிபடுகின்றார். ஒன்பதாமவர் தலைமேல் இரு கைகளையும் குவித்து நின்றும் பத்தாமவர் நெஞ்சுக்கு நேரே இரு கைகளையும் குவித்து நின்றும் வணங்குகின்றார்கள்.

திருநாவுக்கரசர் 'பத்துக்கொலாம் அடியார் செய்கை தானே' எனப் பத்தர்க்குரியனவாகக் குறித்த பத்துச் செய்கைகட்கும், சேக்கிழாரடிகள் பத்தராய்ப்பணிவார் புராணத்துள் பத்தர்க்குரிய இயல்புகளாக விரித்துக் கூறியவற்றுக்கும் இச்சிற்பத்தில் அமைக்கப்பெற்ற பத்தர் திருவுருவங்கள் பத்துக்கும் அமைந்த தொடர்பினை ஒப்பு நோக்கியாராய்தல் அறிஞர் கடனாகும்.

59, 59 A. பரமனையே பாடுவார் :

59-ஆம் படத்தில் நந்தியும் கோயிலும் அமைந்திருத்தலும், (59 A – படத்தில்) நந்தியின் பின்னே கோயில் முற்றத்தில் இசைவல்லார் மூவர் ஒருங்கு அமர்ந்திருந்து தாளமிட்டுப் பாடுதலும் காணலாம். இச்சிற்பத்தில் பரமனையே பாடுவார்க்கு மூன்று உருவங்கள் அமைக்கப் பெற்றிருத்தலின் நோக்கம், இசை பாடும் அடியார்கள், தமிழ்ப் பாடல்களையும் வடமொழிப் பாடல்களையும் இந்நாட்டில் வழங்கும் பிற திசைமொழிப் பாடல்களையும் பாடும் நிலையில் மூவகையினராக இருத்தலால் சிவனடி பரவும் தெய்வ இசையினைக் கற்றுவல்ல இம்மூவகையினரும் பரமனையே பாடுவார் என்னும் திருக்கூட்டத்தினராகவே போற்றப் பெறுவர் என்பது அறிவித்தற்பொருட்டெனக் கொள்ள வேண்டியுளது இந்நுட்பம்,

> "தென்றமிழும் வடகலையும் தேசிகமும் பேசுவன
> மன்றினிடை நடம்புரியும் வள்ளலையே பொருளாக
> ஒன்றியமெய் யுணர்வோடும் உள்ளுருகிப் பாடுவார்
> பன்றியுடன் புட்காணாப் பரமனையே பாடுவார்"


எனச் சேக்கிழாரடிகள் தரும் விளக்கத்தால் இனிது புலனுதல் காணலாம். "தமிழென்பது வடவெழுத்தொரீஇ வந்த எழுத்தானே கட்டப்பட்ட வாக்கியக் கூறுகளும் இயலிசை நாடகங்களும் என்று சொலலப்படாநின்ற மூன்று தமிழ்களும்" என விளக்கங் கூறிய சிலப்பதிகார அரும்பத வுரையாசிரியர், "தேசிகம் என்றது - இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல் என்று சொல்லப்படா நின்ற சொற்பிரயோகம்" எனத் தேசிகத்தைப் பற்றி விளக்குதலால் இந்நாட்டில் தமிழும் வடமொழியும் அல்லாத இவற்றின் சார்புடையனவாய் வழங்கும் திசைமொழிகளின் இசைப் பாடல்கள் யாவும் இசையாசிரியர்களால் தேசிகம் என வழங்கப்பெற்றன என்னும் உண்மை இனிது புலனுதல் காணலாம்.

60. சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார் :


வலமிருந்து இடம்: கோயிலும் நந்தியும் பலிபீடமும் அமைந்திருத்தலும், அருகிருந்து பலர் பலவகை வாத்தியங்களை வாசித்தலும், ஆடல் மகள் ஆடுதலும், அடியார் ஒருவர் தெய்வத் திருவுருவத்தினைத் தாங்கி நிற்க, அருகே அடியார் ஒருவர் சாமரை வீசுதலும், முன் இருவர் குடை பிடித்தலும், இத்திருவிழா ஆரவாரம் தமது அருகே அணுகிய நிலையிலும் அடியார் ஒருவர் தம் உள்ளத்தைப் புறத்தே செலுத்தாது சித்தத்தைச் சிவன்பாலே வைத்த சிந்தையராய்ச் சிவயோகத்தில் அமர்ந்திருத்தலும் காண்க (சித்தத்தைச் சிவன்பாலே வைத்த அடியார் திருவுருவத்தையடுத்து உள்ளது பிச்சைத்தேவர் (பிக்ஷாடனர்) திருமேனி).

61. திருவாரூர்ப் பிறந்தார்கள் :

வலமிருந்து இடம்: திருக்கோயில் முன்றிலில் அடியார் நால்வர் அமர்ந்திருத்தலும், அவர்களது அருகே மரமும் மரத்திற் பறவைகளும் மரத்தினருகே பசுவும் இருத்தலும் காணலாம். திருவாரூரில் வேற்றுமை தெரிந்த நாற்குலத்துப் பிறந்த மக்களேயன்றிப் பசு, பறவை முதலிய மன்னுயிர்களும் சிவகணங்களாகப் போற்றத்தக்க சிறப்புடையன என்னும் உண்மையை இச்சிற்பம் புலப்படுத்துதல் அறியத் தருவதாகும்.




60. சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்




61. திருவாரூர்ப் பிறந்தார்




62. முக்காலுந் திருமேனி தீண்டுவார்



62-A. முக்காலுந்திருமேனி தீண்டுவார்



63. முழுநீறுபூசிய முனிவர்



63-A. முழுநீறுபூசிய முனிவர்



64. அப்பாலும் அடிச்சார்ந்தார்



64-A. அப்பாலும் அடிச்சார்ந்தார்

62, 62 A. முக்காலும் திருமேனி தீண்டுவார் :

இவ்விரு படங்களும் ஒரே சிற்பத்தின் தொடர்ச்சியாகும். இச்சிற்பத்தில், அடியார் ஒருவர் சிவலிங்கப் பெருமானை வழிபாடு செய்யும் முறையில மூவகைத் தோற்றங்கள் இடம்பெற்றுள்ளன. இம்மூவகைத் திருமேனிகளும் காலை நண்பகல் மாலை என்னும் மூன்று பொழுதுகளிலும் திருக்கோயில்களில் சிவலிங்கத் திருமேனியைத் தீண்டி வழிபடும் திருக்கூட்டத்தாரின் மூவகை நிலைகளைக் குறிக்கும் முறையில் அமைக்கப் பெற்றிருத்தல் காணலாம். இதன்கண் இடமிருந்து வலம்: முதற்கண் உள்ள அடியாரின் திருமுன் முக்காலியின்மேல் அர்க்கிய பாத்திய ஆசமனத்திற்குரிய நன்னீரைக் கொண்ட சங்கு வைக்கப்பெற்றிருத்தலும், அதன்மேலாக மண்டபத்தில் மணியொன்று கட்டப்பெற்றிருத்தலும், முப்போதும் திருமேனி தீண்டுவார் செய்யும் இப்பூசை தனியொருவர் தம் பொருட்டுச் செய்யும் (ஆன்மார்த்த) பூசையைக் குறிக்காமல், அவர் உலகத்தார் பொருட்டுச் செய்யும் (பரார்த்த) பூசையினைக் குறிப்பனவாகும்.

63, 63 A. முழுநீறு பூசிய முனிவர் :

இவ்விரு படங்களும் ஒரே சிற்பத்தின் தொடர்ச்சியாகும். வலமிருந்து இடம்: திருக்கோயிலின் திருமுன்றிலில் உடம்பு முழுவதுந் திருநீறு பூசிய அடியார்கள் அறுவர் அமர்ந்துள்ளனர். இச்சிற்பத்தில் உள்ள அடியார் திருவுருவங்கள் ஆறும் சைவ சமயத்தினைச் சார்ந்த அறுவகை அகச்சமயங்களை மேற்கொண்டொழுகும் அடியார்கள் அறுவரையும் குறிக்கும் நிலையில் அமைந்தன.

64. அப்பாலும் அடிச்சார்ந்தார் :

இதன்கண் வலமிருந்து இடம்: சிவபெருமான் எழுந்தருளிய திருக்கோயிலும் அத்திருக்கோயிலை இறைஞ்சிப் போற்றும் நிலையில் அடியார் திருவுருவங்கள் மூன்றும் இடம் பெற்றிருத்தல் காணலாம். நம்பியாரூரரால் திருத்தொண்டத் தொகையில் 'அப்பாலும் அடிச்சார்ந்தார்' எனப் போற்றப் பெற்ற இத் திருக்கூட்டத்தார், நம்பியாரூரர் காலத்திற்கும் அவர் நிலவிய தமிழகமாகிய

இடத்திற்கும் அப்பாற்பட்ட நிலையில் உள்ள சிவனடி யார்கள் என்பது விளங்க, தமிழ் நாட்டுக்கு அப்பாலுள்ள அடியாரைக் குறிக்கும் நிலையில் ஒரு திருவுருவமும், நம்பி யாரூரர்க்குக் காலத்தால் முற்பட்ட அடியாரைக் குறிக்கும் நிலையில் ஒரு திருவுருவமும், நம்பியாரூரர் காலத்திற்குப் பின்தோன்றும் அடியாரைக் குறிக்கும் நிலையில் ஒரு திரு வுருவமும் ஆக மூன்று திருவுருவங்கள் அமைக்கப்பெற் றுள்ளன எனக் கருதவேண்டியுளது.

"மூவேந்தர் தமிழ்வழங்கு நாட்டுக் கப்பால்
முதல்வனுர் அடிச்சார்ந்த முறைமை யோரும்
நாவேய்ந்த திருத்தொண்டத் தொகையிற் கூறும்
நற்றெண்டர் காலத்து முன்னும் பின்னும்
பூவேய்த்த நெடுஞ்சடைமே லடம்பு தும்பை
புதியமதி நதியிதழி பொருந்த வைத்த
சேவேந்து வெல்கொடியா னடிச் சார்ந்தாரும்
செப்பிய வப்பாலுமடிச் சார்ந்தார் தாமே"

(பெரிய – அப்பாலும் – 1)


எனச் சேக்கிழார் கூறும் விளக்கம் இச்சிற்ப அமைப்புக்கு ஆதரவாக அமைந்துள்ளமை இங்கு நினைக்கத்தகுவ தாகும்.

65, 65 A. பூசலார் நாயனுர் :


இவ்விரு படங்களும் ஒரே சிற்பத்தின் தொடர்ச்சியா கும். இதன்கண் வலமிருந்து இடம்: பூசலார் நாயனுர் தம் மனத்தே எண்ணி உருவாக்கிய திருக்கோயிலின் அமைப்பும், அத்திருக்கோயிலை மனத்தால் அமைக்கும் ிலையில் பூசலார் சிவயோகத்து அமர்ந்திருக்கும் தோற்ற அவ்வடியார் தம்மைக் கண்டு வழிபட வந்த காடவர் மானை நோக்கிய நிலையில் இறைவனை இறைஞ்சி ற்கும் தோற்றமும், காடவர்கோமானுகிய மன்னன் தேவி யுடன் பூசலாரை வழிபட்டு நிற்றலும் காணலாம்.

66. பாண்டிமாதேவி (மங்கையர்க்கரசியார்) :


வலமிருந்து இடம்: அடியார் ஒருவர் சாமரை வீசிப் பின்னே நிற்க அமர்ந்திருக்கும் ஆளுடைய பிள்ளையாரைப் பாண்டிமாதேவியாகிய மங்கையர்க்கரசியார் தோழிமாரு டன் சென்று கண்டு கைதொழுது நிற்றல். (67-ஆம் படத்தில் தோழியர் இருவர் கைகுவித்து நிற்றல் காண்க).



65. பூசலார்




65-A. பூசலார்




66. பாண்டிமா தேவி



67. நேசாண்டார்



68. கோச்செங்கட்பெருமாள்



69. திருநீலகண்டப் பெரும்பாணர்



70. சடையனார்



71. இசைஞானியார்

67. நேசாண்டார் (நேசநாயனுர்) :

இதன்கண் இடமிருந்து வலம் : முதலில் நிற்கும் இரு திருவுருவங்களில் இரண்டாவதாக அமைந்தது நேச நாயனுர் திருவுருவமாகும். நேசநாயனுர் அளிக்கும் கோவண ஆடையைப் பெறும் நிலையில் முதற்கண் நிற்கும் அடியார் திருவுருவம் இப்படத்திற் சிறிது மறைந்துள்ளது.

68. கோச்செங்கட்பெருமாள் :

வலமிருந்து இடம்: கோச்செங்கட் சோழர் தாம் அமைத்த திருக்கோயிலைக் கைதொழுது நிற்றல். (அடுத்துக் காணப்பெறுவது கலியாணசுந்தரராகிய இறை வரது திருவுருவமாகும்).

69. திருநீலகண்டப்பெரும்பாணர் :

இடமிருந்து வலம்: மனைவியார் மதங்க சூளாமணி யார் தாளமிட்டு இசைபாடத் திருநீலகண்டப்பெரும்பாணர் சகோடயாழினை வாசித்து இறைவன் திருக்கோயிலை வழி படுதல். கையில் தாளங்கொண்டு பாடும் நிலையில் மதங்க சூளாமணியார் வடிவமும் யாழ்க்கருவியை வாசிக்கும் நிலையிற் பெரும்பாணர் வடிவமும் அவர் கையில் ஏழுக்கு மேற்பட்ட நரம்புகளைக்கொண்ட யாழ்க்கருவியின் உருவச் சாயலும் இச்சிற்பத்தில் இடம்பெற்றுள்ளமை காண்க.

70. சடையனுர் :

இரு கைகளையும் குவித்து நின்று இறைவனை வழி படும் நிலையில் சடையநாயனுரது திருவுருவம் அமைந் துளது.

71. இசை ஞானியார் :

இரு கைகளையும் குவித்து நின்று இறைவனை வழி படும் நிலையில் இசை ஞானியாரது திருவுருவம் அமைந் துளது. (இவ்வாறு நிகழ்ச்சியெதனையும் குறிப்பிடாத நிலையில் அமைக்கப்பெறும் அடியார் திருவுருவங்கள் நெஞ்சிற் குவித்த கைகளுடன் அமைக்கப்பெறுதல் வேண்டும் என்பது, சடையனுர் இசைஞானியார் திருவுருவ அமைப்பால் இனிது விளங்குதல் காணலாம்).

72. நம்பியாரூரர் :

திருத்தொண்டத் தொகையிற் போற்றப் பெற்றுள்ள அடியார்களின் வரலாற்றுச் செய்திகளைக் குறிக்கும் முறையில் அமைக்கப் பெற்ற இச்சிற்ப வரிசையில் திருத்தொண்டத் தொகையினை அருளிச் செய்த நம்பியாரூரரின் வரலாற்று நிகழ்ச்சிகளைக் குறித்துப் பின்வருமாறு ஏழு சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன.


(1) உடையநம்பி எழுந்தருளுகிறார் :

72 A, 72 B இவ்விரு படங்களும் ஒரு தொடர்ச்சி தம்பிரான் தோழராகிய நம்பியாரூரர் நங்கை பரவையாரை மணந்து அவருடன் விளையாடி மகிழ்பவர், பரிசனங்கள் தம்மைச் சூழ்ந்து உடன்வரத் திருவாரூர்ப் பெருமானை வழிபட எழுந்தருளுதலைக் குறிப்பது இச்சிற்பமாகும். இதன்கண் இடமிருந்து வலம்: நம்பியாரூரர், நங்கை பரவையார், தோழி, விளையாட்டுக்குரிய ஆட்டுக்கிடாவை ஓட்டிச் செல்லும் நிலையில் ஏவலர் ஒருவர் அவரையடுத்துப் பிற விளையாட்டுப் பொருள்களை ஏந்திச் செல்லும் ஏவலர் நால்வர் இடம் பெற்றுள்ளமை காணலாம். நம்பியாரூரர் திருவாரூர்த் திருவீதியில் எழுந்தருளிய இச் சிறபபினைக் குறித்து,

"கைக்கிடா குரங்கு கோழி சிவல்கவுதாரி பற்றிப்
பக்கமுன் போதுவார்கள் பயில்மொழி பயிற்றிச்செல்ல
மிக்கபூம் பிடகை கொள்வோர் விரையடைப்பை யோர்சூழ
மைத்தடங் கண்ணினர்கள் மறுகநீள் மறுகில் வந்தார்"
(பெரிய – தடுத்தாட் – 187)

எனச் சேக்கிழாரருளிய திருவாக்கும் இச்சிற்பமும் ஒத்து அமைந்திருத்தல் இங்கு நினைத்தற்குரியதாகும்.


நம்பியாரூரர் வரலாறுகளாக இங்குக் குறிக்கப் பெற்றுள்ள சிற்பங்களுள், இச்சிற்பம், 72 (3) 'உடைய நம்பியையாண்டு கொண்டருளினபடி' என்ற சிற்பத்தின் பின் அமைக்கப்பெறுவதே முறையாயினும், நம்பியரூரர் திருத்தொண்டத் தொகையினைப் பாடுதற்குத் தோற்றுவாயாக அமைந்தது அவர் பரிசனங்கள் சூழத்திருவாரூர்த் திருக்கோயிலுக்கு எழுந்தருளிய இந்நிகழ்ச்சியேயாதலால் நம்பியாரூரர்க்குரிய வரலாற்று நிகழ்ச்சிகளுள் இதுவே முதலிடம் பெறுவதாயிற்று.




72. உடையநம்பி எழுந்தருளுகிறார்



72-A. உடையநம்பி எழுந்தருளுகிறார்



72-D. உடைய நம்பிக்கு ஓலமென்றருளினபடி



72-E. உடைய நம்பியை வேடர் வழிபறித்தபடி

(2) உடைய நம்பிக்கு ஆவண ஓலை காட்டினபடி:

நம்பியாரூரர்க்கும் புத்தூர்ச் சடங்கவி சிவாசாரியார் திருமகளார்க்கும் திருமணம் நிகழவிருக்கும் திருமணப் பந்தரிலே சிவபெருமான் கிழவேதியர் வடிவுடன் வந்து அங்குள்ள அந்தணர்களை நோக்கி 'நாவலாரூரனாகிய இவன் என் அடியான்' என்று கூற, அம்மொழியினைக் கேட்டு நகைத்த நாவலூரரை நோக்கி, 'ஏடா, அக்காலம் உன் பாட்டன் எழுதிக்கொடுத்த அடிமைச் சீட்டாகிய ஆவண ஓலை இதுவாகும்' எனக் காட்டிய நிகழ்ச்சியைக் குறிக்கும் முறையில் அமைந்தது இச்சிற்பமாகும். இதன் கண் வலமிருந்து இடம்: இடக்கையில் குடையினைப் பிடித்து நிற்கும் கிழவேதியர் தம் வலக்கையில் உள்ள ஆவண ஓலையைக் காட்டுதலும், அது கண்டு திகைப்புற்று நிற்கும் நம்பியாரூரர்க்குப் பின்னே மறையோர் இருவர் அமர்ந்திருத்தலும் காணலாம்.

(3) உடைய நம்பியை ஆண்டுகொண்டருளினபடி:

திருவெண்ணெய் நல்லூர்ச் சபையில் வாயாடி வழக்கில் வென்ற கிழவேதியர், "உமக்கு இவ்வூரில் வரு முறை மனையும் நீடுவாழ்க்கையும் காட்டுக" என்ற வெண்ணெய் நல்லூர்ச் சபையாரை நோக்கி, 'என்னை நீவிர் ஒருவரும் அறியீராகில் என்னுடன் வம்மின்' என அழைத்துச் சென்று திருவருட்டுறைக் கோயிலிற் புக்கு மறைந்து, 'ஆரூரனே! நீ முன்பு நமக்குத் தொண்டன்; நின்னுள்ளத்தில் வேட்கை மிக்கெழுந்தமையால் பின்பு நம் ஏவலாலே மண்ணின்மீது பிறந்தனை; நின்னை மேலும் பாசத் தொடர்பு பற்றாதவாறு மறையோர் முன்னிலையில் நாம் தடுத்து ஆட்கொண்டோம்; நமக்கு அன்பின் விருப் புடைய வழிபாடு இசைப் பாடலாற் பரவிப் போற்றுதலே. ஆதலால் சொற்றமிழ் பாடுக' என அருள்செய்யக் கேட்ட வன்றொண்டர், அருட்டுறைப் பெருமானைப் 'பித்தா பிறை சூடீ' என்ற முதற் குறிப்புடைய திருப்பதிகத்தைப் பாடிப் போற்றுதலைக் குறிப்பது இச்சிற்பமாகும். இதன்கண் இட மிருந்து வலம்: திருவெண்ணெய் நல்லூர்த் திருவருட்டு றைக் கோயிலையும், அதன்முன் திருவெண்ணெய் நல்லூர்ச் சபை அந்தணர் இருவருடன், நம்பியாரூரர் இன்னிசைப் பதிகத்தினைப் பாடி நிற்றலையும் காணலாம். நம்பியாரூரர்

பாடிய திருப்பதிகம் தாளத்துடன் பாடுதற்கமைந்த இன்னிசைச் செழும்பாடல் என்பது புலப்பட ஆரூரர் கையில் தாளம் அமைக்கப் பெற்றிருத்தல் காண்க.

(4) உடைய நம்பிக்கு ஓலமென்றருளினபடி:

காவிரியின் தென்கரையிலுள்ள திருக்கண்டியூரைச் சேரமான் பெருமாளுடன் வழிபட்டு மகிழ்ந்த நம்பியாரூரர், காவிரியின் வடகரையில் திருவையாறு எதிர் தோன்றக் கண்டு, கடல்போற் பெருகிவரும் காவிரியைக் கடந்து ஐயாறன் திருவடிகளைத் தொழுதற்கு எண்ணிப் 'பரவும் பரிசொன்றுடையேன் நான்' என்னும் முதற் குறிப்புடைய திருப்பதிகத்தைப் பாடிப் பாடல் தோறும் 'ஐயாறுடைய அடிகளோ' என அழைத்தபொழுது, ஐயாற்றிறைவர், ஒன்றும் உணர்வால் சராசரங்கள் எல்லாம் கேட்க ஓலம்' என மொழிந்தருளினமையாற் பொன்னிநதி மேல்பால் வெள்ளம் ஒதுங்கி நிற்க ஆரூரர்க்கு நெறிகாட்டிய நிகழ்ச்சியைக் குறிப்பது இச்சிற்பமாகும். இங்ஙனம் காவிரியாறு உடைய நம்பிக்கு விலகி நின்று வழிகாட்டுமாறு ஐயாற்றிறைவர் 'ஓலம்' என்று அருள் செய்த நிகழ்ச்சியையே இச்சிற்பம் குறிக்கின்றதென்பது, 'உடைய நம்பிக்கு ஓலமென்றருளினபடி' என இதன்மேற் பொறிக்கப் பெற்றுள்ள கல்வெட்டுத் தொடராலும்,

"மன்றில் நிறைந்து நடமாட வல்லார்தொல்லை ஐயாற்றிற்
கன்று தடையுண் டெதிரழைக்கக் கதறிக்கனைக்கும்
புனிற்றுப்போல்
ஒன்று முணர்வால் சராசரங்கள் எல்லாங் கேட்க 'ஓலம்' என
நின்று மொழிந்தார் பொன்னிமா நதியும் நீங்கி நெறிகாட்ட"
(பெரிய – கழறிற் – 135)

எனவரும் சேக்கிழாரடிகள் வாய்மொழியாலும் நன்கு துணியப்படும்.

இதன்கண் இடமிருந்து வலம்: கண்டியூர்த் திருக்கோயிலும், சேரமான் பெருமாள் கைகுவித்து இறைஞ்சி உடன் நிற்கக் காவிரியின் தென்கரையில் நின்றுகொண்டு வடகரையிலுள்ள திருவையாற்றுக் கோயிலை எதிர் நோக்கிய நிலையில் வலத்திருக்கையினால் அழைத்து நிற்கும் நம்பியாரூரரும், அடுத்துக் காவிரியாறும், அதன் பெரு வெள்ளம் மேல்பால் நிற்க நடுவில் வழியுண்டாகும்படி

அதன் வடகரையிலுள்ள திருவையாற்றுக் கோயிலி னின்றும் 'ஓலம்' என்றதோர் ஓசை தோன்றி விரிந்த அடையாளமும், அதன்படி ஆற்றின் நடுவிலே வழியமைந் துள்ளமையும், காவிரியாற்றுப் பெருவெள்ளத்தில் மீன் களும் மரங்கள் முதலியனவும் செறிந்துள்ளமையும் காணலாம்.

இச்சிற்பத்தின்மேல் அமைந்த கல்வெட்டில் 'ஓல மென்றருளினபடி' என்ற தொடரை 'ஓலெவென்றருளின படி' எனப் பிறழக்கொண்டு தென்னிந்தியக் கல்வெட்டுத் துறையினர் கூறும் விளக்கம் இச்சிற்ப அமைப்புடனும் உடைய நம்பிகள் வரலாற்றோடும் பொருந்துவதாக இல்லை.[1]

(5) உடைய நம்பியை வேடர் வழிபறித்தபடி:

நம்பியாரூரர் சேரநாட்டிலிருந்து மீள்பவர் சேரமான் பெருமாள் கொடுத்த பொருட்பொதியினைப் பரிசனங்கள் சுமந்து உடன்வரக் கொங்குநாட்டிலுள்ள திருமுருகன் பூண்டியின் அருகே வந்தபொழுது, சிவகணங்கள் வேடர் வடிவில் வந்து ஆரூரருடன் வரும் பரிசனங்களை வழிமறித்து அவர்களிடத்தேயுள்ள பொருட்பொதிகளைப் பறித்துச் செல்லுதல்.

இதன்கண் இடமிருந்து வலம்: நம்பியாரூரரும் அவரருகே எக்காளம் ஊதும் நிலையிலும் பொதியினைச் சுமக்கும் நிலையிலும் ஏவலர் இருவரும் நிற்றலும், வேட னொருவன் தரையில் வீழ்ந்த நிலையில் அவர்களை வழி மறித்தலும், மற்றொரு வேடன் பொதியைச் சுமந்துள்ள அடியார் அருகே அலைக்குங் கோலினை ஓங்கி அச்சுறுத் தலும் காணலாம்.

(6) திருமுருகன் பூண்டியிற் பெற்றபடி:

வேடர்கள் பொருள்களைப் பறித்துச் சென்றதறிந்த நம்பியாரூரர், திருமுருகன் பூண்டியிலுள்ள திருக்கோயிலை யடைந்து 'வெருவுற வேடுவர் பறிக்கும் வெஞ்சுரத்தில்


1. தென்னிந்தியக் கல்வெட்டு 1920-ஆம் ஆண்டு அறிக்கை, பக்கம் – 103.

எத்துக்கு இங்கிருந்தீர்' என இறைவனை வினவும் முறையில் 'கொடுகு வெஞ்சிலை' என்னும் முதற் குறிப்புடைய பதிகத்தினைப் பாடிப் போற்றிய நிலையில், வேடர்கள் தாம் பறித்துச் சென்ற பொருள்களை யெல்லாம் திருமுருகன் பூண்டியிலுள்ள திருக்கோயில் முன்றிலில் கொண்டுவந்து குவித்தல்.


இச்சிற்பத்தில் வலமிருந்து இடம்: நம்பியாரூரர் திருமுருகன் பூண்டித் திருக்கோயிலில் வீற்றிருக்கும் பெருமானை நோக்கித் திருப்பதிகத்தினைத் தாளமிட்டுப் பாடி நிற்றலும், அவரருகில் காளத்தைப்பிடித்த நிலையில் அடியார் ஒருவர் நிற்றலும், அவர் பக்கத்தில் வேடர் இருவர் தாம் பறித்துச் சென்ற பொதிகளைப் பொதியெருதின்மேற் கொணர்ந்து திருக்கோயில் முற்றத்திற் குவித்தலும் காணலாம்.

(7) அவிநாசியாண்டார் முதலைவாய்ப் பிள்ளை :

நம்பியாரூரர், திருப்புக்கொளியூர் அவிநாசியில், அந்தணர்வாழும் வீதியின்மருங்கு வந்தபொழுது ஒரு வீட்டில் மங்கலவொலியும் அதன் எதிர் வீட்டில் அழுகையொலியும் எழுந்தன. அந்நிலையில் நம்பியாரூரர் அங்குள்ளவர்களை நோக்கி, 'இரண்டும் உடன் நிகழ்வது ஏன்' என வினவினர். 'ஐந்து வயது இளைஞர்களாகிய புதல்வர் இருவர் மடுவிற் குளித்தபொழுது ஒருவனை முதலை விழுங்கப் பிழைத்த மற்றொருவனுக்கு இப்பொழுது இவ்வீட்டில் உபநயனம் நிகழ்கின்றது. அவ்வீட்டில் பிள்ளையை யிழந்தவரது அழுகுரல் கேட்கின்றது' என அங்குள்ளார் கூறினர். அது கேட்ட வன்றொண்டர் உளம் வருந்தி நிற்கும் நிலையில் மைந்தனையிழந்த மறையோனும் மனைவியும் ஆரூரர் வருகையறிந்து தம் துயர் மறந்து முகமலர்ந்து அவரை எதிர் வந்து இறைஞ்சினர். அவர்களது அன்பின்திறங்கண்டு உளமிரங்கிய வன்றொண்டர் 'அவர்கள் புதல்வனை முதலைவாயினின்றும் மீட்டுக் கொடுத்த பின்பே அவிநாசி யிறைவனை வணங்குவேன்' என எண்ணி, முதலை விழுங்கிய மடு எதுவென வினவி யறிந்து அதன் கரையை யணுகி நின்று 'எற்றான் மறக்கேன்' என்னும் முதற் குறிப்புடைய திருப்பதிகத்தைப் பாடிப் போற்றினர். அப்பதிகத்தின் நான்காந் திருப்



72-F. திருமுருகன் பூண்டியில் பெற்றபடி



72-G. அவிநாசியாண்டார் முதலைவாய்ப் பிள்ளை

டலைப் பாடும்பொழுது இயமன், மடுவிலுள்ள முதலையின் யிற்றிலே முன் விழுங்கப்பட்டிருந்த புதல்வனது உடம்பில் பிரைக் கொண்டுவந்து புகுத்தினன். முதலை மடுவி ருந்து வெளிப்பட்டுக் கரையில் வந்து மைந்தனை உமிழ்ந் து. புதல்வனைக் கண்ட தாய் விரைந்து சென்று புதல் னைத் தழுவி எடுத்துக்கொண்டார். மறையோன் தன் னவியுடன் சுந்தரர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினன் ன்பது வரலாறு. இவ் அற்புத நிகழ்ச்சியைக் குறிப்பது ச்சிற்பமாகும்.

இதன்கண் இடமிருந்து வலம்: திருப்புக்கொளியூர் ,விநாசித் திருக்கோயிலும், அதனருகேயுள்ள மடுவில் ாழும் முதலை தான் முன் விழுங்கிய புதல்வனைக் கரை டத்தே உமிழ்தலும், தாயார் அப்புதல்வனைத் தழுவி டுத்தலும், தந்தையாகிய மறையோன் இருகைகளையும் லைமேற் குவித்து நின்று நம்பியாரூரரை வணங்குதலும், மைந்தனை உய்வித்தருளிய இறைவனது திருவருளை யெண்ணி மகிழ்ந்த நம்பியாரூரர் குவித்த கைகளுடன் ,விநாசி யிறைவனை இறைஞ்சி நிற்றலும், முதலையால் மிழப் பெற்று உய்ந்த மைந்தன் ஆரூரரருகே நிற்றலும் ாண்க.

பிற்சேர்க்கை 2

திருப்பனந்தாள் திருக்கோயிலில் உள்ள திருத்தொண்டத் தொகை அடியார்களின் சிற்பங்கள்

தஞ்சை மாவட்டத்தில் உள்ள திருப்பனந்தாள் திருக் கோயிலில், திருத்தொண்டத்தொகை அடியார்களின் வரலாற்றுச் சிற்பங்கள் அமைக்கப் பெற்றுள்ளன. மேற்கு நோக்கிய சந்நிதியையுடைய இத்திருக்கோயிலின் உட் கோபுரத்தை யொட்டித் தெற்கு வடக்காக அமைந்த மதிற் சுவரின் உட்புறமாக வடமேற்குப் பகுதியில் திருத் தொண்டத்தொகை அடியார்களின் சிற்பங்கள் மூன்று

வரிசைகளாக இடம் பெற்றிருத்தல் காணலாம். இவ் வரிசைகளின் தொடர்பாக அமைந்த பிற்பகுதி பிற் காலத்தில் மதிலையொட்டித் தடுக்கப்பட்டுள்ள அறையின் குறுக்குச் சுவரால் மறைக்கப்பட்டிருத்தலால் சுவரின் வடபுறத்தேயுள்ள சிற்பவரிசைகளைப் படம் எடுக்க இயல வில்லை. இச்சிற்பங்களின் தொடக்கமாக வெளிப்படை யாகத் தெரியும் சிற்பங்களின் நிழற்படம் இந்நூலில் இராசராசபுரச் சிற்பங்களை யடுத்துத் தரப் பெற்றுளது. அதன்கண் திருத்தொண்டத் தொகையிற் போற்றப் பெற்ற சிவனடியார்களில் இருபத்தைந்து அடியார்களின் வரலாற்றுச் சிற்பங்கள் மூன்று வரிசைகளாக அமைந் துள்ளமை காணலாம்.

மேல் வரிசையில்: இடமிருந்து வலம்: முதற்கண் அமர்ந்திருக்கும் நிலையில் உள்ள அந்தணர் மூவருடைய திருவுருவங்கள் தில்லை மூவாயிரவராகிய தில்லை வாழந் தணரைக் குறிப்பன. அடுத்துக் கோல்பிடித்துக் குளத்தில் மூழ்கி இளமை பெற்று எழுந்து இறைவனைக் கைகுவித்து இறைஞ்சும் நிலையில் திருநீலகண்டக் குயவனாரும் அவர் தம் மனைவியாரும் நிற்றல் காணலாம். அடுத்துச் சிவனடி யார் ஒருவர் அமர்ந்திருக்க அவர் அருகே இயற்பகையார் மனைவியாரும் இயற்பகையாரும் கைகுவித்து அமர்ந் துள்ளனர். அடுத்துக் கூடையுடன் அமர்ந்திருக்கும் நிலையில் அமைந்தசிற்பம், வயலில் முளைவாரி வந்த இளையான்குடி மாற நாயனாரைக் குறிப்பதாகும் அடுத் துள்ள சிற்பத்தில் கையில் புத்தகக் கட்டுடன் சிவனடியார் வடிவில் முத்தநாதனும் அருகே கைகுவித்து வணங்கும் நிலையில் மெய்ப்பொருள் நாயனாரும் உள்ளனர் அவரை யடுத்து அமர்ந்திருப்பவர் விறன் மிண்ட நாயனாராவர்.

நடு வரிசையில்: இடமிருந்து வலம்: முதற்கண் கைகுவித்து நிற்பவர் திருநாளைப் போவார். அடுத்துச் சிவனடியாராக வந்து உடையினைத் துவைக்கக் கொடுத்து, அதனைத் தருக என வேண்டி நிற்கும் இறைவனது திருவுருவமும், குறித்த காலத்தில் கொடுக்க இயலாமை யால் தம் தலையினைப் பாறையில் மோதப் புக்க திருக்குறிப்புத் தொண்டர் திருவுருவமும் அமைந்திருத்தல் காணலாம். அதனை அடுத்து அமைந்தது சண்டேசர் வரலாருகும்.



73 திருத்தொண்டத் தொகை அடியார்கள் சிற்பம்
– திருப்பனந்தாள் திருக்கோயில்



74 கருவூர்த் தேவரும் இராச இராச சோழனும்
– தஞ்சை இராச இராசேச்சுரம்

ண்டேசர் வழிபாடு செய்த சிவலிங்கத் திருவுருவம் மேலே யுள்ளமையும், சிவபூசைப் பொருளைக் காலாற் தைத்த தந்தை எச்சதத்தன் கால்களைச் சண்டீசர் மழுவால் வெட்டுதலும், கால்கள் துணிக்கப்பட்ட எச்ச தத்தன் கீழே வீழ்ந்து கிடத்தலும் காணலாம். அடுத் துள்ள சிற்பத்தில் திருநாவுக்கரசர் உழவாரப் படையுடன் அமர்ந்துள்ளார். அவரருகே மார்பிற் குவித்தகையினராய் அமர்ந்திருப்பவர் குலச்சிறை நாயனர். அடுத்துள்ளது பெருமிழலைக் குறும்ப நாயனர், நம்பியாரூரரை ஆசனத் தமர்த்தி அவருடைய திருவடிகளை வழிபடும் முறையில் அமைந்த சிற்பமாகும். இதன்கண் நிலமிசை இருந்து திருவடியைத் தொட்டு வழிபடுபவர் பெருமிழலைக் குறும்ப நாயனர். அவர் விரும்பி வேண்டிய வண்ணம் தவிசின் மேல் அமர்ந்து அவரது வழிபாட்டினை ஏற்றுக்கொள்பவர் நம்பியாரூரர். இச் சிற்பம்,

“ சித்தம் நிலவும் திருத்தொண்டத் தொகை பாடிய நம்பியைப் பணிந்து
நித்தன் அருள் பெற்றவர் பாதம் நினைக்கும் நியமத்தலை நின்றார் ”

எனவும்,

“ மையார் தடங்கட் பரவையார் மணவாளன்தன் மலர்க்கழல்கள்
கையால் தொழுது வாய்வாழ்த்தி மனத்தால் நினைக்குங் கடப்பாட்டில்
செய்யாள் கோனும் நான்முகனும் அறியாச் செம்பொற் றுளிணைக்கீழ்
உய்வான் சேர உற்றநெறி இதுவே என்றன் பினிலுய்த்தார் ”
(பெரிய–பெருமிழலை, 4, 5,)

எனவும் வரும் சேக்கிழாரடிகள் வாய்மொழிகளை யுளத்துட் கொண்டு அமைக்கப் பெற்றிருத்தல் அறியத் தகுவதாகும். இதனையடுத்து இரு கைகளிலும் தாளமிட்டுப் பாடிக் கொண்டு அமர்ந்திருக்கும் நிலையில் அமைந்தது பேயா ராகிய காரைக்காலம்மையார் திருவுருவமாகும். இதனை யடுத்து அப்பூதியடிகளது வரலாற்றுச் சிற்பம் அமைக்கப் பெற்றுளது. தாண்டவம் புரிய வல்ல தம்பிரானுக்கு அன்ப ராய்ச் சிந்தையிற் சிவனை நினைந்து வழிபாடு செய்து அமர்ந்திருக்கும் அப்பூதியடிகளும், விடந்தீண்டியிறந்த மைந்தனைப் பாயில்வைத்து மறைக்கும்நிலையில் அப்பூதியார் மனைவியாரும், மைந்தனைத்தீண்டிய பாம்பு படம்விரித்த நிலையில் வாழையிற் சுற்றிக்கொண்டுள்ளமையும் காணலாம்.

கீழ் வரிசையில்: இடமிருந்து வலம்: முதற்கண் அமர்ந்திருப்பவர் இருவருள் முதல்வர் கலிய நாயனாரும் அடுத்தவர் சத்தி நாயனாரும் ஆதல் வேண்டும். அடுத்துச் சிவலிங்கத் திருவுருவத்தினை வழிபடும் நிலையில் அமைந்த உருவம் ஐயடிகள் காடவர்கோன் நாயனாரைக் குறித்த தாகும். அடுத்து, கணம்புல்லை விளக்கெரிக்கும் நிலையிற் கணம்புல்ல நாயனாரும், பொருள் விரித்துரைக்கும் நிலையிற் காரியாரும், அரசிருக்கையில் அமர்ந்த நிலையில் நின்றசீர் நெடுமாற நாயனாரும், அமர்ந்து அகப்பூசை செய்யும் நிலையில் வாயிலார் நாயனாரும், வாள் ஏந்திய போர் வீரர் என்ற நிலையில் முனையடுவார் நாயனாரும் அமர்ந்துள்ளமை காணலாம். அடுத்து, பட்டத்தரசியின் கையினைத் தடியும் நிலையிற் கழற்சிங்க நாயனாரும், முரசறைவோன் எதிர் நிற்க, 'என்செல்வம் அனைத்தும் சிவனடியார்க்கு உரியது எனப் பறையறைக' என அறிவுறுத்தும் நிலையில் அரசிருக் கையில் வீற்றிருக்கும் இடங்கழி நாயனாரும், திருவாரூர்ப் பூ மண்டபத்தில் வீழ்ந்து கிடந்த மலரை மோந்த பல்லவ வேந்தனது பட்டத் தரசியின் மூக்கினை அரியும் நிலையிற் செருத்துணை நாயனாரும் இடம்பெற்றிருத்தல் காணலாம்.

இச்சிற்பங்கள்யாவும் தாராசுரச் சிற்பங்களையொத்துத் திருத்தொண்டத் தொகையிலுள்ள வரிசை முறைப்படி அமைக்கப் பெற்றிருத்தலையும் தில்லைவாழந்தணராகிய மூவாயிரவரைக் குறிக்க ஆயிரத்திற்கு ஒருவர் என்ற முறையில் அந்தணர் மூவர் திருவுருவம் முதற்கண் இடம் பெற்றிருத்தலையும் நோக்குங்கால், இராசராசபுரத் திருக் கோயிற் சிற்பத்திற்கும் திருப்பனந்தாளிலுள்ள இச்சிற்பத் திற்கும் நெருங்கிய தொடர்புண்மை இனிது விளங்கும் இங்கு அப்பூதியடிகளைக் குறித்தமைந்த சிற்பத்தில் அப் பூதியார் மனைவியார் விடந்தீண்டியிறந்த தம் மைந்தனைப் பாயிற் சுருட்டுதலும், மைந்தனைத் தீண்டிய பாம்பு படம் விரித்த நிலையில் வாழையிற் சுற்றிக் கொண்டுள்ளமையும் அப்பூதியார் மகனார் மூத்த திருநாவுக்கரசு அப்பரடிகளை அமுது செய்வித்தற்கென வாழையிலையினை அரியும் நிலையில் விடந்தீண்டியிறந்து திருநாவுக்கரசரால் உயிர் பெற் றெழுந்த வரலாற்றை அறிவுறுத்தும் வரலாற்றுச் சான் ருதல் காணலாம்.

சர்க்கை 3

திருஞான சம்பந்த சுவாமிகள் தேவாரம்
ரலாற்றுமுறைத் திருப்பதிகத் தல அட்டவணை

தலம்	பதிக முதற் குறிப்பு	பண்	திருமுறை	பதிக எண்	புராணச் செய்யுள்
ப்பிரமபுரம்	தோடுடைய செவியன்	நட்ட	1	1	76
ம்	நறவ நிறைவன்	தக்கேசி	1	74	88
லக்கா	மடையில் வாளை	தக்க	1	23	102
ு	பூவார் கொன்றை	,,	1	24	107
பள்ளி	காரைகள் கூகை	பிய. கா	2	84	115
ச்சங்காடு	நலச் சங்க	காந்தாரம்	2	55	119-20
ம்புரம்	கொடியுடை மும்மதில்	பழம் பஞ்சு	3	103	120
லவனீச்சரம்	அடையார் தம்புரம்	தக்கேசி	1	65	121
,,	பரசு பாணியர்	பழம் பஞ்சு	3	112	121
ய்க்காடு	மண்புகார்	சீகாமரம்	2	41	122
,,	நித்தலுந் நியமஞ்	இந்தளம்	2	38	123
ண்காடு	கண்காட்டு நுதலானும்	சீகாமரம்	2	48	126
,,	உண்பாய் நஞ்சை	காந்தாரம்	2	61	,,
,,	மந்திர மறையவை	கா. பஞ்சம	3	15	,,
ழைத் திருக்-காட்டுப்பள்ளி	செய்யருகே	நட்ட	1	5	,,
தன்-ருமுல்லைவாயில்	துளிமண்டியுண்டு	பிய. கா	2	88	127
யேந்திரப் பள்ளி	திரைதரு பவளமும்	கொல்லி	3	31	129
தன் திருமுல்லை வாயில்	—	...	–	—	129
லிக்காமூர்	மடல் வரையின்	பழம் பஞ்சு	3	105	—
ருகாவூர்	சுண்ண வெண்ணீறணி	அந். குறிஞ்	3	124	129

திருத்தில்லை	கற்றுங்கெரி யோம்பி	குறிஞ்சி	1	80	162
வேட்களம்	அந்தமு மாதியுமாகிய	தக்க	1	39	166
கழிப்பாலை	புனலாடிய புன்	இந்தளம்	2	21	167
,,	வெந்தகுங் கிலியப்புகை	கௌசிகம்	3	44	167
நெல்வாயில்-திருவுச்சி	புடையினர் புள்ளி	இந்தளம்	2	26	167
தில்லை	ஆடினாய் நறுநெய்	கா. பஞ்சம	3	1	174
எருக்கத்தம்-புலியூர்	படையார் தரு பூதப்	குறிஞ்சி	1	89	179
முதுகுன்றம்	மத்தாவரை நிறுவி	நட்ட	1	12	181
,,	தேவராயு மசுரராயும்	பழந்தக்க	1	53	,,
,,	நின்று மலர்தூவி	குறிஞ்சி	1	93	182
,,	மெய்த்தாறு சுவையும்	மே. குறிஞ்சி	1	131	,,
,,	தேவாசிறியோம்	காந்தாரம்	2	64	182
,,	வண்ணமாமலர்	கொல்லி	3	34	182
,,	முரசதிர்ந் தெழுதரு	சாதாரி	3	99	183
பெண்ணகடம்	ஒடுங்கும் பிணி	பழந்தக்க	1	59	184
நெல்வாயில் அரத்துறை	எந்தை யீசன்	பிய. கா	2	90	213
நெல் வெண்ணெய்	நல் வெண்ணெய்	சாதாரி	3	96	229
பழுவூர்	எண்ணுமொ ரெழுத்தும்	இந்தளம்	2	34	237
விசயமங்கை	கீதமுன்னிசைதரக்	கா. பஞ்சம	3	17	239
வைகா	கோழை மிடருக	சாதாரி	3	71	240
புறம்பயம்	மறம் பயமலைந்தவர்	இந்தளம்	2	30	241
சேய்ஞலூர்	நூலடைந்த	பழந்தக்க	1	48	248
பனந்தாள்	கண்பொலிநெற்றி	பஞ்சமம்	3	62	250
பந்தணை நல்லூர்	இடறினர் கூற்றை	புற நீர்மை	3	121	250
ஓமாம்புலியூர்	பூங்கொடி மடவாள்	,,	3	122	251
வாள்கொளி-புத்தூர்	பொடியுடைமார்பினர்	தக்க	1	40	252
,,	சாகையாயிர முடையார்	பிய. கா	2	94	252
கடம்பூர்	வானமர் திங்களும்	காந்தாரம்	2	68	252

ரயூர்	உரையினில் வந்த	பிய. கா	2	86	253
,	காம்பினை வென்ற	பழம் பஞ்சு	3	102	253
,	கடலிடை வெங்கடு	,,	3	107	253
பறியலூர்	சுற்றமொடு பற்றவை	இந்தளம்	2	31	255
(பொது)	துஞ்சலுந்துஞ்ச	கா. பஞ்சம	3	22	266
புரம்	காடதணிகலம்	வியாழக்	1	117	276
	யா மாமா நீ	கௌசிகம்	3	117	276
புரம்	சுரருலகு	சாதாரி	3	67	276
ங்குரு	விண்ணவர் தொழு	,,	3	94	276
புரம்	பிரமபுரத்துறை	வியாழக்	1	127	276
,,	அரனையுள்குவீர்	குறிஞ்சி	1	90	276
,, (பொது)	கல்லால் நீழல்	கொல்லி	3	40	276
,,	ஒருருவாயினை	வியாழக்	1	128	276
,,	வரமதேகொளா	பழம்பஞ்சு	3	110	276
தராய்	தக்கன் வேள்வி	கா. பஞ்சம	3	5	276
ரி	இயலிசை யெனும்	,,	3	3	277
மலம்	பிறையணிபடர்	நட்ட	1	19	277
ரி	முன்னிய கலைப்	இந்தளம்	2	29	277
ரபை	எந்தமது	சாதாரி	3	75	277
ரணிபுரம்	சங்க மரு	,,	3	81	277
வம்	பெண்ணியலுரு	,,	3	84	277
மபுரம்	விளங்கிய சீர்ப்	காந்தாரம்	2	73	277
,,	பூமகனூர்	,,	2	74	277
ரஞ்ஞர் கோயில்	தண்ணுர் திங்கள்	குறிஞ்சி	1	101	285
ளிருக்குந்திரு வேளூர்	கள்ளார்ந்த	சீகா	2	43	286
ன்றியூர்	சூலம்படை	நட்ட	1	18	287
ந்ர் ர்கூர்	முந்தி நின்ற	தக்க	1	27	287
ன்னிப் படிக்கரை ன்னியூர்	மன்னியூரிறை	குறிஞ்சி	1	96	289

குறுக்கை					289
பந்தணை நல்லூர்					,,
மணஞ்சேரி	அயிலாரும்	இந்தளம்	2	16	290
எதிர்கொள் பாடி					,,
திருத்துருத்தியும் வேள்விக்குடியும்	ஓங்கி மேலுழி	சாதாரி	3	90	291
கோடிகா	இன்று நன்று	நட்டரா	2	99	292
கஞ்சனூர்					,,
மாந்துறை					293
மங்கலக்குடி	சீரினார் மணியும்	இந்தளம்	2	10	293
வியலூர்	குரவங்கமழ்	நட்ட	1	13	294
திருந்து தேவன்குடி	மருந்து வேண்டிலிவை	கொல்லி	3	25	295
இன்னம்பர்	எண்டிசைக்கும்	சாதாரி	3	95	297
வடகுரங்காடு துறை	கோங்கமே குரவமே	,,	3	91	298
பழனம்	வேதமோதி	தக்கேசி	1	67	299
ஐயாறு	புலனைந்தும்	மே. குறிஞ்சி	1	130	301
,,	கோடல் கோங்கம்	இந்தளம்	2	6	303
பெரும்புலியூர்	மண்ணுமோர் பாகம்	காந்தாரம்	2	67	304
நெய்த்தானம்	மையாடிய	நட்ட	1	15	305
மழபாடி	அங்கையாரழல்	கௌசிகம்	3	48	306
,,	களையும்வல்வினை	இந்தளம்	2	9	307
,,	காலையார் வண்டினம்	கொல்லி	3	28	307
கானூர்	வானார் சோதி	தக்கேசி	1	73	308
அன்பிலா லந்துறை	கணை நீடெரிமால்	தக்கரா	1	33	308
வடகரை மாந்துறை	செம்பொனார் தரு	நட்டரா	2	110	309
திருப்பாச்சிலாச் சிராமம்	துணிவளர் திங்கள்	தக்கரா	1	44	318
திருப்பைஞ்ஞீலி	ஆரிடம் பாடிலர்	கா. பஞ்சம	3	14	322
திருஈங்கோய் மலை	வானத்துயர் தண்	தக்கேசி	1	70	323
கொடிமாடச் செங்குன்றூர்	வெந்த வெண்ணீறணிந்து	வியாழக்	1	107	326

ணு	பந்தார் விரல் மடவாள்	காந்தாரம்	2	72	327
. மாடச் ங்குன்றூர் பாது)	அவ்வினைக்கிவ்வினை	வியா. குறி	1	116	335
ாடிக் ாடுமுடி	பெண்ணமர் மேனியரும்	காந்தாரம்	2	69	338
ந்சமாக்கூடல்					,,
யூர்த் ருவானிலை	தொண்டெலாமலர்	இந்தளம்	2	28	339
ளிக்கவெற்பு பாட்போக்கி)					,,
ய்த்துறை	நீறு சேர்வதோர்	மே. குறிஞ்சி	1	135	341
வாலந்துறை நச்செந்துறை					342
குடி மாமலை	வடந்திகழ் மென்முலையாளை	தக்கரா	1	43	343
க்கீச்சரம் உறையூர்)	சாந்தம் வெண்ணீ	செவ்வழி	2	120	343
நச்சிராப் பள்ளி	நன்றுடையானை	குறிஞ்சி	1	98	344
நவானைக்கா	மழையார்மிடறு	இந்தளம்	2	23	345
,,	வானைக்காவில்	கௌசிகம்	3	53	—
ருக்கயிலாயம் னைக்கா ருமயேந்திரம் ருவாரூர்	மண்ணதுவுண்டரி	பழம்பஞ்சு (கூடசதுக்கம்)	3	109	346
வத்துறை (லால்குடி)					347
ாற்றுறை	காரார் கொன்றை	பழந்தக்க	1	56	348 348
றும்பியூர்					349
நெடுங்களம்	மறையுடையாய்	,,	1	52	,,
நியமம்					
மேலைத்திருக் காட்டுப்பள்ளி	வாருமன்னும்முலை	கொல்லி	3	29	350
கடைமுடி (திருச் சின்னம்பூண்டி)	அருத்தனையறவனை	வியாழக்	1	111	
திருவாலம் பொழில்					351

திருப்பூந்துருத்தி					351
கண்டியூர்	வினவினே னறியாமையில்	கொல்லி	3	38	352-3
சோற்றுத்துறை	செப்பநெஞ்சே	தக்கரா	1	28	354
வேதிகுடி	நீறுவரியாடர வோடாமை	சாதாரி	3	78	357
வெண்ணி	சடையானைச்	இந்தளம்	2	14	359
தென்குடித் திட்டை	முன்னை நான்மறை	கொல்லி	3	35	—
சக்கரப்பள்ளி	படையினார் வெண்மழுப்	,,	3	27	362
புள்ள மங்கை திருவாலந் துறை	பாலுந்துறுதிரளாயின	நட்ட	1	16	363-4
சேலூர்					364
பாலைத்துறை					364
நல்லூர்	கொட்டும்பறைசீராற்	குறிஞ்சி	1	86	369-70
,,	பெண்ணமருந் திருமேனி	காந்தாரம்	2	57	
,,	வண்டிரிய விண்ட	சாதாரி திருவிராகம்	3	83	
கருகாவூர்	முத்திலங்கு முறுவல்	கௌசிகம்	3	46	372
அவளிவ ணல்லூர்	கொம்பிரியவண்டுலவு	சாதாரி	3	82	374
பரிதி நியமம்	விண்கொண்டதூமதி	பழம் பஞ்சு	3	104	375
பூவனூர்					,,
ஆவூர்ப் பசுப தீச்சரம்	புண்ணியர் பூதியர்	நட்ட	1	8	377
நல்லூர்					,,
திருவலஞ்சுழி	விண்டெலாமலரவ்	இந்தளம்	2	2	382
,,	என்ன புண்ணியஞ்	நட்டரா	2	106	383
,,	பள்ளமதாய படர்சடை	பழம் பஞ்சு	3	106	383
பழையாறை- மேற்றளி					390
திருச்சத்தி- முற்றம்					391
திருப்பட்டீச்சரம்	பாடன்மறை	சாதாரி	3	73	397
பழையாறை- வடதளி					399

நக்கருக்குடி (ருதா நல்லூர்)	நனவிலும்	கா. பஞ்சம	3	21	—
ரும்பூளை	சீரார்கழலே	இந்தளம்	2	36	402
ரதைப்-பெரும்பாழி	பைத்தபாம் போடரைக்	கொல்லி	3	30	403
நச்சேறை	முறியுறு நிறமல்கு	சாதாரி	3	86	403
நநாலூர்-மயானம்	பாலூரு மலைப்பாம்பும்	சீகா	2	46	403
டவாயில்	திகழுந்திருமாலொடு	இந்தளம்	2	22	403
,,	கலைவாழுமங்கையார்	காந்தாரம்	2	58	403
றையூர்ச்சித்-தீச்சரம்	ஊருலாவு பலி	தக்கரா	1	29	403
,,	பிறைகொள் சடையர்	தக்கேசி	1	71	403
,,	நேரியனுகுமல்லன்	பிய. கா	2	87	403
ரிசிற் கரைப் புத்தூர்	மின்னுஞ்சடை மேலிள	காந்தாரம்	2	63	403
வபுரம்	புவம்வளிகனல்	நட்ட	1	21	404
,,	இன்குரலிசை கெழும்	வியாழக்	1	112	404
,,	கலைமலியகலல்குல்	,,	1	125	404
ருக்குடமூக்கு	அரவிரிகோடல்	பஞ்சமம்	3	59	407
ழ்க்கோட்டம்					408
டந்தைக் காரோணம்	வாரார் கொங்கை	தக்கேசி	1	72	410
ரகேச்சரம்	பொன்னேர்தரு	இந்தளம்	1	24	411
,,	தழைகொள் சந்தும்	செவ்வழி	2	119	,,
ருவிடைமருது	ஓடேகலன்	தக்கரா	1	32	413
,,	தோடொர் காதினன்	குறிஞ்சி திரு. குறள்	1	95	,,
,,	மருந்தவன் வானவர்	வியாழக்	1	110	,,
,,	நடைமருதிரிபுரம்	,, திரு. குறள்	1	121	,,
,,	விரிதருபுலியுரி	,,	1	122	,,
,,	பொங்குநூல் மார்பினீர்	காந்தாரம்	2	56	,,
தன்குரங்-காடுதுறை	பரவக்கெடும் வல்வினை	இந்தளம்	2	35	416

ஆவடுதுறை	இடரினுந்தளரினும்	கா. பஞ்சமம்	3	4	424
					425
கோழம்பம்	நீற்றுனை நீள்சடை	இந்தளம்	2	13	432
வைகல் மாடக் கோயில்	துளமதியுடைமறி	கா. பஞ்சம	3	18	433
திருநல்லம்	கல்லால் நிழல்மேய	குறிஞ்சி	1	85	434
சிறுகுடி	திடமலி	சாதாரி	3	97	—
அழுந்தூர் மாடக் கோயில்	தொழு மாறுவல்லார்	இந்தளம்	2	20	435
திருத்துருத்தி	வரைத்தலைப் பசும் பொன்	நட்டரா	2	98	436
மூவலூர்					437
மயிலாடுதுறை	கரவின்றிநன்	தக்கரா	1	38	439
,,	ஏன வெயிருடரவோ	சாதாரி	3	70	439
செம்பொன் பள்ளி	மருவார்குழலி	தக்கரா	1	25	440
விளநகர்	ஒளிரிளம்பிறை	காந்தாரம்	3	78	440
பறியலூர் வீரட்டம்	கருத்தன் கடவுள்	மே. குறிஞ்சி	1	134	442
திருவேட்டக்குடி	வண்டிரைக்கும்	பஞ்சமம்	3	66	443
தருமபுரம்	மாதர் மடப்பிடியும்	யாழ்முரி	1	136	447
திருநள்ளாறு	போகமார்த்த பூண் முலையாள்	பழந்தக்க	1	49	456
,,	ஏடுமலிகொன்றை	இந்தளம்	2	33	458
திருச்சாத்த மங்கை அயவந்தி	திருமலர்க்கொன்றை மாலை	பஞ்சமம்	3	58	464
நாகைக் காரோணம்	புனையும் விரிகொன்றை	குறிஞ்சி	1	84	466
,,	கூனற்றிங்கட் குறுங் கண்ணி	செவ்வழி	2	116	466
சிக்கல்	வானுலாவும்	இந்தளம்	2	8	467
கீழ்வேளூர்	மின்னுலாவிய சடையினர்	நட்டரா	2	105	467
செங்காட்டங்குடி	பைங்கோட்டுமலர்ப் புன்னை	பஞ்சமம்	3	63	470
திருமருகல்	சடையாயெனுமால்	இந்தளம்	2	18	482
,,	அங்கமும் வேதமும்	நட்ட	1	6	486

					487
சங்காட்டங்குடி	நறைகொண்ட மலர்	பழந்தக்க	1	61	—
ராமன தீச்சரம்	சங்கொளிர் முன்கையர்	வியாழக்	1	115	488
கலூர்	வெங்கள் விம்மு	செவ்வழி	2	115	490
,, வர்த்த மானீச்சரம்	பட்டம்பால்நிற	பிய. கா	2	92	491
ற்குடி வீரட்டம்	வடிகொள் மேனியர்	நட்டரா	2	108	497
ருஆரூர்	பாடலன் நான் மறையன்	வியாழக்	1	105	497
,,	பருக்கையானை மத்தகத்	நட்டரா	2	101	499
,,	சித்தந் தெளிவீர்கள்	குறிஞ்சி	1	91	500
,,	அந்தமாயுலகாதியும்	கௌசிகம்	3	45	507
					512
,, அரனெறி					513
ளிவலம்	ஒல்லையாறி	பழந்தக்க	1	50	515
,,	பூவியல்புரிகுழல்	வியாழக்	1	123	515
கொளிலி	நாளாய போகாமே	பழந்தக்க	1	62	515
திருவாரூர்	பவனமாய்ச் சோடையாய்	காந்தாரம்	2	79	518
திருப்பனையூர்	அரவச்சடைமேல்	தக்கேசி	1	37	519
திருப்புகலூர்					522
,,	குறிகலந்த இசை	நட்ட	1	2	524
அம்பர் மாகாளம்	அடையார்புர மூன்றும்	குறிஞ்சி	1	83	530
,,	புல்கு பொன்னிறம்	நட்டரா	2	103	532
,,	படியுளார் விடையினர்	சாதாரி	3	93	—
அம்பர்ப்பெருந் திருக்கோயில்	எரிதர அனல் கையில்	கா. பஞ்சமம்	3	19	532
திருக்கோட்டாறு	கருந்தடங் கண்ணி	சீகாமரம்	2	52	—
,,	வேதியன்	கா. பஞ்சமம்	3	12	533
திருக்கடவூர் வீரட்டம்	சடையுடையானும்	கா. பஞ்சமம்	3	8	534
கடவூர்த்திருமயானம்	வரிய மறையார்	காந்தாரம்	2	80	535

திருவாக்கூர்	அக்கிருந்த ஆரமும்	சீகா	2	42	537
திருமீயச்சூர்	காயச் செவ்விக்	காந்தாரம்	2	62	537
பாம்புரம்	சீரணிதிகழ்தரு	தக்கரா	1	41	538
வீழிமிழலை	அரையார் விரிகோ வணவாடை	தக்கேசி	1	35	542
,,	சடையார்புனலுடை யான்	நட்ட	1	11	545
,,	தடநிலவிய	நட்ட	1	20	—
,,	இரும்பொன்	குறிஞ்சி	1	82	—
பேணு பெருந் துறை	பைம்மா நாகம்	தக்கேசி	1	42	549
திலதைப்பதி முற்றம்	பொடிகள் பூசிப்	செவ்வழி	2	118	549
வீழிமிழலை திருப்புகலியும் திருவிழி மிழலையும்	மைம்மருபூங் குழல்	நட்ட	1	4	556–7
,,	வாசிதீரவே	குறிஞ்சி	1	92	570
,,	அலர்மகள்	வியாழக்	1	124	—
,,	ஏரிசையும்	மே. குறிஞ்சி	1	132	—
,,	கேள்வியர்	கா. பஞ்சம	3	9	—
,,	சீர்மருவு	சாதாரி	3	80	—
,,	மட்டொளி	,,	3	85	—
,,	வெண்மதி	,,	3	98	
,,	வேலினேர்தரு	,	3	111	—
,,	துன்றுகொன்றை	பழம் பஞ்	3	116	—
,,	புள்ளித்தோ	புறநீர்	3	119	—
திருவாஞ்சியம்	வன்னி கொன்றை மதமத்தம்	இந்தளம்	2	7	573
தலையாலங்காடு					573
பெருவேளூர்	அண்ணாவுங்கமுக் குன்றும்	பஞ்சமம்	3	64	573
தனிச்சாத் தங்குடி					573
கரவீரம்	அரியும் நம்வினை	பழந்தக்க	1	58	357
விளமர்	மத்தக மணிபெற	சாதாரி	3	88	573

வாரூர்					—
ங்காருயில்	நீரானே நீள்சடை	இந்தளம்	2	15	574
பூர்	பண்ணிலாவிய	காந்தாரம்	2	82	574
	காடுபயில் வீடு	சாதாரி	3	74	574
ல்லிக்கா	அறத்தாலுயிர்	இந்தளம்	2	19	574
ச்சினம்	தையலோர் கூறுடையான்	சீகா	2	45	574
ங்கூர்	புரைசெய்வல்வினை	பிய. கா	2	93	574
ள்ளிக்காடு	நிணம்படுசுடலையின்	கா. பஞ்ம	3	16	574
ட்டூர்	நீலமார்தரு கண்டனே	நட்டரா	2	109	574
ண்டுறை	ஆதியனாதிரையன்	பஞ்சமம்	3	61	575
ாடலை- ;ணைறி	விரும்புந் திங்களும்	கௌசிகம்	3	50	575
;க்களர்	நீருளார் கயல்	சீகா	2	51	575
;ச்சிற்றேமம்	நிறைவெண்டிங்கள்	கொ. கௌ	3	42	—
;மறைக்காடு	சிலைதனை நடு விடை	நட்ட	1	22	585
,,	சதுரம் மறை	இந்தளம்	2	37	587
;வாய்மூர்	தளரிளவளரென	நட்டரா	2	111	596
;மறைக்காடு	பொங்கு வெண்மணற்	பிய. கா	2	91	598
தவனம்	கற்பொலி சுரத்தினெரி	சாதாரி	3	76	—
,, (பொது)	வேயுறு தோளிபங்கன்	பிய. கா	2	85	616
;அகத்தியான் பள்ளி	வாடிய வெண்டலை மாலை	காந்தாரம்	2	76	622
ாடிக்குழகர்					622
க்குளம்	பொடி கொள் மேனிவெண்	நட்டரா	2	104	623
ும்பாவனம்	மனமார் தருமடவாரொடு	நட்ட	1	17	,,
;வுசாத்தானம்	நீரிடைத்துயின்றவன்	கொல்லி	3	33	624
;க்கொடுங் குன்றம்	வானிற் பொலி	நட்ட	1	14	630
; ஆலவாய்	மங்கையர்க்கரசி	புறநீர்மை	3	120	663
,,	நீலமாமிடற்றால வாயிலான்	குறிஞ்சி	1	94	667

திரு ஆலவாய்	செய்யனே	கௌசிகம்	3	51	702-4
,,	காட்டுமாவதுரித்துரி	,,	3	47	738-9
,,	வேதவேள்வியை நிந்தனே	பழம் பஞ்சு	3	108	739-40
,, திருப்பிரம புரம் பன்னிரு பெயர்ப்பற்று	பிரமனூர் வேணுபுரம்	காந்தாரம்	2	70	753-4
,,	மானினேர் விழி மாதராய்	கொல்லி	3	39	760
,,	மந்திரமாவது நீறு	காந்தாரம்	2	66	764
,, (திரு நள்ளாறு)	தளிரிளவளரொளி	சாதாரி	3	87	784
பொது	வாழ்க அந்தணர்	கௌசிகம்	3	54	818-47
,, திருஏடகம்	வன்னியும் மத்தமும்	கொல்லி	3	32	850
திருவாலவாய்	வீடலாலவாயிலாய்	கௌசிகம்	3	52	865-6
,,	ஆலநீழலுகந்த திருக்கையே	பழம் பஞ்சு	3	115	870
,, (கழுமலம்)	மண்ணினல்ல வண்ணம்	கொல்லி	3	24	879-80
திருப்பரங்குன்றம்	நீடலர் சோதி	குறிஞ்சி	1	100	885
ஆப்பனூர்	முற்றுஞ் சடைமுடி	,,	1	88	885
திருப்புத்தூர்	வெங்கள் விம்மு	தக்கராகம்	1	26	885
பூவணம்	அறையார் புனலும்	தக்கேசி	1	64	886
,,	மாதமர் மேனியனாகி	கா. பஞ்சம	3	20	886
கானப்பேர்	பிடியெலாம் பின்செலப்	கொல்லி	3	26	886
சுழியல்					886
குற்றாலம்-குறும்பலா	வம்பார்குன்றம்	குறிஞ்சி	1	99	886
,,	திருந்தமதிசூடி	காந்தாரம்	2	71	886
நெல்வேலி	மருந்தவை மந்திரம்	சாதாரி	3	92	887
திருவிராமேச்சரம்	அலைவளர் தண்மதி	கா. பஞ்சம	3	10	889
,,	திரிமரு மாமணி	பழம் பஞ்சு	3	101	898
,, (ஈழநாட்டுத்) திருக்கோணமலை	நிரைகழலரவஞ்	புறநீர்மை	3	123	890

,, மாதோட்டக் கேதீச்சரம்	விருதுகுன்றமா மேருவில்	நட்டரா	2	107	890
திருவாடானை	மாதொர்கூறுகந் தேற தேறிய	நட்டரா	2	112	891
திருப்புனவாயில்	மின்னியல் செஞ்சடை	கா. பஞ்சம	3	11	891
மணமேற்குடி					892
திருக்களர்					896
பாதாளீச்சரம்	மின்னியல் செஞ்சடை	வியாழக்	1	108	896
திருக்கொள்ளம் பூதூர்	கொட்டமே கமழும்	கா. பஞ்சம	3	6	898
திருநள்ளாறு (திருநள்ளாறும் திருவாலவாயும்)	பாடகமெல்லடி	நட்ட	1	7	902
தெளிச்சேரி	பூவலர்ந்தன கொண்டு	இந்தளம்	2	3	904
திருக்கடவூர்					927
திருப்பூந்துருந்தி நெய்த்தானம், ஐயாறு,					
	கலையார்மதி	தக்க	1	36	949
	பணிந்தவரரு	வியாழக்	1	120	949
	திருத்திகழ்	இந்தளம்	2	32	949
பழனம்					
திருக்கழுமலம்	உற்றுமை சேர்வது	பழம் பஞ்சு	3	113	954
தில்லைமூதூர்					962
திருத்தினைநகர்					,,
திருச்சோபுரம்	வெங்கணானை	பழந்தக்க	1	51	—
திருமாணிகுழி	பொன்னியல் பொருப்பரையன்	சாதாரி	3	77	962
திருப்பாதிரிப் புலியூர்	முன்னநின்ற முடக்கால் முயற்கு	செவ்வழி	2	121	963
வடுகூர்	சுடுகூரெரி மாலை	குறிஞ்சி	1	87	963
வக்கரை	கறையணி மா மிடற்றான்	பஞ்சமம்	3	60	964
இரும்பை மாகாளம்	மண்டு கங்கை	செவ்வழி	2	117	,,
திருவதிகை வீரட்டம்	குண்டைக் குறட்பூதம்	தக்கரா	1	46	965

திருவாமாத்தூர்	குன்றவார்சிலை	சீகா	2	50	967
,,	துன்னம் பெய்	சீகா	2	44	967
திருக்கோவலூர்	படைகொள் கூற்றம்	நட்ட	2	100	968
அறையணி நல்லூர்	பீடினாற் பெரியோர்களும்	காந்தாரம்	2	77	,,
,, திரு அண்ணாமலை	உண்ணாமலையுமையாளொடும்	நட்ட	1	10	969-70
திருவண்ணாமலை	பூவார் மலர்கொண்டு	தக்கேசி	1	69	972
திருவோத்தூர்	பூத்தேர்ந்தாயன	பழந்தக்க	1	54	979-80
மாகறல்	விங்குவிளை	சாதாரி	3	72	984
குரங்கணின் முட்டம்	விழுநீர் மழுவாட்	தக்கரா	1	31	985
காஞ்சி-திருவேகம்பம்	மறையானை	இந்தளம்	2	12	995
அறப்பெருஞ் செல்வக் காமக் கோட்டம்					998
திருவேகம்பம்	பாயுமால் விடை	பஞ்சு பழம்	3	114	—
,,	கருவார்கச்சித்	கொல்லி	3	41	,,
,,	வெந்தவெண்பொடிப்	மே. குறிஞ்சி	1	133	—
கச்சிநெறிக் காரைக்காடு	வாரணவு	பஞ்சமம்	8	65	1000
அநேகதங்காவதம்					,,
திருமேற்றளி					1001
மாற்பேறு	ஊறியார்தரு	பழந்தக்க	1	55	1002
,,	குருந்தவன்	வியாழக்	1	114	,,
திருவல்லம்	எரித்தவன் முப்புரம்	,,	1	113	1003
இலம்பயங்கோட்டூர்	மலையினார் பருப்பதந்	குறிஞ்சி	1	76	1004
திருவிற்கோலம்	உருவினாருமையொடும்	கா. பஞ்சம	3	23	1005
தக்கோலம்-திருவூறல்	மாறிலவுணரரணம்	வியாழக்	1	106	1006
கள்ளில்	முள்ளின்மேல்	,,	1	119	1007
பழையனூர்த் திருவாலங்காடு	துஞ்ச வருவார்	(தக்கரா)பழம் பஞ்சு	1	45	1010
ஊர்	சிந்தையிடையார்	காந்தாரம்	2	60	1012

திருக்காரிகரை					1015
திருக்காளத்தி	வானவர்கள் தானவர்கள்	சாதாரி	3	69	1020-21
,, வடகயிலை	பொடிகொளுருவர்	தக்கேசி	1	68	1026
,, ,,	வாளவரிகோளபுலி	சாதாரி	3	68	,,
,, கேதாரம்	தொண்டரஞ்சு களிறு மடக்கி	செவ்வழி	2	114	,,
,, கோகரணம்	என்று பரியான்	சாதாரி	3	79	1027
,, திருப்பருப் பதம்	சுடுமணியுமிழ்நாகம்	வியாழக்	1	118	1027
,, இந்திரநீல பருப்பதம்	குலவுபாரிடம்	இந்தளம்	2	27	,,
,, அநேகங் காபதம்	நீடல்மேவு நிமிர்	,,	2	5	,,
திருக்காளத்தி	சந்தமாரகிலொடு	கொல்லி	3	36	1028
திருவேற்காடு	ஒள்ளிதுள்ளக்	பழந்தக்க	1	57	1030
வலிதாயம்	பத்தரோடு பலரும்	நட்ட	1	3	,,
ஒற்றியூர்	விடையவன் விண்ணு மண்ணும்	பஞ்சமம்	3	57	1031
திருமயிலை	மட்டிட்ட புன்னையங் கானல்	சீகா	2	47	1085-91
திருவான்மியூர்	கரையுலாவுங் கடலிற்	இந்தளம்	2	4	1123
,,	விரையார் கொன்றை யினாய்	பஞ்சமம்	3	55	1125
இடைச்சுரம்	வரிவளரவிரொளி	குறிஞ்சி	1	78	1128
திருக்கழுக்குன்று	தோடுடையானொரு காதிற்	,,	1	103	1131
அச்சிறுபாக்கம்	பொன்றிரண்டன்ன	,,	1	77	1133
அரசிலி	பாடல்வண்டறை	பியா. கா	2	95	1135
புறவார் பனங் காட்டூர்	விண்ணமர்ந்தன	சீகா	2	53	1135
திருத்தில்லை சீகாழி	வண்டார் குழலரிவை யொடும்	நட்ட	1	9	1146-7
(புகலி)	பந்துசேர் விரலாள்	கா. பஞ்சம	3	2	
,,	நம் பொருணமக்க ளென்று	நட்ட	2	97	1148
,,	விதியாய் விளை	தக்கரா	1	30	

காழி	அடலேறமரும்	,,	I	34
சிரபுரம்	பல்லடைந்த	பழந்தக்க	I	47
தோணிபுரம்	வண்டரங்கப்	,,	I	60
பிரமபுரம்	எரியார் மழு	தக்கேசி	I	63
சண்பை	பங்க மேறு	,,	I	66
வெங்குரு	காலைநன்மாமலர்	குறிஞ்சி	I	75
கழுமலம்	அயிலுறுபடை	,,	I	79
காழி	நல்லார்தீமேவும்	,,	I	81
புறவம்	எய்யாவென்றித்	,,	I	97
காழி	உரவார் கலையின்	,,	I	102
புகலி	ஆடலரவசைத்தான்	வியாழக்	I	104
சிரபுரம்	வாருறு முலை	,,	I	109
கழுமலம்	பந்தத்தால்	வியாழக்	I	126
,,	சேவுயருந்	மே. குறிஞ்சி	I	129
பூந்தராய்	செந்நெலங்	இந்தளம்	II	1
காழி	நல்லானை	,,	II	11
வேணுபுரம்	நிலவும் புனலும்	,,	II	17
புகலி	உகலியாழ்	,,	II	25
,, (பொது)	ஆரூர்தில்லையம்பலம்	,,	II	39
பிரமபுரம்	எம்பிரானெனக்	சீகா	II	40
காழி	பண்ணினேர்மொழி மங்கை	,,	II	49
புகலி	உருவார்ந்த	காந்தாரம்	II	54
காழி	நலங்கொள்	,,	II	59
பிரமபுரம்	கறையணிவேலிலர்	,,	II	65
காழி	விண்ணியங்கு	,,	II	75
வேணுபுரம்	பூதத்தின் படை	,,	II	81
கொச்சைவயம்	நீலநன் மாமிடற்றன்	பிய. கா	II	83
,,	அறையும் புனலும்	,,	II	89
காழி	பொங்குவெண்புரி	,,	II	96
சிரபுரம்	அன்னமென்னடை	நட்டரா	II	102
காழி	பொடியிலங்குந்	செவ்வழி	II	113
புகலி	விடையதேறி	,,	II	122

,,	கண்ணுதலானும்	கா. பஞ்சம	III	7	
பூந்தராய்	மின்னன எயிறு	,,	III	13	
பிரமபுரம்	கரமுனம் மலராற்	கொல்லி	III	37	
காழி	சந்தமார்முலை	கௌசி	III	43	
பிரமபுரம்	இறையவனீச னெந்தை	பஞ்சமம்	III	56	
கொச்சைவயம்	திருந்துமாகளிற்றிள	சாதாரி	III	89	
தோணிபுரம்	கரும்பமர் வில்லி	பழம்பஞ்சு	III	100	
கழுமலம்	மடல் மலிகொன்றை	புறநீர்மை	III	118	
நல்லூர்ப் பெருமணம்	கல்லூர்ப் பெருமணம்	அந்தாளிக் குறிஞ்சி	III	125	1245
பொது	காதலாகிக்	கௌசிகம்	III	49	1247

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம் வரலாற்றுமுறைத் திருப்பதிகத் தல அட்டவணை

தலம்	பதிக முதற்குறிப்பு	பண்	திருமுறை	பதிகம்	பெரிய புராணம் திருநாவுக்கரசர் புராணச் செய்யுள்
திருவதிகை வீரட்டானம்	கூற்றாயினவாறு	கொல்லி	4	1	70
(பொது) மறுமாற்றத் திருத்தாண்டகம்	நாமார்க்கும்	திருத்	6	98	93
,, தனித்திருக்குறுந்தொகை	மாசில் வீணையும்	திருக்	5	90	98, 99
திருவதிகை வீரட்டானம்	சுண்ணவெண்	காந்தாரம்	4	2	115
(பொது) நமச்சிவாயத் திருப்பதிகம்	சொற்றுணைவேதியன்	கா பஞ்சம	4	11	126
திருப்பாதிரிப் புலியூர்	ஈன்றாளுமாய்	திருவிருத்	4	94	134
திருமாணிகுழி திருத்தினைநகர் }	இத்தலங்களைப்பாடிய பதிகங்கள் கிடைக்கவில்லை				135
திருவதிகை வீரட்டானம்	வெறிவிரவு	ஏழைத் திருத்	6	3	143
,,	முளைக்கதிரிளம்	கா. பஞ்சம	4	10	144
,,	இரும்பு கொப்பளித்த	கொ. திரு	4	24	144
,,	வெண்ணிலா	திருநேரிசை	4	25	144
,,	நம்பனே எங்கள்	,,	4	26	144
,,	மடக்கினார்	,,	4	27	144
,,	முன்பெலாம்	,,	4	28	144
,,	மாசிலொள்வாள்	திருவிருத்	4	104	144
,,	கோணன்மா	திருக்	5	5	144
,,	எட்டுநாண்மலர்	திருக்	5	54	144
திருவதிகை வீரட்டானம்	சந்திரனைமா நாகம்	திருத்	6	4	144
,,	எல்லாஞ்சிவனென்ன	,,	6	5	144
,,	அரவணையான்	,,	6	6	144

,,	செல்வப்புனற்	திருத்	6	7	144
திருமுண்டீச்சுரம்	ஆர்த்தான்	திருத்	6	85	147
திருவெண்ணெய் நல்லூர்	இத்தலப்பதிகம் கிடைக்கவில்லை				148
திருவாமாத்தூர்	மாமாத்தாகிய	திருக்	5	4	148
,,	வண்ணங்கள் தாம்பாடி	திருத்	6	9	148
திருக்கோவலூர்	செத்தையேன்	திருநே	4	69	148
திருத்தூங் கானைமாடம்	பொன்னார்திருவடிக்கு	திருவிருத்	4	109	151
திருநெல் வாயி லரத்துறை	கடவுளைக்	திருக்	5	3	154
திருமுதுகுன்றம்	கருமணியை	திருத்	6	68	154
கோயில் (தில்லை)	கருநட்டகண்டனை	திருவிருத்	4	81	168
,,	பத்தனாய்ப்பாட	திருநே	4	23	169
,,	அன்னம்பாலிக்கும்	திருக்	5	1	171
திருவேட்களம்	நன்றுநாடொறும்	,,	5	42	172
திருக்கழிப்பாலை	வனபவளவாய்	காந்	4	6	173
,,	நங்கையைப்	திருநே	4	30	173
,,	நெய்தற்குருகு	திருவிருத்	4	106	173
,,	வண்ணமும்	திருக்	5	4	173
,,	ஊனுடுத்தி	திருத்	6	12	173
கோயில்	பனைக்கைமும்மத	திருக்	5	2	174
,,	அரியானை	திருத்	6	1	175
,,	செஞ்சடைக்கற்றை	திருநே	4	42	176
,,	பாலையுடைக்	திருவிருத்	4	80	176
,,	மங்குன்மதி	திருத்	6	2	176
திருநாரையூர்	விறுதானுடை	திருக்	5	55	179
,,	சொல்லானை	திருத்	6	74	179
திருக்கழுமலம்	பார்கொண்டுமூடி	திருவிருத்	4	82	187
,,	படையார்மழு	,,	4	83	187
,,	மாதியன்று	திருக்	5	45	187
திருக்கோலக்கா	இத்தலப்பதிகம் கிடைக்கவில்லை				189
திருக்கருப் பறியலூர்	,,	,,			189

திருக்குரக்குக்கா	மரக்கொக்காமென	திருக்	5	75	189
திருப்புள்ளிருக்கு வேளூர்	வெள்ளெருக்கும்	,,	5	79	189
,,	ஆண்டானை	திருத்	6	54	189
திருப்புன் கூரும் திருநீடூரும்	பிறவாதே தோன்றிய	,,	6	11	189
திருக்குறுக்கை வீரட்டம்	ஆதியிற் பிரமனுர்	திருநே	4	49	189
,,	நெடியமால்	,,	4	50	189
திருநின்றியூர்	கொடுங்கண்	திருக்	5	23	189
திருநனிபள்ளி	முற்றுணையாயினனை	திருநே	4	70	189
திருவலம்புரம்	தெண்டிரை	,,	4	55	189
,,	மண்ணளந்த	திருத்	6	58	189
திருச்சாய்க்காடு	தோடுலாமலர்	திருக்	5	64	189
,,	வானத்திளமதி	திருத்	6	82	189
திருவெண்காடு	பண்காட்டிப்	திருக்	5	49	189
,,	தூண்டுசுடர்மேனி	திருத்	6	35	189
திருச்செம்பொன் பள்ளி	ஊனினுளுயிரை	திருநே	4	29	190
,,	கானருத	திருக்	5	36	190
திருமயிலாடு துறை	கொள்ளுங்காதன்மை	திருக்	5	39	190
திருத்துருத்தி	பொருத்திய குரம்பை	திருநே	4	42	190
திருவேள்விக்குடி திருவெதிர் கொள்பாடி					190
(திருமணஞ் சேரி)	பட்டநெற்றியர்	திருக்	5	87	190
பந்தணைநல்லூர்	நோதங்கமில்லாதார்	திருத்	6	10	190
அன்னியூர்	பாறலைத்த	திருக்	5	8	190
கடம்பூர்	தளருங்கோளர	,,	5	19	190
,,	ஒருவராயிரு	,,	5	20	190
ஓமாம்புலியூர்	ஆராருமூவி	திருத்	6	88	190
ஆப்பாடி	கடலகமேழினோடு	திருநே	4	48	190
மங்கலக்குடி	தங்கலப்பிய	திருக்	5	73	190
கஞ்சனூர்	மூவிலைநற்	திருத்	6	90	190

கோடிகா	நெற்றிமேற்	திருநே	4	51	190
,,	சங்குலாமுன்	திருக்	5	78	190
,,	கன்றலஞ்சேர்	திருத்	6	81	190
திருக்கோழம்பம்	வேழம்பத்தைவர்	திருக்	5	64	190
திருஆவடுதுறை	நம்பனை நால்வேத	திருத்	6	46	191
,,	நிறைக்கவாலியா	திருக்	5	29	191
,,	மஞ்சனேமணி	திருநே	4	57	191
,,	திருவேயென்	திருத்	6	47	191
திருத்தென் குரங் காடுதுறை	இரங்காவன் மனத்	திருக்	5	63	191
திருஇடைமருதூர்	பாசமொன்றில	,,	5	14	192
,,	காடுடைச்	திருநே	4	35	192
,,	பறையின்ஓசை	திருக்	5	15	192
,,	சூலப்படை	திருத்	6	16	192
,,	ஆறுசடைக்	திருத்	6	17	192
திருநாகேச்சரம்	கச்சை சேர்	திருநே	4	66	192
,,	நல்லர் நல்ல	திருக்	5	52	192
,,	தாயவனை	திருத்	6	66	192
பழையாறு திருச்சத்தி முற்றம்	கோவாய் முடுகி	திருவிருத்	4	96	194
திருநல்லூர்	நினைந்துருகும்	திருத்	6	14	196
,,	அட்டுமின்இல் பலி	திருவிருத்	4	97	198
திருக்கருகாவூர்	குருகாம் வயிரமாம்	திருத்	6	15	197
திருஆவூர்	—				198
திருப்பாலைத் துறை	நீலமாமணி	திருக்	5	51	198
திருஅவளிவ ணல்லூர்	தோற்றினான்	திருநே	4	59	—
திருவெண் ணியூர்	முத்தினை	திருக்	5	17	—
,,	தொண்டிலங்	திருத்	6	59	—
திருப்பூவனூர்	பூவனூர்	திருக்	5	65	—
திருநல்லூர்					198
திருப்பழனம்	ஆடினார்ஒருவர்	திருநே	4	36	199

திருப்பழனம் திங்களூர்	ஒன்றுகொலாம்	இந்தளம்	4	18	208
திருப்பழனம்	சொன்மாலை	பழந் தக்க	4	12	211
திருச்சோற்றுத் துறை	பொய்விரா	திருநே	4	41	212
,,	காலை எழுந்து	திருவிருத்	4	85	212
,,	கொல்லையே	திருக்	5	33	212
,,	மூத்தவனாய்	திருத்	6	44	212
திருவேதிகுடி	கையதுகாலெரி	திருவிருத்	4	90	—
திருக்கண்டியூர்	வானவர்தான	,,	4	93	—
திருப்பழனம்					212
,,	மேவித்து	,	4	87	212
,,	அருவனாய்	திருக்	5	35	212
,,	அலையார் கடல்	திருத்	6	36	212
திருநல்லூர்					213
பழையாறை பலதளி					215
திருவலஞ்சுழி	ஓதமார் கடலின்	திருக்	5	66	215
,,	அலையார்புனற்	திருத்	6	72	215
திருவலஞ்சுழியும் திருக்கொட்டையூரும்	கருமணிபோல்	,,	6	73	215
திருக்குடமூக்கு	பூவணத்தவன்	திருக்	5	22	215
குடந்தைக் கீழ்க் கோட்டம்	சொன்மலிந்த	திருத்	6	75	215
நாலூர்					216
திருச் சேறை	பெருந்திரு	திருநே	4	73	216
,,	பூரியாவரும்	திருக்	5	77	216
குடவாயில்					216
நறையூர்ச்சித் தீச்சரம்					216
திருச்சிவபுரம்	வானவன் காண்	திருத்	6	87	—
திருஅரிசிற் கரைப் புத்தூர்	முத்தூரும்	திருக்	5	61	—
திருக்கடுவாய்க் கரைப் புத்தூர்	ஒருத்தனை மூவுல	திருக்	5	62	—

திருவாஞ்சியம்	படையும் பூதமும்	திருக்	5	67	216
திருப்பெரு வேளூர்	மறையணி நாவி	திருநே	4	60	217
திருவிளமர்					217
திருவாரூர்	குலம்பலம்பா	திருவிருத்	4	101	220
,,	கற்றவர்க ளுண்ணுங்	திருத்	6	32	222
,,	காண்டலே கருத்தாய்	சீகா	4	20	223
,,	மெய்யெலாம்	காந்	4	5	224
,,	பாடிளம் பூதத்	,,	4	4	226
,,	வேம்பினைப்	திருவிருத்	4	102	227
திருவாரூர் – அரனெறி	எத்தீபுகினும்	இந்	4	17	227
,,	பொருங்கைமத	திருத்	6	33	227
திருவாரூர்	சூலப்படை	சீகா	4	19	227
,,	படுகுழிப்பவ்	திருநே	4	52	
,,	குழல்வலங்	,,	4	53	
,,	எப்போதும்	திருக்	5	6	
,,	கொக்கரை	திருக்	5	7	
,,	கைமான	திருத்	6	24	
,,	உயிராவணம்	திருத்	6	25	
,,	பாதித்தன்	,,	6	26	
,,	நீற்றினையும்	,,	6	28	
,,	திருமணியை	,,	6	29	226
,,	எம்பந்த	,,	6	30	226
,,	இடர்கெடுமா	,,	6	31	226
,,	ஒருவனாய்	,,	6	34	226
திருவலிவலம்	நல்லான்காண்	,,	6	48	228
திருக்கீழ்வேளூர்	ஆளான அடியார்	,,	6	67	228
திருக்கன்றாப்பூர்	மாதினையோர்	,,	6	61	228
திருவாரூர்					228
திருப்பயற்றூர்	உரித்திட்டார்	திருநே	4	32	230
திருப்பள்ளியின் முக்கூடல்	ஆராத இன்னமுத	திருத்	6	69	230

திருப்புகலூர் (திருவாரூர்)	முத்துவிதான	குறிஞ்சி	4	21	235
திருப்புகலூர்	துன்னக் கோவண	திருக்	5	46	239
திருச்செங் காட்டங்குடி	பெருந்தகையை	திருத்	6	84	240
திருநள்ளாறு	உள்ளாறுத	திருக்	5	68	240
,,	ஆதிக்கண்ணான்	திருத்	6	20	240
திருச்சாத்த மங்கை					240
திருமருகல்	பெருகலாந்தவம்	திருக்	5	88	240
திருப்புகலூர்					242
திருஅம்பர்					
திருக்கடவூர் வீரட்டம்	பொள்ளத்த	திருநே	4	31	247
,,	மருள்துயர் தீர	திருவிருத்	4	107	247
,,	மலைக்கொளானை	திருக்	5	37	247
,, மயானம்	குழைகொள்	திருக்	5	38	248
திரு ஆக்கூர்	முடித்தாமரை	திருத்	6	21	249
திருமீயச்சூர் இளங்கோயில்	தோற்றுங் கோயிலும்	திருக்	5	11	249
திருவீழிமிழலை	போரானை யீருரி	திருத்	6	50	259
,,	பூதத்தின்படை	திருநே	4	64	259
,,	வான் சொட்டச்	திருவிருத்	4	95	259
,,	என்பொனே	திருக்	5	13	259
,,	கயிலாய மலை	திருத்	6	51	259
,,	கண்ணவன் காண்	,,	6	52	259
,,	மானேறு	,,	6	53	259
திருக்கொண்டீச் சரம்	வரைகிலேன்	திருநே	4	67	263
,,	கண்டபேச்சினிற்	திருக்	5	70	263
திருவாஞ்சியம்					,,
திருத்தலையாலங் காடு	தொண்டர்க்கு	திருத்	6	79	263
திருப்பேரெயில்	மறையும் ஓதுவர்	திருக்	5	16	263
திருமறைக்காடு	பண்ணினேர் மொழி யாளுமை	,,	5	10	268
,,	இந்திரனோடு	திருநே	4	33	270

திருமறைக்காடு	தேரையும் மால்	,,	4	34	270
,,	ஓதமால் கடல்	திருக்	5	9	270
,,	தூண்டுகடரனைய	திருத்	6	23	270
திருவாய்மூர்	எங்கேயென்னை	திருக்	5	50	277
,,	பாடஅடியார்	திருத்	6	77	281
திருமறைக்காடு திருக்கோளிலி	மைக்கொள் கண்டன்	திருக்	5	56	,, —
,,	முன்னமே	,,	5	57	—
திருநாகைக் காரோணம்	மனைவிதாய்	திருநே	4	71	291
,,	வடிவுடை	திருவிருத்	4	103	291
,,	பாணத்தால்	திருக்	5	83	291
,,	பாரார் பரவும்	திருத்	6	22	291
திருவீழிமிழலை	கரைந்து	திருக்	5	12	291
திருவன்னியூர்	காடுகொண்ட	,,	5	26	—
திருக்கருவிலிக் கொட்டிட்டை	மட்டிட்ட குழலார்	,,	5	69	—
திருநல்லம்	கொல்லத்தான்	,,	5	43	—
திருநீலக்குடி	வைத்த மாடும்	,,	5	72	—
திருஆவடுதுறை	மாயிருஞாலமெல்லாம்	திருநே	4	56	293
திருப்பழையாறை வடதளி	தலையெலாம்	திருக்	5	58	300
திருஇன்னம்பர்	விண்ணவர்மகுட	திருநே	4	72	301
,,	மன்னுமலை மகள்	திருவிருத்	4	100	—
,,	என்னிலாரும்	திருக்	5	21	—
,,	அல்லிமலர்	திருத்	6	89	—
திருப்புறம் பயம்	கொடிமாட	,,	6	13	—
திருவிசயமங்கை	குசையுமங்கையிற்	திருக்	5	71	—
திருவாலம் பொழில்	கருவாகி	திருத்	6	86	—
திருக்கானூர்	திருவின்நாத	திருக்	5	76	—
திருக்காட்டுப் பள்ளி	மாட்டுப்பள்ளி	,,	5	84	—
திரு அன்பிலா லந்துறை	வானஞ்சேர்	,,	5	80	—

திரு ஆனைக்கா	கோனைக்காவி	,,	5	31	302
,,	எத்தாயர்	திருக்	6	62	302
,,	முன்னானை	,,	6	63	302
திரு எறும்பியூர்	விரும்பியூறு	திருக்	5	74	302
,,	பன்னிய செந்தமிழ்	திருத்	6	91	302
திருச்சிராப் பள்ளி	மட்டுவார்குழலா ளொடு	திருக்	5	85	302
திருக்கற்குடி	மூத்தவனை	திருத்	6	60	302
திருப்பராய்த் துறை	கரப்பர் காலம்	திருக்	5	30	302
திருக்கடம்பந் துறை	முற்றிலா முலை	,,	5	18	—
திருவாட் போக்கி	காலபாசம்	,,	5	[illegible]6	—
திருப்பைஞ்ஞீலி	உடையர்கோவணம்	,,	5	41	310
திருப்பாண்டிக் கொடுமுடி	சிட்டனை	திருக்	5	81	—
திருஅண்ணாமலை	ஓதி மாமலர்கள்	திருநே	4	63	313
,,	வட்டனைம்	திருக்	5	4	313
,,	பட்டியேறுகந்	,,	5	5	313
திருவோத்தூர்	பதிகங்கள் கிடைக்கவில்லை				316
திருக்கச்சி ஏகம்பம்	கரவாடும்	காந்	4	7	323
,,	நம்பனை நகர	திருநே	4	44	325
,,	ஓதுவித்தாய்	திருவிருத்	4	99	325
,,	பண்டு செய்த	திருக்	5	47	325
,,	பூமேலானும்	,,	5	48	325
திருக்கச்சி மயானம்					325
,, திருமேற்றளி	மறையதுபாடி	திருநே	4	43	326
திருமாற்பேறு	மாணிக்குயிர்	திருவிருத்	4	108	327
,,	பொருமால்	திருக்	5	59	327
,,	ஏதுமொன்றும்	,,	5	60	327
,,	பாரானைப்	திருத்	6	80	327

திருக்கச்சி ஏகம்பம்	கூற்றுவன் காண்	,,	6	64	328
,,	உரித்தவன் காண்	,,	6	65	328
திருக்கழுக் குன்று	மூவிலை வேற்கை	,,	6	92	329
திருவான்மியூர்	விண்டமாமலர்	திருக்	5	82	331
திருமயிலாப்பூர்					—
திருவொற்றியூர்	வண்டோங்கு	திருத்	6	45	336
,,	செற்றுக்களிற்	திருவிருத்	4	86	337
,,	ஒற்றியூரு	திருக்	5	24	337
,,	வெள்ளத்தை	திருநே	4	45	337
,,	ஓம்பினேன்	,,	4	46	337
திருப்பாசூர்	முந்தி மூவெயிலெய்த	திருக்	5	25	340
,,	விண்ணாகி	திருத்	6	83	340
திரு ஆலங்காடு	ஒன்று உலகனைத்து	,,	6	78	342
,,	வெள்ளநீர்ச்	திருநே	4	68	342
திருக்காரிகரை					343
திருக்காளத்தி	விற்றூணொன்	திருத்	6	8	345
திருப்பருப்பதம்	கன்றினார்பு	திருநே	4	58	349
திருக்கோகரணம்	சந்திரனுந்	திருத்	6	49	350
மாளவம்					351
இலாடபூமி					352
மத்தியபைதிரம்					,,
வாரணாசி					353
கற்கரம்					,,
திருவையாறு					371
திருக்கயிலாயம்	வேற்றாகி விண்ணாகி	திருத்	6	55	380
,,	பொறையுடைய பூமி	,,	6	56	380
,,	பாட்டான நல்ல	,,	6	57	380
,,	கனகமா வயிர	திருநே	4	47	380
திருவையாறு	மாதர்ப்பிறைக்	காந்	4	3	384
,,	ஆரார்திரிபுரம்	திருத்	6	37	385

திருவையாறு	ஓசையொலியெலாம்	,,	6	38	385
,,	சிந்தைவாய்தல்	திருக்	5	27	385
,,	சிந்தைவண்ண	,,	5	28	385
,,	கங்கையைச்	திருநே	4	38	385
,,	குண்டனாய்ச்	,,	4	39	385
,,	தானலாதுலக	,,	4	40	385
,,	குறுவித்தவா	திருவிருத்	4	91	385
,,	சிந்திப்பரியன	,,	4	92	385
,,	அந்திவட்ட	,,	4	98	385
,,	விடகிலேன்	பழந்தக்க	4	13	385
திருநெய்த் தானம்	காலனைவிழ	திருநே	4	37	386
,,	பாரிடஞ்சாடி	திருவிருத்	4	89	386
,,	கொல்லியான்	திருக்	5	34	386
,,	வகையெலாம்	திருத்	6	41	386
,,	மெய்த்தானத்	,,	6	42	386
திருமழபாடி	நீறேறு திருமேனி	,,	6	39	386
,,	அலையெடுத்த	,,	6	40	386
திருப்பூந்துருத்தி	நில்லாத நீர்	,,	6	43	388
,,	கொடிகொள்	திருக்	5	32	388
,,	மாலினைமாலு	திருவிருத்	4	88	389
திருப்பூந் துருத்தி:— பலவகைத் திருத் தாண்டகம்	நேர்ந்தொருத்தி	திருத்	6	93	390
பரவுந்தனித் தாண்டகம்	ஆமயந்தீர்த்	,,	6	96	390
அடைவு திருத் தாண்டகம்	பொருப்பள்ளி	,,	6	71	390
திரு அங்கமாலை	தலையே நீ வணங்காய்	சாதாரி	4	9	390
எல்லையில் பன் மைத் தொகை					
தனித்திருக் குறுந்தொகை	ஒன்று வெண்	திருக்	5	89	390
,,	ஏயிலானை	,,	5	91	390
காலபாசத்திருக் குறுந்தொகை	கண்டுகொள்ளரியானைக்	,,	5	92	390

மறக்கிற்பனே ,,	காசனைக்கனை	,,	5	93	390
தொழற் பாலதே ,,	அண்டத்தா	,,	5	94	390
இலிங்க புராணம் ,,	புக்கணைந்து	,,	5	95	390
மனத்தொகைத் ,,	பொன்னுள்ளத்	,,	5	96	390
சித்தத் தொகைத்	சிந்திப்பார்	,,	5	97	390
உள்ளத் தொகைத் ,,	சிறலைத்த	,,	5	98	390
பாவநாசத் ,,	பாவமும்பழி	,,	5	99	390
ஆதிபுராணத் ,,	வேதநாயகன்	,,	5	100	390
திருப்புத்தூர்	புரிந்தமரர்	திருத்	6	76	402
மதுரைத் திரு ஆலவாய்	முளைத்தானை	,,	6	19	404
,,	வேதியா வேத	திருநே	4	62	406
திருப்பூவணம்	வடிவேறுதிரி	திருத்	6	18	407
திருவிரா மேச்சுரம்	பாசமுங்கழிக்க	திருநே	4	61	409
திருநெல்வேலி					410
திருக்கானப்பேர்					410
திருப்புகலூர்	செய்யர் வெண்ணூலர்	இந்தளம்	4	16	413
,,	பகைத்திட்டார்	திருநே	4	54	413
நின்ற திருத் தாண்டகம்	இருநிலனாய்த்	திருத்	6	94	414
தனித்திருத் தாண்டகம்	அப்பன்நீ	,,	6	95	414
மன்றுறைவார் வாழ்பதிகள் வழுத்து திருத் தாண்டகம் (க்ஷேத்திரக் கோவை)	தில்லைச் சிற்றம்பலம்	,,	6	70	414
குறைந்த திரு நேரிசை	வென்றிலேன்	திருநே	4	78	414
,,	தம்மானங்	,,	4	79	414
தனித்திரு நேரிசை	தொண்டனேன்	,,	4	75	414

தனித்திரு நேரிசை	மருளவா	,,	4	76	414
,,	கடும்பகல்	,,	4	77	414
நினைந்த திரு நேரிசை	முத்தினை	,,	4	74	414
ஆருயிர்த் திரு விருத்தம்	எட்டாந்திசை	திருவிருத்	4	84	415
தசபுராணத் தடைவு	பருவரை யொன்று	பழம்பஞ்சுரம்	4	14	415
பாவநாசத் திருப்பதிகம்	பற்றற்றார் சேர்	,,	4	15	415
நேர்பட நின் றறை கூவுந் திருப்பதிகம்	சிவனெனு மோசை	பிய. கா	4	8	415
பசுபதி திரு விருத்தம்	சாம்பலைப் பூசி	திருவிருத்	4	110	415
சரக்கறைத் ,,	விடையும்	,,	4	111	415
தனித் ,,	வெள்ளி	,,	4	112	415
தனித் ,,	பவளத்	,,	4	113	415
வினாவிடைத் திருத்தாண்டகம்	அண்டங்கடந்த	திருத	6	97	415
திருவாரூர்	பொய்ம்மாயப்	,,	6	27	423
திருப்புகலூர்	தன்னைச்சரணென்று	திருவிருத்	4	105	426
,,	எண்ணுகேன்	திருத்	6	99	42"

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்
வரலாற்றுமுறைத் திருப்பதிகத் தல அட்டவணை

தலம்	பதிக முதற் குறிப்பு	பண்	திருமுறை	பதிக எண்	புராணச் செய்யுள்
		தடுத்தாட் கொண்ட புராணம்			
திருவெண்ணெய் நல்லூர்	பித்தா பிறை சூடி	இந்தளம்	7	1	74
					78
திருநாவலூர்					79
திருத்துறையூர்	மலையாருவித்	தக்கரா	7	13	88
திருவதிகை	தம்மானையறியாத	கொ. கௌ	7	38	90
திருமாணிகுழி					91
திருத்தினைநகர்	நீறுதாங்கிய	தக்கேசி	ஃ 7	64	107
(கோயில திருத்தில்லை)					113
திருக்கழுமலம்	சாதலும் பிறத்தலும்	,,	7	58	114
திருக்கோலக்கா					115
திருப்புன்கூர்					116
மயிலாடுதுறை					116
அம்பர் மாகாளம					117
திருப்புகலூர்					123
திருவாரூர்	கரையும் கடலும்	காந்	7	73	126
	(இன்னிசைவண் தமிழ் மாலை)				199
	தில்லைவாழந்தணர்	கொ. கௌ	7	39	
		ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம்			
திருக்கோளிலி	நீள நினைந்தடியேன்	நட்டரா	7	20	20
					30
திருவாரூர் (பதிகள் பல)					33
திருநாட்டியத் தான் குடி	பூணாணவதோர்	தக்கரா	7		
திருவலிவலம்	ஊனங்கத்துயிர்ப்	தக்கேசி	7		

திருப்புகலூர்	தம்மையே புகழ்ந்து	கொல்லி	7	34	51
திருப்பனையூர்	மாட மாளிகை	சீகா	7	87	53
திருவாரூர்					54
(ஆரூர் மருங்கு அணிய கோயில் பல)					55
திருநன்னிலத்துப் பெருங்கோயில்	தண்ணியல் வெம்மை	பஞ்சமம்	7	98	56
திருவீழிமிழலை	நம்பினார்க்கருள்	சீகா	7	88	59
திருவாஞ்சியம்	பொருவனார்புரி	பிய. கா	7	76	60
திருநறையூர்ச் சித்தீச்சரம்	நீரும் மலரும்	குறிஞ்சி	7	93	61
அரிசிற்கரைத் திருப்புத்தூர்	மலைக்கு மகளஞ்ச	இந்தளம்	7	9	62
திருஆவடுதுறை	மறையவனொரு	தக்கேசி	7	66	63
திரு இடைமருது	கழுதை குங்குமம்	,,	7	60	65
திருநாகேச்சரம்	பிறையணி வாணுதலாள்	பஞ்சமம்	7	99	65
திருச்சிவபுரம்					65
(பிறபதிகள்)					65
திருக்கலய நல்லூர்	குரும்பை முலை	தக்கரா	7	16	67
திருக்குடமூக்கு					
திருவலஞ்சுழி					
திருநல்லூர்					
திருச்சோற்றுத் துறை	அழல் நீரொழுகி	குறிஞ்சி	7	94	70
திருக்கண்டியூர்					71
திருவையாறு					71
திருப்பூந்துருத்தி					71
திருவாலம் பொழில்					71
திருமழபாடி	பொன்னார்மேனியனே	நட்டரா	7	24	73-4
திருவானைக்கா	மறைகளாயின	காந்	7	75	76-7
திருபாச்சிலாச் சிராமம்	வைத்தனன்	தக்கரா	7	14	80-1
திருப்பைஞ்ஞீலி	காருலாவிய	கொல்லி	7	36	84

திருப்பாண்டிக் கொடுமுடி	மற்றுப் பற்றெனக்	பழம்பஞ்சுரம்	7	48	89-91
காஞ்சிவாய்ப் பேரூர்					
வெஞ்சமாக் கூடல்	எறிக்குங்கதிர்	கொ. கௌ	7	42	92
திருக்கற்குடி	விடையாருங்	நட்டரா	7	27	92
திருஆறை மேற்றளி					93
திரு இன்னம்பர்					95
திருப்புறம்பயம்	அங்கமோதியோர்	கொல்லி	7	35	96
திருக்கூடலை யாற்றூர்	வடிவுடை மழுவேந்தி	புறநீர்மை	7	85	103
திருமுதுகுன்றம்	நஞ்சியிடையின்று	கொ. கௌ	7	43	105
,,	மெய்யை முற்றப்	தக்கேசி	7	63	106
திருக்கடப்பூர்					111
கோயில் (திருத்தில்லை)	மடித்தாடு மடிமைக்கண்	குறிஞ்சி	7	90	115
திருக்கருப்பறிய லூர்	சிம்மாந்து	நட்டரா	7	30	117
திருமண்ணிப் படிக்கரை	முன்னவனெங்கள் பிரான்	,,	7	22	118
திருவாழ்கொளி புத்தூர்	தலைக்கலன்றலை	தக்கேசி	7	57	118
திருக்கானாட்டு முள்ளூர்	வள்வாயமதிமிளிரும்	கொ. கௌ	7	40	120
திருவெதிர் கொள்பாடி	மத்தயானை	இந்தளம்	7	7	121
திருவேள்விக்குடி	மூப்பதுமில்லை	நட்டரா	7	18	121
திருவாரூர் (முதுகுன்றம்)	பொன்செய்த மேனியினீர்	,,	7	25	132
,,	பாறுதாங்கிய	கொல்லி	7	33	140-41
திருநன்னாறு	செம்பொன்மேனி	தக்கேசி	7	68	142-43
திருக்கடவூர் மயானம்	மருவார் கொன்றை	பழம் பஞ்சு	7	53	145-6
திருக்கடவூர் வீரட்டம்	பொடியார்மேனியனே	நட்டரா	7	29	146
திருவலம்புரம்	எனக்கினித்	காந்	7	72	147

திருச்சாய்க்காடு					148
திருவெண்காடு	படங்கொணுகஞ்	இந்தளம்	7	6	148
திருநனி பள்ளி	ஆதியனுதிரையன்	பஞ்சமம்	7	97	149
திருச்செம்பொன் பள்ளி					149
திரு நின்றியூர்	அற்றவனுரடியார்	,,	7	19	149
,,	திருவும் வண்மையும்	தக்கேசி	7	65	150
திரு நீடூர்	ஊர்வதோர் விடை	,,	7	56	151–52
திருப்புன்கூர்					153
திருக்கோலக்கா	புற்றில்வாளரவார்த்த	,,	7	62	153 4
திருச்சண்பை					155
திருக்குருகாவூர்	இத்தனையாமாற்றை	நட்டராக	7	29	163
திருக்கழிப்பாலை	செடியேன் தீவினையின்	,,	7	23	166
திருத்தில்லை					166
திருத்தினை நகர்					167-8
திருநாவலூர் பிறபதியும்	கோவலனன்முகன்	,,			170
திரு இடையாற்றுத் தொகை	முந்தையூர்	கொல்லி	7	31	172
திருக்கழுக்குன்று	கொன்று செய்த	நட்ட	7	81	173
திருக்கச்சூராலக் கோயில்	முதுவாயோரி	கொல்லிக் கௌவாணம்	7	41	182
காஞ்சி ஏகாம்பரம், கச்சிநகர் ஆலயங்கள்					185 9
காமக்கோட்டம் கச்சித்திரு மேற்றளி	நொந்தாவொண் சுடரே	நட்டராக	7	21	190
,, ஓணகாந்தன் தளி	நெய்யும் பாலும	இந்தளம	7	5	191
,, அநேகதங்காவதம	தேனெய்புரிந்	,,	7	10	192
திரு வன்பார்த்தான் பனங்காட்டூர்	விடையின் மேலவ	சீகாமரம	7	86	194
திருமாற்பேறு					195
திருவல்லம்					195

திருக்காளத்தி	செண்டாடும் விடையாய்	நட்டரா	7	26	197
திருப்பருப்பதம்	மானும் மறை	நட்ட	7	79	198
திருக்கேதாரம்	வாழ்வாவது	,,	7	78	198
திருவொற்றியூர்	பாட்டும் பாடிப்	குறிஞ்சி	7	91	204
,,	பத்திமையும்	பழம்பஞ்சுரம்	7	51	272
,,	அழுக்குமெய்கொடுன்	தக்கேசி	7	54	276
திருமுல்லை வாயில்	திருவுமெய்ப் பொருளும்	,,	7	69	277-8
திருவெண் பாக்கம்	பிழையுளன பொறுத்	சீகா	7	89	280
திருவாலங்காடு (எல்லை)	முத்தா முத்தி	பழம்பஞ்சுரம்	7	52	283
திருவூறல்					283
காஞ்சிமாநகர்					283
திருக்காமக் கோட்டம்					284
திருவேகம்பம்	ஆலந்தானுகந்	தக்கேசி	7	61	288
காஞ்சியிலிருந்து புறப்படும் நிலையில்	அந்தியும் நண்பகலும்	புறநீர்மை	7	83	29
திரு ஆமாத்தூர்	காண்டனன்	கொ. கௌ	7	45	292
திருநெல்வாயி லரத்துறை	கல்வாயகிலும்	இந்தளம்	7	3	294
திருஆவடுதுறை	கங்கைவார்சடையாய்	தக்கேசி	7	70	296
திருத்துருத்தி	மின்னுமா மேகங்கள்	காந்	7	74	300
திருவாரூர்ப் பரவையுண் மண்டளி	தூவாயா	கௌசிகம்	7	96	303
,, திருமூலட் டானம்	குருகுபாயக்	கொல்லி	7	37	305
,,	மீளாவடிமை	செந்துருத்தி	7	95	309
திருப்புன்கூர்	அந்தணாளன்	தக்கேசி	7	55	406

பெரிய - கழறிற்றறிவார் புராணம்

திருநாகைக் காரோணம்	பத்தூர் புக்கிரந்	கொ. கௌ	7	46	63
திரு கீழ்வேளூர்					87

திருநாகைக் காரோணம்					85
திருமறைக்காடு	யாழைப்பழித்	காந்	7	71	87
திரு அகத்தியான் பள்ளி					88
திருக்கோடிக் குழகர்	கடிதாய்க் கடற்	கொல்லி		32	89
திருப்புத்தூர்					90
மதுரைத் திரு ஆலவாய்					93
திருப்பூவணம்	திருவுடையார்	இந்தளம்	7	11	98
மதுரை					100
திரு ஆப்பனூர்					101
திரு ஏடகம்					101
திருப்பரங் குன்றம்	கோத்திட்டையும்	இந்தளம்	7	2	103-4
திருக்குற்றாலம்					106
(திருக்குறும்பலா)					107
திருநெல்வேலி					108
திருவிராமீச்சரம்					109
,, திருக்கேதீச்சரம்	நத்தார் புடை	நட்ட	7	80	109
திருச்சுழியல்	ஊனாயுயிர்	,,	7	82	111
திருக்கானப்பேர்	தொண்டரடித்	புறநீர்மை		84	114
திருப்புனவாயில்	சித்த நீ நினை	பழம் பஞ்ச	7	50	118
பாம்பணி-பாதாளீச்சரம்					119-20
திருவாரூர்-ஏசறவாத் திருப்பதிகம்	இறைகளோடிசைந்த	இந்தளம்	7	8	122
திருநாட்டுத் தொகை	வீழக்காலனை	,,	7	12	
ஊர்த்தொகை	காட்டூர்க்கடலே	பழம் பஞ்ச	7	47	
திருக்கண்டியூர்					134
திருவையாறு	பரவும் பரிசொன்	கா. பஞ்சம	7	77	130
கொடுங்கோளூர் திருவஞ்சைக் களம்	முடிப்பது கங்கை	கொ. கௌ		44	146

,, (திருவாரூர் நினைந்து)	பொன்னுமெய்ப்	தக்கேசி	7	59	151
திருமுருகன் பூண்டி	கொடுகு வெஞ்சிலை வெள்ளானைச்சருக்கம்	பழம் பஞ்சு		49	170
திருவாரூர் திருப்புக்கொளி யூர் அவிநாசி	எற்றான் மறக்கேன்	குறிஞ்சி		92	10,11
திருவஞ்சைக் களம்	தலைக்குத்தலை மாலை	இந்தளம்	7	4	21
திருக்கயிலை	தானெனை முன் படைத்தான்	பஞ்சமம்	7	100	39–50

திருச்சிற்றம்பலம்

பொருட்குறிப்பகராதி

[எண் பக்க எண்]

‘அ’

அக்கினி 502
அகநானூறு 295
அச்சப்பத்து 198
அச்சோப்பதிகம் 222
அடைக்கலப்பத்து 183
அண்ணாமலை 705
அதிசயப் பத்து 186
அதிகன் 962
அதிசூரன் 906
அதிபத்த நாயனார் 964
அதிராவடிகள் 713
அந்தணன் 691
அநபாய சோழன் 797
அப்பாலும் அடிச்சார்ந்தார் 977
அப்பூதியடிகள் நாயனார் 934
அமர்நீதி நாயனார் 901
அரிவாட்டாய நாயனார் 914
அருட்பத்து 190
அற்புதத்திரு அந்தாதி 535
அற்புதப்பத்து 206
அன்னைப்பத்து 167
ஆசைப் பத்து 184
ஆயிரக்கால் மண்டபம் 816
ஆளுடையநம்பி ஸ்ரீ புராணம் 822
ஆளுடையபிள்ளையார் திருக்கலம்பகம் 785
ஆளுடையபிள்ளையார் திருத்தொகை 788
ஆளுடையபிள்ளையார் திருவுலாமாலை 782
ஆனந்த மாலை 221
ஆனாய நாயனார் 916
இசை ஞானியார் 986
இடங்கழி நாயனார் 970
இரண்டாம் ராசராசசோழன் 998
இயற்பகை நாயனார் 891
இளங்கோவடிகள் 826
இளம் பெருமானடிகள் 708
இளையான்குடிமாற நாயனார் 894
இறையனார்களவியலுரை 285
உண்மை விளக்கம் 502
உயிருண்ணிப்பத்து 195
உருத்திர பசுபதி நாயனார் 921
எச்சதத்தன் 929
எட்டாந்திருமுறை 1
எட்டுத்தொகை 699
எறிபத்த நாயனார் 903
எண்ணப்பதிகம் 211
ஏயர்கோன் கலிக்காம நாயனார் 943
ஏனாதிநாத நாயனார் 906
ஐயடிகள் காடவர்கோன் 545,966
ஒருதிரு அருட்பா 713
ஒன்பதாந்திருமுறை 347

“க”

கங்கையாறு 737
கச்சியப்ப முனிவர் 831
கண்டபத்து 193
கண்டராதித்தர் 388
கண்ணப்ப நாயனார் 908
கணநாத நாயனார் 959
கணம்புல்ல நாயனார் 966
கபிலதேவ நாயனார் 698
கயிலைபாதி காளத்திபாதி அந்தாதி 682
கருவூர்த்தேவர் 370
கல்லாட தேவர் 693
கல்லாடம் 92,93
கல்லாடக்கரம 696
கலிக்கம்ப நாயனார் 964
கலித்தொகை 313, 676
கலிய நாயனார் 965
கழற்சிங்க நாயனார் 969
கற்புடை நங்கை 648
காடவர் கோன் 555
காரெட்டு 677
காரி நாயனார் 967
காரைக்காலம்மையார் 519, 934
காவிரிப்பூம்பட்டினம் 718
கானப்பேர் 697
கீர்த்தித்திரு அகவல் 114; 695
குங்குலியக்கலய நாயனார் 911
குயிற்பத்து 168
குலச்சிறை நாயனார் 932
குலாப்பத்து 205
குழைத்தபத்து 195
குறுந்தொகை 294, 296
கூத்தப்பெருமான் 26
கூற்றுவ நாயனார் 960
கொடுங்கோளூர் 835

கோச்செங்கட்
சோழ நாயனார் 980
கோட்புலி நாயனார் 972
கோப்பெருஞ் சிங்கன் 818
கோபப்பிரசாதம் 663
கோயில் திருவிருத்தம் 769
கோயில்மூத்த திருப்பதிகம் 174
கோயில் நான் மணிமாலை 717

"ச"

சகோடயாழ் 1022
சகோடயாழ்த்தலைவர் 1022
சடைய நாயனார் 985
சண்டேசுர நாயனார் 926
சத்தி நாயனார் 966
சந்தனத்தாதியார் 953
சாக்கிய நாயனார் 949
சாத்தனார் 403
சித்தத்தைச் சிவன்பாலே
வைத்தார் 975
சிதம்பரம் 40, 431
சிதம்பர ரகசியம் 345
சிம்மவர்மன் 420
சிலப்பதிகாரம் 827
சிவகணநாதர் 47
சிவசருமர் 723
சிவஞானசித்தியார் 486
சிவஞான போதம் 343, 479, 481
சிவநேசர் 722
சிவப்பிரகாச சுவாமிகள்
77, 619, 936
சிவப்பிரகாசம் 105, 489
சிவபுராணம் 108
சிவபெருமான் 643, 836
சிவபெருமான் திருஅந்தாதி 703
சிவபெருமான்
திருமும் மணிக்கோவை 708
சிறப்புலி நாயனார் 950
சிவாகமங்கள் 403
சிறுத்தொண்ட நாயனார் 951
சிறுபாணாற்றுப்படை 313
சீகாழிப்பதி 74
சீராளதேவர் 952
சுசீலையம்மை 723
சுந்தரர் 403, 707, 835
சுந்தரன் 424
சூதன் 947
செத்திலாப்பத்து 181
செம்முறைக்கேள்வி 1022
செருத்துணை நாயனார் 971
சென்னிப்பத்து 207

சேக்கிழார் நாயனார் 793
சேக்கிழான் பாலறுவாயன் 821
சேக்கிழான் மாதேவடிகள்
ராமதேவனான உத்தம
சோழப்பல்லவராயன் 814
சேதிராயர் 347, 399, 400
சேந்தனார் 360
சேரமான் பெருமாள்
நாயனார் 557, 611, 959
சோமாசிமாற நாயனார் 948
சோழன் கோச்செங்கணான் 88

"த"

தஞ்சைப்பெருவுடையார் 348
தண்டியடிகள் நாயனார் 945
தத்தன் 899
தருமி 629
தாயுமானவப் பெருந்தகை 728
திண்ணப்பர் 687
திருஎழிருக்கை 382
திருக்கண்ணப்ப தேவர்
திருமறம் 685, 696
திருக்கண்ணப்பர் 693
திருக்கழிப்பாலை 705
திருக்கழுக்குன்றம் 21
திருக்கழுமல
மும்மணிக்கோவை 717, 743
திருக்களிற்றுப்படியார் 480, 481
திருக்காளத்தி 631
திருக்குறள்
314, 452, 453, 456, 686
திருக்குறிப்புத் தொண்ட
நாயனார் 925
திருக்கோடிகா 553
திருக்கோத்தும்பி 155
திருக்கோவை 296
திருச்சதகம் 122
திருச்சாழல் 158
திருச்சிற்றம்பலக்கோவை 224
திருஞானசம்பந்தர்
தேவாரம் 683
திருஞானசம்பந்தமூர்த்தி
நாயனார் 943
திருத்தசாங்கம் 169
திருத்தொண்டத் தொகை 835
திருத்தொண்டர்
திருஅந்தாதி 402, 558, 799
திருத்தொண்டர்
புராணம் 624, 826
திருத்தோணோக்கம் 389
திருநாகேச்சுரம் 39
திருநாவுக்கரசர் 550, 932

திருநாவுக்கரசர் திருவேகாதச மாலை 789
திருநாளைப்போவார் நாயனார் 921
திருநீலகண்டக் குயவ நாயனார் 886
திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார் 984
திருநீலநக்க நாயனார் 937
திருப்படையாட்சி 218
திருப்படையெழுச்சி 213
திருப்பரங்குன்றம் 622
திருப்பள்ளியெழுச்சி 171
திருப்பாண்டிப்பதிகம் 199
திருப்புலம்பல் 204
திருப்புலீச்சுரம் 39
திருப்பூவல்லி 160
திருப்பெருந்துறை 4
திருப்பெருந்துறைப் புராணம் 46
திருப்பொற் சுண்ணம் 151
திருப்பொன்னூசல் 165
திருமங்கையாழ்வார் 983
திரு மந்திரம் 343, 383, 431
திருமாளிகைத் தேவர் 347
திருமுகப்பாசுரம் 512, 518
திருமுருகாற்றுப்படை 669
திருமூல நாயனார் 338, 945
திருவண்டப்பகுதி 115
திருவதிகை 504
திருவம்மானை 148
திருவள்ளுவர் 713
திருவாசகம் 85, 629
திருவாவடுதுறை 412
திருவாதவூரடிகள் 1
திருவாதவூரர் திருவிளையாடற் புராணம் 2
ருவார்த்தை 209
ருவாரூர் 73
ருவாரூர்ப் பிறந்தார்கள் 975
ருவாலங்காட்டுமூத்த திருப்பதிகம் 582
ருவாலவாயிறைவர் 513
திருவாலவாயுடையார் 508, 511
திருவாலியமுதனார் 395
திருவாவினன்குடி 679
திருவிசைப்பா 89, 347, 370, 410
திருவிடை மருதூர் 372
திருவிடை மருதூர் மும்மணிக் கோவை 94, 717, 748
திருவிளையாடற் புராணம் 1, 514
திருவீங்கோய்மலை எழுபது 640
திருவுத்தரகோச மங்கை 21
திருவுத்தரகோச மங்கை புராணம் 44
திருவுந்தியார் 163, 420
திருவெண்காட்டடிகள் 717, 737
திருவெண்காட்டு நங்கை 952
திருவெண்பா 216
திருவெம்பாவை 139
திருவெழுகூற்றிருக்கை 656
திருவேகம்பமுடையார் திரு அந்தாதி 717, 756
திருவேசறவு 202
திருவையாறு 385
திருவொற்றியூர் 721
திருவொற்றியூர் ஒருபா ஒருபஃது 717, 762
திருவொற்றியூர் மும்மணிக் கோவை 653
தில்லை 406
தில்லைப்பதி 27
தில்லையம்பலம் 736
தில்லைவாழந்தணர் 884
திவாகரம் 294
தென்னவன் பிரமராயன் 6
தேவாரம் 322, 457, 477
தேவாஸ்ரயன் 818
தொண்டர் சீருரைத்தான் 820
தொல்காப்பியம் 285, 419, 427
தொல்காப்பியனார் 1005

"ந"

நக்கீரதேவ நாயனார் 613
நச்சினார்க்கினியர் 421
நந்தீசர் 82
நம்பியாண்டார் நம்பி 50, 508, 766
நம்பியாரூரர் 509, 829
நமிநந்தியடிகள் நாயனார் 939
நரசிங்கமுனையரைய நாயனார் 963
நன்னூல் 418
நான்முகன் 664, 715
நிரம்ப அழகிய தேசிகர் 621
நின்றசீர் நெடுமாற நாயனார் 968
நீத்தல் விண்ணப்பம் 137
நேசநாயனார் 979

"ப"

பட்டினத்துப்பிள்ளையார் 734
பண்டாயநான்மறை 216

பத்தராய்ப்பணிவார் 974
பத்தாந்திருமுறை 402
பத்திரகிரியார் 726
பதினோராந்திருமுறை 508
பரஞ்சோதி 1
பரஞ்சோதியார் 951
பரஞ்சோதி முனிவர் 618
பரணதேவ நாயனார் 703
பரமனையே பாடுவார் 974
பரமதத்தன் 520
பரமேஸ்வரவர்மன் 548
பழமுதிர்சோலை 674
பழமொழி நானூறு 420
பன்னிரண்டாந்திருமுறை 793
பாட்டியல் 421
பாண்டிக்கோவை 295
பாண்டியன் 8, 639
பாணபத்திரன் 517
பாணன் 655
பிடித்தபத்து 210
பிரார்த்தனைப் பத்து 194
புகழ்ச்சோழ நாயனார் 961
புகழ்த்துணை நாயனார் 971
புணர்ச்சிப்பத்து 187
புருடோத்தம நம்பி 397
புலவராற்றுப்படை 678
புலிகேசி 547
பூசலார் நாயனார் 977
பூதத்தாழ்வார் 543
பூந்துருத்திநம்பி
காடவநம்பி 89, 385
பெருந்தேவபாணி 659
பெருநம்பி 932
பெரும்பற்றப்புலியூர் நம்பி 21
பெரும்பாணாற்றுப்படை 313
பெருமிழலைக்குறும்பநாயனார் 933
பொய்யடிமையில்லாத
புலவர் 960
போற்றித்திரு அகவல் 117
போற்றித்திருக்கலி
வெண்பா 668

"ம"

மங்கையர்க்கரசியார் 979
மதங்கசூளாமணியார் 984
மதுரை 614
மதுரைச் சொக்கநாதர் 3
மதுரைப்பதி 28
மயிலாடுதுறை 395
மலைபடுகடாம் 313
மலையரையன் 737
மனுச்சோழன் 865
மாணிக்கவாசகர் 5
மாயூரம் 395
மானக்கஞ்சாற நாயனார் 913
மானி 979
மீஞ்ஞூர் வரதராசப்
பெருமாள் கோயில்
கல்வெட்டு 696
முத்தநாதன் 898
முத்தொள்ளாயிரம் 629
முதற் குலோத்துங்கன் 400
முப்போதுந் திருமேனி
தீண்டுவார் 975
முருகன் 671
முருக நாயனார் 920
முனையடுவார் நாயனார் 969
முழுநீறுபூசிய முனிவர் 976
மூத்தபிள்ளையார் திரு
மும்மணிக்கோவை 713
மூர்க்க நாயனார் 947
மூர்த்தி நாயனார் 917
மூன்றாம் குலோத்துங்கன் 820
மெய்ப்பொருள் நாயனார் 897
யாத்திரைப்பத்து 212
யாப்பருங்கல விருத்தி 421 543
வடமலையப்பப்பிள்ளை 77
வடலூர் இராமலிங்கர் 79
வடுகக் கருநாடர் மன்னன் 917
வாளிலைகண்ட பெருமாள் 817
வாதாவி 951
வாயிலார் நாயனார் 968
வாழாப்பத்து 189
விக்கிரமாதித்தன் 547
விறன்மிண்ட நாயனார் 900
வீரசோழிய உரை ஆசிரியர் 711
வீறுயர் கோவை 658
வெறிபாடிய
காமக்கண்ணியார் 674
வேணாட்டடிகள் 392
வேம்பில் 99

பிழையும் திருத்தமும்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
5	21	திவாதவூரடிகள்	திருவாதவூரடிகள்
11	37	அநநிலேயில்	அந்நிலேயில்
26	5	உபதேசிதத‌ருளிய	உபதேசித்தருளிய
64	6,7	கொடுத்தற்	கொடுத்தற்கு
104	5,6	காலத்தார்	காலத்தாற்
107	8	அடைமொழியால்	அடைமொழியாய்
254	23	கூறடுப்படுதலின்	கூறப்படுதலின்
272	2	அழகின்ற	அழிகின்ற
317	5	கழித்தனான்	கழித்தனன்
338	9	அத்து விதம்	அத்துவிதம
400	17	வெயிதுயிர்த்து	வெய் துயிர்த்து
439	22	ஆகளின் சிறப்பும் கமப்பொருள்	ஆகமப் பொருள் களின் சிறப்பும்
504	8	வான்கருனே	வான்கருணை
546	26	புதவன்பால்	புதல்வன்பால்
558	19	வெளுந்திருத்தமை யால்	வெளுத்திருந்தமை யால்
626	7	பிறபித்தது	பிறப்பித்தது
630	14	தமுல்வ	முதல்வ
675	18	பாட்டு தலேவனுகக்	பாட்டுடைத் தலேவனுகக்
717	6	10 திருவெண் காட்டடிகள்	11. திருவெண் காட்டடிகள்
772	22	இபமுகத்தோன்	இபமுகத்தோன்
777	7	பெற்றுயளன	பெற்றுள்ளன
778	,,	இதன	இதன்
781	34	பொற்பமா	பொற்பமர்
783	36	இயலபை	இயல்பை
785	19	பதினெடடு	பதினெட்டு
794	18	சமய	சமயப்
,,	35	நம்பியாருராகிய	நம்பியாரூர ராகிய

தேவாரத் திருமுறைப் பரிசும், தமிழ் இலக்கிய இலக்கண வெளியீடுகளும் விவரமும் விதிகளும்

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட இராஜராஜ அபயகுலசேகர சோழ மகாராஜா அவர்களின் ஞாபகார்த்த எண்டௌமெண்டின் தேவாரத் திருமுறைப் பரிசும், தமிழ் இலக்கிய இலக்கண நூல்களின் வெளியீடுகளும்.

தற்கால வருஷ வருமானம் ரூ. 500 + ரூ. 1,250

தேவாரத் திருமுறைகளின் தமிழ் இசைக் கலையை அபிவிர்த்தி செய்தலும், தமிழ் இலக்கிய இலக்கண நூல்களை வெளியிடுதலும் இதன் நோக்கமாகும். திருமுறைகளை வெளிப்படுத்தக் காரணமாயிருந்தவர்களான இராஜராஜ அபயகுலசேகர சோழ மகாராஜா அவர்களுடைய ஞாபகம் என்றும் குன்றாதிருந்து வரும் பொருட்டு இந்தப் பரிசு, திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் ஏற்படுத்தப்பட்டது.

இதன் மூல சொத்து தஞ்சாவூர் ஜில்லா, கும்பகோணம் தாலூக்கா, 21-ம் நம்பர் சிறுகுடி, 23-ம் நம்பர் கீழ்மாந்தூர் இந்த வட்டங்களில், தாம் பட்டா மிராசுடன் சர்வ சுதந்திரமாக அநுபவித்து வருகிற, கயலூர் மேலச்சேத்தி கிராமத்தில் நன்செய் ஏக்கர் 114, சென்டு 3 புன்செய் ஏக்கர் 4, சென்டு 72 ஆக ஏக்கர் 118-ம் சென்டு 75-ம் ஆகும். அது ரூ. எழுபத்தையாயிரம் (ரூ. 75,000) பெறுமானமுள்ளது. தற்கால நிலைமையை அநுசரித்து வருஷம் ஒன்றுக்கு ரூபாய் ஆயிரத்தெழுநூற்றைம்பது (1,750) வரை நிகர வருமானம் வரக்கூடியது. இந்த வருமானத்திலிருந்து ரூபாய் ஐந்நூறு (ரூ. 500) ஒரு பரிசு கொடுக்க ஒதுக்கப்படவேண்டும். மூல சொத்தின் வருமானத்தின் எஞ்சிய தொகையை, இதனுடன் சேர்த்திருக்கிற ஷெடியூல்களின்படி கீழ்க்கண்ட ஷரத்துக்களை அநுசரித்துத் தமிழ் இலக்கிய இலக்கண நூல்களை அச்சிட உபயோகப்படுத்தவேண்டும்.

I. பரிசு அளிப்பதற்குரிய விதிகளும் நிபந்தனைகளும் வருமாறு:—

1. இப்பரிசு ஆண்பாலர் பெண்பாலராகிய யாவருக்கும் ஜாதி, மத, தேச வேறுபாடு கருதாமல் அளித்தற் குரியது.

அண்ணாமலை யுனிவர்ஸிட்டியிலாவது, சென்னை யுனிவர்சிட்டியிலாவது அல்லது இவைகளில் ஏற்படுத்தப்பட்டிருக்கிற தனித்

தமிழ் வித்வான் பிரிலிமினரிப் பரீட்சையில் தேறினவரும் அண்ணாமலை யுனிவர்ஸிட்டி சங்கீத பூஷணத் தேவாரத் திருமுறை டைடில் முடிவுப் பரீட்சையில் முதல் முறையிலேயே தேறினவரும், பன்னிரண்டு திருமுறைகளிலும் பாடமாக வைக்கப்பெறும் ஆயிரத் திருநூறு 1,200-க்குக் குறையாத செய்யுட்களைப் பாராயணம் (நெட்ரு) செய்வதிலும் அவற்றிற்குரிய பண்முறைகளோடு பாடுவதிலும் முதல் வகுப்பில் முதல்வராக வருபவரும் ஆகிய ஒருவருக்கே இப்பரிசு அளிக்கப்படும்.

3. எல்லாப் பண்களும் அமைய ஒன்றுமுதல் ஏழு திருமுறைகளிலும் திருமுறை ஒன்றுக்குப் பாடல் நூறு விகிதம் எழுநூறும், ஏனை ஐந்து திருமுறைகளிலும் அத்திருமுறை நூல்களின் பாடல் மிகுதி குறைவுகளுக்கு ஏற்றபடி பாடல் ஐந்நூறுமாக ஆயிரத் திருநூறு (1,200)-க்குக் குறையாத பாடல்கள் பாடமாக வைக்கப்படவேண்டும். அங்ஙனம் பாடமாக வைப்பது, ஆண்டுதோறுமாவது தொடர்ந்த சில ஆண்டுகளுக்கு ஒரு முறையாவது. மேற்படி ஆயிரத் திருநூறு ஆகிய அளவுக்குக் குறையாதபடி, எல்லாப் பண்களிலுமாகத் திருத்தி யமைக்கப்படவேண்டும். மேற்படி திருமுறை ஆயிரத்திருநூறு பாசுரங்களையும் எழுத்துப் பிழையில்லாமல் திருத்தமாகப் பாராயணம் செய்வதற்கு அம்சம் 50, பண் முறை பிறழாமல் ஒழுங்காகப் பாடுவதற்கு அம்சம் 40, பொருள் உணர்ச்சியுடன் பாடுவதற்கு அம்சம் 10 — இவ்விதம் ஏற்படுத்தவேண்டும்.

4. எந்த வருஷத்திலாயினும் இருவரேனும், இருவருக்கு மேற்பட்டவரேனும் பரிசுக்குரியவரானால், சங்கீதப் பிரிலிமினரிப் பரீட்சையில் பெற்ற அம்சங்களையும் சேர்த்துப் பார்த்து மொத்தத்தில் அதிக அம்சம் பெற்றவருக்கு இப்பரிசு அளிக்கப்பெறும். அப்படியும் தீர்மானிக்க முடியாவிட்டால் அவர்களுடைய சங்கீத என்ட்ரன்ஸ் பரீட்சையின் அம்சங்களையும் (Marks) வயதையும் பார்த்து, அதிக அம்சம் உள்ளவருக்கும் வயதில் குறைந்தவருக்கும் பரிசைக் கொடுக்க ஸிண்டிகேட் சபையார் தீர்மானிப்பார்கள்.

5. ஸிண்டிகேட் சபைக் கூட்டம் ஒன்றில் இந்தப் பரிசு உரியவருக்கு வழங்கப்பெறும். எந்த வருஷத்திலேனும் பரிசுக்குரியவர் நேரில வந்து பரிசைப் பெற்றுக்கொள்ள முடியாமற் போனால், ஸிண்டிகேட் சபையார பரிசுத்தொகையை அவருக்கு அனுப்புவதற்குரிய ஏற்பாட்டைச் செய்வார்கள். பரிசு வழங்குவதற்கு முன் அப்பரிசுக் குரியவர் இறக்கும்படி நேர்ந்தால் அத்தொகை சட்டப்படி அவருடைய வாரிசாக இருப்பவரிடம் சேர்ப்பிக்கப்படும்.

6. இப்பரிசுத் தொகை பணமாகவேனும் செக்காகவேனும் அளிக்கப்பெறும். இந்தப் பரிசுத் தொகையை எக்காரணத்தாலாவது பகுக்கவும், குறைக்கவும், மாற்றவும் கூடாது.

7. எந்த ஒரு வருஷத்திலேனும், அல்லது தொடர்ந்த பல வருஷங்களிலேனும் பரிசு கொடுக்கப்படாமலிருந்தால், அவ்வாறு கொடுக்கப்படாமலிருந்த பரிசுத் தொகை முழுவதும் சேர்த்து, எந்த வருஷத்தில் பரிசு வழங்கப்படுகிறதோ அவ்வருஷத்தில் பரிசுக்குரிய வருக்கே அளிக்கப்பெறும்.

II. 1. மேற்கண்ட 1-வது அயிட்டத்தில் கண்ட பரிசுத் தொகை ரூபா ஐந்நூறு (ரூ. 500) போக மூலச்சொத்தின் வருமான பாக்கியை, இதனுடன் சேர்த்திருக்கிற அட்டவணையில் இருபத்தேழு (27) தொகுதிகளாகத் தொகுதிக்கப்பட்டிருக்கிறபடி பன்னிரு திருமுறை முதலிய தமிழ் இலக்கிய இலக்கண நூல்களின் மூலங்களையும், மூல உரைகளையும், வசனங்களையும், அவைகளின் தகுதிக்கேற்பத் தொகுதி தொகுதியாகவும் அல்லது பிரித்தும் சேர்த்தும் பகுதி பகுதிகளாகவும் செய்யுட்களைச் சீர் பிரித்தும் கூடியவரை பெரிய எழுத்துக்களில் திருத்தமான இன்றியமையாத பாட பேதங்களுடனும் லைப்ரரி எடிஷன்களாக வெளியிட உபயோகிக்கவேண்டும். டி வெளியீடுகள் ஒவ்வொன்றையும் நல்ல உயர்ந்த காகிதத்தில் ராயல் சைசில் வால்யூம் ஒன்றுக்கு எழுநூற்றைம்பது (750) பக்கங்களுக்குக் குறையாமல் லைப்ரரிகளுக்கு உபயோகப்படும் தகுதியில் நல்ல உயர்ந்த பைண்டு செய்தல் வேண்டும். மேற்கண்ட வெளியீடுகளில் ஒவ்வொரு புத்தகத்திலும் ஒவ்வொரு பதிப்பிலும் இராஜராஜன் பிளாக்குடன் இந்த டீடும், ஐந்தாம் ஜார்ஜ் பிளாக்குடன் சென்னை யூனிவர்ஸிட்டியில் நம்மால் ஏற்படுத்தப்பட்டிருக்கிற ஐந்தாம் ஜார்ஜ் சக்ரவர்த்தியின் ஞாபகார்த்தமாக ஆயிரம் ரூபாத் தமிழ்ப் பரிசின் டீடும் சேர்க்கப்படவேண்டும்.

2. இந்த டீடில் கண்ட விவரப்படி வெளியிடப்படும் ஒவ்வொரு புத்தகத்தின் ஒவ்வொரு பதிப்பிலும் ஐம்பது (50) பிரதிகள் விகிதம் நமக்கும் நமக்குப்பின் வரும் உரிமையுள்ளவர்களுக்கும் (Successors in-interest) புத்தகங்கள் தயாரானவுடன் அனுப்பி வரவேண்டும். தவிர மீதியிருக்கும் புத்தகங்களில் ஒவ்வொன்றும் அடக்க விலைக்கு நான்கில் ஒன்றுக விற்கப்படவேண்டும்.

3. இந்த டீடில் கண்ட விபரப்படிக்குள்ள பரிசு கொடுப்பது புத்தகங்கள் வெளியிடுவது முதலிய காரியங்களை நிருவகிப்பதனுல் ஏற்படும் நிருவாகச் செலவுகளை மூல சொத்தின் வருமானத் தொகையிலாவது, அதனுடைய விருத்தியாம்சம் முதலிய எவ்வித வருமானங்களிலாவது கழிக்கக்கூடாது.

4. மேற்கண்ட வெளியீடுகள் விற்ற வருமானம், டி புத்தகங்கள் அச்சிடுவதற்கு வருஷத்தோறும் மேற்படி என்டௌமெண்டின் வருமானத்திலிருந்து ஒதுக்கப்பட்டு வரும் தொகையை வட்டியாகவுள்ள மூலதனத் தொகையாகும் வரையிலும் சேர்க்கப் படல் வேண்டும்.

5. அப்படி ஒரு மூலதனத் தொகை ஏற்பட்ட பிறகு, இராஜ ராஜத் திருமுறைப் பரிசை ரூபா ஆயிரமாகக் கொடுக்கவும் புத்தக வெளியீடுகளை முன் சொல்லப்பட்ட கண்டிஷன்களுக்குட்பட்டு அடக்க விலைக்கு எட்டில் ஒன்றாக விற்கவும் வேண்டும். மேற்கண்ட படி ஆயிர ரூபாய்ப் பரிசுத் தொகை போக மேற்படி என்டௌ மெண்டிலிருந்து வரும் பாக்கித் தொகையையும், வட்டியையும், புத்தகங்கள் விற்ற வருமானங்களையும், புத்தக வெளியீடுகளுக்கே உபயோகப்படுத்தவேண்டும்.

6. இதனுடன் சேர்த்திருக்கிற அட்டவணையிற் கண்ட புத்தகத் தொகுதிகளின் வரிசைக்கிரமம் எவ்விதமிருந்தபோதிலும், அந்தந்தக் காலங்களில் தேவைக்குத் தகுந்தபடி எந்தத் தொகுதி எவ்வளவு வேண்டுமானாலும் எவ்வளவு பதிப்புக்கள் வேண்டுமானாலும் அச்சிட ஸிண்டிகேட் தீர்மானிக்கலாம். தனிப்பட்டவர்களாவது அல்லது ஒரு கூட்டத்தாராவது இந்த அட்டவணையிற் கண்ட தொகுதிகளில் எந்தத் தொகுதிப் புத்தகங்களை விரும்பினாலும், விலைக்கு ஐந்நூறு (500) காப்பிகளுக்குக் குறையாதபடி எடுத்துக் கொள்வதாகவும், அதற்கு முன் பணம் கொடுப்பதாகவுமிருந்தால், பொருள் நிலை இடம் கொடுக்கும் பட்சத்தில், முதல் பதிப்பாயிருந்தாலும் அதற்கு மேற் பட்ட பதிப்புக்களாயிருந்தாலும் அந்தத் தொகுதியை முன்னதாக அச்சிட ஸிண்டிகேட் தீர்மானிக்கலாம்.

7. அதன் பிறகு இதனுடன் சேர்த்திருக்கிற அட்டவணையிற் கண்ட புத்தகங்களின் தொகுதிகள் இருபத்தேழும் (27) அச்சிட்டுக் காப்பிகள் செலவழிந்தபின் மேற்படி அட்டவணையிற் கண்ட புத்த கங்களில் இன்றியமையாதவைகளை அவைகளின் தகுதிக்கேற்றபடி அரும்பதவுரை முதலிய உரைகளுடன் மேற்கண்ட விவரங்களின் படியே வெளியிடவேண்டும். பின்பு இந்த அட்டவணையிற் கண்டி ராத வேறு எந்தத் தகுதியுள்ள தமிழ் புத்தகங்களின் மூலங்களையும்-மூல உரைகளையும், வசனங்களையும், மேற்படி அட்டவணையிற் கண்ட புத்தகங்களை அச்சிடுவதற்கும், செலவழிப்பதற்கும் ஏற்பட்ட விவரப் படிக்குள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு ஸிண்டிகேட்டார் அபிப்பிராயப் படி வெளியிட்டு வரலாம்.

8. ஒவ்வொரு வருஷத்திலும் ஷெ பரிசைப் பெறுபவரின் பெயர், விலாசம், போட்டோ இவைகளோடு அச்சிட்ட புத்தகத்தின் பெயரையும், அதன் பிரதிகளின் எண்ணிக்கையையும் அச்சிடப்படும் புத்தகத்தின் பெயரையும் விற்கப்பட்ட புத்தகங்களின் எண்ணிக்கை யையும்; மீதியிருக்கும் புத்தகங்களின் எண்ணிக்கையையும் புத்தக வெளியீடுகளின் கணக்கிற் கண்ட பணம் எவ்விதப் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருக்கிறதென்பதையும் ஒரு பிரபல தமிழ்த் தினசரிப் பத்திரிகையில் வெளியிடுவதுடன், தமக்கும் தமக்குப் பின்வரும் உரிமையுள்ளவர்களுக்கும் அனுப்பிவரவேண்டியது.

9. மேற்குறித்த பரிசுக்காகவும், வெளியீடுகளுக்காகவும், ஏற்படுத்தப்பட்ட என்டௌமெண்டுகளையும் அவற்றின் விருத்தியாம் சங்களையும் இந்த அடியில் கண்ட விவரப்படிக்குள்ள பரிசு கொடுத்தல், புத்தகங்கள் வெளியிடுதல் இவைகளைத் தவிர வேறு எந்தக் காரியத்துக்கும் உபயோகப்படுத்தக்கூடாது.

10. தேவாரப் பரீட்சைகளுக்கு ஏற்படுத்தப்படும் பரீட்சாதிகாரிகளில் ஒருவராகச் சேர்த்துக்கொள்ளும்படி தகுதியுடைய ஒருவரைக் குறிப்பிட்டு ஸிண்டிகேட்டாருக்குச் சிபார்சு செய்ய நமக்கும், நமக்குப் பின்வரும் உரிமையுள்ளவர்களுக்கும் பாத்தியதையுண்டு.

11. இந்த என்டௌமெண்டிலிருந்து கிடைக்கும் அந்த அந்த வருஷ நிகர வருமானத்திலிருந்து நூற்றுக்கு ஐந்து ரூபாய் விகிதம் ரிசர்வ் பண்டாக இதன் மூல சொத்தின் ஒரு வருஷத்திய சர்க்கார் கிஸ்தி வகையராவை வட்டியாகவுடைய முதல் தொகையாகும்வரை ஒதுக்கிவைக்கவேண்டும் அப்படி ஒரு மூலதனத் தொகை ஏற்பட்ட பிறகு, அதனால் மிகுதிப்படும் தொகையைத் தேவாரத் திருமுறைப் பரீட்சைக்குப் படிக்கும் மாணவர்களில் எளிய தகுதியுடைய மாணவர்களுக்கு வகுப்பு ஒன்றுக்கு பன்னிரண்டு (12) பேர்கள் விதம் நான்கு வகுப்புக்கும் நாற்பத்தெட்டு (48) பேர்களுக்கு இலவச உண்டி உறைகளுக்காக (Stipend) பிரதி வருஷத்திலும் கொடுத்து வருவதற்கு வேண்டிய தொகையையும் இவ்வாறே தனித் தமிழ் வித்வான் பிரிலிமினரிப் பரீட்சைக்குப் படிக்கும் மாணவர்களில் வகுப்பு ஒன்றுக்கு இருபத்து நான்கு (24) பேர்கள் விதம் இரண்டு வகுப்புக்கும் நாற்பத்தெட்டு (48) மாணவர்களுக்குப் பிரதி வருஷமும் கொடுத்து வருவதற்கு வேண்டிய தொகையையும், வட்டியாகவுடைய தனித்தனி முதல் தொகைகளாகும் வரை ஒதுக்கிவைக்கவேண்டும். மேற்கண்டபடி மூலதனத் தொகைகள் பூர்த்தியான பிறகு, இந்த என்டௌமெண்டின் மூல சொத்தின் அந்த அந்த வருஷ வருமானம் முழுவதையும் முன் சொல்லப்பட்ட கண்டிஷன்களுக்குட்பட்டுப் புத்தக வெளியீடுகளுக்கே உபயோகப்படுத்தவேண்டும்.

12. மேற்கண்ட பன்னிரு திருமுறைத் தேவாரப் பரிசைப் பெறத் தகுதியுடையவர்கள் கிடைக்கும் வரையுள்ள முதல் நான்கு வருஷங்களுக்கு என்டௌமெண்டின் வருமானத்திலிருந்து ஒதுக்கப்பட்ட பரிசுத் தொகையைப் புத்தக வெளியீடுகளுக்கும் பன்னிரு திருமுறைகளின் ஸெலக்ஷன்களுக்கும், (Selections) உபயோகப் படுத்தலாம்.

புத்தகங்களின் அட்டவணை

தொகுதி	தொகுதி 1-க்கு சங்கியை	புத்தகங்களின் விபரம்	
1	1	பன்னிரு திருமுறைகள்—மூலம்	
	2	பன்னிரு திருமுறைகள் அரும் பதவுரை முதலிய உரைகளு டனும் ஆராய்ச்சிகளுடனும்	
2	1	பெரிய புராணம்	
	2	திருவிளையாடற் புராணம்	பரஞ்சோதி முனிவர்
	3	கந்த புராணம்—மூலம்	
	4	உபதேச காண்டம்	கோனேரியப்பர்
	5	கந்தபுராணச் சுருக்கம்	சம்பந்த சரணலயர்
3	1	கம்பராமாயணம்—உத்தர காண்டத்துடன்	
	2	பாகவதம்—மூலம்	செல்லைச்சூடுவார்
	3	வில்லிபுத்தூரார் பாரதம்	
	4	அரங்கநாத கவி பாரதம்	
	5	நல்லாப்பிள்ளை பாரதம்	
4	1	விநாயக புராணம்	கச்சியப்ப சுவாமிகள்
	2	தணிகை புராணம்	,,
	3	கோயிற் புராணம	உமாபதிசிவாசாரியார்
	4	இலிங்க புராணம	குலசேகர பாண்டியர்
	5	சிவதருமோத்தரம்	மறைஞான சம்பந்தர்
	6	வாயுசங்கிதை	வரதுங்கராமபாண்டியர்
	7	சூதசங்கிதை	தேவராஜபிள்ளை
	8	பிரமோத்தர காண்டம்	வரதுங்கராமபாண்டியர்
	9	கூர்ம புராணம்	அதிவீரராமபாண்டியர்
	10	காசி காண்டம்	,,
	11	சேது புராணம்—மூலம்	நிரம்ப அழகிய தேசிகர்
	12	திருப்பரங்கிரிப் புராணம்	,,
	13	காஞ்சிப் புராணம்	சிவஞான சுவாமிகள், [கச்சியப்ப சுவாமிகள்
	14	திருவானைக்காப் புராணம்	கச்சியப்ப சுவாமிகள்
	15	பேரூர் புராணம்	,,
	16	திருக்குற்றலத் தலபுரா [ணம்	திருகூட ராஜப்ப கவி [ராயர்
	17	மாக புராணம்	அதிவீரராமபாண்டியர்
	18	மச்ச புராணம்	வடமலையப்ப பிள்ளையன்
	19	திருப்பறியலூர்ப் புராணம்	வேலப்ப தேசிகர்
	20	திருவாப்பனூர் புராணம்	கந்தசாமிப் புலவர்
	21	வசவ புராணம்	—
	22	இரகு வமிசம்	அரசகேசரி
	23	சூளாமணி	தோலாமொழித் தேவர்

தொகுதி	தொகுதி 1-க்கு சங்கை	புத்தகத்தின் விபரம்	
	24	மேருமந்தர புராணம்	வாமன முனிவர்
	25	யசோதர காவியம்	,,
	26	சீருப்புராணம்	உமறுப் புலவர்
	27	தேம்பாவணி	வீரமா முனிவர்
5	1 2	திருக்குறள் முழுவதும் எல்லாருடைய உரையு முன்பட மற்றப் பதினொண் கீழ்க்கணக்கு நூல் கள்—உரைகளுள் பட.	
6	1	சகலகலாவல்லி மாலை — மூலம் — பாக்கெட் சைஸ்	
	2	பதினொண் கீழ்க்கணக்கு நூல்கள்	
7	1	நாளிதுவரையில் வெளியாயிருக்கிற காவியங்கள், நீதி நூல்கள் முதலிய இலக்கியங்களிலுள்ள திருக் குறளின் கருத்துக்களமைந்த சிறந்த செய்யுட் களைத் திருக்குறள் அதிகார அடைவில் வகுத்து அமைத்த தொகுதி—மூலம்	
8	1	கந்தர் கலிவெண்பா	
	2	திருமுருகாற்றுப்படை	
	3	சகலகலா வல்லிமாலை — மூலம் பாக்கெட் சைஸ்	
	4	ஆத்திசூடி முதலிய நூல்கள் - பதினொன்று மூலம்	
	5	பதினெண் கீழ்க்கணக்கிலுள்ள நீதி நூல்கள் — [பதினொன்று	
9	1	பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் பிரபந்தங்கள் (அஷ்டப்பிரபந்தம்)	
	2	சிவப்பிரகாச சுவாமிகள் பிரபந்தங்கள்	
	3	சிவஞானசுவாமிகள் பிரபந்தங்கள்	
	4	குமரகுருபர சுவாமிகள் பிரபந்தங்கள்	
	5	சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தங்கள்	
	6	திருப்போரூர்ச் சந்நிதிமுறை-சிதம்பர சுவாமிகள்	
	7	திருத்தணிகைச் சந்நிதிமுறை மூலம் - கந்தப்ப [தேசிகர்	
	8	பிரபுலிங்க லீலை	சிவப்பிரகாச சுவாமிகள்
	9	பிரபோத சந்திரோதயம்	திருவேங்கட சுவாமிகள்
	10	திருவாதவூரர் புராணம்	கடவுண்மா முனிவர்
	11	திருக்கூவப் புராணம்	சிவப்பிரகாச சுவாமிகள்
	12	சீகாளத்திப் புராணம்	கருணைப்பிரகாசர், சிவப் பிரகாச சுவாமிகள், வேலைய சுவாமிகள்
	13	திருநாகைக்காரோணப் புராணம்	மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை அவர்கள்
	14	திருவிடைமருதூர்த் தல புராணம்	சிவக்கொழுந்து தேசிகர்
10	1	நாளிதுவரையில் வெளியாயிருக்கிற இலக்கியங்	

தொகுதி	தொகுதி 1-க்கு சங்கியை	புத்தகங்களின் விபரம்	
10	1	களிலுள்ள விநாயகர் தோத்திரம் முதலிய தோத்திரங்களின் சுவையுள்ள பாடல் தொகுதி	
	2	தாயுமான சுவாமிகள் பாடல்	
	3	பட்டினத்தார் பாடல்	
	4	இராமலிங்க சுவாமிகள் பாடல்	
	5	மஸ்தான் சாகிப் பாடல்	
11	1	நாளிதுவரையில் வெளியாயிருக்கிற இலக்கியங்களிலுள்ள பாராயணம் (நெட்டு) பண்ணக்கூடிய சரித்திரச் சுவையுள்ள பாகங்களின் செய்யுட்களையும் பொருட்சுவையுள்ள செய்யுட்களையும் பக்திச்சுவை முதலிய சுவையுள்ள செய்யுட்களையும், மேற்கண்ட சுவைகளுள்ள தனிப்பாடல்களையுமுடைய தொகுதி—மூலம்	
12	1	கந்தர் கலிவெண்பா	
	2	திருமுருகாற்றுப்படை	
	3	சகலகலாவல்லி மாலை	
	4	நாலடியார்	
	5	நீதிநெறி விளக்கம்—மூலம்—பாக்கெட் சைஸ்	
	6	திருக்குறள்	
	7	நன்னூல்	
	8	உவமான சங்கிரகம்	
	9	இரத்தினச் சுருக்கம்	
13	1	கோவை	
	2	உலா	
	3	தூது	1 முதல் 5 முடிய
	4	கலம்பகம்	125 பிரபந்தங்கள்
	5	பிள்ளைத் தமிழ்—மூலம்	வரையில்
	6	சூடாமணி நிகண்டு 11, 12 தொகுதிகளும்	
	7	திரிபு	
	8	யமகம்	
	9	நிரோட்டகம்	
	10	பதிற்றுப்பத்து	
	11	வெண்பா அந்தாதி	
	12	கலித்துறை அந்தாதி—மூலம்	7 முதல் 19 முடிய
	13	சிலேடை	125 பிரபந்தங்கள்
	14	மடல்	வரையில்
	15	குறவஞ்சி	
	16	குறம்	
	17	பள்ளு	
	18	பரணி	
	19	வண்ணம்	
	20	சதகம்—மூலம்	20 முதல் 27 முடிய

தொகுதி	தொகுதிப் பகுதி	புத்தகங்களின் விபரம்	
13	21	மாலை	– 125 பிரபந்தங்கள்
	22	நான்மணி மாலை	வரையில்
	23	மும்மணிக்கோவை	
	24	இரட்டைமணி மாலை	
	25	நவமணி மாலை	
	26	பதிகம்	
	27	சிறந்த சில்லறைப் பிரபந்தங்கள்	
14	1	வேழமுகம்	
	2	பிள்ளையார் சிந்தனை	
	3	சரஸ்வதி சிந்தனை	
	4	சகலகலாவல்லி மாலை	
	5	ஆத்திசூடி	
	6	கொன்றைவேந்தன்	
	7	மூதுரை	
	8	நறுந்தொகை	
	9	உலகநீதி	
	10	நல்வழி	
	11	நன்னெறி	
	12	நீதிவெண்பா	
	13	அறநெறிச்சாரம்	
	14	நீதிநெறி விளக்கம்	
	15	சோமேசர் முதுமொழி வெண்பா	
	16	விவேக சிந்தாமணி	
	17	நீதிசாரம்	
	18	நீதிநூல்—வேதநாயகம் பிள்ளை	
	19	குமரேச சதகம்	
	20	அறப்பளீசுவரர் சதகம்	
	21	சூடாமணி நிகண்டு 12 தொகுதிகளும்	
	22	வருஷாதி நூல்	
	23	திருப்புகழ்	
	24	நன்னூல் வசனச் சுருக்கம்	
	25	கந்தர் கலிவெண்பா	
	26	சரசுவதியந்தாதி	
	27	அருணகிரியந்தாதி	
	28	அபிராமியந்தாதி	
	29	திருப்புகலூரந்தாதி	
	30	திருவேங்கடத்தந்தாதி	
	31	பழமலையந்தாதி	
	32	மறைசையந்தாதி	
	33	கல்லலையந்தாதி	
	34	திருவரங்கத்தந்தாதி	
	35	திருச்செந்தில் நிரோட்டக யமகவந்தாதி	
	36	திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி	
	37	மதுரைப்பதிற்றுப்பத்தந்தாதி	
	38	கலைசைச் சிலேடை வெண்பா	

தொகுதி	தொகுதி 1-க்கு கூடிய	புத்தகங்களின் விபரம்
14	39	சிங்கைச் சிலேடை வெண்பா
	40	திருவரங்கத்து மாலை
	41	சோணசைல மாலை
	42	பெரியநாயகியம்மை திருவிருத்தம்
	43	மதுரை மீனாட்சியம்மை இரட்டைமணி மாலை
	44	சிதம்பர மும்மணிக்கோவை
	45	நால்வர் நான்மணி மாலை
	46	திருவாரூர் நான்மணி மாலை
	47	செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத் தமிழ்
	48	முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ
	49	அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ்
	50	மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்
	51	திருவிடைமருதூர் உலா
	52	தஞ்சை பெருவுடையாருலா
	53	நெல்விடு தூது
	54	பணவிடு தூது
	55	வருணகுலாதித்தன் மடல்
	56	சித்திரமடல்
	57	வெங்கைக் கலம்பகம்
	58	மதுரைக் கலம்பகம்
	59	சமுத்திர விலாசம்
	60	சந்திர விலாசம்
	61	கலிங்கத்துப் பரணி
	62	ஏலாதி
	63	சிறுபஞ்ச மூலம்
	64	நான்மணிக்கடிகை
	65	திரிகடுகம்
	66	இன்னா நாற்பது
	67	இனியவை நாற்பது
	68	ஆசாரக் கோவை
	69	முதுமொழிக்காஞ்சி
	70	பழமொழி நானூறு
	71	நாலடியார்
	72	திருக்குறள்
	73	நன்னூல் காண்டிகையுரை
	74	நன்னூல் விருத்தயுரை
	75	பஞ்சலட்சணம், வச்சணந்திமாலையுடன் வசனம்
	76	தஞ்சை வாணன் கோவை
	77	வெங்கைக் கோவை
	78	கோடீச்சரக் கோவை
	79	சீகாழிக் கோவை
	80	கல்லாடம்
	81	அருணசைல புராணம்
	82	அரிச்சந்திர புராணம்
	83	நைடதம்
	84	நளவெண்பா

தொகுதி	தொகுதி 1-க்கு சங்கியை	புத்தகங்களின் விபரம்
14	85	சிவராத்திரி புராணம்
	86	ஏகாதசி புராணம்
	87	முக்கூடற் பள்ளு
	88	கதிரைமலைப் பள்ளு
	89	திருக்குற்றாலக் குறவஞ்சி
	90	சரபேந்திர பூபாலக் குறவஞ்சி
	91	அருணாசலக்கவி இராம நாடகக் கீர்த்தனை
	92	நந்தனார் சரித்திரக் கீர்த்தனை
	93	குசேலோபாக்கியானம்
	94	பாகவதம்—செவ்வைச்சூடுவார்
	95	வில்லிபுத்தூரார் பாரதம்
	96	அஷ்டாவதானம் அரங்கநாதகவி பாரதம்
		நூல்களின் தகுதிக்கேற்பக் குறிப்புரை, அரும்பதவுரை, பதவுரை, பொழிப்புரை, கருத்துரை, இன்றியமையாத இடங்களில் விசேட உரை முதலியன இனிய எளிய நடையில்.
15	1	நாளிதுவரையில் வெளியாயிருக்கிற இலக்கியங்களி லுள்ள பெருங்காப்பிய உறுப்புக்களின் செய்யுள் தொகுதி—மூலம்.
16	1	தொல்காப்பியம் முழுவதும் எல்லாருடைய உரையு முன்பட.
17	1	சகலகலாவல்லிமாலை பாக்கெட் சைஸ் ஒரு பைண்டு
	2	தொல்காப்பியம்—மூலம்.
18	1	கந்தர் கலிவெண்பா
	2	திருமுருகாற்றுப்படை
	3	சகலகலாவல்லிமாலை
	4	தொல்காப்பியம் எழுத்ததிகாரம்
	5	தொல்காப்பியம் சொல்லதிகாரம்—மூலம் பாக்கெட் சைஸ் ஒரு பைண்டு
	6	நேமிநாதம்
	7	வீரசோழியம்
19	1	சகலகலாவல்லிமாலை
	2	நன்னூல்
	3	நம்பி அகப்பொருள்
	4	இறையனார் அகப்பொருள்
	5	புறப்பொருள் வெண்பாமாலை
	6	யாப்பருங்கலம் உரைகளுள்பட—டெம்மி சைஸ்
	7	யாப்பருங்கலக்காரிகை
	8	தண்டியலங்காரம்
	9	வச்சணந்திமாலை

தொகுதி	தொகுதி 1-க்கு சங்கியை	புத்தகங்களின் விபரம்
20	1	கந்தர் கலிவெண்பா சகலகலாவல்லிமாலை பஞ்சலட்சண மூலம்—பாக்கெட் சைஸ் ஒரு வச்சணந்தி மாலை [பைண்டு—மூலம் வரையறுத்த பாட்டியல் உவமான சங்கிரகம் இரத்தினச் சுருக்கம்
21	1	எழுத்துச் சொல், பொருள், யாப்பு, அணி, பாட்டியல் முதலியவைகளின் இலட்சணங்களைக் கூறச் சூத்திரங்களாகவும் செய்யுட்களாகவும், வசனங்களாகவும். நாளிதுவரையில் வெளியாயிருக்கிற சிறந்த நூல்களுடன் அவற்றிற்குப் போதுமான தகுந்த உதாரணங்களோடு கூடிய நூற்றொகுதி
22	1	நாளிதுவரையில் வெளியாயிருக்கிற இலக்கிய இலக்கணங்களிலுள்ள உரைகளில் உதாரணங்களாகக் காட்டப்பட்டிருக்கும் செய்யுட்களின் தொகுதி.
	2	பழைய சாசனங்களிலுள்ள செய்யுள் தொகுதி
	3	தமிழ்ச்சாசனங்களின் தொகுதி.
23	1	இந்த அட்டவணையிற்கண்ட நூல்களின் ஆசிரியர்கள், உரையாசிரியர்கள், இவர்களை ஆதரித்தவர்கள் முதலியவர்களுடைய சரித்திரம், காலம், இவர்களைப்பற்றிய ஆராய்ச்சிகளின் தொகுதி.
	2	இந்த அட்டவணையிற் கண்டிராத தமிழ் இலக்கிய இலக்கண நூல்களின் ஆசிரியர்கள், உரையாசிரியர்கள், இவர்களை யாதரித்தவர்கள் முதலியவர்களுடைய சரித்திரம், காலம், இவைகளைப் பற்றிய ஆராய்ச்சிகளின் தொகுதி.
	3	தமிழ் இலக்கிய இலக்கண நூல்களைப்பற்றிய பலவித ஆராய்ச்சிகளின் தொகுதி.
24	1	அன்னிய தேசங்களுள்பட இந்தியா முழுவதற்கும் கெய்டும் டைரெக்டரியும் (தகவல் விளக்கம்)
25	1	தருக்க சாஸ்திரம் (Logic)
	2	தத்துவ சாஸ்திரம் (Philosophy etc.)
	3	வான சாஸ்திரம் (Astronomy)
	4	கணிதம் (Mathematics etc)
	5	பௌமிய சாஸ்திரம் (Geology etc)
	6	பூகோளம் (Geography etc)
	7	தாவர சாஸ்திரம் Botany etc.)

தொகுதி	தொகுதி 1-க்கு சங்கியை	புத்தகங்களின் விபரம்	
25	8	பிராணி வர்க்கம் (Zoology etc)	
	9	தேகதத்துவநூல் (Physiology etc.)	
	10	பிரகிருதி சாஸ்திரம் (Physics etc.)	
	11	சுகாதார முறை (Sanitary Science etc.)	
	12	ரஸாயனம் (Chemistry etc.)	
	13	விவசாயம் (Agriculture etc.)	
	14	தேச சரித்திரம் (History etc.)	தமிழில் கூடிய வரையில் சுருக்கமாகவும் விளக்கமாகவும், தமிழ்மட்டும் தெரிந்தவர்களுக்கு உபயோகப்படும் தகுதியில்
	15	ராஜாங்கமுறை (Politics etc.)	
	16 17	அர்த்தசாஸ்திரம் (Economics etc).	
	18	சங்கீதம் (Music etc.)	
	19	இயந்திர சாஸ்திரம் Engineering etc.)	
26	1	தமிழ் அகராதி பிரயோகமுள்பட (தமிழுக்குத் தமிழ்)	
27	1	தமிழ் வித்யாமண்டபம் (என்ஸைக்களோபிடியா)	

ஷெடியூல்

தஞ்சாவூர் டிஸ்டிரிக்டு குத்தாலம் சப்ரிஜிஸ்ட்டரைச்சேர்ந்த 21-ம் நம்பர் சிறுகுடி வட்டம் 132-ம் நம்பர் பட்டாவிலும், 23-நம்பர் கீழ்மாத்தூர் வட்டம் 47-ம் நம்பர் பட்டாவிலும் உள்ள நன்செய் புன்செய்

நிலங்களின் விபரம்

தொடர்ந்த நம்பர்	வட்டம் நம்பர் பெயர்	ரீ சர்வே நம்பரும் உள் நம்பரும்	விபரம்	விஸ்தீர்ணம்		ஆக மொத்தம்	
				ஏ.	செ.	ஏ.	செ.
1	21 தெ. சிறுகுடி	373—1	நன்செய்	5	40		
2	,,	373—3	,,	0	4		
3	,,	374—2	,,	2	4		
4	,,	375—1	,,	5	7		
5	,,	376—1	,,	2	76		
6	,,	377—1	,,	2	79		
7	,,	377—3	,,	0	48		
8	,,	378—2	,,	1	91		
			ஆக நன்செய்			20	49

ஷெடியூல்—தொடர்ச்சி

தஞ்சாவூர் டிஸ்டிரிக்டு குத்தாலம் சப்ரிஜிஸ்டரைச் சேர்ந்த 21-ம் நம்பர் சிறுகுடி வட்டம் 132-ம் நம்பர் பட்டாவிலும், 23-ம் நம்பர் கீழ்மாந்தூர் வட்டம் 47-ம் நம்பர் பட்டாவிலும் உள்ள நன்செய் புன்செய் நிலங்களின் விபரம்—தொடர்ச்சி

தொடர்ந்த நம்பர்	வட்டம் நம்பர் பெயர்	ரீ சர்வே நம்பரும் உள் நம்பரும்	விபரம்	விஸ்தீர்ணம் ஏ.	விஸ்தீர்ணம் செ.	ஆக மொத்தம் ஏ.	ஆக மொத்தம் செ.
9	21 தெ. சிறுகுடி	378—1	புன்செய்	0	22	0	22
			ஆக நன்செய் புன்செய்			20	71
10	23 தெ. கீழ்மாந்தூர்	198	நன்செய்	4	91		
11	,,	199	,,	3	59		
12	,,	200—2	,,	3	46		
13	,,	201	,,	6	7		
14	,,	202—2	,,	3	8		
15	,,	203—2	,,	4	41		
16	,,	204—2	,,	5	56		
17	,,	205—2	,,	3	51		

18	23 தெ. கீழ்மாந்தூர்.	206	நன்செய்	4	40		
19	,,	207—2	,,	4	8		
20	,,	208—2	,,	3	68		
21	,,	209—2	,,	3	3		
22	,,	210—2	,,	2	35		
23	,,	211—2	,,	2	8		
24	,,	213—1	,,	0	58		
25	,,	214	,,	2	48		
26	,,	215—4	,,	0	40		
27	,,	216—2	,,	3	6		
28	,,	217—2	,,	3	88		
29	,,	218	,,	2	31		
30	,,	219	,,	1	80		
31	,,	221	,,	2	99		
32	,,	222—2	,,	2	93		
33	,,	223	,,	3	65		
34	,,	227—2	,,	3	87		
35	,,	238—2	,,	3	24		
36	,,	239	,,	2	86		
37	,,	240	,,	2	59		
38	,,	241—2	,,	2	74		
			ஆக நன்செய்			93	54

ஷெடியூல்—தொடர்ச்சி

தஞ்சாவூர் டிஸ்டிரிக்டு குத்தாலம் சப்ரிஜிஸ்ட்டரைச் சேர்ந்த 23-ம் நம்பர் வட்டம் 47-ம் நம்பர் பட்டாவில் உள்ள நன்செய் புன்செய் நிலங்களின் விபரம்—தொடர்ச்சி

தொடர்ந்த நம்பர்	வட்டம் நம்பர் பெயர்	ரீ சர்வே நம்பரும் உள் நம்பரும்	விபரம்	விஸ்தீர்ணம் ஏ.	விஸ்தீர்ணம் செ.	ஆக மொத்தம் ஏ.	ஆக மொத்தம் செ.
39	23-ம் தெ. கீழ்மாந்தூர்	111—5	புன்செய்	0	53	கிட்டங்கி வகையறு	
40	,,	212—2	,,	1	18		
41	,,	213—2	,,	1	3		
42	,,	220	,,	1	76		
			நத்தம்				
			ஆக புன்செய் ...			4	50
			ஆக நன்செய் புன்செய் ...			98	4
			ஆக வட்டங்கள் இரண்டுக்கு ...			118	75

குறிப்பு:— "இந்த தஸ்தாவேஜி 1940-ம் வருஷம் அக்டோபர் மாதம் 24௳ பகல் 3-மணிக்குமேல் 4-மணிக்குள் குத்தாலம் சப்ரிஜிஸ்தாராபீஸில் தாக்கல் செய்யப்பட்டு 1 தெ. புத்தகம் 445-வது வால்யூம் 197 முதல் 215 வரையுள்ள பக்கங்களில் 1940-ம் வருஷத்திய 2152-ம் நம்பராக ரிஜிஸ்தர் செய்யப்பட்டது".

ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் ஞாபகார்த்தத் தமிழ்ப் பரிசு

ரூ. (1000) ஆயிரம்

நம்முடைய அன்பார்ந்த அரசரும், சக்கரவர்த்தியுமான ஐந்தாம் ஜார்ஜ் மன்னரவர்களுடைய உதார குணத்தையும் தயாள சித்தத்தையும், இந்தியாவின்பாலிருந்த அன்பையும் கருதி அவர்களுடைய இனிய ஞாபகம் என்றும் குன்றாதிருந்து வரும் பொருட்டு இந்தப் பரிசு திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சாமிநாதத் தம்பிரான் சுவாமிகளவர்களால் ஏற்படுத்தப் பெற்றது. இந்தப் பரிசின் நோக்கம் தமிழ்மொழிப் பயிற்சிக்கும் ஆராய்ச்சிக்கும் ஆதரவு அளிப்பதே யாகும். "ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் ஞாபகார்த்தத் தமிழ்ப் பரிசு" என இது வழங்கப்பெறும்.

இந்தப் பரிசுக்குரிய மூலதனமாக இப்பொழுது உள்ள தொகை முப்பத்தையாயிரம் ரூபாய் (ரூ. 35,000). இத்தொகை நூற்றுக்கு வருஷத்துக்கு 3½ வட்டியுள்ள காலவரையறையில்லாத சர்க்கார் கடன் பத்திரமாக உள்ளது. இதிலிருந்து வருஷந்தோறும் கிடைக்கும் வட்டியிலிருந்து ரூபாய் ஆயிரம் (ரூ. 1000) வருஷந்தோறும் ரொக்கப் பரிசாக அளிக்கப்பெறும். 1935—36-ம் வருஷத்துச் சென்னை சர்வகலாசாலைக் காலண்டர் தொகுதி 1. பகுதி 2-ல் கண்ட 7-D விதிப்படி யமைந்த தனித் தமிழ் வித்துவான் பட்டத்துக்குரிய முடிவுப் பரீக்ஷையில் முதல் வகுப்பில் முதல்வராகத் தேர்ச்சிபெறுவோர் இப்பரிசைப் பெறும் தகுதியுடையோராவர். மூலதனத்தின் வட்டியில் இவ்வாறு செலவானது போக வருஷந்தோறும் எஞ்சும் தொகை மூலதனம் லக்ஷம் ரூபாய் (ரூ. 100,000) ஆகும் வரையில் தன்னோடு சேர்க்கப்படும். அதன்பின் மூலதனத்திற்குக் கிடைக்கும் வட்டி முழுவதும் வருஷந்தோறும் பரிசுத் தொகையாக உரியவருக்கு அளிக்கப்படும்.

பரிசளிப்பதற்குரிய விதிகளும் நிபந்தனைகளும் வருமாறு :—

1. இப்பரிசு ஆண்பாலர் பெண்பாலராகிய யாவருக்கும் ஜாதி மத வேறுபாடு கருதாமல் அளித்தற்குரியது.

2. ஓரியண்டல் பட்டப் பரீக்ஷைகளுள் தனித்தமிழ் வித்துவான் பரீக்ஷையில் தேர்ச்சி பெறுவோர்களுள் முடிவுப் பரீக்ஷையில் முதல் வகுப்பில் முதல்வராக வருபவர் முதல் முறையிலேயே தேறினவராயின் அவருக்கு இப்பரிசு அளிக்கப்பெறும்.

எந்த வருஷத்திலாயினும், இருவரேனும் இருவருக்கு மேற்பட்டவரேனும் பரிசுக்குரிய தகுதியைப் பெற்ருல் பிரிலிமினரிப் பரீக்ஷையில் பெற்ற அம்சங்களேயும் (Marks) சேர்த்துப் பார்த்து மொத்தத்தில் அதிக அம்சம் பெற்றவருக்கு இப்பரிசு அளிக்கப்படும். அவ்வாறு செய்வதிலும் சிக்கல் நேருமாயின், தேர்ச்சி பெற்றவர்களுடைய ஆங்கிலப் பயிற்சியையும் வயதையும் ஆராய்ந்து. அவர்களுள் அதிக ஆங்கிலப் பயிற்சியுடையவர்க்கும், குறைந்த வயது உடையவர்க்கும் பரிசைக் கொடுக்க ஸிண்டிகேட் சபையினர் தீர்மானிப்பார்கள்.

3 ஸெனெட் சபைக் கூட்டமொன்றில் இந்தப் பரிசு உரியவருக்கு வழங்கப்பெறும். எந்த வருஷத்திலேனும் பரிசுக்கு உரியவர் நேரில் வந்து பரிசைப் பெற்றுக்கொள்ள முடியாமற் போனல் ஸிண்டிகேட் சபையார் பரிசுத் தொகையை அவருக்கு அனுப்புவதற்குரிய ஏற்பாட்டைச் செய்வார்கள். பரிசு வழங்குவதற்கு முன் அப் பரிசுக்குரியவர் இறக்கும்படி நேர்ந்தால் அத்தொகை சட்டப்படி அவருடைய வார்சாக இருப்பவரிடம் சேர்ப்பிக்கப்படும்.

4. இப்பரிசுத் தொகை பணமாகவேனும் செக்காகவேனும் அளிக்கப்பெறும். இந்தப் பரிசுத் தொகை எந்தக் காரணத்தைக் கொண்டாவது பெருக்கவோ குறைக்கவோ படாது. எந்த ஒரு வருஷத்திலேனும் அல்லது தொடர்ந்து பல வருஷங்களிலேனும் பரிசு கொடுக்கப்படாமல் இருந்தால் அங்ஙனம் கொடுக்கப்படாமல் இருந்த பரிசுத் தொகை முழுவதும் சேர்த்து, எந்த வருஷத்தில் பரிசு வழங்கப்படுகிறதோ அவ்வருஷத்தின் பரிசுக்குரியவருக்கே அளிக்கப்பெறும். பரிசுத் தொகைக்கு மேலே கிடைக்கும் தொகை தான் மூலதனத்தோடு சேர்க்கப்படும்.

5. வருஷந்தோறும் பரிசளிப்பு விபரம், பரிசு பெறுபவரின் பெயர், விலாசம் ஆகியவற்ருேடு திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சாமிநாதத் தம்பிரான் சுவாமிகளவர்களுக்கும், அவர்களுக்குப்பின் வரும் உரிமையுள்ளவர்களுக்கும் (Successors in Interest) தெரிவிக்கப் படவேண்டும்.

6. பரிசு ஏற்படுத்தியவர்களுடைய நோக்கத்துக்கு வேறுபட்ட எந்தக் காரியத்துக்கும் இந்த நிதியை உபயோகிக்கக் கூடாது. இனி எப்பொழுதேனும் சர்வகலாசாலையாரின் 7-D. விதிப்படி யமைந்த தனித்தமிழ் வித்துவான் பட்டப் பரீக்ஷைக்குப் பிரதியாக ஏதேனும் ஏற்பட்டாலும், டை. பரீக்ஷைக்குரிய விதிகள் மாறுபட்டாலும் பரிசை ஏற்படுத்தியவர்களுடைய நோக்கமாகிய தமிழ்க் கல்வி யபிவிருத்திக்கு ஏற்றதென்று கருதும் வகையில் ஸிண்டிகேட் சபையார் இந்தப் பரிசை உரியவருக்கு அளிக்க ஏற்பாடு செய்யும் உரிமையைப் பெறுவார்கள்.

7. பரிசு கொடுத்தது போக எஞ்சும் வட்டித்தொகையையும், மூலதனத்தையும் கவர்ன்மெண்டார் எப்போதேனும் திருப்பிக் கொடுக்க நேர்ந்தால் அத்தொகையையும் எந்தவிதமான பத்திரங்களிலேனும், வேறு வகையிலேனும் வைத்துப் பாதுகாக்கும் உரிமை ஸிண்டிகேட் சபையாருக்கு உண்டு.

காசி மடம்,
திருப்பனந்தாள். } காசிவாசி சாமிநாத தம்பிரான்

குறிப்பு :— மேலே கண்ட மூலதனம் என்டௌமெண்ட் சென்னை சர்வகலாசாலையாருடைய அங்கீகாரம் பெற்று 1937, 38-ம் வருஷத்திய யுனிவர்ஸிட்டி காலண்டர் பகுதி 2-ல் 129, 130-வது பக்கங்களில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.